Koviloor Digital Library
KOVILUR ADHEENAM
KOVILUR B. O.
(Via) MANAGIRI
RAMANATHAPURAM DIST.
PIN: 623 307

6-1

2088

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 2088

ஸ்வாமி

ஆசிரியர் :

ரா. கணபதி

பூம்புகார் பிரசுரம்
109, மன்னார்சாமி கோவில் தெரு,
சென்னை – 600 013.

1977 — 4 9/00

Koviloor Digital Library

விலை ரூ. 49-00

பூம்புகார் வெளியீடு எண்: 31
முதற் பதிப்பு: மார்ச், 1977
உரிமை: ஆசிரியருக்கே.

அச்சிட்டவர்கள்:
நாதன் & கம்பெனி, மெயின்ரோடு, வேளச்சேரி, சென்னை-600 042.

Koviloor Digital Library

கோவிலூர் ஆதீனம்
2088
R65
கோவிலூர்-630 307

ௐ

“என் கதையையும் உபதேசங்களையும் படிப்பது பக்தர்களின் இதயத்தில் விசுவாஸத்தை ஆழமாக்கி, அவர்களை எளிதே ஆத்மாநுபவமும் பேரானந்தமும் பெறவைக்கும்.”

— ஷிர்டி ஸாயி பாபா, அவரது சரிதையை எழுதத் தொடங்கிய அன்று ஸாயிபக்தர்களிடம் அருளியது.

MADATHIPATHI
KOVILOOR MADALAYAM

Koviloor Digital Library

அகவுரை

அன்பின் ஆனந்த நிறைவோடு, ஸ்ரீ ஸத்ய ஸாயி சரித கங்கையில் நீராட ஸாயி பக்தர்களை மங்கள தாம்பூலம் தந்து அழைக்கிறேன். சக்தி மயமாக ஆற்றலைக் காட்டும் லீலை அலைகள் வீசும் கங்கை. சிவ மயமாக அன்பின் குளிர்ச்சியைப் பொழியும் கங்கை. சக்திக்கும் சிவத்துக்கும் உள் இலங்கும் பாவன சாந்தத்தை ஸ்நானத்தின்போதே நம்முள் இழையோட விடும் கங்கை. ஸாயி பக்தர்களே, வாருங்கள் நீராட!

ஆம், இது ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபாவை இறைவனின் பூர்ணாவதாரமாகக் கொண்டு வழிபடும் பக்தர்களுக்கே ஆன நூல். இதனால்தான் அவருக்கென்றே தீர்ந்த பக்தர்கள் அவரை அழைக்கும் ''ஸ்வாமி'' என்ற பெயரையே இதற்கு முகுடமாக இட்டிருக்கிறது.

ஸ்வாமியின் அவதாரத்வத்தை அலசும் அநேக விஷயங்கள், குறிப்பாக அவர் ஷிர்டி யவதாரத்தின் மறுபதிப்பு என விவரிக்கும் பல விஷயங்கள், 'மிரகிள்' ஆத்மிகத்துக்கு உகந்ததா என்ற ஆராய்ச்சி, ஸ்வாமியைப் பற்றிக் கூறப்படும் பல குற்றச்சாட்டுகளின் விசாரணை — ஆகியன இந் நூலில் இருப்பது வாஸ்தவந்தான். ஆனால் இவையெல்லாம் மாற்றுரையோ, நடுநிலைமை யாளரையோ கூட, 'கன்வின்ஸ்' செய்வதற்காக எழுதியதல்ல. ''உன் பக்தியை நீ கவனித்துச் செம்மை செய்து காத்துக் கொண்டாலே போதும். வேறெவருக்கோ என்னிடம் பக்தி இல்லையே என்று கவலைப்படுவதோ, கோபப்படுவதோ, அவர்களை என் பக்தராக்க முயல்வதோ உனக்கு வேண்டாத சிந்தனை; உன்னால் இயலாத காரியம்'' என்பார் நம் ஸ்வாமி. முன்பு ஷிர்டியவதாரத்தில் சரிதை எழுத ஆசி கோரிய அன்னா ஸாஹேப் தபோல்கரிடம், ''உனக்கு மெய்யாக உறுதிப்படுவதைக் கூடுதல், குறைதல் இல்லாமல் அந்தரங்க சுத்தத்தோடு எழுது. ஆனால் உன் கருத்துக்களையே மற்றோரிடம் நிலைநாட்ட வேண்டும் என்ற பிடிவாதம் இல்லாமல் எழுது. மற்றோரின் மாற்றுக் கருத்தை நம்மால் தகர்க்க முடியும் என்றெண்ணி அத் திசையில் முயலாதே'' என்றார். இந்தக் கட்டளைக்குப் பூர்ணமாகக் கட்டுப்பட்டே எழுதியிருக்கிறேன்.

ஆயினும் மேலே சொன்ன ஆராய்ச்சிகள் ஏன் நூலில் இடம் பெற்றுள்ளன எனில், சில ஸாயி பக்தர்களுக்கே இவ் விஷயங்களில் தெளிவு தேவைப்படுகிறது. பலவிதமான பிரசாரங்களைக் கேட்டு இவர்களுக்கும் கலக்கம் உண்டாகி யிருக்

Koviloor Digital Library

கிறது. எனக்கே முன்பு உண்டாயிருக்கிறது. இப்போதும் ஸ்வாமியின் ஸ்வாமித்வத்தில் உறுதிபெற்ற சிலரும் என்னிடம் சில ஐயங்களைக் கூறி விளக்கம் கேட்கிறார்கள். மெய்யான விளக்கம் ஸ்வாநுபூதியே! அந்தச் சொந்த அநுபவத்தை ஸ்வாமிதான் தர முடியும். ஆனாலும் ஓரளவுக்கு நம் சிற்றறிவாலும் விளக்கம் தர வைத்து லீலை செய்கிறார். இப்படி, குழம்பிய பக்தர்களைச் சிற்றறிவின் அற்ப விளக்கத்தாலும் தெளிவுபடுத்த முடிவதை நான் நடைமுறையிலே பார்க்கிறேன். எனவேதான் வேறு பல அடியாருக்கும் இது பயன்படலாம் என்று, ஆங்காங்கே சரிதைத் தேரின் பவனியை நிறுத்தி ஆராய்ச்சி விளக்க 'மண்டகப்படி'கள் நடத்தியிருக்கிறேன்.

மீண்டும் சொல்கிறேன்: நம் அறிவாராய்ச்சிகளுக்கு அப்பாற்பட்ட ஆழம் பொருந்திய பேராழி இக் காவிய நாதன். ஆயினும் அவரே பிரத்தியக்ஷத்தில் காட்டியுள்ள நற்பலனால் ஊக்கப்பட்டுத்தான் சிற்றறிவால் இயன்ற அளவுக்கு விளக்கிக் காட்ட முயன்றிருக்கிறேன். இதனால் கண்ட அநுமானங்களில் சில தவறாகவும் இருக்க ஹேதுவுண்டு. ''ஸாயீச்வரி, க்ஷமா கரோ மா'' என்று மன்னிப்புக் கோருகிறேன். என்னைவிட ஸ்வாமியிடம் பூர்ணசரணாகதர்களான மெய்யடியார்கள் இவற்றில் தப்பிதம் காண நியாயமுண்டு என உணர்கிறேன். ஆயினும் ஆசிரியன் இன்றுள்ள நிலையில் அவனது அறிவின் ஸத்தியத்தை (intellectual honesty) அங்கீகரித்தே ஸ்வாமி இவற்றை எழுத வைத்திருப்பதாகத் திருப்தி கொள்கிறேன். அவரைப் புரிந்து கொள்வதில் என்னைவிடப் பின்நிற்கும் பக்தர்களுக்குத் தெளிவு உண்டாக்க இவ் விளக்கங்கள் உதவுமென்பதே என் நம்பிக்கை.

ஸாயி வட்டத்துக்குள் வந்தும் அவ்வப்போது கலங்கி நிற்போருக்கு என் கோரிக்கை: மாற்றாருக்குப் பலவித ஆட்சேபம் தோன்றலாம். அதற்காக நாம் அவர்களிடம் யுத்தம் தொடங்க வேண்டியதில்லை. இதற்கு இன்னொரு புறம், எல்லா ஆட்சேபத்துக்கும் புத்திபூர்வமான விடை இராது என்பதை உணருங்கள்; பக்திபூர்வமாக நீங்கள் பிரத்தியக்ஷத்தில் உணர்ந்துள்ள அவரது தெய்வத் தன்மையில் ஐயம் எழ இடம் தராதீர்கள்! அவரே சொல்வதுபோல், பெண்டுலமாக ஐயத்துக்கும் தெளிவுக்குமாக ஊசலாடாமல் அவரது ஸ்வாமித்வத்தில் உறுதிப்பாட்டோடு இருங்கள்.

அபிராமி பட்டரின் நினைவு வருகிறது. அவர் காலத்தில் சைவத்தையும் வைணவத்தையும் போல் சாக்தம் தமிழகத்தில் பரவியில்லை. சாக்த சமயத்தைப் பல படித்தாகப் பழித்து சாக்தரான பட்டரையும் பலர் ஏளனம் செய்தனர். அவர் எதிர்ப்பாளரிடமும் அன்போடு ஆனந்தமாகப் பாடினார்:

விரும்பித் தொழும் அடியார் விழி நீர் மல்கி, மெய் புளகம்
அரும்பித் ததும்பிய ஆனந்தமாகி, அறிவிழந்து
சுரும்பிற் களித்து மொழிதடுமாறி, முன் சொன்னவெல்லாம்
தரும் பித்தர் ஆவர் என்றால் அபிராமி சமயம் நன்றே!

Koviloor Digital Library

ஒரளவு சரணுகதி செய்தாலும், அல்லது செய்ய முயன்ருலும் போதும் — பட்டர் சொன்னற்போல், ஸ்வாமி நமக்கு ஆனந்த பாஷ்பத்தையும், புளகாங்கிதத்தையும், ஜீவ-சிவ ஐக்ய ஸ்தானத்திலிருந்து பொழியும் இன்பத் தேனைச் சுவைத்துக் களித்துப் பெறும் போதையையும் எப்போதேனும் ஒரு போதாவது நிச்சயம் அருள்கிருர். சிறுபோதாயினும் அநுபவ ஒரு யுகத்தின் சுக நிறைவைத் தரும். இத்தகைய திவ்ய போதையில் நம்மைப் பித்தராக்கும் "ஸாயி சமயம் நன்றே" என்று சபதம் செய்யலாம். இந்த சாக்த போதை மட்டுமின்றி சாந்த போதமாம் பரம உன்னத அநுபூதியும் வழங்க வல்ல அவரைத் தாராளமாக தெய்வமே எனலாம்.

இப்படிப்பட்ட பேரநுபவம் (தாற்காலிகமாகவேனும்) வாய்க்காவிடினும் பரவாயில்லை. அன்றட வாழ்விலேயே நாம் ஸ்வாமியிடம் பெற்றுள்ள ரக்ஷையைவிடப் பெரிதாக வேறெந்த தெய்வத்தை வழிபடுபவர்தாம் பெற்று விட்டார்கள்? (இருப்பது ஒரே தெய்வம் எனினும், இஷ்ட தெய்வ வழிபாடு என்ற கொள்கைப்படி ஸ்ரீ ஸத்ய ஸாயியையே முழுமுதற் தெய்வமாகக் கொள்வதில் சற்று சலனமுற்ற பக்தர்களுக்காக இது எழுதப்படுவதைக் கருத்திற் கொள்ள வேண்டும்.) துயர் களைவதில், இடர் தீர்ப்பதில், நோயை நலிவிப்பதில், விபத்தை விலக்குவதில், ஆயுர் - ஆரோக்ய - ஐச்வரியங்களைத் தருவதில் நம் ஸ்வாமிக்கு அதிகமாக எவரது இஷ்ட தெய்வந்தான் செய்துள்ளது? கண்ணை இமை காப்பதுபோல் நம்மில் லக்ஷம் லக்ஷம் பேரைக் கட்டிக் காக்கும் அவரினும் ஒரு கடவுளின் தேவை நமக்கு ஏது? 'கிருபாநிதி இவரைப் போலக் கிடைக்குமோ?' என்று நாம் சபதம் செய்து சாற்றும்படியாக அவர் நம்மை எப்படியெல்லாம் கட்டிக் காத்து வருகிருர்?

ஸ்வாமியை ஆசிரயித்ததிலிருந்து நம்மில் அநேகருக்கு,

கண்ணன் எனதகத்தே கால்வைத்த நாள் முதலாய்
எண்ணம், விசாரம் எதுவும் அவன் பொறுப்பாய்ச்
செல்வம், இளமாண்பு, சீர், சிறப்பு, நற்கீர்த்தி,
கல்வி, அறிவு, கவிதை, சிவயோகம்,
தெளிவே வடிவாம் சிவஞானம், என்றும்
ஒளிசேர் நலமனைத்தும் ஓங்கி வருகின்றன காண்!

என்ற கவி வாக்கு பிரத்தியக்ஷ சத்தியமாகியிருப்பதால், இவ் வட்டத்துள் வந்து விட்டோருக்கு, 'பக்தியில் தளராதீர்' என்று எடுத்துச்சொல்கிறேன். நாம் பக்தராக இருப்பதால் நம் ஸ்வாமிக்கு ஒரு லாபமும் இல்லை. எனவே அவருக்குக் கூட்டம் குறையக் கூடாதென்று இதைச் சொல்லவேயில்லை. கிடைக்கத் தகாத பரம நல்ல வஸ்துவை பக்தர்கள் இழந்துவிடக் கூடாதே என்றுதான் சொல்கிறேன்.

சில பக்தர்களின் இவ்விதக் குழப்பத்துக்குக் காரணம் ஆத்மிகப் பெரியார்களிலும், சமயத் துறை முக்யஸ்தர்களிலும் ஒரு சிலர் கூட ஸ்வாமியை ஒப்பிப் பேசாததுதான். இவர்கள் இந் நூலில் 655-657 பக்கங்களைப் பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஸ்வாமியைப் பகுத்தறிவுவாதிகளும் விஞ்ஞான மனப்பான்மையினரும் மட்டுந்தான் சோதித்துப் பார்க்க முடியாது என்றில்லை. (இவ்

Koviloor Digital Library

விஷயமாக 'நிந்தனையும் வந்தனையும்' என்ற அத்தியாயத்தைப் பார்க்கவும்). ஆத்மிகக் கொடுமுடியை எய்திய மஹாபுருஷர் களுங்கூட அவரைப் பரிசோதித்து ஆழங்காண்பது முடியாத காரியமே. ஏனெனில், அவர் ஜடமான சோதனைப் பொருளல்ல. அவரைச் சோதிக்க விரும்பும் மஹாபுருஷர்களையும்விட மாபெரும் சக்தி வாய்ந்த அதி மானஸ ஆற்றல் படைத்தவர் அவர். எனவே அவரும் சோதனைக்கு ஆட்பட மனங்கொண்டாலன்றி, தனிப்பட்ட முறையில் (objective ஆக) அவரை வேறு எவராலுமே — மஹாபுருஷர்களாலுந்தான் — எடை போட முடியாது.

இன்னொன்று. எந்த மஹாபுருஷரானாலும் அநேகமாக அவர் களுக்கும் ஒரு கொள்கைச் சார்பு அல்லது சம்பிரதாயப் பிடிப்பு இருக்கத்தான் செய்கிறது. அதனால் அவர்கள் முற்றிலும் திறந்த மனத்துடன் ஸ்வாமியை ஆராய்வார்கள் என்று சொல்வதற்கில்லை. இந் நிலையில் அவர்களது முடிவு எப்படிச் சரியாக இருக்கும்?

எவ்விதக் கொள்கைச் சார்புமில்லாமல், பௌதிக — சித்த — அதிதமான முறையில் ஒருவரின் உட்திட்பத்தைச் சோதிப்பதில் நிபுணர்களான டைகல் (Diegel) தம்பதியர் சமீபத்தில் ஸ்வாமி யைச் 'சோதித்து' அவரிடமே அவரது 51-வது ஜயந்தியன்று ஸமர்ப்பித்த முடிவுகள் ஸாயி பக்தர்கள் அறிய வேண்டியதாகும். ஹொனலூலுவில் வசிக்கும் இந்த அதீந்திரிய சாஸ்திர வல்லுநர்கள் (occultists) உயிரினத்தைப் பல வகைகளாகப் பிரித்திருக் கிறார்கள். தங்களது சோதனைகளின் மூலம் ஒருவரை இவ் வகைகளில் ஒன்றாக நிர்ணயம் செய்கிறார்கள். இவர்கள் நம் ஸ்வாமி மந்திர சித்தர்களுக்கும் மேம்பட்டவர், அதனினும் உயரிய தெய்வாநுபூதி பெற்ற குரவர்களுக்கும் மேம்பட்டவர், இவ் வகைக்கும் உயரிய ஜீவன் முக்தர்களுக்கும் மேம்பட்டவர், ஜீவன் முக்தருக்கும் உயரிய அவதாரங்களுக்கும் மேம்பட்டவர், அவர் Beingness எனப்படும் பரம ஸத்தியமான மெய்ப்பொருள் நிலையிலேயே வேர் கொண்டவர் என்று தங்கள் 'பரிசோதனை'யால் நிர்ணயித்திருக்கிறார்கள். நம் ஸ்வாமி தாம் மீண்டும் பிரேம ஸாயியாக அவதரிக்கப் போவதாகச் சொல்வதற்கேற்ப இவர்களும், அவர் இன்னம் ஒரு முறை நரவுடல் கொண்டு அவதரிக்க முடியுமென்றும், அதன்பின் ஜோதி வடிவம் கொள்வாரென்றும் கூறுகிறார்கள். பூரண பராசக்தி தானாகத் தன்னை ஓரளவு கட்டுப்படுத்திக் குறுக்கிக் கொண்டு வெளிப்படுவதுதான் அவதார நிலை என்பது இவர்களது கருத்தாதலால், இப்படிப்பட்ட கட்டுப்பாடும் இல்லாதவர் நம் ஸ்வாமி எனக் கண்டு, அவரை அவதார வகைக்கும் உயரிய உச்ச ஸ்தானத்தில் சேர்த்திருக்கிறார்கள். இப்படி அவர்கள் நிர்ணயிக்க முடிந்ததுங்கூட, ஸ்வாமியின் சங்கல்பமானது அவர்களது பரிசோதனைக்கு அநுகூலமாக இருந்ததால்தான். இல்லாவிடில் எந்தக் கொம்பர்களும் அவரை 'டெஸ்ட்' செய்ய வொண்ணாது.

நமக்கு ஒரே 'டெஸ்ட்' நம் நெஞ்சின் நிறைவுதான். இவ் விஷயத்தில் நூலாசிரியன் தன்னுள் அவர் திறந்து விட்டிருக்கும் பிரேமப் பிரவாகத்தை உணர்ந்து, 'கல் நார் உரித்த என் மன்னா, என்று அருணகிரி பாடியதற்கு போல், 'கல் நீர் உருக்கிய என் மன்னா,

Koviloor Digital Library

என்று பாடுகிறான். இவன் பூர்ணத்வத்துக்கு மிகவும் அப்பாலேதான் இன்னமும் இருக்கிறான் எனினும், அவரது அருளில் எத்தனை புன்மைகள் நலியப் பெற்றுவருகிறான் என்பதற்குப் பெரிய பட்டியலே கொடுக்க வேண்டியிருக்கும். எத்தனை சிரத்தையுடன், பொறுமையுடன், பரிசுத்தப் பிரேமையுடன் ஸ்வாமி இதைச் செய்து வருகிறார்? இவனைப்போல் ஆயிரக்கணக்கானவரை இப்படி உய்வித்து வருகிற மஹாசக்திமானை, பரம காருண்யனை தெய்வமாகக் கொள்வதற்கு வேறென்ன 'டெஸ்ட்' வேண்டிக்கிடக்கிறது?

மேலே மஹாபுருஷர்களின் சோதிப்புக்கும் ஸ்வாமி அப்பாற்பட்டவர் என்று சொன்னதால் ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந் நூலில் சில இடங்களில் பல்லாயிரவருக்கு நடமாடும் தெய்வமான ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களைக் குறிப்பிட்டிருக்கிறேன். ஆத்மிகத்துக்கு அற்புதசக்தி விரோதமானதா என்ற மூலாதாரக் கேள்விக்கு முடிவான தீர்ப்பாகவே ஸ்ரீ பெரியவர்களின் அருள்வாக்கைத்தான் மேற்கோள் காட்டியிருக்கிறேன் (பக். 534-5). இதனால் நம் ஸ்வாமியின் ஸ்வாமித்வத்துக்கு அவர்களது சான்றிதழை நான் பெற்றுத் தருவதாக வாசகர் எண்ணிவிட வேண்டாம். பலப் பல ஆண்டுகளாக ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களிடம் நான் ருசித்து வந்துள்ள தெய்விகப் பண்புகளும் அமுத உபதேசங்களும், நான் எழுதும் எவ் விஷயத்திலும் அவரைப் பிணைக்குமாறு செய்துவிடுகிறது. அவ் வகையிலேயே இந் நூலிலும் அவர்களைப் பற்றிய பிரஸ்தாவங்கள் சில இடங்களில் புகுந்துவிட்டன. இதனால் அவர்கள் நம் ஸ்வாமியை 'ஒப்புக்கொள்ளும் பிரச்னையை ஸாயி பக்தர்கள் எழுப்பிக்கொள்ள வேண்டாம். மீண்டும் சொல்கிறேன்: நம்மைப் பொறுத்த மட்டில் சோதனை, சான்றிதழ் யாவும் நம் அன்பிதயத்தின் சொந்த அநுபவம் மட்டுமேயாகும். ஸ்ரீ பெரியவர்களைக் காட்டி ஸ்வாமியை நான் 'நிலைப்படுத்துவதாக' தொனிப்பதற்கு இடம் தருவது சரியல்ல என்றும், இது ஸ்வாமி பெரியவர்கள் ஆகிய இருவருக்கும் செய்கிற தப்பிதம் என்றும் இப்போது (அதாவது சரிதம் அச்சான பின், இம் முகவுரையை எழுதும்போது) காண்கிறேன். இதற்காக மனமார மன்னிப்பும் கேட்டுக் கொள்கிறேன்.

பக்தர்கள் ஒன்றைக் கொஞ்சம் கவனித்தால், பிற சான்று ஏதுமே தேவைப்படாத பாபானந்தத்தின் முழுமையை விரைவே அநுபவிக்கலாம். அதாவது, 'நம் விருப்பங்களை அவர் ஈடேற்றிக் கொடுக்க வேண்டும்' என்றே ஓயாமல் எதிர்பார்த்து இதற்காக பக்தி புரிவதை விட்டு, அவருக்காகவே அவரிடம் பக்தி செய்யும் பாங்கைக் கொஞ்சம் கொஞ்சமாக வளர்த்துக் கொள்ள முயல வேண்டும். இதிலே பெறும் ஆன்மிகமான ஆனந்தத்தை, நயந்து எந்த விருப்பப் பூர்த்தியும் உண்டாக்க முடியாது. அவர் 'செல்வம், இள மாண்பு, சீர், சிறப்பு, நற்கீர்த்தி' எல்லாம் தருவது உண்மையே. ஆனாலும் நம் கர்மா மிக வலித்தாக இருப்பின், தர்ம மூர்த்தியான அவர் இவற்றைத் தந்தேயாக வேண்டும் என்று தாபப்பட்டுப் பயனிராது. மற்ற தெய்வ மூர்த்தங்களையோ, மஹாபுருஷர்களையோ வழிபடுகிறவர்களுக்கு மட்டும் எல்லா வேண்டுதல்களும் நிறைவேறிவிடுகின்றனவா, என்ன? கர்ம கதி என்ற மஹாதர்மம் உள்ளளவும் இதுசாத்தியமே அல்ல.

Koviloor Digital Library

''தர்ம மூர்த்தி'' என்பதால் அடியார்க்கு இன்னொன்றும் சொல்ல வேண்டும். நமக்கு பஜனையும் பூஜையும் புரிந்தால் மட்டும் பக்தராகி விட முடியாது; தர்மசாலிகளாக வாழ்பவர்களே தமது மெய்யடியார்கள் என்று ஸ்வாமி திரும்பத் திரும்பச் சொல்கிறார். எனவே, ஸாயி பக்தர்கள் நல்லற-நல்லொழுக்கங்களை, நிறைந்த அன்பை, ஜீவ தயையை, பரோபகாரத்தை, ஆன்ம சாதனைகளோடுகூட வழுவறக் கைக்கொள்வதில் விசேஷ ஈடுபாடு காட்டவேண்டும். இதைக் கருத்திற்கொண்டே, இவ் விஷயங்கள் குறித்த ஸ்வாமியின் ஏராளமான உபதேச ரத்தினங்களை இச் சரித ரதத்தில் இழைத்திருக்கிறது. ஸ்வாமி சரிதத்தில் சம்பவங்களுக்கும் அநுபவங்களுக்கும் எவ்வளவு முக்கியத்வம் உண்டோ, அவ்வளவு அவரது அருள்வாக்குகளுக்கும் உண்டு.

ஆன்ம நலனை மட்டும் கருதாமல் மற்ற வேண்டுதல்களை முக்கியமாகக் கொள்வது சரியல்ல என்னும்போது நம் ஸ்வாமி விஷயமாகக் குறிப்பாக ஒரு வேண்டுதலைக் கூறவேண்டும். அநேக பக்தர்கள் தம்பொருட்டு ஸ்வாமி ஏதேனும் மிரகிள் விநோதம் புரிய வேண்டுமென ஓயாமல் ஏங்குகிறார்கள். பகுத்தறிவால் பகுக்கவொண்ணாத திவ்ய சக்தி உள்ளது என்று சாக்ஷியம் காட்டவும், சில சமயங்களில் தமது அன்புக்கு ஸ்தூல அடையாள மாகவுமே ஸ்வாமி மிரகிள் என்று சொல்லப்படும் விந்தைகளைச் செய்கிறார். அவருக்கு அதித ஆற்றல் உண்டு என்று நாம் கண்டு கொண்டு, அவரிடம் பக்தி வைக்கத் தொடங்குமளவுக்குத்தான் மிரகிள் நமக்கு விசேஷப் பலன் தருகிறது. அதன் பின், படத்தில் விபூதி வருவதாலோ, தேன் துளிப்பதாலோ, புஷ்ப ஹாரம் சுற்றுவதாலோ நமக்குச் சிறப்பான ஆன்மாபிவிருத்தி ஏற்பட்டு விடுவதில்லை. எனவே இவற்றுக்காகத் தவித்து விண்டு விரிவதில் தசாம்சமாவது நம் சித்தசுத்திக்காக வேண்டினால் ஸ்லாக்ய மாக யிருக்கும். அதுவும்கூட வேண்டாமல், 'அவருக்குத் தெரியா ததா?' என்று திருப்தராக இருந்தால் அது மிக உத்தமம். இதைச் சொல்லக் காரணம், மிரகிளாலேயே ஸ்வாமி சிறப்பாகப் பிரக்யாதி பெற்றிருந்தாலும் அவரோ இதற்கு அடியார் மிகையான முக்யத்வம் அளிக்கக்கூடாது என்பதுதான். ''மிரகிள் எனப்படுபவை என் விஸிட்டிங் கார்டுகளே. உங்கள் வாசலில் வந்து அதைக் காட்டியவுடன் உள்ளே அழைத்துக் கொள் கிறீர்கள். பழகுகிறீர்கள். அதன்பின் விஸிட்டிங் கார்ட் எதற்கு?'' என்கிறார்.

அவரது மிரகிள்களைப் படிக்கும்போது திவ்ய சக்தியையும், லீலா விநோதத்தையும் உன்னி உவகை உறுகிறோமே, அதுவே போதும். நம் ஒவ்வொருவர் பொருட்டும் அவர் இவற்றைச் செய்ய வேண்டும் என்று மனத்தைக் கசக்கிக் கொள்ள வேண்டாம். ஸாயி ஸமுத்திரத்தின் மேன் மட்டத்தில் ஓடும் வண்ண வண்ண மிரகிள் மீன்கள் நமக்குப் பார்க்கப் பார்க்க அழகாக இருப்பினும், நம் லக்ஷியம் கடலடியில் கொழிக்கும் ஞான-ப்ரேம முத்துக் குவியல்களைப் பெறுவதுதான் என்பதை மறக்கலாகாது. அவரது சரித ஸமுத்திரத்துக்கும் இதுவே பொருந்தும்.

Koviloor Digital Library

முதலில் சரித கங்கை என்றேன். இங்கு சரித ஸமுத்திரம் என்கிறேன். பரம புனிதத்வத்தைக் கருதி கங்கை என்றேன். விஸ்தார விச்சையும், ஆழத்தையும் கருதினாலோ அது ஆயிரம் கங்கைகளை விழுங்கும் மஹா ஸமுத்திரமாகும். உங்கள் கை கனக்க வந்தமர்ந்துள்ள இப் பெரிய நூலும் அந்த மா கடலின் சில பல அலைகளே. (இது சரியாக 1008 பக்கங்களாகி யிருப்பது வெகு விசேஷம். ஸஹஸ்ர நாமமாக ஆயிரம் புஷ்பங்களும், அஷ்ட குணங்களுக்காக எட்டுப் புஷ்பங்களும் அர்ச்சிப்பதே போல அமைந் திருக்கும் அருமையை என்னென்பது?) கரை காண வொண்ணாத ஸத்ய ஸாயிப் பிரவாகத்தில், பிரபாவத்தில், பிரதாபத்தில், பிரகா சத்தில் இது சில குடங்களே எனினும் அவரது பிரேமையாம் பிரஸா தத்திலும் அதன் பயனான பிரமோதத்திலும் பிரபோதத்திலும் பிரசாந்தத்திலும் பக்தரை முழுக்கடிக்க இதுவே போதுமென என்னுகிறேன். என்னளவில் மொள்ளக்கூடியதைப் பூர்ண கும்பமாகத் தருகிறேன்.

கண்ணன் எவற்றிலெல்லாம் தன் மகிமை தெற்றென வியாபித்துள்ளது என்பதற்கு விரிவான பட்டியல் தந்து, முடிவில் சொன்னான்:

ந அந்தோஸ்தி மம திவ்யானாம் விபூதீனாம் பரந்தப |
ஏஷ து உத்தேசத: ப்ரோக்தோ விபூதேர் விஸ்தரோ மயா ||

''என் திவ்ய மகிமைகளுக்கு முடிவே இல்லை. இங்கே சொன்னதெல்லாம் அவை எவ்வளவு விஸ்தாரமானவை என்று குறிப்பால் உணர்த்தத்தான்.''

நம் ஸ்வாமி மகிமையைக் குறிப்பாலுணர்த்தும் சங்கேதம் தான் இந்தப் பெரிய நூலும்.

அன்றன்றும் அவர் புரியும் அனந்த அருள் லீலைகளை எவரே அறிவார்? தாம் அருள் புரியும் பலருக்கே அருளை மட்டும் காட்டி, அதைப் புரிவது ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபா என்ற வடிவம் கொண் டிருப்பதைக் காட்டாத அதிசயத் தியாகி ஆயிற்றே நம் காவிய பதி! எனவே உலகுக்குத் தெரிந்த லீலைகளைவிடத் தெரியா லீலைகளே அதிகம் இருக்கும். லீலைகளை அவராக வெளியிடுவது வெகு வெகு வெகு அபூர்வமே. லீலைகளுக்குப் பாத்திரமானோரில் அதை அறிந்துங்கூட வெளியிட்டவர் சொற்ப சதவீதமே யிருப்பர். இப்படி யெல்லாமிருந்தும் இதைப்போலப் பலப்பல நூல்கள் எழுதுமளவுக்குச் சுவையான தகவல்கள் கிடைத்துள்ளன. அவற்றிலிருந்து தேர்ந் தெடுத்த பொறுக்குமணிகளே இப் புத்தகத்தில் ஒளிர்வன. வற்றாமல் வழங்கும் காமதேனுவான வரலாற்றில், நம் ஆன்ம ஆரோக்கியமாம் ஆனந்தத்தைத் தர இவ்வளவு போதும் என்று சில குவளைகளோடு திருப்தியுடன் நிறுத்தி விட்டிருக்கிறேன்.

ஆர் அறிவார் எங்கள் அண்ணல் பெருமையை?
ஆர் அறிவார் இந்த அகலமும் நிகளமும்?
பேர் அறியாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேர் அறியாமை விளம்புகின்றேனே!

(நூலாசிரியர்)

Koviloor Digital Library

ஸ்வாமியின் வேரை — உள் மூலத்தை — எவருமே அறிய முடியாதுதான். அவரருளால் அவ் வேரோடு வேருக இன்றி, பரம ஸத்தியத்தை அநுபவிக்க முடியலாம். அப்போதுங்கூட அதை அறியவோ, உரைக்கவோ முடியாது. ஆனல், வேரிலிருந்தெழுந்த மஹா விருக்ஷம் கப்பும் கிளையுமாக விரிந்து பரந்து, வேரைப் போலன்றி நம் கண்ணுக்குத் தெரிகிறது. அதன் கனிகளை நாமே பறித்து ருசிக்க முடிகிறது. சுற்றிச் சுற்றி வந்தாலும் எத்தனை கிளைகள் என்றே கணக்கிட முடியாத ஸாயி மஹா விருக்ஷத்துடைய ஸத்ய வேரின் பலனுகக் கனிந்துள்ள கருணை விலைக் கனிகளில் நம் இதயப் பசி திர இவ்வளவு போதும் என்று சில கூடைகள் பறித்துத் தந்திருக்கிறேன்.

★

அவருக்கு ஜீவாதார வேர் ஸத்தியம் எனில், இந் நூலுக்கும் உயிர்மூலமாக ஒரு ஸத்தியம் உள்ளது. அதுவே இதன் சிறப்பு. நூலாசிரியன் சிறியவனுயினும் ஸத்தியம் ஸத்தியந்தானே? இந்த ஸத்தியம் என்ன? 'ஸத்ய ஸாயி நம் சொந்தச் சரக்கு; நாம் சாக்ஷாத்தாக அநுபவிப்பது' என்பது தான். 'அவருக்கு இத்தனை ஆற்றல் உண்டா, அருள் உண்டா, அறிவு உண்டா? வறுமையிலும், வியாதியிலும், விபத்திலும், வியாகுலத்திலும் அவர் அபாரமாகக் காப்பது உண்மையா? இதற்கெல்லாம் மேலாக, நம்மை நம்மிடமிருந்தே காப்பாற்றி ஸன்மார்க்கத்தில் செலுத்தி ஆன்மப் பேரநுபவங்களை அளிக்க அவர் வல்லவர்தாமா?' என்றெல்லாம் நமக்கு ஐயப்பாடே இல்லை, பாருங்கள்! பிறர் எழுதியோ, சொல்லியோ நம்பிக்கையின் மேல் ஏற்க வேண்டியவையல்ல நம் கதாநாதரின் விதவித மகிமைகள். பிரத்தியக்ஷத்தில் அநுபவிக்கிருேம். நம்மளவில் பெற்ற அநுபவத்திலிருந்தே, பிறரது—இதற்கும் உயர்ந்த அநுபவங்களையும் உறுதியுடன் ஏற்றுக்கொள்கிருேம். 'நம்பிக்கை' என்று மட்டும் நிறுத்த முடியாத இந்த உறுதியும் சொந்த அநுபவத்துக்கே சமதை யாகிறது. சொந்த அநுபவம் என்பதன் ஸத்யத்வமே இந் நூலின் சிறப்பு.

தன் நூலுக்குத் தானே 'சிறப்பு' சொல்லிக்கொள்வது அகம்பாவத்தில் அல்ல. அகம்பாவப்பட நமக்கு லவலேசமும் உரிமை யில்லை என்பதை நம் மஹா மஹாப் பிரபுவின் சந்நிதியிலன்றி வேறெங்கு உணரப் போகிருேம்? இம் முன்னுரை மட்டுமின்றி, நூல் முழுதுமே இதயத்திலிருந்து ஸத்தியமாக வரும் அக வுரையே அன்றி, அகம்பாவ உரை அன்று. இதில் வருவ தெல்லாம் உண்மை, உண்மை, உண்மையே என்று ஆசிரியனை உணர வைத்து, பிறருக்கும் அப்படிச் சொல்லுமளவுக்கு ஸத்தி யத்தைக் காட்டிக் கொடுத்த ஸ்வாமி, இவன் ஆராய்ச்சியில் இறங்கும்போதும் மனச் சுத்தத்தோடு இவனளவில் உண்மையாகத் தெரிவதையே தைரியத்துடன் கூற வைத்திருக்கிருர். ஸத்ய ஸாயி என்று பெயர் கொண்டவர் ஸத்ய வாசகத்தையே மொழிய வைத் திருக்கிருர். இது அவர் அருள்தான். எனவே, 'சிறப்பு'ம் அவரையே சாரும்.

Koviloor Digital Library

''ஸ்வாமி'' என்ற முகுடத்தைப் பற்றிச் சில:

கவி நயம் கொழிக்க வேறு பெயரிட்டிருக்கலாம். காவிய நாயகனின் இறைமையை அழுத்திச் சொல்வதாயினும், 'பகவான்', 'கண் கண்ட தெய்வம்', 'பிரத்தியக்ஷ பராசக்தி' என்பது போல் தலைப்பிட்டிருக்கலாம். ஆனால், "ஸ்வாமி" என்பதிலுள்ள சொந்தம், எளிமை வேறெந்தப் பெயரிலும் இல்லை. குழந்தைகளும், பாமரரும் இறைவனைப் பேச்சு வழக்கில் 'ஸ்வாமி' என்றுதானே சொல்கிறார்கள்? நம் கதாநாதர் முன் நாம் யாவரும் எளியர் தாம், குழந்தைகள்தாம். அதனால்தான் அவரிடம் பக்தியில் முன்னேறுகையில் நம்மை அறியாமல் 'பாபா', 'பகவான்' என்று சொல்வதைவிட்டு 'ஸ்வாமி' என்று கூறியே இன்புறத் தொடங்குகிறோம். ஆதியிலும் ஷிர்டி பாபா ஷிர்டியை அடையுமுன்னரே அவரருளால், கோதாவரி திரத்தில் புரவியை மீளப் பெற்ற நவாப் தம்மையறியாமல், ''ஸாயி'' என்று கூவியபடிதான் அவரது பாத மலரில் படிந்தார். ''ஸாயி'' என்பது ''ஸ்வாமி'' என்பதன் திரிபே. எல்லாவற்றுக்கும் மேலாக, நம்மிடம் தனித்துப் பேசுகையில் நமது கதாநாதரே தம்மை, ''நான்'', ''எனது'' என்றோ ''பாபா'' என்றோ குறிப்பிடாமல் ''ஸ்வாமி உன் கூடவே இருக்கிறேன். ஸ்வாமி கிருபை உனக்குப் பூர்ணமாக இருக்கிறது'' என்றுதான் சொல்கிறார். பொதுமேடையிலும் தம்மை ஸ்வாமியாக அவர் சொல்லிக் கொள்வதுண்டு.

எளிமையும் மகிமையும் ஒருங்கே கூடியவர் நம் ஸ்வாமி என்பதற்கேற்ப, எளிய ''ஸ்வாமி'' பதமும் மகிமையான பொருள் வாய்ந்ததாகும். 'ஸ்வம்' என்றால் சொத்து, உடைமை. ''ஸ்வாமி'' என்றால் சொத்துக்குரியவன், உடைமையாளன். ''எல்லாம் உன் உடைமையே'' என்றார் தாயுமானார். ஆண்டவன் தன்னையே நாமாக்கி, நம்மை உடைமையாகவும், தன்னை உடையவராகவும் செய்துகொண்டிருக்கிறான். நாம் அவன் உடைமையே; எனவே நம் சொத்துக்களை நாம் எப்படி இஷ்டப்படி ஆள்கிறோமோ, அப்படித் தன்னிஷ்டப்படி அவன் நம்மை ஆள் உரிமை பெற்றவன் என்று உணர்ந்து விட்டால், அதுவே பூரண சரணாகதி; எனவே மோக்ஷ நிலை. இந்தப் பேருண்மையை உணர்த்துவது ''ஸ்வாமி'' என்ற பதமாதலின், நம் நூலுக்கு அதனிலும் பொருத்தமான முகுடமில்லை.

நாம் அவர் சொத்து. ஆனால் நடுவே 'ஸத்ய ஸாயி நம் சொந்தச் சரக்கு' என்கிறேன். கொழுப்பா? அபசாரமா? அல்ல, அல்ல. அவரே ஊற்றிடச் செய்துள்ள அன்பின் ஸ்வாதீனந்தான். இந்த அன்புரிமையில் வேதமே செப்பியதுதானே?

த்வம் அஸ்மாகம். தவ ஸ்மஸி

''நீ எங்களுடையவன், நாங்கள் உன்னுடையவர்.''

(ரிக் : 8–12–32)

Koviloor Digital Library

வேதநாயகனும் நம் ஸ்வாமியும் அமிருத பிந்துக்களாகக் கூறுவாரே: "You are My treasure even if you deny Me; I am your treasure even if you say, 'No'." ''நீங்கள் என்னை ஏற்க மறுத்தாலும் என் செல்வங்களே ஆவீர்; அவ்வாறே நீங்கள் 'இல்லை' என்றாலும் நான் உங்கள் செல்வம்தான்.''

நம்மை உடைமையாகக் கொண்ட ''ஸ்வாமி'' அவர். இதைப் புரிந்துகொண்டு நாம் ''வெறுமே கிடக்க''ப் பழகி விட்டால், ஆஹா, அதனினும் நிம்மதி ஏது? ''எதையும் நீ எப்படி நினைக்கிறாயோ, அப்படியே அது ஆகிறது — யத் பாவம் தத் பவதி'' என்பார் அவர். வாஸ்தவமாகவே ஸ்வாமியான அவரை நாம் உடைமையாளராம் ஸ்வாமியாகவே நினைத்து, அதையே அநுபவமாக்கிக் கொள்ள அவர்தான் அருள்புரிய வேணும்.

✱

நன்றி சொல்லும் நனி சொரியும் பணிக்கு வருகிறேன்.

முதல் நன்றி — ஸாக்ஷாத் ஸ்வாமிக்கு அன்றி யாருக்கு? கிடைக்கத் தகாத பேறாக அவதாரனின் காலத்திலேயே அவதார சரிதையை எழுத வைத்திருக்கிறாரே! எழுத்தில் குறை இருந்தாலும் பக்தர்கள் ''தமது'' ஸ்வாமியைப் பற்றியது என்ற அன்பினாலேயே நிறைசெய்து பேரானந்தப்பட இவனைக் கருவியாகக் கொண்டாரே? பஜனை, தியானம், பூஜை இவற்றைப் போல — பகவானின் சரிதையைக் கேட்பதே பரம பக்தி என்றார் கர்காசாரியர். 'கதாதிஷ்விதி கர்க:' என்கிறது நாரத பக்தி ஸூத்ரம். 'பகவானின் கதை அமுதைப் பருகுவதே ஒரு தனி ஸாம்ராஜ்யம். அது அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய ஸகல பலனும் நல்க வல்லது; தீரம், ஆனந்தம், சாந்தம் இவற்றின் உறைவிடம்; கர்மக் கட்டு என்ற நெருப்பு வெள்ளத்தைக் கடக்க உதவும் நாவாய்; கலியைப் போக்கவல்லது' என்றெல்லாம் தியாக ராஜர் 'ராம கதா ஸுதா ரஸ' கிருதியில் சொல்கிறார். இவ்வளவு பெருமைகளும் பொருந்திய ஸ்வாமியின் சரிதத்தைத் தந்து அடியார் பணி புரிய அடியேனுக்கு அருளிய அற்புதக் கருணை ஸ்வாமி ஒருவருக்கே சாத்தியமானது. இதை எண்ணுகையில் உலக ரீதியிலான நன்றிக்கெல்லாம் மேலான உருக்க உணர்வு ஊற்றெடுக்கிறது.

ஸ்வாமீ! இவ்வளவு பெரிய நூலில் தப்பிதங்கள் இருக்கத்தான் செய்யும். என் மனச் சுதந்திரத்தால் ஏதேனும் தப்பான கருத்துத் தெரிவித்திருந்தால் அதற்குத்தான் உங்களை ''க்ஷமா கரோ'' கோருகிறேனே யன்றி, இதிலுள்ள மற்ற தகவல்களில் ஏற்பட்டிருக்கக்கூடிய பிழைகளுக்காக மன்னிப்புக் கேட்கவில்லை. ஏனெனில் இதெல்லாம் மனித ரீதியில் சகஜந்தான். பெருந் தன்மையில் சக்கரவர்த்தியான நீங்கள் இதைப் பிழையாகவே நினைக்க மாட்டீர்களாதலால், 'மன்னிப்பு, கின்னிப்பு' என்று சொல்லி மனக் கிலேசப்பட நான் தயாராக இல்லை. நீங்கள் அம்மா; நான் குழந்தை. உங்களிடம் விளையாடும்போது

Koviloor Digital Library

அறியாமல் உங்களை இரண்டு கிறல் கிறிறல்தான் என்ன? உங்கள் பக்தக் குழந்தைகள் எல்லோரும் சந்தோஷிக்க, நீங்களே தானே என்னை இச் சரித விளையாட்டை விளையாட விட்டீர்கள்?

இந் நூல் விஷயமாக ஸ்வாமி ஸ்தூலத்தில் நல்கிய அற்புத 'ஒத்துழையாமை'யையும், சூக்ஷ்மத்தில் அருளிய அரும் சகாயத்தையும் உள்ளே சொல்லியுள்ளேன் (பக். 960-1). சரிவரக் கணக்கெடுத்தால் சுமார் ஏழெட்டு மாதங்களுக்குள்ளேயே இவ்வளவு பெரிய நூலுக்கான தகவல்களை நான் சேகரித்து, அவற்றிலிருந்து தேர்வு செய்து, எழுதியும் முடித்திருக்கிறேன். பலவீனனான என்னாலான காரியமா இது? எல்லோரா ஆலயத்தைக் குடைந்து முடித்தபின் தலைமைச் சிற்பி, "நிஜமாக இதை நானா செய்து முடித்தேன்?" என்று வியந்து சுலோகம் எழுதிய நிலையில் தான் நான் இருக்கிறேன்.

சூக்ஷ்மத்தில் ஸ்வாமி இச் சரிதையை நடத்திப் போனதில் அடிக்கோடிட்டுச் சொல்ல வேண்டிய அம்சம் ஒன்றுண்டு. அதாவது, நூலில் தொடக்கத்திலிருந்தே காலவாரியாக (chronologial) வரலாற்றைக் கூறினாலும், ஒவ்வொரு கட்டத்திலும் ஒப்புவமை காட்ட வேண்டிய பிற்காலச் சம்பவங்கள், உபதேசங்கள் ஆகியவற்றையும் கோத்துக் கொண்டே வந்திருக்கிறது. 'சுபம் எய்த சுப்பம்மா' எனற முப்பதாவது அத்தியாயததிலிருந்தோ, காலவாரி அடிப்படையே வெகுவாக எடுபட்டுப்போய், வரலாற்றின் கதி ஒவ்வொருவிதமான லீலையையோ அல்லது குணநலனையோ ஆதியோடந்தம் கூறுவதாக மாறிவிட்டிருக்கிறது. அதிலிருந்து இந் நூல் ஸ்வாமியின் வெவ்வேறு அருள விளையாடல்களில் ஒவ்வோர் இனத்தையும், அவரது குணவியல்புகளையும் அன்றிலிருந்து இன்று வரை வர்ணிப்பதாகி விட்டது. நாற்புறத்திலும், மேலும் கீழும் மோதி வீசிய ஸாயி ஸமுத்திரத்தில் நீந்திக் கரை சேர ஸ்வாமியே அனுப்பிய புணைதான் இந்த ஏற்பாடு என்று கொள்கிறேன். ஸம்ஸார ஸமுத்திரத்துக்கும் புணையான அவரது இணையடிகளை துணை என நெஞ்சார நமஸ்கரிக்கிறேன்.

நன்றி நவிலலில் குருவந்தனம் முக்கியமாச்சே! ஸ்வாமியின் பக்தனாவேன் என்றோ, இவரது சரிதையை எழுதுவேன் என்றோ நான் கனவிலும் நினைக்காத காலத்தில், ஓயாது இவரது லீலைகளைச் சொல்லியும், படங்களைக் கொணர்ந்து மாட்டியும் கொஞ்சம் கொஞ்சமாக என் கல்நெஞ்சைப் பிசைந்து இவரிடம் கனிவித்த என் குட்டி குருமார்களும், வயதால் தம்பிமாருமான சிரஞ்ஜீவிகள் என். துரைஸ்வாமி, வி. ஸாம்பமூர்த்தி, வி. ஸுரேஷ் சந்திர குமாருக்கு—'நன்றி' என்பதை இவர்கள் ஒப்பமாட்டாராதலால்—என் பிரார்த்தனா பூர்வமான ஆசி.

இன்னொரு குழந்தை, இந் நூலின் கைப்படியில் கணிசமான பகுதியை சிரத்தையுடன் முத்தாக எழுதித் தந்த சிரஞ்ஜீவி மோஹன ராமன். என்னோடு எனக்காகவும் ஓடி ஆடிய இரு செல்வர்கள் கே. பாலசந்திரனும், வி. மோஹன் சந்திர குமாரும். இவர்களுக்கும் ஸ்வாமியிடம் வேண்டுதலாக என் வாழ்த்துக்கள்.

Koviloor Digital Library

பகவான் கருணை புரிய நெம்புகோல் போடும் 'புருஷகார' மாக மஹாலக்ஷ்மியைச் சொல்வார்கள். சரிதை எழுத என்னையும் ஊக்கி, இதற்கு நம் பகவான் அநுமதியைப் பெற்றுத் தர ஸ்ரீ வி. கே. கோகக்கையும் ஊக்கிய நண்பர், இலக்கியச் சிற்பி ஸ்ரீ தி. ஜானகிராமன்;

பகவானிடம் சிபாரிசின் வாடை தோன்றுவதாகக்கூட வாயைத் திறக்க முடியாதாயினும் இவ் விஷயமாகப் பேசி, அவரது ஆசியைப் பெற்றுத் தந்த ஸ்ரீ வி. கே. கோகக்.

— இருவருக்கும் புருஷகாரத்துக்கான நமஸ்காரங்கள்.

தங்களது திவ்விய அநுபவங்களை நேரிலும் கடிதமூலமும் என்னோடு தாராளமாகப் பகிர்ந்துகொண்டு ஏராளத் தகவல்கள் தந்த வள்ளல்கள் அனைவரையும் பெயர் கூற முடியாததால் 'அந்தரிகி வந்தனமு' என்று ஆம்னிபஸ் நன்றி கூறுகிறேன்.

குறிப்பாக,

ஸ்வாமியின் மூல ராமாயணமாம் 'ஸத்யம்-சிவம்-ஸுந்தரம்' நூலை எழுதிய வால்மீகியும், அதிலே சேர்க்காத அநேக சுவாரஸ்ய விஷயங்களையும் எனக்கு மனமுவந்து நல்கிய பெருந் தகையுமான ஸ்ரீ என். கஸ்தூரி;

ஸ்வாமி குறித்த அரிய நூல்களை முன்னரே தந்து என் வேலை யைப் பெருமளவு குறைத்துள்ள ஸ்ரீ ஹவர்ட் மர்ஃபெட், ஸ்ரீமதி இந்திராதேவி, மாதுஸ்ரீ நாகமணி பூர்ணையா போன்றோர்;

பல்லாண்டுகள் ஐயனிடம் பழகித் திளைத்து, ஒவ்வோர் அநுபவத்தையும் ருசிக்க எழுதிக் கைப்படியாக நல்கிய ஸ்ரீ ஆர். பாலபட்டாபிச் செட்டியார்;

தாமே நூலாசிரியர் என்பது போன்ற கவலையுடன், சிரத்தை யுடன் விவரங்கள் சேகரித்து அனுப்பிய ஸ்ரீ டி. ஏ. கிருஷ்ணமூர்த்தி;

ஸ்வாமியின் லீலைகளை ஏராளமாகத் தெரிவிக்கும் 'ஸநாதன ஸாரதி' ஏட்டின் ஆரம்ப இதழிலிருந்து ஒன்று விடாமல் தந்துதவிய ஸ்ரீ ஆர். ராஜகோபாலன்;

புகைப்படங்களை அன்புற வழங்கிய ஸ்ரீ என். ரமணி -- நாக ராஜன்; ஸ்ரீ ஸுதாகர் — கே. வி. ராமசந்திரன்; ஃபோட்டோ எம்போரியம் ஸ்ரீ கதிரேசன்; (கோவை) ஸ்ரீ மாணிக்கம்; ஸ்ரீ டி. வி. ராதாகிருஷ்ண செட்டியார்; ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் — ஸ்வாமிநாதையர்; ஸ்ரீ ஆர். வேங்கடராமன் — பாலகிருஷ்ணன்; ஸ்ரீ எம். கே. சூரிய பிரஸாத் ராவ்;

இதய சுத்தமான ஈடுபாட்டுடன் 'ப்ரிண்ட்'கள் போட்டுத் தந்த ஸ்ரீ கணேஷ்ராம்;

தங்கள் பேரை வெளியிடக்கூடாது என்று சத்தியம் வாங்கிக் கொண்டு பேருபகாரம் புரிந்துள்ள உத்தமமான ஸாயி பக்தர்கள்;

தமக்கே உரிய சத்திய தீரத்துடன் இந் நூலுக்கென மிரகின் களின் வைதிகப் பிராமாண்யத்தை எடுத்துக் கூறி எழுதியளித்த ப்ரஹ்மஸ்ரீ அக்னிஹோத்திரம் ராமாநுஜ தாதாசாரியார்;

தமிழக ஸாயி ஸமிதிப் பிரமுகர்களான ஸர்வஸ்ரீ டி. கே. தாமோதர ராவ், பி. ஜி. அச்சுதானந்தம், கே. ஜி. மாணிக்கவாசகம்; (கோவை) டாக்டர் புன்னைவனம்:

— இவர்கள் அனைவர்க்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன்.

இறுதியாக, இது புத்தகமாகி உங்கள் கையில் கனக்க விழச் செய்திருக்கிறார்களே, அவர்களுக்கு எவ்வளவு நன்றி சொன்னால் தான் போதும்? இந்த திவ்விய மாத் திருப்பணியை மனமார மேற்கொண்ட 'பூம்புகார் பிரசுர' அதிபர் ஸ்ரீ பிரதாப் சிங்கும், நிர்வாகி ஸ்ரீ மே. ச. பரதனும் இதை ஒப்பற்ற கலைப் பண்டமாக்கத் தங்களாலான அனைத்தும் செய்து என் நன்றியோடு உங்கள் அனைவரது வாழ்த்தையும் பெறுகிறார்கள்.

நாதன் அச்சுக்கூடத்தார் அருமையான முறையிலும், விரைவாகவும் (அவ்வப்போது ஸாயி ஸ்பீடில்) இதை அச்சுக் கோத்து அச்சிட்டுத் தந்து நன்றியறிதலுக்குப் பாத்திரமாயிருக்கிறார்கள்.

இதனைக் கண்ணுக்கு விருந்தாக்கியுள்ள ஸ்ரீ விஜுவும், ஸ்ரீ கல்பனாவும் ஓவியப் பொறுப்பை வெகு நேர்த்தியாக ஈடேற்றி நன்றி கொள்கிறார்கள்.

அச்சுத் தாள்களைச் சோதித்த ஸ்ரீ சினி. விசுவநாதன் ப்ரூஃப்-ரீடராக மட்டுமின்றி ஸ்வாமியின் பக்தராகவும், ஆசிரியரின் ரஸிகராகவும், துளித்துளி ஆசிரியராகவுமே இருந்து மிகுந்த ஈடுபாட்டுடன் தம் பணியை ஆற்றி நிறைந்த நன்றிக்கு உரியவராகிறார்.

இவர்கள் யாவருக்கும், வாசக பக்தர்களான உங்கள் அனைவருக்கும், எப்பொழுதும் எவருக்குமுள்ள நம் ஸ்வாமியின் அநுக்கிரஹத்தை நெஞ்சாரப் பிரார்த்தித்து, துளஸீ விவாஹ சுபதினமான இன்று இக் காவிய கன்னிகையை ஸ்ரீ ஸாயிக் கண்ணனுக்கு நிவேதிக்கிறேன். கண்ணன் பிறந்த திருநாளில் நூலின் முதல் அச்சுத்தாள் எனக்குக் கிடைக்குமாறும், துளஸீ கல்யாண நன்னாளில் முகவுரையை நான் முடிக்குமாறும் அருளிய ஸாயி கிருஷ்ணன், ராதா-கிருஷ்ண மஹோத்ஸவ தினமும் ராதா-கிருஷ்ண அவதாரமான ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபுவின் ஜயந்தியுமான இந்த ஹோலி பூர்ணிமையன்று (மார்ச் 5, 1977) இதை நூல் வடிவில் உங்கள் அனைவருக்கும் நிவேதிக்கச்செய்து, தமது கருணையின் முழு நிலவை நம் அனைவருக்கும் பொழிகிறார்.

சென்னை-600 053
நள ஆச்வியுஜ சுத்த த்வாதசி
(3—11—1976)

ரா. கணபதி

Koviloor Digital Library

பதிப்புரை

ஸத்ய தரிசனம்

ஒவ்வொரு நாளையும் அன்பில் தொடங்குங்கள்; ஒவ்வொரு நாளையும் அன்பில் தொடருங்கள்; ஒவ்வொரு நாளையும் அன்பில் செலவழியுங்கள்; ஒவ்வொரு நாளையும் அன்போடு முடியுங்கள்; ஒவ்வொரு நாளையும் அன்பால் முழுக்கடியுங்கள்; இதுதான் பகவானிடம் சேரும் வழி.

— பிரேம ஸாயியின் ஸத்ய மணிவாசகம்

அற்புதங்கள் புரிந்து வரும் மகாலீலா விநோதரை — வியாதி சிகித்ஸரை — மரணத் தாரகரை — அற்ப விஷயங்களிலும் கட்டிக் காக்கும் பக்த வாத்ஸல்ய நிதியை—அறத்தையும், ஆன்மிகத்தையும், பக்தியையும், பஜனையையும், அன்பையும், இன்பையும், தினே தினே பரப்பி வரும் தர்மக் கற்பகத் தருவை — தன்னலம் இழந்த தியாக மேருவை — நானிலம் முழுதும் கோடாநுகோடி மக்களால், 'பிரத்தியட்ச பகவான், முழு முதற் கடவுள், அசல் பரம் பொருள்' என்றே போற்றித் துதித்து வழிபடப்பெறும் ஸ்வாமி ஸ்ரீ ஸத்யபாபா அவர்களின் திவ்ய சரித வரலாற்றைப் பூம்புகார் பிரசுரம் வெளியிடுவதில் பெருமையும் பூரிப்பும் கொள்கிறது. அதே சமயத்தில், பகவானின் அருட்காப்பியத்தை — ஸத்ய தரிசனத்தின் பெருவாழ்வேயான வரலாற்றுக் காவியத்தை — வெளியிடும் புனிதத்தைக் கிடைத்தற்கரிய பாக்யம் எனவும் கருதுகிறது. ஸாயம்மாவின் கருணைப்பெருக்கு இதற்குக் காரணமோ?

சுருதியும் லயமும் இணைந்த தெள்ளுதமிழ் துள்ளும் கவி நடையிலே — நெஞ்சையள்ளும் விதத்திலே — சூர்ய வம்ஸ தோன்றலாம் ஸ்ரீ ஸத்ய நாராயணனைப் பிராம்மண பாலுடுவாக— மாணிக்க மாணிக்கமாகக் காட்சிப்படுத்தி, ''செப்பனட்லு சேஸ்தாரா?'' என்ற பால ஸத்யாவின் அருளில் அரும்பிய குறும்புகளை அடுக்கடுக்காக விவரித்து, பாலஸாயி ஸத்ய பாபாவான வரலாற்றை விரித்து, வேற்றுமையிலே ஒற்றுமை காண அவதாரமெடுத்த மஹிமையை விஸ்தாரப்படுத்தி, பகைவர்க்கும்

ஸ—II

Koviloor Digital Library

அருள் ஸாயியாம் பக்தவத்சலனை — மரண ஸ்மரணத்திலும் பிறவித் தரணம் தந்து, கடைப்பொழுதிலே கடைத்தேற்றி, கரையேற்றி, இம்மை — மறுமை இரண்டிலுமே ஆபத்பாந்தவனாய் நின்று, நிந்தனையையும் வந்தனையையும் ஒருபோலவே பாவித்து, கனவிலும் கொலையிலும் அளவில அருட் செயல் புரிந்து, சித்து மிறிய 'சித்' விலாஸத்தால் பிரஸித்த ஸித்தராக மட்டுமின்றி, அவதாரமாகவே அலர்ந்து ஸர்வ தேவ ரூபனாகத் திருத்திப் பணி கொள்ளும் ஸத்ய ஸாயியை ஞான ஸாயியாக — பிரேம ஸாயியாக — தியாக ஸாயியாக — வேத ஸாயியாக — ஸர்வமத ஸம்மத ஸாயியாக — தர்ம ஸாயியாக—யோக (கர்ம) ஸாயியாக - சாந்த ஸாயி (ஸத்ய ஸாயி)யாக - ஆனந்த ஸாயியாகப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்துள்ளார், பேராசிரியர் ஸ்ரீ ரா. கணபதி அவர்கள்.

"குரு வடிவாகிக் குவலயம் தன்னில் திருவடி வைத்து" நம் ஸாயி ஸத் குருவாம் அவதாரன் புரிந்துள்ள அற மலர்ச்சியில் நாமும் உத்ஸாகம், உத்வேகம் பெற்று — அதர்மத்தில் அச்சமும், அறத்தில் பற்றும் கொண்டு ஐயனை அற வடிவனாக அநுபவித்து, நவயுக நாயகனைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டு சரணாகதம் அடைந்தால் ஸாயி அருளில் சாயும் நம் துயரமெலாம்!

'தருமப் பயிர் வாழத் தருணமா மழை'யாக வந்துதித்த ஸ்வாமியின் — இறுக்கமான அன்பைக் காட்டி, வியாதி தீர்த்து, விபத்து தீர்த்து, விபரீத சிந்தை தீர்த்து, வினை தீர்த்து அருளும் ஸர்வேச்வரனின் — பாபாத்துவத்தில் உள்ளம் தோய நம்மைப் 'பூரண கும்பம்' வைத்து அழைக்கிறார், ஆசிரியர். நாமும் நம் அஹங்கார, மமகாராதிகளை அழித்துக்கொள்ள ஸாயி ஸத்குருவாம் இறைவனை — வீர ஞானியை — அனைவர்க்கும் மேலோனையான அவனி வேந்தனை — அன்பு வேந்தனை—ப் பணிவோம்:

"குருவை எதிர்கொண்ட போதே
மாற்றான அகந்தையினைத் துடைத்துக் கொள்வோம்;
பேற்றாலே குருவந்தான், இவன்பால் ஞானப்
பேற்றை யெல்லாம் பெறுவோம் யாம்"

என்ற அமர கவியின் ஸத்யவாக்கைச் சிரமேற்கொண்டு பிரேம ஸாயியின் காருண்ய லாவண்யத்தில், 'ஆவியினுள்ளும் அறிவினிடையேயும் அன்பை வளர்த்திடு'வோமாக!

O O O O

இன்று பாபா என்றாலே மிராகிள் என்று நினைக்கப்பட்ட போதிலும், நம் காவிய நாதர் மிராகிள் செய்வது — அற்புதம் புரிவது — ஆத்மிக வழியில் சேர்க்க உதவும் அர்ச்சுவடியாகத் தான். அல்லது எந்தவித நோக்கமுமேயற்ற பரம தூய அன்பு காரணமாகவே அற்புதம் விளைவிக்கிறார்! 'மிராகிள்' மூலம் ஈர்க்கப்பட்டவர்களை — பிறகு பாபா எப்படி அவரவர் பக்குவத்தைப் பொறுத்து பக்குவியாக்குகிறார் என்பதையும் இங்கு

Koviloor Digital Library

நிலைவுகூரத்தான் வேண்டியுள்ளது. பிழைமலிந்த மானுடரை முதலில் தர்ம வாழ்வில் திருப்பி, பிழைகள் குறைந்தவர்களாகத் திருத்துவது; அதற்கு மேல்படியில் அவர்களைப் பக்தராக்கி, தெய்விக அநுபவங்கள் தருவது; யோகம், ஞானம் முதலிய மார்க்கங்களில் உயர்த்துவது; முடிந்த முடிபாக ஆத்மாநுபவம் என்ற மோட்சத்தை அருள்வது — இவை யாவற்றுக்கும் பாபாவின் சரிதத்தில் — ஸாயியின் அருட் காப்பியத்தில் மலர்ந்துள்ள பற்பல உதாரணங்களை இந் நூல் நெடுகிலும் நூலாசிரியர் பேராசிரியர் ஸ்ரீ ரா. கணபதி அவர்கள் இழையவிட்டுள்ளார்.

ஸ்வாமி தமக்கு அற்புத ஆற்றல் இருக்கிறது என்ற பெருமைக்காக சிருஷ்டி செய்பவரேயல்லர். மக்கள் நல்வழிப்பட வேண்டும் என்பதில் அவருக்குள்ள உள்ளார்ந்த அன்பு காரணமாகவே தான்—கருணையாலேதான்—தியாக சீலத்தாலேதான் மிராகிள்கள் எனப்பெறும் அற்புதங்கள் புரிகிறார் என்பதை நூலில் காணப் பெறும் ரஸத் திரட்டு சம்பவக் கோவைகள் உணர்த்துகின்றன.

மிராகிள்களைத் தாமும் ஆயாஸப்படாமல், காண்போரை மூச்சுத்திணற வைக்காமல், சர்வ லகுவாக, லேசாக, லீலையாகச் செய்கிறார். அற்புதத்திற்காக வந்தவர்கள், பேரற்புதமாம் அன்பை உணர்கின்றனர்; அன்பே வடிவேயான இறைவனிடம் நினைவை ஆழ்த்துகின்றனர்; புனித உணர்வைப் பெறுகின்றனர், புண்ணியன் அருட்பார்வையாலே. இவ்வாறு, ஆன்மிகத்துக்காகவே — ஆஸ்திகத்துக்காகவே பாபா அற்புத சக்தியைப் பிரயோகிக்கிறார் என்ற ஸத்ய உணர்வை இந்த அரிய நூல் புலர்விக்கிறது.

அற்புதத்தைக் காட்டி, தெய்வ சக்தியை நம்ப வைத்து அதிலிருந்து படிப்படியாக ஆன்மிகத்தில் உயர்த்துவதே ஸ்வாமி மிராகிள் புரிவதன் பயனாகும். பாமர மக்களைத் தெய்வ பக்தியில் ஈடுபடுத்துவது மட்டும் மிராகிளின் பயன் அல்ல. மாபெரும் விஞ்ஞானிகளையும் தெய்வ நம்பிக்கைக்குத் திருப்புவதும் மிராகிள்தான் என்பதை நிதர்சனமாகக் காட்டிய ஐயன் நம் ஸ்வாமிதான்!

உலக விதியை மீறிய தெய்வ சக்தி ஒன்று உண்டு என்று காட்டவும், அன்புப் பொங்குதலை முன்னிட்டும், ஸ்வாமியின் கருத்துப்படி தேவைப்படும்போது மட்டுமேதான் மிராகிள் புரிகிறார்.

எத்தனை விதமான மிராகிள் உண்டோ அத்தனையும் ஸ்வாமி செய்கிறார் என்பது போலவே, எத்தனை விதமான குறைகள் உண்டோ அத்தனையையும் அவர் சீர்திருத்தி வருகிறார்.

நாஸ்திகம் பேசி, நாத் தழும்பேறியவர்களை நாத் தழுதழுக்க பகவான் நாமம் பாடவைக்கும் பாபாவின் சீர்திருத்தத்தின் பெருமையே பெருமை. ஆம்; நாஸ்திகரையும் ஆஸ்திகப் பாதைக்குத் திருப்புகிறார், நம் ஸநாதன ஸாரதி!

ஸ்வாமியின் அவதாரத்துக்குப் பெரிய சான்று, மிராகிள்களாக வர்ணிக்க முடியாத அவரது பக்த ரக்ஷணந்தான்!

Koviloor Digital Library

பாபா என்றாலே மிராகிள் மனிதர் என்று வாய் புளித்ததோ—மாங்காய் புளித்ததோ என்று வாய் கூசாமல் புழுதிப் புயலைக் கிளப்பும் அன்பர்கள் — மக்களது மனத்துக்கு பக்தி உணவும், அறிவுக்கு ஞான உணவும் ஊட்டும் கருணையாளரை - கிருபா தயாளுவை ஏன் நினைக்க மறுக்கிறார்கள்? கர்ம வினையோ, என்னவோ? முன்வினைத் தீவினைப் பயன் தற்போது மறைக்கின்றதோ?

*

'ஸநாதன ஸாரதி'யான நம் ஸ்வாமி வேத வழியை நிலை நாட்டவே அவதரித்துள்ளார் எனலாம். ஸநாதன தர்ம விருட்சம் பூச்சிகளாலும், புல்லுருவிகளாலும் சிதிலமாகி வருவதைத் தடுத்து, அதைப் புதுத் தளிர்ப்பு கொள்ளச் செய்யவே ஸ்வாமி அவதரித்துள்ளார் என்பதில் ஐயமில்லை. ஆம், ஸத்ய பாபா ஸத்ய யுகமாம் கிருத யுகத்தினை மீளவும் படைக்கவே அவதாரம் எடுத்துள்ளார்.

இன்னும் சொல்லப்போனால், மக்கள் குலத்தை முன்னேற்ற வேண்டும் — உய்விக்க வேண்டும் என்ற பிரேமையால் பாபா அவதரித்துள்ளார் எனவும் கொள்வதில் தவறில்லை. மக்களுக்காக அவர் அனவரதமும் உபதேசித்து, கலியுகத்தின் பிரத்யேகமான ஆத்மசாதனையாய் நாம ஸங்கீர்த்தனம் செய்வது, எழுதுவது, சஞ்சாரம் செய்வது அனைத்தும் இறைவன் ஒருவனுக்கே இருக்கக் கூடிய பரம காருண்யத்தின்மீதுதான் என்பது தெளிவு.

"அன்பும் ஆண்டவனும் ஒன்றே என்பதை நிரூபிக்கத் தான் நான் வந்திருக்கிறேன்.... உங்கள் இதய விளக்கில் அன்புச் சுடரை ஏற்றி வைக்கவே வந்திருக்கிறேன்" என்னும் ஸ்ரீ பகவான் பிரேம வாசகத்தைத் தினமும் நினையுங்கள். ஆம்; அன்பே வடிவாகி மக்களை அன்பு மழையில் மூழ்கடிக்கவே இறைவன் அவதரித்துள்ளார்.

நூலாசிரியராம் பேராசிரியர் ஸ்ரீ ரா. கணபதி அவர்கள் கூறுமாப்போல, காணிகாணியாகப் பசுமை கொட்டும் வயலிலிருந்து ஓரிரு பயிர்க் கதிரை மட்டும் காட்டுவதேபோல் இச் சரிதையில் ஸாயி லீலைகளைச் சுருக்கித்தான் தர முடிந்துள்ளது.

ஏழைகளிடமும் ஏதலர்களிடமும் பாபாவின் உள்ளம் அனிச்ச மலராகக் குழைந்ததை — மாக்களிடம் மாதேவன் பேரன்பு பொழிந்ததை — ஏன், எல்லா உயிரினங்களிடமும் இதயத்தை இழைய விட்டு, அவற்றின் நலனைக் கோரியதை — எல்லாம் இம் மதுர காவியத்தில் விரியக் காண்கிறோம்.

கர்ம கதியை அநுசரித்தே பாபாவின் கருணை கதி செல்கிறது என்பதையும், மரணத்திலிருந்து காப்பு — மரணத்தின் மூலமே காப்பு என்கிற அருட்காப்புக்களையும், கோடானு கோடி மக்களில் ஒவ்வொருவருக்கும் உள்ள கோடி கோடி கர்மங்களையும் தம் அற்புதத்தால் மாற்றிவிடவில்லை — அப்படி மாற்ற ஸ்வாமி எண்ணவும் இல்லை என்பதையும் — இந் நூலில்

Koviloor Digital Library

ஆழமும் அழுந்தமும் வாய்ந்த அநுபவங்களைக் கொண்டு நயமுற — கனிவுற விளக்கியுள்ளார் ஆசிரியர்.

'நாலிருக்கப் பயமேன்' என்று அருள்பாலித்த ஷிர்டி பாபாதான் பர்த்தி பாபா என்பதைத் தகுந்த ருஜுக்களுடன் தெளிவுற சிந்திப்பார்க்கே மட்டுமேயன்றி, மற்றவர்க்கும் விளங்கும்படி விளக்கிக் காட்டிய பான்மை நூலின் தனிச்சிறப்பு.

பர்த்தியில் தொடங்கி, பாரதத்தில் பரந்து, இன்று பாரெல்லாம் ஒப்பும் உயர்வுமின்றிப் பரவியுள்ள 'பாபாத்துவம்' பற்றி நூல் முழுதும் நீள நெடுக பரக்கக் காண்கிறோம். ஆன்மிகம், ஆஸ்திகம், அறநெறி ஆகியவற்றில் தனியொருவரேயான ஸ்வாமியினால் நவ கண்டங்களிலும் ஏற்பட்டுள்ள புத்துணர்ச்சியை—மறுமலர்ச்சியை—புது விழிப்பை மிக நயம்பட நூலில் கோடிட்டுக் காட்டியுள்ளார் நூலாசிரியர்.

தமிழ், ஆங்கிலம், ஸம்ஸ்கிருதம் ஆகிய பன்மொழிகளில் பாண்டித்யம் பெற்றுள்ள ஸ்ரீ ரா. கணபதி அவர்கள் தமக்கே உரிய பாணியில் வரலாற்று நூலை — அதி உன்னத, அதி புனித திவ்ய காவியத்தை — உள்ளத்தைக் கொள்ளும் முறையில், ஏன், உருக்கும் வகையிலேயும்கூடத்தான் — எழுதியிருக்கிறார்.

வியாஸர் அருளிய பாரதத்தை மஹா கணபதி எழுதியது, புராண வரலாறு!

ஆனால், பகவான் ஸத்ய ஸாயி பாபாவின் புனித காவியத்தை ஸ்ரீ ரா. கணபதி அவர்கள் எழுதியுள்ளது நிதர்சன உண்மை!

வேத வியாஸர் பகவான் என்றே அழைக்கப்படுகிறவர்.

நூல் முழுதும் ஆசிரியரின் உள்ளொளி பேசுகிறது. தாம் கண்டதையும் கேட்டதையும் படித்ததையும் மட்டுமே வரலாற்று நூலில் எழுதி விடாமல், அவற்றிற்கும் பட்டை தீட்டி, மெருகு கொடுத்ததோடு நிறைவு பெறாமல், தம் சொந்தப் பாங்குடன் இழைந்து நிற்கும் "பாபாத்துவ" இன்பத்தையும் இழைத்துப் பின்னிப் பிணைத்திருப்பது நூலுக்குத் தனி சோபையை யளிக்கிறது. ஸத்ய உணர்வு வேகம் — ஸத்ய நாராயண நாயகனைத் தரிசிக்கச் செய்கிறது.

வேதங்களிலிருந்தும், ஆகமங்களிலிருந்தும், கீதையிலிருந்தும், ஆழ்வாராதியர் வாக்குகளிலிருந்தும், அமர கவி தமிழகம் தந்த மகாகவி பாரதியாரின் பாடல்களினின்றும், பைபிளிலிருந்தும், மற்றும் பல படைப்புக்களினின்றும் பற்பல மேற்கோள்கள் காட்டி, அவற்றைத் தகுந்த இடங்களில் மிக அழகாக — வெகு நளினமாக — லாகவமாகப் பயன்படுத்திப் பொருத்தியுள்ள ஆசிரியர் திறனை என்னவென்று புகல; அவரது ஆழ்ந்த அறிவாற்றலை — நுண்ணிய, செவ்விய புலமையை என்னவென்று புகழ! ஸத்ய ஸாயியின் வரலாற்றுத் தொடர்புடையனபோல் திகழும் அவை நூலுக்கே உயிர் நாதமாக — ஜீவ கீதமாக ஒலிக்கின்றன.

Koviloor Digital Library

இந்த வரலாற்று அருட் காப்பியம் ஸாயி பக்தர்களுக் கெல்லாம் ஒரு வரப்பிரஸாதம் போல்வதாகும். அது மட்டு மில்லை — பாபாவைப் பற்றிய முழு அளவில் அறிய விரும்பு வார்க்கும் அரிய பொக்கிஷமுமாகும்.

இந்தப் புனித காவியத்தில் ஸ்வாமியைப் பற்றிய அனைத்து விவரங்களும் மிரகிள்களும் ஆதாரத்தோடும் நிருபணத்தோடும் தெள்ளத் தெளிவாக, எதிர்ப்பாளரும் கண்டு வியக்கும்படி — திறந்த மனத்தோடு இருந்தால் ஏற்கும்படி — எழுதப்பட் டுள்ளன.

தமிழில் ஸ்வாமியைக் குறித்து வெளிவந்துள்ள நூல்களுக் கெல்லாம் இந் நூலே சிகரம்போல்வதாகும்.

எழுத்துக்கு எழுத்து, வார்த்தைக்கு வார்த்தை அழகும் உண்மையும் ஆழப் பதிந்து ஆத்மாநந்தமாக — ஆத்மார்த்தமாக எழுதப்பட்டுள்ள — ஸாயியின் கருணை வெள்ளத்தைப்போல் — மாபாரதம்போல் வளர்ந்துள்ள — இந்த ஸத்ய ஸாயி தரிசன புனித நூலை வாசகர்களாகிய உங்கள் அன்புக் கரங்களில் நேயமுடன் தவழ விடுகிறது, பூம்புகார் பிரசுரம்.

நேசமுடன் நம்மையெல்லாம் வினையிலிருந்தும் — விபத்தி லிருந்தும், வியாதியிலிருந்தும் கைதூக்கி விடும் காப்புத் தெய்வமாய் அன்புக் கடவுளிடம் நம்மை ஒப்புக்கொடுப்போம்:

சித்தத் துணிவினை மானுடர் கேள்வனைத்
தீமை பழிப்பவனை—நன்மை
சேர்த்துக் கொடுப்பவனை—பல
சீர்கள உடையவனைப்—புவி
அத்தனையும் சுடரேறத் திகழ்ந்திடும்
ஆரியர் நாயகனை—உருத்திரன்
அன்புத் திருமகனைப்—பெருந்திரளாகிப்
பணிந்திடுவோம்—வாரீர்!

என அமரகவியின் வாக்காலே அழைக்கிறோம்.

எங்களின் அன்பு வேண்டுகோளுக்கிணங்க மிகச் சிறந்த முறையில் காவிய நாதனின் சரித நூலை எழுதித் தந்த பேராசிரியர் ஸ்ரீ ரா. கணபதி அவர்களுக்கும், நூல் சிறக்க உதவிய நண்பர் களுக்கும் எங்கள் நன்றியும் வணக்கமும்.......

— பூம்புகார் பிரசுரம்

Koviloor Digital Library

பொருளடக்கம்

அத்தியாயம்			பக்கம்
1.	சுருதியும் லயமும்	..	1
2.	ஆலவாயான ஆயர்பாடி	..	9
3.	சூரிய வம்ச சூரியன்; ரத்னாகர ரத்தினம்	..	19
4.	ஸத்ய நாராயணன்	..	27
5.	''பிராம்மண பாலுடு''	..	39
6.	யார் அந்தத் தாத்தா?	..	50
7.	மாணுக்க மாணிக்கம்	..	60
8.	''கூறை சோறிவை தந்தெனக் கருளி''	..	70
9.	அருளில் அரும்பிய குறும்பு	..	82
10.	ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே?	..	91
11.	ஸத்யாவின் சபதம்	..	101
12.	சாரணன் ஸத்ய நாரணன்	..	110
13.	''செப்பினட்லு சேஸ்தாரா?''	..	118
14.	இறகு முளைக்கிறது!	..	127
15.	சித்திரவதையிலும் சித்திரத் தாமரையாய்	..	136
16.	அவதாரம் அலர்ந்தது!	..	146
17.	மல்லிகையில் மலர்ந்த மந்திரம்	..	155
18.	வேற்றுமையில் ஒற்றுமை	..	166
19.	பறந்ததே பட்சி!	..	175
20.	பால ஸாயி	..	186
21.	ஸத்ய ஸாயி பாபா	..	196
22.	நானிருக்கப் பயமேன்?	..	206
23.	கற்பகம் கற்பனையல்ல!	..	217
24.	கல்கிதானே?	..	229
25.	பகைவனுக்கருள் ஸாய்!	..	244
26.	சென்னையம்பதியில் ஒரு ஷிர்டி-பர்த்தி	..	258

Koviloor Digital Library

27.	"பாத மந்திரம்"	..	285
28.	சிறிய பாம்பும், வீரியப் பீரும், பிறிய வெள்ளமும்	..	300
29.	பக்தவத்ஸலன்	..	311
30.	சுபம் எய்த சுப்பம்மா	..	328
31.	மரணஸ்மரணம் பிறவித்தரணம்	..	338
32.	ஸாயி அருளில் சாயும் துயரம்	..	353
33.	கடைத்தேறும் கடைப்பொழுது	..	371
34.	இம்மை, மறுமை இரண்டிலும் அம்மை!	..	387
35.	புலியாஸனமும் சிம்மாஸனமும்	..	399
36.	"மருந்துவனாய் நின்ற மாமணிவண்ணா!"	..	412
37.	பிணி தீர்ப்பதும் பிறவி தீர்ப்பதும்	..	424
38.	ஆபத் பாந்தவன்	..	440
39.	"கண்டனே, வெண்டனே, ஜண்டனே, இண்டனே"	..	449
40.	களவிலும் கொலையிலும் அளவில அருட்செயல்	..	463
41.	சிந்தக் களத்திலும், யுத்தக் களத்திலும்	..	478
42.	நிந்தனையும் வந்தனையும்	..	497
43.	பிரசித்த ஸித்தர் மட்டுமா?	..	517
44.	சித்து மீறிய 'சித்' விலாஸம்	..	540
45.	அவதாரம் அல்லவோ?	..	607
46.	"ஸர்வ தேவ ரூபா!"	..	661
47.	திருத்திப் பணி கொள்வான்	..	685
48.	ஞான ஸாயி	..	725
49.	பிரேம ஸாயி	..	746
50.	தியாக ஸாயி	..	782
51.	வேத ஸாயி	..	816
52.	ஸர்வமத ஸம்மத ஸாயி	..	839
53.	தர்ம ஸாயி	..	868
54.	யோக ஸாயி (= கர்ம ஸாயி)	..	909
55.	சாந்த ஸாயி (= ஸத்ய ஸாயி)	..	974
56.	ஆனந்த ஸாயி	..	987

★

Koviloor Digital Library

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
30	26	தமக்கை	தமக்கை வெங்கம்மா
37	11	வெளிப்பட்டது	வெளியிடப்பட்டது
67	24	உனக்கின்ன	உனக்குள்ள
70	10	இந்தாரரூயதொரு	இந்தகையதொரு
,,	15	கருதிஞர்கள்.	கருதிஞர்கள்
77	15	சிருஷ்டித்தார்	சிருஷ்டிக்கிறார்
79	1	கனியுற	கனிவுற
83	30	ஆர்த்தி	ஆரத்தி
135	36	சமாளிக்சு	சமாளிச்சு
138	16	உறுமிஞன்	உருமிஞன்.
139	13	இயதம்	இதயம்
141	38	பிரதியக்ஷத்தில்	பிரத்யக்ஷத்தில்
151	41	கொண்ட பரத்வாஜ	பரத்வாஜ
152	33	மலர்ந்த	மலிந்த
153	3	உறுத்த மாறு	உறுத்துமாறு
163	40	பொருத்து	பொறுத்து
164	3	வெறும், 'வித்தை'	வெறும் 'வித்தை'
172	38	உதவாத	உகவாத
180	25	தம்	தன்
184	40	ஃப்ரான்ஸில்	ஃப்ரான்ஸிஸ்
191	28	பழம் பாக்கி	பழைய பாக்கி
201	37	மூ த்தி	மூர்த்தி
221	7	நிராகர	நிராகார
230	40	பாலஸாலி	பாலஸாயி
262	17	சுமங்கிலி	சுமங்கலி
264	17	கடைலொன்றிலிருந்து	கடையொன்றிலிருந்து
272	8	எழும்புவதற்டு	எழும்புவதற்கு
293	32	மந்திரந்தின்	மந்திரத்தில்
311	9	திருவாசகம	திருவாசகம்
312	27	ஆர்ப்பட்டம்	ஆர்ப்பாட்டம்
322	24	தாங்களிடம்	தங்களிடம்
333	31	ஆஹா மூன்று,	ஆஹா, மூன்று
363	17	ராமோத் விர்	ராமோ த்விர்

Koviloor Digital Library

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
373	29	ஸுசிலா	ஸுசிலா
,,	40	,,	,,
375	6	,,	,,
382	9	ஸூஷ்ம	ஸூக்ஷ்ம
384	13	வாகு கெல்லனி	வாரி கெல்லனு
384	23	தமது	நமது
391	34-35	ஸ்மரணைலேயே	ஸ்மரணையிலேயே
409	31	ஒப்புகொள்வாயாகில்	ஒப்புக்கொள்வாயாகில்
420	15	டென்டிரிக்	டென்டிரிடிக்
,,	37	,,	,,
460	29	யோக்கிதை	யோக்கியதை
463	8	பீரோக்கள், சாமான்கள்	பீரோக்களில்,
487	38	தொழிலாளிகளிடம்	தொழிலாளிகளிடம்,
490	39	நடந்து வந்து	நடந்து வந்த
530	40	இருப்பத்தியோரு	இருபத்தியோரு
531	42-3	உத்தேசித்துத்தான்	உத்தேசித்துந்தான்
536	9-10	''டெலி-கெனெஸிஸ் (ஓரிடத்தே உள்ள பொருளை இன்னோரிடத்துக்குப் பெயர்த்து வருவது)'' — என்ற பதங்களை நீக்கி விடவும்	
,,	14	டெலிகைனெஸிஸ்	டெலிகைனெஸிஸ்
,,	42	மேதையான எடிங்டன்	மேதையரான ஸர் ஜேம்ஸ் ஜீன்ஸ், எடிங்டன்
541	3-4	நிர்ந்திருக்கலாமாமாயினும்	நிர்த்திருக்கலாமாயினும்
563	15	நீலநாட்டப்	நீலநாட்டிப்
570	2	மல்லிகை	மல்லிகையை
589	25	ஸர்ப்ப ஸாந்தி	ஸர்ப்ப சாந்தி
607	2	கிறுஸ்துக்கள்	கிறிஸ்துக்கள்
609	33	இவர்களில்	இவர்கள்
634	40	அவ்வது	அவரது
638	43	தந்திருக்கிறதே!?	தந்திருக்கிறதே!)
640	11	'பாபாவா'	'பாபாவா,
646	39	சொருகிறுர்	சொருகினுர்
658	36	பாடிறுர் போல்	பாடினுற்போல்
659	30	அநுபவ	ஸ்வாநுபவ
667	2	ஸப்த ஸதி	ஸப்த சதி
,,	5	,,	,,
,,	21	,,	,,
684	1	ஜாகநந்தனே	ஜகநந்தனை
693	13	அதிகாரியாகி	அதிகாரியாக

Koviloor Digital Library

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
720	36	(imperceptible)ஆக	(imperceptible-ஆக)
732	11	பிரஸன்னமாக	பிரஸன்னமாக
742	36	ஆனந்தமா(கி)யத்	ஆனந்தமா(கி)ய
756	25	பின்பற்றுவதால்	பின்பற்றுவதில்
758	25	பக்தி; ஒன்று	பக்தி ஒன்று;
,,	36	சக்தி	பக்தி
763	43	தாரையாகச்	தாரையாகக்
766	7	மாஹபலி	மஹாபலி
,,	11	உயர்வு	உணர்வு
775	39	ஒன்றை	ஒற்றை
781	32	இன்னும்	இன்றும்
787	28	பத்திரிக்கைக்காரர்கள்	பத்திரிகைக்காரர்கள்
,,	32-3	பத்திரிக்கைக்கு	பத்திரிகைக்கு
,,	35	பத்திரிக்கைக்காரர்கள்	பத்திரிகைக்காரர்கள்
807	35	கொண்டார்?	கொண்டார்.
815	34	ஸயனம்	சயனம்
820	29	நம்முள்	நம்முன்
828	4	முனைவாள்	முளைவாள்
845	21	பயிற்றுவது	பயிற்றுவிப்பது
,,	28	இந்திரீயாதீத	இந்திரியாதீத
858	24	விடுகின்றன!	விடுகிறது!
866	7	ஆச்ரிதர்கள்	ஆச்ரிதர்களை
878	6	ஹ்ருஷீசேகன்	ஹ்ருஷீகேசன்
891	41	திவ்	திவ்ய
904	5	பொங்கு மாங்கடல்	பொங்கு மாகடல்
917	37	அவரவர்களை	அவரவர்களின்
924	14	ஒருவரைப்	ஒருவரை
927	30	சராந்தஸ்ய	ச்ராந்தஸ்ய
932	9	அதே	அதை
941	1	நான் என்னை?	நான்? என்னை
947	4	சேமியாயோ	சேமியாவோ
956	12	வடக்கத்தி	வடக்கத்திய
967	23-4	சுபகாரியங்களுக்கே	சுமங்கலிகளுக்கே
982	32	சேஷஸாயி	சேஷசாயி
984	4	ஃளாட்களுக்கு	ஃப்ளாட்களுக்கு
987	1	அறிந்தாா.	அறிந்தார்.
988	15	ஆனந்தம்.	ஆனந்தம்,
992	31	பந்துக	பந்நுக
999	8	மங்களாரத்தில்	மங்களாரத்திப்
1006	11	புறமெரித்த	பரமெரித்த
1007	7	வேண்டும்?	வேண்டும்
,,	16	குண்டலினீ	குண்டலினீ

Koviloor Digital Library

புகைப்படப் பொருளடக்கம்

படம் 1 : பிரசாந்தி நிலைய வடக்கு வாயில் விநாயகர்

படம் 2 : பிரசாந்தி நிலையக் கிழக்கு வாயில் விநாயகர்

படம் 3 : ஷிர்டி ஸாயி பாபா (ஸத்ய ஸாயி பாபா சிருஷ்டித்த சித்திரம்)

படம் 4 : பிரசாந்தி நிலையத்திலுள்ள ஷிர்டி விக்ரஹத்துடன் ஸ்வாமி

படம் 5 : ஷிர்டி ஆலயத்தில் மூலவரும் ''உத்ஸவ'' மூர்த்தியும்.

படம் 6 : ஷிர்டி ஆலயத்திலுள்ள ஷிர்டி பாபா சேரடிகள். (ஸ்வாமி பதிவித்தது. 265-ம் பக்கம் பார்க்க).

படம் 7 : ஷிர்டி ஸாயி பாபா

*

படவரிசை எண்

1. தந்தை வெங்கப்ப ராஜுவும் அன்னை ஈச்வராம்பாவும்

2. பாட்டனார் கொண்டமராஜுவுடன் ஸ்வாமி (பக்கம் 227)

3. வேணுகோபால ஸ்வாமி ஆலயம் (பக்கம் 15)

4. ஸத்ய பாமா ஆலயம் (பக்கம் 22)

5. 'பாத மந்திர'மாக (அத்தியாயம் - 27) இருந்து, இன்று கல்யாண மண்டபமாகியுள்ள (பக்கம் 30) கட்டிடம்

6. அன்னையின் பெயரிலான பள்ளி (பக்கம் 30)

7. கோகுலம் (பக்கம் 16-7)

8. ஸாயி ஸ்தாபனத்தின் ஸர்வமத இலச்சினை (பக்கம் 840)

Koviloor Digital Library

9. கற்பக விருக்ஷம் (பக்கம் 225-6)

10. பிரசாந்தி நிலைய வட விருக்ஷம் (பக்கம் 985-6)

11. பிரசாந்தி நிலையத்திலுள்ள ஸர்வ தர்ம ஐக்கிய ஸ்தூபி (பக்கம் 844)

12. ஷிர்டி வெள்ளி விழா ஸ்தூபி (பக்கம் 266)

13. பிரசாந்தி நிலைய ராஜ கோபுரம்

14. ஷிர்டி ஸாயி பாபா ஆலயம்

15. பிரசாந்தி நிலயம் : பழைய தோற்றம்

16. பிரசாந்தி நிலயம் : இன்றைய தோற்றம்

17. ஹைதராபாத் இருக்கையான 'சிவம்' (பக்கம் 859)

18. பம்பாய் இருக்கை 'தர்ம க்ஷேத்திர'த்திலுள்ள 'ஸத்ய தீபம்' (பக்கம் 859)

19. ஒயிட்ஃபீல்ட் 'பிருந்தாவனம்'

20. அனந்தப்பூர் மகளிர் கல்லூரி (பக்கம் 859)

21, 22. பட்டங்கி நிலம் புரளக் குலுங்கி வரும் அழகு (பக்கம் 8)

23, 24. மிடுக்கு மிளிரும் 'புட்டபர்த்தி சக்கரவர்த்தி' (பக்கம் 25)

25. எத்தனை யெத்தனை குழந்தைகளுக்கு அக்ஷராப்யாஸம்? (பக்கம் 60)

26. பிரேம காவியமான ஸத்ய மாதா (பக்கம் 37)

27. ஆள்காட்டி விரலைத் தூக்கினார் பெருமாள் (பக்கம் 98)

28. ஸத்யா, ஸாயி பாபாவானபின் எடுத்த முதற் படம் (பக்கம் 175-6)

29. பாபாவுக்கு முன் இருந்த கல் ஷிர்டி ஸாயி விக்கிரகமாக (பக்கம் 188)

30, 31, 32, 33. பால ஸாயியின் பாலான பல தோற்றங்கள்

34. சிவராத்ரி உத்பவ லிங்கத்தைத் தூக்கிக்காட்டுகிறார் (பக்கம் 287)

35. பஜனை பாடும் பகவான்

36. ''ஸாதுவம்மா'' (பக்கம் 418)

Koviloor Digital Library

37. 38, 39. இனிப்புக் குழந்தையாக விளையாடுகிறார் (பக்கம் 377)

40. தம்பூரா மீட்டிப் பாடுவார் (பக்கம் 404)

41. ஸ்வாமியே ஸ்டெதாஸ்கோப்பைச் சொருகிக்கொண்டு (பக்கம் 434)

42. எக்ஸ்-ரே பிரிவைத் தொடங்கி வைத்தார் (பக்கம் 434)

43. வைத்தியர்களுக்கும் வைத்தியர் (பக்கம் 434)

44. வெட்கமும் நாணமும் கொண்ட பெண்மை (பக்கம் 281)

45. வெள்ளை உள்ள எளிமை (அங்கியும் வெள்ளையே!) (பக்கம் 281).

46. தொலைபேசியில் நெருக்கத்துடன் பேசும் அழகுண்டே! (பக்கம் 455)

47. 'ஸாயிராம்' நாமம் எழுதிய போர்வை போர்த்து (பக்கம் 395)

48. ஜயந்தியில் அன்னை எண்ணெய் வைப்பது (பக்கம் 406)

49. வெள்ளை அங்கி அணிந்து உய்யாலோத்ஸவம் (பக்கம் 406)

50. ஆனைச் சவாரி நடத்திய காலம் (பக்கம் 314)

51. சித்ராவதி மணலில் அளைந்து சிருஷ்டித் தொழில் (பக்கம் 441)

52. ஸம்பிரதாய தபஸ்விக் கோலத்தில் (பக்கம் 408)

53. சிங்காசன சிங்காரி (பக்கம் 411)

54. சிங்காரி ஏறிய சிங்காசனம்

55. கடிகாரம் பாபாவின் அங்கியிலேயே 'பாட்ஜ்' போலப் பதிந்து விட்டது (பக்கம் 542)

56. பாபா சிம்மத்தின்மீது வீற்றிருப்பதுபோல் (பக்கம் 543)

57. கிரீடத்தின்கீழ் பாபாவின் பம்பை முடி (பக்கம் 544)

58. பாரத தேசம் பொறிக்கப்பட்ட மெடலுடன் (பக்கம் 578)

59. 61. 'போறும்மா, போறும்மா' என்று ஸாயீநாவைத் தட்டிக் கொடுத்து (பக்கம் 773)

Koviloor Digital Library

60. பக்ஷிகள் வளர்க்கிறார் (பக்கம் 778)

62. யானைக் கூட்டங்களிடையே சகஜமாக நின்றுகொண்டு (பக்கம் 773)

63. நாய்களை அன்புக்கிட்ட நாயகர் (பக்கம் 771)

64. ஒட்டகம் உறவு கொண்டாட வந்திருக்கிறது (பக்கம் 778)

65. 'ஞானப் பாலூட்டும் ஸாயிமாதா' (பக்கம் 768)

66. கலைநிகழ்ச்சிக் குழந்தைகளிடம் அன்பு (பக்கம் 769)

67. ''என்(னம்)மா?'' என்ற ஒரே வார்த்தையில் அன்பு ஸமுத்திரம் (பக்கம் 761)

68. ஹாஸ்ய வெடிகளை வீசிக்கொண்டு அன்பர் குடும்பங்களைச் சிரிக்க வைத்து (பக்கம் 956)

69. மாணவரிடம் அவரது அன்பு அதிசயமானது (பக்கம் 769)

70. சிறாரும் யுவரும் பாபாவின் பாதங்களை அமுக்கி விடுவது (பக்கம் 769)

71. பூணூல் வரவழைத்துக் கொடுக்கிறார் (பக்கம் 572)

72. திருமாங்கல்யம் சிருஷ்டித்துத் தருவார் (பக்கம் 952)

73. 76. வேத விதிப்படி அஸ்திவார ஸ்தாபனம் (பக்கம் 828)

74. நூற்றுக்கணக்கானவருக்கு உபநயனம் செய்வித்திருக்கிறார் (பக்கம் 835)

75. வேதவித்துக்களுடன் வித்தகன் (பக்கம் 819)

77. கல்கியே எனப் புரவியில் ஆரோஹணித்து (பக்கம் 878)

78. ''பதரிப் பிரஸாத்'' (பக்கம் 885)

79. காச்மீரத்தில் (பக்கம் 878)

80. காருக்குள்ளிருந்து, ''விட்டுட்டுப் போறேனே'' என்று (பக்கம் 959)

81. ''அந்தமே ஆனந்தமு'' (பக்கம் 856)

82. ''இல்லையே'' என்று இரு கையும் விரிப்பதே நவநிதியை வாரிக் கொடுக்கும் (பக்கம் 959)

Koviloor Digital Library

83, 84, 85, 86. பரிசு வழங்குவது, பிரஸாதங்கள் வழங்குவது இவற்றிலும் ஷிர்டி பாபாவின் அபிஷேகத்தில் காட்டும் அதே ஈடுபாடு (பக்கம் 922)

87. விமான வாயிலில் அபய ஹஸ்தம் (பக்கம் 900)

88. கையெழுத்தும் அழகான சுந்தர ஸாயி (பக்கம் 857)

89. கப்னியைச் சிறிதே தூக்கி நடக்கும் சொகசு (பக்கம் 965)

90. கேசவன் கேச பாரத்தை அழுந்தப் பிடித்துக்கொண்டு (பக்கம் 993)

91. பேசுவதும் கொள்வதிலும் நாகரிகம் (பக்கம் 965)

92. தாம்பூல தாரணத்தில் பெண்மொழில் (பக்கம் 965)


93. பேசும் விரலசைப்பால் கோரிக்கைக்கு எழுப்புகிறார் (பக்கம் 994)

94 — 112. விதவித ரஸபாவங்கள் (அத்தியாயங்கள் 54, 56-ல் விவரிக்கப்படும் ஸ்வாமியின் நானு உணர்ச்சிகளையும், செய்கைகளையும் விவரிப்பன).


113. திண்டில் சாய்ந்த ஆனந்த ஸாயீச்வரி (பக்கம் 1006)

114. வெற்றிச் சிரிப்பால் சரிதையை நிறைவிக்கும் ஸ்வாமி (பக்கம் 1008).


Koviloor Digital Library



Koviloor Digital Library




Koviloor Digital Library



Koviloor Digital Library




Koviloor Digital Library



Koviloor Digital Library



Koviloor Digital Library



Koviloor Digital Library

Koviloor Digital Library





1



2

Koviloor Digital Library


3



4


5




6

Koviloor Digital Library



7



8



9



10


Koviloor Digital Library



11



12




13




14

Koviloor Digital Library




15




16


Koviloor Digital Library



17



18



19



20

Koviloor Digital Library










Koviloor Digital Library



25




26



27

Koviloor Digital Library





28



29

Koviloor Digital Library



30


31



32


33

Koviloor Digital Library



34





35



36

Koviloor Digital Library





38




39



40

Koviloor Digital Library



41



42



43

Koviloor Digital Library



44



45



46



47

Koviloor Digital Library



48




49


Koviloor Digital Library



50




51



52



Koviloor Digital Library




53



54

Koviloor Digital Library


55


56


57


58


Koviloor Digital Library



59



60



62

Koviloor Digital Library



63



64

65



66



Koviloor Digital Library









Koviloor Digital Library


71


72


73


74


75


76

Koviloor Digital Library



77




78



79

Koviloor Digital Library



80



81



82

Koviloor Digital Library


83


84


85


86

Koviloor Digital Library



87



88




89



90

Koviloor Digital Library



91



92



93

Koviloor Digital Library


94


95


96



97


98

Koviloor Digital Library



99



100



102



101



103

Koviloor Digital Library



Koviloor Digital Library



109



110



111




112

Koviloor Digital Library


113


114



Koviloor Digital Library

அத்தியாயம் – 1

சுருதியும் லயமும்

கண்ணன் பிறந்தான்—எங்கள்
கண்ணன் பிறந்தான்—இந்தக்
காற்றதை எட்டுத் திசையிலும் கூறிடும்
திண்ணம் உடையான்—மணி
வண்ணம் உடையான்—உயர்
தேவர் தலைவன் புவிமிசைத் தோன்றினன்
பண்ணை இசைப்பீர்—நெஞ்சில்
புண்ணை ஒழிப்பீர்—இந்தப்
பாரினிலே துயர் நீங்கிடும் என்றிதை
எண்ணிடைக் கொள்வீர்—நன்கு
கண்ணை விழிப்பீர்—இனி
ஏதும் குறைவில்லை; வேதம் துணையுண்டு.

— பாரதியார்: "கண்ணன் பிறப்பு"

பிள்ளையாரப்பனுக்கு உகந்த சங்கடஹர சதுர்த்தி தினம். மக்கட் குலத்தின் இடையூறுகளும் இன்னல்களும் தீர விநாயகப் பெருமானுக்கு விசேஷ பூஜை செய்யும் நன்னாள்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கையும் அருளுவதால் அது சதுர்த்தி. விழிப்பு, கனவு, உறக்கம் என்ற மூன்று நிலைகளையும் கடந்த துரீய சத்தியமும் 'சதுர்த்தம்' என்றே மறைமுடியில் சிறப்பிக்கப்படுகிறது.

மாதந்தோறும் கிருஷ்ணபக்ஷத்தின் நான்காம் திதியாக வருவது சங்கடஹர சதுர்த்தி. அதிலும் நம் வரலாறு தொடங்கும் இந்தச் சதுர்த்திக்கு அதிவிசேஷம் என்னவெனில், இது முருகப் பெருமானோடும் தொடர்பு கொண்டதாக உள்ளது. இது

Koviloor Digital Library

கார்த்திகேயனின் கீர்த்தி செழிக்கும் கார்த்திகை மாதத் தேய்பிறைச் சதுர்த்தியாகும். சங்கடங்கள் தீர உபாயமாக இந்த சங்கடஹர விரதத்தை உலகுக்குக் காட்டிக் கொடுத்தவனே அம் முருகன்தான். அவன் ஒரு சமயம் பரத்வாஜ ரிஷியின் தோன்றலாக, அதாவது பாரத்வாஜ கோத்திர முன்னோனாக அவதரித்தான். அப்போது அங்காரகன் என்றும் செவ்வாய் என்றும் பெயர் கொண்டான். மானுடனாகவே பிறந்தும் தேவாமுதத்தை அவன் உண்டு, நவக்ரஹங்களில் ஒருவனாக உயர்ந்தான். இந்த அதிசய உயர்வை அவன் எய்தியதற்குக் காரணம், அவன் விநாயகப் பெருமானை சங்கடஹர சதுர்த்திதோறும் வழிபட்டது தான்.

நம் சரித நாயகனுக்கு பாரத்வாஜத் தொடர்பு உள்ள விஷயம் பிற்பாடு தெளிவாகும்.

இதோ, இக் கார்த்திகைச் சதுர்த்தியானது செவ்வேள் உகக்கும் செவ்வாய்க்கிழமையைத் தீண்டும் தருணம் வந்து விட்டது. அடிவானத்தில் செங்கோடுகள் படரத் தொடங்கி விட்டன. ஒரு நாழிகையில் சூரியோதயம் நிகழ்ந்து, செங்கோடவின் மங்களவாரம் மங்கள பவனி தொடங்கிவிடும்.

அதாவது, இன்னமும், இதோ இந்த நாழிகை வரையில் திங்கட்கிழமைதான். ஆஹா, எத்தனை தெய்விகப் பெருமைகள் ஒன்றுதிரண்ட நாள்! இது கார்த்திகை மாத ஸோம வார மாகும். உமையோடு கூடிய ஈசனும் ஸோமனுக்கு, எனவே, சிவ-சக்தியருக்குப் பிரீதியான புனித நாள். நம் சரித நாயகர் தமக்கு "ஸோமப்பா" என்றே பெயரிட்டுக் கொண்டு ஒரு திருவிளையாடல் புரியப் போவதையும், இவரே ஸோமநாதபுரத்தில் உள்ள மூல ஜ்யோதிர்லிங்கத்தை வெளிக்கொணரப் போகிறார் என்பதையும் எண்ணுகையில் ஸோமவாரப் பொருத்தம் நம்மை மெய் சிலிர்க்கச் செய்யும்!

இன்று நக்ஷத்திரமும் சிவபெருமானுக்குரிய ஆதிரையே! தயையில் நனைந்து நனைந்து "ஆர்த்ர"ராக இருக்கும் பரமேச்வரனின் நக்ஷத்திரமே ஆர்த்ரா எனும் ஆதிரை.

இதேபோல் ஸோமவாரமும் திருவாதிரையும் கூடியதொரு நாளில்தான் முருகப் பெருமான் மீனாக்ஷி-ஸுந்தரேச்வரர்களுக்கு மகவாக உதித்து உக்ர பாண்டியன் எனப் பெயர் பெற்றான். முருகேசனின் மற்றோர் அவதாரமான ஞான சம்பந்தர் அவதரித்ததும் ஓர் ஆதிரையிலேயே.

இப்படியாக ஈசன், உமை, கணேசன், ஷண்முகன் சம்பந்தத்துடன் இது சைவப் பெருநாளாக இருந்தால் மட்டும் போதுமா? சைவ சமயாசாரியரான சம்பந்தரைப் போலவே, ஸ்ரீமத் ராமாநுஜர் தோன்றியதும் ஓர் ஆதிரையில்தான் என்னும்போது வைஷ்ணவத் தொடர்பும் இந்நாளுக்கு ஏற்பட்டுவிடுகிறது!

இது மட்டுமில்லை. மேற்படி கார்த்திகை ஸோமவாரம் முடியும் வைகறை வேளையில் நம் வரலாறு நடக்கும் பிரதேசத்தில்

Koviloor Digital Library

அனைவருமே விஷ்ணுவுக்குத்தான் விசேஷ வழிபாடு செய்கிறார்கள். ''ஸத்ய நாராயண விரதம்'' என்று கோலாஹல பூஜை நடத்துகிறார்கள். சமய சமரஸம்!

* * *

இதோ ஒரு பெண்மணி பூஜை செய்கிறாளே, இதுவும் ஸத்ய நாராயண ஆராதனைதான்.

இவளுக்கு மிகவும் சோர்வாக இருக்கிறது ; ஆனாலும் வெகு விரைவில் விரதம் முடிக்க முனைந்திருக்கிறாள். அவசரப்படுகிறாள்.

காரணம், இவளுக்குப் பேற்று நோவு கண்டுவிட்டது.

ஆயாசத்திலேயே ஆனந்தம்! நோவிலேயே ஓர் இன்பம்! எந்தத் தாய்க்கும் இருக்கக் கூடியதைவிட இவளுக்குக் கூடுதலாகவே இன்பம் இருந்திருக்குமோ? உலகுக்கே பெரும் பேறாக ஒரு பிள்ளையைப் பெறப் போகிற மஹா பாக்கியவதியாயிற்றே!

ஆம், சரியாக ஐம்பதாண்டுகளுக்குப் பிறகு இவ்வூரில் கும்ப மேளா போல் ஒரு மஹோத்ஸவம் நடக்கப் போகிறது. லக்ஷ லக்ஷமான மக்கள் தங்கள் பிரத்யக்ஷ தெய்வத்தைத் தரிசிக்க இங்கு குழுமப் போகிறார்கள். ஊரும், சுற்றுப்புறமும் ஊசி விழவும் இடமின்றி மக்கள் வெள்ளத்தில் முழுகிவிடும்போது, விழா நாயகனை கண் கண்ட தெய்வம் எப்படி வழி ஏற்படுத்திக் கொண்டு வந்து அடியார் அனைவருக்கும் அண்மையில் நின்று ஆசி வழங்க இயலும்? மண்ணிலே வழி ஏற்படுத்திக் கொண்டு ஜனசமுத்திரத்தைப் பிளந்து வருவது இந்த அற்புதனுக்குமே இயலாத சாகஸமாகிவிடும். எனவே மக்கள் காணும் நெருக்கத்தில் விண்ணில் ஹெலிகாப்டர் பவனி வந்தே அவதார புருஷன் அனைவருக்கும் தரிசனம் தர வேண்டியதாகும்! தான் விண்ணிலிருந்து மண்ணுக்கு வந்த ஐம்பதாவது ஜயந்தியை இப்படி விண் வீதியுலாவால் சிறப்புறச் செய்த நாயகன், வானூர்தியைத் தன் வாச ஸ்தானத்தில் நிறுத்தி, மண்மிசை பொற்பாதம் வைக்கப் போகும் அக்கணத்தில் ஆயிரமாயிரம் கண்டங்கள் ஆர்த்துப் பாடப் போவது இந்தப் பெண்மணியின் பாக்கியத்தைத்தான்.

தன்ய ஹோ ஈச்வராம்பா !

இத் தனயனை ஈன்றதால் தன்யளான அவள் புகழே பஜனைப் பாடலாக வானை முட்டப் போகிறது. அங்கு புகழுடம்பிலே தன் புதல்வனின் பொன் விழா காணும் மங்கை நல்லாளுக்கு இந்த இன்சொலே கனகாபிஷேகம் செய்யப் போகிறது.

அந்த அபிஷேகத்தின் ஆரம்பத் தூறல்கள் அவளுள் குளிர விழுந்துச் சிலுசிலுப்பூட்டிய பழைய கார்த்திகை ஸோம வாரத்துக்கே திரும்புவோம்.

Koviloor Digital Library

இவளால் உலகம் பெறப்போகும் பாக்கியத்துக்குக் கட்டியம் கூறியாகிவிட்டது. அப்படிக் கட்டியம் கூறியது ஒரு மத்தளமும் தம்பூராவுமாகும். அது ஒரு விந்தை!

ஆம், எதிர்காலத்தில் சர்வ தேசங்களும் எந்தப்பெருமானின் விந்தைகளைக் கண்டே அவரிடம் முக்கியமாக ஈர்க்கப்படப் போகின்றனவோ, அந்த விகிர்தனின் ஜனனத்துக்கு முன்பிருந்தே அவ்வீட்டில் அதிசயங்கள் நிகழத் தொடங்கி விட்டன. நாடகக் கலைஞர்களைக் கொண்ட அவ்வில்லத்தில் பகல் முழுதும் பாட்டும் அதோடு தம்பூரா மீட்டும், மத்தள தாளமும் ஓயாமல் சத்தித்துக் கொண்டே இருப்பது பரம்பரையான வழக்கம். இப்பெண் கருக்கொண்ட நாளிலிருந்தோ இரவிலும் இங்கு இசையலைகள், லய சப்தங்கள் ஓயவில்லை. வாய்ப் பாட்டில்லாமலே, நள்ளிரவு களில் தம்பூராவின் ஸுநாதமும், மிருதங்கக் குமுகுமுப்பும் அங்கு நிரம்புகின்றன. விந்தை என்னவெனில், எவரும் கை தீண்டி வாசிக்காமலே, தம்பூரா தானே தன்னை மீட்டிக் கொண்டு, 'ரீம் ரீம்' என ரீங்கரிக்கிறது; மிருதங்கமும் தானுகவே தன்னைத் தட்டிக் கொண்டு 'ஜாம் ஜாம்' என்று ஜமாய்க்கிறது!

தானுகப் பிறக்கும் அநாஹத நாத தத்வம் பற்றி அவ்வீட் டாரோ, ஊராரோ என்ன அறிவார்கள்? எனவே கண்ணுக்குத் தெரியாமலே இப்படி சுருதி கூட்டிய, லயம் ஈட்டிய விந்தைக் கரத்தைப் பற்றி விதவிதமாக அர்த்தம் (அதாவது அனர்த்தம்) கற்பித்துக் கொண்டார்கள். பயந்தார்கள்.

வீட்டுக்குரியவர்—நம் மங்கை நல்லாளின் கணவர்— பக் கத்து ஊரில் இருந்த, மதிப்பு வாய்ந்த ஒரு சாஸ்திரியாரிடம் சென்று விளக்கம் கோரினுர்.

''இதில் பயப்பட ஏதும் இல்லையப்பா. தர்மமும் பிரேமை யும் தழைக்க வைத்து லோக கல்யாணத்தை விளைவிக்கப்போகும் ஒரு காருண்ய மகாசக்தி உன் வீட்டில் தோன்றப் போகிறது என்பதற்கே இது அறிவிப்பாகும். அனைவரும் அன்பில் இசைவது தான் தம்பூரா சுருதி; அறத்தை அநுசரிப்பதுதான் மிருதங்கத் தின் லயக் கட்டுப்பாடு. சுருதியும் லயமும்தான் பிரபஞ்சப் பேரியக்கத்தின் சுவாசமும், ரத்தத் துடிப்புமாகும்''—என்ற உண்மையை அந்த சாஸ்திரியார் அறிந்திருந்த அளவுக்கு, அதிலும் விளக்கம் கேட்டவர் புரிந்து கொள்ளக் கூடிய அளவுக்கு, சொல்லி பயத்தை நீக்கி உற்சாகமூட்டினுர்.

★

காருண்ய மகா சக்தி மானுட உருவில் உற்பவிக்கும் சுப முகூர்த்தம் நெருங்கிவிட்டது.

பெண்மணி விரைவே விரதம் முடித்து, தாழ்வரை மூலையில் திண்ணைபோல் உயர்ந்த ஒரு மேடையில் படுக்கிருள்.

Koviloor Digital Library

கண்ணன் பிறந்த காராக்ருஹத்தோடும், இயேசு ஜனித்த தொழுவத்தோடும் இந்தத் தாழ்வரையை ஒப்பிட முடியாது தான். எனினும், தாழ்வாரைத் தாங்கவே தாழ்ந்து வரும் நாயகன் இப்போதும் பரம எளிமையான ஒரு குக்கிராமத்தில் சிலமான ஒரு சிறு வீட்டைத்தான் ஜன்ம ஸ்தலமாகத் தேர்வு செய்திருந்தான்.

(அவதார ஸ்தலம் இன்று வெறும் இடிபாடாகவே இருக்கிறது. ஐம்பதாவது ஜயந்தியின் போதாவது இங்கு ஒரு ஜய ஸ்தம்பம் எழும்பாதா என்ற அடியாரின் ஆசையை ஐயன் ஏனோ நிறைவேற்றவில்லை!)

பெண்மணிக்குப் பேற்று நோவு வலுத்துவிட்ட இச்சமயத்தில் அவளது மாமியார் வீட்டில் இல்லை. முறைப்படி ஸத்ய நாராயண பூஜை செய்வதற்காக அம்மூதாட்டி புரோஹிதரின் வீட்டுக்கே சென்றிருக்கிறாள்.

அவளுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதற்காக பக்தி சிரத்தை மிக்க மூதாட்டி பரபரப்பு அடைந்துவிடவில்லை. ஸாங்கியம் ஏதும் விடாமலே பூஜையைத் தொடருமாறு புரோஹிதரிடம் கூறினாள்.

விதிவத்தாக வழிபாடு முடிந்தது.

நிறைந்த மனத்தோடு கிழவி வீடு திரும்பினாள். அவள் நம்பியது வீண் போகவில்லை. நம்பி இன்னம் பிறக்கவில்லை.

மாற்றுப் பெண்ணுக்குப் பிரஸாத மலர்களையும் தீர்த்தத்தையும் அளித்தாள். நிர்மல நாரணனின் நிர்மால்யம் நிறைகர்ப்பிணியின் முடியில் ஏறியது. அவனது திவ்ய தீர்த்தம் அவள் உதரத்தில் குளிர்ந்தது.

மறுகணம், தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரன் தரணியில் நெளிந்துவிட்டான், மிளிர்ந்து விட்டான். நித்ய தத்வம் ஸத்ய நாராயணனாக நிலமிசை முகிழ்த்துவிட்டது!

சொல்லி வைத்தாற் போல், குழந்தை பிறந்தவுடன் ஆலய மணி ''ஓம் ஓம்'' என்று ஒலிக்கத் தொடங்கியது. ஓசையில் ஊரே நிறைந்தது.

அவ்வருஷத்துக்குப் பெயரே நிறைவுதான். 'அக்ஷய' வருஷம்.

ஆண்டு, மாதம், வாரம், திதி யாவற்றாலும் தெய்விக நலன்களைச் சுட்டிய அத்தினத்தை ஆங்கிலக் காலண்டர்படி சொன்னால்தானே பெரும்பாலான வாசகர்களுக்குப் புரியும்?

அது 1926-ம் ஆண்டு நவம்பர் 23-ம் தேதி.

Koviloor Digital Library

இத்தேதியில் பழைய புராணப்படியான சிறப்புக்களோடு இன்னொரு புது விசேஷமும் உள்ளது: மனித மனங்களுக்கு மூலமான அதி மானஸ மஹாசக்தியானது மண்ணுலகில் உற்பவித்து மக்களை மேம்படுத்த வேண்டும் என்பதற்காகவே ஸம்பூர்ண யோகத் தவமிருந்த அரவிந்த முனிவர் 1926-ம் ஆண்டு நவம்பர் 24-ம் தேதிதான் தமது வெளிச் செயல்களை நீத்து, அறையோடு அறையாக ஏகாந்தத்தில் இருந்து விடுவதென முடிவு செய்தார். இவ்விதம் தாம் ஏகாந்தம் புகுந்ததற்கு அவர் சொன்ன காரணம், மனித மனத்துக்கு மேம்பட்ட பேரின்ப உணர்வின் உருவான கண்ணன் மீண்டும் பௌதிகமாக உலகுக்கு வந்தாகி விட்டது என்பதுதான். நம் சரித நாயகனின் அவதாரம் சரியாக இதற்கு முன்தினமே நிகழ்ந்திருப்பதால் பேரின்ப உணர்வுருவான அக்கண்ணன் யார் என்பது வெள்ளிடைமலையாக விளங்கவில்லையா?

* * *

செவ்வாய் தினம் விரியச் செவ்வானத்தே உதித்தான் ஆதவன், மாதவச் சேயைக் காண.

குங்குமச் சிவப்பாக இருந்தது குழந்தை. பிறப்பிலே இத்தனை சிவப்பாக இருந்தால் வயதேறும்போது சியாமள மேனியாகவே இருக்கும் எனப் பெண்டிர் அனுமானிக்கிறார்கள். சரீரச் சிவப்புக்கு மாறாகக் குழந்தையின் சின்னஞ் சிறு கர மலர்களும், பாதப் போதுகளும் பொன்னெனப் பொலிவது சற்றே விந்தையாக இருக்கிறது.

இதைவிடப் பெரிய விந்தை, குட்டியான உள்ளங் கால்களில் திகழும் சங்க சக்கரச் சின்னங்களும், நடு மார்பில் பளிச்சிடும் ஸ்ரீவத்ஸம் எனத்தக்க மச்சமும்தான்.*

பரம சுந்தரமான குழந்தை. அலையலையான அளகபாரம். வட்ட வதனம். விசால நயனம். அகன்றிருப்பதோடு, 'காதளவோடும்' என்ற கவி வாக்கும் பொருந்த நீளப் பாய்ந்த நீலக் குறு நயனம். கண்மணி வெட்டோ மின்னல் பொட்டுத்தான். மொட்டுச் சம்பகமன்ன நாசி. பட்டு அதரங்களில் இயல்பான நேர் இளம் சிவப்பு. திட்டமான முகவாய். கதுப்புக் கன்னத்தில் இடப்பக்கம் திருஷ்டிப் பொட்டுப்போல் ஒரு மறு. அதற்கே திருஷ்டி போடலாம்போல் அத்தனை அழகு! மேனி, கால், கை, அவற்றில் விரல்கள் யாவும் உத்தமமான விகிதத்தில் ஒன்றுக்கொன்று பொருந்தி அமைந்துள்ளன. மொத்தத்தில், சிற்ப சித்திரங்களில் காணும் திருத்தமான திரு உரு.

* இவற்றைக் கண்ணுரத் தரிசனம் செய்த அடியார் பலர் உள்ளனர். ஆனால் இவ்வடியார்கள் கண்ட அவ்வச்சமயங்களில் மட்டுமே இத் திவ்ய சின்னங்களை நம் சரிதநாதன் தோற்றுவித்தாரா, அல்லது இவை எப்போதுமே அவரது திருவுருவில் பதிந்துள்ளனவா என்று தீர்மானமாகச் சொல்லத் தெரியவில்லை.

Koviloor Digital Library

இன்றும் சுந்தரராஜனாகவே இருப்பவர் நம் சரித ஸ்வாமி. அவரை நேரில் காணாது, புகைப்படங்களிலேயே கண்டோருக்கு இதை ஏற்பது சிரமமாயிருக்கலாம். ஏனோ தெரியவில்லை—பெரும்பாலான புகைப்படங்களில் இவரது தோற்றம் வேறு, நேர் தோற்றம் வேறு என்றே உள்ளன. புகைப்படத்தில் இவரது சிகையும், சிகப்பு உடையும் பலருக்கு அருவருப்பாகவும், அச்சமூட்டுவதாகவுமே படுகின்றன. ஆனால், நேரில் கண்டாலோ இவையே அவருக்குப் பரம பாந்தமாகப் பொருந்தி, நம்மையும் அவர்பால் பரம பந்துவாகப் பொருத்துவதை உணர்வோம். கீர்த்தியில் பெரியவராயினும் மூர்த்தியில் சிறியவரேயான அவர் அநேகப் புகைப்படங்களில் வாட்ட சாட்டமாகத் தென்படுகிறார். கோமள ஸ்வரூபமான இவ்வடிவு காமிராவில் பிடிபடுகையில் சில சமயம் கரடு தட்டி முரடாகி விடுகிறது.

முடி, உடை, மொத்த வடிவு, இவை மட்டுமின்றி அவரது மற்ற அவயவ ஸௌந்தர்யங்கள்கூடப் பெரும்பாலான புகைப் படங்களில் உள்ளபடி பதியக் காணோம். முதல் தரிசனானுபவத்தை எழுதியுள்ள அன்பர்களில் பலர், புகைப்படங்களில் அவ்வளவாக இனிதாத தோற்றம் கொண்டவர் நேரில் இப்பேர்ப்பட்ட திவ்ய மோஹன ஸ்வரூபமாக இன்பும் அன்பும் பொலிய விளங்குகிறாரே என்று மனம் கரைந்து கூறியிருக்கிறார்கள்.

அவரைக் கண்ட மாத்திரத்தில் ஜெர்மன் ஓவியர் ஆடிவான் ஹார்டருக்குத் தோன்றிய எண்ணம், ''ஆஹா, இவரை நாம் சித்திரம் தீட்டியே தீர வேண்டும்'' என்பதுதான்!

அவர் அற்புதம் செய்வதாலும், அறிவுரை பகர்வதாலும், அருள்களைப் பொழிவதாலும் பக்தரை மேம்படுத்துவது ஒரு புறம் இருக்கட்டும். கண்ட மாத்திரத்தில் அவரது அழகே எண்ணற்றவரின் நெஞ்சை உலுக்கி உருக்கிப் புனிதப்படுத்துகிறது. அது சாதாரண சரீர அழகல்ல. Truth is Beauty என்று கீட்ஸ் சொன்ன ஸத்தியம் என்கிற ஸௌந்தர்யம் இதுவே; ''காருண்யமே லாவண்யம்'' என்று ஸ்ரீ காஞ்சிப் பெரியவாள் கூறும் திவ்யப் பிரேமையின் திரு உருவமே இது.

காஞ்சிப் பெரியவாளின் வடிவும் இதே காருண்ய லாவண்ய பூரிதமானதுதான். அவரும் இவ்வாறே மத்திம ஆக்ருதிக்கும் குறைந்த வடிவர்தாம். தங்கக் கர அழகும், பொன்னம் கழலழகும் இவ்விருவருக்கும் பொதுவானதே. ஆயினும் காஞ்சீச்வரரிடம் குளுமையிலேயே ஞான அனலும் மோன அமைதியும் தூக்கலாக நிற்கும்; பர்த்தீச்வரியிடமோ பிரேமையும், லீலானந்தமும் கூடுதலாக அலைமோதும். அவ்வப்போது அமைதி மயமாக நின்றுவிடுபவர், அல்லது அன்னநடை பயில்பவர், உடனே இயல்பான பரபரப்புற்று விசையுடன் நடந்துவரும் சொகஸே சொகஸு! அதிலும் முன்புறத்தைவிட மெலிந்ததாகத் தோன்றும் நளின முதுகுப் புறம் காட்டி அவர் நடக்கும்போது பூங்கொடியாம் தேவி ஒல்கி ஒசிந்து செல்வதாகவே தோன்றும்.

Koviloor Digital Library

அடாடா, சிலும்பும் முடி சூழ்ந்த, தளதளத்த முகத்தில் சுடர் தெறிக்கும் கண்ணழகும், நனி சிந்தும் கனி அதர நகை அழகும், முத்துப்பல் வரிசையழகும், நலுங்காத பட்டங்கி நிலம் புரள விசையுடன் குலுங்கி வரும் ராஜஸ நடை அழகும் அநுபவித்தவர்களுக்கே புரியும்.

நகரத் தெரியாத சிசுப் பருவத்திலிருந்து எங்கோ நகர்ந்து வந்து விட்டோமே!

* * *

பாலன் பிறந்த அன்று கழலிலிருந்து குழல் வரையில் குழந்தை எழிலை அங்க அங்கமாகப் பாட அங்கொரு பெரியாழ்வார் இருக்கவில்லை.

ஆனாலும் விரித்த கண் விரித்தபடி பெண்டிர் குழந்தையை நோக்கியவண்ணம் இருக்கின்றனர். அங்க லக்ஷணங்களைக் காணும் ஆனந்தத்துக்கு மேலாக அவர்களது பார்வையில் அச்சம் கலந்ததோர் ஆச்சரியமே தென்படுகிறது!

ஆம், விசித்திர சித்தன் பிறக்கு முன்பே தானாகத் தம்பூரா இன்பூற இசைத்தது, மத்தளம் சத்தலயம் சாற்றியது எனில், பிறந்தவுடனும் விந்தை தொடருகிறது.

குழந்தைக்குக் கீழே விரித்திருக்கும் துணிகள் விம்மி விம்மித் தணிகின்றன. அசைந்தாடும் அலைகளில் மிதக்கவிட்ட தொட்டியில் போல், துணிகளின் அசைவில் குழந்தை அசைந்தாட, அதன் சுற்றைக் குழல்கள் தாழ்ந்து பிஞ்சு முகத்தைச் சூழ்ந்து கொள்கின்றன.

சுற்றியிருந்தோர், 'இதென்ன அற்புதம்!' என்று வியப்படைகிறார்கள்; பயப்படுகிறார்கள்.

படட்டும் படட்டும். நாம் காணக் கொடுத்து வைக்காத ஜயந்தியைக் கண்டு கொண்டவர்களைச் சிறிது அச்சப்படுமாறு விடுவோம். அதற்குள் வாழ்க்கை வரலாற்று இலக்கியத்துக்கான சில இலக்கணங்களைப் பூர்த்தி செய்வோம்.

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்

என்று அடிகள் பாடியதில், நம் கதாநாதனின் ஸத்ய நாராயண நாமத்தையும் அவரது வடிவ வண்ணத்தையும் மட்டுமே கேட்டுக் கொண்டோம். இனி ஆரூரை—அவர் ஆர்ந்த ஊரை—பிறந்து, வளர்ந்து, பின்னரும் தங்கித் தலைநகராகக் கொண்ட ஊரை அறிந்து கொள்வோம். அதன் பின் குழந்தையின் குடிப் பெருமையைத் தெரிந்து கொள்ளலாம்.

Koviloor Digital Library

அத்தியாயம்—2

ஆலவாயான ஆயர்பாடி

தாதாடு பூஞ்சோலைத் தத்தாய் ! நமை ஆளும்
மாதாடும் பாகத்தன் வாழ்பதி என்?—கோதாட்டிப்
பத்தரெல்லாம் பார்மேல் சிவபுரம் போற் கொண்டாடும்
உத்தர கோச மங்கை ஊர்

— திருவாசகம்

(தாதாடு—பூந்தாது உண்ணும்; தத்தாய்—கிளியே; மாதாடும் பாகத்தன்—அர்த்த நாரீச்வரன்; வாழ்பதி—வாழுகின்ற ஊர்; கோதாட்டி—பாராட்டி; பத்தர்—பக்தர்; சிவபுரம்—கைலாஸம்; உத்தரகோச மங்கை—ஒரு பாண்டி நாட்டுத் தலம்.)

சிவ, சக்தியரின் பொலிவு மிக்கது ஆந்திர தேசம். மூன்று சிவ மூர்த்தங்கள்—த்ரி லிங்கங்கள்—எல்லை கட்டுவதாலேயே 'த்ரிலிங்க தேசம்' எனப் பெயர் பெற்று, பிறகு 'தெலுங்கு தேசம்' எனத் திரிந்த நாடு அது. நம் நாட்டில் அக்ஷராப்யாஸத்தின் போது குழந்தைகளுக்கு நாராயண அஷ்டாக்ஷரத்தை உபதேசிக்கிறோமெனில், தெலுங்கு நாட்டிலோ எழுத்தறிவிக்கத் தொடங்கும் போது ஸகல வகுப்புக் குழந்தைகளுக்கும் சிவ பஞ்சாக்ஷரத்தையே உபதேசிக்கிறார்கள். பாரத லிபிகளில் தெலுங்கு எழுத்து மட்டுமே வலப்புறமாக அன்றி, இடப்பக்கமாகச் சுழித்தெழுதப்படுவது. இதை 'வாமாவர்த்தம்' என்பார்கள். வாம பாகம், வாம மார்க்கம் ஆகிய 'இடதுசாரி' சமாசாரமெல்லாமே அம்பிகை சம்பந்தமானதல்லவா? அதனால் ஸ்ரீசக்ரத்திலேயே மாத்ருகாக்ஷரங்களாகப் பொறிக்கக் கூடிய அலாதித் தகுதி தெலுங்கு லிபிக்குத் தான் உண்டு என ஸ்ரீ காஞ்சிப் பெரியவாள் கூறுவார்.

ஆக, ஆந்திரத்தில் நாடு சிவ ஸ்வரூபம் ; மொழி சக்தி ஸ்வரூபம்.

Koviloor Digital Library

சிவ-சக்தி அவதாரமாக அடியார் பலர் உணரும் நம் சரித நாதர், சிவ-சக்தி என்று தம்மைத் தாமே 1963 குரு பூர்ணிமை யில் பிரகடனம் செய்து கொண்டவர், அவதரித்தது சிவசக்தி மயமான ஆந்திராவில்தான். மன்னுதி மன்னனாகத் தாம் கொடி கட்டிப் பறக்கப் போவதற்கேற்ப 'ராயல சிமை'யில் பிறந்தார். பிறந்த மாவட்டம் அனந்தப்பூர் எனப்படும் அனந்தபுரம். மெய் யாலுமே மா வட்டம்தான். ஆதி அந்தமில்லாத பூரணம், அனந்தம், ஒரு பெரிய வட்டமாகவே மண்டலித்திருக்கிறது. அண்மையில் மஹா சமாதியுற்ற திருக்கோவலூர் ஞானநந்த கிரி ஸ்வாமிகள், இந்நூலாசிரியரின் நண்பர்களான ஒரு குடும்பத் தினரிடம், ''புட்டபர்த்தி அனந்தப்பன் கேட்டதெல்லாம் கொடுப் பானே!'' என்று மனஸாரக் கூறினராம்.

குண்டலம் போல் மண்டலித்த அனந்தனையே இன்னொரு நிலையில் ஆதிசேஷன் என்ற அரவமாகவும் சொல்வார்கள்.

மாவட்டம் மட்டுமின்றிப் பிறந்த ஊரும் அரவத் தொடர்பு கொண்டது. இன்று பக்தர்கள் பூலோக கைலாஸமாக, பூலோக வைகுண்டமாக மதித்துத் தொழும் புட்டபர்த்தி என்ற சிறு கிராமத்துக்குத்தான் இவரைப் பெறும் அதிருஷ்டம் கிடைத்தது. 'புட்டவர்த்தினி' என்பதே 'புட்டபர்த்தி' என்முயிற்றும். 'புட்ட' என்றால் புற்று. 'புட்டவர்த்தினி' எனில், 'புற்றுக்கள் விருத்தி யாகியுள்ள ஊர்' என அர்த்தம்.

'புட்ட' என்றால் தெலுங்கு மொழியில் பிறப்பதையும் குறிக்கும். புற்றுக்கள் வளர்ந்த புட்டபர்த்தியே மெய்யன்பரின் பிறப்பறுக்கும் ''புட்டஹர்த்தி''யுமாகும் என்பாராம் நம் நூல் நாயகர்.

புற்றுவாழ் அரவத்துக்கு நம் மதத்தில் உள்ள மதிப்பு அலாதி யானது. சிவனுக்கு அது அணி; திருமாலுக்கு அணை; விநாய கருக்குப் பூணூல்; ஸுப்ரம்மண்யத்தின் மாற்று வடிவே 'ஸுப்ப ராயன்'; கண்ணனோடு பலராமனாக, ஸ்ரீராமனோடு இலக்குவனாக வருவது அதுவே. பாம்புக்கு ஏன் இத்துணை பெருமையெனில், அதுவே ஆதி பராசக்தி. புற்றுக்குள் பாம்பு காற்றை உண்டே வாழ்வதுபோல், வடிவு கொண்ட மஹாப் பிரபஞ்சப் புற்றுக்குள் பிராணசக்தியாக விளங்கும் பாம்பு அவள்தான். ஜீவர்களின் உடலான புற்றுக்குள் சுவாசம் விடும் ஆதாரக் குண்டலினிப் பாம்பும் அவளே. லிங்கமான அரனை அரவாகி அணைத்து அரவணைப்பவள் அவளன்றி யார்?

நம் காவிய நாதரைப் பொதுவாக அனைத்துக் கடவுளராக வும், அதாவது ஸர்வ தேவ ஸ்வரூபமாகவும், குறிப்பாக ஷிர்டி ஸாயி பாபாவாகவும் அடியாருலகத்தில் சொல்கிறோம். இருந் தாலும் தனிப்பட அடியார்களை வினவினால் பெரும்பாலோர் அவரைக் கண்ணனாகவே கண்டு அன்பு செய்வதாகத் தெரிகிறது. அடுத்தபடியாக அவரை அம்பிகையாகக் கொண்டு வழிபடுவோரே நிறைய இருக்கிறார்கள். கண்ணனின் நகரம் வட மதுரை.

Koviloor Digital Library

கன்னி—அங்கயற்கண்ணி—அரசோச்சிய தலைநகரம் தென் மதுரை. ''இது (வட) மதுரையாக, பிருந்தாவனமாக, திருப் பதியாக ஆகப்போகிறது'' என்று நம் காவியபதியே புட்டபர்த்தி யைப் பற்றிச் சொல்வதுண்டு.

வட மதுரை பாலாகப் பொழிந்த இடம். தென் மதுரையோ பாம்பு சுற்றி வளைத்து எல்லையிட்டு விஷ ஜ்வாலை விசிய இடம். அதனாலேயே ஆலவாய் என்றும் ஹாலாஸ்யம் என்றும் பெயர் பெற்ற இடம். வட மதுரை அமுது; தென் மதுரை நஞ்சு என்று சொல்லி விடலாமா? கூடாது. ஏனெனில் இந்த நஞ்சே அமுதம்தான். ஆலஹால நஞ்சை உண்டபோது, அதை விழுங்கிய நெஞ்சைத் தொட்ட மாத்திரத்தில் விஷத்தையே அமுதாக்கினாளே, அந்த அம்ருத சைதன்ய ரூபிணியான அம்பிகை யைத்தான் இன்னொரு சமயத்தில் ஈசன் அரவாபரணமாக ஆக்கி அணிந்துகொண்டான். பிறகு எதிரிகள் நெருங்கா- வண்ணம் வங்கிய சேகர பாண்டியனின் தலைநகருக்குச் சுற்றுமதில் அமைக்கும்பொருட்டு இந்த அரவையே காவல் வேலியாக அமைத்தான். அதனால் அந்நகர் ஒரே போதில் ஆலவாய் என்ற விஷப் பெயரையும், மதுரை என்ற மதுரமான அமுதப் பெயரை யும் பெற்றது.

நம் ஸ்வாமி பிறந்த சமயத்தில் புட்டபர்த்தி ஆலவாயாகத் தான் இருந்தது. ஊர் எல்லை நெடுகிலும் பாம்புப் புற்றுக்கள் தான். கிராமத்துக்குள்ளும் கால் வைத்த இடமெல்லாம் புற்று, புற்று, புற்றுத்தான்.

ஆனால், அதற்கு முன்பு ஒரு காலத்தில் இதுவே பால் பொழிந்த வட மதுரையாக, திரு ஆய்ப்பாடியாக இருந்திருக் கிறது! ''ஆயர்பாடி'' என்பதன் நேர் மொழிபெயர்ப்பான ''கொல்ல பள்ளி'' என்றே அக்காலத்தில் இக்கிராமத்துக்குப் பெயர். கண்ணன் விளையாடிய புண்ணிய பூமியின் ஒரு பகுதியே எவ்வாறோ இங்கு தெறித்து விழுந்ததாக ஐதிஹ்யம். நந்த குமாரன் நீந்தித் திளைத்த யமுனையே நந்திமலையிலிருந்து இங்கே சித்ராவதி நதியாக ஓடுவதாகக் கொள்ளலாம். இங்கும் சைவ— வைணவ ஸமரஸம். ஈசனின் நந்தியும் நந்த நந்தனனும் இணைகிறார்கள்.

ஆதியில் கொல்லபள்ளி என்ற பெயருக்கேற்ப அவ்வூர் பசு வளத்துக்குக் குறைவில்லாதிருந்தது. அந்த நிலை அடியோடு மாறிய உத்பாதம் பிற்பாடு நிகழ்ந்தது. அந்தக் கதையைப் பார்ப்போம்:

மேய்ச்சலுக்குப் போகும் பசுக்களில் ஒன்று, நாள்தோறும் கொட்டிலுக்குத் திரும்புகையில் தன் பாலையெல்லாம் இழந்து வெற்று மடியாகத் திரும்பிற்று. இது கண்டு வியப்பும் கோபமும் கொண்டான் ஆயன். இந்த மர்மத்தைக் கண்டுபிடிக்க எண்ணி, ஒரு நாள் கண்குத்திப் பாம்பாக அந்த மாட்டின் சஞ்சாரத் தையே பின்தொடர்ந்து கவனித்தான்.

Koviloor Digital Library

பசு புற்றென்றின் பக்கலில் போய் நின்றது. புற்றிலிருந்து நாகம் வெளிவந்தது. ஜம்மென்று படமெடுத்தது. தூக்கிய தலையைப் பசுவின் மடியில் வைத்தது. சகஜமாகப் பாலைப் பருகத் தொடங்கியது. பசுவும் சற்றுக்கூடப் பதற்றமின்றி வெகு இயல்பாகத் தன் கன்றுக்குப் பாலூட்டுவதே போல ஸர்ப்பத்துக்குப் பாலூட்டிக் கொண்டிருந்தது.

(அநேக ஸ்தல புராணங்களில் இந்தப் பாம்புப் பாலூட்டு பற்றி வருகிறது. நவீனர்களுக்கு இது கட்டுக்கதையாகத் தோன்றலாம். ஆனால் காப்டன் ஃப்ரெட்டீ கெஸ்ட் இதன் யதார்த்த உண்மைக்குச் சான்று பகர்கிறார். குதிரைப் படை வீரரான அவர் 1944-ல் பெங்களூருக்குச் சமீபத்தில் இத்தகைய தொரு காட்சியை நேரில் கண்டு தம் சுய சரிதையில் குறிப்பிட்டிருக்கிறார்.

விடிகிற நேரத்தில் கெஸ்ட் குதிரைமீது சென்று கொண்டிருந்தாராம். ஓரிடத்தில் குதிரை பயப் பிராந்தி அடைந்து இடக்குச் செய்தது. காரணத்தைக் கண்டறிய இவர் சுற்றிலும் பார்த்தபோதுதான் அந்த அதிசயக் காட்சி தென்பட்டது. ஒரு கொழுத்த நாக ஸர்ப்பம் பசுவொன்றின் பின்னங்கால்களைப் பின்னிச் சுற்றிக் கொண்டு, அதன் மடியில் நேராக வாய் வைத்து க்ஷீரபானம் செய்கிறது!

சற்றுத் தொலைவிலே பாம்பு இருந்த போதிலும் இவர் சவாரி செய்த குதிரை மிரண்டு குதித்தது. பசுவோ பாம்பின் ஸ்பரிசத்திலே கட்டுண்டு சிலையாக நிற்கிறது.

குதிரையைச் சரிப்படுத்துவதற்காக கெஸ்ட் சவுக்கைச் சொடுக்கினார்.

அரவம் கேட்ட அரவம் பசுவை விட்டுச் சரேலென விலகி ஓடிற்று—அப்போதும், தன் சுபாவப்படிப் பசுவை ஒரு போடு போடாமல் அது போனது விந்தைதான்.

எனவே இது அன்று மட்டும் அகஸ்மாத்தாக நடந்த விஷயமல்ல என்றாயிற்று. அப்பாம்பின் புஷ்டியை நினைத்தபோது, இந்த க்ஷீரபானம் தற்செயலாக ஒரு நாள் நடவாமல், தினந்தினமும் நடந்து வந்திருக்க வேண்டும் என்று கெஸ்ட்டுக்கு உறுதிப்பட்டதாம்.

இனி விரியவிருக்கும் சரிதையில், ''சத்தியம் கட்டுக்கதையை விட விந்தையானது'' (Truth is stranger than fiction) என்றபடி அதிசயத்துக்கு மேல் அதிசயமாகப் படிக்கப் போகிறவர்களுக்கு எதுவுமே அவநம்பிக்கை யூட்டுவதற்கில்லை.)

''பாழும் பசுவே! நாள்தோறும் நாகத்துக்குப் பாலூட்டியா என்னை ஏமாற்றுகிறாய்?'' என்று சினம் கொண்டான் ஆயன்.

Koviloor Digital Library

ஆயினும் பசுதானே இவனது மூலதனம்? அதோடு, எந்த ஹிந்துவும் பசு வதையை எண்ணியும் பார்க்க மாட்டானே! எனவே ஆயன் ஆத்திரம் முழுதையும் பாலுண்ட பாம்பின்பாலே திருப்பிக் கொண்டான்.

அருகேயிருந்த ஒரு பாறுங்கல்லே எடுத்துத் தலைக்கு மேல் தூக்கி வீசினன் பாம்பை நோக்கி.

ஆனந்தமாகப் பால் மடுத்து முடித்த அரவம், அடடா, இதோ அடுத்த நொடியில் அடியுண்டு நசுங்கித் துடித்தது.

மரிக்குமுன் அது மனம் கொதித்துச் சாபமிட்டது. ''இனி இந்த ஊரில் யாதவர்கள் நசிக்கட்டும். பசுப் பெருக்கமும் பால் வளமும் குன்றி ஒழியட்டும். சாகும் என்னெருவனுக்காகப் பழி தீர்க்க இவ்வூரெங்கிலும் நாகப்படை செழித்தோங்கட்டும். இங்கு மண்ணெல்லாம் புற்ருகட்டும்'' என்று சூளுரைத்து மாண்டது நாகம்.

இதன் பின்தான் கொல்லபள்ளி புட்டபர்த்தியாக மாற்றுருவம் கொண்டது.

புற்றிடம் கொண்ட ஒற்றியீசனுக இதையே தம் ஜன்ம பூமியாகவும் ராஜதானியாகவும் உகந்தார் நம் சரித ஸ்வாமி.

திரு ஒற்றி ஈசன் மட்டுமல்ல, ''பின்னே அவனுடைய ஆரூர் கேட்டாள்'' என்ற வாக்குப்படி திரு ஆரூரனும் இப்படிப் புற்றிடம் கொண்ட பிரான்தான். புற்று மண் பிருத்வீ தத்வத்தைக் குறிப்பது. ஆகாச ரூபியான ஆண்டவன் மிகவும் ஸ்தூலமாக வருவது பிருத்வியாகத்தானே? ஆரூர் போலவே பிருத்வீ க்ஷேத்ரமாக உள்ளது காஞ்சி. இங்கே பிலம் என்ற புற்றிலே காமாக்ஷி ஆகாச ரூபிணியாக இருக்கிறுள். விண்ணவன் மண்ணுக்கு வந்து அவதரிப்பதற்குப் 'புற்றுவர்த்தினி'யைவிடப் பொருத்தமான இடம் இல்லேதான்.

ஸ்தல மாஹாத்மியத்தை மேலும் கொஞ்சம் பார்ப்போம். பிரபஞ்சத்தின் இதயமாகத் தில்லேயும், திருவருணையும், கச்சியும், காசியும் கூறப்படுவதே போல், புட்டபர்த்தியையும் ஐந்தாவதாகச் சேர்த்துக் கொள்ளலாம். இங்கு இதயம் என்பதே அகண்ட ஆத்ம ஆகாசம். புற்று என்ற மண்கூடு சரீர தத்வமாகும். உடல் வாழ உயிர் வேண்டும். உயிராயிருப்பது மூச்சுக் காற்றே. காற்றை உண்ணும் திறன் பெற்ற புற்றரவம், மூச்சின் ஆதாரமான பிராண சக்தியாகும். அந்த சக்திக்கும் ஆதாரம் எது என்று ஆழ்ந்து பார்க்கும்போது, வெளிக் காற்றனது ஆகாயத்தில் பிறப்பதுபோல், நம் மூச்சும் ஓர் ஆகாயத்தில்தான் பிறக்கிறதெனத் தெரியும். அந்த ஆகாயத்திலேயே ஒருமைப்பட்டு நின்ருல் மூச்சும் அடங்கி மூல சத்தியத்தோடு ஒன்றும் ஸமாதியநுபவம் கூடும். விளக்கவொண்ணுத ஏதோ ஒரு விதத்தில், புட்டபர்த்தி க்ஷேத்ரத்தை ஸ்மரிப்பதால், இந்த மூச்சும் பேச்சும்

Koviloor Digital Library

அடங்கிய "ஹ்ருதய"த்தின் சாந்தச் சாயலை அநுபவிக்க முடிகிறது. (இவ்வநுபவத்துக்கு நம் ஸ்வாமியிடமிருந்தே அற்புத ஒப்புதல் கிடைக்கிறது—பஜனைப் பாடல்களில் "பர்த்தி விஹார" என வரும் இடங்களில் அவர் "ஹ்ருதய விஹார" என்றே மாற்றிப் பாடுவதில்.)

உடலாம் அன்னமயகோசத்துக்கு மிதாக, உத்தரமாக, உள்ள பிராணமய கோசம்தான் மூச்சுப் பாம்பு சஞ்சரிக்கும் உத்தர கோசமங்கை. சிவபெருமானின் தலைநகரமாகத் திருவாசகம் வர்ணிக்கும் உத்தரகோசமங்கையின் பிறிதொரு வடிவம்தான் 'பர்த்தி' எனப் பார் புகழும் புட்டபர்த்தி.

* * *

புகழ் சமீப காலத்தில்தான். முப்பத்தைந்தாண்டுகளுக்கு முன்பு வரை அது வெளியார் அறியா குக்கிராமமாகவே அஜ்ஞாத வாசம் செய்து வந்தது. தேசப்படம் எதிலும் அதற்கு இடமில்லை. ரயில் நிலையம் கிடையாது. (இன்றும் கூடத்தான்). அன்று அது பஸ் மார்க்கத்திலும் இல்லை. சித்ராவதி ஆற்றை (அது மணற் படுகையாக உள்ள காலமே அதிகம்) காலாலோ கட்டை வண்டியாலோ கடந்துதான் அவ்வூரை அடைய முடியும்.

அநாமதேயமாயினும் அதன் அழகுக்கு என்றுமே குறை யில்லை. நாற்புறமும் குன்றுத் தொடர்கள் சூழ்ந்து தந்தையென கம்பீரமாகப் பாலிக்க, அன்னையெனக் குளிர்ந்தோடும் சித்ரா வதியின் உள்ளூற்று அமுதைப் பருகிக் கொண்டு பச்சென வளரும் பச்சைக் குழந்தை புட்டபர்த்தி.

புட்டபர்த்தி போலவே சித்ராவதியும் பாரமார்த்திகமான உட்பொருள் படைத்ததாகும். இப்படிப்பட்ட ரஹஸ்யார்த்தங் களைக் (esoteric significance) கூறவிடில் இந்நூல் நிறைவுறாது.

சுவாசம் எங்கே பிறக்கிறது என்று ஆய்ந்து, ஆழ்ந்து நோக்கினால் அப்பிறப்பிடத்திலேயே மனம் ஒடுங்கிவிடும். ஆத்மா காசமான அப்பிறப்பிடத்தைத்தான் அநுபூதிச் செல்வர்கள் "ஹ்ருதயம்" என்பர். இதிலே ஒன்றி நிற்பதுதான் மோக்ஷம். மூச்சு பிறக்கும் இதே இதயத்தில்தான் எண்ணமும் பிறக்கிறது. அதாவது பிராணன், மனம் இரண்டும் ஒரே ஆதாரத்தில்தான் தோன்றுகின்றன. மூச்சின் மூலம் எங்கே என்று ஆராய்வதால் இதயப் பெருவெளியில் கரைவது போலவே, எண்ணம் முளைப்பது எங்கே என ஆழ்ந்து விசாரம் செய்தாலும் மனம் அங்கே ஒடுங்கிவிடும்; ஆத்மா மட்டில் ஸ்வயம் பிரகாசமாகத் துலங்கும்.

புட்டபர்த்தி என்ற ஊர் ஆத்மனைப் பிராண சக்தியின் மூலமாகச் சுட்டுகிறதெனில், சித்ராவதி ஆறோ அதே ஆத்மனை மனச் சக்திக்கு மூலாதாரமாகக் காட்டிக் கொடுக்கிறது. சித்ர விசித்ரமாக அலை பாய்ந்து கொண்டிருக்கும் சித்தம்தான் சித்ரா வதி. பர்த்தியில் இந்நதி பெரும்பாலும் மண்ணுள் வற்றிச்

Koviloor Digital Library

சுவறி இருப்பதால் சிந்தனை ஓட்டம் நின்றுவிட்ட ஆத்மாநுபவமே குறிக்கப்படுகிறது.

சித்த—சித்தத்தை; ராவம்—அழ வைப்பது (அதாவது வருத்தி, நீக்குவது)தான் சித்ராவதி. சித்தம் நின்றபின் சித் என்ற தன்னுணர்வு மட்டுமே விளங்குகிறது. சித்—தன்னுணர்வை; ராதி—தருகிறது, சித்ராவதி.

அந்த உணர்வே ஆனந்தம் எனப்படும் பேரின்ப வீடாகும்.

இறைவனின் ஊர் உத்தரகோச மங்கை எனத் திருவாசகம் சொல்வது பர்த்திக்குப் பொருந்துகிறதெனில், அவனது ஆறு பற்றி,

வான்வந்த சிந்தைமலம் கழுவ வந்திழியும்
ஆனந்தம் காண் உடையான் ஆறு

என்று அது புகல்வதும் சித்ராவதிக்கு மிகப் பொருத்தமாக இருக்கிறது.

சித்ராவதீ தீர வாஸி ராம்—ஜய
பர்த்தீ புரீசா ஸாயிராம்

என்று இனிப் பாடுகையில், அலை அலையான நம் எண்ண ஓட்டங்களின் கரையில் அமைதி மயனுகவும், நம் உடலத்தின் உட்குகையில் உயிர் மயனுகவும் இலங்கும் ஆத்ம ஸாயியை உன்னி உணர்வோமாக!

★

இன்று உலகின் நாற்கோடிகளிலுமுள்ள கோடி பக்தருக்குப் பிறந்தகத்துக்கு மேலாக விளங்கும் ''பிரசாந்தி நிலையம்'' தோன்று முன், பர்த்திக் கிராமத்துக்கு மையமாக இருந்தது வேணு கோபால ஸ்வாமி ஆலயமே. அங்கு குடிகொண்ட கோபால ஸ்வாமி விக்கிரஹம்—அன்று பாம்பை நசுக்கி வதைத்த அதே பாறுங்கல்தான்!

இந்தக் கல்லிலே அரவத்தின் குருதி கொப்பளித்து, அச் சிவப்புத் தடம் ஆழப் பதிந்துவிட்டது.

நேராக மாட்டு மடியிலிருந்து பால் மடுத்த அரவம் யார்? பிராணனையே இசையாக்கிப் புல்லாங்குழல் என்ற புற்றின் வழியே புன்னகவராளியாக ஊதும் கோபாலன்தான் இப்படி அரவமாக வந்தான். இந்தப் பெரிய உண்மையை எளிய கிராமவாசிகள் எவ்வாறோ அறிந்துவிட்டனர். தங்களது எளிமையாலேயே ஒருவேளை அறிந்திருக்கலாம். அல்லது வெங்காவதூதர் போன்ற தொரு மகான், ஸர்ப்பத்தின் சாபத்தையும், அது யார் என்பதையும் அவர்களுக்கு அறிவித்திருக்கக் கூடும்.

Koviloor Digital Library

சிலுவையில் அறையுண்டாலும் மெய்யான கிறிஸ்து அதனால் மரிக்காதது போல், மாறாக இதுவே அவரது மெய்யான உருவை வெளிக்கொணர்ந்தது போல், கல்லடி பட்டு அந்தப் பாம்பு இறந்ததால் அமரக் கண்ணன் மரித்துவிடவில்லை. மாறாக இதனாலேயே அவனது கருணைச் சாறான ரத்தம் உலகுக்கு நலன் பயக்க வெளிப்படப் படிந்துவிட்டது. கிறிஸ்துவின் ரத்தத்துக்குக் கூறப்படும் அன்புச் சிறப்பு கிருஷ்ணனுக்கும் உண்டே. இதனால் தானோ இன்றும் ரக்த வஸ்திரதாரியாக நம் ஸ்வாமி விளங்குவது?

செம்மைத் தடம் கொண்ட கல்லையே கோபாலஸ்வாமி யாகப் பிரதிஷ்டை செய்து, அதற்குக் கோயிலெடுத்து வழிபட்டு, பழைய சாபம் தீரும் நாளைக் கிராமத்தார் எதிர்பார்த்திருந்தனர்.

பிற்காலத்தே நம் கண்ணன் அக் கல்லின்மீது சந்தனக் குழம்பை அப்பச் செய்து, ''இதோ பாருங்கள்'' என்று காட்டி னார். பாம்பாக வந்த கோபாலாம்சத்தின் பழி தீர்க்கும் வெம்மை சந்தனத்தில் தணிந்ததோ, அல்லது இந்தப் பூர்ண கோபாலனின் சங்கற்பத்தில் தணிந்ததோ, குழலூதும் கண்ணனின் திவ்ய வடிவம் அக்கல்லிலே புடைப்புச் சிற்பமாக விம்மி எழுந்ததாம். பலர் இக்காட்சியைக் கண்ணாரக் கண்டிருக்கிறார்கள்.

கோபாலஸ்வாமி ஆலயத்தைத் தம் பொன்விழாவின்போது நம் கதாநாதர் சிறப்புறத் திருத்தியமைத்து, திருத்தேரும் செய்து வைத்திருக்கிறார்.

இவரது அவதாரத்துக்கு முன், பாம்பின் சாபப்படி, புட்ட பர்த்தியில் பசுச் செல்வம் அடியோடு அழிந்தே யிருந்ததாம். ஊரெங்கிலும் பாம்பு மயமாக இருக்கையில் எப்படிப் பசுவை வைத்து ரக்ஷிப்பது? பக்கத்துக் கிராமங்களிலிருந்துதான் இவ் வூருக்குப் பால் வந்தாக வேண்டும். தப்பித் தவறி பர்த்திக்குப் பசு பிடித்து வந்தால் அதற்குக் கோமாரி முதலிய நோய் பீடித்துக் கதையை முடித்துவிடுமாம்.

ஸ்வாமி அவதரித்ததிலிருந்து ஆச்சரியமான முறையில் நிலைமை மாறலாயிற்று. புற்றுக்கள் கொஞ்சம் கொஞ்சமாக அற்றுப் போகலாயின. பிற்காலத்தில் ''கான்ஸர் கான்ஸல்'' (Cancer cancel) என்று கூறிய மாத்திரத்தில் பலரது புற்று நோயைத் தீர்த்தவர், முதலில் தமது ஊரின் 'புற்று நோயை'யே தீர்த்திருக்கிறார். பாம்புப் பயம் இல்லை என்ற பின் இங்கும் பசுக்களை வைத்து வளர்க்கலாமே எனப் பரீட்சை பார்க்கும் தைரியம் பிறந்தது. பசுக்களைப் பீடிக்கும் தைரியம் இப்போது நோய் எதற்கும் இல்லை. எனவே பர்த்தியிலும் பசு வாழ முடியும் என்றாயிற்று. ஸாயி கோபாலன் கல்லிலே வேணுகோபா லனைக் கொண்டு வந்ததிலிருந்து கோ ஸம்ருத்தி மேலும் செழித் தது. இன்றோ கேட்கவே வேண்டாம். ஐம்பதாண்டு களுக்கு முன் பசுவைப் பற்றிக் கனவுகூடக் காணமுடியாத ஊர் இது என்று நம்ப முடியாதபடி, ஆனிரை நிறைந்த அற்புத கோகுலமே அங்கு உருவாகியுள்ளது. நம் நவ கோவிந்தன்தான்

Koviloor Digital Library

1975 கோகுலாஷ்டமியன்று ஏராளமான பசுக்களை முன்னின்று அழைத்து வந்து இந்த கோகுலத்தை நிறுவி, 'அந்த கோகுல நந்தனனே நான்; அவனது ஆய்ப்பாடியே இப் புட்டபர்த்தி' என்று நிலைநாட்டி யிருக்கிறார். (தம் கிருஷ்ணத்வத்தைக் க்காட்டுவதற்கே போல் பெங்களூர் ஒயிட் ஃபீல்டில் தமது இருக்கைக்கு ''பிருந்தாவனம்'' எனப் பெயரிட்டுள்ள இவர் அங்கும் ஒரு கோகுலம் வைத்திருக்கிறார்.)

குக்கிராமமாயினும் ஒருங்கே வட-தென் மதுரைகளாக இருக்கும் மஹா க்ஷேத்திரமே புட்டபர்த்தி என்று தெரிகிற தல்லவா? அதனால்தான் இந்த அநாமதேயப் பட்டிக்காட்டைத் தன் ஜன்மஸ்தலமாக ஐயன் தேர்ந்தெடுத்துக் கொண்டான்.

* * *

ஆம், தமது பிறப்பிடம், குலம், குடி, தாய் தந்தை எல்லா வற்றையும் தாமே தேர்வுசெய்து பிறந்ததாகத்தான் அவர் சொல்கிறார்—திருமால் தானே பெற்றோரைத் தேர்வு செய்து கொண்டு தாசரதியாகப் பிறந்தான் (பிதரம் ரோசயாமாஸ) என்று வால்மீகி கூறுவதே போல.

''உங்கள் அனைவரின் பிறப்புக்கும் இறைவனின் அவதாரத் துக்கும் நிரம்ப மாறுபாடு உண்டு. நீங்கள் உங்களுடைய பூர்வ பாப புண்ணியங்களை முன்னிட்டே பிறக்கிறீர்கள். ஆனால் அவதாரங்களோ ஹிரண்யகசிபு போன்ற தீயோர்களின் பாபங்களை யும், பிரஹ்லாதன் போன்ற தூயோர்களின் புண்ணியங்களையும் முன்னிட்டே நிகழ்கின்றன. அவதாரங்களுக்கு பூர்வ கர்மச் சுமை ஏதும் இல்லை. மற்ற ஜீவர்களைப்போல் கர்ம பலனை அநுபவிப்பதற்காக அவை தோன்றவில்லை. தர்ம ஸம்ஸ்தாபனத் துக்காகவே — உலகில் அறத்தை நிலைநிறுத்துவதற்காகவே — அவதாரங்கள் ஏற்படுகின்றன.

''ஒரு மாலை உள்ளதெனில் அதில் பற்பல வண்ண மலர் கள் கோக்கப்பட்டிருக்கின்றன. பலப்பல செடி கொடிகளிலிருந்து மாலாகாரன் மலர்களைத் திரட்டி ஹாரமாகத் தொடுக்கிறான். அவன் மாலை தொடுக்கு முன்பே இங்கிங்கிருந்து இன்னின்ன புஷ்பங்கள் எடுக்க வேண்டுமெனத் திட்டமிட்டு விடுவான். நார், நீர் யாவும் தயார் செய்து கொண்டு விடுவான். இவ்வாறேதான், ஓர் அவதாரம் நிகழ்கிறதெனில், அது பிறக்கு முன்பே அதன் சமிதத்தின் ஸகல நுணுக்கங்களும் தீர்மானிக்கப்பட்டு விடுகின்றன. ஒரு நாடகம் மேடையில் நடிக்கப்படு முன்னரே கதையாக முற்றிலும் உருவாக்கப்பட்டு விடுகிறதல்லவா? இதுபோலவே அவதார சரிதமும் முன்னதாகவே, அவதரிக்கும் இறைவனால் சங்கற்பிக்கப்பட்டு விடுகிறது. ஆண்டவனின் அவதார வரலாறு ஒரு வண்ண வண்ண மாலையே ஆகும். எவரெவரோ எப்பொழு தெப்பொழுதோ பெற்ற வரங்கள், சாபங்கள் ஆகியவற்றை நிறைவேற்றத்தக்க நிகழ்ச்சிகளை நானா மலர்களாக்கி இக் கதம்பக்

Koviloor Digital Library

கோதையை இறைவன் தொடுத்துக் கொள்கிறான்''— இவ்வாறு கூறுவார் நம் சரிதப் பூங்கோதையின் 'மாலாகாரர்.'

மேலும் சொல்வார் : ''நீங்கள் ஓரளவுக்கு உங்களுடைய மனைவி அல்லது கணவன், நண்பர்கள், யஜமானர்கள், பணியாட்கள் ஆகியோரைச் சுதந்திரமாகத் தேர்வு செய்துகொள்வது போல இருக்கிறது. ஆனால் நான் என் பெற்றோரையே முன் கூட்டித் தேர்வு செய்துகொண்டு பிறந்தவன்.''

இதன்படியே எந்தப் பூர்வ புண்ணியத்தின் பலனாகவோ, புட்டபர்த்தியில் ஒரு குறிப்பிட்ட குடியில் லோக கல்யாண தீபம் வந்து சுடரிட்டது.

மன்னு நாரணநம்பி பிறந்தமை
பன்னு பாடல் வல்லார்க்கில்லை பாவமே

என்ற ஆழ்வார் வாக்குப்படி இந்த அவதாரனின் ஜனன கட்டத்தைப் படிப்பதே புண்ணியமாகும்.

Koviloor Digital Library

அத்தியாயம்—3

சூரிய வம்ச சூரியன்; ரத்னாகர ரத்தினம்

"சூரிய வம்சம் எங்கே? என் சிற்றறிவு எங்கே? ஆயினும் ரத்தினத்தில் துளையிட்டிருந்தால் சாமானியச் சரடும் அதனுள் புகுமன்றோ? முன்னரே வால்மீகி முனிவர் சூரிய வம்ச ரத்தினத்தில் துளையிட்டு விட்டதால் அவ்வழியே நானும் என் சிறு கவிச் சரட்டைச் செலுத்துகிறேன்."

— 'ரகுவம்ச'த்தில் காளிதாஸன்

இடைக் காலத்தில் புட்டபர்த்தி சோடை போயிருந்தாலும், பூர்வத்தில் அதற்கு வரலாற்று முக்யத்வம் உண்டு. அதன் பக்கலில் உள்ள புக்கபட்டணம், விஜயநகர ஸாம்ராஜ்யத்தைத் தோற்றுவித்த ஹரிஹர—புக்கர்களில் பின்னவரின் பெயரில் அமைந்ததேயாகும். புட்டபர்த்தியின் பெரிய ஏரி சரித்திரப் புகழ் வாய்ந்த சிக்கராயரால் அகழப்பட்டதாகும். இவ்வூர் ஒரு காலத்தில் கோட்டை கொத்தளங்களுடனும், இயற்கை அகழி போன்ற சித்ராவதி நதியுடனும் முக்கிய நகரமாக விளங்கியிருக்கிறது. கோட்டை இடிபாடுகளை இன்றும் சிறிது காணலாம்.

இன்று கிராமமாக உள்ள பர்த்தி நகரமாக இருந்த அன்று, இந்நகரையும் சுற்றுப்புறங்களையும் பாலிக்கும் பொறுப்பு ராஜு வம்சத்தாரிடம் இருந்தது. இவர்கள் க்ஷத்ரியர். தம்மை சூரிய வம்ச வழித்தோன்றல்களாகக் கருதியவர். பாரத்வாஜ கோத்ரத்தவர். ஆபஸ்தம்ப ஸூத்ரத்தவர். பாரத்வாஜத் தொடர்பை இன்னொரு விதத்தில், முதல் அத்தியாயத்தில் சங்கடஹர சதுர்த்தி மகிமையில் பார்த்தோம். இதற்கு மேலும் கோத்திர —சூத்திரப் பொருத்தம் பிற்பாடு விரியும்.

ராஜுக்களில் பல கிளைகள் உண்டு. அதில் ஒன்று 'ரத்னாகர' என்ற இல்லப் பெயரை (இண்டிப் பேரு)க் கொண்டதாகும்.

Koviloor Digital Library

நவ மணிகளில் மாணிக்கமாம் ரத்தினத்தைப்போல் ராஜுக்களில் இவர்களே முடிமணியெனக் கருதப்பட்டனர் போலும்.

எக்காரணத்தாலோ காலக் கிரமத்தில் ரத்னாகர ராஜுக்களிற் சிலர் க்ஷத்ரியர்களின் வீர தீர வாழ்வை விட்டு, இனிமையும் கனிவும் கொண்ட காவிய வாழ்வுக்குத் திரும்பினார்கள்.

துவாரகையில் வதியும் கண்ணனுக்கு 'ரண சோட் நாத்', அதாவது 'யுத்தத்தை விட்டவன்' என்றே பெயர். பூதனையிலிருந்து கம்ஸன் வரை அநேகரைக் கொன்ற பிறகு, ஜராசந்தனின் பல தாக்குதல்களுக்குப் பின்னர், போர் புரிவதில் அலுப்புற்ற கண்ணன் அமைதியாகத் தங்கிய இடம்தான் துவாரகை. இதன் பின் அபூர்வமாக எப்போதோ ஒரு சிசுபாலன், ஒரு நரகாசுரன் போன்றவரை அவன் சம்ஹரித்தாலும், மா பாரதப் போரிலும் ஆயுதம் எடுக்காமல்தான் இருந்தான். 'மற்ற யுகங்களில் தீயோரை அழித்து தர்மத்தை வளர்ப்பதே அவதார காரியமாக இருப்பினும், மக்கட் குல முழுமையுமே தீமைக்கு ஆட்பட்டுவிட்ட கலியில் ஓர் அவதாரமானது சம்ஹாரத்தில் இறங்குவதற்கில்லை. எனவே, கலியுக அவதாரங்கள் ஆயுதத்தை ஒழித்து, ஞானோபதேசத்தையே முக்யமாகக் கொண்டவை' என்பார் நம் ஸ்வாமி. இதற்கேற்ப ஒரு 'ரண சோட்' க்ஷத்ரிய குடும்பத்தில் அவதரித்திருக்கிறார். இதில் இன்னொரு விசேஷம், இவரது பூர்வ அவதாரமான ஷிர்டி பாபா தமது இருக்கைக்கு 'துவாரகா மாயீ' என்று பெயரிட்டிருந்ததுதான்!

'அயோத்யா' என்றாலும் யுத்தம் அற்ற இடம் என்றே பொருள். ஸ்ரீ ராமன் அயோத்திக்குள் எந்தப் போரும் புரிந்ததில்லை. ஸாயிராம் என்றே மஹாமந்திரமாகப் பெயர் கொண்டுள்ள நம் ஐயனின் முன்னோர்கள் அவரது ஜனன பூமியை அயோத்யாவாக, துவாரகாவாக ஆக்கியிருந்தார்கள்.

ஆதியிலேயே துரோணர் முதலான அந்தணர்கள் க்ஷத்ரிய தர்மத்தை மேற்கொண்டதுபோல், சிற்சில சந்தர்ப்பங்களில் நமது சமுதாயப் பகுப்பில் ஒரு சமூகத்தார் வேற்றாரின் தொழிலைத் தழுவியிருக்கிறார்கள். இப்படித்தான் ரத்னாகர ராஜுக்கள் யுத்தரங்கத்தை விட்டு நாடக அரங்கத்தைத் தமது வாழ்வாக்கிக் கொண்டனர். காவலர்களாக இருந்தவர்கள் நாவலராக, பாவலராகப் பரிணமித்தனர். கவிதை இயற்றுவது, நாடகம் எழுதி நடிப்பது, இவற்றின் மூலம் குறிப்பாக பக்தியை, தர்மத்தை வளர்ப்பது இக் குடியின் தனிப் பெருமையாயிற்று. கோபால ஸ்வாமி ஆலயத்தை நிர்மாணித்ததே இக் குடியினர்தாம் என்று சொல்லப்படுகிறது. பாரம்பரியமாக நாடகக் கலையை ஒழுக்க விதிகளுடன் பேணிக் காத்தவர்களைப் பற்றி ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள் (அப்போது 'இல்லஸ்ட்ரேடட் வீக்லி' ஆசிரியராக இருந்த) ஸ்ரீ ஏ. எஸ். ராமனிடம் பேசுகையில் ''படராஜுக்கள்'' என்போரைக் குறிப்பிட்டுள்ளார். இந்தப் படராஜுக்கள் ரத்னாகர குலத்தில் நம் கதாநாதன் உதித்த கிளைவம்சத்தினரே ஆவர்.

Koviloor Digital Library

இவர்களது மூதாதைகளில் சில நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட வெங்காவதூதர் முதலிடம் பெறுகிறார். பெயரிலிருந்தே அவர் அவதூத சந்நியாசியாக ஆன்மிகம் பரப்பியிருப்பதை ஊகிக்கலாம். அவரைப் பற்றி விரிவான விவரங்கள் தெரியாவிடினும், ''வெங்காவதூதர்'' என்றவுடனேயே இன்றும் ஆந்திரத்திலும் கர்நாடகத்திலும் கையெடுத்துக் கும்பிடுபவர்கள் உள்ளனர். கலி மலிந்து வரும்போது உலகில் அவதாரம் புரிய வேண்டும் என்று இறைவனிடம் நேருக்கு நேர் வரம் கேட்டுப் பெற்ற மனிதகுல தூதர் வெங்காவதூதர் என்பது அடியாருலகில் ஒரு நம்பிக்கை.

கடுந்தவமும், யோகமும், யாகமும், விஸ்தார பூஜையும் கலிகால மாந்தருக்குக் கை வரா என்பதால் சாஸ்திரங்களே இந்த யுகத்துக்குக் கை கண்ட மருந்தாக அளித்துள்ள கீர்த்தனத்தை நாடகமாக, காவியமாக மேலும் கவர்ச்சியுடன் தந்து அறம் வளர்த்த இக் குடியில் சென்ற நூற்றாண்டு மத்தியில் பிறந்த பெரியவர் ஸ்ரீ கொண்டமராஜு. சாதாரணமாக நாடகக்காரர், கவி என்றால் அக் காலத்தில் அவர்களுக்கு விசேஷ மரியாதை செலுத்தமாட்டார்கள். ஆனால், படராஜுக்கள் மட்டும் இதற்கு விதிவிலக்கு. அவர்களை மக்கள் ஊருக்கே பெரியவர்களாக, உபதேசகர்களாக மதித்தனர். அவர்களும் கல்வி கேள்விகளிலும் நடக்கையிலும் சிறந்தவர்களாக, வித்வத்துடனே கவித்வத்தைக் கலந்து கலையாக மக்களுக்குத் தந்தார்கள். இவர்களது ஆன்மிகக் குலதனங்களில் 'லேபாக்ஷி பாடாந்தரம்' என்ற ஆந்திர ராமாயணப் பாடல் முக்யமானது. அது சிற்பச் சிறப்பு வாய்ந்த லேபாக்ஷியில் சொற்சிற்பமாக நிர்மாணிக்கப்பட்ட கதைப்பாட்டு. கொண்டமராஜுவுக்கு இக் காதை ஆதியோடந்தம் கரதலப் பாடமாகும். அப் பவித்திர சரித்திரத்தின் சுவையில் ஊறித் திமிர்த்தவர் அவர். நடிப்புத் திறனும் மிக வாய்ந்தவர். ஆயினும் அடக்கம் மிக்க அவர், ஸ்ரீராமனாகத் தாம் வேஷம் போடவா என்ற பயபக்தியினால், ராமனின் அடித் தொழும்பனான லக்ஷ்மணனாகவே நாடகத்தில் தோன்றுவார். லக்ஷ்மணன் போலவே சரணாகதி தத்வத்தின் வார்ப்பு வடிவாக நாடக மேடையில் மட்டுமின்றி, வாழ்விலும் விளங்கப் பிரயாசைப்பட்டு பெருமளவு இதனைச் சாதித்தார்.

இந்த லக்ஷ்மணரின் பத்தினி, ஊர்மிளையை ஒத்த கடும் விரத நியமம் கொண்ட லக்ஷ்மம்மா. மாற்றுப் பெண்ணுக்குப் பேற்று நோய் கண்டபோதுகூட, ஸத்ய நாராயண பூஜையை விரைவு படுத்தாமல் நடத்தினாளே அவள்!

கொண்டமராஜு வயோதிகப் பருவத்தை அடைந்தபின், சாஸ்திரப்படி வானப்ரஸ்தரைப் போலப் பிள்ளைகளை விட்டுத் தனிக் குடிலில் வசிக்கலானார். அக் குடிலை மக்கள் ஆசிரமம் போலவே மதித்தனர். அங்கு ஸகல விரதங்களையும் அநுஷ்டித்து வந்தார். வெகு முக்யமாக அஹிம்ஸா தர்மத்தை மேற்கொண்டிருந்தார். இக் குடியினர் புலால் உண்பவரேயாயினும் கொண்டமராஜு மட்டும் திவிர சைவத்தை உணவு நெறியில் கைக்கொண்டிருந்தார்.

Koviloor Digital Library

இப்பேர்ப்பட்டவருக்குத் தெய்வ அருளின் சூசகங்கள் கிட்டாமற்போகுமா? அப்படிப்பட்டதோர் சம்பவத்தை, நூற்றுப் பத்தாண்டுகள் நிறைந்து வாழ்ந்த இப் பெரியார், தமது சுருங்கிய கன்னங்களை ஆனந்த தாரை பள்ளமடையிட உருகிக் கூறுவார். கனவு போலத் தோன்றினும், வெறும் ஸ்வப்பனம் எனத் தள்ள முடியாத அநுபவ மயமான சம்பவம்!

* * *

தெய்வ மாது ஒருத்தி புயல் மழையில் சிக்கித் தவிக்கிறாள். நாற்புறமும் சலிக்கும் அவளது பார்வை தற்செயலாகக் கொண்டமராஜுவின் மீது விழுகிறது. அவளது தவிப்பு தணிகிறது.

''அப்பனே! நான்தான் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் அன்புப் பத்தினியான ஸத்யபாமை. எனக்காகக் கற்பக விருக்ஷம் கொண்டு வர அவர் தேவலோகம் சென்றிருக்கிறார். போனாரோ போனார், எத்தனையோ காலம் ஓடியும் இன்னம் அவர் திரும்பக் காணோம். என் செருக்கை அடக்குவதற்காக அவர் அவ்வப்போது என்னை வாட்டிச் சோதிப்பதுண்டு. அப்படித்தான் இப்போதும் செய்கிறாரோ என்னவோ? ஐயனுக்காகக் காத்துக் காத்துக் களைத்து விட்டேனப்பா! போதாக் குறைக்கு இப் பேய் மழையை வேறு அனுப்பி வைத்திருக்கிறார். நல்ல வேளை, உன்னைப் பார்த்தேனப்பா! அன்பு மகனைப் பார்த்தாற்போல் நிம்மதி பிறந்து விட்டது. அவர் வருகிறவரை நான் சுகமே தங்கியிருக்க நீதான் எனக்கு இடம் கொடுக்க வேண்டும்'' என்று கொண்டமராஜுவிடம் கூறுகிறாள் பாமை.

கனவு கலைகிறது. கொண்டமரின் மனத்துளோ இன்ப மழை பொழிகிறது. புயல் கொடுமையும், பாமாவின் பரிதவிப்பும் அவருக்குப் பெரிதாகத் தெரியவில்லை. கொண்டல் வண்ணன் கற்பக விருக்ஷத்தைத் தம் ஊருக்கே கொண்டுவரப் போகிறான் என்பதொன்றே கொண்டமரின் நெஞ்சில் கற்பக மலர்களைச் சொரிகிறது.

கனவில் அன்னை பணித்தபடி அவள் எழுந்தருள ஓர் ஆலயம் எழுப்பவேண்டும் என்று தீர்மானிக்கிறார். பக்தி இருந்துவிட்டால் எண்ணம் செயலாகக் கேட்பானேன்? எனவே, சொத்து வசதியில்லாதவராக இருந்தும்கூட எப்படியோ கோவிந்த மஹாட்டிக்குக் கோவில் எடுத்துவிட்டார். இன்று நம் காவியநாதர் தமது இருக்கையாக உவந்து உலகப் புகழ் ஊட்டுவித்துள்ள பிரசாந்தி நிலயத்திலிருந்து சுமார் கால் மைலில் மண்டப உருவில் உள்ள மந்திரம்தான் கொண்டமராஜு எழுப்பிய பாமை கோயில். இதுவும் நம் ஸ்வாமியின் ஐம்பதாவது ஆண்டு விழாவில் புதுக்கப் பட்டு பொலிவுற்றிருக்கிறது.

பாமைக்குத் தனிக் கோயில் இருப்பது அபூர்வத்திலும் அபூர்வந்தான். வாசகர்கள் பொறுத்திருந்து பார்த்தால் இங்கு அவள் ஆலயம் எழுப்பிக் கொண்டதன் பொருத்தம் தெரியவரும்.

Koviloor Digital Library

பாமா விக்ரஹத்துக்காகக் கொண்டமர் சிரமப்படவில்லை. கல்லையே கோபாலஸ்வாமியாக வைத்ததற்கேற்ப, அவன் காமினி யையும் இங்கே ஒரு குத்துக் கல்லிலேயே ஆவாஹனம் செய்து விட்டார். மூர்த்தியானது அங்கலக்ஷணம் இல்லாது, வெறும் பாறாங்கல்லாக இருந்தாலும், கிராம மக்கள் இப்படிப்பட்ட கற்களிடமும் நம்பிக்கை மயமாக பக்தி செய்கிறார்களே அந்தக் கனிவுதான் முக்யமானது. இங்கே ஸத்யபாமா அழகு பிம்பமாக இருக்கவில்லை. 'கலைக்கண்' படைத்தவர்கள் இங்கே நிறைவு பெறுமலே போகலாம். ஆனால், பர்த்தி கிராமவாசிகளோ 'ஸத்யம்மா, ஸத்யம்மா' என்று தாயுரிமை கோரி இந்த ஸத்ய பாமையை வணங்கலாயினர். கோபாலஸ்வாமிக்கும் மேலாக இவளே ஊர்த் தேவதையாக 'உயர்வு' பெற்றுவிட்டாள்!

★

கொண்டமராஜுவுக்குப் பெரிய பொருளாதார வசதி கிடையாது. மத்யதரக் குடிதான் அது. பூர்விகச் சொத்து என்று கொஞ்சம் பூமி கர்நூல் மாவட்டம் கொலிமிகுண்ட்லாவில் இருந்தது. கொண்டமராஜுவின் நாடகக் குழுவுக்குத் தாலுகா முழுதும் வரவேற்பு இருந்ததால், 'இல்லை' என்னாமல் குடும்பம் ஓடிக்கொண்டிருந்தது.

கொண்டமருக்கு இரண்டு புத்திரர்கள். வேங்கட ரமண நாமத்தின் சுருக்கமான வெங்கா(வதூதர்) எனப் பெயர் கொண்ட குல முதல்வரின் பெயரையே இரு பிள்ளைகளுக்கும் வைத்தார். மூத்த புதல்வர் பெத்த (பெரிய) வெங்கப்ப ராஜு. இளையவர் சின்ன வெங்கப்பராஜு. இருவரும் ஸங்கீத, நாடக சதுரத்தைப் பிதுரார்ஜிதமாகப் பெற்றனர். இளையவருக்குச் சொந்த சாஹித்தியத் திறனும் உண்டு. இவருக்கு மூலிகை வைத்தியம் பார்க்கவும் வரும். சில மந்திரங்களை ஓதித் தாயத்து செய்யவும் கற்றிருந்தார். நம் ஸ்வாமியின் சிறிய தந்தையான இவர் இன்றளவும் ஜீவியவந்தராக இருக்கிறார்.

ஒருமுறை கொண்டமராஜு மூத்த பிள்ளைக்கு நிலபுலங்களைப் பரிசயம் செய்து வைப்பதற்காகக் கொலிமிகுண்ட்லாவுக்கு அழைத்துச் சென்றார். அருகேயிருந்த சுப்பாராஜு என்ற உறவினரின் வீட்டுக்கும் சென்றார். ஈச்வரம்மா எனப்படும் அவரது மகளான ஈச்வராம்பாவைப் பார்த்ததும் கொண்டமரின் மனத்தில் ஓர் ஆசை எழுந்தது.

சுப்பாராஜுவிடம், "உங்கள் மகள் எங்கள் வீட்டு விளக்காக வரட்டும். நீங்களுந்தான் அந்தப் பக்கமே வந்து குடியேறி விடுங்களேன்! இங்கே பார்லே பள்ளிக் காடுகளில் பகல் நேரத்திலேயே கொள்ளைக்காரர்கள் சூறையாடுவதாகத் தெரிகிறதே! பேசாமல் புறப்பட்டு வந்து விடுங்கள். நாம் பந்துக்களாக, கூப்பிட்ட குரலுக்கு ஒத்தாசையாக இருந்து கொள்வோம்" என்றார்.

Koviloor Digital Library

சாதாரணமாக சுப்பாராஜு குடிபெயர இசைந்திருப்பாரோ, மாட்டாரோ? ஆனால் கொண்டமர், பெத்த வெங்கப்ப ராஜுவை 'லஞ்சம்' கொடுக்க முன்வந்ததால், "ஆஹா" என்று ஒப்புக்கொண்டார். புட்டபர்த்திக்கு எதிர்க் கரையிலுள்ள கர்நாட நாக பள்ளியில் வந்து குடியேறினார்.

ஈச்வரம்மா என்ற மங்கை நல்லாள் பெத்த வெங்காவின் கரம் பிடித்தாள். கொண்டமரின் கிருஹத்திற்கு வந்து சேர்ந்தாள். காலக் கிரமத்தில் குலம் விளங்க மூன்று மக்களையும் பெற்றுக் கொடுத்தாள். முதலில் சேஷமராஜு என்ற பிள்ளை; பிறகு வெங்கம்மா, பார்வதம்மா என்ற இரு பெண்கள்.

அதற்குப் பிறகுதான் சாந்தம்-சிவம்-அத்வைதம்-சதுர்த்தம் என்ற உபநிஷத வாக்குக்கேற்ப, சதுரரான நம் சாமிதேசனை ஒரு வத்ய சதுர்த்தித் திதியிலே நான்காவது மகவாகப் புவிமிசை மலர்த்தினாள்.

சூரிய வம்சம், ரத்னாகரம், ராஜு - இந்த ஒவ்வொன்றுமே நம் நூல் நாயகருக்குப் பொருத்தந்தான். இதயத்தில் ஆத்ம ஜ்யோதியாகத் தியானிக்கப்படுபவன் சூரியன்தான். ஞான வடிவன் அவன். நம் ஸ்வாமி கண்ணனையே அதிகம் நினைப் பூட்டுபவர் எனினும் தமது மந்திரமாக "ஸாயிராம்" என்று ராம நாமத்தை உவந்தாற்போலவே, தமது குடியாகவும் ஸ்ரீ ராம சந்திரன் அவதரித்த சூரிய வம்சத்தையே தேர்ந்தெடுத்திருக்கிறார். (கண்ணன் தோன்றிய யதுவம்சம் சந்திரவம்சமாகும். ரத்னாகர ராஜுக்கள் தம்மை சூரிய வம்சமாகச் சொல்லிக் கொண்டாலும், ஆதியில் இவ்வூர் கொல்லபள்ளியாக இருந்ததாலோ என்னவோ, பிரம்ம நாடியானது நம் ஸ்வாமியையே யது வம்ச திலகன் என்றுதான் அழைக்கிறது. மதிநலம் மதியிடமிருந்தே வருவதாக சாஸ்திரம் சொல்வதால் இதுவும் பொருத்தந்தான்!)

ஸ்ரீராமனை ஸத்ய தர்ம விக்ரஹன் என்றே கொண்டாடுகிறோம். நம் சதுரன், ஸாதனை சதுர்த்தமாக — நல்லறத்தின் நாற்கால்களாக — வலியுறுத்துவதும் ஸத்யம், தர்மம், சாந்தி, ப்ரேமை என்பனவே.

ரத்னாகரம் என்றால் மாணிக்கச் சுரங்கம் என்று பொருள். இவர் உபதேச ரத்தினங்கள் கொழிக்கும் மாணிக்கச் சுரங்கமே யன்றோ? அது தவிர, எங்கெங்கோ எவரெவரையோ கட்டிக் காப்பதற்காக இவர் ஓயாது ஒழியாது தாயினும் சாலப் பரிவுடன் புரியும் கருணைச் செயல் ஒவ்வொன்றும் ஒரு ரத்தினம் அல்லவா? ரத்தினங்களைத் தன்னகத்தே கொண்ட கடலுக்கு ரத்னாகரம் என்ற பெயர் உண்டு. இவரோ மகா சமுத்ரமே ஆவார். ஆழங் காண வொண்ணாதவர். கரை கடந்தவர். அதேபோதில் அடியாரைக் கடைத்தேற்றிக் கரையேற்றும் கருணைக்கடல். நாகர் முடியிலும் ரத்தினம் தோன்றுவதுண்டெனில், இவரோ குண்டலினி நாகத்தின் நாத முடிவிலே தோன்றும் தத்வ ரத்தினமாக இருக்கிறார். ஸோமசுந்தரக் கடவுள் அபிஷேகப் பாண்டியனுக்கு

Koviloor Digital Library

மணிமுடி செய்யத் தாமே நவரத்ன வியாபாரியாக வந்தாரெனில், ஸோம வாரத்து உதித்த நம் நாயகர் எத்தனை முறை நவரத்ன மாலைகளும் மோதிரங்களும் சிருஷ்டித்து அடியாருக்கு ரக்ஷையாக அருளியிருக்கிறார் என்பதற்குக் கணக்கே இல்லை. வேதத்தின் முதல் மந்திரமே இறைவனை ''ரத்னதா—தமம்'' (ரத்தினம் வழங்கும் வள்ளல் திலகம்) என்கிறது. அதற்கு உயிர் கொண்ட உதாரணம் நம் ஸ்வாமிதான்.

எதிலுமே சிரேஷ்டமானதை ரத்னம் என்கிறோம், ஸ்திரீ ரத்னம், பாரத ரத்னம் என்பதுபோல், ஸர்வ சிரேஷ்டரான நம் ஸ்வாமியே ரத்தினம்தான். ''ரத்னாகர குல பூஷணா'' என்று பஜனையில் போற்றப்படும் குணரத்தினம்!

ராஜு என்றால் ராஜாதான். ஒவ்வொரு செயலிலும் மிடுக்கும், பூர்ண அதிகாரப் பெருமையும் மிளிரும் நம் ராஜாதிராஜ ராஜ கம்பீரனிடத்தே! 'ஜய விஜயீ பவ' சூர்ணிகையில் ''புட்டபர்த்தி சக்ரவர்த்தி'' என்றே போற்றப்படுபவர் அல்லரோ? இறைவன் சந்நிதிகளிலும்கூட வணங்காத முடி அன்றோ அவருடையது?

குடிப் பொருத்தம் இதோடு நின்றுவிடவில்லை. இவரது பெற்றோருக்கும் சோதரருக்கும் பெயர்ப் பொருத்தம் கண்டும் பக்தர்கள் மகிழலாம். தந்தை வெங்கப்பா — வேங்கடவனின் அப்பாவோ? தாய் ஈச்வராம்பா—ஈசனின் அம்மா! ஆதிசங்கரரின் பெற்றோருக்கு சிவகுரு, ஆர்யாம்பா என்ற இயற் பெயர்களே புத்திரனால் காரணப் பெயர்களாகவும் ஆனது போலத்தான் இருக்கிறது. கண்ணனுக்கு சேஷன் அண்ணனாக வந்தானெனில், இங்கும் தமையன் பெயர் சேஷம ராஜு. நாராயண சகோதரி பார்வதி என்பதற்கேற்ப நமது ஸத்ய ஸாயி நாராயணனின் உடன் பிறந்தாள் ஒருத்தி பார்வதம்மா. வேங்கடவனையே ஸாக்ஷாத் பராசக்தியாகக் கொள்வதுண்டாதலின், வெங்கம்மா என்றாலும் வேங்கடவனை அம்மா — பார்வதி என்று பொருள் கொண்டு நாரண சோதரியாக்கிக் கொள்ளலாம்.

சேஷகிரியில் வசிக்கும் வேங்கடரமணனுக்குப் பாம்புத் தொடர்பு நிறைய உண்டு. நமது நூல் நாயகருடன் சம்பந்தப் பட்ட, ஏராளமானவர் பெயரில் 'வெங்க' அல்லது 'சுப்ப' (நாகம்) சப்தம் சேர்ந்திருப்பது ஒரு அதிசயம். அவர் தொடர்புள்ள ஊர்களும் அப்படியே. புட்டபர்த்தி, கர்நாட நாக பள்ளி, உரவ கொண்டா இத்யாதி.

* * *

பக்தர்கள் இவ்வாறெல்லாம் இவரை ஒரு குடியுடன் குடும்பத்துடன் தொடர்புறுத்திப் பேசலாமாயினும், இவர் என்ன சொல்கிறார்? "உடம்புக்கு உடை போல் ஆத்மாவுக்கு இந்த உடலும் ஓர் உடையளவோடு சரி. இந்த உடல் எடுத்ததால் உண்டான உறவு முறைகள் அனைத்தையும் நான் பொய்யாகவே கருது

Koviloor Digital Library

கிறேன். நிலையற்ற தேக சம்பந்தத்தால் எனக்கு எந்த பந்துத்வமும் கிடையாது. அன்பு ஒன்றாலேயே நிலையாக ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய ஆத்மிக உறவொன்றுக்கு மட்டுமே நான் உட்பட்டவன்'' என்கிறார்.

உற்றார்கள் எனக்கில்லை யாரும் என்னும்;
உற்றார்கள் எனக்கிங்(கு) எல்லோரும் என்னும்

என்கிற திருவாய்மொழியின் எதிரொலிதான்!

பிரிதோரிடத்தில், ''புத்திரர்களில் பலவகை உண்டு. முற்பிறவியில் உங்களிடம் தாங்கள் பட்ட கடனைத் திர்ப்பதற்காக உங்களுக்குப் பிள்ளையாகப் பிறக்கும் ''ந்யாஸ புத்ரர்கள்'. முற்பிறப்பில் நீங்கள் அவர்களிடம் பட்ட கடனைத் திர்த்துக் கொள்வதற்காகப் பிறக்கும் 'ருண புத்ரர்கள்'. இப்படி இரு தரப்பில் எதிலும் பழம் பாக்கிக்காக இல்லாமல் தெய்வாநுக்கிரஹத்தால் புதிதாகப் பிறக்கும் ஸுபுத்ரர்கள். தெய்வ அருளின்றி வெறும் பசு வேகத்தில் பிறந்து, தவறி நடக்கும் குபுத்ரர்கள். இந்த நாலு வகையாரையும் குடும்பப் பாச பந்தங்கள் பிணிப்புறுத்தும். ஆனால், அவதாரங்களோ ஐந்தாம் வகையைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு 'உபேக்ஷா புத்திரர்' என்றே பெயர். அதாவது, 'இவர்கள் நம் பெற்றோர்; இவர்கள் நம் உற்றோர்; இவர்கள் நமக்கு இன்ன செய்ய வேண்டும்; இவர்களுக்கு நாம் இன்ன செய்ய வேண்டும்' என்ற விருப்பம் அடியோடு அற்றவர்கள். அவர்களுக்கு ஸகல உயிர்களிடமும் சமமான அன்பும் தயையுந்தான் பெருகுமே தவிர, தனிப்படச் சிலரிடம் உறவு முறைக்காகக் கூடுதலான ஒட்டுதல் இராது. அவர்களுடைய ஒரே பொறுப்பு லோக உத்தாரணம்தான். உறவால் ஏற்பட்ட சிறிய கடமைகளில் அவர்கள் கட்டுப்படவில்லை'' என்கிறார்.

இதை இவர் விஷயத்திலேயே பொருத்திப் பார்க்கும்போது அதில் ஒரு ரஸம் இருக்கத்தான் செய்கிறது.

Koviloor Digital Library

கோவிலூர் ஆதீனம்
2088
R65
கோவிலூர்-630 307

அத்தியாயம் — 4

ஸத்ய நாராயணன்

ஸத்யம் — ஞானம் — அனந்தம் — ப்ரம்ம

—தைத்திரீய உபநிஷதம்

ஸத்யம் — சிவம் — சுந்தரம்

—பிரம்ம ஸமாஜ வாசகம்

சத்தியத்தில் வாசுதேவன் நிலைபெற்றிருக்கிருன். சத்தியம் வாசுதேவனிடத்தில் நிலைபெற்றிருக்கிறது. எனவே அவன் 'சத்தியன்' என்றே சான்ருேர்களால் நினைக்கப் படுகிருன்.

—மஹாபாரதம்: உத்யோக பர்வம்

ராமசந்திர மூர்த்தி தம்மை மானுடமாகவே சொல்லிக் கொண்டவர். எனவே உற்ருரிடம் பாசபந்தப்பட்டிருந்தவர் போலவே காட்டிக் கொண்டார். தசரதர் மரித்தபோதும், ஸீதை அபகரிக்கப்பட்டபோதும், லக்ஷ்மணன் நாக பாசத்தில் மூர்ச்சித்தபோதும், ராமர் சாதாரண மாந்தரைப் போலப் புலம்பி அழுதார். தமது தெய்வத் தன்மையை அனவரதமும் புலப்படுத்திய கண்ணனே, எத்தனை ஆட்டம் போட்ட போதிலும் உள்ளூற எதிலும் பட்டுக்கொள்ளாத பரமஞானியாக இருந்தார். வஸுதேவரைச் சிறை மீட்கும்போது மட்டும், பெற்ருேருக்கான தமது கடமைகளை அதுகாறும் செய்யாததற்காக பச்சாத்தாப முற்றது போல் காட்டினுரே ஒழிய, குடும்ப பாசம் என்பதை அவரிடம் பொதுவாகக் காண இயலாது. அருமை மருமகன் அபிமன்யுவும், ஏன் சொந்த மக்களுமே மாண்டபோதும் மனம் கலங்காதவர் அவர். ஆனுல், மற்றவர்கள் தம்மை அவ்வப்போது அவர்களில் ஒருவராக நினைக்கச் செய்து மயக்குகிருர். இன்னேர் அவதாரமாகவே மதிக்கப்படும் அண்ணன் பலராமனுக்கே கண்ண

Koviloor Digital Library

வின் செயல்களில் பல சம்மதமாக இருக்கவில்லை. மாயக் கண்ணனும் தமையன் என்ற சம்பிரதாய மரியாதையை விடாமலே, அவருடன் உரசி மோதாமலே, தம் காரியத்தைத் தாம் எண்ணிய படியே நடத்திக் கொண்டு போனார்! ஸாயி பாகவதமும் ஓரளவு இப்படித்தான்!

நம் சரிதேசனின் பந்துக்களில் பலர் இன்றும் நம்மிடை வாழ்ந்து வருகிறார்கள். சிலர் சமீப காலம் வரை வாழ்ந்தவர்கள். எனவே அவர்களைக் குறித்து அதிகம் விமரிசிப்பதற்கில்லை. சுருங்கச் சொன்னால், அவர்கள் யாவரும் நம்மைப் போன்றவர்கள்; நம்முடைய குறை, நிறை உள்ளவர்தாம். நாம் அவரது உறவினராக இல்லாததே ஒரு விதத்தில் நமது பாக்கியம். அவருக்கு பந்துவாக இருந்தோமாயின் அவர் மற்றவர்களிடம் காட்டுவதை விட நம்மிடம் பிரத்யேக அக்கறை காட்டவேண்டும் என்ற எண்ணம் நமக்கும் ஏற்படக்கூடுந்தான். "எத்தனையோ முன்னாள் மன்னர்களும், கோடீச்வரர்களும் இவரைத் தொழுகிறார்களே, அவர்களிடம் கொஞ்சம் கைகாட்டி நமக்கு மாடமாளிகை கூடகோபுரம் ஏற்படுத்தித் தரமாட்டாரா?" என்று எதிர்பார்க்கத் தான் செய்வோம்.

ஆனால், அவருக்கோ 'வஸுதைவ குடும்பகம்' என்றபடி உலகக் குடும்பம் ஒன்றுதான் கருத்தில் உள்ளதே தவிர, உறவுக் குடும்பம் அல்ல. ஆயினும் ஏதோ காரணத்தால்தானே குறிப்பாக இக் குடியில் பிறந்திருக்கிறார்? எனவே, அதன் தலைப்பேறு பெற்ற அங்கத்தினருக்குத வறுமையும் துயரும் இல்லாத அளவுக்குக் 'கைகாட்டி' இருக்கிறார். ஆனாலும், எவருக்குமே அதிசௌக்கிய ஜீவனம் உதவாது என்பது அவரது கொள்கையாதலால் மாடமாளிகையும் கூடகோபுரமும் எதிர்பார்த்துப் பயனில்லை. ஒருவரது ஆற்றலின் திறன், பக்தியின் தரம், பூர்வ கர்மம் இவற்றை மட்டுமே அவர் கருதி அருள் புரிகிறாரேயன்றி, உறவு என்ற ஒன்றுக்காகச் சலுகை தரவே மாட்டார். இன்று ஸ்ரீ ஸத்ய ஸாயி ட்ரஸ்ட் என்பது ஒரு மஹாஸாம்ராஜ்யமாகப் பல கிளைகளோடு பரவிப் பல்வேறு நிறுவனங்களை நிறுவகித்து வந்தபோதிலும், அவற்றின் மத்யக் குழு ஒன்றில் மட்டும் புட்டபர்த்தி பஞ்சாயத்துத் தலைவர் என்கிற ஹோதாவில் ஸ்வாமியின் தம்பி ஸ்ரீ ஜானகிராம ராஜு இடம் பெற்றிருப்பது தவிர, பாபாவின் உறவினர் வேறெவரும் அங்கம் வகிக்கவில்லை என்பதே அவரது தெய்விகமான ஸமத்துவத்துக்குச் சான்றுதானே?

புட்டபர்த்தியிலேயே பிரசாந்தி நிலயத்தில் இவர் இருக்கை கொண்ட போதிலும் தந்தை உயிர் வாழ்ந்த வரையில் தம் பெற்றோரை அங்கே அழைத்து வைத்துக்கொள்ளவில்லை என்பதும் எத்தகைய நீதித் துலா முனையைக் காட்டுகிறது? இவரது சஞ்சாரங்களின்போது ராஜபவனம் போன்ற இடங்களில் பாபா குடும்பத்துக்கு மட்டும் இடம், அவரது கோஷ்டியில் மற்றோருக்கு வேறிடம் என்று ஏற்பாடு செய்வதுண்டு. ஆனால், பாபாவோ, "எல்லா பக்தருமே என் குடும்பம்தான் — இவர்களுக்குள் வித்தியாசம் கற்பிப்பதற்கில்லை" என்று சொல்லித் தாம்

Koviloor Digital Library

மட்டுமே ராஜபவனத்தில் தங்கி, உடன் வரும் பெற்றோர் சோதரர் உட்பட எல்லா 'உறவினர்'களையும் மற்றோரின் விடுதிக்கே அனுப்பி விடுவார். 'வெளியாராக' இருந்து பார்க்கும்போது இதை நாம் வாயாரப் பாராட்டுகிறோம். ஆனால், நாமே 'உறவின'ராக இருந்தாலோ......?

தமக்குத் தனிப்பட்ட குடும்ப பாசம் கிடையாது என்று அவர் உடைத்துச் சொல்லியிருக்கிறார். 1963 நவம்பரில் அவரது தந்தை புட்டபர்த்தியிலேயே காலமான போதிலும், சடலத்தைப் பொது இடமான பிரசாந்தி நிலயத்துக்குக் கொண்டுவரக் கூடாது எனக் கூறி, வீட்டிலிருந்து நேரே ருத்ரபூமிக்கே எடுத்துப் போகச் செய்தார். எண்ணற்ற பக்குவ ஜீவர்களின் அந்திம சமயத்தில் ஸ்தூலமாகவோ, ஸூக்ஷ்மமாகவோ பக்கத்தே இருந்து அருள் புரியும் ஸ்வாமி, தந்தையின் பக்கலில்கூட இருக்கவில்லை. உறவு முறை சற்றும் பாராட்டாததால் ஈமக் கிரியையில் பங்கு கொள்ளவில்லை; திட்டு துடக்குகள் பார்க்கவுமில்லை. ஆயினும் ஏதோ பூர்வ புண்ணியத்தால் இவரது தந்தை என்று குறிப்பிடக் கூடிய பேறு பெற்ற வெங்கப்ப ராஜுவின் உடல் பிரசாந்தி நிலய வாயில் வழியே செல்கையில் ஸ்வாமி உள்ளிருந்து வந்து அதன் மேல் சந்தனமாலை ஒன்றை வைத்துச் சென்றாராம்.

வைராக்ய மலைகளான சங்கரரும், பட்டினத்தாருமே பதறிய மாத்ரு வியோகத்தின்போதும் ஸ்வாமி மயிரிழை சலனமடையவில்லை. 'ஈச்வராம்பா ஸுத ஸ்ரீமன்' என்பதாக ஸுப்ர பாதத் தொடக்கத்திலேயே இடம் கொண்ட அந்த பாக்யவதி மறைந்தது 1972 மே மாதத்தில். ஸ்வாமிக்கு இது துயர் தரவில்லையா என ஓர் அணுக்கத் தொண்டர் விசாரித்த போது, அவர் புன்னகைத்து, "என்னைப் பிச்சிவாடு (பைத்தியக் காரன்) என்று நினைத்தாயா? நான் இவளுக்கோ அல்லது வேறு எவருக்குமோ பிறந்ததாகவும் நினைக்கவில்லை; இப்போது இவள் இறந்துவிட்டதாகவும் எண்ணவில்லை" என்றாராம் — தோற்றமும் நீக்கமும் அற்ற ஆத்மாவிலேயே ஊன்றி நிற்கும் ஐயன்.

அன்னையின் மரணத்தின்போது ஸத்யஸாயிக் கல்லூரியும் பாபாவின் பெங்களூர் இருக்கையும் அமைந்துள்ள ஓயிட்ஃபீல்ட் 'பிருந்தாவன'த்தில் அகில இந்திய மாணவர்களுக்கான ஆத்மிக—கலாசாரப் பயிற்சி முகாம் நடந்துகொண்டிருந்தது. முன் கூட்டியே ஸகலமும் அறியும் ஸ்வாமி தாயாரை இங்கு தம்முடனேயே வைத்துக்கொண்டிருந்தார். அப் புண்யவதி அவரது திரு முன்னரே அநாயாச மரணம் அடைந்தாள்; அல்லது மரணம் கடந்தாள். உடனேயே சிறிதும் பரபரப்பின்றி, சந்தடியின்றி, பயிற்சி முகாம் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும்கூடத் தெரியாமல், உடலத்தைக் காரில் வைத்துப் புட்டபர்த்திக்கு அனுப்பி விட்டார் — தந்தையின் ஸமாதிக்குப் பக்கத்திலேயே நல்லடக்கம் செய்வதற்காக. பயிற்சி முகாமினர், அவதாரனை ஈன்றவள் என்பதற்காக அவளுக்கு அதிக தெய்விகத்தை ஊட்டி ஹிஸ்டீரியா வழிபாடுகள் செய்வதற்குத் துளிக்கூட இடம்தராத இந்தவைராக்ய தர்மத்தை என் சொல்ல? சர்வ சகஜமாக அன்று பிற்பகலும்

Koviloor Digital Library

மாணவருக்கு உபதேசம் வழங்கினார், ஆனந்தமாக பஜனைகள் பாடினார். உபேக்ஷா புத்திரருக்கு இதைவிட உதாரணம் உண்டா?

ஆயினும் அவதாரங்களைப் போன்ற உபேக்ஷா புத்திரராக இல்லாத அனைவருக்கும் பெற்றோரிடம் மகத்தான கடமையுண்டு என்பதை எக்காலும் வலியுறுத்துகிறார். பெற்றோரைப் பேணாத மக்களுக்கு ஸத்யஸாயி ஸேவா ஸமிதிகளில் அங்கம் வகிக்கவே தகுதியில்லை என்றுகூடக் கூறியிருக்கிறார். இத் திசையில் வழியும் காட்டியிருக்கிறார். தமது காசி, ஹ்ருஷிகேச யாத்திரைகளின் போது பெற்றோரையும் உடன்கூட்டிச் சென்றார். விச்வநாத ஸ்வாமிக்கு தம்பதி ஸமேதராக அவர்களைப் பூஜை செய்ய வைத்திருக்கிறார். பெற்றோர் உயிர் வாழ்ந்த வரையில், தமது ஜயந்தி நன்னாளில் அவர்களை வீட்டிலிருந்து மேள தாள மரியாதைகளோடு பிரசாந்தி நிலயத்துக்கு அழைத்துவரச் செய்து, அவர்களைத் தமது திருமுடிக்குத் தைலம் வைக்கச் செய்தார். பாவனைக்காகவாவது தாம் பிறந்ததாக வைத்து ஒரு நாளைக் கொண்டாடும்போது, அந்தப் பிறப்புக்கு பௌதிகக் காரணம் போன்ற 'பெற்றோர்'களை கௌரவிக்க வேண்டும் என்பதும் எத்தகைய தர்ம உள்ளத்தைக் காட்டுகிறது? தந்தை காலமான பிறகு, தாயாருக்குப் பிரசாந்தி நிலயத்திலேயே ஒரு சிறிய ஜாகை கொடுத்தார்.

பெற்றோர் இருவரும் மறைந்தபின் தம் ஜயந்திதோறும் அவர்களுடைய ஸமாதிக்குச் சென்று பூ வளையம் வைத்து, அங்கு குழுமியுள்ள குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கி வருகிறார். புட்டபர்த்தியில் 'தந்தை'யின் பெயரில் கல்யாணக் கூடமும், 'அன்னை'யின் பெயரில் பள்ளிக்கூடமும் அமைத்துத் தந்திருக்கிறார்.

இவருக்காக உணவு சமைத்துப் படைக்கும் பாக்கியம் தமக்குக் கிட்டவேண்டும் என்று தமக்கை விரும்பிக் கோரியதால், அந்த அம்மாளுக்கு இந்தப் பெரிய வரத்தை அளித்திருக்கிறார். பக்தர்கள் பலர் நிவேதிக்கும் அன்ன வகைகளில் சிலவற்றை மாதிரிக்குக் கொறிப்பதோடு, தமக்கை தயாரித்த உணவையே முக்கியமாகச் சேர்த்து உண்கிறார்.

மொத்தத்தில் உலகுக்குக் குடும்ப ஒட்டுதலில் உதாரணம் காட்டவேண்டும் என்பதற்காக, தமக்கு அஞ்ஞானப்பாச ஒட்டுதல் அறவேயில்லாவிடினும் துளித்துளி இதுபோன்ற ''சுற்றம் தழால்'' பண்பினைக் காட்டி வருகிறார்.

தமது மிக நெருங்கிய பந்துக்களுக்கும் கர்ம கதிப்படி ஏற்படவேண்டிய பெருந் துயரங்களை இவர் விரட்டுவதில்லை. உதாரணமாக, இவரது இரு அக்காள்மாருமே நடுத்தர வயதில் கைம்பெண்ணானவர்கள்தாம்.

இம் மாதிரித் துயரங்களுக்கு ஆளான 'உறவின'ருக்கு பாபாவின் மகிமையில் விசேஷப் பிடிப்பு இராமலிருப்பது மனித இயல்பு தானே? இன்னலடைபவர்களில் பெரும்பாலோரால், 'இறைவன் கர்மப் பயனை அடியோடு மாற்றுவதில்லை' என்ற உண்மையை

Koviloor Digital Library

ஏற்க முடியாமல்தானே உள்ளது? இதனால் இன்று பாபாவின் 'உறவின'ரில் பலர் அவரைப் பற்றி அதிகம் சிலாகித்துப் பேசக் காணோம்; அவரிடம் விசேஷ பக்தி பாராட்டவும் காணோம். இவர்களில் சிலர் பாபாவை இழித்துரைக்கவும் செய்வர். வேறு சிலர் தங்களால்தான் வெறும் ஸத்யநாராயணராஜு 'பகவான் ஸத்ய ஸாயி பாபா'வாகப் பரிணமித்திருப்பதாகக் கூடக் கருதி, இதற்காக அவர் தங்களிடம் விசேஷமாக நன்றி பாராட்டாத தற்காகப் பழிக்கவும் செய்வார்கள். என்னே விந்தை மானுட இயல்பு!

'இறைவனுக்கு சாமானிய மாந்தரிடமே அன்பு அதிகம். அதனால்தான் மிகப் பெரும்பான்மையினரை சாமானியராகப் படைத்திருக்கிறான்' என்பார் ஆபிரகாம் லிங்கன். பூர்வத்தில் வெங்காவதூதரையும் கொண்டமராஜுவையும் போன்ற விசேஷ வியக்திகள் தோன்றிய குடி எனினும், இன்று பெரும்பாலும் சாமானிய மக்களையே கொண்ட குடும்பத்தில்தான் ஐயன் தோன்றினார். எத்தனை எத்தனை எத்தனையோ விதங்களில் தமக்குப் பிரதிகூலமான சூழல்களை ஏற்படுத்திக்கொண்டும் தாம் கொழுந்து விட்டெரிவதுதானே அவரது அலாதி மகிமை!

''என்னைப் பற்றி எழுதும்போது உனக்கு எது உண்மையாகப் படுகிறதோ அதையே சொல். வெறும் முகஸ்துதியையும் அதிசயோக்தியையும் நான் விரும்பவில்லை'' என்று அவர் தமது வரலாற்றாசிரியர்களிடம் கூறுவது, அவரது உறவினருக்கும் பொருந்தும் என்பதாலேயே இவ்விஷயமாக 'இலை மறைவு காய் மறைவாக'வாவது இத்தனை சொல்ல நேர்ந்தது.

★

இச் சரிதையின் தொடக்க அத்தியாய முடிவில், குழந்தை பிறந்தவுடன் அதன் கீழே விரித்திருந்த துணிகள் அசைந்தாடி விம்மித் தணிந்தன என்று கண்டோமல்லவா? இதுவே பக்தர்கள் திரித்துவிட்ட அதிசயோக்திதான் என்று ஓர் ஆங்கிலேயர் எழுதி விட்டார். ஆனால், பிற்பாடு தீர விசாரித்ததில் இது உண்மையே என்றும், இதனை மிகைபடக் கூறல் என்று அந்த ஆங்கிலேயரிடம் கூறிய 'உறவினர்'தான் பாபாவிடம் தாம் அச் சமயம் அடைந் திருந்த ஆசா பங்கத்தாலோ என்னவோ இவ்வாறு குறைபடக் கூறிவிட்டார் என்றும் தெரிந்தது!

★

பிரஸவ அறையில் இருந்தவர்கள் குழந்தையின் அடியில் அசைந்த துணிகளைத் தூக்கிப் பார்த்தனர்.

அசைவுக்குக் காரணம், அடியிலே நெளிந்த அரவம்!

''வரியரவின் அணைதுயின்ற மாயோன் காண்மின்'' என்று ஆழ்வார் பாடிய அனந்த சாயியோ?

அனைவரும் திக்பிரமித்திருக்க, பாம்பு வளைந்து நெளிந்து மறைந்தே விட்டது — மாயமாக!

கண்ணன் அவதரித்தவுடன் வஸுதேவர் அவனை யமுனை வழியே தூக்கிச் செல்கையில் மழை பெய்ய, அப்போது அனந்தனே குடைபிடித்தான் — 'சென்றால் குடையாம்' என்ற வாக்குப்படி. இங்கோ அதே ஆழ்வார் 'புல்கும் அணையாம்' என்று கூறியதற்கேற்பக் குழந்தைக்கு மெத்தையாக மெத்தென்று இருந்திருக்கிறான்!

குழந்தைக்கு ஜாதகர்மம் செய்தார்கள்.

* * *

ஜாதகர்மம் எனும்போது அதன் ஜாதகத்தைப் பற்றி எண்ணம் படருகிறது. அடடா, எப்பேர்ப்பட்ட ஜாதகம்! ஐநூறாண்டுகளுக்கு முன்னால் பனை ஓலைகளில் எழுதப்பட்டதாகக் கூறப்படும் அகஸ்திய நாடி, புத நாடி, சுக்ர நாடி, பிரம்ம நாடி முதலியவற்றிலெல்லாம் போற்றப்படும் ஏற்றமிகு ஜாதகம்! தீர்க்க தர்சிகளான மகரிஷிகள் அதற்கும் பல காலம் முன்பு அருளியதே ஐநூறு வருஷங்களுக்கு முன் ஓலையில் வெளிவந்ததாகச் சொல்லப் படுகிறது. நாடி சாஸ்திரங்களைத் தற்போது வெளியிடுகிறவர் களைப் பார்க்கும்போது இவற்றில் நம்பகமானதும் உண்டு, சூதும் உண்டு என்று தோன்றுகிறது. ஆயினும் புது தில்லி இண்டியன் ஆஸ்ட்ரோ அக்கல்ட் ரிஸர்ச் கழக ஆராய்ச்சியாளரான டாக்டர் ஈ. வி. சாஸ்திரி ("ஸியோ") மேற்சொன்ன நாலு நாடிகளில் முதல் மூன்றின் சுவடிகளை மூவேறு இடங்களிலிருந்து பெற்ற போதிலும், அவற்றில் ஒவ்வொன்றிலும் நம் கதாநாதனின் ஜாதகம் அச்சடித்தாற்போல் ஒன்றாகக் காணப்படுவதும், ஜாதக விளக்கமாக மூன்று ரிஷிகளும் ஒரே குரலில் பேசுவதும் இவற்றின் மெய்ம்மைக்குச் சான்று என உறுதி கொள்ளலாம். இவரது சரிதம் பற்றி இருடியர் பைந்தமிழில் கூறும் புகழ்மொழிகள் நம்மைப் புளகமுறச் செய்கின்றன. உதாரணமாக, இவரை "மின் மருத்துவக் கலைப் பண்டிதர்" என்று அகஸ்திய நாடி கூறுவதில் எத்துணை நயம்? 'எலெக்ட்ரிக் ஸ்பீடி'ல் நோய் தீர்க்கும் தன்வந்தரியன்றோ நம் ஸ்வாமி? வெறும் வைத்திய நிபுணர் தாமா? அல்ல. 'பள்ளிகள் பல நிறுவுவார். அறநூல்கள் அருளுவார். ஆயுள் முற்றிலுமே அறம் வளர உபதேசிப்பார்' என்று இந்த நாடிகள் மொழிகின்றன. அவ்வளவுதானா?

சிறு வயதிலேயே அவர் வீட்டைத் துறந்து தர்ம ஸம்ஸ்தாபனத்தைப் பிரதமப் பணியாகக் கொள்வார் என்கின்றன. சரி, இது அவர் வெளியிலே செய்வது. உள்ளுக்குள் அவர் யார்? அவர் பெருமை என்ன? அதையும் நாடிகள் இயம்புகின்றன. 'முற்பிறப்பிலே ஏராளமான மக்கள் தொழுத குருவும் முனிவருமான ஸாயிபாபாவே அவர்' என்று தெளிவாகக் கூறுகின்றன. "ஸாயியின் அவதாரமேதான்" என்று அறுதியிட்டு உறுதி கூறுகிறார் ஒரு நாடி ரிஷி. அவர் 'பேரானந்தத்திலேயே மூழ்கி

Koviloor Digital Library

யிருப்பவர்' என்று புத நாடி புகலும். அவரை ''அருளின் திவ்வியப் பிறப்பு'' என்றும், ''அகிலத்தார் பிதா''வாக ஒளிர் வார் என்றும் அகமகிழ்ந்தோதுகிறுர் அகஸ்தியர். அன்பு, அருள், ஒளி (அறிவு - ஞானம்)மூலம் அவர் நித்யானந்தத்தை நீணிலத் தில் நிலைநாட்டுவார் என்றும், அவர் உறையும் ஆலயம் ''தவநிலை'' யாகத் திகழும் என்றும் கூறுகிற சுக்ரநாடி, அவரை மக்கட் பணியிலேயே மகிழ்வு காண்பவராகச் சொல்லி, முடிந்த முடிபாக, முத்தாய்ப்பாக, ''அவதாரத்திலொன்று'' என்கிறது! நாடி சாஸ்திரம் கூறுவது நம் நாடியுள்ளும் பாயத்தான் செய் கிறது.

அன்பர் ஸ்ரீ எம். சின்னதுரை (வராகனேரி, திருச்சி) பிரம்ம நாடியிலிருந்து பெயர்த்தெழுதியிருப்பதில் அடியார் உள்ளத்தை அள்ளும் சில வாசகங்கள் இதோ:

''மாயாவதாரி பர்த்திவாசன் சத்தியசாயி நாராயணன் லிங்க சொரூபியாய், சக்தி சொரூபியாய் நரவுடல்தனில் அவதரித்தவன்...

''சக்தி சிவ அவதார, சீரடி சாயிபாபா அவதார, சித்ராவதி தடாக பர்த்தி சாந்தாலயம்*தனில் சாந்த சொரூபியாயமைந்த ச்த்திய நாராயணன்....

''ஸ்ரீ கிருஷ்ணும்ச, ஸ்ரீ ருத்ராம்ச, ஸ்ரீ லிங்காம்ச, ஸ்ரீருத்ரகாளி [பத்ரகாளி?] அம்ச, ஸ்ரீசக்தி அம்ச, ஸ்ரீவிஷ்ண்வாம்ச, ஸ்ரீ மக முனிவனுய், மானிட வடிவமதில் அவதாரம் செய்ததோர் ச்த்திய புருஷனுமாய், மராட நகரமதில் [மஹாராஷ்டிர தேசத் தில்] சீரடி எனும் புரமதில் சீரடி பாபாவாய் அவதரித்தும், நைந்த ஆடையதும் உடுத்தி, ஏழ்மையுடன் தோற்றமுறவே எளிய வாழ்க்கையுடனும் வாழ்ந்து, பின்னும் ஓர் அவதாரம் ச்த்திய நாராயணனுய் சர்ப்ப சயனத்துடன் அவதரித்தான்...

''நிஷ்களங்க நிராமய நிராதார நிராலம்ப ஏக சுயம்பு மகேஸ்வரன்போல் மானிடரோடு மானிடனுய் ஜனித்தானே...

''தத்தாத்ரேய சொருபம் போல் ... நர சொரூபமாய் அவதரித்து ... திரி மூர்த்தியும் கூடும் அவதாரமாய்...

''சக்தி சொரூபியாய் அமர்ந்த சத்குருநாதன்...

* 'ப்ரசாந்தி நிலையம்' என்பதையே நாடி 'சாந்தாலயம்' என்கிறது. இதை விடவும் மறைமுகமாக நாடிகளில் இயற்பெயர்கள் மாற்றிக் கூறப்படு வதுண்டு. உதாரணமாக, சந்திரசேகர நாமம் பூண்ட ஸ்ரீ காஞ்சிப் பெரியவாளை 'சசிசேகரப் பெருமான்' என்றே அகஸ்திய வசனம் கூறும். ஒரு நாடி ஸ்ரீ ஸத்ய ஸாயிக் கல்லூரி உள்ள ஒயிட் ஃபீல்ட் காடுகுடியை 'வனலயம்' என்றே சொல்லும். (வனம்—காடு; ஆலயம்—குடி.)

"பிரேமசாயி எனும் சத்திய சாயி பின் அவதாரம் தனில் ஜனித்திடவும்.....*

"ஞாலமதே மெச்சும் ஞானசிகாமணியாம் கோலமணி மார்பழகன், கொவ்வை அதரமும்...

"பாலகனும் சத்திய சாயி எனும் பகவன் சிலமதாய்க் கொண்டாடும் குருவாரம்...

"சாந்தமூர்த்தி, சாம்பமூர்த்தி, ஞானமூர்த்தி, ஞானேஸ்வரன், சக்தீஸ்வரன், லிங்கேஸ்வரன், சத்திய சாயி நாதனவன்..."

★

நேராக இவரது பெயரிலுள்ள நாடிகளைவிடவும் நம்பகமான இரு சான்றுகள் உள்ளன. சான்று கூறும் ஒருவர் ஹரியானா முன்னாள் முதலமைச்சர் ஸ்ரீ சர்மா. மற்றவர் பம்பாயைச் சேர்ந்த ஸ்ரீ ஜே. பி. மரு. இவர்கள் தனித்தனியாக "ப்ருகு ஸம்ஹிதை" என்ற சம்ஸ்கிருத நாடியைப் பார்த்தவர்கள். நமது நாயகரைக் குறித்தல்ல; தங்களுடைய ஜாதகத்தையே நாடியில் பார்த்துக் கொண்டார்கள். அப்போது இவர்களுக்கும் சரி, இவர்களுக்கு அதிருஷ்டம் கூறிய நாடி சோதிடர்களுக்கும் சரி, நம் ஸ்வாமியைப் பற்றி எதுவுமே தெரியாது. ஆயினும் ஸ்ரீ சர்மாவுக்காக ப்ருகு ஸம்ஹிதையைச் சோதித்துப் பார்த்த சோதிடர், "நீங்கள் பிரசாந்தி நிலயத்தில் மனித உருவில் வந்துள்ள இறைவனின் அவதாரத்தைப் பார்க்கப் போவதாக இதில் காண்கிறது" என்றாராம். அப்போது பிரசாந்தி நிலயம் யாருடையது, அது எங்கே இருக்கிறது என்ற விவரம் எதுவும் சர்மாவுக்குத் தெரியவில்லை. நாடி சாஸ்திரியாருக்கும் தெரிந்திருக்கத்தானில்லை. "இதில் இருப்பதைச் சொன்னேன். அவ்வளவுதான்" என்று கூறிவிட்டார். பிற்பாடு நாடி சொன்ன இடத்தை நாடித் தேடி ஸ்ரீ சர்மா நம் நாயகனை வந்தடைந்தது வேறு கதை!

இதே போலத்தான் ஸ்ரீ ஜே.பி. மருவின் எதிர்காலத்தை ஸம்ஹிதையில் ஆராய்ந்த நேபாளியரான நாடி ஜோதிஷர், "உங்களுக்கு 1967 நவம்பர் நாலாந் தேதியன்று 'பிரத்யக்ஷ தேவ தரிசனம்' கிடைக்கப் போவதாகச் சுவடி கூறுகிறது" என்றார். அதற்கு அதிகமாக விவரம் தர அவரால் இயலவில்லை. அதே தேதியில்தான் ஸ்ரீ மரு நம் ஸ்வாமியைத் தம் இல்லத்திலேயே வரவேற்கும் பேற்றினை அடைந்தார்.

* முன்பு ஷிர்டி ஸாயியாக வந்த தாம், தற்போதைய ஸத்யஸாயியாக 96 ஆண்டுகள் இவ்வுடலில் வாழ்ந்து, பின்னர் கர்நாடகத்தில் மாண்ட்யாவில் பிரேம ஸாயியாக இன்னோர் அவதாரம் நிகழ்த்தப் போவதாக நம் ஸ்வாமி கூறுவார். இந்த எதிர்கால அவதாரந்தான் இங்கே நாடியில் குறிப்பிடப்பெறுகிறது. அந்த நாடி எழுதப்பட்ட காலத்தில் ஷிர்டிஸாயி, ஸத்யஸாயி ஆகியோரும்கூட எதிர்காலத்தவர்தாமே?)

Koviloor Digital Library

படு சந்தேகப் பிராணிகளைக்கூடச் சிந்திக்கத் தூண்டும் இரு சான்றுகள்தாமே?

★

ஜாதகர்மம். பிறகு நாமகர்மம். ஸத்ய நாராயண பூஜைக்குக் கைமேல் பலனாக, சேஷ பர்யங்கத்தில் பிறந்த பிள்ளைக்கு வேறென்ன பெயர் வைப்பார்கள்? ஸத்ய நாராயணன் என்றே நாமமிட்டனர்.

நாமப் பொருத்தம், ஆஹா, சொல்லத்தரமன்று.

பூமியைப் பாலிக்கும் விசேஷப் பொறுப்புப் படைத்த காப்புத் தெய்வத்தின் அஷ்டாக்ஷரி மந்திரத்தில் கூறப்படுவது "நாராயண" நாமமே ஆகும். உள்ளும் புறமும் அனைத்தும் நாராயணனே என்பதாக வேதமும் இப்பெயரையே விசேஷித்து 'நாராயண ஸூக்தம்' பாடுகிறது. "கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்" என்றுதானே ஆழ்வாரும் ஆரவாரிக்கிறார்? நரரின் புகலிடமே நாராயணன். ஜீவ தத்வத்துக்கும் கருணைத் தத்வத்துக்கும் உருவான நீராம் "நார"த்துக்கு உறைவிடம் நாராயணனே.

இந்த நாராயணன் எல்லா மக்களுக்கும், குறிப்பாக வைச்ய ஜாதிக்கும் அருள்புரிவதற்காக எடுத்ததோர் அவதாரத்தையே விசேஷமாக ஆந்திரத்திலும், ஓரளவுக்கு உத்கலத்திலும் (ஒரிஸ்ஸா), மஹாராஷ்டிரத்திலும் "ஸத்யநாராயணன்" என்று வழிபட்டு, பாராயணம், பூஜை, விரதம், ஸமாராதனை முதலியன நடத்துகிறார்கள். அற்புதங்கள் பல கொண்டது இந்த ஸத்ய நாராயண சரிதம். இத்தனை அற்புதங்களும் செய்த அந்த அவதாரன் வெற்றுச் சித்து நிபுணனல்லன், சத்தியமாக அவன் நாராயணனே என்பதால்தான் அவனை "ஸத்யநாராயணன்" என்றே பெயரிட்டுப் போற்றுகிறார்கள். எனவே நமது ஸ்வாமிக்கு இப்பேர் இடப்பட்டது தனிப் பொருத்தம் வாய்ந்ததுதானே?

ஸத்யமாக நாராயணன் என்பதோடு ஸத்யமான நாராயணன் என்பதாலும் ஸத்யநாராயணன். ஆம், பரம ஸத்தியமான பிரம்மம், அல்லது ஆத்மாதான் நாராயணன். எனவே ஸத்ய நாராயணன் என்னாமல் ஸத்யன் என்றே சொல்லி விட்டாலும் போதும்! இதற்கேற்பவே, இன்று ஸத்ய ஸாயி பாபா என்று உலகம் துதிக்கும் வியக்தியின் அன்றைய முழுப் பெயர் 'ரத்னாகரம் ஸத்ய நாராயண ராஜு' என்பதாயினும், செல்லமாகக் குறுக்கி 'ஸத்யா' என்றே அழைத்தார்கள்.

எல்லாமாகப் பரந்து விரிந்த ஒன்றே ஒன்று இருக்கிறதே அதற்கு 'ஸத்', 'ஸத்யம்' என்றே பெயர். 'ஏகம் ஸத்' என்றே வேதம் கூறும். திருமாலைக் கண்ணனாக அவதரிக்குமாறு தேவர்கள் வேண்டியபோது, "ஸத்ய வ்ரதம், ஸத்யபரம், த்ரி ஸத்யம், ஸத்யஸ்ய ஸத்யம்" என்றெல்லாமே வர்ணித்ததாக ஸ்ரீமத்

Koviloor Digital Library

பாகவதம் கூறுகிறது. ஸத்தியத்திலேயே குடிகொண்ட மெய்ப் பொருள் ஸத்தியத்தை நிலைநாட்டுவதையே ஜன்ம விரதமாகக் கொண்டு அவதரிக்கிறது. ஸத்ய-தர்ம-சாந்தி-ப்ரேமை என்பதாக முதலிடத்து சத்தியத்தையே கூறுவதுதான் நம் ஸ்வாமி தந்துள்ள ஜீவ சூத்திரம். குரு நானக் ''ஜப்ஜி''யில் அழகுற மொழிவார்: ''ஒன்றுதான் என்றும் உளது. அதன் ஒலி ஓம், பெயர் சத்தியம் —ஏக் ஓம், ஸத் நாம்!''

இயேசு நாதனும் இறைவன் மீள உலகுக்கு வரும்போது Truth (ஸத்யம்) என்பதே அவனது பெயராக இருக்கும் என்றுதான் கூறினார்.

இந்த 'ஸத் நாமை' வைத்துக்கொண்டுள்ள நம் குழந்தை பிற்காலத்தில் ''ஸத்ய நாம் ஸத்ய நாம் ஸத்ய நாம் ஜெய் போலோ'' என்று வேக வேகமாய்ப் பாடி லக்ஷோபலக்ஷம் மக்களையும் பாட்டுவிக்கப் போகிறது!

கற்பகத் தருவோடு வரப் போகும் காந்தனை எதிர்பார்த்து முன்னரே இங்கு வந்து கோயில் கொண்டுவிட்டாளே அவள் பெயரும் ஸத்யாதான். ஸத்யபாமா என்பதில் பாமா என்றால் மங்கை நல்லாள் என்றே அர்த்தம். ஸத்யா என்பதே அவள் பெயர். ஸத்யப் பொருளான கண்ணனின் மனாட்டி ஸத்யபாமா என்றும் கொள்ளலாம்.

பாமாதேவி உண்மையில் பூமா தேவிதான். இது பௌதிக சம்பத்தைக் குறிப்பது. ஆத்மிகமான ஸத்யக் கண்ணனோடு சேர்க்காமல் தனியாக உலக சுகத்தைமட்டும் பார்த்தால் பேராபத்துதான். புயல் மழையாக வந்த வெற்று உலகாயதக் காற்றில் மக்கள் பாமாவைக் கண்ணனிடமிருந்து பிரித்து விட்டார்கள். அப்போதுதான் அவள் நல்லறமாகிய கற்பக விருக்ஷத்தை உலகுக்குக் கொண்டு வர நாதனை எதிர்பார்த்துக் கொண்டம ராஜுவின் கனவிலே தோன்றியிருக்கிறாள்!

இப்போது காந்தனிடமிருந்து பிரிந்திருப்பதாக வெளியே தோன்றினாலும் உள்ளுற இவளும் அவனேதான். இதைக் காட்டவேதான் அவன் 'ஸத்யா' என்பதாக இவள் பெயரையே தானும் சூட்டிக்கொண்டானோ? பொறுமையின் வடிவம் இப் பூதேவி எனில், நம் பிழை பொறுப்பதில் பாபாவும் பாமாவே தான்.

பூமா என்றாலே பிரம்மதத்வம், அளவு கடந்த அகண்ட தத்வம் என்று சாந்தோக்யம் சொல்கிறபடியும் இவர் அந்த இறுதி ஸத்யமான பூமாதான்.

1963-ம் ஆண்டு தீபாவளியின்போது உரையாற்றிய பாபா, கண்ணன் துணைகொண்டு பாமை நரகனை வதைத்த வரலாற்றைச் சொல்லி, ''கண்ணன் பரமாத்மா, பாமா ஜீவாத்மா, நரகன் அஞ்ஞானம். கடைசியில் அஞ்ஞானம்

Koviloor Digital Library

நீங்கிய பின் ஜீவாத்மாவே பரமாத்மாவாகி விடுகிறது. பாமாவே கண்ணனாகி விடுகிறாள். ஸத்ய நாராயணன் தன் பரமாத்மத்துவத்தை மறக்காமலேதான் ஸத்ய பாமா என்ற ஜீவாத்மாவாக நடித்தான்" என்று கூறியருளினார்.

புட்டபர்த்தியில் இட்டமுடன் குடிகொண்ட கொண்டமாரின் ஸத்ய பாமாவை அக் கிராம மக்கள், மேற்சொன்ன தத்வார்த்தங்கள் தெரியாமலே, இயல்பாக ''ஸத்யம்மா ஸத்யம்மா'' என்று அன்போடு சொல்லித்தான் வழிபட்டனர், படுகின்றனர்.

பல்லாண்டுகட்குப் பின் 1961-ம் ஆண்டில் பிரசாந்தி நிலைய சஞ்சிகையான ''ஸநாதன ஸாரதி''யின் நவராத்ரி இதழில் ஓர் அன்பொழுகும் சித்திரம் வெளிப்பட்டது. நம் பாபா இரு குழந்தைகளை மடியில் வைத்துக் கொண்டு அணைத்திருக்கும் பிரேம காவியமே அப் புகைப்படம். அன்னைத் திருவிழாவாம் நவ-ராத்ரிக்குப் பொருத்தமாக இதனை முகப்புச் சித்திரமாக வெளியிட்ட ஆசிரியர் ஸ்ரீ கஸ்தூரி ''ஸத்யஸாயிமாதா'' என இதற்கு மகுடமிட்டார். அச்சேறுமுன் இதன் கைப்படியை அம் மாதாவிடமே காட்டினார். அந்த மகுடத்தைப் பார்த்த பாபா தாய்மை கனக்கும் குரலில் கூறினார்: ''இதில் 'ஸாயி' எதற்கு ஸாயி? 'ஸத்ய மாதா' என்றாலே போதுமே! எல்லோருக்கும் பெற்ற தாயரெல்லாம் பொய் அம்மாக்கள் தான் — மித்யா மாதாக்கள் தான். நானே நிரந்தரமான, நிஜமான, மெய்யம்மா — ஸத்ய மாதா'' என்று.

ஒரு பிறவியோடு பொய்யாகிவிடாமல் 'தொடர்ந்து வரும் தாயான்'!

மற்றொரு சமயம் சித்ராவதி தீரத்தில் பக்தர் புடைசூழ நம் பகவான் இனிமை பெருக்கிக்கொண்டிருந்தார். அப்போது ஓர் அடியார், ''ஸ்வாமீ! உங்களை எப்படி மனமுருகிப் பிரார்த்திப்பது என்பதற்கும் நீங்களேதான் வாசகம் கொடுக்க வேண்டும்'' என்று வேண்டினார்.

உடனே நம் நாயகர், ''இப்படிப் பிரார்த்தியுங்களேன்: 'ஸாயி அம்மா! நாங்கள் யாவரும் உன் கர்ப்பத்தில்தான் இருக்கிறோம். கருப்பைக் குழவி உதைப்பதையும் அன்னை அன்புடன் பொறுப்பதே போல், நாங்கள் பாபம் புரிந்து உன்னை உதைப்பதையும் நீ கருணையோடு பொறுத்துத் தாங்கிக் கொள்கிறாய். குழந்தை நலனுக்காகவே தாய் ஸகலமும் செய்வதுபோல், எம்பொருட்டே எல்லாக் காரியங்களும் செய்யும் எம்பிராட்டி நீ. துர்க்கையாக வந்து எம் இடர் கடிந்து காக்கிறாய். ஸரஸ்வதியாக ஞானம் போதிக்கிறாய். லக்ஷ்மியாகத் தேவைக்குரிய அளவான செல்வத்தை நல்குகிறாய். அன்னபூர்ணியாக உணவூட்டுகிறாய். குழந்தை கேளாமலே தாய் ரக்ஷிப்பதுபோல், நீயே எங்களுக்கு உரியதை உரியபோது உவந்தளிப்பாய். எனினும் எங்கள் திருப்திக்காக வேண்டுகிறோம். எங்களது மனத்துக்கு பக்தி உணவும், அறிவுக்கு ஞான உணவும் ஊட்டுவாய்! எங்குமாய்

யாவுமாய் உள்ள சக்தி நீயே எனக் காணும் திருவடியை அருள்வாய்!''

> தாயிருக்கும் வண்ணமே உம்மைத் தன்
> வயிற்றிருத்தி உய்யக் கொண்டான்

என்ற அப்பர் மொழிக்கு இதனிலும் ஆதரிச வடிவம் உண்டா?

* * *

பேரன் பிறந்தது கேட்டுப் பூரித்த கொண்டம ராஜு தாம் கோயிலெடுத்த ஸத்யம்மா தேவிய நாயகனே இன்னொரு பரம ஸத்ய அய்யாவாகத் தம் இல்லத்தில் வந்திருப்பதை உணர்ந்திருப்பாரா? இப்பிள்ளை இங்கு மெய்யாலுமே கற்பக விருக்ஷம் கொணரப் போவதை அனுமானித்தேனும் இருப்பாரா?

Koviloor Digital Library

அத்தியாயம்—5

"பிராம்மண பாலுடு"

பிறந்தது மறக்குலத்தில்—அவன்
பேதமற வளர்ந்ததும் இடைக்குலத்தில்
சிறந்தது பார்ப்பனருள்ளே

—பாரதியார்: 'கண்ணன்—என் தந்தை'

'நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக'க் காவியக் குழந்தைகள் ஓவியமாக வளர்வதைச் சொல்வார்கள். நம் கதாநாதன் வளர்ந்ததை அப்படிச் சொல்லலாமா?

நடுவே பலப்பல ஆண்டுகள் 'நாளொரு மேனி' என்று சொல்லவே முடியாதபடி நவயௌவனம் அதிகம் மாறாமல் 'என்றும் பதினாறு' போலத்தான் இந்த அதிசய புருஷர் இருந்திருக்கிறார். ஐம்பதாண்டுகள் நெருங்கிய நாளாகவோ முன்னிலும் இளமையாக மாறியிருக்கிறார். நரை தோன்ற வேண்டிய சமயத்தில் இவரது கொழித்த கேச பாரம் முன்னிலும் 'கரு கும்' என்று ஆகியிருக்கிறது! முதன் முறை தரிசிப்பவர் இவருக்கு ஐம்பது பிராயம் எனில் நம்பவே முடியாதபடி சிரிளமை ததும்புகிறது.

நரை திரை இல்லாததுபோல் வெள்ளெழுத்தும் வரவில்லை, அரை நூற்றாண்டினருக்கு. "அஜரம் யுவானம்" என்று வேதம் சொன்னதற்கு இதைவிட விளக்கம் இருக்க முடியாது.

வயது முதிர்ந்திடினும் எந்தை
வாலிபக்களை என்றும் மாறுவதில்லை;
துயரில்லை; மூப்புமில்லை—என்றும்
சோர்வில்லை; நோயொன்று தொடுவதில்லை

என்று அமரகவி என்றோ பாடியது நம் ஸ்வாமியை தீர்க்க திருஷ்டியில் கண்டுதானோ என்று தோன்றுகிறது.

Koviloor Digital Library

இப்படி நாளொரு மேனியாக இல்லாமல் எந்நாளும் ஒரே மேனியாக இருக்கும்போதே இன்னொரு விசித்திரம், கணத்துக்குக் கணம் அவரது தோற்றம் மாறிக் கொண்டேயிருப்பதாகக் காண்பதுதான். புகைப்படங்களில் ஒன்றுக்கொன்று சம்பந்தமேயில்லாமல் முக ஜாடையும் உருவ அமைப்பும் வித்யாசப்பட்டிருக்கின்றன என்றால் நேரில் பார்க்கும்போதும் இப்படித்தான் மாறி மாறி மயக்குகிறார். ஆனால் புகைப்படங்களில் பல தோற்றங்களும் அவ்வளவாக இன்னுததாக இருக்க, நேரிலோ மாறி மாறி வரும் உருவங்கள்தனிலும் மாறா இனியராக இருக்கிறார். எது மாறினாலும், அந்த இடக் கன்ன மறுவும், இரு புருவங்களிடை பிறை ரேகை போல் காணும் சதை மடிப்பும், மேல் வரிசைப் பற்களின் மத்தியிலுள்ள சிறு இடுக்கும் இவரது 'ஸ்பெஷாலிடி'யாக மோகிக்க வைக்கின்றன.

நடுத்தர உயரத்துக்கும் குறைந்தவரே இவர் எனினும் சில சமயங்களில் இவர் மிகவும் உயரமானவர் போன்றதோர் பிரமை ஏற்படுகிறது. (இப்படியேதான் சிறு மூர்த்தமான ஸ்ரீ காஞ்சிப் பெரியவாளை ஆர்தர் கோஸ்(ட்)லரும் யுஜீனியா போர்கினியும் 'உயரமானவர்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்!) நம் ஸ்வாமியின் திரண்ட புஜத்தோடும் திண்ணிய மார்போடும் பார்க்கையில் முழங்கைக்குக் கீழ்க் கரமும், கால்களும் மிக மெல்லியனவாகும். ஆயினும் எதனாலோ இந்த முரண்பாடு தெரியாமல் அவர் ஒத்து உருவின தேகத்தவர்போலவே காண்கிறார். முன்புறப் பருமனுக்கும் ஸ்வாமியின் முதுகுப்புறக் கொடித் தோற்றத்துக்கும் உள்ள மாறுபாடும் நமக்குத் தெரியாமல் இன்னிசையின் ஸ்வரூபமாகவே அவர் விளங்குகிறார். இதற்குள்ளேயே ஒரு சமயம் பூசினாற்போலவும், மற்றொரு சமயம் மெலிந்தவராகவும் தோன்றுகிறார். ஒரு சமயம் உதரம் சற்று உப்பினாற்போல் உள்ளது. மற்றொரு சமயம் தடுக்காக உள்ளடங்கிக் காண்கிறது. சில சமயங்களில் வட்ட வதனம் மதுபி வடிவாக மாறுகிறது. தளதளக்கும் தக்காளிக் கன்னங்களில் ''ஒவர்'' சதைப் பற்றே ஒரோரு சந்தர்ப்பங்களில் தெரிகிறது. அழகிய நயனம் இடுங்கி, இமை வெதுவாகக் கனத்துக் காணும் சமயங்களும் உண்டு. ஆனால் அடுத்த கணமே இயல்பான ஸுந்தரஸாயியாகி விடுவார். தனிப் பேட்டியின்போது அவரது முகமண்டலம் மிகவும் விஸ்தரித்ததுபோலவும், இவரே அதி புஷ்டியாகி விட்டதுபோலவும் தோன்றும். குழந்தைமுகம் பல விதமிருக்கும் என்பதை ''பாபனு முகானு பதி விதானு'' என்பர். ''பாபானு'' முகம் மட்டுமின்றி முழுத்தோற்றமுமே இப்படிப் பல விதமாகத்தான் உள்ளது. மாறாதது ஆத்மா ஒன்றே; வெளித்தோற்றம் மாறிக்கொண்டேயிருப்பதுதான் என்ற மஹா தத்வத்தை இதன்மூலம் உணர்த்துகிறரோ?

•

இவ்விதத்தில் இன்றும் கணமொரு மேனியாக உள்ள ஐயன் குழந்தையாக வளர்ந்தபோது நாளொரு மேனியாகத்தான் இருந்திருக்கும். மொட்டு புஷ்பமாகும்போது நவ நவ எழிலுடன் மலர்வதுபோல் இருந்திருக்கும்.

Koviloor Digital Library

'பொழுதொரு வண்ணமாக' ஒருவர் எப்படியிருக்க முடியும் என்று வியப்பவர்களுக்கெல்லாம், ''இதோ என்னைப் பாருங்களேன்' என்று சொல்லாமல் சொல்கிறார் நம் ஸ்வாமி. பொதுவில் அவர் மாநிறம் என்கிற சியாமள வண்ணர்தான். ஆயினும் அதற்குள்ளேயே, அதற்கு மாறாகவும் வண்ணம் அவ்வப்போது மாறிக்கொண்டே யிருக்கும்.

மாந்தரிடை காணவே முடியாத அசாதாரண குளிர்நீலச் சாயல் அவர் நிறத்தில் மேவியிருப்பதைப் பலர் பல சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன் அமெரிக்கர் ஒருவர் இவரை வண்ணப் புகைப்படம் எடுத்தார். சுற்றுச் சூழலும், ஸ்வாமியின் ஆடையும் கூட அந்த உயர் ரகக் காமிராவின் திறத்தில் உள்ளபடியே பதிந்திருக்க, இவரது திருமுகம் மட்டும் நல்ல நீலமாகவே 'டெவலப்' ஆயிற்று! 'ரஸாயனத் தவறா? அப்படியாயினும் ஓரிடத்தில் மட்டும் திட்டமாக அது எப்படி நேரும்?' என்று புகைப்பட நிபுணருக்குப் புதிராக இருந்தது! பிறகுதான்,

நீலமேனி, ஐயோ! நிறை கொண்டது என் நெஞ்சினையே

என்று ஆழ்வாராதியர் அநுபவித்த மோஹன வஸ்து இவர் என்பதைப் புரிந்துகொண்டார். (இப்புகைப்படம் ஸ்ரீ கஸ்தூரி அவர்களின் இல்லத்தில் உள்ளது.)

ஸ்வாமி முகத்தில் செம்மை பாய்ந்து செழித்திருக்கும் சமயங்களும் உண்டு. சிவராத்ரியன்று லிங்கோத்பவத்துக்கு இவர் வருகையில் புத்தம் புது ரோஜாக் குவியல்போல, ராஜ ராஜேச்வரியே ரோஜா ரோஜேச்வரியானதுபோல விளங்குவதை பக்தர்கள் வியந்து கூறுகிறார்கள். உத்பவத்துக்குப் பின் வெளேரென்று நிலாவாகத் திரும்பி இருக்கை செல்கையில் கசிந்த கண்கள் பல. 1975 மத்தியில் நூலாசிரியர் ஸ்வாமியை ஒயிட்ஃபீல்டில் தரிசித்தபோது இத்தனை வெளுத்துவிட்டாரே என்று அதிசயமாக இருந்தது. ஒரு மாதத்துக்குள் மறுபடி கண்டபோது வழக்கமான சாமளமே திரும்பிவிட்டது.

பல நிறம் மாறுவது தெய்வங்களின் இயல்பு போலும்! ஒவ்வொரு நிறமும் ஒவ்வொரு குணத்தைக் குறிப்பதாகும். இவ்வாறே ஒவ்வொரு தெய்வமும் குறிப்பாக ஒரு குணசம்பத்தின் உருவமாயினும், அடியார் பக்குவமடைய அடைய ஸகல கல்யாண குணங்களும், ஏன், அகல்யாண குணங்களும், நிர்க்குணமும்கூட இதே மூர்த்திதான் என்றுணர்ந்துமுகமாக, அத் தெய்வம் பல்வேறு வண்ணங்களில் தரிசனம் சாதிப்பதாக அநுபவிகளின் வாக்கிலிருந்து அறிகிறோம்.

உதாரணமாக, திருமழிசையாழ்வார் நீலமேக ச்யாமனையே, ''பாலின் நீர்மை செம்பொன் நீர்மை பாசியின் பசும் புறம் போலும் நீர்மை''—அதாவது வெளுப்பு, சிவப்பு, மஞ்சள்,

Koviloor Digital Library

பச்சை முதலிய வண்ணங்கள்—கொண்டவருகவும் வர்ணிக்கிருர். மணிவாசகர் வெண்சிவத்தை "வெளியாய்" என்பதோடு, "கரியாய்! பச்சையனே! செய்ய [சிவந்த] மேனியனே!" என்றும் அழைக்கிருர்.

அபிராமிபட்டர் அந்தாதி முடிவில் அம்பிகையைக் குயில் (கருப்பு), மயில் (பச்சை நீலம்), வெயில் (நிர்குண வண்ணமின்மை), அன்னம் (வெளுப்பு) எனக் கூறுகிருர்.

திருமால் யுகத்துக்கு ஒரு வர்ணமாக, க்ருத யுகத்தில் வெளுப்பாகவும், த்வாபரத்தில் செம்மஞ்சளாகவும், த்ரேதா யுகத்தில் பச்சையாயும், கலியில் நீலமாயும் இருப்பதாகச் சொல்வதுண்டு. எனவே அவர் 'யுகமொரு வண்ணரே' அன்றிப் 'பொழுதொரு வண்ணர்' அல்லர். சிவபெருமானே பொழுதொரு வண்ணராகவே ஒரு தலத்தில் உள்ளார். உறையூர் எனப்படும் திருமுக்கீச்சரத்தில் அவரது திருநாமமே பஞ்ச வர்ணேச்வரர் என்பதாகும். பிரம்மாவுக்கும், உதங்க முனிவருக்கும் இங்கே சிவபெருமான் ஒரே நாளில் ஐந்து காலங்களில் ஐந்து வர்ணங்களில் காட்சி தந்திருக்கிருர். "பஞ்சவர்ணன்" என்ற பெயர் முருகனுக்கும் அவனது அஷ்டோத்தரத்தில் காணப்படுகிறது. காயத்ரி ஒரே போதில் தனது ஐந்து முகங்கள் ஐந்து வர்ணங்களாக இருக்கிருள். நம் கதாநாதனை "ஸர்வ வர்ணேச்வரர்" என்று வர்ணிக்கலாம்தான்!

திருமழிசையாழ்வார், மாணிக்கவாசகர், அபிராமிபட்டர், உதங்க முனிவர் போன்ற மகான்களும் சதுர்முகப் பிரம்மன் போன்ற தேவருமே கண்டநுபவித்த நாறு வர்ண நூதனத்தைப் பாமரரும் நுகர்ந்து இன்புற வழங்குகிருர் இச்சரித நாயகர்.

பரமபுருஷன் உலகவடிவாம் 'விராட்'டாக விரிகையில், கருப்பாகவும், உலகின் இயற்கையை இயக்கும் 'ஸூத்ராத்மா'வாக உள்ளபோது பச்சையாகவும், இயற்கை உள்ளடங்கிக் கிடக்கும் 'அவ்யாக்ருத'மாக இருக்கையில் சிவப்பாகவும், இதற்கும் ஆதாரமாம் சுத்தப் பிரம்மமாம் 'துரிய' நிலையில் வெளுப்பாகவும் இருப்பதாக சாஸ்திரம் சொல்வதையும் நினைவுகூரலாம். இந் நாலாகவும் உள்ளவரே யன்றோ இந்நூலின் நாதர்?

இந்தத் தத்துவத்தை வலியுறுத்தத்தானே என்னவோ, 1972ல் தெரிட்மீ நந்து உந்பவித்த சிவராத்ரி லிங்கத்தின் வர்ணம் மாறிக்கொண்டே இருந்திருக்கிறது!

இந்த அநலப் புத்தாண்டுப் பிறப்பன்று ஸ்வாமி சென்னைக்கு விஜயம் செய்தபோது அவரிடம் அநேகர் வண்ணமாற்ற அதிசயத்தைச் சாக்ஷாத்காரக் கண்டனர். 'அநல்' வருடத்தில் புனலாய்க் குளிர்விக்கவே வந்தாற்போல் அதிகாலை தரிசனத்தின்போது கொண்டல் வண்ணனாக நின்றார். ஆறும் ஒன்பது மணிக்கு "ஸாந்தரம்" என்ற தமது சென்னை இருக்கையில் திருவுறப் பிரவேசம் செய்யும்போதோ கருங்கொண்டல் முடிக்கிடையே

Koviloor Digital Library

ஸ்வாமி முகம் மதியம் என நிலா வீசியது. கார்மேகக் கண்ணனைக் 'கதிர் மதியம்போல் முகத்தான்' என்று ஆண்டாள் பாடிய மர்மம் இதுதானோ? மேடையில் அமர்ந்திருக்கையில் வெண் சலவைப் பதுமையாக இருந்தார். மாலைக் கூட்டத்தின்போதோ சந்திர வெண்மையில் மஞ்சள் மங்களமும் கலந்து பொன் மெருகிட்டாற் போலப் பொலிந்தார். பொதுவில் அவர் சியாமள முகராக இருக்கும்போதும், அவரது கரங்கள் முகத்தைவிட வெண்மையாகவும், திருவடிகளோ கரத்தைவிடவும் பிரகாசமாக வும் இருப்பது வழக்கம். இன்றோ ஸர்வாங்கமும் தங்கத் தக தகப்பு! பொற்பாதம் என்பது உபசார வார்த்தையாக இன்றி, அசலே பொன்னாக இருந்தது. ஸ்வாமி சென்னையிலிருந்து புறப் படும் வரை, அதாவது அடுத்த இரு தினங்களும், ''பொன் வண்ணத்து அந்தாதி''க்கு உரியவராகவே திகழ்ந்தார். முதன் முறையாக இப்போதே அவரைக் கண்டவர், 'இவரையா மாநிறம் என்கிறார்கள்?' என்று ஆச்சரியப்பட்டிருப்பார்கள்.

''அரும் பொன்னே மணியே'' என்றும், ''இப்பொன் நீ' என்றும் ஈசனைத் தங்கத்தோடு இழைப்பது நம் ஸ்வாமிக்குப் பாங்குறப் பொருந்திவிட்டது. ''பங்காரு'' என்றே அவர் பாங்குற அடியாரை அழைப்பது வழக்கம். மட்டிக் களிமண்ணாக, கட்டிக் கரியாக உள்ள நம்மை அந்தக் கட்டிக் கரும்புக் குரல் ''பொன்னே'' என்றழைப்பதை என்னே சொல்ல? பதிலுக்கு, மெய்யாலுமே பொன்னனான நம் மன்னனை,

பங்காரு பர்த்தி பாபா
சிங்கார வதனா ஸாயீ

என்று பஜனை பாடி மகிழ்வோம்.

(நம் ஸ்வாமி பங்காரு மூர்த்தியாகியிருப்பதை இந் நூலாசிரியர் அன்பர் சிலரிடம் வியந்துகொண்டேயிருந்தபோது தபாலில் ஒரு பிரஸாதம் வந்தது—தஞ்சை பங்காரு காமாக்ஷியின் குங்குமம்!)

★

குழந்தை ஸத்யா நன்கு வளர்ந்தான். நீந்தினான், தவழ்ந்தான், 'ங்கு' சொன்னான், அப்புறம் நின்றான், நடந்தான், பேசவும் தொடங்கினான்.

அவனது பச்சைக் குழந்தை விளையாட்டில் ஈச்வரம்மா குறிப்பிட்டுச் சொல்வதொன்றுண்டு. சின்னஞ் குழவியாக இருக்கையில் தாயின் 'முகம் பார்ப்பதை' விட அம்முகத்திலிட்ட பெரிய திலகத்தையே உற்றுப் பார்ப்பானாம். தந்த விரலால் குங்குமத்தைத் தொட்டுத் தொட்டுச் சிரிப்பானாம். ஆயினும் குங்குமம் அழியாதாம், உதிராதாம். செவ்விய உள்ளத்துச் செவ்வாடை ஸ்வாமி அன்றே சிவப்பை உவந்துவிட்டான். அன்பின் வர்ணம் அதுவேயல்லவா?

Koviloor Digital Library

தவழும் காலம். வாயில் வரை தவழ்ந்து தவழ்ந்து சென்று விடுவான். அங்கே பிச்சைக்காரர்கள் நின்றிருந்தால், உள்ளே தவழ்ந்து வருவான். வீட்டாரின் கவனத்தைக் கவர்ந்து, பரிதாபப் பார்வை நிறைந்த தனது முகத்தை வாசலுக்குத் திருப்புவான். ''போடு பிச்சை'' என்ற பொருள் அச்சைகையிலேயே பளிச்சென வெளியாகிவிடும். ஈகையே குழந்தைக்கு இயற்கையாக இருந்திருக்கிறது.

அதிசயக் குழந்தையின் மவுனக் கட்டளைப்படி வீட்டார் பிச்சை போடுவார்களாம். அவர்கள் யாசகருக்கு அன்ன பிட்சை போட்ட பல சந்தர்ப்பங்களில், உள்ளே அன்னம் குறையாமல் வளர்ந்தும் இருக்கிறதாம்! இப்படியாக, முதலாவதான அன்னமய கோசத்திலிருந்து ஐயன் அருள் பசுங்குழவிப்பருவத்திலேயே தொடங்கிவிட்டது.

மழலை என்பதாகக் குழந்தை குழறிக் கொட்டியதே இல்லையாம். பேச ஆரம்பித்த அன்றிலிருந்தே வாக்குத் தெளிவு. நறுக்கு நறுக்கென்று உச்சரிப்பானும். இன்றும் அவரது ரீங்காரக் குரல் எத்தனை ஸ்பஷ்டமாக நம்முள் சுரீல் எனத் துளைத்துப் புகுகிறது.

கவர்ச்சி நிறைந்த குழந்தை! கருப்பு வெல்வெட் குல்லாய் முடியாலும், மிறுக்கு விழியாலும், நறுக்கு மொழியாலும் ஊருக்கே செல்லமாகி விட்டது. 'புருவம் கருங்குழல் நெற்றி பொலிந்த முகிற்கன்று போலே புருவம் அழகிய நம்பி'யைப் பார்க்க ஊர் ஜனங்கள் ஓயாமல் பெத்த வெங்கப்ப ராஜுவின் வீட்டை முற்றுகையிட்டார்கள்.

குழந்தை பிறந்த நாளாகப் பாம்புகள் குறைந்து, பசுவளம் மீளத் தொடங்கியதாற் போலும், ஆயர்கள் குறிப்பாக நிறைய வந்தனர். பாலும் வெண்ணெயும் தயிரும் கொண்டு வந்து கொடுத்தார்கள். ஆனால் ஆதி கோபாலன் இவற்றைக் களவிட்டும் உண்டானெனில், இன்றைய பாலகோபாலனே இவற்றை ஊட்டினாலும் உண்பதில்லை.

இன்றைக்கும் ஸ்வாமிக்குப் பால், தயிர், வெண்ணெய், நெய் இவை தாரூபடிதான். கேட்டால் , பூர்வாவதாரத்தில் இவற்றை அமிதமாக உண்டு திகட்டி விட்டதாம். ஏழை மக்கள் பொருட் செலவு செய்து தம்பொருட்டு இவற்றை வாங்கி அர்ப்பிக்கக் கூடாது என்பதற்காக ஐயன் புரியும் தியாகமே இது என்றும் நம்ப இடமுண்டு.

இதற்கு ஒரு விதிவிலக்கை இங்கேயே கண்டுவிடலாம்:

பாலசமுத்ரம் என்பதாகப் பெயரிலேயே பாலை வைத்துக் கொண்டு ஓர் ஊர் பர்த்திக்கு அருகே பெங்களூர் மார்க்கத்தில் இருக்கிறது. பிரசாந்தி நிலயப் பூஜகரான ஸ்ரீ பத்மநாப சாஸ்திரியின் இல்லம் அங்குதான் உள்ளது. பொருளாதாரத்தில் மத்யதரத்துக்கும் கீழ்ப்பட்ட குடும்பம். ஆனால் குடும்பத்தினரின்

Koviloor Digital Library

பக்தி சிரத்தைக்குக் குறைவேயில்லை. பர்த்திநாதனைப் பரந்தாமனாகவே வழிபட்டு வருபவர்கள்.

இவர்கள் வீட்டுப் பூஜையில் பீங்கானால் செய்யப்பட்ட ஒரு கண்ணனும் பசுவும் இருந்தன. பிரசாந்திக் கண்ணன் இங்கு லீலை தொடங்கினான். அவ்வளவுதான், தினந்தோறும் பீங்கான் மாட்டின் மடியிலிருந்து சொட்டுச் சொட்டாகப் பால் சிந்தலாயிற்று! இப்படி ஒரு நாளில் ஒரு கிண்ணம் நிரம்பிவிடும். இந்தப் பாலிலிருந்து எடுத்த நவநீதத்தை நவயுகக் கண்ணனுக்குப் பூஜகர் அன்னாடம் சமர்ப்பித்து வந்தார். ஐயனும் இதனை உவந்து ஏற்றார். இப்படிப் பல நாட்கள் நடந்தது. ஒரு வேளை அது காமதேனுவின் பாலே தானோ?

ஆதிக் கண்ணனுக்கும் ஸத்யாக் கண்ணனுக்கும் வேறு சில வேற்றுமைகளும் உண்டு. கண்ணன் ஓயாத தொல்லையாக ஊருக்குச் செய்த திம்புகளைத்தான் பாகவதமும், நாலாயிரப் பிரபந்தமும் அடுக்கிக் கொண்டு போகின்றன. ஸத்யாவோ ஊருக்கே நல்ல பிள்ளை, ஸாதுப்பிள்ளை, அதி சமர்த்துப் பிள்ளை. கொள்ளையன்புக் கிள்ளை அனைவரையும் ஆகர்ஷணம் செய்தது.

'கர்ஷணம்' உள்ளவனே 'க்ருஷ்ணன்'. எத்தனை பொல்லாங்கு செய்தாலும், கன்னற்குடம் திறந்தாற் போன்ற கணகணச் சிரிப் பாலேயே ஆதிக்கண்ணன் மக்களை வசியம் செய்தான். பொல் லாங்கே செய்யாமல் பொல்லென்ற சிரிப்புடன் பொலிந்த ஸத்யா ஊரை வசியம் செய்ததில் விந்தை என்ன?

கண்ணன் தன்னொத்த சிறாரை ரகசியமாகக் கிள்ளுவான். அவர்களின் காதுகளில் கட்டெறும்பைப் போடுவான். ஸத்யா இதற்கு நேர்மாறு. சிசு நாளிலேயே அவற்றின் இயல்புப்படி வேறொரு குழந்தையின் கையிலிருப்பதை இழுப்பதோ, மற்றக் குழந்தைகளைக் காரணமின்றி அடிப்பதோ கிடையாது. இது மட்டுமில்லை. மற்றக் குழந்தைகள் ஸத்யாவை அடித்து ஹிம்சித் தால் கூட இவன் பதிலடி தரமாட்டான், அழவும் மாட்டான், பெற்றோரிடம் சொல்லவும் மாட்டான். வேறு யாராவது சொல்லித்தான் விஷயம் வெளிவரும், 'கோளுக்கு மிகவும் சமர்த்த'னாகவும், 'பொய்மை குத்திரம் பழி சொலக் கூசாச் சழக்க'னாகவும் இருந்த பாலகிருஷ்ணன் இந்த 'மறுபதிப்பில்' தன்னை ரொம்பவுந்தான் 'எடிட்' செய்துகொண்டு விட்டான்!

பூர்வக் கண்ணன் 'வெண்ணெய் அளைந்த குணுங்கும் விளையாடும் புழுதியும் கொண்டு' நீராட வாராமல் பிடிவாதம் பிடித்தவன். ஸத்யாவோ ஸதா சுத்தம். இன்றைக்கும் பாருங்கள், எத்தனை சுசி ருசியாகவே எப்போதும் காண்கிறார்! அதிகாலையில் அன்றலர்ந்த மலராக அவர் விச்வரூப தரிசனத்துக்கு வந்து நிற்பதையும், முன் மாலையில் மோஹனத் தெளிவோடு அடியாரிடை உலவிப் பேட்டிக்குத் தேர்வு செய்வதையும் பார்த்தவர்கள் இவ்விரு சமயங்களிலும் அவர் ஸ்நானம் செய்யாமலே வருகிறார் என்பதை நம்புவது சிரமமாகத்தான் இருக்கும். விச்வரூபத்துக்குப் பின் (இத்தரிசனம் சில ஆண்டுகளுக்கு முன்பு நிறுத்தப்பட்டுவிட்டது)

Koviloor Digital Library

காபி அருந்திவிட்டு, அதன் பின்தான் நீராடுவாராம். கடும் கோடைதவிர மற்றக் காலங்களில் மறுபடி அடுத்த நாள்தான் ஸ்நானம். ஆயினும் ஸதாவும் சுதாவாகவே புதுமைத் தெளிவு! பிரணவம் (ப்ர நவம்) என்றாலே 'விசேஷப் புதுமை' என்பதுதான் பொருள் எனில் இவர் பிரணவ ஸ்வரூபிதான்! கசகசக் கோடை இறுக்கத்திலும் உள்ளே வெள்ளிசாகப் பன்னிரண்டு முழப் பட்டு வேஷ்டியும், மேலே கழுத்தோடு கால்வரை காற்றே புகாத பட்டங்கியும் கர்ண கவசமாகக் கழற்றாமலே அணிந்திருந்தும் வாடுவதில்லை, வதங்குவதில்லை என்றால் அதிசயம் தான் ஐயா! இவர் நிர்மலம் நீங்காதது போலவே, புழுதியில் தழையத் தழையப் புரளும் அந்த அங்கி ஓரம் கூட அழுக்காக மாட்டேன் என்கிறதே, அது இதைவிட அதிசயம். ''அலக் நிரஞ்ஜன்'' என்றே கோரக் நாத் சம்பிரதாயத்தார் கூறும் மாசற்ற நிரஞ்ஜனன்தான்!

பாலப் பருவத்திலேயே துளிக்கூட அழுக்குப் படியக் கூடாதாம். நன்றாக நீராடி நீறு பூசிக்கொள்வான். விபூதி கலையவே கூடாது. கலைந்தால் எந்த வேளையானாலும் மறுபடி திருநீற்றைக் குழைத்துப் பரந்த நெற்றியில் வெள்ளை வெளேரென்று பட்டை போட்டுக் கொள்வான். தமது கையிலிருந்தே விபூதி மழை பொழியத் தொடங்கி, லீலா விபூதியை விரிவாக்கத் தொடங்கியதிலிருந்துதான் ஸ்வாமி திருநீறு பூசுவதை நிறுத்தி விட்டார். குழந்தைப் பருவத்திலேயே ஓர் ஆயுள் முழுதற்குமான விபூதிக் கந்தாயத்தைத் தீர்த்துக் கட்டிவிட்டாரோ? கண்ணை உறுத்திய வெண்மையைத் திகட்டினாற்போல, முக்கண்ணனுக்குரிய வெண்ணீறும் போதுமென்றாகி விட்டதோ? அல்லது விபூதி தாரணத்தால் தாம் சைவ மதத்துக்கே விசேஷச் சார்புடையவன் என்ற தப்பபிப்பிராயம் ஏற்பட்டு விடக்கூடாதென்றே ஸர்வமத ஸம்மதரான ஸ்வாமி நமக்குத் தமது நீறு திற்றிய திருமுக தரிசன பாக்கியத்தை மறுத்துவிட்டாரோ?

பிஞ்சு ஸத்யாவுக்கு விபூதி மட்டும் போதாது. அன்னையின் செந்தூரத் திமிர்படியவராயிற்றே! விபூதிப் பட்டைக்கு நடுவே வட்டமாகக் குங்குமத் திலகமும் மின்ன வேண்டுமாம்! இங்குதான் சமர்த்து அப்பா அம்மாவுக்கு அடங்காமல் முரண்டு செய்வான். அம்மா தன் பிள்ளைக்குத் திலகமிடமாட்டாள் என்றால், நிச்சயம் கண் பட்டுவிடும் என்ற பயம்தான் காரணம். குங்குமச் சிமிழை ஒளித்து வைத்து விடுவாள். சலிக்க மாட்டான் ஸத்யா. தன் அக்காள்மாரின் அழகு சாதனப் பெட்டியைக் குடைவான். இங்கு மட்டும் திருட்டுத்தனம்! குங்கும டப்பியைத் தேட்டை போட்டு, தானே எடுத்து அப்பிக் கொள்வான். அம்மா நெற்றியில் உதிராமலே நிற்கின்ற அந்தப் பொல்லாத குங்குமம் இவன் நெற்றியில் பாதியே நின்று, மீதி ஆடையில் கொட்டும். பொட்டிட மறுத்ததற்குப் பழியாகப் பிள்ளையாண்டான் குங்குமாபிஷேகமே செய்துகொண்டு நிற்பதைப் பார்த்துத் தாய்க்காரி பெருமூச்சு விட்டாளோ, பூரித்து நின்றாளோ?

இன்று உடையில் குங்குமத் திட்டுக்கள் மட்டுமே பெற்ற பாலன் பின்னொரு நாள் ஆபாத க்ரீவம் செவ்வாடை அணிந்து

Koviloor Digital Library

சிவிகையில் சிவையாக நவராத்ரி பவனி வரப்போவதையும், அப்போது இந்த நவராத்ரி நாயகியின் நெற்றி முழுதும் தாரை கவே குங்குமம் குமுகுமுத்துப் பொங்கப் போவதையும் ஈச்வ ராம்பா கற்பனைகூடச் செய்திருக்கமாட்டாள். ''விபூதி ஸுந்தர ஸாயீ நாத்'' என்றும், ''குங்கும தாரண குவலய ரக்ஷண'' என்றும் சிவ-சக்தி ஸ்வரூபமாகத் தன் மகன் பஜனைத் துதி பெறப் போகிறுன் என்று அன்று அவள் கனவேனும் கண்டிருப்பாளா?

★

ஸத்யா அன்னமுண்ணத் தொடங்கியபோது இன்னொரு விசித்ரம் செய்தான். ரத்னுகரம் ராஜுக்கள் புலால் உண்பவரே என்று முன்னர் கண்டோமல்லவா? குழந்தையோ உணவிலே சுத்த சைவம் கொண்டாடியது. அசைவ பதார்த்தங்களின் சம்பந்தப்பட்ட பாத்திரத்தில் தனக்கு உணவு படைக்கப்பட்டால் கூட அதைத் தீண்ட மறுத்தான். தாத்தா கொண்டமராஜு தீவிர சைவமல்லவா? அவரது வீட்டுக்குச் சென்றே அமுது கொள்வான் மதலை. தொண்டு கிழங்களான தாத்தா பாட்டிக்குப் பேரனிடம் ஏற்கெனவே பெருமிதம். இப்போது அந்த ஆரமுது தங்களிடமே அமுதுண்ண வருவதில் மகிழ்ச்சி இரட்டிப்பாயிற்று.

எனினும், பூரண பாக்கியத்தையும் இவர்களுக்கே தந்தால் தாளாது என்று ஸத்யா எண்ணினுனே என்னவோ? அமுதூட்டும் பேற்றை மற்றொரு புனித ஜீவனுக்கும் பங்கு போட்டுக் கொடுத்தான்.

அப் புனித ஜீவன், புட்டபர்த்திக் கர்ணத்தின் தர்ம பத்னி யான சுப்பம்மாள். வெங்கப்ப ராஜு குடியிருந்து, நம் ஸத்ய நாராயணராஜு பிறந்தது, இந்தக் கர்ணத்துக்குச் சொந்தமான வீட்டில்தான். அவதரிக்க அகம் அளித்தவளுக்கே, தனக்குப் போனகம் ஊட்டும் பாக்கியத்திலும் பங்கு தந்தான்.

இன்றும் ஸாயி பக்தர்கள் 'சுப்பம்மாள்' என்றுலே தழைந்து தலைவணங்குவர். ஸ்வாமியும் அவளை நினைத்தால் உருகிப் பேசுவதே அலாதியாக இருக்குமாம். ஒருத்தி மகனுகப் பிறந்து வேறொருத்தி மகனுக வளர்ந்த கண்ணனைப்போல், ஒரளவுக்கு ஸ்வாமி ஈச்வராம்பாவை தேவகியாகவும் சுப்பம்மாவைய அசோதையாகவும் உவந்திருந்தார் எனலாம்.

சுப்பம்மா பிராம்மண மாது. அக்காலத்தில் ஒரு க்ஷத்ரியப் பிள்ளையை பிராம்மணர் வீட்டில் சேர்த்து உணவூட்டுவது நினைத் தும் பார்க்க முடியாத விஷயம். ஆனுல், இந்த அம்மை, புரட்சி செய்யும் எண்ணம் லவலேசமும் இன்றியே, ஸத்யாவிடம் சுரந்த சுபாவமான அன்பின் வேகத்தில் இக் காரியத்தைச் செய்தாள்.

சுப்பம்மாவின் வீட்டிலேயே குழந்தை பெரும்பாலும் வளர்ந் தது. ஊரார் விளையாட்டாக அதை ''பிராம்மண பாலுடு'' என்று குறிப்பிடலானுர்கள். இந்தப் ''பார்ப்பாரப் பிள்ளை''யும்

Koviloor Digital Library

உள்ளமை அந்தணருக்குரிய செந்தண்மைகளை — அஹிம்ஸை, ஸத்தியம், தியாகம், தூய்மை முதலிய பண்புகளைப் பெருக்கிட்டுக் காட்டியது.

அஹிம்ஸையில் புத்தரை நிகர்த்த குழைவு! ஆடு பன்றிகளையோ, பட்சிகளையோ வதைக்கும் இடத்தின் வழியாகக்கூடப் போக மாட்டான். மீன் பிடிக்கும் குளம் குட்டையிலோ, ஏரியிலோ, கண்ணைச் செலுத்தாமல் பதறி ஓடுவான். பட்சிப்பதற்காகப் பிடித்து வைத்திருக்கும் பட்சிகளை எடுத்துத் தன் சின்னயார்போடு சேர்த்தளைத்துக் கொஞ்சி உருகுவான். இவன் அஹிம்ஸைப் பிரசங்கம் செய்யாவிட்டாலும், இந்த இரக்க உருக்கத்தினால் அந்த அசைவர்களுக்கும் சில சமயங்களில் இளக்கம் உண்டாகிவிடும்.

... வேறொன்றை ஒருவர் கொல்லின்
அந்நேரம் ஐயோ என்முகம் வாடிநிற்பதுவும்
ஐய நின் அருள் அறியுமே

எனத் தாயுமானாரும்,

கண்ணினால் ஐயோ பிறஉயிர் பதைக்கக்
கண்ட காலத்திலும் பதைத்தேன்

என வள்ளலாரும் 'ஐயோ' போட்டுச் சொன்ன ஜீவகாருண்யம் ஸத்யாவின் இள நெஞ்சில் இளநீராய்த் துளும்பிக் கொண்டிருந்தது.

கோழிச் சண்டை என்று ஊர் முழுதும் குதூஹலிக்கும். ஸத்யாவோ நெட்டுயிர்த்து நெகிழ்ந்து போவான்.

'தொலி ஏகாதசி' என்கிற விரதத் தினத்தில் புட்டபர்த்தியில் லோகப்படும். சித்ராவதிப் படுகையில் நடக்கும் ரேக்ளா ரேஸுக்கு ஆண், பெண், பாலர் அடங்கலும் செல்வார்கள். 'ஐயோ, மாடுகள் பாடுபடுமே!' என்று வாடுவான், தவிப்பான் பால ஸத்யா. விட்டாரையும் விளையாட்டுத் தோழரையும், 'இந்தப் பாதகத்தைப் பார்த்து ரஸிக்கப் போகாதீர்கள்' என்று தடுப்பான்.

* * *

காலச் சகடம் பல சுற்றுச் சுற்றிய பின் ஒரு நாள். ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபா தம்மிடம் சற்றுமுன் விடை கொண்ட சில பக்தர்களை மீண்டும் அழைத்து வர ஆளனுப்பினார். பக்தர்கள் என்னவோ ஏதோ என்று ஏக ஆர்வத்துடன் திரும்பிவந்தனர். ஸ்வாமி அவர்களிடம், "ஒன்றுமில்லை. நீங்கள் இத்தனை பேர் ஒரே வண்டியில் வந்திருக்கிறீர்கள். மாட்டுக்குக் கஷ்டந்தான். சாதாரணச் சாலையிலாவது பரவாயில்லை. சித்ராவதி மணலில் ரொம்பவும் சிரமப்படும். ஆகையால் ஆற்றுப் படுகை தாண்டுகிற

Koviloor Digital Library

வரையில் வண்டியிலிருந்து இறங்கி நடந்து செல்லுங்கள். இதைச் சொல்லவே கூப்பிட்டேன்'' என்றார். ஸர்வ பூத தயாபரன்!

* * *

ஸத்யா தன் தோழர்களையும் மனத்தில் தைக்குமாறு பேசி அஹிம்ஸையில் ஈடுபடுத்துவான். அஹிம்ஸைக்கு அடுத்த பரம தர்மமான ஸத்தியத்திலும் அவர்களைத் தோய்த்தெடுக்கத் தன்னாலானதெல்லாம் செய்தான். குழந்தைப் பிராயத்திலேயே இவனுக்கென்று சொந்த ஆசை ஏதும் இருந்ததாகத் தெரியவில்லை.

இதையெல்லாம் பார்த்து ஊரார், ''ஸத்யாவா? அது பிரம்ம ஞானி, பிராம்மண பாலுடு'' என்பர்.

* * *

பலப்பல ஆண்டுகளுக்கு முற்பட்ட சம்பவம். ஷிர்டி பாபாவைக் காண பிரம்ம ஞான சபை மாதொருத்தி செல்கிறாள். ஏனோ அவரை அணுகுகையில், 'இவரை மகானாக எண்ணி வருகிறோமே! உண்மையில் இவர் அநேக துருக்க மந்திரவாதிகளில் ஒருவராக இருந்துவிட்டால்....?' என்ற கலக்கம் அவளுக்கு ஏற்படுகிறது. அனைத்தும் அறியும் ஸாயி பாபா அவளை அருளோடு நோக்கித் தெள்ளத் தெளியச் சொன்னார்: ''அம்மே! இது ஒரு பிராம்மணன். சுப்ரமான (வெள்ளையான, தூய்மையான) பிராம்மணன். லக்ஷக்கணக்கானவரை சுப்ர மார்க்கத்தில் சேர்க்கப் போகிற பிராம்மணன்.''

பிறிதொரு சந்தர்ப்பத்தில் பலரால் துருக்கராக நினைக்கப் பெற்ற மசூதிவாசியான ஷிர்டி பாபா தாம் பாரத்வாஜ கோத்திரத்தில் ஆபஸ்தம்ப ஸூத்திரத்தில் தோன்றிய பிராம்மணர் என்று சொல்லிக்கொண்டார்.

இன்று ஊரில் பாதிப்பேர் புகழாகவும், பாதிப்பேர் கேலியாகவும் ''பார்ப்பாரப் பிள்ளை'' என்று பேரிட்டபோது குட்டி ஸத்யன் அந்தப் பழங்கதையையெல்லாம் நினைத்துச் சிரித்துக் கொண்டிருப்பானோ?

Koviloor Digital Library

அத்தியாயம்—6

யார் அந்தத் தாத்தா?

அன்னம் உண்ண அழைத்தனர்;
நான் ஆடும் மலர் அடித்தேன்
அருந்துகிறேன் என உரைத்தேன்;
அதனாலே அன்று)
துணிந்தெடுத்து வளர்த்தவளும்
சோர்ந்த முகம் ஆனாள்

— ராமலிங்க ஸ்வாமிகள்

என்றோ குழந்தை ஸத்யா கொல்லாமை நோன்பிருந்தது இன்றும் பயன் தருகிறது! இன்று ஸத்ய ஸாயி வழிபாடு சற்றேனும் பரவாத தேசமில்லை அல்லவா? பல்லாயிரம் காதம் கடந்துள்ள ட்ரினிடாட் தேசக் குழந்தைகள் சமீபத்தில் நம் ஸாயி ராமாயணத்தின் பாலகாண்டத்தைக் கேட்டனர். ''ஆஹா! நம் ஸ்வாமி குழந்தையாயிருந்தபோதே புலாலை விலக்கினாரா? ஸ்வாமி நம்மை விலக்காமல் சேர்த்துக் கொள்ள வேண்டுமானால் நாமும் புலாலுணவைத் தொடாமலேயிருப்போம்'' என்று அக் குழந்தைகளும் அற்புத சபதம் செய்துவிட்டன. இதனைப் படிக்கும்போது ஐயனால் அலர்ந்து வரும் அன்பு யுகத்தை எண்ணி வியக்கிறோம். உபதேசத்தைவிட வாழ்வின் உதாரணமே பிறர் மனத்துள் பதிந்து அவர்களைக் கட்டாயப்படுத்தாமலே தூநெறி சேர்ப்பிக்கும் என்பதற்கு பால ஸத்யாவின் அஹிம்ஸா சக்தி ஓர் அற்புதச் சான்று.

ஒருவரின் அன்புச் சக்தி மற்றோரிடமும் அன்பை ஊற்றெடுக்கச் செய்வது ஒரு பக்கம். எதிர்வெட்டாகச் சில சமயங்களில் அன்பாலேயே விரோதங்களும் தோன்றுவது இறைவனின் லீலா விநோதம்தான். முடிவில் இதுவும் அன்பின் அமர சக்தியை நிலைநாட்டத்தான் எனலாம்.

Koviloor Digital Library

சுப்பம்மா ஸத்யாவிடம் காட்டிய அன்பாலேயே வீட்டிலும் ஊரிலும் விரோதத்தைச் சம்பாதித்துக் கொண்டாள். அவளுக்குப் புத்திரப் பேறு இல்லாததால் கணவரான கர்ணம் கமலம்மாவை இரண்டாந்தாரமாக மணந்தார். அவளுக்கும் சந்ததி வாய்க்க வில்லே. பிறகு சுப்பம்மாவின் மருமானுன கோபால் என்ற பிள்ளையை ஸ்வீகாரம் செய்துகொண்டார். இதன் பிறகும் ஸத்யாவே சுப்பம்மாவுக்கு கோபாலனுக இருந்தான். இதனுல், உலக ரீதியில் உரசல்கள், மன விரிசல்கள் ஏற்படத்தானே செய்யும்?

முன்பே சொன்னுற்போல் கதாபாத்திரங்களில் பலர் ஜீவிய வந்தராக இருப்பதால் விவரங்களேப் புட்டுக் கூறுவதற்கில்லே. நம் ஸ்வாமியிடம் துவேஷம் பாராட்டிச் செய்யப்பட்ட காரியங் களே விளக்கப் புகுந்தால், அப்படிச் செய்தோரிடம் நமக்குத் துவேஷம் உண்டாகத்தான் செய்யும். ஆனுல் இதை நம் ப்ரேம பகவான் அறவே ஒப்பமாட்டார். எதிர்ப்புக்கள் எவ்வளவுதான் ஏற்பட்டாலும் அவற்றை அநாயாசமாக நிஷ்பலனுக்குவதில் ஸ்வாமியின் அதிமானுட வல்லமையையும், எந்த எதிர்ப்பிலும் ஆட்டம் கொடுக்காத சுப்பம்மாள் போன்ருேரின் ஆழ்ந்த பக்தி சிரத்தையையும் வெளிக்கொணரவே சதிகளும் சூழ்ச்சிகளும் மூண்டதாகத்தான் நாம் கொள்ளவேண்டும்; எதிர்ப்பாளரிடம் காழ்ப்புக் கொள்ளலாகாது. லீலே என்று வந்தால் நான தினுசு களும் இருக்கத்தானே செய்யும்? இல்லாவிடில் ஏது ருசி?

தன்னுல் சுப்பம்மாவுக்குத் தொல்லே ஏற்பட்டதால், தாத்தா வீட்டுக்குத் திரும்பினுன் ஸத்யா. பிஞ்சிலேயே பழுத்தது, இது வும் தாத்தாதான் என்று ஊரார் சொல்லிக் கொண்டனர். ஆம், பாலப் பருவத்திலேயே வைராக்யத்தாலும் ஞானேபதேசத் தாலும் தாத்தாவாக இருந்திருக்கிருன். இன்ருே, தாத்தா என்று குறிப்பிடப்படவேண்டிய ஐம்பதாம் வயதிலும் அதி பால்யத்தோடு, 'பாலா லீலா விநோதினி' என்றபடி குழந்தை விளேயாட்டு விளேயாடிக் கொண்டிருக்கிருர்.

லீலே என்று வந்ததால் ஸ்வாமியும் வெளிப் பார்வைக்குப் பல சிரமங்களுக்கு ஆளாகத்தான் நேர்ந்திருக்கிறது. அவற்றி லொன்ருக, பாட்டி லக்ஷ்மம்மா பரகதி அடைந்து விட்டாள். சுமங்கலியாக அவளுக்குக் 'கிடைத்தது' விசேஷந்தான். ஆனுல், பாட்டனுர் பேரனுர் பாடுதான் திண்டாட்டமாயிற்று. வேறு வழியில்லாமல் அந்த வானப் பிரஸ்தரும், அவரைவிட முற்றிய குஞ்சு சந்நியாசியும் பெத்த வெங்கா வீட்டிலேயே தனியாக சைவச் சமயல் செய்யச் சொல்லி உண்ண வேண்டியதாயிற்று.

அது ஓர் அவிபக்த குடும்பம். கொண்டமரின் இரு பிள்ளே களும், பெண்களில் ஒருத்தியும், மாற்றுப் பெண்களும், பேரக் குழந்தைகளுமாகச் சுமார் இருபது பேர் கொண்ட பெரிய குடும்பம். குடும்பத்துக்கே மூத்த கிழவருக்கும், கடைக்குட்டிக் கும் அதில் தனி மரியாதை!

Koviloor Digital Library

பிஞ்சிலேயே இவன் தாத்தா என்பது மட்டுமல்ல. தாதாவாகவும் இருந்தான். மூன்று, நாலு வயசிலேயே ஸத்யாவுக்கு இருந்த தானதர்ம சிந்தை அதிசயமானது. ஏன், முன்பு தவழும் பருவத்திலேயே விட்டாரை அன்னதானம் செய்ய வைத்தவனன்றோ? ஆனால் 'தானம்' என்ற வார்த்தையைச் சொன்னாலே நம் நூல் நாயகர் முகத்தைச் சுளிப்பார். "நம்மை உயர்ந்தோராகவும், மற்றவர்களைத் தாழ்ந்தோராகவும் நினைத்து, நாம் ஏதோ போனால் போகிறதென்று அவர்களுக்கு உதவும்போதுதான் 'தானம்' என்ற எண்ணம் பிறக்கிறது. சாக்ஷாத் நம்மவருக்கே நாம் பட்டுள்ள அன்புக் கடனை அபிமானத்தோடு ஆற்றும்போது, 'தாதா' 'தானம்' என்ற அஹம்பாவ வார்த்தைகளுக்கு இடமில்லை" என்பார்.

புட்டபர்த்தியில் நவராத்ரி போன்ற விழாக்களில் பல்லாயிரம் ஏழையர்க்கு உணவிடுவது பற்றி ஒருவர் 'அன்னதானம்' எனக் குறிப்பிட்டபோது, ஸ்வாமி சற்றே வெகுண்டு, "அப்படிச் சொல்லக்கூடாது; 'நாராயண சேவை' என்று திருத்திச் சொல்" என்றார். ஆயிரத்துக்கு மேற்பட்ட ஏழைகளுக்கு ஸ்வாமி வேஷ்டியும் சேலையும் வழங்கக் கண்ட ஒரு பிரமுகர், "இங்கே இவ்வளவு சமூக சேவை செய்வது வெளியுலகுக்குத் தெரியவில்லையே! நீங்கள் இதையெல்லாம் புகைப்படம் எடுத்துப் பிரசுரிக்க வேண்டும்" என்று 'ஆலோசனை' சொன்னபோது ஐயனுக்குக் கோபமே வந்துவிட்டது. 'ஒரு தாயார்க்காரி தன் குழந்தைகளுக்குத் துணிமணி வாங்கிக் கொடுத்து விருந்து செய்து போட்டால் அதை 'அட்வர்டைஸ்' பண்ணிக்கொள்வாளா?" என்று சுரிலெனக் கேட்டார்.

பால ஸத்யாவுக்கு ஏழையரையும், ஏதலரையும் தன் அங்கமாகவே காண்கிற பரிவு இருந்தது. வீட்டுக்கு எத்தனை பிச்சைக்காரர்கள் வந்தாலும் அத்தனை பேருக்கும் ஏதாவது போட்டேயாக வேண்டும் என்று பிடிவாதம் செய்வான். இவனுடைய பிடிவாதத்தைத் தெரிந்துகொண்டே யாசகர்களும் அவ்வீட்டை ஓயாமல் படையெடுத்தார்கள். அவர்களனைவருக்கும் ஐயமிட்டேயாகவேண்டும் என ஐயன், சோதரிகள் வெங்கம்மாவையும் பார்வதம்மாவையும் உபத்திரவிப்பான். அவர்களுக்குந்தான் எத்தனை பேருக்குப் பிச்சைபோட முடியும்? பார்க்கப் போனால் இதுவே ஒரு மத்யதரக் குடும்பந்தானே? புத்திசாலி ஸத்யாவுக்கு இது மட்டும் ஏன் புரியவில்லை என்றால், இங்கே அவனது புத்தியெல்லாம் இதயத்திடமே அஸ்தமித்துவிட்டது! 'அம்மா பசிக்கிறது' என்ற தீனக்குரல் கேட்டால் கரைந்துருக மட்டுமே அப்பிஞ்சு மனசுக்குத் தெரிகிறது. இதனால் தினமும் ஸத்யாவுக்கும் வீட்டாருக்கும் போராட்டமாக இருந்தது. அவர்கள் பிச்சைக்காரரை விரட்டிவிட்டால் இவன் பரிதாபமாக அழத் தொடங்குவான். செல்லத்தின் அழுகை பொறுக்காமல் அவர்களே பிச்சைக்காரனைத் தேடிப் போய்ப் பிச்சையிடும்படி ஆகும்!

தனக்கு மிஞ்சிய தர்மம் ஈச்வராம்பாளால் தாங்க முடியாத அளவுக்கு ஒரு நாள் அதிகமாயிற்று. அவள் கோபத்துடன்,

Koviloor Digital Library

''ஏ ஸத்யா! இங்கே கொட்டிக் கிடக்கலே. இனிமேலே பிச்சை போடறதானு உன் சாதத்திலிருந்துதான் போடணும். ஆமாம்'' என்று கூறிவிட்டாள்.

''ஓ!'' என்று சவாலாகச் சொன்னுன் இளவரசன். தன் குஞ்சுக் கை கொள்ளாத அளவுக்கு அள்ளி அள்ளி யாசகர் குவளையை நிரப்பினுன்.

சாப்பாட்டு வேளை வந்தது.

சாப்பிட அழைத்தாள் அம்மா. அருமைப் பிள்ளையிடம் சபதத்தை விடாதிருக்க முடியுமா?

ஆனுல் பிள்ளையாண்டான் சபதத்தை விடவில்லை. அம்மா கூப்பிட்டதற்கு வாய் திறந்துகூடப் பதில் சொல்லாமல் கையை மட்டும் அலட்சியமாக வீசி ''வேண்டியதில்லை'' என்று சைகை காட்டினுன்.

''மூளைச்சு மூனு இலை விடலை. இத்தனை ரோஷமா? வா, எழுந்திருந்து'' என்ருள் தாய்.

ஊஹூம்! அசையவில்லை ஸத்யா.

நயமாகவும் பயமாகவும் வீட்டார் எத்தனையோ சொன்னுர்கள். ''மலரினும் மென்மை. அதுவே மனம் வைத்து விட்டாலோ வஜ்ராயுதத்தினும் கடுமையாகிவிடும்'' என்று வடமொழியில் சொல்வதற்கேற்ப, நம் மதுர ஸத்யாவா இவன் என்று ஆச்சரியப் படும்படி வீம்பு பிடித்தான்.

எங்கோ வெளியே போய் வந்தான். சாப்பிடாத களைப்பு அவனிடம் லவலேசமும் இல்லை. 'கேர் கேர்' என்று ஏப்பமும் விட்டான்.

'சரிதான், சுப்பம்மா வீட்டில் உண்டு வந்திருக்கிருன்' என்று வீட்டார் அநுமானித்தனர்.

மாலையும் வெளியே சென்று இரவுதான் திரும்பினுன். அவனிடம் சோர்வோ வாட்டமோ இம்மியும் இல்லை. அலாதி உத்ஸாகத்துடன் துள்ளிக் கொண்டிருந்தான்.

'மறுபடி ஐயாவாள் கர்ணத்தின் அகத்தில்தான் சக்கை போடு போட்டு வந்திருக்கிருர். இதனுல் சுப்பம்மாவுக்கு ஏற்படுகிற சங்கடம் மட்டும் இவனுக்குத் தெரியாதா என்ன? எனவே ஏதோ வீராய்ப்பில் இன்று அங்கே போனுலும், நாளைக்கு நம்மிடமே படிந்து வந்து விடுவான்' என்றே வீட்டிலுள்ளவர்கள் நினைத்தார்கள்.

ஆனுல் மேலும் ஓரிரு வேளையும் இவன் அகத்தில் சாப்பிடாமலே, வெளியே போய்விட்டு வயிறுமுட்ட உண்டாற்போலத்

Koviloor Digital Library

திரும்பியதும் அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை! 'மானியான ஸத்யா கர்ணத்தின் வீட்டில் கஷ்டம் கொடுத்துக்கொண்டு சாப்பிடவே மாட்டான். அவன் சாப்பிடக் கூடிய இடம் வேறெதுவும் இல்லையே!'

சுப்பம்மாளை விசாரித்தபோது குழந்தை அங்கே சாப்பிடவில்லை என்று உறுதிப்பட்டுவிட்டது.

ஈச்வரம்மாவுக்குப் பெற்ற வயிறு இல்லையா? தவித்துவிட்டாள் தவித்து! 'கிடைக்கமாட்டாத செல்லக் கண்மணி தன் சுடுசொல் பொறுக்காமல் இத்தனை வேளை ஒட்ட ஒட்டக் கிடந்து விட்டானே!' அந்த வயிறு காய்ந்ததில் தாய் வயிறு பகிரென்றது. 'ஆனாலும் அவன் ஒட்டக் காய்ந்தமாதிரியும் இல்லையே. வழக்கத்தைவிட கனகுஷியாக அல்லவா ஓடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் இருக்கிறான்? அதெப்படியானாலும் அந்தப் பச்சைக் குழந்தைக்குச் சரியாக நான் எதிர் விம்பு இனியும் செய்வதற்கில்லை!'

அடுத்த சாப்பாட்டு வேளை வந்தது.

''நாயனா! இப்படிப் பண்ணலாமாம்மா? ஓடி வா, சாப்பிட. இனிமே உன்னைக் கண்டிக்கவே மாட்டேன் கண்ணா'' என்று கெஞ்சினாள் ஈச்வரி.

'பழம் வேண்டாம்' என்று சினந்த ஈச்வரி குமாரன்போலவே நம் பால ஸத்யா, ''வேண்டாம் ஒண்ணும். நான் சாப்பிட்டாச்சு'' என்றது தீர்மானமாக.

''அப்படிச் சொல்லாதே மகனே! நீ எங்கே சாப்பிட்டே? யார் உனக்குச் சாதம் போட்டாங்க? சும்மாவுக்காகக் கதைக்கக் கூடாது ராஜா! பொய் சொல்லப்படாதுன்னு ஊருக்கெல்லாம் உபதேசம் பண்ற நீயே பொய் பேசலாமா? தோதகம் பண்ணுமவாம்மா சாப்பிட'' என்று வருந்தியழைத்தாள் அன்னை.

''பொய்யா? நானா பொய் சொல்றேன்?'' என்று சீறிற்று சிங்கக்குட்டி. ரோஷமான ரோஷம் நம் சின்ன ஸ்வாமிக்கு! ''திருமாத்தான். நான் நல்லா வயிறு ரொம்பச் சாப்பிட்டாச்சு. எனக்கு ஒரு தாத்தா பாலும் நெய்யும் வெல்லமும் சாதத்தோடு சேர்த்து அமிருதம் மாதிரி உருட்டி உருட்டி வேளாவேளைக்குப் போட்டுக்கிட்டேதான் இருக்காரு. சந்தேகமானா பார்த்துக்கோ என் வயிற்றை'' — சட்டையைத் தூக்கிக் காட்டினான் ஸத்யன்.

ஆழ்வார் வாக்கில் ஓரிடத்தில் பிள்ளையாரைச் சொல்வது போல் குட்டிக் கண்ணனையே 'பேழை வயிற்றன்' என்று சொல்லியிருக்கிறது. ஈச்வரம்மாவின் பிள்ளையாரான நம் கண்ணன் வயிறும் இப்போது அப்படித்தான் பூசணிக்கொட்டையாகப் புடைத்திருக்கிறது!

Koviloor Digital Library

அசோதை கோபித்ததால் உண்ணமாட்டேன் என்று கண்ணன் விம்பு செய்த ஒரு சந்தர்ப்பமும் உண்டு. ஆனால், கண்ணன் ஸத்யாவைப்போல் யாசகருக்குத் தன் பங்கைக் கொடுத்து உபவாஸமிருக்கவில்லை. மாறாக, கன்னியர் 'சிறுசோறு' என்பதாக விளையாட்டில் செய்த சமையலை இவன் குறும்பிலே வாரிக்கொட்டினான். அசோதை கோபித்தாள். அவன் பட்டினி கிடந்து பயமுறுத்தினான்.

> ''சிறு சோறும் இல்லும் சிதைத்திட்டு அப்போது
> நான் உரப்பப் போய் அடிசிலும் உண்டிலை''

என்பார் ஆழ்வார், அசோதையாகி.

மெய்யாகவோ கண்ணன் பட்டினியும் கிடக்கவில்லை. கோபியர் வீட்டில் களவாடி உண்டுகொண்டுதான் இருந்தான். அது மட்டுமில்லை. ஓர் ஆய்ச்சி மாதந்தோறும் செய்யும் திருவோண விரதங்களைச் சேர்த்து வருடாந்தர விழாவாகச் செய்தாள்; பன்னிரண்டு விரதங்களுக்கும் உரிய பணியாரங்களைச் சேர்த்து ஒரு மொத்தமாக நிவேதித்தாள். அது முழுவதையும் கண்ணன் ஒரு கை பார்த்துவிட்டான்! அப்படியும் பசி ஆறவில்லை. வயிறோ குழைந்தே கிடந்தது. ''இன்னம் போடு'' என்றான்!

> பன்னிரண்டு திருவோணம் அட்டேன்
> 'இன்னம் உவப்பன் நான்' என்று சொல்லி
> எல்லாம் விழுங்கிட்டுப் போந்து நின்றான்

என்று பாடுகிறார் ஆய்ச்சியான ஆழ்வார்.

ஸத்யாவோ வாஸ்தவமாகவே பட்டினிதான் கிடந்ததாகத் தெரிகிறது. ஆனாலும் வயிறுமுட்ட உண்டதாகக் காட்டுகிறானே! இதென்ன மாயம்? வயிற்றிலே மூச்சை எக்கி உப்ப வைத்துக் காட்டுகிறானா என்ன? இவனை ஆழம் பார்க்க முடியாமல் அம்மா சோர்ந்து விட்டாள். அக்காள்மாருக்குச் சிரிப்பாக வந்தது இவன் சொன்ன தாத்தாக் கதை கேட்டு.

அவர்கள் கிளறிவிட்டதில் அம்மாக்காரி, ''யாரோ தாத்தா வாவது? வேளை தப்பாமல் வெல்லச் சாதம் போடவாவது? இந்த அளப்பெல்லாம் செல்லாது அப்பாயி!'' என்று கூறிவிட்டாள்.

ஸத்யாவுக்குத் தன்னை அசத்தியன் என்று அம்மாவே சொன்னால் மட்டும் அசாத்திய ஆத்திரம் வந்துவிடும்.

''ஆமாம், தாத்தா வரத்தான் வந்தாரு. வேளாவேளைக்குச் சாதம் போட்டாரு. சத்தியம், சத்தியம். இப்பக்கூடச் சாதம் போட்டுட்டுத்தான் போனாரு. இதோ கையை மோந்து பாரு''— பஞ்சுக் கையில் பிஞ்சு பிஞ்சாக மொட்டிட்ட விரல்களைத் தாயின் நாசிக்கெதிரே நீட்டினான் ஸத்யா.

Koviloor Digital Library

ஆஹா! கமகமக்கிறது அக் கரமலர், அக்கார அன்ன மணத் திலே! ஆம், ஞானசம்பந்தர்போல தெய்விகப் 'பால் அடிசில்' உண்டிருக்கிறான் என்பது நிச்சயம். பூவுலகப் பசுவிடமிருந்தன்றிக் காமதேனுவிடமே கறந்த பாலும், அதன் நெய்யும்தான் இப்படி தெய்விகமாக மணக்கின்றனவா? தெய்வலோகப் பாலும் வெண்ணெயும் இவனது உணவானதால்தான் மண்ணுலக மாட்டின் பாலையும், தயிரையும், நெய்யையும் தவிர்த்துவிட்டானா?

'நீ சோறு போடா விட்டால் என்ன? எனக்கொரு தாத்தா எப்படிப்பட்ட அமுது படைக்கிறார் பார்! அதில் நூற்றிலொரு பிட்டம் உனக்கு வருமா?' என்று குறுகுறுக்கும் சுடர் விழிகளால் கேட்காமல் கேட்கிறான் ஸத்யா!

ஈச்வரம்மா குழந்தைப் பிள்ளையிடம் அஞ்சுமளவுக்கு மரியாதை கொள்கிறாள். 'என் பிள்ளைதானா இவன்? உண்மையில் இவன் யார்? இவன் என் கருவில் குமுறிக் கொண்டிருந்தபோதே தம்பூராவின் நாத கர்ப்பம் குமுறி வெளி வந்ததே! மிருதங்கம் மிருதங்கள் கூறி இவனை வா வா என்று அழைத்தனவே! பிறக்கையிலேயே இவன் பாம்பணைப் பள்ளிக் கிடக்கவில்லையா? தவழும் நாளில் இவன் ஜாடை பார்த்து யாசகருக்கு அன்னமிட்ட போது, குறையாமலே சோறு வளர்ந்ததே! இவனுக்கு அன்ன மிடவும் இவனைப் பட்டினி போடவும் நான் யார்? அது சரி, இவன் தான் யார்?'

அன்னைக்குத் தன்பால் ஏற்படும் அதீத உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டான் ஸத்யா. தனது நாடகத்துக்கு அது உதவாது என்பதால் அவ்வுணர்வைக் கிள்ளி எறிந்தான். அன்று கோவிந் தனும் இப்படித்தான் செய்தான். கோபர்களுக்கும், பெற்றோருக் கும், வளர்ப்புப் பெற்றோருக்கும் அவ்வப்போது தன் இறைமை நிறைந்த அற்புதங்களைக் காட்டுவான். ஆனால் இது காரணமாக அவர்கள் தன்னுடன் இழைந்து நில்லாமல், விலகி நிற்கும் நிலை வந்துவிடக் கூடாதெனக் கருதிச் சடக்கென்று அவர்கள்மீது மாய மூட்டத்தைப் போர்த்தி விடுவான். மனிதர்களோடு மனிதனாக இருக்க வேண்டுமென்றுதானே வைகுந்தம் விட்டு வையம் வந்திருக்கிறான்?

பிள்ளையின் மகாபெருமையை மறந்தாள் ஈச்வராம்பா. ஆனால், அவனுக்கு உணவூட்டிய தாத்தாவை மறக்கவில்லை. இவனுடைய ஸ்தானத்தில் ஸத்யாவுக்குச் சோறு போட்டவ ராயிற்றே அந்தத் தாத்தா! 'யார் இவன்?' என்பது போய், 'யார் அந்தத் தாத்தா?' என்பதே கேள்வியாயிற்று. ஆனால், இவனிடம் அந்தக் கேள்வியை எழுப்பவோ எவருக்குமே திராணி யில்லை. குட்டிப் பிள்ளையாக, கூட இருந்துகொண்டு கும்மாளியிடும் போதே, இப்படி அவதார ரஹஸ்யம் என்று வரும் சமயங்களில் அவர்களை எப்படியோ எட்ட நிறுத்தி விட்டான்!

கிடைத்தற்கரிய தன் மாத்ரு ஸ்தானத்தை ஈச்வராம்பா அந்தக் கிழவருக்கு விட்டுக் கொடுப்பாளா? எனவே கெஞ்சிக்

Koviloor Digital Library

கூத்தாடிப் பிள்ளைக்கு அன்னமிடும் பாக்கியத்தை மீண்டும் பெற்றாள்.

இதன்பின், வீடு தேடி வந்த யாசகர் போதாதென்று ஸத்யாவே தேடிப்போய் இழுத்து வந்த கூன், குருடு, நொண்டி, முடவருக்கும் ஆட்சேபனை சொல்லாமல் பிச்சைபோட வேண்டியதாயிற்று. களஞ்சியத்தின் அடிவரை பிறுய்ந்து அக்காள்மார் கப்பரைகளை நிரப்ப, இளஞ்சியமாகச் சின்ன எஜமான் மிடுக்கோடு பார்த்துக் கொண்டு நின்றார்! அது சரி, பிறுயப் பிறுயக் களஞ்சியம் வற்றாமலே கொடுத்துக் கொண்டிருக்கிறதா என்ன? ஸத்யாவின் வற்றாத அன்பு ஊற்று செய்யும் வித்தையோ இது?

இன்றைக்கும் ஸ்வாமி சஞ்சாரம் செய்யும்போது, வழியில் ஒரே ஒரு தீனமான பிச்சைக்காரன் தென்பட்டாலும் காரை நிறுத்தி ஐயமிடாமல் அப்பால் போவதில்லை என்கிறார் ஹவார்ட் மர்ஃபெட்.

* * *

இன்று ஸத்ய ஸாயி பாபா என்ற மாத்திரத்தில் எவருக்கும் நினைவு வருவது அவரது விநோத முடிதான். குழந்தை நாளிலேயே இப்படித்தான் ஒவ்வொரு கேசமும் 'ஸ்ப்ரிங்' போல் சுருண்ட, கொத்துக் கொத்தான குழல் அவனுக்கு. ஆனாலும், 'முடியிறக்குவது' என்ற குடும்பப் பழக்கம் உள்ளதே! அதனால் மூன்றாம் வயதில் ஸத்யாவுக்கு முடியிறக்கினார்கள். அப்போதே அவனுக்குக் காதும் குத்தப்பட்டது.

சின்ன ஸத்யா! மொட்டைத் தலையும் கடுக்கனுமாக நீ நிற்பதும் ஒரு அழகாகத்தான் இருக்கிறது. பிற்காலத்தில் உன் விரித்த முடியில் இந்தக் காதுகள் எங்கள் பார்வையிலிருந்து பெரும்பாலும் மறைந்தே இருக்கப் போகின்றன. இந்தக் குறை தீர, எங்கள் குறை முழுதையும் கேட்கும் அந்தக் காதுகளில் கடுக்கன் மின்னுவதை இதோ மானசிகமாகத் தரிசித்துக் கொள்கிறோம். பால ஸத்யா! ஒரு காலத்தில் பலர் உன் இருப்பிடமே திருப்பதி எனக்கொண்டு குழந்தைகளைப் பார்த்திக்குக் கொண்டு வரப்போகிறார்கள். நீ உன் பட்டுக் கையை அக் குழந்தைகளின் முடியில் வைத்து வழிக்கப் போகிறாய். என்ன விந்தையப்பா! பூ எப்படிக் கத்தி ஆகும்? நீ பூங்கரத்தால் வழித்த வழிப்பில் கேசம் முழுதும் மழித்தாகியிருக்கும்! கத்தியின்றியும் குழந்தைகளைக் கத்தவிடாமலும் முடியிறக்கி விடுவாய். பிறகு அக் குழந்தைகளின் அடிக்காதை நீ வெறுமே தொடுவாய். அவ்வளவே. அவற்றில் கடுக்கன் மிளிரும்; தொங்கட்டான் ஆடும்! துளியும் வேதனையின்றிக் 'கர்ண வேதனம்' செய்து விடுவாய்!

* * *

நாட்கள் ஓடின. மொட்டைத் தலை கிராப் ஆயிற்று. எல்லோரையும் போன்ற சாதாரண கிராப் தலையனாகத்தான்

Koviloor Digital Library

இருந்தான் பால ஸத்யன். ஆனால், அப்போதே தலைவனாகவும் ஆகியிருந்தான். அந்தத் தலைமை வெளிப்பட்டதும் ஒரு சுவையான நிகழ்ச்சிதான்!

ராம நவமி. மலர்களால் அலங்கரித்த வண்டியில் ஸ்ரீ ராம சந்திர மூர்த்தியின் பெரிய படத்தை வைத்து ஊர்வலமாகக் கொண்டு வருகிறார்கள்.

பெத்த வெங்கப்பராஜுவின் வீட்டு வாசலுக்கு ஊர்வலம் வந்துவிட்டது.

'ஸத்யாவுக்கு தெய்வ சமாசாரம் என்றால் ரொம்ப இஷ்டமாச்சே! இச் சமயம் பார்த்து எங்கே போய்விட்டான்?' — வீட்டார் தேடுகிறார்கள். பிள்ளையாண்டானைக் காணவில்லை.

சரி, நாமும் தரிசனத்தை இழக்கவேண்டாம் என்று வாசலுக்கு வருகிறார்கள். அலங்கார வண்டியை நோக்குகிறார்கள்.

பெற்றோர் உற்றோரின் மனம் புளகமுறுகிறது. பிள்ளையாண்டான் ஆண்டவர் பிள்ளைபோல் அல்லவா உயர்வு பெற்றிருக்கிறான்! ஆம், ராமபிரானின் படத்துக்குக் கீழே, வண்டியின் மீதே மலர்க்குவியலுக்கிடையில் ஒரு பாரிஜாதமாக ஆரோஹணித்திருக்கிறான் அஞ்சு வயசுக் குஞ்சு! பால ராமனைப் போன்ற காம்பீர்யம்! ஊராரில் இவன் பெருமை உணர்ந்து இத்தனை மதிப்புத் தந்து, இவனை இறைவனோடு சேர்த்து உயர்த்தி வைத்து ஊர்வலம் கொண்டு வருபவர்களும் இருந்திருக்கிறார்கள்.

ஆதி சங்கரர் குழந்தையாக இருக்கையில் வீதி பவனி வந்த ஈசனாகவே நம்மைத் தந்தைக்குக் காட்டிக் கொண்டார். வெங்கப்பருக்கு அவ்வளவு அதிருஷ்டம் இல்லாவிடினும் தெய்வத்தோடு சேர்ந்து தன் மகனும் உலா வருவதைக் கண்டு பூரித்தார்.

வண்டிக்கு முன்னால் தெருவில் ஸத்யாவின் சகாக்கள் ஸ்ரீ ராம நாமாவளிகளைக் கீச்சுத் தொண்டையில் கூச்சலிடுகின்றன. எல்லாம் ஸத்யா சொல்லிக் கொடுத்ததுதான். அவனுக்கு யார் சொல்லிக் கொடுத்தார்கள்? அதுதான் தேவ ரஹஸ்யம்!

வெங்கப்பா தமது பூரிப்பாலேயே விளையாட்டாக அக் குழந்தைகளைச் சீண்டுகிறார். "பசங்களா! நீங்கள்ளாம் கால் தேய வர்றீங்க. தொண்டை வற்றக் கத்துறீங்க! அந்தப் பய மட்டும் வண்டி மேலேயே ஜம்முனு குந்திட்டு உங்களுக்கு ஸபாஷ் போட்டுக்கிட்டு வர்றானே! இது என்ன நியாயம்?" என்கிறார்.

குட்டிப்படை பளிச்சென்று பதில் சொல்கிறது: "இதிலே என்ன மாமா தப்பு? ஸத்யா அப்படித்தான் வரணும். அவன் எங்களோட குரு இல்லே?"

Koviloor Digital Library

தந்தை சிந்தை மேலும் குளிர, ஊர்வலத்தோடு வந்த பெரியவர்களில் சிலரும், 'பிட்ல குருவு, பிட்ல குருவு' என்று மகிழ்ந்து ஆமோதிக்கிறார்கள். குட்டிக் குருநாதனும்! ஞான பண்டித ஸ்வாமி போல!

அன்றே சிறுவர் அனைவருக்கும் குருவாக பஜனை சொல்லிக் கொடுத்துத் தலைவனான ஸத்யா, இன்று பார் போற்றும் ஒரு ஜகத்குருவாகப் புவிமிசைத் தலைமை எய்திருக்கிறார்.

பிற்காலத்தில் நம் சரித நாயகருக்கு அஷ்டோத்தரம், ஸஹஸ்ரநாமம் எல்லாம் தோன்றியது ஒரு பக்கம் இருக்கட்டும். வாண்டு ஸத்யாவுக்கு வாய்த்த மூன்று நாமங்கள் வெகு விசேஷந்தான்: ''பிராம்மண பாலுடு'', ''பிரம்ம ஞானி'', ''பிட்ல குருவு''.

ஒவ்வொன்றுக்கும் உட்பொருளாக ஓர் உலகமே உள்ளது.

Koviloor Digital Library

அத்தியாயம்—7

மானுக்க மாணிக்கம்

ஸகல வித்தைகளைப் பிறப்பித்தவர்களும், எல்லாம் அறிந்தவர்களும் உலகையாள்பவர்களுமான பலராமனும் கண்ணனும் பிறரிடமிருந்தன்றி, இயற்கையாகவே பெற்றிருந்த பெரு ஞானத்தை மறைத்துக்கொண்டு, குருவிடம் ஒழுகவேண்டிய நெறியை மற்றோருக்குக் காட்டும்பொருட்டு, சாமானிய மனிதர்போல் குருகுலம் சேர்ந்தனர்.

— ஸ்ரீமத் பாகவதம் 10-45

'பிட்ல குருவு' என்று பேரன் பேர் பெற்றதில் கொண்டம ராஜுவுக்குக் கொள்ளை சந்தோஷம். குருவுக்கு குருவாகும் பாக்கியம் அவருக்கே கிடைத்தது. ஸத்யாவுக்கு அக்ஷராப்யாசம் செய்கிற பருவம் வந்தது. அக்ஷரப் பிரம்ம யோகத்தைச் சொன்ன அக்ஷர புருஷனுக்கு அக்ஷராப்யாசம் செய்யும் பேறு கொண்டம ராஜுவுக்குக் கிட்டியது.

ஏறக்குறையத் தொண்ணூறு வயதான அக் கிழவர் தம் சுருக்கக் கையால் ஐந்து வயசுப் பேரனின் துளிர்க்கரத்தைப் பிடித்துப் புனித பஞ்சாக்ஷரத்தை எழுதுவித்தார்.

எதிர்காலத்தில் இத் துளிர்க்கரம் எத்தனையெத்தனை குழந்தைகளுக்கு அக்ஷராப்யாஸம் செய்விக்கப் போகிறது? இன்றும் எத்தனை கூட்டமாகட்டும், ஸ்லேட்டும் கையுமாகத் தாயார் அல்லது தந்தை மடியில் உட்கார்ந்திருக்கும் குழந்தையைப் பார்த்து விட்டால் நம் காவியநாயகர் தவறாமல் அங்கு வந்து மொட்டுக் கையைப் பிடித்து 'ஓம்' எழுதித் தருகிறார்.

★

புட்டபர்த்தியின் ஆரம்பப் பாடசாலைக்கு அதிருஷ்டம் அடித்தது. "ரத்னாகரம் வி. ஸத்ய நாராயண ராஜு" என்ற பெயரை ஆஜர்ப்பட்டியலில் பெறுகின்ற மாண்பு அதற்குக் கிடைத்தது.

Koviloor Digital Library

ஸத்யா படிப்பில் படுசுட்டியாக இருந்தானென்று சொல்லவும் வேண்டுமா? ஓதாமலே உணர்ந்தவன் ஒருமுறை கேட்டதைக் கரதல பாடமாக்கிக் கொள்வதற்குக் கேட்பானேன்?

படிப்பு ஒருபுறமிருக்க தன் நன்னடத்தையால் பள்ளிக்கே ரத்ன திபமாக இருந்தான்.

மற்றப் பிள்ளைகளை வீண் பேச்சு, சண்டை, சோம்பல் முதலியவற்றிலிருந்து நல்வழிக்குத் திருப்புவதில் ஸத்யாவுக்கு அபார சக்தி இருந்தது. ஸத்யாவின் ரத்தத்தோடு கரைந்திருந்த நல்லொழுக்கமே அவர்களையும் அவ்வழிக்கு ஈர்த்திருக்குந்தான். இதோடு இன்னம் இரு காரணங்கள் உண்டு.

ஒன்று சங்கீதம்; மற்றது 'சமத்காரம்'.

ஸத்யாவுக்கு அற்புதமான சாரீர சம்பத்து வாய்த்திருந்தது. இசை-நாடகக் குடும்பத்தில் பிறந்ததால் அவனுக்குப் பாட்டுத் திறனும், நடிப்பாற்றலும் பரம்பரைப் பண்புகளாக வந்ததாகவே நினைத்திருப்பார்கள். ஆனால், அவரையே பரம்பரன் எனப் பார்த்தால் இங்கே பாரம்பரியம் என்பதும் ஒரு வேடிக்கைதான்!

இன்றும் அவரது மணிக்குரல் எப்படிச் சொக்கச் செய்கிறது? பேச்சே பாட்டாக இனிக்கிறது. பாடியே விட்டாலோ?

பதினாலு வயசில் அவர் ஸாயி பாபாவாகத் தம்மை அறிவித்துக் கொண்டதிலிருந்து சுமார் அடுத்த பத்தாண்டுகள் அவரே தான் பஜனைப் பாடல்களை ஏராளமாக முன்பாடியிருக்கிறார். இன்றும் தமது உரைகளைத் தொடங்குமுன் ஒரு சுலோகமும், முடித்த பின் ஓரிரு பஜன்களும் பாடுகிறார். தங்க மணியைச் சுண்டியது போன்ற ஆழ்ந்த ரீங்காரமும், ஆந்திரர்களுக்கே உரிய பொடி ரவை ஜாதிகளும், நுட்பமான வளைவு சுளிவுகளும் பொருந்திய சாரீரம் அவருடையது. ஸரளமாக உள்ளபோதே உள்ளுக்குள் அதில் ஒரு 'பிடிப்பு' இருந்து, அதிலிருந்து மீண்டு வருகிற பிரயாசையின் சாயலும் தெரியும். இதுவேதான் ஸ்ரீ கே. எஸ். வேங்கடரமணி நம் காஞ்சி ஜகத்குருவின் குரலில் கண்டு பிடித்த ''கருணையின் திவ்ய நோவு' (the divine ache of compassion). ஒரு பக்கம் நோவு; மறுபக்கம் கேட்போருக்கு அதிலேயே ஒரு புனித ஆனந்தம். பேட்டி அறையில் ரகசியக் குரலில் ஸ்வாமி பேசுகையில் இந்தக் கருணை நோவு மிகவும் அடர்ந்து தெரியும்.

இப்படி ஓர் ஆனந்த சோகம் அவரது உட்குரலில் இருப்பினும், பக்தர்கள் சோகமுறையீடுகளான பஜன்களைப் பாடுவதை ஸ்வாமி ரஸிப்பதில்லை.

''பகவான் அனைவருக்குமே தகுதிக்கு அதிகமாகத்தான் அருள் புரிந்து வருகிறான். அப்படியிருக்க, 'பாஹி பாஹி',

Koviloor Digital Library

"தேஹி தேஹி' என்றெல்லாம் ரொம்பவும் புலம்பவேண்டியதில்லை. இப்படிப் பிரலாபிப்பதால் ஏதோ நான் என் அநுக்ரஹக் கடமையைச் செய்யாததாக நீங்கள் குத்திக் காட்டுவதுபோல் இருக்கிறது. எனவே, குஷியாகப் பாடுங்கள், குதூஹலமாகப் பாடுங்கள். ஆனந்தமே ஆத்ம ஸ்வரூபம், அதுவே பகவத் ஸ்வரூபம் என்றுணர்ந்து இன்புற்றுப் பாடுங்கள். இதுவே உயிருக்குப் பெரிய டானிக்.

''அதிலும் பலர் சேர்ந்து பஜனை செய்கிற கூட்டுப் பாட்டுக்குத் தொய்ந்த, தளர்ந்த மனோபாவம் கூடாது என்பதுமட்டுமின்றி ராகம், தாளம் இவற்றிலும்கூட தொய்வும் தளர்ச்சியும் இருக்கக் கூடாது. பலரை ஈடுபடுத்திக் கட்டுப்படுத்துவதற்கு விறுவிறுப்பு அவசியம். சோக ராகங்களும், விளம்ப தாள கதிகளும் இப்படி உத்ஸாகமூட்டா. எனவே, சுருசுருவெனப் பாடுங்கள்.

''ஸங்கித சாஸ்திரப் புலமையைவிட பக்தி ரஸத்தைத்தான் பகவான் உவக்கிறான் என்பது உண்மையே. ஆனாலும், சங்கமாகக் கூடிப் பலர் பஜனை செய்யும்போது ஒருத்தர் அபஸ்வரமாக, அவலயமாகப் பாடினால் மற்றவர் மனத்தில் இது இடறலை உண்டாக்கி, இசை வழியாக இறைவனிடம் ஈடுபடவொண்ணாமல் செய்யும். எனவே, கூடிய மட்டும் ஸுஸ்வரமாகவும், தாளக் கட்டுடனும் பாட இயலாதவர்கள் ஸங்கீர்த்தனக் கூட்டங்களில் முன்பாடாதிருப்பதே (lead செய்யாதிருப்பதே) சிலாக்யம். இதற்கு எதிர்த் திசையில், ஸங்கித நிபுணர்களும் மற்றோர் பின்தொடர முடியாத விந்நியாசங்களில் புகாமல், பாவத்துக்கு அடங்கியும் அநுசரணையாகவுமே இசையைக் கொண்டுபோக வேண்டும்.'' இதெல்லாம் ஸ்வாமி நாம பஜனை குறித்து வழங்கும் அரிய அறிவுரைகளில் சில.

இன்றைவிட ஆறு ஏழு ஆண்டுகளுக்கு முன்வரையில் ஸ்வாமியின் குரல் மூன்று ஸ்தாயிகளிலும் 'ஜிவ்'வென்று, ஜில்லென்று சுருதிலயமாகச் சஞ்சரித்தது ரஸிக பக்தர்களின் மறக்கவொண்ணா அநுபவமாகும். பாக்கியவசமாக, அந்த இசை காற்றோடு கரைந்து மறைந்து விடாமல், 'டேப்'பிலே பதிவு செய்யப்பட்டு, பிறகு இந்த 'டேப்'களிலிருந்து இசைத்தட்டுக்களாகவே பதிவாகி வெளிவந்திருக்கிறது.

சாரீர வளத்தைப் பொறுத்தமட்டில் ஸ்வாமிக்கும் சாமானிய மானுடர் போலவே சுமார் நாற்பத்தைந்து வயதுக்குப் பின்னாகவும் குறைந்திருப்பதைப் பார்க்கும்போது, குரல் 'உடைவதற்கு' முன், பால ஸத்யாவின் சாரீரம் எத்தனை மாதுரியமாக இருந்திருக்கும் என்று ஊகித்துப் பார்க்கலாம். 'தேவகானம் தேவ கானம்' என்று சொல்கிறோமே அப்படித்தான் இருந்திருக்க வேண்டும். தேவனே தேவனைப் பாடிய தேவகானம்.

ஆம், குழந்தை ஸத்யன் இறைவன் நாமங்களையேதான் பாடினான். பள்ளியில் பொடிப் பயலாக இருந்தபோதே இந்த

Koviloor Digital Library

அவதாரத்தின் நாம ஸங்கீர்த்தனப் பணிக்குக் கொடியேற்றி விட்டான்!

கலியுகத்தின் பிரத்யேகமான ஆத்ம சாதனை நாம பஜனை தான் என்பது சாஸ்திரம். நம் சரித நாதனும் இதை அடிக்கடி வலியுறுத்துகிறார்.

* * *

பரமஹம்ஸ ராமகிருஷ்ணர், ஷிர்டி பாபா, ஸ்ரீ காஞ்சிப் பெரியவாள், மா ஆனந்தமயீ போலவே நம் ஸ்வாமியும் குறிப்பிட்ட ஒரு சாதனையை மட்டும் மோக்ஷ மார்க்கமாக விதிக்காமல், அவரவர் பக்குவமறிந்து, அதற்கேற்றதொரு வழியைக் கூறுபவர் தான். (நம்மையே அடுத்தோரைப் பொறுத்தமட்டில் ஆத்ம விசாரமொன்றையே வலியுறுத்திய ரமண மஹர்ஷிகளும், மற்ற மார்க்கங்களில் உள்ளவர்களை அவரவரது சாதனையில்தான் ஊக்கினார்.) இதற்கு மாறாக அநேக மகான்கள் இருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்டதொரு மந்திர ஜபம், அல்லது இஷ்ட தெய்வ வழிபாடு, அல்லது யோகம், தியானம் என்று ஏதாவதொன்றைத்தான் விதிப்பார்கள். இவர்களில் சிலர் பிற மார்க்கங்களை வன்மையாகக் கண்டிப்பதும் உண்டு. இப்படியாக ஒரு தனி மார்க்கம் என்று உருவாகிறபோது அதைச் சேர்ந்தவருக்கென்று பிரத்யேகமான சின்னங்கள், உடுப்புக்கள் போன்றவையும் நிர்ணயிக்கப்படுகின்றன. இதனால் ஒருவரைப் பார்த்த மாத்திரத்தில் இன்ன மார்க்கத்தைச் சேர்ந்தவர் என்று தெரிகிறது.

நம் ஸ்வாமியோ எந்தத் தனியொரு மார்க்கத்தையும் கூறவில்லை. தம் பக்தர்களுக்கெனத் தனி அடையாளம் எதுவும் விதிக்கவும் இல்லை. ஸாயி ஸமிதியினர் கண்களை உறுத்தும் வர்ணங்களில் சித்திர விசித்திர உடைகள் அணியாமல், அமைதியை உண்டாக்கும் தூய வெள்ளாடையையே உடுத்தவேண்டும் என்பதற்கு அதிகமாக எவ்விதக் கட்டுப்பாடும் செய்யவில்லை. சிலருக்கு ஞான விசாரம், சிலருக்கு யோகம், சிலருக்கு பக்தி, சிலருக்குக் கர்மம் என்றும், பலருக்கு இவற்றைக் கலந்து கலந்தும் அவரவர் மனோபாவப்படி வழிகாட்டுகிறார். இவ்வாறு சகல சமய மார்க்கங்களையும் அவர் அங்கீகரித்தபோதிலும், இக் கலியுகத்தில் சகல புருஷார்த்தங்களுக்கும் தனிப் பெரும் சாதனம் நாம ஸங்கீர்த்தனமே என்று சாஸ்திரங்கள் கூறுவதற்கிசைய, நம் ஸ்வாமியும் பரம சுலபமான, மதுரமான பஜனை மார்க்கத்தை மட்டும் ஒரு படி கூடுதலாக வற்புறுத்தத்தான் செய்கிறார்.

'எவரும், எச் சமயத்திலும், எவ்விடத்திலும், எவ்வித வெளிப் பொருளும் உபகரணமும் தேவைப்படாமல், எளிதே பயிலக்கூடியது நாம ஸ்மரணம்தான். இதையே இசையும் லயமும் கூட்டி பஜனையாகப் பாடிவிட்டால், நம் உயிரைப் பரிசுத்தம் செய்துகொள்ளும் அதே சமயத்தில், இந்த பஜனையைக் கேட்டு, உடன் கலந்துகொள்வோரையும் அகத் தூய்மை பெறச் செய்கிறோம். நம்மைத் துலக்கிக் கொள்ளும்போதே உலகையும்

Koviloor Digital Library

நிலக்க பகவந்நாம பஜனையே ஒப்பற்ற ஸாதனம். இப்படியாக இந்த ஸாதனையில் தலைசிறந்த பரோபகாரமும் சேர்ந்திருக்கிறது'' என்பார்.

பிரசாந்தி நிலையத்திலும் சரி, ஸ்வாமி முகாமிடுகிற வேறெந்த இடமாயினும் சரி, அங்கு அனைவருக்காகவும் தவறாமல் நடத்தப்பெறும் ஒரே ஆத்ம சாதனை நாம ஸங்கீர்த்தனம்தான்.

இதற்குத்தான் இவர் ஆரம்பப் பள்ளி நாளிலேயே — அதற்கும் முன் 'பிட்ல குரு'வானபோதே — கொடியேற்றம் செய்துவிட்டார். தங்கக் கை ஏற்றிவைத்த கொடியாதலால், இன்று கயாறு, ஹவாய் உள்ளிட்ட சின்னஞ்சிறு நாடுகளிலும் பாட்டொலியாலே பட்டொளி வீசிப் பறக்கிறது பரமனின் நாமப் பதாகை! ஸத்ய ஸாயி ஸமிதியும் இப்போது ஒரு புனைடெட் நேஷன்ஸாக விச்வ வியாபகம் பெற்றுவிட்டதால், இன்று நாம பஜனையில்லாத நாடு ஏதேனும் உலகில் இருக்குமா என்று சந்தேகம் கொள்ள வைக்கிறது!

* * *

சங்கீர்த்தனம் என்பது சாதகர்களான நாம் செய்ய வேண்டியது. ஏராளமானவரைத் தம்பாற்படுத்தி ஸங்கீர்த்தனத்தில் ஈடுபடுத்துவதற்காக அவர் செய்வது — அதுதான் சரியாகவோ, தப்பாகவோ 'சமத்காரம்' எனப்படும் அற்புதங்கள் (miracles). இன்று 'ஸத்ய ஸாயி' என்ற மாத்திரத்தில் அநேகர் இவர் செய்யும் மிரகிளைத்தானே நினைக்கிறார்கள்? 'அவர் கையை அசைத்தால் எது வேண்டுமானாலும் ஸிருஷ்டியாகி விடுமாமே!' என்றுதானே ஆச்சரியப்படுகிறார்கள்?

'சமத்கார்' என்று வடநாட்டிலே கூறப்படும் இந்த அற்புதத்தை. சமர்த்து ஸத்யா பள்ளி நாளிலேயே தொடங்கி விட்டான்.

இவன் பிறக்குமுன்பே தம்புராவும் மிருதங்கமும் இசைத்தது கூட இவனது சிருஷ்டிதான். சுருதி-லய ஸங்கீதமே ரஸராஜனான நம் ஸ்வாமியின் முதல் சிருஷ்டி. சத்தியம் என்ற சுருதிக்கேற்ப ருதம் என்ற ஒழுங்கு லயம் தோன்றியதில்தானே பிரபஞ்ச சிருஷ்டியே உண்டாயிற்று?

இவனது பச்சிளம் பருவத்தில் வீட்டார் பிச்சையிட்ட பிறகு பன்மடங்கு அன்னம் வளர்ந்ததே, அதுவும் இவன் சிருஷ்டித்ததுதான். ஆனால், அவை நேராக இவன் செய்யாமல் ஸூக்ஷ்மமாக நடந்தவை.

இப்போது பள்ளியில் நேராகவே ஸ்தூலப் படைப்பைத் தொடங்கி விட்டான்.

Koviloor Digital Library

புத்தகப் பைக்குள் கை விடுவான். வெளியே எடுக்கையில் பெப்பர்மின்ட், பலப்பம், பென்சில் என்று ஏதாவது வரும்! சக மாணவர்களுக்கு விநியோகிப்பதற்குத்தான்.

அன்றும் சரி, இன்றும் சரி, தமக்கென இவர் அற்புத சக்தியால் ஒரு துரும்புகூடப் படைத்துக்கொண்டதில்லை.

சாதாரண ராஜுகுடும்ப பையனுக முரட்டுத் துணியில் ஓர் அரை நிஜாரும், அரைக்கை சட்டையும் போட்டுக் கொண்டு தான், மற்ற மாணவருக்கு வற்ரு நிதியாக இப் பொருள்களைப் பையிலிருந்து 'எடுத்து'க் கொடுத்தான்!

அன்றும் சரி, இன்றும் சரி, இவர் ஒரு பொருளை வழங்கினுல் அதுவும் வெறும் ஜடப் பரிசாக மட்டும் நின்றுவிடவில்லை. இதனுல் வெளியாகும் இவரது அதீத சக்தியைக் காண்கையில் தானுகவே இவர் வார்த்தைக்குக் கட்டுப்படுகிற அடக்கம் ஏராளமானவருக்கு உண்டாகிறது. எனவே, இவர் வார்த்தைப்படி கொஞ்சத்தில் கொஞ்சமாவது நாம பஜனை, பரோபகாரம், ஆத்ம சிந்தனை முதலியவற்றில் ஈடுபடுகிருர்கள்; ஓரளவுக்காவது பாபத்துக்குப் பயந்து தர்மத்தில் கட்டுப்பட முயல்கிருர்கள். இவரது அற்புதங்களின் உத்தேசமே இதுதான்.

ஏதோ ஓர் அற்புத ஆற்றலால் ஸத்யா தங்களுக்கு மிட்டாயும், ஸ்லேட்டும் தருகிருன் என்றவுடன் அவனிடம் மற்றச் சிருருக்குத் தன்னுல் ஒரு மரியாதை உண்டாயிற்று. அதனுல் அவன் சொல்கிறபடி பகவந்நாமாவைப் பாடிருர்கள். பொய், பொருமை, புறங்கூறல் போன்றவற்றுக்கு அஞ்சிருர்கள்.

நம் ஸ்வாமி தமக்கு அற்புத ஆற்றல் இருக்கிறது என்ற பெருமைக்காக சிருஷ்டி செய்பவரே அல்லர். நாம் நல்வழிப்பட வேண்டும் என்பதில் அவருக்குள்ள நிறைந்த அன்பு காரணமாகவே பரிசுகளை சிருஷ்டி செய்கிருர்.

சில சமயங்களில் நல்வழிப்படுத்த வேண்டும் என்ற காரணம் கூட இல்லாமல் வெறும் அன்பு தூண்டுவதாலேயே அவ்வன்பை நாம் புரிந்துகொள்வதற்கு வெளியடையாளமாக ஏதேனும் பரிசைப் படைத்தளிக்கிருர்.

''எல்லையில் அந்நல''மாகிய தம்மைத்தாமே இவர் நல்வழிப் படுத்திக்கொள்ளவோ, தம்மிடமே அன்பு பாராட்டிக்கொள்ளவோ அவசியமே யில்லாததால்தான் தமக்கென எதுவும் அற்புத ஆற்றலால் படைத்துக் கொள்வதில்லை.

இந்த அற்புத ஆற்றலையே அவர் எப்போது பார்த்தாலும் வெளியிட்டுக் கொண்டிருப்பதில்லை. இன்று பாபா என்றுலே மிரகிள் என்று நினைக்கப்பட்ட போதிலும், மற்ற மகான்களைவிட மிக அதிகமாக இவர் வ்யக்தமான ''சமத்கார''ங்களைச் செய்கிரு ரெனினும், இதிலுங்கூட ஒரு பெரிய கட்டுப்பாடு இருக்கத்தான்

Koviloor Digital Library

செய்கிறது. ஒரு புறம் யாருமே அறியாதபடி பலருக்கு சூக்ஷ்மத்தில் அற்புதம் செய்கிறாரெனினும், ஸ்தூல அற்புதம் எனும்போது எல்லா அடியாருக்கும் எப்போது பார்த்தாலும் அதைச் செய்து கொண்டிருப்பதில்லை. படத்தில் விபூதி வராதா, தேன் வராதா, வேறு ஏதேனும் மிரகிள் செய்யமாட்டாரா என்று எத்தனையோ பக்தரை ஏங்கிக் காக்க வைத்துத்தான் வருகிறார். எந்த அடிப்படையில் இந்தக் கட்டுப்பாட்டை அவர் செய்துகொண்டிருக்கிறார் என்பது அவரொருத்தருக்கே தெரியும். உதாரணமாக, சாதாரணச் சிறுவர்கள் தங்களுக்குச் சிறிது மேதா விலாசம் இருப்பினும் அதைப் பெரியோர்களிடம் காட்டிப் பாராட்டுப் பெறவே விழைவர். ஸத்யாவோ மஹா அற்புத ஆற்றல் இருந்தும் ஸ்தூலத்தில் அதைப் பெரியோரிடம் காட்டாமல் கட்டுப்படுத்தித் தன்னொத்த பாலருக்கே வெளிப்படுத்தினான். அப்போதும்கூட அவர்களைவிட உச்சாணிக் கொம்பில் தன்னைக் காட்டிக்கொள்ளாமல், அவர்களில் ஒருவனாகவே விளையாடிக் கொண்டு இதனைச் செய்தான்.

ஆம். ''பிரம்மஞானி''. படிப்பிலும் ஒழுக்கத்திலும் எப்படியோ அப்படியே விளையாட்டிலும் சூரனாக இருந்தான். கோலியிலும் சடுகுடுவிலும் 'படு'வாக இருந்தான்.

மற்ற சிறுவர்களுக்காக அந்த மந்திரப் பையிலிருந்து கோலிக் குண்டுகள்கூட அள்ளிக் கொடுத்துக் களிப்பூட்டியிருக்கிறான்.

''எப்படடா ஸத்யா, காலிப் பையிலே இதெல்லாம் வர்றது?'' என்று பசங்கள் வியப்புக் கொள்வார்கள்.

''ஸத்யாம்மாதான் தர்றா; வீட்டிலே இதைப் பத்திச் சொல்லாதிங்க; சொன்னா தர்றதை நிறுத்திடுவா'' என்று இவன் ஒரு போடு போடுவான், கோலிக் கண்களைச் சுழற்றி!

குழந்தை லோகத்தோடுமட்டும் தன் கும்மாளத்தைக் கொஞ்ச காலத்துக்கு வைத்துக்கொள்ள வேண்டும் என்று அவதாரன் திருவுளம் கொண்டிருக்கிறான். அவர்களும்கூட இந்தக் கும்மாளத்தில் தன்னைக் கண்டு அஞ்சி விலகும்படியாகிவிடக் கூடாது என்றே, தான் சிருஷ்டித்ததை ஸத்யாம்மாவின் அருளால் கிடைத்ததாகச் சொல்லித் தன்னைக் குறுக்கிக் காட்டிக் கொண்டான். அவர்களுக்கு எவ்வளவு 'ஜெரிக்குமோ' அதற்கேற்பவே அளந்தான் — இல்லை, அளக்கவில்லை, அளவையைக் குறைத்தே சொன்னான். தனக்கே உள்ள படைப்பாற்றலைக் குறைத்து, ஸத்யாம்மா படைத்ததைத் தான் வழங்குவதாக மட்டும் சொல்லிக் கொண்டான்.

ரத்னாகரம் ராஜா வீட்டில் ஸத்யாம்மா தொடர்பு மிகவும் உண்டு என்பதை அறிந்த கிராமப் பையன்கள் அந்தத் தேவிதான் இப் பிள்ளை மூலம் விளையாடுகிறாள் என்பதை எளிதிலே நம்பி ஏற்றுக் கொண்டனர். இவனுக்குள்ளேயே உள்ள பரம ஸத்ய அம்மாவை — ஸத்யரூபா, ஸத்ய வ்ரதா, ஸத்யஸந்தா, ஸத்யா

Koviloor Digital Library

னந்த ஸ்வரூபிணி, ஸத்யஞானனந்த ரூபா என்றெல்லாம் லலிதா ஸஹஸ்ரநாமம் கூறும் மஹா அம்மாவை — அவர்கள் கண்டார்களா?

''பழம் தரட்டுமா, பழம்?'' கண்களை உருட்டுவான் ஸத்யன்.

சின்னச் சின்னக் கைகள் இவனைச் சுற்றி நீளும்.

ஸத்யா மாயப் பையைத் துழவி வெளியே கையை எடுப்பான்.

கொய்யாப் பழம்!

ஆமாம், கொய்யாத பழம்தான். அது ஏதேனும் மரத்தில் பழுத்திருந்தால்தானே கொய்யவேண்டி இருந்திருக்கும்?

செல்வா ஸத்யா! நீ இப்போது ஒரு சில சிறுவர்களிடம் செய்கிற இந்த விளையாட்டைத்தான் ஒரு நாள் நவ கண்டத்தி லுள்ளவரிடமும் பரப்பி, நவ நவமாக விளையாடப் போகிறாய்! அதனாலேயே உன்னைப் பலர் ஸர்வேச்வரனாகக் கொண்டு வழிபடப் போகிறார்கள். இது காரணமாகவே வேறு பலரோ உன்னை வெற்றுச் சித்தன், உண்மையான ஆத்மிகத்துக்கு உலைவைக்கிற தந்திரக்காரன் என்று தாக்கவும் போகிறார்கள். போற்றுதல், தூற்றுதல் இரண்டாலும் பாதிக்கப்படாமல், விலகி நின்று அவற்றை ஒரேபோல ரஸித்துக் கொண்டு, நீயும் இந்த விளையாட்டை விமரிசையுற விஸ்தரித்துக் கொண்டேதான் இருக்கப் போகிறாய். வேறெந்த விதத்திலும் ஈச்வர சக்தியை உணர முடியாத ஏராளமான மக்களை இறை நினைவில் திருப்ப அற்புதங் களாலேயே முடிகிறது என்பதால் அவர்களை நன்னெறிப்படுத்து வதில் உனக்கின்ன கருணைப் பிடிவாதத்தால் அபவாதங்களையும் உவந்து பூணப்போகிறாய்!

உலகம் காணப் பெரிய அளவில் இவர் 'சமத்காரம்' செய்யத் தொடங்கிய பிறகுதான், அதுவரை கப்சிப் என்றிருந்த இவரது அடிநிலைப் பள்ளித் தோழர்களில் பலர் அந்தக் காலத்திலேயே தாங்கள் பெற்ற அற்புதப் பரிசுகளைப் பற்றி அவிழ்த்து விட்டார்கள்.

★

படிப்பு, படைப்பு, விளையாட்டு, வழிபாடு இத்தனைக்கும் நடுவில் இவன் செய்த வீட்டுக் காரியம்! அடேயப்பா! ஆமாம், ஒரு குடும்பத்தின் சமையல் வேலை முழுவதையும் சவரணையாக, விதரணையாகச் செய்தான்.

அது ஒரு குட்டிக் குடும்பம். தாத்தாவையும் பேரனையும் மட்டும் கொண்ட அன்புக் குடும்பம்.

Koviloor Digital Library

பாட்டி காலமான பின் சிறிது காலம், அதாவது ஏழு வயசு வரையில் அசைவ வீட்டில் தயாராகும் சைவ உணவை சகித்து ஏற்றுக்கொண்டான். அப்புறம், 'இந்தப் பாத்திரம் பண்டம் சம்பந்தமே வேண்டாம்; அசைவ உணவைச் சமைத்து உண்போரின் ஸ்பரிசமும் தன் ஆகாரத்துக்கு இருக்க வேண்டாம்; நாமேதான் தாத்தாவுக்காகவும் நமக்காகவும் சமைத்துக்கொண்டு விடலாமே' என்று தீர்மானித்தான்.

ஆத்மிக வாழ்வின் நுழைவாசலாக ஆகார சுத்தியைத்தான் ஸநத்குமாரர் நாரதருக்கு உபநிஷத்தில் உபதேசிக்கிறார். இவ் விஷயத்தை பாபா மிகமிக வலியுறுத்துவார். (துரதிருஷ்ட வசமாகக் கேட்போர்தான் அபூர்வத்திலும் அபூர்வமாக இருக் கிறார்கள்!) உணவைச் சமைப்பவர், பரிமாறுபவர் ஆகியோரின் மனோபாவமும் உண்பவரின் உட்புகும் என்பதையும் கதைகள் மூலம் விளக்குவார்.

இவ்விடத்தில் உணவு விஷயமாக அவரது கருத்துக்களில் இரண்டைக் கூறலாம். உணவு ஆராய்ச்சியாளர்கள் (dieticians) பாலின் சிறப்பைப் பரக்கக் கூறினாலும், ஸ்வாமியோ பாலைவிட மோர்தான் சிறந்தது என்கிறார். நிலத்துக்கு அடியில் உண்டாகும் வெங்காயம், கிழங்குகள் முதலியவற்றைவிட, மேல் மட்டத்தில் விளையும் காய்கறிகள்தாம் ஸத்வ குண அபிவிருத்திக்கு அனுகூல மானவை என்கிறார்.

ஏழு பிராயச் சிறுவன் அஞ்சாமல் அடியிலிருந்து நுனிவரைச் சமையல் வேலையை ஏற்றான். பெரிய பிரம்ம வித்தையா என்ன? பிரம்ம வித்தையேதான் இவனுக்கு அரிச்சுவடி ஆயிற்றே!

கொண்டமராஜுவின் தனிவீட்டிலேயே சமையல் பணியைத் தொடங்கினான். ஒரு பக்கம் குழந்தைகளிடம் பஜனை மூலம் சமயப் பணி; மறுபக்கம் கிழவனுருக்குச் சமையல் பணி. இதையும் உள்ளார்ந்த ஈடுபாட்டோடு ஒரு சமயச் சடங்காகவே செய்தான். எந்த வேலையை எடுத்துக்கொண்டாலும் அதை அப்பழுக் கில்லாமல் செய்கிற கர்ம யோகியல்லவா?

தண்ணீர் சேந்துவது, காய்கறி நறுக்குவது, உலை வைப்பது, அரைப்பது, கரைப்பது (ஆந்திரச் சமையலில் சட்னி, பச்சடி என்று சொல்லிக் கொண்டு துவையல்கள் அரைப்பது மிக அதிகம்) இத்தனையும் செய்தது குழந்தை. எப்படித்தான் குழவிக்கை அம்மியில் குழவியை ஓட்டியதோ? கார மசாலாக்களை மொட்டான பட்டு விரல்பட அரைத்ததோ? பீமனைப்போலவும் நளனைப் போலவும் மந்திரம் போட்டே (சங்கற்பத்தாலேயே) இவன் சமைத்திருக்கலாம்தான். ஆனால், அப்படிச் செய்யாமல் மனிதருக்கு முன்னுதாரணமாக, அலுப்பின்றி, உற்சாகத்துடன் காரியம் செய்யும் லீலையை மேற்கொண்டு விட்டான்!

ஈச்வராம்பாவுக்கு ஆச்சரியம், பெருமை, பொறுமைகூட! இரண்டு பெண்கள், நாத்தி, ஓரகத்தி இவ்வளவு பேரையும்

Koviloor Digital Library

சகாயத்துக்கு வைத்துக்கொண்டும் தான் சமையலுக்குச் சதிராடும் போது, இவன் ஏழு, எட்டு மணிக்குள் கன கச்சிதமாக உக்கிராண காரியம் முடித்து விட்டுப் பள்ளிக்குக் கிளம்பிவிடுகிருனே என்று வியந்தாள்.

இரண்டு பேர் குடும்பமாளுல் என்ன, இருபது பேர் குடும்ப மாளுல் என்ன? அளவில்தான் வித்தியாசமே தவிர அயிட்டங்களில் வித்தியாசமில்லே. தாத்தாவுக்குத் தொண்ணூற்றுக்கு மேல் வயதாளுலும் நவ்வும் ஐவ்வுமாக ஒரு வியஞ்சனம் குறைவில்லாமல் செய்து போடுவான். சுத்த வாழ்க்கை வாழ்ந்த தாத்தாவும், தெம்பாகவே இருந்து ஜெரித்துக் கொண்டார். தாத்தாவுக்கு மட்டுமில்லே; தானும் ரஸித்து உண்டான். பிரம்மஞானி என்பதால் இந்தக் குற்றமற்ற இன்பங்களே அளவறிந்து அனுப விப்பதில் தவறில்லே. ''வேலே அமுதம் விந்தைபெற அறுசுவையில் வந்ததென அமுதுண்ணும் வேளேயிலும் நின் அருளே மறவா வரம் தந்து'' என்று தாயுமானவரே பாடவில்லேயா? உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலே எல்லாவற்றிலும் நம்மாழ்வாரும் கண்ணனின்பத்தையே அநுபவித்து கானம் செய்ய வில்லேயா ?

ஸத்யா சோறு என்று பறக்க மாட்டான். நாவுச் சபலம் கிடையாதுதான். ஆனுல், சமையல் என்று செய்தபோது 'பணிக்கு' குன்ருமல் பணி செய்து, ருசித்து உண்டான்.

பிற்காலத்தில் எத்தனேயோ முறை பத்துப் பேருக்குச் சமைத்தது நூறு பேருக்கும், நூறு பேருக்குச் சமைத்தது ஆயிர வர்க்கும் காண்கிற மாதிரி அன்ன விருத்தி செய்த 'அற்புதன்' இவன்! தவிர தனிப்பட்ட பக்தர்களுக்குச் சுடச்சுட போண்டா, பூரி மசாலாகூட சிருஷ்டித்துக் கொடுத்து மகிழ்வூட்டி, வேறு பலரின் நையாண்டி மொழிகளே வாங்கிக் கட்டிக்கொள்ளப் போகிருன். எத்தனேயோ ஆயிரம் பேருக்குப் படியளக்கும் 'ஸாயி ஸ்டோர்ஸ்' வைத்திருப்பதாகச் சொல்லிக்கொள்ளப் போகிருன்! இவனேதான் சின்னஞ்சிறு பிராயத்தில் நேராகத் தனக்கே உணவில் பங்கு உண்டு என்னும்போது அற்புத சக்தியைப் பிரயோகித்துப் பயனடையாமல், வேர்க்க விறுவிறுக்க உழைத்துக் கொட்டி, உழைப்பின் பலனே உண்டு களித்தான். 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்' தன்மை இதுதான்.

Koviloor Digital Library

அத்தியாயம் — 8

“கூறை சோறிவை தந்தெனக் கருளி”

ஏழையரும் ஏதலரும் இழிந்தோர் தாமும்
இருக்குமிடம் ஐயா, உன் பாதபீடம் !

— தாகூர்: அ. சீ. ரா. தமிழாக்கம்

பால ஸத்யாவின் பள்ளி நாளில், அதாவது நாற்பதாண்டுகளுக்கு முன்னால், பள்ளிக் கெடுபிடிகள் நாகரிகப் பட்டணங்களில் கூடக் கொடுமையாகத்தான் இருந்தன. எனவே கிராமமான பர்த்தியின் லோயர் எலிமென்டரிப் பள்ளி நிர்வாகிகள் மாணவரை நடத்திய விதத்தில் கொடுரம் காணப்பட்டதில் வியப்பில்லை தானே?

பள்ளிப் பிள்ளைகள் லேட்டாக வந்தால் இத்தகையதொரு கொடுந்தண்டனைக்கு ஆளாவர். நிர்வாகிகள் அகராதிப்படி மணியடித்த பிறகு வருபவர்தான் லேட் என்று அர்த்தமில்லை. வகுப்புக்கு முதலாவதாகவும் இரண்டாவதாகவும் ஆஜராகிற இரு மாணவர்களைத் தவிர மீதமுள்ள அனைவருமே லேட் என்றுதான் கருதினார்கள். — இப் பிள்ளைகள் மணியடிக்கு முன்பே வந்திருந்தாலுங்கூட! லேட்டாக வந்தவர்களில் முதல்வனுக்கு ஒரு பிரம்படி, அடுத்தவனுக்கு இரண்டு அடி என்று ஈவு இரக்கமில்லாமல் உயர்த்திக்கொண்டே போவார் ஆசிரியர்.

அந்நாளில் சிறுவர்கள் பள்ளிக்கு வருவதில் சிறிதும் உற்சாகமில்லாதிருந்தனர் என்றும், பெற்றோரும் தங்கள் தொழில்களில் பிள்ளைகளைப் பயன்படுத்திக் கொண்டதால் குறித்த நேரத்தில் அனுப்பி வைப்பதில்லை என்றும், எனவேதான் இப்படித் தண்டனை விதிக்கப்பட்டது என்றும் ‘நியாயம்’ சொல்கிறார்கள். எத்தனை சொன்னாலும் இது அநீதி தான். இதைச் சமாளிப்பதற்காக, பாவம், குழந்தைகள் அதிகாலையிலேயே பள்ளிக்கு வந்து விடுவார்கள். யார் முந்தி வந்தார்கள் என்று குறித்துக்கொள்ள ஆசிரியரோ, வேறு பணியாளர் எவருமோ வருமுன்பே அத்தனை

Koviloor Digital Library

பிள்ளைகளும் வந்துவிடுவார்கள். கோப்பித் தண்ணியோ, நாஸ்தாவோ இல்லாமல் சூரியோதயத்துக்கு முன்பே வந்து வயிறு வாடக் கிடப்பார்கள்.

ஸத்யன் இவ்விதம் பொழுது புலருமுன் பள்ளிக்குப் போனதில்லை. சமையல் முழுதும் முடித்து, பகலில் தாத்தாவும் தானும் சாப்பிடுவதற்காக அதை ஒழுங்குபடுத்தி மூடி வைத்து விட்டு, அடுக்களையைப் பளிச்சென்று சுத்தம் செய்த பின்தான் பள்ளி செல்வான். 'பிள்ளை குரு'வாக, பிறவி ராஜகுமாரனாக இருந்த ஸத்யாவுக்குப் பிரப்பம்பழப் பிரஸாதம் தர ஆசிரியர் களுக்கே துணிச்சல் இல்லை.

ஆயினும், இவன் சக மாணவர் படுகிற கஷ்டத்தைத் தனதாகவே கொண்டு தவித்தான்.

* * *

ஒரு நாள் விடியற்காலை. மழை கொட்டிக் கொண்டிருந்தது. சீதம் உட்புகுந்து எலும்பைக் குடைந்தது. சகாக்கள் என்ன செய்கிறார்களோ என்று பார்க்கப் பள்ளிக்கு ஓடினான் ஸத்யா.

என்ன பரிதாபம்! இந்த மழையிலும் குளிரிலும்கூட அவர்கள் விடியற்காலமே பள்ளிக்கு வந்துவிட்டனர். வாத்தியார் வருமுன் வகுப்பறைக்குள் விடமாட்டார்களே, அதனால் அறைக்கு வெளியே நாற்புறமும் சிறிது நீட்டிக்கொண்டிருக்கும் கூரையின் கீழ். சுவரோடு சுவராக ஒட்டிக்கொண்டு, சாரலில் வெடவெடத்து விரைத்துக்கொண்டிருந்தார்கள். பாதிப் பேருக்குப் போதிய உடுப்புக்கூடக் கிடையாது.

ஸத்யாவின் அஸ்கா நெஞ்சு ஐஸாக உருகிவிட்டது.

மழையைப் பாராமல் வீட்டுக்கு ஓடினான். தன் உடுப்புக்கள், சிற்றப்பா பிள்ளைகளின் உடுப்புக்கள், வீட்டிலிருந்த துண்டுகள், துப்பட்டிகள் எல்லாவற்றையும் திரட்டிக் கட்டினான். வண்ணான் மூட்டையளவுக்கு அது வீங்கிற்று. வீட்டிலிருந்தவர்கள் தடுத்தும் கேளாமல், மூட்டையைத் தோள்மேல் போட்டுக்கொண்டு பள்ளிக்குப் புறப்பட்டான். அவனது அன்பின் ஆவேச ராஜஸத்வத்தின் முன் வீட்டுப் பெரியோரும் அடங்கி நிற்க வேண்டியதாயிற்று.

''எத்தனை பாரமானாலும் இந்த ஸாயித் தாயின் தோளில் போட்டுவிட்டு நிர்விசாரமாக இருங்கள்'' என்று பிற்காலத்தே கூறப் போகிறவரின் முற்றா இளம்தோள் அன்று ஸ்தூலமாகவே மூட்டை தூக்கிற்று!

இவன் பள்ளியடைந்தபோது மழையும் விட்டிருந்தது. சொட்டச் சொட்ட நனைந்து நின்ற மாணவர்கள் குதூஹலிக்கக் காய்ந்த ஆடைகளை வழங்கினான் நனைந்த நெஞ்சினனான ஸத்யா.

Koviloor Digital Library

'அப்யூர்ணேதி யந்நக்னம்' — திகம்பமாக நிற்கும் திக்கற்றோருக்கு ஆடை தந்து காக்கிறான் — என்று வேதம் இறைவனைப் போற்றியது. ''அன்ன வஸ்த்ர தாதா'' என்றே இன்று நம் ஸ்வாமி அர்ச்சனையில் ஒரு நாமம் உள்ளது. இவ்வருட் செயல் அரும்புப் பருவத்திலேயே நறுமலராக மலர்ந்திருக்கிறது. பிச்சைக்காரருக்குச் சோறு; ஏழை மாணவருக்குக் கூறை. ஈவதே ஸத்யாவின் பிறவி விரதம். தனக்கென எதுவும் வேண்டான்.

பாகப் பிரிவினையாகாத பெரிய குடும்பமல்லவா வெங்கப்ப ராஜுவுடையது? அதைச் சேர்ந்த பல பிள்ளைகளுக்காகப் பெரியவர்கள் சட்டைத் துணி, நிஜார்த் துணி எடுத்து வருவார்கள். ஸத்யாவே வீட்டுக்குச் செல்லமாதலால் முதலில் அவனுக்குப் பிடித்தமானதை எடுத்துக்கொள்ளச் சொல்வார்கள்.

ஆனால், அவன் அப்படிச் செய்யமாட்டான். ''மத்தவங்க தங்களுக்குப் புடிச்சமாதிரி எடுத்துக்கட்டும். ஏதானும் மீந்திச்சுன்னா நான் அதை எடுத்துக்கறேன்'' என்றுதான் சொல்வான்.

அளவெடுக்கத் தையற்காரரை அழைத்து வருவார்கள். இப்போதாவது ஸத்யாவுக்குச் சபலம் வராதா என்று வீட்டுப் பெரியவர்களுக்குச் சபலம்! இவனா மசிந்து கொடுப்பான்? ஜிதேந்திரியனாயிற்றே!

எல்லாரும் கழித்துக் கட்டியதையே, அதாவது கட்ட மாட்டோம் என்று கழித்ததையே உவந்தேற்பான்.

ஆஹா! பிற்காலத்திலோ இதுவேதான் வேறொரு விதத்தில் தேவதாரு விருக்ஷமாக வளர்ந்துவிட்டது!

* * *

சமூகத்தால் கழித்துக்கட்டப்படுபவர்களுக்கும் அநுமதி தருவதன்றோ நம் ஸ்வாமியின் ஆச்ரமம்? இப்படி இவர்களை நிசமெனக் கழித்துக்கட்டுபவர்களில் பெரும்பாலோரும்கூட உள்ளூறத் தங்கள் மனத்தில் வைத்துள்ள கழிவடைகள் ஏராளம் என்பதை இவர் அறிவாரே! எனவேதான் வெளிப்படத் தவறியவர், உள்ளூறத் தவறியவர் என்ற பேதமின்றி எல்லோரையும் பிரசாந்தி நிலயத்தில் அநுமதிக்கிறார்.

சில துர்ப்பாக்கியசாலிகள் வெளி வாழ்விலும் தாழ்ந்துவிடுகிறார்கள். தங்களை மற்ற ஆச்ரமங்களிலோ மடாலயங்களிலோ கௌரவமாக நடத்துவார்களா என்று அவர்களுக்கே தயக்கமாகிறது. எனவேதான் நம் ஸ்வாமி ஸநாதன தர்மங்களின் நிலைக்களனாக உள்ளூற இருப்பினும், வெளியிலே புது மாதிரிச் சாமியாராகத் தோன்றுவதால் இவரிடம் தயக்கமின்றி வருகிறார்கள். ஆறுதல் தருவதே ஜன்ம விரதமாகக் கொண்ட நம் பகவானும் இப்படிப்பட்ட அவலைகளை ஈர்த்தருளவேதான் புது மாதிரி வேஷம் போடுகிறாரோ என்னவோ? இவரால்

Koviloor Digital Library

ஈர்க்கப்பட்ட தரக்குறைவானவர்கள் பிற்பாடு நல்லொழுக்கத்தில் இவர் மகா கண்டிப்பானவர் எனக் காண்கிறார்கள். அதே சமயத்தில் இவரது காப்பையும், கருணையையும் உணர்ந்ததால் இந்தக் கண்டிப்புக்கும் உட்படத் தயாராகிறார்கள். சிறிதேனும் திருந்த முயல்கிறார்கள்.

தரம் பார்க்காமல் எல்லோரையும் அநுமதிப்பதால் ஸ்வாமிக்கு எத்தனை அபவாதம், அவதூறு கற்பிக்கப்படுகிறது? தியாகி அதைச் சற்றேனும் பொருட்படுத்துகிறாரா? ''எல்லோரைப் போல நானும் சிலரை ஒழுங்கு தப்பியவர்கள் என்று முகத்திலடித்தால் அவர்கள் எங்கேதான் புகல் என்று போவார்கள்? ஆனந்த ஸ்வர்க்க லோகத்தைவிட ஆராத் துயர நரக லோகத்திலேயே நான் அதிகம் தேவைப்படுகிறேன். நான் பவித்திரர்களைவிடப் பாவியருக்கே உரியவன். புண்யசாலிகள் தாமாகவே நற்கதி பெற்றுவிடுகிறார்கள். அவர்களுக்கு நான் எதற்கு? ஆனால் பதிதருக்கோ என்னை விட்டால் கதி ஏது? நான் இருக்குமிடம் எல்லா விதமான மக்களுக்கும் பிறந்தகம்—தாய் வீடு. நல்லவர்களைப் போலவே அல்லவர்களும் ஸாயம்மாவின் சேய்கள் தாம். இந்த அம்மாவால் எந்தக் குழந்தை முகத்திலும் கதவைச் சாத்த முடியாது'' என்பார்.

புத்தர் ஆம்ரபாலிக்கு ஆசிரயம் அளித்தார். மாக்தலேனாவை மகளாக ஏற்றார் இயேசுநாதர். இறைவனுக்கு, இறைவனிலேயே திளைக்கும் மகான்களுக்கு, மாசு ஏது, தேசு ஏது? ஆனாலும் புத்தரை, இயேசுவைக் கொண்டாடும் பலர், ஸ்வாமியை மட்டும் குற்றமாகவே பார்ப்பதை என் சொல்ல? அவர் லீலை என்றுதான் சொல்ல வேண்டுமோ?

* * *

''குழந்தை நாளில் பிறர் கழித்துக்கட்டியதை உவந்தவர் இன்று ஏன் ஸில்க்கில் மினுக்குகிறார்? கோபுரம் கட்டிக்கொண்டு பிரசாந்தி நிலயத்தில் வாழ்கிறார்? ரகத்துக்கு ஒரு கார் வைத்துக்கொண்டிருக்கிறார்?'' என்று கேட்கலாம்.

ஸில்க் தானாக வாய்த்ததுதான். ஆதியில் யாரோ பக்தர்—ஸாகம்மா போலிருக்கிறது—ஷிர்டி பாபா 'கஃப்னி' என்ற முழு நீள அங்கியே அணிவார் என்பதால் இவருக்கும் அதே போல், ஆனால் பட்டினாலான, கஃப்னியும் பட்டு வேஷ்டியும் ஸமர்ப்பித்தார். அன்பின் பொருட்டே இளம் ஸாயி அதனை ஏற்றார். மற்ற பக்தர்கள் சும்மாயிருப்பார்களா? பட்டாடை ஸமர்ப்பணத்தைத் தொடர்ந்தனர். பிற மகான்களிடம் போகவே தயங்குவோரை நாம்தான் புது வேஷத்தால் ஈர்த்து நல்வழிப்படுத்தலாமே என்று இவர் எண்ணினாரோ என்னவோ? அங்கிகளையே தம் உடுப்பாக அங்கீகரித்தார்.

''அருணாருண கௌஸும்ப'' ஆடை லலிதைக்குப் பிரீதியானது என்பதால் எவரோ ஸாயம்மாவுக்குச் செவ்வாடை

Koviloor Digital Library

அளிக்க, மற்றோரும் இதையே தொடர்ந்தனர். வேறு சிலர் பொருக்களுக்குரிய காவி, ஆரஞ்சு, மஞ்சள், பழுப்பு மஞ்சள் ஆகிய நிறங்களில் அர்ப்பித்த அங்கிகளையும் ஏற்றார். "நல்லது, இந்த வண்ணப் பட்டாடையிலும் ஒரு சௌகரியம் உள்ளது. எனக்கில்லை, பக்தர்களுக்குத்தான். எத்தனை பெருங்கூட்ட மானாலும் நான் எங்கிருக்கிறேன் என்பதைப் பளபளா அங்கி எல்லோருக்கும் எளிதே காட்டிக் கொடுத்துவிடுகிறது" என்றார், சிரித்து.

இன்றுபோல் அன்று ஆடவர்கள் வண்ண வண்ண ஸில்குகள் உடுத்தியதில்லை யல்லவா? இன்றைய முடியலங்கார அலங்கோலங் களும் அன்று இல்லாததால் இவரது உடையும் முடியுமே இவரைப் பிரம்மாண்டக் கூட்டங்களிலும் எடுப்பாகக் காட்டின.

கையுறையாக நூற்றுக்கணக்கில் அங்கிகள் சேரத் தொடங்கின. அவற்றைத் தையல் பிரித்து, புயல் மழையால் பாதிக்கப்பட்ட ஏழைப் பெண்டு பிள்ளைகளுக்கு அனுப்புவார். அநாதருக்குப் பட்டுத் துணி கொடு என்றால் யார் செவி சாய்ப் பார்கள்? எனவே அநாத நாதனை தாம் அவற்றை உவப்பதாகக் காட்டி, இதனால் கேலியையும் வாங்கிக் கொண்டு, அநாதருக்கே அவற்றில் பலவற்றை அனுப்பி வைத்தார். ஒரு சமயம் வெள்ளக் கொடுமைக்கு ஆளான ஏழையருக்கென்று சுமார் ஐநூறு அங்கிகளைக் கொணர்ந்து போட்டாராம். அப்படி ஒரு கொடுமை ஏற்படப் போகிறதென்றே இத்தனை அங்கிகள் சேர்த்து வைத்திருந்தார் போலும்!

கண்ணன் 'உடுத்துக் களைந்த பீதக ஆடை'யை ஆழ்வார் வேண்டியதேபோல, பாபா பல பக்தருக்குத் தாம் உடுத்துக் களைந்த கஃப்னியை அருளுவதுண்டு. ஓர் ஓணத் திருவிழாவின் போது பிரசாந்தி நிலயத்தில் குழுமிய நூற்றுக்கணக்கான மலையாளிகளில் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் தமது அங்கி யொன்றை அளித்து ஆனந்தத்தில் ஆழ்த்தினார். ஸ்வாமியின் ஆடைக்கு ஓர் ஆத்மிக ஆற்றல் உண்டு. மருத்துவ சக்தியும் உண்டு. நோயாளிகள் அதைத் தலைமாட்டில் வைத்துக்கொண்டோ, அதிலிருந்தே வெட்டிச் சட்டை தைத்துப் போட்டுக்கொண்டோ பயனடைவதும் உண்டு. ஓர் எடுத்துக்காட்டாக, ஆலந்தூர் ஸ்ரீமதி கே.வி. ராமசந்திரனின் ஹார்ட் அட்டாக் ஸ்வாமியின் கஃப்னி மகிமையாலேயே தீர்ந்திருக்கிறது. இவ்வித மருத்துவ, ஆத்மிக சக்திகளைப் பருத்தியைவிடப் பட்டே (க்ஷௌம வஸ்திரம்) நமக்கு காத்துத் தரும் என்பது சாஸ்திரம். இதனால்தான் ஸ்வாமி ஸில்க் மட்டுமே உடுத்துகிறாரோ என்றெண்ணவும் இடமுண்டு.

ஏன் பட்டு அணிகிறார் என்று எதிர்ப்பாளர்கள் முகம் சுடுக்கிறார்கள் எனில், பக்தர்களோ முதுவேனிற் காலத்தில்கூட இவர் ஏன் இப்படிப் பட்டு வேஷ்டியையும் அங்கியையும் புழுங்கப் புழுங்க ஸதாகாலமும் அணிகிறார் என்று கரிசனப்படத்தான் செய்கிறார்கள். உறங்கும்போதுகூட ஹாய்யாக அங்கியைக் கழற்றி விட்டு ஒரு மெல்லிய பருத்தி வேஷ்டி அணிந்தார்

Koviloor Digital Library

என்று கிடையாதாம்! இவரது பழக்க வழக்கங்களை ஆழம் காண நாம் யார்?

ஒரு கட்டம் வந்ததும், பக்தியின் பெயரில் வகை தொகையில்லாமல் ஆடை வந்து சேருவதை நிறுத்திவிடத் தீர்மானித்தார். ஏழையரை உத்தேசித்தே இவர் வஸ்திர காணிக்கையை ஏற்கப் போக, பல ஏழையரே பிறரைப் பார்த்து இப்படிக் காணிக்கை செலுத்தத் தொடங்கியதைக் கண்டதும் இனி அங்கீகாரம் மறுத்துவிட வேண்டியதுதான் என முடிவு செய்து விட்டார்.

ஆடை மட்டுமல்ல, அன்புக்கு அடையாளமாகப் பொருட் காணிக்கை ஏதுமே செலுத்தக் கூடாது என்றார். வெறுமே சொல்லவில்லை. மீறவொண்ணுக் கட்டளையாகவே விதித்து விட்டார். ஆலயத்துக்கோ, ஒரு மகானிடமோ செல்லும்போது ஏதேனும் கையுறை எடுத்துத்தான் செல்ல வேண்டும் என்ற சம்பிரதாயத்தையே நிர்தாக்ஷிண்யமாக நிராகரித்தார். தம்மைக் காண வருபவர்கள் ஒரு வில்லை கர்ப்பூரம் கூடக் கொண்டு வரக் கூடாது என்று உத்தரவிட்டார். சம்பிரதாயத்தை மீற முடியாமல் புஷ்பம், பழம் இப்படி ஏதாவது வாங்கி வருபவரிடம், அவர் அதனை எவ்வளவு முறைதான் வற்புறுத்தி நீட்டினாலும், ''பரவாயில்லை'' என்று மட்டும் சொல்வாரே தவிர அங்கீகரிக்கவே மாட்டார். துளி விதிவிலக்குக் காட்டினாலும் ஏழைகள் தமக்காகப் பொருட்செலவு செய்து விடுவார்கள் என்ற தீன காருண்யம். காடின்யமாகத் தோன்றுமளவுக்கு முற்றிய காருண்யம்.

'பத்திரம் (துளஸீ தளம், வில்வம் போன்றவை), புஷ்பம், பலம் (பழம்), தோயம் (புண்ய தீர்த்தம்) முதலியவற்றை அர்ப்பணம் செய்வதை கீதையே அநுமதிக்கிறதே' என்றால் அதற்கு இச் சொல்லின்செல்வர், சிந்தனைச் செல்வர் விடை சொல்வார் : ''உங்கள் சரீரத்தைச் சருகாக, பத்திரமாக நீங்கள் எண்ணுங்கள். அந்த எண்ணமே எனக்கு நிவேதனம். இதயத்தை அன்பால் மலர்த்திக் கொள்ளுங்கள். இதுவே நான் உவக்கும் புஷ்பம். உங்கள் செயல்களின் விளைவுகளை, பலன்களை நான் விட்டபடி என்று அர்ப்பணம் செய்யுங்கள். எனக்குப் பிரீதியான பலம் இதுதான். பக்தியில் நீங்கள் வடிக்கும் ஆனந்த பாஷ்பமே நான் விரும்பும் தோயம்.''

''ஏழைகளுக்கு இம்மிச் செலவும் வைக்க இசையேன். இந்த சரீரம் கொடுக்கவே ஏற்பட்டது; வாங்கிக் கொள்வதற்கல்ல'' என்கிறார்.

ஏழைகள் மட்டுமில்லை, ஸமீபத்தில் ஸத்ய ஸாயி ட்ரஸ்ட் நிறுவப்பட்டதற்கு முன்பு வரை, மிகவும் தனவந்தர்களான ஸாயி பக்தர்கள் அநேகரிடமிருந்துகூட இவர் கால்காசு வாங்கிக் கொண்டதில்லை. இப்போதும் இவர் தனி மனிதராக வாங்கிக் கொள்வதில்லை. பொது நலப் பணிகள் பல புரிந்து வரும் ட்ரஸ்டே நன்கொடையை ஏற்கிறது.

Koviloor Digital Library

கை நீட்டி வாங்கி விட்டால், கொடுத்தவர்கள் இதற்காக ''எக்ஸ்ட்ரா'' அநுக்கிரகத்துக்கு உள்ளூறவாவது பாத்தியதை கொண்டாடுவது மனித சுபாவமே என்பதால், இந்த எண்ணம் தலையே எடுக்க வொட்டாதிருக்கத்தான் எவரிடமுமே ஸ்வாமி திரவிய காணிக்கை ஏற்பதில்லை என்று வைத்துவிட்டார் போலும்!

அப்படியானால் ட்ரஸ்ட் உருவாகுமுன்னரே, பிரசாந்தி நிலையமும், வேறு சில ஸ்தாபனங்களும் எப்படி எழும்பின? பிரதிப் பிரயோஜனமே எதிர்பார்க்காதவர்கள், அல்லது ஏற்கெனவே ஸ்வாமியிடமிருந்து பெற்ற அநுக்கிரஹத்துக்குப் பிரதியாக ஏதேனும் திரவிய ரூபத்தில் செய்தேயாக வேண்டும் என்று துடித்தவர்கள், பிள்ளை குட்டியில்லாதவர்கள்—இப்படிப் பட்ட தனிகர்களில் ஸ்வாமிக்கு ஸ்தூலத்தில் மிக நெருக்கமாக இருந்த சிலர் பிடிவாதமாக அளித்த காணிக்கைகளிலிருந்தே இவை எழும்பின.

இன்றும் பல கோடீச்வரர்கள் இவர் உதட்டை அசைத்து ஏதேனும் ஒரு புண்ணியப் பணியில் தங்கள் பொருளை ஈடுபடுத்த மாட்டாரா என்று காத்துக் கிடக்கிறார்கள். இப்படிப்பட்டவர் களிடம் ஒரு பள்ளியோ, வைத்தியசாலையோ, பஜனை மந்திரமோ எழுப்பச் சொல்வார். தமக்கென்று கை நீட்டிப் பைஸா பெற மாட்டார் சக்ரவர்த்தி!

இதனால் அன்றும் சரி, இன்றும் சரி இவர் பெயரில் காலணுச் சொத்தோ ஒரு மில்லி மீட்டர் நிலமோ இருந்ததில்லை, இருக்கவு மில்லை. இதனால் இந்தச் சக்ரவர்த்தியே தம்மை ஆண்டிபோல வர்ணித்துக் கொள்வதுமுண்டு. ''நான் சாண்கூடச் சொந்த நிலமில்லாதவன். (மூவுலகும் எனதே என்பவர்தான் இப்படிக் கூறுகிறார்!) நிலமற்ற ஏழைகள் ஏரி வற்றுகிறபோது, ஈரமுள்ள அதன் ஓரப் பகுதியை அவசரமாக உழுது, குறுகிய காலப் பயிர் களை விளைவித்துக் கொள்கிறார்களல்லவா? நானும் இதுபோலவே உங்கள் மனத்தடாகத்தில் சிந்தனை அலைகள் சிறிது சுருங்கும்போது அவசரமாக அந்த இடத்தை எனக்குச் சொந்தமாக்கிக் கொண்டு அன்பை விதைத்து ஆனந்தத்தை அறுவடை செய்துகொள்கிறேன்' என்பார்.

ஸ்ரீருத்ரம் இறைவனை, ''தரித்ரன், நில லோஹித'' என்கிறது. திருவாசகமும் ''ஒருவரை, ஒன்றுமில்லாதவரை'' என்னும்.

முதலில் ஸத்ய ஸாயி பக்த ஸஹாய ஸங்கம் என்ற பெயரில் பக்தர்களை ஒன்றுசேர்ந்து நிதி திரட்டிப் பிரசாந்தி நிலையத்தில் அடியார்க்குத் தேவையான கான்டீன் முதலிய சில வசதிகளைச் செய்தனர். 1966-ல் ஸத்ய ஸாயி ட்ரஸ்ட் அமைக்கப்பட்டது. பிரசாந்தி நிலையம், மற்றும் சில நகரங்களில் உள்ள ஸாயி திருவனங்கள், ஸத்ய ஸாயிக் கல்லூரிகள், பாடசாலைகள், மருத்துவ மனைகள், புத்தகப் பிரசுராலயம் முதலானவை இந்த ட்ரஸ்டாலும், இதன் அங்கங்களாலும் நிர்வகிக்கப்படுகின்றன.

Koviloor Digital Library

ஏழையடியார் சிலருக்கு இவரே நேரில் சிறு தொகைகள் பண உதவி செய்வதும் உண்டு. இது தவிர தமது சூக்ஷ்ம சக்தியால் தினர்களின் இல்லங்களிலுள்ள தமது படத்திலிருந்தோ வேறு விதமாகவோ அவர்களின் அத்யாவசியத் தேவை பூர்த்தி பெறுவதற்கான தொகையை ரூபாய் நோட்டாகப் பொழிவதும் உண்டு. எப்படிப் புட்டபர்த்தி சென்று வருவது என ஏங்கித் தவித்த ஏழையர் சிலருக்கு இவ்வாறு அவர் பயணச் செலவை 'அனுப்பி' வைத்திருப்பதற்குச் சிந்தாதிரிப்பேட்டை ஆயா போன்ற பல எடுத்துக்காட்டுக்கள் உண்டு. இப்படிப் பல விதங்களில் அவரிடமே பண உதவி பெற்ற பலர் உள்ளனர். இதற்கெல்லாம் அவர் ட்ரஸ்டிலிருந்து பணம் கேட்டு வாங்குவதாகத் தெரியவில்லை. அப்படியாயின், அவருக்கென்று சொந்தப் பணம் இருக்க வேண்டும் என்றே ஆகும். அவரோ கிடையாது என்கிறாரே! இதனால்தான் சிலர், மற்றப் பொருட்களை சிருஷ்டிப்பதேபோல் ஸ்வாமி ரூபாயும் சிருஷ்டித்தார் என்று நினைக்கிறார்கள். இது பரம அபத்தம். நாணயம் அச்சிடுவது அரசாங்கத்துக்கே உரிய காரியம். மற்றவர் சிருஷ்டிப்பது கள்ளநோட்டுத்தான். ஏழெட்டு வருஷங்களுக்கு முன் அப்போதைய மஹாராஷ்டிர சட்ட சபை நாயகர் ஸ்ரீ பார்டேவுக்கும், ''நவகால்'' ஆசிரியருக்கும் பாபா அளித்த பேட்டியில் இவ்விஷயத்தைத் தாமே தெளிவுபடுத்தியிருக்கிறார். தமது பரிசளிப்புக்களில் துளிக்கூட மோசடி அம்சமே கிடையாது என அடித்துக் கூறியிருக்கிறார்..

இவ்வாறெனில், இவர் ரூபாய் சிருஷ்டிக்கவுமில்லை, சொந்தச் சொத்து வைத்திருக்கவுமில்லை எனில், வேறொருவரின் திரவியத்தைத்தான் 'அப்போர்ட்' எனப்படும் சூக்ஷ்மமான கடத்துச் சக்தியின் மூலம் இடம் பெயர்த்துப் பரம ஏழையருக்கு அளிக்கிறார் என்றாகும்—இப்படி எவர் பணத்தையோ கடத்துவது மட்டும் மோசமாகாதா என்றால் . . .

அப்படி இல்லை. ஸ்வாமியிடம் பரம பக்தி பூண்டவர்களில் ஏராளச் செல்வம் படைத்த பலர் உள்ளனர். இவர் சொற்படி ஏழையருக்காகப் பெரு நிதியம் செலவிடச் சித்தமாயிருப்பவர்கள் இவர்களில் உண்டு. ஆனாலும் இவர்களிடமும் ஸ்வாமி பொதுவாகப் பல ஏழையர்க்குரிய பணிகளைத்தான் சொல்வாரே தவிர, தனிப்பட ஓர் ஏழைக்கு நன்கொடையாகத் தரச் சொல்வது அபூர்வமேயாகும். காரணம், இப்படிச் செய்வதால், அந்த ஏழையின்மீது இந்த தனிகருக்குத் தம்மையும் அறியாது ஓர் அகம்பாவ அதிகாரத்வம் வந்துவிடும்; உதவி பெற்றவரும் இவருக்கு பவ்வியப்பட்டு விட்டதாகத் தம்மை நினைக்கக் கூடும். ஸ்வாமியோ அகம்பாவ உயர்வு, மனிதனிடம் மனிதன் தாழ்ந்து கிடப்பது இரண்டையுமே வெறுப்பவர். இதனால்தான் இவ்வித தோஷங்களால் தீண்டப்படாத, அபூர்வமான, பக்குவர் குறித்தே ஒருவர் இன்னொருவருக்கு நன்கொடை தருவதை அநுமதிப்பார். மற்றச் சமயங்களில் இப்படிப்பட்ட செல்வந்தர்களின் பணத்தையே இடம் பெயர்த்து தீனருக்கு வழங்குகிறார் என்பதே இந்நூலாசிரியரின் துணிபு. இத்தொகைகள் அந்த தனிகர்களுக்கு ஒரு பொருட்டாகவே இராது. அது கைவிட்டுப்

Koviloor Digital Library

போனதேகூட அவர்களுக்குக் கணக்குத் தெரியாததாக இருக்கும். தமது பக்தர்கள் பெரும் சொத்தையும் அர்ப்பிக்கத் தயாராயிருக்கையில், இப்படி ஸ்வாதீனத்துடன் நம் ஸ்வாமி அநில் கொசு மாத்திரத்தை திரைட்சணத்துக்காக இடம் மாற்று வதை எப்படி மோசடி என்பது?

ஸ்வாமியின் அதி உன்னதமான ஒழுக்கத்தை அறிந்தவர்கள், அவர் தமது 'கடத்துச் சக்தி' (apport)யால் கடுகத்தனையும் நீதி முறை மீற மாட்டார் என்று உறுதியாக அறிவர்.

உதாரணமாக, ஒரு முறை அவர் அத்யந்த பக்தர் சிலரிடம் உரையாடுகையில் முகலாய மன்னர் ஒருவர் உள்ளூறக் கண்ணனன்பு நிறைந்து அவனிடமிருந்தே பெற்ற பரிசில் ஒன்றை விளக்கமாக வர்ணித்தவுடன், அப் பொருளைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவர்களுக்கு மூண்டுவிட்டது. தாபத்தை மூட்டி விட்ட ஸ்வாமியும் அதைத் தணிப்பது தம் கடனெனக் கருதிக் கை யசைத்தார். அக்கணமே திருக்கரத்தில் மிளிர்ந்தது திவ்யப் பரிசில். உடனிருந்த அனைவரும் அதனைப் பார்த்து மகிழ்ந்த பின் ஸ்வாமி மறுபடி கையசைக்க அது மறைந்தேவிட்டது. 'அடடா, அதனை ஏன் ஸ்வாமி தாமே வைத்துக் கொள்ளவில்லை? அல்லது பக்தர் ஒருவருக்காவது ஈந்திருக்கலாகாதா?' என்ற எண்ணம் எல்லோருக்கும் பிறந்தது. ஸ்வாமி சொன்னார் : "நான் சொன்னது நிஜம் என்று நீங்கள் நம்புவதற்காகவும், உங்களுக்கு நானே ஆர்வத்தை உண்டாக்கிய காரணத்தால் அதை நிறைவேற்ற வேண்டும் என்பதாலுமே அந்த விலை மதிப்பற்ற பரிசிலை வரவழைத்தேன். அது பிரிட்டிஷ் ஆட்சியில் லண்டனுக்குப் போயிற்று. தற்போது அங்கு ஓரிடத்தின் உரிமையாக உள்ளது. அங்கிருந்து அதைப் பறிப்பது திருட்டு. அதனால்தான் அங்கேயே திருப்பி அனுப்பிவிட்டேன்" என்றார். தற்போதைய இங்கிலாந்து உரிமையாளர் அப்பண்டம் ஆறாயிரம் மைல் கடந்து போயிருப்பதை அறிந்துப் புலனுராய இடமேயில்லைதான். ஆயினும் ஸ்வாமியின் தர்ம உணர்வு, பொருட் பற்றின்மை - இவ்விதம் செயற்பட்டது.

இப்படிப்பட்டவரே மாக்ஸ்முல்லர் குடும்பத்தின் வழித் தோன்றல் ஒருவரைச் சேர்ந்த ஒரு பொருளை அப்போர்ட் செய்து, அதை டாக்டர் வி. கே. கோகக்குக்கு வழங்கியிருக்கிறார் என்றால் விசித்ரமாயிருக்கலாம். ஆனால் இதிலேயே நீதியுணர்வின் அன்னையும் வெளியாகிறது.

இங்கே குறிப்பிடும் பண்டம் 'கீதா மாஹாத்மியம்' எனும் நூல். கிழக்கிந்தியக் கம்பெனியின் தொடக்க காலத்தில் மிக மிகப் பொடியான எழுத்தில் 'கீதா மாஹாத்மியம்' துக்குணி யூண்டு நூலாக வெளிவந்தது என்று ஸ்வாமி கூறியபோது, உடனிருந்த சோகக் முதலியோருக்கு அதனைக் காணும் ஆர்வம் ஏற்பட்டதாலேயே அதை "அப்போர்ட்" செய்தார். அதை ஸ்ரீ கோகக் வாங்கிப் புரட்டுகையில் மிக மிகப் பழைய அப்பிரதியின் அட்டை உதிர்ந்து, புத்தகத்திலிருந்து பிய்ந்து வந்துவிட்டது.

Koviloor Digital Library

கோகக்குக்கு உதறல் எடுத்தது. ஸ்வாமியோ கனியுற நகைத்து, ''பரவாயில்லையப்பா! இதை நீயே வெச்சுக்கோ. இது முதலில் ஸர் வில்லியம் ஜோன்ஸிடம் இருந்தது. பிறகு அவரது நினைவுப் பரிசாக மாக்ஸ் முல்லரிடம் போயிற்று. அவருடைய குடும்பத்தினரிடம் வம்சாவளியாகப் போயிருக்கிறது. இப்போதைய உடைமையாளருக்கு இது இருப்பதும் தெரியாது. தெரிந்தாலும் இதன் பெருமையை அவர்கள் உணரக் கூடியவர் அல்ல. இதை விட, உன்னிடம் இருப்பதே சிலாக்கியம்'' என்றார்!

அப்புத்தகத்தின் தற்போதைய உடைமையாளருக்கு அதன் அருமை தெரியாவிடினும் அதை இன்னொருவர் விரும்பிக் கேட்கிறார் என்றால் பேரம் செய்யத் தோன்றும். இம்மாதிரிச் சில விதிவிலக்கான சமயங்களில் அப்போர்ட் செய்வதில் தவறு ஏதும் தெரியவில்லை.

சொந்தச் சொத்தில்லாத ஸ்வாமி ஏழையருக்கு திரவிய சகாயம் செய்வதற்கு நம் சிற்றறிவு அறிந்த அளவில் இந்த தர்ம நியாய அப்போர்ட் சக்திதான் காரணமாகத் தோன்றுகிறது.

* * *

''சரி, சொத்தாசை, பொருளாசை இல்லாதவர் என்றால் இவருக்கு ஒரு சிறிய இருக்கை போதாதோ? இவ்வளவு பெரிய பிரசாந்தி நிலயம் எதற்கு?'' என்று கேட்கலாம். பிரசாந்தி நிலயத்துக்குப் போகாதவர்கள்தான் படத்தில் மட்டும் அதைப் பார்த்து இப்படிக் கேட்பார்கள். அங்கே போனால் அதில் முக்காலே மூன்று வீச இடத்தை பஜனைக் கூடமே பிடித்துக் கொண்டிருக்கிறது என்றும், மாடியிலே உள்ள சின்னஞ் சிறு அறையில்தான் ஐயன் வசிக்கிறார் என்றும் தெரிந்து கொள்வார்கள். அங்கே மேஜை நாற்காலிகள்கூடக் கிடையாது. ஸ்வாமி எழுதுவதெல்லாம் தம் மடியிலேயே காகிதங்களை வைத்துக் கொண்டுதான். அவ்வறையில் உள்ள ஃபர்னிச்சர் ஒரே ஒரு ஸோஃபா-கம்-பெட் தான். பகலில் அதிலமர்ந்துதான் ஆட்சி நடத்துவதும், கட்டுரைகள் — கடிதங்கள் எழுதுவதும். இரவு அதுவே சயனம்—'இருந்தால் சிம்மாசனமாம், புல்கும் அணையாம்' என்பதாக நாரணனுக்கு ஆசனம் சயனம் இரண்டுமாக சேஷன் இருந்தாற்போல. மின்சார விசிறிக்கு அதிகமாக, ஏர்-கண்டிஷனர் முதலிய எந்த வசதியும் ஸ்வாமி அறையில் கிடையாது.

விமானங்களுடனும் கோபுரங்களுடனும் இன்று ஏன் பிரசாந்தி நிலயத்தைப் புதுக்கியிருக்கிறார் எனில், எண்ணற்ற அடியாருக்கு இந்த அசற் கோயில் தோற்றம் உண்டாக்கும் ஆனந்தத்துக்காகத் தான். நமது பண்டைய ஆலய அமைப்புக்கே பக்தி உணர்வை உண்டாக்கும் தனிச் சக்தி இருக்கத்தானே செய்கிறது? அச் சூழலிலேயே மனம் தன்னால் லயிப்பதால்தானே ஆ-லயம் என்ற பேரே உண்டாயிற்று? இவ்வாறு கோபுரம், விமானங்களின் வெறும் தரிசனமே எவரையும் சற்றுப் பாவனமாக்குகிறதெனில்

Koviloor Digital Library

உள்ளன்பர் விஷயத்திலோ கேட்கவே வேண்டாம். எதிர்ப்பாளருக்கு எது கரிக்கிறதோ அதுவே பக்தருள்ளத்துக்கு இனிக்கிறது. கடவுளாகவே அவரை வழிபடுபவருக்கு அந்த நம்பிக்கையை அழுத்தமாக ஊட்டுவது தம் கடமை என அவர் கருதுவதாலேயே, கடவுள் போல அசற் கோபுரக் கோயிலில் குடிகொண்டிருக்கிறார். கண்ணன் கூடத்தான் துவாரகாபுரி என்ற புது நகரை எழுப்பியபோது அதில் தமக்கென ஆலயம் போன்ற இருக்கையை அமைத்துக்கொண்டார்.

பிரசாந்தி நிலயம் கோயில் உருக் கொண்டதால் அங்கேயும் ஆகம சாஸ்திர விசேஷங்களும், புராணப் பெருமைகளும், சிற்பச் சிறப்புகளுமே குடிகொண்டுள்ளன. ஸ்வாமியின் ஏராளமான அந்நிய நாட்டு அடியார்களுக்கும், பாரதத்தில் பிறந்தே அந்நியர்களாக உள்ள அநேக பக்தருக்கும் இவற்றின் பெருமையும் பயனும் தெரிகின்றன. இந்த நிர்மாணத்தின்போது நம் தமிழகத்தைச் சேர்ந்த பல சிற்பிகளும், ஆலயக் கலை ஊழியர்களும் நலமுற்றனர்.

வெளிப் பார்வைக்கு பிரம்மாண்ட மாளிகையில் இருப்பினும் உள்ளே ஒரு சாமானிய மானுடனின் சௌகரியங்களோடுதான் ஏன், அசௌகரியங்களோடும்தான், ஸ்வாமி இருக்கிறார்.

பால், வெண்ணெய், தயிர், இனிப்பு ஏதுமற்ற ஆகாரம் தான் உண்பார் என்று முன்னரே பார்த்தோம். அதுவும் டிபன் காரியரில் போட்டு அக்காள் கொண்டு வருவதை, எத்தனையோ மணிகளுக்குப் பின் அது ஆறிக் குளிர்ந்த பிறகுதான் உண்கிறார். ஆகாரத்தைச் சூடாக வைத்திருக்கப் பெரிய ஃப்ளாஸ்க் கூட உபயோகிப்பதில்லை.

சாதாரண மனிதரைப் போல ஸோப்பு, சீப்பு, பற்பசை, தைலம், ஷேவிங் உபகரணம் முதலியவற்றை உபயோகிப்பவர் தாம் ஸ்வாமி எனினும், இவற்றில் தமக்கு இன்ன 'ப்ராண்ட்' தான் வேண்டும், சீமைச் சரக்குதான் வேண்டும் என்றெல்லாமில்லாமல் எதுவானாலும் சரி என்று திருப்தராக இருப்பவர். இவர் பவுடர் அல்லது ஸென்ட் போடுவதாகச் சிலர் நினைப்பதும் முழுத் தப்பு. இவர் அருகே செல்லும்போது காற்றில் கமழும் கமகமப்பைக் கொண்டு இப்படி எண்ணுகிறார்கள். ஆனால் இது அவரது இயல்பான சரீர மணமேயாகும். மன மலரின் அன்பு மணம்! "ஸுகந்தி" என்று வேதமும், "கந்தம் கமழ் காயா வண்ணன்" என்று தமிழ் வேதமும் சொன்னாற்போல் ஸ்வபாவமாகவே பரிமளம் வீசும் பரமர் இவர். இவர் ஸ்தூலமாக இல்லாத இடங்களிலும் சூக்ஷ்ம ரூபத்தில் தாழம்பூச் சாருகச் சரிசேர மணம் வீசுவதை பக்தர்கள் எவ்வளவோ அநுபவித்திருக்கிறோமே!

ஸ்வாமியிடம் டாய்பிக மோஸ்தர் உள்படப் பல கார்கள் இருப்பது பற்றி நிறையக் குறை கூறப்படுகிறது. பிரசாந்தி நிலயத்துக்கு வந்த அயல்நாட்டுப் பணக்கார பக்தர் பலர்

Koviloor Digital Library

இங்கேயே கார்களை அன்பளிப்பாக விட்டு விட்டுச் சென்றிருக்கிறார்கள். புது மாதிரி கார் செய்யும்போது முதல் தயாரிப்பைப் புட்டபர்த்திக்கு 'புக்' பண்ணிவிடும் அமெரிக்க பக்தர் கூட உண்டு. ஆனால் இப்படிக் கார்கள் வருகிற வேகத்திலேயே ஸ்வாமி அவற்றை அன்பளிப்பாக வழங்கியும் விடுவார். இது உலகுக்குத் தெரியவில்லை. ஒன்று போய் இன்னொன்று என்பதாக இவரிடம் கார்கள் மாறிக் கொண்டே யிருப்பதை அறியாமல், ஒவ்வொரு முறை ஒவ்வொரு காரில் இவர் வருவதை மட்டும் கவனித்து ஒரே சமயத்தில் பல கார்கள் வைத்திருப்பதாக எண்ணுகிறார்கள். உண்மையைத் தெரிந்துகொள்ள முயலாமலே சிலர் வசையும் பாடத் தொடங்கி விடுகின்றனர். ஏதாவது அபவாதத்தை வாங்கிக் கட்டிக் கொள்வதிலேயே இவருக்கும் ஒரு குஷி போல் காண்கிறது. தாம் எதற்கும் சலனமுறாத நித்யஸாக்ஷி என்று பக்தருக்கு வேறெப்படி உணர்த்துவது?

* * *

கார்களால் புகார்களுக்கு ஆளாகியுள்ள நம் காவிய நாயகர் கால் தோய நடந்து புக்கபட்டணம் ஹையர் எலிமென்டரிப் பள்ளிக்குப் போன காலத்துக்குத் திரும்புவோம். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் இவர் இதற்குச் சற்றே மாறாக, குழந்தைக் குறும்பாக, ஆசிரியரிடம் செய்த ஓர் ஆச்சரிய விஷமத்தைப் பார்ப்போம்!

Koviloor Digital Library

அத்தியாயம்—9

அருளில் அரும்பிய குறும்பு

கருத்(து)இன்னா செய்தவக் கண்ணும்
மறுத்(து)இன்னா
செய்யாமை மா(சு)அற்றார் கோள்.

— குறள்

(பகை கொண்டு ஒருவன் தீயன செய்தபோதிலும், பிரதியாகத் தீமை இழைக்காதிருப்பதே புனிதர்களின் தர்மம்.)

★

எட்டாம் வயதில் ஸத்யா ஹையர் எலிமெண்டரிப் பள்ளியை எட்டினான். பர்த்திக் கிராமத்தில் அவ்வளவு 'பெரிய' படிப்புக் கிடையாது. எனவே சித்ராவதிக்கு மறு கரையில் உள்ள புக்கபட்டணம் சென்று படிக்க வேண்டியதாயிற்று. இன்றைக்கும் பூம்போதுகள் போலுள்ள அப்பாதங்கள் கொண்டு பிஞ்சிளம் பருவத்தில் போக இரண்டரை மைல், வர இரண்டரை மைலாகத் தினமும் ஸத்யா ஐந்து மைல்கள் நடக்க வேண்டியதாயிற்று.

இதோடு சமையல் வேலை, பஜனை போதனை எல்லாம் வேறு. ஐயா உழைப்புக்கும் வற்றா உற்சாகத்துக்கும் ஊற்றாயிருந்தான்.

தாய் மனசு கேட்குமா? தனிச் சமையலை விடுமாறு ஈச்வராம்பா இவனிடம் மன்றாடிக் கேட்டாள். வெற்றியும் பெற்றாள். அசைவ வாடையே சேராமல் எவ்வளவு செய்ய முடியுமோ அப்படிச் செய்து இவனுக்கும் கொண்டம ராஜுவுக்கும் ஆக்கிப் போட்டாள்.

காலையில் அரிசி நொய் சேர்த்த கேழ்வரகுக் களியைக் களிப்புடன் விழுங்கிவிட்டு, கையில் பழைய சோற்றுக் கட்டுடன் பள்ளிக்குப் புறப்படுவான்.

Koviloor Digital Library

பிற்காலத்தில் இதை அவர் ரஸித்து வர்ணிப்பது கேட்ட அன்பர்களும் அவருக்கு அரிசி-கேழ்வரகுக் களி நிவேதிக்கலாயினர். ஆதி ஆதிரையானுக்கு வெல்லக் களி போல், ''ஸங்குடு'' எனப் படும் இந்த உப்பங்களியே நூதன ஆதிரையானுக்குப் பிரீதியான நைவேத்தியம் என்றுகூடச் சொல்வதுண்டு.

சிறிது வெயிலடித்தாலும் கொதிக்கும் சித்ராவதியின் நுண் மணல்; சற்று மழை பெய்தாலும் உளையாகிவிடும் குட்டை ஓரங்கள்; பலமாகப் பெய்தாலோ பெரியோருக்கும் முழங்கால் அளவு (ஸத்யாவுக்கு இடுப்பளவு) சேற்று நீர் ஏறிவிடும் வயல்கள் ஆகியவற்றைக் கடந்து புக்கபட்டணம் சென்றான்.

இப்போது ஸகாக்கள் சற்று விவரம் தெரிந்தோராதலால், பக்திப் பணியை ஒரு படி உயர்த்தினான். பள்ளியிலேயே ஓரிடத்தில் தெய்வப் படங்களை மாட்டினான். பள்ளி மணி அடிக்கு முன் இவன் பூஜை மணி அடித்து, வெள்ளி மணிக் குரலில் அர்ச்சனை நாமாவளியும் பாட்டுக்களும் சொல்லி வழிபாடு நடத்துவான். இவனாகவே இப்போது பஜனைப் பாடல்களோடு, அஷ்டோத்தர சத நாமாவளிகளும் கவனம் செய்யலானான். மற்ற பிள்ளைகளுக்கும் அவற்றைக் கற்பித்து, உடன் கோஷிக்க வைத்தான். பாடம் தொடங்கு முன் பாவன நாமங்கள் பால கண்டங்களிலிருந்து எழும்பிப் பொங்கிப் பள்ளியை நிறைவிக்கும். கர்ப்பூர ஆர்த்திக் காட்டி, அக்ஷயப் பையிலிருந்து பிரஸாதங்கள் எடுத்து விநியோகிப்பான் விநோதன்.

பூஜையின் போதும் அவனிடம் ராஜ குமார கம்பீர ஆனந்தமே அலைமோதும். குட்டி ஸகாக்களைப் போலவே தெய்வங்களையும் ஸகாவாக எண்ணும் ஸ்வாதீனம் உள்ளூற இருந்தாலும், மற்றப் பிள்ளைகளுக்கு பயபக்தியில் வழிகாட்டுவதற்காகவே இவனும் வழிபட்டுத் தொழுதான். பிற்காலத்தில் தம்மையே ஈச்வரனாக வெளியிட்டுக் கொண்டதற்கப்புறமும், சுமார் பத்தாண்டுகள், அதாவது புதுப் பிரசாந்தி நிலயம் புகும் வரை இவரே தெய்வ உருவங்களுக்கு ஆர்த்தி கொடுத்துப் பிரஸாதம் வழங்கியதுண்டு. அதன் பிறகு—அதாவது சுமார் இருபத்தைந்தாம் பிராயத்திலிருந்து—தாம் பூஜிக்கப்பட வேண்டியவன் மட்டுமே யன்றி, பூஜிப்பவன் என்பதாக பாவனைக்குக் கூடக் காட்டியதில்லை!

பக்திசாலியாகவும் தன்னைக் காட்டிக் கொண்ட பால ஸத்யா புத்திசாலியாக இருந்ததோடு சிலசாலியாகவும் இருந்தான். அவன் எத்தனை ஒழுக்கத்தோடு நடந்து கொண்டான், ஆசிரியரிடம் எத்தனை ஒடுக்கத்தோடு இருந்தான், பேச்சிலே எவ்வளவு மிதமாக இருந்தான், மற்ற மாணாக்கரை எப்படியெல்லாம் பக்தி நெறியூட்டிப் பண்புறச் செய்தான் என்பனவற்றை இவனுக்குப் போதிக்கும் பேற்றினைப் பெற்ற சுப்பண்ணாச்சார், கொண்டப்பா ஆகியோர் பிற்காலத்தில் பெருமையோடு நினைவுகூர்ந்து எழுதியிருக்கிறார்கள். 'எழுத்தறிவிப்பவன் இறைவன்' என்பதற்கு

Koviloor Digital Library

மாருகத் தம்மால் எழுத்தறிவிக்கப்பட்டவன் இறைவன் என்று பிற்காலத்தில் கண்டுகொண்ட ஆசிரியர்கள்!

பிற்காலத்திலன்றி அக்காலத்திலேயே ஸத்யாவின் தெய்விகத்தை உணரும் பெரும் பாக்கியம் முஸ்லிமான ஆசிரியர் ஜனுப் மஹபூப் கானுக்கே இருந்தது! ஷிர்டி பாபாவைக் குழந்தைப் பிராயத்தில் எடுத்து வளர்த்த ஃபக்கிரின் அம்சமோ இவர் என என்னுவோரும் உண்டு. ஏனெனில் நம் காவிய நாதரே நமக்கும் ஷிர்டி பாபாவுக்குமுள்ள ஒற்றுமைகளைக் கூறுகையில், "இரு ஜன்மங்களிலும் இரு துருக்கர்களால் பாலப் பருவத்தில் வளர்க்கப்பட்டேன்" எனக் கூறியிருக்கிருர்.

என்ன பூர்வ புண்ணியமோ, மஹபூப் கான் பால ஸத்யாவிடம் அந்தராத்ம அன்பு பூண்டிருந்தார். பனி மலரான அவனைக் கண் பனிக்கப் பார்த்தபடியே இருப்பார். புரளும் அவனது வெல்வட்டுக் குழலைக் கையால் கோதியபடி, "ஸத்யா, அற்புத ஸத்யா! நீ எப்படியெல்லாம் வரப் போகிருய், என்னவெல்லாம் செய்யப் போகிருய்!" என்று நெஞ்சினித்துக் கூறுவார்.

பிரம்மசாரியாகவே வாழ்ந்த இவரைப் பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் ஸ்வாமி 'பவித்ராத்மா' எனத் தம் பவித்ர வாயால் புகல்வார், புகழ்வார்.

ஸத்யாவுக்கு உணவிட வேண்டுமென்று மஹபூப் கானுக்கு அபார ஆசை. ஆயினும் "பிராம்மண பாலுடு"வுக்குப் புலால் உண்ணும் முஸ்லிம் குடும்பத்தினரான தாம் அன்னம் தரத் துணிய மாட்டார். தைல பாகமான பட்சணங்கள் மட்டுமே கொண்டு வந்து தருவார். "ஸத்யா! பாத்திரங்களையும் அடுப்பையும் மட்டுமன்றி, அம்மி, கல்லுரல், சமையல் உள், ஏன்—வீடு முழுதுமே நன்ருகக் கழுவிச் சுத்தம் செய்து, சமைப்பவரும் ஸ்நானம் செய்து, அதன் பின்பே உனக்கெனச் செய்தது இது. உன் வயிற்றுக்குள் இது போன பின்தான் இன்று என் பல்லில் பச்சைத் தண்ணீர் படும்" என்று இறைஞ்சுவார். பிரேமைக்கு உருகும் பால ஸ்வாமி தின்பண்டத்தில் துளித் துளி எடுத்துக் கொறிப்பான்.

அன்றும் சரி, இன்றும் சரி, வயிறுதாரி அல்லர் நம் சரிதை நாயகர். மிகவும் மிதமாகவே உண்பார். மித உணவே தேகம், மனம் இரண்டுக்கும் இதம் என்று மற்றேருக்கும் உபதேசிப்பார். "இப்போது சாதாரணமாக ஒருவர் உண்பதைவிட மிகவும் குறைந்து உண்டாலே போதுமானது. போதுமானது மட்டும் அல்ல; இதுவே சரீரம், புத்தி இரண்டுக்கும் ஊட்டம் அளித்து அவற்றை ஆத்மிக வளர்ச்சிக்கு அநுகூலமாக்குவது. உணவுப் பஞ்சம் என்று கூப்பாடு போடாமல் இப்போதுள்ள தானிய வசதியிலேயே மித உணவுப் பழக்கத்தின் மூலம் அனைவரும் வயிருரலாம்" என்று மிகவும் தட்டுப்பாடு இருந்த சமயங்களில் கூறியிருக்கிருர்.

Koviloor Digital Library

''நான் மிகக் குறைவாக உண்டும் அலுப்புச் சலிப்பின்றி ஓடியாடுவதைப் பார்த்து நீங்கள், 'அவர் என்ன? ஸ்வாமி! அதனால் அல்ப ஆகாரத்திலேயே இவ்வளவு வேலை செய்ய முடிகிறது. நம்மால் அப்படி முடியுமா?' என்று எண்ணுகிறீர்கள். இந்த எண்ணம் தப்பானது. பாஞ்ச பௌதிகமான இந்த ஸாயி சரீரத்தின் விஷயத்தில் நான் அதிமானுட ஸ்வாமித்வ சக்தி எதையும் பிரயோகிப்பதே இல்லை. எனவே, எந்த மனிதருக்கும் என்னளவு மித உணவே போதும். உணவை நீங்கள் சாப்பிட வேண்டுமேயன்றி உணவு உங்களைச் சாப்பிட விடாதீர்கள்'' என்றும் கூறியிருக்கிறார்.

★

ஒரு நாள் மஹபூப் கானை அதிர்ச்சிக்கு ஆளாக்கிய ஒரு நிகழ்ச்சி நடந்தது.

ஆங்கிலப் பாடம் எடுப்பதற்காக ஸத்யாவின் அறைக்கு வந்த கான், அவன் பெஞ்சு மேல் நிற்பதைக் கண்டார். அதிர்ச்சியடையாமல் இருக்க முடியுமா?

தவறே செய்ய முடியாத ஸத்யாவை பெஞ்சு மேல் ஏற்றும் கொடுமையை முந்தையப் பாட ஆசிரியர் எப்படிச் செய்தார் என்று பதைத்து ஆச்சரியமுற்றார்.

இதைவிட ஆச்சரியம், அந்த ஆசிரியர் இன்னமும் கானுக்காக நாற்காலியை ஒழித்துக் கொடுத்து விட்டுப் போகாமல் அங்கேயே உட்கார்ந்திருந்ததுதான். உட்கார்ந்திருப்பது மட்டுமா? பேந்தப் பேந்த விழித்தார் வேறே! இஞ்சி தின்றக் குரங்குதான். இனிப்பு ஸத்யாவா இவருக்கு இஞ்சி கொடுத்துவிட்டான்?

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த கான் கடைசியில் அந்த ஆசிரியரிடம், ''ஏனய்யா, எழுந்திருக்காமலே இருக்கிறீர்?'' என்றார்.

அவர் ஜாடை காட்டி மஹபூப் கானை வெகு அருகே வரச் செய்து, ''நானா எழுந்திருக்க மாட்டேன் என்கிறேன்? நான் எழ முடியாதபடி இந்த நாற்காலியோடு என்னைக் கோந்து போட்டு ஒட்டினமாதிரி யல்லவா இருக்கிறது? நான் எழப் பார்த்தால் நாற்காலியும் ஒட்டிக் கொண்டு கிளம்புகிறதே! பசங்கள் சிரிக்கப் போகிறார்களே என்றுதான் உட்கார்ந்து கொண்டே இருக்கிறேன்'' என அழமாட்டாக் குறையாக எழமாட்டாக் குறையைக் கூறினார்.

ஒட்டு மாயத்தோடு ஸத்யா பெஞ்சு மேல் நிற்பதை ஒட்டிப் பார்த்தது பக்குவியான கானின் மனம். அந்த கோவிந்தனிடம் மனம் ஒட்டாமல் இந்தப் பேர்வழி ஏதோ செய்த வினைதான் கோந்தாக நாற்காலி ஒட்டிக் கொண்டது என ஊகித்தார்.

Koviloor Digital Library

''அது சரி, ஸத்யாவை பெஞ்சு மேல் ஏற்றியிருக்கிறீரே, அது எதற்காக?'' என்று கேட்டார்.

''அதுவா?'' என்று மென்று விழுங்கித் தொடர்ந்தார் அவதிப்பட்ட ஆசிரியர். ''இந்தப் பையன் ஸத்யம்மா பிரஸாதம் என்று மற்ற பசங்களுக்கு ஏதேதோ விநியோகம் செய்வதாக இப்போது மெதுவாக ஒரு பேச்சு வந்திருக்கிறதல்லவா? சில பசங்கள் வீட்டுக்குப் புதுப் பலப்பம், பென்ஸில், நோட் இப்படிக் கொண்டு வருவதைப் பார்த்து இவை எப்படிக் கிடைத்தன என்று பெற்ரோர் கேட்டிருக்கிறார்கள். ஸத்யாதான் கொடுக்கிறான் என்றும், நீண்ட காலமாகவே அவன் இப்படி இனிப்புக்கள் கூடக் கொடுத்து வருகிறான் என்றும், இதெல்லாம் ஸத்யம்மா அருள்பவை என்று அவன் சொல்வதாகவும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நீங்களே இப்படிக் கேள்விப்பட்டிருப்பீர்களே! எனக்கென்னவோ இது வெறும் புரளியாகத்தான் தோன்றியது. ஒன்று அந்தப் பிள்ளைகளே திருடிக் காசு சேர்த்து இப்படியெல்லாம் வாங்கியிருக்க வேண்டும். அல்லது இவனே திருட்டுப் புரட்டுப் பண்ணிக் கொண்டிருக்க வேண்டும். ஸத்யம்மா என்று கதை கட்டி விட்டு, அது வெளியே தெரியக்கூடாது என்று சொல்லி, மற்றப் பிள்ளைகளிடம் தனக்குப் பேர் தேடிக் கொள்கிறான் என்றுதான் எனக்கு எண்ணம். எப்படியாவது இவனைத் தண்டிக்க வேண்டும் என்று சந்தர்ப்பம் பார்த்து வந்தேன். இவனானால் படிப்பிலும் சரி, நடத்தையிலும் சரி தினையளவு குற்றமும் காண இடம் தருவதில்லையே! கடைசியில் எனக்கு வாய்ப்பாகப் போன பீரியடில் என்ன ஆயிற்று தெரியுமா? நான் ஒரு பாடம் டிக்டேட் செய்தேன். இவன் அதை எழுதாமல் வேறேதோ கிடுகிடு என எழுதிக் கொண்டிருப்பதாகப்பட்டது.

'' 'என்ன எழுதுகிறாய்?' என்று கேட்டேன்.

''இவன் பொய் சொல்லவில்லை. 'மற்ற பிள்ளைகளுக்குத் தருவதற்காக அஷ்டோத்தரம் காப்பி பண்ணுகிறேன்'' என்றான்.

'' 'நான் தருகிற டிக்டேஷனை எழுதாமல் ஏன் இப்படிச் செய்கிறாய்?' என்று மிரட்டினேன். சந்தர்ப்பம் கிடைத்த சந்தோஷம் எனக்கு.

''அதற்கு அவன், 'இந்தப் பாடம் எனக்கு ஏற்கெனவே மனப்பாடம். நீங்கள் வேண்டுமானால் கேள்வி கேளுங்கள். தப்பாகப் பதில் சொன்னால் தண்டியுங்கள்' என்று பணிந்தே பதில் சொன்னான்.''

''ஜாறுப்! என் பழி வாங்குகிற புத்தியில் இந்த நியாயம் ஏறவில்லை. 'ஏறு பெஞ்சு மேலே!' என்றேன். இப்போது நான் படுகிற அவஸ்தையைப் பார்த்தால்...''

கானுக்குச் சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்தது. 'ஸத்யா! உனக்கு விஷமம்கூடச் செய்யத் தெரியுமா?' என்று உள்ளூற

Koviloor Digital Library

ஸ்பாஷ் போட்டார். அவனது சில்விஷமமும் இவருக்கு ஜில்லென்றே யிருந்தது.

"சரி ஓய்! போனதெல்லாம் போகட்டும். இப்போதாவது இவனைப் பெஞ்சு மேலிருந்து இறங்கச் சொல்லிவிட்டு நீர் எழுந்திருந்து பாருமேன்! புட்டபர்த்திச் சரக்கு புரட்டா, தெய்விகமா என்று புரிந்து விடுகிறது" என்றார்.

உபாதைப் பட்ட உபாத்தியும் ஈன ஸ்வரத்தில் "இறங்கு அப்பா" என்றார் ஸத்யாவை அரைகுறையாகப் பார்த்து.

இறங்கினான்.

இரங்கினானும் கூடத்தான்!

தத்க்ஷணம் நாற்காலியும் ஆசிரியரை விட்டுவிட்டது. அவர் எழுந்தே விட்டார்.

இறைவன் அவதரணம் செய்தால் நமக்கு ஆரோஹணம் தானே? நாலுகாலிகளாக நம்மைப் பற்றி ஒற்றிக் கொண்டுள்ள மனம்—சித்தம்—புத்தி—அஹங்காரம் என்ற நாற்காலி தெறித்து விலகும்தானே?

'இனி வம்புக்கு வருவதில்லை. உன் திக்குக்கு ஒரு நமஸ்காரம்' என்று முனகி விட்டு அந்த ஆசிரியர் வெளியேறினார்.

"குரு" பெஞ்சு மேல் நிற்பதில் குவிந்த அத்தனை பசங்களின் மனமும் இப்போது பொய்க் குருவின்மேல் இந்த மெய்க் குரு செய்த குறும்பிலே மலர்ந்து மகிழ்ந்தன.

★

இதைப் படிப்பதால், தம்மை மதிக்காதோருக்கு நம் கதாநாயகர் அமாநுஷ்ய சக்தியால் தீம்பு செய்வார் என்று எவரேனும் எண்ணினால் அது உண்மைக்கு நேரெதிர் துருவமாகும்.

அவரைப் பழித்து நிந்தை பரப்புவதையே தொழிலாகக் கொண்ட பலர் பல்லாண்டுகளாகச் செழித்துக் கொழித்துத்தான் வருகின்றனர். "எங்களை இவரால் என்ன செய்ய முடிந்தது? இவருடைய 'தெய்விக சக்தி'யின் வண்டவாளத்தைப் பார்த்தீர்களா?" என்று கூடக் கொக்கரிக்கிறார்கள். தெய்விகச் சக்திக்குப் பழி வாங்கவே தெரியாது. அது அன்பும் மன்னிப்புமே உருவானது என்றறியாததால் இப்படிச் சொல்கிறார்கள். இவர்களை பற்றி நம் ஸ்வாமியும் பக்தரிடம், "அவர்களுடைய காரியத்தால் நீங்கள் துக்கப்படக் கூடாது; கோபமும் கொள்ளக் கூடாது. எவர், எது சொன்னாலும் நான் என் இறை மகிமையில்தான் நிலைத்திருக்கிறேன். எத்தனை எதிர்ப்பு வந்தாலும், நான் செய்ய வேண்டிய பணியைச் செய்தே முடிப்பேன். என் பெருமையை

Koviloor Digital Library

எவரும் குறைக்க வொண்ணாது. எனவே நீங்கள் துக்கிப்பதில் பொருள் இல்லை. 'ஸ்வாமியிடம் நமக்குக் கிடைக்கும் திவ்யானந்தம் இவர்களுக்குக் கிட்டவில்லையே?' என்ற நல்லெண்ணத்தில் உங்களுக்கு அவர்களைக் குறித்தே துக்கம் ஏற்பட்டாலும் அதுவும் கூட முற்றிலும் சரியானதல்ல. ஏனெனில் அவர்களது பூர்வ வினை காரணமாகவே அவர்கள் என்னிடம் அன்பு கொண்டு இந்த ஆனந்தத்தை அநுபவிக்க முடியாமலிருக்கிறது. இதனால் நீங்கள் அவர்களைக் கோபிக்கவும் கூடாது. என்னிடம் பக்தி கொள்ள முடியாதபடி வினை அவர்களைத் தடுக்கும்போது அவர்களைக் கோபித்துப் பயன் என்ன? அன்போடு நினைக்காவிடினும் வெறுப்புடனாவது என்னைத்தானே நினைக்கிறார்கள்? நான் பக்தியுடன் நினைப்போருக்கு ஜீவனோபாயம் தருவது போலவே, துவேஷத்தோடு நினைப்போருக்கும் தருகிறேன். என்னைத் துவேஷிப்பவர்கள் எதிர்ப் பிரசாரத்திலேயே பொருளும், ஒருவிதமான புகழும் அடைகிறார்கள். அவர்கள் குடும்பம் நடக்கவும் நான் பயன்படுவதில் எனக்கு ரொம்ப ஸந்தோஷம்தான். என் சலியாத் தன்மையில் உங்களுக்கு நம்பிக்கை வருவதற்கும், என்னிடம் உங்களுக்கே சலியாத நம்பிக்கை உள்ளதா என நீங்கள் உரைத்துப் பார்த்துக் கொள்வதற்கும் எதிர்ப் பிரசாரம்தானே உதவுகிறது? இவ்விதத்திலும் எனக்கு இது மகிழ்வே ஊட்டுகிறது'' என்கிறார்.

தம்மைப் பழிப்போரை இவர் பழி வாங்குவதில்லை என்பது மட்டுமில்லை; எதிர்ப்பாளரைத் திருப்பிப் பழிக்கும் தம் பக்தர்களையே தண்டிக்கிறார்; கண்டிக்கிறார். ஓர் உதாரணம்:

சில ஆண்டுகளுக்கு முன் பம்பாய் மாதுங்காவில் உபந்நியாசம் நிகழ்த்திய ஒரு பண்டிதர் நம் சரிதை நாயகர் செப்படி வித்தையையே சமயமாக்கி மக்களை ஏமாற்றி வருவதாக மறைமுகத் தாக்குதல் செய்தார். 'மறைமுகம்' என்றாலும் அவரது கேலி வர்ணனையிலிருந்து புட்டபர்த்தி பாபாவைத்தான் குறிப்பிடுகிறார் என அவையோருக்குப் புரிந்துவிட்டது. அவர்களில் ஸாயி பக்தர்களுக்கோ ஒரே ஆத்திரம். ஒருவர் எழுந்திருந்து பிரவசனகர்த்தரிடம் காரசாரமாக சவாலே விட ஆரம்பித்தார். இவர் ஒன்று சொல்ல, உபந்யாஸகர் ஒன்று சொல்ல, கூட்டத்தினர் இரு தரப்பாகப் பிரிந்து தலைக்குத் தலை பேச, பிரசங்கம் ஒரே குழப்பத்தில் முடிக்கப்பட்டது.

வேதனையுடன் வீடு திரும்பினார் அவ்வடியார். அவரது வீட்டில் ஐயன் புரிந்து வந்த லீலை கொஞ்ச நஞ்சமல்ல. அங்குள்ள தெய்வப் படங்களிலிருந்து விபூதி கொட்டும், குங்குமம் கொப்பளிக்கும், மதுரத் தேன் மல்கும். கூட்டங் கூட்டமாக பக்தர் வந்து இவற்றைக் கண்டு செல்வர். பன்னாட்களாக நடந்து வந்த இந்த லீலைகள் அன்றிலிருந்து சடேரென நின்று விட்டன. அதோடு போச்சா? முன்னம் படங்களில் தோன்றி முட்டு முட்டாகப் பதிந்திருந்த விபூதி குங்குமமும் கூட ஏதோ ஒரு மாயக் கை அழுந்தத் துடைத்தாற்போல் அடையாளம் தெரியாமல் மறைந்து விட்டது. தேன் சொட்டுகள் சுவடு தெரியாமல் சுவறிவிட்டன. மறுநாளிலிருந்து அங்கு வந்த அடியாருக்கே

Koviloor Digital Library

பெரும் ஏமாற்றமெனில், வீட்டுக்குரியவரின் ஏக்கத்தை, துக்கத்தைச் சொல்லவும் வேண்டுமா? ஏன் ஐயன் கோபமுற்றுச் சோதிப்பதே போல் திருவிளையாடலை நிறுத்தி விட்டார் எனப் புரியாமல் தவித்தார்.

சில தினங்களுக்குப் பிறகுதான் அவருக்குப் பளிச்சிட்டது. "அப்பனே! அப்படியா சமாசாரம்? நான் உபந்யாஸகர்மீது எதிர்த் தாக்குதல் செய்தது நின் திருவுளச் சம்மதம் பெறுதநா? உன்னிடம் எவர் பக்தி பூண வேண்டும் என்பதும் உன் காரியமே தவிர, அது எங்கள் பிரசாரத்தையும் வாதத்தையும் கொண்டு நடப்பதல்ல என்று ஆணியறைந்தாற்போலக் காட்டவே இப்படிச் சோதனை செய்தனையா? 'எதிர் தூஷணை செய்வது என் அடியார் பண்பல்ல. உன் மட்டில் பக்தி சுரக்கிறதா, சரி, அதைத் தூய்மையாகக் காத்துச் செலுத்து. மற்றோரை மாற்ற யத்தனிக்காதே! அதிலும் கோபதாபத்துடன் இதைச் செய்ய ஒருகாலும் முனையாதே! ஸாயியிடம் மட்டுமின்றி ஸாயியை விரோதிப்பவர் உள்பட ஸகலரிடமும் கலப்படமற்ற அன்பு காட்டுவதே என்னை வழிபடுவதாகும்' என்று அறிவிக்கிறாயா?"—இப்படி ஸ்வாமியிடம் மானஸிகமாகக் கேட்டார்.

"ஸ்வாமி! பக்தியிலும் கூட ஒருவித சுயபாசம் புகுந்ததால் தான் உனக்கு உகவாத செயலைப் புரிந்துவிட்டேன். என் அறிவீனத்துக்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்" என்று பிரார்த்தனை செய்தார் பம்பாய் பக்தர்.

எதிராளிகளுக்குக் கொதிப்பு உண்டாக்கியதற்குப் பிராயச் சித்தம் அடியாரைக் குளிர்விப்பதுதான் எனக் கருதித் தம் வீட்டில் பக்தரைக் கூட்டி பஜனை செய்தார்.

அடடா, என்ன அற்புதம்! என்ன அருள்! உடனேயே அங்கு நறுமணம் கம்மென்று பரவியது. படங்களிலெல்லாம் அப்போதே குப்பல் குப்பலாக விபூதி மீண்டும் அப்பிக் கொண்டது. குங்குமக் கொழிப்பு பொங்கி வந்தது. பைந்தேனும் பில்கிப் பாய்ந்தது.

எங்கெங்கும் நடப்பதை எக்காலும் கவனித்து வரும் நம் ஸ்வாமி பாவ மன்னிப்பு அருளிவிட்டார்.

அந்தப் பாபம் என்னவெனில் இவரை அவமதித்தவரைத் திரும்ப அவமதித்ததுதான்!

பழி வாங்கும் எண்ணத்துக்கும் நம் கதாநாயகருக்கும் எட்டாத் தொலை தூரம் என்றுரை இந்த உதாரணம் போதாதா?

வினைப்படி அல்லது தமது தெய்விகத் திட்டத்தின்படி தம்மிடம் பக்தி கொள்ள வேண்டிய சிலர் விலகி நிற்கும்போதே அவர்களைச் சுண்டியிழுத்துக் கொள்வதற்குச் சுண்டாயமாகத்

Koviloor Digital Library

தண்டிப்பார். (கள்ளக் குறும்புக்கு ஆழ்வார் இட்ட பெயர் 'சுண்டாயம்'. இந்த திவ்யப் பிரபந்த பதத்தை நம் திவ்ய நாயகருக்குப் பூணுவிப்பதில் ஓர் ஆனந்தம் உள்ளதல்லவா?) இம் பாதிரிச் சுண்டாயங்களுக்கு ஆளானவரே பிற்பாடு அதை வெகுவாக ரஸித்து மற்றோருக்குக் கூறி மகிழ்வர். இதிலிருந்தே அது பழி வாங்கும் வெம்மைக்கு அடியோடு மாறுபட்ட அருளின் குறும்பு எனத் தெரிகிறதல்லவா? இவ்வகையைச் சேர்ந்தது தான் புக்கபட்டணம் ஆசிரியரை நாற்காலியில் ஒட்ட வைத்துச் செய்த கூத்து! நம் ஸ்வாமி தம்மையே ஒட்டக்கூத்தராகச் செய்து கொண்டிருக்கிறார்.

இனி இந்த அம்பலக் கூத்தன் அரங்கேறிக் கூத்தாடிய விளைக்குப் போகலாமா?

Koviloor Digital Library

அத்தியாயம்—10

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே?

நடைமுறை உலகுக்குள் சிறைப்பட்டிருக்கும் ஸத்ய தத்வத்தை வெளிப்படுத்துவதே கலை. உண்மையான கலைப் படைப்புக்களில் காலத்தை ஊடுருவிக்கொண்டு நித்யத்வம் வெளிப்படும்; சூக்ஷ்மமான தெய்விகம் நமது அநுபவத்துக்கும் கிட்டிவிடும்.

— கார்லைல்

பார்த்தியை ஒட்டியுள்ள கொத்தசெறுவு, புக்கபட்டணம் இரண்டிலும் ஒரு புதிய அதிசயம் வந்தது. 'பயாஸ்கோப்' என்று சொல்லிக்கொண்டு கூட்டங் கூட்டமாகத் திரண்ட திரைப்படம் தான் அந்த அதிசயம்!

நாடகக் கலைஞரான பெத்த வெங்கப்ப ராஜு, புது யுகத்தின் புது முறை நாடகமான ஸினிமா பார்க்கக் குடும்ப சகிதம் கிளம்பினார். இக் குடும்பத்தில் ஒருவனாகக் குறுகிக் கொள்ளாத ஸத்யன் மட்டும் கிளம்பவில்லை.

''ஸினிமாவினால் விபரீதம்தான் வரப் போகிறது. நாடகக் கலை என்பதாக நாம் பாரம்பரியமாகக் கட்டுத் திட்டப்படுத்தி வைத்திருப்பதுபோல் அல்ல இது. இந்த ஸினிமாவால் ரொம்ப ஒழுக்கக் கேடு உண்டாகப் போகிறது. புனிதமான புராணங்கள் கேலிக் கூத்தாகப் போகின்றன. சமூகப் படம் என்று சொல்லிக் கொண்டு மனிதனின் கெட்ட அம்சங்களையே பெரிதுபடுத்திக் காட்டப் போகிறார்கள். இது மட்டுமல்ல. நம் உன்னதமான ஸங்கீதம், நாட்டியம் ஆகியவற்றையும் தரம் குறைத்து ஆபத்துக்கு ஆளாக்கப் போகிறார்கள். ஸினிமாவுக்கு நீங்கள் போவதே எனக்குச் சம்மதமில்லை. நான் ஒரு நாளும் வரமாட்டேன்'' என்றான் சின்ன ஸத்யா.

Koviloor Digital Library

சிறுருக்குள்ள ஆர்வத் துடிப்பு அறவே யில்லாத அபூர்வத் துறவி!

ஸத்ய ஸாயி பாபா என்றுலே ஸினிமா ஸ்டார்கள், படாதிபதிகள், தியேட்டர் சொந்தக்காரர்கள், பின்னணிப் பாடகர்கள் ஆகியோரின் 'ஸ்பெஷல் தெய்வம்' என்று நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு இது ஆச்சரியமாகத்தான் இருக்கும். அவ்வளவு திரைப்படத் துறையினர் இவரது பக்தர் குழாமில் இருக்கத்தான் செய்கிறார்கள். எனவே இதைச் சற்று விண்டு, விளங்கிக் கொள்வோம்.

★

தற்போது திரைப்பட உலகினரில் பலர் செய்வது கலைக் கொலையாகவே இருந்தாலும், நம் நரம்புக் கிளுகிளுப்புக்கு இதுவும் வேண்டியிருப்பதால், 'கலைஞர்கள்' என்ற பெரிய வார்த்தையைச் சொல்லி இவர்களை உச்சநிலையில் வைத்திருக்கிறோம். அதே போதில் 'மனிதர்கள்' என்ற ரீதியில் இவர்களுக்கு நாம் தரும் இடம் என்ன? நெஞ்சில் கை வைத்துச் சொல்வோம். இவர்களைக் குறை நிறைந்த நமக்குச் சமதையாகவாவது நினைக்கிறோமா? நினைக்காததால்தான் இவர்கள் ஒரு மஹாத்மாவை அதிகம் நாடுகிறார்கள் எனும்போது அந்த மஹானையே 'ஒரு மாதிரி'யாகப் பார்க்கிறோம்.

இதிலே நமக்கு நேரெதிராக இருப்பவர் இச் சரித நாதர். அவர் எல்லோரையும் முதலிடத்தே 'மனிதர்கள்' என்றே வைத்துப் பார்க்கிறார். ஜன்ம ஜன்மங்களாக ஊறிய விஷய வாஸனைகளில் மீள மீள வலித்திழுக்கப்படும் மனிதர்கள், சந்தர்ப்பச் சூழ்நிலைகளால் நிர்ப்பந்தமாகக் கவரப்படும் மனிதர்கள், எப்படியாயினும் மனிதர்கள்; எனவே அன்புக்கும் அநுதாபத்துக்குமே உரியவர்கள் என்ற கண்ணோட்டத்தோடேயே அனைவரையும் பார்த்து, ஒதுக்காமல் சேர்த்துக் கொள்கிறார். ஒதுக்கவில்லை என்பதால் அவர்கள் செய்வதை யெல்லாம் அவர் ஒப்புகிறார் என்று அர்த்தமில்லை; இல்லவே இல்லை.

சரி, சேர்த்துக் கொண்டவர்களை யெல்லாம் அவர் மஹாத்மாக்களாக்கி விடக் காணுமே என்றால் அதுவும் உண்மைதான். சிற்சிலரை சிற்சில அளவுக்கு உயர்த்துகிறார். அவ்வளவே. ஆனால் இது ஸத்ய ஸாயிக்கு மட்டுமின்றி, எந்த மஹாபுருஷர் அல்லது இறையவதாரத்துக்குமே பொருந்துகிற விஷயம்தான். திருப்பதிக்கும், திருத்தணிக்கும், திருவேற்காட்டுக்கும், ராமகிருஷ்ண மடத்துக்கும், ரமணாச்ரமத்துக்கும், சங்கர மடங்களுக்கும் விடாமல் போகிறவர்களில் மட்டும் எத்தனை பேர் முமுக்ஷுக்களாகி விட்டார்கள்? ஏதோ இந்த இடங்களுக்குச் செல்கிற சமயங்களிலாவது நம்மையும் கெடுத்துக் கொள்ளாமல், மற்றவரையும் கெடுக்காமல் இருக்கிறோம் அல்லவா? ஆன்மிக முன்னேற்றம், வாஸனைக்ஷயம் என்பது கொஞ்சம் கொஞ்சமாகத்தான் ஏற்படும். இயல்பாக வந்தின மடப்பான்மையும், பழகிப் போன நடவடிக்கை

Koviloor Digital Library

களும் விரைவிலே முற்றும் மாறுவது அபூர்வத்திலும் அபூர்வமே. மஹாபுருஷர்கள் ஹிப்னுடிஸ்ட், மெஸ்மெரிஸ்ட் போல் பிறர் மனத்தை ஆக்கிரமித்து அதை மாற்ற மாட்டார்கள். ஒரு ஜீவ மனத்துக்கெனத் துளி சுதந்திரம் இருந்துதானே அது தன்னைக் கெடுத்துக் கொண்டது? இதே சுதந்திரத்தால் அதுவாகவே விரும்பித் தன்னைத் திருத்திக் கொள்ளத்தான் வழி செய்வார்கள். அது மேலும் கெட்டுப் படுகுழியில் விழாமல் காப்பார்கள். படிப் படியாகச் செம்மை நெறியில் கைப்பிடித்து அழைத்துப் போவார்கள். இப்படிப் பக்குவமுற்று, அந்த உயர்நிலையில், ''என் செயலாவது யாது ஒன்றில்லை இனித் தெய்வமே!'' என்று மெய்யாக சரணுகதி செய்து, தானுகத் தன் மனத்தை ஒப்பி ஸமர்ப்பணம் பண்ணுகிறபோதுதான் அந்த மனத்தை எடுத்துக் கொண்டு இறுதி முலாம் (finishing touches) கொடுத்து அதை அடியோடு மாற்றுவார்கள்; அல்லது ஆத்மனில் மாய்ப்பார்கள்.

இந்த சரணுகதிச் சிகரத்தில் எல்லோராலும் ஏறமுடியா விட்டாலும், மலையடிவாரத்தில் ஒரு சில படிகளாவது ஏற்றிவிட மஹா புருஷர்களை யன்றி யார்தான் பொறுப்பேற்பது?

ஆனால் இது கண்குத்திப் பாம்பாக, கத்தி முனை நடையாக ஆற்றவேண்டிய ஆபத்தான பொறுப்பு. ஒரு மஹானின் ஆத்ம சக்தி பூர்ணமாகக் கனிந்து பக்குவப்பட்டாலன்றி, இவர் இழிந்த வர்களோடு நெருங்கிப் பழகினல், இவர் அவர்களை உயர்த்துவ தற்குப் பதில் அவர்கள் இவரைக் கீழே இறக்கிவிடக் கூடும். எனவே சந்தேகத்துக்குரியவர்களை எல்லா ஆசிரமங்களிலும் தாராளமாகச் சேர்த்துக் கொள்வதற்கில்லை. சந்தேகாஸ்பதமான வர்களிடமிருந்து தம்மைக் காபந்து செய்துகொள்வது மட்டு மின்றி, தமது மற்ற அடியார்களும் இவர்களால் கெடுக்கப்படாமல் காக்கிற அபரிமித சக்தி ஒரு மஹானுக்கு இருந்தாலே இப்படிப் பட்டவர்களை சகஜமாக அநுமதிக்கலாம். எனவே அடர்ந்த ஆத்ம சக்தி வாய்க்காத வரையில் ஓர் ஆசிரமத் தலைவர் ஸமத் துவம் என்ற பெயரில் யாரை வேண்டுமானுலும் சேர்த்துக் கொள்ளாமலிருப்பதுதான் முறை.

ஆத்மிகத்தில் மஹா சக்திமானுகவே இருப்பவருங்கூட, வழி வழி மரபுப்படி வந்த ஒரு மடாலயத் தலைவராக இருந்தால் அப்போது அங்கு ஐயுறவான நடத்தைக்காரர்களை சகஜமாக அநுமதிக்கலாகாதுதான். ஏனெனில் ஊர் அபவாதங்களை இம் மஹான்கள் பொருட்படுத்தியே ஆகவேண்டும். ஸாக்ஷாத் ஸீதா பிராட்டி விஷயத்திலேயே ஸ்ரீ ராமசந்திர மூர்த்தி கைக்கொண்ட ராஜகுல தர்மம், இந்த சம்பிரதாயிக மடாதிபதிகளுக்கும் பொருந்தும். தனிப்பட்ட ஒரு மஹான் தமக்கு அபவாதம் வந்தாலும் வரட்டும் என்று தியாகமாக எவரை வேண்டுமாயினும் தாராளமாகச் சேர்த்துக் கொள்ளலாம். ஆனுல் ஒரு மடாலயத் தலைவர் தமக்கு முன்னுல் வம்ச பரம்பரையாக இருந்து, தமது பின் தலைமுறைகளுக்கும் இருக்க வேண்டிய மடத்தின் பெயருக்கே தம் தயாளத்தாலோ, தியாகத்தாலோ அவப்பெயர் உண்டாக்கி விடக் கூடாதல்லவா? எனவே ஐயுறவானவர்க்கு இவர்கள்

Koviloor Digital Library

நெருக்கமான ஸ்வாதினத்தைத் தராமல், எட்ட வைத்தேதான் அருள் செய்ய வேண்டும். அருளில் எட்ட வைத்தல்ல; ஸ்தூலத்தில்தான். (இப்படி எட்ட வைத்தே எட்டி எட்டியும் கிடைக்க வொண்ணுப் பேரருளை ஸ்ரீ காஞ்சி ஆசார்யாள் எத்தனையோ பதிதர்களுக்கு அளித்ததைவிட மடாலய தர்ம நெறியின் உயர்வினை வேறெங்கு காணப் போகிறோம்?)

இதையெல்லாம் எண்ணுகையில், திவ்ய மஹா சக்தி செறிந்தவரும், எந்த ஸம்பிரதாய நிறுவனத்துக்கும் கட்டுப்படாதவருமான நம் ஸ்வாமியை விட ஸகலரையும் தம்மிடம் தாராளமாகச் சேர்த்துக் கொள்ளத் தகுதி பெற்றவர் எவருமில்லை எனத் தெளியலாம்.

ஸினிமாத் துறையினரை விட, மனிதர்கள் என்ற ரீதியில் மற்றவர்கள் உயர்ந்தவர்கள் என்று ஒருகாலும் சொல்வதற்கில்லை. திரை உலகிலும் மேன்மக்கள் உள்ளனர்; வெளி உலகிலும் அவர்களை விடத் தாழ்வானவர் உள்ளனர். ஆயினும் பட உலகச் சூழல் அபவாதத்துக்கும் ஆபத்துக்கும் ஆஸ்பதமாக இருப்பதென்னவோ உண்மைதானே? பொது மக்கள் நோக்கில் 'ஆஸ்பதம்' என்று துளி இருந்தாலே போதும், அது 'வாஸ்தவம்' என்றே மாற்றுருப் பெற்றுவிடும். ஒன்று தவறுக இருக்கலாம் என்ற ஏதுவும் தோதுவும் இருந்தாலே அது தவறுகத்தான் இருக்கிறது என்று முடிவு கட்டி, புரளிப் பிரசாரமும் தொடங்கிவிடுவார்கள். இதனுல்தான் நம் காவிய நாயகரை ''ஸினிமாக்காரர் சாமியார்'' என்பவர்கள், 'அவர்களும் மனிதர்கள் என்ற ரீதியில் அருளுக்குத் தகுதி வாய்ந்தவர்களே; அவர்கள்பொருட்டு மற்றெந்த மஹானும் தாராளமாகச் செய்ய இயலாத—செய்யக் கூடாத—காருண்யப் பணியை இவரே ஆற்றுகிறுர்' என்ற நல்லுணர்வுடன் இப்படிக் கூறுமல், கிண்டலாகக் கூறுகிறுர்கள்.

ஆனல் அவர் எந்தக் கிண்டலும் கிண்டவொண்ணு காம்பீர்யர். எதிர்ப்பை லவலேசமும் கருதாமல் திரைப்படத்தினருக்கும் தமது ஆசிரமத்தில் ஆசிரயம் தருகிறுர். அவர்களது இல்லங்களுக்குச் செல்கிறுர்.

சுருங்கச் சொன்னுல், நாம் கலைஞர்களாகப் போற்றி, மனிதர்களாகத் தூற்றுபவர்களையே நம் ஸ்வாமி மனிதர்களாக ஏற்று, அவர்கள் கலைஞர்களாக இல்லாதபோது கண்டிக்கிறுர். மனிதர்களாக அவர்களது உள் வாழ்க்கையில் உள்ள குறைகளை அந்தரங்கமாகக் கண்டித்து, கலைஞர்களாக அவர்கள் அரங்கேறி உலகுக்கு இழைக்கும் குறைகளைப் பகிரங்கமாகக் கண்டனம் செய்கிறுர். ஸினிமாவால் மக்களின் வாழ் நெறியை அவர்கள் பாதிக்கும்போது சாட்டையடி கொடுத்துச் சாடுகிறுர்.

ஆத்மிக உயர்வைத் தராத எந்தக் கலையையும் 'மாஸ்-மீடியா' என்பதால் மட்டும் அவர் வாழ்த்துவதில்லை. பார்க்கப் போனுல், இவை 'மாஸ்-மீடியா'வாக உள்ளனவே, இதனுல்

Koviloor Digital Library

இவை பரப்பும் நச்சு ஜனசமூகம் முழுதையும் பாதிக்கிறதே என்பதாலேயே அதிகம் வெகுண்டு பேசுவார்.

சில எடுத்துக்காட்டுகள் :

''மக்களை மேம்படுத்த முடிந்தால்தான் அது டெலிவிஷன்; அல்லாமற் போனால் அது டெலிவிஷம் தான்! அதிக மக்களை லகுவில் கவர்ந்திழுக்க முயல்கையில் நல்ல சாதனங்களும் நச்சாகவே மாற இடமாகிறது.''

''நமது கலாசாரத்தைக் கட்டிக் காக்கும் அரண் பெண் மக்களே ஆவர். ஆனால் இப்போது படித்த பெண்களின் போக்கைப் பார்க்கும்போது இதற்கு நேர் எதிரான நிலையையே காண்கிறோம். இதற்கு முக்கியமான காரணம், அவர்களை ஆட்கொண்டுள்ள மட்டரகமான இலக்கியமும், சிற்றின்பத்தையே சித்திரிக்கும் ஸினிமாவுந்தான்.''

''மேல்நாடுகளிலும் 'மூவி'கள் படுமட்டமாகத்தான் இருக்கின்றன. ஆனால் அதுவும் ஒரு பொழுதுபோக்கு என்ற அளவோடு அவர்கள் நிறுத்திக் கொள்கிறார்கள். ஏற்கெனவே கெட்டுப்போன அவர்களுடைய சமூக வாழ்க்கையின் பிரதிபலிப்பாகவே அங்கே ஸினிமா உள்ளது. ஆனால் நம் தேசத்திலோ என்றால், ஸினிமாவைப் பார்த்து வாழ்க்கையையே அதன் பிரதிபலிப்பாகச் செய்து கெட்டு வருகிறார்கள். முக்கியமாக, ஸினிமாவானது நம் நாட்டு மாதர் தர்மத்தைப் பாழ்படுத்தி வருகிறது.''

''எந்த லலித கலையாயினும் அது மனிதனை நன்னெறியில் உயர்த்தி, அவனுக்கு அன்பும், எளிமையும், வைராக்கியமும், பக்தியும், ஞானமும் ஊட்டி ஆத்மிகப் பாதையில் அழைத்துச் செல்வதற்கே பயனாக வேண்டும். கலைகளைச் சந்தைக் கடைக்குக் கொண்டு வந்து சந்தி சிரிக்க வைக்காதீர்கள். ஒருநாளும் காமக் குரோதாதிப் பசிகளைத் திருப்தி செய்வதற்குக் கலைகளைப் பயன் செய்யாதீர்கள்.''

(கிருஷ்ண தேவராயர் ஜன்மதின விழாவில் பேசுகையில் :) ''இம்மாதிரி ஏதோ ஒரு நாள் ஒரு சான்றோரின் பெயரைச் சொல்லி அமர்க்களப்படுத்திவிட்டால் போதுமா? மற்ற நாட்களில் யார் பெயரை ஜபித்துக் கொண்டு, யாருக்குப் பின் திரிகிறீர்கள்? ஸினிமா ஸ்டார்களும், கிரிகெட்காரர்களுந்தானே இன்று பெரும்பாலோரின் சித்தத்தில் பித்தம் பிடித்த அளவுக்கு ஊறிப் போயிருக்கிறார்கள்? கலைஞர்களாகத்தான் இருக்கட்டும்— இன்னாருக்கு இவ்வளவுதான் இடம் என்று நம் மூதாதையர் அளவறிந்து, கட்டுப்படுத்தி அநுபவித்த வியவஸ்தையை இன்று காண முடியவில்லையே!''

''கவிகளும், மற்ற எழுத்தாளர்களும் அற்ப விஷயங்களையும் ஆவேச சமாசாரங்களையுமே எழுதித் தங்கள் எழுதுகோலைக் களங்கப்படுத்திக் கொள்ளக் கூடாது. நிர்மலமே வடிவான

Koviloor Digital Library

கலைத் தெய்வமாம் சரஸ்வதியின் நினைவு சிறிதேனும் இருந்தால் இப்படிப்பட்ட அபசாரம் செய்யத் துணிவரா?''

''இன்று நாம் கலைத் துறையில் பார்ப்பது நல்லதைச் செய்யவேண்டும் என்பதல்ல. நூதனமாக எதையாவது செய்து, கவர்ச்சி செய்து, பெயர் தேடிக் கொள்வதையே காண்கிறோம். மக்களின் நரம்பைக் கிளறிவிட்டுக் காமத்திலோ குரோதத்திலோ தள்ளும் செக்ஸும், க்ரைமும்தான் இன்று இலக்கியம், ஸினிமா எல்லாம்.''

''கவிதையும் மற்றக் கலைகள் யாவுமே மனத்தின் ஆட்டங்களை அடக்கி சமநிலையும் சாந்தமும் ஊட்டவே ஏற்பட்டவையாகும். இன்றோ அவை மனத்தை வெறிக் கூத்தாட வைக்கவே துஷ்பிரயோகமாகின்றன. இந்தக் கொடுமையை என்னென்பது?''

''காட்டு மிருகங்களை அடக்கி வசப்படுத்துவதுபோல், கொந்தளிக்கும் உணர்ச்சிகளை அடக்கிச் சித்தத்தைச் சீரிய தெய்விகமான நோக்கங்களில் செலுத்தவே ஏற்பட்ட பவித்ரமான (ஸ்வாமி பாரத பாரம்பரியத்தைச் சொல்கையில் ''பவித்ரமைன'' ''பவித்ரமைன'' என்று எப்படித் திரும்பத் திரும்ப அடித்து, அழுத்திக் கூறுகிறார்! நம் பவித்ர ஸ்வரூபனின் திருவாக்கிலிருந்து இந்த ''பவித்ர'' உதிர்வதே பரம பவித்ரம்தான்.) பாரதீய சங்கீதத்தின் மகத்தான மாண்பினை மறந்து விட்டோம். சாஸ்த்ரீய ராகங்களின் ஆழ்ந்த கம்பீரங்களை ரஸிக்க மறந்து, சினிமாப் பாட்டுக்களின் கீழ்த்தரமான சப்தஜாலங்களையும் சொற்சிலம்பங்களையும் மக்கள் பாடிப் பரவசமாகிறார்கள்.''

''தியாகராஜர் போன்ற மஹான்கள் தெய்வத்துடன் மனிதனை இணைப்பதற்காகப் பயன்படுத்திய இசை தற்கால ஸினிமாக்களின் தாக்குதலில் பட்டு நிசமாகி வெற்றுப் புலன் வெறிகளைத் தூண்டி விடுவதாகிவிட்டது.''

பக்தர் ஒருவர் ராம நாமத்தைப் பெரிதாக, வர்ணவிசித்ரமாக அச்சிட்டுச் சாலைகளிலெல்லாம் ஒட்டுவதற்கு ஸ்வாமியிடம் அநுமதி கோரினார். துயரப்படவே அறியா நித்யானந்தரான நம் நாயகரே அப்போது வேதனை பொருமும் குரலில், ''ஏன் ஐயா, ராமன் உனக்கு என்ன திங்கு செய்தான், ராம நாமத்திடம் உனக்கு இத்தனை துவேஷம் வரும்படியாக? அருவருப்பான ஸினிமா போஸ்டர்களுக்கும், 'ஒழிக' கரிப்பூச்சுக்களுக்கும் நடு நடுவே பவித்ரமான தாரக நாமாவைச் சிறை வைக்க வேண்டுமா? அவரவரும் பகவந் நாமாவை இதயத்தில் பிரிக்க முடியாமல் ஒட்டிக் கொள்ள முயலுங்கள். அதுவே போதும்'' என்றார்.

நீங்களே சொல்லுங்கள், இவரா ஸினிமாக்காரர்களின் 'ஸ்பெஷல் சாமி'?

இங்கே இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம்: போஸ்டர்களும், சஞ்சிகைகளின் அட்டைப் படங்களும் ஸ்வாமியின்

Koviloor Digital Library

கண்களில் பட்டிருக்கக் கூடும். எனவே இவற்றை அவர் கண்டிப்பதில் வியப்பில்லை. ஆனால் சில படாதிபதிகள் தங்கள் இல்லத்திலேயே ஸ்வாமிக்கெனப் பண்பான ஸீன்கள் போட்டுக் காட்டுவதன்றி, அவர் வேறு ஸினிமா பார்த்ததே கிடையாது. இதே போல் சஞ்சிகைகளையோ, ஏன், வேறெந்த நூலையுமே, அவர் புரட்டிப் படித்துப் பார்த்த நாளே கிடையாது. ஒரு முறை 'பவன்ஸ் ஜர்னல்' இதழ் ஒன்றை வைத்திருந்த அதன் ஆசிரியர் ஸ்ரீ ராமகிருஷ்ணனிடமிருந்து ஸ்வாமி அதை வாங்கிப் பிரித்து முதலிலிருந்து வரிசையாக நோட்டம் விட்டது தமக்கு அபூர்வக் காட்சியாக இருந்தது என்று அவருக்கு மிக அணித்தான ஒரு பக்தர் கூறுகிறார். பின் அவரால் எப்படி இன்றைய ஸினிமாக்கள், சஞ்சிகைகள், மற்ற 'இலக்கிய' நூல்களைப் பற்றி இவ்வளவு துல்யமாக மதிப்பிட்டு விமரிசிக்க முடிகிறது எனில், இதுதான் ஸர்வக்ஞத்வம் என்பது!

* * *

ஸினிமாவுக்குப் போகவே கூடாது என்று அடியார்களை, குறிப்பாக மாணவர்களைக் கண்டிப்பதில் பாபாவைப் போலத் தீவிரவாதியாக ஆசார மடாலயத் தலைவர் பலரைக் கூடச் சொல்வதற்கில்லை. ஒரு சுவாரஸ்யமான உதாரணம் (''ஒக சின்ன உதாஹரணமு'' என்று ஸ்வாமியே உரைகளின் இடையிடையே கூறுமாப்போலே)—ஸ்ரீ வி. கே. கோகக்கின் ''பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபா'' என்ற ஆங்கில நூலிலிருந்து (பக். 35):

ஸினிமாப் பித்துப் பிடித்த ஹைதராபாத் மாணவன் ஒருவனால் பிரதிதினமும் ஒரு படமாவது பார்க்காமல் முடியாது. இவனுக்கு ஸ்வாமி ஒரு ரிஸ்ட்-வாட்சைத் தம் அற்புத ஆற்றலால் "வரவழைத்து"க் கொடுத்தார். கொடுக்கும்போதே, "நீ இனிமேல் எப்போதாவது ஸினிமாவுக்குப் போனால் இந்தக் கடிகாரம் நின்றேவிடும்'' என்று எச்சரித்தார்.

அடுத்த சில நாட்கள் ஸினிமாப்ரியன் பாபாவுக்குக் கட்டுப் பட்டே நடந்தான். ஆனால் பரீட்சை முடிவு வெளியாகித் தன் வெற்றியை அறிந்த தினத்தில், அதனால் ஏற்பட்ட உற்சாகம் பழைய வாசனையைக் கிளறி விட்டது. மற்ற நண்பர்களோடு மாலைக் காட்சிக்குக் கிளம்பிவிட்டான்.

படம் முடிந்து வெளிவந்தனர். தெரு விளக்கில் மணி பார்க்க வாட்சைப் பார்த்தால்......!

பொல்லாத வாட்ச் இவன் தவற்றை 'வாட்ச்' செய்து கொண்டிருந்திருக்கிறது! ஸ்வாமி உத்தரவை 'உயர்' திணையான இவன் புறக்கணித்திருக்க, அஃறிணையான கடிகாரம் அவர் சொல்லுக்கடங்கி நின்றே விட்டது!

ஹைதராபாத்தில் எந்தக் கடிகார ரிப்பேர் நிபுணராலும் அதை ஓட வைக்க முடியவில்லை.

Koviloor Digital Library

பம்பாயில் முயன்று பார்த்தான். அங்கேயும் இதே கதை தான். நாவில முழுவதும் அவர் ராஜ்யமாக இருக்க இவன் மாநிலத்துக்கு மாநிலம் மாற்றிப் பார்த்தால் காரியம் நடந்து விடுமா என்ன?

கடைசியில் மானுபிமானம் விட்டு பாபாவிடமே வந்தான் மாணவன். மன்னிப்புக் கோரினன்.

அவர் கடிகாரத்தைத் தொட்டாரோ இல்லையோ, அது 'டிக்' 'டிக்' என்று மாணவனைக் கேலி செய்யத் தொடங்கி விட்டது!

''அப்பாயி, மறுபடி ஸினிமாப் பக்கம்...'' என்று ஆள் காட்டி விரலைத் தூக்கினர் பெருமாள் சிரித்த முகத்தோடு.

ஸ்வாமி அற்புதம் செய்வதைத் தாக்குபவர்களும் இருக்கிறார் களே, நல்வழிப்படுத்துவதில் அதற்குள்ள அபார வல்லமைக்கு இது ஒன்று போதாதா? ஸினிமாத் தீமையை விலக்குவதில் நம் கதாநாதரின் தீவிரத்தை விளக்கவும் இது போதும்தான்.

★

திரைப்பட சகாப்தம் புட்டபர்த்தியில் தலைதூக்கிய அன்றே, ஸினிமா மோகத்துக்கு மாற்று மருந்து கண்டுபிடித்து, சகாக்களைத் திருப்பிக் கொண்டான் பால ஸத்யா.

அந்த வசிய மருந்துக்குப் ''பண்டரி பஜன்'' என்று பெயர்.

ஆந்திர தேசத்தில் பண்டரி பஜனை கோஷ்டியார் என்று பலர் உண்டு. பாகவதர்கள் பாண்டுரங்க தரிசனத்துக்காகத் தவிப்பதையும், பண்டரீபுர யாத்திரைக்குப் புறப்பட்டுச் செல் வதையும், ஆலய விமானத்தைக் கண்ட மாத்திரத்தில் விழுமிய இன்ப உணர்ச்சியில் விம்முவதையும், பண்டரி விட்டலன் விக்கிரகத்தைக் கண்டவுடன் விதிர் விதிர்ப்பதையும் இனிய பாடல் களாக்கி, ஆடி ஆடிப் பாடுவார்கள். நடுநடுவே ''ஜே ஜே விட்டல; ஜய ஹரி விட்டல; பாண்டுரங்க விட்டல; பண்டரிநாத விட்டல'' என்பது போன்ற நாமாவளிகளையும் நா இனிக்கக் கோஷிப்பர்.

அன்றைக் கிராமங்களில் இப்படிப்பட்ட பஜனைகளைக் கண்டான், கேட்டான் நம் பால கதாநாதன். 'ப்ளாட்டிங் பேப்பர்' போல் அப்பாடல்களையும், ஆடல் முறையையும் ஒற்றி உறிஞ்சிக் கொண்டுவிட்டான்.

'தோழன்மார்களை ஸினிமாப் பூதத்திடமிருந்து மீட்க வழி கண்டேன்' என மகிழ்ந்தான்.

பண்டரி பஜனைக்காரர்களது மஞ்சள் உடைபோலவே தன் குட்டிப் படைக்கும் ஆடை தயாரித்தான். அவர்களைப்

Koviloor Digital Library

போலவே ஒவ்வொருவரும் பிடித்துக் கொள்ளக் கொடி செய்தான். பாட்டின் பரவசத்தை ஊக்கும் ஆட்டத்துக்கு ஊட்டம் தரப் பாதச் சிலம்புகளும் சேகரித்துவிட்டான். ஜாலராக்களும், இடுப்பில் கட்டிக்கொண்டு அடிக்க 'கோல்' என்ற மத்தளமும் தயார் செய்துவிட்டான். மத்ய தரக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சிறு பிள்ளை இவ்வளவு பொருட்கள் சேகரம் செய்தது, தோழன்மாரை நல்வழிப்படுத்துவதில் அவனுக்கிருந்த ஈடுபாட்டுச் சக்தியாலேயே அன்றி இங்கு தன் 'சமத்கார' சக்தியைக் காட்ட வில்லை.

பீதாம்பரம், பதாகம், பாதச் சிலம்பு, மத்தளம் இவற்றைப் பார்த்ததுமே மற்றப் பிள்ளைகளுக்குக் கவர்ச்சி உண்டாகிவிட்டது.

மேலும் ஸத்யாவே நுங்குக் கண்டத்திலிருந்து இளநீராக பஜனை பாடி, தோம் தோம் என்று சிலம்பு சிலும்ப ஆடுகிறானே இல்லையோ, ஸகாக்களின் உற்சாகம் கரை புரண்டது. வெள்ளித் திரையில் வேறெவரோ நடிப்பதைப் பாராமல், தாங்களே ஆடிப் பாடும் ஆனந்தம், பகவந் நாம சக்தி, பக்தரநுபவத்தின் ஆற்றல், எல்லாவற்றுக்கும் மேல் தெய்வக் குழந்தையான ஸத்யனின் தலைமை—அப்புறம் ஸினிமாவாவது, கினிமாவாவது?

சிறுச்சிறிதே ஆய்ப்பாடியாக மாறத் தொடங்கியிருந்த புட்டபர்த்தி ஒரே துள்ளலில் பண்டரீபுரமாகிவிட்டது. புட்ட பர்த்திக் குட்டன் விட்டலக் கிட்டனுனன். அவன் மஞ்சளாடை பூண்டு, கருட கம்பம் என்ற தீபஸ்தம்பத்தை ஏந்தி, கமல நாவு கானத் தேன் பொழிய, தாமரைச் சேவடி தாளப் பூந்தாதுகளைத் தூவ முன் செல்வான். அவனைத் தொடர்ந்து இக்கண்ணனின் கோப பாலர்கள் கொடியும், ஜாலராவும், மற்ற வாத்தியங்களும் ஏந்தி கிராமத்தை வலம் வந்து ஊரையே பாவனமாக்கினர். நடுநடுவே அனைவரும் ராஸலீலை அல்லது குரவைக் கூத்தைப் போல் வட்டமாக மண்டலித்து நின்று நட்டம் புரிந்தனர்.

உலக நாடகத்தை நடத்தும் நடராஜன் ஒரு நாடகக் குடும்பத்தில் பிறந்தான். அரங்கன் புட்டபர்த்தி அரங்கிலே பாண்டுரங்கனின் நாடக நாட்டியத்தால் மக்களை, குறிப்பாக பாலரைச் சுருக்குப் போட்டு இழுத்துக் கொண்டான். "பொம்ம லாட்டக்காரன் போல் எல்லாரையும் ஆட்டுவிக்கிறேன்" என்று குருக்ஷேத்திரத்தில் கூறியவன், தானும் ஆடி, தான் பயிற்றுவிக் கும்படி மற்ற பாலரையும் ஆட வைத்தான்.

பண்டரீ பஜனின் புது உத்திகளைப் புகுத்தினான் பத்து வயதுப் புத்திமான். இதுகாறும் பக்தர்களின் உணர்ச்சியே மையமா யிருந்த பஜனில் இப்போது இவன் பகவானை மையமாக்கினான். பாலகிருஷ்ண லீலைகள், கோபியர் பட்ட பாடு, அசோதையிடம் அவர்களது முறையீடு, அன்னையிடம் மாயாவி செய்த ஜாலக்கு ஆகியவற்றை அந்தச் சிறு வயதில் அற்புதப் பாடல்களாகக் கவனம் செய்து, பண்டரீ பஜனில் இழைத்துவிட்டான்..

Koviloor Digital Library

பக்தரநுபவம் என்பதை விட சாக்ஷாத் கண்ணன் கதை என்றவுடன் பஜனின் ஈர்ப்பு பன்மடங்காயிற்று.

'எம்பெருமான் தன் சரிதை செவியால் கண்ணால் பருகுவோம்' என்று குலசேகரர் சொன்னபடிக்கு, நம் நாயகன் வரலாற்றைக் குறிப்பாகச் சில இடங்களிலாவது மானஸிகமாக அப்படியே கண்முன் நிறுத்திச் சிறிது தியானிக்க வேண்டும். பால ஸத்யா பால க்ருஷ்ணனாக ஆடிப் பாடியதைவிட மானஸிக த்யானத்துக்கு உகந்ததொரு ரமணீயக் காட்சியும் உண்டா? ஸத்யா தலைமுடியை முன்புறம் கொண்டையாக உயர்த்திக் கட்டி, அதைச் சுற்றிப் பூச்சரம் முடித்து, மயில்பீலி சூடி, பீதாம்பர தாரியாக, சலங்கை குலுங்க ஆடி, பூர்வாவதார வேணுவினும் இனிமையாக மாதுளை போட்டு வாயால் மதுமயமாகப் பாடிய காட்சி — ஆஹா, நினைக்கும்பொழுதும் தித்திக்கிறதே!

அவன் கண்ணனாக நடித்துத் திருப்தி அடையவில்லை. கண்ணனாக மட்டுமின்றி அன்னை பராசக்தியாகவும் இருப்பவரன்றோ? அன்றே இப் பிற்கால யசோமாதாவுக்குத் தாய்மையிலும் ஆசையிருந்திருக்கிறது. எனவே அவ்வப்போது தோழரில் ஒருவனைக் கண்ணனாக நடிக்கச் செய்து, தான் அசோதையின் பாகத்தை ஏற்றுத் தாயன்பைப் பொழிந்து திருப்தியடைவான்.

★

பண்டரி பஜனில் புது அம்சம் புகுத்தினான். இந்த பஜனை முறைக்கு இது புதிது என்னும், பாலக்ருஷ்ண லீலை என்பது மக்களுக்குப் புதிதல்லவே! இதோடுகூட, ஊரே அடியோடு அறிந்திராத புதுக் கருத்தையும் கருவாகக் கொண்டு இன்னொரு பஜனை பத்ததியை வகுத்து விட்டான்! பண்டரிபுரம் உள்ள அதே மஹாராஷ்டிரத்தில் இன்னொரு தலத்துக்கும் யாத்திரை செல்வதாக நினைக்கச் செய்தான். யாரும் கேள்விப்படாத க்ஷேத்திரம்! அங்கு கோயில் கொண்ட மூர்த்தியின் பெயரைக் கேட்டாலோ அறிந்த நாமமாகவே தோன்றவில்லை. துருக்கப் பெயராகத் தொனித்தது. 'இந்த ரத்னாகர கொடுக்கு காரியமெல்லாமே விசித்ரம். இதென்ன ஸ்தலம், இதென்ன ஸ்வாமி?' என்றுதான் பார்த்தியின் விஷயமறிந்த பெரியவர்களும் விழித்தனர்.

ஸத்யாவோ, கண்ணனையும் பண்டரிபுரத்தையும் போலவே இந்த இன்னொரு தலத்தையும் அதன் தெய்வத்தையும் தன் உயிரில் உயிராகக் குழைத்துக் குழைத்துப் பாடுகிறான்! இதன் மர்மம் என்ன?

Koviloor Digital Library

அத்தியாயம்—11

ஸத்யாவின் சபதம்

ஆட்டங்கள் காட்டியும் பாட்டுக்கள் பாடியும்
ஆறுதல் செய்திடுவான்.

— பாரதியார்

ஸத்யா ஜில்லெனக் குளிரப் பாடிக் கொண்டும், ஜில் ஜில் என்று நளினமுற ஆடிக் கொண்டும் பண்டரீபுரத்தையும் கண்ணனையும், கேள்விப்படாத அந்த இன்னொரு க்ஷேத்திரத்தையும் மூர்த்தியையும் புட்டபர்த்திக்குக் கொண்டு வந்தபோது சிறார் மட்டுமின்றிப் பெரியோர்களும் அதில் ஈர்க்கப்பட்டனர். இந்த வாண்டு பக்த 'ட்ரூப்'பின் புகழ் கிராமத்துக்கு வெளியிலும் பரவி, அண்டை ஊராரும் இந்த பால பாகவத கோஷ்டியைத் தங்கள் ஊர்களுக்கு அழைக்கலாயினர். புட்டபர்த்திக்குச் சுமார் நாற்பது மைலில் உள்ள ஹிந்துப்பூர் வரையில் நமது குழந்தைக் குழு சென்று குதூகல பஜனையில் ஜனங்களை ரஞ்ஜனமுறச் செய்தது.

ஸத்யாவின் உற்சாகத்தால் புது உத்வேகம் பெற்றோ என்னவோ, இச்சமயத்தில் அவனது குடும்பத்தினரும் புது உற்சாகத்துடன் தங்களுடைய திறந்தவெளி நாடகங்களை இயற்றி நடிக்கலாயினர்.

1937-ஐ ஒட்டிய சமயம். அப்போது ஒரு பஞ்சம் நாட்டைப் பிடித்தது. பஞ்ச நிவாரணத்துக்காக ஸத்யா குடும்பத்தினர் பல ஊர்களுக்குச் சென்று பாணாசுரம், உஷாபரிணயம், துரௌபதி மான ஸம்ரக்ஷணம், கம்ஸவதம் முதலிய நாடகங்களை நடத்தினர். ஸத்யாவின் தந்தை பெத்த வெங்கப்ப ராஜு இப்போது பிள்ளையிடமிருந்து ஓர் 'இன்ஸ்பிரேஷன்' பெற்று விட்டார் போலும்! யுதிஷ்டிரனாகவும், பாணாசுரனாகவும் வேஷம் போட்டு ஜமாய்க்கலானார்.

Koviloor Digital Library

ஊர் ஊராக நாடகக் குழுவுக்கு அழைப்பு வந்ததில் அதிசயம் இல்லை. சிறுவன் ஸத்யாவின் பண்டரி பஜனுக்கும் இதைவிட வரவேற்புக் கிடைத்ததுதான் அதிசயம். படிப்புக்குக் குந்தகம் இன்றி விடுமுறை நாட்களிலேயே இந்த பகவத் பணியைப் புரிந்து வந்தான். படிப்பு என்ற கடமையைக் கைவிட ஸத்யா ஒரு நாளும் அனுமதிக்க மாட்டான்.

தன் பலம் கொண்டு அம்பலம் ஏறித் தானே ஹீரோவாகி விட்ட ஸத்யாவின் பிராபல்யத்தைக் கண்ட பெரியவர்கள் தங்களது நாடகங்களிலும் பங்குகொள்ளுமாறு ஸத்யாவை அழைத்தனர்.

''ஆகா'' என்றான் ஸத்யா. ''ஆனால் ஒரு நிபந்தனை. எனக்கான வசனங்களை நானேதான் தயாரித்துக் கொள்வேன். என் பாட்டுக்களையும் நானே கவனம் செய்து கொள்வேன்'' என்றான்.

ஸத்யாவின் கலையறிவை அறிந்த பெரியோர்கள் பரீட்சை தான் பார்க்கலாமே என்று ஒப்புக்கொண்டனர். அதன் முடிவில் தங்களுக்கான வசனங்களையும் பாடல்களையும்கூட ஸத்யாவே மாற்றி எழுதித் தர வேண்டுமென்று கேட்கலாயினர்! அந்தச் சின்ன வயதிலேயே அவனது வசனங்களில் கவர்ச்சிகரமான கவித்துவம் மிளிர்ந்தது. கவர்ச்சி என்பதால் கௌரவம் சிறிதும் குறைந்திருக்கவில்லை. தூய்மையும் தார்மிகமும் ஆத்மிகமுமே கலை என்பதை அந்த நாளிலேயே காட்டினான் ஸத்யா. வீரம், ஹாஸ்யம், பிரேமை, சோகம் ஆகிய எல்லா உணர்ச்சிகளையும் உன்னத முறையில், நன்னெறிக்கு வழிகாட்டும் முறையில் வசனமாக, கானமாக ஆக்கித் தந்தான். எல்லா உணர்ச்சிகளையும் பக்திக்கே தலைபணிய வைத்தான்.

இன்றும் ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபா, நாடகத்துக்கு மக்கள் மீதுள்ள மகத்தான சக்தியைக் கருத்தில் கொண்டு அதை தர்ம வளர்ச்சிக்கே பயன்படுத்துவதில் விசேஷ கவனம் காட்டிவருகிறார்.

தமது எண்ணற்ற அலுவல்களிடையே தெய்விகமான நாடகங்கள் பலவற்றை இயற்றி புட்டபர்த்தி வேத பாடசாலை வித்யார்த்திகளையும், பெங்களூர் ஸத்ய ஸாயி கல்லூரி மாணவர்களையும் கொண்டு அவற்றை நடிக்கச் செய்கிறார். கதை, வசனம், பாடல், டைரக்ஷன், காஸ்ட்யூம் சகலமும் அவரே பொறுப் பேற்றுச் செய்கிறராக்கும்!

ஆதியில் பெரியோர்களின் நாடகத்தில் அவர் ஏற்ற பாத்திரங்களில் கிருஷ்ணனையும், மோஹினியையும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். கண்ணனாகவே இவரைப் பலர் ஆராதிக்கப் போகிறார்கள்; மோஹினி அமுதம் தந்தது போலவே இவரும் பலருக்கு 'அமிர்தம்' வழங்கப் போகிறார்! மற்ற நடிகர்கள் மேடைக்கு வெளியே நிஜமாகவும், மேடை மேல் வேஷதாரிகளாகவும் இருப்பர் எனில், இவரோ வெளியே ராஜ குடும்பத்தாரைப் போன்ற வேஷதாரியாகவும், மேடையில் தனது நிஜமான

Koviloor Digital Library

பழைய கிருஷ்ண, மோஹினி ரூபங்களை எடுத்தவனுகவும் இருந்தான்!

ஸத்யா மேடையில் தோன்றிவிட்டாலே அவையோரின் ஆனந்தம் தாங்க முடியாது. பார்த்தாலே பசி தீரும் பால் வடியும் முகம். கணீரென்று வசனங்களை மொழியும் தெளிவு — அவற்றின் கலை நயம், தர்ம போதனை. கானம் செய்தாலோ நாரத வீணைதான். நாட்டியமும் செய்துவிட்டால், அந்த இன்பம் சொல்லி முடியாது. "இது மனுஷ உடம்புதானு? பூப்பந்து கணக்காயில்லே குதிக்குது இந்தப் பிள்ளை? தேவருங்க கால் பூமியிலே பாவாதுன்னுவாங்களே, அது மாதிரி இந்த படராஜு வீட்டுப் படு சுட்டியின் பாதமே பூமியைத் தொடாத மாதிரி யில்லே ஸ்பிரிங்காத் துள்ளுது?" என்று வியப்பார்கள்.

"கிருஷ்ண லீலா"வில் தேவகி அல்லது கன்னனுகை ஸத்யா நடிப்பான். ஒரு சமயம் இவ்விரு வேஷங்களிலும் அவனது சிறப்பைக் கண்டவர்கள், தேவகி அல்லது கன்னனுகை இல்லாமல், தேவகி கன்னன் இருவராகவும் ஒரே நாடகத்தில் அவன் நடிக்க வேண்டும் என்றனர். அதனுல் மோனே-ஆக்டிங் போல் கன்னனே, கன்னனுக்கான உடையலங்காரத்துடனேயே, தேவகியாகவும் நடிக்க வேண்டி வந்தது. பிறகு கம்ஸன் தர்பாரில் நாட்டியக் காட்சி வந்தது. மோஹினியாக ஸத்யா ஆடியிருப்பதைக் கண்ட ரஸிகர்கள், இப்போதும் "கொண்டு வா ஸத்யாவை" என்று ஆர்ப்பரித்தனர். கன்னனே கம்ஸ சபையில் நாட்டியமாடும் விசித்திரமும் நிகழ்ந்தது!

பிற்காலத்தில் இதையெல்லாம் அவர் மகிழ்வுடன் நினைவு கூருவதுண்டு. "துரௌபதி மான ஸம்ரக்ஷணத்தில் ஒரு சமயம் நான் துரௌபதியாக நடித்தேன். துச்சாஸனன் துகில் உரிய உரிய அது வளர வேண்டுமல்லவா? அதற்காக எனக்கு ஏழு புடவைகளை ஒன்றின்மேல் ஒன்றுகச் சுற்றி விட்டிருந்தார்கள். ஆனுலும் அப்படித் தெரியக்கூடாது என்பதற்காக அமுக்கு திமுக்கு என்று வயிற்றேடு கட்டி, என்னைப் படுத்திய பாடு உண்டே!" என்று கூறிச் சிரிப்பார். ஏழு தாதுக்களுக்குள் உள்ள ஆத்மாவே ஏழு சுற்றுகளுக்கு (பிராகாரங்களுக்கு) உள்ளே இருக்கும் ஸ்ரீ ரங்கநாதன் என்பார்கள். அவனையே, அரங்கில் ஏறி நடிக்கையில் ஏழு புடவைகளைச் சுற்றிப் பாடுபடுத்தியிருக்கிறுர்கள்!

பாடுபடுத்தியிருக்க வேண்டாம்தான். இந்தத் துரௌபதியே கன்னனுகி, வாஸ்தவமாகவே வஸ்திரத்தை அட்சயமாகப் பெருக்கிக் கொள்ள முடியும் என்று அவர்கள் கண்டார்களா? ஆனுலும் பிற்பாடு இப்படி நடந்ததென்னவோ வாஸ்தவம்.

* * *

அப்போது ஸத்யாவுக்கு இருபது வயது இருக்கலாம். வெறும் ஸத்யாவாக இல்லாமல் ஸத்ய ஸாயி பாபாவாகி விட்டார்.

Koviloor Digital Library

பண்ருட்டியிலிருந்து ஒரு தம்பதியர் அவரைத் தரிசிக்க வந்திருக்கிறார்கள். பொம்மைக்குப் பெயரெடுத்த ஊரல்லவா அது? இவர்கள் பெரிய பார்வதி—பரமேசுவரப் பொம்மைகளை பாபாவுக்கு அர்ப்பிக்கின்றனர். அதோடு அவர் அணிவதற்காக சரிகை வேஷ்டி, அங்கவஸ்திரமும் சமர்ப்பிக்கின்றனர்.

புத்தாடைகளை அவர் அணியவில்லை. பொம்மைப் பரம சிவனுக்கே வேஷ்டியைக் கட்டி, அதன் தலையில் அங்கவஸ்தி ரத்தை வரிந்து சுற்றுகிறார். ஈசனுக்கு இந்தக் கோலமும் கூட அழகாகத்தான் இருக்கிறது.

பாபா பண்ருட்டித் தம்பதியரைப் பார்த்துக் கண் உருட்டி குறும்புப் புன்னகையுடன், ''பார்வதியம்மாவுக்குப் புடவை எங்கே?'' என்கிறார்.

அவர்கள் ஒன்றும் சொல்லத் தெரியாமல் உட்கார்ந்திருக் கிறார்கள்.

பாபா மதுரமாக, ''பாவம் பரவாயில்லை'' என்கிறார்.

இந்தப் 'பாவம்' அல்லது 'ஐயோ பாவம்' அவரது அதரத்தி லிருந்து அடிக்கடி உதிரும் சொல்லாகும். 'பாபம்' என்று அவர் சொல்வதையே இங்கு 'பாவம்' என்று வகாரமாக மாற்றி இருக்கிறது. ஏனெனில் தமிழகத்தில், 'பாவம்' என்று சொல்வதே பரிதாபச் சொல்லாக உள்ளது; 'பாபம்' என்பது எரிச்சலில் கண்டிக்கும் பொருளிலேயே கூறப்படுகிறதன்றோ?

ஏதோ செய்துகொண்டிருப்பார், எவருடனோ பேசிக் கொண்டிருப்பார், நடுநடுவே சம்பந்தமில்லாமல் 'பாவம்' 'ஐயோ பாவம்' என்பார். 'சம்பந்தமில்லாமல்' என்று எப்படிச் சொல்ல முடியும்? உலகக் குழந்தைகள் அறியாமையால் ஓயாமல் பாவத்தில் மாட்டிக் கொள்வதை எண்ணி அவர் அனவரதமும் உருகுகிறார். அவ்வப்போது அவர்களில் அடியார்கள் எழுப்பும் தீனக்குரல் இவர் எங்கிருந்தாலும், என்ன செய்துகொண்டிருந் தாலும், எவரோடு பேசிக் கொண்டிருந்தாலும் இவர் காதில் விழுகிறது. ''அடியார்க்கு ஆ ஆ என்றிரங்கி'' என்று ஆழ்வார் சொன்னது போல், 'ஐயோ பாவம்' என்று ஓயாமல் பரிதவிக்கிறார். தம் எதிரில் இருப்பவர்களின் பாவத்தையும் அடிக்கடி நினைப்பார் போலும், பரிதாபத்துடன் 'பாவம், பாவம்' என்று கரைந்து கூறுகிறார்.

''பாவம், பரவாயில்லை'' தான்! பண்ணுருட்டித் தம்பதியர் அம்பாளுக்குச் சேலை கொண்டு வராவிட்டால் என்ன? இவரே தமது இடது உள்ளங்கையில் வலக்கை விரல்களை வைத்துத் தோல் உரிப்பதால் அதை எடுப்பது போல் பாவனை செய்கிறார். இல்லை, இல்லை, தோலை உரிக்கவில்லை! இவர் வலக்கை விரல் களால் இழுக்க இழுக்க இடக்கை உள்ளிருந்து ஓர் அருமையான சேலையே வந்துவிட்டது! அதைப் பார்வதி பொம்மைக்கு அணிவிக்கிறார்!

★

Koviloor Digital Library

குழந்தைகளின் பஜனை, ரத்னாகர ராஜுக்களின் நாடகம், ஸினிமா இவற்றோடு ஒரு டிராமா கம்பெனியார் வேறு வந்து டேரா அடித்தார்கள். அவர்கள் போட்ட நாடகங்களைவிட, மக்களைக் கூட்டம் கூட்டமாக ஈர்த்த அம்சம், நடிகைகளில் ஒருத்தியான ருஷ்யேந்திரமணி செய்த ஒரு சாகஸந்தான்.

எந்த நாடகமானாலும் சரி, கதைக்குப் பொருத்தமிருக்கிறதோ இல்லையோ இடையே இவள் வருவாள். தலைமீது ஒரு பாட்டிலை வைத்துக்கொண்டு அது விழாமலே நடனமாடுவாள். கொஞ்சம் கொஞ்சமாகத் தரையோடு தரையாகக் குனிந்து பூமி மீதுள்ள ஒரு கைக்குட்டையை வாயில் கவ்விக் கொண்டபடியே, பழையபடி எழுந்திருப்பாள். பாட்டில் அப்படியே தலைமேலிருக்கும். இதைக் கண்டு ரஸிக மஹா ஜனங்களின் உற்சாகம் கரைபுரண்டுவிடும்!

ஸத்ய நாராயணனும் வீட்டாரோடு சென்று இந்த சாகஸத்தைப் பார்த்து வந்தான். திரும்பிய பின் வீட்டில் இதேதான் பேச்சு. "இத்தனைக்கும் அதுவும் சிறுசுதான். எப்படியோ அசுர சாதனையாப் பழகிடுச்சு. வேறே யாரும் நினைச்சுக்கூடப் பார்க்க முடியுமா?" என்று சொன்னார்கள்.

"நினைச்சுப் பார்க்கிறதென்ன? நடத்தியே காட்டிட்டாப் போச்சு" என்று அலட்சியமாகச் சொன்னான் ஸத்யா.

தரையில் ஒரு கைக்குட்டையைப் போட்டான். தலையில் ஒரு பாட்டிலை எடுத்து வைத்துக்கொண்டான். அது விழாமலே எப்படியோ நிறுத்திக்கொண்டான். பல காலம் பழகியவனைப் போல ததிங்கிணதோம் போட்டு ஆடினான், குனிந்தான், கைக்குட்டையைக் கவ்வி எடுத்தான், நிமிர்ந்தான், நிர்த்தமிட்டான்! இத்தனை அண்ட கோளங்களும் எதில் 'பாலன்ஸ்' ஆகின்றன என்றே தெரியாமல் விசுவ நடனம் செய்கிற மஹாசக்தியில் ஒன்றுபட்டவன் பாட்டிலை 'பாலன்ஸ்' பண்ணுவது ஒரு அதிசயமா?

ஆனால் அவனுடைய ரகசியத்தைத் தெரிந்துகொள்ளாதவர்களுக்கு—இவன் அதைப் பூரணமாக அவிழ்த்துவிட்டால்தானே அவர்கள் தெரிந்துகொள்ளலாம்?—இது மஹா அதிசயமாக இருந்தது.

இனித் தங்கள் நாடகங்களிலும் அவன் இந்த பாட்டில் நாட்டியத்தைச் செய்தால், கம்பெனியார் கொட்டம் ஒடுங்கும், தாங்கள் தலை தூக்கலாம் என்று எண்ணினார்களோ என்னவோ? "ஸத்யா, இனிமேலே இந்த அயிட்டத்தை நம்ப டிராமாக்களிலே தவறாமல் சேர்த்து விடலாம்" என்றார்கள்.

"ஒருகாலும் முடியாது" என்று பளிச்செனச் சொன்னான் ஸத்யா. இரவல் சரக்கைக் கொண்டு அதன் அசல் சொந்தக்காரர்களுக்கே இடைஞ்சல் செய்யக் குழந்தையின் தர்ம உள்ளம் இடம் தரவில்லை. ஸத்ய தர்ம நாயகனன்றோ?

Koviloor Digital Library

இருந்தாலும் விட்டார் வெளியே சொல்லி ஊரெல்லாம் ஸத்யா செய்த சாகஸ நடனம் பிரசித்தி பெற்றுவிட்டது. அண்டையிலுள்ள கொத்தச்செறுவுவில் தேர்த் திருவிழா வந்தது. அவ்வூரார் ஸத்யாவிடம் வந்து பாட்டில் நாட்டியம் ஆடுமாறு கேட்டுக்கொண்டனர். டிராமாக் கம்பெனியாரிடமோ, ருஷ்யேந்திரமணியிடமோ இப்போது போட்டி ஏதுமில்லாததால் ஸத்யா ஒப்புக்கொண்டான். நாட்டியமாக இருப்பதால் பெண் வேஷத்தில் தோன்றினால்தான் நன்றாக இருக்கும் என்று முடிவாயிற்று.

திருவிழாவன்று பார்வதம்மாவும் வெங்கம்மாவும் தம்பியைச் சிங்காரித்ததுண்டே! 'மாதாய மாலவனே' என்றபடி கொண்டையும், திலகமும், கூடை நகையும், நாட்டியக் கட்டுமாக ஸத்யா கொத்தச்செறுவு சென்றான். விட்டாரும் உடன் சென்றனர்.

அப்போது அவ்வூரார் உற்சாக மிகுதியில் செய்த ஒரு 'திசமன்' தெரிந்தது. அதாவது ருஷ்யேந்திரமணியே அன்று நடனமாடப் போவதாக அவர்கள் சுற்றுப்புறம் முழுதும் விளம்பரம் செய்துவிட்டார்கள்! ஸத்யாவும், 'ஏதோ அசட்டு உற்சாகத்தில் செய்துவிட்டார்களே தவிர இதில் வஞ்சனையொன்று மில்லை. அவர்கள் தமாஷைக் கெடுக்க வேண்டாம்' என்று பேசாமல் இருந்து விட்டான்.

திரை விலகியது. ''ருஷ்யேந்திரமணி'' தலையில் பாட்டிலும் இடுப்பிலே கைகளுமாக நின்றாள். முன்னைவிட அழகாகவும், இளமையாகவும் ஆகிவிட்டாளே என்று அவையோரில் பலருக்கு ஆச்சரியம்.

டுப்ளிகேட் ருஷ்யேந்திரமணி ஒரிஜினலையே தூக்கியடிப்பது போல் வளைந்து, நெளிந்து, துள்ளித் தடுகுட்டமாக ஆடினாள்! அநாயாசமாகக் குனிந்தாள். அடடா, பழைய சாகஸத்தைவிட அசாத்திய சாகஸம்—கைக்குட்டை அல்ல, ஓர் ஊசியையே கவ்வி எடுக்கிறாள்! அதுவும் எப்படி? பல்லால் கவ்வவில்லை. இடது கண் இரப்பையாலேயே ஊசியைக் கொந்தி எடுத்துக்கொண்டு விட்டாள்!

அவை அல்லோல கல்லோலப்பட்டது.

சாதனை செய்தது புட்டபர்த்தி ஸத்யாவே என்று தெரிந்ததும், ரதோத்ஸவ ஸ்வாமியை மறந்து இவனுக்கே தேர் விழா நடத்திவிடுவார்கள் போலாயிற்று. ஆறுனப்பட்ட ருஷ்யேந்திர மணியை விழுங்கிவிட்ட பயல் நம் பக்கத்து ஊர்க்காரனையிற்றே என்ற அபிமானத்தில், அங்கே கூடியிருந்தவர்கள் வெள்ளிக் கிண்ணங்களையும் மற்ற பரிசுகளையும் அவன்மீது வருஷித்து விட்டனர்.

ஆயிரமாயிரம் மக்கட் கூட்டம் ஆரவாரித்தபோது ஓர் இதயம் மட்டும் ஒதுங்கி நின்றது. தாய் இதயம்தான் அது-

Koviloor Digital Library

''இத்தனை பேர் கண்படக் குழந்தை ஆடிவிட்டானே. திருஷ்டி தோஷம் வந்துவிடப் போகிறதே'' என்ற கவலை ஈச்வராம்பாளைப் பிடுங்கித் தின்றது.

ஈச்வராம்பா பயந்தபடியே ஆயிற்று.

புட்டபர்த்திக்குத் திரும்பியவுடன் ஸத்யாவின் செவ்வலரிக் கண்களில் குத்தல் வலி கண்டு அவை விருவிருவென விங்கின. இடைவிடாமல் கண்ணீரும் வழியலாயிற்று.

கண்வலியும், அதன் விளைவான கடுங்காய்ச்சலுமாக ஸத்யா படுக்கையில் சுருண்டு கிடந்தான். தென்றலில் தளிர்த்தாடிய ஒரு பசும் நாற்று திடுமென வைக்கோலாகிச் சாய்ந்து விட்டாற் போலிருந்தது. ஆனால் அவனோ முனகக் கூட இல்லை. பொறுமையின் உருவாக இருந்தான். தங்கள் 'குருவு' குருடாகிக் கிடப்பதைப் பார்த்துச் சிறுவர் பொருமினர்.

நாட்கள் ஓடின. ஒரு நாள் நள்ளிரவு. ஈச்வராம்பாவுக்கு உறக்கம் கொள்ளவில்லை. 'எந்த வைத்தியத்துக்கும் பிடிபடாமல் குழந்தை இப்படியாகிவிட்டானே?' என்று தவித்துக்கொண்டு இருந்தாள்.

அப்போது அவள் காதுகளில் கேட்டது ஓர் ஒலி! 'லொட்' 'லொட்' சப்தம். பாதக் குறட்டின் சப்தந்தான். சந்தேகமில்லை. ஆனாலும் இவள் கண்களுக்கு எவருமே தெரியவில்லை. ஆதியில் பாலன்னமிட்ட மாயத் தாத்தா தானோ?

'தன் கண்ணுக்குப் பாதம் தெரியாவிடினும் அதன் குறட்டொலி இதோ தன்னை சமீபிக்கிறது, பக்கத்தே வந்துவிட்டது தாண்டியும் சென்று ஸத்யாவை அடைகிறது'.

அதன் பிறகு லொட்டுச் சப்தம் இல்லை. இனம் தெரியாத அடர்த்தி செறிந்த ஒரு நிசப்தம்!

பிள்ளையிடம் ஓடினாள். அந்த 'கிண்டன்' ஒன்றையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் படுத்திருந்தான். அம்மாக்காரி அவனை அப்படியே பற்றி அணைத்துக் கொண்டாள். என்ன ஆச்சரியம்! காய்ச்சலுற்று வெந்துகிடந்த மேனி சந்தனமாக வியர்த்திருக்கிறது!

விளக்கை எடுத்து வந்து பார்த்தாள். கண் விக்கம் இருந்த இடம் தெரியாமல் வடிந்து விட்டிருந்தது. அலர்ந்த தாமரையுள் அமர்ந்த கருவண்டு போன்ற விழிகளால் அன்னையைக் குறு குறு என்று பார்க்கிறான் ஸத்யா.

ஆயினும் 'தாத்தா'வைப் பற்றி அவனிடம் தாய் ஒன்றும் கேட்கவில்லை. கேட்டாலும் சொல்லமாட்டான் என்று இவளுக்கே தெரிகிறது. வயிற்றில் பால் வார்த்து விட்டான். அது போதும்!

Koviloor Digital Library

பாதக் குறடு அணிந்து வந்தவரின் அருள்தான் என அன்னை வலிக்கிறாள். அன்றொரு நாள் பாலன்னம் ஊட்டிய பாட்டனாரின் நினைவு வருகிறது. அன்று பசி தீர்த்த தாத்தாவேதான் இன்று பார்வை தந்திருப்பவர் என உறுதி பிறக்கிறது.

*

பன்னிரண்டாம் வயதில் ஸத்ய நாராயணன் ஹைஸ்கூல் சேர வேண்டியதாயிற்று. அவன் படிப்பில் ரொம்பத் துடியாக இருந்ததால், எத்தனை கஷ்டப்பட்டாகிலும் அவனை பி.ஏ. ஆக்கிச் சர்க்கார் ஆபீஸராகச் செய்துவிட வேண்டுமென்பது பெற்றோர் ஆசை.

* * *

நம் ஸ்வாமி திருவிட பெங்களூர் கல்லூரியில் 1972 யுகாதி விழாவில் பேசிய புத்திசாலியான ஸதிஷ் சந்திரா என்ற மாணவர் 'இந்தக் கல்லூரியில் படிக்கும் எல்லா மாணவரும் பி.ஏ. பெற்று விடுவதொன்றும் விசேஷமில்லை. அது எல்லாக் கல்லூரி மாணவரும் பெறுவதுதான். எங்களுடைய விசேஷம் என்னவென்றால் பி.ஏ.வுக்குப் படிக்கும்போதே டபுள் பி.ஏ. ஆக BA BA எங்களுக்குக் கிடைத்திருப்பதுதான்' என்றார்.

பி.ஏ. படிக்கப் போகாத இந்த டபுள் பி.ஏ.க்காரரை ஹைஸ்கூல் அனுப்ப ஏற்பாடாயிற்று. வீட்டார் 'எத்தனை கஷ்டப் பட்டாகிலும்' அவனைப் படிக்க வைப்பதாகச் சொன்னது அர்த்த புஷ்டி வாய்ந்தது. ஏனெனில் எதிர்பாராத சூழ்நிலையால் இப்போது அக்குடும்பம் மிகவும் நொடித்துப் போயிருந்தது.

ஸத்ய நாராயணனின் மூத்த சகோதரர் சேஷம ராஜு கடப்பை ஜில்லா கமலாபுரத்தில் திருமணமாகி, வேட்டகத்தில் இருந்து வந்தார். வேறு வழியின்றி ஸத்யாவையும் அங்கேயே படிப்புக்கு அனுப்பிவைக்கும்படி ஆயிற்று.

புட்டபர்த்தி வெறிச்சோடியது. கண்ணனில்லாத பிருந்தாவனம்தான்.

அவனது அருமை பெருமை தெரியாத அண்ணனின் வேட்டகத்தில் அடிமைபோல் வேலை செய்து வந்தான் கிடைத்தற்கரிய ஸத்யா.

கமலாபுரத்தில் தண்ணீர்ப் பஞ்சம். தண்டச்சோறு சாப்பிடும் சம்பந்தி வீட்டுப் பிள்ளையிடமே வீட்டின் தண்ணீர் சப்ளை வேலை முழுவதையும் கருணைகூர்ந்து அளித்திருந்தனர்.

ஸத்யா காவடிபோல் ஒரு கம்பில் இருபுறமும் குடங்களைக் கட்டித் தோளின்மேல் வைத்துக்கொண்டு எங்கோ போய், ஓர் அகாதக் கிணற்றிலிருந்து நீர் சேந்தி வருவான். ஏகநாதருக்குக்

Koviloor Digital Library

கண்ணனே 'கண்டியா கிருஷ்ண'னாக வந்து செய்த அதே தண்ணீர்ச் சேவை. ஆனால் இவர்களுக்கு ஏகநாதரின் நெஞ்சு விளக்கம் இல்லையே!

படிப்புக்கிடையே, சற்றும் முணமுணக்காமல் மலர்ச்சியோடு குடம் குடமாக நீர் கொண்டுவந்து கொட்டிய குழந்தை, ஒரு நாள் ஏதோ உற்சாகத்தில் அந்த வீட்டிலுள்ள ஆடும் நாற்காலி யில் அமர்ந்து முன்னும் பின்னும் ஆடி மகிழ்ந்தான்.

இதைக் கண்டதும் சேஷம ராஜுவின் மைத்துனர் சுப்பா ராஜுவுக்கு ஆத்திரம் பொங்கியது. "ஏ பயலே! என்ன கொழுப்பு உனக்கு? பெரியவங்க உட்காருகிற நாற்காலியில் உட்கார்ந்து ஆடறே! இந்த வீட்டிலே அது ஒண்ணுதான் நாற் காலி, அதை உடைச்சுத் தொலைச்சிடுவே போலிருக்கே. பெரிய ராஜகுமாரன், நாற்காலி கேட்கிறதோ நாற்காலி?" என்று கையை ஓங்கிக்கொண்டு போனார்.

ஸத்யா ஒரு துள்ளுத் துள்ளினான். வாசலில் நின்றான். இள நெஞ்சில் ரோஷம் வெடித்து வந்தது. "பாவா, என்னை என்னமோ நினைச்சுப் பேசிப்பிட்டீங்க. நான் ராஜகுமாரனு, அதுக்கும் மேலேயான்னு ஒரு நாள் காட்டாட்டாப் பாருங்க! வெள்ளி வைச்சு இழைச்ச நாற்காலியிலே, சிம்மாசனத்திலே இந்த ஸத்யா உட்காரத்தான் போறான், அதை நீங்களும் பார்க்கத் தான் போறீங்க!" என்று சிங்கக்குட்டியாகக் கர்ஜித்தான்.

"லே! டிராமாவிலே நடிச்சு நடிச்சு டயலாக்கா பேசறே. வீட்டிலே அடுத்த வேளை சோற்றுக்கு வழியில்லை—வெள்ளிச் சிம்மாசனத்துலே உட்காருவாராமில்லே . . ." என்று அவர் உத்தண்டமாகச் சொல்கையில் சேஷம ராஜு வந்துவிட்டார். என்ன இருந்தாலும் மாப்பிள்ளை என்பதால் மைத்துனர் வாய் மூடிற்று.

அண்ணா இல்லாத சமயத்தில்தான் தம்பியை அவர்கள் வேலை வாங்குவது, கரித்துக் கொட்டுவது எல்லாம். இவற்றை அவன் தமையனிடம் சொல்லமாட்டான் என்று அவர்களுக்கு ஒரு நம்பிக்கை. அதன்படியே ஸத்யாவும் தனக்கு உப்பிட்ட வீட்டாரைப் பற்றிக் கடுகளவும் வெளியே சொல்லியதில்லை.

மேலே சொன்ன சம்பவம் வெளிவந்ததே ஒரு சுவாரஸ்ய மான சூழ்நிலையில்தான். அதைப் பின்னால் பார்ப்போம்.

Koviloor Digital Library

அத்தியாயம்—12

சாரணன் ஸத்ய நாரணன்

பிறருக்குதவவே நதிகள் பெருக்கிடுகின்றன
பிறருக்குதவவே தருக்கள் பழுக்கின்றன
பிறருக்குதவவே பசுக்கள் சுரக்கின்றன
பிறருக்குதவவே நமக்கு உடல் வாய்த்துளது.

— வடமொழி நல்வாக்கு

உயர்நிலைப் பள்ளி அல்லவா? பசங்கள் சிலருக்குக் காளைப் பருவமாகக் கூட இருக்கும். அதனால் தப்பு, தண்டா செய்வதிலும் 'உயர்நிலை' அடைந்தவர்களாக இருப்பார்கள். பீடி, சிகரெட், குப்பைப் பத்திரிகைகள்—இத்யாதி, இத்யாதி இல்லையா? இவற்றால் கெட்டுப் போவார்கள்.

ஸத்யாவோ வயதில் சிறியவன். பார்வைக்கும் அவனுக்கான வயதை விடவே குழந்தையாக இருப்பான். மெலிந்த பொடியனாக இருப்பவன். இருந்தாலும் அவனுக்கு ஓர் அற்புதமான, அழுத்தமான அதிகார சக்தி மற்றப் பெரிய மாணவர் மீதும் இருந்தது. புகை பிடிப்பது, சூதாடுவது போன்ற ஒழுக்கவீனங்களில் அவர்கள் போகாமலிருக்க ஸத்யா தன்னாலானதெல்லாம் செய்வான்.

புகை பிடிக்கும் வழக்கத்தின் அதி தீவிர எதிரி ஸத்யா. இன்றைக்கும் நம் நூல் நாயகர் இவ்விஷயத்தில் மிகக் கண்டிப்பு. அதும் கண்டிப்பே பரம ஹாஸ்யமாக, அந்த ஹாஸ்யத்திலேயே உட்புகுந்திருக்கும் அற்புத அருளாக, பரிணமித்த ஸமீப கால லீலை ஒன்றை இங்கேயே பார்த்து விடுவோம்.

* * *

1973-ம் ஆண்டு. பெங்களூரை அடுத்த "பிருந்தாவன"த்தில் மாணவர்களின் கோடைப் பயிற்சி பாபாவின் அருளாதரவில் நடைபெறுகிறது.

Koviloor Digital Library

மாணவர்களில் ஒருவன் சங்கிலித் தொடராகப் புகை பிடிப்பவன்.

புகை, மது, மாம்சம், மாதரிடம் தரக்குறைவான நடவடிக்கை, ஸினிமா, கிருதா மீசை, லுங்கி போன்ற விசித்ர வேஷம்—ஆகிய சம்பந்தமுள்ளோருக்கு இம்முகாமில் இடமில்லை என்று முதல் நாளே பாபா எச்சரிக்கிறார்.

அப்படியும் இந்த மாணவனால் தன் புகைப் பழக்கத்தை விட முடியவில்லை. பாபா இவனைத் தனிப்படவே அழைத்துக் கண்டிக்கிறார். அவருக்கு எப்படித் தெரிந்தது என்று வியக்கிறான். சக மாணவர் எவரேனும் கோள் சொல்லிக் கொடுத்து அவர் அறிந்திருக்கக் கூடும் என்று தன் 'விஞ்ஞான மூளை'யால் வியாக்யானம் செய்து கொள்கிறான். ஆயினும், ''இனி புகைப்பதில்லை'' என்று அவரிடம் சத்தியம் செய்கிறான்.

பிறகு ஒரு நாள் வகுப்பு தொடங்கு முன், எந்த மாணவனுமே அறியாதபடி, கோசாலைக்குப் பின்புறம் சென்று பரம ஏகாந்தமாகப் புகைத்து மகிழ்கிறான். பழக்க 'வாசனை' சக்தியத்தைத் துரத்திவிட்டது! 'ஒவ்வொரு ஜீவனின் ஒவ்வோர் இமைக் கொட்டுதலையும் இறைவன் எண்ணி வைத்துக் கொண்டிருக்கிறான்' (ஸங்க்யாதா அஸ்ய நிமிஷோ ஜனானாம்) என்ற வேதவாக்கு விஞ்ஞான மூளைக்கு ஒப்புமா? ரகசியத்தில் இறைவனை ஏமாற்ற எண்ணிவிட்டான்.

பாபா எப்போதும் பிறர் குற்றத்தை அந்தரங்கமாகவே பன்முறை எடுத்துரைப்பார். அப்படிக் கூறியும் அவர்கள் திருந்துவதற்கு மனப்பூர்வமாகப் பிரயாசை எடுக்கவில்லை எனக் கண்டால் பகிரங்கமாகவே கடிந்து கொண்டுவிடுவார். இன்று அப்படித் தான் நடந்தது. ஆத்மீய கலாசார வகுப்புகள் நடக்குமிடத்துக்கு பாபா வந்து, அனைவர் முன்னிலையிலும் அம்மாணவனைக் காட்டி, "தவறு செய்தது மட்டுமின்றி, தவற்றைத் திருத்திக்கொள்வதாகத் தந்த சத்திய வாக்கை மீறிவிட்ட மாபெரும் தவற்றையும் செய்திருக்கிறான்'' என்றார்.

சகமாணவருக்கு முன் தன்னை அவர் அவமானப்படுத்திவிட்டதாக அந்த விடலையின் இளரத்தம் கொதித்தது. அந்த வேகத்தில் மூன்றாவது தவற்றையும் செய்துவிட்டான். ''நான் வாக்கை மீறவே இல்லை'' என்றான்.

பாபா சிரித்தார். கோபச் சிரிப்பல்ல. அன்புச் சிரிப்பாகவே இருந்தது. ''எனக்கு வேண்டியதும் அதுதான் நாயனா!'' என்று பிரியம் சொட்டக் கூறினார். ''சரி, இந்தா... ஃபோட்டோ தருகிறேன்'' என்று சுந்தரக் கையை அந்தரத்தில் சுழற்றினார்.

பாபாவின் ஸர்வக்ஞத்வத்தையும் ஸர்வாந்தர்யாமித்வத்தையும் அம்மாணவன் ஒப்பாவிடினும், அவருக்குத் தெய்வத்

Koviloor Digital Library

திரு உருவப் படங்களை சிருஷ்டித்து வழங்கும் ஆற்றல் இருப்பதைப் பன்முறை கண்டிருப்பதால், ''இது ஏதோ ஒரு வித்தை'' என்றே எண்ணினான். இப்போது தன் பொய்யை அவர் மெய்யென நம்பி, தன்னைக் கடிந்து கொண்டதற்குப் பரிகாரமாகவே அவரது புகைப்படத்தையோ, அல்லது வேறு ஏதேனும் தெய்வ வடிவத்தையோ அளிக்கப் போவதாக எண்ணிக் கை நீட்டியபடி, அவரது அங்கையில் உருவான புத்தம் புது புகைப்படத்தில் கண்களைப் புதைத்தான்.

எல்லா மாணவர்களின் கண்களும் அப்படத்தில்தான் பதிந்தன. மறுகணமே அவர்களது கண்டங்கள் ''ஜெய் ஸாயி ராம்'' என்று வியந்து கூவின.

நம் சூராதி சூர மாணவனின் நாவோ வற்றியே விட்டது; புகைப்படத்தைக் கண்ட கண்கள் வற்றாமல் சுரந்தன.

ஏன்?

அவர் சிருஷ்டித்த புகைப்படம் அவருடையது அல்ல. இந்த மாணவனின் புகைப்படமே தான் அது. ஆம் ''புகை''ப் படமேதான்! ஒரு சில நிமிஷங்களுக்கு முன் இவன் புகை பிடித்தானே, அதே திவ்யக் கோலத்தை இவர் ஃபோட்டோவில் ''பிடித்து'' எல்லா மாணவருக்கும் இவனது 'அக்னிஹோத்திர தரிசன'த்தைக் காட்டுகிறார். இன்று இவன் அணிந்துள்ள இதே உடுப்பு. பின்புறம் கோசாலைகூட சந்தேகமில்லாமல் தெரிகிறது! எந்தக் காமிராவால், எந்த ஃபிலிமில் படம் எடுத்து எந்த ஸ்டுடியோவில் பிரிண்ட் போட்டார் என்று விஞ்ஞான மூளை விலவிலக்கிறது.

விலவிலப்பை விலக்குகிறது ஸாயி நாதனின் கருணை கடாக்ஷம்.

இன்று மனமார மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறான் மாணவன், மாநவனாக வந்த மாதவனிடம்.

இப்படி பாபா திருத்திய இளைஞர்கள் அன்றிலிருந்து இன்றுவரை எத்தனையோ பேர்!

★

ஸத்யாவின் பால்யத் தோழர்களில், புக்கபட்டணத்தில் படித்த நாகேசம், ஸத்யநாராயணா என்ற இருவரையும், கமலாபுரம் சிரஸ்ததாரின் இரு பிள்ளைகளையும் விசேஷமாகச் சொல்லவேண்டும்.

நாகேசமும், ஸத்யநாராயணாவும் அப்பள்ளியிலேயே ஆசிரியராக இருந்த சுப்பண்ணாவின் மக்கள். நாக சயனனான ஆதித்ய நாராயணனே தங்களுடன் படித்த ஸத்ய நாராயணன்

Koviloor Digital Library

என்று பிற்காலத்தில் உணர்ந்த பாக்கியசாலிகள். அக் காலத்தில், அதாவது முப்பத்தாறுண்டுகளுக்கு முன், அவரே தம்மை அவதார புருஷராக அறிவித்துக்கொண்டபோதிலும் ஊராரில் பலர் அதை நம்பத் தயாராக இல்லைதான். இவ்விருவருக்கும் இறையருளால் அந்த நம்பிக்கை இருந்தது.

சிறு வயதிலேயே இவ்விருவரும் இரண்டாவது உலக மகா யுத்தத்தில் ஜவான்களாகச் சேர்ந்தார்கள். இமாலய வடகிழக்கு எல்லையில் இவர்களது ராணுவப் பிரிவு முகாமிட்டிருந்தபோது ஒருநாள் ஒரு பெட்ரோல் டாங்கு பற்றிக் கொண்டு, அந்த முகாமெங்கும் நெருப்புப் பரவியது. நாகேசமும், ஸத்யநாராயணுவும் 1500 மைல்களுக்கு அப்பாலே இருந்த தங்கள் பழைய சகா, இன்றைய தெய்வம், ஸத்யாவை நினைத்துக் கதறினார்கள். அத்துணை தொலைவு தாண்டி வந்து கதறல் பால ஸாயியைத் திண்டியது. உடனே தமது ஸ்தூல சரீரத்தைப் புட்டபர்த்தியில் கட்டையாகக் கிடத்தி விட்டு சூக்ஷ்ம சரீரத்தில் நேஃபா எல்லைக்கு ஒரே நொடியில் வந்துவிட்டார். பரவி வந்த நெருப்பு வெள்ளம் பள்ளித் தோழரின் டேராவைத் தொடாமலே அணைபோட்டாற் போல் சடக்கென நின்று அணைந்தும் போயிற்று!

தமது சூக்ஷ்ம சரீர யாத்திரைகளை அபூர்வமாகவே வெளியிடும் பாபா, இச்சமயத்தில் மட்டும் புட்டபர்த்தி சரீரத்துக்குள் மீளப்புகுந்ததும், தாம் இமய எல்லை சென்று இயமனின் எல்லைக்கே போய்விட்ட இரு பால்யத் தோழரைப் பாலித்து வந்ததாகத் தெரிவித்தார்.

சில ஆண்டுகளுக்குப் பின் 1945—ல் யுத்தம் முடிந்து திரும்பி வந்த அவ்விருவரும் மற்ற அடியாருக்கு இச் சம்பவத்தை விரித்துரைத்தனர்.

"No more fires!" ("இனி நெருப்பு விபத்தில்லை!") என்று கூறி ஐயன் புரிந்த இதேபோன்றதொரு காப்பைப் பின்னால் ஓர் அத்தியாயத்தில் பார்ப்போம்.

* * *

கமலாபுரம் சிரஸ்ததார் வீட்டுப் பிள்ளைகளுடன் ஸத்யா பாட்மிண்டன் விளையாடுவான். படிப்பைப் போல் விளையாட்டிலும் கெட்டிக்காரனாக இருந்த அவன்மேல் டிரில் மாஸ்டருக்கு ஒரு கண். இவர்தான் அங்கு ஸ்கௌட்—மாஸ்டரும் கூட. ஸத்யாவை எப்படியாவது தம் சாரணர் படையில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று அவருக்கு ஆசை. அந்தக் காலத்துப் பெற்றோர்களுக்குச் சாரண இயக்கமெல்லாம் அவ்வளவாகப் பிடிக்காது. சீருடை, முகாம் செலவு முதலியவற்றுக்குப் பணம் தர வேண்டுமல்லவா? இதைப் பெரியவர்கள் விரும்புவதில்லை. 'படிப்புக்கான பொழுதை சமூகசேவை என்று சொல்லிக்கொண்டு வீணடிப்பதற்கே இந்த ஸ்கௌட்

Koviloor Digital Library

வந்திருக்கிறது' என்பார்கள். இதனுல்தான் ஊருக்கெல்லாம் ஒளிவிளக்காயிருந்த ஸத்யா ஸ்கௌட்டாகிவிட்டால், பல பெற்றோர் அதற்கு ஆதரவு தந்து தங்கள் பிள்ளைகளையும் சேர்ப்பர் என மாஸ்டர் நம்பினுர்.

ஏற்கெனவே சாரணப்படையிலிருந்த சிரஸ்ததார் பிள்ளைகளின் மூலம் ஸத்யாவுக்கு அடிக்கடி தூது விட்டார். பிறர் சொல்லாமலே சமூகப்பணி ஸத்யாவுக்கு மிக மிகப் பிடித்த மானதுதான். ஆனுல் வீட்டின் வறுமை நிலையில், சம்பந்தியகத்தில் மானத்தைத் துறந்து அவன் இடிசோறு உண்டுகொண்டிருக்கும்போது, பள்ளிக் கட்டணத்துக்கு அதிகமாக ஒரு பைசாவுக்குக்கூட எங்கே போவான்? இந்த அவல நிலையைச் சொல்லாமலே மாஸ்டரின் தூதுக்கு அவன் பிடிகொடுக்காமலிருந்து வந்தான். காரணத்தை அவர்களும் ஊகித்து விட்டார்கள்.

ஒரு நாள் ஸத்யா தன் பள்ளி டெஸ்கைத் திறந்தபோது உள்ளே புத்தம் புது சாரணர் சீருடையைக் கண்டான்!

"எங்களுக்கெல்லாம் என்னென்னவோ வரவழைத்துத் தரும் உனக்கேயென்றுதான் ஸத்யம்மா இதை வைத்திருக்கிருள். நீ ஸ்கௌட் ஆகவேண்டுமென்று அம்மா உத்தரவு" என்று சிரஸ்ததார் பிள்ளைகள் மடக்கினர்.

அற்புத சக்தியால் தனக்கென நேராக எந்த லாபமும் அவன் பெறமாட்டான் என்பது அவர்களுக்குத் தெரியாது. சீருடை முளைத்தது சிரஸ்ததார் சிறுவரின் சூழ்ச்சியே என்று ஸத்யா புரிந்துகொண்டான். அந்தச் சூழ்ச்சிக்குள்ளிருந்த தூய அன்பைப் போற்றினுன். சாரணப் படையில் சேர்ந்து விட்டான்.

புஷ்ப கிரியில் பெரிய கால்நடைக் காட்சியும் சந்தையும் நடந்தது. அதில் குடிநீர் விநியோகம், சுகாதாரப் பாதுகாப்பு, முதலுதவி, காணுமற்போகிற குழந்தைகளின் மீட்பு ஆகியவற்றுக்காகச் சாரணப்படை முகாமிட்டது. அதற்கான கட்டணம் ரூபாய் பத்து. ஸத்யாவிடமோ செல்லாக் காசு கிடையாது; கேட்பதற்கும் மனிதரில்லை.

பிரேமையோடு சேவை செய்வதற்கும், மற்ற மாணுக்கருக்குத் தொண்டில் வழிகாட்டுவதற்கும் வாய்த்த இச் சந்தர்ப்பத்தை நழுவவிட ஸத்யா விரும்பவில்லை. சிறிது யோசித்து விட்டு மாஸ்டரிடம், "என் பஜனைக்க புஷ்பகிரிக்கு வராங்க. நான் அவங்களோட வந்துக்கறேன். அவங்களோடேயே சாப்பாடும் வைச்சுக்கறேன். 'காம்ப்'பிலே நீங்க சொல்கிற வேலை களை மட்டும் செய்யறேன்" என்ருன். அவரும் ஒப்புக்கொண்டார்.

இப்படியாகத்தானே பிரயாணம், மெஸ் இவற்றுக்கான கட்டணத்தைத் தவிர்த்துவிட்டான். கையில் ஏதோ கொஞ்சம்

Koviloor Digital Library

யில்லாறையிருந்தால் போதும் எனத் தீர்மானித்தான். அதற்காக முந்தைய வருட பாட புத்தகங்களை—இவன் அவற்றைப் பிரித்தும் பாராமலேதான் முன்னனியில் தேறியிருந்ததனால் அவை புத்தம் புதிதாகவே இருந்தன—ஓர் ஏழை மாணவனுக்கு விற்ருன். அவன் கொடுத்த பன்னிரண்டு ரூபாயை மிக அதிகம் என்று கூறி மறுத்து, முகாம் செலவுக்கான ஒரு சிறு தொகை மட்டுமே வாங்கிக்கொண்டான்.

ஆனால் உண்மையில் இவனுடைய 'மனுஷங்க' யாரும் சந்தைக்குப் போகவில்லையே! அப்படியானுல் இவன் பிரயாணச் செலவுக்கு என்ன செய்தான்? பஸ்ஸில் போகாமல் அந்தப் பல காவதங்களும் தன் பாததாமரைகள் நொந்திடப் பார் மிசை சென்று, அப்படியே திரும்புவது என்று தீர்மானித்து விட்டான். சாப்பாடு? பட்டினி கிடந்து விட்டால் போச்சு. ''தாத்தா'' போட்டால் போடுகிருர் என்றிருந்து விட்டான் போலும்! இல்லாவிட்டால் ஏதோ பழம், கிழங்கு, வேர்க் கடலையில் நாளைப் போக்கத்தான் இந்த ஒரு சில ரூபாய் களோ என்னவோ? சமூக சேவைக்காக இளம் ஸத்யா இப்படித் தியாகம் செய்து காட்டியிருக்கிருன்.

இன்றும் அவரது சர்வதேச ஸ்தாபனங்களுக்கு 'ஸத்ய ஸாயி சேவா சமிதி' என்றே பெயர் இருப்பது குறிப்பிடத் தக்கது. சமூக சேவை பற்றிய அவரது அருள்வாக்குகளை இச் சரிதையில் பிற்பாடு ''பிரேம ஸாயி'' என்ற அத்தியாயத்தில் பார்க்கலாம். சுருக்கமாகச் சொன்னுல், இறைவனின் பிரேமையை நாம் பெற அருகதை உண்டாக வேண்டுமானுல் அந்த இறைவன் படைத்த உயிரினம் அனைத்திடமும் நாம் பிரேமை பொழிய வேண்டும், சேவையைச் சொரிய வேண்டும் என்பார்.

இந்தப் பிரேமையின்பொருட்டே ஸத்யா புஷ்பப்பாதம் நோகப் புஷ்பகிரிக்குச் சென்ருன். கால்நடையாகவே கால்நடைக் காட்சியைச் சென்றடைந்தான்.

கைப்பையைத் தலையணையாக வைத்துக்கொண்டு ஆற்றங் கரையில் அயர்ந்து தூங்கினுன். எத்தனை அயர்வு என்ருல், காலை எழுந்து பார்க்கும்போது பையும் அபேஸ், அதிலிருந்த பைசாவும் அபேஸ்!

எதையும் அறியும் ஸத்யாவும் அறியமாட்டாமல் எவரோ அவனிடமே களவு செய்தது பக்தருக்குப் புரியாத விந்தை! (பிற்பாடு அவதார மர்மங்களைச் சற்று ஆராயும்போது புரிந்து கொள்ள முயலலாம்.)

பணம் பறிபோனதற்காக ஸத்யா மனம் தளர்ந்துவிட வில்லை. தன் பாட்டில் சந்தையை நோக்கி நடந்தான். வழியே ஒரு கல் தொட்டியின்மேல் கேட்பாரற்று ஓர் அணு வைத் திருந்தது. அது எதற்கு என்று ஸத்யா புரிந்துகொண்டிருக்க

Koviloor Digital Library

வேண்டும். எனவே அதை எடுத்துக்கொண்டான். சந்தையுள் நுழைந்தான்.

அங்கே ஒருவன் அதிருஷ்டப் பரிசு விளையாட்டு நடத்திக் கொண்டிருந்தான். அதாவது, அவன் ஒரு கட்டம் போட்ட துணியை விரித்துப் போட்டிருந்தான். கட்டங்களில் சிலவற்றில் சில இலக்கங்கள் எழுதப்பட்டிருந்தன. மற்ற கட்டங்கள் காலியாகவே விடப்பட்டிருந்தன. துணியின் நடுவே வட்டமாகச் சுற்றும் நீண்ட ஊசி ஒன்று ஒரு ஸ்டாண்டில் பொருத்தப்பட்டிருந்தது. அதிருஷ்டப் பரிசு விரும்புவோர் அவனுக்கு ஓரணா போட்டுவிட்டு, ஊசியைச் சுற்றிவிடவேண்டும். அது சுற்றிவிட்டு முடிவில் எந்தக் கட்டத்துக்கு நேராக வந்து நிற்கிறதோ, அந்தக் கட்டத்திலுள்ள இலக்கத்துக்குரிய பங்கு சேர்த்து அவன் பரிசு கொடுப்பான். அதாவது "இரண்டு" என்ற இலக்கத்தின் மேல் நின்றால் இரண்டணா திருப்புவான், மூன்றுக்கு மேல் நின்றால் மூன்றணா கொடுப்பான். இலக்கே இல்லாமல் பல கட்டங்களை விட்டிருந்தானே, அவற்றின் நேரே நின்றால் ஏதுமே தரமாட்டான். ஓரணா அவனுக்கே கிரணமாகிவிடும்!

போட்டிப் பந்தயங்களை . அறவே வெறுப்பவன் ஸத்யா. இருந்தாலும் இப்போது அவதார விசேஷத்துக்கு மாறாகக் கைப்பொருளைக் கோட்டைவிட்டாற்போல், இந்த விளையாட்டிலும் அவன் மனம் சென்றது. அதிருஷ்ட விளையாட்டில் இவன் கையிலிருந்த ஒரே அணாவைப் போட, அது பலவாகத் திரும்பியது. போடப் போட மேலும் பலப் பலவாகத் திரும்பிற்று. விளையாட்டு நடத்தியவனே விலவிலத்துப் போனான். 'பாவம், அவனை மேலும் கஷ்டப்படுத்த வேண்டாம், தன் செலவுக்கு இது போதும்' என்று கருதிய ஸத்யா அதோடு நிறுத்திக்கொண்டான்.

கால்நடைக் காட்சியில் உற்சாகமாகப் பணிபுரிந்தான். அவன் தலைமையில் மற்றப் பிள்ளைகளும் அயனான சேவை செய்து மாஸ்டருக்கு நல்ல பெயர் வாங்கித் தந்தனர். அவர்களோடு ஓடியாடி வேலை செய்துவிட்டு, அவர்கள் உண்ணப் போகும் போது, ஸத்யா நழுவிவிடுவான்!

கடைசியில் அவர்கள் சந்தை கலைந்து கமலாபுரத்துக்குத் திரும்பியபோதும் அவர்களிடமிருந்து நழுவினான். அடி சோரத் தொலைதூரம் நடந்து கமலாபுரம் திரும்பினான்.

இதையெல்லாம் பற்றிப் பிற்காலத்தில் அவர் கூறும் போது அடியார் ஒருவருக்கு, "நம் ஸ்வாமி தமது மாஸ்டரிடம் தன் மனிதர்களோடு வருவதாகவும் உண்பதாகவும் பொய் சொல்லியிருக்கலாமா?" என்ற சங்கை எழுந்தது. உடனே ஸ்வாமி சிரித்து, "உலகத்திலுள்ள அத்தனை பேரும் என் மனிதர்கள்தானே? சந்தைக்கு நடந்துபோய், அங்கே பட்டினி கிடந்த பிச்சைக்காரர்களும் என் மனிதர்கள்தான்.

Koviloor Digital Library

அவர்களில் ஒருத்தனுக இருந்தேன். சாப்பிடாமலே எப்படிக் களைப்பில்லாமலிருந்தேன் என்ருல், என் ஆகாரம் நல்லவர் களின் ஆனந்தம் தான். குற்றமற்ற எளிய மக்கள் பலர் சந்தைக்காட்சியில் கண்ட இன்பமே எனக்கு உணவாக இருந் தது'' என்ருர். ''மீ ஆனந்தமே நா ஆஹாரமு'' என்று பக்தர்களிடம் பாபா பகரும் அழகுண்டே!

இதன்பின், சாரணப்படைச் செலவுக்காகக் கவித் தொழிலில் இறங்கினுன் ஸத்யா! கமலாபுரத்தில் கோடே சுப்பண்ணு என்பவர் மருந்துகள், கண்ணுடிச் சாமான்கள், குடைகள் உள்படப் பலவிதமான பண்டங்களை விற்கும் கடை வைத்திருந்தார். புதுப்பண்டங்களை அறிமுகப்படுத்துவதற்காகச் சிறுவர்களைத் தெருத் தெருவாக விளம்பரப் பாட்டுக்கள், 'ஸ்லோகன்'கள் கூவிச் செல்லச் செய்வதுண்டல்லவா? ஸத்யாவின் கவித்திறனைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்த சுப்பண்ணு அவனிடம் இப்படிப்பட்ட பாட்டுக்களையும் வாசகங்களையும் இயற்றித் தரும்படி கோரினுர். ஸத்யாவும் கடல்மடையாக இயற்றித் தந்தான். சிறு பிள்ளைகள் கேள்வி — பதிலாகவும், பாட்டாகவும் கூவிச்சென்ற இந்த 'சாகித்ய'ங்களில் சிலவற்றைப் பிற்காலத்தில் அவர் பாடிக் காட்டுவதுண்டு.

இப்படியாகத்தானே, சுயவிளம்பரத்தைக் கட்டோடு வெறுக்கும் நம் நூல் நாயகர், பாலகாண்டத்தில் கோடே சுப்பண்ணுவின் சரக்கு விளம்பரத்துக்காக ஆஸ்தான கவி யாகி, அவர் தந்த சம்பளத்திலிருந்து ஸ்கௌட் செலவு மற்றும் தம் உடுப்பு முதலியவற்றுக்கான செலவுகளைச் செய்து வந்தார்.

அண்ணன் சேஷமராஜு வேட்டகத்திலிருந்து விடைபெற்று ஆசிரியப்பயிற்சிப் படிப்புக்காக வேற்றூர் சென்று விட்டார். அண்ணியின் அண்ணன் முதலானோரிடம் சிறுமைப்பட்டான் சிறுவன் ஸத்யா. இருந்தாலும் கமலாபுரம் முழுவதிலும் அவனுக்கொரு தனிப்பெருமை இருக்கத்தான் செய்தது. ''உரவகொண்டாவில்தான் பாபா தம் சுய உருவம் கொண் டார் என்ருலும், கமலாபுரத்திலேயே தம் கீர்த்திக் கமலத்தை இதழ் விரிக்கத் தொடங்கிவிட்டார்'' என்று அவ்வூர்வாசிகள் பிற்காலத்தில் பெருமிதப்பட்டுக் கொள்வதுண்டு!

''உரவகொண்டா'' என்ருல் 'உரகமலை,' 'பாம்புமலை' எனலாம். நாமும் அங்கே போக வேண்டியதுதான். பாம்பின் பெயர் கொண்ட சேஷம ராஜு பயிற்சி முடிந்து, இப் பாம்புமலைக்குச் சென்று, அங்குள்ள பள்ளியில் தெலுங்கு ஆசிரியராகி யிருக்கிருர். புற்றிடம் கொண்ட புட்டபர்த்தீசனை யும் தம்மிடம் வந்து விடும்படி அழைப்பு விட்டிருக்கிருர். அந்த அழைப்பு நமக்குந்தானே?

Koviloor Digital Library

அத்தியாயம்—13

"செப்பினட்லு சேஸ்தாரா?"

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்

— ராமலிங்க ஸ்வாமிகள்

யானை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே! ஸத்யா உரவகொண்டாவுக்கு வருமுன்னரே அவனது புகழ் அங்கு பரவி விட்டது. எனவே அவன் வந்தவுடன் ஊராரின் நாவிலெல்லாம் 'தெலுங்கு பண்டித'ருடைய 'தம்முடு'வின் பிரதாபமே அலை வீசியது. பள்ளிக்கூடத்தில் பத்தாவது வகுப்பு ஆசிரியர்களில் ஒவ்வொருவரும் தாங்கள் போதிக்கும் ஸெக்ஷனிலேயே ஸத்யா இடம் பெறவேண்டும் என்று போட்டி போட்டனராம்!

ஸத்யாவின் அழகான பிரார்த்தனையுடன்தான் தினமும் பள்ளி தொடங்கும். சின்னவண்டுபோல் அந்தக் காலத்தில் ஸத்யா பாடிய துதிகள் பள்ளியைப் பாவனப்படுத்தின. அவன் பக்தியில் முதல், படிப்பில் முதல், சடுகுடுவில் முதல், நாடகத்திலும் முதல்.

ஸத்யாவிடம் அத்யந்த பிரியம் கொண்ட ஆசிரியரான ஸ்ரீ தம்மிராஜு அவனையே பள்ளி மாணவர் நடிப்பதற்காக ஒரு புது நாடகம் எழுதித்தரச் சொன்னார். ஒரு சில நாட்களுக்குள் அவன் முடித்துத் தந்த நாடகத்தைப் பார்த்துத் தம்மிராஜு மலைத்துவிட்டார்.

அதை முற்றிலுமாகப் பார்க்காவிட்டாலும் சாராம்சத்தை நாமும்தான் பார்ப்போமே! தர்மத்தில், ஒழுக்கத்தில் அவனுக்கு எத்தனை நாட்டம்; அவை அவமதிக்கப்படுவதில் எத்தனை வாட்டம்; இவற்றைப் பன்னிரண்டே வயதில் எத்தனை நுட்பமாக அவன் இலக்கியமாக்கினான் என்பதைக் கவனித்தால் நாமும் வியக்காமலிருக்க முடியாது.

Koviloor Digital Library

''செப்பினட்லு சேஸ்தாரா?'' — ''சொன்னபடி செய்கிறார்களா?'' என்ற தலைப்பிலேயே எத்தனை கலை நயம்!

முதல் காட்சியில் ஓர் அம்மாள் தன்னொத்த பெண்டிருக்கு பாகவதம் படித்து உபதேசிக்கிறாள். தானத்தின் மகிமை பற்றிய கட்டம். பாத்திரமறிந்தே பிச்சையிட வேண்டும் என்பதை விளக்குகிறாள். மெய்யாலுமே தீனராக உள்ளவருக்குத்தான் தானமிடவேண்டும்; வேலைசெய்ய வசதியிருந்தும் பிச்சை எடுப்பவர்களுக்கு ஐயமிடுவது சோம்பேறித்தனத்துக்கு ஊக்கம் தருவதேயாகும் என்று எடுத்துச் சொல்கிறாள். பெண்கள் கலைகிறார்கள்.

பரமதீனமாக உள்ள ஒருவன் பிச்சைக்கு வருகிறான். உபதேசம் செய்த அம்மாள் அவனை அடிக்காத குறையாக விரட்டுகிறாள். உடனே ஒரு தடியாப்பிள்ளை, பார்த்தாலே போலி என்று தெரிகிறது, 'வேங்கடரமணா, சங்கடஹரணா, கோவிந்தா, கோவிந்தா' என்று ஆர்ப்பாட்டம் செய்துகொண்டு வருகிறான். இவனுக்கு அந்த அம்மாள் ஆசார உபசாரம் செய்து அவனுடைய செம்பு வழிய அரிசியால் நிரப்புகிறாள்.

இதைப் பார்த்துக்கொண்டே இருந்த பிள்ளை கிருஷ்ணன், ''அம்மா, நீ இத்தனை நாழி சொன்னதென்ன? இப்போது செய்கிறதென்ன?'' என்கிறான்.

''அதிகப் பிரசங்கி! நாம் சொன்னபடியெல்லாம் இருந்து விடமுடியுமா? என்னை எதிர்த்துக் கேட்கிறாயே!'' என்று அம்மாக்காரி சினந்து பிள்ளையைக் கரகரவென்று கணவரிடம் இழுத்துப் போய்ப் புகார் கொடுக்கிறாள்.

அடுத்த காட்சி, தகப்பனார் பிள்ளைக்குச் செய்யும் தர்மோபதேசம். ''பெரிய விஷயங்களையெல்லாம் பற்றிப் பசங்கள் பேசப்படாது. பள்ளி நாளில் படிப்புமட்டும்தான் முக்கியம்'' என்று சொல்லிக் கல்வி மகிமை, வித்யாதானம் குறித்துப் பிரசங்கமே செய்கிறார் அப்பாக்காரர். அப்போது ஓர் ஏழைப்பிள்ளை வந்து, பள்ளிக் கட்டணத்தில் ஒரு ரூபாய் குறைவதாகச் சொல்லி அவரை யாசிக்கிறான். ''இல்லாவிட்டால், இன்று கடைசிநாள், பேரை அடித்துவிடுவார்கள்'' என்று அழுகிறான். ''காசே யில்லை யப்பா'' என்று கையை விரித்து அவனை அனுப்புகிறார் வித்யாதான வாசாலகர்!

அவரது ஆபீஸைச் சேர்ந்த சக குமாஸ்தாக்கள் வருகின்றனர். புதிதாகப் பதவி ஏற்கும் ஆபீஸருக்கு வரவேற்பு கொடுப்பது பற்றி இவரிடம் ஆலோசனை கலக்க அவர்கள் வந்திருக்கிறார்கள். புது ஆபீஸருக்கு ''ஸோப்புப் போட்டு'' வசமாக்கிக் கொள்ள விரும்பும் அப்பாக்காரர் தடபுடலான விருந்துக்கு ஏற்பாடு செய்யச் சொல்லி, அப்போதே அவர்களிடம் இருபது ரூபாய்களை எடுத்து வைக்கிறார்.

Koviloor Digital Library

கிருஷ்ணனால் தாங்க முடியவில்லை. ''அப்பா, அந்தப் பையனிடம்....'' என்று ஆரம்பிக்கும்போதே அவர் சீறுகிறார். ''இந்த லோக வாழ்க்கையில் சொல்கிறபடியெல்லாம் செய்யமுடியுமா என்ன? உன்னிடம் நான் சொன்னதென்ன? உனக்குப் படிப்புத்தானே முக்கியம்? இங்கே நிற்காதே, குறுக்கே பேசாதே, போ பள்ளிக்கு'' என்று கையை ஓங்குகிறார்.

பள்ளிக்கு ஓடுகிறான் பாலன்.

அடுத்த காட்சி. பள்ளி ஆசிரியர் மாணவர்களிடம், ''நாளைக்கு இன்ஸ்பெக்டர் வருகிறார். அவர் எத்தனை பாடம் நடந்திருக்கிறது என்று கேட்டால் நீங்கள் யாரும் 23 என்று உண்மையைச் சொல்லிவிடக் கூடாது. 32 என்று சொல்ல வேண்டும். அவர் வருகிறபோது நான் 33 — ம் பாடத்தை, அப்போதுதான் முதல் தடவை சொல்லிக் கொடுப்பது போல ''டச்'' பண்ணி உங்களைக் கேள்வி கேட்பேன். ஆனால் உண்மையில் இப்போதே அந்தப் பாடத்தை நடத்தி விடப் போகிறேன். அப்போதுதான் நீங்கள் நாளைக்கு 'டக்' 'டக்' என்று பதில் சொல்லி எனக்கு நல்ல பேர் வாங்கித் தர முடியும்'' என்கிறார்.

ஆகா, அந்த 33—ம் பாடம், அது சாக்ஷாத் ஹரிச்சந்திரனைப் பற்றியது! வகுப்பு முடிந்தபின் கிருஷ்ணன் ஆசிரியரிடம் போய், ''ஹரிச்சந்திரன் பாடத்தில் நீங்கள் சொன்ன தர்மமென்ன? நாளைக்கு எங்களுக்கென விதித்துள்ள அதர்மமென்ன?'' என்பதை நாசூக்காகக் கேட்கிறான். பழைய கதை தான். இந்தத் துக்கிணியூண்டுப் பிள்ளை தனக்கு தர்மம் சொல்லவா என்று எரிந்து விழுகிறார் ஆசிரியர். மீண்டும் ''செப்பினட்லு சேஸ்தாரா?'' தான்!

மறுநாள். கிருஷ்ணன் பள்ளிக்குப் போகமாட்டேன் என்று வீட்டிலே ''ஸ்டிரைக்'' செய்கிறான். பெற்றோரால் அவனை அசைக்க முடியாததால், ஆசிரியருக்கே சொல்லியனுப்புகிறார்கள். அதிபுத்திசாலியான கிருஷ்ணனைக் கொண்டே இன்ஸ்பெக்டரிடம் 'ஷொட்டு' வாங்கி விடலாம் என்று ஆசைப்பட்ட ஆசிரியர் விழுந்தடித்துக் கொண்டு வருகிறார். ''இன்ஸ்பெக்ஷன் தினத்தன்று நீ வராதிருக்கலாமா?'' எனக் கேட்கிறார், மன்றாடுகிறார்.

''எனக்கு நானே, உள்ளுக்குள்ளே ''இன்ஸ்பெக்ட்'' பண்ணிக் கொண்டுநான் இப்படி முடிவு பண்ணினேன்'' என்கிறான் பாலன். ''இனி எனக்குப் பள்ளியும் படிப்பும் போதும். தாங்களும், என் தாய் தந்தையரும் பள்ளியில் பயின்றவர்கள் தாம். ஆனால் பயின்ற தர்மம் எதையும் வாழ்க்கையில் மேற்கொள்வதற்கில்லை என்று காட்டி விட்டீர்கள்! அப்படியிருக்க, இந்தப் பள்ளிப் படிப்பால் எனக்கென்ன பிரயோஜனம்?'' என்று வெண்கல மணியெனக் கேட்கிறான்.

Koviloor Digital Library

பெரியோர் வெட்குகின்றனர். அவர்களுடைய கண் திறக்கிறது. ''நீ தானப்பா எங்கள் குரு'' என்கின்றனர்.

'பிட்ல குருவு' இந்த நாடகத்தை எழுதி, அதில் தானே கிருஷ்ணனுக நடித்தான்.

கதை, கருத்து, நடிப்பு அனைத்தையும் ஊரெல்லாம் போற்றியது.

இன்றைக்கும் சரி, பெற்றேரும் போதகரும் குழந்தைகளுக்கு வழிகாட்டியாக இல்லாததில் நம் காவிய நாயகர் மிக்க மனம் வெதும்பிப் பேசுவார்; அனல் தெரிக்கவும் பேசுவார்.

''மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ, ஆசார்ய தேவோ பவ'' என்று குழந்தைகளுக்கெனவே அமைந்த ஸாயி மன்றங்களான ''பால விகாஸ்''களில் தவருமல் எடுத்துரைப்பவர் அவர். ஆனல் பெரியோரிடம் பேசும்போது, மாதா — பிதா — குரு — தெய்வம் என்று சொல்லப்பட்டாலும், இதில் முதல் மூவர் எப்படிச் சற்றும் தெய்வாம்சம் இல்லாமலிருக்கிருர்கள் என்பதையும், அவ்வளவு உயர்வாகப் போகாவிட்டாலும், சாமான்ய மனித நன்னெறிகளில் கூட இவர்கள் எவ்வளவு தாழ்ந்து, எதிர்காலத்தையும் இந்தச் சறுக்குப் பாதைக்கு இழுத்துவிட்டிருக்கிருர்கள் என்பதையும் இடித்துக் காட்டுவார்.

''வெற்று இந்திரிய சுகங்களின் உச்சிக்குப் போயும் நிறைவு காணுததால் வெளிநாட்டார் நமது பக்தி, யோகம், வேதாந்தம் இவற்றை நாடி வருகிருர்கள். ஆனல் நம் நாட்டுப் பிள்ளைகளோ புராதன பாரதப் பண்பாட்டில் வேர் ஊன்றப் பிடிக்காமல், வெளிநாட்டார் தூவென்று தள்ளிய மட்டமான அம்சங்களைப் பிடித்துக்கொண்டு திரிகிருர்கள். நடை, உடை, பாவனை எதிலுமே பாரதக் கலாசாரத்தின் வாடைகூட வீசக் கூடாதென்று கருதும் மேற்கத்திய சுவீகாரப் புத்திரர்களைக் கொண்டதுதான் இன்றைய 'சுதந்திர பாரதம்'! ஆத்மிகமாகவும், தார்மிகமாகவும், உண்மையான கலையுலகிலும், அறிவுலகிலும் சாதிக்கவேண்டிய சாதனைகள் எத்தனையோ இருக்க நம் இளைஞர்கள் போயும் போயும் கேசத்தை வளர்த்துக் கொள்வதையும், கிருதா வைத்துக் கொள்வதையும், ட்ரெயின் — பைப் நிஜார் போட்டுக் கொண்டு அசங்கியமான மெட்டுக்களைச் சீட்டியடிப்பதையும் பெரிய சாதனையாக நினைப்பதை என்னென்பது? ஆனல் நான் அவர்களைக் குறை சொல்லமாட்டேன். அவர்களுக்கு நல்வழி காட்டத் தவறியவர்களும், அவர்களுக்கு உபதேசம் செய்ய ஒருவித யோக்கியதை இல்லாதவர்களுமான பெற்றேரையும், ஆசிரியர்களையும் தான் குற்றத்துக்கு முழுப் பொறுப்பாக்குவேன். இன்றுள்ள முன் தலைமுறையினர் இளம் தலைமுறையினரின் தப்பிதமான போக்குக்களைத் தாங்களும் மேற்கொள்ள

முடியாதா என்று உள்ளூறத் தாபம் கொண்டவர்கள்தாம். விதைதான் பயிராகும். குளத்தில் இருப்பதுதான் குழாயில் வரும். முன் தலைமுறையினரின் மானசிகமான முறைகேடுதான் பின் தலைமுறையில் காரியாம்சமாகவே வெளி வந்திருக்கிறது'' என்பார்.

இங்கே நடுவில் கேசத்தைப் பற்றிய பிரஸ்தாவம் வந்தது. நம் கதாநாதருக்கே அவரது ''ஹேர் – ஸ்டைலா''ல்தான் ஒரு பிரக்கியாதி. இவரது திருமுடி இப்படியிருப்பதற்குப் பிற்பாடு காரணம் ஆராயலாம். இங்கே நாம் கவனிக்கவேண்டியது, அவருக்கு நாகரிகக் கேசம், மீசை, ஸைட் – பர்ன்ஸ் இத்யாதி அடியோடு பிடிக்காது என்பதுதான். ஸத்யஸாயி கல்லூரி மாணவர்கள் இவ்விதம் தம்மை ''அலங்கரித்து''க் கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. அதுமட்டுமில்லை, இந்தியாவெங்கிலும் உள்ள கல்லூரி மாணவருக்கென அவர் ஆண்டுதோறும் பெங்களூர் ஒயிட்ஃபீல்டில் நமது கலாசாரம் குறித்துக் கோடைப் பயிற்சி (Summer Course) நடத்துவதுண்டு. வகுப்புகள் தொடங்குவதற்கு முன்தினம் ஒவ்வொரு மாணவனிடமும் வந்து உற்றுப்பார்த்து, ஹிப்பி முடி, பழுவேட்டரையர் மீசை முதலியன வைத்திருப்பவர்களை முதற்காரியமாக சலூனுக்குப் போய்வந்து, பிறகே வகுப்பில் சேரலாம் என்பார். ''மாடர்ன்'' சாமியார் என்று நினைக்கப்படும் நம் சரித நாயகர் அநேக விஷயங்களில் சநாதனிகளையும்விடக் கடுமையாக இருப்பவர் என்பது பலருக்குத் தெரியாது.

மேற்சொன்ன பயிற்சி முடிகிற தினத்தில் அத்தனை ஆடவ மாணவர்களுக்கும் சட்டையோடு வேஷ்டி வழங்குவார். 'இன்று ஒரு நாளாவது கல்லூரி மாணவர்கள் வேஷ்டி கட்டிக்கொள்ளட்டும், அதுவும் மரபுப்படி மூலைக்கச்சமாகக் கட்டிக் கொள்ளவேண்டும்' என்பார். மாணவர்களும் அவ்விதமே ஆடை புனைந்து அவரை வணங்கி ஆசி பெறுவர்:

ஆனாலும், இன்னொரு விஷயமும் இங்கே மனத்தில் தோன்றுவதை எழுதாமலிருக்க முடியவில்லை. ஸத்யஸாயி பக்தர் பலரின் பஜனை உட்பட்ட ஆன்மிகக் கூட்டங்களுக்குப் போனால், ஏதோ ஒரு கம்பெனியின் டீ பார்ட்டிக்கு வந்த மாதிரிதான் தோன்றுகிறதே தவிர, ஸத்ஸங்கத்துக்குரிய புனித கம்பீரத்தை, கௌரவத்தை நுகர முடியவில்லை. காரணம் ஸ்வாமியின் அணுக்கத் தொண்டர் உள்படப் பலரும் பான்ட் போட்டுக் கொண்டும், நெற்றியில் திருநீறு இருக்கிறதா என்பதே தெரியாமல் அவ்வளவு லேசாக இட்டுக் கொண்டும் வருவதுதான். ''வைதிக தர்மம்'' ''பாரதீய ஸதாசாரம்'' இவற்றை அடிக்கடி இயம்பும் ஸாயிநாதனின் அடியார்கள், ஒரே படி சத்தியாக இல்லாவிட்டாலும் இன்னும் கொஞ்சத்தில் கொஞ்சம் ''பாரதீயர்''களாகத் தங்களைக் காட்டிக் கொண்டால் நன்றாக இருக்குமே எனத் தோன்றுகிறது. ''நம் ஸ்வாமி 'ஸநாதன ஸாரதி'. வேத வழியை நிலைநாட்டவே வந்தவர்'' என்று சொல்லிக்கொண்டே பக்தர்கள்

Koviloor Digital Library

வெளித் தோற்றத்தில் இப்படியிருந்தால், இவர்களைக் குறித்தே ''செப்பினட்லு சேஸ்தாரா?'' என்று கேட்கும்படியாகத் தானிருக்கும்.

செப்பினபடி செய்யாததுதான் இன்று நம் நாட்டைப் பிடித்துள்ள பெரிய சாபத்திடு என்பதை அவர் ஓர் அழகிய உவமையால் விளக்குவார் : ''இப்போது நம் நாட்டில் வேதாந் தத்தையும் பக்தியையும் பற்றிச் சண்டப் பிரசண்டமாகப் பேசுவதற்கு ஒரு குறைவுமில்லை. அநுஷ்டானத்தில்தான் அதில் ஒரு சிறு அம்சமும் காணோம். விருந்துணவைச் செரித்துக் கொண்டால்தான் அது தேகத்துக்கு ஊட்டம். அல்லாமற் போனால் அதுவே டாக்ஸின் ஆகி, உடம்பை நச்சால் நலி வித்து விடும். இன்று ஏராளமான ஆத்மிகப் படிப்பும், பேச்சும் இருந்தபோதிலும், அது கொஞ்சம்கூடக் காரியத்துக்கு வராமல், இதயத்தில் கரையாமல், அதாவது செரிக்காமல், வெறுமே வாயோடு மூளையோடு தேங்கி நின்று விடுவதால், அகங்காரம் என்ற 'டாக்ஸின்'' உண்டாவதோடு முடிகிறது!''

★

துளித்துளியாக, படிப்படியாகத் தன் அவதார மகிமையைப் புரிந்துகொள்ளும் திராணியை அடியாருக்கு ஏற்படுத்தி வந்த ஸத்ய நாராயணன் இச் சமயத்தில் அவர்களை இவ்வழியில் இன்னொரு படி உயர்த்தினான். அதாவது, அவர்கள் ஏதாவது பொருள் காணவில்லை என்று தெரிவித்தால் அது இருக்குமிடத்தைப் பளிச்சென்று கூறலானான்.

இதிலே ஷிர்டி பாபாவை நினைவூட்டுகிறது ஒரு நிகழ்ச்சி. இளமைப் பருவத்தில், ஷிர்டியைச் சென்றடைவதற்கும் முன்னர், அவர் கோதாவரி தீரத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார். அப்போது அங்கு எதிர்ப்பட்ட ஒரு நவாப் தன் குதிரை எங்கோ தப்பியோடி விட்டதென்றும், அவர் அதை எங்கேனும் கண்டாரா என்றும் வினவினார். அவர் ''குதிரையை நீ தேடிப் போக வேண்டாம். இங்கேயே இரு. அதுவே சிறிது போதில் இங்கே வரப்போகிறது'' என்றார். அவர் கூறியது நவாபுக்கு விந்தையாக இருந்தாலும் அவ்வார்த்தைக்குக் கட்டுப்பட்டு நின்றார். சில விநாடிகளிலேயே குளம்பொலி கேட்டது. அடுத்துக் குதிரையும் வந்து அவர் பக்கத்தே நின்றது. ''ஸாயீ'' என்று கூவிக் கொண்டு பாபா பாதத்தில் விழுந்தார் நவாப்.

''ஸாயி'' என்பது ''ஸ்வாமி'' என்பதன் திரிபு. ''கோஸ்வாமி''களை வடக்கே ''கோஸாயின்'' என்பதிலிருந்தே இது புலனாகிறது. மகானைக் குறிக்கும் ''ஸாஹி'', ''ஷாஹி'' என்ற பெர்சிய வார்த்தையே ''ஸாயி'' ஆயிற்று என்பாரும் உண்டு.

''ஸாயின்'' என்றாலே வடமொழியில் குதிரைக்காரன் என்றும் அர்த்தம் இருப்பது அதிசயமாகும்.

Koviloor Digital Library

அதெப்படியாயினும் ஷிர்டி அவதாரத்துக்கு ''ஸாயி'' நாமம் ஏற்பட்டது குதிரையைக் கண்டுபிடித்துக் கொடுத்த லீலையால் தான்.

ஸாயி பாபாவுக்கே உரித்தான உபகாரப்பணி ஆரம்பித்தது அதில்தான்.

இங்கே ஸத்யாவும் வெளி உலகுக்குப் பகிரங்கமாகக் காட்டிய முதல் லீலை குதிரையைக் கண்டுபிடித்துத் தந்தது தான். இதுவரையில் அவன் தன்னுடைய பாலருக்கே தின் பண்டம், நோட்டு, பென்சில் போன்றவற்றை ''வரவழைத்து''த் தந்தானே ஒழிய, வெளி உலகுக்கு அமாநுஷ்ய சக்தியால் உதவி புரிந்தானில்லை. உபாத்தியாயரை நாற்காலியில் ஒட்டியதை ''பாபா—த்வம்'' வாய்ந்த உபகாரத்தோடு சேர்ப்பதற்கில்லை. பாலரிடமும்கூடத் தான் சிருஷ்டித்ததாகச் சொல்லாமல் ''ஸத்யம்மா பிரஸாதம்'' என்றே கூறி வந்தான். இப்போது, தன் பெயரிலேயே, வெளி உலகுக்கு அதிமானுட ஆற்றலால் உதவியைத் தொடங்க ஒரு குதிரைக் கண்டு பிடிப்பையே அங்குரார்ப்பணமாக்கிக் கொண்டான்.

முஸ்லிம் ஜட்காவாலா ஒருவனது குதிரை காணாமற் போய் விட்டது. தெலுங்கு வாத்தியாரின் தம்பிக்குத் தேவ சக்திகளின் உதவியிருப்பதாகச் சொல்கிறார்களே என்று ஸத்யாவிடம் ஓடி வந்தான், பரியைப் பறிகொடுத்தவன்.

ஸத்யா, ''ஊருக்கு வெளியில் ஒன்றரை கல்லில் பெரிய தோப்பு இருக்கு பாரு, அங்கே போ, உன் குதிரை புல் மேய்ஞ்சிட்டிருக்கும்'' என்றான்.

ஜட்காக்காரன் அப்படியே அங்கு ஓடினான். குதிரையும் மேய்ந்து கொண்டிருந்தது! அதைப் பிடித்துக்கொண்டு திரும்பினான்.

மொழியிலக்கணப்படி ''அசுவம்'' என்றாலும் ''விசுவம்'' என்றாலும் ஒன்றேதான். திசை தவறி ஓடிய விசுவத்தை வழி திருப்பி விடவே வந்த அவதாரம் என்று காட்டவேதானே இரு ஸாயிகளும் முதன் முதலாகத் தறிகெட்டோடிய அசுவத்தைக் கண்டுபிடித்துக் கொடுத்தது? இன்றிருப்பதுபோல் நாளைக்கு இல்லாமல் மாறிக்கொண்டிருப்பது வி — ச்வம், அ — ச்வம் இரண்டுமே. ஓயாமல் மாறும் சம்ஸாரத்தின் மாறாத திவ்ய சாரத்தைக் காட்டிக் கொடுப்பதற்கு அடையாளமாகவே குதிரை கண்டுபிடித்துத் தந்திருப்பரோ? கலியுகாவதாரமாம் 'கல்கி'க்கு உள்ள குதிரைத் தொடர்பும் இங்கு நினைவுறத் தக்கது.

அன்றிலிருந்து ஜட்காக்காரர்கள் யாவரும் தங்கள் வண்டியில் ஸத்யா ஏறினாலே அதிருஷ்டம் எனக் கருதி, அவன் எங்கே

Koviloor Digital Library

நடந்து சென்ருலும் அங்கே போய், அவனை ஏறிக்கொள்ளச் சொல்லி அன்புத் தொல்லை கொடுக்கலாயினர்.

* * *

பள்ளி ஆசிரியர் ஒருவர் தமது பேனுவைக் காணேம் என்ருர். வேலைக்காரன் ஒருவன் பெயரைச் சொல்லி அவன்தான் களவிட்டவன் என்ருன் ஸத்யா.

''அவனு? ஒருநாளும் இராது. சத்தியசந்தன்'' என்ருர் ஆசிரியர்.

''இல்லை. அவன்தான் குற்றவாளி'' என்ருன் மாணவன்.

வேலைக்காரன் இல்லாதபோது அவன் அறையைச் சோதித்த ஆசிரியர் பேனுவை அங்கு காணவில்லை.

''அதெப்படி இங்கே இருக்கும்? அவன்தான் அனந்தப் பூரில் படிக்கும் தன் பிள்ளைக்கு அதை அனுப்பிவிட்டானே!'' என்ருன் ஸத்யா.

இதை நிரூபிப்பதற்காக, எழுதப்படிக்கத் தெரியாத அந்த வேலைக்காரன் தன்னைவிட்டு எழுதச் சொல்வதாகக் கள்ளத்தனம் செய்து அனந்தப்பூர் பிள்ளைக்குக் கடிதம் எழுதினுன். (யானையைக் காட்டி யானையைப் பிடிப்பதுபோல் 'கண்ணி'வைத்துத் திருடரைப் பிடிப்பது அன்றிலிருந்து இன்றுவரை நீதி சாஸ்திரத்தால் ஒப்பப்படுவது தானே?) கடிதத்தில் வழக்கமான யோக க்ஷேமங்கள் விசாரித்துவிட்டு, ''புதிதாக அனுப்பி வைத்த பேனு நன்ருக எழுதுகிறதா? அதை ஜாக்கிரதையாக வைத்துக்கொள். விலை உயர்ந்த வஸ்துவாதலால் யாராவது திருடிப்போய் விடுவார்கள்'' என்று உஷார்ப்படுத்தி எழுதினுன்! பதிலுக்கும் உறை வைத்தான்.

நாலாவது நாள் பதில் வந்தது. ஸத்யாவின் ''ஜோசியம்'' நிருபணமாயிற்று என்று சொல்லவும் வேண்டுமா?

* * *

அந்தக் காலத்தில் தோழர்கள் இம்மாதிரி களவு பற்றித் தெரிவித்தால், பண்டத்தை எடுத்தவர்களின் பெயரில் முதல் எழுத்தையும் கடைசி எழுத்தையும் மட்டுமே சொல்லி அவர்களைக் கொஞ்சம் திண்டாடவிட்டுத் தாம் குஷிப்பட்டதாகப் பிற்காலத்தில் கூறியிருக்கிருர். உதாரணமாக 'எஸ் — என்' என்று ஸத்யா சொன்னல் அது ஸ்ரீநிவாசனுக இருக்கலாம், அல்லது சங்கரனுக இருக்கலாம், அல்லது ஸத்ய நாராயணனுகவே இருக்கலாம் அல்லவா?

Koviloor Digital Library

மகா பெரிய கள்வன் ஒருவனின் பெயரையும் அவன் அறிவிக்கப் போகிற தருணம் நெருங்கிவிட்டது. ஸத்ய நாராயணன் என்ற சிறுவனாக ஒருத்தன் உலவுகிறானே, இவன் ரத்னாகர படராஜு வீட்டுப் பிள்ளை அல்லவே அல்ல. இவனுக்குள்ளே ஒரு கள்ளத் தலைவன், வேதம் சொல்கிற 'தஸ்கராணாம் பதி' ஒளிந்து கொண்டிருக்கிறான்! அவனுடைய பெயரை ஆரம்ப எழுத்தும் கடைசி எழுத்தும் மட்டுமின்றி முழுமையாகவே இவன் அறிவிக்கப்போகிறான். அற்புத முறையில் தனக்குத்தானே நாமகரணம் செய்துகொண்டு இவன் புனர் ஜன்மம் கொள்ளப்போகிற நாள் இதோ நெருங்கி விட்டது!

Koviloor Digital Library

அத்தியாயம்—14

இறகு முளைக்கிறது!

இயற்கையன்னையின் வேதம், அடியிலிருந்து நுனிக்கு ஒரே தாவாகத் தாவுவது அல்ல; ஒரு படியிலிருந்து அடுத்தது, அதற்கடுத்தது என்றே இயற்கை பரிணமிக்கும். இத்தனைக்கும் கருவான பெருநலன் தன் முழுமையைப் பெறுவதற்காகத் தன்னுள்ளேயே தீமைகளையும் உறிஞ்சிக்கொள்ளும்!

— ஜே. ஆர். லோவெல்

1940—ம் வருடம் மார்ச் 8—ம் தேதி. சிவராத்ரிக்கு மறுநாள். அமாவாசை. எதிர்காலத்தில் சிவராத்ரிதோறும் தன்னிலிருந்தே லிங்கோத்பவம் செய்யப்போகும் ஸத்யா, இன்று வேறு ஒருவித உற்பவம் செய்துவிட்டான்.

ஆம், தன்னிலிருந்தே தானே உற்பவித்து சரீரம் விட்டு வெளியே போய்விட்டான்.

மாலை 7 மணி இருக்கும். தன்பாட்டில் ஏதோ செய்து கொண்டிருந்தவன் திடுமென 'ஹா' என்று அலறியபடி ஒரு துள்ளுத்துள்ளி வலக்கால் பெருவிரலைப் பிடித்துக்கொண்டான். மறுகணம் உடல் கட்டையெனச் சாய்ந்தது.

அனைவரும் பதைபதைத்து விட்டனர். வாராது போல் வந்த மாமணியைத் தோற்றுவிட்டோமோ எனக் கலங்கினர்.

இல்லை. ஸத்யா அவர்கள் வயிற்றில் பாலை வார்த்தான்; சிறிது நேரத்தில் கண்ணைத் திறந்தான். ஏதும் நடக்காதது போல் சகஜமாக இருந்தான். அவன் அலறிச் சாய்ந்ததற்குக் காரணம் கேட்டும் ஏதும் பதில் கூறவில்லை.

மறுதினம் மாலை. சரியாக அதே ஏழு மணி. மறுபடி ஸத்யா பிரக்ஞையற்று மடேரெனச் சாய்ந்தான்; உடல் விரைத்து விட்டது.

Koviloor Digital Library

விட்டாரும் ஊராரும் புலம்பலாயினர். முன்தினம் மாலை ஸத்யாவைக் கருந்தேளோ பாம்போ தீண்டியிருக்கவேண்டும் என்றும், அப்போதைக்குத் தெய்விக சக்தியால் அவன் அதைச் சமாளித்தபோதிலும், அவ்வூருக்கு ஏற்பட்ட சாபத்தின்படி இருபத்து நாலுமணி கெடுவில் உரவகொண்டா தேவதை பழி வாங்கிவிட்டது என்றும் அவர்கள் முடிவு கட்டிவிட்டனர்.

உரவகொண்டா குன்றுச்சியில் நூறடி உயரமுள்ள ஒன்றைக்கல் ஒன்று உண்டு. ஊர்மீது ஒரு போடு போடுவதற்குக் காத்திருக்கும் அரவத்தின் விரித்த படம் போலவே அக் கல் தோற்றமளிக்கும். அதனால் அவ்வூரில் பாம்பு கடித்தாலோ, தேள் கொட்டினாலோ இருபத்து நான்கு மணிக்கு மேல் எவரும் உயிர் தரித்திருக்க முடியாது என்ற நம்பிக்கை ஏற்பட்டு விட்டது.

டாக்டர் வந்தார். ஊசி போட்டார்.

இரவு நெடு நேரமாகியும் பிரக்ஞை திரும்பவில்லை. உற்றார் பயந்தனர். குன்றருகே கோவில் கொண்டுள்ள முத்தியாலம்மாவுக்கு உடனே பூசை போட வேண்டுமென்று எவரோ சொன்னார். "இந்நேரம் கோவில் மூடியிருப்பாங்களே?" என்றார் ஒருவர். வேறு சில சூரர்கள், "நம்ம கண்ணுமணி ஸத்யாவைக் காப்பாத்த என்னதான் செய்யக்கூடாது? நாங்க மதில் ஏறிக் குதிச்சு அம்மாவுக்கு நேர்த்தி செஞ்சு வாரோம்" என்று கூறி, ஏணியும் கையுமாகச் சென்றனர்.

சிறிது நேரத்தில் சிறுநகை துவண்டது, உயிரோட்டப் பசையற்ற ஸத்யாவின் உதட்டிலே. அருகே இருந்தவர்கள் "நாயனா, நாயனா" என்று ஆர்வத்தோடு அவனை நெருங்கினர்.

"முத்தியாலம்மாவுக்குத் தேங்கா மூணு உடைஞ்சிடுச்சு" என்று முத்து முறுவலோடு முத்துச் சொற்கள் அதரத்திலிருந்து உதிர, மீண்டும் ஸ்மரணை இழந்துவிட்டான் ஸத்யா.

கோயிலுக்குச் சென்றவர்கள் சிறிது நேரத்தில் திரும்பினர். வாஸ்தவமாகவே அவர்கள் உடைத்த தேங்காய் இரு பாதிகளாக இன்றி மூன்றாக உடைந்திருந்ததாகச் சொன்னார்கள்.

'இதென்ன, மறுபடி உணர்வற்றிருக்கிறானே' எனக் கலங்கினர். 'நினைவு தப்பிய நிலையில் சம்பவத்தை எப்படிச் சொன்னான்?' என்று ஆச்சரியமுற்றனர். 'விந்தைப் பிள்ளை தான், நமக்குத் தக்கி நிற்க வேண்டுமே!' என்று பிரார்த்தித்தனர்.

மறுநாள் காலை ஸத்யா நல்ல உணர்வோடு எழுந்திருந்தான். ஆனால், அன்றிலிருந்து அவனிடம் ஒரு பெருத்த மாறுபாடு காணப்பட்டது.

Koviloor Digital Library

விஷ முறிவுக்கான டாக்டரின் மிக்ஸ்சரைக் கொடுத்த போது, ''விஷமும், விஷயமும் என்னைத் தொடுமா?'' என்று அவன் கேட்ட கம்பீரம்! அதிலும் 'விஷயம்' என்னைத் தொடுமா என்றதில் உள்நின்ற வேதாந்த போதம்!

இதுவரை தெய்வசக்தியை அவ்வப்போது காட்டிய மானுட பாலனாக அவனைப் பார்த்தவர்களில் சிலருக்கு இப்போது தெய்வத்தன்மை அவனை முழுக்க முழுக்கிவிட்டிருந்ததாகத் தெற்றெனத் தெரிந்தது. தெலுங்குப் பண்டிதரின் தம்முடு என்று தங்களில் ஒருவனாக அவனைப் பார்க்கமுடியாத ஓர் ஏற்றம் அவனிடம் தோன்றியதை உணர்ந்தவர். அப்பாலன் தங்களுக்கு அப்பாலான ஒன்றாகிவிட்டான் என்று கண்டனர்.

விஷம் தன்னைத் தொடவில்லை என்றானே, பின் ஏன் விரலைப் பிடித்துக் கொண்டு அலறிச் சாய்ந்து உணர்விழந்தான், மீளவும் 24 மணிக்குப் பின் நஞ்சு தலைக்கேறினாற் போல் பிரக்ஞை தப்பி விழுந்தான் என்பது அவர்களுக்குப் புரியவில்லை. அவன் புரிய வைக்கவுமில்லை! 'புரிய வை'' என்று அவனைக் கேட்க அவர்களுக்குத் தைரியம் இல்லை!

எங்கோ எவரோ பக்தர் ஆபத்தில் தவித்து நிற்கும் போது, தன் சரீரத்திலிருந்து தன்னையே கிளப்பிக்கொண்டு உயிரை வெளியே எடுத்து அங்கே சென்று அந்த பக்தரைக் காக்கும் பேரநுக்கிரகத்தை இனி இவன் பல முறை செய்யப் போகிறான் என்பதும், அதற்குத் துவஜாரோகணம் தான் இன்று இவன் செய்தது என்பதும் அவர்களுக்கு எப்படித் தெரியக்கூடும்?

'இவனை நினைத்து ஆபத்தில் அழைத்த பக்தர் அதற்குள் ஏற்பட்டு விட்டாரா?' என்ற கேள்வி எழலாம். நியாயமான கேள்வி. ஆனால் பிற்பாடு நம் காவியநாதர் வாழ்வைப் பார்த்தால், ''ஸத்ய ஸாயி பாபா'' என்ற பெயரிலே, உருவிலே இருக்கிற இவரை நினைக்காமலே இருக்கிறவர்களுக்கும், இவரைப் பற்றிக் கேள்வியே படாதவர்களுக்கும் கூட, அவர்கள் நல்லவர்களாக, பக்தர்களாக, யோக சாதகர்களாக இருந்தால் இவர் இவ்விதம் சரீரத்தை விட்டு நீங்கி பேராபத்துக் காலத்தில் இடர் தீர்த்து வந்திருக்கிறார் என்பது தெரியும்.

சில சமயங்களில் மட்டுமே அவர் இவ்விதம் தாம் புரிந்த ''சரீர-அதீத யாத்திரை'' (extra-corporeal journey) பற்றிச் சொல்வதுண்டு. உரவகொண்டாவில் தாம் முதல் முதலாகச் சென்றது எவர்பொருட்டு என்று இன்றளவும் அவர் கூறவில்லை. ஆனால் பிற்காலத்தில் இதேபோல் நிகழ்ந்த சம்பவங்களோடு இதைப் பொருத்திப் பார்க்கையில், 1940—மார்ச் எட்டாந்தேதி எங்கோ ஒருவர் மரணாவஸ்தையில் இருக்கும் போது அவரது அந்தராத்மா இறைவனை அழைக்க, அது கேட்டு நம் ஸத்யா தன் வலக்கால் பெருவிரலால் வெளியாகி

Koviloor Digital Library

அவரை அடைந்தான் என்று ஊகிக்கலாம். ('சங்கர விஜயம்' முதலான நூல்களைப் பார்க்கையில், பரகாயப் பிரவேசம் செய்யும்போது ஒரு யோகி தன் ஜீவனை வலது காலின் பெரு விரல் வழியாகவே வெளிச் செலுத்துவார் எனத் தெரிகிறது.) பக்தரின் துயரை இவன் வாங்கிக் கொண்டு ''ஹரா'' என்றலறி, கால் விரலைப் பிடித்து அதன் வழியே ஜீவ சக்தியை வழித்து விட்டதைத் தான், காலில் தேள் கொட்டியதென்றும் அதனால் இவன் அலறிவிட்டான் என்றும் எண்ணிவிட்டார்கள்! இப்படி வெளியேகியவன் பக்தரைத் தாற்காலிகமாக சொஸ்தப்படுத்திவிட்டுத் திரும்பியிருக்கிறான். மறுநாள் மீளவும் அவர் அபத்தான நிலையடைந்தபோது இவனும் மறுபடி சென்றிருக்கிறான் — ஆயினும் இம்முறை தன் உணர்வுச் சக்தியைப் பூரணமாக இழுத்துக் கொள்ளாமல் ஓரிழை சரீரத்தில் வைத்துவிட்டே சென்றிருக்கிறான். இதனால்தான் முத்தியாலம்மன் விஷயத்தைத் திடமென எடுத்துச் சொல்லியிருக்கிறான். இம்முறை நீண்டநேரம் அந்த பக்தரின் பக்கலிலேயே இருந்து பக்ஷமுடன் ரக்ஷித்துவிட்டுத் திரும்பியிருக்கிறான் போலும்!

'போலும்'தான்! ஏனெனில் இதெல்லாம் நம் அநுமானம் தான். அவர் யார், என்ன செய்தார் என்று ஆழம் கண்டு சொல்ல ஆரால் ஆகும்? யோகி போல் அவர் சரீரத்தை விட்டுச் செல்ல வேண்டும் என்பதுகூட அவசியமில்லை. இதன் பின் அவரிடமிருந்து ஆபத்சகாயம் பெற்ற ஆயிரமாயிரவர் அந்த அநுபவத்தை எழுதியுள்ளனர். எழுதாதவரோ லட்சோப லட்சமாக இருப்பார்கள். இந்த லக்ஷக் கணக்கான ரக்ஷகப் பணியின் போதும் அவர் சரீரத்தைக் கட்டையாகப் போட்டு விட்டு வெளியே போவது என்றிருந்தால், நம்மிடையே ஸத்ய ஸாயி பாபா என்பதாக ஒருவர் சஞ்சரிப்பதற்கே அடியோடு இடமிராது; வெளியின் உடல் போல், அவரது சரீரமும் ஏதாவது ஒரு இடத்தில் இத்தனை ஆண்டுக்காலமாக கட்டை போல் கிடக்கத்தான் வேண்டியிருக்கும்! ஓரிடத்தில் அமர்ந்து உல்லாசமாகத் தமாஷ் பண்ணிக் கொண்டிருக்கும்போதே அவர் தொலை தூரத்துக்கப்பாலும் அநாயாசமாகச் சென்று ஆற்றப்போகிற அற்புதங்களைப் பார்க்கப் போகிறோம். 'சென்று' என்பதே தப்பு; தாம் என்றுமே எப்போதுமே உள்ளவர்தாம் என்றும் அவரே சொல்லியிருக்கிறார். ஆகவே நம்மைப்போன்ற அதிசாமான்ய மானுடராக வேஷம்போட்டு விளையாடுவது போலவே, அவ்வப்போது அவர் யோகசித்தர் போலவும் விளையாடுகிறார், இதுவும் அவரது மகத்தான தெய்விகப் பிரபாவத்தைக் குறைத்துச் சொல்லும் லீலை என்று நாம் தெரிய வேண்டும். வெறும் சங்கல்பத்தினாலேயே எதையும் சாதிக்க வல்ல அவர், யோகசித்தி போன்றவற்றால் சிலவற்றைச் செய்வது போல் காட்டுவதும் அவரது அலகிலா விளையாட்டில் ஓர் அம்சம் என்றுதான் கொள்ளவேண்டும்!

அவர் பிறந்ததிலிருந்து படிப்படியாக தெய்விக சக்தியில் முன்னேறி, முதலில் ஸத்யம்மா என்ற கிராமதேவதை

Koviloor Digital Library

யின் அருளையும், பிறகு மறைந்த பொருட்களைத் தானாகக் கண்டு பிடிக்கும் ஸித்து வித்தையையும், அதன்பின் கூடுவிட்டுச் செல்லும் யோக சக்தியையும், இதற்கும் பிற்பாடு ஷிர்டி ஸாயி பாபாவின் ஆவேசத்தையும், அதன் கையோடு கையாக ஈசுவராவதாரப் பேராற்றலையும் பெற்றதாக எவரேனும் எண்ணினால் அது முழுத்தவறு என்று அவரே கூறுகிறார். ஒரு படிகூட வளர முடியாத ''சர்வ பரிபூரண அகண்ட தத்துவமாக''வே தாம் தோன்றியதிலிருந்தே இருப்பதாகக் கூறுகிறார். ஆனாலும் இதை பக்தர்கள் எடுத்த எடுப்பில் உணருவது தாங்கவொண்ணாத தாக இருக்குமாதலால், அவர்களை யொட்டிச் சிறிய நிலையிலிருந்து பெரிய நிலைக்கு வருவதாகக் காட்டி, அவர்களையே படிப்படியாகத் தம்மைப் புரிந்துகொள்வதில் உயர்த்தியதாகக் கூறுகிறார்.

(தம்மைப் பரிபூரணம் என்றவரே, ''ஒரு மானுட யாக்கையில் இருப்பதால் எனக்கும் சில கட்டுப்பாடு உண்டு'' என்றும் கூறியிருக்கிறார். அவ்வாறெனில் பூரண பராசக்தியாக இன்றி மானுட யாக்கைக்கெனத் தனியாக 'ரத்னாகரம் ஸத்ய நாராயணராஜு' என்ற ஒரு ஜீவனும் உள்ளதா? கேள்வி சுவையானது — அதை இங்கே போட்டாயிற்று. சிற்றறிவு காணக்கூடிய அளவில் இதற்கான விடை இந்நூலில் பிற்பாடு வரும்.)

இதுகாறும் கூட்டுப் புழுவாகவே தன்னைக் காட்டிக் கொண்டவன், கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டைப் பிய்த்து, 'பார்த்தீர்களா, எனக்கு இறகு முளைக்கிறது, விரைவிலேயே வண்ணத்துப்பூச்சியாகப் பறக்கப் போகிறேனாக்கும்!' என்று சமிக்ஞை தரத் தொடங்கிவிட்டான். ஏதோ ஓர் ஊருக்கு அருளாளனாக இருந்த ஸத்யா உலகுக்கோர் அநுக்கிரகமூர்த்தியாகத் தன்னை விரித்துக் கொள்ளத் தொடங்கிவிட்டான். உடலை விட்டு, ஊரை விட்டு, எங்கோ இருந்த எவரோ ஒருவரின் ஆபத்தைத் தீர்த்து வந்திருக்கிறான்!

ஷிர்டி பாபாவும் தம் உள்ளார்ந்த மகிமையை 1886ல் வெளியிடத் தொடங்கியபோது, அதன் முதல் கிரணமாக இவ்விதமேதான் சரீர — அதீத யாத்திரை செய்தார். தாம் உயிரோடு அல்லாவிடம் செல்வதாகவும், மூன்று நாட்கள் பொறுத்துப் பார்த்து, திரும்பாவிடில் அவ்வுடலை அடக்கம் செய்துவிடலாம் என்றும் மஹால்ஸபதி என்ற அந்நாளைச் சேவகரிடம் கூறிச் சென்றார். அவர் அல்லாவிடம் சென்றது போலவே ஸத்யாவும் இப்போது எவரொருவரின் ஆபத்தையும் தீர்க்கச் செல்லாமல், பூரணப் பிரம்ம சக்தியிலேயே தோய்ந்து, தன்னிடம் கொஞ்சம் ஒட்டியிருந்த தனிமனித ஸத்யநாராயண ராஜுத்துவத்தை அதில் மேலும் கரைத்து வந்திருப்பாரோ? எவரே கூறமுடியும்?

ஷிர்டி பாபா காற்பெருவிரலால் வெளியேறினாரா என்பது தெரியவில்லை. ஆனால் அவரது ஜீவன் கூட்டுக்குத்

திரும்பியபோது முதலில் அவரது வலக்கை விரல் ஆடியதாகத் தெரிகிறது. ஸத்யா விஷயத்தில் உயிரின் புனர்ப் பிரவேசம் பற்றித் தெரியவில்லை. பரவாயில்லை, ஷிர்டி பாபாவின் அபய ஹஸ்தத்தையும், பர்த்தி பாபாவின் சிரடிகளையும் சிந்தித்தாலே போதுமே!

* * *

அடாடா! விளையாட்டு விநோத ஸத்யா மாறிவிட்டான்! (அல்லது அவர் சொற்படி, உள்ளூற மாறுதலற்றவன் வெளியே மாறியதாகக் காட்டத் தொடங்கி விட்டான்!) யாருடனும் பேசுவதில்லை; உண்பதில்லை; திடீர் திடீரெனப் பாடுகிறான்; யாரும் கேட்டிராப் பாடல்கள் — அதுவும் தெலுங்கில் மட்டுமல்ல; கம்பீரமான ஸம்ஸ்கிருதத்தில் பரம ஸ்பஷ்டமாக நீண்ட நீண்ட சுலோகங்களை, சூர்ணிகைகளை, வசனங்களை, மந்திரங்களைக் கொட்டுகிறான்; உரவகொண்டா மக்களுக்கு இம்மியும் புரியாத உபநிஷத மகா தத்துவங்களைக் கடலென அடுக்கடுக்காக அலை வீசுகிறான்.*

இப்போதெல்லாம் சிற்சில சமயங்களில் இவனது உடல் இலவம் பஞ்செனெ இலேசாகிப் பறந்தே விடுவானோ என்றெண்ணச் செய்கிறது; வேறு சில சமயங்களிலோ கருங்கல்லையும் விடக் கனமாகிப் பலர் தள்ளினாலும் அசையாமலே கிடக்கிறது! குபீர் குபீரென அழுகிறான் சில சமயம்; கலீர் கலீரென நகைக்கிறான் சில சமயம்.

சேஷம ராஜு பயந்து, புட்டபர்த்தியிலிருந்த பெற்றோருக்கு உடனே வருமாறு தகவல் அனுப்பினார். அவர்கள் இன்னும் வரவில்லையே என்று தவித்து வேறொருவரைப் பர்த்திக்கே அனுப்பி வைக்க முற்பட்டபோது, ஸத்யா, "யாரையும் அனுப்ப வேண்டாம். அவங்களே இன்னம் அரை மணியிலே வந்து விடுவாங்க" என்றான்.

சரியாக முப்பதாவது நிமிஷம் பெத்த வெங்கப்பராஜுவும் ஈச்வராம்பாளும் உள்ளே நுழைந்தனர்.

"நாயனா, ஸத்யாப்பா! உனக்கு என்னம்மா தங்கம்?" என்று உருகிக் கேட்டார்கள்.

அவன் பதில் சொல்லாமல், வேதாந்த தத்துவ தாரையை வருஷிக்கலானான். மழையை வருஷிக்கும் மேகம் தானே அற்றுப் போய் விடுவது போல், இந்த வேதாந்த மழைக்குப் பின் நாணல் தண்டெனப் பூமியில் சாய்ந்துவிட்டான்.

* மா ஆனந்தமயீ, நிர்மல சுந்தரி என்ற இல்லத்தரசியாக இருந்த நிலைமாறி பக்த ரட்சகியாக மாறுவதற்கு முன்பும் இதேபோல் பரவச நிலையில் வடமொழி வாசகங்களைக் காட்டருவியாகப் பொழிந்தது குறிப்பிடத் தக்கது.

Koviloor Digital Library

அச்சமும் ஆருத்துயரமுமாக அவர்கள் அவனிடம் ஓடிய போது, அவனே விருட்டென எழுந்து அமர்ந்தான். "நாரா யண சாஸ்திரியைக் கூப்பிடுங்கள். பாகவதத்துக்கு வாயில் வந்தபடி தப்பர்த்தம் சொல்லிக் கொண்டிருக்கிறார். அவருக் குத் திருத்திக் கொடுக்க வேண்டும்" என்றான்.

அண்டையிலிருந்த அவர் வீட்டுக்கு எவரோ சென்றார். அவர் மெய்யாலுமே அப்போது பாகவதம் தான் சொல்லிக் கொண்டிருந்தார். வந்தவர் விஷயத்தைச் சொன்னதும் சாஸ் திரியார் எள்ளுருண்டையாக எகிறினார். "அஸத்து, ('ஸத்' தான ஸத்யாவைத்தான் 'அர்ச்சனை' செய்கிறார்!) அப சரித்து! ('ரம்ய சரித்ரன்' என்றும், 'அத்புத சரித்ரன்' என்றும், 'நிருபம சரித்ரன்' என்றும் ஆரத்தித் துதிப் பெறப் போகிற வனைத்தான் 'அபசரித்து' என்கிறார்!) பழம் தின்று கொட்டை போட்ட எனக்கா அர்த்தம் சொல்லப் போகிறானும்! மகாபண்டிதர்களின் மண்டையை உடைக்கும் ஹம்ஸ கீதை பற்றி இந்தச் சுண்டைக்காய்க்கு என்ன தெரியும்?" என்று இறைந்தார்.

அவரை இட்டுச் செல்ல வந்தவர் ஸத்யாவிடம் வெறுங் கையராகத் திரும்பினார். அவனோ விடமாட்டேன் என்கிறான். "பாவம், ஐயோ பாவம், இப்படியா இஷ்டப்படி அர்த்தம் சொல்வது? கர்ண கடூரம்" என்று காதைப் பொத்திக் கொள் கிறான்.

"நாஸ்திகர்களைவிட நம் மதத்துக்குத் தீங்கு செய்வது, இம்மாதிரி புராண இதிஹாஸ தத்துவார்த்தங்களைத் தெரிந்து கொள்ளாமல் இஷ்டப்படி அர்த்தம் சொல்கிற பிரவசனக் காரர்கள்தான். சாஸ்திரியாரை அழைத்துவந்தால்தான் ஆயிற்று" என்றான்.

பெத்த வெங்கப்பரே நாராயண சாஸ்திரியிடம் சென்றார். "தயவு செஞ்சு நீங்க வாங்க. எதுக்குச் சொல்றேன்னு, நீங்க பெரியவங்க வந்து ஒரு அதட்டல் போடுங்க. அந்தப் பய மகன் ரொம்பத் தான் துள்ளுது. நீங்கதான் அடக்கிப் பாருங்க" என்றார்.

பழங்காலக் கிராமவாசிகளுக்கே உரிய முறையில் ஸத்யாவை எடைபோட்டு விட்டார், அவனது சாட்சாத் பிதாவாக உலகால் நினைக்கப்படுபவர்!

சாஸ்திரியாருக்கு ஓர் உற்சாகம் பிறந்தது. 'அபசரித்'தைச் சினம் திரக் காய்ச்சி விட்டு வரலாம் என்று புறப்பட்டு வந்தார்.

அவரைக் கண்டதும் ஸத்யா, ஹம்ஸகீதை என்ற பாறுங் கல்லைக் கோதெடுத்த நறுங்கவிச் சுளையாக்கிப் புட்டுப் புட்டுப் பொருள் விளக்கலானான்.

என்ன இருந்தாலும் சாஸ்திரியார் பண்டிதரல்லவா? அதிலே பல இடங்கள் தமக்கு அடியோடு அர்த்தமாகவில்லை

Koviloor Digital Library

என்பது அவரது உள்மனத்துக்குத் தெரியும் தானே? எனவே இப்போது இந்தப் பதின்மூன்று வயதுப் பிள்ளை ஸ்ரீராகவபாக யாக அதன் அர்த்தத்தை விளக்கியவுடன் அவர் விம்மிதமுற்றார்.

நெடுஞ்சாண் கிடையாகச் சிறுவனின் பாதத்தில் விழுந்து வணங்கினார். "அப்பனே! நீ ஏதோ மகா பெரிய வஸ்து. முதலிலேயே உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு நான் வராததற்கு என்னை மன்னித்துவிடு, ஐயா!" என்றார்.

நம் சரித நாயகன் மகாபுருஷன் என்ற முறையில் முதல் நமஸ்காரம் பெற்று விட்டான்! வேதம் காக்க வந்தவனுக்கு வேத வித்து முதல் வணக்கம் செலுத்திவிட்டார். இது ஆல விருட்சமாகி வித்வன் மகாசபைகள் பல இவனை வணங்கப் போகும் காலமும் வரப்போகிறது!

* * *

வீட்டார்தான் அவனைப் புரிந்துகொள்ளும் வழியாக இல்லை. அனந்தப்பூரிலிருந்து வந்து "காம்ப்" செய்திருந்த மாவட்ட வைத்திய அதிகாரியை உரவகொண்டா வைத்தியர் அழைத்து வந்தார். அவர் "நோயாளி"யைப் பரிட்சித்தார். அவ்வூர் வைத்தியரிடம், "நீங்கள் தேள் விஷம் என்று நினைத்து மருந்து தருவது சரியில்லை. இது ஹிஸ்டீரியாவில் உண்டாகிற இசிவு" என்று சொல்லி "சரி"யான மருந்துகளைக் கொடுத்துச் சென்றார்.

அவற்றை மூன்று நாட்கள் உட்கொண்டும் ஸத்யாவோ, அதேபோல் பாடுவதும், போதிப்பதும், மௌனமாவதும், கட்டையெனச் சாய்வதுமாக இருந்தான்!

வைத்தியம் பலிக்காததால் சோதிடத்தில் சோதித்துப் பார்க்க எண்ணினர். இந்த ஜோதி ஜோதிஷத்துக்குட்படுமா? ஜோஸ்யர் ஏதோ ஹேஷ்யம் செய்தார். "கிரக பீடை. ருத்ராபிஷேகம் பண்ணுங்கள்" என்றார். "இல்லாவிட்டால் பெரிய அம்பாள் உபாஸகர் யாரையாவது அழைத்துக்காட்டுங்கள்" என்றார்.

அப்படி ஓர் உபாஸகர் அண்மையில் இருந்தார். அவர் வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்கும்போதே ஸத்யா ஓங்கி உயர்ந்த குரலில் "உன் இஷ்ட தேவதையையே 'சோஸ்தம்' செய்ய வந்திருக்கிறாயா? வா, வந்து பூஜை செய்துவிட்டு ஓடு" என்றான்.

உபாஸகர் ஒரு கணம் அவனைப் பார்த்தார். வண்டிச் சத்தம்கூடக் கேட்டு வாங்கிக் கொள்ளாமல் ஓட்டம் பிடித்தார். தொடர்ந்து சென்ற சேஷம ராஜுவிடம், "தம்பிக்கு கிரக பீடையுமில்லை; காற்று – கருப்பு சஞ்சாரமும் இல்லை. அது தெய்வத்தில் இருந்துகொண்டு நிற்கிறது" என்றார்.

Koviloor Digital Library

இருந்தாலும் கிராமத்தாருக்கே உரியபடி இவர்கள் 'காற்று — கறுப்பு'தான் காரணமாயிருக்கும் என்று இன்னமும் நம்பினர். மந்திரவாதியை வரவழைத்தனர். "ஆமாம், ஆமாம், பிள்ளையைப் பேய்தான் பிடிச்சிருக்குது" என்றான் அவன். சேஷம ராஜுவைப் பார்த்து, "என்னு தம்பி! இந்த ஊர் முச்சூடும் உனக்கு இந்தப் பாழாப்போற வூடுதானா கெடச்சுது? இதைக் கட்டின பாவிப் பயலோட ஆவி இதை விட்டே போகாமச் சுத்திச் சுத்தி வருதே. அதுதான் பிள்ளையைப் புடிச்சுப் பாடு படுத்துது" என்றான். ஆனாலும் ஸத்யாவைத் தொட்டு "மந்திரம்" பண்ணப் பயந்து நழுவிவிட்டான்!

புட்டபர்த்திக்கே அழைத்துச் சென்று மாந்திரிகம் செய்வதென்று பெற்றோர் தீர்மானித்தனர்.

பர்த்தி வந்த ஸத்யா அக்காள்மாரிடம், "ஆரத்தி எடுங்கள், வான மண்டல மீதாக தேவர்கள் செல்கிறார்கள்" என்பான். உரவகொண்டாப் பரவசமும், பாடலும், மௌனமும், மயக்கமும் இங்கும் ஓயவில்லை.

மந்திரவாதி ஒருத்தன் வந்தான். ஸத்யாவைப் பார்த்தான். ரொம்பவும் புரிந்துகொண்டதுபோல் தலையை ஆட்டி, "ஓகோ, சரித்தான், சரித்தான்" என்று சொல்லிக் கொண்டான். "பையனை என்ன பிசாசு பிடிச்சிருக்குதுன்னு நல்லாத் தெரிஞ்சுடுத்து. இனி கவலையை வுடுங்க. அந்தப் பிசாசை ஒரு ஆடு அல்லது கோழிமேலே மாற்றிப் போட்டு புள்ளையைச் சரிபண்ணறது என் பொறுப்பு" என்று பெற்றோருக்கு அபயஹஸ்தம் அருளினான். இந்தப் பிசாசு "ட்ரான்ஸ்ஃபரு"க்கு வேண்டிய திரவியங்களாக ஒரு பெரிய ஜாப்தா கொடுக்கலானான். துர்த்தேவதா சாஸ்திரத்திலும் கூடத் தனக்குத் தேர்ச்சி உண்டு என்பது போல, ஸத்யர் இன்னம் இந்த வஸ்து வேண்டுமே, அந்த வஸ்து வேண்டுமே என்று குறிப்பிடலானான். உரவகொண்டா மாந்திரிகர் போலவே பர்த்தி மாந்திரிகரும் கம்பி நீட்டிவிட்டார்.

மந்திரவாதிக்கே இப்படிப் பிள்ளையாண்டான் மந்திரம் போட்டு விரட்டிவிடுகிறானே என்று வெங்கப்பர் எரிச்சல் அடைந்தார். இச் சமயத்தில் யாரோ, "கதிரிக்குப் பக்கத்தில் பிராம்மணபள்ளியில் ஒரு மந்திரவாதி ராஜா இருக்காரு. அவருகிட்டே எந்தப் பெரிய கருப்பணசாமியின் பாச்சாவும் பலிக்காது. ஸத்யாவைச் சமாளிச்சு சரி பண்ணறதுக்கு அவர் தான் வழி" என்றார்.

தங்கள் அருமை ஸத்யா, இனிமையே வடிவான ஸத்யா, ஊர் முழுதும் பகவந் நாமம் பரப்பிய பாவன ஸத்யா ஒரு பேய் பிடித்த பிள்ளை என்று எத்தனை எளிதில் புட்டபர்த்தி நம்பி விட்டது! அவனது பெற்றோரே நம்பிவிட்டனர்! இதன் விளைவாக அவன் பிராம்மணபள்ளி சென்று அங்கே பெற்ற சித்ரவதை! நினைத்தாலே நெஞ்சு பொறுக்குதில்லை!

Koviloor Digital Library

அத்தியாயம்—15

சிந்திரவதையிலும் சிந்திரத் தாமரையாய்!

என் உண்மை நிலையில் நிலைத்து உன்மத்தனைப் போலவும் ஐடத்தைப் போலவும் உள்ள என்னை எத்தனை ஹிம்ஸை செய்தாலும் பயன் ஏது? தேக உணர்ச்சியற்று, மனிதமனம் மரத்துக்கிடக்கும் எனக்குத் தண்டனை தருவது அரைத்த மாவையே அரைக்கிற பொருளற்ற செயல்தான்.

— ஸ்ரீமத் பாகவதத்தில் ஜடபரதர்

மகா மகா மந்திரவாதியிடம் போவதற்காக இரட்டை மாட்டு வண்டி கொண்டுவரப்பட்டது. ஆனால் வண்டிக்காரன் எப்பாடு பட்டும் மாடுகள் கிளம்பாமல் சண்டித்தனம் செய்தன. அதற்காக வெங்கப்ப ராஜு தம் உத்தேசத்தைக் கைவிடுவதாக இல்லை.

மேலும் மேலும் தெய்விகத்தின் சமிக்ஞைகள் காட்டி உற்றாரின் மனம் அவற்றிலிருந்து படிப்பினை பெற்று தானாகவே திருந்துமாறு செய்வதற்கே ஸத்யா முன்னம் வந்த மந்திரவாதிகளை ஓட்டம் பிடிக்கச் செய்தான். இப்போதும் மாடுகளை நிறுத்தி வைத்தான். ஆனால் இதிலும் தந்தை மனம் தெளிவு பெறவில்லை என்று கண்டதும், ''சரி வண்டி நகரட்டும்'' என்றான். புட்டபர்த்தியின் கரடு முரடான ரஸ்தாவில் கடா கடா குடு குடுவென்று வண்டிச் சகடம் ஓடலாயிற்று.

பிள்ளையின் சங்கற்பத்திலேயே வண்டி கிளம்பியதிலாவது பெற்றோருக்குத் தெளிவு பிறந்திருக்கக் கூடாதா? ஏனோ பிறக்கவில்லை. மனித மன விசித்திரத்தை என்ன சொல்ல? அந்த மனத்தை அடியோடு வசியம் செய்ய நம் விசித்திர சித்தனும் எண்ணவில்லை. ஆயினும் தன் கருணையால் மீண்டும் சமிக்ஞைகள் சங்கேதங்கள் காட்டினான் — தானாகவே விரும்பிச்

Koviloor Digital Library

சுதந்திரமாக மன மாறுதல் ஏற்படட்டுமே என்ற பெரு நோக்கில். போகிறவழியில் இடையூறுக்கு மேல் இடையூறு, இடுக்கண்ணுக்கு மேல் இடுக்கண் உண்டாக்கிக் காட்டினுன். ஆயினும் பெற்ருேரின் கண் திறக்காததால் அந்த இடர்களைக் களைந்தான்.

பிராம்மணபள்ளியைச் சென்றடைந்தார்கள்.

மந்திரவாதியைப் பார்த்தாலே கிலி உண்டாயிற்று. வாட்ட சாட்டமாக, மாமிச பர்வதமாக, பழங்கால அரக்கர் போலத் தோன்றினுன். அந்தக் கண்கள்! செக்கச் செவே லென்று தணலாக எரிந்தன.

அறியாமையாலும், அறிந்துகொள்ள இசையாத பிடி வாதத்தாலும் அருமைக் கண்மணியை அந்த அரக்கனிடம் ஒப்புக் கொடுத்து விட்டார் வெங்கப்பர்.

அவன் ஒரு ரத்தக் கோலம் போட்டு அதன் நடுவே குழந்தையைத் தர தரவென்று இழுத்து உட்கார வைத்தான். குருதியைச் சில்லிடவைக்கும் குரூரக் குரலில் தனக்குத் தெரிந்த-தெரியாத மந்திரங்களை எல்லாம் உச்சாரணம் செய்து 'பேயை' உச்சாடனம் செய்ய ஆரம்பித்தான். நீண்டநேரம் பல ஆவிருத்திகள் சொல்லியும் ''பேய்'' அசைந்து கொடுப்பதாகத் தெரிய வில்லை. ஆனுல் முன் இருமுறை செய்ததுபோல் இம்முறை இப் ''பேய்'' மந்திரவாதியை விரட்டவில்லை.

பொறுமையின் சிகரத்தை உலகுக்குக் காட்டும் லீலையைப் புரியப் பாலகன் சித்தம் கொண்டு விட்டான். மந்திரவாதியின் கொடூரம் அனைத்துக்கும் தான் ஆட்பட உளம் கொண்டுவிட்டான்.

''ஏ பேயே! மந்திரத்திலே நீ ஓடலேன்னுச் சும்மா உட்டுவேன்னு நினைச்சியா? இவரு மந்திர ராஜா — உன் வாலை ஒட்ட நறுக்காம விட மாட்டாரு'' என்று சவால் விடுத்தான் ராட்சதன்.

புளிய மிலாருகளைச் சொடுக்கலானுன், பேயை விரட்டுவதாகச் சொல்லி — எழுதக் கை கூசுகிறது, எண்ண மனம் பதைக்கிறது — ஸத்யாவைப் புளியங்குச்சிகளால் வெளுத்துக் கட்டலானுன்.

என்ன இருந்தாலும் பெற்ருேர் இல்லையா? வெங்கப்ப ராஜுவும் ஈச்வரம்மாவும் குற்றவாளிகளைப் போல் குறுகுறுத்து நின்றனர்.

ஸத்யா ? அத்தனை அடியையும் வாங்கிக்கொண்டு இமையைக் கூட இம்மி அசைக்காமல் சிலையாக அமர்ந்திருக்கிறுன். அந்த சாந்தத்தைக் கண்டும்கூட பேய்க்கும் தெய்வத்துக்கும் உள்ள வேறுபாடு தெரியாமல் மந்திரவாதி நையப் புடைத்துக் கொண்டிருந்தான்.

Koviloor Digital Library

தாய் தந்தையால் தாங்க முடியவில்லை. "பிள்ளையை விட்டுடுங்க சாமி! அதன் தலையிலே இப்படித்தான் பேயாத் திரியணுமின்னும், எங்க தலையிலே அந்தப் பேயைத்தான் கட்டி மாரடிக்கணுமின்னும் எழுதியிருக்குது. நாங்க கூட்டிட்டுத் திரும்பிப் போறோம். நீங்க சிரமப்படாதீங்க" என்று வேண்டிக் கொண்டார்கள்.

ஆனால் அந்த ராட்சதனுக்கோ, இது தன் சக்திக்கு எதிர்ந்த சவால் என்றே தோன்றியது. 'சவாலை முறியடித்தே யாக வேண்டும். மந்திர ராஜாவாகப் பெயரெடுத்த தன் வீட்டிலிருந்து மீந்த ஒரு கேஸ் குணமாகாமலே திரும்ப இடம் தருவதாவது?' என்ற வம்பு தோன்றி விட்டது. ஸத்யாவின் பெற்றோரைப் பார்த்து நிர்தாட்சிண்யமாக, "அதெல்லாம் பிள்ளையை விடறதுக்கில்லே. ரத்த சாமுண்டியே இந்தப் பேயை இங்கே அனுப்பிச்சு வைச்சிருக்கா. இது என் சரக்கு — இனி எனக்காச்சு, அந்தப் பேய்க்காச்சு" என்று கருவினான், உறுமினான்.

பெற்றோர் பதராகிப் பதைத்து உட்கார்ந்து விட்டனர்.

மந்திரவாதி, ஸத்யாவின் தலையை மொட்டை யடித்தான். பட்டுக் கேசங்கள் கொத்துக் கொத்தாக மழிக்கப்பட்டன. கிராதகன் ஓர் உளியைக் கொண்டுவந்து, இளநுங்கு போன்ற ஸத்யாவின் உச்சித்தலையில் ஏதோ பாறையில் கல் வெட்டுச் செதுக்குவதுபோல் X அடையாளத்தைச் செதுக்கினான்.

வெங்கப்பர் கண்களை மூடிக்கொண்டு நடுங்கினார்; ஈச்வராப்பா அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டு துடிதுடித்தாள்.

ஸத்யா — சர்வ சகஜமாக, பிரம்மமாக, நிஜ... ம்.. மாகவே பிரம்மமாக, உட்கார்ந்திருந்தான்.

பாதகன் குழந்தையின் நடுமண்டையில் மறுபடி உளியைக் குத்தி ஒரு திருகு திருகினான். எங்கோ சுவரிலே ஒரு ஆணி 'கிறீச்'சென இழுபட்டாலே நம் நாடி நரம்புகள் கூசுகின்றன. நேராகத் தன் மண்டையைக் கீறிப் பெருக்கல் குறி போடப்பட்டபோது பாலன் ஆடாமல் அசையாமல் நன்றாகக் குனிந்து காட்டிக்கொண்டிருந்தான்.

மகாபாவிக்கு இன்னமும் திருப்தி உண்டாகவில்லை. நெற்றி உச்சியில், முன் மண்டையில் மூன்றும் முறையாக உளியை வைத்துக் குடைந்து இன்னொரு X போட்டான்.

அவனைக்கூட வைது என்ன பயன்? அதைக் இக்காலிய நாதரோ விரும்பமாட்டார். அவரை ஆழ்பிறந்த மாயை இப்படி யெல்லாம் அவனை ஆட்டுவிக்கிறது! என்றுதான் சொல்ல வேண்டும்.

Koviloor Digital Library

சாதகர்களுக்கு அத்தியாவசியமான குணங்களில் ஒன்றுக 'ஸஹனம், ஸஹனம்' என்பதை நம் நாயகர் அடிக்கடி சொல்வார். சகிப்புத் தன்மையின் எல்லையான அந்த ஸஹனத்தை அவரே செய்துகாட்டுவதற்கு இந்தக் கொடுரம் தானே வழி செய்திருக்கிறது? சிறு ஸத்யாவின் ஸஹனமே நம் இதயத்தில் ஸஹாநுவாகத் துயர இசையை எழுப்புகிறதல்லவா? இப்பாவனத் துயரமே நம் பாவங்களில் பலவற்றை அடித்துச் சென்று விடும்.

சொட்டு ரத்தம்கூடச் சிந்தக்கூடாத ஸுகுமார ஸத்யாவின் சிரத்தில் மூன்று 'எக்ஸ்' அடையாளங்களிலிருந்தும் குருதி வழிகிறது. மூன்றுக விழும் விசித்திர கங்கைதான்!

மந்திரவாதி மண்டைப் பிளவுகளிலிருந்து ரத்தத்தை வடிக்கிருன். அப்புறம். . . . இவனுக்கென்ன இயதம் என்று ஒன்று இல்லவே இல்லையா? அந்தப் பச்சைப் புண்ணிலே எலுமிச்சஞ்சாற்றையும், பூண்டுச் சாற்றையும், இவை போதாவென்று நெடி வீசும் அமிலங்களையும் காரங்களையும் கொட்டுகிருன்.

நம் கதாநாதருக்கு முதல் அபிஷேகம்!

பெற்ருேரின் முகங்களைக் கண்ணீர் அபிஷேகித்தது.

ஆனுல் ஸத்யாவின் கண்கள் — கலங்கவேயில்லை.

மந்திரவாதி சற்றுக் கலங்கித்தான் விட்டான். ஆனுலும் சமாளித்துக் கொண்டான். ''இன்னும் ஒரு வாரம் தினமும் இவன் தலையில் நூற்றியெட்டுக் குடம் பச்சைத் தண்ணீர் கொட்டினுல் போதும்!'' என்ருன்.

'ஒரு வாரம் என்ன, ஒரு நாளே போதும். பச்சைப் புண்ணில் பச்சைத் தண்ணீர் நூற்றெட்டுக் குடம் கொட்டினுல் ஒரு நாளிலேயே ஜன்னி கண்டு கதை முடிந்து போகும்' என்றுதான் பெற்ருேர் நினைத்தனர்.

ஆனுல் அவர்கள் நினைப்புக்கோ, மந்திரவாதியின் நினைப்புக்கோ கட்டுப்பட்டவஞ ஸத்யா? ஜம்மென்று ஒரு வாரம் அஷ்டோத்தர சத கும்ப அபிஷேகம் பெற்ருன். அதன் பின்னும் தானிருந்தபடியே இருந்தான்!

கொஞ்சம் விளையாடக்கூட ஆரம்பித்தான்!

'இதோ ஸ்தம்பன வித்தை செய்கிறேன். பேயால் இந்த இடம்விட்டு அசையமுடியாது' என்று சொல்லி, ''ஹ்ரீம் ஹ்ரூம்'' என்று கூச்சலிடுவான் யாந்திரிகன். அது வரை குத்துக்கல்லாக இருந்த ஸத்யாவோ இப்போது துள்ளித் துள்ளி ஓடத் தொடங்குவான்!

Koviloor Digital Library

'ஆங்..... அப்படியா சமாசாரம்?' என்று மீசையை முறுக்குவான் விடாக்கண்ட மந்திரவாதி. மீசையில் மண் ஒட்டாத கதையாக, ''இந்த மாதிரி துள்ளி ஓடறதுக்கு 'மான் வியாதி'ன்னு பேரு. பிசாசு ஓடிப் போறதுக்கு முந்தி இந்த வியாதி வரத்தான் செய்யும். நல்லது நல்லது''— என்று சொல்லியபடி, ''துள்ளியா ஓடறே! உன் காலை முறிச்சுப் போடறேன் பாரு'' என்று ஸத்யாவிடம் சூள் உரைப்பான். விறகுக் கட்டையைக் கொண்டுவந்து ஓடும் குழந்தையின் குதிகால், முழங்கால், மற்ற பூட்டுக்களில் போடு போடு என்று போடுவான்.

''பாவம், பாவம். இதையெல்லாம் எழுதும்படியும் படிக்கும்படியும் இருக்கிறதே!'' என்று நாம் ஸத்யாவைக் குறித்துப் பரிதாபப்படுகிறோம். ஆனால் அன்று அங்கே பரிதவிக்க வேண்டிய நிலையில் இருந்தது மாந்திரிகன்தான். அடியை ஸத்யா தனதாக ஏற்றுக் கொண்டால் தானே! அவன் பாட்டுக்கு ஆனந்தமாகத் துள்ளியபடியே இருப்பான். விறகை வீசிவீசி மந்திரவாதிக்குத்தான் தோளே பிய்ந்தாற் போன்ற வலி ஏற்பட்டு உடலெல்லாம் வேர்த்து விருவிருத்து, அவன் கட்டையைப் போட்டு விட்டுக் கட்டையாக விழுவான்.

உடனே சமர்த்துப்பிள்ளை மாதிரி ''பேயு''ம் கட்டையாக உட்கார்ந்து விடும்!

''ஆங். . . வந்தியா வழிக்கு!''' என்று (இவன் அதை வழிக்குக் கொண்டு வந்து விட்ட மாதிரி) திருப்திப்பட்டுக் கொண்டு ''பேய்'க்கு மறுபடி ''பூசை'' போட ஆரம்பிப்பான் மாந்திரிகன்.

இதன் பின் இருந்த இடத்தைவிட்டே எழுந்திராமல் வட்டியும் முதலுமாகப் பழி வாங்குவான் பாலன். ''இதுக்குப் பேரு 'பாருங்கல் வியாதி'. பேய்க்கு மான் வியாதியும், பாருங்கல் வியாதியும் மாறி மாறி வந்துச்சுன்னு அது ஓடிப்போற நாள் கிட்ட வந்துடுச்சுன்னு அர்த்தம்'' என்று மந்திரவாதி வியாக்யானம் செய்வான்.

ஆனால் நாட்கள் தான் ஓடினவே தவிர பேய் ஓடுகிற வழியாகத் தெரியவில்லை. ஸத்யா பாடினான், ஆடினான், மந்திரங்களை முழக்கினான். முன்னே புட்டபர்த்தி பஜனையில் ஊரார் அறியாத ஒரு க்ஷேத்திரத்தையும் மூர்த்தியையும் குறிப்பிட்டு வந்தான் அல்லவா? இப்போது அந்த பிரஸ்தாவம் மிக அதிகமாயிற்று.

அந்தப் பெயர்களைக் கேட்டுவிட்டு, ''சரித்தான், துலுக்கப் பிசாசு! இது வரைக்கும் நான் செஞ்சதெல்லாம் சரிதான். பொதுவா எல்லாப் பிசாசுகளுக்கும் பண்ண வேண்டியதெல்லாம் பண்ணி முடிச்சாச்சு. அதுலேயே, தான் ''துலுக்கப் பிசாசு''ன்னு இப்போ நிஜத்தைக் கக்கிடுச்சு, இதுக்கு

Koviloor Digital Library

'ஸ்பெஸலா' ஒரு கலிகம் போட்டுட்டாப் போதும். 'விடேன் தொடேன்'னு பறந்துடும். பார்த்துக்கங்களேன்!'' என்று வெங்கப்பராஜுவிடம் எக்களிப்புடன் பேசினான் மாந்திரீகன்.

'பாம்பின் வாய்த் தேரையாக இந்தக் கால கண்டனிடம் தலையைக் கொடுத்தாச்சு. அவன் விட்டால் விடட்டும், விழுங்கினால் விழுங்கட்டும்' என்று நினைத்த பெற்றோர் 'அம்போ' என்று உட்கார்ந்து விட்டனர்.

சித்திரவதை சாஸ்திரம் என்று ஒன்று இருந்தால் அதன் பிரம்மாஸ்திரம் இந்தக் கலிக வைத்தியம்தான். தனக்குத் தெரிந்த அத்தனை கார மூலிகைகளையும், அமிலங்களையும், தனக்குத் தெரிந்த அத்தனை மந்திரங்களையும் சொல்லிச் சேர்த்துக் கிளிறிக் ''கலிகம்' என்ற மையைச் செய்தான் மாந்திரீகன். அதன் நெடியிலே மூச்சுத் திணறியது, அதைப் பார்த்தாலோ கண் எரிந்தது. நெருப்புத் திராவகத்துக்கு மிளகாய் எஸென்ஸை ஊட்டினால் எப்படியிருக்குமோ அப்படிப்பட்ட கலிகம் தயாராகிவிட்டது.

அதை விழுதாக வழித்தெடுத்துக் கொஞ்சமும் கூசாமல் ஸத்யாவின் இரு கண்களிலும் அப்பிவிட்டான் அரக்கன்!

அதுவரை செய்த அத்தனை கொடூரத்திலும் கலங்காமல் கமலதளமாக இருந்த கண்களை மூடிக் கலிகத்தை இட்டு விட்டான்.

உடனே கண்களும், முகமும், மண்டையும் மளமளவென வீங்கத் தொடங்கின. ஸத்யாதானா என்று அடையாளம் கண்டுகொள்ள முடியாத வீக்கம்! ஜவ ஜவ என்று ஒரு சிவப்பு. அவனுக்குப் பக்கத்தில் போனாலே செங்கற்சூளையாக அனல் வீசிற்று!

பாலனின் உடல் கிடுகிடுவென நடுங்கியபடி இருக்கிறது. கண்களிலிருந்து ஓயா மாரியாக நீர் கொட்டிக் கொண்டே இருக்கிறது.

இத்தனைக்கும் 'இம்' மென்று முனகாமலே இருக்கிறான். ஆனாலும் பூரண நினைவுடன் இருக்கிறான்.

சரீரத்திலிருந்து ஆத்மாவைத் தனிப்படுத்தி வாழ முடியும் என்று பதினாயிரம் சாஸ்திரங்களில் எழுதி வைத்திருந்தாலும், நம்மால் நம்ப முடிகிறதா? 'தூக்கத்தில் ஒரு கொசு கடித்தால் கூட வலி தெரிந்து விழித்துக் கொள்கிறோம். அப்படியிருக்க சரீரம் வேறு, ஆத்மா வேறு என்று இருப்பதாவது? இதெல்லாம் வாய் வேதாந்தம் தான். அல்லது வெறும் கற்பனைதான்' என்றே சொல்வோம். ஆனால் பிரதியக்ஷத்தில் ஒரு ரமணர் பாதாளலிங்கக்குகையில் புழுக்கள் பின் தொடை முழுதும் குடைந்து குளசியபோதும் கூட ஆத்மாராமராக

Koviloor Digital Library

உட்கார்ந்திருந்தார். ஒரு ஸத்யநாராயணன் உளிகொண்டு தலையை செதுக்கி உக்கிர கஷிகத்தைக் கண்ணில் அப்பியபோதும் அந்த வலி தனக்கில்லை என்று அமர்ந்திருந்தான் என்றால் சாஸ்திர வாசகத்தில் நம்பிக்கை பிறக்கத்தானே செய்கிறது? இதற்காகவேதான் இந்த விளையாட்டோ?

அவனுக்கு விளையாட்டாக இருக்கலாம். பெற்றோருக்கு வினையாகச் சுட்டது. கை தேர்ந்த சிற்பி செதுக்கியது போன்ற ஸத்யாவின் திட்டவட்டமான வதனம் பரம விகாரமாக வீங்கி வதங்கி வழிந்து பெருக்குவதைப் பார்த்து அவர்களால் பொறுக்க முடியாமல் போயிற்று.

''பேய் கைக்குள்ளாற வந்திடுச்சு. இனிக் கவலையில்லே'' என்று சொல்லிக்கொண்டு மாந்திரிகன் வெளியே சென்றான்.

ஈசவரம்மா அடக்கி வைத்திருந்த அழுகை வெடித்து வந்தது. ''நாயனா! இப்படி சிசுஹத்தி பண்ற பாவிங்களா நாங்க ஆயிட்டமே'' என்று புலம்பினாள். இவள் 'எடுத்துக் கொடுத்த' உடனே தகப்பனாரும் அழத் தொடங்கி விட்டார்.

தன்னைப் பொறுத்தமட்டில் ஸத்யாவுக்கு நோயும் வலியும் பொருட்டில்லை. ஆனால் தன்பொருட்டு பிறர் விசனிப்பதை அவனது கருணை உள்ளம் தாங்கவில்லை. அவர்கள் தம்மையே அபராதிகளாக எண்ணிப் பச்சாத்தாபத்தில் வேகிறதைக் கண்டு உருகினான்.

''அழாதீங்க' அழாதீங்க'' என்று கையைத் தூக்கி ஆட்டினான். அன்றிலிருந்து எத்தனை லட்சம் பேரின் அழுகைக்கு ஆறுதல்தர அந்தக் கை உயர்ந்திருக்கிறது என்று யாரே கணக்கெடுத்துச் சொல்ல முடியும்?

''தெருவிலே போய்ப் பாருங்க. பசுஞ்சாணி போட்டிருக்கும். அதன் பக்கத்திலேயே ஒரு பச்சிலை படர்ந்திருக்கும். பச்சிலைச் சாற்றைச் சாணியில் பிழிஞ்சு கொண்டாங்க'' என்றான்.

சாணியும் வேண்டாம், சாறும் வேண்டாம். அவற்றை இப்போ அநாயாசமாக சிருஷ்டித்த இவனது சங்கற்ப சக்தியாலேயே தன்னைக் குணப்படுத்திக் கொண்டிருக்கலாம். இருந்தாலும் இவனுக்கு நிறைய லீலை வேண்டியிருந்ததே!

பெற்றோர் சென்று பார்த்தனர். இவன் சொன்னபடியே சாணமும் மூலிகையும் இருந்தன. பச்சிலையைச் சாணத்தில் பிழிந்து ஸத்யாவிடம் கொண்டுவந்து கொடுத்தார்கள்.

அதை வாங்கித் தன் கண்ணில் இவன் ஒற்றிக் கொண்டானோ இல்லையோ, நாடக அரங்கில் மூடிய திரை சர சர

Koviloor Digital Library

எனத் திறந்து கொள்வதைப்போல, ரேடியோவில் 'மாஜிக்—ஐ' திறப்பதுபோல, எந்த மாஜிக்காலோ வீங்கி இடுங்கி மூடியிருந்த இவனது கண்கள் மலர்ந்து திறந்தன.

இந்திர ஜாலம் போல வீக்கம் வடிந்தது. மண்டையும் முகமும் ஜவஜவப்பு நீங்கி பழைய ஸத்யாவின் பால் வழியும் வதனமாயிற்று.

''அப்பாடா'' என்று ஆசுவாசப் பெருமூச்சு விட்டனர் பெற்றோர்.

''ஐயோடா'' என்று ஊது உலைத் துருத்திபோல் நெடு மூச்சு வாங்க வந்து விட்டான் யமராட்சதன். ''பேயை அடிச்சுத் தொறத்துரத்துக்கு ஒரு அங்குலம்தான் பாக்கி இருந்துச்சு. இந்தச் சமயத்திலே தான் போகப்படாதுங்கறதுக்காக அது பண்ணின சூழ்ச்சியிலே மாட்டிக்கிட்டு மாற்று மருந்து வைச்சுட்டீங்களே. நான் பட்ட பாட்டையெல்லாம் தவிடு பொடியாப் பண்ணிட்டீங்களே! கொஞ்சமாறும் யோசனை வேணும். மூளை வேணும்? இப்போ 'அடியைப் பிடிடா பாரதபட்டா'ன்னு முதலிலிருந்துன்னு ஆரம்பிக்கணும்? உங்களைப்போல் முட்டாள் பசங்க கேஸை நான் எடுத்துக்கிட்டு உயிரை விட்டதே தப்பு''' என்று மாந்திரிகன் கூச்சல் போட்டான்.

''ஆமாங்க தப்புத்தான். நீங்க மறுபடி எங்களுக்காகச் சிரமப்பட வேண்டாம். உங்களுக்கு என்ன தட்சிணை வேணும் தந்துடறோம். உங்கள் கிட்ட குணம் பண்ணிக்க எங்களுக்குப் பொசிப்பு இல்லை. மன்னிச்சுவிட்டிடுங்க. நாங்க போறோம். கடவுள் கிருபை இருந்தால் இந்தப் பய இன்னும் கொஞ்சம் உடம்பு தேறினவிட்டு மறுபடி அழைச்சிட்டு வாரோம்''என்று அவனிடம் தழைந்து குழைந்தார் வெங்கப்பர்.

பின், என்ன செய்யலாம்? அவனோ மந்திரவாதி. அவனிடம் பகைத்துக் கொண்டால் அவன் நிஜமாகப் பூதப் பிசாசு எதையாவது ஏவினாலும் ஏவி விடக்கூடும் என்று இவருக்குப் பயம். பூதப் பிரேதப் பிசாசங்கள் ஏதும் தலைகாட்டவொண்ணா ரட்சை தன் புதல்வன் என்று அவருக்கு இன்னமும் புரியவில்லையே!

ஆனால் மாந்திரிகனுக்கு உள்ளூறப் புரிந்து தான் இருக்க வேண்டும் — நான் இத்தனை மந்திர தந்திர வைத்தியங்கள் செய்தும் ஸத்யாவை அது தொடாததும் க்ஷண மாத்திரத்தில் அவன் கவிதத்துக்கு மாற்றுச் செய்து கொண்டதும் 'இது நம் சக்திக்கு அப்பாற்பட்ட ஒரு பெரிய சமாசாரம்' என்று அவனுக்கு உணர்த்தியிருந்தானே இருக்க வேண்டும்? இனி இங்கே காசல் கொரல் விட்டுப் பயனில்லை என்று கண்டு கொண்டிருப்பான். எனவே, தன்னிடம் சண்டை போடுவதற்குப் பதில் 'தாஜா' செய்த வெங்கப்பரிடம் ஒத்தைக்கு

Koviloor Digital Library

இரட்டையாக தட்சிணை கேட்டுத் தண்டிக்கொண்டு அவர்களைப் போகவிட்டான்.

சிந்திரவதைக் கூடத்திலிருந்து சித்திராவதிப் பர்த்திக்குத் திரும்பினான் ஸத்யா.

ஆனாலும் "நோய்" என்னவோ தீரவில்லையே என்று தான் இன்னமும் பெற்றோர் மயங்கினர்!

இனி பயங்கர மாந்திரிகம் வேண்டாம் என்று தீர்மானித்து பக்கத்துக் கிராமம் ஒன்றில் பச்சிலை வைத்தியம் பார்க்க எண்ணினர்.

நல்ல மருந்திம் மருந்து—சுகம்
நல்கும் வைத்திய நாத மருந்து

என வள்ளலாரும்,

அரு மருந்தொரு திருமருந்து

என மாரிமுத்தாப் பிள்ளையும்,

பார்வதி என்றொரு சீமாட்டி...பாதிதின்ற...மருந்து

என கோபால கிருஷ்ண பாரதியும் பாடிய மூல வஸ்துவுக்கு மூலிகை மருத்துவம் செய்ய உத்தேசித்தனர்.

* * *

வண்டி கட்டப்பட்டது. வெளி நினைவற்றிருந்த ஸத்யாவை அதில் தூக்கிப் போட்டுக் கொண்டு புறப்பட்டனர்.

வழியே கண் விழித்தான்.

இம்முறை பெற்றோரிடம் அதிகம் 'ஸீ—ஸா'' விளையாட அவன் எண்ணவில்லை. "நான் அங்கே எல்லாம் வரல்லே. வீட்டுக்குத்தான் போகப் போறேன்'' என்றான் மெல்ல.

உடனே வண்டிமாடுகள் ஜண ஜண என்று கழுத்து மணிகள் குலுங்கப் புட்டபர்த்தியை நோக்கித் திரும்பி ஓடலாயின. அவற்றை அடக்கி வழிக்குக் கொண்டு வருவது தன்னாலாகாத காரியம் என்று வண்டிக்காரன் ஓய்ந்து உட்கார்ந்து விட்டான்.

பசு—பதி, கோ—பாலன் இஷ்டப்படிதான் மாடு நடக்கும். ஆன்றோர்கள் மனித ஜீவனைத்தான் அந்த மாடாக உருவகித்தார்கள். இங்கோ, மனித ஜீவர்கள் நம் கோபாலனுக்கு உடன்படாதபோது, அசல்மாடுகளே அவன் சங்கல்பத்தை ஈடேற்றின.

புட்டபர்த்திக்குத் திரும்பியவர்களிடம் பெனுகொண்டா வக்கீல் ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார், "ஆவிகள், துர்த் தேவதைகள் பிடிப்பு எதுவானாலும் கடிகாசலத்து நரசிம்ம மூர்த்தியைவிடக் கை கண்ட மருந்து வேறில்லை. பையனை அங்கே அழைத்துப் போங்கள்" என்றார். (சோளிங்கர் எனப்படும் சோழசிம்மபுரம் தான் இந்த கடிகாசலம்.)

நகை சிந்தும் நயனத்தால் அவரைப் பார்த்தான் ஸத்யா. "மாமா, நீங்க சொல்றது ரொம்பத் தமாஷா இருக்கு. கடிகாசலத்திலே ஏற்கெனவே இருக்கிற எங்கிட்டேயே என்னை அழைச்சுட்டுப் போகச் சொல்றீங்களே!" என்றான், ஸ்பஷ்டமாக!

அவருக்கு அது அதிகப் பிரசங்கமாகவே இருந்தது. ஆனால் வெங்கப்ப ராஜுவோ அவனை வியப்புடன் பார்த்தார். வியப்பு பக்தியாக, இனம் தெரியா அச்சமாகப் பரிணமித்தது: 'இந்த மொட்டைத் தலை ஸத்யா உண்மையில் பிடரி சிலிர்க்க விளங்கும் சிங்கப்பிரான்தானோ?'

Koviloor Digital Library

அத்தியாயம் — 16

அவதாரம் அலர்ந்தது!

நீ சிறுவனாக இருக்கிறாய் ...
நீயே கோலூன்றிய கிழவனாக மயக்குகிறாய்
அனைத்து வடிவாயும் இருப்பவன் நீதான்

— அதர்வ வேதம் 10–8–27

ஸத்யா கமலாபுரத்துக்குச் செல்லுமுன், புட்டபர்த்தியில் சகாக்களுடன் வீதிபஜனை செய்து வந்த காலத்தில், ஒரு நாள் கதிரியில் கோயில் கொண்டுள்ள நரசிம்மரைப்பற்றி ஒரு பாட்டுப் பாடினார்கள். அதில்,

“எஃகுத் தூணைப் பிளந்து எகிறி வந்தனன் சிங்கன்”

என்ற வரி வந்தபோது ஸத்யா ஓர் எகிறு எகிறி எங்கோ நின்றான். எயிறு தெரியச் சீறி நகைத்து இரணியனின் உதரத்தை உகிர்ந்த சீயப் பிரானாகவே அன்று அவனை ஊரார் கண்டனர். பலர் தேங்காய் உடைத்துச் சூடம் சமர்ப்பித்த பின்தான் அவனது ஆவேசம் தணிந்தது.

“கடாகாசத்திலே ஏற்கெனவே இருக்கிற எங்கிட்டே” என்று ஸத்யா சொன்னது, இது வெங்கப்ப ராஜுவுக்கு நினைவில் வந்தது. தெய்விகமோ, பைசாசமோ இனி இந்தப் பிள்ளை விஷயமாகத் தாம் செய்வதற்குப் பரிகாரம் ஏதுமில்லை என்று மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டு விட்டார். எப்படியும் கோடை விடுமுறைக்காக உரவகொண்டா பள்ளி மூடிவிட்டதால், மறுபடி திறப்பதற்குள் ஸத்யா சாதாரணப் பிள்ளையாக மாறுகிறானோ என்று கொஞ்சம் ஆறப்போட்டுப் பார்க்கலாம் என நினைத்தார்.

* * *

1940 மே 23-ந்தேதி. ஸத்யாவுக்குச் சரியாக பதின்மூன்றரை வயது முடிந்த சமயம். இவன் பிறந்தது நவம்பர் 23. இது மே 23. அதற்கு இது சரியாக ஆறு மாதம்.

Koviloor Digital Library

திட்டமாக ஆறுமாத இடைவெளியிருப்பதற்கு ஒரு விசேஷம் உண்டு என்பதை ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள் வாக்கிலிருந்து பெறுகிறோம். ''சங்கர — நாராயணனாக உருவத்தால் ஒன்றிலேயே இருவர் பாதிப் பாதியாக இருப்பதுபோல், காலத்திலும் இவர்கள் ஓராண்டில் பாதிப் பாதியாக இருக்கிறார்கள்; கிருஷ்ண ஜயந்திக்கும், மகாசிவராத்ரிக்கும் இடையே சரியாக அரை வருட இடைவெளியிருக்கும்'' என்பது அவர்களது அருள்மொழி.

(இதில் ஒரு வேடிக்கை: பாபா ஜயந்திக்கும் பெரியவர்கள் ஜயந்திக்குமிடையே கூடச் சரியாக அரைவருட இடைவெளியிருப்பதுதான். ஒருவர் சங்கரர், மற்றவர் (ஸத்ய) நாராயணர் என்பதைப் பார்க்கும்போது இருவரையும் சேர்த்து பக்தி செய்யும் பாக்கியம் பெற்றவர்களுக்கு ஒரு குதூஹலமே உண்டாகிறதல்லவா? ஒருவர் பிறந்தது வைசாகம் — மற்றவர் பிறந்தது கார்த்திகம். இரண்டும் முருகபரமான பெயர்கொண்ட மாதங்கள். ஒருவர் அனைத்து மக்களும் போற்றுபவராயினும் 'ஒன்றை'யே சொல்லும் அத்வைத மதாசாரியராதலால், ஒன்றாம் திதியாம் பிரதமையில் தோன்றினார். மற்றவரும் அத்வைதியே எனினும் பல மதஸ்தர், சம்பிரதாயத்தவருக்கும் பொதுவானதால் அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம், துவைதாத்வைதம் (பேதாபேதம்) என்ற நான்கில் அடங்கிவிடும் அனைத்துச் சமயமரபுகளையும் குறிப்பதே போல் நாலாம் திதியான சதுர்த்தியில் தோன்றினார். சங்கரர் பொன்னார் மேனியர்; ஸத்ய நாராயணர் சாமள சரீரர், முன்னவரிடம் சிவத்தின் ஞான மோனம் அதிகம். பின்னவரிடம் மாயவனின் லீலா விநோதம் அதிகம். ஆக, ஆறுமாத இடைவெளிக்கு அர்த்த புஷ்டி உண்டு என்று நிச்சயமாகிறது.)

இன்று ஸத்யாவுக்கு பதின்மூன்று முடிந்து சரியாக ஆறு மாதமாகிவிட்டது. மானுடமாகப் பிறந்த பிறப்புக்கு நேரெதிர் புறமாக, பூர்வத்தில் தான் எந்த தெய்வப்பிறப்பாக இருந்தானோ அதுவாகப் பிறக்கவேண்டிய நாள் என்று கொண்டானோ என்னவோ? அதுவும் முந்தைய தெய்வப் பிறவிக்கு விசேஷமான குரு வாரமாகவும் அன்று வாய்த்திருந்தது.

கண்ணனின் காலத்தில் பதின்மூவாண்டு கண்காணாமல் வாழ்ந்தால் ஒரு ஜன்மம் கழிந்ததற்குச் சமம் என்றும், ராமனின் காலத்தில் பதினாலாண்டு மறைந்து வாழ்ந்தால் ஒரு பிறவி தீர்ந்ததற்கு ஈடாகும் என்றும் கருதப்பட்டது. கண்ணனுக்கும் ராமனுக்கும் மத்தியாக இப்போது பதின்மூன்றரை என்று கொண்டானோ என்னவோ? இத்தனைக் காலம் இவனும் ஒரு வனவாசம், அக்ஞாதவாசம் செய்து மறைந்துதான் இருந்துவிட்டான். கூட்டை முற்றிலும் பிய்த்து வெளிவந்து சிறகடிக்கும் வண்ணத்துப் பூச்சியாகிவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்து விட்டான் போலும்!

அன்று காலை எழுந்ததிலிருந்து ஸத்யா வானம்பாடிபோல் பாடிக்கொண்டு பரம உற்சாகமாக, ஜீவகளை பொங்கிவழியக் காணப்பட்டான்.

Koviloor Digital Library

விட்டார், அனைவரையும் அன்னையகத்தார் எல்லோரையும் அழைத்துத் தன்னைச் சுற்றி வைத்துக்கொண்டு ஆனந்தமாகப் பேசினான், பாடினான். அன்று அவன் இருந்த மதுர மனோஹரக் கோலம் காரணமாக, எவருமே பேயோ, பைத்தியமோ என்று அஞ்சாமல் அவனைச் சூழ்ந்துகொண்டனர்.

செங்கையைச் சுழற்றினான். கைவழியக் கற்கண்டுகள் தோன்றின. அனைவருக்கும் கொடுத்தான். கொடுக்கக் கொடுக்கக் குறையவில்லை.

மறுபடி மலர்க்கையை அசைத்தான். கைநிறையக் கவின் மலர்கள்! அதையும் விநியோகம் செய்தான்.

மீண்டும் கரத்தை அசைத்தான். ஆஹா, திவ்யமான பாலன்னத்தின் தீஞ்சுவை சுகந்தம்! எல்லோரையும்விட ஒருபடி அதிகமாக அதிசயித்தாள் ஈச்வரம்மாள். ஏறக்குறைய பத்தாண்டுகளுக்கு முன், பட்டினி கிடந்த பாலன், தாத்தா சாதம் போட்டதாகச் சொல்லிக் கை நீட்டியபோது அதிலே வீசிற்றே அதே நறுமணம்!

கூடியிருந்த அனைவருக்கும் ஒவ்வொரு பெரிய கவளம் அந்தத் தெய்விகப் பிரஸாதத்தை அளித்தான். ''பாற்சோறு மூட நெய் பெய்து முழங்கை வழி வாரக் கூடியிருந்து'' உண்டு மகிழ்ந்தவர் அம் மக்கள். பயந்தவர், ஐயுற்றவர் அனைவருமே அவனது அன்பிலே உருகி, இதை உண்ணலாமா கூடாதா என்ற யோசனைகள் இன்றி உட்கொண்டு களித்தனர்.

ஆஹா! மஹாமாயையின் ஆளுகையை என்னென்பது? இப்படி எல்லோரும் இன்புற்றிருக்கையில், வெளியே சென்றிருந்த வெங்கப்பர் மட்டும் இதைக் கேள்விப்பட்டு வெகுண்டார். இன்று இவரே நரசிம்மக்கோலம் கொண்டுவிட்டார். 'சாதாரணமாக, ஊர்ப்பிள்ளைகள் போலில்லாமல் இந்த ஸத்யா செய்கிற கூத்துக்களை இன்றோடு முடித்துக்கட்டிவிட வேண்டும்' என்று அவருக்கு ஓர் ஆத்திர எழுச்சி பிறந்துவிட்டது.

விடுவிடுவென்று சென்று வீட்டுள் நுழையப் போனார்.

வாசலிலே ஏகக்கூட்டம். அதைக் காணவே எரிச்சலாயிருந்தது அவருக்கு. எரிகிற கொள்ளியில் எண்ணெய் வார்ப்பது போல் அவர்களில் சிலர், ''ராஜு சாமி! கடவுளே வந்திருக்காரு, கால் கழுவாம உள்ளே போறிங்களே!'' என்றனர்.

''இன்றோடு இவனுக்குக் கைதான் கழுவப்போகிறேன்'' என்று உறுமிக்கொண்டே உள்நுழைந்தார்.

'இரண்டில் ஒன்று தீர்த்துவிட்டுத்தான் மறு காரியம்' என்று குமுறியபடி ஒரு பிரம்பைக் கையில் எடுத்துக்கொண்டார்.

Koviloor Digital Library

அதை ஓங்கிப் பிடித்தபடி ஸந்யாவிடம் சென்று, "நீ யார்? என்ன நினைத்துக்கொண்டிருக்கிறுய்? சொல்லாவிட்டால் உன் மண்டையை உடைத்துவிடுவேன். சொல்லு, நீ யார்? பைத்தியமா, வெறியா, தெய்வமா, அவதாரமா, பேயா, பிசாசா?" என்று உச்ச ஸ்தாயியில் கூச்சலிட்டார்.

கூடியிருந்த அனைவரும் அச்சமும் ஆச்சரியமும் கலந்த இனம் தெரியாததோர் உணர்வின் உச்சி விளிம்புக்குச் சென்று விட்டனர்.

அன்றலர்ந்ததொரு பெரிய குவளை மலர்போல், அன்பே உருவாக அமர்ந்திருந்த ஸத்யாவின் நவசம்பக உதடுகளையே அத்தனை கண்வண்டுகளும் மொய்த்தன. 'என்ன பதில் சொல்லப் போகிறுன்? உண்மையிலேயே இவன் யாராம்?'

சம்பக மொட்டு மடலவிழ்ந்தது. தேனுகப் பொசிந்தது அவன் வாக்கு:

"நான் யாரா? நான்தான் ஸாயிபாபா!"

நிதானமாக, குளுமையாகத்தான் அவன் அப்படிச் சொன்னுன். ஆனுலும் அதிலிருந்த ஸத்யத்தின் அழுத்தம்! மேக விளிம்பிலிருந்து பால்நிலாப் பொழியும் பூர்ணமதியம் போலத் தண்ணென்று அமர்ந்திருந்தான். சூரியனின் உக்கிரத்தைவிட இந்தச் சந்திரிகையிலேயே தாங்கொணுதவொரு சக்தி ததும்பி நின்றது.

"ஸாயி பாபா" — இந்தப் பெயரைத்தான் பல வருடங்களுக்கு முன்பிருந்தே பஜனைகளிலெல்லாம் இவன் பாடி ஆடிக் கொண்டாடியிருக்கிறுன். பண்டரிநாதனைக் கானம் செய்யும் போதெல்லாம், கூடக்கூட, அதே மஹாராஷ்டிரத்திலுள்ள இன்னெரு தலமாக "ஷிர்டி" என்ற ஒன்றைப் பாடி, அப் பதியில் வதியும் ஷிர்டிபதியான இந்த ஸாயிபாபாவைத்தான் போற்றியிருக்கிறுன். மக்களுக்கோ அந்த ஊரையும் தெரியாது; ஸாயி பாபா என்ற சப்தமும் அவர்கள் செவிக்கு அதுவரையில் எட்டியிராத ஒன்றுதான். சிவன், ராமன், கிருஷ்ணன், ஆஞ்ஜநேயர் எல்லாம் சேர்ந்த மூர்த்தியாக இந்த ஸாயிபாபாவை ஸத்யா வருணித்துப் பாடிய போதெல்லாம் அவர்களுக்குப் புதிராகவே இருந்தது. 'ஏதோ துருக்கப் பெயர்போல இருக்கிறது. ஆனுல் அவரை ஹிந்து மதக் கடவுளாகப் பாடுகிறுனே' என்று வியந்தும், பயந்தும்கூட இருக்கிறுர்கள். பாட்டிலே வந்த இந்தப் பெயரைக் கேட்டுத்தான் மந்திரவாதியும் 'துலுக்கப் பிசாசு' என்று முடிவுசெய்து 'சிகித்ஸை' செய்தான்!

பூரண சந்திரனுக அன்பு நிலாப் பொழியும் அதிசயப் பிசாசு! பெற்ற தாயின் அன்போடு, காண வருகிறவர்களை எல்லாம் குழந்தைகளாக்கிக் கற்கண்டும், க்ஷீரான்னமும் கனிந்தளிக்கும் அற்புதப் பிசாசு!

Koviloor Digital Library

ஸமர்த்த ராமதாஸர் ஸ்ரீராமனின் நினைவிலேயே மூழ்கி, உலக வழக்குகளை விட்டுத் திரிந்தபோது அவரிடம் எவரோ, "உன்னைப் பூதமா பிடித்து ஆட்டுகிறது?" என்று கேட்டார். "ஆமாம், ஆமாம், பூதமேதான்" என்று கூறி ராமதாஸர் சிரித்தார். ஸ்ரீராமனைப் பற்றிச் சுலோகம் சுலோகமாகப் பாடி, "அந்த ராமபூதம் தான் என்னை ஆட்கொண்டிருக்கிறது" என்று முத்தாய்ப்பு வைத்தார். "நீ பேயா, பிசாசா?" என வெங்கப்பர் கேட்க, ஸத்யா, "நான் ஸாயிபாபா" என்றது அச் சரிதையை ஓரளவு எதிரொலிக்கிறது.

ஸத்யநாராயணன் என இவனுக்குப் பெற்றோர் நாமகரணமிட்டனர். இன்று இவனே "ஸாயிபாபா"வாகப் பெயர் சூட்டிக்கொண்டு விட்டான். அந்தப் பிறவி முடிந்துவிட்டது. இன்று புதிதாகப் பிறந்து விட்டான்! ஓரிலையில் இருந்துகொண்டே அடுத்த இலையை நீட்டும் பட்டுப்புழுபோல், ஜன்மா எடுத்த நாளாகவே இந்த இன்னொரு ஜன்மத்தையும் இவன் தொட்டுக் கொண்டுதான் இருந்தான். பட்டுப்புழு சுருங்கிச் சுருங்கி அவ்விலையில் முன்னேறி, இந்த இலையைக் கவ்விக் கொண்டே வந்து, கடைசியில் இதில் தாவி ஜம்மென்று இதிலேயே விழுந்துவிட்டது. இதிலேயே பெரிய "மிராகிள்"! அடுத்த ஜன்மம் என்று நாம் சொல்கிற இதுவே முந்தைய பிறவியாக இருக்கிறது!

இன்றும் நம் சரித நாதர் ஷிர்டி பாபாவைக் குறிப்பிடும் போதெல்லாம் தமது "பூர்வ சரீரம்," "மொதடி சரீரம்" என்றே சொல்வது வழக்கம்.

"ஸாயிபாபா" என்றால் என்ன அர்த்தம்? "பாபா" என்றால் தந்தை, மகான் என்று பொருள்படும். "ஸாயீ" என்பது "ஸ்வாமீ" என்பதன் திரிபு. "ஷாஹி" என்ற பார்ஸிய பதம் மகாபுருஷர் என்று பொருள்படும். அதுவே 'ஸாயி'யானதாகவும் சொல்வர்.

நம் ஸ்வாமியோ அற்புதப் பொருள் சொல்வார். "ஆயி என்றால் அம்மா, அம்பா; பாபா என்றால் பிதா, லோக பிதாவாம் சிவன். எனவே ஸ ஆயி (ஸாயி) பாபா என்பது அம்மையப்பனான ஸ அம்ப (ஸாம்ப) சிவமே" என்பார். "BABA–வில் B என்பது Being–ஸத்; A என்பது Awareness–சித், அடுத்த B என்பது Bliss–ஆனந்தம்; கடைசி A–Atma, இத்தன்மையான, ஸச்சிதானந்தமான, ஆத்மா" என்பார்.

நாம் வேறு தத்வார்த்தமும் ஸாயி நாமத்தில் காணலாம். "ஸாய்" என்ற தாது "முடிவிப்பது" என்று பொருள்படும். எனவே "ஸாயி" தான் ஸம்ஸாரத்தை முடிவிப்பவர். அதன் தொடக்கமும் இவரே! ஏனெனில் 'ஸை'' என்றால் சலனமுறுவது எனப் பொருள். அசலப் பிரம்மம் சலித்தவுடன் 'ஸாயி' ஆகிறது! "ஸாயி"யுடன் "யுஜ்" (சேருவதே) ஸாயுஜ்யமாம் முக்தி எனலாம். தமிழில் "சாய்" என்றால் ஒளி (ஞானம்), அழகு (கருணை)!

Koviloor Digital Library

''நான்தான் ஸாயிபாபா'' என்ற மஹத்தான பிரகடனத்தைச் செய்ததோடு, அந்தத் துருக்கப் பெயருக்குப் பொருத்தமில்லாமல் தொடர்ந்தான், இதுகாறும் ஸத்ய 'நாராயணனுக இருந்தவன்: ''ஆம், நான்தான் பாரத்வாஜ கோத்திரத்தில் ஆபஸ்தம்ப சூத்திரத்தில் பிறந்த ஸாயிபாபா. உங்கள் துயரெல்லாம் தீர்க்கவே மீளவும் வந்திருக்கிறேன். உங்களுடைய இல்லங்களை, உள்ளங்களைத் தூய்மையாக்கிக் கொள்ள விரும்புங்கள். நான் அங்கெல்லாம் குடிகொண்டு ரட்சிக்கிறேன்''.

அமர வாசகங்கள்! பதின்மூன்றரை வருட அக்ஞாத வாசம் முடிந்து, மேக மூட்டம் வெடித்து அவதார ரகசியம் பரசியமாக மழை கொட்டிவிட்டது. முட்டிநின்ற மழை அந்தக் கரு மேகத்திலேயே தெரியத்தான் செய்தது; அவ்வப்போது அது பூஞ்சிதறலாகவும் உதிர்ந்தது; இப்போதுதான் பூரணமாகப் பிதிர்ந்து, அடித்தே பெய்துவிட்டது. பதின்மூன்றரை ஆண்டுகள் கர்ப்பத்தில் குமுறிக்கொண்டிருந்த ஸத்யம் ஜனனம் எடுத்துவிட்டது. ஸத்யநாராயண ஜனனம் இதிலேயே ஒருவாறு முடிந்தும் விட்டது.

அப்போது அவன் சொன்னதன் அர்த்தம் கூடியிருந்தவருக்கு எவ்வளவு தூரம் புரிந்ததோ, புரியவில்லையோ, அதன் அழுத்தம் அவர்களை அப்போதைக்கேனும் வாயடைக்கச் செய்தது.

வெங்கப்பராஜு ஓங்கியிருந்த பிரம்பு கை நழுவி விழுந்தது. பிள்ளையையே வெறிக்கப் பார்த்தார். தன் பிள்ளைதானு?

காலை இனிய ஸத்யாவாக இருந்த அவனை அண்டவே ஒரு கௌரவமான தயக்கம், அச்சம் அனைவருக்கும் உண்டாயிற்று.

அவன் பிற்பகல்வரையில், திரும்பத் திரும்ப ''பாரத்வாஜ கோத்திரம், ஆபஸ்தம்ப சூத்திரம்'' என்பதையே ஜபம் செய்வதுபோல் சொல்லிக்கொண்டிருந்தான்.

புட்டபர்த்திக்கு வந்திருந்த தமையன் சேஷமராஜுவுக்குத்தான் சற்றுத் தைரியம் வந்தது. ''நீ என்ன சொல்கிருய்? ஸாயிபாபா என்று துருக்கப் பெயர் மாதிரி ஏதோ சொன்ருய். இப்போது அவருக்கு நம்முடைய கோத்திரத்தையும் சூத்திரத்தையும் சொல்லிக்கொண்டிருக்கிருயே! இதற்கு என்ன பொருள்?'' என்று வினவிஞர்.

''ஸாயிபாபா இளமையிலேயே துருக்க ஃபகிர் ஒருவரால் வளர்க்கப்பட்டு, பிற்பாடு ஷிர்டி மசூதியிலேயே இருக்கை கொண்டபோதிலும், அவர் பிறந்தது பிராமணக் குடியில்தான். ஸ்ரீமத் ராமாயண காலத்தில் ஐயனைச் சேர்ந்த ஆயிரமாயிரவர்க்கு அற்புத ஆற்றலால் அறுசுவை உண்டி படைத்த போதிலும் 'வெறும் சித்துக்காரர்' என்று அவப்பெயர் பெருமல் ''மஹர்ஷி'', ''பகவான்'' என்றெல்லாம் புகழப் பெற்ற பரத்வாஜ முனிவரின் கோத்திரத்தில் அவதரித்தவர்

Koviloor Digital Library

ஷிர்டி பாபா. அக்னி மயமான அங்காரகன் அந்த பரத்வாஜரின் சந்ததிதான். தாய்மைக்காக கோத்திரத்தில் நெருப்புச் சம்பந்தம் கொண்டார். குருமைக்காக சூத்திரத்தில் நீரின் தொடர்பு கொண்டார். ஒரு சமயத்தில் தண்ணீரையே தானாக நிறுத்தி வைத்ததால் ஆப—ஸ்தம்பர் என்று பெயர் கொண்ட ரிஷி வகுத்த ஆசாரங்களை மேற்கொண்ட சூத்திரத்தில் இந்தப் பெரிய சூத்திரதாரி அவதரித்தார்.

''வாமனாவதாரத்தில் காச்யப கோத்திரத்தில் பிறந்த திருமால், அடுத்ததான பரசுராம அவதாரத்தில் பார்க்கவ கோத்திரத்துக்கு மாறினார். ஸ்ரீராமனாக சூரிய வம்சத்தில் தோன்றியவர் பலராமனாகவும் கண்ணனாகவும் வந்தபோது சந்திர வம்சத்துக்கு மாறினார். ஆனால் ஷிர்டி பாபாவாக இருந்த நான் மறுபடி இதோ இப்போது பிறந்திருக்கும்போது கோத்திரத்தையும், சூத்திரத்தையும் மாற்றிக் கொள்ளவில்லை. அன்று அந்தணனாகச் சற்றே அடங்கியிருந்தவன். இன்று கொந்தளித்துச் சக்தியைக் காட்ட க்ஷத்ரியனாகி யிருக்கிறேன். அன்று மஹாராஷ்டிரத்தில் பத்ரியில் பிறந்தேன். இன்று ஆந்திரத்தில் பர்த்தியில் பிறந்திருக்கிறேன். இப்படியே என் தோற்றம், ஆற்றலைக் காட்டும் பான்மை இவற்றிலும் முன் அவதாரத்திலிருந்து சிறு மாறுதல்கள் காட்டுவேன். ஆனாலும் அன்றும் இன்றும் மாறாதவை இந்த கோத்திரமும், சூத்திரமும். 'கோ' என்றால் 'உலகு'; 'த்ரம்' என்றால் 'காப்பது'. உலகைக் காக்கும் பணி அன்றும் இன்றும் ஒன்றேயாதலால் 'கோத்திரம்' மாறவில்லை. பரத்வாஜர் உருவகிக்கும் சமத்கார சக்தியே இந்த அவதாரத்தின் தொடக்கத்திலும் பிரதானமாக இருக்கும். 'சூத்திரம்' என்பது நூல், பல மணிகளைச் சங்கிலியாக இணைக்கும்போது உள்ளே ஓடும் சரடு அது. எத்தனை அவதாரங்கள் எடுத்தாலும் உள்ளே இழையோடுவது கருணை என்னும் ஒரே குருமைச் சரடாதலால் சூத்திரத்தையும் மாற்றிக் கொள்ளவில்லை. இந்தும் அற்புத சக்தியை வற்புறுத்தவே நீரைத் தானாக நிறுத்திவைத்த ரிஷியின் சூத்திரத்தைத் தேர்வு செய்து கொண்டேன். உள்ளூற நாங்கள் ஒன்றே என்று காட்டத்தான் அன்று பாம்புகள் மலர்ந்த ஷிர்டியில் ('சிர' என்றாலே வடமொழியில் 'பாம்பு' என்றுதான் அர்த்தம். சிர வாடியே ஷிரடியாகிப் பிறகு ஷிர்டி என ஆகியிருக்கும்!) பிறந்தேன். இன்றும் புற்றுக்கள் மூடிய புட்டபர்த்தியில் பிறந்து உரவகொண்டா என்ற அரவக் குன்றில் சிறுகச் சிறுக சுய உருவம் கொள்ளலானேன். இனியும் என் அருள் பொலியப்போகும் பல மந்திரங்களில் (கோயில்களில்) புற்றுக்களை உண்டாக்கி, நாக ரூபியாக வெளிவருவேன். அன்றும் இன்றும் முதலில் திரையைக் கண்டுபிடித்துக் கொடுத்தே என் மகிமையை உலகுக்குப் பயனாக்கினேன்'' — இப்படியெல்லாம் நம் ஸத்யா சேஷமராஜுவுக்கு விளக்கம் தந்தாரா என்றால் அதுதான் இல்லை!

அவதாரத்தை உடைத்து வெளியிட்ட பின்னருங்கூட, உட்பொருள்களை உடனுக்குடன் உடைக்க அவன் பிரியப்பட

Koviloor Digital Library

வில்லை. பிரபஞ்ச காவியத்தைப் புனைந்துள்ள இறைவன் மஹா கவி. கவிநயமே சொல்லாமற் சொல்லும் 'தொனி' அல்லது 'வியங்கிய'த்தில்தானே உள்ளது? உலகிலே தன்னை உறுத்துமாறு காட்டிக்கொள்ளாமல் உருக்கரந்து சூட்சும சங்கேதம் மட்டுமே கொடுக்கிறான் இறைவன். அதை நாம் புரிந்துகொள்ளாத போது காவிய நயத்தையும் தியாகம் செய்து, இயற்கைக்கு மேம்பட்ட ஆற்றல்களை வெளிக்காட்டுகிறான். அப்போதும்கூட அதற்குள்ளேயே நுட்பமாகப் 'பொடி' வைத்து ஆங்காங்கு ரகசியம் செய்துவிடுகிறான். பக்குவமற்ற மக்களுக்கு எட்டுவதற்காக அற்புதங்கள் செய்து தெய்வத்தன்மையை உடைத்துக் காட்டிக் கலைத்தியாகம் செய்கிற நம் நாயகரும் ஊடே ஊடே ஒளிந்து கொண்டு விடுவார்—'தேவர்களுக்கு ஒளிந்திருப்பதிலேயே பிரியம் போலும்' என்ற உபநிடத மொழிக்கு ஒப்ப.

இப்போதும் இவ்வாறுதான் தமையனிடம் மௌனம் சாதித்தான் ஸத்யா. எத்தனை துளைத்துப் பார்த்தும் பயனில்லை என்று கண்ட சேஷமா் சலிப்படைந்தார். 'எதற்காக இப்படி ஒருவன் நம் வீட்டிலே பிறந்து வளர்ந்து, நம்மையே கண்ணைக்கட்டிக் காட்டில் விட்டதுபோல் பிரமிக்கச் செய்கிறான்?' என்றெண்ணினார்.

தமையனின் மன ஓட்டத்தை உள்ளங்கை நெல்லிக்கனியாகக் கண்டுகொண்ட ஸத்யா, ''நான் ஏன் இந்த வீட்டில் வந்து பிறந்தேன் தெரியுமா? உங்களுடைய வெங்காவதூதர், 'இறைவா, இந்த உலகைக் காக்க நீ அவதரிக்க வேண்டும். அப்படி அவதரிக்கும்போது எங்கள் குடியில் வந்து தோன்ற வேண்டும்' என்று தவமிருந்து பிரார்த்தித்தார். அதனால்தான் இங்கே வந்தேன்'' என்றார்.

ரத்னாகர ராஜுக் குடும்ப மூதாதையரில் ஒருவரான இம் மஹானைப் பற்றி முன்பே கூறியுள்ளோம். அவதூதராக சர்வ சங்கப் பரித்தியாகம் செய்த பின்னும் கூட அவருக்குத் தம் குடி என்ற பாசம் கொஞ்சம் ஒட்டிக்கொண்டிருந்தது போலும்! இவனோ இக் குடும்பத்திலேயே பிறந்து வளர்ந்து வந்த போதிலும் இதைத் தன் குடியாகவோ, வெங்காவதூதரைத் தன் மூதாதையாகவோ எண்ணாமல் 'உங்களுடைய வெங்காவ தூதர்' என்கிறான்! லீலாவிநோதராகத் தோன்றும் நம் நாயகரை விடப் பரம வைராக்கியசாலி இல்லை என்பது தெரிந்தவர்களுக்குத் தான் தெரியும் — அதாவது அவராகத் தெரிவித்துக் காட்டியவருக்கே தெரியும்!

வெங்காவதூதருக்காக வந்தவனை வெங்கப்ப ராஜு இன்னமும் பூரணமாகப் புரிந்துகொள்ளாவிடினும், ''இது பேய் பிசாசு இல்லை, யாரோ ஒரு முஸ்லிம் மஹான் நம் மகன்மேல் ஆவேசித்து வருகிறார்'' என்ற அளவுக்கு மனத்தைச் சமாதானப் படுத்திக் கொண்டார்.

ஆவேசித்து வருகிற ஹிந்துத் தெய்வங்களைத் தணித்து மலையேறச் செய்வதற்குக் கர்ப்பூரம் காட்டுவது வழக்கம். ஆனால் இந்தத் துருக்கச் சாமியை எப்படித் திருப்பி அனுப்பி வைப்பது?

சாமியையே கேட்டார், ''உனக்கு எப்படிப் பூசை போட வேண்டும்?'' என்று.

சாமி சிரித்தது. ''இல்லத்தை, உள்ளத்தைத் தூய்மையாய் வைத்துக்கொண்டால் அதுவே எனக்குப் பூஜை. குருவாரத்தில் சம்பிரதாய பூஜையும் செய்'' என்றது — தகப்பனாரை நோக்கிப் பூஜிக்கச் சொன்ன தகப்பன் சாமி!

''பாபாக்களும் சத்திய சாயி எனும் பகவன் சிலமதாய் கொண்டாடும் குருவாரம்'' என்று இதைத்தான் என்றோ ரிஷி கூறிவிட்டார் பிரம்ம நாடியில்.

Koviloor Digital Library

அத்தியாயம்—17

மல்லிகையில் மலர்ந்த மந்திரம்

"அர்ஜுனா! எனக்கும் உனக்கும் எத்தனையோ பிறவிகள் சென்றுவிட்டன. நான் அவை அனைத்தையும் அறிவேன்.. நீ அறியமாட்டாய்."

— பகவத் கீதையில் கண்ணன்

தன் பிள்ளையைப் பிடித்திருந்த சாமியைப் பிடித்துத் தள்ளவே முடியாது என்று பெத்த வெங்கப்ப ராஜுவுக்குத் தெரியவில்லை. பிள்ளை சாமியாக இருப்பதைவிட ஆசாமியாக ஆவதிலேயே தகப்பனாருக்கு ஆசை இருந்தது. ஏதாவது பூசை கிசை போட்டுத் துருக்கச் சாமியை அனுப்பிவைத்து விடலாம் என்று நினைத்துத்தான் பிள்ளையை வினவினார். அவன் சொன்ன உள்ளத் தூய்மை, இல்லத்தூய்மை, குருவார பூஜை எல்லாம் இவருக்குச் சரியான பரிகாரமாகத் தெரியவில்லை. துருக்கச் சாமியின் பூஜாமுறையை அறிய விரும்பினார் — அவரைப் பூஜித்து சமாதானப்படுத்தி, "போய் வாருங்கள்" என்று வழியனுப்பி வைப்பதற்குத்தான்! எனவே அந்த முஸ்லிம் மஹானின் பக்தர் எவரேனும், எங்கேனும் இருக்கிறாரா என்று விசாரணையில் இறங்கினார்.

பெனுகொண்டாவில் ஸாயிபாபாவை வழிபடும் ஓர் அரசாங்க அதிகாரி இருப்பதாகத் தெரியவந்தது. வெங்கப்பருக்கு ஏக மகிழ்ச்சி. பிள்ளையை அவர் பரிசோதித்துப் பார்ப்பதற்காக அழைத்துச் சென்றார்.

அவரோ ஒரே வார்த்தையில் "பைத்திய கேஸ்" என்று திருவாய் மலர்ந்து விட்டார்.

"ஆமாம், பைத்திய கேஸேதான். ஆனால் யாருக்கு என்பதில்தான் நமக்குள் அபிப்பிராய பேதம்" என்று அவரிடம் நறுக்கெனச் சொன்னான் ஸத்யா. தொடர்ந்து, "பூசாரி

Koviloor Digital Library

ஒருவனுக்கு அவன் பூஜை போடும் தெய்வமே வேற்று ரூபத்தில் வந்தால் நம் தெய்வந்தான் இப்படி வந்திருக்கிறது என்று தெரிந்துவிடுமா? நீ அப்படிப்பட்ட பூசாரிதான்'' என்றான்.

பூசாரி மற்றோருக்கு விபூதி தருவது வழக்கமல்லவா? பூசாரிக்கு இறைவனேதானே விபூதி தர வேண்டும்? ஸத்யா வெட்டவெளியில் கையைப் போட்டுப் பிடிப்பிடியாக விபூதியை 'எடுத்து' வீசினான்!

ஷிர்டி பாபா 'உதி' எனப்படும் விபூதிப் பிரஸாதம் கொடுத்தே தான் வினை யாவும் தீர்த்துவந்தார். ஷிர்டி மசூதியில் இந்தச் சாம்பலுக்கென்றே ஓயாமல் 'துனி' என்ற அக்கினியில் கட்டையைப் போட்டுக்கொண்டிருப்பார். இன்றும் அந்த அக்கினி குண்டம் அகண்டமாக எரிந்து, திருநீற்றைத் தந்து கொண்டிருக்கிறது. புது அவதாரத்தில் ''ஸ்ருஷ்டி''லீலையை விஸ்தரித்து விரலசைப்பிலேயே விபூதி வர்ஷத்தை ஏற்படுத்துகிறார். இந்த லீலா விபூதிக்கு ''சுக்லாம் பரதரம்'' குட்டிக்கொண்டு விட்டான் ஸத்யா.

* * *

ஸ்வாமி சரித்திரத்தில் விபூதி விசேஷத்தைச் சொல்லாமல் இருப்பதற்கில்லை.

ஆம், விபூதியின் மகிமையே அலாதியானது. ஈச்வரத் தன்மையான ஐச்வர்யத்தை, வளமையை, நிறைவை அது ஏதோ ஒரு மர்மமான முறையில் ஊட்டுவதாலேயே ''விபூதி பூதிரைச்வர்யம்'' எனப்படுகிறது. ஜாபால உபநிஷதத்தில் அதன் பெருமை பரக்க ஓதப்படுகிறது. அனைத்தும் எரிந்து முடிவில் வெண்ணீறாகவே நிற்பதால், விபூதிதான் எக்காலும் நிற்கும் பரமாத்ம தத்வம் என்பார் ஸ்ரீ காஞ்சி முனிவர். உடல் எரிந்த பின்னும் நிற்கும் ஆத்மா அதுவே என்பதால்தான், உடலை எரிக்காமல் அடக்கம்செய்யும் கிறிஸ்துவர்களும்கூடச் ''சாம்பல் புதன்கிழமை'' (Ash Wednesday) என்ற விரதம் அநுஷ்டிக்கும் போது, பாதிரியார் அம்மதத்தினரின் நெற்றியில் சாம்பலிட்டு, ''தூசியான நீ அந்த தூசி நிலைக்கே திரும்பவேண்டும்'' (Dust thou art and to dust shalt thou return) என்று ஓதுகிறார்.

இப்படி இகம் அழிந்த பரதத்வமாக, தேகம் அழிந்த திவ்ய தத்வமாக மட்டுமின்றி இகசெல்வத்தையும், தேக ஆரோக்கியத்தையும் கூட இவ்விபூதியே விளைவிக்கிறது. திரு ஆனைக்கா திருமதில் எழுப்பிய கூலியாட்களுக்குப் பரமேச்வரன் சித்தராக வந்து விபூதியைத்தான் கூலியாகக் கொடுத்தார். அதுவே அவர்கள் வீட்டுக்கு எடுத்துச் சென்றபின் இக உலகுக்கு உதவும் பொருட்செல்வமாக மாறும். பொன்னனையாளுக்காகச் சொக்கநாதக் கடவுளும் சித்தராக வந்தபோது, விபூதியை அவளது தாமிரப் பாத்திரங்களில் தூவினான் அவற்றைப் பொன்னாக மாற்றினார். இதுபோலவே உடல் நலன் தரும் மருத்துவ

Koviloor Digital Library

மகத்துவம் அதற்கு இருப்பதால்தான் திருஞான சம்பந்தர் திருநீற்றுப் பதிகம் பாடி, விபூதி மகிமையாலேயே கூன் பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்த்திருக்கிறார். செந்திலாண்டவன் பத்ர விபூதியின் ஸர்வ ரோக நிவாரண மகிமையை ஆதி சங்கரரே போற்றுகிறார்.

உடல் நலம், செல்வம், மேதை, ஞானம் யாவற்றுக்கும் பாபா மிக அதிகமாக வழங்கி வரும் பிரஸாதம் விபூதிதான்.

பாலப் பருவத்தில் அவரே எப்போதும் விபூதி பூசிய திருக் கோலத்தில்தான் இருந்தார். பிற்பாடு அவர் வெளியே விபூதி பூசாவிடினும், தாமே விபூதி விக்கிரகமாகி விட்டதுபோல் திரு நீற்று வர்ஷத்தைப் பொழிந்து வருகிறார். விஜயதசமி, சிவ ராத்ரி முதலிய தினங்களில் ஷிர்டி நாதருக்குக் குடம் குடமாக விபூதி சிருஷ்டித்து அபிஷேகிக்கிறார். பக்தர்களை மரண சமயத்தில் காக்க முன்பெல்லாம் அவர் சரீர — அதீத யாத்திரை செய்கையில் அவரது வாயிலிருந்து விபூதியே ஏகமாகப் பெருகும். அதனால்தான் அவரை விபூதி வடிவம், திருநீற்றுத் திரு உரு, ''விபூதி ஸுந்தர ஸாயிநாத்'' என்பது.

> பரமம் பவித்ரம் பாபா விபூதிம்
> பரமம் விசித்ரம் லீலா விபூதிம்
> பரமார்த்த இஷ்டார்த்த மோக்ஷ ப்ரதானம்
> பாபா விபூதிம் இதம் ஆச்ரயாமி.

என்று பாடி பஜனையை முடிக்கும்போது, 'விபூதி' என்ற சொல்லால் கண்ணன் கீதையின் விபூதி யோகத்தில் குறிப்பிட்ட 'திவ்ய மஹிமை' மட்டும் குறிக்கப்படவில்லை; ஸ்தூலமாக பாபா நேரேயும், தம் படங்களிலும், இதர தெய்வங்களின் படங்களிலும் சிருஷ்டித்து அருளும் திருநீறும் குறிக்கப்படுகிறது எனலாம்.

ஷிர்டி உதி இன்றும் தொடர்கிறது. 'விபு'வான ஸர்வ வியாபியின் 'ஊதி'யான ரட்சணமே இவ்விபூதி.

அசல் ஷிர்டி குண்டக் கரும் சாம்பல் 'உதி'யையே நம் ஸ்வாமி அனந்தம் முறை வழங்கியுள்ளார். இது மட்டுமின்றி அவர் சிருஷ்டிக்கும் விபூதியில் எத்தனை வகை? எத்தனை நிறங்கள்? எத்தனை வெவ்வேறு ருசிகள்? மருந்தின் காரம், கசப்பு, விருவிருப்பிலிருந்து அஸ்காவின் தீஞ்சுவை வரையிலும் பற்பல தினுசு. ரகம் மாறினும் திருநீற்றையே எல்லாவிதக் கோளாற்றுக்கும் திவ்யௌஷதமாக வழங்குவது ஷிர்டியவதாரத் தொடர்ச்சியே ஆகும்.

ஆனால் ஏனோ பெனுகொண்டாவில் வாழ்ந்த ஷிர்டி பக்தருக்கு இந்த அவதாரத் தொடரிழை புரியவில்லை. ஸத்யா திருநீறு படைத்து வீசியவுடன் அவர் ''இது ஏதோ சில்லுண்டி சித்து. எங்கள் பாபா இதெல்லாம் செய்ய மாட்டார்'' என்று கூறிவிட்டார்.

Koviloor Digital Library

புட்டபர்த்தி திரும்பினர். அன்றும் ஒரு குருவாரம்தான். பெனுகொண்டா அதிகாரி, தங்கள் ஸாயிபாபா மறுபடி அவதரிக்கமாட்டார் என்று எதனுலோ முடிவுகட்டிச் சொல்லி விட்டதாக எல்லாருக்குத் தெரிந்தது. அவர்கள் வற்புறுத்தியதன் பேரில் வெங்கப்ப ராஜு பிள்ளையிடம் , ''நீதான் ஸாயி பாபா என்றால் அதற்கு ஏதாவது நிரூபணம் கொடேன்'' என்றார்.

''ஓ, தருகிறேனே'' என்றான் பிள்ளையாண்டான். ''அந்த மல்லிகைப் பூக்களையெல்லாம் எடுத்து என் கையில் போடுங்கள்'' என்று தாமரைப் பூவான கரங்களை நீட்டினான்.

குருவாரத்தில் இவன் பூஜை செய்யச் சொன்னான் என்றுதான் யாரோ மல்லிகை மலர்கள் வாங்கிவந்து அவன் முன் வைத்திருந்தனர். அம்மலர்கள் ஸத்யாவின் கைகளில் குவிந்து வைக்கப்பட்டன.

அவற்றை விசிறி எறிந்தான் ஸத்யா. என்ன விந்தை! தரையில் விழுந்த பூக்கள் தெலுங்கு லிபியில் ''ஸாயிபாபா'' என்று திருத்தமாக அமைந்திருந்தன.

இமைகொட்டும் நேரத்துக்குள், தெலுங்கு எழுத்துக்களின் ஏற்பட்ட வளைவு நெளிவுகளோடு, கண்ணில் ஒத்திக் கொள்கிற மாதிரியான நேர்த்தியோடு புஷ்பங்கள் ஸாயி நாமத்தைத் எழுதியிருப்பது கண்டு அத்தனை பேருக்கும் இதுநாள் வரை இல்லாத ஆழ்ந்த நம்பிக்கை உண்டாகிவிட்டது.

மல்லிகை கமகமக்கும் நாமம்தான் அது! வெள்ளை வெளேரென்று மனத்தை மல்லிகையாக்கும் திருப்பெயர் அல்லவா?

''ஸாயிபாபா, ஸாயிபாபா'' என்று எல்லோரும் தங்கள் ஸத்யாவை அழைக்குமாறு செய்தது இந்த மல்லிகை லீலை.

ஷிர்டி பாபாவைப் பர்த்திபாபாவுடன் இணைக்கும் சரமாகவும் இந்த மல்லிகையே உள்ளது—''அந்தாதி'' முறைப்படி! ஒன்றின் முடிவு (அந்தம்) இன்னென்றின் தொடக்கமாக (ஆதி) இருப்பதுதானே அந்தாதி! மல்லிகை மலரோடுதான் ஷிர்டி பாபா தம் வாழ்வை முடித்துக்கொண்டார். அவர் மஹாஸமாதி அடைந்த தினத்தன்று விடியற்காலை தமது பரம பக்தரான தாஸ்கணுவின் முன் திடுமெனத் தோன்றினார்: ''மசூதி இடிந்து விட்டது. நான் அதிலிருந்து வெளியேறுகிறேன். அதைச் சொல்லவே வந்தேன். சீக்கிரம் அங்குபோய் என் ஆசையை நிறைவேற்று. என்ன ஆசை என்றால், என் தபாரியில் (ஸமாதியில்) மல்லிகைப் பூக்களைக்கொண்டு கொட்டு'' என்றார்.

ஷிர்டி ஸாயி மல்லிகை மணத்தில் மறைந்தார். இன்று அந்தமே ஆதியாகப் புட்டபர்த்தியில் மல்லிகை மணத்தோடு ஸாயி நாமம் மக்கள் கண்டங்களில் பிறந்துவிட்டது.

★

Koviloor Digital Library

ஷிர்டி பாபாவுக்கும், பர்த்தியில் பிறந்த பாலனுக்குமுள்ள ஒற்றுமைகளை, தொடர்புகளை இங்கே கண்டோம். ஒற்றுமை, தொடர்பு என்பதெல்லாமும் போதாது, இரண்டும் முற்றிலும் ஒன்றே என்பதே எண்ணற்ற அடியார் அநுபவம். ஒன்றே என்றுதான் நம் சரித நாதரும் சொல்கிறார். இதனால்தான் ஸாயி பாபா என்றே நாமம் தரித்திருக்கிறார்.

ஆயினும் ஷிர்டி பக்தர் பலர் இவரை அவ்வாறு ஒப்பவில்லை என்பதை இங்கு கவனிக்க வேண்டும். உத்தமர்களான, சான்றோர் களான ஷிர்டி பக்தர்களில் சிலரும்கூட இவர்களில் இருக் கிறார்கள். இவர்கள் ஒப்பாததற்குக் கூறும் ஒரு முக்கியமான காரணம், இவரைப் போல் ஷிர்டி பாபா பொருட்களைச் சிருஷ் டித்து (அல்லது, இவர்களில் சிலர் எண்ணப்படி, ஏற்கனவே உள்ள பொருட்களைத் தம்மிடம் கடத்துவித்து புது சிருஷ்டி போலக் காட்டி) ஏராளமானவருக்கு வழங்கவில்லை என்பதே யாகும். 'ஸித்திகள் என்று தோன்றக்கூடிய பல இயற்கைக்கு அதீதமான லீலைகளை ஷிர்டியார் புரிந்திருண்டுதான். எங்கோ நெருப்பிலே விழுந்தவரை ஷிர்டியிலிருந்து கொண்டே காப்பது, உடலை விட்டு வெளியேகி ஆபத்திலுள்ள அடியாரின் இடுக்கண் நீக்கி வருவது, தமது பாதத்திலிருந்தே கங்கையைப் பொழிவது போன்ற அற்புதங்களை அவர் புரியத் தான் செய்தார். ஆனால் இவை பெருத்த இடரிலிருந்து பக்தரைக் காக்கும் பேரருளில் பிறந்தவை; அல்லது தெய்விக சக்தியை முட்டமுட்ட எடுத்துக் காட்டவே செய்யப்பட்டவை. ஒரு சிறிய வட்டத்துக்கே இந்த அற்புதங்களைக் காட்டினார். மாறாக, பர்த்திபாபா எப்போது பார்த்தாலும் சர்வசகஜமாக ஏராளமானவருக்கு அற்புதங்களைச் செய்துகாட்டுகிறார். இது வெறுமே தம் சக்தியைத் தம்பட்டம் அடித்துக் கொள்வது போலத்தான் இருக்கிறது. மஹாபுருஷர்கள் ஆத்மிகத்துக்கு முதற்படியாகவே மட்டும் இலைமறைவு காய்மறைவாகக் காட்டு கிற அதிமானுட ஆற்றலை, சாதாரணச் சித்து விளையாட் டுக்காரர்களும் மந்திரவாதிகளும்தான் பொத்தைப் பூசணிக் காயாகக் காட்டி மக்களைப் பிரமிக்கவைத்துத் தங்களுக்குப் பெயர் தட்டிக்கொண்டு போவார்கள். பர்த்திக்காரர் இதைத் தான் செய்கிறார். அடக்கமும் அமரிக்கையும் உள்ளோடிய ஆற்றல் சமுத்திரமாக இருந்த ஷிர்டிபாபா, இப்படிப் படாடோபப் பிரகடனம் பண்ணிக் காட்டவே மாட்டார்' என்பது இவர்களது கருத்து.

இருக்கட்டும். இவர்களை இப்போதைக்கு விட்டுவிட்டு தெய்வபக்தி, சமய நம்பிக்கை, சம்பிரதாய ஈடுபாடு, ஆத்மிக நாட்டம் எல்லாம் உள்ள வேறு ஆஸ்திகர்களிடம் செல்வோம். இவர்கள் ஸத்யஸாயி, ஷிர்டி ஸாயி இருவரையுமே ஏற்று வழி படாதவர்கள். காரணம், இயற்கைக்கு மீறிய சக்தியைக் காட்டுவதே இரண்டாம் பட்சம் என இவர்கள் கருதுவதே!

அதிலும் புட்டபர்த்தி பாபா என்ற மாத்திரத்தில் ,'ஷாக்' முடி, பளபளா பட்டங்கி இவற்றை நினைத்து, 'ஷாக்'

அடைவார்கள். 'கரம்' மைசூர் போன்டாவிலிருந்து பலவகை வஸ்துக்களை அவர் கர அசைப்பில் 'வரவழைத்து'த் தருவதே அவரது முக்கியமான செயலாக இவர்களிடை பரவியுள்ளது. "பரமஹம்ஸர், ரமணர், காஞ்சிப் பெரியவர் போன்றோர் இப்படி வஸ்துக்களை உண்டாக்கி ('மெட்டீரியலைஸ்' செய்து) தந்ததில்லையே, இது ஏதோ இந்திர ஜாலமாக அல்லவா இருக்கிறது. ஆத்மிகத்தோடு சேர்ந்ததாகக் காணவில்லையே" என எண்ணுகிறார்கள்.

அற்புதம் செய்தார் என்ற இதே காரணத்தால் இவர்கள் ஷிர்டி பாபாவையும் மேற்சொன்ன மஹாபுருஷர்களுக்குச் சமதையாகக் கொள்ளமாட்டார்கள். ஷிர்டி பாபா ஏராளமான பண்டங்களை 'மெட்டீரியலைஸ்' செய்யாவிடினும், வேறுவிதங்களில் 'சமத்காரம்' எனப்படும் 'மிராகிள்'கள் பலவற்றைச் செய்தவர்தாமே? இப்பேர்ப்பட்ட பௌதிக அதீதமான அற்புதங்கள் செய்த ஸ்ரீராகவேந்திரர், சேஷாத்ரி ஸ்வாமி, ஷிர்டி பாபா போன்ற எல்லோரையுமே "ஸித்த புருஷர்" என்ற வரிசையில் வைத்து, "இவர்களும் அற்புதத்தால் தன்னலன் பேணிக்கொள்ளாமல், பரநலமே புரிந்து தெய்வநினைவூட்டியவர்கள் என்ற அளவில் பெரியோர்தாம். ஆயினும் இப்படிக்கூட லோக இயற்கையை மீறிக் காட்டாமலே, தங்களது அநுபவமயமான வாழ்வின் உதாரணத்தாலும், அதன் சூக்ஷ்ம சக்தியாலும் பிறரை நல்வழிப்படுத்துவதுதான் சிலாக்கியமானது" என்பார்கள். இவ்வாறு இரு பாபாக்களையுமே ஏற்காதவர்களுக்குப் பிறகு விடை சொல்லலாம். ஆயினும் இங்கே இவர்களை இழுத்ததற்குக் காரணம் உண்டு.

ஷிர்டியாரை மட்டும் ஏற்று, பர்த்திக்காரரை ஏற்காதவர்கள் அற்புத ஆற்றலைக் காட்டுவதற்குள்ளேயே உயர்வு — தாழ்வுப் பாகுபாடு செய்கிறார்கள். "ஷிர்டி பாபா பக்தரின் தரமறிந்து, அத்யாவசியம் ஏற்பட்டாலே அற்புதம் செய்தார். பர்த்திக்காரரோ நினைத்தபோதெல்லாம் விபூதி, பதக்கம், ஃபோட்டோ என்று 'வரவழைத்து' வெகுஜன ('மாஸ்—ஸ்கேல்') விநியோகம் செய்வது தரக்குறைவாக உள்ளது" என்கிறார்கள். இவர்கள் 'மிராகிள்' செய்வதிலேயே உயர்வு — தாழ்வு சொல்கின்றனர் எனில், மேலேகண்ட ஆஸ்திகர்கள் 'மிராகிள்' முழுவதுமே தாழ்வானதுதான் என்கிறார்கள். அவர்களுக்கு இவர்கள் என்ன பதில் சொல்கிறார்கள்? "எங்கள் ஷிர்டி பாபாவும் ஆத்மிக உச்சியிலிருந்த ஞானபூரணர்தாம். ஆனாலும் ஞானியரது அநுபவ வாழ்வின் அதிநுட்ப சக்தியைக் கிரஹிக்க சாமான்யருக்குத் திறன் போதாது என்பதாலேயே அவர்களுக்கு ஒரு 'கன்ஸெஷன்'ஆகவும், தமது மஹாத் தியாகமாகவும் அதிமானுடச் செயல்களையும் சிலர்பொருட்டுப் புரிந்தார். அதுவே மற்றோரிடம் பரவிற்று. மாற்றமுடியா இயற்கை நியதி எனத் தோன்றுவதை மாற்றிவிடும் அற்புதத்தைப் பார்க்கையிலேயே சாமானியருக்கு, 'எல்லாவற்றுக்கும் மேம்பட்ட ஒரு மஹா சக்தி இருக்கத்தான் செய்கிறது' என்ற நம்பிக்கையும், அதனிடம் ஈடுபாடும் உண்டாகின்றன. இவ்வாறு இறை நினைவை ஊட்டவே ஷிர்டி பாபா அற்புதம் காட்டினார்" என்கிறார்கள்.

Koviloor Digital Library

இவர்கள் மற்றோருக்குச் சொல்லும் சமாதானமே இவர்களுக்கு நாம் சொல்லும் சமாதானமும் ஆகிறது. மற்ற ஞானிகளைவிட ஷிர்டிபாபா சில "கன்ஸெஷன்" தந்தார், தியாகம் புரிந்தார். அந்த பாபாவே காலத்தின் தேவையை ஒட்டி இன்று புட்டபர்த்தி சரீரத்திலிருந்துகொண்டு இன்னும் அதிக கன்ஸெஷன், இன்னும் பெரிய தியாகம் செய்கிறார் என்று ஏன் கொள்ளக்கூடாது? 'மெட்டீரியலைஸேஷனு'க்காக அன்றி ஆத்ம 'ரியலைஸேஷனு'க்காகவே இவரை அடைந்து, இவரது அநாயாச அருளால் ஞான வைராக்யாதிகளைப் படிப்படியாகப் பிரத்தியட்சத்தில் அநுபவித்துவரும் எண்ணற்ற சாதகர், "நம் ஸ்வாமி ஏன் சிருஷ்டியும் கிருஷ்டியும் கணக்கின்றி செய்து அவப்பெயர் வாங்கிக்கட்டிக் கொள்கிறார்?" என்று எண்ணிக் கூடும் எண்ணுவர். ஆனால் இவர்கள் ஞான பூரணராகவே பார்த்தும், கேட்டும், அநுபவித்தும் வரும் பர்த்தி பாபா கருணா பூரணராகவும் இருக்கிறார். அக் கருணை — இமயத்திலிருந்து பெருகும் தியாக கங்கையின் வேகத்தை இந்த ஞான சாதகர்கள் தடுக்க முடியுமா என்ன?

கருணையாலேயே, தியாக சீலத்தாலேயே இவர் சென்ற நூற்றாண்டுப் பிற்பகுதியிலும், இந்த நூற்றாண்டுத் தொடக்கத்திலும் ஷிர்டியில் சிறிய வட்டத்தில் அற்புதம் செய்தார். அதுவே பெரிய வட்டத்தில் பரவியது. அவர்கள் நம்பிக்கை மிகுந்த பழந்தலைமுறையினராதலால் சிறிய வட்டம் கண்டு சொன்னதை மனமார ஏற்று, அற்புதத்தின் மூலம் இறை நினைவில் ஈர்க்கப்பட்டனர்.

இன்றோ காலம் மாறிவிட்டது. இது அவநம்பிக்கை சகாப்தம். ஒரு சிலருக்குக் காட்டிக்கொடுப்பதால் பிறரை நம்ப வைக்க முடியாது. எனவே ஷிர்டித் தியாகத்தை விஸ்தரிக்க வேண்டியதாயிற்று. வெகு ஜன ரீதியில், "மாஸ் — ஸ்கேலில்" அற்புதம் காட்ட வேண்டியதாயிற்று. தியாகம் உயர உயர, மெட்டீரியலைஸேஷனும் ஃபோட்டோ வரை, போண்டா வரை இறங்க வேண்டியதாயிற்று. இவரது 'ஷாக்' முடி, பளபளா பட்டங்கி இவைகூட வெகு ஜன ஈர்ப்புக்கான தியாகமாகவே இருந்தாலும் இருக்கலாம்.

இப்படியும் ஈர்க்கப்படாத அசல் நாஸ்திகர்களைப் பற்றிப் பேச்சேயில்லை. இதேபோல் வேதாந்திகள், ஆசாரசீலர்கள் என்ற முறையில் இவற்றால் ஈர்ப்புக்குப் பதில் அருவருப்பே கொள்ளும் ஆஸ்திகர் பற்றியும் கவலையில்லை. ஏனெனில் அவர்கள் எப்படியும் சன்மார்க்கத்தில் இருப்பதால், பாபா என்ற ரூபத்தை வழிபடாவிடினும், நற்கதி பெற்றுவிடுவார்கள். இரண்டுங் கெட்டானை பல கோடியரை ஈர்ப்பது 'மிராகிள்' தான்.

ஈர்ப்பு எதனிடம்? தெய்வத்திடம்தான். ஈர்க்கப்பட்டவர்கள் பாபாவைத் தெய்வம் என்றுகொண்டு, அந்தத் தெய்வத்திடமே பக்தி செலுத்துகிறார்கள். அந்த மஹாசக்தி தம்மை

எப்போதும் கண்காணிக்கிறது என்ற கருத்தில் கொஞ்சம் மாத்ரம் தங்களது தவறுகளைத் திருத்திக்கொள்கிறார்கள்.

இவ்விஷயமாக நூலாசிரியர் பேசுவதைவிட ஸநாதன தர்மத்தில் ஊறிய பண்டிதோத்தமரான ஸ்ரீ அக்னிஹோத்திரம் ராமாநுஜதாதாசாரியர் அவர்களைப் பேசவிடுவது பரம ஸௌகர்யம். அவர் சொல்கிறார்:

"ஸாயி பாபாவின் பேர் தமிழ்நாட்டில் பரவ ஆரம்பித்து நல்ல ஸநாதனிகள் வீட்டுப் பத்திரிகைகள்கூட பாபா படம் போட்டுக் கொள்ள ஆரம்பித்தபோது எனக்கே ஆத்திரமாகத்தான் வந்தது. அப்போது — அதாவது சுமார் முப்பத்தைந்து வருஷங்களுக்கு முன் — சிவப் பிரகாசானந்த கிரி என்று ஒரு பெரிய யோகி, மஹாஞானி கும்பகோணத்தில் இருந்தார். அவரிடம் நான் ஸித்திகளை ஆட்சேபித்துப் பேசியபோது அவர், 'ஜனங்களுக்கு பக்தி வரவேண்டும், ஞானம் வரவேண்டும் என்று வெறுமனே சொல்லிப் புண்ணியமில்லை. இதற்கெல்லாம் அடிப்படையாக அவர்களுக்கு பகவானிடம் ஒரு பிடிப்பை உண்டாக்கித் தர வேண்டும். தன்னை பௌதிகமாகவே நினைந்து, லௌகிகக் கஷ்டங்களுடனேயே அவதிப்படும் போது ஜனங்களிடம் பிரம்ம ஞானத்தையும் மோக்ஷத்தையும் கொடுக்கிற பகவானைப் பற்றிப் பேசினால் துளிக்கூட எடுபடாது. இவனிடமும் அந்த பகவானுக்கு அன்பு இருக்கிறது, இவனுடைய இகலோக சந்தோஷ வாழ்க்கையையும் அவர் தருவார், இவனது ஆபத்தை அவர் தீர்க்கமுடியும் என்றுதான் முதலில் இவனுக்குத் தெய்வத்திடம் பிடிமானமே உண்டாகும். அதிலிருந்துதான் படிப்படியாக உயர்ந்து, கடைசியில் லௌகிக இச்சை போகிற நிலை வரவேண்டும். ஆக, ஆரம்பம், இவன் இருக்கிற நிலைக்கே பகவான் வந்து இவனுக்கு உதவுவார் என்று காட்டுவதுதான். இதனால்தான் ஒருவனுக்கு அவரிடம் அன்பே உண்டாகமுடியும். அதோடு அவர் மஹாசக்தியான் என்றும் காட்டவேண்டும். அப்போதுதான் பயம் உண்டாகும். அன்போடு பயமும் வேண்டும். பயம் உண்டானால்தான் பாபம் செய்தால் அவர் தண்டிப்பார் என்கிற எண்ணத்தில் யோக்கியமாக வாழ முயற்சி செய்வான். ஜனங்களைப் பக்தியில் திருப்புகிற சக்தி குறைந்துவிட்ட இந்தக் காலத்தில் (யோகியர் ஞானியரான) நாங்கள் யாவரும் மீண்டும் பக்தி உண்டாக்க வேண்டுமென்றேதான் இந்த ஸாயி பாபா என்ற ஒன்றைத் திரட்டி அனுப்பிவைத்திருக்கிறோம். நீ அதையே என்னிடம் குறை சொல்கிறாயே!' என்றார். எனக்கும் தெளிவு பிறந்தது.

"ஸத்ய ஸாயி பாபா செய்கிற 'மிராகிள்'கள் பய — பக்தியையே உண்டாக்குகின்றன. இதிலே தெய்விகம் இல்லை என்று சொல்வது சரியேயில்லை. ஒருத்தன் ஹோட்டலுக்குப் போய் போண்டா சாப்பிடுகிறான். பசி தீருகிறது. ஆனால் அது இதோடு முடிந்து போகிறது. அதுவே பாபா கையசைப்பிலே போண்டா வரவழைத்துத் தந்தால், அது இவனுடைய

Koviloor Digital Library

பரியைப் போக்குவதோடு நிற்கவில்லை. 'இயற்கைக்கு மீறிய ஒரு சக்தி இருக்கிறது. அதற்கு நம் அற்ப லௌகிகத்தில்கூட அக்கறையிருந்து, நமக்கும் சாப்பாடு போடுகிறது' என்ற அன்பு எண்ணம் இவனுக்கு ஏற்பட்டு, அந்த சக்தியிடம் இவன் பக்தி வைக்கத் தொடங்குகிறான். ஆஸ்பத்திரியில் ஒருவன் வியாதியை குணமாக்கிக் கொண்டால் அது பௌதிகமாகவே முடிந்து போகிறது. பாபா 'மிராகிள்' மூலம் சொஸ்தப்படுத்தும்போதோ அது அவனது மனத்தையும் தொட்டு, தெய்வ நினைப்பை ஊட்டிவிடுகிறது. அவர் எதை 'மெட்டீரியலைஸ்' செய்து கொடுத்தாலும் அது வெறும் கடைப் பண்டமாக நில்லாமல், தெய்வத்தோடு நம்மைத் தொடர்புறுத்தி விடுகிறது.

''காலஞ்சென்ற ஸ்ரீ கே.எம். முன்ஷியும் இதைத்தான் என்னிடம் சொன்னார். அவர், 'எல்லா மக்களையும் ஞான உச்சிக்குக் கொண்டு போவது சாத்யமில்லை. ஆனால் இப்போதுள்ள ஒழுக்கக் குறைவு நீங்க வேண்டுமானால் எல்லோருக்கும் தெய்வத்திடம் ஓரளவாவது பய — பக்தி இருக்குமாறு பண்ணவேண்டும். இதற்கு அற்புத ஆற்றல் காட்டுவதைவிட வழியில்லை. பாபா இங்கே வரும்போது கூடுகிற ஜன சமுத்திரத்தைப் பார்த்தால், நாஸ்திகமும், நவநாகரிகமும், எதற்கும் கட்டுப் படாத சுயேச்சைப் போக்கும் மலிந்துவிட்ட பம்பாய்தானா இது என்று எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. கூட்டத்துக்குக் காரணம் மிராகிள்தான். மிராகிள்மூலம் இப்படி எல்லோரையும் கூட்டியபின் அவர் என்ன செய்கிறார்? அத்தனை லட்சம் ஜனங்களையும் பரவசமாகப் பஜனை செய்ய வைக்கிறார். 'எப்படியெப்படியோ' இருந்தவர்கள் இந்த பஜனைகளில் பரவசமாகக் கலந்துகொள்வதைப் பார்த்து எனக்கே அதிசயமாக இருந்திருக்கிறது. கூட்டங்களில் அவர் செய்யும் ஸத் உபதேசங்களையும் நான் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். உயர்ந்த ஆத்ம தத்துவங்களைத்தான் சொல்கிறார். ''பவன்ஸ் ஜர்னலி'ல்கூட அவற்றைப் போடுகிறேன். உங்களைப் போன்ற ஸநாதன மதோபதேசகர் எவரும் ஒப்பும் தர்மங்களைத் தான் சொல்கிறார். ஆனால் முதலிலேயே பஜனை, ஞானோபதேசம் என்றால் இத்தனை லட்சக்கணக்கான மக்கள் கூடுவார்களா?'' என்றார்.

''இன்றைய லோக ரீதியில், மிராகிள்களைப் பழிக்கவே கூடாது; அதுதான் ஆஸ்திக அபிவிருத்திக்கு அத்யாவசியம் என்று கருதுகிறேன். இன்று என்ன, வேத காலத்தில் கூட..''

அந்த வேத சமாசாரம் பற்றி ஸ்ரீ தாதாசாரியரின் குரலைப் பிற்பாடு ஓர் அத்தியாயத்தில் கேட்கலாம்.

''மிராகிள்' மூலம் ஈர்க்கப்பட்டவர்களைப் பிறகு பாபா எப்படி அவரவர் பக்குவத்தைப் பொருத்து பக்தி, யோக, ஞான மார்க்கங்களில் செலுத்துகிறார் என்பது அவரது அடியாருக்குத் தெரிந்த விஷயம்தான். வெறும் சித்துக்காரர்கள் அற்புதத்தைக் காட்டித் தங்களைச் சுற்றிக் கூட்டம் போட்டுத் தெய்வத்திடமிருந்து மக்களைப் பிரித்துத் தமக்கு விளம்பரம் தேடிக் கொள்வதோடு நிற்பரே அன்றி, இவ்விதம் அத்யாத்ம

வழி காட்டி, அதில் அங்குலத்துக்கு அங்குலம் உடனிருந்து அழைத்துப் போக மாட்டார்கள். அற்புதமே ஆன்மிகம் என்று மயங்கச் செய்து இவர்கள் அத்யாத்ம சாதனைக்கே உலை வைத்து விடுவார்கள். பாபாவுக்கோ வெறும், 'வித்தை'க்காகத் தம்மைச் சுற்றி மக்கள் கூட்டம் போடுவதும், விளம்பரம் செய்வதும் அடியோடு பிடிக்காத விஷயம். தம்மைத் தெய்வமாகச் சொல்லிக் கொள்ளும் அதே சமயத்தில் தமது ஸ்தூல உருவில் அவர்கள் மிகையான ஈடுபாடு கொள்ளாமல் அருவமான தெய்வத் தத்துவத்திலேயே தோயவேண்டும் என்றும் வற்புறுத்துவார்.

இவரது நாமத்தையே மந்திரமாக, இவரது ரூபத்தையே இஷ்ட தேவதையாகக் கொண்டவர்களை இவர் தடுப்பதில்லை. ஆனால், ஸாயி நாமத்தைத்தான் ஜபிக்கவேண்டும் என்பதில்லை. ஸாயி ரூபத்தைத்தான் வழிபடவேண்டும் என்பதில்லை. 'எந்த நாமத்தை, ரூபத்தை வழிபட்டாலும் உய்வு உண்டு. ஒரு வழிபாடும் இல்லாத யோக ஞான மார்க்கங்களில் செல்வதே எல்லாவற்றுக்கும் முடிவானது' என்று ஆணி அடித்தாற் போல் பன்முறை கூறியிருக்கிறார். எனவே இவர் அற்புதத்தைக் காட்டி மக்களை ஆத்மிகத்திலிருந்து பறித்துத் தம்மிடம் இழுத்துக் கொள்கிறார் என்று எவரேனும் எண்ணினால் அது அடியோடு தவறாகும்.

மக்களைத் தெய்வத்திடமிருந்து பிரித்துத் தம்மிடம் ஈர்த்துக் கொள்கிற அற்ப சித்தர்களைபோல் இவர் பக்தரிடம் ஏதேனும் பணம், காசு வசூலிக்கிறாரா? இல்லை, தமக்கு விளம்பரம் கொடுக்கச் சொல்கிறாரா? அல்லது, அவர்களது தப்பு தண்டாக்களைத் தட்டிக் கேட்காமல் தாஜா செய்துகொண்டிருக்கிறாரா? பக்தியில் இவரை நெருங்க நெருங்கத்தான் இவர் ஆத்மிகத்தில், அதன் ஆதாரமான நன்னெறிகளில் சாதகரைச் செலுத்துவதில் எவ்வளவு . கண்டிப்பானவர் என்பது தெரியும். தம்மை நெருங்குபவர்களின் சிறிய ஒழுக்கக் குறைவையும் கண்டிப்பார், தண்டிப்பார். 'வறுத்தெடுத்துவிடுவார்' என்றே பெங்களூர் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தரான ஸ்ரீ வி.கே. கோகக் இதை வருணிப்பது வழக்கம்.

முதலில் தவறு செய்யும் பேதையரிடமும் இளக்கம், இரக்கம் — அற்புதம், சிற்புதம் காட்டி, ஆபத்துக்களைத் தீர்த்து சுக சௌகரியங்கள் தந்து அவர்களை அன்னையினும் அன்போடு ஆதரிப்பார். ஆயினும் அவர்கள் இதோடு நின்று ஆத்மிகத்தில், நன்னெறியில் மனப்பூர்வமாக ஈடுபடாவிடில் மறக்கருணை தொடங்கிவிடுவார். எவ்வளவோ விட்டுப்பிடிப்பார். அப்படியும் திருந்தாவிடில் இரக்கம் இறுக்கமாகிவிடும். அந்த நிலையில் அத்யந்த பக்தர்கள் என எண்ணப்படுபவரையும் நொடியில் உதறி விடுவார் உதறி! வெறுமே தம் பிரதாபத்துக்காகவே கூட்டம் சேர்த்துக்கொள்ளும் எந்தச் சித்து விளையாட்டுக்காரரும், இவர் ஒரு சொடுக்கிலே சில கோடீசுவரர்களை, ராஜாதி ராஜாக்களைக்கூடத் தம்மிடமிருந்து தள்ளியதுபோல் செய்ய முடியவே முடியாது.

Koviloor Digital Library

நம் காரியநாதர் அற்புதம் செய்வது ஆத்மிகவழியில் சேர்க்க உதவும் அரிச்சுவடியாகத்தான்.

அல்லது எந்த நோக்கமுமே அற்ற பரம தூய அன்பு காரண மாகவே அற்புதம் விளைவிப்பார். நாம் நம் அன்புக்குரியவர் களிடம் நமக்கு இயல்பாக, எளிதாகக் கைவரும் பரிசுகளை வழங்குகிறோமல்லவா? இதற்கு விசேஷமாக என்ன நோக்கம் கற்பிக்க முடியும்? அன்பு சுரக்கும்போது அதன் வெளி அடையாளமாக எதனையோ அளிக்கத் தோன்றுகிறது என்பதற்கு அதிகமாக வேறு என்ன ''விளக்கம்'' சொல்வது? அற்புதத்தையே இயல்பாக ஆயாசமின்றி ஆற்றும் ஆற்றல் படைத்தவர் நம் வரலாற்றுப் பெருமான். எனவே எப்போதும் எவர்பாலும் சுரந்துகொண்டிருக்கும் அவரது அன்பு சிலரிடம், சில சந்தர்ப்பங்களில் அடர்ந்து பொங்குகையில் பரிசுகளை சிருஷ்டித்து வழங்கி விடுகிறார். நாம் வாங்கி வழங்குகிறோம், அவர் தாமே சிருஷ்டித்து வழங்கு கிறார் என்பதில்தான் வேறுபாடே தவிர, இதற்குக் காரணம் ஒன்றேதான் — அதாவது காரணமில்லாத அன்புதான் அது. இதைப் புத்தியால் தோண்டித் துருவி விவாதிப்பதில் பொருளே இல்லை. மூளையின் எல்லைக்கு அப்பாற்பட்ட அன்பில் ஊறிப் பரிசுகளை வழங்கும்போது பாபா ஃபோட்டோ, போண்டா உள்பட எதையும் படைத்து அளிக்கிறார். இதை சில்லறைச் சித்து என்பது புனிதமான ஒன்றுக்கு அபசாரம் இழைப்பதே யாகும். அடியார் ஒருவரின் பெருத்த இடர்ப்பாட்டில் வேண்டுமானால் அற்புத சக்தியையும் காட்டலாமேயன்றி, இப்படி எடுத்ததற்கெல்லாம் காட்டுவது முறையல்ல என்பவர்கள் அன்பின் வழிமுறையே அலாதியானது என்றறியாத வர்கள்தாம்.

Koviloor Digital Library

அத்தியாயம்—18

வேற்றுமையில் ஒற்றுமை

பூர்வத்தில் இருந்தவனே புதிதாக உவந்து வருகிறான். எல்லாப் பாதைகளும் இவனையே நோக்கித் திரும்புகின்றன. இவனும் அவனும் ஒன்றேதான்!

— ஸாம வேதம். 372

பெருத்த இடர்ப்பாட்டில் அடியார் அவதியுறும்போதோ அல்லது வேறு விதத்தில் அத்யாவசியம் ஏற்பட்டாலோதான் ஷிர்டிபாபா அற்புதம் நிகழ்த்தினார்; பார்த்திக்காரரைப்போல் வெறும் விநோதத்துக்காக இயற்கையை மீறிச் சில்லறைச் சித்து செய்ததில்லை என்று ஷிர்டி பக்தர் சிலர் சொல்கிறார்கள். இவர்கள் தங்களது மஹாபுருஷரின் வாழ்க்கையைச் சரியாகப் படிக்கவில்லையோ என்றே சந்தேகமாக இருக்கிறது. இரண்டு, மூன்று எடுத்துக்காட்டுகளை மட்டும் இவர்கள் முன் நீட்டலாம்.

ஸ்ரீ ரேகே மிக ருசியாக சர்பத் செய்து ஷிர்டிபாபாவுக்கு அளிக்கிறார். பாபா அதை வாயில் விட்டுக் கொண்டு, ''அச்..சோ, புளிப்பான புளிப்பு'' என்கிறார். 'இனிய பழச் சாற்றில் சர்க்கரையும் தேனும் கலந்து செய்த சர்பத் எப்படிப் புளிக்க முடியும்' என்று ரேகே நினைக்கிறார். பாபாவோ ஸ்ரீ ஹெச். எஸ். தீக்ஷித்திடம் சர்பத்தை நீட்டி, ''ருசி பாருங்கள்'' என்கிறார். ''தயார் செய்த நீங்களும்தான் 'அநுபவி'யுங்கள்'' என்று ரேகேயிடமும் நீட்டுகிறார். இவர்கள் வாயில் விட்டுக்கொள்ள, அது மெய்யாலுமே புளியைவிடப் புளிப்பாக இருக்கிறது! பாபா நகைத்து, ''கப்டா தமாஷ் பண்ணினேன். இப்போது பாருங்கள்'' என்று மறுபடி அவர்களுக்கு அதே சர்பத்தைக் கொடுக்கிறார். என்ன ஆச்சரியம், இப்போது எந்தப் பழத்துக்கும், சர்க்கரைக்கும், தேனுக்கும் இல்லாத அதியசத் திருசுவை அதற்கு வந்துவிட்டது!

Koviloor Digital Library

காகா மகாஜனி என்ற அடியார் மற்றொருவரை பாபாவிடம் அழைத்து வருகிறார். இந்த 'மற்றவ'ருக்கு 'சமத்கார்' (miracle) பார்க்க வேண்டும் என்றே ஆசை. இவர் பாபாவுக்குக் காய்ந்த திராட்சை அர்ப்பணிக்கிறார். பாபா அதில் ஒரு கை அள்ளி அவரிடமே கொடுத்து உண்ணச் சொல்கிறார். அவ்வாறே வாயில் போட்டுக்கொண்டவர், 'அடடா, கொட்டைகள் ஏகமாக உள்ளனவே! எப்படி இப்புனித ஸ்தலத்தில் துப்பு வது? துப்பாமலும் இருக்க முடியவில்லையே!' என்று தின்றாடி விட்டு, ரகசியமாகத் தம் கைக்குட்டையிலேயே துப்பிக் கொள்கிறார். பாபாவோ அவர் குட்டை உடைக்க விரும்புவது போல் மறுபடி ஒரு குத்து திராட்சையை அள்ளி ''தின்னு, தின்னு'' என்று அவரிடம் கொடுத்துக் கொனஷ்டை செய் கிறார். என்ன செய்வது? ''விதியே'' என்று இதையும் வாங்கி அவர் வாயில் போட்டுக்கொள்கிறார். 'அட, பழங்களில் ஒரு கொட்டை கூட இல்லையே! கொட்டை திராட்சை கோதற்ற வெண்ணெய் விழுதாக அல்லவா மாறிவிட்டது?'

ஏகாதசி உபவாஸமிருந்த குசபாவிடம், ''இன்று கந்தம் (கிழங்கு) சாப்பிட்டால் விரதபங்கமில்லை, சாப்பிடுங்கள்'' என்கிறார் ஷிர்டி நாதர். ''சரி, காந்தம் சாப்பிடுகிறேன்'' என்று குசபாவ், வாய்த் தவறுதலாகக் 'கந்த'த்தை நீட்டிக் 'காந்த' மாக்கி விடுகிறார். காந்தம் என்றால் வெங்காயம்! உபவாஸத் துக்கு அடியோடு உகவாத பொருள்! பாபா, ''காந்தம்தானே? தருகிறேன்'' என்று சொல்லி அவருக்கு நிறைய வெங்காயம் தருகிறார். குசபாவ், ''நீங்கள் சாப்பிட்டால் நானும் சாப்பிடு கிறேன்'' என்று பாபாவிடம் ஸ்வாதீனமாகக் கூறுகிறார். எந்தத் தோஷமும் தீண்ட முடியாத ஷிர்டிபதி சந்தோஷமாக வெங்காயத்தைத் தின்கிறார். குசபாவ் கையிலும் விண்டு விண்டு போடுகிறார். ஐயன் துணையிருக்க விரதத்துக்கு ஊறு ஏது என்ற திட நம்பிக்கையில் குசபாவ் வெங்காய விருந்தை ஒரு கை பார்க்கிறார்.

மற்ற பக்தர்கள் வருகிறார்கள். பாபா, ''இந்த பம்னியா (பார்ப்பான்) பண்ணின அக்கிரமத்தைக் கேளுங்கள். ஏகாதசி யில் வெங்காயத்தை வளைத்துக் கட்டிக்கொண்டு தின்றான்'' என்று சொல்லிக் கை கொட்டினார். ''எல்லாம் இந்த ஸாயி யும்தான் அதே அக்கிரமத்தைச் செய்தார்'' என்று பதிலுக் குத் திருப்பினார் குசபாவ், அன்பின் உரிமையிலே.

''நானா வெங்காயம் தின்றேன்? பொய் பொய்'' என்று சொல்லிக்கொண்டு கிழவனார் வயிற்றை எக்கித் துப்பினார் — வெங்காயமெல்லாம் சர்க்கரைவள்ளிக்கிழங்குத் துண்டங்களாக வெளியே வந்து விழுந்தன.

தவிர்க்க முடியாத அத்தியாவசியம் ஏற்பட்டா ஷிர்டி பாபா இந்த அற்புதங்களைப் புரிந்தார்? ஆனாலும் நம் இதயத்தைத் திறந்துகொண்டு இந் நிகழ்ச்சிகளைப் படிக்கும்போது, 'விளையாட்டுக்குச் செய்த சில்லறைச் சித்து' என்று தோன்றுகிறது?

Koviloor Digital Library

இவற்றில் உள்ள நகைச்சுவையும் அந்த நகைச்சுவைக்குள் உள்ள அடிச்சுவையான அன்பும் ஆன்மிகமான புனித ஆனந்தத்தையே ஊட்டுகின்றன அல்லவா? ஓயாமல் கஷ்டப்படும் குழந்தைகள் சிரித்து மகிழட்டும் என்றே ஷிர்டி பாபா இந்த சின்ன சமத்காரங்கள் செய்திருக்கிறார். அன்பு விளையாட்டு!

இன்றைய பாபா கல்லைக் கற்கண்டாக்கித் தருவதும், காற்றை வாச்செட்டாகப் பிடித்துத் தருவதும் இதே அன்பின் பொருட்டுத்தான். நம் குழந்தைகளை எப்படியோ ஒருவிதத்தில் இன்புறுத்துவதன் பொருட்டுத்தான்.

அவரே சொல்கிறார்: ''நான் பண்டங்கள் சிருஷ்டித்துத் தருவது பற்றிப் பலர் பலவித வியாக்கியானங்கள் செய்கிறார்கள். நான் சொல்லும் ஒரே காரணம் என் அன்புதான். அன்பிலே செய்வதற்குக் காரணம் காட்ட முடியுமா? ஒரு தாயார் குழந்தைகளுக்குப் பட்சணம் செய்து தரும்போது, 'வெறுமே சாப்பாடு போட்டால் போதாதோ? எதற்குப் பட்சணமெல்லாம் செய்து உன் சக்தியை வீணாகச் செலவழிக்கிறாய்?' என்று கேட்டால் இதற்கு என்ன பதில் சொல்வது? நான் ஒரு பொருளைப் படைத்துத் தருகிறேன் என்றால் அதைப் பெறுபவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும், இன்னும் மற்ற பக்தர்களுக்குங்கூட எத்தனை ஆனந்தமாக இருக்கிறது? குழந்தைகளை மகிழ்ச்சி கொள்ளச் செய்யும் வாத்ஸல்யத்தின் அடையாளமாகவே, ஒரு தாயாக இந்தப் பரிசுப் 'பட்சணங்களை'த் தருகிறேன். என் அற்புத ஆற்றலுக்கு டமாரம் கொட்டிப் பிரசாரம் செய்வதற்காக அல்ல.''

அத்தியாவசியத்துக்கு மட்டுமே என்றில்லாமல், இயல்பாக வெறும் அன்பைக் காட்டவே ஷிர்டிபாபாவும் அற்புதம் செய்தார் என்று நிதர்சனமாகத் தெரிகையில், அவ்வன்புக்கு நாம் ஓர் அடைக்கும் தாழ்போட்டு, அது இந்த அளவோடு நின்று விடவேண்டும் என்று வரையறை செய்வதில் பொருள் இல்லை. மறு அவதாரத்தில் அந்த அன்பு நானாவித மெட்டீ-ரியலைஸேஷனாகவும் மலருமானால், அப்படி மலரக் கூடாது என்று நாம் விதி செய்து பயனில்லை.

''ஷிர்டி பாபா எளியராக இருந்தார். இடிந்த மசூதியில் வாழ்ந்தார். பிட்சை எடுத்தே உண்டார். பர்த்தி பாபா இப்படியெல்லாம் இல்லையே. ஷிர்டி பாபா அணுக்கத் தொண்டரிடம் மட்டுமே தம் அவதாரச் சிறப்பை வெளியிட்டாலும் பொதுவில் தம்மை அல்லாவின் தொண்டனாகத்தான் சொல்லிக்கொண்டார். இவரோ எப்போதுமே பார் அறியத் தன்னை பகவான் என்றல்லவா பிரகடனப்படுத்திக் கொள்கிறார்?'' என்று கேட்கிறார்கள். ஷிர்டி பாபா ஒன்றுவிட்டொரு நாள் சாவடிக்குச் செல்லுந்தோறும் நடந்த கோலாகலத் திருவிழா பவனியையும், அங்கே அவரை இருத்தி நேர் இறைவனாக வைத்து சாங்கோபாங்கமாகப் பூஜை செய்ததையும், அவரது 'தர்பாரை'யும் பற்றி இவர்

Koviloor Digital Library

களுக்கு நினைப்பூட்ட வேண்டும். "அதெல்லாம் அவர் பக்தர் பொருட்டுத் தவிர்க்க முடியாமல் ஒப்புக்கொண்டதேயாகும். இவரைப்போல் அவர் வாயார் அறிய உலகறிய, 'நானே தர்ம ஸம்ஸ்தாபனத்துக்காக வந்துள்ள இறைவன்' என்று ஒரு நாளும் சொன்னதில்லை, சொல்லவும் மாட்டார்" என்கிறீர்களா?

இதற்கு ஒரே பதில், "அவதாரங்கள் யாவும் ஒரேபோல இருப்பதில்லை, அவற்றிடையே மாபெரும் மாறுபாடுகள்கூட இருப்பதுண்டு. அந்தந்த அவதார காலத்தின் தேவையை ஒட்டியே அவதார புருஷர்களின் பாவனை, செயல், உபதேசம் முதலியன அமைகின்றன" என்பதுதான்.

கபட நாடக சூத்திரதாரியாகவும், பதினாறாயிரம் பத்தினிகளின் பதியாகவும் இருந்த கண்ணனேதான் ஸத்யத்தில் கட்டுண்டவராகவும், ஏகபத்னி விரதராகவும் இருந்த ராகவன் என்றால், 'நம்பமாட்டோம்' என்பதா? ராமபிரான், "நான் சாதாரண மானுடன்தான்" என்றே சொல்லிக்கொண்டார். கண்ணனோ "நானே சர்வ பூதங்களின் இதயத்தில் உள்ள ஆத்மா. பிராணிகளின் ஆதி, நடு, முடிவு எல்லாமும் நானே. என் மகிமையை தேவகணங்களும், மகரிஷிகணங்களும்கூட உணர முடியாது. நானே லோக மஹேச்வரன்" என்றெல்லாம் சொல்கிறார். இதனால் இவர்கள் வேறு வேறு எனலாமா? ஒரு நதியைக் கடப்பதானால் அதற்குப் பூஜை போடவேண்டும் என்பது போன்ற சின்னச் சம்பிரதாயங்களைக்கூட ராமன் விடாமல் பின்பற்றினார். கண்ணனோ ஆயர்கள் நீண்டகாலமாகச் செய்துவந்த இந்திர பூஜையை நிறுத்தினார். இதனால் இவர்களிடையே பேதம் கற்பிக்கலாமா? ஷிர்டிபாபாவையே எடுத்துக்கொண்டாலும், அவர் பூர்வத்தில் தாம் கபிராக இருந்ததாகச் சொல்லியிருக்கிறார். கபிர் உருவ வழிபாட்டை அடியோடு மறுத்தார். ஷிர்டிபாபாவோ எத்தனை பக்தர்களை விக்கிரக ஆராதனையில் ஈடுபடுத்தியிருக்கிறார்?

வேற்றுமையில் ஒற்றுமையே நமது வேத மதம். அதுவே நம் அவதாரங்கள், மஹாபுருஷர் வரிசையிலும் கவிநயத்துடன் மிளிர்கிறது. இதனை ஷிர்டிபாபாவே ரத்னச் சுருக்கமாக "ஜைஸா தேஷ், ஐஸா வேஷ்" என்று கூறியிருக்கிறார். "உலகம் எப்படியிருக்கிறதோ அதற்கேற்ப வெளித்தோற்றம் மாறவேண்டும்" என்ற இக் கருத்துப்படியே, இன்றைய உலகப் போக்கை ஒட்டி அவர் பர்த்தியவதாரத்தில் சற்று மாற்று வேஷமும் போடுகிறாரேயன்றி, இது ஏமாற்று வேஷம் அல்லவே அல்ல!

ரேகே, நரசிம்ம ஸ்வாமி போன்ற மகனீயர்களான ஷிர்டியடியார்களும், இன்றும் நம்மிடையுள்ள ஷிர்டி பக்தசிரேஷ்டர் சிலரும் பர்த்திபாபாவை ஒப்பவில்லையே என்றால் இதுவும் அவர் லீலை என்றுதான் சொல்லவேண்டும்.

சிரஞ்ஜீவியான ஆஞ்ஜநேயரால் துவாரகாநாதனைத் தமது அயோத்தி வேந்தனாகக் கொள்ள முடியவேயில்லை என்று புராணங்

கள் கூறுகின்றனவே! இதனால் நாம் கண்ணனுக்கும் குறை சொல்லவேண்டாம்; மாருதி பிரபுவுக்கும் மாசு கற்பிக்க வேண்டாம். வெளிராஜ்யத்தவரெல்லாம் பண்டரிபுரத்துக்கு யாத்திரை வரும்போது, மஹாராஷ்டிரத்தையே சேர்ந்த மஹாநுபாவரான ஸமர்த்த ராமதாஸ், 'பண்டரிபுரத்தில் என் ராமன் இல்லையே, கண்ணன் அல்லவா இருக்கிறான்?' என்று சொல்லி அக் கோயிலுக்குச் செல்லாமலே இருந்தாராம்! இங்கே தமிழகத்தில் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் என்ற வைணவப் பெரியார், 'ஸ்ரீரங்கநாதனைத் தொழுவனையன்றி வேங்கடாசலபதியை வணங்குவேனோ?' என்று விப்பாக இருந்து, 'அரங்கனைப் பாடும் வாயால் குரங்கனைப் பாடுவேனோ?' என்று கேட்டிருக்கிறார். மஹாபுருஷர்களில் சிலருக்குக்கூட எக் காரணத்தாலோ ஒரு தெய்வ மூர்த்தியிடம் மட்டும் ''அனன்ய''மான பக்தி இருக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கும் போலிருக்கிறது! அல்லது பதில் சொல்ல இயலாதபோதெல்லாம் கூறக்கூடிய ''லீலா விநோதம்'' என்ற பதிலை(?)த்தான் சொல்லவேண்டும். இல்லாவிடில் ஸாமானியரான நம்மில் பெரும்பாலாருக்குக்கூட சிவபெருமானையும் திருமாலையும் ஸமமாக அன்பு செய்யும்போது, நம்மைவிட எத்தனையோ உச்ச நிலை அடைந்த ஆழ்வார், நாயன்மாரில் பலரைச் சிவ-விஷ்ணுச் சழக்கில் இறைவன் ஏன் விட்டு வைத்திருக்கவேண்டும்?

ஷிர்டியாரின் அத்தியந்த பக்தர்களான சிலர் பர்த்தியார் அவரே ஆயின் அதற்கு இன்னின்ன அடையாளம் காட்ட வேண்டும் என எண்ணி இவரை அடைந்ததுண்டு. சிலருக்கு அந்த அடையாளங்களை அதிவலிவுடன் காட்டி ஆட்கொண்டிருக்கிறார். சிலருக்குக் காட்டாமல் எதிர்ப் பிரசாரம்கூடச் செய்ய வைத்திருக்கிறார். இங்கே, 'இருப்பது வேண்டுமாயின் ஒரு காரணத்துக்காக இல்லாதது மாதிரி ஒளியலாம்; ஆனால் இல்லாத ஒன்று ஒருபோதும் இருக்கிற மாதிரி தோன்ற முடியாது' என்ற சின்ன உண்மையை நினைத்துப் பார்த்தால் போதும். ஷிர்டிபாபா ஏதோ காரணத்துக்காகத் தம்மைச் சிலரிடம் இவராகக் காட்டாமல் ஒளித்துக் கொள்ளலாம். ஆனால் ஷிர்டிபாபாவாக இல்லாத ஒருவர் அவரது அத்தியந்த சீடரான வேறு சிலரிடம் அவராகவே தம்மைக் காட்டிக் கொள்வது நடக்கக் கூடியதா? எம். எஸ். தீக்ஷித், ஷிர்டிஸாயி ஸம்ஸ்தான முன்னாள் தலைவர் ஷாவந்த், சிந்தோலி ராணி, சாரதம்மா (பெத்த பொட்டு) முதலிய ஷிர்டிபக்த சிகாமணிகள் நம் நூல் நாயகரைத் தங்கள் இஷ்டமூர்த்தியாகவே கண்டிருப்பது அசாதாரணமான சான்றுகள் அல்லவோ!

உண்மையில் ஸத்யநாராயணன் ஷிர்டிஸாயி அல்லவாயின் அவன் ஏன் தன்னைப் பொய்யாக அப்படிச் சொல்லிக் கொண்டானாம்? இதற்கு இவர்கள் சொல்லும் காரணம், எவ்வாறோ சில சித்துக்களைப் பெற்ற இவன் ஒரு மஹானின் பெயரைச் சொல்லி மக்களின் மதிப்பைப் பெறப் பார்த்தானாம்! தன்னிடம் ஆள் சேர்ப்பதற்காக அவதார புருஷரின் பெயரை இழுத்தானாம்!

Koviloor Digital Library

ஆனால் உண்மைநிலை இதுதானா? ஷிர்டிபாபாவை அப்போது புட்டபர்த்தியிலும் அக்கம் பக்கத்திலும் உள்ளவர்கள் (ஏன், பொதுவாக தென்மாநிலத்தார் எவருமே) மஹான் என்று தெரிந்துகொண்டிருந்தார்களா? அந்தப் பெயரே அவர்கள் கேள்விப்படாத ஒன்றாக அல்லவா இருந்தது? கேள்விப்பட்ட பின்னரும், அது அவர்களுக்கு மரியாதை உணர்வை மட்டும் ஊட்டாமல், ''இது ஏதோ துருக்கப் பெயராக இருக்கிறதே'' என்று அச்சத்தையும் மன வேறுபாட்டையும் கூடத்தானே தூண்டிவிட்டது?

ஆதியில் அவன் பள்ளிக் குழந்தைகளிடம் கதைத்ததுபோல், அவர்களுக்குத் தெரிந்த ஸத்தியம்மாவின் பெயரை மட்டும் சொல்லியிருந்தாலே 'நம் கிராம தேவதைதான் இந்தப் பிள்ளை மூலம் ஆவேசிக்கிறாள்' என்று நம்பி ஊரார் அவனைக் கொண்டாடியிருப்பர். எனவே இப்போது அவன் அவர்கள் அறியாத—அவர்கள் மனத்துக்குப் பூரணமாக ஒட்டாத — ஒருவர் பெயரைச் சொல்லித் தன்னிடமிருந்து அவர்களை ஓரளவு விலகச் செய்யவும் துணிந்தான் என்பதுதான் உண்மை. இது படிப்படியாகத் தன் உள்ளார்ந்த ஸத்யத்தை அவன் வெளியிட்டு வந்ததன் உச்சநிலை என்பது தெளிவு.

முதலில் தான் அற்புத சக்தன் என்று காட்டவே, கருவில் உள்ளபோதே இசைக் கருவிகளைத் தாமாகப் பாடவைத்தான். பின் பாலரோடு பாலராகக் கொஞ்சம் விளையாட எண்ணிய போது, அன்பின் வேகத்தில் அவர்களிடைமட்டும் சிருஷ்டியைத் தொடங்கியபோது, துருக்கப் பெயர் அவர்களை அடியோடு அஞ்சச் செய்திருக்கும் என்பதால் அவர்களறிந்த ஸத்யம்மாவைச் சொன்னான். சிறுகச் சிறுக, பண்டரி பஜன்களில் ஸாயிபாபாவைக் கலந்து அவர்களுக்கும், ஊராருக்கும் அறிமுகம் செய்யலானான். அன்பொழுகும் லீலைகளால் மக்களைத் தன் வயமாக்கி, ஹிந்து மதக் கண்ணனின் மகிமைகளையும் பாடி, கையோடு கையாக ஸாயியைச் சொன்னதால் மக்கள் ஒரேயடியாக ஐயுறாமல் அந்தப் பேரைக் கேட்டுக்கொண்டார்கள். அதற்கும் மேல்படிக்குத் தான் இப்போது சென்றிருக்கிறான். இருந்தாலும் இன்னமும்கூட, ஸாயி சமாசாரம் அவர்கள் உள்ளத்தில் இயல்பாக மேவாமல் அதிலே சம்சயமும் அச்ச இழைகளும் ஓடத்தான் செய்தன. ஸாயிபாபா பேரைச் சொல்லி அவன் நிச்சயம் 'எக்ஸ்ப்ளாயிட்' செய்யவில்லை—ஏனென்றால் அந்தச் சிமையில் அந்தக் காலத்தில் அந்தப் பேருக்கு ஏதாவது சக்தி இருந்ததெனில், அது 'எக்ஸ்ப்ளாய்டேஷ'னுக்கு நேரெதிர்த் திசையில்தான் இருந்தது.

வேறு எவரின் பெயரையும் சொல்லாமல், தன் சொந்த ஹோதாவில் ஸத்யா அற்புதங்கள் காட்டியிருந்தாலே போதும், புட்டபர்த்திவாசிகள் மட்டுமின்றி எல்லா மக்களும் அவரை வணங்கி வழிபட்டிருப்பார்கள். இன்று எத்தனையோ பேருக்குப் பெரிய பக்தர் கூட்டம் சேர்ந்திருக்கிறதே, அவர்கள் இன்னொருந்தர் பேரைச் சொல்லியா கூட்டம் சேர்த்திருக்கிறார்கள்? அவர்களையெல்லாம் விட மிக அதிகமாக அற்புத ஆற்றல்

படைத்த ஸத்யா பொய்யாக இன்னொருத்தர் பெயரைச் சொல்லித்தான் பக்தர்களைச் சேர்க்க வேண்டும்?

அந்தச் சீமை மக்கள் அறிந்திராத பாபாவின் பெயரை இவன் எப்படி அறிந்து 'துஷ்பிரயோகம்' செய்துகொள்ள முடிந்தது என்பதற்கு ஒரு 'காரணம்' கற்பிக்கப்படுகிறது. அதாவது 'ஏதோ பூர்வஜன்ம விசேஷத்தாலோ, அல்லது ஷிர்டியாரின் காரணமற்ற கருணை காரணமாகவோ அவர் ஸத்யாவின் குழந்தைப் பருவத்திலிருந்து இவனுக்கு அநுக்கிரகம் செய்திருக்கலாம்; அவரது சக்தியில் ஒரு சிறிதை இவனுக்கும் அளித்திருக்கலாம். இவன் பட்டியிலிருந்தபோது அவர் பாலன்னம் போட்டது, இவன் கண் வீக்கத்தில் காய்ச்சலாகக் கிடந்தபோது பாதக் குறட்டொலி கேட்க இவனிடம் வந்து சொஸ்தப்படுத்தியது முதலியன அவர் இவனுக்குச் செய்த அநுக்கிரகமே. இச் சந்தர்ப்பங்களில் அவர் இவனுக்கு வேறாக இருந்து அருள் புரிந்ததாகத்தானே ஏற்படுகிறது? எனவே இவன் பெற்றிருந்த சில அணிமாதி ஆற்றல்களும் அவரது கொடை என்றே சொல்லலாம். இதையே இவன் முற்றிலும் திரித்து, 'நானே ஸாயிபாபா' என்று பிரகடனம் செய்து ஏமாற்றி வருகிறான்' என்கிறார்கள்.

ஷிர்டிபாபா தமது அநுக்கிரகத்தை இப்படிப் பாத்திரமறியாமல் ஒருவருக்கு வழங்குவாரா? அப்படியே தம் கருணை விளையாட்டில் தகுதி பாராமல் ஒருவருக்கு வழங்கினாலும்கூட, அதைப் பெற்றவர் முப்பத்தைந்தாண்டுகளுக்கு மேலாக அகில உலக ரீதியில் இந்த 'ஏமாற்று வித்தை' செய்வதை அவர் தடுக்காமல், பார்த்துக்கொண்டே இருப்பாரா? அற்புத சக்தி தந்தவர் அவரே என்றால் அது எல்லை மீறித் துஷ்பிரயோகமாகும்போதுகூட அதைத் தம்மிடமே திரும்ப வாங்கிக் கொள்ளாதிருப்பாரா?— என்ற கேள்விகள் எழுகின்றன.

முன்பு குசபாவ் என்று ஒருவரைக் கண்டோமல்லவா? பாபாவின் பரம சிஷ்யரான அவருக்கு இனிப்புப் பேடா 'வரவழைப்பது' போன்ற சித்திகள் ஏற்பட்டன. ஆனால் பாபா இதைக் கண்டித்து, 'இனி நீ என்னை நினைக்கும்தோறும் விபூதி ஒன்று மாத்திரமே உன் கையில் வரும்; மற்ற சிருஷ்டிகள் வேண்டாம்' என்றார். அதிலிருந்து குசபாவுக்குப் பேடா படைக்கும் ஆற்றல் போய்விட்டது. இதைப் பார்க்கையில் ஷிர்டிநாதர் ஸத்யாவுக்கு வேறானவர் என்றே க்ஷண காலத்துக்கு வைத்துக்கொண்டாலுங்கூட, தம் சிஷ்யரான இந்தப் பையன் தமக்கு உதவாத சமத்காரங்கள் செய்வதை ஒருகாலும் அநுமதிக்கமாட்டார் என்று உறுதியாகிறதல்லவா?

உபாஸனி பாபாவின் விஷயத்தில் ஷிர்டிபாபா, அவர் தன்னிச்சையாகப் போக ரொம்பவும் சுதந்திரம் கொடுத்தது உண்மைதான். ஷிர்டி பக்தர்கள் இந்த உபாஸனி பாபா இன்னொரு ஸாயியாகவே ஆகிவிடப் போகிறார் என்று நம்பச் செய்யும் அளவுக்கு ஸாயிபாபாவே உண்டாக்கியும், ஊக்கியும்

Koviloor Digital Library

வந்தார். ஆனால் ஷிர்டி சரீரம் மறைந்தபின் உபாஸனி பாபாவோ உலக தர்மங்களையே மதித்து வாழ்ந்த குருவுக்கு மாறாகத் தம்மை லோக தர்மத்துக்கு அதீதர் என்று antinomianism கொண்டாடிக் கொண்டார். இருபத்தைந்து விவாகங்கள் செய்துகொண்டார். ஏராளப் பொருள் சேர்த்தார். அப்படியும் ஒரு காலம் வரை அவரது அற்புத ஆற்றலிலும், சொற் திறனிலும் மயங்கி ஏராளக் கூட்டம் அவரிடம் செல்லத்தான் செய்தது. ஆயினும் 'ஒரு காலம் வரை'யில் தான்!

பாபா மறைந்து எட்டாவது ஆண்டிலிருந்து, அதாவது 1926-லிருந்து, உபாஸனி பாபாவின் புகழ் மளமளவென்று சரியத் தொடங்கியது. ஸத்யா பிறந்தது இதே ஆண்டில் தான் என்பது குறிப்பிடத்தக்கது. ஸத்யா தன்னை ஸாயியாக அறிவித்துக் கொண்ட 1940 மத்தியில் உபாஸனி, உடல் உள்ளம் எல்லாமே ஒடுங்கி நலிந்துவிட்டார், அடுத்த சில மாதங்களில் மறைந்தே விட்டார் என்பதும் கவனத்துக்குரியது.

அன்றிலிருந்து இன்று வரை, முப்பத்தாறாண்டுகட்கு மேலாக, பலதரப்பட்ட மக்களிடமிருந்து என்ன முடியாத எதிர்ப்புகள், ஆட்சேபனைகள் நம் காவிய நாயகரைப் பற்றிப் பரப்பப்பட்ட போதிலும் அவரது புகழ்க் கொடி தினேதினே மேலேறி திசை எட்டும் பறக்கத்தான் செய்கிறது. இதிலே இவருக்கே உரிய விசேஷம், ரமணர், பரமஹம்சர் போன்ற அவதார புருஷர்களை நாஸ்திகர் மட்டுமே ஆட்சேபிப்பர் எனில் நம் ஸத்யஸாயிபாபா மிரகிள் செய்வதால், நாஸ்திகர் மட்டுமின்றி, அவர்களை விடவும் கூட உக்ரமாகப் பல ஆஸ்திகர்களும் இவரைக் கண்டனம் செய்கின்றனர். இதற்கும் மேலாக, மிரகிள்கள் செய்த ஷிர்டி நாதரின் சீடர் பலரும் இவரை ஒப்பாமல், போலி என்கின்றனர். இருபுறமும் அடிவாங்கும் மத்தளத்துக்கும் மேலாக, இப்படி மும்முனைத் தாக்குதலுக்கு ஆளாகியிருந்தும் கூட ஆண்டுக்கு ஆண்டு அண்ட கோளத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் இவரை அண்டும் அடியார் தொகை பெருகிக் கொண்டேதான் இருக்கிறது. ஷிர்டியாரின் சீடரேயான இவர், தம்மையே அவராகத் திரித்துச் சொல்லிக் கொண்ட குருத் துரோகி எனில், இவரை இவ்வளவு நீண்ட நெடிய காலம், இவ்வளவு பரந்து விரிந்த அளவில் ஷிர்டியார் சுயேச்சையாக விட்டுவைத்திருப்பாரா?

இன்று ஸத்யஸாயி அருள் பெற்றே சிலர் பௌதிக— அதீதமான ஆற்றல்களை அடைந்திருப்பதாகத் தெரிகிறது. இப்படிப்பட்டவர்கள் எல்லையறிந்து அடங்கிச் செயலாற்றும் வரை நம் கதாநாயகரும் இவர்களை அநுமதிப்பதாகத் தோன்றுகிறது. ஆனாலும், சற்று வரம்புக்கு அப்பாற்போனாலும் விட்டு வைப்பதில்லை, ஒட்ட நறுக்கி விடுகிறார். அவர்களது பெயரை வெளிப்படச் சொல்லித் தமக்கும் அவர்களுக்கும் தொடர்பில்லை என்றும், தம் அடியார்கள் இவர்களை அகிரயிக்கக் கூடாதென்றும் பகிரங்கமாகவே பிரகடனம் செய்து விடுகிறார். அந்த சக்திமான்களும் இருந்த இடம் தெரியாமல் மங்கிப்போய் விடுகிறார்கள்.

"சிலரை எல்லாக் காலமும், எல்லாரையும் சில காலமும் ஏமாற்றலாம்; எல்லாரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது" என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். இது சாமானிய மாந்தரையே குறித்து எழுந்த வசனம். மஹாபுருஷர்களோ நிச்சயமாக இப்படி ஏமாற்றப்படவே மாட்டார்கள். ஷிர்டி பாபாவின் திவ்ய சக்தி அவர் சமாதியடைந்ததோடு தீர்ந்து விடவில்லை என்று சொல்கிற பக்தர்கள் இதைச் சற்றுச் சிந்திக்க வேண்டும்.

இங்கே ஒரு சம்சயம் பாக்கி நிற்கிறது. ஸத்யாவுக்குத் தாத்தாவாக வந்து பாலன்னம் ஊட்டியபோதும், அவனது கண் நோயைக் குணப்படுத்தியபோதும் ஷிர்டிபாபா இவருக்கு வேறாக இருந்ததாகத்தானே தெரிகிறது? இதற்கு விடை உண்டா? ஓ, இருக்கிறது!

இயேசுநாதர் தம்மைப் பெரும்பாலும் கடவுளின் குமாரர் (Son of God) என்றே சொல்லிக்கொண்டார். ஆனாலும் தமது உபதேச முடிவாக, 'நானும் என் தந்தையும் ஒன்றே' (I and my Father are one) என்றார்.

ஸமர்த்த ராமதாஸ் சாக்ஷாத் ஆஞ்சநேயரின் அவதாரமே. ஆனால் அதே ஹநுமாரிடம்தான் இவர் சீடராக உபதேசம் வாங்கிக் கொண்டிருக்கிறார்.

ஏன், ஷிர்டிபாபாவே தம்மைக் கபீரின் சீடன், கபீரின் அவதாரம் என்று இருவிதமாகவும் கூறிக்கொண்டிருக்கிறார். ஸ்ரீ ராமன் தமது பூர்வாவதாரமான பரசுராமனிடம் போரே செய்திருக்கிறார். கண்ணன் இன்னொர் அவதாரமான பலராமனுக்குத் தம்பியாக இருந்திருக்கிறான். எனவே கடவுள் ஒரே சமயத்தில் தம்மையே பலவாக்கிப் பல விதத்தில் பழகியும், அதே போதில் அந்த ஒன்றேயாகவிருந்தும் லீலை புரிகிறார்.

அவதாரங்கள் வரை போவானேன்? நம்மையே எடுத்துக் கொண்டாலும், ஆத்ம ஞான நிலையில் நாமே கடவுள்தான். ஆனாலும் வியவகார உலகில், அவரே இயக்கும் மஹாசக்தியாகவும், நாம் இயக்கப்படும் அல்ப சக்தியாகவும் இருக்கிறோம். நம்மில் நாமான கடவுள் நம்மிலேயே பல பக்தர்களுக்கு தந்தை, தாய், நாயகன், ஸகா, பாலன் என்பதாகப் பல உறவுகளிலும் அருள் செய்திருக்கிறார். ஆத்ம நிலையில் இறைவனைத் தவிரத் தாம் என்றே ஒன்றில்லை என எப்போதும் ஸ்பஷ்டமாகக் கண்ட ரமணரும், இறைவனை அருணாசலத் தந்தையாகவும், தம்மைப் பிள்ளையாகவும் கொண்டு உறவு பூண்டிருந்தாரே!

இப்படியே ஷிர்டிஸ்வாமி, தானே ஸத்யாவாகப் பிறந்தும், ஆரம்ப காலத்தில் தாத்தாவாக இருந்து அதே ஸத்யாவுக்கு அருளியிருக்கிறார். பிறகு பேரனாகவே பூரணமாக ஆகிவிட்டார்; ஆம் அவர் பேரையே இவர் தனதாக மல்லிகையில் மலர்த்திக் காட்டிய அன்றிலிருந்து!

அத்தியாயம்—19

பறந்ததே பட்சி!

கருவிலிருந்தபோதே நான் தேவ ஜன்மங்கள் அனைத்தும் அறிந்திருந்தேன். நூற்றுக் கணக்கான இரும்புக் கோட்டைகள் முன்னம் என்னைச் சுற்றி அரண் செய்தன. இப்போது வலையை அறுத்த பருந்தென விரைவுடன்—விசையுடன் வெளிக் கிளம்பிவிட்டேன்."

— வாமதேவ ரிஷி: ஐதரேய உபநிஷதம்

உரவகொண்டாவில் பள்ளி விடுமுறை முடிந்து மீண்டும் திறந்தது. ஒன்றுமே நடக்காததுபோல் "ஸாயிபாபா" பள்ளியில் மீண்டும் சேர்ந்து படிப்பதற்காக அண்ணனுடன் சென்றார்!

அவ்வப்போது விட்டார் இழந்த இழப்புக்குத் தாம் வந்தது போலக் காட்டி, உண்மையில் அவர்களையேதான் ஆட்டி வைத்துக் கொண்டிருந்தான் மாயாவி ஸத்யா. ஸ்வச்சமாகப் பிரகாசித்த முழுமதி மறுபடி கொஞ்சம் மேகப் போர்வையை இழுத்து விட்டுக்கொண்டது!

அண்ணா வீட்டில் குருவாரந்தோறும் "ஸாயிபாபா" வாகவே இருந்து, வருகிறவர்களுக்கு விபூதியும் பிரஸாதங்களும் 'வரவழைத்து'த் தந்தான். அச்சமயத்தில் அவனது அருட் பொலிவைக் கண்டு பள்ளித் தலைமை ஆசிரியரே தலைதாழ்த்தி வணங்கினார்.

ஆசிரியருக்கும் ஞானோபதேசம் செய்தான் ஸத்யா. சாமானிய மக்கள் அற்புத விபூதிக்குக் கூடுகையிலும், இவனது உபதேசத்துக்காகவே தலைமையாசிரியரும், ஸ்ரீ மஞ்சிராஜு தம்பி ராஜு, ஸ்ரீ சேஷ ஐயங்கார் ஆகிய ஆசிரியர்களும் வந்து, பயன் பெற்று மகிழ்ந்தனர். இச்சமயத்தில் ஆசிரியர் ஸ்ரீ கொண்டப்பா எடுத்த புகைப்படம்தான் ஸத்ய நாராயணன் ஸாயிபாபாவான

Koviloor Digital Library

பின் எடுத்த முதற்படம். வஞ்சனையற்ற பிள்ளையாக நாலுமுழ வேட்டியும், அரைக்கைச் சட்டையுமாக ஒரு நாற்காலியில் அமர்ந்திருப்பார், சாதாரணக் கிராப் முடியுடன்.

தம்பிராஜு ஸத்யாவிடம் மிகவும் ஈர்க்கப்பட்டார். ஞான, பக்தி மார்க்கங்களில் தமக்குத் தோன்றிய ஐயங்களை வெளியிட்டுக் கேட்டார். உபநிடத, புராண, இதிஹாச, சாஸ்திரங்களிலிருந்து சொறுமாரியாக மேற்கோள்கள் காட்டிச் சந்தேக விளக்கம் தந்தான் ஸத்யா.

இவர் கேள்வி கேட்பதைக் கேள்வியுற்று மற்ற ஆசிரியர்களும் ஒரு நாள் வந்தனர். அத்தனை பேரையும் ஒரே சமயத்தில் கேட்குமாறு சொன்னான் ஸத்யா. ஆத்மிகம் குறித்தும் சாதனை குறித்தும் அவரவர் தங்கள் ஐயங்களை ஒரே போதில் வெளியிட்டனர். ஒருத்தருக்கும் ஒன்றும் புரியாத சந்தைக் கூச்சலாக, பைபிள் சொன்னதும் பேபல் டவராக இருந்தது! ஸத்யா இதன் பின் ஒவ்வொரு ஆசிரியரையும் பார்த்துச் சரியாக அவரது வினாவுக்கான விடையைச் சொல்லிக்கொண்டு போனான். அஷ்டாவதானம் நம் அவதாரனுக்குக் கஷ்டமா என்ன?

இன்னொரு நாள் போக்கிரிகளும் அங்கு வந்து 'கன்னா பின்னா' என்று வினாக் கணைகளைத் தொடுத்தனர். மகா வீரனாக, சிரித்த முகத்துடன், இனித்த இதயத்துடன் அந்தக் கணைகளுக்கு எதிர்ப் பாணங்கள் போட்டு அவற்றைத் தவிடு பொடியாக்கினான் சிறுவன்.

உடல் நோய் தீர்க்க விபூதிப் பிரஸாதம் தரும் உத்தம அநுக்கிரகமும் இப்போதே தொடங்கி விட்டது. நோயுற்று வந்த சிலருக்குப் பெரிய ரட்சை ஒன்று தந்தான். ஷிர்டிபாபாவின் பழுப்புக் கஃப்னி (அங்கி)யின் துண்டங்கள்தான் இந்த ரட்சை. ஸத்யா அந்தரத்தில் சுந்தரக் கையை அலைவான்; அதிலே ஷிர்டிபாபாவின் கஃப்னித் துணி வந்து விடும்!

இந்த லீலைகளுக்கு நடுவே தினம் பள்ளிக்கூடமும் சென்று வந்தான். ஒரு நாள் தோழர்களுடன் அவ்வூரிலிருந்து ஒன்றரை மைலில் இருந்த பூதளவி என்ற கிராமத்துச் சிவாலயத்துக்குச் சென்றான்.

'இதென்ன, இருண்ட கர்ப்பக்கிரகம் ஒளி வெள்ளத்தில் முழுகுகிறதே!' என சகாக்கள் வியக்கும்போது, தங்கள் தோழன் வி. ஸத்யநாராயண ராஜுவின் நெற்றியிலிருந்தே ஒரு ஜோதிக் கற்றை புறப்பட்டுக் கருவறை சென்று லிங்கத்துக்குள் பாய்வதைக் கண்டனர். லிங்கத்திலிருந்து இன்னோர் ஒளிக் கற்றை தோன்றி இவனுள் புகுவதையும் பார்த்தனர்.

ஒரு குரு வாரத்தன்று வழிபட வந்திருந்த காரிபட்ல ஸ்ரீ ராமமூர்த்தியின் மனைவியிடம், "உங்க அகத்துப் பூஜை பிறையே ஒரு படம் வைச்சிருக்கேன். அதை வழிபடுங்கோ!"

Koviloor Digital Library

என்று கூறினான் ஸத்யா. அந்த ஊரில் குரங்குத் தொல்லை அதிகமாதலால், அந்த அம்மாள் ஜன்னல்கள் உட்பட வீட்டின் கதவுகளை எல்லாம் அடைத்துப் பூட்டிக்கொண்டு வந்திருந்தாள். ஸத்யாவின் வார்த்தை கேட்டு வீட்டுக்கு விரைந்து, கதவுகளைத் திறந்துகொண்டு பூஜையறைக்குச் சென்று பார்த்தாள். அங்கே நடு நாயகமாக ஷிர்டிபாபா ஒரு புத்தம் புது படவடிவில் வீற்றிருந்தார்.

* * *

நடுவே ஒரு முறை ஸத்யா புட்டபர்த்திக்குச் சென்று விட்டான். தம்மிராஜுவுக்கு ஸதாவும் அவன் நினைப்பே. இன்றும் அவரைப் பிரிந்த பக்தர்களுக்குத்தான் தெரியும், எப்படி மனம் திரும்பத் திரும்ப அவர் நினைப்பிலேயே தோய்ந்து இன்ப வேதனை கொள்ளும் என்பது! காசிபட்லவுக்குச் செய்த மாதிரி, தன்னை விட்டுப் பிரியாமல் ஒரு பட உருவிலாவது ஸத்யா இருக்கக் கூடாதா, இந்த அருள்கூடச் செய்யாமல் போய் விட்டானே என்று ஏங்கிக்கொண்டிருந்தாரோ என்னவோ?

'பஸ்ஸ்' என்று நரம்பு அதிர ரீங்காரம் செய்துகொண்டு ஒரு பெரிய வண்டு ஜன்னல் வழியாக அவர் அறைக்குள் நுழைந்தது. தான் காலில் இடுக்கி வந்த எதையோ போட்டுவிட்டு வெளியே பறந்து விட்டது, அந்த வண்டு. தம்மிராஜு அது என்ன என்று பார்த்தார். சுருளாக மடிக்கப்பட்ட வழவழ காகிதம். எடுத்துப் பிரித்தார். ஆகா, ஷிர்டிபாபாவின் திரு உருவப் படமேதான்!

வண்டு விடுதூது சுவையாக இல்லை?

அடுத்து, ராமபிரான் ஒருவரே செய்திருந்த வானரம் விடு தூது! சில நாட்களுக்குப் பின் ஒரு நாள் காலை பள்ளிக்குப் போகிற அவசரத்தில் இவர் ஓட்ட ஓட்டமாக பஜனை செய்து கொண்டிருந்தார். அப்போது அதே ஜன்னல் வழியாகக் குரங்கு ஒன்று ஒரு சிறு துணி முடிச்சை வீசி மறைந்தது. தம்மிராஜு முடிச்சை அவிழ்த்தார். அதில் ஓர் லட்டு உருண்டையும், கடிதமும் இருந்தன.

''அன்றைக்கு வண்டு மூலம் உங்களுக்கு என் படம் அனுப்பியிருந்தேன். அதை நீங்கள் அந்தரங்க சுத்தமாகப் பூஜிப்பதில் எனக்கு மகிழ்ச்சி. இன்று பிரஸாதம் அனுப்பியிருக் கிறேன்'' என்று கடிதத்தில் கண்டிருந்தான் ஸத்யா.

இதனால் ஸத்யாவின் ஸர்வ வியாபகத்தை உணர்ந்துவிட்ட தம்மிராஜு அன்று பள்ளிக்கே செல்லவொண்ணாமல், ''ஸத்யா, என் அப்பா, என் ஸ்வாமி'' என்று விம்மிப் புரண்டுகொண்டே யிருந்தார்.

இவரது மனைவி ஸ்ரீமதி காமேசுவரம்மாவுக்கும் ஸத்யாவிட மிருந்த பக்தி சொல்லத்தரமன்று. இருபத்திரண்டு வயது மகளை

Koviloor Digital Library

வாரிக் கொடுத்துவிட்டு வயிறு எரிந்து கொண்டிருந்த அந்த அம்மாளை ஸத்யா தன் அன்பிலும், ஞானோபதேசத்திலும் முழுக்கி ஆறுதல் தந்ததை அவள் எப்படி மறக்க முடியும்? ஒரு குரு வார பஜனையின்போது காமேசுவரம்மாவுக்கு ஷிர்டி கஃப்னித் துண்டம் கொடுத்தான்; மறுவாரம் அதில் முடிந்து வைக்க மந்திராட்சதை யும் சிருஷ்டித்துக்கொடுத்தான். அதை முடிச்சுப் போட்டு வைத்தவுடன் இவளது புத்திரிப் பாச முடிச்சு அறுந்தது.

(இன்றும் நம் சரித நாயகர் செய்கிற அநேக பிரமிப்பான லீலைகளைவிட, பலரது புத்திர சோகம், வைதவ்யம் போன்ற பெருந்துயரங்களை அவர் எப்படி எளிதே கொய்து போட்டு விடுகிறார் என்பதுதான் அதிசயிக்கத்தக்கதாக இருக்கிறது.)

கிருஷ்ணஜயந்தியன்று அபிநவக் கண்ணன், தம்மிராஜுவின் வீட்டுக்கே வந்தான்.

''கிருஷ்ண ஜனனம் வாஸ்தவமாகவே பார்க்கணுமா? அதற்கு முற்பட்ட அவதாரங்களையும் காட்டட்டுமா?'' என்று கேட்டான். அற்புத சாதனை செய்யப்போகிற பெருமிதம் அதில் இல்லை. பெற்ற பிள்ளையின் எளிய அன்புதான் கமழ்ந்தது. ''வீட்டிலே எல்லோரையும் கூப்பிடுங்கள்'' என்று சொல்லி அனைவரையும் அழைத்து வைத்துக்கொண்டான்.

உடனே ஸத்யாவைக் காணவில்லை.

அந்த அறை ஓர் அதிசயத் திரைபடக் கொட்டகையாயிற்று. திரையில்லாமலே படம் ஓடிற்று! ''வடபத்ர சாயி'' என்று நம் இளம் ஸாயியின் குரல் மட்டும் கேட்டது. இல்லாத திரையிலே பாற்கடலும், அதிலே ஆலிலையும், ஆலிலைக்குள் கால் கட்டை விரலை ருசிக்கும் கள்ளக் கண்ணனும் தெரிந்தனர். திரைப்பட உருவங்களைவிட உயிர்கொண்ட வடிவமாகத் தெரியும் கண்ணனைக் கண்டு புளகித்தனர்.

''மச்சம்'', ''கூர்மம்'' என்று ஒவ்வோர் அவதாரத்தின் பெயரும் கேட்டன. எதிரே அந்தந்த அவதாரம் கண்ணாரக் காட்சி தந்தது. கஜேந்திர மோட்சம், மோஹினியின் அமுத தானம் முதலிய காட்சிகள் எதிரே விரிந்தன. வைணவமாக மட்டும் இல்லாமல் வாணியும் நான்முகனும் தோன்றி மறைந்தனர்; பார்வதி பரமேச்வரர் பனிச்சிட்டுச் சென்றனர். கடைசியில் கண்ணன் வந்து விளையாடினான், விஷமம் செய்தான், கீதம் இசைத்தான், கீதை பொழிந்தான், பண்டரிநாதனானான், ஷிர்டிநாதனானான். ஷிர்டிநாதன் ஸத்யாவானார்.

திரைப்படக் கொட்டகை தம்மிராஜுவின் வீடே ஆயிற்று.

புகழ் பரவலாயிற்று.

★

Koviloor Digital Library

விஜயநகர சாம்ராஜ்யத்தின் தலைநகராக இருந்த ஹம்பிக்கருகேயுள்ள ஹாஸ்பெட்டின் பள்ளித் துணை மேற்பார்வையாளர், சுகாதார அதிகாரி, பொறி இயல் அதிகாரி, சில முனிசிபல் கவுன்சிலர்கள், வியாபாரிகள் ஆகியோர் கூட்டாகச் சேர்ந்து, இந்த அற்புத பாலனைத் தம் ஊருக்கு அழைத்து வரும்படி சேஷமராஜுவுக்கு அழைப்பு விடுத்தனர். தசரா விடுமுறையும் வந்ததால், சேஷமராஜு ஒரு பெரிய கோஷ்டி சேர்த்துக்கொண்டு, தம்பியுடன் ஹாஸ்பெட்டுக்குப் புறப்பட்டார்.

வரலாற்றுப் புகழ்கொண்ட ஹம்பி இடிபாடுகளைப் பார்த்துக்கொண்டு பயணிகள் அனைவரும் விஜயநகர மன்னர் களின் குல தெய்வமான விருபாக்ஷர் ஆலயத்துக்குச் சென்றனர்.

எல்லோரும் கோயிலுக்குள் செல்ல, ஸத்ய நாராயணன் மட்டும் வெளியிலேயே அதன் சிற்பச் சிறப்புக்களை ஆராய்ந்து கொண்டு நின்றுவிட்டான். அன்று காலையிலிருந்தே அவன் சொப்பன உலகில் மிதப்பதுபோல் காணப்பட்டதால் எவரும் அவனை அணுகவே தயங்கிக்கொண்டிருந்தவர். இப்போதும் மற்றோர் மட்டுமே ஆலயத்துட் சென்றனர்.

கர்ப்பக் கிருகத்தில் கர்ப்பூரம் ஏற்றிய அர்ச்சகர், ''நன்றாகத் தரிசனம் செய்துகொள்ளுங்கள்'' என்றார்.

நன்றாகவே தரிசனம் செய்துகொண்டனர் — ஆனால் விருபாக்ஷ மகாலிங்கத்தை அல்ல — அந்த லிங்கத்துக்குப் பதிலாக அதே இடத்தில் நின்ற ஸத்யாவைத்தான்!

ராஜமிடுக்கோடு இன்னகை கொழிக்க நிற்கிறான் ஸத்ய நாராயணன் — அல்லது ஸத்யசிவன். வேதமானது நாராயணனும் சிவனும் சேர்ந்த ஹரிஹரனைத்தான் மேற்குத் திசைநோக்கி 'விருபாக்ஷன்' என வணங்கச் சொல்கிறது. விருபாக்ஷர் கோயிலில் இந்த சிவ நாராயணனாக ஸத்யாவைக் கண்டதும் பிரயாண கோஷ்டி மெய்சிலிர்த்து விட்டது. இத்தனை காலம் நம்பாதவரும், அரைகுறையாக நம்பியவர்களும் இன்று அவனது தெய்விகத்தைத் தெற்றெனத் தெரிந்துகொண்டனர்.

ஸத்யா மறைந்து விருபாக்ஷ லிங்கம் பார்வைக்கு வந்த போது, அதைத் தரிசிக்க அங்கு எவரும் இல்லை. எல்லோரும் ஸத்யாவை நோக்கி வாசலுக்கு ஓடிக்கொண்டிருந்தார்கள். அவனோ அங்கே கோமளமாக சுவரின்மீது சாய்ந்து அடிவானத்தைப் பார்த்துக்கொண்டு நின்றான். ஆனாலும் அந்தக் கண்களில் பார்வை என்றே சொல்ல முடியாத வெறுமை! வெறுமையா முழுமையா? முழுமையாலேயே வெறுமை! பார்க்கிறவனே அனைத்துமாகிவிட்ட பரிபூரண நிலையில் எதைப் பார்ப்பது, பார்வைதான் ஏது?

விருபாக்ஷனாக இவன் ஸ்வரூபத்தைக் கண்டவர்கள், அன்று குருவாரமின்றி புதன் கிழமையாக இருந்தும்கூட, அப்போதே

Koviloor Digital Library

இவனுக்கு மலர் தூவி, தேங்காய் உடைத்து, கர்ப்பூரம் காட்டிப் பூஜை செய்தனர். இவனும் எந்தப் பரபரப்பும் இன்றி அதை இயல்பான கம்பீரத்துடன் ஏற்றுக்கொண்டான்.

மறுநாள் ஹாஸ்பெட்டில் இந்த அதிசயம் பரவிவிட்டதால் பெரும் கூட்டம் திரண்டுவிட்டது. குருவார பூஜை நடந்தது.

காச நோயாளி ஒருவரை உறவினர் அழைத்து வந்து, ஸத்யாவின் அருளை வேண்டினர்.

ஸத்யா நோயாளியிடம் சென்றான். தன் தங்கக் கையால் அவரைத் தடவிக்கொடுத்தான். வைக்கோல் துரும்பாகக் கிடந்தவரை, ''எழுந்திரு'' என்றான்.

அந்த நோயாளியும் விருட்டென்று எழுந்தார். எங்கிருந்து சக்தி வந்தது? இந்த சிவ-சக்தியின், ஹரி-ஹரனின் கரஸ்பரிசத்திலிருந்துதானே!

''இந்த வீதிகளைச் சுற்றிக்கொண்டு வா'' என்றான், சற்று முன்வரை சப்தநாடி ஒடுங்கியிருந்த மாஜி நோயாளியிடம்.

அவரும் அந்த ஒரு மைலை விரைவில் சுற்றிக்கொண்டு திரும்பி வந்து, ''வைத்தியநாதா!'' என்று ஸத்யாவின் அடி பணிந்தார்.

இயேசு ஒரு பாரிசவாயுக்காரனிடம், ''எழுந்திரு, படுக்கையைச் சுருட்டிக்கொண்டு கிளம்பு'' என்றார்; அவன் தத் க்ஷணமே அப்படிச் செய்தான் என்று பைபிள் கூறுவதுதான் நினைவு வருகிறது!

ருத்திரனை வைத்தியர்களுக்கு மேம்பட்ட ஸூபர்லேடிவ் வைத்தியன் (பிஷக்தமம்) என்று வேதம் போற்றுகிறது. விருபாக்ஷனைச் தரிசனம் தந்ததையடுத்துத் தம் மருத்துவ மகிமையைப் போல்லெவக் காட்டிவிட்டான்!

கண்ணுக்கு முன் கண்ட அற்புதத்தில் மக்கள் பரவசமாயினர். கூட்டம் நெரிந்தது.

''பஜனை செய்யுங்கள்; பகவந் நாமங்களைப் பாடுங்கள்'' என்றான் ஸத்யா. தானே மதுர கண்டத்திலிருந்து அமுத நாமங்களைப் பெருக்கினான். ஹாஸ்பெட்டின் பாக்கியமே பாக்கியம். முதன்முதலாக நம் சரித நாயகரை மையமாகக் கொண்டு பொதுக் கூட்ட பஜனை நடந்தது அங்குதான்.

* * *

ஹம்பியிலிருந்து உரவகொண்டாவுக்குத் திரும்பினர்.

ஊர் திரும்பியதும், ஸத்யா தன்னுடன் வந்த இருபத்தைந்து பேர்களுடன் நேரே ஆசிரியர் தம்மிராஜுவின் வீட்டை அடைந்தான்.

Koviloor Digital Library

பரம பக்தையான ஸ்ரீமதி தம்மிராஜுவிடம், ''அம்மாயி, எல்லோருக்கும் டிபன், காபி கொண்டு வாங்கோ, ஜல்தி'' என்றான்.

அவள் நடுங்கிவிட்டாள். ''கொஞ்சம் பொறுங்கள் ஸ்வாமி! நான் அகத்துக்கு மட்டும் தான் டிபன் காபி பண்ணியிருக்....''

''பரவாயில்லே, பரவாயில்லே, அதையே பரிமாறுங்கள், யதேஷ்டமாகக் கிடைக்கும்'' என்று அடித்துச் சொன்னான் ஸத்யா.

'யதா இஷ்டம்'—இவன் எப்படி இஷ்டப்பட்டாலும் அப்படி நடக்கத்தானே வேண்டும்?

சிலருக்குத் தயாரித்த உணவை சிவாஜியின் பரிவாரத் திரளான அறுபது பேருக்குப் படைத்த ஸமர்த்த ராமதாஸரை நினைத்தார் தம்மிராஜு. நம் ஸத்யாவுக்கு அந்தச் சமர்த்து கிடையாதா என்ன?

தம்பதியர் டிபனைத் தட்டுக்களில் எடுத்தெடுத்துப் போட்டனர். காபியைத் தம்ளர்களில் ஊற்றினர். 'வளர்ந்தன, வளர்ந்தன, வளர்ந்தனவே' என மஹாகவி சொன்னபடி, ஆறு பேருக்குச் செய்தது வளர்ந்து ஐந்து மடங்கினருக்குப் பசியாற்றியது.

*　　*　　*

மறு நாள். ஸத்யஸாயி பக்தர்கள் மறக்கவொண்ணாத 1940 அக்டோபர் 20-ந் தேதி. ஐப்பசி மாத சங்கடஹர சதுர்த்தி தினம்.

ஸத்யா பிறந்ததும் ஒரு சங்கடஹர சதுர்த்தி என்பது நினைவிருக்கிறதல்லவா? அது கார்த்திகை மாதம். இது ஐப்பசி எனப்படும் 'ஆச்வயுஜம்'. 'இரு புரவிகளின் இணைப்பு' என்று அதற்குப் பொருள். 'ஸாயின்' என்றால் 'குதிரை வீரன்' என்பதையும், 'கல்கி' புரவிமீது ஊர்பவனே என்பதையும், இரு ஸாயிக்களும் முதலில் குதிரை கண்டுபிடித்துக் கொடுத்த லீலையையும் நாம் நினைப்பூட்டிக்கொள்வோம்.

'இரு ஸாயி' என்றில்லாமல் இறுகி இணைந்துவிட வேண்டும். கொஞ்சம்கூட ஸத்யநாராயணன் என்ற ராஜு குடும்பப் பையனை விட்டுவைக்கக் கூடாது; பூரண ஸாயியாகவே ஆகிவிட வேண்டும். முழுமதி மறுபடி மேகப் போர்வையைப் போர்த்திக் கொள்வதற்கு இடமேயில்லாமல் செய்து விடவேண்டும்.

தரையிலிருந்து கிளம்பும்போது ராக்கெட்டின் ஒரு வெளிக் கூடு வெடித்து விழுவதுபோல் மார்ச் 8-ந் தேதி ஸத்யாவின்

ஒரு கூடு கழன்று விழுந்தபோதுதான், மற்றவர்கள் தேள்கடி என மயங்க, இவன் சரீரக் கூட்டிலிருந்து வெளிச் சென்றான். ஆனால் ராக்கெட் தன் இலக்கை அடைய மேலும் இரு கூடுகளையும் பெயர்த்துத் தள்ள வேண்டுமே! பூவுலகின் ஈர்ப்பிலிருந்து அப்போதுதான் அது முற்றிலும் விடுபட்டு விசுவ வெளியில் சஞ்சரிக்க முடியும். வீட்டின் ஈர்ப்பிலிருந்து விடுபட்டு பூவுலகு முழுதும் தனதாகக்கொண்டு சஞ்சரிக்க வேண்டிய ஸத்யா, இரண்டாம் கூட்டை மே 23-ந் தேதி கழற்றி எறிந்து, "நான்தான் ஸாயிபாபா" என்று வெளியிட்டுக்கொண்டான். இன்னும் ஒரு கூடு மீதமிருக்கிறது. வருகிற மாதம் தேய்பிறைச் சதுர்த்தியில் பதினாலு வயது முடிவதற்கு முன்னமே, இன்று, இந்த சங்கடஹர சதுர்த்தியன்றே உலகுக்குச் சங்கடம் தீர்க்கும் மங்கல நாளை முற்றுமாகப் பொலிவித்துவிட வேண்டும். மூன்றும் கூட்டையும் இன்று அலாக்காகக் கழற்றி அப்பாலே எறிந்து விடவேண்டும். திரி-புரங்கள் என்பதாக ஸ்தூல, ஸூக்ஷ்ம, காரண தேகங்கள் என்ற மூன்றைச் சொல்கிறார்களே, இவற்றை இன்று வீழ்த்திக் காரணமற்ற மஹாகாரணமான பூரணத்தில் முற்றிவிட வேண்டும். இப்படி எல்லாம் அன்று ஸத்யா எண்ணினானோ என்னவோ?

இகலோக இணைப்பு மிகமிக லேசாகவே இழையோடுவது போல் அன்று காலையிலிருந்து தியான மயமாகக் காணப்பட்டான்.

கலால் இன்ஸ்பெக்டர் ஆஞ்ஜநேயுலு என்றுமே இவனிடம் பக்தி கொண்டவர், இன்று இவனது பாவனக் கோலம் கண்டு இவனை விட்டுப் பிரிய முடியாத பிரியத்தில் ஊறியிருந்தார்.

சிந்தையெல்லாம் எங்கோ தோய்ந்திருக்க, சற்றுச் சுதாரித்துக்கொண்டு பள்ளிக்குக் கிளம்பினான் பாலன்.

அன்று ஞாயிற்றுக் கிழமை. ஆனாலும் சமீபத்தில் தசரா, சந்தை என்று பல நாட்கள் விடுமுறை விட்டதால் அன்றும் பள்ளி வைத்திருந்தார்கள்.

ஸத்யாவுடன் ஆஞ்ஜநேயுலுவும் பள்ளியின் வாயில் வரை சென்றார்.

'விடுமுறை நாளிலும் பள்ளி! பள்ளிக்கே இனி விடுமுறை கொடுத்து விடவேண்டும். விடுமுறை, விடுதலை. ஆம், விடுபட்டே தீர வேண்டும். பள்ளியிலிருந்து, வீட்டிலிருந்து விடுதலை பெற்றேயாக வேண்டும். நான் யார்? எதற்காக வந்திருக்கிறேன்? ஏன் இப்படிக் கட்டுப்பட்டதுபோல் விளையாடிக் கொண்டிருக்கிறேன்? வெங்காவதூதரின் தவத்துக்கும், ராஜு குடும்பத்தினரின் பூர்வ புண்யத்துக்கும் பலன் கொடுத்தாயிற்று. போதும் இந்த லீலை' என்று முடிவு கட்டிவிட்டான் ஸத்யா.

"இந்தப் பள்ளியால் எனக்கு ஆவதென்ன?" என்று 'செப்பினட்லு சேஸ்தாரா' நாடகத்தில் கேட்டவன், உலக

Koviloor Digital Library

நாடகத்திலேயே அந்தக் கேள்விக்கு விடையை நடத்திக்காட்டத் தீர்மானித்து விட்டான்.

விண்கலத்தின் மூன்றும் கூடும் மளாரென்று வெடித்து விட்டது!

பள்ளிக்குள் நுழைய வேண்டியவன், மாருகத் திரும்பினுன்.

ஆகா, திரும்பிய திருமுகம்—அந்த ஞாயிற்றுக் கிழமையன்று வானில் ஒளிர்ந்த ஞாயிற்றைப் போலவே ஜோதி வீசிற்று! தெய்வ சித்திரங்களில் தலையைச் சுற்றி ஒரு வட்டவடிவமான ஜோதிப் பிரபை வரைவதுண்டல்லவா? இன்று ஸத்யாவின் சிரத்தைச் சுற்றி மெய்யாலுமே அந்தப் பேரொளிப் பரிதியைக் கண்டு கண்கள் கூசி மூடிக் கொண்டார் ஆஞ்ஜநேயுலு.

இதுவரை யோசனை வயத்தனுக அடிமேல் அடி வைத்து அன்னமாக வந்த பாலன், இப்போது காற்றினும் கடுகி நடக்கத் தொடங்கினுன்.

கிடுகிடுவென வீட்டுக்கு வந்தான்.

வாசற்படியிலேயே நின்றுகொண்டு புத்தகங்களை எறிந்தான்.

கம்பீரமான குரலில், ''இனி நான் உங்கள் ஸத்யா இல்லை. நான் ஸாயி'' என்று கூவினுன்.

ஓசை கேட்டுச் சமையற்கட்டிலிருந்து ஓடிவந்த அவனது அண்ணி சுசீலம்மா கண்களைப் பொத்தியபடி பின்வாங்கிக் கொண்டாள்.

கோமளக் கொழுந்தாக இருந்த கொழுந்தன் இப்போது கொழுந்து விட்டல்லவோ ஜொலிக்கிறுன்! அந்த ஒளி வட்டம் கண்ணைப் பறிக்கிறதே! 'கிறீச்'சிட்டு விட்டாள் அப் பேதை.

ஸத்யா அவளைப் பார்த்து, ''நான் போகிறேன். இனி நான் உங்களைச் சேர்ந்தவனில்லை. உங்களுக்குச் சொந்தக்காரனில்லை. மாயை ஓடி விட்டது. என் பக்தர்களின் கூப்பாடு என்னை அழைத்துவிட்டது. நான் செய்யவேண்டிய ஜன்மப்பணி இருக்கிறது. அதை மேற்கொண்டு விட்டேன். இன்னமும் வீட்டில் கட்டுப்பட்டிருக்க என்னுலாகாது'' என்று உறுதியாகக் கூறினுன்.

''போகாதே நாயனு, போகாதே! உன் அப்பா-அம்மாவுக்கு நாங்க பதில் சொல்லக் கடமைப்பட்டவங்க. அவங்களை வரவழைக்கிறோம். அப்புறம் என்ன பண்ணுவியோ பண்ணிக்க'' என்று அவள் மன்றுடினுள்.

''அண்ணி! அவங்களுக்கு மட்டும் என் போக்குத் தெரியாதா என்ன? உங்க கிட்டே மனஸ்தாபப்பட்டுக்கிட்டோ, நீங்க

Koviloor Digital Library

விரட்டியடிச்சோ நான் போயிட்டேன்னு அவங்க நினைக்கப் போறாங்க? தயவுசெய்து உங்களைக் குழப்பிக்காதீங்க. என்னையும் குழப்பப் பார்க்காதீங்க. நான் நல்லாத் தெளிஞ்சாச்சு. என்னை யாராலும் கலக்க முடியாது. என்னை எவராலும் தடுக்க முடியாது.''

பள்ளியிலிருந்து சேஷமராஜு விழுந்தடித்துக் கொண்டு வந்தார். திடுமென இப்படித் தம்பிரான் வீட்டைவிட்டுக் கிளம்புவார் என்று அவர் எண்ணியதேயில்லை. அயர்ந்து விட்டார்.

மனைவி சொன்னதையே இவரும் சொன்னார். அவளுக்குச் சொன்னதையே இவருக்கும் சொன்னார் தம்பிரான்.

நாராயண சாஸ்திரி, ஸத்யாவினால் பாகவதத்தில் திருத்தப் பட்டுத் தம் சித்தமே திருந்தியவர், அவரும் ஓடி வந்தார்.

ஜோதிப் பிரபையைப் பார்த்தார். ''மாயை போச்சு. நான் போகிறேன். வேலை காத்துக் கொண்டிருக்கிறது'' என்ற மகாப் பிரகடனத்தைக் கேட்டார். வாயே திறவாமல் கும்பிட்டு நின்றார்.

''உங்கள் அநுமதி பெற்று நான் புறப்படுவதென்பது நடக்கிற காரியமில்லை. நீங்கள் மாயையிலிருந்து விடுதலைபெற மறுப்பதற்காக நானும் கட்டுப்பட்டுக் கிடப்பது இனி ஒரு நொடியும் சாத்தியமில்லை'' என்று சொல்லிக்கொண்டு சரசரவென வெளியே நடந்தார் ஸத்யஸாயி பாபா.

ஆம், இனி அவர் ரத்னாகரம் ஸத்யநாராயண ராஜு அல்ல. அல்லவே அல்ல. குடும்பத் தளையை அறுத்துப் புறப்பட்டு விட்டது மத்தவாரணம். பக்தர் துயரநிவாரணம் என்கிற பணியே இனி அவரது வாழ்வு. ''என் பக்தர்களின் கூப்பாடு'' என்று இவர் சொன்னாரே, அது ஸத்யாவை இறைவனாகக் கொண்ட தம்மிராஜு போன்ற பத்துப் பதினைந்து பேரை மட்டும் குறித்ததல்ல. ஸத்யாவை அறியாமலே, ஸத்ய வஸ்துவைப் பல தெய்வங்களாக வழிபடும் பாரோர் அனைவரையுமே ''என் பக்தர்கள்'' என்றார்.

இது மட்டுமில்லை. ஸத்யஸாயியை அறியாத பக்தர்களின் குறை தீர்க்கவும் இவர் கிளம்பி விட்டார் என்பது மட்டுமில்லை. இவரையும் அறியாமல், தங்களுக்குக் குறை இருக்கிறது என்றும் கூட அறியாமல் உள்ளோரையும் வலுவில் காக்கப் புறப்பட்டு விட்டார்! பக்தர்கள் குரல் கேட்டுப் புறப்பட்டதாகச் சொன்னாலும், தாமே குரல் கொடுத்து அவர்களைக் கூப்பிடச் செல்கிறார்! ''கூவிக்கொண்டு'' அருள்வதாக மாணிக்கவாசகர் சொல்வது போல! நாம் விட்டோடினாலும் வந்து கவ்விக் கொள்ளும் வேட்டை நாயாக, Hound of Heaven — ஆக, ஃப்ரான்ஸிஸ் தாம்ஸன் பாடினாரே, அப்படி!

Koviloor Digital Library

ஒரு குடும்பத்தை விட்டவர் உலகத்தையே குடும்பமாக்கிக் கொள்ளப் போகிறார். ஒரு குடும்பத்தினரின் வாழ்விலிருந்து தம்மைத் துண்டித்துக் கொண்டவர், லட்ச லட்சக் குடும்பங்களின் வாழ்வில் இழைந்து, அவர்களின் இன்னலிலெல்லாம் குழைந்து அருளப் போகிறார். 'கட்டுப்பட மாட்டேன்' என்றவர் அன்புக்குக் கட்டுப்பட்டு ஆயிரமாயிரம் காவதமும் சென்று ஆபத்திலும் தாபத்திலும் பாபத்திலும் தவிப்பவர்களுக்கும் பரிந்து உதவப் போகிறார். கலியின் கோர தாண்டவத்தைத் தன்னாலானமட்டும் தடுத்து நிறுத்தி மக்களிடை அன்பும், அறமும், ஆஸ்திகமும், ஆன்மிகமும் செழிக்க அயராத உழைப்பை மேற்கொள்ளப் போகிறார்.

இனி அவர் வெறும் ஸத்யா இல்லை—ஸத்ய ஸாயி பாபா!

Koviloor Digital Library

அத்தியாயம்—20

பால ஸாயி

தந்தை, தாய், தமர், தாரம், மகவென்னும்
இவை எலாம் சந்தையிற் கூட்டம்;
இதிலோர் சந்தேகமில்லை.

— தாயுமான ஸ்வாமிகள்

ராமன் எங்கு செல்வான்? ஆஞ்ஜநேயர் இருக்குமிடத்துக்குத் தான்! ஸாயிராம் எங்கு சென்றார்? ஆஞ்ஜநேயுலுவின் வீட்டைச் சுற்றியுள்ள தோப்புக்கு.

புத்தர் தர்மசக்கரத்தைச் சுழற்றத் தொடங்கிய ஸாரநாத மாந்தோப்பு அவரது அடியார்களுக்கு எத்தனை புனிதமானதோ, அத்தனை புனிதமானது இந்த மாந்தோப்பு—பர்த்திநாதன் பக்தருக்கு. மரங்களுக்கிடையே, ஒரு பாறை மீதேறி அமர்ந்து கொண்டார்.

வீட்டைப் பொருத்தமட்டும் இதயம் பாறையாகிவிட்டது. உலகைக் குறித்தமட்டிலோ பாறைக்குள் நீர்ச்சுனைகள் தாம் பொடின!

விடுதலை என்ற மெய்யான வீட்டில் இருக்கும் ஞான பர்வதங்கள் எல்லாவற்றிலும் இந்தக் கருணைச் சுனை பொங்கிக் கொண்டுதானிருக்கும்!

தெலுங்கு வாத்தியாரின் தம்முடு வீட்டை விட்டு ஓடினார். வீட்டை மட்டுமே விட்டோடினார்; தங்களை விட்டு ஓடவில்லை; இன்னும் சொல்லப்போனால் தங்களுக்காகவே வீட்டிலிருந்து வெளிப் புறப்பட்டுவிட்டார் என்று கேள்விப்பட்ட ஊர் ஜனங்கள் கலாம் இன்ஸ்பெக்டரின் தோட்டத்தில் கூட ஆரம்பித்தனர்.

ஸத்யஸாயி பாபாவாகவே முற்றிலும் ஆகிவிட்டபின் முதல் முதலாக பஜனை போதிக்கத் தொடங்கி விட்டார்.

Koviloor Digital Library

மரபுப்படி, குரு வந்தனத்திலேயே தொடங்கினர்:

மானஸ பஜரே குரு சரணம்
துஸ்தர பவ ஸாகர தரணம்

(மனமே! கடக்கவொண்ணுத சம்ஸாரக் கடலேத் தாண்டுவிப்பதான ஆசாரியனின் அடிமலர்களை அடைக்கலம் கொள்.)

எத்தனையோ காலமாக இந்தத் தேசத்தில் பாடப்பெற்ற வரிகள் தாம். ஸத்யஸாயி இசைத்த பின்னே ஐந்து கண்டங்களில் இருப்போரின் கண்டங்களும் இன்று இதைப் பாடுகின்றன. ஆத்மிகத்தின் நுழைவாசல் ஆசானின் சரண கமலங்களை அண்டுவதுதான். அந்த நுழைவாயிலே கருவறை மூர்த்தியுமாகி விடுகிறது என்பதை உணர்த்தும் அமர வாக்குகளை அன்று நூறு நூறு மக்கள், புதிதே பிறந்ததோர் எழுச்சியுடன் பாடினர். நாலு முழ வேட்டிக்குக் கீழே தெரியும் குட்டிக் குருவின் குஞ்சுச் சரணங்களைப் பார்த்துக்கொண்டே நெகிழ்ந்து பாடினர்: ''மானஸ பஜரே குரு சரணம்!''

மக்கள் வந்தபடி யிருந்தனர். மட்டிப்பாலும், கர்ப்பூரமும் கொண்டு வந்து பூஜித்தனர்.

'தங்கள் ஸத்யா இனி பள்ளிக்கு வரமாட்டான், ஸ்வாமிகளாகி விட்டான்' என்றறிந்ததும் மாணவர்கள், குறிப்பாகப் பத்தாம் படிவத்தில் உடன் பயின்ற தோழர்கள் விம்மியழுது விட்டனர்.

''இனிமே அவரு ரொம்பப் பெரியவரு. அவருகிட்டே கூட நாம் போறத்துக்கில்லே'' என்று சொல்லிக்கொண்டு, எட்ட நின்று தரிசனம் செய்வதற்காகத் தோப்புக்கு வந்தனர்.

அவர்கள் நினைத்ததற்கு முற்றிலும் மாருக, அவர்களை அருகழைத்து அமர்த்திக் கொண்டார் பாபா. நாம பஜனை பாட வைத்தார். பிரஸாதம் சிருஷ்டித்துத் தந்தார். 'அப்பாலுக்கும் அப்பால் இருப்பது; இப்பாலுக்கும் இப்பாலே இறைவது' என்று காட்டினுர்.

மூன்று நாட்கள் இப்படியே ஓடின.

புது சாமியாரைப் புகைப்படம் பிடிக்க ஒருவர் வந்தார். சப்பணமிட்டு உட்கார்ந்திருந்த பாபாவின் முன் ஒரு பெரிய கல் இருந்ததைப் பார்த்து, ''அதைக் கொஞ்சம் அந்தண்டை தள்ளிடுங்க ஸ்வாமி'' என்று கேட்டுக்கொண்டார்.

பாபா அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லே. இந்தச் சாமியார் 'போஸ்' கொடுக்கமாட்டார் என்று தெரிந்தது.

வேறுவழியின்றிப் புகைப்படக்காரர் 'கிளிக்'கினுர்.

Koviloor Digital Library

மறுதினம். ஃபிலிமைக் கழுவிப் பிரிண்ட் போட்டவர் பிரமித்து விட்டார். ஃபோட்டோவைத் தூக்கிக்கொண்டு மாந்தோப்புக்கு ஓடி வந்தார்.

பாபாவின் முன் இன்றும் அந்தக் கல், சாக்ஷாத் அதே மலைப்பிஞ்சாகவே இருந்தது.

ஃபோட்டோவை அவர் முன் வைத்தார், மலைப்பு நீங்காத புகைப்படக்காரர். ஃபோட்டோவைப் பார்த்த எல்லோருமே மலைத்து விட்டனர். அதிலோ பாபாவுக்கு முன் இருந்த கல் ஷிர்டிஸாயி விக்கிரகமாக உருவம் மாறி விழுந்திருந்தது!

பலப்பல ஆண்டுகளுக்குப் பின்

உஸ்மானியா பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஓய். ஜே. ராவிடம் பாபா ஒரு கல்லை எடுத்துக்காட்டி, "இதென்ன? உங்கள் ஜியாலஜிப்படி இதில் என்ன இருக்கிறது?" என்றார்.

அவர், "இது ஒரு கல்" என்று சொல்லி, ஜியாலஜியால் அந்தக் கல்லின் தன்மையைத் துளைத்துப் பார்க்கும்போது அதற்குள் என்னென்ன தெரியுமோ அவற்றை விளக்கினார்.

"இதிலே அவ்வளவுதான் இருக்கா?" — பாபா குழந்தையாகக் கேட்டார்.

"ஆமாம்."

"சரி, இப்போ பாருங்கோ"—தங்கள் பிராணேசனாகவே பக்தர்கள் உணரும் புனிதர், அப் பாறாங்கல்லின்மீது தமது சுவாசத்தை ஊதினார்.

அது வேணுகோபாலக் கண்ணனாக மாறியிருந்தது.

வடிவம் மாறியது மட்டுமில்லை. அதன் அணுக்கள், மூலக்கூறுகள் யாவுமே மாறிவிட்டன. இப்போது அது கல் விக்கிரகம் கூட அல்ல, கல்கண்டு விக்கிரகம். சீனிக்கட்டியாலான சீனிவாஸச் சிலை!

"புரொஃபஸர்! நீங்கள் உங்கள் ஸயன்ஸ்படி இதற்குள் ஏதேதோ கண்டு சொன்னீர்கள். ஃபிஸிக்ஸில் இதன் அணுவுக்குள் 'துளைத்து'க் கொண்டுபோய் எலெக்ட்ரான், ப்ரோடான், ந்யூட்ரான் என்று நிறுத்துவார்கள். ஆனால் அவற்றுக்கும் உள்ளே இருப்பது பரம்பொருள். ஒரே பரம்பொருள்தான் வேறுவேறாகத் தோன்றும் பலவாகவும் ஆனது. எலெக்ட்ரான் ப்ரோடானாக ஜடசக்தியாக மட்டும் நிற்பவரில்லை கடவுள். உயிர் ததும்பும் பிரேம சக்தியாக இருப்பவர். அந்தப் பிரேமையைக் காட்டத்தான் பரமாத்மா இதில் வேணுகானம்

Koviloor Digital Library

செய்கிறார்; தன் இதய மதுரத்தைக் காட்டவே கல்கண்டாகி யிருக்கிறார்'' என்றார், 'கல்லைக் கனிவிக்கும் சித்தர்.'

* * *

மாந்தோப்பில் ஐயன் பஜனையை மாந்தி இன்புற்றுக் கொண்டிருந்த மாந்தரின் கவனம் உள்ளே நுழைந்த அந்த மாதின் மீது பதிந்தது.

அவள் கண்ணீரும் கம்பலையுமாக பால ஸாயியிடம் விரைந்து கொண்டிருந்தாள். இவர் பாலஸாயியாகி விட்ட பின்னரும், 'தன்' ஸத்யா என்றே உறவு பாராட்டிக் கொண்டு வருகிறாள். ஆம், புட்டபர்த்தியிலிருந்து வெங்கப்ப ராஜுவுடன் வந்த ஈச்வரம்மாதான் அது.

''மாயி, மாயி'' என்று எல்லோரும் ஸாயியின் அம்மா வந்ததைப்பற்றிக் கிசுகிசுத்தனர்.

''மாயியா? மாயா வந்திருக்கிறது'' என்று சிரித்தார் பாலஸாயி.

வைராக்கிய சிகரங்களான மஹாபுருஷர்களையும் 'தான் ஆடாவிடினும் தன் சதை ஆடும்' என்றபடி கொஞ்சம் கொஞ்சம் ஆட்டுவித்த அம்மாப் பாசம் நம் காவிய நாதருக்கு அடியோடு இல்லை.

ஈச்வராம்பா 'கோ'வென்று கதறினாள். வெங்கப்ப ராஜு 'பிள்ளை'யை வீட்டுக்குத் திரும்புமாறு பலவிதமாக எடுத்துச் சொன்னார்; வாதம் செய்தார்; பிடிவாதம் செய்தார்; வேண்டுகோள் விடுத்தார்.

அத்தனைக்கும் ''மாயை மாயை'' என்ற ஒன்றையே சொல்லிக்கொண்டு அசைந்து கொடுக்காமலிருந்தார் பிள்ளைப் பெருமாள்.

''திடீர்னு இப்படிச் சொல்லாம, கொள்ளாம ஓடி வந்துட்டியே நாயனா? பெற்ற தாய்க்குத் தாங்குமா? உன்னை இன்னம் கொஞ்சம் சீராட்ட விட்டிருக்கக் கூடாதா? சீராட்ட வேண்டிய குழந்தைநாளில்கூடச் சோறு கிடையாதுன்னு சொன்ன பாவியாச்சேன்னு சொல்லிக்காம புறப்பட்டுட்டியா அப்பனே?'' என்று புலம்பினாள் ஈச்வராம்பா.

ஆதியில் ஒரு நாள் பிள்ளைக்கு உணவு கிடையாது என்று இவள் சொல்ல, அந்தக் குழந்தை பட்டினி கிடந்ததன் ஞாபகவடு இப்போது மீண்டும் விண்டு புண்ணாகியிருந்தது தாயுள்ளம்.

பாலஸாயியின் 'முரண்டு' கொஞ்சம் சுருண்டது. பாசம் போகலாம். நேசம் போக முடியுமா? காருண்ய வடிவனாயிற்றே!

Koviloor Digital Library

''சரி, எனக்கு உன் கையாலேயே சாதம் போடு''—என்று சொல்லிக்கொண்டு எழுந்தார். 'நுழையமாட்டேன்' என்று நுவன்றுரைத்த அன்னாள் வீட்டுக்குத் தாயோடு சென்றார். இரக்கம் என்று வந்து விட்டால் சூளாவது, இன்னொன்றாவது?

தாய் வகைவகையாய், சுசிருசியாய், சுவைக் குவையாய் சமைத்துப் பரிமாறினாள்.

பாலவாயி அன்னம், வியஞ்சனங்கள் எல்லாவற்றையும் ஒன்றாகப் போட்டுப் பிசைந்தார். இனிமேல் ''ஏகரஸம்''தான். தனித்தனியாக ருசிகள் என்ன வேண்டிக் கிடந்தது? பிச்சைக்காரன் கப்பரையாகக் குழப்பி இருந்த அந்தக் கலவையைப் பந்துகளாக உருட்டினார்.

அன்னையிடம், ''அன்னிக்குச் சாதம் போடாத குறைதானே உனக்கு? அதைத் தீர்த்துக்கோ. உன் கையாலேயே எடுத்து எனக்குப் போடு'' என்று கூறித் தாமரைக் கையை நீட்டினார்.

அவள் ஒரு கவளம், இரண்டு கவளம், மூன்று கவளம் எடுத்து வைத்தாள். மகா மகனின் குட்சியில் அவை இறங்கின.

''போதும், போதும்! இதோடு மாயா பந்தம் தெறித்தே விட்டது!'' என்று எழுந்திருந்தார்.

மாந்தோப்புக்கே திரும்பிவிட்டார்.

* * *

அன்று குருவாரம்.

உரவகொண்டாவில் நறவமாகப் பெருகியது பரமனின் நாம சங்கீர்த்தனம்.

மற்ற எல்லோரையும்விட ஆர்வத் துடிப்புடன் ஓர் அம்மையார் அங்கு வந்தார். 'தான் கேள்விப்பட்டது மெய்தானா? இவர் 'அவர்' தானா? இனிமையே உருவான இந்த இளவல் போலியாக இருக்க முடியாது என்று இதயம் சொன்னாலும் புத்தி ஏதேதோ ஐயங்களைக் கிளறிவிடுகிறதே! நாம் ஏமாறி விடப் போகிறோமே!' என்ற எண்ணத்தில் அலைப்புண்ட அந்த அம்மை பாலவாயியை நெருங்குவதா வேண்டாமா என்று குழம்பிக்கொண்டிருந்தார்.

பாலரின் செங்கை பரிவோடு சைகை காட்டிற்று: 'அசடே, வா இங்கே' என்று.

அம்மையார் அவரது அருகே சென்றார். தமக்கு வலப்புறம் அண்மையில் அம்மையாரை அமர்த்திக்கொண்டு தண்மை கசியும் ரகசியக் குரலில், ''குழந்தே! கடைசியில் வந்து சேர்ந்துவிட்டே'' என்று ஹிந்தியில் கூறினார் ஐயன்.

Koviloor Digital Library

செவி வழியே நேரே சித்தக் கருவுக்குள்ளேயே புகுந்து அம்மையை ரோமாஞ்சனமுறச் செய்தது அக்குரல். ஆம், சாட்சாத் ஷிர்டிநாதனின் குரலேதான். மாறிய சரீரத்திலிருந்து மாருத சாரீரத்தால் பேசுகிருர்!

'கொடுத்த வாக்கைக் காத்துவிட்டார் என் ஷிர்டிநாதர்' என்று கண் மல்கினுர் அம்மை.

நைஜாம் ராஜ்யத்தில் கலெக்டராக இருந்த ஷிர்டி பக்தர் ஒருவரின் புதல்வியாகப் பிறந்தவர் இவர். சாரதா என்று பெயர். பெயர் வைத்ததே ஷிர்டி பாபா தான். சாரதை மூன்றும் வயதில் தந்தையோடு சென்று முதல் முறையாக பாபாவைத் தரிசித்தாள். இரண்டாம் முறை, ஏழாம் வயசில் சென்றபோது அவளுக்குத் திருமணமாகி விட்டிருந்தது. ''ஐயோ பாவம்'' என்று பரிதவித்தார் ஷிர்டிநாதர். (இன்று பர்த்தி நாதர் அடிக்கடி பகரும் 'ஐயோ பாபம்' ஷிர்டியின் தொடர்ச்சியே போலும்!) பரிதவிப்புக்குக் காரணம் பிறகுதான் புரிந்தது.

சாரதை மங்கையாகி நாலு குழந்தைகளைப் பெற்ருள். நாலையும் குழியில் வைத்துக் கதறினுள்.

தந்தையின் ரத்த விசேஷமோ என்னவோ, இவளுக்கும் பாபாவிடம் அதீத பக்தி இருந்ததால் ஷிர்டி சென்று, அவரது இணையடிகளைப் பற்றிக்கொண்டாள். ''பிள்ளை, குட்டிகள் போனதெல்லாம் போகட்டும். இதெல்லாம் மாயை என்ற திடமான ஞானத்தைத் தாருங்கள். சஞ்சலத்திலிருந்து என்னைத் தூக்கி விட்டு மோட்சம் தாருங்கள்'' என்று அவர் காலைக் கட்டிக்கொண்டு பிரார்த்தித்தாள்.

அவர் காலை உதறினுர். இவளை உதைக்காரோ என்று கூடத் தோன்றியது. சில சமயங்களில் இப்படி அவர் ரௌத்திரா காரம் காட்டுவது உண்டு.

''மோக்ஷமா? அதற்குள்ளா? நிறையப் பழம் பாக்கி யிருக்கே!'' என்ருர்.

''அதைத் தீர்ப்பதற்குத்தான் திருவடியைப் பிடித்தேன்'' என்ருள் சாரதா விடாப்பிடியாக.

''இருந்தாலும், கொஞ்சம் அநுபவித்துத்தான் ஆக வேண்டும். உனக்கு இப்போதே நான் மோக்ஷம் தருவதற்கில்லை. மறுபடி நான் ஆந்திரதேசத்தில் வரப்போகிறேன். அப்போது உன்னை என் கூடவே வைத்துக்கொண்டு கரையேற்றுகிறேன்'' என்று முடிவாகச் சொல்லி விட்டார் பாபா.

இது நடந்தது 1917-ல். மறு ஆண்டே பாபா உடலை உகுத்துவிட்டார்.

Koviloor Digital Library

ஊருக்குத் திரும்பிய சாரதைக்கு மனத்திலே ஒரு தெளிவு பிறந்து, மெய்யான பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு வலுத்தது. அந்த அம்மாளுக்கு நல்ல படிப்பறிவும், சங்கீத ஞானமும் இருந்ததால் ஊர் ஊராக ஸத் கதா காலக்ஷேபம் செய்து பக்திப் பிரசாரம் புரிந்தார். "ஸாயி ஸதன்" என்ற பெயரில் அநாதைப் பெண்களுக்கு ஓர் இல்லம் எழுப்பிப் பரிபாலித்தார். அதன் பராமரிப்புக்காகப் பல ஊர் சென்று நிதி திரட்டும் போது தான், ராஜூப் பையன் ஒருவன் தன்னை ஸாயிபாபாவாகப் பிரகடனம் செய்துகொண்டிருக்கிறான் என்று கேள்விப்பட்டார்.

'ஆந்திர தேசத்தில் வருவேன்' என்று ஷிர்டிநாதன் சொன்னதை மறவாமலிருந்ததால், புது அவதாரத்தைச் சென்றடையப் பேரவாக் கொண்டார். எப்படியோ விசாரித்துக் கொண்டு உரவகொண்டாவை அடைந்து விட்டார்.

எங்கேயும் பக்தர்களைப் போல், சந்தேகக்காரர்கள், பரிகசிப்போர்கள் ஆகியோரும் இருக்கத்தானே செய்வர்? உரவகொண்டாவில் இருந்த இப்படிப்பட்ட 'புண்ணியாத்மா'க்கள் சிலர் இந்த அம்மையைச் சற்றே ஐயப்பாடு கொள்ளச் செய்தனர்.

பதினாறு வயதேயான ஐயன் அருளொழுகும் ஷிர்டிக் குரலில், ஹிந்தியில் பேசி, இந்த அறுபது வயதுப் பாட்டிக் "குழந்தை"யை அழைத்துக் கொண்டவுடனேயே அம்மையாரது சிந்தை குளிர்ந்தது. நிம்மதி பிறந்தது.

பாலஸாயியின் கை அவரிடம் நீண்டது. "பாக்கி இருக்கிற பதினாறு ரூபாய்க் கடனைத் திருப்பிக் கொடு அம்மே!" என்றார்.

"பாக்கியா? கடனா?"

"ஆமாம், ஷிர்டியில் தசராக் கொண்டாட்டத்துக்கு அனுப்ப வேண்டுமென்று நீ ரூபாய் சேர்த்து வைத்திருந்தாய் அல்லவா? ஒரு சமயம் பலராமுக்கு அதிலிருந்தே நாற்பது ரூபாய் எடுத்துக் கொடுத்தாய்; நினைவு வருகிறதல்லவா? அவன் உனக்கு எவ்வளவு திருப்பிக் கொடுத்தான்? இருபத்திநாலு ரூபாய் தானே? அதை மட்டுந்தான் நீ என் பூர்வ சரீரத்துக்காகச் செலவிட்டாய். எனக்காக உத்தேசித்த காணிக்கையில் நீ அவனிடம் வசூலிக்காமல் விட்ட பாக்கி பதினாறு ரூபாய் கடன் தீர்க்கவில்லையா?"—பாலஸாயி 'பகபக' வெனச் சிரித்துக் கேட்டார்.

"என் பகவானே!" என்று அரற்றினார் சாரதம்மை.

எத்தனை ஆண்டுகட்கு முன் நடந்த எத்தனை சிறிய விஷயம்? பாபா தவிர வேறு யார் இதை நினைவுகொண்டு கேட்க முடியும்?

தணிந்த குரலில் பாலஸாயி சொன்னார்: "எனக்கு உன் பணமும் காசும் வேண்டாம். ஷிர்டி ஸாயிபாபாவேதான் நான்

Koviloor Digital Library

என்று உனக்கு உறுதி பிறக்கவே இதைச் சொன்னேன். உனக்குப் பூரண நம்பிக்கை வராததால்தானே என் பாதங்களைத் தொட்டு வணங்காமலே பக்கத்தில் உட்கார்ந்தாய்?''

எக்ஸ்-ரேயைவிட ஆழமாக மனிதருள்ளத்தைத் துளைத்துக் கண்டு விடுவார் போலிருக்கிறதே! இல்லை. ''நான் பிறர் மனங்களைத் துளைத்துப் பார்க்கிறேனென்றால் மற்றச் சமயங்களில் அவர்களுக்கு வெளியே இருக்கிறேன் எனவும், ஏதோ ஒரு சமயத்தில் மட்டுமே அவர்கள் சித்தத்தைக் குடைந்து பார்க்கிறேன் எனவும் அல்லவா ஆகும்? இது தப்பு. நான் எப்போதுமே எல்லோர் சித்தத்திலும் இருந்து கொண்டிருக்கும் ஸர்வாந்தர்யாமி அல்லவா?'' என்பார் நம் கதாநாதர்.

சாரதா அம்மையார் வீட்டையும், ஸாயி ஸதனையும் கூட்டமூட்டை கட்டி வைத்து விட்டுப் புட்டபர்த்திக்கே வந்து விட்டார். இன்று தொண்ணூற்றுக்கு மேற்பட்ட பிராயத்தினரான அவர், இத்தனை வயதிலும் தீர்க்க சுமங்கலியாக, பெரிய குங்குமம் நெற்றியில் ஒளிர 'பெத்த பொட்டு அம்மா' என்ற பெயரில் பிரசாந்தி நிலயத்தில் சாந்தமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

* * *

இந்த அம்மாள் புட்டபர்த்திக்கு வந்த கதை இருக்கட்டும். நம் கதாநாயகரே இப்போது உரவகொண்டாவில்தானே இருக்கிறார்? 'பெற்றோருடன்' புட்டபர்த்திக்குத் திரும்ப மாட்டேன் என்றல்லவா அடம் பிடிக்கிறார்!

பெற்றோர் ஆலோசித்தனர். ஒரு முடிவுக்கு வந்தனர். 'பிள்ளை'யேதான் அந்த முடிவை இவர்களுக்கு ஸ்புரிக்கச் செய்திருக்கவேண்டும்! இவரிடம் வந்து அடக்கத்துடன், ''உன்னை இனி ஸ்வாமியாகவே வைத்துக்கொள்கிறோம். எங்கள் பிள்ளையாக நினைக்கவில்லை. எந்தவிதமான கட்டுப்பாடும் செய்ய வில்லை. நீ எங்கேயோ ஓரிடத்தில் ஆசிரமம் வைத்துக்கொண்டு தானே பக்தர்களைக் காப்பாற்றிக் கொண்டும், தர்மத்தை வளர்த்துக் கொண்டும் இருக்க வேண்டும்? புட்டபர்த்தி வீட்டையே அப்படிப்பட்ட ஆசிரமமாக வைத்துக்கொள் என்றுதான் வேண்டிக்கொள்கிறோம். எங்கள் பிரார்த்தனையை மறுக்காதே!'' என்று நெஞ்சுருகிக் கேட்டுக்கொண்டனர்.

அவரும் புட்டபர்த்தியைத்தான் இந்த அவதாரத்தின் தலைநகரமாக முன்னரே சங்கற்பித்து விட்டிருந்தார். என்றாலும் இவர்களுடைய கர்மாவுக்காகக் கொஞ்சம் அலைக்கழிக்க வைக்க வேண்டியிருந்தது போலும்! இப்போது இவர்களே ஸத்யாவாக இன்றி, சுதந்திர ஸாயி பாபாவாக இவரைக் கொள்வதாகச் சொல்லி புட்டபர்த்திக்கு அழைத்தவுடன், ''ஆகா'' என்றார்.

அவர்களோடு புட்டபர்த்திக்குப் புறப்பட்டுவிட்டார்.

Koviloor Digital Library

ஊருக்கே உயிர் தந்த அன்புச்சுடர் புறப்பட்டு விட்டதே என்பதில் உரவகொண்டா திமிலோகப்பட்டது. 'புட்டபர்த்தியில் பிறந்தார்; உரவகொண்டாவில்தான் துறந்தார். அவதார ஜன்மம் நம் ஊரில் தான்' என்ற பெருமிதம் ஒருபுறமும், 'என்ன இருந்தாலும் நம்மை விட்டுப் பிரிந்து பிறந்த ஊருக்குத்தானே புறப்பட்டுவிட்டார்?' என்ற தாபம் மறுபுறமுமாக அவ்வூர் மக்கள் ஊசலாடினர்.

வழியனுப்பு மரியாதையை மேள தாளங்களோடு திருவிழாவாகச் செய்து, பாலஸாயிக்குத் திருவீதி உலா நடத்தினர். வழி நெடுகப் பதினுவில் பழுத்துவிட்ட முதியோனுக்குக் கர்ப்பூர ஆரத்தி காட்டினர். ஸத்யஸாயி தனது தர்மசக்கரத்தைச் சுழற்றத் தொடங்கிய தோப்பின் தாற்காலிக உடைமையாளரான ஆஞ்ஜநேயுலு பாபாவுக்கு முதல் பாத பூஜை செய்தார். கொடுத்து வைத்தவர்!

* * *

புட்டபர்த்தியில் மீண்டும் வந்து சேர்ந்தார் பால பாபா.

'நம்' வீட்டிலேயே முதலில் தங்கினார். ஆனாலும் 'பொருந்த'வில்லை.

வெங்கப்பர் சாமான்ய மனிதர்தாமே! அவர் உரவகொண்டாவில் கொடுத்த வாக்கை உள்ளபடி காக்க முடியவில்லை. எனவே அவ்வீடு சமத்வத்துடன் சுவாதீனமாக பக்தர்கள் வந்து போகிற ஆசிரமமாக இல்லாமல் வெங்கப்பராஜுவுடைய வீட்டின் ஒரு பாகமாகத்தான் மாற ஆரம்பித்தது. அவர் பாபாவின்மீது அப்பா — பாத்தியதை காட்டாவிடினும், மற்ற பக்தர் மீது தாம் ஸ்வாமியின் தந்தை என்பதாக உயர்விடம் கோரத்தான் செய்தார்போலிருக்கிறது. பாபாவோ எந்தப் பிள்ளையும் தன் பெற்றோரை அழைக்கத் துணியாத விசித்திரமாகத் தந்தையை "சிருக அப்பாயி" என்றும், தாயை "சிருக அம்மாயி" என்றும் குறிப்பிடலானார். அதாவது "வீட்டுப் பிள்ளை", "வீட்டுப்பெண்" என்று அர்த்தம். தமையன் சேஷமராஜுவைத் 'தெலுங்கு பண்டிட்' என்றே அழைக்கலானார். இவரது வைராக்கியத்துக்கும் அவர்களது சாமானியமான சுபாவத்துக்கும் எத்தனை காலம் ஒத்து வரும்?

பாபா பிறந்த வீட்டைத் துறந்தேயாக வேண்டியதாயிற்று. தாய்மாமனும் அக்காள் கணவருமான சுப்பாராஜுவின் இல்லத்துக்குச் சென்றார். அங்கும் இதே சூழ்நிலை விரைவில் ஏற்பட்டதால், அங்கிருந்தும் புறப்பட்டார்.

ஒருத்தி மகனாய்ப் பிறந்து இன்னொருத்தி மகனாக வளர்ந்தாரே, அந்த சுப்பம்மாவுக்கு அடித்தது மஹாபாக்கியம்! 'ஸத்யா'விடம் ஈடுபாடு கொள்ளாத அவளது கணவரான கர்ணம் இன்று இவ்வுலகில் இல்லை. அவர் போனதிலிருந்து

Koviloor Digital Library

காலமெல்லாம் இந்த பாலனை நினைந்தே உருகிக்கொண்டிருந்தாள் அவள். அவளது சகளத்திரியான கமலம்மாவுக்கும் இந்த ராஜூப்பிள்ளையிடம் ஓர் ஈர்ப்பு இருந்ததால் 'அயம் விசேஷ:' ஆயிற்று.

கர்ணத்தின் வீடு பாலஸாயி கோயில்கொண்ட பாலாலயம் ஆயிற்று!

அடடா, இதிலிருந்து எத்தனை விபரீதங்கள் பிற்பாடு புறப்படப் போகின்றன?

Koviloor Digital Library

அத்தியாயம்—21

ஸத்ய ஸாயி பாபா

நீ ஸத்தியத்தை உணருவாயாக! அந்த ஸத்தியமே உன்னைக் கட்டிலிருந்து விடுவிக்கும்.

—பைபிள்: புது ஏற்பாடு, ஜான்

பாபா இன்னமும் நாலு முழ வேட்டி, அரைக்கைச் சட்டை, சாதாரண கிராப் முடி இவற்றோடு தோற்றத்தில் ஸத்யாவாகத் தான் இருந்தார். பிராம்மணபள்ளி மாந்திரிகன் மழித்தெடுத்த பின் மறுபடி வளர்ந்திருந்த அந்தக் கிராப்பினூடே தெரியும் மூன்று எக்ஸ் தழும்புகளைக் காணும்போதெல்லாம் மக்களுக்குத் துயரமும் அச்சமுமாக இருக்கும். இந்த வடுக்கள் தெரியாதபடி இவர் விரிந்த சடையால் இன்னம் தலையை மூடிக் கொள்ளவில்லை. புட்டபர்த்தி பாபாவின் ஸ்பெஷல் அடையாளங்களான கஃப்னி உடை, பம்பை முடி இவை இரண்டுமே இவரிடம் வந்து சேரவில்லை. ஸத்யாவாகவே தான் இருந்தார். அதனால் புட்டபர்த்தி மக்கள் பாலஸாயி என்பதைவிட 'ஸத்யா ஸாயி' என்றே இவரைக் குறிப்பிடலானார்கள்.

இதிலும் ஓர் அழகைக் கண்டார் நம் கதாநாயகர். 'ஸத்யா ஸாயி' என்பதைவிட 'ஸத்ய ஸாயி' என்பதை உகந்தார். தன் புதுப்பிறவியில் கொண்ட 'ஸத்ய நாராயணன்' என்ற பெயர் இணைந்திருப்பது; ஸத்தியமாகவே தான் ஸாயிபாபா என அடித்துச் சொல்வதாகத் தொனிப்பது; 'ஸத்யம்' எனப்படும் சர்வ ஆதாரமான மெய்ப்பொருளே ஸாயி தத்வம் எனக் காட்டுவது—ஆகிய மூன்று விசேஷங்கள் இதில் உட்கிடையாக இருந்ததால் இன்று பார் போற்றும் பாவன ''ஸத்ய ஸாயி பாபா'' என்ற திருநாமத்தாலேயே தம்மைக் குறிப்பிட அநுமதித்தார்.

இதிலே ஒரு விந்தை: ஷிர்டி ஸாயிபாபா அவரது காலத்திலேயே தபோல்கர் இயற்றிய ஸாயி ஸத்சரித்ரம் என்ற மராத்திய காவியத்தில் 'ஸத்ய ஸாயி' என்றும் குறிப்பிடப்படுகிறார்.

Koviloor Digital Library

அவருக்கு ஸத்யஸாயி என்ற பெயர் வாய்த்த இன்னொரு சந்தர்ப்பம் இது: பீமாஜி படேலின் வீட்டில் ஸத்ய நாராயண விரதம் அநுஷ்டிப்பதுண்டு. இவருக்குக் கொடுமையான நோய் வந்து, பிறகு ஷிர்டிபதி அருளில் அது குணமாயிற்று. அந்த மகிழ்ச்சியில் இவர், 'ஸத்ய நாராயண விரதம் எதற்கு? பிரத்தியட்ச தெய்வமான ஸத்யஸாயி விரதமே இருக்கிறேன்' எனச் சொல்லி ஷிர்டிபாபாவின் படத்தை வைத்துப் பூஜை செய்தார். விரத முடிவில் ஸத்ய நாராயண சரித்திரத்தைப் பாராயணம் செய்வது வழக்கம். இவரோ, ''ஸத்யஸாயி கதையைப் பாராயணம் செய்கிறேன்'' என்று சொல்லி ஷிர்டி நாதரின் வாழ்க்கை வரலாற்றைப் படனம் செய்தார்! அந்த ஸாயி ஸத்ய நாராயணராகவே பிறக்கப்போவதை அப்போது எவரே அறிந்திருக்க முடியும்?

சுமார் இருபதாண்டுகளுக்கு முன் புட்டபர்த்தி பாபா பற்றிக் கேள்விப்படாத ஒரு மகாராஷ்டிரர் ஷிர்டிபாபா பற்றி எழுதிய கவிதையில் அவரையே 'ஸத்ய ஸாயி' என்று குறிப்பிட்டார். பிறகு ஸத்ய ஸாயி என்றே ஒருவர் வந்திருப்பதை அறிந்து அதிசயித்துப் புட்டபர்த்திக்கு ஓடிவந்தார். ஷிர்டி நாதனே இவர் எனத் தெளிந்து இவரது பரமபக்தரானார். 'ஸத்ய ஸாயி' என்ற மஹாமந்திரநாமத்தில் நாமறியாத மர்மங்கள் இன்னும் எத்தனை உள்ளனவோ?

* * *

நாளுக்கு நாள் அடியார் கூட்டம் அதிகரித்தது. நோயை ஒருவர் குணப்படுத்துகிறார் என்றால் கூட்டம் சேரக் கேட்பானேன்? அற்புதம் காட்டுவதென்றாலே அதில் மக்களுக்கு ஆகர்ஷணம் இருக்கும். அதோடு பிணிதீர்க்கும் பணியும் சேர்ந்து விட்டாலோ?

கர்ணத்தின் வீட்டு அறையும் கூடமும் போதாமல் கூட்டம் நெரிந்தது. வியாழக்கிழமை மட்டுமின்றி எல்லா நாட்களிலுமே மக்கள் வரலாயினர். அனந்தப்பூர் மாவட்டத்திலிருந்து மட்டுமின்றி, ஆந்திரத்தின் மற்றப் பகுதிகளிலிருந்தும், மைசூர் ராஜ்யத்திலிருந்தும், நம் தமிழகத்திலிருந்தும்கூடப் பலவித மான குறைகள் தீருவதற்காக மக்கள் வரலாயினர்.

கீதையில் கண்ணன் குறிப்பிட்ட ஞானியர், ஞானசாதகர், இன்னலுற்றோர், பொருள் வேண்டுவோர் என்ற நாலு தரப் பட்ட பக்தர்களில் பின் இரு இனத்தவரே நிறைய இருப்பார்கள். இவர்கள் வெறும் லௌகிக நோக்கில் தன்னை நாடுவதைக்கூட கீதாசாரியனே ஆமோதிக்கிறான். நமக்கு மேம்பட்ட ஒரு கருணைச் சக்தி இருக்கிறது எனக் கொண்டு அதனிடம் இவர்கள் இன்னல் தீரவும், வறுமை நீங்கவும் துணை கோருகிற அளவில் இவர்களது லௌகிகப் பிரார்த்தனையும் வரவேற்கத்தக்கதுதான். இப்படிப்பட்டவர்களையும் வரவேற்று, அவர்கள் நிலைக்கே இறங்கியவனாகக் காட்டி, அவர்கள் வேண்டும் வரங்களைத்

Koviloor Digital Library

தந்து, பிறகு படிப்படியாக அவர்களை மேல் நிலைகளுக்கு அழைத்துப் போவதே தம் ஜன்மப் பணி எனக் கொண்டார் ஸத்ய ஸாயி.

"முதலில் பக்தர்களுக்கு அவர்கள் விரும்புவதையே நான் கொடுப்பதற்குக் காரணம், பிற்பாடு நான் அவர்களுக்கு எதைத் தர விரும்புகிறேனோ அதையே அவர்களாக விரும்பிக் கேட்குமாறு தயார் செய்யத்தான்" என்று இதை ஸ்ரீ பர்த்திநாதர் சுவைபடக் கூறுவார்.

முதலில் தாங்கள் விரும்புவதை இவர் வழங்குவார் என்று அவர்கள் எப்படி நம்ப முடியும்? அப்படி நம்பி வந்தால்தானே, அப்புறம் அவர்களை மேலே மேலே அழைத்துப் போகிற வாய்ப்பே உண்டாகும்? இந்த அடிப்படை நம்பிக்கையை ஆரம்பத்தில் ஊட்டவே, அந்த சக்தியைக் காட்டி அற்புதங்கள் செய்தார்.

மக்களும் நிறைய வந்தனர். வியந்தனர். மலைத்தனர். வியப்போடு, மலைப்போடு நிறுத்திவிடாமல் இவர் அன்பைக் கொட்டினார். "சேயன் அணியன்" என்று தேவாரம் சொல்வது போல், தம் பேராற்றலால் அவர்களுக்கெட்டாச் சேயனாக இருந்தவரே, அவர்களைத் தம் சேயாக்கி — அல்லது தாமே அவர்களுக்குச் சேய்போல் ஆகி — பிரேமையைப் பொழிந்து அண்மைக்கும் அணியரானார்.

ஏதோ ஒரு சிறிய உபாசனையைச் செய்து ஒரு சிறிய அற்புதம் செய்யும் ஸித்தி ஒருவருக்கு வாய்த்துவிட்டாலே, அவர் மற்றவர்களைவிடத் தாம் மகாபட்டவர் என்பதுபோல் 'போஸ்' செய்வதைப் பார்க்கிறோம். ஆனால் பதினாலே வயதில் பேராற்றல் சமுத்திரமாக இருந்த பாபாவோ மக்களில் ஒருவராகவே இனிக்கப் பழகி, இயல்பாக அவர்களோடு உட்கார்ந்து பகவந் நாமாக்களைப் பாடி, அவர்களையும் பாட வைத்தார். உத்தம உபதேசங்களை உபந்நியசித்தார். அந்தத் தத்துவச் சிறப்பில் அவர்கள் அயர்ந்தபோது, தமாஷ் செய்து அவர்களைத் தம்மிடம் மேலும் அருகே இழுத்துச் சேர்த்துக்கொண்டார். மிராகிள்களைத் தாமும் ஆயாசப்படாமல், காண்போரையும் மூச்சுத் திணற வைக்காமல், சர்வ லகுவாக, லேசாக, லீலையாகச் செய்தார். அற்புதத்துக்காக வந்தவர்கள், பேரற்புதமாம் அன்பை உணர்ந்தனர். அன்பே வடிவான இறைவனிடம் நிலைவை அழுத்தினர். இவ்வாறு ஆத்மிகத்துக்காக, ஆஸ்திகத்துக்காகவே இவர் அற்புத சக்தியைப் பிரயோகித்தார்.

கர்ணம் வீட்டு அறையிலும், கூடத்திலும் கர்ணாமிர்தமாக நாம பஜனை நிறைந்தது. கூட்டத்துக்குக் கரை போட அந்தக் கூடம் போதவில்லை. சுப்பம்மாவும் கமலம்மாவும் வெளியே ஒரு கொட்டகை போட்டனர். அதுவும் போதாமல் அதை நீட்டினர். அப்படியும் போதவில்லை.

வந்தோருக்கெல்லாம் அன்னம் படைக்கச் சொல்வார் பாபா. அந்தக் காலத்தில் புட்டபர்த்தி கிராமத்தில் ஹோட்டல்

Koviloor Digital Library

ஏதும் கிடையாது. (பாபாவைப் பார்க்க ஹிந்துப்பூர் ராணுவ அதிகாரி ஒருவர் ஜீப்பில் சித்ராவதியைக் கடந்து வந்தபோது தான் அந்தக் கிராமம், முதன் முதலாக ஒரு ஊர்தி வாகனம் யந்திர சக்தியில் ஓடுவதையே பார்த்தது என்றால் அது இருந்த நிலையை ஊகிக்கலாம்.) புக்கபட்டணத்திலிருந்து குன்றும் குழியுமான சாலையிலும், ஆற்றுப்படுகையிலும் நடந்தே வரும் அடியாருக்கு உணவு படைப்பதை அக்காலத்தில் தம் பொறுப்பாகவே ஏற்றிருந்தார் பாபா.

சமையலறைக்கு வருவார். இரு தேங்காய்கள் கேட்பார். அவற்றை ஒன்றோடொன்று மோதி உடைப்பார். இரு காய்களும் சரிபாதியாக உடைந்திருக்கும். அதிலிருக்கும் இளநீரை எடுத்து அன்னத்தின்மீதும், மற்றும் குழம்பு, மோர், கறி முதலியவற்றின்மீதும் தெளித்துவிட்டு, "உம், பரிமாறலாம்" என்பார். பகலிலிருந்து தொடங்கி அந்தி சாயும்வரை வருகிற அத்தனை அடியார்களுக்கும் பரிமாறப் பரிமாற மணிமேகலைப் பாத்திரமாக அவை சுரந்துகொண்டே யிருக்கும்! பரதன் பரிவாரத்துக்கு பரத்வாஜர் இட்ட அட்சய அன்ன லீலை இன்று இந்த 'பாரத்வாஜி'யிடம் தினே தினே தொடர்ந்தது. கார்த்திகைத் திங்களன்று பிறந்த இந்த சோம சுந்தரரின் திருவிளையாடல்களை அறுபத்து நாலாக இன்றி அறுபத்து நாலாயிரமாக வர்ணிக்கும்போது, 'அன்னக் குழி அழைத்த படலம்' என்பதே ஒரு தனிப் புராணமாக விரிந்து விடும்!

இந்திரா தேவி என்ற இந்தியப் பெயர் தரித்த, அமெரிக்கப் பிரஜையாகிவிட்ட, ருஷ்ய மாதரசி பாபா குறித்து எழுதியுள்ள Sai Baba and Sai Yoga என்ற நூலில் (பக்கம் — 26) கூறும் ஒரு விவரம்: 1968—ல் சிவராத்ரிக்கு மறுநாள் புட்டபர்த்தியில் குழுமியிருந்த முப்பதாயிரம் மக்களுக்குப் பாரணையாக உணவுப் பொட்டலங்கள் பிரசாந்தி நிலைய போஜன சாலையிலிருந்து பாபாவின் அன்பளிப்பாக வழங்கப்பட்டதைக் கண்டார் இந்த அம்மை. தாம் கண்ட அளவில் இத்தனை பெரும் கூட்டத்துக்கு உணவு தயாரிப்பதற்கான ஏற்பாடுகள் ஏதும் போஜன சாலையில் செய்யப்படாததாக இவருக்குத் தோன்றியது. இவர் ஆச்சரியமுற்று, சம்பந்தப்பட்டவர்களையே எப்படி இந்த ஜன சமுத்திரத்துக்கு போஜனம் தயாரித்தனர் என வினவினாராம். அதற்கு, அவர்கள் அன்றாடம் காண்டீறால் எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்குத்தான் உணவு தயாரித்ததாகவும், அதுவே ஸ்வாமியின் கர ஸ்பரிசத்தால் பல்லாயிரவருக்கும் பரிமாறப் பரிமாற விருத்தியானதாகவும் தெரிவித்தார்களாம். ஐந்து ரொட்டித் துண்டங்களையும், இரு மீன்களையுமே இயேசு நாதன் ஒரு பெருங்கூட்டத்துக்கு வயிறார விநியோகித்த விந்தையை அம்மை நினைவுகூர்கிறார்.

பிரதி வருஷமும் இப்படியே நடப்பதாக அவர் கூறுவதிலிருந்து ஏற்படுகிறது.

இப்பேர்ப்பட்ட அன்னபூரணேச்வரியால் அந்த இரு தேங்காய்களை மட்டும் சிருஷ்டிக்க முடியாதா என்ன? காலிப்

பாத்திரத்தில் கைவிட்டே எவ்வளவோ முறை அதில் அன்னத்தை நிரப்பியவர், இப்போது இவர்கள் முன்னமே கொஞ்சம் சமைத்து வைத்ததைத்தானா விருந்து செய்ய வேண்டும்? சங்கல்ப மாத்திரத்திலேயே உணவு படைத்து விடலாமே! இதுதான் லீலா விநோதம் என்பது. உபயோகத்தை மட்டும் பூர்த்தி செய்வது யந்திர கதியாகிவிடும். அதிலே ஓர் இன்பத்தை, கிளுகிளுப்பை, ஆர்வ அம்சத்தை, கலை எழிலை உண்டாக்கினாலே லீலையாகிறது. அன்று பாகவத காலத்தில், மழையே பெய்யக்கூடாது என்று கோவிந்தன் சங்கற்பித்திருந்தாலே போதும். இந்திரன் ஓய்ந்து போயிருப்பான். ஆனாலும், பகவான் ஏன் அவனை மழை பெய்யவிட்டுத் தாம் கோவர்த்தனத்தைத் தூக்கிநின்று அதைத் தடுத்தார்? பக்தருக்கு லீலானந்தத்தையும், தன் அன்பின் இன்பையும் தரத்தானே?

நாலாண்டுக்காலம் கர்ணத்தின் இல்லமே ஐயனின் இருக்கையாயிற்று. இச்சமயத்தில்தான், இன்றும் பிரசாந்தி நிலையத்தில் பாடப்பெறும் ஏராளமான கீதங்களை அவர் யாத்து அளித்தது. 'யாத்து' என்றால் யோசித்து, இட்டுக் கட்டினாரா என்ன? ஆசுகவி என்றாலும் போதாது. அத்தனை வேகமாக அவர் வாக்கிலே புதுப்புதுப் பாடல்கள் புனலாகத் துள்ளி வந்து சில்லெனப் பாயும். யாவும் பக்திப் பாடல்கள். அவற்றை மக்கள் திருப்பிப் பாடுகையில் அவற்றின் சொல், இசை இரண்டுமே அவர்களுக்கு பக்தி உணர்வை உசுப்பிவிட்டு விடும். அதோடு எதிரே அமர்ந்து அவற்றைப் பாடுவதோ பாபா. பரவசத்துக்குக் கேட்பானேன்!

ஆனால் பாபா எப்படிப் பாடுகிறார்? பக்தனாகவா பாடுகிறார்? பரமனைக் கரைந்துருகியா வேண்டுகிறார்? இல்லவே இல்லை. பக்தித் துதிகளில் பெரும்பாலானவற்றுக்கு உரிய தினம், சோகம் இவர் பாடும்போது ஒருசிறிதும் தொனிக்காது. பகவானாக அன்றி பக்தனாகத் தம்மை ஒருபோதும் நினைக்க முடியாத இவர், உற்சாகத்தில் களித்துக் கொண்டுதான் பாடுவார். முதலிலேயே மத்திம காலத்தில் பாடுவார். பிறகு வேக கதியில், அதிவேக கதியில் பாடுவார். பிறரும் விருவிருப்புடன், ஆனந்தமாகப் பாடுவதையே வெகுவாக ரசிப்பார். விதவிதமாகக் கைகளால் தாளமிட்டும், குழந்தைபோல் தொடையில் குத்திக் கொண்டும், வட்டவட்டமாகக் கரங்களைச் சுழற்றியும், சிரத்தை உருட்டியும் ரசிப்பார். கொஞ்சம்கூடத் 'தொய்ந்து' போக விடாமல் பாண்ட்-மாஸ்டர் போல், விரல் விச்சாலேயே தாள கதியை விரைவுபடுத்துவார். உயர்ஜாதி அரபுப் புரவிகள்போல் சங்கீர்த்தனம் உயிர்த்துடிப்புடன் செல்வதைத்தான் அவர் விரும்புவார். தாமே பாடும்போதோ ஆனந்தமான இறை நினைவுதான் அவரது பஜனையில் நாம் காண்பதே தவிர, சோகமான பிரார்த்தனைப் பிளிறல் அல்ல. நாம் பகவானிடமிருந்து பிரிந்து இருப்பதால் சோகித்துப் பாடுகிறோம்; அவரோ ஒன்றியிருப்பதால் களித்தே பாடுகிறார்.

குழந்தையாக பாபா பஜனைசெய்த நாளிலிருந்தே இது ஒரு குறிப்பிடத்தக்க அம்சம். அவர் தாமே பக்தனாக இருந்து

Koviloor Digital Library

தழைந்து, கரைந்து, கும்பிட்டது என்பது கிடையவே கிடை யாது. பக்தரைப் போலப் பிரார்த்தனை பாடியபோதிலும், பள்ளி யிலே மணியடித்துப் பூஜை செய்தபோதிலும்கூடத் தம்மை தினருக அவர் காட்டிக் கொண்டதில்லை.

* * *

மற்ற மஹான்களுக்கும் இவருக்கும் இது ஒரு பெரிய வேறுபாடு. காஞ்சிப் பெரியவாள் ராமபிரானைப் போல் தம்மை மானுடமாகவே குறைத்துக்காட்டும் அவதாரம். முற்றிலும் நமக்கு வழிகாட்டவே வந்துள்ள எளிமையின் நிறைவு அவர். எனவே அவர் குட்டிக் கிராம தேவதைகளுக்குக்கூடக் கும்பிடு போட்டு நமக்கு வழிகாட்டுகிறார். ஆனால் ஆனந்தமயி மா, நம் கதாநாய கரைப் போலவேதான், ''நான் சாதனை செய்து ஆத்மிகத்தில் வளர்ந்தவள் அல்ல; பிறந்ததிலிருந்தே நான் பூரண வஸ்து. ஒரு லீலையாகவே மந்திர — தந்திர — ஜப — யோக — பூஜாதி சாதனைகள் செய்வதாகக் காட்டினேன்'' என்பவர். ஆயினும் இவரும் ஒரு கோயில் குளம் என்று சென்றால் அங்கே வணங்கி வழிபடுவார், கண்ணீர் விடுவார், பாவ சமாதி அடைவார். பகவான் — பக்தன் என்ற பேதம் நினைக்க வொண்ணாமல் ஆத்ம ருகவே இருந்த ரமணமஹர்ஷிகளும் கூட அருணாசலம், அருணா சலேசுவரர், மீனாக்ஷி என்றால் பக்தனாக நெகிழ்ந்து வழிபட்டுத்தான் நிற்பார். பாபா பிறந்ததிலிருந்து என்றுமே எந்த சாதனை யும் செய்யாமல் தாமே 'ஸாத்யமாக', ஸத்யமாக இருந்து அஸாத்யங்களைச் செய்தது மட்டுமின்றி, ஒருபோதிலும்கூடத் தமக்கு வேருக ஒரு தெய்வமிருப்பதாக பாவனைக்குக்கூட காட்டி வழிபட்டதே யில்லை. அவதாரங்களுக்குள்ளேயே இப்படி வெவ்வேறு சாயல்கள் வீசுகின்றன என்று காட்டவே இதைச் சொல்கிறேமேயன்றி. இவர்தான் மற்றவர்களைவிட சிரேஷ்டர் என்று நிலைநாட்டுவதற்கல்ல.

எல்லாத் தெய்வங்களையும் குறித்து பஜனைகள் இயற்றித் தந்தார் ஸத்யஸாயி. இன்றும் ஸத்யஸாயி பஜனை மண்டலியார் எல்லாக் கடவுள் வடிவங்களையும் தவறாமல் பாட வேண்டும் என்று விதித்திருக்கிறார். ''பஜனைக்கு வருகிறவர் களில் ஒவ்வொருவருக்கும் ஓர் இஷ்ட தெய்வம் இருக்கும். அதைப் பாடவில்லையே என்ற குறை எவருக்கும் இருக்கக்கூடாது'' என்கிறார். 'இஷ்ட' தெய்வம் இருக்கலாமே தவிர — அதாவது, பல தெய்வ வடிவங்களில் ஒன்றில் விசேஷமான பிடிப்பு இருக்கலாமே தவிர — எவருக்கும் 'துவேஷ' தெய்வம் இருக் கக் கூடாது என்பதால்தான் எல்லோரும் எல்லா மூர்த்தி களையும் பாடவேண்டும் என்கிறார். ஸாயி பஜனைக்காரர்கள் நகர சங்கீர்த்தனம் செய்துவரும் போது தம் படத்தை எடுத்துப் போகக் கூடாது என்றும் கண்டிக்கிறார். இப்படிச் செய்வ தால் இவரிடம் ஈடுபாடு இல்லாத ஆஸ்திகர்களுக்கு பஜனை யில் கலந்துகொள்ளும் பாக்கியமே பறிமுதலாகிவிடும் என்ப தால்தான்! சிலருக்கு பஜனையின் நடுநடுவே மற்ற தெய்வங் களின் பெயர்களோடு ஸாயி நாமமும் வந்தால் ஓரளவு

Koviloor Digital Library

ஏற்புடைத்தாக இருக்கலாம்; ஆனால் இவர் படத்தையே நடுநாயகமாகத் தூக்கி வந்தால் அதைப் பார்த்த மாத்திரத்தில் விலகிப் போகத் தோன்றலாம் என்பதால் இவ்விதம் இவர் பணித்திருப்பதன் கருணைச் செவ்வியை என்னென்பது! அவர்களுக்கு இவரிடம் பக்தியில்லாவிட்டாலும், இவருக்கு அவர்களிடமும் அநுக்ரஹக் குறைவில்லை அன்றோ!

பஜனைப் பாக்களை இயற்றி அருளுகையில் மற்ற தெய்வங்களோடு புதிதாக ஷிர்டிபாபாமீது நாமாவளிகளும், கீதங்களும் சொல்லிக் கொடுத்தார். அவர் வசித்த புண்ய ஸ்தலமான ஷிர்டி இப்போது விரிவாக வர்ணிக்கப்பட்டது. அங்கே ஸாயிநாதன் உயிர் வாழ்ந்தபோது கோயில் கொண்ட 'துவாரகாமாயி' என்ற மசூதி, பூடிமந்திரம், உடலை உகுத்தபின் கொண்ட சமாதி, அவர் உகந்த வேப்பமரம், அணையாத அக்னிகுண்டத்திலிருந்து அவர் சர்வரோக நிவாரணியாக அளித்துவந்த உதி எனும் விபூதி—இவை யாவும் இப்பாடல்கள் மூலம் தென்னகபக்தர்களுக்குப் பரிசயமாகத் தொடங்கின.

பக்தர்கள் இவ்வாறு மற்ற தெய்வ ரூபங்களைப் பாடியதோடு திருப்தி அடையவில்லை. 'போல்தே சல்தே தேவ்' என்று சொல்லப்பட்ட ஷிர்டி பாபாவைப் போலவே, தம்மிடை காண்கிற பேசும் தெய்வத்தை, நடமாடும் தெய்வத்தைப் பாடிப் பரவ அவாவுற்றனர். ஆசையிருந்ததே தவிர கவித்துவம், இசைப் புலமை இல்லை. எனவே இவர் தாமே தம்மீதும் — அதாவது இந்த ஸத்யஸாயியின் பெயரிலும் — நாமாவளிகளையும், கீதங்களையும் இயற்றித் தந்தார்.

பக்தரல்லாத மற்றோருக்கு, தன்மீது தானே பாடிக்கொள்வதா என்று வித்தியாசமாகத்தான் படும். ஆனால் பக்தர்கள் அப்படி எண்ண மாட்டார்கள். அநுபூதி நிலையில் பாடிய சம்பந்தர் 'எனதுரை தனதுரையாக' என்று ஈசனே தம்முட் புகுந்து தன்னையே பாடிக் கொண்டதாகத்தான் சொல்கிறார். நம்மாழ்வார், 'தானே யான் என்பானாகித் தன்னைத்தானே துதித்து' என்கிறார். பகவானே தான் பக்தனும், பக்தியும்கூட. அப்படி உணராத நிலையில் உள்ளவர்களுக்குப் பக்தி ஊட்டுவதற்காக அவனே துதி செய்து தந்தால் அது தற்பெருமையல்ல, அவர்களிடமுள்ள தன் கருணையே ஆகும். ரமண மஹர்ஷிகள்கூட இப்படிப் பக்தர்களுக்காகத் தாமே தம் மீது, தம்மை முருகனாக வர்ணித்துக் கொண்டு பாடியிருக்கிறார்! வேதாந்த தேசிகன் தாமே தமது விக்கிரகத்தைச் செதுக்கிக் கொடுத்திருக்கிறார். இதெல்லாம் சுயநலம் அடிபட்டுப்போன நிலை என்பது அடியாரே அறியக் கூடியது.

"ராமன், கிருஷ்ணன், சிவன், தேவி, ஷிர்டிபாபா முதலிய எந்த தெய்வத்தைப் பாடும்போதும் நான் அவற்றை என்னில் பிறிதாக நினைத்துப் பாடவில்லை. பஜனையின் லட்சியமாகவே இருக்கிற எனக்கு நாம சங்கீர்த்தனம் செய்வதால் ஆகவேண்டியது ஒன்றும் இல்லை. பி.ஏ.படித்த ஆசிரியரானாலும், குழந்தைக்குப்

Koviloor Digital Library

பாடம் சொல்லித் தரும்போது, ஆனு ஆவன்னு எழுதுகிற மாதிரிதான், உங்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்காகவே நான் பஜனை செய்கிறேன். ஓட்டப்பந்தய வீரனும் தன் கைக் குழந்தைக்காக நடைவண்டியைப் பிடித்துக்கொண்டு நடந்து காட்டுவதைப் போலத்தான் நான் கீர்த்தனம் செய்வதும். உங்களுக்காக இதைவிடத் தாழ்ந்து வரவும் நான் தயார். உளையில் அகப்பட்டுக் கொண்ட குழந்தையைக் காப்பதற்காகத் தானும் சேற்றில் குதிக்கும் தாயாக உங்கள் உபத்திரவங்களில் கூட நான் பங்கு கொண்டதுபோல் நடிப்பேன். ஏன், திருடனைப் பிடிப்பதற்காகப் போலீஸாரே திருட்டுவேஷமும் போட்டுக் கொள்வதைப் போல, உங்கள் தப்புக்களைக்கூட நானும் செய்வதுபோல நீங்கள் மயங்குமாறு சில சமயங்களில் நடிப்பேன்'' என்றெல்லாம் கூறும் பாபா, தாமேயான மற்ற மூர்த்தியரைப் பாடியது போல் இந்த ஸத்யஸாயி மூர்த்தியையும் பாடினார்.

அடவுல யந்துன்ன ஆகாச முனனுன்ன
பட்டணமுந நுன்ன பள்ளெ நுன்ன
குட்ட மீதனுன்ன எச்சோட்ட நீவுன்ன
பட்டு விடுவபோடு பர்த்தி ஸாயி

(அடவியில் இருந்தாலும் ஆகாசத்திருந்தாலும், பட்டணத்திருந்தாலும், பட்டியிலிருந்தாலும், எத்திசை மீதிலே எங்கு நீ இருந்தாலும் பற்றும் கை விடமாட்டான் பர்த்தி ஸாயி.) என்று பாடினார். மற்றோர் என்ன வேண்டுமாயின் சொல்லட்டும், பக்தர்களுக்கு இதைப் பாடும்போதே அந்த வாக்கில், பண்ணில் பர்த்தி வாஸனின் கை மலர்ந்து நீண்டு தங்களைச் சுற்றிச் சுருண்டு அணைக்கும் இன்பமே கிட்டும்!

இப்படிப் பாடிய பாடல்கள் ஒன்றா, இரண்டா? பானைக்கு ஒரு சோறுகக் கூட இல்லாமல், கடலில் ஒரு துளி பார்ப்பதோடு இங்கே நாம் திருப்திப்படவேண்டியதுதான்! இப்படி வெள்ளமாக வந்த பாடல்களில் ஒன்றுமட்டும் பிறருக்காகப் பாடாமல் தானே பாடுவதாக அமைந்துவிட்டது. போனால் போகிறதென்று பிறருக்காகப் 'பாஹி', 'தேஹி' என்று கொஞ்சம் தீனமாகக்கூடப் பாடிய ஆனந்த ஸ்வரூபர் தாமாகவே பாடிய போது அதில் பேரின்பமே அலைமோதும் என்றுதானே நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை. பாட்டைப் பார்ப்போம்:

விச்வமெல்லட வ்யாபியை வெலயுவாடு
பக்தஜனுலகு ப்ராபுடை பரகுவாடு
பக்திஞெஸகி ரக்ஷிம்சடி சக்திமயுடு
பர்த்தி வாஸுடு —
ஏலமீ ஹ்ருதயான ஹத்து கொனடோ?

(உலகெல்லாம் வியாபித்து ஒளிரும் ஆற்றலைக் காட்டுகிறார், அடியார் கணம் அவதியுறும்தோறும் துணைக்கு ஓடுகிறார், பக்தி

மையும் தாமே தந்து ரட்சிக்கும் பராசக்தி மயமாக இருக்கிறார் — பர்த்திநாதன் இப்படியெல்லாம் இருந்தும் அவரை ஏன் உங்கள் இதயத்தில் ஒட்டிக்கொள்ளமாட்டேன் என்கிறீர்கள்?)

விச்வ வேதனையோடு இப்படிப் பாடினார் ஆனந்த மூர்த்தி!

'பக்தியையும் இவரே தருகிறார்' என்றால் அவர்கள் இதயத்தில் இவர் ஒட்டிக் கொள்வதுதானே வேண்டும்? பின், ஏன் முரணாகப் பாடினார் என்றால், அந்த பக்தியைத் தானாக விரும்பி அவர்கள் கேட்டால்தான் தரமுடியும். மனித மனத்துக்குக் கொஞ்சம் சுதந்திரம் இருக்கிறது. அதன் சுயேச்சையில்லாமல் தெய்வமாக ஆட்கொள்வது 'யதேச்சாதிகாரம்' தான். சுந்தரமூர்த்தி நாயனார் மாதிரி சிலபேரை மட்டும் பகவான் தானே வலிந்து ஆட்கொண்டாரே; இப்படி நம் எல்லாரையும் செய்யக்கூடாதா என்று தோன்றலாம். ஆனால் இப்படி எல்லோரையும் தானாக ஆட்கொள்வதைவிடப் பரமாத்மா சிருஷ்டி என்றே ஒன்றில்லாமல் இருந்துவிடலாமே! 'சிருஷ்டி என்பதே கொஞ்சம் தன்னிலிருந்து விலகின மாதிரி ஜீவர்களை விட்டுவைத்து, ஆட்டம் பார்ப்பதற்குத்தான்' என்பார் ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள். விலகின மனம் தன்னிடம் ஓடிவராதா என்ற அன்புத்தாபம் இறைவனுக்கு. அதற்குத்தான் உலகம் வியாபிக்கும் ஆற்றலை, அற்புதத்தைக் காட்டுகிறான்; துன்பம் தீர்த்து அன்பைக் காட்டுகிறான்; இவற்றிலிருந்து நம்பிக்கை கொண்டு மனத்தைச் சமர்ப்பிக்கத் தயாரானால் அதில் பக்தி வித்தையும் நடுகிறான். 'இத்தனை சக்தி எனக்கிருந்தும் என்னை நீங்கள் இதயத்தில் ஒட்டிக்கொள்ளச் செய்யமுடியவில்லையே!' என்று ஆனந்த ஸ்வரூபரே அருள் வெறியில் பரம சோகமாகப் பாடிவிட்டார்! 'பென்' என்ற அமெரிக்க வியாபாரி பாபாவிடம் உணர்ந்த 'பரமனின் பரம வேதனை' (agony of God) இதுதான்!

தமிழிற்கூட அமிழ்தொழுக பாபா தம்மையே பாடிக் கொண்டிருக்கிறார்! 'ஸாம்பிள்' கேட்க ஆசைதானே? 'மீரா' திரைப்படத்தில் ஒலித்த 'காற்றினிலே வரும் கீத'த்தின் மெட்டில் அமைந்து இதய வீணையை மீட்டும் பாடல். 'காற்றினிலே வரும் கீத'த்தின் வார்த்தைகளைக்கூட அடியொற்றியே அமைந்திருக்கிறார்!

ஸாயி உன்றன் திருநாமம்
உள்ளம் உருக்கிடும் சொன்னால் போதும்
ஜனன மரணம் தவிர் நாமம் (ஸாயி)

விண்ணிலும் மண்ணிலும் நிறைந்த நாமம்
மனம் கவர்ந்திடுமே
வானவெளிதனில் தாராகணங்கள்
தயங்கித் துதித்திடுமே
ஓ, என் சொல்வேன், நாமத்தின் மகிமை
துன்பமெலாம் தீருமே (ஸாயி)

Koviloor Digital Library

ஜயஜய ஸாயி, ஜயஜய பாபா,
ஜயஜய ஸத்ய ஸ்வரூபா
ஜயஜய ஸத்ய ஸ்வரூபா, ஜயஜய பாபா,
ஜயஜய ஸாயீ
காலமெலாம் உன்றன் பாவன நாமம்
எண்ணி எண்ணி உருகினேனே
ஸாயி உன்றன் திருநாமம்
உன்றன் திருநாமம்
திருநாமம்

இதைக் கேட்டால் பக்தரல்லாதவருக்குத் தூக்கி வாரிப் போடலாம், சிரிப்பு வரலாம், எரிச்சல் ஏற்படலாம். பக்தருக்கோ, அவர் அகங்கார லேசமும் இல்லாமல், லேசாக அமர்ந்து, லேசான தும்பை மலர் போன்ற வெள்ளை நஞ்சோடு, தும்பைக் குவியல் போன்ற இந்த வார்த்தைகளை, அதிலிருந்து பொசியும் தேனான சாரீரத்தில், எந்தத் தும்பைக்குமில்லாத தூய அன்பின் சுகந்தம் வீச ஆனந்தமாக கானம் செய்வதை எண்ணி எண்ணிக் காலமெல்லாம் நெஞ்சுருகவே செய்யும்.

* * *

மீரா கேட்டாளே, காற்றிலே மிதந்து வந்த வேணுகானம், அதையும் நம் கண்ணனிடம் கேட்கமாட்டோமா என்று ஒரு சமயம் கமலாபுரத்திலிருந்தும் உரவகொண்டாவிலிருந்தும் வந்த பக்தர்கள் ஆசைப்பட்டார்கள்.

"வேணுகானம்தானே கேட்க வேண்டும்? வாருங்கள் இங்கே" என்று பாபா அவர்களை ஒவ்வொருவராக அருகே அழைத்தார். அவர்கள் செவியைத் தம் இதயத்தோடு ஒட்டச் சேர்த்து அணைத்துக் கொண்டார் — அவர்கள் இவரை ஒட்டி வைத்துக் கொள்ளாத 'குறை' தீர்ந்தாற் போல்!

ஆஹாஹா! பாபாவின் இதயத்திலிருந்து குளுகுளுவென்று-- குமுகுமுவென்று அவர்கள் ஒவ்வொருவர் செவியிலும் குழலொலி பாய்ந்தது! வேணுவே யில்லாமல் வேணுகானம்! அவர்களது அணுக்களை யெல்லாம் ஊடுருவிக்கொண்டு உள்ளே தோய்ந்தது ஐயனின் மூச்சுக் காற்றினிலே பிறந்த மூல அன்பாமிர்தம்!

KOVILUR ADHEENAM
KOVILUR B. O.
(Via) MANAGIRI
RAMANATHAPURAM DIST.
PIN: 623 307

Koviloor Digital Library

அத்தியாயம்—22

நானிருக்கப் பயமேன்?

தனக்குமேல் உத்தமமான ஒன்றில்லாத என் பரமாத்ம ஸ்வரூபத்தை அறிந்துகொள்ளும் திறனற்றவர், மாறுத, பிறவாத என்னை நரப் பிறவியாகவே கருதுகின்றனர். நான் என்னையே யோக மாயையால் மூடிக்கொண்டு அனைவருக்கும் என் உண்மை நிலை பிரகாசியாவண்ணம் இருக்கிறேன். இதனால் மதியிழந்தோர் என்னை உள்ளவாறு அறிவதில்லை.

— கண்ண பெருமாள் : கீதை 7-24,25

பாட்டின் மூலம் பரமன்பால் சித்த ஈடுபாட்டைப் பெறுவது மக்களுக்கு மிக எளிதாக இருந்தது. கலியின் உள்ளீடற்ற நலிந்த மாந்தருக்குக் கண்கண்ட மருந்து பகவந் நாம பஜனைதான் என்ற ஆன்றோர் வசனத்தையே அவதார புருஷரும் நிலைநாட்டி வந்தார். சிரித்துக்கொண்டே சொன்னார்: ''இந்தக் காலத்தில் எல்லாமே சொகசாக வேண்டியிருக்கிறது. கட்டை வண்டிபோய் சொகசுக் கார்; முரட்டுத்துணி போய்ச் சொகசு சில்க்; பட்டாணியும் வேர்க்கடலையும் போய் டாஃபியும், ஐஸ்கிரீமும். இப்படியே சாதனையும் சொகசாகத்தானே இருக்கவேண்டும்? மந்திர ஜபம், யோகம், பூஜை எல்லாம் உங்களுக்கு ரொம்பக் கடினம். சொகசுச் சாதனை தருகிறேன். எளிதாக, இனிதாக பரமாத்ம ரசத்தை உள்ளே இறக்க நாம பஜனையைத் தருகிறேன். நாமாவை நாவில் சுவைத்து, மூச்சோடு கரைத்துப் பாடுங்கள். தாளம் போட்டுப் பாடுங்கள். கையைத் தட்டினால் மரத்தின் மேலுள்ள காகங்கள் பறப்பதுபோல், கர தாளத்தில் பாப எண்ணங்கள் பறந்து போகட்டும்'' என்று சொல்லிப் பாடினார்:

மதுரம் மதுரம் முரளீ கன ச்யாமா
மதுராதிபதே ராதே ச்யாமா
சூரதாஸ ப்ரபு ஹே கிரிதாரி—ஹரே கிரிதாரி
மீரா கே ப்ரபு ஹ்ருதய விஹாரி

Koviloor Digital Library

இப்படிப் பாடியாடிக் கொண்டிருப்பவர் திடீர் திடீரெனக் காணுமற் போய் விடுவார்.

அதற்கு ஒரு காரணம் இந்த நைஷ்டிக பிரம்மச்சாரியால் அவ்வப்போது தாம் இருக்குமிடத்தின் 'குடும்ப வாடை'யைத் தாங்க முடியாததுதான். விவேகாநந்தரும் இவ்வாறே தம்மைச் சுற்றியுள்ள கிருஹஸ்தர்களின் 'தாம்பத்திய நெடி'யால் மிகவும் உபாதைப்பட்டதுண்டு. எத்தனை உகாத சூழலையும் உகந்தேற்கும் ஸம சித்த ஸ்வரூபமான மகாபுருஷர்களும்கூட ஒரொரு சமயம் ஒருவித சூழலை ஒதுக்க நேர்ந்தது என்றால் என்ன அர்த்தம்? பொல்லாத காமத்திலிருந்து விடுபட நம்மை எச்சரிக்கிறார்கள் என்றே அர்த்தம்.

இவ்வாறு திடுமென காணுமற்போகும் பாபா பிறகு சித்ராவதிப் படுகையிலோ, அல்லது அக்கம் பக்கக் குன்றுச்சிகளிலோ காணப்படுவார். இக்கால மாந்தரான மற்றேருக்கு இயலாதது என்று அவர் சொன்ன யோக சாதனைகளைத்தான் அவர் இச்சமயங்களில் ஆற்றினர் என்று சிலர் பேசிக் கொண்டார்கள் — ஸ்ரீ கஸ்தூரி அவர்கள் கூறுவதுபோல, நமது யோக க்ஷேமத்தையே தாங்கவந்த அவருக்கு இந்த யோகப் பயிற்சியெல்லாம் தேவையே யில்லை என்றறியாமல்!

ஆம், யோக க்ஷேமத்தைத் தாங்குவதாகக் கண்ணன் தந்த வாக்கை இன்றும் காத்துப் பலர் குடிகாக்கும் கருணாநிதியாகி விட்டார். அடியாரது குடும்பத்தின் யோக க்ஷேமம் முழுவதையும் தான் வகிப்பதற்குக் கண்ணன் சில நிபந்தனைகள் விதித்தான். "என்னைத் தவிர வேறு எதையுமே எண்ணக் கூடாது. என்னை உபாசித்தால் மட்டும் போதாது. ஆழ்ந்து உபாசிக்க வேண்டும் (பரி உபாஸதே). இவ்வாறு எப்போதும் என்னிடமே மனத்தை ஒன்று சேர்த்திருப்பவர்களின் சகல நலன்களையும் நானே பார்த்துப் பார்த்துச் செய்து அவர்களைத் தாங்குகிறேன்!" என்றான். கள்ளன்! அவனிடமே ஒன்றுசேர்ந்து அவனைத் தவிர வேறு எண்ணுதவருக்கு உலகாயதமான அதிருஷ்ட யோகமும், க்ஷேமமும் சற்றேனும் தெரியப் போகிறதா? இவன் அவற்றைத் தராமல் அவர்களை வறுத்தெடுத்தாலும்கூடத் தெரியப் போவதில்லையே! ஸாயிகிருஷ்ணன் தற்கால அவல மாந்தரிடம் இத்தகைய ஆழ்ந்த பக்தியைக்கூட எதிர்பார்க்கவில்லை. லௌகிகத்தையும் நினைத்து, அதன் பொருட்டே இவரை நினைத்து விட்டாலும் குடி தாங்க விரைவதாகச் சொல்கிறார்.

* * *

இவ்வாறாக யோக க்ஷேம பாரத்தைத் தாம் தாங்குவதாக அவர் முதலில் வாக்குக் கொடுத்தது தம்மிராஜு மனைவி காமேச்வரம்மாவுக்குத்தான். உரவகொண்டாவிலிருந்து புட்டபர்த்திக்கு வந்த பின்னும் அந்த வாக்கை எப்படியெல்லாம் காப்பாற்றிக் கொண்டிருந்தார்? ஒரு உதாரணம்:

Koviloor Digital Library

மாலை வேளை. தம்பிராஜூ வீட்டுள்ளே பஜனை செய்து கொண்டிருக்கிறார். வாசல் வராந்தாவில் எவரோ ஒரு பெரிய தடியால் தரையை 'லொட்' 'லொட்'டென்று தட்டும் ஓசை. வெளியே வந்து பார்க்கிறார். எவரையும் காணவில்லை. மறுபடி அறைக்கு வந்து பஜனை தொடங்குகிறார். மீளவும் வாசலில் அதே சப்தம்.

'வண்டையும் வானரத்தையும் தூதுவிட்ட குறும்பன் இப்போது ஷிர்டிக் கிழவனாராகவே கோலும் கையுமாக வந்தனரோ?' என்ற எண்ணம் பளிச்சிட்டது.

அதற்கேற்றாற்போல் காமேச்வரம்மாவும், "வாசலில் நன்றாகப் பாருங்கள். அப்பாயி (இவர்களது மூத்த மகன்) ஆபீஸிலிருந்து திரும்பியவன், வாசலிலிருந்தபடியே அவசரமாக ஏதோ சொல்லிவிட்டு டிராமாவுக்குப் போய் விட்டான். 'பணப்பெட்டி' என்று சொன்னது போல் இப்போது நினைவு வருகிறது" என்றாள்.

ஆம், வராந்தாவுக்குப் பக்கத்தில் உள்ள அறையில் ஒரு பணப் பெட்டி பூட்டாமலே இருந்தது! திறந்து பார்த்தால்.... அம்மாடி! பத்தாயிரத்துச் சொச்சம் ரூபாய்!

"ஸாயிராம்!" என்று கையெடுத்துக் கும்பிட்டனர் அத் தம்பதியர்.

பஞ்ச நிவாரண அலுவலராக இருந்த அப்பாயி, மறுநாள் பட்டுவாடாவுக்காக கூட்டி கஜானாவிலிருந்து கொண்டு வந்திருந்த பணப் பெட்டியைத்தான் இத்தனை 'பொறுப்போடு' காபந்து செய்துவிட்டுத் தலைதெறிக்க டிராமாவுக்கு ஓடியிருக்கிறார்! யோக க்ஷேமப் பொறுப்பு வகித்துக் காக்கும் பந்து ஒருத்தர்தான் இருக்கிறாரே என்ற தைரியம் போலும்!

இப்படி எத்தனை ஆயிரம் சந்தர்ப்பங்களில் நம் ஸ்வாமி சன்றாகும் கருத்துமாய்ப் பொறுப்பாற்றியுள்ளார் என்பதை விவரிக்க பூமியே காகிதமாகவும், கடலே மையாகவும் ஆனாலும் முடியாதுதான்!

ஆயினும் பதினைந்துப் பருவ பால ஸ்வாமி, வயோதிக ஸாது ஒருவருக்கு "யோக க்ஷேமம் வஹாம்யம்" பாலித்ததை மட்டும் குறிப்பிடாதிருப்பதற்கில்லை.

* * *

ஸத்ய ஸாயி தோன்றிய நாட்களாக அவருக்கு பக்தர்கள் தோன்றிவிட்டனர். பக்தர்கள் தோன்றிய நாட்களாக எதிர்ப்பாளர், ஏன், பரம விரோதிகளுங்கூடத் தோன்றிவிட்டனர். ஸாயி ரத்தினத்தை எடுத்துக்காட்டப் பொற் கட்டிடமாக பக்தர்கள்; ரத்தினம், பொற் கட்டிடம் இரண்டையுமே எடுத்துக்காட்டக் கருப்பு நகைப் பெட்டியாக விரோதிகள்.

Koviloor Digital Library

இதிலே நம் பிரபுவின் ஜாதக விசேஷம், மிருதங்கத்துக்கு இரண்டு பக்கமும் அடி என்பதுதான். மற்ற மஹாபுருஷர்களை நாஸ்திகர் மட்டுமே தாக்குவர். இவரையோ, அற்புதம் செய்கிறார் என்பதால் நாஸ்திகரோடு ஆஸ்திகர் பலரும் தாக்குகின்றனர். ஆனால் சிட்டுக் குருவிப் பட்டாளம் கோடி கோடியாகத் தாக்கினாலும் குலையாத கௌரீசருங்க பர்வதம்போல் அவர் மாண்புற, பீடுறத்தான் பொலிந்து கொண்டிருக்கிறார்!

அந் நாட்களில் ஆந்திர கிராமங்களில் கர்ணம், ரெட்டி என்ற இரு அதிகாரிகளே அதி முக்யஸ்தர்களாக இருந்தனர். கர்ணம் என்பவர் ரிவின்யூ இலாகாவுக்கு உதவுபவர்; ரெட்டி என்பவர் (ஜாதியால் ரெட்டி அல்ல, இது ஒரு பதவியின் பெயர்) போலீஸுக்கு உதவியாளர். கிராம மக்கள் இவ்விருவரையுமே கலெக்டராகவும், டி.எஸ்.பி.யாகவும் பாவித்து, மேல்துண்டை இடுப்பில் சுற்றிக்கொண்டு மரியாதை செய்வார்கள். கிராமங்களில் இவ்விருவரும் வைத்ததே சட்டம்.

புட்டபர்த்தியில் ரத்னாகரம் வீட்டுப்பிள்ளை தலைதூக்கியதும் அவ்வூர் கர்ணம், ரெட்டி (அங்கு ரெட்டியாக இருந்தவரும் பிராமணர்தான்) இவர்களின் மவுசு குறையத்தான் செய்தது. பிள்ளையாண்டான் கொஞ்சம் தலைதூக்கியதோடு நில்லாமல் பகவானாகப் பரிணமித்தபின் இவர்களுக்குத் தமது சாம்ராஜ்யமே பறிபோன எண்ணம் உண்டாகிவிட்டது.

போதும் போதாததற்கு பால ஸாயிக்கோ ஸகலரும் ஒன்றுதான். ஊர்ப் பிரமுகர்கள் என்று இவர்களுக்குத் தனி மரியாதை செய்வது அவரால் முடிகிற காரியமா? இதைத் தங்களுக்கு இழைக்கப்படும் அவமரியாதையாகவே அவர்கள் கருதினர்.

இத்தனைக்கும் பாலஸாயி வசித்ததே கர்ணத்தின் வீட்டில் தான். அப்போதைய கர்ணம் கோபால்ராவ் சுப்பம்மாவின் தத்துப் புத்திரர்தாம். ஆனாலும் சாதாரண மனிதராகப்பட்ட எவருக்கும் தம்மை ஸ்வீகாரம் செய்துகொண்ட பின்னும், வளர்ப்புத்தாய் இன்னொரு பிள்ளையைப் பிள்ளையாகவும், தெய்வமாகவுமே வைத்துக்கொண்டு, வருகிறவர்களுக்கெல்லாம் சாப்பாடு போட்டுக் கொண்டிருந்தால் மனவேறுபாடு ஏற்படத்தானே செய்யும்? ஆதலால் ரெட்டியைப் போல வெளிப்பட இல்லாவிடினும், இவரும் மறைமுகமாக எதிர்த் தரப்பில் இருந்ததாகவே தெரிகிறது.

ஏற்கெனவே கர்ணத்துக்கும் ரெட்டிக்குமிடையே நீண்ட காலச் சச்சரவு இருந்தபோதிலும், இப்போது My enemy's enemy is my friend (விரோதியின் விரோதி நண்பனாவான்) என்றபடி இருவரும் பொதுவாக ஸ்வாமியிடம் உள்ள வெறுப்பால் ஒன்றுசேர்ந்து, மேலும் தீர்க்கமாக அவரிடம் பகை பாராட்டியதாக அறிகிறோம்.

கிராமத்தில் வேறு சிலருக்கும் கூத்தாடி படராஜுகளுக்கு இத்தனை கொண்டாட்டமா என்று வயிறெரிந்தது. துரதிருஷ்ட

Koviloor Digital Library

வசமாக, நம்மைச் சுற்றி எத்தனைவிதமான ஈதிபாதை உண்டோ அத்தனையும் வைத்துக் கொள்ளவேண்டும் என்று நம் அந்தனன் சங்கற்பித்ததாலோ என்னவோ, அவரது குடும்பத்தினரும் விசேஷமாக விவேகம் பெற்றிருக்கவில்லை. இவருக்குத் 'தம் குடும்பம்' என்ற தனிப் பாசமே அவர்களிடம் இல்லாவிடினும், அவர்களில் பலர் அந்தஸ்து கொண்டாடத்தான் செய்தனர். ஸத்யாவை ஸ்வாமியாக்கியதே தாங்கள்தான் என்றும், அவர் தம்மிடம் நன்றிக் கடன் பட்டிருப்பதாகவும் எண்ணிய மேதாவிகளும் இவர்களில் உண்டு. இதற்காக பாபாவோ அவர்களை மேலும் ஒட்ட வெட்டினார். உடனே நேராகவோ, மறைவாகவோ அவர்களும் நிந்திப்பவர்களுடன் சேர்ந்துகொண்டனர்.

நூறு வயதைக் கடந்த பாட்டனார் கொண்டம ராஜுவுக்குத்தான் ஸ்வாமியின் நிஜமான ஸ்வாமித்வம் புரிந்தது. இக் குடும்பத்துக்கே வந்துவிட்ட அவரது பெண் ஒருத்திக்கும்—அதாவது பாபாவின் அத்தைக்கும் — இவரது தெய்விகத்தில் பெருமளவு நம்பிக்கை யிருந்தது. இதில் வேடிக்கை யாதெனில், தாய் தந்தையரை 'கிருஹ அம்மாயி, கிருஹ அப்பாயி' என்றே கூறி வந்த பாபா இவளை மட்டும் உறவு சொல்லி 'அத்தை கோனம்மா' என்றே அழைப்பார். பாபாவின் தமக்கைகளில் வெங்கம்மாவுக்கு இவரிடம் ஓரளவு பக்தி விசுவாசம் உண்டு. மற்றபடி, ''பகவான் ஸத்ய ஸாயி பாபாவுக்கு நமஸ்காரம்'' என்றே 'தந்தை' வெங்கா எழுதியபோதிலுங்கூட உள்ளூற அவரும், ஏன், ஈச்வரம்மாவும் கூட, ஐயனின் மகிமையைப் பூரணமாக உணரத்தான் இல்லை. அவர்களைக் குற்றம் சொல்ல வேண்டாம். இதுவும் ஸ்வாமி சித்தமாகத்தான் இருக்கவேண்டும்.

இதையெல்லாம் வெளியே சொல்லலாமா எனச் சில ஸாயி பக்தர் எண்ணலாம். ஆனால் நம் பிரபு பதினாலாம் வயதிலிருந்தே எப்போர்ப்பட்ட வைராக்ய பர்வதம், தம்மை நெருங்கிய உறவினரும் புரிந்துகொள்ளாததில் அவர் எப்படிக் கலக்கமே கொள்ளாமல் அலையாமல் குலையாமல் தம் ஒரே பணி பக்தரக்ஷணம் என்று நடத்தி வந்தார் என்பன இவற்றிலிருந்துதானே தெரிகிறது?

உறவினரும் பக்தி சிரத்தையைப் பொறுத்தே மற்ற அடியாரைப் போலத் தம்மை அணுகியிருக்கலாமே அன்றி உறவால் மட்டும் முன்னுரிமை கோரிப் பயனே இல்லை என்று பாலஸாயி நிர்தாட்சிண்யமாகக் காட்டினார். விரோதத்தை மேலும் சம்பாதித்துக் கொண்டார்.

இப்படியாகப் பல காரணங்களால் பாபாவைத் துவேஷித்தவர்களுடன், காரணமேயில்லாமல் மஹான்களிடம் பகைமை கொள்ளும் 'புண்யசாலி'களும் சேர்ந்துகொண்டனர். நல்லதை எல்லாம் எதிர்க்கும் முரடர்கள், அவநம்பிக்கைக்காரர்கள், நாஸ்திகர்கள் ஆகியோருக்கு மஹாமாயையின் பிரபஞ்சத்தில் பஞ்சமே இல்லையன்றோ? ''எந்த அவதாரத்திலும் சிசுபால, தந்தவக்திர கோஷ்டி உண்டு. எனக்கு எதிர்ப்பு புதிதுமல்ல;

Koviloor Digital Library

பொருட்டுமல்ல. மலைகளை வஜ்ராயுதம் பொடி செய்வதுபோல, மலைமலையாக எதிர்ப்பு வந்தாலும் ஸாயியின் வஜ்ர சங்கற்பம் அவற்றைத் தூள் தூளாக்கித் தன் லக்ஷியத்தை நிறைவேற்றியே தீரும்'' என்று சொல்லிக்கொண்டு ஸ்வாமி எதிர்ப்பை ஏற்றார்.

மற்ற அவதாரங்களுக்கும் இதற்கும் மகாமதுரமான ஒரு மாறுபாடு. பூர்வ அவதாரங்கள் சிசுபாலனையும், தந்தவக்திரனையும், மற்ற விரோதிப் பட்டாளத்தையும் வதைத்தன. இன்றைய அவதாரத்துக்கோ சம்ஹாரம் என்பது அடியோடு தெரியாத வஸ்து!

பால ஸாயி கொழுந்துவிட்ட தொடக்க காலத்தில் எதிர்ப்பாளர்கள் குறிப்பாக ஒரு திருப்பணி செய்தனர். அதாவது: புட்டபர்த்திக்கு வரும் வெளியார் முதலில் வந்திறங்கும் புக்க பட்டணம், பெனுகொண்டா போன்ற இடங்களில் இவர்கள் சில ஆட்களை அமர்த்தியிருந்தனர். அவர்களது தொழில் என்னவெனில் அந்த யாத்ரிகர்களைப் புட்டபர்த்திக்குச் செல்லவொட்டாமல் தடுப்பதுதான்! புண்ணியவான்கள் பஸ் ஸ்டாண்டில் தாமாக அவர்களை ஆட்கொண்டருளி, ''அய்யய்ய! புட்டபர்த்தியுமாச்சு, பாபாவுமாச்சு. வெறும் புரளி. அங்கே போய் சிக்கிக் கொள்ளாதீர்கள்'' என்று உபதேசம் வழங்குவார்கள்! அதற்குச் செவி சாய்க்காவிட்டால் கன்னு பின்னு என்று கதை கட்டுவார்கள். அப்படியும் சொல் மேவாதபோது, ''அது ஏவல், சூன்ய வித்தை'' என்று அச்சமூட்டுவார்கள்.

இத்தனையையும் மீறிக்கொண்டு பக்தர்கள் கூட்டம் நின்னினே பெருகியதெனில் அதுதான் ஐயா, சத்தியத்தின் சக்தி!

முதலிலேயே எதிர்ப்பாளராக முத்திரை குத்திக் கொண்டவர் ஒரு புறமிருக்க, பக்தராக வந்து பழகிவிட்டே, விரோதியாக மாறி தூஷணை கிளப்பியவர்கள் வேறு! இந்த பக்தர்கள் (அதாவது தங்களை பக்தர்களாக நினைத்துக்கொண்டவர்கள்) தாங்கள் பாபாவிடம் வந்துவிட்டோம், மணியடித்து பூப்போட்டு பாபா பூஜை செய்கிறோம், செலவு செய்து பாபா பஜனை செய்கிறோம் என்ற காரணங்களுக்காகவே அவர் தங்களது கர்மா முழுவதையும் களைந்துவிட்டுத் தாங்கள் வேண்டிய வரங்களையெல்லாம் தந்து சுக ஜீவனத்திலேயே வைத்திருக்க வேண்டும் என்று நினைத்தவர்களாவர். நம் காவிய நாயகரும், பிற்பாடு தாம் விரும்பும் ஞான வைராக்யாதிகளை அவர்கள் விரும்பி ஏற்கப் பக்குவப்படுத்தும்பொருட்டே, தொடக்கத்தில் அவர்களுக்கு விட்டுக்கொடுத்து, அற்புதங்கள் காட்டி, நோய் தீர்த்து, வறுமை முதலிய பிரச்னைகள் தீர்த்து அருள்வார்: அவர்களது பூர்வ சுகிர்தம் அல்லது இன்றைய பக்தியின் வலிவு, அல்லது காரணமே அற்ற தனது காருண்யம் இவற்றில் ஒன்றை முன்னிட்டுப் பலரது நியாயமான லௌகிகத் தேவைகளைப் பூர்த்தி செய்து, அனவரதமும் இக வாழ்விலேயே கட்டிக் காப்பார். ஆனால் பாபாவைக் கும்பிடும் அனைவரது இல்லங்களிலும் நோவு, சாவு, வறுமை, மற்றத் துயர்கள்

Koviloor Digital Library

யாவும் விலகி, கர்மா முழுதும் பஸ்மீகரமாக வேண்டுமெனில் அப்புறம் தெய்வ நீதி என்பதுதான் என்னுவது? உண்மையில் இகவாழ்வைவிட அகவாழ்வுதான் அவருக்கு முக்கியம். அகவாழ்வுக்குதவும் பக்தியை உண்டுபண்ணவே தொடக்கத்தில் கர்மாவைச் சிறிது குறைத்து அநுக்கிரகிப்பார். போகப் போக நடுநடுவே நீதிபதியாக இருந்து வினைப் பயனுக்கும் அவர்களை ஆளாக்குவார். இம்மாதிரி நஷ்டம், மரணம் போன்றவை உண்டானதால் உடனே இவரை விட்டு விலகித் தூற்றத் தொடங்கியவர்களும் பலர் இருக்கிறார்கள்.

லௌகிக லாபநஷ்டங்களைப் பாராமல் பக்தியில் நிலைத்திருப்பவர் மீது அவர் அக உலகின் பாவன ஆனந்தத்தின் அலைகளை அவ்வப்போது வீசிக்கொண்டுதான் இருக்கிறார். இப்படிப்பட்ட மெய்யடியார் பலரை இந்நூலாசிரியரே சந்தித்திருக்கிறார். உலக ரீதியில் மட்டும் பார்த்தால் இவர்கள் பாபாவிடம் பக்தி செலுத்தக் காரணமே இராது. வியாதி, வறுமை, புத்திர சோகம் முதலான பரம துக்கங்கள் இவர்களுக்கு சம்பவித்திருக்கும். ஆனால் இவ்வடியார்களோ இவற்றைப் பொருட்படுத்தாமல், பக்தி புரிவதில் உள்ள பேரின்பத்துக்காகவே பாபாவிடம் மாறாத அன்பு பூண்டிருப்பர். 'பலருக்கு வியாதியை சொஸ்தப் படுத்தியிருக்கிறார். வேறு சிலருக்கோ வியாதி சொஸ்தமாக வேண்டும் என்ற தாபத்தையே சொஸ்தம் செய்திருக்கிறார்" என்று இதைத்தான் ஹவார்ட் மர்ஃபெட் அழகாகக் கூறுவார்.

இப்படிப் பக்குவமாகாதோரில் பலர் வெறுமே விலகி விடுகிறார்களெனில், சிலரோ நிந்தனையிலேயே தீவிரமாக இறங்கி விடுகின்றனர்.

சில பணக்காரர்கள், படே படேக்கள் இவரிடம் வந்து பழகி, பிறகு (எப்படி உறவினர் தமக்குத் தனி உரிமை இல்லை என்பதால் அசாபங்கமுற்றனரோ அப்படியே) தமது பணம் அல்லது பதவிக்காக இந்த சலுகை கிடைக்காது எனக் கண்டு, எதிர்ப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

பின் இவர் ஏன் 'பணமூட்டைகளின் சாமியார்' எனப் பழிக்கப்படும் அளவுக்குத் தனவந்தர் சகவாஸத்தில் காணப்படுகிறார் என்ற கேள்வி எழலாம். அவரே கூறும் விடையைக் கேளுங்கள்: "என்னைச் சுற்றி தனிகரும் பிரமுகரும் சூழ்ந்திருப்பதால் நான் பொதுமக்களைப் பொருட்படுத்தாமல் இவர்களை மட்டும் ஆதரிக்கிறேன் என்று நினைத்தால் அது சற்றும் சரியல்ல. பொதுமக்களின் பொருட்டேதான் இவர்களை நான் ஆதரிக்கிறேன். மக்கள் நலனுக்கான எப்பணி செய்வதாயினும் அதற்கு நிதியம் வேண்டுந்தானே? பணக்காரர், பதவிக்காரர் ஆகியோரிடம் நான் பொது ஜனங்களுக்காகப் பள்ளிக்கூடம், பஜனைக் கூடம், வைத்தியசாலை முதலியன வைக்கச் சொன்னால் உடனே காரியம் நடந்து விடுகிறது. எனவே என் சொந்த ஆதாயத்துக்காக இவர்களை நான் சேர்த்துக் கொள்ளவில்லை. பூர்வ ஸுகிர்தத்தால்தானே இவர்களுக்கு இவ்வளவு லக்ஷ்மி கடாக்ஷமோ,

Koviloor Digital Library

அதிகார ஸ்தானமோ கிடைத்திருக்கிறது? அதே ஸ்ஹிர்தத்தால் பகவத் ஸாமீப்யமும் அவர்களுக்குக் கிட்டியுள்ளது.''

பாபாவைப் போல் 'பணக்காரர் சாமி' என்ற அபவாதம் பெருத வேறெந்த ஸ்வாமிஜியை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். இவர்கள் விஜயம் செய்யும் வீடு களில் எத்தனை சதம் ஏழைகளுடையது, எத்தனை தனிக ருடையது என 'சென்ஸஸ்' வேண்டுமானால் எடுத்துப் பாருங்கள். பொதுவாக ஜனத்தொகையில் 90 சதம் ஏழையர், 10 சதமே தனிகர் என்றிருப்பினும் இவர்கள் விஜயம் செய்யும் இல்லங்களில் 10 சதமே ஏழையரதாகவும், 90 சதம் தனிகரதாகவும் தான் இருக்கும். காரணம் பாரபட்சம் அல்ல. எந்த மஹானாயினும் அவர் புரிய விரும்பும் பொதுநலப் பணிக்குப் பணம் வேண்டி யுள்ளது என்பதே காரணம். ஆனாலும் நம் நாயகர் மட்டுமே இங்கும் பழிக்கு ஆளாகிறார். 'ஸ்தோத்ர ப்ரியா' என்று அம்பிகைக்கும், 'ஸ்தவ ப்ரியர்' ('ஸ்தவம்' என்றாலும் ஸ்தோத் திரம்தான்) என்று மஹாவிஷ்ணுவுக்கும் பெயர் உள்ளது. நம் நாயகரை 'நிந்தை ப்ரியர்' என்றே பெயரிடலாமோ என்னவோ?

இவரால் தாங்கள் ஆதாயம் பெற எண்ணிப் பணம் பதவியைக் காட்டி இவரை வளைத்துப் போட முயன்று, இதன் விளைவாக நம் தர்மமூர்த்தியால் அடியோடு துண்டிக்கப்பட்ட படே படேக்களைப் பற்றி வெளியார் அறியாததால்தான் வாய் கூசாமல் அபவாதம் கூறுகின்றனர்.

ஒரு காலத்தில் இவருக்குத் தாயினும் மேலாகப் பலர் நினைத்த ஒரு கோடீச்வரி, தனக்குப் பிடிக்காத ஓர் எளியவர் வீட்டுக்கு இவர் போகக் கூடாது என்று கட்டாயப்படுத்திய தொன்றுக்காகவே இவர் ''அப்படியா சங்கதி? இனி உன் வீட்டில் அடி எடுத்து வைப்பதில்லை'' என்று சொல்லி ஒரே வெட்டில் ஒட்டக் கத்திரித்து விட்டார்.

கொள்ளை லாப வட்டி தருவதாகச் சொன்ன ஒரு ரூநுக் கம்பெனியில் லக்ஷம் லக்ஷமாகப் போட்டுத் தோற்றுப் போன முன்னாள் பக்த சிகாமணி ஒருவர், தன் துராசையை பாபா நிறை வேற்றாமல் நஷ்டம் வரச் செய்து விட்டார் என்பதால் அவரைத் தூற்றத் தொடங்கியதும் உண்டு.

அஹங்கார, மமகாரங்களை ஓரளவாவது சமர்ப்பணம் செய்யத் தயாராக இருந்தாலொழிய இவரது அநுக்கிரகத்தில் எவரானாலும் நிலைத்திருக்க இயலாது. மற்றோர் உதாரணம்:

பெரிய நூற்பாலை உரிமையாளர் ஒருவர் இவருக்குக் கோலாகல வரவேற்புத் தந்து, தங்க முலாம் பூசிய வெள்ளித் தாலங்களி லும் கிண்ணங்களிலும் பஞ்ச பக்ஷ்ய பரமான்னங்களைப் படைத் தார். ஸ்வாமி அவற்றைத் தொடவுமில்லை. தனிகரையும் சுற்றத்தினரையும் பார்த்து, ''எனக்குப் பஞ்ச பக்ஷ்யம் உங்களு டைய பஞ்ச இந்திரியங்களின் கட்டுப்பாடுதான். அதைச்

Koviloor Digital Library

சற்றேனும் செய்யத் தயாரா? குறைந்த பட்சம் ஸிகரெட், மது, இன்னும் சில துர்வழக்கம் வைத்திருக்கிறீர்களே, அவற்றை விடுவதாக வாக்குத் தாருங்கள். அப்போதே இதில் சிறிதாவது என் வாயில் போகும்'' என்றார்.

அவர்கள் அப்போதைக்கு வாக்குத் தந்து ஸ்வாமியைத் துளித்துளி கொறிக்கச் செய்தனர்.

நாளாக ஆக வாக்கிலிருந்து பிறழ்ந்து எப்படியெப்படியோ சென்றனர். ஸ்வாமியும் கொஞ்சம் விட்டுப் பிடித்துக் கடைசியில் ஒட்ட ஒட்ட வெட்டி அவர்களை ஓட்டியே விட்டார்.

இப்படிப்பட்டவர்கள் தாங்களாக எதிர்ப் பிரசாரம் தொடங்காவிடினும் கூட, இவர்களைப் பிறர், ''ஏன் புட்டபர்த்தி ஸ்வாமியை விட்டு விட்டீர்கள்?'' என வினவினால் என்ன சொல்வர்? ''அவர்தான் எங்களை விட்டு விட்டார்'' என்று சொல்ல மானாபிமானம் இடம் கொடுக்குமா? ஆதலால், ''ஸ்வாமியுமாச்சு பூஜையுமாச்சு'' என்று நம் நாதரையே ஏதேனும் பழி கூறித் தங்களைக் 'காத்து'க் கொள்ளத்தான் தோன்றும்.

ஸ்வாமியின் பக்தர் பட்டியலிலிருந்து எத்தனை பணக்காரர்கள் விடுபட்டிருக்கிறார்கள் என்று பார்த்தாலே போதும், அவர் தனிகரின் தனிச்சாமி அல்ல என்று தெளிவாகிவிடும்.

பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே

என்ற புறநானூற்றின் கூற்றுக்கு எவ்வளவு விரிவாகப் பொருள் கொண்டாலும் அத்தனைக்கும் பாஷ்யமாக இருக்கும் ஸர்வ ஸம பாவமே நம் பாபா. அதன் உள் மகிமையால்தான் பொங்கிப் பொங்கிவரும் எதிர்ப்பு அலைகளையும் மீறிக்கொண்டு நம் நாயகரிடம் பக்தி நாவாய் நானிலமெங்கும் நாள்தோறும் முன்னேறி வருகிறது.

ஆரம்ப காலத்தில் எதிர்ப்பு அலை வீசியவரின் கதைக்குத் திரும்பலாம். அதன் விளைவாகவே பதினைந்து பருவ பால ஸ்வாமி, வயோதிக ஸாதுவுக்கு யோக க்ஷேமம் பாலித்த படலம் விரியும்.

* * *

குட்டிச்சாமியை மண் கவ்வ வைக்க வேண்டும் என்று அந்தக் காலப் புட்டபர்த்திப் 'புண்யாத்மாக்கள்' ஒரு சூழ்ச்சி செய்தனர்.

அப்போது அந்த வட்டாரங்களில் திகம்பரஸ்வாமி என்றொருவர் ஓரளவு பிரசித்தியுடன் இருந்தார். இரண்டு காலும் அற்ற இவர் ஆடை உடுத்தமாட்டார். வாய் திறந்து பேச மாட்டார். இவரை பக்தர்கள் ஊர் ஊராகச் சிவிகையில் வைத்துத் தூக்கி வருவார்கள்.

Koviloor Digital Library

புக்கபட்டணத்துக்கு வந்த திகம்பரஸ்வாமியைப் பார்த்திப் புண்ணியவான்கள் அங்கு வரவழைத்தனர் — அவரிடம் பக்தியால் அல்ல; ராஜூப் பயலின் வேஷத்தைக் கிழித்தெறியத் தான்!

ஸ்வாமியார் ஏறி வந்த சிவிகையை பாலஸாயியின் இருக்கையான கர்ணம் வீட்டு வாசலில் இறக்கினர். ''உண்மையான மஹாத்மாவெனில் இவரே அல்லவா? உடுக்கவேண்டும், உரைக்க வேண்டும் என்ற உந்தல்கள் கூட இல்லாத உண்மை ஞானியைப் பாருங்கள்! 'மாஜிக்' செய்துகொண்டு, மக்களோடு கும்மாளமிடும் போலிகளைக் கண்டு மோசம் போகாதீர்கள்!'' என்றெல்லாம் கோஷமிட்டனர். ''இந்த உண்மை ரிஷியை அந்தப் போலி நேருக்கு நேர் சந்திக்க முடியுமா?'' என்று சவால் விட்டனர்.

உள்ளேயிருந்து ''போலி'' பிரஸன்ன முகத்தோடு வந்தார். அவர் கையில் ஒரு பெரிய துண்டு இருந்தது.

நேரே சிவிகைக்கு வந்து திகம்பரரிடம் துண்டை நீட்டினார் பாபா. அன்பும், அன்பில் பிறந்த கண்டிப்பும் தொனிக்கும் குரலில் பச்சிளம் ஸ்வாமி வயோதிக ஸ்வாமியாரிடம் கூறுவார்: ''அப்பா! ஜீவனோபாயம் வேண்டும் என்பதற்காக இந்த திகம்பர வேஷம் ஏன்? இதை உடுத்துக் கொள். உடல் உணர்வே உண்மையாக நசித்தாலன்றோ உடை நழுவலாம்? உனக்கு உடலைப் பற்றிய கவலைதானே யப்பா பெரிதாக இருக்கிறது? காலற்ற நாம் ஜீவனத்துக்கு என்ன செய்வதென்றுதானே சாமியாராக மாறியிருக்கிறாய்? மக்கள் உன்னைச் சுமக்கச் செய்கிறாய்; இதனால் நீ பாபத்தைச் சுமக்கிறாய்! நான் சொல்கிறேன், இனி மெய்யாலுமே ஸாதுவாக மாறு. பயப்படாமல் எங்கேனும் வனத்துக்கோ, குகைக்கோ போ. இப்போதுபோல் பொய் மௌனமின்றி, மெய்யாக மோனத்தவமிருந்து ஜன்மாவை ஸபலமாக்கிக் கொள். 'காலிழந்த நமக்குக் கானக விலங்குகளிடமிருந்து காப்பு ஏது? அங்கு நமக்கு உணவிடுவார் யார்?' என்று பயப்படுகிறாய்! அப்பனே, அஞ்சேல்! நானிருக்கப் பயம் ஏன்? பரம்பொருளை உண்மையாக நாடினால் நீ எந்தக் காட்டில், மேட்டில், தண்டகாரண்யத்தில், ஹிமாசலத்தில் இருந்தாலும் உனக்கு நான் காப்பு. வேளைக்கு உனக்கு எப்படியோ உணவு அனுப்புவது என் பொறுப்பு. யோக க்ஷேமம் வஹாம்யஹம்!''

இரண்டு மஹாவாக்கியங்கள். முதலாவதாக, அன்று ஷிர்டியில் செய்த ஆணை: ''நானிருக்கப் பயமேன்?'' ஷிர்டியில் மட்டும் தானா? ஆதியில் இரண்டு யுகங்களுக்கு முன், ராவணனின் தொல்லை தாளாமல் தேவாதியர் நடுங்கி வேண்டியபோது நாரணனுகச் சொன்ன முதல் வாக்கும் இதே தான்: ''பயம் த்யஜத— அச்சத்தை விடுங்கள்!''

பின், ஒரு யுகத்துக்கு முன் குருக்ஷேத்திரத்தில் கூறியதே இரண்டாவது மஹாவாக்கியம்: ''யோக க்ஷேமம் வஹாம்யஹம்.''

Koviloor Digital Library

பக்தனுக்கு வேண்டிய பொருளைக் கூட்டுவிக்கவும் (யோகம்) அவன் நலனைப் பேணவும் (க்ஷேமம்) பகவானே பொறுப்புத் தாங்குவதாகச் செய்த பிரதிக்ஞை!

இதில் இரண்டாவதன் உட்பொருளை அறிந்து, உண்மை பக்தி செலுத்துவோர் அபூர்வமாகவே இருப்பர். நாம் யோக நஷ்டம் என்றும், க்ஷேமம் என்றும் எண்ணுவதற்கு நேர்மாறாகவும் அவற்றை பகவான் நடத்தி வைத்துப் புடம் போடும்போது, அறிவிலிகள் அவர் வாக்கு தவறியதாகவே எண்ணுவோம். ஆனால் முதல் சபதம் இப்படியல்ல. ஓர் ஆபத்தில் நம்மால் ஆவது ஏது மில்லை என்று அஞ்சி, ''ஸாயிராமா'' என்று அழைத்துவிட்டால், ''நானிருக்கப் பயமேன்?'' என்று அவர் பரிந்து வந்து புரந்து அருள்வது பல்லாயிரவரின் பிரத்தியக்ஷ அநுபவம். ''அருகாக வந்தென்னை அஞ்சேல் என்பார்'' என்று அப்பர் செப்பியது இந்த அப்பனுக்கே என்பவர் அனந்தம் அடியவர்.

மேலே ''ஸாயிராமா'' என்று அழைத்தாலே போதும் என்றதும்கூட சரியல்ல. அவர் பெயரை நினையாவிட்டாலும், அவர் பெயரே தெரியாவிட்டாலும்கூட ஆபத்துதவியாகப் பலருக்கு அருளியிருக்கிறார்.

............ பவளத் திருவாயால்
''அஞ்சேல்'' என்ன ஆசைப் பட்டேன்

என்றார் மணிவாசகர். இவரது தாம்பூலம் தரித்த பவளவாயை அறியாதாருக்கும் அபய தானம் செய்யும் அருளை என்னென்பது? இதற்கு எடுத்துக்காட்டுக்கள் பின்னர் பார்ப்போம்.

Koviloor Digital Library

அத்தியாயம்—23

கற்பகம் கற்பனையல்ல!

"பகைவராலோ, கள்வராலோ, அரசராலோ, ஆயுதத்தாலோ, அக்னியாலோ, வெள்ளத்தாலோ என் பக்தனுக்கு ஒருபோதும் பயம் ஏற்படாது."

— தேவி மாஹாத்மியத்தில் அம்பிகை வாக்கு

பால ஸாயியின் பால்மொழி திகம்பரஸ்வாமியைக் குலுக்கிவிட்டது. ஆம், கண்டித்தாலும் கஷாயமாக இன்றிப் பாலாகவே இருந்தது அவ் வாக்கு.

ஸ்வாமி நீட்டிய துண்டத்தை வாங்கி அணிந்துகொண்டு திகம்பரக் கோலம் விட்டார் ஸ்வாமியார்.

மௌனத்தை விட்டு, "ஐயனே! என் தவற்றை மன்னியுங்கள். தாங்கள் சொல்லியுங்கூட, அச்சம் விட்டு வனாந்தரம் புக எனக்குப் பக்குவம் வரவில்லை. ஆயினும் இனி மக்களைப் பாதபூஜை, பணக் காணிக்கை, பல்லக்குச் சுமத்தல் இவற்றில் சிரமப்படுத்தமாட்டேன். இருந்த இடத்தில் இரண்டு வேளைக் கஞ்சி மட்டும் பிச்சை எடுக்கிறேன். அது கிடைக்க அருள்வாய்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்.

"அப்படியே" என்றருளினார் பால ஸாயி.

இப்படி தலைகுப்புற விழுந்து, தங்கள் காலை வாரிவிட்ட சாமியாரைப் புட்டபர்த்திப் புண்யாத்மாக்கள் அப்போதே கைவிட்டுப் போய்விட்டனர். அவருக்கென்றே ஏற்பட்ட பக்தர்கள் சிவிகையைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டனர்.

ஸாதுக்கள் பணக்காணிக்கைகளாகப் பறி முதல் செய்வதை மட்டுமின்றி, அவர்கள் தர்மப் பிரசாரத்தை உத்தேசித்தேகூட தத்தம் ஸ்தாபனங்களை ரொம்பவும் கட்டிக் கொண்டு, ஓயாமல்

Koviloor Digital Library

காரியத்தில் ஈடுபட்டிருப்பதை பாபா வன்மையாகக் கண்டிப்பார். ஸ்தாபனம் இருக்கலாம், காரியமும் செய்யலாம். ஆனாலும் இவற்றைவிட ஸாதுவுக்கு மிக மிக முக்கியம் ஆத்ம சாதனைதான் என்று வலியுறுத்துவார். ஸ்தாபனத்தில் ஏற்படும் அதிதப் பற்றும் ஆத்ம வளர்ச்சிக்கு ஹானியே என்பார்.

திகம்பர ஸ்வாமி சம்பவம் நடந்து பதினேழாண்டுகளுக்குப்பின் பிரசாந்தி நிலயத்துக்கு வந்தார் ஸ்வாமி ஸச்சிதானந்தா. உலகில் நன்மதிப்பும் மரியாதையும் பெற்ற இவர் நிச்சயமாகப் போலி அல்ல. ராஜயோகத்தில் நல்லதேர்ச்சி பெற்றவர் இவர்.

எழுபது வயதான ஸச்சிதானந்தாவை முப்பத்திரண்டு பிராயத்து பாபா முதுகில் தட்டிக் கொடுத்து, ''உங்களுக்கு ஏன் இத்தனை ஸ்தாபனப் பற்று? ஏன் இத்தனை காரிய அரிப்பு? ஹிமாசலத்தில் ஏகாந்த தியானத்தில் நீங்கள் முழுகக் கூடாதா? உலக நலன் என் ஆவது என்கிறீர்களா? நீங்கள் மட்டும் யோகஸித்தி அடைந்துவிட்டால் போதும், அதன் சக்தி குகையையும், வனத்தையும், இமயத் தொடரையும் துளைத்துக் கொண்டு வெளியே பரவி, உலகத்துக்கு இப்போது நீங்கள் செய்வதைவிட உயர்ந்த நன்மையை நிச்சயமாகத் தரும். உங்கள் சரீர ரக்ஷணத்தைக் குறித்தும் தயங்கவேண்டாம். பனியில் உங்களுக்கு நான் போர்வையாக இருப்பேன்; பசிவேளையில் போஜனமாக வருவேன். யோக க்ஷேமம் வஹாம்யஹம்'' என்றார்.

முதிர்ந்த யோக சாதகரான பிரபல தமிழ்க்கவி ஒருவர் பாபாவிடம், ''ஸ்வாமி! எத்தனையோ அற்புதம் செய்கிறீர்களே, எனக்கு இரு இறகுகள் சிருஷ்டித்துத் தாருங்களேன்! எனக்கு உலகத்தின் முக்கியமான மொழிகள் யாவும் தெரியும்; கவித்துவமும் உள்ளது. சிறகடித்து உலகெங்கும் பறந்து நானா மொழிகளிலும் உங்கள் புகழைப் பாடி நானில முழுதும் பரப்புகிறேன்'' என்றார்.

உடனே ஸ்வாமி, ''என் காரியத்தை நான் கவனித்துக் கொள்கிறேன் ஐயா! உம்மைப் பொறுத்தமட்டில், இப்போதே உம் பறப்பு அதிகம், உம் இறக்கைகளைக் கட்டிப் போடலாமா என்றுதான் ஆசைப்படுகிறேன். நீர் ஏன் ஓரிடத்தில் அடங்கியிருந்து, கற்ற யோகத்தை முற்றும் அநுபவமாக ஆக்கிக் கொள்ளக் கூடாது?'' என்றார் நறுக்கென.

எத்தனை அபயதானம் தந்தாலும், ஏகாந்தத்துக்குப்போகும் துணிவு எளிதில் எவருக்குத்தான் வரும்? அப்படியானால் நிர்மானுஷ்ய அடவியில் ஸ்வாமி யோகக்ஷேமம் வகிப்பதற்கு உதாரணமே இல்லையா?

இருக்கிறது. இதுவே, அவரை இந்த ஸத்யஸாயி உருவில் அறியாதாருக்கும் அவர் காப்புத் தருகிறார் என்பதற்கும் உதாரணமாக இருக்கிறது.

Koviloor Digital Library

1957 ஜூலை பிற்பகுதி. அடியார்களோடு ஐயன் (ஹ்ற)ருஷீகேச யாத்திரை செய்த சமயம்.

ஹிமாலயத்தில் வஸிஷ்ட குகைக்குச் சென்றுவிட்டு ஸ்ரீ சிவானந்தாசிரமத்துக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

வழியிலே பாபா திடுமென சரீரத்தை விட்டு வெளியேக, உடல் கீழே சாய்கிறது.

இம்மாதிரி சந்தர்ப்பங்களில் வெளியே வேறெங்கோ அவரது சூக்ஷ்ம சரீரம் புரியும் செயல்களின் பிரதிபலிப்பு இங்கே கட்டையாகக் கிடக்கும் ஸ்தூல சரீரத்தில் தெரிவதுண்டு.

அதன்படி இப்போது பாபாவின் உள்ளங்கைகள் ஒன்றையொன்று பொத்தி எதையோ அடக்கமாகக் காப்பது தெரிகிறது.

சிறிது போதுக்குப்பின் எழுந்து அமருகிறார்.

"எங்கு போயிருந்தீர்கள் ஸ்வாமீ?" என்று பக்தர் வினவுகின்றனர்.

சில சமயங்களில்தான் அவர் இதைப் பகருவார்.

இன்று கருணைகூர்ந்து, "சொல்கிறேன்" எனக் கூறி, "சுப்ரம்மண்யத்தைக் கூப்பிடுங்கள்" என்கிறார்.

பாபா கோஷ்டியைச் சேர்ந்த சுப்ரம்மண்யம் வந்தவுடன் அவரிடம், "வஸிஷ்ட குகையில் என்ன பார்த்தாய்?" என்று கேட்கிறார்.

சுப்ரம்மண்யம் பதைப்புற்று, "ஸ்வாமீ, தங்களிடம் சொல்லலாமா வேண்டாமா என்று யோசித்துச் சொல்லாதிருந்துவிட்டேன்! ஆனாலும் தாங்கள் அறிந்துவிட்டீர்கள்!" என்றார்.

"இவர்களுக்குச் சொன்னாலொழியத் தெரியாதே! நீயே சொல்" என்றார் பாபா.

சுப்ரம்மண்யம் கூறினார்: "வஸிஷ்ட குகைப்பக்கத்தில் கங்கையில் ஒரு உடல் அடித்துச் செல்லப்படுவதைப் பார்த்தேன். யோகி போல் இருந்தது. பத்மாஸனத்தில் இருந்தார். அந்த உட்கார்ந்த நிலையிலேயே அவரை வெள்ளம் அடித்துச் சென்றது. பிணம் என்றே தோன்றியது. எனவே இதைச் சொல்லி எல்லோருக்கும் அமங்கள உணர்வை உண்டாக்குவானேன் என்றுதான் பேசாதிருந்து விட்டேன்."

"பிணமில்லை" என்றார் பிரான். "அந்த யோகி கரையில் ஒரு மண் மேட்டுப் பாறைமேல் அமர்ந்து தியானத்தில் அமிழ்ந்து

Koviloor Digital Library

விட்டார். கங்கை பெருகிவந்து மேட்டை அரித்து, அதை அப்படியே அடித்துச் செல்ல ஆரம்பித்து விட்டது. அதுகூட யோகிக்குத் தெரியாது. மண் முழுதும் வெள்ளத்தில் சிதறியதும், மேற்பாறை சரிந்தது. யோகி வெள்ளத்தில் விழுந்து விட்டார். அவரறியாமலே பிராணாயாம சக்தி அவரை மிதக்க வைத்தது. அப்புறம் வெளிப் பிரக்ஞை வந்தது. என்னதான் யோகியாயினும், உயிர்போய் விடுமோ என்றவுடன் பயம் பிடித்துக் கொண்டது! 'பகவான்' என்று அடிமனத்திலிருந்து கூவினார். உடனேதான் நான் சரீரத்திலிருந்து கிளம்பினேன்.

"அங்கு ஓடினேன். கங்காப் பிரவாகம் அவரது இதயத்தைப் பிளக்காமல், இதயத்தின் முன்னும் பின்னும் என் சூக்ஷ்மக் கைகளைப் பொத்திக் காத்தேன். இவர் உணவு உட்கொண்டு வெகு காலமாகிவிட்டதால், சாப்பாடு கிடைக்கும் இடமாகப் பார்த்துக் கரையேற்றலாம் என எண்ணி, அப்படியே வெள்ளத்தின் மீதே முப்பதுமைல் தள்ளிக் கொண்டுபோய் விளையாட்டுப் பார்த்தேன். சிவாநந்த நகருக்குப் பக்கத்தில் ஒரு குடியானவன் வீட்டில் அவரைக் கரை சேர்த்தேன். சில்லித்துப் போன அவருக்கு அங்கே கணப்பு கிடைத்தது; வாடிய வயிற்றுக்கு ரொட்டி கிடைத்தது" என்று முடித்தார்.

ஸத்யஸாயி என்ற பெயரையே கேட்டிராத ஒருவர் பகவானுக்குத் விடுத்த கூப்பாடு அந்த ஸத்யஸாயியின் காப்பை இழுத்து வந்து விட்டது என்றால் என்ன அர்த்தம்? குழந்தைகூடச் சொல்லிவிடுமே!

பெயரேதும் சொல்லாமல் ஆதிமூலப் பரம்பொருளை கஜேந்திரன் கூவி அழைத்தான்; நாராயணன் எனப் பெயர் கொண்ட தேவதேவன் அங்கே விரைந்தான் என்ற புராணமே நவீனமாயிற்று!

சாதாரணமாக மகா யோகஸித்தர்களும் தமது வடிவத்தை வழிபடுவோரும், தமது நாமத்தை ஓதுவோரும், தம்மிடம் தீக்ஷை பெற்றோரும் ஆபத்திலிருப்பதை மட்டுமே உணர்ந்து ஸூக்ஷ்ம சரீரத்தால் காப்பு அளிப்பதைத்தான் வரலாறுகளிலிருந்து அறிகிறோம்.

இந்த அம்சத்தில் பாபா தனித்துத்தான் பிரகாசிக்கிறார். அதோடு, அவரிடம் துளிக்கூட சுயவிளம்பர எண்ணமில்லாததால், மேற்படி வசிஷ்டகுகை யோகி போன்ற பலருக்குத் தாம் அருள் புரிந்த பின்னருங்கூட தமது ஸாயி ஸ்வரூபத்தையோ ஸாயி நாமத்தையோ வெளிப்படுத்துவதில்லை.

பாபா சிலருக்குத் தரும் தாயத்து, மோதிரங்கள் போன்றவை மட்டுமே அவற்றை அணிவோரின் இடர்களை அவருக்குத் தெரிவித்து ரட்சனை பெற்றுத் தருமாக்கும் என எண்ணுவோர் இதிலிருந்து தெளிவு பெற வேண்டும். இதுபோன்ற ஸ்தூலப் பரிசுகள் மூலம் பக்தரை அவர் எப்போதும் ஸ்பரிசிப்பதும்

Koviloor Digital Library

ஒரு லீலா விநோதமேயன்றி, முழு சத்தியமல்ல. பக்தியே தான் உண்மைத் தாயத்தாக ஸாயித் தாயைக் கட்டிப்பிடித்துத் தருகிறது. இவரால் இடுக்கண்களில் ரக்ஷிக்கப்பட்ட எல்லோரும் ஸ்தூலப் பரிசுகள் பெற்றவர்களா என்ன? அல்லவே அல்ல.

அவரே சொல்வார்: ''ஸாயி என்ற ஆகாரத்தில் (உருவத்தில்) தான் பக்தி செய்யவேண்டும் என்பதில்லை. இந்த நராகாரம் உண்மையில் நிராகரப் பிரம்மந்தான். எந்த ரூபத்திடம் மெய்யன்பு செய்வோரும் ஆபத்தில் எழுப்பும் எஸ்.ஓ.எஸ். இந்த எஸ். எஸ். எஸ்ஸை (ஸ்ரீ ஸத்ய ஸாயியை) அடைந்துவிடும். ஒருவர் எம் முறையில் ஆத்ம முன்னேற்றத்துக்கு முயன்றாலும், அந்த மார்க்கத்தையே நான் ஒரு முறைக்கு மும்முறை yes, yes, yes என்று அங்கீகரிக்கின்றேன். இன்னும் சொல்லப்போனால், 'பகவான் — பக்தி' என்றெல்லாங்கூட இல்லாமல் ஒருவன் சத்தியத்தையும், தர்மத்தையும் விடாமல் எல்லோரிடமும் அன்புபூண்டு யோக்கியனாக இருந்தாலே போதும், அவன் எந்த நாமாவையுமே சொல்லாவிடினும், அழையாவிடினும், நானே அவனது ஆபத்தில் பக்கத்தே சென்று இடர் கடிந்துவருகிறேன்.''

இங்கே எஸ்.ஓ.எஸ். அனுப்பச் சொன்னதுங்கூட லீலைதான். சிலர் தங்களுக்கு நேரவிருக்கும் ஆபத்தை உணராதிருக்கிற போதும், அதாவது தீனக்குரல் எழுப்ப அவசியம் இருப்பதையே அறியாதபோதும் இவராக ஆபத்தைக் களைந்தெறிந்த சந்தர்ப்பம் பல. பிறகே அவர்கள் தங்களுக்கு எப்பேர்ப்பட்ட விபத்து ஏற்படவிருந்தது என்று தெரிந்து கொண்டிருக்கிறார்கள்.

'நானிருக்கப் பயமேன்?' அருளில் [பாபா பாபாதான்,. சந்தேகமில்லை.

* * *

பயம் போக்குபவரே அவ்வப்போது கொஞ்சம் பயமுறுத்தியும் விளையாடுவதுண்டு. லீலையில் இது ஒரு ரகம்!

தமக்கை வெங்கம்மாவுக்கு இப்படித்தான் ஒரு நள்ளிரவு பயம் உண்டாகிவிட்டது.

வாசலில் யாரோ கூப்பிட்டாற்போலிருந்தது. அப்புறம் அவள் படுத்திருந்த அறைக்குள்ளேயே சோள மூட்டைகளுக்குப் பின் எதுவோ, அல்லது எவரோ சஞ்சரிக்கும் அரவம் கேட்டது. பயமாக இராதா?

'தம்பி'யை நினைத்து, தைரியப்படுத்திக்கொண்டு விளக்கை ஏற்றினாள்.

தம்பிரான் ஏமாற்றிவிட்டாரே என்ற நினைப்பு வந்தது. இவள் அவரிடம் ஷிர்டிபாபா படம் கேட்டிருந்தாள்.

Koviloor Digital Library

"ஓ. தருகிறேன்! குருவார பூஜை அதற்குத்தான் செய்யப் போகிறாய்" என்றார் நம்பிஸ்வாமி. சொன்னாரே தவிர, படம் தராமலே இன்று, புதன்கிழமை, உரவகொண்டாவுக்குப் போய் விட்டார்.

வெங்கம்மா விளக்கு வெளிச்சத்தில் மூட்டைகள் பக்கம் பார்த்தாள். ஒரு மூட்டைக்கு மேல் வெளேரென்று எதுவோ நீட்டிக் கொண்டிருந்தது. அருகே சென்று பார்த்தால், காகிதச் சுருள். பிரித்துப் பார்த்தால்.... வேறென்னவாக இருக்கும்? ஷிர்டிபுரீசர் திருவுருவப்படந்தான்!

நம் கதாநாதன் சித்திரதானம் செய்வதை முதலில் ஸ்ரீமதி காசிபட்ல விஷயத்தில் கண்டோம். இன்று வெங்கம்மாவுக்கு. இனி, பல்லாண்டுகள் பலருக்கு (வி)சித்திர தானம் தொடரப் போகிறது. ஒரு 'ஸாம்பிள்' இங்கேயே பார்த்துவிடலாம்.

தஞ்சை விஜயபுரம் துர்க்கா ஆசிரமத் தலைவரான குஞ்சப்ப ஸாது ஒரு திமிர்வு நோயாளி; அங்க ஊனமுற்றவரும் கூட. உள்ளூருக்குள் சஞ்சரிப்பாரேயன்றி வெளியூர்ப் பயணம் செய்ய இயலாதவர். ஆயினும் இவருக்குப் பர்த்தி சென்று ஸத்ய பாபாவைத் தரிசிக்க முடியவில்லையே என நீண்டகால மாக ஏக்கம்.

1965 ஜூன் 17-ந்தேதி அதிகாலை வழக்கம்போல் மாட்டுக் கொட்டிலில் தீனி வைத்துவிட்டு வந்து படுக்கையில் சாய்ந்தார். வாயிற்கதவு தட்டப்பட்டது. ஸாது சென்று திறந்தார்.

முன்பின் தெரியாத ஒருவர் அவரிடம் ஒரு படத்தை நீட்டினார். ஸாது அதை வாங்கிக் கொண்ட உடனேயே வந்தவரைக் காணவில்லை. ஸாது தெருவுக்குச் சென்று பார்க்க, ஒரு சுவடும் இல்லாமல் அந்த நபர் மறைந்து விட்டிருந்தார்.

படத்தைப் பிரித்தார். சொல்லவும் வேண்டுமா? நம் ஸ்வாமியின் சித்திரந்தான்.

'என்னால் பர்த்தி வர இயலாது என்பதால் நீயே இங்கு வந்து உன்னையே கொடுத்துச் சென்றாயா?' என்று நெகிழ்ந்தார் குஞ்சப்ப ஸாது.

இந்த அதிசயத்தை நண்பரிடம் சொல்லி வியந்தார். நண்பர், "உங்களுக்கு பாபாவிடமுள்ள பக்தியைப் பற்றித் தெரிந்த ஆசாமி எவராவதுதான் படத்தைக் கொடுத்துவிட்டு வேகமாக நழுவியிருப்பாரோ என்னவோ? பாபாதான் வந்தார் எனில் புட்டபர்த்தியிலிருந்து தஞ்சாவூருக்கு வந்தவர், உங்கள் அறைக்குள்ளேயே தோன்றியிருக்கலாமே! ஏன் வாசலில் வந்து கதவைத் தட்ட வேண்டுமாம்?" என்று ஐயத்தைக் கிளப்பி விட்டார்.

நாள் முழுதும் பாழாய்ப் போன சந்தேகம் குஞ்சப்ப ஸாதுவைக் குழப்பிற்று. மறுநாள் புலருமுன் மாட்டுத் திவனம்

Koviloor Digital Library

வைக்க எழுந்தபோது இவரது படுக்கையிலேயே எதுவோ தட்டுப் பட்டது.

இன்னொரு படம். படம்தான் வேறே தவிர, படத்திலிருந் தவர் அவரேதான்!

'உன்னிடம் சந்தேகப்பட்டதற்காக எனக்கு ஒட்டிக்கு இரட்டையாக அருட்பரிசா?' என்று உருகினார் ஸாது.

* * *

''ஷிர்டி ஷிர்டி என்று 'மருமான் பெருமான்' பாடுகி றானே, அந்த ஊர் எப்படியிருக்கும்? அந்த ஷிர்டி பாபா பட உருவில் அன்றி உயிர்வடிவில் எப்படியிருப்பார்?'' என்றறியும் ஆசை அத்தை கோனம்மாவுக்கு உண்டாயிற்று. ஒரு நாட் காலை பாலஸாயியிடமே தன் விருப்பத்தை வெளியிட்டாள்.

''அத்தை, ஸாயங்காலம் உன் ஆசையைப் பூர்த்தி பண்றேன்'' என்றார் அருளாளர்.

அந்தி மயங்கும் ஸந்தியில் அத்தையை அழைத்தார் அத்தன். தம் திருக்கையால் அவள் கண்களைப் பொத்தி வீட்டின் கோடியறைக்கு இட்டுச் சென்றார். கரத்தை எடுத்துவிட்டு, ''அதோ பார்'' என்று எதிரே காட்டினார்.

அத்தைக்கு ரத்தம் குளிர்ந்தது; சித்தம் மிளிர்ந்தது.

சதையும் தசையுமாக ஸாக்ஷாத் ஷிர்டிஸாயிபாபா அங்கே அமர்ந்திருக்கிறார்! படங்களில் கண்ட உருவம் ஜீவனுடன் பொலி கிறது! இரண்டு வித்தியாசங்கள். ஒன்று: கண்களைத் தியான நிலையில் மூடியிருக்கிறார். இரண்டு நெற்றியிலே விபூதிப்பட்டை பளிச்சிடுகிறது.*

ஷிர்டி சூழலே அங்கு வந்துவிட்டது. பாபாவைச் சுற்றி சாம்பிராணி, ஊதுபர்த்திகளின் தூபம் மனோஹரமாக மணக் கிறது.

பர்த்தி நாதன் குரல் ஊதுவர்த்திச் சுருளாகவே சுருண்டு மணந்தது: ''பார்த்தாச்சா, அத்தை?''

மீளவும் அவள் கண்களைப் பொத்தி வெளியே அழைத்து வந்தார்.

* பாபுராவ் சாந்தோர்கர் என்ற பரம பக்தர் ஷிர்டி பாபாவுக்குத் திருநீற்றை முப்பட்டையாக இடுவதுண்டு என அறிகிறோம். அத்தை யம்மை கண்டது அப்படிப்பட்ட கோலந்தான். வெளிப்பார்வையில் 'உதி' எனும் விபூதிப் பிரஸாதம்தானே இரு பாபாக்களையும் முக்யமாக ஒன்றுபடுத்துகிறது? அதனால் விபூதிதாரணக் கோலம் போலும்!

Koviloor Digital Library

(அத்தை பெற்ற இன்னொர் அநுபவம்: புட்டபர்த்தி கண்டிராத ஒரு கனியை அவருக்குக் கொடுத்தார் பாலஸாயி. "இது ஷிர்டிப் பழம்" என்றார். "நாயனா, இவ்வளவு நல்லா இருக்கே! இங்கே வர்றவங்களுக்குத் தலைக்கு ஒண்ணு படைச்சுக் கொடேன்" என்றாள் அந்த நல்ல மநுஷி. "கொண்டு வா ஒரு கூடை" என்றார் வரதராஜர். கூடை வந்தவுடன் 'முன்னைப் பழம் பொருள்' அதை ஒரு தட்டுத் தட்ட, கொல்லென்று அது முழுதும் ஷிர்டிப் பழங்கள் நிறைந்து விட்டன. அன்று பஜனைக்கு ஏறக்குறைய நூறு பக்தர் வந்து விட்டனர். கூடையிலோ நாற்பது பழத்துக்குமேல் பிடிக்காது. "பரவாயில்லை, தலைக்கு ஒண்ணு கொடுத்துண்டே போ" என்றார் பாபா. அத்தையும் அபூர்வக் கனியைக் கொடுக்கக் கொடுக்க வளர்ந்து அத்தனை பேருக்கும் முழுசாக ஒவ்வொன்று கிடைத்தது. வெறும் கூடையில் நாற்பது பழம் முளைக்கும் போது, நாற்பது நூறாக வளர முடியாதா என்ன?

* * *

முன்பு நமக்கு அறிமுகமான பெனுகொண்டா வக்கீல் ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார் சிலரோடு வந்து பெத்த வெங்கப்பராஜுவிடம் ஏக ரகளை கட்டினார். "பிள்ளையைக் கிளப்பிவிட்டு, ஊர் கூட்டி, கலாட்டா செய்கிறாயாமே! ஷிர்டியாம், பாபாவாம் இதெல்லாம் என்ன புரளி? மகனை அடக்கிவை" என்றார்.

அப்போது உள்ளே பிள்ளையாண்டார் சாவதானமாக சுப்பம்மாவுக்கு ஷிர்டிக் காட்சியை அருளிக் கொண்டிருந்தார். ஏனோ இவருக்கு ஷிர்டி பாபாவைக் காட்டாமல், அவரது சமாதியையே காட்டினார். அதன் அருகேயுள்ள மாருதி ஆலயத்தோடு, தூரத்தே உள்ள வேப்ப மரத்தோடு சேர்த்துக் காட்டினார். ஸ்தல தரிசனமே மூர்த்தி தரிசனத்தளவு பாவனமாக இருந்தது.

சுப்பம்மாவிடம், "வாசலில் இருக்கும் வக்கீல் வகையறாக்களை அழைத்து வா" என்று கூறி அனுப்பினார் ஸ்வாமி.

அப்படியே அழைத்து வந்தாள்.

'புரளி' என்று எகத்தாளம் செய்தவர்கள் ஷிர்டியைக் கண்குளிர, கருத்து குளிர தரிசனம் செய்துகொண்டனர். அவர்கள் நாஸ்திகரோ, தீயவரோ அல்லராதலால் இக்காட்சியில் உண்மையான தெய்விக உணர்வைப் பெற்றனர்.

நிந்திக்க வந்தவர் வந்தித்துச் சென்றனர்.

* * *

1950-ல் பாபா பிரசாந்தி நிலையப் புது மாளிகைக்குப் பெயர்வதற்கு முற்பட்ட காலமே அலாதிதான் என்று பழவடியார்

Koviloor Digital Library

சொல்வதுண்டு. இன்று அவரைச் சுற்றி ஏகக் கூட்ட மாகி விட்டதால் பக்தர்களை உடன்வைத்துக் கொண்டு, தனித் தனியாகக் கவனம் செலுத்தி, லீலை செய்து கும்மாளி போடுவதற்கு ஸ்வாமியால் முடியவில்லை. கால — தேசங்களுக்குக் கட்டுப் படாத சூக்ஷ்ம தேகத்தால் இப்போதும் ஏராளமான பக்தருக்குத் தாராளமாக அருள் புரிந்துதான் வருகிறார். ஆனால் ஸ்தூல சரீரத்தைக் கால—தேசங்களுக்கு அவரே கட்டுப்படுத் தித்தான் இருக்கிறார். அதனால் இன்று அடியாரிடம் தனிக் கவனம் காட்டுவது வெகுவாகக் குறைந்துவிட்டது. இன்று அவர் சித்ராவதிக் கரைக்குச் செல்கிறாரெனில் கூடவே ஆயிரமாயிரவர் தொடரத்தானே செய்வர்? அவ்வளவுபேரும் படுகையில் அமரக் கூட இயலாதே! அன்று அப்படியில்லை. தரிசனம், கோரிக்கை* இவற்றுக்குப்பின் நூறு பேருக்குள்தான் இருப்பர். எனவே அனைவரையும் அழைத்துக்கொண்டு பிரதி மாலையும் ஆற்றங்கரைக்குச் செல்வார். அங்கே அன்றாடம் செய்த அற்புதங் களோ எண்ணில. ஆற்று மண்ணிலே கையை அளைந்து அளைந்து எத்தனை விதமான பிரதிமைகள், 'பட்சணங்கள், பழங்கள், படங்கள் எடுத்தெடுத்து வழங்கியிருக்கிறார்!

* * *

'கொடி கட்டிப் பறக்கும்' மரம் ஒன்று சித்ராவதியை அடுத்த குன்றின் உச்சியில் உண்டு. அதில் ஒரு கொடியைக் கட்டி விட்டிருப்பதற்குக் காரணம், அது ஒரு காலத்தில் கற்பக விருக்ஷ மாக இருந்ததை நினைப்பூட்டத்தான்.

பாபாவின் பம்பை முடி போலவே தோன்றும் அம்மரம் இன்று வெறும் புளிய மரமாகத்தான் இருக்கிறது. ஆதியிலும் அப்படித்தான் இருந்தது. ஒருநாள் பாலஸாயி, பக்தர்களை அம் மரத்தடிக்கு அழைத்துச் சென்றார்.

''யார் யாருக்கு என்னென்ன பழம் வேண்டுமோ அதை இந்த மரத்திலிருந்து பறித்துக் கொள்ளுங்கள்'' என்று சந்தன வெள்ளமாகச் சிரித்துக் கூறினார்.

ஒருத்தர் வாழைப் பழத்தை நினைத்துக்கொண்டு புளிய மிலாற்றை உருவினார்; கையில் செவ்வாழைக் கனியே வழுக்கிக் கொண்டு வந்தது.

வேறொருவர் ஆரஞ்சை, இன்னொருவர் ஆப்பிளை, பிறி தொருவர் அத்தியை, மற்றொருவர் அன்னாசியை — என்று இப்படி ஒவ்வொருவர் ஒரு கனி வகையை நினைத்துப் புளிய மரத்தில்

* பாபா அடியாருக்கு அந்தரங்கமாக அளிக்கும் பேட்டியை "கோரிக்கை" என்பது வழக்கம். "கோரிக" என்று தெலுங்கு மொழியில் வழங்குகிறது. பொதுவாக 'இண்டர்வ்யூ' என்றே சொல்கிறார்கள். ஆனால் இது தெய்விக பேட்டியைக் குறிப்பதாகத் தோன்றாமல், சாதாரண மான பேட்டி போலவே தொனிக்கிறது. 'ஆடியன்ஸ்' என்றாவது சொன்னால் ஒரு படி உயர்வாக இருக்கும்.

Koviloor Digital Library

பறித்தவர். அவரவர் விரும்பிய பழமே கையில் கனத்தது, நாசியில் மணத்தது, நாவில் ருசித்தது. கூடுதலாக அப்பழங்களில் ஸாயிப் பிரேமையின் கனமும் மணமும் ருசியும் சேர்ந்திருக்கும்!

இன்று பாபாவுக்கான ஆரத்திப் பாடலொன்றில், ''ஆச்ரித கல்ப லதிகா—ஆபத்பாந்தவா'' என்ற பதங்கள் வருகின்றன.

கஷ்டங்கள் தீர்க்கும் கலியுகவரதா
கற்பகமாகும் உன் திருக்கரமே

என்று இன்னொரு பாடல். அவரே கற்பகம். குழைவு மிக்க ஸாயிச்வரியாதலால், அவரைக் கற்பக 'மரம்' என்பது பொருத்தமில்லை; கற்பகக் கொடி — கல்ப லதிகா — என்றே சொல்கிறோம். இந்தக் கற்பகக் கொடி தன் சங்கல்பத்தில்தான் புளியமரத்தை ஒரு நாள் கற்பக விருட்சமாக்கி, விரும்பியதை நல்கும்படிச் செய்தது.

மாமதுரையில் ஸோமசுந்தரர் ஸித்தராக வந்துசெய்த பல லீலைகளில் எட்டி மரத்தில் சுவைக் கனிகளைப் பழுக்க வைத்ததும் ஒன்று. புட்டபர்த்தியாம் ஆலவாயில் ஸோமவாரத்தில் பிறந்த நம் பிரான் திட்டத்தில் இப் புளியமரம் புராண எட்டி மரத்தின் மகிமையை எட்டிவிட்டது!

புளிமரத்தை இன்கனித் தருவாக்கியவர், நாம் மட்டும் நம் புளித்த மனத்தை அவர்வசம் ஒப்புவித்தால் அதை மதுர மயமாக்காது இருப்பாரா?

புளிய மரத்தில் கனிகள் மட்டுமா பழுக்கவைத்தார்? தெய்வ விக்கிரகங்களையும் பழுக்கவைத்துவிட்டார்.

அப்போதைக்கு நாவுக்கு ருசித்து, வயிற்றை நிரப்பும் பழங்களைத் தந்ததோடு திருப்தியடையாத பாபா, ''அவரவருக்கு விருப்பமான விக்ரஹத்தைப் பறித்துக்கொள்ளுங்கள்'' என்றார்.

பக்தர்கள் விநாயகர், முருகன், கண்ணன், ராமன், திருமால், லக்ஷ்மி, சரஸ்வதி, பார்வதி, சிவன், பாபா எனத் தாங்கள் விரும்பிய பிரதிமைகளைப் பறித்துக் கொண்டனர். சின்ன புளியங்கச்சியில், நுனியிலே நாலு புளிய இலைகள் அப்படியே மாறுதிருக்க, பிரதிமைகளும் இயல்பாக ஒட்டிக்கொண்டு வந்தன.

''உனக்குப் பிரதிமா (ஈடுஜோடு) இல்லையப்பா'' என இந்திரனை நோக்கி வேதம் கூறுவது நம் இந்திர ஜாலக்காரருக்கும் பொருந்தும்.

கற்பக நல் நிழலைப்
பாரினிடை வரவழைப்பீர்

என்று தாயுமானவர் கூறியதை இன்று சத்தியமாக்கிவிட்டார் நம் ஸத்யர்.

Koviloor Digital Library

புட்டபர்த்திப் புளியமரத்தை மட்டுமின்றி, வேறுசில மரங்களையும் பாபா தமது சஞ்சாரங்களின்போது கல்பகமாக்கியிருக்கிறார்.

கற்பகம் வேறு, பாரிஜாதம் வேறு என்று பண்டிதர்கள் கூறுவராயினும், மெத்த அறிந்தவர்களில் பலரும் இவற்றை ஒன்ருகச் சொல்வதையும் காண்கிறோம். பாமைக்காகக் கண்ணன் விண்ணகம் சென்று இந்திரனை வென்று பாரிஜாதம் கொணர்ந்து துவாரகையில் நட்டதை ஆழ்வார்கள்,

> ஏவிளங் கன்னிக்காகி இமையவர் கோனைச் செற்று
> காவளம் கடிதிறுத்துக் கற்பகம் கொண்டு போந்தாய்

என்றும்,

> மட்டேறு கற்பகத்தை மாதர்க்காய்
> வண்துவரை நட்டானை

என்றும் கூறுகிறார்கள்.

பாமைதான் பர்த்தியில் ஸத்யம்மாவாகக் கோயில்கொண்டாள். கற்பகம் கொணர விண் சென்ற ஐயனுக்காகக் காத்திருந்த போதே காற்று மழையில் சிக்கிக் கொண்டம ராஜுவிடம் உதவி கோரினாள் அவள். ஆண்டுகள் கழிந்த பின் ஐயனும் அவதரித்தான். அதாவது, கலிமலிந்த இன்று தர்மம் என்ற கற்பகத் தருவைக் கண்ணன் கொணர்ந்து நடமாட்டானு என்றே பூமாதேவி இங்கு தவமிருந்திருக்கிறாள்; தவம் பலித்தது. இன்று நானு நாடுகளிலும் விரியும் கற்பக விருட்சமாக ஸ்வாமி செய்யும் தர்ம ஸ்தாபனந்தான் எப்பேர்ப்பட்ட அரும் பெரும் பணி!

இன்று ஆலாகத் தழைத்துள்ள அப்பணியின் கன்று பச்சிட்ட அன்றே கொண்டமராஜுவுக்குத் தாம் கனவிற் கண்டது நனவாகி, கண்ணன் வந்து விட்டான் என்ற உறுதி ஏற்பட்டு விட்டது. தாம் நூறாண்டு வாழ்ந்தது வீணுக்கில்லை என விம்மிதமுற்றார். ஆயினும் அந்தப் பெருமிதம் செருக்காக ஆகவேயில்லை. ஸ்வாமியின் பாட்டனார் என்பதற்காக எந்தப் பெருமையும் பாராட்டாமல், தமது தொண்டு கிழப் பருவத்திலும், ஸாயி பக்தர் தம்மை வணங்க வந்தால், நடுங்கும் கால்களைச் சமாளித்துக் கொண்டு எழுந்திருந்து நிற்பார்!

'குடும்ப ஃபோட்டோ'வே எடுத்துக் கொள்ளாத பாபா, தாத்தாவின் நூறாவது பிறந்த நாளன்று அவரது தோளில் தம் முழங்கையை வைத்துக்கொண்டு புகைப்படம் எடுத்துக் கொண்டார். அவரது எளிமைக்கு பகவான் தந்த பரிசு!

பின்னும் பத்தாண்டுகள் சென்றன. கொண்டமரின் அந்திம காலம் வந்தது. பிரபு அவர் பக்கலில் வந்தமர்ந்தார். கிழவர் வலுவிழந்த கரங்களில் அன்புச் சக்தியால் தெம்பூட்டிக் கொண்டு அவற்றைத் தூக்கி, பௌத்திர பவித்திரரின்

Koviloor Digital Library

சுற்றைக் குழல்களைக் கோதினார்; கண்ணனின் கண்ணாடிக் கன்னங்களை வருடினார்; ஸாயீச்வரியின் அபயவரதக் கரங்களைத் தம் கைகளால் தட்டித் தடவிக்கொடுத்து, தம் விரல்களை வினைதீர்க்கும் விறல் கொண்ட ஸ்வாமியின் விரல்களோடு கோத்துக்கொண்டார். லேபாக்ஷி ராமாயணத்தில் வாலி ஸ்ரீராமனை நாராயணனாகவே உணர்ந்து, ''என் பாக்யமே பாக்யம்! சாக்ஷாத் பரம்பொருளின் திரு முன் உயிர் நீத்துப் பிறவா நெறி சேர்கிறேன்'' என்று கூறும் கட்டத்தை ஒவ்வொரு மயிர்க்காலிலும் உயிர்ப்புடன் மொழிந்த படியே மோன முடிவில் முழுகினார். பார்த்தி நாரணன் அவரைத் தம்முள்ளேயே கொண்டிருப்பார் என்பதில் சந்தேகம் என்ன?

Koviloor Digital Library

அத்தியாயம்—24

கல்கிதானே?

தருமம்தவிர்ந்து பொறைகெட்டுச் சத்தியம்
சாய்ந்து தயை
தெருமந்து தன் பூசனை முழுதுஞ் சிதையக் கலியே
பொரும் அந்த காலக் கடையினில் எம்
பொன்னரங்கன் அல்லால்
அருமந்த கற்கி யென்றுரே, அவை நிலை ஆக்குவரே.

— பிள்ளைப் பெருமாளையங்கார்:
திருவரங்கத்துமாலை

தம் வாழ்வின் முதல் பதினாறுண்டுகள், காரணமற்ற விளையாட்டின்பமே மிகுந்த அற்புதங்களைக் காட்டியதாகவும், அடுத்த பதினாறுண்டுகள் வினைதீர்க்கும் மகிமையற்புதங்களை விஸ்தரித்ததாகவும், இதற்குப் பிற்பட்ட அறுபத்துநாலாண்டுகளில் அற்புதங்களோ 'டு உபதேசமும் தர்ம ஸம்ஸ்தாபனமும் முக்யத்துவம் பெறும் என்றும் பாபா கூறியுள்ளார். (இவ்வுடலில் 96 ஆண்டுகள் இருக்கப் போகிறாராம்.)

துவார்காதீசனாகவும், கீதாசாரியனாகவும் இருந்த கண்ணனை விடத் திராத விளையாட்டுப் பிள்ளையாம் பாலகிருஷ்ணன் தனிக் கவர்ச்சி பெற்றுத்தான் இருக்கிறான். ஆனால் அன்று கவரப்பட்டவர்களிடம் தனது தெய்விகத்தையே மறைத்து மாயமும் செய்தான் குட்டிக் கண்ணன். நம் ஸாயிக் கண்ணனும் இப்படித் தான்.

பால ஸாயியுடன் நெருங்கிப் பழகிய ஒருவர் இந்நூல் ஆசிரியரிடம் உள் கண்ணீரில் கனத்த குரலில் கூறினார்: ''அக்காலத்தில் அவர் எங்களுக்கு வெகு நெருக்கத்திலிருந்தும் நாங்கள் விநோதத்தை, விளையாட்டை மட்டுமே உணர்ந்தோமே யன்றி

Koviloor Digital Library

அவரது தெய்விகத்தை யல்ல. எப்போது, 'ஆஹா, இது தெய்வம்!' என்று உணரத் தொடங்கிறோமோ அப்போதே அவர் சடேரென விளையாட்டை நிறுத்திவிட்டு, நெருக்கத்திலிருந்து விலகி எட்ட நின்று விட்டார். 'பால லீலாயியுடன் கூடிக் களித்தவர்கள் பாக்யசாலிகள், நமக்கு அந்த பாக்யம் இல்லையே!' என்று உங்களைப் போன்றோர் எண்ணுகிறீர்கள். உண்மையிலோ நாங்கள்தான் கடைந்தெடுத்த ஏமாளிகள்; பக்கத்திலே பகவானை வைத்துக்கொண்டே அவரைக் கோட்டை விட்ட வடிகட்டிய அசடுகள். எங்களிடம்தான் ஸ்வாமி யோகமாயையை நன்றாகப் பிரயோகித்து விட்டார்! இன்றைக்கு எங்கள் பக்கத்தில் வந்தால்கூட, 'ஒரு காலத்தில் இவர்கள் கழுத்தைக் கட்டிக் கொண்டு தான் அத்தனை ஆட்டம் போட்டோம்' என்ற தனிப்பாசம் இம்மியும் இல்லாமல், ஏனையவர்களைப் போலவேதான் எங்களையும் கண்டுகொள்கிறார், கண்டுகொள்ளாமலும் இருக்கிறார்'' என்று நெடுமூச்செறிந்தார்.

பாலுடைச் சட்டை போட்டுக்கொண்டிருப்பதால், சரீரத்தைக் காலத்துக்குக் கட்டுப்படுத்தியுள்ள நம் ஸ்வாமியின் பாடும் இதுதான்! அவர் எல்லோரிடமும் தனிக்கவனம் செலுத்தக். காலம் நிச்சயமாக அநுமதியாது. ஏங்குகிறார்களே என்று பழைய பக்தரிடம் பாபா கூடுதல் கவனம் செலுத்தினால், நாம் அவர்களைவிட அதிகம் நெடுமூச்செறிவோம். 'ஆதியில்தான் இவர்களோடு ஆடியாச்சே; இப்போதேனும் இவர்களை விட்டு நம்மைச் சீராட்டக் கூடாதோ?' என்று ஆதங்கப்படுவோம்.

ஆதியிலும் இவர்களை வேறொரு விதத்தில் நெடுமூச்செறிய வைத்திருக்கிறார். இந்த விநாடி சித்ராவதி தடத்திலிருப்பார்; மறுநொடி பக்கத்துக் குன்றுச்சியில் நின்று, ''வாருங்கள், வாருங்கள்'' என்று கையாட்டுவார். இவர்கள் குண்டோட்டம் குதிரோட்டமாகக் குன்றேறிப் போனால், அடுத்த கணம் அவர் ஆற்றின் சலசல அலைகளிடை நின்று கலகலச் சிரிப்பலைகளைப் பரப்புவார். அடியார்கள் அலுத்துக் களைத்து ஆற்றுக்கே வந்தாலோ, பாபா அக்கரையிலுள்ள இன்னொரு குன்றுத்தொடரில் நின்று குறும்பாகக் கையாட்டுவார். மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்க பக்தர்கள் அங்கும் செல்வர். பாபா இறகைத் தூக்குவதுபோல் இவர்களுக்குக் கைகொடுத்துப் பாறை பாறையாக அநாயாசமாக ஏற்றிவிட்டு, அன்பு மயமாக ஆசுவாசம் செய்வார்.

சோமசுந்தரக் கடவுள் 'எல்லாம் வல்ல ஸித்த'ராக வந்தபோது, மகடிக்கு மகப்பேறு, ஊமைக்கு உரையாற்றல், பொட்டைக்குப் பார்வை என்றிப்படி பல அற்புதங்கள் செய்ததை நம் சரிதநாதனும் இனிப் பன்முறை செய்யப் போகிறார். இப்போது நாம் கண்ட பாலலீலை லீலைகளையும் ஆதியில் 'எல்லாம் வல்ல ஸித்தர்' செய்திருக்கிறார். 'தெற்கேயிருப்பவர் திடுமென மறைந்து வடக்கே தோன்றுவார். கிழக்கில் போவதாகக் காட்டி மேற்கில் நிற்பார். தொலைவில் உள்ளதை அருகிலும், அருகில் உள்ளதைத் தொலைவிலும் காட்டுவார்' என்றெல்லாம் திருவிளையாடற்புராணம் கூறுகிறது!

Koviloor Digital Library

நெடுமரங்கள் தமது இடுப்பளவே வருமளவுக்கு பாலலாயி ஓங்கி உலகளந்த விச்வரூபமும் அந்நாட்களில் காட்டுவாராம்.

''பாருங்கள்'' என்பார். அவர் சிரந்தைச் சுற்றிக் கண்ணைப் பறிக்கும் ஜோதிச் சக்கரம் சுழலும். அல்லது சிவபெருமானின் மூன்றுவது நேத்திரம் எனப்படும், சித்த ஒருமைப்பாட்டின் மூலஸ்தானமான புருவ மத்தியிலிருந்து ஒளிக் கிரணங்கள் பிரவகிக்கும்.

திடீரென அந்தர்தானமாவார். மேலே ஆகாசத்திலிருந்து சிரிப்பொலி கேட்கும். ஆம், பூரண சந்திரனுக்குள் இவரது மந்திர முகம் தெரியும். 'சந்திரமண்டல மத்யவாஸினி' என்று அம்பிகையைச் சொல்லியிருக்கிறதல்லவா?

மதியாகக் குளிர்ந்திருப்பவரே, அருணுசல அக்னி ஸ்தம்பமாகவும் அவ்வப்போது நிற்பார்.

அன்று அமாவாசை முன்னிருட்டு. நதி தீரத்திலிருந்த திரா விளையாட்டர் எங்கே போனார் என்பதே உடன்வந்த பக்தர்களுக்குத் தெரியவில்லை.

''பாருங்கள் ஜோதி தரிசனம்!'' என்று குன்றுச்சிப் புளிய மரத்தடியிலிருந்து தீங்குரல் வந்தது.

அத் திக்கு நோக்கி பக்தர் முகங்கள் நிமிர்ந்தன.

அங்கோர் ஒளிப் பந்து! அமாவாசை வானில் அபிராமி பட்டர் கண்டாற் போன்ற முழுமதியமா?

கதிர் மதியம் பின்னும் ஒளிகூடிக் கதிரவனுகவே ஆகி, காணவொண்ணுப் பிரகாசத்தைப் பொழிகிறது.

பிற்பாடு இச் சரிதையில் நாம் சந்திக்கவிருக்கும் ஸ்ரீ லோகநாத முதலியாரின் குமாரி வர்ணிப்பதைக் கேளுங்கள்:

''சித்ராவதி நதிக்கரை இருளில் முழுகியிருந்தது. கல்ப விருக்ஷம் இருந்த பகுதியை நோக்கி அடியார்களின் பார்வை ஒருமுகப்பட்டிருந்தது. இமைக் கொட்டும் நேரத்தில், மின் வேகத்தில் இப்போது தான் பகவான் அவ்விடத்தை அடைந்திருந்தார். அவரது மதுரக்குரல் கேட்டது: ''கனபடதானு?'' (''நான் காணப்படுகிறேனு?'')

''நாங்கள் கண்ட காட்சிதான் என்னே? ஓர் ஒளிப் பிழம்பு உதிக்கிறது. அதன் நடுவில் தேவி மஹாலக்ஷ்மியைக் கண்டோம்! சிவப்புச் சேலையும், அழகிய மஞ்சள் கஞ்சுகமும் அணிந்து, கண்ணைப் பறிக்கும் நகைகள் பூண்டு விளங்கினுள் தேவி. ஒளியும்

Koviloor Digital Library

கவர்ச்சியும் வாய்ந்த அவளது வதனத்தின் நடுவே, நாசியிலே ஒரு நத்து அணி செய்கிறது. ஐந்து வயதுக் குழந்தையிலிருந்து வயோதிகர் வரை அவளை நுணுகித் தரிசித்துக் கொண்டோம். தேவி அணிந்திருந்த வளையின் நுட்பமான வேலைப்பாடு உள்பட ஒவ்வோர் அம்சமும் அனைவருக்கும் ஒரே போலத் தெளிவே தெரிந்தன. அப்படிப்பட்டவர் நம் பகவானான ஸ்ரீ ஸத்யஸாயி லக்ஷ்மி.''

சில சமயம் ஷிர்டி ஸாயி பாபாவாகவே நின்று விடுவார். இக் கோலம் கொண்டிருக்கையில் அவரிடம் சென்றும், அவரைத் தொட்டும், ஏன் கட்டித் தழுவிக்கொண்டும்கூடப் புனிதம் பெற்ற சில புண்யசாலிகள் உள்ளனர்.

சிலரோ இவரது தீவிர தெய்விக தரிசனங்களைத் தாங்க மாட்டாமல் மூர்ச்சித்தும் விழுந்திருக்கிறார்கள்.

பிரபாவப் பிரவாகப் பிரகாசத்தை யெல்லாம் உடனே அடக்கிக் கொண்டு ஸ்வாமி சிறு குழந்தையாக விளையாட ஆரம்பிப்பார். பூவை எடுத்து இதழ் இதழாகப் பிய்த்து எறிவார். ஒவ்வோர் இதழும் ஒருவித பெப்பெர்மின்ட்டாக மாறி விடும். பக்தர்கள் அவற்றைப் பொறுக்கிக்கொள்ளும்போதோ வேறுவித மிட்டாயாக உருமாறி யிருக்கும்! எல்லோருக்கும் சிரித்து வயிறு புண்ணாகிவிடும்.

ஸாஹேப் செருவு என்னும் ஏரியில் உற்சாகமாக நீச்சலடிப் பார். பூஞ்சை உடலில் எப்படி இந்த ஸாண்டோ பலம் வந்தது என ஆச்சரியமாயிருக்கும்.

(இருபது வயதுக்குப் பின் ஸ்வாமியின் உடல் கட்டு மஸ்தாக ஆயிற்று. இதன் பின்பும் நமக்கு மெல்லியலாகவே தோன்று கிறார். இதற்கு முன்போ பொடியான கொடியாகவே இருந்தா ராம்).

நீந்திய சிரமமேயின்றி, தன்னொத்த பிராயத்தினரை ஓட்டப் பந்தயத்துக்கு அழைப்பார். மானைத் துள்ளி ஓடுவார் மானவ மாதவர். அவரோடு எவர் போட்டி போட முடியும்? தெய்வத் தோடு மனிதன் போட்டியிட முடியுமா? ஆயினும் தெய்வமே போட்டிக்கு அழைத்து மாயாவித்தனம் செய்தது!

ஸாஹேப் செருவை ஒட்டிய தோப்பில், ஒரு மரக்கிளையில் பலகையை ஊஞ்சலாகக் கட்டிக்கொண்டு ஆடினார். இதுவரை எவரும் கண்டிரா டோலோத்ஸவம். ஊஞ்சல் புஷ்பாலங்கிருத மஞ்சமாயிற்று. இப்போது அதில் அமர்ந்திருப்பது பால ஸாயி அல்ல; சாக்ஷாத் பால கிருஷ்ணனே!

சூரிய ஜோதி தரிசனங்களைக் கூடத் தாங்கியவர்களும் இந்தக் குளிர் நீல இளஞ்ஜோதியைத் தாங்க வொண்ணாமல் மூர்ச்சித்து விழுந்தனர்.

Koviloor Digital Library

கிருஷ்ணபாபா கையசைத்தார். கைநிறைய மந்திராக்ஷதை வந்தது. மூர்ச்சித்தோர் மீது அதை விசினர். அவர்கள் வெளியுணர்வு பெற்றனர். ஆற்றல் கடலாக அலைமோதியவர், அமைதியின் அகண்ட வானாகி, ''சாந்தி: சாந்தி: சாந்தி'' என்று நிதானமாக மொழிய, அவர்களது . நரம்போட்டம் யாவும் சமனமாயின.

சாக்தம் ஒரு கோடி, சாந்தம் மறுகோடி. ஆற்றலுக்கும் அமைதிக்கும் இடையே முடி போடுவது அன்பு. அன்பே சிவம்.

சக்தி — சிவம் — சாந்தம்.

நரஸிம்மர் முதலான வடிவங்களை பாபா காட்டக் கண்டு முழுதாக மூன்று நாலு நாட்கள் மூர்ச்சித்திருந்தோரும் உண்டு. இதற்குள் இவர் பச்சைப்பிள்ளை விளையாட்டுக்களில் இறங்கி விடுவாராதலால், மூர்ச்சித்தோரின் உறவினர் இவரது மகிமையையே மறந்து, ''எங்கள் மனிதரை இப்படி மூர்ச்சையாகச் செய்து விட்டீர்களே!'' என்று இவரிடம் சண்டைகூடப் போடுவார்கள். அதையும் ரஸித்துக்கொண்டு, விளையாட்டாகவே மூர்ச்சித்தவர்களுக்குப் பிரக்ஞையை அருள்வார்.

பலர் தம்மைச் சூழ இருக்கும்போதே, அவர்களில் சிலருக்கு மட்டும் அற்புத தரிசனம் தருவதும் உண்டு. மற்றோர் நாலு முழ வேட்டியும், அரைக்கைச் சட்டையுமாக அரட்டையடிக்கும் 'தங்கள்' ஸத்யபாபாவையே பார்த்துக் கொண்டிருப்பார்கள். இவர்கள் திவ்யக் காட்சி பெறுவோர் கண்ணீர் சொரிவதையும் மூர்ச்சித்து விழுவதையும் கண்டு, 'திடீரென இவர்களுக்கு என்ன வந்து விட்டது?' என வியப்பார்கள். குருக்ஷேத்ரப் போர்க்களத்தின் நட்டநடுவிலேயே கண்ணன் விச்வரூப தரிசனம் தந்தும்கூட, அதை தனஞ்ஜயனும் ஸஞ்ஜயனும் மட்டுமே கண்டனர், மற்றவர் காணவில்லை என்ற பாரதக் கூற்றை இப்போது நம்ப முடிகிறதல்லவா?

தெய்விகத்தைக் காணும் திவ்வியப் பார்வையையும் தானே தருவதாகக் கண்ணன் கூறினான். நம் ஸாயிக்கண்ணன் இப்பார்வையைத் தந்து ஸாயியில் மட்டுமின்றி தன்னிலேயே தெய்வ தரிசனம் பெறமுடியும் என்றும் ஒரு முறை காட்டினார், வேடிக்கையாகவே. பர்த்தியவதாரத்திடம் வந்து பத்து அவதாரமும் காட்டுமாறு வேண்டினார் ஓர் அடியார். ''பங்காரு, முதலில் போய் ஆற்று நீரில் உன் பிம்பத்தைப் பார்த்து விட்டு வாயேன்'' என்றார் பால ஸ்வாமி. அவ்விதமே சென்று பார்த்தவர் பேராச்சரியமுற்றார். தமது பிம்பத்துக்குப் பதில் வரிசையாக மச்சம், கூர்மம், வராஹம், நரஹரி என்று கண்டால் பேராச்சரியமாக இராதா? பத்தாவதாகக் கல்கி தோன்றுகையில், புரவிமீது வீற்றுள்ள ஸத்யஸாயிநாதனையே கண்டார்.

இது கல்கியைப் பற்றி முன்னமே அறிந்த ஹிந்துவின் காட்சி.

Koviloor Digital Library

ஹில்டா சார்ல்டன் என்பவளுக்கோ கல்கி சமாசாரமே தெரியாது. 1969—ல் இவள் பிரசாந்தி நிலைய பஜனையில் கலந்து கொண்டாள். சிம்மாசனத்தில் அமர்ந்து செவி மடுத்துக் கொண்டிருந்தார் ஸ்வாமி. அவருக்குப் பின்னால் திடீரெனப் புரவி வீரராகத் தோன்றிய தெய்வ வடிவொன்றைக் கண்டாள் ஹில்டா. புளகாங்கிதமானாள். பிற்பாடு இது குறித்து மற்றொருவரிடம் சொன்னாள். அப்போதுதான் கல்கி என்ற பெயரையே கேட்டறிந்தாள்.

புராணத்தில் கல்கி அவதரிக்க வேண்டிய காலம், குலம், இடம், அவர் புரியப்போகிற லீலைகள் பற்றிக் கூறியிருப்பது எதுவுமே நம் சரித ஸ்வாமிக்குப் பொருந்தாது. ஆயினும் இவர் பலருக்குக் கல்கியாக தரிசனம் தந்திருப்பது அநுபவ சத்தியம். பூர்வ அவதாரங்களைக் காட்டுவது போல், இனி என்றோ ஒரு காலத்தில் வரவிருக்கும் கல்கி அவதாரத்தையும் காட்டுகிறார் போலும்!

இவரைத் தவிர எதிர்காலக் கல்கி வேறொருவர் உண்டெனில் இவர் தசாவதாரங்களில் ஒன்றில்லை என்றேயாகும். இதற்காக ஸாயிபக்தர்கள் விசனிக்க வேண்டியதில்லை. ஏனெனில் ''அவதாரங்கள் பத்து'' என்று கரை கட்டியதே பிற்காலப் புராண எழுத்துத்தான். பாகவதத்தில் இருபத்திநாலு அவதாரங்கள் பேசப்படுகின்றன. கீதையில் கண்ணபெருமானோ, ''எப்போதெப்போது அறத்துக்கு ஊறும், அதர்மத்துக்கு வீறும் உண்டாகின்றனவோ அப்போதப்போதும் நான் அவதரிப்பேன்'' என்றே ஸ்பஷ்டமாகக் கூறுகிறாரேயன்றி, பத்து, இருபத்திநாலு என்றெல்லாம் கணக்கேதும் சொல்லவில்லை. கண்ணனின் இந்த வசனத்தைத்தான் பராசக்தியும் தேவி மாஹாத்மிய முடிவில் நவில்கிறாள்; அவதாரங்களைக் கணக்குக்கு உட்படுத்தவில்லை.

கல்கி கத்தியைச் சுழற்றிப் பகைவரையெல்லாம் ஸம்ஹரிக்கப் போவதாகப் புராணவசனம். ஆனால் (1932—ல் காஞ்சிப் பெரியவர்கள் கூறியதை எழுத்துக் கெழுத்து எதிரொலிப்பது போல்) நம் ஸ்வாமி சொல்வார்: ''பூர்வ யுகங்களில் பொதுவாக மக்கள் ஸத்ய தர்மங்களில் ஈடுபட்டே வாழ்ந்தனர். ஒருசிலர் தான் இவற்றுக்கு விரோதமாக இருந்தவர். இப்படிப்பட்ட அசுர குணம் படைத்தவர்களை வதைக்க பகவான் அவ்வப்போது அவதரித்தார். கலியுகத்தின் நிலை வேறுவிதமானது. அநேகமாக மக்கள் அனைவருமே அதர்மத்தில் இறங்கி விட்ட காலம் இது. இதில் அசுர குணமுள்ளவர்களை ஸம்ஹரிப்பதெனில், மிஞ்சுவோர் துர்லபமாகவே இருப்பார்கள். எனவே இந்த யுகத்தில் உபதேசத்தின் மூலம் மக்களைத் திருத்தவே அவதாரங்களே யன்றி, கொன்று குவிப்பதற்கல்ல. இதையொட்டி, ஆதி சங்கரரிலிருந்து தோன்றிய அவதாரங்கள் ஞான போதனையையே மையமாகக் கொண்டிருக்கின்றன.''

ஆதி சங்கரரிலிருந்து அவதாரங்களிடையே இன்னொரு வித்தியாசமும் காண்கிறோம். அதுவரை பூ — வராஹர், லக்ஷ்மீ—

Koviloor Digital Library

நரஸிம்மர், ஸீதா — ராமர், ராதா — கிருஷ்ணர் என்பதாகப் பத்தினி சமேதராக அவதாரங்கள் உள்ளன. தாம்பத்தியம் என்பது கௌரவத்துடன் கட்டுப்பாட்டுடன் காக்கப்பட்ட அக்காலங்களில் இறைவனும் ஜோடி சேர்ந்து வந்ததில் பவித்ரக் குறைவாக எதுவும் தோன்றவில்லை. ஆனால் புலன்வெறி கட்டு மீறிவிட்ட இந்த யுகத்தில், ஞானோபதேசகர்களாகவே வரும் அவதாரங்கள் சதி பதியாகத் தோன்றுவதற்கில்லை. சங்கரர் போல் சந்நியாசியாக, சைதன்யர் போல் கல்யாண மாகியும் துறவு பூண்டவராக, ஸமர்த்த ராமதாஸ் போல் நைஷ்டிக பிரம்மசாரியாக, ராமகிருஷ்ணர் போல் மனைவியுடன் வாழ்ந்த போதிலும் ஜிதேந்திரியராக, ரமணரைப் போலவும் ஷிர்டி-பர்த்தி பாபாக்கள் போலவும் ஸ்திரீ ஸங்கத்தைக் கனவிலும் கருதா அதிவர்ணாச்ரமிகளாகவுமே கலியுக அவதாரங்கள் அமைந்துள்ளன.

(''பால ப்ரம்மசாரிணே நம:'' என்று ஆதியில் நம் ஸ்வாமி அஷ்டோத்தரத்தில் ஒரு நாமா இருந்ததெனினும், 'சாஸ்திர'ப்படி அவர் பிரம்மசாரி அல்ல. உபநயன ஸம்ஸ்காரம் ஆனவரே சாஸ்திரப் பிரகாரம் பிரம்மசாரி ஆவர். பாபா உபநயனத்துக்கு அதிகாரம் பெற்ற க்ஷத்ரியரே எனினும், பூணூல் கலியாணமாகு முன்பே வீட்டைத் துறந்து அவதாரப் பணியை ஏற்று விட்டார்.)

நம் ஸ்வாமியின் தர்ம ஸ்தாபனப் பணி கலியின் தலைவிரித்தாடும் கோலாகலத்துக்கும் தாக்குப் பிடித்து, நாளுக்கு நாள் நவ கண்டத்திலும் பீடு நடை போடுவதைக் காண்கையில் இவரைக் ''கல்கிக்குச் சற்றும் குறைவிலாத அவதாரம்தான்'' என்று தயங்காமல் கூறவே தோன்றுகிறது.

★

அரைக்கைச் சட்டை மாறியது. ஷிர்டி பாபாவாகவே இவரை உணரவேண்டும் என்பதற்காக அடியார்கள் அவர் உடைபோலவே இவருக்கு அங்கி தைத்து அளித்தனர். முழங்காலுக்குச் சற்று கீழ்வரை தொங்கிய அங்கிக்கு அடியே ஒரு சாணுக்கு மேல் வேஷ்டியும் தெரிந்தது. பிறகுதான் முழுக்காலையும் மறைத்துச் சில சமயங்களில் ஷிர்டி பாபா அணிந்த முழுநீள கஃப்னி இவரது பிரத்தியேக உடையாயிற்று.

ஆரம்பகாலத்தில் பலர் காண அவ்வப்போது கஃப்னியைக் கழற்றி விட்டும் ஸ்நானம் முதலியவற்றின் போது இருப்பார். ஆனால் சில ஆண்டுகளிலேயே கர்ணனின் கவசம் போல் அங்கியின்றி இவரில்லை என்றாக்கிக் கொண்டுவிட்டார்.

இது பட்டாகப் பளபளப்பது ஏனோ அன்பரல்லாதாருக்குக் கரிக்கிறது. ஆனால் அவரோடு அவராகவே பொருந்தியுள்ள இந்த அங்கி அன்பர்களையோ அவரது நெருக்கக் கதகதப்பில் பிடித்துக் கொள்வது போலவே உணருகிறோம்.

Koviloor Digital Library

**Where's the man could ease a heart
Like a satin gown?**

என்று கேட்கும் டோரதி பார்க்கரிடம், ''இதோ'' எனப் பட்டுக் கவுன் பாபாவைக் காட்டலாம்.

கண்ணன் பீதாம்பரதாரி என்பதற்கேற்ப மஞ்சளிலும், ஸாதுக்களுக்கு ஏற்ற ஆரஞ்சிலும் கஃப்னிகள் வந்தாலும், அன்னை பராசக்தி உவக்கும் ரக்த வஸ்திரமே பெரும்பாலும் இவரது ஆடையாயிற்று. பீதக ஆடைக் கண்ணனையும் கூடத் திருமங்கையார் 'சேவடி கை திருவாய் கண் சிவந்த ஆடை செம்பொன் செய் திருவுருவமானான்' என்றுதான் சொல்கிறார். கண்ணனும் லலிதையும் ஒன்றே என்பது சாஸ்திரம்.

லலிதைக்குச் சிவந்த ஆடை, சிவந்த அதரம் இரண்டுமே முக்கியம். 'தாம்பூல பூரித முகி' என்றும், 'முகே தே தாம்பூலம்' என்றும் போற்றப்பெறும் வெற்றிலை வாயினள். நம் ஸ்வாமியும் செவ்வாடை தரித்த நாளாகத் தாம்பூலதாரியாகத் தான் இருக்கிறார். தாமோதரனின் தாம்பூல முகம் கண்டே திருப்பாணாழ்வார், ''செய்ய வாய் ஐயோ என்னைச் சிந்தை கவர்ந்ததுவே'' என்றார். ஸோமஸுந்தரப் பெருமானும் தேவிக்கு அஷ்டமாஸித்தி உபதேசித்தபோது வாய் நிறைய வெற்றிலை தரித்திருந்ததாகத் திருவிளையாடற் புராணம் கூறும். தூர்வாஸர் அருளிய உத்தமத் துதியான 'ஸ்ரீலலிதா ஸ்தவ ரத்னம்'த்தில் காமேச்வர சிவனை வர்ணிக்கையில், 'தாம்பூல வாஸனையின் அலைகளால் இரு மடங்காக்கப்பட்ட முகத்தாமரையின் பரிமளத்தை உடையவர்' (விடி ஸௌரப விசி த்விகுணித வக்த்ர அரவிந்த ஸௌரபம்) என வாய்கொள்ளாமல் ரஸித்துக் கூறியுள்ளது. நம் ஸ்வாமியின் வெற்றிலை வாயையும் இப்படியே பக்தர்கள் ரஸிக்கிறார்கள்; 'தாம்பூல ரஞ்ஜித முகாரவிந்தா' என்று பஜனை பாடுகிறார்கள். இவர் பிரம்மசாரியுமல்ல, ஸந்நியாஸியுமல்ல, அதிவர்ணாச்ரமி என்பதால் வெற்றிலை போடுவதில் தவறேயில்லை. தாம்பூலத்தில் இவர் போதைப் பொருட்களையோ புகையிலையையோ உபயோகிப்பதே இல்லை என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும். அதிவர்ணாச்ரமி என்பதற்கு மேலாக இறைவனின் அவதாரம், அன்னைத் தெய்வம் எனக் கொண்டாலோ தாம்பூலம் போடுவதில் சற்றும் தோஷமில்லை. ஸதா வெற்றிலை போட்டாலும், 'செங்கல் பொடிக் கூறை, வெண் பல் தவத்தினர்' என்றாற்போல இவர் காவி வண்ண அங்கி மட்டுமே அணிந்து, பற்களில் சிறிதும் காவி ஏறாமல் அவற்றை நிலாத் துண்டுக்களின் வரிசையாக வைத்திருக்கும் அழகே அழகு!

அவர் ஏன் சிவப்பு உடுத்தவேண்டும், வெற்றிலை போடவேண்டும் என்றெல்லாம் ஆட்சேபிப்போருக்குத் ''திருவாசக'' வாக்கினை நினைவூட்டுவதன்றி நாம் சொல்லக்கூடிய விடை வேறு இல்லை:

Koviloor Digital Library

எம் பெருமான் ஏது உடுத்து அங்கு ஏது அமுது செய்தாலும்
தம்பெருமை தானறியாத் தன்மையான்

ஆடை மாறினாற்போலவே கிராப்பும் மாறிற்று. பிராம்மண பள்ளியின் பயங்கர மாந்திரிகன் இவரது மண்டையை மழித்து அதில் உண்டாக்கிய மூன்று அச்சமூட்டும் வடுக்கள் தெரியா திருக்கவே இப்படிப் பம்பையாக, புதராக முடியை வளர்த்துக் கொண்டார் என்று சிலர் சொல்கிறார்கள். பாபாவின் சிரசு உச்சியில் பிரணவாக்ஷரத்தைப் பார்த்துள்ள ஓர் அன்பரோ, அது அனைவர் கண்ணிலும் படலாகாதென்றே இப்படிச் சிகை வளர்த்திருக்கிறார் என்கிறார்.

முதலில் ஒருபுறம் வகிடு எடுத்தேதான் அடர்ந்து நீண்ட கேச பாரத்தை வாரிக்கொண்டார். அது ஒரு விநோதத் தோற்ற மாயிருக்கும். பின்னரே வகிடு எடுப்பதையும் விட்டு விட்டார். இவரது முடி எப்படி இம் மாதிரிக் கழுத்துப் பட்டைக்குமேல் அலாதியாக வளைந்து, குடை கவிந்தாற்போல் முகத்தைச் சுற்றி மண்டலித்திருக்கிறது, அது ஏன் ஓரளவுக்கு மேல் நீளாமல் நின்று விட்டது, அதன் ஒவ்வொரு ரோமமும் எப்படி இத்தனைச் சுருட்டையாக இருக்கிறது என்பதெல்லாம் நம் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்ட விஷயங்கள். ஆழ்ந்த கறுப்பி லிருந்து செம்பட்டை வரை இவரது முடி பல வண்ணங்களாகவும் காணப்பட்டிருக்கிறது. இவரது ஐம்பதாண்டுத் தொடக்கத் திலிருந்தோ மையிலும் கரியதாகவே காண்கிறது இக் கொண்டல் முடி. இடையிலே சற்று நீளம் குறைந்தும், விலத்தியாகவும் காணப்பட்ட கேசபாரம், பொன்விழா ஆண்டிலிருந்து பழைய செழுமையை மீளவும் பெற்றுவிட்டது.

மந்திரவாதி மொட்டையடித்து அமிலத்தை ஊற்றியபின் இவரது தலை வழுக்கையே ஆகிவிட்டது; அதை மறைத்து 'டோப்பா' போட்டுக் கொண்டிருக்கிறார் என நினைத்தவர்களும் உண்டு. இப்படி ஐயுற்ற ஒருவரை அவரே அருகழைத்து, ''பங் காரு! பிடித்து இழுத்துப் பார்'' என்றிருக்கிறார். (பக்தரைப் போலவே பரிகசித்து வந்தோரும் அவருக்கு ''பங்காரு''தான்.) சந்தேகப் பிராணியை இவரே ஊக்கியதன் மீது அவர் துணிந்து, தம் பலம் கொண்ட மட்டில் இவரது கேசத்தை இழுத்தார். 'டோப்பா'வாக முழுதும் கழன்று வராதது மட்டுமின்றி, ஒரு சிறிய ரோமம் கூட அவர் கையில் வரவில்லை!

இன்னொரு சந்தேகக்காரரிடம் பாபா பெரிய தையற் காரத் கத்திரிக்கோலைக் கொடுத்து, ''வெட்டிப் பார்'' என்று திருமுடியைச் சாய்த்தார். கருக்கு வாய்ந்த அந்த ராட்சதக் கத்திரியால் எத்தனை வெட்டியும், ஊஹூம், ஒரு ரோமம் அசைய வேண்டுமே!

இவரது முடியின் ஒவ்வொரு ரோமமும் ஒரு பாம்பாக நெளியக் கண்டதாகவும் கூறுவோர் உள்ளனர்.

Koviloor Digital Library

இவற்றையெல்லாம் கொண்டு சிலர், 'இவரது விசித்ர முடியிலேயே ஏதோ ரகசியம் இருக்கிறது. பைபிளில் வரும் ஸாம்ஸன் போல் இவரது சக்தியே கேசத்தில் தான் இருக்கிறது' என்கிறார்கள். இந்த ஊகமும் சரியல்லதான். ஏனெனில் மேற் சொன்ன சந்தர்ப்பங்களில் சில சம்சயாத்மாக்களின் பொருட்டே கேசத்தில் அமாநுஷ்யத்தன்மையைக் காட்டினார். தினந்தோறும் இவர் விசேஷப் பற்கள் கொண்ட சிப்பினால் முடியை வாரிக் கொள்ளும்போது கொத்துக் கொத்தாக ரோமம் பெயர்த்துக் கொண்டு வருவதும் உண்டு. (ஹிப்பிகள் இவரைத் தங்களில் ஒருவராக எண்ணவேண்டாம். இவர் தினமும் முடிக்குத் தைலமிட்டு ஸ்நானம் செய்து நன்றாகக் கோதிப் பரம சுத்தமாக வைத்திருப்பவரே ஆவார். அசுத்த வாடையே நம் ஸ்வாமியிடம் தலைகாட்ட முடியாது.)

பாபா சொல்வார்: ''என் முடி ஏன் forest ஆக இருக்கிறது என்று ஆராய்வதால் நீங்கள் ஒன்றும் புரிந்துகொள்ள முடியாது. நீங்கள் புரிந்துகொள்ள வேண்டியதெல்லாம் இந்தத் தலை நீங்கள் போடுகிற பாரத்தையெல்லாம் தாங்கிக்கொண்டு உங்களுக்கு அமைதிதரவே for rest—ஏ, ஏற்பட்டது என்பதைத்தான்.'' அவரைத் தவிர எந்த தயாளு இப்படி நம் பாப பாரத்தையெல்லாம் சிரஸால் வகிக்க இயலும்?

சிவபெருமானும் அம்பாளும் தரிப்பதாகக் கூறும் 'கபர்த்தம்' என்பது வாரிய முடிக்கும், வாராமலே திரித்துவிட்ட ஜடைக்கும் இடைப்பட்ட ஏதோ ஒன்று எனில் பர்த்தி நாதரும் கபர்த்திதான்!

குடும்ப முடிச்சுக்கு அடையாளமாகச் சிகையை முடிக்க வேண்டும் என வைத்தனர். 'குடும்பி' என்பதே 'குடுமி' என்றாயிற்று! குடும்பத்தை விட்டவன் ஒன்று, தலையை மழித்துக் கொள்ள வேண்டும்; அல்லது ஜடாமுடி வளர்க்க வேண்டும். 'ஜடாமுடி' என்கிறபோதே அதுவும் முடியப் படுவதுதான், அதாவது ஒருவித பந்தத்துக்கு அடையாளம்தான் என்றாகிறது. எனவேதான் துறவின் உச்சியில் சகல பந்தங்களையும் விட்ட சிரேஷ்டர்கள் கேசத்தை முடியாமல், அப்படியே பரட்டையாக விட்டு, ''கேசிக்கள்'' என்று சிறப்பிக்கப்படுகிறார்கள்.

தெய்வத்தன்மை வாய்ந்த இக் கேசி பற்றி ரிக்வேதம் (பத்தாம் மண்டலம், 136-ம் ஸூக்தம்) கூறுவது வியக்கத்தக்க வண்ணம் நம் கேசவருக்குப் பொருந்துகிறது. இதை வேதம் கூறும் ''ஸாயி ஸூக்தம்'' என்றே சொல்லிவிடலாம் போல் இருக்கிறது!

புகை என்ற கேசத்தை உடைய அக்னி, கிரண வளையத்தைக் கேசமாகக் கொண்ட சூரியன், கேசம் சிலிர்த்துப் பொங்குவது போலவே வேகமாகத் துள்ளிச் செல்லும் வாயு ஆகியவர்களை வேதமானது கேசிக்கள் என்கிறது. ''மனிதனாகப் பிறந்து கேசியானவரே அக்னியையும் தாங்குகிறான்; மண், விண் இரண்டை

Koviloor Digital Library

யும் தாங்குகிறான்; நீரைத் தாங்குகிறான்; (பஞ்ச பூதங்களில் எஞ்சி நிற்கும்) காற்றிலே அவன் மிதக்கிறான்; காற்றையே புசிக்கிறான்; காற்றுக்கு வேகத்தைத் தரும் சூக்ஷ்மக் குதிரையே இவன்தான். (பிராண இயக்க சக்தியான யோக மஹாசக்தி இங்கு சுட்டப்படுவதாகக் கொள்ளலாம்.) ஜோதிமயனான கேசி உலக முழுமையும் மக்கள் ஏகமாகப் பார்க்க உதவுகிறான். (ஆத்மாநுபவத்தில் பெறும் அத்வைத ஞானம் இங்கு குறிக்கப்படுவதாகக் கருதலாம்.)

''கேசி தூசி படிந்தாற்போன்ற மஞ்சள் ஆடை உடுக்கிறான். (இதே யெல்லோ — ஆகர் வண்ண அங்கியில் பாபாவும் எழில் வெள்ளமாக விளங்குவதுண்டு. சிவப்பங்கியை விடவும் இதுவே அவருக்கு அதிக அழகு என்று கருதுவோரும் இருக்கிறோம்.) கேசி உலக முழுமையும் மேற்பார்வையிட்டுக் கொண்டு அந்தரத்தில் சஞ்சரிக்கிறான். மக்களுக்கும், தேவ தேவருக்கும் இதமே எண்ணி இனியதே செய்யும் நண்பன் அவன். தன்னிச்சையால் ஏவப்படாமல், முற்றும் கடவுளாலேயே இயக்கப்படுபவன் அவன்.

''கேசி கீழும் மேலும், கீழ்க்கடலிலிருந்து மேற்கடல் வரையிலும் பரவி நிற்கிறான். கந்தர்வர், அப்ஸரசுகள் மத்தியில் உலவும் இவன் விலங்கினங்களிடையும் விளையாடுகிறான். (பாபாவுக்கு தேவ சக்திகளிடை உள்ள செல்வாக்கும், வாயில்லா ஜீவன்களிடமுள்ள பரிவும் அதிசயமானது. பிற்பாடு எடுத்துக்காட்டுக்கள் பார்ப்போம்). அவன் அறிஞரில் பேரறிஞன், அன்பரில் பேரன்பன், ருசித்து ருசித்து அநுபவிக்கத்தக்க மதுர குணத்தவன், பிறரை மகிழ்விப்பதையே வாழ்வாகக் கொண்டவன்'' — இப்படியெல்லாம் மறை புகல்வது நம் ஸாயி மஹிமைதானே!

வேத வாயிலாக இதோ அந்தக் கேசியே பேசிக் கேட்போம்: ''மானுடரான நீங்கள், மானுடமாகவே தோன்றும் என் சரீரத்தைக் கண்கொண்டு காணலாம். ஆனால் நான் (அன்னமயமான வெறும் சரீர கோசமல்ல;) காற்றின் மூலமான பிராண ஆதாரத்தையே சார்ந்து நிற்பவன். மனித மதியைக் கடந்து முனித்தன்மை பெற்று உன்மத்தனானவன்.''

'கேசி ஸத்யகாமீ' என்று ஒரு முனிவருக்கு யஜுர்வேதம் பெயர் கொடுக்கிறது. 'கேசி ஸத்யஸாயி' என்று நாம் சொல்கிறோம்.

பூர்வத்தில் மாபாவம் செய்த சிலர் பகவத் நினைவு பெற்று எளிதில் தப்பிவிடக் கூடாது என்று பகவானே அவர்களைச் சற்று இருளில் முழுக்குவதாக கீதை ஓரிடத்தில் சொல்கிறது. இவ்வாறு நம் ஸ்வாமி தமது முடியிடம் அருவருப்பாலோ, அச்சத்தாலோ சிலரைத் தம்மிடம் வரவொண்ணாமல் செய்கிறார் போலும்! ''என்னை 'ரௌடி' என்று நினைத்துச் சிலர் விலகுவதற்கும் இப்படி முடி வைத்திருக்கிறேன்'' என்று கூறியிருக்கிறார்.

Koviloor Digital Library

நல்லவர்களான பல ஆஸ்திகர்களையும் இந்த தலைக்கோலாட்டியிலிருந்து விலக்கியுள்ளதே எனில், எல்லா ஆஸ்திகரும் மெய்ந்நயம் ஒன்றுக்கே வந்து, இதனால் தாங்க வொண்ணாத நெரிசல் ஏற்படாமல், வெவ்வேறு வழிகளில் சென்று உய்வு பெறவே இப்படி இருக்கலாம். மற்ற தெய்வங்களை, தெய்வ புருஷர்களை, தெய்வ அருள் வாய்ந்த மஹான்களை நாடுவோர் தத்தம் வழிகளிலேயே செல்லாமல், அனைவரும் ஸாயியிடமே ஈர்க்கப்பட்டால் ஸ்தூல உலகில் இது குழப்பமாகத்தான் ஆகும்; தங்களை இவர் ஸ்தூலமாகக் கவனிக்கவில்லையே என்று தாபப்படுவோரின் எண்ணிக்கை இன்றைவிடப் பலப்பல மடங்கு பெருகும்!

பிரம்மஞானம், இயற்கையை ஆளும் மஹாசக்தி இரண்டும் பெற்ற கேசிக்களும், நம் கதாநாயகரும் எதற்காக இப்படி முடையை விரித்துக்கொள்ள வேண்டும் என்பது பற்றி நாம் முடிவாக ஏதும் சொல்வதற்கில்லைதான். அறிவாலும் அநுபவத்தாலும் விளக்கக் கூடியதை எல்லாம் விளக்கிய பின்னும் எஞ்சி நிற்கும் 'அவதார ரஹஸ்யம்' என்று சொல்லித் தப்பித்துக் கொள்ளவேண்டியதுதான்!

* * *

பாபாவின் பதினாறு, பதினைந்தாவது வயசிலேயே அவரை நாடிச் சென்ற வெகு சில தமிழர்களில் ஒருவர் சென்னை வர்த்தகர் ஸ்ரீ பார்த்தசாரதி.

கல்ப தருவிலிருந்து இவர் பழம் பறித்து உண்டிருக்கிறார். ஆனால் இவர் சென்றது விநோதம் காண அல்ல. வியாதி தீரவே சென்றார். இவரது ஆஸ்த்மாவுக்கு மருந்து தந்தார் ஆத்மாவின் நாயகர். மருந்தும் ஒரு பழம்தான். அங்கை அசைப்பில் வந்த செங்கனி ஆப்பிள்! அதை உண்ட மாத்திரத்தில் பார்த்தசாரதியின் ஆஸ்த்மா உபாதை தீர்ந்தது.

இவரது தாய் இரு கண்களையும் 'காடராக்ட்' மூடி முழுப் பொட்டை போலவே இருந்தார். அவருக்கு உடனடி நிவாரணம் தராமல் பத்து நாட்கள் சிகித்ஸை அளித்தார் பாலஸாயி. அந்த அம்மையின் கர்மா அப்படிப் போலும்! பாபா செய்த வைத்தியம் என்ன? தினமும் அம்மையாரின் கண்களில் மல்லிகை மலர்களை வைத்து 'பாண்டேஜ்' போட்டார். பதினோராவது நாள் காடராக்ட் போன இடம் தெரியவில்லை. காடராக்ட் என்றால் காட்டருவி என்றும் அர்த்தம். கருணைக் காட்டருவி கர்மக் காடராக்ட்டை அடித்துக் கொண்டுபோய் விட்டது!

* * *

கருணையைத் தென்றலாகவும், நிலவாகவும் பெறுமல் காட்டருவியாகத்தான் பெற வேண்டும் என்று விம்பு செய்து, அதன் வெள்ளத்திலேயே முழுகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியின் கதை நெஞ்சை நெகிழ்ப்பதாகும்.

Koviloor Digital Library

பதினாறு வயது பாபா பெங்களூர் பக்தர் ஒருவரது பிரார்த் தனைக்கு இணங்கி அவரது இல்லத்துக்கு எழுந்தருளியிருந்தார். அங்கே ஒருநாள் காலை மைசூர் ஸெக்ரிடேரியட்டில் குமாஸ்தா வாக இருந்த ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி பாபாவைக் கண்டார், புண்ணிய வசமாக தெய்வமாகவே தரிசித்தார்.

''மாநுஷ வேஷத்தை மறைத்துத் தங்களது தெய்வ வடிவைக் காட்டி அருளுங்கள்'' என்று பாபாவிடம் வேண்டினார்.

பாபா அவருக்கு ஷிர்டிபாபாவின் சித்திரத்தை சிருஷ் டித்துத் தந்தார். ''அதையே பார்த்துத் தியானம் செய்'' என்று சொல்லி வெளியே சென்றார்.

சில பக்தர்களின் வீடுகளுக்குச் சென்று பாபா நண்பகலில் திரும்பினார். அவர் வெளி வாசலில் நுழையும்போதே, உள்ளே யிருந்த கிருஷ்ணமூர்த்தி பரவசமாகக் கூவி மூர்ச்சையுற்றார். சிறிது நேரத்துக்குப் பின் உணர்வு மீண்டது. இன்னமும் அவரது உடல் ஆடிக் கொண்டேயிருந்தது.

கண்களை இறுக மூடிக்கொண்டே எழுந்து வந்தார் கிருஷ்ண மூர்த்தி. என்ன அதிசயமோ, எதிலும் முட்டிக் கொள்ளாமல் பாபாவிடம் வந்தார். ''உங்கள் பாதத்தைத் தாருங்கள்'' என வேண்டினார்.

''வேண்டாம் பங்காரு, வேண்டாம்! அதற்குள் வேண் டாம்'' என்றார் பாபா. அங்கிக்குள் தம் பாதங்களை ஒளித்துக் கொண்டு சப்பணமிட்டமர்ந்தார்.

அடியாரோ திருவடிகளை அங்கியிலிருந்தும் பிடித்திழுக்கப் பிடிவாதம் செய்தார்!

பிடிபடாதிருக்க எங்கெங்கோ ஓடினார் பாபா.

கண்களை மூடியபடியே கிருஷ்ணமூர்த்தி எப்படியோ மோப் பம் பிடித்து பாபாவை இடைவிடாமல் தொடர்ந்தார். பலரை ஆட்டி ஓட்டுபவர் இன்று இவரிடம் ஆட்படாமலிருக்கத் தாமே ஓடுகிறார்!

வாகனம் கொண்டுவரச் சொல்லி வேறொரு பக்தர் வீட்டுக்குச் சென்று விட்டார் பாபா.

அதற்காக விடாக்கண்டர் வாளாவிருப்பாரா? கண்மூடிய நிலையிலேயே தெருவில் ஓடிய கிருஷ்ணமூர்த்தி ஒரு ஜட்காவைப் பிடித்து, தாம் மோப்பம் காட்டுகிறபடி ஓட்டச் செய்து பாபா இடம் மாறிய இல்லத்துக்கும் சென்றுவிட்டார். மூடிய கண்ணு டனும் இவர் எப்படிப் பார்த்தார், கர்மவாஸனைகளைத் தீர்க்கும் பாபா வாஸனையை எப்படி மோப்பம் பிடித்தார் என்பது பாபா வுக்கே தெரியும்!

Koviloor Digital Library

கதவை அடைத்துக்கொண்டு ஸ்வாமி உள்ளே அமர்ந்திருந்தார். கிருஷ்ணமூர்த்தி குறி பிசகாமல் அந்த அறையின் வெளி ஜன்னலண்டை வந்து வெறியாகத் தட்டினார்.

''நாயனு! பிடிவாதம் பண்ணுதேம்மா! என் பாத தரிசனத்தையும் ஸ்பரிசனத்தையும் உன் சரீரம் தாங்காது. போயிடு பங்காரு'' என்று உள்ளிருந்தே உருகிச் சொன்ன ஸ்வாமி, கதவைத் திறக்கவே யில்லை.

ஸ்வாமி ஏன் தாமே கிருஷ்ணமூர்த்தியின் வெறியைத் தணிக்க வில்லை என்ற கேள்வி எழுகிறது. நிஜபக்தி வருவதற்குத்தான் தனி மனச் சுயேச்சையை சரணாகதி செய்ய வேண்டும் என்பது மட்டுமில்லை; அளவு மீறிய பக்தி வெறியை விடுவதற்கும் ஸ்வயமாக, உள்ளூர இஷ்டம் இருக்கவேண்டும் போலும்! கிருஷ்ணமூர்த்தி பூர்ண சரணாகதி செய்திருந்தால் பாபாவின் இஷ்டமே தம் இஷ்டம் என்று அவர் உத்தரவுக்குச் செவி சாய்த்திருப்பார். சரணாகதி செய்திருந்தால் பாபாவே அவர் மனத்தில் புகுந்து அதை சுத்தம் செய்திருப்பார். இப்படி மனமொப்பி மனத்தை அவர் பாதத்தில் கிடத்தாவிட்டால், தாமாக அப்படிப் பட்ட மனத்தை வசம் செய்வது ஹிப்னாடிஸ்ட் வேலை என்று தள்ளிவிடுவார் போலும். (புத்திபூர்வமாக கிருஷ்ண மூர்த்தி விருத்தாந்தத்தை விளங்கிக் கொள்ள முயல்கையில் இக் கருத்து தோன்றுகிறது. ஆனால் இது அந்தத் திவிர பக்தரைக் குறைசொல்வது போலிருப்பது நம் மனத்துக்கே உகவாமலும் உள்ளது. இச் சம்பவங்களின் ரகசியம் பாபாவுக்கே தெரியும் என்று விட்டுவிட வேண்டியதுதான்!)

கிருஷ்ணமூர்த்தியின் வீட்டார் வந்து அவரை பலாத்கார மாக இழுத்துச் சென்றனர்.

வீடு திரும்பியவர் பாபாவே தியானமாக, அதே ஏக்கத்தில் அன்ன ஆகாரமின்றிப் பஞ்சடைந்து கிடந்தார்.

வைத்தியசாலையில் சேர்த்தனர். ஆனால் கிருஷ்ணமூர்த்தி மருந்து உண்ணவும் மறுத்தார்.

இங்கே பாபா தமது பாத கமலங்களில் நீர் வார்த்துக் கொண்டார். அவரது இதய கமலமும் அப்போது கண்ணீர் சொரிந்துதான் இருக்கும். பாத தீர்த்தத்தைப் பிடித்து, ''இதைக் கொண்டு போய் அவனுக்குக் கொடுங்கள். அவன் இஷ்டமே நிறைவேறட்டும்'' என்றார்.

ஆம், பக்தி வெறிக்குப் பராதீனமாகிவிட்டார்!

தீவனுக்கு மாறும் சந்தோரமாகப் பாதநீரைப் பருகினார் கிருஷ்ண மூர்த்தி. பக்ஷையாகக் கிடந்தவர் பிக்ஷையாகத் தெம்பு பெற்றார். பரவச வெறி எப்படியோ அடங்கிவிட்டது. சாந்த ரானார்.

Koviloor Digital Library

வைத்தியசாலையிலிருந்து வீடு திரும்பினார்.

விட்டாரை பஜனை செய்யச் சொன்னார்.

பஜனை முடிவில் மங்களாரத்தி எடுத்தார்கள். கர்ப்பூர ஜோதியை ஒற்றிக்கொள்ளக் கிருஷ்ணமூர்த்தியிடம் கொண்டு வந்தபோது அவர் அசையவில்லை.

எப்படி அசைய முடியும்? கர்ப்பூரமாகவே இந்த ஜீவ ஜோதி பாபாஜோதியில் கரைந்து விட்டது!

கிருஷ்ணமூர்த்தி காலமாகி விட்டாரா? இல்லை. காலத்தைக் கடந்து விட்டார்.

அவரைக் கடத்துவித்து, இந்த நிகழ்ச்சியால் நமக்கே இனம் புரியாததோர் கனமான வேதனையைத் தரும் பாபாவோ லேசாகக் குழந்தை விளையாட்டு விளையாடிக்கொண்டிருந்தார். "அந்தக் கடிகாரத்தைப் பாருங்கள்" என்று பக்தர்களிடம் சிரித்துக் கொண்டே கூறினார்.

கடிகார முள் முன்னோக்கிப் போகாமல் பின்நோக்கி ஓடிக் கொண்டிருந்தது!

விளையாட்டிலேயே 'கால தத்வம் என் ஆதிக்கத்துள்தான்' எனக் காட்டினாரா?

இந்தக் காலகாலனையே காலனிடம் அனுப்பி வைக்கவும் பயங்கரச் சூழ்ச்சிகள் நடந்தன!

Koviloor Digital Library

அத்தியாயம்—25

பகைவனுக்கருள் ஸாய்!

மன்னுயிர்ஓம்பி அருள்ஆள்வாற்(கு) இல் என்ப
தன்னுயிர் அஞ்சும் வினை

— குறள்

(மன்னுயிர்களுக்கு அருள் பொழிந்து வளர்ப்பதே பணியாகக் கொண்டோருக்குத் நம் உயிரைப் பற்றிக் கவலைப்படும் காரியம் இல்லை.)

''ஸ்வாமி! நீங்கள் ஒருநாள் பக்தர்களோடு என் அகத்துக்கு வந்து போஜனம் செய்யவேணும்'' என்று பாபாவிடம் வேண்டிக்கொண்டாள் ஓர் அம்மாள்.

ஓர் அம்மாள் என்று பேர் சொல்லாமல் தள்ளக்கூடியவள் அல்லதான். ஆயினும் இங்கு பேரைச் சொல்லாததற்குக் காரணமுண்டு.

''ஆஹா'' என்று ஒப்புக்கொண்டார் பாபா. ''சாப்பாடு வேண்டாம். டிஃபன் போறும்'' என்றார்.

அவள் காரியத்துக்கு அதுவே போதும், அதிக செலவு வைப்பானேன் என்று அருளாளர் எண்ணியிருக்கிறார்! எப்படியும் இவர் காரியம்தானே நடக்கப் போகிறது!

அணுக்கத் தொண்டர்களோடு அவ் வீட்டுக்குச் சென்றார்..

அம்மாள் ஆர்வத்தோடு வரவேற்றாள்.

வடையும் காபியும் மணக்க மணக்கக் கொண்டு வந்து பரிமாறினாள்.

பாபாவுக்கு முன் இரண்டு வடைகளை வைத்து, ''ஸ்வாமி! நீங்க சாதாரணமாத் துளித்துளி கொரிச்சுட்டுச் சாப்பிட்டதாப்

Koviloor Digital Library

பேர் பண்ணிடறேள். இங்கே அப்படிப் பண்ணும..'' என்று அவள் சொல்லும்போதே பாபா இடைமறித்து, ''இந்த இரண்டு வடையையும் வள்ளிசாத் தின்னத்தான் போறேன்'' என்று முகமலரக் கூறினார்.

அவளும் அகமலர்ந்தாள்.

சொன்னபடி இரண்டு வடைகளையும் முழுசாக உண்டார் ஸ்வாமி.

காபி அருந்தியபின், தமது இருக்கையாகக் கொண்ட சுப்பம்மாவின் வீட்டுக்குப் புறப்பட்டார்.

டிபன் உபசாரம் செய்தவளும் உடன் வந்தாள்.

வீடு திரும்பியதும் அவளையே சற்றுப் பார்த்தார் ஸ்வாமி. ஏதோ உபாதை போல் வயிற்றைப் பிடித்துக்கொண்டார்.

எல்லோரும் பதைத்தனர்.

குபீர் என்று வாந்தி செய்தார் பாபா.

கலீர் என்று நகைத்தார்.

புட்டபர்த்தீசன் சற்றுமுன் புட்டுப்புட்டு உண்ட இரு வடைகளும் முழு முழு வடைகளாக வெளியே விழுந்திருந்தன!

அனைவருக்கும் ஆச்சரியம் தாங்கவில்லை.

வடை கொடுத்தவளோ தவடையில் படபட என்று போட்டுக்கொண்டு நடுங்கினாள். ''ஸ்வாமி! இந்தக் கொலைகாரப் பாவியை மன்னிச்சுடுங்கோ!'' என்று அழுதுகொண்டு அவர் காலடியில் விழுந்தாள்.

ஸ்வாமி அன்போடு அவள் தலையில் பூங்கையை வைத்து, ''பங்காரு, ஸந்தோஷம்'' என்றார்.

அந்த அம்மாள் ஆறுகக் கண்ணீர் வடித்தாள்.

'எப்பேர்ப்பட்ட கொடூரத்தைச் செய்ய இருந்தோம், இந்த மதுர மூர்த்திக்கு' என்று மறுகிப் பச்சாத்தாபத்தில் புலம்பினாள்.

* * *

அக்காலத்தில் கிராமாந்தரங்களில் ஜாதிக் கட்டுப்பாடுகள் மிகவும் கடுமை. க்ஷத்ரிய இளைஞரான பாபா பிராமண சுப்பம்மாவின் வீட்டில் வசிப்பதும், உண்பதும், அவர் உண்டு மிகுந்ததை பிராமணர்களும் பிரஸாதமாக ஏற்பதும் கிராமத்தில் சிலருக்குப் பரம அக்கிரமமாகத் தோன்றியது. ஏற்கெனவே வேறு காரணங்

களால் பாபாவைக் கண்டு வயிறெரிந்தவர்களுக்கு இந்த 'அக்கிரமம்' எண்ணெய் வார்த்தது!

இத்தனைக்கும் பாபா இன்றளவும், அநேக சமய சீர்திருத்த வாதிகளைப் போல ஜாதியமைப்பு தவறானது என்று சொல்பவரே அல்ல. பிறப்பால் ஒருவர் உயர்த்தி, இன்னொருவர் தாழ்த்தி என்ற எண்ணமும் துவேஷமும் இல்லாமல் அவரவரும் ஜாதி தர்மத்தைக் கடைப்பிடித்தால் அதுவே சமூக க்ஷேமம் பயக்கும் என்ற கருத்துடையவர்தான் அவர். 'ஓர் அறைக்கு நாலு சுவர்கள் இருப்பதுபோல், நாலு வர்ண ஏற்பாடே நம் சமுதாயத்தைப் பேணிக் காத்து வந்திருக்கிறது' என்பார். ஆனால் நடைமுறையில் பழைய கட்டுப்பாடுகள் அனைத்தையும் பின்பற்றுவது நடக்காத காரியம் என்றே அவர் காண்கிறார் போலும்! இன்றைய மக்களைப் பாரம்பரியத் தொழில்களிலேயே ஈடுபடச் செய்வது இயலாத காரியம், அது அவ்வளவாக அவசியமும் அல்ல என நினைக்கிறார் போலும். பரம்பரைத் தொழில் போன பின், அவற்றை அநுசரித்தே உண்டான ஆசாரங்களில் சிலவற்றைத் தளர்த்துவதில் தவறில்லை என்பதே அவரது கருத்தாகத் தெரிகிறது. ஒரே போன்ற உலகாயதப் போட்டியில் அனைவரும் இறங்கியபின், தமக்குள் நிரம்ப வித்யாசங்கள் பாராட்டுவது துவேஷத்துக்கும் துக்கத்துக்குமே இடமாகும் எனக் காண்கிறார். இதனால்தான் 1940-லேயே சமபந்தி போஜனம் முதலானவற்றைத் தம் இருக்கையில் அமலாக்கினார்.

ஆயினும் இன்றுங்கூட அவர், ''எல்லா ஜாதிகளையும் ஒன்றாக்கி விடவேண்டும்; கலப்பு மணம் செய்துகொள்ள வேண்டும்'' என்றெல்லாம் சொல்வதில்லை.

ஜாதியமைப்புக் குறித்து ராமகிருஷ்ணர், ரமணர், ஆனந்தமயீ மா ஆகிய அவதாரங்கள் வகிக்கும் அதே நடுநிலைமைக் கொள்கை கொண்டவர்தான் நம் கதாநாதர். இவர்களிடம் கலப்பு மணம் செய்துகொண்டவர்கள், சுயம் பாகமே செய்து மறைவாக உண்பவர்கள் ஆகிய இரு சாராரும் வருவதுண்டு. இவர்கள் இரு தரப்பினரையும் ஏற்பார்கள். முன்னவர்களிடம் ஜாதி நியமங்களை இவர்கள் வலியுறுத்துவதில்லை; அதேபோல் பின்னவர்களிடம் கலப்பு மண மகிமையை ஓதுவதும் இல்லை.

ஒரு விஷயம் குறிப்பாகக் கவனிக்க வேண்டும். வேதத்தோடு நேர் சம்பந்தம் கொண்ட அத்யயனம், யக்ஞம் ஆகிய விஷயங்களில் இவர்கள் பழைய பாரம்பரிய ஏற்பாட்டை மிகப் பெருமளவுக்கு வழுவாமலே பின்பற்றுகிறார்கள். வேத தத்வங்களை எல்லா ஜாதியாரும் பயில்வதை இவர்கள் ஆட்சேபிக்கவில்லை. வைதிக ஸ்தோத்ரங்களைக்கூட அனைவரும் கற்பதையும் இவர்கள் கண்டிப்பதில்லை. ஆனால் வேதமோதுவதும் பிறருக்குப் போதிப்பதுமே தொழில் எனக் கொண்டு அத்யயன—அத்யாபனம் செய்யும் அதிகாரத்தை இவர்கள் பாரம்பரிய முறையில் மட்டுமே அநுமதிக்கிறார்கள். யக்ஞம் முதலான சடங்கு

Koviloor Digital Library

களிலும் பரம்பரை உரிமை பெற்றோருக்கு மட்டுமே இடம் தருகிறார்கள். நம்மால் அறியவொண்ணாத ஆழ்பொருள் கொண்ட பரம வைதிக விஷயங்களில், வேத மந்திரங்களைக் கண்டு கொடுத்த ரிஷிகளின் ரத்த சுத்தத்தைப் பாரம்பரியமாக ரட்சிப்பதில் இவர்கள் கண்ணும் கருத்துமாக இருப்பதாகவே சொல்லலாம்.

உதாரணமாக, புட்டபர்த்தியில் மற்றவர்களுக்கெல்லாம் சமபந்தி போஜனம் அமலில் உள்ள போதிலும், வேதபாடசாலை மாணவருக்கு மட்டும் தனிச் சமையல்தான் நடக்கிறது. கோடையில் அகில இந்திய மாணவர்களுக்காக பெங்களூரில் நடத்தப்பட்ட ஆத்மிக—கலாசாரப் பயிற்சி முகாம்களில் கலந்துகொண்ட பிரம்மஸ்ரீ ஜம்மலமதக மாதவராம சர்மாவுக்கு பாபா தனிச் சமையலும், அநுஷ்டானத்துக்காகத் தனியிடமும் ஏற்பாடு செய்ததை அவர் வானளாவப் புகழ்ந்து 'இவரே வர்ணாச்ரமக் காவலர்' என்கிறார்.

புட்டபர்த்தி பாடசாலையிலேயே சம்ஸ்கிருத காவியம் பயில்பவர் கிராப் வைத்துக்கொள்ளலாம்; ஆனால் வேத வித்யார்த்திகளுக்கு சிகை இருக்கவேண்டும் என்பதிலிருந்து வேதம் ஒன்றின் விஷயத்தில் எவ்வளவு நுண்ணிய ஆசார திருஷ்டியை நம் ஸ்வாமி கொண்டிருக்கிறார் என அறியலாம்.

வேதியர் என்று சொல்லிக்கொண்டு வேதத் தொடர்பே இல்லாதவர்களை உண்மை வேதியர்களிலிருந்து பிரித்து, உண்மை வேதியர்களை ஸநாதன ஆசாரங்களிலேயே நிலைப்படுத்தி வருகிறார் நமது ஸநாதன ஸாரதி.

கலியுகத்துக்கு நாம ஸ்மரணமே மோக்ஷ உபாயமாதலால் எல்லோரையும் ஆசார வைதிகத்தில் திருப்பாமல் ஸங்கீர்த்தனத்தில் ஈடுபடுத்தினால் போதுமெனக் கருதுகிறார் போலும். ஆயினும் யுகாந்தரமாக நம் தேசத்தில் வந்துள்ள தேவசக்திகொண்ட வேதமும் வேள்வியும் அடியோடு மறையாமல் கொஞ்சமேனும் இருக்கவேண்டும்; அதன் வீர்யத்துக்கு வேண்டிய சூழ்நிலை தற்போது மிகக் கெட்டுவிட்டதால், சுத்தமாக அதைக் காக்கும் தீரர் வெகுசிலரே இருந்தால் போதும் எனக் கருதி இப்படிப் பட்டவர்களை வர்ண தர்மாசாரத்திலேயே ஊக்கி நிலைப்படுத்தி வருகிறார்.

ஏனையோர் விஷயத்தில் பாபா கைக்கொள்ளும் நீக்குப் போக்குத்தான் அக்கால ஆசாரக்காரர்களுக்கு அக்கிரமமாகத் தோன்றியது. பழைய பகைவர்கள் இந்த ஆசாரவாதிகளைத் தூண்டி விளைவித்த பரம அக்கிரமத்தின் விளைவுதான் அன்று அந்த அம்மாள் வடை உபசாரம் செய்து, பிறகு மன்னிப்பு வேண்டிக் கதறியதில் முடிந்தது.

பாபா ஆசாரத்துக்கு உலை வைக்கிறார் என்ற எண்ணத்தில், சூழ்ச்சிக்காரர் வலையில் விழுந்து, அவரது இன்னுயிருக்கே உலை வைக்க முற்பட்டுவிட்டாள் இந்த அம்மாள். 'ஆம், அந்தண

Koviloor Digital Library

வட்சணத்தில் முதலாவதான அன்பை அறவே துறந்து, தாய்க் குலத்தின் தனிச் சுவையையும் ஆசார வெறியில் வற்றச்செய்து கொண்டு தீச்செயலில் இறங்கினாள்.

சதிகாரரின் கைப்பாவையாகி பாபாவை — அமிருத ஸ்வாமியை- மதுர தேவதையை — விஷம் வைத்துக் கொல்லத் திட்டமிட்டு விட்டாள். கொடிய விஷத்தை மாவோடு சேர்த்து இரு வடைகளாகத் தட்டி பாபாவுக்கு வைத்தாள்.

''உண்ண வாருங்கள்'' என்று வஞ்சகமாக வேண்டி அழைத்து, விஷ உணவைத் தந்து, அதை இவியன் முழுவதும் உண்ணவும் செய்து, இதுவும் போதாதென்று அவர் உயிரிழந்து விழுவதைக் கண் ஞாரப் பார்ப்பதற்காகக் கர்ணத்தின் வீட்டுக்கும் உடன் சென்றுளே, அவளுடைய நெஞ்சின் நஞ்சை என் சொல்ல?

அந்த நெஞ்சழுத்தத்தை எத்தனை வேடிக்கையாக இளக்கிக் கதறவைத்துவிட்டார், ஆலகாலமுண்ட நம் காலகாலர்! விண்டு விண்டு உண்ட வடையை முழு உருவில் வெளிப்படுத்தி, விண்டுரைக்க மாட்டா விந்தை புரிந்துவிட்டார்.

''அந்தம்மாவை யாருமே துவேஷிக்கக்கூடாது. தெரியாத் தனத்தால்தானே இப்படிச் செஞ்சாங்க ?'' என்று பரிந்து பேசினர் பார்த்திவாளர்.

தம்மைச் சிலுவையில் அறைந்தவர்களுக்காக இயேசு நாதர் பிரார்த்தனை செய்து, ''தந்தையே! அவர்களுக்குத் தாங்கள் என்ன செய்கிறோம் என்று தெரியாது. அவர்களை மன்னித்து விடுங்கள்'' என்றார்.

ஈராயிரம் ஆண்டுகளானாலும் அன்பின் குரல் மாறுவதில்லை தான்!

''அவள் சதி செய்ததாகவே சொல்லக்கூடாது. அவள்தான் என் தெய்விகத்துக்குப் பரீட்சை வைத்து, உங்கள் எல்லோருக் கும் அதை நிரூபித்துக் காட்டிய உபகாரத்தைச் செய்திருக்கிறாள். ஸ்வாமியை யாரும் ஏமாற்ற முடியாது; ஸ்வாமியை விஷமும் கொல்ல முடியாது என்ற உண்மைகளை உங்களுக்கெல்லாம் அவளுடைய காரியம்தானே நிதரிசனமாக்கி யிருக்கிறது? என்னைப் பரீட்சை பார்த்தாள். அதில் நான் பாஸ் ஆனவுடன் பக்தி கொண்டு விட்டாள்'' என்பாராம் பாபா.

'சீடனை குரு பரிசீலிப்பது போல், சீடனும் குருவைப் பரிசீலிக்க வேண்டும். என் காரியங்களைப் பைஸா பைஸாவாகச் செல்லுமா செல்லாதா என்று பரிசோத பார்த்தே என்னை ஏற்றுக் கொள்' என்றார் பரமஹம்ஸ ராமகிருஷ்ணர். அதையேதான் பாபாவும் சொல்கிறார்.

Koviloor Digital Library

அந்த அம்மாள் இதன்பின் பாபாவிடம் ஆழ்ந்த பக்தி கொண்டுவிட்டாள். தானே தனது தீச்செயலைப் புதிதாக வருவோருக்கும் சொல்லி, ஸ்வாமியின் தெய்விகத்தை நிலைநாட்டிப் பேசுவாள். எனவே இங்கு அவள் பெயரைக் கொடுத்தாலும் தவறில்லைதான். ஆனாலும் இதனால் ஒரு குடும்பத்தையே களங்கமான பழைய நினைவினால் குறிப்பிடும்படியாகி விடுமாதலால் பெயரைத் தராமல் விட்டிருக்கிறது.

பிற்காலத்திலும் பாபா பலமுறை அவள் வீட்டில் உணவு கொள்ளச் செல்வதுண்டு. ''சாதாரண சாப்பாடு போறும்மா; அன்னிக்கு மாதிரி ஸ்பெஷலா எதுவும் போடவேண்டாம்'' என்று அவளைச் சீண்டிவிட்டு, அவள் கண்கலங்கும்போதே, ''பங்காரு பங்காரு'' என்ற பனிச் சொற்களால் அவள் கண்களின் பனிப் படலத்தை வற்றச் செய்வார்.

ஒரு மாலை அடியாரோடு ஆற்றங்கரை சென்றார் நம் ஆண்டகை. பக்தி மார்க்கம் பற்றி அரிய உபதேசங்கள் அளித்தவாறே, மண்ணில் கைவிட்டு அளைந்தார்.

அக் கை வெளிவந்தவுடன், ''ஸுப்ரம்மண்யா, ஷண்முக நாதா'' என்ற கோஷம் பக்தர் நாவிலிருந்து வெளிவந்தது.

வள்ளலின் கரத்தில் வெள்ளியிலான வள்ளிமணாளன் விக்ரஹம் மின்னியது. சுமார் அரைசாண் உயரமிருக்கும்!

''அம்மா, உனக்கே உனக்கு'' என்று அதை விஷம் வைத்தவளுக்கே வழங்கினார் ஐயன்.

அந்த அம்மாள் பெயரிலேயே விஷ சம்பந்தமுண்டு. அவள் வெந் நாகமாக விஷம் வைத்தாள். நாகஸாயியோ அமுத குண்டலினியாம் நாகராஜனேயான முருகனின் பிரதிமையை அவளுக்குப் பிரதியாகக் கொடுத்தார். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் சால்புக்கு இதைவிட ஓர் உதாரணம் உண்டா?

* * *

பக்தையாகும் பாக்கியம் இவளுக்குக் கிட்டியதே தவிர, எல்லாப் பகைவர்களுக்கும் கிட்டவில்லை. பிரஹ்லாதனையும் மீராவையும் விஷம் தீண்டாதபின்னும், ஹிரண்யனும் ராணாவும் அவர்களைக் கொல்ல வேறு சித்ரவதைகளைச் செய்தனர் அல்லவா? பாபா மஹிமையை மேலும் உயர்த்திக் காட்டவே கங்கணம் கட்டிக்கொண்டாற் போல், அவரை விரோதித்தவர்களும் சூழ்ச்சியை விடவில்லை.

அடுத்தபடியாக, அந்த அரக்கர்கள் அரக்கு மாளிகை லீலையைப் புரியப் போகிறார்கள் என்று பாபாவுக்கா தெரியாது? தன் வாஸத்தால் ஏற்கெனவே பெருமை பெற்ற சுப்பம்மாவின்

Koviloor Digital Library

விட்டுக்கே அரக்குமாளிகை மகிமையும் ஏற்படக்கூடாதென என்னினுர் போலும்!

சுப்பம்மாவிடம், "அம்மா! பிராம்மணியான உன் வீட்டில் நான் இருப்பதால்தானே ஊரில் துவேஷம் பரவி விட்டது? நான் தனியாக ஆச்ரமம் வைத்துக்கொண்டு அங்கே ஆசாரங்களை விட்டால் அது இவ்வளவு தூரம் ஊர் கண்ணை உறுத்தாது. அப்படித்தான் செய்யப் போகிறேன்" என்ருர்.

சுப்பம்மாவும், அவளுடைய சகளத்திரியான கமலம்மாவும் "கூடவே கூடாது" என்று பிடிவாதம் செய்தனர்.

"அவரும் போய்விட்டார். பிள்ளைக்கும் எங்களிடம் திருப்தி இல்லை. தெய்வமாக வந்த நீங்களும் போனுல் தாங்க முடியாது" என்று அரற்றினர்.

"அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. ஸ்தூலமாக வெளியே போனுலும் நான் உங்களோடேயே இருப்பேன். ஏன், நீங்கள் போயேபோய்விட்டதாக நினைக்கும் உங்கள் அகத்துக்காரர் கூட உள்ளே தோட்டத்துக் கோடியில் தான் இருக்கார். போய்ப் பாருங்கோ" என்ருர் பாபா.

அவரிடம் எத்தனையோ அதிசயங்களைக் கண்டிருந்தும்கூட அவ்விருவரும் இதை நம்பத்தான் இல்லை.

"நான் சொல்கிறேன். நம்ப மாட்டீர்களா? உம், போய்ப் பாருங்கோ" என்று பிடரியைப் பிடித்துத் தள்ளாத குறையாகக் கூறினுர் பாபா.

சுப்பம்மாவும், கமலம்மாவும் புறக்கடை சென்று பார்த்தார்....

என்ன விந்தை! எப்போதோ புகைந்து சாம்பலாகிவிட்டவர்தாம் வழக்கப்படி சுருட்டை இழுத்துப் புகைத்துக்கொண்டு மரத்தடியில் நிற்கிறுர்!

புண்ய தீர்த்தமாடச் செல்கையில் மீனுக்ஷியம்பிகையின் தாய் காஞ்சனமாலை, 'புருஷன் அல்லது புத்திரனின் கைப்பற்றியே தீர்த்தமாடவேண்டுமென்பார்களே! நமக்கோ பிள்ளையில்லை, பதியும் மரித்துவிட்டாரே' என்று கலங்க, அப்போது மாப்பிள்ளையான சுந்தரேச்வரர் மறைந்த மலயத்வஜனைத் தாற்காலிகமாக வரவழைத்த வரலாறு நினைவு வருகிறது.

அன்று காஞ்சனமாலை மகிழ்ந்தாள்.

இன்றோ சகளத்திரிமார் அலறிப் புடைத்துக்கொண்டு வாசலுக்கு வந்தனர்.

Koviloor Digital Library

கிண்கிண் என நகைத்த ஸ்வாமி, "பயப்படாதீங்க! இனி மேலே வரமாட்டார். போக வேண்டியது போனுத்தானே சரியா இருக்கு? இல்லாட்டா அதுவே பயத்துக்கு இடமாறது. பாருங்கோ! நான் இங்கேயிருந்து போய்த்தான் ஆகணும்" என்ருர்.

★

குடிசை வேய்ந்து கொண்டு தனியே சென்று விட்டார் பாபா.

ஓரிரவு குடிலுக்குள் அடியார் சிலரோடு சயனித்திருந்த ஸாயி சிரித்துக்கொண்டே வெளிவந்தார். உறக்கம் கலைந்த அடியார் எட்டிப் பார்த்தனர்.

வெளியே மையிருட்டில் நாலைந்து பேர் நின்று கொண்டிருந்தனர். பாபாவைக் கண்டதும் அவர்கள் கலவரமடைந்து விலவிலத்து நின்றனர்.

பாபா கலகலவென நகைத்தார். அவர்களில் ஒருவனை நோக்கி வெறும் கையை வீசினுர். நெருப்புப் பெட்டியொன்று சிருஷ்டியாகி அவனை நோக்கிப் பறந்தது.

"ஐயோ பாபம்! நீயுந்தான், அப்பாயி, அப்பவே பிடுச்சுக் குடிசைக்குத் தீ வைக்கணும்னு ஒவ்வொரு குச்சியாக் கிழிச்சுப் பார்த்தே! பெட்டிதான் காலியாச்சே தவிர ஒரு குச்சியாவது பற்றவில்லை. இது ஸாயி பிராண்ட். இதை 'யூஸ்' பண்ணிப் பாரு" என்ருர். தன்னைக் கொல்வதற்குத் தானே ஆயுதம் படைத்துத் தரும் அற்புதர்!

அவர்கள் ஓட்டம் பிடித்தனர்.

பகை மட்டும் ஓட்டம் பிடிக்க மறுத்தது.

* * *

ஸாயி பிராண்ட் வத்திக் குச்சியைத்தான் உபயோகித்தார்களோ என்னவோ, இன்னெரு நள்ளிரவில் மெய்யாகவே குடில் பற்றி எரிந்தது.

பக்தர்கள் பதறி விழித்தனர்.

பகவான் அமைதியாய் அமர்ந்திருந்தார்.

விதிக்கு ஓடுவதற்குமின்றி, கதவை வெளியே பூட்டியிருந்தனர் வஞ்சப் பாதகர்.

"ஸ்வாமீ, ஸ்வாமீ" என்று அடியார் கதற, "நானிருக்கப் பயமேன்?" என நளினக்கரத்தை உயரத் தூக்கி அசைத்தார் நாதர்.

அண்ட கபாடங்கள் பிளப்பதுபோல் இடி இடித்தது.

Koviloor Digital Library

இமை கொட்டுவதற்குள் மழை கொட்டுக் கொட்டு என்று கொட்டத் தொடங்கியது.

'முழங்கி உருமெனத் தோன்றும் மழையாய் மின்னி இடித்தவன் காண்' என்ற தேவார வாசகத்தை தேவன் மெய்யாக்கிவிட்டான்.

நெருப்பு தணிந்தது.

வஞ்சகத் தீ தணியவில்லை.

* * *

இவரைக் கொல்வது இயலாத காரியம் என்பதால் கொலைச் சதியை எதிர்ப்பாளர் கை விட்டாலும், character–assassination என்னும் கொலையினும் கொடிய அபவாதப் புரளிகளை பாபா குறித்து அபரிமிதமாகப் பிரசாரம் செய்யத் தொடங்கினர்.

பாபாவின் பக்தர்களுக்கு ஓயாமல் பலவிதமான தொல்லைகளைத் தரலாயினர்.

ஓர் உதாரணம்:

அந் நாளில் தசரா, கிருஷ்ண ஜயந்தி போன்ற தினங்களில் பாபாவை உலா எடுத்து வருவதற்காக அன்பர்கள் அலங்காரச் சப்பரம் ஜோடிப்பார்கள். அவர்கள் இப்பணியில் ஈடுபட்டிருக்கும் போது, விரோதிகள் உயரே இருந்து அவர்கள்மேல் கற்களை வீசுவார்கள். "ஸாயிராமா" என்று சொல்லிக் கொண்டே அடியவர் பணியைத் தொடருவார்கள். அதற்கு வெகுமதியாக, கற்கள் பூ இதழ்களாக மாறி அவர்கள் சிரசில் மெத்தென விழும் — ஐயன் தூவும் ஆசி மலர்!

அரிச்சந்திரன் சந்திரமதியின்மேல் வாளை வீச அது பூமாலையாக விழுந்தது என்பது கட்டுக்கதையல்ல என்று இனி நம்பலாம் தானே?

"பூ, இவ்வளவுதானே?" என்று பாபா சங்கல்பித்தால், கல்மாரி பூமாரியாக வேண்டியதுதான்!

மூத்த அன்பர் ஸ்ரீ கணேஷ்ராவ் தாமே நேரில் கண்டதாகக் கூறும் ஒரு நிகழ்ச்சி. சில ஆண்டுகளுக்கு முன் ஸ்வாமி பெங்களூரில் உரையாற்றிக் கொண்டிருந்தார், கீதா யக்ஞம் ஒன்றில். அவரை நோக்கி ஒரு கல் பறந்து வந்தது. எவனோ மகாபாபிக்கு (அவனைப் பாபி என்பதையும் பாபா ஒப்ப மாட்டார்தான்!) இந்தப் புண்ய மூர்த்தியைக் கல்லால் அடிக்கும் கொடூர ஆசை தோன்றியிருக்கிறது. அவை விலவிலத்தது. ஸ்வாமியோ

Koviloor Digital Library

கலகலப்பாகவே உரையைத் தொடர்ந்து கொண்டிருந்தார். கல்லானது அசல் ரோஜா மலராக மாறி அவரை அர்ச்சித்தது! ஆயிரமாயிரம் கண்கள் கண்ட அதிசயக் காட்சி! ஆனாலும் அந்தக் கயவனின் கல்மனம் மலராகி அவன் பாபாவின் பாதத்தில் விழுந்ததாகத் தெரியவில்லை!

* * *

பல பகைவர்களைப் பகைவராகவே வைத்து விளையாட்டுப் பார்க்கும் பகவர், பழிக்க வந்த சிலரைத் துதிக்க வைத்துத் திருப்புவதும் உண்டு.

இப்படித்தான் லக்ஷ்மையா பாபாவின் மானத்தை வாங்க வேண்டும் என்றே நாலைந்து பேருடன் பர்த்திக்கு வந்தார்.

அன்று பூர்ணிமை.

வழக்கம் போல் பாபா சித்ராவதி தீரத்தில் அடியாரைத் தம் அன்பின் முழு நிலவில் முழுக்குவதற்காக அழைத்துச் சென்றார். மதியத்தை விழுங்க எண்ணிய ராஹு கேதுக்களான லக்ஷ்மையா கோஷ்டியையும் இட்டுச் சென்றார்.

ஆற்றங்கரையின் இன்னிசைக்குப் பொருந்தாத அபஸ்வரக் கேள்விகளை, அபஸ்மார வினாக்களை இந்தப் 'புண்யவான்'கள் தொடுக்கலாயினர்.

சளைக்காமல் பதிலளித்து, ராஹுவும் கேதுவும் தீண்டவொண்ணா மதியமாக இலகினார் மாமதியாளர்.

பேசிக்கொண்டே அக் கோஷ்டியை மட்டும் இடுகாட்டருகே இட்டுச் சென்றார்.

பாபா அங்கே அமர்ந்தார்.

பரீக்ஷிக்க வந்த ஒருவர், "இப்போதே, இங்கேயே எங்களுக்குச் சாப்பிட ஏதாவது உங்கள் சக்தியால் வரவழைத்துத் தரவேண்டும்" என்றார்.

"பேஷாக" என்றார் அன்னபூரணர். "மசாலா தோசையா? போளியா? ஸொஜ்ஜியா? லட்டுவா? என்ன வேணும்?"

அவர்கள் தமக்குள் கிசுகிசுத்துக் கொண்டனர். "இதை எல்லாம் இவர் மாஜிக் செய்து ஏதேனும் ஹோட்டலிலிருந்து கடத்திவரக் கூடும். இந்தக் கடத்தலைத்தான் முட்டாள் ஜனங்கள் 'ஸிருஷ்டி' என்கிறார்கள். எனவே இந்தப் பருவத்தில் விளையாத பழம் எதையேனும் கேட்போம்" என முடிவு செய்து, "மாம் பழம் வேண்டும்" என்றனர்.

"ஓ" என்றார் ஸ்வாமி.

''யத்ன ப்ரயத்னமுல் மானவதர்மமு
ஜய அபஜயமுல் தைவாதீனமு''

என்று பாடி, ''மனிதன் கொஞ்சமாவது முயற்சி செய்தால்தான் அவன் விரும்புவதற்குத் தெய்வம் கை கொடுக்கும். உங்களில் ஒருவர் மண்ணைத் தோண்டிப் பாருங்கள்! பழம் கிடைக்கிறதா பார்ப்போம்'' என்றார்.

உடனே ஒருவர் தாம் உட்கார்ந்த இடத்திலேயே தோண்டினார். 'ஷாக்' அடித்ததுபோல் கையை எடுத்தார்.

''சாமி! சுடுகாட்டுக்குக் கூட்டி வந்திருக்கீங்க. இங்கேயானு, தோண்டுறப்ப, கையிலே என்னவோ ஜிலீர்னு படுது. சவமா, சிவமா இருக்கப்போவுதேன்னு பயமாயிருக்கு'' என்றார் அந்தப் பேர்வழி.

பதினேழு வயது பால பாபா, பாப்பாவாக மண்ணில் புரண்டு புரண்டு சிரித்தார்.

''நாயனா! சவத்துகிட்டே ஏன் பயம்? நாமும் அப்படி ஆகத் தானே வேணும்? பார்க்கப் போனால் ஒரு தீங்கும் பண்ணாத சவத்தைவிட, உயிரோடு இருக்கிற நம்மைக் கண்டேதான் நாம் பயப்படணும்'' என்றார் பொருள் பொதிய.

லக்ஷ்மையாவைப் பார்த்து, ''அவர் பாவம், பயப்படுறாரு. நீ பங்காரு, போய்க் குழிக்குள் பாரு'' என்றார்.

லக்ஷ்மையா, நண்பர் தோண்டிய 'வளை'க்குப் பக்கத்தில் வந்தபோதே கம்மென்று மாம்பழ மணம் வீசியது!

''பழந்தான் சாமி'' என்றார்.

''லோக நாடகத்தைப் பார்த்தியா? ஒருத்தன் பிணம்னு சொன்னதையே இன்னொருத்தன் பழம் என்கிறான். சரி, இன்னம் கொஞ்சம் தோண்டி, அதை எடுத்துண்டு வா.''

மேலும் அகழ்ந்ததில், காலமில்லாக் காலத்தில் ஒரு குண்டு மல்கோவா தன்னைக் கைக்கு வந்தது.

பாபாவைத் தோண்டி ஆழம் பார்க்கவந்தவர்களுக்கு பக்தி வரத் தொடங்கி விட்டது.

''இத்தனை பேருக்கு இந்த ஒரு பழம் எப்படிப் போதும் சாமி?'' என்று கேட்டவாறு கனியை ஸ்வாமியிடம் கொடுத்தனர்.

ஸ்வாமி அங்கை அசைக்க அதிலே ஒரு கத்தி வந்தது.

பழத்தைத் துண்டம் போடலானார்.

அதென்ன ஒரு பழமா? அல்லது ஒரு பழக்கூடையா?

Koviloor Digital Library

நறுக்க நறுக்கத் துண்டங்கள் வந்துகொண்டே யிருந்தன. இன்னும் அரைப்பழம் கூட நறுக்கியாகவில்லை. அந்தக் கோஷ்டியினர் முட்ட முட்டத் தின்று திணறுகிறார்கள்.

பாபாவோ விடமாட்டேன் என்று தே மாந்துண்டங்களைத் திங்கரத்தால் மேன்மேலும் அவர்களிடம் வீசிக் கொண்டிருக்கிறார்.

"தின்னுட்டி விடமாட்டேன். இது சுடுகாடு இல்லே? பூதங்களைக் கூப்பிட்டுப் பிடிச்சுக் கொடுத்துடுவேன்" என்று பூச்சிக் காட்டுகிறார் — குழந்தைகளை மிரட்டிச் சாதமூட்டும் தாய்!

"அடித்தடித்து அக்கார முன் நிற்றிய அற்புதம் அறியேனே" என்று மணிவாசகர் பாடியது நினைவு வருகிறது!

பூதத்தைச் சொல்லிப் பயமுறுத்தியபோதிலும் எந்தப் பூதம் வந்தாலும் பயப்பட மாட்டோம் எனும்படியாக பூந் சிரிப்பலைகளை அந்தப் பூர்ணிமை நிலவில், தீர்த்தக்கரையில் பிரவகிக்கிறார்.

லக்ஷ்மையா கோஷ்டி பாபாவின் பரம பக்தர்களானதைச் சொல்லவும் வேண்டுமா?

Fools who came to scoff remained to pray

என்று கோல்ட்ஸ்மித் சொன்னதைப் பிரத்தியக்ஷமாக்கும் இது போன்ற நிகழ்ச்சிகள் பல நம் நாதனின் சரிதத்தில் நிகழ்ந்துள்ளன. இவரே கோல்ட்ஸ்மித்தாகிப் பல 'பங்காரு'க்களை அழகு அணியாக்கி யிருக்கிறார். காலமிலாக் காலத்தில் கனி காட்டியவர், கசந்து வந்த பல இதயங்களையும் கனிவித்திருக்கிறார். இதைத்தான் மஹான்கள் 'வம்பே பழுத்த பழம்' என்பது.

* * *

ஒருமுறை இவரிடம் வந்த நாலைந்து பேரைப் பார்த்த மாத்திரத்தில், அவர்களில் இன்னார் கடிகாரத்தை இன்னார் மாற்றிக் கட்டிக் கொண்டிருக்கிறார் என 'டக் டக்' கென்று கூறினார்.

உடனே அவர்கள் தடதடவென இவர் முன் வீழ்ந்து ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்தனர்.

அவர்கள் நாஸ்திகர்கள். இவரைக் குடைந்து குட்டை வெளிப்படுத்தவே கங்கணம் கட்டிக்கொண்டு வந்தவர்கள். வரும் வழியில், "நாம் ரிஸ்ட் — வாட்ச்களை மாற்றிக் கட்டிக் கொள்வோம். 'பரட்டைத் தலை'யிடம் நிஜமாகவே சரக்கு இருந்தால் இதைக் கண்டுபிடித்துச் சொல்லட்டுமே!" என்று ஏற்பாடு செய்துகொண்டு கடிகாரங்களை மாற்றிக் கொண்டனர்.

Koviloor Digital Library

அதனால்தான் அவர்களைக் கண்ட மாத்திரத்தில் இவர் அவர்களது மட்டை உடைக்க, அவர்கள் கண்டனம் செய்ய வந்த இடத்தில் தண்டனிட்டனர்.

இன்னொரு சமயம். ஆற்றங்கரையில் சுமார் ஐம்பது பக்தர் சூழ அமர்ந்திருந்தார் பாபா.

ரக்ஷணம் தரும் ஸ்வாமியை பக்ஷணம் கேட்டார் ஓர் அடியார். அந்நாட்களில் மணலிலிருந்து பாபா 'எடுத்து' வழங்கிய பணியாரங்கள் யதேஷ்டம்.

இன்று பாபா எங்கோ நினைவாக ஆனார். ''ஐயோ பாபம்! எந்த கஷ்டபடி ஒக்கொருவாரு ராவி'' (ஐயோ பாவம்! எத்தனை கஷ்டப்பட்டு வருகிறார்கள்?) என்று தமக்குத் தாமே சொல்லிக் கொள்வதுபோல் கூறினார்.

பக்தர்கள் திரும்பித் திரும்பிப் பார்த்தனர். யாரும் வருவதாகத் தெரியவில்லை.

சிறிது போது சென்றது. ஆற்றின் அக்கரையில் தொலை தூரத்தே காரின் தலைவிளக்கு வெளிச்சமிட்டது.

வண்டி நெருங்கியது. அக்கரையில் நிறுத்தப்பட்டது.

அதிலிருந்து இறங்கிய நாலுபேரும் ஸ்வாமியிருந்த இடம் நோக்கி வந்தனர்.

அவர்களில் எவருமே ஸ்வாமியை வணங்கவில்லை. சற்றே எட்டத்தில் விரைப்பாக அமர்ந்தனர்.

''பக்ஷணம் கேட்டாயில்லை?'' என்று திடீர் நினைப்பு கொண்டாற்போல் பாபா பழைய பக்தரிடம் கேட்டார். ஆற்று மணலை எடுத்து அவர் கையில் தூவினார். புத்துருக்கு நெய்யின் மணம் வீசும் பெரிய மைசூர்பாகுக் கட்டியாக மாறியிருந்தது அம் மணல்.

மற்றவர்கள் கையிலும் இப்படியே மணலைத் தூவிச் சென்றார் ஸ்வாமி. ஒவ்வொருவர் கையிலும் முதல்தரமான மைசூர் பாகு உதித்தது!

காரில் வந்த வணங்காமுடிகள் பக்கமும் பாபா கையை நீட்ட, அவர்களும் மணலை வாங்கிக் கொண்டனர்.

ஆனால் அவர்கள் கைகளில் மட்டும் மணல் சாக்ஷாத் மணலாகவேதான் இருந்தது.

அவர்கள் முகத்தில் அசடு வழியத் தலைகவிழ்ந்தனர்.

"பாபம், வாரி வாரி தலபுலு வாரி வாரிகி" ("பாவம், அவரவர் எண்ணப்படி அவரவருக்கு'') என்று உருகிச் சொன்ன ஸ்வாமி, ''அய்யோ பாவம்! ஈரோட்டில் கிளம்பினதிலிருந்து எத்தனை கஷ்டம்? ஐந்தாம் மைலில் ஆக்ஸில் உடைஞ்சுது. வேறு வண்டி

Koviloor Digital Library

பிடிச்சு எடுத்து வந்திங்க. பெங்களூரில் டயர் வெடிச்சுது. புது டயர் போட்டுக்கிட்டீங்க. இங்கே வந்தால் எல்லாருக்கும் கிடைக்கிற பக்ஷணமும் கிடைக்க மாட்டேங்குது!''

ஈரோட்டிலிருந்து வந்த நாஸ்திகர்களை ஆஸ்திக ரோட்டுக்குத் திருப்புகிறார். ஸநாதன ஸாரதி ஓட்டும் வண்டியாதலால் வழியே விபத்து வராது!

அவர்களை ஆசிரமத்துக்கு அழைத்துச் சென்றார். ஒவ்வொருவருக்கும் தனிப்பட கோரிக்கை (அதாவது, பேட்டி) வழங்கினார். அவர்களுக்குத் தமது வாழ்வு முழுதும் இவருக்கு வெளிச்சம் என்பது பேட்டியின்போது தெரிந்தது. அப்படி வெளிச்சமாயிருந்தும் இவர் சபிக்காமல் வரம் தருவதில் உருகி நின்றனர்.

பாபா தாமே சிருஷ்டித்துத் தம் கரத்தாலேயே அன்போடு அழுந்தப் பூசிய திருநீறு துலங்கும் நெற்றியோடு திரும்பினர் அந்த முன்னாள் நாஸ்திகர்கள்.

'கூன் பாண்டியன்' சம்பந்தர் கையால் நீறு பூசப்பெற்று 'நின்ற சீர் நெடுமாற'னான கதை மீளவும் நடந்தது. ஆம், நாஸ்திக வாதம்தானே உள்ளத்துக்குக் கூன்? அதை நிமிர்த்திவிட்டாரே பர்த்திவாஸர் !

ஆனால்... எல்லா நாஸ்திகருக்கும் இந்த நற்பேற்றை நல்குகிறாரா? விளையாடுகிறார், ஏனோ!

Koviloor Digital Library

அத்தியாயம்—26

சென்னையம்பதியில் ஒரு ஷிர்டி-பர்த்தி

ஏழை ஏதலன் கீழ்மகன் என்ன(து) இரங்கி
மற்(று) அவற்(கு) இன்னருள் சுரந்து

— திருமங்கையாழ்வார்

பாபாவைக் காண பக்தர்கள் பல ஊர்களிலிருந்து வரலாயினர். பாபாவும் பக்தர்களைக் காணப் பல ஊர்களுக்குச் செல்லத் தொடங்கினார். தம் சஞ்சாரத்துக்கான காரணத்தை அவரே இவ்விதம் சொல்வார்: "புட்டபர்த்தியிலுள்ள பக்தருக்கும், என்னைக் காண இங்கு வருவோருக்கும் நான் வெளியூர் சென்றால் வருத்தமாக, ஏமாற்றமாக இருக்கிறது. நான் தித்திப்பு பக்ஷணம்; பக்தர்கள் எறும்புகள். ஆனால் எல்லா எறும்புகளாலும் இந்த பக்ஷணத்திடம் வர முடிவதில்லை. பரம ஏழைகள், கொடிய வியாதியஸ்தர்கள், படுகிழவர்கள் ஆகியோர் எப்படி வெளியூர்களிலிருந்து இங்கு வர முடியும்? அந்த எறும்புகளுக்காகவே இந்த பக்ஷணம் அவர்களிருக்கும் இடத்தைத் தேடிச் செல்கிறது.

"என்றாலும், முடிந்த முடிவாக, அவர்களுக்கும் சரி, மற்றவர்களுக்கும் சரி, பிரசாந்தி நிலயம் என்பது புட்டபர்த்தியில் இல்லை. அவரவருக்கும் மனத்தின் அலைப்புக்கள் அமைதியில் ஓய்ந்து, தமது இதயமே அதன் உண்மையான பிரசாந்தி நிலையைப் பெற வேண்டும். இதயப் பிரசாந்தி நிலயத்தில் உறையும் ஆத்மாதான் மெய்யான ஸாயிராம்."

தமது இருபதாம் வயதுக்கு முன்பிருந்தே ஸ்வாமி என்ற கருணைப் புயலின் சஞ்சாரம் தொடங்கிவிட்டது. ஸாகம்மா முதலான முக்கியமான பக்தர்கள் பெங்களூரில் இருந்ததால் அங்கு அதிகமாகச் சென்றார். அந்நகரின் அலாதி பாக்கியம், பிற்பாடும்

Koviloor Digital Library

அதை ஒட்டிய ஒயிட்ஃபீல்ட் பிருந்தாவனமே பிரசாந்தி நிலயத்துக்கு அடுத்தபடியாக ஐயனின் முக்கியமான இருக்கையாக உள்ளது.

நடுவே சில மாதங்கள் பாலஸாயியின் இருப்பிடம் தெரியாமலே கூட இருந்தது. அக்காலத்தில் ஸ்வாமி மிக மிக உடல் நலம் குன்றி, ஸாகம்மா வீட்டில் சிகித்ஸை பெற்றதாக ஒரு சிலர் சொல்கின்றனர்; மற்றவர்களோ, அவர் தமது தேக அணுக்கள் முழுதையும் வேறு விதத்தில் புனரமைத்துக் கொள்ளவே பரம ஏகாந்தத்தில் இருந்ததாகச் சொல்கிறார்கள்.

நாளாக ஆக, பெங்களூர் மட்டுமின்றி இதர நகரங்களும், பிறகு கிராமங்களும்கூட ஸ்வாமியின் விஜய பாக்கியத்தைப் பெறலாயின. எனினும், அதிகமாகச் சென்றது, சுதேச மன்னர், ஜமீன்தார் போன்றோரின் தலைநகரங்களுக்குத்தான். (சுதந்தர காலத்துக்கு முன் எந்த ஸ்வாமிஜியின் சுற்றுப்பயணத்தைப் பார்த்தாலும் இப்படித் தானிருக்கும். ஏனெனில் அரசர்களும், பிரபுக்களும் அப்போதெல்லாம் ஸாதுக்களின் ஸத்காரத்தில் விசேஷ ஈடுபாடு காட்டி, வருந்தி அழைத்து உபசரித்து வந்தனர்.)

* * *

ஸ்வாமி முதல் முறையாகச் சென்னைக்கு எழுந்தருளியது 1943 தசராவின் போதாகும்.

இவ்விஜயத்தின் ஒரு புண்ணிய விளைவுதான் இன்றும் புற நகரில் தெய்விக சாந்தி தோய்ந்து நிற்கும் ஓர் ஆலயம் நிற்பது. கிண்டி ரயில் நிலையத்தை அடுத்துள்ள ஸாயிபாபா கோயிலில் இன்னறுக்கும் அற்புத சாந்நித்தியத்தை நுகர்வது பல அடியாரின் சொந்த அநுபவமாகும்.

இவ்விடத்தில் இவ்விதம் ஒரு மஹாபுருஷருக்காக மந்திரம் எழும்பும் என நாறாண்டுகளுக்கு முன்பே இங்கு வாழ்ந்த ஒரு ஸித்த புருஷர் ஓலையில் எழுதி வைத்திருக்கிறார். அந்த ஸித்தர் ஆஸ்திக ரான முதலியார் ஒருவரின் உடைமையாக இருந்த கிண்டிப் பனந்தோப்பில் தங்கி, தாம் கைவல்யம் அடையுமுன், பிற் காலத்தே தம் ஸமாதிக்கு வலப்புறம் ஒரு மஹாபுருஷருக்கு ஆலய மும், இடப்புறம் பெரிய தொழிற்பேட்டையும் தோன்றும் என தீர்க்கதரிசன வாக்குப் புகன்றிருக்கிறார்!

அந்த முதலியாரின் புதல்வர் ஸ்ரீ எம்.ஜே. லோகநாத முதலியார். முன்பு உத்தம ஸித்தர் வசித்த அதே கிண்டி நிலத் தில் இவர் காலத்திலோ துர்த்தேவதைகளை வசப்படுத்தியிருந்த குஜராத்தி மந்திரவாதி ஒருவர் குடியேறினார். அவரை வெளியேறு மாறு லோகநாதர் நயமாகவும் பயமாகவும் பலமுறை சொல்லி யும் பலனில்லை. எனவே லோகநாதர் சட்டபூர்வமாக வெளியேற்ற உத்தரவு பெற்று, அரசாங்க பைலிஃபுடன் மாந்திரிகரிடம் சென்றார். வேறு வழியின்றி துர்மந்திரவாதி வெளியேற

Koviloor Digital Library

வேண்டியதாயிற்று. ஓட்டம் பிடிக்குமுன் அவர் ரௌத்திரா காரமாகக் கோபம் கொண்டு, முதலியாரின் முகத்தெதிரே கையைப் பிடித்து, "பார், நீ நாளைக்கே வெறிபிடித்துத் திரியப் போகிறாய்" என்று சாபம் கொடுத்தார்.

அதைப் பற்றி அலட்டிக்கொள்ளாமல் திருவல்லிக்கேணி யிலுள்ள தம் வீட்டுக்குத் திரும்பினார் லோகநாத முதலியார்.

மறுநாள். பரம சுபமான அந்த நவராத்ரி வெள்ளிக் கிழமைதான் நம் முதலியார் வீட்டில் எத்தனை அசுபமாகப் பிறந்தது!

காலை எழுந்த முதலியார், முன்னிரவிலிருந்ததற்கு முற்றிலும் மாறி, உக்கிர வெறி பிடித்துக் கூச்சல் போடலானார்.

கதி கலங்கிய வீட்டார், மனநோய் மருத்துவசாலை மேலாள ரான டாக்டர் தைரியத்திடம் நோயாளியைக் காட்டினர். அவர் சோதனை செய்து, மருத்துவமனையிலேயே சேர்த்துவிட வேண்டிய கேஸ்தான் என்று கூறிவிட்டார்.

"ஐயோ, பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலா?" என்று துடித்தார் முதலியாரின் மனைவி ஸ்ரீமதி தனம்மா. "இன்னம் ஒருநாள் பார்த்து விட்டுக் கொண்டு வந்து சேர்க்கிறோம்" என்று வாய்தா கேட்டுக் கொண்டார்.

ஏன் அந்த ஒருநாள் வாய்தா கேட்டாரோ, பாபாவே அறிவார்.

ஒருநாள் ஓடிற்று. வெறிக்கூத்து அடங்கவே யில்லை. மறு நாளும் இப்படியே ஆயின், மருத்துவ விடுதியில் சேர்த்து விட வேண்டியதுதான்!

ஞாயிற்றுக்கிழமை. காலை விழித்தெழுந்த முதலியார் கூச்சல் போடவே யில்லை. ஆம், அடியோடு பழைய நபராகவே, புத்திக் கலக்கம் நீங்கித் தெளிந்து காணப்பட்டார்.

இந்திய முறைப்படி சூரியோதயத்தில் ஞாயிறு பிறந்தாலும், கடிகாரமோ முட்டி வந்த ஆங்கில வழக்குப்படி ஞாயிறு பிறந்த முதல் நாளிரவு இரண்டு மணிக்கே அற்புதம் புரிந்துவிட்டது. அந்த நள்ளிரவில் அவர் பதற்றமின்றி எழுந்து மற்றோரையும் எழுப்பினார்.

ஆச்சரியமுற்ற வீட்டாருக்கு மேலும் ஆச்சரியமூட்டும் விவரங்களை அவரே தெளிவாகச் சொன்னார்: "சற்றுமுன் ஒரு சொப்பனம் வந்தது. மிளகாய்ப் பழக் கலரில் கவுன் போட்டுக் கொண்டு சட்டைக்கார நர்ஸம்மா மாதிரி ஒரு இளம்பிள்ளை கனவில் வந்தார். ராமாநுஜ பாத்திரத்திலிருந்து (வைஷ்ணவர்கள் பூஜையில் வைத்துள்ள செம்பை ராமாநுஜ பாத்திரம் என்பர்)

Koviloor Digital Library

துளஸீ தீர்த்தம் எடுத்து எனக்கு மூன்று முறை கொடுத்தார் அந்த வாலிபர். ''இதை உட்கொள்ளு. உடம்பு குணமாகி விடும்'' என்று சொல்லிக் கொடுத்தார். அப்படியே செய்தேன். அவர் மறைந்து விட்டார். இப்போது என் பைத்தியக் கோளாறும் பூரணமாகக் குணமாகிவிட்டது.''

பெருமாளேதான் கனவில் வந்து காத்திருக்கிறார் என்று அனைவரும் கருதினர். பெருமாள் தோற்றத்தில் சிறு ஆளாக உலகிடை வந்திருப்பதை அவர்கள் அறிய மாட்டார்கள். எனவே மிளகாய்ப் பழ கவுன் மிஸ்ஸியம்மாவைப் புரிந்துகொள்ளாமல் 'மிஸ்' பண்ணிவிட்டார்கள்.

ஆனால் அவர் இவர்களுக்குப் புள்ளிவைத்து விட்டாரே! 'மிஸ்' பண்ண விடுவாரா?

ஞாயிறு பகல் 11—30 மணி. வாசலில் ஒரு கார் வந்து நின்றது.

அதிலிருந்து மேற்சொன்ன வர்ணனைக்கொத்த இளைஞர் இறங்கிச் சரசரவென உள்ளே வந்தார்—மிகவும் பழகிய இடம் போலே.

கனவிலே கண்ட அதே கவினுருவைக் கண்டு பரவசமானார் லோகநாதர்.

கனவிற் கண்டேன் இன்று, கண்டமையால் என்
கண்ணிணைகள் களிப்பக் களித்தேனே

என்று ஆழ்வார் சொன்னார் எனில், கனவில் மட்டுமின்றி நனவிலும் கண்டவரின் இரட்டிப்புக் களிப்பு எப்படித்தான் இருந்திருக்கும்?

புத்திக் கலக்கம் சொஸ்தமான போதிலும், இரண்டு நாள் வெறியாட்டத்தில் பலவீனமுற்றுப் படுக்கையில் கிடந்த முதலியாரின் அறைக்குள் நேரே வந்தார் முதல்வர். மென்மையான அருட்குரலில், ''நேனு நின்ன ராத்ரியே நீகு துளஸீ தீர்த்தம் இச்சினானு நாயனா'' என்றார். (''நேற்று ராத்ரியே வந்து துளஸீ தீர்த்தம் தந்தது நான்தான்'' என்று அர்த்தம்.) தொடர்ந்து ''இனி ஒருபோதும் உன்னைச் சித்தப் பிரமை தீண்டாமலிருப்பதற்கு உறுதிப்படுத்தவே வந்திருக்கேன்'' என்றார். என்ன தயை அப்பா!

கையை அசைத்தார். ஒரு தாயத்து 'வந்தது'.

முதலியாரின் கழுத்தில் அணிவித்தார்.

இதுவரை இன்பச் செறிவில் ஸ்தம்பித்திருந்த லோகநாதர் இப்போதுதான் பாபாவை வணங்க வேண்டும் என்ற உணர்வைப் பெற்றார். ஆனால் முதல் நாள் லோகநாதர் எகிறு எகிறு

Koviloor Digital Library

என்று எகிறித் துள்ளியபோது, அவரைப் படுக்க வைத்துக் கால் மேலே உறவினர் உட்கார்ந்திருந்ததால், அவரது முட்டி நகர்ந்திருந்தது. இப்போது அவர் வணங்க அவசரமாக எழுந்தவுடன், உடல் பாரத்தை நலிவுற்ற கால் தாங்கவொண்ணுமல் அவர் விழவிருந்தார். உடனே ஸ்வாமி அவரது கால் கட்டைவிரலை ஓர் இழுப்பு இழுக்கப் பிசகின எலும்பு தத்க்ஷணம் சரியாகிவிட்டது.

பகவான் காலைப்பிடிக்க நாம் தயங்குகிறோம். பகவானோ தயங்காமல் அடியார் அடியையும் பிடிக்கிறான்!

முதலில் முதலியார் கழுத்தில் தாயத்துத் தாலி! இப்போது அம்மி மிதிச் சடங்கில் போல் காலையும் பிடித்துவிட்டார். லோக நாதரின் ஆத்மநாதர்.

ஆம், பாபா பக்தி என்பதும் ஒரு பதிவிரதம் தான். இதில் கற்பரசிகளாகத் தேறிவந்தோர் ஒரு சிலரே. நீண்டகாலமாகத் தம்மிடம் சற்றும் பக்திசிரத்தை குன்ருமல், அவர்களது அகங்காரத்துக்குத் தாம் கொடுக்கும் அத்தனை அடிகளையும் பொறுத்து வாழும் அடியார்களை அவரே ''விருத்த முத்தைதி'' (கிழச் சுமங்கிலி) என்றழைப்பதுண்டு.

லோகநாத முதலியார் ஒரு நல்ல மனிதர்; தூய வைணவர். இவர் பாபாவைப் பற்றி அறியாதிருந்தும், இவரது ஆபத்தறிந்து பாபா இவருக்கு அருளியதால் அவரை நாராயணனுகவே கொண்டார் லோகநாதர்.

என்துணை எந்தை தந்தை தம்மானைத்
திருவல்லிக்கேணி கண்டேனே

என்ற ஆழ்வார் வசனம் லோகநாதருக்கு அதே திருவல்லிக்கேணியில் பிரத்தியக்ஷ உண்மையாயிற்று.

''நீங்கள் சாக்ஷாத் பகவான்'' எனக் கூவி, அவர் பாதத்தில் புரண்டார் முதலியார். என்ன செய்கிறோம் என்று புரியாமல் ஸ்வாமியின் பொற்பாதங்களைப் பிடித்துச் செந்தூக்காகத் தூக்கப் பார்த்தார். பைத்திய வெறி தீர்ந்து, பக்தி வெறி வர வேண்டாமென்று பாபா அவரது முதுகைத் தட்டிக் கொடுக்க ஆவேசம் அடங்கியது.

தனம்மாவை அழைத்தார் ஸ்வாமி. ''கிண்டி நிலத்தில் போய்ப் பாருங்கள். ஓரிடத்தில் பானையின் உடைசல் சில்லிகள் நிறைய இருக்கும். அதன் கீழே நோண்டச் செய்யுங்கள். ஆடு, கோழிகளின் சவங்கள் புதைந்திருப்பதைப் பார்ப்பீர்கள். அது மாந்திரிகன் காரியம் தான். சவங்களை எடுத்தெறிந்து விடுங்கள். இந்தாருங்கள் விபூதி'' என்று கூறிக் கையைப் பூமி நோக்கிச் சுழற்றினார். விபூதியை அள்ளிப் பிடித்தார். அதை வீட்டில் எல்லோருக்கும் அளித்தார். முதலியாரின் தலையணைக்குக் கீழே வைப்பதற்கென ஓர் எலுமிச்சம் பழம் ''வரவழைத்து''க்

Koviloor Digital Library

கொடுத்துவிட்டு, ''புட்டபர்த்திக்கு வாருங்கள்'' என்று அவரிடம் சொல்லிக் கொண்டே காருக்கு விரைந்தார்.

அச்சமயம் ஸ்வாமி சென்னைக்கு விஜயம் செய்திருந்தார். தாம் தங்கியிருந்த பக்தரில்லத்திலிருந்து புறப்பட்டுத் திருவல்லிக்கேணி பெரிய தெருவில் முதலியாரின் வீட்டைக் குறிப்பிட்டுச் சொல்லிக் காரை ஓட்டச் செய்து அங்கு வந்து இப்படி அருள் புரிந்திருக்கிறார்.

தனம்மா கிண்டிக்குச் சென்றார். பாபா சொன்னபடியே பானை உடைசல், அதனடியில் புதைந்த ஆடு, கோழி சவங்கள் ஆகியன இருந்தன. சவங்கள் எடுத்தெறியப்பட்டன.

மறுதினமே நன்றியுணர்வு உந்தித் தள்ளப் பர்த்திக்குப் புறப்பட்டுவிட்டார் லோகநாதர். அங்கே அவர் அநுபவித்த திவ்ய லீலைகளுக்கு எல்லை இல்லை. பால ஸாயியை ஷிர்டியின் விருத்த ஸாயியாகவே கண்ணாரக் கண்டு அக் கிழக் கோலத்தைக் கட்டியணைத்துக் கருத்துருகியிருக்கிறார் ஸ்ரீ முதலியார்.

சென்னை திரும்பியபின் கிண்டி நிலத்தில் பாபா சென்னை வந்தால் தங்குவதற்கென்றே ஒரு வீடு கட்ட உத்தேசித்தார். 1946 ஜூலை 10-ந்தேதி இதற்கு பாபாவே அஸ்திவாரமிட்டுச் சென்றார்.

அந்த மனையில் மளமளவென்று ஒரு பாம்புப் புற்று வளரத் தொடங்கியது. ஷிர்டிபக்தர்கள் இது தமது இஷ்ட தெய்வத்துக்குரிய லீலையே என்றனர்.

ஷிர்டி பாபா முதலியாரின் கனவில் தோன்றினார். கிண்டி நிலத்தில் தமக்குக் கோயில் கட்டுமாறு பணித்தார்.

மறுநாளே புட்டபர்த்தியிலிருந்து கடிதம் வந்தது. ''எனக்கு வீடு கட்ட வேண்டாம். அதற்குப் பதில் என் பூர்வ (ஷிர்டி) சரீரத்துக்கே கோயில் கட்டவும். என் பூர்வ சரீரத்துக்கு முதல் விக்ரஹத்தை நானே கிண்டியில் பிரதிஷ்டை செய்யப் போகிறேன். இதுவரை ஷிர்டியில்கூட எனக்கு விக்ரஹம் கிடையாது. தக்க ஏற்பாடு செய். நான் உடனிருக்கிறேன். 'வயரிங்' எல்லாம் போட்டுவிட்டேன். 'ஸ்விட்ச்' மட்டுந்தான் போட வேண்டும். தயங்காமல் வேலை தொடங்கு'' என்று கடிதத்தில் கண்டிருந்தார் நம் ஸ்வாமி!

(ஷிர்டி ஸாயிக்கு முஸ்லீம் தொடர்பு மிகவும் உண்டாதலின், படம் வைப்பதையாவது முஸ்லீம்கள் ஓரளவு ஆதரிப்பரேயன்றி, அசல் விக்ரஹமாக வைத்தால் ஆட்சேபிப்பர் என்ற அச்சத்தில் அப்போது ஷிர்டியிலேயேபாபாவுக்குச் சிலை அமைக்கப் படவில்லை. பிற்பாடுதான் தற்போதுள்ள மூர்த்தம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.)

Koviloor Digital Library

இதையடுத்து ஒருநாள் முதலியாருக்கு முன்பின் தெரியாத ஒருவர் ஒரு சிற்பியை அவரிடம் கொண்டு வந்து விட்டு, போன சுவடு தெரியாமல் மறைந்து விட்டார்.

அந்தச் சிற்பிக்கு லோகநாதரைத் தெரியாது. அவர் மதுராந்தகத்தருகே ஒரு கிராமத்தைச் சேர்ந்தவராம். சமீப காலமாக ஒரு முஸ்லீம் ஸாது இவர் கனவில் தோன்றி, 'கிண்டிக்குப் போ, அங்கே உனக்கு ஒரு வேலை காத்துக் கொண்டிருக்கிறது' என்று கூறி வந்தாராம். அதன் மீதே இவர் கிண்டிக்கு வந்தார். ரயிலடியில் முன்னறிமுகமில்லாத ஒருவர் இவர் பெயரைச் சொல்லி அழைத்து, இவரை லோகநாத முதலியாரிடம் கொண்டுவந்து விட்டிருக்கிறார்! இப்போது நழுவியும் விட்டார் அந்த மாய மனிதர்.

ஷிர்டிபாபாவிடம் ஸ்வப்பன ஆக்ஞை பெற்று வந்த அச் சிற்பியிடமே கல் விக்ரஹம் அடிக்கும் பொறுப்பு வழங்கப்பட்டது. கனாக் காட்சியிலிருந்து திட்டவட்டமான உருவமைப்பு சிற்பிக்கு நினைவில்லை. எனவே திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் வாசற்புறக் கடையொன்றிலிருந்து ஷிர்டிபதியின் பொம்மை வாங்கிக் கொடுத்தார்கள். சிற்பி சிலை வடித்தார். ஜீவகளையுடன் அற்புத வடிவம் பெற்ற விக்ரஹம், பர்த்தி பாபாவின் நாசியையே பெற்றிருப்பதாகத் தோன்றுகிறது.

1949-ம் ஆண்டு பிப்ரவரி மூன்றாம் தேதி, குருவார புண்ய தினத்தன்று நம் ஸ்வாமியே இந்த விக்ரஹத்தைப் பிரதிஷ்டை செய்தார். அங்கை அசைப்பாலேயே சிறிய விநாயகப் பிரதிமை, யந்திரம், நவரத்தினங்கள், அக்ஷதை முதலியவற்றை ''வரவழைத்து''ப் பீடத்துக்கு அடியே போட்டு, அதன் மேல் ஷிர்டி பாபாவின் திருவுருவத்தை ஸ்தாபித்து அஷ்டபந்தனம் செய்தார்.

''விக்ரஹத்துக்கு என் ஜீவ சக்தியை ஊட்டுகிறேன், பாருங்கள்'' எனக் கூறி, அதன் நேர் முன்னே நின்று உற்று நோக்கினார்.

கூடியிருந்த அனைவரும் காண விக்ரஹம் மேலே எழும்பி, க்ஷணகாலம் அந்தரத்தில் நின்று, பிறகு யதாஸ்தானத்தில் அமர்ந்தது!

மெய்யான 'பிராண பிரதிஷ்டை'! விக்ரஹம் பெற்றுள்ள அந்த நிறைவான உயிர்ச்சக்தியின் விசேஷந்தான், இன்றும் சரியான 'ஏரியல்' பெற்ற பக்தர்களால் இச் சந்நிதியில் ஆத்மிக சாந்த அலைகளை நிச்சயமாகக் கிரகிக்க முடிகிறது.

அதன்பின் முதலியார் வீடு திரும்பவேயில்லை. ''வேண்டேன் மனை வாழ்க்கையை'' என்ற வைராக்கியம் அவ்வளவு தீவிரமாகப் பிறந்து விட்டது. மனைவாழ்க்கை மட்டுமா? ஸத்ய ஸாயியின் மதுர ஸ்வரூபத்திலும்கூட ஆசை வெறி

Koviloor Digital Library

தணிந்ததால்தான். அந்த ஸாயியே இவரது வீட்டுக்குச் சென்று தங்கியும்கூட, இவரோ, 'அவர்தானே உவந்து இச்சிலையில் குடிகொண்டிருக்கிறார்? இதனைப் பூஜித்துக்கொண்டு இங்கேயே கிடப்பதே என் தர்மம்' என்று, மூர்த்தி பிரதிஷ்டையான இடத்திலேயே தாமும் பிரதிஷ்டையாகிவிட்டார்!

பாபாவை சித்துக்காரர் என்றே எண்ணுபவர்கள் அவர் எப்பேர்ப்பட்ட ஞானவைராக்கியங்களைச் சிலருக்கு வழங்கி யுள்ளார் என்று அறியாதவர்கள். லோகநாதரின் திடீர்த் துறவு ஒரு சான்று. அவர் கிண்டிக் கோயிலை ஒட்டினாற்போல் ஒரு சிறு வீடு கட்டிக்கொண்டு தங்கி விட்டார்.

என்றாலும், லோகநாதர் ஷிர்டி பாபாவே மெய்யான மஹான் என்றுணர்ந்து, போலியான ஸத்ய ஸாயியை விட்டு விட்டார் என்ற புரளி எழும்பாதிருக்கவோ என்னவோ, அவ்வப்போது பர்த்திக்கு ஒரு காந்தம் இவரை இழுத்துக் கொண்டுதான் இருந்தது.

1962—ல் தசராவுக்குப் பிரசாந்தி நிலையம் சென்று வந்த வர், சில நாட்களிலேயே இறைவனடி சேர்ந்துவிட்டார்.

ஐந்தாண்டு முன்னரே ஒரு குருவார அதிகாலையில் தனம்மா சுமங்கலியாகக் கண் மூடினார். அதே சமயம் வேறோரிடத்தில் பல் துலக்கிக் கொண்டிருந்த ஸ்வாமி, "தனம்மா என் பாதத்தில் சேருகிறாள்" என்றாராம்.

கிண்டி பாபா மந்திரத்தில் ஸாயி விக்ரஹத்தோடு வேறிரு தெய்விகச் சின்னங்களும் உள்ளன.

ஒன்று, துணியில் பதிந்த ஷிர்டிநாதரின் சிரடிகள். பிரதிஷ்டை முடிந்து அல்லிக்கேணி திரும்பியவுடன் ஸ்வாமி ஒரு கைக்குட்டை மீது நின்றார். பெண்களுடையது போன்ற இவரது சிறிய திருவடிகளுக்குப் பதில் அத்துணியில் ஷிர்டி பாபா வின் பெரிய பாதங்கள் பதிந்திருந்தன! இப் பாத அடை யாளம் கொண்ட வஸ்திரம் ஆலயத்திலேயே இடம் கொண்டது.

மற்ற தெய்விகச் சின்னம், பிரதிஷ்டைக்கு நாலு நாட் களுக்குப் பின் ஸ்வாமி சங்கல்ப மாத்திரத்தில் சிருஷ்டித்த ஸ்படிக லிங்கம்.

ஒருமுறை கிண்டிக் கோயிலில் அகண்ட பஜனை நடந்த போது, சற்றும் எதிர்பாராதவண்ணம் அதில் ஸத்ய ஸாயியே கலந்துகொண்டு பஜனை முடிந்ததும் ஊரைவிட்டே புறப்பட்டு விட்டார். இந்த ஆனந்தத்தைத் தெரிவித்து லோகநாதரின் புதல்வி தமது பர்த்தித் தோழிக்கு எழுதினார். அதற்குத் தோழி எழுதிய பதிலில் ஓர் ஆச்சரியம் இருந்தது — மேற் சொன்ன தினத்தில் பாபா பர்த்தியிலேயேதான் இருந்தாராம்.

Koviloor Digital Library

சுமார் பத்தாண்டுகளுக்கு முன் கிண்டி ஆலயத்தில் பாபாவே மீண்டும் சக்கரம், நவரத்தினம் முதலியன போட்டு சாந்நித்தியத்தைப் புதுப்பித்தார். 1973 பிப்ரவரி 3-ந்தேதி ஆலய வெள்ளிவிழா வருஷத் தொடக்கத்தன்று விஜயம்செய்து ஓர் அற்புத ஸ்தம்பத்தைத் திறந்து வைத்தார். நாலு பக்கங்களிலும் கணேசர், முருகன், கண்ணன், தக்ஷிணாமூர்த்தி உருவங்களைக் கொண்ட இத் தூணில் ஸ்வாமியின் உபதேசங்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

அன்று அசோகன் அறத்தைப் பரப்ப ஸ்தம்பங்கள் நாட்டினாற்போல, இன்று ஸாயி ஸ்தம்பங்கள் பல நம் தேசத்தில் எழுந்துள்ளன. பர்த்தியிலேயே பகவானின் ஸ்வர்ண ஜயந்தியின் போது ஒரு ஸர்வமத சமரஸ ஸ்தம்பம் எழுப்பப்பட்டிருக்கிறது. ஆயினும் இவற்றில் முதலாவதே கிண்டியில் அமைத்தது தான் என்பது நமக்குத் தனிப் பெருமிதம் ஊட்டுவது தானே!

கிண்டிக் கோயில் வெள்ளிவிழாத் தொடக்கத்தில் பர்த்தி பாபா சிருஷ்டித்த பதக்கமாலையை அணிந்து கொண்டு ஷிர்டி பாபா அந்த ஆலயத்தில் திவ்விய தரிசனம் சாதித்து வருகிறார்.

* * *

எங்கோ இருந்த லோகநாத முதலியாருக்கு பாபாவின் அருள் வெள்ளம் பாய்கிறது. "லோகநாதனான நான் எங்கும் தானிருக்கிறேன். எனக்கு எங்கோ உள்ளவர் என்பாரும் உண்டா?" என்று ஐயன் கேட்கலாம்தான்! எங்கெங்கும் பாயும் அக் கருணைப் பிரவாகத்துக்கு பெங்களூர் சக்கிலியன் ஒருவன் பாத்திரனானது நம் காவியப் பூங்காவில் ஒரு கவினுறு மலராகும்.

ஸிவில் ஸ்டேஷன் அருகே ஒரு தெரு முனையில் கடை பரப்பியிருந்தான் அக் கிழச் சக்கிலியன். எதிரேயுள்ள பங்களாவுக்கு ஏகப்பட்ட கார்கள் வருவதும் போவதுமாக இருப்பதைக் கவனித்தான்.

"அவதாரம்," "கிருஷ்ண பரமாத்மா", "பகவான்," "பாபா" என்ற வார்த்தைகள் அடிக்கடி அவன் காதில் விழுந்தன.

பூர்வ பாக்கியத்தால் ஆர்வவெறி இவனைப் பற்றித் தள்ளியது.

பெட பெடக்கள் போகிற பங்களா காம்பவுண்டில் நுழைந்து, கட்டிடத்தருகே சென்று, ஜன்னல் வழியாக ஹாலுக்குள் பார்வையைச் செலுத்தினான் நம் செருப்புத் தொழிலாளி.

அதே சமயம் உள்ளேயிருந்து திவ்விய சக்தி மின்னும் பாபாவின் பார்வை இவன் புறம் திரும்பி, இவன் திருஷ்டியோடு இணைந்தது.

Koviloor Digital Library

'வா' என்று இவனைத் தம்மிடம் அழைக்காமல், வள்ளலே வாயிலுக்கு விரைந்து இவன் பக்கத்தே வந்து நின்றார் பட்சமுடன்.

அவன் அளிக்கலாமா, கூடாதா எனத் தயங்கிக் கையில் ஒளித்திருந்த காய்ந்த பூச்சரத்தைத் தாமே பறித்துக் கழுத்தில் சூட்டிக் கொண்டார். குசேலருக்குக் கண்ணனும், குகனுக்கு ராமனும் காட்டிய அதே பரிவு! 'பரிவு' என்பதற்கும் மேம்பட்ட ஸம பாவம்!

''பங்காரு, உனக்கு நான் என்ன பண்ணணும்?'' என்று அவனிடம் தமிழில் கேட்டார். அவன் தமிழ்மகன்தான். பாபா வின் அருளாழத்தை அவன் புரிந்துகொண்டுவிட்டான். எனவே கூடியிருந்தோர் திடுக்கிட்டாலும், அவனோ கொஞ்சமேனும் தியக்கமின்றி, ''சாமீ, என் வூட்டுக்கும் நீ வந்து, நான் படைக் கிறதை ஏத்துக்கணும்'' என்றான்.

''கண்டிப்பா வரேன்'' என்று தமக்கே உரிய பதப் பிரயோகத்தைச் செய்தார் பாபா. சக்கிலியனைத் தட்டிக் கொடுத்துவிட்டு உள்ளே போய்விட்டார்.

ஸ்வாமி மறுபடி வெளியே வருவாரா என்று அவன் காத் திருந்தான். மற்ற பக்தர்கள் விடை பெற்று விட்டனர். அன்று அதன்பின் பாபா வெளிவர மாட்டார் என்று அவர்கள் சொன்ன தும் நம் செருப்புத் தொழிலாளிக்கு ஆசாபங்கமாகி விட்டது. ''என் அட்ரசைச் சாமிக்கிச் சொல்லாம இருந்துட்டேனே! அதுக்காகத்தான் காத்துப் பார்த்தேன்'' என்று நெடுமூச் செறிந்து கொண்டு புறப்பட்டான்.

மறுநாட் காலை கடை பரப்பும்போது, பாபா அந்தப் பங்களாவிலிருந்தே சென்று விட்டார் எனத் தெரிந்தது. பாவம், அவனுக்குச் சொரேலென்றாகிவிட்டது. 'எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விட்டேன். அதுவும் என் பேராசை தானே?' என்று தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொள்ளப் பார்த்தான்.

சில நாட்கள் ஓடின.

பெரிய கார் ஒன்று சக்கிலியின் அருகே சத்தம் போடாமல் வந்து நின்றது. அலறிப் புடைத்துக் கொண்டு, தன் உபகரணங் களைத் திரட்டிக் கொண்டு, ஓடப் பார்த்தான். பேவ்மென்டில் கடை போட்டதற்காகத் தன்னைக் கைது செய்யப் 'போலீஸ் வேன்' வந்திருப்பதாக நினைத்து விட்டான்.

காரின் உள்ளிருந்தோ, ''நாயனு'' என்ற நனிச்சொல் அல்லவா வருகிறது?

மெய் சிலிர்த்து உள்ளே பார்த்தான்.

ஆஹா! சாமியேதான்!

Koviloor Digital Library

கதவைத் திறந்து, ''ஊம், ஏறிக்கோ'' என்றார் ஸ்வாமி.

நிக்ரமித்த நிலையிலும் எவ்வாறோ சக்கிலி காரில் ஏறிச் சக்ரவர்த்தியின் ஸமீபம் அமர்ந்தான். எவரது பாதத்தின் ரக்ஷை வேண்டும் என்று பிரபுக்களும் தவம் கிடந்தனரோ, அவர் பாதரக்ஷை தைப்பவனைச் சரி நிகர் ஸமானமாக அமர்த்திக் கொண்டிருக்கிறார்.

அவனுக்குப் பேச்சு எழவில்லை.

பாபாவே டிரைவருக்கு வழி சொல்லிக் கொண்டு போனார். ''இதற்கு மேல் கார் போகாது'' என்று ஓரிடத்தில் காரை நிறுத்தச் செய்தார்.

குண்டும் குழியும், சேறும் சகதியும், துர்நாற்றமும் துர்பாவனையும் நிறைந்த சந்து பொந்துகள் வழியாக ஸமத்வ ஸ்வரூபமான நம் பகவான் ஜிலுஜிலுவெனச் செல்ல, பின் தொடர்ந்தான் சக்கிலி.

சேரியில் சரியாக அவன் குடிலை அடையாளம் கண்டு உட்புகுந்தார், 'பழங்குடில்தொறும் எழுந்தருளிய பரன்'.

இப்போதுதான் அவனுக்கு உணர்வே முழுமையாகத் திரும்பியது.

''நம்ம பொத்தக் குடிசைக்கு சாச்சாத் ஆண்டவனே வந்திருக்காரு! வாங்க, கும்பிடுங்க'' என்று வீட்டாரை அழைத்தான்.

ஓர் உடைசல் பலகையை எடுத்துப் போட்டான். எத்தனையோ அலங்கார ஆசனங்களில் அமர மறுத்த அமரநாயகன் இதிலே பாங்காக உட்கார்ந்தார்.

கையை அசைத்தார். அந்த தீனர்கள் கனவிலும் எண்ண முடியாத கனிகளும், பணியாரங்களும் ''வந்தன''. பிரேமையோடு விநியோகித்தார்.

சக்கிலிக் கிழவன் விக்கி அழுதான். ''கடவுளே! நான் படைக்கிறதை ஏத்துக்கணும்'' என்று வேண்டினான்.

''ஓ'' என்றார் தீனபந்து.

தன்னை வாழ வைத்தவருக்கு வாழைப்பழம் வாங்கிவர அவன் வெளியே ஓடினான். அவன் வருமளவும் அவனது குடும்பத்தாருடன் மனமொட்டி உரையாடிக் கொண்டு காத்திருந்தார், மன்னர்களையும் காக்கவைக்கும் மாமன்னர்.

பக்ஷ்ய பக்ஷ்ய பரமான்னங்களை ஒதுக்குபவர், சக்கிலி வாங்கி வந்த வாழைப்பழத்தை ருசித்து உண்டார்.

Koviloor Digital Library

'பங்களாக்காரர்களின் சாமியார்' என்றே அபவாதம் பேசப்படும் ஏழை பங்காளர், "பங்காரு, பங்காரு" என்று அந்த எளியோரை யெல்லாம் ஆசிர்வதித்துவிட்டுப் பிரியா விடை கொண்டார்.

* * *

சில ஆண்டுகளுக்கு முன் பம்பாயில் அரண்மனை எனத்தக்க ஓரிடத்தில் ஓரிரவு பாபாவுக்கென அமர்க்களமான விருந்து உபசாரம் காத்திருந்தது.

பாபாவோ தம் அணுக்கத் தொண்டரான ஸ்ரீ ராஜா ரெட்டியை வேறோரிடத்துக்குக் காரை ஓட்டிச் செல்ல வழி கூறினார்!

பல சாலைகளைக் கடந்து, ஒரு சந்தில் உள்ள 'சால்' எனப்படும் ஏழைகளின் கூட்டுக் குடித்தனக் கட்டிடமொன்றின் முன் வண்டியை நிறுத்தச் செய்தார்.

நாலாவது மாடி ஏறி ஓர் ஒண்டுக் குடித்தனக்காரரின் போர்ஷன் கதவைத் தட்டினார் நம் தீனநாதன்.

கதவைத் திறந்தவர் மலைத்தே விட்டார். "பகவான்! வாஸ்தவமா, இது வாஸ்தவமா? உங்கள் கால் இங்கே பட வேண்டுமென்று நான் பட்ட தாபம் மெய்யாகவே பலித்து விட்டதா? பம்பாயின் கனதனவான்கள் உங்களது க்ஷணகால தரிசனத்துக்காகக் காத்துக் கிடக்க, நிஜமாகவே இந்த ஏழையின் வீடு தேடி வந்தீர்களா? தெய்வமே, தீனபந்தோ, தயாஸிந்தோ!" என்று கண்ணீர் பெருக்கினார்.

"வந்தது மட்டுமில்லை; சாப்பாடும் இங்கேதான். நீ எனக்கு போஜனம் செய்விக்கணும் என்றுந்தானே தவம் கிடந்தே! எனக்கு உன் அந்தரங்க ஆர்வம் பெரிசா, அங்கே யாரோ பகிரங்கத்தில் செய்கிற 'ஷோ' பெரிசா?" என்று பிரஸன்னமாகக் கேட்டார் பிரசாந்திவரதர்.

சமைத்துப் போடும் வரை காத்திருந்து உண்டார். பக்த ஹ்ருதய சாயியான ஸத்யஸாயி, பழைய படுக்கையொன்றில் சாய்ந்தபடி அழகாகத் தாம்பூலம் போட்டுக் கொண்டு அதை விடச் சிவந்த தம் இதயம் திறந்து அவ்வேழையரிடம் ஸரஸஸல்லாபம் செய்தார்.

* * *

வஞ்சமற்ற தொழில் புரிந்துண்டு
 வாழும் மாந்தர் குலதெய்வமாவாள்;

...

'உய்வம்' என்ற கருத்துடை யோர்கள்
 உயிரினுக்குயிராகிய தெய்வம்;
'செய்வம்' என்றொரு செய்கையெடுப்போர்
 செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்;
கைவருந்தி உழைப்பவர் தெய்வம்;

Koviloor Digital Library

என்றெல்லாம் கவி பாடியதை மெய்ப்பிக்கும் நம் ஸாயீச்வரி சரிதத்தில் இதே போல் இன்னம் ஒன்று பார்த்துவிடுவோம்.

1971 நசராவுக்குச் சில தினம் முன்னால்.

பிரசாந்தி மந்திரத்தில் கோபுரம் எழுப்புவதற்காக மேற்கூரையில் சில பாட்டாளிகள் எஃகுக் குழாய்களை 'வெல்ட்' செய்துகொண்டிருந்தனர். பிற்பகல் தொடங்கிய வேலை இருட்டியும் முடியவில்லை.

பிரசாந்தி நிலயத்தில் எல்லா வேலைகளையும் அததற்கான தொழிலாளர்களோடு, மற்ற பக்தர்களும் அன்புப் பணியாகச் செய்வது வழக்கம். பெரிய மனிதர்களும் இப் பணிகளில் தாமாகவே பிரியமுடன் ஈடுபடுவர். இப்போதும் இவ்விதமே நடந்தது.

எட்டு மணி அடித்ததும், மேற்பார்வை செய்து வந்த பெரிய மனிதர்கள் உண்ணச் சென்றனர். உண்டு முடித்து அரை மணியில் திரும்பினர்.

வெல்டர்களோ வேலையை விட்டு நகரவே இல்லை. முன்பு பாபாவிடம் சொன்னதற்போல் மறுநாட்காலைக்குள் வேலையை முடித்துக் காட்டுவதில் மனமார முனைந்திருந்தனர். உடம்பெல்லாம் வேர்வையும், தூசும், க்ரீஸுமாக இருந்த அவர்களுக்குப் பக்கத்தில் போகவே எஞ்சினியர்களுக்குக் கூசியது!

ஒன்பதரை மணிக்கு எஃகுச் சட்டகத்தைத் தூண்களில் வெல்ட் செய்தாயிற்று. இனி கோபுரத்தைப் பொறுத்த வேண்டும். எஞ்சினியர்களுக்கு அலுப்பாக இருந்தது. அவர்களுடைய வாயைப் பிளந்துகொண்டு கொட்டாவிகள் வந்தவண்ணம் இருந்தன.

தொழிலாளிகளை வேலை நிறுத்தச் சொல்லி, காலையில் மீதியைப் பார்த்துக் கொள்ளலாமா என்று 'பெரிய மநுஷ்யர்கள்' ஆலோசனை நடத்திய அந்த அயனான வேளையிலே,

பின்புறம் கதவு கிறீச்சிட்டது.

ஸ்வாமிதான்!

கைகூப்பி நின்ற வெல்டர்களைப் பிரேமை மோதும் நயனங்களால் முந்தாகப் பார்த்தார் பாபா. "எவ்வளவு சிரமப் பட்டிருக்கிறீர்கோ!" என்று கருணை வலி தொனிக்கும் தெய்வக் குரலில் கூறினார்.

'பெரிய மநுஷ்யாள்' பக்கம் திரும்பினார். "பெட்ரோல் போட்டுண்டாச்சா? ஸந்தோஷம்" என்றார்.

பெட்ரோல் போட்டுக்கொள்ளாமலே வெல்டர்கள் உழைப்பாக உழைக்கும்போது, பெட்ரோல் போட்டுக் கொண்டும்

Koviloor Digital Library

உறங்க விழைந்தவர்களைப் பார்த்து "ஸந்தோஷம்" சொல்ல ஸ்வாமியை அன்றி யாரால் முடியும்?

பாபா இவர்களிடம் பேசிக் கொண்டிருக்கும்போதே, வேத பாடசாலை மாணவர் இருவர் தண்ணீர் நிறைந்த ஒரு பிளாஸ்டிக் பக்கெட், ஒரு துண்டு, ட்ரே, தட்டுகள், கோப்பைகள் சகிதம் அங்கு வந்தனர். அன்னதான அன்னை ஸாயி ஏற்பாடு தான்!

வெல்டர்களைக் கை கால் கழுவித் துடைத்துக் கொள்ளச் சொன்னார். வழிய வழியப் பலகாரம் நிரம்பியிருந்த தட்டுக்களை ஒவ்வொருவருக்கும் தமது திருக்கரத்தாலேயே கொடுத்துவிட்டு, கனியான கரத்தாலேயே கனிகரத்துடன் (தெலுங்கில் 'கனிகரம்' என்றால் நேசம்) ட்ரேயிலிருந்த பழங்களையும் அள்ளிப் பாட்டாளிகளுக்கு விநியோகித்தார்.

அவற்றை வாங்கி வைத்துக்கொண்ட தொழிலாளிகள், அவரது கருணையின் எதிரொலியாக அவர்களது உள்ளங்களில் பீறிய பக்தியுடன் அவரது பாதங்களை இறுகப் பற்றி, தரையோடு தரையாகக் கிடந்தனர்.

"போறும், போறும், பங்காரு, பங்காரு" என்று சொல்லிக் கொண்டே அவர்களது முதுகுகளைத் தொட்டுத்தொட்டு எழுப்பினார் பாபா.

'இவ்வேலையைச் செய்தே தீருவோம்'—'செய்வம்' என்றொரு செய்கை எடுத்த — அவர்களின் மனச் செம்மையை இந்தக் கர்மயோகி எத்தனைப் பிரீதியுடன் ஏற்கிறார்?

அவர்கள் உண்ண அமர்ந்த பின்பே அண்ணல் அங்கிருந்து புறப்பட்டார்.

தொழிலாளிகள் அவர் பாதத்தைப் பிடித்துக்கொண்டு எண்ணெய் முடிபடத் புரண்டதால், ஸ்வாமியின் அங்கி ஒரே மெல்லாம் எண்ணெய் மயமாயிருந்தது. அவர்கள் முதுகினை இவர் வருடியதால் கை 'ஸ்லீவ்' களில் நீள நீள க்ரீஸ் கோடுகள். கிருஷ்ணாவதாரத்தில் காட்டிய புழுதிக் கோலத்தை இன்று முதன் முறையாகக் காட்டிவிட்டார் "நீட்னெஸ்" என்பதன் மறுபெயரான ஸ்வாமி.

ஸ்வாமியை அழுக்காடையில் கண்டே பழக்கமில்லாத ஸ்ரீ பி.வி. ரமணராவ் தம்மை யறியாமல் "மரகாலு ஸ்வாமீ" என்று கத்திவிட்டார். ('மரகாலு' என்றால் அழுக்குக் கறைகள் என்று அர்த்தம்.)

ஸ்வாமி மோஹன நகை புரிந்து, "மரகாலு லேது; மரகதாலு!" என்று நெஞ்சாரச் சொல்லிக்கொண்டே பஞ்சாக நகர்ந்து விட்டார்.

அந்த அழுக்குக் கறை ஒவ்வொன்றும் அவருக்கு ஏழைத் தொழிலாளர் அணிவித்த மரகத ஆபரணங்களாம்! அன்பின் ரஸவாதத்தில் அழுக்கே அழகாகிறது!

* * *

பிரசாந்தி நிலயம் கோபுரம் பெற்ற சமீப காலத்துக்கு வந்து விட்டோமே! கோபுரமில்லாத பிரசாந்தி நிலயக் காலமொன்று உண்டு. அதற்கு முன், பிரசாந்தி நிலயமே எழும்பு முன் ஸ்வாமி இருக்கை கொண்ட "பாத மந்திர" காலமும் உண்டு. அந்தப் பாத மந்திரமும் எழும்புவதற்கு முற்பட்ட காலத்தில் அல்லவா நாம் பாலஸாயியுடன் கும்மாளமிட்டுக் கொண்டிருந்தோம்? அக் காலத்தில், இதெல்லாவற்றுக்கும் பல்லாண்டு முன் அவர் குடிகொண்டிருந்த ஷிர்டித் தொடர்பாக நடந்த சம்பவங்களைப் பார்ப்போம்.

நம் ஸத்யஸாயி லீலா சமுத்திரத்தில் சேரும் ஒரு மகாநதி ஷிர்டித் தொடர்பான திருவிளையாடல்கள் எனில், இந்த மகாநதியின் ஒரு முக்கியமான கிளை சிஞ்சோலி ராணி குறித்த அருட்செயல்களாகும்.

ரெய்ச்சூருக்கு அருகே இருந்த சிஞ்சோலி சம்ஸ்தான மன்னனும் ராணியும் ஷிர்டி பாபாவின் அத்யந்த பக்தர்கள். உலகறிய ஷிர்டிபாபா வெளியூர் சென்றதேயில்லை ஆயினும், ஷிர்டியில் உள்ளபோதே இன்னொரு சரீரம் எடுத்துக்கொண்டு சிஞ்சோலிக்கும் சென்று தங்கி, டோங்காவில் ஊர்வலங்கூட வந்திருக்கிறார். சிஞ்சோலிக் கிழவர்களில் பலர் இதற்குச் சான்று பகர்வதாக ஸ்ரீ கஸ்தூரியவர்கள் தெரிவிக்கிறார்.

ஷிர்டிபாபா மகாநிர்வாணம் எய்தியது சிஞ்சோலி அரச தம்பதியருக்குப் பேரிடியாக இருந்தது. சிறிது காலத்தில் மன்னரும் விண்ணுலகு எய்தினார். இதற்குப் பல்லாண்டுகளுக்குப் பின்பே புட்டபர்த்தி ஸத்யா தன்னை ஷிர்டியவதாரமாகப் பிரகடனம் செய்துகொண்டது.

இதனைக் கேள்வியுற்றதும் ஷிர்டிபாபாவின் பரமபக்தையான சிஞ்சோலி ராணி ஆவல் மீதூர, ஆர்வம் முந்துறப் பர்த்திக்கு ஓடி வந்தார். கர்ணம் வீட்டிலே நம் கண்ணனைக் கண்டார்.

ஷிர்டிபாபா அவரை எப்படி அழைப்பாரோ அப்படியே நம் பால ஸாயி அழைக்க, அம்மையார் மாண்டவர் மீண்ட பேரானந்தத்தில் மூழ்கினார்.

"ஸ்வாமி! என்றேனும் தாங்கள் சிஞ்சோலிக்கு எழுந்தருள வேண்டும்" என வேண்டினார் ராணி.

"ஆஹா" என்றார் பாலபாபா.

ராணியுடன் சிஞ்சோலிக்குச் சென்றார்.

Koviloor Digital Library

ஷிர்டிபாபாவாகத் தாம் அங்கு விஜயம் செய்தபோது கண்ட வீதிகள், கடைகள், மரங்கள் முதலியவற்றைப் பற்றியெல்லாம் இனுக்கு இனுக்காக நம் குமார தேவன் கேட்கக் கேட்க சிஞ்சோலி ராணிக்கு நம்பிக்கையும் பக்தியும் பாறையாக நிலைப்பட்டன.

''ராஜாவுக்கு நான் கொடுத்த மாருதி விக்ரஹம் எங்கே?'' என வினவினார் ஸ்வாமி.

''அந்த விஷயம் எனக்குத் தெரியாதே'' என்றார் ராணி.

''பரவாயில்லை'' என்ற ஸ்வாமி தாமே அதை அரண்மனையில் குறிப்பாக ஓரிடத்திலிருந்து எடுத்துக்கொடுத்தார்!

''ஆஹா! அவரே இவர்'' என நூறு சதவிகிதமும் தெளிந்த ராணி, ஷிர்டிபதி சிஞ்சோலியில் சவாரி செய்த டோங்காவைப் புட்டபர்த்திக்கே அனுப்பி வைத்துவிட்டார்.

பல்லாண்டுகளுக்குப் பின். ராணி தட்டுமுட்டுச் சாமான்களை ஒழித்து விற்பனை செய்வதில் முனைந்திருந்தார். அப்போது ஒரு பழைய பித்தளைக் கமண்டலு அகப்பட்டது.

விசித்திர வேலைப்பாடமைந்த அக் கமண்டலுவை விற்க ராணிக்கு மனம் வரவில்லை. தனது ஹைதராபாத் இல்லத்தின் வரவேற்பறையில் வைக்க நினைத்தார். அதை ஹைதராபாத்துக்கு அனுப்ப அவர் ஏற்பாடு செய்யும்போது,

எங்கிருந்தோ ஒரு நாகப் பாம்பு முளைத்தது! கமண்டலுவை மண்டலித்துச் சுற்றிக்கொண்டு விட்டது அந்த நாகம்!

ஷிர்டி பாபா நாக ரூபத்தில் தரிசனம் தரும் வழக்கமுண்டாதலால், இது அவரது லீலையே எனப் புரிந்துகொண்டனர்.

நாகத்துக்குப் பூஜை செய்தனர். அதுவும் சாவகாசமாகப் பூஜையை வாங்கிக் கொண்டது. பிறகு மறைந்துவிட்டது.

புனித கமண்டலுவைக் காட்சிப் பொருளாக வைப்பது பாபாவுக்குச் சம்மதமில்லை எனக் கண்ட ராணி அதைப் பர்த்தி அவதாரத்துக்கே சமர்ப்பித்துவிடத் தீர்மானித்தார்.

கமண்டலுவும் கையுமாக ராணி பிரசாந்தி நிலயத்துள் நுழையும்போதே, உள்ளே மாடியில் இருந்த ஸ்வாமி, ''சிஞ்சோலி ராணி என் கமண்டலுவோடு வருகிறாள். நீ போய்ப் பார்'' என்று ஆளை அனுப்பினார்.

பாத்தியதை கொண்டாடிய பாத்திரம் கைக்கு வந்ததும் ஸ்வாமி அதைச் சுற்றியிருந்தோருக்குக் காட்டி, ''இதில் என்ன எழுதியிருக்கிறது பாருங்கள்!'' என்றார்.

Koviloor Digital Library

தேவநாகரி லிபியில் ''ஸா பா'' என்று அதில் பொறித்திருந்தது!

உடைமையற்ற துறவியரசான ஸாயிபாபாவின் பெயர் பொறித்த இந்த ஒரு சொத்தை அவரது புனரவதாரம் உரிமை கோரிப் பெற்றுக்கொண்டதும் ஒரு விந்தையே!

விந்தையின் பொருள் தசராவின்போது அவிழ்ந்தது. தசராவில் அதிவைபவமான மகாயக்ஞம் நடந்தபோது, சாஸ்திரப் பிரகாரம் அமைக்கப்பட்ட 'கரகி' என்ற தீர்த்த பாத்திரத்துக்காக வேதியர்கள் அலைந்தனர். ''இதோ, உங்களுக்கு வேண்டிய கும்பம்'' என்று கூறி இந்தக் கமண்டலுவைத்தான் கொடுத்தார் நம் ஸ்வாமி.

அது சாஸ்திர லட்சணங்கள் யாவற்றையும் பூர்த்தி செய்வது கண்டு பண்டிதர்கள் வியப்புற்றனர்.

* * *

ஷிர்டி – பர்த்தித் தொடர்மையை இந்நூலில் ஆங்காங்கு கண்டு வந்திருக்கிறோம். தலைசிறந்த மிருதங்க வித்வான் பக்க வாத்தியமாக அமைந்தால் அவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விஸ்தாரமான தனி ஆவர்த்தனங்களும், ஆங்காங்கே குட்டி ஆவர்த்தனங்களும் தருவதுண்டல்லவா? இங்கே அப்படியொரு தனி ஆவர்த்தனம் கொடுப்போமே!

* * *

சிஞ்சோலி ராணியைப் போலவே ஷிர்டிபாபாவை நேரில் கண்டு அவரில் ஊறிய அடியார் திலகங்களில் இன்னொருவர் சமீபத்தில் காலமான ஸ்ரீ எம்.எஸ். தீக்ஷித்.

இவரது பெரியப்பாவான ஸ்ரீ ஹெச்.எஸ். தீக்ஷித் பெயரைச் சொன்னாலே ஷிர்டி பக்தர் தலைவணங்குவர். பிரபல வழக்கறிஞரும், அந்நாள் சட்டசபையாளருமான ஸ்ரீ ஹெச்.எஸ். தீக்ஷித்தை ஏனைய ஷிர்டியடியார் ''காகா ஸாஹேப்'' என்றே மரியாதையுடன் குறிப்பிடுவர் எனில், ஷிர்டிபாபாவோ அவரை அலாதி அன்பு சொட்ட ''காகா'' என்றே அழைப்பார். பெரியப்பாவை தெய்வ ஸ்தானத்தில் வைத்திருந்த எம்.எஸ். தீக்ஷித், அவருக்கும் தெய்வமான ஷிர்டி பாபாவிடம் ஆராத பக்திகொண்டு ஆராதனை புரிந்து வந்ததில் ஆச்சரியமில்லை அல்லவா? 1909 லிருந்து இவர் ஷிர்டி பாபாவை நேரிலேயே கண்டு, அவரருளில் முக்குளித்தவர். இவரது தீராத் தலைவலியை பாபா ஓர் அறை அறைந்தே ஓட்டம் பிடிக்கச் செய்திருக்கிறார்.

இவருடைய ஷிர்டி முதல் தரிசனத்துக்குப் பொன்விழா எடுப்பதுபோல், ஷிர்டிபாபா மறைந்து நாற்பத்தோராண்டுகளுக்குப் பின் 1959–ல் அவரது மறுபிறவியான ஸ்வாமி இவரை மறவாமல் ஆட்கொண்டதை என் சொல்ல?

Koviloor Digital Library

மங்களூரில் வசித்துவந்த தீக்ஷித் அப்போது குரு சரித்திரத்தை ஸப்தாஹமாகப் பாராயணம் செய்து வந்தார். ஆறு நாள் பாராயணம் ஆகிவிட்டது. மறுநாள் அது பூர்த்தியாக வேண்டும். பூர்த்தியாகும் வரை காக்கப் பொறுத்திராமல், ஆறும் நாளிரவே ஆராமுதன் கனவில் வந்துவிட்டார்.

ஆனால் குறும்பைப் பாருங்கள், பக்தரை முன்னின்று அழைத்துச் செல்லும் நம் தலைவன், தீக்ஷித்தின் கனவிலே அவரைப் பின்தொடர்ந்து சென்றார்!

மரங்களுக்கிடையே ஓர் அகன்ற பாதையில் சென்றுகொண்டிருக்கும் தீக்ஷித்துக்கு அவர் தம்மைப் பின்தொடர்வதாக உள்ளுணர்ச்சியில் தெரிகிறது. திரும்பிப் பார்க்கிறார். செழித்த கேச பாரமும், செக்கர் ஆடையுமாக ஒரு சுந்தர புருஷன் நிற்கிறார்.

அடடா, மஹாமாயாவின் குறும்பை என்னென்பது? அவரை தீக்ஷித்துக்கு அடையாளம் தெரியவில்லை!

''நீ யார்? ஏன் என்னைப் பின்தொடருகிறாய்?'' என்று வினவுகிறார்.

பின்வந்த முன்னவன் மறுமொழி தரவில்லை.

தீக்ஷித் தொடர்ந்து நடக்கிறார். பின்னே அந்த வியக்தி தொடர்ந்து வருவதை உணருகிறார். பின்னே வந்தவர் வேகமாகத் தம்மை நெருங்குவதை அறிகிறார். தம் தலையில் அவர் எதையோ கொட்டுவதையும் அநுபவிக்கிறார். விபூதியைத்தான் வர்ஷித்திருக்கிறார்!

தமது பூர்வ சரீரத்துக்கே விபூதி அபிஷேகம் செய்பவர், இன்று பூர்வ சரீரத்தின் அபூர்வ பக்தரையும் திருநீற்றால் முழுக்காட்டியிருக்கிறார்!

ஸத்யஸாயியின் புகழ் வெகுவாகப் பரவிவிட்ட அந்த 1959—லும் கூட நம் எம். எஸ். தீக்ஷித் அவரைப் பற்றி அறிந்திருக்கவில்லை. அதனால், கனவு கனமாக அவருள் பதிந்திருந்தும் அதன் பொருளை அவர் விளங்கிக் கொள்ளாமலே இருந்தார்.

சில மாதங்களுக்குப் பிறகுதான் அவர் ஷிர்டீசரின் புனர் ஜன்மாவைப் பற்றிக் கேள்விப்பட்டார். ஏனோ அவருக்கு நம்பிக்கை பிறக்கவில்லை.

ஆனால் இவருக்காகப் பிரேமை வலையை வீசிவிட்டவர் இவரை நம்பவைக்காமல் விடுவாரா?

இவர் வேறெங்கோ சென்ற இடத்திலும் பர்த்தியவதாரரைப் பற்றியே பேச்சு படர்ந்தது.

Koviloor Digital Library

(ஸாயி பக்தர் பலரது அநுபவம்: ஆரம்பத்தில் அவர்கள் எங்கு சென்றாலும் ஸ்வாமியின் மகிமை பற்றிய செய்திகளாகவே வரும். பிறகு இவர்கள் பக்தியில் ஆழங்காற்படுவதற்குச் சோதனை வைப்பது போல் ஸ்வாமியைப் பற்றி நாலு மூலைகளிலிருந்தும் ஐயமூட்டும், அச்சமூட்டும் சமாசாரங்களாக வந்து குவிந்தபடி இருக்கும்! ராமகிருஷ்ணர் சொன்னாற்போல், பந்தற்காலை நன்றாக ஆட்டி ஆட்டியே நடுவதைப் போன்றது இந்தக் கலக்கம் என்று கொள்ளலாம். அல்லது, ஏகமாகக் கர்ம மூட்டையைச் சுமந்து கொண்டுள்ளவருக்கும் தெய்வம் கருணையால் தன்னை அறிவித்துக் கொண்டபின், தர்ம நீதியைக் கைக்கொண்டு, உடனே அவர்கள் தன்னிடம் முற்ற ஆழ்ந்துவிடாதபடி இப்படி அலைக்கழித்து, அதன் மூலமே கர்மத்தைத் தீர்த்து, பிறகு லவலேசமும் ஐயமின்றி, அச்சமின்றித் தன்னை அண்டுமாறு செய்கிறது என்றும் கொள்ளலாம்.)

பர்த்தியவதாரத்தைப் பற்றி மீண்டும் கேள்விப்பட்டது மட்டுமின்றி அவரது சித்திரத்தையும் ஸ்ரீ தீக்ஷித் கண்டவுடன் உள்ளே ஒரு பூட்டு திறந்துகொண்டாற் போலிருந்தது. ஆம், சித்திரத்தில் கண்டவரே இவரது சொப்பனத்தில் பின்னே வந்து விபூதி வர்ஷித்தவர்!

ஷிர்டிபாபா, "மறுபடி எட்டு ஆண்டுகளான குழந்தையாக வருவேன்" என்று காகாவிடம் கூறியதும் இவரது நினைவில் வெடித்தது. புட்டபர்த்திக்குச் சென்று பார்த்து வருவதென முடிவு செய்தார்.

இவர் பிரசாந்தி நிலையத்துக்குச் சென்றது சிவராத்ரி சமயத்தில். எக்கச்சக்கமான கூட்டம். இப்போது இவரைச் சுற்றி ஜனங்கள் நெரித்தாலும், அன்று கனவில் ஒரே ஒருவர் பின்தொடரத் தாம் நடந்த நடைபாதை சாட்சாத் இதோ பிரசாந்தி நிலயத்தில் விரியும் இந்தச் சாலைதான் எனக் கண்டு வியந்தார்.

ஸ்வாமி தரிசனம் கிடைத்தது. சந்தேகமேயில்லை, கனவில் வந்தவர்தான். ஆனாலும் சந்தேகமாகத்தான் இருந்தது. இவர் 'நம் ஷிர்டித் தெய்வந்தானா' என்று. 'ஆஹா, அவர் முரட்டுத் துணிகட்டிய எளிய பக்கிரி போலிருந்ததென்ன? தலைக்குட்டைக்குப் பதில் புதர்முடியும், முரட்டுத்துணிக்குப் பதில் ஸில்க் அங்கியும், எளிய பக்கிரித் தோற்றத்துக்குப் பதில் ஸினிமா ஸ்டார் போன்ற இந்த ஷோக்கும் — இவர் எப்படி அவராக இருக்கமுடியும்?'

ஷிர்டி ஸாயி விக்ரஹத்துக்கு ஸத்ய ஸாயி ஒரு காலி மரக் குடத்திலிருந்து பற்பல குடங்கள் விபூதியை 'வரவழைத்து' அபிஷேகம் செய்வதைப் பார்த்தார் தீக்ஷித். ஸத்யஸாயியின் உபந்நியாசத்தையும் கேட்டார்.

உபந்நியாசத்திடையே அவர் கூறியது தீக்ஷித்தைத் திடுக்குறச் செய்கிறது. என்ன கூறினார்? நாமும் கேட்போம்:

Koviloor Digital Library

"இங்கு வந்திருக்கும் சிலருக்கு ஸினிமா ஸ்டார் போல் தோன்றும் இந்தப் பட்டங்கி விநோத முடியர் எங்காவது ஷிர்டி பாபாவாக இருக்க முடியுமா என்று தோன்றுகிறது. வெளித் தோற்றத்தைப் பார்த்து எப்படி உள்தன்மையைப் புரிந்துகொள்ள முடியும்? இரண்டு பட்சணங்கள் இருக்கின்றன. இரண்டும் ஒரே மாவு, ஒரே சர்க்கரை, ஒரே நெய் சேர்த்துச் செய்ததுதான். ஆனால் ஒன்றுக்குக் கலர் போடாமல் அப்படியே வட்டமாகத் தட்டி வைத்திருக்கிறது. இன்னொன்றுக்கோ கலர் போட்டு கனசதுரமாகத் துண்டு போட்டு வைத்திருக்கிறது. வட்டப் பணி யாரத்தைத் தின்ற ஒருவர் மற்ற பட்சணத்தை உண்டுபாராமல் "கலரும் வேறே; உருவமும் வேறே. இதெப்படி நாம் சாப்பிட்ட பணியாரச் சரக்காக இருக்கமுடியும்?' என்று சங்கித்தால் என் சொல்வது? 'நீங்களே இதை ருசித்துப் பாருங்கள்' என்றே சொல்ல வேண்டும். என்னை நெருங்கி வந்து பாருங்கள். அப்போதே ஷிர்டியும் இதுவும் ஒன்று, வேறு என்று அநுபவத்தில் தெரியும். அநுபவத்தால் ருசி பாராமல், அறிவால் வெளி ஆராய்ச்சி மட்டும் செய்தால் உண்மை தெரியாது" என்றார் ஸ்வாமி!

தீக்ஷித் துணுக்கமுறாமல் இருக்க முடியுமா? ஆயினும் இம் முறை அவருக்கு ஸ்வாமி தனிப்பேட்டி தரவில்லை.

மூன்று மாதங்களுக்குப் பின் மீண்டும் தீக்ஷித்தைப் புட்ட பர்த்தி இழுத்தது.

இம்முறை பேட்டியும் கிடைத்தது.

ஸ்வாமி, தீக்ஷித் வைத்திருந்த அவரது பெரியப்பாவின் புகைப்படத்தை உருவி எடுத்து, "மேரா காகா, அச்சா" என்று தம்முடைய காகாவைப் பார்த்துச் சொன்னது அசல் ஷிர்டி வாசகமாகவே தொனித்து, தீக்ஷித்தைப் பரவசப்படுத்தி விட்டது!

"உன் பெரியப்பா அவர். அவர், நான் 'எட்டாண்டு பாலனாக வருவேன்' என்று சொன்னதாகக் கூறியது சரியல்ல. 'எட்டாண்டுகளுக்குப் பின் பாலனாக வருவேன்' என்றுதான் நான் வாஸ்தவத்தில் அவரிடம் சொன்னேன். ஷிர்டியில் 1918ல் மஹாஸமாதி கொண்ட எட்டு ஆண்டுகளுக்குப்பின் 1926ல் இங்கே பிறந்தேன். அவர் அதைத் தப்பாகப் புரிந்துகொண்டு மறு அவதாரத்தில் தோன்றும்போதே எட்டு வயசுப் பிள்ளையாக இருப்பேன் என்று நினைத்துவிட்டார்..."

ஸ்வாமி இப்படிச் சொல்லிக்கொண்டே போக, தீக்ஷித்தின் ஐயப்பனி மூட்டம் முழுவதும் சூரிய வெளிச்சத்தில் ஆவியாகிவிட்டது.

"இன்னம் சந்தேகமா?" என்று கனியக் கேட்கிறார் ஸ்வாமி!

Koviloor Digital Library

நடுவே கொஞ்சம் திறந்துகொண்டு மீளவும் பூட்டிக்கொள்ள இருந்த திக்ஷித்தின் உட்பூட்டு கழன்றே விழுந்துவிட்டது. இதயக் கதவும் விசாலமாகத் திறந்துகொண்டது!

அதற்குப் பரிசாகக் கதவு திறக்கும் கைங்கரியம் ஒன்றையே இவருக்கு அளித்தார் ஸ்வாமி.

ஷிர்டிபாபாவிடம் திக்ஷித், "நினது வாயிற்காப்போனுகப் பணிபுரியும் பேற்றை எனக்கு அருள்வாய்" என வேண்டினூராம். ஷிர்டியில் தராத அந்த வரத்தைப் பர்த்திசர் ஒயிட்ஃபீல்ட் பிருந்தாவனத்தில் திக்ஷித்துக்கு வழங்கிவிட்டார். அங்கு ஸ்வாமியின் இருக்கைக்கு மேற்பார்வையாளராக திக்ஷித் நியமிக்கப் பட்டார். ஸ்வாமியின் கார் வந்து போகும் போதெல்லாம் ஸ்ரீ திக்ஷித் தாமே வெளி வாயில் கேட்டைத் திறந்தும் மூடியும் மகிழ்ந்து வந்தார்.

ஷிர்டீசருக்கும் பர்த்திசருக்கும் கடுகத்தனை பேதமும் கிடை யாது என்ற திடம் பெற்றவர் ஸ்ரீ எம்.எஸ். திக்ஷித். இரண்டை யும் கூட இருந்து அணு அணுவாக அநுபவித்த அவரது கருத்து நமக்கு பெரிய பிரமாணமாகும்.

நம் ஸ்வாமி அடிக்கடி அந்தரத்தில் "காற்றை எடை போடுவது போல்" கையைச் சுழற்றுகிறார் அல்லவா? ஷிர்டி பாபாவின் வழக்கமேதான் இது என வியக்கிறார் ஸ்ரீ திக்ஷித். (ஹேமாத்பந்த்தின் 'ஸாயி ஸத்சரித்ர' 27-ம் அத்தியாயத்திலும் ஷிர்டிபாபாவின் இச் சைகை கூறப்படுகிறதாம்.) நம் ஸ்வாமியின் மற்றொரு வழக்கம், அந்தரத்திலேயே விரலால் ஏதோ எழுதிப் பார்ப்பது. இதுவும் அப்படியே ஷிர்டீசருடைய 'மானரிஸம்' (!) தான் என்று திக்ஷித் கூறத் தெரிகிறது.

* * *

ஷிர்டீசர் எளியர், பர்த்திஸாயியோ டாம்பீகமானவர் என எண்ணினால் அது அஸம்பாவிதம்தான். ஸ்வாமி பட்டணி வதிலும், காரில் செல்வதிலும், கோயிலெழுப்பிக்கொண்டு வசிப்பதிலும் டாம்பிகம் எதுவும் இல்லை என்பதை இந்நூல் தொடக்கத்திலேயே (அத்தியாயம் — 8) விளக்கி யிருக்கிறோம்.

டாம்பிகம் என்று தோன்றக்கூடிய ராஜ மரியாதை செலுத்தப்படாத மகான் எவருமே இல்லை. ஷோடச (பதினாறு) உபசாரம், சதுஷ்ஷஷ்டி (அறுபத்துநாலு) உபசாரம் என்றெல் லாம் இறைவனுக்குப் பூஜை புரியும் ஒழுங்குகளான நம் ரத்தத் திலேயே மகான்களுக்கும் கோலாகல வழிபாடு நடத்தும் ஆர்வம் ஊறியிருக்கிறது. இதன்படி ஷிர்டிபாபா பெற்ற அபரிமித அலங் காரத்தையும், ஊர்வலத்தையும் நம் ஸ்வாமி நிச்சயமாகப் பெறவில்லை என்றே சொல்லவேண்டும். ஷிர்டிபாபாவின் வீதி உலாவில் எத்தனை வாத்தியங்கள், எத்தனை சாமரங்கள், எத்தனை ஆலவட்டங்கள், எத்தனை தண்டங்கள்! எப்பேர்ப்பட்ட புஷ்ப

Koviloor Digital Library

மாரி! ''பராக் பராக்'' சொல்லி அவருக்குக் கிரீடமே வைத்து மேனி மூடப் பொன்னாரங்களையும், மணிமாலைகளையும் அணிவித் திருக்கிறார்களே!

இதேபோலத்தான், தம்மைப் பக்கிரியாகவும், அல்லாவின் அடிமையாகவும் அவர் சொல்லிக்கொண்டதை மட்டும் கருத்தில் கொண்டு, ''அவர் எத்தனை எளியராகப் பேசினார்? இவரோ தம்மையே அவதாரம் என்றல்லவா முழக்கிக்கொள் கிறார்?'' என்று கேட்கிறார்கள். இப்படிப்பட்ட அன்பர்களுக்கு, ஸத்யஸாயிக்குச் சற்றும் சளைக்காத ஷிர்டிபதியின் மகோன்னத வாக்கியங்கள் சிலவற்றை இங்கு எடுத்துக்காட்டுவோம்:

''நான் இருக்கப் பயமேன்?'' என்ற ஒன்றே போதாதா? தன்னை இறையவதாரமாகக் கருதுபவரன்றி யார் இப்படி அதிகாரபூர்வமாக அபயம் வழங்க முடியும்? மேலும் சில:

''கடலானது தன்னில் விழவரும் நதிகளை ஏற்க மறுத் தாலும் மறுக்கலாம்; நான் என் பக்தர்களை ஏற்று உய்விப்பதில் என்றும் பின்வாங்க மாட்டேன்.

(விஜயாநந்தரிடம்) ''பூர்வ ஜன்மங்களில் நீ செய்த புண்ணியத்தால்தான் இந்த இடத்தை (ஷிர்டியை) உன்னால் மிதிக்க முடிந்திருக்கிறது.''

''பொம்மலாட்ட சூத்திரத்தை ஆட்டுபவன் நானே.''

''நான் அனைத்தறிவானவன். தீயில், காற்றில், நீரில், மண்ணில், விண்ணில் எங்கும் நான் குடிகொண்டிருக்கிறேன். என்னைக் கட்டுப்படுத்த முடியாது.'' (குணாஜியின் ஷிர்டிபாபா சரிதம்)

''என் கஜானா பரிபூர்ணமானது. எவர் எதைக் கேட்டாலும் என்னால் கொடுக்க முடியும். ஒருத்தனுக்குத் தகுதியில்லை என்பதால் நான் ஒன்றைத் தருவதில்லையே தவிர, என்னால் எதையும் தரமுடியாது என்றில்லை.''

''அனைத்துக்கும் ஆதாரமான தாயே நான். முக்குணங் களின் இசைவு நானே. எல்லாக் காட்சிகளையும் இயக்குபவன் நான்தான். சிருஷ்டி கர்த்தாவும், பரிபாலகரும், ஸம்ஹார மூர்த்தியும் நானே.'' (ஸத்சரித்ரம்: பக். 13)

போதுமா?

இதோடுகூட ஷிர்டி ஸாயி பாபா பல தெய்வ வடிவங் களில் காட்சி தந்ததையும் நினைவுகொண்டால் 'அவர் எளியர்; இவர் பகட்டுக்காரர்' என்ற வாதம் சரியே யல்ல என்று புலனாகும்.

இந்த நாணயத்தின் மறுபுறத்தில் சக்திப் பிரவாகமான நம் மகா ஸ்வாமியிடமும் எத்தனை எளிமை உள்ளது என்பதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

Koviloor Digital Library

அவர் தம்மைப் பராசக்தியாக, பகவானுகச் சொல்லிக் கொள்வதை எழுத்தில் படிக்கும்போது அவரை எளியராக எண்ண முடியாமலிருக்கலாம்; ஒருகால் மேடைப் பிரஸங்கத்தில் அவர் இதை அழுத்திச் சொல்லும்போதும் இவருக்கு எளிமை கை வராது என்று தோன்றலாம். ஆனால் அவர் தனிப்படப் பேசும் போது, குறிப்பாக, அந்தரங்கப் பேட்டியின்போது, தம்மைக் குறித்தே, ''ஸ்வாமி உங்களோடேயே இருக்கிறேன்; உங்களுக் குள்ளேயே இருக்கிறேன்'' என்று சொல்லி நமது சகலப் பிரச்னை களையும் கூறி, விபூதி முதலியன சிருஷ்டித்துத் தரும்போது நாம் உன்னதமான ஒன்றைக் காணும் வெலவெலப்பை அடைவதேயில்லை. மாறாக அவர் இனிமையிலும் இனியராகத்தான் தோன்றுகிறார். அவரிடம் ஒட்டி உருகத்தான் அப்போது நெஞ்சு எழும்புகிறது. எளிமை இருந்தாலன்றி அற்ப சக்தர்களான நாம் அந்த மகா சக்தியிடம் இயல்பாக ஒட்டி நிற்கமுடியுமா?

நம் ஸ்வாமிக்கு மிகவும் அணுக்கத்திலிருந்து அவரை எளிய ராகவே கண்ட ஸ்ரீ கோகக் அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்கையில், 'பத்தாயிரம் மைல்களுக்கப்பால் இத்தனை இல்லங் களில் இவ்வளவு அற்புதங்களைச் செய்பவர், அந்நியர்களால் இப்படி ஆண்டவனாகவே வழிபடப் பெறுபவர், வாஸ்தவமாக இவரேயா தம்மோடு அவ்வளவு சகஜமாகப் பழகும் அந்த பாபா?' என்றே அவருக்குத் தோன்றியதாம்.

மகோன்னத வாக்கியங்களைச் சொல்லும் அதே பாபா, **''I am the servant of all''** (''நான் அனைவருக்கும் ஊழியன்'') என்பது போன்ற மிக விநயமான மொழிகளையும் கூறத்தான் செய்கிறார்.

பிரசாந்தி நிலைய வைத்யசாலையில் ஸ்வாமி அருளால் நடந்த அற்புத சிகித்ஸைகள் பற்றி டாக்டர் ஸீதாராமய்யா சொல்ல, ''நான் என்ன செய்கிறேன்? உங்கள் எல்லோருடைய மனப் பூர்வமான சேவையும், இங்கே வருகிறவர்களின் ஸாதனை, பஜனை இவையுமேதான் நோயாளிகளைக் குணப்படுத்துகின்றன'' என்றாரே, இதைவிட ஒரு விநயம் உண்டா?

இதுதான் உண்மையெனில், பிரசாந்தி நிலைய மருத்துவ மனையில் மட்டுமின்றி, உலகாயதச் சூழலே கொண்ட வெளி ஆஸ்பத்திரிகளில், சேவா உணர்ச்சியற்ற வெறும் இயந்திர கதி டாக்டர்களிடம் சிகித்ஸை பெறும் ஸாயி பக்தரான அநேக நோயாளிகளும் அந்த டாக்டர்களே வியக்கும்வண்ணம் அற்புத நிவாரணம் பெறுகிறார்களே, அதெப்படி? எனவே இங்கே அடக்கத்தின் வடிவாகத்தான் பாபா பேசியிருக்கிறார்.

இப்படியே நிச்சயமாக பாபாவின் அதித சக்தியால்தான் தங்களுக்கு ஒரு பெரு நலன் விளைந்தது என்று உணர்ந்து அதற் காக நன்றி கூறும் பக்தர்களிடம் விநய வடிவாக, ''உங்களுடைய நம்பிக்கையின் சக்திதான் காரணம்'' என்பார்.

Koviloor Digital Library

அவ்வாருயின் நம்பிக்கையே அற்ற பலர் பாபாவினுல் அதிசய முறையில் காக்கப்பெற்ற பின்பே அவரிடம் பக்தி கொள்ள ஆரம்பித்திருக்கிருர்களே, இதை எப்படி விளக்குவது? இங்கும் ஸ்வாமி தம்மை அடக்கிக்கொண்டு பேசியிருக்கிருர் என்பது தெளிவு.

ஒடுக்கமும், ஒதுக்கமும் எளிமையின் உடன்பிறப்புக்கள். பாபாவின் மேனிப் பாங்கில் அநேக சந்தர்ப்பங்களில் நாம் எப்பேர்ப் பட்ட ஒடுக்கத்தைக் காண்கிருேம். குறிப்பாகச் சுவரிலோ, கதவிலோ ஒட்டினுற்போல் அவர் நிற்பதில் எந்தனை ஒடுக்கம்?

அநேகப் புகைப்படங்களைப் பாருங்கள். சக்கரவர்த்தி மிடுக்குக்குப் பதில் வெள்ளை உள்ள எளிமையே தெரியும். அடக்கத்தின் அங்கமான வெட்கமும் நாணமும் கொண்ட பெண்மையும் தெரியும்.

மேடையில் நாற்காலி போட்டிருந்தாலும், அதில் அமராமல் கீழேயே, அதுவும் கூட நட்ட நடுவில் அன்றிச் சற்று ஓரப் புறமாக ஒதுங்கியே உட்காருவது பாபாவின் வழக்கம். அதுவும் பெண்ணைப் போல மட்டி போட்டு அமருவார். பிரசாந்தி நிலையத்தில் பேட்டி அறையிலிருந்து வெளிப்பட்டு பஜனை கூடத்துக்குள் அவர் வரும் போது பாருங்கள்—வாயில் நிலைகளின் ஓரமாக ஒதுங்கித்தான் வருவாரே அன்றி, நட்ட நடுவாக வரமாட்டார். இம்மாதிரி பல சின்னச் செயல்களில் அவரது எளிமையை உணர்கிருேம்.

ஷிர்டி—பர்த்தி இரு பாபாக்களையும் வணங்குபவர்கள், "அன்று பக்கிரி வேஷம் போட்டேன்; இன்று நவாபாக வந்திருக் கிறேன்" என்று ஸ்வாமி சொல்வதைக் கேட்டிருக்கலாம். ஆனல் இது பூர்வாவதாரத்தில் பிச்சை எடுத்து உண்டதையும், முரட்டுத் துணி உடுத்தியதையும் மட்டுமே குறிப்பதுதான். ஷிர்டிவாஸர் பக்தரைக் கூப்பாடு போட்டு வைததையும் அடித்ததையும் நினைத் தால், இன்றைய பாபாதான் அவரைவிட அடங்கியவர் என்றும் கொள்ளலாம்.

ஒரு ரம்யமான நிகழ்ச்சித் துணுக்கு : ஷிர்டி பாபாவின் படமொன்றைப் பார்க்கிருர் பர்த்தி பாபா. அவர் முகத்தில் ஒரு விநோத உணர்வு படர, தாமாக அவரது திரு அதரங்களி லிருந்து, "ஆஹா, ஏனு ஜம்ப!" ("என்ன ஜம்பம்!") என்ற இரு வார்த்தைகள் உதிருகின்றன.

ஆம், 'ஷிர்டி பாபா எளியர், புட்டபர்த்திக்காரர் ஜம்பக் காரர்' என்று சிலர் சொல்கிருர்களெனில், புட்டபர்த்திக்காரரே ஷிர்டி பாபாவை ஜம்பக்காரர் என்கிருர்!

அந்த இரண்டு வார்த்தைகளை அவர் அநுபவித்துச் சொன்ன நயத்திலேயே ஷிர்டியின் எளிய கிழவருடைய "ஜம்பம்" என்ன என்று புரிந்ததாம். அதாவது, நம் ஸ்வாமி அவரிடம், "கிழவனுரே! உலகத்தை நல் வழியில் திருப்ப வேண்டும் என்பதற்

Koviloor Digital Library

காக நான் ஓயாமல் ஒழியாமல் ஊரைச் சுற்றி, தொண்டைத் தண்ணீர் வற்ற என் மகிமையைச் சொல்லிக்கொண்டும், நவ சங்கடத்திலும் என் சக்திகளை அற்புதமாகக் காட்டிக்கொண்டும், பல நிறுவனங்களைக் கட்டிக்கொண்டும் அவதிப்பட்டு, அவப் பேரும் வாங்கிக் கொண்டிருக்கிறேன். நானேயான நீரோ உம் முடைய அந்தத் தெய்விகத்தையும் மனமிருந்தால்தான் காட்டுவது என்ற ஜம்பத்துடன், ஷிர்டியை விட்டு அசையாமல், வேண்டுமென்றே பக்கிரி வேஷம் போட்டு ஹாயாக இருந்து விட்டீரே! முரட்டு ஆண்டி போலிருந்தாலும் அதைத் துளைத்துக் கொண்டு உம் மன்றுதி மன்வ மகத்துவத்தைப் புரிந்துகொள்பவர் புரிந்துகொண்டால் போதும்; மற்றவருக்கு அதை நீராகத் தெரிவித்து ஒன்றும் ஆக வேண்டியதில்லை என்கிற ஜம்பம்தானே உமக்கு?'' என்று சொல்லாமல் சொல்லி விட்டாற் போலிருந்த தாய், ''ஏனு ஜம்ப!'' என்ற இரண்டே வார்த்தைகளின் அற்புதப் பிரயோகம்!

* * *

மிருதங்கத் தனி ஆவர்த்தனத்திலிருந்து கடம், கஞ்சிரா, மோர்சிங் என்று வெகு தூரம் போய் விட்டோமே! மிருதங்கத்துக்குத் திரும்புவோம். ஷிர்டியின் நேர் சிஷ்யரான எம். எஸ். தீக்ஷித் நம் ஸ்வாமியை ஸாயி பாபாவே என உணர்ந்த அழுத்தமான பிரமாணத்தைத்தானே பார்த்தோம்?

இவரை விடவும் ஷிர்டி பாபாவுக்கு நெருக்கத்திலிருந்த அப்துல்லா பாபா குறித்து நம் பர்த்தி பாபா புரிந்த லீலையைக் ''கடைத்தேறும் கடைப்பொழுது'' என்ற அத்தியாயத்தில் பார்ப்போம்.

உள்ளாழம் வாய்ந்த மற்றொரு பெரியாரின் சான்றை இங்கு பார்க்கலாம் :

ஸ்ரீ காயத்ரீ ஸ்வாமிகள் என்ற அந்தப் பெரியார் சிருங்ககிரி பீடத்தில் பூர்வாசாரியராக இருந்த ஸ்ரீ நரஸிம்ம பாரதி ஸ்வாமிகளின் சீடராவார். 1906-ல் ஷிர்டி இவரை ஆகர்ஷித்தது. ரண்டு முழுதும் ஷிர்டி ஸாயியுடனேயே தங்கியிருந்து அவரது தெய்விக மகிமையில் நீராடினார். அவரையே குருவாகக் கொண்டார். இதன் பின்பும் பன்முறை ஷிர்டிக்குச் சென்று குருவை மேலும் மேலும் அண்மையில் அநுபவித்தார்.

புட்டபர்த்தியில் புனரவதாரம் நிகழ்ந்திருப்பதாகக் கேள்விப்பற்று, 1960 வாக்கில், தமது தள்ளாப் பருவத்தில் இங்கு வந்தார். நம் ''ஜம்பக்காரர்'' அவருக்கு இன்டர்-வ்யூ தரவேயில்லை.

அன்று அவர் புட்டபர்த்தியிலிருந்து கிளம்ப வேண்டிய தினம். தமக்கே உரிய குழந்தைத் தனத்தில் குதூஹலம் கொந்தளிக்க ஸ்ரீ கஸ்தூரியிடம் வந்தார். ''நேற்று இரவு குரு (ஷிர்டி

Koviloor Digital Library

பாபா) எனக்குத் தரிசனம் தந்தார். (கனவில் அல்ல; 'விஷன்' எனும் உருவெளித் தோற்றத்தில்.) 'எட்டு வருஷத்துக்கப்புறம் கிளம்பினேன்; அப்புறம் பதினைந்து வருஷத்தில் பழைய சொத்து முழுதையும் சேர்த்துக் கொண்டுவிட்டேன்' என்று கூறி மறைந்து விட்டார். இதற்கு என்ன அர்த்தமாக இருக்கும்?'' என்று வினவினார்.

'இரண்டும் இரண்டும் நாலு' என்பது போல் எளிதாகக் கஸ்தூரிக்கு அர்த்தம் புரிந்துவிட்டது. சொன்னார் : ''ஷிர்டியில் மஹா சமாதி அடைந்த பின் எட்டு வருஷங்களுக்குப் பிறகுதான் பர்த்தியில் அவதாரம் நடந்தது. ஸத்யா பழைய பாபா செய்த எல்லா லீலைகளையும் செய்ய ஆரம்பித்தது பதினைந்தாம் வயதில் தான். அந்த லீலா மகிமைதான் பழைய சொத்து.''

''ரொம்ப ரொம்ப சந்தோஷம். எனக்கு 'இன்டர்-வ்யூ' கிடைக்காவிட்டால் என்ன? இந்த 'ஸென்டர்-வ்யூ' (உண்மையின் மையக் காட்சி) கிடைத்துவிட்டதே!'' என்று மகிழ்ந்து கொண்டு நிறைவுடன் புறப்பட்டாராம் காயத்ரி ஸ்வாமிகள்.

* * *

குறிப்பிடத்தக்க இன்னொரு புள்ளி ஸ்ரீ பி. கே. ஸாவந்த். இன்று மஹாராஷ்டிர பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் இவரே. முன்பு அமைச்சர், கீழ்-மேல் சட்ட சபாநாயகர் ஆகிய பதவிகளை வகித்தவர். நம் நூலைப் பொறுத்தமட்டில் இவற்றை விட முக்கியமாக ''ஷிர்டி ஸம்ஸ்தான டிரஸ்ட்''டில் நெருங்கிய தொடர்பு கொண்டவர். அதன் முன்னாள் தலைவராகவே இருந்தவர்.

1960 மே மாதம் இவர் பம்பாயில் நடைபெற்ற ஸத்ய ஸாயி பஜன் ஒன்றில் கலந்துகொண்டார். பஜன் முடிவில் எல்லோருக்கும் வழங்கப்பட்ட பிரசாந்தி நிலைய விபூதியை இவருக்கும் வழங்கினார் டாக்டர் டி. ஜே. கதியா.

அவ்வளவுதான், ஸாவந்த் திணறித் திண்டாடலானார். ''ஏதோ பஜன் பாடியதைக் காதால் கேட்டோம், அதில் நடு நடுவே ஸத்ய ஸாயியின் பெயர் வந்தாலும் தோஷமில்லை. ஆனால் இந்த விபூதியை எப்படி நேராக உடம்பிலேயே அணிவது? அதுவும் போதாதென்று, இதோ மற்றவர்கள் செய்வது போல் இதை எப்படி உட்கொள்வது? பர்த்தி பாபாதான் ஷிர்டி பாபா என்பதற்கு என்ன ருஜு? இது போலியாக இருந்து விட்டால்? இவ்விபூதியை அணிவதே ஷிர்டி பாபாவுக்கு அபசார மாகிவிட்டால்? ஆனால், நம்பிக்கை கொண்ட பல பக்தரிடையே தாம் திருநீறு வாங்கிக் கொள்ளாவிடினும் பண்பாக இராதே!'' —இவ்வாறெண்ணிக் குழம்பினார்.

சிலரைப் போல ஸ்ரீ ஸாவந்த் தீர்மானமாக மனக்கோணல் (prejudice) கொண்டு, ஷிர்டி பாபா பர்த்தியில் வந்தே

Koviloor Digital Library

இருக்க முடியாது என்று வீம்பாக எண்ணவில்லை. வாஸ்தவமாகவே நாட்டில் போலி பாபாக்கள் ஏராளமாகப் பரவி விட்டதால்தான் கலங்கினார். தம் கலக்கமே மெய்யானது என்று எண்ணாமல், அதற்குத் தெளிவு கிடைக்குமாயின் அதைப் பெற மனத்தைத் திறந்து வைத்துக் கொண்டிருந்தார். 'ப்ரெஜுடிஸ்' இல்லாமல், திறந்த மனத்தோடு ஐயுறுபவரையும் தாம் தெளிவிப்பதாக நம் ஸ்வாமி சொல்வதற்கேற்ப, ஸ்ரீ ஸாவந்துக்காக ஓர் அற்புதம் புரிந்தார்.

ஓரிரு விநாடிகளுக்கு மேல் ஸாவந்தைக் குழம்பவிடாமல் அவரது நாடிக்குள்ளேயே உண்மையை 'இன்ஜெக்ட்' செய்து விட்டார்.

எப்படிச் செய்தார்? விபூதி விநியோகித்த கதியாவின் தலைக்கு மேலிருந்த ஸத்ய ஸாயி பாபா படத்தின் அபய ஹஸ்தத்திலிருந்து கண்களைக் கூசச் செய்யும் ஓர் ஒளி புறப்பட்டது. அதன் பிரகாசத்தில் சந்தேக இருட்டு இருந்த இடம் தெரியாமல் ஓட்டம் பிடித்துவிட்டது. ஸ்ரீ ஸாவந்த் விபூதியை இதயமார வாங்கிப் பூசிக் கொண்டு உட்கொள்ளவும் செய்தார்.

ஸ்ரீ ஸாவந்த் இன்று ஸத்ய ஸாயியின் பக்த சிரோமணிகளில் ஒருவராக இருக்கிறார்.

ஷிர்டி ஸம்ஸ்தான முக்யஸ்தர்களில் மேலும் பலரும் இரு ஸாயிக்களின் ஒற்றுமையை உணர்ந்து ஸத்ய ஸாயியை வணங்கி வருகிறார்கள். ஜீவ ஸமாதி கொண்டிருப்பதாகத் தாங்கள் கருதும் ஷிர்டி பாபா, அந்த ஸமாதிக் கோயிலையே நிர்வகித்து வருபவர்களும் ஸத்ய ஸாயியிடம் ஈடுபட்டிருப்பதைத் தடுக்கவில்லை என்பதிலிருந்தேனும் ஷிர்டி பாபாவின் 'எக்ஸ்க்ளுஸிவ்' பக்தர்கள் தெளிவு பெறலாம். இவ்வாண்டு மே மாதம் ஸ்வாமி பம்பாய் சென்ற போது கூட ஷிர்டி ஸம்ஸ்தானத்தினர் அவரை அந்தப் பூர்வ சரீர க்ஷேத்திரத்துக்கு வருமாறு வருந்தி அழைத்திருக்கிறார்கள். ஆனால் அதற்குரிய காலம் இன்னம் வரவில்லை என்றே ஸ்வாமி கருதுகிறார் போலும்!

ஆயினும் ஸூக்ஷ்மத்தில் நம் பார்த்தி பாபா ஒவ்வொரு விஜய தசமியன்றும் ஷிர்டி சென்று அங்கு 'மொதடி சரீர'த்தின் மஹா ஸமாதி பூஜை நடப்பதைப் பார்த்து, அதன் விவரங்களை இங்கே அன்றைக்குத் தொண்டர்களுக்குக் கூறுவது உண்டு. அவரது வழி முறைகளை எவர்தான் பூரணமாகப் புரிந்துகொள்ள இயலும்?

Koviloor Digital Library

அத்தியாயம்—27

"பாத மந்திரம்"

மாக க்ருஷ்ண சதுர்தச்யாம் ஆதிதேவோ மஹாநிசி |
சிவலிங்கத(யோ) உத்பூத: கோடிஸூர்ய ஸமப்ரப: ||

(மாசி மாதத் தேய்பிறை சதுர்த்தசிப் பேரிரவில் ஆதிதேவன் கோடி சூரிய ஒளியுடன் சிவலிங்கமாக உற்பவித்தனன்.)

— ஈசான ஸம்ஹிதை

புட்டபர்த்தியில் பாபாவுக்கும், அவரைத் தரிசிக்க வரும் அடியாருக்கும் ஸௌகரியமாக ஓர் ஆச்ரமம் அமைக்கும் பொறுப்பை ஏற்றார் ஸ்ரீ திருமல் ராவ். தாம் பாபாவிடம் பெற்ற பேரனுக்கிரகத்துக்கு நன்றிக் காணிக்கையாக, அவருக்கு கிருகம் எழுப்ப முனைந்தார்.

இல்லறத்தார் வாழுமிடம் கிருஹம்; துறவியர் வாழ்வது ஆச்ரமம். உலகக் குடும்பம் முழுதையும் பாசப்பற்று இல்லாமலே பரிபாலிக்கும் பாபாவோ வர்ணாசிரம விதிப்படி கிருஹஸ்தரும் அல்ல, ஸந்யாசியுமல்ல. அதனால் அவரது இருக்கையை கிருஹம் என்பதும் சரியல்ல, ஆசிரமம் என்பதும் கூட 'டெக்னிகலாக'ச் சரியல்ல. ஆச்ரமவாசிகளான ''ஸ்வாமிஜி''களுக்கு மேம்பட்ட ஸ்வாமியே இவர் எனக்கொண்டு அடியார் அவரது வாச ஸ்தானத்தை மந்திரம் (கோயில்) என்றே சொல்வர். இன்றும் 'பிரசாந்தி நிலயம்' என்ற பொதுப்பெயரில் அமைந்த டவுன் ஷிப்பில் அவரது இருக்கையைப் 'பிரசாந்தி மந்திரம்' என்றே சொல்கிறோம்.

இதற்கு முன் அவர் வதிந்தது 'பாத மந்திரம்' எனப்படுகிறது. 'பழைய கோயில்' என்று அர்த்தம். பலரது பாதகம் நீர்த்த தாரக மந்திரமாய் இருந்த பாத மந்திரத்தைத் திருமல் ராவ் எழுப்பியதற்குக் காரணம் இதுதான்:

பெங்களூரில் அவர் கட்டிட காண்ட்ராக்டராக இருந்தார். அவரது அருமை மகன் நோய்வாய்ப்பட்டான். ஆஸ்பத்திரியில்

Koviloor Digital Library

சேர்ந்தார். வியாதி முற்றியது. ஒரு நாளிரவு டாக்டர்கள் கைவிரித்து விட்டனர். ராவ் ஷிர்டி பாபாவின் பக்தர். பர்த்தி பாபா பற்றிக் கேள்வியே படாதவர். பூஜை அறைக்குச் சென்று இரவு முழுதும் ஷிர்டி பதியிடம் நெஞ்சு கரைந்து வேண்டிக் கொண்டிருந்தார்.

காலையில் பாபா படத்துக்கு அர்ச்சித்திருந்த மலர்களிடையே ஒரு சிறு படம் தென்படவே, அதிசயமுற்று அதை எடுத்துப் பார்த்தார். அதில் மேற்பாதியில் ஷிர்டி பாபாவின் மார்பளவு உருவமும், கீழே சிலிர்த்த முடியோடு ஓர் இளைஞனின் திருமுகமும் காணப்பட்டது. தம் இஷ்டமூர்த்தியின் இன்னருள் என்பதற்கு அதிகமாக ராவுக்கு ஒன்றும் புரியவில்லை.

ஆஸ்பத்திரிக்கு ஓடினார். மகன் கண்டத்திலிருந்து தப்பி விட்டிருந்தான். வைத்தியர்களே ஏதோ அற்புதமான விதத்தில் குணமாகியிருக்கிறான் (miracle cure) என்றனர். பையன் பூரணமாக நல்லபடியாகிச் சில நாட்களில் வீட்டுக்கு அழைத்து வந்தார் ராவ்.

சிலிர்த்த முடி இளைஞரைப் பற்றியும் மெல்லத் தெரிய வந்தது. 'பாபாவின் மறு அவதாரம்' என்று கேட்ட மாத்திரத்தில் திருமல் ராவுக்கும் அகம் சிலிர்த்தது. பிள்ளையோடுகூடப் புட்டபர்த்தி வந்து சேர்ந்தார்.

பர்த்தி நாதன், இவரது மகனுக்கு ஏற்பட்ட ஆபத்தான நிலைமை, அதைத் தாம் குணம் செய்தது எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லி, தாம் 'வைத்து வந்த' படத்தைப் பற்றியும் தெரிவித்தார். புத்திர சோகத்திலிருந்து தம்மைக் காத்த கருணமூர்த்தியின் அடிமையாகிவிட்டார் ராவ். பாபாவிடம் வேண்டிச் சம்மதம் பெற்று அவருக்கு ஆசிரமம் (அல்லது ஆலயம்) எடுக்கத் தலைப்பட்டார்.

(ஆனால் அப்போதே பாபா இது தம் நிரந்தர இருக்கை யல்ல என்று ஒரு சில அணுக்கத் தொண்டருக்கு உணர்த்தியிருக் கிறார். உதாரணமாக, ஒரு நாள் லக்ஷ்மையாவிடம் இன்று பிரசாந்தி நிலையமுள்ள மேட்டு நிலத்தைக் காட்டி, "ஸாயிப் பிரவேசம் அந்த இடத்தைப் பிரசாந்திப் பிரதேசமாக்கப் போகிறது. அங்கே மாடமாளிகை எழும்பும். அப்போது ஆயிரக் கணக்கில், அகில பாரதத்திலிருந்து, அகில உலகத்திலிருந்துமே பக்தர் வந்து காத்திருப்பார்கள். இப்போது என்னோடு அணுகிக் கூடியிருக்கிற நீ அப்போது ஒரு கண நேரம் தரிசனம் கிடைக்காதா என்று எட்டாத் தொலைவில் நின்று தவிக்கப் போகிறாய்" என்றார். இதை முப்பதாண்டுக்குப் பின் நினைவுகூர்ந்த லக்ஷ்மையா "அப்போது அதை நான் நம்பத்தான் இல்லை. ஆனால், ஐயோ, இப்போது அது மெய்யாகி விட்டதே!" என்று ஏங்கினார்.)

ஸத்ய பாமா ஆலயத்தின் அண்மையில் கர்ணத்துக்குச் சொந்தமான மனைக்கட்டு வாங்கப்பட்டது. கடைகால் எடுப்ப

Koviloor Digital Library

தற்காகத் தோண்டினார்கள். கூனல் முதுகனான 'கூனி வேங்கடா' என்பவனிடம் பாபா ஒரு குறிப்பிட்ட இடத்தில் அகழச் சொன்னார். அவன் அவ்வண்ணமே செய்தான். என்ன ஆச்சரியம்! அங்கே குவியல் குவியலாகச் சிவலிங்கத்தைச் சொருகும் ஆவுடையார்கள் அகப்பட்டன. லிங்கமே இல்லாத வெறும் ஆவுடையார்கள்!

''ஏன் ஸ்வாமி, லிங்கங்களைக் காணோம்?'' என்று அடியார் கேட்டபோது, பாபா தம் உதரத்தைத் தொட்டு, ''அவை எல்லாம் இங்கே இருக்கின்றன'' என்றார்.

அப்போது அவர்களுக்கு அதன் பொருள் புரியவில்லை. சிறிது காலத்துக்குப் பின் சிவராத்ரியின் போதுதான் உள்ளர்த்தம் அவிழ்ந்தது.

* * *

மஹா சிவராத்ரி நன்னாள். மஹோத்ஸவமாக மக்கள் கூடியிருக்கின்றனர். மஹா உத்ஸாஹமாக உபதேசமும், கீதமும் வழங்கிய ஸ்வாமி திடீரென வயிற்றைப் பிடித்துக் கொண்டார். பேற்று நோவு போல் அவர் தவிப்பது தெரிந்தது. அமர்ந்தார், கனைத்தார். நீர் வாங்கிப் பருகினார். இருமினார். பொருமினார். வாயைத் திறந்தார். ஆஹா, அது என்ன? அவர் வாயிலிருந்து பளிச்சிட்டுக் கொண்டு வெளிவரும் வஸ்து! அதை அவர் கையில் பிடித்துப் பக்தர்களுக்குத் தூக்கிக் காட்டினார்!

ஆஹா, ஸ்படிக லிங்கம்!

இந்த லிங்கத்தை ஊர்த்வமுகமாகப் பிரசவிப்பதற்காகத் தான் அந்தப் பாடு பட்டிருக்கிறார்.

'எல்லிப்ஸ்' என்று ஸயன்ஸே ஒப்புக்கொள்ளும் நீள்வட்ட வடிவான பிரபஞ்சத்தைப் படைத்த பரம்பொருள், தனக்கும் அதே போல் வடிவம் வகுத்துக் கொண்டு லிங்கமாக உற்பவித்தது ஒரு சிவராத்ரியில்தான். எனவே இந்த லிங்க ரூபத்துக்கே பிரபஞ்ச ஆதாரமான சாந்தத்தில் பக்தர்களைத் திருப்பும் ஒரு மர்மமான வல்லமை இருக்கிறது. ஆதியில் இப்படிப் பரம் பொருள் லிங்காகாரம் கொண்ட அதே சிவராத்ரி நன்னாளில் பர்த்திசர் லிங்கோத்பவம் செய்து விட்டார். உத்ஸவம் காண வந்தவர்கள் எதிர்பாராத உத்பவம்!

* * *

அந்த ஓராண்டு மட்டுமல்ல. அதிலிருந்து ஒவ்வொரு சிவராத்ரியன்றும் பாபா லிங்கோத்பவம் செய்கிறார். அவரது திரு உதரத்திலுள்ள லிங்கங்கள் இன்னமும் சிவராத்ரிதோறும் வெளிவருகின்றன. ஒரே சிவராத்ரியில் ஒன்றுக்கு மேற்பட்ட

Koviloor Digital Library

லிங்கங்கள் வெளியாவதும் உண்டு. ஒரு முறை ஐந்து லிங்கங்கள் வெளிவந்தன. 1958-ல் ஒன்பது லிங்கங்கள் கடகடவென வந்து விழுந்தன. ஸ்படிகத்தில் மட்டுமின்றி, தங்கம், வெள்ளி, மாணிக்கம், மரகதம் முதலியவற்றிலும் இந்த லிங்கங்கள் இருப்பதுண்டு. ஒருக்காலும் வாய்க்குள்ளோ, கைக்குள்ளோ அடக்கி வைக்க முடியாத அளவுக்கு சுமார் ஐந்தங்குல நீளமும், இரண்டங்குல விட்டமுமாக இவை இருந்ததுமுண்டு. சில சமயங்களில் அடிப்பீடங்கள்கூட இருந்திருக்கின்றன' இவை எப்படி உணவுக் குழலின் குறுக்களவு வழியே வருகின்றன என்பது எவருமே விளக்க முடியாத விந்தைதான். முதலில், இவை ஒரு சரீரத்துக்குள் உருவாவதே அற்புதம்தானே?

பாத மந்திரத்துக்குக் கடைகாலிட்டபோதே அவ்வளவு லிங்கங்களும் தம் வயிற்றிலிருப்பதாக அவர் சொன்னாலும் அவை அப்போது சூக்ஷ்ம ரூபத்தில் தான் இருந்திருக்கின்றன. ஒவ்வோராண்டும் சிவராத்ரிக்குச் சில தினங்கள் முன்புதான் ஸ்தூல லிங்கம் அவரது மணி வயிற்றில் தோன்றத் தொடங்குகிறது. உடனே வைத்தியரை வரவழைத்து, டெம்பரேச்சர் பார்க்கச் சொல்வார். 103 அல்லது 104 டிகிரி இருக்கும். ஆனாலும் இவரைப் பார்த்தால் காய்ச்சல்காரர் போலவேயிராது. தம் பாட்டில் ஓடியாடிக் கொண்டுதான் இருப்பார்! மருந்து எதுவும் உண்ணவும் மாட்டார். கடைசியில், சிவராத்ரியன்று லிங்கம் உருட்டிப் புரட்டிக்கொண்டு வெளியாகும்போது மட்டில் இவரே அவஸ்தைப்படத்தான் செய்கிறார் என்பது நிதர்சனம். அந்த அவஸ்தையின்போதும், அதைக் கண்டு துடிக்கும் அடியார்களைத் தேற்றுவதற்காகச் சிரிக்கப் பார்ப்பார் தயாளு. லிங்கோத்பவத்துக்குப் பிறகு, துடிக்கும் பக்தருக்கு 'நஷ்ட ஈடு' கொடுத்து மகிழச் செய்யும் அளவுக்கு அதிமலர்ச்சியான தரிசனத்தை அருள்வார்.

பாபா சக்தும் இந்த லிங்கங்களை 'ஆத்ம லிங்கம்' என்றே பக்தர் கூறுவர். பரம பக்தர்கள் சிலர் இவற்றை பாபாவின் விசேஷக் கொடையாகப் பெற்றுள்ளனர்.

சாதாரணமாக பாபா சிருஷ்டித்துத் தரும் தெய்வப் பிரதிமைகளைப் பூஜிப்பதற்குக் கடுமையான ஆசார நியதிகள் விதிக்கப் படுவதில்லை. "இதென்ன? இவர்கள் ஏதோ 'ஷோ பீஸ்' போல இப்புனிதச் சின்னங்களை வைத்திருக்கிறார்களே" என்று நாம் நினைக்கும்படியாகக்கூட இருக்கும். இது பாபாவின் மாதுர்ய ஸௌலப்யத்துக்கு ஒரு சான்றேயாகும்.

ஆயினும் விச்வத்தின் பிரதி ரூபகமாக அவரினின்றெழும்பும் சிவராத்ரி லிங்கங்கள் மட்டும் தனியானதொரு வீர்யம் பொருந்தியன போலும். இவற்றிடம் எவரும் விளையாட்டுப் போக்காக நடந்து கொள்ள முடியாது. ஒரு உதாரணம் :

1972-ல் பாபா உத்பவ லிங்கத்தை அனைவரும் தரிசித்துச் செல்லுமாறு வைத்து, அதன் பரம பவித்ரத்துவத்தைத் தாமே

Koviloor Digital Library

சொல்லி, எவரும் அதைத் தீண்டவொண்ணுது எனக் கூறினுர். பிறகு தமதறைக்குச் சென்றுவிட்டார். பக்தர் லிங்கத்தைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்ளாமல், சற்று எட்டத்தில் நமித்தே சென்றனர்.

சிவராத்ரிக்கு மறுநாட் காலே அதை பாபா வைத்திருந்த தாம்பாளத்தோடேயே அவரிடம் எடுத்துப் போக வேண்டிய வைதிகருக்கு ஏனே அதைத் தொட்டுப் பார்க்க வேண்டும் என்ற சபலம் உண்டாகிவிட்டது. (பாபா வாக்கின் உண்மை உலகுக்குத் தெரியவே அந்தச் சபலம் உண்டாயிற்று எனலாம்!) அவர் லிங்கத்தை லேசாக ஸ்பர்சித்தாரோ இல்லேயோ, அது மாயமாக மறைந்தே விட்டது!

அவருக்கு எப்படிப்பட்ட உதறல் எடுத்திருக்கும் என்பதை வாசகரே ஊகித்துக் கொள்ளலாம். ஸ்வாமியிடம் ஒளிக்க முடியாதாகையால், சாஸ்திரியார் நடுநடுங்கிக் கொண்டு நின்ருர்.

மாடியில் தமதறையில் இருந்த ஸ்வாமியிடமிருந்து இவரை அழைத்து வர ஆள் வந்தவுடன் சாஸ்திரியாரின் உதறல் உச்ச கட்டத்தை அடைந்தது.

குற்றவாளியாகச் சென்று சந்நிதானத்தில் நின்ருர்.

அவரை அநாயாசமாக மன்னித்த கருணநிதி, ''என் காலடி யில் பார்! லிங்கம் 'கம்ப்ளெயிண்ட்' கொடுக்க வந்திருக்கிறது'' என்று காட்டினுர்.

ஆம், மாயமே மறைந்த லிங்கம் பாபாவின் பட்டு வேஷ்டி யில் மறைந்த பட்டுப் பாதங்களுக்குப் பக்கத்தில் நின்று கொண் டிருந்தது!

இதனினும் சுவையான இன்னெரு சம்பவம் :

பாபா நேம நிஷ்டையோடு பூஜிக்கக்கூடியவருக்கே சிவ ராத்ரி லிங்கத்தை வழங்குவதாகவும், அநேக ஆண்டுகளில் எவருக்குமே வழங்காமல் அந்தர்தானமாக்கி விடுவதாகவும் தெரி கிறது. எனவே 1967-ம் வருஷத்திய ஆத்ம லிங்கத்தை ஜீந்த் மஹாராணியான பிருத்விக்கு வழங்கியபோது அந்த அம்மாளே பயப்படத்தான் செய்தார். இருப்பினும் கிடைத்தற்கரிய கொடையை மறுக்கமுடியுமா? பாபா விதித்த ஆசரணேகளின்படி அதை வழுவின்றி வழிபடுவதாகக் கூறிப் பெற்றுக் கொண்டார்.

வெளியூர்களுக்குச் செல்கையில் இந்த லிங்கத்தை ஒரு பட்டுக் கைக்குட்டையில் கட்டித் தன் கைப்பைக்குள் எவர் கண்ணிலும் படாதவாறு வைத்திருப்பார் பிருத்வீ. தினசரி ஸ்வாமி கூறியவண்ணம் பூஜித்து வருவார்.

இரண்டாண்டுகளுக்குப் பின் அவர் ஒரு முறை புட்டபர்த்தி வந்தார். கோரிக்கை அறையில் அவரிடம் ஸ்வாமி, ''அம்மா!

Koviloor Digital Library

நீ இப்போ ரொம்ப பிஸினஸ் இஸினஸ் எல்லாம் ஆரம்பிச்சுட்டே. நான் சொன்ன மாதிரி லிங்கத்துக்கு ஸாங்கோபாங்கமாக அபிஷேக அர்ச்சனாதிகள் செய்ய இப்போ உனக்கு அவகாசம் இல்லை. அதனாலே அதைத் திருப்பிக் கொடுத்துடு'' என்றார்.

மஹாராணிக்கு நெஞ்சை முறுக்கிப் பிழிந்தது. பச்சாத் தாபத்தோடு மௌனமாக நின்றார்.

பரமர் பரிவோடு, ''நான் வேறே லிங்கம் தரேன். இதுக்கு அவ்வளவு நியமங்கள் தேவை இல்லை. ஆத்ம லிங்கத்தைத் திருப்பி விடு'' என்றார்.

பிருத்விக்கு இப்போதும் மனம் வரவில்லை. என்ன இருந் தாலும் உத்பவ லிங்கத்தின் மஹிமை அலாதிதானே? ஸ்வாமி சொல்வதிலிருந்தே தெரிகிறதே!

தயங்கும் பக்தையை மேலும் தவிக்க விடாது அண்ணல் மாடிப்படி வரிசைப் பக்கம் திரும்பினார்.

மஹாராணிக்கு என்ன தோன்றிற்றோ, குட்டையில் கட்டி யிருந்த லிங்கத்தை எடுத்து பாபாவிடம் நீட்டினார்.

பாபா அதை எடுத்துக்கொள்ளவில்லை.

பிருத்வியின் நீட்டிய கைகளுக்குக் கீழ்த் தமது கரங்களை தரு விருடி விரித்துவிட்டு, ''பிரிச்சுப் பார்'' என்றார்.

குட்டையை அவிழ்த்த பிருத்வி ஆச்சரியத்தில் ஸ்தம்பித் தார்.

பழைய ஸ்படிக லிங்கத்துக்குப் பதில் இப்போது ஒரு ஸ்வர்ண லிங்கம் மின்னிக் கொண்டிருந்தது.

அதே சமயம் மாடிப்படிகளின் மேலிருந்து 'லொட்' 'லொட்' என்று தாளம் தவறாமல் ஒரு விசித்ர சப்தம் வந்தது.

பிருத்வியும், உடனிருந்த (ருஷ்யாவில் பிறந்து, அமெரிக்கப் பிரஜையாகி, இந்தியப் பெயர் கொண்ட யோக மூதாட்டி) இந்திராவும் ஒலி வந்த திசையைப் பார்க்க, அதியாச்சரியம் ஒன்று நடந்தது!

சாக்ஷாத் அந்த சிவராத்ரி ஸ்படிக லிங்கம் மேலேயிருந்து ஒவ்வொரு படியாக இறங்கி வந்தது!

கீழ்த் தள வரிசையை அடைந்து, ஸ்வாமி பாதத்துக்கு வந்து சேர்ந்தது.

அதுவரை பேச்சிழந்திருந்த பிருத்வி, ''என் லிங்கம்'' என்று கூவி விட்டார்.

Koviloor Digital Library

ஸ்வாமி ஒன்றும் சொல்லாமல் திரும்பி, படி வரிசையில் சொகசாக ஏறி மாடிக்குப் போய் விட்டார்.

''என் லிங்கம்'' என்று மஹாராணி உரிமை பாராட்டிய லிங்கப் பிரானே, ''இல்லை, இல்லை, அவரது லிங்கம்தான்'' என்பது போல் அந்த மஹாராஜாதி ராஜனுக்குள்ளேயே ஐக்கியமாகி விட்டது போலும்! ஏனெனில் அதைக் காணவே காணோம்!

சிவராத்ரி லிங்கத்தின் உட்சிறப்பையோ, அதற்கும் நம் ஸ்வாமிக்கும் உள்ள தொடர்பையோ நம் சிற்றறிவால் அறிகிற வியர்த்தமான முயற்சியைக் கைவிட்டு, வெறும் பக்தியில் இனித்திருப்பதுதான் நாம் செய்யத் தக்கது.

* * *

சிவராத்ரியன்று புட்டபர்த்திக் கிராமத்தில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் திரண்டு பூலோக கைலாசமாக்கிவிடுவர். அகண்ட பஜனை நடக்கும். மாலையில் பாபா வருவார். தாமும் பஜனை செய்வார். சிவராத்ரி மஹிமை, லிங்க தத்வம் இவை பற்றி உரையாற்றுவார். உரையின் நடுவிலேயே, லிங்கம் உந்திக் கொண்டு உந்தியிலிருந்து புறப்பட ஆரம்பிக்கும். அவதிப்படுவார் சில நிமிஷங்கள்.

லிங்கோத்பவகரா லிங்கேச்வரா
பர்த்தீச்வரா மாம் பாஹி ப்ரபோ
பாஹி ப்ரபோ முதம் தேஹி விபோ

என்ற வரிகளைப் பக்தர்கள் பரவசப் பதறலோடு பன்னிப் பன்னிப் பாடியவண்ணம் இருப்பர்.

ஐயனின் திருவாயைத் திறந்துகொண்டு லிங்கமும் உத்பவ மாகும்.

ஆனந்த ஸாயி அவற்றை அனைவருக்கும் காட்டுவார். அந்தந்த ஆண்டும் வெளியாகும் லிங்கத்திலுள்ள தனித் தன்மையைப் பற்றி விவரிப்பார். ஒரு சமயம் லிங்கமே பிரபஞ்ச ரூபகம் என்பதற்கேற்ப, அதற்குள்ளே ஸூர்ய மண்டலம், கிரகங்கள், தாரா கணங்கள் போன்ற அமைப்புகள் காணப் பட்டன. இன்னொரு சமயம் அம்பாள், ஈச்வரன் என்ற பேதங்கள் ஆத்மலிங்கத்தின் இரு பாதிகளில் அடையாளங்கள் காட்டின. இப்படி எத்தனையோ நுணுக்கங்கள்!

பேச்சு முடிந்து ஓரிரு பஜன்கள் பாடிவிட்டு இரவு ஒன்பது மணி அளவிலேயே பாபா உள்ளே சென்று விடுவார். உத்பவத் துக்குப் பின் அவரது அழகைச் சொல்லி முடியாது என்பர் அடியார். ஸாக்ஷாத் சிவத்தின் அன்பு வடிவாக, அன்பே சிவமாக பராசக்தியாகவே அப்போது அவரைச் சொல்லலாம்.

Koviloor Digital Library

சக்தி—சிவம் என்பன மானுட தேக உறவில் கட்டுப்பட்ட வ்யக்திகளல்ல. பரப்ரம்ம தத்வமே இப்படி இரண்டாகத் தோன்றுவது. எனவே ஒரு நிலையில் சக்தியை சிவத்தின் ஸதி என்றாலும், சிவம் என்ற அடிப்படை அமைதியிலிருந்தே சக்தி என்ற காரிய ஆற்றல் பிறப்பதால் இவள் சிவத்தின் மகளாகிறாள். இன்னொரு நிலையிலோ, சிவம், தான் இருக்கிறோம் என்று உணரவே ஒரு சக்தி வேண்டியிருப்பதால், சிவம் தன்னை உணருமுன் சக்தி இருப்பதாகவும், இவ்விடத்தில் சக்தியே சிவத்தின் தாய் என்றும் கூறுவர். திரு மந்திரத்தில் தாரம், மகள், தாய் என்ற மூன்று நிலைகளில் நிர்குண மெய்ப் பொருளும் அதன் ஆற்றலான சக்தியும் தொடர்புறுத்தப்படுகின்றன.

எம் பெருமான் இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன் தமையன்

என அத்தனை உறவுகளையும் திருவாசகம் கூறும். இவ்விதத்தில், லிங்கங்களைப் பெற்றெடுக்கும் சிவ மாதாவாக பாபா சிவராத்ரி-தோறும் இருக்கிறார்.

ஆண்டுதோறும் அவர் லிங்கோத்பவம் செய்வதன் ரகசியங்கள் நமக்குத் தெரியவில்லை. தெரிய வேண்டியதுமில்லை. எண்ணிறந்த மக்கள் சிவராத்ரியில் ஒன்றுகூடி இரவெல்லாம் ஈசன் நினைவில் பஜனை செய்து பாவன உணர்வு பெறச் செய்யும் புண்ணியப் பணி, இந்த அற்புத உத்பவத்தால்தான் நிகழ்கிறது என்பதொன்றே நமக்குப் போதும்.

பாபா லிங்கம் கக்குவதைத் தாக்கிப் பலர் விஷம் கக்குகின்றனர். கக்கிவிட்டுப் போகட்டும். இப்படியொரு இயற்கைக்கு அதீதமான ஸம்பவம் நிகழ்வதுதான் ஆயிரமாயிரம் மக்களை ஆகர்ஷித்து புனித சிவராத்ரியில் அவர்களை சிவ ஸ்மரணத்தில் பரவசமாக ஆழ்த்துகிறது. அதனால் அவர்கள் பெறும் திவ்ய இன்பமே பாபாவுக்குப் பொருட்டே யன்றி, இதை ஜாலவித்தை என்று தாக்குபவரின் விஷம் இந்த நீல கண்டனைப் பாதிக்காது. ''என்னை எவர் எந்தப் பழி சொன்னாலும் சொல்லி விட்டுப் போகட்டும். என் காரியம், என் குழந்தைகளை எப்படி யாவது தெய்விகமாக சந்தோஷப்படுத்துவதுதான்'' என்பார் அவர்.

உத்பவம் ஆகி பாபா சென்ற பிறகும் விடிய விடிய பஜனை நடக்கும். பல்லாயிரவர் கண்விழித்து பக்தி புஞ்சிதமாகச் செய்யும் அற்புத பஜனை! விடிந்த பிறகு, முதல் நாளன்று (அதாவது சிவராத்ரி பகலில்) பாபா தமது 'மொதடி சரீர'மான ஷிர்டி ஸாயி விக்ரஹத்துக்குக் குடம் குடமாக அபிஷேகம் செய்த விபூதிப் பிரசாதமும், பாரணையாக நைவேத்தியமும் அனைவருக்கும் வழங்கப்படும்.

அந்த விபூதி அபிஷேகத்திலும் ஒரு விசேஷம் உண்டு. அணுக்கத் தொண்டர் ஒருவர் ஷிர்டி பாபா சிலைக்கு மேல் ஒரு சிறிய மரக் குடத்தைத் தலைகீழாகப் பிடித்திருப்பார். பர்த்தி

Koviloor Digital Library

பாபா அதனுள் கையை விட்டுக் குடைவார். அவ்வளவுதான், அதிலிருந்து கொட்டுமோ, கொட்டுமோ அப்படி ஒரு விபூதி மழை கொட்டிச் சுமார் இரண்டடி உயரமுள்ள ஷிர்டி ஸாயி சிலேயே அதில் முழுகிவிடும்!

இத்தனை ஆண்டுகளாக வெளிவந்த லிங்கங்களுக்கும் இனி வரவிருப்பனவுக்குமான ஆவுடையார்கள் யாவும் புட்டபர்த்தி யில் கூனி வேங்கடா தோண்டிய அந்த ஓரிடத்தில் எப்படி வந்தன என்பது நம் அறிவுக்கு எட்டாத விஷயம்தான்.

* * *

பாத மந்திரம் எழும்பியது. இன்றைய பிரசாந்தி நிலைய் டவுன்ஷிப்போடு பார்க்கும்போது அது கடுகத்தனைதான். அதிலே ஸ்வாமிக்கென எட்டடி நீளமும் ஆறடி அகலமும் உள்ள சிறிய அறை கட்டப்பட்டது.

1945-ல் நடந்த கிருஹப் பிரவேசம் பக்தர்களுக்குத் திரு விழாவாக அமைந்தது. அவரவரும் விருந்துக்காகப் பட்சணங்கள் செய்து தட்டுத் தட்டாகக் கொண்டு வந்து வைத்தனர். பாபா பஜனை செய்தார். ஷிர்டி நாதர் சிலைக்கு தீபாராதனை செய் தார். பிறகு பட்சணங்களை அனைவருக்கும் விநியோகிக்கப் பணித்தார்.

ஒரு ரவாலாடுத் தட்டை மட்டும் எட்டி இழுத்தார். தாமே அதை எடுத்துக் கொண்டவுடன், அவர் கையாலேயே வழங்கப் போகிறார் என்று அடியார் எதிர்பார்த்தனர். ஆனால் அவரோ அதைக் கொண்டு போய்த் தம் அறைக்குள்ளேயே வைத்துக் கொண்டு விட்டார். பிறகு திருமல் ராவை அழைத்து, ''அந்த லாடுக்களை எல்லாம் ஆற்றங்கரையில் வெகு தூரம் தள்ளி ஆழமாகக் குழி தோண்டிப் புதைத்து வா'' என்றார்.

அவை அனைத்தும் விஷம் கலந்த பட்சணமாகும்! நடுவே கொஞ்சம் அடங்கியிருந்த பகைவர்கள், பாபாவுக்கு மந்திரம் எழுப்பி, கோலாகலமாக புதுமனை புகு விழாவும் நடக்கிறது என்றவுடன் மறுபடியும் க்ஷாத்திரத்தில் பொங்கி எழுந்து இப்படிப் பட்ட நிச்செயலைச் செய்திருக்கிறார்கள். தன்னை நாடி வந்த அடியாருக்கு அபாயம் நேர ஐயன் விடுவாரா?

பழைய மந்திரத்தின் பாபாவின் சிறிய அறையில் விசேஷ வசதி எதுவும் கிடையாது. தனி அறைக்குக் காரணமே, தற்போது எப்போதும் கச கச என்று கூட்டமாகி விட்டதால் எவரிடமும் அந்தரங்கமாகப் பேசித் திருத்துவதற்கு அவர்களைத் தனியாகக் கூப்பிட்டுக் கொள்ள முடியாதிருந்ததுதான் எனத் தோன்றுகிறது. ஏனெனில் அநேகமாக சயனம் உள்பட பாபா எல்லாக் காரியமும், வெளியில் அனைவர் மத்தியிலும், அவர்களிலேயே தாமும் ஒருவர் போலத்தான் வைத்துக் கொண்டிருந்தார். முதலில் சிறிது காலம்

Koviloor Digital Library

சுப்பம்மா வீட்டில் குளியலும், போஜனமும் வைத்துக் கொண்டிருந்தார். பிறகு இவற்றையும் ஆசிரமத்துக்கே மாற்றிக் கொண்டார்.

கோனம்மா என்ற வைசிய மாது அப்போது தினமும் பாபா குளிப்பதற்கு நீர் கொண்டு வந்து கொட்டுவாள். அவள் ஒருத்திக்கே பிரத்யேகமாக அளிக்கப்பட்ட பணி இது. இன்றும் இவள் பிரசாந்தி நிலயத்தில் பாபாவின் அறைக்கு முன்புறம் தினமும் காலை, மாலை பெருக்கி, நீர் தெளித்து, கோலமிட்டுப் பணி செய்து வருகிறாள்.

நம் ஸ்வாமிக்காகவும், மற்ற பக்தர்களுக்காகவும் சுப்பம்மா சமைத்தது இன்னமும் நிற்கவில்லை. "ஒவ்வொரு நாள் அவள் எட்டு மணி நேரம் சட்டினி அரைத்திருக்கிறாள்" என்று பாபா பரிவுடன் நினைவுகூர்வார். பொதுவாக, வரும் அடியார்கள் தாங்களேதான் சமைத்துக் கொள்வார்கள். அவர்கள் தங்கவும், சமைத்து உண்ணவும் அதம பட்சமான ஸௌகரியம் மட்டுமே ஆசிரமத்தில் செய்து தரப்பட்டது.

மிகச் சமீப காலம் வரையில், இன்றைய பிரசாந்தி நிலயத்திலும் கூட ஸௌகரியங்கள் மிகக் குறைவுதான். குளியல், இயற்கைக் கடனுக்கெல்லாம் கூடக் கஷ்டம்தான். ஆற்றுக்கும், ஆற்றங்கரைக்கும்தான் செல்ல வேண்டும். அதே போல் புட்டபர்த்திக்குச் சாலை வசதியும் ஓரிரு ஆண்டுகளுக்கு முன்தான் நல்லபடிச் செப்பனிடப்பட்டது. வேண்டுமென்றேதான் பாபா இப்படி வைத்திருந்தார். அப்போது ரயில்வே மந்திரியாக இருந்த ஸ்ரீ ஹநுமந்தையா போன்றவர்கள் பர்த்திக்கே ரயில் பாதை அமைத்துத் தருவதாகக் கூறியும் கூட பாபா மறுத்து விட்டார். "புனித யாத்திரை என்றால் அதில் ஓரளவு சிரமமும் இருக்கத்தான் வேண்டும். சில இடர்ப்பாடுகளையாவது பொறுத்துக்கொள்ளும் சகிப்புத் தன்மை பக்தர்களுக்கு இருக்க வேண்டும். உல்லாசப் பயணமாகவும், பிக்னிக் ஸெண்டராகவும் இருந்தால் தான் வர முடியும் என்பவர்களுக்கு மெய்யான பக்தி இல்லை என்றுதான் அர்த்தம். பொதுவாகவே மக்கள் இன்றுள்ளது போல் இத்தனை சுக சாதனங்களை நம்பி வாழ வேண்டியதில்லை என்பதற்காகத்தான் புட்டபர்த்தியை இப்படியே வைத்திருக்கிறேன்" என்பார் ஸ்வாமி.

இத்தனை அசௌகரியத்திலும் பரம சுகவாசிகள், மேல் நாட்டினர் கூட, பர்த்திக்குப் படையெடுத்துக் கொண்டுதான் இருந்தார்கள். இப்போதும்கூட அங்கே மிருந்த வசதிகள் கிடையாதுதான். ஆனால் நாளுக்கு நாள் உடம்பு, மனம் இரண்டிலும் பூஞ்சையாகிவரும் புதுத் தலைமுறையை ரொம்பவும் சோதிக்க வேண்டாம் என்றோ என்னவோ, இப்போது பல அபிவிருத்திகளைச் செய்திருக்கிறார் ஸ்வாமி.

இரவிலே, பழைய மந்திர வெளிக் காம்பவுண்டில் ஆடவர் ஒரு புறமும், பெண்டிர் ஒரு புறமும் படுத்திருக்க நடுவே அந்தத்

Koviloor Digital Library

திறந்த வெளியில் திறந்த மனத்தரான பாபா சயனித்திருப்பார். நிலாக் காலங்களில் அவரது சயன கோலத்தைக் கண்டால் எந்த நயனமும் அதன் பின் தூங்க மறுக்கும். வெள்ளைத் தலையணையில், குலுகுலு என்னும் பட்டுக் குழல்களுக்கு மத்தியில் ஸ்வாமியின் பச்சிளம் குழந்தை முகம், அந்த நீண்ட பெரிய நேத்திரங்கள் குவிந்த அழகு, ஒருக்களித்துச் சயனித்த தேகத்தின் நெளிவு எல்லாம் கண்ணுக்கு அமிருதமாக இருக்கும்.

தாம் தூங்குவதே யில்லை என்றும், தாம் விழித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிற வரை பக்தர்களும் உறங்கப் போக மாட்டார்கள் என்பதாலேயே நித்திரை செய்வது போல் நடிப்பதாகவும் அவர் கூறுவதுண்டு.

வாஸ்தவத்திலேயே அவர் ஸ்தூல தேகத்துக்குச் சிறிது ஓய்வு கொடுப்பாராயினும் கூட, சூக்ஷ்ம தேகத்துக்கு ஓய்வு தந்து உறங்கவே யில்லை என்பது நிச்சயம். அவர் மட்டும் சூக்ஷ்ம தேகத்திலும் உறங்கினால் அமெரிக்காவில் இன்று நாள்தோறும் அவரது அடியார்கள் பெறும் அற்புத அருள்கள் நடப்ப தற்கில்லையே! ஏனெனில் நம் இரவுதான் அவர்களின் பகல். அங்கே பகல் போதில் இவரது லீலா விநோதங்கள் நடந்தபடி யிருப்பதால் இங்கே இரவில் இவர் உறங்கவில்லை என்றுதானே அர்த்தம்? இந்தியாவிலேயே நள்ளிரவில் எவ்வளவு பேரை ஆபத்துக் காலத்தில் கட்டிக் காத்திருக்கிறார்? ''ப்ர-ஜ்ஞா'' எனப்படும் ஆத்மப் பெருவிழிப்பான (Awareness) அவரது சூக்ஷ்ம சரீரத்துக்கு உறக்கமேயிருக்க முடியாதுதான். உறங்காமலும் அது வாடாமலே யிருக்கக் காரணம் அன்பு என்ற திவ்ய ஔஷதம் அதில் ஊறிக்கொண்டே யிருப்பதுதான்.

திருமாலின் பொய்த் தூக்கத்துக்கு 'சல சயனம்' என்றே ஓர் அழகிய பெயருண்டு. நம் ஸ்வாமியும் சல சயனப் பெருமாளே போலும்!

பாத மந்திர நாட்களில் பக்தர்கள் படுத்தபின் அவர் அவர்களைச் சுற்றி வருவார். பகவான் ஏன் பக்தர்களைப் பிரதக்ஷிணம் செய்கிறார் என்பது அவர்களுக்குப் புரியாத ஒன்றாகவே இருந்தது. பிறகுதான் ஒரு நாள் அவர் வெளியிட்டார்: நாம் அப்படிச் சுற்றி வருவதால், அந்த எல்லைக்குள் விஷ ஜந்துக்கள் எதுவும் வருவதில்லை என்று. புட்டபர்த்தியில் அப்போதும் கூட ஓரளவு பாம்புகளும், மற்றும் தேள், ஜலமண்டலி போன்ற ஜந்துக்களும் உண்டு. ஆயினும் பழைய மந்திரத்தில் ஒரு நாள் கூட இவற்றின் கடிக்கு ஒருவரும் ஆளானதில்லை! பாம்பு முதலியன, ஸ்வாமியின் பாதம் வகுத்த எல்லைக் கோடு வரை வந்துவிட்டு மேலே வராமல் திரும்பி விடுவதைத் தாங்களே நேரில் பார்த்திருப்பதாகச் சிலர் கூறுகிறார்கள்.

* * *

வெளிப் பாம்பை உள்ளே புகவொட்டாமல் தடுத்தவர், தாமே ஒரு முறை பாத மந்திரத்தில் பாம்புருக் கொண்டிருக்

Koviloor Digital Library

கிறார். இது உன்னத தெய்விக உணர்வை அடியார்க்கு ஊட்டிய நிகழ்ச்சி. இதன் முன், வேடிக்கையா விபரீதமா என்று வரை யறுக்க மாட்டாதபடி இவர் செய்த இன்னொரு பாம்பு லீலையைப் பார்க்கலாம்.

ஒரு நாள் மாலை சித்ராவதிப் படுகைக்கு உலாவப் புறப் படுகையில் மற்ற பக்தர்களை உடன் வரவேண்டாம் எனச்சொல்லி அத்தாணித் தொழும்பர்களான சேஷகிரி ராவ், விட்டல் ராவ், கிருஷ்ணா, பால பட்டாபிச் செட்டி ஆகியோரை மட்டும் உடன் அழைத்துச் சென்றார்.

ஆற்றுக்கு முன்னே வாய்க்காலருகே ஒரு நாலடி நீளப் பாம்பைக் கண்டனர். ''செத்த பாம்பு'' என்று சொல்லிக் கொண்டே பாபா அதனண்டை சென்று ஒரு குச்சியால் நிமிண்டி னார். பிறகு அதன் அருகிலேயே முழங்கையில் தலைவைத்துப் படுத்துவிட்டார். சிறிது நேரத்தில் செத்த பாம்பு நெளிந்தது. பாபாவின் உடல் விரைத்தது.

கூடுவிட்டுக் கூடு பாய்ந்துவிட்டார்.

பாம்பு பேசிற்று. அதாவது பாம்புக்குள்ளிருந்தே பாபாவின் குரல் வெளியாவதைக் கேட்டார்கள். ''இங்கேயே இருங்கள்'' என்றார். அப்புறம் பாம்பும் பேச்சு மூச்சற்றுப் போயிற்று. அப்போது மணி ஐந்து.

ஆறாயிற்று. ஏழாயிற்று. நிலா வெளிச்சம் பாபாவின் முகத்தை மூழ்க்கியது. உயிருள்ள முகம் தானா? அதில் நிச்சய மாக சவக்களை இல்லைதான். ஆனால் ஜீவகளையும் இல்லையே! இந்த 'நாலடியார்' என்னானதெல்லாம் எண்ணி நாமஸ்மரணை செய்ய ஆரம்பித்தனர். எட்டு, ஒன்பது, பத்து என்று மணி ஓடிற்றே தவிர பாபாவிடம் அசைவே யில்லை. பாம்பும் அசைய வில்லை. இத்தனை நீண்ட நேரம் அவர் கூடு விட்டிருந்து பார்த் திராதவர்களுக்குப் பதைப்பாயிற்று.

பன்னிரண்டு மணி.

அப்பாடா! பாபாவின் தேகம் அசைந்தது. பளிரென்று எழுந்தமர்ந்தார். ''இரண்டு உயிர்கள் பிழைத்தன. நிலாத்ரி ராணி சாம்ராஜ்யம்மாவுக்குப் பேற்று நோவு. குழந்தை குறுக்கே திரும்பிப் பெரும் அவதிப்பட்டாள். இரண்டு டாக்டர்களும் கைவிட்டு விட்டார்கள். நிலாத்ரி என்னையே நினைத்துப் புலம் பினான். நான் போய்க் குழந்தையின் 'பொஸிஷனை'ச் சரி செய்தேன்'' என்றார். வழக்கமான ''பாவம், ஐயோ பாவம்'' என்ற சொற்களும் குழைந்து வந்தன.

மறுநாள் நிலாத்ரி ராஜா வந்து பாபாவின் பாதத்தில் விழுந்தார். ''தாங்கள்தான் சாம்ராஜ்யம்மாவைக் காப்பாற்றி யிருக்க வேண்டும்! சந்தேகமில்லை'' என்று விம்மிதத்துடன் கூறினார்.

Koviloor Digital Library

ஸாயி சாம்ராஜ்யம் செத்த பாம்பின் உடலுக்குள்ளிருந்து தொடங்கி, சாம்ராஜ்யமாவின் கருப்பை உயிர் வரை வியாபித்திருக்கிறது!

* * *

இன்னொரு பாம்பின் சரீரத்தில் புகாமல், தாமே பாம்பாக வருவது பல ஸித்த புருஷர்களின் வரலாற்றில் காணும் ஒன்றாகும். இங்கே பாம்பு என்பது யோக குண்டலினியைக் குறிப்பதாகும். ஷிர்டி பாபா விசேஷமாகப் பாம்புருவில் தோன்றுவதுண்டு.

கோயமுத்தூரில் அவர் நாகமாகத் தோன்றிய இடம்தான் இன்று 'நாக ஸாயி மந்திரம்' என்று பாபா பக்தர்களுக்கு ஒரு காசியாக, ராமேச்வரமாக விளங்குகிறது. அங்கு பாம்பு தோன்றிப் பதினெட்டு ஆண்டுகளுக்குப் பின் ஸத்ய ஸாயி விஜயம் செய்து ஷிர்டி பாபாவின் சலவைக் கல் சிலையைப் பிரதிஷ்டை செய்தார். ''ஸ்ரீ ராமன் ராமலிங்கப் பிரதிஷ்டை செய்ததற்கு சமமான நிகழ்ச்சி இது'' என்று அவரே அப்போது சொன்னார். கிண்டி கோயில், பாலக்காடு சாந்தி நிவாஸ் முதலிய இடங்களிலும் பாபா பாம்பாக வந்து அருள் புரிந்திருக்கிறார். புட்டபர்த்தி பழைய மந்திரத்துக்கும் இந்த பாக்கியம் கிடைத்தது.

மைசூர் ராஜ குடும்பத்தைச் சேர்ந்த 'அர்ஸ்'களில் ஒருவரின் அழைப்பை ஏற்று தீபாவளிக்கு அங்கு சென்றிருக்கிறார் பாபா. தீபாவளித் திருநாளில் பாமையும் கண்ணனுமான ஸ்வாமி தம்மிடையில்லையே எனப் புட்டபர்த்தியில் பக்தர்கள் ஏங்கினர்.

மைசூர் அரச குடும்பத்தாரை ஏமாற்றிக் 'கூடுவிட்டு' விட்டார் பாபா.

தீபாவளி காலை புலருமுன்னே மந்திரத்தில் பஜனை நடக்கிறது. சித்ராவதிக் கரையருகே கார் தலைவிளக்கு பளிச்சிடுகிறது. ''ஸ்வாமி வந்து விட்டார்'' என்று அதைக் கண்டவர் மகிழ்கிறார்கள். ஆனால் பிறகு வெளிச்சத்தைக் காணோம்; காரையும் காணோம்.

ஆனாலும், ஸ்வாமி என்னவோ வந்துதான் விட்டார்! ஆம், பஜனை மன்றத்தின் நடுவே வைத்துப் பூஜிக்கப் பெற்ற பாபா படத்தை வளைத்துச் சுற்றிக்கொண்டு ஒரு நல்ல பாம்பு காணப்படுகிறது! பஜனைக் கேற்ப ஆனந்தமாக அது தலையை ஆட்டி ரசிப்பதைப் பார்த்தவுடன் அனைவருக்கும் இது ஐயமில்லையே என்று புரிந்தது.

பாம்பென்றால் படையும் கலங்கும் என்பது பொய்யாயிற்று. அன்போடு ''அனந்த சாயி'' என்று பெயர் சொல்லி மஞ்சள் பொடியாலும், குங்குமத்தாலும் அரவத்தை அர்ச்சித்தனர். அது ஆராதனையைப் பெற்றுக்கொண்டு தன் பாட்டில் இருந்தது. கிண்ணம் கிண்ணமாகப் பால் வைத்தார்கள். அசல் பாபாவாகவே

Koviloor Digital Library

இருந்து. பாலைத் தொடாமலே யிருந்தது! பலர் தேங்காய் உடைத்தனர். ஒருத்தி மூடிகளைத் திரும்பப் பெறுகையில், தான் பெரிய தேங்காய் கொடுத்ததாகவும் வேறு யாரோ உடைத்த சிறிய மூடிகளைத் தனக்குத் திருப்புவதாகவும் பொய் சொல்லி ரகளை கட்ட, 'உஸ்' என்று அவள் பக்கம் திரும்பி அது சீறிற்றே பார்க்க வேண்டும்!

பகல் மூன்று மணி வரை இப்படி லீலைகள் புரிந்துவிட்டு, அது படத்திலிருந்து இறங்கிக் கீழே ஒரு கஜம் ஊர்ந்தது; அப்படியே அந்தர்த்தானமாகிவிட்டது!

அதே பிற்பகல் மூன்று மணிக்கு அர்ஸ் மாளிகையில் பாபா துயில் கலைந்தாற்போல் எழுந்திருந்தார்.

அரவில் துயில்பவன் ஓரிடத்தில் அரவாகவும், இன்னோரிடத்தில் துயில்பவனாகவும் தன்னைச் செய்து கொண்டிருக்கிறான்!

இன்று, தீபாவளி தினத்தில் தாம் 'இருந்தும் இல்லாமல்' அர்ஸ்களை ஏமாற்றியதால்தானோ என்னவோ, இன்னொரு சமயம் அவர்களிடையே தாமாகவும் இருந்து, அதே சமயம் ஒட்டிக்கு இரட்டையாக இரு பாம்புகளாகவும் இருந்து அவர்களுக்கு அநுக்கிரகம் செய்தார். அன்று பாபாவைச் சிம்மாதனத்தில் அமர்த்தி அர்ஸ்கள் பூஜிக்கையில் எங்கிருந்தோ இரு பாம்புகள் தோன்றி பக்கத்துக்கு ஒன்றாக, அரியணைக் காலைச் சுற்றிக்கொண்டு படமெடுத்து நின்றன. இந்த அற்புதக் காட்சியை இவர்களும் படமெடுத்திருக்கின்றனர்!

பாம்பாக வந்தவரின் பாதம் போட்ட எல்லையைப் பாம்பு எதுவும் கடந்து வரவில்லை என்ற கதையில் அல்லவா இருந்தோம்?

* * *

கால் வண்ணம் அப்படி! கை வண்ணம்—அபய ஹஸ்தத்தின் ரட்சக ஆற்றல்—எப்படி என்பது இன்னொரு சந்தர்ப்பத்தில் தெரிந்தது. கடப்பை மாவட்டத்திலோ எங்கோ, ஒரு முறை ஸ்வாமியின் கார் ஓர் சாலை வழியே செல்கையில், அவர் அத்தனை நேரமும் தமது கரங்களை இரு புற ஜன்னல்கள் வழியாக வெளியே நீட்டி அபயம் காட்டிக்கொண்டே வந்தார்.

இந்த ஊர் மக்களுக்கு என்ன இத்தனை யோகம்—'நான்-ஸ்டாப்' அபயம் அளிக்கிறாரே, என்று பாபாவுடன் வண்டியில் வந்தவர்களுக்கு ஆச்சரியமாகிவிட்டது. அவரிடமே விளக்கம் கேட்டார்கள்.

''ஓ, அதுவா? அந்தச் சாலைகளில் இருந்த வீடுகளைக் கவனிக்கவில்லையா? அநேகமாக எல்லா வீடுகளின் கூரையாகவும் வெறும் கள்ளிகளைப் பரப்பி அதன் மேல் மண்ணைத்தான் அப்பி வைத்திருக்கிறார்கள். ஒழுங்காகச் செங்கல்லோ, காங்கிரீட்டோ

Koviloor Digital Library

பூசவில்லை. (இங்கே மழை ரொம்பக் குறைவாதலால், ஜலம் ஒழுகும் பிரமேயமில்லாததால், வசதியில்லாத ஜனங்கள் ஓட்டுக் கட்டடமாகக் கூரை கட்டிச் செலவழிக்காமல் இப்படிச் செய்திருக்கிறார்கள்.) இன்றைக்கு என்னைப் பார்க்கிற ஆர்வத்தில், அந்தச் சுள்ளிக் கூரைகளுக்கு மேல் இடித்துப் புடைத்துக் கொண்டு இவ்வளவு பேர் ஏறி நிற்கிறார்கள். நான் வரும்போது அவர்கள் முந்திக் கொள்கிற வேகத்தில் இந்தக் கூரைகள் முறிந்து விடாமல் தடுத்து நிறுத்தத்தான் அப்படிக் கையைக் காட்டி வந்தேன்'' என்றார்!

அடேயப்பா, பிஞ்சுக் கையில் இத்தனை விஞ்சைச் சக்தியா?

Koviloor Digital Library

அத்தியாயம்—28

சிறிய பாம்பும், வீரியப் பீரும், பீறிய வெள்ளமும்

... இடையூறனைத்தும் நீங்கிய இடமும், நன் மனத்தவரின் நவநிதியும், இடையர்களின் இறைவனுமான கண்ணனை வணங்குகிறேன்.

— ஸ்ரீ க்ருஷ்ண கர்ணாம்ருதம் 2.89

பழைய மந்திர அடியாரைப் பாம்பு தீண்டாமல் காத்த இவரையே ஒரு முறை அரவம் 'பதம்' பார்த்துவிட்டது. அன்று பாபா பக்தர் கணத்துடன் ஸாஹேப் செறுவு ஏரிக்குச் சென்றார். அங்கேயே சமையல் செய்து அனைவரும் கூட்டாஞ் சோறு உண்டு களித்தார்கள். பகல் போது முழுதும் அட்டகாசம் தான். ஊருக்குத் திரும்புகையில் அந்தி சாய்ந்தது. பாபா முன் செல்ல மற்றோர் பின்தொடர்ந்தனர்.

புதர் ஒன்றிலிருந்து சர சரவென ஒரு சாரை ஊர்ந்து வந்து பாபாவின் வலது காலைச் சுற்றிக்கொண்டது.

"பாம்பு, பாம்பு" என்று எல்லோரும் அலறிக் கொண்டிருக்கையிலேயே அது ஸ்வாமியின் வலக்கால் பெருவிரலில் தன் பற்களைப் புதைத்து விஷத்தைப் பாய்ச்சி விட்டது.

யாரும் தீண்டாமலே ஒரு நல்ல பாம்பு தீண்டுவது அதிசயந்தான்; அதிலும் மக்கள் திரளிடைப் புகுந்து தீண்டுவது அபூர்வத்திலும் அபூர்வமேயாகும். எனவே இந்தப் பாம்புக் கடி நிகழ்ச்சிக்கு நாம் அறியாத மர்மப் பொருள் இருக்குமோ?

காரியம் முடிந்த மகிழ்ச்சியில் விடுவிடுவென அவரது காலைச் சுற்றிய சுற்றை அவிழ்த்துக் கொண்டு ஓடலாயிற்று அந்த நாகம்.

Koviloor Digital Library

ஆலிலைக் கண்ணனாக இருக்கையில் வாயில் எந்தக் கட்டை விரல் அமுதைப் பாய்ச்சுமோ அதிலே நஞ்சு புகுந்துவிட்டது. ஆனால் நெஞ்சில் அமுதமே சுரந்தது. பாய்ந்து வந்தோரைத் தடுத்து, ''பாம்பை அடிக்க வேண்டாம்'' என்று கூறிய பாபா, ''போ'' என்று அதற்கு உத்தரவு பிறப்பித்து அதன் ஓட்டத்துக்கு மேலும் உத்வேகம் தந்தார்!

அந்த இடத்திலேயே சோர்ந்து சாய்ந்து விட்டார். உரவ கொண்டாவில் அரவம் தீண்டாமலே வலக்கால் பெருவிரலைப் பிடித்துக்கொண்டு மயங்கி விழுந்தவர், இன்று மெய்யாகவே இவ்விதம் பாம்பின் தீண்டலுக்காளானதற்கு உள்ளர்த்தம் ஏதோ, யார் அறிவர்?

பாம்பு கடித்து பாபா சாய்ந்ததை நேரில் கண்டதாலும், அன்பு மிகுதியில் என்ன செய்கிறோம் என்று தெரியாததாலும் உடன் வந்தோர் அவரது தெய்விகத்தை யெல்லாம் மறந்து வைத்தியரையும், மாந்திரிகரையும் தேடி ஓடினர்.

விஷ ஓட்டத்தைத் தடுப்பதற்காக பாபாவின் காலில் ஒரு பக்தர் கட்டுப் போட்டுக் கொண்டிருந்தார். அவரைப் பார்த்து, சிறு சிறு அலைகளாகக் கையை அசைத்தார் பாபா. அவர் ஒரு வஸ்துவை சிருஷ்டிப்பதென்றால் இப்படித்தான் சைகை செய்வது வழக்கம். இம்மாதிரியே அந்தப் பக்தர் சைகை செய்ய வேண்டும் என்று தமது பார்வையால் அவருக்கு உணர்த்தினர்.

அந்த ஆபத்து வேளையில் கூட பக்தருக்கு இது வேடிக்கை யாகத்தான் இருந்தது. வெறும் ஆசாமியான தான் ஸ்வாமி போல் அங்கை அசைப்பதாவது? எனினும் உத்தரவு என்பதால் அவ்விதமே அசைத்தார்.

உடனே அந்த அடியாரது உள்ளங்கைக்குள் ஒரு யானையே மோதிக் கொண்டு வருவது போன்ற அழுத்தத்தை உணர்ந்தார். மறுவிநாடி பக்தர் கையில் பளிச்சிட்டது ஒரு தாயத்து!

இதற்குள் பாபாவின் வாயிலிருந்து நுரை தப்பத் தொடங்கியது. அந்நிலையிலும் உணர்விழக்காமலே அவர் அந்தத் தாயத்தைத் தமக்குக் கட்டச் சொல்லி, வாய் நுரையையே எடுத்துக் கொட்டுவாயில் பூசச் சொன்னார். அடியார் அவ்விதமே செய்தார். உலக ரக்ஷகருக்கு பக்தர் ரக்ஷை சிருஷ்டி செய்து கட்டியிருக்கிறார்!

ஒரு சில விநாடிகளிலேயே பாபா நண்பகல் கதிரவனாக ஜீவசக்தியுடன் எழுந்திருந்து விட்டார்! விட்டுப்போன அட்டஹாஸம் தொடர்ந்தது!

''நான் இந்த ஸாயி தேகத்தில் இருந்து கொண்டு சிருஷ்டிக்கும் ஒரு பொருளை இவ்வுடம்புக்கே பயன் செய்து கொள்வதை சுயநலமாக நினைக்கிறேன். ஆனாலும் அன்று என்னவோ

Koviloor Digital Library

வெறும் சங்கற்பத்தாலேயே குணப்படுத்திக் கொள்ளாமல் தாயத்து விளையாட்டுப் பார்க்கத் தோன்றிற்று. அதனால்தான் இன்னொருவர் கைக்குப் படைப்புச் சக்தி தந்தேன்'' என்று பிற்காலத்தில் பாபா கூறினார்.

'தன் கையே தனக்கு உதவி' என்றே நாம் வாழ்கிறோம். 'தன் கை பிறருக்கே உதவி' என வாழ்பவர் பாபா. அன்று பக்தரைப் பெருமைப்படுத்துவதற்காகப் 'பிறர் கை கூடத் தமக்கு உதவி'யாக இருக்க முடியும் என்பது போல நாடகமாடி விட்டார்.

நாடகம்தான்! அந்தத் தாயத்தையும் பிறகு எடுத்தெறிந்து விட்டார்.

பக்தர்களைக் கொஞ்சம் கதிகலங்க அடிக்கும் நாடகத்தில் அன்று நம் நாயகனுக்கு ஆசை வந்துவிட்டது. விஷக்கடிக்கு ஆளானதால் அன்றிரவு அவர் உண்ணக் கூடாது என்றும் உறங்கக் கூடாது என்றும் பக்தர்கள் வற்புறுத்தினர். இவரோ வழக்கத்தை விட அதிகமாக உண்டு, வழக்கத்தை விட அதிக நேரம் உறங்கினார்! (அல்லது அப்படி நடித்தார்). தினமும் வெந்நீரில் குளிப்பவர், மறுநாள் வேண்டுமென்றே ஒரு கிணற்றில் குதித்து பலம் கொண்ட மட்டும் குளிர்ந்த நீரில் நீச்சலடித்து வந்தார்!

நிச்சயமாக இயற்கையை மீறியவர்தான் அவர். ஆயினும் மனிதரிடமிருந்து ஒரேயடியாக விலகியிருந்து விடக் கூடாது என்பதால் இயற்கைக்கும் தாமே உட்படுகிறார். இயற்கையாகப் பிறருக்கு ஏற்படக் கூடிய உபாதிகள் தம்மையும் பாதிக்க அநுமதித்து, அவற்றை அற்புதமாகத் தாங்கிக் கொண்டு பொறுமையின் பெருமையை மற்றோருக்குப் பாடம் கற்பிக்கிறார். ஓர் எடுத்துக்காட்டு:

மூன்றாண்டுகளுக்கு முன் பாபா (பெங்களூர்) ஒயிட் ஃபீல்டில் தங்கியிருந்தபோது காய்ச்சல் காரணமாகச் சில நாட்கள் வெளியே தரிசனம் தர வராமலே இருந்தார். பிறகு தரிசனம் தர வந்த தினத்தில் டாக்டர் கோகக், ''ஸ்வாமி, ஜுரம் முற்றும் குணமாகி விட்டதா?'' என்று வினவினார்.

''ஜுரம் ஒன்றும் பெரிய விஷயமில்லை. உண்மை உபாதியை இதுவரை நான் சொல்லவில்லை. சென்னையிலிருந்து நான் புறப்படுகையில் கார் கதவைச் சாத்தியபோது என் பாதம் அதில் மாட்டிக் கொண்டு நன்றாக நசுங்கிவிட்டது. அது உடன் வந்தவர்களுக்குத் தெரியாமல், கார் 'ஸ்டார்ட்' ஆகிற ஓசையிலேயே நான் கதவை மடமடத் திறந்து, காலை இழுத்துக் கொண்டு, மூடினேன். அந்த ரணத்துக்காகத்தான் ஜுரம் கண்டுவிட்டது. பக்தர்களை ஏமாற்றாமல் தரிசனத்துக்குக் கூடத் தினமும் வெளியே வந்திருக்கலாம். ஆனால் அவர்கள் காலைத் தொட்டுத் தொட்டு, வலியை நான் வெளிக்காட்டுமாறு செய்துவிடப் போகிறார்களே என்றுதான் சில நாள் உள்ளேயே இருந்தேன். இந்த நீள [illegible] எத்தனை சௌகரியம் பாருங்கள்: இங்கே கூடவே

Koviloor Digital Library

இருப்பவர்களுக்கும் என் பாதமோ, அது நசுங்கியுள்ள விகாரமோ தெரியவே இல்லை. இதோ பாருங்கள்'' என்று அங்கியிலிருந்து அம்புஜ பாதத்தை நீட்டினார்.

ஐயோ! கல்லால் அடித்த அம்புஜமாக அது வதங்கியிருக்கிறது! வாதை இவருக்குப் பொருட்டில்லாவிட்டாலும், அதை மற்றவர் அறிந்து மன உபாதைப்படுவதைப் பொருட்டாகக் கொண்டு வெளியில் சொல்லாமலே இருந்திருக்கிறார்!

கோகக்குடன் சென்றிருந்த ஸ்ரீ பிரபு பிரஸாத், ''அது சரி ஸ்வாமி....'' என்று ஆரம்பிக்கும்போதே பாபா, ''புட்டபர்த்தி குரு பூர்ணிமைதானே! அது மற்றவர்களின் துயரத்தைப் பற்றிய விஷயம்'' என்று குறுமையாகக் கூறினார்.

பிரபு பிரஸாத் நெக்குருகினார். குரு பூர்ணிமைக்கு இவர் குடும்பத்தோடு பர்த்தி சென்றபோது, இவரது மூன்று வயதுப் பிள்ளையின் கையை வைத்தே யாரோ காரின் கதவை அறைந்து சாத்தி விட்டனர். ''ஸாயி ராம்'' என்று துடித்துக்கொண்டு கதவைத் திறந்து அந்தக் கையை எடுத்துப் பார்த்தார். சட்னியாகியிருக்க வேண்டிய கை சிறு புண்ணும் படாமல் வள்ளிசாக இருந்தது!

இங்கே பாபாவின் பாதமே துவையுண்டு புண்ணாகியிருக்கிறது. ஆம், அது மற்றவர்களின் துயரத்தைப் பற்றிய விஷயம்! அதோடு ''சகிப்பு சகிப்பு என்று சொல்கிற பாபா எதை சகித்துக் கொள்கிறார்? அவருக்கு சக்ரவர்த்தி போல் எல்லாம் சௌகரியமாக நடந்துவிடுகிறது. நம் போல் அவதிப்பட்டால்தானே தெரியும்?'' என்கிறவர்களுக்கும் இங்கே பதில் வந்துவிட்டது!

''உற்ற நோய் நோன்றல்'' என்று குறளாசிரியர் தவ லக்ஷணங்களில் ஒன்றாகக் கூறியதை நடத்திக் காட்டிவிட்டார்.

பாபாவின் சரீர தர்மம் நமக்குப் புரியாத ஒன்று. மானுட காயமென்றே எண்ணும்போது அதில் அமாநுஷ்யத் தன்மையைக் காட்டிவிடுவார். சாதாரண மனிதர்போல் சில சமயங்களில் தமக்கு வரும் கடிதங்களைப் பிரித்துப் படிக்கிறார். பல சமயங்களிலோ வெறுமே தொட்டுவிட்டுப் போட்டு விடுகிறார். ''படிக்கவில்லையே ஸ்வாமி!'' என்று பக்தர் கேட்டால், ''இந்த விரல்கள் ஸ்பர்சித்தாலே போதும், விஷயம் எனக்கு எட்டி விடும்'' என்று சொல்லி, அக்கடிதங்களில் அந்தரங்கம் எதுவும் இல்லாவிடில் அதை அப்படியே ஒப்பித்து, ''சரிதானா பார்'' என்பார்! (அந்தரங்க விஷயங்களைப் பிறரிடம் ஒருநாளும் விடவே மாட்டார், பண்புச் சிகரமான பாபா. இதனால்தான் தமக்கு வரும் நூற்றுக் கணக்கான கடிதங்களைப் பிறர் உடைத்துக் கொடுக்கக் கூட அனுமதிக்காமல், தாமே பிரித்துப் படிக்கிறார். லீலைக்காகச் சிலவற்றுக்குப் பதில் எழுதும்போதும் 'ஸ்டெனோ' இல்லாமல் தம் கைப்பட எழுதி, தாமே கவரில் போட்டு, தமது கரத்தாலேயே ஒட்டியும் கொடுக்கிறார்.)

Koviloor Digital Library

சாதாரணமாக அவரது விரல்கள் அந்தரத்தைத் துழாவிக் கொண்டிருக்கும். சில சமயங்களில் அந்தரத்திலேயே அவர் ஏதோ எழுதுவார். உதட்டைப் பிதுக்குவார். கையை விரிப்பார். இதற்குக் காரணம் கேட்ட பிரபல அமெரிக்கத் திரைப்படக் கதாசிரியர் ஹால்மானிடம், தம் விரல்களே எண்ணற்ற பக்தரோடு தம்மைத் தொடர்புறுத்துவதாகக் கூறியிருக்கிறார். விரலசைந்தால் உலகசையும் என்பார்களே! இங்கே இவர் விரலை அசைக்கும் போது எங்கோ, எந்தப் பக்தருக்கோ, ஏதோ அநுக்கிரகம் நடந்து விடுகிறது. எங்கோ பக்தருக்கு எழும் பிரச்னைக்கு விடையைத் தான் இங்கே அந்தரத்தில் எழுதுகிறாராம்.

அவரது சரீரத்தின் தனித்தன்மைக்கு இன்னொர் உதாரணம். அக்காலத்தில் பக்தரின் ஆபத்தில் இவர் படபடரெனச் சரீரத்தை விட்டுக் கிளம்பி அவர்களிடம் செல்வது வழக்கம். இம்மாதிரிச் சந்தர்ப்பங்களில் அவரது சரீரம் மரக்கட்டையாக விழுந்து விடும். சென்னையில் பக்தர்களோடு ஒருமுறை காரில் போகும் போதே, இவ்வாறு அவர் எவர் ஆபத்தையோ தீர்க்கப் பதறிப் 'புறப்பட்டார்.' தடாலென்று எதிர் ஸீட்டில் இடித்துக் கொண்டு விட்டார். அந்த வேகத்தில் இவரது ஒரு பல்லை தெறித்து விழுந்துவிட்டது. பிரக்ஞை வந்தபின், பக்தர்களுக்குத் தங்களது என்றும் இளைய இறைவன், இப்படித் திடீர்க் கிழமாகிப் பல்லை இழந்தது பெருந்துயர் அளித்தது. அவர்களைக் கொஞ்சம் அழவிட்டு வேடிக்கை பார்த்த பாபா, பிறகு உடைந்த பல்லை வாய்க்குள் வீசிக்கொண்டார். அது லபக்கெனத் தன் யதா ஸ்தானத்தில் பிரதிஷ்டையாகிவிட்டது! விந்தைச் சரீரம்தானே?

மாதக்கணக்கில் ஸ்வாமி அன்ன ஆகாரமின்றி இருப்பதுண்டு. இது வெளி உலகுக்குத் தெரிவதற்கே யில்லாமல், பூர்ண உற்சாகத்துடன் தனது வெளிக் காரியங்கள் அனைத்தையும் புரிந்து வருவார். மேனி சற்றும் வாடாது, வதங்காது. இரவிலும் அவர் கூற்றுப்படியே மெய்யான உறக்கம் கிடையாது. அப்படியும் இவ்வளவு தெம்புடன் இருப்பதெனில் அது சாதாரண சரீரமாக இருக்க முடியுமா?

பக்தரின் பிணியைத் தாமே ஏற்று உள்ளே ரத்தவாந்தி செய்வார். மறுநிமிஷமே வெளியிலே ராஜநடை போடுவார். சாமானிய சரீரமா அது?

மகான்களின் மனம் மலரினும் நளினமாயினும் வஜ்ரத்தை விட வலியதுமாகிவிடும் என்பர். பாபாவின் சரீரமே இவ்வாறு நளினம் கடினம் இரண்டும் ஒருங்குசேர்ந்த அற்புதம்! புஷ்டியான வாலிபர் பலர் சேர்ந்தும் அவரது பூங்கரத்தை அசைக்க வொட்டாமல் செய்து விளையாட்டுப் பார்த்திருக்கிறாரே!

* * *

காளியன் நஞ்சீர்ச்சுனையை நச்சாக்கி, அதன்பக்கமே கோபர்கள் செல்லமுடியாமற் செய்தபோது கண்ணன் காளிய

Koviloor Digital Library

நர்த்தனம் செய்து, அவன் மதத்தை மர்த்தனம் செய்து, அந்த இடத்தை மக்கள் வசிக்கத் தகுந்ததாக்கினன் அல்லவா? பழைய மந்திர நாட்களில் பாபா புரிந்த ஒரு லீலையை இதற்கு ஒப்பிடுவார் அன்பர் ஸ்ரீ பாலபட்டாபிச் செட்டியார்.

விஷயம் இதுதான்: ''அந்தப் பக்கமே போவதற்கில்லை'' என்று கோபர்கள் ஓரிடத்தை ஒதுக்கியதுபோல் பர்த்திக்குப் பக்கலிலும் ஒரு பகுதி இருந்தது. அவ்வழியே எவர் சென்றாலும் மூன்று நாட்களில் அவர் கடுங்காய்ச்சலில் விழுந்து விடுவதாக ஒரு பயம் இருந்தது. எனவே அருகேயுள்ள இடத்துக்குப் போவதானாலும், நேரே செல்லாமல், மேற்சொன்ன பகுதியைச் சுற்றிக்கொண்டு செல்ல வேண்டியதாயிருந்தது.

பாபாவிடம் இதுபற்றி முறையிடப்பட்டவுடன் அவர் சில முஸ்லிம்களை வரவழைத்தார். அவர்களோடு அப்பகுதிக்கே சென்றார். அங்கே குறிப்பாக ஓரிடத்தைக் காட்டி, ''இங்கே பூமியை வெட்டிக் கொண்டே போ'' என்று ஒருவரிடம் சொன்னார். ஸ்வாமி கொடுத்த தைரியத்தில், அவர் அந்தச் சாபம் மலிந்த மண்ணிலே இறங்கி, அகழத் தொடங்கினார். சிறிது தூரம் உள்ளே சென்றதும் ஓர் அலறல் போட்டார்.

கடப்பாறை அவரது கையோடு கோந்து போட்டாற்போல் ஒட்டிக்கொண்டு விட்டது!

எட்டு வயதுப் பாலனாகயிருக்கையில் உபாத்தியாயரை நாற்காலியோடு ஒட்டிய ''கோந்தை'' கணத்தில் கரைத்த பிரபு காவாமலிருப்பாரா?

பாபா அவர் கையைத் தொட்டார். உடனே கடப்பாறை விடுபட்டது!

''உம், தோண்டு'' என்றார். மறுபடியும் தோண்டியதில் உள்ளேயிருந்து கமகமவென சாம்பிராணிப் புகை வந்தது! ''ம், இன்னும் தோண்டு'' என்றார் பாபா. மேலும் அகழ்ந்ததில் பீர்கள் வெளிப்படத் தொடங்கின!

(கெர்பலாவில் இன்னுயிரைப் பலிகொடுத்த ஹாஸன், ஹுஸைன் நினைவாக மொஹரத்தின்போது முஸ்லிம்கள் வழிபடும் 'கை' உருவங்கள்தாம் 'பீர்' என்பவை.)

இந்தத் தோண்டல் நடக்கும்போது பூர்வ சரித்திரத்தை எல்லாம் தோண்டித் துருவக் கூடிய பாபா, ''இவை உங்கள் முன்னோர்கள் வழிபட்ட பீர்கள். மிகுந்த சாந்நித்யம் பெற்றவை. பிற்காலத்தவர்கள் இவ்வழிபாட்டை விட்டுவிட்டனர். சக்தி வாய்ந்த பீர்கள் மண்ணுக்குள் மறைந்துவிட்டன. அவற்றின் மீதாக நடக்கும் அபசாரம் காரணமாகவே கடுங்காய்ச்சல் ஏற்பட்டது. இனி அந்தப் பயமில்லை. இந்த மொஹரத்திலிருந்து இவற்றின் வழிபாட்டை மறுபடி தொடங்குங்கள்'' என்றார்.

Koviloor Digital Library

உள்ளே இறங்கியவரிடம் "அதை எடுத்து வா" என்றார்.

என்ன ஆச்சரியம்! அந்தப் பீர்களோ அவர் எத்தனை முயன்றாலும் அவர் கைக்குப் பிடிபடாமல் சுற்றிச் சுற்றி வந்தன! பிறகு பாபாவே உள்ளே இறங்கி அவற்றை எடுத்து வந்தார்.

"மொஹரத்தின்போது வந்து இவற்றை வாங்கிக்கொள்ளுங்கள்" என்று அவர்களிடம் சொல்லி, பீர்களைத் தாமே மந்திரத்துக்குக் கொண்டு வந்து வைத்துக்கொண்டார்.

ஷிர்டி அவதாரத்தின்போது மசூதியில் ஹிந்துப் பூஜை நடந்தது. இப்போதோ ஹிந்து மந்திரத்தில் முஸ்லீம் சின்னங்கள் இடம் கொண்டன. ஏதோ ஒரு விதத்தில் ஹிந்து—முஸ்லீம் இணைப்பு இரு அவதாரங்களிலும் காண்கிறது.

மொஹரத்தின்போது முஸ்லிம்கள் வந்தனர்.

பாபாவும் பீரைக் கொடுத்தனுப்பினார்.

ஆனால் பீர்கள் அவரை விட்டுப் போனால்தானே? ஜட வஸ்துக்களாகத் தோன்றும் அந்தக் கைகளுக்குக்கூட ஐயனிடம் எல்லையில்லாப் பிரேமை! அவற்றை எடுத்துச் சென்றவர் மந்திர வாசல் வரைதான் போக முடியும். புயலில் ஆடும் கிளையாக ஓடி வந்து திரும்பவும் பாபாவிடமே விழுவார். பாபா அவரைப் போகச் சொல்வார். அவரும் கிளம்புவார். வாசலுக்கு வந்ததும் பழைய கதைதான். இப்படிப் பல முறை ஆட்டம் பார்த்த பின், பாபா அந்தப் பீர்களை அன்போடு தடவிக்கொடுத்து, "பங்காரு! போம்மா, போம்மா" என்று செல்லமாகச் சொன்னார். கரஸ்பரிசம் பெற்ற கரங்கள் அதன் பிறகு 'சமர்த்தாக' அந்த முஸ்லிம்களுடன் சென்றன.

மொஹரத்துக்கு மட்டும் இவற்றை வாங்கிச் சென்று வழிபட்டுவிட்டுப் பாபாவிடமே திருப்பிவிடும் வழக்கத்தை அந்த ஆண்டிலிருந்து அவர்கள் மாமூலாகப் பின்பற்றலாயினர்.

ஜனப் புழக்கத்துக்கே பயனற்றிருந்த பகுதியில் நிம்மதியான ஜனநடமாட்டம் தொடங்கிற்று.

* * *

பாத மந்திரத் திருவிளையாடல்களில் எத்தனை அலையாடினாலும் நமக்குத் திருப்தி வராதுதான். இச்சரிதையில் "ஸாம்பிள்" காட்டுவதற்கு மேல் செய்வதற்கில்லை. முக்கியமான லீலை ஒன்று பார்ப்போம்.

1947-ம் ஆண்டு. ஒருநாள் பிற்பகல் தமது சிறிய அறைக்குள் புகுந்த பாபா மாலை மணி ஏழாகியும் வெளி வராதது பக்தருக்கு வியப்பாக இருந்தது. ஏழு மணிக்கு வந்தார்.

Koviloor Digital Library

வெகு சுருக்கமாக பஜனையை முடித்தார். ''இன்று சித்ராவதியில் பெரிய வெள்ளம் வரப் போகிறது'' என்று சொல்லிவிட்டு மறுபடி அறைக்குள்ளேயே சென்றுவிட்டார். அப்போது ஆசிரமத்தில் பத்து, பன்னிரண்டு பேர்தான் தங்கியிருந்தனர்.

'வெள்ளத்துக்கான அறிகுறியே இதுவரை ஆற்றில் இல்லை. இங்கே மழையும் இல்லை. ஒருவேளை நதி உற்பத்தியாகும் நந்தி மலையில் பெருமழையோ என்னவோ? எதுவானாலும் சரி, பகவான் இங்கே இருக்கிறார். நாமும் அவரோடு இருந்துவிடுவோம்' எனத் தீர்மானித்தார்கள். உண்டார்கள். படுக்கையை எடுத்துக் கொண்டார்கள். வெளியிலுள்ள தகர ஷெட்டுக்குப்போய் அயர்ந்து உறங்கியும் விட்டார்கள்.

பாபா அன்றிரவு தமதறையை விட்டு வெளிவரவே யில்லை. இது ஒரு விசித்ரம்தான்.

இரவு மணி மூன்று. தங்கள் படுக்கை நனைவதை உணர்ந்து பக்தர்கள் விழித்தார்கள்.

வெள்ளம் வந்தே விட்டது! வெளியே சாலையில் 'ஹோ' வென்று சித்ராவதி ஓடுகிறாள். இங்கே மந்திரத்துள்ளும் புகுந்து 'ஷெட்' வரை எட்டி, மேலும் எழும்பி, எழும்பிப் பார்க்கிறாள். எல்லோரும் ஸ்வாமி இருந்த மந்திர ஹாலுக்கே ஓடினார்கள். மெல்ல மெல்ல அங்கும் பிரவாகம் ஏறி வந்து முழங்கால் அளவில் நின்றது.

புட்டபர்த்தியில் ஒரு தூறல் கூட விழாவிட்டாலும், பெரு வெள்ளம் வந்தேவிட்டது.

பாபாவின் அறைக்கதவு திறந்தது. அமைதி வெள்ளமாகக் கட்டிலில் அமர்ந்திருந்தார்! அந்தக் கட்டில் விளிம்பை எட்டிப் பிடிக்கப் பார்க்கிறாள் சிற்றம் கொண்ட சித்ராவதி. அதிலிருந்து முற்பகல் பத்து மணிவரை சித்ராவதித் தண்ணீருக்குள்ளேயே நின்றபடி பக்தர் பட்ட சித்திர அவதி!

பாபா கட்டிலிலிருந்து இறங்கினார். நீரில் அளைந்து கொண்டே மந்திரத்திலிருந்து கிளம்பினார். மார்பளவு நீரில் நடந்து வாசல் கேட் வரை சென்று விட்டார். பதைப்புடன் பக்தரும் பின்தொடர்ந்தனர். 'சாலையில் ஆளை முழுக்கும் ஆழத்தோடல்லவா பிரவாகம் ஓடுகிறது! ஸ்வாமி பாட்டுக்குப் போய்க் கொண்டே இருக்கிறாரே! ஆனால் அவருக்கா தெரியாது?'

நவராத்ரியின்போது சுமங்கலிப் பெண்கள் தம்மைப் பராசக்தியாக வைத்து அர்ச்சனை செய்த குங்குமத்தில் விநியோகித்தது போக மீதம் பஜனை மன்றத்தில் மேலே மூட்டையாகக் கட்டித் தொங்க விடப்பட்டிருந்தது. அதை எடுத்து வருமாறு பணித்தார் பாபா. குங்குமம் கொண்டு வரப்பட்டதும் அதை

Koviloor Digital Library

இரு கைகளாலும் வாரி வாரி, வாரிதியாகப் பெருகும் வெள்ளத்தில் வீசினார். என்ன அதிசயம்! அது வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகாமல் நீர்ப்பரப்பின் மீதே ஒரு சாலைபோட்டது போல் அமைந்தது!

உடனே ஸ்வாமி விடுவிடுவென்று வெள்ளத்தில் நடக்கலானார். சாலைக்கே சென்றார். மேலும் செல்லலானார். இவர் ஒவ்வொரு அடி வைக்கவும் வெள்ளமும் குறைந்து இவரது மார்பளவோடேயே நின்றது. அடியாரும் உடன் சென்றனர். இன்றைய பிரசாந்தி நிலயம் கட்டப்படத் தொடங்கிய மேட்டுப் பாங்கான நிலத்தை அனைவரும் அடைந்தனர். ''அப்பாடா'' எனப் பெருமூச்சு விட்டனர்.

கட்டிட வேலையில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களிடமிருந்து இரண்டு அண்டாக்கள் வாங்கிவரச் சொன்னார் பாபா. அவ்விதமே செய்தவுடன், இரண்டினுள்ளும் தமது திருக்கரத்தை விட்டு எடுத்தார். ஒன்றிலிருந்து 'கம்' மென்று சுடச்சுட வடித்த அன்னத்தின் மணம் வீசிற்று; மற்றதிலிருந்து 'ஜம்' மென ரசத்தின் மணம் எழுந்தது. ஓர் அண்டா சாதம், ஓர் அண்டா ரசம்!

அண்டங்களைக் காப்பவன் அருளில் அன்று அடியார், நீரில் அலைந்த ஓதத்துக்கும் சீதத்துக்கும் ஔஷதமாக, அந்த ரசஞ் சோற்றை வயிறார உண்டனர்.

மெள்ள மெள்ள வெள்ளமும் வடிந்தது. அனைவரும் பாத மந்திரத்துக்குத் திரும்பினர்.

குழந்தைக் கண்ணனுக்காக யமுனை வெள்ளம் அடங்கி நடந்தது. இயேசுநாதன் வெள்ளத்தின்மீதே நடந்தார். கிருஷ்ணனாகவும் கிறிஸ்துவாகவும் பல அடியார் உணரும் நம் ஸாயி பகவானுக்கும் வெள்ளம், மழை ஆகியன அடிபணிந்த அற்புதம் பன்முறை நடந்திருக்கிறது.

மேற்சொன்ன நிகழ்ச்சியை ஆதியோடந்தம் கூறும் ஸ்ரீ பால பட்டாபிச் செட்டியாருக்கு மட்டும் பிரத்யேகமான ஒரு வெள்ள அநுபவம் உண்டு. இவரை சம்சாரப் பிரவாகத்திலிருந்தே பாபா காத்தருளிச்செய்த பல லீலைகளில் இதுவும் ஒன்று. எத்தனையோ மெய்யடியார்களைக் கண்ணை இரப்பை காப்பதுபோல் பாபா அனவரதமும் காத்து வருகிறார் என்பதற்கு 'ஸாம்பிளாக' ஸ்ரீ பாலபட்டாபியின் அநுபவங்களை இனி பார்க்கலாம். கரும்பு சர்க்கரையாக வேண்டுமானால் அதைக் கசக்கிப் பிழிய வேண்டும்; தங்கம் நகையாக வேண்டுமானால் அதை உருக்கி அடிக்க வேண்டும். இப்படியே ஜீவனைக் கசக்கி, உருக்கிக் கர்மாவைத் தீர்க்கும் போதே கூடக்கூட இருந்து கருணைக் காப்பும் தந்து கைதூக்கி விடுகிறார் நம் ஸ்வாமி என்பதற்கு இந்த அடியாரின் அநுபவமே அற்புதச் சான்று.

Koviloor Digital Library

ஸ்ரீ பாலபட்டாபிக்குப் பாய்ந்த கருணைப் பிரவாகத்தைப் பற்றி அறியுமுன், சமீபத்தில் பாபா தடுத்து நிறுத்திய ஒரு பிரவாகத்தையும் பார்த்து விடுவோம்.

1975—ம் ஆண்டு ஆகஸ்ட் 26-ந் தேதி. தென் மேற்குப் பருவக்காற்று மழை சக்கை போடு போடுகிறது. புட்டபர்த்தியைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள ஆறு ஏரிகளும் உடைப் பெடுத்துவிட்டன. இதனால் சித்ராவதி ஆறும் கரைமீறி புட்ட பர்த்தி கிராமத்துள் பிரவேசிக்கலாயிற்று.

மள மளவென்று நீர்மட்டம் ஏறி வந்தது. பாத மந்திரத்துக்குள் ஆறடி நீர் தேங்கி விட்டது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். எங்கு பார்த்தாலும் நீர்ப் பாம்புகள் நீந்துகின்றன. பாத மந்திர மேடை மீது மேஜைகளைப் போட்டுக் கொண்டு அவற்றின்மீது அடைக்கலம் புகுந்தவர்களையும் இந்தப் பாம்புப் படை அச்சுறுத்த வந்து விட்டது.

மேட்டு நிலத்திலுள்ள பிரசாந்தி நிலயத்திலும் பிரவாகம் புகுந்து அங்குள்ள ஸ்டேட் பாங்க் கட்டிடம் மூன்றரை அடி நீரில் முழுகும் அளவுக்கு ஏறி விட்டது.

கிராமத்தில் நூறு வீடுகளுக்கு மேல் அடித்துச் செல்லப் பட்டுவிட்டன. மின்சார, பம்புநீர் இணைப்புக்கள் யாவும் துண்டித்துப் போயின.

கலி பாபத்துக்கு இன்னும் தண்டனை தரத்தான் வேண்டும் எனினும், போதும் எனப் புனிதன் எண்ணினான் போலும். முற்பகல் பதினொரு மணிக்கு பாபா மெதுவாக ''கிழக்குப் பிரசாந்தி'' என்ற மூன்றடுக்கு மாளிகையின் மொட்டை மாடிக்கு ஏறினார். எவ்வித உணர்ச்சியையும் பிரதிபலிக்காத தமது தெளிந்த விரி நயனங்களால் வெள்ளத்தைப் பார்த்துக் கொண்டு நின்றார்.

நாம் இதய பூர்வமாக இன்றியே வெளியில் உணர்ச்சிகளைக் கொட்டுகிறோம். உணர்ச்சிகளைக் காட்டாத ஸ்வாமியின் திரு இதயத்திலோ கருணைப் பிரவாகம் சித்ராவதி வெள்ளத்திலும் பெரிதாக அலை எறிந்திருக்க வேண்டும்.

அவரது வலக்கை உயர்ந்தது. மக்களுக்கு அபயமூட்டவா? ஆமாம். அதே சமயத்தில் ஜல தேவதைக்குப் பயமூட்டவும்தான். ஆம், இதுகாறும் பக்தர் கண்டிராத அதிகார விரட்டலான அபிநயத்திலே அந்தக் கை வெள்ளத்திடம், ''இடது கரையிலிருந்து திசை திரும்பி வலத்தே ஓடி புக்கபட்டணம் ஏரிக்குப் போ'' என்று ஜாடை காட்டி ஆக்ஞையிட்டது.

என்ன விந்தை! பெரும் பிரவாகம் சுழித்துச் சுழித்துக் கொண்டு உடனே தன் திசையை மாற்றிக் கொள்ளலாயிற்று. ஊரை நாசப்படுத்துவதை விட்டு, வயலும் வெற்றுத் திடலுமான வலது கரைப்பக்கமாக வெள்ளம் நகர்ந்து நகர்ந்து சென்ற அற்புதத்தை பர்த்திவாசிகள் நிதரிசனமாகக் கண்டனர்.

Koviloor Digital Library

அப்...பாடா! கூண்டோடு, பூண்டோடு அடித்துக்கொண்டு போயிருக்க வேண்டிய பல கிராமங்கள், ஸ்வாமி விரலசைப்பிலே மீண்டன!

அடுத்துவந்த கோகுலாஷ்டமி யன்று பிரசாந்தி நிலையப் பொதுக்கூட்டத்தில், வெளியூரிலிருந்து திரண்டு வந்திருந்த அடியாருக்கு ஸ்ரீ கஸ்தூரி அவர்கள் ஸத்யஸ்வரூபியான ஸ்வாமி முன்னரே இந்நிகழ்ச்சியை விளக்கினர். மிகையாக ஏதேனும் சொன்னால் உடனேயே கண்டிக்கும் பாபா இதைத் தலையாட்டி ஆமோதித்ததோடு, அன்று தாம் எப்படிக் கையசைத்து வெள்ளத்தை விரட்டினரோ அதே அபிநயத்தை இன்றும் செய்து காட்டினர் — கள்ளமற்ற பசுங்குழந்தையின் சைகையாக!

''கோவர்த்தன கிரியைத் தூக்கி இந்திரனின் செருக்கறுத்த கோபாலனின் ஜன்ம தினத்தை இன்று எவர்முன் கொண்டாடுகிறோமோ, இந்த நவயுகக் கண்ணனிடம் மீளவும் இந்திரன் பரிபவம் அடைந்தான்'' என்று அழகாக முடித்தார் ஸ்ரீ கஸ்தூரி.

Koviloor Digital Library

அத்தியாயம்—29

பக்தவத்ஸலன்

அன்றே என்றன் ஆவியும்
 உடலும் உடைமை எல்லாமும்,
குன்றேயனையாய்! என்னை ஆட்
 கொண்டபோதே கொண்டிலையோ?
இன்றோர் இடையூ(று) எனக்குண்டோ?
 எண்தோள் முக்கண் எம்மானே!
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
 நானோ இதற்கு நாயகமே?

— திருவாசகம்

பாபாவை முதலில் சென்றடைந்தபோது பாலபட்டாபிச் செட்டியாருக்கு அவரிடம் நம்பிக்கை இருக்கவில்லை.

அப்போது பாபாவுக்கு வயது இருபதுதான். பட்டாபிக்கு முப்பத்தேழு. ஆனாலும் பாலிய விவாகமாதலால் சுமார் இருப தாண்டு குழந்தை யில்லாமல், இனி பிறக்கவும் போவதில்லையோ என்று நினைக்கும் நிலையில் இருந்தார். உடுமலைப்பேட்டையில் நல்ல செல்வந்தர். வெல்ல வியாபாரம். குலம் விளங்க மதலை வேண்டாமா என்ற நியாயமான தாபம்.

தேசம் நெடுகிலும் ஒரு க்ஷேத்திரம் மீதமின்றிச் சென்று பிரார்த்தனை செய்தார். இவர் வடமதுரையருகே தயாள் பாக்கில் இருக்கும் போதுதான் கருரிலுள்ள மைத்துனரிடமிருந்து பாபாவைப் பற்றிக் கடிதம் வந்தது. வேண்டாவெறுப்பாக இவரும் ஊர் திரும்பி, கருரிலிருந்து சென்ற நாற்பதுக்கு மேற் பட்டவர்களுடன் புட்டபர்த்தியைச் சென்று சேர்ந்தார்.

மற்ற ஒவ்வொருவரும் அளித்த பூமாலைகளை ஏற்ற பாபா, இவரிடம் மட்டும் ஏற்கவில்லை. ''என்னிடம் வரவேண்டாம்

Koviloor Digital Library

என்றுதான் நினைத்தாய். ஏதோ வந்திருக்கிறாய்!'' என்றார் ஸ்வாமி.

'அட, உள் மனத்திலிருப்பதைச் சொல்கிறாரே! ஏதோ கொஞ்சம் சரக்கு உள்ள சாமியார்தான் போலிருக்கிறது' என்றெண்ணினார் பாலபட்டாபி.

மாலை பெறுவதில் இவரைமட்டும் ஒதுக்கிவைத்த பாபா, அன்று மாலை மற்றோரை ஒதுக்கிவிட்டு இவரை மட்டும் சித்ராவதி நிரத்துக்கு அழைத்துச் சென்றார்.

தமக்கே உரிய ஸம்ஸ்கிருத மயமான தெலுங்கில், தமக்கே உரிய ''ஜெட்'' வேகத்தில் பாலபட்டாபியின் விஷயங்களை எல்லாம் சொல்லி அவரைத் திணறடித்தார். அவரைத் தன்னோடு கட்டி அணைத்து, ''உன்னைக் கைவிடவே மாட்டேன்'' என்று வாக்குறுதி தந்து வலக்கை பற்றினார்.

பக்தனுக்கும் பகவானுக்கும் நடக்கும் பாணிக்கிரகணம்!

அடுத்தது மாங்கல்ய தாரணம்!

ஆம், பாபாவின் அங்கை அசைப்பில் ஒரு ரக்ஷை மஞ்சள் கயிற்றுடன் வந்தது. அதை பாலபட்டாபியின் கழுத்தில் கட்டி விட்டார்!

இவரது பூர்வகர்ம விசேஷம்தான்! நம்பிக்கை இன்றிப் போனவரை நம்பி கைகொடுத்து அலாக்காக ஆட்கொண்டு விட்டார்!

பாலபட்டாபிக்கு எப்படியோ அத்யாத்ம விஷயங்களில் ஈடுபாடு உண்டாகலாயிற்று. 'தான் யார்' என்றறிவதில் ஒரு சிறிய முனைப்பு பிறந்துவிட்டது. பரம ஞானியைக் கல்யாணம் செய்துகொண்ட விசேஷம்தான்!

சம்சார பந்தம், ஆசாபாச அலை மோதல், அஹங்கார மமகாரங்களின் ஆர்ப்பட்டம், வியாபாரம், செல்வம், ஸந்ததி ஆசை—இத்யாதி சிந்தனைகள் அடியோடு போகவில்லைதான். ஆனால் இந்தப் போராட்டத்தின் இடையிடையே பகவத் நினைவு நீங்காமல் இழையோடத் தொடங்கியது; பக்தன் என்ற தான் யார் என்ற ஞான விசாரமும் அவ்வப்போது சற்று இதழ் விரித்தது!

வெளியே பார்த்தால் வேடிக்கைப்பிள்ளை போலவும், விளையாட்டுச் சித்தர் போலவுமே இருந்துகொண்டு, பக்தரின் உள்ளே பக்திப் பித்தை, ஞான தாகத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தார் பாபா.

புட்டபர்த்தியில் ஒருமாத காலம் பாபானந்தத்தில் திளைத்துத் திரும்பிய பால பட்டாபி இப்போது அவரது பரம பக்தராகிவிட்டார்.

Koviloor Digital Library

இதன் பிறகு நினைத்த போதெல்லாம் மனைவியும் தாமுமாகப் பர்த்திக்கு ஓடலானார். பாபாவே உத்தரவு தந்தாலன்றிக் கிளம்பாமல் அங்கேயே தங்கலானார். அவர் உத்தரவிட்டாலும் கூடக் கேட்காமலும் தங்க ஆரம்பித்தார். பிறகு அவர் வார்த்தையைத் தட்டியதால் அவதிகள்பட்டு, புத்தி தெளிந்திருக்கிறார். இப்படி எத்தனை எத்தனையோ அநுபவங்கள்.

ஒருநாள் இவரிடம் பாபா, ''வெல்ல வியாபாரமா? பாவம், நானிருக்கிறேன்'' என்றார்.

உடுமலைப்பேட்டைக்கு இவர் திரும்பிய பிறகுதான் அந்த வார்த்தைகளின் உட்பொருள் தெரிந்தது. இவர் வியாபாரத்தைக் கவனிக்காமல் பஜனை, பர்த்திவாசம் என்று இருந்ததால் கடையில் பலவிதமான கோளாறுகள் நடந்து ஏக நஷ்டமாயிருந்தது.

கர்மத்தின் கதியை அடியோடு மாற்றுமலே, கூடக் கூடக் கருணையின்பமும் தரும் பாபா, தொழில் நஷ்டத்தில் பாலபட்டாபியின் மனம் நையவும், நொய்யவும் செய்தார். ஆனாலும் அது அடியோடு முறிந்துவிழாமல் முட்டுக் கொடுத்தும் வந்தார்.

இந்த அருளுக்கு ஒரு ஸ்தூலச்சின்னமாக கோதண்டராம விக்ரஹம் ஒன்றைச் சித்ராவதிக்கரையில் சிருஷ்டித்து பாலபட்டாபிக்கு வழங்கினார். தசராவுக்குப் பின் வந்த சரத்கால பௌர்ணமி தினம். பைரவி ராகத்தில் ''ராமா கோதண்டராமா'' என்ற தியாகராஜ கிருதியை அழகாகப் பாடிக்கொண்டே பாபா ஆற்று மணலிலிருந்து ஐயன் பதுமையை 'எடுத்து' அன்பருக்கு வழங்கினார். கற்பனைக் கண்ணால் காணும்போதே இனிக்கிறது!

அவ்வழகுப் பிம்பத்தைப் பிற்பாடு ஒரு சமயம் உடுமலைப்பேட்டையிலுள்ள பாலபட்டாபியின் இல்லத்தில் பாபாவே பிரதிஷ்டை செய்தார். அப்போது வீட்டில் தாம் உண்ட இடத்தின் மீது அவர் வலக்கையை அசைக்க நவரத்னங்கள் உதிர்ந்தன. அவை தரைக்குள்ளே மறைந்துவிட்டன. சரியாக அவ்விடத்தின் மீதே ராம விக்ரஹத்தை ஸ்தாபிதம் செய்தார். (இப் பிரதிமையில் ஸ்ரீராமனின் முக மண்டலம் பாபாவின் சாயலாக விளங்குவதாகவே இந்நூலாசிரியருக்குத் தோன்றியது. இந்த பிம்பம் உலோகமா, தந்தமா, பளிங்கா, சலவைக்கல்லா என்றே சொல்லத் தெரியாத ஏதோ ஒன்றால் உருவாகியிருப்பது ஒரு விசேஷம். லக்ஷார்ச்சனை செய்யும் காலத்தில் அது சிவப்பாக மாறி விடுவதாக பக்தர்கள் சொல்கிறார்கள்.)

உடுமலைப்பேட்டை விஜயத்தின்போது இந்தப் பிம்பத்தைப் பிரதிஷ்டை செய்தது மட்டுமில்லை. இனி வரவிருக்கும் பற்பல இடுக்கண்களுக்கு எதிர்முகம் கொடுக்கப் பக்கபலம் இருக்கிறது என்ற உறுதியை பாலபட்டாபிக்கு இன்னம் வலுவாக்கவேண்டுமென பாபா எண்ணினாரோ என்னவோ? அவரது தம்பி ஸ்ரீ விச்வநாதன் செட்டியாரின் இல்லத்துக்கு விஜயம் செய்தபோது ஒரு

Koviloor Digital Library

தேங்காயைத் தம் கைவைத்த மாத்திரத்தில் இருபாதியாக உடைத்து, அதற்குள் நவக்ரஹங்களையும் சிருஷ்டித்து வைத்து, மறுபடி மூடி, "இதைப் பிரித்துப் பார்க்காமல் வீட்டில்கொண்டு வை" என்று பாலபட்டாபி தம்பதியரிடம் வழங்கினார். அவ்விதமே அதைக் கைக்குட்டையால் கட்டி, அவர்கள் இரும்புப் பெட்டியில் வைத்தனர்.

இடுக்கண்களில் மிகப் பெரியது அவரவர் மனத்தின் ஆட்டம்தான்! ஒருநாள் பாலபட்டாபி, அந்த நவக்ரஹங்களைப் பார்க்க எண்ணி, மனைவியிடம் தேங்காயைக் கொண்டு வருமாறு சொன்னார். ஹா! தேங்காய் மட்டுமே இருந்தது. உள்ளே இருந்த நவக்ரஹங்கள் மாயமே மறைந்திருந்தன. "அடடா ஒரே பெரிய நவக்ரஹக் கோளாற்றிலிருந்து நம்மைக் காக்கத் தானே ஸ்வாமி மெனக்கெட்டு இந்த அருட் பிரஸாதம் வழங்கினார்? அவர் வார்த்தையை மீறிப் பிரித்துப் பார்த்து அதைக் கோட்டை விட்டோமே" என்று பாலபட்டாபியின் நெஞ்சு படாத பாடு பட்டது.

உடனே புட்டபர்த்திக்கு ஓடினார்.

அப்போதுதான் பாபாவும் கரூர், உடுமலைப்பேட்டை, திருச்சி பயணம் முடித்துப் பழைய மந்திரத்துக்குத் திரும்பியிருந்தார். சுற்றிலும் பக்தர்களை உட்காரவைத்துக்கொண்டு,

கருருக்குப் போயி காலுபெட்டி கதலி ஒச்சினானு

என்று கீர்த்தனை உருவிலேயே தம் பிரயாண விவரங்களைப் பாடிக்கொண்டிருந்தார், ஆசுகவி பாபா!

(கரூர், உடுமலை முதலான பகுதிகளின் வைசியர்கள் பாபாவிடம் தீவிரமாக ஈடுபட்டு அவருக்கு அற்புத வரவேற்புகள், மேளதாளத்தோடு, ஆனைச் சவாரியோடு நடத்திய காலம் அது. கண்ணனைப் பற்றி பாரதியார், "பிறந்தது மறக்குலத்தில்; அவன் பேதமற வளர்ந்ததும் இடைக்குலத்தில்; சிறந்தது பார்ப்பனருள்ளே" என்பதை யெல்லாம் ஏற்கெனவே மெய்யாக்கியிருந்த பாபா, இப்போது கவிஞன் வாக்கிலே விட்டுப்போயிருந்த "சில செட்டி மக்களோடு மிக்கப் பழக்கமுண்டு" என்ற வாசகத்தையும் நிரூபித்து வந்தார்.)

ஆசுவாசம் உற்றார் பட்டாபி, பாபாவின் தரிசன மாத்திரத்திலேயே!

எத்தனை பிழை செய்தாலும் பொறுத்தருளும் கருணாமூர்த்தி இதன்பின் சித்ராவதி மணலிலிருந்து மீண்டும் அதே நவக்ரஹ மூர்த்திகளை "எடுத்து"ப் பட்டாபிக்கு வழங்கினார். இத் தம்பதியருக்குத் தனியாகக் 'கோரிக்கை' கொடுத்தபோது, "நான் தேங்காயை மறுபடி எடுத்துப் பார்க்காமல் பந்தோபஸ்தாக வைக்கச் சொன்னேன். அப்படியும் நீ அதை எடுத்துப் பிரித்துப் பார்த்தாய். இனியாவது என் சொல்படி நட. யாவும் உங்கள்

Koviloor Digital Library

நன்மைக்குத்தான் சொல்கிறேன்'' என்று தாயார் குழந்தைகளுக்குக் கூறுவது போன்ற கனிவோடு மொழிந்தார்.

அந்த நாட்களில் பக்தர்கள் விடைபெறு முன் பாபாவுக்குத் தேங்காய் உடைப்பார்கள். இவர்கள் அவ்விதம் உடைப்பதற்காக வைத்திருந்த தேங்காயை, முன்பு செய்தாற் போலவே ஸ்பரிச மாத்திரத்தில் இரண்டாக்கி, அதில் ஒன்பது சிறு பிரதிமைகளையும் வைத்து மூடிக்கொடுத்தார் பாபா. பிழை செய்தால் தண்டிப்பார். பிறகு சேர்த்து வைத்து அன்பைக் கொட்டிப் 'பரிகாரம்' செய்து விடுவார். அந்தத் தண்டனையும் கூட அன்புப் பரிசுதான்—கட்டுப்பாடு வேண்டும் என்பதை உணர்த்தும் கண்டிப்புத்தானே அது?

''ஜாக்கிரதையாக உன் வீட்டின் மூன்றாவது வாசலுக்கு உட்புறம் ஓர் அரை அடிக் குழி தோண்டி, அதில் இந்தத் தேங்காயை வைத்துத் தரையைப் பூசி மூடிவிடு. இந்த நவக்ரஹப் பிரதிஷ்டையாகி ஆறுமாதம் வீட்டைப் பூட்டிவிட்டு எங்கும் போகாதே'' என்றார்.

பாலபட்டாபி ஒருமுறை அடிபட்டதால் இம்முறை பாபா சொற்படியே செய்தார்.

இன்று அவர் வீட்டு வாயிலில் நிலைக்கு உட்புறம், தரைக்குள் நவக்ரஹங்கள் பிரதிஷ்டையான இடத்தைக் காட்டி, ''அந்த இடத்தைத் தாண்டி வெளியிலிருந்து எந்த விபத்தும் இந்த வீட்டுக்குள் நுழைய முடிவதில்லை என்பது எங்களுக்குக் கண்கூடாகத் தெரிந்த சந்தர்ப்பங்கள் பலப்பல'' என்கிறார்.

ஆனால் விபத்து என்பது விரோதியராலும், திருடராலும், அலிகளாலும், விஷ ஜந்துக்களாலும் மட்டும் ஏற்படுவதல்லவே! கர்மாவை ஓரளவுக்கே லேசாக்கும் பாபா இந்த விதங்களில் மட்டுமே விபத்தைத் தவிர்த்திருந்தார்! வெல்ல வியாபாரத்தில் ஏற்பட்ட நஷ்டமோ வேறுவிதத்தில் பெரும் விபத்தாகவே இருந்தது. அதைத் தொடர்ந்து இவரது மனம் உலைந்த உலைப்பு! இந்த உள் விபத்தைத் தடுக்க, இவரது மன வாயிலில் ஒரு விக்ன யந்திரமும் போடாமலே ஸ்வாமி விளையாடினார்!

''அடித்தாலும் நீயே, அணைத்தாலும் நீயே'' என்று பர்த்திக்கே ஓடினார் பட்டாபி. மூன்று நாட்கள் சித்ராவதித் தண்ணீரையும், பழனைப் பிரஸாதமான பப்பாளித்துண்டத்தையோ அல்லது ஒரு பிடி பொறியையோ மட்டுமே உண்டு உபவாசமிருந்தார்.

அடித்த கை அணைக்க வந்தது!

பாபா இவரை அன்போடழைத்து, ''பாவம்! பங்காரு.. ஊருக்குப் போகிறாயா?'' என்று கேட்டுக் கையை அசைத்தார். முன்பு நவக்ரஹங்கள் தந்தார். இப்போது நவ அநுக்ரஹ

Koviloor Digital Library

மூர்த்திப் பதக்கங்கள் கையசைப்பில் வந்தன. பாலஸாயிக் கோலத்திலிருந்து அன்றுள்ளது வரையிலுமான தமது ஒன்பது வித உருவங்களைத் தாங்கிய லாக்கெட்டுகளை பாலபட்டாபிக்கு வழங்கினார். நவ வித பக்தியில் முன்னேறி முன்னேறி, அவற்றின் இறுதியான ஆத்ம ஸமர்ப்பணத்தில் இவர் நிறைய வேண்டும் எனத் திருவுளக் குறிப்போ?

வியாபார நஷ்டம் பற்றி எதுவுமே கேளாமல், இவராக வும் சொல்லவிடாமல், அனுப்பிவைத்து விட்டார்! மாயாவி தான்!

உடுமலை போனவரை மறுபடி சுண்டி இழுத்துக் கொண் டார்.

* * *

இம்முறை சித்ராவதியில் ஏக வெள்ளம். புக்கபட்டணத்தின் அக்கரையில் விடப்பட்ட பாலபட்டாபி, 'ஐயோ! இன்று குரு வாரமாயிற்றே! மணி மாலை ஆறு ஆகிவிட்டதே! இவ்வளவு தூரம் வந்தும் வெள்ளம் என்பதால் பர்த்தி போகாமல் இங்கே உட்கார்ந்திருக்கிறேனே' என்று குமுறிக் கொண்டிருந்தார்.

நேரம் போகப்போக அவருக்கு இருப்புக் கொள்ளவே யில்லை. புக்கபட்டணம் கர்ணத்தின் வீட்டில் சாமான்களைப் போட்டு விட்டு ஒரு பையும் துண்டும் மட்டும் எடுத்துக்கொண்டு கிளம்பியே விட்டார், புட்டபர்த்தியை நோக்கி.

குருவாரத்தில் இவர் எப்போதும் உபவாசம். இப்போதோ, நேற்றுப் புதன்கிழமை பகல் புறப்பட்டதிலிருந்தே பட்டினி. அதையும் பொருட்படுத்தாமல் பல வழிகளைப் பிடித்து, நாலுமைல் நடந்து, ஜானகம்பள்ளி அடைந்து, சித்ராவதிக் கரைக்கே வந்து விட்டார்.

அப்புறம்? முக்காலே மூணுவீசம் கிணறு தாண்டினாலும் கூடப் பலன் உண்டா என்ன?

கரை புரண்டோடும் சித்ராவதியைக் கடப்பது எப்படி? தன்னந்தனியே தவித்து நின்றார்.

மணி ஏழரை. முன்னிருட்டுக் காலம். சுழித்தோடும் வெள்ளத்தின் பயங்கர ஓலம். அதோடு நரிகளின் கர்ணகடோர மான ஊளை வேறு!

நதியைக் கடக்க முடியாது என்பது மட்டுமில்லை. மறுபடி புக்கபட்டணமும் போக முடியாது. ஏனெனில் இவர் வரும் போதே கொத்தசெருவுவில் உயர்ந்துகொண்டு வந்த கடைவழி யின் நீர் மட்டம் இப்போது ஆள் உயரத்துக்கு மேல் போயிருக் கும்! அதைக் கடந்து செல்ல முடியாது!

Koviloor Digital Library .

''ஸாயிராம், ஸாயிராம்'' என்று நெஞ்சு நைந்து, சொல்லிக் கொண்டு, விநாடி விநாடியாக ஏழே முக்கால், எட்டு, எட்டரை என்று மணியைப் பிடித்துத் தள்ளினார்.

நிலா உதித்தது. உலகின் அவலங்கள் எதனாலும் தொடப்படாமல் விண்ணிலிருந்து வெள்ளியை அள்ளிச் சொரிந்தது.

நீர்ப்பெருக்கு தங்கத் தகடாகத் தகதகத்தது.

பக்திப் பெருக்கு அதைவிட உந்திவந்தது; பிடரியைப் பிடித்துத் தள்ளியது.

வெள்ளத்திலேயே இறங்கிவிட்டார் பாலபட்டாபி!

நெஞ்சளவுவரை நீர் வந்தது. உயிராசை விடுகிறதா? தள்ளாடித் தள்ளாடித் திரும்பினார்.

பாபா ஆசையும் விடவில்லை. மீண்டும் இறங்கினார்.. மறுபடி திரும்பினார்.

வியாபார நஷ்டத்தை எண்ணினார். ஊரில் தலைகாட்ட முடியாத நிலை நெருங்கிவருவதை நினைத்தார். 'ஆஹா, இதற்கு மரணமே பகவான் அருளும் பரிகாரமோ? அவரைக் காணச் செல்லும்போதே வெள்ளத்தில் இந்த உயிரை எடுத்துக் கொள்வாரானால் அப்படித்தான் நடக்கட்டுமே!'

'இம்முறை திரும்புவதில்லை' என்ற அசாத்திய துணிச்சலுடன் ஆற்றை நோக்கி நடக்கலானார்.

''அப்பாயி, நாயனா!''

அமுதனின் குரலல்லவா? மெய்தானா? அப்பன் வந்து விட்டானா?

பட்டாபி திரும்பிப் பார்த்தார்.

இக்கரையில் தோளில் கம்பளி போட்டுக்கொண்டு தடியூன்றி ஒரு கிழவனார் நிற்கக் கண்டார். ஸ்வாமி குரல் என்று நினைத்தது தம் பிரமை என்று நினைத்தார்.

''அப்பாயி, நானும் புட்டபர்த்திக்குத் தான் போகிறேன். என் பின்னாலேயே நீ வா. என்னை விட்டு ஓர் அடி நகர்ந்தாலும் வெள்ளத்துக்கு இரையாவாய். ஜாக்கிரதை!'' என்றார் கிழவர். பாபாவின் குரலிலேயே பேசிய அவர் தம் கையிலிருந்த கோலைப் பட்டாபியிடம் நீட்டிக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளச் சொன்னார்.

திருநீலகண்ட நாயனாரும் அவரது மனைவியாரும் ஒரு கோலின் இரு புறங்களைப் பற்றிக்கொண்டு குளத்தில்

Koviloor Digital Library

இறங்கியதுபோல், மாயக் கிழவரும் பட்டாபியும் சித்ராவதி வெள்ளத்தில் இறங்கினர்.

''இடுப்பளவு நீரில் இறங்கியதுதான் எனக்குத் தெரியும். மறுகணம், நான் பூராவும் நனைந்து மறு கரையில் நிற்பதை உணர்ந்தேன். எப்படி ஆற்றைக் கடந்தேன் என்பதை நான் அறிந்து கொள்ளாவண்ணம் மாயம் செய்து விட்டார். திரும்பித் திரும்பிப் பார்த்தேன். கண்ணெட்டும் வரை பெரியவரைக் காணோம்'' என்று ரோமாஞ்சனமுற்றுக் கூறுகிறார் பட்டாபி.

யமுனை நடுவே விலகி வழிவிடச் செய்ததாகவாவது கண்ணன் வசுதேவருக்குக் காட்டினான். இங்கோ வழிவிட்டது கூடத் தெரிய வில்லை! ''கரை காட்டி ஆட்கொண்டாய்'' என்ற மாணிக்க வாசகத்தை ஸ்தூலமாகவே செய்துகாட்டிவிட்டார்!

தண்ணீர் சொட்டச் சொட்ட, முட்ட முட்ட அநுபவித்த அருளின்பம் சொட்டச் சொட்ட, பாத மந்திரம் அடைந்தார் பால பட்டாபிச் செட்டியார்.

எட்டு மணிக்கு, ''உடுமலைப்பேட்டை அப்பாயி ஒஸ்தாரு'' என்று கூறியபடி பாபா 'கூடுவிட்டதை'யும், எட்டரைக்குத் 'திரும்பி' வந்ததையும், வாயிற்புறம் பார்த்துக் கொண்டே அவர் நிபாராதனை செய்ததையும் அங்கிருந்த பக்தர்கள் சொல்ல, 'உடுமலைப்பேட்டை அப்பாயி' உருகிவிட்டார் உருகி!

பாதத்தில் விழுந்த பட்டாபியின் தலையை அன்போடு கோதித் தூக்கி நிறுத்தினார் கோதிலாக் கோமகன்!

''சாப்பிட வேண்டாம்?'' என்று தேன் சிந்தக் கேட்டார்.

''குருவார உபவாஸம் ஸ்வாமி! ஒன்றும் வேண்டாம்'' என்றார் பட்டாபி, வயிறு காய்ந்து எரிந்துகொண்டிருந்த நிலையிலும்.

பாபாவுக்கு இம்மாதிரி 'முரட்டு' ஆசரணைகள் அடியோடு பிடிக்காதவை. ''இனிய பகவானை இனிக்கவே உபாஸிக்க வேண்டும். இந்திரிய போஷணை கூடாது என்ற அளவில் விரத நியமாதிகள் நல்லவைதாம். ஆனால் தாங்கமுடியாத நிலையில் தங்களைத் தாமே கொடுரமாக வறுத்திக் கொள்வது பேதைமை தான். இதனால் ஒன்றும் பிரேம பகவான் பிரீதி அடைவதில்லை'' என்பார்.

தம் நெஞ்சின்மீதே ஒரு காலிப் பாத்திரத்தை வைத்துக் கொண்டு விளிம்பில் விரலால் தடவினார். பாத்திரத்துள்ளிருந்து கடச்கட பூரிகள் எடுத்து 'அப்பாயி'யிடம் நீட்டினார்.

பூரிக்கவில்லை 'அப்பாயி.'

Koviloor Digital Library

குருவார உபவாஸமாச்சே!

பகவானுக்காக ஓர் ஆசரணையை அநுஷ்டிக்கிறோம். அப்புறம் அந்த பகவானே வந்து, அந்த ஆசரணை வேண்டாம் என்றால் கூட விட மறுக்கிறோம்! ஆஹா, இந்த அஹங்காரம் தான் எத்தனை மாய ரூபங்களில் வந்து சூது செய்து விடுகிறது!

''பல்லியம் இல்லாமல் வாங்கிக்க மாட்டியா'' என்று கேலி செய்து, பூரிக்குத் 'தொட்டுக்' கொள்ள, வெங்காயம் போட்ட மசாலாவை வரவழைத்து, பட்டாபியின் வாயில் திணிக்காத குறையாக வழங்கினார் ஸ்வாமி. (குசபாவின் ஏகாதசி விரதத்துக்கு இதே போல் ஷிர்டி பாபா 'பங்கம்' உண்டாக்கியது நினைவிருக்கிறதல்லவா?)

பகவானின் கட்டளையைவிட ஒரு நியமமுண்டா எனப் பட்டாபிக்குத் தெளிவு பிறந்தது. உண்டார்.

பொருள் உணவு கொடுத்துண்ணச் செய்வித்தே
பசியைப்
போக்கி அருள்புரிந்த என்றன் புண்ணிய நற்றுணையே

என்று வள்ளலார் பாடியதைப் பர்த்தி வள்ளல் மீண்டும் உண்மையாக்கினார்.

ஹாலிலேயே புக்கபட்டணத்திலேயே போட்டுவந்த பட்டாபிக்கு, அனைத்தையும் தம்முள் அடக்கியதால் ஹால்ட்—ஆல் ஆகவே உள்ள ஸ்வாமி, தம் தலையணையையே எடுத்துப் போட்டுப் படுக்கச் சொன்னார். 'கூட்டத்திலே இந்தக் கண்ணனைப் போல் அன்பு செய்பவர் வேறுளரோ?' என்று கவி தெரியாமலா பாடினார்?

பிரயாணக் களைப்பு, பட்டினி இளைப்பு, அநுங்காப்பின் பிரமிப்பு இவற்றால் திருண மாத்திரமாகியிருந்த பட்டாபி வயிறு நிறைந்து மனமும் நிறைந்து நிம்மதியாகத் தூங்கினார்.

காலை ஐந்து மணிக்குப் 'படால்' என்ற முதுகில் விழுந்த அடியில்தான் விழித்தார். அத்தனை செல்லமாக அடிக்கக்கூடியவர்—பாபா அன்றி யார்?

குழம்பி வந்த பட்டாபி தெளிந்து விட்டார்.

ஆனால் இதுவும் தாற்காலிகம்தான். வண்டிச்சக்கரத்துக்கு வெளிப்பட்டை அடிக்கும்போது மாறி மாறிக் காய்ச்சுவதும், நீர்விடுவதும் வழக்கம் அல்லவா? ஸம்ஸாரப் பாதையில் கர்மச் சக்கரம் சுற்றித் திரவும் இப்படிக் கஷ்டத்தில் காய்ச்சுவதும், கருணை நீர் பாய்ச்சுவதும் மாறி மாறி வந்தன.

இப்படி மாறி மாறி ஓடிய சகடம் ஒரு சமயம் தடம் புரண்டு முறிந்து விழும்போலவே ஆயிற்று.

Koviloor Digital Library

வியாபாரம் நொறுங்கி விழுந்தது. வேறுவிதக் குடும்பத் தொல்லைகள் எல்லையைத் தொட்டுவிட்டன. இதற்கெல்லாம் பாபா பக்திதான் காரணம் என்று ஊராரின் பரிகாசம் வேறு!

'என்ன செய்கிறோம், என்ன செய்யப் போகிறோம்?' என்றே தெரியாத நிலையில், மனையாளைத் தன்னந்தனியாக விட்டுவிட்டு, சில நகைகளுடன் வீட்டிலிருந்து ஓடிவிட்டார் பட்டாபி!

பித்துப் பிடித்தவர்போல் கும்பகோணத்திலுள்ள தங்கை வீட்டை அடைந்தார். அங்கும் சிறிதுகூடப் பொருந்தவில்லை. சென்னை சென்றார்.

பர்மாவிலும், மலேயாவிலும் உள்ள தமது பழைய வாடிக்கைக்காரர்களின் நினைவு வந்தது. ஒருகால் அங்கே போய்க் காலூன்றினால் பிறகு மனைவியை அழைத்துக் கொள்ளலாம் என்பதாகத் தீர்மானித்தார்.

தேசத்தைவிட்டே செல்லத் துணிந்துவிட்டார்.

அந்நிய தேசப் பயணத்துக்கான சாங்கியங்களை அவசர அவசரமாக முடித்துவிட்டு, பூந்தமல்லி நெடுஞ்சாலையில் ஸ்ரீ சூரா செட்டியார் வீட்டில் வந்து தங்கினார்.

மறுநாள் காலை கப்பலுக்கு டிக்கெட் எடுக்கச் சரியாக இந்நூறு ரூபாயுடன் கஸ்டம்ஸ் ஹவுஸ் சென்றார்.

டிக்கட் வாங்க ஜேபியில் கைவிட்டபோது, ஹா,பாழும் கர்மா மறுபடி பழிவாங்கிவிட்டது!

பணத்தைக் காணோம்.

இதற்காக, முன்வைத்த காலைப் பின் வைப்பதில்லை; மறுபடி போய்ப் பணம் கொண்டுவரலாம் என்று பூந்தமல்லி ஹைரோடு ஜாகைக்குத் திரும்பினார்.

சூரா செட்டியார், "உங்களுக்குக் கடிதம் வந்திருக்கிறது" என்றதுமே பட்டாபிக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'தான் சென்னை வரப் போகிறோம், வந்தாலும் இன்ன இடத்தில் தங்கப் போகிறோம் என்பது தனக்கே முந்தாநாள் வரை தெரியாதபோது இந்த முகவரிக்கு எவர் எழுத முடியும்?'

கவர் கைக்கு வந்தது!

முகவரியின் எழுத்து! நிஜமா? ஸ்வாமியா எழுதியிருக்கிறார்? முத்து முத்தான எழுத்தில் முத்தனின் முத்து முறுவல் தெரிகிறதே!

உறையை உடைத்தார். எழுதியது ஸாக்ஷாத் ஸ்வாமிதான். இரண்டு நாள் முன்பே இந்த நேரத்தில் இவர் சூரா செட்டியார்

Koviloor Digital Library

விட்டிலிருப்பார் என்றறிந்து கடிதம் எழுத ஸ்வாமியை அன்றி யாரால் முடியும்?

மைக்குப் பதில் அமிருதத்தைத் தோய்த்து எழுதப்பட்ட அக் கடிதம் இன்றும் பட்டாபியிடம் பொக்கிஷமாக உள்ளது.

துள்ளி எழும் உள்ளத்தோடு கடிதத்தைப் படித்தார் பட்டாபி:

> ப்ரிய பக்துடைன பால பட்டாபிகு..........
> நா மாட வினு. இண்டிகி வெள்ளு. இண்டிகி வெள்ளு. இண்டிகி வெள்ளு. நா மாட வினு. நீ க்ஷேமமு கொறகு செப்புதானு. இண்டிகி வெள்ளு.
>
> இட்லு
> பாபாகாரு

> (பிரிய பக்தன் பால பட்டாபிக்கு........
> என் வார்த்தையைக் கேள். விட்டுக்குப் போ. விட்டுக்குப் போ. விட்டுக்குப் போ. என் வார்த்தையைக் கேள். உன் க்ஷேமத்தைக் குறித்தே சொல்கிறேன். விட்டுக்குப் போ.
>
> இப்படிக்கு
> பாபாகாரு)

மாலை மாலையாகக் கண்ணீரை வழிய விட்டுக்கொண்டு நின்றார் பட்டாபி. 'ஸர்வலோக நாயகன், என் வாழ்க்கையை அனவரதமும் அணு அணுவும் கண்காணித்து, கருணைபாலித்து, நன்மையே கோரி உத்தரவிடுகிறான்!'

மலேயா, பர்மாவுக்கு ஓடுகிற எண்ணம் ஓடிற்று. கப்பலுக்கு டிக்கட் வாங்கவொட்டாமல் பணத்தைப் பறி கொடுக்க வைத்ததிலும் கருணை மனத்தின் மணமே இப்போது வீசிற்று!

தன்னை இப்படிக் கிட்டியிருந்து கட்டிக் காக்கும் பிரபுவிடம் ஓட உள்ளம் விழைந்தது. சென்னையிலிருந்து நேரே பர்த்திக்குப் புறப்பட்டார்.

ஆஹா, இங்கேதான் அஹங்காரம் இன்னொரு மர்மச்சாயலில் தலைதூக்கிவிட்டது. பாபாகாரு சொன்னது, ஒரு முறைக்கு மும்முறையாகச் சொன்னது, ''விட்டுக்குப் போ'' என்று. அப்படியும் இவர், உடுமலைப்பேட்டை போகாமல் பர்த்திக்குப் போகிறார்!

பக்தியாம், நன்றியாம்! ஆக, அவர் சொன்னபடியே அடங்கிக் கிடக்கும் பரிபூரண சரணாகத நிலை இன்னம் வாய்க்கவில்லை.

அது இவருக்கு வாய்த்தாலொழிய அவரும் விடுவதாக இல்லை.

Koviloor Digital Library

எனவே பர்த்திக்கு வந்து பழியாகக் கிடந்த பட்டாபியை ஏறெடுத்தும் பார்க்கவில்லை பாபா. நூற்றுக்கணக்கான மைல் களுக்கப்பால் உடலிருந்து காத்த தெய்வம், பக்கத்தில் வந்த போது பாராமுகமாயிருந்தது! இருவேறு துருவங்களாகத் தோன்றும் பரிவும் வைராக்கியமும் அற்புதமாக சங்கமிக்கும் ஸ்தானமன்றோ பாபா?

உண்ணா நோன்பிருந்தால் அவரை இளக்கி விடலாமென்று எண்ணிவிட்டார் பட்டாபி. விளைவு: மூன்று முழு நாட்கள் வயிறு காய்ந்தது மட்டுமே! ஒரு விம்மைத் தீர்க்க இன்னொரு விம்மைச் செய்தால் பாபா 'வழிக்கு' வந்து விடுவாரா என்ன? பாபாவிடம் தமக்குப் பக்தி, பாபாவுக்குத் தாம் நன்றி செலுத்த வேண்டும் என்பவைவற்றிலுள்ள அஹங்காரம் கூட இவருக்குப் போய், 'அவர் எப்படிவிட்டாரோ, அப்படி; அவர் எப்படிச் சொன்னாரோ அப்படி' என்ற பரிபூரண அடைக்கல மதியை அருளுவதில் பாபாவும் படு விம்பாக இருந்தார். 'வீட்டுக்குப் போகச் சொன்னால் அதை மீறி இங்கு ஏன் வரவேண்டுமாம்?'

மூன்றும் நாளிரவு. நள்ளிரவு.

பாபாவுக்குக் கடிதம் எழுதி அதைத் தம் கைப்பைக்குள் போட்டு அவரது அறைவாசலில் வைத்துவிட்டு பட்டாபி புறப் பட்டார். கடிதத்தில் என்ன எழுதினார்?

பகவான் பாபா அவர்களுக்கு,

> என்சகல விஷயங்களும் தங்களுக்குத் தெரியும். நான் ஓடோடியும் வந்தேன். மூன்றுநாள் நிகழ்ச்சி களால் நான் தாங்களிடம் வைத்திருந்த உறுதியைக் கொஞ்சம்கூடக் கைவிடவில்லை. ஆனால் இந்த உலக வாழ்க்கை என்னை விரட்டி ஓட்டுகிறது. தங்கள் பாதங்களில் சேர்த்துக்கொள்ளுங்கள். இதுவே என் முடிவான தீர்மானம்.

அன்று தேசத்தை விட்டோட எண்ணினார்; அதைத் தடுத் தார் பாபா. இன்று உலகத்தையே விட்டோட எண்ணி, 'முடிவான தீர்மானம்' பண்ணிவிட்டார் — முடிவு செய்யும் அதிகாரம் இவர் கையில் இருப்பதுபோல்!

தற்கொலைக்குத் துணிந்துவிட்டார்! பாபாவின் பாராமுகம் ஒருபுறம் அறுத்தது. அவர் சொற்படி வீடு திரும்பினாலும், தாம் கிளம்பியபோது அங்கிருந்த அவலச் சூழ்நிலை இப்போது மட்டும் எப்படி மாறியிருக்கும் என்ற ஐயம் மறுபுறம் அறுத்தது. இதற்கெல்லாம் தீர்வு தற்கொலைதான் என்று தீர்மானித்து விட்டார்.

சித்ராவதிக்குப் போகும் வழியில் சுண்ணாம்புக் காளவாய் அருகே உள்ள கிணறு, எல்லோரும் உதறித்தள்ளிய பட்டாபியை ''வா, வா'' என்று வாய் திறந்து அழைத்தது!

Koviloor Digital Library

அதன் ஒட்டிலே வந்து நின்றார். இந்த ஜன்மத்தின் ஒட்டுக்கும் வந்தாயிற்று. இரு கைகளையும் கூப்பிக் கொண்டார். மற்ற விதங்களில் எத்தனை எத்தனை எத்தனை சலனமிருந்தாலும், 'இவரே தெய்வம்' என்பதிலே சற்றும் சலிக்காமல் தாம் வணங்கும் தேவதேவனை நினைந்தார். நாத்தழும்பேற நவின்றுள்ள அவரது திவ்யநாமத்தை மும் முறை கூறினார்.

"ஓம் ஸ்ரீ ஸாயிராம், ஓம் ஸ்ரீ ஸாயிராம்,
ஓம் ஸ்ரீ ஸாயிராம்!"

எழும்பினார் ஓர் எழும்பல்! மறுபடி கால் பூமியில் பாவாது. கிணறு முடிந்த முடிவாக அடைக்கலம் தரப்போகிறது!

ஆஹா, இதென்ன! திடுமென, திண்ணென, பின்புறமாகக் கழுத்தை வளைக்கிறதே ஓர் இரும்புக் கரம்! சரசர சரசரவென்று தன்னை ராம சரமாகத் தள்ளிக் கொண்டே போகிறதே! அந்தப் புயல் வேகத்தில் பட்டாபிக்கு ஏதுமே புரியவில்லை.

ஏதோ ஒரு கதவு திறக்கப்படுகிறது — படீரென்று. தடாலென்று உள்ளே தள்ளப்படுகிறார் பட்டாபி.

எழுந்து பார்க்கும்போதுதான் தெரிகிறது—அது பாத மந்திரத்தில் ஸத்யஸாயீச்வரனின் அறை. அங்கே தம்மைக் கொண்டு வந்து தள்ளியது, பிரபுவேதான்!

கிணற்றில் பிணமாக மிதக்க வேண்டியவனை க்ஷணத்தில் பறந்து வந்து காத்து, நெருக்கித் தள்ளிக் கொண்டுவந்த ஸர்வக்ஞன், ஸர்வசக்தன், இதற்கெல்லாம் மேலாக தயாஸாகரன் 'நானா இத்தனையும் செய்தேன்?' என்பது போல் கட்டிலில் சாவதானமாகப் படுத்துக்கொண்டிருந்தார். தரையில் உட்கார்ந்த பட்டாபி, அவரது நெஞ்சுக்கு நேர் தம் கைகளைக் கட்டில் விளிம்பில் வைத்து அதிலே தலையைச் சாய்த்து அப்படியே உறங்கி விட்டார்.

செல்லமான அடி வழக்கமான ஐந்துமணிக்குப் பட்டாபியின் முதுகில் விழ, விழித்துக் கொண்டார்.

பத்மபாதங்களைப் பற்றிக் கண்ணில் ஒற்றிக்கொண்டார்.

"ஏன் வீட்டுக்குப் போகாமல் இங்கு வந்தாய்?" என்று பாபா கேட்டார்.

"தங்களுக்குத் தெரியாதா? ஊர் சூழ்நிலை... என்னைத் தாங்கள்தான் காப்பாற்றவேண்டும்" என்று தேம்பிக்கொண்டு அவர் பாதங்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார் பட்டாபி.

ஸ்வாமி கலீரென்று சிரித்தார். விடியற்காலையில் விடிவு தரும் வடிவாக, மதுர மதுரமாகப் பாடலானார்:

Koviloor Digital Library

''ஸ்ரீமந் நாராயணனே ராமனாக வந்து மனைவியை அரக்கனிடம் பறிகொடுக்கவில்லையா?

''சக்கரவர்த்தி ஹரிச்சந்திரன் மயானத்தில் பிணம் சுடவில்லையா?''

இப்படியே போயிற்று பாடல்.

''யார் யார் நிலை எப்படி எப்படி இருக்கும் என்பதை ஸ்ரீ ஸாயியே அறிவார்!'' என்று முடிந்தது.

* * *

இன்று சரணாகத லக்ஷணத்தில் மேன்மேலும் முன்னேறி ஞான பக்தராக நிற்கிறார் ஸ்ரீ பால பட்டாபிச் செட்டியார். மேற் சொன்ன சம்பவத்துக்குப் பின்னும், கர்மச் சுழலும் கருணைப் புயலும் பலவாறாக அவரை ஆட்டின. இத் தம்பதியருக்குப் பிள்ளை ஆசையே போன பின், இவரது மனையாளிடம் பாபா புத்தம் புது துளசி ஹாரத்தை ''வரவழைத்து'' வீச, பத்தாம் மாதம் புத்திரி ஸாயிலீலா பிறந்தாள்.

வியாபாரத்தில் பல வழுக்கல் சறுக்கல். வியாதிகள் வேறு.

சொல்லொணாக் கஷ்டங்களும், அவற்றுக்கு இணையிலாப் பரிகாரங்களும் மாறி மாறி வந்தன. மாபாரதமாக விரியும் இவற்றில் எதைச் சொல்ல, எதை விட?

ஒருமுறை பால பட்டாபி வர்த்தக வரி செலுத்தவில்லை என்பதாகக் கைதிக் கூண்டில் ஏற்றப்படவேண்டிய தருணத்தில், இவர் அதிகப்படியாகவே செலுத்தியிருப்பதாக வெளியாகி, இருநூற்றுச் சொச்சம் ரூபாய் ரீஃபண்ட் பெற்று, அதைக் கொண்டு பாபாவுக்கு லக்ஷார்ச்சனை செய்தாரே, அதைச் சொல்லவா? வெளியூர் ஒன்றில் பட்டாபியிடம் புது சிநேகிதம் கொண்டாடி, விடுதியில் இவருடன் ஒண்டிக் கொண்டவன் நள்ளிரவில் இவரைத் தீர்த்துக்கட்டி விட்டுப் பணத்தைப் பறிமுதல் செய்ய வந்தபோது, கட்புலனாகாத ஸாயிசக்தியால் தூக்கிஎறியப் பட்டுத் துத்தநாகத் தடுப்பில் மோதி விழுந்தானே, அச் சத்தத்தில் மற்றோர் விழித்தெழுந்து பட்டாபியைக் காக்க வந்தனரே, அதைச் சொல்லவா? ஒரு காலத்தில் மாதம் ரூ.750 விற்பனை வரி செலுத்திய பட்டாபி நொடித்து விழுந்து, ''பாபா பாபா என்று சொல்லிப் பாபர் ஆனான்'' என்று ஊரார் சிரிக்க, கடனில் சரக்குப் பிடித்து வரச் சென்னை புறப்பட்ட பரிதாபத்தைச் சொல்லவா? கோ-டவுன் தெரு வாடிக்கைக்காரர் இவரை நம்பி ஆயிரம் ரூபாய்ச் சரக்குக்கூடத் தர மறுத்துப் பரிகாசம் செய்த பரிபவத்தைச் சொல்லவா? இதற்கெல்லாம் அற்புத பரிகாரமாக எதிர்க்கடைக்காரர் இவரை ''முதலாளி'' என்றழைத்து, ஏதோ ஆதி கால செய்ந்நன்றிக்காக, இப்போது 23000 ரூபாய்ச் சரக்கை இவரிடம் பரம மரியாதையுடன் கொடுத்ததைச்

Koviloor Digital Library

சொல்லவா? இதற்கும் மேலாக, இதைக் கவனித்த வாடிக்கைக் காரரும் இவரை வலிய அழைத்துத் தாமும் மூவாயிரம் ரூபாய்ச் சரக்கை வற்புறுத்தியளித்ததைச் சொல்லவா? ஸாயியின் சூக்ஷ்ம விரல்கள் ஆட்டிய கயிறுகளில்தான் இத்தனை பொம்மலாட்டமும் நடந்தது!

பிரசாந்தி நிலயத்திலேயே குழந்தை ஸாயிலீலா மணிக் கணக்காக யமலோக நுழைவாயிலில் நின்று பாலபட்டாபி தம்பதியரைப் பதறடித்ததைச் சொல்லவா? கடைசியில் நம் ஸ்வாமி அருளில் அவள் தீக்கனவிலிருந்து எழுந்தது போல் க்ஷணத்தில் குணமுற்றதைச் சொல்லவா?

ஸ்வாமியின் விருப்பமின்றியே பாலபட்டாபி குடும்பசகிதம் மாதக் கணக்கில் புட்டபர்த்தியில் வசிக்க, அத்தனை நாட்களும் ஐயன் இவரைக் கண்ணெடுத்தே பாராமல் தவிக்கச் செய்ததைச் சொல்லவா? இதுவும் போதாதென, பட்டாபி தங்கியிருந்தது உட்பட அவ்வரிசையில் எல்லா ஜாகைகளையும் (பிரசாந்தி நிலயப் புத்தமைப்பை முன்னிட்டு) இடித்துவிட வேண்டுமென உத்தர விட்டுவிட்டு, ஸ்வாமி பெங்களூருக்குச் சென்ற சோதனையைச் சொல்லவா? பாபா போட்ட கோட்டைத் தாண்டாத பிரசாந்தி நிலய ஊழியர்கள் அவ்வாறே இடிக்க வரும் அயனான சந்தர்ப்பத்தில், பாபா பெங்களூரிலிருந்து ஃபோன் செய்து இடிக்க வேண்டாம் என ஆக்ஞையிட்டதன் இனிமையைச் சொல்லவா? இப்படி அனந்தம்.

சரணாகத புத்தி இத்தனைக்கு நடுவிலும் சிறுகச் சிறுக இத் தம்பதியருக்கு வளர்ந்தது. 'அவர் நடத்துகிறபடி நடத்தட்டும்' என்பது வெறும் பேச்சாக இல்லாமல் வாழ்வுத் தத்வமாகவே ஆகிவிட்டது!

''பைத்தியம் மாதிரி அங்குமிங்கும் திரியாதே. இருக்கிற இடத்திலேயே இரு'' என்று பாபா இவருக்கு மீண்டும் மீண்டும் எழுதினார். இது உடலால் அலைகிற அலைச்சலை மட்டும் குறிப்ப தல்ல. மனத்தை அலையவிடாமல் ஸ்திதபிரக்ஞனாக இருக்க உபதேசித்தார்.

பாபா சொல்லும் பரமதத்வ விளக்கங்களைக் கட்டுக் கட்டாக நோட்டுகளில் எழுதி, அவற்றை அலசி, அலசி, தம்மால் முடிந்த மட்டில் நடைமுறைக்குக் கொண்டுவரலானார் பட்டாபி. நாள்தோறும் ஸாயிநாமத்தை மணிக்கணக்கில் ஜபித்தும் எழுதியும் சித்த சுத்தி பெறலானார்.

லௌகிக ரீதியில் பார்த்தால் இன்று இத்தம்பதியர் ''பாபா பாபா'' என்று கொண்டாட வேண்டியதேயில்லைதான். ஆனால் லௌகிகம் இப்போது இவர்களுக்குப் பெரும்பாலும் துச்சமாகி விட்டது. ஸாயிக்காகவே ஸாயி, இன்னொன்றுக்காக இல்லை என்ற பான்மை வேரூன்றிவிட்டது. அந்த ஸாயிகூட ஸ்தூல ஸாயி அல்ல. இவர்கள் இப்போது முந்தைய பறப்போடு பர்த்திக்கு ஓடுவதில்லை. எப்போதேனும் செல்கிறார்கள். பட்டாபியின்

Koviloor Digital Library

கழுத்தில் கைவளைத்துக் கொஞ்சிச் சீராட்டிய பாபாவும் இன்று அவரை விசேஷமாகக் கண்டு கொள்வதுகூட இல்லை. அதனால் இவர் தாபப்படுவதும் இல்லை!

ஆத்மாதான் பாபா என்ற பரமதத்வத்தை உணர்ந்து நிம்மதியாய், நிச்சிந்தையாய் வாழ்கிறார் பட்டாபி. லீலாநிமித்தம் அவர் செய்யும் பிரேமையைப் புளகித்துப் போற்றுகிறார்!

பக்குவமாவதற்கு விழையும் பக்தர்களின் உடன் இருந்து எக்காலமும் பாபா உத்தாரணம் தருகிறார் என்பதற்கு ஓர் உதாரணமாகவே இங்கு பால பட்டாபியவர்களது அநுபவங்களில் சிலவற்றை விரிவாகப் பார்த்தோம்.

"குச்சியால் குத்தித் தூண்டி விடுவதால் விளக்கைப் பிரகாசப்படுத்துவது போல், மேன்மேலும் வந்த கஷ்டங்களால் பாபா என்னைப் பொலிவிக்கவே செய்தார். முக்கியமாக அவர் செய்த உபதேசம், நான் உடலாலும் உள்ளத்தாலும் ஓடித் திரிந்துகொண்டேயிராமல், இருக்குமிடத்திலேயே ஆத்ம ஸ்வரூபமான அவரை அநுபவித்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதைத்தான்" என்று கூறுகிறார் ஸ்ரீ பால பட்டாபிச் செட்டியார்.

★

இப்படி பாபாவின் அத்யந்த ரக்ஷணையை அனவரதமும் பெற்றுவரும் அடியார்கள் எண்ணிலர். அவர்களில் பலரை வெளி உலகம் அறிந்தேயிராது. இதனினும் வேடிக்கை, அவர்களில் சிலருக்கே பாபா தங்களை ரக்ஷித்து வருவது தெரியாமலும் இருக்கலாம்.

ஆரம்ப காலங்களில் பாபா தமது அருள் என நன்றாகத் தெரியும் விதத்தில் காப்புத் தந்து பக்தியை வலிவாக்குகிறார். பிறகு மட்டும் அவரது காப்பு நின்றுவிடுமா, என்ன? அல்லவே அல்ல. பக்தரைவிட்டு அவர் விலகி நிற்கவே மாட்டார். ஆனால் "காப்பு" என்பது உண்மையில் பக்திக் கவசம் தானேயன்றி, வெளிவிஷயங்கள் நமக்குச் சாதகமாக அமைவதல்ல. எனவே போகப்போக வெளி விஷயங்கள் கர்ம தர்மத்தை அநுஸரித்து நமக்கு பாதகமாகவும் இருக்கவிடுகிறார்; ஆனால் இதனால் நம் உள்ளம் அவ்வளவாகப் பாதிக்கப்படாமல் பக்திக் காப்பையே பெரிதாக மதித்துப் பூண்டிருக்கச் செய்கிறார்.

அநேக பக்தர்கள் தங்கள் குடும்பப் பிரச்னைகளில் பாபா இடைவிடாமல் ஈடுபட்டு நின்று நேரடியாகவோ, ஸூக்ஷ்மமாகவோ அற்புதத் தீர்வு தந்து வருவதை ஆண்டாண்டுக் காலமாக உணர்ந்து உருகி வருகிறோம். வறுமை, வியாதி, மனக் குமுறல்கள், பந்து மித்ரர்களின் மனபேதம், விபத்து இம்மாதிரியான பல அம்சங்களில் அவரது அருட்காப்பு புரியும் அற்புதத்தை உணர்ந்து வருகிறோம். பஸ்ஸில் இடம் கிடைப்பதிலிருந்து பரமபதத்தில் இடம் பெறுவது வரை, பள்ளிக்கூட அட்மிஷனி

Koviloor Digital Library

லிருந்து பரலோக அட்மிஷன் வரை, இது சின்னஞ் சிறு விஷயம், இது பென்னம் பெரும் பிரச்னை என்ற வித்தியாசமின்றி அவர் தீர்வு தருகிற அலுக்காத சலிக்காத அபரிமித காருண்யத்தைப் பற்றி ஸாகரமான கண்ணீரிலேயே எழுதினாலும் போதாது. இதனால் எல்லாப் பிரச்னைகளையுமே அவர் தீர்த்து விடுகிறார் என்று அர்த்தமில்லை. தீர்க்காத போதும்கூட அவர் உடனிருந்து பார்த்துக் கொண்டிருக்கிறார் என்பதில் ஐயம் எழுவதில்லை. அவர் உடனிருக்கிறார் என்பதே தோல்வியிலும் ஒரு தெம்பை அளிக்கிறது. எக்காலமும் உள்ளும் புறமும் சுற்றிச் சூழ்ந்து பக்த வாத்ஸல்யம் பாராட்டுவதில் ஸாயிமாவுக்கு நிகர் ஸாயிமா தான்!

Koviloor Digital Library

அத்தியாயம்—30

சுபம் எய்து சுப்பம்மா

எவன் மரண காலத்திலும் என்னையே சிந்தித்துக் கொண்டு உடலைவிட்டுச் செல்கிறானோ அவன் என் நிலையையே அடைகிறான். இதில் ஐயம் இல்லை.

— கீதை 8.5

''ஸாயி லீலா தரங்கிணி'' என்று ஒரு புது காப்பியம் உருவானால் அந்த விளையாட்டலைகளில் பல பழைய மந்திரத் திவலையே மோதி வீசியதைப் பார்ப்போம்.

அலைகடல் திடுமெனப் பாலையானது போல் மந்திரத்தை வெறிச்சோடச் செய்துவிட்டு அவர் வெளியூர்கள் சென்று அங்கு லீலா தரங்கங்களை வீசுவார்.

* * *

தரங்கக் கடலான வங்க விரிகுடா. மசூலிப்பட்டணக் கடற்கரை. அடியார்களோடு கடற் காற்றினும் இனிய பூங் காற்றாக உலவுகிறார் ஸ்வாமி.

''ஐயனே வா, வா'' என்று அலைகள் அழைக்கின்றனவா?

அழைப்பை ஏற்று விட்டார் பாபா.

விடு விடுவென்று கடலுள் புகுந்து போய்க்கொண்டே இருக்கிறார்.

ஸ்வாமி ஸமுத்ரத்துக்குள் சென்று விட்டார் என்று பக்தர்கள் புரிந்துகொள்ளவே சிறிது நேரம் பிடித்தது! அனைவரும் அதிர்ந்திருந்தபோது, ''இதோ இங்கே'' என்று கடலோசைக்கு மேலாக அலைகளுக்கு நடுவேயிருந்து அமுதனின் குரல் ஒலித்தது.

Koviloor Digital Library

அங்கே பார்த்தால்.... பார்த்த கண்கள் பனித்தன.

சித்திரங்களில் மட்டுமே நாம் பார்த்துள்ள ஆதிசேஷன் ஆழ்கடலில் பாய்விரித்து, அதற்குத் தன் படத்தாலேயே விதானமும் அமைத்திருக்கிறன். அந்தப் பாம்பணைமீது பள்ளி கொண்டிருக்கிறார் பாபா!

க்ஷீர ஸாகர சயனன் லவண ஸாகர சயனனாக, லாவண்ய ஸாகரனாகக் காட்சி தருகிறான்!

''வங்கமலி தடங்கடலுள் அனந்தனென்னும் வரியரவின் அணை துயின்ற மாயோன் காண்மின்'' என்று ஆழ்வார் சொன்னது வங்கவிரிகுடாவில் பிரத்யக்ஷமாக விரியக் கண்ணாலே கண்டனர், பாக்யசாலி பக்தர்கள்.

மறு நிமிடமே கடலிலிருந்து பாபா வெளிப்பட்டு அவர்களருகே நின்றார். வஸ்திரத்தில் துளி ஈரம் இல்லை! அதுதான் ஈரம் அத்தனையும் நெஞ்சிலேயே இருக்கிறதே!

* * *

கடற்கரைகளில் அவர் செய்துள்ள லீலைகள் அனந்தம். பல சமயங்களில் வெள்ளிக் கோப்பையை (அது எங்கிருந்துதான் வருமோ) கடலில் மிதக்க விடுவார். அது கடல் நீரை அள்ளிக் கொண்டு இவர்களிடமே திரும்பிவரும். ''எல்லோரும் உப்புத் தண்ணீரைச் சாப்பிடுங்கள்'' என்று சொல்லிக்கொண்டு உடன் வருவோர் கைகளில் அதை ஊற்றுவார். கோப்பை குடத்தை விட அதிகமான நீரை அத்தனை பேருக்கும் கொடுத்து விடும். நீரா? இல்லை. பக்தர்கள் இந்த பூவுலகில் ருசித்தேயிராத, ருசிக்கவே முடியாத, ஒரு தீஞ்சுவை ரஸமாக உப்பு நீர் மாறியிருக்கும்! இதை 'அம்ருதம்' என்றே ஸாயி பக்தர் கூறுவர். ஆயினும் இது சிரஞ்ஜீவித்வம் அளிக்க வல்லதல்ல. மனிதப் புலன்களுக்குப் பிடிபடாத தேவ, கந்தர்வர்கள் (பூத, பைசாசங்களும் கூடத்தான்) உண்மையிலேயே இருப்பதாக உணர்ந்துள்ள பலர், தேவ சக்திகள் தயாரிக்கும் ஒரு பானத்தையே பாபா வரவழைத்து 'அம்ருதம்' என வழங்குவதாக நினைக்கிறார்கள்.

(கடற்கரையில் மட்டும் என்றில்லை. எங்கிருந்தாலும் அங்கை அசைப்பிலே ஒரு சிறிய பொம்மை வெள்ளிக் கூஜாவை 'வரவழைத்து' அதிலிருந்து நூற்றுக்கு மேற்பட்டவர்கள் வாயில் அவரே நேராக அமுதத் துளிகளை வார்த்த ஸந்தர்ப்பங்கள் பல. வைகுண்ட ஏகாதசிதோறும் அம்ருதம் வழங்கும் வழக்கத்தை நாலைந்து ஆண்டுகளுக்கு முன்பு வரை அவர் கடைப்பிடித்திருக்கிறார்.)

சென்னையிலிருந்து ஓராண்டு வைகுண்ட ஏகாதசியன்று மாமல்லபுரம் கடற்கரைக்கு அன்பர்களோடு சென்று அங்கே அமுதம் ஈந்தார். தளுக்கும் குலுக்குமாக அன்று இவர் ஒயில்

Koviloor Digital Library

நடையிட்டு ஒய்யாரமாகப் பேசியதைக் காண, மோஹினியே மீளவும் வந்து அம்ருதம் பறிமாறுகிறளோ என்றிருந்ததாம். ''பெண்ணாகி அமுதூட்டும் பெருமானார் மருவினிய தண்ணார்ந்த கடல் மல்லை'' என்ற பிரபந்த வாசகத்தைப் பிரத்யக்ஷமாக்கி விட்டார்!

அசுரரை ஏமாற்றி அமரருக்கு மட்டுமே அமுதூட்டினாள் பழைய மோஹினி. அப்படி வஞ்சகம் செய்யாமல் பிரேமையால் வேறு ஒரு வித ஏமாற்று விளையாட்டை இங்கும் ஸ்வாமி செய்தாராம்.

மாமல்லபுரத்துக்கு உடன் வந்த அடியாருக்கும் பிடிபடாமல் கடற்கரையோடு போய்க்கொண்டேயிருந்தாராம்.

அங்கே ஓரிடத்தில் வலைஞர்கள் நிறைய இருந்தனர். அவர்களுக்கு இவரைப் பற்றி ஏதுமே தெரியாது. அதனாலென்ன? 'கைவருந்தி உழைப்பவர் தெய்வமான' நம் அப்பனுக்கு அவர்களைத் தெரியுமன்றோ? அதனால், கடலிலிருந்து அமுதெடுத்த அமுதன் கூப்பிட்டுக் கூப்பிட்டு அந்த வலைஞர்களுக்கே முதலில் அதை வழங்கினாராம்!

வெண்மணல் பரப்பு; மேலே ஆகாய விதானம்; பக்கத்தே பொங்கு மாங்கடலின் விஸ்தாரம்; வீசும் காற்றில் முடியும் அங்கியும் பறக்க நம் பரிமள கந்தர் அந்த மச்சகந்தர்களின் நடுவே சென்று அமுது வழங்கும் சம்பவம்—ஆஹா, விசுவ சித்திரமாக அல்லவா மனத்திரையில் விரிகிறது!

* * *

நிலத் திரைக்கடல் ஓரத்திலே நித்தம் தவம்செய் குமரி முனை. கடற்கரையில் பாபா ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் அடியே ஒரு ஸ்படிக மணி தோன்றுகிறது. ஓர் அடியார் அவற்றை எல்லாம் சேகரிக்கிறார்.

அனைவரும் அமர்கின்றனர். எண்பத்து நாலு மணிகள் இருப்பதாகச் சொல்கிறார் அந்த பக்தர்.

''இல்லை; நூற்றியெட்டுதான் சரியான கணக்கு. மறுபடி எண்ணிப் பார்'' என்று சிரிக்கிறார் பாபா.

அடியார் எண்ணுகிறார். இவரது எண்ணத்தின் சக்தியால் எண்பத்துநாலு நூற்றெட்டாகக் குட்டி போட்டிருக்கிறது!

தனித்தனியே இருந்த மணிகளை பாபா தம் கரத்தில் வாங்கிக் கொண்டதும், அவை ஒரு சரமாக, ஜப மாலையாகச் சரட்டில் கோக்கப்பட்டுப் பரிணமித்து விடுகின்றன. உடன் வந்த ஸ்வாமி ஸதானந்தருக்கு (ஸ்வாமி சிவானந்த ஸரஸ்வதிகளின் பரம சிஷ்யர் இவர்) அதை வழங்குகிறார் பாபா.

Koviloor Digital Library

அதே கன்யாகுமரி. 1958 டிஸம்பர் 22-ந் தேதி. வான மாதேவி ஸந்தியா காலம் என்ற வண்ண வண்ணச் சிலையை உடுத்துக்கொண்டு கவினுறக் காட்சி தருகிறாள். முக்கடலும் கூடும் இடத்தில் ஐயன் வந்து அலைகளை அளைந்து மகிழ்கிறான்.

நிமிர்ந்து நின்று கொண்டு, ''பாருங்கள், ஸமுத்ர ராஜன் என்னை வரவேற்கிறான், மாலையும் கையுமாக'' என்கிறார்.

ஓர் அலை கம்பீரமாக ஆடி ஆடிக் கொண்டு அருகே வந்து, பாபாவின் பாதத்தில் புரண்டுவிட்டு, மறுபடி சுருண்டு உள்ளுக்குப் போகிறது.

ஆஹா, அவர் பாதத்திலே ஓர் ஒப்பற்ற முத்தாரம்! முத்தனுக்கு சமுத்திரம், 'உலக நாதன் நீ' என முத்திரையிட்டுத் தந்த பரிசா?

ஓதக் கடலில் ஒளி முத்தினாரமும்...
மாதக்கவென்று வருணன் விடுதந்தான்

என்று பெரியாழ்வார் என்றோ இதைப் பாடி வைத்து விட்டார்!

கேரளத்தில் கோவளம். கடலைத் தொட்டு விளையாடிக் கொண்டிருந்த பாபா, ''சமுத்ரத்துக்கு வேறு என்ன பெயர்கள் உண்டு? சொல்லுங்கள் பார்க்கலாம்'' என்று கூடியிருந்தோரைக் கேட்டார்.

ஒருவர் ''ரத்னாகரம்'' என்றார்.

உடனே நம் 'ரத்னாகர ராஜு' சிரித்து, ''அப்படியானால் அவன் நமக்கு ரத்தினங்கள் தர வேண்டுமே'' என்றார்.

பகவானுக்குப் பக்கத்திலிருந்தார் டாக்டர் பகவந்தம் அவர்கள். பிரபல பௌதிக விஞ்ஞானி. டாக்டர் கே. எஸ். கிருஷ்ணனின் ஸகா. மத்திய ராணுவ அமைச்சகத்தின் விஞ்ஞான ஆலோசகர். அவர் பாபாவிடம், ''நீங்கள் சங்கற்பித்தால் கடலரசன் ரத்தினம் வழங்கிவிடுவான்'' என்றார்.

பாபா தமது கையில் நீரைப் பிடித்தார். மெய்யாலுமே அது ரத்தின மாலையாகி இருந்தது!

ஆனால் ஒரு குழந்தைக்குத்தான் சிரமப்பட்டுப் பூட்டக் கூடிய அளவில் சிறியதாக இருந்தது. ''இதை என்ன செய்ய லாம்?'' என்றார் பாபா.

பாபாவை அடைந்ததிலிருந்து பௌதிக விஞ்ஞானிக்குக் கொஞ்சம் கொஞ்சமாகப் பௌதிக அதீத தத்வத்தில் பிடிப்பு ஏற்பட்டு வந்ததெனினும், இன்னும் பூரண நம்பிக்கை வரவில்லை. எனவே பாபாவைப் பரிசோதிக்குமுகமாக, ''சிருஷ்டி செய்த தாங்கள்தான் இதை அணிந்து கொள்ளவும் வேண்டும்'' என்றார்.

Koviloor Digital Library

பாபா அவரைக் குறுகுறுவென நோக்கிப் புன்னகைத்து, "எனக்கு ஒரு பிரச்னையை ஏற்படுத்தப் பார்க்கிறாய், இல்லே?" என்றார்.

கையை மாலைக்குள் விட்டு நீட்டினார். நீட்ட நீட்ட அது வளர்ந்தது.

உடனிருந்தோர் பிரார்த்தித்ததன் பேரில் அதைத் தமது கழுத்திலேயே அணிந்துகொண்டு எழிற்கோலம் வழங்கினார்.

கற்பனை செய்து பார்த்தாலே பேரின்பமாயிருக்கிறது. மாலை வேளையில் நவரத்ன மாலை அணிந்து நின்ற அவரைத் திருமாலாகவே கொண்டுவிட்டார் பகவந்தம்.

* * *

கடலில் அமிழ்ந்த இந்தக் கையிலிருந்து கங்கை பெருகிய நிகழ்ச்சி. சுப்பம்மாவின் பக்தி கங்கை; பாபாவின் அநுக்ரஹ கங்கை!

பாபா பெங்களூர் சென்றிருக்கையில் சுப்பம்மா நோய் வாய்ப்பட்டாள். பிறவி நோயே தீரப் போகிறது என்று உள்ளுணர்ச்சி கூறியது. பாபாவைப் பற்றியே ஓயாமல் நினைத்துப் பேசிக் கொண்டிருந்தாள்.

சுற்றத்தார் ஏளனம் செய்தனர். "இப்ப அவர் ரொம்பப் பெரிய 'பகவான்' ஆயிட்டார். பெங்களூரிலே கோடீச்வரர்கள் வீட்டிலேதான் அவருக்கு வாஸம். இந்தப் பரதைக் கர்ணத்தின் பெண்ஜாதியை அவர் நினைக்கவும் மாட்டார். நீ ஏன் அவரை நினைச்சுப் பிறுத்திக் கொண்டிருக்கிறாய்?" என்று அவளைக் கண்டித்தனர். அவள் மறுத்தும், பிடிவாதமாகப் புக்க பட்டணத்துக்கு அழைத்துப் போனார்கள்.

அவளோ குட்டி போட்ட பூனையாக, அந்த பலவீன நிலையிலும் ஒரு மாட்டு வண்டியைப் பிடித்துக்கொண்டு, தனது பகவானின் பாதம் பட்ட பர்த்திக்கே திரும்ப வந்து சேர்ந்தாள். உறவினர் அவளை மீண்டும் புக்கபட்டணத்துக்கு இழுத்துச் சென்றார்கள். "ஐயோ பாவம். உனக்கு இன்னும் மூளை வரல்லியே! உன் அழகான சாமிக்கு நீ இத்தனை காயலாவாகப் படுத்தது கூடத் தெரியல்லியோ, அல்லது தெரிஞ்சும் தான் உன்னிடம் கரிசனம் இல்லாததாலோ, பெங்களூரிலிருந்து திருப்பதி போயிட்டாராம்" என்றனர்.

"அந்திமத்தில் என்னைக் காப்பாற்றாமல் கைவிடமாட்டார் என் பிரபு. அவர் நிச்சயம் வருவார், வருவார். என் கடைசிக் காலத்தில் அவரைப் பற்றி அபவாதப் பேச்சை என் காதிலே போட்டு என்னை வதைக்காதீர்கள். என் ஸ்வாமிக்குத் தெரியாதா? எப்போ வரணுமோ, அப்போ வருவார், வருவார்" என்றாள் சுப்பம்மாள்.

Koviloor Digital Library

இப்படிச் சொல்லிக்கொண்டே ஒரு நாள் கண்ணை மூடி விட்டாள் அம் மாதரசி—பாபாவுக்கே மாதா போன்ற மாதவத் தினள்.

கண் மூடிற்று. மூச்சு ஓய்ந்தது. நாடி நின்றது.

பாபாவை மனமாரப் பழித்துக்கொண்டு பிரேத ஸம்ஸ் காரத்துக்கு ஏற்பாடு செய்தனர் அவளது உறவினர்.

ஆனால் உடலத்தை எடுக்கப்போகும்போது அவர்களுக்கு ஒரு தியக்கம் உண்டாயிற்று.

*

நிலவால் முலாமிட்டது போல் சுப்பம்மாவின் தலையோடு கால் ஓர் ஒளி வந்து குடிகொண்டிருந்ததை அத்தனை பேரும் உணர்ந்தனர். அதனால்தான் உடலை எடுக்கத் தியங்கினர்!

ஓர் ஈ, எறும்பு மொய்க்கவில்லை. ஜீவகளையோடு, ஜீவித்த நாட்களில் இருந்ததைவிட அதிகக் களையோடு தியானம் செய்வதே போல் காணப்பட்டாள் சுப்பம்மா. அவளைப் பிணம் என்று எண்ண எவராலும் முடியவில்லை.

தேகத்தில் நீலம் பாய்ந்தாலோ, வேறு விதத்தில் கெட்டுப் போனாலோ ஸம்ஸ்காரம் செய்யலாம் என்று விட்டுவிட்டார்கள்.

இப்படியே ஒரு நாளல்ல, இரண்டு நாளல்ல, முழுதாக மூன்று நாட்கள் சென்றன.

உறவினர் பொறுமை இழந்து விட்டனர். 'ஒன்று எழுந் திருக்கவாவது வேண்டும், அல்லது அழுகவாவது வேண்டும். இதென்ன இரண்டுங்கெட்டான் நிலை?' என்று எரிச்சலடைந்தனர்.

வந்துவிட்டார் பாபா!

திருப்பதியிலிருந்து புக்கபட்டணத்துக்கு வந்துவிட்டார். ஆதி சங்கரர் அன்னை ஆர்யாம்பாளின் அந்திமத்தில் எங்கிருந்தோ பறந்து வந்தது போல் வந்துவிட்டார்!

சுப்பம்மாவுக்கு வெகு அருகே வந்து அமர்ந்தார். அவள் முகந்தருகே குனிந்து, தம் முகத்தில் குழல் தாழ, அன்பு கனத்தில் குரல் தாழ, தாழம்பூக் குரலில், ''சுப்பம்மா, சுப்பம்மா'' என்று இருமுறை அழைத்தார்.

ஆஹா மூன்று, நாட்களாக மூடியிருந்த சுப்பம்மாவின் கண்கள் பலபலவெனத் திறந்தன—சந்திரிகையில் மலரும் குமுத மாக! பாலைப் பொழிந்து கொண்டு அவள் முகத்தெதிரே பாபா வின் சந்திர வதனம். 'ச்யாமா காசன சந்த்ரிகா' என்று காமாக்ஷியின் கடாக்ஷத்தை மூகர் வர்ணித்ததுபோல், சாமள சந்திரன்!

Koviloor Digital Library

சுப்பம்மாவின் கரங்கள் நீண்டன. "கை விடமாட்டார்" என்றுளை, அந்தக் கைகளை அழுந்தப் பற்றிக் கொண்டாள் — பற்றற்றான் பற்று!

சுமார் இருபதாண்டுகளாகக் குழந்தை ஸத்யாவின் நாளிலிருந்து, இன்றைய யௌவன பாபா வரையில் அவள் செலுத்திய அன்பத்தனையும் திரண்டு புரண்டு வந்தது! பிள்ளையைத் தாய் போல், பாபாவின் கைகளைத் தடவிக் கொடுத்தாள், தட்டிக் கொடுத்தாள். கொண்டம ராஜு பெற்ற அதே பாக்யம்! இதோ, அதற்கும் மேலாக ஒரு பாக்கியம்.

பாபா தமது திருவிரல்களை அவளது உதட்டின்மீது வைத்தார்.

அவளது வாய் சிறிது திறந்தது.

மடக்கு மடக்கு என்று மும்முறை தீர்த்தத்தை விழுங்கினுள்.

ஆம், பாபாவின் கையிலிருந்து கங்கா தீர்த்தமே அவளது வாயுள் பொசிந்தது!

ஆதியில் காலிலிருந்து கங்கையைப் பெருகவிட்ட பகவான், ஷிர்டியில் கூட ஒரு முறை தமது காலிலிருந்து கங்கையைப் பொழிய வைத்தவர், இன்று கையிலிருந்து வருவித்த புண்ணிய தீர்த்தம் அவளது வினை யாவற்றையும் தீர்த்துவிட்டது.

சுப்பம்மா அமரருலகை எய்தினுள்.

* * *

சாகும் தருணத்தில் கைகொடுத்துச் சாகா நிலைக்குக் கடத்திவிடுவதே உத்தம குருவின் லக்ஷணம் என்று ஸ்காந்தத்திலுள்ள குரு கீதை கூறுகிறது. இதற்கு "ஸதி ஆகாரகம்" என்று பெயர் கொடுத்திருக்கிறது. ஷிர்டி ஸாயியின் "ஸதி ஆகாரக"த்தை நரசிம்ம ஸ்வாமி வியந்து வியந்து கூறுவார்.

பர்த்தியவதாரத்திலும் இவ்வருள் சற்றும் குறையவில்லை.

நம் சரித நாயகர் பலரை யமனுலகிலிருந்து மீட்டு, இவ்வுலகிலேயே உயிர்ப்பித்திருப்பது மட்டுமில்லை. 'ஸதி ஆகாரக' அநுக்ரஹத்தில் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை எனத்தக்க விதத்தில், பலரது அந்திமத்தில் பக்கத்தே எழுந்தருளிப் பர லோகத்தில் (பரமேயில்லாத ஆத்ம ஸாம்ராஜ்யத்தில்) அவர்களைச் சேர்த்திருக்கிறர்.

பாபா ஸ்தூல சரீரத்தால் ஓரிடத்தே யிருப்பார். வேறு எங்கோ ஓர் அடியார் மரண வாயிலில் இருப்பதை அறிவார். கட்டையெனச் சாய்வார். இவரது உயிர்ச் சக்தி ஸ்தூல சரீரம்

Koviloor Digital Library

விட்டு அந்த அடியாரிடம் ஓடும். இங்கே பாபாவின் ஸ்தூல சரீரத்தின் வாயிலிருந்து விபூதி பறக்கும். மீண்டும் அவர் எழுந்திருக்கையில், இன்ன இடத்துக்குச் சென்று, இன்னாரை இனிப் பிறவியில்லாத நெறியில் சேர்த்து வந்ததாகத் தெரிவிப்பார்.

அவ்வண்ணமே, மறைந்த அடியாரின் உறவினரிடமிருந்து மரணச் செய்தி தெரிவித்துக் கடிதமும் பிற்பாடு வரும்.

''முடிந்த முடிவான உண்மை விபூதிதான். எதை எரித்தாலும் அது கரியாகும். அந்தக் கரியையும் எரித்தால் அது நீறு ஆகும். நீற்றை மறுபடி எரித்தாலும் அது அப்படியே தான் இருக்கும். மாறாது நிற்கும் பரம்பொருள் தத்வத்தின் சின்னம் அதுவே'' என்பார் ஸ்ரீ காமகோடிப் பெரியவர்கள். முடிந்த நிலையில் அடியாரை பாபா சேர்க்கும்போது, இவரது ஸ்தூல சரீரம் விபூதியைத்தான் வெளியிடுகிறது. முடிசார்ந்த மன்னரும் பிடி சாம்பல் ஆவர் என்ற விதத்திலும் மரணத்தைக் காட்ட விபூதிச் சாம்பல் வெளிவருகிறதோ என்னவோ? (தகன ஸம்ஸ்காரம் உள்ளவர் பொருட்டு விபூதியும், புதைத்து அடக்கம் செய்யப்படுபவர் விஷயத்தில் மண்ணும் பாபாவின் சரீரத்திலிருந்து வெளிவந்ததாகவும் தெரிகிறது. பிடி சாம்பலாவது, மண்ணோடு மண்ணாக ஆவது இரண்டும் ஒன்றுதானே?)

மரணம் நேரும் காலத்தை நொடி தவறாமல்—மரணம் சம்பவிக்கும் இடத்தை அங்குலம் தவறாமல்—பாபா பிற்பாடு சொல்வதே ஓர் அழகு. ஒரு முறை, குறிப்பிட்ட ஒரு பக்தையின் மரண காலத்தில் அவளுக்குத் தரிசனம் தந்து உய்வித்து வந்ததாக பாபா சொன்னபோது, ஸ்ரீ கஸ்தூரி, ''அப்படியானால் முத்தனூர் போய் வந்திருக்கிறீர்கள்!'' என்றார். ''இல்லை, அங்கிருந்து இருபது மைல் தாண்டிப் போனேன்'' என்றார் ஸ்வாமி.

ஓரிரு நாட்களுக்குப் பின் அங்கிருந்து கடிதம் வந்தது. முத்தனூர் வைத்தியசாலையில் ஆக்ஸிஜன் இல்லாததால், அடுத்த நகரத்து ஆஸ்பத்திரிக்கு நோயாளியை டாக்ஸியில் வைத்து எடுத்துச் சென்றதாகவும், வழியிலேயே இருபதாவது மைலில் அவள், ''ஸாயிராம், ஸாயிராம்'' என்று இரு முறை கூறிக் காலமானதாகவும் அதில் கண்டிருந்தது!

* * *

சில சமயங்களில் சூக்ஷ்ம சரீரம் உள்ள இடத்தில் பாபா செய்வதை ஸ்தூல சரீரம் பிரதிபலிப்பதுண்டு. ஒரு முறை அவர் புட்டபர்த்தியில் இருக்கும்போது, ''ஜலம், ஜலம்'' என்று கேட்டவுடன், அடியார்கள் நீர் கொண்டு வந்தனர். அவரோ அதைக் கவனித்ததாகவே தெரியவில்லை. சிறிது போதுக்குப் பின், ஸ்தூல தேகத்தில் முழு விழிப்புப் பெற்ற பின், தம் முன்னிருந்த தண்ணீர் தம்ளரைப் பார்த்துச் சிரித்தார்.

Koviloor Digital Library

"நான் எங்கோ ஓரிடத்தில் மரித்துக்கொண்டேயிருக்கும் ஒருவனுக்கு நீர் கேட்டால், நீங்கள் இங்கே ஜலம் கொடுத்திருக்கிறீர்களே!" என்றார்.

1958 நவம்பர் 15. மாலை மணி 5-20. பிரசாந்தி நிலயத்தில் அன்பர்களோடு அளவளாவிக் கொண்டிருந்த பாபா, "ஹா" எனச் சொல்லிக் கொண்டு தரையில் பிரக்ஞையற்றுச் சாய்ந்தார். பத்து நிமிஷங்களுக்குப் பின் மும்முறை இருமினார். ஒவ்வொரு இருமலின் போதும் அவரது வாயிலிருந்து ஏராளமான விபூதி வெளிப்பட்டு ஓரடிக்கும் அப்பால் போய் விழுந்தது. ஐந்து நிமிஷம் கழித்து, சரியாக 5-35க்குத் தெளிந்த தெளிவாக எழுந்திருந்தார். விட்ட இடத்தில் உரையாடலைத் தொடங்கினார்.

அன்பர்கள் இடைக்காலத்தில் அவர் செய்த அற்புதத்தைச் சொல்ல வேண்டுமென நச்சரித்தனர்.

"அதுவா? இங்கே அடிக்கடி வருகிறாளே, வேலூர் லேடி மெடிகல் ஆபீஸர் டாக்டர் கிருஷ்ணா, அவளுடைய தாயார் டேராடன்னில் 5.30 மணிக்குக் கண்ணை மூடிட்டா. கிருஷ்ணா பக்கத்திலேயே தான் இருந்தா. நாடியைப் பிடிச்சுப் பார்த்து, 'இதுதான் கடைசி மூச்சு' என்றாள். என் பஜனைதான் அங்கு நடந்துகொண்டிருந்தது. அந்த அம்மாவுக்குத் தரிசனம் தந்தேன். பரம சாந்தமாக உயிர் பிரிந்தது" என்றார்.

18-ந் தேதி ஓர் இன்லண்ட் கடிதம் வந்தது. வழக்கத்துக்கு மாறாக பாபா அதை ஸ்ரீ கஸ்தூரியிடமே கொடுத்து, "பிரிச்சுப் படி" என்றார்.

அதில் ரகசியம் ஏதும் இல்லை. முற்றிலும் தெரிந்த விஷயம் தான். டேராடன்னிலிருந்து டாக்டர் கிருஷ்ணாதான் எழுதியிருந்தார். "அம்மாவின் கடைசி மூச்சு சனிக்கிழமை மாலை ஐந்தரைக்கு அடங்கிற்று. . .தங்கள் ஸ்மரணையாகவே இருந்தாள். தாங்கள் அவளுக்குத் தரிசனம் தந்தீர்கள் என ஊகிக்கிறேன்."

* * *

துளிக்கூடக் கட்டுப்பாடோ, மரியாதைப் பண்புகளோ, நாகரிக நடத்தையோ, கௌரவமான பேச்சோ அறியாத முரடர் "ஸ்டீவ்" என்ற அந்த அமெரிக்கர். பாபா அவரை எப்படி அடியோடு மாற்றிவிட்டார்? கடைசியில் ஸ்டீவ் புற்று நோய்க்கு ஆளாகிப் பெரும் வேதனையில் மரித்தபோது, அது மரணத்தின் சோகமும் பீதியும் கொண்ட சூழலாகவா இருந்தது? மூச்சு கொஞ்சம் கொஞ்சமாக அடங்கும்போது ஸ்டீவின் கண்ணில் மின்னிய ஒளி! அவர் முகத்தில் பரவிய திவ்யானந்த மலர்ச்சி! அடேயப்பா! கூடியிருந்த அத்தனை பேரும் ஸ்டீவின் மரணத்துக்காக அழாமல், அவரது அமரத்வ பட்டாபிஷேகத்தைப் புசித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர்! இச்சம்பவத்தை வர்ணிக்கும் "லேடொரதி ஓப்" புற்று நோயிலிருந்து பாபாவாலேயே குணமடைந்தவர்.

Koviloor Digital Library

இவரே அதே புற்று நோயால் மரணமடைந்த ஸ்டீவை பாபா 'குணப்படுத்தியது' தான் விசேஷமானது என்கிறார்! ஆம், உடலைக் குணப்படுத்துவதைவிடக் குணத்தை குணப்படுத்துவது தானே சிறப்பானது?

* * *

மரண காலத்தில் கடவுளை நினைத்திருந்தால் கடவுளையே சென்று சேருவர் என்று கீதை உறுதி கூறுகிறது. பாபா செய்கிற மற்ற அகடிதகடனா லீலைகள் ஒரு புறம் இருக்கட்டும். சாவி லிருந்து சிலரை அவர் மீட்பதும் இருக்கட்டும். இப்படி மீட்கப் பட்டவர்களும் பிறகு சாகத்தானே வேண்டும்? இனியொரு பிறவியின்றி, இப்பிறப்பிலேயே அவர்கள் கர்மாவைக் கழித்துக் கொள்ளத்தான் இந்த மீட்பே! எனவே இதுவும் தாற்காலிகம் தான். உண்மை மீட்பு மரண காலத்திலேயே அவர்களுக்குத் தெளிவையும் சாந்தியையும் ஆனந்தத்தையும் தந்து, அவர்களை ஸம்ஸாரச் சகடத்திலிருந்து விடுவிப்பதுதான். பாபா செய்யும் லீலைகளில் ஞானமயமானவையே முக்கியமானவையெனில், இவ்வாறு அந்திமத்தில் அவர் புரியும் அருளை விசேஷமாகச் சொல்ல வேண்டும். இவற்றுள் நம் இதயத்துள்ளே புகுந்து உருக்கும் எடுத்துக்காட்டுக்களைப் பார்க்கலாம்.

Koviloor Digital Library

அத்தியாயம்—31

மரணஸ்மரணம் பிறவித்தரணம்

செத்துப் போவதோர் போது நினைந்து செய்யுஞ்
செய்கைகள் தேவபிரான் மேல்
பத்தராய் இறந்தவர் பெறும் பேற்றை (...ப்பயில) வல்லார்
சித்தம் நன்கொருங்கித் திருமால்மேல் சென்ற
சிந்தை பெறுவர் தாமே

—பெரியாழ்வார் திருமொழி

நாகமணி பூர்ணையா என்று பெங்களூரில் ஒரு மூதாட்டி இருக்கிறார். பழுத்த பழம். வயதில் மட்டுமல்ல. பக்தியிலும் தான். பாபாவே முப்பதாண்டுகளுக்கு முன் இவரிடம் சொன்னார்: "நாகமணியம்மா! மாமரம் இருக்கு. அதிலே பூ விடுகிறது. அப்புறம் ஏராளமான பூ கொட்டிப் போகிறது. மிஞ்சினவை காயாகின்றன. அந்தக் காயிலும் பெரும்பாலானவை வடுவாக, வெம்பலாக விழுந்துவிடுகின்றன. சிலதான் தேறிய காயாகின்றன. அப்போதே அவற்றில் பலவற்றைப் பறித்து விடுகிறோ. பாக்கிதான் பழுக்கிறது. பக்ஷி, குரங்குக்குத் தப்பி மரத்திலேயே பூரணமாகப் பழுக்கிற பழங்கள் அபூர்வம்தான். இப்போ என்னிடம் நெருக்கமாக அநேக பக்தர்கள் இருக்கா. ஆனாலும் இவர்களிலேயும் முக்கால்வாசி எப்போதோ ஒரு போது அஹங்காரத்துக்கு ஆளாகி, பூவாக, பிஞ்சாக, காயாக, அரைப் பழமாக என்னை விட்டு உதிர்ந்துதான் விடப் போகிறா. அம்மா, நீ பழுத்த பழமாக ஆவாய். அப்போ உன்னை நானே பறிச்சு முழுங்கிடறேன்" என்றிருக்கிறார்.

பாபா இவரை இன்றளவும் 'விழுங்காத'தால் நமக்கு இவரது திவ்விய அநுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும் அதிருஷ்டம் கிட்டியிருக்கிறது. ஆனால் வேறு இருவரை பாபா இப்படி 'விழுங்கிய' விவரத்தை இந்த அம்மையார் தெரிவிக்கிறார். இவ்விருவரும்

Koviloor Digital Library

வயதுப்படிப் பார்த்தால் பழுத்த பழமல்ல. ஒன்று பூ. மற்றது பிஞ்சு. ஆனால் இரண்டும் பக்தியில் செங்கனியாகிவிட்டவை.

* * *

'பூ' என்றது ஓர் எட்டு வயதுப் பெண். நாகமணியம்மையின் தூரபந்துக்களின் குழந்தை அவள். பழைய மந்திரத்தில் பாபா இருந்தபோது தாயாருடன் வந்தாள்.

பாபா சித்ராவதிக்கு அன்பர்களோடு புறப்படுகையில் அந்தக் குழந்தை ஓடிப்போய் தானாகவே அவரது பாதரக்ஷைகளைக் கொண்டு வந்து அவர் முன் வைத்தாள்.

சூட்டிகை மிகுந்த அக் குழந்தையை அன்போடு தடவிய பாபா, "உனக்கு என்ன வேணுமோ கேள். தருகிறேன்" என்றார்.

எட்டு வயசுப் பெண், நம்பவொண்ணாத பெரிய வாசகத்தைக் கூறிற்று: "வேறென்ன வேணும் ஸ்வாமி! இந்தச் செருப்பு சில ஸமயத்தில் உங்கள் பாதத்தில் இருக்கு. நான் எப்பவும் உங்கள் பாதத்தை விட்டு இந்தண்டை அந்தண்டை போகாமல் அதிலேயே இருக்கணும்."

குழந்தை சொன்னது அனைவருக்கும் அதிசயமாக மட்டு மில்லாமல், அதிர்ச்சியாகவும் அச்சரியமாகவுமே இருந்தது.

"நான் எது கேட்டாலும் தருவேன்னேளே? என்னை உங்க பாதத்திலேயே சேர்த்துண்டுடுங்கோ" என்று ஸ்பஷ்டமாகவே சிறுமி கூறிவிட்டாள்.

'விட்ட குறை வந்து தொட்டாச்சு' என்பது தவிர என்ன விளக்கம் சொல்வது?

பாபா கசிந்தார். வரம் தருவதாக வலியச் சொல்லிவிட்டு வார்த்தை மீறலாமா? அந்தப் பெண்ணைத் தாஜா செய்து வரத்தை வாபஸ் வாங்கிக் கொள்ளுமாறு செய்யப் பார்த்தார். "அம்மாயி! நீ சின்னக் குழந்தை. இன்னம் உலகத்தில் எத்தனை பார்க்கணும், படிக்கணும், கல்யாணம் பண்ணிக்கணும். . . "

"ஊஹூம். அதெல்லாம் எனக்கு வேண்டவே வேண்டாம் ஸ்வாமீ. நீங்க சொல்கிறதிலெல்லாம் நிலையான சுகம் ஒன்றும் இல்லே. கல்யாணம், வீடு, குழந்தை, குட்டி என்று இருக்கிறவா ளெல்லாம் கஷ்டம்தான் படறான்னு நன்னாப் பார்க்கறேன். அவாளிலே ஒருத்தியா நான் இருக்க ஆசைப்படல்லே. இந்தப் பாதத்துக்குத்தான் ஆசைப்படறேன். நீங்கள் கொடுத்துத்தான் ஆகணும்" என்று கூறி, 'ஓ' என்று அழத்தொடங்கிவிட்டது அந்தப் பெண். பெரிய மநுஷி மாதிரி பேசினவள், இப்போது குழந்தைக்கே உரிய முறையில் அடம் பிடித்தாள்!

அன்று பாபா காட்டிய இளக்கத்தை விளக்கவே முடியாது. பரம பரிவோடு பாலேயைத் தடவிக்கொடுத்து, "அம்மாயி,

Koviloor Digital Library

உனக்கு அப்பா இல்லே. அதனாலே உன் அம்மாவுக்கு ஒரே பிடிப்பு நீதான். நீயும் போயிட்டேன்னு அவ எப்படித் தாங்கிப்பா, பங்காரு?'' என்றார்.

பாலகி பளிச்சென்று, ''எனக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தாலும், அப்போ என்னை அம்மா உயிரோடேயே இல்லேன்னு விட்டுக்குத்தானே அனுப்பணும்? அப்பவும் அவ அழத்தான் வேணும். நியாயமாக அப்போதுதான் அழணும்: 'நம் மாதிரியே நம் குழந்தையும் கட்டுலே மாட்டிண்டுவிட்டதே'ன்னு. உங்ககிட்டே சேருகிறதற்கு அவள் ஏன் அழணும்? நம் குழந்தை ரொம்ப நல்லதுக்குப் போகிறாள்னு — சிரிச்சிண்டுதான் அனுப்பி வைக்கணும். ஸ்வாமி, மற்றவாளுக்கெல்லாம் ஆசையே கூடாது, அப்படி இப்படின்னு உபதேசம் பண்ணற நீங்களே எனக்கு நேர்மாறாகச் சொல்றேளே! நான் மாட்டேன்'' என்று முரண்டு பிடித்தாள்.

''மஞ்சிதி, மஞ்சிதி'' (நல்லது, நல்லது) என்று குழந்தையைத் தட்டிக் கொடுத்தார், தாமாக வரம் கொடுத்து விட்டு வசமாக மாட்டிக்கொண்ட பாபா!

அந்தக் குழந்தை தாயோடு பெங்களூர் திரும்பிற்று.

ஐந்தாம் நாள், குருவாரத்தன்று நாகமணியம்மாவுக்கு சமாசாரம் வந்தது: சிறுமியின் பிடிவாதம் ஈடேறிவிட்டதென்று!

அன்று காலே. ''அம்மா, நான் இனி ஸ்கூலுக்குப் போகப் போகிறதில்லே. எனக்கு ஒரு ரூபாய் கொடு'' என்று தாயிடம் கேட்டாளாம் குழந்தை.

பெண்ணின் போக்கு அடியோடு புரியாத பேதைத் தாய் அவ்விதமே ஒரு ரூபாய் கொடுத்தாள். குழந்தை தேங்காய், பூ, பழம் முதலியன வாங்கிவந்தாள். ஸ்நானம் செய்து, பாபா படத்தை வைத்துப் பூஜை செய்தாள். பிஞ்சுக் கையால் 'ஸாயிராம்', 'ஸாயிராம்' என்று பூவைப் போட்டு அர்ச்சனை செய்தாள். நிவேதனம் செய்தாள். நன்றாக உண்டாள். ''உடம்பு என்னவோ போலிருக்கு'' என்று சொல்லிப் படுத்தாள். அவளைப் பார்த்தால் ஆனந்தமாகவே காணப்பட்டாள். எதற்கும் டாக்டரிடம் அழைத்துப் போகலாமா என்று அம்மா யோசித்தாள். அவளைக் குழந்தை அதிகம் யோசிக்கவிடவில்லை. ஓர் உபாதையும் இல்லாமல் பவள மல்லிப் பூ உதிருகிற மாதிரி, இந்தப் பூவுடலிலிருந்து உயிர் உதிர்ந்து விட்டது! ஸாயிராமனின் சரணாரவிந்தத்தில் அர்ச்சனையாகிவிட்டது!

குழந்தையொன்று இத்தனை தெளிவோடு ஜீவ யாத்திரையை முடித்துக் கொண்ட அதிசயம் ஒரு புறம் இருக்கட்டும்; அதனினும் அதிசயம், பதியைப் பறி கொடுத்துவிட்டு, இப்போது கிடைத்தற்கரிய புத்திரியையும் வாரிக் கொடுத்த அந்தப் பேதை மாது கதிகலங்கிவிடவில்லை. புத்திர சோகத்தைத் தாங்கும் வைராக்கி

Koviloor Digital Library

யத்தை இவளுக்கு அளித்ததே, பாபா இவளது மகளுக்குந் தந்த வரத்தைவிடப் பெரியது எனலாம். இதன் பின்னரும் அவள் பாபாவிடம் பக்தியுடனேதான் இருந்து வந்தாள்.

போகிறவர்கள் போய்விடுகிறார்கள். இருப்பவர்களைத்தானே அவர்களது பாச நினைவு புரட்டி எடுக்கிறது? ''பாச வேர் அறுக்கும் பழம் பொருளாக'' பாபா ஆற்றும் அருள் நம்ப வொண்ணாததுதான். இதற்குப் பல திருஷ்டாந்தங்கள் உண்டு.

*　　　*　　　*

'பிஞ்சு' என்றேமே, அது ஒரு பதினாறு வயதுப் பெண். பெங்களூரில் போலீஸ் உயர் அதிகாரியாக இருந்த ஸ்ரீ ரஞ்சித் சிங்கின் குமாரி.

அக் குடும்பத்தில் பாபா செய்த லீலை அநேகம். ஹிந்து—முஸ்லிம் மோதல் ஒன்றை அடக்க ரஞ்சித் சிங் சென்றபோது, கிளர்ச்சியாளர் இவர் மீதே துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். 'ரவை இதோ நம் முகவாய்க்குள் துளைத்துப் புகப் போகிறது' என்று இவர் எண்ணிய தருணத்தில், பிரத்யக்ஷமாக பாபாவின் கை தம்மை அப்பாலே பிடித்துத் தள்ளுவதை உணர்ந்தார்!

இவருடைய புதல்விக்குக் குடலில் க்ஷய ரோகம். இம் மாதிரிக் காரணங்களுக்காகவே அநேகர் பாபாவை அடைவர். அவரோ, கர்மாவின் எடையைக் கணக்குப் பார்த்துச் சில சமயங்களில் அந்த வியாதியைத் தீர்க்கமாட்டார். ஆனாலும், கொஞ்சம் கொஞ்சமாக அந்தக் குடும்பத்தைத் தம்மிடம் இழுத்துக் கொண்டு, பக்தியில் ஈடுபடுத்துவார். இன்று பாபாவின் பரம பக்தர்களாக இருக்கும் அநேகர் வீட்டில் இப்படித் தீராத கேஸ் ஒன்று இருக்கும்; அகால மரணம் உள்படப் பலவிதக் கஷ்டங்களும் உண்டாகியிருக்கும். ஆனாலும் அவர்கள் பக்தியை வேறு அநுக்ரஹங்களுக்கு விலையாக நினைக்காமல், பக்தியேதான் பெரிய அநுக்ரஹம், பக்தியின்பத்துக்காகவே பக்தி செய்யவேண்டும் என்ற உணர்வைப் பெற்றிருப்பதால், மற்றக் கஷ்ட நிவாரணங்களைப் பொருட்படுத்துவதில்லை எனக் காண்போம்.

ரஞ்சித் சிங்கின் பெண்ணுக்குக் குடல் உபாதி குடைந்தெடுக்கும். 'குடரோடு துடக்கி முடக்கியிட ஆற்றேன்' என்று பாபாவையே கெட்டியாகப் பிடித்துக்கொண்டாள். தாங்கொணா வலியின்போது அவரது படத்திலேயே கண்ணையும் கருத்தையும் புதைப்பாள். தரிசன இன்பத்தில் வலி மறையும். நீண்ட நேரம் இப்படி பாபா படத்தையே வைத்த கண் வாங்காமல் பார்ப்பது தான் அவளது பரம ஸாதனை—வேதனை தீர்த்த ஸாதனை.

குரு வாரந்தோறும் அவ்வீட்டில் விசேஷ பூஜை நடக்கும். ஒரு பூஜைக்கு பாபாவே வருகை புரிந்தார்.

மகளால் ஒன்றுமே உண்ண முடியவில்லை என்றும், அவள் அப்படி வயிறு வற்றிக் கிடக்கும்போது தாங்கள் ''கொட்டிக்

Koviloor Digital Library

கொள்ள'' வேண்டியிருக்கிறது என்றும் பெற்றோர் முறையிரந்தனர்.

''ஐயோ பாவம்'' என்றார் பாபா.

அங்கையை அசைத்தார்.

கம்மென்று நெய் மணம் வீச முறுகலான இரு தோசைகள் ''வந்தன.''

முறுவலுடன் அவற்றில் ஒன்றை அப்பெண்ணுக்குக் கொடுத்தார்.

அவள் ருசித்து உண்டாள். அவளது நொந்த குடலுக்கு இந்தத் தோசை சிறிதுகூட உறுத்தல் தரவில்லை.

பெற்றோருக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அப்போதைக்கு மட்டுமே அவர்களது குறை தீர்த்த தற்கால சாந்தி எனக் கண்டார்களா?

மற்ற தோசையை அவளை விட்டே விட்டார் அனைவருக்கும் விண்டு கொடுக்கச் செய்தார் பாபா.

முன்பு இவர் ஈச்வராம்பாவின் கையிலிருந்து மூன்று கவளம் அன்னம் உண்டவுடன் தொந்தம் கத்திரித்தது அல்லவா, அதே லீலைதான் இங்கு வேறு சாயலில் நடக்கிறது!

பிணியும் துயரும் நிறைந்த சூழலை அரை மணி நேரம் பூலோக ஸ்வர்க்கமாக்கி விட்டு ஐயன் புறப்பட்டார்.

''ஸ்வாமியைத் தினமும் வரச்சொல்லக்கூடாது. அதனால் அடுத்த குருவாரம் இங்கு...'' என்று யாரோ விஞ்ஞாபித்துக் கொண்டபோது, அவர் தட்டிக்கழித்துக்கொண்டே நகர்ந்து விட்டார்.

அன்றிலிருந்து அவளது உடல்நிலை அபாய கட்டத்துக்குத் திரும்பியது. வைத்தியர்கள் நாட்கணக்குதான் என்று கெடு வைத்து விட்டனர்.

மறு வியாழக்கிழமை.

உணர்வேயில்லாமல் படுத்துக் கிடந்த பெண்ணைப் பார்த்துக் கொண்டே உற்றார் பக்கத்தில் அமர்ந்திருந்தனர்.

பளிரென ஓர் ஒளிக் கொழுந்து அவளது பாதத்தில் காணப் பட்டது. அது சரசரவென அவள் சரீரத்தின்மீது ஊர்ந்து உச்சந்தலை மேலாக வெளியாகி, மறைந்தேவிட்டது!

''வருகிறேன் வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு வராமலே பலரை ஏமாற்றும் பாபா, இங்கோ தட்டிக்கழித்து விட்டு இன்று தமது அநுக்ரஹ ஒளியை அனுப்பி வைத்திருக்கிறார்!

Koviloor Digital Library

ஜீவ ஜோதி வெளியேறி விட்டது என்றே அனைவரும் எண்ணி யிருக்க, குமாரியோ உயிர்த் துடிப்போடு எழுந்திருந்து அமர்ந் தாள்.

''ஸ்வாமி வந்து விட்டுப் போனார். நம் உறவுக்காரர்களை யெல்லாம் கூப்பிடுங்கள். பூஜைக்கு ஏற்பாடு செய்யுங்கள்'' என்றாள்.

அவள் குரலில், உடலில், மனத்தில் எங்கேயிருந்து இத்தனை சக்தி வந்தது?

பரபர எனச் சென்று குளித்துப் பரம மங்களமாக வந்தாள். தானே பாபாவுக்கு அர்ச்சனை செய்தாள். கர்ப்பூரம் காட்டினாள்.

திடமாக, நிதானமாகச் சொன்னாள்: ''நான் ஸ்வாமியிடம் போகிறேன். ஒருத்தரும் அழக்கூடாது. நான் ஆனந்த லோகத் துக்குத்தான் போகிறேன். அதில் நீங்கள் வருத்தப்பட ஏதுமில்லை. ஸ்வாமியை ஒரு நாளும் மறக்காதீர்கள். குருவார பூஜையை ஒருகாலும் நிறுத்தாதீர்கள்.''

படுக்கையில் வந்து உட்கார்ந்தாள்.

''பகவான் கூப்பிட்டு விட்டார்'' என்றாள்.

உயிர்ப் பறவை உடற் கூட்டிலிருந்து சிறகடித்துச் சென்று விட்டது.

அதே சமயம் அவளது தலையணையைத் துளைத்துக்கொண்டு தகதகவென ஒரு தகடு மேலெழும்பியது; கூரையைப் பிய்த்துக் கொண்டு சென்று அந்தர்தானமாகிவிட்டது. கூரையும், தலை யணையும் துளைபட்ட சுவடேயின்றி மூடிக்கொண்டிருந்தன!

முன்பு பாபா அந்தப் பெண்ணுக்கு விஷ்ணு பாதம் சிருஷ் டித்துத் தந்திருந்தார். அதை இவள் தலையணைக்குக் கீழேயே வைத்திருந்தாள். 'பரமம் பதம்' எனப்படும் அந்தப் பாதத்தி லேயே இவள் சேர்ந்தவுடன், விஷ்ணு பாதத் தகடும் விண்ணுக்கு ஏகிவிட்டது!

இதே குருவாரம், அவள் அமரம் எய்திய காலை பதினொரு மணிக்கு பாபா சென்னையில் பக்தர்களோடு உரையாடிக் கொண் டிருந்தார். சடேரெனக் கீழே சாய்ந்தார். உணர்வு பெற்ற போது, ''ஒரு பக்தர் என்னிடம் சேர்ந்தாச்சு'' என்று மட்டும் கூறினார்.

ரஞ்சித்சிங் வீட்டார் அதன் பின்னும் பாபா பக்தர்கள்தாம். அடியாருக்குத் தம்மிடம் பக்தி சலித்துப் போகாமல், இகப் பற்றுக்களில் அவர் உண்டாக்கும் விரக்திக்கு இன்னும் பல உதாரணம் தரலாம். இதனால் இந்த அடியார்கள் சுகப்ரம்மமும், ஸதாசிவப்ரம்மமும் போல் பரம ஞானியராகி விட்டவர் என்று அர்த்தமில்லை.

Koviloor Digital Library

தங்களை மிகவும் பாதிக்கக்கூடிய ஒரு பாசப் புயலிலிருந்து அவர்கள் இவரால் காப்பாற்றப்படுகிறார்கள் என்பதே அதிசயம் தானே? கூடவே வாழ்ந்த நெருங்கிய உறவினரின் மரணத்தில் கலங்கிக் கதறாமலிருப்பதென்றால் சாமான்ய விஷயமா என்ன?

இந்த அம்சத்தில் ஸ்ரீ வி. பி. லோகநாத நாயக்கர் மரணத்தை அடிக்கோடிட்டுக் குறிப்பிட வேண்டும்.

* * *

பாபாவுக்கு நீண்ட காலம் தொழும்பு செய்தவர் லோகநாத நாயக்கர். 'ஸநாதன ஸாரதி' ஆரம்பகால அச்சிட்டாளராக இருந்தவர். மனைவியோடு பிரசாந்தி நிலயத்திலேயே ஒரு குடிலில் வசித்து வந்தவர்.

1964-ம் ஆண்டு பாபா ஜயந்தி விழா முடிந்து ஐந்தாம் நாள் காலை. பஜனையில் கலந்துகொண்டிருந்த நாயக்கரை பாபாவே அழைத்து, ''வீட்டுக்குப் போய்ப் படுத்துக்கொள்'' என்றார்.

ஆரோக்கியமாக இருந்த நாயக்கருக்கு இதன் காரணம் புரியவில்லை. எனினும் ஸ்வாமி ஆக்ஞை என்பதால் அவ்விதமே செய்தார்.

சிறிது நேரத்துக்குப் பின் நாயக்கரின் நாயகி மனோரஞ்சிதம்மாவை பாபா அழைத்தார். ஒரு வாழைப்பழத்தை உரித்துப் பாதியைத் தாம் உண்டார். பாக்கிப் பாதியை அந்த அம்மாவிடம் கொடுத்து உண்ணச் செய்தார். ஒரு தம்ளரில் இருந்த பாலில் பாதியைத் தாம் பருகி, மீதத்தை அம்மையார் பருகக் கொடுத்தார்.

ரஞ்சித் சிங் மகன் பாதியும், மற்றோர் பாதியுமாகத் தோசையைத் தின்ன வைத்து அவர்களது ஆசையை அறுத்து விட்டார். இங்கே வேறு ரூபத்தில் அதே பாச நாச அருள் நடக்கிறது!

மனோரஞ்சிதம்மாவின் சிரஸில் கை வைத்து ஆசிர்வதித்து, ''வீட்டுக்குப் போம்மா'' என்று தேனொழுகக் கூறி அனுப்பி வைத்தார்.

அங்கே லோகநாத நாயக்கரின் உடலம்தான் இருந்தது. ஜீவன் ஸர்வ லோக நாயகனைச் சென்றடைந்து விட்டது!

பாரதப் பெண் ஒருத்திக்குப் பதியின் வியோகத்தைவிடக் கொடிய துயரத் தாக்குதல் உண்டா? ஆனால் என்ன விந்தை! இந்த அம்மாள் அதிரவில்லை, பதறவில்லை, கதறவில்லை.

பாபா எப்படியெல்லாம் ஒருவரை மனப்பாங்கில் உயர்த்தி விடுகிறார்? ஒரு காலத்தில் இந்த அம்மாளுக்கு இருந்த குறைப்பப்

Koviloor Digital Library

பாச வேகம் என்ன? நகை, நட்டு, புடவை, துணி மணி என்று எத்தனை ஆசை வைத்திருந்தார்? அதெல்லாவற்றையும் எப்படி ஐயன் பஸ்மம் செய்தாரோ?

சென்னையிலிருந்து நாயக்கரின் இரு குமாரர்கள் வந்தனர். அவர்கள் காம்பவுண்டில் நுழையும்போது பாபாவே அவர்களை எதிர்கொண்டார்.

வேறொன்றும் செய்யவில்லை, அவர்களது தாய்க்குச் செய்தது போல இவர்களது சிரத்திலும் தம் கரத்தை அழுத்தி எடுத்தார்.

வேறென்ன செய்ய வேண்டும்? 'தாள் பட்டழிந்தது இங்கு என் தலை மேல் அயன் கையெழுத்தே' என்பது ஆப்தர் வாக்கு. இவரது பட்டுக்கை பட்டுப் பந்தம் அழியாதா?

சென்னையிலிருந்து அலறிப் புடைத்துக்கொண்டு வந்தவர்கள் இந்த ரஸவாதக் கர ஸ்பரிசம் பெற்றபின் தந்தையின் சடலத்தை நேருக்கு நேர் பார்த்தார்கள். கண்ணிலே அரும்பு நீரும் துளிக்கவில்லை. அமங்கலியம் தீண்டி நிற்கும் அருமைத் தாயைப் பார்த்தார்கள். அப்படியும் விம்மவில்லை, விசிக்கவில்லை. அந்தத் தாயே அமைதியாகத்தானே இருந்தாள்?

* * *

நம்பவொண்ணாத இந்த மனத் தெளிவு குறித்து இந் நூலாசிரியருக்கே ஒரு சொந்த அநுபவம் உண்டு.

இந்நூலாசிரியர் சுமார் பத்தாண்டுகள் ராஜாஜியிடம் ஓரளவு நெருங்கிப் பணி புரிந்தவர். வறட்சியானவர் என்று பொதுவில் தவறாக நினைக்கப்படும் ராஜாஜியின் வளமான பாசத்தை நன்றாகவே அநுபவித்தவர். ஆயினும் ராஜாஜியின் நிர்யாணத்துக்கு மூன்று நாட்கள் முன்னிருந்து அவரது கால் மாட்டிலேயே உட்கார்ந்திருந்து அப்புனித ஜீவன் பட்ட அவஸ்தையை யெல்லாம் கண்டபோதும், பிறகு அதைச் சிதையிலிட்டு தீ வைத்தபோதும் கூட இவர் அபாரமான விச்ராந்தியுடன் இருந்ததை என் சொல்ல? தானாக அழாதது மட்டுமல்ல, சுற்றி ஏராளமானவர் தேம்பும்போதும், இவரையே சிலர் கட்டிக் கொண்டு அழுதபோதும்கூட இவர் அணுவும் நிலை குலையாமலிருந்ததை என் சொல்ல? ஸாயி கிருபை என்றேதான் சொல்ல வேண்டும்.

* * *

''இனி உன் கண்ணில் ஜலம் வரக் கூடாது'' என்று ஸ்வாமி வஜ்ர சங்கற்பத்தோடு சொல்லிவிட்டாற் போதும்—அப்புறம் எப்பேர்ப்பட்ட பரம சோகத்துக்காகவும் ஒருவர் அழ முடியாதுதான். தமது இயற்பெயரை வெளியிடலாகாது என்னும் ஓர் அநாமதேயினியின் எடுத்துக்காட்டு அற்புதமானது.

Koviloor Digital Library

இரண்டாவது உலகப் போரில் காப்டனாக இருந்தவர் இந்த அநாமதேயினியின் கணவர். 1945-ல் மனைவியையும், மூத்தவனான ஒரு பிள்ளையையும், இரு பெண்களையும் நட்டாற்றில் விட்டு மறைந்தார். எப்படியோ அந்த அம்மாளே குடும்பத்தை ஓட்டி வந்தார். சென்னையில்தான் இவர்கள் வசித்தது.

பிள்ளை வேங்கடராமன் மிகவும் ஒழுக்கத்தோடும் பக்தியோடும் விளங்கிப் படிப்பிலும் நன்கு முன்னேறி வந்தது அம்மையாருக்கு ஆறுதலூட்டியது. விதி செய்யவிருந்த சதியை அப்போது அறிவாரா? அது சதியே அல்ல, பரம கதியே என்பதைத்தான் அறிவாரா?

பச்சையப்பன் கல்லூரியில் படித்துப் பதினெட்டாம் வயதிலேயே பி.எஸ்ஸி முதல் வகுப்பில் தேறினான் வேங்கடராமன். அடுத்து, 1959 மே மாதம் பெங்களூர் கன்டோன்மென்ட் ராணுவ நியமன அலுவலகத்தில் வேலை தருவதாக உத்தரவும் வந்து விட்டது. வெண்ணெய் திரண்டு வந்த அந்த வேளையில். . . .

நெய் கைங்கரியத்துக்காக வேங்கடரமணன் ஸந்நிதிக்கு வேங்கடராமனை அனுப்புகிறாள் தாய். இக் குடும்பத்தினர் பல தலைமுறைகளாக வேங்கடவனின் அகண்ட தீபத்துக்கு நெய் கொடுத்து வந்திருக்கிறார்கள். இப்போது பிள்ளை தலையெடுக்கு முன் முந்நிவாஸப் பெருமானுக்கு அந்த வேண்டுதலைச் செலுத்த அம்மையார் நேர்ந்துகொண்டார். பிள்ளை மகிழ்ச்சியோடு திருப்பதிக்குச் சென்றான்.

'போனேன் வந்தேன்' என்று திரும்ப வேண்டியவன் நாலு நாட்களாகியும் வரவில்லை.

சிறு பெண்கள் இருவரையும் அழைத்துக்கொண்டு இனம் தெரியா பீதியுடன் அம்மாள் திருப்பதிக்குச் சென்றார்.

ஐயோ, பீதிகரமான சோக சம்பவம் அங்கு நடந்திருந்தது!

ஸ்வாமி புஷ்கரிணியில் ஸ்நானம் செய்யச் சென்ற வேங்கடராமன் வழுக்கி விழுந்து, குளத்திலேயே மூழ்கி மாண்டு விட்டிருந்தான். போலீஸார் உடலத்தை எடுத்துச் சென்று உறவினருக்காக இரண்டு நாட்கள் ஐஸில் வைத்திருந்தார்களாம். யாரும் வராததால் சடலத்தைப் புகைப்படம் எடுத்துக்கொண்டு அடக்கம் செய்துவிட்டார்கள்.

போலீஸார் காட்டிய அந்தப் புகைப்படத்தைப் பார்த்ததும் அம்மையாரை மூச்சு விடவொட்டாமல் உள்ளும் புறமும் கனத்த புகை சூழ்ந்து நெரித்தது. தாங்கொணாத புத்திர சோகம். சங்கடஹரணனான வேங்கடரமணனே சங்கடகரணனாகி விட்டானால் அப்புறம் யார் கதி?

Koviloor Digital Library

கொழு கொம்பு முறிந்த கொடியாகச் சென்னைக்குத் திரும்பினார் அந்த அம்மாள். புத்தி பேதலித்த நிலையில் பொருட்களை வாரிக் கொடுத்தார். எப்படியோ ஜீவனோபாயம் நடந்து கொண்டிருந்தது.

வேதனை தீர உபாயம் ஜீவனை விடுவதுதான் என்றுகூடத் தோன்றிவிட்டது. பிள்ளை மறைந்த ஓராம் ஆண்டு, ஜலத்தில் மரித்ததற்கான சாந்திகளைச் செய்யப் பெண்களோடு திருப்பதி சென்ற அம்மாளுக்குப் புஷ்கரிணியிலேயே தானும் முழுகி ஜீவனை முடித்து விடலாமா என்ற எண்ணமும் இருக்கத்தான் செய்தது. ஆனால் அறியாப் பெண்களின் கதி?

கதி கலங்கிப் படுத்திருந்த அம்மாள் எப்படியோ கண்ணயர்ந்தார். உறக்கத்திலே ஒரு கனவு வந்தது.

கனவில் நம் ஸ்வாமி வந்து கருணை மயமாக நின்றார். அவர் புட்டபர்த்தி ஸாயி பாபா என்று அம்மையார் அறிந்திருக்கவில்லை. பெயர் தெரியாவிடினும் அவரது உயிரான காருண்ய சந்திரிகையைச் சகோரமாகப் பருகினார்.

கனவில் வந்த கனவான் சொன்னார் : ''நான் யாரென்று உனக்கு இப்போது தெரியவில்லை. பரவாயில்லை. நான் சொல்வதை நம்பு. நாளைக்குப் புறப்பட்டு நேரே நான் நிவஸிக்கும் புட்டபர்த்திக் கிராமத்துக்குக் குழந்தைகளோடு வா. அப்புறம் நான் யாரென்று தானே தெரியும்.

''உன் கஷ்டமெல்லாம் எனக்குத் தெரியும். உனக்கு ஜீவிதத்தில் மனசாந்தி வேறெங்கும் இல்லை; என் பாத சந்நிதியில்தான் உனக்கு சாந்தி. சந்தேகமில்லாமல் உடனே புறப்பட்டு வா. உனக்கு வழிகாட்டி நானே!''

கனவு மறைந்தது; ஆயினும் அருளாளன் உரைத்தது அம்மாளின் நெஞ்சில் உறைந்தது. கனிவு மயமான அக் கனவு மனிதர் ஒரு தெய்வ புருஷர் என்ற உறுதி ஏற்பட்டது.

திருப்பதியிலிருந்து புட்டபர்த்திக்கு வழி தெரியவில்லை. இவர்கள் விசாரித்தவர்களுக்கும் சொல்லத் தெரியவில்லை. 'கீழத் திருப்பதி போவோம்; பிறகு பார்த்துக் கொள்வோம்' என்று கிளம்பினார்கள். வழியிலும் இவர்களுக்குப் புட்டபர்த்தி வழி கூற எவரும் கிடைக்கவில்லை.

காளி கோபுரம் எனப்படும் கால கோபுரத்தருகே இவர்கள் வருகையில் ஒரு கிழப் பிராமணர் எதிர்ப்பட்டார்.

''புட்டபர்த்திக்குத் தானே போகிறீர்கள்? நானும் அங்கு தான் போகிறேன்'' என்று அவர் கூறியது இவர்கள் செவியில் இன்பத் தேனாகப் பாய்ந்தது.

Koviloor Digital Library

அவரது துணையில் நிம்மதியாகப் பர்த்தி சென்றனர். பாபாவின் மகிமைகளைக் கிழ அந்தணர் விரித்துரைத்து அவராலேயே இவர்களுக்குச் சாந்தியும் சந்தோஷமும் பிறக்கும் என்று கூறியது இவர்களுக்கு மேலும் திடமான விசுவாசத்தை உண்டாக்கியது.

புட்டபர்த்தி எல்லை வந்தது. கிழவரைக் காணவில்லை! தேடியும் பயனில்லை!

"உனக்கு வழிகாட்டி நானே!" என்று கனவில் சொன்ன பாபாவே உடன் வந்திருக்கிறார் எனப் புரிந்துகொண்டார்கள். கருணைக் காப்பில் மேலும் உறுதி கூடியது.

ஆனால், முற்றிலும் உற்சாகம் இழக்கும்படியான செய்தியே பிரசாந்தி நிலையத்தில் இவர்களை வரவேற்றது.

பாபா ஊரில் இல்லையாம். சென்னைக்குத்தான் சென்றிருக்கிறாராம். இம்முறை அங்கு முகாம் ஒரு மாத அளவு நீடிக்கக் கூடுமாம்.

சற்றே தளிர்த்த அம்மாளும், பெண்களும் வாடி விட்டனர். முன்பின் தெரியாத ஊரில் பாபாவும் இல்லாமல் எப்படி ஒரு மாதம் காலம் தள்ளுவது? அதுவுமன்றி, ஏதோ ஒரு வேகத்தில் வந்துவிட்ட போதிலும், பெண்களில் ஒருத்தி பி.யு.ஸி. சேரக் கல்லூரிகளில் முயல வேண்டுமே; இது அட்மிஷன் சமயமாயிற்றே!

'நாம் வந்தது வீண்தான். நாளையே சென்னை திரும்புவோம். பாபாவும் அங்குதானே இருக்கிறாராம்? அப்புறம் நடக்கிறபடி நடக்கட்டும்' என்று முடிவு செய்தார்கள்.

ஆசாபங்கம் உள்ளே வாதைப்படுத்திற்று.

மறுதினம். பிற்பகல் மணி மூன்று.

இவர்கள் மூட்டை கட்டிக் கொண்டிருக்கும்போது, ஒரு கார் நிலையத்துள் நுழைந்தது.

கனவில் கண்ட கருணைசுந்தரம் காரிலிருந்து இறங்கிற்று. இவர்களை உற்றுப் பார்த்தது, உடுக்கண்களால்.

"உங்களுக்காகவே வந்து விட்டேன்" என்று பரிவொழுகக் கூறிய பாபா, "நீங்கள் இப்போது போக வேண்டாம். சாயங்காலம் பேசுகிறேன்" என்றார்.

அபய ஹஸ்தம் காட்டிவிட்டு நகர்ந்தார்.

அம்மையார் மூட்டை முடிச்சுக்களை அவிழ்த்துவிட்டு ஆனந்தக் கூத்தப்படி பழைய மந்திரத்தில் அயர்ந்திருந்தார், பெண்களோடு.

Koviloor Digital Library

பகவான் கூப்பிடுவதாகச் சொல்லி ஒரு பெரியவர் இவர்களை அழைத்துச் சென்றார்.

ஆஹா! கிடைத்தற்கரிய அந்தரங்க பேட்டி!

இவர்கள் அதுவரையில் பட்டிருந்த சுகதுக்கங்கள் அனைத்தையும் மடைதிறந்த வெள்ளமாக எடுத்துச் சொன்னார் பாபா. மகன் மறைவு பற்றி அவர் சொன்னதும் துக்கம் தாளாமல் அம்மையார் கதற, "அம்மா, அழாதே!" என்று ஆறுதல் சொன்ன ஸ்வாமி தொடர்ந்தார். லேசான குரல்; ஆனால் அதிலிருந்த ஆழம்! மோகனக் குரல்; ஆனால் அதிலே எத்தனை கனம்!

"Life ஒரு day-dream (வாழ்க்கையென்பது ஒரு பகற் கனவு.) அதில் ஸம்யோக, வியோகம் மனுஷ்யராகப் பிறந்தவர்களுக்கு சகஜம். (உற்றார் உறவினரின் சேர்க்கையே ஸம்யோகம்; அவர்களது பிரிவு வியோகம்). உன் புத்திரன் உண்மையில் பரம சுத்தாத்மா. நல்ல டிஸிப்ளினோடு (ஒழுக்கக் கட்டுப்பாட்டோடு) டிவோஷனோடு (பக்தியோடு) விநயத்தோடு வாழ்ந்தான். வித்யையிலும் பிரகாசித்தான். கடைசியில் தன் ஜீவாத்மாவைப் பரமாத்மாவில் லயம் செய்து கொண்டுவிட்டான். பகவானோடு புத்திரன் சேர்ந்ததற்காக நீ துக்கப்படலாமா? நீ சோகப்பட்டால், இப்போது பரமானந்த ஸ்தானத்துக்குப் போயுள்ள அவனுடைய ஆத்மாவின் சாந்திக்குப் பாதகம் உண்டாகும்."

இப்படி ஸ்வாமி உபதேசித்தும் புத்ர சோகத்தில் பச்சைப் புண்ணாகியிருந்த தாய் மனம் ரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டே யிருந்தது.

"அம்மா, உன் துக்கம் எனக்குத் தெரியும், புரியும்" என்று கூறிய பாபா, "பிள்ளையின் dead body-ஐ (பிரேதத்தை)க் கூடப் பார்க்க முடியவில்லையே என்றுதானே தவிக்கிறாய்?" என்று கேட்டுத் தமது கையை அவள் முன் நீட்டினார். அதுதான் எப்பேர்ப்பட்ட கை?

பக்கத்திலேயே இருந்த பெண்களுக்குத் தெரியாத பேரற்புதம் அந்தக் கரத்திலே அம்மாவுக்கு மட்டும் தெரிந்தது.

ஸினிமாப் படம் போல் மகனின் அந்திம கால நிகழ்ச்சிகள் யாவும் ஐயனின் கையில் ஸ்வச்சமாகத் தெரிந்தன!

கர தலத்தில் திருக்குளம் தெரிகிறது! ஸ்வாமியின் புஷ்பக் கரத்தில் ஸ்வாமி புஷ்கரிணி! அதில் நீராட இறங்குகிறான், ஆஹா இறந்து போன வேங்கடராமன்.

ஐயோ, பாசி வழுக்கிவிட்டது!

நீர் அவனை இழுத்துக்கொண்டே போகிறது!

Koviloor Digital Library

கரையிலிருந்த வேறு சிலரும் அவனைக் காப்பாற்றக் குதிக்கிறார்கள். ஆனாலும் பலனில்லை.

அதோ, நீராழி மண்டபத்தருகில் உயிருக்குப் போராடுகிறான் செல்வன். போரிட்டுப் பயனில்லை எனக் காண்கிறான். அன்னையையும் தங்கைகளையும் எண்ணுகிறான்.

''நாராயணா! நான் உன்னிடம் வருகிறேன். என்னைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் என் குடும்பம்! நாராயணா, ஸத்ய நாராயணா, அவர்களைக் காப்பாற்று'' என்று பிரார்த்திக்கிறான்.

ஆவி அடங்கிவிட்டது!

அடங்கிவிட்டதா? கிளம்பிவிட்டதா? இதோ வேங்கடராமனின் ஆத்ம ஜ்யோதி, வாஸ்தவமாகவே ஓர் ஒளிப் பிழம்பாகப் புறப்படுகிறது! ஜ்யோதி வடிவான தாமரை போலுள்ள அது எங்கே செல்கிறது? ஆம்,

அடிச்சோதி நீ நின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ?

என்று ஆழ்வார் பாடிய வேங்கடரமணனின் திருவடியான ஜ்யோதித் தாமரையிலேயே ஐக்கியமாகிறது வேங்கடராமனின் ஜீவ ஜ்யோதிக் கமலம்.

மெய்யாலுமே பிள்ளை பகவானில் இணைந்ததைக் கண்டதும் அம்மை நெஞ்சில் ஒரு தெளிவு பிறக்கிறது. தெளிவை மேலும் வலுவாக்குகிறார் ஐயன்.

பாலாஜி கோவிந்தனைப் பாதத்திலிருந்து அங்க அங்கமாக அவளுக்கு மேலே மேலே காட்டிப்போகிறார்.

முடிச்சோதியாய் உனது முகச்சோதி மலர்ந்ததுவோ?

என்று ஆழ்வார் வர்ணித்த திருமுக தரிசனம்!

பச்சை கர்ப்பூரம் அப்பிய சுந்தர முகவாய்; கட்டறுத்துப் பாயும் நகை மிளிரும் திருவாய்; கம்பீர நாசி; தளதள கன்னங்கள்; கர்ப்பூர நாமத்தில் மறைந்தும் கடாக்ஷப் பிரவாகத்தை மறைக்காத நயனங்கள்.

ஆஹாஹா! பாலாஜியின் முகம் பாபாஜியின் முகமாக அங்கே மாறிவிட்டது!

ஒருமுறை மட்டுமல்ல. மும்முறை ஏழுமலையப்பனாகவே நின்றார் நம் எளிமையப்பன்.

பரம அபாக்கியவதியை மகா பாக்கியவதியாக்கிவிட்டார்!

காட்சிகள் மறைந்தன. சர்வஸாக்ஷியான பாபா கம்பீரமாகப் பேசலானார்:

Koviloor Digital Library

"அம்மா. உன் பிள்ளை என்று நினைத்தவன் பூர்வ ஜன்மாவில் பரம வைஷ்ணவனுக இருந்தவன். அந்த ஜன்மத்தில், திருப்பதிப் புஷ்கரிணியில் ஜலசமாதி அடையவேண்டுமென்றே பன்னிரண்டு வருஷங்கள் தபஸ் செய்தான். ஆனுல், அந்த ஆசை பூர்த்தியாகவில்லை. குறைதீரவே மறுபடி ஜன்மித்தான். பதினெட்டு வருஷங்கள் உலகத்தில் இருந்துவிட்டு, அதே திருப்பதியில் பகவத் சங்கல்பப்படி காலகதி அடைந்து, மனுேரதம் பூர்த்தி பெற்ருன். அவன் போய் விட்டான் என்று நீ துக்கிப்பதை விட்டு, நமக்குப் பிள்ளையாகப் பிறந்து, பதினெட்டு வருஷம் நம் கூட இருந்தானே என்று சந்தோஷப்படத்தான் வேண்டும்.

"உனக்கு அவனே குரு, வழிகாட்டி. பகவானை அடைய வழிகாட்டிக் கொடுப்பவர்தானே குரு? நீ என்னை அடைய வழிகாட்டியது அவன்தானே? அவன், 'ஸத்யநாராயணு, என் குடும்பத்தைக் காப்பாற்று' என்று பிராணனை விடும் போது பிரார்த்தித்ததாலேயே உன்னை நான் தடுத்தாட்கொண்டேன். In fact, திருப்பதியிலிருந்து புட்டபர்த்திவரை கிழப் பிராமணனுக வழிகாட்டி வந்தது நானேதான். உன் புத்திரனின் மரணம் நிகழாவிட்டால் நீ என்னிடம் வந்தேயிருக்கமுடியாது. அவன் சரீரத்தை விட்டு, திருப்பதியில் சிலாரூபத்தில் உள்ள பகவானை அடைந்தான். பிரத்யக்ஷ நடமாடும் தெய்வமாக, உன்னைப்போல் துக்கித்தவர்களுக்கு ஆதாரமாகவும் ஆனந்தம் தரவுமே அவதரித்துள்ள என்னிடம் உங்களை சரீரத்துடனேயே சேர்த்துக் கொண்டுவிட்டேன். சீக்கிரம் உங்கள் மூவரையும் என் சந்நிதியிலேயே நிரந்தரமாக வைத்துக்கொள்கிறேன். என் நாம ஸங்கீர்த்தனமே உங்களுக்கு இனி மன சாந்தி."

— தேவ தேவ தேவாதி தேவப் பெருமாளாகப் பேசியவரின் குரல் எளிமையில் சுருண்டது: "அம்மா! என்னையே இனிமேல் உன் புத்ரனுக பாவித்துக் கொள்."

மகன் மறுபடி மன்னர்மன்னனுகி உன்னதம் பொங்கச் சொன்னுர்: "இனி, பிள்ளைக்காக உன் கண்ணிலிருந்து பொட்டு ஜலம் விழக் கூடாது!"

இன்று அந்த அம்மாள் புத்திரசோகமுற்ற விவரங்களைச் சொல்கையில் கேட்போர் கண்களில் நீர்த்திரையிடும். ஆனுல் அவரோ அலைகுலையாமல் அமைதியாகவே இந்த சம்பவங்களை ஆற அமரச் சொல்வார்.

"இனி உன் கண்ணிலிருந்து பொட்டு ஜலம் விழக் கூடாது" —என்ற வார்த்தைகளின் மந்திர சக்தி!

தாய்க்குலத்தால் தாங்கவொண்ணு புத்ர சோகத்தையும் கரைக்கும் அருள் வேகத்தை என் சொல்ல?

ஒருவருக்கு ஞானத் தெளிவோடு மரணம் தந்து, அவரது உற்ருரது பாசப் புலம்பலைக் களைந்தெறியும் லீலைகளில் இன்னும் ஒன்றை இந்த அத்தியாயத்தில் பார்க்கலாம்.

Koviloor Digital Library

ஒருமுறை ராஜமஹேந்திர புரத்தில் ஒரு மாபெரும் கூட்டத்தில் பேசிய பாபா, "இங்கே வந்திருப்போரில் சிலர் 'பாமர மக்களுக்கு மத்தியில் பாபா ஏன் பரம அத்வைத தத்வங்களைச் சொல்கிறார்? இது யாருக்குப் புரியும்?' என்று நினைக்கலாம். ஆனால் ஸத்யத்தைத்தான் நான் சொல்லமுடியுமே தவிர, வெறுமே செவிக்கு ரஞ்சகமாகப் பேசிப் போவதற்கில்லை. நான் சொல்வது வீண் போகாது. இங்கேயே ஓரிரு நெஞ்சங்களிலாவது அது ஆழப்புகுந்து அவர்களது வாழ்வையே மாற்றக் கூடும். இப்படிச் சிலர் உய்வதே போதுமானது" என்றார்.

மெய்யாலுமே அன்றைய உபந்யாஸத்தைக் கேட்ட ஒரு தகப்பனாரும், பிள்ளையும் உண்மையான ஆத்மிக நாட்டம்கொண்டு அந்த மார்க்கத்தில் ஆழங்காற்படப் பிரவேசித்தனர்.

சில மாதங்களிலேயே பிள்ளை காலமாகிவிட்டான்.

பெற்ற பிள்ளையைச் சாகக் கொடுத்த தந்தை, பாபாவுக்கு எழுதியதைப் பாருங்கள்: "அவன் உங்கள் நாமத்தைச் சொன்னபடியே ஆனந்தமாக முடிந்துபோனான். ஆண்டவனோடு இரண்டறக் கலக்க வேண்டுமென்பது தவிர வேறு ஒரு ஆசையும் இல்லாதிருந்து, அதை நடத்திக்கொண்டுவிட்டான். இப்படிப்பட்ட ஒரு வாழ்க்கை வாழ்ந்து, பெருமைப்படத்தக்கதாக இப்படியொரு இன்பமுடிவு கண்ட பிள்ளை நமக்குப் பிறந்தானே என்பதில் மகிழ்கிறேன்".

புத்திரனின் மரணத்தில் "I am glad" என்று ஒரு தந்தையை எழுத வைக்கும் ரஸவாதத்தை என்னென்பது?

Koviloor Digital Library

அத்தியாயம்—32

ஸாயி அருளில் சாயும் துயரம்

இறந்தவர்களைக் குறித்தோ, இருப்பவர்களைக் குறித்தோ ஞானிகள் துக்கப்பட மாட்டார்கள்.

— கீதை ·2.11

மனோரஞ்சிதம்மாவும், அநாமதேயினியும் ஓரளவு வயதாகி, வாழ்க்கையில் அடிபட்டவர்கள்தான். ஆனால், அலமேலுவோ நடுத்தர வயதினர். செல்வச் செழிப்பில் இருந்த இவர் மத்திமப் பிராயத்தில் பதியை இழந்துபோது பாபா செய்த அநுக்ரஹம் அதிவிசேஷம்தான்.

ஆங்கிலத்தில் ஸ்ரீ கஸ்தூரி எழுதியுள்ள 'ஸத்யம் — சிவம்— ஸுந்தரம்' என்ற பாபா சரிதை முதற்பாகத்தின் தமிழாக்கத்தை மூன்று பதிப்புக்கள் அச்சிடும் பேறுபெற்ற உடுமலைப்பேட்டை அச்சக உரிமையாளர் ஸ்ரீ ராதாகிருஷ்ண செட்டியாரின் அருமை மகள் இந்த அலமேலு.

துரதிருஷ்டவசமாக அவரது கணவர் வேங்கடகிருஷ்ணன் இளவயதிலேயே இதய நோயுற்றார். பாபாவும்தான் அயராது, சலியாது எத்தனை முறைகள், எத்தனை விதங்களில் இவருக்கு அருள்செய்து இதய நோயை அவ்வப்போது கட்டுப்படுத்தியிருக்கிறார்!

ஒருமுறை இவரது இதயத்துக்கு வேலை அதிகமிருக்கக்கூடாது என்பதற்காக பாபா இவரது காலிலும், வயிற்றிலும் நீரை நிறுத்தி வைத்துச் செய்த அற்புதம், டாக்டரான அலமேலுவின் சகோதரருக்கு ஆச்சரியமூட்டியது!

இத்தம்பதியருக்கு ஸ்வாமி பர்த்தியில் பழைய மந்திரத்திலும், பிரசாந்தி நிலயத்திலுமாகப் பல மாதங்கள் இடம் கொடுத்து வைத்துக்கொண்டிருக்கிறார். ஓடும் ரயிலில்கூட விபூதி உருவில் தம் அருளை அனுப்பி வேங்கடகிருஷ்ணனுக்கு வயிற்றுப்போக்கை உண்டாக்கி தாற்காலிகமாக சொஸ்தம் செய்திருக்கிறார். ஆனாலும் தாற்காலிகம்தான். நோயைக் குறைத்தாரேயன்றிக் குணப்படுத்தவில்லை.

Koviloor Digital Library

இதைத்தான் சிலர், 'ஒருவரைக் குணப்படுத்த வேண்டுமென்பதில் பாபாவின் தீவிரமான சிரத்தை (sincerity) யைப் பற்றி சந்தேகமில்லை. அவர் படாதபாடு படத்தான் செய்கிறார். ஆனாலும் கூட உலகில் அவருக்குள்ள அதிக சக்தி, மனித சரீரத்திலிருந்து இல்லை; மனித சரீரத்திலிருந்துள்ள அளவுக்கும் கூட மனித உள்ளத்திலிருந்து இல்லை. இதனால்தான் விபூதி, பதக்கம், மோதிரம், விக்ரஹம் இவற்றை சிருஷ்டிப்பதில் அவருக்குள்ள பேராற்றலை நோய்களைக் குணப்படுத்துவதில் காணமுடியவில்லை' என்கிறார்கள்.

“கான்ஸர் கான்ஸல்” என்று சொல்லியே சிலருக்குப் புற்று நோயையும் தீர்த்தவர் இவர். பிரசாந்தி நிலயத்தின் மாதாந்தர பத்திரிகையான 'ஸநாதன ஸாரதி' ஆரம்ப நாட்களில் பிரதி இதழிலும் அந்த பாபா அமைத்துள்ள மருத்துவ மனையில், மருத்துவ சாஸ்திரத்துக்கு மேம்பட்டு நடந்த 'மிராகிள் க்யூர்'களைப் பற்றி முழுத்தகவல்கள் வந்துள்ளன. ஆயிர மாயிரவரின் தீரா நோய் தீர்த்த வைத்தியநாதன் பாபா என்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஆயிரமாயிரம் பேர் அவரிடம் சென்றும் குணமாகாமலே இருப்பதும் உண்மை.

ஆனால், இது காரணமாக அவருக்கு இத்துறையில் சக்தி போதாது என்பது பொருத்தம் இல்லை. வைத்யசாலைகளிலும் கூடத்தான் மிக உயர்ந்த சிகித்ஸை தந்தாலும் எல்லோருமா குணமாகி விடுகிறார்கள்? சிலருக்குப் பலிக்காததால் அந்த மருந்திலே வீர்யம் இல்லை என்பதா? வியாதி என்று வந்தால் வேங்கடரமண ஸ்வாமிக்கு மஞ்சள் துணி முடிந்துவைக்காத வீடே தென்னகத்தில் இராது. அப்படியும் பலர் காலமாகிறார்கள் என்பதால் பெருமாளுக்குச் சக்தி போதவில்லை என்பதா? உலகில் வியாதியே இல்லாமல், மரணமே யில்லாமல் ஆகும் என்பது நடக்கக்கூடிய காரியமா? கர்மாவின் பலனுக்கு வியாதியும் மரணமும் வரத்தான் வேண்டும். அதிலேயே மன்னிக்கக் கூடியவர்களுக்குக் கொஞ்சம் கர்மாவைத் தளர்த்தி நிவாரணம் தருகிறான் பகவான் — வேங்கடரமணனாகவோ, குருவாயூரப் பனாகவோ, வைத்தீச்வரனாகவோ இருந்துகொண்டு. இப்படியே பாபாவாகவும் பகவதனுக்ரஹம் பாய்கிறது என்பது பக்தர்களின் நம்பிக்கையும் நடைமுறையனுபவமும் ஆகும்.

நிவாரணம் பெறுவதற்கில்லாத கடுமையான கர்மச் சுமை யுள்ளவர்களையும் தம்மிடம் (அதாவது பகவத் கிருபையிடம்) நன்றாக ஈடுபடுத்தி, அவர்கள் இப் பிறவியை முடிக்கு முன் பக்குவப்படவே அவர்களுக்குத் தம் அன்பையும் அக்கறையையும் காட்டிச் சேர்த்துக்கொள்கிறார். “பாபாவுக்கு நம்மிடம் எத்தனை அக்கறை!” என்று அவர்கள் நினைக்கும்பொருட்டே, தீர்க்கக் கூடாத வியாதி என்று தெரிந்தும்கூட, இவர் விடாமல் அவர்களுக்கும் விபூதி, மருந்து தந்தும், அல்லது விக்ரஹம் தந்து அதன் அபிஷேக நீரைக் குடிக்கச் செய்தும் தாற்காலிக சாந்தி தருகிறார். நோயாளியிடம் கூறாவிடினும், அவரது உற்றாரிடம், “இது முற்றிய கர்ம வியாதி; அநுபவித்துத் தீரட்டும்”

Koviloor Digital Library

என்று பாபா கூறியுள்ள ஸந்தர்ப்பங்கள் பல. உற்றோரும் நல்ல பக்குவிகளாக இல்லாதபோது அவர்களிடமும் இந்த ரகசியத்தை அவிழ்க்கமாட்டார். ஆனால் மற்றோருக்குச் சொல்லி விடுவார். எனவே அவர் தம்மால் குணம் செய்ய முடியும் என்று நினைத்து ஓரிடத்தில் ஏமாறிப் போனார் என்பது சரி இல்லை. அப்படி நினைத்தால் நாம்தான் ஏமாறியவராவோம்.

''குணமாகிவிடும் என்று அவரே நன்றாகச் சொன்னார். கால கெடுகூட வைத்தார். ஆனால் சரியாகவில்லையே!'' என்று சொல்கிறவர்களை இந்நூலாசிரியருக்குத் தெரியும். இப்படி யெல்லாம் அவர் கூறுவதும் அவர்களை ஸன்மார்க்கத்தில் நன்றாகத் திருப்புமுகமாக என்றுதான் சொல்லவேண்டும். ஏனெனில் பாபா விடம் ஒரு வீட்டில் நோய் நிவாரணத்துக்காகப் போகிறார்கள் என்றாலும் கூட, உடனே அங்கே பஜனை, பூஜை முதலியனவும் நுழைந்து விடுகின்றன அல்லவா? இவ்வாறாகச் செய்யவே, ''ஸத்தியம் என்பது வெறும் யதார்த்தத்தைச் சொல்வதல்ல, அது ஜீவர்களுக்கு ஹிதம் செய்வதே'' என்ற தர்ம சாஸ்திர லக்ஷணப் படி — அல்லது, ''பொய்மையும் வாய்மை இடத்த'' என்று வள்ளுவர் சொன்னபடி 'பொய்' வாக்குறுதி தருகிறாரோ?

பாபாவிடம் குறை காண்கிறவர்கள் எத்தனையோ ஆயிரம் பக்தர்களின் நோயை அவர் நொடியிலே தீர்த்திருப்பதை ஏன் கவனிக்கமாட்டேன் என்கிறார்கள்? இதேபோல் வறுமை, விபத்து முதலியவற்றிலிருந்து எண்ணற்றவரை அவர் அற்புதமுறையில் ரக்ஷித்திருப்பதை ஏன் கருத்தில் கொள்ளத் தவறுகிறார்கள்? இவ்விதம் அவரால் தீர்க்கப்பட்ட ஏராளமான இன்னல்களில் பெரும்பாலானவை பூர்வகர்ம பயனாக இன்றி நிகழ்காலச் சந்தர்ப்ப நெரிசலால் ஏற்பட்டவையாக இருக்கலாம். அவர் தீர்க்காவிடில் அவை இப்போது விபரீதம் விளைவிப்பதோடு நில்லாமல், எதிர்காலக் கர்ம மூட்டையையும் பெருக்கி, முடியாத துன்பத்தைத் தந்துகொண்டே தானிருக்கும். இவற்றைப் போகக் கும் பேருபகாரத்துக்காக பாபாவைப் போற்றுவதை விடுத்து, அவர் தீர்க்காமல் வைத்துள்ளவற்றுக்காக அவரைக் குறை சொல்வது எப்படிச் சரியாகும்?

பாபா தீர்க்கும் பிரச்சினைகளில் பெரும்பாலானவை கர்மபாக்கி அல்ல என்று மேலே சொன்னதால், சிறுபாலானவை கர்ம விளைவே என்று ஆகும். ஆம், இந்நூலாசிரியரின் உள்ளுணர்ச்சிப் படி. பாபா சிலர் விஷயத்தில் கர்மத்தையும் மீறி, கர்மத்தையும் தகர்த்து அருள் செய்துதான் வருகிறார். ஒரு சிலரது நிகழ்கால பக்தியின் தீவிரத்தால் பழைய கர்மத்தை நலிவிக்கிறார்; வேறு சிலருக்கோ இப்படிப்பட்ட காரணம் கூட இன்றித் தமது அருளா வேசம் ஒன்றாலேயே கர்மாதீதமான நன்மைகளை விளைவிக்கிறார் என்பது நூலாசிரியரின் அநுமானம்.

✿ ✿ ✿

வியாதி என்பது ஏதோ இப்போதைய பௌதிக காரணங் களால் ஏற்படுவது மட்டுமல்ல; சிலருக்கு வியாதி பூர்வபாப

Koviloor Digital Library

கர்மாவின் பலனாகவே ஏற்படுகிறது. அந்தக் கர்மாவை ஜன்மா முழுக்க அநுபவிக்கும்படியும் இருக்கலாம்.

இம் மாதிரியானவர்களைப் பெரும்பாலும் பாபா குணப்படுத்துவதே இல்லை.

வெகு தெளிவாகவே இதை இந்திராதேவியிடம் கூறியிருக்கிறார். இவ்வம்மையாருக்கு ஸ்வாமி 108 முத்துக்கள் கொண்ட ஒரு மாலை அளித்து, அதை நோயாளிக்கு அணிவித்தால் வியாதி தீரும் என்றார்.

"எந்த நோயானாலும் தீர்ந்துவிடுமா?" என இந்திராதேவி வினவினார்.

"No" என்றார் ஸ்வாமி பளிச்சென்று. தொடர்ந்து, "not if the illness is a form of payment for a *Karmic* debt" என்றார். (கர்மக் கடனைத் தீர்ப்பதற்காக வியாதி என்பது உண்டாகும்போது முத்துமாலை பலனளிக்காது என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்).

* * *

வியாதி மட்டும் என்றில்லை. வறுமை, விபத்து, தோல்வி, விரோதம் முதலிய பல பிரச்னைகளிலும் நிகழ்கால சந்தர்ப்ப நேர்ச்சல்களால் மாத்திரமே நேருபவை, பழைய கர்மாவுக்குப் பலனாக விதிக்கப்பட்டு உண்டாகிறவை என்று இரண்டு விதங்களும் உள்ளன. கர்மாவால் ஏற்பட்டவற்றை ஈச்வர கிருபையைப் பெற்றாலுங்கூட ஜன்மா முழுதும் அநுபவிக்கவேண்டியும் இருப்பதுண்டு; அல்லது நீண்ட காலம் அநுபவித்த பின்பு அவை இப் பிறப்பிலேயே தீர்வதுமுண்டு.

பாபா நீண்டகாலம் சில வியாதிகளுக்கு விபூதி, மூலிகை, டானிக் போன்றவற்றைக் கொடுத்தபின்பே அவை தீர்வதைப் பார்த்து, அவரது சிறிய ஆற்றலால் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் வியாதியைத் தீர்க்க முடிந்தது என எண்ணுவது சரியேயல்ல. தமது பெரிய ஆற்றலையே, கர்மக் கணக்குப்படி, சிறிய அளவில் அவர் வேண்டுமென்றே குறைத்துப் பிரயோகிப்பதுதான் இதற்குக் காரணம்.

எத்தனை எத்தனையோ நோயாளிகள் நீண்ட கால அவஸ்தைக்குப்பின் க்ஷணநேரத்தில் பாபாவால் சொஸ்தப்படுத்தப் பெற்றிருக்கிறார்களே! இந்த மருத்துவப் பேராற்றலை என்னென்பது? இத்தனை பேராற்றல் இருந்த போதிலுங்கூட, அடியார்களிடம் கருணையும் பேரன்பும் அவருக்கு இப் பேராற்றலோடு கூட இருந்துங்கூட, கர்ம தர்மத்துக்காக அவர் இந்த அன்பையும், ஆற்றலையும் அத்தனைக் காலம் அடக்கி வைத்துக் கொள்கிறாரே, அந்த திவ்விய நீதியுணர்வை நமஸ்கரிப்போம்; இதன் உட்கிடையாக அவர் வெளியே காட்டாமல் உள்ளுக்குள்ளேயே உறும் திவ்விய வேதனையை நமஸ்கரிப்போம்.

Koviloor Digital Library

பிற்பாடு இந்நூலில் ''தியாக ஸாயி'' என்றே ஒரு அத்தியாயம் வருகிறது. அதில் பலரது நோயை ஸ்வாமி தாமே ஏற்று அநுபவிக்கும் தியாகம் பரக்கப் போற்றப்படும். ஆனால், ஒரு நாணயத்தின் இருபுறம் போல் இதற்கு மறுபுறம், தர்ம நியாயத்தின் பொருட்டு அவர் பலரது நோயைத் தீர்க்கக்கூடிய அன்பும், ஆற்றலும் முட்டிவந்தும்கூட அவற்றைக் கட்டிப்போட்டுவிட்டு உள்ளுக்குள்ளே குமையும் தியாகத்தையும் வியந்து போற்றத் தான் வேண்டும்.

வியாதி, வறுமை, விரோதம் முதலிய கர்ம பாக்கிகளை பாபா தீர்க்காத போதிலும் இவற்றால் வருந்துவோருக்கு விபூதிப் பொழிவு, பரிசு வழங்கல் முதலிய அற்புதங்களால் ஆனந்தம் தருவதுண்டு—தாற்காலிகமாகவேனும் அவர்கள் தங்களது கஷ்டத்தை இவற்றால் மறக்குமாறு செய்வதுண்டு. இந்தக் கருணையைத்தான் சிலர் புரிந்துகொள்ளாமல் அவரால் ஏதோ சில சித்துக்களைக் காட்ட முடிகிறதே தவிர ஜீவிதப் பிரச்னைகளைத் தீர்க்க இயலவில்லை என்று தப்பாக வியாக்கியானம் செய்கிறார்கள். கர்ம தர்மத்தின் மர்மத்தை அறியாதவர்கள்!

வியாதிக்கு பாபா விபூதியோ, மருந்தோ வரவழைத்துக் கொடுப்பதுங்கூட இவ்வித தாற்காலிக சாந்தியோடுநின்றுவிடுவதும் உண்டு—கர்மச் சுமையைப் பொறுத்து! உதாரணமாக, மூளைக் கோளாறுள்ள ஒரு பெண்ணின் வீட்டுக்கு ஸ்வாமி புரியும் அருள்கள் அனந்தம். அப்பெண்ணையும் அவ்வீட்டில் அனைவரையும் பேரானந்தத்தில் முழுக்கி விடுவார். நோயாளிக்கு விபூதி கொடுப்பார். அவளது பெற்றோருக்கு ஏதேனும் விக்ரஹம் கொடுத்து, ''இதற்கு அபிஷேகம் செய்து, அத் தீர்த்தத்தைப் பெண்ணுக்குக் கொடுங்கள்'' என்பார். இச் சம்பவங்களில் அவர்களுக்கு ஆனந்தம் பொங்கும். நாளாவட்டத்திலோ இவற்றாலும் பலன் இல்லை என்று தெரியும். ஆனால் இதனாலும் அவர்கள் மனம் நொய்ந்து விடாதபடி பாபா மீண்டும் அன்பையும் அற்புதத்தையும் காட்டி அவர்களை உற்சாகப்படுத்துவார்.

பிறகுதான் ஒருநாள் அப்பெண்ணின் தந்தை போதிய பக்குவம் எய்தியபின் அவரிடம் மகத்தான ரகசியத்தை மணிவாக்கில் திறந்து காட்டினார்: ''அப்பா! ஒரு குழந்தை வயிற்று வலியில் துடிக்கிறது. அம்மா டாக்டருக்குச் சொல்லி அனுப்புகிறாள். அவர் வரும்வரையில் குழந்தையை சமாதானப் படுத்த வேண்டுமல்லவா? அதற்காக ஒரு கிலுகிலுப்பையை எடுத்து ஆட்டுகிறாள். குழந்தை அதையே கவனிக்கிறது; மகிழ்கிறது; சிரிக்கிறது. அப்போதைக்கு வயிற்று வலியை மறந்தே விடுகிறது. ஆனால், நாயனா, வயிற்று வலிக்குக் கிலுகிலுப்பை மருந்தா என்ன? இப்படித்தான் கர்ம நிராகரணம் என்ற டாக்டர் வருகிற காலம் வரையில் வேறு விதங்களில் கிலுகிலுப்பை ஆட்டி வருகிறேன்!''

Koviloor Digital Library

பழைய கர்ம பலனை அடியோடு மாற்றக் கூடாதுதான். ஆனால் அந்தக் கர்ம வாஸனையால் இழுக்கப்பட்டு அதே போக்கில் மேலும் மேலும் போவதைத் தடுக்கலாமல்லவா? பலன் கொடுக்கத் தொடங்கிய பழைய கர்மாவைப் ''பிராரப்தம்'' என்றும் இதை மாற்றுவது இறைவனும் அவ்வளவாகச் செய்யாத காரியமே என்றும் சொல்வர். பழைய கர்மம் போலவே இப்போதைய கர்மமும் எதிர்காலத்தில் என்றோ பலன் தருவதற்காக மூட்டை கட்டிக் கொள்ளும் என்பர். இவ்வெதிர்காலக் கர்மச்சுமையை ''ஆகாமி'' என்பர். ''ஆகாமி''யில் பாபம் சேராமல் தடுப்பதே இறைவன் தயங்காமல் புரியும் அருள். இதன் ஓர் அம்சமாக, பிராரப்த கர்மவாஸனையால் இன்று நாம் நடக்கிற விதமே ஆகாமியிலும் நம்மிடம் குறையைச் சேர்த்துவிடாதபடி நம்மைக் காப்பதாகும். இதற்கு நம் ஸ்வாமியின் லீலையில் ஒரே ஓர் எடுத்துக்காட்டு — அற்புதமான எடுத்துக்காட்டு — பார்க்கலாம்.

(பெயர் தெரிவிக்க விரும்பாத) அந்த மாணவர் எம்.எஸ்ஸி.யில் 'மரைன் பயாலஜி' சேர இருந்தார். கடல்வாழ் உயிரினங்கள் பற்றிய ஆராய்ச்சி அது. இம்மாணவரோ குழந்தைப் பருவத்தில் நீர் என்றாலே இனம் தெரியா நடுக்கம் கொண்டவர்; 'ஹைட்ரோஃபோபியா' என்ற சித்தக் கலக்கம் கொண்டவர். இப்போது அதை மறந்து இந்தப் படிப்பைத் தேர்வு செய்துவிட்டார். ஆனால் இதில் அவர் மேலும் ஈடுபடுவாரானால் பழைய பீதி உள்மனத்திலிருந்து மறுபடி கிளம்பி இவரைப் பிடித்துக்கொண்டு விடும்! பக்தரான அவரை இதற்கு ஆட்படுத்துவாரா நம் பகவான்?

மாணவரின் கனவிலே தோன்றினார். ''மரைன் பயாலஜி வேண்டாம். என்டமாலஜி (நிலம் வாழ் பூச்சி இயல்) படி'' என்று தீர்மானமாகச் சொன்னார்.

மாணவரும் அவ்விதமே செய்தார்.

பிறகுதான் அவருக்கு நீர்ப் பிராந்தி படைத்த தாம் மரைன் பயாலஜியில் ஈடுபட்டிருந்தால் எத்தகைய கோளாறு உண்டாகியிருக்கும் என்று புரிந்தது!

இந்த எடுத்துக்காட்டை 'அற்புதம்' என்று சொன்னது ஏன் எனில்:

பாபா இம் மாணவருடைய ஹைட்ரோஃபோபியாவையே போக்கியிருக்கக் கூடாதா? அப்படிச் செய்து அவரை மரைன் பயாலஜிக்கு ஏற்றவராக்கி இருக்கக் கூடாதா? இவ்விதம் செய்யாததற்குக் காரணம், பூர்வ ஜன்மத்தில் இம் மாணவரின் கர்மாவுக்குப் பலனாகத்தான் இக் கோளாறு அவருக்கு ஏற்பட்டிருக்கிறது. பால்யத்தில் இந்தப் பிராரப்தத்தை அவர் அநுபவிக்குமாறே விட்டிருக்கிறார் பாபா. இறைவனின் தர்ம உணர்வு பெரும்பாலும் பிராரப்தத்தை மாற்றுவதில்லையே. இக்கர்ம வாஸனை, பெருங்காயத்தை எடுத்த பின்னும் அதை வைத்திருந்த பாத்திரத்தில் நெடி இருப்பதுபோல் மாணவர் உள் மனத்தில் தேங்கி இருந்திருக்கிறது. அது வெளிப்பட்டு, மறுபடி அவர்

Koviloor Digital Library

பிராந்தி கொண்டால், இந்த அச்சம் மறுபடியும் வளர்ந்து, எதிர் காலத்துக்கும் ஆகாமியாகச் சேரும். அப்படிச் சேரவிடாமல் தான், அடியில் மண்டியது மங்கி மங்கி மறையுமாறு, அவரை வேறு படிப்பில் திருப்பி விட்டார் ஸ்வாமி. வைரம் திருப்பவனை விடக் கவனத்துடன் கர்மாவை நிறுத்து, பிராரப்தத்தை மாற்றாமல், ஆகாமியை மாற்றியதை அற்புதம் எனத்தானே கூறவேண்டும்?

* * *

வந்த வினையும் வருகின்ற வல்வினையும்
கந்த எனச் சொல்லக் கலங்கிடுமே

என்றார் அடியார். 'வந்தவினை'யே பிராரப்தம். 'வருகின்ற வினை' ஆகாமியும், பழைய கர்மாவிலேயே இப்பிறப்பில் அநுபவத்துக்கு வராமல் எதிர்காலத்துக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் ஸஞ்சிதமும் ஆகும். இங்கே "வந்தவினை"யான பிராரப்தத்தையும் ஆண்டவன் போக்குவதாக அடியார் சொல்கிறார்.

ஆம், அவனால் அதையும் போக்கமுடியாது என்பதில்லை. தர்மத்துக்காகப் போக்கக் கூடாது என்று இருக்கிறானே ஒழிய, போக்க இயலாது என்பதாலல்ல. தர்மமும் அவன் ஏற்பாடு தானே? அதை மாற்றவும் அவனுக்கில்லாத உரிமையா? எப்போதேனும் அருமையாக, அபூர்வமாக இப்படிப் பிராரப்தத்தையும் அவன் நசிக்கச் செய்வதை விசேஷ கிருபை (Special Grace) என்று ஸ்வாமி சொல்வார்; ஏனைய பல மஹாத்மாக்களும் சொல்வதுண்டு.

"புட்டிக்குள் அடைத்த மருந்து ஒரு குறிப்பிட்ட கால கெடுவுக்குப் பின் வெளிப்பார்வைக்கு மாறாமலே இருந்தாலும் அடியோடு வீரியம் இழந்துவிடுவது போல வெளியில் காரியங்கள் பூர்வ கர்மாப்படி நடந்தாலும் ஜீவனின் உள் அவற்றின் வீரியம் தாக்காமல் கருணையானது காக்கும்" என்று பாபா சொல்வதையும் விட ஒரு படி அதிகமானது இந்த விசேஷ கிருபை. வெளியிலும் காரியங்கள் பூர்வ கர்மாப்படி நடக்காமல், நல்லதாகவே நடக்கச் செய்யும் கிருபை இது!

இதற்கு வெகு அழுத்தமான ஓர் உதாரணம்:

ஹைதராபாத் வைசியர் ஒருவர் பணக் கஷ்டத்தால் அவதியுற்றார். ரேகை சாஸ்திரியிடம் ஆரூடம் கேட்டார்.

"தன ரேகையே இல்லையே அப்பா. உன் பூர்வகர்மா இது! என்ன செய்யலாம்?" என்று கூறிவிட்டார் ரேகை ஜோதிடர்.

மனமுடைந்துவிட்டது வைசியருக்கு. கர்மப்படி பணக் கஷ்டம் தீருவதற்கே யில்லை என்றால் மனமுடையாதா?

Koviloor Digital Library

அவர் ஸாயி பக்தர்.

ஸாயி இரவில் கனவிலே தோன்றினார். வைசியரின் கையை பிடித்தார். ஒரு கத்தியால் அந்தக் கையில் தாமே தனரேகை போட்டார்.

காலையில் எழுந்த வைசியர் கையைப் பார்த்தால்...

அழுத்தமாக தனரேகை கையிலே காணப்பட்டது!

அது ஸாயியின் வெறும் குறும்பாக முடிந்துவிடவில்லை. வாஸ்தவமாகவே அந்த வைசியருக்குப் பணமுடை தீர்ந்து, செல்வ வசதியும் உண்டாகிவிட்டது!

ரேகையை மாற்றி, கர்மாவையும் மாற்றிய அயனான லீலை தான்! கையில் புது ரேகை போட்டபோதே, தலையில் அயன் கையெழுத்தைத் துடைத்த அதிசய லீலைதான்!

இத்தனை சொல்லியும் அவரே தவறியதாக ஓரளவு உறுதிப் படுத்தக் கூடிய சில எடுத்துக்காட்டுக்கள் இருக்குமாயின், அதை எந்த அவதாரத்திலும் ஓரம்சம் ஒட்டிக்கொண்டுள்ள மாயாம் சத்தின் பிரதிபலிப்பு என்றுதான் சொல்லவேண்டும். இவ்விஷயத் தைப் பின்னால் ஓரிடத்தில் சற்று விளக்கமாகப் பார்க்கலாம்.

* * *

பல சமயங்களில் பாபா சொல்லிப் பிறகு பலிக்காததாக பக்தர்கள் சொல்வது கூட அவர் சொன்னதைப் புரிந்து கொள் ளாததன் விளைவாகவே இருக்கிறது. உதாரணமாக, ஒரு பக்தர் தமது மகளுக்கு எப்போது விவாஹம் நடக்கும் என்றபோது ''சிராவணமாசம் (ஆவணிமாதம்)'' என்றார் பாபா. ஆவணி வந்தது; ஆனால் திருமணம் நடக்கவில்லை. அதற்கும் அடுத்த ஆண்டும் போயிற்று. மூன்றாம் ஆண்டு ஆவணியில் கல்யாணம் நடந்தது. பாபா அந்த பக்தரிடம், ''நீ நன்றாக நினைத்துப் பார். நான் உன்னிடம் 'சிராவணத்தில் நடக்கும்' என்றேனே ஒழிய, மூன்றாம் வருஷம், அல்லது போன வருஷம், சிராவணமாசம் என்று சொன்னேனா?'' எனக் கேட்டார். இப்படியெல்லாம் சில சமயங் களில் குறும்பாகவும் மறைபொருளாகவும் அவர் பேசுவதால், 'அவர் சொன்னபடி நடக்கவில்லை' என்று நாம் நினைப்பது உண்மையில் அவர் சொன்னபடியை நாம் புரிந்துகொள்ளாக் குறையாகவேகூட இருக்கலாம். ''நான் பொருள் இல்லாமல் ஒரு சொல்லும் சொல்வதில்லை. நான் சொன்னது ஒன்று நடக்காமலும் போகாது'' என்று அவர் அடித்துக் கூறுகிறார்.

ஏதோ அகஸ்மாத்தாக அவர் சொன்னார் என்று நினைப்பது கூட எப்படி அதிசயமாகச் செயலில் விளைந்திருக்கிறது என்று பார்த்தவர்கள் இதை ஒப்பாமலிருக்க முடியாது. திருஷ்டாந்தம்:

Koviloor Digital Library

பேஸகரஹள்ளியைச் சேர்ந்த மத்யதர சர்க்கார் ஊழியர் ஸ்ரீ ராகவன். ஐந்து குழந்தைகள் கொண்ட குடும்பத்தை நடத்துவதே சிரமமாயிருக்கும்போது, அவரது மனைவியோ ராஜ வைத்தியமும் போதாத ஒரு கொடிய வியாதிக்கு ஆளாகிவிட்டார். அந்த அம்மாளின் எலும்புகள் உள்ளுக்குள் உளுத்தது போலாகி, தாமாக விரிசல் காணத் தொடங்கின. ஆஸ்டியோ—மலேஷியா என்ற இந்தப் பயங்கர வியாதியின் வலியை அவ்வப்போது குறைக்கத்தான் மருந்துகள் இருந்தனவேயன்றி நோயைக் குணப்படுத்துவது வைத்ய நிபுணர்களுக்கு இயலவில்லை. உயிரும் போகாமல், பாதைப்பட்டுக்கொண்டு எப்போதும் படுக்கையில் கிடந்தார் ஸ்ரீமதி ராகவன்.

மூன்று ஆண்டு இப்படி அவஸ்தைப்பட்டபின் தான், பாபாவின் பெயரைக் கேட்கவே அவர்களது கர்மம் அநுமதித்திருக்கிறது! அந்த அம்மாளைப் புட்டபர்த்திக்கு அழைத்து வருவதே பெரும் பாடாக இருந்தது.

பாபா 'கோரிக்கை' கொடுத்தார். பேட்டியறையில் வெளியே மற்ற பக்தர் இருப்பராதலால் கிசுகிசுக்கிற மாதிரியே பேசுவார். இப்படி அடித் தொண்டையிலேயே மணிக்கணக்கில் வலிகாணுமல் பேசுகிற சதுரம் பாபாவுக்கும் காஞ்சிப் பெரியவர்களுக்கும் தான் இருக்கிறது. பாபாவின் கிசுகிசுப்பு மிகவும் அழுத்தமாகவும் தெளிவாகவும் இருக்கும் — நம் நெஞ்சையே வந்து கவ்வும். அப்படிப்பட்ட மோஹனக் குரலில் ஸ்ரீமதி ராகவனிடம், "ஆஸ்பத்ரீலு, டாக்டர்லு, மந்துலு ஏமி அக்கர லேது. ஒக நாடு நேனு (கையை மும்முறை சொடுக்கி) டக் டக் டக் அனி அன்னி ஸரிசேஸ்தானு" ["மருந்துவமனை, வைத்யம், மருந்து இந்த எதுவும் தேவையில்லை. ஒருநாள் நான் டக், டக், டக்(கையை மும்முறை சொடுக்கி) என்று பூரணமாகச் சொஸ்தம் செய்கிறேன்]" என்றார்.

வாடிய பயிருக்கு வான் முகிலாக வடிந்த வார்த்தை வாரிதி.

பேஸகரஹள்ளிக்குத் திரும்பினார்கள். மூன்று மாதங்கள் ஓடிவிட்டன. ஸ்ரீமதி ராகவன் சிறிதும் முன்னேற்றம் இன்றி பழையபடியேதான் அவதிப்பட்டார். பழையபடியா? அதனிலும் மோசமான நிலைகூட அடைந்தார். என்றாலும் பாபாவின் வார்த்தையை மதித்து வேறு சிகித்ஸை செய்துகொள்ளாமலே இருந்தார்.

ஒருநாள் அதிகாலை ராகவன் எழுந்திருக்கும்போது சமையல் அறையில் விளக்கு எரிவதையும், பாத்திரங்களைப் புழங்கும் ஓசை எழும்புவதையும் கேட்டு "யாரங்கே?" என்றார்.

ஸ்ரீமதி தான் படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியாமல் கிடந்தாரே! எனவே சமையலறையில் ஓசை வந்தால் 'யாரங்கே?' என்று கேட்கத்தானே தோன்றும்?

"நான் தான்" என்று உள்ளிருந்து மனையாளின் குரல் திடமாக வந்ததும் அதிசயித்து அங்கு ஓடினார் ராகவன்.

நல்ல தெம்போடு உள்ளே காப்பி போட்டுக்கொண்டிருந்த ஸ்ரீமதி ராகவன், "ஸ்வாமி நேற்று ராத்திரி வந்தார். அதை சொப்பனம் என்று சொல்லமாட்டேன். என் கட்டிலுக்குப் பக்கத்தில் நின்றுகொண்டு 'எழுந்திரு இறங்கி நமஸ்காரம் பண்ணு' என்றார். நானும் எப்படியோ குனிந்து விழுந்து நமஸ்கரித்தேன். அவர் ரொம்ப ஆறுதல் சொன்னார். கோணு மாணு என்று விலகிப் போயிருந்த என் எலும்புப் பூட்டுகளைத் தட்டினார். என்ன ஆச்சரியம்? எலும்புக்குள்ளேயிருந்து டக்,டக்,டக்கென்று— அன்னிக்குப் புட்டபர்த்தியிலேயே கையைச் சொடக்குப் போட்டாரே, அதே சப்தம் — அதே மாதிரி மூணுதடவை — கேட்டது! மள மள வென்று உள்ளுக்குள்ளே ஒரு வலிவு வந்துடுத்து. வலி போயே விட்டது. அவரும் மறைஞ்சுட்டார்" என்று ஆரவாரித்தார்.

அந்த நிமிஷத்திலிருந்து சாதாரணப் பெண்மணியாக ஓடியாடத் தொடங்கிவிட்டார்.

"ஐந்தாண்டு வெளி நாடுகளிலெல்லாம் சோதனை செய்து பார்த்ததில் இப்படி அக்யூட் ஆஸ்டியோ-மலேசியா குணமானதாக ஒரு சான்றுகூட இல்லை. மானுட மருத்துவர்களுக்கு அப்பாற்பட்ட விஷயமாகத்தான் இருக்கிறது"—என்று எலும்பு வைத்திய நிபுணரே வியந்தாராம்!

மனித சரீரத்தின்மீது பாபாவுக்கு ஆதிக்கம் போதாது என்பதை இது பொய்ப்பித்தது ஒரு புறமிருக்கட்டும். ஏதோ தற்செயலாக அவர் மும்முறை சொடக்குப் போட்டார் என்று நினைத்ததற்குக் கூட எத்தனை உட்பொருள் இருந்திருக்கிறது! அந்த சொடக்கு அந்த அம்மாளின் எலும்புக்குள்ளேயே ஒலித்தல்லவா அவரைக் குணப்படுத்தி யிருக்கிறது? மூன்று மாதம் காக்கவைத்ததற்கும் அவர் வார்த்தையிலேயே நியாயம் இருக்கிறது, பாருங்கள். "ஐல்தி சரிசேஸ்தானு" என்னாமல் "ஒக நாடு சரிசேஸ்தானு" என்றுதானே சொன்னார்! அப்படி சரி செய்யும்போது, கொஞ்சம் கொஞ்சமாகக் குணப்படுத்தாமல் முற்றிலும் (அன்றே) சொஸ்தமாக்குவதாகவும் சொல்லி அப்படியே செய்தும் விட்டாரல்லவா! எனவே சிலருக்குக் கொஞ்சம் கொஞ்சமாக குணம் செய்கிறார், அதுவும் தாற்காலிகமாக நின்று மறைகிறது என்பதால், இவருக்கு இத்துறையில் சக்தி போதாது என்பது பொருத்தமாகப்படவில்லைதான்.

அவர் ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் அது எத்தனை அதிசயமாக உண்மையாகி விடுகிறது! பிள்ளை வரம் கேட்ட தெலுங் காரு பக்தருக்கு ஓர் ஆப்பிள் கொடுத்து, அவரது மனையாளை உண்ணச் சொன்னார். அந்த ஆப்பிளில் எலியோ எதுவோ கடித்ததுபோல் இரண்டு பல் அடையாளம் பதிந்திருந்தது. பக்தருக்கு "முழு ஆப்பிளாக இருந்தால் முழுக்குழந்தை பிறக்கும். இதில்

Koviloor Digital Library

இரு பல்லளவு குறைந்திருக்கிறதே! பிறக்கப்போகும் குழந்தைக்கு இதனால் வாழ்நாள் முழுதும் இரண்டு பல் இல்லாமலிருக்குமோ?'' என்ற சந்தேகம் வந்துவிட்டது.

உடனே ஸர்வக்ஞரான ஸ்வாமி, ''கவலைப்படாதே! குழந்தை முழுசாகவே பிறக்கும். இரண்டு பல்லும் இருக்கும்'' என்றார்.

பத்துமாதத்துக்குப் பின் குழந்தை பிறந்தது. . விந்தையிலும் விந்தை — பிறக்கும்போதே இரு முன்னம் பற்களும் இருந்தன!

பம்பாயைச் சேர்ந்த ஸிந்தித் தம்பதியரான கிருஷ்ண தாஸ் பாடியாக்களுக்குப் புத்திரவரம் தந்து ''குழந்தை பிறக்கும்போது நானே பம்பாயில் இருப்பேன்'' என்றார். அப்படியே நடந்தது. இதிலே அதிசயம் என்னவெனில் அந்தத் தாய் பத்துமாதமின்றி, பதின்மூன்று மாதம் கருவைத் தாங்கவேண்டியதாயிற்று. ஏனென்றால் பதின்மூன்றும் மாதம்தானே பாபா பம்பாய் வந்தார்? அவர் வார்த்தை பொய்க்கலாமா?

ஸ்ரீராமன் சொன்னால் ஒரே சொல் எனப் புகழ் கொண்டவன். 'ராமோத் விர் நாபிபாஷதே' என்று இதை வால்மீகியும், 'தவிமெய்யன்' என்று கம்பரும், 'ஒக மாட' என்று தியாகராஜரும் போற்றுவர். கபடற்ற அப் புகழுக்குரிய ஸாயிராமன் ஸாயி கிருஷ்ணனாகச் செய்த ஒரு இன்பக் கபடத்தைப் பார்ப்போம்:

ஸ்வாமியின் வார்த்தை பொய்க்காது என்பதை வைத்தே அவரை 'மடக்கிவிட' எண்ணினார் அப்போது திருவனந்தபுரம் வானொலி டைரக்டராயிருந்த—தற்போதைய சென்னை டி.வி. டைரக்டர்—ஸ்ரீ முரளிதரன். விஷயம் இதுதான்:

பாபா எப்போதும் ஓர் ஊரிலிருந்து புறப்படுகையில் தாம் சீக்கிரமே அங்கு திரும்பிவருவதாகச் சொல்வார். ''இன்ன மாசம் வருகிறேன்'' என்று கூடச் சொல்வார். ஸ்வாமி புறப்படுகிறாரே என்று வேதனைப்படும் மக்களை ஆறுதல் படுத்தத்தான் இப்படிச் சொல்வாரே யன்றி, வாஸ்தவத்தில் அவ்வாறு விரைவே மீண்டும் வர அவர் திட்டமிட்டே இருக்கமாட்டார். விடை பெறுகையில் ஏற்படும் விசனச் சூழலைத் துடைத்து அனைவருக்கும் ஆனந்தமூட்டுவதற்காக ஸ்வாமி இவ்விதம் சொல்வதைப் 'பொய்' என்பதோடு சேர்ப்பதற்கில்லைதான். எவருக்கும் தீமை பயக்காத, சுயநலம் கலவாத பிரிய வசனமே சத்தியம் என்ற லக்ஷணப்படி இதை உண்மை என்றே சொல்லலாம். இந்த வழக்கப்படிதான் ஒருமுறை பாபா எர்ணாகுளம் டவுன் ஹாலில் பேசும் போது, தாம் சிவராத்ரிக்குப்பின் மறுபடி கேரளாவுக்கு இக்விஜயம் செய்வதாகக் கூறினார். பாபாவின் இந்த உரை முழுவதையும் ஸ்ரீ முரளிதரன் டேப்பில் பதிவு செய்திருந்தார்.

இதைக் கொண்டே அவர் ஓர் அன்புச் 'சூழ்ச்சி' செய்ய எண்ணினார். அதாவது, பிற்பாடு சிவராத்ரியை அடுத்து பாபா

Koviloor Digital Library

வருவது சந்தேகம் என்பதற்கான அறிகுறிகள் தோன்றின. இது பற்றி நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்த முரளீதரன், ''ஸ்வாமி நாம் சொன்ன வாக்கு தவறுவதே கிடையாது என்கிறார் அல்லவா? அதை வைத்தே அவரைப் 'பிடித்து' கேரளாவுக்கு வரவழைத்து விடலாம். அவருடைய எர்ணாகுளப் பிரஸங்கத்தை நான் டேப் செய்திருக்கிறேன். நாம் புட்டபர்த்திக்குப் போய் அவரை அழைப்போம். அவர் வராவிடில் டேப்பை அவருக்கே போட்டுக் காட்டுவோம். 'என்ன ஸ்வாமி! சிவராத்ரிக்குப் பின் வருவதாக இதோ இதில் நீங்களே சொல்லியிருக்கிறீர்களே! உங்கள் வாக்கு பொய்க்கலாமா?' என்று மடக்குவோம்'' என்றார்.

நண்பர்களில் ஒருவர் எர்ணாகுளம் உரையைக் கேட்காதவர். எனவே அவர் உடனே ஸ்வாமியின் வாக்குறுதியைக் கேட்க ஆசைப்பட்டு, 'டேப்'பைப் போட்டுக் காட்டச் சொன்னார்.

ஸ்ரீ முரளீதரனும் டேப்பைப் போட்டார்.

என்னே விந்தை! இவர் தட்டியிலே புகுந்தால், ஸ்வாமிக்குக் கோலத்திலே புகத் தெரியாதா என்ன?

சிவராத்ரிக்குப் பிற்பாடு கேரளாவுக்கு மறுபடி வருவதாக ஸ்வாமி தெலுங்கில் கூறியதும், அதை வார்த்தைக்கு வார்த்தை மொழிபெயர்ப்பாளர் மலையாளத்தில் ஆக்கிக் கூறியதும் டேப்பிலிருந்து அப்படியே அந்தர்தானமாகி விட்டிருந்தன!

அதைவிட விந்தை! டேப்பில் அந்த இடம் மௌன இடைவெளியாகவும் இல்லை. ஸ்வாமியின் சொற்பெருக்கும், மலையாள மொழிபெயர்ப்பும் தங்கு தடையின்றி இயல்பாகத்தான் பதிவாகியிருந்தன. அவரைப் 'பிடிக்க' உதவும் தூண்டில் வாசகங்களை மட்டும் காணோம்!

* * *

ஸ்வாமியே வாக்குத் தந்தும் சிலர் சொஸ்தமடையவில்லை எனில், அவரவரது கர்மாவின் கதியை ஒட்டித் தம் கருணையின் கதியை நடத்துகிறார் என்று சொல்ல வேண்டியதுதான். தீரா நோயாளிகள் கர்மாவை அநுபவிக்கும்போதே அவர்களுக்கு தெய்வ நினைப்பை அதிகமாக்கி அருள் செய்கிறார்.

இந்த அத்தியாயத் தொடக்கத்தில் நாம் கண்ட வேங்கட கிருஷ்ணனுக்கு இப்படியே பாபாவின் நினைப்புப் பெருகியது. உடம்பும் நன்றாகவே சொஸ்தமானதாகப் பட்டது. அதிக ஆயாஸமின்றி, ஒரளவு தெம்போடு ஐந்தாண்டுகள் வாழ்ந்தார்.

பிறகு 'செக்—அப்' என்று மருத்துவ மனைக்குப் போக அப்போது தந்த மருந்து 'ஓவர்—டோஸ்' ஆகிவிட்டது. இதய நோய் உக்ரமாகத் திருப்பிக் கொண்டது. அப்போதும் 'ஸாயி ராம்' நாமத்தை அட்டையில் எழுதிக்கொண்டே இருந்தார்.

Koviloor Digital Library

தலையெழுத்து அழிந்தது.

அலமேலுவின் குங்குமமும் அழிந்தது.

அலமேலுவை அழைத்து வருமாறு தந்தைக்கு ஆணையிட்டார் பாபா.

"ஒராண்டுக்குள் வெளியே..." என்று விக்கி விக்கி அழுதார் தந்தை ஸ்ரீ ராதாகிருஷ்ண செட்டியார்.

"தாய் வீடான என்னிடத்துக்கு வரவா இந்த ஸம்பிரதாயமெல்லாம்? உடனே அழைத்து வாருங்கள்" என்றாள் ஸாயிமாதா!

அலமேலு வந்து அலமந்து, இவரது அலர்ப்பாதங்களில் விழுந்து துடித்தார்.

அவர் தலையிலடிப்பதுபோல் ஓங்கிக் கை வைத்தார் பாபா. "அழப்படாது. இதோ பார்" என்றார்.

அலமேலு தலைநிமிர்த்திப் பார்த்தார்.

பாபாவின் கையில்—வேங்கடகிருஷ்ணன் 'ஸாயிராம், ஸாயிராம்' என்று எழுதிய அட்டை!

அலமேலுவின் அழுகை அந்த நிமிடத்தோடு நின்றது.

'ஜட உலகின்மீதுதான் இவர் சக்தியைப் பிரயோகிக்க முடிகிறது, சைதன்யத்தின் மீதல்ல' என்றால் அலமேலுவின் கண்கள் எப்படி வற்றின?

இதில் கவனிக்க வேண்டிய விஷயம்: ஜட உலகத்தில் கர்மம் என்பதும் மனம் என்பதும் இல்லை. எனவே இவர் ஸங்கல்ப மாத்திரத்தில் அது விஷயத்தில் எதுவும் செய்கிறார். ஆனால் ஜீவர்கள், ஜீவ சைதன்யம் என்று வரும்போது அங்கே கர்மமும், மனமும் வந்து விடுகின்றன. அவரவர் கர்மத்தையும், அவரவர் மனோபாவத்தையும் பாராமல் இங்கே சகட்டுமேனியாகப் பிரவேசித்து எதை வேண்டுமானால் மாற்றலாம் என்றால், தர்மமும் நீதியுமே அடிபட்டுப் போவதாக அல்லவா ஆகும்? ஆகவே தான், ஒரு மனமானது தன்னிச்சையாகத் தன்னைப் பறிகொடுக்கச் செய்வதற்கு ஊக்குவிக்கும் அளவிலேயே அந்த ஜீவனின் கர்மத்தையும் கொஞ்சம் மாற்றிக் காட்டி அருள்கிறார். இந்த அருளின் நோக்கத்தைப் புரிந்துகொண்டு மனத்தை நாமாக அவருக்கு ஸமர்ப்பிப்பதில் எவ்வளவு முன்னேறுகிறோமோ அவ்வளவுக்குத்தான் அதைத் தன்வசமாக்கிக் கொள்வார். இப்படி 'ஆத்ம ஸமர்ப்பணம்' ('மனோ ஸமர்ப்பணம்' என்பதுதான் சரியான வார்த்தை) செய்பவர்கள் விஷயத்தில், 'தங்கள் கர்மா, அதைத் தாங்கள் அநுபவிக்கிறோம்' என்ற எண்ணம் அவர்களுக்கு இல்லாததால், முழு கர்மாவையும் இவர் நீக்கினாலும் நீக்கலாம்.

அல்லது, கர்ம பாதிப்பைத்தான் அவர்கள் பொருட்படுத்துவதில்லையே என்பதால் அதைத் துளிக்கூடக் குறைக்காமல் அதன் முழுவீச்சையும் அனுமதித்தாலும் அனுமதிக்கலாம்.

அநேகமாக பக்தி நெறியில் ஒருவரைக் கொண்டு வருமளவுக்குத்தான் பாபா வெட்டவெளியிலேயே செய்து பரிசுதரும் லீலை, பக்தர் வீட்டுப் படங்களில் விபூதி, குங்குமம், மஞ்சள் பொடி, தேன் முதலியன பொழிவிக்கும் லீலை, அவர்கள் பூஜையில் செய்யும் நிவேதனத்தைத் தாமே ஸூக்ஷ்ம உருவில் உண்கிற லீலை முதலியவற்றை அதிகமாகச் செய்கிருர். அவர்களது கர்மாக்களைக் குறைத்து, வறுமை, வியாதி இத்யாதி கஷ்டங்களைத் தீர்ப்பதும் கூட இந்தக் கட்டத்தில்தான் விசேஷமாக நடக்கிறது. பக்தி செம்மையாகிப் பக்குவம் வந்தபின் அவர்களது கர்ம கதியிலே இவர் வெகுவாகத் தலையிடாமல் அது தன் தர்மப்படி இன்ப துன்பங்களைத் தருமாறு விட்டுவிடுகிருர்—அதனுல் அதனுல் பாதிக்கப்படாத உயர்வற உயர்நல மனப்பான்மையை அநுக்ரஹிக்கிருர். இதுவே தலையாய 'மிராகிள்' எனலாம். துயரம் தரும் ஸம்பவத்தை மாற்றாமலே, அதனுல் பக்தருக்கு ஏற்படக்கூடிய அநுபவத்தை மட்டும் மாற்றிவிடுகிருர்.

* * *

பரம்பொருளை மெய்யாலும் பிடித்தேயாக வேண்டும் என்பதற்காகப் பல ஸாதனைகளைச் செய்தும் பயன்பெறாத அமெரிக்கத் தம்பதியர் வால்டர் கவனும், எல்ஸி கவனும். ஒருநாள், "ஆண்டவனே, எங்கள் தாபம் உனக்குத் தெரியவில்லையா? பல குருமாரிடம் போய் ஏமாந்துவிட்டோம். இன்று இந்த லோகத்தில் யார் உத்தமோத்தமமான குருவோ அவரை நீயாக எங்களுக்குக் காட்டிக் கொடுக்க மாட்டாயா? இனி நாங்களாக எவரையும் தேடப் போவதில்லை. நீதான் காட்டவேண்டும். போட்டுவிட்டோம் உன்னிடம் பொறுப்பை" என்று தீவிரப் பிரார்த்தனை புரிந்தனர்.

மறுநாள் எங்கிருந்தோ ஒரு நண்பர் வந்து ஸத்யஸாயி சரிதத்தைக் கொடுத்துப் போனுர்.

ஈச்வரனே காட்டிக் கொடுத்த குரு எனக் கருதி பாபாவை அடைந்தனர், வால்டரும் அவரது மனைவி எல்ஸியும்.

எல்ஸியை "ராணி" என்றழைத்தார் பாபா. அப்போது எந்த அரசைத் தனக்குத் தரப்போகிருர் என்று அந்த அம்மாளுக்குத் தெரியாதுதான்.

கடவுளால் காட்டிக் கொடுக்கப்பட்ட குருவெனக் கருதி பாபாவை அடைந்த தம்பதியர் நாளடைவில், அவரே குருவால் காட்டிக் கொடுக்கப்படவேண்டிய கடவுள் என்று உணர்ந்தனர்.

Koviloor Digital Library

இந்த வால்டர் கவன் 1971 டிஸம்பர் 25 கிறிஸ்துமஸ் தினத்தில், பாபா சென்னைக்கு விஜயம் செய்திருந்தபோது, கன்னிமாரா ஹோட்டலில் மரணம் அடைந்ததாகவே அவரும், அவரது மனையாளும், மற்ற ஸாயிபக்தர்களும் கருதுகின்றனர். சென்னையில் புகழ்கொண்டதொரு மருத்துவமனையில் 'வைத்தியப் படி செத்தவர்' (clinically dead) என்று அவரது உடலைப் போர்த்தி, காதிலே மூக்கிலே பஞ்சை அடைத்துத் தள்ளி விட்டார்கள்.

இதே சமயத்தில் பாபா சுற்றியிருந்தோரிடம், "ஐயோ பாவம்! அந்தக் கிழவி இந்தியாவுக்கு வந்து புருஷனைப் பறி கொடுத்துவிட்டு அமெரிக்காவுக்குத் தனியாகத் திரும்பிப்போனால் பரிதாபமாகத்தான் இருக்கும்" என்றார்.

எல்ஸி, ஹோட்டலின் பக்கத்தறையில் தங்கியிருந்த ஸ்ரீமதி ரத்தன்லாலைத் துணைக்கு அழைத்துக்கொண்டு பாபாவிடமே ஓடிவந்தார்.

"நான் பத்துமணி சுமாருக்கு ஆஸ்பத்திரிக்கு வருகிறேன்" என்று கூறி அவர்களை அனுப்பிவைத்தார் பாபா.

அவர்கள் ஹோட்டலுக்குச் சென்றுவிட்டு சரியாகப் பத்து மணிக்கு வைத்தியசாலைக்குச் சென்றார்கள். டாக்டர்கள் அப்போது வெளியே போயிருந்த சமயம்.

"இங்கே பாபா வந்து போனார்" என்று யாரோ ஒரு ஊழியர் எல்ஸியிடம் சொன்னார்.

'அடடா, அதற்குள் வந்து, திரும்பியும் போய்விட்டாரா?' என்ற தாபத்துடன் இவர்கள் வால்டரின் உடலை வைத்திருந்த அறைக்குச் சென்றபோது அற்புதம் நடந்திருந்தது! அது உடலாக மட்டும் இல்லாமல் வால்டராகவே உயிர் கொண்டிருந்தது!

ஜாகைக்குத் திரும்பிய பாபாவும், "வால்டருக்கு மறுபடி வாழ்வு தந்தேன்" என்று பக்தர்களிடத்தில் கூறினார்.

கவனே பிற்பாடு, தம் உயிர் நீதித்தேவனிடம் சென்றதாகவும், அங்கு தமது பூர்வ கர்மா யாவும் படிக்கப்பட்டதாகவும், நீதித்தேவன் தீர்ப்பு வழங்கவிருந்த சமயத்தில் பாபா குறுக்கிட்டு அவனிடமிருந்து தம் உயிரை மீட்டு வந்ததாகவும் நீள நெடுக ஒரு விருத்தாந்தம் கூறியுள்ளார்.

சித்திரகுப்தன் எழுத்தால் தென்புலக்கோன்
பொறி ஒற்றி
வைத்த இலச்சினை மாற்றித் தூதுவர் ஓடி ஒளித்தார்

என்று பெரியாழ்வார் பாடியவாறு, சித்திரகுப்தன் கணக்குப்படி தென்புலக்கோனான யமன் போட்ட முத்திரையையே மாற்றி, யம தூதுவரை ஓடவைத்தாரா நம் ஸ்வாமி?

Koviloor Digital Library

லாஸரஸ் என்பவன் செத்தே விட்டபின் இயேசு அவனை உயிர்ப்பித்தார். பாம்பு தீண்டிச் செத்த அப்பூதி மகனை அப்பரும், திருமருகல் வாணிய வாலிபனை சம்பந்தரும் உயிர்ப்பித்தவர். வெளி உலகுக்கு வெகுவாகத் தெரிந்த அளவில் பாபாவும் இருமுறை இந்த மஹா மஹா அற்புதத்தைச் செய்திருக்கிறார். கவன் விஷயத்தில் செய்ததொன்று. மற்றது இதற்கு முற்பட்டதாயினும், பிற்பாடு பார்க்கலாம். ஏனெனில் இங்கு கவன் இறந்து பிழைத்ததைவிட எல்ஸி 'ராணி'யானதுதான் நமக்கு முக்கியம். அந்தக் கதைக்குப் போவோம்.

கர்மதர்மத்தை ஒரேயடியாகப் புறக்கணிக்கக் கூடாதென்றே என்னவோ மறுபடி கொஞ்சம் 'ஆட்டம்' பார்த்தார் பாபா. மறுநாள் 26-ந் தேதி. கவன் மீண்டும் பரலோகத்துக்கு நழுவத் தொடங்கினார். அதேசமயம் சென்னை ஸமிதி அங்கத்தினர்களிடம் பேச்சைத் துளிக்கூட நிறுத்தாமல் உரையாற்றி முடித்த பாபா, "பிரஸங்கத்தின் நடுவே ஆஸ்பத்திரியிலிருந்து மிஸிஸ் கவனின் அழைப்பு வந்தது. அங்கு 'போய்' செய்யவேண்டியதைச் செய்துவந்தேன்" என்றார்!

ஆம், அந்தப் பூட்டுக்குப் பிழைத்துவிட்டார் கவன்.

பிறகு பாபா பிரசாந்தி நிலயத்துக்குச் சென்றுவிட்டார். மற்றோர் அமெரிக்க பக்தரான ஜான் ஹிஸ்லாப்பிடம், "மிஸிஸ் கவனிடமிருந்து தந்தி வந்திருக்கிறது. கவனுக்கு மறுபடி ஆபத்து நிலை. அவர் இப்போது சாகக்கூடாது என்பது என் ஸங்கல்பம். மூன்றும் முறையும் உயிர் கொடுத்துவிட்டேன்" என்றார். ('தந்தி' என்றது எல்ஸியின் மானஸிகப் பிரார்த்தனையைத்தான் என்று பிற்பாடு அந்த அம்மாள் சொல்லித் தெரிந்தது).

பாபா பெங்களூர் ஒயிட்ஃபீல்டுக்கு வந்தார். கவன் தம்பதியரும் வந்தனர். கவனை 'செக்-அப்' செய்த பெங்களூர் டாக்டர் ஞானேசுவரன் அவரது பழைய அமெரிக்க கேஸ்—ஷீட்டைப் பார்த்து விட்டுப் பிரமிப்பில் ஆழ்ந்துவிட்டார். நடுவே நேர்ந்த ஆபத்திலிருந்து கவன் பிழைத்ததுமட்டுமல்ல. ஏற்கெனவே பல்லாண்டுகளாக அவருக்கு இருந்துவந்த சிறிய, பெரிய உடல் கோளாறு எல்லாமும்கூட மாயமே மறைந்திருந்தன!

ஒயிட்ஃபீல்ட் பிருந்தாவனத்தில் பாபா இந்தத் தம்பதியரைப் பேரன்போடு வரவேற்றார். வேத மந்திரங்கள் முழங்க, பஜனை கீதங்கள் இனிக்க, பாபா இவர்களுக்கு மோதிரங்களை 'வரவழைத்து'த் தந்து மறு கல்யாணம் செய்து வைத்தார்! அப்போது, தாமே இவரை மரணத்திலிருந்து காத்ததைச் சொன்னார். அதுமட்டுமின்றி, "என் கிருபையைப் பூரணமாக ஒருவர் பெற்றுவிட்ட நிலையில் அவர்களது மரண காலத்தில் என் ஸாந்நித்யத்தை அவர்களுக்கு அளிக்கிறேன். அவர்கள் பரம சாந்தியில் என்னுடனே கலந்துவிடுகிறார்கள்" என்றார்.

பூரண கிருபையும், பரமசாந்தியும் வரும்போது மரணத்திலிருந்து காப்பாற்றுவதில்லை; புனர் ஜனனத்திலிருந்தே காக்கிறார் என்றாகிறதல்லவா?

Koviloor Digital Library

லாஸரஸும், அப்பூசி மகனும், திருமருகல் வணிக இளைஞனும் சிரஞ்ஜீவியாக இருந்துவிடவில்லை. அநுக்கிரஹ சக்திக்கு அடையாளம் உலகத்துக்குக் காட்டவே இந்தக் காப்பு லீலைகள் நடந்தன.

கவனும் பத்தொன்பது மாதங்களுக்குப்பின் அமெரிக்காவில் மாண்டார். ஆனால் இந்தப் பத்தொன்பது மாதங்களில் பழைய கவனின் புன்மைகள் தீர்ந்து, தமக்குப் பேரருள் செய்த பெருமானின் நினைவிலேயே நிலைத்திருந்தார். இப்போது பூரண கிருபைக்குப் பாத்திரமானதால், அந்திமத்தில் பாபாவையே ஸ்மரித்து, பரம சாந்தியில் பாபாவுடனே இழைந்துவிட்டார்.

அதே சமயத்தில் பாபா இங்கிருந்து "Rani, Walter arrived here in good shape" ("ராணி, வால்டர் இங்கு நல்ல வடிவத்துடன் வந்து சேர்ந்துவிட்டார்") என்று தந்தி கொடுத்தார். இந்த 'குட் ஷேப்'பை—'நல்ல வடிவத்தை'—கவன் பெறுவதற்கே தான் இவர் இந்தப் பத்தொன்பது மாத வாய்தா அளித்திருக்கிறார்!

* * *

இங்கே வால்டர் வந்துவிட்டார் (arrived) என்பதை ஸ்வாமி வாசகத்தால் மட்டும் தெரிவித்திருக்கிறார், ஸ்ரீமதி கவனிடம். சார்லஸ் பென்னின் அநுபவமோ இதனிலும் விசேஷமானது.

பாபா, பென்னின் தாயாரை ஏழாண்டுகள் கண்ணின் கருமணியாக நோயிலிருந்து காத்தார். பிறகு 91—வது வயதில் அவள் காலமானாள். அவள் ஆஸ்திரேலியாவில் பென்னின் சகோதரர் வீட்டில் காலமான அதே சமயத்தில் , பன்னிராயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்த பென்னுக்கு அவளது உடல் உயரே செல்வதாகக் காட்டினார் பாபா. உயரே சென்றது மட்டுமல்ல. வேறொரு லோகத்தை அவள் நல்ல உருவத்தோடு சென்று அடைவதையும், அதாவது 'Arrival'—ஐயும் பிரத்யக்ஷமாகவே கண்டார் பென். எனவே சகோதரரிடமிருந்து தாயின் மரணச் செய்தி டெலிஃபோனில் வந்தபோது, பென்னுள் சோகம் புகுந்து ஆட்டாமல் இனிப்பானதோர் அமைதி யின்பமே அவர் இதயத்தில் குடிகொண்டது.

* * *

இறந்தவர்களைக் கரையேற்றுவது ஒரு புறமிருக்க, (அவர்களைப் பிரிந்து) இருப்பவர்களை சோகக் கரையேற்றும் அற்புதம் அல்லவா இங்கே நாம் பல உதாரணங்களில் கண்டது? இதன் படியே இப்போது பதியின் வியோகத்தைத் தாங்கும் விவேகத்தை எல்ஸிக்கு இவர் அளித்திருந்தார்.

அதனால்தான் பதி மறைந்தும், இவருக்கு பக்தி மறையவில்லை. அமெரிக்காவிலிருந்து பல்லாயிரம் காவதம் தள்ளியுள்ள

Koviloor Digital Library

ஒயிட்ஃபீல்ட் ஸத்யஸாயிக் கல்லூரி மாணவருக்கெனப் பல லக்ஷம் ருபாயில் விடுதி எழுப்பி அதையே தம் கணவரின் நினைவாலயமாக்கி, பங்காரு பாபாவின் பொற்கரத்தால் திறப்புவிழாச் செய்தார்.

இதுவே — வைதவியத்திலும் வைராக்யமே — அவரை 'ராணி'யாக்கி இவர் செய்த பட்டாபிஷேகம்!

இனி ராணி என்றே சொல்லத்தக்க பாரதப் பெண்மணி ஒருத்தர் விஷயத்தைப் பார்க்கலாமே!

Koviloor Digital Library

அத்தியாயம்—33

கடைந்நேரும் கடைப்பொழுது

ஜோத் மே ஜோத் மிலா ஜா!
(ஜோதியில் ஜோதியை முழுக்கிக் கொள்வாய்!)

— மீரா

ஒருவர் மரணத்தை மனோரமணமாக ஏற்பதற்கும், அவர் மறைவால் சோகித்துத் துடிக்க வேண்டியவர் சாந்தத்தில் சமாதானமடைவதற்கும் பிரபல தொழிலதிபர் பூனம்சந்தின் பிரிவு இன்னோர் உதாரணம்.

சிவராத்ரிக் குளிரில் பல்லாயிரம் மக்கள் புட்டபர்த்தியில் திறந்த வெளியில் காலம் தள்ள வேண்டியுள்ளதே என்பதற்காகவே 1972-ம் ஆண்டு பாபா அங்கு லிங்கோத்பவம் செய்யாமல், பெங்களூரை அடுத்த பண்டிப்பூர் வனத்தில் ஒரு சிலரோடு அமைதியாக சிவராத்ரி கொண்டாடினார். இதைக் கேள்வியுற்றதும் பூனம்சந்த், 'இந்தக் காரணத்துக்காகவா புட்டபர்த்தியில் சிவராத்ரி நிற்க வேண்டும்? இருபதாயிரம் மக்கள் அமரக்கூடிய 'பக்கா' மன்றம் எழுப்பிவிட்டால் போச்சு!'' என்றார். சொன்னது மட்டுமல்ல. நிதிக் காணிக்கை அள்ளி அர்ப்பணித்தார்.

இது காரணமாக இன்று இந்தியாவிலேயே, ஒருகால் உலகிலேயேகூட இருக்கலாம், மிகப் பெரிய ஆடிட்டோரியம் பிரசாந்தி நிலயத்தில், நமது பூர்விக ஸமயக் கலையழகு முழுவதையும் சொரிந்துகொண்டு கம்பீரமாக எழும்பியிருக்கிறது.

மூன்றாண்டுகளுக்கு முற்பட்ட நவராத்ரியின்போது கட்டிடத்தை ஒரு கட்டம் வரை முடித்துத் திறப்புவிழா செய்ய உத்தேசிக்கப்பட்டது.

இதற்குச் சிலகாலம் முன்பே பாபா பூனம்சந்திடம், ''உங்கள் சொத்து, தொழில் நிர்வாகம் இவற்றை உறவினரிடம்

Koviloor Digital Library

பொறுப்புத் தந்துவிட்டு, நீங்கள் அத்யாத்மிக மார்க்கத்துக்கே பூரணமாகத் திரும்பிவிடுங்கள்'' என்றார்.

கோடீச்வரரும், தமது ஸ்தாபனங்களைக் கண்ணெனப் பேணிய வருமான அந்த உண்மை பக்தர் பாபா சொற்படி தன் பதவிகள், பங்குகள் எல்லாவற்றையும் மற்றவர்களுக்குப் பிரித்துத் தந்து விட்டார். ஜெய்ப்பூரில் தம் இல்லத்திலேயே இருந்துகொண்டு இறைநினைவில் மூழ்கினார்.

நவராத்ரிக்கு முதல்நாள் அப்போது மைசூர் கவர்னரா யிருந்த மோஹன்லால் ஸுகாதியா பாபாவிடம், ''பூனம்சந்தே இங்கு வந்திருந்தால் ரொம்ப நன்றா யிருந்திருக்கும். அதனால் பரவாயில்லை. எப்படியும் பாபா அங்கு போகத்தான் வேண்டும். ஜெய்ப்பூர் 'விஸிட்' ரொம்பநாள் 'ட்யூ' '' என்றார்.

பாபா லேசாகச் சிரித்துக்கொண்டு, ''அவரே இங்கு வந்து கொண்டிருக்கிறார்'' என்றார்.

ஆம், இங்கே மகத்தான மன்றம் திறக்கப்பட்டபோது அங்கே பூனம்சந்த் பகவானோடு பகவானாக இரண்டறக் கலந்துவிட்டார்.

பூனம்சந்த் என்பது 'பூர்ணசந்திர' என்பதன் திரிபே யாகும். மதி நலத்தில் முழு மதியாகவே ஆகிப் பூரணம் எய்தி விட்ட அந்த பக்தரின் பெயரிலேயே பாபா, மன்றத்துக்கு 'பூர்ணசந்திர ஆடிட்டோரியம்' எனப் பெயரிட்டார். இம்மாதிரி தனி மனிதரான ஓர் உபயதாரரின் பெயரை பாபா ஒரு நிலையத் துக்கு வைத்தது இதுவே முதல்முறை; இன்றுவரை கடைசிமுறை யும் ஆகும்.

பரம மங்களமான நவராத்ரியில் விதவையான செல்வச் சீமாட்டி, ராணி என்றே மதிக்கத்தக்க ஸ்ரீமதி பூனம்சந்த் மறு நாளே ராஜஸ்தானத்திலிருந்து பாபாவிடம் வந்து ஆறி, தேறி, சாந்த சமுத்ரத்தில் மூழ்கியிருந்தார்! அதென்ன அற்புத மருந்தோ, அமுத ஸஞ்ஜீவினியோ!

* * *

சிலரது கர்மத்தின் தன்மை போலும், அவர்கள் பிரிவுத் துயரத்திலிருந்து மீண்டு மன சாந்தி பெற பாபா உடனே அருள்-கூர்ந்து விடுவதில்லை. ஆயினும் இவர்களில் இறந்தோரின் பக்கத்திலும் இறுதியில் இல்லாததால் துடிக்கும் சிலருக்கு வேறொரு வித அதிசயிக்கத்தக்க அநுக்கிரஹத்தைப் புரிகிறார். அதாவது இறந்துபோன அவர்களது உறவினர்களையே மறுபடியும் சிறிது நேரம் அவர்கள் கண்முன் காட்டி, அவர்களை உறவாடச் செய்து, தங்களது மஹா சோகத்தை நீக்கிக்கொள்ளக் கருணைகூருகிறார். முன்பு பார்த்த அநாமதேயினி தனது மரித்த மகனைக் கண்டது இதற்கொரு திருஷ்டாந்தமே.

Koviloor Digital Library

'இறந்தவர்கள் ஒன்று மறு பிறவி எடுத்திருக்க வேண்டும், அல்லது இறைவனிலேயே கலந்திருக்க வேண்டும். அவர்கள் எப்படிப் பழைய உருவில் வரமுடியும்? இறந்த உயிர் ஓராண்டுவரைப் பிரேத சரீரத்திலிருக்கிறது என்பதை ஒப்பினுலும், ஓராண்டுக்குப் பிறகும் பாபாவால் எப்படி இறந்தவரை அதே உடலில் வரவழைக்க முடிகிறது?' எனத் தோன்றலாம். வேறு வடிவில் பிறந்தவரை, அல்லது தம்மில் கலந்தவரைப் பழைய உருவில் காட்டும் வல்லபம் நம் ஸ்வாமிக்கு ஏன் இருக்கக் கூடாது? அவரது அருந்திறன்களை யாரே அளவுக்குட்படுத்த முடியும்?

பாபாவின் பூர்வ அவதாரமான கண்ணனும் இவ்விதம் செய்திருக்கிருனே! கண்ணனே கிழப்பருவம் எய்தியபோது, படுகிழவியான தேவகி ஆதியில் தான் சிறையில் பறிகொடுத்த ஆறு சிசுக்களையும் காண விரும்புகிருள். இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னரும் கண்ணன் அவ்வறுவரைப் பச்சைக் குழந்தைகளாகவே தருவித்து தேவகியிடம் கொடுத்து, அவள் சிறிது நேரம் அவர்களைச் சீராட்டியபின் தேவ லோகத்துக்கு அனுப்பி வைக்கிருர். ஸ்ரீமத் பாகவதம் தசம ஸ்கந்தம் 85-ம் அத்தியாயத்தில் இக் கதையைக் கூறும் சுகர் முடிவில் இதனைத்தும் கிருஷ்ணமாயை என தேவகி தெளிந்ததாகக் கூறுவது கருதற்பாலது.

* * *

கர்ம கதியை அநுசரித்தே பாபாவின் கருணை கதி செல்கிறது என்பதற்கு ஒரே குடும்பத்தில் நடந்த இரு ஸம்பவங்கள் அழுத்தமான சான்ருகும். ஸாயி விருக்ஷத்தில் பழுத்த அருட் கனிகளில் கூடை கூடையாகப் பெற்ற ஆழ்வார்ப்பேட்டை (காலஞ் சென்ற) ஸ்ரீ வேங்கடமுனி அவர்களின் குடும்பம்தான் இது.

வேங்கடமுனியின் தாய் நல்ல கிழவி. மரணப் படுக்கையில் விழுந்தார். ஓர் இரவு இறுதிக் கட்டம் நெருங்கியது. உறவினர் யாவரும் வந்துவிட்டனர்.

வேங்கடமுனியின் மனைவி ஸுசிலா அம்மாளுக்கு பாபா தந்திருந்த ஜபமாலையின் நினைவு வந்தது. அதைக் கொண்டு வந்து மூதாட்டியின் மார்புமீது வைத்தார். மெல்ல மெல்ல உடலில் உணர்வும் உயிர்த்துடிப்பும் வந்தன. காலையில் திடமாகவே எழுந்திருந்துவிட்டார். சுற்றியிருந்தோரைப் பார்த்து, ''எனக்கு என்ன வந்து விட்டதென்று இத்தனை பேரும் கூடியிருக்கிறீர்கள்?'' என்ருர்.

பிறகு பல ஆண்டுகள் வாழ்ந்து இறைவனடி சேர்ந்தார்.

இதே வேங்கடமுனியின் குமாரர்களில் ஒருவன், பிஞ்சிலும் பிஞ்சு, வலிப்பு நோயுற்றுப் படாதபாடு பட்டான். முடிவு வந்துவிட்டது என்றே தோன்றியது.

ஸுசிலா அம்மாள் ஜபமாலையைக் கொண்டுவர ஓடினுள்.

Koviloor Digital Library

ஆனால், இதென்ன சோதனை? கையிலெடுக்க எடுக்க மறுபடி மறுபடி மாலை நழுவி விழுந்தது. கைக்கெட்டியது வாய்க்கெட்டவில்லை என்பது போல், கைவசமேயிருந்த மாலை கைக்கு வசமாகாமல் எத்தனை முயன்றும் ஏமாற்றி விட்டது! பிள்ளையும் ஏமாற்றிவிட்டுப் போயே போய்விட்டான்!

வெந்த நெஞ்சோடு பெற்றோர் பாபாவிடம் ஓடி வந்தனர். அவரோ பரம ஸந்தோஷமாகக் காணப்பட்டார். இவர்களைப் பரிஹாஸம் செய்துகொண்டு வரவேற்கிறார்! இவர்களால் தாங்கவே முடியவில்லை.

''நாயனா, அம்மாயி'' என்று கருணை துளிக்க அழைத்தார் பாபா. ''பிள்ளைக்காக இனி நீங்கள் வருந்தக் கூடாது. அவன் இங்கிருந்ததைவிட ஆனந்தமாக இப்போது இருக்கிறான். கொஞ்சம் கர்மபாக்கி இருந்ததால் தீர்த்துக்கொள்ள இங்கே வந்தான். அதைத் தீர்த்துக்கொண்டு புறப்படுவதுதான் அவனுக்கு நியதியாக இருந்தது. ஆகவே அவனிடம் உங்களுக்கு அன்பு இருந்தால் நீங்கள் அழுவதற்கே யில்லை'' என்றார்.

தங்களிடமே தங்களுக்குள்ள ஆசைக்காக வேண்டுமானால், அவன் உயர் கதி அடைந்திருக்கும்போது இவர்கள் அழலாம்! பாசிக் கொத்தைப் பறித்துப்போடுவதுபோல் இந்த சுயபாசத்தை பாபாவின் பரிவுமொழி அடியோடு அகற்றிவிட்டது!

பிள்ளை போனதோடு பக்தியும் போய்விடுமோ என்னும்படி நடுவே நலியத் தொடங்கிய நம்பிக்கை மீண்டும் துளிர்த்துவிட்டது!

* * *

இசைக்கலைஞர் ஸ்ரீ டி.எம். சௌந்தரராஜன் இல்லத்திலும் மரணத்திலிருந்து காப்பு, மரணத்தின் மூலமே காப்பு என்ற இரண்டு அருள்களையும் பாபா பாலித்திருக்கிறார்.

டி.எம்.எஸ்ஸின் மூத்த மகனின் இதயக் கோளாற்றுக்கு அமெரிக்கா போய் ஆபரேஷன் செய்து பார்ப்பது தவிர வேறு வழியே இல்லை என்ற நிலையில் பாபாவின் விபூதியும், நாமமுமே அவனுக்கு நோயைப் பூரணமாகக் குணப்படுத்தின. இதில் வைத்திய நிபுணர்களே வியந்தனர்.

இறப்பிறும் முன்பு இதயம் வெகுவாகப் பழுதுற்றிருந்த அப்பையனுக்கு இனியும் திருமணம் செய்வது உசிதமல்ல என்றனர். ஆனால், பிறகு, பாபாவே அவனுக்கு ஜாதகம் பார்த்துக் கல்யாணமும் பண்ணிவைத்தார்; அவன் குடியும் குடித்தனமு மாக இருக்கிறான். இது ஓர் அருள்.

இன்னொரு புறம், ஸ்ரீ சௌந்தரராஜனின் பதினாறு வயசுப் பிள்ளை மூன்றே நாள் காமாலையில் பரலோக வாயிலுக்குச் சென்று விட்டான். ஆஸ்பத்திரியிலிருந்தவன், தன்னை வீட்டுக்கு இட்டுச்

Koviloor Digital Library

சென்று பாபா படத்தன்டை கிடத்தச் சொன்னுன். வைத்தியர் களும் கைவிட்டுவிட்டதால் அவ்விதமே செய்தார் டி.எம்.எஸ். அதோடு, துணிந்து புட்டபர்த்திக்கே 'டிரங்க் கால்' போட்டார்.

என்ன பரிதாபம்! ஒரே அட்மாஸ்ஃபெரிக் கோளாறு. 'கால்' கிடைத்தும், பாபாவே ஃபோனை எடுத்தும் அவருடன் பேச முடிய வில்லை. ஸுசிலா அம்மாளுக்கு ஜபமாலை கைக்கெட்டாமற் போகவில்லையா, அதே கதைதான்!

பிள்ளை, ''முருகா முருகா முருகா'' என்று பூர்ணப் பிரக்ஞையோடு மும் முறை சொல்லி மானுட சட்டையைக் கழற்றிப் போய்விட்டான்!

டி.எம்.எஸ். பக்தி இழந்தார். பகவான் படங்களைக்கூட அப்புறப்படுத்திவிட்டார். ஆறுமாதம் பைத்தியம் போல் அலைந் தார்.

தெளிய வழி? அந்தத் தெய்வத்திடமே மறுபடி ஓடினுர்.

''சுந்தரராஜன்! அன்னிக்கு ஃபோனில் ஏன் அத்தனை டிஸ்டர்பன்ஸ்?'' என்று பாபா சிரிக்கிறுர்.

''ஸ்வாமீ, நான் கேட்கவேண்டிய கேள்வியை நீங்களா கேட்பது?'' என்று சௌந்தரராஜன் கண்ணீர் உகுக்கிறுர்.

''உஷ்... அழக் கூடாது'' என்கிறுர் பாபா. ''இந்தச் சரீரம் செருப்பைவிடக் கேவலம், தெரியுமோ? மழையில் போகி ரோம், செருப்பு ஜலத்தை வாரி அடிக்கிறது. உடனே பக்கத்தில் ஒரு வீட்டுக்குச் சென்று, 'இந்தச் செருப்பைக் கொஞ்சம் இங்கே விட்டுப் போகலாமா?' எனக் கேட்கிறோம். வீட்டுக்காரர்கள், 'பேஷாக' என்கிறுர்கள். அதுவே, ஒரு பிணத்தை எடுத்துப் போகிறோம்; மழை அடிக்கிறது; அந்த வீட்டுக்கோ, வேறு எந்த வீட்டுக்கோ போய், 'மழை நிற்கிற வரையில் இந்தப் பிணத்தை உங்கள் வீட்டில் போட்டு வைக்கலாமா?' என்று கேட்டால் எவராவது ஒப்புக்கொள்வார்களா? நாயனு, செருப்பைவிடத் தாழ்ந்தது இந்த சரீரம். இதற்குள் ஒரு ஆத்மா வந்து இருப்பது கர்மாவைத் தீர்த்துக் கொள்ளத்தான். ஆனுல் பெரும்பாலும் தீர்த்துக்கொள்ளாமல் மேலும் சேர்த்துக்கொண்டு மறுபடி மறுபடி மட்டமான சரீரத்தில் அது பிரவேசிக்க வேண்டி யிருக்கிறது.

''சுந்தரராஜன், உன் பிள்ளை அப்படி மறுபடி ஒரு சரீரத் தில் புகப் போகிறதில்லை. பிறப்பு எடுத்தது பிறப்பைப் போக்கிக் கொள்வதற்கே, சரீரத்தில் புகுந்தது மறுபடி அப்படிப் புகாமல் ஆக்கிக் கொள்வதற்கே என்பதை சத்தியமாகச் சாதித்துக் கொண்டுவிட்டான். அந்திமத்தில் பகவத் ஸ்மரணம் வந்தால் பகவானேடேயே கலந்து விடுவார்கள் என்பது தெரியாதா? நல்ல நினைவோடு மூன்று தடவை முருகனை அழைத்துக்கொண்டே

Koviloor Digital Library

உன் மகன் கண்ணை மூடினானே! அவனுக்கு முக்தி அல்லவா கிடைத்துவிட்டது! இதற்கா நீ துக்கப்படுவது? அவனுக்கு வந்த அந்த பக்தி முதிர்ச்சி உனக்கு ஸித்திக்கவே பிரயாசைப் படு. ஸங்கீதத்தால் பகவானை, பகவந் நாமத்தை வழிபட்டுக் கொண்டே இரு.''

புத்தியில் புகுந்து புத்திரசோகம் தீர்த்துவிட்டார்!

* * *

வேங்கடமுனிக்குத் திரும்பலாம்.

ஒருமுறை சென்னை வந்து அவர் இல்லத்தில் தங்கி, மதுரைக்குப் புறப்பட்டார் ஸ்வாமி.

ஸுசிலாம்மாளைப் பார்த்து, ''அம்மா, உன் புருஷரை நான் என்னோடயே அழைச்சுட்டு...உம்?'' என்று கேட்டார்.

''என்னைக் கேட்க வேண்டுமா, ஸ்வாமி!'' என்றார் அப் பெண்மணி.

''சரி, உன் பெர்மிஷனோடு, அவரை என்னோடு அழைச்சுக் கிறேன்'' என்று பாபா சொல்லி, வேங்கடமுனியையும் மதுரைக்கு அழைத்துச் சென்றார்.

மதுரையில் அவர்கள் தங்கியிருந்த ஜாகையில் வேங்கடமுனி சட்டென மார்பை அழுத்திக்கொண்டார்.

பக்கலில் இருந்த பகவான் அவரை இரு கரமும் நீட்டித் தம்மிடம் இழுத்துக்கொண்டார். தம்மீதே ஆரச் சாய்த்துக் கொண்டார். பரிவோடு தடவிக்கொடுத்தார்.

வேங்கடமுனி அந்தப் பரம பதத்திலிருந்து அதன்பின் எழுந்திருக்கவே இல்லை.

பாபா அவரை 'அழைத்துக் கொள்ள'ப் பெர்மிஷன் தந்த தர்மபத்னியின் கண் கலங்க பாபா பெர்மிஷன் தரவில்லை! சூரியனாகக் காயாமல், கருணையில் குளிர்ந்திருந்தே நம் ஸ்வாமி கண்ணீர்ச் சுரப்பிகளை வற்ற வைக்கிறாரே, அந்தச் ''கண்டாயம்'' என்ன?

* * *

பாத மந்திரத்தில் பாபாவின் பாதத்தில் தம் குழந்தையைக் கிடத்தியவர் அந்நாள் சென்னை மாகாண போக்குவரத்துக் கமிஷனர் ஸ்ரீ ஹநுமந்தராவ் அவர்கள்.

''எங்களுடைய ஒரே பிள்ளை'' என்றார்.

Koviloor Digital Library

''என் பிள்ளை'' என்றார் பாபா.

'' 'ஈச்வரிப் பிரஸாத் தத்தாத்ரேயா' என்று பெயர்'' என்றார் தந்தை.

''இல்லை, சிவா'' என்றார் பாபா. ''சிவாதான் உங்களை என்னோடு முடி போட்டிருக்கும் கயிறு'' என்று சொல்லிச் சிரித்தார். ('சிவன் பதி, ஜீவன் பசு; இந்தப் பசுவை அந்தப் பதி, 'பாசம்' என்கிற உலக மாயையால் கட்டுகிறான் என்பது சாஸ்திரம். இங்கே மாற்றிச் சொல்லிவிட்டாரா பாபா? காரண மில்லாமல் ஒரு வார்த்தை அவர் வாயில் மாறி வருமா?)

அதன் பொருள் பெற்றோருக்குப் புரியவில்லை.

''ஆறும் மாசமே இளம்பிள்ளைவாதம் வந்துவிட்டது. எங்களுடைய இந்த ஒரே புத்திர ஸந்தானத்தைத் தாங்கள் தான் காப்பாற்ற வேண்டும்'' என விண்ணப்பித்துக் கொண்டனர்.

''மஞ்சிதி, மஞ்சிதி'' (''நல்லது, நல்லது'') என்றார் பாபா.

பெற்றோருக்கு இழந்த கண்ணைப் பெற்ற இன்பம் வந்தது.

பாபா சென்னை வரும்போதெல்லாம் இவர்களது இல்லத்துக்கு வந்து 'லூட்டி' அடிப்பார்! அப்போது அவருக்கு வயசு இருபது. 'காளை'ப் பருவம் என்று சொல்ல வேண்டும். ஆனால் பார்வைக்கு ரொம்ப இளசாக இருப்பார். (இங்கே, நாகமணி பூர்ணையா முதல் தரிசனம் செய்ததைப் பற்றிச் சொன்னது நினைவு வருகிறது: ''பெரிய பெரிய அற்புதங்களைச் செய்கிறார் பாபா என்பதால் எட்டாத் தொலைவில் இருப்பவராக எப்படியோ அவரைக் கற்பனை செய்துகொண்டு போனேன். ஆனால் அவரைத் தரிசித்த மாத்திரத்திலே, ''இனிப்புக் குழந்தை'' என்பதொன்று தான் தெரிந்தது. அப்படியே வாரி இடுப்பில் வைத்துக்கொண்டு வீட்டுக்கு வந்துவிட மாட்டோமா என்றிருந்தது'' என்பார்.)

சிவாவை விடக் குழந்தையாக பாபா ஹநுமந்தராவ் வீட்டில் வளைய வந்து விளையாடினார். குறிப்பாக, சிவாவோடு மிகவும் விளையாடினார். அந்தக் குழந்தையும் பாபா கிட்டத்தில் இருந்தால் ஒரே குதூகலத்தில் இருக்கும்.

ராவ் வீட்டில் பாபா செய்த லீலை அனைத்தையும் இங்கே சொல்வதற்கில்லை. எனினும், ஒன்றைச் சொல்லாதிருப்பதற் கில்லை.

அன்று ஜன்மாஷ்டமி. ஏதோ யோசனையில் ஆழ்ந்தது போல் பாபா வீட்டுக்குள்ளே குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்தார். 'உல்லாஸ பாலர் ஏன் சிந்தனை வசப்பட்டு விட்டார்?'

திடீரென ஹநுமந்தராவின் மனைவியாரான லக்ஷ்மி பார்வதம் மாவின் புறம் திரும்பினார். ''தேவர்கள் வருகிறார்கள், எனக்கு

Koviloor Digital Library

நிவேதனங்கள் தருவதற்காக'' என்றார். எதையோ வாங்கிக் கொள்வதற்கே போல் இரு கைகளையும் உயரத் தூக்கினார்.

அம்மாளின் கண்களுக்குத் தேவர் எவரும் தெரியவில்லை. ஆனால் பாபாவின் கைகளில் ஒரு பெரிய கண்ணாடிக் கிண்ணம் வந்திறங்குவதும் அதை அவர் வாங்கிக்கொண்டிருப்பதும் நன்றாகத் தெரிந்தது. அந்தப் பெரிய கிண்ணம் எப்படித் திடுமென அங்கே முளைத்தது!

அதுமட்டுமல்ல. அது நிறைய இனிப்புப் பக்ஷணங்கள்! இந்தியாவில் ஒவ்வொரு பகுதிக்கும் விசேஷமான இனிப்புக்கள் ஒவ்வொன்றிலும் வகைக்குக் கொஞ்சம் அதில் இருந்தது!

'கிருஷ்ண ரஸாயன'த்தின் ருசியைப் பெற்ற அந்த இனிப்புக்களை அடியார் யாவரும் உண்டனர்.

தாதியர்கள் கழுத்தில் கட்டிக் கொள்வார்களே, அந்த மாதிரி ஓர் 'ஏப்ரன்' கேட்டார் பாபா. ஏன் தாமே சிருஷ்டிக்க வில்லையோ, யார் சொல்ல முடியும்? லக்ஷ்மிபார்வதம்மாள் கொண்டு வந்து கொடுத்தார். அதைக் கழுத்தில் கட்டிக்கொண்டு தமது மடியைத் தட்டிக் கொடுத்துக்கொண்டே குழந்தைக் கண்ணனைத் தூங்கவைக்கும் தாலாட்டுக்களைப் பாடலானார் பாபா. அவரது நீலாம்பரியில் நீலபாலனை நீளப்படுத்து நித்திரை செய்வதாகத் தோன்றியது. குழந்தை நாளிலிருந்தே கண்ணனாக மட்டுமின்றி அசோதையாகவும் நடித்த ஸாயி மாதா இந்த ஜன்மாஷ்டமியிலும் கிருஷ்ண ஜனனியாகிப் பிரேமைப் பிரவாஹமாயிருந்தாள்!

தாலாட்டு முடிந்து, ஏப்ரன் துணியை எடுத்தார்.

அதன் மடிப்புகளிடையே ஒரு சந்தன விக்கிரஹம்!

கண்ணன் பதுமையேதான்!

தங்களது ஸந்தானம் தங்கவேண்டும் என்ற ஒரே பிரார்த்தனையாக இருந்த ராவ் தம்பதியருக்குச் சந்தனக் கண்ணனை அளித்தார்.

பர்த்திக்குத் திரும்பினார்.

சிவாவின் இளம்பிள்ளைவாதம் மூளையைத் தாக்கிவிட்டது. ''பாபா, பாபா'' என்று பிரார்த்தித்துக்கொண்டேயிருந்தனர் பெற்றோர். ஆனால் இவர்களை ஆறாத புத்திர சோகத்தில் ஆழ்த்தி மறைந்து விட்டான் குழந்தை.

''சிவாதான் உங்களை என்னோடு முடிபோடும் கயிறு'' என்று பாபா சொன்னதற்கேற்ப, அவரிடம் இத் தம்பதியர் வைத்த பக்தி துளிர்த்தே போயிற்று. குழந்தைக்கு முழுக்குப் போட்டதோடு புட்டபர்த்திக்கும் ஸ்நானம் செய்துவிட்டார்கள்.

Koviloor Digital Library

பாபாவிடம் பக்தி போனாலும், ஈச்வர கிருபையால் ஜீவ காருண்யம் இவர்கள் நெஞ்சில் அதிகமாக ஊற்றெடுத்தது. இளம் பிள்ளைவாதமுற்ற இளம்பிள்ளைகளுக்காக ஏராளமான பொருட் செலவில் அடையாற்றில் ''ஈச்வரிப் பிரஸாத் தத்தாத்ரேயா வைத்தியசாலை''யை எழுப்பினர்.

ஈச்வரி தன் பிரஸாதமாகத் தத்தம் செய்திருந்த பிள்ளையை எடுத்துக் கொண்டுவிட்டாலும், இம் மருத்துவ மனையில் வந்து சேர்ந்த அபலைக்குழந்தைகள் யாவும் இவர்களுக்குத் தத்துப் பிள்ளைகள் போலாயின.

ஜீவகாருண்யம் வேறு, பாபா பக்தி வேறு என்ன? நோயுற்ற இளம் கன்றுகளுக்கு மருத்துவமும், அதனினும் இனிய அன்பு மருத்துவமும் செய்ததில் இவர்களது புத்திரசோகம் தேய்ந்து தேய்ந்து மறைந்தது. ''சிவன் தந்தான். சிவன் எடுத்துக் கொண்டான். சிவன் செய்யல் எல்லாம் நல்ல செயல்தான்' என்ற தெளிவு பிறந்தது. சிவசிந்தனை வந்தவுடன் துண்டித்த கயிறும் மறுபடி முடிச்சுப்போட்டுக் கொண்டுவிட்டது. ஆம், 'மிராகிள்' என்று சொல்லக்கூடிய வெளிச் செயல் ஏதுமில்லாமலே நிடுமென பாபா விடம் இவர்களுக்கு மீண்டும் பக்திச்சுனை பொசியத் தொடங்கி விட்டது!

பர்த்தி அவர்களை அழைத்துவிட்டது, பழையபடியே ஆட்கொண்டும் விட்டது!

குழந்தையைச் சரி செய்வதாக பாபா சொன்னதும், அதற்காகத் தாம் பிரம்மப் பிரயத்தனம் செய்வதாகக் காட்டியதும் எல்லாமே லீலைதான் என்று தேர்ந்தனர். 'அவர் ஏமாறவில்லை, தங்களையே ஏமாற்றினார், அதுவும் தங்கள் மனத்தை உயர்த்தி மாற்றவே தாற்காலிகமாக ஏமாற்றினார்' என்று தெளிந்தனர்.

'முன்னோ, பின்னோ சரீரம் என்றெடுத்தால் அது அழியத்தான் வேண்டும். சாவை ஒரு பெரிய விஷயமாக எண்ணிப் பயப்படவேண்டாம்' என்பார் பாபா. அடியார்கள் தாங் கொணு மொழியாக, ''அவதாரமைன மேமே மா தேஹான்வி ஓதலி பெட்டி போவல் சிந்தே'' [அவதாரமான நானே என் தேஹத்தை (ஒருநாள்) உதறிவிட்டுப் போக வேண்டியதே] என்பார். புட்டபர்த்தியையும் பக்தர்கள் 'புட்டஹர்த்தி'யாக்கிக் கொள்ள வேண்டும் என்பார். 'புட்ட' என்றால் 'பிறப்பது' என்றும் ஒரு பொருள். பிறப்பை அழித்துக்கொள்வது 'புட்டஹர்த்தி.'

* * *

பாபா லக்ஷோபலக்ஷம் அற்புதங்கள் செய்கிறார் என்ற போதிலும் இவற்றால் கோடாநுகோடி மக்களில் ஒவ்வொருவருக்கும் உள்ள கோடி கோடி கர்மங்களை மாற்றிவிடவில்லை. அப்படி மாற்ற அவர் எண்ணவும் இல்லை. தாம் செய்வதனைத்தும்

Koviloor Digital Library

அன்புக்கு ஒரு சிறு அடையாளம் தான் என்கிறார். ''இயற்கையன்னை மிக அழகாகவே சமையல் செய்து கொண்டிருக்கிறாள். அதில் நான் சும்மா சும்மாத் தலையிட விரும்பவில்லை. அது அவசியமும் இல்லை'' என்ற அமர வாசகங்களைக் கூறியிருப்பவர் அவர்.

இன்பம், துன்பம் இரண்டையும்—நல்லது, கெட்டது இரண்டையும்-சேர்த்தே தருவதுதான் இயற்கை நியதி என்பார். ''மனித சரீரம் உண்டாகிறபோதே அதில் நல்ல ரத்தத்தை எடுத்துச் செல்ல ஒருபுறம் குழாய்கள் சிருஷ்டியாகின்றன வெளியில், இன்னொரு புறம் கெட்ட ரத்தத்தை எடுத்துச்செல்லவும் குழாய்கள் உருவாகின்றன அல்லவா? ரத்தம் கெட்டுப் போவானேன், அப்புறம் சுத்தம் செய்வானேன் என்று விவாதித்துப் பயன் என்ன? லீலைக்கு இந்த மாறுபாடு இருந்தால்தான் ருசிக்கிறது'' என்பார்.

''தேகத்தில் இரு விதமான ரத்தக் குழாய்கள் இருப்பது போலவே தான், நாமும் ஓர் ஊரை நிர்மாணம் செய்கிறபோது, ஒரு பக்கம் குடிநீர்க் குழாய்களை அமைக்கிறோம், இன்னொரு பக்கம் கழிவு நீர்க் குழாயும் போடத்தானே செய்கிறோம்? இரண்டும் இருக்கத்தான் வேண்டும். துன்பம் என்று ஒன்றை நினைத்து, அழ வேண்டாம். கெட்டது என்று ஒன்றை நினைத்து, கெட்டவர் என்று ஒருவரை நினைத்து துவேஷம் கொள்ள வேண்டாம்'' என்பார்.

துக்கமும் தோல்வியுமேதான் அநேக சந்தர்ப்பங்களில் மனிதனுக்கு அவனது சிறுமையை உணர்த்தி அவனைத் தெய்வத்திடம் திருப்புகிறது என்பார். இகவாழ்வே நிறைவானது என்று மனிதன் நினைத்து விடாமலிருப்பதற்கேதான் இறைவன் வேண்டுமென்று துன்பத்தை வைத்திருக்கிறான் என்பார்.

''துயரங்கள் செய்து தன் தெய்வ நிலை உலகில் புக உய்க்கும் அம்மான்'' என்று நம்மாழ்வார் சொன்னதையே நம் ஆண்டகையும் நினைப்பூட்டுகிறார்.

துக்கமும், துவேஷமும் தம் பக்கமே வர முடியாமற்செய்து விட்ட ஐயன், பக்குவ பக்தருக்கும் இப்பான்மையை அருளித் தான் வருகிறார்.

தங்கள் வீட்டில் மரணம் நேர்ந்துவிட்டதே என்று எவரேனும் புலம்பினால் பாபா, ''பாரேன்! என் அக்காள்மார் இருவருங்கூடத்தான் இளம் பிராயத்திலேயே விதவைகள் ஆகிவிட்டனர்'' என்பார்!

இவர்களில் வெங்கம்மாவின் கணவர் சுப்பாராஜு பாபாவுக்கு மாமனும் ஆவார். இவரது மரணத்தின்போது பாபா பராசக்தி வேகத்தோடு பொழிந்த வாசகத்தை எண்ணும் போதெல்லாம் ஸ்ரீ கஸ்தூரி அயர்ந்து விடுவார்!

Koviloor Digital Library

பிரசாந்தி நிலயத்துள், மந்திரத்தின் பின்னுல்தான் சுப்பா ராஜுவை அடக்கம் செய்திருந்தார்கள். தனது தாய், தந்தை, தாத்தா—யாருக்குமே தராத இந்த பாக்யத்தை, தம்மிடம் அவ்வளவாக ஈடுபாடற்ற அத்திம்பேருக்கு மட்டுமே பாபா அளித்ததன் ரகசியம் அவர் ஒருவருக்குத்தான் தெரியும்!

'காரியம்' முடிந்தபின் வெங்கம்மா பிரசாந்தி நிலயத்துள்ளே விசும்பிக் கொண்டிருக்கிருர். பாபா வெளியே சோகம் சூழ்ந்த 'உறவினர்' நடுவே ஓர் உணர்ச்சியுமில்லாது அமர்ந்திருக்கிருர். காலை மணி பத்திருக்கும். வெளியூர் சென்று திரும்பிய ஸ்ரீ கஸ்தூரி தயங்கித் தயங்கி வருகிருர். பாபாவிடம் வருகையில் அழுகை முட்டிக்கொண்டு வந்துவிட்டது.

கார் மேகங்கள் குழம்பிக் கிடக்கும்போது அவற்றிடையே மின்னல் பளிச்சிடுவதுபோல், அந்த சோகச் சூழலில் பாபா ஒளிச் சுடராகப் பேசுகிருர்:

''கஸ்தூரி! செச்சேதி புட்டேதி லேகபோதே நாகு எட்லையா டைம் போயேதி?'' (சாவு, பிறப்பு இதெல்லாம் இல்லையென்ருல், எனக்கு எப்படி ஐயா பொழுது போகும்?) முத்துக் குவியலைச் சரித்து விட்டாற்போல் சலசலவென நகைத்தார் ஐயன்.

ஆம், ஆம் — பராசக்தியின் லீலைக்கு இதவ்வளவும் உள்ளடங்கியவைதாம்.

எப்படி ராமகிருஷ்ணர் மரணப் படுக்கையில் நலிந்து கொண்டே தம்மை அவதாரம் என்று சொல்லியது விவேகாநந்தரின் நெஞ்சில் பரம சத்தியமாக ஆழப் பதிந்ததோ, அப்படியே இத்தனை ரத்த பந்துக்களும் சாம்பிக்கிடந்த அந்த செத்த சூன்யத்தில், பாபா உச்ச சூரியனுக ஜொலித்துக் கொண்டு கூறிய வாசகம் கஸ்தூரியின் அந்தராத்மாவுக்குள் புகுந்து அவதாரத்வத்தை நிலைநாட்டிவிட்டது!

உற்ருர்களைச் செய்வேனும் யானே என்னும்
உற்ருர்களை அழிப்பேனும் யானே என்னும்

என்று பராசக்தி மயமாகிவிட்ட தலைவியைப் பற்றி அவளது தாய்க் கூற்ருக நம்மாழ்வார் சொன்னது நம் புட்டபர்த்திச்வரிக்கு எப்படிப் பொருந்துகிறது பாருங்கள்!

பாபாவின் உறவினர் காலமாகிவிட்டனர் என்பதால் அவரைத் 'துக்கம்' கேட்பவர்கள்கூட உண்டு. வெங்கப்பராஜுவின் மரணத்தின்போது தமக்கு அநுதாபக் கடிதங்கள் எழுதியவர்களைப் பற்றிப் பரிதாபப்பட்டு, பரிஹாஸமாகவே பதில் எழுதினுர் பாபா—தமது 'ஸநாதன ஸாரதி' ஏட்டில்.

''எவரும் மரிக்க வேண்டியதுதான். ஆனுல் மறுபடி பிறக்காத வகையாகச் செய்துகொண்டு மரிக்கவேண்டும். இப்படிச் செய்துகொள்ள அந்திமத்தில் பகவத் ஸ்மரணை அவசியம்.

Koviloor Digital Library

இறுதியான அந்திமத்தில் மட்டும் அந்த ஸ்மரணை வந்து விடாது. இறை நினைவை வாழ்நாள் முழுதும் பழக்கிக்கொண்டால்தான் அது கடைசி மூச்சில் கை கொடுக்கும். அப்படி நினைப்பவர்களுக்கு நான் தரிசனம் தந்து என்னிடமே சேர்த்துக்கொள்கிறேன்'' என்பார்.

* * *

பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைகின்ற பரிபூரணத்தில் ஒரு பக்குவ ஜீவன் கரைகிறது. அப்பரிபூரணம் எங்கும் நிறைந்திருந்தாலும், சில சமயங்களில் அந்த நிராகாரத்தின் நராகாரமாக உள்ள பாபா தமது ஸ்தூல சரீரத்தையோ, ஸூக்ஷ்ம சரீரத்தையோ தாங்கிக்கொண்டு அப்படிப்பட்ட ஜீவனிடம் மரணத் தறுவாயில் ஓடுகிறார்.

இப்படி ஸ்வாமியைத் தங்களிடம் ஓடிவரச் செய்தவர்களில் கிறிஸ்துவ மிஷனரிக் கல்லூரி யொன்றின் முதல்விக்குக் கிட்டிய பேற்றைக் குறிப்பிட வேண்டும்.

அவளது பாபா பக்தி வெளியில் தெரிந்தால் மிஷன் அவளைத் தண்டிக்கும் என்பதால் அவள் ஒரு பரம ஸாயி பக்தையான மாணவி மூலமே ஸ்வாமிக்குப் பிரார்த்தனை செலுத்தி வந்தாள். அவள் மிஷனைவிட்டு வெளிவர வேண்டியதில்லை; அதிலிருந்து கொண்டு அவள் செய்யும் கல்வித் தொண்டே சிறப்பானதுதான் எனத் திரு உளம் கொண்ட பாபாவும் அவளுடைய பக்தியை ரகசியமாகவே காத்தார். எனவே இப்போது அவள் இறந்துவிட்ட போதிலும் அவள் பெயரை வெளியிடுவது முறையாகாது. இச் சரிதம் ஸாயி பக்தர்களுக்கெனவே எழுதப்படுவதால் இதில் புனைந்துரை ஏதும் இருப்பதாக வாசகர் எண்ணுவதற்கில்லை. எனவே, பெயர், ஊர், காலம் ஆகிய விவரங்களை மறைத்து இதனைக் கூறுகிறோம்.

மேற்சொன்ன பக்தையான மாணவிக்கு முதலில் இந்தக் கல்லூரி முதல்வி அட்மிஷன் மறுத்திருந்தாள்—அப் பெண் தகுதி பெற்றிருந்தும்கூட.

மாணவி பாபாவுக்கு ஓயாமல் பிரார்த்தனை செலுத்தினாள்.

பாபா கனவில் வந்தார். ''நாளைக்கு மறுநாள் அதே காலேஜுக்குப் போ. ஒரு தமாஷ் பார்ப்பாய்'' என்றார்.

அதேபோல் அப் பெண் சென்றாள்—ரட்சையாக, பாபாவே தந்திருந்த அவருடைய படத்தையும் விபூதியையும் கையில் மறைத்து எடுத்துக்கொண்டு. இவள் காலேஜ் உள்ளே சென்றதும் ஒரு 'நன்' இவளிடம் வந்து, ''நீ வருவாயோ என்றுதான் பிரின்ஸிபல் அதோ சர்ச் பக்கம் காத்துக்கொண்டிருக்கிறார்'' என்றாள்.

'நன்' சொன்ன நன்மொழிகளைக் கேட்டு மாணவி தன் காதுகளையே நம்ப முடியாமல் சர்ச் பக்கம் சென்றாள். அன்று

Koviloor Digital Library

கண்டிப்பே உருவாக இருந்த கல்லூரி முதல்வி இன்று அபிமானமே வடிவாக இவளிடம் வந்தாள். ஆங்கிலத்தில் பின்வருமாறு கூறினுள்—முன்னிலும் நம்பவொண்ணுத தமாஷ்தான்!

''குழந்தே! அன்றைக்கு உன்னைப் புறக்கணித்ததற்காக மனமார வருந்துகிறேன், மன்னிப்புக் கோருகிறேன். நேற்று ராத்திரி எனக்கு ஒரு விசித்திரமான கனவு வந்தது. ஒரு மகான் தரிசனம் தந்தார். ஹிந்து மாதிரித்தான் தோன்றினுர். அழகான சுருட்டை முடியே அவருக்கு ஜோதிப்பிரபை போல் முகத்தைச் சூழ்ந்திருந்தது. அவர் யாரென்று தெரியாவிட்டாலும் பரம தெய் விகமாகத் தோன்றினுர். அவர் என்னிடம் 'பார்! என் பாதத்தில் தஞ்சம் புகுந்த அந்தச் சிறு குழந்தையை நீ புண்படுத்தி விட்டே! சத்தியமும் ஈகையுமே குறிக்கோள் என்று நீ பிரதிக்ஞை எடுத் துக் கொண்டிருந்தும் அந்தப் பெண்ணை நிராகரித்து விட்டாய். இதனுல் கிறிஸ்துவையே நீ புண்படுத்திவிட்டாய்!' என்ருர்.

''இப்படிச் சொன்னவர் தாமே மூன்று முறை முடியிலிருந்து அடிவரை கிறிஸ்துவாக மாறிவிட்டார்!

''பிறகு நான் உனக்கு ஸீட் தருவதாக வாக்குறுதி தந்த வுடன் அவர் மறைந்துவிட்டார்.''

இப்படிக் கூறிய முதல்வி அதைக் கனவென்று தன்னுல் தள்ள முடியாததைக் கூறி, ''குழந்தே! அவர் யார்? அவரைப்பற்றி விவரமாகச் சொல்லேன்'' என்று கெஞ்சாத குறையாகக் கேட்டாள்.

பாபாவுக்குத் தமாஷாக இருந்த நிகழ்ச்சி நம் மாணவி யையோ அதித அநுபவத்தில் ஆழ்த்திவிட்டது. அவளுக்குக் கண் மங்கிற்று; உடல் வியர்த்தது; கைகள் வெடவெடத்தன.

வெடவெடப்பில் பாபாவின் புகைப்படம் நழுவிக் கீழே விழுந்தது.

அதைப் பார்த்த முதல்வி ஆர்த்துக் கூறினுள்:''Oh! Look, dear child! This was the same fellow who came in my dream as Christ'' (''ஓ! அதிசயம் பார், அன்புக் குழந்தாய்! இதே பேர்வழிதான் என் கனவில் கிறிஸ்துவாக வந்தது!'')

[அன்புமிகுதியில் பேராயிரம் பரவும் நம் பெம்மானை அவள் ''பேர்வழி''யாக, ''fellow'' — ஆகக் கூறியதிலும் ஓர் அழகு இருக்கத்தான் செய்கிறது.]

அப்புறம் கேட்பானேன்? மாணவிக்குக் கல்லூரியில் ஸீட் கிடைத்தது. ஸ்வாமிக்கு முதல்வியின் இதயத்தில் ஸீட் கிடைத் தது!

மாணவி புட்டபர்த்தி செல்லும் போதெல்லாம் முதல்வி அவள்மூலம் பாபாவிடம் தனது விஞ்ஞாபனங்களைத் தெரிவிப்பாள்.

Koviloor Digital Library

பாபாவும் அவளுக்கென ஞாபகமாக விபூதிப் பிரஸாதமும், அறிவுரைகளும் அனுப்பி வைப்பார்.

ஒருமுறை தன் விஞ்ஞாபனத்தை மாணவியிடம் விண்டு சொல்லாமல், "எனக்கு ஏதோ ஒரு கோரிக்கை இருக்கிறதென்றும் அதை பாபாதான் நிறைவேற்ற வேண்டும் என்று பிரார்த்திப்பதாகவும் சொல்" என்றாள் முதல்வி.

பர்த்தியில் பாபா மாணவியை அழைத்தார். "என்ன, உன் மதர் பிரின்ஸிபல் கோரிக்கை சொல்லட்டுமா? அவளுக்கு ரோமில் உள்ள ஸெயின்ட் பீடர் பாஸிலிகாவிலேயே மரணமடைய வேண்டுமென்று ஆசை; அதோடுகூட அந்திமத்தில் நான் தரிசனம் தர வேண்டுமாம். கோரிக்கை பூர்த்தியாகிற பிராப்தி அவளுக்கு இருக்கு என்று சொல்" என்றார்,

கோரி வச்சின வாரு கெல்லனி
கோர்கெ லொஸகே பிருது கதா?

என்று ச்யாம சாஸ்திரி போற்றிய ஸாயீச்வரி.

ஊருக்குத் திரும்பிய மாணவி இதை முதல்வியிடம் சொன்னதும், 'ஆஹா, அவர் ஸர்வாந்தர்யாமிதான்' என்று அவள் உருகி விட்டாள்.

பிறகு அவள் ரோமில் ஸெயின்ட் பீட்டர் பாஸிலிகாவிலேயே தன் இறுதி நாட்களைச் செலவிட்டாள். அதுமட்டுமல்ல. பாபா தரிசனம் தனக்குக் கிடைத்துவிட்டதாகத் தனக்கு அந்தரங்கமான 'நன்'னுக்கு ஒரு குறிப்பும் எழுதினாள். இதை அந்த நன் தமது மாணவிக்குத் தெரிவித்தாள்.

அடுத்த முறை மாணவி பர்த்தி சென்றபோது பாபா அவளிடம், "உன் பிரின்ஸிபலுக்காக ரோமுக்குப் போனேன். தரிசனம் கொடுத்தேன். கொஞ்ச காலத்திலேயே அவளுடைய ஜீவன ஜோதி எனது பாதத்தில் லயமாகிவிட்டது. ரொம்ப அதிருஷ்டக்காரி!" என்றார்.

- ஆயிரமாயிரம் மைல்களுக்கப்பால் ஸ்வாமியை வரவழைத்துக் கொண்டு அவரில் கரைந்ததோடு அவர் வாயாலேயே 'அதிருஷ்டக்காரி' என்று புகழப்பட்ட மகா அதிருஷ்டக்காரி!

சில சமயங்களிலோ மரிக்கும் ஜீவனிடம் இவர் ஓடாமல், அந்த ஜீவனை இவர் ஸ்தூல சரீரத்தில் உள்ள இடத்துக்கு வந்து இறக்கச் செய்வதாகி விடுகிறது. இதற்கு உதாரணம் பெங்களூர் ரஞ்சித்சிங்கின் மகள்.

தனிக்கொன்றாக இன்னம் இரு உதாரணங்களும் பார்த்து விடுவோம். இவ்விருவருமே மஹாத்மாக்கள் ஆவர்.

ஒருவர் அப்துல்லா பாபா. இவர் ஷிர்டி பாபாவின் பரம பக்தரும் நேர் சிஷ்யரும் ஆவார்.

Koviloor Digital Library

சுமார் பதினைந்தாண்டுகளுக்கு முன் பாபா சென்னையிலிருந்த போது ஒருநாள் பல விஷயங்களைப் பேசிவருகையில் நடுவே, தமது 'மொதடி சரீர'த்தின் அத்தாணிச் சேவகராய் இருந்த ஒருவர் குறிப்பிட்ட நாளன்று காலையில் சரீரயாத்திரை முடிக்கப் போவதாகவும், அப்போது தாம் அங்கே அருகிருந்து அவரை எடுத்துக்கொள்ளப் போவதாகவும் சொன்னார். அடியார்கள் பேராவலுடன் அந்தத் தினத்தை, அத்தினத்திலே அவர் குறிப் பிட்ட காலை வேளையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

அந்த நாளும், வேளையும் வந்தன. பாபா குளியலறைக் குச் சென்றவர் திரும்பவே யில்லை. வெகு நேரமாகியும் அவர் வெளி வராததால் பக்தர்கள் ஜன்னல் வழியே பார்த்தபோது அவர் கட்டைபோலக் கிடப்பதைக் கண்டனர். கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றனர். சரீரத்தில் சற்றும் ஜீவச்சாயல் காணவில்லை. இதயம் நின்றுவிட்டது. நாடி ஒடுங்கிவிட்டது. இவர்களும் ஸப்தநாடி ஒடுங்கிப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

ஆஹா, குபுகுபுவென பாபாவின் வலக்கால் பெருவிரலி லிருந்து விபூதி வெளிப்படலாயிற்று. ஷிர்டியில் வழங்கப்படும் உதிதான்! பக்தர்களின் பயம் தெளிந்தது. அவர்களுக்கு உதரம் குளிரும் விதத்தில் ஐயனின் அதரமும் அசைந்து, வார்த்தைகள் வெளிப்பட்டன.

கரகரத்த குரலில் மராத்தியில் ஏதோ மொழிந்தார்; ஹிந்தியில் செய்யுள்கள் கூறினார். ஷிர்டி பாபாதான் பேசினார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. எங்கோ சாகும் தாஸனிடம் அவர் வருஷித்த வாக்கு மழையின் தூவானத்தைத்தான் இங்கே கேட்கிறார்கள்.

பாபா துள்ளி எழுந்தார். ஷிர்டி சரீரத்தைத் தொழுது தொழும்பு செய்துவந்த உத்தமரான அப்துல்லா பாபாவையே தாம் கடைத்தேற்றி வந்ததாகத் தெரிவித்தார்.

பிறகு, அன்று அதே சமயத்தில்தான் அப்துல்லா பாபா அமரருலகெய்தினார் என்று ஊர்ஜிதமாயிற்று.

இங்கே, இவர் ஒரு பரிசுத்த ஜீவனிடம் சென்றார். மற்றொரு பரிசுத்த ஜீவன் இவரிடம் வந்ததைப் பார்ப்போம்:

1957—ம் ஆண்டு நவம்பர் 8-ந்தேதி வெள்ளிக்கிழமை. பூர்ணிமை நிலா வெளியே பொழிந்துகொண்டிருந்தது. சுக்ர வாரத்துக்கும் பௌர்ணமிக்கும் விசேஷமான அம்பிகையாக ஸாயீச்வரி சயனித்திருந்தாள் பிரசாந்தி நிலயத்தில் தன் அறையில்.

'ராமனுக்கு லக்ஷ்மணன் போல் ஸாயிராமனுக்கு இவர்' என்று அடியார் பலரால் நினைக்கப்பட்டவரும், ஏராளமான சொத் திருந்தும், எம்.ஏ. படித்திருந்தும், அவற்றையெல்லாம் மறந்து

Koviloor Digital Library

பாபாவின் அணுக்கத் தொண்டராக நிலயத்தில் அற்புத பஜனை பாடி வந்தவருமான இளஞர் ஸ்ரீ ராஜா ரெட்டி, ஸாயீச்வரியின் ஒரு பாதத்தைப் பிடித்துவிட்டுக்கொண்டிருந்தார். ராதாகிருஷ்ணன் என்ற இன்னொரு அத்யந்த தாஸர் மற்றொரு பாதத்தை அமுக்கிக் கொண்டிருந்தார்.

இதென்ன! வெளிநிலவு இறுகிச் சுவரைத் துளைத்துக்கொண்டு வருகிறதா என்ன? அடியார் இருவரும் பார்த்துக்கொண்டே யிருக்க, ஓர் ஒளிக் கொழுந்து ஐயனின் அறைச் சுவரின் ஊடே புகுந்து உள் வந்தது; நேரே ஐயனை நோக்கிப் பறந்துவந்து அவரது திருமுடியில் புகுந்து மறைந்தேவிட்டது.

"கிதயலே ஸ்வாமி என்னிடம் ஐக்கியமாகி விட்டார்" என்றார் பாபா.

நாகர்கோவிலில் நீண்ட காலமாக வசித்துவந்த புண்யாத்மா கிதயலே ஸ்வாமி. மலபாரில் புகழ் பெற்றதோர் மஹான் ஆவார்.

அன்று தற்செயலாக இவர்கள் பாபாவின் அறையில் இருந்த தால் இது தெரியவந்தது. ஆனால் வெளி உலகு அறியாமல் இன்னும் எத்தனை புண்ய ஜீவ ஜோதிகள் இங்கே வந்து சிவசக்தி ஜோதியில் கலக்கின்றனவோ, யாரே அறிவர்?

Koviloor Digital Library

அத்தியாயம்—34

இம்மை, மறுமை இரண்டிலும் அம்மை!

மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக் குரம்பை கட்டழிக்க வல்லானே!

*　　　*　　　*

போற்றி எல்லா உயிர்க்கும்
ஈறாய் ஈறின்மையானாய்!

— மாணிக்க வாசகர்

நமக்குத் தெரியாமலே பாபாவிடம் கரைந்து மறைந்தவர்கள் கதை இருக்கட்டும். பழவடியார்கள் மிகவும் பழகியறிந்த மூன்று பரம பக்தர்களின் கதையைப் பார்ப்போம். (சாவு என்பதன் அமங்களத்தைப் போக்கும் பாபா இச் சரிதையிலும் மரணப்படலத்தையே திருமணப் படலம் போல் விரிக்கச் செய்கிறார்!)

பாதமந்திர நாட்களிலிருந்து நம் ஸ்வாமியின் ஆசிரமத்துப் பூஜையைப் பதினாலாண்டுகள்—பரதன் பாதுகா பூஜை செய்தது போல்—உயிர் கலந்து செய்தவர் உத்தமர் ஸ்ரீ சேஷகிரி ராவ்.

பூஜாபலனை இவருக்கு அமோகமாக வழங்கிவிட்டார் பகவான். மனிதனைப் பிடித்தாட்டும் மகா பயமான மரணபயம் எள்ளளவும் இல்லாதவராக இவரை ஸ்வாமி ஆக்கியது சாதாரண அருளா?

''மரத்தில் ஒரு பட்சி உட்கார்ந்திருக்கிறது. அது உட்கார்ந்துள்ள கிளை திடீரென முறிகிறது. பட்சி பயப்படுகிறதா? அது பாட்டில் ஆனந்தமாகப் பறந்துவிடுகிறது. நாமும் அப்படித்தான்

Koviloor Digital Library

நம் ஆத்மாவை உணரவேண்டும். சரீர விருட்சம் உடைந்து விழுந்தாலும் ஆத்ம பட்சி அதோடு விழுந்து உடையாது; அதற்கு பகவானிடம் பறக்கக்கூடிய இறகுகள் இருக்கின்றன என்று உணர்ந்தால், மரம் விழுவதில் பட்சி பயப்படாததுபோல் எவரும் மரண பயமே இல்லாதிருக்கலாம்'' என்பார் பாபா.

மறுபடி கருப்பையில் புகாமல், பகவானிடம் பறக்கிறோம் என்று உறுதிப்படுத்திக்கொண்டால் ஒழிய எப்படி மரண பயமில்லாதிருப்பது?

சேஷகிரி ராவுக்கு இந்த உறுதியை நல்கிவிட்டார் ஸ்வாமி.

''மரணத்துக்கு எப்போதும் தயாராக இருக்கவேண்டும், தெய்வ நினைவோடு மரித்தால் மோக்ஷமடையலாம் என்பதால் சாகுந் தருணத்தில் மட்டும் பகவானை நினைத்தால் போதும் என்று இருக்கலாமா எனில், சாகுந் தருணம் எது என்று எப்படிச் சொல்ல முடியும்? எப்போது வேண்டுமானாலும் மரணம் நேரலாம். இப்போதேகூட நேரலாம். ''சரியாகப் 'போஸ்' கொடுங்கள்'' என்று சொல்லி நமக்காகக் காத்திருக்கும் ஃபோட்டோக்காரன் இல்லை யமதர்மராஜன். எனவே அவனுக்காக நாம் எப்போதும் ரெடியாக இருக்கவேண்டும். அதாவது எப்போதும் பகவத் ஸ்மரணம் இருந்தால் பயமேயில்லாமல் மரணத்துக்கு ரெடியாக இருக்கலாம்'' என்பார் பாபா.

இப்படி ரெடியாக இருந்தவரே சேஷகிரி ராவ்.

இவர் மரணவாயிலில் நின்ற சமயம். உண்மையான பக்தியில் தானாகக் கனிந்த ஞானத்தின் அதிசயத் தெளிவோடு, ''இந்தப் பஞ்ச பூத சரீரம் பஞ்ச பூதங்களாகவும் பிரியப் போகிறது. இதற்குள் சிறைப்பட்டுக் கிடந்த ஆத்மா விடுபடப் போகிறது. நான் மோக்ஷத்துக்குப் போகிறேன்'' என்றார் ஸ்ரீ ராவ்.

பெரிய பதவி ஏற்பதற்காக வேற்றூருக்குச் செல்கையில் விடைபெறும்போது கூட ஒரு வேதனை இழை ஓடத்தான் செய்யும். சற்றும் வேதனை வாடையே வராமல் உலகிலிருந்தே விடை கொள்கிறார் ஸ்ரீ சேஷகிரி ராவ்.

அங்கிருந்தோர் மெய் சிலிர்த்தனர்.

சிலிர்த்த முடியோடு சிங்காரஸ்வாமி அங்கு வந்து நின்றார். அவ்விடத்தின் அடர்ந்த உணர்வுக்கு நேர் மாறான லீலைக் குறும்பு முகத்தில் சுடரிடுகிறது.

''என்ன கொழுப்பு ஐயா, உனக்கு?'' என்கிறார் சேஷகிரியிடம். ''ஆமாம், எங்கிட்டே டிக்கெட் வாங்கிக்காமல் எப்படி ஐயா புறப்படுவே? நான் இப்போ டிக்கெட் தருகிறதாக இல்லை. எழுந்திரு. உன் வேலையைப் பாரு. பூஜையில் ஹாரத்தி கொடுக்க 'டயம்' ஆகலே? நீ பாட்டுக்கு ஜம்னு படுத்துட்டு ஃபிலாஸஃபி

Koviloor Digital Library

லெக்சர் கொடுக்கறியே...ம், போ'' என்றார் அலக்ஷியமாக நம் ஸ்வாமி.

சாம் பிணமாகச் சாம்பிக்கிடப்பவரிடம் ஈவிரக்கமில்லாமல் பேசுவது போல்தான் இருந்தது. ஆனால் சாம்பலையும் உயிருடலாய்த் தளிர்க்கச் செய்யும் ஸாம்பமூர்த்தி அல்லவோ பாபா?

சேஷகிரி ராவ்தானா இவர் என்று அதிசயிக்கும் விதத்தில், கிழித்த நாராகக் கிடந்தவர் விருட்டென எழுந்தார், நடந்தார்.

சர்வ சகஜமாகப் பூஜை வேலையைத் தொடங்கிவிட்டார். வஜ்ர ஸங்கல்பம் இவர் உடலை வஜ்ரமாகவே செய்துவிட்டது.

ஆறு மாதங்கள் ஓடின.

மீளவும் நோயுற்றார் ராவ். வஜ்ரம் வலுவிழந்து கொண்டே வந்தது. ''ஐயோ, இந்த பக்த சிகாமணிக்குமா இப்படிப்பட்ட நரக அவஸ்தை?'' எனும்படி வாதைப் பட்டார்.

''நான்தான் அவன் கர்மா முழுக்கத் தீர்ந்து அவன் திரும்ப உடம்பு எடுக்காமலிருப்பதற்காக இப்படி வைத்திருக்கிறேன். இல்லாவிட்டால் அன்றைக்கே அவனைப் போக விட்டிருக்க மாட்டேனா? போவதென்பது என்றைக்கும் நடக்க வேண்டியது. திரும்பக்கூடாது என்பதுதான் முக்கியம். அதற்கு அநுபவித்தே தீர்க்க வேண்டும்'' என்றார் வைராக்ய பாபா.

கர்ம தாட வசமா? நருடா
கர்ம தாட வசமா?

என்று அந்த நாட்களில் பாபா பாடுவது வழக்கம். ''மனிதா! நீ கர்மத்தைத் தாண்ட முடியுமா?'' என்று அர்த்தம். அநுபவித்துத்தான் தீர்க்க வேண்டும். அதற்கே அவர் துணைபுரிவார்.

பாபா ஈரமில்லாதது போல் இப்படிச் சொன்னாலும் அன்றிலிருந்தே ராவின் உபாதை மலையேறிவிட்டது. 'அநுபவித்தே தீர வேண்டும்' என்றவர், பக்தர் அநுபவிக்கவிடாமல் தாமே அதை வாங்கிக்கொண்டு விட்டாரா? தியாகஸாயியின் ரஹஸ்யத்தை யாரே அறியமுடியும்?

இதன்பின் ஆறு வாரங்கள் ஸ்ரீ சேஷகிரி ராவ் பரம சாந்தத் தடாகத்தில் ஆனந்தப் பூம்படகில் மிதந்துகொண்டிருந்தார்.

ஒரு மாலை அவர் கண்மூடிப் படுத்திருந்தார். அண்டையில் சென்றமர்ந்தார் ஆண்டை.

சூடான பால் கொண்டுவரச் சொன்னார்.

''நாயனா! நான்தான் உன் ஸ்வாமி வந்திருக்கேன், வாயைத் திற'' என்று பாலினும் இனிக்கக் கூறினார்.

Koviloor Digital Library

ராவ் கண்ணைத் திறந்து பாபாவைப் பருகினார்; வாயைத் திறந்து அவர் ஸ்பூன் ஸ்பூனாகச் செலுத்திய பாலைப் பருகினார்.

பரபரவென்று பறக்கும் வழக்கம் கொண்ட ஸ்வாமி, பொறுமையாகக் கோப்பை பாலையும் ஸ்பூனால் எடுத்து எடுத்து ராவுக்குப் புகட்டினார்.

கோப்பை காலியானதும் எழுந்திருந்தார். கதவு வரை வந்தவர் திரும்பி ராவைப் பார்த்தார். ''இப்போது நீ போகலாம்'' என்றார்.

டிக்கெட் கொடுத்துவிட்டார்.

ராவும் புறப்பட்டுவிட்டார்.

அநாயாஸ மரணம். ஆதிமூலத்தில் அடக்கம்.

* * *

ஒரு காலத்தில் ஸ்ரீமான்கள் பாலைய நாயுடு, ஸி.கே. நாயுடு, ராமஸ்வாமி ஆகியவர்களைக் கிரிக்கெட் ''ட்ரியம்விரேட்'' (மூவேந்தர்) என்பார்கள். இவர்களில் ராமஸ்வாமியை தத்து எடுத்துக் கொண்டவர் நரஸம்மா. ஆசாபாசங்கள் நிறைய இருப்பவர்கள்தான் ஸ்விகாரம் எடுத்துக்கொள்வர் என்று சொல்லவும் வேண்டுமா?

ஸத்யநாராயணன் பாலஸாயியாகிச் சிறிது காலத்திலேயே அவரிடம் வந்தார் நரஸம்மா. அவ்வளவுதான்! குடும்ப ஆசை, பாசம் முழுதும் எப்படியோ சுவறிவிட்டது. கோபால் ராவை தத்து எடுத்துக்கொண்டும், ஸத்யாவுக்கே தன்னைத் தத்தம் செய்து கொண்ட சுப்பம்மா போலவே, நரஸம்மாவும் நர உருவில் வந்துள்ள நம் தேவனிடம் அன்றே தன்னை ஒப்புக்கொடுத்துக்கொண்டு விட்டார். 'தில்லை வெளியிலே கலந்து விட்டால் அவர் திரும்பியும் வருவாரோ?' என்றபடி பர்த்தியையே தமது நிரந்தர இருக்கையாக்கிக் கொண்டு விட்டார்.

அன்பும் பரிவுமே ஒருருவாக வளர்ந்து வந்த நரஸம்மாவுக்குக் காலக் கிரமத்தில் வேறொரு வித பாசம் உண்டாயிற்று. அந்நாவது பிரசாந்தி நிலைய வாசிகளுக்கும், அங்கு வரும் பக்தர்களுக்கும் அவரது குடில் எப்போதும் திறந்திருந்தது. அவர்களிடமெல்லாம் அன்பு பாராட்டுவதே இவருக்கு முழு நேர வேலையாகி விட்டது.

அவ்வப்போது ஸ்வாமியே கடிந்துகொள்வார்: ''இதென்ன காரியம் நரஸம்மா? வீடு வாசலை விட்டுவிட்டு வந்து இப்போது வேறு விதமான பந்த பாசத்தை வளர்த்துக்கொண்டு விட்டாய்? பலதரப்பட்ட ஜனங்களை இப்படி ஸதா உன்னிடம் அனுமதித்துக் கொண்டே இருந்தால் ஸாதனைகள், குறிப்பாக மௌன அநுஷ்டானம் என்னாவது?'' என்பார்.

Koviloor Digital Library

இதற்கு நரஸம்மா பதில் சொல்ல மாட்டாள். ஆனாலும் தன் போக்குப்படியே பக்த ஜனங்களிடம் பந்தம் பாராட்டிப் பாச வெள்ளத்தைப் பொழிந்துதான் வந்தாள்.

பாபாவுக்கும் தெரியாதா, அவள் அநுஷ்டித்த தூய அன்பு தான் எல்லாவற்றுக்கும் மேம்பட்ட ஸாதனை என்று? அதை அவள் தன் வாய்மொழியாகச் சொல்லாமல் இருக்கும் பக்குவத்தை ரஸிப்பதற்கே இப்படிக் கடிந்து கொள்வதாக நடித்தார் போலும்!

உள்ளூற நரஸம்மாவுக்கும் பாபாவுக்கும் இடையில் நிலவிய புனித அன்பை என்னென்பது? 1970 டிஸம்பரில் பாபா கோவாவில் இருந்தபோது திடீரென அப்பெண்டிஸிடிஸ் கண்டு துடியாகத் துடித்ததை பக்தர் அறிவர். ஏதோ ஒரு பக்தரின் உபாதையையே தாம் வாங்கிக்கொண்டு தீர்ப்பதாக அப்போது பாபா அறிவித்ததும் அடியாருலகுக்குத் தெரிந்த விஷயமே. இன்ன பக்தர் என்று அவர் பெயர் குறிப்பிடாவிடிலும் இதே ஸமயத்தில் பர்த்தியில் மிகவும் ஸுகவீனமுற்றிருந்த நரஸம்மாவுக்கு அவர் கோவா ராஜ நிவாஸிலிருந்தே கடிதம் எழுதியதை எண்ணுகையில், இவருடைய சரீரக் கஷ்டத்தையேதான் அவர் ஏற்றுக் கொண்டாரோ எனத் தோன்றுகிறது!

எத்தனை பிரியம் சொட்டும் கடிதம் அது!

நரஸம்மா!

ஆசீர்வாதம் பெற்றுக்கொள். இரண்டு மூன்று நாட்களில் பம்பாய் போய்விட்டு, பிறகு பிரசாந்தி நிலையத்துக்கு வந்து விடுகிறேன். உன் ஆரோக்யம் நலிந்து கொண்டிருப்பதை நான் அறிவேன். பரிதாபப் பட வேண்டிய விஷயம். ஆனால், உனக்கும் வயதாகி விட்டது.

ரொம்ப பலவீனமாக இருப்பாய். பழங்கள், மற்றும் ஸத்துள்ள ஆஹாரங்கள் சாப்பிடு.

ஸாயி எப்போதும் இதயத்திலேயே குடிகொண்டிருக்கிறான். அவன் வெளியே போகவே மாட்டான். ஒருகாலும் உன்னை மறக்கமாட்டான்.

ஒவ்வொரு மூச்சிலும் ஸாயி, ஸாயி என்று ஜபித்துக் கொண்டிரு. ஸதா காலமும் ஸாயி ஸ்மரணையிலேயே இரு. வேறு சிந்தனையில் பொழுதை வீணாக்காதே.

ஸாயி உன்னை ரக்ஷிப்பான். அவன் உன்கூடவே இருக்கிறான். அவனிலேயே ஐக்கியமாகி நித்திய பதத்தில் நிலைத்துவிடு.

அங்கே ஒவ்வொருவருக்கும் என் ஆசீர்வாதம் சொல்லு.

காபோ ராஜ நிவாஸ் — ஹ்ருதயவாஸி
கோவா 14—12—70 — பாபா

Koviloor Digital Library

சுமார் நான்கு மாதங்களுக்குப் பின் நரஸம்மாவின் அந்திம காலம் வந்துவிட்டதென்று அனைவருக்கும் புரிந்துவிட்டது. அப்போது ஸ்வாமி பெங்களூரில் இருந்தார். ஏன் பார்த்திக்கு வந்து சுப்பம்மாவுக்குச் செய்த அருளை நரஸம்மாவுக்கும் செய்யவில்லை என்று உடனிருந்த பக்தர்களுக்குப் புரியவில்லை.

ஆனால் பர்த்திக்கு ஸ்தூலமாக வராமலே அருள்புரிய பாபாவுக்கா தெரியாது?

உயிர் ஒடுங்கிக் கொண்டிருந்த நரஸம்மா திடுமெனக் கையை வாயருகே கொண்டுபோய் எதையோ வாயிலிட்டுக் கொண்டு மெல்லுவதை உடனிருந்தோர் கவனித்து அதிசயித்தனர்.

''நரஸம்மா, வாயிலே என்ன?'' என வினவினர்.

அவள் நல்ல பிரக்ஞையுடன் ''ஸ்வாமி இப்போ வந்தார். விபூதிப் பிரஸாதம் கையில் கொடுத்துவிட்டுப் போனார்'' என்றாள்.

சில மணிகளில் அவள் உடம்பும் வெந்து விபூதியாகிவிட்டது!

காலை பதினொரு மணி ஏழு நிமிஷத்துக்கு அவள் பிரசாந்தி நிலயத்தில் நிரந்தரமாகக் கண்மூடிய அதே ஸமயத்தில் ஒயிட்ஃபீல்டில் பாபா, ''பெத்த பொட்டு! உன் நரஸம்மா போயாச்சு'' என்று அவருடைய நீண்டநாள் தோழியான பெத்தபொட்டம்மாவிடம் கூறினார்!

1971 ஏப்ரில் 18-ந் தேதி பிரசாந்தி நிலயத்தில் ஐயன் நிகழ்த்திய உரையில் நெஞ்சு கொள்ளாமல் நரஸம்மாவை நினைந்து வாயாரப் போற்றிப் பேசினார்.

''அவள் உடம்பு பழுத்தது. அப்புறம் அழுகியும் போயிற்று. அதனால் அது அற்றுப்போகும்படி ஆயிற்று. ஆனால் அவளுடைய சேவையும், ஸாதனையும் என்றும் அற்றுப் போகாதவை. அவளுடைய வாழ்க்கையின் அழகைப் புரிந்துகொள்வதோ, அதை விளக்க உவமை காண்பதோ இயலாத காரியம்'' என்றார்.

* * *

சுப்பம்மா, நரஸம்மா போல் விதவையர் பலர் பாபாவின் அருளுக்குப் பாத்திரமாகியிருக்கிறார்கள். ரமணர் ஸந்நிதானம், காஞ்சிப் பெரியவாள் மடம் என்று எந்தப் புனித ஆசிரமத்தைப் பார்த்தாலும் அங்கே இப்படி சரணாகதி உருவான கைம் பெண்கள் சிலரைக் காண்கிறோம். சரணாகதி செய்வதில் பெண்களுக்குள்ள தனித் திறமையையே இது காட்டுகிறது போலும்! ஆடவர்கள் தாரத்தை இழந்தாலும் அதன்பிறகு ஏதோ வேதாந்தப் படிப்பு, அல்லது சிரமமான ஸாதனை என்றுதான் போகிறார்களே தவிர, ஒரு மஹாத்மாவிடம் அநாயாஸமாக ஸர்வஸங்க பரித்யாகம் செய்துவிட்டு எளிமையாக, நிம்மதியாக வாழ்வதை

Koviloor Digital Library

வெகு துர்லபமாகவே பார்க்கிறோம். ஆனால் எளிமையால் பெண்டிர் பெறும் நிறைந்த நிறைவான நிலையை வேதாந்தப் படிப்பும், சிரம ஸாதனைகளும் அளிப்பது துர்லபந்தான்!

வாழ்விலும் மரணத்திலும் பாபாவோடு உருகி இறுகி யிருந் தவர்களில் ஸ்ரீ கஸ்தூரி அவர்களின் தாயான ஜானகியம்மாளை யும் சேர்க்க வேண்டும்.

நல்ல வைதிக ஆசாரங்கள் கொண்ட பிராம்மண விதவையான ஜானகியம்மாள் பலப்பல ஆண்டுகளுக்கு முன்பே ஸத்ய ஸாயி பாபா போன்ற ஒருவரிடம் உள்ளார்ந்த நம்பிக்கை வைத்ததிலேயே வெள்ளையான தொரு பரித்யாக மனோபாவம் புலனாகத்தான் செய்கிறது. பாபா வைதிக ஆசாரங்களை ஒருகாலும் கண்டிப்பதில்லை என்றாலும், அவற்றைக் கண்டிப்புடன் பின் பற்றுவதும் இல்லையே!

பத்தவிலோசனத்தைச் சேர்ந்த கடும் ஆசாரக்காரர்களான யாகப் பிராம்மணர்களையும் கண்ணீரில் குழைத்த கண்ணனின் மதுர சக்தி நம் ஸ்வாமிக்கு நிச்சயமாக உண்டு!

ஜானகியம்மாளிடம் எப்படியெல்லாம் பட்டாக ஒட்டி லட்டாகப் பரிவைப் பொழிந்தார் நம் பாபா! அந்த மூதாட்டி இவருடைய கர கமலங்களைப் பிடித்துக்கொண்டு, ''ஸ்வாமீ, நான் கண்ணை மூடும்போது இந்த குஞ்சுக் கையால் எனக்குத் தீர்த்தம் கொடுத்துக் கரையேற்றணும்'' என்பாள்.

''ஓ, அப்படியே!'' என்பார் ஸ்வாமி.

'இங்கு நம் இல்லங்கள்தோறும் எழுந்தருளி' என்று மணி வாசகர் சொன்னதற்கேற்ப, பிரசாந்தி நிலையக் குடில் ஒவ்வொன் றுக்குள்ளும் சென்று யோக க்ஷேமம் விசாரிக்கும் நாயகர்,வேண்டு மென்றே கஸ்தூரி வீட்டுக்கு மட்டும் போகாமல் ஒதுக்கி நடையைக் கட்டுவார், ஓரக் கண்களால் அம்மையாரை நிமிண்டியவாறே.

கிழவி ஓடோடி வந்து, ''நம்மாத்துக்கு வராமல் போறேளே ஸ்வாமி!'' என்பாள்.

''எனக்கு நீ இரண்டு ஆரத்தி கொடுத்தால்தான் உங்காத் துக்கு வருவேன்'' என்று ஒட்டாரம் பிடிப்பார் குழந்தை பகவான்.

''அப்படியே இரண்டு ஆரத்தி தரேன், ஸ்வாமி'' என்று குழந்தையை அழைத்துப் போவாள் பாட்டி.

அடுக்களையில் புகுந்து அவள் சமைத்து வைத்திருப்பதை எல்லாம் திறந்து பார்ப்பார். ''அம்மா! (லோக மாதாவான ஸாயி 'அம்மா' என்று கூப்பிடுகிற அழகே அழகு) இத்த னூண்டு சமைச்சு வெச்சிருக்கியே, இது போறுமா? ஏன் கறி,

Koviloor Digital Library

காய் ஏதும் சமைச்சுக்கவில்லே? நன்ருச் சாப்பிடு, அம்மா நன்ருச் சாப்பிடு. உன் பிள்ளேக்கு நான் நிறையப் படி அளந்துண்டு இருக்கேன்'' என்று வாத்ஸல்யம் பொங்கக் கூறுவார்.

ஸ்வாமி அப்போது பெங்களூரில் இருந்தார். பிரசாந்தி நிலய பஜனை மந்திரில் இருந்த கஸ்தூரியிடம் ஆள் பறந்து வந்தது. ஜானகியம்மாள் வாந்தி செய்துவிட்டுச் சாய்ந்து விட்டாராம்.

கஸ்தூரி பதறி ஓடினர் அன்னையிடம். 'அண்ணல் இங்கு இல்லேயே, அம்மா அவருடைய குஞ்சுக் கரத்தால் ஜன்மா நீக்கும் தீர்த்தம் கேட்டாளே!'

அண்ணல் அங்கு ஏன் இல்லாமல்?

சுவரிலே, ஜானகியம்மாளுக்குப் பக்கத்திலே மாட்டியிருந்த பாபாவின் படத்திலிருந்து கலகலவென கங்கை வழிந்தது!

பாக்யசாலினி அதைக் கை குழித்து வாங்கி, மூன்று மடக்கு உட்கொண்டாள்.

ஸ்வாமி அவளைத் தம் உள்ளே கொண்டுவிட்டார்.

அங்கே பெங்களூரில் ஸ்வாமி உடனிருந்தோரிடம் சிரித்துக் கூறினர்: ''இந்தக் கஸ்தூரியே கிழம். இவன் அம்மா போய் விட்டாளே என்று குழந்தை மாதிரி அழுதுகொண்டிருக்கிருன்!''

புட்டபர்த்திக்குத் திரும்பியவர் கஸ்தூரியைப் பார்த்ததும், ''பஜனை ஹாலில் வாந்தி...'' என்று ஆரம்பித்தார். எவரோ இப்போது பஜனைக் கூடத்தில் வாந்தி எடுப்பதாக ஸ்வாமி சொல்கிருர் என நினைத்து அவ்விடத்துக்கு விரைய எண்ணினுர் கஸ்தூரி. ''அசடே! இப்போ யாரும் வாந்தி எடுக்கவில்லே. அன்னிக்கு நீ பஜனை ஹாலில் இருந்தபோது உன் அம்மா வாந்தி பண்ணிளுளே, அதைச் சொல்ல வந்தேன்'' என்று கூறிய ஸ்வாமி தொடர்ந்தார்: ''அசுத்தமெல்லாம் போன பிறகே தீர்த்தப் பிரஸாதம் தரவேண்டும் என்றுதான் முதலில் வாந்தி எடுக்கச் செய்தேன்'' என்று விளக்கினர்.

உடல் அசுத்தத்தை மட்டும் அவர் கூறியிருக்கமாட்டார். ஏனெனில் உயிரைத் தூயதாக்கி அவரது பாதகமலத்துக்கு என்றென்றும் தூக்கிவிடுவதே யன்றோ அந்தத் தீர்த்த விசேஷம்?

பிறப்பிலே ஏற்படும் வியாதிக்கு மருந்து செய்வதைவிட, பிறப்பே ஏற்படாமல் இருக்கத் தருகிற மருந்துதான் அதி விசேஷம்.

''பிறப்பறுத்தேன் நல்ல மருந்தின் அடி
என் மனத்தே வைத்து''

என்று அடிகள் பாடியவண்ணம், மற்ற ரோகங்களேவிட பவ ரோகத்துக்கு வைத்யநாதனு யிருப்பதே ஸ்வாமியின் பெருமை!

Koviloor Digital Library

ஸ்வாமியின் பலவிதமான மரணகால அருள்களைப் பார்த்தோம். இவற்றோடு சில பக்தர்கள் மரிப்பதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்பு பாபா அவர்கள் இல்லத்துக்குச் சென்று மரிப்பவர், அவரது உறவினர்கள் ஆகிய இரு சாராரையும் தெளிவித்து வருவதையும் சேர்க்க வேண்டும்.

பரம பக்தரும் தேசத்தலைவருமான டாக்டர் பி. ராமகிருஷ்ணராவின் கடைசிக் காலத்தில் பாபா பெங்களூரிலிருந்து ஹைதராபாத்துக்குக் காரில் பறந்து சென்றது இவற்றில் ஒன்றே. ''ராவ் நல்ல பக்குவி. அவருக்கு என் ஸ்தூல தரிசனம்கூட வேண்டாம். அவரது இல்லத்தாருக்கு சாந்தி அளிக்கவே சென்றேன்'' என்றாராம்.

'ஸாயிராம்' நாமம் எழுதிய சரிகைப்பட்டொன்று போர்த்திய கோலத்தில் ஸ்வாமியின் புகைப்படமொன்று உள்ளதல்லவா? இது அவரது நாற்பத்தியொன்றாவது ஜயந்தியின்போது நேசவாளர் கிருஷ்ணப்பா சமர்ப்பித்த காணிக்கையாகும். கபீர் தாஸைப் போல நாமத்தை மூச்சில் நெய்தபடியே இப் பொன்னாடையை அவர் நெய்தார். இந்த அன்புதான் கையுறையே ஏற்காத ஸ்வாமியை இளக்கி, அவர் அதைப் போர்த்திக் கொள்ளுமாறு செய்தது! பிரதியாக ஸ்வாமி கிருஷ்ணப்பாவின் அந்திம நாட்களில் பெங்களூர் அவென்யூ சாலையிலுள்ள அவர் வீட்டுக்குச் சென்று தரிசனம் சாதித்து வந்தார். பொன்னாடை தந்தவர்க்குப் பொன்னுடு தந்தார்.

* * *

மரணத்தை மாற்றாமல் பாபா செய்த மேற்சொன்ன லீலைகளில் ஐயனின் அருள் அபாரமாகத் ததும்புவது வாஸ்தவந்தான் எனினும், ''மாற்றவே முடியாது'' என்று உலகெலாம் எண்ணும் மரணத்தையும் உலகறிய அவர் இருமுறை மாற்றிப் பிரேதத்தை உயிர்கொள்ளச் செய்தது அலாதிச் சிறப்பு வாய்ந்தது தான். இவ்விரண்டில் வால்டர் கவனின் மாண்ட உயிர் மீண்டதை முன்பே பார்த்துவிட்டோம். இன்னொன்றை இப்போது பார்ப்போம்.

குப்பத்தைச் சேர்ந்த தனிகர் ஸ்ரீ.வி. ராதாகிருஷ்ணா, நமக்கு முன்பே பரிசயமாகியுள்ள ஸ்ரீ வேங்கடமுனியின் மாமனார். இவர் புனர்ஜன்மம் பெற்றது அநேக ஸாயி பக்தர்களுக்கு நேரில் தெரிந்த விஷயமாகும்.

குடற்புண்ணுடன் 1953-ம் ஆண்டு நவராத்ரியின் போது பாபாவிடம் வந்தார் ஸ்ரீ ராதாகிருஷ்ணா. மனைவி ஸ்ரீமதி ராதாம்மா, மகள் ஸ்ரீமதி விஜயா, மருகர் ஸ்ரீ ஹேம்சந்த் ஆகியோரும் உடன் வந்தனர்.

அல்ஸர் வலி தாங்க முடியாத ராதாகிருஷ்ணா பாபாவிடம், ''ஸ்வாமி, இந்த வலி தீராதானால் நான் இப்போதே சாகத் தயார்'' என்றார், துடித்து.

Koviloor Digital Library

ஸ்வாமி வலி தீரும் என்றும் சொல்லவில்லை; சாகவும் சொல்லவில்லை. ஏதோ பெரிய தமாஷைக் கேட்டது போல் சிரித்துக் கொண்டே அகன்றார்!

புட்டபர்த்தியில் பிரசாந்தி நிலயத்துள் தங்கியிருக்கும் போதே ராதாகிருஷ்ணாவுக்கு உடல் நிலை படுமோசமாகி, ஓரிரவு 'கோமா' என்ற பிரக்ஞையற்ற நிலையை அடைந்துவிட்டார்!

'சாகத் தயார்' என்று அவர் அபஸ்மாரம் போல் சொன்னதையும், ஸ்வாமி ஏதும் சொல்லாமல் சிரித்துச் சென்றதையும் நினைவுகொண்டு கதிகலங்கிய அவரது மனையாள் பாபாவிடம் ஓடினார். ''பதிபிக்ஷை தாருங்கள், பகவானே!'' என்று தீனமாக ஓலமிட்டார்.

பாபா வந்து நோயாளியைப் பார்த்தார். ''ஒன்னும் கவலை வேண்டாம். எல்லாம் சரியாப் போகும்'' என்று சொல்லிப் போய் விட்டார்.

இரவு தேய்ந்து மறைந்தது. ராதாகிருஷ்ணாவின் மயக்க நிலை மறையவில்லை.

அக்காலத்தில் புட்டபர்த்தியில் வைத்திய வசதி ஏதும் கிடையாது. ஹேம்சந்த் எங்கோ சென்று ஒரு 'மேல் நர்ஸை' அழைத்து வந்தார். அவர் உதட்டைப் பிதுக்கி விட்டார். "பல்ஸே இல்லையே. பிழைக்க வைக்க முடியாது'' என்று சொல்லிப் போய்விட்டார்.

ராதாகிருஷ்ணாவின் உடல் சில்லிட்டது. தொண்டை 'களகள' வென்றது. அப்புறம் அதுவும் ஓய்ந்துவிட்டது. விரைத்துப் போயிற்று உடல் — உடல் என்பதா, சடலம் என்பதா?

பாபா உணவருந்திக் கொண்டிருந்த இடத்துக்கே தாயும் மகனும் ஓடி, நடந்த விஷயத்தைச் சொன்னார்கள். அவர் ஆனந்தமாகச் சிரித்துக்கொண்டே அதைக் கேட்டபடி போஜனம் செய்தார். கை கழுவிக் கொண்டு எதிர்ப்புறமுள்ள தமது அறைக்குச் சென்று கதவை மூடிக்கொண்டு விட்டார்!

ராதாகிருஷ்ணாவின் வியாதியோ, மரணமோ தரும் வேதனை ஒருபக்கம் இருக்கட்டும். கண்கண்ட தெய்வம் என்று எவர் சரணடியில் அடைக்கலம் புகுந்தார்களோ அவர் ஏன் இப்படி அக்கறையே இல்லாமல் ஆகிவிட்டார்? ஆனாலும், ''எல்லாம் சரியாப் போகும்'' என்று அவர் சொன்னது வீணாகாது என்று நம்பிக் கொண்டு விநாடி விநாடியாக நெட்டித் தள்ளினார்கள்.

கனத்து, விரைத்து, குளிர்ந்து, நீலம் பாரித்துப் போன உடலைப் போட்டுக் கொண்டு இரவு முழுவதையும் கழித்தனர்.

மறுநாள் காலை. ஆசிரமத்தின் அன்டைவாசிகள் வந்து குடும்பத்தாரைத் துக்கம் விசாரித்ததோடு, உடலை எடுத்து ஸம்ஸ்காரம் செய்து விடும்படி சொன்னார்கள். நாற்றம் எடுத்துவிட்டதே! இனியும் ஸ்வாமியை எதிர்பார்த்துப் பயனில்லை என்றனர்.

Koviloor Digital Library

அவர்களில் சிலர் பாபாவிடமே சென்று, அவர் சொன்னு லொழிய பிணத்தை அகற்றமாட்டார்கள் போலிருக்கிறது என்று விஞ்ஞாபனம் செய்துகொண்டனர்.

பாபா நிதானமாக, ''சூஸ்தாமு, சூஸ்தாமு'' (பார்க்கிறேம், பார்க்கிறேம்) என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டார்.

மணி ஓடிக்கொண்டே இருந்தது.

பழுக்கப்போட்டுக் கட்டியை அறுப்பது போல், ராதா கிருஷ்ணுவின் குடும்பத்தினர் துக்கத்திலும் ஏமாற்றத்திலும் எல்லைக்கு வரும்வரை பேசாமலே இருந்தார். கடைசியில் ஒரு வழியாக பகல் மணி இரண்டரைக்கு அங்கே வந்தார்.

உடலருகே பாபா வந்ததும் ஸ்ரீமதி ராதாம்மாவும் விஜயாவும் அவர் அடிகளில் துவண்டு விழுந்தனர். 'கோ'வென்ற கதறல் வெடித்து வந்தது. 'லாஸரஸின் சகோதரிகள் மார்த்தாவும் மேரியும் இயேசுநாதன் முன் அவன் பிணத்தைக் கிடத்தி எப்படி அழுதார்களோ அப்படி' என்கிருர் ஹவார்ட் மர்ஃபெட். இயேசு காலம் கடந்து வந்திருக்கிருர் என்று அவர்கள் நினைத்தது போலவே தான் இவர்களும் எண்ணினரோ, என்னவோ? கால காலனிடம் காலம் என்ன செய்யமுடியும்?

அவ்விருவரையும் ஹேம்சந்தையும் அறையைவிட்டு வெளியே அனுப்பிவிட்டுக் கதவைச் சாத்திக் கொண்டார் பாபா. பாபாவும், ராதாகிருஷ்ணுவின் உடலும் மட்டும் தனியாக இருந்த அந்த ஒரு சில நிமிஷங்களில் அவர் என்ன செய்தார் என்று யாரே அறிவர்? நாம் கனவில் கூட கற்பனை செய்யவொண்ணுத எதையோ அவர் செய்துவிட்டார் என்பது மட்டும் நிச்சயம்.

சில நிமிஷங்களில் பாபா அமைதி மயமாய் வெளிவந்து, ஆர்வத்துடிப்பே உருவாயிருந்த அம் மூவரையும் உள்ளே போய்ப் பார்க்குமாறு சைகை காட்டினுர். அவர்கள் என்னுததெல்லாம் எண்ணிப் புண்ணுன நெஞ்சோடு உட்சென்றபோது ராதாகிருஷ்ணு சிரித்த முகத்தோடு, செழித்த தெம்போடு படுக்கையிலிருந்து தலை திருப்பி அவர்களை வரவேற்ருர்! சில்லிப்பும், விறைப்பும், நீலமும், நாற்றமும் மாறி பழைய ராதாகிருஷ்ணுவாக இருந்தார். பழைய ராதாகிருஷ்ணுவா? இல்லை, அதனினும் ஆரோக்யமாக! ஆம், அவருடைய குடற்புண்ணும் இப்போது குணமாகி விட்டிருந்தது!

அவரது தலையைத் தடவிக் கொடுத்த பாபா, ''அவங்க ரொம்ப கவலைப்பட்டுட்டாங்க. அவங்ககிட்ட பேசு, நாயனு'' என்ருர்.

ஆனந்தத்திலும், நன்றியிலும் கண்கள் குளமான ராதாம்மாவைப் பார்த்து, ''பதி பிக்ஷை கிடைச்சுடுத் தோல்லியோ?'' என்று பிரேம ஸ்வரூபர் வினவினுர்.

Koviloor Digital Library

மரணம் என்றே ராதாகிருஷ்ணா, கவன் ஸம்பவங்களை நாம் சொன்னாலும் பாபா மரணம் என்பதை ''.......'' என்ற அடைகுறிகளுக்குள்ளேயே பிரசுரிக்கச் சொன்னாராம். அப்படியானால் இவை இரண்டும் அசல் சாவு இல்லையா? நாற்றமெடுத்து, ஈ எறும்பு மொய்த்த, ராதாகிருஷ்ணாவின் நீலம் பாய்ந்த உடம்பைப் பார்த்தவர்கள் ஒப்ப மறுக்கிறார்கள். கவனின் விஷயத்திலோ வைத்தியசாலையின் பெரிய டாக்டர்களே மருத்துவப்படி அவர் மரித்ததாகக் கருதித்தான் அவர் மூக்கிலும் காதிலும் பஞ்சடைத்து வைத்திருக்கிறார்கள்! எனவே மரணம் என்பது இந்த உடம்பை விட்டு உயிர் போவதுமட்டுமல்ல, உயிரானது மீள வேறோர் உடலில் பிறப்பெடுக்கும் வரையில் இந்த உடல் மரித்ததாக ஆகாது எனக் கொண்டே பாபா இவ்வாறு கூறியிருப்பார் போலும்! பிற்பாடு மரித்தாலும் இன்னோர் உடல் பெறாமல் தம்மிடமே வந்து சேரப் போகிறவர்களை மரணமடைந்ததாக அப்பட்டமாகப் போடாமல் அடைகுறிகளுக்குள் போட வேண்டும் என்றாரோ?

ஆம், பிற்பாடு ராதாகிருஷ்ணா, கவன் இருவரும் அவரிடம் போய்ச் சேரத்தான் செய்தார்கள் — மாண்டு மீண்டதால் சிரஞ்சீவிகளாகத் தங்கள் உடலிலேயே வாழ்ந்துவிடவில்லை.

''பகவானின் பெருமை தெரியவே'' — ''for the glory of God''— தாம் லாஸரஸைத் தாற்காலிகமாகச் சாவிலிருந்து உயிர்ப்பித்ததாக இயேசுநாதர் கூறினார். பாபாவும் இதன் பொருட்டே இருமுறை இந்த மஹா அற்புதத்தை நிகழ்த்தியிருக்க வேண்டும். இன்னொரு காரணமும் சொன்னார். சுமார் எண்பது வயது மூதாட்டியான எல்ஸி அமெரிக்காவிலிருந்து பல்லாயிரம் மைல் வந்து, இங்கிருந்து தனது கணவரின் சடலத்தைத் தம்மோடு திரும்ப எடுத்துச் செல்லும் கொடுமைக்கு ஆளாக வேண்டாம் என்பதே அது. ராதாகிருஷ்ணாவை உயிர்ப்பித்ததற்கும் ஒரு காரணம் அவர் தமது ஆஸ்திபாஸ்திகளைத் தக்கபடி பிரித்து வைப்பதற்கே என ஸ்வாமி சொன்னதாகத் தெரிகிறது. அந்தக் குடும்பம் முழுதுமே தம்மிடம் தீவிர பக்தியில் திளைத்ததாகையால் அது ராதாகிருஷ்ணாவின் மறைவுக்குப் பின் சிதறிவிடக் கூடாது என்றே இந்த ஏற்பாடுகள் பூர்த்தியாவதற்காக 'க்ரேஸ் டைம்' கொடுத்தார். உபசாரமல்ல, வாஸ்தவமான க்ரேஸேதான்! கிருபையேதான்!

* * *

பாபாவின் கிருபை வாழ்வின் பல அம்சங்களிலும் உதவுவது எனினும் இதுவரை அது எப்படி மரணத்திலும் கைகொடுத்துப் பெருவாழ்வு தருகிறது என்பதற்கு நிறையச் சான்றுகள் பார்த்து விட்டோம். இன்னம் பலப்பலச் சான்றுகளும் உண்டு. நமக்குத் தெரியாமலே இவ்வருள் பெற்ற அநேகரும் இருக்கலாம். இவ்வளவு சான்றுகள் காட்டிய பின்னும் புலவர் மொழியில் ''கீர்த்தி விரித்தனம்'' என வேண்டியதுதான்!

Koviloor Digital Library

அத்தியாயம்—35

புலியாஸனமும் சிம்மாஸனமும்

சீரிய சிங்காதனத்திருந்து யாம் வந்த
காரியம் ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய்

— திருப்பாவை

நமக்குத் தெரியாமலே பாபாவிடம் கரைந்து மறைந்தவர் பலர் இருக்கலாம் என்றோம். ஏன், உயிர் வாழ்பவர்களிலேயே பாபாவின் பரமாநுக்ரஹத்தைப் பெற்ற பலரைப் பற்றி வெளி உலகுக்குத் தெரியாதிருக்கலாம். வெளி உலகம் அறிந்த பக்த சிகாமணிகளும் ஏராளமானவர் இருக்கின்றனர். இவர்களில் ஸத்யஸாயி ஸ்தாபனங்களின் முக்கியஸ்தர்கள் பலர் உள்ளனர். வேறு பலரும் இருக்கின்றனர். ஆயினும் இச்சரிதையில் இவர்களில் எவர் பெயரையும் விட்டுப் போகாமல் சொல்வதென்றால் அதுவே ஓர் அத்தியாயமாகிவிடும். ஒருவரைச் சொல்லி ஒருவரை விட்டாலும் தவறு. எனவே, வெளிப்படத் தெரிந்த அவரது அநந்த லீலாவிலாஸங்களில் இங்கே துளித் துளித் காட்டும் உதாரணங்களில் சம்பந்தப்பட்ட ஒரு சில பக்தரோடு நாம் திருப்திப்பட வேண்டியது தான். ''எந்தரோ மஹாநு பாவுலு, அந்தரிகி வந்தனமு'' என்று ஒரு 'ஆம்னிபஸ்' கும்பிடு போட்டுவிட்டுக் கதைக்குத் திரும்புவோம்.

* * *

சிவராத்ரி, நவராத்ரி, பாபா ஜயந்தி, குருபூர்ணிமை ஆகிய நான்கும் பெருந் திருவிழாக்களாக உருப்பெற்றது பாத மந்திர காலத்தில்தான். பண்டிகை தினம் யாவுமே விசேஷமாகக் கொண்டாடப்பெறும் எனினும் இந்த நான்கும் அதிமுக்கியத்வம் பெற்றன. மெல்ல மெல்ல தேசமெங்கும் பாபாவின் புகழ் ஓங்கத் தொடங்கியிருந்ததால் இவற்றுக்கு வரும் கூட்டமும் பெருகி வந்தன. இருந்தாலும் சில ஆயிரக்கணக்கில்தானே ஒழிய, இன்று போல் பல்லாயிரக் கணக்கில் அல்ல. இந்த விழாக்களின்போது

Koviloor Digital Library

பெங்களூரிலிருந்து பூ ஜோடனைக்காரர்களைத் தருவித்து மயில், ஆதிசேஷன் போன்ற வாஹனங்கள் அமைத்து, அதில் பாபாவை எழுந்தருளப் பண்ணி, மேளதாளங்கள் முழங்க, பக்தர்களே அவற்றை ஊர்வலமாக எடுத்து வருவது கண் கொள்ளாக் காட்சியாயிருக்கும். இதற்கு 'மெரவணை' என்று பெயர் சொல்வார்கள். அந்தக் கால பக்தர்களின் தன்மை, கூட்டத்தின் அளவு முதலியவற்றைக் கருதி பாபா இதை அநுமதித்து வந்தார். ஆனால் 1950—ல் பிரசாந்தி நிலையத்துக்குப் பெயர்ந்து சில காலத்துக்குப் பின் இவற்றை நிறுத்திவிட்டார். திருவிழாக் காலங்களில் புஷ்ப ஊஞ்சல் ஆடுவது போன்ற ஒரு சில இனங்களோடு நிறுத்திக் கொண்டார். பழைய நாளின் உத்ஸவ கோலாஹலம் அந்தக் கால பக்தருக்கு மட்டுமே கிட்டிய ஸ்வர்க்காநுபவம். அதிலும் தசரா பவனி அதி சிறப்பு. பாபா ஒன்பது நாட்களும், வெவ்வேறு வாஹனங்களில் உலா வருவது பவானியே பவனி வருவதாகத்தான் இருக்கும். அச்சமயங்களில் அவரது நெற்றியிலிருந்து குங்குமமும், விபூதியும் பொழிந்த சந்தர்ப்பங்கள் பல. மலரிதழ்களை எறிந்துப் போடுவார். பெப்பர்மிண்ட்களாக மாறி விழும்!

ஸரஸ்வதி பூஜையன்று வெள்ளைக் கலை உடுத்து (அதிலே ஜிகினா மினுமினுக்கும்) தரிசனம் தருவார், ஜிலுஜிலுவென.

விஜயதசமி அன்று 'ஸீமோல்லங்கனம்' என்ற விழா விமரிசையாக நடக்கும். 'ஸீமோல்லங்கனம்' என்றால் 'எல்லை தாண்டுவது' என்று அர்த்தம். முற்காலங்களில், விஜயதசமியன்று அரசர்கள் தமது எல்லையைத் தாண்டி அடுத்த ராஜ்யத்தைப் பிடிக்கச் செல்வார்களாம். புட்டபர்த்தி சரித்திரப் பிரஸித்தி பெற்றிருந்த காலத்தில் அங்கிருந்த விஜய நகர ராஜப் பிரதிநிதிகள் ஒரு சாங்கியமாக, விஜயதசமியன்று கிராமத்தின் எல்லையைக் கடந்து ஒரு சமி (வன்னி) விருக்ஷத்திலிருந்து அம்பு எறிந்து, அடுத்த கிராமத்தை நோக்கி எய்வதுண்டு. பாண்டவர்கள் அக்ஞாத வாஸத்தின் போது சமி விருக்ஷத்தில் தமது ஆயுதங்களைக் கட்டிவைத்துவிட்டு, பிறகு பாரதப் போரின்போது அங்கிருந்தே அவற்றை எடுத்து வந்து வெற்றிபெற்றனர் என்பதால் இப்படி வழக்கம் ஏற்பட்டிருந்தது. பர்த்தி எல்லையில் அந்தத் தொன்மை வாய்ந்த வன்னிமரம் உள்ளது.

விஜயதசமி வெற்றிக்கு ஆதிகாரணம் துர்கா பரமேச்வரி தானே? அவுணர்களை அவள் வென்றபின் தேவர் மறுபடி தம் லோகத்தில் பிரவேசித்து, அவளை அங்கு எழுந்தருள்வித்து வெற்றி விழாக் கொண்டாடியதாலேயே அது விஜயதசமி எனப்படுகிறது. எனவே நவராத்ரி நாயகியாக விளங்கிய ஸாயிமாதா — அதுவும் புட்டபர்த்தியின் காவலர் குடியிலேயே வந்தவர்—ஸீமோல்லங்கனம் செய்ய வேணுமென அடியார் விரும்பினர். அதற்கேற்ப அக்காலத்தில் ஆண்டுதோறும் விஜயதசமி நன்னாளில் பாபா ஜரிகைப் பட்டாடை அணிந்து அதே சமி விருக்ஷத்தடிக்குச் சென்று அம்பு போடுவார். ஸாயிமாதாவை அன்று அம்பு ஏந்தி 'ஸாயகி' என்றே பெயர் கொண்ட அம்பாளாகவே அனைவரும் வணங்குவர்.

Koviloor Digital Library

ஷிர்டி பாபா உடலை நீத்ததும் விஜய தசமியில்தான். ''எல்லை தாண்டப் போகிறேன்; ஸிமோல்லங்கனம் செய்யப் போகிறேன்'' என்று கூறி, அந்த சரீர எல்லையைக் கடந்தார், அருளில் எல்லை கடந்த ஷிர்டிபதி.

ஷிர்டியில் மஹாஸமாதியன்று ஆரத்தி நடக்கும் சமயங்களில் தாம் உடன் இருப்பதாகப் பர்த்தி பாபா கூறுவதுண்டு. முன்பெல்லாம் அச்சமயத்தில் அவர் உடலை விட்டு வெளியேறி விடுவார். சரீரத்துள் புகுந்த பிறகு ஷிர்டியில் நடந்த விமரிசைகளையெல்லாம் வர்ணிப்பார்.

('முன்பெல்லாம் உடலை விட்டு வெளியேறுவார் எனில் இப்போது செல்வதில்லையா? சிலர் சொல்வது போல் பாபாவின் அதிமாநுஷ்ய ஆற்றல்கள் இப்போது குறைந்து விட்டனவா?' என்று வாசகர்களில் எவரேனும் சம்சயமுறுவரோ என்னவோ? அவர்களாக ஐயுறாவிடினுங்கூட இக் கேள்வியை எழுப்பியதே சந்தேகத்தைக் கிளப்பும்! ஓர் இலக்கிய சிருஷ்டி என்றால் வாசகரை யோசனையில் ஆழ்த்திக் குழப்பத்தில் தொங்க விடுவது (Suspense) அதில் ஓர் அங்கமல்லவா? அப்படியே உங்களைக் கொஞ்சம் தொங்கவிடலாம். விடை பிற்பாடு ஓரிடத்தில் விரியும்.)

பர்த்தி உற்சவங்களைப் பார்த்தால் தமக்கே, டாம்பிகமாக விழா எடுத்துக்கொள்கிறாரே என்று சிலருக்குத் தோன்றலாம். ஆனால், 'தமக்கு' என்பதே பாபாவுக்கு இல்லை. வெளியிலே எத்தனை விழாக் கொண்டாடும்போதும், அனவரதமும் அவரது சித்தம் அடியாரின் நலனில்தான் பதிந்துள்ளது என்பதற்கு பிரத்யக்ஷ எடுத்துக்காட்டுகள் உண்டு.

1946 நவராத்ரியின்போது முதல் நாள் சிவிகையில் ஏறு முன் உடைகளை மாற்றிக்கொண்டிருந்த பாபா அப்படியே கீழே சாய்கிறார். அவர் சாய்ந்தால் எங்கோ எவரையோ தூக்கிவிட்டு வருகிறார் என்றல்லவா அர்த்தம்? சில நிமிஷங்களில் கண் திறந்தவர், ''உடுமலைப்பேட்டை பாலபட்டாபியின் அம்மா இங்கிருந்து இரண்டுமைலில் புக்கபட்டணம் வழியில் வண்டி குடை சாய்ந்து விழுந்துட்டா. பெட்ரோமாக்ஸ் எடுத்துட்டுப் போய் அந்த கோஷ்டியை அழைச்சு வாங்க. ஒரு 'டெண்டு'ம் அவங்களுக்குக் கொடுத்துடணும்'' என்றார்.

(அப்போதெல்லாம் பாபாவே இம்மாதிரி விழாக்களில் பக்தர் தங்க பெங்களூரிலிருந்து டெண்டுகள் வரவழைத்து விடுவார். பக்தர் அனைவருக்கும் ஆசிரமத்திலேயே உணவும் அளித்து விடுவார்.)

ஆம், அங்கே விசாலாக்ஷியம்மா வண்டியிலிருந்து விழுந்து மண்டையும் நெற்றியும் உடைபட்டு ரத்தம் வழியத்தான் கிடந்தார். உடன் வந்த ஸ்ரீ பாலபட்டாபிச் செட்டி அவர்களுக்கோ, அம்மாவுக்கு இப்படி ஆன வருத்தம் ஒரு பக்கம்; இன்னொரு பக்கம், 'உடன்வந்த பலர் ஏற்கெனவே பூரண நம்பிக்கை இல்லாத

Koviloor Digital Library

வர்கள். இப்போது நம் பகவானே இவர்கள் பழிப்பதற்கு இடம் கொடுத்த மாதிரி விபத்தும் வந்ததே!' என்று அதைவிட துக்கம். சமயத்தில்தான் பிராணபத்திலிருந்து அந்த அம்மையைக் காத்து, அவர்களுக்கு விளக்கு, தங்க இடம் எல்லாம் ஏற்பாடு செய்திருக்கிறார் பாபா.

அதுமட்டுமில்லை. இவர்களுக்காக ஏற்பாடான டெண்டில் இவர்கள் வருமுன்பே வேறொருவர்—சென்னை பிரமுகர் ஒருவர்—புகுந்துவிட, அந்தப் பெரிய மனிதரை எப்படி வெளியேறச் செய்வதெனத் தயங்கி, இவர்கள் திறந்த வெளியிலேயே தங்கியபோது, பாபா ஒரு பாம்பாக அந்த டெண்டுக்குள் வந்து பிரமுகரை விரட்டியிருக்கிறார்! அதே சமயத்தில் கோலாஹல பவனியிலும் இருந்திருக்கிறார்! (இங்கே சரீரத்தை விட்டு ஜீவ சக்தியைப் பிரிக்கவில்லை, பாருங்கள்! ஒரே சமயத்திலேயே பல இடங்களில் செயலாற்றக் கூடியவர்தான் லீலா நிமித்தமாக சில சமயங்களில் 'கூடு விட்டும்' வெளியே சென்றிருக்கிறார்!) பிறகு பவனியின் போது அந்த பிரமுகரிடம் வந்து அவரது ஆக்கிரமிப்பை வன்மையாகக் கண்டித்தார். ''தாங்கள் கஷ்டம் அநுபவித்தாவது பிறருக்கு சகாயம் செய்வதுதான் ஸாயி பக்தர்களுக்கு இருக்க வேண்டிய முதல் லக்ஷணம். இனிமேலாவது இங்கே என்னை நாடி வரப்பட்டவர்கள், வயோதிகர்கள், வியாதியஸ்தர்களுக்குத் தங்களாலான உதவி செய்வதுதான் ஸாயி பூஜை என்று தெரிந்து கொள்ளுங்கள்'' என்றார். இதனிடையில் பார்த்திக்கு விசாலாக்ஷியம்மாள் வந்த உடனேயே கூட்டத்தில் அவரை அழைத்து வர வழிசெய்து, ஒரு வெண் பொடியை 'வரவழைத்து'க் காயத்தில் அழுக்கி, வலியையும் விக்கத்தையும் பெருமளவுக்குக் குறைத்திருந்தார்.

1958 செப்டெம்பர் 8-ந்தேதி எலமர்ரு அரண்மனைத் தோட்டம் விழாக் கோலம் பூண்டிருக்க, அங்கு உரையாற்றிக்கொண்டிருந்த பாபா பேச்சுக்கிடையிலேயே நாற்காலியில் தடாலெனச் சாய்ந்து, ஆயிரம் பேரை அயர வைத்தாரே! அதே ஆண்டு தம் ஜயந்தி விழாவில்'பொன்னூஞ்சலில் பூரித்திருந்தவர்' மடேரெனச் சாய்ந்து பல்லாயிரவரைப் பதற அடித்தாரே! இதெல்லாம் பக்த ரக்ஷணத்துக்காகக் கூடு விட்டோடிய சந்தர்ப்பங்கள் தாம். எனவே பக்தர் நலனை மறந்து, தமக்கு அவர் விழா எடுத்துக்கொண்டார் என்பது ஒருபோதுமில்லை.

இப்படி விழாவின்போது வெளியில் கட்டையாகச் சாய்ந்து தான் அவர் பக்த ரக்ஷணம் செய்ய வேண்டுமென்பதில்லை. இங்கே விழாவில் கலந்துகொண்டு பக்தரைக் களிப்பிக்கும் அதே சமயத்திலேயே வேறெங்கோ பக்த ரக்ஷணம் புரியும் வித்தகமும் அவருக்குண்டு. உதாரணமாக, 1972—ல் வட இந்திய மாநிலங்களில் செல்லுமிடமெல்லாம் உற்சவமாக்கிக் கொண்டு சஞ்சரித்துக் கொண்டிருந்தபோதே மோகா எனுமிடத்தில் ஸ்ருமதி சாந்திசர்மா என்பவருக்கு பால ரூபத்தில் தோன்றி அவரது அடைத்துப் போன குரலைத் திறக்கவைத்து அவரைப் பேசச் செய்திருக்கிறார்!

Koviloor Digital Library

அவருக்கென ஒரு ஷோவும், ஷோக்கும், கோலாஹலமும், உத்ஸவமும் வேண்டியதில்லைதான். பகவத் நினைவில் ஆனந்தமாக நிலைத்திருக்க உதவும் விழாக்கள் சமய மரபோடு கரைந்து விட்டபடியால் பக்தர்களுக்காகவே இவற்றை ஏற்கிறார். இவற்றுக்கு உடன்பட்டிருக்கும் போதும் ஆபத்தில் உள்ள அடியாரை மறக்காமல் அங்கங்கே ஓடி அங்கையால் அவர்களைத் தாங்கிக் காத்துத்தான் வருகிறார். பாத மந்திர நவராத்ரி வைபவத்தில் ஆரம்பித்து, துர்கா தேவிக்கு விசேஷமாக உரிய காப்பு லீலைக்கு வந்து விட்டோம்!

* * *

இன்றும் நவராத்ரி விசேஷம் புட்டபர்த்தியில் அலாதிதான். 'துர்கா — லக்ஷ்மி—ஸரஸ்வதி ஸாயிஜகன்மாதா' என்ற பஜனைப் பாடல் பன்முறை ஒலிக்க பராசக்தியாகப் பர்த்திவாஸர் இக்காலத்தில் அருள் பாலிப்பார். தேவி வேத ஸ்வரூபிணி என்பதால், 1962—லிருந்து வேத புருஷ ஸப்தாஹ யக்ஞம்தான் இதன் மையமாகி உள்ளது. தலைசிறந்த வேத வித்துக்கள் கூடி விதிமுறை வழுவாது ஏழு நாட்கள் வேத பாராயணம், மந்திராநுஷ்டானம், ருத்ர மஹாயக்ஞம் செய்வர். அம்பாளுக்கென ஏற்பட்ட சண்டீஹோமமும், தேவிபாகவத, தேவிமாஹாத்மிய பாராயணங்களும் பல பண்டிதர்களால் இச்சமயத்தில் செய்யப்படுகின்றன. ஸ்ரீயந்த்ர பூஜையும் நடக்கும்.

இதுதவிர ஆதிகாவியமான ராமாயணத்தை —ஸத்யதர்ம சரிதத்தை—சில வித்வான்கள் பாராயணம் செய்வர். அன்றன்றும் கருப்பு மண்ணில் ஆயிரம் லிங்கங்களை உருட்டிப் பூஜித்து மறுபடி ஒன்றாகச் சேர்த்து விடும் ஸஹஸ்ர லிங்க பூஜை செய்வார் இன்னொரு பண்டிதர். ஸூர்ய நமஸ்காரம் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கும். ஹிந்து ஸமயத்தின் உயிர்நாடிகள் யாவும் புத்துயிர்கொண்டு பொலியப் பிரசாந்தி நிலையம் ஸநாதன தர்மப் பெருங்கோயிலாக இருக்கிற சமயம் நவராத்ரியே ஆகும்.

முன்பெல்லாம் பாபாவை அம்பாளாக பாவித்து சுமங்கலிகள் ஸஹஸ்ர நாம அர்ச்சனை புரிவர். இவ்விதம் ஒன்பது நாட்களும் இரு வேளையும் பர்த்திபாபாவை அர்ச்சித்த குங்குமத்தை ஒன்றுசேர்த்து விஜயதசமியன்று ஷிர்டிபாபா விக்கிரஹத்துக்குக் குங்குமாபிஷேகம் நடக்குமாம்! பெண்களுக்குத் தாம்பூலம் வழங்குகையில், எத்தனை வேடிக்கைகள் செய்திருக்கிறார்? கோவை ஸமிதிச் செயலாளர் ஸ்ரீ மாணிக்கம் ஓர் உதாரணம் சொன்னார். விறு விறு வென்று ஒவ்வொருவருக்கும் பிரஸாதம் அளித்துவரும் போதே, இவர் வீட்டுப் பெண்களில் மிகவும் பக்தி உள்ளவருக்கு ஜரிகைக்கரை போட்ட பட்டு ரவிக்கைத் துணி, சுமாராக பக்தி உள்ளவருக்கு வெறும் பட்டுத்துணி, இரண்டுங் கெட்டான இருந்தவருக்கு நூல் துணி என்று வழங்கினாராம்! இந்தப் பூஜை ஸகலருக்கும் பொதுவானது. இது தவிர அக்காலங்களில் அந்தணாளர்கள் மட்டுமே தம்பதியாக இந்த 'விப்ர ப்ரியா, விப்ர ரூபா'வுக்கு த்ரிசதி அர்ச்சனை செய்வராம்

அன்றும் இன்றும் முதல்நாள் பிரசாந்தி உச்சியில் கொடியேற்று விழா நடைபெறுகிறது. நவராத்ரியில் ஒருநாள் வைத்திய

Koviloor Digital Library

சாந்த் தினம். இன்னொருநாள் அன்னவஸ்திர தானம். அன்னம் அளித்து ஏழையர்க்கும், அதாவது ஆயிரக்கணக்கானவருக்கு அளிக்கப்படும். வஸ்திரம் பெற வேண்டியவர்களை இவர்களி லிருந்து ஸ்வாமியே தேர்வு செய்வார்.

இச்சமயத்தில் அவரையே ஏமாற்ற எண்ணிச் சில பிச்சைக் காரர்கள் இதரர் குழந்தைகளை மடியில் வைத்துக்கொண்டு, 'தாயில்லாக் குழந்தை', 'தந்தையில்லாக் குழந்தை' என்று 'எக்ஸ்ட்ரா—சலுகை' பெறப் பார்ப்பார்கள். ஸ்வாமியோ அந்தக் கூட்டத்திலும் இப்படிப்பட்டவர்களிடம் சென்று, 'குழந்தையைக் கீழே இறக்கிவை' என்பார். கண்ணை மூடிக் குருட்டு வேஷம் போடுவோரிடம் "கண் அப்படியே ஆகிவிட்டா என்ன நாயனு செய்வே?" என்பார். அவர்கள் அலறிப் புடைத்துக்கொண்டு கண்ணைத் திறப்பார்கள். இந்தத் தேர்வின் போது அவர்களுக்குச் சீட்டுக் கொடுத்து, பிறகு வரிசை யாக மேடைமேல் அழைத்து பாபாவே வஸ்திரம் வழங்கு வார். பிரேமை மழை ஒன்று உண்டென்றால் அது இதுதான்.

மூன்று மாலை வேளைகளில் நடக்கும் கவி அரங்கில், வேதம் 'கவிரும் கவிய்' என்று பரமாத்மனை வர்ணிப்பதற்கேற்ப பாபாவே மஹாகவியாக விளங்கி, மற்றக் கவிகளின் பாமாலைகளை ஏற்பார்; அவற்றில் அதிநுட்பமான மாறுதல்களைக்கூட அப்போதே செய்வார். அடடா, அவரால் ஊக்குவிக்கப்பட்டுப் பிறந்த கவிதையும், காவியமும், இலக்கியமும் கொஞ்சமா நஞ்சமா?

வித்வான்கள் பல சாஸ்திரங்களை விளக்கி உபந்யஸிப்பார்கள். பாபா அந்தந்த சாஸ்திரங்களுக்கும் ஸூக்ஷ்ம உட்பொருள்களை எடுத்துச் சொல்வார்.

பிறகு கலை நிகழ்ச்சி. கலைவாணியாகவே இருந்து கண்டு களித்துக் கலைஞர்களை ஊக்குவார் பாபா. அவரே எழுதி டைரக்ட் செய்த நாடகங்களை வேத பாடசாலை மாணவரோ, ஸத்யஸாயி கல்லூரி மாணவரோ அரங்கேற்றுவர். இது தவிர புர்ர கதா, ஹரிகதை இவை உண்டு. இசைக் கச்சேரிகளுக்குக் குறைவே யில்லை.

'பாபாவும் இசைக் கலைஞர்களும்' என்று தனிக் காவியமே எழுதலாம். அவரே ஸங்கீத மஹாபண்டிதர், பாடகர். முன்பெல்லாம் தம்பூரா மீட்டியே பாடுவார். வாஸ்தவமாகவே முரளீதரனாக பாபா புல்லாங்குழல் ஊதிப் பண்ணைப் பொழிந்து கேட்ட பாக்யசாலிகள் உண்டு. கற்பனைக் கண்ணுக்குக் கற்கண்டுக் காட்சிதான்! கற்பனைக் காதுக்குக் கற்கண்டு கானம் தான்! "எம் இறை நல்வீணை வாசிக்குமே" என்று அப்பரடிகள் சொன்னாற்போல் வெங்கடகிரி முதலிய இடங்களில் ஐயன் வீணை வாசித்தும் மகிழ்வித்திருக்கிறார். பிறந்தமுன்பே மத்தளத்தை அதிரச் செய்தவர், நிலையத்தில் கச்சேரி செய்யவந்த மிருதங்க வித்வான்களின் வாத்தியத்தை வாங்கிக்கொண்டு

Koviloor Digital Library

கணக்குத் தவருமல் மோராக்களைக் கொட்டிக் காட்டியதும் உண்டாம்!

ஷிர்டிபாபாவின் அணுக்கத் தொண்டரான தாஸ்கணுவின் ஸாயி கீர்த்தனுக்கு ஹார்மோனியம் வாசித்த சிறுவன் பாண்டு ரங்க திக்ஷித் பிற்காலத்தில் பெரிய இசைக் கலைஞராக, பஜனை நிபுணராக ஆனுர். ஷிர்டிபாபா குறித்த திரைப்படத்துக்கு இசை இயக்குநராகும் பேறும் இவருக்குக் கிடைத்தது. அதனினும் பெரும் பேருக ஷிர்டியவதாரமே பர்த்திபதி என்றுணர்ந்து நம் ஸ்வாமியின் பரமபக்தரானுர். ஒருமுறை பாபா இவரோடு பம்பாயிலிருந்து பெங்களூருக்குக் காரில் செல்கையில் தமது அளப் பரிய இசையறிவால் இவரை அயரவைத்து விட்டார். அன்று பாபாவின் கைக் கஞ்சிராவில் பேசிய கதிகள் இவரைப் பிரமிக்க வைத்தனவாம். வட இந்தியத் தரமு உள்பட பாபாவுக்கு சங்கீத சாஸ்திரம் அற்றுபடி என்று அன்று தெரிந்ததாம்.

முற்காலங்களில் பாபா யார் எந்தத் தியாகராஜ கிருதி கேட் டாலும் உடனே அத்தனை சங்கதிகளுடனும் அதைப் பாடிக் காட்டிய சங்கதியையும் இங்கு சேர்த்துக் கொள்ளலாம்.

வித்வான்களுக்கு அவர் தரும் பரிசுகள்! போஜராஜா தோற் ருன் போங்கள்! அள்ளி அள்ளிக் கச்சேரி ஸபாக்களை விட நிறைய நிதியம் தருவார்! அதுதவிர பட்டுவேஷ்டி இத்யாதி. பதக்கங்கள், சங்கிலிகள், மோதிரங்கள் பெற்ற பாக்யசாலிகளும் பலர் உண்டு. நாதஸ்வர வித்வான் திருவெண்காடு ஸ்ரீ சுப்ரமண்யபிள்ளைக்குத் திருவெண்காட்டு அகோர விரபத்ர உருவமே பொறித்த பதக்கத் தைத் தந்து விதிர்விதிர்க்க வைத்தார். ஒரு அதிப் பிரபல வயலி னிஸ்டுக்கு பாபா ‘மெடல்’ வழங்க, அவர் ‘‘இதில் தங்கள் பரிசு என்று போடக் காணுமே!’ என்று விசனித்தார். ‘‘கொண்டா இங்கே’’ என்று அதைக் கையில் வாங்கித் திருப்பிக் கொடுத்தார் ஐயன். அந்த க்ஷண ஸ்பரிசத்தில் அந்த மெடலிலே, ‘வித்வான் சௌடையாவுக்கு பாபாவின் அன்பளிப்பு’ என்று ஆங்கிலத்தில் அச்சாகிவிட்டது! இப்படி எத்தனையோ! ஸ்ரீ எ.கே.ஸி. நடராஜன் பெற்ற பரிசுகளைப் பற்றி மற்றவர் எவ்வளவோ கூறினுலும், அவரோ வெளியிடத் தயங்குகிறுர், பாபாவின் பிரஸாதத்தைப் பிரகடனம் செய்வதே புனிதக் குறைவானது என்ப தால். இவற்றை எல்லாம்விட, அவரிடம் ஸ்ரீ டி.எம்.எஸ். ரூபக தரிசனம் பெற்றதையும், முன்பின் இவரைப்பற்றி அறிந்திராத ஸ்ரீமதி ஜமுனிகா ராயை மூன்றுண்டுகளுக்கு முன் அவர் வரவழைத்து கிருஷ்ண பரமாத்மாவாகவே தம்மை அவருக்கு உணர்த்தியதையும் குறிப்பிடவேண்டும்.

* * *

அகில உலகத்தவரின் சௌகரியத்தை முன்னிட்டு பாபாவின் ஜயந்தித் திருநாள் ஆண்டுதோறும் ஆங்கில வழக்குப்படி நவம்பர் 23-ந்தேதி கொண்டாடப்படும். முன்பெல்லாம் இதில் விசேஷம் பாபாவின் ‘‘பெற்ருேரும்’’, வேறுசில தேர்ந்தெடுத்த

பக்த சிகாமணிகளும் அவரது சிகைக்குத் தைலம் வைப்பதே யாகும். வெள்ளிக் கிண்ணத்திலிருந்து பூவால் எண்ணெய் எடுத்து அவரது திருமுடியில் வைப்பார்கள்.

தாம் பிறப்பற்ற வஸ்து என்றும், தமக்குப் பிறந்த நாள் கொண்டாட்டம் என்று ஏதேனும் உண்டெனில் அது பக்தர்கள் தமக்குள் ஆத்மனை உணர்ந்துகொள்கிற தினம்தான் என்றும் ஸ்வாமி கூறுவது வழக்கம். இருந்தாலும் பக்தரின் மகிழ்ச்சிக்காக ஜயந்தி விழாவை ஏற்கிறார்.

இந்த சரீரத்தின் பிறப்பு கொண்டாடப்படும்போது, இதைப் பிறப்பித்த பெற்றோரையும் கொண்டாடத்தானே வேண்டும்? பிறந்த நாளில் தைல ஸ்நானம் செய்விப்பது தாயின் தனி உரிமையாச்சே! "நம்பி, நீ பிறந்த திரு நன்னாள்; நன்று நீ நீராட வேண்டும், நாரணா ஓடாதே வாராய்" என்று அசோதை அழைக்க சாதாரணமாகக் குளிக்க அடம் செய்யும் கண்ணனே கட்டுப்பட்டிருக்கிறானே? அப்படியிருக்க, தினமுமே குளியல் என்று அமர்க்களம் செய்யும் பாபா, ஜயந்தியன்று தைல நீராட்டுப் பெறுதிருப்பாரா? தேர்ந்தெடுத்த பல பக்தர்களை அன்று தம் சிந்தை முடியில் எண்ணெய் வைக்க அநுமதிக்கும்போது 'பெற்றோருக்கு' முதலிடம் தருகிறார். இதற்காக அன்று பெற்றோரின் வீட்டுக்கு மேளதாளத்தோடு பக்தர்கள் போய் அழைத்து வருவார்கள்.

பிறந்தநாளில் மற்றொரு விசேஷம் பாபா கையாலேயே பல்லாயிரவருக்கு லட்டு வழங்கப்படுவதாகும்.

முகமெலாம் எண்ணெய் வழிய, மணிக்கணக்கில் அலுக்காமல் சலிக்காமல் அந்த சர்க்கரைக் கரம் லட்டு விநியோகம் செய்வது நேத்திரத்துக்கும் தித்திப்பான காட்சிதான்!

மூன்றாம் விசேஷம், சாதாரணமாகச் செவ்வாடைச் சிராமையும், பீதாம்பரதாரியாகவுமே உள்ள ஐயன் ஜயந்திக்கு மறுதினம் மட்டும் வெள்ளை அங்கி அணிந்து வந்து உய்யாலோத்ஸவம் என்ற ஊஞ்சலாட்டம் பெறுவதேயாகும்.

முன்பெல்லாம் காலையிலிருந்து ஒவ்வொருவராக க்யூவில் வந்து மாலையிட அநுமதித்து வந்தார். மாலை மலைக்கிடையில் மஹாபுஷ்பமாக அமர்ந்திருப்பார். ஒரு சமயம் ஒன்பது மணி நேரத்துக்கு மேல் இப்படி உட்கார்ந்தும் மாலை 'க்யூ' முடியவில்லை. அன்புத் தொல்லைக்கு அப்படி ஆட்பட்டு வந்தார்! இன்றைய பிரம்மாண்டக் கூட்டத்தில் தனித்தனி மாலை மரியாதை எண்ணியும் பார்க்க முடியாத விஷயம்.

தகப்பனார் போன பின்னும் தாய் இருந்த வரை எண்ணெய் வைத்து வந்தாள். பிறகு அதுவும் இன்று நின்றுவிட்டது!

* * *

இன்றைக்கும் அன்றைக்கும் எத்தனை வித்தியாஸம்? அப்போதெல்லாம் வெறும் நாளிலேயே 'அம்மா, அம்மா' என்று

Koviloor Digital Library

அக்காரமாகக் கூப்பிட்டுக்கொண்டு பாபாவாகவே பல மூதாட்டிகளிடம் சென்று, தமக்கு எண்ணெய் தேய்க்கச் சொல்லி உட்கார்ந்து விடுவார். இதைப் பார்த்து வேறு சில கிழவிகள், ''ஸ்வாமி, நாளைக்கு எங்கள் குடிலில் அபிஷேகம் வைத்துக் கொள்ள வேண்டும்'' என்பார்கள். ''ஆஹா'' என்று மறுநாள் அங்கே போய், சமர்த்தாக துண்டைக் கட்டிக்கொண்டு வெற்றுடம்பினராக உட்கார்ந்துவிடுவார்!

ஸ்வாமியின் வயிறும் மார்புப் பிரதேசமும் பார்த்தால் மென்மையாகவே இருக்கும். முதுகுப்பக்கமோ இதில் பாதியாக, பூஞ்சையாகவே இருக்கும். ஆனால் தோளில் அசாத்தியத் திட்பம். உருண்டு திரண்ட முண்டா வேறு. ராஜாரெட்டி போன்ற திடகாத்திரர்களிடமே ''என்னய்யா பூச்சி பிடிக்கிறே! தோளிலே நல்லா அழுத்தித் தேய்! ம்... இன்னம் அழுத்தி'' என்பார். இவரது தோள்வலியில் அசந்து, தேய்க்கிறவர்களின் தோளுக்கு வலி எடுத்துவிடும்! தமது உள்ளங்கையை நீட்டி, நாலைந்து பேரை ஒன்றுகச் சேர்ந்து அதைப் பிடித்துத் தள்ளச் சொல்வார். அவர்கள் என்னதான் பிரம்மப்பிரயத்னம் செய்யட்டுமே, வெளிப் பார்வைக்குத் தாமரையாயிருக்கும் கையைத் துளிக்கூடத் தள்ள முடியாது! ஒருமுறை தம்மைப் பெரிய யோகி போல மிகைபடச் சொல்லிக் கொள்ளும் ஒரு சாமியார், ஒரு பொதுக்கூட்டத்தில் பாபா பேசி முடித்தவுடன் அவரை அப்படியே கட்டி அணைப்பது போல் கைகளை விரித்துக் கொண்டு வர, பாபா வெறுமே ஒரே விரலால் அவரைத் தொட்டுவிட்டு 'விறுக்'கென்று காருக்குப் போய்விட்டார். அந்த ஒரு விரலின் விசையில் சாமியார் பத்தடி பின்னேக்கிப் பறந்து விட்டார்! துந்துபி எலும்பை ஸ்ரீராம சந்திரமூர்த்தி கால் விரலால் கல்லி எறிந்தான் என்பார்களே! 'எண்டிசை அதிபரும் அண்டிய படையுடன் மண்டியிடினும் அண்ணல் சுண்டு விரலுக்காமோ?'

இவை எல்லாம் ஸ்தூல சரீரத்திலேயே காட்டும் சக்தி. ஸூக்ஷ்ம சரீரத்தில் இவர் வெளிச் செல்கையில் கட்டையாகச் சாயும் இவரது ஸ்தூல சரீரமோ கருங்கல்லைவிடக் கனமாகி விடுமாம்! அதுவும் ஸூக்ஷ்ம சரீரத்தால், எங்கோ விபத்தில் சாய்ந்த பக்தர்களின் ஜீப்பையோ, காரையோ தூக்கிவிடுகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள், அப்போது இங்கே 'ம்..ம்' என்று இந்த உடம்பு அதற்கிசையமுனகிப் பிரதிபலித்து அசையும் போது இரும்பினும் இறுகிவிடுமாம்!

ஒருமுறை பிரசாந்தி நிலைய குட்டிக் கைப்பிடிச் சுவர்மேல் இவர் அமர்ந்து பக்தர்களோடு பேசிக் கொண்டிருக்கையில் திடீரென உடம்பை ஒரு குலுக்குக் குலுக்கி எழுந்தபோது, 'ஐயோ, ஸ்வாமி விழுந்துவிடப் போகிறரே' என்று இரண்டு பக்தர்கள் இவரது இரு கால்களையும், வேறிருவர் இரு கைகளையும் பற்றிக் கொண்டனர். அவர் உடம்பை ஓர் உதறல் உதறியதுதான் தாமதம், நால்வரும் திக்குக்கு ஒருவராகச் சென்று விழுந்தனர்.

பாபா சுவரிலிருந்து விழாமலே ஸ்மரணை பெற்றார்.

Koviloor Digital Library

"என்ன ஸ்வாமி, அப்படி நாலுபேரை நாலுமூலைக்குத் தள்ளிட்டீங்களே?" என்று ஒரு பக்தர் வினவ, அவர் கொல் லென்று சிரித்தார்.

"தொங்கா, நீங்கதான் தொங்கா" என்றார். ('தொங்கா' என்றால் 'திருடன்'.)

"எங்கேயோ வனாந்தரத்தில் ஒரு பக்தன் நாலு திருடர் களிடம் மாட்டிக்கொண்டான். அவர்களை விரட்டவே சென்றேன். அங்கே அவர்களை மூலைக்கொருவராகச் சிதற அடித்தேன். இங்கே நீங்களும் திக்குக்கு ஒருவராகப் பறந்திருக் கிறீர்கள்" என்று விளக்கினார்.

பழைய மந்திரத்தில் திறந்த மேனியுடன் குளிக்க உட்காரும் பாபா என்ற பாப்பாவிடம் திரும்புவோம். இந்த சுந்தர தேகத்தை அடியோடு மூட நீள நீள அங்கிகளை நிறையத் தைத்துத் தந்த அதே லோகம்மாவுக்கு, ஒரு சமயம், பாபா மற்ற மஹான்களைப் போல் திறந்த மேனியராகத் தரிசனம் தரவேண்டுமென ஆசை உண்டாயிற்று.

குடகு நாட்டைச் சேர்ந்த பெரிய காப்பித் தோட்டச் சொந்தக்காரி அந்த மூதாட்டி. ஆனால் சுப்பம்மாவுக்குப்பின், பாபா வுக்கு இரண்டாவது செவிலித்தாய் என்னும்படிக்கு இவள் உரிமை யோடு பழகியதற்கு இவளது சொத்து காரணமல்ல. ஸன்மார்க் கத்தில் இவ்வம்மையாருக்கு இருந்த நாட்டமும், கொடைத் தன்மையுமே மைசூர் மன்னரிடம் இவளுக்கு "தர்ம பாராயணி" என்ற விருதைப் பெற்றுத் தந்திருந்தன; இவை காரணமாகத் தான் "ஸத்ய தர்ம பாராயணர்" என அஷ்டோத்தரத்தில் ஒரு நாமம் பெற்ற பாபாவும் இவளை வெகு அண்மையில் சேர்த்துக் கொண்டார்.

சட்டை போடாமல் பாபா தவக் கோலத்தில் அமர வேண்டும் என்றும், அதைப் படமெடுக்க வேண்டும் என்றும் இவள் ஆசைப்பட்டபோது நம் ஸ்வாமி இல்லாத வெட்கமெல்லாம் பட்டதாகக் கூத்தடித்தார். கடைசியில் ஒரு மாதிரியாக இணங் கினார். ஏகத் தமாஷ் செய்துகொண்டு, புலித்தோலாஸனத்தில் 'ஸம்பிரதாய' தபஸ்விக் கோலத்தில் அமர்ந்து புகைப்படம் எடுத்துக்கொண்டார். அந்தப் படத்தைப் பார்த்து, அவர் ஒரு காலத்தில் தவ யோகம் செய்தாரோ எனப் பலர் எண்ணுவ துண்டு. அதெல்லாம் இல்லவே இல்லை. தவத்துக்கே யோகமடித்த தால் அதுதான் இவரை வந்தடைந்தது! இவர் பிறந்ததிலிருந்து ஒரு ஸாதனையையும் செய்தது கிடையாது!

இந்த அருமையான புகைப்படத்தில் பாபாவின் நிர்மலத் தூய்மையும், மென்மையும் இள நிலவாக இலகுகின்றன. 'ஐயா! அங்கியைப் போட்டுக் கொள்வதாலேயே பலவித தப்பபிப்பிராயங்களை ஏற்படுத்தும் நீ இந்தத் திறந்த மேனித் திரு உடலுடனேயே திகழ்ந்துவரக் கூடாதா?' என்ற பிரார்த்தனை கூட க்ஷணகாலம் மனத்துள் எழுகிறது.

Koviloor Digital Library

இப் புகைப்படத்தில் பாபா ஒரு புலித்தோல் மீது அமர்ந் துள்ளார் அல்லவா?

இந்தப் புலித் தோலுக்குக் கதை ஒன்று உண்டு. கோரப் புலியைக் குறித்து ஈரம் நிறைந்த இனிய கதை.

பழைய மந்திரத்தருகே ஒருநாள் ஜீப்பொன்று நின்றுவிட்டது. எத்தனை 'ஸ்டார்ட்' செய்துபார்த்தும் கிளம்பவில்லை. ஜீப்பில் இருந்தது ஸாக்ஷாத் அனந்தப்பூர் மாவட்ட கலெக்டர் பெருமான்! வெள்ளைக்கார ஆட்சியில் கலெக்டர் என்றால் கேட்பானேன்? அவரது உதவியாளர், மென்று விழுங்கிக்கொண்டு, "இங்கே, பக்கத்தில் ஸ்வாமிஜி ஒருத்தர் இருக்கிறார். அவர் மிரகிள்கள் செய்பவர். அவரை வேண்டினால் இந்த ஜீப் கிளம்ப வழி பிறக்க லாம்" என்றார்.

"ஓ.கே! ட்ரை தட்" என்று திருவாய் மலர்ந்தார் கலெக்டர்.

பாபாவிடம் ஓடினார் உதவியாளர்.

குறும்புச் சிரிப்போடு பாபா ஜீப்புக்கே வந்துவிட்டார்.

இப்போது குறும்பு போயிற்று. இதயத்தில் கருணைவாரிதி பெருகிற்று. வாக்கில் கண்டிப்பு பொறி பறந்தது. கலெக்டரிடம், "அதோ ஜீப்பிலே வேட்டையாடி சுட்டுப் போட்டிருக்கிறாயே ஒரு பெண்புலியை—அதை நீ எந்த இடத்தில் சுட்டாய், சொல்லட்டுமா?" என்று கேட்டார். பக்கத்திலிருந்து பார்த்தவர் போல் அந்த சித்ராவதிக் காட்டுச் சூழலை வர்ணித்தார்.

கலெக்டர் அசந்து விட்டார்.

"புலி! ஐயோ பாவம்! அதற்கு இரண்டு சின்னஞ்சிறு குழந்தைகள் உண்டு தெரியுமா? பிறந்து பத்தே நாளான பச்சைக் குழந்தைகளான அவை இப்போது நீ சுட்ட இடத்தருகே அம்மாவைத் தேடித் தேடித் தவித்துக் கொண்டிருக்கின்றன. இப்படி அநியாயம் செய்துவிட்டாயே. அந்த இரண்டு குட்டிகளை யும் எடுத்துப்போய் நீ மிருகக் காட்சிசாலையில் சேர்க்க வேண்டும். அவற்றின் பராமரிப்புக்கு ஏற்பாடு செய்யவேண்டும். இதற்கு ஒப்புகொள்வாயாகில் இந்த ஜீப்பைப் புறப்படச் செய்கிறேன்" என்றார் ஸ்வாமி.

"ஸ்வாமிஜி"யின் அதிமாநுஷ சக்தியும், ஜீவகாருண்யமும் கலெக்டரைத் தொட்டுவிட்டன. மரியாதையுடன், "அப்படியே செய்கிறேன்" என்றார்.

பாபா டிரைவரிடம் ஸ்டார்ட் செய்யச் சொல்லி, ஜீப்பைத் தட்டிக்கொடுத்து, "போம்மா, போ" என்றார்.

'கிர்'ரென்று புறப்பட்டது வண்டி!

Koviloor Digital Library

அதிசயித்த கலெக்டர் அண்மைக் காட்டுக்குச் சென்றார். பாபா சொன்னவண்ணமே அங்கு தாயைப் பறிகொடுத்த சின்னஞ் சிறு புலிக் குட்டிகள் விவரம் தெரியாமல் தவித்துக் கொண்டிருந் தன. அவற்றை ஜீப்பில் எடுத்துப் போட்டுக்கொண்டு புறப் பட்டார். பாபா சொன்னவண்ணமே மிருகக்காட்சி சாலையில் அவற்றைச் சேர்த்து, கவனமான பராமரிப்புக்கு ஏற்பாடும் செய்தார்.

பாபா சொல்லாத இன்னொன்றையும் செய்தார், கலெக்டர். சுடப்பட்ட தாய்ப்புலியின் தோல் பாடம் செய்து வந்தவுடன், அதை பாபாவுக்கே காணிக்கையாக அனுப்பிவைத்தார்! இன்றும் பிரசாந்தி நிலயத்தில் பாபாவின் வெள்ளிச் சிம்மாதனத்தின் கீழ்ப் போட்டுள்ள மரப்பீடத்தின்மீது காணப்படுவது ஐயனது பூத தயைக்கு அடையாளமான இந்தப் புலித் தோல் தான்!

* * *

சிம்மாஸனத்தைப் பற்றிய கதையையும் இங்கேயே சொல்லி விடுவோம். பாபாவுக்கெனப் பல நகரங்களில் பல அன்பர்கள் வெள்ளியும், தங்கமும் தைத்து சிம்மாஸனங்கள் செய்திருக்கிறார் கள். பிரசாந்தி சிம்மாஸனத்தின் விசேஷம், அது தயாராகிவந்து பல காலமாகியும் பாபா அந்தப் பார்சலைப் பிரிக்கச் சொல்லவே யில்லை.

பாபாவின் இருபதாவது பிறந்த தினத்தன்று அவர் ஆரோஹணிக்கவே அதை அன்பர்கள் செய்து அனுப்பி யிருந்தார்கள். ஆனால் ஏனோ பாபா, அவர்களது கோரிக்கையை ஈடேற்றவில்லை. பிறகு சிவராத்ரி வந்தது. இன்னம் பல பண்டிகைகள் வந்தன. ஆனால் பாக்கிங்கைக் கூடப் பிரிக்கக் கூடாது என்று பாபா சொல்லி, பக்தர்களை ஏமாற்றி வந்தார். காரணமும் சொல்லவில்லை.

ஏறக்குறைய ஓராண்டு சென்று தசரா வந்தது. பக்தர்கள் வெகு தாபத்துடன் வேண்டிக்கொண்டனர். ஸிம்ஹவாஹினி எனவும், ஸிம்ஹாஸனேச்வரி எனவும் பெயர் கொண்ட தேவியின் திருவிழாவிலாவது ஸாயீச்வரி அரியணையில் ஆரோஹணிக்க வேண்டுமெனப் பிரார்த்தித்தனர்.

"இன்று வேண்டாம், இன்று வேண்டாம்" என்று ஒன்பது நாளும் தட்டிக் கழித்துவிட்டார்.

விஜயதசமி. வெற்றிபெற்ற அன்னை நிச்சயம் சிம்மாசனத் தமர வேண்டும்தான்!

அன்று சேஷமராஜுவின் கமலாபுர மைத்துனர் சுப்பாராஜு தற்செயலாகப் புட்டபர்த்திக்கு வந்திருந்தார்.

பாபா அவரிடம், "அந்த பார்சலைப் பிரி" என்றார்.

சுப்பாராஜு, பாக்கிங் ஒவ்வொரு சுற்றாக உரித்துப்போடப் போடக் காலச் சக்கரமும் ஒவ்வோர் ஆண்டாக உரித்துக் கொண்டு பின்னேக்கி ஓடியது. கடைசியில் வெள்ளித்தகடுகள்

Koviloor Digital Library

இழைத்த சிம்மாஸனம் வெளிவந்தபோது, எட்டாண்டுகளுக்கு முற்பட்ட சம்பவமும் சுப்பாராஜுவின் வாயிலிருந்தே வெடித்து வந்தது!

அன்று சிறுவன் ஸத்யா, கமலாபுரத்தில் இவர் வீட்டு ஆடும் நாற்காலியில் அமர்ந்ததற்காக இவர் சினந்ததையும், அப்போது சிறிய ஸத்யா சிறி எழுந்து, "ஒருநாள்... வெள்ளி வெச்சு இழைச்ச சிங்காசனத்திலே இந்த ஸத்யா உட்காரத்தான் போறான், அதை நீங்களும் பார்க்கத்தான் போறீங்க" என்று சூள் உரைத்ததையும் உணர்ச்சியோடு கூறினார் சுப்பாராஜு.

"இன்று ஸ்வாமி அதை எனக்குக் குத்திக் காட்டுவதாக அர்த்தம் இல்லை. புத்தி புகட்டுவதாகவே உணர்கிறேன். அவருக்கு சிம்மாஸனம் போடும் பாக்கியத்தைத் தண்டனையாக அன்றி வரப்பிரஸாதமாகவே உணர்கிறேன்" என்றார்.

முதல்முறை தாம் அரியணையில் உட்காருவதை அவர் பார்க்க வேண்டுமென்றே பாபாவும் இத்தனை நாள் ஒத்திப் போட்டிருக்கிறார்!

சுப்பாராஜு சிம்மாஸனத்தைக் கொண்டுவந்து பாபா அமருவதற்காகப் போட்டார்.

ஒராண்டாகப் 'பிகு' செய்துகொண்ட ஸாயீச்வரி, சுப்பாராஜுவை "பங்காரு" என்று மெச்சினாள். சூள் பலித்த வெற்றியில் சிங்காசன சிங்காரியாக விஜயதசமிப் பிரகடனம் செய்தாள்!

Koviloor Digital Library

அத்தியாயம்—36

"மருந்துவனாய் நின்ற மாமணிவண்ணா!"

மங்கிய வல்வினை நோய்காள்! உமக்கும் ஓர்
வல்வினை கண்டீர்
இங்குப் புகேன்மின் புகேன்மின்; எளிதன்று
கண்டீர்; புகேன்மின்

பெரியாழ்வார் திருமொழி

பழைய மந்திர நாட்களைச் சொல்லும்போது அங்கு நடைபெற்ற ஆபரேஷன்களைப் பற்றிச் சொல்லாமலிருக்க முடியாது. ஸர்ஜன் ஸாக்ஷாத் நம் பாபாதான். மயக்கம் கொடுப்பது, தையல் போடுவது எல்லாமே அதி விசித்ரமாக நடக்கும்.

அப்பைய செட்டிக்கு பாபா செய்த ஆபரேஷனைக் கண்முன் கண்ட இருபது பேரில் ஒருவரான ஸ்ரீ பாலபட்டாபி அதைப் பற்றிய விவரங்களை எழுதி, "இதைப் பார்க்காதவர்களிடம், பின்பும் நம்பிக்கையில்லாதவர்களிடம், இதைப்பற்றிக் கூறினால் குதர்க்கமும் கிண்டலும் பேசி, என்னைப் போன்ற நேரில் கண்டவரை கூடப் பைத்தியக்காரன் என்று சொல்லிச் சொல்லிப் பைத்தியமே ஆக்கிவிடுவார்கள்" என்கிறார்!

சுமார் முப்பதாண்டுகளுக்கு முன், சிவராத்திரிக்குச் சில நாட்கள் முன்பு, வயிற்று வலிக் கொடுமை தாங்காது தவித்துக் கொண்டிருந்த அப்பையாவை அழைத்துக்கொண்டு மனைவி லக்ஷ்மியம்மாள் பாபாவிடம் வந்தாள். 'ஆபரேஷன் செய்ய வேண்டும்; செய்தாலும் உயிருக்கு உத்தரவாதம் தருவதற்கில்லை' என்று டாக்டர்கள் சொல்லிவிட்டனராம்.

ஸ்வாமி, "இங்கேயே இருங்கள்" என்று சொன்னார்.

Koviloor Digital Library

ஒருநாள் சித்ராவதி மண்ணிலிருந்து ஜவ்வுபோல் எதையோ எடுத்துக்கொடுத்து அப்பையாவைச் சாப்பிடச் செய்தார்.

நாட்கள் சென்றன. பாபா வேறு ஒன்றும் செய்யவில்லை. அப்பையசெட்டிக்கு நோய் அதிகமாகவில்லையே தவிர குணமும் ஆகவில்லை.

சிவராத்ரி வைபவமும் வழக்கம்போல் ஆத்ம லிங்கோத்பவத்துடன் நடந்தேறியது. ஓரிருநாளில் கூட்டம் கலைகையில் அப்பையா தம்பதியரிடம் பாபாவே, ''ஊருக்குப் போகிறீர்களா?'' என்றார், இதயமே இல்லாதவராக.

'சரி, நீண்டநாள் தங்கியாச்சு. நம் பிராப்தி இவ்வளவே போதும்' என்றெண்ணிய எளிய தம்பதியர் ''அப்படியே'' என்றனர்.

வண்டியமர்த்தி, லக்ஷ்மியம்மா அதில் சாமான்களையும் எடுத்து வைத்துவிட்டாள்.

''பகவானே, நமஸ்காரம் செய்துகொள்கிறோம்'' என்று இருவரும் அகம் குழைந்து வணங்கினர்.

அப்பையாவிடம் ''எங்கே வலிக்கிறதப்பா?'' என்றார் ஸர்வக்ஞர், தலையிலிருந்து கால்வரை இதயமொன்றே உள்ளவராக.

அவர் வயிற்றில் வலிக்கும் பகுதியைக் காட்டினார்.

பாபா அவரது முகத்தெதிரே கையை நீட்டினார்.

உடனே அவ்விடம் முழுவதும் குளோரோஃபாரம் மணம் வீசுவதுபோன்ற நெடி பரவலாயிற்று.

பாதமந்திர நடுஹால் ரண சிகித்சை தியேட்டராகிறது! ஸெப்டிக் ஆகக்கூடாது என்பதற்காக டாக்டர்கள் அநுசரிக்கும் சுத்திகரிப்பு எதுவுமே யில்லை. இருபது அடியார்கள் பக்கத்திலேயே நின்று கொண்டிருக்கிறார்கள்.

அப்பையாவின் பிடரியில் பாபா கை கொடுத்து, மயக்க முற்ற அவரைப் படுக்கவைத்தார்.

வலக்கையை அசைத்தார்.

பளபளப்பான ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பெட்டி அதிலே வந்து குதித்தது!

திறந்தார், ஒரு கத்தியை எடுத்தார்.

பார்த்துக்கொண்டிருந்தவர்கள் கண்மூடித் திறப்பதற்குள் அப்பையாவின் வயிற்றைக் கிழித்துவிட்டார்.

Koviloor Digital Library

'கிறுகிறு' என்று வேலை முடித்தார். குடலை வெளியே இழுத்தார். அதிலிருந்து சீழும் ரத்தமுமாய் பெரிய நெல்லிக்காய் அளவிலிருந்த கட்டியைக் கத்தரித்து எடுத்தார். இருநாள் முன் தமது வயிற்றிலிருந்து ஆத்மலிங்கம் எடுத்து அனைவருக்கும் காட்டியவர் இன்று இவர் வயிற்றிலிருந்து கட்டிலிங்கத்தை எடுத்து விட்டார். சுற்றியிருந்தோருக்கு இந்த லிங்க தரிசனமும் செய்வித்தார்!

அதை வெளியில் கொண்டுபோய் எறிந்துவிட்டு, உள்ளே வந்து கை கழுவிக்கொண்டார். நோயாளியிடம் வந்தார். கிருமி நாசினி எதுவும் போடாமலே இத்தனை நேரம் வெளியே நோக்கிக் கொண்டிருந்த அவரது குடலை உள்ளே தள்ளினார்.

கிழிந்த வாயின் இரண்டுபுறங்களையும் கைவிரல்களால் பிடித்து ஒன்றுசேர்த்து, அதன் பக்கமாய் விரலை அசைத்தார். தையல் போட்டமாதிரியே அவ்விடம் சேர்ந்துவிட்டது! பாண்டேஜ் போட்டுக் கட்டிப் படுக்க வைத்துவிட்டார்.

பிரயாணத்துக்கு வந்த வண்டி திருப்பி அனுப்பப்பட்டது. யமதர்மராஜன் நெடும் பயணத்துக்காக அனுப்பியிருந்த வண்டியும்தான்!

பிறகு பாபா கொத்தசெறுவு சென்று, மாலை ஐந்துக்குத்தான் திரும்பினார். நேரே அப்பையாவிடம் சென்று விபூதி சிருஷ்டித்து நெற்றியில் வைத்தார். இதுவரை மயக்கத்திலேயே இருந்த அப்பைய செட்டி தெளிந்தார்.

அவருக்குக் காபி கொடுக்கச் செய்தார் பாபா.

பிறகு பான்டேஜை அவிழ்த்துவிட்டார். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் ஆபரேஷன் ஆனதுபோல், கிழிந்த இடத்தில் ஒரு தழும்பு மட்டுமே யிருந்தது. அப்பையா துளி வலியின்றிப் பூரணமாகக் குணமடைந்துவிட்டார்.

பக்தர்கள், "ஸ்வாமி, இதைப் பேப்பருக்கு எழுதியனுப்புகிறோம்" என்றார்கள்.

"சை!" என்றார் ஸ்வாமி. "என்னைப் பற்றி யாரார், எப்போது எப்போது, எப்படி எப்படித் தெரிந்துகொள்ள வேண்டுமோ அப்படியே ஆகட்டும். உங்கள் அட்வர்டைஸ்மென்ட் வேண்டாம்" என்று கூறிவிட்டார்.

* * *

இன்னொரு முறை ஒரு தாயார் குழந்தையை வைத்திருக்கும் போதே மயக்க மருந்து ஏதுமின்றி அதன் டான்ஸில்ஸை ஒரு நொடியில் ஒரு திரிசூலத்தால் (!) துண்டித்து எடுத்துவிட்டார். தத்க்ஷணமே சொஸ்தம் தான்!

Koviloor Digital Library

விஷம் வைத்த அம்மாளுக்கு பாபா முருகன் விக்கிரஹம் வரவழைத்துத் தந்ததாக முன்பு பார்த்தோமல்லவா? இவ்வருள் லீலை புரிந்துவிட்டு பாபா சித்ராவதியிலிருந்து திரும்புகையில், நாகமணியம்மா அவருக்கு முன் விரைந்தார்— பாபா மந்திரத்துக்குத் திரும்புவதற்குள் தாம் அங்கு சென்று, முன்னமே 'ஸ்டவ்'வில் வைத்துப் போயிருந்த வெந்நீரை ஆற்றி, அதனால் அவர் பாதங்களைக் கழுவ வேண்டும் என்று தான். மாலையின் சில்லிப்பில் உலவிவிட்டு வருபவருக்கு இது ஹிதமாக இருக்கும் என்பது அவரது அன்பில் தோன்றிய எண்ணம். குளிர்—வெப்பம் கடந்த அப்பனும் அன்பை மதித்து 'வெந்நீர் பிரக்ஷாலன'த்தில் மகிழ்ச்சி கொள்வதாக நடிப்பார்.

நாகமணி பழைய மந்திரத்தில் தம் அறைக்குப் போய் வெந்நீர் கொண்டு வருவதற்குள் பாபா மந்திரத்துக்குத் திரும்பி இன்னோர் அறைக்குள் போய்விட்டார்.

பத்து நிமிஷங்களுக்குப் பின்பே அங்கிருந்து வந்தார். அவர் கையில் வாழைப் பழத்தோல் போல் எதுவோ இருந்தது. வெளியே சென்று அதை எறிந்துவிட்டு வந்து, ''நாகமணிபாய், கையிலே உன் வெந்நீரை ஊற்று'' என்று நீட்டினார்.

கை முழுதும் ரத்தம்! .

''என்ன ஸாமீ! சிவப்பு பெயின்ட் குழைச்சுப் படம், கிடம் போட்டீங்களா?'' என்று கிண்டல் செய்தார் ஸர்வ ஸ்வாதீனம் பெற்ற நாகமணி.

''படமா? உன் பேச்சுக்காகத்தான் அந்த ஆளுக்கு ஆபரேஷன் செய்தேன். வயிறு விங்கிப் பிராணனே போகிற மாதிரி இருக்கிறவனை நான் கவனிக்காமலே இருக்கிறேன் என்று நீ தானே நச்சரித்தாய்?'' என்றார் பாபா.

'ஆபரேஷன்' என்றதும் அந்த அம்மாளுக்குச் சில்லிட்டு விட்டது. பாபாவின் தெய்விகத்தில் நன்றாக ஈடுபட்டவ ராயினும், நல்ல நாகரிக அறிவு பெற்ற அந்த அம்மாளுக்கு, ரணசிகித்ஸைக்கான நவீனப் பாதுகாப்பு ஏதுமேயில்லாமல் ஒருத்தரின் வயிற்றை அறுத்து, வாழைப்பழத்தோல் அளவுக்கு வெட்டி எறிவதாவது என்று திகிலாகவே இருந்தது. 'இந்தக் கொடுமைக்கு நானே ஜவாப்தாரியா?' — பேசாமலே இருந்தார்.

ஆம், முன்பு நாகமணியே தான் பாபாவிடம் நோயாளிக் காகப் பன்முறை சிபாரிசு செய்தார். இவர் நச்சரித்ததில் ஸ்வாமி ஆத்திரமுற்றதுபோல் காட்டி, ''நான் இங்கே ஆசிரமம் வெச்சிருக்கேனா? ஆஸ்பத்திரி வெச்சிருக்கேனா?'' என்று எரிந்து விழுந்தார்.

நடிகர் திலகம்தான் நம் நாயகன்.

இப்போது நாகமணியைக் கலக்கிவிட்டு, இன்னொரு அபார நடிப்பாக, பேசாமலே நகர்ந்தார்!

Koviloor Digital Library

மறுநாள் காலை பாபா அவரை அழைத்து, "அம்மா, கொஞ்சம் பஞ்சு வாங்கி அதை நீயே அந்த ஆளுக்குக் கொண்டு போய்க் கொடு" என்றார்.

ஆபரேஷனை செய்தவருக்கு, பஞ்சுக்குத்தான் பஞ்சம் வந்து விட்டதா என்ன? மாய லீலை!

பஞ்சை வாங்கிக்கொண்டு வந்து நோயாளியின் அறைக்கு வெளியே நின்றார் நாகமணி, தயங்கி. உள்ளே நோயாளி நோய் தீர்ந்து படுத்திருப்பார் என்பதைவிட வாழ்வே தீர்ந்து படுத்திருப்பார் என்றுதான் அவருக்குத் தோன்றியது.

மெல்ல, "அம்மா!" என்று நோயாளியின் மனைவியை வெளியிலிருந்தே அழைத்தார்.

அதற்குள் பாபா அங்கு வந்து "உள்ளே போக மாட்டே! அந்த ஆளுக்குப் பஞ்சு அவசரமாகத் தேவைப்படுகிறது. ம்...ம் போ" என்று கர்ஜித்தார்.

பஞ்சுக்கு அவசரத் தேவை என்றதும் அம்மையின் அச்சம் அதிகரித்தது. உள்ளே நுழைந்தார்.

நாகமணியின் விரிந்த கண் விரிந்தபடி நின்றுவிட்டது.

நேற்றுவரை பிராணன் போகிற மாதிரி வயிறு வீங்கிக் கிடந்தவர், தட்டு நிறைய இட்லிகளை வைத்துக்கொண்டு, இன்னொரு நாட்டின் உணவுக்குத் தகுந்த சூடாகக் கபளீகரம் செய்கிறார். அவரது மனைவியார் கரண்டியால் எடுத்து ஊற்றும் சட்னியிலிருந்து ஆந்திராவுக்கே உரிய மிளகாய் நெடி நாகமணியின் நாசிவரை வந்து தாக்குகிறது—குடற்புண் நோயாளிக்கு மிளகாய் மருத்துவமா? மருத்துவமோ, மகத்துவமோ?

அபூர்வ சகோதரர்கள் போல் நோயாளிக்கு அச்சான இன்னொரு தம்பியாக இவர் இருப்பாரோ என்ற ஐயத்துடன் படுக்கையைப் பார்த்தாராம் நாகமணி! 'நோயாளி'யே நடந்ததைச் சொல்லித் தெளிவு செய்துவிட்டார்.

இம்முறை விபூதியை முகத்தில் பூசி மயங்கச் செய்திருக்கிறார் பாபா. அந்தக் நிமிஷத்தில் ஆபரேஷன் முடிந்து, மயக்கமும் தீர்ந்துவிட்டது. கிழிந்த இரு ஓரங்களையும் ஸ்வாமி ஒன்றுகச் சேர்த்தவுடனேயே ஒட்டிக்கொண்டு விட்டனவாம்!

இதைச் சொல்லும் நாகமணி அம்மையார், "காதால் கேட்டால் நம்பத்தான் முடியாது. Seeing is believing" என்கிறார்!

* * *

ஆபரேஷன், ஆயுதம், மயக்க விபூதி என்பதெல்லாமே வேடிக்கைதான். சில சமயங்களில் நோயாளிக்கு வீரியம் பொருந்திய மூலிகைகளைக் கையசைப்பில் வருவித்துத் தருவார். இதே அங்கை அசைப்பால் டானிக், காப்ஸ்யூல், மாத்திரைகள் ஆகியன பெற்ற

Koviloor Digital Library

வரும்யதேஷ்டம். அவை எங்கே தயாரானவை என்பதுதான் மர்மம். ஆபரேஷன் போலவே லம்பார்—பங்க்சர் என்று முதுகெலும்பில் ஊசி குத்தி மூளைத் திராவகத்தை எடுப்பது போன்ற நுண்ணிய வைத்திய முறைகளையும் அநாயாசமாக, அற்புதமாகச் செய்வார் பாபா. இவ்விதம் வெளியில் பலவித நடைமுறைகளை அப்பழுக்கறக் காட்டினாலும் வாஸ்தவத்தில் பாபாவின் ஸங்கல்பமேதான் சொஸ்தம் செய்கிறது. வெறுமே சங்கற்பித்து'போர்' அடையாமல், அதைப் பல விதத்தில், நவீன மெடிகல் ஸயன்ஸுக்கு உடன்படுகிற மாதிரி கூடக் காரியத்தில் செய்து களிக்கிறார் லீலாவிநோதர்.

தாம் ஸ்தூலமாக இல்லாத இடத்தில் செய்கிற ஆபரேஷன்களும் எத்தனையோ. வேலூரில் ஒரு பஜனை நடந்து கொண்டிருந்த போதே அதில் கலந்துகொண்ட ஒரு பெண்ணுக்கு ஆபரேஷனாகி, அவள் பஜனை முடிவில் அதைச் சொல்ல, கூடியிருந்தவர்கள் நம்ப மறுத்தனர். பிறகு பெண்கள் அவளது வயிற்றில் தையலைப் பார்த்துத்தான் நம்பிக்கை பெற்றார்கள். வேலூர் ஆஸ்பத்திரிக்கு மறுபடி அவளை அழைத்துப் போனபோது வைத்தியர்களும் அவளது வியாதி அறிகுறிகள் முற்றும் மறைந்ததாகக் கூறினர்.

கனவிலே தனக்கு ஆபரேஷன் ஆனதாகக் கண்டு, காலையில் விழித்தெழுந்திருக்கையில், வாஸ்தவமாகவே பாண்டேஜ் போட்டிருப்பதையும், வாஷ்பேஸினில் ரத்தம், பஞ்சு முதலியன இருப்பதையும் பார்த்து ஐயனின் அருளில் உருகிக் கரைந்திருக்கும் பாக்யசாலி பக்தர்கள் உண்டு. பாத மந்திரம் கட்டிய திருமல்ராவுக்கே இப்படி ஓர் அநுபவம் உண்டு.

பாபா சிகித்ஸை யளித்ததாகக் கனவில் கண்ட பல நோயாளிகளுக்கு விழித்தெழுந்த பின் அதன் வாஸ்தவமான வெளி அடையாளங்கள் இருந்ததில்லை. ஆனாலும் நோய் தீர்ந்திருக்கும். மருத்துவ ரீதியில் பரிட்சித்துப் பார்த்தால் வைத்தியரே வியக்கும் வண்ணம் உபாதை சொஸ்தமாயிருக்கும்.

கனவு – நனவு, ஸ்தூல சிகித்ஸை – சூக்ஷ்ம சிகித்ஸை யாவற்றிலும் பெரும்பாலும் விபூதிக்கு இடமுண்டு.

எங்கேயோ ஓர் ஆஸ்பத்திரியில் ஒரு ஸாயி பக்தர் அவதிப்பட்டுக் கொண்டிருப்பார். பக்கத்தில் வைத்துள்ள பஜனைப் புஸ்தகத்தில் திடீரென விபூதி பரவியிருக்கும். பக்தர் அதை வழித்து உண்பார். அல்லது வெளிப் புண்ணாயின் அப்புண்ணின் மீது தூவிக் கொள்வார். பிறகு என்ன? வைத்தியரே வியக்குமாறு வியாதி தீர்ந்திருக்கும். 'மின்னல் மருத்துவ நிபுணர்' என்று திர்க்க திருஷ்டியில் சொல்லிப்போன நாடிசோதிட முனிவர் வாயில் சர்க்கரைதான் போடவேண்டும்.

பிரஸவ காலத்தில் இவர் தாயுமானவரானது— அது எத்தனையோ முறை! பெற்ற தாயும், டாக்டரும், நர்ஸ்களும் உடன் இருக்கும்போதே, அவர்கள் கை மீறியபோது இவர் அநுக்ரஹித்தது ஒரு புறமிருக்கட்டும்.

பெங்களூரில் ஒரு பெண் சில நாட்கள் கழித்துத்தான் பிரஸவிப்பாள் என்ற நிர்மானத்தில் வீட்டார் யாவரும் வெளியே சென்றிருந்தபோது, அவளுக்குப் பேற்று நோவு கண்டு, 'அம்மா அம்மா' என்று வலியில் ஒரு மடங்கும், தனித்திருக்கும் அச்சத்தில் ஒரு மடங்குமாக அலறியபோது இந்த ஸாயம்மா அசல் தாயுமானவராகவே அங்கே விரைந்திருக்கிறாள். இத்தனைக்கும் அப்பெண்ணுக்கு பாபாவைப் பற்றியே தெரியாது.

இம் மாதிரிச் சமயங்களில் இவர் அப் பெண்களின் கண்களுக்கு ஆடவராகவே தெரிவதில்லை என்பது இன்னொரு அதிசயம். என்ன இருந்தாலும் ஆணில் ஒரு கூச்சம் உண்டாகத்தானே செய்யும்? இவரது முடியும் அங்கியுமே இவரைப் பாதிப் பெண்ணாக்கி யிருக்க, இச் சமயங்களில் தமது தாயன்பின் பூரிப்பில் முற்றுமே பெண்ணாகத்தான் தோன்றுவார். (ஆஸ்பத்திரியில் டாக்டர், நர்ஸ் யாருமே இல்லாதபோது ஒரு கிராமப் பெண்ணுக்குப் பேறு பார்த்துவிட்டு ஸ்வாமி சென்று விட்டார். பிற்பாடு அவள் அவர்களிடம் "அந்த மிஸ்ஸியம்மாதான் வந்து எல்லாம் செஞ்சாங்கோ" என்று கூறிச் சுவரில் மாட்டியிருந்த படத்தைக் காட்டினாள். "ஸாதுவம்மா போஸ்" என்றும், "ஸாயி மாதா போஸ்" என்றும் பிரசித்திபெற்ற அப்படத்தில் பாபா பெண்மை வழியவழிய ஒரு தென்னங்கிற்றை ஒட்டி நின்றிருந்தார்! அவரை அந்த வைத்தியசாலையைச் சேர்ந்த ஒரு மிஸ்ஸியம்மா என்றே இப்பெண் நினைத்திருக்கிறாள்!) மேலே சொன்ன பெங்களூர்ப் பெண்ணுக்கு எத்தனையோ பரிவோடு, சகிப்புத் தன்மையோடு ஸ்வாமியே பிரஸவம் பார்த்து, தொப்புள் கொடி நறுக்குவது முதலியதான நோயாளிக்குச் செய்யவேண்டிய சகல ஊழியமும் அசங்கியம் பாராமல் செய்துவிட்டு மறைந்த பின் தான், அவளுக்கு 'யார் வந்து நம்மைக் காத்தது?' என்ற வியப்பே ஏற்பட்டது. திரும்பி வந்த வீட்டாருக்கும் அவள் சொல்லிய அடையாளத்திலிருந்து புரியவில்லை. பிறகு எப்போதோ பாபா படத்தைப் பார்த்த பின் தான் பளிச்சென்று வெளிச்சமாயிற்று!

மற்றவர்கள் இந்த வைத்திய நிபுணத்வத்தை அதிசயிப்பது ஒருபுற மிருக்கட்டும். தங்கள் தங்கள் துறையில் ஸ்பெஷலிஸ்டாக உள்ள பல பிரபல டாக்டர்களே அவர் அளிக்கும் அற்புத வைத்யத்தை வியந்து அவரது அடித்தொழும்பராகி யுள்ளனர்.

'மூகம் கரோதி வாசாலம், பங்கும் லங்கயதே கிரிம்' என்பது ஆன்றோர் வாக்கு. மாதவன் அருளில் ஊமை பேசுகிறான், முடவன் மலை தாண்டுகிறான் என்று அர்த்தம்.

பர்த்தி மாதவன் இரண்டும் செய்திருக்கிறார்.

திருச்சியிலே ஓர் ஊமையை நடுக் கூட்டத்தில் அழைத்து, "உன் பெயர் என்ன?" என்று கேட்க, அவன் "வெங்கட நாராயணன்" என்று பளிச்சென்று பதில் சொல்லியிருக்கிறான். கூட்டத்தினர் கூத்தாடியிருக்கிறார்கள். இதன் விளைவாக பாபா பட்ட

Koviloor Digital Library

பாடு! மறுநாள் காலே அவரது ஜாகைக்கு முன்னுல் விதி கொள்ளாது ஊமர்கள் கூடிவிட, அவர் தோட்டத்து வழியாகத் தப்பி ஓட நேர்ந்தது!

சக்கர வண்டியில் பிரசாந்தி நிலேயத்துக்குத் தள்ளப்பட்டு வந்து, பாபாவிடம் பேட்டி பெற்று, கோரிக்கை அறையிலிருந்து ராஜநடை போட்டுக்கொண்டு பக்தி வெறியோடு வெளியே வந்தவர் பலர் உண்டு. 1969 பிறந்த நாள் விழா. பெற்ரோரும், வேறு பாக்யசாலி அடியாரும் ஸ்வாமி தலேக்கு எண்ணெய் வைத்தாயிற்று. தைலம் வழியும் முகத்தோடு, தயைவழியும் முகத்தோடு ஐயன் ஒரு சக்கர வண்டியண்டை செல்கிருர். அதில் அமர்ந்திருந்த அமெரிக்கக் கிழவி ஸ்ரீமதி எல்ஸா ஆண்டர் ஸென்னின் கையைப் பிடித்துத் தூக்குகிருர்.

ஆஹா, ஆண்டாண்டாகச் செயலற்ற ஆண்டர்ஸென்னின் கால்கள் ஆண்டான் அருளில் இயங்குகின்றன! நாலு அடி அவர் பிடிப்பில் நடக்கிருர் ஸ்ரீமதி ஆண்டர்ஸென். பிறகு அந்தப் பிடியையும் விட்டுவிடுகிருர். அன்று அவர் முன் பாபா புதரான தம் முடியைத் தாழ்த்தி, அதில் அவரையும் தைலம் வைக்கச் சொன்னதுண்டே, கருணேக் காவியம்தான்! அருளின் ஓவியம் தான்!

இப்படிப் போலியோ கேஸ்களில் எத்தனே 'போலி'யோ என்னுமாறு கணத்தே ஓட்டம் பிடித்துள்ளன!

அச்வினீ தேவர்கள் முடவரான பராவிருஜ ரிஷிக்கு நடக்கும் சக்தி அளித்ததை வேதம் சொல்லும் கட்டுக்கதை என்று இனிக் கூறுவோமா? அவ்விரு தேவரும் காலிழந்த விச்பலாவை விறுடன் எழுப்பிப் போர் புரிய வைத்தனர் என்பதை இனியும் நம்பாதிருப்போமா?

இங்கெல்லாம் ஸ்தூலமாக மருந்தோ, விபூதியோ இல்லே. ஆனல் அவர் பெயரில் வைத்தியம் செய்கிற மற்றவர்களுக்கு விபூதி தான் பரம ஔஷதம். எக்காரணத்தாலோ ஆதி காலத்திலிருந்து நீறுதானே இந்த மருத்துவ மஹிமை பெற்றிருக்கிறது? திருச்செந்தில் பன்னீரிலே விபூதியை ஆதிசங்கரரே ஸர்வரோக நிவாரணி என்று புகழ்ந்திருக்கிருரே! உடல் எரிந்தபின் நீறு; ஆனல் உடலே வளர்க்கும் அருமருந்தாகவும் அதுவே உள்ளது!

டான்ஜானியாவில் ஒரு டாக்டர் மிக முற்றிய நோயாளிகளுக்கு ஏதோ ஒரு வெள்ளேப் பொடியை நீரில் கரைத்து ஊட்டுவதையும், பல சந்தர்ப்பங்களில் அது பலன் அளிப்பதையும் கண்டு வியந்த உதவியாளர், அந்த மருந்தின் பெயரையும் செய்முறையையும் கேட்க, ''பாபா விபூதி; செய்முறை அவருக்குத் தான் தெரியும்'' என்று பதில் வந்தது!

இந்திய டாக்டர்களுக்கு வருவோம்:

* * *

1968 பிப்ரவரியில், ஆந்திரப் பல்கலேக்கழக அச்சகத்தைச் சேர்ந்த ஸ்ரீ எம்.ஆர்.பி. நரஸிம்ம ராவ் வலது கண்ணில்

Koviloor Digital Library

வலியோடு பிரபல கண் டாக்டரான ஸ்ரீ எம்.எஸ். ராமகிருஷ்ண ராவ் எம்.எஸ்ஸிடம் வந்தார். "கண் சிகிச்சை முழுதும் என் வசமிருப்பது போல் அவரிடம், 'கவலையே படாதீர்கள், நான் பார்த்துக் கொள்கிறேன்' என்றேன்" என்கிறார் இப்போது அந்த டாக்டர், வெட்கத்துடன்.

ஆனால் இவரது சிகித்சைக்கு அது மசியவில்லை. Dendritic ulcer என்ற கொடிய கண் வியாதியாகிவிட்டது. இதற்கு நேரடி குணம் தரும் ஒரே மருந்தான I. D. U. என்ற அமெரிக்கத் தயாரிப்பு அப்போது இந்தியாவில் கிடைக்கவே யில்லை. டாக்டர் என்ன செய்வார்? வெறுமே 'காடரைஸ்' மட்டும் செய்து கொண்டிருந்தார். பலன் விபரீதமாயிற்று! மறுகண்ணுக்கும் வியாதி பரவிற்று.

தமக்குப் பேராசிரியராக இருந்த டாக்டர் ஆர். ஸூர்யப் பிரஸாத ராவிடம் ஓடினார், நம் டாக்டர். தமது பன்னெடுங்கால அநுபவத்தில் இரு கண்களிலும் 'டென்டிரிக் அல்ஸர்' வந்து பார்த்ததே யில்லை என்று கூறிய பேராசிரியர், ஐ.டி.யு. அன்றி வேறு கதியில்லை என்று சொல்லி, அதை வரவழைக்கத் தாம் எப்பாடும் படுவதாக வாக்களித்தார். ராமகிருஷ்ண ராவும் அந்த மருந்துக்காகப் பலருக்குத் தந்தி மேல் தந்தி கொடுத்து வந்தார்; பயனில்லை.

ராமகிருஷ்ண ராவ், நோயாளி நரஸிம்ம ராவ் இருவருக்குமே பர்த்திபாபாவிடம் பக்தி உண்டு. இப்போது அவரது அருட்சக்தியைத் தான் நாடுவோமே என்ற எண்ணம் வந்தது.

இனிப் பொறுப்பதற்கில்லை என்ற கட்டம் வந்தவுடன், பிரபல வைத்திய நிபுணர், பாபா விபூதியைப் புண்ணுண்டு குதறிய இரு கண்களில் வைத்துக் கட்டினார்; 'பாபா ரக்ஷது' என்று விட்டு விட்டார்!

சிலமணி நேரத்திலேயே பேராசிரியர் ஸூர்யப் பிரஸாத ராவிடமிருந்து, ஐ.டி.யு. மருந்து வந்துவிட்டது! பாபாவின் பிரஸாதமாகவே அது நம் டாக்டருக்குத் தெரிந்தது.

அதை எடுத்துக்கொண்டு நோயாளியிடம் ஓடினார். கட்டைப் பிரித்தார்.

"எல்லாம் சரியாகிவிட்டது!" என்றார் நரஸிம்ம ராவ்.

ஆம், சரியே ஆகிவிட்டிருந்தது.

புண் இருந்த இடம் தெரியவில்லை.

ராமகிருஷ்ண ராவ் நன்றாகச் சோதனை செய்து பார்த்தார். டென்ட்ரிக்காவது, அல்ஸராவது—இவருக்கு அது வந்தது என்றால் யாரும் நம்பவே முடியாது!

குருட்டு ரிஷிகுமாரனுக்கு அச்வினிதேவர் க்ஷண காலத்தில் பார்வை தந்தது வேத வரலாறு. நரஸிம்ம ராவுக்கு ஸாயிக் கண்ணன் கண நேரத்தில் கண்தந்தது இக்கலியிலேயே!

Koviloor Digital Library

டாக்டர் சிரித்தார், அழுதார். கருணையை எண்ணி அழுகை; மாயையை எண்ணிச் சிரிப்பு. நோயைக் குணப்படுத்திய கையோடு ஐ.டி.யு.வை அறுப்பிவைத்து அதைப் பயனில்லாமல் செய்த மாயாவியை என்னென்பது!

ராமகிருஷ்ணராவுக்கு இனிவரியல் ''எம்.எஸ்.'' அவர் படித்துப் பெற்ற பட்டமும் ''எம்.எஸ்.'' அவரது பக்தி லட்சியத்திலும் இரட்டை எம்.எஸ். உண்டு. மிரகிள் ஸாயி, மெடிகல் ஸர்ஜன் தான்!

பிற்பாடு புட்டபர்த்தி சென்றார், ராமகிருஷ்ண ராவ். பாபாவின் திவ்யப் பிரேமை உருவைப் பார்த்து, ''ஆஹா, இந்த க்ருபாளு தாம் செய்கிறோம் என்றுகூடக் காட்டிக்கொள்ளாமலே எத்தனை ஆயிரம் பேரின் கண்ணீரைத் துடைத்து விடுகிறார்!'' என்று எண்ணிக் கலகலவென்று கண்ணீரைக் கொட்டிவிட்டாராம். கண்ணீரின்மீது பன்னீராகப் பட்டது ஒரு கரஸ்பரிசம். ஸாயீச்வரியின் கைதான்! கண் டாக்டரின் கண்ணீரை பாபாவே துடைத்து விடுகிறார்!

''ஆயிரம் அம்மாக்களின் அன்போடு துடைத்தார். உடனே எனக்குச் சுற்றுச் சூழல் உணர்வே கழன்றது. ஆழம் காண வொண்ணா ஆனந்த ஆழிக்குள் அமிழ்ந்தேன். வெளிப்பிரக்ஞை வந்தபோது, பிரபு பக்கத்தறையில் மற்றொரு பக்தரிடம் நமது அயராத கருணைப் பணியை அலுக்காமல் செய்து கொண்டிருந்தார்'' என்கிறார்.

அயராத கருணை. சோம்பலே யில்லாத அருள். ''அதந்த்ரித கருணா'' என்று காஞ்சி காமாக்ஷியின் சலிப்பற்ற கருணை பற்றி மூகர் சொன்னாரே, அதன் வார்ப்பு வடிவுதான் பாபா.

ராமகிருஷ்ண ராவ் முழுகிய ஆனந்த ஆழிதான் பாபா செய்கின்ற உண்மை மருத்துவம்!

* * *

இன்னொரு கண் டாக்டரின் அநுபவத்தையும் சொல்லிவிட வேண்டும். ஸாயி அற்புதங்களிலும்கூடப் பரம அற்புதம் இது!

சமீபத்தில் காலமான டாக்டர் ஏ. ரங்கா ராவையும் அவரது நீள நீளப் பட்டங்களையும் சென்னையின் கண் நோயாளிகள் பலர் அறிவர்.

பூர்வத்தில் பீமாவரத்தில் தொழில் நடத்திக்கொண்டிருந்த இவர் ஆதியிலிருந்து ஷிர்டிபாபாவின் பக்தர். அந்த பாபாவின் புது அவதாரத்தைப் பற்றி இவருக்கு விசேஷமாக எதுவும் தெரியாது. எனவே, சில குறைபாடுகளின் காரணமாக ஆபரேஷனுக்கு லாயக்கில்லை என்று இவர் தள்ளிவிட்ட ஒரு கேஸ், பிற்பாடு இவரிடமே வந்து, ''ஸத்ய ஸாயி பாபா உங்களிடமேதான் அந்த

Koviloor Digital Library

ஆபரேஷனைப் பண்ணிக் கொள்ளவேண்டும் என்று அனுப்பியிருக்கிறார்'' என்றபோது இவர் முதலில் யோசித்தார். ''அவர் ஷிர்டி பாபாவின் மறு அவதாரம். தாம் சொன்னால் நீங்கள் கேட்பீர்கள் என்றும் சொன்னார்'' என்று அந்த நோயாளிக் கிழவி வற்புறுத்திச் சொன்னதும், இவருக்கு ஏனோ தமது மருத்துவ சாஸ்திர விதியையும் புறக்கணித்துவிட்டு 'ஆபரேஷன் செய்ய வேண்டியதுதான்' என்ற உறுதி பிறந்துவிட்டது.

ஆபரேஷன் செய்தார். 'காடராக்ட்'டோடு கூடிய 'ஐரிடிஸ்' என்ற விழி வீக்கம், அதுவும் போதாது என்று ருமாடிஸமும் உற்றிருந்த அந்தக் கிழவி அதிசயிக்கத்தக்க விதத்தில் குணமாகி விட்டாள்.

ஷிர்டியின் புது மூர்த்தியிடம் ஈர்த்துக் கொள்ளப்பட்டார், ரங்காராவ். இது டாக்டரின் 'கண்ணைத் திறப்பதற்காக' பாபா செய்த வைத்தியம்!

பிறகு இவர் சென்னையில் பிராக்டீஸ் தொடங்கினார். பாபாவும் சென்னை வந்தார். அவரைத் தரிசிக்கச் சென்ற டாக்டர் பெருங் கூட்டத்தைக் கண்டு அயர்ந்தார். செல்வத்தை, செல்வாக்கைக் காட்டியோ, அல்லது பாபாவின் அந்தரங்க சிஷ்யர்கள் என்று யாரையோ நினைத்து அவர்கள் மூலமாகவோ அவரைத் தனியாகப் பார்த்துவிட எண்ணினால், அது அடியோடு நடக்காத காரியம் என்பது டாக்டருக்குத் தெரியும். அவரே அழைத்தால் தான் உண்டு என்று அறிவார். எனவே எப்படித் தரிசனம் செய்யப் போகிறோம் என்று இவர் கலங்கி எங்கோ நின்று கொண்டிருந்தார்.

ஓர் இளைஞர் ஓடிவந்து, ''டாக்டர் ரங்கா ராவ் நீங்கள் தானே? முதல்மாடியில் பாபா உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்'' என்றார். (வேங்கடமுனியின் குமாரர் ஸ்ரீ ஈச்வர்தான் அந்த இளைஞர்.) துள்ளும் இதயத்துடன் ஐயன் ஸந்நிதி அடைந்தார் ரங்கா ராவ்.

வணங்கிய அவரை அள்ளி எடுத்துக்கொண்டு பாபா, ''உன்னோடு நான் யுக யுகமாக இருந்திருக்கிறேன். நான்தான் உன்னைச் சென்னையில் கொண்டுவந்து அமர்த்தியிருப்பது. எப்போதும் உன் கூடவே இருந்தேன், இருக்கிறேன், இருப்பேன்'' என்றார்!

ரங்கா ராவின் அந்தரங்கத்தில் அமுத அன்பு கொப்பளித்தது.

அதன்பின் இவரது 'நர்ஸிங் ஹோம்' பாபாவின் லீலா மேடையாயிற்று. பேருக்கு மருத்துவ ரீதியில் இவர் வைத்தியம் செய்தாலும், இவரும் உதவியாளரும் பாபா நாமத்தையே ஸர்வரோக நிவாரணியாகக் கொண்டிருந்தனர்.

இவர் ஆபரேஷன் மேஜையில் படுத்துள்ள நோயாளியண்டை செல்வார். இவரைப் பார்த்து நோயாளி, ''பாபா, பாபா,

Koviloor Digital Library

நிஜமாக நீங்களேயா எனக்கு ஆபரேஷன் செய்கிறீர்கள்? ரங்கா ராவ் எங்கே?'' என்று கேட்பார்!

''ஆஹா, நமக்கே தெரியவில்லை, நம்மை இவர் பாபா வாகப் பார்க்கிறாரே. பிரபோ! இதென்ன லீலை?'' என்று வியப்பார் ரங்காராவ்.

'சித்தமறியாதபடி சித்தத்தில் நின்றிலகு 'கள்வனைத்தான் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். ரூபம் அறியாதபடி அந்த ரூபத்திலேயே தம் ரூபமாக நின்றிலகு லீலை நம் காவிய நாயக னுக்கே உரியது. ஒருமுறை, பேத–அபேதம் என்ற தத்வபபடி தம்மிலேயே, தம் மூலமே, பாபா உருவம் செயல் இரண்டிலும் விளங்கியதை எப்படியோ அவரிடமிருந்து ரங்கா ராவாகப் பிரிந் திருந்து இவர் உணர்ந்ததோ விநோத சிகரமே யாகும்!

Koviloor Digital Library

அத்தியாயம்—37

பிணி தீர்ப்பதும் பிறவி தீர்ப்பதும்

குருடர்களுக்கு நானே கண்;
நொண்டிகளுக்கு நானே கால்.

— பைபிள்: பழைய ஏற்பாடு

டாக்டர் ரங்கா ராவுக்கு ஓர் உத்தரவு போட்டுப் பெரிய சோதனை செய்துவிட்டார் பாபா.

ரத்த அழுத்தம், நீரிழிவு, மகோதரம், இதய நோய், ஹெர்னியா இத்தனை கோளாறுகளும் ஒருங்கே கொண்ட ராய புரம் சகன் லாலுக்கு காடராக்ட் ஆபரேஷன் செய்யும்படி, 'முஹூர்த்தம்' கூடக் குறித்து, உத்தரவு போட்டுவிட்டார் பாபா.

இப்படிப்பட்ட ஒரு கேஸுக்கு ஆபரேஷன் செய்யமுற்படும் டாக்டரைப் போலீஸார் கைதுகூடச் செய்து விடலாம்—மருத்துவ சாஸ்திரத்துக்கு அத்தனை முரணான சமாசாரம்!

பாபாவின் பரம பக்தரான போதிலும் ரங்கா ராவுக்கு அன்று தியேட்டருக்குப் போகத் தயக்கமாகத்தான் இருந்தது. உதவியாளருக்கும் முகத்தில் ஈயாடவில்லை. ஓர் உயிர் போவதற்கும், ஒரு டாக்டரின் தொழில் பறிபோவதற்கும் அத்தனை முகாந்தரம் இருந்தது.

"பாபா, பாபா" என்று புலம்பியது டாக்டரின் நெஞ்சம். "மருத்துவ சாஸ்திரப்படி, மனமறிந்து ஓர் உயிரைக் கொலை செய்யப் புறப்படுகிறேனே! உன் ஆணைக்கு முன் எந்த விதியும், எந்த நியதியும் நில்லாது என்றால் அதை நான் நம்பும் தெளிவை அளியப்பா! உத்தரவு போட்ட நீ, அதை நிறைவேற்றும் மனத் திராணியை அளிக்காமல் சோதிக்கலாமா?" என்று வேண்டினார்.

பிறகு என்ன நடந்தது? ரங்கா ராவின் வார்த்தைகளையே கேட்போம்:

Koviloor Digital Library

''திடுமென பாபா என் கையைப் பற்றிக்கொண்டு, தம்மோடு மேலே ஆபரேஷன் அறைக்கு வரச் சொல்வதை உணர்ந்தேன். அவரைப் பின்தொடர்ந்தேன். ஆம், மிக ஸ்பஷ்டமாக என் கண்முன் அவரது காவிநிறக் கஃப்னி சென்றது; மிருதுவாக நகர்ந்து படிப்படியாக மாடிமீது ஏறிற்று; அதன் பின்னாலேயே சென்றேன். வழக்கம் போல் கை கழுவிச் சுத்தம் செய்துகொண்டேன். கவுனும் கையுறைகளும் போட்டுக் கொண்டேன்.

''நோயாளி மேஜை மேல் கிடந்தார். அவரது ரத்த அழுத்தம் ஏகமாக உயர்ந்திருந்தது. இதயத்துடிப்பும் வெகுவாகி விட்டிருந்தது. அப்போதே அந்த மேஜையில் அவர் உயிரை விட்டு விடப் போகிறார் என்றுதான் தோன்றியது.

''அப்போது என்னை வெளவிக்கொண்ட பயப்பிராந்தி போல் என் வாழ்நாளில் நான் அநுபவித்ததில்லை. நான் பரம நிராதரவாகிவிட்டதாகத் தோன்றியது. 'ஸாயிராம், ஸாயி ராம்' என்று கூவியழத் தொடங்கினேன். உதவியாளர்களும், 'கோரஸ்' சேர்ந்து ''ஸாயிராம், ஸாயிராம்'' என்றனர். நோயாளியும் உருவேற்றத் தொடங்கினார்—'ஸாயிராம், ஸாயி ராம்!'

''தியேட்டரில் இருந்த அனைவரும் பிரமிக்க, நானுமே மலைத்து நிற்க, நான் உடுத்திருந்த வெள்ளை ஏப்ரன் காவி வர்ணமாக மாறியது. அதன்பின் கையுறைக்குள் இருந்த என் விரல்கள் என் இயக்கத்தில் இல்லவே இல்லை. மஹா மேர்ஜனை ஸாயி என்னுடல் மூலம் தம்மைப் புலர்த்திக் கொண்டுவிட்டார்! அவரேதான் ஆபரேஷன் செய்தார்!

''ஒரு சில விநாடிகளில் ரணசிகித்சை முடிந்தது. பின்னால் செய்ய வேண்டிய சாங்கியங்களையும் பிரபுவின் கரங்களே கிடுகிடு வென முடித்தன.

''எல்லாம் ஆனதும், என்னிலிருந்து அவர் போய்விட்டார். என் கவுன் மறுபடி பழைய வெள்ளையாக மாறியது.

''இதே சமயத்தில் பாபா பிரசாந்தி நிலயத்தில் சுற்றி யிருந்த பக்தரிடம் 'சகன்லால் ஆபரேஷன் முடிந்துவிட்டது' என்றாராம்!''

ஆத்மாவில் என்றும் அதுவாகவே இருப்பவர்; ஒரு படி தள்ளி சித்தத்தை வேறுக்கி வைத்து உடன் இருக்கிறார்; மேலும் ஒருபடி தள்ளி உருவத்தையோ இதைவிட பேதத்தில் வைத்துள்ளார். இப்படிப்பட்டவர் நமது டாக்டர் ரங்கா ராவ் விஷயத்தில் அவரது உருவிலும் கூடத் தம்மை பல நோயாளிகளுக்குக் காட்டியிருக் கிறார். இன்றே, ஆத்மாவுக்கு மிக மிகத் தள்ளி உடம்புக்கு வெளியே உள்ள உடுப்பைக்கூடத் தமதாகக் காட்டி, அதே சமயம் உள்ளுக்கு உள் நின்று இயக்கி, அந்த இயக்கத்தையும் ரங்கா ராவ் வேறாக நின்று தமது சித்தத்தால் பார்க்கவும் செய்திருக் கிறார்! எந்தப் புராணத்திலும் கேட்டிரா ஸீலா மஹிமைதான்!

Koviloor Digital Library

டாக்டர் ரங்கா ராவின் உடலிலும், உடையிலும் கூட பாபாத்வம் அமர்ந்ததை என்னுகையில் "எந்தையே ஈசா, உடல் இடம் கொண்டாய்" என்று மணிவாசகத்துக்கு ஒரு புது உரையே கிடைக்கிறது.

உடம்பே ஆத்மாவுக்கு ஓர் உடைதான் என்றான் கண்ணன். அந்த உடைக்குப் போடும் உடையிலும்கூடப் பார்த்திக் கண்ணன் தன்னைக் காட்டிக்கொண்டிருக்கிறான்.

புண்டரீக மகரிஷி பரமேச்வரனின் உயிரோடு தம் உயிரைக் கலக்க விரும்பாமல் அவனது திவ்யமங்கள உருவிலேயே தம் உருவைக் கலக்க விரும்ப, சிவபெருமானும் அவ்விதமே தம் காயத்தில் அவரை ஆரோஹணிக்கச் செய்து காயாரோஹணேச்வரரானார். பர்த்திசனோ ரங்கா ராவ்!உடலில் தாம் அவதரணம் செய்து அவரையே தாபாகப் பல நோயாளிகளுக்குக் காட்டி, காயாவதரணேச்வரராகி இருக்கிறார்!

* * *

நேரில் பாபாவே மல்லிகைப்பூ வைத்துக் கட்டியும், கையசைப்பில் வரும் சொலிலிருந்து சிதத்துளிகளைக் கண்களுக்குள் விட்டும் பல கண் நோயாளிகளைக் குணப்படுத்தி யிருக்கிறார். நிச்சயமாக பார்வை திரும்பாது என்று டாக்டர்கள் திர்மானித்து விட்ட என்றுருவாய் டாக்ஸி உரிமையாளர் ஸ்ரீ டி.என். நடராஜன் இதற்கு ஒரு சான்று.

குருடர் கண்ணில் பாபா ஊதிய மாத்திரத்தில் பார்வை வந்ததாகவும் இந்திரா தேவி கூறுகிறார்.

பாபாவின் வாழ்க்கை வரலாறான "ஸத்யம்—சிவம்—சுந்தர"த்தைப் பாராயணம் செய்தே காடராக்ட் நீங்கிய பக்தரும் உண்டு.

* * *

அகக் கண் காட்சி கொடுப்பது இதனினும் விசேஷம்.

தமிழ்த்திரையுலகின் முதல் சக்ரவர்த்தியாக இருந்த ஸ்ரீ எம்.கே. தியாகராஜ பாகவதர் கடைசிக் காலத்தில் கண்ணிழந்தும், மற்றும் பல விதங்களில் அடியோடு லௌகிக விழுமுற்றும் பாபாவை அடைந்தபோது, பாபா அவரிடம் அகக் கண் பார்வை, அதற்கும் மேம்பட்ட பாராமலே பார்க்கும் துரியப்பார்வை இவைபற்றியே பேசினார். இந்தப் புறக்கண்ணால் பலவற்றைப் பார்ப்பதாலேயே தான் தீவினை வந்து சேர்கிறது என்றார். இப்படி வேதாந்தமாகப் பேசினாரே யன்றி, பௌதிகமாகக் குணப்படுத்தாமலே யிருந்துவிட்டார். பாகவதரே ஞானக் கண்ணையும் ஊனக் கண்ணையும் பற்றிச் 'சிந்தாமணி'யில் பாடியவர்தாமே!

Koviloor Digital Library

பூர்வபுண்ய விசேஷமோ, பாபாவின் அநுக்ரஹ விசேஷமோ, எம்.கே.டிக்கு மெய்யாலுமே அருள்தாகம் எடுத்தது.

''ஸ்வாமீ! வாஸ்தவந்தான். இந்தக் கண்ணால் பார்த்த தெல்லாம் போதும். ஆனாலும் இதனாலும்கூட ஒரு பெரிய நல்லதைப் பார்க்க முடியுமே! இந்தப் பூலோகத்தில் தாங்கள் ஓர் உருவம் கொண்டு உலவுகிறீர்களே, அதையும் இந்த ஊனக் கண்ணால் காணலாம்தானே? அடியேனுக்கு அந்த தரிசன பாக்யத்தை மட்டும் அளிக்கலாகாதா?'' என்று எம்.கே.டி. விண்ணப்பித்தார்.

''சரி, இந்தத் தரிசனத்துக்காக மட்டும் பார்வை தருகிறேன்! ம்.. பார் நாயனு!'' என்றார்.

'நாயனு'வின் நயனத்தில் நாராயண கிருபை பாய்ந்தது; பாகவதரின் கண்களில் பார்வைச் சக்தி பாய்ந்தது. ''நிஜமா, இது நிஜமா! நீ அடிமைக்கும் காட்சி தந்தது நிஜமா?'' என்று மெலிமாவில் பாடியவர், மெய்யாகவே அந்தப் பாட்டை நாவு கொண்டு பாடமுடியாத உணர்ச்சி நிலையிலே ஸத்யஸாயி நாதனை இனித்த பாதத்திலிருந்து, விரித்த முடிவரையில், கண்ணாரக் கண்டுகொண்டார்.

''நன்றாகப் பார்த்துக்கொண்டாயா?'' என்றார் பாபா.

நிஜ பக்தி என்ற 'ஏரியல்' போட்டுக் கொண்டவர்களிடம், ''ஒகஸாரி நனு சூஸ்தே வானி பாபாலு தொலசி போதுந்தி'' என்பார். அதாவது, அவரை மட்டும் பார்க்கிறபடி பார்த்து விட்டால், ஒரே தரிசனத்தில் ஒருவரது பாபம் முழுதும் தொலைந்து விடுமாம்!

இப்போது அவரைப் பார்க்கவேண்டியபடிப் பார்த்துக் கொண்டார் எம்.கே.டி.

அதோடு பாபாவும் பார்வையைத் திரும்ப வாங்கிக் கொண்டு விட்டார்.

பெருமாளையும், ஸ்ரீராமாநுஜரையும் பார்ப்பதற்காகமட்டும் கூரத்தாழ்வார் பார்வை பெற்று, மற்றவர்களைப் பார்க்க முடியாமல் குருடராகவே இருந்தார் என்ற கதை நினைவு வருகிறது.

பாகவதர் தாம் கண்ட பாபாவை, அங்க அங்கமாக வர்ணித்தபோது மற்ற அடியார்களுக்கு அவர் நிச்சயமாக தாற்காலிகப் பார்வை பெற்றுத் தரிசனம் செய்தது உறுதியாகத் தெரிந்தது.

பாகவதர் விடை பெறுகையில், உடன் இருந்த ஒருவர் அவரது சரீரம் நோய்ப் பிண்டமாகிவிட்டதைச் சொல்லி, அவரைக் குணப்படுத்த வேண்டும் என்று விண்ணப்பிக்க, பாபா, ''கொந்த

சரீரமு இஸ்தானு" என்றார். அதாவது "புது உடம்பு தருகிறேன்" என்றார்.

பாகவதர் ஊருக்குத் திரும்பிச் சிறிது காலத்திலேயே இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்று பாபா வரமொழி அளித்தபோது உடனிருந்து கேட்டிருந்த பிரசாந்திவாஸி ஒருவர், ஸ்வாமியின் வாக்குப் பலிக்கவில்லையே என்ற எண்ணத்துடன் அவரிடம் சென்றார்.

ஸர்வக்ஞர் முறுவலோடு, "நான் என்ன சொன்னேன்? அந்த நலிந்த சரீரத்தையே சரி செய்வதாகவா சொன்னேன்? புது உடம்பு தருவதாகத்தானே சொன்னேன்? அந்த உடம்பு போய்விட்டது. எம்.கே.டி. வேறு ஓரிடத்தில் புது உடம்பில் பிறந்திருக்கிறார்" என்றார்.

பாபா சொல்லும் வார்த்தைகளைப் பூரணமாகப் புரிந்து கொள்ளாமல், பிறகு அவர் சொன்னபடி நடக்கவில்லை என்று குறை சொல்வதற்கு இதுவும் ஓர் உதாரணம்.

* * *

சேயொன்றுக்கு இவர் உயிர்தந்து வந்தது ஸாயி அஷ்டோத்தர சத நாமாவளியிலேயே இடம் கொண்டு விட்டதால் அதைக் குறிப்பிட்டேயாக வேண்டும். நால்வராகச் சென்று நாடகமாடி நலம் புரிந்து வந்த லீலை அது.

இடம், புட்டபர்த்தி—பெங்களூர் சாலையில் பாலசமுத்ரத்துக்கும் பாகேபல்லிக்கும் நடுவே. நேரம்: 1958 நவம்பர் 25, பிற்பகல் மணி 2–45.

இரண்டு நாட்களுக்கு முன் நடந்த ஸ்வாமி ஜயந்தியைக் கண்டு திரும்பிக்கொண்டிருக்கும் பரம பக்தர் ஸ்ரீ எஸ். ஆர். வேங்கடராமனின் சிறு குழந்தை கீதஸுதா அவ்விடத்தில் அந்நேரத்தில் பஸ்ஸிலேயே இறந்துவிட்டது; அல்லது இறப்பின் வெகு நெருக்கத்தில் இருகிவிட்டது. தாய் தந்தையருக்கு எப்படியிருக்கும்?

பஸ் நின்றது. ஏகக் கூட்டம் சேர்ந்துவிட்டது.

ஒரு கிழவன் கூட்டத்தின் நடுவேயிருந்து வந்தான். "குழந்தையை இங்கே கொண்டாய்யா" என்றான்.

அவனோடு ஒரு பெண்டிரும் ஒரு பிள்ளையும் இருந்தனர். "ஆமாம், ஆமாம். அவருகிட்டே பாப்பாவைக் கொடுங்க. உசிரு போயிடிச்சுன்னு தோணுற சிசுவுங்களைக் கூட அவரு மருந்து மந்திரம் போட்டு பொளைக்க வெச்சுடுவாரு" என்று அவர்கள் ஒத்துப் பாடினர்.

Koviloor Digital Library

சவம் என்று எண்ணப்பட்ட சிசுவைக் கிழவனாரிடம் கொடுத்தார்கள். அவர் அதை வாங்கிக்கொண்டு ஏதேதோ மந்திரங்களை முணமுணத்தார். இவர்களிடமிருந்தே ஸாயி விபூதி வாங்கி அதன் நெற்றியில் வைத்தார்.

அவ்வளவுதான்! குழந்தை 'வீல்' என்று அழுதது. அழுத பெற்றோரின் முகம் அலர்ந்தது.

கிழவருக்கு ஒரு ரூபாய் எடுத்து நீட்டினார் எஸ். ஆர். வி. அவர் வாங்க மறுத்துவிட்டார். பிறகு ஓர் ஆரஞ்சை அவருக்கு அளித்துவிட்டு பஸ்ஸில் மறுபடி ஏறுமுன், ''எங்கள் வயிற்றில் பால் வார்த்த மஹாராஜா, உன் பெயர் என்ன?'' என்று கேட்டார்.

''ஜோடி ஆதிபள்ளி ஸோமப்பா'' என்று பதில் வந்தது.

''எனக்கென்னவோ, யோசிக்க யோசிக்க, அந்தக் கிழவரும், அவ்விரு பெண்டிரும், பிள்ளையும் பாபாவே தரித்த வேஷங்கள் என்றுதான் தோன்றுகின்றன. 25-ந் தேதி பிற்பகல் 2—45க்கு பாபா கூடுவிட்டுச் சென்றிருக்கவேண்டும் என அநுமானிக்கிறேன்'' என்று எஸ்.ஆர்.வி. எழுதிய கடிதம் நவம்பர் 28-ந் தேதிதான் புட்டபர்த்திக்கு வந்தது. ஆனால் 25-ந் தேதி மாலை ஐந்தரை மணிக்கே பாபா தம் அணுக்கத் தொண்டர்களுக்கு இத்தனை விவரங்களையும் நுணுக்கமாகச் சொல்லிவிட்டிருந்தார்! ''நான் அவனுக்கு அன்று பகல் பிரஸாதமாகக் கொடுத்த ஆறு ஆரஞ்சுகளில் ஒன்றை எனக்கே ஃபீஸாகக் கொடுத்தான்! குழந்தையைத் தொடர்ந்த விபத்தை அப்பழத்திலேயே ஆகர்ஷணம் செய்து எறிந்துவிட்டு இங்கு வந்து சேர்ந்தேன்'' என்றார் அன்றைய தினம் பிற்பகலில் சரியாக 2—45க்குக் கூடுவிட்டுக் கிளம்பிய பாபா.

ஆதிபள்ளிதான், உலகின் முதல் ஊரான கைலாஸம். அங்கு உமையுடன் ஜோடியாக இருப்பவனே ஸோமப்பன். உமை, அவளது சோதரி கங்கை இருவரும் இவனை விட்டுப் பிரியாதவர்கள். ஸோமப்பன் ஸோமாஸ்கந்தனாகவே ஒரு பிள்ளையுடனும் இருப்பவர். இதனால்தான். அன்று இரு பெண்டிரும் ஒரு பிள்ளையுமாக வந்தபோது ''ஜோடி ஆதிபள்ளி ஸோமப்பா'' என்று பெயர் சொல்லிக்கொண்டார்.

பாத மந்திர நாட்களிலேயே பாபாவுக்கு அஷ்டோத்தரம், ஸஹஸ்ர நாமம் முதலியன பக்தர்களாலும், பண்டிதர்களாலும் இயற்றப்பட்டுவிட்டன. அவர் மட்டுமே பஜன் இயற்றிய நாட்கள் போய், அடியாரும் ஸ்தோத்ரங்கள், பாடல்கள், நாமாவளிகள், பஜனை கீதங்கள் இயற்றத் தொடங்கிவிட்டனர். பிற்பாடு அழகிய ''ஸுப்ரபாதம்'' கூட அவருக்குத் தினமும் ஸமர்ப்பிக்கப்படலாயிற்று. பக்தர் சூட்டிய அஷ்டோத்தரம், ஆயிர நாமம் ஆகியன ஒருபுறமிருக்க ஸாயிராமனே உகந்தது ''ஜோடி ஆதிபள்ளி ஸோமப்ப'' நாமம்.

"ஸாயிபாபா"வேதான் "ஸோமப்பா". அதாவது, "ஸ+ஆயி+பாபா"வேதான் "ஸ+உமா+அப்பா". அதனால் ஏற்கெனவே யிருந்த அர்ச்சனை நாமாவளியிலிருந்த ஒரு பெயரை எடுத்துவிட்டு இப் பெயரை அங்கே பாபாவே சேர்த்தார்.

ஓம் ஸ்ரீ ஸாயி ஜோடி ஆதிபள்ளி ஸோமப்பாய நம:

* * *

கைவிடப்பட்ட கான்ஸர்களை பாபா சொஸ்தம் செய்த அற்புதம் பல முறை நிகழ்ந்திருந்தாலும், ஸ்ரீ பி.எஸ். திக்ஷித் அவர்களின் சகோதரிக்குச் செய்ததில் ஒரு புதுமைச் சிறப்பு உண்டு.

முப்பத்தைந்தாம் அத்தியாயத்திலேயே நாம் சந்தித்த இந்த பாண்டுரங்க எஸ். திக்ஷித் அப்போது மஹாராஷ்டிர அரசின் டாகுமெண்டரி தயாரிப்பாளராக இருந்தார். இப்பதவியைவிட ஸாயி பஜனை இசையாலேயே பெயர் பெற்றிருந்தார். இவரது சகோதரியின் இடது மார்பகத்தில் கான்ஸர் கண்டிருப்பதாக பம்பாயிலுள்ள டாடா நினைவு மருத்துவ மனையின் பரிசோதனைகளிலிருந்து முடிவாயிற்று. அதற்கடுத்த புதன் கிழமை அறுவைசெய்துவிடவேண்டுமென ஏற்பாடு செய்தனர்.

அதற்குள் பாபாவை தரிசித்து, அருட்காப்பு வாங்கிவந்துவிடவேண்டுமென்று, திக்ஷித் நோயுற்ற சகோதரியுடன் அனந்தப்பூருக்குப் பறந்தடித்துக் கொண்டு வந்தார். இவர்களைப் பார்த்த மாத்திரத்திலேயே பாபா "மாலூம் ஹை, மாலூம் ஹை" என்றார். ("எனக்குத் தெரியும், எனக்குத் தெரியும்") "இடமார்பில் புற்றுநோய். செவ்வாய்க்கிழமை ஆபரேஷன் செய்வதாக சீஃப் ஸர்ஜன் சொன்னார். அஸிஸ்டென்ட்கள் அன்று விடுமுறை என நீட்டிப் புதன்கிழமை வைத்துக்கொள்ளச் சொல்லி, அப்படியே முடிவாயிருக்கிறது" என்று பம்பாயில் நடந்ததை நடந்தபடிக் கூறினார், ஸர்வ வியாபக பாபா.

"ஆனால் புதன்கிழமையும் ஆபரேஷன் நடக்கப் போவதில்லை. மறுநாள் குருவாரம்தான் நடக்கும். நான் பக்கத்தில் இருப்பேன். எல்லாம் சரியாகும். விசாரம் வேண்டாம்" என்றார் கருணை சொட்ட.

"இந்தா, சாப்பிடு" என்று சொல்லி, விபூதி சிருஷ்டித்து நோயாளியின் கையில் கொஞ்சம் போட்டார். தம் கரத்தில் மீதமிருந்ததை திக்ஷித்தின் இடது மார்புக்கு மேல்—ஆம், நோயாளியின் மேல் அல்ல, அவரது சகோதரரின் மேல்தான்(!) — வைத்து நன்றாகத் தேய்த்துவிட்டு, ஒரு தட்டுத் தட்டி "ஜாவ், ஜாவ்" என்று அனுப்பிவிட்டார்.

பம்பாய் திரும்பினர். எக்காரணத்திலோ மருத்துவமனையில் புதன்கிழமை நடக்க வேண்டிய ஆபரேஷனை மறு தினத்துக்கு ஒத்திப் போட்டார்கள்.

Koviloor Digital Library

புதனிரவு படுக்கு முன் தீக்ஷித் மெத்தை மேல் உட்கார்ந்திருந்தார். திடுமென அவரது இடது நாசியிலிருந்து குழாயைத் திறந்து விட்டாற்போல் ஒரு திரவம் தாரையாகக் கொட்டலாயிற்று. தண்ணீர் மாதிரிதான் இருந்தது. வலியும் இல்லை. அந்த தாரையில் இவரது பைஜாமாவே நனைந்து விட்டது. பிறகு தாரை கொட்டத் தொடங்கிய அதே வேகத்தில் சடக்கென்று நின்றும் விட்டது. இதன் மர்மத்தை யாரே விளங்கிக் கொள்ள முடியும்? ''பாபா, நீ விட்ட வழி'' என்று படுத்துக்கொண்டார்.

மறுநாள் காலை 9 மணிக்கு ஆபரேஷன் தியேட்டருக்கு இவரது சகோதரி எடுத்துச் செல்லப்பட்டாள். அரை மணியில் பாதாலஜிஸ்ட் வெளி வந்தார். ''எக்ஸ்–ரேயில் நன்றாகத் தெரிந்த புற்று முண்டு எங்கோ மறைந்திருக்கிறது. தண்ணீர் மாதிரி ஒரு திரவம் தானிருந்தது. அதையும் வடித்துவிட்டோம். அதைக் குளிர்வித்து 'பயாப்ஸி' செய்து பார்க்க வேண்டும். 24 மணி சென்றபின் வாருங்கள்'' என்றார்.

மறுநாள் காலை 'ரிப்போர்ட்' வந்தது. என்னவென்று கேட்கவும் வேண்டுமா? கான்ஸர் அறிகுறியே இல்லை.

''எப்படியோ (Somehow) அது மறைந்து விட்டது'' என்றார் பாதாலஜிஸ்ட். எப்படியோவா, நம் அப்பனின் சித்தப்படி நடந்தது!

எல்லோரும் பர்த்தி சென்றனர். பிரசாந்தி நிலைய மாடியில் நின்ற பாபா, அங்கிருந்தே புன்னகைத்து, ''ஹ!குச் நஹி! பாணி ஒன்லி! அதிலே ஒண்ணும் இல்லே. வெறும் தண்ணி மாதிரி எதுவோதானே?'' என்றார்.

இதிலே விசித்திரம் தீக்ஷித்தின் இடமார்பில் திருநீறு பூசி, இவரது இடமூக்கில் சகோதரியின் துர்நீர் வடிப்பைத் தொடங்கி வைத்து....!

குறத்தி பிள்ளை பெற்றால் குறவன் மருந்து சாப்பிடுவான் என்பார்களே, பாபா அப்படியும் செய்ய வைப்பாரோ என்னவோ?

ஆக, தத்துவம் என்ன? அந்தச் சரீரமும் ஒன்றுதான். நாம் வேறு வேறு என்று நினைக்கிறோம். இல்லை; ஒன்றுதான் என்று இம்மாதிரி உதாரணங்களால் காட்டுகிறார். மருத்துவ சித்து என்று நினைக்கப்படுவதே அத்வைத ஸித்திக்குக் கோடி காட்டுகிறது.

ஸஹோதரர்கள் ஸஹ–உதரர் மட்டுமில்லை, ஏக – சரீரத்தவரே என்று இங்கே காட்டுகிறார். பிறப்பால் சகோதரராக இல்லாதவரும்கூட அப்படியேதான் என்று தமது உபந்நியாஸங்களில் விளக்குகிறார். இத்தனை சகோதரர்களையும் தாங்கும் ஒரே உதரம் ஸாயி மாதாவான தம்முடையதே என உணர்த்துகிறார்.

இங்கே வேடிக்கையாகச் செய்ததைத் தம் திவ்ய தேகத்தில் விபரீதமாகவே செய்துகொண்டும் சில சமயங்களில் பக்தர்களைக்

Koviloor Digital Library

தீர வைக்கிறார். ஆம், ஸங்கல்ப மாத்திரத்திலே பிறர் நோய் தீர்க்கக்கூடிய இவர், சில சமயங்களில் உலகின் துயர் தமக்கும் வேண்டும் என்றோ, அல்லது சகிப்புத் தன்மைக்கு வழிகாட்டி உணர்த்த வேண்டும் என்றோ, அல்லது நோயாளியின் பூர்வகர்மத்தை மதித்தோ, பிறரது நோயைத் தாமே வாங்கிக் கொண்டு படாதபாடு படுவதும் உண்டு. இதைப் பிறகு 'தியாக ஸாயி' என்ற அத்தியாயத்தில் விரிவாகப் பார்ப்போம்.

எல்லா சரீரமும் ஒன்று, அந்த சரீரம் தமதே என இவர் காட்டிய ஒரு நிகழ்ச்சியை இப்போது பார்ப்போம்.

ஒருமுறை வெளியூரிலிருந்து பிரசாந்தி நிலயத்துக்குக் காரில் வந்த பாபா இறங்கியவுடன், ஓட்டிவந்தவரைப் பார்த்து, "என்னோடு மேலே வா" என்றார்.

அவருக்கு அதிசயம் தாங்கவில்லை. பிரசாந்தி நிலய அடித்தளத்திலுள்ள பேட்டி அறையில் பாபாவைத் தனித்துச் சந்திக்கும் பாக்கியமே அபூர்வமாகத் தான் கிடைப்பது. அதற்கு மேலே மாடியில் உள்ள பாபாவின் தனியறைக்குப் போகும் பேறு இதனினும் அபூர்வம் அல்லவா?

ஆர்வத்தில் இதயம் துடிக்க பாபாவுடன் அவரது அறையை அடைந்தார் அன்றைய கார் ஓட்டுனர்.

கர்ண கவசமான அங்கியை பாபா தம் கண்முன்னேயே கழற்றும்போது, காரை ஓட்டி வந்தவருக்கு அதிசயம் அதிகமாயிற்று.

"பார் இங்கே!" என்று அவருக்கு நேரே முதுகைத் திருப்பினார் பாபா.

சுளீர் என்று எவரோ தம்மைச் சவுக்கால் விறியதைப்போலத் துள்ளிவிட்டார் ஓட்டுனர்!

பாபாவின் முதுகிலே கார் டயர் ஓடினாற் போன்ற அடையாளம். அந்த அடையாளத்தைத் தாங்கியிருப்பது பாபாவின் உடலா? அல்லது அரவத்தின் உடலமா?

ஆம், வரும் வழியில் ஒரு பாம்பு ஊர்வதைக் கண்டும் ஓட்டுனர் தம் பாட்டுக்கு அதன் மீதே காரைச் செலுத்திக்கொண்டு வந்துவிட்டார்! 'ஆனால் பாம்பின் மீதா ஓட்டினோம்? பாம்பணை துயில்வோனே அல்லவா அதைத் தாங்கியிருக்கிறான்?'

மன்னிப்புக் கேட்டார். "என்ன பிராயசித்தம் செய்வேன், ஸ்வாமி!" என்று கரைந்தார்.

"பச்சாத்தாபம் தான் பிராயச்சித்தம். இப்போது எழிவிரக்கப்பட்டுவிட்டாயே! அது போதும். ஸாயி இந்த சரீரத்தில்

Koviloor Digital Library

மட்டும் இல்லை. அந்தரி லோறு ஸாயி உன்றுடு. ஸாயி இல்லாத உடலே இல்லை. போய் வா, பங்காரு'' என்று அனுப்பி வைத்தார் பாபா.

* * *

பாபாவை ''ப்ரணவ சரீரி'' என்றே ரமணசிடராயிருந்து பின்னர் இவரிடம் வந்த ஸ்ரீ அபேதாநந்த ஸ்வாமி கூறுவது வழக்கம். ஆகவே எல்லாவற்றிலும் உள்ள ஸாயி, பிரணவத்தில் விசேஷமாக உள்ளார் போலும். நியூயார்க் ஸாயி கேந்திரத்தின் நாநூறு அங்கத்தினரும், குறிப்பிட்ட நோயாளிகளின்பொருட்டு கோஷ்டியாகக் குறிப்பிட்ட ஆவிருத்திகள் ஓங்கார ஜபம் செய்தே அநேகரைக் குணப்படுத்தி யிருப்பதாகப் புள்ளி விவரம் தருகிறார்கள்.

ரிக் வேதத்தில் அச்வினி தேவர்கள் எத்தனை விதமான வியாதிகளைத் தீர்த்திருக்கிறார்களோ அத்தனையும் செய்திருக்கிறார் பாபா.

தன்வந்தரி என்றே இவரைச் சொல்லலாம். தேவ வைத்தியரான தன்வந்தரி வித விதமான மருந்துகள் தந்து குணப்படுத்துவாராம். ''விவித ஔஷத தாதா'' என்பது அவரது அஷ்டோத்தரத்தில் ஒரு நாமம். மூலிகை, ஸிரப், மாத்திரை, தினுசு தினுசான விபூதி என்று நம் ஸ்வாமியும் விதவித மருந்துகள் தருவார் எனக் கண்டோம் அல்லவா?

நவராத்ரி. ஏழைகளுக்கு மறுநாள் வஸ்திரதானம். இரட்டை வேஷ்டிகளை ஒற்றையாகக் கத்திரிக்கும் பன்னிரண்டு பேர்களில் ஒருவராக பாபாவும் அமர்ந்திருக்கிறார், பிரசாந்தி நிலயத்திலே. சட்டென்று தலையை நிமிர்த்தி, ''பார்த்தசாரதி, நீ என்னவோ நான் இங்கே கத்திரியும் கையுமாக உட்கார்ந்து வேஷ்டி கிழிப்பதாகத்தானே நினைத்துக்கொண்டிருக்கிறாய்? போன நிமிஷம் வரை நான் சென்னையில் இருந்தேன். உன்னுடைய குசாவுக்குத் திடீரென்று டிஃப்தீரியா முற்றிவிட்டது. உன் சகோதரன் அதைத் தூக்கிக்கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கிறான். கவலைப் படாதே! நான் குணம் செய்துவிட்டேன்'' என்கிறார்! இங்கும் இருந்துகொண்டு பற்பல மைல்களுக்கு அப்பாலும் கண்ணை, கருத்தை, கருணையை வைத்து பக்தர் வீட்டை ரக்ஷிக்கும் பரந்தாமன்!

* * *

காணி காணியாகப் பசுமை கொட்டும் பெரிய வயலிலிருந்து ஒரு பயிர்க் கதிரை மட்டும் காட்டுவது போல்தான் இச் சரிதையில் ஸாயிலீலைகளைச் சுருக்கித் தர வேண்டியுள்ளது. ஆயினும் பாபாவின் மருத்துவ மகிமையைச் சொல்லும்போது டாக்டர்களுக்கே இவர் வைத்தியம் செய்வதையும் சிறிதாவது குறிப்பிடத் தான் வேண்டும்.

Koviloor Digital Library

தாம் வைத்தியர்களுக்கும் வைத்தியர் என்பதை பாபா வேடிக்கையாகவே வெளிக்காட்டுவது உண்டு. எடுத்துக்காட்டாக:

1961 ஜூன் மத்தியில் பதரிநாத்துக்கு விஜயம் செய்த ஸ்வாமி அங்கு ஜெனரல் ஆஸ்பத்திரியில் எக்ஸ்—ரே பிரிவைத் தொடங்கி வைத்தார். அப்போது அங்குள்ள மெடிகல் ஆபீஸரைத் தாமே எக்ஸ்—ரே படம் பிடித்தார். ''உன் இதயத்தில் நான் உட்கார்ந்திருந்தாலும் இந்த எக்ஸ்—ரேயில் விழமாட்டேன்'' என்று வேடிக்கை செய்தார்.

சமீபத்தில் தமது நடமாடும் மருத்துவமனையை ஒயிட்ஃபீல்டில் தொடக்கிவைத்தபோது ஸ்வாமியே ஸ்டெதாஸ்கோப்பைச் சொருகிக் கொண்டு டாக்டர் சுந்தர ராவ் அவர்களைப் பரிட்சித்துப் பார்த்தார்.

இந்த வேடிக்கைகள் தவிர வாஸ்தவமாகவே அநேக மருந்துவருக்கும் மருத்துவராக அவர் வியாதி தீர்க்கிறார்.

ஜீவகாருண்யத்தின் திருவுருவமாக விளங்கிய டாக்டர் ஆல்பர்ட் ஷ்வைட்ஸரின் தமிழக 'மினி' பிரதி எனத்தக்கவர் கோயம்புத்தூர் டாக்டர் புன்னைவனம் அவர்கள். இவருடைய 'ரேனல் ஸ்டோன்' உபாதிக்கு மருந்தாக பாபா விபூதியை நீரில் கரைத்துக் குடித்தே சரி செய்து கொண்டிருக்கிறார். பெங்களூர் டாக்டர் டி.எஸ். சந்துருக்கு இதே விபூதி தீர்த்தம்தான் கால்—ப்ளாடர் கல்லைக் கரைத்திருக்கிறது!

விபூதி, ஸாயிராம நாமம் இவற்றின் மருத்துவ சக்தி அநேகம் அடியாருக்குக் கண்கூடு.

* * *

நாமத்தின் மருத்துவ சக்தியைச் சொல்லும்போது, இன்னதென்று சொல்லவொண்ணாமல் நெஞ்சைப் பிசையும் ஒரு ஸம்பவம்:

அந்த அம்மாள் சென்னையின் பிரபல நகை வியாபாரி ஒருவரின் மனைவி. எத்தனையோ வைத்தியம் செய்தாயிற்று. பர்த்திக்கு எத்தனையோ முறை போய் வந்தாயிற்று. பர்த்திவாஸனின் விபூதியை எவ்வளவோ உண்டாயிற்று. அந்த விபூதியில் தான் எத்தனை ருசிகள்! ஒரு முறை தித்திப்பு—ஒருமுறை கசப்பு. ஒருமுறை காரத்திலும் காரம், இப்படி! இத்தனை செய்தும் பிணி அகன்றபாடில்லை.

மயிலையில் புகழ்வாய்ந்த ஒரு நர்ஸிங் ஹோமில் படுத்திருக்கிறார் அப்பெண்மணி.

சுற்றத்தினர் ஓயாமல் ஸாயி பஜனை செய்கிறார்கள்.

Koviloor Digital Library

சடாரென்று அந்த அம்மணிக்கு ஸ்புரிக்கிறது.

"இனிமேலே பஜனை பண்ணவேண்டாம்" என்கிறாள். கண்டித்துச் சொல்கிறாள்.

பாபாவின்மீது பக்தி போய் விட்டதா? ஆசா பங்கமா?

இல்லை, இல்லை.

"நான் இந்தனை வருஷங்களாக ஸாயிராம் ஸாயிராம் என்று விடாமல் ஜபித்து வருகிறேன். நீங்களும் தினம் நாம பஜனை செய்கிறீர்கள். மெய்யாலுமே அந்த நாமாவுக்கு ஆயுளை வளர்க்கிற சக்தி இருக்கத்தான் செய்கிறது. அதனால் தான் நான் சாகாமல் இன்னமும் இருந்துகொண்டிருக்கிறேன். ஆனால் என்ன பிரயோஜனம்? போதும், போதும் இந்த ஆயுள். இது என்றைக்கோ போகத்தானே போகிறது? இதை எதற்காக வேண்டி வேண்டி நீடித்துக் கொள்ள வேண்டும்? இனி எனக்கு ஆயுசு வேண்டாம். எனவே ஸாயி நாமமும் வேண்டாம்" என்றாள்.

அன்றோடு பஜனை நின்றது.

அவளது மூச்சும் நின்றது.

நாம மஹிமை பெரிதுதான். ஆனால் நாமமும் வேண்டாத மோன நிறைவுதானே முடிவு? வைத்திய ஸாயி வைத்தியமே வேண்டாத அந்நிலைக்கு அவளை உய்வித்துவிட்டார்! பிணிகளுக் கெல்லாம் பெரிதான பிறவிப்பிணி தீர்த்துவிட்டார்!

* * *

பாபா அற்புதத்தின் மூலம் நோய் தீர்த்தாலும், இயற்கைப் படி வைத்தியம் நடப்பதையும் தாமே அநுமதித்துத்தான் வரு கிறார். பிரசாந்தி நிலயத்தில் வைத்யசாலை வைத்திருப்பது மட்டு மின்றி, கிராம மக்களுக்குப் பிணி தீர்க்கும் பணி புரிய நடமாடும் மருந்துவ மனையும் வைத்துள்ளார். பிரசாந்தி நிலயத்திலேயே டாக்டர் எம்.ஸி. மோடியின் பிரசித்திபெற்ற கண் சிகித்ஸை முகாமை நடத்தச் செய்கிறார்.

ஆனால் இங்கெல்லாமும் இயற்கையோடு அற்புதம் கலந் திருக்கிறது. டாக்டர் மோடி ஒரே தினத்தில் இருநூறு கண் ஆபரேஷன் செய்யும் அதிசயத்தைப் புரிபவர். பிரசாந்தி நிலயத் திலோ பேரதிசயமாக 511 ஆபரேஷன்கள் செய்ய முடிந்ததை எண்ணி அவரே வியக்கிறார்!

எப்படியானாலும் அற்புதத்தையே நடைமுறையாக்கிக் கொள்ள முடியாதுதானே? அதனால் தான் அற்புதத்தால் நோய் தீர்த்தாலும் நடைமுறை வைத்யசாஸ்திரத்துக்கும் அதற்குரிய இடத்தை பாபா தந்திருக்கிறார் போலும். டாக்டர் புன்னைவனம் அவர்கள் சொந்த விஷயத்தில் பாபாவின் அருளையன்றி, மருத் துவத்தை நாடுவதில்லை என முடிவு செய்தபோது, பாபாவே

அவருக்கு மருத்துவப்படி சிகிச்சை பெறத்தான் வேண்டும் என்று ஏதோ ஒரு விதத்தில் உணர்த்தினாராம். இவரே டாக்டராக இருந்தபோது, அந்தத் தொழிலுக்குரிய நியாயமான ஸ்தானத்தைத் தரத்தானே வேண்டும்?

'இயற்கை அன்னை அழகாக நடத்தும் குடித்தனத்தில் தம் தலையீடு அதிகம் கூடாது!' என்றே சிலரை இயற்கையான வைத்திய சிகிச்சைகளுக்குத் திருப்புகிறார். அதே சமயத்தில் இயற்கையையும் இயக்கும் மஹாசக்தியின் பெருமை அவ்வப்போது தெரிய வேண்டும் என்பதற்காகச் சிலரை வைத்தியத்துக்குப் போக வொட்டாமல் தடுத்துத் தமது அருட் சக்தியாலேயே குணப்படுத்துகிறார்.

ஸ்ரீ சல்லா அப்பாராவ் மதிப்புக்குரியதொரு ஸாயி பக்தர். மூல உபத்திரவத்தினால் ஏற்பட்ட ரத்தப் போக்கால் அவர் பயங்கரமான ரத்த சோகைக்கு ஆளானார். உடம்பு வீங்கிற்று. ஹெமோக்ளோபின் 30 சதத்துக்கும் கீழே போயிற்று. ஆனாலும் இவர் வைத்தியம் செய்துகொள்ளப் பிடிவாதமாக மறுத்தார். பாபாவின் கிருபையே தமக்கு ஔஷதம் என்று தீர்மானமாக இருந்தார். இவர் இப்படிப் பிடிவாதம் செய்வதை அப்போது (1968) ஒயிட்ஃபீல்டில் இருந்த ஸ்வாமியிடம் தெரிவித்தனர். ஸ்வாமியும், "மருந்து சாப்பிடுபவர்கள் மட்டும் சாவதில்லையா, என்ன?" என்று கேட்டார்—அதாவது அப்பாராவை அவர் போக்கிலேயே தான் வைக்கிறார்!

சிறிது காலத்திலேயே கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட கருணாமூர்த்தி அப்பாராவின் கிராமத்துக்கும் வந்தார். நோயாளியின் படுக்கையருகே அமர்ந்து அவரை ஆசிர்வதித்தார். ஒரு லிங்கம் சிருஷ்டித்துக் கொடுத்து, அதன் அபிஷேக தீர்த்தத்தைப் பருகுமாறு நோயாளியிடம் கூறினார்.

இதையடுத்து "Wonder of wonders" (அற்புதத்திலும் அற்புதம்) என்று டாக்டர் ஜி. கேசவராவ் வியந்து எழுதும்வண்ணம் மறுகணத்திலிருந்தே நோயாளி ஆரோக்கியம் பெறத் தொடங்கினார்.

வீக்கம், சோர்வு, ரத்தப்போக்கு எல்லாம் அடியோடு மறைந்து, ஒரே மாதத்தில் யௌவன புஷ்டி பெற்றுவிட்டார் சல்லாராவ். "பாபா வருமுன் நான் பிணமாய் இருந்தேன்; அவர் வந்து சென்றபின் மரணத்தையே வென்றவனானேன்" என்பாராம் ஸ்ரீ சல்லா அப்பா ராவ்.

உதியைவிட ஊசியை நம்புபவருக்கே தாம் வைத்யசாலை வைத்திருப்பதாக பாபா சொல்வதுண்டு. ஆனால் இது ஒரு நிலையிலிருப்பவர்களை உத்தேசித்து, ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் கூறுவதேயன்றி முழு உண்மையுமாகாது. உலகில் விதி முறைகளுக்கு உட்பட்டு நடக்கும் அநேக காரியங்களைப் போல் வைத்தியம் என்பதும் நடப்பதை பாபா அங்கீகரிக்கத்தான் செய்கிறார்.

Koviloor Digital Library

வைத்திய சாஸ்திரப்படி சிகித்சை நடப்பதாகத் தோன்றும் போதே அதற்குள் பாபாவின் மகிமை புகுந்து நோய் தீர்ப்பதும் உண்டு. முன்பே நாம் பார்த்தது போல் டாக்டர் ரங்காராவ் செய்யத் தயங்கிய ஆபரேஷன்களைச் செய்யுமாறு பாபா அவரைப் பணித்தாரே, அச் சமயங்களில் மருத்துவ ரீதியில் ஆபரேஷன்கள் நடந்தது உண்மையே. ஆனால் ரோக நிவாரணம் என்னவோ பாபா அருளால்தானே கிட்டியது?

இன்னொரு உதாரணமும் பார்க்கலாம்:

ஒத்தப்பாலம் கல்லூரி முதல்வரான பேராசிரியர் ஜி.பி. பிள்ளை அவர்களுக்கு ஏற்பட்ட உள் விழித்திரை நீக்கத்துக்கு (detachment of retina) இந்தியாவில் சிகித்சையே இல்லை; அவர் மேற்கு ஜெர்மனிக்கோ அல்லது அமெரிக்காவுக்கோ சென்றால் தான் வழி பிறக்க, விழி திறக்க இடமுண்டு—என்று பிரபல கண் டாக்டர் ஸ்ரீ டி.டி. ராமலிங்கம் அவர்கள் கூறியிருந்தார். ஆனால் பிறகு பாபா அளித்த தெம்பில் அதே டாக்டர் சென்னையிலேயே ஸ்ரீ பிள்ளைக்கு அந்த அதிநுணுக்கமான ஆபரேஷனைச் செய்தார். 1968 ஜூலை 27-ந் தேதியன்று முழுசாக மூன்றரை மணிநேரம் ஆபரேஷன் நடந்தது. டாக்டர்களே ஆச்சரியப் படும்படி அது வெற்றிகரமாக முடிந்தது.

'இங்கே ஏன் பாபா வெறும் சங்கல்பத்தாலோ, அல்லது விபூதியாலோ, மல்லிகை மலராலோ சொஸ்தம் செய்யவில்லை? மருத்துவ ரீதியில் நடந்ததாக ஏன் காட்டினார்?' என்று எவரே கண்டு கூறமுடியும்? லீலைகளைப் பலப்பல விதங்களில் செய்து களிக்கிறார் என்பது ஒன்றே நாம் ஊகிக்கக் கூடிய பதில்.

புட்டபர்த்தியில் பகவானே வைத்துள்ள வைத்ய சாலையைப்பற்றி எண்ணும்போது, டாக்டர்கள் வி. பிரம்மம், பி. ஸீதாராமையா, ஜயலக்ஷ்மி ஆகியோரை நன்றியுடன் நினைக்காமல் இருக்க முடியாது. இவர்களிடம் ஸ்வாமி, இவர்கள் கருவி மாத்திரமே என்றும், தாமே அவர்கள் பொருட்டு எல்லா சிகித்சையும் செய்வதாகவும் கூறியிருக்கிறார். இதனால்தான் வெளி தேசங்களில் பிரபல மருத்துவ மனைகளில் தீராத வியாதிகளும்கூடப் பிரசாந்தி நிலைய வைத்யசாலையில் தீர்ந்திருக்கின்றன.

லீலையில் 'வெரைட்டி' வேண்டியிருக்கிறது என்பதால் இம் மருத்துவமனை வைத்தியர்களை கதிகலங்க அடித்துவிட்டு பாபா தம் விபூதிமூலமே இங்கே பலரை சொஸ்தப்படுத்துவதும் உண்டு. அந்த விபூதிகூடத் தராமல், தமது வைத்தியசாலையின் டாக்டர்கள் எக்ஸ்—ரேயில் பித்தப்பைக் கற்களை நன்றாகக் கண்டும்கூட, "அதெல்லாம் இல்லை. கற்கள் உன் கற்பனையில்தான் இருக்கு" என்று பாபா சொன்ன மாத்திரத்தில் நோயாளியின் கல் கரைந்து குணமான அதிசயத்தையும் டாக்டர் ஸீதாராமையா கூறுகிறார். கல்மனம் கரைவது இருக்கட்டும், கல்லேகூடக் கரைகிறது!

எனவே இந்த வைத்யசாலையின் டாக்டர்கள், "ஸ்வாமி ஆஸ்பத்திரி வைத்திருப்பதற்குக் காரணமே எங்களைப் போன்ற

Koviloor Digital Library

டாக்டர்கள் ஆண்டவன் அருளால்தான் நோய்கள் தீருகின்றன என்று உணரச் செய்வதற்குத்தான்'' என்கின்றனர்.

அற்புதத்தையும், வைத்யத்தையும் ஒன்றோடொன்று இழைத்திருப்பதற்குப் பிரசாந்தி நிலய வைத்யசாலையில் ஒரு விசித்ரமான எடுத்துக்காட்டு உண்டு. அதற்குத்தான் ''ஸாயி ராம் பௌடர்'' என்று பெயர். ஸ்வாமியே அல்லோபதி மருந்துப் பட்டியலில் உள்ள பல பொருட்களைச் சேர்த்து இந்தப் பௌடரின் தயாரிப்பு முறையைக் கூறியிருக்கிறார். இதை சாதாரணமாக உண்டாகக்கூடிய பலவித நோய்களுக்கு நிவாரணியாக டாக்டர்கள் தருகிறார்கள். ஆனால் அசாதாரணமாக, இதைக் கொண்டே முற்றிய தொண்டைக் கான்ஸரைக் கூட குணப் படுத்தியிருக்கும் விவரமும் தருகிறார் டாக்டர் ஸிதாராமையா.

இப்படி ஆஸ்பத்திரி வைத்து, அங்கே தம் அற்புதத்தையும் ஊடே ஊடே கோத்துள்ள ஸ்வாமி, அந்த ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டாமென்று பக்தரைத் தடுத்து, சொஸ்தப் படுத்துவதும் உண்டுதான். அடேயப்பா, எத்தனை திறுசுகளில் கூத்தடிக்கிறார்! ஒரே ஓர் உதாரணம்: ராஜமஹேந்திர புரத்தைச் சேர்ந்த அறுபது வயதுக் கிழவி ஸூரம்மா பிரசாந்தி நிலயத்துக்கு வந்திருக்கையில் திடீரென நோய்வாய்ப்பட்டு ஆபத்தான கட்டத்தை அடைந்துவிட்டார். அவரை ஸ்ட்ரெச்சரில் போட்டு நிலய வைத்யசாலைக்குத் தூக்கிவர டாக்டர் ஏற்பாடு செய்தார். இந்த அயனான சந்தர்ப்பத்தில் வைத்தியசாலை வைத்த அதே பாபா நோயாளி முன் உருவெளித் தோற்றம் காட்டி, ''ஆஸ்பத்திரிக்குப் போகாதே!'' என்றாராம். அந்த அம்மாள் இதைச் சொல்லி, பிடிவாதமாக வைத்யசாலைக்கு வர மறுத்துவிட்டார். அரை மணிக்குள் அவரது உடம்பும் குணமாகி, 'அவர்தானா இவர்?' என்று மூக்கில் விரலை வைக்கும்படி ஆரோக்கியம் பெற்று விட்டாராம்!

*　　*　　*

வியாதி தீர்ப்பது ஒரு பக்கம் இருக்கட்டும். கொடூரமான வியாதிவந்து சொஸ்தமான பிற்பாடும், அது மீண்டு கிளைத் தெழக் கூடிய ஹேது உண்டு என்ற எண்ணத்தில் ஏற் படும் பயப்பிராந்தி உண்டே, இது நோய்களை எல்லாம் விடக் கொடிய நோய்தான். மரணபயத்தைத் தீர்க்கும் பாபா, இந்த வியாதி பயத்தையும் தீர்ப்பதில் அபார சதுரம் படைத்தவர். அமெரிக்காவில் ஸ்டான்ஃபர்ட் பல்கலைக் கழகத்தில் பேராசிரிய ராக உள்ள ஸ்ரீ ஒய்.டி. தாத்தாச்சாரி அவர்கள் தமக்கு ஏற்பட்ட பயங்கரப் புற்றுக்கட்டிகள் எப்போது புத்துயிர் பெறுமோ என்ற திகிலில் அநுதினமும் அணு அணுவாகச் செத்துக் கொண்டிருந்த போது பாபா ஊட்டிய அற்புத உற்சாகத்தையும் ஜீவத்துடிப்பை யும் எண்ணி எண்ணி நன்றியில் உருகுகிறார்!

பயம்தான் மகாவியாதி! 'நானிருக்கப் பயமேன்?' என்பதே நம் வைத்யநாத பிரபுவின் மகா மருந்து.

Koviloor Digital Library

எந்தத் தெய்வத்தைப் பற்றிய துதிகளிலும் அத்தெய்வம் ஆயுள். ஆரோக்கியம் தருவதாக நிச்சயம் கூறப்படும். எத் தெய்வத்துக்கும் 'ஸர்வ வியாதி பிரசமனம், ஸர்வ மிருத்யு நிவாரணம்' என்ற சக்திகள் கூறப்படும். ஜீவர்கள் முக்கியமாக உடலையே தாங்களாக எண்ணுவதால்தான் அதன் ரட்சணை இவ்வாறு குறிப்பிக்கப்படுகிறது. மிகவும் பக்குவம் பெறும்வரை, நோய் கஷ்டப் படுத்தும்போது ஆத்ம சாதனையும் செய்ய முடிவதில்லை என்பதாலும் அதைக் குணப்படுத்த வேண்டித்தான் உள்ளது. இதனால் தான் மகான்களில் ஒவ்வொருவரின் சரிதையைப் பார்த்தாலும் அவர்கள் பக்தர்களின் வியாதிகளைத் தீர்த்தருளியது பெரிதாக விரியக் காண்போம். இதில் ஸாயிபுராணம் எண்ணி முடியா அலைவரிசைகளைக் கொண்ட மகா சமுத்திரமே யாகும். ஆயினும் இந்த மருத்துவமும் இறுதி முக்கியத்துவம் வாய்ந்ததல்ல என்பதையும், நோயைப் பற்றிய அஞ்சாமை, மரணத்தைப் பற்றியும் அஞ்சாமை இவையே நம் ஸ்வாமியின் விசேஷக் கொடை என்பதையும் நன்றாக மனத்தில் வாங்கிக் கொள்வோமாக!

Koviloor Digital Library

அத்தியாயம்—38

ஆபத் பாந்தவன்

ஆபத்தினில் வந்து பக்கத்திலே நின்று
அதனை விலக்கிடுவான்

— பாரதி: கண்ணன்,.என் தோழன்

'பாவயாமி ரகுராமம்' பாட்டில் ஒவ்வொரு ராகத்திலும் சிட்டஸ்வரம் பாடி சாவேரி முத்தாய்ப்புக்குத் திரும்புவதுபோல், பாபாவின் ஒவ்வொரு வித லீலா மகிமையை இன்றுவரை சொன்னாலும், பிறகு பழைய மந்திரத்துக்கே திரும்புகிறோம். "பழங்குடில்தொறும் எழுந்தருளிய பரனே" என்று மணிவாசகம் கூறும் தத்வமயமான 'பழங்குடில்'தான் அந்தப் பாத மந்திரம். லக்ஷக் கணக்கிலானவர்க்கு இன்று பிரசாந்தி நிலயம் இருப்பதை விட, நூற்றுக்கணக்கானவருக்கு மட்டுமே அன்று இன்னும் நெருக்கமான தாயகமாக இருந்தது பாத மந்திரம்.

தாயாகவே தான் விடைதர முடியாமல் தந்து பக்தர்களை அந் நாட்களில் அனுப்பி வைப்பார் நம் ஸ்வாமி. "வீடு திரும்ப வேண்டும்" என்று பக்தர் விண்ணப்பித்தால், "ஏன், பிறந்தகம் அதற்குள் அலுத்துப் போச்சா? மாமியார் வீட்டுக்குப் போகணுமா? ம்...போங்கள்! மாமியார் அவஸ்தை அதிகமானதும் மறுபடி வந்து சேருங்கள்" என்பார்.

மாயைதான் மாமியார்; மாயி நம் ஸ்வாமியார்! அவர்கள் வண்டியில் ஏறிக்கொண்டு அது கிளம்பும் வரை உடன் நிற்பார். சில சமயம் ஆற்றங்கரை வரை சென்று, அக்கரையில் அவர்கள் புள்ளி புள்ளியாக மறைகிறவரை நின்றிருந்து அபயஹஸ்தத்தைத் தூக்கி ஆட்டிக் கொண்டிருப்பார். ஆற்றங்காற்றிலே கற்றைக் குழல் புரள, இதயம் அன்பிலே துவள அவர் அப்படி நிற்பதை மனத்தில் பார்த்துக்கொண்டாலே, பச்சைக் கர்ப்பூர அபிஷேகம் பெறுவது போலிருக்கிறது!

Koviloor Digital Library

தாமே பக்தர்களுக்குத் தம் கைப்பட, பந்துத்வம் சொட்டக் கடிதம் எழுதுவார். விழாக்களுக்கு வரச் சொல்லி அழைப்பார். தாமாகவே அவர்கள் வீட்டுக்கு வருவதாகச் சொல்லிக்கொண்டு செல்வார். பகவானாக இவர் என்னும்படிக்கு விளையாடி விநோதம் செய்வார் — இழையப் பழகுவார். இன்றும் ஒரு சில அந்தரங்க பக்தர்களிடம் அவர் இப்படி எல்லாம் ஒட்டி நின்று இனித்து விளையாடினாலும், அந்த ஆதிகாலத்தோடு ஒப்பிட்டால் இன்று விரக்தராக, விலகியவராகவே ஆகிவிட்டார் என்கிறார்கள்.

பழைய மந்திரத்தில் ஒவ்வொரு பாட்டிமாரையும் தமக்கு ஸ்நானம் செய்விக்கச் சொன்னதை முன்பே பார்த்தோம். இப்படியே அங்குவந்து தங்குவோர் ஒவ்வொருவர் அறைக்கும் சென்று, அவர்களோடு அமர்ந்து உண்பார். ஆம், ஒரே நாளில் பதினைந்து, இருபது பக்தர் ஜாகைகளுக்கு அடுத்தடுத்துச் சென்று இப்படி உண்டிருக்கிறார், உலகுண்ட மாயன்!

ஆனால் அந்நாட்களிலும் உபதேசத்துக்குக் குறைவில்லை. முப்பத்திரண்டு வயதுக்குப் பின்பே விசேஷமாக உரைகள் ஆற்றத் தொடங்கினார் எனினும், இதன் பின்பே வேதாந்த, புராண, தத்வங்களைப் பிரசாரம் செய்ய "ஸநாதன ஸாரதி" என்ற பத்திரிகை தொடங்கினார் எனினும் (இன்று இவ்வேடு ஆங்கிலம், ஹிந்தி, தெலுங்கு, தமிழ், கன்னடம், மலையாளம், மராத்தி, குஜராத்தி, சிந்தி, நேபாளி, அஸ்ஸாமி, ஒரியா ஆகிய இத்தனை மொழிகளில் வெளியாகிறது) ஆதி காலத்திலேயே, விநோதங்களுக்கு ஊடே ஊடே உபதேசம் கொடுத்துவிடுவார். விநோத லீலையாகத் தோன்றுவதிலேயே தத்வார்த்த விளக்கம் கொடுத்து விடுவார். உதாரணமாக:

ஒருமுறை ஸாகம்மா, "போர்க்களத்தில் பகவான் அர்ஜுனனுக்கு இத்தனை பெரிய கீதையை உபதேசம் செய்து, விச்வரூப தரிசனம் காட்டிக் கொண்டிருந்தபோது எதிரிகள் எப்படிப் போரிடாமலே பேசாமலிருந்தார்கள்? இது நம்ப முடியாமலிருக்கிறதே!" என்றாள்.

பாபா அதற்குப் பதில் சொல்லாமல் சித்ராவதி மணலை அளைந்தார். மணலைக் கயிறாகத் திரிப்பது என்பார்கள். இவரோ கயிறென்ன, எதுவாக வேண்டுமானாலும் அதை மாற்றிவிடுவாரே? இப்போது முழங்கை வரை மணலில் ஆழ்த்தி எடுத்தார். அடடா, ஓரடி நீளமும் அரையடி உயரமும் உள்ள அழகிய தந்தப் பிரதிமை வெளிப்பட்டது! ஆம், கீதோபதேசப் பதுமை! பல குதிரைகள் பூட்டிய ரதத்தில் பகவான் அமர்ந்து அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறார். ஒவ்வொரு மில்லிமீட்டரிலும் எத்தனை நுணுக்கமான வேலைப்பாடு!

அதெல்லாம் இருக்கட்டும். ஸாகம்மாவின் கேள்விக்கு விடை எங்கே? இதோ பாபா சொல்கிறார்: "இதோ இந்த தந்தப் பதுமை இருக்கிறதே, இதைச் சாதாரணமாக மானுட ரீதியில் எத்தனை தொழிலாளிகள் சேர்ந்து எத்தனை நாட்கள் வேலைசெய்து

Koviloor Digital Library

தயாரிக்க வேண்டியிருக்கும்? ஆனால் இப்போது இது ஸ்வாமி ஒருவரின் சங்கல்பத்தில் க்ஷணகாலத்தில் சிருஷ்டியாகி விட வில்லையா? பகவான் மனம் வைத்தால் காலத்தையே மாற்றிவிட முடியும். இப்போது மாநுடரீதியில் பல நாட்கள் தேவைப்படுகிற காரியத்தை ஒரு நொடியிலேயே முடித்துவிட்டேன். அன்று மாநுடரீதியில் போர்க்களத்தில் மற்ற வீரர்களுக்கு ஒருவிலகணம் ஓடும்போதே, அர்ஜுனனின் சித்தத்தில் கீதோபதேசத்துக்கான அந்த நீண்டகாலத்தை உண்டாக்கிவிட்டேன்; மற்றோர் கண்ணுக்குத் தெரியாத விச்வரூபத்தையும் அவன் ஒருவனுக்கே அருளினேன்'' என்றார்.

இருப்பினும், பெரும்பாலும் தமது ஸ்தூல சரீரத்தைக் காலதத்வத்துக்கு உட்பட்டே அவர் இயக்குவதால்தான் பழைய மந்திர நாட்களில் செய்ததுபோல் இன்றுள்ள கணக்கற்ற அடியார்க்கு தரிசனம் தர முடியாமலாகி யிருக்கிறது. இன்று ஒவ்வொருவர்பாலும் இதயத்தில் அலை வீசும் அன்பு ஸமுத்ரத்தை அடக்கிக்கொண்டு வெளியிலே சற்று விட்டேற்றியாகத் தான் அவர் இருந்தாக வேண்டி யிருக்கிறது. பழைய நாட்களைப் போல அவர் ஸ்தூல அன்பு காட்டினால் புட்டபர்த்தியில் கோடிமக்கள் அல்லவா நித்யவாஸம் செய்ய ஆரம்பித்துவிடுவர்? இதனால்தான் ஒரு பார்வை, ஒரு சொல்லில் அன்பைக் கொட்டிவிட்டு அகன்று விடுகிறார். பேட்டி கொடுப்பாராகில், அப்படிப்பட்டவர்களிடம் அச்சமயத்தில் பிரேமையை வர்ஷித்துவிடுகிறார். ஆயினும் அது முடிந்த மறுகணமே, அவரா இவர் என்னும்படி ஒரே விட்டேற்றியாக, வறட்சி மாதிரி கூட, ஆகிவிடுவார். பாத மந்திரத்தில் எவர்களைக் கழுத்தில் கை போட்டுக்கொண்டு கட்டி மகிழ்ந்தாரோ அவர்களுக்குக்கூட இன்று இதே கதிதான் என்பதை நினைத்து வேண்டுமானால் பிற்கால பக்தர்கள் திருப்திப் படலாம்.

ஆயினும் ஸூக்ஷ்ம ஸாயிக்கு அத்தனை லக்ஷம் பேரும் நெருக்கம். அவர்களிடம் இறுக்கமான அன்பைக் காட்டி வினைதீர்த்து, வியாதி தீர்த்து, விபத்து தீர்த்து, விபரீத சிந்தை தீர்த்து அருள் வதில் அவருக்கிணை அவர் தான். ஸ்தூல ஸாயி செய்யாததெல்லாம் ஸூக்ஷ்ம ஸாயி செய்வார். ஸ்தூலருக்கு வெண்ணெய், பால் படைக்காதிருக்கலாம். ஸூக்ஷ்மரோ பலர் இல்லங்களில் இதே நிவேதனங்களை ஏற்கிறார்! ஸ்தூல ஸாயிக்கு புலம்பலாகவும், விளம்பமாகவும் உள்ள பஜன்கள் உதவாமலிருக்கலாம். ஸூக்ஷ்ம ஸாயியோ இப்படிப்பட்ட பஜன்கள் பாடப்பெறும்போது கூடப் பல இடங்களில் தமது அருளின் அடையாளங்களைக் காட்டுகிறார் — அதாவது பஜனைக் கூடத்தில் திடுமென தாழம்பூ அல்லது மல்லிகை மணம் பரவும்; அல்லது படங்களில் விபூதி, தேன் முதலியன துளிக்கும்; அல்லது அதற்குச் சாத்தியுள்ள பூச்சரம் மின்விசிறி சுழல்வது போல் சுழலும்; அல்லது படத்திலிருந்து விக்கிரஹங்களை 'தொப் தொப்'பெனக் குதிக்கும்; அல்லது ஒளி மயமான ''ஓம்'' என்ற எழுத்து சித்திரத்தில் தோன்றும்; அல்லது ஸூக்ஷ்ம பாபாவுக்கென அமைந்த ஆஸனத்தில் வைத்திருக்கும் புஷ்பத்தில் அவர் ஸ்பரிசம் பட்டாற்போல் அது நசுங்கும்.

Koviloor Digital Library

ஸ்தூலமோ, ஸூக்ஷ்மமோ, எப்படியாயினும், இவரது அவதாரப்பணி இரண்டுதான்— ஒன்று அடியாரின் தனி வாழ்க்கையைக் கணந்தோறும் கவனித்து இடர்களில் காப்பது; மற்றது, உலகம் முழுவதிலும் பொதுவாக நல்லறங்கள், ஆன்ம நாட்டம் பரப்புவது. பின்னே சொன்னதற்கே அவதாரங்களை மீள மீள நிகழ்த்துவதாக கீதாசார்யன் கூறினான். ''உலகில் தர்ம ஸம்ஸ்தாபனத்துக்கே நான் அவதரித்துள்ளேன்'' என்று பாபாவும் பன்முறை அடித்துக் கூறியிருக்கிறார். ஒருபக்கம் தர்மங்கள் முன்னைவிட வளர்ந்து கொண்டு தானிருக்கின்றன. இன்னொரு பக்கம் ஆத்மிகச் சிரழிவும், அது பாட்டுக்கு வலுத்துக் கொண்டுதான் போகிறது. இந்த விஷயத்தைப் பிற்பாடு கவனிக்கலாம். அவதாரப்பணி என்று எடுத்துக் கொள்ளும்போது தர்ம ஸ்தாபனமே தலையான முக்யத்துவம் பெற்ற போதிலும், தனிப்பட்ட அடியாரின் இடர் தீர்ப்பதிலேயே அவதாரத்தின் அன்பு இனிக்க இனிக்க நம் நெஞ்சில் மேவுகிறது.

இவ்விதம் விபத்தில், விபரீதத்தில் பாபா கை கொடுப்பது போல் எந்தப் புராண இதிஹாஸத்திலும் பார்த்திருக்கமுடியுமா என்பது சந்தேகம்தான். வானத்து விண்மீன்களை எண்ணினாலும் எண்ணலாம், இந்த ஆபத்சகாய லீலைகளை எண்ணி முடியாது. இங்கே இவற்றுக்கு ''ஸாம்பிள்'' மட்டுமே பார்க்கலாம்.

* * *

பாபா கொடைக்கானலில் பக்தர் சூழ்ந்திருக்கையில் படுக்கையில் சாய்ந்தமர்ந்திருக்கிறார். திடுமென எழுந்து, ''ஷூட் பண்ணாதே!'' என்று கூவிவிட்டு, அப்படியே சாய்ந்து விடுகிறார். ஜீவசக்தி கூடுவிட்டுக் கிளம்பிவிட்டது.

மீண்டும் 'பிரக்ஞை' பெற்ற பாபா, போபாலில் உள்ள காப்டன் எஸ்..... என்ற ராணுவ வைத்திய அலுவலருக்கு ஒரு தந்தி கொடுக்கச் சொல்கிறார். தந்தி வாசகம், ''ரிவால்வரைப் பற்றிக் கவலைப்படாதே; அது என்னிடம் இருக்கிறது—பாபா'' என்றிருக்க வேண்டுமாம்!

பக்தர்கள் எத்தனை கோரியும் விளக்கம் தராமல் 'வதைக்கிறார்'!

நான்காம் நாள் போபாலிலிருந்து கடிதம் வருகிறது. முதலை பற்றிய கஜேந்திரனையும், துச்சாஸனன் துகிலுரித்த துரோபதியை யும் காத்த பதி இவர் என்று காட்டிக் கொடுக்கும் கடிதம்! அக் கடிதத்தை அடியார் கேட்கப் படிக்கச் செய்கிறார்.

அப்போது செய்யப்பட்ட மாநிலப் புனரமைப்பில் ஸாயி பக்தரான மேற்படி காப்டன் மிகவும் தாழ்ந்த ஒரு பதவிக்குத் தள்ளப்பட்டு, அவரது ஜூனியர்கள் இவருக்கு மேலாளராகி விடுகின்றனர். இவர் செய்த முறையீடுகளுக்கும் கேள்வி முறை யில்லை. மனம் சலித்து விடுகிறார். அச்சமயத்தில் அவரது மனைவியும் உடன் இல்லை.

Koviloor Digital Library

இரண்டாம் உலகயுத்தத்தில் பணி செய்தவர் இவர். சட்டென்று துப்பாக்கி நினைவு வந்து விடுகிறது. ஆம், தற்கொலைக்குத் துணிந்து விடுகிறார்.

கை பிசகாமல் சுடுகிறோமா என்று சோதனை பார்க்க ஒரு முறை சுட்டு விட்டார்.

மறுமுறை தம்மை நோக்கியே சுட்டுக் கொள்ளப் போகும் அந்த நொடித்துகளில்தான்—சரியாக இங்கே கொடைக்கானலில் பாபா 'ஷூட் பண்ணாதே!' எனக் கத்தியது!

அதே சமயம் அங்கே, போபாலில், காப்டனின் அறைக்கதவு தடதட வெனத் தட்டப்பட்டது.

அவருக்கு என்ன தோன்றியதோ, படுக்கை அறைக்குப் போய், ரிவால்வரைத் தலையணையின் கீழ் வைத்துவிட்டு வந்து கதவைத் திறந்தார்.

அவரது ஆதிகாலக் கல்லூரி நண்பர் தமது மனைவி, வேலையாள் சகிதம் பெட்டியும் படுக்கையுமாக வந்து நின்றார். உல்லாச புருஷரான அந்த நண்பர் பழைய ஜோக்குகளை அடித்தார்; புது ஜோக்குகளைப் பொழிந்தார். எந்த தத்வமும் உபதேசமும் செய்யமுடியாததை அவரது அன்பும், மலர்ச்சியும், நகைச்சுவையுமே சாதித்துவிட்டன.

அதாவது, தற்கொலை எண்ணத்தையே விட்டு விட்டார், காப்டன்!

இப்படி முக்கால் மணி ஆனபின் இவருக்கு மீண்டும் உயிரளித்த நண்பர், "இங்கே உன் அகத்துக்காரியும் இல்லை. நாங்கள் தங்கினால் சிரமம்தான். பக்கத்திலேயே வேறொரு நண்பர் இருக்கிறார். அங்கே தங்குகிறோம்" என்று சொல்லி, அந்த இன்னொரு நண்பரின் விலாசத்தைக் கொடுத்துவிட்டு, மனைவி, வேலையாள் சகிதம் பெட்டியும் படுக்கையுமாகக் கிளம்பிவிட்டார்.

காப்டன் திரும்பி உள்ளே வந்து துப்பாக்கியை அதனிடத்தில் வைப்பதற்காகத் தலையணைக்குக் கீழ் கைவிட்டார்.

காணோம்!

அவர் உள்ளம் ஒரு விம்மல் விம்மியது. ஒருகால், ஒருகால்... அப்படியும் இருக்குமோ?

கல்லூரி நண்பர் கொடுத்த விலாசத்துக்கு ஓடினார். 'அப்படியும் இருக்குமோ?' என எண்ணினாரே, அப்படியேதான் இருந்தது. அவ்விலாசத்தில் குறிப்பிட்ட எவருமே இருக்கவில்லை.

"நொடியின் ஒரு சிறு பொடிக்குள் புகுந்து அடியேனை வெடியிலிருந்து மீட்ட பிரபோ, ஸாயி" என்று ஆவி கூவியழைக்க வீடு திரும்பினார்.

Koviloor Digital Library

நந்திச் சேவகர் வந்தார். கோடைக்காவலிலிருந்து, கோடையும் கானலும் தெரியாத குளிர் பூம்புனலான அருளாளனிடமிருந்து தந்தி வந்திருந்தது! அவரிடம் ஆயுதம் பத்திரமாக இருக்கிறதாம்!

மூவராக வந்து விளையாடியதை என்னென்று சொல்ல? ''ஏகதா பவதி த்ரிதா பவதி''—''ஒன்று மூன்றாகிறது'' என்ற வேத வாக்கியத்தை எப்படி விசித்திரமாக விளக்கிவிட்டார்!

* * *

போபால் மட்டும்தானா என்ன? பூபாலனத்தில் அமெரிக்கா வரை விரிகிறது ஐயனின் ஆபத்ஸஹாயம். அமெரிக்க விமானப் படை ஸிவில் பாட்ரோலைச் சேர்ந்த கேப்டன் சார்லஸ் பென் விமானம் ஓட்டிக் கொண்டிருக்கிறார். லாஸ் ஏஞ்ஜெல்லைச் சேர்ந்த இவருடைய 'கார்டியன் ஏஞ்ஜல்' (காப்புத் தேவதை) நம் பாபாதான்.

காணமற் போன சில விமானங்கள் எங்கு போயின என்று கண்டுபிடித்து மீட்கும் பணியில் பென் ஈடுபட்டிருக்கையில், இவரது விமானமே காணமற் போகிற துர்க்கதிக்கு ஆளாக இருந்தது. மற்ற விமானங்களின் தடம் தெரியாமல் இவர் திண்டாடியது மட்டுமின்றி, பெட்ரோல் டாங்க் வெடித்து விண்ட் ஸ்க்ரீன் மீது பெட்ரோல் பீய்ச்சி அடித்தது. விமானம் நெருப்புப் பிடித்து எரிந்து விழ வேண்டியதுதான்.

அந்த உச்சகட்டத்தில், புட்டபர்த்திக்குப் பதினாயிரம் மைல்களுக்கப்பால் பதினாயிரம் அடி உயரத்தில், அந்த விமானத்தில் பாபா ஸாக்ஷாத்தாகப் பென்னுக்குப் பக்கத்தில் பொன்னாக நின்று புன்னகைக்கிறார்!

விமானத்துக்குள் பெட்ரோல் வெடிப்பு; வெளியே மலைச் சிகரங்களில் மோதிக் கொண்டு சீறும் 'ஹை ஸ்டார்ம்' எனும் பயங்கரப் பனிப்புயல்! பென் துளிக் கலங்கவில்லை. அந்தப் பைலட்டின் வாழ்க்கைப் பைலட்டான பாபாதான் பக்கத்தே உள்ளாரே!

பென்னிடம் ''இந்த விசையை இப்படி முடுக்கு; அந்த விசையை அப்படித் திருகு'' என்று சொல்லிக் கொடுத்துக் கொண்டேயிருக்கிறார் ஸ்வாமி. விமானம் விபத்தின்றிப் பறக்கிறது.

ஆத்மாவை நெருப்பு எரிக்காது, காற்று அசைக்காது என்பார்கள். ஆத்மநாயகன் அருளில் ஜடமான விமானத்தைக்கூட நெருப்பும் காற்றும் தொடவில்லை. விபத்திலிருந்து காத்ததுமட்டுமில்லை. ''மற்ற பிளேன்களைத்தானே தேடுகிறாய்? நீ ஏன் தேட வேண்டும்? நான் தேடித் தருகிறேன்'' என்கிறது தேடக் கிடைக்காத தெய்வம், தேடாமலே கிட்டிவந்து!

மெக்ஸிகோவும் அமெரிக்காவும் சந்திக்கும் டிகேட்டில் இருக்கிறது 'ஸாயி நிலையம்.' இந்திராதேவி என்ற இந்தியப் பெயர் சூட்டிக் கொண்டுள்ள அமெரிக்க பிரஜையான ருஷ்ய மூதாட்டியை முன்பே கண்டிருக்கிறோம். "ஸாயி நிலையம்" என்பது அவரது யோகப்பயிற்சிக் கூடமே. உலகம் முழுதும் சென்று வரும், பதினொரு மொழி நிபுணரும் "இருளிலிருந்து ஒளிக்கு" என்ற தத்வத்தைப் பல தேசங்களில் போதித்தவருமான இந்திரா தேவி, ஆதியில் மைசூர் கிருஷ்ணமாச்சாரியர் என்ற மஹா யோகியிடம் பயின்றவர். முடிவில் 'யோகேச்வரன் இவனே' என்று பாபாவிடம் வந்துவிட்டார்.

அதன்பின் அமெரிக்காவில் யோக ஆஸனங்களை இவர் போதனை செய்யத் தொடங்கினார். ஒருநாள் போதனையின்போது ஒவ்வொரு பௌதிகச் செயலோடும் ஒவ்வொரு மானஸிக பாவனையையும் சேர்த்துக் கொள்ளுமாறு பாடம் சொல்லிக் கொண்டே போனார். உதாரணமாக ஓர் அவயவத்தைத் தளர்த்தி விட வேண்டியானால், 'நாம் இறைவனுக்கு முன் மிக எளியவர் என்ற எண்ணத்தோடு தளர்த்துங்கள்' என்றார்; கையை ஊன்றச் சொல்லும்போது 'ஸர்வ ஆதாரமான பகவானையே ஊன்று கோலாகப் பிடிக்கும் உணர்வை அக்கையில் ஊட்டிக் கொள்ளுங்கள்' என்றார். ஜீவத்தையைத் தசைகளோடு சேர்த்துத் தகைவது போல் ஒவ்வொரு யோக அப்யாஸத்திலும் அன்பான மனோ பாவனைகளைக் கலந்து கலந்து அளித்தார்.

சிடர்களுக்கு வியப்பு—"இதென்ன ஹட யோகம், ராஜ யோகம் எதிலும் சேராத புது யோகம்!" என்று. ஆனால் இவ்விதம் உடலசைவோடு உணர்வசைவுகளைச் சேர்த்து தேகத்தைப் பிரேம மயமாக்கிக் கொண்டு ஆஸனங்கள் பயிலும் போதோ இதுவரை கிட்டா புனித ஆனந்தம் தெரிகிறது!

"மாதாஜி, இதென்ன யோகம்?" எனக் கேட்டனர்.

"ஸாயி யோகம்" என்றார் இந்திரா பளிச்சென.

"இதைத் தாங்கள் எப்போது கற்றீர்கள்?" என்று சிடர்கள் கேட்டதும் அம்மையாருக்குள்ளே மின்னல் வெட்டியது!

என்ன விந்தை! அப்போது, அவர்களுக்குப் பாடம் சொல்லித் தருகிற அப்போதேதான், இவருக்கும் இந்த 'ஸாயியோகம்' தெரிய வந்திருக்கிறது! ஸூக்ஷ்ம ஸாயிகுரு இவருள்ளிருந்து போதிக்க, அதையே இவர் வெளியே மொழிந்திருக்கிறார்!

சரி, இந்த யோக சமாசாரம் இதோடு இருக்கட்டும்; நாம் விபத்துத் தீர்க்கும் வித்தகத்துக்கு வருவோம்.

1970 ஸெப்டெம்பர் முடிவில் இந்திராதேவி சிகாகோ சென்றிருக்கையில், டிகேட்டில் பயங்கரக் காட்டுத் தீ மூண்டு 4500

Koviloor Digital Library

ஏக்கர் பரப்பளவை பஸ்மீகரமாக்கிவிட்டதாகச் செய்தித்தாள்களில் பார்த்தார். அந்த டிகேட் பகுதியில்தான் இவரது ஸாயி நிலையம் இருந்தது.

இந்திராதேவி உண்மை யோகினியாதலால் கலங்கவில்லை. 'அது பகவான் பாபாவுக்கு அர்ப்பணமான இடம். அவர் பார்த்துக் கொள்கிறார். அது எரிந்து போயிருந்தாலும் சரி, அதுதான் பகவானுக்கு சம்மதம் என்று அர்த்தம். அவருக்கு எது சம்மதமோ அதுதான் உண்மையில் நல்லது. கொடுமைக்கும் அவர் சம்மதிக்கிறார் எனில், அதற்கு நாம் அறியாத ஒரு தர்மமான காரணம் இருக்கத்தான் வேண்டும்'' என்று நிம்மதியாகத் திரும்பி வந்தார்.

ஸாயி நிலையம் எரியாமலே நின்றது.

அங்கிருந்த ஸாதகர்கள் பகவானின் அற்புதத்தைச் சொல்லிச் சொல்லிக் குதித்தனர். நெருப்பு நெருங்கி வந்ததும் இவர்கள் பக்கத்துக் குன்றுச்சிக்கு ஓடினராம். அக்னி பகவான் திருவிளையாடலை முடித்துத் தணிந்த பின்பே திரும்பினர். ''ஸாயிநிலையம்'' முழுவதற்கும் நெருப்புக் கடவுள் கருப்புப் பூ[illegible]டும் கொடுத்துவிட்டுச் சென்றானே ஒழிய, அதை எரிக்கத் [illegible]வில்லை. அதுவும் பாபாவின் பூஜையறையிலோ, இந்த[illegible]யின்டிங்' வேலை கூடச் செய்யாமலே, அதை வெள்[illegible]ரென்று விட்டுச் சென்றான்! 'நெருப்பையும் எரி[illegible]என்று திருப்புகழ் சொன்ன திறன்தான்! சில்லென்ற நீ[illegible] நெருப்பை எரித்து விடுகிறது—ஸாயியின் கருணை மழை[illegible] நெருப்பை எரித்தது!

மீண்டும் அக்னி படையெடு[illegible]அதே ராஞ்சோ குசுமாப் பிரதேசத்தை, 1971 ஜூலைத் [illegible]க்கத்தில். வாயுதேவன் பரம சகாயம் செய்ய, தீச்சேனை ம[illegible]வென்று முன்னேறி இதோ ஸாயி நிலையத்தை நெருங்கி விட்ட[illegible]!

இந்திரா, அவரது கணவர், டிரைவர் அல்ஃபான்ஸோ ஆகிய மூவரும் வெளியே சென்று திரும்புகையில் இதைக் கண்டனர். ஆயினும், வெளியிலேயே இருந்துவிடாமல், நெருப்பு நெருங்கும் நிலையத்துக்குள்ளே சென்றனர்—அத்தனை குண்டு தைரியம்! அதுவல்லவா உண்மை நம்பிக்கை!

இவர்கள் வருமுன்பே மற்ற ஸாதகர்களும் வீட்டாரும் பக்கத்திலுள்ள குன்றுக்கு ஓடியாயிற்று!

இந்திரா தியானத்தில் அமர்ந்தார். ''பாபா பகவான்! உங்களுக்கு எல்லாம் தெரியுமாயினும், நீங்களே ஆபத்துக் காலத்தில் இந்த மோதிரத்துள் தோன்றும் உங்களிடம் முறையிடச் சொல்லியிருக்கிறீர்கள் அல்லவா, அதனால் சொல்கிறேன். இதோ காட்டுத் தீ ஸாயி நிலையத்தை நெருங்குகிறது. வெறுமே விஷயத்தைச் சொன்னேன். முறையிடவில்லை. உங்கள் சித்தப்படி ஆகட்டும்'' என்று பாபாவிடம் சொன்னார்.

Koviloor Digital Library

விபத்து வேளையில் பாபா அவரது மோதிரத்திலேயே அமர்ந்த மட்டும் தெரிவார். அந்த சமயத்தில் பாபா எங்கே எப்படி இருக்கிறாரோ, அப்படியே இந்த மோதிரத்துள் தெரிவார்! ஒருமுறை ஒரு வெள்ளைக் காரிலிருந்து அவர் இறங்குவதாகத் தெரிந்தது. பிறகு இந்திரா விசாரணை செய்து, அவர் அச்சமயத்தில் ஒரு வெள்ளைக்காரில் பயணம் முடித்து இறங்கினார் என்று தெரிந்துகொண்டார்!

இப்போதும் மோதிரத்தில் தெரிந்த மாதிரத்தோனிடம் பேசினார் அம்மாது.

'விர் விர்' என்று வந்துகொண்டிருந்த அக்னி அலைகள் ஏனோ இப்போது நெருங்குவதாகவே தெரியவில்லை! மூவரும் பால்கனிக்கு வந்து பார்த்தால்...

ஸாயி பக்தர்களாலும்கூட நம்பவொண்ணா அதிசயம்!

நிலையத்துக்குச் சற்றுத்தள்ளி நெருப்பு ஒரு சுவர்போல் அப்படியே ஸ்தம்பித்து நின்றது!

திடீரெனக் காற்றின் திசை மாறிற்று. திக்குத் துணையாக இருந்த காற்று எப்படியோ ஒரு சுழி சுழித்துக் கொண்டு திரும்பி விட்டது! நிலையத்திலிருந்து நெருப்பை நோக்கிச் சூறாவளிக் காற்று பாய்ந்து அதைப் பிடித்துத் தள்ளியது; துரத்தித் துரத்திச் சென்றது. அடக்கி, ஒடுக்கி அடிபணிய வைத்தது!

தங்கள் கைமீறிய விஷயம் என்று சளைத்துப் பின் வாங்கிக் கொண்ட மெக்ஸிகரான தீயணைப்புக்காரர்கள் இவ்வதிசயத்தைக் கண்டு கூவினர்: "மிலாக்ரோ, ஸெஞோரா!" ("அம்மணி! அற்புதம்!")

பாபாவிடமிருந்து உடனே வரச்சொல்லித் தந்தி வந்தது. புட்டபர்த்திக்குப் பறந்தார் இந்திரா. இந்திரையாம் மஹாலக்ஷ்மி பொறித்த பதக்கம் ஒன்றை அவர் கையில் வைத்த பாபா, "இது நிலையத்துக்கு ரக்ஷை, இனி நெருப்பில்லை" (No more fires) என்றார்.

வேதம் மறுபடி வாழ்கிறது, நம் வித்தகன் வரலாற்றிலே! நாற்புறமும் சூழ்ந்த நெருப்பிலிருந்து அத்ரி மஹர்ஷியை அச்வினி தேவர் காத்தனர் என்ற வேதக் கதையை இனி நம்பலாம்தானே?

அன்று நிலையத்தைத் தீ நெருங்கியபோது வெளியே ஓடி விட்ட மாதர்கள் தங்கள் உயிரையே கண்களில் தேக்கிக்கொண்டு "மாதாஜி என்னவாரோ?" என்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். நெருப்பு நிலைத்து நின்றதையும், பிறகு திரும்பி ஓடினதையும் பார்த்தனர். பாபாவிடம் இதுவரை பக்தியே கொள்ளாத லின் என்பவளின் கண்களிலிருந்து மடை பெருகிற்று.

"ஸாயி பாபா இதோ இருக்கிறார்" என்று விசும்பினாள்.

Koviloor Digital Library

அத்தியாயம்—39

"குண்டனே, வெண்டனே, ஜுண்டனே, இண்டனே".

காட்டு வழியானாலும், கள்ளர் பயமானாலும்
இரவிற் பகலிலே எந்நேரமானாலும்
சிரமத்தைப் பார்ப்பதில்லை, தேவரீர் தம்முடனே
சுற்றுவேன், தங்களுக்கோர் துன்பமுறாமற் காப்பேன்

— பாரதியாரிடம் கண்ணன் சேவகனாக மொழிந்தது

காட்டுத் திக்கு பக்தரைக் காட்டிக்கொடுக்காமல் அதைக் கட்டிவைத்து அழித்தது ஒரு லீலை. தாமே திக்குள் பாய்ந்து காப்பதோ ஷிர்டிபாபாவை நினைப்பூட்டும் மற்றொரு விதப் பிரேமை விளையாட்டு!

1959 ஜூன் 21-ந் தேதி பகல் ஒன்றரை மணிக்குப் பிரசாந்தி நிலயத்தில் பாபா தமக்கு டெம்பரேச்சர் பார்க்கச் சொன்னார். 104.5 டிகிரி இருந்தது! 'சிவராத்ரி கூட அருகில் இல்லையே, ஏன், இந்த தாப ஜுரம்?' என்று அடியாருக்குப் புரியவில்லை.

கருணையின் தாபம்தான்! அநுதாபம்தான்! பரிதாபம்தான்!

ஐந்து நிமிஷத்துக்குப் பின் மீண்டும் டெம்பரேச்சர் பார்க்கச் சொன்னார்.

நார்மல்.

ஆர்வத்தைக் கிளப்பிவிட்டுப் பேசாமலே இருந்துவிட்டார்.

இரவு ஒன்பதரைக்கு அன்பர் பலர் சூழ உரையாடுகையில் சென்னை இளைஞர் ஒருவரை நோக்கி, ''வீட்டுக்குப் போன பின் அம்மாவிடம் குத்துவிளக்கைப்பற்றி இன்னம் அவளுக்கு ஜாக்கிரதை வேண்டும் என்று சொல்'' என்றார்.

Koviloor Digital Library

ஆர்வ விளிம்பில் இருந்தவர்களுக்கு இது போதாதா? 'விட்டுக்குப் போகிற மட்டும் காத்திருப்பானேன்?' என்று அப்போதே செயினுக்கு ட்ரங்க்—கால் போட்டார் இளைஞர்.

அந்த அம்மாள் ஃபோனில் எல்லா விவரமும் சொன்னார். பகல் ஒன்றரைக்குப் பூஜை அறை விளக்கு இவரது சேலையில் பிடித்துக்கொண்டதாம். ஆனால் எவ்வாறோ அது எரியாமல் பாபா அணைத்துவிட்டார்! ஸூக்ஷ்ம உடல் நெருப்பில் புகுந்ததன் பிரதிபலிப்புத்தான் இங்கே ஸ்தூலத்தில் 104.5 டிகிரியாகத் தெரிந்தது!

* * *

சகோதரரோடு சண்டை போட்டுக்கொண்டு, "என் பாகம் வேண்டியதில்லை" என்று ஓடிவிட்ட பீமையா புட்டபர்த்தியில் பிச்சை எடுத்துப் பிழைக்கத் தொடங்கினார். பாபா அவரை வாங்கு வாங்கு என்று வாங்கினார். " என் பக்தன் என்கிறாய், நடிமாப் பிள்ளையாயிருந்து கொண்டு பிச்சை வாங்குகிறாயே, வெட்கமாயில்லை? இங்கே இந்தனை பேரிடம் யாசிப்பவன், உடன் பிறந்தானிடம் தழைந்துபோனால் குறைந்துவிடுமோ? இங்கே உன்னை க்ஷணம் கூட இருக்கவிடமாட்டேன். தொலைந்து போ!" என்றார்.

"தொலைந்து போ" என்று பாபா சொல்லிவிட்டாரே என்ற தாப வேகத்தில் பீமையா நேரே பெனுகொண்டாவுக்குப்போய், இரவில் ரயில் தண்டவாளத்தில் நீள நெடுகப் படுத்துவிட்டார்!

தண்டவாளத்தினூடே "டண் டண்" என்று ரயில் சக்கரங்களின் ஓசை அதிர்கிறது.

கரணம் தப்பினால் மரணம் என்கிற கணத் துகளுக்குள் பாபா காப்புத் தரும் அற்புதத்தை என்னதான் சொல்வது?

அதிவிசையுடன் ஒரு கை தன்னைத் தண்டவாளத்திலிருந்து இழுத்து, ரயில் ட்ராக்கில் உருட்டிவிடுவதை உணர்ந்தார் பீமையா.

எழுந்திருந்தார், ரயில் வேகமாக ஓடிக்கொண்டிருப்பதைப் பார்த்தார்.

"நீ இருக்கிறாய் என்னை ரக்ஷிக்க; நிச்சயமாக இருக்கிறாய் அப்பா! மரண எல்லையில் காப்பவன் குடும்பத் தொல்லையில் மட்டும் காக்க மாட்டாயா?" என்று சொல்லிக்கொண்டு வீடு திரும்பினார்.

சகோதரரோடு ஒத்துப்போய் ஸமாதானமாய் வாழலானார்.

* * *

தண்டவாளத்திலிருந்து காத்தது இருக்கட்டும்! ரயில் விபத்திலும் இந்தக் காப்புச் சக்தி செயற்பட்டதுண்டு.

Koviloor Digital Library

1969 டிஸம்பர் முடிவில் பேய் மழையும் பெரு வெள்ளமும் வந்து பாம்பன் பாலமே அடித்துப் போய்விட்டது நினைவிருக்கிறதல்லவா? டிஸம்பர் 23-ந் தேதி பேராசிரியர் ஜி.பி. பிள்ளை திருவனந்தபுரத்திலிருந்து சென்னை வந்து கொண்டிருக்கிறார். ரயிலை விடுவதா வேண்டாமா என்று யோசித்தே கடைசியில் விட்டிருக்கிறார்கள். அப்படி மழை வெளுத்துக் கட்டுகிறது! மதுரையில் மூன்றுமணி நிறுத்தப்பட்டு, பிறகு முக்கிமுனகிக் கொண்டு நகர்கிறது ரயில், புயல் மழையிலே.

பள்ளப்பட்டி ஸ்டேஷன் தாண்டிற்று. இரவு மணி 9.30. படுக்கையை விரித்தார் பிள்ளை.

பூமி வெடித்தாற்போல் பேரொலி!

அடுத்த கணம் பேராசிரியர் நீரோட்டம் ஒன்றின்கீழ் முழுகிக் கொண்டிருக்கிறார். அவரை நன்றாக முழுக்கி மூச்சை நெரித்துவிட வேண்டுமென்பது போல், ரயில் பெட்டியின் சிதறிய பாகங்கள் அவர்மீது அழுத்துகின்றன.

ஆம், ரயில் விபத்துத்தான். பெட்டி தடம் புரண்டு முறிந்து விழுந்துவிட்டது!

''ஸாயிராம்'' என்று இதயத்தின் அடியிலிருந்து கூவினார் பிள்ளை.

நாம மகிமைதான் என்னே!

மேலே ஓடிக்கொண்டிருந்த பிரவாகம் சிறிது சிறிதாக அடங்கத் தொடங்கிற்று! பிள்ளையை அழுத்திக் கொண்டிருந்த ரயில் பெட்டிப் பாகங்கள் கலகலவென அவர் மீதிருந்து விலகி உதிர்ந்தன.

''ராஜன்!'' என்று தீனமாகப் பிளிறினார்.

தாம் காக்கப்பட்டோம் என்ற நிம்மதி பிள்ளைக்கு இல்லை. உடன்வந்த அருமைப்பிள்ளை ராஜன் என்ன ஆனானோ, நீந்தவும் தெரியாதவனாயிற்றே என்று தந்தையுள்ளம் தவித்தது.

''அப்பா, அப்பா'' என்று தூரத்தேயிருந்து மகனின் குரல் கேட்டது.

''பாபா, பாபா'' என்று நன்றிப் பெருக்கில் திணறினர் தந்தையும் மகனும்.

''அப்பா, நொறுங்கிவிழுந்த ரயிலின் ஒரு சின்னஞ்சிறு துண்டின் மேல் நான் எப்படி மிதந்து போனேன் என்று புரியவேயில்லை. அது என்னை ஒரு பாறைக்குக் கொண்டு சேர்த்து விட்டுப் போய்விட்டது. பாபாதான், பாபாதான்'' — திக்கினான் மகன்.

Koviloor Digital Library

ரயில் விழவில்லை. ஆனால் ரயிலிலிருந்து விழுந்துவிட்டார் அனந்தப்பூர் வக்கீல் தோட்டப்பள்ளி சிதம்பரையா. 1965—பிப்ரவரி 7-ந் தேதி இரவு சென்னையிலிருந்து யாத்திரை செய்வதற்காக பம்பாய் மெயிலில் புறப்பட்டவர், பேஸின்பிரிட்ஜ் தாண்டியதும் குளியலறையிலிருந்து திரும்புகையில், திறந்திருந்த கதவு வழியாக வெளியே....

விழுந்துவிட்டார்?

இல்லை, விழவில்லை!

ஓடும் ரயிலிலிருந்து விழுந்தால் பலமான அடிபட்டு உயிரே போயிருக்குமே! குறைந்த பக்ஷம் எலும்பு முறிந்திருக்குமே! இவருக்கோ ஒரு சிராய்ப்பு, சுளுக்குக்கூட இல்லை.

ஆம், விழவேயில்லை. 'ஐயையோ! ரயிலுக்கு வெளியே காலை வைத்து விட்டோமே' என்று எந்தக் கணம் இவர் உணர்ந்தாரோ, அதே கணத்தில் ஒரு சூக்ஷ்மக்கரம் தம்மைப் பலமாகப் பற்றி இழுத்துத் தாங்குவதை உணர்ந்தார்!

அடுத்த க்ஷணம் மெத்தென்ற புல்தரையில் சுகமே உட்கார்ந்துகொண்டிருப்பதை அறிந்தார் சிதம்பரையா.

பம்பாய் மெயில் அவரை விட்டு விட்டு 'கூ'வென்று ஸாயி மகிமையைக் கூவிக்கொண்டு போய்விட்டது!

இதே இரவு பத்துமணிக்கு அனந்தப்பூரில் அவரது இல்லத்தில் ஒரு ஜோதி வெள்ளம். தூங்கிக் கொண்டிருந்த ஸ்ரீமதி சிதம்பரையா அந்த வெளிச்சத்திலேயே விழித்துக் கொண்டார். 1944—ல் பாபா அவ்வீட்டில் பாதம் பதித்ததிலிருந்து எத்தனையோ அற்புதங்கள் நிகழ்ந்திருந்தாலும், இந்த வெளிச்ச வெள்ளம் பேரதிசயமாக இருந்தது.

மறுநாள் புட்டபர்த்திக்கு அந்த அம்மை ஓடினார்.

''வாம்மா! மதராஸ் போக வேண்டியவள் இங்கு வந்திருக்கிறாய்!'' என்று வரவேற்ற பாபா பேஸின் பிரிட்ஜ் சம்பவத்தை இம்மியும் கூட விடாமல் வர்ணித்தார். பிற்பாடு நடந்த கதையையும் சொன்னார். ''உன் புருஷனுக்கு ஒரு காயமும் நோவும் இல்லாவிட்டாலும் பேஸின் பிரிட்ஜ் ஸ்டேஷன்காரர்கள் ஜெனரல் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்க் காட்டினார்கள். அங்கே டாக்டர்களுக்கே அதிசயம், எப்படி ஓடும் மெயிலிலிருந்து விழுந்த கிழவர் ஒரு கீறல்கூட இல்லாமல் தப்பினார் என்று! உன் அகத்துக்காரரின் சாமான்கள் கர்நூல் ஸ்டேஷனில் பத்திரமாக எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன!''

* * *

ரயில் ஓடிக்கொண்டிருக்கிறது, உத்தரப்பிரதேசத்தில் பரேலியிலிருந்து நைனிடாலுக்கு. பாபாவின் பரமபக்தரான கவர்னர் டாக்டர் பி. ராமகிருஷ்ண ராவும், அவரது மனைவியார்

Koviloor Digital Library

ஸ்ரீமதி அனந்தலக்ஷ்மியும் அதில் பிரயாணம் செய்து கொண்டிருக்கின்றவர்.

டாக்டர் ராவ் உண்மையான காந்தியவாதியாதலால், கவர்னருக்குரிய பரிவாரம் ஏதுமின்றிச் செல்கிறார். இருவர் மட்டுமே பயணம் செய்யும் தனிப் பகுதி அது.

இரவு மணி பதினொன்று. மின்விசிறி திடீரென ஏராளமாகப் பொறிகளை வாரியிறைக்கத் தொடங்குகிறது. ஸ்விட்சை அணைத்தும் பயனில்லை. சோளப் பொறிவாணமாகச் சுடர்கள் கொட்டியபடி உள்ளன.

அபாய சங்கிலியை எத்தனை தேடியும் அகப்படவில்லை! கவர்னருக்கே இத்தனை அழகான பெட்டி ஒதுக்கியிருக்கிறார்கள்!

அந்த நிலையில் ஸாயிராம ஜபம் தவிர வேறென்ன செய்ய?

வெளியே பெட்டிக்கதவை யாரோ தட்டினார்கள்.

ஓடுகிற ரயிலில் யார், எப்படி வெளியிலிருந்து தட்ட முடியும் என்று புரியாவிட்டாலும் ராமகிருஷ்ண ராவ் சென்று பார்த்தார்.

காக்கி யூனிஃபாரம் அணிந்த மின்சாரத் தொழிலாளி ஒருவன் வெளியே தொங்கிக்கொண்டு கதவைத் தட்டுகிறான்!

கதவைத் திறந்து அவனை உள்ளே விட்டார் ஸ்ரீ ராவ்.

இவர்களிடம் ஒரு வார்த்தை பேசாமல் அவன் நேரே விசிறியருகில் சென்றான். முறத்தில் புடைத்தால் உமி பறக்குமே, அதுபோல் பொழிந்துகொண்டிருந்த தீப் பொறிகளிடையே அலுங்காமல் நின்று, ஏதோ ஆயுதங்களை எடுத்து ரிப்பேர் செய்தான்.

வாணவேடிக்கை நின்றது.

''நீங்கள் படுக்கலாம்'' என்று ராவ் தம்பதியரிடம் கூறிவிட்டு மின்சார மெக்கானிக் கதவருகே போய் உட்கார்ந்தான்.

ஸ்ரீமதி அனந்தலக்ஷ்மி ''இது என்னவோ புதிராயிருக்கிறது. ஓடும் ரயிலுக்குள் ஒருத்தன் வந்தான் என்றால் அவன் பழக்கப்பட்ட ரயில் கொள்ளைக்காரனாகத்தான் இருக்க வேண்டும். ஃபான் கெட்டுப் போனது, அதை ரிப்பேர் செய்தது எல்லாமே ஏதோ சதித்திட்டமாக இருக்கலாம். இவனை இங்கே வைத்துக்கொண்டு எப்படித் தூங்குவது?'' என்று ராவிடம் கிசுகிசுத்தார்.

மெகானிக் இவர்களிடம் வந்தான்.

''நான் போறேனுங்க, தயவுசெஞ்சு கதவைப் போட்டுக்கறீங்களா?'' என்றான்.

Koviloor Digital Library

எப்படிப் போவான் என்று புரியாமலே ராவ் அவன் பின்னாலே போனார்.

அவன் கதவைத் திறந்தான்.

வெளிக்காற்று உள்ளே விர்ரென்று வந்தது.

காற்றோடு காற்றாக அவன் போய்விட்டானா?

'கொள்ளைக்காரர்கள் என்ன அசகாய சூரத்தனம் தான் செய்யமாட்டார்கள்? அல்லது கவர்னர் பெட்டியானதால், இங்கே விசிறி கெட்டுப் போனதைத் தெரிந்துகொள்ள கார்புடம் கருவி யிருக்கலாம். ஓடும் ரயிலில் பெட்டிக்குப் பெட்டி தாவிச் செல்கிற வேலைக்காரர்களும் இருக்கக்கூடுமோ என்னவோ?' என்று நினைத்துக்கொண்டனர்.

ஒரு மாதம் கழித்து கவர்னர் கான்பூரிலிருந்து காசிக்கு விமானத்தில் சென்றார். காசியில் விமானம் இறங்கவொண்ணாதபடி அண்டர்—காரியேஜ் விடுபட மறுத்தது. விமானம் சுற்றிச் சுற்றி வந்தது. பெட்ரோலும் தீர்ந்துகொண்டே இருந்தது. வேறு வழியில்லாததால் க்ராஷ்-லாண்டிங் செய்யப் பைலட்டுக்கு அநுமதி தந்தார் டாக்டர் ராவ். ஆபத்துக்கு ஆஸ்பதமான நடவடிக்கை தான்!

கீழே விமான தளத்தில் நெருப்பணைக்கும் எஞ்ஜின்கள் தயாராக நின்றன. மற்ற ஆபத்துதவி ஏற்பாடுகளும் செய்யப் பட்டன.

பைலட்டின் கண்கள் கவர்னருடைய அந்தரங்கக் காப்பாளர் அணிந்திருந்த மோதிரத்தின்மீது விழுந்தன. அதிலே பாபா படம் பொறித்திருந்தது. பைலட்டுக்கு என்ன தோன்றிற்றோ, காப்பாளரிடம், ''க்ராஷ்—லாண்ட் செய்வது அபாயகரமானது. பாபா-மோதிரம் போட்டிருக்கும் உங்கள் கையால் இந்த லிவரைக் கொஞ்சம் இழுத்துப் பாருங்கள். அண்டர்—காரியேஜ் விடுபட் டாலும் விடுபடலாம்'' என்றார்.

பாபாவேதான் அவரை அப்படி எண்ணவும் பேசவும் வைத் தாரா?

அந்தரங்கக் காப்பாளர் அப்படியே செய்தார்.

ஒவ்வொருவரின் இதய அந்தரங்கத்துள்ளும் விளங்கும் மகா காப்பாளர் கை கொடுத்துவிட்டார்!

ஏ.டி.ஸி.யின் கைபட்ட மாத்திரத்தில் அண்டர்—காரியேஜ் விடுபட்டுவிட்டது!

விமானத்தை எளிதாகத் தரைக்குக் கொண்டு சேர்த்தார் விமானி.

Koviloor Digital Library

பெங்களூரிலிருந்த பாபாவுக்குத் தமது நன்றிப் பெருக்கைச் சொல்வதற்காக ஃபோன் போட்டார் ஸ்ரீமதி அனந்தலக்ஷ்மி அம்மையார்.

''அது சரி, ரயில் சமாசாரத்துக்கு ஏன் 'தாங்க்' பண்ண வில்லே?'' என்று மறுகோடியில் கேட்டார் பகவான். (ஆஹா, பகவான் தொலைபேசியிலே அதி நெருக்கத்துடன் பேசும் அழகுண்டே!)

அது ஏதோ திருடர் கபடம் அல்லது மெகானிக் சாதுரியம் என்றே நினைத்து மறந்துவிட்டிருந்தார் அந்த அம்மாள்.

''என்ன? மறந்து போச்சா? நான் ஓடோடி வந்து மெகானிக் வேலை செய்தேன். நீ கூட என்னைக் கொள்ளைக்காரன் என்று நினைத்தாயே!'' — 'படா சித்த சோர்' என்று பாடப்படும் உள்ளம் கவர் கள்வன் தான் பேசுகிறார்!

'எங்களுக்காக மெகானிக்காக வந்து சேவை செய்து, அவப் பெயரையும் வாங்கிக்கொண்டாயா?' என்று நெகிழ்ந்தார் ஸ்ரீமதி ராவ்.

* * *

'மின் மருத்துவக்கலை நிபுணர்' என்று பாபாவை அகஸ்திய நாடி கூறியது. இங்கே மின் விசிறியைச் சரி செய்தார். ''இன் சாரமும் மின்சாரமும்'' என்ற தலைப்பில் மேலும் பார்ப்போம்:

1973 தீபாவளிக்கு முதல் நாள் ஹோஷியார்பூர் ஸத்ய ஸாயி ஸேவா ஸமிதி செயலாளர் ஸ்ரீ ஏ. காமேச்வர், படங்களை எல்லாம் துடைத்துச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தார். கவனக் குறைவால் அவரது கரம் ஒரு மின்—ஓட்டம் உள்ள லைவ்—ஒயரில் பட்டுவிட்டது. அடுத்த க்ஷணம் மின் தாக்குதலில் சாக வேண்டியதுதான். பௌதிக உலகிலேயே அதிவேகம் வாய்ந்த மின்சாரத்தையும் விட விரைந்து வந்தது ஐயனின் அருள்! சுவரில் மாட்டியிருந்த பாபாவின் படம் அறுந்து காமேசுவரின் கையை இழுக்கிற அந்த மின் கம்பியின்மீது தடாலென்று விழுந்தது; அது வெட்டுண்டது.

மயிரிழையில் ஓர் உயிர் காக்கப்பட்டது.

விழுந்த படத்திலும் ஒரு விரிசல் இல்லை!

மற்றொரு சமயம். பிரசாந்தி நிலயத்தில் அறுந்திருந்த ஒரு மின்கம்பியில் எப்படியோ சிக்கிவிட்டான் ஒரு சிறுவன். மெயின் ஸ்விட்சை அணைக்க அடியார் ஓடினால், அந்த மெயின் உள்ள அறையைப் பூட்டிக்கொண்டு நிலைய அலுவலர் எங்கோ போய்விட்டார். இருபது நிமிஷங்களுக்குப் பிறகு அவர் திரும்பி அறையைத் திறந்து, விசையை அணைக்கும் வரையில் சிறுவன் ஒயரிலேயே தொங்கிக் கொண்டிருந்தான்! அந்த அதிசயம் எப்படி

Koviloor Digital Library

நடந்ததெனில், ஸ்வாமி மாடி வராந்தாவிலிருந்து தமது மின் வெட்டும் தீக்ஷண்யப் பார்வையை அச்சிறுவன் மீதே அந்த இருபது நிமிஷங்களும் ஒருமுகப்படுத்தி யிருந்தார்!

மெயின் அணைந்ததும் பயல் தொப்பென விழுந்தான். உற்சாகமாக எழுந்து ஓடினான். ''உனக்குப் புனர் ஜன்மந்தான், போ'' என்று சொல்லிக்கொண்டே மேலிருந்து அவனிடம் இரண்டு ஆப்பிள்களை வீசினார், மெயினை அணைப்பதற்காக இருபது நிமிடம் ஆட்டம் போடாமல் தத்க்ஷணமே அவனை விடுவிக்கச் சக்தி படைத்தும் இப்படியொரு கூத்தடித்துத் தம் கண்ணின் திறத்தைக் காட்டிய கண்ணபிரான்.

இவற்றை எழுதும்போது, பாபா இன்னொரு சம்பவத்தை யும் கூறுமாறு ஸூக்ஷ்மமாகக் 'கிண்டி' விடுவது போலிருக் கிறது! இந் நூலாசிரியர் வசிக்கும் அம்பத்தூரிலேயே, ஒரு தாய்க்கு ஒரு மகனான ஓர் இளைஞன் பாபா பஜனுக்காகவே மின்சார ஜோடனை செய்து கொண்டிருந்தபோது ஷாக் அடித்து க்ஷணத்தில் உயிர் பிரிந்துவிட்டான்! கர்மாவின் போக்கையும், கருணையின் நீக்குப்போக்கையும் நாமெப்படி வகுத்துக் கூறுவது? ஆயினும் அக்கருணையின் அதித எழுச்சியில் அவர் அளித்த காப்புக் குச் சான்று ஒன்றல்ல, இரண்டல்ல. இத்தனை உதாரணங்களில் ரக்ஷித்தாரே என்று வாழ்த்தத்தான் நமக்கு வாய் உண்டே தவிர, ரக்ஷிக்காமல் விட்ட உதாரணங்களுக்காகக் குறை கூற நமக்கேது உரிமை?

கர்மத்தையும், கருணையையும் பாபா எப்படியெப்படி 'பாலன்ஸ்' செய்கிறார் என்று நாம் எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? இதற்கு உதாரணமாக இன்னொரு மின்சாரக் காப்பை யும் சொல்லலாம்.

கேரள நீதிபதி ஸ்ரீ பாலகிருஷ்ண எராடி ஸாயி பக்தர்களில் தலைசிறந்த ஒருவர். அநேகமாக ஸ்வாமியின் அத்யந்த பக்தர் வீட்டி லெல்லாம் தீராத கர்மத்தோடு ஒரு கேஸ் இருப்பது போலவே இவரது ஒரு புதல்வன் மன நோயாளியாக இருக்கிறான்.

ஒரு சமயம் ஸ்ரீ எராடி புதல்வனின் நோயை ஸ்வாமியிடம் விக்ஞாபித்துக் கொண்டதும் ஸ்வாமி, ''எனக்கில்லாத அக்கறையா? அவனை எலெக்ட்ரோக்யூட் ஆகாமல் காப்பாற்றியது யார்?'' என்றார். எராடியின் வாய் அடைத்துவிட்டது. ஆம், ஒருமுறை இவன் ஸ்விட்சில் கைவிட்டு ஏதோ செய்தபோது மின்சாரத் தாக்குக்கே ஆளாகியிருக்க வேண்டும். அப்போது பாபா தான் ஸூக்ஷ்மமாக அவனைப் பிடித்துத் தள்ளி மின் வீச்சிலிருந்து மீட்டார். எராடியோ அவரது மனையாளோ அல்ல, அன்று கணத் தின் ஒரு அறியார், எதிர்க்கவொண்ணாத சக்தி என ஸயன்ஸ் கூறும் மின்சாரத்தின் போக்கையே நலிவித்த அம்மையப்ப பாபா அவனது சித்தக் கோளாற்றைத்தானா தீர்க்க முடியாது? ஆனாலும் தீர்க்கவில்லையே!

இதுதான் கர்மம்—கருணை இவற்றிடை நடக்கிற தராசு திருவை!

Koviloor Digital Library

மேலே கண் பார்வையாலேயே விபத்துக்காளான சிறுவனைக் காத்ததாகக் கண்டோம். இதே கண்ணின் சக்தியில், விபத்தை விளைவிக்கவிருந்த விஷஜந்துவை அவர் விரட்டியதும் உண்டு.

மல்லிகைப் பந்தரின்கீழ் அமர்ந்திருந்த அந்தப் பிரசாந்தி நிலைய வாசிகள், தூரத்தேயிருந்து ஸ்வாமி தங்கள் தலைக்கு மேல் எதை அத்தனை உன்னிப்பாக, நிலைகுத்திட்டுப் பார்க்கிறார் என வியந்தனர்; தலையை நிமிர்த்திப் பார்த்தனர்.

அய்...யோ! இவர்கள் தலைக்கு வெகு வெகு அண்மையில் நாகப் பாம்பு அந்தப் பந்தரில் படமெடுத்துக் கொண்டிருக்கிறது! பாம்பு தானாகத் தீண்டாது எனினும் மனிதர்கள் நடமாட்டத்தில் தனக்கு ஆபத்து வருவதாக எண்ணித் தற்காப்பாக ஒரு போடு போட்டுவிடுமே! இப்போது இவர்கள் நகர்ந்தால்கூட அந்த பயங்கரம்தான் நிகழும்!

நிகழவொட்டாமல் செய்யவே ஸ்வாமி இன்னமும் அதை வைத்த கண் வாங்காமல் பார்க்கிறார். அரவமும் சரசரவென ஓடி எங்கோ மறைகிறது.

* *

பாம்புக் கடிக்கே ஆளானவரையும் ஸ்வாமி காத்ததுண்டு. ஒரு முறை பக்கத்துக் கிராம வாசிகள் பாம்பு தீண்டிய ஒரு பெண்ணைக் கயிற்றுக் கட்டிலில் போட்டுத் தூக்கிக்கொண்டு பிரசாந்தி நிலையத்துக்கு ஓடிவந்தனர். விரைத்து நீலம் பாய்ந்து கிடந்த அப்பெண் மரித்தே விட்டதாகத்தான் தோன்றியது.

அப்பூதி மகனுக்கு அப்பர் புரிந்த அருளைச் செய்ய அப்பன் வந்தார்; அப்பினார் விபூதியை அப்பெண் நெற்றியில்.

அவ்வளவுதான்! ஏராள பக்தர் காண அவள் கயிற்றுக் கட்டிலிலிருந்து துள்ளி எழுந்தாள். சாம்பிணமாக வந்தவள் அன்று நடந்தேயாக்கும் தன் கிராமத்துக்குத் திரும்பினாள்.

மீரா போல பக்தி சிகரத்தைப் பிடிக்காதவரையும் நஞ்சி லிருந்து காக்கிறார் நம் நவயுகக் கண்ணன்.

* * *

கள்வர்கள், கொலைகாரர்கள் முதலியோரிடமிருந்து பக்தருக்கு நம் ஸ்வாமி அளித்துவரும் ரக்ஷணை அருமையிலும் அருமையானது.

தியாகராஜ ஸ்வாமிகளை கோவூருக்கருகே ராமபிரான் திருடரிடமிருந்து காத்தான்; ஞான சம்பந்தரையும் பரிவாரங்களையும் திருவருணைக்கருகே சிவபெருமான் ரக்ஷித்தார் என்பது போன்ற

Koviloor Digital Library

சம்பவங்களை நினைப்பூட்டும் ஆபத்சகாயத் திருவிளையாடல்களை நம் ஐயன் பலப்பல முறை நிகழ்த்தியிருக்கிறார்.

* * *

இருபத்தைந்தாண்டுகளுக்கு முன் ஒரு நாள் பாபா பக்கத்திலிருந்த அடியார்களை எல்லாம் அடி அடி என்று அடிக்கத் தொடங்கி விட்டார்.

ஷிர்டிபாபா, பகவந்நம் ஸ்வாமிகள், சேஷாத்ரி ஸ்வாமிகள் முதலிய பல பெரியோர்கள் சில சமயங்களில் அடியாரை வாயில் வந்தபடி வைவதும், அடிப்பதும், உதைப்பதும்கூட உண்டு. ஆழ்ந்து பார்த்தால் தெரியும், அவர்கள் அந்த அடியார்களை அடிக்க வில்லை, வையவில்லை; அவர்களைப் பிடித்திருந்த வியாதி, அல்லது பைசாசம், அல்லது கர்மவினை இவற்றைத்தான் திட்டியும், உதைத்தும் அடித்தார்கள் என்று. நம் கதா நாயகர் நிலையத்தில் தம்மை நெருங்கியுள்ளோர் சிறிய ஒழுக்கக் குறைவு செய்தாலும் ரௌத்ராகாரமாகக் கோபிப்பது வேண்டுமாயின் உண்டே தவிர, இதுவரை எவரையும் அடித்ததில்லை.

அவரே சொல்வாரே: ''ஷிர்டியில் 'மொதடி சரீரத்'தில் இருந்தபோதும் சரி, இன்றும் சரி, நான் எல்லோருக்கும் அம்மா தான். இருந்தாலும் அப்போது சமையல் செய்கிற அம்மாவாக இருந்தேன். இப்போது சமையல் முடித்துச் சாதம் போடுகிற அம்மாவாக இருக்கிறேன். சமையல் செய்யும்போது அடுக்களையில் குழந்தைகள் வந்தால் தாயார் கொஞ்சம் எரிந்துதான் விழுவாள். அப்படித்தான் அன்று கொஞ்சம் கோபிஷ்டராக இருந்துவிட்டேன். பரிமாறும்போது அம்மா பிரியமே உருவாகத்தானே மேலும் மேலும் போடுவாள்? இப்போது இப்படிப் பிரேமமாதாவாக இருக்கிறேன்.''

இவ்வாறு சொல்பவர் இன்று உடன் இருப்பவர்களை நோக்கு நோக்கு என்று நோக்கத் தொடங்கியதும் அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

பிறகுதான் பாபாவின் சூக்ஷ்ம சரீரச் செயலின் பிரதிபலிப்பு தான் இங்கே தாங்கள் வாங்கிக்கொண்ட அடி என்று தெரிந்தது.

ஹைதராபாத்தில் ஒரு ஹிந்து பக்தர், ஈவு இரக்கமற்ற ராக்ஷதர்களான ரஜாக்கர்களிடம் அகப்பட்டுக்கொண்டு விட்டார். அவரை அவர்கள் சித்திரவதை செய்து சாக அடிக்கப் போகிறார்கள். இச் சமயத்தில் திடீரென அவர்கள் அவரை விட்டுவிட்டுத் திரும்பி ஓட ஆரம்பித்துவிட்டனர். ''என் அப்பா ஸாயிராம்! என்ன செய்து இந்தப் பாதகர்களை விரட்டினாய்?'' என்று அங்கே பக்தர் தம் உயிர்காத்த வள்ளலை நினைந்து உருகிக்கொண்டிருந்தார்!

ரஜாக்கர்களுக்கு அங்கே திவ்யமாகத் திருச்சாத்து கிடைத்திருக்கிறது! அதன் ஒரு சாயைதான் இங்கே பிரசாந்தி நிலைய பக்தர்மீது வீசியிருக்கிறது!

Koviloor Digital Library

சூக்ஷ்மத்திலே இப்படி ரஜாக்கர்களை வெளுத்துக் கட்டி விரட்டினார். ஸ்தூல தேகத்திலேயே ஒருமுறை ஹைதராபாத்தில் சிஞ்சோலி ராணி, நாகமணி பூர்ணையா முதலியோருடன் பாபா காரில் சென்றுகொண்டிருக்கையில், நாலா திசையிலிருந்தும் ரஜாக்கர் படை காரை வளைத்துக்கொள்ள வந்தது.

அந்த நிலையில் ராணிக்கு பாபாவின் ஈச்வரத்வம் முழுதும் மனத்திலிருந்து அகன்று, ''ஐயோ, நாம் இந்தப் பிரபுவை அதிதியாக அழைத்து ரஜாக்கர்களுக்குப் பலி கொடுக்கிறோமே!'' என்ற வேதனையும் பீதியும்தான் உண்டாயிற்று!

பாபா காரை நிறுத்தச் சொன்னார்.

ரஜாக்கர்கள் அருகே வந்து பார்த்தனர். பெண்கள், வயோதிகர்கள் என்ற பேதம் பாராமல் ஹிந்துக்களைக் கொன்று குவிக்கும் பாவிகள்! நல்ல வேட்டை கிடைத்ததென நெருங்கி வந்தவர்கள், பாபாவைப் பார்த்தனர்!

என்னவாகப் பார்த்தனர்?

பாபா அவர்களுக்கு என்னவாகத் தரிசனம் தந்தார்?

அந்த மர்மம் மற்ற எவருக்கும் தெரியாது!

ஆனால் எல்லோருக்கும் தெரிந்தது, அந்த ரஜாக்கர்கள் மரியாதையாக ஒதுங்கிக்கொண்டு, கார் மேலே செல்லலாம் என்று வழிவிட்டதுதான்!

'அஹிம்ஸையில் பூரணமாக நிலைத்து விட்டவனின் ஸந்நிதியில் கொடூரமானவரின் பகையும் தானே நீற்றுப் போய் விடும்' என்கிறது பாதஞ்சல யோக ஸூத்ரம். இது அதற்கு ஓர் உதாரணம்தானே?

ஸாயி ரூபம் இல்லாமல் ஸாயி நாமமே இந்த அற்புதத்தை விளைவித்தது அமெரிக்காவிலே.

நியூயார்க்கில் ஒரு பெண் பூங்காவில் அமர்ந்திருந்தாள். அந்தி மங்கிக்கொண்டு வருகிறது. இவள் தன்னந்தனியே இருக்கிறாள்.

திடீரென அவள் எதிரே ஓர் ஆள் வந்து வெகு நெருக்கத்தில் நிற்கிறான். 'பெர்மிஸிவ் ஸொஸைடி.' (ஸர்வ சுதந்திர சமூகம்) என்று சொல்லிக்கொண்டு அமெரிக்க இளைஞர் பலர் செய்கிற அக்கிரமங்கள் ரஜாக்கரின் கொடுமைகளுக்குத் தாழ்ந்தது இல்லைதானே? துர்நோக்கத்தோடு வந்த இம் மனிதன், அதற்கு அவள் உடன்படாவிட்டால் கொன்று விடுவது என்றே திட்டமிட்டிருக்கிறான்.

கத்தியை எடுத்து அவள்முன் ஆட்டுகிறான்.

ஹில்டா சார்ல்டன் பரப்பி வரும் ஸாயி பக்தியலைகள் இந்தப் பெண்ணையும் நனைத்ததுண்டு. எனவே துரௌபதிக்கு மான

Koviloor Digital Library

ஸம்ரக்ஷணமும், கஜேந்திரனுக்குப் பிராண ஸம்ரக்ஷணமும் அளித்த தேவ தேவனே தனக்கு இவ்விரு காப்புகளை அளிக்கவேண்டும் எனக் கோரி, 'ஸாயிராம், ஸாயிராம்' என்று வாய்விட்டு அழைத்தாள்.

நம்ப முடியாதது நடந்தது நாம மகிமையிலே.

காமுகக் கொலைபாவியை அந்த நாமா அடக்கிவிட்டது.

''நீ என்னவோ சொல்கிறாயே, அதற்கு என்ன அர்த்தம்?'' என்று கேட்டான் தணிந்து.

''சாந்தி என்று அர்த்தம்'' என்றாள் யுவதி.

பேசாமல் வந்த வழி திரும்பிவிட்டான் தூர்த்தன். இனியும் அவனைத் தூர்த்தன் என்று சொல்லலாம்தானா? அவனது மனத்தில் தேங்கியிருந்த அழுக்குக் குட்டையைத்தான் ஸாயி நாமம் தூர்த்து விட்டதே!

இதை எழுதும்போது இன்னொன்றை எழுதாமலிருக்க முடியவில்லை. பெங்களூர் அருகே ஒரு மாணவி மாலையில் கல்லூரி முடிந்து திரும்பி வருகையில் சில காலிகளின் பிடியில் சிக்கிக் கொண்டதாகவும், பாபாவின் பரம பக்தையான அவள் கதறக் கதற அது நிஷ்பலமானதாகவும், காலையில் உயிரோடு கலாசாலைக்கு அனுப்பிய அருமைப் புதல்வியை அவளது பெற்றோர் அன்று மாலை பிணமாகத்தான் கண்டார்கள் என்பதாகவும் இந்நூலாசிரியர் காதுக்கு எட்டியதுண்டு.

மன்னிக்கக் கூடாத பூர்வகர்மா என்று ஒன்று இருக்கத்தான் வேண்டும் போலும். முற்பிறவியில் இதே பெண் ஆடவனாக இருந்து எத்தனை கற்பரசிகளுக்குத் தீமை இழைத்திருப்பாளோ, யாரே அறிவர்? அதற்குப் பிரதியாக இப் பிறவியில் கோர மரணமடைந்தாலும், ஸாயி ஸ்மரணத்துடன் மரித்ததால், இனிப் பிறவியில்லாத அமர நிலை எய்தியிருக்கலாம்! எனவே பாபா காப்பாற்றவில்லை என்று குறை சொல்ல, நம் சிற்றறிவு இன்றுள்ள நிலையில், நமக்கு யோக்கிதை இல்லைதான்.

பூர்வ கர்ம பலனாக இன்றிப் புதிதாக நமக்குத் தீங்கு வரும் போதெல்லாம் பாபாவைப் போல் அதைத் தடுத்துக் காத்தருளும் ஒரு தயாமூர்த்தியை எந்தப் புராண, இதிஹாஸத்திலும் நாம் கண்டதில்லை. அந்த தயைக்குத் தழைந்து தலைவணங்கி, அதன் நினைவில் இன்புற்றிருப்பதே நாம் செய்யக்கூடியது, செய்ய வேண்டியது.

* * *

ஸூக்ஷ்ம ஸாயி, ஸ்தூல ஸாயி இருவரும் விபத்துத் தீர்ப்பது போல் ஸாயி நாமமே கொலை வெறியர்களைக் 'கப்சிப்' என அடங்கச் செய்த நிகழ்ச்சிகள் இன்னும் பல உண்டு.

Koviloor Digital Library

. பாபாவின் இணைபிரியா அடியாராகப் பல்லாண்டுகள் இருந்த ராஜா ரெட்டிக்கு பாபாவே நாலாண்டு முன்பு திருமணம் நிச்சயித்திருந்தார். பிரபல பஜனைப் பாடகரான ஸ்ரீ தீக்ஷித்தின் மகளைத் தான் வதுவாகத் தேர்ந்தெடுத்திருந்தார். அப்பெண்ணும் சங்கீர்த்தனத்தில் வல்லவள்தான். பழைய மந்திரத்தில் விவாகத்துக்கான ஏற்பாடுகள் நடந்தன. மணமகள் கோஷ்டி பம்பாயிலிருந்து வந்திறங்கினர்.

பெண்ணின் தந்தையான தீக்ஷித்தைப் பார்த்தவுடன் பாபா, ''உங்கள் பெயர் என்ன?'' என்றார்.

அவருக்கு ஆச்சரியமாகிவிட்டது. எல்லோரையும் அறிந்தவர் பாபா. அதிலும் தம்மிடம் பல சந்தர்ப்பங்களில் நெருங்கிப் பழகியவர். அப்படியிருக்க ஏன் பெயரைக் கேட்கிறார் என்று புரியாமலே, ''தீக்ஷித்'' என்றார்.

''இல்லை. ரக்ஷித்'' என்று பாபா கூறிச் சிரித்தார்.

''ரக்ஷித்'' என்றால் ''காக்கப்பட்டவர்'' என்று அர்த்தம்.

பெல்காம் மஹாராஷ்டிரத்தில் சேரவேண்டுமா, மைசூரில் சேரவேண்டுமா என்பது குறித்து மகா பயங்கர மோதல் நடந்து வந்த காலம் அது. மராத்தியர், கன்னடியர் இருவரும் ஒரு தேச மக்களே என்பதை மறந்து, குறுகிய பிரதேசப் பித்தில் குருடாகிக் குரூரச் செயலில் இறங்கியிருந்த சமயம்.

பம்பாயிலிருந்து வந்துகொண்டிருந்த தீக்ஷித்தின் காரை வன்முறைக் கன்னடியர்கள் சூழ்ந்துவிட்டனர். திருமண கோஷ்டி திகைத்தது, தவித்தது.

மனிதத் தன்மையையே மறந்துவிட்ட அந்தக் காலிகளிடமிருந்து எப்படித் தப்புவது?

தீக்ஷித்துக்கு என்ன தோன்றிற்றோ? ''அப்பன்மார்களா! நாங்கள் ஸத்ய ஸாயி பாபாவைப் பார்க்கப் போகிறோம்'' என்றார்.

அவர் சொன்னதுதான் தாமதம், அந்த நாமம் என்ன விந்தை செய்ததோ, தாக்க வந்தவர்கள் விலகிக்கொண்டனர்.

'தீக்ஷித்' 'ரக்ஷித்'தானார்!

* * *

நியூயார்க் கல்லூரியில் படிக்கும் மாணவரில் ஒருவன் க்ரைஸ். அங்குள்ள ஸாயி தியான கேந்திரத்தில் ஈடுபாடு கொண்டவன். அவனது ஹாஸ்டல் அறைக்குள் ஒருநாள் ஒரு வெறியன் சண்டமாருதம் போல் ஓடிவந்தான். ''நான் உன்னைச் சுட்டுக் கொல்லப் போகிறேன்'' என்று கூவி, க்ரைஸின் முகத்துக்கு நேரே கைத்துப்பாக்கியை நீட்டிவிட்டான்.

"ஸாயி பாபா, ஸாயி பாபா" என்று க்ரைஸ் தீனக்குரல் எழுப்பும்போதே, துப்பாக்கி ரவையும் வெடித்து வந்துவிட்டது.

ஆனால் என்ன அதிசயம்? அது க்ரைஸ் தலைக்குள் பாயவில்லை. தரையிலே உருண்டோடியது!

வெறியனும் ஓடியேவிட்டான்.

* * *

"உங்கள் கண் முன்னால் (கண்டனே), உங்கள் பின்னால் (வெண்டனே), உங்கள் பக்கங்களிலே (ஜண்டனே), உங்கள் இல்லத்திலே (இண்டனே) நான் எப்போதும் இருந்து காக்கிறேன்" என்று பாபா சொல்வதுண்டு.

நம் இல்லத்தில் நாமே இல்லாதபோதுகூட அவர் இருந்து காப்பதுண்டு. இந் நூலாசிரியர் குடும்பமே இந்த ரக்ஷணையைப் பிரத்யக்ஷமாக அநுபவித்ததுண்டு!

Koviloor Digital Library

KOVILUR ADHEENAM
KOVILUR B. O.
(Via) MANAGIRI
RAMANATHAPURAM DIST.
PIN: 623 307

அத்தியாயம்—40

களவிலும் கொலையிலும் அளவில அருட்செயல்

கள்ளர் பயமிருந்தால்—எங்கள்
வீட்டுக் குலதெய்வம்—தம்பி
வீரம்மை காக்குமடா!

— பாரதியார் : வண்டிக்காரன் பாட்டு

ஆறாண்டுகளுக்கு முன் நாங்கள் புட்டபர்த்தி போய் விட்டுத் திரும்பியபோது எங்கள் வீடு இருந்த அலங்கோலம்!

பூட்டுக்களை உடைத்துத் திருடர்கள் உட்புகுந்திருக்கிறார்கள்! அத்தனை பீரோக்கள், சாமான்கள், பரண்களில் உள்ள சகல சாமான்களையும், பாத்திரங்கள், புத்தகங்கள் முதலிய எல்லாவற்றையும் வீடு முழுக்க வாரி இறைத்திருக்கிறது!

பல திருடர்கள் வந்து, நீண்டநேரம் சாவகாசமாகத் தங்கள் காரியத்தை நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவு.

ஆனாலும் அதுதான் வேடிக்கை, காரியத்தை நடத்திக் கொள்ளவில்லை!

ஆம், திருடர்கள் இங்கே இத்தனை அமளி துமளி செய்திருந்தும் ஓர் சின்னஞ் சிறிய வஸ்துகூடக் காணமற் போகவில்லை!

பெட்டிகளை உடைத்திருக்கிறார்கள்! ஆனால் அவற்றிலிருந்து ஒரு பொருளும் களவு போகவில்லை!

அக்கம்பக்கத்தினரோ போலீஸாரோ வந்துதான் அவர்கள் ஓடிவிட்டார்களா என்றால் அப்படியும் இல்லை. திருடர் வந்து போனது எவருக்கும் தெரியாது!

Koviloor Digital Library

தாங்களாகவேதான் ஓடியிருக்கிறார்கள்!

வேறு எவரேனும் வந்து இவர்கள் ஓட்டம் பிடித்திருந்தால் கூட, இந்தச் சாமான்களை வேர்க்க விறுவிறுக்க ஏற்றியிறக்கி வைத்தவர்கள் கையடக்கமாக ஒரு பேனா, சின்ன 'மிக்ஸி', அல்லது கடிகாரம் போன்றவற்றையாவது சுருட்டிக்கொள்ளாமல் போகத் தோன்றுமா? ஆனால் வேற்று மனிதர் யாரும்தான் இவர்களை நிச்சயமாக விரட்டவில்லையே!

இதிலிருந்து என்ன தெரிகிறது? சந்தேகத்துக்கு இடமின்றி பாபாதான், எந்த ரூபத்தையோ காட்டி கள்வரை கதிகலங்க அடித்து ஓட்டியிருக்கிறார்!

எங்கள் பூஜை அறையைத் திருடர்கள் அண்டாமலே செய்து அன்றைக் காத்திருக்கிறார் ஆண்டை பாபா!

போலீஸாரே மூக்கில் விரலை வைத்தனர்!

புட்டபர்த்தி போய் வந்தவுடன், ஏதோ எங்கள் பழைய கர்மாவுக்காக அத்தனை சாமான்களையும் முதுகு வலிக்க அடுக்கச் செய்திருக்கிறார். அதோடு போயிற்று—படு கொள்ளையாக முடிந்திருக்க வேண்டிய திருடர் படையெடுப்பு!

எங்கள் குலதெய்வமான பராசக்தியின் குறிப்பிட்ட ரூபபேதமே குறிப்பாக ஆவிகள், பகைவர்கள் போன்றோரை அணுகவொட்டாமல் வெருட்டுவதற்குத்தான் விசேஷ வல்லமை வாய்ந்ததாக அதர்வ வேதத்தில் கூறப்படுகிறது. எனவே, இந் நூலாசிரியர் மேற்படி நிகழ்ச்சி பாபாவின் அருளாலன்றி, குல தேவியின் சக்தியாலேயே நடந்திருக்கலாமோ என்றும் எண்ணியதுண்டு. பாபாவே அனைத்துத் தெய்வமும் என்றாலும் கூட, இங்கே அவரது சரிதையை எழுதும்போது குருவாயூரப்பனோ, திருமலையப்பனோ, செந்திலாண்டவனோ செய்த அருட்செயல்களை பாபா செய்ததாக எழுதினால் அது சரியல்லதானே? இப்படி எண்ணி மேற்படி நிகழ்ச்சியை இங்கு குறிப்பதா வேண்டாமா என்று நூலாசிரியர் மயங்கியதுண்டு. ஆனாலும் இங்கே ஏதோ ஒன்று உந்தித்தள்ளி இச் சம்பவம் எழுதப்படுவதால், குல தெய்வத்தோடு நூற்றுக்கு நூறு சதவிதமும் இழைந்துவிட்ட ஸாயி நாதன் லீலையாக இதை வர்ணிப்பது அயுக்தமாகத் தெரியவில்லை.

* * *

கோலேவான் விசையோடு வந்து குலைநடுங்கும் வேளையில் அவரது அருட்காப்பு அதனினும் விசையாக வரும் அற்புதம்!

1971–ம் வருஷம் மார்ச் முதல் தேதி பாலக்காடு ஸ்ரீ டி. வேணுமாதவன் நாயருக்கு ஒரு பயங்கரக் கடிதம் வந்தது. கபால முத்திரை பதித்த காகிதத்தில் ரத்தத்தாலேயே எழுதப்பட்ட நக்ஸலைட்களின் கடிதம்! டி.எஸ். நாயரின் 'சாந்தி நிவாஸ'க்குச் சற்றும் பொருந்தாத கடிதம்!

Koviloor Digital Library

சென்னேயில் கிண்டி பாபா கோவில் போல், ஸாயி ஸாந் நித்தியம் விம்மி நிற்பது பாலக்காட்டு சாந்தி நிவாஸ். இத்தனேக் கும் அங்கு ஸ்தூல ஸாயி ஒருமுறை கூட வந்ததில்லே.

ஆனல் 1970 ஜனவரி 19-ந் தேதி அங்கே பாம்பு வடிவில் நாக ஸாயியாக — மணிகள் வைத்திழைத்த அதிசயப் பொன் நாகமாக — வந்திருக்கிருர்! அதற்கு மூன்று கண்கள் வேறு! இரண்டு கண்களுக்கு மத்தியிலுள்ள மூன்ரும் கண்ணிலிருந்து 'டார்ச்' அடித்தது போல் ஒளி வீசியதாம்! இதைக் கண்டவர் நூற்றுக் கணக்கானவர். பிறகு புற்ருகவும் சாந்தி நிவாஸில் வளர்ந்தார் புற்றுவர்த்தினியில் பிறந்த பாபா. 1970 ஜூலே ஐந்தாம் தேதி தமிழக பக்தர் பலர் அங்கு குழுமியிருந்தபோது, திவ்ய போதை யில் ஆழ்ந்தவராகக் காணப்பட்ட நாயர் புற்றுக்கு கர்ப்பூராரத்தி காட்டி, அதை உடைக்கச் செய்தார். உள்ளிருந்து மயிலேறிய வேலாயுதன் விக்கிரஹம் வெளிப்பட்டது. 'வாஸுகி தக்ஷகாதி ஸர்ப்ப ஸ்வரூபன்' அல்லவா? பக்கத்திலிருந்த இன்ெெரு சிறு புற்றையும் உடைத்தவர். அதிலே விபூதி பூசப்பட்ட ஒரு தேங்காய் இருந்தது. தேங்காயை உடைத்ததும், உள்ளிருந்து விபூதி உருண்டை குதித்து வந்து வெடித்தது. திருநீற்றுப் பொடிகள் உதிர்ந்ததும், உள்ளே இருந்தது ஒரு விநாயகர் விக்கிரஹம்!

அதே ஆண்டு ஆகஸ்ட் 23-ந் தேதி கிருஷ்ண ஜயந்தியன்று பூப்பந்துகளேக் கட்டித் தொங்கவிட்டு அலங்கரிக்கும்போது, ஒரு பூப்பந்தே வெண்ணெய் உருண்டையாக மாறியிருந்தது. பக்தர்களுக்குச் செலவில்லாமல் கண்ணனே தன் பிரஸாதமாக ஒரு கிலோ கிராம் வெண்ணெய் அனுப்பிவிட்டிருக்கிருன்! வெண் ணெயை அடியாருக்கு விநியோகித்த பின் அந்தக் கட்டியினின்று பாபாவின் வண்ணப் படம் ஒன்று வெளிப்பட்டது!

வெண்ணெய் தந்த கண்ணன், மற்ருெரு நாள் அங்குள்ள குருவாயூரப்பன் படத்தில் ஐயன் கையிலிருக்கும் தாமரையி லிருந்தே தேனேப் பொழியத் தொடங்கிருன். அப்பன் பாதத்தி லிருந்தும் என்னவோ சொட்டுகிறதே என்று ஏந்தி, மோந்து, உண்டு பார்த்தார்கள்—ஐயமே யில்லே, குருவாயூரில் ஸர்வரோக நிவாரணி யாக அளிக்கப்படும் ஐயனின் அபிஷேகத் தைலமே தான்! ஆறு வாரங்கள் இந்தப் பொழிவு தொடர்ந்தது!

இப்படிப்பட்ட இடத்தில் பக்தி பரவசம் பொங்கக் கேட்பானேன்? ஆனுலும் பொங்குவதெல்லாம் அடங்குவது தான் இறுதி நிறைவு.

அந்த அடக்கத்தின் உருவானுர் ஸ்ரீ நாயர்— அவருக்கே அற்புத ஆற்றல் பல கூடியும்கூட. அந்த இடமும் பரவசத்தை விட அமைதிக்கு ஆலயமாக 'சாந்தி நிவாஸா'கவே இருந்தது.

இது நக்ஸல்பாரிகளின் கண்ணே உறுத்தியது. அதுவும் பகவான் லீலேதான்!

"'இக் கடிதம் கண்ட ஏழாம் நாளுக்குள் பழனே பூஜைகளே நிறுத்தாவிடில் உன் தலே சிவப்படும்'' என்று நாயருக்கு அச்சுறுத்திக்

Koviloor Digital Library

கடிதம் எழுதினார்கள், சபால முத்திரையிட்ட காகிதத்திற் சந்த மையினால்.

அவர் சற்றும் நிலைகுலையவில்லை. விடாமலே பஜனையை நடத்தினார். முன்னைவிடவும் கோலாகலமாக நடத்தினார்.

கெடுவைத்த ஒரு வார காலம் முடிந்து, எட்டாம் நாளும் போயிற்று.

மார்ச் 10-ந் தேதி.

காலை எழுந்ததும் நாயர் குளியலறைக்குச் சென்றார்.

'சர்'ரென்று அவ்வறையின் வெளி ஜன்னல் திரை கிழி படும் ஓசை கேட்டது! வெட்டுக் கத்தி! துணியைக் கிழித்துக் கொண்டு குறி பிசகாமல் விர்ரென்று நேரே நாயரிடம் வரு கிறது! கத்தியை எறிந்தவன் வெளியே ஓடுகிறான். இருப்பினும் வைகறை வெளிச்சத்தில் அடையாளம் தெரிகிறது.

அந்த க்ஷணத்தில் பாபாவின் பட்டுடை போன்ற ஆரஞ்சு வெள்ளம் நாயரைச் சூழுகிறது.

பாபாவின் பூங்கரம் வஜ்ராயுதத்தின் வலுவோடு நாயரைப் பிடித்துத் தள்ளுகிறது கண வேகத்தோடு!

'களாங்' என்ற சப்தத்தோடு கத்தி தரையிலே விழுகிறது— இவரது கழுத்தைச் சீவியிருக்க வேண்டியது!

சுற்றத்தார் ஓடி வருகிறார்கள்.

விபூதி அபிஷேகம் செய்துகொண்டு விலவிலத்து, விதிர் விதிர்த்து நிற்கும் நாயரைப் பார்க்கிறார்கள். கத்தியைப் பார்க் கிறார்கள். ஆயுதம் மேலே வந்து விழுகின்ற அப்போதே அம்பாள் காக்கிறாள் (பதத்வா சாபி சஸ்த்ரேஷு) என்ற சண்டீவாக்கு சர்வ சத்யமா யிருக்கிறது!

பாபாவின் பரம காருண்யத்தை, பக்த வாத்ஸல்யத்தை எண்ணிக் கண்ணீர் உகுக்கிறார்கள்.

'ஆபத்சகாயம்' இதோடு முடிகிறது. ஆனாலும் கருணை இதைவிட இனிய முறையில் இன்னமும் தொடர்ந்து, நாயரையே ஆபத்சகாயராக்கியதைப் பார்ப்போம்.

நண்பர்கள் புகார் கொடுத்ததன் மீது போலீஸார் வந்தனர். கத்தியை ஆர்ஜிதம் செய்துகொண்டார்கள். நாயரை வாக்கு மூலம் கேட்டார்கள்.

மீண்டும் சுபாவமான அடக்கத்தையும் அமைதியையும் பெற்றுவிட்ட நாயர், ''அதெல்லாம் வேண்டாம். மேல்

Koviloor Digital Library

நடவடிக்கை தேவை யில்லை. பகவான் எல்லாம் நல்லதற்கே செய்கிறான்'' என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டார்.

இருந்தாலும் பக்தர்கள் அவரைத் தொணப்பினார்கள். ''குற்றவாளியால் இன்னும் எந்தெந்த பக்தர்க்குக் கெடுதல் விளையுமோ! அவனைப் பிடிப்பதற்கு நீங்கள் சட்டப்படியான உதவியைச் செய்யத்தான் வேண்டும்'' என்றனர்.

நாயரோ சாவதானமாக, ''பகவான் சித்தம் இருந்தால் அவனே இங்கு வருவான். பகவானை நமஸ்கரித்து, மன்னிப்புக் கேட்டுப் போவான்'' என்றார்.

போலீஸார் தாமாகவே அந்த நபரை சமூக விரோதி என்ற முறையில் கைது செய்வதற்காகத் தேடி வருகிறார்கள் என்றறிந்து பக்தர்கள் சற்று நிம்மதி பெற்றனர்.

அம்மாதம் 27-ந் தேதி. மாலை 5 மணி. போலீஸார் இருவர், சோர்ந்து அழுதுகொண்டிருக்கும் ஒரு நடுத்தர வயதுக்காரனை ''சாந்தி நிவாஸ''க்கு அழைத்து வருகிறார்கள்.

''இப்போது அடையாளமேனும் சொல்வீர்களா? குற்றவாளி இவன்தானா?'' என ஸ்ரீ நாயரிடம் கேட்கிறார்கள் போலீஸார்.

நாயர் அப்போதுங்கூடச் சொல்லியிருப்பாரோ, மாட்டாரோ? அதற்குக் காத்திராமல் அவனாகவே குற்றத்தை ஒப்புக்கொண்டான்.

பகவான் படத்தையும், நாயரையும் நமஸ்கரித்தான். மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். விம்மி அழுதான்.

நாயர் அவனை அரவணைத்து ஆறுதல் தந்தார்.

இது பக்தர் பலர் கண்ணால் கண்ட சம்பவம். ஏனெனில் அப்போது பஜனை நடந்துகொண்டிருந்தது.

விபத்திலிருந்து காத்த கருணை பெரிதா? விபத்து விளைவித்த பகைவனுக்கும் ஆபத்து நேராமல் சகாவாக அருளும் பான்மையை நாயருக்குத் தந்தாரே, அந்தக் கருணை பெரிதா? அல்லது நக்ஸலை நெகிழவைத்தாரே, அது பெரிதா?

* * *

தாம் புரியும் ஆபத்சகாயத்தைப் பெருமையடித்துச் சுமையாக்கிக் கொள்ளாமல் எத்தனை வேடிக்கையாக்கி விடுகிறார் விநோத பாபா!

நன்றி உணர்ச்சி அலைமோத ஒரு பக்தர் குடும்பம் பிரசாந்தி நிலயத்துள் நுழைகிறது. பாபா மேலே பால்கனியில் தோன்றிக் குடும்பத் தலைவரைப் பார்க்கிறார்.

Koviloor Digital Library

'பகபக'வெனச் சிரித்து, "ராதாகிருஷ்ணா! எத்தனை நாழி அய்யா உன்னைத் தூக்கிட்டு நிற்கிறது? தோள் வலிக்கிறது. நாயனா" என்கிறார். வேடிக்கையாக்கிவிட்டார் விபரீதம் தீர்ந்த வியத்தகு செயலை!

இங்கே குறிப்பிடப்பெறும் ராதாகிருஷ்ணா மாண்டபின் பாபாவால் மீட்கப்பட்ட அதே குப்பம் ஸ்ரீ ராதாகிருஷ்ணாதாம்.

அந்தப் பேரற்புதத்துக்கு ஏழாண்டுகளுக்குப்பின் அவர் பொருட்டே இன்னொர் அற்புதத்தைப் புரிந்த பாபா, "எத்தனை நாழி ஐயா உன்னைத் தூக்கிட்டு நிற்கிறது?" என்று பால்கனியிலிருந்து பாலும் கனியும் கலந்த இன் குரலில் வினவினார்.

பக்தர்களின் பாரத்தைச் சுமக்கும் 'போர்ட்ட'ராகப் பரமன் நிற்கிறான். இதனால் அவனுக்கு உமாபதி சிவாசாரியார் "எடுத்துச் சுமப்பான்" என்றே ஒரு பெயர் கொடுத்திருக்கிறார். நம் ஸத்யஸாயி பகவான் சரீரத்தாலேயே பக்தர் உடம்பை எடுத்துச் சுமந்த கதை தீங்கரும்பிலும் இனித்தானது.

இந்தக் கதைக்கு வருவோம்: ராதாகிருஷ்ணாவுக்கு ஏதோ நோய் கண்டது. மனித சரீர தர்மம், கர்ம நியதி நடந்துதானே ஆக வேண்டும்?

டாக்டர் மார்பியா ஊசி போட்டுச் சென்றார்.

இரவு மூன்று மணிக்கு விழித்துக்கொண்ட ராதாகிருஷ்ணா 'பாத்ரூம்' போக விரும்பினார். மார்பியா மயக்கத்தில் நினைவு சரியாக இல்லை. எங்கோ தடுமாறிச் சென்றவர், சுற்றுச்சுவர் இல்லாத கிணற்றில் விழுந்துவிட்டார்.

அவருக்கு நினைவே மரத்து விட்டாற்போலிருந்தது!

இதற்குள் மனைவியார் விழித்துக்கொண்டு, பக்கத்தில் அவரைக் காணோமே என்று தேடினார். வீடு திமிலோகப்பட்டது.

கிணற்றுக்குள் அரை ஸ்மரணையில் இருந்த ராதாகிருஷ்ணாவையும் அது அசைத்து விட்டது. "இங்கே இருக்கிறேன்" என்று குரல் கொடுத்தார்.

மனைவி, பெண், பிள்ளை யாவரும் அங்கே ஓடினர்.

கிணற்றுக்குள் ராதாகிருஷ்ணா! அது சரி, அவர் எப்படி அதில் மூழ்காமல் நிற்கிறார்? ஆழமான அந்தக் கிணற்றில் அவர் முற்றிலும் முழுகி, தலைக்கு மேல் தண்ணீர் ஓடவேண்டுமே! அவ்விதமின்றி இப்போதோ அவரது இடுப்பளவுக்குத்தானே ஜலம் நிற்கிறது? நீருக்கு நடுவில் ஏதோ ஓர் ஆசனத்தின் மேல் நிற்பது போலல்லவா நன்றாக நிற்கிறார்? அம்மாதிரி அங்கு நிற்பதற்கு எந்த ஆதாரமும் கிடையாதே!

Koviloor Digital Library

கிணற்றிலிருந்து வெளியே எடுக்கப்பட்டபின்பு ராதா கிருஷ்ணுவாலும் இந்த அதிசயத்தைப் புட்டு விளக்க முடியவில்லை. ஆனாலும் புட்டபர்த்திசன் தம்மைக் காத்ததை மட்டும் நன்ருக உணர்ந்து கொண்டிருந்தார்.

ஆபத்து தீர்ந்தது என்றவுடன் பாபா நகருவதாகவும் ஒரு சூக்ஷ்ம உணர்வு ராதாகிருஷ்ணுவுக்கு உண்டாயிற்று. ''ஸ்வாமி, உங்களை மறுபடி எப்போது பார்ப்பேன்?'' என்ற வார்த்தைகள் தாமாக அவர் வாயிலிருந்து வெளிப்பட்டன.

பாபாவைப் பார்க்க அப்போதே புட்டபர்த்திக்குப் புறப்பட்டனர். பிரசாந்தியைச் சென்று சேர்ந்தனர்.

ஸ்வாமி, மாடியிலிருந்து, ''எத்தனை நாழி ஐயா உன்னைத் தூக்கிட்டு நிற்கிறது?'' என்று குறும்பு செய்கிருர்!

எவரது பாதம் நம் தலையில் படாதா என்று பரம ஸாதகர்கள் தவமிருக்கிருர்களோ, அவர் ராதாகிருஷ்ணுவின் பாதங்களைத் தம் தோளில் தாங்கி அத்தனை நேரம் கிணற்றுக்குள் இருந்திருக்கிருர். ''பாரப்ருத்—சுமைதாங்கி'' என்று விஷ்ணு ஸஹஸ்ர நாமம் சொல்வது ஸ்தூலத்திலேயே நடந்திருக்கிறது! வேதங்களில் ரேபர், வந்தனர், கண்வர், திரிதர் ஆகியவர்களை அச்வினி தேவர் கிணற்றிலிருந்து காத்த பெருமை பரக்கப் பேசப்படுகிறது. நம் ஸாயி வேதத்திலும் அந்த லீலை இடம் கொள்கிறது!

★

துர்க்கா தேவி, மாருதி இவர்களின் அநுக்ரஹங்களைச் சொல்கையில் பிரயாணத்தில் காப்பதைச் சிறப்பித்துச் சொல்வார்கள். கார், பஸ், ரயில், பிளேன் விபத்துக்களில் பாபா செய்துள்ள காப்பு லீலை ஒரு தனிக் காப்பியமாகிவிடும்!

இறைவன் இரக்கத்தால் எத்தனை இளக்கினாலும் இளக்க முடியாத வலிய கர்மா என்று ஒன்று தனியாக இருப்பதுபோல் தான் தோன்றுகிறது.

1957—ம் ஆண்டு பாபாஜயந்திக்குப் பின் ஊர் திரும்பிய பக்தர்கள் பலர் இருந்த பஸ் புக்கபட்டணத்திலிருந்து பெனுகொண்டா போகும் வழியில் அச்சம்மா தோட்டக் கிணற்றில் விழுந்து அவர்கள் மாண்டு போனுர்கள். ஸ்வாமி வார்த்தையையும் தட்டி இவர்களில் சிலர் புறப்பட்டதாகவும் தெரிகிறது. சரியாக இதே சமயத்தில் பாபா பிரசாந்தி நிலைய பால்கனியில் சிந்தனை வயத்தராக வந்து நின்று, ''போயினுடு, போயினுடு'' என்று மட்டும் சொன்னுரே தவிர, போனவர்களைக் காக்கத் தாமும் உடன் போகவில்லை. அவர்கள் கர்மம் அப்படியோ? சங்கடஹரணுக விளங்கும் வேங்கடரமணனைக் காணச் செல்லும் யாத்ரிகர்களின் பஸ்களே எத்தனை முறை திருமலையில் விபத்துக்குள்ளாகி யிருக்கின்றன?

Koviloor Digital Library

முன்பே சொன்னதுபோல், இன்னது செய்யவில்லை என்று பழிக்க நமக்கு உரிமையில்லை. இன்னமுதாக அவர் இன்னல் தீர்த்த ஏராள நிகழ்ச்சிகளை எண்ணுகையிலே நம் நெஞ்சம் நெகிழ்கிறதே, அது போதும்!

உதாரணமாக: 1968 ஜனவரி 18-ந் தேதி பர்த்தியிலிருந்து குடும்பத்தோடு மதுரை திரும்பிக்கொண்டிருந்தார் பாலகிருஷ்ணை யின் கார் சேலத்துக்கு முப்பது மைல் முந்தி மக்கர் செய்து விட்டது. இருட்டு வேளை. மாற்றுப்பந்துவாய் லாரி தவிர கதியில்லை என்று விடப்பட்ட சமயம்.

ஒரு வெள்ளை ஃபியட் கார் பக்கத்தே வந்து நிற்கிறது. அதிலே இருவர். உரிமையாளராகத் தோன்றியவரிடம் பாலகிருஷ்ணரோ டிரைவரோ வாய் திறக்கு முன் அவரே பாலகிருஷ்ணனிடம், "அந்த 'ஸேஃப்டி பின்'னைத் தாருங்கள்" என்று கேட்டு வாங்கிக் கொள்கிறார். பிறகு அதை டிரைவரிடம் கொடுத்து, "வண்டிக்குக் கீழே போய் இந்தப் பின்னை நிப்பிளில் குத்திவிட்டு ஸ்டார்ட் பண்ணு" என்கிறார்.

டிரைவர் அவ்விதமே செய்ய, வண்டி ஜம்மென்று செல்லத் தொடங்கிவிட்டது.

ஃபியட் புயல் வேகத்தில் இக்காரைத் தாண்டி பார்வையி லிருந்து மறைந்தது.

எதற்கும் சேலம் ஒர்க்ஷாப்பில் நன்றாக ரிப்பேர் செய்து விடலாம் என்று வண்டியைக் கொண்டுவிட்டார்கள்.

"என்ன ஆச்சரியம்! இந்தக் காரில் எப்படி 30 மைல் வந்தீர்கள்?" என்று அங்கே மெகானிக்குகள் வியக்கிறார்கள்.

'ஜியர்ராட்' இரண்டாக உடைந்திருக்கிறது! அதை வெல்ட் செய்யவே மூன்று மணி ஆயிற்று.

அதுமட்டுமில்லை. நிப்பிளையும் காணோம், ஸேஃப்டி பின்னையும் காணவே காணோம்.

ஆனால் ஸேஃப்டிக்கு பாபா இருப்பது நிச்சயம்தான்! அந்த ராஜ்ய சக்தியில் இடம், காலம் (Space, Time) என்று விஞ்ஞானம் தவிர்க்கமுடியாததாகச் சொல்லும் இருதத்வங்களுமே தவிடுபொடிபடும் அதிசயத்தை ஜான் ஹிஸ்லாப் கோஷ்டியார் கண்டது போல் எவரே காணப்போகிறார்கள்?

1973-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஓர் இரவு எட்டு மணிக்கு ஹிஸ்லாப் கோஷ்டியார் ஒயிட்ஃபீல்ட் பிருந்தாவனத் தில் ஸ்வாமியை தரிசனம் செய்துவிட்டு பெங்களூருக்கு டாக்ஸி யில் திரும்புகிறார்கள்.

பிருந்தாவனத்திலிருந்து சுமார் ஆறு கல்கள் வந்தாயிற்று. அந்த இடத்தில் சாலையில் எதிரும் புதிருமாக இரண்டே வண்டிகள்

Koviloor Digital Library

தான் செல்ல முடியும். அதில் குறிப்பாக ஒரு பகுதியில் ரிப்பேர் நடந்துகொண்டிருக்கிறது. டாக்ஸிக்கு இடப்புறத்தில் சாலை ஓரமாகக் கருங்கல் ஜெல்லி முதலியவற்றைக் குன்றுபோல் கொட்டியிருக்கிறது. இவ்விடத்தில் டாக்ஸி டிரைவர் ஒரு பஸ்ஸை 'ஓவர்டேக்' செய்ய நினைத்து வலப்பக்கமாக வண்டியை ஓடித்து விட்டார்.

என்ன விபரீதம்! இதோ, எதிரே, வெகு வெகு அருகில் வாயுவேகமாக மறுபுறத்திலிருந்து ஒரு கார் பறந்து வந்து கொண்டிருக்கிறதே! ஏற்கெனவே அது இரட்டை வாகனச் சாலைதான். அப்படியும் ஏதோ கொஞ்சம் இடம் தரலாம் என்று பஸ் டிரைவர் சற்று இடத்தே 'ஒடிக்க' எண்ணினாலும்கூட, அதற்கு முடியாதபடி கருங்கல் ஜெல்லிக் குன்று. இதோ மிக நெருக்கத்தில் வந்து விட்ட காரை 'பிரேக்' போட்டாலும் நிச்சயம் நிறுத்த முடியாது.

''தீர்ந்தே விட்டோம்'' என்றுதான் ஹிஸ்லாப் கோஷ்டியினர் முடிவு கட்டிவிட்டனர்.

இதோ எதிர்க் காரின் தலைவிளக்கு இவர்களது விண்ட்—ஸ்க்ரீனில் நேராக விழுகிறது. ஒன்று அல்லது இரண்டு விநாடிகளில் கூண்டோடு கைலாஸம்தான்!

ஒரு விநாடி.

அடுத்த விநாடி.

விநாடியா, அதிலும் ஒரு தசாம்சமா, சதாம்சமா?

அந்த அதிசின்னக் காலத் துணுக்குக்குள் என்ன நடந்து விட்டது? பாபா என்ன செய்துவிட்டார்?

மோதியிருக்க வேண்டிய கார், டாக்ஸியைத் தாண்டி, இதற்குப் பின்னால் எதிர்த் திசையில் அது பாட்டுக்குப் போய்க் கொண்டிருக்கிறதே!

எப்படி, எப்படி?

டாக்ஸியில் இருந்தவர்களுக்கு ஸர்வ நிச்சயமாகத் தெரியும். சாலையில் இவர்களுக்கு வலப்பக்கமாக ஓடித்து அந்தக் காரைச் செலுத்தவில்லை என்று. அப்படிச் செய்வதற்கு வலப் பக்கத்தில் இடமே கிடையாது. இடது பக்கமோ அந்த பஸ் இன்னமும் சுவர் வைத்தாற்போல் இவர்களது டாக்ஸியை ஒட்டியே சென்றுகொண்டிருக்கிறது!

அப்படியானால் இவர்களது காருக்கு மேலாக அது பறந்து போயிற்றா? அல்லது அடியில் பூமியைத் துளைத்துக்கொண்டு போயிற்றா? இவ்விதமெல்லாம் நடக்கவில்லையே!

Koviloor Digital Library

நேருக்கு நேர் இரு வண்டிகளும் அங்குல இடைவெளியில் வந்தது தான் தெரிந்தது. மறுகணம் பார்த்தால், கார் டாக்ஸியைக் கடந்து போய்க்கொண்டிருக்கிறது! அந்தக் காரில் போய்க் கொண்டிருந்தவர்களுக்கும் பேரற்புதமாகத்தான் இருந்திருக்கும்!

அந்த ஒரு க்ஷணத்தில் பாபா கால தத்வத்தை விழுங்கி விட்டாரா? அல்லது ஒன்றோடொன்று மோதி நொறுங்கியிருக்க வேண்டிய இரு வண்டிகளின் நீளம் என்ற இட தத்வத்தைப் புசித்து விட்டாரா? என்ன செய்தார்?

மறுநாள் காலை நன்றிக் கங்கையில் நனைந்து ஹிஸ்லாப் கோஷ்டியார் பிருந்தாவனத்துக்குச் சென்றனர். கண்ணன் தன்னெதிரே வந்து நின்றான். அங்கியைவிட வழுவழு லிஸ்தாக வாக்கு வந்தது: 'ரொம்ப 'க்ளோஸா'கத்தான் வந்துடுத்து! உங்களுடைய 'ஷாக்'கில் ஒருத்தராவது ஸ்வாமியை நினைக்கவில்லை. ஆனாலும் ஸ்வாமி கடமையைச் செய்துவிட்டார்!'

பிரபு! உன் கடமை உணர்வை, கருணைப் பெருக்கை என்ன சொல்வதப்பா? கூப்பிட்ட குரலுக்கு வருவதாக மற்ற அவதாரங்களில் சொல்வார்கள். அப்படித்தான் கஜேந்திரனும், துரௌபதியும் கதறி அழைத்தனர். நீயோ இந்தப் பூர்வ அவதாரங்களையும் 'இம்ப்ரூவ்' செய்துகொண்டு வந்திருக்கிறாய்! கூப்பிடா விட்டாலுங்கூட வந்து காக்கிறாய்!

* * *

விசாகப்பட்டினம் டாக்டர் ஏ. பாபி ராஜு ஐந்தாண்டுகளுக்கு முன் ஒரு நாள் துறைமுகக் கப்பல் ஒன்றிலிருந்து நோயாளிகளைப் பார்க்கக் காரில் சென்றார். அவரது மகன்தான் கார் ஓட்டியவர். வழியே காவலாளி இல்லாத ரயில்வே கேட் ஒன்று திறந்திருந்தது. வலப்புறத்தே நீண்ட சுவர் மறைத்ததால் இவர்கள் பார்வை அப் பக்கம் தடைப்பட்டிருந்தது. எனவே இருப்புப் பாதையைக் கடக்க எண்ணிக் காரைச் செலுத்திவிட்டார் டாக்டரின் மகன்.

பயங்கரம் நடந்தது! வலப்பக்கத்திலிருந்து ஒரு ரயில் வெகு அருகில் வந்துகொண்டிருந்தது. இதோ ரயில் எஞ்சின் காரின் வலப் பக்கமே மோதியும் விட்டது!

பயங்கரம் நடக்கவில்லைதான்! இவர்கள் சற்று தொலைவில் காரிலிருந்து இடப்புறம் தூக்கி எறியப்பட்டனர். எலும்பு முறிவுகூட இல்லாமல் தப்பினர்.

இதனினும் அதிசயம் காரும் அவ்வளவாக நொறுங்காமல், தூக்கி எறியப்படாமல், நின்ற இடத்தில் நிலைகுத்திட்டமர்ந்தது தான்!

இன்னமுங்கூட அதிசயம், அந்த ரயில் எஞ்சினும் அதே இடத்தில் நின்று விட்டதுதான். "ஆஹா, நான் பிரேக்

Koviloor Digital Library

போடாமலே எஞ்சின் எப்படி நின்றது?'' என்று வியந்தார், கீழே இறங்கிய எஞ்சின் டிரைவர்.

தம்மால்தான் நின்றது என்பதை பகவான் இதற்கடுத்த வாரம் புட்டபர்த்திச் சென்ற பாபிராஜுவுக்குத் தெளிவாக விளக்கினார்!

இங்கேயும் தம்மை ஆபத்தில் அழைக்க மறந்தோருக்கும் நம்பவே முடியாத விதத்தில் காப்பளித்திருக்கிறார் நம் கண்கண்ட தெய்வம்!

ஆபத்து அதிவேகத்தோடு நெருங்கியதால் ஹிஸ்லாப் கோஷ்டியாரும், டாக்டர் பாபிராஜுவும் மூளை ஸ்தம்பித்து, ஸ்வாமியைக் கூப்பிடாதிருந்தனர். வேறு பல பக்தர்கள் தமக்கு நேரவிருக்கும் ஆபத்தை அடியோடு அறியாதிருந்ததாலேயே அவரைக் கூப்பிட இடமில்லாதிருந்தது. அப்படியும் ஸ்வாமி அவர்களைக் காப்பாற்றி யிருப்பது நிச்சயமாக அவரது ஸர்வ வியாபகத்தை விளக்குவதுதான்!

★

வேண்டாமலே காக்கும் இந்த மஹா காருண்யத்துக்கு ஓரிரு எடுத்துக்காட்டுகள் பார்ப்போம்:

குடகிலிருந்து ஸ்ரீ.ஸி.எம். அப்பையா எழுதுகிறார்: ''அன்று மின்சாரக் கோளாறினால் ஊரில் வெளிச்சமே இல்லை. குமார் ஏதோ கொஞ்சம் உண்டுவிட்டுப் படுக்கப் போனார். அவர் ஒரு பழைய கட்டிடத்தில் வசித்து வந்தார். மெழுகுவர்த்தி ஏற்றி வைத்து, பாபா படத்தருகே ஊதுவர்த்தி சொருகிவிட்டு ஒரு சில பஜனைகள் பாடினார் பிறகு உறங்கிவிட்டார். புயற்காற்று ஊளையிடலாயிற்று. மழை 'தொப தொப' எனக் கொட்டத் தொடங்கியது. திடுமென குமாரின் காதுக்குள் ஒரு ரஹஸ்யக் குரல் கேட்டது: ''குமார், ஓடு'' என்று. கதவைத் திறந்துகொண்டு அவர் இருளில் வெளியே ஓடினார். அவர் தெருவை அடைந்த அதே விநாடி, ஒரு பயங்கர சப்தம் கேட்டது. ஆம், அவர் வசித்த வீடு இடிந்து விழுந்துவிட்டது! மறுநாட்காலை இடிபாடு களிடை சேதமுறாததாக அவர் கண்டெடுத்த ஒரே ஒரு பண்டம்: பாபாவின் படம்தான்! அதன் கண்ணாடிகூட விரியவில்லை!

(1812—லிருந்து 1828 வரை மதுரை கலெக்டராய் இருந்த ரோஸ் பீடரை அன்னை மீனாக்ஷி இடிந்து விழவிருந்த வீட்டிலிருந்து காத்ததை அச்சடித்தாற்போல் நம் ஸ்வாமி செய்துள்ள லீலை! மீனம்மாவும் நம் ஸாயம்மாவும் வேறுவேறா என்ன? ''ஹே ஸத்ய ஸாயீ! ஓ மதுரா மாயீ!'' என்று நாம் பாடுவது முற்றும் உண்மை தான்.)

★

மஹாராஷ்டிரத்திலுள்ள நந்தர்பரைச் சேர்ந்த ஸ்ரீ ஆர்.ஜீ. கோலாப்பும் இதே போன்ற(விபத்து) வருமுன் காக்கும் அருளுக் குச் சான்று பகர்கிறார்: ''காலை 4—15 மணி யிருக்கலாம். என்னை

Koviloor Digital Library

எழுந்திருக்கச் சொல்லி ஒரு குரல் கேட்பது போல் இருந்தது. மறுபடி, மறுபடி, மும்முறை கேட்டது. எனக்குத் தூக்கங் கலங் கல். இவ்வளவு முன்னதாக எழுந்து என்ன செய்யப் போகிறோம் என்று படுத்தபடியே இருந்தேன். 'குறைந்தபக்ஷம் உன் கண்ணை யாவது திறந்து பாரேன்' என்று மீண்டும் அக்குரல் கூறிற்று. வேண்டா வெறுப்பாகக் கண்ணைத் திறந்தேன் — அடடா, நான் கண்டது என்ன? ஒரு திருடன் நுழைந்திருக்கிறான்! அபாயக்குரல் எழுப்பினேன். அவன் ஓடியே விட்டான். அப்போதுதான் நம்மை எழுப்பியது யார் என்ற ஆச்சரிய உணர்வே எனக்கு ஏற்பட்டது. அதற்கு விடையாக ஒரு விபூதிச்சுவடு என் அறையி லிருந்து வெளி வராந்தாவுக்குப் போயிற்று. பாபாவேதான் என்றறிந்தேன்.''

*　　　*　　　*

சில நூறு மைல்களில் உள்ள குடகிலும், பல நூறு மைல் களுக்கு அப்பாலுள்ள மஹாராஷ்டிரத்திலும் மட்டுமின்றி, பல்லாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள லண்டன் வரையில் இப்படி அடியார் அறியாதபோதே அவர்களை ஆபத்தில் எச்சரிக்கும் பரமாத்புத அநுக்ரஹம் பரவியிருக்கிறது.

ஸ்ரீமதி ஸீதாராமன் காஸ் அடுப்பை மூடாமலே படுக்கப் போய் விட்டார். வெறுமே அடுப்பு பாட்டுக்கு எரிந்துகொண்டு, காஸ் வீணாவது மட்டுமல்ல. அடுப்பின்மீது எண்ணெய் பாத் திரத்தை வேறு வைத்திருந்தார். அது பற்றியிருந்தால் விபரீதமே நேர்ந்திருக்கும். ஆனால் ''அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாச மாய் அருளொடு நிறைந்த'' ஸாயிராமன் காஸை மூடிவிட்டார்— ஆம், லண்டனிலுள்ள ஸீதாராமன் இல்லத்தில்தான். பிறகு அத்தம்பதியரையே கேட்டார்: ''நான் மட்டும் காஸை மூடியிரா விட்டால் என்னவாகியிருக்கும்?'' என்று.

நாமே அறியாத ஆபத்தை நமக்கு எச்சரிப்பது மட்டுமல்ல; அவரே அதற்கு எதிர் நடவடிக்கையும் கூட எடுத்துவிடுகிறார்!

இந்த இனத்தில் கடைசியாக இன்னொரு திருஷ்டாந்தம். இங்கிலாந்து என்ன, அமெரிக்காவும் ஐயனுள் அடக்கம்தான் எனக் காட்டும் உதாரணம். ''ஆபத்துக் காலத்தில் உன் மோதிரத் தில் தெரியும் என்னிடம் முறையிடு'' என்று பாபா இந்திரா தேவிக்குச் சொன்னதும் தம்மைத்தாமே குறுக்கிக்கொண்டு அவர் செய்த லீலைதான். அந்த அம்மையாரே, தமக்கு வரவிருக் கும் விபத்தை அறியாத சமயத்திலுங்கூட இவராக, எந்த முறை யீடும் இன்றி, காத்துத்தான் இருக்கிறார்.

ஒருநாள் கொட்டும் மழை. மூதாட்டி காரோட்டிச் செல் கிறார். திடீரென்று நீர்த்துடைப்பானை (wiper) ஒரு சூக்ஷ்மக் கை பிடுங்கி எறிவது போலிருக்கிறது. மழையில் 'வைபர்' இல்லாமல் என்ன செய்வது என்பதால் அருகே உள்ள பெட்ரோல் நிலையத்தில் வண்டியை நிறுத்தி, புது 'வைபர்' வாங்க இறங்கு

Koviloor Digital Library

கிறார் இந்திரா. அங்குள்ள சேவகன் "அம்மா, டயரைப் பாருங்க!" என்கிறான்.

டயரில் ஒரு பெரிய ஆணி பொத்துக்கொண்டிருக்கிறது!

அதனால் ஏற்படவிருந்த பெரிய விபத்தைத் தடுக்கத்தான் சிறிய விபத்தாக வைபரை அபேஸ் செய்து போயிருக்கிறார் நம் பகவான்.

"திமை காட்டி விலக்கிடும் தெய்வம்" என்றார் பாரதி. ஒரு திமையைக் காட்டி, அதைவிடப் பெரும் திங்கை விலக்குகிறார் தெய்வஸாயி.

★

"வருமுன் காப்பதில்" வெளி விபத்துக்களாயின் பாபா ரக்ஷித்த பின், நேரவிருந்த ஆபத்தை உணர முடிகிறது. ஆனால் உள் விபத்தான வியாதியில் "வருமுன் காப்பு" ஏற்படும்போது பிற்பாடும் தெரிவதற்கில்லை. ஆம், ஸ்வாமி பலருக்கு நோய் ஏற்படுமுன்பே அதைத் தடுத்திருக்கிறார்; சில சமயம் அந்நோயைத் தாமே ஏற்று அவதியும் பட்டிருக்கிறார் தயாளு. அதோடு, எவரது "நோயையோ தாம் ஏற்றதாகவும் அது எந்தச் சமயம் பட்டென்று விலகும் என்பதையும் மட்டும் சொல்வாரே யன்றி, அந்த எவரோ ஒருவர் யார் என்று அடையாளம் சொல்லாமலும் இருப்பார். பிற்பாடு நாம் விரிவாகப் பார்க்க இருக்கும் பாரிசவாயுச் சம்பவத்தின்போது, எவருடைய வியாதியை ஸ்வாமி வாங்கிக் கொண்டிருப்பார் என்று அறிவதற்காக அடியார்கள் நிலையத்துக்கு வருவோரில் அந்நோயுற்றோரைத் தேடினர். ஸ்வாமி சிரித்தார். "நீங்கள் எப்படி அவனைக் கண்டுபிடிக்க முடியும்? நான்தான் அவனுக்கு நோய் வருமுன்பே அதை எதிர்கொண்டு வாங்கிக் கொண்டு விட்டேனே! தனக்கு வரவிருந்த நோயையும், அது தடுக்கப்பட்டதையும் அவனே அறியாதபோது, நீங்கள் எப்படி அறிய முடியும்?" என்றார். காப்புப் பெற்றவருக்கே தாம் காத்த தாகக் காட்டாத தியாகச் செம்மல்!

மணிவாசகர் அடியாரை நோக்கி, ஆண்டவனைச் "சுற்றுமின், சூழ்மின், தொடர்மின், விடேன்மின், பற்றுமின்" என்கிறார். இப்படியெல்லாம் செய்யாதோரும், சற்றும் பாத்திர ரல்லாதோருமான நம்மைப் பார்த்தியாண்டவன் தாமே சுற்றி, சூழ்ந்து, தொடர்ந்து, விடமாட்டேன் என்று பற்றிக் காத்தருள்கிறார்.

ஸர்வேச்வரனைத் தவிர எந்த மஹாமஹா ஸித்தராலும் இப்படி எங்கெங்கும் இருந்து, எல்லாவித இடரும் களைய இயலாது என்றே ஸாயி பக்தர்கள் தீர்மானமாகக் கருதுவர். ஸாயியின் இந்த 'ஸ்பெஷாலிடி'யை எவ்வளவு சொன்னாலும் முடியுமா?

* * *

மேலே குறிப்பிட்ட இந்திராதேவி நிகழ்ச்சியில் சிறிய திமையைக் காட்டிப் பெரிய திமையை பாபா விலக்கியதை வெளிப்படப்

Koviloor Digital Library

பார்த்தோம். ஆனால் அடியார் அனைவரின் பொருட்டும் இவ்வருளை அவர் வெளிப்படத் தெரியாமல் புரிந்துகொண்டேதான் இருக்கிறார். பக்தர்களுக்கும் ஏதாவது சிரமங்கள், தொந்தரவுகள் இருந்தபடிதான் உள்ளன. 'பாபா ரக்ஷிக்கவில்லையே?' என்று கூடத் தோன்றலாம். ஆனால் இந்த இன்னலை அவர் தீர்த்தால் வேறென்ன பெரிய துன்பம் ஏற்படுமோ யாரே சொல்ல முடியும்?

உதாரணமாக வயிற்றில் அல்ஸர் உள்ள ஒரு பக்தர் சொன்னார்: ''அல்ஸர் இருப்பதால்தான் நான் புளி, மிளகாய் நீக்கிய ஸாத்வ உணவு உண்கிறேன்; இதனால் சிறுகச் சிறுகச் சித்த சுத்தி பெறுகிறேன். அல்ஸரைச் சரி செய்துவிட்டாரானால் என்னால் நாவைக் கட்டுப்படுத்த முடியாது. காரத்தையும் புளியையும் ஒரு கை பார்த்து சித்த சுத்தியைக் கெடுத்துக் கொள்வேன்.''

ஸ்வாமியிடம் மிகுந்த பக்தி பூண்டிருந்த காலஞ்சென்ற நணைசித்திர நடிகர் சித்தூர் ஸ்ரீ வி. நாகையாவும் இப்படி ஒன்று சொல்வார். ஒரு சமயம் இவர் வீட்டிலிருந்து புறப்படுகையில் தென்னைமரம் ஒன்று நடாலென்று விழுந்ததாம். அபசகுனமாயிற்றே என்று வீட்டோடு இருந்தாராம். அன்று மட்டும் அவர் வெளியே போயிருந்தால் ஒரு மிகப் பெரிய சிக்கலும், பெருத்த நஷ்டமும் ஏற்பட்டிருக்கும் என்று பிற்பாடு தெரிந்ததாம். ''பச்சை மரம் விழுந்ததே!'' என்ற பதைப்பை இவருக்குச் சிறிது காலம் தந்து, பெரிய தீங்கினை ஸ்வாமி விலக்கிவிட்டார் என்பார்.

பெரிய தீங்காகவே தோன்றுவதுங்கூட உண்மையில் நன்மைக்காக இருக்கலாம். உதாரணமாக,

ஒருமுறை நிலயத்துக்கு வந்திருந்த ஒரு குருடரைப் பற்றி ஸ்வாமி ஸ்ரீ கஸ்தூரியிடம் சொன்னார்: ''அவன் என்ன பிரார்த்திக்கிறான் தெரியுமா? அவனுக்கு நான் பார்வை தரவேண்டுமாம். அதாவது அவனுடைய குடும்பத்தை நாசம் பண்ணவேண்டுமாம்!''

கஸ்தூரிக்குப் புரியாத புதிராக இருந்தது. 'குருடருக்குப் பார்வை தருவது எப்படிக் குடும்ப நாசமாகும்?'

ஸ்வாமி புதிரை அவிழ்க்கவில்லை.

தந்திச் சேவகர் அவிழ்த்தார்.

குருடரைத் தேடிப் பிரசாந்தி நிலயத்துக்கே தந்தி வந்தது. தந்தி தந்த தகவல்:

அவருக்கு உத்தியோகம் கிடைத்திருக்கிறதாம்—குருடர் மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ்!

ஸ்வாமி மட்டும் இவருக்குப் பார்வை தந்திருந்தால் லக்ஷோப லக்ஷம் அவலர்களோடு இவரும் வேலையில்லாக் கொடுமைக்கு ஆளாகித் திண்டாடிக் கொண்டிருக்க வேண்டியதுதான்!

Koviloor Digital Library

இப்போதோ குருடர் என்பதாலேயே அயனுன உத்தியோகம் தேடி வந்திருக்கிறது!

நன்மைக்கேதான் ஸ்வாமி தீமை தருவதும் என்பதற்குப் போதிய சான்றுதானே? இதை மட்டும் ஆழ நம்பிவிட்டால் அப்புறம் நிரந்தரத் திருப்தி தவிர வேறென்ன?

எத்தனையோ பேரை ஸ்வாமி விபத்திலிருந்து, வியாதியிலிருந்து, வறுமையிலிருந்து காப்பாற்றுவதும் அவர்களது கர்மச் சுமையைக் குறைக்கிற அருள்தான் என்ற உறுதி நமக்கு ஏற்பட்டு விட்டால் நாம் ராஜாதான்!

ஆனால் அது ஏற்படுவது மிகவும் துர்லபம். 'கெடுதலும் நேரட்டும்' என்று சொல்வதையே நாம் உள்ள நிலையில் ரசிக்க முடியாமல்தான் இருக்கும். எனவே இதைச் சொல்லி இவ் வதிகாரத்தை முடிக்க வேண்டாம்.

நாம் விரும்பும் விதத்திலேயே துள்ளி வரும் ஸ்வாமியின் 'ஸ்பெஷல்' அநுக்கிரஹத்தோடு முடிப்பதுதான் பொருத்தம்.

இந்திராதேவி விதவிதமாகப் பெற்றுள்ள அநுக்கிரஹங் களில் இன்னும் ஒன்றினைச் சொல்லி இவ்வதிகாரத்தைத் தலைக் கட்டுவோம்.

புயலிரவு. இந்திராதேவி கார் ஓட்டுவதில் பிடிப்பிழந்து விட்டார். அது தன் இஷ்டப்படி தடதடவென்று ஓடிற்று. எதிரும் புதிருமாக மும் மூன்று பாதைகளுள்ள அந்தச் சாலையின் குறுக் காக வண்டி இரண்டு முறை சுற்றிச் சுழன்றுவிட்டு, இன்னொரு பாதிச் சுற்றும் போட்டு எதிர்ப்புறத்தில் போய் நின்றது!

விபத்து எதுவுமே நேரவில்லை.

போலீஸ்காரர் ஆச்சரியமுற்றுக் கேட்டார்: "அந்தச் சாலையில் இரு புறமும் ஆறு பாதைகளிலும் கார்கள் வந்தபடி இருக்குமே! அதெப்படி உங்கள் கார் வேறெந்த வண்டியிலும் மோதாமல் சாலையின் குறுக்காக இரண்டரைச் சுற்று சுற்றியது?"

ஆம், இந்திராவுக்கு இரு புறங்களிலும் கார்கள் பாட்டுக்குப் பறந்து கொண்டுதான் இருந்தன. ஆனாலும் அவரது வண்டி அவற்றோடு மோதாமல் எப்படியோ இந்த நர்த்தனத்தைச் செய்தது!

இதை இந்திராதேவி கூறியதும் போலீஸ்காரர், "உங்களுக்கு ரொம்பவும் ஸ்பெஷலான ஒரு காப்புத் தேவதை இருப்பதாகத் தெரிகிறது" என்றார்.

ஸ்வாமியைப் பற்றியும், அவர் தந்த ரகசியமான மோதிரம் பற்றியும் அவரிடம் ஏதும் சொல்லாமலே அம்மையார், "ஆமாம், ஆமாம், ரொம்ப ஸ்பெஷல் தேவதை தான்" என்று மட்டும் கூறினார்!

Koviloor Digital Library

அத்தியாயம்—41

சிந்தக் களத்திலும், யுத்தக் களத்திலும்

பகைவரின் படைகளைப் பணியச்செய்து வெல்வதும், உக்கிரம் வாய்ந்ததுமான அக்னியாம் பராசக்தியைப் பரம பதத்திலிருந்து வருமாறு அழைக்கிறோம். அச் சக்தி நம்முடைய ஸகல ஆபத்துக்களையும் அழிப்பதாக!

— வேதத்தில் உள்ள துர்கா ஸூக்தம்.5

மோதாமல் காப்பது ஒரு லீலை. மோதியும் காப்பது இன்னொரு லீலை.

கரக்பூரில் ஒரு மூன்று வயதுப் பிள்ளை கார் மோதி இருபது அடிகள் தள்ளித் தூக்கி எறியப்படுகிறான். ரத்த வெள்ளத்தில் மிதந்தவன் கே.ஜி. ஆஸ்பத்திரியில் சேர்க்கப்படுகிறான். 'முடிந்த சமாசாரம்' என்றே நினைத்தபோது, மலரக் கண் விழிக்கிறான். "டாக்டர், கவலைப்படாதீர்கள். பாபா என்னைத் தூக்கிக் கொண்டு கையால் பிடித்துவிட்டார். எல்லாம் சரியாயிடுத்து" என்கிறான். ஆம், எல்லாம் சரியாகிவிட்டது! அத்தனை ரத்தம் கொட்டியிருந்ததே தவிர, காயம் என்று எதையுமே காணோம். சின்ன எலும்பு முறிவு கூட இல்லை.

டாக்டர் எஸ்.என். தத்தா நைனிடாலிலிருந்து லக்னௌ நோக்கிக் காரில் போய்க் கொண்டிருக்கிறார். லால்குவா என்ற ஊரில் சாலைக்குக் குறுக்கே திடீரென்று ஓர் ஐந்து வயதுப் பெண் ஓடுகிறது. 'ப்ரேக்' போட்டும் ஒன்றும் செய்து கொள்ள முடியாத நிலை! ஆம், கார் மோதியே விட்டது.

சிறுமி ஆறடி அப்பாலே போய் விழுகிறாள். கூட்டம் கூடிவிட்டது. நடுநடுங்கிய தத்தா கையிலுள்ள பாபா படம் பொறித்த மோதிரத்தைப் பார்த்துக்கொண்டு, "ஸாயிராம்" என்கிறார்.

Koviloor Digital Library

அந்த மஹாமந்திரத்தை இவர் சொன்னவுடன், சிறுமியின் கண் திறக்கிறது. டாக்டரிடம் தூக்கிப் போகிறார் தத்தா. ''மைனர் சிராய்ப்புத்தான்'' என்று சொல்லி மருந்து போட்டு அனுப்புகிறார் டாக்டர். இப்படி அனந்தம்.

*

எங்கெங்குமே இருந்து அவர் காப்புத் தருகிறார் என்னும் போது பிரசாந்தி நிலயத்திலும், மற்றும் அனந்தப்பூர், ஒயிட் ஃபீல்ட் முதலான இடங்களிலும் அவரது ஸ்தாபனங்களுக்கென்றே மாபெரும் கட்டுமானப் பணிகள் நடக்கும்போது அங்கே அவரது ரக்ஷணை பூரித்து நிற்கும் என்பதில் ஐயமென்ன?

பிரசாந்தி நிலயக் குடியிருப்புக்களின் பிரம்மாண்டமான விஸ்தரிப்பு, மஹோன்னதமான அனந்தப்பூர் மகளிர் கல்லூரிக் கட்டிடப்பணி இவற்றில் முக்கியமானதொரு பொறுப்பேற்றிருந்த பொறி இயல் நிபுணர் ஸ்ரீ பவராஜு ஸத்ய நாராயணா அவர்கள் இந்த மிகப்பெரும் வேலைகள் நடந்தபோது ஒரு சிறிய விபத்துக் கூட நடக்காததை வியந்து கூறுகிறார். 'ஒரு தொழிலாளிக்குக் கூட ஒரு கிறல் ஏற்படவில்லை' என்று அடித்துக் கூறுகிறார். நம் பவரோக நிவாரண ஸத்யநாராயணரின் காப்புச் சக்தியையே காரணம் காட்டுகிறார் பவராஜு ஸத்யநாராயணா.

இதற்கு மாறாகவும் நடந்துவிடுமோ என்று நடுங்க வைத்த ஒரு நிகழ்ச்சியையும் அவர் தெரிவிக்கிறார்.

1972—ல் பிரசாந்தி நிலயக் குடியிருப்புக்களின் நிர்மாணப் பணி நடந்துகொண்டிருக்கிறது. மேற்குப் பிரசாந்தியின் தென் கோடி 'ப்ளாக்கி'ல் இரண்டாம் மாடிக்கு மேல் தளம் ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். வேலை செய்பவர்களில் ஒருவர் ஸ்ரீ ஒய். ஸாய்ஜி ராவ் என்ற பொறி இயல் பட்டதாரி.

இவர் புல்லிக் கயிறொன்றை 'அட்ஜஸ்ட்' செய்யும்போது, அது அப்படியே இவரை இழுத்துக்கொண்டு போக...

ஆ! தடால் என்ற சப்தத்துடன் முப்பதடி உயரத்திலிருந்து ஸாய்ஜி ராவ் நிலத்தில் விழுந்துவிட்டார்.

நல்ல இளமைப் பருவத்தினர், இத்தனை கோரமாக துர்மரணம் உற்றாரே என்று ஒரு பக்கமும், நம் ஸ்வாமிக்கு மாளாத பழி ஏற்பட்டுவிட்டதே என்று ஒரு பக்கமும் நெஞ்சு அடித்துக் கொள்ள, மற்ற பணியாளர்கள் அவர் கிடந்த இடத்துக்கு ஓடினார்கள். அது சரீரமாக இருக்குமா, அல்லது ரத்த மாமிசப் பிண்டமாக இருக்குமா என்று கலங்கியபடி அருகே சென்றார்கள்.

அவர்கள் கண்டதென்ன?

விருட்டென எழுந்தமர்ந்தார் ஸாய்ஜி. ''பஞ்சு மெத்தையிலிருந்து எழுவது போலே'' என்கிறார் ஸ்ரீ பவராஜு.

Koviloor Digital Library

எல்லோரையும் பார்த்து இளநகை செய்தார். "நான் சொஸ்தமாக இருக்கிறேன்; சொஸ்தமாக இருக்கிறேன்" என்று இருமுறை உறுதி கூறினார்.

மலையிலிருந்து பிரஹ்லாதனை உருட்டிவிட்டும் அவனை அது இம்மிகூட பாதிக்கவில்லை என்ற புராணம் பொய்யல்ல என்று நிரூபணமாயிற்று. ஆனந்தம் தாங்க முடியாத பக்தர்கள் ஸ்வாமியிடம் ஓடினர். திவ்யமுகத்தில் ஸர்வக்ஞ நகை எழில் செய்தது!

அடிபடாவிடினும், அதிர்ச்சி யிருக்கலாம் என்பதால் ஸாய்ஜியை ஒருநாள் மருத்துவமனையில் ஓய்வுபெறச் சொன்னார்கள். அவரா கேட்பார்? "எனக்கு ஏதுமே இல்லை; வேலை செய்தே திருவேன்" என்றார்.

ஸாய்ஜி சொன்னதற்கு ஸாயியின் ஒப்புதலும் கிடைத்து விட்டது. அவர் தொடர்ந்து பணியை ஏற்றார். ஒரு விநாடி கூட 'ரெஸ்ட்' இல்லாமல் ஆபத்ஸஹாயப் பணியைச் செய்ய ஐயன் இருக்கும்போது இவருக்கு எதற்கு 'ரெஸ்ட்'?

★

பலவிதமான விபத்துக்களில் ஒன்றாகவே மூளைக் கோளாற்றையும் சேர்க்க வேண்டும். உடம்புக்கு ஏற்படும் கோளாறுகளை நோய் எனக் கூறலாம்; இவற்றைத் தீர்ப்பதில் வைத்ய ஸாயியின் திறனை முன்பே கண்டோம். உடம்புக்கு இன்றி உள்ளத்துக்கு ஏற்படும் கோளாறே, வியாதி என்பதைவிட விபத்துக்கே நெருக்கமானது. இறைவனின் தலைசிறந்த படைப்பான மனித மனமானது கலங்கித் தாறுமாறாகச் செயல் புரிவதைவிடப் பெரிய விபத்து என்ன உண்டு?

ஆயினும் ஸாயி பக்த சிகாமணிகளைக் கொண்ட பல குடும்பங்களில் இப்படிப்பட்ட ஒரு மன நோயாளர் இருக்கக் காண்கிறோம். அவர்களை ஸ்வாமி குணப்படுத்துவதையும் வெகு அபூர்வமாகவே காண்கிறோம். இதே குடும்பங்களில், ஏன், இம்மாதிரிச் சித்தக் கோளாறு உள்ளவர்களுக்குக்கூட அவர் மற்ற நோய்களைத் தீர்க்கிறார், மற்ற ஆபத்துக்களை விலக்குகிறார், ஆனால் இந்த புத்தியாரட்டத்தை சொஸ்தம் செய்யாமல் விடுகிறார். உதாரணமாக முன்பே ஜஸ்டிஸ் எராடியின் மகளைக் கண்டோம். மற்றொரு பரமபக்தரான டாக்டர் பகவந்தம் அவர்களின் ஒரு புதல்வனின் சித்த நோய் மேலும் முற்றிவிடாமலிருக்க, பாபாவே ஒருமுறை எவரும் எதிர்பாராதபோது 'ஸிரிஞ்ஜ்' வரவழைத்து 'லம்பார் பங்க்சர்' செய்து, மூளையிலிருந்து சிறிது திரவத்தை அதன் மூலம் வெளியேற்றினார். ஆனால் இதுவும் கோளாறு மேலும் முற்றாமலிருப்பதற்குத் தானேயன்றி, அன்றிருந்த நிலையிலிருந்து அதைக் குணப்படுத்துவதற்கு அல்ல.

ஏன் இவ்விதம் மன நோயாளரை அவர் சொஸ்தம் செய்வதில்லை என்று யோசிக்கும்போது ஸ்ரீ கஸ்தூரிப் பெரியவர்கள்

Koviloor Digital Library

கூறியதுதான் பதிலாகக் கிடைக்கிறது. அவர்கள் சொல்வார்கள்: "என்னிடம் சித்தக் கோளாறு உள்ளவர்களை அழைத்து வந்து சொஸ்தப்படுத்தவேண்டும் என்று பல பேர் கேட்டுக் கொள்கிறார்கள். அப்போதெல்லாம் எனக்கு என்ன தோன்றுகிறதென்றால்: இவர்களுக்கு புத்தி கோளாறாகி யிருப்பதால் இவர்கள் செய்கிற காரியம் எதுவுமே புத்தி பூர்வமானதல்ல. புத்தி பூர்வமாக ஒரு காரியம் செய்தால்தான் அதற்கான வினைவை நாம் அநுபவிக்க வேண்டும். அதாவது நம்மைப்போல் புத்தி பூர்வமாகக் காரியம் செய்பவர்கள் தப்புச் செய்தால்தான் அது பாப கர்மாவாகி, அதற்காக நாம் பிற்பாடு கஷ்டம் அநுபவித்தாக வேண்டும். புத்தி பூர்வமாகச் செய்யாதவர்களுக்கோ, அவர்கள் என்ன தப்பு செய்தாலும் அதனால் கர்ம மூட்டை, பாப மூட்டை ஏறுவதே யில்லை. ஏதோ பூர்வத்தில் செய்த தப்பான கர்மாவுக்காக அவர்களுக்கு இப்போது இப்படி சித்தப்பிரமம் ஏற்பட்டிருந்தாலும், இன்றைக்கு நமக்குள் பாபமே சேராதவர்கள் யாரென்றால் அது இவர்கள் தான். எனவே குணப்படுத்துவது என்ற பெயரில் இவர்களையும் நம்மைப் போலாக்கி, இவர்களுக்கும் பாபம் சம்பவிக்கும்படி ஏன் செய்யவேண்டும்? இப்படித்தான் எனக்குத் தோன்றுகிறது."

அதாவது சில சமயங்களில் அதிர்ச்சியையே ஒரு வைத்தியமாகத் தருவது போல் (shock — therapy), மூளைக் கோளாறு என்ற விபத்து அல்லது நோயை பகவான் சிலருக்குத் தந்திருப்பதே அவர்களுக்கு பாபம் என்ற விபத்து அல்லது நோய் சேராமலிருப்பதற்காகத்தான் எனலாம். எனவேதான் பாபா இதில் அதிகம் தலையிடவில்லையோ எனத் தோன்றுகிறது.

"அவர் தலையிடுவதில்லை என்று ஏன் பெத்தப் பெயர் தருகிறீர்கள்? அவருக்கு மன நோயைத் தீர்க்கும் ஆற்றலேதான் இல்லையோ என்னவோ?" என்று சிலர் கேட்கலாம். இவர்களது வாயை அடைக்கும் விதத்தில் பாபாவினால் பைத்தியம் தெளிவிக்கப்பட்ட சிலரும் உண்டு.

பூர்வ கர்மாவுக்காக "பைத்தியம்" என்றே மருத்துவ ரீதியில் சொல்லப்படுபவர்களையும் சொஸ்தப்படுத்தி யிருக்கிறார்; புது கர்மாவாகப் பிறர் ஏவி விட்டு மாந்திரீக ரீதியில் ஏற்பட்ட பைத்தியத்தையும் தெளிவித்திருக்கிறார். பின்னால் சொன்னதில் ஆவிகளின் ஆளுகையையும் சேர்த்து விடலாம்.

* * *

இவருக்கே பைத்தியம்தானோ என்று இவரது பிதாகூடக் கொஞ்சம் ஸம்சயித்து வந்த இளம் பிராயத்திலேயே 'பித்தம் தெளிய மருந்தாக' இருந்திருக்கிறார். அப்போது இவருக்கு வயசு பதினாறுதான்.

ஒருவர் அடங்கா வெறி பிடித்த தமது பெண்ஜாதியைப் படாதபாடு பட்டு அழைத்து வந்தார். துணைக்கு இன்னொருவரும்

Koviloor Digital Library

உடன் வந்தார். புக்கபட்டணத்தில் இருந்த 'புண்யாத்மா'க்களில் சிலர், "உம் மனைவிக்குப் பைத்தியமா? உமக்குப் பைத்தியமா? மோசடிப் பையன் ஒருத்தனை நம்பிப் போகிறீரே, பேசாமல் ஊருக்குத் திரும்பும்" என்று உபதேசித்தார்கள். ஆனாலும் அவர் விடாப்பிடியாக அவளை டக்ஸுக்கட்டி இழுத்து வந்தார். சித்ராவதிப் படுகையில் அவள் 'ப்ரேக்' போட்டுவிட்டாள்.

கணவரை அவளுடன் விட்டு, உடன் வந்த இன்னொருவர் பர்த்தியில் கர்ணம் வீட்டிலிருந்த பால ப்ரபுவிடம் வந்தார். இவரைப் பார்த்ததும், "எத்தனை வசீகரக் குழந்தை!" என்று வியந்தார். "இங்கே ஸாயி பாபா என்று...." என இழுத்தார்.

குமாரஸ்வாமி சிரித்தது. அச்சோ, அந்த உதட்டழகும், பல்லழகும்! "அய்யோ பாவம்" என்று உருகிச் சொல்லிற்று. "அந்தப் பெண்பிள்ளை ஆற்றங்கரையில் அமளி துமளி பண்ணுகிறாள். நீ அங்கே போய்க் குளி. அவளும் கொஞ்சம் அடங்கியிருப்பாள். அவர்களையும் குளிக்கச் சொல்லி அழைத்து வா" என்றது.

ஒரு வழியாக அந்தப் பாதேவதை வந்து சேர்ந்தாள். தம்பதி நாம் கொண்டுவந்திருந்த வாழைப்பழங்களை பால ஸாயி முன் வைத்தனர். அந்த நாட்களில் அவர் கையுறைகளை ஏற்றுவந்தார். அவர் அதிலிருந்தே ஒன்றை எடுத்து அவளிடம் கொடுத்து உண்ணச் செய்தார். விபூதி சிருஷ்டித்துக் கொடுத்தார்.

அவ்வளவுதான். இவரது சுத்தப் பிரேமையில் மறைந்தது அவளது சித்தப் பிரமை.

கணவரைப் பார்த்து, "போய், அரிசி, காய்கறி ஏதேனும் வாங்கி வாருங்கள். யாரிடமாவது பாத்திரம் இரவல் வாங்கி வாருங்கள். சமைத்துப் போடுகிறேன். இப்போதே ரொம்ப நேரமாகிவிட்டது" என்றாள்.

கணவரால் தம் காதுகளையே நம்ப முடியவில்லை. முற்றிய பைத்தியம் அதற்குள்ளா தீர்ந்து விட்டது? அவரது கண்களையும் நம்ப முடியவில்லை. உன்மத்த வெறிக் கூத்தாடும் அவள் முகமா இப்படி பவ்யமான பெண் முகமாக மாறிவிட்டது? இந்த மாறுதலைச் செய்த மஹாநுபாவனை, மஹா அநுபவமே வெளிப்படாமல் பச்சைப் பிள்ளையாக அமர்ந்திருப்பவனின் இன்முகத்தைப் பார்த்தார். அந்த இன் முகத்திலிருந்து உலக மக்களையெல்லாம் தன் பச்சைக் குழந்தைகளாகப் பார்க்கும் தாய்மையுடன், "வேண்டாம்மா! இன்னிக்கு நீ என் சமைக்கறும்? என்னோடேயே சாப்பிடுங்கள்" என்ற பொன்மொழிகள் உதிர்ந்தன.

சுப்பம்மா கொணர்ந்த உணவுவகைகளைக் கதம்பமாகச் சேர்த்துப் பிசைந்தார் பால பாபா. தலைக்கு ஓர் உருண்டை கொடுத்தார். அடடா, அதன் சுவை! திவ்யப் பிரேமை என்பதன் சுவை இதுதானோ?

Koviloor Digital Library

மற்றொரு சமயம் பழைய மந்திரத்தில் பக்தர்களை அடித்துப் புடைத்து ஊதாஊதம் செய்தான் ஒரு முரட்டு வெறியன். பாபா அவனுடைய தலைமயிரைப் பிடித்து ஓர் ஆட்டம் ஆட்டிய வுடன், பெட்டிப் பாம்பாக அடங்கி அவரது பாதத்தில் விழுந் தான். விபூதியை அவன் நெற்றியில் அப்பினார் விகிர்தர். அவனது சுகிர்தம் அப்படி! ஏழாண்டுப் பைத்தியம் ஏழு விநாடி வைத்தியத் தில் தெளிந்தது!

* * *

'ஆவியே, ஆரமுதே' என்று ஆழ்வார் போற்றும் ஐயன், ஆவிகளின் சேஷ்டையைக் கண்டிப்பதில் அதி நிபுணர்தாம்! ஒரு முறை பழைய மந்திரத்தில் நாகமணியம்மாள், பேய் பிடித்த ஒரு பெண்ணின் பக்கத்திலேயே தெரியாத்தனமாகப் படுத்துறங்கி விட்டார். நள்ளிரவில் அவள் தன் ஸ்வரூபத்தைக் காட்டத் தொடங்கியவுடன், நடுநடுங்கிவிட்டார். வெளியே ஓடிவிட லாம் என்று நாகமணி கதவண்டை வந்து பார்த்தால், அடடா கதவு வெளிப் பக்கம் பூட்டியிருக்கிறது! இந்தப் பெண் மற்றொருக்குத் தொந்தரவு கொடுக்கக் கூடாது என்பதற்காக வெளியே பூட்டிவிட்டிருந்தார்கள்.

'இதோ அவள் துரத்தி வந்து விட்டாள்! வகையாகச் சிக்கிக் கொண்டுவிட்டோம்; வசமாக மாட்டிக் கொண்டோம். தன்னை அவள் கொன்றே விடப் போகிறாள்! ஸாயிராம்' என்று நாகமணியம்மாவின் இதயம் கூவிற்று!

இதயநாதன், பூட்டிய அறைக்குள் வந்து நின்றார்! "நாக மணியம்மா" என்று மணிக்குரலில் அழைத்தார். பேய்ப் பெண்ணை வெறித்துப் பார்த்தார். பேயின் வெறி அடங்கியது.

மறுநாள் காலை பேய்ப் பெண்ணுக்குத் தைல நீராட்டி, சாம்பிராணி போட்டு அழைத்து வருமாறு அவளது உறவினரிடம் கூறினார். அவர்கள் அவ்விதமே செய்தனர்.

பாபா அவளது உச்சந்தலையில் கையை வைத்தார். அம் மாத்திரத்தில் அது சிறிதே வெடித்துத் திறந்துகொண்டது! அதற்குள் விரலை விட்டு, இரண்டங்குல நீளமுள்ள ஒரு புழுவை எடுத்தெறிந்தார்!

"அது தான் பிசாசு" என்றார்.

அந்தப் பெண்ணின் சிரத்தை மீண்டும் தொட்டார். வெடிப்பு ஒன்றுசேர்ந்து விட்டது!

முன்பு தம் மண்டையையே மும் முறை மாந்திரீகன் கீறு வதற்கு உட்படுத்திக்கொண்டும் 'பேய்' தெளியாதவர், இன்று ஒரு மண்டையைப் பிளந்தே பேயை ஓட்டி விட்டார். அந்த ராக்ஷஸன் இவருக்குத் தந்த வலி கொடூரமானது. இன்று

Koviloor Digital Library

இந்தப் பெண்ணோ, "கொஞ்சம்கூட வலியே யில்லை" என்றாள்! எப்படி வலிக்கும்? நஞ்சமுதாக்கிய அபிராமவல்லியின் கரம் பட்ட பின் எப்படி ஐயா, வலிக்கும்?

* * *

பம்பாயின் மிகப் பிரபல ஷிப்பிங் கம்பெனி முதலாளியான ஆல்பிப் டைட்மான்ட் ஜோஹான்வலஸனுக்குப் பல எதிரிகள் பல விதத்தில் மாந்திரிகம், பில்லிசூன்யம் முதலியவற்றை ஏவிவிட்ட போதிலும் பாபாவின் திருநீற்றில் அவை யாவும் நீற்று விழுந்தது பற்றி ஒரு தனி காண்டமே எழுதலாம். ஜோஹான்வலஸன் அத்தனை எதிர்ப்புக்களையும் சமாளித்து, தமது நிறுவனத்தை யும் நியாயமான லாபத்துக்கு விற்று விட்டு, மீண்டும் ஆஸ்லோ வுக்குச் சென்று குடியும் குடித்தனமுமாக விளங்குவதற்கு பாபா தான் அங்குலத்துக்கு அங்குலம் உதவி புரிந்தார்.

பைத்தியம் என்றும், பேய் என்றும் எவரெவரையோ சொல் கிறோம். நாம் மட்டும் என்ன வாழ்ந்தோம்? எத்தனை வெறி யாட்டத்தில், பேயான உட்பகை ஆட்டத்தில் பாழாகிக் கொண் டிருக்கிறோம்? இங்கும் சொஸ்தம் செய்யக் காத்துக் கிடக்கிறான் வைத்யநாதன்! நாம்தான் நிஜ சரணாகதி செய்யாமல் அவரைக் காத்துக் கொண்டே இருக்குமாறு நிறுத்திவைக்கிறோம்.

* * *

அடிபடுவதும், பொருள் இழப்பதும், கொலைபாவிகளின் கையில் சிக்குவதும், சித்தப் பிரமை பிடித்தாட்டுவதும் தான் விபத்து என்றில்லை. ஒரு குடும்ப அங்கத்தினரிடையே, அல்லது ஒரு நிறுவன அங்கத்தினரிடையே மன இசைவு இல்லாததால் ஏற்படும் சூழ்நிலையும் பெரிய விடத்துத்தான். இங்கே மனத்தை மாற்றும் காரியம் வந்து விடுகிறது. பாபா மற்ற விபத்துக்களில் அற்புதம் புரிவது போல் தனி நபர் சுதந்திரத்தைச் சிதைத்துத் திடீர் மன மாற்ற அற்புதத்தைச் செய்வது துர்லபந்தான். விதிவிலக்காக இப்படியும் ஒரு சில செய்துதான் இருக்கிறார். ஆனால் நயமாகவும் பயமாகவும் எடுத்துச்சொல்லி அநேகரைத் திருத்தி, எண்ணற்ற குடும்பங்களில், நிறுவனங்களில் ஒற்றுமை ஒளியை அவர் நிச்சயமாகச் சுடர் விச வைத்திருக்கிறார். இதற்காக அவரைக் கையெடுத்துக் கும்பிடக் கடமைப்பட்டவர் ஆயிரமாயிரவர்.

ஆனால் இவர்கள் கதையில் ஸ்வாரஸ்யமாக இங்கே எடுத்துச் சொல்லும்படி எதுவும் இல்லை. எனவே இவ்வினத்திலும் துர்லபமாக நடைபெற்ற அற்புதங்களில் ஓரிரண்டை மட்டும் பார்ப்போம்:

மாமனாரைப் படுத்தி, மனைவியைக் கொடுமைப்படுத்திய ஒரு வாலிபரிடம் தம் சூக்ஷ்ம ரூபத்தில் சென்று, ஸ்தூலமாக அடி அடி என்று அடித்தும் கூட பாபா புத்தி புகட்டிய சம்பவம்

Koviloor Digital Library

ஒன்று உண்டு. (நமக்குத் தெரிந்து பாபா ஒருவரை அடிப்பது மிகவும் அபூர்வந்தான்).

ஓரளவுக்குப் பெயர், ஊர் முதலான விவரங்களோடு இன்னோர் உதாரணம்: அந்த இருபது வயது அபலையின் பெயர் ஆர்வி. அவள், அவளது கணவன், மாமியார்-மூவருமே குடகுக் காபித் தோட்டம் ஒன்றில் வேலை செய்யும் தொழிலாளிகள். பேதை ஆர்வி இருபது வயதுக்குள்ளேயே நாலு குழந்தைகளைப் பெற்று, நாலையும் வாரிக்கொடுத்தாள். இந்தத் துக்கம் போதாதென்று, மூடர்களான அவளது மாமியாலும், கணவனாலும் "துக்கிரி, தோஷி" என்று ஓயாமல் தூஷிக்கப்பட்டவள். வாயால் திட்டியது மட்டுமல்ல; அவ்விருவரும் இவளை நன்றாக அடித்து நொறுக்குவதும் உண்டு.

1967, ஏப்ரில் 27-ந் தேதி இந்தக் கொடுமை உச்சகட்டத்தை அடைந்தது. அன்று ஆர்வியை அவ்விருவரும் ஆவி துடிக்கப் புடைத்துவிட்டனர்.

மறுநாள் தாயும் மகனும் சந்தைக்குச் சென்று விட்டனர். 'இறைவனே அளித்த வாய்ப்பு' என்று ஆர்வி எண்ணினாள்.

உத்தரத்தில் கயிற்றைக் கட்டிச் சுருக்குப் போட்டாள். ஆம், குடும்ப விபத்தைத் தீர்க்க முடியாமல் தற்கொலை விபத்தைத் தற்காப்பாகத் தேடி விட்டாள்! சுருக்குக்குள் தலையைக் கொடுத்துக்கொண்டு ஓர் எழும்பு எழும்பினாள்.

ஆனால் தூக்குக் கயிறுதானா இவளைத் துக்கத்திலிருந்து தூக்கிவிடும்? அதற்கென்றே நம் தீனதயாளன் இல்லையா?

சுருக்கு இவள் கழுத்தை நெரிக்கவேண்டிய அந்த விநாடிப் போதுக்குள், உத்தரத்தில் போட்டிருந்த முடிச்சே அறுந்து விட்டது.. இம்மாதிரி இறுதி நொடி மட்டும் காத்திருந்து அருள்வதுதான் அப்பன் பெருமை. தாம் அந்த நொடியைத் தவறவே விடமாட்டோம் என்ற ஸர்வ நிச்சயம் அவருக்கு உண்டு!

புகழ்கொண்ட வித்வானாகில், தாளத்திலே 'இடத்துக்கு'ச் சரியாக அவர் வரவேண்டுமே என்று ஸதஸ் ஆர்வமாகவும் கவலையாகவும் கவனித்துக் கொண்டிருக்கும்போது, அவரோ நிச்சிந்தையாக ஸ்வரங்களைக் கோத்துக் கொண்டே போய், தாளத்தின் கடைசி வீச்சுக்குள்ளேயே ஒரு தீர்மானத்தை வளைத்துக் கட்டி ஜம்மென்று 'இடத்துக்கு' வந்து விடுவார். இந்தக் கலையம்சம் பாபாவின் விபத்து ரக்ஷணத்தில் அருமையாகப் பிரகாசிக்கிறது. கடைசிவரை ஹாயாக இருப்பது போலிருந்து, ஒரு க்ஷணத்தின் நுண்துகளுக்குள் புகுந்து விளையாடி விடுவார்!

இப்போது அப்படித்தான் கழுத்தை வளைத்த சுருக்கு இறுகும் விநாடிக்குள், மேலே முடிச்சை அறுபட வைத்தார்.

தடாலென்று விழுந்தாள் ஆர்வி.

Koviloor Digital Library

தற்கொலை செய்துகொள்ள எண்ணிய பாபத்துக்கு தண்டனையாகவோ என்னவோ சிறு காயம் ஏற்பட வைத்தார்.

கீழே விழுந்த ஆர்வியின் முன் ஓர் ஒளிப்பிழம்பு ஜொலித்தது! மஞ்சள் அங்கியில் மங்கள ஸ்வரூபன் நின்றான்!

அவளை நோக்கிப் புன்னகைத்தார் ஸ்வாமி. மறைந்தார்.

"முதலாளி ஐயா வீட்டு படத்தை ஹாலில் மாட்டியிருக்குமே, அந்த சாமியார்தான் இவரு!" என்று வியந்து கொண்டாள் ஆர்வி.

தான் தூக்கில் தொங்காமல் வாழவைத்தது அவர்தான்; இப்படிச் செய்தவர் தன் துயரும் தீர்ப்பார் என்று அவளுக்கு ஆழ்ந்த நம்பிக்கை பிறந்து விட்டது. சாவதை மறந்து வாழ்வதில் ஆர்வம் கொண்டுவிட்டாள் ஆர்வி.

'எசமானியம்மாளிடம் இந்த விவரத்தைச் சொல்லலாமா? இதைச் சொல்வதானால் மாமியாரும், புருஷனும் கொடுமைப் படுத்துவதையும் சொல்லும்படியாகும். அதனால் என்னென்ன விளைவு ஏற்படுமோ?' என்று யோசித்துப் பேசாமலே இருந்து விட்டாள் ஆர்வி.

இவள் பேசாதிருந்தால் ஸ்வாமியின் வாயை அடைத்துவிட முடியுமா? அவர் பரம பக்தையான காபித் தோட்ட முதலாளி மனைவியின் கனவில் தோன்றினார். ஆர்வி சமாசாரம் முழுவதையும் சொல்லி மறைந்தார்.

அப்புறம் அவளுக்கு அடித்ததே யோகம்! தங்கள் பகவானால் பேணிக் காக்கப்பட்டவள் ஆர்வி என்றறிந்தவுடன் முதலாளி வீட்டார் அவளுக்கு ஏக உபசாரம் செய்ய ஆரம்பித்துவிட்டனர். அதைப் பார்த்து மாமியும், கணவனும் கூட அவளால்தான் தங்களுக்கு மேன்மை என்றுணர்ந்து, முன்பு அவளைப் படுத்தியதற்கு வட்டியும் முதலுமாக அன்பைச் சொரியத் தொடங்கினர்.

திட்டும், அடியும், கோபமும், சோகமும், கதறலும் நிறைந்த ஒரு பாட்டாளிக் குடும்பத்தில் இப்படியாக ஸாயி நாதனின் அபாரக் கருணை அன்பையும், ஆனந்தத்தையும் பொலிவித்து விட்டது!

இன்னொரு காபித்தோட்ட முதலாளி — தொழிலாளி சம்பந்தப்பட்ட விஷய மொன்றையும் இங்கேயே கூறிவிடலாம்: நாம் நன்கு அறிந்த லோகம்மாதான் இந்த முதலாளி.

சாதாரணமாக முதலாளித்வ கெடுபிடிகளே இல்லாத அந்த அம்மாளுக்குத் தான் மிகவும் விரும்பிய வைர மோதிரம் களவு போனதும் மனப் போக்கே சற்று மாறிவிட்டது.

அவ்வம்மை புட்டபர்த்திக்கு வந்தபோது அங்கேயே மோதிரம் காணாமற் போயிற்று. ஸ்வாமியிடம் முறையிட்டாள். "ஒரு

Koviloor Digital Library

பாரம் தொலைந்தது என்று சந்தோஷப்படு!'' என்று கூறி ஸ்வாமி ஜோக் அடிக்கலானார்.

அம்மாளுக்கோ மோதிரத்திடம் இருந்த பாசத்தில் எந்தச் சமாதானமும் எடுபடவில்லை. தம்முடன் வந்த பணியாட்களிடம் சந்தேகம் உண்டாயிற்று.

ஊருக்குத் திரும்பிய பின் வேலைக்காரர்களைக் கொடுமை செய்யலானார்.

பிற்பாடு பாபா அவ்விடத்துக்கு விஜயம் செய்தபோது, நிரபராதிகளான அவர்கள் பாபாவிடம் முறையிட்டுக் கொண்டனர்.

ஸாகம்மாளின் பொருட்டுச் செய்ய விரும்பாத லீலையை இவ்வபலையர் பொருட்டுச் செய்ய உளம் கொண்டார் தீனநாதன்.

ஸாகம்மாளின் அவுட்—ஹவுஸில் காப்பி அருந்திக் கொண்டிருந்த ஸ்வாமி தாம் இருந்த இடத்தின் சுவரை ஒரு தட்டுத் தட்டினார். சுவரிலிருந்து மின்னி வந்தது, துள்ளி வந்தது அம் மோதிரம்!

''ஏன், நிரபராதிகளைக் குற்றம் சாட்டிக் கஷ்டப்படுத்தினாய்?'' என்று அம்மையாரைக் கடிந்துகொண்ட ஐயன் உண்மையான குற்றவாளி இன்னார் என்பதையும் தெரிவித்தார்.

ஸாகம்மாள் வீட்டில் இடைக்காலத்தே ஏற்பட்ட சௌஜன்யக் குறைவு என்ற விபத்து நீங்கிற்று.

எளியாரை வலியார் வாட்டினால், வலியாரைத் தெய்வம் வாட்டும் என்பது பழமொழி. ஸாயிபகவான் வாய்ப் பேச்சால் தான் வாட்டுவார், அதுவும் சிறிது போதே வாட்டுவார், குரூரமான தண்டனை தர அவரால் இயலாது — அந்தளவு தேன் ஸ்வபாவம்! இப்படிச் செய்தே பல அபலைகளை, அநாதைகளைக் கொடுமையிலிருந்து மீட்டிருக்கிறார்.

தேசிய விபத்துக்களேயான தொழிலகப் பூசல்களுக்கு ஸ்வாமி மருந்து தருவதையும் அவரது விபத்துத் தடுப்புக்களில் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

கமானி தொழிலகங்கள், ஸான்டூர் இரும்பாலை போன்ற இடங்களில் தொழிலாளி—முதலாளி நல்லிணக்கம் பற்றி ஸ்வாமி ஆற்றியுள்ள அற்புத உரைகளைப் படித்தால், ஸ்வாமியிடம் நெருங்கிய தொடர்பு கொண்ட பல பிரமுகர்களின் தொழில் நிறுவனங்களில் வேலை நிறுத்தம், கதவடைப்பு போன்ற விபத்துக்கள் நேராதது ஏன் என உணரலாம். முதலாளிகளின் பணப் பேராசையையும், கெடுபிடியையும் கண்டிக்கும் ஸ்வாமி அதே சமயத்தில் தொழிலாளிகளிடம் கடமையைச் செய்யாமல் உரிமை

Koviloor Digital Library

களை வலியுறுத்திப் பயனில்லை என்பதை விளக்குவார். முதலாளி—தொழிலாளி என இருதரப்பாகப் பிரிப்பதே தவறு என்றும், இவர்கள் ஒரே நாணயத்தின் இரு புறம் போன்றவர் என்றும், இவர்களுள் யார் பெரியவர் என பலப் பரிட்சை பார்ப்பது ஒரு மனிதனின் வயிறும், இதயமும் பலப் பரிட்சை செய்வது போலத்தான் என்றும் உணர்த்துவார்.

★

'ஐயோ, நம்மால் தீர்த்துக்கொள்ள முடியாத அவஸ்தையில் மாட்டிக்கொண்டு விட்டோமே' என்று நமக்கு வியர்த்து விடுகிறபோது, வியப்பூட்டும் விதத்தில் விமோசனின் வியன் கருணை அநாயாசமாக அந்தச் சிக்கலை நீக்கி, நம்மை உருக வைக்கிறதே, அதை எவ்வளவு எழுதினாலும் முடியாது. உதாரணமாக,

வேங்கடமுனி தம்பதியர் உலகம் சுற்றும் பயணம் தொடங்கினார்கள். அதில் முதல் கட்டமாகப் பாரிஸுக்குச் சென்றார்கள்.

முதல்நாள் ஊர் சுற்றிப் பார்க்கும்போதே, தங்களிடமுள்ள பயணிகள் செக்குகளில் சிலவற்றைக் காசாக்கிக் கொண்டு 'ஷாப்பிங்' செய்ய எண்ணினார்கள்.

செக் மாற்றுவதற்காகத் தமது சிறு கைப்பையைத் திறந்த ஸ்ரீமதி ஸுசிலம்மாவுக்கு 'ஷாக்' அடித்தது. செக்குக் கத்தைகள் கொண்ட ஃபோல்டரைக் காணோம்.

சிறிய அந்தக் கைப்பையை நன்றாகத் துழாவினார்கள். அதிலிருந்தவற்றையெல்லாம் முழுதுமே கவிழ்த்துக் கொட்டினார்கள்.

என்ன செய்து என்ன? காணாமற்போனது போனதுதான்.

பம்பாயை விட்டுக் கிளம்பு முன் ஃபோல்டரைப் பார்த்த ஞாபகம் அம்மாளுக்கு. அப்படியாயின் ஒரு வேளை இந்தியாவிலேயே கெட்டுப்போயிருக்கவும் கூடும். இங்கே இவர்கள் பிரமாதமான உலகப் பயணத் திட்டத்தின் முதல் கட்டத்திலேயே ஹோட்டல் பில்லைக்கூடக் கொடுக்கப் பணமில்லாமல் அவலமாக நிற்கிறார்கள்!

''அந்த சமயத்தில் அவர்கள் செய்த காரியம் அத்யந்த ஸ்வாமி பக்தர்களன்றி மற்ற எல்லோருக்கும் முழுப் பைத்தியக்காரத் தனமாகத்தான் தோன்றும். ஸ்வாமி பக்தர்களுக்கோ புத்திசாலித்தனமாகச் செய்யக் கூடிய காரியம் அது ஒன்றே எனத் தோன்றும்'' என்று இந் நிகழ்ச்சியை வர்ணிக்கும் மர்ஃபெட் கூறுவார். அவர்கள் செய்த அந்தக் காரியம் என்ன?

தங்களிடம் இருந்த ஒரு சில ஃபிராங்குகளைச் செலவழித்து பாபாவுக்கே ஒரு கேபிள் கொடுத்தார்கள். S. S. S.க்கு S. O. S.!

Koviloor Digital Library

இத்தம்பதியரின் உண்மை பக்தியைப் பாருங்கள்! கண்டிப்பாக ஸாயிசஸின் உதவி வந்துவிடும் என்ற தெளிவில் மறுபடி ஷாப்பிங் கிளம்பினர். இழந்த செக்குகள் திரும்ப வந்து அந்நாட்டுப் பணமாக மாற்றிய பின், என்னென்ன பண்டங்கள் வாங்கலாமென்று பார்த்து, குறித்துக் கொள்வதற்காக இப்போதே கடைகளுக்குச் சென்றனர்கள். இப்போர்ப்பட்ட நம்பிக்கையை வணங்கத்தான் வேண்டும்.

பிற்பாடு வாங்க வேண்டிய பண்டங்களைக் குறித்துக் கொள்வதற்காக நோட்டும் பென்சிலும் எடுக்க அதே கைப்பையைத் திறந்தார் ஸுசிலம்மா.

ஷாக் அடித்தது. ஆனால் முன்பு போலல்ல. அது சொரேலென்று வாடவைத்த ஷாக்; இதுவோ கலீரென்று மலரவைத்த ஷாக்.

கைப்பையைத் திறந்தவுடனே, மேலேயே அந்த செக்குக் கத்தை விம்மிக்கொண்டு விரிந்து நிற்கிறது — ஸாயிப் பிரபுவின் காருண்யத்தைப் போலவே! அயர்ந்து நின்ற அடியாருக்காக அயல்தேசத்துள் புயலாய் வந்த காருண்யம்!

''டிக்கட் வாங்காத பயணியாக நான் உங்களுடனேயே வருகிறேன்'' என்று பகவான் தம்மிடம் விடைபெறும் பக்தரிடம் சொல்வதுண்டு. அவர்கள் வெளி தேசம் சென்றால் டிக்கட் மட்டுமின்றி பாஸ்போர்ட், விஸா இவையும் இல்லாமல் தொடர்கிறார் மார்க்கபந்து!

*　　*　　*

மனிதர்களுக்கு நேரக்கூடிய இன்னல்களுக்குக் கணக்கு வழக்கில்லை. அத்தனை விதத்திலும் ஸ்வாமி காத்தருளியதற்கு ஓரிரு திருஷ்டாந்தங்களாவது இல்லாமலில்லை. சொல்லிக் கொண்டே போகலாம்.

உதாரணமாக ஒரு வெறி பிடித்த காளையானது பிரசாந்தி நிலைய வாசினி ஒருவரை நோக்கித் தலைதெறிக்க ஓடியபோது அதைத் தடுக்க வொண்ணாமல் மற்றவர்கள் ஸ்தம்பித்து நின்றனர்.

இதோ, ராட்சத மாட்டின் கொம்புகள் அவள் மீதே பாய்ந்து விட்டன!

ஆயினும் அந்த நொடிப் பொடியில் ரக்ஷை வந்து விட்டது! அவளுடைய சேலை மட்டுமே தார் தாராகக் காளையின் கொம்பிலே சிக்கி வந்ததே ஒழிய, அவளுக்குத் துளிக்கூடக் காயமில்லை.

திசை திருப்பிக்கொண்டு எங்கோ சென்று விட்டது உன்மத்தக் காளை.

மாடியிலிருந்து அந்த அம்மாளைப் பார்க்கிறார் அன்புப் பகவான். தமது மார்பைத் தடவிக்கொண்டு நகர்கிறார்! நியாக ஸாயி தமது திருமார்பிலேயே காளையின் தாக்குதலை ஏற்றாரா?

Koviloor Digital Library

நப்பின்னையை மணக்க ஏழு உக்ரகாளைகளின் கொம்பைப் பிடித்து உடல் நோகப் பொருதான் கோவிந்தன். இங்கே சூக்ஷ்ம சரீரத்தாலேயே காளையை அடக்கிய அபிநவ கோவிந்தன் ஸ்தூல சரீரத்திலும் அதன் எதிர் விளைவை அநுபவித்தாரோ?

இங்காவது மாடு அம்மாள் மீதே மோதி விட்டது என்று சொல்லாமல் ஒரு மில்லி மீட்டர் விலகியிருந்திருக்கலாம். ஆனால் இப்படிக் கூடச் சொல்ல முடியாமல் ஒரு பெண்ணின் தலையிலேயே நேராக ஒரு பெரிய கனமான டிரங்க் விழுந்தும் அவள் தலை அப்பளமாக நொறுங்காத அதிசயத்தையும் பிரசாந்தி நிலயம் கண்டிருக்கிறது. பிறகு பாபா அவள் பக்கம் வந்தபோது "இந்த ஸாயி இல்லாவிட்டால் இத்தனை நாழி சித்ராவதிக்கு (மயானத்துக்கு)ப் பிரயாணமாயிருப்பாய்" என்று புன்னகைத்தார்.

★

இதுவரை பெரியதான இடர்ப்பாடுகள் பலவற்றைப் பார்த்தோம். ஆனால் ஸ்வாமியின் அருள் சின்னஞ்சின்ன சங்கடங்களையும் தீர்த்துவைக்க இதே விரைவோடு வந்து குதிக்கிறது. சங்கடஹர சதுர்த்தியில் அவதரித்த அவர்போலக் கோடிக்கணக்கான சங்கடங்களைத் தீர்த்தவர் எவருண்டு?

கான்கிரீட் சுவரில் ஆணி அடிக்கும்போது அது இறங்க வில்லையா; ஸ்விட்ச் போடப்பட்ட இடத்துக்கு வராமல் இடக்குப் பண்ணுகிறதா; மழைக் காலமானதால் கிழிக்கக் கிழிக்க வத்திக் குச்சி ஏற்றிக் கொள்ள மறுக்கிறதா; இசகு பிசகாக மூடிய ஹார்லிக்ஸ் பாட்டில் மூடியைத் திறக்க முடியவில்லையா; உதறி உதறிப் பார்த்தும் பேனா எழுதாமல் சண்டித்தனம் செய்கிறதா— இன்னம் இதுபோல் எத்தனை அல்பமான விஷயமாகத்தான் இருக்கட்டும், ஸ்வாமியை நினைத்த மாத்திரத்தில் அவர் நமக்குக் காரியத்தை நடத்திக்கொடுப்பது பல்லாயிரவரின் அன்றாட அநுபவம்.

'ஒவ்வொரு எறும்பின் காலடி ஓசையைக்கூட பகவான் கேட்கிறார்' என்றார் ராமகிருஷ்ணர். ஸாயி பகவான் கேட்பது மட்டுமல்ல; அந்த ஓசை கொஞ்சம் சிறுத்தால்கூட உடனே அந்த சிற்றெறும்பின் சின்னஞ் சிறு காலில் ஏற்பட்ட ஊனத்தைப் பரிந்து தடவி சொஸ்தப்படுத்துவான்!

★

தனி நபர்கள் அல்லது குடும்பங்கள், அல்லது நிறுவனங்கள் இவற்றோடு பாபாவின் ஆபத் சகாயம் நின்று விடவில்லை. நம் தேசத்துக்கே இடர் ஏற்படுகையில் பெருங்காப்பாக நிற்கிறது அவரது அருட்சக்தி. இப்படித் தேசிய விரோதிகளைத் தோல்வி புறச் செய்த திவ்ய லீலைகளை, ஒரு ஸாயி பக்த குடும்பத் தொடர்போடு தொடங்குவோம்:

நாகாலாந்தில் நீண்ட நெடுங்காலமாக நடந்து வந்த வன்முறைகளை வாசகர் அறிவர். 1964 ஏப்ரிலில் நாகர்கள் கட்டுக் கடங்காமல் அக்கிரமத்தில் இறங்கினர். அதை ஒரு படையெடுப்பு

Koviloor Digital Library

என்றே சொல்லிவிடலாம். 14-ந் தேதி வன்முறை உச்ச கட்டத்தைத் தொடுகிறது.

மாவட்ட மாஜிஸ்திரேட் ஸ்ரீ காயனுவின் வீட்டுக்கு 23 ஹவுஸ் கார்ட்களைக் காவல் வைத்தும் பயனில்லை. காம்பவுண்டைச் சுற்றி வலைகள் நோண்டிக்கொண்டு ஏகப்பட்ட கலகக்காரர்கள் அவற்றில் பதுங்கிப் பங்களாவை நோக்கிக் குண்டுமாரி தொடங்கி விட்டனர்!

எரிமலை ஆபத்து உள்ள ஊராதலால் பங்களாச் சுவர்களோ துப்பாக்கி ரவைகளை எதிர்த்து நிற்க முடியாதபடி லேசாகவே இருந்தன. 'விஸ், விஸ்' என்று சுவரைத் துளைத்துக்கொண்டு தோட்டாக்கள் உள்ளே வந்தபடி இருந்தன.

14-ந் தேதி இரவு ஏழரை மணியிலிருந்து மறுநாள் காலை நாலரை வரையில் இப்படிச் சோனுமாரி!

மாஜிஸ்திரேட்டும் மனைவிமக்களும் தரையோடு தரையாக மேஜை, கட்டில்களின் அடியே ஒட்டிக்கொண்டு கிடக்கிறார்கள். இவர்களை உராய்கிறாற்போல் தோட்டாக்கள் பறந்து கொண்டிருக்கின்றன. அதற்குத் தடுப்பாக இவர்கள் விடுத்த ஆயுதம் ஸாயி நாமம் தான். ''ஸாயி ராம் ஸாயி ராம்.''...

காலை நாலரைக்குக் காவல் துறையினர் கலகக்காரரை அடக்கி வெளியேற்றிய பிறகு தான் இவர்கள் ஆசுவாஸப் பெருமூச்சு விட்டார்கள்.

வீட்டிலே கால் வைக்க முடியாதபடி மொத்தம் 185 குண்டு கள். ஆனால் ஓர் உயிர்ச் சேதமில்லை!

ஏதோ பூர்வகர்மாவுக்காக ஓரிரவெல்லாம் பதைத்துக் கலங்கியதோடு போயிற்று!

''Bullet-proof Name'' என்று ஸாயி நாமாவை ஸ்ரீ காயனு வர்ணிப்பது நியாயம்தானே? ''அம்புக்கும் தீக்கும் விடத்துக்கும் நோவுக்கும் அச்சமில்லாதபடி....வாழ்வுதரும் பதம்'' அந் நாமமே யன்றோ!

* * *

கலக நாகரிடமிருந்து காயனுவைக் காத்த நாயனு, ஜாம் நகரில் பாகிஸ்தான் விமானப்படை எடுப்பின்போது புரிந்த அருளுக்காக, நம் தேசமே அவருக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறது!

ஜாம் நகர் மன்னர் காலஞ்சென்ற திக் விஜயஸிங்கும் அவரது மனைவியாரும் பாபாவின் பரம பக்தர்கள். 1965 ஸெப்டெம்பரில் பாகிஸ்தான் வாலாட்டம் தொடங்கியபோது நம் பகவானை சரண் புகுந்தனர் — ராணுவ ரீதியில் நடப்பதற்கு மேலாகத் தெய்வ பலத்தையே நம்பியிருந்த தம்பதியர்.

ஐயனும் அளப்பருங்கருணையுடன் பகைவரின் குண்டுகளி லிருந்து, விமானப்படை யெடுப்பிலிருந்து ஜாம் நகரைக் காத்தார். ''நான் உங்களுக்குத் துணை நிற்கிறேன்'' என்று பாபாவே

Koviloor Digital Library

அன்றைய நமது விமானப்படையினருக்கு அனுப்பிய செய்தி அவர்களுக்கு எல்லையற்ற தெளிவும், வேவாநெறியும் ஊட்டியது.

பாகிஸ்தானியர் வீசிய குண்டுகள் ஜாம் நகர் விமான தளத்தில் விழுபவை, குறி தவறி எங்கெங்கோ சென்று விழுந்து வெடித்ததாக நமது விமானப்படையினரிலேயே பலர் சாட்சியம் தருகிறார்கள்.

அச்சமயம் பல இந்திய பைலட்டுகளுக்கும், அவர்களை நினைத்துத் தவித்துக்கொண்டிருந்த குடும்பத்தினருக்கும் பாபா பிரத்யக்ஷ தரிசனம் தந்து தமது அபய ஹஸ்தத்தாலும், முல்லை நகையாலும், ஒளி சொட்டும் பார்வையாலும் உத்ஸாகமூட்டியிருக்கிறார். "ஆசீர்வாதம் செய்யவே இதோ வந்து நிற்கிறேன்" என்று காதாரக் கேட்கும்படி சொல்லிக்கொண்டு பாபா ஒரு விமானப் படை அதிகாரியின் மனைவி கண்ணாரக் காணுமாறு தரிசனம் தந்து மறைந்தார். அதே சமயம் அவரது கணவரைச் சிதைத்துச் சின்னாபின்னமாக்கியிருக்க வேண்டிய ஒரு வெடிகுண்டு நாலு அடிகள் தள்ளி விழுந்து வெடித்தது!

பிற்பாடு ஒரு முறை பாபா நேரிலேயே ஜாம் நகருக்கு விஜயம் செய்தார். அங்கிருந்த ஜவான்கள் அப்போது அடைந்த பக்தி எழுச்சியை என்னென்பது?

அவர்களுக்கு "ஸைனிக் ஸ்கூல் பாய்ஸ்" என்று பெயர். இதன் சுருக்கமாக எஸ்.எஸ்.பி. என்ற எழுத்துக்கள் பொறித்த பாட்ஜுகளை அவர்கள் அணிந்திருப்பது கண்ட பாபா, சிரிப்பு கொழிக்கும் சுந்தர முகத்தோடு, அடியாரைத் தாமாகவே காணும் அத்வைத சுந்தரத்தோடு "S. S. B.— Sathya Sai Baba" என்றார்!

இதன் பின் ("ஸநாதன ஸாரதி" ஆசிரியர் சொல்வது போல்) ஸௌராஷ்டிரமே ஸாயிராஷ்டிரமானதில் விந்தை என்ன?

ஸௌராஷ்டிரம் மட்டும்தானா? இந்த நானிலத்தையே அவர்தான் ரக்ஷிக்கிறார் என்பது அவரது மெய்யடியார் நம்பிக்கை. அதிலும் பாரத ராஷ்டிரத்தைப் பரிந்து காக்கிறார். ஜாம்நகர் விமானதளத்தை மட்டுமின்றி, தேசத்தையே சீன, பாகிஸ்தான் படையெடுப்பில் அவரது அருட்சக்தி காத்திருக்கிறது என்று பக்தர் நம்புவதற்கான காரணங்களை இங்கு பார்க்கலாம்:

1962—ம் ஆண்டு நவம்பரில், சீனப் படையெடுப்பினால் என்ன நேருமோ என்று தேசமே கதி கலங்கிக் கொண்டிருந்த போது, பிரசாந்தி நிலய அடியார்கள், அம்மாதம் 23-ந் தேதி ஸ்வாமி ஜயந்தியைக் கொண்டாட ஏற்பாடு செய்யலாமா என மிகவும் தயக்கத்துடன் அவரையே வினவினர்.

"இந்த வருஷம் என்ன, எந்த வருஷமுமே எனக்கு ஜயந்தி கொண்டாடி ஒன்றும் ஆகவேண்டியதில்லை. ஆனால் பக்தர்கள் திருப்திக்காகச் செய்கிறோம். பேஷாக இந்த ஆண்டும் செய்வோம். என் பிறந்தநாளன்று சீன அபாயமே ஓடிப் போயிருக்கும்" என்றார்.

Koviloor Digital Library

அடுத்த சில தினங்களில் நடந்ததோ, அவரது வாக்கில் அவநம்பிக்கை தருவதாகவே இருந்தது. சீனர் மேன்மேலும் முன்னேறி வந்துகொண்டிருந்தனர்.

ஆயினும் கடைசியில், நாளைக்கு ஸ்வாமி ஜயந்தி என்றால், இன்று, நவம்பர் 22-ந் தேதி சீனர்கள் பின்வாங்கியே விட்டனர்! போர் நிறுத்தம் ஏற்பட்டே விட்டது!

சீனப் படை எடுப்பு குறித்து இதுவரை தளபதிகள் உட்படப் பலர் புஸ்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். ஆயினும் அன்று சீனர்கள் போரை நிறுத்தும்படியாக என்ன நேர்ந்துவிட்டது என்பது இன்னும் புரியாத புதிராகத்தான் இருக்கிறது. அமெரிக்காவின் புகழ்பெற்ற 'ஸெவந்த் ஃப்ளீட்' என்ற கடற்படை பாரதத்துக்கு உதவி செய்யப் பஸிஃபிக்கில் புறப்பட்டதாகவும், அது காரணமாகவே சீனர் பின்வாங்கியதாகவும் அநுமானத்தின் மீது சொல்லப்படுகிறதே யொழிய, அறுதியிட்டு உறுதியாக எவரும் காரணம் சொல்லக் காணோம். எனவே தெய்வ சக்தியை நம்பும் ஸாயி பக்தர்கள், தமது பகவானே வாக்குப்படி ஜயந்தியன்று முதல் நாள் அவர்களைப் பின்வாங்கச் செய்து நம் தேசத்தை ரக்ஷித்துக் கொடுத்தார் என்று நம்புவதற்கு முகாந்திரம் இல்லை என்று சொல்ல முடியாதல்லவா?

இப்படியே தான் 1965 அக்டோபரில் பாகிஸ்தான் போரில், தேசம் முழுவதும் எமர்ஜென்சியும், இருட்டடிப்புமாக இருந்த போது பாபா மாபெரும் அளவில் தசரா விழாவுக்கும், வேதப் பெரு வேள்விக்கும் ஏற்பாடு செய்தார். முன்பு 1962ல் பாபாவின் திட்டமே நிறைவேறிக் கண்டிருந்தும் கூட, இப்போது பக்தர்கள் கலங்கத்தான் செய்தனர். ஆனால் ஸாயி ஸங்கல்பம் இப்போதும் நிறைவேறவே செய்தது. தசரா வருமுன்னரே இருட்டடிப்பு போய்விட்டது. பக்தரின் மன இருட்டும்தான்! அமோகமாக நடந்தது விழா!

பிற்பாடு பங்களா தேசப் போரின்போதும் அவர் அது இந்தியாவுக்குள் நுழையாது என்றே கூறிவந்தார். "முன்பு சீனாவையும் பாகிஸ்தானையும் இந்தியா எதிர்த்ததைவிட இந்த பங்களா தேசப் போரில் நம் தார்மிகப் பாரம்பரியப் பண்பு கொழுந்து விட்டெரிகிறது. அப்போதெல்லாம் நம்மை எதிர்த்தவர்களை நாம் எதிர்த்தோம். இது எந்த நாடும் செய்வதுதான். ஆனால் இப்போதோ அண்டை நாடான கிழ்வங்கம் நம்மை நம்பி அடைக்கலம் புகுந்துவிட்டது என்பதற்காகவே, ஸுக்ரீவனுக்காக ஸ்ரீராமன் வாலியுடன் போர் தொடுத்ததுபோல் பாரதம் போரில் இறங்கியிருக்கிறது. நட்பு, சரணாகத ரக்ஷணம் ஆகிய நற்பண்புகளுக்காக நடக்கும் இப்போரில் நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம்" என்று பிரசாந்தி நிலையத்தில் பிரசங்கத்திலேயே கூறினார்.

1971 டிஸம்பர் மூன்றாம் தேதி பாகிஸ்தான் இந்திய விமானப் படைத் தளங்களின் மீது குண்டு வீசியவுடன், "நம் எல்லைக்குள் போர் நுழைந்து விட்டதே!" என்று அடியார் பதைத்தனர்.

Koviloor Digital Library

"இல்லை, நான் உள்நாட்டு வாழ்வையும், சாமான்ய மக்களையும் யுத்தம் தொடாது என்கிற அர்த்தத்தில் தான் சொன்னேன். என் வார்த்தையை நம்புங்கள். சென்னையில் இம்மாதம் 22,23 தேதிகளில் நமது அகில இந்திய மகாநாடு நடத்தியாக வேண்டும். எல்லா மாநிலங்களுக்கும் அழைப்புகள் அனுப்பிப் பிரதிநிதிகளை வரவழைக்க ஏற்பாடு செய்யுங்கள்" என்று உறுதியுடன் பகர்ந்தார் பாபா.

அவர் இத்தனை சொல்லியும் அந்தியில் ஜூரத்துடன் தான் ஸாயி ஸ்தாபனத்தார் ஏற்பாடு செய்தார்கள். 'பாபா சொன்னாராம், என்ன நடந்தது?' என்று உலகம் சிரித்து விடப் போகிறதே, பகிரங்கப் பிரகடனம் செய்து 'ஸநாதன ஸாரதி'யிலும் பிரசுரித்து விட்டாரே!' என்று தங்கள் ஸ்வாமியைப் பற்றி அவர்களுக்குக் கவலை!

டிஸம்பர் 17 பங்களா யுத்தம் முடிந்தது.

யுக்தமாக நடந்தது அகில இந்திய ஸாயி ஸமிதி மகாநாடு.

பங்களா யுத்தம் தொடங்கிய பின் பாபா அதன் முடிவைப் பற்றிச் சொன்னார் என்பது மட்டுமில்லை. போர் ஆரம்பிப்பதற்கு நீண்டகாலம் முன்பே அது மூளப் போவதையும் சூசனையாக உணர்த்தியிருக்கிறார். பங்களா போரின் போது கப்பற்படை சேநாபதியாக இருந்த அட்மிரல் எஸ்.எம். நந்தா அவர்களின் அநுபவம் இதற்குப் போதிய சான்று பகரும்.

பாபாவைப் பற்றிக் கல்கத்தாப் பிரமுகர் ஸ்ரீ டி.டி.சோப்ரா மூலம் நந்தா நிறையக் கேள்விப்பட்டார். டீ பார்ட்டியும், கேளிக்கையுமாக இருந்த சோப்ராவின் வீடு பஜனைக் கூடமாக மாறியதையும், அவ்வீட்டார் புலாலையும் குடிவகைகளையும் அடியோடு விட்டு விட்டதையும் கண்டு பாபாவின் நன்மைச் சக்தியை நந்தா வியந்தார். என்றாலும் 'பக்தி' உண்டாகிவிடவில்லை. 1971 ஜூன் தொடக்கத்தில் நந்தா பெங்களூர் சென்றிருக்கையில் கவர்னர் ஸ்ரீ தர்மவீரா அவர்கள், பாபாவின் பெருமையை மேன்மேலும் சொல்ல, இவருக்கும் ஈடுபாடு வர ஆரம்பித்தது. அப்போது ஒயிட்ஃபீல்ட் பிருந்தாவனத்தில் தங்கியிருந்த பாபாவைக் காண கவர்னருடன் ஸ்ரீ நந்தாவும், ஸ்ரீமதி ஸுமித்ரா நந்தாவும் சென்றனர். மற்ற எல்லோரையும் போலவே பஜனைத் திடலில் அமர்ந்தனர். பாபா அங்கு வந்து தரிசனம் தந்து, கவர்னரை விடுத்து, நந்தா தம்பதியரை மட்டும் பிரத்யேகப் பேட்டிக்கு உள்ளே அழைத்துப் போனார்.

ஸ்ரீ நந்தாவின் குடும்ப விவகாரங்கள், இரு புத்திரர்களைப் பற்றிய விவரங்களை பாபா புட்டுப் புட்டு வைக்கவே தம்பதியருக்கு பக்தி உண்டாகத் தொடங்கியது. இருவருக்கும் பரிசுகள், விபூதி சிருஷ்டித்துக் கொடுத்துவிட்டு பாபா நந்தாவிடம், "சீக்கிரமே நீங்கள் கீர்த்தியடையப் போகிறீர்கள். மக்களிடமெல்லாம் நற்பெயர் வாங்கப் போகிறீர்கள்" என்றார்.

Koviloor Digital Library

இவ்விஷயம் 1971 ஜூலை 'ஸத்ய ஸாயி ஸமாசார்' என்ற கல்கத்தா ஏட்டில் பிரசுரமாயிருக்கிறது. அப்போது பங்களா போர் மூளவில்லை; மூளக்கூடிய தோது கூட இல்லை.

நவம்பரில்தான் யுத்தம் மூண்டது. அதில் வங்க விரிகுடா, அரபிக் கடல் இரண்டிலும் பாகிஸ்தானுக்கு மேலாக நம் கப்பற் படை ஆதிக்கம் பெற்றதும், நூற்றுக்கு மேம்பட்ட பாகிஸ்தானியக் கலங்களை நாம் மூழ்கடித்ததும், இதில் ஸேநாபதி நந்தா காட்டிய அபார சதுரத்துக்காக நாடும், பிரதமரும், ராஷ்டிரபதியும் அவரைப் போற்றி ''பத்ம விபூஷண்'' சூட்டியதும் உலகறிந்த விஷயங்கள். ஒரு சேநாபதிக்குக் கீர்த்தி யுத்த காலத்தில்தான் உண்டாக முடியுமே தவிர, சமாதான காலத்தில் அவரை யார் பாராட்ட முடியும்? எனவே பாபா ஜூலையிலேயே இவரது எதிர்காலப் புகழைக் கூறினரெனில்.:....?

இச் சந்தர்ப்பங்களில் நடக்கப்போவதை முன்னரே கண்டு சொன்னார் என்று மட்டும் அடியார் எண்ணுவதில்லை. அவரேதான் பின்னால் நடக்கப்போவதையும் உருவாக்கினார் என்றும் அவர்கள் நம்புகிறார்கள். இது எப்படி என்று அவர்கள் நிரூபிக்க முடியாது தான்! ஆனால் அவர்கள் நினைப்பது தவறு என்று மற்றோரும் நிரூபிக்க முடியாதுதானே?

*

தனி மனிதருக்கு ஏற்பட்ட விபத்து, ஒரு பிரதேசத்துக்கு ஏற்பட்ட விபத்து, தேச முழுவதற்கும் ஏற்பட்ட விபத்து இவற்றில் நம் சரித நாயகரின் கருணையும் ஆற்றலும் புரியும் அற்புதங்களைப் பார்த்தோம். ஆனால் உலக விபத்து தீர்க்கவே அவர் அவதாரமெடுத்திருப்பது. அதர்மம் என்பதுதான் அந்த விபத்து. தனி மனிதனையும், தேசத்தையும் அவர் காப்பது கூட அவர்களைத் தார்மிகத்தில் நிலைநிறுத்துவதற்கு முன்னோடியாகத்தான். வெளிப் பகைவர்களை விரட்டிவிட்டு, உட்பகைவர்களிடம் ஓயாமல் சிக்கிக் கொண்டு இடர்ப்படுவதில் — இடர்ப்படுகிறோம் என்பதைக்கூட அறியாமல் அஞ்ஞானவாய்ப்பட்டுக் கிடப்பதில் — என்ன பயன்? தாம் உடல் நலம் தருவது, பொருள் தருவது, விபத்தைத் தீர்ப்பது எல்லாமே அதோடு நின்றுவிடுவதல்ல; இவற்றைக் காட்டி, முடிவாக ஆன்மநலம் தருவதே தம் லக்ஷியம் என்பார் ஸ்வாமி.

அந்த லக்ஷியத்தில் அவருக்குள்ள அபரிமித சக்தியால்தான் இன்று உலக நாடுகளிலெல்லாம் ஸத்ய ஸாயி ஸேவா ஸமிதிகள் எழும்பியுள்ளன. ஸான்டியாகோவிலும், ஹானலூலுவிலும், டிரினிடாட்டிலும், டான்ஜானியாவிலும், அடிஸ் அபாபாவிலும் ''பாபா பாபா'' என்று பஜனை செய்து கொண்டு மது மாம்சாதிகளைத் தொடுவதில்லை என்று விரதம் பூண்டவர்கள் ஏராளமானவர் தோன்றியிருக்கின்றனர். தொண்டு கிழவர்களும், பெண்டிரும், குஞ்சுகுளுவான்களும் பதினாயிரம் காவதங்களுக்கப்பால் ஹரி நாமத்தை, சிவ நாமத்தை, அம்பிகை நாமத்தை, ஸாயிநாமத்தைப் பாடிப் பாடிப் பரவசமுறுகிறார்கள்.

Koviloor Digital Library

எப்பொழுதும் ஸம்மதமாகக் கொண்டு, தமது பிரசாந்தி பதாகையிலேயே ஒதிந்து, பௌத்த, கிறிஸ்துவ, இஸ்லாமிய, பார்ஸியச் சின்னங்களை ஒருங்கே பொறித்துக்கொண்டுள்ள ஐயனை எல்லா மதத்தவரும், மத உணர்ச்சியே அற்றவரும் கூட ஆசானாக, அன்பனாகவே கொண்டு ஸன்மார்க்கத்தைத் தொட்டு வருகிறார்கள். அந்தந்த மதப்படி அவரவரும் மாஸ், நமாஸ் முதலானவற்றைச் செய்தாலும், கலியுக திவ்ய ஔஷதமாம் நாமம் எனும் வைரத்தை ராகத்தில் கடைசல் பிடித்து, தாளத்தில் பட்டை தீட்டி ஸங்கீர்த்தனமாக ஜொலிக்கச் செய்வதிலுள்ள அலாதியான ஆத்மானந்தத்தை அகிலமெல்லாம் அநுபவித்து வருகிறது. பண்டைய வேதாந்தத்துக்கும், பாரத தர்ம சாஸ்திரங்களுக்கும் சற்றும் முரணின்றி, அவற்றை மேலும் கனிவித்து அவர் அருளியுள்ள உபதேசங்களை உலக நாடுகள் பலவற்றின் பல்லோர் படித்து அத்யாத்ம ரீதியில் பயன்பெற்று வருகிறார்கள். இங்கு 'ஸம்பவம்' என்று மயிர்க்கூச்செறியும்படியாகக் காட்டி எழுதுவதற்கு எதுமில்லை. ஆனால் இந்த அத்யாத்ம அநுபவத்தில் கொண்டு விடுவதற்குத்தான் அத்தனை அற்புத ஸம்பவமும்!

Koviloor Digital Library

அத்தியாயம்—42

நிந்தனையும் வந்தனையும்

என் உண்மை உருவை வேதங்களும் காணச் சக்தி யற்றன; தவத்தாலோ, தானத்தாலோ, வேள்வியாலோ என் உண்மையைக் காண இயலாது. வேறெந்த நாட்டமுமில்லாத பக்தியாலேயே என் உண்மையை அறியவும் காணவும் கூடும்.

— கீதையில் கண்ணன்
(II. 53–54)

பாபாவின் சரிதம் என்பது பக்தர்களுக்கு அவர் புரியும் அநுக்கிரஹ சரிதமாகவே மாறி நீண்ட நெடுங்காலமாகிவிட்டது. பதினான்காம் வயதில் அவர் தம்மை ஸாயி பாபாவாக அறிவித்துக் கொண்டதிலிருந்தே, அவரது 'சொந்த' சரிதம் என்பது முடிந்து விட்டது எனலாம்.

ஒருவரது சரித்திரம் என்பது அவரது பிள்ளைப்பருவம், பள்ளிப்பருவம், கல்லூரி, கல்யாணம், சம்பத்து, சந்ததி என்று இப்படி வெளிச் சம்பவங்களில் செல்வது ஒருபுறம். இன்னொரு புறம் அவரது மனப் போராட்டங்களைக் குறிப்பிடுவது சரிதமாகிறது. பொதுவாகப் பின்னதே இலக்கியச் சுவை மிக்கது.

பாபாவின் விஷயத்திலோ இது அடியோடு இல்லாத விஷயம். அவர் 'அதிமானஸ' மஹாசக்தி. அவருக்கு நமது மனித ரீதியிலான மனமே கிடையாது; சாந்தி ஆனந்தத்திலேயே ஒன்றியுள்ள அவர் உள்ளத்தில் நானாவித உணர்ச்சி மோதலுக்கு இடமே இல்லை. அவர் சிரிப்பது, கோபிப்பது போன்ற சமயங்களிலும் உள்ளிலே பட்டுக்கொள்ளாமல் தாற்காலிகமாகவே உணர்ச்சிகளைக் காட்டுகிறாரே யன்றி—அதுவும் நம்பொருட்டுக் காட்டுகிறாரே யன்றி — இவை எல்லாம் 'மனக்கிளர்ச்சி' என்ற வகையைச் சேராதனவே ஆகும். எனவே 'உள் கிளர்ச்சி' இல்லாத சரிதை இது. பாபா விஷயத்தில் உணர்ச்சி என்று ஏதேனும் ஒன்றைச் சொல்ல வேண்டுமானால் அது கலப்படமே யில்லாத பரிபூரணக்

கருணை ஒன்றேதான். எனவே இந்தப் பரம பவித்ரமான பிரேமை யிலிருந்து பிறக்கும் அநுக்கிரஹ லீலைகளே பாபா சரிதமாகி விட்டது, அவர் தம்மை பாபாவாக அறிவித்துக்கொண்ட அன்றிலிருந்து! தனி ஒரு பெருவாழ்வே ஆகிவிட்ட பாபாவுக்கு பக்த ரக்ஷணம் புரிவதன்றி வேறு தனி வாழ்வே இல்லை.

'வெளி வாழ்க்கை' என்று எடுத்துக்கொண்டாலும் மற்றவர்கள் இவரைப் போற்றித் தொழுவது, அல்லது தூஷிப் பதைத்தான் சொல்லமுடியுமே தவிர, அவற்றால் இவருக்கு எந்தச் சலனமும் இல்லை. சலனம் இருக்கும்போதுதான் சரிதம் வரும். எல்லாம் அடங்கிய சமனத்தில் வர்ணித்து எழுத என்ன இருக் கிறது? எனவே இந் நூலை 'பாபாவின் திவ்ய சரிதம்' என்று கொள்ளலாமாயினும், உண்மையில் இது ஒரு தனி மனிதரின் வாழ்க்கை வரலாறல்ல. பெருவாழ்வேயான ''பாபாவுடைய கருணையின் திவ்ய சரிதம்'' என்றுதான் இதைச் சொல்லவேண்டும்.

ஆனால் பாபாவே கருணை, கருணையே பாபா என்று கொள்ள லாமாதலின் 'பாபாவுடைய கருணையின் சரிதம்' என்னாமல் 'பாபாவின் சரிதம்' என்றே சொல்வதும் சரிதான்!

இங்கே இப் பீடிகை போடக் காரணம்: வாசகரில் பலர் 'நாற்பத்தொரு அத்தியாயம் முடிந்தும் பாபா இருபத்தைந்தாவது வயதில் பிரசாந்தி நிலயம் புகுந்ததுகூட இன்னும் வரவில்லையே. மீதமுள்ள ஒரு சில அத்தியாயங்களில் எப்படி அடுத்த இருபத் தைந்து ஆண்டுகளை முடிக்க முடியும்?' என்று எண்ணக்கூடும். ஆனால் தேதிவாரியான (chronological) பாபா சரிதம் அவர் உரவகொண்டாவில் வீட்டைத் துறந்த உடனேயே முடிந்துவிட்டது. பிறகு கால தத்வத்தைக் கடந்த கருணையின் வரலாறாகவே இது ஆகிவிட்டது. எனவே அவரது ஒவ்வொரு விதமான அநுக்கிரஹத்தையும்—மரணத்தில் காப்பது, வியாதியைத் தீர்ப்பது, விபத்தில் அருள்வது ஆகிய ஒவ்வொரு இன அருளையும் சொல்லி வரும்போது இவற்றில் நேற்றுவரை நிகழ்ந்த சம்பவங் களை இங்கு ஏற்கெனவே கொடுத்தாயிற்று. தேதி அடிப்படை (date-war) போய், பொருள் அடிப்படை (subject-war)யில் கதையை நடத்திக்கொண்டு போகிறோமாதலால், அவசர நாடக மாக முடிந்துவிடுமோ என்று அஞ்ச வேண்டா!

* * *

பக்தரின் புகழ்ச்சி, மற்றோரின் தூஷணை இவையே அவரது வெளிவாழ்வு என்றோமல்லவா? இந்தப் பூவுலகு தோன்றிய நாளாக எந்த ஒரு தனி வியக்தியும் இவை இரண்டையுமே நம் ஸ்வாமியைப் போல நிச்சயமாகப் பெற்றதில்லை. தன் ஜீவிய காலத்திலேயே அகில உலக ரீதியில், ஐந்து கண்டங்களிலும், 'பிரத்யக்ஷ பகவான், முழு முதற்கடவுள், அசல் பரம்பொருள்' என இவர் லக்ஷக் கணக்கானவரால் வழிபடப்பெறுவதுபோல் வேறெவரும் சிருஷ்டி தோன்றிய நாளிலிருந்து பெற்றதில்லை

Koviloor Digital Library

என்பது மறுக்க முடியாத விஷயம். இவர் பகவான் இல்லை என் வேண்டுமாயின் மறுக்கலாம்; அதில் பலர் மெய்யாலுமே உறுதி பெற்றிருக்கலாம். ஆனால், இவர் நானிலம் முழுதும் கோடாநு கோடி மக்களால் ஆண்டவனாகவே துதிக்கப்படுகிறார் என்ற யதார்த்த உண்மையை எவரும் ஆக்ஷேபிப்பதற்கில்லை.

இதுபோல், வேறெந்த வியக்தியும் இவர் போலத் துவேஷத்துக்கும், தூஷிப்புக்கும் ஆளானது இல்லை. இவரே இப்படி 'பாலன்ஸ்' பண்ணிக்கொண்டிருக்கிறாரோ, என்னவோ? 'எல்லோரையும்விட நமக்குத்தானே உலகில் உயிர்கொண்டு வாழும் காலத்திலேயே அதிக பூஜை நடக்கிறது? இதை ஈடுகட்ட அந்த அவப்பெயரையும், அபவாதத்தையும் வாங்கிக்கொள் வோம்' என்றெண்ணி விட்டார் போலும்!

இங்கே தெய்வத்தின் இன்னொரு ஹாஸ்யக் குறளை (irony of Fate)ச் சொல்லலாம். பரமஹம்ஸ ராமகிருஷ்ணருக்கு முற்பட்ட மற்ற அவதாரங்களுக்குப் புகைப்படமே கிடையாது. நம் சரித நாயகரோ 'புகைப்பட' சிருஷ்டிக்கே பேர் போனவ ராக இருக்கிறார். இப்படித் தாம் விசித்திர விசித்திரப் 'புகைப்பட அநுக்ரஹ மூர்த்தி'யாக இருப்பதை 'ஈடுகட்டவே' தம்மைத் தூஷிப்பவர்களும் பலவிதப் புகைப்படத் தந்திரம் செய்து தங்கள் காரியத்தை ஜமாய்த்துக் கொள்ளச் செய்திருக்கிறார்.

''பக்தர்களுக்கு ஒரு விதத்தில் அன்ன வஸ்திரம் தருகிறேன்; என்னைத் தூஷித்து எழுதுவதற்கும் நல்ல விற்பனை இருப்பதால், அவர்களுக்கும் அந்த விதத்தில் நானே அன்ன வஸ்திரம் தருகிறேன். அவர்கள் குடும்பங்களுக்கும்கூட இப்படி என்னால் உபகாரம் நடப்பதில் எனக்கு ரொம்ப ஸந்தோஷம்தான்'' என்கிறார்.

இவ்வித மஞ்சள் பத்திரிகை மாஹாத்மியம் பாபாவின் இருபத்தோராவது வயதிலேயே கொடியேற்றம் பெற்றுவிட்டது.

மற்ற ஸாதுக்களைவிட இவர் அபவாதத்துக்கு மிகவும் ஆஸ்பதமாக இருந்தார்! சிரிளமை வாய்ந்த அழகராக இருக்கிறார். பெண்ணாகப் பிறந்த பக்தர்களையும் அருகிலே அநுமதிக்கிறார். 'பாத நமஸ்காரம்' என்று காலைத்தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொள்ள அவர்களுக்கும் உரிமை தருகிறார். வெறும் வாயை மெல்லுபவர்களுக்கு இது போதாதா?

ஆனால் ஒரு விதத்தில் இவரது எதிர்ப்பாளர்களைப் போற்றத் தான் வேண்டும். இவரை ஆண்டவன் என்று அவர்கள் நம்பாமலே போகட்டும். ஆனால் இவர் நிச்சயமாக ஏதோ மாந்திரீக சக்தியாவது படைத்த அதிக ஆற்றல்காரர் என்று உலகம் பெரும்பாலும் ஒப்புக்கொள்கிறது. அப்படியிருந்தும் இந்தச் சக்தியால் தங்களுக்கு அவர் தீங்கு செய்யமாட்டார் என்ற திட நம்பிக்கையில்தானே அவர்கள் துவேஷப் பிரசாரத்தை ஜாம்ஜாம் என்று செய்வது?

Koviloor Digital Library

"உண்மையாகவே அவர்களுக்கு ஏன் ஒரு கெடுதலும் வரவில்லை? பாபா ஏன் அவர்களைத் தண்டிக்கவில்லை?" என்று கேட்கிற பக்தர்களைவிட, இந்த விரோதிகள்தாம் அவரது பழி வாங்கவே தெரியாத காருண்ய பூரணத்தை நன்றாக உணர்ந்திருக்கிறார்கள் எனலாம்!

மாந்திரீகம் போன்ற இயற்கைக்கு மேம்பட்ட சக்தி ஏதுமே அடியோடு கிடையாது என்று கருதி பாபாவின் அதித ஆற்றலையே ஏற்க மறுக்கும் நாஸ்திகர்களும், பகுத்தறிவாளர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

(இந்தப் "பகுத்தறிவாளர்"களிலேயே ஒரு சிலர் இயற்கைக்கு மேம்பட்ட பாபாவின் தெய்விக சக்தியை மறுக்கும் போதே, தாங்கள் கூறும் 'இயற்கை'க்கு உட்படாத துர்மாந்திரிகத்தை நாடி பாபாவுக்கும் பாபாவின் பக்தர்களுக்கும் அரக்க சக்திகளைக்கொண்டு தீங்கு இழைக்க முற்படும் அதி விசித்திரத்தைப் பற்றியும் இந் நூலாசிரியருக்கு ஓரளவு தெரியும். இவர்கள் செய்ய நினைக்கும் ஏவல் நம் காவல் நாயகனின் கடாக்ஷத்தில் பஸ்மமாகி விடுவதைச் சொல்லவும் வேண்டுமா?)

இந்தப் 'பகுத்தறிவாளர்'களில் சிலர் ஸ்வாமியையே சவாலுக்கு அழைக்கிறார்கள். 'எங்கள் கண்முன் நீங்கள் இன்னின்னவற்றைச் செய்தால்தான் உங்களை நம்புவோம்" என்கிறார்கள்.

இவர்கள் திறந்த மனத்தோடு நம்ப விரும்பினால் பாபாவைப் புதிதாகச் சவாலுக்கு அழைக்க அவசியமில்லை; அத்தனை ஆயிரமாயிரம் சாட்சியங்கள் ஏற்கெனவே உள்ளன. பாபாவின் சிருஷ்டியான பரிசங்களைப் பெற்ற நூற்றுக் கணக்கானவரும் பொய்யா சொல்கிறார்கள்? "பொய்யில்லை; பாபா கண்கட்டு செய்து இவர்களை ஏமாற்றி விட்டார்" எனில், இப்படிச் சொல்கிறவர்களை விட மாமேதைகளும் 'ஏமாந்தவர்'களில் இருக்கிறார்கள்; எனவே அவர்களுக்குச் செய்ததுபோல் இந்த சவால்காரர்களின் கண்களையும் பாபா கட்டி ஏமாற்றலாந்தானே! எனவே இந்த சவாலுக்கே அர்த்தமேயில்லை. சவால் விடுப்பதால் சிலர் தங்களைப் பிரசித்திப் படுத்திக்கொள்வதோடு சரி.

நவ கண்டத்திலும் பாபாவால் வியாதி தீர்ந்தவர், விபத்து கடந்தவர், மனநலன் எய்தியவர், வீட்டிலே விபூதி— விக்கிரகாதி வர்ஷத்தைப் பெற்றவர் எண்ணிலடங்காமல் உள்ளனர். பிரசித்தி பெற்ற வைத்தியர்களின் மருத்துவ அறிக்கைகள், புகழ்கொண்ட விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகள், கியாதி மிக்க ஆன்மிகப் பெரியார்களின் அநுபவ வார்த்தைகள்—இவை பாபாவின் அதித சக்தியை நிச்சயமாக இயம்புகின்றன. இத்தனையையும் நம்ப முடியாது, புதிதாக எங்கள் அறைகூவலை அவர் ஏற்க வேண்டும் என்பவர்களை என் சொல்வது? பாபா பக்தர்களான நம் வாயால் கண்டனமாக எதும் கூற வேண்டாம்; நம் இதயத்தால் அவர்களைத் துவேஷிக்கவும் வேண்டாம்.

Koviloor Digital Library

ஸ்வாமியிடம் இதற்கு நாம் பெறும் ஒரே பதில், தமது அற்புதங்கள் நிதரிசனத்துக்கே அன்றி பிரதரிசனத்துக்கு அல்ல என்பதுதான். அதாவது தம்மிடம் அற்புத ஆற்றல் இருக்கிறது என்ற ஒன்றுக்காக மட்டும் அவற்றை மேடையேறித் தம்பட்டம் போட்டுக் காட்டுவது தமது காரியமல்ல; இயற்கையை ஆளும் தெய்வ சக்தியொன்று மக்களிடம் அன்புகொண்டு அருள் செய்கிறது என்று இயல்பாகக் காட்டுவதுதான் தமது பணி என்கிறார். வாஸ்தவத்தில் இதெல்லாம் அற்புதமே அல்ல; மகத்தான அன்பின் சிறு அடையாளமே என்கிறார்.

ஒருவரிடம் தம் அன்பு பொங்கி வருகையில் அதற்கு ஓர் அடையாளமாக அற்புத முறையில் பரிசு சிருஷ்டித்து வழங்குகிறார். அல்லது ஒருவர் இன்னலுற்றபோது அதைத் தீர்க்கத் தமது தெய்விக ஆற்றலை வெளியிடுகிறார். இவ்விரு காரியங்களுக்காக அன்றி, சவால் விடுப்பவர்களுக்கு நிரூபித்துக் காட்டுவது அவருக்குப் பொருட்டில்லாத விஷயம். ஸ்வாமி சொல்வார்: "இச்சாமாத்திரத்தில் ஆண்டவன் சிருஷ்டிக்கிறான் என்பதற்கு 'நிதரிசனமே' எனது அற்புதங்களேயன்றி, வெளிப் படாடோபத்துக்காகக் காட்டும் 'பிரதரிசனம்' அல்ல." நவீன விஞ்ஞான ரீதியிலான நிரூபணத்துக்கு அப்பாற்பட்ட இந்த சங்கற்ப சிருஷ்டியை எவரும் நிரூபித்துப் பார்க்கவே முடியாது. எனவே நிரூபணம் கேட்பது அபத்தமே. கோடிக்கணக்கானவர் நம்புகிறோம்; பிரத்தியக்ஷமாகப் பயன் அடைகிறோம். இதைவிட என்ன நிரூபணம் வேண்டும்? சவாலுக்கெல்லாம் ஜவாப் சொல்லிக்கொண்டிருப்பதென்றால் அவருக்கு அநுக்கிரஹம் புரியவே பொழுது இருக்காது. ஓரிடத்தில் ஒருவரது சவாலை ஏற்று, நிரூபித்துவிட்டால் போதுமா? இன்னொருத்தர் கிளம்புவார்: "அந்த சவால்காரர் சொன்னதை நம்ப மாட்டோம். அவர் கண்ணையும் கட்டி இவர் ஜாலக்கு செய்து விட்டார்; அதனால் எனக்கும் நிரூபித்துக் காட்டவேண்டும்" என்பார். அப்புறம் இன்னொருத்தர், மேலும் ஒருவர் என்று போய்க்கொண்டே இருக்கும். இப்போது பல நூறு விஞ்ஞானிகளும், வைத்ய நிபுணர்களும், ஆன்மிகப் பெரியார்களும் பாபாவின் அற்புதங்களுக்குச் சாட்சி பகர்ந்து அவரது அடித்தொழும்பராகியுள்ளபோதிலும், இத்தனை சாட்சியத்தையும் இந்த சவால்காரர்கள் நம்ப மறுக்கிறார்கள் எனில், பிற்பாடு இச் சவால்காரர்களின் சாட்சியத்தையும் இதே போல் மறுத்துப் புதுச் சவால் விடுப்பவர்கள் ஏன் முளைக்கமாட்டார்கள்?

மொத்தத்தில் இப்படி நிரூபணம் கேட்பதை ஓர் உவமை காட்டி, கொஞ்சம் 'பச்சை'யான உவமை காட்டி, ஒதுக்கித் தள்ள வேண்டியதுதான்:

தாயானவள் குழந்தைக்குப் பால் கொடுத்து வளர்க்கிறாள். அதன் வளர்ச்சிக்குப் பால் தேவை என்பதால் கொடுக்கிறாள்; அது நன்றாக வளர்ந்திருந்தாலும் சில சமயங்களில் அன்புக்காகவே பாலூட்டுகிறாள். 'அன்னை பால் கொடுத்துத்தான் குழந்தை வளர்கிறது என்றால் நாங்கள் நம்பமாட்டோம். எங்களுக்குப் பால் உண்டாகாததால் எவருக்குமே உண்டாக முடியாது' என்று சில

Koviloor Digital Library

ஆடவர்கள் கிளப்புகிறார்கள். (இயற்கைக்கு மேல் தங்களால் போக முடியவில்லை என்பதால் எவரும் அப்படிப் போக இயலாது என்று 'பகுத்தறிவாளர்' சொல்கிறார்களே!) தொடர்ந்து இந்த ஆடவர்கள் சவால் விடுக்கிறார்கள்: 'எங்கள் கண் காண இந்தத் தாய் பால் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் அவள் பசும் பாலையோ, பால் பவுடரையோ குழந்தைக்குக் கரைத்துக் கொடுத்துவிட்டுத் தானே பாலூட்டுவதாகப் பொய் சொல்லுகிறாள் என்றுதான் சொல்வோம்' என்று. (பாபா சிருஷ்டிப்பதாகச் சொல்வதெல்லாம் உண்மையில் அவர் ஏற்கெனவே உள்ள பொருட்களை ஒளித்து வைத்திருந்து, கைத்தந்திரத்தினால் எடுத்துத் தருவதுதான் என்ற வாதம்.) இப்படிச் சவால் விடுபவர் சவாலுக்காக ஒரு தாய் பகிரங்கத்தில் உண்மையை நிரூபிக்க வருவாளா என்ன?

குழந்தைக்குப் பாலூட்டுவது பரம புனிதமான காரியந்தான். ஆனாலும் அதை வெளிப்படச் செய்வதில் ஒரு கூச்சம் இருக்கத்தானே செய்கிறது? ஏன் இப்படி இருக்க வேண்டும் என்று பகுத்தறிவால் கேட்டுப் பயனுண்டா? பரம புனிதமானதாலேயே அதில் கூச்சம் உள்ளது. "பாபா ஏன் சவால்காரர்களுக்குக் கூச்சப்பட வேண்டும்? வாஸ்தவமாகவே சவாலைச் செய்து காட்டி அவர்கள் வாயை அடைக்கட்டுமே!" என்று சிலர் நல்லெண்ணத்தாலேயே சொல்கிறார்கள். இவர்களுக்குப் பாலூட்டலின் தெய்விகமான கூச்சத்தையே நினைப்பூட்டுகிறோம். இது குறித்த உவமையை இங்கு சொல்வதுகூடக் கூச்சமாகத்தானே உள்ளது?

சாமானிய உலகினருக்கு பக்தியூட்டும் பொருட்டு, உலகியற்கைக்கு அதீதமானவற்றை பாபா செய்வதே தியாகந்தான். அவர்களை சன்மார்க்கத்தில் திருப்புவதற்காகவே இப்படி இயற்கையின் சாமானிய விதிகளை மீறி, அசாமானிய விதிகளின்படி நிகழும் அற்புதங்கள் எனப்படுபவற்றைக் காட்டுகிறார். இந்த அன்புத் தியாகத்துக்கும் மேலாக, அவநம்பிக்கையை விம்பாகக் கொண்டவரின் பொருட்டு இந்த அற்புதங்களை அவர் புட்டுப் புட்டுப் பரீட்சைக்குக் காட்ட வேண்டும் என்பது சற்றும் நியாயமல்ல. இயற்கை விதிகளுக்கு அதீதமானவற்றை இயற்கை விதிகளின்படி சோதனை செய்யவேண்டும் என்ற அபத்த, பகுத்தறிவற்ற வாதத்துக்கு அவர் எப்படிச் செவிசாய்க்க முடியும்?

இன்னொரு நுட்பமான விஷயம்: அடுத்து வரும் அத்தியாயத்தைப் பார்க்கும்போது பாபா எத்தனையெத்தனை நூதனமான அற்புதங்கள் செய்திருக்கிறார் என்பதற்கு 'ஸாம்பிள்' கிடைக்கும். இதிலிருந்து அவர் எப்பேர்ப்பட்ட கலா விநோதர் என உணரலாம். கலையின் உயிரே அதற்கு அறிவு விளக்கமில்லாமல், அது நேராக ஸஹ்ருதயர்களின் இதயத்தில் பாய்ந்து இன்பம் சுரப்பது தான். ஒரு கவிஞனிடம், "இது எப்படி 'ட்ராஜெடி' என்று விளக்குங்கள்" என்றோ, "இது எப்படி ஹாஸ்யம் என்று புட்டுச் சொல்லுங்கள்" என்றோ கேட்டால் அதை அசட்டுத்தனம் என்பது தவிர வேறென்ன சொல்ல? ஒரு நிலையில் பாபாவின் பிரகிருதியே பௌதிக இயற்கை என்ற கலையை அவர் பக்தர்

Koviloor Digital Library

பொருட்டு சற்று புட்டுக்காட்டும் தியாகந்தான். இன்னொரு நிலையில் இப்படிப் புட்டுக்காட்டுவதிலும் ஒரு கலா விநோதத்தை மிளிர்விக் கிறார். இதை இதற்கு மேலும் அவர் பக்தரல்லாதார் பொருட்டுப் புட்டுக்காட்ட வேண்டிய அவசியமே இல்லை.

எனவே பாபா சவால்களையும் 'சாலஞ்ச்'களையும் காதி லேயே போட்டுக் கொள்ளாததில் வியப்பேதும் இல்லை. பக்தர் களின் கூவலுக்கே பரிந்தோடும் பரமர் மற்றவர்களின் அறை கூவலைப் புறக்கணிக்கவே செய்வார். வெகு சமீபத்தில் மட்டும் ஸ்வாமி ஒரு சவாலை ஏற்காவிடினும், அப்படி ஏற்காதது குறித்து விரிவாக விளக்கியதே பல பக்தர்களுக்கு விந்தையாகவே யிருந்தது. "ஏன் இந்த அளவுக்குக்கூட ஸ்வாமி பேசி, வாதப் பிரதிவாதச் சர்ச்சையை வளர்க்க வேண்டும்?" என்றே சற்று வருந்தினர். ஆனால் பின்னர்தான் புரிந்தது, திறந்த மனமின்றி ஒரு நல்லவர் விடுத்த சவாலை ஸ்வாமி ஏற்காமல் சர்ச்சையை விஸ்தரித்ததன் விளைவாகவே, திறந்த மனமுள்ள ஒரு நாஸ்திகரைத் தெய்விகத்தில் நம்பிக்கை கொள்ளச் செய்து அவர் மூலமாக லக்ஷக் கணக் கானவரை பக்தியில் திருப்பவே இப்படி விளையாடியிருக்கிறார், என்று!

முன்பு பம்பாய் ஸித்தர் ஒருவர், நீர்மேல் நடக்கும் ஸித்தியில் தம்முடன் பாபாவைப் போட்டிக்கு அழைத்துப் பத்திரிகை மூலம் பகிரங்கச் சவால் விடுத்தார்.

'வாஸ்தவமாகவே சர்வ சக்தியும் பொருந்திய ஸ்வாமி ஏன் சவாலை ஏற்று வென்று காட்டக் கூடாது?' என்றெண்ணிய ஓர் அணுக்கத் தொண்டர் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு இதை அவரிடமே விண்ணப்பித்துக் கொண்டார்.

பாபா உதாசீனமாகச் சிரித்தார். "அசடே! உலகத்தில் உள்ள விதண்டாவாதக்காரர்களின் சவாலுக்கெல்லாம் பதில் சொல்வதா என் காரியம்? தினந்தினம் ஒருத்தன் சவால் விட்டுக் கொண்டுதான் இருப்பான். நாளைக்கே ஒருத்தன், 'நான் பன்றி தின்பதையெல்லாம் கூடத் தின்னுவேன். நீ அதைச் செய்வாயா?' என்று சவால் விடுப்பான். இதற்கெல்லாம் பதில் சொல்லித்தான் நான் என் தெய்விகத்தை நிலைநாட்ட வேண்டுமாக்கும்" என்று வாயில் போட்டுவிட்டு நகர்ந்தார்.

பிறகு அந்த பம்பாய் ஸித்தர் அன்றைய தினம் தாமே தண்ணீர் மேல் நடக்கப்போவதாக அறிவித்து, கூடியிருந்தோர் காண அதற்குள் மூழ்கி, வெளியே எடுத்துப்போட வேண்டிய பரிதாபகரமான மானபங்கத்துக்கு ஆளானது வேறு விஷயம்.

அற்புத சக்திகள் உண்டா என்று வாஸ்தவமாகவே விஞ்ஞான ரீதியில் விளங்கிக்கொள்ள முடியுமா என்றும், அப்படி விளங்கிக்கொள்ள முடியாததால் அற்புதம் கிடையாது என்று சாதிப்பதற்கில்லை என்றும் திறந்த மனத்தோடு ஸத்தியத் தேட்டத்தில் ஸ்வாமியை அணுகுபவர் விஷயம் வேறு.

Koviloor Digital Library

இவர்களை ஸ்வாமி அன்போடு அழைத்து சங்கைகளைத் தெளிவிக்கவே செய்கிறார் — பகுத்தறிவு ரீதியில் முடிந்த அளவிலும், ஆனால் முடியாத பக்தி ரீதியிலும். நம் நாட்டுப் பிரபல பௌதிக விஞ்ஞானியான டாக்டர் எஸ். பகவந்தம், அமெரிக்காவைச் சேர்ந்த அதீத-மன (பாராஸைகாலஜி) ஆராய்ச்சி நிபுணர்களான டாக்டர் கார்லிஸ் ஒஸிஸ், டாக்டர் எர்லெண்டர் ஹாரல்ட்ஸன் போன்றவர்கள் இதற்குச் சிறப்பான உதாரணங்கள் ஆவர்.

மருத்துவச்சிகளே தங்களுக்குப் பயன்படும் சில உண்மைகளை அறிவதற்காக ஒரு தாய் பாலூட்டிப் பார்க்க வேண்டும் என விரும்பினால், இந்த நியாயமான விருப்பத்துக்காக ஒரு தாயார் கூச்சத்தையும் விட்டு விட்டுக்கொடுப்பதே போன்றது இது. ஆயினும், குழந்தையின் பொருட்டுத்தான் பால் உண்டாகும் என்பது போல் அன்பு ஒன்றுக்காகவே ஸ்வாமியிடம் 'அற்புதம்' உண்டாகிறதே தவிர ஆராய்ச்சிக்காக உண்டாவதில்லை. எனவே இவர்கள் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்பதற்காக இவர்களின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஸ்வாமி அற்புதம் செய்ய இணங்கவில்லை. ஆனால் இவர்கள் தம்முடனேயே இருந்து தாம் அன்பு மிகுதியால் பலர் பொருட்டுச் செய்யும் அற்புதம் எனப்படுபவற்றை அருகிருந்து பார்த்து, சோதித்துக் கொள்ளத் தாராளமாக இடம் கொடுத்தார். இவர்களுக்குமே தமது அன்பால் அற்புதப் பரிசுகளைத் தந்தார்.

ஸ்வாமியைத் தங்கள் நிபந்தனைக்கு உட்படுத்தி 'எக்ஸ்பெரிமெண்ட்' செய்யவே செஸ்டர் கார்ல்ஸன் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து ஒஸிஸும் ஹாரல்ட்ஸனும் வந்திருந்தனர். இவர்களுக்கு எட்டத்தில் இருந்த ஸ்வாமி ஒஸிஸிடம் "உன் மோதிரக்கல் என்ன ஆச்சு பார்" என்றார்.

ஒஸிஸ் பார்த்தார். என்ன விந்தை! கல்கட்டிடமான மோதிர ஃப்ரேம் அப்படியே இருக்க, கல்லை மட்டும் காணோம்.

"இது என் எக்ஸ்பெரிமெண்ட்" என்று பாபா புன்னகைத்தார்.

ஆம், அவர்கள் திறந்த மனத்தோடு வந்திருக்கிறார்களா என்று பார்க்க ஸ்வாமி செய்த எக்ஸ்பெரிமெண்ட்! வாஸ்தவமாகவே உள்ளத்தில் கள்ளமின்றி வந்திருந்த அவர்கள் பாபா தான் இந்தக் கல் அந்தர்தானத்துக்குக் காரணமானவர் எனப் புரிந்துகொண்டனர். அவரது அதீத ஆற்றலை ஒப்புக்கொண்டனர்.

இதன் பின் அவர்கள் பாபா குறித்துப் பல ஆராய்ச்சிகள் செய்தனர்; சொந்த அநுபவமும் பெற்றனர்.

1975-ல் நடந்த கலிஃபோர்னியா பல்கலைக் கழக அதீத-மன ஆராய்ச்சி நிறுவனத்தின் சம்மேளனத்தில் இவ்விரு நிபுணர்கள் வெளியிட்ட அறிக்கையில் கூறுகிறார்கள்: "தற்போதுள்ள நிலையில் இந்த அற்புதங்களின் உண்மையை விஞ்ஞான பூர்வமாக ஏற்கப்

Koviloor Digital Library

போதிய அடிப்படை இல்லை என்பது வெளிப்படை. அதே சமயத்தில் இவற்றில் மோசடி இருப்பதற்குச் சான்றாக எதையும் எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதையும் கூறவேண்டும்."

உண்மையாகவே யார் திறந்த மனத்தோடு ஐயப்படுகிறார்கள் என்பது தமக்குத் தெரியும் என்கிறார் ஸ்வாமி. வெளிப் பார்வைக்குத் தூய நோக்கத்துடனேயே தம்மைச் சோதிக்க விரும்புவதாகச் சொல்பவர்களும் உள்ளூற அப்படியில்லாவிடில் அவர்களது சவாலைத் தாம் ஏற்க முடியாது என்கிறார்.

★

அடடா, நம் பரமப் பிரிய ஸ்வாமி, அன்பு புரிவது தவிர வேறு அறியாத அமுதர், எத்தனை வித எதிர்ப்புக்கு ஆளாகிறார்! மத்தளம் கூட இரண்டு பக்கம் மட்டுமே அடி வாங்கும்! அது மேற்புறமும் கீழ்ப்புறமும் அடி வாங்குவதில்லை. நம் ஸ்வாமியோ ஆயிரக்கணக்கான பட்டை தீர்ந்த வைரமாக வந்து, அத்தனை பட்டைகளிலும் அடி வாங்குகிறார்! நாஸ்திகர்கள் இவர் செய்வதெல்லாமே ஏமாற்று வித்தை என்கிறார்கள். ஆஸ்திகர்களிலேயே பலர் இவர் செய்யும் அற்புதங்கள் வாஸ்தவம் என்றாலும்கூட, அதனால் இவர் உண்மை ஆஸ்திகத்துக்கு ஊறுதான் செய்கிறார் என்கிறார்கள். ஸித்திகளையும் ஸித்தர்களையும் போற்றுபவர்களிலேயே சிலர் இவரும் அப்படிப்பட்ட ஸித்த புருஷரில் ஒருவர்தாம் என்றும், ஆனால் அப்படிப்பட்ட ஸித்த புருஷர்களுக்குத் தாங்கள் செலுத்தும் மரியாதையைக்கூட இவருக்குச் செலுத்த முடியாதபடி இவர் தம்மைக் கடவுள் என்று பொய் சொல்லிக்கொள்கிறார் என்றும் கண்டிக்கிறார்கள். வேறு சில ஸித்தர்களோ, இவரைத் தம்மில் ஒருவராகக்கொண்டு, இவர் பெற்றுள்ள அதிதப் பிராபல்யத்தினால் அசூயை அடைந்து இவரைக் குறித்துப் பலவிதமான புரளிகளைப் பரப்புகிறார்கள்.

(அநேக ஸித்த புருஷருள் ஒருவர் மட்டுமேயான பாபா தம்மை இறைவனாக மிகைப்படுத்திச் சொல்லிக்கொள்கிறார் என்று சிலர் கருதுவதற்கு அவர்களளவில் ஒரு நியாயமான காரணம் இருக்கிறது: அதாவது பாபாவின் சில செயல்கள் தவறிப் போவது, அல்லது தோல்வியடைவதுதான். 'இறைவனின் சொல்லோ, செயலோ, சங்கற்பமோ தினையளவும் தப்பாது. ஆனால் பாபாவிடம் இத்தகைய தோல்விகளும் இருக்கத்தான் செய்கின்றன' எனக் கூறி இவர்கள் சில எடுத்துக்காட்டுகளையும் நம் முன் வைப்பார்கள். இவற்றில் சிலவற்றை முன்னரே பார்த்துத் தக்க பதிலும் சொல்லியிருக்கிறோம். (குறிப்பாக, 32-ம் அத்தியாயத்தில்.) உதாரணமாக 'பாபாவுக்கு ஜடப் பொருள்களின்மீது உள்ள ஆதிக்கம் மனித உடம்பின்மேல் இல்லை. மனித உடம்பின்மேல் உள்ள அளவுக்குக்கூட மனித மனத்திடம் இல்லை' என்ற கருத்து சரியல்ல; மனத்தின்மீது கட்டாய ஆதிக்கம் செலுத்துவதை அவரே விரும்பவில்லை எனக் கூறியிருக்கிறோம். அவர் 'சிகித்ஸை' செய்தும் பலர் நோய் தீராததால் அவருக்கு மனித உடலின்மேல் ஆதிக்கம் போதாது

Koviloor Digital Library

என்பது சரியல்ல; மனத்தைக் கட்டாயப்படுத்தி மாற்ற விரும்பாதது போலவே, அவர் கர்மாவையும் அறவே மாற்ற விரும்பவில்லை என்பதாலேயே கார்மிகமான நோய்களைக் குணப்படுத்தாமல் இருக்கிறார் எனக் கூறினோம். ஆகவே, இவ்வம்சங்களில் அவரது தோல்வியாகத் தோன்றுவது உண்மையில் தோல்வியே அல்ல என விளக்கியுள்ளோம். 'அவர் சொன்னது தவறிவிட்டதே, பொய்த்துப் போயிற்றே' என்பதும் அவர் சொன்னதை நாம் சரியாகப் புரிந்துகொள்ளாததால் இருக்கலாம் என்பதற்குத் திருஷ்டாந்தங்கள் காட்டியுள்ளோம். அல்லது கர்மாவின்படி ஒருத்தருக்கு வியாதியோ, வறுமையோ, வேறு பிரச்னைகளோ தீரக்கூடாது என விதித்துள்ளபோது கூட, அவரை பக்தி மார்க்கத்தில் திருப்பும் பொருட்டு, 'பொய்ம்மையும் வாய்மை இடத்த' என்றபடி பாபா பிரச்னையைத் தீர்ப்பதாக வாக்களித்துப் பிறகு அவ்விதம் செய்யாமலிருந்து விடுகிறார் என்றும் கூறினோம். இத்தனை கூறியும் அவர் தவறியதாகச் சில மாத்திரமிருப்பின் அவை எந்த அவதாரத்திலும் உள்ள ஒரு சில அபச்சுருதிகளைச் சேர்ந்ததே என்றும் சொல்கிறோம். இவ்விஷயமாக மேலும் அடுத்து வரும் அத்தியாயங்களில் அலசிப் பார்ப்போம்.)

நியாயமான ஐயப்பாடுகள் கொண்டோர் மட்டுமின்றி ஸ்வாமியிடம் அப்பட்டமான துவேஷமே கொண்ட விரோதிகள் நிறைய உள்ளனர். இவர்கள் நாம் எத்தனை எடுத்துச் சொன்னாலும் செவிசாய்க்க மாட்டார்கள்.

இந்த விரோதிகள் போதாதென்று இவராலேயே பிரதிநிதித்துவம் வழங்கப்பெற்ற 'குட்டி ஸாயி பாபா'க்களாகத் தங்களை வர்ணித்துக்கொண்டு இவருக்குப் பூஜையும் பஜனையும் நடத்தியே இவரது பெயரைக் கெடுக்கிறவர்கள் வேறு! இந்தக் 'குட்டி பாபா'க்கள் சில விதமான சித்துகளில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். ஆனால் வெறும் சித்துக்காரன் என்று தங்களை உலகம் நினைத்துவிடக் கூடாதென்று நினைக்கிறார்கள். பாபா சித்து போன்ற அற்புதங்களையும் செய்வது இவர்களுக்குக் கை கொடுக்கிறது! எனவே அண்டவரான அவரது பிரதிநிதிகள் என்று தங்களைச் சொல்லிக்கொள்கிறார்கள். அவருக்கே பஜனை, பூஜை நடத்துகிறார்கள். ஆனால் இவர்கள் பண ஆசை, புகழாசை முதலானவற்றால் செய்யும் காரியங்கள் நாளாவட்டத்தில் இவர்களிடமும், இவர்களது குருவாக நினைக்கப்படும் ஸ்வாமியிடமுமே வெறுப்பு மனச்சலிப்பை உண்டாக்கி விடுகிறது. அதுவும் தவிர, இவர்களால் சில சித்துக்களை செய்ய முடிகிறதேயன்றி, பக்தர்களின் வியாதி, விபத்து முதலான பிரச்னைகளைத் தீர்க்க முடிவதில்லை. இவற்றில் இவர்கள் அடைகிற படுதோல்வியும் அறியாமையால் பாபாவின் மேல் சுமத்தப்பட இடமுண்டாகிறது.

ஸ்வாமி தாம் நேரடியாகவே அத்தனை கோடி பக்தருடனும் தொடர்பு கொள்வதாகவும், தமக்குப் பிரதிநிதி தேவையே இல்லை என்றும், தாம் பிறர் மூலம் ஆவேசிக்கிறவர் அல்லவே அல்ல என்றும் பன்முறை வெளியிட்டிருக்கிறார். பக்தி முதிர்ச்சியில் பக்தன் தானாக பகவானின் அனந்த கல்யாண குணங்களைப்

Koviloor Digital Library

பெறுவது போல் அமெரிக்க 'டொன்னு, ஆந்திர ஹைகப்பா போன்ற சிலர் 'பாபாத்வ'த்தில் ஓரளவைத் தாங்களாகவே பெற்றிருப்பதாகத் தெரிகிறது. இறைவன் தானே நேரடியாக மக்களையெல்லாம் காக்கலாயாயினும் தூதர்கள் மூலமும் இதனைச் செய்வது போல் ஓரிரு தூதர்கள் ஸ்வாமிக்கும் உள்ளனரோ என்றே தோன்றுகிறது. ஸ்ரீ ஸேதுமாதவன் நாயர் போன்ற சிலரை ஸ்வாமியே வலிந்து ஆட்கொண்டும்கூடத் தம் சக்திகளில் சிலவற்றை அளித்திருப்பதாகவும் நம்ப இடமிருக்கிறது. ஆயினும், இப்படிப்பட்டவர்கள் தங்களைத் தவறிப்போய்க் கூட தூதர் என்றோ பிரதிநிதி என்றோ சொல்லிக்கொள்வதே யில்லை. தங்களுக்கென புகழோ, பணமோ தேடிக்கொள்வதே யில்லை. அடக்கத்தின் உருவாக, பணிவின் பெட்டகமாகவே இருக்கிறார்கள். தங்கள் மூலம் நடப்பதாகத் தோன்றும் அநுக்ரஹம் எதற்கும் தாங்கள் சற்றும் பொறுப்பு இல்லை என்றும், அதற்கு முழுக் காரணமும் ஸ்வாமிதான் என்றும் சொல்லி, அவரைத்தான் அடியார்கள் வழிபடவேண்டுமே யன்றி தங்களை அல்ல என்றும் அடித்துச் சொல்கிறார்கள். இவர்கள் வழிபடவே பிறந்தவர்கள்; வழிபாட்டை வாங்கிக்கொள்ள அல்ல. உத்தமப் பிறவிகள்!

மாமுக பாபாவின் சம்பந்தமே அற்ற சித்தர்கள், அல்லது ஒருகால் பாபாவிடமிருந்தே சில சக்திகளைப் பெற்று, பிறகு பேருக்கும் புகழுக்கும் ஆசைப்பட்டுத் தவறாகச் செல்பவர்கள், ஏனைய விரோதிகள் எதிர்ப்பால் செய்வதைவிடத் தாங்கள் பாபாவுக்காகச் செய்யும் ஆதரவுப் பிரசாரத்தாலேயே அவருக்கு அதிக அவப்பெயரைத் தேடி வைக்கிறார்கள்.

மற்றவகை நிந்தனைகள்: இவர் கள்ள நோட்டு அச்சிடுகிறார்; கள்ளப்பணம் வைத்திருக்கிறார்; சிருஷ்டி என்று இவர் காட்டுவதெல்லாம் ஒரு சித்துத் தந்திரத்தால் எவரெவரது பண்டங்களையோ இவர் கடத்திக்கொண்டு வரும் திருட்டுத்தான் என்பன.

ஏராளமான தனிகர்கள் பிடிவாதமாகக் காணிக்கைகளைக் கொண்டு வந்து கொட்டுவதால் பிரசாந்தி நிலையமும் மற்ற ஸாயி நிறுவனங்களும் நாள்தோறும் பெருகி வருவதுதான் மேற்சொன்ன அபவாதங்களுக்குக் காரணம். இவ்வாறு கள்ளத்தனத்தை இவருக்குக் கற்பிக்காமல், தனிகர் உதவியாலேயே, இவ்வளவு செல்வம் ஸத்யஸாயி ட்ரஸ்டில் சேர்ந்திருக்கிறது என்று ஒப்புகிறவர்களில் சிலரோ இன்னொரு வித நிந்தனையில் இறங்குகிறார்கள் — அதாவது ஸ்வாமி பணக்காரர்களுக்கு அதிகப் பக்ஷம் காட்டுகிறார் என்று.

இதையும், 'ஸிம்மாக்காரர் சாமியார்' என்ற குற்றச் சாட்டையும் முன்பே அலசிவிட்டோம். இன்னம் சில்லறை சில்லறையாகப் பல நிந்தனைகள்: (ஸ்வபாவமாகப் பரிமளம் வீசுவதால்) ஸெண்ட் போடுகிறார் என்று; ஏன் கார் வைத்திருக்கிறார்; ஏன் ஸில்க்; ஏன் இந்த முடி; ஏன் வெற்றிலை போடுகிறார்— இந்தப் பட்டியல் நீண்டுகொண்டே போகும். இவற்றையெல்லாமும் முன்பே பார்த்து விட்டோம்.

Koviloor Digital Library

இதற்கெல்லாம் சிகரமாகத்தான் அந்தப் பாவன புருஷரின் நடத்தைக்கே தோஷம் கூறும் பரம கொடூரமான நிந்தனை.

பரிசுத்த பாபா பரிவொன்றே பொருட்டாகக் கொண்டு, பெண்களையும் அருகே அனுமதித்து, குறை கேட்டு, திருவார்த்தை புகல்வதில் சற்றும் ஸநாதனிகளான வேத பாஷ்ய விசாரத உப்பலூரி கணபதி சாஸ்திரி, அத்வைத வேதாந்த சிரோமணி வேங்கடசுப்பிரமணிய சாஸ்திரி போன்றோருக்குக்கூட விகல்பமாக எதும் தெரியவில்லை. இவ்விஷயத்தை இங்கே பிரஸ்தாபித்து எழுதுவதற்கும் கூட, "ஐயோ, இப்படியும் ஓர் உலகா! 'பனித் துளிபோல் பரிசுத்தமாக, பனிக்கட்டி போல் பவித்திரமாக இருந்தாலும் பழிப் பேச்சிலிருந்து மட்டும் நீ தப்ப முடியாது' என்ற ஷேக்ஸ்பியரின் வாக்கு இப்படியா மெய்யாக வேண்டும்?" என்று நெஞ்சு வலிக்கத்தான் செய்கிறது.

இளம் பெண்களுக்கும் ஸ்வாமி கோரிக்கையறையில் அந்தரங்கப் பேட்டி தருவது பற்றி அபத்தமாக, அசுத்தமாக அபவாதம் பரவியிருப்பதால் அதுபற்றிச் சிறிது சொல்ல வேண்டியதாகிறது. ஒரு மஹாபுருஷர் வந்திருக்கிறார் எனும்போது இளம் பெண்களுக்கும் அவரது பாதத்தைத் தொட்டு ஒற்றிக்கொள்ளும் நியாயமான பவித்ர ஆசையும், தமது அந்தரங்கப் பிரச்னைகளுக்கு அவரிடம் அந்தரங்கமாகத் தீர்வு பெறும் நியாயமான தாபமும் இருக்கத்தானே செய்யும்? அவர்கள் பெண்ணாகப் பிறந்துவிட்ட ஒரே குற்றத்துக்காக இவற்றை மறுக்கலாகுமா? எனவேதான் மஹாபுருஷர் பலர் இவ்வருளைத் தயங்காமல் புரிந்திருக்கின்றனர். இது தனி மனித அபவாதமாக மட்டும் நில்லாமல், ஒரு மரபைக் குறித்த அபவாதமும் ஆகிவிடக்கூடாது என்பதால், மரபு வழிவந்த மடாலயத் தலைவர் சிலர் இவ்வருளைப் புரிய மறுப்பதும் நியாயமே. சம்பிரதாய நிறுவனமொன்றின் தலைவராக இராத நம் ஸ்வாமி தமது காருண்ய மாதுரியத்தைப் பெண்ணாகப் பிறந்தோருக்கும் மறுப்பதில்லைதான். ஆனால் இக்கால ஸ்வாமிஜிகளில் அநேகரைப் போல் (இவர்கள் வெள்ளை உள்ளத்தினராகவும் இருக்கலாம்) பெண்களைத் தொடுவது, தட்டிக் கொடுப்பது, தம்மைச் சுற்றி அவர்களை அமர்த்திக்கொண்டு அரட்டையடிப்பது போன்ற கண்ணியக்குறைவான (அல்லது அப்படித் தோன்றும்) செயல்களை நம் ஸ்வாமியிடம் ஸ்வப்னத்திலும் எதிர்பார்க்க முடியாது. பிரசாந்தி நிலய வாஸினிகள், ஸத்யஸாயி மகளிர் கல்லூரி ஆசிரியைகள் போன்றோருக்குத்தான் அவர் அதிகம் நெருப்பாக இருக்கிறார். மாணவ—மாணவியரின் ஆத்மிகப் பயிற்சி முகாமில் மாணவியரும் ஸ்வாமியின் இனிமையை நிறையப் பெறுவர் எனினும் மாணவரிடம் அவர் பழகும் நெருக்கமும், மாணவியரிடம் அவர் கைக்கொள்ளும் ஒதுக்கமும் வெகுவாக வித்தியாசப்பட்டுத்தானிருக்கும்.

பேட்டி விஷயம்: கோரிக்கையறை பற்றி அறியாதாரே இதில் விகற்பம் கற்பிக்க முடியும். பாபா தனியாக ஒரே ஒரு நபரைப் பேட்டிக்கு அழைத்துப் போவதேயில்லை. நாற்பது ஐம்பது பேரைத் தேர்வு செய்து, வராந்தாவில் அமர்த்தி,

Koviloor Digital Library

இவர்களைப் பத்துப் பன்னிரண்டு பேர்களாகவே நாலைந்து பாட்ச்களில் பேட்டி அறைக்குள் கூப்பிட்டுக் கொள்வார். இவர்களில் பெண்கள் மட்டும் இருக்கமாட்டார்கள்; ஆண்களும் பெண்களும் கலந்தேயிருப்பர். அந்தப் பேட்டி அறையே மிகச் சிறியதுதான். அது இரு பிரிவுகளாகத் தடுக்கப்பட்டிருக்கும். பின் பிரிவின் வாயிலில் ஒரு கெட்டியான திரை தொங்கும். தடுப்பின் முன்புறம் பேட்டியாளர் பத்துப்பேரையும் ஒருங்கே நிறுத்தி வைத்துக்கொண்டு, விபூதி சிருஷ்டித்துத் தந்த பின், ஸ்வாமி தனியாக வந்தோரை ஒவ்வொருவராகவும், குடும்பமாக வந்தோரைக் குடும்பமாகவும் திரைக்கு மறுபுறம் அந்தரங்கப் பேட்டிக்கு அனுப்புவார். ஸ்வாமி இடைநிலையில் தொங்கும் திரையை ஒட்டியேதான் நிற்பார். வெளியே நிற்பவர்கள் எட்டினால் அவரைத் தொட்டுவிடலாம். திரைக்குக் கீழ் அவர் பாதமும், திரையால் போர்த்தப்பட்டிருந்தாலும் அவரது முதுகமைப்பும் வெளியே உள்ளோருக்கு நன்கு தெரியும். ஒருவர் விஷயம் இன்னொருவருக்குத் தெரியக்கூடாது என்பதால் திரைக்குப்பின் பேட்டி பெறுவோரிடம் அவர் ரகசியக் குரலில் தான் பேசுவார். வெளியே உள்ள மற்றோருக்கு வார்த்தை புரியாதாயினும் அவர் ரகசியம் பேசுகிறார் என்பது லேசான கிசுகிசுப்பாகக் கேட்கவே செய்யும்.

அந்தரங்கத்தை இதைவிட பகிரங்கமாகச் சாதிக்க முடியுமா? இப்படிப்பட்ட பேட்டியில் சந்தேகமாக எண்ணுவது வடிகட்டிய பைத்தியக்காரத்தனந்தான். ஆனாலும் துஷ்பிரசாரகர்களின் சாமர்த்தியத்தால், ஸ்வாமியிடம் பக்தி வழியில் திரும்ப ஆரம்பிப்பவர்களிலும், ''பாபா ஏன் சார், லேடீஸுக்குக்கூட இன்-காமிரா இன்டர்வ்யூ தருகிறாராம்?'' என்று ஐயுற்றுக் கேட்பவர்கள் இருக்கிறார்கள். அப்பப்பா, ஸ்வாமி சுமக்கும் அபவாத மூட்டை!

ஒவ்வோர் உபந்யாஸத்திலும் பாபா ஆயிரம் முறை 'பவித்ரம்' 'பவித்ரம்' என்பதைத்தான் பரம பவித்ரமாக அழுத்திச்சொல்லி வலியுறுத்துவார். அந்த மாசிலாமணிக்கு மாசு சொல்கிறார்களே! எத்தனையோ பேருக்கு விஷய வாஸனை களைக் களையும் அந்த அக்னிக்கே தோஷம் கூறுகிறார்களே, இது அடியாருக்கு நரக வேதனை தருவதுதான்.

அரக்கரும் குரக்கரும் காண அன்னை ஜானகியை அபவாதம் தீர்த்துக்கொள்ளச் சொன்னதற்குப் பிராயச்சித்தமாகத்தான் ஸாயிராமன் இந்த முழு மூட அபவாதத்துக்கும் ஆளாகிறாரோ என்னவோ?

மற்றவர்கள் கிளப்பிவிட்டால் ஸம்சயாத்மாக்களுக்கு சந்தேகம் ஏற்படும்தானே? இந்த நூலாசிரியனை இந்தப் படு பாதகமான சந்தேகத்துக்கு ஆளானதுண்டுதான். இம்மாதிரி விஷயங்களில் நிரூபணம் அந்தராத்மாவில் தைந்து உறைந்தால் தான் உண்டு. பரம கிருபாளுவான ஸாயீசன் இந் நூலாசிரிய னுக்கு அப்படிப்பட்ட அரிய நிரூபணத்தை அளித்தார்.

Koviloor Digital Library

சாதாரணமாக நூலாசிரியர் 'நான்' போட்டுக்கொண்டு அந்தரங்க விஷயத்தை எழுதலாகாது என்பார்கள். ஆனால் அந்த "நானு"க்குத் துளிக்கூடப் பெருமையில்லாமல், கதாநாயகனின் பெருமையே இவனது மூலம் வெளியாகும்போது அதைச் சொல்வதில் தவறில்லை. அடியோடு ஆதாரமில்லாததும், இங்கு இப்படி விவரிப்பதற்குக் கூட வேதனை தருவதாகவும் உள்ள ஒரு புரளியை விஷமிகள் பரப்பிப் போதிய உறுதி பெறாத பக்தரைத் தத்தளிக்கச் செய்கையில் நூலாசிரியரின் சொந்த அநுபவம் பக்தர்களுக்குத் தெளிவை அளிக்குமாயின் அதைச் சொல்லத்தானே வேண்டும்?

நீண்ட காலம் முன்பே திருமணம் செய்துகொள்ளக்கூடாது என்று இந்நூலாசிரியன் தீர்மானித்துவிட்ட போதிலும், அவனுக்கு உண்மையான சித்த சுத்தி என்பது சிறுகச் சிறுக ஏற்பட ஆரம்பித்தது ஸாயிநாதன் நிழலில் ஒதுங்கத் தொடங்கிய பிறகுதான். பிரம்மசரியம் என்பதற்காகப் பெண்களைக் கண்டு பயந்து ஒதுங்குகிற வரையில் சித்த சுத்தி ஏற்பட்டதாகச் சொல்வதற்கில்லை. நிர்ப்பயமாக விகல்பமே யில்லாமல் ஸ்திரீ சமூகத்திடம் பழகுகிற பாக்யம் இந்த நூலாசிரியனுக்கு ஏற்பட்டிருக்கிறதெனில் இது ஸாயீச்வரன் போட்ட பிச்சைதான். இவ்விஷயத்தை இங்கே தோண்டித் துருவி எழுதுவதால் தான் இதில் பயத்துக்கும் விகல்பத்துக்கும் இடமே இருப்பதாகக்கூடத் தெரியுமளவுக்கு, இப்போது வேற்றுமை தெரியாமல் ஸஹஜமாகவே மனம் சுத்த நிலையில் இருக்கிறது. எத்தனையோ கர்ம மூட்டையும் பூர்வ வாஸனைகளும் கொண்ட ஒருவனுக்கே இந்த ஸஹஜமான விகல்ப மற்ற பான்மை அவரது அருளால் வாய்த்திருக்கிறது எனில் அப்புறம் அவரது தூய்மைக்கு என் சொல்ல? வேதாந்த சாஸ்திர பரிபாஷையில் "நிர்விகல்பம் ஸவிகல்பம் இரண்டுக்கும் மேற்பட்ட ஸஹஜ யோகியிலேயே" உள்ள நம் ஸாயிநாதனின் பவித்ரத்வத்தைப் பற்றிச் சொல்லி முடியாது என வேண்டியதுதான்.

நூலாசிரியன் அவர் நிழலில் சற்று ஒதுங்கத்தொடங்கிய போது, விஷமிகளின் புரளி அவனையும் அலைக்கழித்து, அவர் நிழல் படிந்தவரோ என்றும் சம்சயிக்கத்தான் வைத்தது. அந்தப் பரம தயாளு இவனுடைய உள்ளிருட்டு கிழிந்தே துளித்துளியாக சுத்தம் செய்து, அதன் மூலமே இவனது அந்தராத்மாவில் தமது பாவனப் பிரகாசத்தை உறுதிப்படுத்தி விட்டார். பித்தளைக்குத் துளி தங்கமேற்றுச் சொட்டித்தானே அது மின்னுகிறதெனில், அந்தத் தங்கம் மினுமினுப்பே நூறு சதமும் நிரம்பியது என்பதில் ஐயமென்ன?

பிற்பாடு இந்நூலில், ராஸலீலையைப் புரிந்து கொள்ளாதவர்களால் காமுகனாகக் கூறப்படும் கண்ணனிடம் அருவருப்புற்ற டாக்டர் டி.கே. பானர்ஜி அக் கண்ணனின் ஆவேசத்தாலேயே தாமும் அற்புத சித்த சுத்தி பெற்றதாக ஒரு நிகழ்ச்சி பார்ப்போம். வெளியளவில் கூட ராஸலீலை போல் விகல்பமான எதையும் தம்மிடம் அண்ட விடாத போதிலும், வெற்றுப் புரளிக்காரர்களின் புனைந்துரையாலேயே அபவாதப்பட்ட நம் ஸாயிக் கண்ணனுக்குமே இது பொருந்தும். அவரைத் தியானிப்பதாலேயே

Koviloor Digital Library

சிந்த விகாரம் சிறுகச் சிறுக நீங்கியவர் பலப் பலர். அப்படி யெனில் இச் சுத்திகரிப்பின் மூலச் சரக்கான அவர் கலப்படமற்ற நிர்மல, நிஷ்களங்கமே என்பதில் ஐயமென்ன?

ஸ்வாமியின் உள்ளார்ந்த பவித்ர சக்தியால்தான், இந்தனை அவதூறு கிளப்பப்பட்டும் லக்ஷம் லக்ஷம் லக்ஷம் கௌரவமான குடும்ப ஸ்திரீகள் அவரைத் தாயை அணுகுவது போல் எவ்விதத் தயக்கமும் இன்றி அண்டி பக்தி புரிகிறார்கள். இவர்களில் அநேக வித்த புருஷர்களையும் யோகிகளையும் நூறுகி நூறுகி அறிந்துள்ள ஒரு பெருமாட்டி, "ஸத்ய ஸாயியின் கண்கள் காமனை எரித்த கண்கள்" என்று நெகிழ்ச்சியுடன் கூறுவது வழக்கம்.

கேவலம் சரீரமாத்திரமான ஓர் இச்சையானது, "கேவல ஸ்திதி" என்றும், "கைவல்யம்" என்றும் வேதாந்த சாஸ்திரங்கள் கூறும் ஆத்மானந்தத்தில் திளைத்துள்ளோருக்கு ஒரு நாளும் ஏற்படாது. இப்படிப்பட்ட மஹான்களில், பாமர மக்கள் தடம் புரளாமலிருப்பதற்காக அவர்களுக்கான கட்டுப்பாடுகளையும் அநுஷ்டித்து வழிகாட்ட வேண்டிய ஸம்பிரதாய குருமார்களிலிருந்து நம் ஸ்வாமி வேறுபட்டிருப்பதால், அவர் பெண் பக்தர்களுக்கு இருக்கக்கூடிய நியாயமான தாபமான பாத ஸ்பரிசனத்தை வழங்கு வதையோ, அபூர்வமாக சிரத்தில் கரம் வைத்து ஆசிர்வதிப்பதை யோ நாம் சற்றும் ஆக்ஷேபிப்பதற்கில்லை. இந்தத் தூய செயல்களில் தோஷம் காண்பது, அப்படிக் காண்போரின் தோஷத்தைத்தான் பிரதிபலிக்கிறது!

தோஷமுள்ளவர்கள் துவேஷப் பிரசாரம் செய்து பொருளும் பெயரும் சேர்ப்பதைப் பார்த்தும் "ஸந்தோஷம்" சொல்கிறாரே அதுவே நம் ஸ்வாமியின் பெருமை. அவரது பக்தர் களில் பரம பக்குவ சிகரத்தை அடைந்தவர்களும் புரளிப் பிரசாரத்தைப் பொருட்படுத்துவதில்லை; எதிராளிகளைப் பகைப்ப தில்லை. "இதுவும் பகவான் லீலையில் ஓர் அங்கம். மாநுஷ காயம் தரித்து வந்து அவன் போடும் பலவிதமான ஆட்டங்களில் இதுவும் ஒன்று" என்றே எண்ணுவர். ஆனால் அவ்வளவு பக்குவம் பெறாத பக்தர்கள் ஒன்று, தாங்களே ஸ்வாமியிடம் சம்சயம் கொண்டு உழலுவார்கள்; அல்லது எதிராளிகளைத் துவேஷித்து அவஸ்தைப்படுவார்கள்; அல்லது, "ஸ்வாமிதான் இந்தப் புரளிக்கு இடம் தராமல் ஏன் கடும் ஆசாரங்களை மேற்கொள்ளக் கூடாது?" என்றுவது உழப்பிக்கொள்வார்கள்.

நம் புனிதப் பெருமானை இப்படிப் பழி சொல்வதை அவர் சற்றும் பொருட்படுத்தாவிடினும், பக்தர்கள் பொருட்படுத்தி வேதனை உறுவதிலும் ஒரு நன்மை யிருக்கலாம். அடியார்கள் சுயநலக் கலப்பின்றிப் படுகிற வேதனைக்கு உலகின் பாப பாரத்தை ஓரளவுக்குக் குறைக்கும் சக்தி உண்டு அல்லவா?

அபவாதப் படலத்தின் இன்னொரு நற்பலன்: பாபாவோடு அக்கிரமமாகப் பிணைத்துப் பேசப்படும் உத்தமப் பெண்டிரில் சிலர் வேதனையில் துடிப்பதன் மூலமே உலகின் பாவச் சுமையைச்

Koviloor Digital Library

சிறிது குறைக்கின்றனர் எனில், இந் நூலாசிரியர் அறிந்த வேறு சில பெண்ணரசிகளோ பாபாவைப் போலவே அபவாதத்தால் சற்றும் பாதிக்கப்படாத அதி உன்னதப் பக்குவத்தைப் பெற்றுள்ள னர். இதைப் பார்க்கும் போதுதான் மாயைகளுள் மாபெரும் மாயையான மானாபிமானம் என்பதைக் கல்வி எறிவதில் ஸ்வாமிக்கு உள்ள அமோக ஆற்றல் தெரிகிறது. நாமும் சரணாகத புத்தியில் முன்னேற முன்னேற, கடக்கவொண்ணாத நம் மானாபி மானங்களிலிருந்தும் அவர் கரையேற்றுவார் என்ற உறுதி இதைப் பார்த்தே உண்டாகிறது.

ஒருகால் இதையெல்லாம்விடப் பெரும் நன்மை அவரைப் பழி சொல்கிறவர்களுக்கே விளையலாம். நாம் இப்படிச் சொல்வது விசித்திரமாகத் தோன்றலாம். ஆனால் சிசுபாலனைக் கண்ணன் தன்னில் தானாகவே கரைத்துக்கொண்டதை பாகவதம் செப்ப வில்லையா? அவதார சரிதங்கள் முற்றிலும் முன்னமே திட்டமாக்கப் பெற்றுத்தான் பிறகு உலகில் நிகழ்கிறது என்று ஸ்வாமியே கூறுகிறாரே! அதன்படி அபவாதப் படலமும் அவர் திட்டந்தான்! நல்லவர்களான சிலரது கர்மத்தைத் தீர்க்கவும், அல்லவர்களான சிலரது கர்மத்தைப் பழுக்கப் போடவுமே அவர்களை அபவாதி களின் களத்தில் ஸ்வாமி தள்ளியிருக்கக் கூடும்.

இந்தக் கோணத்தில் நோக்கும்போதுதான், "என்னைத் துவேஷிப்பவர்களையும் நீங்கள் பதிலுக்குத் துவேஷிக்கவே கூடாது. நான் எப்படி அவர்களிடமும் அன்பே கொண்டிருக்கிறேனோ அப்படியே நீங்களும் இருக்கவேண்டும். உலக வழக்கு இப்படித்தான் என்று நீங்கள் நிச்சலனமாகவே இருக்க வேண்டும். உலகத்தில் என்ன பார்க்கிறோம்? நாக பூஜை செய்து, நிவேதனம் முதலியன ஏராளமாக சமர்ப்பிக்கிறார்கள். ஆனால் நிஜ நாகமே வந்தால் என்ன செய்கிறார்கள்? அடித்துக் கொல்லத்தானே போகிறார்கள்? அப்படியே, ஆண்டவன் வரவேண்டும் என்றே பூஜை செய்தவர் களுங்கூட, நான் நேரே வந்திருக்கும்போது என்னைத் தாக்க லாம். ஆனால் நாகத்தை வதைப்பது போல் என்னை உலகமே திரண்டு வந்தாலும் வதைக்க முடியாது என்பதால் இதை நீங்கள் உதாசீனப்படுத்த வேண்டியது தான்" என்று ஸ்வாமி சொல் வதை நாம் மெய்யாலும் நடத்திக் காட்ட முடியும்.

(நாக பூஜை செய்தாலும் நாகம் வந்தால் அடிப்பதற்குக் காரணம் அதனிடம் விஷம் இருப்பது. மற்ற தேவதைகளைப் பூஜை செய்து அவை பிரசன்னமானால் அடிக்கப் போவோமா? அப்படியாயின் ஸ்வாமியே தம்மிடம் விஷ அம்சம் இருப்பதாகச் சொல்கிறாரா? ஆம், ஒரு விதத்தில் நம் மாயாவிப் பிரபுவிடம் 'விஷம' விஷம் இருக்கத்தான் செய்கிறது. அதைப் பின் அத்தி யாயங்களில் பார்ப்போம்.)

ஒருகால், ஸ்வாமியுங்கூட எதிராளிகளைப் பரிகசித்தும் ஓரளவு கண்டித்தும் பேசுவது போல் நாடகம் செய்யலாமாக இருக்கும். ஆனால் உள்ளூற அவரைப் போலவே நமக்கும் அவர்களிடம் பிரேமைதான் இருக்கும். இவர் எழுதி, டைரக்ட்

Koviloor Digital Library

செய்யும் நாடகத்தில் இவரே அவர்களை வில்லனாகவும் நம்மை மாற்றுத் தரப்பாகவும் வைத்திருக்கிறார் என்ற உணர்வின் ரஸிக்ய இன்பம் கூட உள்ளூற இருக்கும்.

பக்தரில் பெரும்பாலாருக்கு இது சாத்தியமல்ல. தங்களை உருப்பிக்கொள்ளவே செய்வர். முன்பே சொன்னாற்போல், ''நம் ஸ்வாமியுந்தான் அபவாதத்துக்கு இடம் தராமல் ஏன் மிகக் கடுமையான ஆசாரத்தை மேற்கொள்ளக் கூடாது?'' என்றுகூட உருப்பிக்கொள்வார்கள்.

ஆதியிலேயே தமையனார் சேஷமராஜு உருப்பிக் கொண்டார். 'ஏன் இவ்வையனை ஸத்யாவும் தான் சம்பிரதாயமான மற்ற ஸந்நியாஸிகளைப் போலப் பெண்களை அருகில் அநுமதிப்ப தில்லை என்று வைத்துக் கொள்ளக்கூடாது? ஏன் பனை மரத்தின் கீழ் பால் குடிக்கவேண்டும்?' என்றெண்ணினார். எனவே, 'தம்பி'க்கு எச்சரிக்கைவிடுத்து ஒரு கடிதம் எழுதினார். அவருக்கே தெரியும், 'தம்பி' செவிசாய்க்கப் போவதில்லை என்று — எனவே 'உனக்குள்ள செருக்கு எனக்குத் தெரியும்' என்றும் ஒரு வரி யைச் சேர்த்தார். தாய், தந்தை, தமையன் என்றெல்லாம் பாபா தலைச் சலுகை தாராதிருந்ததில் சேஷமராஜுவுக்கு இருந்திருக்கக் கூடிய தாபமும் இங்கே வெளிவந்துவிட்டது போலும்!

அதற்கு பாபா பதில் எழுதுகிறார்:

பக்துலகு,

(பிற்பாடு இக் கடிதம் தமது சரிதங்களில் வெளியாகப் போகிறது என்று கண்டுகொண்டு, அன்றே அண்ணனுக்கெழுதிய கடிதத்தை 'பக்தர்களுக்கு' என்று தொடங்குகிறார்!)

அன்பனே, உன் கடிதத்திலிருந்து உன்னுள்ளே பொங்கும் பக்தி, பாசம் இவற்றையும், அவற்றின் அடிமட்டத்தில் உள்ள விசனத்தையும் ஐயத்தையும் தெரிந்துகொள்ள முடிகிறது.

உனக்கு ஒன்றே சொல்வேன்: ஞானிகள், யோகிகள், ரிஷிகள், முனிகள் போன்றோரின் இயல்பை ஆழம் காண எவராலும் இயலாது. மக்கள் பலதரப் பட்ட நடத்தைகள், மனப்பான்மைகள் கொண்டோரே யாவர். இவற்றை மீறியோரையும் தங்கள் கோணத்திலேயே பார்ப்பார், பேசுவர், வாதிப்பர். ஆனாலும் நாங்கள் எங்களுக்கே உரிய சரியான பாதையை, எங்களின் நல்லறிவை, எங்களது ஸங்கல்பத்தையே தான் வழுவின்றிப் பின்பற்ற வேண்டும். கனிமரம் கல்லடி பட்டுத்தானாக வேண்டும். நல்லவரும் அல்லவரும் பரஸ்பரம் பரிகாசமும் அபவாதமும் செய்துகொள்வதுதான் உலக இயல்பு. இப்படி நடக்காவிட்டால்தான் ஆச்சரியப்பட வேண்டும்.

Koviloor Digital Library

துவேஷிப்பவரையும் துவேஷிக்கலாகாது; பரிதாபமே படவேண்டும். பாவம்! அவர்களுக்குத் தெரியவில்லை. தெரிந்துகொண்டு சரியான முடிவெடுக்கிற பொறுமையும் இல்லை. காமக் குரோதாதிகளில் மூழ்கித் தெளிவான பார்வை இழந்தவர்கள் எல்லாவற்றையும் அப்படியே பார்த்துப் பலவிதமாக எழுதுகிறார்கள். நீ இதையெல்லாம் இதயத்தில் பதித்துக்கொண்டு முக்யத்துவம் கொடுப்பது நமக்குத் தகாது. ஸத்தியம் ஒருநாள் நிச்சயம் வெல்லும்.

போற்றுவதால் உப்புவதும், தூற்றுவதால் சுருங்குவதும், மஹாத்மாக்களின் வழியல்ல. அவர்களுக்கு எந்த தர்ம சாஸ்திரமும் விதிகள் வகுத்துத் தரவில்லை. ஏனெனில் அவர்களுக்கே தமக்கான வழிமுறைகள் தெரியும். அவர்களது ஞானமே அவர்களுக்கு ஒழுங்கு தருவது, அதுவே அவர்களது காரியங்களைப் புனிதமாக்குவது. ஆத்மநிலையே நிலைத்து நிற்பது. உலகுக்கெல்லாம் நலம் பயப்பது இவ்விரண்டுமே அவர்களது சிறப்பு அடையாளங்கள். இவ்விரண்டிலிருந்தும் நான் சற்றும் வழுவாதபோது நீ ஏன் வருந்தப்படவேண்டும்? புகழும் இகழும் ஆத்மாவைத் தொடுவன அல்லவே!

எனக்கொரு ஜன்மப்பணி உள்ளது. மக்களுக்கெல்லாம் பேரின்ப வாழ்வை வளர்த்துத் தருவது தான் அது. எனக்கொரு பிரதிக்ஞை உண்டு. தர்மத்தில் தவறுவோரை மறுபடி ஸன்மார்க்கத்தில் திருப்பிக் காப்பதுதான் அது. நான் அன்போடு ஈடுபட்டுள்ள தொழில், தீனரின் துயர் துடைத்து அவர்களது நியாயமான தேவையைப் பூர்த்தி செய்வதேயாகும். என்னை உள்ளன்போடு உபாஸிப்போருக்கு இவற்றை நான் நிச்சயம் நிறைவேற்றித் தந்து கடைத்தேற்றுகிறேன் என்பதால் நான் 'செருக்கோடு' இருக்கவும் நியாயமுண்டு! (தம்பியின் 'செருக்கை'க் குறிப்பிட்ட அண்ணனுக்குப் பதில்!)

என் பக்தர்களும் (என்னைப்போலவே) எதையும் ஸம திருப்தியுடன், திடத்துடன் தாங்கவேண்டும். இன்ப துன்பங்களை, லாப நஷ்டங்களை ஸம சித்தத்தோடு தாங்குவதற்கே நான் 'பக்தி' என்று பெயர் கொடுப்பேன். இப்படிப்பட்டவர்களை, நான் பிறரது ஏச்சுப் பேச்சுக்காக, ஒரு நாளும் கைவிடமாட்டேன்...

ராம, கிருஷ்ணாதியரைப் பற்றி இதைவிடக் கொடூர அபவாதங்களும், படுபாதகமான தப்பர்த்தங்களும் பரப்பப்பட்டது உனக்கே தெரியாதா? எந்தக் காலத்திலும், எந்தத் தேசத்திலும் மஹாத்மாக்கள் விஷயம் இப்படித்தான்.... ஸத்யத்தின் அதிகார பூர்வ சக்தி விரைவில் தானே வெல்லும்.

Koviloor Digital Library

என் பணியை, என் ஸங்கல்பத்தை நான் ஒருகாலும் விடமாட்டேன். அவற்றை வெற்றிகரமாக முடிக்கவே செய்வேன்....

இதுவரை யாரிடமுமே வெளியிடாததைச் சொல்கிறேன். உள்ளூற (நான் இந்த அபவாதத்தில் தான் பட்டுக்கொள்ளாமல் விலகி இருக்கிறேன் என்றில்லை;) அவதாரமாக ஒன்றை உலகுக்கு அறிவித்து, சஞ்சரித்து எத்தனையோ பேசுகிறேனே, செய்கிறேனே இவை யாவற்றிலிருந்தும்கூடப் பட்டுக்கொள்ளாமல் விலகி நிற்பவன் நான். வெளி உலகின் வெளிப் பார்வைக்குச் செயல் புரிகிறேன். உள்ளுக்குள்ளே இவையும் பற்றாதவன் நான். எனக்கென ஓர் இடமும் இல்லை; ஒரு பெயர் இல்லை; 'எனது', 'உனது' என்ற பேச்சுக்கே இங்கு பொருளில்லை. நீங்கள் எந்தப் பெயரிட்டழைத்தாலும் எனதாக உவக்கிறேன்; எவ்விடத்துக்கு அழைத்தாலும் அதை என்னிடமாகக் கொள்கிறேன். மக்கள் குலத்தின் பொருட்டே நான் செயல் புரிகிறேன். என் மஹிமையை எவரும் அறிய இயலாது. ஒருவன் எத்தனை பெரியவனாகத்தான் இருக்கட்டும், அவன் எத்தனை விதங்களில் எத்தனை காலம் முயன்று ஆராய்ந்தாலும் என் மஹிமையை அளவிட முடியாது....

இதை எழுதியும்கூட எனக்கு ஒன்றும் ஆக வேண்டாம். பதிலெழுதாவிடில் நீ வருந்துவாயே என்றே எழுதினேன்.

இந்தயே நீ பாபா
(இப்படிக்கு உன் பாபா)

இதுவரை சொல்லாமல் இப்போது வெளியிடுவதாக இதில் கூறுவதை அவர் பிற்பாடு பன்முறை இதைவிடச் சக்தி தெறிக்கும் வாசகங்களில் விளம்பியதுண்டு. புகழ்பெற்ற ஹாலிவுட் திரைக் கதையாளர் ஆர்னல்ட் ஷுல்மன் இவரது சரிதையை ஆராய்ந்து எழுத விரும்பியபோது பாபா, "ஆகாசத்தை அளக்க ஒரு சிறு மீனால் முடியுமா?" என்று கேட்டார்.

பம்பாயில் 1968 மே மாதம் நடைபெற்ற அகில உலக ஸாயி மகாநாட்டில், ஏராளமான அந்நிய தேசங்களின் பிரதிநிதிகள் கூடியிருந்த ஸதஸில், பாபா ஆலாட்சமணிக் குரலில் கம்பீரமாக, தெளிவாகச் சொன்னார்: "மனித குலம் முழுதும் சேர்ந்து ஆயிரம் ஆண்டுகள் தவ யோக விசாரம் செய்தாலும் என் உண்மை இயல்பை அறியவொண்ணாது....நான் உங்களிடை நடக்கிறேன், உங்களைப் போல் உண்கிறேன், உங்களிடம் பேசுகிறேன் என்பதால் இதுவும் ஒரு மனித வ்யக்தியே என்று ஏமாறியிருக்கிறீர்கள். நானும் உங்களோடு பாடியும், விளையாடியும், பலவிதப் பணிகளில் ஈடுபட்டும் உங்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறேன். ஆனாலும் எந்த க்ஷணமும் என் தெய்விகம் உங்களுக்குப்

பகிரங்கப் ப்ரகாசிக்கப்படலாம். அந்த க்ஷணத்துக்குத் தயாராக இருங்கள்.

"நீங்கள் ஸத்ய ஸாயி என்று பார்க்கிற இந்த மனித சரீரம் ஸர்வ தேவதா ஸ்வரூபங்களையும் தன்னுள்ளே தரித்ததாகும். இதைப் பற்றிய ஐயம் உங்களைச் சற்றும் திசை திருப்ப அநுமதிக்காதீர்கள். என் தெய்விகத்தில் நம்பிக்கையை உங்கள் இருதயத்தில் நிலைநாட்டிக் கொண்டீர்களாயின் என் உண்மை இயல்பை உங்களுக்கு உணர்த்துவேன். பெண்டுலம் போல் நம்பிக்கைக்கும் ஐயத்துக்குமிடை ஊசலாடிக் கொண்டிருந்தால் என் இயல்பான ஸத்ய ஸாக்ஷாத்காரத்தையும், அதன் பிரம்மானந்தத்தையும் நீங்கள் பெற இயலாது."

*　　　*　　　*

இவரைப் படுபட்டமாக வர்ணிப்பவர்களைப் பார்த்தோம். பகவானாகப் பூஜிப்பவரைப் பார்த்தோம். இங்கோ இவரே தம்மை பகவானாக ஆணி அறைந்தாற்போல் சொல்வதையும் பார்க்கிறோம். இவ் வாசகங்களைக் கேட்டு ஸாயி பக்தர்கள் பூரிக்கின்றனர். ஆனால் பக்தர் என்றும் சொல்ல முடியாமல், அபவாத கோஷ்டியினர் என்றே தள்ளவும் முடியாமலிருக்கிற பலர் இங்கே தான் கலங்குகிறார்கள், பிணங்குகிறார்கள்.

முன்னமே பல இடங்களில் இவர்களின் அபிப்பிராயத்தை அலசியிருக்கிறோம். விருந்தில் முதலிலேயே கொஞ்சம் பாயஸம், சித்ரான்னங்களைப் பரிமாறிவிட்டு, பிறகு ரஸஞ் சாதம் உண்ட பின் இவற்றைப் பெரிய அளவில் பரிமாறுவது வழக்கம். இச் சரிதையில் நாம் மோர் சாத கட்டத்துக்கு வந்துவிட்டதால், முன்பு (குறிப்பாக 17, 18 அத்தியாயங்களில்) ஸ்பூனால் பரிமாறிய அந்த சர்ச்சைக்கிடமான விஷயங்களை இப்போது கரண்டியால் பரிமாறுவோம்.

மாற்றாரை மாற்றும் சாகஸ எண்ணத்தில் இதைச் செய்யவேயில்லை. ஸ்வாமி பக்தர்களுக்கே மாற்றாரின் பிரசாரத்தால் கொஞ்சம் தடுமாற்றம் உண்டாவதால், இந்த பக்தர்களைத் தெளிவிக்க உதவுமோ என்ற கருத்திலேயே இந்த ஆராய்ச்சியில் இறங்குகிறோம்.

அறியாக் குழந்தையானது நம்பிக்கை, அவநம்பிக்கை என்ற வார்த்தைகளுக்கே இடமின்றி அம்மாவின் பாலைக் குடித்து மகிழ்ந்து வளர்வது போல், எக் கேள்வியும் கேட்கத் தெரியாமல் ஸ்வாமியின் அருளில் ஆழ்ந்திருப்பவர்களே பரம பாக்யசாலிகள். ஆனாலும் கோபியர்போல் இப்படி அனைவரும் அநுபவிப்பவரா? பிறர் கிளப்பிவிட்டதால், 'ஒருவேளை அம்மா பால் கொடுக்காமல் பவுடரைத்தான் கரைத்துத் தருகிறாளோ? அல்லது அம்மா பாலுக்குப் பதில் ஏதேனும் நச்சுப் பொருளைத்தான் ஊட்டுகிறாளோ? ஒருவேளை இவள் அம்மாவே இல்லையோ?' என்று சில அடியாரே கலங்கவும் கூடும். அவர்களுக்குப் பயனாகலாம் என்ற கருத்திலேயே இனிச் சில விளக்கங்கள் விரிகின்றன.

Koviloor Digital Library

அத்தியாயம்—43

பிரஸித்த ஸித்தர் மட்டுமா?

**அஷ்ட சித்தியும் நல் அன்பருக்கருள
விருது கட்டிய பொன் அன்னமே!**

— தாயுமானவர்

பாபாவை ஏராளமானவர்கள் பகவான் என்றே வழிபடுகிறார்கள். இதற்கும் மேலாக அவரே அழுத்தந் திருத்தமாகத் தாம் பகவானே எனப் பகருகிறார். இப்படியிருந்துங்கூட, மாற்றாரின் பிரசாரத்தால் சில சமயங்களில் பக்தருமே குழம்புகின்றனர். சொந்த அநுபவத்தையும் மீறி ஓர் ஐயப் பனிப் போர்வை சில அடியாரையும் சூழ்கிறது. அதை ஐயன் அருள் துணைகொண்டு இயன்ற அளவுக்குப் போக்க முயல்வது நூலாசிரியன் கடமையாகிறது. எனவே எதிர்ப்பாளரைத் திருத்தப் புகும் சக்தி மீறிய காரியத்தில் நாம் புகாமல், பக்தர்கள், திறந்த மனமுள்ள இடைநிலையாளர்கள் ஆகியோருக்கு ஓரளவு தெளிவுதரும் நோக்கத்திலேயே இங்கு மாற்றாரின் கருத்துக்களை ஆராய முற்படுகிறோம்.

(யோகம், ஸித்தி, மந்திர சக்தி முதலியவற்றையே நம்பாத நாஸ்திகர்களைப் பற்றி நமக்குக் கவனமே இல்லை. பகுத்தறிவுக்கும், விஞ்ஞானத்துக்கும் அப்பாற்பட்டதாக எதுவுமே இருக்க முடியாது என்கிறவர்களுக்கு நாம் பதில் சொல்ல எண்ணவேயில்லை. ஆஸ்திகர்களுக்கே, குறிப்பாக ஸாயி பக்தர்களுக்கே ஐயங்களைக் களைய முயல்கிறோம்.)

பகவத் சக்தி வரை போகவேண்டியதில்லை. யோகி, ஸித்தர், மந்திரவாதி என்ற முறையில் கூட பாபாவுக்கு ஏதேனும் ஆற்றல் உள்ளதா என்று கேட்பவர்களிடமிருந்து தொடங்கலாம்.

★

இவர்கள் பாபாவுக்கு அப்படி ஆற்றல் இல்லை என்று சொல்வதோடு நிற்கவில்லை. ஏற்கெனவே உள்ள பண்டங்களைத்

Koviloor Digital Library

தாம் உள்ள இடத்துக்கு வரவழைக்கும் அதீத சக்தி கூட அவருக்கு இல்லை என்கிறார்கள். இத் தொலைக் கடந்துச் சக்தியை அதீத-மன விஞ்ஞானத்தில் "டெலி-கைனெஸிஸ்" என்கிறார்கள். இவ்வாறு ஓரிடத்திலுள்ளதை வேறிடத்தே வரவழைப்பதை "அப்போர்ட்" என்பர். யோகியரும், ஸித்தரும், மந்திர சாதகரும் இவ்வாற்றலைப் பெறமுடியும் என நம்பும் சிலரும் பாபாவை இப்படி ஒருவராகக் கூடக் கருதாமல், அவர் சிருஷ்டி என்று காட்டுவதெல்லாம் வெறும் கைத்தந்திரந்தான் (sleight of the hand) என்கின்றனர். தமது புதர் முடியிலிருந்தும், மிக நீண்ட அங்கிக்குள்ளிருந்துமே பாபா பண்டங்களை எடுத்துத் தருகிறார்; தேர்ந்த 'மாஜிக்'காரராக அசாத்திய வேகத்தில் இதைச் செய்து சிருஷ்டி என்றே பிரமிக்க வைக்கிறார் என்கிறார்கள். இப்படிப் பொருட்களை ஒளித்துக்கொள்வதற்காகவே தான் டோப்பா முடி வைத்திருக்கிறார், நீண்ட கஃப்னி அணிகிறார் என்கிறார்கள். கொட்டிக் கொட்டிக் குளவி தன் நிறமாக்கிய கதையாக இந்த ஓயாப் பிரசாரத்தைக் கேட்டுச் சில பக்தரும், "நிஜமாகவே பாபாதான் ஏன் இத்தனை பெரிய முடியும், நீண்ட உடையும் தரிக்கவேண்டும்?" என்று கேட்கிறார்கள். அதிமானுஷ்யமாக எதுவுமே யில்லாத 'லெகர்டிமைன்' என்ற சாதுரிய கைத் தந்திரந்தானே பாபா செய்யும் அற்புதம் என்று ஐயுறுகிறார்கள்.

அடியார்களே! நீங்கள் நேரில் அநுபவித்ததையும், கேட்டதையும், படித்ததையும் இவ்வளவு எளிதே மறந்து ஐயப் பைசாசத்துக்கு ஆளாகலாமா? எத்தனையோ சந்தேகக்காரர்களுக்கு பாபா நெடுங் கூட்டத்திலேயே தம் வணங்காத தலையைக் குனிந்து, முடியில் அவர்கள் கைவிட்டுச் சோதித்துப் பார்க்க அநுமதித்திருப்பதை மறந்துவிட்டீர்களா? ஐயுற்றவர்களிடமே தமது அங்கிகளை சகஜமாகக் கொடுப்பது போல் தந்து அவற்றை இஸ்திரிபோடச் சொன்னதையும், அப்போது அவர்கள் அவற்றிலே ஒளித்துக் கொள்ள ஜேபியோ, கழுத்து மடிப்போ, மணிக்கட்டு மடிப்போ எதுவுமே இல்லை என்று தெளிந்ததையும் நீங்கள் அறியீரா? முன் பக்கங்களில் நாலைக் கொஞ்சம் புரட்டுங்கள். புரட்டுப்பேச்சு விரட்டப்படும்.

இதற்கெல்லாம் மேலாக, பாபா ஸ்தூலமாக இல்லாத இடங்களிலெல்லாம், தொலை தூரங்களிலும், உங்கள் வீடுகளிலே கூட, தெய்வப் படங்களில் விபூதி பூக்கிறதே, தேன் துளிக்கிறதே, விக்கிரஹங்கள் வந்து விழுகின்றனவே! அறிவிலியும் கூட இதை 'லெகர்டிமைன்' என்று சொல்ல முடியாதே!

எனவே சாமானிய மாந்தருக்கு மேம்பட்ட அற்புத ஆற்றல் இவருக்கு இருக்கிறது என்பதில் லவலேசமும் சம்சயம் வேண்டாம்.

இனி 'லெகர்டிமைனி'லிருந்து அடுத்தபடிக்கு ஏறுவோம். இந்தப் படியில் நிற்கிற எதிர்ப்பாளர்கள் பாபாவின் அற்புத ஆற்றலை ஓரளவு ஏற்கிறார்கள். யோக ஸித்தராகவோ, மாந்திரிகராகவோ அவருக்குச் சில அதீத சக்திகள் இருப்பதாக ஒப்புகிறார்கள். ஆனால் இந்த ஸித்திகள் உண்மையான ஆத்மிகத்துக்கு வேறு

Koviloor Digital Library

பயப்பன என்று கூறி ஸ்ரீமத் பாகவதத்தையும், பாதஞ்சல யோக சூத்திரத்தையும், பரமஹம்ஸ ராமகிருஷ்ணரையும் மேற்கோள் காட்டுகிறார்கள். இந்த 'படேபடே' மேற்கோள்களைப் பார்த்த வுடன் அடியார்களுமே ஸித்திகள் யாவும் தவறானவைதாமோ என்று தடுமாறத் தொடங்குகிறார்கள். எனவே இவ்விஷயத்தைச் சற்று தீர்க்கமாகவே அலசுவோம். பாபா என்றவுடனேயே ஸித்திகள் முன்னிற்பதால் இந்த அலசல் இந் நூலில் அவசிய மாகிறது.

* * *

பாதஞ்சல யோக சூத்திரத்தின் மூன்றாம் அத்தியாயத்தில் பதினாறாம் சூத்திரத்திலிருந்து ஐம்பதாம் சூத்திரம் வரை பல விதமான பௌதிக—அதீதமான ஆற்றல்கள் பேசப்படுகின்றன. உடலைச் சுருக்குவது, பெருக்குவது; எங்கு வேண்டுமாயினும் சஞ்சரிப்பது; எங்கெங்கோ நடப்பதைப் பார்ப்பது, கேட்பது என்றிப்படிப் பல ஸித்திகள் பேசப்படுகின்றன. பொதுவில் அஷ்ட மஹாஸித்திகள் என்று எட்டு சொல்லப்பட்டாலும் இவை மேலும் பலவாகக் கவடு விடுகின்றன. இவற்றின் பெரியனவற்றை ஸித்தி என்றும், சிறியனவற்றை ரித்தி என்றும் பாகுபடுத்துவதுண்டு. ஸ்ரீமத் பாகவதம், பதினோராம் ஸ்கந்தம், பதினைந்தாம் அத்தி யாயத்தில் பதினெட்டு அதீத ஆற்றல்கள் கூறப்படுகின்றன. இவற்றில் முதல் எட்டே அஷ்ட மஹாஸித்திகளான அணிமா (உடல் அணு மாத்திரமாகச் சிறுப்பது), மஹிமா (பெருத்தல்), லகிமா (லேசாகுதல்), பிராப்தி (மற்றோரின் மனத்தில் புகுதல்), பிராகாம்யம்(உலகெங்கிலும் மறைந்துள்ளதை எல்லாம் அறியும் சக்தி), ஈசித்வம் (வெறுமே அறிவதோடு நில்லாமல் அவற்றை இயக்கி ஆட்டி ஆளுந் திறமை), வசித்வம்(மனத்தை வசப்படுத்தி நிறுத்தும் ஆற்றல்), காமாவஸாயிதா (ஆசை அழிந்த நிலையில் நிலைத்தல்) ஆகியன. சில நூல்களில் இவ்வெட்டில் காமாவ ஸாயித்வம் என்பது காணப்படாமல், 'கரிமா' என்ற ஒன்று கூறப் படுகிறது. லேசாகும் 'லகிமா'வுக்கு மாற்றாகப் பளு கூடும் ஸித்தியே 'கரிமா' என்பது. லேசாக முடியும் என்பதன் உட் கிடையாகவே பளுவாக முடியும் என்பதும் கிடைக்கிறதென்றும், எனவே இதனைத் தனி ஸித்தியாகச் சொல்லவேண்டாம் என்றும் மற்றவர் கருதுகின்றனர்.

அதிருக்கட்டும். மோக்ஷ உபாயத்தையே கூறிய பாதஞ் சலரும் பாகவதமும் என்ன சொல்கின்றன? யோக மார்க்கத்திலும், ஞான—பக்தித் தியான மார்க்கத்திலும் போகிறவனுக்குத் தானாகவே இந்த ஆற்றல்கள் கைகூடுவதாகச் சொல்கின்றன. இவற்றை இவற்றின் பொருட்டே அவை கண்டிக்கவில்லை. ஒரு முறைக்குப் பல முறையாகப் பக்தர்கள் இவ்விரு நூல்களைப் புரட்டிப் பார்த்துத் தெளிவு பெறலாம். ஆனால் இவை எச்சரிப்பது யாதெனில், லக்ஷியமான சாக்ஷாத்காரத்தை எய்துமுன் இவ்வாற்றல்களைப் பெறும் சாதகன் இவற்றிலேயே களித்துக் கொண்டு இம்மட்டோடு நின்றுவிட்டால், இதனினும் பெரும் களிப்பான மோக்ஷ நிலையைத் தொட முடியாமலே போகும் என்பதைத்தான். பரமஹம்ஸ ராமகிருஷ்ணரும்

Koviloor Digital Library

இவ்விதமேதான் ஒரு சாதகன் ஸித்திகளைத் தூவென்று தள்ளி மெய்ப்பொருளை சாக்ஷாத்தாக உள்ளி அநுபவிப்பதிலேயே நாட்டத்தைச் செலுத்த வேண்டும் என்றார். குலுக்கி மினுக்கி கவாகக் குறுக்கே வரும் ஸித்திகளின் வழியிலேயே சென்றால் மாயப் படுகுழியில் விழ வேண்டியதுதான் என்று எச்சரித்தார். இதை நினைவில்தான் மணிவாசகரும் “எண்ணிலியாகிய சித்திகள் வந்தெனை எய்துவதாகாதே” என்றார். ஆனால் அவரே சொக்கநாதன் சித்தராக வந்து செய்ததை எல்லாம் சொக்கிச் சொக்கிப் பாடுகிறார்.

ஆகவே ஸித்திகளைக் கண்டித்ததெல்லாம், அவற்றிலேயே உள்ளூறக் கெடுதல் இருப்பதால் அல்ல. ஒரு சாதகன் வகை தொகை தெரியாமல் அவற்றிலேயே மயங்கி அற்புதங்களைச் செய்து காட்டிப் பெயரும், பணமும், புகழும் பெறுவதில் மூழ்கி, லக்ஷ்யமான பரம்பொருள் அடைவைக் கோட்டை விட்டுவிடப் போகிறானே என்பதற்காகத்தான் கண்டனம்.

இவ்வாறு இவன் தன்னைக் கெடுத்துக்கொள்வான் என்பது ஒன்று. இன்னொன்று, அந்த ஆற்றல்களால் இவன் பிறரையும் கெடுக்க முடியும் என்பது. பெயர், பணம், புகழ் முதலிய வேட்டைகளில் இறங்கினால் அவற்றின் பொருட்டுத் தகாதன செய்யவும் தோன்றும்தானே? அந்த ஆற்றலை இத் தகாத காரியங்களுக்குப் பிரயோகிக்கக்கூடும்தானே?

இதனால்தான் பரிபக்குவம் பெறாத சாதகர்கள் — அதாவது ‘சாத்யம்’ அல்லது லக்ஷ்யம் எனப்படும் பரம்பொருளை இன்னம் அடையாமல் அவ்வாறு அடைவதற்கே சாதனை செய்பவர்கள் — ஸித்திகளில், மிரகிள்களில் புத்தியைச் செலுத்தக்கூடாது என்று பதஞ்சலியும், கண்ணனும், ராமகிருஷ்ணரும் எச்சரிக்கிறார்கள்.

ஸித்திகளை, மிரகிள்களை நம் ஸத்ய ஸாயி நாதனும் இதே காரணத்துக்காக, இவர்களுக்குச் சற்றும் சுருதியில் இறங்காமல் வன்மையாகக் கண்டிப்பவர்தான் என்பதை அடிக்கோடிட்டுக் குறிப்பிட விரும்புகிறோம்.

“அஷ்ட ஸித்திகளுக்காக ஆசைப்பட்டு முயலவே முயலாதீர்கள். இவை சாதகனை வெறும் மாயப் பிரமையில்தான் கொண்டு சேர்க்கும்” என்று பன்முறை உபதேசித்திருப்பவர் நம் பாபா.

பிரசாந்தி நிலயத்தில் மையமான மந்திரத்துக்கு முன் ஒரு வட்டத் திட்டு உண்டு. அதன் மத்தியில் யோகமெனும் தீபத்திலிருந்து ஒளிரும் ஞான ஜோதி இதய மலரைப் புஷ்பிப்பதாகச் சாதனையின் லக்ஷ்யம் சிற்பத்தில் காட்டப்பட்டுள்ளது. இவ் வட்டத்தின் வெளி ஓரத்தில் பாபா எட்டு அழகான பூந்தொட்டிகளை வைக்கச் சொன்னார். “இந்த எட்டும் என்ன தெரியுமா? அஷ்ட ஸித்திகள்தாம். வர்ண விசித்திரத்தால் இந்தச் செடிகள் ஒருவரைக் கவரும். ஆனாலும் இதில் பசியாற்றும் கனி விளையாது.

Koviloor Digital Library

மையத்திலுள்ள லக்ஷியத்தை அடைந்தவன் இந்த எட்டு ஸித்திகளை வெளி எல்லையிலேயே நிறுத்திவைப்பான் என்று அர்த்தம். இவற்றிலேயே கவனத்தைச் செலுத்துபவர் மைய ஸ்தானத்தை நோக்கிப் போகவே மாட்டார்கள்'' என்றார்.

சரி: ஆனால் லக்ஷியத்தை அடைந்தவன் ஏன் இவற்றை வெளி எல்லையிலாவது வைத்திருக்கவேண்டும்? இவற்றை அடியோடு அப்பாலே துரத்தியிருக்கலாமே!

இங்கேதான் ஸித்திகளில் அவற்றின் பொருட்டே கண்டிக்கும்படியாக எதுவும் இல்லை என்பதும், நாம் அவற்றை துஷ்பிரயோகம் செய்யாதிருப்பதன் பொருட்டே கண்டனம் தெரிவிக்கப்படுகிறது என்பதும் தெளிவாகின்றன. சாதாரண சாதகன் ஸித்திகளைப் பெறத் தொடங்கியதும் சுய நலத்தில் தான் இறங்குவான். பிறரைக் கெடுத்து, இதன் விளைவாக, வாஸ்தவமான சுயநலமான மோக்ஷத்தைப் பெறாமல் தனக்கும் கேடே விளைவித்துக் கொள்வான். ஆனால் லக்ஷியத்தை எய்திவிட்டவன் இவற்றைப் பர நலனுக்கே பயன்படுத்துவான். பரமாகிய இந்த வெளி உலகுதான் அவனது வட்டத்தின் வெளி விளிம்பு. இதற்கு உன்னத ஆற்றல்களால் சக்தி வாய்ந்த முறையில் உதவிபுரிய இந்த ஸித்திகள் உதவுவதாலேயே, எட்டு செடித் தொட்டிகளை பாபா வெளிச் சுற்றில் உருவகமாக அமைக்கச் செய்தார். கண்டித்தபோதே, கண்டனம் எதற்கு என்பதையும் இப்படி உள்ளுறை பொருளாகக் காட்டிவிட்டார்!

பணத்தால் நல்லதும் செய்யலாம், கெட்டதும் செய்யலாம். படிப்பால் நன்மையும் புரியலாம், தீமையும் இழைக்கலாம். தீயினால் சமைக்கலாம்; கூரை மேல் வைத்து வீட்டையும் கொளுத்தலாம். கத்தியால் காய்கறிகளை நறுக்கலாம், கழுத்தையும் வெட்டலாம். விஞ்ஞானம் சுகங்களையும் கொடுத்திருக்கிறது; பயத்தையும் பரப்பியிருக்கிறது. ஆகவே எதையும் அதற்காகவே கண்டிக்காமல், நாம் எப்படி அதைப் பயன் செய்து கொள்கிறோம் என்பதைப் பொருத்தே கண்டிக்கவோ, பாராட்டவோ வேண்டியதாகிறது. லக்ஷியத்தை எய்தாதவன் இடை நிலையில் ஸித்திகளின் ருசியைக் கண்டுகொண்டால் அதிலேயே தான் ஆழ விழுவான். இந்த நிலையில் இவன் செய்யும் அற்புதம், காண்போருக்கும் தாற்காலிகக் கிளுகிளுப்பைத்தான் ஊட்டுமே ஒழிய, தெய்விக சக்தியில் நேரிய உதவாது. அவர்களும் இந்த அற்புதங்களைப் பெறுவதிலேயே அவாவுறுமாறு செய்து, அவர்களது ஆன்ம முன்னேற்றத்தையும் குலைக்கும்.

ஆனால் தன்னலமே கருதாத ஒரு மகானின் கையில் இதே ஸித்திகள் லோகோபகாரமாக மட்டுமே அமையும். உலக மக்கள் உள்ள அடிநிலைக்கு இறங்கிவந்து அவர்களுக்கு 'தெய்வசக்தி' என்று ஒன்று இருக்கிறது என்று பிரகிருதி மூலம் காட்டியபின், அம்மட்டோடு அவர்களை நிறுத்திவிடாமல் அறிவுரை, திருஷ்டி, தனது சங்கத்தின் தூய்மை, பிரேமை முதலியவற்றால் மேலே மேலே ஏற்றிக்கொண்டு போவார்கள்.

Koviloor Digital Library

"ஸித்திகள்" என்பதாகப் பயின்று பெறாமல் அநேக ஞானியருக்கு, பக்தர்களுக்கு இப்படிப்பட்ட அற்புத ஆற்றல்கள் ஸித்தித்திருக்கின்றன. அவர்கள் ஏராளமான மிரகிள்களைப் புரிந்திருக்கிறார்கள். அஷ்டாங்க யோகம், குண்டலினி யோகம் முதலியவற்றால் ஸித்திகளை அப்பியசித்தே பெற்று உலகுக்கு நலன் புரிந்த யோகிராஜரும் பலர் உண்டு. மந்திரோபாஸனையால் அதிமாநுஷ்ய சக்தி பெற்ற மகா பெரியவர்களும் பலர் உண்டு. மிரகிள்கள் என்றாலே கண்டிப்பவர்கள் இவர்களனைவரையுமே கண்டிக்கிற பாவத்தைத்தான், பாவம், அறியாமையால் செய்துவிடுகிறார்கள். அறியாமையால் செய்தது பாவமே யல்ல என்று பாவன பகவான் அவர்களை க்ஷமிப்பார்!

தாங்கள் ஆத்மிகத்தில் மிக உயர்ந்ததாகக் காட்டிக்கொள்ள வேண்டும் என்று சிலருக்குத் தோன்றுகிறது. மிரகிள்களைப் பழித்தால் இதுவே அந்த உயர்வுக்கு உருவகமாகிவிடுகிறது (Status symbol). உள்ளூற இவர்களும் தங்கள் விஷயமாகவே அற்புத அநுக்கிரகங்கள் நடந்தால் பூரித்துத்தான் போவார்கள். பூரண வைராக்கியம் நம்மில் எவருக்கு வாய்த்தது? அது வாய்க்கிற வரையில் நம்முடைய பிரச்னைகள் ஏதேனும் மிரகிளால் தீர்ந்தால் பூரிப்பு ஏற்படத்தானே செய்யும்? பிரச்னை தீராவிட்டாலுங்கூட, பலரால் போற்றப்படுகிற ஸித்தர் ஒருவர் நமக்கு ஒரு பரிசை மிரகிளால் வழங்கினால் உடனே நம் அகங்காரத்துக்கு ஒரு திருப்தி உண்டாகி அவரைப் போற்றத்தான் தொடங்கிவிடுவோம். நூலாசிரியர் அறிந்த, மெத்தக் கற்ற புதுச்சேரி "பெரிய மனித"க் குடும்பம் ஒன்று இப்படித்தான் பாபா என்றாலே எரிந்துக் கொட்டிவிட்டுப் பிறகு அவர் இவர்களுக்கு வெறும் லௌகிகமாகவே சில அற்புத அருள்களைக் காட்டினார் என்பதால் இன்று அவரது பரம பக்தர்களாகி யிருக்கிறார்கள்!

மிரகிளைப் பரிகசிப்பவர்களில் ஆஸ்திகராக உள்ளோரில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர், ராமகிருஷ்ணர், ரமணர், காஞ்சி ஆசார்யாள் போன்ற ஒருவரின் பக்தராக இருப்பதற்குக் காரணம் அவர்களிடம் இவர்கள் கண்ட மிரகிள்தான்! ஆம், இப்படிப்பட்ட அவதாரப் புருஷர்களின் பக்தர்கள் தங்களுக்குள் பேசும்போது இது நன்றாகத் தெரியும். ஏன், ஸித்தர்களை அடிமட்டத்தில் வைத்து, அதற்குமேல் காஞ்சி ஆசார்யாள், அதற்கும் மேல் அரவிந்தர், இன்னம் ஒருபடி மேல் ரமணர், உச்சத்தில் ஸ்ரீ ஜே. கிருஷ்ணமூர்த்தி என்று வரிசைப்படுத்திப் பேசுகிறவர்களும் கிருஷ்ணாஜி (ஸ்ரீ ஜே.கேயை அத்தியந்தமானவர் இப்படித்தான் அழைப்பர்) தங்கள் விஷயமாகப் புரிந்துள்ள மிரகிள்களைத் தழுதழுத்துக் கூற நூலாசிரியன் கேட்டிருக்கிறேன். இதிலே சிறிதும் தவறு இல்லை. ஏனெனில் சாதாரணமாக நமக்கு இல்லாத சக்தி ஒருவரிடம் இருக்கிறது என்று தெரியும்போதுதான் அம் மகானிடம் மதிப்புப் பிறக்க இடமுண்டாகிறது. ஞானம், பக்தி முதலியவற்றில் ஒரு மகான் நம்மைவிட எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்தாலும் அவரது ஞானமும், பக்தியும் கனிந்த பக்குவிகளைத் தவிர மற்றவருக்கு எப்படி அழுத்தமாகத் தெரிய முடியும்? எனவே ஒருவர் ஞான சிரோமணியாக, பக்த சிகாமணி

Koviloor Digital Library

யாக இருந்தாலும், 'அவர் ஞானிதான் என்பது என்ன நிச்சயம்? அவர் உத்தம பக்தியில் ஊறியிருக்கிறார் என்று என்ன உறுதி?' என்று தோன்றலாம்தான். ஞானமும், பக்தியும் அவரது உள் அநுபவம். அது வெளியே ஸூக்ஷ்மமாகத் தான் பிரகாசிக்கும். அந்தப் பிரகாசத்தைப் புரிந்துகொள்ளக் கூடியவர் சிலரே இருப்பர். ஆனால் **சக்தி** என்பது வெளியில் செயல்பட்டுத் தன்னை நன்றாகப் பிறருக்குக் காட்டிக்கொள்கிறது. அதை ஒருவர் காட்டுகையில், ''இவர் ஞானிதானா? பக்தர்தானா?'' என்பதுபோல், ''இவர் சக்திமான்தானா?'' என்ற கேள்வி எழும்பவே இடமில்லாமற் போகிறது. இதனால்தான் மஹாபுருஷர்கள் யாவருமே ஒன்று, தாமே உணர்ந்து, உத்தேசித்து சக்தியைக் காட்டி மிரகிள் செய்திருக்கின்றனர்; அல்லது அவர்கள் உணராமலும் உத்தேசியாமலும் கூடப் பராசக்தியே அவர்கள் மூலம் அற்புதங்களைச் செய்து காட்டியிருக்கிறது. நமக்கு மேம்பட்ட **சக்தி** அவர்களிடம் இருப்பதில் மக்களுக்கு ஏற்படும் உறுதியால்தான் பெரும்பாலார் அவர்களிடம் ஈர்க்கப்பட்டு, ஏதோ கொஞ்சமேனும் ஆன்மநெறியில் செலுத்தப்படுகிறார்கள். இதற்காக யாரும் வெட்கப்படவேண்டியதில்லை. தாங்கள் மதிக்கும் மஹானின் அற்புதங்களை உள்ளூற வியந்து போற்றிக்கொண்டே, வெளியே ஸாயி பாபா செய்யும் மிரகிள்களைக் கண்டித்து, 'மிரகிள் ஆத்மிகத்துக்குப் புறம்பு தானே?' என்று இடைநிலையில் உள்ளவர்களைக் குழப்பவேண்டியதுமில்லை.

. . .

சும்மாவுக்காக ராமகிருஷ்ணரை மேற்கோள் காட்டிவிட்டால், ஏராளமான ஸித்த யோகியர் செய்ததெல்லாம் தவறு என்றாகிவிடாது. நம் ஸ்வாமி இதை நறுக்குத் தெறிக்க உரைத்திருக்கிறார். அவர் சொல்வார்: ''ராமகிருஷ்ணர் அற்புத ஆற்றல்கள் கூடாது என்று சொன்னது வாஸ்தவம். ஆனால் யாருக்குக் கூடாது என்றார்? சாதகனுக்கு — அதாவது ஆத்மிக லக்ஷியத்தை அடையப் பாடுபடுகிறவனுக்கு-கூடாது என்றார். அந்த லக்ஷியத்தை சாதித்துவிட்டவனுக்குக் கூடாது என்று அவர் சொல்லவில்லை. அந்த லக்ஷியமேயான என் விஷயத்தில் அவர் வாக்கை மேற்கோள் காட்டுவது பொருந்தவே பொருந்தாது.''

ஜட இயற்கைக்கு மேல் தெய்வ சக்தி ஒன்று இருக்கிறது என்று நம்ப வைப்பதற்கு அற்புதமின்றி வேறு வழியில்லை என்பதை ஸ்ரீ ராமகிருஷ்ணரே ஒப்புக்கொண்டு, தாமே மிரகிள் செய்து காட்டவும் நேர்ந்திருக்கிறது. பவதாரிணி ஆலய நிர்வாகியான மதுர்பாபு, 'எல்லாம் இயற்கைப்படிதான் நடக்கிறது. இயற்கையை இயக்கும் மகா சக்தி ஒன்றில்லை' என்று வாதித்தார். அப்போது அற்புதம் காட்டினாலன்றி அவரைப் பக்திக்குத் திருப்ப முடியாது எனக் கண்டார் ஸ்ரீ ராமகிருஷ்ணர். செக்கச் சிவந்த மலர்களையே பூக்கும் ஒரு சிவரோஜாச் செடியில் வெள்ளை வெளேர் என்று ஒரு மலரைப் பூக்கவைத்து மதுர்பாபுவிடம் காட்டினார் — ஆம், மிரகிள் — எதிர்ப்பாளர் மேற்கோள் காட்டி முழக்கமிடும் அதே பரம ஹம்ஸர்தாம்! மதுர்பாபு இதனால்தான் வழிக்கு வந்தார்.

ராமகிருஷ்ணர் காலத்தில் மதுர்பாபுக்கள் குறைவு. தற்காலத்தில் நவீன ஸயன்ஸ்களும், நாஸ்திகமும் நம்பிக்கை வேரை

மிக வழியே பறித்துப் போய்விட்டதால் தோன்றியுள்ள கோடிக் கோடி மதுப்பாடுக்களில் சில லக்ஷம் பேரையாவது நல்வழிப் படுத்துவதற்காக எத்தனை மிரகிள் வேண்டுமானாலும் தாராள மாகச் செய்யலாமென்று இன்று பரமஹம்ஸரே இங்கு வந்தால் அநுமோதிப்பார்!

சாதகர்கள் ஸித்திகளை நாடுவதையே அவர் ஆட்சேபித்தார், சாதித்த மகான்கள் சமத்காரம் (மிரகிள்) புரிவதை அல்ல. சமத்காரங்களுக்கே விசேஷமாகப் பெயரெடுத்த திரைலிங்க ஸ்வாமியைப் பரமஹம்ஸர் காசியில் பன்முறை சந்தித்து வந்தார். அவருக்குத் தம் கையாலேயே அரிசிப் பாயஸம் ஊட்டியிருக் கிறார். 'வெறும் ஸித்தர்' என்று அவரை இகழாமல், ''இவர் பரமசிவனின் உயிருள்ள விக்கிரஹமே ஆவார்'' என்று போற்றி யிருக்கிறார்.

ராமகிருஷ்ணரின் இந்த வாசகத்தை அச்சடித்தாற்போல், ரமண பகவானும் கூறியிருக்கிறார். யாரோ ஒரு மஹாஸித்தரை உத்தேசித்து மட்டுமல்ல, ஸித்தர் கணம் முழுவதையும் குறித்தே அவர் இப்படிக் கூறியிருப்பது ஸ்ரீ ரமண கீதையின் முடிவைப் பார்த்தால் தெரியும். ''ஸித்தர் பெருமை கருதற்கு அரிது. அவர்கள் சிவனை நிகர்த்தவர்; சிவ ஸ்வரூபர்'' என்கிறார் ஞானக் கொடுமுடியிலேயே நின்றவரும், தம்மளவில் ஒரு ஸித்தியைக்கூட வெளிக் காட்டாதவருமான ஸ்ரீ ரமணர்.

அனேகமாக, 'மெய்ஞ்ஞானியர் இயற்கைத் தர்மத்தை அநுசரித்தே நடப்பர்; அதை மீற மாட்டார்கள்' என்பதாக ஒரு வாதத்தைச் சொல்லிச் சமத்காரத்தை ஆட்சேபிப்பதற்கு மெய்ஞ் ஞானியரே ஆதாரமாக இல்லை. மேலே சொன்ன வாதமே—அதாவது இயற்கை விதியை மீறிய குற்றம் மிரகிள்களில் காணப் படுவதாக நினைப்பதே — சரியல்ல. இயற்கை என்பதாக ஒரே மட்டத்திலே பிரபஞ்ச வாழ்வு முடிந்துவிடவில்லை. மனிதன் என்று எடுத்துக்கொண்டால் ஒருத்தனே குழந்தையின் இயற்கைப்படிச் செய்யும் காரியங்களுக்கும், பெரியவனாகிச் செய்யும் காரியங் களுக்குமிடையே எத்தனை முரண்பாடுகள் உள்ளன? சாதாரண லௌகிகனாக உள்ளபோது ஒருவனின் இயற்கை எப்படியிருக்கிறது? அவனே ஸாதகனாகி முன்னேற முன்னேறப் பழைய இயற்கை எப்படி எப்படியெல்லாம் மாறி விடுகிறது? மானவ உயிரில் போகவே வேண்டாம். வெளி இயற்கையிலும் பல ''லெவல்''கள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றில் ஒரு லெவலுக்கும் இன்னொன்றுக்கும் விதி முறைகளில் வித்தியாசம் இருக்கத்தான் செய்யும். நம்போன்ற மனிதர்கள் எந்த லெவலின் இயற்கை விதிகளைக் கடைப்பிடித்திருக்கிறார்களோ அந்த லெவலுக்கு மேல் ஸித்தர்கள் சென்றிருக்கிறார்கள். இயற்கை விதிகளை மீறியதாக நம் லெவலில் நாம் சொன்னாலும், அவர்களது லெவலின் இயற்கை யின் விதிகள் என்னவோ அதை அநுசரித்தேதான் அவர்கள் நமக்கு மிரகிளாகத் தோன்றுவதை இயற்றுகிறார்கள்.

மனுஷ்யர்களுக்குள்ளேயே இப்படிப்பட்ட ''லெவல்''கள் வெவ்வேறு மட்டங்களில் இருக்கத்தான் செய்கின்றன. ஒவ்வொரு

Koviloor Digital Library

நேர்கோடுகளாகத்தான் செல்லும் என்ற ஆதார விதிக்கு'முரணாக', பிரபஞ்சத்தில் நேர்கோடு என்ற ஒன்றே கிடையாது என்ற மேல் மட்ட விதிப்படிதான் விண்வெளி விஞ்ஞானத்தில் அநேகக் காரியங்களைச் செய்கிறார்கள். இதற்கென்ன சொல்கிறீர்கள்? எனவே விதி, விதி மீறல் என்பதெல்லாம் பொருளற்ற வாதம். எப்போது வித்தர் ஒருவரால் நாம் இயற்கை விதி என்று நினைப்பதை மீற முடிகிறதோ, அப்போதே அது இயற்கையால் நிர்மாணிக்கப்பட்டு விட்ட விதியல்ல என்றாகிவிட்டது எனக் காண்பதே அறிவுடைமை.

ஆயினும் நாம் நடைமுறை உலக இயற்கையிலேயே வாழ்வை அமைத்துக் கொண்டிருப்பதால், இதிலும் ஒரு தர்மம் உண்டு, அழகு உண்டு, நோக்கம் உண்டு, பயன் உண்டு என்று தெளிய வேண்டும். இதற்கு மேலும் ஒன்றுண்டு என்று நமக்குத் தெரிவிக்க மட்டுமே மஹான்களும் ஓரளவு மிரகிள் செய்தாலும், அச் சக்தியால், நம் உலகியல் வாழ்வுப் பிரச்னைகளை முற்றிலும் தீர்த்துவிட மாட்டார்கள். பொங்கும் அன்பின் அடையாளமாகவும், நமது ஆபத்திலே அவர்களுக்குச் சுரக்கும் கருணையாலுமே நாம் தகுதி பெறாத "மேலியற்கை" விதிகளை நம் பொருட்டும் பிரயோகித்து அற்புதம் செய்வார்கள். இது தவிரப் பொதுவிலே பகவான் ஸர்வசக்தன், இச்சாமாத்திரத்தில் சிருஷ்டிப்பவன் என்பதை நம்ப வைக்கும் சான்றுகளாகச் சமத்கார் செய்வர்.

அற்புதத்தைக் காட்டி தெய்வ சக்தியை நம்பவைத்து அதிலிருந்து படிப்படியாக ஆன்மிகத்தில் உயர்த்துவதே நம் ஸ்வாமி மிரகிள் புரிவதன் பயன். அற்புதத்தைக் கண்டு வியப்பதோடு நிறுத்தி விடுவதல்ல. இதைத்தான் அவர் ஒருவருக்கு ரத்தின மோதிரம் சிருஷ்டித்துத் தருகையில் ரத்தினச் சுருக்கமாக "டைமண்ட் – டை மைண்ட்" என்பார். இந்த 'டைமண்ட்' மோதிரம், மனமிறந்த (மைண்ட் டை ஆகிற) ஆத்ம வெளியில் சேர்ப்பதற்கு அடிப் படியே என்று அர்த்தம்.

ஒன்று மனம் இறக்கவேண்டும்; அல்லது அதில் கெடுதலே இல்லாமல் அது பிரேமை மயமாகிவிட வேண்டும். பாபாவின் மிரகிள் தரும் பிரேமை எழுச்சியை என் சொல்ல? ஒரு மலரைப் பறித்து, மலர்க்கர ஸ்பரிசத்தால் ரத்தினக் கல்லாக்கி ஒருவரிடம் வீசுகிறார் – உடனே அதைப் பெற்றவரின் கல் மனம் அன்பிலே மலராகக் குழைகிறது!

பாமர மக்களை தெய்வ சக்தியில் ஈடுபடுத்துவது மட்டும் மிரகிள்களின் பயன் அல்ல. மாபெரும் விஞ்ஞானிகளையும் தெய்வ நம்பிக்கைக்குத் திருப்புவது மிரகிள்தாம். இயற்கை விதிகள் என்பதாகத் தாங்கள் கண்டுபிடித்துள்ளவை ஒருகாலும் மீற முடியாதவை என்றெண்ணி, உயிரற்ற ஓர் இயற்கையோடு மட்டும் நின்றுவிட்ட அநேக விஞ்ஞானிகள் பாபா இவ்வியற்கைக்கு அதிதமாகப் புரியும் மிரகிள்களைக் கண்டுதான், இயற்கையையும் இயக்கும் பேரறிவு ஒன்று உயிர்மயமாக உள்ளது என்ற நம்பிக்கையைப் பெற்றிருக்கிறார்கள். புயல், மழை முதலான பெரும் இயற்கைச் சக்திகளை பாபா பெட்டிப் பாம்பாக அடங்கச் செய்யும்

Koviloor Digital Library

அற்புதத்தைக் கண்டே பல விஞ்ஞானிகள் தெய்வ நம்பிக்கை பெற்றுள்ளனர். தங்கள் அறிவில் வருவதற்கு மிஞ்சி எதுவும் இல்லை என்ற செருக்கு நீங்கிப் பணிவின் உருவமாகி உள்ளனர்.

விஞ்ஞான நிபுணரில் ஒருவரான டாக்டர் ஸி.வி.எல்.என். மூர்த்தி நயமுறச் சொல்வார்: "நான் டி. எஸ்ஸி (D. Sc)யாக இருக்கலாம். ஆனால் பல்கலைக் கழகங்களுக்கெல்லாம் மேலான பல்கலைக் கழகத்தில் எஸ்ஸி. டி (Sc. D) பட்டம் பெறவே ஏங்குகிறேன்."

'டி.எஸ்ஸி' என்றால் 'டாக்டர் ஆஃப் ஸயன்ஸ்'; 'எஸ்ஸி.டி' என்றால் 'ஸாயிசரண—தாஸன்.'

* * *

உலகின் முதல் சமய நூலான வேதத்தில் தொடங்கி, இன்று வரை வந்துள்ள சகல மத நூல்களிலும் அற்புதங்களுக்கு மேல் அற்புதங்களாகவே பேசப்படுகின்றன. இப்படியிருந்தும் அற்புதங்கள் ஆன்மிகத்துக்கு விரோதம் என்று வாதிப்பவர்களை என் சொல்ல? வேதத்தில் தொடங்கி மிரகிள்களைக் கொஞ்சம் எடுத்துக்காட்டுவதே நாம் செய்யக்கூடியது.

"மிரகிள்கள் ஆன்மிகத்துக்கு முரணானது என்பவர்கள் வேதப் பிரமாணத்தையே ஆட்சேபிக்கிறார்கள்" என்று ஐயம் திரிபறக் கூறுகிறார் வேத சிம்மமான அக்னிஹோத்ரம் ஸ்ரீ ராமாநுஜ தாதாசாரியர் அவர்கள். தொடர்ந்து சொல்கிறார்: "பகவான் இயற்கையை மீறி அற்புதங்கள் செய்வதை வேதம் பல இடங்களில் ஸ்தோத்திரம் செய்வதோடு நிற்கவில்லை. மனிதர்களும் இப்படிப்பட்ட மிராகிள் சக்தியைப் பெற வேண்டும் என்று ரிஷிகள் பிரார்த்திக்கிறார்கள். மநுஷ்ய கணங்களுக்கு மேற்பட்ட தேவ, பித்ரு கணங்களின் மேதா சக்தி மனிதனுக்கும் உண்டாக வேண்டும் என்று வேண்டுகிறார்கள். (யாம் மேதாம் தேவ கணா: பிதரச் சோபாஸதே|...) 'அற்புதங்கள் புரியும் ஆண்டவனே எங்களுக்கு வாழ்வளிக்கவல்ல நல்சிறந்த அற்புதங்களை அருள்வாய். (ஸ சித்ர சித்ரம் சிதயந்தம் அஸ்மே, சித்ரக்ஷத்ர சித்ரதமம் வயோதாம்|) என்றெல்லாம் வேதமே வேண்டுகிறது. ரிக்வேதம் பத்தாவது மண்டல 28-வது ஸூக்தமானது ரிஷியின் சக்தியால் நடக்கும் மிரகிள்களைச் சொல்கிறது. "நதிகள் திசையை மாற்றிக் கொண்டு ஓடுகின்றன. சிங்கத்தை மான் எதிர்க்கிறது. காட்டுப் பன்றியை நரி இழுத்துப் போகிறது. தன்மேல் பாயவரும் அம்பை முயல் விழுங்கிவிடுகிறது. மண்ணாங்கட்டியால் மலை பிளக்கப்படுகிறது" என்றெல்லாம் வேத மந்திரங்களே மிரகிள்களை விவரிக்கின்றன.

"வைதிக தர்மத்துக்கு மிராகிள் விரோதம் என்பது அறிவாளிகள் பொது ஜனங்களுக்கு இழைக்கிற குற்றமேயாகும்" என்று வீறுடன் கண்டிக்கும் ஸ்ரீ தாதாசாரியார் இதனை விளக்குகிறார்: "மிராகிள் இல்லாமலும் அறிவாளிகளால் தெய்விக

Koviloor Digital Library

சக்தியைத் தெரிந்துகொள்ள முடியலாம். ஆனால் அதனால் அவர்களுக்குச் செருக்கு ஏற்படுகிறபோது, மிராகிள் தெய்வசக்தியே இல்லை என்று உண்மைக்கு விரோதமாகப் பேச ஆரம்பிக்கிறார்கள். இதனால், தங்களைத் தவிர பொது ஜனங்கள் எவரும் தெய்வ சக்தியில் ஈடுபட முடியாமலே தடுத்து விடுகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். பகவத் சக்தியிடம் பொது ஜனங்களுக்குப் பிடிப்பையும் பயபக்தியையும் ஏற்படுத்தித்தரக்கூடிய ஒரே சாதனமான மிரகிள்களை ஆட்சேபிப்பதால் இவர்கள் சமூகத்துக்கு நிச்சயமாக நல்லது செய்யவே இல்லை.''

ஸ்ரீ அக்னிஹோத்ரம் அவர்கள் இந்நூலில் சேர்ப்பதற்கென்றே அன்புகூர்ந்து எழுதுவதாவது:

''தெய்வ தத்வத்தைப் பற்றிய பல கருத்துக்களில் 'மிராகிள்' என்பதே மிகவும் முக்கியமானது எனக் கொள்ளலாம். பலவித தெய்வக் கருத்துக்களுக்கும் கருவூலமாக உள்ளது நமது ஸநாதன தர்மத்தின் ஆதி நூலும், ஆதார நூலுமான ரிக்வேதம். இதிலேயே பல இடங்களில், குறிப்பாக அக்னி தேவர்களும் இந்திரனும் செய்யும் அநேக அற்புதங்களில், மிராகிள் மூலமும் தெய்வத்தன்மை உலகில் வெளியாகி நிலைநாட்டப்படுவதாகக் காட்டப்படுகிறது. ஆகவே மிராகிள் வேதப் பிரமாணமுடையதே; அவைதிகமானதல்ல.

''வேதாந்திகள் கடவுளை நிரந்தரமாக மாறாமல் இருக்கும் ஆத்ம தத்வம் என்று கொள்கிறார்கள். மாறுவதும், அழிவதுமான எல்லாம் அனாத்மா என்கிறார்கள். வேதாந்திகள் அனாத்ம தத்வம் முழுவதையும் ஆராய்ந்து ஆராய்ந்து தள்ளிவிட்டு ஆத்மா ஒன்றையே பற்றி நிற்கிறார்கள். அதுவே கடவுள் என்பது. ஆனால் இந்த வேதாந்த சாஸ்திரம் பெரும் அறிவாளிக்கே பயனாவது. இவ்விதமே தர்க்க சாஸ்திர ரீதியிலும் சத்தியப் பொருளான கடவுளைப் பிடிக்கலாம் என்பது உண்மைதான். தர்க்க ரீதியில் உலகத்தைப் படைத்து, நடத்துகிறவன் ஒருவன் இருக்கத்தான் வேண்டும் என்று முடிவு செய்யும்போது கடவுள் தத்துவம் உதயமாகிறது. இதுவும் பயிற்சியின் மூலம் அறிவாளிகள் மட்டுமே உறுதி கொள்ளக்கூடிய வழியாகும். மூன்றாவதாக, பக்தர்கள் கடவுளை நேரில் கண்டு அநுபவித்து விளக்குகிறார்கள். இப்படி நேரில் கடவுளை அநுபவிப்பதும் பெரும்பாலாருக்குச் சாத்தியமில்லை. உள்ளத்தில் மற்ற எண்ணங்கள் எல்லாவற்றையும் நீக்கியே பக்தர்கள் கடவுளை உணர்கிறார்கள். ஆனால் உலக வாழ்க்கையிலேயே ஈடுபட்ட பொதுமக்கள் இவ்விதம் உலக அநுபவங்களிலிருந்தெல்லாம் மனத்தைத் திருப்புவது சுலபமல்ல. மேலும் உள்ளத்தில் தோன்றும் கடவுளை அவரவர்தான் உணர முடியும். மற்றவர்களுக்கு இதனால் கடவுளின் சக்தியைக் காட்டி நிரூபித்து நம்பிக்கை ஏற்படுத்த முடியாது.

''வேதாந்திகளும், தர்க்க ரீதியில் ஆராய்கிறவர்களும், பக்தர்களும் இயற்கை மூலம் இயங்கும் கடவுளை, இயற்கை நியதியை மீறுத கடவுளை உணரச் சக்தி உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இவ்வாறு இயற்கையிலேயே கடவுள்

Koviloor Digital Library

தன்மையை உணர முடியாதவர்களே அதிகமானவர்கள். இவர்கள் ஒரே நியதியில்தான் இயற்கை நடக்கிறது என்பதைப் பார்த்து இயற்கை தானாகவே இயங்குகிறது என்றும், அதற்கு மேல் ஒரு கடவுள் வேண்டாம் என்றும் நினைக்கக்கூடியவர்கள். இயற்கையை மீறி மிராகிள் நடக்கும்போதுதான் இவர்கள் கடவுள் சக்தியை நம்ப முடிகிறது.

“இயற்கையின் அன்றாட நடைபெறும் காரியங்கள் யாவுமே கடவுள் செயல்தான் என்ற வேதாந்த சமாதானம் பொது ஜனங்களுக்கு எட்டாது. பொது ஜனங்கள் ஏற்கும் விதத்தில் இயற்கை நியதியை மீறியும் தெய்வ தத்வம் இயங்கும் என்பதே வேதத்தின் முடிவு. இயற்கையாகக் காரியங்கள் நடந்தால், அவை தெய்வம் மூலம் நடந்ததா, ஜடமான இயற்கை மூலமே நடந்ததா என்ற சந்தேகம் உண்டாகவே செய்யும் என்பதால்தான் இயற்கைக்கு அதீதமான மிராகிள் — தத்வம் தெய்வ சக்தியின் நிச்சயமான நிரூபணமாகக் கூறப்படுகிறது.

“மிராகிள் — தத்வத்துக்கு இவ்வுலக இயற்கை நியதி இடையூறாக நிற்காது. இவ்வுலக இயற்கையின்படி வாழும்போதே மிராகிளைக் காண்பிப்பதால் அத் தத்வம் இயற்கைக்கு மேம்பட்டது என்பது மேலும் நன்றாகப் புலனாகும். இவ்வாறு உலக இயற்கை வாழ்விலேயே மிராகிள்—தத்வத்தைக் காட்டும் அடிப்படையிலேயே பகவானின் அவதாரங்கள் தோன்றி யிருக்கின்றன. குறிப்பாக கிருஷ்ணாவதாரத்தில் மிராகிள்—தத்வத்தின் முழு உருவத்தை நாம் பார்க்கிறோம். இயற்கைக் குழந்தையாக இருந்துகொண்டே மிகவும் பாமர மக்களான இடையர்களுக்கும் கிருஷ்ண பரமாத்மா மிராகிள் மூலம்தான் தெய்வ உணர்ச்சியை உண்டுபண்ணினார்.

“யுக்தி வாதங்களால் பொது ஜனங்களுக்குக் கடவுள் நம்பிக்கையை ஊட்ட முடியாது. பொது ஜனங்களை மிராகிள் மூலமே நம்பவைக்க முடியும். இது அவரவர் அறிவிலோ, உள்ளத்திலோ மட்டும் இல்லாமல் வெளியிலே பிரத்தியக்ஷமாக இருப்பதால் எவரும் ஏற்க முடிகிறது. பிரத்தியக்ஷமானதாலேயே இதை யாரும் ஆட்சேபிக்கவும் முடியாது. இதனாலேயே புத்தர், கிறிஸ்து முதலிய மதாசாரியார்களின் தெய்வத்தன்மையை விளக்கவும் அவர்களுடைய சரித்திரங்களோடு அதிசய நிகழ்ச்சிகள் சம்பந்தப்படுத்தப்படுகின்றன. நம் போல் பிறந்து வளர்ந்த இந்த ஆசாரியர்கள் கல்லை ரொட்டியாக்கினர், தீரா வியாதியைத் தீர்த்தனர் என்பதெல்லாம் நமக்கு இல்லாத தெய்விக சக்தி அவர்களுக்கு இருந்தது என்று பிரத்தியக்ஷமாகக் காட்டி நம்ப வைக்கத்தான்.

“புத்தர், கிறிஸ்து காலத்துக்குப் பிறகே மிராகிள்-தத்வம் தனிக் கொள்கையாக உருவானாலும், இக் கொள்கையும் வேதத்தை. குறிப்பாக ரிக் வேதத்தை, ஆதாரமாகக் கொண்டதே என்பது மறுக்க முடியாத உண்மை.

Koviloor Digital Library

"கடவுள் தத்வம் பொதுமக்கள் சகலருக்குமான சொத்து. சாமான்ய மக்களால் இயலாத தர்க்கம், விசாரம், அநுபவம் இவற்றின் மூலம் கடவுளை உணரக்கூடிய வேதாந்திகளும், பக்தர்களும், அறிவாளிகளும் இந்தப் பொதுச் சொத்தை, மிராகிளை ஆட்சேபிப்பதன் மூலம், தங்களுக்கு மட்டும் ஏகதேசமான உடைமையாக்கிக் கொண்டு, பொதுமக்கள் கண்ணுக்குத் தெய்வ தத்வம் படாமல் மறைத்து விட்டார்கள்.

"வேதத்தை உள்ளபடி பார்த்தால் மிராகிள்—தத்வம் ஆட்சேபனைக்கு உரியதே அல்ல. தன் விஷயத்திலோ, பிறர் விஷயத்திலோ மிராகிள் நடந்தாலே சாதாரண மனிதன் தெய்வ சக்தியில் அசையாத நம்பிக்கை வைக்கும்போது, இதை மறுப்பது சமூகத்துக்கு உதவி செய்வதாகாது.

"எத்தனையோ க்ஷேத்திரங்கள் இருந்தபோதிலும்திருப்பதி, குருவாயூர் போன்ற இடங்களிலேயே கூட்டம் மிகுதியாக இருந்து, இதன் மூலம் தெய்வ நம்பிக்கை வளருகிறது என்றால் இதற்குக் காரணம் இந்த ஆலயங்களில் நடக்கும் மிராகிள்கள்தான். விசாரம், அநுபவம், தர்க்கம் முதலியவற்றுக்குப் பக்குவப்படாத ஜனங்களை நாஸ்திகத்திலிருந்து ஆஸ்திகத்துக்குத் திருப்பும் பெரிய சக்தியான மிராகிள்-தத்வத்தை ஆக்ஷேபிப்பது மதத்துக்கு நல்லது செய்வதாகாது."

*

இப்போது ஸநாதனிகள் எனப்படுவோரில் பலர் மிராகிளை ஆட்சேபித்தாலும் இவர்களது ஆதாரமான வேதம் அற்புத சக்திகளை வாழ்த்தி வரவேற்கவே செய்கிறது. வேதம் இறைவனைப் போற்றிச் சொல்லும் "தஸ்மன்" "தம்ஸன்" என்ற பெயர்களுக்கு "அற்புதம் புரிபவன்" என்றே அர்த்தம். அடியாரைக் காக்க இந்திரனும், அச்வினிதேவரும், ஏனைய தேவரும் ரிஷியரும் புரிந்த மிரகிள்கள் வேதங்களில் அனந்தமாக விரிகின்றன.

வேதவாக்கைவிட வேறு பிரமாணமே வேண்டாம்தான். ஆனாலும் பிற்காலங்களிலும் தொடர்ந்து பார்ப்போம். புராணங்களுக்கு வந்து விட்டாலோ, அப்பப்பா, ஒரே அற்புதங்கள் மயம் தான். அத்தனை தெய்வங்களும் அதிசயங்களைப் புரிந்திருக்கின்றன. அதிலும் ஸோம வாரத்தில் பிறந்த நம் சுந்தர ஸ்வாமி போலவே, மூல ஸோமசுந்தரரும் ஸித்தர் போலவே பெரும்பாலும் தோன்றித்தான் அறுபத்துநாலு திருவிளையாடல்களைப் புரிந்திருக்கிறார். இவற்றில் ஒன்றாக இயக்கிமாருக்கு அஷ்ட ஸித்திகளையே உபதேசித்திருக்கிறார். "எண்ணிலியாகிய சித்திகள் வந்தெனை எய்துவதாகாமே" யிருக்க வேண்டிய அதே மணிவாசகர் சொக்கேசன் "இந்திர ஞாலம் காட்டிய" இயல்பினை, "அற்புதன் காண்க" என்று துதிக்கவும் செய்தார். பயனுறிறபடி ஆனால் பரம ஞானியரும் மிராகிளைப் போற்றவே செய்வர்.

கீதையை ஓதிய ஞானக்கனியான கண்ணனைவிட ஒரு மிராகிள்காரர் உண்டா?

நம் புராணங்கள் மட்டுமில்லை, இதர தேசங்களிலும் இப்படியேதான்கிறோம். பரம ஞானியான இயேசுநாதன் நீர்மேல்

நடப்பது, நீரை ஓமிறுக்குவது, தொழுநோய் தீர்ப்பது, மாண்டவனை மீள்விப்பது முதலான பல அற்புதங்களைப் புரிந்தது மட்டுமின்றி, அற்புதம் புரிவதற்கு அழுத்தமான காரணமும் காட்டினர்.

"Except ye see signs and wonders
Ye will not believe."

(''இதுபோன்ற அடையாளங்களையும் அற்புதங்களையும் கண்டாலன்றி நீங்கள் திவ்விய சக்தியை நம்பமாட்டீர்கள்!'')

'புராணங்களில் காண்கிற அதிமானுட, பௌதிக அதிசய விந்தைகளைத் தத்துவ ரீதியில் மட்டும் அர்த்தம் செய்துகொள்ளக் கூடாது. அவற்றை யதார்த்தமாகவே மெய்யென ஏற்கவேண்டும்' என்று ஸநாதனிகள் கூறி வந்தனர். ஆங்கிலப் படிப்பு காரணமாகப் புராண அற்புதமெல்லாம் வெறும் கட்டுக் கதை என்றும், அவற்றை உருவகமாகக் கொண்டு வேண்டுமாயின் தத்துவங்களை விளங்கிக் கொள்ளலாம் என்றும் நவீனர்கள் கருதிய சமயத்தில் அதாவது 35 அல்லது 40 ஆண்டுகளுக்கு முன், ஸநாதனிகள் மேற்சொன்னவாறு வாதித்து வந்தனர். இதன் பின்பே ஸத்ய ஸாயி மிராகிள்கள் பரவலாயின. கட்டுக்கதை என்று நினைத்த அற்புதங்களைக் கண்முன்னே செய்துகாட்டினர் பாபா. புராண அதிசயங்கள் பல நவீன அநுபவமாக ஆயின. புராணங்களும் கண்டிரா வியன்மிகு புதுமைகளைச் செய்தார். இப்போது ''புராண அற்புதங்கள் யதார்த்த உண்மையே என ஒப்புகிறோம்'' என்று பல நவீனர்களும் வழிக்கு வந்தார்கள். ஆனால் என்னே பரிதாபம்! அந்த ஸநாதனிகளோ, புராணங்களின் சத்தியத்வத்தை மறுபடி நிலைநாட்டிய மஹாபுருஷனுக்கு நன்றி செலுத்தவில்லை, நமஸ்கரிக்கவில்லை; இதெல்லாம் செய்யாவிட்டாலும் பரவாயில்லை-சும்மாக்கூட இராமல், 'ஸாயி பாபா மிராகிள் செய்து ஸநாதன தர்மத்துக்கே ஊறு செய்கிறார்!' என்று கண்டனமும் செய்கிறார்கள்.

இவர்கள் சற்று யோசித்துப் பார்த்தால் புரிந்து கொள்வார்கள்: ஸநாதன தர்மத்துக்கு ஊறு வந்தபோதெல்லாம் மிராகிள் தான் அதைக் காப்பாற்றியிருக்கிறது என்று. ஆம், அறிவு—ஆத்ம அநுபவம் என்ற உத்தமமான விஷயங்களில்கூட மனிதனுக்குச் செருக்கு வந்துவிடக்கூடாது என்றே போலும், பராசக்தியானவள் அதி முக்கியமான கட்டங்களில் அற்புதத்தின் மூலமே தான் நம் மத ஸித்தாந்தங்களை விழாமல் காத்திருக்கிறாள். பாருங்கள்:

அறிவுக் கடலும், அநுபவ பர்வதமுமான ஆதி சங்கரர் மண்டனரை வென்றதற்கு அறிவையும் அநுபவத்தையும் விட அற்புதமே கை கொடுத்தது. இருபத்தியொரு நாட்களாக சங்கரர் அணிந்திருந்த மாலை வாடவில்லை என்ற மிராகிளுக்காகத் தான் அவர் வென்றதாகத் தீர்ப்புத் தரப்பட்டது. ''சங்கர விஜய''த்தில் இப்படித்தான் சொல்லியிருக்கிறது.

Koviloor Digital Library

ராமாநுஜ ஸித்தாந்தத்தைத் தவிடு பொடியாக்குவதற்காக காசியிலிருந்து யக்ஞமூர்த்தி பண்டிதர் வந்தார். ராமாநுஜர் வரதராஜனை சரண் புகுந்தார். வரதன் அவருக்குப் பேராற்றலைத்தானே அருளியிருக்கவேண்டும்? ஆனால் அப்படிச் செய்யவில்லை. ராமாநுஜரின் தோற்றத்தையே தெளிவு மயமாகச் செய்தான் மாயவன். அவரைக் கண்ட மாத்திரத்தில் அவரது தோற்றத்தின் அற்புதத்தாலேயே கவரப்பட்ட யக்ஞமூர்த்தி வாதமே நடத்தாமல் அவரது அடிபணிந்தார். குருபரம்பரை நூல் இப்படித்தான் கூறுகிறது.

ஞான சம்பந்தர் சமணரை இறுதியாக வென்றதும், அறிவு வாதத்தால் அல்லவே! அனல்—வாதம், புனல்—வாதம் என்று பெயரிட்டாலும், சம்பந்தரின் ஏடு அனலில் எரியாததும், அது புனலை எதிர்த்து வந்ததும் வாதத்தை மீறிய அற்புதங்கள்தாமே!

மாணிக்க வாசகர் ஈழத்து பௌத்தர்களை எப்படி வென்றார்? ஊமை ராஜகுமாரியைப் பேச வைத்துத்தானே?

சொல்லிக்கொண்டே போகலாம் — மிராகிளால் ஸநாதன வேத தர்மம் நலிவுறவில்லை; மாறாக மிராகிளால்தான் அது பெரும் இடுக்கண்ணின் போதெல்லாம் காக்கப்பட்டுப் புத்துயிர் பெற்றது என்பதற்குச் சான்றுகளை.

வேதம், புராணம், முற்கால மதாசாரியர்கள், இவர்கள் வழியாக ஆழ்வார்கள், அறுபத்துமூவர், மஹாபக்த விஜய ஸாதுக்கள் என்று வந்தால் இவர்களில் ஒவ்வொருவர் வாழ்விலும் ஏகப்பட்ட அற்புதங்கள்! பகவான் இவர்கள் பொருட்டாகச் செய்த மிராகிள்கள், இவர்களே புரிந்த மிராகிள்கள் என்று ஏராளமாகப் பார்க்கிறோம். பரம ஞானிகளும் பக்த சிகாமணிகளுமான இவர்கள் எந்த ஸித்திக்கும் தாமாகத் துளிக்கூட ஆசைப்படாத போதிலுங்கூட பகவானாகவே பிடிவாதமாக இவர்களுக்கு அற்புத ஆற்றல்களைக் கொடுத்திருப்பதை என் சொல்ல? எளியரில் எளியராகவே இருக்க விழைந்த அப்பரடிகள் பாடினால் பாம்பின் விஷம் இறங்குகிறது; பிணம் உயிர் கொள்கிறது. இவர் பதிகம் பாட மறைக்காட்டுக் கோயிற் கதவம் திறந்து கொள்கிறது. யோகத்தால் சிவமேயான திருமூலர் பரகாயப்பிரவேசம் செய்கிறார். ஞான வைராக்கிய நிதியான பட்டினத்தடிகள் அப்பத்தை விட்டெறிந்தால் வீடு எரிகிறது; ஈரவாழை சந்தனச் சிதையாக எரிகிறது! அநுபூதிச் செல்வரான அருணகிரி கிளியுடலில் பரகாயப் பிரவேசம் செய்து விண்மலர் கொண்டுவந்தார். அத்வைதத்துக்கும் ராம அநுபூதிக்கும் உருவமான ஸமர்த்த ராமதாஸ் செய்யாத அற்புதமில்லை என்பதால் அவரது ஞானத்தையும் பக்தியையும் ஆட்சேபிப்பதா? வெறும் சித்துக்காரர் போலக் கூட அவர் செய்த வேடிக்கை விநோதங்கள் எத்தனை?

ஆம், பேராபத்திலும் பெருநோக்கம் ஒன்றை உத்தேசித்துத் தான் அற்புதம் செய்யலாம் என்றில்லாமல் பொங்கி வரும் புனித அன்பின் அடையாளமாகவே 'சில்லறை' அற்புதங்களையும் மஹாபுருஷர்கள் விளையாடி யிருக்கிறார்கள். ஸதாசிவப்

பிரம்மேந்திரர்களைவிட ஒரு பிரம்மஞானியை நாம் கற்பனை செய்ய முடியாது. அப்படிப்பட்டவர் கண் கொட்டும் நேரத்தில் நேயர்ச் சிலர்களை மதுரைக்குக் 'கொண்டு போய்', மீனாக்ஷி-சுந்தரர் திருவுலா காட்டி, பட்சணங்கள் வாங்கிக்கொடுத்து, 'இம்' மென்பதற்குள் திரும்பவும் நேரில் சேர்த்தாரே! 'இதனால் அந்தப் பசங்கள் யாவரும் முமுக்ஷுவாகி விட்டனரா?' என்று நாம் கேலி செய்யலாமா? மஹானுக்கு பாலரைக் கண்டதும் பரிவு பொங்கி வந்தது. அதற்கு மேல் 'சமாதானம்' சொல்ல என்ன இருக்கிறது? அவர்களை மதுரைக்குத் 'தொலைக் கடத்தல்' செய்தார், தின்பண்டம் வாங்கித் தந்தார். பிரம்மஞானியின் அந்தத் தித்திப்புப் பட்சணமான இதயந்தான் நமக்கு வேண்டுவது. ஸத்ய ஸாயி பிரசாதங்களுக்குச் சுவை யூட்டுவதும் இதே தித்திப்புத்தான். இதைப் புரிந்துகொண்டால் கேலி செய்ய மாட்டோம். விபூதியும், விக்கிரஹமும், மருந்தும், மோதிரமும், பட்சணமும் ஒருவர் சிருஷ்டித்துத் தந்தால் அது மட்டமானது, கேலிக்கிடமானது என்ற விதத்தில் நினைப்பதும் பேசுவதும் தான் கேலிக்குரியது. அவதார புருஷர்களோ, மஹான்களோ இன்னின்ன தான் செய்ய முடியும் அல்லது செய்யவேண்டும் என்று சொல்ல நாம் யார்? எவ்விதத்திலும் தீமையே கலக்காமல் எப்படி வேண்டுமானாலும் அவர்கள் அனுக்ரஹம் செய்வதற்கு நாம் விதி போட்டு எல்லை கட்டுவது சற்றும் பொருந்தாது. 'அந்த அவதாரம் இப்படிச் செய்ததா, அந்த மஹான் இப்படிச் செய்தாரா?' என்றெல்லாம் ஒப்புவமை பார்த்து ஒருவரைக் கழித்துக் கட்டுவது அறிவு வளர்ச்சியைக் காட்டவில்லை. இதுவரை எந்த சாஸ்திரத்திலும் இவர்கள் சொல்வது போல் மஹான்களும் தெய்விக வியக்திகளும் இப்படியிப்படித்தான் அனுக்ரஹம் செய்ய லாம் என்று விதி வகுத்திருக்கவில்லை.

பிரம்மேந்திராளுக்குப் பின்னும் எத்தனை மஹான்கள் தோன்றியிருக்கிறார்கள்? எத்தனை அற்புதம் செய்திருக்கிறார்கள்? பரமஹம்ஸ யோகாநந்தரின் சுய சரிதையைப் பார்த்தால் இப்படி வடநாட்டில் சுய நலமே யின்றி அன்புருவாகப் பல பெரியோர்கள் மக்களை மனம் குளிர்வித்திருக்கிறார்கள் எனக் காணலாம். தமிழகத்திலும் குழந்தையானந்தர், சேஷாத்திரி ஸ்வாமிகள், விடோபா, சுரைக்காய் சித்தர், சேந்தமங்கலம் ஸ்வாமிகள் என்றிப்படி பல மஹான்கள் தோன்றி அற்புதங்கள் ஆற்றியிருக்கிறார்கள். இன்றைக்கும் பல்லாயிரவருக்கு ஆறுதலாகவும், அவர்களை பகவந் நெறியில் சேர்ப்பவர்களாகவும் அநேக சித்த புருஷர்கள் உள்ளனர். இந்த மாபெரும் மரபையே மதிக்க மாட்டோம் என்பது ஆஸ்திகம் ஆகவே ஆகாது.

சமீபத்தில் தோன்றிய மஹான்களுள் அனைவராலும் மிக உன்னதமாக மதிக்கப்படும் ஒருவர் ஸ்ரீ ராமலிங்க ஸ்வாமிகள். அவர் விஷயமாக எத்தனை மிராக்கிள் நடந்துள்ளன? அவருக்குமே எத்தனை ஸித்திகள் வாய்த்திருக்கின்றன? அவர் வாய்மொழி யாகவே கொஞ்சம் கேட்போம்:

இவர் பொருட்டே ஒருமுறை

நெய்விளக்கே போன்றொரு தண்ணீர் விளக்கும்
எரிந்தது சந்நிதியின் முன்னே

Koviloor Digital Library

என்கிறார். நமி நந்தி அடிகளுக்கும், ஷிர்டி பாபாவுக்கும், மேலே சொன்னாற் போல் ராமலிங்கருக்கும் தண்ணீரே தீபம் எரிக்க உதவிற்று என்றால் பரவசமடைபவர்கள், நம் ஸ்வாமி தண்ணீரைப் பெட்ரோலாக்கினால் ஏன் கேலி செய்கிறார்களோ?

மண், பெண், பொன் என்று மூன்று மாய மகா பிசாசுகளில் ஒன்றாக இருப்பது பொன். ஆனால் ஒருவன் ஞானியாகி விட்டால், அதன்பின் பொன்னாலும் லோக உபகாரம் புரியலாம். எனவே அஞ்ஞானிகளைப் படுகுழியில் ஆழ்த்தவல்ல, பித்தளையைப் பொன்னாக்கும் ரஸவாத ஸித்தியும் கூடச் சில ஞானிகளுக்குக் கிடைக்கிறது. ராமலிங்கர் நமக்கே ஈசன் இவ் வித்தை அருளியதை "பொன் செயல் வகையை உணர்த்தி" என்கிறார்.

எலாம் வல்ல சித்தியும் தந்தே...
எல்லாம் வல்ல சித்தி ஆட்சி ஈய்ந்த சோதியே

என்றெல்லாம் தமக்கு ஸகல ஸித்திகளும் அருளப்பட்டதைப் பாடுகிறார். இதை ஈனமானதென ஒளிக்காமல், பெருமிதத்துடனே தெரிவிக்கிறார். ஏனெனில் உத்தம புருஷர்கள் ஸித்திகள் என்ற பேராற்றல் யாவும், பராசக்தியின் சித் எனும் அறிவுச் சோதியில் தெறிக்கும் சுடர்களே என்றுணர்ந்து அந்தச் 'சித்'தில் களிக்கிறார்கள். இதை அநுபவபூர்வமாகக் கண்டவரன்றோ வள்ளலார்?

சித்தர் எனும் நின்னடியார் திருச்சபையில் நடு இருத்திச்
சித்துருவின் வளர்க்கின்றாய், சிற்சபையில் நடிக்கின்றாய்

என்று அருட்பா அகவுகிறது.

விச்வப் பெருமனமாம் 'சித்'தின் விலாஸமாகவே சித்துக்களைப் பார்க்கப் பழக்கிக் கொண்டால் ஒருவர் மிரகின் புரிவதில் சற்றும் தவறே இராது. அவர் அதனால் தம்மையும் கெடுத்துக் கொள்ளமாட்டார். பிறரையும் கெடுக்கமாட்டார். இறை மகிமை விளங்கவே இயேசு நாதன் அற்புதம் புரிந்தாற்போலப் புரிவார்.

அஷ்ட ஸித்திகள் மகான்களிடம் இப்படித்தான் பர நலனுக்கே கூடுகின்றன.

மகான்களிடம் உள்ள வசித்வ ஸித்தி தங்கள் மனத்தைத் தன்னலவழியில் செல்லாமல் அடியோடு அடக்கிய நிலையாகும். இந்த நிலையில் அவர்கள் கொஞ்சம் கொஞ்சம் மற்றோரின் மனத்தை வசப்படுத்தினாலும், இது அம் மனத்தை மேலும் உயர்த்துவதற்காகவே இருக்கும். ஆசையை அடியோடு அழித்துவிட்ட காமாவஸாயியே நம் ஸத்யஸாயி என்ற உண்மையை உணர்ந்தால், அவர் புரியும் 'சமத்கார'ங்களில் வெறுக்கவோ, அஞ்சவோ எதுவுமே இல்லை — அவை அனைத்தும் உலகினரை எப்படியேனும் ஆத்மிகத்தில் கொண்டு வருவதற்கே என்ற தெளிவு பிறக்கும். இவ்வளவு பேராற்றல் படைத்த அவர் சற்றேனும் எவரையாவது

Koviloor Digital Library

செய்வதற்காக அற்புத ஆற்றலைக் காட்டியிருக்கிறாரா? எதிர்ப் பாளர் எத்தனையோ அபாண்டங்களைச் சுமத்தியும், அவர்களில் சிலர் அவரையே அழிக்க ஆபிசாரம் முதலிய ஏவல் சூனியங்களைச் செய்துங்கூட அவற்றுக்குப் பதிலடி தரக் கனவிலும் நினையாத மகாமகா நல்லவர் அல்லவா அவர்?

மொத்தத்தில் 'மிராகிள்'களில் அவற்றைக் குறித்தே எவ்விதமான தவறும் இல்லை. அவை எப்படிப் பிரயோஜன மாகின்றன, எந்த அளவில் பிரயோஜனமாகின்றன என்பதில்தான் தவறு நேர இடமிருக்கலாம். இவ்விஷயமாக எந்த ஸுப்ரீம் கோர்ட்டுக்கு மேல் அப்பீலே இருக்கமுடியாதோ அப்படிப்பட்ட ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களின் மணிமொழியை அனைவரும் ஒரு முறைக்குப் பன்முறை படித்துத் தெளிவோம். நடமாடும் காமகோடித் தெய்வத்தின் குரல், இதோ:

> "நமக்கு என்றில்லாமல் லோகோபகாரமாக நம் தேக சக்தி, மனோ சக்தி இரண்டையும் விருத்தி செய்து கொள்ளவேண்டும். கொஞ்சம் பிரயத்தனம் செய்தால் ஸ்தூல தேகத்துக்கு விசேஷ பலத்தை சம்பாதித்துக்கொண்டு ஸாண்டோவாகி விடலாம். விடாமல் பிரயாசைப்பட்டால் மனஸின் விஷயத்திலும் அளவில்லாத சக்தியைப் பெறலாம். ஸ்தூல தேகத்தால் ஸாண்டோவானால் சில மைல்கள் ஓடலாம்; ஒரு சின்ன சுவரை ஒருத்தனாகவே கட்டலாம். மனோசக்தியை நன்றாக விருத்தி செய்துகொண்டுவிட்டாலோ எவ்வளவு தூரமும் போக முடியும்; எத்தனை கட்டிடம் வேண்டுமானாலும் கட்டமுடியும். ஆனதால், நாம் மனோ சக்தியை விருத்தி செய்துகொண்டு, லோகோபகாரமாக நிறையக் காரியங்களைச் செய்ய வேண்டும். விச்வாமித்ரர் ஒரு லோகத்தையே சிருஷ்டி பண்ணினார், பரத்வாஜர் பரதனுடைய சைனியம், அயோத்தி ஜனங்கள் அவ்வளவு பேருக்கும் ஒரு சொடக்குப்போட்டே பெரிய விருந்து நடத்தினார் என்றெல்லாம் படிக்கிறோம். பிரம்ம பட்டத்தையே அடைவது முதலான சாதனைகளை மனோசக்தியாலேயே பூர்வத்தில் சாதித்திருக்கிறார்கள். சொந்தமாக நமக்கென்று பட்டம், ஸ்தானம் எதுவும் வேண்டாம். லோக க்ஷேமம்தான் நமக்கு எப்போதும் கருத்தில் இருக்கவேண்டும். அதற்காகவே மனோ சக்தியை வளர்த்துக் கொள்வதில் தப்பில்லை. பகவானை, நம்முடைய நிஜமான ஆத்ம க்ஷேமத்தை விட்டு விட்டு இதில் இறங்குவதுதான் தப்பு. பகவத்பாதாள் (ஸ்ரீ ஆதி சங்கரர்) அபிப்பிராயம் இதுதான்.
>
> "அத்வைத அநுபவத்தில் அப்படியே ஆத்மாராமனாக உட்கார்ந்து விடுவதற்காக ஆதிசங்கர பகவத்பாதாள் 'தக்ஷிணாமூர்த்தி அஷ்டகம்' என்று செய்திருக்கிறார் அதிலே, ஒன்பதாவது ச்லோகமாக 'பலச்ருதி' ஒன்று

Koviloor Digital Library

பண்ணியிருக்கிறார். இந்த ஸ்தோத்திரத்தில் சொன்ன படி அத்வைத ஸித்திக்குப் பிரயாசைப் படுகிறவனுக்கு இன்னின்ன நல்ல பலன்கள் உண்டாகும் என்று இந்த 'பலச்ருதி'யில் சொல்லியிருக்கிறது. இதிலே முதலில் 'எல்லாம் ஒரே ஆத்மா என்ற ஸமத்துவ ஞானம் உண்டாகிறது. இதுதான் 'மஹாவிபூதி'—'பெரிய ஸித்தி' யாகும் என்கிறார். 'இதற்கப்புறம் வேறே என்ன பலன் வேண்டும், இதுதானே அத்வைதம்?' என்று தோன்றும். ஆனால் ஆசார்யாள் இதோடு நிறுத்தவில்லை.

'ஸாரத்தில் எல்லாம் ஒன்று என்று இவன் தெரிந்து கொண்டுவிட்டாலும் அதோடு திருப்தியாக இருந்து விடக் கூடாது. எல்லாரும் ஒன்று என்று இவனுக்குத் தெரிந்தாலும் அவர்களுக்குத் தெரியவில்லையல்லவா? அதை அவர்களும் தெரிந்து கொள்கிற மாதிரி, அவர்கள் லெவலுக்கே இவனும் இறங்கி அவர்களைக் கொஞ்சங் கொஞ்சமாக மேலே கொண்டுவரவேண்டும்' என்கிற ரீதியில் ஆசார்யாள் சுலோகத்தைக் கொண்டு போகிறார். ஈச்வரன் எப்படித் தான் ஆத்மராமனாக இருந்தாலும் லோகத்தையும் பரிபாலனம் பண்ணுகிறானோ அப்படியே ஞானியும் ஈச்வரத்வத்தை அடையவேண்டும். அத்வைத ஸித்தி ஏற்பட்டபின், காரியலோகத்தை ஞானி பார்க்கிறபோது எல்லாம் ஆத்ம ஸ்வரூபமானதால் எல்லாவற்றிடமும் அன்பு பொங்குகிறது. 'நாம் மட்டும் பிரம்மமாக உட்கார்ந்து விட்டால் போதாது. லோகாநுக்கிரகம் செய்கிற ஈச்வரன் மாதிரி நாமும் சகல ஜீவாத்மாக்களுக்கும் நல்லது செய்யவேண்டும் என்று தோன்றுகிறது. இந்த எண்ணம் வந்தவுடன் இப்படி சக்தியோடு லோக உபகாரம் பண்ணுவதற்காக இவனுக்கு அஷ்டமஹா ஸித்திகளும் உண்டாகி விடுகின்றன — ஸித்யேத் தத் புனர் அஷ்டதா பரிணதம் ஐச்வர்யம்—என்கிறார் ஸ்ரீ ஆசார்யாள். இவன் இன்னொரு ஈச்வரன் மாதிரியே ஆகி விடுகிறான் என்கிறார்: ஈச்வரத்வம் ஸ்வத:. கஷ்டப்படுகிறவர்களுக்கெல்லாம் நல்லதைச் செய்வதற்கு நாம் நல்ல சக்திகளையெல்லாம் அபிவிருத்தி செய்து கொள்ள வேண்டும் என்று இதிலிருந்து தெரிகிறது. அதனால் தான் தக்ஷிணாமூர்த்தி மாதிரி ஒரு காரியம், ஒரு பேச்சு இல்லாமல் உட்கார்ந்திருப்பதற்காக ஸ்தோத்திரம் செய்த ஆசார்யாள் அதை முடிக்கிறபோது 'ஸர்வாத்மத்வ மஹா விபூதி' யோடு முடிக்காமல், ஈச்வரத்வம், அஷ்ட ஸித்திகள் இவற்றைச் சொல்லியிருக்கிறார்.''

இது காமகோடி அருள்வாக்கு. இதில் ஆதி ஆசாரியரின் திருவுளமும் அற்புத ஆற்றல்களுக்கு ஆதரவாகவே இருந்திருப்பது புலனாகிறது. மிரகிள்களை நிலைநிறுத்த இதற்கு

மேல் சொல்ல வேண்டியதில்லை. காஞ்சி சங்கரர், காலடி சங்கரர் வாக்குக்கும் கட்டுப்படாதவர்களை நாம் கருத்தில் கொள்ளவேண்டிய அவசியமில்லை.

★

முதல்படியான 'லெகர்டிமைனை'த் தள்ளிவிட்டு, அடுத்தபடியாக அற்புதங்கள் உண்டு என ஒப்பி அவற்றுக்கு ஆன்மிகத்தில், சமயத்தில் மதிப்புக்குரிய ஸ்தானம் உண்டு எனத் தெளிவோம். அற்புதங்களை 'தௌமாடர்ஜி' என்ற சாஸ்திரமாகவே மேல்நாட்டினரும் ஒப்புகிறார்கள். பாரா—ஸைகாலஜி ஆராய்ச்சிகள் மூலம் டெலி — கைனெஸிஸ் (ஓரிடத்தே உள்ள பொருளை இன்னோரிடத்துக்குப் பெயர்த்து வருவது), க்ளேர்வாயன்ஸ் (தீர்க்க திருஷ்டி), க்ளெயிர் ஆடியன்ஸ் (எங்கோ பேசுவதை இங்கே கேட்பது), டெலிபதி (மனோசக்தியாலேயே தன் எண்ணங்களைப் பிறருள் புகுத்துவது, பிறர் எண்ணுவதைத் தான் அறிவது), டெலிகைனெஸிஸ் (எங்கோ உள்ள பொருளை, இங்கே கடத்துவிப்பது. இதற்கு 'அப்போர்ட்' என்றும் பெயருண்டு), இதே போல பல விதத்தில் இந்திரிய அதீதமான உணர்வுகளைப் பெறுவது (extra – sensory perception) என்பனவற்றையெல்லாம் ஒப்பத் தொடங்கியிருக்கிறார்கள். அணுக்களைப் பிரித்து ஒரு வஸ்துவை இல்லாமற் செய்து விடும் ஆற்றலையும் (dematerialization) விஞ்ஞான பூர்வமாக ஒப்புகிறார்கள். இவ்விதம் ஒருவர் தம்மையே ஓரிடத்தில் 'டிமெடீரியலைஸ்' செய்துகொண்டு அந்தர்தானமாகி, வேறிடத்தே அணுக்களைக் கூட்டிக்கொண்டு தன்னுருவில் தோன்றுவது சாத்தியமே என்று சிலர் வல்லாரும் ஒத்துக்கொள்கிறார்கள். 'அணு' சம்பந்தமின்றி ஜீவ சக்தியை மட்டும் தூக்கிச் சென்று பரகாயப் பிரவேசம் முதலானது செய்வதும் நடக்கக் கூடியதே என்கின்றனர். 'தாட் — தெரபி' என்பதாக அடர்ந்த நல்லெண்ண சக்தியாலேயே நோய்களைத் தீர்ப்பதையும் ஏற்கிறார்கள். ஏன், மனித இனத்துக்கு மேம்பட்ட தேவ சக்திகளை இயக்கிக் காரியம் செய்து கொள்ளும் பால்டர்ஜிஸ்ட் (Poltergeist) ஐக்கூட அங்கீகரிக்க முன் வருகிறார்கள். ஆனால் கடைசியாக ஒன்றை மட்டும் ஏற்க விஞ்ஞான மூளை தயங்கவே செய்கிறது. அதாவது சங்கல்ப மாத்திரத்தில் ஒருவர் சிருஷ்டி செய்ய முடியும் என்பதை மட்டும் ஏற்கத் தயங்குகிறார்கள்.

வெறும் பிஸிக்ஸ் இப்போதுள்ள நிலையை மட்டும் ஒப்புக் கொண்டு, 'சூனியத்திலிருந்து எதுவுமே வரமுடியாது. சங்கற்பத்தால் சிருஷ்டிப்பதென்பது முழுப் பொய்' என்பது சற்றும் சரியல்ல. பொருளாகவும் சக்தியாகவும் உள்ளது ஒன்றே என்று சொல்வதோடு மட்டும் ஐன்ஸ்டைன் முதலியவர்கள் நிற்கவில்லை. இந்த இரண்டாகவும் இருப்பது கடைசியில் ஒரு பேரறிவின் எண்ண அலைகளே என்று கோடி காட்டியிருக்கிறார்கள். மாபெரும் விஞ்ஞான மேதையான எடிங்டன் போன்றவர்கள், "The world seems to be more a thought than a machine" என்கிறார்கள்.

Koviloor Digital Library

எனவே பிரபஞ்சம் முழுவதையும் கற்பித்துள்ள, அல்லது சங்கற்பித்துள்ள பேரறிவில் நமது அறிவை முழுக்கிக் கொண்ட மஹான்களுக்கும் இச்சாமாத்திரத்தில் சிருஷ்டியாற்றல் கைகூடும். ''பூத—க்ருத்''—'பொருள்களை உண்டாக்குபவர்கள்' — என்றே வேதத்தில் ரிஷிகளுக்கு ஒரு பெயர் உள்ளது. **யம் காமம் காமயதே. ஸோஸ்ய ஸங்கல்பாதேவ ஸமுத்திஷ்டந்தி** (இவன் என்ன விரும்பினாலும் அது இவனது சங்கற்பத்தாலேயே முன் நிற்கிறது) என உபநிஷதமும் ஐயந்திரிபற ஓதுகிறது. 'பொருள்' என்று நாம் சொல்வதற்கெல்லாமே மூலச்சரக்கு பராசக்தியின் வெறும் எண்ணந்தான். எனவே மஹாபுருஷர்கள் எண்ணத்தின் சக்தியாலேயே பொருட்களைப் படைப்பதில் நம்பவொண்ணாததாக எதுவும் இல்லை. ஓரளவு இத் திசையில் முன்னேறத் தொடங்கியிருக்கும் விஞ்ஞானம், விரைவிலேயே சங்கற்ப சிருஷ்டியையும் ஒப்பக் கூடும் என நம்புவோமாக!

*

ஸித்திகள் ரித்திகள் என்று நாம் நூல்களில் கண்டுள்ள அனைத்தையும் அபரிமிதமாகப் புரிபவர் ஸ்ரீ ஸத்யஸாயி பாபா. பரகாயப் பிரவேசம், பால்டர்ஜிஸ்ட், டெலி கைனெஸிஸ், கனத்தல், லேசாதல், எங்கெங்கோ நடந்ததைக் காணுதல் — கேட்டல், நோய் தீர்த்தல், விபத்தில் காத்தல், நவ நவ சிருஷ்டிகள் என்று பாபா செய்வதையெல்லாம் பார்த்தே அவரை ஒரு மகா பெரிய ஸித்தர் என்று பலர் கொள்கிறார்கள். இவருக்கு ஜகப் பிரஸித்தி உண்டாகியிருப்பது முதலிடத்தே Miracle-man, Wonder-worker (அற்புதம் புரிபவர்) என்பதால்தான் — இதை அவரும் நாமும் விரும்பாவிட்டாலும் கூட. அப்படியானால் இவர் ஸித்தர்களுள் மிகப் பெரிய ஒருவர் தானா? இவரை ஈச்வராவதாரம் என்று ஏன் சொல்லவேண்டும்?

இப்படிச் சொல்வதற்கு முக்கியமான காரணம், ''விஞ்ஞான பூர்வமான'' காரணமேயல்ல. பக்தர்களின் உள்ளுணர்ச்சியில் அவர் பகவானாகவே தம்மை ஐயம் திரிபற நிலைநாட்டிக் கொண்டிருப்பதற்கு ''விஞ்ஞான பூர்வ'' விளக்கம் இல்லைதானே? ஆயினும் ஓரளவுக்கு புத்தி ரீதியில் காரணமும் சொல்லலாம். அதாவது வேறு எந்த ஸித்தரும், மஹாபுருஷரும் இத்தனை வித விதமான அற்புதங்களைச் செய்ததில்லை. **அதுவும் எவ்வித சாதனையும், அப்பியாசமும் செய்யாமலே!** விபூதி, விக்ரஹம் முதலியன வரவழைக்கும் அநேக ஸித்தர்கள் வியாதி தீர்ப்பதில் தோற்றுப் போகிறார்கள். வியாதி தீர்க்கும் மஹாபுருஷர்கள் பூர்வ காலம், எதிர் காலம் சொல்லப் புகும்போது பரிதாபமாகத் தவறுகிறார்கள். ஆனால் பாபாவோ எல்லாம் வல்லவராக அல்லவா உள்ளார்? அணு விஞ்ஞானத்திலிருந்து வேதங்களின் சூக்ஷ்ம ஸ்வர ஞானம் வரையில் எவ்விஷயத்தைப் பற்றியும் அறிந்த பூர்ண ஸர்வக்ஞத்வம் பாபாவைப் போல் வேறெந்த ஸித்த மஹானுக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. லக்ஷோபலக்ஷர்களின் வாழ்க்கை விவரங்களை, சின்னச்சின்ன சமாசாரங்களை, பரம அந்தரங்க ரகசியங்களை பாபா புட்டு வைப்பது போல்

வேறெங்கும் காண்பதற்கில்லைதான். புயல் மழை, காட்டுத் தீ போன்ற இயற்கை சக்திகளின்மீது இவருக்குள்ள ஆதிக்கமும் வெறும் ஸித்தியாகவோ, மஹாத்ம சக்தியாகவோ மாத்திரம் தோன்றவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, வேறெந்த ஸித்தர் விஷயத்திலும் கேள்விப்படாத விதத்தில் இவரை அறியவே அறியாதாருக்கும், 'ஸாயிராம்' என்ற பெயரையே கேள்விப்படாதாருக்கும் காப்புத் தருகிறாரே, இதற்காக ஆயிரமாயிரம் மைல் கடந்த அப்பால் தோன்றுகிறாரே! ஒருகால் இந்த சூக்ஷ்ம அருளைக் கூட மஹா ஸித்தர்கள் மிகச் சிறிய ஒரு வட்டத்துக்காக ஆற்றக் கூடியோராக இருக்கலாம். ஆனால், தாம் ஸ்தூலமாக இல்லாத ஆயிரமாயிரம் இடங்களிலும் பாபா "ஸ்தூல"மான அற்புதம் செய்கிறாரே — உதாரணமாக, ஹவாய் பக்தர் இல்லங்களில் விபூதியை வர்ஷிக்கிறாரே, கம்பாலா அடியார் வீடுகளில் விக்கிரஹங்களைத் தோற்றுவிக்கிறாரே, அருணாசல பிரதேசத்தில் பஜனை மன்ற ஹாரங்களைச் சுழற்றிச் சுழற்றி விளையாடுகிறாரே, இப்படி எண்ணி மாளாத இடங்களில் கண்ணுறுக்கு மெய்யான விந்தைகளை விளைவிக்கிறாரே, — இதுபோல் வேறெந்த ஸித்தரோ, மஹாபுருஷரோ செய்ததாக நாம் அறியவில்லை.

ஸித்தர்களும் **எப்போதாகிலும்** தமது ஜீவ சக்தியை ஓரிடத்தில் உள்ள ஸ்தூல சரீரத்தில் காட்டும்போதே, பிற இடங்களில் தோன்றி அருள்வதுண்டுதான். ஆனால் பொதுவாக இவர்களது ஸ்தூல சரீரம் 'ட்ரான்ஸ்' போல ஸ்மரணை இழந்தாலே, பிற இடங்களில் இவர்கள் தோன்றி அற்புதம் செய்ய முடிகிறது. பாபாவைப் போல் **எப்போதுமே** ஒரு ஸ்தூல சரீரத்தில் ஜீவச் செழிப்புடன் செயலாற்றிக்கொண்டே, அதே போதில் பல்வேறு இடங்களிலும் சாந்நித்தியம் கொண்டு அற்புதங்கள் விளைவிக்கும் மஹாசக்திமானைப் பற்றி நாம் அறியவில்லை.

ஸித்திகள் சாதனையால் சம்பாதிக்கப்படுபவை, அதாவது சாதனைக்கேற்ப சம்பாத்தியம் கிடைக்கும். பொருளை எடுத்துச் செலவழிக்கச் செலவழிக்க அது குறைகிறது. மறுபடி உழைத்து அதை ஈட்டவேண்டியிருக்கிறது. மந்திரயோகம், குண்டலினி யோகம் போன்ற ஒன்றில் உழைத்தே ஸித்திகளை மற்றவர்கள் சம்பாதிக்கிறார்கள். அற்புதங்கள் செய்யச் செய்ய அவர்களது ஸித்தியாற்றல் குறைகிறது. எனவே நடு நடுவே மீண்டும் தவம் செய்து செய்து, குறைந்ததை ஈடுசெய்து கொள்கிறார்கள். ஆனால் நம் ஸ்வாமி! எந்த ஸாதனையும் செய்யாமலே, பிறப்பதற்கு முன்னிருந்து தம்பூராவை மீட்டியும், மிருதங்கத்தைத் தட்டியும் விந்தை விளைவித்திருக்கிறார். நிச்சயமாக, வெளி உலகம் முழுதும் நன்கு காண, தமது பதினான்காம் வயதிலிருந்து முப்பத்தேழாண்டுகளாக, தினந்தினமும் நமக்குத் தெரிந்தே நூற்றுக்கணக்கான மிரகிள்களும், தெரியாமல் ஆயிரமாயிரம் மிரகிள்களும் புரிந்துவருகிறார். அள்ள அள்ள, கொள்ளக் கொள்ளக் குறையாத இப்பேர்ப்பட்ட பிரபாவ சமுத்திரத்தை சாக்ஷாத் அகண்ட பராசக்தி விலாஸம் என்று கொள்ளாமல், மகா மகா ஸித்தி என்று மட்டும் எப்படிச் சொல்வது?

Koviloor Digital Library

சக்தி பெற விரும்பித் தாமாக ஸித்திகளை விரும்பிப் பயிலாத பக்த சிகாமணிகளும், ஞான சிரோமணிகளும் வாழ்நாள் முழுதும் ஏராள அற்புதங்கள் புரிந்தது உண்மையே. இவர்கள் ஆற்றல் அவ்வப்போது குறைந்து, இவர்கள் அதை மீளவும் ஈட்டிக் கொண்டார்கள் என்பதில்லை. ஏனெனில் இவர்கள் மூலமாக மூலபராசக்தியே செயற்பட்டது. இவர்கள் யாவரும், தமக்கென உள்ளது போல் தோன்றும் ஜீவாத்மாவின் சக்தியால் தாங்கள் அற்புதங்களை ஆற்றவில்லை யென்றும், இறைவனின் கருவியாகவே தாங்கள் இவற்றைப் புரிவதாகவும் தெளிவுறக் கூறியுள்ளனர். எனவே அநேக சந்தர்ப்பங்களில் இவர்களுக்கே தெரியாமல் இவர்கள் வழியாக அற்புத அருள்கள் நடந்துள்ளன. ஆனால் பாபாவுக்குப் பெயரளவில்கூடப் பரமாத்மனுக்குத் தனியான ஜீவாத்ம பாவம் இருப்பதாக அவர் காட்டிக்கொண்டதில்லை. பரமாத்மாவின் கருவியாக பக்தி அல்லது ஞானநிலையில் சரணாகதராக அடங்கியிருந்தா அவர் அற்புதம் புரிகிறார்? தாமே திட்டமிட்டு, தமது அற்புதங்களின் விவரம் முழுவதையும் நன்கு அறிந்து, உணர்ந்து, தம் சங்கற்பத்தால் தாமே நிர்வகித்துத் தானே அவர் அற்புத சக்திக் கடலை அனவரதமும் அலைபாய்ச்சி வருகிறார்? இந்த அற்புத சமுத்திரத்தின் அலைகள் பலவற்றை முன்னரே கண்டோம். இந்நூல் பூர்த்தியாகுமளவு ஆங்காங்கு இவ்வலைகள் மோதிப் பாயத்தான் செய்யும். எனினும் இங்கே துண்டாக, பாபாவின் நவ நூதன அற்புதங்கள் சிலவற்றைக் கண்டு உள்ளம் துள்ளுவோம், வாரீர்!

Koviloor Digital Library

அத்தியாயம்—44

சிந்து மீறிய 'சித்' விலாஸம்

**சித்தெவையும் வியத்தியுறும் சுத்த சிவ சித்தாய்ச்
சித்தமதில் தித்திக்கும்...**

—திருவருட்பா

சின்னஞ் சிறிய மூர்த்தி.

கோமள ஸ்வரூபம்.

மிருதுவான பேச்சு.

குளிர்ந்த பார்வை.

இதுவா இப்படி நவ கண்டமும் விஸ்மிதமுறும் வியப்புகளை விளைவித்து வருகிறது!

இதுவே பேரற்புதமாக இருக்கிறது! தாம் பிரமிப்பூட்டும் தோற்றம் கொள்ளாமல் லலிதமாக, நளினமாக, சௌம்யமாக, சிங்காரமாக இருந்துகொண்டே, அதிரச் செய்யும் அற்புதங்களை அநாயாசமாகப் புரிகிறார்.

அநேக சந்தர்ப்பங்களில் பேரற்புதங்களும் நம்மைச் சற்றுக் கூட அதிர அடிப்பதில்லை. இயல்பான ஏதோ ஒன்றாகவே அதை நாம் அநுபவிக்கும்படிச் செய்துவிடுகிறார். சற்றும் கலப்படமில்லாத அன்பின் மென்மை மட்டுமே அற்புதத்திலும் இதமாகப் பொசியுமாறு காட்டுகிறார்.

★

கொடு நோய்கள் தீர்ப்பது, மரணத்தில் அருள்வது, விபத்தில் காப்பது, வேறு பெரிய பிரச்னைகளைத் தீர்ப்பது என்றிப்படிப் பல விதத்தில் ஸ்வாமியின் அற்புதங்களை முன்னமே பார்த்து விட்டோம். ஆழமும் அழுத்தமும் வாய்ந்த பக்தி — ஞான அற்புத

Koviloor Digital Library

அநுபவங்களைப் பிற்பாடு பார்ப்போம். இங்கே லீலா விநோதமே தூக்கலாக உள்ள அவரது ஏராள அற்புதங்களுக்கு மாதிரிகள் பார்க்கலாம். இவற்றுலும் பெரிய பிரச்னைகள் தீர்ந்திருக்கலாமா மாயினும், அதைவிட இவற்றின் விநோத விந்தை எழிலே நம்மை வெகுவாக ஈர்க்கின்றன. இயலாததையெல்லாம் இயற்றும் "அகடித கடனா படீயஸி" பெற்ற பராசக்தியே இவர் என்று இவை நிரூபிக்கும்.

★

முன் அத்தியாயமொன்றில் ஸ்வாமியைப் 'புகைப்பட அநுக்கிரஹ மூர்த்தி' என்றேமே, அதிலிருந்து தொடங்குவோம்.

ஸ்வாமி ஸிருஷ்டிக்கும் ஃபோட்டோக்களில்தான் எத்தனை விசித்திரங்கள்! ஷிர்டிபாபாவுக்குள் இவர் இருப்பார்; இவரது இதயத்தில் ஷிர்டிபாபா இருப்பார். ராமகிருஷ்ணருக்குள் ஷிர்டி பாபா, ஷிர்டி பாபாவுக்குள் இவர் என்று பலவகைப்பட்ட அதிசய ஃபோட்டோக்கள்! இவ்விதமே மற்ற தெய்வ மூர்த்தங்களுள் இவர் இருப்பார்; அல்லது அவை இவருள் இருக்கும். இந்த புகைப்படங்களில் தம் ஒருவரை மட்டும் விந்தைக் கோலங்களில் வழங்குவதும் உண்டு.

அடியோடு உற்சாகமிழந்து தற்கொலை செய்துகொள்ள இருந்த ஒருவருக்கு 1969 நவம்பர் 16-ந் தேதி இரவு பெங்களூர் ஹோட்டல் அறையொன்றுள் திவ்ய தரிசனம் தந்து, தமிழில், "பத்திரமா வெச்சுக்கோ, படுத்துத் தூங்கு" என்று சொன்னபடி ஒரு புகைப்படத்தைக் கொடுத்து அந்தர்தானமானார். அந்தப் படத்தில் பாபா ஆனந்த ஸ்வரூபமாகவே இருந்தார். இடது கையில் வீணை தாங்கியிருக்கிறார்; வலது கையில் சிப்ளாக் கட்டை; கழுத்து நிறைய ஹாரங்கள்; காலிலே சலங்கை! அதைப் பார்க்கப் பார்க்க அடியாருக்கு உற்சாகம் பொங்கி வந்தது. மனத் தளர்ச்சி ஓடியேவிட்டது. ஒரு தற்கொலை தவிர்க்கப்பட்டது!

ஒருமுறை சித்ராவதிக்கரையில் பக்தரொருவரிடம், "உன் காமிராவைக் கொடு" என்றார் ஸ்வாமி.

"அதில் ஃபிலிம் லோட் பண்ணலே ஸ்வாமி" என்று அழமாட்டாக் குறையாகக் கூறினார் பக்தர்.

"தெரியும் நாயனா" என்று பரிவு பொங்கச் சொன்னார் பாபா.

ஸ்வாமியைப் புகைப்படம் எடுக்கவே வந்த அன்பர் கவனப் பிசகாக 'லோட்' செய்து கொள்ளாமல் வந்துவிட்டு, இந்த அசட்டுத்தனத்துக்காக இத்தனை நேரமும் தம்மைத் தாமே மனத்துக்குள் சபித்துக்கொண்டிருக்கிறார். (ஸ்ரீ பால பட்டாபி கூறச் சொல்வதுபோல்) புகைப்படம் எடுக்க முடியாத அன்பரின் மனத்தைப் புகைப்படம் பிடித்துவிட்ட ஸ்வாமி அந்தக் காமிராவை வாங்கிக்கொள்கிறார்.

Koviloor Digital Library

செல்லம் கொடுப்பதுபோல் அதைத் தட்டுகிறார். தட்டிக் கொண்டேயிருக்கிறார். அதிலிருந்து சோனாமாரியாக ஸ்வாமியின் புகைப்படங்கள் விழுந்துகொண்டேயிருக்கின்றன!

காமிரா கூட எதற்கு? ஸ்வாமி தாம் எந்தச் சூழலில், எந்த உடையில், எந்த பாவத்தில் இருக்கிறாரோ அதையே தத்க்ஷணம் கையசைப்பில் தத்ரூபமான வண்ணப் படமாகக் கொடுத்து விடுவாரே! ஏற்கெனவே யிருந்த கோலத்தில் புகைப்படம் வழங்குவதைக் கூட, முன்பே எடுத்த ஃபோட்டோவைத்தான் 'டெலிபோர்ட்' செய்திருக்கிறாரோ என ஐயுறலாம். ஆனால் அப்போதைக்கப்போதே தாம் உள்ள கோலத்தைக் கலர்ப் படமாக வழங்குவதைத் 'தொலைக் கடத்துச் சமத்கார'த்தில் சேர்க்கவே முடியாதே! (ஆனாலும் அப்படியும் நினைக்கும்படி அவரே குழப்புவார்.)

சஞ்சாரத்தின்போது கரூரில் ஒரு மாடியில் ஸ்வாமி நிற்கிறார். வீதிக்கு எதிர்ப்புறம் இன்னொரு மாடியில் ஒரு புகைப்படக்காரர் நிற்கிறார். அவரைப் பார்த்து பாபா சிரிக்க, அக்கணமே அவரது காமிரா இவர் கைக்கு எப்படியோ வந்துவிடுகிறது! கீழே திரண்டுள்ள கூட்டத்தின்மீது ஸ்வாமி அந்தக் காமிராவைத் தட்டுகிறார், தட்டிக்கொண்டேயிருக்கிறார். தட்டத் தட்ட ஸ்வாமியின் புகைப்படங்கள் மழையாக விழுந்துகொண்டேயிருக்கின்றன! அநேகமாக ஒவ்வொருவருக்கும் ஒரு படம் கிடைக்கிறது; காமிராவும் புகைப்படக்காரரின் கைக்கே திரும்புகிறது.

ஸ்வாமி கொடுக்கும் படங்கள் இருக்கட்டும், ஸ்வாமியைப் பிறர் எடுக்கும் படங்களிலும் என்னென்ன வேடிக்கைகளைச் செய்து விடுகிறார்!

உரவகொண்டாவில் தம்மை ஸாயியாக அறிவித்துக்கொண்ட போதே இவரை ஒருவர் புகைப்படம் எடுக்க, இவர் முன்னிருந்த கல் ஷிர்டிபாபாவாகப் படத்தில் விழுந்ததைப் பார்த்தோமல்லவா?

லீ ஹார்ட்பெர்ஸ் என்பவர் பம்பாய் தர்மக்ஷேத்திரத்தில் ஸ்வாமியைப் படமெடுத்தார். அப்போது ஸ்வாமி ஒரு கடிகாரத்துக்கு எதிரே நின்றுகொண்டிருந்தார். அதற்கு ''ஆத்மிக கடிகாரம்'' என்று பாபா பெயர் கொடுத்திருந்தார். ஏனெனில் அதில் ஒன்றிலிருந்து பன்னிரண்டு வரையான ஒவ்வோர் இலக்கத்துக்கும் சரியாக ஆத்மிக முன்னேற்றத்தின் படிகளாகப் பன்னிரண்டு சாதனைகள் குறித்திருக்கும். லீ எடுத்த படத்தில் என்ன விந்தை விளைந்ததெனில் மேற்சொன்ன ''ஆத்மிக கடிகாரம்'' பாபாவின் அங்கியிலேயே அவரது இதயத்துக்கு நெருக்கமாக ஒரு 'பாட்ஜ்' போலப் பதிந்துவிட்டது!

பாபாவிடம் இப் புகைப்படம் காட்டப்பெற்றபோது அவர், ''கடிகாரம் குறிப்பிடும் வகையில் சாதனை செய்பவனை நான் என்

Koviloor Digital Library

இதயத்திலேயே ஆபரணமாக அணிகிறேன் என்று இதற்கு அர்த்தம்'' என்றார்.

(இப் புகைப்படம் குறித்த இன்னொரு லீலையையும் இங்கே காணலாம்:

கவன் தம்பதியர் எத்தனையோ முயன்றும் இப்படத்தின் பிரதி அவர்களுக்குக் கிடைக்கவில்லை; பிறகு ஒருநாள் இரவு அமெரிக்காவில் அவர்கள் வீட்டு மின்சாரக் கடிகாரம் சுவரில் டாங் டாங் என்று மோதிக்கொண்டது. விழித்துக் கொண்ட ஸ்ரீமதி எல்ஸி கவன் கடிகாரத்திடம் வந்து பார்த்தார். மின்சார ஓட்டத்தினால் நடக்கும் விசித்திரமோ என வியந்துவிட்டு படுக்கப் போய்விட்டார். கிழவியின் தூக்கத்தைக் கெடுக்க வேண்டாம் என்றுபோலும், கடிகாரம் சுவரில் மோதிச் சத்தம் எழுப்புவதை நிறுத்தி விட்டது.

மறுநாள் இரவு இதே திருவிளையாடலை மறுபடி தொடங்கி விட்டது. 'சரி, இன்று கடிகாரத்துக்குப் பக்கத்திலுள்ள பீரோவை அப்பால் இழுத்து, அதன் பின் உள்ள மின் இணைப்பைத் துண்டிக்க வேண்டியதுதான்' எனத் தீர்மானித்தார் எல்ஸி. அவ்வாறு செய்கையில் மின் இணைப்புக்குப் பக்கத்தில் எதுவோ பளிச்சிட்டது.

கையிலெடுத்துப் பார்த்தார் எல்ஸி! அவர் அடைந்த கிளுகிளுப்பு! இவர்கள் எந்தப் புகைப்படத்துக்காக அலையாக அலைந்தார்களோ அதே ஆத்மிக கடிகார பாபாவின் படம்தான் அது! கடிகாரப் படம் அநுக்கிரகித்திருப்பதைக் கடிகாரத்தை மோதியே தெரிவித்ததும் பொருத்தமான குறும்புதான்!

இதன் உபநதியாக இன்னொரு குட்டி மிரகிள்: மேற்படி படத்தை இந்நூலில் எப்படியேனும் சேர்த்தாகவேண்டும் என்று விரும்பிய ஆசிரியர், 'எல்ஸி கவனுக்கே எழுதலாமா? எழுதினாலும் அவர் ஸ்வாமியின் அருட்கொடையான அரிய படத்தை அமெரிக்காவிலிருந்து தபாலில் அனுப்பிவைக்க மனம் கொள்வாரா?' என்றெல்லாம் குழம்பியபோது, ஏதோ ஒன்று (ஸ்வாமிதான்!) இவரது பிடரியை உந்தி இவர் முன்பே சேகரம் செய்திருந்த படக்குவியலைப் பரிசோதிக்கச் செய்தது; அதில் இந்த ஆத்மிக கடிகாரப் படத்தைத் தரித்த பாபாவும் இவரைப் பார்த்துச் சோலை மலரொளியாகச் சிரித்துக்கொண்டு நின்றார்!)

விஜயதசமியொன்றின்போது ஸ்வாமி விழாக் கொட்டகைக்கு எழுந்தருளுகையில் பக்தை ஒருத்தி அவரைப் படமெடுத்தாள். ஆஹாஹா! மஹிஷமர்த்தினியின் வெற்றித் திருநாளன்றோ விஜய தசமி! அதற்கேற்ப, பாபா சிம்மத்தின்மீது வீற்றிருப்பதுபோல் அப்புகைப்படத்தில் பதிந்திருந்தார். இந்த அபூர்வ சிம்மவாஹினிப் படத்தையும் இந்நூலில் பிரசுரித்திருக்கிறோம். நன்றாகக் கவனித்துப் பாருங்கள். ஸ்வாமியின் இடுப்புக் கீழ் ஒரு சிங்கம் நம்மை நோக்கி நிற்கும். சற்றே இடப்புறமாகத் திரும்பிய அதன் முகமும், முன்னங்கால்கள் இரண்டும், பின்னே இடப்பக்கம் வாலும், வால்

Koviloor Digital Library

நன்றாயிருந்தால் குச்சமும்கூடத் தெரியும். ஸ்வாமி அதன்மீது அமர்ந்து இரு புறமும் இரு கால்களைப் போட்டுக்கொண்டிருப்பதாகத் தோன்றும்.

வேடிக்கையாகவே நெஞ்சகத்துக்கு ரஞ்சகமாக வரும் ஸாயி பராசக்தி!

சிம்மவாஹினி, ஸாயி நாராயணி!

என அவளுக்கு பஜனை பாடிப் பணிவோம்.

ஹைதராபாத்தில் ஸாயி பக்தர் ஒருவர் வீட்டில் கண்ணனின் பெரிய திரு உருவச் சிலைக்கு அலங்காரம் செய்து அதைப் புகைப் படம் எடுத்திருந்தார்கள். புகைப்படத்திலோ ஸாயிக்கண்ணன் தரிசனம் தருகிறார்! பாதத்திலிருந்து முகம் வரையில் பழைய வேணுகானக் கண்ணனேதான். கிரீடமும் கண்ணனுடையதே. ஆனால் கிரீடத்தின் கீழ், கண்ணனின் நெற்றி தொடங்கவேண்டிய இடத்தில் ஜம்மென்று, பம்மென்று பாபாவின் பம்பை முடி சூழ்ந்த பாலிய பங்காரு முகம் பதிவாகி யிருக்கிறது. நம் வாசகரின் நற்பேறாக இப்படமும் இங்கே அச்சாகியுள்ளது.

* * *

இந் நூலில் உள்ள புகைப்படங்களில் பல ஸ்ரீ எம். கணேஷ் ராவ் காப்பி எடுத்துத் தந்தவையாகும். நெகடிவ்கள் கிடைக்காமல், ஏற்கனவே எடுத்த புகைப்படப் பிரிண்ட்களிலிருந்தும், பழைய புத்தகங்களில் வெளியான படங்களிலிருந்துமே அவர் காப்பி போட்டிருக்கிறார். ஆனால் இக் காப்பிகளில் பல மூலத்தை விடவே மிகத் தெளிவாக அமைந்திருக்கின்றன. இத்தனைக்கும் ரயில்வே ஊழியரான ஸ்ரீ கணேஷ் ராவ் அப்படியொன்றும் நுணுக்கம் வாய்ந்த விசேஷக் கருவிகளையோ உத்திகளையோ உபயோகப்படுத்திக் கொள்ளவில்லை. ஆயினும் புகைப்பட நிபுணர்களும் வியக்கும்வண்ணம், மூலத்தைவிடக் காப்பி சிறப்பாக அமைந்திருக்கிறது எனில் இது ஸ்ரீ கணேஷ் ராவின் அந்தரங்க சுத்தத்தையும், சிரத்தையையும் மெச்சி ஸ்வாமி புரிந்துள்ள அருள்தான். இந்நூலின் வாசகருக்கும் இவ்வாறு தமது அருளைத் தெரிவித்திருக்கிறார் எனலாம்.

ஃபோட்டோ அற்புதங்களில் இன்னொன்று: பாபா ஸூக்ஷ்மமாகப் பல ஸத் ஸங்கங்களில் எழுந்தருளுகிறார் அல்லவா? இவற்றில் கலந்து கொள்பவர்கள் ஏதோ ஒரு அடர்ந்த சாந்நித்தியத்தை உணர முடியுமேயன்றி பாபாவைப் பிரத்தியக்ஷமாகக் காண முடியாது. ஆனால் இப்படிச் சில ஸத் ஸங்கங்களின்போது எடுத்த படங்களிலோ ஸ்வாமியே தெள்ளத் தெளிய விழுந்திருக்கிறார்.

இதற்கு இன்னொரு புறம். சிலர் ஸ்வாமியோடு கூட இருக்கையில் புகைப்படம் எடுத்துக்கொள்வார்கள் — பிறகு அதனைத் தங்களுக்குப் பெருமை தேடிக்கொள்ளும் எண்ணத்தோடு. இப் புகைப்படங்களில் அவர் விழுவதே இல்லை. மற்றவர்களும்,

Koviloor Digital Library

சூழ்நிலையும் நன்றாகப் பதிந்திருக்கும்; பூர்ணரான ஸ்வாமி நின்ற இடமோ சூன்யமாக இருக்கும்!

* * *

சாதாரணமாக ஒரு குடும்பத்தில் பாபா புகுந்து பக்தி விளைவிக்கும்போது என்னென்ன மிரகிள்கள் நடக்கின்றன என்பதற்கு ஓர் உதாரணமாக ஸ்ரீ மஹாலிங்கையர் வீட்டுச் சம்பவங்களைப் பார்க்கலாம். எங்கெங்கோ உள்ளவருக்கு பாபா எப்படிப் புள்ளி வைத்துச் சேர்த்துக்கொள்கிறார் என்பதையும் இது காட்டுகிறது.

தற்போது அம்பத்தூர்வாசியாகி விட்ட ஸ்ரீ மஹாலிங்கையர் அப்போது பர்ன்பூரில் உத்தியோகமாக இருந்தார்.

இவர்களது குடும்ப வழக்கப்படி 1965—ம் ஆண்டு அக்ஷய திருதியை யன்று விநாயகருக்கு ருத்ராபிஷேகம் செய்ய ஏற்பாடு செய்தனர். துரதிருஷ்ட வசமாகப் பழங்கள் எதுவுமே கிடைக்கவில்லை. ஐயர், அவரது பத்தினி ஸ்ரீமதி அம்புலு அம்மாள் இருவரும் வெளியே சென்று திரும்பினர்.

வீட்டிலே ஒரு கூடை நிறையப் பழம் வைத்திருந்தது. கர்பூஜ், தர்பூஜ், மாம்பழம், கொடித்திராட்சை யாவும் கூடையில் நிரம்பி வழிந்தன. வீட்டில் பணியாள் மட்டும் இருக்கையில் யாரோ கொண்டு வந்து வைத்தனராம். 'எசமான்தான் அனுப்பியிருக்கவேண்டும்' என்று வேலைக்காரன் நினைத்திருக்கிறான்.

எவரேனும் லஞ்சமாக அனுப்பியிருக்கலாம் என்றெண்ணி அய்யர் அதைத் தொடக்கூடாது என்று கூறிவிட்டார். ஆனாலும் அம்புலுமாமி கேட்கவில்லை. அக்ஷய திருதியைக்குப் பிள்ளையாருக்கு ருத்ராபிஷேகம் செய்தபின் மற்ற நிவேதனங்களோடு இந்தப் பழங்களை 'ஸாலட்' மாதிரி செய்து விநியோகித்தே தீருவது என்று முடிவு செய்தார்.

பகல் ஒன்றரை மணிக்கு அவரும் அவரது சிநேகிதிகளும் பழங்களை நறுக்கத் தொடங்கினர். இரண்டு, மூன்று, நாலு என்று மணி ஒடிக்கொண்டேயிருந்தது. பழம் நறுக்கித் தீர்ந்தபாடில்லை. பாபா பர்த்தியில் ஒரு குடத்திலிருந்து பத்துக்குட விபூதியை வரவழைத்து அபிஷேகம் செய்வாரே, அதுபோல் அந்தக் கூடைப் பழம் நறுக்க நறுக்க அந்த வீட்டு அடுக்குகளை எல்லாம் நிரப்பியும் முடிந்த பாடில்லை. ஐந்து மணிக்குத்தான் அக்ஷயக்கூடை வற்றியது!

இதன் பின்னரே இவர்கள் பாபாவின் லீலைகளைப் பற்றி விசேஷமாகத் தெரிந்துகொண்டு, அவரிடம் ஈடுபட்டனர்.

தொடர்ந்து அவ்வீட்டில் நடந்த திருவிளையாடல்கள் பலப் பல. பூஜை அறையில் போடும் கோலம் S S S (ஸ்ரீ ஸத்ய

Koviloor Digital Library

ஸாயி) என்ற எழுத்துக்களாக மாறும். ஒரு வாரம் தரையில் 'ஸ்ரீராம' என்ற எழுத்துக்கள் தாமே தோன்றும்; அடுத்த வாரம் 'ஜயம்' என முடியும். எல்லாவற்றுக்கும் மகுடமாகத் தரையிலேயே (ஈர ஸிமென்டில் பதித்தாற்போல்) பாபாவின் திருவடித்தடம் தோன்றியது. பிறகு இவர்கள் வேறு பெரிய வீட்டுக்குச் செல்ல வேண்டி வந்தது. அப்போது பாபாவின் பாதத்தை விட்டுப் போகிறோமே என்று மாமிக்கு ரொம்பவும் தாபம் தான்! ஆனால்தேடிவந்த பாதம் இவர்களை விட்டுவிடுவதாக இல்லை. இவர்கள் வேறு வீடு சென்றதும், பாதமும் அங்கே வந்துவிட்டது — பழைய வீட்டில் மறைந்துவிட்டது!

இந்தச் சம்பவங்களை அய்யர் அடக்கமாக அமைதியாகச் சொல்வது ஓர் அழகு; மாமி வஞ்சனையில்லாத தம் பெரிய முகம் மேலும் பூரிக்கப் பரவசத்தோடு சொல்வது இன்னொரு அழகு. பாபாவின் லீலை நடப்பதாலேயே சிலருக்கு ஏற்படும் அஹங்கார மும், அதிகார தோரணையும் இவர்களுக்கு ஏற்படாததை விசேஷ மாகச் சொல்லவேண்டும். கூடை கூடையாக அருள் செய்யும் அப்பன் முதலில் அனுப்பிய பழக்கூடை இன்று இவர்களது பூஜையை அலங்கரிக்கிறது!

அநேகர் வீடுகளில் தெய்வப் படங்களில் முட்டு முட்டாக விபூதி, சொட்டுச் சொட்டாகத் தேன் ஆகியன தோன்றியே விபூதின் தேன் மனத்தில் அவர்களைத் தோய்த்திருக்கிறது. விக்கிரஹங்கள், சித்திரங்கள் முதலியனவும் தோன்றும். இவற்றை விடாமல் காட்டியே அம்பத்தூர் ஸ்ரீ கோபால கிருஷ்ணனின் குடும்பம் வியாதியிலும், இல்லாமையிலும் தவித்தபோது அவர்களை உருத்து விழாமல் உற்சாகமூட்டி, பிறகு உரிய காலம் வந்தபோது, அந்த ஆரோக்கியத்தையும் ஐசுவரியத்தையும் அருளியுள்ளார் நம் ஸ்வாமி.

கிருஷ்ண ஜயந்திக்குப் போடும் பாதம் போலப் பல வீடு களில் விபூதியாலேயே ஆன அடிச்சுவடுகள் தோன்றுவது சகஜம். அசாதாரணமாகக் காருக்குறிச்சியில் ஒரு வைதிகப் பாட்டியின் வீட்டில் மஞ்சளால் ஒரு பாதமும், குங்குமத்தால் ஒரு பாதமும் தோன்றின. இவற்றின் ஈரத் தடத்தை அம் மூதாட்டி ஒற்றி வைத்துக்கொண்டிருக்கிறார். (விபூதிச் சுவட்டை ஒற்றி வைத்துக் கொள்வதற்கில்லை என்பதாலேயே இப்படி விளையாடினார் போலும்!)

சமணத்தை வென்று விபூதியின் பெருமையை நிலைநாட்டி னார் ஞானசம்பந்தர். அவர் காலத் தேவை அப்படி! நம் விபூதி வர்ஷகருக்கோ சமணமும் மணக்கும். 1965 ஆகஸ்டில், சௌராஷ் டிரத்திலுள்ள நவஸாரியில் ஒரு ஜைனர் வீட்டில் விபூதி கொட்டத் தொடங்கியது. அதை அந்த வீட்டு மாற்றுப் பெண் இட்டுக் கொண்டவுடன் மாமனாரும் கணவரும் அவளை ஏசத் தொடங் கினர். "ஜைனர்களான நாம் விபூதி அணிவதாவது? நம் கடவுள்களோடு நில்லாமல் ஸத்ய ஸாயி பாபா படத்தை வீட்டில் வைத்திருப்பதே விபரீதத்துக்குத்தான்" என்று அவளைக் காய்ச் சினர்.

Koviloor Digital Library

உடனே அவர்களது பரம சொந்தத் தெய்வமான மஹாவீரரின் படத்திலிருந்து சமணர்களுக்கே உரிய மஞ்சளான சூர்ணம் பொல பொல எனப் பொழியத் தொடங்கியது.

இதன் பின் அக் குடும்பத்தில் அனைவரும் பெற்ற மத விசாலப் பான்மையைக் கவனிப்போமாயின் 'மிரகிள்' எதற்கு என்று கேட்கவே மாட்டோம். எத்தனை வாதப் பிரதிவாதத்தாலும் முடியாததை அற்புதச் செயலே சுலபத்தில் முடித்து விடுகிறது.

அவரவருக்கு ஏற்றதைப் போலவே அந்தந்தச் சமயத்துக்கு ஏற்றதை அருள்வார். ஷிர்டிபாபா பூஜையில் ஷிர்டியிலேயே கிடைக்கும் உதி, பேரிச்சம்பழம் முதலியவற்றைக் கொட்டுகிறார். நாராயணீய பாராயணம் நடக்கும் சமயத்தில் அதற்குப் பொருத்தமாக குருவாயூர் அபிஷேகத் தைலத்தைச் சிந்துகிறார். வேங்கடரமணன் ஸமாராதனையில் திருப்பதிப் பச்சைக் கர்ப்பூர ஸ்ரீபாத ரேணுவையே உதிர்க்கிறார். ஷஷ்டி விரதக்காரர்களுக்குப் பழனி பஞ்சாமிர்தத்தைப் பொழிகிறார். காருக்குறிச்சிப் பாட்டி பாகவதத்தில் குசேலோபாக்கியானம் பாராயணம் செய்தபோது பூஜை அறையில் அவலையே கொட்டியிருக்கிறார்!

படத்தின் கண்ணாடிகளிலிருந்து விபூதி, தேன் முதலியனவற்றை ஸ்வாமி அருள்வதற்கு சோமசுந்தரக் கடவுளே முன்னோடியாக இருந்திருக்கிறார். வேடன் ஒருவனுக்கு அவர் வாள் முதலிய படைக்கலங்களைக் கண்ணாடியின் வாயிலாக அளித்ததை மாணிக்க வாசகர்,

> தர்ப்பணமதனிற் சாந்தம்புத்தூர்
> விற்பொடு வேடற்கீந்த விளைவும்
>
> (தர்ப்பணம் - கண்ணாடி)

என்று திருவாசகத்தில் சிறப்பிக்கிறார்.

அடியார் ஒருவர் வீட்டில் ஸ்வாமி படத்தின் கண்ணாடிமேல் விபூதி பூத்திருப்பதைக் கண்டதும் அவர் அது விபூதி என்ற விவரம் தெரியாமல் துடைத்துவிட்டார். பிறகு ஸ்வாமி இப்படி விளையாடுவதுண்டு என்றறிந்ததும், "அடடா, பகவான் விபூதியைப் புரிந்துகொள்ளாமல் துடைத்துவிட்டோமே" என்று வருந்தினார். உடனே பகவான் மறுபடி விபூதி பூக்கச் செய்தார்—. கண்ணாடி மேல் அல்ல; கண்ணாடிக்கு உள்புறமே, நேராகத் தம் படத்தின் மீது. சட்டத்தைக் கழற்றினாலொழிய அடியார் இதை நிச்சயம் துடைக்க முடியாதுதானே?

* * *

ஷிர்டி பாபாவின் செயல்களில் பல அடியாருக்குப் புரியாமலே இருந்தன. அவற்றில் ஒன்று:

அக்னி குண்டத்தில் நீற்று விழும் உதியைப் பார்த்தபடியே அப்பாவன புருஷர் பாலனைப்போல் பாடுவார்:

Koviloor Digital Library

ரமதே ராம்! ராம்! ஆயோஜி, ஆயோஜி!
உதியோங்கி கோணியா லாயோஜி, லாயோஜி!

(ராமா! விளையாட்டுப்பிள்ளாய் ராமா! வா வா! கோணிப் பைகள் நிறைய உதி கொண்டுவா, கொண்டுவா!)

ஷிர்டிபாபாவிடம் லக்ஷக்கணக்கான மக்கள் திரண்டு வந்து விடவில்லை. ஒரு கணக்கிலேயே அவரிடம் வந்த அடியார்களுக்குக் கோணிக் கோணியாக விபூதிப் பிரஸாதம் தேவைப்படவில்லை தான். சின்ன ஹோல்ஸப்பை அளவு திருநீறே போதுமாயிருந்திருக்கும்.

ஆனாலும் ஏன் இப்படிப் பாடினார் என்ற புதிர் இந்தப் புது அவதாரத்தில்தான் அவிழ்கிறது.

பர்த்தி பாபா லக்ஷக்கணக்கானவருக்கல்லவா விபூதி சிருஷ்டித்து அருள்கிறார்? நேரில் போதாது என்று நவ கண்டங்களிலும் எத்தனை இல்லங்களில் உள்ள படங்களிலிருந்து திருநீற்றைக் கொட்டுகொட்டு என்று கொட்டுகிறார்! எல்லாவற்றுக்கும் மேலாக, அப்பாவி ஸாது போல் பாடிய ஷிர்டிக் கிழவனுருக்கே விஜயதசமி, சிவராத்ரி தினங்களில் குடம் குடமாக விபூதி அபிஷேகம் செய்கிறாரே! இதற்கெல்லாந்தான், அன்றே ஷிர்டியில் பாடி ஸ்டாக் செய்து வைத்துக்கொண்டு விட்டார் போலும்! சக்கரவர்த்தித் திருமகனான ஸ்ரீராமசந்திரன் இவருக்குப் பணியாளாக எத்தனை கோணிதான் சுமந்து வந்து முதுகு வலிக்கக் கொட்டினானோ?

தனி மனிதர் ஒருவருக்கே மூட்டை மூட்டையாக விபூதி கிடைத்தது ஒரு சுவையான விஷயம்:

அமெரிக்காவில் ஒஹாய் என்னுமிடத்தில் ''உலக அவஸ்தாலஜிக் கழகம்'' நடத்துகிறார் டாக்டர் பெனிட்டோ ரேயெஸ் என்பவர். 'அவஸ்தா' என்றால் வடமொழியில் மனநிலையைக் குறிக்கும். ஆத்மாபிவிருத்தியில் மனநிலைகள் எப்படிப் பரிணமிக்கின்றன என்று ஆராயும் இயலுக்கே ரேயெஸ் ''அவஸ்தாலஜி'' என்ற புது வார்த்தையைப் பெயராக இட்டிருக்கிறார். இவர் பாபாவிடம் வந்து தமது நிறுவனத்துக்கு ஆசி பெற்றிருக்கிறார். ''உன் பிரார்த்தனைகளை நீ எனக்கு வாய்விட்டுச் சொல்ல வேண்டுமென்பதோ எழுத வேண்டுமென்பதோ இல்லை. நீ நினைத்தாலே போதும், உடனே வேண்டுதல் நிறைவேறிவிடும்'' என்று இவருக்கு அபார வரமளித்தார் ஸ்வாமி.

1974 செப்டெம்பர் மாதத்தில் ஒரு தினம் காலை இவரும், இவரது காரியம் யாவிலும் கை கொடுக்கும் ஸ்ரீமதி ரேயெஸும் 'வாக்கிங்' சென்றனர். அப்போது இவர், ''பலர் வீடுகளில் ஸ்வாமியின் விபூதி உண்டாகியிருக்கிறதே! நம் வீட்டிலும் தோன்றக் கூடாதா?'' என்று நினைத்தார்.

Koviloor Digital Library

நினைத்தாலே போதும் என்றுதான் வரதன் சொல்லியிருக்கிறாரே!

இவர்கள் வீட்டுக்குத் திரும்பி வந்தால், அங்கே போதும் போதும் என்கிற அளவுக்கு விபூதி மழை பெய்திருந்தது!

வாசல் அறையின் தரை, கணப்பு முதலிய இடங்கள் முழுவதிலும் கால் வைக்க இடமின்றி விபூதி. ஆம், கோணிக் கோணியாகக் கொண்டுவந்து முகம் கோணாமல் கொட்டியிருக்கிறான் ஸ்ரீராமன்!

அதிசயத்தைப் பார்க்க அக்கம் பக்கம் முழுதும் வந்துவிட்டது.

வீட்டுக்காரரும் வந்தார். அவருக்கு வீட்டைப்பற்றிய கவலைதானே இருக்கும்? "வெளியில் தெரியாமலே வீடு உள்ளூறப் பற்றிக்கொண்டு எரிந்திருக்கிறதா? இல்லாவிட்டால் இத்தனை சாம்பல் எப்படி வரமுடியும்?'' என்று விசாரப்பட்டுக் கொண்டு ஃபயர் ஸர்வீஸ் நிபுணர்களை வரவழைத்தாராம்!

* * *

கணேஷ்புரியைச் சேர்ந்த பிரஸித்த யோகியான நித்யானந்தரின் சிஷ்யையான நியூயார்க் மாது ஒருத்தி ஸத்ய ஸாயியின் பரம பக்தையானாள். இவள் வீட்டில் பாபா, படங்களிலிருந்தெல்லாம் திருநீற்றை வாரிச் சொரிந்தார். அவை ஷெல்ஃபுகளின்மீது விழுந்ததால் அடிக்கடித் தட்டிச் சுத்தம் செய்ய வேண்டியிருந்தது. எனவே அவள் கணவரை 'ட்ரே'க்கள் வாங்கிவரச் சொல்லி, படங்களை அவற்றுக்குள் வைத்தாள் — விபூதி 'ட்ரே'க்குள்ளேயே விழட்டும் என்று. ஆனால் அப்பன் லீலா விபூதிக்கு இவள் கரை கட்ட முடியுமா? படங்களில் குப்பலாகப் பூத்த விபூதியெல்லாம் 'ட்ரே'யைத் தாண்டி எகிறி எகிறி வந்து ஷெல்ஃபின் மேலேயே விழுந்தன! ஐயன் குறும்பு இவளுக்கு ஷெல்ஃப் துடைக்கும் பிராரப்தத்தை நிலைப்படுத்தியது!

கர்நாடகத்தில் ஷிமோகாவிலுள்ள ஸிர்ஸியில் பிரசாந்தி தர்மோத்ஸவம் என்ற விழா கொண்டாடப்பட்டது. பாபா குறித்த பஜனை முதலான எல்லா ஸத் ஸங்கங்களிலும் அவர் 'அமர்வதற்கென' ஒரு நாற்காலி போடப்படுவது வழக்கமல்லவா? அநேக இடங்களில் இந்த நாற்காலியில் ஸ்வாமி சூக்ஷ்மத்தில் அமர்ந்து சென்றதற்கான அடையாளங்கள் காணப்படுவதுண்டு. இங்கே ஸிர்ஸியிலோ நாற்காலிமேல் போட்டிருந்த பட்டுத் துணியே இரண்டு பிரணவங்களாக வளைவு சுளிவுகளோடு உருட்டித் திரித்துக் கொண்டது. ஒரு பிரணவம் நாற்காலி முன்புறமும் மற்றது பின்புறமும் ஓரங்குல உயரத்துக்கு எழும்பி அனைவருக்கும் ஸ்பஷ்டமாகத் தரிசனம் தந்தன.

கல்கத்தாவில் ஒரு டாக்ஸியோட்டியின் வீட்டில் ஒவ்வொரு பஜனையின்போதும் பாபாவே, ஆண் பிரிவுக்கும் பெண் பிரிவுக்கும்

Koviloor Digital Library

இடையில் உள்ள நடைபாதை வழியாக ஸ்வாமியின் மையமான படத்தை நோக்கிச் சென்று மறைந்திருக்கிறார். பஜனைக்கு வந்த பலரும் இதைக் கண்டிருக்கிறார்கள். அங்கே சுவரில் விபூதியாலேயே பெரிதாக ஒரு கீதோபதேச சித்திரமும் உருவாயிற்று. இதில் இன்னொரு வேடிக்கை: குதிரையும், ரதமும், அர்ஜுனனும் எல்லாருடைய கண்களுக்கும் தெரிந்ததாம். கண்ணன் மட்டும் சிலருக்கே தெரிந்தானாம். ''உனக்கு திவ்ய திருஷ்டி வழங்கி என்னை பார்க்கச் செய்கிறேன்'' என்று சொன்ன கீதாசார்யன் சிலருக்கு மட்டுமே அப் பார்வை தந்து மற்றோரை ஏய்த்து விட்டான்!

சேலத்தில் ஓர் இல்லத்தில் தெய்வப்படத்தில் விபூதி விந்தையாக விளைந்தது: ''ஓம் நமோ நாராயணாய'', ''நானிருக்கப் பயமேன்?'' என்று தமிழ் எழுத்துக்களிலே இரு வாசகங்களும் விபூதியால் எழுதப்பட்டிருந்தன!

* * *

பெரும் இயற்கைச் சக்திகளின் மேல் இவருக்குள்ள ஆதிக்கம் சித்த புருஷர் எவருக்கும் இருக்க முடியுமா என்றுதான் தோன்றுகிறது. டிகெட் வனத்தில் நெருப்பு வெள்ளத்தை ஸ்வாமி தடுத்ததும், சித்ராவதி வெள்ளத்தை இருமுறை அடக்கியதும் வாசகர் மறந்திருக்க முடியாது. இன்னம் சில:

1966 டிஸம்பர் 21. கொல்லங்கோட்டில் ஸ்வாமி திறந்த வெளியில் உபந்நியாஸம் செய்கிறார். அது கொல்லங்கோடாகவா இருந்தது! கொண்டல் காடாக வானத்தில் மழைச் சூல் கனத்த கார்மேகங்கள் மண்டிக் கிடந்தன. அப்படியும் பெருங்கூட்டம் கூடிவிட்டது.

ஆனால் ஓரிரு தூறல்கள் விழ ஆரம்பித்ததும் கூட்டத்தில் ஒரு சலசலப்பு உண்டாயிற்று.

''பயப்பட வேண்டாம். எவரும் நகர வேண்டாம்'' என்று வெள்ளிமணியாக ஆணையிட்டார் ஸ்வாமி. ''இவை மழைத் துளிகள் அல்ல; ஆனந்தாமுதத் துளிகள்தாம். மழை வலுக்காது'' என்றார்.

மந்திரத்தில் கட்டுண்ட பணி நாகம்போல் மக்கள் திரள் கட்டுப்பட்டிருக்க, மேலே மேகத் திரளும் கட்டுப்பட்டே நின்றது.

பாபா ஒரு மணி நேரம் சொற்கொண்டலாகப் பேருரை நிகழ்த்தினார்.

கூட்டமெல்லாம் கலைந்து சிறிது போதுக்குப் பின்னரே மழை தொடங்கிற்று; கொட்டு கொட்டு என்று கொட்டிற்று.

மலையாளப் பத்திரிகைகள் யாவும் இவ் விந்தையைக் குறிப்பிட்டு எழுதின.

Koviloor Digital Library

அடைமழைக்குப் பெயரெடுத்த மெர்க்காராவில் பாபாவின் பிரசங்கம் தொடங்குகிறது. தொடுவானில் பந்து பந்தாகக் காளமேகங்கள் எழும்புகின்றன. ''இன்றைக்கு நான் பேச்சை முடித்து நீங்கள் எல்லோரும் வீடு திரும்பிப் பத்து நிமிடத்துக்கு அப்புறம்தான் மழை பெய்யும்'' என்றார் பாபா. நீண்ட உரையைத் தொடங்கினார். தொடுவான மேகமந்தை மேலும் மேலும் பரவி வந்தது. மழை மூட்டமும் கண்ணுக்குத் தெரிந்தது; கூட்டம் நடந்த இடத்திலிருந்து நாலே பர்லாங்கில் உள்ள மகாதேவ பேட்டில்கூட மழை கொட்டலாயிற்று. ஆயினும் அடுத்த ஒன்றரை மணி பாபா சொற்பொழிவை முடித்த வரையில், அதற்குப் பிறகும் கூட அரை மணி நேரம் மெர்க்காராவில் ஒரு தூறல் விழவில்லை.

பரமேசுவரன் ஒரு மெய்யடியார் உலர்த்தியிருந்த நெல்லுக்கு அருள்வேலியிட்டு, அதற்கு அப்பாலே மழையை நிறுத்தி வைத்துத் திருநெல்வேலியாக்கினான் என்று நெல்லைப் புராணம் சொல்கிறது. அது மெய்யாலுமே நடந்திருக்கக் கூடியதுதான் என்று இக் கலியில் ஸ்வாமி நிரூபணம் தருகிறார்.

பிரசாந்தி நிலயத்தின் இரு முக்கிய விழாக்களான நவராத்ரியும், ஸ்வாமி ஜயந்தியும் நல்ல மழைக் காலத்தில் வருபவையே. இவற்றின்போது பல்லாயிர மக்கள் திண்டாடாதபடி பாபா மழையை அடக்கி வைத்திருக்கும் அற்புதத்தை என்சொல்ல? கார் மேகக் கூட்டங்களைப் பார்த்து பாபா, ''போம்மா, போம்மா'' என்று கை ஆட்ட, அவை ஓட்டமாக ஓடிப் பிசுபிசுத்த விந்தை எத்தனையோ முறை நடந்துள்ளதாம்!

* * *

'மின்சாரமும் இன்சாரமும்' என்று முன்பே பாபா அளிக்கும் விபத்துக் காப்பில் சில பார்த்தோம். அதற்கு இதோ ''கொசிறு'':

திருவனந்தபுரத்தில் பாபா பேசிக்கொண்டேயிருக்கையில் திடுமென மின் விளக்குகள் மங்குகின்றன. பாபா கையைத் தூக்குகிறார். விளக்குகள் அணையாமல் அந்த மங்கல் நிலையிலேயே எரிகின்றன. ஆனால் பாபா பேசிய இடம் தவிர நகர் முழுதும் 'கரெண்ட்' போய், காரிருளில் முழுகியிருக்கிறது. இதற்கு பௌதிக விஞ்ஞான மாமேதையாலும் விளக்கம் கூற முடியுமா?

* * *

'அதற்கென ஒரு முகமாக அப்பியாசம் செய்தால் எவருமே பிறர் மனத்தில் ஓடும் எண்ணங்களை அறிந்து சொல்ல முடியும்; ஸாயி பாபா பலரது சிந்தனைகளை அப்படியே சொல்வது இப்படிப்பட்ட 'தாட்-ரீடிங்'கைச் சேர்ந்தது'தான் என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால் நாம் அவருக்கு முன்பு இருக்கும் சமயத்தில் நினைப்பதை, அல்லது நம் மனத்தில் முக்கியமாக உள்ள

Koviloor Digital Library

பிரச்னையை மட்டுமா அவர் ஒப்பிக்கிறார்? என்றே, எப்போதோ, அகஸ்மாத்தாக நாம் செய்த சின்னச் சின்னக் காரியங்கள், நினைத்த அற்ப எண்ணங்கள் இவற்றையும்கூட அல்லவா சகஜமாக (casual-ஆக)ச் சொல்கிறார்? நமக்கே மறந்துபோன விஷயங்களை அவர் நினைப்பூட்டுகிறார் என்னும்போது, நம் நினைவோட்டத்தையே அவர் படித்து ஒப்பித்துவிட்டு நாம் ஸர்வக்ஞர் என்றும், ஸர்வாந்தர்யாமி என்றும் கதைக்கிறார் என்று அறியாதோர் குறை கூறுவதை எப்படி ஏற்பது? இதற்கு எத்தனையோ உதாரணம் கூறலாம்.

நாம் முன்பே சந்தித்துள்ள அமெரிக்கப் பல்கலைக் கழகப் பேராசிரியர் ஸ்ரீ ஐய்.டி. தாதாச்சாரியின் மனைவி ஸ்ரீமதி மாதுரியிடம் பாபா தெலுங்கில் பேச ஆரம்பித்தார். தமிழில் பேசாமல் தெலுங்கில் பேசுகிறாரே என்ற ஆச்சரியம் அவருக்குத் தோன்றும் போதே பாபா, "ப்ரொத்தூருக்குப் பக்கத்தில் ஆந்திரக் கிராமத்தில்தானே பிறந்தாய்? உன்னிடம் ஏன் தெலுங்கில் பேசக் கூடாது?" என்றார்.

ஸ்ரீமதி மாதுரிக்குத் தாம் பிறந்த ஊரின் நினைவே மறந்து போயிருந்தது. ஸ்வாமிக்கு மறக்கவில்லை.

நம் விஷயங்களை அவர் சொல்வது மட்டுமில்லை. நம்மைப் பாதிக்கும் விதத்தில் பிறர் செய்யப் போவதையும்கூட ஸ்வாமி திர்க்கதிருஷ்டியில் கூறப் பிற்பாடு அப்படியே நடக்கிறது. இது எப்படி தாட்-ரீடிங்கில் சேரும்?

எங்கேயோ பம்பாய் டாடா ஆஸ்பத்திரியில் ஓர் ஆபரேஷன் புதன் கிழமையன்று செய்ய உத்தேசித்தால் இங்கே ஸ்வாமி அதைச் சொல்வதோடு, 'புதன் கிழமை ஆபரேஷன் நடக்காது; வியாழன்தான் நடக்கும்' என்கிறார். அவ்விதமே ஆகிறது.

முன்னாள் நீதிபதி ஸ்ரீ ஜி.கே. தாமோதர ராவ் அவர்கள் சர்வதேச லயன்ஸ் கிளப் மாநாட்டுக்காகச் சிகாகோவுக்குப் புறப் பட்டபோது பாபா அவரிடம் விபூதிப் பிரஸாதம் கொடுத்து, "கலிபோர்னியா பக்தர்களுக்கு விநியோகித்து வாருங்கள்" என்றார்.

ஸ்ரீ ஜி.கே.டி. மிகவும் வருத்தத்துடன், "ஸ்வாமி! கலிபோர்னியா வழியாகப் போகவோ வரவோ சர்க்காரில் எக்ஸ்சேஞ்ச் தரவில்லை. அட்லாண்டிக் வழியாகவேதான் போய்த் திரும்ப வேண்டும்" என்றார்.

"பரவாயில்லை. நீங்கள் கலிபோர்னியாவுக்குப் போவீர்கள்" என்று ஸ்வாமி காஷுவலாகச் சொல்லிப் பிரஸாதத்தை அளித்தார்.

என்ன விந்தை! பிற்பாடு ஜி.கே.டி. யின் சிகாகோ விஜயம் முடிந்து அவர் தாயகம் திரும்பும்போது, இவருக்காக ஏற்பாடாகி

Koviloor Digital Library

யிருந்த வான மார்க்க விமானிகள் ஸ்டிரைக் செய்து விட்டனர். அதனால் இவர் பஸிஃபிக் வழியாகவே இந்தியாவுக்கு அனுப்பப் பட்டார். மார்க்கத்தில் கலிஃபோர்னியா அடியார்களுக்குப் பிரஸாதத்தை ஈந்து உவகையுற்றார்!

இந்த ஸ்டிரைக் அன்றே தெரிந்துவிட்டது நம் முற்றறிவு மூர்த்திக்கு.

காலத்தையும் நுழைந்துக் காணக் கூடியவர், அல்லது காலா தீதர் என்பதற்கு இன்னம் எத்தனையோ உதாரணம் தரலாம்.

* * *

ஸத்யநாராயண ராஜு பிறப்பதற்குப் பல்லாண்டுகளுக்கு முன் அமிருதானந்தர் செய்த ஹடயோக சாதனையையும், அதில் ஏற்பட்ட கோளாறுகளையும் அவரைக் கண்ட மாத்திரத்தில் பாபா ஒப்பித்தாரே! இன்னம் எத்துணைபேருக்கு 70,80 ஆண்டு களுக்கு முன் நடந்தவற்றையும் புட்டு புட்டுச் சொல்லியிருக்கிறார்!

எத்தனை எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் நம் வாழ்வில் நடந்த சம்பவங்களை பாபா தேதி, மணி, நிமிஷம், அந்நிகழ்ச்சி நடந்த ஊர், தெரு, வீட்டு நம்பர் உள்படச் சொல்வதே அதிசயமெனில் — எதிர்காலத்தில் என்றோ நடக்கப் போவதையும் இப்படியே இடத்தில் அங்குலம் தவறாமல், நேரத்தில் விநாடி தவறாமல் அவர் கூறுவதற்கு எத்தனையோ பேர் சான்று தருகிறார்கள். இன்று பிரசாந்தி நிலயத்திலுள்ள டாக்டர் ஜயலக்ஷ்மி ஒருவர்போதுமே! ஜயலக்ஷ்மி கற்பனைகூடச் செய்து பாராத நாளில் பால பாபா அவரிடம், ''நீ அயல் நாடு போய் டாக்டர் பட்டம் பெற்று வரப் போகிறாய்!'' என்றார். சாத்தியமே இல்லை என்றுதான் அன்று ஜயலக்ஷ்மி கேலியாகச் சிரித்துக்கொண்டார். ஆனால் நடந்த தென்ன? பதின்மூன்றாண்டுகளுக்குப் பின் அவர் அந்நிய நாட்டுப் பட்டம் பெற்ற டாக்டர் ஜயலக்ஷ்மியாகப் புட்டபர்த்தியிலேயே பணிபுரிய வந்தபோது பாபா அந்தக் கேலிச் சிரிப்பைத் திருப்பினார்!

எதிர்காலம் சொன்னதோடு இன்னொன்றும் சேர்ந்த லீலை. புட்டபர்த்தியில் ஒரு சிறு மூர்த்தியாக உலவிக் கொண்டு, ஆறாயிரம் மைல்களுக்கப்பால் ஒரு பல்கலைக் கழக அட்மிஷனைக் கூட நிர்வகிக்கிறார் இத் திருவிளையாடலில்.

எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர் டி.ஜே. கதியாவிடம் ஸ்வாமி, ''நீ இங்கிலாண்டில் பெரிய டிகிரி வாங்கப் போறே. ஸ்வாமி அநுக்கிரகம் இருக்கு'' என்றார்.

இதன் மீது 1963 ஸெப்டெம்பரில் கதியா லண்டன் சென்றார். இந்தியா போன்ற உஷ்ண தேசங்களுக்கே உரிய மருத்துவம், சுகாதாரம் குறித்த கோர்ஸில் (Course in Tropical Medicine and Hygiene) சேரவே இவர் விரும்பினார்.

Koviloor Digital Library

துரதிருஷ்டவசமாக லண்டனிலும், அருகில் எந்தக் கல்லூரியிலும் ஸீட் கிடைக்கவில்லை. க்ளாஸ்கோ சென்றார். ஏமாற்றம் தொடர்ந்தது. எடின்பரோ அடைந்தார். அங்கும் இதே கதை தான். க்ளாஸ்கோவுக்குத் திரும்பினார்.

'அடாடா, கண்டம் விட்டுக் கண்டம் வந்து இப்படித் தோற்றோமே! நாமா தோற்றோம்? ஸ்வாமி அல்லவா அனுப்பினார்? அவருக்கும் தோல்வி உண்டா? இதென்ன சோதனை என்று வருந்தினார். இரவெல்லாம் 'ஸாயி, ஸாயி' என்று அழுதார்.

சோர்வில் கண்கள் தாமே சொருகிக் கொண்டன.

சொப்பனத்தில் வந்தான் அப்பன். "My boy!" ('என் பிள்ளாய்") என்று குழைய அழைத்தான் குழந்தையை. "நாளைக்கு சீக்கிரம் லிவர்பூலுக்குப் போ. அங்கே தான் உனக்கு ஸீட் ரிஸர்வ் பண்ணியிருக்கிறேன். நானே உன்னை யு.கே—க்கு அனுப்பிவிட்டு, எப்படிப் புறக்கணிப்பேன்?" என்று கூறி மறைந்தார் ஸ்வாமி.

புதுத் தெம்புடன் கதியா காலை ரயிலைப் பிடித்தார். அங்குள்ள உஷ்ணதேச மருத்துவக் கலாசாலையைத் தீர்வம் மோத விரைந்தார்.

கலாசாலையின் நிர்வாகச் செயலர் அவரிடம், "நீர் மகா அதிருஷ்டசாலி. இன்றுதான் அட்மிஷன் கடைசி நாள். போன மணிவரை ஒரு ஸீட் கூடக் காலி இல்லை. இதோ இப்போதுதான் இந்தக் கடிதம் வந்தது — அட்மிஷன் கிடைத்த ஒருவர் அதைக் கான்ஸல் செய்ததாக எழுதியிருக்கிறார். உமக்குத்தான் அந்த ஸீட். கங்க்ராசுலேஷன்" என்றார்.

குருவாரத்தில் அக் கலாசாலையில் சேர்ந்தார் டாக்டர் கதியா.

1975 ஏப்ரில் 2-ந் தேதி பாபா, பக்தர் கோஷ்டியோடு தில்லியிலிருந்து அமிருதஸரஸ் செல்கையில், "அமிருதஸரஸ் விமான நிலையத்தில் கட்டுக்கடங்காத கூட்டம் சேரப் போகிறது. போலீஸ்காரர்கள் திண்டாடப் போகிறார்கள். அதனால் ஸ்திரீகள் எவரும் விமானத்தை விட்டு இறங்கவே வேண்டாம். நான் விரைவாகப் பேச்சை முடித்துக்கொண்டு திரும்புகிறேன்" என்று முன்கூட்டியே சொன்னார்.

வாஸ்தவமாகவே அன்று அமிருதஸரஸ் விமான நிலையம் அமளோகப்பட்டதையும், 'ஸ்டாம்பீட்' ஏற்படாமல் பாபாவின் திவ்ய சக்தியே காத்ததையும் கண்ட சக பயணிகள் அவரிடம் முன்னிலும் கூடுதலான நம்பிக்கை பெற்றனர்.

பல்லாண்டுகளுக்கு முன் ஒருமுறை கேரள — தமிழக யாத்திரை செய்கையில் பாபா முன்கூட்டியே ஒவ்வோர் ஊரிலும் தமக்காகச் செய்துள்ள வரவேற்பு ஏற்பாடுகளைச் சொல்லி வந்தாராம். "சின்ன ஊரானாலும் சரண்டை ஜனங்களுக்கு அலாதி

Koviloor Digital Library

பக்தி! ஜோராக யானை ஊர்வலத்துக்கு ஏற்பாடு பண்ணியிருக்கா!'' என்றார். அப்படியே அங்கு அதி விமரிசையாக நடந்தது!

சுரண்டையிலிருந்து திருவனந்தபுரம் செல்கையில் குற்றாலம் டிராவலர்'ஸ் பங்களாவை இண்டு இடுக்கு விடாமல் வர்ணித்துக் கொண்டே போனார். எத்தனை அறைகள், எங்கெங்கே ஜன்னல், என்ன மாதிரியான விரிப்பு, சுற்றிலும் என்னென்ன செடிகள் உள்ளன என்பதையெல்லாம் ஒரு விவரம் விடாமல் கூறினார். அங்கு சென்று ஒவ்வொன்றும் அப்படியே இருக்கக் கண்டு அடியார்கள், 'தங்கள் கூடவே மானுடர் போல நடிக்கும் இந்த வியக்தி அஸாதாரண புருஷர்தாம்' என்று திடமாகக் கொண்டனர்.

சின்னச் சின்ன விவரங்களும்கூட அவரது முற்றறிவிலிருந்து தவறுவதில்லை. மங்களூரிலிருந்து புட்டபர்த்திக்கு வந்த ஒரு தையற்காரரிடம் அவர் மறுபடி ஊருக்குத் திரும்புவதற்கான செலவைத் தாமே கொடுப்பதாகக் கூறினார் ஸ்வாமி. 24 ரூபாய் செலவாகும். ஸ்வாமியே தம் செலவுக்குப் பணம் தருவதாகச் சொன்ன சந்தோஷச் செய்தியை அந்த பக்தர் அப்போது புட்ட பர்த்திக்கு வந்திருந்த ஹாலிவுட் திரைக் கதையாளரான ஸ்ரீ ஆர்னல்ட் ஷுல்மனிடம் கூறினார். ஷுல்மன் அப்போதே புறப்பட இருந்ததால் தையற்காரரிடம், ''உங்களுக்கு பாபா பணம் கொடுத்ததும் நீங்கள் எனக்கு எழுதுங்கள்'' என்று கூறி, அமெரிக்கத் தபாலுக்கான செலவை அந்த ஏழை ஏற்க வேண்டா மென்று தாமே அவருக்குப் பத்து ரூபாய் கொடுத்தார்.

ஷுல்மன் புறப்படுவதற்குள்ளேயே தையற்காரர் அவரிடம் ஓடி வந்தார். ''ஸ்வாமி ஸூரையா மூலம் 14 ரூபாய் கொடுத் தனுப்பி விட்டார்'' என்றார்.

''பதினாலா? நீங்கள் இருபத்து நாலு ரூபாய் பிடிக்கும் என்றீர்களே?'' என்றார் ஷுல்மன்.

''ஆமாம். நீங்கள் எனக்குப் பத்து ரூபாய் கொடுக்கவில்லையா? அப்படி நீங்கள் கொடுத்ததும், தாம் பணம் தந்ததை நான் கடிதத்தில் எழுத அவசியமிராது என்பதும் ஸ்வாமிக்குத் தெரியாதா? அதனால்தான் இந்தப் பத்து ரூபாயைக் கழித்துக் கொண்டு பதினாலு ரூபாய் அனுப்பியிருக்கிறார்!''

* * *

ஜயந்தியில் ஆயிரமாயிரவருக்குக் ''கிறு கிறு'' வென லட்டுகள் வழங்கிக்கொண்டிருக்கிறார் ஸ்வாமி. அவர்களின் முகத்தைக்கூட இவர் பார்த்ததாகத் தெரியவில்லை. பல கைகளுக்கு மீதாக இரு கைகள் இவரிடம் முந்தி வருகின்றன. இப்போதும் அவர் தலைதூக்கி அக்கைக்கு உரியவரின் முகத்தைப் பார்க்கவில்லை. ஆனாலும் சகஜமாக, ''இரண்டு வாட்டி வாங் கிண்டாச்சு'' என்று சொல்லிக்கொண்டே, அவ்விரு கைகளைப்

Koviloor Digital Library

புறக்கணித்து மற்றவற்றில் லாடுகளைப் போடுகிறார். ஒருவரே இரண்டாம் முறை லட்டு வாங்கி இவரை ஏமாற்ற எண்ணிய போது அப்படியே ஏமாந்ததாக நடித்திருக்கிறார். இப்போது அநாயாசமாக குட்டை உடைக்கிறார். மாயாவியின் பார்வையிலிருந்து எந்த அற்ப விஷயமும் தப்ப முடியாதுதான்.

* * *

"எங்கே இருவர் ரகசியம் பேசிக்கொண்டிருந்தாலும் அங்கே மூன்றாமவனாக இறைவன் நின்று கேட்டுக்கொண்டிருக்கிறான்" என்ற வேதவாக்கு (அதர்வம்-IV 16.2) ஐயனுக்கு அதி பொருத்தம். பேட்டி அறையில் இவ்வுண்மையைக் கண்டிருப்பவர் அனந்தம்.

மகா நாடகக் கலைஞர் அல்லவா? மாமியார் — மாற்றுப் பெண், புருஷன் — மனைவி ஆகியோர் வீட்டிலே போட்டுக்கொண்ட சண்டைகளை, அவர்களுக்குப் பேட்டி தரும்போது, எழுந்து எழுந்து 'டயலாகாக' அவர் மாறி மாறி ஒப்பிப்பது உண்டே! இந்தக் கலை அழகால் அவரது கண்டனமே கண்டிக்கப்படுவோருக்குத் தித்திக்கும். அதிலே பிறக்கும் அன்பே சண்டையை சௌஜன்யமாக மாற்றும். குறும்போ, மிரகிளோ, இது போன்ற குறும்பான மிரகிளோ எதுவானாலும் மக்களைத் திருத்துவதே அதன் நோக்கம் அல்லவா?

* * *

"ஓதாமே எல்லாம் உணர்ந்தான்," "கலைஞானம் கல்லாமே கற்பித்தான்" என்பதற்கெல்லாம் பாபாவைப் போல் இலக்கியமாக எவரே இருக்கமுடியும்? இவர் ஒரு நூலும் படித்து எவரும் பார்த்ததில்லை. ஆனால் காலஞ்சென்ற உயர் போலீஸ் அதிகாரி ஸ்ரீ வி. ராமசந்திரய்யர் எந்த மதக் கிரந்தங்களைப் பற்றிக் கேட்டாலும் பாபா சோனாமாரியாக, கங்காவாரியாக விளக்கம் தந்திருக்கிறார். குறிப்புப் பார்க்க ஒரு ஏடும் வைத்துக் கொள்ளாமலே, சரியாக இரண்டே மணி அவகாசத்தில் 'பிருஹதாரண்யக உபநிஷத்'ச் சுருக்கத்தை ஓர் அடித்தல், திருத்தல் இல்லாமல் "ஸநாதன ஸாரதி"க்காக எழுதிக்கொடுத்து ஸ்ரீ கஸ்தூரியை விலவிலக்கவும் விதிர் விதிர்க்கவும் வைத்திருக்கிறார். வேத புருஷ ஸப்தாஹ மகா யக்ஞத்தில் மாபெரும் பண்டிதர்களும் ஒப்பி ஏற்குமாறு மந்திர ஸ்வரங்களைத் திருத்திக் கொடுக்கிறார்.

அவர் அறியாத மொழியுண்டா? தனிப் பேட்டியில் அவரவர் மொழியில் அன்றோ பேசுகிறார்? கிழக்காப்பிரிக்காவில் நீக்ரோக்களின் மொழியான 'ஸ்வாஹிலி'யில்கூட அந்தரங்க பேட்டியின் போது பேசியிருக்கிறார் எனில் பார்த்துக் கொள்ளுங்களேன்!

ஸ்வாமியின் ஸர்வ வியாபக, ஸர்வக்ஞ சக்திகளுக்கு ஓர் எடுத்துக்காட்டு:

யோக போதகியான இந்திரா தேவி ஸ்வாமியிடம், "என்னிடம் பலர் வந்து மந்திரோபதேசம் கேட்கிறார்கள். எனக்கு

Koviloor Digital Library

மந்திரங்கள் தெரியாதென்றும், மந்திரம் தெரிந்தாலும் இன்னாருக்கு இன்ன மந்திரம் என்று கண்டு கொண்டு உபதேசித்தாலன்றிப் பயனில்லை என்றும் நான் சொல்கிறேன். ஆனால் அவர்கள் என்னைவிட மாட்டேன் என்கிறார்கள். மந்திரோபதேசம் என்பதைப் பற்றி அமெரிக்கர்கள் நிறையக் கேள்விப்படுவதால் இப்படி ஆசைப்படுகிறார்கள்'' என்றார்.

''சரி, நீ தான் அவர்களுக்கெல்லாம் உபதேசித்து விட்டுப் போயேன்'' என்றார் ஸ்வாமி சகஜமாக.

''நானா? உபதேசிப்பதா? எனக்கு என்ன மந்திரம் தெரியும்? யாருக்கு எந்த மந்திரம் ஏற்றது என்று நான் எங்கே கண்டேன்?''

''எல்லாருக்கும், எல்லாவற்றுக்கும் பொதுவாகத்தான் ஓம் இருக்கே! அதை உபதேசம் பண்ணு.''

''பாபா, நீங்கள் சொல்கிற மாதிரி நானும் நினைத்ததுண்டு. ஆனால் மனித சுபாவத்தைப் பாருங்கள். எந்தப் பிரச்னையுடன் வருபவருக்கும் நான் பிரணவம் ஒன்றையே சொன்னால் அவர்களுக்கு நம்பிக்கைப்பட மாட்டேன் என்கிறது. 'ஒவ்வொரு விதமான அநுக்ரஹத்துக்கும் தனி மந்திரம் இருக்கிறதாமே! அதை உபதேசம் பண்ணுங்கள்' என்கிறார்கள்.''

''வாஸ்தவம். ஹ்யூமன் நேச்சர் அப்படித்தான்'' என்றார், அநு—தாபமே உருவான பாபா.

தொடர்ந்து சர்வ சகஜமாக, ''அதனால் என்னம்மா? உன்னை யாராவது உபதேசம் கேட்க வந்தால் உடனே நீ என்னைக் கேள்'' என்றார்.

ஆம், இப்படி ஓர் அதிசயம் நடக்கிறது! இந்திராதேவியிடம் எவரேனும் மந்திரம் கோரினால், உடனே அவ்வம்மையார் பாபாவுக்குக் கோரிக்கை விடுகிறார். பதினாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள பாபா குறிப்பிட்ட மந்திரத்தைச் சொல்கிறார். அம்மாள் அதைத் தம்மிடம் வந்தவருக்கு உபதேசிக்கிறார்.

இவர்களில் சிலர் பிற்பாடு பாபாவை தரிசிக்க நேர்கிறது. அப்போது பாபா அதே மந்திரத்தைச் சொல்லி, ''நான் உனக்கு உபதேசம் பண்ணியது'' என்கிறார்.

இது அமெரிக்காவிலும் ஸ்வாமியின் வியாபகத்தை எடுத்தியம்புவதோடு, அவரது ஸர்வக்ஞத்வத்தால், எல்லா மந்திரங்களையும், அவை எவரெவருக்கு ஏற்றவை என்பதையும் அறிந்திருக்கிறார் என்றும் அழுத்தமாகக் காட்டுகிறதல்லவா?

மந்திர சாஸ்திரம் மட்டும்தானா? யோக, ஞான சாஸ்திரங்களில் பாபாவின் தெய்விக நைபுண்யத்தைப் பின்னால் பார்ப்போம்.

Koviloor Digital Library

ஸர்வக்ஞ, ஸர்வ வியாபக எல்லையாக இந்த நிகழ்ச்சியைப் பாருங்கள்:

புதுதில்லி இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தில் 'அக்ரி கல்சரல் ஃபிஸிக்ஸ்' பகுதிக்குத் தலைவரான டாக்டர் எஸ். தக்ஷிணாமூர்த்திக்கு விஞ்ஞான சம்பந்தமாகப் புரியாத புதிர்கள் தோன்றும் போதெல்லாம் கண்முன் பிரத்தியக்ஷமாக பாபா தோன்றுவாராம். (பாபாவைப் பற்றியே இவருக்குத் தெரியாத காலத்திலும்கூட.) உடனே இவருக்குப் புதிர் விளங்கிவிடுமாம்.

அங்காராவில் நடந்த சர்வதேச அணு ஏஜென்ஸி மாநாட்டுக்கு டாக்டர் தக்ஷிணாமூர்த்தி சென்றிருந்தார். சற்றும் எதிர்பாராத சூழ்நிலையில் இவரே அதற்குத் தலைமை தாங்கும்படியாகி விட்டது.

என்ன தலைமையுரை வழங்குவது என்று இவர் கலங்கிக் கொண்டே பாபாவுக்குப் பிரார்த்தித்தபடி பேச எழுந்தார்.

தத்க்ஷணமே, 'நாவிருக்கப் பயமேன்?' எனும் நாயகனின் தூக்கிய அபயஹஸ்தம் இவர் கண்ணெதிரே தெளிவாகத் தெரிந்தது. அந்தக் கையிலே இவர் உரையாற்றுவதற்கென அரிய குறிப்புக்களும் தெளிவாக எழுதியிருந்தது! அப்புறம் கேட்பானேன்? ஜமாய்த்து விட்டார் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி.

அணு விஞ்ஞானப் புதிர்களை அவிழ்ப்பதைவிட ஸம்ஸ்கிருத இலக்கணமான "அஷ்டாத்யாயி"யின் நெருடலான பகுதிகளை விளக்குவது கடினமான ஸாஹஸமாகும். ஆயின், நம் ஸர்வக்ஞருக்கு எதுதான் இயலாது? டாக்டர் தக்ஷிணாமூர்த்திக்குச் செய்தாற்போலவே அருணாசல் பிரதேசத்தைச் சேர்ந்த ஸ்ரீ லக்ஷ்மி குமாரின் வீட்டில் பலமுறை நள்ளிரவுகளில் அவருக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு, அஷ்டாத்யாயி முழுதையும் அவர் மிகக் குறுகிய காலத்தில் கரைத்துக் குடிக்குமாறு செய்திருக்கிறார்.

பௌதிக அதீதமாக 'வெளியே போய்'தான் அவர் இப்படிப் பேரறிவைக் காட்டுகிறார் என்பதில்லை. 'வாஸ்தவம்' எனப்படும் நடைமுறையிலும் அவரது ஸர்வக்ஞத்வம் ததும்பி வழிகிறது.

அத்யயனமே செய்யாதவர், கோணஸீமாவின் பிரக்யாதி பெற்ற வேத பண்டித சிம்மங்கள் வியந்து ஒப்புமவண்ணம் வேத மந்திரங்களின் சரியான உச்சாரணத்தைச் செப்பம் செய்திருக்கிறார் என்று கண்டோமல்லவா?

ஆரியல் பக்கமே தலைவைத்துப் படுக்காதவர், மா—மிஸம் வெளியினம் இவற்றிடை உள்ள நுண்ணிய வித்தியாசங்களைப் பற்றிச் சக்கை போடு போட்டதாக டாக்டர் கோகக் தெரிவிக்கிறார்.

Koviloor Digital Library

மருத்துவத்தின் அரிச்சுவடி படிக்காமலே வைரஸ் தொற்று நோய்கள் பற்றி விளாசியிருக்கிறார்.

தம்மிடம் வரும் நோயாளிகளின் உபாதையை விளக்குகை யிலோ மெடிகல் டயாக்னோஸிஸ் நிபுணராகத் தம்மைக் காட்டிக் கொள்கிறார்.

ஒருமுறை விவசாயத் துறை நிபுணர்களிடம் ஸ்வாமி, "வரம்பில்லாமல் குழாய்க் கிணறுகள் தோண்டிக்கொண்டே போனால் தண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்கிவிடலாம் என்று நீங்கள் நினைப்பது தப்பு. இப்படிச் செய்வதாலேயே பிற்பாடு பெரிய தட்டுப்பாடு உண்டாகும்" என்று சொன்னதோடு பூமிக்கு அடியே உள்ள நீர்ப் படுகைகள், ஊற்றுக் கண்கள் முதலியவற்றின் தன்மையை விளக்கியபோது அவர்கள் வியப்பில் மூழ்கிவிட்டனர்.

மிருகம் மனிதனாகப் பரிணமித்ததில் ஒரு நிலையில் வாலும், ரோமமும் இல்லாத, மரம் வாழ் குரங்கினம் தோன்றியது என்று பாபா கூறினார். மானுட இயல் (ஆந்த்ரோபாலஜி) பேராசிரியரோ இப்படிப்பட்ட பிராணி பற்றிக் கேள்விப்பட்டதில்லை. "இந்தக் குரங்கினத்தை மறுபடி வர்ணியுங்கள், ஸ்வாமீ" என்று அவர் கேட்டுக்கொள்ள, ஸ்வாமி, "வர்ணிப்பானேன்? இதோ பார்த்துக்கோ" என்று காற்றை அள்ளிப் பிடித்தார். அந்த அபூர்வ குரங்கின் பொம்மையொன்று அவர் கையில் இருந்தது!

இதிலே ஸர்வக்ருத்வம் ஒருபுறம் இருக்கட்டும். எவருமே அறிந்திராத இக் குரங்கினத்துக்கு ஏற்கெனவே பொம்மை இருக்கவே முடியாதல்லவா? எனவே இது 'கடத்து' அல்ல, சிருஷ்டியே என்பதில் சற்றும் ஐயம் இல்லைதானே?

தொழிலகங்களுக்கு பாபா சென்று மேற்பார்வையிடுகையில் லேத் முதலான சகல இயந்திரங்களின் இயக்கமும் அவருக்குத் தெரியும் என்பது புலனாகும்.

* * *

வேறிடத்தே உள்ள பொருளைத் தம்மிடத்தே வரவழைக்கும் 'டெலி-கைனெஸி'ஸில் பாபாவின் வல்லமையையும், இத் தொலைக் கடத்தில் அவர் கடைப்பிடிக்கும் பரம தர்ம நியாயத்தையும் எட்டாம் அத்தியாயத்தில் கண்டிருக்கிறோம்.

ஆதியில் கன்யாகுமரியின் நாசியில் மிளிர்ந்து, கடலில் செல்லும் நாவாய்களையும் கரைக்கு இழுத்த மகாப் பிரகாசம் பொருந்திய மூக்குத்தியையே பாபா, கன்யாகுமரி கடற்கரையில் "வரவழைத்தார்." அனைவர் கண்களும் அவ்வொளியில் கூசின. அதை அது இருக்கவேண்டிய இடத்துக்கே (அவ்விடம் அவரொருவருக்குத்தான் தெரியும்) திருப்பியும் விட்டார்.

ஏதோ ஒரு க்ஷேத்திரத்தில், அந்தரத்தே தொங்கும் ஆகாச லிங்கம் இருப்பதாகப் பேச்சு வந்தபோது பாபா தாம்

Koviloor Digital Library

இருந்த இடத்திலேயே அதை வரவழைத்தார். அது ஓர் இரும்பு லிங்கம். அது அந்தரத்தில் தொங்குவதன் அந்தரங்கத்தையும் பாபா அவிழ்த்து விட்டார். "இந்த லிங்கத்துக்கு மேலேயும், கீழேயும் பிறர் கண்களுக்குத் தெரியாமல் இரண்டு காந்தக் கற்கள் உள்ளன. அவற்றில் ஒன்று இந்த லிங்கத்தை மேற்புறமும், மற்றது கீழ்ப்புறமுமாக ஆகர்ஷிப்பதால்தான், இது இரண்டுக்கும் மத்தியில் நட்ட நடு வெளியில் தொங்குகிறது" என்றார்.

உடனே லிங்கத்தை யதா ஸ்தானத்துக்கு அனுப்பியும் விட்டார்.

இவை புது சிருஷ்டியல்ல. ஏற்கெனவே உள்ளதை வரவழைக்கும் 'அப்போர்ட்'தான். பாபாவின் தலைசிறந்த இரு 'அப்போர்ட்'கள் பதரி நாதத்தில் ஆதி சங்கரர் பிரதிஷ்டித்த 'நேத்ர லிங்க'த்தை ஒரு சில மணிகளுக்கு வெளிக் கொணர்ந்ததும், ஸோமநாத புரத்தில் மூல ஜோதிர்லிங்கத்தை நிரந்தரமாக வெளிப்படுத்தியதுமாகும். இவற்றைப் பிற்பாடு சற்று விரிவாகவே பார்ப்போம்.

* * *

வெறும் சங்கற்பத்தாலேயே சிருஷ்டிக்காமல், தேவ சக்திகளைத் தொழிலாளிகளாகக் கொண்டு அவற்றின் மூலம் சிருஷ்டிப்பது, அல்லது பொருள்களைக் கொண்டு வரச் செய்வது 'பால்டர்ஜிஸ்ட்' எனப்படும். தாம் சில சமயங்களில் இவ்வித 'பால்டர்ஜிஸ்ட்' செய்வது போலத் தொனிக்கவும் பாபா பேசியிருக்கிறார்.

உதாரணமாக, ஒரு கோகுலாஷ்டமியின்போது சென்னை ஹநுமந்தராவ் வீட்டில் பாபா, "தேவர்கள் இப்போது எனக்கு நைவேத்தியம் எடுத்து வரப் போகிறார்கள்" என்றே வெளிப்படக் கூறி, தலைக்கு மேல் கைகளைத் தூக்கினார். உடனே அக் கரங்களில் ஒரு பெரிய கண்ணாடிப் பேழை வந்திறங்கியது. அதில் நவ நவமான பணியாரங்கள் மணம் வீச நிறைந்திருந்தன!

இன்னொரு முறை பாபா சித்ராவதி மணலை அளையலானார். உள்ளிருந்து மண்ணைத் துளைத்துக்கொண்டு முதலில் முகுடம், பிறகு சிரம், அதன் பின் உடல், கால் என ஸ்ரீராம பட்டாபிஷேக விக்கிரஹங்கள் ஒவ்வொன்றாக வெளிப்பட்டன. அனல் வீசும் அப் பதுமைகளை பாபா அலாக்காகக் கைக் கொப்பளிக்காமலே எடுத்தெடுத்து அப்பால் போட்டார், "என் தேவத் தொழிலாளர்கள் இப்போதுதான் தங்கள் ஊது உலையில் இவற்றை வடித்து முடித்தனர்" என்றே வியக்தமாக விளக்கினார்!

இன்னோர் உதாரணம்: அத்தியந்த பக்தரான காலஞ்சென்ற வேங்கடகிரிராஜாவின் குடும்பத்தோடு ஸ்வாமி பிரயாணம் செய்துகொண்டிருந்தார். கைவல்ய நதிக்கரையில் காரை நிறுத்திக் கீழிறங்கினார்.

Koviloor Digital Library

பாபா சட்டென்று கஃப்னியின் கையைத் தமது முழங்கை வரை தள்ளிவிட்டுக் கொண்டு மணலைத் தோண்டலானார். புவிக்குள்ளிருந்து ரம்பத்தால் அறுப்பதுபோன்ற ஓசை கேட்டது.

''கைலாஸத்தில் சரக்குத் தயாராகிறது'' என்று ரத்தினச் சுருக்கமாகச் சொன்னார் ஸ்வாமி.

கையை வெளியே எடுத்தார்.

குபீரென்று ஒரு நீலப் பேரொளி உள்ளிருந்து எழுந்தது. இருபதடி விட்டத்துக்கு அவ்வொளி வெள்ளம் பாய்ந்தது. அதே சமயம் ஸ்வாமியின் கையில் எட்டங்குல நீளமுள்ள சுத்த வெண் பளிங்காலான ஸீதாராம விக்கிரஹங்கள் ''வந்திருந்தன!''

கைலாஸத்திலிருந்து வந்ததற்கேற்பவே ராமன் தனது நீல வண்ணத்தை விடுத்து, சிவபெருமானின் வெண்மையைப் பெற்றனனோ?

ராணியிடம் விக்கிரஹத்தை நீட்டினார் பாபா. ''பட்டு வஸ்திரத்தில் சுற்றி மூடி வைத்திருந்து, நாளைக்குப் பிரித்துப் பாருங்கள்'' என்றார்.

அவ்விதமே செய்யப்பட்டது.

மறுநாள் பட்டைப் பிரித்தபோது விக்கிரஹம் நீல மேக சியாமளமாகவே மாறியிருந்தது!

இங்கும் தமது சங்கற்ப சிருஷ்டி என்னுமல் ''கைலாஸத்தில் தயாராகிறது'' என்றதால் பால்டர்ஜீஸ்ட் தொனிக்கிறது.

இன்னொன்றையும் இங்கு கூற வேண்டும். தேவ சக்திகளைப் போலவே குட்டிச்சாத்தான் முதலான கெட்ட சக்திகளைக் கொண்டும் ஸித்தர்களும், மாந்திரீகர்களும் செயலாற்றுவது உண்டுதான். ஆனால் இது அந்த ஸித்தர்களுக்கே, மாந்திரீகர் களுக்கே, ஆபத்துக்கிடமானது தான். இத் தீய சக்திகள் தங்கள் கெட்ட இச்சைகளை இவர்கள் பூர்த்தி செய்யாவிடில், பலி முதலியன தராவிடில் இவர்களையே பழிவாங்கி விடும். குட்டிச் சாத்தான், யட்சிணி போன்றவர்களால் காரியம் சாதித்துக்கொள்வோர் அவ்வப்போது தலைமறைவாக இருந்து சில கொடூர, ஆபாச சாதனைகளைச் செய்வதும், உயிர்க் காவு முதலியன கொடுப்பதும் தவிர்க்க முடியாததாகும். நம் பகவான் விஷயத்தில் பக்தர்கள் இப்படிப்பட்ட எண்ணத்தை சொப்பனத்திலும் நினைத்துவிடலாகாது. அநேக ஸித்தர்கள், 'பாபா பூத—ப்ரேத—பைசாச—யக்ஷ கணங்களைத் துணைகொண்டு அற்புதம் செய்கிறார்' என்று புரளி செய்வதால், இதை பக்தர் களுக்கு அடிக்கோடிட்டு வற்புறுத்த வேண்டியதாகிறது.

தீய சக்திகளைக் கொண்டு ஏதோ சில நல்ல காரியங்களையும் செய்யலாமாயினும், அவற்றைத் திருப்திப்படுத்துவதற்காக

"black magic" என்கிற துர் மாந்திரிகங்களையும் செய்தேயாக வேண்டியிருக்கும். பாபாவின் அனந்த கோடி அற்புதங்களில் அன்பும், ஆறுதலும், அழகும், கலா நூதனமும், பாவனமுமே உள்ளனவே அன்றி, துர்மாந்திரிகம் எனத்தக்கதாக எள்ளத்தனையேனும் கேள்விப்பட்டிருக்கிறோமா? கிடையவே கிடையாது. சங்கற்பத்தாலேயே எதையும் ஆற்றக்கூடிய பாபா விளையாட்டாகவே தேவர்களைக் கொண்டுமட்டும் சில சமயங்களில் அற்புதம் புரிகிறார். இதில் black magic என்பதன் கரும் சாயை லவலேசமும் கிடையாது. இது வெள்ளையிலும் வெள்ளையான 'whitest magic'!

பரம உன்னதமான தெய்விக சக்தி வாய்ந்தவரிடம் தீய சக்திகளும், தாமாகவே அடிபணிந்து, அவர்கள் காலால் இட்ட பணியைத் தலையால் செய்யக்கூடும். கைலாசாதிபதியான பரமேச்வரனிடம் பூத கணங்கள் இப்படித்தான் அடங்கிக் கிடக்கின்றன. ஒருவேளை தமது இப்பேர்ப்பட்ட பரமேச்வரத்தைக் குறிக்கவே பாபா, கைலாஸத்தில் சரக்கு தயாராவதாகக் கூறியிருக்கலாம்.

எப்படியாயினும், தீய சக்திகளும்கூட மஹாபுருஷர்களிடம் நடுங்கி, ஒடுங்கி உள்ளனவே அன்றி, இவர்களிடமிருந்து தாங்கள் எதையும் மிரட்டிப் பெறுவதில்லை. இதனால் பாபா, ஸ்ரீகாஞ்சிப் பெரியவாள், விவேகாநந்தர், போதேந்திராள் போன்றவர்களிடம் பேய் பிசாசுகள் நடுங்கி, தாம் பிடித்தாட்டுபவர்களை விட்டு ஓட்டம் பிடிக்கின்றன.

பாபா பக்தர்கள் கவனிக்க வேண்டிய விஷயம்: இந்தக் கீழ்த்தர சக்திகளை வசியம் செய்யும் மாந்திரிகர்களின் மகா பெரிய விரோதி காயத்ரீ மந்திரம்தான். இவர்கள் எப்படியாவது தமது சிஷ்யர்களின் காயத்ரீ உபாஸனையை நலிவிக்கவே முயல்வார்கள். ஆனால் நம் ஸ்வாமி! அவரைப் போல் காயத்ரியில் மக்களை ஊக்குவிக்கும் மகான் அபூர்வமே. அவர் புரிந்துள்ள அளவு பிரம்மோபதேசம் (காயத்ரீ உபதேசம்) வேறெவரேனும் செய்திருப்பாரா என்பது சந்தேகம்தான். காயத்ரீ உபாஸகர்கள் அவரை வெகு கெட்டியாகப் பற்ற முடிவது பிரத்யக்ஷ அநுபவம். அவரே காயத்ரீ தான்! எனவே, பக்தர்காள், பிறர் பரப்பும் வதந்திகளை நம்பி நம் பரம தெய்விகப் பிரபுவை ஒரு குட்டிச் சாத்தான் படைத்தலைவராக எண்ணிவிடாதீர்கள்!

நம்மை உள்ளும் புறமும் பிடித்தாட்டும் குட்டிச் சாத்தான்கள், பெருத்தச் சாத்தான்கள் யாவரையும் விரட்டவே வந்துள்ள பிரேமாவதாரம் அவர் என்பதில் தினையளவும் ஐயுறாதீர்கள்.

உயர்தர சக்திகளுக்கும், கீழ்த்தர சக்திகளுக்கும் இன்னொரு வித்தியாசம்: கீழ்த்தர சக்திகளால் பித்தளை, இரும்பு, உயர்ந்தால் செம்பு. வெகு அபூர்வமாகவே வெள்ளி முதலியவற்றாலான பண்டங்களைப் படைக்க முடியும். இப்படியே கண்ணாடி மணிகளையே அவற்றால் படைக்க இயலும். உத்தமமான சக்தி

Koviloor Digital Library

களால்தான் வெள்ளி, பொன், வைரம் முதலான நவ மணிகள் ஆகியவற்றில் பொருட்கள் தயாரிக்க இயலும். மற்ற ஸித்தர்கள் அபூர்வமாகவே தங்கத்திலும், நவரத்தினத்திலும் பரிசுகள் தருவிக்க முடிகிறது. ஸத்யஸாயியோ பெரிய பெரிய ஜுவெல்லர்களும் தோற்று விடுமளவுக்குத் தங்க, நவரத்ன ஆபரணங்களும் விக்கிரஹங்களும் வழங்கி வருகிறார். இதுவும் தூய தேவ சக்தியின் அடையாளமே.

இன்னோர் அடையாளம்: ஆவி முதலானவற்றைக் கைக்குள் போட்டுக்கொண்டுள்ள மாந்திரிகர்கள் அக்னியைப் பெருமளவில் விலக்குவர். ஆனால் பாபாவோ பக்கத்தே இருந்து வேதப் பெரு வேள்வி நடத்தி வானெட்ட அக்னி குண்டம் வளர்க்கிறார். பாபாவே சுப்ரம்மண்யமான அக்னியானதால் அவர் பெயரைச் சொல்லிக் கிழித்தாலே ஈரத் தீக்குச்சியும் பற்றி விடுகிறது! இதுபோன்ற சிறு விஷயங்களும் விஷமப் பிரசாரத்தை எரித்து அவரது சுத்த தேவத்வத்தை நிலைநாட்டப் புரியவைக்க உதவுகின்றன.

★

பாபா அப்போர்ட்டும் பால்டர்ஜீஸ்ட்டும் மட்டும் செய்பவரல்ல. தமது சங்கற்ப மாத்திரத்திலேயே சிருஷ்டிக்க வல்லவர் என்பதற்குச் சான்றுகள் அனந்தம். உலகில் எங்குமே கிடைக்க முடியாத பலவற்றை பாபா தருகிறார் என்பதை இனி பார்ப்போம். இவை நிச்சயமாக 'அப்போர்ட்'டில் வர முடியாதவை. ரம்ப அறுப்பு, ஊது உலைச் சூடு முதலியன இல்லாமலே பாபா நினைத்த மாத்திரத்தில் இவை முளைப்பதால் இவை தேவர்களின் துணைகொண்டு செய்த சிருஷ்டியும் அல்ல — அவரது சொந்த சங்கற்ப சிருஷ்டியேதான்.

சிருஷ்டி என்பது வாஸ்தவத்திலேயே அசாதாரண ஆற்றலைக் காட்டுவதுதான். எண்ணமே ஸ்தூலப் பொருளாவதென்றால் அது சாமானிய விஷயமா என்ன? முகூர்த்த காலமே இருந்து மறைந்துவிடும் சிருஷ்டிகளைச் செய்யும் ஸித்தர் பலர் உள்ளனர். ஒரு பண்டத்தை அணு அலைகளாக டீ மெட்டீரியலைஸ் செய்து, கடத்தி வந்து, அந்த அலைகளை நிரந்தரமாகவே மறுபடியும் பொருளாகப் பூட்டவல்ல ஸித்தர்களும் உள்ளனர். ஆனால் சங்கற்ப மாத்திரத்தில் பாபாவைப் போல் எண்ணிறந்த நிரந்தர சிருஷ்டிகளைச் செய்த வேறெவரைப் பற்றியும் இந் நூலாசிரியர் கேள்விப்படவில்லை.

பாபா 'அப்போர்ட்'டும் செய்வதால் சிலர் யோசியாமல் அவரது சிருஷ்டியையும் தொலைக் கடத்துத்தான் என்று கூறி அடியாரைக் குழப்புகின்றனர். பக்தர்கள் சிறிது சிந்தித்தாலும் தெளிவர்.

உதாரணமாக,

1970 மே 15-ந் தேதி.

Koviloor Digital Library

துவாரகை யருகே கடற்கரையில் பாபா அடியார்களோடு அளவளாவுகிறார். கை அலை அலையாக அளைகிறது மாதவன் புரண்ட மணலை.

மணலை எடுத்தெடுத்து ஒரு முழ உயரத்துக்குக் குவித்தார் ஸ்வாமி, குழந்தையாக. அந்தக் கூம்பின் தலையைத் தட்டிச் சமன் செய்தார். அங்கே மூன்று கோணலான ஒரு கோட்டை வரைந்தார். கோட்டு உச்சியில் ஒரு வட்டம் போட்டார். வட்டத்தின் முடிவில் ஒரு முக்கோணம் போட்டார். வட்டத்தின் நடுவே ஒரு சிறு கோடு வரைந்தார்.

“ரெடி. ஆயிடுத்து” என்று பச்சைக் குழந்தையாகச் சொல்லிக்கொண்டே மண் கூம்புக்குள் கைவிட்டு எடுத்தார்— சொக்கப் பொன்னாலான கண்ணன் விக்கிரஹத்தை.

மூன்று—கோணல் கோடானது மூன்றாக வளைந்து நிற்கும் திரிபங்கி நர்த்தனனின் உடலாகி விட்டது! உச்சி வட்டம் அவனது வதனமாகவும், முக்கோணம் மயிற் பீலியாகவும், குறுக்குச் சிறுகோடு குழலாகவும் உருவெடுத்துவிட்டன! பதினைந்து அங்குல நீளமாக்கும் அந்தப் பத்தரைமாற்றுத் தங்கச் சிலை!

விக்கிரஹத்தை ஜாம் நகர் மகாராணிக்கு ஈந்துவிட்டார் பகவான்.

‘கடத்தல்’ என்கிறார்களே, வஸ்திசாக ஒன்றேகால் அடி உயரமுள்ள பதுமை எனில் அது எத்தனை பவுன் இருக்கும்? இத்தனை ‘பவுன்’களை எங்கிருந்து கடத்த முடியும்? இதற்கான ஒரு பெருந் தங்கப் பாளம் களவு போயிருந்தால் எவராவது கண்டுபிடித்திருப்பார்களே! அப்படியின்றி, எங்கோ சுரங்கத்திலுள்ள துவார்க்கட் கல்களின் தங்க ரேக்குகளை எல்லாம் இத்தனை பவுன்களாக பாபா சில கணங்களில் திரட்டி, அதிலிருந்து நுனி வரை வேலைப்பாடுகள் அமைந்த விக்கிரஹமாகவும் அச் சில நொடிகளுக்குள்ளேயே ஆக்கினார் எனில், ஸ்ரீ கஸ்தூரி கூறுவது போல், இந்த அற்புத ‘அப்போர்ட்’டைவிட நவீன சிருஷ்டியே விசித்ரமானது என்று கொள்ளலாம்தானே?

மேற்படி ஸ்வர்ண விக்கிரஹத்தைத் தங்கக் கட்டுப்பாடு. அல்லது புதையல் சட்டத்தின் கீழ் சர்க்காரே ஆர்ஜிதம் செய்து கொள்ளவில்லை எனில், அது சிருஷ்டி என்பதற்கு அவ்வளவு முகாந்தரம் இருந்ததே காரணமன்றோ?

* * *

அப்பப்பா! என்னென்ன அற்புத சிருஷ்டிகள்! உடுமலைப் பேட்டை பிரபல நூற்பாலை அதிபரான காமத்தென்ற ஸ்ரீ பி.டி. செல்லஸ்வாமி நாயுடு சித்ராவதிக் கரையில் தமது பல் செட்டைக் கழற்றி வைத்துவிட்டு நீராடுகிறார். இவர் குளித்து வரும்போது, ஒரு கல் உருண்டு விழுந்து அந்தப் பல் செட் பொடியாகிவிட்டது.

Koviloor Digital Library

பிரசாந்தி நிலயத்துள் தம் விடுதிக்குத் திரும்பிய ஜி.டி. கே-க்குப் பலர் காணப் பல்லிழந்த கோலத்தில் பாபாவிடம் போகக் கூட வெட்கம்!

பாபாவா விடுவார்? இவரைக் கூப்பிட்டனுப்பி விட்டார்.

கையைச் சுழற்றினார்.

அட, பல் ஸெட் அல்லவா வந்து விட்டது! அதுவும் அங்கே நொறுங்கிப் போன அதே பல் ஸெட் புத்துயிர் பெற்று வந்திருக்கிறது! அதே பல் ஸெட் தான் என்று நிரூபிக்கும் பொருட்டு, அதில் ஒரு பல் மட்டும் சற்று மூளியாக இருக்கிறது! ஆம், ஜி.டி.கே. பொத்திப் பொத்திக் காப்பாற்றியும் அந்த ஸெட்டில் ஒரு பல் சற்றுப் பழுதாகித்தான் இருந்தது தூள் தூளானது புத்துருப் பெற்ற அதிசயத்தில் இன்னோர் அதிசயமாக பழைய மூளிமட்டும் மூளியாகவே இருந்து விட்டது!

இங்கே ஸ்வாமி நிச்சயம் 'அப்போர்ட்' செய்யவில்லை. சித்ராவதிக் கரையில்தான் பழைய 'டெஞ்சர்' தூள் தூளாகி விட்டதே! புது சிருஷ்டியிலேயேதான் பழையதன் பொக்கை போறைகளையும் உண்டாக்கி விட்டார்.

எத்தனையோ அளவெடுத்துச் செய்ய வேண்டிய பல்வரிசை ஐயன் கைவரிசையில் கணத்தே முளைத்தது.

எத்தனையோ 'டெஸ்ட்' செய்து, தயாரிக்க வேண்டிய மூக்குக் கண்ணாடியும் ஐயனின் விந்தைப் படைப்புக்கு விலக்கல்ல.

ஓர் அம்மாள் மூக்குக் கண்ணாடி எடுத்துக்கொள்ளாமலே புட்டபர்த்திக்கு வந்து விட்டார். சித்ராவதி தீரத்தில் 'ஹாட்டி' அடித்துக்கொண்டிருந்தார் ஸ்வாமி. எட்டத்தில் இருந்த அம்மாளுக்கு அந்தத் தெய்வ முகமே தெளிவாகத் தெரியவில்லை. துக்கம் துக்கமாக வந்தது.

''அம்மா, இங்கே வந்து இதை எடுத்துக்கோ!'' என்று குழந்தையாக அழைத்தார் ஸ்வாமி.

ஸ்வாமி மண்ணில் ஒரு மூக்குக் கண்ணாடி வரைந்திருந்தார். அதைக் காட்டித்தான், ''இதை எடுத்துக்கோ'' என்றார்.

அவர் கேலி செய்கிறார் என்று நினைத்த அம்மாள், பேசாமலே நின்றார்.

''என்ன, நான் சொல்றேன், பேசாமல் இருக்கியே..!..ம்'' என்று மிரட்டினார் பாபா.

அவள் மண் ஓவியத்தைத் தொடப் புத்தம் புது மூக்குக் கண்ணாடி ஒன்று அவள் கைக்கு வந்தது! வியப்போடு அதை

Koviloor Digital Library

அணிந்துகொண்டார். அவள் வீட்டிலே வைத்து வந்த கன்றுகுட்டியைவிட இன்னும் சரியாக இது பொருந்தியதோடு, அதைவிடப் பளிச்சென்றும் தெரிந்ததாம்!

அன்புக் காரியங்களில் இருவகை உண்டு — நடைமுறை வாழ்வில் உபயோகமாகிறவை (utility உள்ளவை); இப்படி உபயோகம் சொல்லத் தெரியாவிட்டாலும் உள்ளே புகுந்து புனித இன்பம் பயப்பவை என்று. பல்செட், மூக்குக் கண்ணாடி, நிலப்பட்டம், வழிபடுவதற்கான சித்திரம் — விக்கிரகம் முதலிய 'யுடிலிடி'ப் பொருள்களோடு, வெறும் விநோதத்தாலேயே மனத்துள் புகுந்து மகா மகிழ்ச்சி தரும் பொருட்களையும் ஸ்வாமி தமது அற்புத ஆற்றலால் செய்வதுண்டு.

திருஷ்டாந்தமாக:

அடையாற்றில் கொசு உபத்திரவமும் புழுக்கமும் தாளாமல் கொசுவலைக்குள் அவதிப்பட்டுக் கடைசியில் ஏதோ சற்றுத் தூங்கி எழுந்த ஹவர்ட் மர்ஃபெட்டை ஸாயித்தாய் மகிழ்வூட்டியதுண்டே! அவரது படுக்கை முழுதும் மஞ்சளும் குங்குமமும் தடவிய பலவிதமான பத்திரங்களை வாரிச் சொரிந்திருந்தாள் ஷிர்டி மாதா.

இம்மாதிரிச் சந்தர்ப்பங்களில் அடியார் பெறும் உவகையை, உற்சாகத்தை, உருக்கத்தைப் பார்ப்பவர்கள் மிரகிள் எதற்கு என்று கேட்கவே மாட்டார்கள். அதன் உள்ளர்த்தம் என்ன என்று ஆராய்ச்சியிலும் இறங்கமாட்டார்கள். உள்ளுக்கும் உள்ளே அதன் அர்த்தம் ஸ்வாமி சொன்னதுதான்: "என் so-called மிரகிள் பற்றி யார் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். என் கவனம் எப்போதுமே என் குழந்தைகளை மகிழ்விப்பதில்தான்."

*

'அப்போர்ட்' என்ற வாதத்தை 'ஸப்போர்ட்' செய்வதாகத் தோன்றினாலும் அப்படியில்லாத ஒரு லீலை:

நாகமணி பூர்ணய்யா நன்கறிந்த ஒரு ராணியின் முத்து வளையல்களில் ஒன்று காணாமற் போய் நீண்ட காலத்துக்குப் பின் அவள் புட்டபர்த்திக்கு வந்தாள். எஞ்சியிருந்த ஒரு முத்து வளையை அவள் ஒரு கையில் அணிந்திருப்பது வழக்கம். ஸ்வாமி அந்த ஒற்றை வளையைக் கேட்டு வாங்கிக்கொண்டார். பிறகு "இந்தா" என்று அவளிடம் போட்டார் — ஒற்றையாக அல்ல; ஜோடியாகத்தான்.

ஸ்வாமி இவ்வளையைப் புதிதாக ஸ்ருஷ்டித்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் இதில் பழைய வளையலில் இருந்த சில அடையாளங்களும், ராணியின் இனிஷியலுங்கூட இருந்தன.

ஆனால்? இதனாலேயே இது 'அப்போர்ட்' தானன்றி ஸ்ருஷ்டியல்ல என்றெப்படிச் சொல்ல முடியும்? நகையைக்

Koviloor Digital Library

கையாடுபவர் சாதாரணமாக அதை உடனே அழிப்பதுதானே வழக்கம்? அதுவும் செல்வாக்கு மிக்க ராணியின் அடையாளங்களைக் கொண்ட அணியை ஒருவர் அத்துணைக்காலம் உருமாற்றாமல் வைத்திருப்பாரா? நம் ஸ்வாமி பழைய நகையிலிருந்த அதே அடையாளங்களோடு புதிதாக ஒன்றை சிருஷ்டித்திருக்கக் கூடும் தான்! ஆம், ஸ்ரீ ஜி.டி.கே. பல் ஸெட் சிருஷ்டியிலிருந்து இதை உணரலாம். ஸ்வாமி சிருஷ்டி என்பதெல்லாம் உண்மையில் 'அப்போர்ட்'தான் என்ற கண்டனத்துக்கு நேர்மாறாக, உண்மையில் ஸ்வாமியே 'அப்போர்ட்' போலக் காட்டுவது அவரது சிருஷ்டியாகவே இருக்கக்கூடும் என்று இவற்றிலிருந்து ஏற்படுகிறது!

* * *

ஒருவர் சபிக்க இன்னொருவர் கல்லானதாகப் புராணங்களில் படிக்கிறோம். மற்ற அற்புதங்களை நம்பினாலும் இதை எப்படி நம்புவது என எண்ணுகிறோம். ஏனெனில் நாம் ஜீவம்-ஜடம் என்ற இரண்டை முற்றிலும் வெவ்வேறாகக் கொள்கிறோம். ஒரு ஜீவ சைதன்யம் எப்படி ஜடமான கல்லாக முடியும் என்று இதனாலேயே நம்ப மறுக்கிறோம். ஆனால், இந்த ஜீவம், ஜடம் இரண்டையுமே கல்பித்து இயக்குவிப்பது ஒரே பேரறிவுதானே? அது ஜீவமே ஜடமாக, அல்லது ஜடமே ஜீவமாக மாற வேண்டுமென சங்கல்பித்தால் ஏன் அப்படி நடவாது? அப் பேரறிவில் திளைத்த சக்தி கொண்ட முனிவர்களும் இப்படி ஒன்றை மற்றதாக மாற்ற ஆற்றல் பெற்றிருக்கக் கூடும்.

சபிக்கவே அறியாத ஸ்வாமி, வைதாரையும் வாழ வைக்கும் ஸ்வாமி சினமுற்று எவரையும் ஜட வஸ்துவாக்கியதில்லைதான். ஆயினும் புராணம் கூறுவது உண்மையே என்று உறுதிப்படுத்தவோ என்னவோ ஒரு முறை ரம்யமான விளையாட்டாக இந்தப் பேரற்புதத்தை — ஜீவத்தை ஜடமாக்குவதை — ஆற்றியிருக்கிறார்.

பிரசாந்தி நிலையத்தில் கௌரீபூஜை செய்தார் ஓர் அம்மணி. ஸர்வ மங்களையான தேவிக்கு ஆந்திர, கர்நாடக தேசங்களில் அதிமங்கலச் சின்னமாகக் கருதப்படும் கருகுமணி அணிவிக்காமலிருக்க மாட்டார்கள். ஆனால், துரதிருஷ்டவசமாக நம் பெண் மணிக்குக் கருகுமணி கிடைக்கவில்லை. மிகுந்த குறையுடனேயே பூஜை செய்து முடிக்கப்போகும் தருணம். பூஜாபலன் தரப் பிரத்தியக்ஷ பராசக்தியான ஸாயீச்வரி அங்கு எழுந்தருளினாள்.

இந்த சந்தோஷத்திலுங்கூட, அம்மணிக்குக் கருகுமணி கிடைக்காத தாபம் அடிபட்டுப் போகவில்லை. ஒரு கட்டத்துக்கு மேல் சமய நெறிகளுமே தெய்வாநுபவத்தைக் கூட்டி வைப்பதற்குப் பதில் அதற்குத் தடையாகிவிடும் என்பதைத்தான் நம்மாழ்வார்

நெறி காட்டி நீக்குதியோ?

என்று பிரலாபித்தார். அந்த நிலையில்தான் அம்மாள் இப்போது பாபானந்தத்தைப் பூரணமாக அநுபவிக்காமல் மனத்தில் ஓர் ஊனத்தோடிருந்தார்.

Koviloor Digital Library

பாபா பொய்முகமதனில் புன்னகை பொங்க, பூஜை மண்டபத்தில் ஓடிக்கொண்டிருந்த ஒரு கட்டை எறும்பைப் பிடித்தார். ''இந்தா, வெச்சுக்கோ'' என்று குழந்தை போல அந்த எறும்பை அம்மணியின் கையில் போட்டார்.

அடடா, அஹிம்ஸா மூர்த்தியான ஸ்வாமி கட்டை எறும்பை இரண்டாக விண்டா போட்டுவிட்டார்? அல்ல, அல்ல. அம்மணியின் கையில் விழுந்துள்ள இரு சிறு கரு உருண்டைகள் கட்டெறும்பின் இரு வெட்டுப் பகுதிகள் அல்ல. அவை அசல் கருகுமணிகளேதாம். பளபளக்கும், கெட்டியான கருகுமணிகள். கோப்பதற்காக அவற்றில் துளைகூட இருக்கிறதே!

ஜீவனுள்ள எறும்பை ஜடமான மணியாக்கிய விந்தையை என் சொல்ல?

'பாபாவுக்கு ஜடப் பொருள்களின்மீதுள்ள ஆதிக்கம் ஜீவ சைதன்யத்தின்மீது இல்லை' என்று சில அறிஞர்கள் கூறுவது எவ்வளவு தவறு என்பது இதிலிருந்து தெரிகிறது. அவரது நிலையில் ஜடம் - ஜீவம் என்ற பேதமேயில்லை!

ஆயினும் பிரகிருதி தர்மத்தை மதித்து அவர் இந்த ஜீவ-ஜடப் பரிவர்த்தனையை மேற்சொன்ன நிகழ்ச்சி தவிர ஒருபோதும் செய்ததில்லை என்றே தெரிகிறது. இதுவே போதும். சுவாஸம், பிராணம் முதலானவற்றுக்கு அரிய உறுப்புக்கள் கொண்டதும், ஓடி, உண்டு, இனப் பெருக்கம் செய்வதுமான ஒரு ஜீவ ஜந்து கருகுமணியாக மாறுவதாவது!

* * *

ஸ்ரீ கே.ஸ. குல்கர்ணி குருவாரந்தோறும் பூனாவிலுள்ள ஷிர்டி ஆலயத்துக்குச் செல்வது வழக்கம். 1965 நவம்பர் 4-ந் தேதியும் சென்றார். அன்று அவர் பையில் பர்த்தி பாபாவின் படங்கள், அவரைப் பற்றிய ஹிந்தி, ஆங்கிலக் குறுநூல்கள் ஆகியவற்றில் தலா அரை டஜன் வைத்திருந்தார். ஆலயத்தில் ஒருவர் இதைக் கவனித்துவிட்டு ஒரு படமும், ஹிந்தி நூலில் ஒரு பிரதியும் தருமாறு கேட்டார். குல்கர்ணியும் கொடுத்தார்.

இதைப் பார்த்து விட்டு மற்றவர்களும் — சுமார் நூறுபேர் — குல்கர்ணியை மொய்த்துக்கொண்டனர். ஒவ்வொருவரும் ஒரு படமும் ஹிந்திப் புத்தகமும் கோரினர்.

குல்கர்ணியின் பாடு சங்கடமாயிற்று: ''இப்போது கைவசம் ஐந்தாறுதான் இருக்கிறது. இதை ஐந்தாறு பேருக்குத் தருகிறேன். அடுத்தவாரம் நிறையக் கொண்டு வருகிறேன்; மீதமுள்ள எல்லோருக்கும் விநியோகிக்கிறேன்'' என்றார். கைவசமுள்ளதை எடுப்பதற்காகப் பையில் அவர் கைவிட்டபோது பை கனத்தது!

விந்தை! பைக்குள் ஒரு கட்டு ஹிந்திப் புத்தகங்களும், ஒரு கட்டுப் படங்களும் வந்து குந்தியிருந்தன!

Koviloor Digital Library

ஆச்சரியமும் ஆனந்தமும் தாங்காமல் அவற்றை ஒவ்வொருவருக்கும் கொடுக்கலானார் ஸ்ரீ குல்கர்ணி. நூறு பேரும் தலைக்கொரு ஹிந்திப் புத்தகமும், சித்திரமும் பெற்றனர். கடைசி நபரோடு கட்டுக்களும் தீர்ந்தன! அத்தனை கணக்கு!

இன்னொரு வேடிக்கை, எவருமே விரும்பாத ஆங்கிலப் புத்தகங்கள் குட்டி போடவேயில்லை.

* * *

ஒரு புத்தகம் என்றிருந்தால் அதில் வெளியிட்டோர், அச்சிட்டோர் ஆகியோரின் பெயர் இருந்தேயாக வேண்டும். இவ் விவரங்கள் இல்லாமலே ஸ்வாமி கையசைப்பில் ஒரு நூலைக் "கொண்டு வந்து" கொடுக்கிறார் என்றால் அது நிச்சயமாக அவரது சங்கற்ப ஸிருஷ்டிதான்; எங்கிருந்தோ கடத்தி வந்ததல்ல.

சர்வதேச பௌதிக விஞ்ஞான உலகில் பெயரெடுத்த டாக்டர் எஸ். பகவந்தம் அவர்கள் இன்று ஸாயி பகவந்தனின் அத்தாணிச் சேவகரில் ஒருவராகி யிருப்பதற்கு ஒரு முக்கிய காரணம், ஆரம்ப காலத்தில் இப்படிப்பட்டதொரு ஸிருஷ்டியை அவர் பெற்றதுதான். அவரது கையில் சிந்ராவதி மணலை எடுத்துத்தான் ஸ்வாமி தூவினார்; ஆனால் பகவந்தத்தின் கையில் விழுந்தபோது மணல், தெலுங்கு லிபியிலான ஸ்ரீமத் பகவத் கீதை நூலாகி யிருந்தது!

தம் கண்ணில் மணலைத் தூவாமலேதான் பாபா இவ் வற்புதத்தைச் செய்தார் என்பதில் ஸ்ரீ பகவந்தத்துக்கு எள்ளளவும் ஐயமில்லை. ஆயினும் ஏற்கெனவே உள்ள நூலைத்தான் பாபா கடத்துவித்திருப்பாரோ என்ற ஐயத்தில், புத்தகத்தைப் புரட்டி அச்சகம், பதிப்பகம் முதலியவற்றின் பெயர் உள்ளனவா என்று தேடினார். காணவே காணோம்!

ஸ்வாமி மந்தஹாஸத்துடன், "ஸாயி ப்ரெஸ்" என்று மதுரமாகச் சொன்னார்!

கணத்துக்குள் எழுநூறு சுலோகங்களை அச்சிட்டு, பைண்ட் செய்து, அட்டைபோட்டுக் கொடுக்கும் அற்புத ப்ரெஸ்!

"இச்சா மாத்ரம் ப்ரபோ: ஸ்ருஷ்டி:" என்பதில் உறுதி பெற்றார் பகவந்தம்.

பௌதிகம், ரஸாயனம் முதலிய விஞ்ஞானங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவர் ஸாயி என்று இன்று மேடைதோறும் கூறியும், ஏடுதோறும் எழுதியும் பணிகிறார் அந்த மாபெரும் விஞ்ஞானி. பாபாவிடம் அவர் கண்ட பல நூறு அற்புதங்களே அவரை இப்படிப் பிரகடனம் செய்ய வைக்கின்றன.

1963 கோகுலாஷ்டமியன்று உபந்நியாசம் நிகழ்த்திய பாபா, "'சரஜா என்ற கோபிகைக்குக் கண்ணன் ஒரு நீலக்கல் தந்தான்.

Koviloor Digital Library

அதனுள் கண்ணன் உருவமே தெரிந்தது'' என்று கூறினார். உடனே ஒருபிடி மல்லிகை எடுத்துச் சுழற்ற ஒவ்வொன்றும் ஒரு நீலக் கல்லாகி யிருந்தது. ஒவ்வொரு கல் உள்ளும் கண்ணனும் தெரிந்தான்.

பலருக்கு பாபா தந்துள்ள மோதிரக்கல்லுள் அவரது திருவுருவம் தெற்றெனத் தெரிவதுண்டு.

* * *

பாரெங்கும் அன்பு மணம் பரப்பும் பாபா நறுமலர்களின் மணத்தை அநேக பக்தரில்லங்களிலும், ஸத் ஸங்க மன்றங்களிலும் பரப்புவதுண்டு.

பெரும்பாலும் தாழம்பூ மணத்தின் மூலமே தம் சாந்நித்தியத்தை அறிவிப்பார். ஒருமுறை ஸாயி பஜனின்போது எங்கள் வீட்டு மாடியில் ஏற்பட்ட இந்த திவ்ய சுகந்தத்தை—அதாவது வெளிப்படையான ஸாந்நித்தியத்தை—விட்டுப் பிரிய மனமின்றியே இந் நூலாசிரியரும், அவரது அன்னையும் கீழே வந்தபோது, படிக்குப் படி அவர்களுடனே அந்த வாஸனையும் இறங்கி வந்து, பிரத பாபாவின் படங்கள் மாட்டியிருந்த கீழ்த்தள அறையை அடைந்ததும் மறைந்துவிட்டது!

காலிஃபோர்னியா டஸ்டினில் உள்ள ஸாயி பாபா புத்தக நிலையப் பூஜை மேடையில் ஸ்வாமி நீங்காத மல்லிகை மணத்தைப் பரப்பி வருகிறார். ஆனதால் அவ்விடத்துக்கே Jasmine Temple (மல்லிகாலயம்) என்ற பெயர் வழங்குகிறது. ஆதியில் மல்லிகார்ஜுனராக இருந்தவர்; இவ்வவதாரத்திலும் மல்லிகை எழுந்துக்காலேயே ஸாயிபாபா நாமத்தைச் சூட்டிக்கொண்டவர் அல்லவா?

மல்லி மணம், தாழை மணம் என்றெல்லாம் சொன்னாலும் மலர் மணத்தோடு அதில் விளக்கவொண்ணா ஒரு தெய்விகமும் கரைந்து நம் நெஞ்சில் உறையும். ஆயிரமாயிரம் மைல்களுக் கப்பால், பல்லாயிரம் அடிகள் உயரே பறக்கும் விமானத்தில் திடீரென இம்மணம் தோன்றிச் சுரீலென உட்புகுந்ததில் நெக்கு நெக்குருகிய அந்நிய நாட்டுப் பக்தரும் உண்டு.

ஸ்வாமி தரும் விபூதிகளுக்குப் பலவித மணங்கள் உண்டெனினும் குறிப்பாக அவ்விபூதியில் ஒரு தனி மணம் உண்டு. பிரசாந்தி நிலையப் பேட்டி யறையில் கமழும் இம் மணம் பிரசாந்தரின் திவ்ய தேகத்திலுமே கமகமப்பதாக இந்நூலாசிரியனின் அநுமானம். அவரது சரீரமே விபூதி மயமானதோ என்றுங் கூடத் தோன்றுவதுண்டு. இவ் விபூதி மணத்தையும் அநேக சந்தர்ப்பத்தில் அநேக அடியார்கள் தாங்கள் உள்ள இடத்தில் தெற்றென அநுபவிப்பதுண்டு.

Koviloor Digital Library

''ஸர்வ கந்த: ஸர்வ ரஸ:'' என்று உபநிஷதம் சொல்வதற்கேற்ப, பல மணங்களில் மனத்தில் புகும் ஸ்வாமி பல சுவைகளாகவும் நாவில் புகுந்து நெஞ்சில் குடிகொள்பவர்தாம்.

சில அடியார்களின் வீட்டில் பூஜாபாத்திரத்தில் பச்சைக் கர்ப்பூரச் சுவையுள்ள நீர் தோன்றி நிறைகிறது. படங்களில் தேன் துளிப்பது சர்வ சகஜம்.

''சுவைதரு கோல் தேன் கொண்டு செய்தனன்''
(கோல்தேன் : கொம்புத்தேன்)

என்ற மணிவாசகத்தின் விசித்திர விளக்கம்!

சில வீடுகளில் ''அம்ருதம்'' எனப்படும் வெள்ளைப் பாகு போன்ற திரவம் பொசிகிறதே, அதன் சுவை பூவுலகு அறியாப் பழங்களின் சாறாக அல்லவா தோன்றுகிறது!

ஸாயி இனிப்பிலேயே இப்படிப் பல சாயல்களாக இருப்பது மட்டுந்தானா? ஒரு மண்டலம் முழுதும் உப்புச் சேர்த்துக் கொள்ளாமல் விரதம் இருந்தனர் ஒரு வட இந்திய தம்பதியர். விரதம் முடித்து அவர்கள் உப்புச் சேர்த்துக்கொண்டு பாரணை செய்யப் போகும் சமயம். ஸ்வாமி படத்திலிருந்து கலகலவென நீர் வழிந்தது! ''கங்கா தீர்த்தமோ, கருப்பஞ் சாறோ! பிரபு நம் அலவண விரதத்தை மெச்சி, சரியாக போஜனம் செய்யு முன் நம் உதரத்தைத் தூய்மை செய்ய அனுப்பியுள்ளார்'' என்ற ஆனந்தத்தோடு தம்பதியர் அந் நீரைப் பிடித்துப் பருகினர்.

அப்போது அவர்கள் அடைந்த பரவசம்! அதென்ன, கங்கையையும் கருப்பஞ்சாற்றையும் விட இனியதொரு பானமா? அல்ல. அடித் தொண்டை வரை கரிக்கிற உப்பு ஜலம்தான்!

ஒரு மண்டலத்துக்குப் பின் இவர்கள் உண்ணும் உப்பு தம் பிரஸாதமாயிருக்க வேண்டும் என்ற கருணைக் கங்கையில் ஐயனின் கரும்பு மனம் பொழிந்ததால், கரிக்கும் உப்பே இனித்தது! அத் தம்பதியர் மட்டுமின்றி நாமும் ஸ்வாமி உப்பிட்டதை உள்ளளவும் எண்ணி உள்ளம் உப்பலாம்!

* * *

ஒரு மாணவன் பட்டமளிப்பு விழாவுக்கு முன் புட்டபர்த்திக்கு வந்து ஜ்வரமாகப் படுத்துவிட்டான் — கான்வகேஷனுக்கு அவன் செல்ல முடியவில்லை. ''பரவாயில்லை'' என்று அவனிடம் ஆறுதல் கூறிய ஸ்வாமி கையை அசைத்தார். பல்கலைக் கழகம் தரும் பட்டத் தாளின் 'மினி' பிரதி ஒன்றே ஸ்வாமியின் கையில் வந்து விட்டது. அதிசயத்திலும் அதிசயந்தான்!

அசல் பட்டத்தாளையே ஸ்வாமி 'அப்போர்ட்' செய்ய முடியுந்தான். ஆனால் நியாய தேவதையாதலால், இதனால்

Koviloor Digital Library

பக்கலைக் கழகத்தாருக்கு ஏற்படக்கூடிய சிரமத்தை முன்னிட்டு அவ்வாறு செய்யவில்லை. சாக்ஷாத் அதன் குட்டிப் பிரதியையே சிருஷ்டித்து வழங்கி, மாணவனை உற்சாகமூட்டி விட்டார். பாபாவின் கையிலிருந்து பட்டம் பெறும் 'சிறப்புக் கான்வகேஷன்' பட்டாபிஷேகத்துக்குச் சமமன்றோ?

வேங்கடகிரி ராஜா ஏராளமான தபால்தலைகள் சேகரித்து வைத்திருந்தார். அதைப் பார்த்த ஸ்வாமி மன்னரிடம் "இதென்ன புண்ணியமா, புருஷார்த்தமா? உங்களுக்கு இதில் ஏன் இவ்வளவு ஈடுபாடு இருக்க வேண்டும்?" என்று கேட்டவாறு, அந்த வரிசை வரிசையான ஸ்டாம்புகளைத் தடவிக்கொண்டே போனார். என்னே விந்தை! அத்தனையும் அந்தந்த அளவேயான பாபாவின் தலைகளாக மாறின! ஒவ்வொன்றிலும் "Sri Sathya Sai" என்று முத்திரையும் இருந்தது!

புண்யலோகம் செல்லும் ஜீவாத்மாக்களான கடிதங்களுக்கு ஒட்ட வேண்டிய தபால்தலை!

பாலாஜி, காமாக்ஷி, ஷிர்டி பாபா, பர்த்தி பாபா போன்றோரின் உருவம் பதித்த டாலர்கள் வேண்டுமானால் வெளியில் கிடைக்கின்றன. ஆனால் திருவெண்காடு வீரபத்ரர் பொறித்த டாலர் எங்கேனும் இருக்கமுடியுமா? பாபா கையசைப்பில் இப்படிப்பட்ட ஒரு டாலர் படைத்து நாதஸ்வர வித்வான் திருவெண்காடு ஸ்ரீ சுப்பிரம்மண்யப் பிள்ளைக்குத் தந்திருக்கிறாரே! இது போன்றவை சிருஷ்டியேயன்றி, கடத்தல் அல்ல என்ற சாமானிய உண்மையை ஏன் அசாமானிய புத்தி பெற்ற சில மேதைகளும் காண மறுக்கிறார்களோ?

துளஸீராமா, ஹரநாத் என்ற பக்த தம்பதியரைப்பற்றி நம்மில் பலருக்குத் தெரிந்தே இராது. இவர்கள் வடக்கே நாம ஸங்கீர்த்தனத்தைப் பரப்பியவர்களில் இருவர். நிச்சயமாக இவர்களுக்குப் புத்தம் புது ரெடிமேட் வெள்ளி விக்கிரகம் எங்கேயோ செய்து வைத்து, அதை பாபா கடத்தல் செய்வதற்கில்லை. 1959 விஜயதசமிக்குப் பிறகு ஒரு மாலை, சித்ராவதி தீரத்தில் துளஸீராமா-ஹரநாத் சம்பிரதாயத்தைச் சேர்ந்த ஒருவர் வந்ததுடன் பாபா அந்த பக்த தம்பதியரின் கதையைச் சொன்னது மட்டுமின்றி, கையசைப்பில் அவர்கள் பாம்புப் படத்தின் அடியில் நிற்பது போன்ற வெள்ளி விக்கிரகத்தையும் சிருஷ்டித்துத் தந்தார். அதில் துளஸீராமாவின் நெற்றியில் குங்கும ஸ்தானத்தில் ஒரு செம்புள்ளி பதித்திருந்தது!

பாபா உபநயனம் நடத்தும்போது ஈரமந்த்ரத்துடன் பூணூலை 'வரவழைத்து'க் கொடுக்கிறாரே. இது எப்படி டெலி-கைனெஸிஸாக இருக்கும்? அவ்வாறெனில் இதே சமயம் வேறெங்கோ நடக்கும் உபநயனத்தில் சாஸ்திரிகள் பூணூலில் மந்த்ரம் தடவிக் கொடுத்தவுடனேயே அது அந்தர்தானமாகியிருக்க வேண்டும். பாபா ஈரமந்த்ரம் காயாமலே எத்தனையோ வடுக்களுக்குச் சமஷ்டி உபநயனங்களில் உபவீதம் வழங்குகிறார். வெளியுலகில் இத்தனை

Koviloor Digital Library

இடங்களில் நடைபெறும் உபநயனங்களில் பூணூல் காணாமல் போயிருந்தால் இந்தக் களவு உலகின் கவனத்துக்கு வராமல் இருக்குமா?

* * *

சிருஷ்டியில் எத்தனை விநோதம்? வெறும் எண்ணத்தால் சிருஷ்டித்ததாகக் காட்டாமல் ஏற்கெனவே உள்ள ஒரு பொருளை உருமாற்றியும் காட்டுகிறார், சில சமயங்களில்.

ஒரு சிறு காகிதத் துண்டை விரலில் வைத்துச் சுற்றுகிறார், காது குடைவி போல். குழந்தையாக இருக்கிறது பாபாவின் தோற்றம். பக்தரைப் பார்த்து விஷமக் குழந்தையாக ''வாயைத் திற'' என்கிறார். காகிதச் சுருளைத் தன் வாயில் போட்டுத் தின்ன வைத்து, ''கழுதை'' என்று குழந்தைஸ்வாமி குதூகலிக்கப் போகிறார் என்றெண்ணி பக்தரும் வாய்திறக்கிறார். காகிதக் குடைவியால் பாபா பக்தர் நாவை நெருடுகிறார். ஆனால் ஆஹா.. இப்போது அது காகிதச் சுருளல்ல; வெள்ளி எழுதுகோலாகி யிருக்கிறது! அந்த லேகனியால் பாபா ஒரு மகா மந்திரத்தைத் தான் பக்தரின் நாவில் எழுதுகிறார்! இந்த மகா அநுக்கிரஹத்தையே குழந்தை விளையாட்டாகச் செய்கிறார்! பிறகு லேகனியை அடியாரிடம் வீசுகிறார். அச் சிறு எழுதுகோலில் அச்செழுத்தாக அம் மஹா மந்திரம் பொறிந்திருக்கிறது! அவ்வளவுதானா? அதன் நுனியிலுள்ள குன்றிமணி அளவேயான உருண்டையில் அம் மந்திரத்துக்குரிய தெய்வ மூர்த்தியின் வடிவம் திகழ்கிறது!

* * *

ஸ்வாமி காரில் பிரயாணம் செய்கையில் பெட்ரோல் தீர்ந்த போது ஜலத்தையே போடச் செய்து அதில் தம் கைவிட்டு அளைய, அது பெட்ரோலாக மாறி வண்டி ஓடியிருக்கிற அதிசயம்—பலப் பல முறைகள் நடந்துள்ளது. நமி நந்தி அடிகளும், ஷிர்டி பாபாவும் நீரை வார்த்தே விளக்கெரித்ததன் தொடர்ச்சி! இங்கும் ஒரு பொருளை இன்னொன்றாக மாற்றியது போன்ற விளையாடல்.

* * *

சித்ராவதி தீரத்தில் பக்தரோடு எழுந்தருளி யிருக்கிறார் பரந்தாமர். வானில் முழுமதி ஜோதி வீசியது. ஸ்வாமி அதைப் பார்த்தார். 'தம் முகம் போலவே அது இருக்கிறதே' என்று எண்ணினாரா? 'தம் முகத்தைச் சூழ்ந்துள்ள கேச வட்டம் அதற் கேன் இல்லாதிருக்க வேண்டும்?' என நினைந்தாரா? இங்கிருந்தே இவர் கை அசைக்க, பக்தரனைவரும் காணப் பரம அற்புதம் நிகழ்ந்தது. சந்திரனைச் சுற்றி பாபாவின் திருமுடிபோலவே ஒரு பம்பை தோன்றியது! அவ்வளவுதானா? இங்கிருந்தவாறே அந்த முடியைப் பார்த்து பாபா எழுதினார். மேலே அவ்வானக் கேசத்தில் மின்னலாலேயே வரைந்த சங்கும், சக்கரமும் தோன்றின!

இதோடும் முடியவில்லை வியப்பு விந்தை. பாபா கை அசைக்க, இந்த நாராயணனின் கைத்தலத்திலேயே வந்தமர்ந்துவிட்டது அந்த ஆகாய மின்னல் சங்கு! மின்னுரு மாறி, வெண் சங்கே ஆயிற்று. அதிலிருந்து நூறு நூறு பேருக்கு அமிழ்தம் வார்த்தார் ஸ்வ மகிமையில் அமிழ்ந்திருந்த ஸ்வாமி. இன்றும் பிரசாந்தி நிலையப் பூஜையில் அச் சங்கு இருக்கிறது.

இம்மாதிரி முற்றிலும் தெய்விகமான சின்னங்கள் மட்டுமின்றி, திருமாங்கல்யம் மங்கள சூத்திரம் போன்ற தெய்விக—லௌகிகச் சின்னங்கள்—மோதிரம், நெக்லேஸ் போன்ற லௌகிகச் சின்னங்கள், மிக மிக லௌகிகமாகவும் தாற்காலிகமாகவும் உள்ள தின்பண்டங்கள் என்பதாக பாபாவின் சிருஷ்டியை வெளிப் பார்வைக்கு வேண்டுமானால் பல்வேறு மட்டங்களில் வரிசைப் படுத்தலாம். ஆனால் அவரது உள்ளன்பு ஒன்றே இது ஒவ்வொன்றிலும் உருக்கொண்டு விடுவதால், நேரிலே அவரிடம் ஒரு 'ஸ்வீட்' பெறுகிறவரும்கூட, ஜபமாலையையோ தெய்வ விக்கிரகத்தையோ பெற்றதற்கு ஒப்பான உன்னத உணர்வையே பெறுவார். உன்னதமும் பிரேமையில் லேசாகியிருக்கும்.

அவரது சிருஷ்டி விந்தை நாம் என்னதான் மண்டையை உடைத்துக்கொண்டாலும் புரியாது. உதாரணமாக, அவர் விபூதி படைத்துத் தந்தால் அவரது கையில் சிறிது ஒட்டிக்கொண்டுதான் இருக்கிறது. பிறகு அதைத் தட்டுவார். ஆனால் நெய் சொட்டச் சொட்ட ஹல்வா முதலியன சிருஷ்டித்துத் தந்தபின் அவரது கரத்தில் சிறிதுகூட நெய்ப்பசையே இருப்பதில்லை!

ஸ்வாமி கணக்கிட முடியாத தடவைகள் தின்பண்டம் சிருஷ்டித்திருக்கிறார் எனினும் 1968—ல் ஒருமுறை இந்திராதேவி, கவன் தம்பதி முதலான பதின்மூன்று அமெரிக்கருக்கு இன்டர்வ்யூ அறையில் வித விதமான ருசிகர பட்சணங்களைச் சிருஷ்டித்துக் கொடுத்து "Freshly prepared. Eat them" (புத்தம் புதிதாக பண்ணியது. சாப்பிடுங்கள்) என்று அம்மாவாக அன்புக்கிட்டது குறிப்பிடத்தக்கது. அவற்றிலிருந்த நெய்யும் பாலும் சர்க்கரையும் பாபாவின் ரூபத்திலும் இதயத்திலும் வாக்கிலும் கொழித்துக் கிடந்தவைதான்!

தன்னை பாபா பண்டங்களாக கவனிக்கவே இல்லை என்பதால் மனம் நொறுங்கியிருந்த மனோதத்துவ மருத்துவர் டாக்டர் ஸாண்ட்விலிடம் பாபா "Sweets, Sweets" என்று சொல்லிக் கல்கண்டை வீசிய மாத்திரத்தில் அவர் மனம் அடைந்த மலர்ச்சியைக் கவனிப்போமானால் பாபா எதற்கு மிரகிள் செய்கிறார் என்று கேட்கவே மாட்டோம்.

கற்கண்டைத் தரும்போது பாபாவையே நாம் கற்கண்டுப் பொம்மையாக உணருவோம்; அமுதம் தரும்போது ஆரா அமுதாக உணர்வோம். ஆம், அவரது இனிப்பிலும் இனிய பிரேமைக்கு அடையாளம்தானே அவரது சிருஷ்டி முழுதும்?

Koviloor Digital Library

இன்னொரு சமயம் அந்நியர் ஐவரிடம் ஐயன் "இந்தாருங்கள் ஸ்வீட்" என்று கரத்தை நீட்டினார். ஒவ்வொரு விரலிலும் பாலால் ஆன ஒரு குண்டு பக்ஷணம் ஒட்டி இருந்தது. ஒரேபோதில் ஐவருக்கும் பரிசு!

கையில் ஒளித்துக்கொள்ளக்கூடிய அளவினதான பண்டங்களையே பாபா தருகிறார் என்று வாய் கூசாமல் சொல்பவர்கள் இதையெல்லாம் ஏன் கவனிக்க மறுக்கிறார்கள்?

*

பொதுவாக ஸ்வாமி கைக்குள் கொள்ளக்கூடிய விக்கிரஹமும், மோதிரம், பதக்கம், ஜபமாலை, நெக்லெஸ் முதலியவற்றையே சிருஷ்டித்து வழங்குவதால்தான், 'தமக்குள்ளேயே ஒளித்து வைத்துக்கொண்டுள்ள வஸ்துக்களைக் கைத்தந்திரத்தால் எடுத்துத் தருகிறார்' என்று எதிர்ப்பாளர் கூறுகின்றனர். 'ஏன் அவர் மேஜை, நாற்காலி போன்ற பெரிய வஸ்துக்களை சிருஷ்டிக்கவில்லை? ஏன் அவர் சங்கற்ப மாத்திரத்தில் ஒரு கட்டிடம் கட்டக்கூடாது? குறைந்த பட்சம் ஒரு பூசணிக்காய் சிருஷ்டித்துக் காட்டட்டுமே!' என்கிறார்கள்.

முன்பே சொன்னாற்போல், ஸ்வாமி ஸ்தூலமாக இல்லாத இடங்களிலும் விக்கிரஹம், விபூதி முதலியன தோன்றுவதே இதில் கைத்தந்திரம் இல்லை என்று நிரூபிக்கப் போதுமானது. நாம் கையும் அசைக்காமலே, சித்ராவதி மயானத்தில் லக்ஷ்மையா முதலிய அவநம்பிக்கையாளர் தோண்டிய குழிக்குள் நறுக்க நறுக்கக் குறையாத மாங்கனியை அவர் படைத்ததையும் முன்பே பார்த்தோம். மறைத்து வைத்து எடுத்துத் தரக்கூடியதல்லவே அந்த அதிசயக் கனி!

இருப்பினும் பொதுவில் கையடக்கமான பண்டங்களையே அவர் படைப்பதற்கு அவரே மிகவும் பொருத்தமான ஒரு காரணம் கூறுகிறார். அதாவது அன்புத்தாயாக அப்போதைக்கு அடியார் உண்டு அதோடு தீர்ந்துவிடும் தின்பண்டங்களைச் சிருஷ்டிப்பது தவிர, மீதம் தாம் படைத்துத் தரும் பொருட்கள் யாவும் அதைப் பெற்ற அடியார் எப்போதும் தம்முடனேயே ஒரு ரக்ஷைபோல் வைத்திருக்கவேயாகும் என்கிறார். மோதிரம், மெடல், ஜபமாலை, நெக்லெஸ், கடிகாரம், பர்ஸுக்குள் அடங்கக்கூடிய புகைப்படம் முதலிய கையடக்கமான பொருட்களைத்தானே பக்தர் எப்போதும் எங்கு சென்றாலும் அணிய முடியும், அல்லது உடன் வைத்திருக்க முடியும்? மேஜை நாற்காலியையும், கட்டிடத்தையும், பூசணிக்காயையும் போகுமிடமெல்லாம் தூக்கிப்போக முடியுமா? ஆகவே "சிருஷ்டிக்க முடியும்" என்ற ஜம்பத்துக்காக அவர் சிருஷ்டிக்கவில்லை, ஓர் உத்தேசத்தைக் குறித்தே படைப்பாற்றலைக் கட்டுப்படுத்தி வெளியிடுகிறார் என்றறிந்தால் எதிர்ப்பாளரின் கேள்வி எழாது.

பாபா தரும் விக்கிரஹங்களை அலுவலகம் போன்ற இடங்களுக்கு அடியார் எடுத்துச் செல்லக் கூடாதாயினும், அன்றாட பூஜைக்காக இவற்றை அவர்கள் வெளியூர்களுக்கும் எடுத்துச்

Koviloor Digital Library

செல்வர். எனவே இவையும் கையடக்கமாக இருப்பதே பொருத்தம். அதுவுமின்றி, சாமானிய மாந்தர் செய்யக்கூடிய நிவேதனத்துக்கு ஏற்ப வீட்டுப் பூஜையில் சாண் உயரத்துக்கு அதிகமான மூர்த்தி வைத்துக்கொள்ளக் கூடாது என்று சாஸ்திரமே விதிக்கிறது. ஏராளமாக நிவேதிக்க வசதி பெற்று ராம் நகர் ராணிக்கு (ஒருகாலும் ஒளித்துவைத்து எடுத்துத்தர முடியாத) பதினைந்தங்குலப் பொற்சிலையை பாபா அளித்ததையும் இங்கு நினைவுகூரலாம்.

நேபாளிலிருந்து வந்தவர்களுக்கு பாபா தந்த சூரிய யந்திரம் எத்தனை பெரிய தகடு? அதை எங்கிருந்தும் ஒளித்து வைத்து, sleight of the hand—ஆல் எடுத்துத் தந்தே இருக்கமுடியாது. பாபா மேலுக்கும் கீழுக்குமாகத் திறந்த கையை வீச அந்த மகா யந்திரம் தகதகத்து வந்த அற்புதத்தைக் கண்ணாரக் கண்டவர்கள் உள்ளனர்.

* * *

பாபாவின் சிருஷ்டியில் பிடிபடாத எதுவுமே இருக்க முடியாது போலிருக்கிறது. இறகுக்கிரீடம் சூட்டிக்கொண்டு ஆப்பிரிக்காவிலிருந்து வந்த பழங்குடிகளுக்கு அவர்களுடைய கிராம தேவதைகளின் தத்ரூப விக்கிரகங்களையே படைத்துத் தந்திருக்கிறார்!

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இயேசுநாதனை அறைந்த சிலுவையின் அதே மரத்துணுக்கினாலான ஒரு சிலுவையை ஹிஸ்லாப்புக்கு வழங்கியிருக்கிறார். அதனுள் உள்ள துக்குணி யுண்டு இயேசுவின் சின்னஞ்சிறு முகத்தில் வெளியாகும் விசுவ வேதனை! ஆணி அறைந்த ரத்தத் தடம்கூடத் தெளிவாகத் தெரிந்தது. திருவாயிலிருந்து ஒழுகிய எச்சிலின் காய்ந்த கோடும் நேர்த்தியாகப் பதிவாகியிருந்தது! 'கண்டதுமில்லை, கேட்டது மில்லை' எனத்தக்க படைப்புத்தான்!

பரமாற்புதப் படைப்பொன்று பாருங்கள்:

1973 டிஸம்பர் 8-ந் தேதி. ஸ்வாமியும் பக்தர்களும் நாலு கார்களில் பிரசாந்தி நிலயத்திலிருந்து பிருந்தாவனத்துக்குப் போகிறார்கள். ஒரு மணி நேரப் பிரயாணத்துக்குப் பின் ஸ்வாமி வண்டிகளைத் திருப்பச் சொல்லி, ரம்யமான ஒரு வனப் பகுதிக்கு அனைவரையும் இட்டுச் செல்கிறார்.

அங்கே ஒரு விளாமரம். அதன் பழங்களைக் கல்லால் அடித்து விழச் செய்வதற்காக பக்தர் செய்த முயற்சிகள் பலிக்கவில்லை. ஓர் அங்குலம் விட்டமுள்ள ஒரு சிறு கட்டைக் கசங்காய்தான் விழுந்தது.

அதை ஸ்வாமியே குனிந்து எடுத்தார். கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்குமிடையே பிடித்துக்கொண்டு, "இதோ சந்திரன் இருக்க" என்றார்.

Koviloor Digital Library

ஒரு க்ஷணம் விளாங்காயைக் கையில் மறைத்துக்கொண்டு அவர் திறந்தபோது காயைக் காணவில்லை. பதிலாக ஓர் அசாதாரண வஸ்து காணப்பட்டது!

ஏரளவு ஒளி ஊடுருவிச் செல்லக்கூடிய ஓர் உருண்டை போன்றது அவ் வஸ்து. சூரிய வெளிச்சம் அதில் பட்டுப் பளபள வென்று பிரகாசத்தை வாரிப் பிரதிபலித்தது!

பொதுவாக இப்படி ஒளிமயமாயிருந்தும் அதற்குள் பிரமிக்கத்தக்க ஒளி குறைந்த, இருட்டான பல பகுதிகளும்கூடத் தெரிந்தன. பற்பல வர்ணங்களில் அநேக தாதுப் பொருள்களின் கீற்றுக்கள் தெரிந்தன. வெளிப் பார்வைக்குச் சமனாகவே இருந்த அவ் வஸ்துவில் பள்ளங்கள், மேடுகள் யாவும் நன்கு தெரிந்தன.

''குட்டி சந்திரன்; சந்திரனில் உள்ள அத்தனை வஸ்துக் களும் கொண்டது'' என்றார் பாபா.

அதற்குச் சிறிது காலம் முன்புதான் சந்திரனின் இரு புறங்களையும் விண்கலங்கள் எடுத்த புகைப்படங்கள் பத்திரிகை களில் வெளியாகியிருந்தன. தத்ரூபம் அவற்றின் அடையாளங்கள் இந்தக் குட்டி சந்திரனில் காணப்படுகின்றன! அதற்கும் அதிக மாக, தாதுப் பொருட்களைக் காட்டுவதோடு வர்ண விசித்திரங் களையும் ஒளியையும் உமிழும் ஸௌந்தர்யப் பாண்டமாயுள்ளது அச் சிறு பண்டம்.

எல்லோரும் வனபோஜனம் செய்தனர், 'கானம் சென்றுண் போம்' என நாச்சியார் பாடியபடி.

ஸ்வாமி கடைசியாக ஒருமுறை மினி சந்திரனை சூரிய வெளிச் சத்தில் தூக்கிப்பிடித்தார். இப்போது அதன் வெளி ஓரத்தில் மட்டும் கதிரவனின் கதிர் பட்டுச் செம்பொன் ஒளியைச் சிதறியது. ''சந்திரோதயம் பார்த்தேளா?'' என்றார் ஸாயி சந்திரர்.

மறுபடி ஒரு கணம் கையை மூடித் திறந்தார். ''மினி மூன்'' அஸ்தமித்தே விட்டது! பழைய விளாங்காயே இருந்தது!

நமக்கு விளங்காப் புதிர்தான்!

விஞ்ஞானத்துக்கெல்லாம் அப்பாற்பட்டவர் ஸ்வாமி என்பதற்கு இந்தக் குட்டிச் சந்திர சிருஷ்டியொன்றே போதும்!

இன்னொரு முறையும் மதியத்தைப் படைத்தார் நம் ஸ்வாமி. சென்ற ஆண்டு ஓர் இரவு பாபா ஒயிட்ஃபீல்ட் கல்லூரி மாணவர் களுடன் பரமானந்தமாகப் பேசிக்கொண்டிருந்தார். ''யாருக்கு என்ன வேணுமானாலும் கேளுங்கோ'' என்றார்.

துணிச்சல் வாய்ந்த ஒரு மாணவன், ''பாபா, அதோ ஆகாசத்தில் இருக்கிற சந்திரனைப் பிடிச்சு இங்கே கொண்டாங்க!'' என்றான்.

Koviloor Digital Library

''ஓ, அப்படியே'' என்று வானைப் பார்த்தார் ஸ்வாமி.

''அம்புலி மாமா வா வா'' என்றாரோ?

மறுகணம் இவரது கையில் குளு குளுவெனச் சந்திரிகையைப் பொழியும் ஒரு பேரற்புத பந்து பிரகாசித்தது.

''மேலே பாருங்க'' என்றார் மேலவர்.

அங்கே மாணவர் கண்ட அதிசயம்! மூல சந்திரன் தன் ஒளி முழுதும் இழந்து சோகையாகி, ஒரு காகிதம் போல் காட்சி தந்தான்.

பாபா தம் கையிலிருந்த சந்திரனை மூடிக்கொண்டார். உடனே வானத்துச் சோகை சந்திரன் தன் பிரகாசம் முழுதையும் பெற்று நிலவைக் கொட்டுகிறான்.

பாபா கையைத் திறந்தாரோ இல்லையோ வான்மதி மறுபடி மங்கியது. பொங்கியது நிலவு ஸ்வாமியின் அங்கை அம்புலியிலிருந்து!

அனந்தத்தையும் கைத்தலத்துள் பிடித்துவிடும் அதிசய நிலையை (''hold infinity in the palm of your hand) ப்ளேக் பாடுகிறார். நம் அனந்தன் கையில் சந்திரன் அடங்கியதில், பார்க்கப் போனால் விந்தை என்ன?

மதியைப் படைத்த மாமதியே இவர் என்று இவரது எதிர்ப்பாளர்கள் கொள்ள முடியாவிடினும் உலகத்தில் எங்குமே காண முடியாத அம்புலிக் குத்துகள் நிச்சயமாக ஸ்வாமியின் சிருஷ்டியே என்பது தெளிவாயன்றோ?

பாபாவின் பிரேம சாகரத்தில் மூழ்கப்படும் கல்லூரி மாணவர்கள், இந்த 1976 ஜூன் மாதம் உதகமண்டலத்தில் நடைபெற்ற கலாசாரப் பயிற்சி முகாமில் மற்றொரு ஒப்பற்ற சிருஷ்டியைக் கண்டனர். தொண்ணூற்றாறு வயதுவரை இவ்வுடலில் இருக்கப் போவதாகக் கூறிய ஸ்வாமி, அடுத்த நாற்பத்தாறாண்டுகள் இந்தியாவின் நாற்புறமும் தம்மால் எழும்பவிருக்கும் முக்கியமான பதினெட்டு நிறுவனங்களைக் குறிப்பிட்டுவிட்டுக் கையைச் சுழற்றினார்.

உடனே அவரது கரத்தில் பாரத தேசம் பொறிக்கப்பட்ட ஒரு பெரிய மெடல் சிருஷ்டியாயிற்று. அதிலே எதிர்காலத்தில் ஏறக்குறைய அரை நூற்றாண்டுகளில் தோன்றப் போகும் பதினெட்டு ஸாயி ஸ்தாபனங்களும் குறிக்கப்பட்டிருந்தன. அது மட்டுமின்றி பொடிப் பொடியான தேவநாகரி எழுத்துக்களில் ஸ்வாமியின் வருங்கால சாதனைகளில் முக்கியமானவை ஸம்ஸ்கிருத சுலோகங்களில் காணப்பட்டன.

Koviloor Digital Library

மாணவருள் ஒருவரான சிரஞ்ஜீவி சேகர் நாகராஜன் அப்போது எடுத்த புகைப்படம் நம் பாக்கியவசமாக இந்நூலில் பிரசுரமாகியுள்ளது.

* * *

என்னாற்றோருக்கு ரக்ஷை தராமலே ஸ்வாமி கண்ணை இமை காப்பதற்கும் மேலாக ரக்ஷித்து வருகிறாராயினும் சிலருக்கு தாயத்து எனப்படும் ரக்ஷையும் தந்து அதன் மூலமே அவர்களுடன் தமக்குத் தொடர்பு ஏற்படுவதாகவும் விளையாடுகிறார் அல்லவா? இதில் கிளைக்கும் சில உப-லீலைகளைப் பார்ப்போம்:

பாத மந்திர காலத்தில் ஒரு நாளிரவு. ஸ்வாமி, "....க்கு நான் கொடுத்த ரக்ஷையை அவன் தொலைச்சுட்டான். அது என் கிட்டே வந்துடுத்து. நான் இப்பவே மெட்ராஸுக்குப் போய் அதை அவனுக்குக் கட்டியாகணும்" என்றார்.

"இந்த அகாலத்திலே போக வேண்டாம் ஸ்வாமி" என்று பக்தர்கள் வேண்டினர் — ஸ்வாமியின் போகை வருகையைப் புரிந்து கொள்ளாத பக்தர்கள்!

அவர்களிடம் இன்னம் கொஞ்சம் தமாஷ் செய்ய விரும்பினார் ஸாயிக் குறும்பர். "அதெல்லாம் முடியாது, நான் இப்பவே போய்த்தான் ஆகணும். இல்லாட்டி, உங்களில் யாராவதுதான் போகணும். யார் போறிங்க?" என்றார்.

பரம தாஸரான ஸ்ரீ சேஷகிரி ராவ் முந்திக்கொண்டார். அவரிடம் ஸ்வாமி, சென்னையிலிருந்து தம்மிடம் 'வந்துவிட்ட' தாயத்தைக் கொடுத்தார். "இப்போ உனக்கு பஸ் கிடையாதே. பரவாயில்லை. கார்த்தாலே போ. அதுக்குள்ளே நீயும் இதைக் கோட்டை விட்டுடப் போறே. பத்திரம், பத்திரம். டவலில் முடிஞ்சு இடுப்போடு சுத்திக்கோ. நீ மட்டும் இதைத் தொலைச்சியோ, தெரியும் சேதி!" என்று எச்சரித்தார்.

எல்லோரும் உறங்கினார்கள்.

நள்ளிரவில் ஸ்வாமியின் கண கணச் சிரிப்பு அவர்களை எழுப்பியது.

படுக்கையில் அமர்ந்து விலாப் புடைக்கிற மாதிரி சிரித்துக் கொண்டிருந்த ஸ்வாமியிடம் என்ன சமாசாரம் என வினவினர்.

"சமாசாரமா? சொல்றேன்" என்று கூறிவிட்டு, இன்னமும் தூக்கம் கலையாத சேஷகிரி ராவைச் சீண்டினார் பகவான். "கும்பகர்ணா, எழுந்திரு. கொண்டா தாயத்தை" என்றார்.

அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்த ராவ் இடுப்பிலே கட்டியபடி இறுக்கமாக இருந்த துவாலையை அவிழ்த்து, அதன் நுனியில் கெட்டியாக இருந்த முடிச்சை அவிழ்த்தார்.

Koviloor Digital Library

ஹா! தாயத்தைக் காணோம்!

''உதவாக்கரைப் பயலே! நான் உன்னிடம் எத்தனை எச்சரிக்கை பண்ணினேன்? ஜம்பமாக வாங்கி வைத்துக்கொண்டு கும்பகர்ணன் மாதிரிக் குறட்டை விட்டாயே! இப்படி இடுப்புப் பொருளையே தாரை வார்க்கிறவனிடம் பிரசாந்தி மந்திரப் பூஜைப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறதே! ஹா..ஹூம்..'' என்று பாபா அமர்க்களப்படுத்தினார்.

ராவ் அழ மாட்டாக்குறையாக அபராத க்ஷமாபணம் கோர, ஸ்வாமி அந்த வசவையும் அமிருதமாக்கிவிட்ட அழுத்தமான கர ஸ்பரிசத்தை ராவின் முதுகுக்கு அருளினார்.

''பங்காரு! இந்த ஸாயித் திருடனிடம் யார் பாச்சா தான் பலிக்கும்? நான்தான் அதை எடுத்துக்கொண்டேன். பெட்ரூமுக்குப் போய் அதைக் ...க்குக் கட்டிவிட்டும் வந்துட்டேன்'' என்றார்.

அவரது போகையும் வருகையும் அலாதியன்றோ?

* * *

மேலே கண்டது போல், இவர் அருளும் தாயத்தை பக்தர் தாரை வார்க்கும்போது அது இவரிடமே வந்து விடுகிறது.

ஸ்ரீ வி.என்.பியை ஒருநாள் பாபா அழைத்து ரக்ஷை கொடுத்தும் அவர் மகிழ்வதற்குப் பதில் பயந்தார். காரணம், அவருக்கு பாபா ஏற்கெனவே ஒரு தாயத்து அளித்திருந்தார். அதை இவர் வீட்டில் பூஜையில் ஒரு வெள்ளி ஸம்புடத்தில் வைத்திருந்தார். அப்படியிருக்க இப்போது இன்னொரு ரக்ஷை தருகிறார் எனில் தனக்கு பெரிய விபத்து ஏற்படவிருக்கிறது என்றும், அதற்குக் காப்பாகவே இரண்டாவது தாயத்துத் தருகிறார் என்றும்தானே தோன்றும்? ரக்ஷையின் காப்பைவிட விபத்தின் கொடுமையை அதிகம் நினைத்து அஞ்சுவதுதானே மனித இயல்பு? வி.என்.பி. நடுங்கிக்கொண்டே ''ஏன் ஸ்வாமி இரண்டாவது ரக்ஷை?'' என வினவினார்.

''இரண்டாவது ரக்ஷையில்லை நாயனா! அதே ரக்ஷையைத் தான் இரண்டாவது தடவையாகத் தருகிறேன்'' என்று கூறிய ஸ்வாமி புதிரைப் பிரித்தார்: ''உன் வீட்டை உடைச்சுத் திருடங்க வெள்ளிப் பாத்திரங்களைத் தூக்கிட்டுப் போயிருக்காங்க. இந்த ரக்ஷையைப் போட்டு வெச்சிருந்தே பாரு, அந்த ஸம்புடத்தையும் திருடிட்டாங்க. ஆனால், ரக்ஷையைத் திருட முடியுமா? அது என்கிட்டே வந்திடுச்சு.''

ஸ்ரீ. வி. என். பி. ஊருக்குத் திரும்பியபின் ஸ்வாமி சொன்னபடியே, அந்த ஸம்புடம் உட்பட இவர் வீட்டு வெள்ளிச் சாமான்கள் களவு போயிருப்பது தெரிந்தது!

Koviloor Digital Library

ஒரு பக்தை புட்டபர்த்தியிலிருந்து ஹைதராபாத்துக்குத் திரும்பிக்கொண்டிருந்தாள். மஹ்பூப் நகருக்கு அருகே அவளது பெட்டி திருட்டுப் போய்விட்டது. ரயில்வே போலீஸுக்குப் புகார் கொடுத்தாள். இரண்டு நாளில் போலீஸார் அவளைக் கூப்பிட்டனுப்பினர். பெட்டி கிடைத்துவிட்டது. அதை எடுத்துப் போகவே இந்த அழைப்பு!

பெட்டியைத் திறந்து பார்த்த அம்மாள் அதில் எல்லாம் வைத்தது வைத்தபடி இருந்தது கண்டு மகிழ்ந்தாள். ஆனால் இம் மகிழ்ச்சியைத் தவிடுபொடியாக்குவது போல், மற்ற எல்லா வஸ்துக்களைச் சேர்த்தாலும் ஈடாகாத ஒரு வஸ்துவை மட்டும் காணவில்லை. ஸ்வாமி அவளுக்கு சிருஷ்டித்துத் தந்திருந்த ஜப மாலைதான்!

அது திருட்டுப் போன விஷயத்தை ஸ்வாமிக்கே தந்தி அடித்தாள்.

ஸ்வாமி பதில் கொடுத்தார். ''அது யாரும் திருடவொண்ணாதது. திருடர்கள் பெட்டியை எடுத்ததும் அது என்னிடமே வந்திருக்கிறது.''

பேரானந்தம் கொண்டாள் பக்தை.

புட்டபர்த்திக்கு வந்தாள். அதே ஜபமாலையை ஸ்வாமியின் திருக்கரத்திலிருந்து இரண்டாம் முறை பெறும் பாக்கியத்தை அடைந்தாள்.

ஜபமாலை தந்த சற்குருநாதா!

ஸ்வாமி எவரை உத்தேசிக்கிறாரோ அவரையன்றி வேறெவரும் அவரது பிரஸாதத்தைத் தமதாக்கிக்கொண்டு பயனடைய முடியாது என்பது தெள்ளத் தெளிவாகிறதல்லவா?

* * *

ஸ்வாமியின் சிருஷ்டிகள் உயிர்கொண்ட வஸ்துக்கள் போல் அவரிடம் தொடர்புகொண்டுள்ளன. அபாத்திரர் தங்களைத் தொடவந்தாலும் அவரிடம் ஓடிவந்து விடுகின்றன. ஒரு சிவராத்ரி லிங்கத்தை அர்ச்சகர் தொடப்போனதும் அது மாடியிலிருந்த பகவானிடம் ஓடி விட்டதையும் முன்பு படித்திருக்கிறோம் அல்லவா?

அதற்குரிய 'மரியாதை'யைத் தராவிடில் ஸ்வாமியின் பரிசுகள் அவரிடமே திரும்பி விடுகின்றன. கொடுக்கிற மிரகிளுக்குச் சமமாகத் திரும்ப எடுத்துக்கொள்ளும் மிரகிளையும் புரிகிறார்!

பிரசாந்தி நிலையத்துக்கு வந்து கச்சேரி செய்த ஒரு பாடகிக்கு ஸ்வாமி ஒரு நெக்லேஸ் சிருஷ்டித்துக்கொடுத்தார்.

Koviloor Digital Library

பிறகு ஒருநாள் ஸ்வாமி ராஜா ரெட்டி முதலியோருடன் உரையாடிக் கொண்டிருக்கும்போது 'பளபள' வென்ற எதையோ அவர் அந்தரத்திலிருந்து கையால் பிடித்து எடுத்துக் கொள்வதைப் பார்த்தனர்.

பாடகிக்குக் கொடுத்த கல்மாலைதான்!

“அவளுடைய புருஷன் இதற்கு என்ன விலை மதிப்பு இருக்கும் என்று தெரிந்துகொள்வதற்காக நகைக்கடைக்காரரிடம் பெட்டியில் வைத்து எடுத்துப்போனான். ஐயோ பாவம்! இப்போது அங்கே அவன் பெட்டியைத் திறந்து பார்க்கும்போது அது காலியாக இருக்கிறது! பூர்ணமான தன்னை வியாபார ரீதியில் எடை போட்டுவிட்டானே என்று கோபித்துக்கொண்டு இது என்னிடமே வந்துவிட்டது” என்றார் ஸ்வாமி.

பிறகு அந்த விதுஷியின் கணவர் இதை அறிந்து, பாபாவிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, கருணைக்கடலிடமிருந்து அதைத் திரும்பப் பெற்றார்.

* * *

சமீபத்தில் டில்லி உயர் வட்டங்களில் செல்வாக்குப் பெற்ற ஓர் அம்மாள், அவர்கள் ஸ்வாமியைத் தாழ்வாக எண்ணும்படி ஒரு பிரசாரம் செய்தார் — தெரியாத்தனத்தால்தான்.

ஸ்வாமியிடமிருந்து ஒரு பரிசும் கிடைக்காதா என்று பக்தர் பலர் ஏங்கியிருக்க, நம் மாயாவிப் பரந்தாமன் அவரிடம் விசேஷமாக ஈடுபாடு இல்லாமலே வந்த இந்த அம்மையாருக்கு ஒரு பரிசு வழங்கியிருக்கிறார்.

அம்மையார் அதை எடுத்துக்கொண்டு தாம் பூரண நம்பிக்கை கொண்டுள்ள ஒரு மஹாபுருஷரிடம் சென்றார். 'பாபாவின் பரிசில் ஏதாவது மாந்திரீகச் சூது இருந்தாலும் இருக்கும்; இந்த மஹாபுருஷரின் திருஷ்டியோ ஸ்பரிசமோ அதற்குக் கிடைத்தால் அதன் தீமை விலகிவிடும்' என்பது அம்மாளின் எண்ணம்.

மஹாத்மாவின் முன் பாபாவின் பிரஸாதத்தை வைத்து, அதைப் பற்றிய விவரத்தைச் சொல்லி, “இதை நான் வைத்துக் கொள்ளலாமா?” என வினவினார்.

மஹான் அப்போது மௌனம் அனுஷ்டித்துவந்தார்.

“தாங்கள் ஜாடையாகத் தெரிவித்தாலும் போதும். தங்கள் சந்நிதியிலே இதை....” என்று சொல்லிக்கொண்டே அம்மாள் பார்த்தபோது அப் பண்டத்தைக் காணவே காணோம்!

தெரியாத்தனத்தால் இதை அந்த அம்மாள் தப்பர்த்தம் செய்துகொண்டு விட்டார். பாபாவின் பரிசு சேர்க்கத் தகுந்ததல்ல என்றே போலும் மஹாபுருஷர் அதை அந்தர்தானமாக்கி விட்டார் என்று பொருள் செய்துகொண்டு, இதைப் பலரிடம் பிரசாரமும் செய்திருக்கிறார்.

Koviloor Digital Library

உண்மையில் அப்படி அந்தர்தானமாக்கியது சாக்ஷாத் பாபாவேதான் என்பதற்கு மேலே உள்ள சான்றுகள் போதும் தானே? அவரது சிருஷ்டி குறித்து அம்மாள் ஐயுறவுற்றதும் அது மாய்ந்துவிட்டது!

பிரம்மத்தை மறைத்து அதனிடத்தில் உலகைக் காட்டும் பராசக்தியின் ஆற்றலைத் 'திரோதானம்' என்று சிறப்பித்துச் சொல்வார்கள். பராசக்தியின் ஐந்தொழில்களான ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவற்றில் "மறைத்தல்" என்பது இதுவே. ஸாயி பராசக்தியின் மறைத்த லாற்றலில் நூலாசிரியனுக்கே அநுபவமுண்டு.

பாபாவின் பிரதிநிதியாகத் தம்மைச் சொல்லிக்கொண்ட ஒருவர் பாபாவே தமக்குத் தந்ததாகக் கூறிய மந்திராக்ஷதையில் சிறிதை இவனுக்குக் கொடுத்திருந்தார். இவன் அதை ஒரு வெள்ளிச் சிமிழில் போட்டுப் பூஜையில் வைத்திருந்தான். பிற்பாடு "ஸநாதன ஸாரதி" ஏட்டில் மேற்படி நபர் பாபாவின் பிரதிநிதி அல்ல என்று அறிவிக்கப்பட்டது. அப்போது நூலாசிரி யனுக்குக் குழப்பம் உண்டாயிற்று— பாபாவே கொடுத்ததாகச் சொல்லப்பட்ட அக்ஷதையை என்ன செய்வதென்று. ஆனால் ஸ்வாமி இவனை அதிகம் குழம்பவிடவில்லை. இவன் பூஜையின் போது சிமிழை எடுக்க அது காலியாகி யிருந்தது! அக்ஷதை அந்தர்தானமாகி விட்டது!

* * *

ஸ்வாமியே பரிசு தரும்போதுகூட பக்தர்களின் சொந்தக் கொள்கை அதை ஏற்கவொட்டாமல் செய்வது அகங்காரத்தின் பல மாயைகளில் ஒன்றுதான். இந்திரா தேவிக்கு வர்ணாலங்கார மாணிக்கதாரு மோதிரத்தை ஸ்வாமி வழங்கியபோது, அம்மாளின் கொள்கை குறுக்கே நின்றது. "அணிகலன்கள் ஏதும் பூணுவ தில்லை" என்பது அவரது கொள்கை.

கொள்கையால்தான் தயக்கமே அன்றி, அவருக்கு ஸ்வாமி யிடமோ பரிசுப் பொருளிடமோ கௌரவக் குறைவான எண்ணம் சற்றும் இல்லை. எனவே ஸ்வாமி இம் மோதிரத்தை 'திரோ தானம்' செய்யவில்லை. மாறாக அதை அம்மாளிடமிருந்து கேட்டு வாங்கி, அதன்மீது வாயால் ஊதினார். இப்போது அதன் விசித்திர வேலைப்பாடுகளும், ஏராளமான கற்களும் மறைந்தன. (குட்டித் திரோதானம்.) ஆனால் மோதிரமே மறைந்துவிடவில்லை. அம்மாள் கூசாமல் அணியத்தக்க ஸிம்பிள் ஒற்றைக்கல் மோதிரமாக மாறிவிட்டது.

* * *

பரகாயப் பிரவேசம் என்பது இன்னொரு உடலில் ஒருவர் புகுவது. பல ஸித்தர்கள் இதைச் செய்துள்ளனர். அவதாரரான ஆதி சங்கரரும், மகா யோகேச்வரரான திருமூலரும் கூடப்

Koviloor Digital Library

பரகாயப் பிரவேசம் செய்ய நேர்ந்திருக்கிறது. ஆயினும் இது ஸித்திகளில் ஒன்றே.

இதைவிட மிக மிக உயர்ந்த ஸித்தியே பரகாய ஸ்ருஷ்டி. அதாவது ஏற்கெனவே உள்ள உடம்பில் தம் ஜீவனைப் புகுத்தாமல், புதிதாகவே இன்னொர் உடம்பை எடுப்பது. காரியம் முடிந்ததுடன் அவ்வுடம்பு மறைந்துவிடும். ஒரு முறை செத்த பாம்பின் உடலில் பாபா பரகாயப் பிரவேசம் செய்ததை நாம் பார்த்திருக்கிறோம். பரகாய ஸ்ருஷ்டியும் அவருக்குத் தண்ணீர் பட்ட பாடுதான். ஓர் உடம்பை மட்டுமின்றிப் பல உடம்புகளையே படைத்து ''பஹுகாய ஸ்ருஷ்டி கர்த்தா''வாகவும் விளங்கியிருக்கிறார். உதாரணமாக, பேபாலில் சுட்டுக்கொண்டு தற்கொலை செய்து கொள்ளவிருந்தவரைக் காத்தபோது, அவரது நண்பர், நண்பரின் மனைவி, போர்ட்டர் ஆகிய இத்தனை உருவங்களைப் படைத்திருக்கிறார். பஸ்ஸில் செத்துக் கொண்டிருந்த குழந்தையைக் காத்து ''ஜோடி ஆதி பல்லி ஸோமப்ப'' நாமம் கொண்டபோது, ஒரு கிழவன், அவனது இரு மனையாள், ஒரு பிள்ளை ஆக நாலு ரூபங்களைப் படைத்திருக்கிறார்.

ரயில்வே ஊழியர் ஸ்ரீ கணேஷ் ராவிடம் ஒரு குறிப்பிட்ட தேதியன்று தாம் அவரது வீட்டுக்கு வருவதாக பாபா கூறினார். அன்று ராவின் மகன் காணாமற் போக, ஒரு கிழவனும் இரு பெண்டிருமாகக் குழந்தையை வீட்டில் கொண்டுவந்து விட்டுச் சென்றனர். 'ஸ்வாமியேதான் இந்த ரூபங்களில் வந்தாரோ? அல்லாவிடில் அவர்களுக்கெப்படித் தம் வீடு தெரிய முடிந்தது? ஆம். சொன்ன தேதி தவறாமல் அவரேதான் வந்திருக்கிறார்' என்று ராவ் தம்பதியர் கூறிக்கொண்டபோது, இன்னொரு ருசுவும் பிரகிருதும் பஹுகாய ஸ்ருஷ்டிக்குக் 'கொசுறு' வாகக் கிடைத்தது: இவர்கள் அலாரம் கொடுக்காமலே கடிகாரம் ''ஆம், ஆம், ஆம்'' என்பது போல் அடிக்கத் தொடங்கிவிட்டது!

ஸித்தர்கள் பரகாயப் பிரவேசம் செய்கையில் இவர்களது ஜீவன் வெளியேற, இங்கே உடல் கட்டையாகிச் செயலற்று விடும். ஆனால் பாபாவோ பஹுகாய ஸ்ருஷ்டி செய்து அவற்றைச் செயற்படவிடும் சமயத்திலேயே, தாம் கட்டையாகி விடாமல் வழக்கமான உயிர்த்துடிப்புடன் செயலாற்றிய சந்தர்ப்பங்கள் பல.

கன் டாக்டர் ரங்காராவுக்குச் சுய உணர்வு இருந்தபோதே பாபாவும் அவரது உயிரிலே, உடலிலே, உடையிலேகூடப் பிரவேசம் செய்த அற்புதத்தை முன்பு பார்த்தோமே! இது எந்த ஸித்தியிலும் சேராததுதான்.

ஒரே சமயத்தில் தம் உடம்பையே இரு இடங்களில் காட்டிக் கொண்டு, இரு இடங்களிலும் ஜீவ சக்தியுடன் செயல்படும் அற்புதத்தையும் நம் ஸ்வாமி பன்முறை புரிந்திருக்கிறார். இந் நாளிலேயே எவ்வளவோ தடவை இதைக் கண்டிருக்கிறோம்.

Koviloor Digital Library

அமெரிக்காவில் பிரதி தினமும் ஒரு பக்தருக்கு சூரியோதயத்தின் போது, சரியாகத் தொடுவானில் உள்ள கதிரவனிலிருந்தே வெளிப்பட்டு வருவது போல் ஸ்வாமி வந்து கிட்டத்தில் எதிரே நின்று உபதேசம் செய்திருக்கிறார். ஒருநாள் அல்ல. தொடர்ச்சியாகப் பல நாள் இப்படிச் செய்து சூரிய மண்டல மத்தியிலுள்ள காயத்ரி நாராயணனை நினைப்பூட்டியிருக்கிறார்!

காலிஃபோர்னியாவில் ஸாண்டா மோனிகாவில் பெஸ் நடத்தும் ஸங்கத் தியானத்தில் பாபாவை ஸ்தூலமாகப் பலர் பார்க்கிறார்கள்.

இன்னொரு விதப் பரகாயப் பிரவேசம் — அல்லது பஹுகாய சிருஷ்டி. ஸ்வாமி ஒருநாள் குறிப்பிட்டு, அன்று சென்னையில் ஒரு பக்தர் வீட்டில் உணவு கொள்வதாகக் கூறியிருந்தார். வீட்டு அம்மாள் அன்றையத் தினம் விருந்து தயாரித்தார். ஸாயிநாமம் சொல்லிக்கொண்டே பருப்பை 'நோம்பி', அடுப்பிலே அது பாலும், சீனியும் சேர்ந்து பக்குவமாகும் வரையிலும் ஸாயி நாமம் சொல்லி 'ஸ்பெஷல்' பாயஸமாகத் தயாரித்தார். சமையல் முடிந்தது. ஸ்வாமி வரக்காணோம். மணி ஓடிக் கொண்டேயிருந்தது. ஏமாற்றியே விட்டார். எல்லோருக்கும் துக்கம் தாளவில்லை.

இரவு பன்னிரண்டு மணிக்கு வந்தார் — அம்மாளின் சொப்பனத்தில். "பேஷ், உங்கள் வழக்கம் நன்றாயிருக்கு" என்று நையாண்டி செய்தார். "வருந்தி வருந்தி விருந்துக்குக் கூப்பிடுவது, சாப்பிட வரும்போது அடித்து விரட்டுவது, இதுதான் உங்கள் வழக்கமா?" என்று சாடினார். "ஐயோ ஸ்வாமீ! நீங்கள் ஏமாற்றிவிட்டீர்கள் என்று தவியாய்த் தவிக்கிற எங்களை இப்படி வேறு அபாண்டமாகக் கோபிக்கலாமா?" என்று அம்மாள் அழுதாள். "அபாண்டமா? பாயஸ பாத்திரத்தை மொய்த்திருந்த எறும்புகளையெல்லாம் நீ விரட்டவில்லை? அந்த ரூபத்தில் வந்த ஸாயியைத்தானே விரட்டினாய்?" என்றார் ஸ்வாமி.

ஆம், அன்று ஸாயி நாமப் பாயஸத்தை இந்த அம்மாள் எறும்பே அணுகமுடியாதபடிப் பாதுகாப்பாக வைத்திருந்தும் எப்படியோ அப் பாத்திரத்தில் ஏகப்பட்ட எறும்புகள் ஏறியிருந்தன! 'ஸ்வீட்' உள்பட வேறெதற்கும் ஓர் எறும்புகூட வராமலிருக்க, பாயஸத்தில் மட்டும் இப்படியிருந்தது. அவற்றையெல்லாம் இவள் விரட்டியது வாஸ்தவந்தான். சொப்பனத்தில் அவர் சொன்னது சாட்சாத் அவரே சொல்வதுதான் எனத் தெளிந்தாள்.

பிற்பாடு புட்டபர்த்தியில் பிரத்தியக்ஷத்திலேயே இதை பாபா 'கன்ஃபர்ம்' செய்தார்.

வேறு வே(று) உருவும், வேறு வே(று) இயற்கையும்
நூறு நூ(று) ஆயிரம் இயல்பினதாகி

என்பதை நிரூபிக்கும் பஹுகாய சிருஷ்டி.

Koviloor Digital Library

ஆந்திர தேசச் சிவாலயம் ஒன்றின் மூலஸ்தான லிங்கத்தின் மீது நாற்றியெட்டுப் பொன் வில்வங்களை சிருஷ்டித்துத் தூவுகிறார் பாபா. கருவறையில் திபு திபுவென அடியார் கூட்டம் இடித்துப் புடைத்துக்கொண்டு புகுந்து விட்டது. வெளியே வந்து கொண்டிருந்த ஒரு பிரசாந்தி நிலைய வாசினி கூட்டத்தில் மோதுண்டு, கர்ப்பக்கிருஹ வாயிலருகே நிற்கும் ஸ்வாமியின் மீதே மோதிக் கொள்ள இருக்கிறாள். 'ஐயோ! ஸ்வாமி மீது விழ இருக்கிறேனே!' என்று இவள் நடுங்கிய அந்த நொடிப் பொழுதுக்குள் ஸ்வாமி வாசல் தூணுக்குள்ளேயே அந்தர்தானமாகி விடுகிறார். கண் இமைக்கும் நேரம் தான்! இவள் தூணைத் தாண்டித் தன்னைச் சமாளித்துக்கொண்டு பார்க்கும்போது தூணிலிருந்து மீளவும் தோன்றுகிறார்— தூணிலிருந்து வந்தாலும் நரசிம்மராக உக்ரம் கொண்டில்லையாம். மந்த ஹாஸத்துடன் சாந்தமாகவே நின்றாராம். நயமுற இப்படி வர்ணிக்கிறாள் அந்த பக்தை!

இது பரகாயப் பிரவேசமல்ல; ஸ்தம்பப் பிரவேசம்—தம்மை ஸ்தம்பிக்க வைக்கும் பிரவேசம்!

இதுவரை உலகம் கண்டிராத உயிரினங்களாகவும் பாபா உருவெடுத்துச் செல்கிறார். பாலக்காடு சாந்தி நிவாஸில் நாம் வைரக்கற்கள் வைத்திழைத்த அபூர்வ நாகத்தைப் பார்த்தோமே, நினைவிருக்கிறதல்லவா?

* * *

தமது ஸத்ய ஸாயி உருவையே அவர் இரு வேறு இடங்களில் காட்டுவதில் மஞ்சேரி லீலைக்குத் தனி மகத்துவம் உண்டு.

பாபா ஒரே சமயத்தில் பல மணி நேரங்கள் இரண்டு இடங்களில் முழு விழிப்புடன் செயலாற்றிய அற்புதத்தைத் திர விசாரித்து உறுதிப்படுத்திக் கொள்ள விழைந்தார் முன்பே நாம் கண்டுள்ள அதி-மேதைத்துவ நிபுணரான டா. கார்லிஸ் ஓஸிஸ். இவர் பாபாவிடம் பலவித மிராகிள்களைத் தமக்காகச் செய்து காட்டும்படி கேட்டபோது பாபா அழகாகச் சொன்னார்: "அப்பா, நான் எவரிடமும் ஸர்டிஃபிகேட் வாங்குவதற்காக மிராகிள் செய்யவில்லை. ஆதலால் உன் பரிசோதிப்புக்காக நான் எதுவும் செய்வதற்கில்லை. என் அன்பைக் காட்டவும், என் அன்பரைக் காக்கவும், பொதுவாக பரமேச்வரனின் அதிசக்தியைத் தெரிவிக்கவுமே எனக்காக இஷ்டம் ஏற்படும்போது மிரகிள் செய்கிறேன்—அதாவது உங்களுக்கெல்லாம் மிரகிளாகத் தோன்றுவதைச் செய்கிறேன். எனக்கு இவை நாச்சுரல் (இயற்கை) தானேயன்றி, ஸூபர் நாச்சுரலே (இயற்கைக்கு அதீதமானதே) அல்ல. நீங்கள் இயற்கையின் நியதியை உங்கள் மட்டத்திலேயே ஆராய்ந்து, சிலவற்றை யதார்த்தம்—நாச்சுரல் என்றும், சிலவற்றை அற்புதம்-ஸூபர் நாச்சுரல் என்றும் சொல்கிறீர்கள். என் மட்டத்திலோ நீங்கள் நினைக்கும் அற்புதமும் யதார்த்தந்தான்; ஸூபர் நாச்சுரலும் நாச்சுரல்தான். அந்த உயர்மட்டத்தில் பொங்கும் தெய்விக அன்போடு காரியங்களைச் செய்யும் எனக்கு மிரகிளும் சகஜமான காரியந்தான், ஓஸிஸ்!

Koviloor Digital Library

உங்கள் பரீட்சைக்காக நான் டெமான்ஸ்ட்ரேட் செய்யமாட்டேன் ஆயினும் உங்களது நோக்கத்தின் தூய்மையை உணர்கிறேன். எனவே என்னுடனேயே நீங்கள் சில நாட்கள் தங்கியிருங்கள். என் பக்கத்திலேயே உங்களை வைத்துக்கொள்கிறேன். அப்போது உங்களுக்காக அல்லாவிடினும், அன்பின் எழுச்சியில் நானே சுபாவமாகப் பல so-called மிராகிள்கள் செய்யக்கூடும். அவற்றை நீங்களே கிட்டேயிருந்து மெய்யானவைதானா என்று அலசி ஆய்ந்துகொள்ளுங்கள்.''

சார்லிஸ் ஓஸிஸும் அவரது சகாவும் இருபது நாட்கள் பாபாவை நிழல்போலத் தொடர்ந்திருந்தனர். பாபாவே பரம கருணையோடு அதற்கு இடமளித்தார். இக் காலத்தில் பாபா செய்த பற்பல விதமான மிரகிள்களை நுணுகி நுணுகிக் கண்டார் ஓஸிஸ். முடிவில் நவீன விஞ்ஞானப்படி இதற்கு விளக்கம் காண முடியாவிடினும், இதில் மோசடி இல்லை என்று அமெரிக்கப் பல்கலைக் கழக வாயிலாக அறிக்கையும் விட்டார். இம் முடிவு காணுமுன்புதான் சம்பந்தப்பட்ட இடங்களுக்கே சென்று, பலரை விசாரணையும் குறுக்கு விசாரணையும் செய்து, ஒரே சமயத்தில் நீண்ட நேரம் பாபா இரு இடங்களில் ஸ்தூல தேகத்தோடு செயற்பட்டதை உறுதிப்படுத்திக்கொண்டார். அந்த அதிசய சம்பவத்தைப் பார்ப்போம்:

பாபா பற்பல சமயங்களில் இரண்டு இடங்களில் பூரணப் பிரக்ஞையுடன் சரீரம் கொண்டு இயங்கியபோதிலும் மஞ்சேரியில்தான் ஒரு முறை மூன்று மணி நேரமும், இன்னொரு முறை இருபத்திரண்டரை மணிநேரமும் இன்னொரு சரீரத்தில் இருந்தபடி பஜனை, பிரவசனம், சிருஷ்டி முதலிய சகல காரியங்களும் அவர் காணச் செய்திருக்கிறார்.

இரு முறையும் மஞ்சேரியில் ஸ்வாமி இருக்கை கொண்ட வீட்டுக்குரிய பரம பாக்கியசாலி ஸ்ரீ ராம் மோஹன் ராவ் என்பவர்.

பரமாக எடுத்துக்கொண்ட தமது இன்னொரு சுய காயத்திலும் தமக்கே உரிய கொனஷ்டையும் குறும்பும் போகாமல் பாபா இவ்விட்டாரிடம் விளையாடி இருக்கிறார். அதாவது, மஞ்சேரிக்காரரான ஸ்ரீ ராவிடம் கன்னடத்திலும், பாலக்காட்டைச் சேர்ந்த ஸ்ரீமதி ராவிடம் தமிழிலும், கேரளத்திலேயே வளர்ந்த அவர்களது குழந்தை சைலஜாவிடம் மலையாளத்திலும் மாறி மாறி சம்பாஷித்திருக்கிறார்!

இவர்கள் சிரிபு. பக்தர்தாம். புட்டபர்த்திக்கு வந்தவர்களோ அல்ல. எனினும் சிறுமி சைலஜாவின் உண்மையான பக்தியை மெச்சியே, 1964 டிஸம்பர் 13-ந் தேதி காலை எட்டு மணிக்குக் காளஹஸ்தியில் ஏகப்பட்ட ஜோலிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஸ்வாமி அதே போதில், ஏரியாக 600 கல்களுக்கு அப்பாற்பட்ட மஞ்சேரிக்கும் 'விஜயம்' செய்துவிட்டார்.

Koviloor Digital Library

'ஷிர்டி பாபாவின் தொடர்புள்ள இம் மகான் வேறேதோ காரியமாக மஞ்சேரி வந்திருக்கிறார் போலும். நாம் அத்யந்த ஷிர்டி பக்தர் எனக் கேள்விப்பட்டு நம் இல்லத்துக்கும் வந்திருக்கிறார்' என்றே ராம் மோஹன் ராவ் நினைத்திருக்கிறார்!

பாபா அக்கம் பக்கத்தில் உள்ளவர்களையெல்லாம் அழைத்து வரச் சொன்னார். பஜனைக் கூட்டம் கூடிவிட்டது. ஸ்வாமி தாமே மணிக்குரலால், "பாஹி பாஹி கஜானன", "ஓ பகவான்", "சிவ சிவ சிவ", "ஓங்கார ப்ரிய ஸாயிராமா" ஆகிய பஜனைகளை முன்பாடிக் கூட்டத்தினரைக் கீர்த்தனம் செய்ய வைத்தார்.

பஜனைப் புத்தகம், சங்கமாலை, வெண்கலக் கமண்டலு, பட்டுத்துணி, விபூதி, குங்குமம் முதலியன சிருஷ்டித்து வழங்கினார். 'மாத்ருபூமி' ஸ்தாபகரான காலஞ்சென்ற மாதவன் நாயரின் மனைவியாருக்கு மருந்து 'வரவழைத்து'க் கொடுத்து, "மூன்று நாட்கள் இதைச் சாப்பிட்ட பிறகு நீ எத்தனை அரிசிச் சோறு வேண்டுமாயினும் சாப்பிடலாம்" என்றார். அவ்வம்மை நீரிழிவு நோய் காரணமாக, ஏராள நெல் வயலுக்கு உரிமையாளராக இருந்தும், கோதுமையே உண்டு வந்தவராம்.

இந்த லீலைகள் மட்டுமின்றி, சந்தேகக்காரன் ஒருவரிடம் கத்திரிக்கோலைக் கொடுத்துத் தம் முடியை வெட்டச் சொல்லியிருக்கிறார்: காளஹஸ்தியில்தான் இவரது ஸ்தூலமான நிஜ சரீரம் இருந்ததாகவும், மஞ்சேரியில் கண்டது கனவுடல் போன்ற ஆகாச மேனி என்றும் நாம் எண்ணுவோம். ஆனால் இந்த இன்னொரு சரீரத்தின் மெல்லிய முடியே கல்லினும் ஸ்தூலமாக அக் கத்திரிக்கோலுக்குக் கொஞ்சம்கூட மசிந்து கொடுக்காமலிருந்திருக்கிறது! ஸித்திகளை மீறிய அதிசயந்தான்! எத்தனை முயன்றும் ஒரு ரோமம்கூடப் பிய்யாததால் அவநம்பிக்கைக்காரன் அயர்ந்து கத்திரியைப் போட்டுவிட்டு இவரடி பணிந்தான்.

ராவிடம் ஸ்வாமி, "பிப்ரவரி 25-ந் தேதி என் தினத்தில் (அதாவது குருவாரத்தில்) உன் அப்பா பெங்களூரில் ஸர்ப்பசாந்தி செய்ய இருக்கிறார். அதைச் செய்யவேண்டாம். ஏனெனில் தோஷத்தை நான் ஏற்கெனவே நிவிருத்தி செய்துவிட்டேன்" என்றார்.

கொஞ்சம் சிற்றுண்டி அருந்தினார்.

"நான் காளஹஸ்திக்குப் போகணும். என் பின்னால் யாரும் வரவேண்டாம்" என்று சொல்லி, பதினொரு மணிக்குப் புறப்பட்டார்.

வாசல் கேட் வரை அவர் போவது தெரிந்தது. அங்கே அந்தர்தானமாகி விட்டார்!

மறுபடி டிஸம்பர் 24-ந் தேதி மாலை இரண்டாவது "வருகை". ராவ் தம்பதியர் வெளியே சென்று திரும்புகையில்,

Koviloor Digital Library

பூட்டிய வீட்டுக்குள் விளக்குகளைப் போட்டுக்கொண்டு ஹாய்யாக அமர்ந்திருந்தார் ஸ்வாமி.

''முன்னே குழந்தை சைலஜாவுக்காக வந்தேன். இப்போது அவள் மங்களூர் போயிருப்பதால் உங்களுக்கு வெறிச் சென்று இருக்கோல்லியோ? உங்களுக்காகவே வந்திருக்கேன்'' என்றார் தயாநிதி.

பஜனை செய்தார்.

சமையலறைக்குச் சென்று ஸ்ரீமதி ராவிடம், ''எனக்காக ஏதுக்கு பாதாம் கீர் செய்கிறே? எனக்கு இதிலெல்லாம் ஆசையில்லை. அகத்துச் சமையலே போதும்'' என்றார்.

அப்படியே அவர்களோடு எளிமையாக உண்டார் ஸௌலப்ய மூர்த்தி.

இரவு அவ்வில்லத்திலேயே சயனித்தார்.

சாவித்துவாரத்தின் வழியாக இரவு முழுதும் ராவ் தம்பதியர் ஐயனின் சயன அறைக்குள் பார்த்ததில், அவர் நொடியும் உறங்காமலே உட்கார்ந்தபடி, ஏதோ சிந்திப்பது போல் நிசியைக் கழித்ததைக் கண்டனர்.

மறுநாட் காலையும் பாபா மஞ்சேரி இல்லத்திலேயே குளித்து, சிற்றுண்டி கொண்டார். விருந்துக்கு ஏற்பாடு தொடங்கிய ஸ்ரீமதியிடம், ''ஆத்துச் சமையலானால்தான் சாப்பிடுவேன். அதிகப்படியாக எதாவது பண்ணினே, சாப்பிடாமே போயிடு வேன்'' என்று மிரட்டினார்.

பிறகு ஆதிசங்கரரையும் முருகப்பெருமானையும் பற்றிப் பல விஷயங்கள் கூறினார். சுப்ரம்மண்ய யந்திரம் கொண்ட தாயத்தை சிருஷ்டித்துத் தந்து, ஸர்ப்ப ஸாந்தி விஷயமாக இவர் களுக்கு இருந்திருக்கக்கூடிய கொஞ்ச நஞ்ச கலக்கத்தையும் போக்கிவிட்டார்.

''தங்கக் கூடு பண்ணி, அதற்குள் இந்த யந்திரத்தைப் போட்டுக் கழுத்தில் கட்டிக்கொள். ஸாரி, இப்போ என்னிடம் தங்கம் இல்லை'' என்று ஜோக் அடித்தார்.

நல்ல கூட்டம் சேர்ந்துவிட்டது.

பக்தியைப் பற்றி மலையாளத்தில் பிரவசனம் செய்தார் பாபா.

பஜனை நடத்தினார். பகல் பன்னிரண்டுக்கு அதை முடித்துத் தாமே கர்ப்பூர ஆரத்தி காட்டினார்.

பிரமாதமாகக் கால் கிலோ பேரிச்சை வைத்திருந்ததைத் தமது இச்சை மாத்திரத்தால் பல கிலோவாக வளர்த்து அத்தனை பேருக்கும் விநியோகித்தார்.

பகல் போஜனம் அங்கேயே உண்டார். 'சிரம பரிகாரம்' செய்துகொண்டார். மாலை 4.30க்குத் தேநீரும் உட்கொண்டார்.

ஐந்து மணிக்குப் புறப்பட்டார்.

வாசல் 'கேட்'டில் அப்படியே மறைந்துவிட்டார்!

சுமார் ஒரு முழுநாள் இவர் கேரளத்தில் இப்படிக் கொட்டம் அடித்தபோதே ஆந்திரத்திலும் தமது குன்றாத ஜீவ சக்தியுடன் தெய்வக் கருணை 'ஆபீஸ்' நடத்தித்தான் இருக்கிறார். பிரசாந்தி நிலைய முக்கியஸ்தர்கள் மஞ்சேரியிலிருந்து வந்த செய்தி கண்டு ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர்.

* * *

வைத்திய அற்புதங்களோடு சேர்க்கத்தக்கதே எனினும், விநோதம் தூக்கலாக இருப்பதால் இந்த அத்தியாயத்துக்கென ஒதுக்கப்பட்ட ஒரு லீலை:

ஸ்வாமி அமிர்தானந்தருக்கு ஏற்பட்டிருந்த ஆஸ்துமா, பன்னெடுங்காலத்துக்கு முன்பு அவர் திருவண்ணாமலையில் செய்த ஹடயோகத்திலிருந்த தவறுகளின் விளைவே என்று கூறி அவரை அதிர அடித்தார் பாபா! இதற்கு பாபா செய்த விநோத வைத்தியத்துக்கு வருவோம்.

முதல் இரண்டு நாட்கள் திருநீறு சிருஷ்டித்துத் தந்தார். மூன்றாம் நாள் தங்க நிறமான ஒரு பஸ்மத்தை ஸ்வாமிஜியின் வாயில் போட்டார். அது நாக்கிலே கனமாக விழுந்தது! பிறகு ஸ்வாமி ஒவ்வொரு திசையும் திரும்பிக் கையை அசைக்க நாலு திக்கிலிருந்தும் தாமிர வர்ண பஸ்மம் ''வந்தது.'' அதை ஸ்வாமிஜியின் முதுகிலும் மார்பிலும் பூசினார். பிறகு ஒரு நாள் மறுபடி விபூதி சிருஷ்டித்துத் தந்து, ''ரொம்பவும் இழுப்பு வரச்சே இதைப் போட்டுக்கோ'' என்றார். வேறொரு நாள் ஏதோ சில மிருதுவான வேர்களை ''வரவழைத்து'' உண்ணக் கொடுத்தார்.

இமாலயம் உள்பட இந்தியா முழுதும், இலங்கை, மலேயாவிலும் சுற்றியவர் அமிர்தானந்தர். இங்கெல்லாம் எங்குமே அவர் கண்டிராத குட்டி வாழைப் பழங்களைச் சில நாட்கள் ''கொண்டு வந்து'' கொடுத்தார் ஸ்வாமி. இன்னொரு நாள் கொட்டையே இல்லாத அதிசய பேரிச்சையைப் படைத்துக் கொடுத்தார்! கை நிறையப் பச்சிலைகளைக் ''கொணர்ந்து'' ஒரு கோப்பையும் சிருஷ்டித்து, தாமே கோப்பையில் பச்சிலையைப் பிழிந்தார். அந்தச் சாற்றையும் குடித்தார் ஸ்வாமிஜி.

Koviloor Digital Library

இன்னொரு நாள் சின்னச் சின்னப் பச்சிலைகளாக ஒரு கட்டை ஸ்வாமிஜியின் கையில் போட்ட ஸ்வாமி கண்ணைச் சிமிட்டியபடி, ''சாப்பிடு'' என்றார். ஸ்வாமிஜி அதிர்ந்தார். ஏனென்றால் அவ்விலைகள் நிறைய முட்கள் இருந்தன. இதற்காகத்தான் அந்தக் குறும்புச் சிமிட்டல்.

''நிஜமாகவா நான் இந்த முள்ளைத் தின்ன விரும்புகிறீர்கள்?'' என்று அமிருதாநந்தர் அழாக் குறையாகக் கேட்டார்.

ஸ்வாமி அமிருதமாக இளகி, ''எங்கே, அதைக் கொண்டா'' என்று கையை நீட்டினார். அமிருதாநந்தர் அதில் பச்சிலைக்கட்டை வைக்க, பாபா அதை உடனே அவரிடமே திருப்பிக் கொடுத்தார். ஆஹா, ஒரு முள் கூட இல்லை!

மகிழ்ச்சி பொங்க அதை ஸ்வாமிஜி உண்டார்.

இன்னொரு நாள், ''நேராக ஹிமாலயத்திலிருந்து வந்திருக்கிற மூலிகை'' என்று ஸ்வாமி பச்சிலைகள் நிறைந்த கரத்தை நீட்டினார். பாதியை ஸ்வாமிஜியின் கையில் போட்டு, ''கம் ஆன்! மென்னு மென்னு சாப்பிடு'' என்றார். வாயில் கொஞ்சம் போட்டுக்கொண்ட ஸ்வாமிஜி தவித்தார். அய்..யோ, அதன் கசப்பு! தமது ஆதிகால தவம் முழுவதன் கடுமையையும் சேர்த்து அநுபவிப்பது போலிருந்ததாம் அமிருதாநந்தருக்கு. ஸ்வாமியோ தயாதாக்ஷிண்யம் இல்லாமல் தம் கையிலே வைத்திருந்த மீதி பாதியையும் கொடுத்து, ''ம், தின்னு'' என்று அதட்டினார். திணறித் திண்டாடிக்கொண்டே அதை வாயில் போட்டுக் கொண்ட ஸ்வாமிஜி ஆனந்த பரவசரானார். ஆம், அதே கசப்பு மூலிகை இப்போது கரும்பையும் தேனையும் விட இனித்தது! அதையும்விட இனிக்க ஸ்வாமி நகைத்தார் — அமிருதாநந்தரின் மகிழ்ச்சியில் மகிழ்ந்தவராக.

கர்மாவுக்காக இத்தனை நாட்கள் அமிருதாநந்தர் அநுபவிக்கும்படித்தான் விட்டிருக்கிறார்! ஆனால் அதே சமயத்தில் தினுசு தினுசாகத் தன் அன்பைக் காட்டி எத்தனை ஆறுதலும் உற்சாகமும் ஊட்டியிருக்கிறார்!

* * *

ஹாஸ்ய ரஸனை மிக்கவர் நம் ஸ்வாமி. அவர் லீலைகளிலும் நகைச்சுவை ததும்பக் குறும்பு அம்சம் ஒன்றைக் கலந்து செய்வதுண்டு.

1969—ம் வருஷம் பாபா ஜயந்திக்குப் போக இந்திராதேவி திட்டம் ஏதும் போடவில்லை. ஆயினும் ஜயந்தி மிக நெருங்கி வந்தபோது அதற்குப் போக மாட்டோமா என்ற ஏக்கம் பிறிக் கொண்டு வந்தது.

டெலிஃபோன் மணி அடித்தது. பிரசித்திபெற்ற திரைப் படத் தயாரிப்பாளரான வார்னர் ப்ரதர்ஸின் சார்பில் ஒருவர்

Koviloor Digital Library

பேசினார். ''மாதாஜி, வார்னர் ப்ரதர்ஸில் ஸாயி பாபாவின் வாழ்க்கை குறித்து டாகுமென்டரி எடுக்க விரும்புகிறார்கள். தயவு செய்து தாங்கள் நாளைக்கே இந்தியாவுக்குப் போய் இதற்கு அவரிடம் அநுமதி வாங்கி வரமுடியுமா? தங்கள் பயணத்துக்கான ஏற்பாடுகளையும், செலவு முழுவதையும் வார்னர் ப்ரதர்ஸே ஏற்றுக்கொள்கிறார்கள்'' என்றார் டெலிஃபோனில் பேசியவர்.

இந்திரா தேவி ஒப்புக்கொண்டார் என்று சொல்லவும் வேண்டுமா?

வார்னர் ப்ரதர்ஸார் தமக்காக டிக்கெட் வாங்கி விட்டனர் என்று லாஸ் ஏஞ்ஜெல்ஸில் இருந்த ஏர் இந்தியா மானேஜரிடமிருந்து உறுதியானவுடன் இந்திரா தேவி இந்தியாவுக்குப் புறப்பட்டார்.

பாபா ஜயந்திக்குப் புட்டபர்த்தி வந்துவிட்டார்.

பகவானிடம் தனிப்பேட்டி பெற்றார். ஆயினும் வார்னர் ப்ரதர்ஸின் கோரிக்கையை அடியோடு மறந்துவிட்டார்! அந்த கிட்டனும் தம் குறும்பைச் சொல்லாமலே அம்மாளுக்கு லக்ஷ்மிப் பதக்கத்தை ரக்ஷையாகக் கொடுத்து அனுப்பிவிட்டார்.

அமெரிக்கா திரும்பியவுடன் இந்திரா தேவி வார்னர் ப்ரதர்ஸ் ஸ்டுடியோவுக்குச் சென்றார் — அவர்கள் செலவுசெய்து அனுப்பி வைத்தும் தாம் ஸ்வாமியிடம் அநுமதி கேட்காததற்கு மன்னிப்புக் கேட்பதற்காக!

''ஸாயிபாபாவைத் தாங்கள் பார்க்கப் போவதற்கு நாங்கள் டிக்கெட் வாங்கினோமா? இல்லவே இல்லையே! ஸாயி பாபா என்பவரைப் பற்றி நாங்கள் கேள்விப்பட்டதே இல்லையே'' என்றனர் அத் திரைப்படத் தயாரிப்பாளர்!

* * *

குறும்பு நிறைந்த ஓர் 'அப்போர்ட்':

காகிநாடாவைச் சேர்ந்த ஸ்ரீ ஜி.கே. ராவின் மாமியார் ஆயிரம் ரூபாய் பறிகொடுத்து விட்டாள். இளைஞனான தன் பிள்ளையேதான் திருடி இருக்கிறான் என்பது அவளது அநுமானம். பறிபோனது திரும்பிவரப் பர்த்திவாஸன் அருளை எதிர்பார்த்தாள். மருமகன், மகன் இருவரையும் தன்னுடன் புட்டபர்த்திக்கு வரச் சொன்னாள். அப்படியே மூவரும் பர்த்தி அடைந்தனர். பாபாவின் சித்தியில் சிறிதும் நம்பிக்கையில்லாததால் தைரியமாக உடன் வந்தான் அவளது விடலைப் பிள்ளை.

பர்த்தி அடைந்தபின் ஜி.கே. ராவ் மைத்துனனிடம் சொன்னார்: ''பாபா ஸர்வக்ஞர். ஆகையால் உன் குற்றத்தை இப்போதேனும் ஒப்புக்கொண்டு விடு.''

Koviloor Digital Library

கொழுப்பாகப் பதில் சொன்னான் பிள்ளையாண்டான்: ''அந்த ஸர்வக்ஞத்வத்தைத்தான் பார்த்து விடுவோமே!''

பாபா இவர்களைத் தனிப் பேட்டிக்கு அழைத்தார். விடலையிடம் பளிச்சென்று, ''அப்பாயி! குற்றத்தை ஒப்புக்கோ. அதோடு, பணத்தைத்தான் நீ செலவழிக்காமல் வெச்சிருக்கியே, ஊருக்குப் போனதும் அம்மா கிட்டேயே அதைக் கொடுத்துடு'' என்றார்.

அந்த அதிர்ச்சியில் இளைஞனும் ஒப்புக்கொண்டான்.

அம்மாக்காரி பாபாவிடம், ''இவன் ஊருக்குப் போனபின் என்ன செய்வானோ? அதனால் நீங்கள் இங்கேயே அந்தப் பணத்தை வரவழைச்சுக் கொடுங்கள் ஸ்வாமி'' என்று வேண்டினாள்.

''ஊஹூம்'' என்றார் பாபா. ''எத்தனையோ பேருக்குத் தான் திருட்டுப் போறது. உன் ஒருத்திக்கு நான் திருட்டுப் போனதை வரவழைச்சுக் கொடுத்தால், அவங்க எல்லாரும் என்னைச் சுத்திக்கிட்டு தொல்லை கொடுப்பாங்க. இதோ பாரு. உன் பணம் உன் வீட்டை விட்டு அப்பாலே போகலை. போய் நல்லாத் தேடிப் பாருங்க. கிடைக்கும்!'' என்றார்.

பலருக்குத் தொலைந்துபோனதை 'அப்போர்ட்'டும் செய்து தந்திருப்பவர்தாம் நம் ஸ்வாமி. இவன் கர்மாவுக்கு இன்னம் கொஞ்சம் ஆட்டம் பார்க்க நினைத்தார் போலும்; கதைத்தார்!

மூவரும் ஊருக்குத் திரும்பினர்.

'அப்பாயி' இப்போது பழைய குரலையே திருப்பிக் கொண்டான். ''நான் பணத்தை எடுக்கவே இல்லை. சும்மாவுக்காகப் புட்டபர்த்தியில் ஒத்துக்கிட்டேன்'' என்று சாதித்தான்.

''போய் நல்லாத் தேடிப் பாருங்க'' என்று ஸ்வாமி சொன்னதிலேயே இவனுகத் தரமாட்டான், தேடித்தான் கண்டெடுக்க வேண்டும் என்று தொக்கி நிற்கிறதே! விழுந்து விழுந்து தேடினர். பயனில்லை.

ஸ்வாமி உடனுக்குடன் பணத்தை வரவழைத்துத் தராததாலேயே சிறிது சலிப்படைந்திருந்த அம்மாள், இப்போது அடியோடு அலுத்து விட்டாள். அந்த விஷயத்தை அதோடு விட்டு விட்டாள்.

சில நாட்களுக்குப் பிறகு அவளது கணவர் பூஜை அறையில் ஒரு டிராயரை எதற்கோ குடைந்தார். அதற்கடியில்.....

வள்ளிசாக அந்தக் களவு போன ரூபாய்க் கட்டு அமர்ந்திருந்தது!

சில நாட்களுக்கு முன்பு தோண்டித் துருவித் தேடியும் அகப்படாத கட்டு, இப்போது எப்படி இதில் முளைத்தது?

Koviloor Digital Library

ஸ்வாமி சொற்படி வீட்டுக்குள்ளேயே வேறெங்கோ அப்பாயி பதுக்கியிருந்ததைத்தான் அவர் இங்கே மாற்றி இருக்கிறார் என்று ஊகித்தனர். புட்டபர்த்திக்கு அப்போர்ட் செய்யாவிட்டாலும் வீட்டுக்குள்ளேயே குட்டி அப்போர்ட் வேடிக்கை செய்திருப்பதாகத் தெரிந்தது.

இப்போது இவர்களும் அப்பாயியிடம் வேடிக்கை பார்க்க விரும்பினர். தந்தையார் பணத்தை மீளக் கண்டபோது அவன் வீட்டில் இல்லை. எனவே, 'பணம் கிடைத்ததை அவனிடம் சொல்ல வேண்டாம். எப்படியும் அவன் செலவழிப்பதற்காகத் தான் வைத்த இடத்திலிருந்து பணத்தை எடுக்க விரும்புவான். அப்போது, தான் அபேஸ் செய்தது அங்கிருந்து அபேஸாகி விட்டது தெரியும். இந்தச் சின்னக் குரங்காக என்ன செய்கிறான் பார்ப்போம்' என்று விஷயத்தை அமுக்கிவிட்டார் அம்மாளின் கணவர்.

அப்படியே ஒரு நாள் அவன் மாடிப்படி வரிசைக்கு அடியிலிருந்த ஸ்விட்ச்-போர்ட்டின் ஸ்க்ரூக்களைக் கழற்றி அதைத் திறந்தான். அதற்குள்தான் அவன் பணத்தை ஒளித்திருந்தான். வீடு முழுதும் தேடிய பெற்றோருக்கு ஸ்விட்ச்-போர்டைத் திறந்துபார்க்க வேண்டும் என்று தோன்றவில்லை! இனியும் விளையாட்டுப் பார்க்க வேண்டாம் என்றே ஸ்வாமி அதை இவர்கள் பார்வையில் உள்ள டிராயருக்கு மாற்றிவிட்டார்!

ஸ்விட்ச் – போர்டைத் திறந்த அப்பாயிக்கு மின்சார ஷாக்கைவிடப் பெரிய ஷாக் அடித்ததும், ஆசாபங்கத்தில் வாய் விட்டே அழுதுவிட்டான்.

அங்கே வந்த தந்தையார் பூஜை அறை டிராயரிலிருந்து அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு விட்ட உண்மையை வெளியிட்டார்.

* * *

'கரிமா' என்பதாக ஸித்தர்கள் தாமே பளுவில் கூடுவதைத்தான் அஷ்டஸித்திகளில் கேட்டிருக்கிறோம். அடியார் ஒருவரின் பளுவைக் கூட்டிய அதிசயம் ஸாயி லீலையில்தான் காண்கிறோம். இதிலும் ஹாஸ்யம் கொழிக்கிறது.

நாகமணி பூர்ணய்யா ஒருமுறை உடல் நலம் குறைந்து மெலிவுற்று வந்தார். அந்த நிலையிலும் அவர் பெங்களூரிலிருந்து புட்டபர்த்திக்கு அடிக்கடிப் பயணம் செய்வதையும், அங்கு ஸ்வாமி தரிசனத்திலும் பஜனையிலுமே மூழ்கி, வேளாவேளைக்கு உண்ணாமல் மேலும் பலவீனமுற்று வருவதையும் கணவரால் ஒப்ப முடியவில்லை. ஆயினும் ஸ்வாமிக்காக ஏக்கமாக ஏங்கிய நாகமணி கணவரிடம் மன்றாடினார். "புட்டபர்த்தி சென்றாலும் உடம்பைக் கவனித்துக்கொள்கிறேன். இந்த முறை நான் இளைத்துத் திரும்பினால், மறுபடி நான் செல்ல அநுமதிக்க

Koviloor Digital Library

வேண்டாம்'' என வேண்டினார். ஸ்ரீ பூர்ணையா இளகினார். வைடமின் மாத்திரைகள், டானிக்குகள், பிஸ்கெட்கள், டின் உணவுகள் முதலியன வாங்கிக்கொடுத்து நாகமணியைப் பர்த்திக்கு அனுப்பினார்.

பர்த்தி சென்ற அம்மை பர்த்தாவுக்குத் தந்த வாக்கை மறந்தே விட்டார். பழையபடியே எப்போது பார்த்தாலும் ஸ்வாமி தரிசனத்திலேயே பித்துப் பிடித்து உணவு உறக்கத்தை இழந்தார். மேலும் மெலிந்தார்.

பெங்களூருக்குத் திரும்பு முன் நாகமணி ஸ்வாமியிடம், ''நீங்கள்தான் எப்படியேனும் என்னை அவர் பார்வைக்குப் பருத்திருப்பதாகத் தோன்றச் செய்ய வேண்டும். மற்றவர்களுக்கு நான் இளைத்தே தெரிந்தாலும் பரவாயில்லை; அவருக்கு மட்டும் அப்படித் தெரியக்கூடாது'' எனப் பிரார்த்தித்தார்.

ஸ்வாமி குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார். மற்ற பக்தர்களை யெல்லாம் அழைத்து, ''நாகமணிபாய் என்ன சொல்றா கேளுங்கோ'' என்று கேலி செய்தார்.

ஏமாற்றத்தோடு வீடு திரும்பினார் அம்மையார். முன்னிலும் மெலிந்து திரும்பிய பார்யாளைப் பார்த்தார் ஸ்ரீ பூர்ணையா. தாம் கொடுத்தனுப்பிய மாத்திரைகளும், டானிக்குகளும், பிஸ்கெட்டுகளும், டின் உணவுகளும் பழைய மேனி குலையாமல் திரும்பிவிட்டதையும் கவனித்தார்.

''நீ படு மோசமாக இளைத்திருக்கிறாய்!'' என்றார் மனையாளிடம்.

''எனக்குத் தெரியவில்லையே! நான் நல்ல தெம்போடுதான் இருக்கிறேன்'' என்று அளந்தார் அம்மையார்.

கணவரை ஏமாற்றுவதற்காகத் தடிப் புடவையும், கம்பளி ஜாக்கெட்டும் அணிந்தார்.

மறுநாள் தம்பதியர் ஒரு ஸினிமாவுக்குச் சென்றனர். பூர்ணையா மனையாளைத் தியேட்டர் வாசலில் இருந்த எடை காட்டும் இயந்திரத்தில் ஏறச் சொன்னார்.

அம்மாளுக்கு ரத்தம் செத்துவிட்டது. கையும் மெய்யுமாகப் பிடிபட்டோமே என்று நடுங்கினார். ஸ்வாமி தந்திருந்த ரக்ஷை யைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, ஸாயிராம நாமத்தை ஜபித்தபடி எடை காட்டும் கருவியின்மீது ஏறினார்.

எடையைப் பார்த்த ஸ்ரீ பூர்ணையாவின் முகத்தில் பேராச் சரியக் கீற்றுகள் உண்டாயின. ''என்ன அதிசயம்! இளைத்தாற் போல் இருக்கிறாய். ஆனால் வெயிட் பத்துப் பவுண்ட் கூடி யிருக்கே!'' என்றார்.

"மெஷினில் கோளாறு இருக்க வேண்டும். கீழே இறங்கு" என்றார்.

நாகமணி இறங்கியதும் பூர்ணையா மெஷின்மேல் ஏறி நின்றார். வெகு சமீபத்தில் அவர் தம் எடையை எடுத்திருந்தார். அதே எடையைப் பிசகாமல் காட்டியது கருவியின் முள்!

மகாகனம் ஸாயியின் அருளில் அடியார்களின் பாரம் யாவும் லேசாவதில், அவர்கள் லேசாக இருக்கும்போதே கனத்தில் கூடுவதையும் சேர்க்கத்தான் வேண்டும்.

பால ஸாயிக் காலத்தில் ஸ்வாமி மிக வேடிக்கையான லீலைகள் செய்து பக்தரைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்தது அதிகம். பக்தர் பூச்சரம் கொண்டு வந்து வைத்தால், பூவை யெல்லாம் பிய்த்து வாயில்போட்டுக் கொண்டு, கன்னம் உப்பக் குதப்பிக் குதப்பித் தின்பார். நாரைப் போட்டு விடுவார். பிறகு வாய்க்குள்ளிருந்து இழுப்பார் – பிய்த்துப் தின்ற பூக்கள் எவ்வாறோ ஒரு நாரில் தொடுத்துக்கொண்டு வள்ளிசான சரமாகச் சரசர வென்று வெளியே வரும். புட்டுப் புட்டு உண்ட விஷவடையை முழுசாகத் துப்பினாரே, நினைவிருக்கதல்லவோ? இப்படிப் பல குறும்புகள்.

* * *

டெலிஃபோன் ஒன்றுக்கு மாலை போட்டு வழிபடுமாறு ஸ்வாமி செய்ததுண்டே, பரம ரஸமான லீலைதான்! பெங்களூரில் லக்ஷ்மி பூஜை கொண்டாடிக்கொண்டிருந்த அந்த பக்தைக்கு மனம் என்னவோ பூரண லக்ஷ்மிகரமாக இல்லைதான். ஆம், ஸாயிலக்ஷ்மி இந்த பூஜைக்கு இல்லாமல் சென்னைக்குப் போய் விட்டாள் என்றால் தாபம் உண்டாகத்தானே செய்யும்? அதோடு இவளது கணவர் சென்னையில் ஸ்வாமியோடு ஆனந்தமாக இருக்கிறார் என்பதில் நியாயமான பொறாமை வேறு!

மனம் ஈடுபடாமலே இவள் பூஜைக்கு அமருகையில் வாசலிலிருந்து.... கண்ணன் குழலொலியா என்ன? இல்லை, காரின் குழல் ஒலிதான்! ஆனாலும் அது ஸாயிக் கண்ணனின் கார் ஒலியாக இந்த அம்மாளுக்குப் பழக்கப்பட்டுவிட்டதால் உள்ளம் துள்ளியது.

தொடர்ந்து ஸ்வாமியும் வந்தே விட்டார், அம்மாளின் கணவரோடு.

நடமாடும் தெய்வம் வந்தவுடன் லக்ஷ்மிபூஜை மறந்தே விட்டது. மனமேதான் லக்ஷ்மிகரமாகி விட்டதே!

ஸ்வாமியை வரவேற்று அமர்த்தினாள். சிற்றுண்டி தயாரித்தாள்.

ஸ்வாமி அதை சந்தோஷமாக உட்கொண்டார்.

Koviloor Digital Library

நீர் கொண்டு வர உள்ளே சென்ற அம்மாள் திரும்பி வந்த போது ஸ்வாமியைக் காணோம். அவளது பதியும் அங்கில்லை.

குறும்புப் பெருமான் 'இவரையும்' அழைத்துக்கொண்டு வேறேதோ பக்தர் வீட்டுக்குப் போய்விட்டார் என்று ஊகித்தாள் நம் பக்தை.

தெருப்பக்கம் வந்து காவலாளியிடம் ''ஸ்வாமியும், ஐயாவும் எந்தப் பக்கம் காரில் போனாங்க?'' என்று கேட்டாள்.

''ஸ்வாமியா? ஐயாவா? காரா? அதெல்லாம் ஒண்ணும் வரவேயில்லையே'' என்றான் பணியாள்.

''உபயோகமற்றவனே! நீ காவல் காக்கிற லக்ஷணம் நன்றாயிருக்கு. அக்கம் பக்கத்திலே போய் வம்பு பேசறதுதானே உனக்குத் தொழிலாய் போயிடுத்து?'' என்றெல்லாம் காவலாளைக் கடிந்துகொண்டு உள்ளே வந்தாள் பக்தை.

பெங்களூரில் உள்ள ஸ்வாமியின் அந்யந்த பக்தர்களுக்கெல்லாம் ஃபோன் செய்து ஸ்வாமி வந்திருக்கிறாரா என விசாரித்தாள்.

அவர்களில் எவர் வீட்டுக்கும் ஸ்வாமி செல்லவில்லை. அவர்கள் யாவருந்தான் மாலையும் கையுமாக இந்த அம்மாள் வீட்டுக்கு விரைந்தனர்—திடுமென இவளை ஏமாற்றிப் போன ஸ்வாமி மறுபடி அங்கு நிச்சயமாக வருவார் என்ற நம்பிக்கையில். (பக்தர்களிடம் ஸ்வாமி மாலை மரியாதை அங்கீகரித்த காலம் அது!)

நீண்ட நேரம் பார்த்தும் ஸ்வாமி வருகிற வழியாக இல்லை. அப்போதுதான் அடியார்களுக்கு அன்று ஸ்வாமி பெங்களூருக்கு ''வந்ததே'' அதிமாநுஷ்யமான விதத்தில் இருக்குமோ என்ற எண்ணமே வந்தது. உடனே சென்னைக்கு டெலிஃபோன்'கால்' போட்டார்கள்.

இவர்கள் எண்ணியது சரியாகவே இருந்தது. ஸ்வாமி சென்னையிலேயேதான் இருக்கிறார். அவரேதான் இப்போது தொலைபேசியில் கருப்பங்கட்டியாகச் சிரித்தார்.

ஸாயிலக்ஷ்மியின் தரிசனம் வேண்டும் என்ற தமது தாபத்தை அறிந்து உடனே ஐயன் புரிந்த அருளை எண்ணி அதிதபரவசமுற்ற நம் அம்மையார் அப்படியே மூர்ச்சித்து விழுந்து விட்டார்!

பக்தர்கள் இதையும் ஸ்வாமிக்கு ஃபோனில் தெரிவித்தனர்.

''பரவாயில்லை'' என்றார் ஸ்வாமி. ''நான் விபூதி அனுப்பியிருக்கிறேன். அதை அவள் நெற்றியிலே தேயுங்கோ, வாயிலேயும் தூவுங்கோ. மயக்கம் தெளிஞ்சுடும்.''

Koviloor Digital Library

விபூதியை எப்படி அவ்வளவு விரைவில் அனுப்புவார் என்று ஸாயிபக்தர் வியக்க வேண்டியதில்லைதான்.

டெலிபோனிலிருந்தே, ஸ்வாமி பேச இவர்கள் கேட்டார்களோ, அந்த முனையிலிருந்தே விபூதி குபு குபு என்று பொங்கிக் கொண்டு வந்தது!

அதைப் பூசி, வாய்க்குள் போட்டதும் அம்மாள் மூர்ச்சை தெளிந்து எழுந்துவிட்டாள்.

விபூதியை வர்ஷித்த அந்தத் தொலைபேசிக்கே அனைவரும் தாங்கள் கொணர்ந்திருந்த மாலைகளைச் சூட்டி நமஸ்கரித்தனர்.

* * *

நகைச்சுவைக் கொடுமுடியில் தமது அற்புத ஆற்றலின் சிகரத்தையும் இழைத்து ஸ்வாமி புரிந்த லீலை ஒன்றுக்கு வருவோம்.

பாபா என்றாலே பரிகசிப்பவர் லாஸ் ஏஞ்ஜெல்ஸைச் சேர்ந்த ஸ்ரீ ஜோயல். ''காரெக்டர்'' என்றே பாபாவைக் கேலியாகக் குறிப்பிடுவார். முட்டாளை நாம் 'பிருஹஸ்பதி' என்று பரிகாசமாகச் சொல்வது போல், 'காரெக்டர்' (நன்னடக்கை) இல்லாமல் மக்களை ஏமாற்றிக் கொண்டிருப்பதாகத் தாம் நினைத்த பாபாவை இவர் 'காரெக்டர்' என்று கூறி வந்தார்.

''என்னென்னவோ சிருஷ்டிக்கிறாராமே! இந்தியாவிலிருந்து அமெரிக்கா வரையில் அல்லவா இந்தக் காரெக்டர் வளைத்துப் போடப் பார்க்கிறார்— வானவில் ஒரு தொடுவானில் தொடங்கி எதிர்த் தொடுவானம் வரை வளைத்துக்கொள்வது போல! நான் ஒரு தமாஷ் பண்ணி இந்தக் காரெக்டரின் சாயத்தை வெளுக்க வைக்கிறேன். அதாவது, அவரை ஒரு வானவில்லே சிருஷ்டித்துத் தரச் சொல்கிறேன்'' என்று நண்பர்களிடம் நையாண்டி செய்துவிட்டுப் புட்டபர்த்திக்குப் புறப்பட்டார் ஜோயல்.

பாபாவின் தரிசனம் கிடைக்கு முன் புட்டபர்த்திக் குன்றில் மனைவி டயானா, உடன் வந்த பமேலா ஆகியோருடன் அமர்ந்திருந்தார் ஜோயல். மனைவியின் தோள் மீதாகப் பார்வையைச் செலுத்தியவர் ஸ்தம்பித்துவிட்டார்.

சில விநாடிகளில் ஸ்தம்பனம் நீங்கிற்று. உடலில் ஒரு கம்பனம் உண்டாயிற்று. வெள்ளமாக வியர்த்து விட்டது. கண்களில் நீர் பொத்து வந்தது. 'ஆஹா! இத்தனை சக்திமானையா அத்தனை எளிதில் அபசாரமாகப் பேசி விட்டோம்!' என்ற உணர்வுதான் காரணம்.

அப்படி என்ன நடந்ததெனில்,

டயானாவின் தோளுக்குப் பின்னிருந்து கிறுகிறுவென ஒரு வானவில் வர்ண ஜாலத்துடன் தோன்றியது; மளமளவென

Koviloor Digital Library

அது வளர்ந்து உச்சிவானைத் தொட்டு மேலும் எதிர்த் திசைக்குப் படர்ந்து அடிவானம் வரை வளைத்துவிட்டது!

அப்போது நல்ல வெயில் அடித்துக் கொண்டிருந்தது. வானத்தில் ஒரு மேகம் கூட இல்லை. ஹோ வென்று வெட்ட வெளியாக, பட்ட சூனியமாக இருக்கிறது ஆகாயம். அதிலே இப்படி ஒரு வானவில் என்றால்,

ஸ்தம்பனமும் கம்பனமும் ஏன் ஏற்படாது?

ஜோயலின் ஆச்சரியப் போக்கிலிருந்து மற்ற இருவரும் வானவில்லைக் கண்டுகொண்டனர். அவர்களும் அப்படியே விக்கித்து விட்டனர் சில நாழி. பிறகு, பெண்களல்லவா, விக்கி அழுதனர்.

பதினாயிரம் மைல்களுக்கப்பால் பேசியதை அறியும் சக்தி; அப் பேச்சில் கேலியாகக் கேட்டதைக் காரியத்தில் கொடுக்கிற சக்தி! விக்கித்துப் போகாமலும், விக்கி அழாமலும் இருக்க முடியுமா பெண் மக்களால்?

பாபா—பக்தியில் கரைந்தவர்களாக தரிசனத்துக்கு வந்து அமர்ந்தனர்.

அதிசயமே இல்லாத அன்புரு மந்திரத்திலிருந்து வெளியே வந்தது. ஜோயலின் அருகே வந்து நின்றார் ஸ்வாமி. ஜோயலின் 'குளிரை'ப் போக்கும் பிரேமைக் கணப்பு ஸ்வாமியின் கண்களில் பிரகாசித்தது, தாம்பூல அதரத்தில் நகை நெளிந்தது.

"Well, *Character*! How did you like the rainbow?" என்றார்!

(''நல்லது, காரக்டரே! வானவில் எப்படி யிருந்தது?'')

இதுவரை எந்த ஸித்தர் சிருஷ்டியிலும் வானவில் வந்ததாக நாம் அறிந்ததில்லை. அற்புத சக்தியோடு எத்தனை நகைச்சுவை உணர்வு நம் அப்பனுக்கு! அற்புதமும், ஹாஸ்யமும் அன்பினாலே ஜோயலைத் திவ்ய சக்தியின் தாஸாநுதாஸராக்கி விட்டது.

"The rainbow.. is more convincing

Than philosophy"

[''தத்வ வாதங்களையெல்லாம்விட ஒரு வானவில்லே (தெய்விகத்தை) உறுதிப்படுத்திவிடுகிறது'']

— என்று எமிலி டிக்கின்ஸன் பாடியதை விசித்திரமான விதத்தில் மெய்ப்பித்துவிட்டார் நம் ஸ்வாமி!

நகைச்சுவைக்கு இன்னம் எத்தனை திருஷ்டாந்தம்தான் இல்லை? ஸ்வாமி சென்னையிலிருக்கையில் ஒருவர் அவரிடம் குறை

Koviloor Digital Library

பிரக்க, ஸ்வாமி, "புட்டபர்த்திக்குப் போய் நாம ஜபம் பண்ணு. பன்னிரண்டாம் நாள் திரும்பி வா. பிரச்னை தீரும்" என்றார். "ஸ்வாமி, தாங்களே இங்கு இருக்கையில்...." என்று பக்தர் சொல்லும்போது பாபா இடைமறித்து, "நான் சொல்கிறதைக் கேளு, பங்காரு" என்று நிர்மாவமாகச் சொல்லிவிட்டார்.

பக்தர் மறுநாள் சென்னையிலிருந்து புறப்பட்டு அதற்கும் மறு நாள் புட்டபர்த்தி சேர்ந்தார். ஸ்வாமி சொன்னபடியே விடாமல் ஜபம் செய்தார். பன்னிரண்டாம் நாள் ஜபம் முடிந்தது. மந்திரத்தில் பிரதானமாக உள்ள பாபா படமொன்றுக்கு நெடுஞ்சாண் கிடையாக நமஸ்கரித்து எழுந்தார்.

அப்போது படத்தில் கண்ட விநோதம்! சித்திரத்தில் திகழ்ந்த பாபா தமது வலக்கையின் இருவிரல்களை மேலே தூக்கிக் காட்டிக் கொண்டிருந்தார்!

மந்திரத்துக்கு வந்த அத்தனை பக்தர்களும் இவ்வதிசயத்தைக் கண்டனர். அத்வைதத்தையே முடிந்த தத்வமாகச் சொல்லும் பாபா ஏன் திடுமென மத்வாசாரியர் போல் இரட்டை விரல்களைத் தூக்கிக் காட்டுகிறார் என்று புரியவில்லை. பலவித அநுமானங்கள் செய்தனர். ஒருத்தர் நம் பக்தரிடம், "உங்களை ஸ்வாமி இன்னும் இரண்டு நாட்கள் இங்கேயே இருக்கச் சொல்கிறாரோ என்னவோ?" என்றார்.

பக்தருக்கு விளங்கிவிட்டது! ஆம், "பன்னிரண்டாம் நாள்" பாபா திரும்பச் சொன்னதை இவர் பாபா கூறிய தினத்திலிருந்து பன்னிரண்டாம் நாள் என்று அர்த்தம் செய்து கொண்டு விட்டார். அதன் பின் இவர் புட்டபர்த்தி அடையவே இரண்டு நாளாகிவிட்டது. அங்கே பத்துநாள் ஜபம் செய்துவிட்டு, இன்று புறப்பட எண்ணினார். ஆனால் பாபாவோ இவர் புட்டபர்த்தியிலேயே பன்னிரண்டு நாட்கள் தங்கி ஜபிக்கவேண்டும் என விதித்திருக்கிறார். அதனால்தான் இப்போது படத்தில் இரு விரலைத் தூக்கிக் காட்டுகிறார்.

இதை பக்தர் புரிந்துகொண்டு, "இன்னும் இரு தினங்கள் இங்கேயே இருக்கிறேன் அப்பனே" என்று சொன்னதுதான் தாமதம்—அவ்வளவு பெரும் காண சித்திரக் கை கீழே இறங்கி அதன் வழக்கமான பாங்கில் அமைந்தது!

* * *

பாபாவின் சிருஷ்டி ஆற்றலோடு ஸர்வக்ஞத்வத்தையும் காட்டும் ஓர் அரிய உதாரணம்:

மனிதன் இத்தனை ஆன்ம சாதனை செய்தால், அதன் பயனாக இத்தனை கர்மம் தீர்ந்து இவ்வளவு ஈச்வராநுக்ரகம் கிடைக்கும் என்பதை ஸ்டாலெக்டைட் — ஸ்டாலெக்மைட் (stalactite — stalagmite) உதாரணத்தால் விளக்கிக்

Koviloor Digital Library

கொண்டிருந்தார் நம் ஸ்வாமி. பூ—இயல் நிபுணர்களின் மண்டையை உடைப்பது இந்த ஸ்டாலெக்டைட்-ஸ்டாலெக்மைட் சமாசாரம். சில விதமான தாதுக்கள் கொண்ட குகைகளுக்குள் மேற்புறம் முழுதும் சுண்ணக் கார்ப்பனேட் உண்டாகி, பற்பல ஆண்டுகளில் சிறு சிறு கூம்புகளாக வெகு சீர்மையுடன் சேர்ந்து விடும். இதுதான் ஸ்டாலெக்டைட். இக் கூரையில் சேரும் நீர்த்துளிகள் கீழே சிந்திச் சிந்திப் பல்லாண்டுகளில் கீழும் கூம்பு கள் எழத் தொடங்கும். இதுவே ஸ்டாலெக்மைட். மேற் பூச்சுக் கூம்புகளும், கீழ்ப்பூச்சுக் கூம்புகளும் ஒன்றை நோக்கி ஒன்று வளர்ந்து, பலப்பல பல ஆண்டுகளுக்குப் பின் சேர்ந்து விடும். இதையெல்லாம் விவரித்த பாபா, ''இப்படியே தான் ஸ்டாலெக்டைட்டான பரமாத்மாவில் ஊறும் கருணை, அடி மட்டத்தில் உள்ள ஜீவாத்மாவின்மீது சிந்தியே இவன் ஸாதனை களால் ஸ்டாலெக்மைட்டாக உயர்ந்து பரமாத்மாவை நோக்கி வளர்கிறன். அதே சமயம் பகவானும் இவனை எதிர்கொண்டு வந்து கொண்டே இருப்பதுடன் மேலும் மேலும் கருணை சிந்தி இவனது எழுச்சியையும் ஊக்கியபடி இருக்கிருர். கடைசியில் ஒரு நாள் இருவரும் சேர்ந்துவிடுகின்றனர். ஆனாலும் கர்ம நாசம், வாஸனை நீக்கம் என்பன ஸ்டாலெக்டைட் — ஸ்டாலெக் மைட் வளர்ச்சிபோல மிக மிக நிதானமாக நடக்கும் ஒன்றுதான்'' என்றார்.

கையை அசைத்தார்.

மறு கணம் அவரது கையே 'விர்ர்....' என அதிரும்படி யாக, அதிலே ஒரு பெரிய பாறைத்துண்டு வந்து நின்றது!

அந்தக் கல்லானது, அதிசயத்திலும் அதிசயமாகவே கிடைக்கக் கூடிய ஒரு ஸ்டாலெக்டைட்—ஸ்டாலெக்மைட் குகையின் குட்டி அச்சாகவே இருந்தது! இந்த 'மினி' குகை வாயில் வழியாக உள்ளே பார்த்தால் மேலும் கீழும் ஒன்றையொன்று முட்டி நிற்கும் சீர்மை நிறைந்த கூம்புகள் மயமாயிருந்தது!

இதையும் விஞ்சும் விந்தை யாதெனில், பின்புறம் மூடி, முன் புறம் வாய் கொண்டிருந்த அந்த உருண்டைக் 'குகை'யானது பரந்தாமனுக்குரிய திவ்விய சாளக்கிராமமாகவும் இருந்தது! அடியார் ஒருவருக்கு அந்த சாஸ்திரோக்தமான சாளக்கிராமம் (ஜியாலஜி யுக்தமான ஸ்டாலெக்டைட் — ஸ்டாலெக்மைட்) வழங்கப்பட்டது!

இதை எப்படி சாதாரண ஸித்து என்பது?

வாஸ்தவத்தில் அவ்வளவு சிறிய ஸ்டாலெக்டைட்—ஸ்டாலெக் மைட் குகை இருக்கவே முடியாது. ஆனாலும் இவர் காட்டினார் எனில் இது சிருஷ்டியே அன்றோ?

இந்த சிருஷ்டியில் கால தத்வத்தையும் எப்படி இறுக்கி அடைத்து விட்டிருக்கிறார்? நூறு நூறாண்டுகளில் தோன்றும் தாதுப் பரிணமங்கள் எப்படி நொடிப் பொழுதிலே முற்றின?

கால தத்வத்தை அவரால் எப்படி இறுக்கிக் குறுக்க முடிகிறது என்பதற்கு ''ஒரு சின்ன உதாஹரணமு'': பச்சைப் பசும் இலையொன்றை ஒரு புத்தகத்தில் வைத்து மூடித் திறக்கிறார். அந்த இலை — ஆறக், பச்சை இலை பழுத்துச் சருகாகி இருக்கிறது!'

* * *

'கடத்தல் அல்ல; ஸ்ருஷ்டியே' என்று அறுதியிட்டு உறுதி கூற முடிவாக ஒன்றைச் சொல்லலாம். டாக்டர் கே. பகவந்தம் (ஸ்வாமியின் அந்தரங்கச் சேவகரான எஸ். பகவந்தம் அல்ல; இவர் வேறொருவர்) ஒரு படு சந்தேகப் பிராணி. அவரது சந்தேகம் நம் பாக்கியம். பாபா அவருக்குப் படைத்துத் தந்த மோதிரம் எந்த உலோகத்தால் ஆனது என்று விஞ்ஞானப்படிச் சோதித்தறிய எண்ணினார்.

தங்கம் உள்பட சகல மூலப்பொருள்களையும் கரைக்கக்கூடிய 'அக்வா ரேஜியா' என்ற நைட்ரிக் — ஹைட்ரோக்ளோரிக் அமிலக் கலவையில் பகவான் தந்த மோதிரத்தைப் போட்டார் பகவந்தம்.

கரைந்தது! மோதிரமல்ல; விஞ்ஞான நிபுணரின் உள்ளம் தான்!

மோதிரம் கின்டாக உள்ளது உள்ளபடி இருந்தது! அமிலம் அதை அணுவளவும் அரிக்க முடியவில்லை! ''திரவ ராஜன்'' எனப்படும் அக்வா — ரேஜியா நம் ராஜாவின் முன் தோற்று விழுந்தது!

பொன்னையும் விட உயர்ந்த, உலகத்திலேயே இல்லாத ஓர் உலோகத்தாலான பரிசைப் படைத்திருக்கிறார் நம் பரமன் என்று தெள்ளத் தெளிவாயிற்று! அந்த மூலப்பொருளே உலகில் இல்லை எனும்போது, தொலைக்கடத்தலுக்கு இடம் ஏது?

இச்சாமாத்ரம் ப்ரபோ: ஸ்ருஷ்டி: — என்பதற்கு இதைக் காட்டிலும் சான்று தேவையா?

* * *

கடற்கரை மண்ணை எண்ணினாலும் எண்ணலாம். ஸ்வாமியின் மிரகிள்களை எண்ணி முடியாது. ஓரளவு கணிசமாகவே மாதிரி பார்த்ததுடன் திருப்தி அடைவோம்.

இத்தனை மிரகிள் அவர் செய்தாலும், இதிலேயே அவர் களிப்பதில்லை. இதை ஒரு பொருட்டாகவும் நினைப்பதில்லை. மிரகிள்களை பக்தர்கள், எதிராளிகள் இரு சாராருமே இது விதங்களில் பெரிதுபடுத்தினாலும் அவர் இவற்றை அற்பவிஷயமாகத் தான் என்கிறார். ஸ்வாமி உபதேசங்கள் ஒன்பது வால்யூம்களாக வெளியாகியிருக்கிறதே. அதில் எங்காவது ஓரிடத்திலாவது மிரகிள் ஆற்றலைப் பெரிதாகச் சொல்லியுள்ளாரா, தேடிப்

Koviloor Digital Library

பாருங்கள். கிடைக்கவே கிடைக்காது. உலக விதியை மீறிய தெய்வ சக்தி ஒன்று உண்டு என்று காட்டவும், அன்புப் பொங்குதலை முன்னிட்டும், அவரது கருத்துப்படித் தேவைப்படும் போது மட்டுமே தான் அவர் மிரகிள் செய்கிறாரேயன்றி, சிலர் தப்பாக எண்ணுவதுபோல் மாஜிக்காரர் மேடையில் ஏறி அன்றன்றும் அற்புதம் காட்டுவது போல காட்டுவதே யில்லை.

முன்பே கண்ட அவரது அமரவாசகம் ஒன்றை இங்கு மீண்டும் நினைவுகூர்வோம். ''இயற்கை யன்னை வெகு அழகாகவே குடித்தனம் நடத்திக்கொண்டிருக்கிறாள். அவளது அடுக்களையில் நான் அடிக்கடிப் புகுந்து தலையிடு செய்ய விரும்பவில்லை'' என்ற நிறைமொழி வாசகந்தான்!

இயற்கை அல்லது கர்மப்படி நடக்கட்டும் என்று அவர் விடுவதற்கும், அன்பு பொங்கி வரும்போது அதை மாற்றுவதற்கும் ஒரு ரம்மியமான எடுத்துக்காட்டு:

மாணவரின் கலாசாரப் பயிற்சி முகாமில் ஒருத்தி, பிரபல கர்நாடக எழுத்தாளரான ஸ்ரீ ஜி.பி. ராஜரத்தினத்தின் குமாரி ஸ்ரீலதா. அவளுக்கு அன்று உடல்நலம் சரியில்லை. போஜனம் முடிந்தவுடன் வழங்கப்பட்ட மாம்பழத்தை வாங்கிக் கொண்டாளே தவிர, உடல் நிலையை முன்னிட்டு அதை அவள் உண்பதாக இல்லை. பழமும் கையுமாக அனைவரும் உணவுக் கூடத்திலிருந்து வெளிவந்து, மாடிப் படிக்கட்டில் நின்று கொண்டிருந்த ஸ்வாமியைத் தரிசித்தனர்.

ஸ்வாமி ஸ்ரீலதாவைப் பார்த்து, ''நீனு ஹண்ணு தின்டியா'' (''நீ பழம் தின்றாயா?'') எனக் கேட்கிறார்.

இல்லை என்கிறாள் ஸ்ரீலதா.

''தின்வ பேடா. ஈவாக தானே மெய்யி சென்றாகிரலில்ல.'' (''தின்ன வேண்டாம். இப்போது உனக்கு உடம்பு சரியாயில்லை'') என்கிறார் ஸ்வாமி.

இயற்கையை அநுசரித்தே இப்படிச் சொன்னார். ஆனால் உடனே, அந்தனை மாணவரும் இன்பமாகக் கனி உண்கையில் இந்தப் பெண் ஏன் கைக்கெட்டியது வாய்க்கெட்டாமல் ஏமாற வேண்டும் என்ற தாயன்பு ஓங்குகிறது. படிக்கட்டின் குறுக்குக் கட்டையைச் சிறிது நேரம் தட்டிக்கொண்டே நின்றார். பிறகு ஸ்ரீலதாவைப் பார்த்து, ''பாப்பா, தின்னு, தின்னு'' என்றார்.

காய்ச்சலிலும் கெடுதல் விளைவிக்க முடியாத மாம்பழமாக அதை மாற்றிவிட்டார். அன்பின் பொருட்டே நிகழ்ந்த அற்புதம். ஒருவேளை, கட்டையைத் தட்டிக்கொண்டிருந்த அச் சிறிய இடைவெளிக்குள் அவளுடைய காய்ச்சலை அவரே வாங்கிக்கொண்டு அநுபவித்துத் தீர்த்திருந்தாலும் இருக்கலாம்! அன்பு ஸாயியின் தியாகத்தை அறிந்தோரே அறிவர்.

சிறு நிகழ்ச்சிதான்; அதில் பொதிந்திருப்பதோ பெருந் தத்வம்—ஸாயி மிரகிளின் விளக்கம் இதைவிட வேறில்லை.

Koviloor Digital Library

முடிவாகச் சொல்ல வேண்டுவது யாதெனில்:

மிரகிள்கள் எப்போது அவசியம் என அவர் எண்ணுகிறாரோ அப்போது மட்டுமே தான் பாபா செய்கிறார். இதிலே வெகு கறாராக இருக்கிறார்.

அற்புதம் புரிவதில் அவர் தம்மை எப்படிக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதைக் கவனித்தால் கீழ்நிலை இயற்கையின் தர்மத்தில் தலையிடாமலிருப்பதில் அவரது ஒப்பற்ற நெறியை உணரலாம். இப்போது பல சவால்காரர்கள் சொல்லும் மிரகிள்களை பாபாவால் எத்தனை எளிதில் செய்துவிட முடியும்? "பாபாவால் பூசணிக்காய் வரவழைக்க முடியுமா?" என்று ஒருவர் மேடை ஏறி சவால் விடும்போது, தத்க்ஷணமே அம்மேடையில் பூசணி மண்டியையே உண்டாக்க பாபாவால் முடியாதா? அல்லது 'அவர் அங்கிக்குள் மறைத்து வைத்தே கைத் தந்திரத்தால் எடுத்துத் தருகிறார்' என்று ஒருவர் குற்றம்சாட்டும்போது, அதே இடத்தில் திருநீற்று மழையைப் பொழிவிக்க ஸ்வாமியால் ஆகாதா? ஆனாலும், இப்படி அவர் செய்து எதிராளிகளின் வாயை அடைக்கக் கூடாதா என்று அடியார் பலர் அவாவுற்றுங் கூட, அவர் 'இயற்கையன்னை ஒழுங்காகவே நடத்தும் குடித்தனத்தில்' அத்யாவசியமின்றித் தலையிடுவதில்லைதான். நம்மில் எவரிடமேனும் அவரது ஆற்றலில் ஆயிரத்தில் ஒரு பங்கு இருந்தால் கூட, சவால்காரர்கள் கிளம்பினால் நம் சக்தியைக் காட்டத்தான் செய்வோம். ஆனால் பாபா? அவரது மிரகிள் ஆற்றலைப் பலர் போற்றுகிறார்கள். அது சந்தேகமின்றி போற்றற்குரிய பராசக்தி விலாஸந்தான். ஆனால் மிரகிள் செய்வதில் இத்தனை ஆற்றல் இருந்தும் நாம் நெருக்கடியாக எண்ணும் சந்தர்ப்பத்தில் அவர் மிரகிள் செய்யாமலிருக்கிறாரே, அந்த தார்மிகக் கட்டுப்பாட்டைத்தான் நூலாசிரியன் மேலும் போற்றி வணங்குகிறான்.

மிரகிளுக்காக பாபாவிடம் போனாலும் நாளடைவில் பக்தர்கள் மிரகிள்தான் பாபாவின் உட்பெருமை என்று நினைப்பதில்லை. அவருக்காகவே அவரை நேசிக்கிறோம். ஆக, எதிராளிகள் 'சமத்கார், சமத்கார்' என்று பெரிதுபடுத்தினாலும், பாபாவும் சரி, உண்மை பக்தரும் சரி அதை ஒன்றும் பெரிய விஷயமாக மயங்கவில்லை. பலன் ஆசிரியர் ஸ்ரீ ராமகிருஷ்ணன் கூறினாற்போல், "நாங்கள் வணங்கும் பாபா விபூதியும், புகைப்படமும், மோதிரமும், நெக்லேஸும், பொன் — வெள்ளி விக்கிரகமும், ஸ்படிகலிங்கமும், மற்ற விலை உயர்ந்த பொருட்களும் சிருஷ்டிக்கும் மிரகிள்களைப் புரிபவர் அல்லர். நாங்கள் வணங்கும் பாபா மக்களையே மாற்றிப் பரிணமிக்க வைக்கும் மகா பெரிய மிரகிளைப் புரிபவரே ஆவார்."

பாபா, பக்தர்களுக்கு உபதேசிப்பதும் இதுவே. "மிரகிளுக்கு முக்கியத்துவம் தராதீர்கள். அவற்றின் உட்பொருளை மிகைப்படுத்திக் கூறாதீர்கள். இதல்ல என் ஆற்றலின் பெருமை. எனது பொருள்மிக்க, முக்கியமான ஆற்றல் பிரேமைதான். என்னால் வானத்தை பூமியாகவும், பூமியை வானமாகவும் மாற்ற இயலும் என்பது வாஸ்தவந்தான். ஆனால் திவ்ய சக்தி இவ்வித

Koviloor Digital Library

அநாவசியங்களைச் செய்து தன்னைக் காட்டிக் கொள்வதில்லை. பிரேமையின் பொருட்டே தெய்விக ஆற்றல் வெளிப்படுகிறது. வெளிப்பாடான மிரகிள்கள் யாவும் அந்தப் பிரேமைக் கடலின் துளிகள்தான். இந்தத் துளிகளைக் கண்டு பெரிதுபடுத்தாதீர்கள். என் அன்புக் கடலையே மதித்து முழுக வாருங்கள்'' என்பார்.

★

ஆற்றலாக நமக்குத் தெரிவது அன்புதான். ஆற்றல் என்பது சக்தி. அன்பு என்பது சிவம். இவ்வாற்றல், அன்பு இரண்டுமே ஒரு பேரறிவின் உட்கிடைகள்தாம். அன்பும் ஆற்றலும் கொண்ட அவ்வறிவே சக்தியும் சிவமும் சேர்ந்த 'சித்' எனும் ஞானவெளி. ஸத்தியப் பொருளான இந்தச் சித்தின் விலாஸத்தால் அன்பைக் கொட்டி ஆற்றலைக் காட்டி ஆனந்திப்பதுதான் ஸச்சிதானந்தம் என்பது. நீண்ட நெடுங்காலமாக அனந்த விதமான அற்புத சக்திகளை எவ்வித சாதனையுமின்றி பொழிந்து வரும் நம் ஸ்வாமியின் அற்புதங்கள் சிவ—சக்தியின் ஸச்சிதானந்த விளையாட்டே என விளங்கிக் கொள்வோம்.

* * *

ஸ்வாமியின் அவதாரத்வத்துக்குப் பெரிய சான்று, இங்கே மிராகிள்களாக வர்ணிக்க முடியாத அவரது விஸ்தாரமான பக்த ரக்ஷணந்தான். எந்த ஸித்த புருஷரும், மஹானும் இப்படி நவ கண்டத்திலுமுள்ள லக்ஷோபலக்ஷம் பக்தர்கள் கூப்பிட்ட குரலுக்கெல்லாம் கை கொடுத்துக் கொண்டும், கூப்பிடாமலே கூடத் தாமே சங்கேத்க குரல் கொடுத்தும் காத்ததாக எந்தப் புராணத்திலும் கண்டதில்லை. அன்றன்றும் அனந்தம் அடியாருக்கு அற்பத்திலும் அற்பப் பிரச்னையிலிருந்து, அதி முக்கியமான கடும் பிரச்னைகள் வரை தீர்வு தருவதில் பாபாவுக்கிணையாக எவரையும் ஏடுகள் சொன்னதில்லை. இந்த ரட்சணையின் அங்கமாக, அம்சமாகவேதான் பாபா மிராகிள் செய்கிறாரேயன்றி, இவற்றில் தன்னலக் கலப்பு அடியோடு இல்லை. மிராகிள்களால் பொருளோ, பெயரோ அவர் இம்மியும் தேடியதில்லை. பொருளைவிடப் பெயர்தான் எவரையும் மயக்கவல்லதால் பாபாவின் மிரகிள்களில் லவலேசமும் விளம்பர அம்சமில்லை என்பதை அழுத்திச் சொல்ல வேண்டும். இதற்கு அழுத்தமான சான்று மேலே விரிந்த மிரகிள்களிலும் சரி, இன்னம் பாபா குறித்த மற்ற நூல்களிலும் சரி, பாபாவுக்கு மிகவும் அணுக்கமாக இருப்பவர்களைக் குறித்த அற்புதம் ஏதும் வெளியாகாததே யாகும். விஞ்ஞானியான தாம் பாபாவை விஞ்ஞானம் கடந்தவராக உணர்ந்ததை விளக்குவதால் விஞ்ஞானியருலகமே விழிப்புப் பெறக்கூடும் என்ற பெருநோக்கில் டாக்டர் எஸ். பகவந்தம் ஒருவர் மட்டும் தமது சொந்த மிரகிள் அநுபவங்களை ஓரளவு நம்மோடு பகிர்ந்து கொண்டிருக்கிறாரேயன்றி, வண்டி வண்டியாக இத்தகைய அற்புதங்களைப் பெற்ற அதி முக்கிய ஸாயிதாஸர்களான ஸர்வஸ்ரீ கஸ்தூரி, கோகக், ராஜாரெட்டி, கமானி குடும்பத்தார், இந்துலால் ஷா, குடும்ப ராவ் போன்றவர்கள் சொந்த அநுபவங்களை வெளியிடுவதேயில்லை. பிரசாந்தி நிலைய வாஸிகளில் பலர் இவ்விதமே தங்கள் அநுபவங்

Koviloor Digital Library

களைப் பிரகாரம் செய்வதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டனர். இவர்களுக்கு இதனால் சுய விளம்பரம் கிட்டிவிடுமோ என்பதில் ஏற்பட்டுள்ள பரம உத்தமமான அச்சத்துக்கு மூல நிதி, சாக்ஷாத் பாபாவே தன்னலங் கருதாத, விளம்பரம் விரும்பாத காமாவஸாயி நிலையில் இம் மிராகிள்களைப் புரிவதுதான். இதனால் அவரைக் காமாவஸாயான நிலையை அடைந்த ஸித்த ச்ரேஷ்டரில் ஒருவர் தான் எனக் கொள்ளலாகாது. வர்ணிக்கவொண்ணாத ரட்சணையால் அன்றி, வர்ணிக்கக் கூடிய மிராகிள்களாலும் பாபா ஆண்டவனின் அவதாரமே என்று புரிந்துகொள்வதற்காகத்தான் இவ்வளவு 'ஸாம்பிள்'கள் பார்த்தோம். அடிமட்டத்திலிருந்து ஆராய்ந்தோம்.

முதலில் இவ்வற்புதங்கள் வெறும் கைத் தந்திரம், லெகர்டுமைன் அல்ல எனத் தெளிந்தோம். பிறகு ஸித்துக்கள்—தௌமடர்ஜி—மட்டும்தானா என்று பார்க்கையில் பலவிதமான அற்புதங்களை அடுக்கினோம். முன்பே இந்நூலில் இறந்தவரைப் பிழைப்பிப்பது, என்றோ இறந்தவரை இன்று கண்முன் காட்டுவது, இறக்கும்போது உடலிருந்து கரையேற்றுவது, இறக்காமல் பயங்கர வியாதிகளிலும் அதிபயங்கர விபத்துக்களிலும் ரக்ஷிப்பது போன்ற பேரற்புதங்களைப் பார்த்துவிட்டோம். குறிப்பாக இவ்வத்தியாயத்தில் விநோத விசித்ரங்களாகவே பாபா தமது முற்றறிவு, முற்றுணர்வு, ஸர்வ வியாபகம், இயற்கையை ஆளும் திறன் இவற்றை எத்தனை விதங்களில் காட்டியுள்ளார் என்பதற்கு மாதிரிகள் பார்த்தோம். அப்போர்ட், பால்டர்ஜீஸ்ட் முதலியவற்றை இவர் கைக் கொண்டாலும், இவற்றின் அவசியமின்றித் தமது சங்கற்ப மாத்திரத்தில் பிரபஞ்சத்திலேயே இல்லாத வஸ்துக்களை ஸ்ருஷ்டிப்பதைப் பார்த்தோம். சர்வமத புராண இதிஹாஸங்களையும், சர்வதேச மகாபுருஷர்கள் சரிதங்களையும் பார்த்தால் எவரும் ஸாதனையே செய்யாமல் இத்தனைக் காலம், இத்தனை வித அற்புதங்களை ஆற்றியதில்லை எனச் சந்தேகமறத் தெரியும்.

நூலாசிரியன் அறிந்தமட்டில் மற்ற மாபெரும் ஸித்தர்களும் தாங்கள் ஸ்தூலமாக உள்ள இடத்தில் மட்டுமே எப்போதேனும் ஸ்தூல ஸ்ருஷ்டியை உண்டாக்குகிறார்கள். இவர்கள் வேற்றிடத்தே உள்ள தம் அடியாரின் நோய், விபத்து முதலியவற்றைச் சூக்ஷ்மமாகச் சென்று தீர்த்தபோதிலும் அங்கெல்லாம் ஸ்தூல ஸ்ருஷ்டிகளைப் படைப்பதில்லை. நம் ஸ்வாமியோ எண்ணிலடங்கா முறைகள் தாம் ஸ்தூலமாக இல்லாத ஏராளமான இடங்களிலும் விபூதி, விக்கிரஹம், புண்ய தீர்த்தம் முதலான ஸ்தூல வஸ்துக்களைத் தோற்றுவிக்கிறார். இது ஸித்திக்கு மேம்பட்ட தெய்வ சக்தியாகவே அடியாருக்குத் தெரிகிறது.

இவ்வளவு சொல்லியும் அவரை ஸித்தருக்கு மேம்பட்ட ஈச்வராவதாரமாகவும், அவர் செய்வதை ஸித்துக்களுக்கு மேம்பட்ட சித்விலாஸமாகவும் கொள்ள முடியாமல் சலனமுற வைக்கும் சில ஆட்சேபணைகளை அடுத்த அத்தியாயத்தில் ஆராய்வோம்.

Koviloor Digital Library

அத்தியாயம்—45

அவதாரம் அல்லவோ?

சச்சிதானந்தமாகிய விருட்சத்தில் ராமர்கள், கிருஷ்ணர்கள், புத்தர்கள், கிருஸ்துக்கள் முதலிய பூங்கொத்துக்கள் கணக்கின்றித் தொங்குகின்றன. அவர்களுள் அவ்வப்போது இரண்டொருவர் பூமியில் அவதரித்துப் பிரம்மாண்டமான மாறுதல்களையும், முன்னேற்றங்களையும் உண்டாக்குகிறார்கள்.

— ஸ்ரீ பரமஹம்ஸ. ராமகிருஷ்ணர்

'எல்லா ரிஷிகளும், தேவரிஷி நாரதரும், அஸிதரும், தேவலரும், வியாஸரும் உன்னை சாசுவத பரம புருஷனாகவும், ஆதிதேவனாகவும், பிறப்பற்றவனாகவும், சர்வ வியாபகனாகவும் கூறுகிறார்கள். நீயுமே எனக்கு இவ்வாறு கூறுகிறாய்!'' என்றான் பார்த்தன் தனக்கு சாரத்தியம் செய்த கண்ணனிடம். இப்படித் தான் ஸ்ரீ ஸத்யஸாயி பாபாவைப் பெரியோர் பலரும், பக்தர் பலரும் பகவானாகச் சொல்வது மட்டுமின்றி, அவரே பகிரங்கமாகத் தாம் பகவான், உலகில் அறத்தை நிலைநிறுத்த வந்த அவதாரம் என்று எடுத்தியம்பிக்கொள்கிறார்.

அவர் தம்மை ஈச்வரனாக அன்றி வேறெவ்விதமும் நினைத்துக்கொள்ள முடியாத உறுதியில் எப்படி நிலைத்திருக்கிறார் என்பது அநுபவித்துப் பார்த்த ரஸிகர்களுக்கே தெரியும்.

நாஸ்திகர்கள் ஆண்டவனை வழிபடாதிருக்கலாம். ஆண்டவனின் நீதித் தண்டத்துக்கு அஞ்சாமல் தெய்வ நிந்தனை கூடச் செய்யலாம். ஆனால் இறைவனுக்கும், இறைவனின் தர்மத்துக்கும் பயந்து நடக்கவேண்டும் என்று அடியாருக்கு அனவரதமும் எச்சரித்து, மிகக் கண்டிப்புடன் அவர்களை நன்னெறியிலும், அடக்க சரணாகதியிலும் ஊக்கிவரும் பாபா போன்ற ஒருவர், தாம் ஆண்டவனாக இல்லாவிடில் அப்படிப் பொய்யாகப் பிரகடனம் செய்யத் துணிவாரா?

சிவானந்தர், காருண்யானந்தர், அபேதானந்தர், அமிருதா
னந்தர் போன்ற பெரும் ஸாதுக்கள், உப-ராஷ்டிரபதியும்
கவர்னரும் உள்ளிட்ட பிரமுகர்கள், உலகப் புகழ்கொண்ட
விஞ்ஞானிகள், அயல்நாட்டுத் தத்வ ஆராய்ச்சி அறிஞர்கள்,
ஐந்து சமய மகாபண்டிதர்கள் ஆகியோர் அடங்கிய கூட்டங்
களிலும் பாபா எத்தனை அநாயாஸமாகத் தம் இறைமையை
எடுத்தியம்புகிறார்?

தாம் அணிந்து களைந்த மாலைகளை அவர் ஸர்வசகஜமாகத்
தெய்வ விக்கிரஹங்களுக்கு அணிவிக்கச் செய்வதைப் பார்க்கிற
வருக்கே தெரியும், அவருக்குத் தாமே பரமேச்வரன் என்பதில்
எத்தனை உறுதி என்பது. எந்த வித்தராவது இப்படிச் செய்யத்
துணிவாரா?

பண்டரிபுர ஆலயத்தில் ரகுமாயி (ருக்மிணி) யின் கழுத்து
காலியாக இருக்கக் கண்டு, உடனே மங்கள ஸூத்திரம் சிருஷ்டித்து,
தாமே அதை அவள் கழுத்தில் அணிவித்தாரே—கிருஷ்ண
பரமாத்மாவாகவே தம்மைக் கொண்டவரன்றி வேறெவர்
இதைச் செய்யத் தைரியம் கொள்வர்?

மக்களை சம்பிரதாய வழிபாட்டு முறைகளில் தூண்டிவரும்
இவரே ஒருவரிடம், 'நீ முருகனுக்காக வேண்டிக் கொண்டுள்ள
ஸர்ப்ப சாந்தி செய்யவேண்டாம். ஏனென்றால் நான் இப்போதே
உனக்கு அநுக்கிரகித்து விட்டேன்' என்கிறார். தம்மையே
முருகனாக உணர்ந்தாலன்றி இப்படிக் கூற முடியுமா? தெய்வக்
குற்றம் வருமோ என்று எந்த வித்தரும் அஞ்சக்கூடிய விஷய
மன்றோ?

ஞானப்பழங்களான ஸாதுக்களிடம், ''நான் உன்னை ரக்ஷிக்
கிறேன்'' என்று அவர் கூறுவதில் கொப்பளிக்கும் ஈச்வரத்வ
அதிகாரம்!

வயதான வைஸ்-சான்ஸலர்களையும், விஞ்ஞானமேதை
களையும், வேத பண்டிதரையுங்கூட வெகு சகஜமாக, ''நீ''
போட்டு அவர் பேசுவதுண்டே, ''அப்பாக்களுக்குள் நீதான்
ரொம்பவும் அப்பா'' (பித்ருதம: பித்ருணாம்) என்று வேதம்
வர்ணிக்கும் இறைவனின் அப்பாத்தன்மையே இது!

வடவேங்கடவனுக்கும், ஸ்ரீசைல மல்லிகார்ஜுனனுக்கும்,
காசி விச்வநாதனுக்கும், பதரி நாராயணனுக்கும் நேர் முன்னாலே
நிற்கும்போது அந்த மகாமூர்த்திகளின் முன்னும் தலை
வணங்கியோ, கை கூப்பியோ அறியாத மூர்த்தியாக அல்லவா
இருக்கிறார்?

நமஸ்காரமே செய்யாதவர், ஆசிர்வாதமே புரிபவர்
அவதாரங்களிலேயே இவரொருவர்தான் எனத் தெரிகிறது.
கண்ணனும்கூட நாரதர், வேத வித்துக்கள், மாதா பிதாக்கள்
முதலானோருக்கு வணங்கியிருக்கிறான். ஸத்ய ஸாயியோ

Koviloor Digital Library

பாவனைக்குக்கூடத் தம்மிலும் உயர்ந்ததொரு சக்தியோ வியக்தியோ இருப்பதாகக் கொள்ளவே முடியவில்லை.

பிறர் சிரிப்பரோ என்று தோன்றும் சூழலிலும் தம் ஈச்வரத்வத்தையே அவர் தயங்காமல் அடித்துக் கூறுவார். 1958-ல் கமிஷன் ஒன்று அவரை விசாரித்து, வாக்கு மூலம் பதிவு செய்ய வந்தது. கமிஷன்காரர்கள் "உங்கள் பெயர்?" என்று கேட்க, நம் சுநாதநாதர், "எந்தப் பெயர் சொல்லி அழைத்தாலும் சரிதான்" என்றார்! "பிறந்த தேதி?" என்று அவர்கள் கேட்க, "பிறக்கவே இல்லை" என்றார்!

"வயசு?"

"யாராலும் வகுக்க முடியாது. அநாதி."

"பெற்றோர் பெயர்?"

"பெற்றோரே இல்லை. ஸ்வயம்பு"

"இருப்பிடம்?"

"ஸர்வ வியாபகம்".

காரியமற்ற நிலையில் தாம் பிரம்மமே என்றுணர்ந்து பிரகடனம் செய்த ஞானியர் பலர் உண்டு. ஆனால் காரியம் என்று ஏற்பட்ட நிலையில், அகில சராசர வியாபாரமனைத்தையும் நடத்திவைக்கும் பராசக்தி தானே என்று அனவரதமும் ஸ்பஷ்டமாகச் சொல்லிக்கொண்டவர் இருவர்தாம். ஒருவர் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா; மற்றவர் ஸ்ரீ ஸத்யஸாயி பாபா.

கண்ணன் இன்று நம் கண்முன் இல்லாததால் அவனைப் பற்றி எதிர்க்கேள்வி கேட்காதவர்களும் பாபா விஷயத்தில் ஆட்சேபணை எழுப்புகின்றனர். அவர் தாமே தம்மை அவதாரம் என்று சொல்லிக்கொள்வதற்கே முதல் ஆட்சேபம் தெரிவிக்கிறார்கள்.

வேறு சில அவதார புருஷர்களைக் குறிப்பிட்டு, "அவர்கள் எவ்வளவு அடக்கமாக இருக்கிறார்கள்? அவர்களில் பலர் மிராகிளே செய்யவில்லையே! அப்படியே அற்புத திவ்விய சக்தியைக் காட்டினாலுங்கூட, இப்படியா தம்மைத் தாமே அவதாரமாகச் சொல்லிக்கொள்கிறார்கள்?" என்று கேட்கின்றனர்.

இவர்களில் புரிந்துகொள்ளவேண்டியது யாதெனில்,

அவதாரங்களில் பலவிதமுண்டு — தர்மத்தை வலியுறுத்தும் அவதாரம், ஞானத்தை அடிக்கோடிட்டுக் காட்டும் அவதாரம் என்றிப்படி. நம் ஸ்வாமி பிரேமையைக் காட்டவே வந்த அவதாரம். தர்மம், ஞானம் முதலியவற்றின் சக்தி உள்ளார்ந்ததேயன்றி வெளியில் பரிமளிக்கத் தெரிவதல்ல. பிரேமையோ

இப்படி அல்ல. உள்ளே பொங்கும் அதன் அபரிமித சக்தி எரிமலை வெடிப்பதுபோல் ஆவேசமாக வெளிச் செயல்களில் கொந்தளித்துக் கொண்டு வந்தே தீரும். இதனால்தான் பிரேமாவதாரமான ஸ்வாமி சக்தியவதாரமாகவே விளங்குகிறார். 'ஸத்ய ஸாயி' என்பதை 'சக்தி ஸாயி' என்றே சொல்லிவிடலாம். அன்பின் நாறு கோடிச் சாயல்களையும் ரஸிப்பதற்காகத்தான் பராசக்தி அனந்த சிருஷ்டி புரிகிறாள்; நவ நவ மாயைகள் புனைகிறாள். அவளுடைய அவதாரமேயானதால்தான் ஸ்வாமியும் குறிப்பாக மற்றெந்த அவதார புருஷரையும்விட அதிகமாக அற்புதங்களை ஆற்றுகிறார். எனவே மற்ற அவதாரங்களுக்கு இவர் ஏன் மாறுபடுகிறார் என்பதற்கு விடை, இவர் சக்தியை, அதாவது சக்தியான பிரேமையைப் பரிமளிக்கக் காட்டவே வந்தவர் என்பதுதான்.

இனிப்பைக் காட்டவேண்டுமானால் சர்க்கரை போட்டுத் தானாக வேண்டும் என்பதே போல், உலகுக்கு தெய்விக மகா சக்தி ஒன்று உள்ளது என்று காட்டவேண்டுமானால் அதீத ஆற்றலைக் காட்டும் மிரகிள்களைச் செய்துதானே ஆகவேண்டும்?

மற்ற சில மகான்களைக் காட்டி அவர்கள் மிரகிள் செய்கிறார்களா என்று கேட்பது பொருந்தாது. மிரகிள் செய்யாததால் மற்றவர் அவதாரமில்லை என்பதும் சரியாகாது. வெள்ளியிலேயே பல பூஜா பாத்திரங்கள் செய்திருக்கிறது. அவற்றில் மணியும் ஒன்று. ஸாயிமணிதான்! அது கணகணவென்று ஒலிக்கிறது—சக்திகரமான அற்புதங்களால். ''மற்ற பாத்திரங்கள் எப்படி அடங்கியிருக்கின்றன! இது மட்டும் 'லொட லொட' என்று பிரகடனப்படுத்திக் கொள்கிறது. அதனால் இது வெள்ளியே அல்ல'' என்பதா? இதேபோல் ஸாயி பக்தர்களும், ''நம் மணி மாதிரி மற்ற பாத்திரங்கள் கண கணவென்று ஒலிக்கின்றனவா? எனவே அவை வெள்ளி அல்ல'' என்று சொல்ல வேண்டாம்.

ஒவ்வொரு அவதாரத்தின் நோக்கத்தைப் பொறுத்தே அதன் செயல் முறை அமையும்.

தன் பெருமையை எந்த அவதாரமும் தானே பரக்கக் கூறிக் கொள்ளாது என்கிறவர்கள் கண்ணனையும் இயேசுநாதனையும் அடியோடு மறந்துவிட்டார்களா? சில அவதார புருஷர் தாம் செய்யும் அதீத அற்புதங்களைத் தாம் செய்ததாகக் காட்டாமலே எளிமையில் ஒடுங்குவதை இவர்கள் புகழ்கிறார்கள். ஆனால் இந்த எளிமையிலும் பக்தருக்கு ஒரு பெரிய கலக்கம் ஏற்படத்தான் செய்கிறது. ஆசைப்பட்ட விவேகாநந்தர் போன்ற ஒரு பரம பக்குவியே. ஸ்ரீ ராமகிருஷ்ணரிடமிருந்து அதீத அநுபவங்களைப் பெற்றிருந்துங்கூட, அவர் பூண்டிருந்த எளிமைப் பாங்கினால் கலக்கமுற்று, ''வாஸ்தவமாகவே இந்த அப்பாவி தக்ஷிணேச்வரக் கிழவர் தெய்வாம்சம்தானா?'' என்று உளைச்சலுற்றிருக்கிறார்! நடமாடும் தெய்வமான காஞ்சிப் பெரியவாளின் அத்யந்த பக்தர் ஒருவர் நூலாசிரியரிடம் கண்ணீர் விடாத குறையாக, ''பெரியவாள் ரொம்பவும் ஏமாற்றிச் சோதித்து விடுகிறார்கள். பரமேச்வரனைப் பல அநுக்கிரகங்களைச் செய்துவிட்டு, தானு

Koviloor Digital Library

செய்தது என்கிற மாதிரி அவர் வேஷம் போடுகிறபோது நமக்கே சந்தேகம் வந்து விடுகிறது. இது எப்பேர்ப்பட்ட அபராதம்?'' என்றார்.

ஆகவே எளிமைக்குள்ளும் ஒரு கடுமை (ஒருவேளை, பக்தரின் பூர்வகர்மாவுக்குத் தண்டனையாக இருக்கலாம்!) இருக்கத்தான் செய்கிறது!

ஆனால் பாபாவோ தாம் செய்த அநுக்கிரகங்களைத் தாமே செய்ததுதான் என்று உறுதிப்படுத்துவதாலும், தாம் தெய்வமே என்று பிரகடனம் செய்துகொள்வதாலும் அவரது லக்ஷோப லக்ஷம் பக்தர்களுக்கு இப்படிப்பட்ட சம்சயமோ, குழப்பமோ, இது காரணமான அபராதி உணர்வோ ஏற்படுவதே யில்லை. ''அப்பாடா! சாக்ஷாத் பரம்பொருளையே பிடித்துவிட்டோம். இனி என்ன குறை?'' என்ற பரம நிம்மதி அவர்களுக்கு லபித் திருக்கிறது.

'தெய்வங்களுக்கு மறைவாக இருப்பதிலேயே பிரியம் போலும்' (பரோக்ஷ ப்ரியா: இவ ஹி தேவா:) என்று உபநிஷதம் கூறுகிறாற்போல், அவதார புருஷர்கள் தமது தெய்விகத்தை மறைக்கிறார்கள். நம் ஸ்வாமியும் தாம் செய்த அருள்களைப் பகிரங்கத்தில் பிரகடனப்படுத்திக் கொள்வதில்லைதான். ஆயினும் அவசியம் நேரும் போதெல்லாம் தனிப்பட்டவர்களிடம் உறுதிப்படுத்துகிறார். தெய்விகத்தின் மறையும் இயல்பை அவர் தியாகம் செய்து இவ்விதம் உறுதிப்படுத்துகிறார்—பக்தரின் மனத்தில் உறுதி குலையாதிருக்கும் பொருட்டே.

ஸித்த புருஷர் பலரை அடுத்து, சாதனைகள் செய்து, ஆன்மிக அநுபவம் பல பெற்று வரும் ஒரு பெருமாட்டி நூலாசிரியரிடம் சொன்னார்: ''நீங்கள் பாக்கியசாலி. உங்களுக்கு ஏற்பட்டுள்ள அநேக நலன்கள் பாபாவால்தான் விளைந்தவை என்று உங்களுக்குத் தீர்மானமாகத் தெரிவதால் அவருக்கு உளமார நன்றி செலுத்தி, அவரிடம் மேலும் பக்தியில் ஈடுபட உங்களால் முடிகிறது. எனக்கும் பல நலன்கள் ஏற்பட்டுத்தான் உள்ளன. ஆனால் அது எந்த அளவுக்கு என் பூர்வ கர்மாவால், அல்லது என் இப்போதைய சாதனையால் நடந்தது: எந்த அளவுக்கு குரு கிருபையால் நடந்தது என்று தெரியவில்லை. ஏனெனில் என் குருமார் தம்மால்தான் இன்னின்ன நடந்தன என்று தெரிவிப்பதில்லை. எனவே 'நம் ஆன்மிக முன்னேற்றத்துக்கு குரு ஏதும் செய்ய வில்லையோ?' என்றுகூடத் தோன்றிவிடுகிறது. நமக்கு அநுபவங்கள் உண்டாவது மட்டுமின்றி, அதைத் தந்தவர்கள் இருப்பின் அதை உறுதியாகத் தெரிந்துகொண்டு நன்றி செலுத்தினால் தான் நிறைவுண்டாகிறது. அவர்களை மேலும் பற்றி நிற்கவும் ஊக்கமுண்டாகிறது. பாபா தாம் அருள் செய்வது மட்டுமின்றி, அதைத் தாம் செய்வதாகவே உணர்த்தியும் விடுவதால் உங்களைப் போன்ற பக்தர்களுக்கு இந்த நிறைவு கிடைத்திருக்கிறது.''

Koviloor Digital Library

கண்ணனையும் பாபாவையும் போல் அனவரதமும் தம் தெய்விகத்தைக் கூறிவிடினும், மஹாபுருஷர்கள் அனைவருமே தங்களது தெய்வாம்சத்தை அந்தியந்த பக்தருக்கு வெளியிட்டுத்தான் இருக்கிறார்கள். அடக்கத்தின் உருவாகவே இருந்த ராமகிருஷ்ண பரமஹம்ஸரே, "ராமனாகவும் கிருஷ்ணனாகவும் வந்தவன் தான் இந்த ராமகிருஷ்ணனாக வந்திருப்பது" எனக் கூறியிருக்கிறார். அவரினும் அடக்கக் கருவூலமான சாரதாமணி தேவியும் தாஸ் குப்தா, கேசவாநந்த ஸ்வாமி, நளினி சர்க்கார் போன்ற நேதிய பக்தரிடம் தன்னை தெய்வ மகா சக்தியாகச் சொல்லிக் கொண்டது உண்டுதான். இன்று விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களால் உலகம் சுருங்கிப் பார் முழுதிலும் பாபாவுக்கு அந்தியந்த அடியார்கள் ஏற்பட்டிருப்பதால் அவர் தம் பரத்துவத்தை ஏராளவு பரக்கக் கூறிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

* * *

தம்மை அவதாரம் என்று ஒருவர் சொல்லிக்கொள்வதே அவதாரத்வத்துக்கு விரோதமானது என்ற ஆட்சேபனைக்கு இவ்வளவு பதில் கொடுத்தது போதும்.

இனி மற்றவிதமான ஆட்சேபனைகளுக்குப் பிறருக்குப் பதில் கொடுப்பதைவிட, சொந்தமாக நூலாசிரியனே பெற்ற பதில்களைச் சொன்னாலே போதும். ஏனெனில் ஒரு காலத்தில் இவனே அடிமட்டத்திலிருந்து இன்று ஸ்வாமியைப் பற்றிப் பல எதிர்ப்பாளர் கொண்டுள்ள சந்தேகங்களைப் பட்டவன்தான். கோபியர் போல் கேள்வியின்றி அவரை ஏற்காமல் இப்படிச் சந்தேகப் பட்டுப் பட்டே தெளிய வைத்திருக்கிறார் ஸ்வாமி. இதுவே அவர் இவனுக்குச் செய்துள்ள பேரருள். இதனால்தானே இன்று இவன் இச் சங்கைகளைத் தெளிவிக்கப் புக முடிகிறது?

முன்னொரு சமயம் நூலாசிரியனே நினைத்ததுண்டு, பாபா தம்மைக் கடவுள் எனச் சொல்லி உலகை ஏமாற்றுகிறார் என்று. ஆம், இவனே அவரை லேகர்டிமைன்—சாரராக நினைத்த அந்தக் காலத்தில்! பிறகு அவரது அருமை பெருமைகளையும் அற்புதங்களையும் அறிந்து அநுபவித்ததில் இவன் இரண்டாம் படி ஏறி அவரை ஒரு மஹானென்த்தராக நினைக்கலானான். இப்போது அவரது ஐச்வரத்வப் பிரகடனங்களைக் கேட்டு இவன், 'அவர் உலகை ஏமாற்றவில்லை; ஆனால் தாமே ஏமாந்திருக்கிறார் போலும்!' என்றெண்ணினான். பற்பல ஸித்திகளின் பொருட்டு இவர் செய்த சாதனைகளில் ஏதோ இசகு பிசகு ஏற்பட்டு இவருக்குச் சித்தத்தில் தாமே கடவுள் என்ற பிரமை உண்டாகி விட்டிருக்கிறது என நினைத்தான். இதன்பின் மூன்றும் படி ஏறினான். அவர் பிறக்கு முன்னிருந்தே அற்புதம் செய்தவர், இந்த ஜன்மாவில் எந்த சாதனையும் செய்யாதவர், ஸித்துக்களால் முடியாத சங்கற்ப சிருஷ்டி முதலானதில் வல்லவர், அதாவது ஸிர்டி சரீரம் விட்டபின் அஹங்கார ஜீவ பாவத்தை அடியோடு துறந்து பராசக்தியின் வடிகாலாகவே ஆகி, நேராக தெய்வ சக்தியினாலேயே இயக்கப்பட்டுச் செயலாற்றுபவர் என உணரலானான்.

Koviloor Digital Library

அகங்காரம் அறவே கரைந்த ஞானிகளும், பக்தர்களும் காரியமற்ற பிரம்மத்தில் ஒன்றியிருப்பது மட்டுமின்றி, சிற்சில சமயங்களில் காரிய—காரண மகாசக்தியும் தாமே என்ற அநுபவத்தைப் பெறுவதும் உண்டுதான். இந்த நிலையில் தான் ரிக்வேத ரிஷிகளில் ஒருத்தியான அம்பிருணி முனிவரின் குமாரியான 'வாக்' என்பவள், ''நானே உலகை ஆள்பவள்; பூஜைக்குரியவர்களில் முதன்மையானவள்; பல வடிவங்களில் எங்கணும் நிறைந்து, எல்லா ஜீவராசிகளுக்குள்ளும் புகுந்து உறைபவளான என் காரியத்தையே தேவர் யாவரும் பல இடங்களில் செய்கின்றனர். நான் இப் பிரபஞ்சம் முழுவதையும் ஊடுருவி நிற்கிறேன். வானுலகையும் என் சரீரத்தால் தொடுகிறேன்'' என்றெல்லாம் வேத மந்திரங்களாக அடுக்கிக் கொண்டு போகிறாள். இந்நிலையில்தான் நம்மாழ்வார்

> கடல்ஞாலம் செய்தேனும் யானே என்னும்...
> கற்கும் கல்விக்(கு) எல்லை இலனே என்னும்...
> காண்கின்ற நிலமெல்லாம் நானே என்னும்...
> திறம்பாமல் மலை எடுத்தேனே என்னும்...
> திறம்பாமல் கடல் கடைந்தேனே என்னும்

என்றெல்லாம் பரமபத நாதனில் ஒன்றிவிட்ட நாயகியாகப் பாடுகிறார்.

இது பாவனைதானேயன்றி, வாஸ்தவத்தில் வாக் ஆம்பிருணியோ, நம்மாழ்வார் நாயகியோ அகிலாண்டங்களை இயக்கியதாகக் கொள்ள முடியாதல்லவா? அப்படித்தான் நம் கதாநாதரும் தம்மைப் பராசக்திக்குப் பிறிதற்றவராகவே உணர்ந்திருக்கிறார் போலிருக்கிறது; மற்ற மகாபுருஷர்களுக்கு இந்த பாவனை தாற்காலிகமாகவே இருக்க, இவரோ எப்போதுமே இப்படி எண்ணுகிறார். ஆயினும் யதார்த்தத்தில் இவரே பிரபஞ்சத்தை ஆட்டிப் படைக்கும் ஆண்டவன் இல்லை. இவர் ஏமாற்றவில்லை, ஏமாறவுமில்லை, ஆனாலும் அவரது ஈச்வரத்வ அநுவபம் அவரைப் பொறுத்தமட்டில் உண்மையேயன்றி, அது வெளியுலகுக்கு நடைமுறை ஸத்தியமாகாது — இப்படி நூலாசிரியன் நினைத்தான்.

இந்நினைப்புக்கு—அதாவது பாபாவை ஆண்டவனின் சாக்ஷாத் அவதாரமாக் கொள்ள முடியாமைக்கு—க் காரணம், இன்று ஆட்சேபணையாளர் பலர் இவரிடம் காணும் குறைபாடுகள்தாம். பாபா சொன்ன வாக்கு பலிக்காமற் போனதற்கு இவர்கள் திருஷ்டாந்தங்கள் காட்டுகின்றனர். பாபா எடுத்த காரியங்கள் சில தோல்வியுற்றதைக் குறிப்பிடுகிறார்கள். அவர் எவ்வளவோ அற்புத மருந்துகள் கொடுத்தும் வியாதி தீராமலிருந்ததற்கு உதாரணங்கள் காட்டுகிறார்கள்.

அநேக ஸாயி பக்தர்கள் இவர்கள் கூறுவதெல்லாமே பொய் என்று சண்டைக்குக் கிளம்புகிறார்கள். ஆனால் ஆசிரியன் அப்படிப் போரிடத் தயாராக இல்லை. ஏனெனில் இவனிடமும் இவனுடைய

Koviloor Digital Library

நெருங்கிய உறவினரிடமுமே பாபா தனிப் பேட்டியில் சில விஷயங்களைத் தவறாகக் கூறியிருக்கிறார். இவரது உறவினர்களில் ஒருவருக்குச் செய்த 'சிகித்சை' நிஷ்பலனாகியிருக்கிறது; எதிர்கால விஷயமாகச் சொன்ன சில பலிக்காமலே யிருந்திருக்கிறது. இது தவிர வேறு பல குறைகளை, தவறுகளை, தோல்விகளை அவரிடம் இவர் கண்டிருப்பதையும் நெஞ்சகத்துக்கு வஞ்சகமில்லாமல் சொல்வதையே நம் ஸத்ய மயமான ஸத்யஸாயி உவப்பார்.

(வேறு ஸாயி பக்தர்களும் இப்படிக் குறைபாடுகளைக் கண்டிருக்கலாம். அல்லது எதிர்ப்பாளர்கள் கூறுவதில் உண்மையிருக்குமோ என்று உள்ளூறச் சலனமுறலாம். ஆனால் தாங்கள் தவறான இடத்தில் பக்தி வைத்ததாக உலகுக்குக் காட்டிவிடக் கூடாது என்ற வீம்புக்காகவே இவர்கள் தங்கள் மனச்சாட்சியை மறந்து, எதிர்ப்பாளரை மறுத்து யுத்தத்துக்குக் கிளம்புகிறார்கள். இது சற்றும் சரியல்ல. உள்ளத்துக்குக் கள்ளமில்லாமல் ஒழுகுவதையே பாபா போற்றுகிறார். அவநம்பிக்கைக்கு முகாந்தரம் ஏற்படுகையில் தைரியமாக அவநம்பிக்கை கொள்வதையே உவக்கிறார். அந்த உவப்பினாலேயே தம் குறைபாடுகளைப் பற்றிய உண்மையை உணர்த்தி அவர்களுக்குத் தெளிவும் ஊட்டுகிறார். 'பாபாவைக் குறித்து நாம் எப்படிச் சிற்றறிவில் ஆராய முடியும்? எனவே நம் அறிவுக்குத் தெரியும் எந்தக் குறைபாட்டையும் உண்மைக் குறைபாடாக எண்ண வேண்டாம்' என்று அவரிடம் சரணாகதர்களாக இருப்போரது விஷயம் வேறு. . இங்கே, கரட்டோராக உள்ளூற ஸம்சயித்தும் வெளியே வேஷம் போடுபவரைக் குறித்தே எழுதுகிறோம்.)

ஆனைக்கும் அடி சறுக்கும் என்பது போல ஸ்வாமியிடம் ஆசிரியர் கண்ட சறுக்கல்களில் சில:

ஆதியில் அவர் புஷ்பகிரிக்குச் சாரணனாகச் சென்றபோது பொருளைப் பறிகொடுத்ததும், பிறகு ஊராருக்குச் சூதாட்டமே போன்ற விளையாட்டில் பணம் பண்ணியதும் அவரது ஸர்வக்ஞத்துவத்துக்கும், ஸத்திய சீலத்துக்கும் முரணானவைதாமே?

''மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ'' என்பன கிருஷ்ண யஜுர் வேதத்தைச் சேர்ந்த தைத்திரீயத்தில் உள்ள மந்திரங்கள். பிரசித்தமான மந்திரங்கள். பாபாவோ ஓர் உரையில் இவை ரிக் வேதத்தில் வருவதாகக் கூறினார்.

பசுவின் உயிரைக் காக்கும் பொருட்டு தன்னையே சிங்கத்துக்கு ஈந்து கொண்ட சூரிய குலச் செம்மல் திலீபனே அல்லவா? ஸ்வாமியோ திலீபன் மகனான ரகு இத் தியாகம் புரிந்ததாகச் சொல்லியிருக்கிறார்.

ஆதி சங்கரர் கைலாசத்திலிருந்து பெற்ற பஞ்சலிங்கங்களைச் சிதம்பரம், கேதாரம், நீலகண்ட க்ஷேத்திரம், காஞ்சிபுரம், சிருங்கேரி ஆகிய இடங்களில் பிரதிஷ்டை செய்ததாக

Koviloor Digital Library

மார்க்கண்டேய புராணமும் சங்கர விஜயமும் கூறும். புரி ஜகந்நாதத்திலோ, துவாரகையிலோ உள்ள சங்கர மடங்கள் கூடத் தம்மிடம் பஞ்ச லிங்கங்கள் இருப்பதாகச் சொன்னதே யில்லை. ஆனால் பாபாவோ, சிதம்பரம், சிருங்கேரி, பதரி, புரி ஜகந்நாத், துவாரகா ஆகிய இடங்களில் இவ்வைந்து லிங்கங்கள் ஸ்தாபிக்கப் பட்டதாகக் கூறுகிறார்.

'ஒருவர் படுக்கலாம், இருவர் உட்காரலாம், மூவர் நிற்கலாம்' என்று இடைகழியில் ஒதுங்கியவர்கள் முதல் மூன்று ஆழ்வார்கள் என்பது உலகறிந்தது. ஆனால் ஸ்வாமியோ மாணிக்க வாசகர் வாழ்வில் இச்சம்பவம் நிகழ்ந்ததாகக் கூறியுள்ளார்.

சீடர்களின் குணமாறுபாடுகளை அநுசரித்து வெவ்வேறு வழி முறைகளை அவர்களுக்கு ராம கிருஷ்ணர் உபதேசித்தது பற்றி இவ்வருட (1976) குருபூர்ணிமா உபந்நியாஸத்தில் ஸ்வாமி குறிப்பிட்டார். அப்போது, 'பரம சாதுவான ராகால் என்ற சீடர் பிறர் செய்த குருநிந்தனையையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்ததற்காக ராமகிருஷ்ணர் அவரைக் கண்டித்து அவருக்கு உணர்ச்சியெழுச்சி ஊட்டினார்; மாறாக, மாவீரரான நரேன் (விவேகாநந்தர்) குரு நிந்தனையாளரைத் தாக்கச் சென்றதற்காக அவரைக் கண்டித்து அவருக்குச் சாந்தத்தை போதித்தார்' என்று கூறினார். ஆனால் சாரதாநந்தர் எழுதிய ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஆதாரபூர்வமான சரிதத்திலோ பரம சாதுவாக இருந்த சீடர் யோகேன் என்றும், உத்தண்டமாக எதிர்த்த சீடர் நிரஞ்ஜன் என்றும் காண்கிறது.

இப்படிப் பல அடிச் சறுக்கல்களை ஸ்வாமியின் உபந்நியாஸத் தில் கேட்கத்தான் செய்கிறோம்.

காலஞ்சென்ற ஸ்ரீ. வி. ராமசந்திரய்யர் (முன்னாள் டி.எஸ்.பி.) எந்த மத நூலில் சங்கை கேட்டாலும் உடனே விளக்கம் தந்து, மேற்கோள்களைப் பொழிந்தவர் — அணு விஞ்ஞானத்திலும், அஷ்டாத்யாயியிலும், வேத ஸ்வரங்களிலும் விளக்கம் தரும் ஸர்வக்ஞரேதான் இப்படித் தவறுகளும் செய்திருக்கிறார்!

பெரிய அளவில் ஸ்வாமி ஆரம்பிக்கும் பல காரியங்கள் பிசுபிசுத்துப் போவதையும் பார்க்கிறோம். உதாரணமாகப் பதினைலாண்டுகளுக்கு முன் 'பிரசாந்தி வித்வன் மஹாசபா'வை ஆரம்பித்து, இதன் மூலம் வேத விருக்ஷம் கப்பும் கிளையுமாகத் தழைத்துப் பரவப் போகிறது என்றார். முதல் ஓரிரு ஆண்டுகள் வாஸ்தவமாக அப்படி ஒரு வைதிக மறுமலர்ச்சி ஏற்படும்போலத் தான் தோன்றியது. ஆனால் இப்போது அச்சபை மிகவும் மங்கி அல்லவா உள்ளது?

கோடைக்கால மாணவர் பயிற்சி முகாமும் இப்படியே! 1972—ல் தேசமெங்கிருந்தும் 300 கல்லூரி மாணவர்களைத் திரட்டி பாபா இந்த ஆத்மிக—கலாசாரப் பயிற்சியைத் தொடங்கி, இதனால் ஆண்டுதோறும் இளைஞரிடை ஓர் அற்புதப் புரட்சி ஏற்படும்

Koviloor Digital Library

என்று கூறியபோது நாமும் அதை நம்பி, ஆவலுடன் எதிர் பார்த்தோம். மறுவருடப் பயிற்சி முகாம் நம் நம்பிக்கையை மெய்ப்பித்தது — இம்முறை 500 மாணவர் பங்குகொண்டனர். மூன்றும் ஆண்டான 1974—ல் இப்படியே அரை ஆயிரம் மாணவர் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். ஆனால் அடுத்த இரு வருடங்களில் நடந்திருப்பதென்ன? பிராந்திய ரீதியில் ஆங்காங்கே சிறு பயிற்சி முகாம்கள், ஸத்யஸாயிக் கல்லூரிகளின் மாணவருக்கு மட்டுமான முகாம்கள் என்று மிகவும் சுருங்கி விட்டன!

ஸ்வாமி எடுக்கும் முயற்சிகளிலேயே இப்படித் தோல்வி போன்றவை ஏற்படலாமா?

இவரது செயல் முறையிலேயும் சில முரண்பாடுகளைப் பார்க் கிறோம். சம்பிரதாயம், பாரதிய கலாசாரம் இவற்றை வலியுறுத்துபவர் தம் அந்தரங்கச் சேவகரே ஸூட்டும் கோட்டும் போட்டுக்கொண்டு கர்ப்பூரார்த்தி காட்டுவதை ஏன் கண்டிப்ப தில்லை? ஆகார சுத்தியை ஓயாமல் வலியுறுத்துபவர் பிரசாந்தி நிலய காண்டீனிலேயே வெங்காய மயமான போஜனத்தை ஏன் தடுக்கவில்லை?

இதெல்லாவற்றுக்கும் மேலாக, உலகம் போகிற போக்கில் இவரால் இவர் கூறுவது போல் வாஸ்தவமாகவே கலியுகத்தை விரட்டி ஸத்ய யுகத்தை நிலைநாட்ட முடியுமா என்ற பெரிய கேள்வி தோன்றிவந்தது. 'உலகம் முழுதிலும் ஆஸ்திகம், ஆன்மிகம், யோகம், பஜனை முதலியன அதிகமாகி வருவது உண்மைதான். ஆனால் மறுபுறம் நெறியற்ற வாழ் முறைகளும், சூது வாதுகளும், கொலை கொள்ளைகளும் வலுத்துத்தானே வருகின்றன? இவற்றைக் களைவதில் முப்பதாண்டுகளுக்கு மேலாக ஸ்வாமி காட்டும் ஆற்றல் விசேஷமாகச் சாதித்து விடவில்லையே?' என்று தோன்றும்.

ஆயினும் இவர் அகந்தை அறுத்துப் பராசக்தியின் வடிகாலானவர், அல்லது ஒரு மஹா ஸித்தராவது ஆவார் என்று கண்ட நாளாக ஆசிரியன் தனக்குத் தெரிந்த இக் குறைகளை வெளியில் சொல்வதில்லை. காரணம் உள்ளக்கரவோ, வீம்போ அல்ல. பின் என்ன எனில்: கணவன், பெற்றோர், குரு போன் றோர் எவ்வளவு குறைபாடுள்ளவர்களாக இருந்தாலும் அவர் களையே ஒருவர் தெய்வமாகக் கொண்டு தொழும்பு செய்தால் உய்வு பெற்றுவிடுவர் என்று நம் சாஸ்திரங்கள் கூறுகின்றன. உதாரணங்களும் காட்டுகின்றன. எனவே ஆங்காங்கு பாபாவுக்கு இடறிவிட்டாலும், மொத்தத்தில் மகாஞானம், அபரிமித ஆற்றல், அளப்பரும் கருணை இவை நிறைந்தவராக ஆயிர மாயிரவரைத் தாயினும் சாலப் பரிந்து புரந்து வரும் இவரை அடியார்கள் தெய்வமாகவே வழிபடுவதில் தவறில்லை; இவர் 'அசல்' தெய்வமில்லாவிடினும் இவர் மூலம் அத் தெய்வம் நிச்சயம் அடியாருக்கு உய்வு தரும் என்ற கருத்திலேயே குறைகளைத் தெரிவிக்காதிருந்தது.

Koviloor Digital Library

இவனிடம் எத்தனையெத்தனையோ குறைபாடுகளிருந்த போதிலும், தம்மைப் புரிந்துகொள்வதில் இவனைப் படிப்படியாக ஏற்றி வந்த பரம கருணாகரரான ஸ்வாமி இவனை இன்னொரு படியும் தூக்கி விட்டார்.

அந்த நிலையில், சில்லறைக் குறைகளும் முரண்களும் அவதாரத்தின் தவிர்க்க முடியாத அம்சம் என்று இவனைத் தெளிவித்தார்.

பரமஹம்ஸ ராமகிருஷ்ணர் சொன்னார்: "இம் மண்ணுலகில் மானுடமாகத் தோன்றும்போது மகாசக்தியும் சிறிது மாயையைக் கலந்துகொண்டே வருகிறது. சுத்தத் தங்கத்தினால் நகை செய்ய முடியாது. அதில் சிறிது செம்பைக் கலந்தால்தான் அணிகள் செய்ய இயலும். இவ்வாறே சுத்தப் பரம்பொருளும் மாயைச் செம்பில் கலந்தே உலகில் உலவ முடியும்."

குறையேயின்றி ஏன் பகவான் அவதரிக்கக்கூடாது என்பதற்கு நாம் காணக் கூடிய விடை இதுதான்: மானுடரான நம்மிடம் பல குறைகள் உள்ளன. ஆய்ந்து பார்த்தால் இக் குறைகளும் பகவானின் சிருஷ்டிதானே? குறைகள் என்று சிலவற்றை அவன் வைத்திருப்பதால்தானே நாம் குறைபாடுள்ளவர்களாக இருக்க முடிகிறது? லீலா நிமித்தம் இப்படி நம்மைக் குறையுள்ளவர்களாக வைத்திருப்பதற்குக் கழுவாயாகத் தர்ம நிமித்தம் தனது அவதாரங்களிலேயே அவனும் சில குறைகளை ஸ்வீகரித்துக் கொண்டு அதற்காக நிந்திக்கப் பெறுகிறான்போலும்!

இன்னொன்றும் தோன்றுகிறது: ஷேக்ஸ்பியர் தமது துன்பியல் நாடகங்களின் பரம உத்தமமான கதாநாயகர்களுக்கும் ஓர் ஊனம் (tragic flaw) இருந்தாலே அப் பாத்திரம் மேலும் அழகு படுகிறது எனக் கருதினார். இக் காரணம் பற்றியே மகா கவியாம் பராசக்தி அவதாரமாக வருகையில் மானுடமான ஒரு சில குறைபாடுகளைத் தன் தெய்விகத்தைத் தூக்கிக்காட்டும் பொருட்டே வைத்துக்கொள்கிறதோ?

பரம்பொருள் சங்கற்ப மாத்திரத்தில் உலகைத் திருத்தாமல் அவதாரம் எடுப்பதே லீலைக்காகத்தான். நல்லது—அல்லது இரண்டுமே லீலையில் அடக்கம்தானே? எனவே அவதார லீலையிலும் நல்லதே தூக்கலாயிருப்பினும் குறைகளும் இருந்துதான் தீரவேண்டும் போலிருக்கிறது.

ஸ்ரீ அரவிந்த முனிவர், அவதாரங்கள் எப்படி மாறாத ஒரே சத்தியத்தையும் மாறிக்கொண்டேயிருக்கும் அதன் அனந்த லீலைகளையும் ஒன்றுக்கொன்று இசைவிக்கின்றன என்பது குறித்து அருமையாக விளக்கியிருக்கிறார். ஆனால் எந்த அவதாரமாயினும் தவிர்க்க முடியாத ஓர் இசைவின்மையும் இருக்கத்தான் செய்கிறது. ஏக சத்தியம் அனந்த லீலைகளாகும்போது, இந்த லீலையிலேயே பல வரிசைகள் இருக்கின்றன. இவ்வரிசைகளிலெல்லாம் உலவி அவதாரர்கள் செயலாற்றும்போது ஒரு

வரிசையிலிருந்துகொண்டு செய்வது இன்னொரு வரிசைக்குப் புரியாமலும் போவதுண்டு; அப்போது இசைவின்மை ஏற்பட்டதாகவே தோன்றும். பார்க்கப் போனால் லீலைகளில் இசைவின்மை என்ற ஒன்றும் இருக்கத்தானே வேண்டும்?

பரிபூர்ணமும் குணமுள்ளதும் மாறானவையாக மேற்பார்வைக்குத் தோன்றலாம். ஆனால் இந்த குணங்களும் அந்தப் பரிபூர்ணத்திலிருந்து வந்தவைதாம் என்று புரிந்துகொள்ளும் போது, பரிபூர்ணத்தின் பிரதிநிதியாக ஒருவர் வந்தால், அக்காரணம் பற்றியே அவரிடம் குணங்கள் இருந்துதான் ஆக வேண்டும் என்றாகிறது. அனைத்தையும் கொண்ட முழுமையின் உருவாக ஒன்று வந்தால், இவ்வினத்தில் ஒன்றாக அம் முழுமைக்கு முரணானதும் அவ்வுருவில் இருக்கத்தானே வேண்டும்? இதைத் தான் வால்ட் விட்மன் அற்புதமாகச் சொன்னார்:

Do I contradict myself?

Very well, then I contradict myself.

I am large, I contain multitudes.

(எனக்கு நானே முரண்படுகிறேனா? ரொம்ப நல்லது, எனக்கு நானே முரண்படத்தான் செய்கிறேன். ஏனெனில் நான் மகத்தானவன்—எல்லாக் குவியல்களையும் உள்ளடக்கியவன்.)

''க்ருஷ்ணஸ்து பகவான் ஸ்வயம்'' என்றும், ''பூர்ணம் ப்ரம்ம ஸநாதனம்'' என்றும் பேசப்படும் நூறு சதவிகித இறையவதாரமாக வந்த ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவுக்கே வெளிப் பார்வைக்கு அடிச் சறுக்கல்கள் இருந்தனவே!

உதாரணமாக, சால்வன் அவரை எதிர்த்துப் போர் செய்த போது மாயையால்தான் அவரைச் செயலிழக்க வைத்து வெல்ல முடியும் எனக் கருதினான். எனவே ஒரு மாயா வஸுதேவரை உண்டாக்கிக் கண்ணன் முன் காட்டி, ''இதோ உன் தந்தையைக் கொல்கிறேன் பார்'' என்று சொல்லி அவ்வுருவத்தை வதைத்தான்.

அப்போது சாக்ஷாத் கண்ணன் அழுது புலம்புகிறான். ஸ்ரீமத் பாகவதம் (10–77.28) இவ்விடத்தில் கண்ணன் முஹூர்த்த காலம் சாதாரண மனிதத்தன்மையில் முழுகியிருந்தான் என்றே சொல்கிறது!

கண்ணனுங்கூட எப்போதும் பூர்ண தெய்வசக்தியில் ஊன்றியில்லாதது போலவும், அந்த உச்ச நிலையிலிருந்து அவர் அவ்வப்போது சற்று கீழே வருவது போலவும் காட்டும் இன்னொரு நிகழ்ச்சி மகாபாரத அநுசாஸனிக பர்வத்தில் வருகிறது. பாரதப் போர் முடிந்தபின் அர்ஜுனன் கீதோபதேச விவரங்கள் மறந்து விட்டதாகக் கண்ணனிடம் கூறி, மீண்டும் அவ்வுபதேசத்தை வழங்கக் கோருகிறான். அப்போது பூர்ணாவதாரனோ, ''கீதையை

Koviloor Digital Library

உனக்கு நான் சொன்ன அந்த உன்னத பாவத்தை இப்போது என்னால் மறுபடி எய்த முடியாது. எனவே இப்போது தோன்றுவதைச் சொல்கிறேன்'' எனக் கூறி 'அநுகீதை'யை மொழிகிறான்.

கண்ணன் என்ற சொக்கத் தங்கத்திலும் ஓர் அணு செம்பு கலந்துதானே உள்ளது?

ஸ்ரீமத் பாகவதத்தைக் கூர்ந்து படித்தால், ஆறுனைப்பட்ட கண்ணன் ஜராஸந்தனின் படையெடுப்புகளுக்கு ஈடு கொடுக்க முடியாமலே மதுரையை விட்டோடி துவாரகையை ஸ்தாபித்துக் கொண்டான் என்று தெரிகிறது. 'ஸர்வலோக மஹேச்வரன்' என்று தன்னைச் சொல்லிக்கொண்டவன் ஏன் இப்படித் தோல்வி யுற வேண்டும்? பிற்பாடு துரியோதனனிடம் கால் தேயத் தூது சென்று, பாண்டவருக்குப் பாதி ராஜ்யமில்லாவிடினும் தலைக்கு ஒரே ஒரு வீடு தந்தாலும் போதும் என்று கண்ணன் மன்றாடியும் அவரது தூதுப்பணி ஏன் தோல்வியுற்றது? ''இந்தத் தோல்வியும் கண்ணனே திட்டமிட்டதுதான். வெளிப்பார்வைக்குக் கண்ணனின் திட்டம் தோல்வியடைந்ததாகத் தோன்றினாலும் உட்பார்வையில் இந்தத் தோல்வியும் அவனது முன்கூட்டிய திட்டமே'' என்பார் நம் ஸாயி கிருஷ்ணர். இவரது தோல்விகள் முதலான குறைபாடுகளும் இதனாலேயே விளக்கமுறுகின்றன என்பதைப் பிறகு விவரமாகப் பார்ப்போம்.

குறையே யில்லாதவர்கள்தான் அவதார புருஷர் என்று நிருபிக்க சமய வரலாறுகளில் ஏதுமில்லை. குறையே சொல்ல முடியாத அநேக மஹான்களை அவதார வரிசையில் சேர்க்காததையும் பார்க்கிறோம்.

ராமன், கண்ணன், சங்கரர், இயேசு, பரமஹம்ஸர் என்று இப்படி எவரது சரிதத்தை எடுத்துக்கொண்டாலும், 'சாக்ஷாத் ஈச்வராவதாரம் என்றால் இவர் ஏன் இப்படி நடந்து கொள்ள வேண்டும்?' என்ற கேள்வி பல சந்தர்ப்பங்களில் எழத்தான் செய்யும். நன்னடக்கை பௌருஷம் முதலியவற்றில் ஸ்ரீராம சந்திரனுக்குச் சற்றும் சளைக்காத திலீபன், ரகு, ஹரிச்சந்திரன் போன்றவர்களை ஏன் அவதாரமாகச் சொல்லவில்லை என்று கேட்கலாம்தான். ஒரு பிரபஞ்சத்தையே சிருஷ்டித்த விச்வாமித்திரரைவிடக் கண்ணனை உயர்த்தி அவதாரம் என்று ஏன் சொல்ல வேண்டும் என்று கேட்கலாம்தான். இப்படிப்பட்ட அவதார புருஷர்கள் மட்டுமின்றி அசல் தெய்வங்களான திருமால், சிவபெருமான் போன்றவர்களையே எடுத்துக்கொள்வோம். புராணங்களில் அநேக இடங்களில் இவர்களது மேன்மைக்கே இழுக்கான விஷயங்கள் இருப்பதால்தானே ஆழ்வார்கள், நாயன்மார்கள் போன்ற பேரறிஞர்களும் முறையே சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் பரத்வம் இல்லை என்று வாதிட இடம் கிடைக்கிறது? எனவே தெய்வத்தன்மை பூரணமாக எந்த மூர்த்திக்குமே இல்லை என்று எண்ணத்தக்க முகாந்தரங்கள் புராணங்களிலும், மகனியர் சரிதங்களிலும் இருக்கத்தான்

Koviloor Digital Library

செய்கின்றன. இப்படி முகாந்தரம் இருந்தும் நாம் ஏன் இவர்களை முழு முதற் கடவுளாக என்னுகிறோமெனின், இத்தனை முகாந்தரத்தையும் நொறுக்கிவிடும் ஒரு பெரிய நிருபணம் இருப்பதால் தான். அதாவது திருமாலையும், சிவபெருமானையும், மற்ற தெய்வங்களையும், ராமன், கிருஷ்ணன், ராமகிருஷ்ணர், சங்கரர், இயேசு போன்ற அவதார புருஷர்களையும் முழுமுதற் கடவுளாகவே கொண்டு வணங்கிய, வணங்குகிற ஏராளமான பக்தர்களுக்கு இவர்கள் அப்படியே இறைவனாக இருந்து அருள்வது தான். ரந்துவும், நிலபனும், ஹரிச்சந்திரனும், விச்வாமித்ரரும் இப்படி அருள முடியாது.

ஸத்ய ஸாயியின் அடியார்கள் அகிலமெங்கிலும் அவரது அருட்காப்பை லௌகிகம், ஆத்மிகம் இரண்டிலும் குறைவறப் பெறுவதே அவரது தெய்வத்தன்மைக்கு மாபெரும் நிருபணம்.

தெய்வங்களும், அவதாரங்களும் செய்கிற மிகப் பெரிய அருள் பக்தரிதயத்தில் அவர்கள் சுரக்கச் செய்யும் தூய பேரன்பு தான். தெய்வங்களை, அவதாரங்களைப் பகைத்துப் போரிட்டவரும் உண்டு. ஆயினும் சிவனையும், அம்பிகையையும், விஷ்ணுவையும், கண்ணனையும், ராமனையும், இயேசுவையும், புத்தரையும், நபியையும் எண்ணி எண்ணி அன்பில் பிச்சேறியவர்கள் எத்தனையோ நூற்றாண்டுகளாகத் தோன்றிக்கொண்டே தானிருக்கிறார்கள். இத்தனை நூற்றாண்டுகளில் அவர்களுக்கு ஏற்பட்ட பக்தர்களையெல்லாம் சேர்த்து வைத்து நம் ஸத்ய ஸாயியின் வாழ்நாளிலேயே சர்வதேசங்களிலும் எண்ணற்ற அடியார் அவரை எண்ணிய மாத்திரத்தில் உள்ளம் கரைகிறோமே, இந்தப் பிரேமாவேசமே அவரது இறைமைக்கு அதி முக்கியச் சான்று. அரசியல் தலைவர்களிடமும், ஸினிமாக் கலைஞர்களிடமும், விளையாட்டு விற்பனர்களிடமுங்கூட மக்கள் அன்பு வைக்கலாம். ஆனால் அதில் உள்ள வெறித்தனத்துக்கும், அவதாரர்களிடம் உண்டாகும் அன்பின் தூய்மைக்கும் உள்ள வித்யாசம் அநுபவத்தாலேயே அறியத்தக்கது. அவதாரரிடம் வைக்கும் பிரேமைக்கு நம் அந்தராத்மாவையே உருக்கவும், கர்மச் சுமையைக் கரைக்கவும் உள்ள சக்தி சொந்த அநுபவத்தாலேயே உணரக்கூடியது.

சாதாரண மானுடரான தந்தை, தாய், குரு, கணவன் ஆகியோரைத் தெய்வமாகக் கொண்டாலும் தெய்வம் இவர்கள் மூலம் அருளிவிடும் என்பது போலல்ல ஸத்யஸாயி விஷயம். சாதாரண மானுடரையே தெய்வமாகக் கொண்ட மகன், சீடன், அல்லது மனைவிக்கு அருள் கிட்டினாலும், அவர்கள் வணங்கும் மாதா–பிதாக்களும், ஆசாரியனும், பதியும் எந்தத் தெய்விக சக்தியும் பெறாமல் அவர்கள் உள்ளபடியே மானுடமாகத்தான் இருப்பர். இவர்களைப் போல் ஸத்ய ஸாயியின் மூலமாக மட்டும் தெய்வ அருள் பாயாமல், அவரே அதிசயிக்கத்தக்க திவ்ய சக்திகளைக் கொட்டுகிறாரன்றோ?

மகான்களில் பலருக்குங்கூடத் தாமே நேராக அருள் செய்யப் பேராற்றல் இராது. இவர்களிடம் பக்தர் பிரார்த்திக்க,

Koviloor Digital Library

இவர்கள் அதையே தமக்கு நெருக்கமான இறைவனிடம் தெரிவிக்க, இறைவன் அருள்புரிவான். இம் மஹான்களும், அருளியது தாமல்ல, ஆண்டவனே என்று பணிவுருவாகக் கூறுவர். கலப்பற்ற அத்வைத அவதாரமான ரமணர், தமக்கு வேருக பக்தர்களோ, அவர்களது முறையீடுகளோ இருந்ததாக எண்ணியதே இல்லை. எனவே பக்தர் பிரார்த்தனையைத் தாமே நேராகவோ, அல்லது இறைவனிடம் தெரிவித்தோ, ஈடேற்றுகிற எண்ணமே அவருக்கு எழுந்ததில்லை. இதை அவரே வெளிப்படக் கூறியுள்ளார். ஆனல் பக்தர்களோ, "நீங்கள் இப்படிச் சொன்னுலும், நாங்கள் உங்களிடம் பிரார்த்தித்துப் பிரத்தியட்சமாகப் பலன் பெறுகிருேமே!" என்பார்கள். அப்போதும் சத்யமூர்த்தியாக அவர் சொல்வார்: "அதனுல் நான்தான் அநுக்கிரஹம் செய்தேன் என்ருகிவிடுமா? எனக்கு விவகார உலகைப் பற்றிய திருஷ்டி இல்லாவிட்டாலும், இந்த நடைமுறைப் பிரபஞ்சத்தை நடத்திக் கொண்டிருக்கும் ஈச்வரன் என்ற ஒருவன் இருக்கவே செய்கிருன் அல்லவா? என்னை நம்பி நீங்கள் விடுக்கும் முறையீடுகளை அவனே கேட்டு, வேண்டியதைப் பூர்த்தி செய்கிருன். எனக்கு இதில் சம்பந்தமில்லை."

ஸத்ய ஸாயி விஷயமோ இப்படியெல்லாம் இல்லை. அவர் அநுக்கிரகம் செய்வது மட்டுமின்றித் தாமேதான் அதைச் செய்தது என்பதையும் ஐயம் திரிபற நிலைநாட்டி விடுகிருர். இப்படி அவர் புரிந்துவரும் கோடானுகோடி அருள்களுக்கு அதிகமாக வேறெந்தத் தெய்வமும் செய்ததாக நாம் அறியவில்லை.

பாபா தம்மை பகவானுகச் சொல்லிக்கொள்வது மட்டுமே நல்ல விதத்திலும், வேறு விதத்திலும் பிரசித்தி பெற்றிருக்கிறது. ஆனுல், தாம் மனித யாக்கையில் அவதரித்ததால் ஏற்றுள்ள "குறைபாடு"களைப் பற்றியும் அவர் கூறியுள்ள அற்புத வாசகங்கள் ஏனே இப்படிப் பரவவில்லை. பரிபூர்ண ஸாயியே செப்பும் குறைபாட்டு வசனங்களில் சில:

"விமானம் ஆகாயத்தில் பறப்பதாயினும், மக்களை ஏற்றிக் கொள்வதற்காக அதுவும் பூமியில் இறங்க வேண்டியிருக்கிறது. அப்போது ரன்—வேயில் அது பறக்கவில்லை. சக்கரங்களால்தான் பூமியில் நகர்கிறது. 'ஐயையோ! இதுவா ஆகாய விமானம்?' என்று பரிகசிப்பார்களா? உங்களிடை வந்து, உங்களை உயரே தூக்கிச் செல்லவே உங்கள் மானுட ரீதியிலான சக்கரங்களும் இந்த ஸாயி விமானத்துக்கு இருக்கிறது."

"ஸ்தூலத்தில் வெளியே பார்க்கும் இந்த ஸாயியில் வேண்டுமென்றே குறைபாடுகளும் சங்கற்பிக்கப்பட்டுள்ளன. ஏனெனில் நான் வந்திருப்பது அவரவரும் தம்முள்ளேயே உறையும் ஸாயியான ஆத்மாவை உணருமாறு செய்வதற்குத்தான். ஸ்தூலமாகத் தெரியும் ஸாயியிடமே நீங்கள் நிறைவான திருப்தி பெற்று விட்டீர்களாயின், ஆத்மாவை அநுபவிக்க முயலவேமாட்டீர்கள். குறையே இல்லாத நிறை உள்—ஸாயிதான் என்று நீங்கள் உணரவே வெளி ஸாயியில் சில குறைகளும் கற்பிக்கப்பட்டிருக்கின்றன."

Koviloor Digital Library

(இது அத்வைத ஞான மார்க்கத்தினருக்கே கூறப்பட்டது. பக்தியிலேயே திளைப்பவர்களுக்கோ அவ்வன்பின் சக்தியில் ஸாயி யிடம் குறைபாடே தெரியாது. எனவே அதைவிட்டு இன்னொன்றுக்குச் செல்ல வேண்டிய அவசியமும் அவர்களுக்கு இல்லை.)

(மேற்காணும் மேற்கோளின் இன்னொரு பாதி: ''உலக வாழ்க்கையில் வியாதி, துக்கம் முதலான குறைபாடுகள் உள்ளன. நான் வேண்டுமென்றே சங்கற்பித்துத்தான் இப்படி வைத்துள்ளேன். இல்லாவிடில் வெறும் லௌகிக வாழ்வே உங்களுக்கு நிறைவானதாகத் தோன்றிவிடும். அதனால், உண்மை நிறைவான ஆத்மிக வாழ்வுக்கு எவரும் முயலவே மாட்டார்கள்.'')

''ஞான சக்தியோடு மாயா சக்தியும் கலந்து வந்ததே இந்த ஸத்யஸாயி ஆகாரம் (சரீரம்)'' என்று அவர் கூறுவதுண்டு. மாயா சக்தி என்ற அஞ்ஞான சக்தியின் அங்கமே குறைபாடுகள்.

பாபாவே தம் குறைகளைச் சொல்லிக்கொள்வதால் நூலாசிரியன் அவற்றைக் குறிப்பிடுவதில் எவ்வித அபசார மிருப்பதாகவும் அடியார் எண்ண வேண்டாம். அவதாரமென்றாலே அதில் குறையிருப்பதும் ஒரு விதி என்றே தெரியவேண்டும்.

* * *

'சரி, இப்படி பாபா வேண்டுமென்றே சில குறைகளை வைத்துக் கொண்டிருக்கிறாரெனில், நாம் அவரது தேவையை மிகவும் விரும்பி வேண்டும்போது, இப் பிரார்த்தனையை அவர் ஏற்க முடியாதபடிக் குறைகள் குறுக்கே நின்று விட்டால்...?' என்ற பயங்கரமான சந்தேகம் எழுகிறது.

குறை ஸ்தூல ஸாயிக்குத்தான், ஸூக்ஷ்ம ஸாயிக்கு அல்லவே அல்ல. நம் பிரார்த்தனைகளைக் கேட்டு ஈடேற்றுவது குறையே இல்லாத அந்த ஸூக்ஷ்ம ஸாயிதான் என்பதைப் புரிந்துகொண்டால் பயங்கர சந்தேகம் ஸூரியனைக் கண்ட பனியாக மறையும். ஸூக்ஷ்ம ஸாயி என்பதுதான் பராசக்தியின் திவ்விய மகா காருண்யம். அந்த ஸூக்ஷ்ம தத்துவம் இந்த மண்ணுலகில் செயற்படவே ஸ்தூல ஸாயியான மானுடச் சட்டையை மாட்டிக்கொண்டிருக்கிறது. மானுடமானதால் இந்தச் சட்டையில் குறைபாடு உள்ளது. ஆயின் இக் குறைபாடு அதனுள் இலங்கும் கருணையைப் பாதிக்கவே பாதிக்காது — அக்கருணை தெய்விகமாதலால்.

ஸ்தூல ஸாயிக்குள் உள்ள ஸூக்ஷ்ம ஸாயிதான் உலகெங்கும் வியாபித்து அருள் புரிவது. ஆபத்திலும், தாபத்திலும், பாபத்திலும் நாம் கூப்பிட்ட குரலுக்கு அவர் ஓடிவருவதை எந்தக் குறைபாடும் தடை செய்ய முடியாது.

ஸ்தூல ஸாயிக்கும் ஸூக்ஷ்ம ஸாயிக்கும் உள்ள பேதத்துக்குச் சில விவரங்களைக் கண்டு தெளியலாம்:

Koviloor Digital Library

ஸ்தூல ஸாயிக்குப் பாலும், பால் சம்பந்தமுள்ள பணியாரங்களும் விருப்பமில்லை. சூக்ஷ்ம ஸாயியோ விருப்பு வெறுப்பு அற்றவர். எனவே பக்தர் பலர் வீட்டில் அவருக்கு நிவேதிக்கும் பாலும், பால் பட்சணங்களும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே மறைகின்றன. அதாவது சூக்ஷ்ம ஸாயி அவற்றை உண்கிறார்.

முன்பெல்லாம் பஜனை முடிவில் பாடப்பட்ட ''பாவனபுருஷ'' என்ற பாடலை ஸ்தூல ஸாயி பரிகசித்து, அன்றிலிருந்து தம்முன் அப்பாடல் பாடப்படுவதை நிறுத்திவிட்டார். ஆனால், இதற்குப் பின்னும் பலகாலம் அப்பாடல் பாடப்பட்ட ஒரு வீட்டு பஜனையில், இந்தப் பாட்டைப் பாடுகிறபோதே, பாபா படத்துக்கு அணிவித்துள்ள மலர்ச் சரம் குலுங்கிக் குலுங்கிப் பாடலுக் கேற்பத் தாளம் போட்டு ஆமோதித்திருக்கிறது. இதுவும் விருப்பு—வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட சூக்ஷ்மஸாயியின் மகிமை தானே?

'ஓ பகவான்' என்று தொடங்கும் பாடல் ஒரே பிரலாபமாக இருக்கிறது எனக் கூறி அதை நிறுத்திவிட்டவர் ஸ்தூல ஸாயி. ஆனால் இவரே சூக்ஷ்மத்தில் ஸ்தூலதேகம் கொண்டு(!) அதி விசித்திரமாக மஞ்சேரியில் ராம் மோஹன் ராவின் வீட்டுக்குச் சென்றபோது, தாமே இந்த ''ஓ பகவான்'' பாடலைக் கானம் செய்திருக்கிறார்!

ஸ்தூல ஸாயி அற்ப ஆகாரமே கொள்பவர். ஆனால் சூக்ஷ்ம ஸாயி எத்தனையெத்தனை வீடுகளில் உண்கிறார், காப்பி பருகுகிறார், தாம்பூலம் போடுகிறார்? பல வீடுகளில் தினந்தோறும் அவருக்குக் காப்பி, டிபன், சாப்பாடு முதலியன வைக்கிறார்கள் — அவர் அவற்றை அந்தர்தானமாக்கி விடுகிறார்.

இதுவரையில் ஸ்தூல ஸாயி தமக்குத் தமிழில் எழுதத் தெரிந்ததாகக் காட்டிக்கொண்டதில்லை. தெலுங்கு படிக்கத் தெரியாமல், ஆனால் அம்மொழியைப் பேச மட்டும் அறிந்த தமிழர்களுக்கு ஸ்வாமி கடிதம் எழுதுகையில் தெலுங்கு வாசகத்தையே (ரோமன் எனப்படும்) ஆங்கில லிபியில்தான் எழுதியிருக்கிறாரே தவிர, தமிழ் லிபியில் எழுதியதில்லை. ஆனால் சூக்ஷ்ம ஸாயி தமிழ் மொழியும் எழுதுவார். எத்தனையோ பக்தர் வீட்டில் ''ஸ்ரீராமஜயம்'', ''ஸாயிராம்'' முதலான வாசகங்கள் தமிழ் எழுத்துக்களிலேயே விபூதியால் உருவாகியிருக்கின்றன.

ஸ்தூல ஸாயி ரகுவம்சம், உபநிஷதம் முதலிய மேற்கோள்களிலும் தப்புச் செய்ய, சூக்ஷ்ம ஸாயியோ மிக மிகச் சிக்கலான அணு விஞ்ஞானம், அஷ்டாத்யாயி முதலியவற்றிலும் ஞானம் தருவதை முன்பே பார்த்தோம்.

ஸ்தூல ஸாயி பொறுமை இழந்து, சுள்ளெனப் பேசிச் சுரீலென எரிப்பதைப் பற்றி அணுக்கத் தொண்டர் யாவரும் சொல்கிறார்கள். ஆனால் சூக்ஷ்ம ஸாயியிடம் மதுர பரிபூர்ணத்தை யன்றி வேறெதுவும் காண முடியாது.

ஸ்தூல ஸாயி காலத்தாலும், இடத்தாலும் கட்டுப்பட்டிருப்பதாலேயே பலரைப் புறக்கணிப்பது போல் நடக்கவேண்டியுள்ளது. ஸூக்ஷ்ம ஸாயியோ கால, தேச, வர்த்தமானங்களுக்கெல்லாம் அதீதரானதால் எல்லாக் குழந்தைகளையும் கொஞ்சிச் சீராட்டுகிறாள்.

ஒரு தாய் நாடகத்தில் தன் நிஜமான குழந்தையையே நாடகக் குழந்தையாகவும் வைத்துக்கொண்டு நடிக்கிறாள். அவள் நாடகத்தில் அக் குழந்தைக்குச் செய்யவேண்டிய சிலவற்றை மறக்கலாம். நாடகத் தாய்க்குரிய வசனங்களில் அவள் தப்பிதம் செய்யலாம். ஆனால் அவளது மெய்யான தாய்த்தன்மையில் குறைபாடு இருக்குமா? மேடையிலே மகவுக்கு ஓர் ஆபத்து வந்தால் அந்தத் தாய்த்தன்மை மீறி வந்து அவள் அன்பு செய்வதற்கு எங்கேனும் தவறுவாளா? மானுட வேஷ ஸாயம்மாவுக்குக் குறைகள் இருந்தாலும் அவள் உள் இருக்கும் ஸ்ரீமாதாவுக்குக் குறைபாடே கிடையாது. ஒரு கனியின் வெளிப்பகுதியில் சிறிது புளிப்பும், கடுப்பும் இருந்தாலுங்கூட உள்ளுக்குள் அது மதுரமயமாகவே இருப்பது போல் வெளி ஸாயியிடம் சில குறைகள் தெரிந்தாலும் உள் ஸாயி பூரணமே யன்றி வேறில்லை. நம்மைச் சூழ்ந்து காப்பது அவளேயாதலால், இந்தப் பணியில் அவள் பொய்த்துவிடுவாளா என்று அஞ்சவே வேண்டாம்.

பக்தர்களான நாம் அவளுடைய பச்சிளங்குழந்தைகள். ஆனால் பச்சைக்குழந்தை நிர்ப்பயமாக, நிஸ்ஸந்தேகமாக அம்மாவிடம் பால் குடிப்பது போல் நாம் செய்ய மாட்டாமல் நம் அறிவுவாதம் அவ்வப்போது குறுக்கே நிற்கிறது— குறிப்பாக மாற்றார் எதையேனும் கிளப்பிவிடும் போது. ''அம்மா பாலுக்குப் பதில் விஷத்தைக் கொடுக்கிறாளா?'' (ஸ்வாமி காட்டும் அற்புதம் ஆத்மிகத்துக்கே உலை வைக்கும் நச்சுதானோ?); அல்லது ''அவள் பால் பவுடரைக் கரைத்துக் கொடுத்துத்தான் பாலூட்டுவதாக மயக்குகிறாளோ?'' (ஸ்வாமி தரும் பரிசுகள் சிருஷ்டியன்றி, கடத்தல்தானோ?); அல்லது, ''இவள் அம்மாவே இல்லையோ?'' (ஸ்வாமி அன்புக் கடவுளா அல்லவோ?) என்றெல்லாம்கூட உலைப்புறுகிறோம். பக்தர்களை இப்படி உலைவதும் அவர் திட்டத்தின் அங்கமாயிருக்கலாம். அதில் இன்னோர் அங்கமாக அவர்களில் சிலரையேனும் தெளிவு செய்யவே இவ்விளக்கங்களை எழுத வைத்திருக்கிறாரோ என்னவோ? பூரண சரணாகதி செய்யும் வரையில் எவ்வோருக்கும் மனச் சுதந்திரம் சிறிது உண்டு என்கிறாரல்லவா? இந்நிலையில் அது எண்ணத்தை எண்ணுவது போலவே, பிறரது விளக்கத்தை ஏற்றுத் திருத்துவதுமுண்டு. குழம்பும் பக்தர் சிலர் இப்படித் தெளியவே இவ்வளவும் சொல்கிறோம்.

ஸாயி விஷயத்தில்தான் என்றில்லை. எந்த அவதாரத்திலுமே மானுடச் சட்டையில் உள்ள வியக்தியில் குறைகள் உண்டு; அதற்கு ஸாரமான ஸூக்ஷ்ம வியக்தியே அருளிலும் ஆற்றலிலும் பூர்ணமானது. 'பஞ்சவடியில் ராவணன் தூக்கிப்போன போது ஸீதை அலறியதைக் கேட்கக் காத தூரத்திலேயே உள்ள ராமனுக்குத் திறனில்லை; அவளை இன்று பக்தர்கள் கூப்பிட்டால்

எப்படி ரக்ஷிக்க வருவான்?' என்று பாதிரிமார்கள் கேலிப் பிரசாரம் செய்தபோது நம் காஞ்சிப் பெரியவர்கள் மானுட நாடகமாடிய ஸ்தூல ராமனுக்கும், ஸதா தெய்விகமாயுள்ள ஸூக்ஷ்ம ராமனுக்கும் உள்ள மாறுபாட்டைச் சுட்டிக்காட்டியே எதிர் வாதத்தை நிராகரித்தார். 'சுய' வாழ்க்கையில் மானுடமாகவே இருக்கவேண்டும் என்று ஸ்ரீராமன் நிர்மானித்து, ஸீதை எங்கிருக்கிறாள் என்றறியாமல் தேடினாலும், பக்தர் விஷயத்தில் பரமனாக இருந்து ஜடாயு, சபரி போன்றோருக்குப் பரம பதத்தையே அல்லவா தந்தார்?

* * *

வேறு குறையிருந்தாலும், நமக்கு அவசியமான ரட்சணையில் பாபா தெய்விகத்தின் நிறைவே என்பதை ஆசிரியனுக்கு அன்றன்றும் நடைமுறையில் நிரூபித்து வந்த அருள் வள்ளல், அதோடு கூடத் தமது பரம மர்மமான அவதார ரகசியத்தை இவனுக்கு மேலும் மடலவிழ்த்துக் காட்டி இவனை இன்னொரு படியும் மேலேற்றினார். இந்த நிலையில் வாஸ்தவத்தில் இவருக்குக் குறையில்லாத அம்சங்களிலும், வேண்டுமென்றே குறையிருப்பதாக நடிப்பதும் உண்டு என்பது புலனாயிற்று. இது 'தன் தோல்விகளையும் கண்ணன் முன்னரே திட்டமிட்டுக் கொண்டான்' என்றோரே, அதன் விரிவும் விளக்கமுமே யாகும்.

இதற்கு 'ஒக சின்ன உதாஹரணமு': சில ஆண்டுகளுக்கு முன் அயல்நாட்டார் உட்பட்ட சில பக்தர்களோடு பாபா ஒயிட்ஃபீல்டிலிருந்து ஜோக் நீர்விழ்ச்சிக்கு உல்லாஸப் பயணம் புறப்பட்டார். வழியில் கார் மக்கார் செய்துவிட்டது. எத்தனையோ அடியாருக்கு அதிசயக் கார் மெகானிக்காக அநுக்கிரகம் செய்துள்ள பாபா இன்று ஏதுமே செய்யவில்லை. அருவிக்குப் போகமுடியாமல் அன்பர்களோடு ஒயிட்ஃபீல்டுக்கே திரும்பி விட்டார்.

பாபாவும் சாதாரண மனிதர் போல், தாம் போட்ட பிரயாணத் திட்டம் கார் கோளாற்றினால் முறிந்து திரும்பும்படி ஆயிற்றே என்று உடன் வந்தோரில் சிலருக்கு மிகவும் உறுத்தலாக இருந்ததாம்.

ஒயிட்ஃபீல்ட் திரும்பிய பின்தான் இவர்களுக்குத் தெரிந்தது: பிரயாணம் தொடங்குமுன்பே அது நிறைவேறப் போவதுமில்லை என்று பாபாவுக்குத் தெரியும் என்ற அதிசய உண்மை. புறப்படு முன்பே, பயணக் கோஷ்டியில் சேர்க்காமல் ஒயிட்ஃபீல்டில் விட்டு வந்த பக்தர்களிடம் அவர், "Jog falls — Joke false" என்று ஹாஸ்யம் செய்தாராம். அதாவது, ஜோக் அருவிக்குப் போவது வெறும் 'ஜோக்'காக, பொய்யாகப் போகிறதெனக் கூறியிருக்கிறார்!

இதைப் பயணத்தில் சேராதவர்கள், பயணம் புறப்பட்டு ஏமாந்து திரும்பியவர்களிடம் சொன்னபோதுதான் இவர்கள்

Koviloor Digital Library

தெளிவடைந்தனர். தமது பூர்வ பாக்கியில் சிறிதைத் தீர்க்கவே இப்படி உடலையும் உள்ளத்தையும் அலைக்கழிக்க வைத்திருக்கிறார் எனப் புரிந்துகொண்டனர்.

புஷ்பகிரிச் "சறுக்கலி"லும் இப்படி இவரது திட்டமே இருந்திருக்கக் கூடும். பணத்தை இவர் தூக்கத்தில் கோட்டை விட்டது சறுக்கல் எனில், பிறகு ஒரு தொட்டியில் இவருக்கென்றே நூறு வைத்திருந்ததை என் சொல்ல? அது எங்கிருந்து முளைத்தது? ஷிர்டி தாத்தா வைத்தாரா? அல்லது இவரேதான் பறிகொடுப்பதாகவும், பிறகு பிரச்னை தீர்வதாகவும் முன்கூட்டிச் சங்கற்பித்து அதற்கேற்ப நடித்தாரா? சூதுபோன்ற ஆட்டம் ஆடியது தவறு எனில், அதில் ஏன் இவரே திரும்பத் திரும்பக் கெலிக்க வேண்டும்? அந்த விளையாட்டை நடத்தியவன் பலரை ஏமாற்றியதற்குத் தண்டனையாகத் தானே ஏமாறவேண்டும் என்ற முன்கூட்டிய சங்கற்பத்திலேயே இருக்கலாமன்றோ?

குறையையே சொல்லிக் கொண்டிருப்பவர்கள் நிறைகளை ஏன் காணக்கூடாது? இத்தனை நிறைவுகள் கொண்டவர் குறைவு காட்டுவதற்கும் காரணமிருக்கலாம் என்ற நல்லறிவு ஏன் பெறக் கூடாது?

மகா புத்திசாலியாக இருக்கும் மாணவன் மண்டுபோல் வேஷம் போட்டு, கேள்விகளுக்குத் தப்பாகப் பதில் சொல்வது வேண்டுமாயின் சாத்தியம். ஆனால் மண்டுவாக உள்ள மாணவன் புத்திசாலியைப் போல நடித்து நூற்றுக்கு நூறு மார்க் வாங்குவது எங்ஙனம் சாத்தியமா? பாபா தவறியதாக ஆங்காங்கு தோன்றலாம். ஆனால் இதைவிடத் திட்டவட்டமாக அவரது தெய்விகமே அல்லவா அதிகம் செயற்படுகிறது? தெய்வமாக இருந்தும் எக்காரணம் பற்றியோ அவர் இத் தவறுகளை வேண்டுமாயின் செய்யக் கூடலாமே ஒழிய, தவறும் ஹேதுவுள்ள ஒரு மானுடர் அவர் புரியும் தெய்விக அற்புதங்களை ஒருகாலும் செய்ய முடியாதே!

பாபா சொன்னது தப்பாகப்போனதாக நினைப்பதே பல சமயங்களில் தப்பாகிறது; வியாதி முதலிய பிரச்னைகள் தீராது என்று தமக்கு நன்கு தெரிந்த கேஸ்களிலும் அவர் தீரும் எனக் கூறுவதுண்டு—என்பன போன்ற விஷயங்களை "ஸாயி அருளில் சாயும் துயரம்" என்ற முப்பத்திரண்டாம் அத்தியாயத்தில் பார்த்திருக்கிறோம். இவையும் அவரது குறைபாடுகளில் பல வாஸ்தவத்தில் குறையே அல்ல எனக் காட்டும்.

மானுடமான குறையுள்ளதாக வெளித் தோன்றும்போதே, உள்ளூறக் குறையற்ற நிறைவாக இருப்பது அவதாரத்தின் இயல்பு.

பூர்ணவதாரனான கண்ணன் வாழ்க்கையைப் பாருங்கள்.

கண்ணன் சாதாரண மானுடன் போல் துவாரகையில் வாழ்ந்ததைப் பார்த்த நாரதர், தன் உள்மகிமையையே நாரணன்

Koviloor Digital Library

மறந்துவிட்டானு எனத் திகைத்தார். பிற்பாடு பகவான் விளக்கினுன்: ''நாரதா! நான் மனிதர்களுக்கு தர்மத்தை நடத்திக்காட்ட வந்திருக்கிறேன். அதில் ஓர் அங்கமாக மனிதர்களின் சாமானிய இயல்புப்படியும் வாழ்கிறேன். இப்படிக் குறுக்கிக் கொள்வதிலேயே சந்தோஷமும் காண்கிறேன். இதைப் பார்த்து நான் என் நாராயணத்வத்தை மறந்துவிட்டதாக நீ துக்கப்பட வேண்டாம்!''

நாராயணத்வத்தை உணர்ந்திருந்தபோதே குறைபாட்டிலும் மகிழ்ந்திருக்கிருன்! அது மட்டுமில்லை, தானே குறையிருப்பதாக நடித்துக் குழப்புவதாகவும் கீதையில் சொல்கிருன். ''நான் என்னையே யோக மாயையால் மூடிக்கொண்டு அனைவருக்கும் என் உண்மை நிலை விளங்காதபடி இருக்கிறேன்'' என்கிருன் — யோக மாயை மூட்டம்தான் மானுடமான குறைபாடுகள்.

இது நியாயமா? குறையிருந்தால் நாம் அவ்வப்போது நம்பிக்கை தளர்ந்து குழம்புவோமே! இப்படிச் செய்யலாமா? செய்யலாம் தான். பாபாவே சொல்கிருர்.

கொஞ்சம் அலசலாம், வாருங்கள்.

* * *

தம் குறைபாடுகளைச் சொல்வது போலவே, பாபா தாமே குழப்புவதாகவும் சொல்வதுண்டு. ''நான் ஞான சக்தி, பிரேம சக்தி இவற்ருேடு மாயா சக்தியும் ஆவேன்'' என்கிருர். குழப்புவதுதான் மாயையின் காரியம். இதை ''க்ஷோபணம்'' என்பர். பராசக்தி வடிவான ஸ்ரீசக்ரத்தில் ஒரு சுற்றுக்கு 'ஸர்வ ஸம்க்ஷோபணம்' என்றே பெயர் — 'எல்லாவற்றையும் நன்ருகக் குழப்புவது'' என்று பொருள். விஷ்ணு ஸஹஸ்ர நாமத்திலும் ''க்ஷோபணன்'' என்றே ஒரு பெயர் காண்கிறது. நம் ஸ்வாமி ஸஹஸ்ரநாமம் ஒன்றும் ''க்ஷோபணுய நம:'' என்றே முடிகிறது.

தெளிந்த தெளிவாகத் தெளிவிப்பதுதான் இறுதியில் பகவானின் காரியம். ஆனுல் அதை முன்னிட்டே பூர்வாங்கத்தில் குழப்பவும் செய்கிருன். இதற்குப் பல காரணங்கள் சொல்லலாம். ஜீவர்கள் யாவரும் ஏராளக் கர்ம மூட்டை கொண்டவர்தாம். எனவே பகவானைச் சேரும் பாக்கியத்துக்கு நாம் தகுதி பெறவேயில்லை. ஆயினும் பகவான் கருணையால் அவதரித்து விடுகிருன். அருகதை பெருத நம்மையும் அருகே அழைத்துக் கொள்கிருன். இப்போது அவனது நீதி உணர்வு நுந்துகிறது. எனவே நம் தகுதியின்மை காரணமாகச் சற்று ஒதுக்க நினைக்கிருன். அதனுல்தான் தன்னைப் பற்றியே குறைவாகவும் எண்ணத் தக்க விதத்தில் எதையேனும் செய்து குழப்புகிருன்.

நாம் எத்தனை குழப்பங்கள் விளைவிக்கிருேம்? நம்மைத் தற்காத்துக் கொள்வதற்காக நம்மைப் பற்றி எத்தனை பொய்களை உண்டாக்குகிருேம்? இதற்குத் தண்டனையாக அவதாரர்கள்

Koviloor Digital Library

நம்மைப் பொய்யாகக் குறைத்துக் காட்டி நம்மைக் குழப்புவது நியாயந்தானே?

'நாகபூஜை செய்வார்கள்; ஆனால் நிஜ நாகமே வந்தால் அடிப்பார்கள். இப்படியேதான் ஆஸ்திகர்கள் பூஜிக்கும் தெய்வமே நரனாக வந்திருக்கும்போது, என்னை அவர்களில் சிலர் தாக்குகிறார்கள்' என்று ஸ்வாமி சொன்னதை 42–ம் அத்தியாயத்தில் குறிப்பிட்டு 'அப்படியாயின் இவரிடம் நாகத்தின் விஷ அம்சம் உள்ளதா?' என்ற கேள்வியை எழுப்பினோம் அல்லவா? விஷ அம்சம் என்று சொல்ல முடியாவிடினும் இவரிடம் விஷம அம்சமாக ஒன்று உள்ளது. அதுதான் இந்த 'க்ஷேபணம்'. நம்முடைய பழைய கர்ம விஷத்தை, விஷமத்தை, விஷய வாசனைகளைத் தீர்த்து வைக்கவே அவர் தம்மில் குறைபாடுகளைக் காட்டி அதனால் குழப்பி வைக்கிறார். விஷமமா, நியாகமா? பூரண வஸ்து குறைபாடுள்ள நம் கர்மக் குறை தீர்க்கத் தானே குறைவு பட்டதாகக் காட்டிக்கொள்கிறதே, இது விஷமமா, தியாகமா?

கர்மாவுக்காக இப்படி அவ்வப்போது க்ஷேபணம் செய்தாலும், கருணையால் நம்மை இதற்கதிகமாக ஆட்கொண்டு, தெளிவு செய்து சோபனம் செய்தும் விடுகிறார்.

இதோதி சாஸ்திரங்களிலும், புராணங்களிலும் சில மகா பாவிகள் ஓரளவுக்கேனும் பாபத்துக்காக அநுபவித்தாக வேண்டும் என்பதன் பொருட்டே பகவான் அவர்கள் தன்னை நெருங்க முடியாதபடி மாய ஆட்டங்கள் போடுகிறான் என்று சொல்லியிருக்கிறது.

நம் ஸ்வாமியின் எதிர்ப்பாளர் யாவரையும் பாவிகள் என்று இந் நூலாசிரியன் நினைக்கவேயில்லை. ஸாயி பக்தர்கள் என்று தம்மை நினைத்துக்கொண்டு பஜனை, பூஜை முதலியன செய்வோரைவிடவும் கூட நல்லவர்களான பலர் அவருக்கு மாற்றாராக இருப்பதை இவன் அறிவான். ஆனால் நமக்குத் தெரியாத பூர்வ கர்மா என்று ஒன்று இருக்கிறதே. இன்றைய நல்லவர்களும் முற்பிறப்புக்களில் செய்த தவறுகளே அவர்கள் இப்போது ஸ்வாமியை ஏற்க முடியாததற்குக் காரணமாய் இருக்கலாம். அல்லது இவர்களில் சிலர் தற்போது உபாஸிக்கும் இஷ்ட தேவதையிடமும், ஆச்ரயமாகக்கொண்ட ஆசாரியரிடமுமே இவர்களுக்கு ஒருமுகமான ஈடுபாடு இருக்கும் பொருட்டே ஸாயி ரூபத்தை அவர்கள் நெருங்காதபடி அவரே செய்திருக்கலாம்.

பக்தரைப் பொறுத்த மட்டில் எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு காரணம் சொல்லலாம். தாய்க் கங்காரு குட்டியை வயிற்றுப் பையிலேயே வைத்துக் காப்பது போல் நம்மை நமது பங்காரு பாபா ரக்ஷிப்பதை நாம் நன்குணர்ந்திருக்கிறோம். இத்தனை செய்யும் ஸ்வாமிக்கு நம்மைச் சோதிக்கவும் பூரண உரிமை உண்டு. அதனால்தான் அவர், ''நான் எத்தனை குறைபாடுள்ளது போல் காட்டினாலும் இவர்கள் அதையெல்லாம் அடியோடு காணாமல்,

Koviloor Digital Library

கோபர்களின் பூரணப் பிரேமை நயனத்தால் மட்டுமே என்னைப் பார்க்கப் பக்குவப்பட்டு விட்டார்களா?'' என்று பரீட்சிக்கு முகமாகவே க்ஷாபணம் செய்கிறாரோ என்னவோ? மூளையையும் அதன் கேள்விகளையும் நாம் அடியே தள்ளிவிட்டு இதயமொன்றாலேயே அவரை அநுபவிக்கத் தலைப்பட்டால் ஏது குழப்பம்?

இதைத்தான் அவரே அமெரிக்க பக்தரிடம், ''நான் நிச்சயமில்லாதது போலவும் நடந்து காட்டுவேன். அந்த நிச்சயமின்மையையும் நீ நேசி (Love my *uncertainty*)'' என்ற அமர வாசகத்தில் கூறியிருக்கிறார்!

இந்நிலையில் நாம் குழம்பாமல் தெளிந்திருப்போம் என்பது மட்டுமில்லை. எதிர்ப் பிரசாரக்காரர்களுக்கு ஸ்வாமியைப் பற்றி எடுத்துச் சொல்லித் தெளிவு தர முயலும் சாகஸத்திலும் இறங்க மாட்டோம். ஏனெனில் அவர்களைக் குழப்புவதும் தெளிவிப்பதும் ஸ்வாமியின் திட்டமே யன்றோ? இன்று அவர்கள் கூறும் சில அபவாதங்களுக்கு முகாந்தரம் இருப்பதுபோல் ஸ்வாமியே நடித்திருக்கலாம். இவற்றை நாம் எப்படி மறுதலிக்க முடியும்? ஸ்வாமியின் நடக்கை பற்றியே அவதூறு சொல்லும் மகாமட்டமான விஷயங்களை மட்டுமே நாம் பொய்யென்று ஆட்சேபிக்கலாமே ஒழிய, அவரது வேறு சில சிறிய தப்பிதங்களாகவும், தோல்விகளாகவும் எதிராளிகளுக்குத் தோன்றக்கூடிய விஷயங்களைப் பொய்யென்று சண்டை போடுவதற்கே யில்லை. இவ்விஷயத்தில் இந்நூலாசிரியனுக்கு அழுத்தமான சொந்த அநுபவம் உண்டு. இவனிடமும் இவனது நெருங்கிய உறவினரிடமும் ஸ்வாமி தப்பாகவே சில விஷயங்கள் சொன்னதுண்டு எனக் கண்டோமே! பிற்பாடுதான் நம் கர்மாவுக்காகக் கொஞ்சம் உளைச்சல்பட வேண்டும் என்றே அவர் செய்த க்ஷாபணம் இது என்று தெற்றென மனத்தில் தைத்திருக்கிறது. இதுபோன்ற தப்புக்களைப் பொறுமை போதாத சிலர் உடனே பத்திரிகைகளுக்கு எழுதினால், இவர்கள் எழுதுவதெல்லாம் பொய் என்று நாம் சண்டைக்குப் போகவேண்டிய அவசியமில்லை.

ஸ்வாமியின் 'வீர' பக்தர்களுக்கு மீண்டும் சொல்கிறோம்: ஸ்வாமியின் நடக்கையிலேயே பிசகு உள்ளது; கள்ளப் பணம் வைத்திருக்கிறார்; கள்ள நோட்டுப் போடுகிறார்; வெறும் மாஜிக் தான் செய்கிறார்; பிறர் பொருளைக் கடத்தி சிருஷ்டி என்கிறார்; ஸித்தராக மட்டுமே இருந்துகொண்டு அவதாரமெனப் புரட்டு செய்கிறார்— என்பன போன்ற பெரிய குற்றச்சாட்டுக்கள் அடியோடு பொய்தாம். ஆனால் தம்மை விலக்கத்தக்க சில முகாந்தரங்களையும் அவரே லீலையாக க்ஷாபணத்தால் செய்கிறாராதலால், எல்லாக் குற்றச்சாட்டுமே பொய்யுரை என்று நாம் ஆட்சேபிப்பதற்கில்லை.

''பொய்யா, உன்னைப் புறம் பல பேசுவ
புத்தகத்துக்குள கேட்டேன்''

என்கிறார் ஆழ்வார் பொய்யுறை கண்ணனை நோக்கி. அதாவது, அவனைப் பற்றிப் புத்தகமாக எழுதும் அளவுக்கு அபவாதங்களைக்

Koviloor Digital Library

கேட்டாராம். அவன் பொய்யனா? இல்லை; மெய்யிலும் மெய்யன். சத்தியன். ஸத்ய நாராயணன். ஆனாலும் தன்னைக் குற்றம் சொல்வதற்கு முகாந்தரம் அளிக்கும் விதத்தில் பொய்யாகத் தன்னைக் காட்டிக்கொண்டு க்ஷோபனைச் செய்தான். கண்ணனைவிட நம் ஸத்ய ஸ்வாமி அபவாதத்துக்கு ஆஸ்பதமான காரியங்களைச் செய்வதில்லைதான். இருந்தாலும் இது கலி முற்றிய காலமாதலால் இவரைப் பற்றியும் ''புத்தகத்துக்குள்''— தொடர் கட்டுரைகள் எழுதுமளவுக்கு—அபவாதங்கள் எழும்பியிருக்கின்றன. இதற்கு அநுகூலமாக இவரும் சற்று க்ஷோபனை கைங்கர்யம் புரியத்தான் செய்கிறார்.

ஸ்வாமியின் பரம நிர்மல நடக்கை பற்றி பக்தரான நமக்கு லவலேசங்கூட ஐயுறவில்லை என்பது வாஸ்தவந்தான். ஆனாலும் அவர் ஒரு காலை முட்டிக் கருகே சற்று 'ஒடித்து' நின்று, வாயில் கோணல் சிரிப்போடு, ஒரு கண்ணைச் சற்று இடுக்கிய மாதிரி நிற்கும் தோற்றத்தில் புகைப்படம் பிரசுரித்து ஓர் எதிர்ப்பாளர், ''இது சாமியாரின் தோற்றமா? மைனரின் தோற்றமா?'' என்று தலைப்புக் கொடுப்பதைப் பார்த்தால் நம்மால் பெருமூச்சு விடாதிருக்க முடியாது. ஆம், அது ஃபோட்டோ தந்திரம் அல்ல. வாஸ்தவமாகவே பாபா சில சமயம் ஒரு கண்ணை இடுக்கி, கோணலாகச் சிரித்து, காலை ஒடித்து நிற்பதுண்டுதான். நேரில் அவரை இக்கோலத்தில் பார்க்கும் பக்தர் அதில் ஸ்வாமிஜி கருத்து உதவாத தோஷம் எதுவும் தெரிவதில்லைதான். ஆனால் ஓர் எதிர்ப்பாளர் இதே கோலத்தைப் பிரசுரித்து, 'மைனர்' பட்டம் சூட்டும்போது, ''ஆம், பக்திக் கண் இல்லாதவருக்கு வாஸ்தவமாகவே நீ மைனராகத் தோன்றவும் இடம் உண்டாக்கித் தான் இருக்கிறாய் அப்பா'' என்றே தோன்றுகிறது.

நல்லவர்களான சிலருக்கே மெய்யாலும் பாபாவின் தோற்றம் அருவருப்பாகத் தோன்றுகிறது. நாஸ்திகர் என்றோ கெட்டவர் என்றோ ஒருகாலும் கூறமுடியாத நண்பர் ஒருவர் பாபாவின் தோற்றத்தை ''அப்னாக்ஷியஸ்'' என்றே சொல்லித் தோளைக் குலுக்கியிருக்கிறார். சிறந்த பக்தியில் ஊறிய ஒரு மாதர், 'புட்டபர்த்தி பாபாவா? அவரை நினைத்தாலே பயமாயிருக்கே!' என்கிறார். 'நானிருக்கப் பயமேன்?' என்று அவர் சொல்கிறார் எனில், இந்த அம்மாளோ, 'நீங்கள் இருப்பதே தான் பயம் தருகிறது' என்கிறார்! நமக்கு பிரேமையின் மதுரத் திரட்டாகத் திகழும் அபய மூர்த்தியே இப்படிச் சிலரை அஞ்ச வைக்கிறார். ஆரம்ப அத்தியாயமொன்றில் ஸ்வாமி அநேகப் புகைப்படங்களில் இன்னாத தோற்றத்திலேயே காண்கிறார் எனக் கூறினேனல்லவா? இது அவரே திட்டமிட்டுச் செய்யும் குழப்பல் திருப்பணியின் ஓர் அங்கமாகவே இருக்கக் கூடும். இப்படி எல்லாம் செய்து சிலரை விலக்குவதும் அவரது உத்தேசமே என்று பக்தரான நாம் தெளிந்தாலே, இப்போது நம்மில் பலர் ஸ்வாமியின் எதிர்ப்பாளரையே ஓயாமல் நினைத்து, மனம் குமுறி, ஆத்திரப்பட்டு, சொற்போர் செய்து நமக்கு நாமே கரி பூசிக் கொள்வதிலிருந்து விடுபட முடியும்.

Koviloor Digital Library

மாற்றார் அறிவு விளக்கமோ, அநுபவமோ பெற்று ஸ்வாமியை ஸ்வாமியாக உணரும் வரையில், தங்களது அவநம்பிக்கைக்கே சத்தியமாக ஒழுகவேண்டும்; உண்மை உறுதியில்லாதபோது அவரைக் கடவுளாகக் கொள்வதும் தவறுதான் என்று அவரே பம்பாயைச் சேர்ந்த பி.பி. கோம்ப்ரபைல் என்பவரிடம் கூறியிருக்கிறார். "அவர் கடவுளாக இருந்தால் என் அநுபவத்தில் அப்படிக் காட்டி அவரை நம்புமாறு செய்யட்டுமே!" என்ற எண்ணத்துடன் கோம்ப்ரபைல் புட்டபர்த்திக்குச் சென்றார். அவர் அன்றுவரை அறிந்த அளவில் பாபாவைக் கடவுளாகக் கொண்டு நம்ப முடியவில்லை. அவர் கடவுளல்ல என்ற கருத்துத் தான் அவருக்கு இருந்தது. ஆயினும் வீம்புச் சவாலாக இன்றி, திறந்த மனத்தோடு மேற்கண்டவாறு எண்ணினார். மெய்யாலுமே பாபா தெய்விகத்தைக் காட்டினால் அதை ஏற்க விரும்பினார். மனச் சுத்தத்தோடு, தம்மை பாபா நம்ப வைக்கும் வரை அவர் கடவுள் அல்ல என்றே நம்ப எண்ணினார். பாபா இவரிடம் வந்து, "Your belief is not wrong; *keep it up*" என்றார். ["உன் நம்பிக்கை (அதாவது பாபாவிடம் அவநம்பிக்கை) தப்பானதல்ல. அதையே விடாமல் பிடித்துக்கொண்டிரு."]

ஸ்வாமி தவிர யார் இப்படிச் சொல்ல முடியும்? அவரவரளவில் உள்ளத்துக் கள்ளமின்றி அபிப்பிராயங்களைக் கடைப் பிடிப்பதையே உகந்தருளும் சத்ய தர்மன்!

பிற்பாடு கோம்ப்ரபைல் அவநம்பிக்கையை விட்டு விட்டு, ஸ்வாமியையே விடாமல் பிடித்துக் கொள்ளுமாறு செய்தார், தம் இறைமையை அவருக்கு நன்கு உணர்த்துவித்து.

இந்த நபருக்குச் சில காலம் மட்டுமே மாற்றாராக இருக்கப் 'பொறி' இருந்திருக்கிறது. வேறு சிலருக்கோ அது நீண்ட காலம் நீடிக்கிறது. உரிய காலத்தில் ஸ்வாமியே விழிப்புத் தருகிறார். ஆனால் பொய்த்தூக்கம் போடுபவர்கள் என்றுமே மாற்றாராக இருக்கவேண்டியதுதான்! அவர்களை விழிப்புறச் செய்ய ஸ்வாமி முயலுவதே இல்லை போலத்தான் இருக்கிறது! ஸ்வாமியே முயலாத விஷயத்தில் நாம் முனைந்து, துவேஷத்தால் நம்மையே ஏன் களங்கப்படுத்திக் கொள்ள வேண்டும்?

ஆக, அவரே சில காரணங்களை முன்னிட்டுக் குழப்புவதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

* * *

இவற்றில், ஆராய்ந்தால் குழப்பம் நீங்கித் தெளிவு ஏற்படக்கூடிய ஆக்ஷேபணைகளும் உண்டு.

முதற் பெரும் குழப்பல் அநேக ஸித்தர்கள் செய்வதை இவரும் செய்து, இவர் ஒரு மஹா ஸித்தர்தாமோ என்றெண்ணச் செய்வது. சங்கற்ப மாத்திரத்தில் அற்புதங்களை இயற்கையாகச் செய்ய வல்லவர் எனினும், ட்ரான்ஸ், டெலிபோர்ட், பால்டர்-ஜீஸ்ட் போன்ற ஸித்தர் டெக்னிக்குகளையும் பின்பற்றிக் காட்டி ஆக்ஷேபணம் புரிகிறார்.

Koviloor Digital Library

இதனைச் சற்று ஆராய்ந்து பார்த்தோமாயின் ஸித்தர்கள் செய்யும் பலவற்றை ஸ்வாமியும் செய்கிறார் என்பதால் அவரை ஸித்தர்மட்டுமே என்பது சரியில்லை எனக் காண்போம். "காளி காளி" என்று பக்திமயமாகவே காணப்பட்டார் பரமஹம்ஸ ராமகிருஷ்ணர். அவதாரமாயினும் பக்தராக வேஷம் போட்டார். அதனால் அவரை பக்தர்களில் ஒருவர்தான் என்பதா? ஆதி சங்கரர் பாஷ்யம் எழுதியும் வாதப் பிரதிவாதம் செய்தும் பேரறிஞராகவே தோன்றினார். அதனால் அவர் மகாமேதைகளில் ஒருவர்தானே யன்றி அவதாரமில்லை என்பதா? காஞ்சிப் பெரியவாள் ஆசார அநுஷ்டானங்களையே வழுவற நடத்திக் கொண்டிருப்பதால் அவர் கர்ம யோகப் பெரியோரில் ஒருவரேயன்றி தெய்வபுருஷர் அல்ல என்று கூறிவிடுவதா? இப்படியே ஸ்ரீ ஸத்யஸாயி பாபா ஸித்தர் போலவும் ஒரு வேஷம் போடுகிறார் என்பதால் அவர் ஸித்தர் மட்டுமே, அவதாரமல்ல என்று சொல்ல முடியாது.

ஞானமார்க்கத்தவரின் வாதங்களை எல்லாம் ஆதிசங்கரரும், பக்தி மார்க்கத்தவரின் போக்கை எல்லாம் பரமஹம்ஸரும், கர்மாசார மார்க்கத்தவரின், போக்கை எல்லாம் காஞ்சிப் பெரியவாளும் பின்பற்றுவதாகக் காட்டுவது போலவே, ஸித்தர்களின் போக்குகளைத் தாம் கைக்கொண்டதாக நம் ஸ்வாமி காட்டுகிறார்.

ஸித்தர்கள் என்றால் லோகவழக்குக்கு விரோதமாக, விநோதமாக, eccentric என்று மற்றோருக்குத் தோன்றும்படியாக ஏதாவது இருக்கத்தான் செய்யும். அவர்கள் சாக்கடையில் கிடப்பார்கள், ஊசிப்போன பழையதை உண்பார்கள், சுருட்டுப் பிடிப்பார்கள், பக்தர்களைத் திட்டியும் நொக்கிப் புடைத்தும் மகிழ்வார்கள், பொருள் விளங்காப் புதிராக எதையேனும் கூறுவார்கள்.

பேய் போல் திரிந்து, பிணம் போல்கிடந்து,
இட்ட பிச்சையெல்லாம்
நாய் போல் அருந்தி, நரி போலுழன்று

என்றெல்லாம் இவர்களைப் பட்டினத்தார் வர்ணிப்பார். உலக மக்கள் வெளிப்பார்வைக்கு நாகரிகம் என்று ஏதோ ஒன்றுக்கு வாழ்ந்தாலும் உள்ளுறப் பண்பு அற்றிருப்பதற்கு மாறாக, ஸித்தர்கள் உள்ளே பண்புச் செல்வர்களாயினும் வெளியே அநாகரிகர்போல் அநேகச் செயல்களைப் புரிவர்.

ஸித்தர் வேஷம் போடும் ஸ்வாமி, மற்ற ஸித்தர்களிடமிருந்து இதில் பெரும்பாலும் விலக்கானவரே. ஷிர்டியில் கூடச் சில பல eccentricity ஆக வெளிப்பார்வைக்குத் தோன்றுபவை இருந்தன. பர்த்தியவதாரமோ வெளியிலும் நாகரிகம்தான். ஆயினும் ஸித்தர்களின் விசித்ரமாகவே முடியும், அங்கியும் மட்டும் இவரிடம் ஒட்டிக் கொண்டிருக்கின்றன. உலக வழக்குக்கு மாறாக ஏதேனும் விநோதமான, (ஓரளவு உறுத்தலாகவும் தோன்றுகிற) அம்சம் இருந்தேயாக வேண்டும் என்பதுதான் போலும்! புதுமையாக ஏதாவது இருந்தாலே நவீனர்கள் சமாப்

Koviloor Digital Library

படுவார்கள் என்பதாலும் கஃப்னியும், வட்ட முடியும் தரிக்கிருரோ என்னவோ? அதாவது மற்ற ஸித்தர்களின் விசித்ரத் தன்மை மக்களை வெருட்டுவதாக உள்ளதெனில், இவருடையதோ சிலரை வெருட்டும்போதே பலரை ஈர்ப்பதாகவும் உள்ளது.

(ஸ்வாமியின் முடி, அங்கி இவை குறித்து நூலாசிரியனுக்குத் தோன்றும் இன்னென்றையும் குறிப்பிடவேண்டும்: ஸாயி பக்தர்களான நமக்கு அநேகப் பொருட்களைப் பார்க்கையில் அதில் ஸ்வாமியின் உருவம் தத்ரூபமாகத் தெரிவது போன்ற பிரமை அடிக்கடி உண்டாகிறதல்லவா? இயற்கை உலகிலும் சரி, செயற்கை உலகிலும் சரி அநேக வஸ்துக்களில் மேலே ஒரு கருவளையமும், அதன் கீழ் ஒரு நீளப் பட்டையும் காண்பதால் தான் அவை ஸ்வாமியின் கேச மண்டத்தையும் கஃப்னியையும் நமக்கு நினைப்பூட்டுகின்றன. பக்தர்கள் பார்க்குமிடமெங்கும் நீக்கமறத் தம்மைக் கண்டு ஆனந்திக்க வேண்டுமென்றே ஸ்வாமி இவ்வாறு முடியும் உடையும் கொண்டிருக்கலாம்! ஒரு புறம் ஸித்தர்—விசித்ரமாகக் குழப்புவதே இன்னொரு புறம் ஸர்வ வியாபக அடையாளமாக மகிழ்வூட்டுகிறது!)

ஸித்தராகவே இருந்து கொண்டு அவதாரத்வம் கொண்டாடுகிருர் எனக் குற்றம் சாட்டுவோருக்கு முடிவாக ஒன்று கூறலாம். எந்த ஸித்தரும் செய்யத் துணியாத ஒன்றை இவர் அனவரதமும், சகஜமாகச் செய்வதுதான் அது. அது என்ன? தாமே கடவுள் என்று இவர் கூறுவதேதான்! மற்ற ஸித்தர்கள் அப்படி இல்லாததால் அவதாரத்வம் கொண்டாடவில்லை. இவர் அப்படி இருப்பதால், உள்ளதைச் சொல்கிருர். மற்ருேர் சொல்லாததை இவர் ஏன் சொல்கிருர் என்பதற்கு விடை இவ்வளவு ஸிம்பிள்!

அவதார புருஷர்கள் பல நிலைகளில் விளையாடுவதுண்டு.

ஆதி சங்கர பகவத்பாதர்கள் ஈச்வராவதாரமேதான். ஆயினும் சாதாரண மானுடர் போல், எதிராளியொருவன் இவருக்கு ஆபிசாரிகம் எனப்படும் துன்மாந்திரிகம் வைக்க,அதற்கு ஆட்பட்டு அவதியுற்றுச் செந்திலாண்டவனைத் தஞ்சம் புகுந்தார். முருகனின் பன்னிரிலை விபூதியாலேயே அவதியினின்று மீண்டார்.

இன்னெரு நிலையில் யோகி போல் நடந்தார். ஓரிடத்தில் கள்ளை எடுத்துக் குடித்தார். உடனே சிடர் தாமும் மதுபானம் செய்தாலென்ன என்று நினைக்க, ஆதி சங்கரர் கொல்லனின் ஊது உலையில் கொதித்துக் கொண்டிருந்த திரவ இரும்பை எடுத்து அலாக்காகப் பருகிறுர் — 'சிடன் இவ்வாறு தழல்சாற்றையும் பருகினுலே, மதுபானமும் செய்யலாம்' என்று உணர்ந்து முகமாக. இங்கே சங்கரர் சித்துக்களை ஆதரிப்பது மட்டுமின்றி, ஸித்தர்கள் உலக தர்மத்துக்கு மாறுக மதுபானம் செய்வது போன்ற 'எக்ஸென்ட்ரிஸிடி'யைக்கூட ஆதரித்திருக்கிருர். -ஆம், வைதிக தர்ம ஆசாரங்களை இம்மியும் வழுவுருமல் பொது ஜனங்களுக்கு விதித்த அதே சங்கரர்தாம்!

அவதாரமாயினும் அவர் பொது ஜனங்களில் ஒருவராகவே சகல ஆசாரங்களையும் பற்றி யொழுகியது ஒரு நிலை. இன்னொரு நிலையில் ஆசாரம் மீறி யோக சித்தும் செய்தார். பரகாயப் பிரவேசம் செய்தபோது சங்கற்ப மாத்திரத்தில் அப்படிச் செய்யாமல் யோகத் 'தொழில் நுணுக்க'ப்படியே வலக்கால் பெரு விரலால் தம் ஜீவனை வழித்துக் கூடுவிட்டுக் கூடு பாய்ந்தார். எனவே இதேபோல் உரவகொண்டாவில் ஸத்யா வலக்காற் பெருவிரலைப் பிடித்துக்கொண்டு கட்டையாகச் சாய்ந்ததால், அவர் வெறும் யோகஸித்தர், அவதாரமில்லை என்று சொல்வது நியாயமாகுமா?

மனிதரோடு மனிதராகக் குளித்தும், உடுத்தியும், உணவுண்டும், உரையாடியும், ''அதென்ன, இதென்ன?'' என்றெல்லாம் கேட்டுத் தெரிந்துகொள்வதாகவும் நடிக்கும் நம் ஸ்வாமி ஸித்தரோடு ஸித்தராக அவர்களது உத்தியைக் கையாண்டும் இன்னொரு நிலையில் நடிக்கிறார். அவதாரமே ஸாதாரண மனிதனாகவும், அஸாதாரண ஸித்தராகவும் நடிக்கிறது.

ஸித்தரின் எக்ஸென்ட்ரிஸிடி என்று மட்டுமில்லாமல், அதற்கும் கீழ்ப்பட்ட நிலையில் அவரை சந்தேகிக்கவும் பம்பை முடி, வெகு நீண்ட கஃப்னி இவற்றால் அவர் க்ஷோபண கைங்கரியம் செய்கிறார். கேசம் புதராயிருப்பதால்தானே அதில் ஒளித்து வைத்திருந்து இவர் பொருட்களை எடுத்துக் கொடுக்கிறார் என்று சிலர் எண்ண ஏதுவாகிறது? காலோடு கழுத்து கஃப்னி போடுவதால்தானே அதற்குள்ளிருந்தே இவர் கைத்தந்திரத்தால் வஸ்துக்களை எடுத்து விநியோகிக்கிறார் என்று குற்றம் சாட்டவும் அஸ்பதம் ஏற்படுகிறது? ஸாதா க்ராப் தலையோடும், நாலு முழ வேட்டி, அரைக்கைச் சட்டையுடனுமே அற்புத சிருஷ்டிகளைக் காட்டிய ஆரம்ப கால பால ஸாயி க்ஷோபணத்தின் பொருட்டும் பிற்பாடு இவ் விநோத கோலத்தை ஏற்றிருக்கலாம்.

ஒளித்ததை எடுத்துக் கைத் தந்திரம் செய்கிறார் என்று எண்ணாதவர்களில் சிலர், ஸாம்ஸனைப் போல் இவர் முடியில்தான் ஏதோ மர்ம சக்தி இருக்கிறது என்றும், அது போனால் இவர் சக்தியும் போய்விடும் என்றும் கூறி பக்தரைக் குழப்பவும் க்ஷோபணர் இடம் கொடுத்திருக்கிறார்!

ஸித்தர் வேஷம் போடுவதில் கவடு விடுவதாக, க்ஷோபணைப் பட்டியலில் இன்னொன்று:

'ட்ரான்ஸ்' என்பதாக ஓரிடத்தில் உடலைக் கட்டையாக்கி இன்னோரிடத்தில் உயிரைக் கொண்டு சென்று லீலை புரிவதை ஸ்வாமி இப்போது சில ஆண்டுகளாக நிறுத்தி விட்டார். ஸாதாரண ஸித்தர் விஷயத்தில் பெரிதாக நினைக்கப்படும் இந்தக் கூடுவிட்டுப் பாயும் செயல், நம் ஸ்வாமி விஷயத்திலோ அவரது மகிமையைக் குறைக்கவே செய்தது. ஸத்ய ஸாயி சரீரத்துடன் பூரணப் பிரக்ஞையுடன் அவர் காரியங்கள் புரியும் அதே சமயத்தில் தமது ஸர்வ வியாபகத்துவத்தால் பிற இடங்களிலும் அநுக்கிரகம்

Koviloor Digital Library

புரிபவர்தாமே! அப்படியிருக்க இவர் கூடு விட்டுத்தான் இன்னோர் இடத்துக்குப் போக வேண்டுமெனில் அது ஸர்வ வியாபகத்துவத்துக்குக் குறைதானே? வேண்டுமென்றே இப்படியும் தம்மைக் குறைவுபடுத்திக்கொண்டு முன்பெல்லாம் கூத்தடித்தார்! ஆனால் 1969 சிவராத்ரியின்போது உலக முழுவதும் அவ்விழா கொண்டாடப் பெறுவதைக் காண்பதற்காக, லிங்கோத்பவத்துக்குப் பின் முக்கால் மணி நேரம் ஸ்வாமி 'ட்ரான்ஸி'ல் சென்றதற்குப் பிற்பாடு, கூடுவிடும் கூத்தைச் செய்வதில்லை.

இந்நூலின் முப்பத்தைந்தாம் அத்தியாயத்தில் ஸ்வாமி இப்போதெல்லாம் முன்போல ஷிர்டி பாபாவின் மஹா ஸமாதியன்று ஷிர்டிக்குச் ''செல்வ''தில்லை என்று கூறி வாசகர்களைக் கொஞ்சம் குழப்பத்துக்கு ஆளாக்கினோம். இதனால் இப்போது பாபாவின் சரீர-அதீத-யாத்திரா சக்தி குறைந்து விட்டதோ என்று வாசகர் குழம்பியிருக்கக் கூடும். உண்மையில், இப்படிக் கூடுவிட்டு யாத்திரை செய்தபோதேதான் ஸ்வாமி அடியார்களைக் குழப்பியிருக்கிறார் — எங்குமே புதிதாகச் ''செல்ல'' முடியாதபடி எங்கணும் தமது சரீரம் பரவியபோதிலும், ஸித்தர்களில் ஒருவரைப் போல இப்படிக் கூடுவிட்டுச் சென்றதன் மூலம்!

''ஸ்வாமி! தாங்கள் பதினாறு வயது வரையில் விநோதம் தூக்கலான லீலைகளையும், அதன் பின் முப்பத்திரண்டு வயது வரை மகிமை தூக்கலான லீலைகளையும், பிறகு இவ்விரு லீலைகளுக்குச் சமமாக உபதேசம் வழங்குவதையும் புரிந்திருக்கிறீர்கள். மறுபடியும் ஒரு பதினாறாண்டுக் கட்டம் முடிந்து தாங்கள் நாற்பத்தெட்டாவது வயதைப் பூர்த்தி செய்ததிலிருந்து பிரத்யேகமாக ஏதேனும் செய்கிறீர்களா?'' என்று அத்யந்தத் தொண்டர்களில் ஒருவர் கேட்டாராம்.

உடனே ஸ்வாமி பளிச்சென்று, ''இப்போதெல்லாந்தான் நான் பிரதிக்ஷணமும் பூர்ண பகவானாகவே இருக்கிறேனே! வேறு என்ன செய்ய வேண்டும், செய்யத்தான் முடியும்?'' என்றாராம்.

மகாஸித்திகளாகத் தோன்றும் சரீர-அதீத-யாத்திரை போன்றவற்றையும் தாம் அறவே நிறுத்தி விட்டதைத்தான் ஸ்வாமி இதனால் குறிப்பிட்டாரோ என்னவோ?

ஸ்வாமிக்கு ட்ரான்ஸில் போவது முதலிய சக்திகள் இப்போது போய்விட்டதாக நினைக்கும் அசடர்களும் உண்டு. ட்ரான்ஸில் போகாமலோ இன்றும் உலகெங்கும் பரவியுள்ள பக்தர்களைத் தமது அன்பிறகுகளால் அணைத்து அடைகாக்கும் அவரது ரட்சணையை உணராத அசடர்கள்!

'ட்ரான்ஸ்' என்ற ஒன்றை அவர் முன்பெல்லாம் கைக்கொண்டதன் ரேஹாபனை விளைவுதான் இது!

ஸர்வக்ஞரான ஸ்வாமி, ''அவர் யார்?'', ''இவர் யார்?'' ''அது என்ன?'', ''இது என்ன?'', ''உன் ஊர் என்ன?'', ''உன்

தொழில் என்ன?'' என்றெல்லாம் கேட்கிறார் எனில் எப்படி [illegible] உண்டாகாதிருக்கும்? இப்படிக் கேட்பவரே கோரிக்கை அறையில் பேட்டி பெறுபவரைப் பற்றிய சகல விவரங்களையும் அறிந்தோராகச் சொல்கிறார் என்றவுடன், சிலருக்கு விசித்திரக் கற்பனைகள் தோன்றிவிடுகின்றன. ''பிரசாந்தி நிலைய இன்டர்வ்யூ ரூமில் ஏதோ யந்திரம் இருக்கிறது, மை இருக்கிறது. அதனால்தான் அங்கே இந்த சாமியார் மற்றவர்களைப் பற்றிய விஷயமெல்லாம் சொல்ல முடிகிறது. அந்த ரூமை விட்டு வெளியே வந்தால் அவரும் சாதாரண மனிதர் போலத்தான் விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது'' என்று வதந்தி பரப்புகிறார்கள். உடனே ஸாயி பக்தர்களுக்குங்கூட சம்சயம் தட்டி விடுகிறது.

இவர்கள் யோசித்துப் பார்க்கவேண்டும். புட்டபர்த்தி இன்டர்வ்யூ ரூமில் மட்டுந்தானா பாபா பேட்டி வழங்கி அவரவரின் உள் விஷயங்களையெல்லாம் சொல்கிறார்? கிழக்காப்பிரிக்காவில் உள்ள கம்பாலா உள்படத் தாம் செல்கிற இடங்களிலெல்லாம் கோரிக்கை கொடுத்துத் தமது ஞான திருஷ்டியை ஆயிரமாயிரம் முறை காட்டியிருக்கிறாரே! அவர் தங்குமிடங்களிலெல்லாம் முன்னேற்பாடாக இந்த மையைப் போட்டிருக்கலாம் என்று எதிர்ப்பாளர்கள் சொல்லலாம். ஆனால் அவர் தங்குமிடங்களில் மட்டுமின்றி எத்தனையெத்தனை எத்தனையோ பக்தர்களின் வீடுகளுக்கே சென்று அங்கெல்லாமும் தமது ஞான திருஷ்டியைக் காட்டியிருக்கிறாரே! தம் உடம்பிலேயே மையை ஒளித்துக் கொண்டு பாபா இங்கெல்லாம் சென்றார் என்று சொல்வதற்கு இடமில்லை. அப்படியானால் புட்டபர்த்தியிலும் இவர் அப்படி தமக்குள்ளேயே அதை ஒளித்துக்கொண்டு கோரிக்கை அறைக்கு வெளியிலும் திரிகால ஞானியாக, ஸர்வக்ஞராகவே இருந்து விடலாமே!

எனவே அவரேதான் தம்மை வேண்டுமென்று குறுக்கிக் கொண்டு பிரசாந்தி நிலையப் பேட்டி அறையில் ஒரு விதமாகவும் வெளியில் ஒரு விதமாகவும் இருக்கிறார்.

அங்கேயே பேட்டி அறைக்கு வெளியிலும், பக்தரிடையே உலவும்போதுகூட பாபா ஸர்வக்ஞத்வத்தை எவ்வளவோ முறை காட்டித்தான் இருக்கிறார். ஆனால் எதிராளிகள் எதையும் ஆராக் கவனியாமலும், சிர யோசிக்காமலுந்தானே வதந்தியைக் கிளப்பி, யோசிக்கத் திறனற்ற பக்தரையும் குழப்புகிறார்கள்?

இன்னொரு குழப்பல்: டாக்டர் பகவந்தத்துக்கு அச்சகப் பெயரில்லாமலே பாபா புத்தகம் சிருஷ்டித்துத் தந்ததைப் பார்த்திருக்கிறோம். இப்படியே எந்த லேபிளும் இல்லாத டானிக் பாட்டில்கள், எப்பெயரும் பொறிக்கப்படாத காப்ஸ்யூல்கள் முதலியவற்றை பாபா பல நோயாளிகளுக்குத் தந்து, இவை அப்போர்ட் அல்ல, சிருஷ்டியே என்று காட்டியிருக்கிறார். இப்படிப்பட்டவரே ''ஹெச்.எம்.டி.'', ''ஸைமா'' என்றெல்லாம் பெயர் பொறித்த கைக் கடிகாரங்களை ''வரவழைக்கும்'' போது, இவை வாஸ்தவ

Koviloor Digital Library

மாகவே வேறோரிடத்திருந்து வரவழைத்ததேயன்றி, இவரது சிருஷ்டியல்ல என்றுதானே தோன்றும்?

இதை ''ப்ளிட்ஸ்'' ஆசிரியர் ஸ்ரீ கரஞ்ஜியா பாபாவிடமே உடைத்துக் கேட்டுமிருக்கிறார். அதற்கு பாபாவும் அழுத்தமாக, 'இவற்றில் பெயர் போட்டிருந்தாலும் இவை கடத்தல் பொருட்கள் அல்ல; நான் எது நினைத்தாலும் அப்படியே சிருஷ்டியாகி விடும்; இந்தப் பெயர் கொண்ட வாட்ச்களும் அப்படித்தான்' என்று கூறியிருக்கிறார்.

அதாவது, ஹெச்.எம்.டி., ஸைமா போன்ற ஒரு கடிகாரம் வேண்டும் என்று பாபா நினைத்த மாத்திரத்தில், அப்படி ஒரு வாட்ச் அந்தப் பெயரையும் போட்டுக்கொண்டு (அந்தக் கம்பெனியின் தயாரிப்பாக இல்லாமல்) புதிதே உண்டாகிவிடும் என்கிறது. 'அது சரி; அச்சகப் பேர் போடாத புத்தகம் போல் பாபா ஏன் எந்தக் கம்பெனியின் பேரும் போடாத வாட்சை உண்டாக்கச் சங்கற்பிக்கக் கூடாது?' என்று கேட்கிறீர்களா? இப்படிக் கேட்டுக் குழம்ப வேண்டும் என்று அவர் சங்கற்பித்திருப்பதாலேயேதான் போலும்!

நூலாசிரியனால் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாவிட்டாலும் இவ்விஷயமாக அவன் கேள்விப்பட்ட ஒன்று: ஒரு முறை பாபா ஒரு வாட்ச் வரவழைத்துத் தந்ததோடு, சென்னைக் கடிகாரக் கம்பெனியான பி.ஆர். அன்ட் ஸன்ஸில் அதை வாங்கியதற்கான 'பில்'லையும் சேர்த்துக் கொடுத்தாராம். இதைத் தொடர்ந்து அக் கம்பெனியில் கேட்டபோது விற்பனையாளர் ஞாபகப்படுத்திக் கொண்டு சொன்னதிலிருந்து, பாபா வாட்ச் தந்த அதே சமயத்தில் இங்கே ஒருவர் ஸாயிபாபாவுக்காக என்று சொல்லிப் பணம் கொடுத்து கடிகாரம் வாங்கியதாகத் தெரிந்ததாம்.

இது சிருஷ்டியைச் சேராதாயினும், தர்ம நியாயமான அப்போர்ட் என்பதில் ஆட்சேபனை இல்லைதானே?

மினி—சந்திரனையே சிருஷ்டிக்கக் கூடிய பாபாவால் கடிகாரம் சிருஷ்டிக்க முடியாது என்பதும் இல்லைதான். ஆனாலும் அதில் ப்ரான்ட்—நேம் காட்டி க்ஷோபணம் செய்கிறார்!

சங்கற்பத்தால் மட்டுமே பக்தரை ரக்ஷிக்கும் ஆற்றல் பெற்ற பாபா, சிலருக்குத் தாயத்து, யந்திரங்கள் முதலியன தருவதையும் க்ஷோபணத்தில் ஓர் அங்கமாகக் கொள்ளலாம். ஸ்ரீ பால பட்டாபிச் செட்டிக்கு நவக்கிரகம் சிருஷ்டித்துத் தந்ததை முன்பு பார்த்தோம். இன்னம் பலருக்குப் பல யந்திரங்கள் தந்திருக்கிறார். ஏன், தர்ம க்ஷேத்திரம், ஸத்யஸாயிக் கல்லூரி விடுதி போன்ற தமது நிறுவனங்களுக்கே அஸ்திவாரக்கல் நாட்டுகையில் வேதோக்தயாகத் தேங்காய் உடைத்து, யந்திரங்களும் நவமணிகளும் சிருஷ்டித்துப் போடுகிறார். 'இவரே கடவுள் எனில் காப்பாக யந்திரம் எதற்கு?' என்று சிலர் ஆட்சேபம்

எழுப்புகின்றனர். இவர்கள், எவ்வித யந்திரமும் இன்றியேதான் ஸ்வாமியின் பக்தர்களில் தொண்ணூறு சதவிகிதத்துக்கு மேலானோர் அபார அதிசய ரட்சணையைப் பெறுகிறார்கள் என்பதை உணர வேண்டும். எனவே யந்திர சிருஷ்டியும் லீலானந்தத்துக்காகப் புரிவதுதான். அல்லது, மக்களுக்கு இதுபோன்ற மத சம்பிரதாயங்களில் மதிப்பு இருக்கவேண்டும் என்று உணர்த்துவதற்காகவும் இருக்கலாம். யந்திர—மந்திராதிகளும் சக்தி வாய்ந்தனவே எனக் காட்ட வேண்டியது நம் மதத்தை நிலைநிறுத்த வந்தவரின் ஒரு கடமை அன்றோ?

முன்பே கூறியதுபோல் ஆட்சேபிப்போரில் உறுதியான நாஸ்திகருக்கு நாம் ஏதும் சொல்வதற்கில்லை. ஆஸ்திக ஆட்சேபணையாளரை மட்டும் ஒரு கேள்வி கேட்கிறோம்: ஆதி மஹா பராசக்தியான லலிதாதேவியானவள் பண்டாஸுரன் போட்ட விக்ன யந்திரங்களின் சக்தியால் தன் படை முன்னேற முடியாமல் ஸ்தம்பித்து விட்டதுபோல் விளையாடவில்லையா? பிறகும் தானே அந்த யந்திரங்களை நாசம் செய்யாமல், விக்னேச்வரரைக் கொண்டே அவற்றை அழித்து, "மஹா கணேச நிர்பின்ன விக்ன யந்த்ர ப்ரஹர்ஷிதா" என்றே ஸஹஸ்ர நாமத்தில் ஒரு பெயர் பெற்றாளே!

இன்னொரு ஆக்ஷேபணம்:

ஸ்வாமி பூமியை நோக்கிக் கையை விரித்துச் சுழற்றியே விபூதி முதலியன வரவழைப்பதால், மின்சாரம் போல் ஏதோ ஒரு சக்தி பூமிக்கடியாகவே இவற்றைக் கடத்தி வந்து அவர் கையில் சேர்க்கிறது என்று வதந்தி. அடடா, ஸ்வாமியின் எதிராளிகளுக்குத்தான் என்ன கற்பனா சக்தி? எதையாவது நூதனமாகப் புனைந்து அல்லது ஊகித்துச் சொல்லி அடியாரையும் சற்று அலைப்புற வைத்து விடுகின்றனர்.

இவர்கள் ஸ்வாமி எவ்விடத்தையும் நோக்கிக் கை சுழற்றாமலே விபூதி முதலானவற்றைக் கொடுப்பதும் உண்டு என்பதைக் கவனிக்க வேண்டும். ஸ்வாமி வாயினால் ஊதிய மாத்திரத்தில் அம்மூச்சு பட்ட இடத்தில் சிருஷ்டி தோன்றியிருக்கிறது. ஒரு முறை ஸ்வாமி கையை முஷ்டிபோல் மூடிக்கொண்டு அதனுள் ஊதிவிட்டுப் பிரிக்க, கைநிறைய விபூதி இருந்ததாக இந்திரா தேவி தெரிவிக்கிறார். தமது சுவாசகோசத்துக்குள்ளிருந்தே ஸ்வாமி விபூதியைக் கடத்தினதாக எதிர்ப்பாளர் கூறுவாரோ?

(பக்தரிடம் பாம்பு வராமல் எல்லைக் கோடு போட்ட கால் வண்ணம், கடப்பை மக்கள் நின்ற மண் தாம் முறியாமல் அபயம் தந்த கை வண்ணம், மின் கம்பியில் சிக்கிய சிறுவனை அங்கேயே உயிரோடு நிறுத்தி வைத்த கண் வண்ணம் இவற்றோடு இந்த மூச்சு வண்ணத்தையும் சேர்க்க வேண்டியதுதான். இம் மூச்சு பட்ட மாத்திரத்தில் எத்தனை கற்கள் கற்கண்டாகியுள்ளன? ஒரு குருடனின் கண்ணில் பாபா ஊதிய மாத்திரத்திலேயே இம் மூச்சு அவனுக்குப் பார்வை தந்திருக்கிறதே!?

Koviloor Digital Library

ஆனால் இப்படி ஸ்வாமியின் அவயவங்களுக்குத் தனி மகிமை சொல்வதும் சேஷாபணந்தான்! பாதாதி கேசம் அவர் ஒரே அநுக்கிரக வார்ப்புத்தான். அவரது திவ்ய சங்கற்பம் ஒன்றுக்கே அவயவங்களும் கருவியாகின்றன.

ஸ்வாமி ஒரு விதமான சைகையும் செய்யாமலே அருகே அமர்ந்திருந்த ஒரு பக்தரை நோக்கி ''உன் மடியில் என்ன பார்!'' என்றார்.

செக்கச் சிவக்க ஒரு குண்டு ஆப்பிள் பக்தர் மடியில் இருந்தது!

நம்மைக் குழப்பவே, அல்லது நமது கவனத்தைக் கவரவே தான் ஸ்வாமி சிருஷ்டிக்குமுன் கையைச் சுழற்றுவது என வைத்துக் கொண்டிருக்கிறாரே யன்றி, இந்தச் சைகையில் எந்த மறைமுக டெக்னிக்கும் இல்லை. வெறும் சங்கற்பமேதான் சிருஷ்டிக்கிறது.

வேறொரு சேஷாபணம் பாருங்கள்:

முன்பெல்லாம் ஸ்வாமி வெள்ளையருடன் சம்பாஷிப்ப தென்றால் மொழிபெயர்ப்பாளர் உடன் இருப்பர். இப்போதுங்கூட ஸ்வாமி வங்காளி, குஜராத்தியர் போன்றோரிடம் அம்மொழிகளில் பேசாமல் ஹிந்தியில்தான் பேசுகிறார். இன்றும் மேடைப் பிரசங்கம் தெலுங்கிலோ, கன்னடத்திலோ தான் செய்கிறார். 'ஈச்வராவதாரம் என்று சொல்லிக் கொள்பவருக்கு ஏன் எல்லா மொழிகளும் தெரியவில்லையாம்?' என்ற கேள்வி எழத்தானே செய்யும்?

வாஸ்தவத்தில் அவருக்குத் தெரியாத பாஷை உண்டா? பால்யத்திலேயே பர்த்திக்கு வந்த பிரெஞ்சுக்காரர்களிடம் பிரெஞ்சு மொழியிலேயே நீண்ட நேரம் ஆத்மிக விஷயங்களில் விளக்கம் தந்திருக்கிறார்!

கிழக்காப்பிரிக்க நாடுகளுக்கு விஜயம் செய்கையில், தனிப் பேட்டியில் மொழிபெயர்ப்பாளர் உதவியின்றி அந்நாட்டுப் பூர்விக மொழியான ஸ்வாஹிலியில்கூடப் பேசியிருக்கிறார்!

பொதுவாக நம்மிடம் அவர் கொச்சைத் தமிழில்தான் பேசுகிறார். செட்டிகளின் 'உடைந்த' தமிழ் மாதிரிக்கூட இருக்கும். இதனால், இலக்கணத் தமிழ் பேச வராததால் தான் அவர் தமிழகத்தில்கூட மேடைப் பிரசங்கங்களில் தெலுங்கில் பேசுகிறார் என்று எண்ணினால் நாம் ஏமாளிகள்தாம்! இதற்கு ஸ்ரீலங்காவைச் சேர்ந்த பிரபல சைவசமய எழுத்தாளியம்மை ஒருவர் சான்று பகர்கிறார். ஈழத் தமிழர்கள் நம்மைப் போல் கொச்சையாகப் பேசாமல், இலக்கண சுத்தமாக, எழுதிப் படிப்பது போல் பேசுபவர்களல்லவா? ஸ்வாமி இந்த அம்மாளை யும் அவரது கணவரையும் ஒயிட்ஃபீல்டில் பேட்டிக்கு அழைத்து, தூய தமிழில் கட கடவெனப் பேச ஆரம்பித்ததும் அவர்களுக்கு

Koviloor Digital Library

ஆச்சரியமாகிவிட்டதாம்—இந்தியாவில் கூட ஒருத்தர், 'இருக்கு, இருக்குது; போறது, போவுது' என்றெல்லாம் பேசாமல் 'இருக்கிறது, போகிறது' என்று இலக்கணமாகப் பேசுகிறரே என்று வியந்தனராம். இந்த அதிசயத்தையே இவர்கள் வியக்க ஸ்வாமியோ, "நீங்கள் நான் பேசும் விதத்தைத்தான் கவனிக்கிறீர்களே யன்றி, நான் சொல்லும் விஷயத்தைக் கவனிக்கவில்லை. என்ன, விளங்குகிறதா?" என்றுராம்!

ஸ்வாமி இப்படி சுத்தத் தமிழில் பேசியதை இவர்கள் அவரது சுபாவமான வழக்கம் என நினைத்து மற்றத் தமிழ்பக்தர்களிடம் சொன்னபோது அவர்களுக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லையாம். 'பாபாவா' 'விளங்குகிறதா?' என்ற வார்த்தையைப் போட்டார்? அவருக்கு இவ்வளவு நல்ல தமிழ் தெரியும் என்று எங்களுக்குத் தெரியவே தெரியாதே! எங்களிடக் கொச்சையாகப் பேசியல்லவா எங்களை ஏமாற்றுகிருர்?" என்றனராம்!

'கலையில் பாபாவுக்கு நுட்பமான ராஸிக்யம் போதாது; உள்ளீடற்ற வெறும் ரவைஜாதி ஸங்கீதத்தை ரஸிக்கிறுர்; விழாக்களில் வெற்று ஜிகினா ஜோடனைகள் செய்கிருர்' என்றெல்லாம் ரஸிகர் எண்ணினுல், இதை அவதாரத்துக்கே உரிய மானுடக் குறைகளில் ஒன்று என்று மட்டும் சொல்வதற்கில்லை. இதுவும் குழப்பப்பட்டியலில் இன்னொன்று தான் எனத் தெரியும்—இந் நூலில் பின்னே வரும் "ஸர்வமத ஸம்மத ஸாயி" என்ற அத்தியாயத்தில் 'கலாஸாயி' என்ற பகுதியைப் படித்தால்!

குழப்பல் பிரியர்தான்! இதுவும் இறுதியில் நமது கர்மக் குழப்பத்தைத் தீர்க்கும் பிரியத்தில் பிறந்ததுதான்!

* * *

ஸ்வாமி அவதாரமாயின் உலகத்தில் ஏன் துக்கங்கள் இருக்க வேண்டும் என்பது ஓர் ஆட்சேபம்.

நமக்கு ஏதேதோ கஷ்டங்கள் வருகின்றன; உலகத்திலே பஞ்சம், பூகம்பம், போர் போன்ற கஷ்டங்கள் ஏற்படுகின்றன என்பதால் அவர் கடவுளல்ல என்பது ஆஸ்திகரைப் பொறுத்த மட்டும் அபத்த வாதம். ஏனெனில் ஸாயிபாபா கடவுளாக இருந்தாலும், இல்லாவிட்டாலும் வாஸ்தவத்தில் கடவுள் என்று ஒருவர் இருப்பதாக நம்புவதே ஆஸ்திகம். அந்தக் கடவுள் இருக்க, ஏன் தனி மனிதருக்கும், தேசத்துக்கும், உலகுக்கும் இன்னல்கள் வர வேண்டும் என்று கேட்டால் என்ன பதில் சொல்வது? எத்தனைதான் கருணை காட்டியும்கூட மன்னிக்க வொண்ணுத கர்ம பாக்கிதான் கஷ்டத்துக்குக் காரணம் என்ற மறுக்க முடியாத உண்மையைத்தான் சொல்லவேண்டும்.

Koviloor Digital Library

'இறைவனாவது, அவதரிப்பதாவது?' என்று ஏனோ பலர் நினைத்து விடுகிறார்கள். ''என்ன இருந்தாலும் மநுஷ்ய சரீரத்தில் உள்ள ஒருத்தரை ஆண்டவன் என்று நினைப்பதென்றால்..?'' என்று தோளைக் குலுக்குகிறார்கள். இந்த எண்ணத்தை ஆஸ்திகர்கள் அடியோடு களைந்தெறிய வேண்டும். உலக நலனில் பரம அக்கறை கொண்டவன் பகவான்; தர்மத்தை நிலைநாட்டத் தானே மண்ணில் அவதரிப்பதாக அவன் வாக்குத் தந்திருக்கிறான். நம் மதத்தின் ஆணி வேரான இந்த உண்மையை நம்ப முடியாதவர்கள் தங்களை ஆஸ்திகர் என்று கருதிக்கொள்ள வேண்டியதே இல்லை.

ஆதி சங்கரரையும், சைதன்யரையும், சம்பந்தரையும், ராமகிருஷ்ண பரமஹம்ஸரையும், ரமண பகவானையும், காஞ்சிப் பெரியவாளையும் அவதார புருஷர்கள், இறைவனின் திரு உருவங்களே என்று இன்று அநேகமாக எல்லா ஆஸ்திகர்களும் கூறுகிறார்கள். இவர்கள் யாவரும் சாக்ஷாத் அவதாரபுருஷர்களே என்பதில் இந்நூலாசிரியனுக்கும் திட உறுதி உண்டு. இவர்களில் எவரும் நம் ஸ்வாமியைவிடச் சக்தியில் குறைந்தவர் என்றும் அவன் நினைக்கவில்லை. ஆனாலும் வெளிப் பார்வைக்கு இவர்கள் ஸ்வாமியைப் போல் சக்தியைக் காட்டாமல் மனிதர்களாகத் தான் பெருமளவு நடித்தார்கள்; நடிக்கிறார்கள். உதாரணமாக, புதிது புதிதாக வருபவர்களிலும் ஸ்வாமி தனிப் பேட்டிக்குத் தேர்வு செய்பவர்களைப் பேசவே வைக்காமல், தாமே அவர்கள் கதையையெல்லாம் ஒப்பித்து, அவர்களது பிரச்னைகளைக் கூறி, அவர்களுடைய எதிர்காலத்தையும் சொல்வது போல் மேலே சொன்ன தெய்வ புருஷர்கள் செய்வதில்லை. ''யார், என்ன?'' என்று மனித ரீதியிலேயே தான் கேட்கிறார்கள். இவர்களில் சிலர் தாங்கள் அவதாரமே யில்லை, வெறும் மனிதர்கள்தான் என்றும் கூறுகிறார்கள். இப்படியெல்லாம் இருந்தும் இவர்களை அவதாரந் தான் என்று கொள்ளும் ஆஸ்திகர்களில் சிலர் ஸ்வாமி விஷயம் வந்தால் உடனே அவர் அவதாரமில்லை என்று சொல்வது மட்டுமின்றி, ''இறைவனாவது? நர காயத்தில் வரவாவது?'' என்று அடி மடியிலேயே கைபோட்டுச் சொல்லும்போது, தாங்கள் மற்ற மஹாபுருஷர்களை அவதாரமாகச் சொல்வதும்கூட மனப்பூர்வமாக உணர்ந்தல்ல என்றே காட்டிவிடுகிறார்கள்.

ஸ்வாமி நமக்கென விசித்ரமாகத்தான் ஒரு ஜாதகத்தைப் படைத்துக்கொண்டிருக்கிறார்! எந்த மஹானை, ஸித்தரை அண்டிப் போகிறவரும் அவரையே தெய்வமாகத்தான் கொண்டாடுகிறார்கள். ஆனால் அப் பெரியார்கள் தாங்களோ தெய்வம் எனப் பிரகடனம் செய்வதில்லை. இதற்கேற்ப அவர்களின் செய்கைகளில் பல, மனிதரீதியிலான குறைபாடுகள், கட்டுப்பாடுகள், தோல்வி முதலியவற்றையே காட்டுகின்றன. ஆயினும் எப்போதேனும் அவர்கள் தெய்விகத்தைக் காட்டினாலும்கூடப் போதுமென்று, நூற்றுக்குத் தொண்ணூறு அவர்கள் மனிதராயிருந்தாலும் அவர்களைத் தெய்வமாகக்கொண்டு தங்கள் பிரச்னைகளையெல்லாம் அவர்களிடமே பக்தர்கள் ஒப்புக்கொடுக்கின்றனர். இப்படியிருக்க இதே பக்தர்கள், வேறெவரையும்

Koviloor Digital Library

காட்டிவரும் பேரற்புதங்களைப் புரியும் நம் ஸ்வாமி ஏதோ பத்துச் சதம் மனித ரீதியிலான குறைபாடுகளையும், கட்டுப்பாடுகளையும், தோல்விகளையும் காட்டுவதைப் பெரிதுபடுத்திச் சொல்லி, 'இவரா உங்களுக்கு பகவான்?' என்று ஸாயி பக்தர்களைக் குழப்புவது எந்த நியாயத்தைச் சேர்ந்தது?

* * *

ஒவ்வொரு படியாக இவனை ஏற்றி வந்ததில் தற்போது பாபா இவனுக்குப் புரியவைத்திருப்பது யாதெனில் அவர் ஸாக்ஷாத் பரப்பிரம்ம மஹாசக்தியின் அவதாரமே என்பது; ஆனால் அவதாரம் என்பதால் அவரிடம் குறைகளே இல்லை என்றில்லை; மாறாக எல்லா அவதாரங்களுக்குமுள்ள மானுட அம்சங்களும், அவற்றுக்குரிய குறைபாடுகளும் சில உள்ளனதாம்; ஆனால் இக் குறைபாடுகள் பக்த ரக்ஷணத்துக்குக் குறுக்கே நிற்காது.

ஸ்வாமியைப் பற்றி இவன் கருதுவது யாதெனில் பல ஜன்ம ஸம்ஸ்காரங்களால் பரம பவித்திரமான ஒரு ஜீவன் ஸத்ய நாராயண ராஜுவாகப் பிறக்க, அதிலே தெய்விகத்தில் திளைத்த மஹாபுருஷரான ஷிர்டி பாபா ஒன்றியிருந்து, இந்த ஜீவன் பூர்ண தெய்வத்திலேயே கரைந்திருக்கிறது என்பதுதான். இதையே வேறு விதமாகவும் சொல்லலாம். அதாவது உலகில் தர்மத்தைக் காட்டிக் கொடுப்பதற்காக அவதரிக்கச் சங்கற்பம் செய்த பரம் பொருள், ஈச்வரம்மா-வெங்கப்பராஜுவுக்குப் பிள்ளையாகப் பிறக்கப் போகும் பரம உத்தம ஜீவனான ஸத்ய நாராயண ராஜுவில் பிரவேசிக்கத் திரு உளம் பற்றியிருக்கிறது. இவ்வித பூர்ண சக்தியின் பிரவேசத்துக்கு அங்கமாக இச் சக்தியில் ஆழத்தோய்ந்த ஷிர்டி பாபாவின் ஆவேசத்தையும் இந்த ஜீவன் பெற வேண்டுமென இறைத் திட்டம் இருந்திருக்கிறது.

ஆக ரத்னாகரம் ஸத்யநாராயண ராஜு என்ற வியக்தியின் மானுட இயல்பு, ஷிர்டி ஸாயியின் மானுட – தெய்விக இயல்பு, அசல் பராசக்தியின் பூரண தெய்விக இயல்பு மூன்றும் கூடிய அழகுத் திரிவேணியாகவே ஸ்வாமி தெரிகிறார்.

ஸத்ய நாராயண ராஜுவாக உள்ள மானுட இயல்பைப் பாருங்கள். இதிலே பிரதேச குணங்கள், பாரம்பரிய குணங்கள், தனி மனித குணங்கள் முதலியன இருக்கத்தான் செய்கின்றன.

ஆந்திரப் பிரதேச வாசிகள் ருசித்து உண்ணும் கார மசாலை, கோங்கூரா சட்னி, கீரை புலுசு, வேர்க்கடலைத் துவையல், பிஞ்சுக்காய்த் தொக்கு, ஸங்கடிக் களி முதலியவற்றை ஸ்வாமி விரும்பி உண்பதாகத் தெரிகிறது. ஏனைய தெலுங்கர்களைப்போலவே 'சம்பு' என்பதை 'செம்பு' எனப் பாடுகிறார். 'ஹ்ருதயம்' என்பது போன்ற பதங்களிலுள்ள குற்றியலுகர 'உ'வை ஆந்திரருக்கே உரியபடி பூரண 'உ'காரமாக உச்சரிக்கிறார். பொதுவாகவே ஆந்திரர்கள் உணர்ச்சி மிகுந்தவர்கள் என்பதற்கேற்ப ஸ்வாமியின் பேச்சிலே உணர்ச்சி பொங்குகிறது.

Koviloor Digital Library

பாரம்பரிய குணம் என்று எடுத்துக்கொண்டால், படராஜுக் குடும்பத்துக்கே உரிய நாடக ரத்தம், காவிய சித்தம் இவரில் சிறப்பாகப் பாய்ந்திருக்கிறது. தோற்றத்தில் மானுடத் தாயான ஈச்வரம்மாவின் ஜாடை வீசுகிறது. நடையில் அக்காள் வெங்கம்மாவின் சாயல் அடிக்கிறது.

பூர்வ ஸம்ஸ்காரத்தால் சுத்திகரிக்கப்பட்டபோதிலும் துளித்துளி பூர்வ வாஸனை நீங்காத ஒரு ஜீவாத்மாவின் தனி மனிதக் குறைபாடுகளும் இவரிடம் இருப்பதாகவே படுகிறது. இதனால்தான் சாந்த மயனும் நம் பிரசாந்தி வாஸவிடம் அவ்வப் போது ஒரு பரபரப்பு, படபடப்பு காணப்படுகிறது. அன்போடு அணுகுவோரைச் சில சமயங்களில் தூக்கி எறிந்து பேசுகிறார். ஆடம்பரப் பளபளப்புகளில் ஓரளவுக்கு விருப்பமுள்ளவராகக் காண்கிறார். உதாரணமாக, அவரது உடையையே எடுத்துக் கொள்ளலாம். இதற்காவது முன்பே சில உட்பொருள்கள் பார்த்தோம். ஆனால் விழாக்களில் பிரசாந்தி நிலயம் பெறும் ஜிகினா தகதகப்புக்களைப் பாருங்கள். இவற்றில் ஆழ்ந்த கலை யம்சம் குறைவாகவும், ஆடம்பரமே தூக்கலாகவும் இருப்பதாக ரஸிகர்கள் கருதலாம். ஸங்கீதத்தில்கூடப் பாருங்கள்: இருதயங்கமமாக உள்ள கௌரவ எழில் கொண்ட இசையைவிட அவர் 'நினுவிநா நாமதெந்து', 'நகுமோமு' போன்ற வற்றின் வாணவேடிக்கை ஜாலத்தைத்தான் உவப்பதாகக் காண்கிறது. அவரது பரிசுகளான மோதிரம், நெக்லேஸ், பட்டுப்புடவை முதலியவற்றிலும், 'gaudy' என்று சொல்லத் தக்க அம்சம் இருக்கத்தான் செய்கிறது. பிரம்மாண்டமாக எதையேனும் செய்யும் 'மெகலோமேனியா'கூட இந்தத் தனி மனித ஜீவாத்மாவுக்குச் சிறிது உண்டோ என எண்ணினால் தவறாகாது. பெரிய பெரிய கட்டிடங்கள் கட்டுவதைப் பாருங்கள். ஏற்கெனவே யுள்ள புனித அழகு வாய்ந்த 'சாந்தி வேதிகா' போன்ற கட்டுமானங்களை இடித்து நொறுக்கச் சொல்வதிலும் மானுடமான குறை தோன்றவே செய்கிறது.

ஆனால் மானுட ஊனம் எந்த அவதாரத்துக்கும் உண்டுதானே? இல்லாவிடில் ஸ்ரீராமசந்திரன் ஏன் அழுது புலம்பவேண்டும்? ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஏன் ஹுக்காவை விரும்ப வேண்டும்? சிவ கண நாதரான ஆலால சுந்தரரின் அவதாரமான சுந்தரமூர்த்தி ஏன் பரவையையும் சங்கிலியையும் நாடவேண்டும்? நல்லவேளையாக, மெய்யலாயி வெளிப்பார்வைக்குப் பயங்கரமான ஊனங்களின்றி சில சிறிய குறைபாடுகளையே கொண்டிருக்கிறார். மற்றபடி வெகுவாகப் பரிசுத்தமான ஜீவனாக இவர் இருப்ப தாலேயே இவரில் இறையம்சமாம் ஷிர்டி பாபாவும், இறைவனுமே புகுந்து செயலாற்றுவது.

இனி மனித தெய்வமாகவும், தெய்வ மனிதராகவும் இருந்த ஷிர்டி பாபாவின் ஆவிர்பாவத்தை நம் ஸ்வாமியிடம் பார்க்கலாம்.—முன்னரே இவ்விஷயமான ஒற்றுமைகளை நிறையக் கண்டிருந்தாலுங்கூட.

Koviloor Digital Library

அற்புத ஆற்றல்களை வெளிப்படுத்துவதிலும், ஆபத்சகாயத்தில் தலைசிறந்து விளங்குவதிலும் ஷிர்டியின் தொடர்ச்சியே பர்த்தி என்பதுதான் முதற்கண் கூறவேண்டுவது.

மற்ற எல்லா தேவ ரூபங்களாகவும், வேறு பல மகா குருமார்களாகவும் நம் ஸ்வாமி தோன்றியுள்ளார் எனினும், ஷிர்டி ஸாயியாக இவர் காட்சி கொடுத்ததே மிக அதிகமாக இருக்கும். முக்கியமாக ஷிர்டி பக்தர்களைத்தான் கவர்ந்திருக்கிறார். இவர்களில் பலருக்குத் தமது இரு உள்ளங்கைகளையும் ஸ்வாமி காட்ட, அவற்றிலொன்றில் ஷிர்டி நாதரும், மற்றதில் பர்த்தி நாதரும் ஜொலித்துக்கொண்டு காட்சி தந்திருக்கின்றனர்! சில சமயங்களில் இவரது ஒரு கையே வெளுத்து, சுருங்கி, முதிர்ந்து சாக்ஷாத் ஷிர்டி ஸாயி பாபாவின் திருக்கரமாகவே இருந்திருக்கிறது!

ஷிர்டியில் செலுத்துவதற்கென அடியார் வைத்துள்ள காவித் துணி முதலான காணிக்கைகளை பர்த்தி பாபா தாமாகவே அடையாளம் சொல்லி அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டதும் பன்முறை நடந்துள்ள சம்பவமாகும். இவற்றுக்கெல்லாம் மேல் ''ஸாயி பாபா'' என்ற பெயரையேதான் நம் கதாநாதர் உவந்துள்ளாரேயன்றி மற்றெந்த அவதார நாமத்தையும் அல்லவே!

அந்தரத்தில் எழுதுவது, காற்றை எடை போடுவதுபோல் கையை அலையாகச் சுழிப்பது முதலிய நம் ஸ்வாமியின் 'மானரிஸம்'கள் ஷிர்டிபாபா செய்தவையே என்று முன்னமே கண்டிருக்கிறோம்.

ஸ்வாமி பக்தர்களுக்குச் செல்லப்பேர் சூட்டுவார். ஸ்ரீகஸ்தூரியைப் பிரசித்த ஆந்திர சரித்திரகர்த்தரின் பெயரைச்சொல்லி ''நன்னய்ய பட்டர்'' என்பார். தாம் வறுத்தெடுப்பதையெல்லாம் பொறுத்துக்கொண்டு தம்மிடம் பக்தி விசுவாஸத்தில் குறையாதுள்ள டாக்டர் வி. பிரம்மம் முதலானோரைப்'பெத்த முத்தைது' (தீர்க்க சுமங்கலிகள்; கணவனை விடாத கற்பரசிகள்) என்றழைப்பார். மிகவும் ஸ்தூலதேகம் கொண்டவரை 'பக்கோடா', 'ரோட்–ரோலர்' என்பார். பக்தியை நாடக பாணியில் வெளியிடுவோரை, 'நவாப் ராஜமாணிக்கம்' என்பார். வயதுக்குத் தகாத நாகரிகவேஷம் போடும் பெண்டிரை 'சந்திரலேகா' என்பார். ஷிர்டி ஸாயிபாபாவும் இதே போல் வேடிக்கையாகத் தமது அணுக்கத் தொண்டர்களுக்குச் செல்லப் பெயர் சூட்டியிருக்கிறார். இன்று பிரசித்தியாகியுள்ள அவரது அந்தரங்கச் சேவகர்களின் பெயரே அவர் வைத்த புனைபெயர்கள்தாம்; அவையே அவர்களது இயற்பெயர் போலாகிவிட்டன.

ஸ்ரீ எம்.எஸ். தீக்ஷித் போன்றோர், இன்று பர்த்திபாபா அடியாரையெல்லாம் குளிர அழைக்கும் ''பங்காரு'' வில், ஷிர்டி பாபாவின் அன்பு சொட்டும் ''பாவு''வையே கேட்டவர்.

Koviloor Digital Library

பர்த்தி ஸாயி 'நவவித பக்தி'களை அடிக்கடி எடுத்தியம்புகிறார் எனில் இது ஷிர்டித் தொடரிழையே. அவரும் இந்த ஒன்பது சாதனைகளைத்தான் ஓயாமல் பகர்ந்தார். இன்று ஸத்ய பாபா உபதேசிக்கும் உவமைக் கதைகளில் பல அன்றே ஷிர்டி பாபா உபதேசித்தவைதாம். ''நானிருக்கப் பயமேன்?''; ''பக்தர்கள் விரும்புவதையே ஆரம்பநிலையில் அவர்களுக்கு நான் தருவதன் நோக்கம், இறுதியில் நானாக அவர்களுக்கு எதைத் தர விரும்புகிறேனோ அதை அவர்கள் விரும்புமாறு செய்வதுதான்'' என்பன போன்ற அமர வாசகங்களை ஷிர்டியின் எதிரொலியாகவே பர்த்தி முழங்குகிறது. பர்த்தி ஸாயியின் உவமையொன்றை ஷிர்டி ஸாயி காரியத்திலேயே செய்து காட்டியதையும் இங்கு குறிப்பிடலாம்:

ஷிர்டி பாபாவிடம் நம்பிக்கையில்லாத வலம்பி ஸ்டேஷன் மாஸ்டர் அவரிடம் வந்தபோது பாபா பானைகளில் தண்ணீர் நிரப்பிக் கொண்டிருந்தார். ஸ்டேஷன் மாஸ்டரைப் பார்த்ததும் மீதமிருந்த பானைகளை வாய் கீழாகக் கவிழ்த்து வைத்து அவற்றின் மீது தண்ணீர் ஊற்றினார். ஏன் இப்படி பானையைக் கவிழ்த்து, நீர் ஊற்றி வீணாக்கினார் என்கிறீர்களா? இதன் விளக்கத்தைப் பர்த்தி பாபாவின் உபதேசத்தில் பெறுங்கள். ''கடவுளின் கருணை எவருக்கும் எப்போதும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால் அவரை நம்பி மனத்தைத் திறந்து வைத்துக் கொள்ள மறுத்தால் இக் கருணையை ஒருவரால் உணரமுடிவதில்லை. மழை பெய்து கொண்டேயிருக்கிறது. வானம் பார்க்கத் திறந்துவைத்த பானைகளில் மழை ஜலம் தானாகவே நிரம்புகிறது. தன்னுள் நீர் நிரம்பப் பானை எந்த முயற்சியும் செய்யவில்லை. வெறுமே தன்னைத் திறந்து வைத்துக்கொண்டிருந்தாலே போதுமானதாக இருக்கிறது. இப்படியே தெய்வத்தை நம்பி, மனத்தைத் திறந்து கொண்டு விட்டால் எந்த சாதனையும் செய்யாமலே கருணை வெள்ளத்தைப் பெற்றுவிட முடியும். ஆனால் நம்பாமல் இதயத்தை மூடிக் கொண்டால்? பானையை வாய்கீழாகக் கவிழ்த்து வைத்து விட்டால், எவ்வளவு மழை பெய்தாலும் அதை நிரப்ப முடியாது தானே?'' என்கிறார் பர்த்தீசர்.

பால ஸத்யா காலில் சலங்கை கட்டிக் குலுங்க ஆடினான் எனில் ஷிர்டி ஸாயி விருத்தராகவே இப்படி நர்த்தனம் செய்திருக்கிறார்! கபீர் பாடல்களுக்குச் சலங்கை ஒலிக்க ஆடி அபிநயம் செய்திருக்கிறார்!

ஷிர்டி பாபாவின் ஹாரத்தி பண்டரிபுர பத்ததியில் அமைக்கப்பட்டதெனில், பால ஸத்யா பண்டரிபஜன் செய்துதான் ஊரையே பரவசமாக்கினான்.

பாபா பல தெய்வங்களாகவும், மகாத்மாக்களாகவும் தம்மையே காட்டிக்கொண்ட போதிலும் ஷிர்டிபாபாவின் மகாஸமாதி தினத்தில் தவறாமல் ஷிர்டிக்குச் ''சென்று'' ஆராதனையை ஏற்பதுபோல் மற்ற கடவுளர், மகான்களின் வழிபாட்டைத் தொடர்ச்சியாக ஒரு கடமை போல் சூக்ஷ்மத்தில் சென்று ஏற்பதில்லையே!

Koviloor Digital Library

இப்படியாக ஈச்வராவதாரமேயான போதிலும், அதற்குள்ளேயே ஸ்வாமி ஷிர்டி அவதாரமாகவும் இருக்கிறார்.

முன்பு நம் ஸ்வாமிக்கும் காஞ்சிப் பெரியவர்களுக்குமுள்ள ஒற்றுமைகளைப் பார்த்தோமே, அவற்றில் இதையும் சேர்க்கலாம்: காஞ்சிப் பெரியவர்களை நடமாடும் தெய்வமெனச் சொன்னாலும், அந்த தெய்வம் முதலில் மஹானாகவே பலரால் போற்றப்பெறும் ஆதி சங்கரராக வந்து, பிற்பாடு சங்கரரே இன்றைய காஞ்சி குருவாக வந்திருப்பதாகக் கொள்கிறோம். இப்படியே ஸ்வாமியைப் பிரத்தியக்ஷ பகவான் என்று சொன்னாலும், முதலில் அந்த பகவான் மஹானாகவே அநேகரால் மதிக்கப்படும் ஷிர்டிஸாயியாக வந்து, பின்னர் அந்த ஸாயியே இவராக வந்திருக்கிறார் எனக் கொள்கிறோம்.

ஷிர்டி பாபாவின் அவதாரம் நம் நாயகர் என்பதால் ஷிர்டிக்கே ஏற்றம் அதிகமாகிறது. இந்த ஏற்றத்தினால்தான், ஸத்யஸாயியின் அன்புக்காகவும் அற்புதங்களுக்காகவுமே இவரிடம் வந்துள்ளோரும் ஷிர்டிரூபத்தில் பக்தி கொள்கிறார்கள். இதைச் சரியாக உணராமல் சிலர் இவர் ஷிர்டிக்குப் போட்டியாகக் கிளம்பி, அவரது புகழைத் தஸ்கரம் செய்து கொள்கிறார் என்றெண்ணுவது அபத்த சிகாமணியாம். பர்த்தி பாபாவால் ஷிர்டி வழிபாடு ஓங்கிப் பரவியிருக்கிறதே யன்றிக் குறையவில்லை. சிவராத்ரி, நவராத்ரி தினங்களில் பிரசாந்தி நிலயத்திலேயே ஷிர்டிபாபாவுக்குத்தானே நம் கதாநாதர் விபூதி அபிஷேகம் செய்கிறார்?

தாமே அவராக இருந்தும் இங்கு வேறுபோல் அவரை அபிஷேக மூர்த்தியாகவும், தாம் அபிஷேகம் செய்பவராகவும் ஆகிறார். இதைக் கொண்டுதான், 'இவர் அவரது அநுக்கிரகம் பெற்ற ஒருவரே; ஆதியில் அவர் தாத்தாவாக வந்து இவரைப் பேணியதை இவரது அடியார்களே ஒப்புக்கொள்கிறார்களே' என்றெல்லாம் 'வீர' ஷிர்டி பக்தர்கள் கூறுகிறார்கள்.

ஷிர்டிபாபாவும், பர்த்திபாபாவும் தாத்தா—பேரனாக மட்டுந்தானா உறவு கொண்டாடி யிருக்கிறார்கள்? முன்பு நாம் பர்த்தி ஸாயி ஷிர்டி ஸாயியை "ஆஹா, ஏனு ஜம்ப?" என்று கேட்டதைப் பார்த்தோமே, அதிலே நாயக—நாயிகா பாவமே சொட்டியது. விபூதி அபிஷேகம் செய்கையில் ஷிர்டிபதி விக்ரஹத்தின் முதுகை அணைத்து பாபா பாசமயமாகப் பார்க்கும்போது அந்தக் கிழவர் இவருக்குக் குழந்தையாகிவிட்டாரோ என்றே தோன்றும். முன்பெல்லாம் ஜீப்பை ரதம் போல் அலங்கரித்து அதில் நம் ஸ்வாமி பவனி வந்ததுண்டு. அப்போது ஒரு சமயம், ஷிர்டி ஸாயி விக்கிரஹத்தை வண்டியின் முன்வைத்து அவரது கையில் ஒரு சாட்டையைச் சொருகினார் ஸத்யஸாயி. அவர் ஸாரதி, இவர் பிரயாணி என்று அர்த்தமா? அல்லது அவர் கண்ணனும் குரு, இவர் அர்ஜுனனும் சிடர் என்று பொருளா? இப்படியெல்லாம் பலவித உறவுகள் பாராட்டினாலும், இருவரும் அசலே ஒன்றுதான் என்றுணர்த்துமுகமாகச் சில சமயம் பர்த்தி பாபா 'ரதத்தில்' ஏறாமல், "கிழவரே உலா வரட்டும்" என்று கூறி ஷிர்டி விக்கிரஹத்தை மட்டுமே பவனி அனுப்பியதுமுண்டு.

Noolaham Digital Library

ஷிர்டியாரிடம் பர்த்தியார் பலவிதங்களில் உறவு கொண்டதால் அவர்கள் வேறாக இருக்கவேண்டியதில்லை என்பதற்கு 18-ம் அத்தியாய இறுதியில் தந்த சான்றுகளோடு மேலும் சில சேர்த்துக் கொள்ளுங்கள்:

நாராயணனேதான் கண்ணன். இப்படியிருக்க, இக் கண்ணனே அர்ஜுனனுடன் மஹாகாலபுரம் சென்று அனந்தன் மீது வீற்றிருக்கும் நாராயணனைத் தரிசிக்கிறார். தரிசித்தது மட்டுமல்ல தன் ஆத்மாவான அந்த நாரணனைக் கண்ணன் வணங்கினார் (வவந்த ஆத்மானம் அனந்தம் அச்யுத:) என்கிறது ஸ்ரீமத் பாகவதம் (10-89.58)

ஸத்யபாமாவும் பூமாதேவியும் ஒருவரேதான். இப்படியிருந்தும் நரகாஸுர வதத்தில் ஸத்யபாமை கண்ணனுக்கு உதவ, இவள் எதிரேயே நரகனின் அன்னையான பூமாதேவியும் தனியாக வந்து கண்ணனை வரம் கேட்கிறாள்!

ஆதிசங்கரர் கைலாஸத்தில் சிவபெருமானை வணங்கிப் பஞ்சலிங்கம் பெற்றார் என்பதால் அவர் அச் சிவனின் அவதாரம் அல்ல என்றாகிவிட்டதா என்ன?

வேறாயிருந்தும் ஒன்றியிருப்பதற்கு வெகு அருமையான இன்னொரு எடுத்துக்காட்டு. இதுவும் கண்ணன் கதையிலேயே இன்னொன்று. இந்திரனுக்குப் பூஜை போட வேண்டாம் என்று ஆயரைத் தடுத்து கோவர்த்தன கிரிக்கு வழிபாடு நடத்தச் சொன்ன கண்ணன், ஆயர்கள் அம்மலைக்குப் படையல் நடத்தியதும், தானே அம்மலைக்குள் ஒரு மகாரூபியாகி அதனை உண்டான். அதே சமயத்தில் ஆயர்களிடம், "மலையின் அபிமானி தேவதை நம் நைவேத்தியத்தை ஏற்றுக்கொள்வதைப் பாருங்கள். அவரை வணங்குங்கள்" என்று சொல்லி அவர்களைக் கும்பிட வைத்ததோடு தானுமே நமஸ்கரித்தான்!

எனவே ஒருவரே இருவராகும்போது அவ்விருவரிடையே நமக்குப் புரியாத தொடர்புகளெல்லாம் இருக்கின்றன. 'தொடர்பு' என்று ஒன்று இருப்பதால் இரண்டும் வேறு வேறு ஆகாது—ஷிர்டியும் பர்த்தியும் வெவ்வேறு ஆகாது—என்பதற்கு இந்த எடுத்துக்காட்டுக்கள் போதாவா?

* * *

ஸத்யாவை வெங்கப்பராஜு ஷிர்டி பக்தரான பெனுகொண்டா அதிகாரியிடம் அழைத்துச் சென்றதையும், அந்த அதிகாரி ஷிர்டி பாபா மறுபடி அவதரிக்கமாட்டார் என்று முடிவு கட்டிச் சொன்னதையும் வாசகர் மறந்திருக்கமாட்டார்கள். எக் காரணத்தினாலோ அன்றிலிருந்து இன்று வரை ஷிர்டி பக்தர் பலர் தமது இஷ்டமூர்த்தி மீளவும் நரவுடலில் வரமாட்டார் என்று சொல்லி வருகிறார்கள். ஆனால் இவர்கள் அனைவரும் போற்றி வணங்கும் பூஜ்யஸ்ரீ நரஸிம்ம ஸ்வாமியின் ஸாயி சரித்திரத்தில் நாம் காண்பதென்ன?

பகீர் ஷா எனப்படும் நந்த பாபா இருநூறாண்டுகளுக்கு முன் உடலை நீத்த ஒரு மகா ஸித்தர். இவர் மீர்ஜ்காமில் உள்ள தமது ஸமாதியில் ஆண்டுக்கொருமுறை தோன்றுவார். ஷிர்டி பாபாவே இப்படி ஒரு தரிசனம் காணக் குசபாவை அங்கு அனுப்பியிருக்கிறார். இந்தப் பகீர் ஷா, ஒரு சில ஆண்டுகளுக்கு முன்கூட (அதாவது நரஸிம்ம ஸ்வாமி ஷிர்டி சரிதம் எழுதிய சமயத்தில்) ஸமாதியில் தோன்றி, "ஸாயி பாபா இன்றும் உயிரோடுள்ளார்" எனக் கூறியிருக்கிறார். இதைக் குறிப்பிடும் நரஸிம்ம ஸ்வாமி, "ஆனால் ஆவியாகவா, அவதாரமாகவா என்று அவர் (பகீர் ஷா) சொல்லவில்லை" என்கிறார். ஆவியாக அத்தனை மஹாத்மாக்களுமேதான் இருக்கிறார்கள். அத்வைதப்படி பரம்பொருளிலேயே பிரிதறக் கரைந்திருக்கவேண்டிய ஆதி சங்கரர், ராம கிருஷ்ணர் போன்றோரும்கூட இன்றும் பல தேர்ந்த பக்தருக்கு ஸூக்ஷ்ம ரூபத்தில் தரிசனம் தரத்தான் செய்கின்றனர். எனவே ஷிர்டி பாபாவை மட்டும் ஆவியாக இருப்பதாகக் குறிப்பிட்டுச் சொல்வதில் பொருள் இல்லை. மறுபடி உடல் கொண்டு அவர் அவதரித்ததையே பகீர் ஷா மொழிந்திருக்கிறார் என்று சிறிது யோசித்தாலும் தெளிவாகிறது.

இதே நரஸிம்ம ஸ்வாமி நூலிலேயே இதற்கு அழுத்தமான ஆதாரமாக ஸாக்ஷாத் ஷிர்டிபதியின் ஒரு வாக்கு உள்ளது. பக்தரிடம் அவர் செப்புகிறார்: "நீங்கள் பிறப்பு—இறப்பிலிருந்து விடுபட விரும்புகிறீர்கள். ஆனால் நானே என்னளவில் இதிலிருந்து விடுபட முடியாது."*

இப்புத்தகத்தில் இன்னோரிடத்தில், "பாபா தமது பக்தர்களுக்கு ஜன்ம ஜன்மத்துக்கும் வழிகாட்டுவதாகத் திரும்பத் திரும்பப் பொறுப்பேற்றுக் கூறியிருக்கிறார்; இந்த நோக்கத்தின் பொருட்டு அவர்களுடனேயே பிறப்பதாக சத்தியம் செய்திருக்கிறார்"** எனக் காண்கிறது.

எனவே ஷிர்டிபாபா இப்போது அவதரித்துத்தானிருக்க வேண்டும். அவரே தாம் என்று கூறி, அவர் செய்த அநேகக் காரியங்களையே அச்சாகச் செய்யும் ஸத்ய ஸாயி அன்றி வேறு எவர்தான் இவ்வவதாரமாக இருக்க முடியும்? வேறெவரும் தம்மை ஷிர்டியவதாரமாகச் சொல்லிக்கொள்ளவும் இல்லையே!

* * *

ஷிர்டி பாபாவை மஹான் என்றும், இறையம்சம் என்றும் கொள்ளாமல் இறைவனின் அவதாரமே என்று தாராளமாகக் கருதலாம். ஷிர்டியும் இறையவதாரம், பர்த்தியும் இறையவதாரம் எனில், பர்த்தியை ஏன் ஷிர்டியவதாரம் என்று வேறு குறிப்பிட வேண்டும்? பகவதவதாரம் என்றாலே போதாதோ?

* "You want to escape from *Samsara* I cannot escape from it myself."

** Baba has repeatedly undertaken to guide his devotees, life after life promising to be *born* with them for that purpose.

Koviloor Digital Library

அவதார லீலையில் இது ஒரு விநோதம். ஈசன், திருமால், முருகன் யாவரும் ஒரே இறைவன்தான். ஆனாலும் ஆதி சங்கரரை ஈச்வராவதாரம் என்கிறோமேயன்றி திருமாலின் அவதார மாகவோ, முருகனின் அவதாரமாகவோ சொல்வதில்லை. இப்படியே தசாவதாரங்களைத் திருமாலின் அவதாரமாகத்தான் சொல்கிறோம். ஞான சம்பந்தரையும், ரமண மஹர்ஷிகளையும் முருக அவதாரம் என்றே கருதுகிறோம். இப்படியாக தெய்வங் களிலும் ஒரு தனித்துவம் இருக்கிறது. இத் தனித்தன்மை புலப் படுமாறு அவை வித்தியாசமான அவதாரங்களை மானுட உடல் கொண்டு எடுக்கின்றன. இவ் வவதாரங்களுக்கும் சில பல தனித் தன்மைகள் உள்ளன. இவ்வாறு தெய்வங்கள் மானுட உடலில் அவதரித்த பின், இந்த அவதாரங்களும் மறுபடி அவதரிக்கின் றன. இப்படி வந்த புது அவதாரம் இறைவனின் அவதாரமே எனினும் முந்தைய அவதாரம் ஒன்றின் தனித்துவம் இதில் தெரிகிறபோது இது அந்த அவதாரத்தின் அவதாரமே என்கிறோம். இப்படித்தான் வித்யாரண்யர்களையும், காஞ்சிப் பெரியவர்களையும் ஆதி சங்கராவதாரம் என்கிறோம்; ராமகிருஷ் ணரை கௌராங்கரின் அவதாரம் என்கிறோம்; ஷிர்டி ஸாயியையே கபீரின் அவதாரம் என்கிறோம்.

இவர்களில் கௌராங்கரைவிடவும் ராமகிருஷ்ணர் அதிகம் இறைமை பெற்றிருந்ததாகவும், கபீரைவிட ஷிர்டி ஸாயி நிச்சயம் அதிகத் தெய்வத்தன்மை பெற்றிருந்ததாகவும் சிலர் கருத இடமுண்டு. இப்போது ஓர் அம்சாவதாரமே மறுபடி பிறந்து மேலும் அதிக தெய்விக கலைகளைப் பெறுகிறது என்றும் தோன்றுகிறது. ஷிர்டி பாபாவின் அபார தெய்வத்தன்மைக்கு நூலாசிரியன் தலை வணங்கினாலும், பர்த்தியடியார் பலர், அகில லோக ரீதியில் இன்று பிரத்தியக்ஷ தெய்வமாக வணங்கப்படும் ஸத்ய ஸாயியும் இவ்வாறே ஷிர்டியின் பரிபக்குவ அவதாரம் என்று கருதினால் அதில் நியாயமுண்டு என்றே கொள்கிறான்.

நானா விதங்களில் சித்ர விசித்ர விநோத லீலை புரியும் பராசக்தி பாபாவாக வருகையில் ஓர் அற்புத ரஸகுல்லாவாக ஆகியிருக்கிறாள். ரஸகுல்லாவுக்குப் பால் வேண்டும், நெய் வேண்டும், ஜீரா வேண்டும். பாலான ஒரு தூய ஜீவான்மா, சம்ஸ்காரங்களால் மேலும் தூய்மை பெற்று, தன் நீர்த்த தன்மை நீங்கி உத்தம குணத்தில் இறுகிய கோவாவான ஸத்யநாராயண ராஜு என்ற மானுட உருக்கொள்கிறது. உணவுப் பொருள் களிலேயே பால்தான் தலைசிறந்தது எனினும், அதிலும் துளி கடுப்பான 'லாக்டிக் ஆஸிட்' இருக்கத்தானே செய்கிறது? இந்த 'ஆஸிட்'தான் பாபாவின் மானுடக் குறைபாடுகள். பாலில் ஆஸிட் இருந்தாலும், ஆஸிட்டால் உண்டாகும் அல்ஸருக்குப் பால்தானே மருந்து? அப்படியே பாபா நமக்கு நல் மருந்துதான்.

சிறிய குறைபாடுகளே இந்தப் புனித ஜீவனில் உள்ளனவே யன்றி, பெரிய ஊனங்கள் அல்ல. பாலில் காரம் மிகக் குறைந்த லாக்டிக் ஆஸிட்தான் இருக்க முடியுமே யன்றி, சற்று அதிகக் காரம் கொண்ட ஓர் ஆஸிட் துளி அதில் சொட்டினாலும் பாலே திரிந்துவிடும்!

Koviloor Digital Library

ஸத்ய நாராயணாத் திரட்டுப் பாற்குன்று ஷிர்டி பாபா என்ற நெய்யில் பக்குவமானது. பாலும் நெய்யும் மூலத்தில் ஒன்றேதானே? திரட்டுப் பாலே தன்னுள் உள்ள நெய்யைக் கக்குகிறதே! அதி உத்தம ஸம்ஸ்காரங்களால் பாலில் கடைந்தெடுத்த நெய்யாக ஆனவர் ஷிர்டிபாபா. பால் இனிக்கிறது. அந்த இனிமையே தெய்வத்தன்மை. நெய்யிலோ தெய்விக மாதுரியம் இன்னமும் இறுகி அடர்ந்திருக்கிறது. மஹாசக்திகள் வாய்க்கப்பெற்ற ஷிர்டி பாபா தம்முள் தெய்வத் தன்மை என்னும் இனிமையை வெகு அழுத்தமாகவே உணர்ந்து, அதைப் பேராற்றலோடு வெளிப்படுத்திக் கொண்டும் இருந்தாரன்றோ? ஷிர்டி நெய்யை நன்கு உறிஞ்சிக்கொண்டு பக்குவமானது ஸத்ய நாராயண கோவா.

அதோடு முழு முழு இனிமையே ஆன ஜீராவில் முழுகி, ஊறி, அதனுள் தன் ஒவ்வோர் அணுவையும் நிரப்பிக்கொண்டு ரஸ ப்லாவாகி உள்ளது. இந்தப் பரிபூர்ண இனிப்பான ஜீராதான் இறைவன் என்னும் அகிலாண்ட மஹாசக்தி.

வெறும் தங்கத்தால் நகை செய்ய முடியாது என்பதே போல் வெறும் ஜீராவைக் குடிக்க முடிவதில்லை. எனவேதான் அந்த ஜீரா ஒரு பால் குன்றை நெய்யிலே பக்குவமாக்கி அதற்குள் புரை புரைத் துருப்பி நிறைகிறது. ''ரஸோ வை ஸ:'' என்று வேதம் போற்றும் அன்பு ரஸத்தால், ஆற்றல் ரஸத்தால், அறிவு ரஸத்தால் ஆனதே ஸத்யஸாயி ரஸகோளம்.

சீனிப் பாகாம் கடவுளில் பூர்ணமாக ஊறிய வியக்திதான். ஆனாலும் தனியே சிறிது பால் மணம், ருசி தெரியும்; நெய் மணம், ருசியும் விசேஷ். ஸத்யஸாயி அனைத்துக் கடவுளுமான மூலத்தில் பூரிதமானவர் எனினும், ஸத்ய நாராயணராஜுவின் மானுடத் தனித்தன்மை, ஷிர்டி பாபாவின் மானுட—தெய்விகத் தனித்தன்மை ஆகியனவும் இவரில் தெற்றென வெளிப்படத்தான் செய்கின்றன. இப்படிப் பால் சுவை, நெய்ச் சுவை இருப்பதே ஜீராவின் ருசியை நாம் திகட்டாமல் சுவைக்க உதவுகிறது — சிறிய குணவீனங்கள் துன்பியல் கதாநாயகனை ரஸிகருக்கு மேலும் நெருக்கமாக்குவதே போல்.

அப்பட்ட ஜீராவாக இல்லையே என்று வருந்திப் பயனில்லை. அதை நாம் இப்படி அள்ளி அள்ளிப் பருக முடியாது. ஸர்வாத்வ ஜீராவில் நிறைத்துத் ததும்பிக்கொண்டு, தொட்ட இடமெல்லாம் அந்த திவ்விய ரஸத்தைப் பொழியும் ஸத்ய ஸாயி அவதாரத்துக்கு மேல் ஒன்றை இந்த பூலோகம் தாங்க முடியாது — அதை எதிர்பார்ப்பதில் பயனுமில்லை.

பாலிலேயே உள்ள இனிப்பாகப் பிறக்கு முன்பே சிறிது தெய்விக குணங்களைக் காட்டினார்—தானாக முழங்கிய மத்தளத்தில், தானே ரீங்கரித்த தம்புராவில். முதலில் ஷிர்டி நெய்யும், இந்த கோவாவும் சிறிது வேறு போலவே காட்டினார்—தாத்தாவும்

Koyiloor Digital Library

பேரனுமாகக் காட்டினார். அப்புறம் நெய் முழுதையும் கோவா கோளம் உறிஞ்சிக் கொண்டது. ஸாயி பாபாவே ஆனார். ஆனாலும், நெய்யில் கோவா உருவிழந்து கரையாதது போலவே, ஸத்ய நாராயண தனித்தன்மையும் நீடித்தது. அதே போதில் ஷிர்டியின் திவ்விய மாதுரியமும் சமத்கார சாதுரியமும் ஓங்கி வெளிப்பட்டன. பிறகு அசல் திவ்விய ஜீராவிலேயே முழுகி, குறைவேயில்லாமல் இறைவனின் பேராற்றலையும் பெருங்கருணையையும் அனவரதமும் பெருக்கத் தொடங்கிவிட்டது. இப்போதும் ஜீராவில் நெய்மயமான பால் கோளம் கரைந்து விடவில்லை தான்! இப்படிக் கரையக் கூடாது என்றே இறைவன் அவதாரத்துக்குக் கரை கட்டியிருப்பதால் அதற்காக நாம் வருந்த வேண்டியதுமில்லை.

இந்த அவதாரத்திடம் பெறுவதற்கு அதிகமான எந்த ஆனந்தத்தையும் நாம் மூலப் பரம்பொருளிடம் பெற முடியாது என்று தெளிந்து திருப்தராக இருப்போம்!

* * *

சரி, ஒரு கேள்வி மீதமிருக்கிறதே! 'தர்ம ஸம்ஸ்தாபனம்'' என்பதுதானே அவதாரங்களின் உத்தேசம்? அது செம்மையாக நடக்காதபோது ஒருவரை அவதாரம் என்பது எப்படிச் சரியாகும்? உலகெங்கும் தலைவிரித்தாடும் கலியை மாற்றுவதில் பாபாவின் பல்லாண்டுப் பணி சிறிதளவுதானே சாதித்திருப்பதாகத் தெரிகிறது?

இதற்கு முந்தைய மஹாவதாரமான கண்ணனுக்கே திரும்புவோம். 'தர்ம ஸம்ஸ்தாபனத்தின் பொருட்டே அவதரிக்கிறேன்' என்று கூறியவனே அவன்தானே? கண்ணன் பிறந்த காலத்தில் உலகில் நிச்சயமாக இன்றளவு ஒழுங்கீனம் இல்லை. அது கலியல்லவே! துவாபர யுக முடிவுதானே? அப்போது தர்மவிரோதிகளான கம்ஸ பட்டாள அரக்கரை முதலில் அழித்தான். உடனே உலகம் முழுதும் தர்மம் வேரூன்றிவிட்டதா? இல்லை. மானுடராகப் பிறந்த கௌரவரே அரக்கராகக் கிளம்பினார்கள். அவர்களையும் சம்ஹாரத்தின் மூலமே அழித்துக்கட்ட வேண்டியதாயிற்று. அதோடாவது தர்மம் நன்கு ஸ்தாபிதமாயிற்றா? இல்லை. சாக்ஷாத் பரமாத்மா அவதரித்த யது குலத்திலேயே பூசலும் பிணக்கும் முற்றி அவர்கள் தங்களைத் தாங்களே கூண்டோடு, பூண்டோடு நாசமாக்கிக் கொண்டார்கள். கண்ணனும் அவதார சரித்திரத்தை முடித்துவிட்டுத் திரும்பினான். பின்னாவது தர்மம் தழைத்ததா? அதுவுமில்லை. ஐயன் பரமபதம் எய்திய உடனேயே கலி புருஷன் தனது கைவரிசையைத் தொடங்கி விட்டான். ஸாயிபாபாவை நிலைநாட்டுவதற்காக ஆசிரியன் கண்ணனை 'இறக்குவதாக' எவரும் எண்ணவேண்டாம். கண்ணன் 'பூர்ணப் பிரம்ம ஸநாதனன்' என்பதில் இவனுக்கு எள்ளளவும் ஐயமில்லை. அவனது திவ்யப் பிரேமைக்கும் திவ்ய சக்திக்கும் ஈடிணை இல்லை என்பதில் உறுதி பெற்றவன்தான். ஆனாலும் தர்ம ஸம்ஸ்தாபனம் என்பதை மட்டும் கருத்தில் கொண்டு நடுநிலையில்

Koviloor Digital Library

அபேக்ஷியுங்கள்: குருவம்சம் யதுவம்சம் இரண்டையும் அழித்து பூபாரம் தீர்த்ததுதானே கண்ணனின் பெரிய அவதார காரியமாக இருந்திருக்கிறது? அவதாரம் முடிந்த கையோடு கலி ஆதிக்கம் பெற்று விடுகிறான். இது எப்படி அறத்தை நிலை நாட்டியதாகும்?

இங்கே நாராயணாவதாரமான ராமன், முருக அவதாரமான குமாரில பட்டர், ஈச்வராவதாரமான சங்கர பகவத்பாதர் ஆகியவர்களைப் பற்றி உபந்நியஸிக்கும்போது ஸ்ரீ காமகோடி பெரியவாள் அவதார காரியம் பற்றிக் கூறியன நம்மைத் தெளிவிக்கின்றன. "தர்ம ஸம்ஸ்தாபனம் பண்ணுவது என்றால் பகவான் என்ன, ராஜாங்கம் மாதிரிச் சட்டம் போட்டு, எல்லோரும் தர்மத்தைத்தான் பண்ண வேண்டும்; இல்லாவிட்டால் சிக்ஷை உண்டு என்று வலுக்கட்டாயமாக "லா" செய்வாரா? இல்லை. அவரவர்களும் தர்மம்தான் நல்லது என்று தாமாக உணர்ந்து, பிரியப்பட்டு தர்ம மார்க்கத்தில் போகிற மாதிரி தான் பகவானே அவதாரமாக வந்து உபதேசம் பண்ணுவான். 'உபதேசம்' என்றால் கீதை மாதிரி வாயால் சொல்கிறது மட்டுமில்லை. தானே தர்மங்களையெல்லாம் அப்பழுக்கில்லாமல் தன் சொந்த வாழ்க்கையில் அநுஷ்டித்துக் காட்டுவான். தானே எல்லார் மனஸிலும் புகுந்து மாற்றிவிட மாட்டான். அப்படி அவனே எல்லாவற்றையும் செய்வதென்றால், அதைவிட ஸ்ருஷ்டியிலேயே வேண்டாமே! எப்போது ஸ்ருஷ்டி என்று ஜனங்களைக் கொஞ்சம் வேறே மாதிரி, தனியாக அவிழ்த்து விட்டிருக்கிறானோ, அப்போது அவர்களாகவே தங்கள் தனி மனஸினால் பிரியப்பட்டு ஒன்றைச் செய்ய விடுவதுதான் சரி, தான் மனஸில் புகுந்து எல்லாவற்றையும் மாற்றிவிடக் கூடாது என்கிற மாதிரிதான் அவதாரங்களில் நடந்து கொள்கிறான். ஜனங்கள் தாங்களாக நல்ல வழிக்கு வருவதற்குத்தான் பரமாத்மா அவதாரமாக வந்து, அநேக லீலைகள் செய்கிறான்; தர்மங்களைத் தானே நடத்திக் காட்டுகிறான்; ஞானோபதேசங்கள் செய்கிறான். அந்த வழியில் உலகம் போவதும் போகாததும் உலகத்தின் காரியமே யொழிய அவதாரத்தின் காரியம் இல்லை. ஆசார்யாளுக்கு (ஸ்ரீ சங்கர பகவத் பாதருக்கு) முற்பட்ட காலங்களில் திருத்தவே முடியாத அசுரப் பிரகிருதிகள் இருந்தபோது, அவதாரமாக வந்தவர்கள் அவர்களை ஸம்ஹாரம் பண்ணினார்கள்"—என்றெல்லாம் காமகோடி அருள்வாக்குகளிலிருந்து பெறுகிறோம்.

ஆக, மக்களாக அறவாழ்வை விரும்பித் தழுவ எவ்வளவு வழி செய்ய முடியுமோ, எத்தனை ஊக்கம் தரமுடியுமோ அவ்வளவையும் செய்வதுதான் கீதையில் பகவான் சொன்ன தர்ம ஸம்ஸ்தாபனம் எனலாம். அவதாரம் அருமையான விருந்து சமைத்துப் பரிமாறுகிறது. அதை எடுத்து உண்ண வேண்டியது உலகின் காரியந்தான்.

எந்த அவதார புருஷர்களின் சாதனையைப் பார்த்தாலும் இவர்கள் மக்களில் நூறு சதவிகிதமும் அறத்தை ஏற்குமாறு செய்யவில்லை என்றே காண்போம். அதே சமயத்தில், இவர்கள்

Koviloor Digital Library

அவதரித்திராவிடில் உலகில் ஒரு சதவீதங்கூட அறம் இல்லாமலே அழிந்திருக்கும் என்றும், இவர்களது அவதாரத்தால்தான் இந்தப் பேர் உத்பாதம் நிகழாமல் காக்கப்பட்டது என்றும் தெளிவோம். இவர்கள் பிறரின் வாழ்விலெல்லாம் தர்மத்தை நிலைநாட்டா விடினும், தம் வாழ்வாலும் உபதேசத்தாலும் அறத்தையே தழுவி நின்றதால்தான், பொதுவாக தர்மம் என்றால் என்ன என்றே அவ்வப்போதும் ஒரு தத்துவமாகவாவது எடுத்துக்காட்டுவதற்கான அஸ்திவாரம் உலகில் நின்றிருக்கிறது. ஸத்யஸாயி அவதாரமும், இவ்வகையிலேயே, அது நிகழாவிடில் இன்றைவிட எத்தகைய கோர அதர்மம் தலைவிரித்தாடியிருக்கும் என்ற அநுமானத்தினாலேயே தனது அவதாரத்துவத்தைப் பெறுகிறது.

'பாகவதம்' என்ற தன் வாழ்க்கை, 'பகவத்கீதை' என்ற உபதேசம் இவற்றை தர்மஸம்ஸ்தாபனத்துக்காகத் தந்ததிலேயே கண்ணன் அவதார லக்ஷியத்தைப் பூர்த்தி செய்து விட்டான். மக்கள் விரும்பி அறத்தை ஏற்க பாகவதத்தையும் கீதையையும் விட உன்னதத் தூண்டுகோலும் உண்டா?

ஸத்ய ஸாயியும் தமது வாழ்வினால் தெய்வ மா சக்தியை, திவ்விய மாக் கருணையை, நல்லறங்களை நாளும் பொலிவித்துக் கொண்டுதான் இருக்கிறார். உபதேசம் என்று எடுத்துக்கொண்டாலோ அத்வைதத்தைப் பகருகையில் சங்கரரும் ரமணருமாக இருக்கிறார்; பக்தியைப் புகலுகையில் ராமாநுஜரும் சைதன்யருமாக இருக்கிறார்; நன்னெறிகளை இயம்புகையில் மனுவும் திருவள்ளுவருமாக இருக்கிறார். எல்லாவற்றுக்கும் மேலாக, தர்மத்தின் பரம ஆதாரமான அன்பைச் சொல்கையிலோ, சாக்ஷாத் ஸத்ய ஸாயிநாதனும் பிரேம ஸ்வரூபமாகவே இருக்கிறார். அவரது ஜீவிதத்தையும் உபதேசத்தைவிடச் சக்திகரமாக தர்ம ஸ்தாபனத்துக்கு வேறென்ன செய்ய முடியும்? ஸாயிமாதா சமைத்து வைத்துள்ள தார்மிக விருந்து கமகமத்து, 'என்னை உண்ணு, உன்னு' என்று அழைக்கிறது. அப்படியும் உலகம் மறுத்தால் அது யார் பிழை?

இன்னொன்றும் கவனிக்கவேண்டும். அதாவது இவ் அவதாரத்தில் சம்ஹாரத்தின் மூலம் தர்மத்தை நிலைநாட்ட இடம் இல்லை. திரேதாயுகத்தில் பெருவாரி மக்கள் தாமாகவே அறவழிதான் நின்றனர். அரக்கர் என்ற தனி இனம் மட்டும் அதர்மத்தில் இறங்கியிருந்தனர். அப்போது அவதரித்த ஸ்ரீராமன் அரக்கரை சம்ஹரித்த மாத்திரத்தில் தானாக தர்ம ஸம்ஸ்தாபனமும் ஏற்பட்டு விட்டது. இன்றோ ஒழுங்கீனத்துக்காக சம்ஹாரம் என இறங்கினால் மக்கட்குலம் முழுதையுமே அழிக்கும்படி அல்லவா ஆகும்? எனவே அழிவின் மூலமன்றி, அறிவின் மூலம் மக்களை மாற்றுவதே இன்றைய அவதாரத்தின் பணியாகிறது. அழிப்பதைவிட மாற்றுவது, அதுவும் மாற்றப்படும் பொருள் தானே மனமுவந்து மாறுமாறு செய்வது, மிக மிக மிகக் கடினம் அல்லவோ? இதை நோக்குமிடத்து, இன்று உலகில் எத்தனை பாபங்கள் அதிகமாயினும், மறுபுறம் சகல தேசங்களிலும்

ஏராளமானவரைக் கூட்டங்கூட்டமாக ஓரளவேனும் திவ்ய வாழ்வின் திசை நோக்கித் திருப்பிவரும் ஸாயி சக்தியை அவதாரம் என்று நம்பிக் கொண்டு போற்றுவதில் தவறென்ன?

“உலகம் முழுதையும் திருத்தி விடுவேன்” என்று இவர் சொல்லியிருப்பாரேயெனில், இங்கும் காஞ்சி முனிவரின் ஓர் அருள்வாக்கு கை கொடுக்கிறது. “ஒருத்தருடைய வழி நல்லது என்று எடுத்துக் கொண்டு யாரார் அதற்குத் திரும்ப முடியுமோ அவர்கள் தான் அந்த ஒருத்தரைப் பொறுத்தமட்டில் லோகம் முழுதும் ஆவார்கள்” என்பார் அவர்.

ஒரு பிராந்தியத்திலோ, ஒரு தேசத்திலோ மட்டுமின்றி லோகம் முழுதும் ஸாயி சரிதமும் உபதேசமும் பரவி விட்டன அல்லவா? இதுதான் இவர் செய்யக்கூடிய அகில உலக தர்ம ஸம்ஸ்தாபனம். இனி இவ்வனைத்து நாட்டு மக்களும் தாமாக அதை ஏற்காவிடில் தோஷம் அவரைச் சாராது.

யார் கண்டார்கள்? வெகு விரைவில் இன்றைய வீம்புச் சந்தேகக்காரர்களும் திறந்த மனத்தோடு ஸாயியை ஆராய்ந்து, பக்தர்களாக ஆனாலும் ஆகலாம். (தற்போதே பழைய தீவிர எதிர்ப்பாளர்களான “ப்ளிட்ஸ்” ஸ்ரீ கரஞ்ஜியா போன்றவர்கள் ஸ்வாமியிடம் பக்தியில் கரையத் தொடங்கியுள்ளனரே). இதன் விளைவாக, கூடிய சீக்கிரமே உலகம் முழுதும் ஆத்மிக அறநெறிகளில் திரும்பினாலும் திரும்பக் கூடும். ஸ்வாமி கூறுவதுபோல் நிஜமாகவே அகில உலக தர்மஸம்ஸ்தாபனம் நிகழ்ந்தாலும் நிகழலாம். நாற்பத்தைந்தாண்டுகளுக்கு முன் ஸ்ரீ காஞ்சிப் பெரியவாள், ஸ்ரீ பால் ப்ரண்டனிடம் சர்வ நிச்சயத்துடன் கூறியதைக் கேளுங்கள்:

“தேசங்களிடையே உள்ள சண்டைக் கொந்தளிப்பு, மக்களின் நெறிச் சிதைவு, கோடாநுகோடியரின் பிணிகள் ஆகியவையே சேர்ந்து, இவற்றின் எதிர் விளைவாகத் தெய்வ சக்தியின் மகத்தான உந்தல் பெற்ற ஒரு ரக்ஷகன் தோன்றத் தூண்டுகோலாக அமையும்.

“இது பௌதிக விதிபோல் தவறாமல் நிகழ்வதாகும். ஆன்மிக அஞ்ஞானத்தாலும் உலகாயதத்தாலும் ஏற்பட்டுள்ள சீரழிவு எவ்வளவுக்கெவ்வளவு வலுவாக உள்ளதோ, அவ்வளவுக்கவ்வளவு மகிமை வாய்ந்த ஒருவர் தோன்றி உலகு உயர உதவி புரிவார். இந்த நூற்றாண்டிலேயே அவர் தோன்றுவார். நிச்சயம் தோன்றுவார். ஏனெனில் அப்படிப்பட்டவர் இன்றைய உலகுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறார். இன்று ஏற்பட்டுள்ள ஆன்மிக இருளின் தடிப்பைப் பார்த்தால், நிச்சயமாக தெய்விக உந்தல் பெற்ற அந்த ரக்ஷகர் வெளிப்பட்டே ஆகவேண்டும்.”

காஞ்சி முனி இப்படிச் சொன்னபோது ஸத்யா ஆறு வயசுக் குழந்தை.

Koviloor Digital Library

லௌகிக சுகத்தில் இனி மீதமே இல்லை என அநன் உச்சியைப் பிடிக்கும் நிலை நெருங்கிவிட்டது. ஆனால் இந்த உச்சியினாலும் நிரந்தர இன்பம் இல்லை என்று இன்று 'முன்னேறிய' நாடுகள் நிதர்சனமாகக் கண்டுதான், ஒன்று ட்ரான்க்விலைஸரையோ அல்லது ஆத்மசாதனையையோ நாடத் தொடங்கியிருக்கின்றன. ட்ரான்க்விலைஸரிலும் நிரந்தர இன்பம் இல்லை எனக் கண்டு விரைவிலேயே மேல்நாடுகள் மளமளவென்று ஆத்மிகத்துக்குச் சாய, அதைக் கண்டே 'பின் தங்கிய' நாடுகளும் இவ்வழிக்குத் திரும்பலாம். ஸத்ய ஸாயி வாக்கு ஸத்தியமே ஆகலாம். அதற்குள் அவசரப்பட்டு தர்ம ஸம்ஸ்தாபனமென்பது சாத்தியமே அல்ல என்று ஏன் முடிவு கட்ட வேண்டும்?

'அதர்மம் தலைவிரித்தாடும் போதெல்லாம் நான் அவதரிக்கிறேன்' என்ற பகவானின் வாக்கை நம்பும் ஆஸ்திகர் நாம் எனில், இன்று உலகுள்ள நிலையில் அவன் அவதரித்தே இருப்பான் என்று ஒப்ப வேண்டியதே! இன்று நாம் காணும் மகாபுருஷர்களில் பலர் அவனது அவதாரமே. அவர்களில் சர்வ தேசங்களிலும் பல்லோரால் தெய்வமாக பூஜிக்கப்படுபவரும், தம்மைத் தாமே அவதாரமாகச் சொல்லிக் கொள்பவருமான பாபா அதி முக்கியமான ஒருவர் எனக் கொள்வதில் தடை என்ன?

* * *

''இன்று உலகில் உள்ள மஹாபுருஷர்களில் பலர் ஏன் பாபாவை அவதார புருஷராகச் சொல்லவில்லை?'' என்று ஒரு கேள்வி கேட்கிறார்கள்.

ஸ்ரீலஸ்ரீ ஞானாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்வாமி சிவாநந்த ஸரஸ்வதி, ஸ்ரீ ரமணரிடமிருந்த ஸ்வாமி அபேதாநந்தர், அமிருதாநந்த ஸ்வாமி மற்றும் ஸ்ரீ ஸச்சிதாநந்தர், ஸ்ரீ காருண்யாநந்தர், ஸ்ரீ சின்மயாநந்தா, இன்றைய மத்வ பீட ஆசார்யர்களான ஸ்ரீ பேஜாவர் ஸ்வாமிகள்—ஸ்ரீ பாலிமார் ஸ்வாமிகள்—ஸ்ரீ கிருஷ்ணாபூர் ஸ்வாமிகள் ஆகியோர் ஆத்மிக உலகில் பெரும் புள்ளிகள் அன்றோ? இவர்கள் நம் ''பிரசாகின்காரர்''ிடம் பெரு மதிப்புக் கொண்டவராயிற்றே! 'இது போதாது, அவதாரங்களாகவே எண்ணப்படும் காஞ்சிப் பெரியவாள், மா ஆனந்தமயீ போன்றவர்கள் இவரைத் தெய்வமாக ஏன் பிரகடனம் செய்யவில்லை?' என்கிறார்கள்.

இது அசட்டுக் கேள்வி.

அந்த தெய்விக வியக்திகள் அப்படிச் சொல்லிவிட்டால் அவர்களது அவதார நோக்கமே நையத் தொடங்கும். பல்வேறு விதமானவர்களை உய்யும் நெறி சேர்க்கவே பரம்பொருள் பாபாவாகவும் மற்ற திவ்ய வியக்திகளாகவும் வந்திருக்கிறது. ஒவ்வொரு ரூபத்தால் ஒவ்வொரு கூட்டத்தைக் கவர்ந்திருக்கிறது. மற்ற தெய்வ புருஷர்களும் பாபாவை அவதாரம் என்று கூறினால் அவர்களது பக்தர்களும் அவர்களை விட்டு பாபாவிடமே சாய்வர்.

Koviloor Digital Library

இதனால் அவர்களது அவதார லக்ஷியமே விளைகும். 'அதனா லென்ன, அனைவரும் உய்வு பெறவேண்டியதுதானே இறைவனின் நோக்கம்? இதை பாபாவே செய்து விட்டுமே' என்கிறீர்களா? அதுதானில்லை. முதலாவதாக, இப்போதே பிரசாந்தி நிலையத் தில் பக்தர்களைச் சமாளிக்க முடியாமலிருக்கிறதெனில், மற்ற மகான்களும் ஒப்பிய மஹா அவதாரமாக இவர் ஆகிவிட்டால், அப்போது பௌதிகத்தில் அடியார் கூட்டத்துக்கு ஈடுகொடுக்கவே முடியாமல் தான் ஆகும். இப்போதே ஸ்தூல ஸாயி கால தேச வர்த்தமானங்களுக்கு உட்பட்டுப் பலரை வெளிப்படக் கவனிக்க வில்லை. இவ்வாறு கவனம் பெறுதாரின் கூட்டம் பன்மடங்காகப் பெருகும். அதோடு, 'முன் நாம் ஆசிரயித்த திவ்ய புருஷரிடம், எப்பேர்ப்பட்ட கவனத்தைப் பெற்றோம்? அதை இழந்தோமே!' என்று இவர்கள் குமுறும்படியாகும். இதற்கெல்லாம் மேலாக, மக்களின் மனோபாவ மாறுபாட்டை உத்தேசித்துத்தானே பல்வேறு மகான்கள் தோன்றியுள்ளனர்? அவர்களே இவரை அவதாரர் என்றுகூட, தனி மனித வேலைத்தனம் லேசில் ஓயாதாகை யால், அவர்களது அடியார்கள் இவரை ஆசிரயிக்க எண்ணிய பின்னரும் நெஞ்சில் ஓர் அடைப்பான் குறுக்கிடத்தான் செய்யும். இருதய பூர்வமாக அவர்கள் இங்கே குழைய முடியாமல் தத்தளிப் பார்கள். சில மனோ பாவத்தினருக்கு பாபா அவதாரம் ஒத்து வராது என்பதை பாபாவே ஒப்புக்கொண்டிருக்கிறார்.

உதாரணமாக,

நா....ஸ்வாமி என்ற ஒருவர் இந்த ஸாயி உருவை வழிபட லாகாதென்றும், மஹாராஷ்டிரத்தில் ரத்னகிரியிலுள்ள தத்தரை உபாஸித்துத்தான் அவர் உய்வு பெறமுடியும் என்றும் பாபாவே கூறி அவரை அங்கு அனுப்பிவைத்தார். பல காலம் சென்று அவர் பாபாவிடம் ஒரு முறை வந்தபோதும், ''ஏன் வந்தாய்? போ போ'' என்று மூட்டை கட்டி அனுப்பியிருக்கிறார்.

வெள்ளையர் ஒருவரிடம், ''உன் குரு பெங்களூரில் அல்லவா இருக்கிறார்?'' என்று சொல்லி, அப்போது பெங்களூரில் இருந்த மஹேஷ் யோகியிடம் அவரை அனுப்பினார் நம் ஸ்வாமி. ஆகவே,

அவரவர் தமதம தறிவறி வகை வகை
அவரவர் இறையவர்

என்றுதான் இருக்குமேயன்றி, சகட்டுமேனியாக அனைவருக்கும் ஒருவரே குருவாகவோ தெய்வமாகவோ இருக்க முடியாது. இக் காரணம் பற்றியே இக் குரவர்களும், தெய்வ புருஷர்களும் பற்ற நிகழ்கால அவதாரங்களைக் குறிப்பிட்டுக் குழப்பம் செய்வதற்குமில்லை.

ரமணர், அரவிந்தர், மா ஆனந்த மயி, காஞ்சி முனிவர் ஆகியோர் சம காலத்தவராக இருந்தும் இவர்களில் ஒருவர் மற்றவரைப் பற்றி பிரகடனம் செய்யாததால், இவர்களில் எவரேனும் மகிமையற்றவர் என்று ஆகுமா? அல்லது அவர்களுக் குப் பரஸ்பரம் மற்றவர் மகிமை தெரியாது என்றுதான் ஆகுமா?

Koviloor Digital Library

தத்தம் அடியாரை திசை திருப்பித் திண்டாட வைக்காதிருக்கவே அவர்கள் பிற மஹானின் பிரபாவத்தைப் பிரகடனம் செய்யாதிருந்தது.

அவரவர் கர்மாப்படி குரு, இஷ்டதேவதை அமைகிறது. சிலருக்கு முதலில் ஒன்றிருந்து பிறகு மாறலாம். சிலருக்கு மாறாமலே புதிதாக ஒன்றும் சேருகிறது. மகானான நரஸிம்ம ஸ்வாமி ரமணரை விட்டு ஷிர்டி பாபாவிடம் சென்றார். இதனால் ரமணருக்கும் சரி, நரஸிம்ம ஸ்வாமிக்கும் சரி தாழ்வு கற்பிப்பதற்கில்லை. நரஸிம்ம ஸ்வாமியின் கர்மா அப்படி இருந்திருக்கிறது. ஒரே சமயத்தில் ஸ்ரீ கோபிநாத் கவிராஜை ஞான சக்தியாகவும், ஸத்ய ஸாயியைப் பிரேம சக்தியாகவும் தாம் உணர்ந்து உபாஸிப்பதாக வர்ஜீனியாவைச் சேர்ந்த ஆர்லின் கூறினார். இவ்வாசிரியன் விஷயத்திலேயே முதலில் பெரியவாள், பிறகு அவரோடு ஸத்ய ஸாயி என்று சேர்ந்திருக்கிறது.

ஆக ஒருவரே உலகுக்கெல்லாம் உத்தாரமாகத் தெரிய வேண்டும் என்று கிடையாது.

மற்ற மகான்கள், அவதார புருஷர்கள் பாபாவை அவதாரமாகச் சொல்ல வேண்டியதில்லை என்பதோடு, அவர்களே அவரை அவதாரமாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்பதுகூட இல்லை. பரசுராமனே அவதாரமாக இருந்தும் ராமனை அவதாரமாகப் புரிந்துகொள்ளவில்லை என்பதோடு நில்லாமல் அவனிடம் யுத்தத்துக்கே வந்தாரல்லவா? பலராமனே அவதாரம் என்பதோடு, அண்ணனாகவே இருந்துங்கூடக் கண்ணனைப் புரிந்து கொள்ளாமல் பல சமயங்களில் பிணங்கினாரே! மகரிஷிகள் தண்டகாரண்யத்தில் ராமனை அடைந்த பின்னும் தத்தம் உபாஸனைகளைத்தான் தொடர்ந்தனரேயன்றி ராமனையே முழு முதற்தெய்வமாக உபாஸிக்கவில்லையே! கண்ணன் அர்ஜுனனோடு சஞ்சரிக்கையில் காட்டிய அநேக மகாபுருஷர்களும் யோகம், பாசுபதம், பாஞ்சராத்ரம் முதலான தங்கள் மார்க்கங்களையே தொடர்ந்தனரே அன்றிக் கண்ணன் வழிபாட்டைத் தொடங்கிவிடவில்லை.

தடுமாறும் பக்தர்கள் இதையெல்லாம் கருத்தில் கொண்டால், மற்ற மகான்கள் ஸ்வாமியைப் பிரகடனப்படுத்தாததோ, சில சமயத்துறைப் பெரியார்கள் அவரைக் கண்டனம் செய்வதோகூட அவரது அவதாரத்வத்தை நிராகரித்துவிடாது என்று விளங்கிக்கொள்ள முடியும்.

அவதாரங்களே பரஸ்பரம் தம்மைப் புரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை, அவை ஒன்றையொன்று பகைத்துக் கொள்ளவும் செய்யலாம் என்னும்போது அவதார மர்மம் நம்மை விலவிலக்கவே செய்கிறது! எனவே நாம் மட்டும் எப்படி அப் புதிரை முற்றிலும் பிரித்து விளக்கம் காண இயலும்?

இங்கு நூலாசிரியன் கூறிய ரஸகுல்லா கூட பாபாவின் க்ஷோபணங்களில் ஒன்றாகவே இருக்கலாம். கொஞ்சம் தனித்

Koviloor Digital Library

தவியாக ஸத்யா, ஷிர்டி பாபா, பராசக்தி என்ற மூன்று தம்மில் இருப்பதாகவும் அவர் நாடகமாடிக் குழப்புகிருரோ என்னவோ? வாஸ்தவத்தில் பராசக்தியே முன் ஷிர்டியில் தோன்றி மஹா ஸித்தராக நடித்திருக்கலாம். பிறகு, மானுட ஜீவனுக பூர்வ கர்மா கொண்ட இன்ஞெருவரை ஸத்யாவில் ஷிர்டீசர் ஆவிர் பவித்தார் என்பதின்றி, ஷிர்டீசரே ஸத்யாவாகத் தோன்றியிருக்க லாம். ஆனாலும் அதில் வேறொரு தனி மனித ஜீவனின் அம்சங்கள் இருப்பது போலவும் நடித்திருக்கலாம். பாரம்பரிய குணம், பிரதேச இயல்பு என்று காட்டியதெல்லாமும் திட்டமிட்ட வேஷமாகவே இருக்கக்கூடும். (தசரதனின் சம்பந்தமின்றித் தெய்விக பாயஸத்தாலேயே கௌஸல்யா தேவி கருக்கொண்டு ஸ்ரீராமனை ஈந்ததாகத்தான் ராமாயணத்திலிருந்து தோன்றுகிறது. ஆனால் ஸ்ரீராமன் தசரதனின் தோற்றச் சாயலைப் பெற்றிருந் திருக்கிறனே! இது பாரம்பரியம் போலப் போட்ட வேஷம் தானே?)

நம் ஸ்வாமி, ஷிர்டி ஸாயிக்கு வேருகத் தமக்கு ஒரு தனித்துவம் இருப்பதாகச் சொல்வதே இல்லை. ஷிர்டி ஸாயியே அசலாக இப்போது ஸத்ய ஸாயியாக வந்திருப்பதாகவும், மறுபடி இந்த அவதாரம் முடிந்தவுடன் பிரேம ஸாயியாக வரப்போவ தாகவுந்தான் கூறுகிருர்.

இவ் வவதாரம் முடிந்த உடனேயே இன்னேர் அவதாரம் எனில், அந்தப் பிரேமஸாயி அவதாரத்தின்போதுதான் லோகம் முழுதும் தர்ம ஸம்ஸ்தாபனம் ஏற்படும் என்று பொருளா? இவ்வளவு நீண்ட அவகாசம் கொடுத்தால் நம்மாலும் உலகு முழுதும் அதற்குள் திருந்தக்கூடும் என்று ஓரளவு வலுவாகவே நம்ப முடிகிறது.

மொத்தத்தில் பாபாவின் புதிர்த்தன்மையை நம் புத்தியால் அவிழ்க்க முடியாது; அவரே எந்த அளவுக்கு விளக்கிக் காட்டு கிருரோ அவ்வளவே அறிய முடியும். ''அவன் அனைத்தும் அறிந்த வன்; ஆனல் அவனை அறிந்தார் யாருமில்லை'' என்று உபநிஷதம் உரைக்கும்.

மோரே பாபாகு மர்ம ந ஜாணுரே கோயி (நம் பாபா வின் மர்மத்தை எவரும் அறியார்) என்று ஷிர்டீசர்மீதுள்ள பாடல் கூறுவது பர்த்திசருக்குந்தான்! பக்தி செய்யும் பாக்கியத் தைப் பெற்றேரைப் பொறுத்தமட்டில், பரமஹம்ஸரைப் பற்றி ஸ்வாமி விவேகாநந்தர் பாடினுர் போல்,

> **விளங்குவதில்லை உந்தன் வழிமுறைகள்,**
> **விளக்கம் பெறவும் நான் விரும்பவில்லை.**
> **உள்ள(து) ஒரே ஆசை, உரைததிடுவேன்:**
> **உன் அன்பு நெருக்கத்துக்கே ஆசை கொண்டேன்**

எனக் கூறவேண்டியதுதான்.

Koviloor Digital Library

அவதாரத்வத்தை வார்த்தைகள் கொண்டு நிலைநாட்டி விட முடியுமா என்ன? எத்தனையோ பேர் பாபா பற்றிய நூல்களைப் படித்தும், அநுபவங்களைக் கேட்டும்கூட ஒதுங்கித்தானே நிற்கிறார்கள்—''கண்டும் கண்டிலோம், என்ன கண் மாயமே?'' என்றபடி!

ஆகவே இங்கு சொல்லியதெல்லாம் அவர் அவதாரம்தான் என அவநம்பிக்கையாளரை நம்ப வைப்பதற்கல்ல; அவர் அவதாரமில்லை என்று சொல்வதற்கில்லை என்று, இரண்டுங் கெட்டானாக உள்ள அடியாருக்குக் காட்டவே இவ்வளவு தூரம் அலசினோம். 'ஸத்ய ஸாயிபாபா அவதாரமில்லை' என்பதற்கு எதிர்ப்பாளர் கூறும் காரணங்களை ஏற்றால் எந்த அவதாரத்தை யும் அவதாரமாகக் கொள்ள முடியாது என்று காட்டினோம். குறைகள் தெரிவதால் இவர் அவதாரமில்லையோ எனக் குழம்பும் அடியாரைத் தெளிவு செய்யவே இவ்வளவும் எழுதினோம்—அதுவும் அவரது திருவருள் கூட்டி வைத்ததாலேயே.

நீண்ட பல்லாண்டுகளாக நீணிலம் முழுதிலும் அற்புதங் களின் அத்தனை வகையிலும் பாக்கி சாக்கி வைக்காமல் புரிந்து வரும் மகா லீலா விநோதரை, விபத்து ரக்ஷகரை, வியாதி சிகித்ஸகரை, மரணத் தாரகரை, அற்ப விஷயங்களிலும் கட்டிக் காக்கும் பக்த வாத்ஸல்ய நிதியை, அறத்தையும் ஆன்மிகத் தையும் பக்தியையும் பஜனையையும் அன்பையும் இன்பையும் தினை தினை பரப்பிவரும் தர்மக் கற்ப தருவை—இத்தனையும் எந்த வித ஸாதனையும் புரியாமலே செய்பவரை, இத்தனைக்கும் எவ்வித விளம்பரமும் அடியோடு விரும்பாதவரை, ஏன், தம்மால் அருளப் பெறும் பலருக்கே தம் ஸாயிரூபத்தைக் காட்டாத அளவுக்குத் தன்னலம் இழந்த தியாக மேருவை— அவதாரமில்லை என்று எவரும் நிரூபிக்க முடியாது என்று காட்டுவதற்குமேல் செய்வதற் கெதுவுமில்லை.

அவரைத் தெய்வமாக உணர்வது, ஸ்ரீ தியாகையரின் வார்த் தையில், ''சாலா அநுபவ வேத்யமே.'' ''இதோ நம் பராசக்தி'' என்று பாபாவைக் கண்டு தானாகப் பொங்கும் நெஞ்சுக்கு அந்தப் பொங்குதலே பிரமாணம், சாட்சி, நிரூபணம் யாவுமாகும். அன்பு, அதனால் ஏற்படும் சரணாகதி இவற்றாலன்றி வாதப் பிரதிவாதத்தால் அவதாரனை அறிய முடியவே முடியாது.

என்பில் எள்கி நெஞ்சுருகி உள்களிந்(து) எழுந்ததோர்
அன்பில் அன்றி ஆழியானை யாவர் காணவல்லரே?

கீதாசாரியன் சொன்னான், ''பக்த்யா மாம் அபிஜானாதி யாவான் யச் சாஸ்மி தத்வத:'' என்று. ''நான் யாவன், எத்தன்மையன் என்று அன்பினாலேயே ஒருவன் உண்மையில் என்னை அறியமுடியும்'' என்றான். அறிவு அறிவதைவிட அன்பே ஒன்றை உள்ளபடி அறிவிக்கும். அன்பில் விலகியிருப்போர் நம் ஐயனை அறியலாகாது. ''மற்று இருந்தீர்கட்கு அறியலாகா மாதவன்'' என்று கோதை சொன்னது முற்றும் உண்மையே.

Koviloor Digital Library

பாபா போலியா, ஸித்தரா, யோகியா, தேவதூதரா, அவதாரமா என்றெல்லாமல் தோண்டித் துருவாமல், ''பாபா யாராக வேண்டுமானாலும் இருக்கட்டும்; அவர் அநுக்கிரகம்தான் செய்யட்டும், அல்லது துக்கமேதான் தரட்டும்; அவர் அவராகவும் நாம் அவரது பக்தராகவும் இருக்கிற பேரானந்தமே போதும்'' என்றிருக்கிற ஒரு சில அடியார்களின் நிர்மல, நிச்சலவாழ்வைப் பார்த்தால் தெரியும், சரணாகதியாலேயே பெறப்படுபடுபவர் அவர் என்று.

அவனும் இவனும் உவனும் மற்(று) உம்ப-
ரவனும் அவன் என்றிராதே — அவனும்
அவனே எனத் தெளிந்து கண்ணனுக்கே தீர்ந்தால்
அவனே எவனேலும் ஆம்

என்றபடி, அறிவுச் செருக்கும் அகந்தையும் மிகுந்த இவ்வுலகில் ஒரு சிலரையாவது அடியோடு தங்களைத் தீர்த்துக் கட்டிக் கொண்டு, ''அவர் எவரானாலும் அவரே நம் அவர்'' என்று சரணாகதி செய்ய வைத்திருக்கிறாரே, இதுவேதான் ஸத்ய ஸாயியின் அவதாரத்வத்துக்குத் தலையாய நிருபணம்.

★

அநுபூதிமான்கள் இறைவனுக்கு 'எண் குணத்தான்' என இலக்கணம் வகுத்திருக்கிறார்கள்.

தன் வயத்தவன்; தூய உடம்பினன்;
தானியற்கை உணர்வினனாகுதல்;
பன்னு முற்ற உணர்தலியன்பினன்;
பாச நீங்குதல்; பேரருளாகுதல்;
மன்னும் ஈறல ஆற்றலுடைமையும்;
வரம்பில் இன்பமுமாகிய எண்குணம்

(ஈறல — முடிவில்லாத; வரம்பில் —எல்லையில்லாத)

அடியார்களே! நம் ஸ்வாமியிடம் இந்த எண் குணங்களும் பூரணமாகப் பொலிகின்றன அல்லவோ? அப்படியிருக்க அவரை இறைவனவதாரமாகக் கொள்வதில் நம் நெஞ்சக் கன கல் நெகிழ்ந்துருகுவதற்கு வஞ்சப்புத்தி வாதங்களை ஏன் தடையாக்கிக் கொள்ள வேண்டும்?

Koviloor Digital Library KOVILUR ADHEENAM
KOVILUR B. O.
(Via) MANAGIRI
RAMANATHAPURAM DIST.
PIN: 623 307

அத்தியாயம்—46

"ஸர்வ தேவ ரூபா!"

பசுக்கள் யாவும் கொட்டிலில் ஒடுங்குவதுபோல் ஸகல தெய்வங்களும் இவனுள் அடங்கும்.

— அதர்வ வேதம் 11.8.32

''எல்லா தெய்வங்களும் ஒன்றுசேர்ந்த சரீரம் இது'' என்று பாபாவே அகில உலக ஸாயி மாநாட்டு அரங்கில் பிரகடனம் செய்துகொண்டதை முன்னர் பார்த்தோம்.

தமது சரீரத்தில் நர உடலுக்கு மேம்பட்ட தெய்விக ஒளியையும், சின்னங்களையும் அவர் பல சமயங்களில் பல அடியாருக்குக் காட்டி அருளியிருக்கிறார்.

குறிப்பாக அவரது சிரத்தைச் சுற்றி ஜோதிப் பிரபையைக் கண்டுள்ள பக்தர்கள் ஏராளமாக உள்ளனர்.

எதனாலோ பாபா நில மட்டத்தில் நம்மிடையில் இருப்பதைவிட நம்மைவிட உயர்ந்த நிலையில், மாடியிலிருந்து நம்மை நோக்கும்போது அவரது தோற்றத்திலேயே நரத்வம் மிகவும் குறைந்து தேவத்வம் விசேஷமாகத் தோன்றுகிறது. தேவத்வம் என்பதால் எட்டாத மஹிமை ஜொலிப்பு என்று அர்த்தமல்ல; தயையின் கொழிப்பாகவே விளங்குவார் பிரசாந்தி நிலைய மாடியிலிருந்து கீழே உள்ள பக்தர்களை நோக்கும் ஸ்வாமி. அப்போது அவரது திரு உள்ளம் நம்மோடு எப்படி அன்பில் ஒட்டி இழைகிறது என்பது தெரியும்; அதே ஸமயத்தில் அவர் எப்படி (நம் 'தமையனு'ருக்குக் கடிதத்தில் எழுதினாற்போல்) உள்ளகத்தே எதிலும் ஒட்டாமல் தன்னந்தனி யொன்றாக இருக்கிறார் என்பதும் புரியும். 'எட்டியும் எட்டாதிருப்போன்' என்பதற்கு இலக்கியம் மாடியில் காட்சி தரும் ஸ்வாமி. அனைத்திடமும் அன்பு பொழியும்போதே அனைத்திடமிருந்தும் விலகியிருக்கும் ஒட்டாத ஒட்டு மாயத்தை (அல்லது ஞானத்தை) காஞ்சிப் பெரியவாள்,

Koviloor Digital Library

ஆனந்த மயி, பாபா இம் மூவரின் தோற்றம், பாவனைகளில் தெற்றெனக் காணமுடிகிறது. இது வார்த்தைகளில் விளக்க முடியாத தெய்வத் தன்மையை அடியார் மனத்தில் உணர்த்து கிறது.

பிரசாந்தி நிலைய மாடியிலிருந்து கொண்டு கனிவு பொங்க மக்களை நோக்கும் வைராக்ய ஸாயி பின்புறமாகவே கால்களை வைத்து மெல்ல மெல்ல வராந்தாவிலிருந்து தமது அறைக்குள் மறைவாரே, அப்போது அவரைப் பரிபூரண தெய்வமாகத்தான் நினைக்கமுடியும்.

வெளி வராந்தாவில் அவர் நிற்கையில் அவரது முகத்தி லிருந்து பஞ்சுனைப் போல் ஓர் ஒளிப்பிழம்பு வெளி வந்து, அவர் மெல்லப் பின் நோக்காக உள்ளே மறைகையில் அந்த ஒளி பஞ்சுறும் சுருங்கி அவரது திருமுகத்திலேயே அடங்கிவிட்டதாகத் தாம் பெற்றதோர் அரிய தரிசனத்தைக் கூறுகிறார் அம்பத்தூர் ஸ்ரீ மஹாலிங்கய்யர்.

கபால உச்சியை 'ப்ரம்ம ரந்த்ரம்' என்பார்கள். ஜீவன் அதன் வழியேதான் உடலுள் பிரவேசிக்கிறது. யோகிகள் உடலை உகுக்கும்போதும் அதன் வழியேதான் ஜீவன் வெளிச் செல்லும். ஸ்வாமியின் புதர் முடியில் பிரம்மரந்த்ர ஸ்தானத்துக்கு நேர் மேலாகப் பொன்னொளி வீசும் ஜோதியைத் தெளிவாக தரிசித் திருக்கிறார் கொழும்பு டாக்டரும், உத்தம ஸாயி பக்தருமான ஸ்ரீ டி. நல்லநாதன். இதைப் பற்றி ஸ்வாமியிடமே கேட்டு ஊர்ஜிதமும் செய்துகொண்டிருக்கிறார்.

இவ்வித அநுபவங்கள் மட்டுமின்றி, ஸ்வாமியின் திருவடி களில் சங்க-சக்ர ரேகைகள், மார்பில் ஸ்ரீவத்ஸ மச்சம், சிரஸில் ஓங்காரம் முதலியவற்றைக் கண்டோரும் உண்டு.

ஸ்வாமி நராக்ருதியாகத் தெரியும் தமது வடிவத்தில் இவ்வாறெல்லாம் தெய்விகச் சின்னங்கள் காட்டுவது மட்டுமல்ல. ப்ரஸித்த ஸித்தராக மட்டுமின்றிப் பிரத்யக்ஷ தெய்வமாகவே பலருக்கு அருள் புரியும் அவர், ஏனைய தெய்வங்களின் ரூபங் களிலும் பலருக்குத் தரிசனம் தந்திருக்கிறார்.

பாபாவை பாபாவாகப் பார்ப்பதே பேரானந்தம் தான், சந்தேகமில்லை. ஆனாலும் இவர் நர ஆக்ருதியில் தசையும் சதை யும் கொண்டு உலவுவதால், இந்த ரூபத்தைவிட பரமேச்வரன், திருமால், அம்பாள் முதலான ரூபங்களில் இவர் தரிசனம் தரும் போதே சில பக்தர்களுக்கு தெய்விக "கனம்" நன்றாகத் தெரிந்து, தங்களால் தாங்க முடியாத அளவுக்கு உணர்ச்சி பரவசமாகி யிருக்கிறார்கள்.

வெளியே பார்க்கும்போது தெய்வ வடிவிலன்றித் தமது பாபா வடிவில் இருந்துகொண்டே தெய்வ ரூபங்கள் தம்மில் இருப்பதை நம் ஸ்வாமி வேறொரு விதத்தில் காட்டுவதும் உண்டு.

Koviloor Digital Library

அதாவது தமது ஸத்யஸாயி ரூபத்தில் இருந்துகொண்டே திருவடிகளைத் துணியில் பதிவித்து பக்தருக்குத் தருவார். அவற்றில் ஒன்றின் சுவடு பெரிதாக, பௌருஷமாக இருக்கும்; மற்ற பாதமோ சிறியதாக, லலிதமாக இருக்கும். ஆம், அர்த்த நாரிச்வர அடிச் சுவடுகள் தாம்!

வெளிப்படவே தெய்வ வடிவங்களில் அவர் தந்துள்ள கணக்கற்ற தரிசனங்களுக்குச் சில அருமையான எடுத்துக்காட்டுக்களை இனி பார்க்கலாம்.

* * *

பிள்ளையாரில் தொடங்குவதுதானே முறை?

பெரம்பூர் ரயில்வே ஊழியர் ஒருவருக்கு கணேசர் இஷ்ட தேவதை. 1937—ல் இவர் இளவயதினராக இருந்தபோது கிராமத்தில் வசித்து வந்தார். ஒரு விநாயக சதுர்த்தியன்று, ''விநாயகா, நீ வாஸ்தவமாகவே வந்து மோதகம், இட்லி முதலானவற்றை என்னோடு சேர்ந்து உண்ணலாகாதா?'' என்று உள்ளமுருகி வேண்டினார்.

நடக்கக்கூடிய ஆசையா என்று சிலர் நகைக்கலாம். ஆனால் பக்தியில் குழைந்த அவரது உள்ளம் இப்படித் தாபத்தில் தவித்தது என்னவோ உண்மை.

விநாயகர் வந்தாரில்லை.

மனமேயின்றி போஜனத்துக்கு அமர்ந்தார் நம் காணபதர்.

சரியாக இவர் உண்ணப் போகும் ஸமயத்தில் வாயிற்கதவு இடிக்கப்பட்டது.

கதவைத் திறந்தவுடன் தேஜஸ்வியான நடுத்தர வயதினர் ஒருவர் உள்ளே வந்தார். நல்ல தொப்பையும் தொந்தியுமாக இருந்தார். கையில் தங்கக் காப்புக்கள் அணிந்திருந்தார். ஆனை முகம் இல்லை; நாலு கரம் இல்லை. ஆனாலும், ஆனாலும் அவரைக் காணவே நெஞ்சை ஆனந்தம் பிசைந்தது.

''எனக்குச் சாப்பாடு போடுங்கள்'' என்று ஸ்வாதீனமாகக் கூறினார் பொற்காப்புத் தொப்பையர்.

காணபதரின் மகிழ்ச்சி சொல்லி முடியுமா?

'தம் மனோரதமே பூர்த்தியாகிறதா?' என்ற எண்ணத்துடன் விருந்தாளியுடன் சேர்ந்து போஜனம் செய்தார்.

ஏனோ அவரைப் பற்றிய விவரங்களை இவரும் கேட்கவில்லை; அவரும் சொல்லவில்லை.

Koviloor Digital Library

சம்பிரதாயமாக உண்டு முடித்தபின், விருந்தாளி விடை கொண்டார்.

'மெய்யாலுமே விக்நேச்வரனா வந்திருப்பான்?'—காணபத ருக்குப் புரியத்தானில்லை.

காலம் ஓடிற்று. எத்தனையோ ஆண்டுகள் உருண்டன. இந்த நிகழ்ச்சியை அடிக்கடி எண்ணி நெகிழ்ச்சி கொள்வார் நம் பக்தர். ஆனால் நெகிழ்ச்சியில் மகிழ்ச்சி பூரணமாயிராது—'அது பிள்ளையாரப்பனாக இல்லாமலும் இருக்கலாம்' என்ற எண்ணமும் தோன்றிக் கொண்டிருந்ததால்!

இருபத்தைந்தாண்டுகளுக்குப்பின் 1962—ம் வருஷம். சித்ரா பூர்ணிமை. அன்று குருவாரமும் சேர்ந்திருந்தது. இரவு எட்டு மணிக்கு 'ஸநாதன ஸாரதி' படித்துக்கொண்டிருந்தார் நம் காணபதர்.

சட்டென அவரெதிரே சிவப்புப்பட்டு 'டால்' அடித்தது.

ஆம், ஸ்வாமிதான் ஸ்தூலமாக நிற்கிறார்! செம்பட்டின் கீழ் தெரிந்த சேவடிகளை இறுகப் பற்றினார் பக்தர்.

தரிசனப் பேறு மட்டுமின்றி ஸம்பாஷணை பாக்கியமும் அருளினார் ஸ்வாமி.

கனி வாய் திறந்து, "எந்த ரூபம், எந்த நாமம் பிடிச்சி ருக்கோ, அதையே கெட்டியாப் பிடிச்சுக்கோ. சந்தேகம், சஞ்சலம் வேண்டாம். கணேச ரூபத்தில்தான் உன் மனசு பதிந்திருப்பது எனக்குத் தெரியும். அவருக்கு நீ போடும் பூவெல்லாம் என்னிடம் தான் வந்து சேருகிறது. நான்தான் கணேஷ். நான்தான் ஸகல தெய்வங்களும். நீ மனமாரப் பிரார்த்தனை செய்தாயே என்று நான்தான் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் குண்டு விருந்தாளியாக வந்து உன்னோடு உண்டு ஸந்தோஷப்படுத்தி னேன்" என்று கூறி அந்தர்தானமானார் சங்கட சதுர்த்தியில் அவதரித்த ஸாயிகணேசர்.

"அதிதிர் துரோண ஸத்" என்று வேதம் இறைவனை வர்ணிக்கிறது. 'வீட்டிலே விருந்தாளியாக வந்தமருகிறான்' என்று அர்த்தம். இப்படி எத்தனையோ வீடுகளில் விருந்தாளியாக விஜயம் செய்து அன்பு பெருக்கும் ஸாயி அச் சமயங்களில் தம் தெய்விகப் பேராற்றலை மிகவும் மறைத்துக்கொண்டு குழந்தை யாகவே இருப்பார். இங்கோ குழந்தை ஸ்வாமியான பிள்ளையாரப்பனாக வந்து விருந்துண்டிருக்கிறார். அப்போது அவரே பதினொரு வயசுக் குழந்தை ஸத்யா தான். தம்மை ஸாயிபாபா வாக அறிவித்துக்கொள்ளாத அந்தக் காலத்திலேயே இப்படி விக்நேசுவரராக வந்திருக்கிறார்.

ஒருவரை தெய்வ ரூபமாகக் காண்பது காண்பவரின் நரம்புத் தளர்ச்சியாலும், காட்டுகிறவரின் ஹிப்நாடிஸ சக்தியாலும்

Koviloor Digital Library

ஏற்படக்கூடும் என்று "புத்திமான்"கள் வாதிக்கலாம். ஆனால் மேற்காணும் சம்பவமும், இனிவரும் சம்பவங்களில் பலவும் இவ்விதக் கண்கட்டு மாயத்தில் வராத ஆழம் வாய்ந்தவை என்பதை நடுவு நிலையிலிருந்து பார்க்கும் எவரும் ஒப்புவர்.

* * *

சிறு வயதிலேயே காளி உபாஸனையில் ஈர்க்கப்பட்டார் கொழும்புவைச் சேர்ந்த ஒரு கிறிஸ்துவர். வாலிபத்தில் மயானத்தில் இருந்துகொண்டு மந்திர ஜபங்கள் செய்தார். (மயானம் என்றவுடன் துர்தேவதா உபாஸனையோ என்று பயப்படவேண்டாம். ரமணரும் காஞ்சிப் பெரியவாளும்கூடப் போற்றும் சேஷாத்ரிஸ்வாமிகள் மயானத்தில் இருந்துகொண்டே மிகவும் ஸௌம்யமான பாலா திரிபுரஸுந்தரி மந்திரத்தை ஜபித்து வந்திருக்கிறார்.)

நம் கொழும்புக் கிறிஸ்துவ அன்பர், இலங்கையிலிருந்து சென்னை வந்து கிறிஸ்துவக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றார். இதனிடையிலும் உபாஸனையை விடவில்லை.

பட்டம் வாங்கியதும் காவியும் வாங்கிக்கொண்டு துறவியாகிவிட்டார். அப்படியும் அன்னையன்பு இழுக்கவே இலங்கைக்குத் திரும்பினார்.

சந்நியாசிப் பிள்ளையைப் பார்த்து அன்னை கதறினாள். அவரை மணவாழ்வில் ஈடுபடுத்த முடியாது என்று தெரிந்ததும், "சரி, துறவியாகத்தான் இரு. ஆனால் குறைந்த பக்ஷம் இப்படி ஹிந்துத் துறவியாக இராமல், கிறிஸ்துவப் பாதிரியாகவாவது இரு'' என்று பிடிவாதம் செய்தாள்.

அதன் விளைவாக அவளையும் விட்டு விட்டு, தமது நிறைந்த செல்வத்தையும் நீத்துப் புறப்பட்டார் நம் ஸாது. எங்கே? புட்டபர்த்திக்குத்தான்.

ஸாயி பகவான் அவரைக் கோரிக்கையறைக்கு அழைத்துச் சென்றார்.

சாதாரணமாக ஒருவரது பேட்டி ஒரு சில நிமிஷங்களிலேயே முடிந்து விடும். இன்றோ ஒரு மணி நேரமாகியும் உள்ளே போன ஸாது வரக்காணோமே என வெளியிலிருந்த பக்தர் ஆச்சர்யத்துடன் காத்திருந்தனர்.

''அம்மா'' என்ற பேரொலி உள்ளேயிருந்து பொங்கி வந்து வெளி பக்தர் செவிகளில் மோதியது.

சிறிது நேரத்துக்குப் பின் ஸ்வாமி கதவைத் திறந்துவிட வெளியே வந்தார், கிறிஸ்துவராகப் பிறந்த சாக்தத் துறவி. விபூதி அபிஷேகம் செய்தது போல் அவர் மேல் ஒரே திருநீற்றுப் பொழிவு.

Koviloor Digital Library

உள்ளே நடந்ததை அவர் அத்யந்தமானவருக்குச் சொன்னார். என்ன நடந்தது?

இவர் நடந்தாராம், நடந்தாராம், நடந்தாராம், அப்படியொரு நடை நடந்தாராம்!

பத்தடி நீளம், பத்தடி அகலமே உள்ள அந்தச் சிறிய சோரிக்கை அறையில் இவர் எப்படி இவ்வளவு நடை நடந்தார் என்று யாரும் வியக்க வேண்டாம்.

ஸ்வாமி இவரை "நட" என்றார். அவ்வளவுதான். இவர் நடந்துகொண்டே இருந்தார். இப்போது அது ஒரு சிறு அறையாக இல்லை. பெருங் காடாகவே மாறியிருந்தது!

வானோங்கு விருக்ஷங்கள் மண்டிய அந்த வனத்தில் மைல் கணக்காக நடந்தார் துறவி.

"நில்; திரும்பிப் பார்" என்று ஸ்வாமியின் குரல் கேட்டது.

ஸாது நின்றார். திரும்பிப்பார்த்தார்—பார்த்த கண் பார்த்தபடி, பனித்தபடி!

ஆம், பிக்ஷுப் பருவத்திலிருந்து தாம் வழிபட்டுவந்த மஹாகாளியைத்தான் பிரத்யக்ஷமாகக் கண்டார்.

அன்னை வடிவமடா ! — இவள்
ஆதிபராசக்தி தேவியடா !

என்று கண்டவுடன், "அம்மா" என்று வெடித்துக் கூவாமலும் இருக்க முடியுமா?

எத்தனை யெத்தனையோ காவதங்கள் கானகத்துள் சென்று, பலகாலம் தவமியற்றிக் காளியைப் பிரத்யக்ஷ தரிசனம் செய்ய ஆர்வமுற்றிருந்தவர் இந்த ஸாது. அத்தனைக் காவதங்களை ஒரு சில மைல்களில் சாறு பிழிந்து அடக்கி விட்டார் ஸ்வாமி; அவர் தவமிருக்க வேண்டிய நீண்ட காலத்தையும் இறுக்கி அந்த ஒரு மணிக்குள் அமுக்கிவிட்டார்; அவர் விரும்பிய திவ்ய தரிசனத்தைத் தந்து விட்டார்.

"அம்மா' என்று விழுந்து வணங்கியவரைத் தொட்டு எழுப்பி, "நாயனா! இந்தக் கலியுகத்தில் எதற்காகக் கடுமையான தபஸ் செய்யவேண்டும்? நாம ஸங்கீர்த்தனம் பண்ணிக் கொண்டிரு. அதிலேயே ஸாந்நித்யத்தை உணருவாய்" என்று உபதேசித்தார். இவரை விபூதி வெள்ளத்தில் முழுக்கினார்.

ஸாது பிற்பாடு இலங்கைக்குத் திரும்பிவிட்டார். அங்கு ஸாயி மகிமையைப் பரப்பலானார்.

Koviloor Digital Library

ஐ.ஏ.எஸ். அதிகாரியான ஸ்ரீவைஷ்ணவர் ஒருவரின் மனையாருக்கு ''துர்க்கா ஸப்த ஸதி'' பாராயணம் செய்வதில் மிகுந்த ஆர்வம் ஏற்பட்டது. பாராயணம் தொடங்கினார்.

சுற்றத்தார் ஆக்ஷேபித்தனர். மந்திர சாஸ்திரமான துர்க்கா ஸப்த ஸதியைக் கிரமமாக உபதேசம் பெறுமல் படிக்கக்கூடாதெனவும், பல நியமங்களைக் காக்க வேண்டும் என்றும் கூறினர்.

அது ஸத்யஸாயி பக்தியில் ஈடுபட்ட குடும்பமாதலால் ஸ்வாமி எப்படிச் சொல்கிறாரோ அப்படிச் செய்வது என முடிவு செய்தார் ஐ.ஏ.எஸ். அதிகாரியின் பத்தினி.

ஸ்வாமியிடம் வந்தார்.

'ஆஹா, இதென்ன! ஸ்வாமியின் நாசியில் புல்லாக்கு மின்னுகிறதே! அட, ஸ்வாமி முகம்தானா இது? நீலப்பளிங்காகி விட்ட கதுப்புக் கன்னங்களில் ஒரு ரோமம்கூட இன்றி திவ்ய ஸ்திரீ ரூபமாக அன்றோ மாறியிருக்கிறது! அடடா! அந்தத் திருநுதலில் செக்கர் செழிக்கும் குங்குமமும், மேலே மின்னும் கிரீடமும்! என்ன பாக்கியம், என்ன பாக்கியம்! சாக்ஷாத் துர்க்கா பரமேச்வரியே அல்லவோ எதிரே, இதோ கை எட்டத்தில் நிற்கிறாள்?'

துர்க்கா ரூபம் மாறி பாபா நின்றார்.

பொருள் பொதிய அப் பெண்மணியை நோக்கினார்.

'துர்க்கா ஸப்த ஸதி படிக்கலாமா?' என்று கேள்வி கேட்க அவசியமே யில்லை என்றுணர்ந்தார், சிறிதளவு பாராயணத்துக்கே பலனாக லாயி துர்க்காவைக் கண்ட அப் பெண்மணி.

* * *

காளி உக்ர ரூபிணி. துர்க்கை உக்ரமும் ஸௌம்யமும் கலந்தவள். பரம ஸௌம்யமானவள் லலிதாம்பிகை. இவளையே காமாக்ஷி, ராஜ ராஜேச்வரி, மஹா திரிபுரஸுந்தரி என்றெல்லாம் சொல்வது.

நவராத்ரியின்போது பாபாவுக்கே லலிதா ஸஹஸ்ரநாமம் சொல்லிக் குங்குமார்ச்சனை செய்யும் பாக்கியம் பெற்ற பலர் அவர் சாக்ஷாத் லலிதாம்பாளாகவே செஞ்சோதி வடிவும், பிறை முடியும் கொண்டு, கரும்பு வில்லையும், மலரம்பையும் ஏந்தி அமர்ந்திருக்கும் லாவண்ய மஹாசமுத்ர தரிசனத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

பாபாவை அநேக தெய்வ ரூபங்களில் தரிசித்துள்ள ஒருவர், ''என்னதான் இருந்தாலும் அவர் காமாக்ஷி ரூபத்தில் தருகிற தரிசனத்திற்கு மற்ற திவ்ய ரூபங்களும் ஈடாகா'' என்று கசிந்துருகிக் கூறுகிறார்.

Koviloor Digital Library

புல்லூரி ஸ்ரீ ராஜேசம் சாஸ்திரி மிகப் பெரிய ஸ்ரீவித்யா உபாஸகர் ஒருவரிடம் உபதேசம் பெற்று நெடுங்காலமாக ஸ்ரீராஜ ராஜேச்வரியை ஸ்ரீசக்ர ரூபத்தில் பூஜித்துவருபவர்.

புட்டபர்த்தியில் ஸ்வாமியிடம் இவர் கோரிக்கை பெற்ற போது ஓர் ஆசை தோன்றிற்று. தம்மிடம் யந்திர வடிவில் மட்டும் உள்ள அம்பாளை அவயவங்கள் கொண்ட அழகு விக்கிரக உருவில் ஸ்வாமி சிருஷ்டித்துத் தர வேண்டும் என்பதே ஆசை. அதை வெளியிட்டுக் கூறினார்.

ஸ்வாமி உடனே "இஸ்தானு" என்று சொன்னதும் சாஸ்திரிக்கு ஒரே ஆனந்தமாகிவிட்டது.

ஆனால் இப்படிச் சொன்னவரோ அவரைப் பிடித்துத் தள்ளாத குறையாக கோரிக்கை அறையிலிருந்து நகர்த்திவிட்டு அடுத்தவர் களைப் பேட்டிக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டார்.

சாஸ்திரி மேலும் இரண்டு நாட்கள் புட்டபர்த்தியிலேயே காத்துப் பார்த்தார். ஸ்வாமியோ இவர் பக்கமே அநேகமாக வரவில்லை. வந்தாலும் இவரை ஏறெடுத்துப் பார்க்காமல் மேலே போய்க் கொண்டிருந்தார். அவரது கவனத்தைக் கவர இவர் செய்த முயற்சியெல்லாம் வீணாயிற்று.

"சரி, நமக்குப் பொசிப்பு அவ்வளவுதான் போலிருக்கிறது. 'தருகிறேன்' என்றவர் உடனே சிருஷ்டித்துத் தராமல் விட்டு விட்டார். இன்னொரு முறை பர்த்திக்கு வரும் போதாவது வரம் பூர்த்தியாகிறதா பார்ப்போம்" என்று எண்ணியபடித் தமது இருப்பிடத்துக்குப் புறப்பட்டார் புல்லூரி சாஸ்திரி.

ஊரை அடைந்த மாலையே ஸ்நானம் செய்து பூஜைக்கு அமர்ந்தார். ஸ்ரீசக்ரம் வைத்திருந்த வெள்ளிப் பேழையை எடுத் தார்.

'இதென்ன, இப்படிக் கிண்டாகக் கனக்கிறதே!' என்று வியந்து பேழையைத் திறந்தார்.

கண்ணைப் பறித்தது ஒளி!

வேறென்னவாக இருக்கும்? சாக்ஷாத் அம்பிகை ஸ்வர்ண விக்கிரஹமாகவும் அப் பேழைக்குள் குடிகொண்டிருந்தாள்.

சாஸ்திரி விம்மியழுதார்; நாட்டியமாடினார்; பைத்தியம் போல் உளறினார். விக்கிரஹத்தை எடுத்து வழிகிற கண்களுடன் கேசாதி பாதம் பார்த்தார். 'ஸௌந்தர்ய லஹரி'யாகவே இருந்த அந்த விக்கிரஹத்தின் அடியில் ஸ்ரீ ஸாயி அம்பா என்று தெளிவாகப் பொறித்திருந்தது!

இந்த நேரம் ஏற்பட்ட ஆவேசமும் பெரிதல்ல என்பது போன்ற பரவசத்தில் அடைந்து விட்டார் புல்லூரி ஸ்ரீ ராஜேசம் சாஸ்திரி.

Koviloor Digital Library

முன்பு ஒரு நியூயார்க் தம்பதியரின் வீட்டிலே பாபா படத்தில் தோன்றும் விபூதி நேர் கீழே வைத்துள்ள 'ட்ரே'யில் விழாமல் எகிறி எகிறி ஷெல்ஃப் மீது விழுந்ததாகப் பார்த்தோம் அல்லவா? இந்தத் தம்பதியரில் மனைவியாகப்பட்டவள் முதலில் முழு நாஸ்திகமாக இருந்தவள். எப்படியோ பாபாவால் ஈர்க்கப்பட்டு நியூயார்க் தியான கேந்திரத்தில் சேர்ந்தாள். பிரஸித்தி பெற்ற கணேஷ்புரி யோக மார்க்கத்தைச் சேர்ந்த ஸ்வாமி நித்யானந்தா இவளுக்குக் குண்டலினிப் பயிற்சி அளித்தார். குண்டலினி எழும்பி எழும்பி, அதன் லக்ஷ்யமான கபால உச்சியை நெருங்கியது. அப்போது ஸாயிநாதனே குண்டலினி சக்தியாம் பராசக்தி என்று அநுபவபூர்வமாக உணர்ந்த இவள், ''ஸாயி பாபா! உன்னிடம் சரணாகதி செய்துவிட்டேன்'' என்று தன்னையறியாமல் கூவி விட்டாள். உடனே உச்சிக் கமலமாம் ஸஹஸ்ராரத்தின் ஆயிரம் இதழ்களும் கொல்லென மடலவிழ்ந்து மலர்ந்தன. மஹா ஜோதியொன்று அவளுள் பொங்கி ஓடி முழுக்கடித்தது. அதுவே ஸாயி வடிவம் என்ற உணர்வினைப் பெற்றாள். பாபாவை யோகாம்பிகையாகக் கண்ட பாக்கியவதி!

* * *

ஒரு ஸமயம் வரமஹாலக்ஷ்மி விரதத்தின்போது பர்த்தி பஜனை மன்றத்தில் கூடியிருந்த அத்தனை மாதர்களுமே பாபாவைச் சேலையும், கிரீடமும் தரித்த திவ்ய ஸ்திரீ வடிவில் திருமகளாகத் தரிசித்திருக்கிறார்கள். இதே போன்றதொரு தரிசனத்தைக் கல்பதருவின் அடியிலிருந்து பாபா வழங்கியதை முன்னரே பார்த்திருக்கிறோம். முன்னமே நாம் கண்ட தசாவதாரக் காட்சிகளையும் இங்கு நினைவுகூரலாம்.

தனிப்பட்ட பக்தர்கள் பலர் அவரை அம்பாளாக, ஆறுமுகனாக, ஈசனாக, கண்ணனாக (குறிப்பாக குருவாயூரப்பனாக), ராமனாக, வேங்கட ரமணனாக, நரஸிம்ம மூர்த்தியாகத் தரிசித்துள்ளனர். அவரவரின் இஷ்ட தெய்வம் இவரே.

மஹாராஷ்டிரத்தில் தத்தாத்ரேய வழிபாடு அதிகம் என்பதாலோ என்னவோ ஷிர்டிபாபா பன்முறை தத்த வடிவில் தரிசனம் நல்கியிருக்கிறார். அதை அடியொற்றி, ஸத்யஸாயியும் தத்த உபாஸகர்களை விசேஷமாக ஈர்த்து, மும்மூர்த்தி ஒன்றிய அம் மூலவடிவத்தில் காட்சியளித்திருக்கிறார். கோவாவில் பக்தரின் பொருட்டு அப்பெண்டிஸிடிஸை ஏற்று அவதியுற்றுப் பிறகு தாமே அதை அதிசயமாக சொஸ்தம் செய்துகொண்ட பாபாவைப் பத்திரிகை நிருபர்கள் ''தங்களது உண்மைத் தன்மை என்ன?'' என்று வினவியபோது அவர் பளிச்சென்று ''நான் தான் தத்தாத்ரேயர்'' என்று அடித்துக் கூறியதைக் குறிப்பிடவேண்டும். பிரம்ம நாடியும் ''தத்தாத்ரேய சொரூபம் போல்.......நர சொரூபமாய் அவதரித்து'' என்று கூறியதை ஆதியில் படித்திருக்கிறோமே!

Koviloor Digital Library

பாபாவின் மேல்நாட்டு அடியார்களுள் அவரை இயேசு கிறிஸ்துவாகக் கண்டிருப்பவர் ஏராளம். இங்கு ஓர் எடுத்துக் காட்டு மட்டும் பார்க்கலாம்.

''அவஸ்தாலஜி'' நிலைய டாக்டர் ரேயிஸை வாசகர்கள் மறந்திருக்கமாட்டார்கள். இவரும் இவரது மனையாரும் ஒரு முறை இந்திராதேவியின் டிகேட் ஆசிரமத்தில் பாபா குறித்த திரைப்படம் ஒன்றைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அதில் ஒரு கட்டத்தில் ஒரே சமயத்தில் டாக்டர் ரேயிஸ், ஸ்ரீமதி ரேயிஸ் இருவருக்கும் பாபாவுக்குப் பதில் இயேசு நாதரே தெரிந்தார்.

படக்காட்சி முடிந்து இருவரும் பேசிக்கொண்ட பிறகுதான் இவ்வாறு ஒரே சமயத்தில் தங்களிருவருக்கும் அரிய தரிசனம் கிடைத்திருக்கிறது என்று தெரிந்துகொண்டு வியந்து மகிழ்ந்தார்கள்.

கிறிஸ்துவ சமய சாஸ்திரத்தில் பின்கண்டவாறு கூறப் பட்டிருக்கிறது:

> இயேசுநாதர் முடிவாக ஏகுமுன்பு, ''என்னை எவன் உங்களிடை அனுப்பினாரோ அவன் மறுபடியும் வருவான்'' என்று கூறி, ஆட்டுக்குட்டியொன்றைச் சுட்டிக்காட்டினார். ''(மறுபடி வருகையில்) அவன் சத்தியம் என்று பெயர் தரித்திருப்பான்; ரத்த அங்கி தரித்திருப்பான். சிறிய மூர்த்தியாக இருப்பான். முடி தரித்திருப்பான்'' என்றார்.

இது தம்மையே குறிப்பது என்று ஸ்வாமி தெளிவாக்கி யுள்ளார். இதில் 'முடி' என்பது கிரீடமல்ல என்றும், தமது பம்பைக் கேசமே என்றும் கூறுவார். ஆட்டுக்குட்டியைச் சுட்டியதற்குக் காரணம் அது ''பா பா'' எனக் கத்துவதாலேயே என்று விளக்குவார்.

* * *

பொதுவாக மக்களால் வழிபடப்பெறும் தெய்வ மூர்த்தி களாகத்தான் பாபா தோன்றுகிறார் என்றில்லை. பிரசாந்தி நிலைய வாசினி ஒருவர் எதனாலோ ஒரு நாள் வாமனாவதாரத்தைப் பற்றி நினைத்துக்கொண்டிருந்தார், பஜனைக் கூடத்துக்குச் செல்கையில். எதிர்பாரா விதமாக ஸ்வாமி வந்தார். அவரைப் பார்த்த அம்மையாருக்கு ஆனந்த பரவசம் ஏற்பட்டது. பாபா ஒரு சிறுபிள்ளையாக நிற்கிறார்! குடையாகக் கவிந்த முடி, நிஜமாகவே ஒரு குடையாக அவரது தலைமேல் தெரிகிறது. பாபாவாக வருகையில் கையில் தெரிந்த காகிதங்கள் மறைந்தன. இப்போது இந்தக் குடை பிடித்த பிரம்மசாரியின் கரத்தில் கமண்டலு காண்கிறது. ஆம், குஞ்சுக் காலால் மூன்றடி மண் கேட்டு மாவலியின் வலியை ஒடுக்கிய வாமனாவதார தரிசனம் தான்.

Koviloor Digital Library

அடுக்கிக்கொண்டே போகலாம்; முடிவிராது.

எனவே மனத்துள் ஆழப்புகுந்து, 'இது பிரமை காட்டுவதாக (ஹால்யூஸினேஷனாக) இருக்கவே முடியாது' என்று உறுதி தரும் ஒரு சில தரிசனங்களைக் கூறித் தலைக்கட்டுவோம்:

பிற்பாடு எல். ஐ. ஸி. யில் டிவிஷனல் மானேஜராக ஓய்வு பெற்ற ஸ்ரீ கே. ஆர். கே. பட்டின் மனைவியாருக்கு 1943-ல் கருப்பையில் புற்றுநோய் கண்டது. அக் குடும்பத்துக்குக் குல தெய்வம் முருகப் பெருமான். பட்டின் அன்னைக்கு முருகனிடம் அசையாத நம்பிக்கை. ஆதியில் தம் கணவருக்குப் புற்றுநோய் கண்டபோது முருகனுக்கு நோன்பிருந்தே அது தீர்ந்ததைக் கண்டவர் ஆயிற்றே! இப்போதும் தீர்மானமாக, மருமகளுக்கு ரணசிகித்சை கூடாதென்று கூறி, வீட்டில் முருகப் பெருமானுக்கு விசேஷ பூஜை, ஹோமம் முதலியன தொடங்கினார்.

பலவீனையாகிவிட்ட மருமகளின் பொருட்டுத் தாமே பூஜை செய்தார்; விரத நியமாதிகளை வெகு கண்டிப்புடன் பின் பற்றினார்.

ஸ்ரீமதி பட்டோ படுக்கையில் நாளுக்கு நாள் நைந்து நலிந்து கொண்டிருந்தார்!

ஆறு நீண்ட மாதங்கள் ஓடின!

அன்று ஸ்ரீ பட் ஊரில் இல்லை. ஸ்ரீமதி பட் மாமியாரின் துணையுடன் படுத்துக்கொண்டிருக்கிறார். நல்ல நிசி வேளை.

ஸ்ரீமதி பட் தூக்கம் என்றோ, விழிப்பென்றோ சொல்ல முடியாத அரை மயக்கநிலையில் இருக்கிறார்.

திடுமெனத் தமது படுக்கையை ஒரு பெரிய பாம்பு வந்து சுற்றிக்கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது. கண் திறந்து பார்க்கும்போதே மெல்லிய நிலவொளியில் இப்படித் தெரிகிறது!

அதிர்ந்தெழுந்து மாமியை எழுப்பினார். விளக்கைப் போட்டார்.

மகா சர்ப்பம் மாயமே மறைந்திருந்தது!

விளக்கை அணைத்துப் படுத்தாரோ இல்லையோ, மீளவும் நாக சர்ப்பம் தெரிந்தது. இவரது படுக்கையை அது சுற்றி வந்தது.

ஆஹா, இதோ அரவம் மறைந்து ஆரா அமுதாம் முருகப் பெருமானின் திவ்ய வடிவம் தெரிகிறது! காற்றில் மிதந்து ஸ்ரீமதி பட்டின் தலைக்கு நேரே வருகிறான் ஐயன். அதோடு நின்றானா?

Koviloor Digital Library

வேலாயுதத்தை அந்த அம்மாளின் உடலுக்குள் குத்தி, அவளைத் தன்னிடம் இழுத்துக் கொள்கிறான்.

மறுகணம் ஏதோ ஒரு மலையுச்சியில் முருகனின் திருமுன் தான் நிற்பதாக உணர்கிறார் ஸ்ரீமதி பட். அவனது செம்பொற் பாதத்தைத் தொட்டுத் தம் தலையை அதில் பதிக்கிறார்.

''என்னுடனேயே இருக்கிறாயா? திரும்பிப் போகிறாயா?'' என்று பெருமான் வினவுகிறான்.

மோக்ஷமா, உலக வாழ்வா என்று தன்னைத் தேர்வு செய்யச் சொல்கிறான் என்று ஸ்ரீமதி பட் புரிந்துகொள்கிறார்.

அவருக்கு வைராக்கிய பக்குவம் வரவில்லைதான். கணவரும் குழந்தைகளும் கண்முன் தோன்றுகின்றனர். பாசம் இழுக்கிறது.

''திரும்பியே போகிறேன்'' என்கிறார்.

''சரி. உன் நோய் குணமாகி விட்டது. விரைவே வலிவு பெறுவாய். வாழ்நாள் முழுதும் உனக்கு நான் காப்பளிப்பேன். என்னை என்றும்போதெல்லாம் பக்கத்தில் வந்து நிற்பேன். இப்போதைக்கு நீ போகலாம்'' என்கிறான் கார்த்திகேயன்.

அம் மலைச் சிகரத்திலிருந்து மைசூரில் உள்ள தம் வீட்டுக்கு எப்படி வழி என்று அம்மாளுக்குத் தெரியவில்லை.

''எப்படிப் போவது?'' என்று ஆறுமுகனையே வினவுகிறார்.

''இதோ, இப்படித்தான்'' என்று பாதத்தை நகர்த்துகிறான் பரமன்.

பூமி விலகுகிறது. அந்த இடத்தில் குறுகலான படிக்கட்டு வரிசை புறப்பட்டு கீழ்நோக்கிச் செல்கிறது.

அதிலே இறங்குகிறார் ஸ்ரீமதி பட்.

அது முடிந்து, காலை வைக்கிற இடம் — சட்டென்று உணர்வு கலைகிறது!

தன் வீட்டு மெத்தையில் படுத்திருப்பதை உணருகிறார் ஸ்ரீமதி பட்.

இந்த அநுபவம் பரம புனிதமாக அவர் உயிராழத்தில் பொதிந்து விடுகிறது. மாமியாரிடமும், ஊரிலிருந்து பதி திரும்பியபின் அவரிடமும் மட்டுமே அதைக் கூறுகிறார்.

அந்த அநுபவம் ஏற்பட்டதிலிருந்தே, உடலில் ஒரு புதுத் தெம்பு பிறக்கிறது. வலி மறைகிறது. நோய் தேய்கிறது.

Koviloor Digital Library

ஆம், புற்று நோயைத் தீர்த்தே விட்டான் முற்றி முறுகிய கருணை முருகையன்! மாமியாரின் நம்பிக்கையும், நோன்பும் பலித்தே விட்டன!

நன்றாக உடல் குணமாகிவிட்ட ஸ்ரீமதி பட் தம்மை யறியாமலே குடும்ப சேவையோடு சமூக சேவையிலும் ஈடு படுகிறார். பரமனிடம் பக்தி பாரோரிடம் பரிவாகப் பரிணமிக்கத்தானே வேண்டும்?

தெய்வாநுபவம் ஏற்பட்டபின் நீண்ட காலம் ஓடுகிறது. ஓராண்டு, இரண்டாண்டல்ல, முழுதாக இருபதாண்டுகள் ஓடி விட்டன.

அப்போதுதான், அதாவது 1963-ல் பாபாவைப் பற்றிக் கேள்வியுற்று, பட் தம்பதியர் பிரசாந்தி நிலயம் சென்றனர்.

ஸ்ரீமதியைச் சிதமதியமாக நோக்கி, "உன்னோடு பேசி ரொம்ப நாளாச்சு — ஆமாம், இருபது வருஷமாயிடுத்து" என்கிறார் பாபா.

"இல்லையே! தங்களைப் பற்றி நாங்கள் கேள்விப்பட்டதே சமீபத்தில்தான். இதுவே நான் இங்கு முதல் முறையாக வருவது" என்றார் ஸ்ரீமதி பட்.

"நீ இங்கே வருவது முதல் தடவைதான். ஆனால், நான் முன்பே உன்னிடம் வந்தேன்" என்று நகைத்த பாபா, இருபதாண்டுகளுக்கு முன் அவர்கள் வசித்த வீட்டு விலாஸத்தைத் தெளிவாகச் சொல்லி, அவ்விடத்தை விவரமாக வர்ணித்தார்.

பிறகு அத்தம்பதியரை மாடியிலுள்ள தமதறைக்கு அழைத்துச் சென்றார்.

கடைசிப்படி ஏறியதும் அம்மாளிடம், "கீழே திரும்பிப் பார்" என்றார் ஐயன். ஆஹா, அந்தத் திருமுகத்தில் வெள்ளமாகக் கொழிக்கும் எழிலை, குறும்பை, கருணையை, புனிதத்தை என் சொல்ல?

கீழே பார்த்த ஸ்ரீமதி பட்டின் உயிர்மூலம் சிலுசிலுத்தது! உடல் சிலிர்த்தது!

ஆஹா, அன்று மலையுச்சியில், முருகன் பாதத்தை விலக்கிக் கீழே வழி காட்டினானே, அதே — சாக்ஷாத் அதே — குறுகல் படி வரிசை!

முருக பாபா முறுவலித்தார். "இந்தா" என்று கையை வீசினார். ஸ்ரீமதி பட்டின் கையில் பட்டென விழுந்தது பாபா சிருஷ்டித்த சித்திரம். அதிலே ரதத்தில் ஆரோஹணித்திருக்கிறான் கந்தப் பெருமான் — அவனது முகம், ஆம் பாபாவின்

Koviloor Digital Library

திவ்ய வதனமேதான். அன்று, ஸ்ரீமதியின் படுக்கையைச் சுற்றியிருந்த சர்ப்பம் இந்தச் சித்திரத்திலுள்ள முருகனை மண்டலித்திருக்கிறது!

பட் குடும்பத்தினர் செய்த பூஜையும், ஹோமமும், நோன்பும் முருகனைக் குறித்தே; பாபாவைக் குறித்தல்ல. பாபா என்றால் கறுப்பா, சிவப்பா என்றே இவர்கள் அறியாத காலம் அது. அப்போது முருகனுக்குச் செய்த உபாஸனையை இவர் ஏற்றுப் பலன் தந்தார் எனில்....?

மற்ற மஹாஸித்தர்களுக்கும் பாபாவுக்கும் இதுவே பெரும் வித்தியாசம். பாபா என்னும் ரூபம், ஸாயி நாமம் இவற்றை அறியாதாருக்கும்—அவர்கள் வேறெதோ இஷ்ட தேவதையை உபாஸித்தாலும், இவர் அநுக்கிரஹிக்கிறார். அநேகமாக அதைத் தாம் செய்ததாகப் பிறகு அவர் வெளியிடுவதுகூட இல்லை. இங்கேயே பாருங்கள், இருபதாண்டுகளுக்குப் பின்தான் உண்மை வெளியாகியிருக்கிறது. அருளைத் தண்டோராப் போட்டு ஆள் சேர்க்கிற சமாசாரம் இங்கு இல்லவே இல்லை.

இதிலே இன்னொரு அற்புத விநோதம்: பிரசாந்தி நிலயம் கட்டியது 1950-ல். கட்டட வேலை தொடங்கியதே 1948-ல் தான். ஆனால், இதற்கும் ஐந்தாண்டு முன்பு 1943-லேயே பிரசாந்தி நிலயத்தில் உள்ள தமதறை மாடிப்படிக்கட்டை முருகனாக வந்து ஸ்ரீமதி பட்டுக்குக் காட்டியிருக்கிறார் என்றால்? ஓர் இறுக்கு மீதமின்றி வாழ்வு முழுதையும் முன்பே சங்கல் பித்துவிட்ட பராசக்தியன்றி யாரால் இந்த அதிசயம் விளைவிக்க முடியும்?

* * *

இங்கே வேலைக் குத்தி இழுத்ததைப் பார்த்தோம். துள்ளி வந்த வெள்ளி வேலின் கதையைப் பார்ப்போம். இது தங்கவேலின் கதையுமாகும்.

பெங்களூர்வாசியான ஸ்ரீ தங்கவேல் செட்டியார் மணமாகி நீண்டகாலமாகியும் சந்தான பாக்கியம் பெறவில்லை. அவர் நல்ல முருக பக்தர். 1947-ல் தம்பதி சமேதராகப் பாதமந்திரத்துக்கு வந்து பாபாவைத் தரிசித்தனர். அன்று மாலை அடியார் புடை சூழ சித்ராவதி தீரம் சென்ற ஸ்வாமி, காலமில்லாக் காலத்தில், மண்ணுள்ளிருந்து ஒரு மாங்கனியை "எடுத்தார்." அதைத் தங்கவேல் தம்பதியருக்குத் தந்து உண்ணச் சொன்னார். திருநீறும் வழங்கினார்.

ஒரு வருடமும் ஒரு மாதமும் ஆயிற்று. ஒரு மாலை வேளை.

அதே தம்பதியர் அதே சித்ராவதி தீரத்தில் ஸ்வாமி தரிசனத்திற்கு வந்தனர் — பழத்தின் பலனாகப் பிறந்திருந்த தொண்ணூறு நாள் பெண் குழந்தையுடன்! மலடு நீங்கிய

Koviloor Digital Library

மகிழ்ச்சியுடன், குழந்தையை அருளியவரிடமே அதற்கு நாம கரணமும் பெறுவதற்காக வந்திருக்கிறார்கள்.

ஸ்வாமி பரிவோடு பச்சைக் குழந்தையை வாங்கித் தன் மடியில் வைத்துக்கொண்டார். பெற்ற தாய் கெட்டாள் என்பதுபோல் அத்தனை பாங்கும் பதவிசுமாக ஸ்வாமி சின்னஞ் சிறு குழந்தைகளைப் பதமுற வைத்துச் சீராட்டுவார்! இந்த பாக்கியக் குழந்தையையும் அன்புக்கிட்டு விட்டுப் பெற்றோரைப் பார்த்து, ''குழந்தை பிறந்தால் வெள்ளிவேல் செய்து முருகனுக்குச் சாத்துப்படி செய்ய வேண்டிக் கொண்டீர்கள்; அப்படியே பெரிதாகச் செய்து வீட்டில் வைத்திருக்கிறீர்கள் அல்லவா?'' என்று குறுநகையுடன் கேட்டார்.

''ஆமாம்'' என்றனர் தம்பதியர்.

ஏழு மணி அளவில் அனைவரும் பாதமந்திரத்துக்குத் திரும்பினர்.

அங்கே பூஜா கிருகத்தில் இதுநாள் வரை இல்லாத ஒரு மின்னொளி பளிச்சிட்டது.

ஷிர்டி பாபா, பர்த்தி பாபா பிரதிமைகளுக்கு நடுவே வள்ளிசாக வந்தமர்ந்துவிட்டது தங்கவேல் செட்டியார் வள்ளீச னுக்கு உத்தேசித்திருந்த ஐந்தடி நீளமுள்ள வெள்ளிவேல்!

''வீட்டில் வைத்திருக்கிறீர்கள்'' என்றபோது ஐயன் குறுநகை பூத்தது, வீட்டிலிருந்து அதைத் தஸ்கரம் செய்த பெருமையில்தான்!

பேறு பெற்ற அத் தம்பதியர் பாபாவை முருகனாகவே தரிசித்து, பாத வந்தனம் செய்துகொண்டனர்.

இன்றும் இவ் வேல் பிரசாந்தி நிலய பூஜையில் உள்ளது.

* * *

ஸ்ரீ ரமண மஹரிஷிகளிடம் பதினேழாண்டுகள் அணுக்கத்தே பழகியவர் ஸ்வாமி அமிருதாநந்தர்.

நம்பூதிரியாகிய இவர் சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ நரஸிம்ம பாரதி ஸ்வாமிகளிடம் சந்நியாச தீக்ஷை பெற்றவர். பிற்பாடு ரமணபகவானை ஆசிரயமாகக் கொண்டார். இவரைப் பற்றிய விஷயத்துடனேதான் ''ஸ்ரீ ரமணகீதை'' முடிகிறது. இவர் ஸ்ரீ ரமண பகவானிடம் ஸித்தர்கள் மகிமை என்ன என வினவு கிறார். ரமணர் ஸித்திகளின் அருகிலேயே செல்லாதவர். காரிய மற்ற ஆத்மனையன்றி வேறொன்றிலும் நாட்டமில்லாத பரம ஞானப் பழம் அவர். இப்போது அமிருதாநந்தரிடம் அவர், ஸித்திகள் எல்லாம் வீணான விஷயம் என்று கண்டித்தார்? இல்லை.

Koviloor Digital Library

மாக, "ஸித்தர் பெருமை கருதற்கு அரிது. அவர்கள் சிவனை நிகர்த்தவர்; சிவ ஸ்வரூபர். வரங்கள் தரும் திறத்தினர்" என்று வேதவாகச் சிறப்பித்தே சொல்கிறார்—ஸித்த புருஷர் என்றே வேதவாகத் தோன்றக்கூடிய நம் ஸ்வாமியிடம் பிற்பாடு அமிர்தாநந்தர் சென்று சேரப் போகிறார் என்றறிந்துதானோ என்னவோ? "ஸ்ரீ ரமணகீதை" இயற்றிய காவிய கண்ட கணபதி முனி என்ற மந்திர சாஸ்திர மஹா விற்பன்னர், இங்கே அமிர்தாநந்தரை "யதீந்திரர்" என்று குறிப்பிட்டிருப்பதிலிருந்து அவரது ஆன்ம பக்குவத்தை ஊகிக்கலாம். இப்படிப்பட்டவரின் அநுபவத்தை இலேசில் புறக்கணிப்பதற்கில்லை.

இவரை ஓர் அருணலை மஹரிஷியின் மறைவுக்குப் பின் பிரசாந்தி நிலையத்தில் கொணர்ந்து சேர்க்கிறது. "அம்ருதம்" என்று அவரை பாபா அழைத்துக்கொண்டே வந்தவுடன் ஸ்வாமிகள் ஆனந்த அதிர்ச்சி அடைந்தார். ரமணர் அழைக்கும் அதே செல்லப் பாங்கு! மூப்புற்ற எண்பத்தைந்து வயது ஸாதுவை முப்பது பிராய பாபா ஸ்வாதீனமாக அழைக்கிறார்!

"அம்ருதம், நீ எழுபத்தெட்டு வருஷத்துக்கு முன் ஏழாவது வயசிலேயே நாற்பத்தோரு நாள் கணபதி ஹோமம் செய்தாயில்லை? அப்போதே உனக்கு மஹாகணபதியின் 28 அக்ஷர மந்திரம் உபதேசமாயிடுத்து. அந்தச் சின்ன வயசிலேயே நாற்பத்தோரு நாட்கள் விடாமல் தினந்தோறும் ஆயிரம் ஆவிருத்தி ஜபித்தாயே! அதோடு இத்தனை ஜபத்துக்கு ஒரு ஹோமம், இத்தனை ஹோமத்துக்கு ஒரு தேங்காய் போடுவது என்றும் கணக்குப்படி உபாஸனை பண்ணினாய். ஆமாம், இதற்கு சாஸ்திரத்தில் என்ன பலன் சொல்லியிருக்கு?" — பாபா கடகடவெனப் பேசுகிறார்.

ஸ்வாமிகளுக்கோ ஒருபுறம் அதிசயம், ஆனந்தம்; மறுபுறம் வெட்கம். மேற்சொன்னதுபோல் 41 நாள் உபாஸித்தால் பூர்ணாஹுதியை வாங்கிக்கொள்ள ஆனைமுகத்து அருள்மலையே நேரே வரும் என்று கேள்விப்பட்டுத்தான் ஏழு வயதுப் பிள்ளை, பிடிவாதம் பிடித்து இந்த ஹோமத்தைச் செய்தது. கடைசியில் பிள்ளையாரப்பன் ஏமாற்றியல்லவா விட்டார்? தான் எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விட்டதை நினைத்து இப்போது நாணினார் அமிர்தர் — எல்லாமறிந்ததாகக் காணப்படும் பாபாவுக்கு அந்த அசட்டுப் பேராசையும், அது தோற்றுப் போனதும் தெரிந்திருக்குமே என வெட்கினார்.

"ம்......ம்...... சாஸ்திரத்தில் என்னவோ பெரிய பலன் சொல்லியிருக்கு. ஆனால் ஒரு ஏழு வயசுப் பிள்ளைக்குப் போய்..... அந்த மாதிரிப் பலன்........" என்று மென்று விழுங்கினார்.

"அமிர்தம்" என்று அமிர்தமாக அழைத்த பாபா, "ஏன் அப்படியெல்லாம் சொல்கிறே? அந்த இள வயசில் செய்த ஜப, ஹோமங்கள்தான் இப்போ உன்னை என்னிடம் கொண்டு வந்து விட்டிருக்கு. எழுபத்தெட்டு வருஷத்துக்கு அப்புறம், சாஸ்திரம்

Koviloor Digital Library

பொய்யில்லை என்று, இன்று, இதோ பலன் அடையப் போகிறாய், பார்'' என்று சர்க்கரைக் குரலில் சக்ரவர்த்தி கூறினார்.

''பார்'' என்றவுடன் அவரைப் பார்த்தார் ஸ்வாமிகள். ரோமாஞ்சனமுற்று நின்றார்!

அங்கே பாபா வடிவம் இல்லை.

செஞ்ஜோதிப் பிழம்பாகப் பத்துக் கரங்களோடு, வேழ முகத்து வேந்தனும், ஸ்ரீ மஹா கணபதியே ஆனைமுகமும் ஆனந்த நகையுமாக நிற்கிறார்!

பரவசத்தில் மெய்ம்மறந்து சாய்ந்தார் அமிருதாநந்தர். அதன்பின் முழுதாக நான்கு நாட்கள் அந்த அதித அநுபவத்தின் பேரலை மோதலிலேயே சிக்கி, உணவு, உறக்கம், குளியல் யாவும் மறந்து உன்மத்தராக இருந்தார்.

* * *

தம் சொத்து முழுதையும் செலவழித்துத் திருவையாற்றில் தியாகராஜ ஸ்வாமிகளுக்கு ஸமாதி ஆலயம் எழுப்பிய நாதோபாஸகி பெங்களூர் நாகரத்னம்மாளின் பெயரைச் சொன்னாலே இசையுலகம் மதிப்புணர்ச்சி தெரிவிக்கும்.

1951–ம் ஆண்டில் கிருஷ்ண ஜயந்திக்கு முன்னால் நாக ரத்னம்மாளிடமிருந்து வேங்கடகிரி ராஜாவுக்கு ஒரு கடிதம் வந்தது. ''என் இஷ்ட தேவதையான ஸ்ரீ தியாகராஜர் எனக்குக் கனவில் தரிசனம் தந்தார். 'ஸ்ரீராமசந்திரன் மறுபடி பூலோகத்துக்கு வந்திருக்கிறான். தனது சஞ்சாரத்தில் வேங்கட கிரிக்குப் போகிறான். அவன் அங்கு வந்த விவரம் தெரிந்தும் நீ புறப்பட்டுச் சென்று அநுக்ரஹம் பெற்றுக் கொள்' என்று ஆணையிட்டார்.....'' என்று கடிதத்தில் கூறியிருந்தார்.

அந்த ஜன்மாஷ்டமித் திருவிழாவுக்கு வேங்கடகிரி எழுந்தருளியது ஸாயிராமின்றி வேறு யாராக இருக்க முடியும்? தியாகையரே தந்த 'உத்தரவாத'த்தின்மீது ஸாயிராமனை வேங்கடகிரியில் தரிசித்துப் புளகமுற்றார் நாகரத்னம்மாள்.

பாபாவின் பேரழகையும், அன்பு மனத்தையும், அதி சொகசையும், அலாதிப் பண்பையும், கண்ணார அவர் கடாக்ஷிக்கும் குளிர்ச்சியையும் கண்டு தியாகராஜரின், ''அதி லாவண்ய ராமா, கன்னுலார ஜூடவே! நீ மனசு, நீ சொகசு, நீ நிறுசு வேறே'' என்ற கிருதியை நினைந்து உருகினார்! ''உன் பேச்சே பேச்சய்யா; உன் குலுக்கே குலுக்கய்யா; உன் தளுக்கே தளுக்கையா — நீது பலுகே பலுகுரா; நீது குலுகே குலுகுரா; நீது தளுகே தளுகுரா'' என்று ஐயாற்று ஐயர்வாள் பாடிய ஐயனை எழுந்தருக் கொழுத்து தரிசித்தார். ஒவ்வொரு விதமான மனிதருக்கும் பொருத்தமாக பாபா சம்பாஷிக்கும் செவ்வி கண்டு, ''ஏமனி

Koviloor Digital Library

மாட்லாடிநிவோ ராம? எவரி மனஸு கேவிதமோ தெலிமி''
என்ற பாடலோடு ஒட்டிக் கனிந்தார்!

பாபா சிருஷ்டித்துத் தந்த ஸ்ரீராம விக்கிரஹத்தைப் பெற்றுக்கொண்ட நாகரத்னம்மாள், அதன்பின் இருபத்திநான்கு மணி நேரம் பாவ ஸமாதியிலேயே இருந்தார். அந்த பக்த சிகாமணி, ''சாந்தமுடன் ராம நாம ஸ்மரணையுடன் நான் கண்ணை மூடவேண்டும்'' என்று வேண்ட, ''ஆஹா, அப்படியே'' என்று ஸாயிராம் வரம் தந்தவுடன் இறும்பூது எய்தினார்!

* * *

பெங்களூரிலுள்ள இந்தியன் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஸயன்ஸில் உயிரியல் ரசாயனப் பேராசிரியர், டாக்டர் டி. கே. பானர்ஜி. வங்காளி. புலிகளோடு அநாயாஸமாகப் போராடி வென்று புகழ் கொண்ட ஸோஹம் ஸ்வாமியின் மருமகர். அத்வைத வேதாந்தத்தில் ஆழ்ந்த பிடிமானம் உள்ளவர்.

இவருக்குக் கண்ணனிடம் வெறுப்பு. அருவருப்பு. ''கோபிகைகளாம், ராஸ லீலையாம்! இந்தக் காமுகனை கீதா சாஸ்திரம் உபதேசித்தவனோடு சேர்ப்பதே எத்தனை அநுசிதம்?' என்றெண்ணுவார்.

எப்படியோ புட்டபர்த்தி இவரை அழைத்தது.

பாபாவைப் பார்த்தார்.

பாபாவையா பார்த்தார்?

பாபாவின் திருமுகம் நீலமாக அல்லவோ மாறியுள்ளது? மயிற்பீலி சொருகிய மணிமகுடம் அல்லவோ சூடியுள்ளது?

கண்ணனேதான்! பாபா வடிவம் இல்லை!

கண்ணைத் துடைத்துக்கொண்டு மீளவும் பார்த்தார் பானர்ஜி. பாபாவின் முகம் தெரிந்தது.

அட, மறுபடி மன மோஹன மாதவன் முகமாக மாறிற்று!

மூன்றும் முறையும் இப்படி நடந்த பின், ஸயன்டிஸ்டாகவும், வேதாந்திகளாகவும் இருந்தும் பானர்ஜி அதை நம்பியே ஆக வேண்டியதாயிற்று.

ஊருக்குத் திரும்பினார்.

மறுநாள் அதிகாலையில் தம் வழக்கப்படி புல்வெளியில் நடமாடும்போது, எதிரே கனச்யாம ஸுந்தரன் நின்றான். நெருங்கி வந்தான். நேரே இவருக்குள்ளேயே புகுந்து மறைந்து விட்டான்.

Koviloor Digital Library

ஸ்ரீ கிருஷ்ண ஆவேசத்தில் தாம் ஆட்பட்டுவிட்டதை உணர்ந்தார் பானர்ஜி. ஆனால் இதற்காக அஞ்சவில்லை, அருவருக்க வில்லை. ஏனெனில் டாக்டர் ஜெகில் என்பவர் மிஸ்டர் ஹைட் ஆனவுடன் துர்புத்தி பெற்றதுபோல் இவருக்கு இந்த ஆவேசத்தில் காமமோ, வேறெந்த இழி குணமோ வந்துவிடவில்லை. மாறாக இப்போதுதான் புலன்களெல்லாம் அற்புதமாகக் கட்டுப்பட்டன. ஆசைகள் யாவும் எங்கோ ஓடி ஒளிந்து விட்டன. ஆத்ம சாம்ராஜ்யத்தை வென்ற மாமன்னனின் மாண்பில் திளைத்தார் பானர்ஜி.

நாட்கள் உருண்டன. அமைதிக்கு மேம்பட்ட பேரமைதி மறையவில்லை. 'கண்ணனைக் காமுகனாக எண்ணியது எத்தனை தவறு? தனது ஒரு சாயலை என்னுள் புகுத்தியே இத்தனை ஞானானுபவம் தந்த அவனிலும் ஞான வடிவு உண்டோ?' என்ற தெளிவு அந்த அமைதியிடையே பிறந்தது.

பிரசாந்தி நிலயத்திற்குச் சென்றார்.

பாபா அருகே வந்து நின்றார்.

ஒன்றும் பேசவில்லை.

மந்தஹாஸத்துடன், ஒரு கையை பானர்ஜியின் சிரத்தில் வைத்தார். மற்றதை அவரது முதுகுத் தண்டின் அடியே வைத்தார்.

உடனே கிருஷ்ண சைதன்யம் பானர்ஜியை விட்டு விலகியது. பழைய பானர்ஜி ஆனார். மூலாதாரத்தையும், பிரம்ம ரந்திரத்தையும் ஸ்பரிசித்த மாத்திரத்தில் கிருஷ்ண போதையைத் திரும்ப எடுத்துக்கொண்டு விட்ட பாபா ''யோகேச்வரன்'' என்றே போற்றப்படும் அந்த கிருஷ்ண பரமாத்மனேதான் என உணர்ந்தார் பானர்ஜி.

(காமுகன் என்று எவரை எண்ணி பானர்ஜி அருவருத்தாரோ, அவரால் ஆவேசிக்கப்பட்டது போலவே இந் நூலாசிரியனுக்கு ஏற்பட்ட சொந்த அனுபவத்தையும் இங்கு கூறலாம். பாபாவைப் பற்றிய கன்னா பின்னா வதந்திகளால் மிகவும் அலைப்புண்ட ஒரு ஸமயத்தில் இவன் புட்டபர்த்தி சென்றான். அங்கிருந்து திரும்பிய பின் நாலு நாட்கள் அதற்கு முன்போ பின்போ எந்நாளும் அநுபவித்திரா அத்வைத இறையோட்டத்தை அநுபவித்தான்.)

* * *

கோமதீச்வரர் சிலையால் உலகப் புகழ் கொண்ட சிரவண பெளா கொளாவுக்குப் பக்கத்தே உள்ள கிராமம் கொத்னகட்டா. அங்கு இரு ஏழைச் சிறுவர்கள் — பள்ளிப் பாலர்கள் — பாபாவைப் பற்றிக் கேள்விப்பட்டனர். முந்தைய புண்ணிய வினை, தரிசன ஆர்வம் அந்த அறியாப் பிள்ளைகளின் பிடரியைப் பிடித்துப்

Koviloor Digital Library

புட்டபர்த்திக்குத் தள்ளியது. பலரிடம் கடன் வாங்கிக் கொண்டு, நடை, பட்டினி எதையும் பொருட்படுத்தாமல் பர்த்தி வந்து சேர்ந்தவர்.

''பங்காரு, பங்காரு'' என்று பாபா அந்த எளிய சிறுவரை அணைத்துத் தட்டிக்கொடுத்தார். ''நான் எப்பவுமே உங்க கிராமத்திலேயே இருக்கேனே! நீங்க ஏன் கஷ்டப்பட்டுக்கிட்டு இங்கே வரணும்? இனிமேலே அங்கேயே என்னை தரிசனம் பண்ணிக்குங்க'' என்றார்.

இங்கே யிருக்கும் ஸ்வாமி போல், அங்கே யிருப்பதாகச் சொல்லும் ஸ்வாமி நம் அல்ப புத்திக்கு அகப்படுவாரா என்ற சந்தேகத்துடனே சிறுவர்கள் கொத்தகட்டாவுக்குத் திரும்பினார்.

புட்டபர்த்தியில் கற்றுக்கொண்ட பஜன்களை இனித் தங்கள் சிவாலயத்தில் பாடுவது என்று தீர்மானித்து ஊராரை சந்நிதியில் கூட்டினர்.

நூறாண்டுக்கு முன் ஓர் உத்தமர் நர்மதையிலிருந்து எடுத்து வந்து இரண்டு வெள்ளை பாண லிங்கங்களில் ஒன்று காந்தராஜபுரத்திலும், மற்றது கொத்தகட்டாவிலும் பிரதிஷ்டை யாகியிருந்தன.

சிவலிங்கத்தின் முன் இந்தக் கபடற்ற சிறுவர்கள் பஜனை செய்தார்களோ இல்லையோ, அர்ச்சகர் லிங்கத்துக்குள் ஏதோ வண்ணங்களும் கோடுகளும் தோன்றுவதைக் கவனித்தார். அவை பல விதங்களில் மாறி மாறி வந்தன. முடிவில், வெள்ளை லிங்கத்தினுள்ளே ஷிர்டிஸாயிபாபா அமர்ந்த திருக்கோலத்திலும் மாலையணிந்த ஸத்யஸாயி பாபா இடுப்பு வரையிலும் உருவாகி விட்டனர்! ''இங்குற்றேன் என்று இலிங்கத்தே தோன்றினன்'' என்ற வாகீசர் வாக்கை மெய்யாக்கிவிட்டான் பர்த்தீசன்.

எட்டாண்டுகள் ஆன பின்பு, இன்றும், அனைவரும் காண அந்த லிங்கத்தில் இரு பாபாக்களும் உள்ளுறைந்து தரிசனம் தருகிறார்கள்!

* * *

ஷிமோகாவைச் சேர்ந்த பக்தர் ராவ், பாபா சொற்படி யுக்தமாக ஸந்தியா வந்தனமும் காயத்ரி ஜபமும் செய்யத் தொடங்கினார். அறிவைத் தெளிவு செய்வதில் காயத்ரி கைகண்ட மருந்தன்றோ? இதிலிருந்து ஒவ்வொரு நல்ல ஆசையாகத் தன்னுள் தோன்றலாயிற்று. தன் பாட்டனாரும், தகப்பனாரும் பூஜித்து வந்ததும், அவர்களுக்குப் பின் வழிபாட்டை இழந்து விட்டதுமான லிங்கத்தைத் தாம் விதிவத்தாக ஆராதிக்க வேண்டும் என்ற ஆர்வம் ராவுக்கு ஏற்பட்டது.

லிங்கத்தைத் தேடி எடுத்தார்.

Koviloor Digital Library

ருத்ரம் சொல்லி அபிஷேகம் செய்தார்.

அபிஷேகம் செய்யச் செய்ய அந்தக் கறுப்பு லிங்கத்தின் நிறமே மாறி மாறி, அது ஸ்வர்ண வர்ண ஸ்படிகமாகி விட்டது.

அவ்வளவுதானா? பொற்பளிங்கு லிங்கத்துள் பொன்மனமும், பளிங்கான ஸுசரித்ரமும் வாய்ந்த ஸாயி பரமேச்வரனின் திரு உருவமும் பிரதிஷ்டையாகிவிட்டது!

கொத்னகட்டா கோவிலில் பெரிய லிங்கத்துக்கு ஏற்பட்ட அதே அதிசய மாறுதல், ராவ் வீட்டுப் பூஜையிலுள்ள சிறு லிங்கத்துக்கும் ஏற்பட்டது!

ஸ்வாமிக்குள்ளேயே பல லிங்கங்கள் உள்ளன. பாதபந்திரத்துக்குக் கடைகால் எடுத்தபோது அவர் அப்படித்தானே கூறினார்? தம்முள் இருக்கும் லிங்கங்களையே சிவராத்ரிகளில் வெளிப் படுத்துகிறார். இவருள் லிங்கம் இருப்பதற்கு எதிர்வெட்டாக இவரே லிங்கத்துள் இருப்பதைத்தான் கொத்னகட்டாவிலும், ஷிமோகாவிலும் பார்க்கிறோம். இவ்விரண்டும் இன்றளவும் அனைவர் கண்காண நிலைப்பட்டுவிட்டதால், தனிச்சிறப்புப் பெறுகின்றன.

* * *

1957 ஜூலை கடைசியில் ஸ்வாமி பரிவாரத்தோடு ஹ்ருஷிகேசத்தில் சிவாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளின் ஆச்ரமத்தில் முகாமிட்டிருக்கையில், ஒரு நாள் தம் கோஷ்டியோடு கார்வதல் சென்று திரும்பினார். திரும்புகையில் ''வஸிஷ்ட குகை'' என்று மங்கலாக எழுதியிருந்த வழிகாட்டிப் பலகையிடம் பஸ்ஸை நிறுத்தினார். உலகின் எந்த மூலை முடுக்குத்தான் அவருக்குத் தெரியாது? இமாலயச் சாரலிலே கிடுகிடு பள்ளமாகக் கங்கை அரித்தோடும் பகுதியில் சரசரவென்று இறங்கி நடந்தார். கங்கை வளைந்தது. அந்த வளைவிலே இன்னொரு குறுநதி அதோடு கலந்தது. பரம ரமணியமான இடம். குளிர்ச்சியும் கம்பீரமும் ஒருங்கே கூடிய நம் அழகுப் பிரபு அங்கு செல்வதை மனத்தில் ஓவியமாக்கிக் கொண்டாலே கங்கா ஸ்நானமாக, ஹிமோத்ரி தரிசனமாக இருக்கும்!

இரு நதிகள் கூடுமிடத்தில் வஸிஷ்ட குகை இருந்தது.

அதன் வாயிலில் எழுபது வயதுத் துறவி சிரேஷ்டர் ஒருவர் பாபாவை எதிர்பார்த்தே நின்றார்!

பாபா சென்றவுடன் பூரித்துப் புளகமுற்று வரவேற்றார்.

அவர்தான் ஸ்வாமி புருஷோத்தமாநந்தர். பரமஹம்ஸ ராமகிருஷ்ணர் தமது சொந்தப் பிள்ளை என்று குறிப்பிடும் பிரம்மாநந்தர், இந்தப் புருஷோத்தமாநந்தரின் இருபத் தோராவது வயதில் இவரது கைரேகையைக் கன்யாகுமரியில்பார்த்து,

'நீ ஒரு குகைக்குள் போய் வருஷக் கணக்கில் தியானம் செய்வாய்' என்றாராம். அப்படியே நடந்தது. ராமகிருஷ்ணரின் மற்றொரு சீடரான மஹாபுருஷ்ஜியிடம் உபதேசம் பெற்று, முப்பதாண்டுகளாக இந்த குகையில் தவமிருக்கிறார் ஸ்வாமி புருஷோத்தமானந்தர்.

அந்தப் பழைய கதையை யெல்லாம் பாபாவும் அவரும் பேசினார்கள். இல்லை, இல்லை. பாபாவேதான் பேசினார்!

ஒரு முறை உப்பும் வத்திப்பெட்டியும் இல்லாமல் காலம் தள்ள முடியவில்லை என்பதற்காக புருஷோத்தமர் மூன்று நாட்கள் நடந்து ஹ்ருஷிகேசம் போய்வந்ததைக்கூடச் சொல்லிச் சிரித்தார் பாபா.

புருஷோத்தமானந்தரின் சிஷ்யர்களாகப் பல ஸாதுக்கள் அந்த வசிஷ்ட குகையில் அவரோடு வசித்து வந்தனர். அவர்களுக்கெல்லாம் தங்கள் ஸாதனையின் பலனாக ஸாயிநாதன் வந்து விட்டதில் எல்லையற்ற மகிழ்ச்சி.

உத்தம ஜீவிகளுக்கு உவகை தருவதில் உவமையற்றவரன்றோ ஸ்வாமி? மறு தினமும் வசிஷ்ட குகைக்குப் புறப்பட்டார். 'வானம் இருண்டு வருகிறதே, அம்மலைச் சரிவில் வெள்ளக் கஷ்டம் ஏற்பட்டால் என்ன செய்வது?' என்று பரிவாரத்தினர் குழம்பினர். ஸ்வாமியோ நிச்சிந்தையாகப் புறப்பட்டார். குழம்பி வந்த வானமும் தெளிந்துவிட்டது!

இன்றும் ஸாதுக்கள் குதூகலித்தனர், ஐயன் வருகையில். ஸ்வாமி தேனாகப் பேசினார்; தேவாமுதமாகப் பாடினார்.

புருஷோத்தமருக்குப் பணிவிடை செய்து வந்த காளிகாநந்தர், "ஸ்ரீ ரகுவர ஸுகுணாலயா" என்ற தியாகராஜ க்ருதி பாடச் சொல்லி வேண்டினார். உடனே ஜம்மென்று வித்வானைப் போல் அந்த பைரவி ராகப் பாடலை வெளுத்துக் கட்டினார் நம் ஸகல கலா வல்லபர்.

இந்தக் கற்கண்டு கானம் போதாதென்று காளிகாநந்தரின் வயிற்று நோவு தீரக் கற்கண்டே சிருஷ்டித்தளித்தார். கற்கண்டுகளே போன்ற ஸ்படிகங்களாலான ஜபமாலை ஒன்றைப் படைத்துப் புருஷோத்தமாநந்தருக்கு அளிக்க, அந்த மஹானும் அதை மரியாதையுடன் பெற்று அணிந்தார்.

இரவு பத்து மணிக்கு பாபா மற்றவர் அனைவரையும் போகச் சொல்லிவிட்டு, புருஷோத்தமாநந்தரும் தாமுமாக இருந்து கொண்டு குகைக் கதவை மூடிவிட்டார்!

உள்ளே நடந்ததைக் கதவிடுக்கு வழியே காணும் பாக்கியம் பெற்ற ஸ்ரீ சுப்பராமய்யா எழுதுவதைப் பாருங்கள்: "ஸ்வாமி புருஷோத்தமாநந்தரின் மடியில் பாபா தலையை வைத்துக்

Koviloor Digital Library

கொண்டு படுத்தார். உடனே பாபாவின் உடல் முழுதையும் ஒரு திவ்ய ஜோதி வெள்ளம் முழுகடித்தது. அவரது கேசத்தையும், திருமுகத்தையும் பார்த்தால் அவை பன்மடங்கு பெரிதாகி யிருந்தன! பாபாவின் வதனத்திலிருந்து பேரொளிக் கதிர்கள் பிரவஹித்தன.''

பிற்பாடு ஸ்வாமியிடமே சுப்பராமையா கண்ட தரிசனம் பற்றி அன்பர்கள் விளக்கம் கேட்டபோது, அவர் முதலில் ரொம்ப 'கிராக்கி' செய்து கொண்டார்; கடைசியில் அதுவே புருஷோத்தமா நந்தர் தரிசிக்க விரும்பித் தவம் கிடந்த ஜ்யோதிர் பத்மநாபக் கோலம் என்றார்.

ஸ்வாமி பாடுகிறாரே ''ஸ்ரீ ரகுவர ஸுகுணாலய'', அதிலே ''ஸரஸிஜ லோசன, விரோச நாப'' என்று வரும். தாமரைக் கொப்பூழான் பத்மநாபனாகிய ஸரஸிஜநாபன். இங்கே அவன் கண்களைத் தாமரைக்கு ஒப்பிட்டு விட்டு, கொப்பூழை சூரியனுக்கு உவமித்து ''விரோச நாப'' என்கிறார் தியாகையர். விரோச நாபனேதான் ''ஜ்யோதிர் பத்மநாபன்.''

1961 சிவராத்ரியின்போது லிங்கோத்பவம் நடந்த அதே நடு யாமத்தில் புருஷோத்தமாநந்தரின் ஜீவ ஜோதியை புருஷோத்தமனான ஐயன் தம்மில் கலந்துகொண்டார்!

அந்த சிவராத்ரியின்போது பாபாவிடமிருந்து மூன்று லிங்கங்கள் உற்பவித்தன. ஒன்று பஞ்சலோஹ லிங்கம்; இன்னொன்று சுத்தத் தங்க லிங்கம்; மூன்றாவது ஸ்படிக லிங்கம். பஞ்ச லோஹம் பஞ்சபூத சரீரத்தையும், சுத்தத் தங்கம் அதன் சுத்தீகரிப்பையும், நிறமற்ற ஸ்படிகம் இறுதி நிலையான குணமற்ற பூரணத்தெளிவையும் குறிக்குமோ? புருஷோத்தமாநந்தரின் ஜீவிதத்துக்கு இதுவே உருவகமாகுமோ?

* * *

மேலும் உதாரணம் தேவையில்லைதான்.

ஸர்வ தேவ ரூபா
ஸத்ய ஸாயி பாபா
ஸத்ய தர்ம சாந்தி ப்ரேம ஸ்வரூபா

என்று அம்பத்தூர் அன்பர் ஸ்ரீ வை. பாலசுப்ரமணியம் பாடுவது பக்தர் அனைவரையும் உடனே புல்லரிக்கச் செய்வதற்குக் காரணம், அவர்கள் ஒவ்வொருவரும் இந்த ஸர்வ தேவ ரூபத்வத்தை ஸ்வாமியிடம் உணர்ந்திருப்பதுதான்.

ஸாயி பக்தர்களில் ஏராளமானவருக்கு ஒரு காலகட்டத்தில் வாஸ்தவமாகவே தாங்கள் கோயில்களில் தரிசிக்கும் மூர்த்திகளில் எல்லாம் பாபாவின் வடிவமே தெரிவதுண்டு. இந்த அபிப்ராயத்தில் பன்முறை வந்தருளும் ஸ்ரீ தியாகையரின் வாக்கில்

பர தெய்வ மூல ஜுசுநந்தனே
பாவமந்து நீவை பரகேதவய்ய

என்ற அநுபவம் எண்ணிறந்த ஸாயி பக்தர்களின் பிரத்யக்ஷ அநுபவமாகும்.

இந்தக் காலகட்டத்துக்குப் பிறகு அவர்களுள் பெரும்பான்மையானவருக்கு அந்தந்த தெய்வ வடிவங்கள் மறைந்து, அவற்றின் இடத்தில் பாபா தெரிவதில்லை. பழையபடியே அந்தந்த தெய்வந்தான் தெரிகிறது. ஆனால் உணர்விலே ஒரு மகத்தான மாறுபாடு நிகழ்கிறது. அத்தனை தெய்வத்திலும் ஒரே பாபா வடிவைக் கண்ட கட்டத்துக்குப் பின், இப்போது அத்தனை தெய்வங்களும் அதனதன் வடிவில் தெரிந்தாலும், அத்தனையுமே வடிவற்ற ஏக சத்தியந்தான் என்ற உணர்வு உறுதியுடன் பிறக்கிறது. ஸர்வ தேவ ரூபன், ஸர்வ தெய்வங்களும் ஒரே அரூபம் என்ற உண்மையை வெகு ஸூக்ஷ்மமாக, அடியார்களை இப்படி விண்டு கொள்ள முடியாத நுண்ணுணர்வாக, அருளிவிடுகிறார். முடிவில் அவர்களுமே இந்த அரூப சத்தியந்தான் என்று உணர்த்தத்தானே அவர் அவதரித்திருக்கிறார்?

Koviloor Digital Library

அத்தியாயம்—47

திருந்திப் பணி கொள்வான்

ஒப்பிலாத் தீவினையேனை உய்யக்கொண்டு
செப்பமே செய்து திரிகின்ற சீர்கண்டே

—திருவாய்மொழி

சீரார் அருளால் சிந்தனையைத்
திருத்தி ஆண்ட சிவலோகா

—திருவாசகம்

தெய்வ ஸ்வரூபமாக தரிசனம் தருவதைவிட உயர்ந்த அநுக்கிரஹம், ஸாதகர் தம்மிலேயே தெய்வத் தன்மையை உணரச் செய்வதுதான். தெய்வத் தன்மை என்னும்போது அதிலே எல்லையில்லா நன்மை, அழகு, ஆற்றல், அறிவு ஆகியன அடங்கி உள்ளன. இப்படி 'தன்மை' கூடச் சொல்ல முடியாமல், இவை எல்லாம் சேர்ந்ததாக ஆத்மா அல்லது பிரம்மம் என்று ஒன்று இருக்கிறதே அதை ஸாதகன் ஒருவன் அநுபவிக்குமாறு செய்வதுதான் அநுக்கிரஹத்தின் எவரெஸ்ட் சிகரம்!

பிழை மலிந்த மானுடரை முதலில் தர்ம வாழ்வில் திருப்பி, பிழைகள் குறைந்தவர்களாகத் திருத்துவது; அதற்கு மேல்படியில் அவர்களை பக்தராக்கி, தெய்விக அநுபவங்கள் தருவது; யோகம், ஞானம் முதலியவற்றில் உயர்த்துவது; முடிந்த முடிபாக ஆத்மாநுபவம் என்ற மோக்ஷத்தைத் தருவது — இவை யாவற்றுக்கும் பாபாவின் சரிதத்தில் பலப்பல உதாரணங்கள் உள்ளன. மகா மாயைக்கு முற்றிலும் தப்பி ஞானியாகிறவர் அபூர்வத்திலும் அபூர்வமே. அதோடு பரம ஞானிகளான எவரும், 'எனக்கு ஆத்ம ஸாக்ஷாத்காரம் வந்துவிட்டது' என்று வெளியிடவும் மாட்டார்கள். எனவே இப்பேர்ப்பட்டவர்களைப் பற்றி வெளியுலகுக்கு அதிகம் விவரம் தருவதற்கில்லை. ஆயினும் இப்படிப் பட்ட உதாரணங்களும் ஸாயியின் அருட் காப்பியத்தில் இல்லாமற் போகவில்லை.

Koviloor Digital Library

அடிமட்டத்தில் பாபியரைத் திருத்துவதிலிருந்து பாபாவின் சக்தியைப் பார்க்கலாம்.

* * *

பாதமந்திர நாட்களில் ஓர் இரவு பாபா சித்ராவதியைக் கடந்து அப்பாலும் சென்றார். அங்குள்ள குன்றில் ஓரிடத்தைக் குறியாக வைத்துச் சென்றார். எந்த பக்தரை நோக்கி?

விந்தை! பக்தரே இல்லை. அங்கே ஒரு கொள்ளைக் கூட்டத்தார் தாங்கள் சூறையாடிய பொருட்களை பாகம் போட்டுக் கொண்டிருந்தார்கள்!

திடும் பிரவேசமாக பாபா அங்கு வந்து நடுவே நின்றதும், அவர்கள் திகைத்துவிட்டனர். பௌதிக ரீதியில் அந்தக் கொள்ளைக் கூட்டத்தார் இளைஞரான பாபாவை என்ன வேண்டுமானாலும் செய்திருக்கலாம்தான். ஆனால் இவர் மானஸ ரீதியில் என்னவோ செய்து அவர்களை அடக்கி அமர்த்தி வைத்திருந்தார். அது அவர்கள் அதிருஷ்டம்! எத்தனையோ தீயவர்களைத் தீயவராகவே விட்டு வைத்துள்ள பாபா, இவர்களுடைய பாக்கிய வசத்தால் இவர்களது உள்ளே புகுந்து திருத்தத் திருவுளம் கொண்டு விட்டிருக்கிறார்.

களவு புரியமட்டுமே அறிந்த கைகளைக் குவித்து அவர்கள் தம்மிடை நின்ற தயாதேவதையை வணங்கினர். பாபா கையசைத்தார். கரம் நிறையத் திருநீறு. "பங்காரு, பங்காரு" என்று அன்போடு சொல்லிக் கொண்டு அந்தப் பதினேழு பக்காத் திருடர்களுக்கும் விபூதி இட்டுவிட்டார். பிறருக்கும் ஆபத்து இன்றி, தங்களுக்கும் அச்சம், ஆபத்து, பாபம் இன்றி அவர்கள் உழைத்துப் பிழைக்க வேண்டிய அவசியத்தை எடுத்துரைத்தார். தாமே அவர்களுக்கு ஜீவனோபாயம் தேடித் தருவதாகச் சொல்லிப் புட்டபர்த்திக்கு அழைத்து வந்தார்.

கொள்ளைக் கூட்டத்தினர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு அவர்களை நன்னெறிக்கு மாற்றி பாபா அழைத்து வந்தது அவரது சரித வானில் ஒரு துருவ நக்ஷத்ரமாகும். அவர்களைப் புட்டபர்த்தியிலேயே பல தொழில்களில் அமர்த்தினார். அவர்களிலே சுப்பண்ணா என்ற பக்கா ரௌடியைப் பழைய மந்திரத்தின் காவலாளாக நியமித்தார் அறக்காவலர். "திருடனின் கையில் சாவியைக் கொடுப்பது" என்பார்களே, அது நெஞ்சைத் தொடும் வகையில் மெய்யாயிற்று.

தவறியவர்கள் திருந்த முற்பட்டாலும் சமூகம் அவர்களை நம்பாது. சமூகத்துக்கு அந்த நம்பிக்கை பிறந்து, அவர்களைத் தம்மோடொத்த மனிதராக நடத்தவேண்டுமென்றேதான் பாபா சுப்பண்ணாவை நம்பி அவனிடமே பாதுகாப்புப் பணியைத் தந்தார். அவனுந்தான் எப்படி மாறிவிட்டான்?

* * *

சில ஆண்டுகளுக்கு முன் நாற்பத்தைந்து வயதான சந்நியாசி ஒருவர் பிரசாந்தி நிலயத்துக்கு வந்தார்.

Koviloor Digital Library

பாபா அவரை உள்ளே அழைத்துச் சென்றார்.

''அப்பா, கல்பகிரி! நீ என்னதான் காஷாயம் கட்டினாலும், ஹ்ருஷிகேசம் போனாலும் கொலை பாவம் உன்னைவிட்டுப் போகுமா? நாலாண்டுகளாகத் தலைமறைவாக சந்நியாசி வேஷம் போட்டது போதும். இப்போதே போய் போலீஸில் சரண்புகு. கர்மாவை அநுபவித்து விடு. அஞ்சி அஞ்சி வாழும் உனக்கு அதுவே நிம்மதி. மரண தண்டனை தருவார்களே என்று பயப் படாதே. நான் துணை இருக்கிறேன். இந்த ஜன்மாவிலேயே உன் கொலை பாவத்துக்கு நீ பக்தியினால் பிராயச்சித்தம் செய்து கொள்வதற்கு என் காப்பு இருக்கிறது. மரண தண்டனை விதித்த பின் ராஷ்டிரபதிக்குக் கருணை மனுப் போடு. நான் உனக்குக் கருணை செய்கிறேன். நிச்சயமாக நீ தூக்கில் தொங்கமாட்டாய். நான் வாக்குத் தருகிறேன். போப்பா, போ, போலீஸ் நிலையத்துக்குப் போ!

''இந்தா, புனித காஷாயம் உனக்கு உதவாது. வெள்ளை வேஷ்டியை இதோ பெற்றுக்கொள்''—அன்பும் கண்டிப்பும் ஒருங்கே தொனிக்கக் கூறிக் கல்பகிரியிடம் வெள்ளாடை கொடுத்தார் பாபா.

ஈச்வரனையன்றி வேறெவரால் இத்தனை அழுத்தத்தோடு பேச இயலும்?

உண்மையாகவே நன்னெறிக்கு அவாவி, பலவாறு உலைப் புண்டிருந்த கல்பகிரி, ஸாயிநாதனை ஸர்வேசனாக உணர்ந்து அவர் சொற்படி நடக்க உடம்பட்டுவிட்டார். விஷப் பற்களை உதிர்த்து விட்ட பாம்பாக 'கோரிக்கை' அறையிலிருந்து மாற்றுருவம் கொண்டு வெளிவந்தார். உள்ளே பிரபு சொன்னதைக் கண்ணும் கண்ணீருமாகச் சில அணுக்கத் தொண்டர்களுக்குச் சொன்னார். உயிர்க் கொலை என்னும் பெரும் பிழை செய்த தானும் பிழைக்கும் வழி தொட்டாச்சு என்ற பெருமிதத்தில் பீடு நடைபோட்டு வெளியேறினார்.

போலீஸில் சரண் புகுந்தார். இது சட்டபூர்வ சரண்! ஆத்மிகமாக பாபாவிடமன்றோ சரணாகதி செய்திருந்தார்!

வழக்கு நடந்தது. தாமே குற்றத்தை ஒப்புக்கொண்டார் என்றாலும்கூட, அவர் புரிந்த கொலை படுபயங்கரமானது என்பதால், நீதிபதி தூக்குத் தண்டனை விதித்துவிட்டார்.

பாபா சொற்படியே ராஷ்டிரபதிக்கு 'க்ளெமென்ஸி பெடிஷன்' அனுப்பப்பட்டது. அது பரிசிலனையில் இருக்கும்போது வாரங்கல் மத்ய சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த கல்பகிரி, உடனிருந்த கொலைகாரர்களிடம், கஜப் போக்கிரிகளிடம் அவர்களது பாபத்தை எல்லாம் துடைக்க வந்த பாபாவின் அவதாரத்தைப் பற்றி ஓயாமல் சொன்னார்.

இரும்பு மனங்கள் பல, பொன்னாக மாறத் தொடங்கின. சிறையிலே ஸாயி பஜன் தொடங்கியது. இரும்புக் கிராதிகளைத்

Koviloor Digital Library

தாண்டி ஐயனின் கரும்பு நாமம் வந்தது — கரும்புக் குழலும், அரும்பு நகையும் கொண்ட ஐயனின் சித்திரம் காராக்ருஹத்தைக் கர்ப்பக்ருஹமாக்கியது!

ராஷ்டிரபதியிடமிருந்து கல்பகிரிக்கு மன்னிப்பு வந்தது. மரண தண்டனை ஆயுட்கால சிறைவாஸமாக மாறியது. அத்தனை கைதிகளுக்கும் பாபாவிடம் அபார நம்பிக்கை வந்து விட்டது.

''ஆஹா! சிறைச்சாலையை எனக்குத் தவச்சாலையாகக் கொடுத்திருக்கிறார் ஸ்வாமி. தண்டனை முடிந்து நான் என் பாபத்தை எல்லாம் தீர்த்துக்கொண்டு வெளியே வரும்போது, தாமே எனக்கு ஜபமாலை தந்து ஸத்குருநாதனாகி, என்னை சந்நியாசத்தில் ஈடுபடுத்துவதாகச் சொல்லியிருக்கிறார்'' என்று ஆனந்த பாஷ்பத்தோடு சொன்னார் கல்பகிரி. கல்லாக, கிரியாக இருந்தவரைக் கனியாக்கிவிட்டாள் நம் கல்பக் கொடி ஸாயி மாதா.

''ஸாதுவுக்கும் ஓர் இறந்த காலம் உண்டு; பாபிக்கும் ஓர் எதிர்காலம் உண்டு'' என்றார் ஆஸ்கார் வொயில்ட். ஸாது வேஷம் போட்டவரின் இறந்த காலத்தை இறக்க வைத்த பாபா மற்ற பாபிக் கைதிகளின் எதிர்காலத்தை எப்படி உய்யவைத்தார் பாருங்கள்!

மற்ற கைதிகள் செங்கப்பாவின் தலைமையில் பாபாவின் பரம தாஸர்களாயினர். மற்ற பஜனை மண்டலிகளையும்விடக் கூட வாய்மையும், தூய்மையும், பக்தியும், பணிவும் நிரம்பிய இடமாக வாரங்கல் சிறைக்கூடம் மாறியது. 1961—ம் வருடம் ஸ்வாமி ஜயந்தி ஆயிரமாயிரம் இடங்களில் கொண்டாடப்பட்டிருந்தபோதிலும், இந்த வாரங்கல் சிறைச்சாலையில் நடந்த ஜயந்தி மஹோத்ஸவத்துக்குத்தான் முதலிடம் தரவேண்டும்.

ஆஹா! அந்தக் கைதிகள் ஒவ்வொருவரும் தம் பாபத்தை உணர்ந்து பாபாவுக்குத் தொடர்ந்து எழுதும் கடிதங்களையும், அவற்றுக்கு உடனுக்குடன் பாபாவே எழுதும் பதில்களையும்விடப் பிரேமச் சுரங்கத்தில் உயர்ந்த பொன்மணிகள் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். கைதிகள் இத்தனை கடிதங்கள்தான் எழுதலாம் என்று கட்டுப்பாடு உண்டு. அதற்கு உட்பட்டு எழுதும்போது பாபாவையே பரம பந்துவாக உணர்ந்து அவர்கள் மனம் திறந்து எழுதுவார்கள். குற்றமற்ற ஸ்வாமி கொடுங்குற்றங்கள் புரிந்த குழந்தைகளிடம் சற்றும் கோபமின்றி, அன்பு மையில் பரிவுப் பேனாவை முக்கிப் பதில் எழுதுவார். பஜனை புஸ்தகங்கள், போதனை நூல்கள் கட்டுக்கட்டாக அவர்களுக்கு அனுப்புவார். அவர்களும் ஸங்கீர்த்தனம், பாராயணம், லிகித ஜபம் (நாமாவை எழுதுவது) இவற்றில் ஈடுபட்டு அருளுக்குத் தங்களைப் பூரணமாகப் பாத்திரராக்கிக் கொண்டார்கள்.

உத்தம ராமதாஸரும், மணிவாசகரும் சிறைவாஸம் செய்ய நேர்ந்தது. இங்கோ அதமர்களும் சிறையில் ராமதாஸர்களாக,

Koviloor Digital Library

மணிவாசகர்களாகப் பரிணமிக்கத் தொடங்கினர். இவர்கள் எழுதிய கடிதங்களில் பாபாவே உவந்து வெளியிட்ட, செங்கப்பா வின் மணிவாசகங்களைப் பாருங்கள்:

''மனைவியோடு ஏற்பட்ட சிறு பிணக்கு முற்றி இருவரும் சாகவேண்டியதே என முடிவு கட்டிவிட்டேன். என் வாயில் விஷத்தை அடக்கிக்கொண்டே, தூங்கும் மனைவியைக் குத்திக் கொன்றேன். உடன் நான் விழுங்கிய விஷம் என்னை ஏனோ கொல்லவில்லை. எனவே, அவளுடைய ரத்தம் சொட்டிக் கொண்டிருந்த அதே கத்தியால் என் வயிற்றை அறுத்துக் கொண்டேன். ஆனாலும் சாகவில்லை. மயங்கிச் சாய்ந்திருக் கிறேன்.

''கண் திறக்கும்போது, போலீஸ் காவலில் ஆஸ்பத்திரியில் இருக்கிறேன்! என் பயங்கர வெட்டுக் காயத்தை எப்படியோ குணம் செய்து, ராஜ மஹேந்திரபுரம் சிறையில் வைத்தார்கள். பழைய காயம் மறுபடி 'ஸெப்டிக்' ஆயிற்று. அதற்காக வயிற் றைக் கிழித்து ரண சிகித்ஸை செய்ய வேண்டியதாயிற்று. இத்தனை விபரீதங்களுக்கும் நான் சாகவில்லை. அப்போதுதான் அறிவிலே பளிச்சிட்டது: என் நல்ல எதிர்காலத்துக்கெனவே கடவுள் என்னை இப்படிச் சாகவிடாமல் கட்டிக் காக்கிறார் என்று. பாபா! சாகாததால்தான், என்போன்ற பாபிகளைத் தூக்கி விடவே மண்ணில் வந்து தோன்றியுள்ள ஈசனான தங்களை எனக்கெனப் பெற்றுவிட்டேன்.

''வயிற்று உபாதியாலும் நன்மையே விளைந்திருக்கிறது. காரம், புளி இன்றிக் கிரை, பருப்புகள் ஆகிய ஸாத்விக உணவே இதனால்தான் எனக்கு விதிக்கப்பட்டிருக்கிறது!.... தாங்கள் 'ஸநாதன ஸாரதி'யில் உபதேசித்துள்ளபடி குருவாரத்தில் மௌன விரதம் தொடங்கியுள்ளேன். பாபா! தாங்கள் பாவியேனுக் கெழுதிய கடிதத்தை என் கண்களில் ஒற்றிக்கொண்டேன், இதயத் தில் அழுத்திக்கொண்டேன். ஆஞ்ஜநேயரிடமிருந்து பெற்ற ஸ்ரீராமனின் மோதிரம் ஸீதைக்கு எப்படியிருந்திருக்குமோ, அப்படி எனக்கிருக்கிறது அக் கடிதம்......''

பஜனை, பாராயணம், தியானம், ஸத்வ உணவு, மௌனம்— இவற்றை சாதாரண மக்களே கைக்கொள்ளப் பின்வாங்கும் போது, கொலைகாரர் கைக்கொண்டார் எனின் ஸாயிசக்தியை என்னென்பது?

கயா, ஹஸாரிபாக் சிறைச்சாலைகள், கல்கத்தா பிரஸிடென்ஸி ஜெயிலின் பெண் பிரிவு போன்ற பல இடங்களை ஸாயி பக்தர் களான (முன்னாள்) குற்றவாளிகள் பாவனப்படுத்தி வருகிறார்கள். ஜகாயி, மதாயி என்ற இரு கொடுங் குற்றவாளிகளை ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் நல்வழிப்படுத்தியதை பாகவதர்கள் மிகச் சிறப்பித்துச் சொல்வர். பாபாவினால் திருத்தப்பட்ட ஜகாயி, மதாயிக்கள் பலப் பலர்.

Koviloor Digital Library

"பங்காரு" என்று பாபா பிரியம் ததும்ப அழைப்பதில் உள்ளர்த்தம் உண்டு. சுத்திகரிக்கப்படாத தங்கமாக உள்ள நம்மைச் சொக்கப் பொன்னுக்க அவர் விரும்புவதையே அது குறிக்கும். இதற்கு விசேஷ தவ, விரத, நியமாதிகள் வேண்டுமென்பதில்லை. பாபாவிடம் சொக்கியிருந்துவிட்டால் போதும், சொக்கத் தங்கமாகி விடலாம். பொன்னைப்போல் ஊது உலையில் அவதிப்படாமல் குளிர்பதனப் பெட்டிக்குள் வைத்தே பந்தரை மாற்றுத் தங்கமாக்கி விடுவார் இந்த அற்புத ஸித்தர்.

இளங் குற்றவாளிகளுக்கான விசாகப்பட்டணம் போர்ஸ்டல் பள்ளி, இப்படித்தான் ஒரு தங்க வயலாக மாறியிருக்கிறது. சீர்திருத்தப் பள்ளி என்பதைவிட ஸாயிகேந்திரமாகவே ஆகிவிட்ட அங்கு பிள்ளைகள் நாம ஸங்கீர்த்தனம் செய்வார்கள்; திவ்ய நாடகங்களை அரங்கேற்றி நடிப்பார்கள்.

நெருங்கிய உறவினன் எங்களுக்கு
நேசன் பர்த்தி யீசன்;
கருங்குணக் கொடுமை தீர்க்கும் கடவுள்
காப்பினைப் பெற்றோமே

என்று ஓர் இளங் குற்றவாளி உளங்கரைந்து பாடியதைவிட பாபாவின் காப்புக் காப்பியத்துக்கு அதிகம் சொல்வதற்கில்லை.

* * *

தாராபுரத்திலிருந்து கரூருக்குக் கார் பறந்து கொண்டிருக்கிறது. காரில் பாபா இருக்கிறார். பரம பக்தர்கள் இருக்கிறார்கள். துளிக்கூட பக்தியே இல்லாத குமாரசாமிதான் டிரைவர். "பகுத்தறிவு"ப் பெருமை அவருக்கு!

நிலா வெள்ளி வெள்ளத்தை அள்ளிச் சொரிகிறது. குளத்துப்பாளையத்தில் இருபுறமும் தென்னஞ்சோலை சூழ்ந்த சாலை. பரம ரஸிகரான பாபா காரை நிறுத்தச் சொல்கிறார். இறங்குகிறார்.

நிலாவையும், தென்னையையும், தென்றலையும், பச்சை வயலையும் ரஸித்துக்கொண்டு மெல்ல நடக்கிறார். அலை அலையான காற்றில் பயிர்கள் அலை அடிப்பதுபோல் அசைகின்றன. பாபாவின் அடர்ந்த குழலும் அலை அலையாக முகத்தில் வந்து புரள்கிறது. அதை அளைந்துகொண்டும், கோதிக்கொண்டும், பிடித்துக்கொண்டும் அவர் சாந்தராக உலவுவதைக் காணும்போது பரம பக்தர்கள் நெகிழ்கிறார்கள். டிரைவரோ மரியாதையே இன்றி பீடி பிடிக்கிறார்.

'அக்னிஹோத்ரம்' முடிந்ததும் பாபா குமாரசாமியிடம் வருகிறார். "விபூதி வெச்சுக்கொள்வதில்லையா?" என்று கனிவாய் கேட்கிறார்.

Koviloor Digital Library

''விபூதி போடணும்னு என்ன சட்டம்? போடாட்டி என்ன நட்டம்?'' என்று எரிச்சலாகப் பதில் சொன்னார் குமாரசாமி.

பாபா நிலவுச் சிரிப்பொன்றை உதிர்த்தார். ''பாவம்'' என்றார். ''நீவு வட தினிண்டாவா?'' என்றார்.

''இதென்ன வீண் கேள்வி? நான் என்ன சின்னக் குழந்தையா, வடை தின்பதற்கு?'' — விரைப்பாக வந்தது விடை.

இனிப்பாகத் தொடர்ந்தார் பாபா: ''அதைத்தான் கேட்டேன். சின்னக் குழந்தை நாளில், உன் மூன்றும் வயசில் வடை தின்னப் போய்த்தானே....'' என்றவர் புஷ்கோட்டுக்குள் ஒளிந்திருந்த குமாரசாமியின் வலப் புயத்தைத் தொட்டு, ''இதென்ன?'' என்றார்.

அவ்வளவுதான். குமாரசாமி சட்டையையும் பனியனையும் பரபரவென்று கழற்றினார். கால்பூட்ஸை அவசரமாக அவிழ்த்தார்; பாபாவின் முன் தண்டாகாரமாக விழுந்து அவரது பாதங்களைக் கட்டிப் பிடித்துக்கொண்டு கதறு கதறு என்று கதறிவிட்டார்.

பாபா எத்தனையோ சமாதானம் சொல்லி, அவரது தலையை தடவிக்கொடுத்து சமனமாக்க வேண்டியதாயிற்று.

குமாரசாமியின் மூன்றும் வயதில் அம்மா வடை சுட்டுக் கொண்டிருந்தாள். வடைக்கு ஆசைப்பட்ட குழந்தை அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு உபத்திரவப்படுத்தியது. கடைசியில் வாணலி மீதே குழந்தை சாய்ந்து, வலப் புயத்தில் கொதிக்கும் எண்ணெய் சுட்டெரித்தது. அன்று கொப்புளித்ததன் தடம் இன்றும் இருக்கிறது! அதை அறிந்து சொல்ல ஒரு மூர்த்தி யிருக்கிறார் என்றதும், தன்னுடைய வெறும் ''பகுத்தறிவு'' வாதம் அடியோடு எடுபடாது என்ற அறிவு குமாரசாமிக்கு உண்டாகிவிட்டது.

புது பக்தனுக்குப் பரிசு வழங்கினார் பகவான். அதாவது, அந்த நிமிஷத்தில் தென்றலில் ஆடிய திரு முடியும், முகத்தில் முகிழ்ந்த முறுவலுமாக பாபா எப்படி இருந்தாரோ, அதையே ப்ரோமைட் பேப்பரில் பதித்த புகைப்படமாக குமாரசாமிக்கு வழங்கினார்!

மறுபடி கார் புறப்பட்டது. மற்ற அனைவரும் மௌனமாக அமர்ந்திருந்தனர். கார் ஓசைக்கு நடுவே காரோட்டியின் விம்மல்கள் மட்டும் அவ்வப்போது கேட்டுக்கொண்டிருந்தன!

பகவானையே பரீக்ஷை பார்த்த பச்சாத்தாபம்! பொள்ளாச்சியிலிருந்து கரூருக்குப் போய் அங்கே உள்ள பாபாவை அழைத்துப் போகுமாறு இவருக்குப் பணி தரப்பட்டிருந்தது. இவர் கரூர் போவதற்குத் தேவையான பெட்ரோல் மட்டுமே போட்டுக்

Koviloor Digital Library

கொண்டார். அதற்குப் பின் பாபாவுடைய மானத்தை வாங்க வேண்டும் என்று இவருக்கு எண்ணம்! 'அவர்தான் எத்தனையோ சமயங்களில் ஜலத்தில் கைவிட்டு அதைப் பெட்ரோலாக்கியதாக இந்த மூட பக்தர்கள் நம்புகிறார்களே; ஜலம்கூட விடாமல் காரைப் போகச் சொல்வார் என்றுகூடப் பிதற்றுகிறார்களே! இன்றைக்கு அந்த 'சாமி'யின் லக்ஷணத்தைப் பார்த்து விடலாம். பெட்ரோலே இல்லாமல் கரூரிலிருந்து புறப்படலாம். கார் வழியில் நின்று அவர் வண்டவாளத்தை வெளியிடட்டும்' என்ற திவ்யமான எண்ணம் குமாரசாமிக்கு.

கரூரிலிருந்து புறப்படுகையில், அடியில் ஒரே அங்குல பெட்ரோலுடன் மக்கார் செய்துகொண்டிருந்த வண்டியைப் பார்த்து, பாபா "பிர, பிர" (ஜல்தி, ஜல்தி) என்றார். அது உடனே புறப்பட்டுவிட்டது!

அப்போதும் குமாரசாமிக்கு, அடியில் கொஞ்சம் பெட்ரோல் இருந்ததாலேயே கார் கிளம்பிற்று என்றே தோன்றியது. "பகுத்தறிவு" இல்லையா?

பெரும்பள்ளத்துக்கு வந்தபோது பாபாவே பெட்ரோல் ஊற்றவேண்டாம் என்றார். குமாரசாமிக்கு வியப்பு அதிகமாயிற்று. ஓரங்குல பெட்ரோல் அப்படியே இருந்தது! உடுமலை வருகிறவரை அப்படியே இருந்தது. நிச்சயமாகப் பெட்ரோல் இல்லாமலேயேதான் கார் ஓடியிருக்கிறது என ஊர்ஜிதமாகி விட்டது.

அதுமட்டுமில்லை. கண்ணன் அர்ஜுனனை முதலில் தேரிலிருந்து இறக்கிவிட்டு, பிறகு தாம் இறங்கியவுடன் அந்தத் தேரே எரிந்தது என்பார்களே! அதை நினைப்பூட்டும் ஒரு விசித்திரமும் நடந்தது. உடுமலை அடியாரின் வீட்டில் பாபாவை இறக்கிவிட்டு, 'ஷெட்'டுக்குப் போக டிரைவர் காரை இயக்கிய போது அது ஓடவேயில்லை. பாபா ஸாந்நித்யத்தில் எத்தனையோ மைல்கள் பெட்ரோலின்றி ஓடிய வண்டி, அவர் இல்லாமல் ஓரடி கூட நகரவில்லை. புதிதாகப் பெட்ரோல் ஊற்றியே அதை குமாரசாமி நகர்த்த வேண்டியதாயிற்று.

இத்தனை அநுபவித்தும், அன்றிரவு குளத்துப் பாளையத்தில் தான் இடக்காகப் பேசியதையும், அப்படியும் அவர் தம்மை மடக்கித் தம் அடிக்குச் சேர்த்துக்கொண்ட வான் கருணையையும் எண்ணினால் எப்படி வியக்காதிருக்க முடியும்?

* * *

இன்னொரு கார் டிரைவர். இவர் திருவனந்தபுரத்தைச் சேர்ந்தவர். குமாரசாமியைப்போலவே நாத்திகர். முரடர். ஏதோ ஓர் அலை இவரை நம் ஸ்வாமியிடம் சேர்த்தது. ஸ்வாமி தம்மை என்ன செய்தார் என்று இன்றளவும் இவர் வெளியே கூறுவதில்லை. ஆனால் ஒரு சில நிமிட பேட்டியில் கல்லைக் கனிவிக்கும் சீர்திருந்த

Koviloor Digital Library

''ஆல்கெமி'' நடந்ததை மட்டும் வெளியுலகம் நிதரிசனமாகக் காண்கிறது. ஸ்வாமியைக் கண்டு வந்த காரோட்டி பரம ஆஸ்திகராகி விட்டார்; அவரது முரட்டுத்தனமெல்லாம் எங்கோ ஓடி மறைந்து இனிமைக்கும் பணிவுக்கும் எடுத்துக்காட்டாகி விட்டார்.

முன்பே ஓர் அத்தியாயத்தில் ஈரோட்டிலிருந்து வந்த சில நாஸ்திகர்களை ஸ்வாமி திருநீற்று நெற்றியராகத் திருப்பி அனுப்பியதைப் பார்த்தோமே!

ஆஸ்திகரொருவர் நாஸ்திகராகி, மீண்டும் ஆஸ்திகத்துக்குத் திருப்பப்பட்டதைப் பார்ப்போம்:

தன் அருமைக் குழந்தை காலமான துக்கத்தைத் தெய்வத்திடம் சீற்றமாக மாற்றிக்கொண்டார் இன்று எல்.ஐ.ஸி.யில் அதிகாரியாகி உள்ள அம்பத்தூர் ஸ்ரீ வீரராகவன். தாம் நீண்ட காலமாகக் கும்பிட்டு வந்த ஷிர்டி பாபா படத்தையும், மற்ற தெய்வ சித்திரங்களையும் உடைத்தும், மிதித்தும் வெளியே எறிந்தார். அடியோடு நாஸ்திகரானார்.

ஆஸ்திகத்தில் ஊறிய இவரது காந்தை, காந்தம்மா என்ற பதவிசான பெண்மணி கணவருக்கு அஞ்சித் தம் பக்தியை உள்ளுக்குள்ளே புதைத்துக்கொண்டு வாழ்ந்தார். அந்த அம்மாளுக்கு ஒரு தொல்லை பிடித்த வியாதி வந்து சேர்ந்தது. முற்றியது. உயிராபத்தே ஏற்படலாம் என்ற நிலையும் ஏற்பட்டது. கோஷா ஆஸ்பத்திரியில் ஆபரேஷனுக்குச் சேர்க்க நினைத்தார்கள்.

அப்போது குடும்ப நண்பர் ஸ்ரீ சூரியப் பிரஸாத், ஸத்ய ஸாயியின் அருளில் தீரா வியாதிகள் ஓட்டம் பிடிப்பதைச் சொன்னார். பாபா ஷிர்டியவதாரம், தெய்வம் என்றார்.

வீரராகவனுக்கு ஆத்திரமுண்டது. மனைவியின் உபாதையையும் மறுநாள் அவரை வைத்யசாலையில் சேர்க்க வேண்டும் என்பதையும்கூட மறந்தார். ''பிரஸாத்! இப்போதே கோயமுத்தூர் பாஸஞ்சரைப் பிடித்துக் காட்பாடி வழியாகப் புட்டபர்த்தி போகலாம், கிளம்பு. உன் ஸத்ய ஸாயிபாபா, ஷிர்டியவதாரமானால், தெய்வமானால் எனக்கு அப்படி நிருபித்துக் காட்டட்டும். ஆமாம். சவால் விடுகிறேன். ஐ சாலெஞ்ஜ், சாலெஞ்ஜ்'' என்று அறைகூவினார்.

அப்படியே புறப்பட்டுப் போனார்கள்.

எட்டு நாட்கள் வீரராகவனை 'கோரிக்கை'க்கு அழைக்காமல் இழுக்கடித்தார் பாபா. இவரும் மனையாள் உடல் நிலையையும் மறந்து, 'உன் சாமியின் அழகே அழகு' என்று பிரஸாத்திடம் நையாண்டி செய்வதும், 'கோரிக்கை' பெறவிரும்பும் கூட்டத்தோடு வீராப்புடன் உட்காருவதுமாக இருந்தார். மனையாள் நிலையை இவர் மறந்தாலும் பாபா மறக்கவில்லை. அந்த எட்டு

Koviloor Digital Library

நாட்களும் அந்த அம்மாளின் நோவு கட்டுப்பட்டே இருந்தது! பர்த்தியில் வீரராகவனைக் கண்ட ஒரு பரம பக்தர் சென்னைக்குத் திரும்பியவுடன் கர்ம சிரத்தையாக அம்பத்தூருக்கு வந்து இந்த அம்மாளுக்கு ஐயனின் விபூதியைக் கொடுத்துச் சென்றார்.

அங்கே பர்த்தியில் எட்டாம் நாளிரவு. பிரசாந்தி நிலைய ஷெட்டில் உறங்கிக் கொண்டிருந்த ஸ்ரீ வீரராகவனுக்குக் 'கனவு' என முடியாத ஸாயிதரிசனம் கிடைத்தது.

நனவில் பாபாவைப் பார்த்தும் பெறாத ஓர் உள்மாறுதலை இந்தக் கனவு செய்துவிட்டது. அதுவரை வேண்டுமென்றே ஸ்நானம்கூடச் செய்யாமல் 'கோரிக்கை'க்காக உட்கார்ந்தவர், இன்று கனவு கலைந்து எழுந்து இரவு இரண்டு மணிக்கே குளித்தார்! பிரசாந்தி நிலயத்தை நூற்றெட்டு முறை பிரதக்ஷிணம் செய்தார்! சித்தம் தெளிவிக்கும் ஸிந்தரில் ஸாயிக்கிணை இல்லை தான்!

துணியை வெளுத்தாயிற்று. இனிமேல்தான் சாயம் ஏற்ற வேண்டும். ஸாயி சாயத்தை ஏற்ற மறுநாளே 'கோரிக்கை'க்கு வீரராகவனை அழைத்துவிட்டார். கோரிக்கை அறையில் இவரது அந்தரங்க வாழ்க்கை முழுதையும் அற்றுப்படி யாக்கிவிட்டார் அத்தன்.

"வீட்டிலே ஸம்ஸாரத்தின் நிலை என்ன? அதைக் கவனிக்கும் ட்யூட்டியை விட்டு என்னிடம் என்ன சாலெஞ்ஜ்"? என்று சாடினார்.

சாடியதும் இனித்தது வீரராகவனுக்கு.

"உன் வீட்டிலிருந்து படங்களை நீ எடுத்துப்போட்டு விட்டால் தெய்வத்தையே வெளியேற்ற முடியுமா என்ன?" என்று பாபா கேட்டபோது, வீரராகவனின் இதயம் தனக்குள் "முடியவே, முடியாது; அதுதான் இங்கேயே குடிகொள்கிறதே" என்று நன்றியில் குளிர்ந்தது.

வெளியே வந்த வீரராகவன் ஸாயி சாயத்தில் ஊறிய ஈர ராகவனாகி விட்டார்.

அம்பத்தூருக்கு அவர் திரும்பி வந்தபின் அவரது வீடே ஸாயி ஸதனமாக மாறிவிட்டது. வெளியே எறிந்த படங்கள் வட்டியும் முதலுமாக உள்ளே திரும்பின. புதிதாகப் பர்த்தி நாதனும் பலவிதக் கோலங்களில் சேர்ந்து கொண்டார்.

பாபா விபூதியில் காந்தம்மாவின் உடம்பும் குணமாயிற்று.

இன்று அவ் வீட்டில் குருவார பஜனைகள் சக்கைப்போடு போடுகின்றன. பாபாவும் அநேகமாகத் தம் ஓவியத்துக்கு அணிவிக்கப்படும் நந்தியாவர்த்தமாலையைப் பம்பரமாகச் சுழற்றி, அடியாரை ஆனந்தத்தில் ஆழ்த்துகிறார்.

Koviloor Digital Library

'நந்த' என்பது ஆனந்தம்; 'ஆவர்த்தம்' என்றால் சுற்றுதல். நந்தியாவர்த்த மாலையை ஆனந்தத்தோடு சுற்றி விளையாடுகிறார் சூக்ஷ்ம ஸாயி!

* * *

ஹாலிவுட்டின் பிரபல திரைக்கதையாளர் ஆர்னால்ட் ஷுல்மன் கடைசி வரை பாபாவிடம் பூரணபக்தி கொள்ளத் தான் முடியவில்லை. எனினும் இவர் எழுதியுள்ள ''பாபா'' என்ற நூலில் ஸ்டீவ் என்ற முரட்டு அமெரிக்க நாஸ்திகரைப் பற்றிய விவரம் அருமையானது. 'பாபாவின் முகமூடியைக் கிழித்தெறிந்து அவரைச் சந்தி சிரிக்க வைப்பதற்காகவே' புட்டபர்த்திக்கு வந்தவர் இந்த ஸ்டீவ். புட்டபர்த்தியிலேயே கன்னா பின்னா என்று கொச்சையாகக் கத்திக்கொண்டிருந்தவர். கடைசியில் இவர் பாபாவிடம் ஒரு சில நிமிஷ 'கோரிக்கை' பெற்று வெளியே வருகையில் செத்த பாம்பாக அடங்கியிருந்த அற்புதத்தை ஷுல்மனின் நூல் அழகுற விவரிக்கக் காண்கிறோம். கொள்ளியாகக் கொழுந்து விட்டுக்கொண்டு பாபாவிடம் பிரத்யேக பேட்டிக்குப் போன ஸ்டீவ், சில நிமிஷங்களில் சாம்பலாக வெளியே வந்ததைச் சொல்கிறார் ஷுல்மன்.

சாம்பலாகத்தான் மீரா விரும்பினாள் — அப்போது கண்ணன் தன்னைக் குழைத்துப் பூசிக் கொள்வான் என்பதால். அஹங்காரம் அடியோடு பஸ்மீகரமாக வேண்டும் என்று அர்த்தம்.

நாத்திகம் பேசி நாத்தழும்பேறியவரை நாத் தழுதழுக்க பகவன் நாமம் பாட வைக்கும் சீர்திருத்தத்தின் பெருமையே பெருமை. இவ்வகையில் பாபா ஆற்றியுள்ள பணிக்காக தெய்வ நம்பிக்கை கொண்ட அனைவரும் அவருக்குத் தலையாய மரியாதை செலுத்தத்தான் வேண்டும்.

* * *

ஸெக்ஸும் ட்ரக்குமே வாழ்க்கை என்றிருந்த ஏராளமான அமெரிக்கர்கள் பாபாவால் ஈர்க்கப்பட்டு பக்தியிலும் தியானத்திலும் இன்னுருப் பெற்றுவருவதை நெஞ்சு கொள்ளாத நன்றியுடன் நவில்கிறார்கள். படங்களில் படியும் பாபா விபூதியைத் தண்ணீரில் இட்டுக் குடித்தே ட்ரக் பழக்கத்தைவிட்ட அமெரிக்கர்கள் உள்ளனர்.

வாரங்கல் கைதிகளுடன் சேர்க்கத்தக்க பெண் ஒருத்தி நியூயார்க்கில் பாருங்கள் :

டொன்னா என்பது அவளுடைய பெயர். இவள் மீது வழக்கு நடந்து கொண்டிருக்கும்போது, அமெரிக்காவில் நாள்தோறும் பரவி வரும் பாபா—வேவ் இவளை இழுத்தது. அந்த ஸர்வ லோக, ஸகல கால நீதிபதியின் முன் தன் குற்றம் குறைகளை யெல்லாம் இவள் திறந்து காட்டியதும் மனம் பரம லேசாகி விட்டது.

Koviloor Digital Library

நியூயார்க் நீதிபதி அளித்த ஆறுண்டுச் சிறைவாசத்தை அமைதியாக ஏற்றுள் டொன்ஞ. ஸ்வாமியிடம் அன்புச் சிறைப் பட்டிருப்பவர்கள், ''சிறைச்சாலை இதென்ன செய்யும்?'' என்று பாடலாம்தானே?

சிறைக்குள் அன்புப் பணியைத் தொடங்கலானுள். பாபா விடம் உண்மையான பக்தி இருந்தால் அது மக்களிடம் அன்பாக, பரோபகாரமாகப் பரிணமித்துத்தான் ஆகவேண்டும். சிறைச் சாலையில் துயர் தீர்க்கும் அரிய சேவகி என்று பெயர் எடுத்தாள் டொன்ஞ.

சேவையில் மனித ரீதியில் இயல்வதற்கும் மேம்பட்டதைச் செய்ய நம் ஸ்வாமி அவளுக்குக் கைகொடுத்தார். உதாரணமாக—

வேனிடா என்ற கைதிக்குப் பேற்றுக் காலம் நெருங்கியது. கொடுங் குற்றவாளியான அவளைப் பிரஸவத்துக்குக்கூட வெளி ஆஸ்பத்திரிக்கு அனுப்புவதற்கில்லை என்றும், சிறைக்கூட மருத்துவ மனையிலேயே தான் அவள் இருக்க வேண்டும் என்றும் மேலதி காரிகள் கூறி விட்டனர். அவளோ பேற்று நோவின் கொடுமை யிலிருந்து தன் கேஸ் சிக்கலானதாக இருக்கும் என்று அஞ்சி, சகல வசதிகளும் கொண்ட வெளி வைத்திய நிலையம் ஒன்றில் சேரத் துடித்தாள்.

ஒன்றும் செய்ய முடியாத நிலையில், எல்லாம் செய்யவல்ல பாபாவைத் துணை கொள்வதன்றி என் செய்ய?

வேனிடா நம் டொன்ஞவிடம் வேண்டினுள்: ''உனக்கு ஸாயி பாபாவிடம் ஆழ்ந்த ஆன்மத் தொடர்பு இருக்கிறது. ஆகையால் எனக்காக நீ அவரிடம் வேண்டிக் கொள்.''

''அப்படியே செய்கிறேன். ஆனால் நீயும் விடாமல் அவரைப் பிரார்த்தித்துக் கொள்'' என்று கூறி வேனிடாவுக்கு பாபா படம் ஒன்றைக் கொடுத்தாள் டொன்ஞ.

இருவரும் மனமுருகி வேண்டிக் கொண்டனர்.

முதல் பலன் — கேளாமலே கிடைத்த பலன் — தாங்க முடியாத பிரஸவ வேதனை தணிந்தது.

சிக்கல் இராமல் சிறைக்கூடத்திலேயே பிரஸவமாகிவிடும் போலிருக்கிறதே என்று இவர்கள் மனத்தெளிவு பெற்றபோது இரண்டாவது பலனும் கிடைத்துவிட்டது. மேலதிகாரிகள் அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டனர்; வேனிடா குறிப்பாக எந்த மருத்துவ மனையை மனத்தில் எண்ணியிருந்தாளோ அதிலேயே அவளைச் சேர்த்தனர்!

பாபாவின் படத்தைக் கையில் கெட்டியாகப் பிடித்துக் கொண்டே சௌக்கியமாகக் குழந்தையைப் பெற்றுள் வேனிடா. தாயுமான நம் ஸ்வாமி சாந்நித்தியத்தில் தாயானவ பாக்யசாலினி!

Koviloor Digital Library

பிரஸவம் ஆனவுடனேயே, சிக்கல் ஏதும் இல்லாததால், அவளைச் சிறைக்குக் கொண்டு வந்து விட்டார்கள்.

வேனிடாவுக்கு மறுபடி ஒரு பிரச்னை முளைத்தது. (மனிதர்களுக்கு ஒன்று மாற்றி இன்னொன்றாகப் பிரச்னைகள் முளைத்துக் கொண்டேயிருக்கக் கேட்கவா வேண்டும்?)

''டொன்னு! குழந்தை பிறந்திருப்பதை என் கணவர் அறிய வேண்டாமா? ஆனால் நான் மிகக் கொடும் தண்டனைக்கு ஆளாகியிருப்பதால் எவ்விதத்திலும் வெளியுலகுடன் தொடர்பு கொள்ள முடியாமல் தடை விதித்திருக்கிறார்களே. நீ தான் பாபாவுக்குப் பிரார்த்தனை செய்து, எப்படியேனும் என் கணவருக்கு இந்த மகிழ்ச்சிச் செய்தி எட்ட வழிகாண வேண்டும்'' என்று மன்றாடினாள் வேனிடா.

அவளுக்காகப் பிரார்த்தனை தொடங்கினாள் டொன்னு. கால் மணி ஆழ்ந்த வேண்டுதலுக்குப் பின் பாபாவின் குரல் ஸ்பஷ்டமாகக் கேட்டது. "Go to the Captain; everything would be well" (சிறை அதிகாரியிடம் போ; எல்லாம் நன்றாக ஆகும்'') என்றார் ஸ்வாமி.

உடனே 'காப்டன்' எனப்படும் அந்தப் பெண்ணதிகாரியிடம் ஓடினாள் டொன்னு. வழியிலேயே இவளுக்கு ஒரு தியாக எண்ணம் உதித்தது. எப்போதேனும் இவள் வெளியுலகுடன் டெலிஃபோன் மூலம் தொடர்பு கொள்ளச் சிறையில் அனுமதி இருந்தது. அதைத் தியாகம் செய்ய ஸாயி பக்தி டொன்னுவைத் தூண்டியது.

காப்டனிடம், ''அம்மா! தயவுசெய்து எனக்குரிய டெலிஃபோன் 'கால்'களில் ஒன்றை வேனிடாவுக்குக் கொடுங்கள்'' என்று வேண்டிக் கொண்டாள்.

இதற்கு முன் இவளைப் பார்த்திராத காப்டன், ''உன்னைப் பற்றி மற்ற அதிகாரிகள் சொல்லி நிறையக் கேட்டிருக்கிறேன். நீ மிராகிள்கூடப் பண்ணுவாய் என்கிறார்களே!'' என்றாள்.

''எனக்கென்று ஏதம்மா அப்படிப்பட்ட சக்தி? பகவானின் சக்திதான் எனக்குள் இருக்கிறது. அதைக்கொண்டு இங்கே என்னாலான மட்டில் பகவானின் கட்டளைகளை எடுத்துச் சொல்லி வருகிறேன்'' என்றாள் டொன்னு.

''சரி! நீ போய் வேனிடாவை ஒரு 'கால்' போட்டுக் கொள்ளச் சொல். அதற்காக உன் 'காலை' நான் குறைக்கவில்லை'' என்று எதிர்பாராத தாராளம் காட்டினாள் காப்டன்.

இப்படிப்பட்ட அதிசயங்களால் அந்த அமெரிக்கப் பெண்கள் சிறையில் பல கைதிகள் டொன்னுவைச் சூழ்ந்தனர்; பாபா பக்தியில் ஆழ்ந்தனர். டொன்னுவுக்குச் சிறையே சொர்க்கமாயிற்று. அவளது சித்தத்தை ஸ்வாமி எப்படிப் பரிபக்குவப்

Koviloor Digital Library

படுத்திருார் என்பதற்கு அளவுகோலாக இதோ அவளது கடிதத்திலிருந்து ஒரு பகுதியைப் பாருங்கள்:

''எனக்கு நல்லது நடக்க வேண்டும் என்றே எதிர்பார்த்துக் கொண்டிருப்பதற்குப் பதிலாக இச் சிறையில் என்னாலான நல்லதைப் பிறருக்குச் செய்கிறேனாதலால் இங்கிருப்பதே எனக்கு ஆனந்தமாயிருக்கிறது. அந்த ஆனந்தத்தில் இதையெல்லாம் எழுதுவதுகூட சிரமமாக இருக்கிறது. ஓம் சாந்தி.

''என் குருநாதரின் உணர்வில் துன்பம் இன்பம் இரண்டும் ஒன்றுதான். எனவே சிறைவாசம் ஒரு பொருட்டல்ல. நான் பூரண சரணாகதி செய்ய வேண்டும்; என் அகங்காரத்தை அடிநாசமாக்க வேண்டும் — நான் சாதித்தாக வேண்டிய பணி இதுவே. அவ்வழியில் இப்போதே ஓரளவு செலுத்தப்பட்டு விட்டேன் என்று தெரிகிறது.

''இங்கே ஸத்ஸங்கத்தில் ('Satsang' என்ற வார்த்தையையே அந்த அமெரிக்கக் கைதி உபயோகிக்கிறாள்! இதுவும் நம் ஐயன் மகிமை) நான் ஒவ்வொருவருக்கும் சொல்லும் பாடம் : 'உங்களுடைய பழைய வாழ்வின் கழிவுகளையே பிடித்துக்கொண்டு தொங்காதிர்கள். சுற்றியுள்ள அனைத்தையும் சக்தி மயமாகப் பார்க்கத் தொடங்குங்கள். உள்ளது அனைத்தும் அன்பு ஒன்றே' என்பதுதான்.

''இதோ இச் சிறைக்கூடத்திலேயே நான் இந்த அன்பை ஸாயிபாபா வழியாக ஆண்டவனுக்கு அளிக்க முடிகிறதெனில், சுதந்திரமாக இருப்பதாக நீங்கள் எண்ணும் வெளியுலகத்தில் உங்கள் அனைவருக்கும் இந்த அன்புச் சாதனை இன்னம் எத்துணை எளிதாக இருக்கவேண்டும்?''

இவ்வாறு அமிருதமாக எழுதும் டொன்னாவின் வாய்மேலன்னத்திலிருந்தே வாஸ்தவமாக அமிருதம் சொட்டுகிறதாம்! அவள் அதையே உண்டுகொள்வதால் வேறு ஆகாரம் எதுவும் சாப்பிடத் தேவை இல்லையாம்!

அவளது கண்களில் மின்னும் ஆழ்ந்த வண்ணத்தையும், அவள் சருமத்தில் ஏறிவரும் பொன் மெருகையும் பார்த்தால் இவளா ஆறாண்டுத் தண்டனை விதிக்கத்தக்க குற்றத்துக்கு ஆஸ்பதமாக இருந்தவள் என்று வியக்க வேண்டியுள்ளதாம். இரவு வேளைகளில் மணிக்கணக்காக தியானம் பயிலும் டொன்னா அவ்வப்போது ஸமாதி நிலைக்கே நழுவி தியான லக்ஷியத்தோடு ஒன்றிவிடுகிறாளாம்!

*

டொன்னாவின் பொருட்டு மிராகிள் நிகழ்ந்தது மட்டுமின்றி டொன்னாவே மிராகிள் புரிவதாகவும் காப்டனின் வாய்மொழியில் பார்த்தோமல்லவா? உண்மையில் டொன்னா மூலம் ஸ்வாமிதான் மிராகிள் புரிந்திருக்க வேண்டும்.

Koviloor Digital Library

களிம்பு தோய் செம்பனைய (என்னைப்)
......... பரிசித்து வேதி செய்து
பத்துமாற்றுத் தங்கம் ஆக்கியே பணிகொண்ட
பக்ஷத்தை என் சொல்லுகேன்?

என்றார் தாயுமானார். ஸ்பரிச வேதியில் வைத்த செம்பும் பொன்னாவது போல் களிம்பேறிய செம்பு மனத்தையும் பொன்னாகத் திருத்துகிறானும் இறைவன். இவ்வளவுதானா? இதற்கும் மேலும் செய்கிறான் குரு பகவான் என்கிறார் ஸ்ரீ ஆதி சங்கரர். ஸ்பரிச வேதியில் வைத்த செம்பு, தான் பொன்னாவதோடு சரி; அதனால் இன்னொரு களிம்பு தோய் செம்பைப் பொன்னாக்க முடியாது. குருவடிவான இறைவனோ ஒருவனைத் திருத்துவதோடு நில்லாமல் அவனைத் தன்னொத்த குருபெருமானே ஆக்கி, அவன் மற்றோரையும் திருத்துமாறு செய்கிறான் என்கிறார் சங்கரர். இப்படித்தான், டொன்னு தன்மட்டில் திருந்தியதோடன்றி, தானே ஸாயித்வ அற்புத சக்தியும் பெற்று மற்றோரையும் திருத்தியிருக்கிறாள்.

பாபா அற்புத சக்தி காட்டி மிராகிள் செய்வதற்கு ஒரு மிக முக்கியமான காரணம், இதனால்தான் பலரைத் திருத்த முடிகிறது என்பதே. அவரே சொல்வார் தமது மிராகிள் இறைவனின் சர்வசக்தி (Omni-potence)யை வெளிக்காட்டும் நிதர்சனம் என்று. இப்படியும் ஒரு மகாசக்தி இருக்கிறது என்னும் போதுதான் அதனிடம் பணிந்தும், பயந்தும் நம்மையே திருத்திக் கொள்ள முற்படுகிறோம். பாபாவுக்கு அனைத்தும் தெரியும் என்பதால்தானே நம்மில் பலர் பாபத்தை ஒதுக்கப் பாடுபடுகிறோம்?

அவரே மிராகிள் மூலம் நேராகத் திருத்தும் உதாரணங்களும் உண்டு. முன்பே பார்த்திருக்கிறோமே, ஸினிமாப் பித்தான ஒரு யுவனுக்குக் கைக் கடிகாரம் பரிசளித்து, அவர் சொல்லை மீறி அவன் படம் பார்க்கச் சென்றவுடன் அதன் முட்களை ஓடாமல் நிறுத்தினார் அல்லவா? ஸிகரெட் பிடித்த இன்னொரு மாணவனை அந்தத் திருக்கோலத்திலேயே புகைப்படமாக சிருஷ்டித்துத் தந்து அவர் நல்வழிப்படுத்தியதும் நினைவிருக்கிறதல்லவா? இப்படியே பலவிதமான தவறுகள் புரிபவருக்குப் பரிசுகள் படைத்துத் தந்து, "நீ பெண்ஜாதியை மறுபடி படுத்தினாயோ இந்தப் பரிசு என்னிடமே திரும்பி வந்து விடும்"; "நீ புருஷனிடம் விசுவாசமாக இல்லாவிட்டால் இது உன்னிடமிருந்து மறைந்துவிடும்"; "நீ ரேஸுக்குப் போனாயாகில் இது ஓடி வந்து என்னிடம் கம்ப்ளெயிண்ட் கொடுத்துவிடும்"; "நீ புலாலுணவை மறுபடி நாடினால் இந்தப் பரிசைப் பறிகொடுக்க வேண்டியதுதான்" என்று எச்சரித்து அவரவர் தவற்றைத் திருத்திக் கொள்ளச் செய்வார்.

இதற்கு அறியாப் பருவ விடலையரின் உதாரணங்களை முன்பு பார்த்தோம். நன்கு அறிந்த பெரியவரான ஸாவனூர் நவாப் ஸாஹேப் (முன்னாள் மன்னர்) மேஹர்பன்கூட பாபாவுக்குக் குழந்தைதானே? எனவே இவரும் நமக்கு ஓர் உதாரணமாகிறார்.

Koviloor Digital Library

மேஹர்பன்னுக்கு இதய நோய் ஏற்பட்டது. பாலஸாயியின் காலத்திலிருந்து அவரது பரம பக்தர்களாக இருந்து வரும் ஸான்டூரின் (முன்னாள்) ராஜ தம்பதியர் இவருக்கு அத்யந்தமான குடும்ப நண்பராவர். இவரது மார்பின் மேல் அவர்கள் பாபா விபூதியைப் பூசினர். பத்து நிமிஷத்துக்குள் மாரடைப்பு வேதனை தணிந்தது.

இதையடுத்து, அதாவது 1973 நவம்பர் 25ந்தேதி, ஸான்டூர் ராணிஸாஹேபா புட்டபர்த்தியில் பாபாவிடம் நேரிலேயே ஸாவனூர் நவாபின் இதயக் கோளாற்றைப் பற்றிக் கூறினார்.

''மாலும் ஹை'' என்று கூறிய ஸ்வாமி டிஸம்பர் ஒன்பதாந் தேதியன்று மேஹர்பன்னை ஒயிட்ஃபீல்ட் பிருந்தாவனத்துக்கு அழைத்துவரச் சொன்னார்.

பெங்களூர் திரும்பிய ஸான்டூர் ராணி இவ்விஷயத்தைச் சொன்னவுடன் மேஹர்பன்னின் டாக்டர், ''இவர் உள்ள நிலையில் இங்கிருந்து பன்னிரண்டு மைல் கார் சவாரி செய்து ஒயிட்ஃபீல்டுக்குப் போவதை நான் அங்கீகரிக்க இயலாது. அப்படிச் செய்தால் பிறகு நான் பொறுப்பெடுத்துக் கொள்ளமாட்டேன்'' என்றார்.

ஆயினும் பாபாவை நம்பி மேஹர்பன் டிஸம்பர் ஒன்பதாந் தேதி ஒயிட்ஃபீல்ட் சென்றார்.

பாபா விபூதி சிருஷ்டித்துத் தாமே அதை ஸாவனூர் நவாபின் வாயில் போட்டார்; தமது கைக்குட்டையாலேயே துடைத்தும் விட்டார்.

நவாபின் உடலுள் அதிசய மின்சாரம் பாய்ந்தது.

''உன் இதயத்தின் பக்க நரம்பு பழுதாகி விட்டது; மேல் நாட்டுக்குப் போய் மேஜர் ஆபரேஷன் செய்து பார்க்க வேண்டியதுதான் என்று டாக்டர் சொல்கிறார். 'இரண்டு, மூன்று லக்ஷம் செலவழியுமே; போகலாமா?' என்று நீயும் உள்ளுக்குள் யோசித்துக் கொண்டிருக்கிறாய். அதெல்லாம் போக வேண்டாம். ஆபரேஷன் அவசியமே இல்லை. உடம்பு சீக்கிரம் சொஸ்தமாகும்'' என்றார் பாபா.

வீட்டார் உட்பட யாரிடமுமே தாம் கூறாத விவரங்களை பாபா சகஜமாகச் சொன்னவுடன் நவாபின் நம்பிக்கை ஆழ வேரூன்றியது.

வெகு உற்சாகமாக வீடு திரும்பினார். சிறிதும் பயணக் களைப்பின்றிக் காணப்பட்டார். அன்று நள்ளிரவு வரை உடனிருந்தோருடன் அளவளாவி விட்டு உறங்கினார்.

கனவில் ஸ்வாமி தோன்றி, ''இரண்டே நாளில் குணமடைவாய்'' என்றார்.

Koviloor Digital Library

பாபா படைத்துத் தந்த திருநீற்றை உடம்பெல்லாம் பூசிக் கொண்டு கூத்தாடினார் நவாப் ஸாஹேப்.

இரண்டு நாட்கள் சென்றபின் பாபாவின் கனவு வாக்கு கனவாகி விடாமல், நனவிலேயே கனமாகப் பலித்துவிட்டதைக் காட்டுமுகமாகத் தாமே காரை ஓட்டிக்கொண்டு ஸாண்டூர் முன்னாள் மன்னரின் வீட்டுக்குச் சென்றார் நவாப் ஸாஹேப்.

இதுவரை உடலைத் திருத்திய கதை. இந்த அத்தியாயமோ உள்ளத்தைத் திருத்துவது பற்றியதல்லவா? இந்த விஷயத்துக்கு வருவோம்.

இதயக் கோளாறு பூரணமாக நீங்கப்பெற்ற நவாப் இரண்டு மாதங்களுக்குப் பிறகு ஸாண்டூர் ராணி பிருந்தாவனத்துக்குச் சென்றபோது தாம் பாபாவைத் தரிசிக்க வரலாமா என்று கேட்டனுப்பினார்.

ஆனால் அடுத்தடுத்து இரு தினங்கள் அவ்வம்மையார் பிருந்தாவனத்துக்குச் சென்றும் பாபா அவரைக் கவனியாமலே சென்று கொண்டிருந்தார். இவர் எத்தனை முயன்றும் அவரைப் 'பிடிக்க' முடியவில்லை.

மூன்றாம் தினம் பாபா இவரருகே நின்று, "அம்மா" என்று தமக்கே உரிய குழந்தைத் தெய்வ பாவத்தில் அழைத்து, "க்யா ஸமாசார்?" என்று கேட்டார். அதற்கடுத்த வெள்ளியன்று மேஹர்பன்னை அழைத்துவரச் சொன்னார்.

இதைச் சொல்லப் போனபோதுதான் மேஹர்பன் நடுவே நேர்ந்த உற்பாதங்களை வெளியிட்டார். அவரது குடும்பத்தில் ஒரு பயங்கரச் சர்ச்சை ஏற்பட்டு விட்டது. அதன் தீர்வு பாபாவிடம் உள்ளது என்று இவர் மறந்து விட்டார். விஸ்கி பாட்டில் தான் தீர்வு தரும் என்று அதனிடம் சரண்புகுந்தார். குடித்து விட்டுக் கவலையை மறந்திருக்கவா? அல்ல. ஏற்கெனவே இதய நோயால் நலிவு கண்ட இதயம் வெடித்து வாழ்வே தீர்வதுதான் குடும்பப் பிரச்னைக்குத் தீர்வு என முடிவு கட்டிவிட்டார். நோய் காரணமாக நீண்ட காலம் தீண்டாதிருந்த விஸ்கியை ஒரு முழு பாட்டில் அப்படியே குடித்து விட்டால் ஸாண்டோவுக்குக்கூட ஹார்ட் - அட்டாக் ஏற்படும்தானே?

இந்தப் பயங்கர உத்தேசத்துடன் படுக்கையறையிலிருந்து ரகசியமாக வெளிவந்தார். பாழும் மதுப் புட்டியை எடுத்தார். தம்ளர் வழிய வழிய அதை ஊற்றினார். கையில் எடுத்து உதட்டை வைக்கப்போகிற சமயம்—

போபாலில் காப்டனின் ரிவால்வர் வெடிக்கவிருந்த அந்த அயனை நொடியில் பாய்ந்து வந்த ஐயனின் அருள் இன்று மட்டும் பின்தங்கி விடுமா?

Koviloor Digital Library

எதிரே சுவரில் ஸ்வாமியின் திருமுகம் தெரிந்தது. திருமுகத்தில் குறுநகை நெளிந்தது! ''பைத்தியக்காரா! பாரம் உனதா, எனதா?'' என்று கேளாமல் கேட்கும் குறுநகை!

நவாபின் நெஞ்சு குறுகுறுத்தது.

தம்ளரைக் கீழே வைத்தார்.

பாபாவை வணங்கினார்.

படுக்கை அறைக்குத் திரும்பினார். பாரத்தை அவர் எடுத்துக்கொண்டு விட்டதால் நிச்சிந்தையாகத் தூங்கிவிட்டார்.

இங்கே இப்படிப் புயலடித்த சமயத்தில்தான் பாபா வேண்டுமென்றே லான்டூர் ராணியைத் தவிர்த்து அப்பால் சென்றிருக்கிறார்!

மறுநாள் லான்டூர் ராணியோடு லாவனூர் நவாப் பாபாவைத் தரிசிக்கச் சென்றார். பாபா அவரிடம் சகல விஷயங்களையும் சொல்லி, தாம் எல்லாச் சிக்கல்களையும் தீர்ப்பதாக உறுதி கூறி, நவாபுக்குப் புதியதோர் உற்சாகத்தை ஊட்டினார்.

ஐயன் கருணையில் பிரச்னைகள் பிசுபிசுக்கலாயின. அவர் நவாபின் இல்லத்துக்கே எழுந்தருளினார். கல் பதித்த மோதிரம் ஒன்றை சிருஷ்டித்து நவாபுக்கு அணிவித்தார்.

பாபா செய்த சீர்திருத்தம் நவாபின் வருத்தத்தைத் தீர்த்ததிலும் வெளியாகவில்லை. இனிமேல்தான் இந்தக் கதை தொடங்குகிறது.

சில வாரங்கள் ஓடின.

நவாபுக்கு ஸ்வாமி வழங்கிய மோதிரத்தின் கல் விழுந்து விட்டது.

அதை உடனே பாபாவிடம் எடுத்துச் செல்லவொட்டாமல் நவாபின் 'குற்றம்' அவர் நெஞ்சுள் குறுகுறுத்தது. எனவே, பொற்கொல்லரிடம் மோதிரத்தையும் உதிர்ந்த கல்லையும்கொண்டு போனார்.

பொற்கொல்லர் கல்லை மறுபடியும் மோதிரத்தில் பதித்து, ''நல்ல கெட்டிக் கட்டிடமாகக் கட்டியிருக்கிறேன். இன்னம் இருபது ஆண்டுகளுக்கு நிச்சயமாகக் கல்லைப் பெயர்க்க முடியாது'' என்று உத்தரவாதம் தந்தார்.

ஆனால், ஒரு சில நாட்களிலேயே கல் மீண்டும் விழுந்து விட்டது. அது மட்டுமல்ல. முன்பு விழுந்த கல் அகப்படவாவது செய்தது. இம் முறை அது அகப்படவும் இல்லை. எவ்வளவு சல்லடை போட்டுச் சலித்தும் அதனைக் கண்டெடுக்க முடியவில்லை. ''வாராது போல் வந்த மாமணியைத் தோற்போமோ?'' என்பது மெய்யாகிவிட்டது.

Koviloor Digital Library

அதைவிடக் ''குற்றம்'' தான் இவரை உள்ளே குடைந்தது. அதை ஊர்ஜிதப்படுத்துவது போல் ஸாண்டூர் ராணியும், ''கல் காணமற் போனதால் பாபாவின் அருள் போய் விட்டதென்றோ இதய நோய், குடும்பப் பூசல் முதலியன திரும்பி விடும் என்றோ அர்த்தமில்லை. ஆனால் இதிலிருந்து நீங்கள் ஏதோ தவறு செய்கிறீர்கள் என்று மட்டும் தோன்றுகிறது. அதற்காகத்தான் ஸ்வாமி முதலில் கல்லை உதிர வைத்துப் பரீட்சை பார்த்திருக்கிறார். அப்படியும் நீங்கள் தவற்றை மாற்றிக்கொள்ளாதிருந்திருக்க வேண்டும். அதனால்தான் இப்போது கல் ஸ்வாமியிடமே திரும்பி விட்டிருக்கிறது'' என்றார்.

நவாப் உடனே குற்றத்தை வெளிப்பட ஒப்புக்கொண்டு விட்டார். அதாவது விஸ்கி மோகினியின் வலை வீச்சுக்கு இவர் மீளவும் அவ்வப்போது ஆட்படத் தொடங்கி விட்டார்!

தீரா நோயிலிருந்து தம்மைத் தேற்றிய தெய்வத்தை, மாளாப் பிரச்னையிலிருந்து தம்மை மீட்ட மகாபுருஷனை இனி எந்த முகம் கொண்டு பார்ப்பது என்று கூசிக் குமைந்தார் மேஹர்பன்.

''இப்படியெல்லாம் கிலேசம் கொள்ளாதீர்கள்'' என ஆறுதல் கூறினார் ஸாண்டூர் ராணி ஸாஹேபா. பாபா மன்னிப்பதில் மன்னர் என்றும், இரக்கத்தின் இன்னுருவம் என்றும் கூறினார். பச்சாத்தாபத்துடன் நம்மைத் திருத்திக் கொள்ளப் பிரயத்தனம் செய்தால் அவரே கைகொடுப்பார் என்றார்.

தைரியம் பெற்ற மேஹர்பன் 1974 மார்ச் 27-ந் தேதி பிருந்தாவனத்திற்குச் சென்றார்.

அவரருகே வந்த பாபா, ''கல் காணமல் போயிடுத்து'' என்று மட்டும் சொல்லிவிட்டுத் தம் இருக்கைக்குச் சென்று விட்டார். அதன்பின் அவர் அன்று மீளவும் தரிசனம் தரும் அடையாளமே இல்லை.

மேஹர்பன்னை மீண்டும் பயம் பிடித்துக்கொண்டது — ஸ்வாமி தம்மைத் திரஸ்கரித்து விட்டரோ என்றுதான்.

மறுதினமும் ஸாண்டூர் ராணி அவரை ஆசுவாஸப்படுத்தி பிருந்தாவனத்துக்கு அழைத்து வந்தார்.

பாபா அவரைப் பார்த்தார். ஆனாலும் பேசவில்லை.

ஸாண்டூர் ராணி முன் சிவப்பு வெள்ளமாக நின்றார். வழக்கம்போல் ''க்யா ஸமாசார்?'' என்று வினவினார்.

இன்று இந்த அம்மாளுக்கே சற்றுக் கிலியாகிவிட்டது. தயங்கித் தயங்கி, மேஹர்பன்னின் மோதிரக் கல் காணமற் போய் இருபது நாட்களாகிவிட்டதாக விண்ணப்பித்துக் கொண்டார்.

Koviloor Digital Library

"பர்வா நஹி" என்றார் ஸ்வாமி. "நாளைக்கு அவரை அழைத்து வா."

பாபா மன்னிப்பில் மன்னர் என்பதால் நாம் மனம்போனபடி நடந்துவிட்டு, எளிதில் தீர்வை எதிர்பார்த்துவிடக் கூடாதல்லவா? அதனால்தான் இப்படிக் கொஞ்சம் ஆட்டம் போட்டுப் பார்த்தார். கண்டிப்பும் நிர்தாட்சிண்யமும்கூட தயையிலே தர்மத்தைக் குறைக்கும்போது அவசியமாகிவிடுகின்றன.

மறுநாள் பாபா கல்லில்லாமல் பல்லை இளித்த மோதிரத்தை நவாபின் கையிலிருந்து எடுத்துக்கொண்டார். "எங்கே ஐயா கல்லு?" என்று கிண்டல் செய்தார்.

"உங்களிடமேதான் வந்துவிட்டது" என்று குழறினார் நவாப்.

பாபா முத்தாகச் சிரித்தார். "இது நீயாகச் சொல்லவில்லை. இந்த அம்மாள் சொன்னதையே ஒப்பிக்கிறே!" என்றார்.

அம்மாளைக் குறும்பாகப் பார்த்தார். தாம் செய்த குற்றம் ஸ்வாமியின் உதடுகள் வரையில் வந்துவிட்டது என்று நவாபுக்கு நன்கு தெரிந்தது. ஆயினும் மானசம்ரக்ஷணமூர்த்தி அதை வெளியிடாமல் நிறுத்திக்கொண்டார்.

நவாபைப் பார்த்து, "ஷிர்டி பாபா பதித்த மோதிரம் கொடுத்தால் வாங்கிப்பாயா?" என்று கேட்டார்.

நவாப் இரு கரமும் குவித்து, "நீங்கள் எது கொடுத்தாலும் வாங்கிக்கொள்கிறேன் ஸ்வாமி" என்றார்.

ஸ்வாமி பழைய மோதிரத்தின் மேலேயே ஊதினார். உலகு முழுதற்கும் ஜீவன் தரும் அம் மூச்சுக் காற்றில் மோதிரம் அடியோடு உருமாறி விட்டது. அதில் ஷிர்டிபதி திவ்விய தரிசனம் சாதித்தார்.

'குற்றவாளி'யின் விரலைப் பிடித்து, தமது குற்றமறியா திருக்கரத்தாலேயே மோதிரத்தை அணிவித்தார் ஸ்வாமி.

இந்த பாக்கியம் போதாதென்று திருநீறும் சிருஷ்டித்துக் கொடுத்துப் பன்னிராக, "பங்காரு, போய் வா!" என்று விடை தந்தார்.

மோதிரத்தில் வெறும் மணி பதித்திருந்தால் அது ஓர் அலங்காரமாக மட்டுமே தோன்றிவிடக் கூடும்; ஷிர்டிபதி வீற்றிருந்தாலோ, அதை அணிந்த கையால் மதுவைத் தொடத் தைரியம் வருமா?

பாபாவின் மிரகிள்-சிருஷ்டியிலேயே இவ்வாறாகச் சீர்திருத்த அம்சமும் கலந்திருக்கிறது. அவரால் சீர்திருந்திய அமெரிக்க

டொன்றுக்கே மிரகிள் ஆற்றல் வாய்ந்ததாக மேலே பார்த்தோம். இதற்கு அமெரிக்கா வரை போக வேண்டும் என்பதில்லை. நம் கன்னட நாட்டைச் சேர்ந்த ஒரு மாஜிக் கைதிக்கே ''பாபாத்துவம்'' எனத்தக்க மிராகிள் சக்தி ஏற்பட்டிருக்கிறது.

* * *

ஹனகப்பா ஒரு முன்னாள் திருடர். அந்த நாளில் ஒரு பெருங்கூட்டத்தில் ஹனகப்பாவிடம் வந்து நின்ற ஸ்வாமி, ''நாயனா, உன் 'தொழிலை' விட்டுடு. நான் வேறே ஏற்பாடு பண்ணித் தரேன்'' என்றார்.

''அப்படியே'' என்று ஹனகப்பா சரணாகதி செய்தார்.

ஸ்வாமி கிருபையால் இன்று அவர் சர்க்கரை ஆலை ஒன்றில் மெகானிக்காக இருக்கிறார்.

குற்றவாளி மற்ற மனிதர்போல் ஆனது மட்டுமல்ல; ஏனையோருக்கும் அதிதமான அற்புத சக்தியை பாபா அவருக்கு வழங்கியிருக்கிறார்! ''சிவமாக்கி எனை ஆண்ட'' என்பதுபோல் இவரைத் துளித் துளி பாபாவாகவே ஆக்கியிருக்கிறார். பாபாவின் படத்தில் உண்டாகும் சிறிதளவு விபூதியை ஹனகப்பா ஒரு பாத்திரத்தில் போட்டுச் சில முறை திருப்பினால் பாத்திரம் முழுதும் திருநீறு நிறைந்துவிடுகிறது!

அவர் பக்தர்களுக்கு இனிப்பாக இவ் விபூதியுடன் சர்க்கரையும் கலந்து விநியோகிக்கலானார்.

கூட்டம் நிறைய வந்தது. விபூதியும் நிறைய உண்டாயிற்று. இதற்கேற்பச் சர்க்கரையும் நிறைய வேண்டும்தானே? மிகவும் சாமானிய நிலையில் உள்ள தங்களுக்கு இந்தச் சர்க்கரைச் செலவு தாங்காது என்று மனைவி எடுத்துக்காட்டினாள்.

'சரி, ஸ்வாமியே தருகிற விபூதிக்கு நாம் ஏன் சர்க்கரை போட வேண்டும்?' என்று ஹனகப்பாவும் சமாதானப்படுத்திக் கொள்ள முயன்றார்.

ஆனால் என்ன ஆச்சரியம்? அதன்பின் ஸ்வாமியின் படத்தில் தோன்றிய விபூதியே சீனியாகத் தித்திக்கத் தொடங்கியது. ஹனகப்பாவின் கையில் இந்தச் சீனி விபூதியும் அக்ஷயமாக வளரலாயிற்று.

ஒரு நாள் ஹனகப்பா ஸ்வாமி படம் பதித்த ஒரு பிளாஸ்டிக் மோதிரம் வாங்கி அணிந்துகொண்டார். சிறிது போதுக்குப் பின் கை கசகசக்கிறதே என்று பார்த்தார்.

விந்தையிலும் விந்தை! ஸ்வாமி தரும் அமிருதம் அவர் கையிலேயே ஊற்றெடுக்கிறது, மோதிரத்திலிருந்து.

முன்னாள் கைதிக்குக் கைமேற் பலன்!

Koviloor Digital Library

எதற்குப் பலன்? இதற்கு முதல்நாள்தான் இவரிட மிருந்து விபூதி பெற்ற சில மேல்நாட்டு பக்தர்கள் அன்பளிப் பாக இவருக்குக் கொஞ்சம் பணம் கொடுத்தனர். ஹுளகப்பா நடுங்கி விட்டார் நடுங்கி! அவர் கண்களிலிருந்து கரகரவென்று தாரை வழியலாயிற்று. ஒரு காலத்தில் பிறர் பணத்தைக் கொள்ளையிட்டவர், இன்று தானாக வந்த பணத்தைக் கண்டு நடுங்கி அழுகிற அளவுக்கு அவரைப் புடமிட்டுப் பொன்னாக்கிய புட்டபர்த்திநாதனை என் சொல்லிப் புகழ? ஹுளகப்பா சபலத்தை வென்ற செவ்வியை மெச்சியே இன்று அவரது கரத்தில் அமுதச் சுனையைத் திறந்துவிட்டிருக்கிறார், முன்பு அவர் அகத்தில் அறம் என்ற அமுத ஊற்றை அகழ்ந்தெடுத்த ஐயன்!

மோதிரத்திலிருந்து அமுதம் வழிந்துகொண்டே யிருந்ததால் கையில் பிடித்து மாளாது என்று அதைக் கழற்றி ஒரு ஜாடியில் போட்டார். ஜாடி நிறைய அமிருதம் பொங்கிற்று.

* * *

இங்கே அழுந்து கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்று உள்ளது. டோன்னாவும், ஹுளகப்பாவும் ஓரளவுக்கு பாபாவின் பிரதிநிதிகள் அல்லது 'மினி பாபா'க்கள் போல மற்றோருக்கு திவ்ய ஆற்றலால் நல்லது செய்வதாகத் தெரிகிறது. இப்படி வேறு சிலரைப் பற்றியும் இந் நூலாசிரியர் கேள்விப்பட்டிருக்கிறார்; சிலரை நேரில் பார்த்துத் தொடர்பு கொண்டும் இருக்கிறார். பாரதத்தில் மட்டுமின்றி வெளிநாடுகளிலுங்கூட இவ்விதம் பாபா அருளால் ஒரு குறுகிய அளவுக்கு அற்புத சக்தி பெற்ற சிலர் இருப்பதாகத் தெரிகிறது.

ஆனால் நம் ஸ்வாமியோ தமக்குப் பிரதிநிதியோ, மீடியமோ கிடையவே கிடையாது என்று பன்முறை அடித்துச் சொல்லி யிருக்கிறார். ஆகையால் மேற்சொன்ன அற்புத சக்தர்களையும் நாம் ஸ்வாமியின் விசேஷ தூதர், அல்லது அவரால் ஆவேசிக்கப் பட்டவர், அல்லது அம்சாவதாரம் என்றெல்லாம் தவறாக எண்ணி, அவர்களை அதீதமாகப் பூஜிக்கலாகாது. எப்படி ஏதோ ஒரு பிளாஸ்டிக் லாக்கெட் மூலமும், காகிதச் சித்திரம் மூலமும் பாபா வின் சக்தியே வெளிப்படுகிறதோ, எப்படி இந்தப் பிளாஸ்டிக் குக்கும் காகிதத்துக்கும் இயல்பாக எந்த அற்புத சக்தியும் இல்லையோ, அப்படியேதான் இந்த மனிதர்கள் மூலமும் சாக்ஷாத் பாபாவே தமது லீலையைச் செய்து காட்டுகிறார் என்றே கொள்ள வேண்டும். ஜடமான பிளாஸ்டிக்கோடும் காகிதத்தோடும் டோன்னா, ஹுளகப்பா போன்ற உத்தமப் பிறவிகளை ஒப்பிட்டு மட்டம் தட்டுவதாக எண்ண வேண்டாம்! இந்த "ஜடத்வ"மே நம்மால் எய்த முடியாத பரிபக்குவ நிலைதான். ஜடத்வத்தைவிட மாறான நம்முடைய ஜீவத்வத்தின் விசேஷம், தனி மனத்தின் ஆசாபாசங்களும் ஆவேசங்களுந்தானே? டோன்னாவும் ஹுள கப்பாவும் மற்றும் சிலரும் இந்தத் தனி மனித விருப்பு-வெறுப்புக் களையே விட்டு, அந்த அளவில் ஓர் அற்புத 'ஜட' நிலையைப் பெற்றவர்கள்தான். இந்த ஜட குணத்தை பாபாவின் மகா

Koviloor Digital Library

மனமே அன்பால் நிரப்ப, அவரது அற்புத சக்திக் கதிரவனின் சில கதிர்களே இவர்கள் மூலம் ஒளி வீசுகிறது.

தாங்கள் செய்வதாகத் தோன்றும் அற்புதங்களில் தங்களுக்கு சொந்த ஹோதாவில் சம்பந்தமிருப்பதாகவே இவர்கள் எண்ணுவதில்லை. அப்படி எண்ணி அவரிடம் அபசாரப்படாமலிருப்பதிலேயே இவர்கள் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். பெயர், புகழ், பணம் முதலியவற்றைக் கண்டு பதைபதைத்து ஓடுகிறார்கள். நாம் இவர்களைப் பூஜிக்க முற்பட்டால் அதைத் தடுத்து, நம்மிலும் அடங்கி ஒடுங்கி பாபாவைப் பூஜிக்கிறார்கள். எனவே இப்படிப்பட்டவர்களை ஒரு சிறிய அளவில் ஸ்வாமியின் லீலைக்குக் கருவியாகும் தகுதிபெற்ற சுத்தாத்மாக்கள் என்று நாம் மதித்து மனத்தால் போற்றலாமாயினும், வெளிப்பட இவர்களையே மிகை பாபாக்களாக்கி வணங்குவது சரியல்ல ; அது அவர்களுக்கே சபலம் ஊட்டித் தீமை பயக்கக்கூடியதுதான்.

மேலே, சிறைக்கூடத்திலிருந்த டொன்றா, "சுதந்திரமாக இருப்பதாக நீங்கள் எண்ணும் வெளியுலகத்தில் உங்கள் அனைவருக்கும் இந்த அன்புச் சாதனை இன்னம் எத்தனை எளிதாக இருக்க வேண்டும்?" என்று வினவியதைக் கேட்டோம். ஆனால் இது அத்தனை எளிதாக இல்லை என்ற விசித்திரத்தையும் காண்கிறோம். ஆம், டொன்றாவையும் ஹளகப்பாவையும்போலக் குற்றவாளிகளாக இல்லாத சுதந்திர வெளியுலகைச் சேர்ந்த ஒரு சில நல்லவர்களுக்கும் பாபாவின் அற்புத சக்திகளில் சிறிதளவு கைகூடியிருக்கிறது. ஆனாலும் என்னே துர்ப்பாக்கியம்! இவர்கள் வெளிப்பட பாபாவுக்கே பூஜையும் பஜனையும் செய்து அவர் மகிமையையே பரப்பியபோதிலும் பணத்துக்கும் புகழுக்கும் வசியமாகி, வெகு நாசூக்காக அவற்றை ஏற்றிருக்கிறார்கள். இதன் விளைவாக பாபாவும், அவரது 'ஸநாதன ஸாரதி'ப் பத்திரிகையும் இவர்களிடமிருந்து ஒதுங்குமாறு மக்களை எச்சரிக்கவும் நேர்ந்திருக்கிறது. இதை நினைந்தாலே ஒரு விநோத வேதனையாகத்தான் இருக்கிறது—நல்லவர்கள், ஒரு குறுகிய அளவில் ஸ்வாமியின் சக்தியையே பெற்றதாக நம்பத்தக்கவர்கள், ஸ்வாமியின் புகழைப் பரப்பியவர்கள்—இப்படிப்பட்டவர்களுக்கே புகழ், பணம் முதலியவற்றில் சபலம் உள்ளதென்றால் என் சொல்ல?

'பாபாவே தமது சக்திக்குச் சிறு வடிகால்களாகக் கொண்டவர்களும் ஏன் தவறவேண்டும்?' என்று தோன்றும். இதற்கு ஒரே விடையாக நூலாசிரியனுக்குத் தோன்றுவது, பரிபூரண சரணாகதிக்குத் தயாராகாத வரையில் பாபா எந்தத் தனி மனத்தையும் அடியோடு மாய்த்து, அதை முற்றிலும் தம் வசமாக்கிக் கொள்வதில்லை என்பதுதான். தன்னை முற்றும் இழக்க ஒரு மனம் தயாரானாலன்றி, அதன் சுதந்திரப் போக்கை முற்றிலும் தடுப்பது இறைவனின் ரகசிய நீதி சாஸ்திரத்துக்குப் புறம்பானது போலும்! மக்களை நன்னெறிப்படுத்தவே ஈச்வரன் அவதரிக்கிறான் என்பது வாஸ்தவம். இந்த அத்தியாயத்திலேயே கண்ட பல எடுத்துக்காட்டுக்கள் எப்படியெல்லாம் பாபா மக்கள் மனத்தைத் திருத்துகிறார், பரம அதமர்களையும்கூட உத்தம

Koviloor Digital Library

ராக்கிறார் என்று தெளிவுபடுத்துகின்றனர். அதிலுங்கூட ஒரு தனி மனது சுதந்திரமாக எண்ணுகிற சக்தியையே அவர் முற்றிலும் அற்றுப்போகச் செய்வதில்லை. பூரண சரணாகதர்களான அபூர்வப் பிறவிகளுக்கே இப் பேரநுக்கிரகத்தை அவர் புரிவார் போலும். மற்றவர்களின் மனச் சுதந்திரத்தை அவர் வலிந்து பறிக்காததாலேயே, ஒரு காலத்தில் அவரது சிறு கருவியாகத் தேர்வு பெற்றவர்களும் கூட பெயர், பவிஷு, பொருள் முதலியவற்றின் சபலத்துக்கு இரையாகின்றனர் போலும்!

இவர்கள் பகிரங்கமாகவே அற்புதம் புரிந்து பெயரெடுத்ததால்தான் இவர்களை பகிரங்கமாகப் பலரறியக் கண்டிப்பதே நியாயம் என்று ஸ்வாமி கருதுகிறார் போலும்!

மனச் சுதந்திரம் செய்யும் விபரீதந்தான் என்னே! இதனால் தான் ஒருகாலத்தில் ஸ்வாமிக்கு மிகவும் அந்நியந்தமாக இருந்தவரும் பிற்பாடு எங்கோ விலகிப்போக நேர்ந்திருக்கிறது. ஸாயி ஸ்தாபனங்களிலேயே அவ்வப்போது தலைதூக்கும் போட்டி, பொறாமை பற்றி ஸ்வாமியே பல மேடைப் பேச்சுக்களில் சாடிச் சவுக்கடி கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆத்மிகப் பண்பின் ஆரம்பப் படியே பணிவுதான் என்று அவர் அல்லும் பகலும் எடுத்துரைத்தும்கூட, பாபாவின் விசேஷ அருள் பெற்றுவிட்டோம் என்பதாலேயே இறுமாப்புற்றோரும் உள்ளனரே! நன்றாக ஸாயி பஜன் செய்கிறோம் என்பதாலேயே தலைக்கனம் பெற்றவர் கூட இருக்கிறார்கள்.

* * *

“ஸத்ய ஸாயி பாபா” என்ற 21-ம் அத்தியாயத்தில் ஸ்வாமி தம்மை ஏன் மக்கள் இதயத்தோடு ஒட்டி வைத்துக் கொள்ளவில்லை என்று வேதனையில் குமுறியதைக் கேட்டோம். சில சந்தர்ப்பங்களில் அவர் இதே மகா வேதனையுடன் பாடுகிறார் :

வெதுகுச்சு நானு—நேனு
வெதுகுச்சுனே உன்னானு

(தேடிக்கொண்டிருக்கிறேன்—நான்
தேடிக்கொண்டே இருக்கிறேன்.)

ஸ்வாமியைத் “தேடிக் கண்டுகொண்டேன்” என்று அடியார் பாட, ஸ்வாமியோ தேடிக்கொண்டே யிருந்தும் கண்டு கொள்ளவில்லை. யாரை? உண்மையான அடியாரைத்தான்!

ஸாயி பஜன் செய்வதும், ஸ்வாமிக்கு சொந்த நைவேத்யம் செய்வதும், அவரைத் துரத்தித் துரத்திச் செல்வதும், 'பாபா' என்றாலே கண்ணீர் சொரிவதும்கூட ஒருவரை உண்மையான அடியாராக்கிவிட முடியாது. ஆக்க முடியுமாயின், இன்று இப்படி லக்ஷக்கணக்கானவர் இருந்தும் ஸ்வாமி “வெதுகுச்சுனே—ஏ உன்னானு” என்று வெதும்பிப் பாடவேண்டிய அவசியம்

Koviloor Digital Library

இராதே! பின் மெய்யடியார் என்றால் யார்? அவர்கள் தம் பெயரைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை, பூஜிக்க வேண்டிய தில்லை, தம்மை அறிந்துகூட இருக்க வேண்டியதில்லை என்கிறார் பாபா. அதிசயமான இலக்கணம்தான். உண்மையான பக்த ருக்கு அவர் கூறும் இலக்கணம் இதுதான் : பொருள் பற்று, குறுகிய உறவுமுறைப்பற்று இவற்றை அறவே விடவேண்டும். அஹங்கார மமகாரத்தை அடியோடு பஸ்மமாக்க வேண்டும். லோகம் முழுதிடமும், எனவே விரோதியிடமும் கூட, பிரேமையே செலுத்த வேண்டும். நம்மால் முடிந்த உபகாரங்களை அனை வருக்கும் புரியவேண்டும். பதிலடி தருவது, பழிக்குப் பழி செய்வது முதலான எண்ணமேயின்றி, ஆத்திரம் க்ஷாத்திரம் அடியோடின்றி, துவேஷ லேசமும் இல்லாதிருக்க வேண்டும். பகை உணர்ச்சியை அறவே களைந்து, பரிவு உணர்ச்சி மட்டுமே உள்ளவன்தான் பக்தன். பிறர் செய்த தீங்கை மறப்பது; தான் செய்த நல்லதை மறப்பது; பிறர் செய்த நல்லதை மறவா திருப்பது; தான் செய்த தீங்கை (இனி ஒருபோதும் அப்படிச் செய்யக் கூடாது என்பதற்காக) மறவாதிருப்பது. மொத்தத்தில் கீதையில் கண்ணன் கூறும் பரம வைரிகளான ஆசையையும், துவேஷத்தையும் பூர்ணமாக ஒழிப்பதைத்தான் ஸ்வாமி பக்தி என்று கருதுகிறார். இதற்காக ஒருவன் மெய்யாக, தானாக அவரைப் பிரார்த்தித்தால் அநுக்கிரகிப்பதாக நவில்கிறார்.

இப்படிச் சொன்னதால் பஜனை, பூஜை, ஜபம், யோகம், ஆத்ம விசாரம் முதலானவை வேண்டாம் என்று அர்த்தம் ஆகாது. ஆனால் மனச் செம்மை, ஒழுக்கம், ஜீவ தயை முதலியன இன்றி இவை நிச்சயம் பயன்படா. ஸ்ரீ காஞ்சிப் பெரியவாள் கூறுவது போல், நமக்குப் புரியாத ஏதோ ஒரு விதத்தில் பின் சொன்ன நன்னெறிகளாலே முன்சொன்ன ஆத்ம ஸாதனை சிறப் படைகிறது; ஆத்ம ஸாதனை செய்வதாலேயே நெறிகளில் நம் ஈடுபாடு வலுவடைகிறது. இவை ஒன்றையொன்று இட்டு நிரப்புபவை—Complementary என்பார் காஞ்சி முனிவர். தர்மமில்லாமல் பக்தியில்லை; பக்தியில்லாமல் தர்மமில்லை. ('பக்தி' என்றது எல்லாவித ஆத்ம சாதனைக்கும் பொருந்தும்.)

ஆனால் ஆத்ம ஸாதனை என்பதைப் பிரித்து, அதற்கே ஒரு ஏற்றம் கொடுத்து ஸாயி பஜனும், ஸாயிராம ஜபமும் செய்யு மளவுக்கு நம்மில் எத்தனை பேர் நன்னெறிகளில் முன்னேறியிருக் கிறோம்? முன்னேறப் பாடாவது படுகிறோம்? பரோபகாரத்தை யும், தியாகத்தையும் பற்றி ஸ்வாமியுந்தான் கரடியாகக் கத்து கிறார். ஆனால் அமர்க்களமாக ஸாயி பஜன் நடத்துகிறவர்களில் எத்தனை பேர் இதை நடத்திக் காட்டுகிறோம்? வாரா வாரம் ஸ்வாமி படத்துக்கு (அவர் சற்றும் விரும்பாத போதிலும்) இருபத்தைந்து ரூபாய்க்கு நிலமாலை வாங்கிப் போடுகிற பக்தர் களில், பரோபகாரமாக ஓர் இருபத்தைந்து பைசாகூடத் தரத் தெரியாதவர்களும் இருக்கிறோமே! 'ஸாயி பக்தர்' என்பதா லேயே ஒரு ஜம்பம், அகங்காரத்தைப் பெறுகிறோம்—குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசிக்கொள்கிறோம்.

ஸாயி பக்தி என்பது மூச்சைப்போல் ஸதாவும் இருக்க வேண்டும் என்பதை மறந்து, ஏதோ சிறிது பொழுது உல்லாசப் படகுப் பயணம்போல் பஜனையும் ஜபமும் செய்கிறோம். அவர் விதிப்பது எதையும் செய்யாமலே, அவரிடம் மட்டும் அன்பு கொண்டு, அவரது ரக்ஷணையை நமக்கு எதிர்பார்க்கிறோம்.

"எனக்கு ஸினிமா என்றால் மகாத் துவேஷம்" என்று ஸ்வாமி கூறுவதை நன்கு அறிந்தும் எந்தப் படமாயினும் முதல் காட்சிக்கே 'ரிஸர்வ்' செய்யும் ஸாயி பக்தர்களும் உள்ளனர்.

சமீபத்தில் வந்துள்ள டி.வி. ஸ்வாமியிடம் பக்திக்கு ஒரு பரீட்சையாகவே இருந்திருக்கிறது. ஸ்வாமிக்கு ஜம்பம் அடியோடு பிடிக்காது. 'உள்ளத்தை உயர்த்த உதவாவிடில் டெலிவிஷன் டெலிவிஷம்தான்' என்று அவர் சொல்வார். ஆயினும் உள்ள உயர்வுக்காக இன்றி, தினந்தினமும் (அவர் விரும்பாத) ஸினிமா பார்க்கலாம் என்பதற்காகவே, தங்களது பொருளாதார சக்தியையும் மீறி, வறட்டு ஜம்பத்துக்காக டெலிவிஷன் வாங்கி வைத்துக்கொண்டுள்ள பக்தர்களும் உண்டு. இதற்கு ஐயாயிரம் செலவழித்தவர்களிடம், ஏதாவது ஓர் அநாதை இல்லத்துக்கோ, புயல் நிவாரணத்துக்கோ ஐம்பது ரூபாய்கூட வசூலித்துவிட முடியாது.

நெறிகள் போகட்டும். ஆத்ம ஸாதனை என்பதிலேயே கூடத் தங்கள் விருப்பு—வெறுப்பை விட்டு அவர் விரும்புவதைச் செய்யாத பக்தர்களும் இருக்கிறோம். உதாரணமாக, இளைஞர்களுக்கு காயத்ரி ஜபம் வெகு அவசியம் என்பதால்தான் அவர் நூற்றுக்கணக்கானவருக்குத் தாமே பூணூல் போட்டு, காயத்ரி உபதேசம் செய்திருக்கிறார். இப்படி அவராலேயே உபதேசிக்கப் பெற்ற இளைஞரில் பலரே சர்வ சகஜமாக இம் மகா மந்திரத்தை விட்டு விட்டுந் தொடர்ந்தும் அவரது பக்தர்களாக இருக்கிறார்களே! அவரும் தொடர்ந்து இவர்களுக்கு அருள் செய்துதான் வருகிறார்.

பிழைகள் பல மலிந்துள்ள நமக்கு நம் வார்த்தையை எவராவது தட்டி நடந்தால் கோபம் வருகிறது. ஆனால் அவதாரரான பாபாவும் காஞ்சிப் பெரியவர்களும் சொல்வதை யெல்லாம் நாம் சற்றும் அநுசரிக்காமலே யிருந்தும் அவர்கள் நமக்கு அயராமல் அருள் புரிவதுண்டே!

அருளைப் புரிந்துகொண்டே, நம்மை அறத்தில் நாமாகப் பிரியப்பட்டு நிற்கச் செய்வதற்கு ஓயாமல் பிரயாசைப்படுகிறார் ஸ்வாமி. அறமே இறை வடிவம் என எடுத்தியம்புகிறார். இவ்வாறு அவர் தர்ம ஸ்வரூபமாகவே இருப்பதால்தான், வெறும் பூஜையும், ஜபமும், பஜனையும், யோகமும், தியானமும் மட்டும் புரிபவர் தம்மை இதயத்தோடு ஒட்டி வைத்துக்கொள்ள முடியாது என்று பொருள்பட ஆதியில் பாடினார். இன்றும் உண்மையான பக்தரைத் தேடிக்கொண்டே யிருப்பதாக வேதனையோடு பாடுகிறார்.

Koviloor Digital Library

வலிந்து திருத்துவதற்கு ஆற்றல் படைத்தவரே ஆயினும், தனி மனித சுதந்திரத்தைப் பறிக்க விரும்பாததால், இந்த வேதனையை அநுபவித்து வருகிறார்!

ஆனால் ஏராளமான ஸாயி பக்தர்கள் ஆதியில் இருந்ததை விட இன்று நன்னெறிகளில் ஓரளவேனும் முன்னேறியிருப்பதை மறுப்பதற்கில்லை. 'புண்ணியம்' என்று விசேஷமாகச் செய்ய முடியாவிடினும், சில்லறைத் தப்புக்கள் பலவற்றை விடாமலே இருந்தாலும், பலர் பஞ்ச மா பாதகங்களையேனும் விட்டதற்கு ஸாயிசன்தான் காரணம். பக்தியும், பஜனையும் புரிகிற அளவுக்காவது எந்தத் தவறும் செய்யாமலிருக்கிறோமே! இப்படி லக்ஷக்கணக்கானவர்களைக் கட்டிப்போட்டு வைப்பது ஸாயி சக்தி தானே?

இப்போது நாம் எவ்வளவு திருந்தியிருக்கிறோம் என்பதை விட, ஸாயிராமன் திருவருளைப் பெற்றிராவிடில் நாம் இன்னம் எத்தனை மோசமாகி இருப்போம் என்பதைக் கருதினாலே, திருத்திப் பணி கொள்வதில் அவரது சக்தியை உய்த்துணர முடியும்.

இச் சக்தி அபரிமிதமாக வெடித்து வந்து செய்த அற்புதங்களை இவ்வத்தியாய ஆரம்பத்தில் நிறையப் பார்த்து விட்டோம். நடுவே அதன் சுருதி கொஞ்சம் இறங்கினாற்போல், ஸாயி பக்தரிடையிலேயே காணும் அவலங்களைப் பார்த்ததற்கு மாற்றாக, 'ஜிவ்'வென்று தாரஸ்தாயியில் சுருதி முறுக்கேறி ஒலிக்கும் ஓர் உதாரணத்தைப் பார்ப்போம். இதிலே பக்தியும் ஒழுக்கமும் ஒன்றையொன்று கவ்வி வருவது ஒரு விசேஷம்.

* * *

வங்காளத்தைச் சேர்ந்த நித்யாவை டொன்னாவின் இந்தியப் பிரதி எனலாம்.

இருபது வயதிலேயே பயங்கரக் குற்றம் புரிந்தவள் நித்யா. சொந்தக் கணவனுக்கு விஷம் வைத்துக் கொன்ற பாதகி அவள்.

பதித பாவனன் என்ற பகவானின் விருதம் இவளால் பிரத்தியக்ஷமாக மெய்யாயிற்று. அவனது நாம மகிமை இவளால் வெளிப்பட்டது.

கல்கத்தாவில் ஸத்ய ஸாயி ஸமிதியின் பெண் பிரிவைச் சேர்ந்த பெருமாட்டி ஸ்ரீமதி ஸுதா மஜும்தார், மாநிலப் பெண்கள் சிறைக்கூடத்தில் நடத்திய பஜன், அங்கு ஆயுட்கால சிறைவாசம் பெற்ற நித்யாவின் ஆவியைக் கூவி அழைத்தது.

கைதிகள் பரவசமாக நாம கீர்த்தனம் செய்துகொண்டிருக்கையில், கேவி அழுதுகொண்டு நித்யா அங்கே வந்தாள். ஸ்ரீராமனின் சித்திரத்தின் முன் விழுந்து, தன் உடம்பே வெடிப்பது போல், கூடியிருந்த மற்றோரின் உள்ளம் துடிக்கக் கதறினாள்.

Koviloor Digital Library

ஸுதா மஜும்தார் பெரும் பாடுபட்டு அவளைத் தூக்கி எடுத்துத் தம் தோளில் சாய்த்துக்கொண்டு ஆசுவாஸப்படுத்தினார். ஸ்ரீ ராமயவின் பக்கலில் அவளை அமர்த்தி, அவளிடம் ஒரு பஜனைப் புத்தகத்தைக் கொடுத்து, மீண்டும் ஸங்கீர்த்தனத்தைத் தொடர்ந்தார்.

நாம ராமாயணத்தில் ஒவ்வொரு வரியும் 'ராம' என்று முடிகையில் அந்த பரம புனித நாமாவை நித்யாவின் மா பாவ நாவும் பாடத் தொடங்கியது ; அதனுடனேயே பாவனமாகவும் தொடங்கியது.

அதிலிருந்து நித்யா ஒவ்வொரு பஜனிலும் கலந்துகொண்டாள். தீபம் ஏற்றுவது, ஊதுவர்த்தி சொருகுவது, மலரலங்காரம் செய்வது, பிரஸாதம் விநியோகிப்பது முதலானவையெல்லாம் சிறுகச் சிறுக நித்யாவின் பொறுப்பே ஆயின. எப்பேர்ப்பட்ட மாற்றம்!

அவ்வளவுதானா? பக்தியோடு ஒழுக்கமும் அற்புதமாகக் கைகோத்து வளர்ந்தது.

பரோபகார சிந்தை தளிர்த்தது, பதிக்கே விஷம் வைத்த பத்தினியிடம்! சிறைக்கூடத்தின் நோயாளிப் பிரிவில் 'நர்ஸ்' போல அரும்பணி புரியலானாள். கைவேலை ஆசிரியையிடம் எம்பிராய்டரி முதலியன கற்றுக்கொண்டு எப்போதும் சுறுசுறுப்போடு உழைத்துச் சிறைச்சாலைக்குப் பொருளும் ஈட்டித் தந்தாள். சகலரிடமும் மிகப் பணிவாக, பண்பாக நடந்துகொண்டாள். ஜெயிலரும், டாக்டரும் அவளுக்குச் சூட்டிய புகழாரங்களைக் கேட்டுத் தாயினும் பெரிது உவந்தார் ஸுதா மஜும்தார்.

சில காலம் பஜனுக்கு வர முடியாமலிருந்த ஸுதா அம்மை அன்று மீண்டும் வந்தார். பஜனையில் நித்யாவைக் காணாமல் வருந்தி, அது பற்றி விசாரித்தார். நித்யா இனை இனை செய்து வந்த நற்பணிகளுக்காக அவளது தண்டனைக் காலம் குறைக்கப்பட்டுக்கொண்டே வந்ததாம். ஆயுள் தண்டனை மாயமாயென்று குறைந்து, அவள் விடுதலையே செய்யப்பட்டு விட்டாளாம்! சிறையிலிருந்து சிறப்புற்றுப் பறந்துவிட்டாள்.

நித்யாவுக்கு நித்தியன் செய்த அருள்!

* * *

மனத்தை மட்டும் நாம் ஒப்பி அவரிடம் ஒப்புக்கொடுத்து விட்டால் அவர் உசிதமான முறையில் திருத்தத்தான் செய்கிறார் என்பதற்கு இது போன்ற உதாரணங்கள் போதும். குறிப்பாக பாபா செய்யும் மனோரஸவாதம் சில உண்டு.

இவற்றில் மாறுபிமானம் நிக்ருதனைச் சிறப்பித்துச் சொல்ல வேண்டும். ஒருவனில் மானம், ரோஷம் என்பவை ஓரளவு

Koviloor Digital Library

வரையில் மிகவும் உயர்ந்த பண்புகளாகும். 'மானம் கெட்டவர்' என்பதை இதனால்தானே மிகவும் நீசமாகச் சொல்கிறோம்? பகவானையும் 'மான ஸம்ரக்ஷகன்' என்று இதனால்தானே விசேஷிக்கிறோம்?

ஆனாலும் உயர்நிலையில் இந்த மானமும் போகத்தான் வேண்டும். அதாவது, மானக்கேடான காரியத்தை ஒருவர் தானாக எந்நாளும் செய்யக் கூடாதுதான்; ஆயினும் உலகம் இவர்களை எவ்வளவு அவமானப்படுத்தினாலும் அதனால் ரோஷமும் சலனமும் அடையாத பக்குவத்தைப் பெறவேண்டும்.

கண்ணனைத் 'திரௌபதி மான ஸம்ரக்ஷகன்' என்று போற்றுகிறோம். ஆனால் எந்நிலையில் இந்த ரக்ஷணையை அளித்தான்? கௌரவர் செய்யும் மானபங்கத்திலிருந்து திரௌபதி தன்னைத் தானே காத்துக்கொள்ளும் எண்ணத்தையும் விட்டு, மேனியை மூடிய கையைத் தூக்கி "கோவிந்தா" என்று கும்பிட்ட அந்த நொடியிலேயே அல்லவோ? ஆற்றில் கோபியரின் வஸ்திரத்தை முதலில் அவன் அபகரித்துப் பிறகு ஈந்ததும், தங்களது மான உணர்ச்சியைக்கூட அவர்கள் விட்டபின்பே அல்லவோ?

ஒழுங்காக இருப்பவர்களைப் பற்றி அபவாதம் கூறப்பட்டால் மான உணர்ச்சி ரோஷமாகப் பீறித்தான் வரும். ஸ்வாமியைப் பற்றிப் படுபாதக அவதூறு சுமத்துவோர், வேறு சிலரையும் பிணைத்தேதான் இதைச் செய்திருக்கிறார்கள். இந்த அவதூற்றினால் ஸ்வாமி சலனமுறாதது அதிசயமில்லை. ஆனால் இதில் பிணைக்கப்பட்ட கௌரவமிக்க நபரும் சலனமுறாத பேரதிசயத்தை நூலாசிரியன் கண்டு விஸ்மிதமுற்றிருக்கிறான். 'மானம்' என்ற உயர்ந்த பெயரில் வேஷம் போடும் அகங்காரத்தையும் ஸ்வாமி அகற்றித் திருத்தும் அற்புதம், ஆஹா!

ஸாயி பக்தரனைவருக்குமே இவரிடம் பக்தி கொண்ட ஆரம்ப காலத்தில், இந்த மானப் பிரச்னை இருந்திருக்கும்! ஸ்வாமியைப் பற்றி விதவிதமான புரளிகள் எழும்பியுள்ளன அல்லவா? இதனால் ஒருவர் ஸாயி-பக்தர் என்றாலே ஏளனமாக நினைக்கக்கூடியவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஒரு வீட்டில் ஸ்வாமி படத்தைப் பார்த்தவுடன், "ஐயய்ய" என்று மனத்தில் நினைத்துக்கொண்டு, "நீங்கள்கூட ஸாயி 'டிவோட்டி'யா?" என்று கேட்பவர்கள் யதேஷ்டம். அவர்கள் அந்தக் கேள்வியைக் கேட்கும் விதத்திலிருந்தே, மனத்தில் நினைக்கும் "ஐயய்ய"வும் 'டிவோட்டி'க்குப் புரியத்தான் செய்யும். இதனாலும், எதிராளிகளிடம் வீண் வம்பை வளர்க்காமலிருக்கவும், 'நாம் ஸாயி பக்தியை வெளிக் காட்டிக்கொள்ளாமலே இருந்துவிட்டால் என்ன?' என்றுகூட அந்த ஆரம்ப தசையில் சற்றுத் தோன்றத்தான் செய்யும். இது ஆசிரியனின் சொந்த அனுபவம் மட்டுமல்ல; அநேக பக்தர்களும் இப்படியே அவனிடம் தெரிவித்திருக்கிறார்கள். ஆனாலும் எவ்வாறோ, இவர்களை அறியாமல், இந்த அசட்டு மான உணர்ச்சியை ஸ்வாமி நாளாவட்டத்தில் நலிவித்து விடுகிறார்!

Koviloor Digital Library

ஆதியில் நெருங்கிப் பழகியவர்கள் உள்பட, அடியார்களை அவர் கவனிக்காமலே இருப்பதுபோல நடிப்பதும், ஓரளவுக்கு நம் மான உணர்ச்சியை நீக்கும் சீர்திருத்தந்தானே?

மானாபிமானம் போக்குவதன் இன்னோர் அங்கம் : ஸாயி பக்தர்களில் அநேகர் தங்கள் விஷயமாக பாபா செய்த அருள்களைப் பெயர் போடாமலே வெளியிட வேண்டும் என்று வாக்குறுதி பெறுகிறார்கள். தம் பேர் அச்சில் வராதா என்று சமயத் துறைப் பெரியோர் சிலரே ஆசைப்படும்போது, ஸாயி பக்தர்கள் இந்தப் பேராசையை—பேர் ஆசையையுந்தான் — விட்டிருப்பது ஸ்வாமியின் திருத்திப் பணி கொள்ளும் திறத்தால் தான்!

* * *

பாபா புரியும் இன்னோர் அருமையான சீர்திருத்தம் உண்டு.

சாதாரணமாக ஒரு ஜீவன் அத்யாத்ம வழியில் போகும் போது ஆரம்ப காலத்தில் ஒருவித சித்தாந்தம், ஒருவித அநுஷ்டானம் இவற்றை மேற்கொள்ள வேண்டியிருக்கும். பிற்பாடு இவற்றால் ஏற்பட்ட பக்குவத்தாலேயே இவற்றை விட்டு, இவற்றினும் உயரிய கொள்கைகளையும், ஆசரணைகளையும் படிப்படியாகக் கைக்கொள்ள வேண்டும். ஆனால் பெரும்பாலும் நடப்பது யாதெனில், ஆரம்ப கால சித்தாந்தத்திலும், அநுஷ்டானத்திலுமே சாதகருக்குப் பற்று ஏற்பட்டு, இவற்றையே பொன் விலங்காக அணிந்து விடுகிறார்கள். இவற்றை விட்டு மேலே போவதை அபசாரமாக எண்ணி விடுகிறார்கள். கீதையில் பகவான் சொன்னதுபோல் பெருவாரியான மக்கள் ஆரம்ப நிலையினரே ஆதலால், இவர்களுக்குத் தடுமாற்றம் உண்டாகும் விதத்தில் சாதகர்கள் அடிநிலைக் கொள்கைகளையும், ஆசரணைகளையும் ஆட்சேபித்துப் பிரசாரம் செய்ய வேண்டாம்தான். ஆயினும் உள்ளூற, தம்மைப் பொறுத்தமட்டில், இக் கொள்கைகள், ஆசரணைகள் இவற்றிலிருந்து மேலெழும்பி வளர வேண்டும். இதற்கான பற்றின்மையை, தைரியத்தைப் பெற்றாலன்றி பூரணநிலை அடையவே முடியாது. ஆனால் லௌகிகப் பற்றுக்களைத் தவறானவை என்று விட்டுவிடுமாறு, தங்களை ஆத்மிகத்தில் சேர்க்க உதவிய இந்த ஆரம்பக் கொள்கைகளையும் பயிற்சிகளையும் விடமுடியாமலே அநேகர் திண்டாடுகின்றனர். மற்றும் பலரோ இந்தப் பொன் விலங்கின் பிரகாசத்தில் மயங்கி அதைக் கழற்ற எண்ணுவதுகூட இல்லை! இவற்றைத்தான் மகா மாயை செய்கிற மாயம் என்று சொல்லவேண்டும். இந்த மாயம் சிலர் விஷயத்திலாவது ஸாயி அருளில் சாய்வதை நூலாசிரியர் அறிவார். இது அவர் புரியும் மிகப் பெரிய சீர்திருத்த அநுக்கிரகம். ஒரு காலத்தில் மிகவும் அவசியமானதாகவும், மனத்துக்கு இனிப்பதாகவும் எண்ணிய அநுஷ்டானங்களையும், மனப்போக்குகளையுங்கூட காலக் கிரமத்தில் விலக்கி நிச்சயமாக நலிவித்து மேல் படிக்கு ஏற்றிவிடுகிறார்.

Koviloor Digital Library

மனம் சுதந்திரமாக, சுயேச்சையாகத் திருந்துவது சற்று அரிதுதான். ஆனால் ஸ்வாமி நமது திருந்தாத போக்கையும் தாம் அறிவதாகக் காட்டுவதாலேயே நம்மைத் திருத்திக்கொள்ளச் செய்வதும் உண்டு. நாம் செய்த, அல்லது செய்யவிருக்கும் தவற்றை அறிந்து அவர் தண்டிப்பதால், (இந்தத் தண்டனையிலும் ஒரு தமாஷைக் கலந்து தருவார் நம் தயாமாதா), 'இனி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்' என்ற நல்லுணர்வை ஏராளவேனும் பெறுகிறோம். இது தண்டனையில் அச்சத்தால் ஏற்படும் அவல மாறுதலல்ல. அச்சத்தோடு அன்பும் கலந்ததால் ஏற்படும் அழகிய மாறுதலே இது! ஒருசில உதாரணங்கள் :

புட்டபர்த்தியில் பகவானின் திருமுன்னரே ஜோதித் தியானப் பயிற்சி கற்பிக்கும் பேறு பெற்றார் யோகினி இந்திரா தேவி. ஒரு வாரம் தினமும் மௌனத் தியானம் நடந்தது. முடிவில் ஸ்வாமி விதித்தபடி,

அஸதோ மா ஸத் கமய
தமஸோ மா ஜ்யோதிர் கமய
ம்ருத்யோர் மா அம்ருதம் கமய
ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி :

என்ற பிருஹதாரண்ய உபநிஷத வாக்கியங்கள் ஆத்மாவைத் தொடும் கம்பீர இசையில் ஓதப்பட்டு வந்தன.

இந்திரா தேவிக்கு இந்த உபநிஷத கானத்தை டேப்பில் பதிவு செய்யும் ஆசை தோன்றியது. ஆசை தோன்றிவிட்டால் அப்புறம் தேறிய யோகினிகூட அசட்டுத்தனம் செய்ய வேண்டியதுதான் போலும்! தியானப் பயிற்சியின்போது டேப் எடுக்கக் கூடாது என்று பிரசாந்தி நிலையத்தில் கட்டுப்பாடு இருந்ததால் யோக நிபுணி இந்திரா தேவியும் ஓர் அசட்டுத்தனம் செய்தார்.

மௌனத் தியானம் முடியவிருந்த சமயத்தில் டேப் ரிகார்டரைத் தம் காலருகே வைத்துக்கொண்டு புடவைத் தலைப்பால் அதை மூடி ஒளித்துவிட்டு அதன் ஸ்விட்சைப் போட்டார்.

ஆ, என்ன நேர்ந்துவிட்டது! இந்திராதேவி அப்படியே அவமானத்தால் குன்றி பூமிக்குள் அழுந்திவிட மாட்டோமா என்று எண்ணச் செய்த அசம்பாவிதம் நேர்ந்துவிட்டது. இவர் ஸ்விட்சை அழுத்தியதுதான் தாமதம், அந்தப் பொல்லாத டேப் ரிகார்டர் கர்ணகடூரமாக ஒரு பெரும் ஊளைச் சத்தத்தை எழுப்பி விட்டது!

பொல்லாத 'டேப்'பா? அது என்ன செய்யும்? 'பொல்லாத' ஸ்வாமியின் குறும்புதான்! அவருக்குத் தெரியாமல் ஒளிவு மறைவாக எதுவும் செய்ய முடியாது, செய்ய நினைத்தால் அவமானத்துக்குத்தான் ஆளாக வேண்டும் என்று இந்திரா தேவிக்கும், அவர்முகமாக மற்றோருக்கும் தெற்றெனக் காட்டிவிட்டார். அற்புத சக்தி சிர்திருத்தத்துக்கு நேராகப் பயனாகிறது!

கிளாரினெட் மன்னர் ஸ்ரீ ஏ.கே.ஸி. நடராஜன் நம் ஸ்வாமியிடம் அநேகப் பரிசுகள் பெற்றதாகக் கேள்வியுற்று நூலாசிரியர் அவரது அநுபவங்களைத் தெரிவிக்கக் கோரினார். அந்தப் பரிசுகளை வெளியிடுவது சரியல்ல என்று கூச்சப்பட்ட ஏ.கே.ஸியோ (இந்தக் கூச்சமும் திருத்திப் பணி கொள்வதன் அங்கந்தான்) பாபாவிடம் தாம் பெற்ற 'தண்டனை'ப் பரிசு ஒன்றை மட்டுமே நினைவுகூருகிறார், பெருமிதத்தோடு!

1964 பிப்ரவரி மூன்றாந் தேதி இரவு எட்டு மணிக்குத் திருச்சியிலுள்ள ஸ்ரீ ஏ.கே.ஸியின் இல்லத்துக்கு வருவதாக பகவான் வாக்களித்திருந்தார். அன்றுதான் புதுமனை புகுவிழா வைத்திருந்தார் நம் இசைக் கலைஞர். பாபா வரப்போகும் செய்தி எவ்வாறோ வெளியில் பரவி ஏராளமான மக்கள் பாய்ந்து வந்து குழுமத் தொடங்கினர்.

'இதென்னடா, கூட்டம் சேர்ந்து புத்தம் புது வீட்டைப் பாழாக்கப் பார்க்கிறார்களே!' என்று சலிப்புற்றார் ஏ.கே.ஸி. வந்த கூட்டத்தைக் கலைக்கவும், இனி கூட்டம் வராமல் தடுக்கவும் ஒரு தந்திரம் செய்தார். அதாவது வீட்டு முகப்பில், "பாபா இரவு பத்து மணிக்கு மேல்தான் விஜயம் செய்வார்" என்று பெரிதாக எழுதி வைக்கச் செய்துவிட்டார்.

கூட்டமும் கலைந்தது.

பாபாவும் வரவில்லை!

எட்டரை, ஒன்பது, ஒன்பதரை என்று மணி ஓடிக்கொண்டே இருந்தது. ஸ்வாமி வந்தபாடாக இல்லை. ஏ.கே.ஸி. வீட்டார் தவியாகத் தவித்தனர்.

பத்தும் அடித்துவிட்டது!

பிறகுதான் ஸ்வாமியின் காரும் அவரது பரிவாரங்களின் கார்களும் வந்தன.

வண்டியிலிருந்து இறங்கிய பக்தர்களில் ஒருவர் ஏ.கே.ஸியிடம், "சரியாக எட்டுக்கே காவேரி பாலத்துக்கு வந்துவிட்டோம். எதனாலோ ஸ்வாமி அங்கேயே வண்டிகளை இரண்டு மணி நேரம் நிறுத்தி வைத்து விட்டார்" என்றார்.

பாபா மானஸீகமாகத்தான் ஏ.கே.ஸி. செய்த தந்திரத்தை உடன்வந்தோரிடம் சொல்லவில்லையாம், இவருக்கோ 'குளிர்' கண்டுவிட்டது! பகவான் பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்தார். ஸ்வாமி அந்தரங்கமாக, "உன்னை யார் நான் பத்து மணிக்கு மேலேதான் வருவேன்னு எழுதி வைக்கச் சொன்னது? அதனாலே உன்னையே இரண்டு மணி தவிக்க வெச்சேன்" என்றார்.

Koviloor Digital Library

பக்தர் வாக்கைக் காப்பாற்றிப் பத்து மணிக்கு வந்ததாகவும் கொள்ளலாம். அதைவிட பக்தரின் நன்னடத்தையைக் காப்பாற்றுவதில் ஐயனுக்குள்ள கருணைக் கண்டிப்பையும் பாருங்கள்.

கண்டிப்பாயினும் அதிலுள்ள கருணையின் இனிமையால்தான் 'குட்டு'ப்பெற்ற ஏ.கே.வியே இதை 'ஷொட்டு'ப்பெற்ற மகிழ்ச்சியுடன் நமக்குத் தெரிவிக்கிறார்.

நம்மை நன்னெறியில் திருத்தச் சிறந்த அஸ்திரமாகப் பயன் படுகிறது என்பதாலேயே ஸ்வாமி தமக்கு மறைவாக எதுவும் நடக்க முடியாது என்று அநேக சந்தர்ப்பங்களில் வெளிப்படக் காட்டுகிறார்.

முன்னொரு முறை பிரசாந்தி நிலைய 'கேட்'டுக்கு வர்ணம் பூசும் பணியைச் சிலருக்குத் தந்திருந்தார். அவர்களில் ஒருவர் வேலையைச் செய்யாமல் வீண் பேச்சில் ஈடுபட்டிருந்தார். பாபா உள்ளேயிருந்து வருவது தெரிந்தது. உடனே அந்த நபர் தாமும் வெகு மும்முரமாகப் பெயின்ட் பண்ணுவதுபோல் பாவிக்க தொடங்கினார்.

பாபா அவரிடம் வந்து நின்று, ''பாவம், எத்தனை சிரமப் பட்டு வேலை செய்கிறாய்!'' என்றார்.

பாபா ஏமாந்துவிட்டதாக இந்த நபர் ஏமாந்தார்! எனவே, ''ஆமாம் ஸ்வாமி, முதுகு வலி கண்டுவிட்டது!'' என்றார்.

ஸ்வாமி மல்லிகைச் சிரிப்புச் சிரித்துக் கூறியதை அவரது அழகிய ஆந்திரவாணியிலேயேதான் சொல்ல வேண்டும்: ''தோக லேனி குண்டநக்க அநேதி நாகு தெலுஸுனு'' என்றார். (''நீ வாலில்லாத குள்ளநரி என்று எனக்குத் தெரியுமே!'' என்று பொருள்.)

இதன்பின் அந்த நபர் இவரிடம் வாலாட்ட முடியுமா?

இன்னொரு நிகழ்ச்சி :

சிறுவன் முன் பொந்திக் கால் வீங்கிய ஒருவன் கண்ணீரும் கம்பலையுமாக விந்தி விந்தி வருகிறான் பிரசாந்தி நிலையத்துக்கு! விந்தை—நம் கருணைக் கண்ணன் இக் கண்ணராவிக் காட்சியைக் கண்டு சிரிக்கிறார்!

அவனை நோக்கி, ''அப்பாயி, பேறு பாக ராஸ்துந்தா?'' (''அப்பனே, பேனா நன்றாக எழுதுகிறதா?'') என வினவுகிறார்.

'அப்பாயி' ஆடிவிடுகிறான். ''சாமி, மன்னிச்சுடுங்க. இனிமே இப்படிச் செய்யவே மாட்டேனுங்க!'' என்று அழுது கொண்டே ஒரு பார்க்கர் பேனாவை அவர் பாதத்தில் வைக்கிறான்.

உரியவரிடம் பேனாவைச் சேர்க்கிறார் ஸ்வாமி.

யாத்ரிகர் ஒருவரது பேறுவைப் போகிற போக்கில் கையாடி மறுத்துக் கைமேற் பலன், அல்லது கால் கீழ்ப் பலன்தான் வழியில் அப்படி அவனுக்கு இசகு பிசகாக முள் தைத்து அவன் ஸ்வாமியிடமே திரும்பி வர வைத்தது.

தம் பக்தர் மனத்தை வஜ்ரமாக மாற்றிக் கொள்ள வேண்டியிருந்த ஸாயம்மா மறுபடி புறப்பட்டாள். கை நிறைய விபூதி வரவழைத்து அந்தக் குற்றவாளியின் பாதத்தில் தாமே பூசினார் ஸ்வாமி. முள் குபீரென்று வெளியே வந்து விழுந்தது. அவனுள் முள்ளாக உறுத்திக் கொண்டிருந்த ஒரு கெட்ட குணமும் வெளியேறிவிட்டது.

★

இவ்விதமெல்லாம் வெளிப்பட அற்புதம் காட்டாமல், பாபா தம் தரிசன மாத்திரத்தாலும், உபதேசத்தாலுமே எவ்வளவோ மக்களைத் திருத்தி வந்திருக்கிறார். திருஷ்டாந்தமாக:

புது தில்லி ஸ்கூட்டரோட்டி (புது தில்லியில் ஸ்கூட்டர் என்றுதான் ஆட்டோ ரிக்ஷாவையும் சொல்வார்கள்) அசோக் குமார் ஸ்வாமியிடம் நெருங்கி நேராக எந்த அற்புதத்தையும் பெற்றவனல்லதான்.

1972 மார்ச் கடைசியில் ஸ்வாமி தில்லிக்கு விஜயம் செய்த போது அசோக் குமாருக்கு வயது இருபத்தொன்று. மீட்டரில் ஏதாவது திருத்தம் செய்து, பயணிகளிடமிருந்து குறைந்த பட்சம் கால் ரூபாயாவது அதிகப்படி கறக்காவிட்டால் அவனுக்குத் திருப்தியாக இராதாம்.

அன்று பக்தர் ஒருவரை கோல்ஃப் லிங்க்ஸுக்குக் கொண்டு விட்டான். அங்கு ஒரே கூட்டம். யாரோ ஒரு பாபாஜி வந்திருப்பதாகப் பேசிக்கொண்டார்கள்.

அசோக் குமாரின் பாக்கியம், அந்த பாபாஜியைத் தரிசிக்க வேண்டும் என்று ஆவல் ஏற்பட்டது. அவனது பரம பாக்கியம், ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபாஜியைத் தரிசித்த மாத்திரத்தில் அவன் 'இனிமேல் எந்தப் பயணியையும் நான் ஏமாற்றமாட்டேன்' என்று சத்தியப் பிரதிக்ஞை செய்துகொண்டது!

எத்தனை பேருக்கு இப்பேர்ப்பட்ட மன உயர்வு அவரால் சுலபமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறதோ, நம்மிடம் 'ஸென்ஸஸ்' இல்லைதான்.

அற்புதம் இன்றியே பாபாவால் அருளில் களிக்கப்பட்ட அசோக் குமாரிடம் சற்றே அற்புதம் காட்டி அதில் நிலைப்படுத்தினார் பாபா. அதாவது, ஸ்வாமியின் புகைப்படம் வாங்க இவன் ஆசைப்பட்டும், இவன் செலவழிக்கக் கூடிய தொகையில் அன்று அங்கு புகைப்படம் கிடைக்கவில்லை.

Koviloor Digital Library

மறுநாள் ஸ்ரீ ஆர். ராமாநுஜம் என்ற ஸாயி பக்தரை ஏற்றிக்கொண்டு இவன் ஸ்கூட்டரை ஓட்டிச் சென்றான். ஸ்வாமி தரிசனத்தால் இவன் எடுத்துக்கொண்ட வாக்குப்பிரமாணத்தைக் கேள்வியுற்றுப் பேருவகை கொண்ட ராமாநுஜம் இவனைத் தம் வீட்டுக்குள் அழைத்துச் சென்று தமது பூஜையிலிருந்த ஓர் அழகிய ஸ்வாமி படத்தை அன்பளிப்பாக வழங்கினார். இதை அவன் ஸ்வாமி செய்த மறைமுக அற்புதம் என்றுதானே எண்ணியிருப்பான்?

இவ்வாறு அவர் நம்மைக் கருத்தோடு கவனித்து, நம் நியாயமான அபிலாஷைகளை நிறைவேற்றுவதாகத் தெரியும் போதுதான் அன்பு கலந்த அச்சத்தில் நாம் அற வழி நிற்க முயல்கிறோம்.

ராமாநுஜம் அவனிடம் பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்தார். அசோக் குமார் மீதத்தைக் கொடுத்து விட்டு, இன்னொரு பயணியை ஏற்றிக்கொண்டு புறப்படத் தயாரானான். அப்போது ஜேபியைத் தடவிப் பார்த்துக் கொண்டவன் வண்டியைக் கிளப்பாமல் ராமாநுஜத்திடமே வந்தான். "ஸாப், நீங்க பத்து ரூபா நோட்டு கொடுக்காமலே பாக்கியை வாங்கிக்கிட்டீங்க. மறந்துட்டீங்க போலிருக்கு. எங்கிட்ட காணோம் பாருங்க!" என்று ஜேபியைக் காட்டினான்.

ராமாநுஜத்துக்கு ஒன்றும் புரியவில்லை. 'நிச்சயமாகத் தாம் கொடுத்திருக்க, இவன் எங்கேயாவது மறைத்துவிட்டுக் கதை அளக்கிறானா? நம் ஸ்வாமியைக்குறித்து உருகிப் பேசியவன், சத்தியசந்தனாகப் பெருமை பேசியவன், அதற்குள்ளா ஏமாற்றுவான்?'

ராமாநுஜம் மீண்டும் ஒரு பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்து அவனை அனுப்பி வைத்தார்.

மறுநாட் காலை அசோக் குமார் மறுபடி வந்தான் அவர் வீடு தேடி. ஒரு பத்து ரூபாய் நோட்டை அவர் முன் நீட்டினான். அது ஒரு விசித்திரமான முறையில் சுருட்டப்பட்டிருந்த அடையாளம் தெரிந்தது.

"ஸாப், மன்னிச்சுடுங்க! நேற்று நான் முதல்லே உங்க கிட்ட வாங்கின நோட்டைப் பாக்கெட்டில் போட்டுக்கிட்டேனு, கீழே தான் நழுவவிட்டேனு, தெரியலே. உங்களுக்கு அப்புறம் வந்தார் ஏறினாரே அவர் எப்படியோ அதை 'அபேஸ்' பண்ணியிருக்காரு. ஸாப், என் கையிலே வருகிற ரூபாய் நோட்டை ஒரு புது மாதிரியாச் சுருட்டி வைக்கிறது என் வழக்கம். அப்பாலே அந்த ஆளு எனக்குக் கூலி தர்றதுக்காகப் பர்ஸிலேயிருந்து பணம் எடுக்கறச்சே இந்த மாதிரி சுருட்டுன நோட்டு ஒன்றும் அதிலே தெரிஞ்சுச்சு. அப்புறம் விடுவேனா? சண்டை கிண்டை போட்டு அந்த ஆளு கிட்டேயிருந்து அதை வாங்கிட்டேன். இதுக்குள்ளே ஒரு கூட்டமே சேர்ந்துச்சு. ஒரு போலீஸ் காரர்கூட வந்துட்டாரு.

“ஸ்கூட்டர்லே ட்ராவெல் பண்ற அளவுக்கு வசதியா இருக்கறவங்க கூட இப்படித் திருட்டுப் புரட்டு பண்றாங்கன்னு, இதுலவிட அநியாயத்தைக் கேளுங்க. அந்த ஆளுகிட்டே சண்டை முடிச்சு நான் வண்டியைக் கௌப்பறச்சே போலீஸ்காரர் என்கிட்டே வந்தாரு. ‘பத்து ரூபாயை என்ன பண்ணப் போறே?’ன்னாரு. ‘என், உடமைக்காரர் கிட்டத்தான் தரப் போறேன். இதிலே என்ன சந்தேகம்?’னேன். உடனே அந்தப் போலீஸ்காரர், ‘அது நேத்தோடு முடிஞ்சு போன கதை. அந்த ஆசாமி ரூபாயும் திரும்பக் கிடைச்சதைக் கண்டாரா, என்ன? பேசாம நீயும் நானும் இதை ஆளுக்கு அஞ்சா வெச்சிக்கிடலாம் தம்பி’ங்கறாரு.

“வேலியே பயிரை மேயுது பாருங்க. போலீஸானதாலே நான் அடங்கிப்பிடுவேன்னு நெனச்சுட்டாரு. ரெண்டு நாளுக்கு முன்னாலேயிருந்தா நானும் அடங்கித்தான் போயிருப்பேன் — இப்படிப்பட்ட இந்தப் போலீஸ்காரங்களோ ஏதாவது ஆக்ஸிடெண்ட் கேஸ்லே நம்மை மாட்டி வெச்சுடுவாங்களோ என்கிற பயத்துலே தான். ஆனால் இப்ப நான் கொஞ்சங்கூடப் பயப்படலீங்க. அந்தப் போலீஸ்காரர் கிட்டே ‘ஸ்ட்ரெய்ட்’டாக் கேட்டேன்: “ஆக்ஸிடெண்ட்லே மாட்டிப்பிடுவே-ன்னு உங்கிட்ட நான் பயந்துட்டுத் தப்பு பண்ணுவேனு என்ன? நீ உண்டாக்கற ஆக்ஸிடெண்டாத்தான் இருக்கட்டும், வேறே எந்த ஆபத்துதான் எனக்கு வரட்டும், அப்போ எனக்குத் துணையா வந்து நிக்கப் போறவரு பாபாதான். அவருக்கு முன்னாடி, ஒத்தரையும் ஏமாத்த மாட்டேன்னு சபதம் பண்ணினேன். அதை உனக்காக மாத்த முடியாது’ன்னு சொல்லிட்டு வண்டியை எடுத்துட்டேன்” என்று முடித்தான் அசோக் குமார்.

☆

அசோக் குமார் போன்ற எத்தனையோ முரட்டு வாலிபர்கள் பாபா ஆல்கெமியில் பதமாக, பதவிசாக ஆகியிருக்கிறார்கள். ஸாயி ஸ்தாபன சாரணர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்களே, இந்த யுவர்கள் எத்தனை இன்னியல்பினராக இருக்கிறார்கள்? இவர்கள் ஒவ்வொருத்தருக்காகவும் ஸ்வாமி அற்புதம் புரிந்து இருக்கவில்லை. அநேகமாக அசோக்குமார் போல் அவரிடம் இயல்பாகச் சுரக்கும் பக்தியேதான் நன்னெறிகளில், நற்பண்புகளில் கொண்டு சேர்க்கிறது. வெளிப்பட ஸ்வாமி திருத்துகிறார் என்று காட்டமுடியாமல் காலக் கிரமத்தில் கொஞ்சம் கொஞ்சமாக, உறுதியாகக் கொண்டு தெரியாமல் (imperceptible) ஆக அவர் இதைச் செய்வதிலேயே ஒரு வியக்கிய எழில் விளங்குகிறது. எங்கள் அக்கம்பக்கத்திலேயே வீட்டுக்கு உதவுவாரா என்று கவலை கொள்ளும் விதத்தில் போய்க்கொண்டிருந்த சில விடலைகள் இன்று நூலாசிரியர் தம் அருமைத் தம்பிகளாகக் கருதும் அளவுக்கு மாற்றி யிருப்பது ஸாயி பதுமின் குஞ்சமான தார்மிக சக்திதான். பல தம்பிமார்கள் விகார முடியலங்காரம், கோலம் போட்ட அங்கிசால உடை விநோதம், சிகரெட், சினிமா இத்யாதிகளைக் களைந்தும் என்றுமக்கு பிரம்மசர்யம், ஆலய தரிசனம், பஜனை,

Koviloor Digital Library

பரோபகாரம் முதலியவற்றில் வேரூன்றி இருப்பதைக் காண்கை யில் ஸ்வாமியின் சீர்திருத்தப் பணியை எண்ணி உருகாதிருக்க முடியவில்லை.

* * *

பூரணமாக ஒருவரைத் திருத்தாவிடினும் ஒரு சில அம்சங் களில் பாபா செய்யும் மாற்றம் அதிசயமானது. முன்பு முழு மூடனாகி ஆகாத பலரையும் பாபா புத்திரசோகம், பதிவியோகம் போன்ற சந்தர்ப்பங்களில் மட்டும் வைராக்கியராக்கியதைப் பார்த் தோம். மற்ற அம்சங்களில் விசேஷ வைராக்கியம் பெறாத சிலரை அவர் அபவாதப் புரளிகளைப் பொருட்படுத்தாமலிருப்பதில் மட்டும் அதிபக்குவம் பெற வைத்ததைப் பார்த்தோம். இதே போல மேற்சொன்ன அம்பத்தூர் தம்பிமார்களில் ஒரு பிள்ளை யாண்டான் ஓரம்சத்தில் பெற்ற சீர்திருத்தம் வியப்பூட்டுவது.

பள்ளி நாளில் இவனுக்குப் படிப்பில் அக்கறையே இல்லை. பரீட்சைகளில் நூற்றுக்கு ஏழு, எட்டு என்று 'தர்ம வட்டி' யாகத்தான் மார்க் வாங்கி வந்தான். பெற்றோருடன் ஸ்வாமி யிடம் கோரிக்கை பெறும் பாக்கியம் இவனுக்குக் கிடைத்தது. இவன் படிப்பில் சிரத்தை காட்டாததை ஸ்வாமி குறிப்பிட்டுக் கண்டித்தார். இனி சமர்த்தாக இருக்க வேண்டும் என்று சொல்லித் தட்டியும் கொடுத்தார்.

இது எப்பேர்ப்பட்ட மாறுதலை விளைவித்துவிட்டது! பெற்றோ ருக்கும் மற்றோருக்கும் சிறிதும் கட்டுப்படாத பையன் இதன் பின் படிப்பில் அதிசயமான கவனம் செலுத்தத் தொடங்கினான். சிரத்தை பிறந்தவுடன் ஸ்வாமியும் நன்றாக அநுக்கிரகித்தார். எவ்விதச் சிபாரிசும் இன்றியே (அதுவும், பிராமணனாகப் பிறந்து கூட!) புகுமுக வகுப்பிலும், பிற்பாடு பட்டப் படிப்பிலும் இடம் பெற்றான் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். இவன் கல்லூரி யில் படிக்கும் காலத்தில் ஸ்வாமியே சென்னைக்கு வந்தாலுங்கூடப் படிப்பை விட்டுவிட்டு அவரைப் பார்க்க வரமாட்டான். 'ட்யூட்டி செய்பவன்தான் டிவோட்டி' என்ற ஐயன் வாக்கை இத்தனை சிறப்பாக நடத்திக் காட்டிய இத் தம்பியைப் பார்த்தால் நூலாசிரியருக்கே பொறாமையாக இருக்கும்!

* * *

ஏன் பொறாமைப்பட வேண்டும்? தன்னையே ஸ்வாமி எவ்வளவு பொறுமையுடன் சீர்திருத்தி வருகிறார் என்பதை யெண்ணி நூலாசிரியன் நிறைவே கொள்கிறான். தன்னாலும் மாற்றிக்கொள்ள முடியுமா என்று இவன் எண்ணிய பல ஆழ்ந்த வாசனைகளை, நீடித்த பழக்கங்களை ஸ்வாமி பரம சகிப்புத் தன்மையோடு கல்வி யெடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்.

அப்பப்பா, சின்னதும் பெரிதுமாக நம்மிடந்தான் எத்தனை துர்க்குணங்களும், மனக்கோணல்களும் மண்டிக் கிடக்கின்றன?

Koviloor Digital Library

குணமொன்றும் ஒன்றிலேன் பால்
கோரம் எத்தனை? பட்ச பாதம் எத்தனை?
அகந்தை எத்தனை? மனக் கள்ளம் எத்தனை?
உள்ள சற்காரியம் சொல்லிடினும்
அறியாமை எத்தனை? முயற்சி சிந்தனை எத்தனை?
சலனம் (எத்தனை?)
இந்த்ரசாலம் போன்ற தேகத்தின் வாஞ்சை முதலா
அல்லாமை எத்தனை?

என்று அடிகள் பாடிய அடிகள் நமக்காகத்தானே?

எத்தனை விதமான மிராகிள் உண்டோ அத்தனையும் ஸ்வாமி செய்கிறார் என்பது போலவே, எத்தனை விதமான குறைகள் உண்டோ அந்தனையையும் அவர் சீர்திருத்தியும் வருகிறார். ஒருவருக்கே அனைத்துக் குறைகளையும் அவர் அறவே நீக்கியதற்குச் சான்று அபூர்வமாக இருக்கலாம். ஆனால் பலருக்கு ஒவ்வொரு விதமான பெரிய மலையை ஒன்றையேனும் அவர் வேரோடு வீழ்த்தி இருப்பது நிச்சயம். இப்படியாக, கருமிகளைக் கொடையாளிய ராக்கி யுள்ளார். வறண்ட இதயத்தோரைப் பரோபகாரியாக்கி யுள்ளார். நடத்தை பிசகியவரைப் பதிவிரதையாக, பத்னி விரதர்களாக மாற்றியிருக்கிறார். பலருக்குக் கடமையுணர்வை, பொறுப்புணர்ச்சியை ஊட்டியிருக்கிறார். நாஸ்திகரை ஆஸ்திக ராக்கியிருப்பதோடு, ஆஸ்திகரிலேயே குறுகிய புத்தியுள்ளோருக்கு மத விசால மனப்பான்மை ஏற்படுத்தி யிருக்கிறார். வெட்டிப் பேச்சில் களிப்பவர்களை ஆக்கப் பணிகளில் திருப்பியுள்ளார். ஓயாமல் திட்டம் போட்டுக்கொண்டிருப்பவர்களின் மன ஓட்டத்தைக் கட்டுப்படுத்திக் 'கடவுள் விட்டபடி' என்று திருப்த ராக்கி இருக்கிறார். தன்னைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப்பவர்களின் 'ஸெல்ஃப்-ஸிம்பதி' என்ற இழிகுணத்தை ஒழித்திருக்கிறார். ஆத்திரக்காரர்களைப் பொறுமைசாலிகளாக்கி யுள்ளார். அகந்தை பிடித்தோரை அடக்கமாக்கி யுள்ளார். கோழைகளைத் தைரியசாலிகளாக்கி யிருக்கிறார். பொய்யர்களை சத்தியத்துக்கு அஞ்சும்படிச் செய்திருக்கிறார். சொந்த அநுபவத்திலேயே இவற்றில் பலவற்றுக்கு ஆசிரியன் ஸாயி தாதாவிடம் பெற்ற பிச்சை அத்தாட்சி தரும்.

இன்னமும் இவனிடம் வண்டி வண்டியாகத் தோஷங்கள் இருந்தாலும், இவை யாவும் தோஷம் என்று இவன் உணரும்படிச் செய்திருக்கிறாரே, அதுவே அநுக்கிரஹந்தான்! மேலும், ஒரு காலத்தில் மலை மலையாக இருந்த இத் தோஷங்களை இப்போது வண்டி வண்டியாகக் குறைத்துள்ள ஸ்வாமி இருக்க, எஞ்சியதைக் கண்டு அஞ்சுவானேன் என்ற நம்பிக்கை ஜோதியை ஏற்றி வைத்து இருக்கிறார்.

இந்த நம்பிக்கையால் ஏற்படும் பொறுமையும் நிம்மதியும் திருப்தியுந்தான் ஸ்வாமி அருளும் தலையாய கொடை. நம்மிடம் உள்ள தோஷங்களுக்கு நியாயம் கற்பித்துக் கொள்ளாமல் அவை

Koviloor Digital Library

தோஷமே என்று உணர்த்தி, இதன் மூலம் திருந்துவதற்கு ஊக்குபவர் ஸ்வாமி. அதே சமயம், இன்னம் திருந்தவில்லையே என்று வருந்தி வருந்திப் புலம்பாத பொறுமையையும் அருள்கிறார். அநேக சாதகர் உள்ளனர். தர்மப்படி அவர்களது கர்மம் தீர இன்னம் காலம் பிடிக்கலாம். ஆனால் அவர்களோ சாதனை செய்கிறோம் என்பதால் இப்போதே சுமை தீர்ந்து பூர்ணத்துவம் அடைந்துவிட வேண்டுமென்று தவிக்கிறார்கள். இந்தத் தாபத் தினாலேயே, தற்சமயம் தங்களுக்கு லபித்துள்ள அருளிலும், ஓரளவு பக்குவத்திலும் பெறவேண்டிய ஆனந்தத்தையும் பறிகொடுத்து விடுகிறார்கள். நம் ஸாயி அடியார்களிலேயே பலர் இப்படிப் பொறுமைக் குறைவால் தவிக்கிறார்களென்றாலும், சிலரையேனும் அவர் நிச்சயமாக நன்னம்பிக்கையின் விளைவான நிறைவில் நிலைப் படுத்தியுள்ளார். இவர்களுக்கு அவர், "நம் ஸ்வாமி யிருக்க ஏன் குறை? அவர் இப்போது செய்துள்ளதில் இனித்திருப்பதும், அவரிடம் நன்றியால் இன்புற்றிருப்பதும், இனியும் அவர் காத்து உயர்நிலையின் உச்சத்தில் உய்விப்பார் என்று உற்சாகமாக இருப்பதும்தான் நாம் செய்ய வேண்டியது" என்ற தெளிவை நல்கியிருக்கிறார். நம் கர்மா தீர அவர் இனி எத்தனை ஜன்மங்கள் கொடுத்தாலும் சரி, அத்தனை ஜன்மங்களிலும் எப்படியும் உடன் வருவார், துணை நிற்பார் என்ற எண்ணத்தில் கூடியவரை விச்ராந்தி தந்திருக்கிறார்.

சலிப்பின்றி ஆண்டு எம்மைச்
சன்ம சன்மாந்தரம் காப்பரே!

நாமும் உய்ய முடியும் என்பதில் அவர் நம்பிக்கை இழக்காத போது, அவரால் நம்மையும் உய்விக்க முடியும் என்பதில் நாம் ஏன் நம்பிக்கை இழக்க வேண்டும்?

ஆம், மிக மோசமான நிலையிலுள்ள மனிதனையும் மாற்ற முடியும் என்பதில் அவர் நம்பிக்கை இழக்கவில்லை. இதனை எத்தனை நயம்பட நவில்கிறார்? "கருங்கல் பொடித்து மண்ணா கிறது; மண்ணில் மரம் வளர்கிறது; மரத்தில் கனி பழுக்கிறது; கனி அதை உண்ணும் ஜீவனின் தேஜஸாகி இன்னொரு ஜீவனாகப் பிறக்கிறது ; நளினம் மிகுந்த சிசுவாக நாம் பார்க்கும் உயிரில் அந்தக் கனி மட்டும் இல்லை; மரமும், மண்ணும், கல்லும் கூட இருக்கின்றன. ஆதியில் கல்லுள் இருந்த சாரந்தான் இன்று பச்சைக் குழந்தையாகப் பரிணமித்திருக்கிறது. எனவே எந்தக் கல் மனம்தான் கனிவுமயமாகப் பரிணமிக்க முடியாது? காலப் போக்கில் எந்தக் கடினமும் இளகி இளகி நளினமாகும்" என்கிறார்!

கல் குழந்தையாக மாற எத்துணையோ காலம் பிடிக்கிறது. அதே போல் மனமாற்றத்துக்கும் மிகப் பொறுமையுடன் காத்து இருக்கத்தான் வேண்டும். கருமான் கைப் பாத்திரம் தன் செயலேதும் இன்றி அவன் கொடுக்கும் அடிகளை மட்டுமே வாங்கிக்கொண்டு திருத்தமான உருப்பெறுவதுபோல், நாமும் நம் பெருமான் கருமானிடம் மனச் சுதந்திரத்தை இழந்து அர்ப்பணமானால் அவர் நம்மைத் தட்டி, கொட்டி, ஒடுக்கு எடுத்துச் செப்பம் செய்துவிடுவார்.

வேதம் ருத்ரனை "சர்மாரேப்யச்ச வோ நமோ நம:" என்கிறது. "கருமான்களாக இருப்பவனுக்கு மீண்டும் மீண்டும் வணக்கம்" என்று பொருள்.

ஸ்வாமியும் தம்மை அப்படியே வர்ணித்துக்கொள்கிறார் பாருங்கள் :

"நான் ஒரு கருமான். விரிசலுற்ற இதயங்கள், நசுங்கிய மனங்கள், ஒடிந்து விழுந்த உணர்ச்சிகள், கோணல் மாணலான சிந்தனைகள் முதலியவற்றை 'ரிபேர்' செய்யவே வந்திருக்கிறேன். இணைக்கவும், திருத்தவும், புத்துருவாக்கவும் வந்திருக்கிற கருமான் நான்."

ஒரு வித்தியாசம். கருமான் அடி அடி என்று அடிப்பான். ஸாயி அம்மா ஏதோ கொஞ்சம் அடிக்கிற மாதிரி பாவனை செய்தாலும் அன்பு, அன்பு, அன்புக்கிடவே அறிவாள்!

Koviloor Digital Library

அத்தியாயம்—48

ஞான ஸாயி

''என்னை உள்ளன்போடு பஜிப்பவர்களிடம் நான் அருளில் உருகுகிறேன்; அவர்களது உள்ளத்துள் ஞான தீபமாக நிலைபெற்று அறியாமை இருளை நாசம் செய்கிறேன்''

— பகவத் கீதை 10.11

அஞ்ஞான இருளில் தீபமாய் திகழ்பவள்

— லலிதா ஸஹஸ்ரநாமம் 993

பரமாத்மா, ஜீவாத்மா என்ற பேதமே இல்லாத அத்வைத ஞானத்தில் கரைவதுதான் மஹாநுபவம்—பரம அநுபூதி. இந்த அநுபவத்தை அநுக்கிரகிப்பதிலேயே ஒரு மஹாபுருஷரின் திருத்திப் பணி கொள்ளும் பூரணத்வம் தெரிகிறது.

அத்வைத நிலை மக்களிடை அபூர்வத்திலும் அபூர்வமாகவே ஏற்படும். அப்படி ஏற்பட்டவர்களிலும் பிறருக்கு அதைச் சொல்பவர் அருமையாகவே இருப்பர்.

எனினும் ஸாயி சரித்திரத்தில் அவர் 'ஞானந்தான் வடிவாய நாயகன்' என்று உணர்த்தக்கூடிய இப்படிப்பட்ட ஒரிருவரும் அவரது திருத்தும் பணியின் கொடுமுடியைக் காட்ட இல்லாமற் போகவில்லை. இந்த ஒவ்வொருவரும் ஒரு பிரபஞ்சம் முழுதற்கும் சமம்.

(இந்த நிகழ்ச்சிகளைப் படித்த பிறகும் சிலர், ''பாபா இந்த எடுத்துக்காட்டான அடியார்களை நிரந்தரமாக அத்வைத ஸமாதியில் ஆழ்த்திவிடவில்லையே! சில மணிகளுக்கு, அல்லது அதிகமானால் சில தினங்களுக்கு அவர்கள் அந்த நிலையில் இருந்து விட்டு, பிறகு மீண்டதாகத்தானே தெரிகிறது?'' என்றெண்ணலாம்.

இந்த அத்வைத ஞான அசலமான அருணாசல ரமணர் குறித்த ஒரு நிகழ்ச்சியிலிருந்து தெளிவு பெறமுடியும்.

மலையாளத்தைச் சேர்ந்த சாதகரான ஸ்ரீ குஞ்சு ஸ்வாமிகள் ரமணரின் ஸந்நிதிக்கு வந்த மாத்திரத்திலேயே 'அண்ட பிண்டம் காணேன்' எனும் அரிய நிர்விகல்ப அத்வைத ஸமாதி நிலையில் ஆழ்ந்துவிட்டார். ஆயினும் நீண்ட நேரத்துக்குப் பின் அதனின்று மீண்டார். மீண்டது மட்டுமல்ல, அதன் பின் அநேக வருஷங்கள் ஸாதனைகள் செய்தும்கூட அந்த அநுபூதி அவருக்கு மறுபடி வாய்க்கவில்லை. இது குறித்து அவர் மஹர்ஷிகளிடமே வினவினார்.

மஹர்ஷிகள் புன்னகை பூத்துக் 'கைவல்லிய நவநீத'த்தில் சொன்னது தெரிந்ததுதானே?'' என்றார். அந்த மேற்கோள் வருமாறு :

தானாகும் பிரமரூபம்
சற்குரு, நூலால் தோன்றும்;
ஆனாலும் தடைகளுண்டேல்
அநுபவம் உறைத்திடாதே!

இதன் பொருள் : குரு கடாக்ஷம் அல்லது வேதாந்த சாஸ்திர படனத்தால் ஒரு ஜீவனின் கர்மம், வாஸனை யாவும் தாற்காலிகமாக நீங்கி பிரம்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படும். நிச்சயமாக அப்படி ஒரு நிலை உண்டு என்று ஸாதகன் உணர்ந்து, அதற்காக பிரயாசைப்படவே இப்படித் தாற்காலிகமாக ஏற்படும் இவ்வநுபவம் நிலையாக உறையாமல் விலகிவிடும். ஜீவன் கர்ம சக்தியின் தடைகளுக்கு மறுபடியும் ஆளாகிறான். ஆயினும் ஸமாதி நிலையின் பேரானந்தத்தை ருசித்துவிட்டதால் கர்மத்தைக் கழித்துக்கொண்டு அதில் நிரந்தரமாகச் சேர இடைவிடா ஸாதனையில் ஈடுபடுகிறான்.

(அருளப்பட்ட விவேகாநந்தருக்கே பரமஹம்ஸர் தமது உயர்ந்த இச்சையால் தாற்காலிகமாகத்தானே நிர்விகல்ப ஸமாதியை அருளி, பிறகு அவரை இறக்கிவிட்டார்?)

* * *

தார்வாரில் வசித்து வந்த பிரபுதாஸி நிவேதிதா என்ற மராத்திப் பெண்மணி வட இந்திய மஹா யோகியர் இருவரிடம் உபதேசம் பெற்று ஸாதனை செய்து வந்தார். அவருக்கு இஷ்ட தெய்வம் நாராயணன். ஆயினும் தெய்வம், பக்தன் என்ற வேறுபாடின்றி அத்வைதமாகக் கரைந்துவிட ஆர்வந் ததும்பு கொண்டவர். யோகியர் அவரை அத்வைத அநுபவத்துக்குத் தான் பயிற்றுவித்து வந்தனர். "ஐயோ, அவர்கள் எத்தனையோ கருணையோடு பயிற்றுவித்தும் நான் இப்படிக் கரையாமல் இருக்கிறேனே!'' என்று ஒரு நாள், 1961 ஃபிப்ரவரியில் ஒரு நாள், தவிப்பின் எல்லைக்கே போய்விட்டார் பிரபுதாஸி.

Koviloor Digital Library

அப்போது அவருக்கு ஒரு கடிதம் வந்தது. அதை எழுதியவர் வர்ணிக்கவொண்ணு, அறியவொண்ணு மர்மத்தை, பேரறிவை, தாம் பெங்களூரில் ஸத்ய ஸாயி என்ற வடிவில் சந்தித்ததாக எழுதியிருந்தார்.

இந்த வாக்கியத்தைப் படித்ததுதான் தாமதம், பிரபு தாஸிக்கு ஞான மின்னல் ஒன்று பளீரென உட்புகுந்தது போல் இருந்தது. சரீரப் பிரக்ஞை போயேவிட்டது. ஜீவ பாவம் ஓடியேவிட்டது. ஆம், கிடைத்தற்கரிதிலும் அரிதான அத்வைத நிலையில், அநுபவம் என்றும் அநுபவிப்பவர் என்றும் வேறில்லாத நிலையில் ஆழ்ந்துவிட்டார்.

இகப் பிரக்ஞை மீண்டது. ஆனால் அத்வைத அலை பெரிதாக மடிந்து வந்து மறுபடி அதை முழுக்கியது. இப்படி ஜீவ பாவம் தலைதூக்கும் போதெல்லாம் சிவ பாவம் வந்து அதை உட்கொள்ளும் ஆனந்தாதிதத்தில் மூன்று நாட்கள் திளைத்திருந்தார் பிரபுதாஸி.

இவ்வநுபவத்தை அருளிய பர்த்திவாஸனிடம் பொங்கி எழுந்த பக்தியுடன் ஓடோடி வந்தார், பிரசாந்தி நிலயத்துக்கு. இப்படி பக்தி என்று ஒன்று பொங்குவதுகூடத் தப்புதான். இதுவும் மாயைதான். 'பொங்குவதற்கு இடமே இல்லாத பூரணமாக அந்த மூன்று நாட்கள் இருந்தோமே! அப்படியே தன்னை அவர் எப்போதும் இருக்குமாறு பண்ணும்படியாக வரம் பெறவேண்டும். வீடு வாசல் என்ற கடமைகளைத் தகர்த்து நொறுக்கும்படி அவரிடம் வரம் பெறவேண்டும்' என்று எண்ணினுர் அம்மையார்.

பாபா 'கோரிக்கை' கொடுத்தார். கோரிக்கை அறையில் அம்மை பெற்ற அநுபவம் : ''நான் இருப்பது வைகுண்டம். என் பிரபு, அகிலாண்டப் பிரபு, நாராயணன் இதோ பக்கத்தில் நிற்கிறுன்; மெய்யாலும் நிற்கிறுன்'' என்று மயிர்க்காலுக்கு மயிர்க்கால் பக்தியில் ஊறிநின்றுர் பிரபுதாஸி. 'இவனும் கூட வேண்டாம், இந்த அன்பும் வேண்டாம், அத்வைதம்தான் வேண்டும்; இவனே வேண்டாம் என்றபோது வீடு வாசல் வேண்டவே வேண்டாம்; கேள் வரத்தை' என்று அடியிலிருந்து ஒன்று தூண்டியது.

கேட்காமலே பதில் சொல்பவர் அல்லவா பாபா? பிரபு தாஸியிடம் வந்து நின்று, ''எனக்குத் தெரியும், தெரியும். கரைஞ்சு போயிடணும், இல்லே? அதுக்குந்தானே ஸாதனை பண்றுகிறே! ஸாக்ஷாத் ஈச்வரனுக்கு எதிரே இருக்கிறச்சே கூட அதை நினேச்சு ஏன் 'வொர்ரி' பண்ணிக்கிறே? அத்வைதத்தைத் தரவேண்டியவன் நான். நீ பண்ண வேண்டியது பக்தி; அதோடு உன் கடமையையும் செய்யணும். ஜீவாத்மாவாக உனக்கு ஏற்பட்ட கடமையைப் பண்ணு. அதிலேயே திருப்தியா, ஸந்தோஷமா யிரு. அத்வைதத்தை என்கிட்டே விட்டுடு'' என்றுர்.

Koviloor Digital Library

இரண்டற்ற ஆத்மாதான் ஜீவனின் உண்மை நிலை. ஆனாலும் ஜீவன் வேறு வேறாக உலகைப் பார்க்கிற மாயையில் பராசக்திதான் ஜீவனைப் பிடித்துத் தள்ளியிருக்கிறது. பிடித்துத் தள்ளிய சக்தியேதான் அதிலிருந்து கைதூக்கி எடுத்து மீட்கவும் முடியும். பராசக்தி அநுக்கிரஹத்தாலன்றி அத்வைதம் இல்லவே இல்லை.

பக்தி என்பது ஸாதகனை குண நிலையமான ஒரு தெய்வ மூர்த்தியிடம் சேர்ப்பதோடு நின்றுவிடுமெனவும், ஞானமே குணம் அற்ற சத்தியமான அகண்ட வெளியில் ஸாதகனை இரண்டறக் கரைப்பது என்றும் ஒரு தவறான கருத்து நீண்ட காலமாக உருவாகி வந்திருக்கிறது. பரமஹம்ஸ ராமகிருஷ்ணரின் காலந் தொட்டுத்தான் பக்தியாலேயே அத்வைத முக்தியும் சித்திக்கும் என்ற உண்மையை மஹான்கள் அழுத்திக் கூறி வருகின்றனர். இவ்விஷயத்தை வெகு அழகாக வேறோரிடத்தில் பாபா கூறுகிறார்:

“பக்தியானது ஸாதகனை முதலில் குணங்கள் கொண்ட தெய்வலோகத்துக்கு அழைத்துப் போவதை ஸாலோக்ய முக்தி என்றும், அதன்பின் அந்தத் திவ்ய குணங்கள் கொண்ட கடவுளுக்கு அருகில் கொண்டு சேர்ப்பதை ஸாமீப்ய முக்தி என்றும், அதற்கும் அப்பால் அந்த குணம் கொண்ட கடவுள் வடிவிலேயே இவன் தோய்ந்து தானே திவ்ய குண மூர்த்தியாவதை ஸாரூப்ய முக்தி என்றும் சொல்லி, இவ்விதம் தெய்வ குணங்களைப் பெறுவதோடு பக்தி முடிகிறது என்றே பெரும்பாலும் பக்தி சாஸ்திரங்கள் எல்லை கட்டிவிடுகின்றன. ஆனால் திவ்ய குணங்கள், துர்க்குணங்கள் யாவுக்குமே ஆதாரமாகவும், ஆனால் எந்தக் குணமுமே இல்லாததுமான நிலையில் பிரம்மத்தோடு பிரம்மமாவதைத்தான் ஸாயுஜ்ய முக்தி என்று அத்வைதம் கூறும். இந்த ஸாயுஜ்யமுங்கூடப் பரமாத்மாவின் கிருபை கிடைத்தால் தான் சித்திக்கும். ஸாதனைக்குப் பலனாகத் தானாகவே அத்வைத முக்தி கிடைக்க வேண்டும் என்று உரிமை கொண்டாடிப் பயன் இல்லை. கடவுள்தான் பக்தனுக்கு பிரம்மஞானத்தையும் கொடுப்பவர். புருஷோத்தமன் என்ற பிரம்மம் வேறு, பிரக்ருதி என்ற மாயை வேறு என்று ஞானவிசாரத்தால் உணர்ந்தால் மட்டுமே மாயைக்கும் அப்பாற்பட்ட அத்வைத அடைவைப் பெறலாம் என்ற கருத்துத் தோன்றிவிட்டது. உண்மையில் புருஷோத்தமனும் பிரக்ருதியும் வேறு வேறு அல்ல. இவற்றை வேறாகச் சொல்வது ஒரு வஸ்துவும் அதன் ஸ்வபாவமும் வேறு வேறு என்பது போலத்தான் — சர்க்கரை வேறு, அதன் இனிப்பு வேறு; தீ வேறு, அதன் ஒளி வேறு என்பது போலத்தான். பரம்பொருள் எப்போதும் ‘ஸ்வபாவம்’ என்றே வரையறுக்க ஒண்ணாத பிரம்மமாகவும், எல்லா ஸ்வபாவங்களுக்கும் காரணமான மாயையை இயக்கும் சக்தியாய் பராசக்தியாகவும் உள்ளது. இந்த சக்திதான் ஜீவர்களுக்கு மாயை என்ற மூடுதிரையை மாட்டி அவர்கள் தம்மை வேறு என்றெண்ணச் செய்திருக்கிறது; எனவே பராசக்தியிடம் பக்தி செலுத்தச் செலுத்த அதுவே இந்த மூடுதிரையை எடுத்தெறிந்து முக்தி நிலையில் சேர்க்கும்.”

Koviloor Digital Library

அது செய்ய வேண்டிய காரியத்தை அல்ப ஜீவாத்மா எப்படி விரைவுபடுத்த முடியும்? இருப்பினும், அதுவே சொன்ன பின்னும் கூடப் பிரபுதாஸி, அதை விரைவுபடுத்தத்தான் பார்த்தார்! பக்தி கொந்தளித்து வர, நாராயணனின் கைகளைப் பிடித்துக்கொண்டார். அதே சமயம் பக்தியும் தொலைந்து பர ஞான வெளியில் அகண்டமாவதற்கு ஆர்வமுற்று, "நாராயணப் பிரபோ! என் இதயத்திலிருந்துகொண்டு என்னை அப்படியே ஆட்கொண்டு விடு ; நானே அடியோடு இருக்கக் கூடாது; நீ தான், நீ மட்டுமே தான் இருக்க வேண்டும்" என்று கதறினார்.

"அப்படியே பண்றேன். கண்டிப்பாப் பண்றேன்" என்று கூறி, பேட்டியை முடித்து அவரை அனுப்பினார் பாபா.

வெளியே வந்தபின், 'வீடு வாசற் கடமை, பக்தி த்ரிய ஸகுணமூர்த்தி இவற்றையேதானே அவர் வலியுறுத்தினார்? குணமற்ற அத்வைத வெளியில் எப்போது கரைப்பாரோ?' என்ற ஏக்கம் அம்மாளை மீண்டும் பற்றிக்கொண்டது. 'கர்மம், பக்தி இவற்றைவிட்டு ஞானம் மட்டுமே என்று எப்போது ஆக்குவார்?' இன்னொரு 'கோரிக்கை' பெற்று அத்வைத வரம் விரைவில் சித்திக்க வாக்குறுதி பெற வேண்டுமெனத் தீர்மானித்தார் பிரபுதாஸி நிவேதிதா.

கருணாமூர்த்தி இரண்டு நாள் சென்றபின் இரண்டாம் முறையும் அவரை அழைத்தார்.

'என்னிடம் என்னென்னவோ வரங்கள் கேட்கவே வருகிறார்கள். நான் தர விரும்புவதோ மோக்ஷ வரம். அதைத் தருவதாகச் சொன்னேனாகில் என்னிடம் வருவோரில் முக்காலே மூன்று வீசம் பேரும் ஓட்டம் பிடித்துவிடுவார்கள்' என்று அங்கலாய்த்துக் கொள்பவரல்லவா? எனவே நிஜமாகவே அத்வைத மோக்ஷானந்தத்துக்கு ஆர்வமுற்ற ஒரு ஜீவனை விட்டு விடுவாரா? அதனிடம் உபரி கருணை கொண்டே இரண்டாம் முறையும் கோரிக்கை கொடுத்தார்.

"கொஞ்சம் கொஞ்சமாக ஸகுணத்தையும் மனசார ஏற்றுக் கொள்ளப் பழகு" என்று உத்தரவிட்டார்.

"எப்படிப் பிரபு, ஸகுணத்தோடு நிற்பது? அந்த மஹா ஜோதியில் இந்த ஜீவ ஜோதி மங்கி, மழுங்கி நிற்கும்போது, அணைந்தே போய்விட வேண்டும், அதுவே இதை அணைத்து ஒன்றாக்கிவிட வேண்டும் என்றுதானே தோன்றுகிறது? தாங்களோ ஸகுண பக்திக்கும் ஒரு படி கீழே போய் விட்டுக் கடமைகளைக்கூட வலியுறுத்துகிறீர்களே! என்னை உள்ளேயிருந்து ஒன்று இழுத்துக்கொண்டே யிருக்கும்போது எப்படி வெளியில் காரியம் செய்வேன், கடமை ஆற்றுவேன்? ஒன்று, என்னை உள்ளேயாவது நன்றாக இழுத்துப் புதைத்துவிடுங்கள்; அல்லது வெளியேயாவது பிடித்திழுத்துப் போட்டுவிடுங்கள்" என்றார் நிவேதிதா.

"அம்மா, நீ நினைப்பதெல்லாம் சரிதான். ஞானம்தான் பரம நிலை. ஆத்மா ஒன்றுதான் பரம சத்தியம். பக்தியும் அந்த நிலையில் போய்த்தான்; கர்மமும் அதற்கும் முன்நிலையிலேயே போய்த்தான். கர்மம் இரும்புக் கூண்டு; பக்தி பொற் கூண்டு. ஆனாலும் இதெல்லாம் ஒரு லீலைக்காக, இருக்கிற மட்டும் இருக்கத்தான் வேண்டும். இருக்க வேண்டிய மட்டும் இருந்துதான் தீரும். இதற்காக ஆத்திரமும் கோபமும் உனக்கு வருகிறது. நீ நிறைய சாதனை பண்ணியிருப்பதால் இந்தக் கோபம் வெள்ளைத் துணியில் கரும் பொட்டு மாதிரி இன்னம் அழுத்தமாகத் தெரிகிறது. இந்த ஆத்திரத்தை விட்டு விடு. நடக்கிறபடி நடக்கட்டும் என்று இரு. நான் பார்த்துக்கறேன்."

நிவேதிதாவின் இதயம் நிரம்பி வழிந்தது. அது அத்வைத நிறைவல்ல; த்வைத நிறைவுதான். ஆனாலும் அதுவே போதும் என்ற திருப்தி பிறந்தது. 'இதோ கிருஷ்ணன் எதிரே நிற்கிறானே! இப்போது தத்வ விசாரணை எதற்கு?' என்று பரவசமானார். "க்ருஷ்ணாத் பரம் கிமபி தத்வம் அஹம் ந ஜானே" என்று தானே அத்வைத ஆசாரியரான மதுஸூதன ஸரஸ்வதியே கூறினார்? "பிரபு, இப்போது நான் ஆனந்த உச்சியில் இருக்கிறேன்" என்று திணறிக்கொண்டு வெளியே வந்தார் பிரபுதாஸி.

அத்வைதத்துக்கு ஆர்வப்பட்டவரை த்வைத பக்தியிலேயே திருப்திப்படுத்தி அனுப்பியது எப்படி பரம ஞான அனுக்கிரஹம் என்கிறீர்களா? இன்னம் மேலே பாருங்கள்!

வீட்டுக்குப் போக வேண்டும் என்றாலே அம்மையாருக்கு வெறுப்பு வந்தது. 'ஐயோ, லௌகிகங்களைக் கட்டி எப்படி மாரடிப்பேன்?' என்று ஏக்கம் வந்தது. 'ஸ்வாமி! நீ அத்தனை சொல்லியும், இத்தனை கோபம் எனக்கு வருகிறதே. என்னைக் கரியாக்கிக் கொள்கிறேனே? நீ சொல்வதோடு நிற்கக்கூடாது. நீயேதான் என்னை அப்படி ஆக்கவும் வேண்டும்' என வேண்டியபடி தார்வாருக்குப் புறப்பட்டார்.

ரயில் போய்க்கொண்டேயிருந்தது. அதன் நூறு நூறு சக்கரங்கள் சுழன்றுகொண்டேயிருக்கின்றன. ஆனாலும் அவை ஒவ்வொன்றிலும் ஒரு மையப் புள்ளி உண்டு. அது சுழலவே முடியாது. இருந்த இடத்தில்தான் இருக்கும். ஆயினும் சக்கரங்கள் சுழலுவதால் அம் மையப் புள்ளியும் ஊர்விட்டு ஊர் போய்க்கொண்டேதான் இருக்கிறது. நகராமலே நகர்கிறது! 'என் இத்தனை மனச் சுழற்சிக்கும் நடுவே சுழலாத மையமாக ஆத்மா இருந்து கொண்டேதான் இருக்கிறது. உடம்பு கர்மத்தி லிருந்தாலும், மனம் பக்தியில் இருந்தாலும் அப்போதும் அந்த மைய ஆத்மா அவற்றினால் பாதிக்கப்படாமல்தான் இருக்கிறது. இவை அதை எங்கேயோ இழுத்துப் போவதாகத் தெரிந்தாலும், அதற்கு எந்த அசைவும் இல்லை; அதை அசைக்கவே முடியாது. நான் வெளி விட்டத்திலுள்ள மனமாகவே என்னை நினைக்கும் வரை சுழற்சியில் அகப்படத்தான் வேண்டும். மனம் கர்மத்தில், பக்தியில் ஒட்டும். அது பூர்வ வினைத் தண்டவாளத்தில்

Koviloor Digital Library

டெர்மினஸ் வரும் வரை ஓடத்தான் வேண்டும். ஆனால் ஓடும் போதே, வெளி விளிம்போடேயே ஸதா என்னை இணைத்துக் கொண்டு அவதிப்படாமல், உள் மையத்தை நினைப்பூட்டிக் கொண்டே யிருப்பேனாக. மையத்தின் அமைதியில் அத்வைதமாக இருப்பேனாக. ஆம், நான் வெள்ளித் திரை. என்மீது டெக்னி கலர் ஸினிமாவாக வெளி உலகக் காரியமெல்லாம் ஓடட்டுமே! இதனால் வெள்ளித் திரையின் வர்ணம் மெய்யாலும் மாறிவிடுமா என்ன?'

இதெல்லாம் பிரபுதாஸியின் அழகுக் கற்பனையாக மட்டும் இருக்கவில்லை. உள்ளுக்குள் தன்னை சக்கர மையமாக உணர்ந்தார். வெளியே சுழற்சிகள் இருக்கத்தான் செய்தன; ஆனால், அதனால் அயர்ச்சி அடையவில்லை இந்த மையம். வெள்ளித்திரையாகவே தன்னை உணர்ந்தார். பல வர்ணங்கள் அதன்மீதே ஓடின. ஆனாலும் வர்ணம் மாற முடியா வெண்மையே, மோனமே, சாந்தியே "நான்" என உணர்ந்தார். மையத்திலிருந்து விலகுகிற போது கடமை நடக்கட்டும், பக்தி நடக்கட்டும் என்று நிம்மதி யாய், நிதானமாய் இருக்கலானார்!

பாபாவின் அருட்சக்தியாலேயே தமக்கு இந்த அதீதத் தெளிவு பிறந்ததாகக் கட்டுரை எழுதியிருக்கிறார் பிரபுதாஸி.

ரயிலை வைத்து பாபாவே புகன்ற ஞானமணி வாசகம் ஒன்றை இங்கு பார்ப்போம் :

"நீ அமர்ந்திருக்கும் ரயில் நின்றுகொண்டே யிருக்கும். இதற்கு இணையாகச் செல்லும் இருப்புப் பாதையில் இன்னொரு ரயில் சென்றால், நீ அதை ஜன்னலுக்கு வெளியாகப் பார்க்கும் போது உன் ரயிலே போவது போலிருக்கும். ஜன்னலுக்குள்ளாகப் பார்த்தால்தான் உன் ரயில் நிற்பது தெரியும். அப்படித்தான் மனசு வெளியே எட்டிப் பார்த்தால் எல்லாம் ஓட்டமாக, சலனமாக, கொந்தளிப்பாகத் தெரிகிறது. அது மாயையின் ஓட்டம். ஆனால் ஆத்மா ஓடவில்லை. இருந்த இடத்திலேயே இருக்கிறது. நீ அதில்தான் உட்கார்ந்திருக்கிறாய். வெளியே போன மனசை உள்ளே திருப்பிப் பார். சலனமற்ற சாந்தத்தில் நீ இருப்பதை உணர்வாய்."

(நூலாசிரியரே ஒரு முறை பர்த்தி சென்று திரும்பிச் சுமார் நாலு நாட்கள் அத்வைத இழையை உள்ளூற அநுபவித்துக் கொண்டிருந்த சொந்த "ஸாக்ஷியத்தை" இங்கே மீண்டும் குறிப்பிடலாம்.)

* * *

முன்பு ரமணரின் பரம சிஷ்யரான அம்ருதாநந்த ஸ்வாமிக்கு பாபா விநாயகராகத் தோன்றியதைப் பார்த்தோம். ரமணரை விடாயினும் அவர் பக்தி மார்க்கத்தில் பற்றுக்கொண்டிருந் தவர். ஞான மார்க்கத்தில் ஆத்ம விசாரம் செய்த இன்னொரு

Koviloor Digital Library

ரமண ரிஷியர் அபேதாநந்த ஸ்வாமி. நிச்சயமாகப் பல படிகள் முன்னேறிய ஸாதகர். முற்றிய முமுக்ஷு எனச் சொல்லத்தக்க பெரியவர். "கைக்கோ" என்று ஒருகாலும் தள்ள முடியாதவர்.

இவரது எழுபத்தைந்தாவது வயதில் ஒரு மார்கழி மாத அதிகாலையில் நடக்கு இந்தனை பிராயமாகி இவ்வளவு அப்யஸித்தும் ஆத்மாவில் ஸ்திதப் பிரக்ஞனாக நிற்க முடியவில்லையே என்ற விசாரத்தில் ஆழ்ந்து கொண்டிருந்தார். ஆத்ம விசாரம் போய் துக்க விசாரமாக இருந்தது!

இக்காலத்தில் துர்பலமாகிவிட்ட ஒரு முமுக்ஷு மெய்யாலும் தவித்துவிட்டார் என்றுதான் ஞானப் பிரதீபிகையான ஸ்வாமியின் அருள் அந்த பிரசன்னமாகிவிடுமே! ஆனால் பிரசன்னமாக (மனதாக) அது மெத்தென்று வரவில்லை!

துக்கித்திருந்த அபேதாநந்தரின் தலையில் பட்ர் என ஓர் அடி விழுந்தது. அவர் எழுந்திருந்து விளக்கைப் போட்டார். தகதகாமயமாக ரமண மஹர்ஷிகள் எதிரே நின்றார். உடன் அவரே ஸத்ய ஸாயி பாபாவாக மாறினார். இல்லை, ரமண மஹர்ஷிகள், ஸத்ய ஸாயி இருவருமே அருகருகே நின்றனர். பிறகு இரண்டு உருவமும் ஒன்றுசேர்ந்து, ஆதியில் அடிமுடி காணா அண்ணாமலை அக்னி ஸ்தம்பமாக நின்றது போலவே இன்றும் ஜோதிஸ்தம்பமாக ஆயிற்று. பல விநாடிகள் இந்த அற்புத ஒளித் தூணைக் கண்ணாரக் கண்டார் அபேதாநந்தர். அதிலே பேரானந்தப் பரிசுத்தம் கவிழ்ந்தது. ஆம், சிறிது நேரம் ஆனந்தாதீதமான அத்வைதமே அவருக்கு ஸித்தித்தது.

காட்சி மறைந்தது. குரல் கேட்டது. (அப்போது அது யார் குரல் என்று அபேதாநந்தருக்குத் தெரியவில்லை. பிற்பாடு பர்த்திநாதனை நேரில் அடைந்த பின்தான் இவரது சாரீரமே அன்று கேட்டது என்று நினைவுகொண்டார்). பாபா அசரீரியாகத் தெளிவாகவே கூறினார்: "கலக்கமடையாதே. சித்தத்தைச் சிதறவிடாதே. தியானம் என்பதாக ஒன்றையே பற்றி விருப்பமாகக்கூடச் செய்யாதே. **வெறுமே கவனித்துக் கொண்டு மட்டும் இரு.** சிந்தனை ஓடிவருவதைக்கூடச் சட்டென்று விலகி நின்று கவனிப்பவனாக ஆகு. எவன் இப்படிப் பட்டுக்கொள்ளாமல் ஸாக்ஷி மாத்திரமாகக் கவனிக்க மட்டும் செய்கிறானோ அவனே முற்றுணர்வு வாய்ந்த சுத்த சைதன்யம். பூரண அறிவாக விழித்திருக்கும் அதுவே ஆத்மன், அதுவே ஸத்–சித்–ஆனந்தம். அதுவே பேதமற்ற அத்வைத சாந்தம். அபேதாநந்தா, நீ அதுவேதான். தத்–த்வமஸி! நீ தீவிரமாகத் தேடுவது இதைத்தான். தேடாதே! தேடுபவனைக் கவனி. ஆம், இதிலே உறுதியாய் இரு. துக்கிக்காதே. நீயே ஆனந்தம்தான். சற்று முன் உன் உணர்வால் இந்தப் பேரானந்தத்தைத்தான் அறிந்து கொண்டாய். இந்த ரகசியத்தை உனக்கு வெளிப்படுத்தவே அந்த அடி கொடுத்தேன். வெறுமே கவனி. Watch."

'வாட்ச்' என்று எல்லோருக்குமே, அந்த வார்த்தையில் உள்ள ஐந்து எழுத்துக்களை வைத்து பாபா உபதேசிப்பார்.

Koviloor Digital Library

W–Word (சொல்), A–Action (செயல்), T–Thought (சிந்தனை), C–Character (நடக்கை), H–Heart (இதயம்)— இந்த ஐந்தையும் எப்போதும் 'வாட்ச்' பண்ணச் சொல்வார். ஆனால் அபேதாநந்தருக்கு மெய்யாலுமே அபேத (அத்வைத) ஆனந்தத்தைத் தருவதற்காக அவர், 'இதைக் கவனி, அதைக் கவனி' என்னுமல் எல்லாவற்றிலிருந்தும் ஒதுங்கி, வெறுமே கவனித்து, அப்புறம் அந்த கவனத்தையுமே கவனிக்கும்படிச் சொன்னதுதான் ஞான யோகத்தின் சிகரம் என்று அம் மார்க்கத்தில் சென்ற எவரும் அங்கீகரிப்பார்கள்.

அபேதாநந்தர் போன்றதொரு சிறந்த சாதகர் ''பிரணவமே எனக்கு பாபாவின் தலைசிறந்த ஓவியம்'' என்கிறார் எனில், நம் ஸ்வாமியை 'ஞான ஸாயி' என்று தயங்காமல் கூறலாந்தான்.

* * *

ஞான-பக்தி அநுபவம் ஒன்றைப் பார்க்கலாம் :

ஹில்டா சார்ல்டன், பாபாவுடனேயே இரண்டறக் கலப்பதற்கு வழி கேட்ட தம் மாணவர் ஒருவருக்கு இவ்விதம் எழுதினார்: ''அவரை விடாமல் நேசி. அவரே ஸர்வப் பிரபஞ்சமும் என்று பாவனை செய். அவரது கேசமே ஆகாசம்; அவரது சரீரம் சராசரம்; அதிலே நாம் அனைவரும் ஒவ்வோர் அணு. அவர் கடவுள். கடவுள் ஒவ்வொருவரிலும், ஒவ்வொன்றிலும் இருக்கிறார். அதனால் பாபாவை நேசிப்பது என்றால் நாம் ஒவ்வொருவரிடமும், ஒவ்வொன்றிடமும் அன்பில் ஒன்ற வேண்டும். இப்படிச் செய்தால் அவரோடு ஒன்றாகிவிடுவோம்.''

மாணவரும் இவ்வழியை சில மாதங்கள் விடாமல் பயின்றார். மிகக் கஷ்டமான காரியம்தான். எதனிடமும், எவரிடமும் வெறுப்பு, கோபம் வராமல் மாதக் கணக்கில் இருக்க முயல்வதும் பயில்வதும் சாமான்யமா என்ன? பார்த்திநாதன் அருள்கூர்ந்தார். அம் மாணவர் சொல்வதைக் கேளுங்கள் : ''மரங்களோடும், இலைகளோடும், மண்ணோடும் மகிழ்ந்து பேச வேண்டும் போலிருக்கிறது; ஏனெனில் அவரை இவை ஒவ்வொன்றிலும் உணர்கிறேன்.'' தன்னையும் அவராகவே பார்த்துக்கொண்டு விட்டால் அப்புறம் இந்தப் பேச்சுக்கும் இடமில்லை. ஞான வரம்பாம் மோனம்தான்! அதற்கு வெகு நெருக்கமாகக் கொண்டு தள்ளியிருக்கிறார் பாபா.

ஹில்டாவின் இன்னொரு மாணவருக்குக் கிடைத்த அநுபவத்தைப் பாருங்கள் : ''குருநாதன் (பாபா) என்னை நெருங்கி வந்துவிட்டார் என்று நான் உணர்வதன் முன்பே, அவர் சடக்கென்று என் இரு புருவங்களின் மத்தியில் சிவனின் மூன்றாவது கண் என்பார்களே—அந்த இடத்தில் ஒரு கிள்ளுக் கிள்ளினார். உடனே மோக்ஷானந்தம் என்பதற்கு வெகு அண்மையை அநுபவித்துவிட்டேன்! சொல்லி முடியாத பரவச எழுச்சி! ஐந்து மணி நேரம் அந்த உன்னத உணர்விலேயே இருந்தேன்.''

Koviloor Digital Library

புருவ மத்தியில் உள்ள ஆக்ஞா சக்கரத்தை உசுப்பி, சிற்றறிவு பேரறிவில் கலக்கிற மடைகாலை வெட்டிவிட்டிருக்கிறார் பாபா, எத்தனை அநாயாஸமாக!

பக்தியாயினும் சரி, யோகமாயினும் சரி, அதன் உச்ச கட்டத்தில் அத்வைத ஸமாதி ஸித்திக்கத்தான் செய்யும். ஆக்ஞா சக்கரத்தைத் தாண்டி இங்கு யோக மார்க்கமாகச் செய்த அருள். இதன் முன் இன்னொரு பக்தி ஸாதகருக்குப் பார்ப்பதெல்லாம் பாபா என்று அத்வைதியமாக உணர்த்துவித்தது — இவை இரண்டும் இந்த உண்மையை நம் ஐயன் விளக்கியதே யாகும். பேச்சு விளக்கமல்ல; அநுபவ விளக்கம்!

* * *

பக்தியையே பாபா பெரும்பாலோருக்கு விதித்தாலும், உண்மையில் பக்தி என்பதே அத்வைதம்தான் என்று அவ் வார்த்தையைக் காட்டியே விளக்குவார் நம் ஸ்வாமி. 'பக்திக்கு எதிர்ப்பதம் விபக்தி. விபக்தி என்றால் வேற்றுமை என்று அர்த்தம். வேறு வேறு உள்ளது என்ற வேற்றுமைதான் த்வைதம். வேற்றுமை போய் ஒன்றுவதுதான் அத்வைதம். எனவே விபக்திக்கு எதிரான பக்தி என்றாலே அத்வைதம்தான்' என்பார்.

பக்தி என்பதற்கு பாபா கூறும் லக்ஷணமே ஞானமயமாகத் தான் இருக்கிறது. "இன்ப துன்பங்களையும், லாப நஷ்டங்களையும் சமசித்தத்தோடு ஏற்பதற்கே நான் பக்தி எனப் பெயர் கொடுக்கிறேன்" என்கிறார்.

* * *

'ஸநாதன ஸாரதி'யில் பாபா தொடர் கட்டுரைகளாக எழுதிப் பின்னர் பல மொழிகளில் புஸ்தகங்களாக வந்துள்ள 'உபநிஷத் வாஹினி', 'ஞான வாஹினி', 'தியான வாஹினி' ஆகியவற்றிலும், பக்தரிடம் பிரத்யேகமாகப் பேசுகையிலும், பொதுக்கூட்டங்களில் ஆற்றும் உரைகளிலும் ஞானச் சுடர் வாசகங்கள் பொறி பறக்கும்.

பல பாமர மக்கள் கூட்டத்திலும் அத்வைதத்தையே முடிந்த முடிபாக எடுத்துச்சொல்லும் ஆசாரிய சிகாமணி நம் ஸ்வாமியே. "அது அவர்கள் அறிவுக்கு எட்டட்டும், எட்டாமல் போகட்டும். அவர்களது யதார்த்த நிலைக்கு ஏற்றதாகத் தான் பக்தி, பஜனை, சேவை, கடமை இவற்றைச் சொல்கிறேன். இருந்தாலும் சாச்வத ஸத்ய நிலை அத்வைதமே. ஆதலால் அதை என்றும் கட்டிக்காட்டாமலிருக்க இயலாது" என்று கூறியுள்ளார். "உள்ளபடி தத்வ விசாரம் செய்தால் எவரும் அத்வைதத்திலிருந்து தப்ப முடியாது" என்கிறார்.

ஞான மார்க்கத்தின் தனியொரு தலைமை குருவான ரமண பகவான் "நான் யார்?" என்ற விசாரத்தையே அடித்து

Koviloor Digital Library

வலியுறுத்துவார். பாபாவும் பரம லௌகிகர்கள் நிறைந்த கூட்டங்களிலும் ''ஸோஹம்—ஸோஹம்'' (நான் யார்?-பரமாத்மாவே நான்) விஷயத்தை விவரிக்காமலிருக்க மாட்டார். உபநிஷத ரிஷிகளுக்கும், ஆதி சங்கரருக்கும், ரமணருக்கும் நிகராக ஐயன் மொழியும் பரஞான வாசகங்கள் சிலவற்றை இவ்வதிகாரத்தில் காணலாம்:

''சங்கராசாரியரின் அத்வைத ஸித்தாந்தம் தான் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் யாவற்றையும் ஒருங்கிணைக்கிறது; அது தான் அறிவின் மிக உயர்ந்த முடிபுகளைத் திருப்திப்படுத்துவது. பொருள்—சக்தி (matter-energy) இவற்றின் ஐக்கியத்தையும், காலம்—இடம் (time-space) இவற்றின் சார்பையும் விளக்குவது அத்வைதமே. ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றே—அத்வைதமே—என்பதுதான் பரம ஸத்தியம். இந்த ஸத்தியத்தை ஸாக்ஷாத்கரிப்பதற்காக ஞான மார்க்கத்தை ஸ்தாபித்த சங்கரரே யோகம், பக்தி, கர்மம் ஆகிய மார்க்கங்களுக்கும் உரிய விதிகளை உபதேசித்தார். ஏனெனில் இவற்றால் உணர்ச்சிகளையும், மனத்தையும், அறிவையும் சுத்தப்படுத்திக் கொண்ட பின்தான் பரமஸத்தியமான அத்வைத அநுபவம் பிரகாசிக்கும்.''

''மற்ற விஷயங்களை அறியுமுன் தன்னையே ஒருவன் அறிய வேண்டும். நிஜமான 'தான்' யார் என்று தெரிந்துகொண்டால் தான் மற்ற விஷயங்களையும் உள்ளபடி அறிய முடியும். தன்னையே தெரிந்துகொள்ளாதவன் கடவுளைப் பற்றியோ, ஸாயி பாபா பற்றியோ என்ன தெரிந்து கொள்ள முடியும்? தன்னைத் தெரிந்து கொண்டுவிட்டால் பிறகு என்னையும் தெரிந்துகொள்ளலாம். அதுவரை என்னைப் பற்றிச் செய்கிற ஆராய்ச்சி, அநுமானம் எதுவும் சரியில்லைதான். தன்னையறிந்தால் அதைத் தவிர எதுவும் வேறில்லை, ஸாயி பாபாவும் வேறில்லை என்று அநுபவத்தில் தெரியும். நான் என்னைக் கடவுள் என்று சொல்லிக் கொள்வதில் ஒருவர் அதிர்ச்சி தெரிவித்தார். நான் அவரிடம், 'அப்பா! 'நான் கடவுள்' என்று மட்டும் நான் சொல்லவில்லை. நீயும் கடவுள்தான் என்கிறேன். எல்லாருமே கடவுள்தான் என்கிறேன். வித்தியாசம் என்னவெனில் நான் இதை அநுபவத்தில் தெரிந்து கொண்டிருக்கிறேன்; மற்றவர்கள் தெரிந்துகொள்ளவில்லை' என்றேன்.''

''இயற்கை மனோ வேகங்களை 'ஸைகாலஜி' என்று சொல்லி, இயற்கையான தேக நிலையை 'ஃபிஸியாலஜி' என்று சொல்லி, இவை இரண்டாலுமே இப்போது மனிதனின் உண்மையை அறிய ஆராய்ச்சி நடக்கிறது. இது அடியோடு தவறு. இயற்கை என்ற பிரக்ருதி, ஆத்மாவான நிஜ ஜீவனின் மாயா விலாஸ விளைவுதான். இந்த விளைவால் இதன் மூலகாரணத்தை அளப்பது அஸம்பாவிதம். இயற்கையைப் பற்றி எவ்வளவு ஆழமான அறிவு ஏற்பட்டாலுங்கூட, அந்த ஆழத்திலிருந்து ஆத்மாவை அறிய நினைக்காதே; மாறாக ஆத்மாவின் உச்சியிலிருந்துகொண்டே இயற்கை இன்னதென்று அறிவாயாக.''

''பந்தம் போகவேண்டும் என்று தவிக்கவே வேண்டாம். வாஸ்தவத்தில் பந்தமே இல்லை. ஆத்மா இன்றே, இப்போதே சுதந்திரமாகத்தான் இருக்கிறது. மனந்தான் பந்தப்படுத்துவது. மனத்தை 'நான்' என்று தவறாக எண்ணுவதால் தனக்குப் பந்தம் இருப்பதாகக் கலக்கம் ஏற்படுகிறது. மனம் நானில்லை என்று புரிந்துகொண்டு அதற்கு மேல் எழும்பி, ஆத்மாவில் நிலைத்தால் என்றும் பந்தமில்லை; எப்போதுமே மோக்ஷம்தான்!

'' 'நாகு மோக்ஷம் காவாலி—எனக்கு மோக்ஷம் வேண்டும்' என்று கேட்கிறார்கள். முதலில் சொன்ன 'நாகு'—நான் என்கிற அஹங்கார முனைப்பு—போகவேண்டும். முடிவில் வரும் 'காவாலி'—'வேண்டும்' என்கிற ஆசையும் போகவேண்டும். அஹங்காரமும் ஆசையும் போய்விட்டால் 'மோக்ஷம்' நடுவில் தானே விளக்கமுற்று நிற்கிறது! இப்போதே இருப்பதுதான் அது. பார்ஸலின் மேல் காகிதத்தை முன்னும் பின்னும் கிழித்து விட்டால் வஸ்து மட்டும் கையில் வருவது போல, 'நாகு மோக்ஷம் காவாலி'யில், நாகு, காவாலி இரண்டையும் கிழித்துவிட்டால் மோக்ஷம் கைவசமே யிருக்கிறது!''

''மனம் இல்லாமலாகிவிட்டால் அங்கே பரம்பொருள் 'ஆட்டோமாடிக்'காக இருக்கிறது. அதைப் புதிதாக வரவழைப்பதற்காக எந்தப் பாடும் படவேண்டியதில்லை.''

''மனம் என்றால் என்ன? ஆசைகளைத் தவிர மனம் என்று ஒன்றே இல்லை. ஒரு துணியிலிருந்து இழை இழையாக எடுத்துக்கொண்டே போனால், கடைசியில் என்ன மிஞ்சும்? எதுவுமே இல்லாமற் போய்விடுகிறது அல்லவா? இப்படியே ஒவ்வொரு இச்சையாக உருவி உருவி எடுத்துக்கொண்டேயிருந்தால் மனம் என்றே ஒன்று இராது. ஆத்ம ஆகாசம் மட்டுமே நிற்கும்.''

''நல்லவராக இருக்க வேண்டும், எல்லாவற்றையும் நல்லதாகப் பார்க்க வேண்டும், நல்லதையே செய்ய வேண்டும். எல்லாவற்றையும்விட உயர் நலம் பூரண வஸ்துவில் நிலைத்திருப்பது தான். இது உங்களுக்கு மோக்ஷம் தருவது மட்டுமின்றி, இதுவே சமூகத்துக்கு நீங்கள் செய்யக்கூடிய மிகப் பெரிய நலமுமாகும்.'' (ஞானியினால் சமூகத்துக்கு என்ன பயன் என்று ரமண மஹர்ஷியிடம் கேட்டவரிடம் அவர் கூறிய அதே பதிலை ஸ்வாமியும் இங்கு சொல்கிறார். இதே ரீதியில் இன்னும் ஒன்று. ஆம், சேவையையும் பிரேமையையும் வெகுவாக வலியுறுத்தும் ஸ்வாமியேதான் அவற்றின் எல்லை நியமான ஞான உச்சியிலிருந்து நவில்கிறார் :)

''முதலில் தன்னைக் கவனித்துக் கொள். பிறகு பரோபகாரத்துக்குப் போகலாம். பிறருக்கு நல்லது செய்யப் போகுமுன் நீ யார் என்று முதலில் கண்டுபிடித்துக் கொள். பிறகுதான் உன்னால் உண்மையான பரோபகாரம் செய்யமுடியும்.''

''தன்னை — ஆத்மனை — அறிந்தபின் வெளியுலகில் புகு. அப்போது அந்த வெளியுலகமும் ஆத்மனின் லீலையே எனக் காண்பாய்.''

Koviloor Digital Library

(பேசுவது பாபாவா, ரமணரா என வியக்க வைக்கும் இன்னொன்று:) ''சரணாகதி சரணாகதி என்று பெரிதாகச் சொல்லும்போது ஜீவனுக்கு அந்நியனான பகவானுக்கு ஜீவன் அர்ப்பணமாவதாக நினைப்பது அடியோடு தவறு. கீழான 'நான்' உண்மையான 'நானி'டம் அற்றுப்போவதுதான் நிஜ சரணாகதி. ஆத்மா ஒன்றே உள்ளது என்ற ஞானம்தான் உண்மையான சரணாகதி.''

''விட்டு விலகு. விடுவதுதான் உன் முதற் கடமை. திட்டம் போடுவதை விடு. மிக நல்ல உத்தேசத்தோடு திட்டம் போடுவதைக்கூட விடு. நீ போற்றிப் பேணும் அத்தனை ஸித்தாந்தங்களையும் விடு. பிரியமாகப் பிடித்திருக்கும் கொள்கைகளையெல்லாம் விடு. மூளையில் நிரப்பிக் கொண்டிருக்கும் அறிவுச் சேகரிப்புக்களை விடு. பிடித்தவை, பிடிக்காதவை என்ற கருத்துக்களை விடு. புகழ், செல்வம், புலமை, மேன்மை இவற்றின் தேட்டத்தை விடு. இவை எல்லாமே வெளி சமாசாரங்கள் தாம். முதலில் ஆத்மாவை ஸாக்ஷாத்கரிப்பாய். பிறகு வெளி உலகில் நுழை. அப்போதுதான் எல்லாவற்றையும் அந்த ஆத்மனின் லீலையாகக் கண்டு மகிழ்வாய்.''

''உலகில் உள்ள துக்கத்தைப் போக்கிக்கொள்ள விரும்பாதே. மாறாக, உலகிலிருந்து துக்கத்தைத் தவிர வேறேதும் எதிர்பாராதே. ஜீவாத்மா என்று நீ குறுகிய எல்லை போட்டுக் கொண்டபோதே, இந்தத் துக்கத்தை சங்கல் பித்துக் கொடுத்து விட்டேன் — அதன்மூலம் உன்னை என்னிடம் இழுத்துக் கொள்ளத்தான்!''

''அந்தந்த நொடியையும் வரவேற்று வாழ்வாயாக. அதற்கு முன் நொடியைப் பற்றிய சிந்தனை, அடுத்த நொடியைப் பற்றிய கவலை வேண்டாம். நினைப்பு, தீர்மானங்கள் இவற்றின் சுமையில்லாமல் ஒவ்வொரு நொடியிலும் புதிதாக வாழ். 'முடிவானவை' என்று தீர்மானங்களைச் செய்வது உன்னைக் கட்டிப் போட்டு மனத்தை நெரிப்பதாகும். தீர்மானத்துக்கு வராமல் இருக்கும் தீரத்தைக் கைக்கொள்க. மனம் நிலையே யில்லாமல் தடுமாறுகிறதா? தடுமாறட்டும்! அதை ஈச்வர லீலையாகப் பார்க்க ஆரம்பி. அப்புறம் தடுமாற்றம் உள்ளதா பார்ப்போம்.'' (ஜே. கிருஷ்ணமூர்த்தியாக ஆரம்பித்து, சமய சம்பிரதாய வழிக்குத் திரும்பி விடுகிறார்!)

''நாம் குறைபாடுள்ளவராக உள்ளோமே என்று விசனப் படாதே; இதற்காக என்னிடம் வரத் தயங்காதே. அத்தனை குறைபாடுகளையும் என்னிடம் திறந்து காட்டிக் கொண்டுவா. அவற்றைப் பார்த்து நான் 'ஷாக்' அடைந்து பின்வாங்க மாட்டேன். உனக்கு வேண்டுமாயின் அவற்றைத் தகர்த்துக் கொண்டு என்னிடம் சேரச் சக்தியில்லாதிருக்கலாம். ஆனால் எனக்கு அவை தடை யில்லை. அவற்றையும் தகர்த்துக்கொண்டு உன்னிடம் வருவேன். பிறகு 'நான், உன்' என்பதெல்லாமே ஏது? எல்லாம் ஒன்றாகிவிடும்.''

Koviloor Digital Library

''சித்தத்தில் அமைதி இல்லை என்று கலங்குகிறாய். உன்னுடைய அந்த அமைதியின்மையால் தவறில்லை. அமைதியின்மை தான் சித்தத்தின் இயல்பு! அதைப் பற்றிக் கலங்குவதுதான் தவறு. கலங்காமல் அதைக் கவனி. அமைதியின்மை இப்போது இருக்கிறதா?''

''விட்டை விட்டு ஓடிப் பயனில்லை. மனத்துக்கு வீடாக ஒரு கொள்கையில் பிடிப்புக் கொண்டுவிடாமல், அது எங்கே வேண்டுமானாலும் ஓடட்டும் என்று விடு. ஓட்டத்தைக் கவனிக்க ஆரம்பி. எல்லாம் நின்று போகும்; ஸ்திதப் பிரக்ஞனாவாய். அப்படியின்றி, மனத்தை இங்கேதான் போகலாம், அங்கே போகக் கூடாது என்றால் அது திமிறும்; குறுகிப் போகும். 'வேண்டும், வேண்டாம்' என்னும்போது நீ வேண்டுவதன்மீது சார்ந்து நிற்கிறாய்; வேண்டாதவற்றை ஒதுக்கி வைக்கிறாய். ஒதுக்கி வைத்தது உன் மேல் வந்து விழுந்து, சுமையாக நெரிக்கிறது. வேண்டாதது என்று எதுவுமே இன்றி நீ பரிபூரண விசாலமாகி விட்டால் எது எதன்மீது விழுந்து நெரிக்க முடியும்?''

''இப்போது மனிதன் தூக்கத்திலேயே பரம சாந்தி காண்கிறான். ஆனால் தூங்குவதால், பரம சாந்தியில் இருக்கிறோம் என்ற ஞானம் அவனுக்கில்லை. விஷயங்களை அறிகிற ஞானமுள்ள விழிப்பு நிலையிலோ அசாந்தி மயமாகவே இருக்கிறான். ஒரே சமயத்தில் சாந்திமயமாகவும், அறிவு விழிப்புடனும் இருப்பது தான் ஆத்மானந்த நிலை. தூக்கத்தில் தோய்கிற சமயத்தில் எது தூங்குகிறது என்றும், தூக்கத்திலிருந்து விழிப்புறும்போது எது விழித்துக் கொள்கிறது என்றும் உன்னிப்பாக, உஷாராக கவனிக்கப் பழகி வந்தால், சாந்தமும் ஞானமும் ஒன்றிய ஆத்மாநுபவம் காலக் கிரமத்தில் ஸித்திக்கும். உறக்கத்துக்கும் விழிப்புக்கும் இடையுள்ள அந்த நுண்ணிய இடைவெளியைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ள அப்பியாஸிப்பாயாக.''

''மன ஓட்டப் புயலை விட்டு, புயற் கருவான அமைதி ஆத்மனைப் பற்று'' என்றார் பாபா 'நியூயார்க்க'ரிடம்.

''ஐயோ, ஆத்மஸாதனை எனும்போது தாங்கள் இல்லையே ஸ்வாமி! பக்தியில்தானே இருக்கிறீர்கள்?'' என்றார் நியூயார்க்கர்.

''அசடே!'' என்றார் ஸ்வாமி. ''அசடே! உங்கள் மனத்துக்கு உவப்பாக, பிடிப்பாக ஆகவேண்டும் என்பதற்குத் தான் எனக்கு இந்த ஸாயிரூபம் வாய்த்திருக்கிறது. இதனிடம் நீ பக்தி செய்கிறாய். ஆனால், இதோடு நான் முடிந்து விட்டேனா? எனக்கு உருவும் பெயருமற்ற அகண்ட நிலையே முழு இயல்பு. அதன் ஓர் அற்ப அம்சம்தான், பின்னம்தான் இந்த ஸாயி ரூபம். நீ என்னைப் பக்தி செய்யாவிட்டால் எனக்கு ஏதாவது குறையா, நஷ்டமா? அல்லது உனக்குத்தான் நஷ்டமா? அத்வைதமாகிவிட்டால் நான் இல்லை என்று நீ நினைப்பதே தப்பு. நானேதான் அந்த அத்விதீயம். அங்கே நீதான் இல்லை'' என்றார்.

Koviloor Digital Library

''என்னை உனக்கு வெளியில் தெய்வமாக நீ தரிசிப்பது கூடப் பரிபூரணமில்லைதான். அதுவும் போதாது. அது இப்படி அபூர்ணமாக இருக்க வேண்டுமென்பதே என் திட்டம்தான். ஏனெனில் இதுவும் போதாது என்ற குறையிருந்தால்தான் நீ 'உள்-தரிசனம்' என்ற பூரணத்தைப் பெற வேட்கைக் கொள்வாய். என் வெளிதரிசனம் ஒருகாலும் நிரந்தரமல்ல. ரூபமும் நாமமும் இல்லாத உள்-தரிசனம்தான் நிரந்தரமானது.''

வாஸ்தவம். ஆத்மானந்தம் ஒன்றே மாறுமல் நிலைத்த பேரின்பம். ஆனால் தனக்கு லீலானந்தம் வேண்டும் என்பதற்காக இந்த பேதப்பிரபஞ்சத்தைப் புனைந்துவிட்ட பராசக்தி நம்மில் யாரோ ஒருவரைத்தான் லீலைக்கும் அப்பால் உள்ள இந்த நிலைக்குக் கொண்டு சேர்ப்பள். நம்மில் 99.99......சதம் லீலானந்தத்திலேயே பொம்மைகளாக ஆடு வதில் திருப்திபெற வேண்டியதுதான். ஆனால் இங்கும்கூட அத்வைத ஞான நினைப்பை மட்டும் நாம் இழையோடச் செய்யலாம். அந்த நினைப்பு அநுபவமாவது? பெரிய கேள்வி தான். ஆனால் இதை நினைத்து விசாரப்பட வேண்டாம். ஞான ஸாயி பிரேம ஸாயியாகவும் இருக்கிறார்! அந்தப் பிரேமையைவிடச் சிறந்த லீலை இல்லை. தித்திக்கும் இந்தப் பிரேமை நமக்குப் போதுமே! அந்தப் பிரேமிக்குத் தெரியாதா நம்மை எப்போது ஞானத்தில் சேர்ப்பதென்று?

ஞானத்துக்கு ஆர்வ வெறி கொண்டிருந்த பிரபுதாஸரை நம் ஞான ஸாயியே தாற்காலிகமாகப் பிரேமையில்தானே விட்டு வைத்தார்? ஆத்மா இதோ இங்கேயே இந்த விநாடியே உள்ளது என்பது வாஸ்தவமே. ஆனாலும் அதை அநுபவிக்க முடியாதபடி பூர்வ கர்மாவும், அதன் வாஸனைகளும் குறுக்கே நிற்கின்றனவே! இந்தக் குறுக்குச் சுவரைத் தகர்க்க பக்தியும், கர்மமும்தான் வழி. இவற்றால் சிறுகச் சிறுகத்தான் பூர்வ கர்மாவும், அவற்றின் வாஸனையும் தேயும். அதுவரை பொறுமையுடன்தான் காத்திருக்க வேண்டும். 'பிஞ்சில் கசந்து, வடுவில் துவர்த்து, காயில் புளித்துக் காலக் கிரமத்தில்தான் கனி யாக இனிக்க முடியும். பிஞ்சாகவும் வடுவாகவும் இருக்கும் போதே பொறுமை இழந்து, காலந்தப்பிப் பழுக்க முயன்றால் வெம்பி விழ வேண்டியதுதான்' என்று காஞ்சிப் பெரியவாள் உபதேசிப்பது வழக்கம். இதையே பாபாவும் வேறு விதத்தில் சொல்வதைக் கேட்போம் : ''நீரில் மட்டுமே வாழும் மீன் பிறகுதான் தரை, நீர் இரண்டிலும் வாழக்கூடிய தவளை போன்ற ஆம்ஃபிபியனாயிற்று. இந்தப் பரிணாமத்துக்கு நீண்ட காலம் தேவையாயிருந்தது. அவசரப்பட்டுத் தரைக்கு வந்திருந்தால் உடனே இறந்திருக்க வேண்டியதுதான். இப்படியே ஆத்மிக பரிணாமத்துக்கும் உரிய காலம் பொறுத்திராமல் அவசரப்பட்டால், ஆத்ம ஹானியே உண்டாகும். படிப்படியாகத்தான் பரிணமித் தாக வேண்டும்.''

''தவளைக்கு ஆரம்பத்தில் வால் இருக்கும். குஞ்சிலிருந்து அது வளர வளர வால் தானாக விழுந்துவிடும். அவசரப்பட்டு

Koviloor Digital Library

வாலே நறுக்கினால் தவளையே செத்துவிடும். இப்படித்தான் பழைய கர்ம வாஸனை காலக் கிரமத்திலேயே ஸாதனைகளால் நலிந்து விழும். பலாத்காரமாக எதுவும் செய்யாமல் இயல்பாக ஸாதனை செய்துகொண்டே போனால் தடைகள் தாமே தகரும்.''

''கடிகாரத்துக்குச் சாவி கொடுக்காமலிருந்தால் பழைய சாவி திரும்பிற மட்டும் ஓடிவிட்டு அது தானே நின்றுபோவது போல், நாம் புதிதாக ஆசைகளை ஏற்படுத்திக் கொள்ளாவிடில், பழைய ஆசை வாஸனைகள் தாமே தீர்ந்து, தன்னால் ஆத்ம ஸாக்ஷாத்காரம் ஏற்படும்.''

''நாம் ஞானம் என்கிற பெரிய பட்டணத்துக்குப் போக வேண்டும். இப்போது குக்கிராமத்தில் இருக்கிறோம். முதலில் இங்கேயிருந்து கர்மம் என்ற ஒற்றையடிப் பாதையைப் பிடித்து, அப்புறம் பக்தி என்ற கப்பி ரஸ்தாவை அடைந்து, அப்பாலே தான் பட்டணத்தில் கொண்டு சேர்க்கிற ஞானமான தார் ரோடை அடையமுடியும்.''

தற்போதைக்கு நம்மை அந்த ஒற்றையடிப் பாதையிலாவது சேர்ப்பது ஸ்வாமியின் கருணைதான். பிற்பாடும், ஒவ்வொரு நிலையிலும், நாம் எத்தனை ஸாதனை செய்தாலும் பலனைத் தந்து மேலே தூக்கிவிடப் போவது அவரது அநுக்கிரஹம்தான். கருணை, அநுக்கிரஹம், அருள், கிருபை, தயை என்றெல்லாம் சொல்லப் படுவதற்கு மூலம் பிரேமை அல்லது அன்பு. அவர் ஞான ஸாயி யாக இருப்பதுங்கூட பிரேமையால்தான். வெறும் ஞானமாக அரூபமாக இன்றி, ஞான ஸாயியாக அவதாரம் செய்திருப்பது மற்றோரை ஞானத்தில் சேர்க்கும் பிரேமையால்தானே? இந்தப் பிரேம ஸாயிதான் நமக்கு மிக மிக முக்யமானவர். இனி அந்தப் பிரேம ஸாயியை நாம் தரிசிக்கப் போக வேண்டும். அதற்கு முன் ஞான ஸாயிக்கும் பிரேம ஸாயிக்கும் இடையே வரும் **யோக ஸாயியைக் கொஞ்சம் பார்த்து விடுவோமே!**

* * *

வெளி உணர்வே இன்றி தானே தனியொன்றாய் நிற்பது ஞானம். வேறொன்றே இல்லாத அந்த நிலையில் யார் யாரிடம் பிரேமிப்பது? ஆயினும் பராசக்தியின் விநோதத்தில் பரம ஞானிகளோ தனியொன்றாகத் தம்மை உணரும் அதேபோதி லேயே பிரபஞ்சத்தை வேறாகவும் பார்ப்பதுபோல் அதனிடம் மகாப் பிரேமை பொழிகின்றனர். இன்னொரு பக்கம் பகவானை யும், உயிர்க் குலத்தையும் வேறாகவே கருதி பகவானிடம் பக்தி யும், உயிர்களிடம் கருணையும் புரியும் மாபெரும் பக்தர்கள் உள்ளூற அனைத்தும் ஒன்றே என்ற ஞானத்தில் தோய்ந்துதான் இருக்கிறார்கள்.

ஆனாலும் பொதுவாக ஞானம் என்பது உணர்வற்ற சாந்தம், பக்தி என்பது செறிந்த அன்புணர்வும் அதன் வெளிப்பாடான செயல்களும் என்றே கொள்கிறோம். யோகம் என்பது என்ன?

Koviloor Digital Library

யோக நிஷ்டையில் ஆழ்ந்து ஸமாதி உண்டாகும்போது, யோகியும் ஞானி போலவே வெளி உணர்வு முற்றும் அற்றுப் போய்ச் சாந்த பூரணமாகத்தான் இருக்கிறான். மனத்தின் மூலத்தில் ஞானி ஆழ்ந்திருக்கிறான் எனில் அதே மூலத்தை மூச்சின் மூலத்தால் அடைந்து அங்கே சொக்கியிருக்கிறான் யோகி. ஆயினும் இந்த நிஷ்டை கூடு முன்பும் சரி, இது கலந்த பின்பும் சரி, இவன் சாந்தி வெளியில் அன்றிச் சக்தி சமுத்திரத்திலேயே திளைத்திருக்கிறான். ராஜ யோகம், குண்டலினி யோகம், கிரியா யோகம் என்ற எந்தப் பெயரிட்டாலும் யோக ஸாதகன் ஒருவன் ஸமாதி லக்ஷியத்தை அடையுமுன் உலகை நடத்தும் காரிய மகா சக்தியின் அந்த ஆற்றல்களில் தோய்ந்து, அவற்றில் சில கைவரப் பெறுகிறான். ஸமாதி கலந்த பின்னும் இவர்களில் பெரும்பாலானோர் இவ்வித சக்திகளை மக்களின் நலனுக்காகப் பயன்படுத்துகிறார்கள். நிர்குணப் பிரம்மம் எனும் சாந்தத்தில் இவர்கள் கரையாமல், ஸகுணப் பிரம்மம் எனும் சக்தியில் திளைத்திருந்த போதிலும், பக்தர்களைப் போல் அச் சக்திக்கு ஒரு திவ்ய ரூபம் தந்து வழிபாடு நடத்துவதில்லை. அரூபமாகவே அச் சக்தியை உணர்ந்து, அதன் திவலைகளைத் தாமும் வெளியிடுகிறார்கள். இப்படி அரூபமாக உணர்கையிலேயே, பக்தன் பெறும் அதே மாபெரும் அன்பு எழுச்சியை அநுபவிக்கும் யோகியரும் உண்டு. அன்பு என்ற உணர்ச்சி இன்றி, எந்த உணர்ச்சியுமே இன்றி, மகா சக்தியை அநுபவிப்பதிலேயே ஆனந்தத்தைப் பெறும் யோகியரும் உண்டு. ஆனந்தம் என்றும் சொல்லத் தெரியாமல் பாழ் போலத் தோன்றும் பூரணத்தில் இவர்கள் ஒன்றி நிற்பதே உச்சமான ஸமாதி—அத்வைத அடைவு.

யோக ஸாதகர் பலருக்கு இப்படிப்பட்ட பல்வேறு அநுபவங்களை அருளியிருப்பவர் நம் பகவான். சிவபெருமானுக்கு மஹா யோகி என்றே பெயர். கண்ணனும் யோகேச்வரன் என்றே பெயர் கொண்டவன். சிவக் கண்ணனான பாபா யோகியரின் முடிமணியாக அநுபவங்களைத் தருவது பொருத்தந்தானே?

யோகத்தின் மகா நிபுணி என்று பல நாடுகளால் கொண்டாடப்பட்டவரும், நமக்கு மிகவும் பரிசயமாகிவிட்டவருமான இந்திரா தேவி போன்றவர்கள் பாபாவின் சந்நிதிக்கு வந்தாலே அவர்களுள் யோக சக்தி பேரலைகளை அடித்துக்கொண்டு, மஹாநுபவ முத்துக் குவியல்களைச் சொரிந்துவிடும்.

பாபா கோரிக்கை அறைக்கு வெளியே வந்து, இம் மூதாட்டியை முதன் முறையாகப் பேட்டிக்கு அழைத்த மாத்திரத்தில், இவருக்கு யோக ரூபமான உள்-பேட்டி கிடைத்துவிட்டது. ஆம், கடாக்ஷம் பெற்ற அக்கணமே இவருக்குப் பூமியினின்று தாம் எழும்பி, மேலே மேலே வளர்ந்து கொண்டு போவது போன்ற அநுபவம் ஏற்பட்டுவிட்டது. யோக ஸாதகருக்கு ஏற்படும் இவ்வித விசித்ர அநுபவங்களைவிட, அவற்றால் பிறக்கும் பேரானந்த ஜிலுஜிலுப்புதான் விசேஷமாகும். இப்படிப்பட்ட பேரின்பக் கிறுகிறுப்பினால் அம்மையாருக்கு எழுந்து, நடந்து, வெளிப் பேட்டிக்குச் செல்லவே முடியவில்லை. கேப்ரியாலா

Koviloor Digital Library

ப்டையர் முதலான மற்ற பக்தர்களின் தாங்கலில்தான் இந்திரா தேவி ஒருவாறு சமாளித்துக்கொண்டு நடந்து கோரிக்கை அறைக்குச் சென்றார்.

இப்படியேதான் ஒரு சிவராத்ரியின்போது ஸ்வாமி ஷிர்டி பாபாவுக்கு விபூதி அபிஷேகம் செய்ததைத் தரிசித்தவுடன் இந்திரா தேவிக்குப் பரவசம் மூண்டது. முந்தைய பரவசத்தை யும்விட இது உச்ச கட்டத்தை அடைந்து, வெளிப் பிரக்ஞையும் உடலுணர்வும் அறவே அற்றுப்போன சாந்த ஸமாதி நிலை யிலேயே கொண்டு தள்ளிவிட்டது. அம்மையார் கண்விழித்தபோது அபிஷேகம் முடிந்து, பக்தர்கள் கலைந்து, ஆடிட்டோரியமே காலியாகி இருந்தது!

இன்னொரு முறை இவ்வம்மை, யோகத்தால் பெற்ற மனோ திடம் யாவும் சிதறி, ஒரே குழப்பத்தில் ஆழ்ந்திருந்தார். அப்போது பம்பாயிலிருந்த அம்மை, தாமே இந்த ஸ்திதியில் இருக்கும்போது மற்றோருக்கு யோகத்தால் மனத்தை அடக்குவது பற்றிப் பிரசங்கமும் பயிற்சியும் தர உலக நாடுகளிலெல்லாம் பயணம் செய்வது முறைகேடான காரியம் என எண்ணித் தமது கருத்தை பாபாவுக்குக் கடிதமெழுதத் தொடங்கினார். அதை இவர் முடிக்கு முன்பே இவரது தோழியர் வந்து இவரை ஷாப்பிங்குக்கு அழைத்தனர். ஷாப்பிங் முடிந்து இவர்கள் டாக்ஸிக்காக, ஆரவாரமிக்க ஒரு சந்து முனையில் நிற்கும்போது, அந்தச் சூழலுக்குச் சற்றும் பொருந்தாத மகாநுபவம் ஒன்றை அருளிவிட்டார் ஐயன், திடும்பிரவேசமாக!

இந்திராதேவி கடிதத்தை எழுதி முடித்துத் தபாலில் சேர்த்து இரண்டு நாட்களுக்குப் பின் அது பர்த்தியில் பட்டுவாடா ஆகும் வரை ஸாயிமா காத்திருப்பாரா என்ன?

"அப்போது நடந்ததை வர்ணிக்கப் போதுமான வார்த்தை ஏதும் எனக்குத் தெரியவில்லை. நான் சொல்லக்கூடியது இதுவே: மேலே ஒரு மேகம் வெடித்தாற் போலிருந்தது. அதிலிருந்து அற்புத ஜோதியாக பிரவாக வீழ்ச்சியொன்று பொன்மாரியாக என்னுள் பாய்ந்து முழுக்கியது. அதோடு கூடவே, சொல்லி முடியாததோர் ஆனந்தம் என்னுள் இறங்கியது. அதன் பரவசத் திலே ஆனந்த பாஷ்பம் என் கன்னங்களில் தாரையிடத் தொடங்கியது" என்கிறார் அம்மையார்.

சிரத்தின் உச்சியில் ஸஹஸ்ரார கமலம் மலர்ந்து, நாடிகளில் அமிருதப் பொன் மழை பாய்ச்சுவதே இது. "ஆனந்தமா(கி)யத் தேனினைச் சொரிந்து" என்று அடிகள் கூறுவது இதைத்தான்.

இந்தக் கிறுகிறுப்பும், குறுகுறுப்பும் அருபமே ஆயினும், இதிலேயே ஸாயிநாதனின் பரிபாலிக்கும் கடாக்ஷத்தையும் நளிதளக்கும் தயை முகத்தையும் இந்திரா தேவி உணர்ந்து கொண்டார்.

தேம்பலுக்கு இடையே அவரது வாய் தானாக, "தாங்க்ஸ் பகவான். ஐ ஆம் ஸோ ஹாப்பி" என்று முணுமுணுத்தது.

Koviloor Digital Library

அவர் என்ன சொல்கிறார், செய்கிறார் என்று புரியாமல் தோழியர் வினவினாலும், விளக்கவே முடியாத கனத்த அநுபவத்தில் அம்மை வாய்மூடி நின்றார்.

பிரகாசப் பிரவாகம் மெல்ல மெல்லக் கட்டுப்பட்டு வந்தது. இப்போது ஒரு பொன் மேகத்தைத் தாம் பனிப் போர்வையாகப் போர்த்தியிருப்பது போன்ற ஹிதமான உணர்ச்சி ஏற்பட்டது.

குழப்பம் அத்தனையும் நீங்கிவிட்டது! சுற்றுப் பயணத்தைக் கான்ஸல் செய்யும் எண்ணத்தைக் கான்ஸல் செய்துவிட்டார் அம்மையார்.

அம்மையாரா செய்தார்?

பரவசம் தாற்காலிகமாயினும், அதன் பலன் நிரந்தரமாயிற்று!

சரீரப் பயிற்சிகளுக்குள்ளேயே மனோ — பாவங்களையும் பிசைந்து இந்திரா தேவி ''ஸாயி யோகம்'' என்ற ஒன்றைக் கண்டிருப்பதும் நாம் அறிந்ததுதானே?

ஸ்வாமியின் முடி உச்சியில், பிரம்மரந்திரத்துக்கு மேல் ஸ்ரீ நல்லைநாதன் பரிதியொளி கண்டது; கணேஷ்புரி யோக மார்க்கத்தைச் சேர்ந்த அமெரிக்க மாதொருத்தி தனது பிரம்மரந்திரத்தையே குண்டலினி எட்டுகையில் அங்கு பாபாவை உணர்ந்தது—ஆகிய இரு விவரங்களை ''ஸர்வ தேவ ரூபா'' என்ற அத்தியாயத்தில் கண்டோமே, இவையும் பாபாவை யோகேசுவரனாகக் காட்டுபவையே.

பாபா யோக ஸாதகர் ஒருவரைக் கழுத்தில் உள்ள விசுத்தி சக்ரத்தில் மனத்தை ஒருமுகப்படுத்தச் சொன்னார். அவர் அவ்விதமே செய்ய, அவரது உடற்பிணி தீர்ந்து, அவர் குண்டலினீ யோகத்தைச் செம்மையாக அப்பியசிக்க முடிந்தது. பாபாவாகத் தாம் பிறப்பதற்குப் பலப்பல ஆண்டுகளுக்கு முன்பு அமிருதாநந்தர் பயின்ற யோகாப்பியாசத்தில் அவருக்கு ஏற்பட்ட கோளாறுகளை அவரிடம் பாபா விவரித்து, அவற்றின் விளைவே அவரது ஆஸ்த்மா என்று கூறினார். ஹடயோகியான பிரெஞ்சுக்காரர் ஒருவரிடம், அவரது அப்பியாசத்தில் உள்ள குறைகளைப் புட்டுப் புட்டுச் சொன்ன ஸ்வாமி, அதோடு மட்டுமின்றி அவருக்கு ஸாதனையையே வெகு எளிதில் சுலபமாக்கிக் கொடுத்துத் தூக்கி விட்டதை அவர் நன்றியில் நெகிழ்ந்து கூறுகிறார்.

நூலாசிரியரின் உறவினர் ஒருவரின்மீது பாபாவின் கடாக்ஷம் அகஸ்மாத்தாகப்பட்ட மாத்திரத்தில் அவரது குண்டலினி ஜிவ்வென்று புருவ மத்தியில் உள்ள ஆக்ஞா சக்ரத்துக்கு உசும்பி வந்து திவ்யானந்தம் பில்கியிருக்கிறது!

* * *

குண்டலினீ, சக்ரங்கள் ஆகியன பற்றிச் சொன்னதால், இங்கேயே மந்திர-யந்திர-தந்திர ஸாதனைகளின் நாயகனாகவும்

Koviloor Digital Library

றையைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் சொல்லி விடலாம். 'தந்திரம்' என்று தனியாக ஒரு மார்க்கமில்லை. எந்த விதமான சாதனையும் ஒரு சடங்காகிற (ritual) போது அதைத் 'தந்திரம்' என்பர். ஆயினும் சாக்த வழிபாட்டின் பல நினுசுகளே, குறிப்பாகத் 'தந்திரம்' என்றவுடன் எண்ணப்படுகின்றன.

"ஸர்வ மந்த்ராத்மிகே! ஸர்வ யந்த்ராத்மிகே! ஸர்வ தந்த்ராத்மிகே!" என்று காளிதாஸன் அழைக்கும் பரதேவி அவரே. பொதுவாக, இந்த யுகத்துக்கு ஏற்ற எளிய மார்க்கமான நாம கீர்த்தனத்தைத்தான் அவர் இயம்புகிறாரெனினும், தனிப்பட்ட ஸம்ஸ்காரங்கள் கொண்டவர்களை, அவரவர்க்குரிய ஞான விசாரத்திலோ, யோக மார்க்கங்களிலோ, மந்திர-யந்திர-தந்திராதிகளிலோ அவர் செலுத்தித்தான் வருகிறார்.

கனவிலும் நேரிலும் பலருக்குப் பல மந்திரங்களை உபதேசித்திருக்கிறார். ஏற்கெனவே உபதேசமானவர்களுக்கு அவர்கள் ஜபித்துவரும் மந்திரத்தை எடுத்துச்சொல்லி யிருக்கிறார். அவர் அறியாத மந்திரமில்லை. முன்பு, அவர் குறும்பாகவே காகிதத்தைச் சுருட்டி எழுதுகோலாக்கி அதனால் பக்தர் நாவில் மந்திரத்தை எழுதுவதாகவும், அவ்வெழுதுகோலிலேயே மந்திரம் பொறிக்கப்பட்டிருப்பது மட்டுமின்றி, நுனியில் அதன் உபாஸ்ய தெய்வத்தின் உருவமும் காணப்படும் என்றும் பார்த்திருக்கிறோமல்லவா?

சப்த சலனத்தால் திவ்ய சக்திகளைப் பெற்றுத்தரும் மந்திர ஜபத்தை ஸ்வாமி மிகவும் சிறப்பித்துப் பேசுவார். மந்திர மகிமையை ஆட்சேபிப்போரை வன்மையாகக் கண்டிப்பார்.

"மந்திரங்களால் எந்த லோகத்து தேவ சக்திகளையும் பிடித்திழுத்து வர முடியும் என்று சொல்கிற இந்த மந்திர உபாஸகர்களால் ஏன் இந்த லோகத்தில் கூட நினைத்த இடத்துக்குப் போக முடியவில்லை?" எனப் பரிகசிக்கும் பகுத்தறிவாளரை ஸ்வாமி கொக்கி போட்டு மடக்கினார்: "அது சரி; உங்கள் விஞ்ஞானிகள் உலகத்தைச் சுற்ற 'ஸாடலைட்'டும், சந்திரனை அடைய 'ராக்கெட்'டும் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் இவர்கள் கண்டுபிடித்த அந்த ஜட யந்திரங்களால்தான் உலகைச் சுற்றவும், சந்திரனை அடையவும் முடிகிறதே அன்றி, இந்த விஞ்ஞானிகளே அவற்றின் துணையின்றி விண்வெளியில் பறக்க முடிகிறதா? ஜடயந்திரத்தை விடச் சக்தி வாய்ந்தது ஜீவனுள்ள மந்திரம். உரியபடி ஜபித்தால் அவற்றின் மூலம் உபாஸகர் வேறு லோகம் போகலாம்; ஆனால் இதைவிட முக்கியமாக, வேறு லோக தேவ சக்திகளையே இங்கே இழுத்து வந்து இந்த லோகத்துக்கு நலமூட்டலாம். இறுதியில் இம் மந்திரங்கள் கொண்டு சேர்ப்பது எல்லா சப்த சலனங்களும் உண்டாகும் ஆத்மப் பெருவெளியிலேயே" என்றார்.

யந்திரம் என்று எடுத்துக்கொண்டால், ஸ்வாமி சிருஷ்டிக்காத யந்திரம் ஏதுமே இராது. சப்தங்கள் மூலம் திவ்ய சக்தியை மந்திரங்கள் பாய்ச்சுகின்றன எனில், வரி வடிவங்கள் மூலம் அச் சக்தியைக் கொணர்பவையே யந்திரங்கள். இந்த யந்திரங்

Koviloor Digital Library

களுக்குள்ளேயே மந்திரங்கள் எழுதப்படுவதுமுண்டு. பாபாவின் திருக்கர அசைவில் பெரிதும் சிறிதுமாக, பொன் வெள்ளி தாமிரம் முதலிய லோஹங்களில் சிருஷ்டியாகியுள்ள யந்திரங்களுக்குக் கணக்கெடுத்தவரில்லை. முக்கியமாக இவை ஆபத்து, வியாதி இவற்றுக்கு ரக்ஷையாகவே வழங்கப்படுகின்றன.

* * *

தேன்கதலி மரம் இலை தருகிறது, பூ தருகிறது, காய் தருகிறது, தண்டு தருகிறது, பட்டை தருகிறது—எல்லாமே உபயோகமாகிறவைதாம். ஆனால் அதன் உச்சமான பயன், அது நல்கும் தேன்கதலிக் கனியே அல்லவா? அதன் தேன் தன்மை அக் கனியில்தானே காணக் கிடைக்கிறது—கதலித் தன்மை ஏனையவற்றிலும் இருந்தாலும் கூட? இப்படியே பாபா எனும் தேன்கதலி மந்திர, யந்திர, தந்திர, யோக மார்க்கங்களைத் தந்தாலும், இவற்றிலும் அவரது தெய்வத் தன்மை இருந்தாலும், இவற்றை எல்லாம்விட இனித்தான அவரது, அலாதி 'பாபாத்துவம்', 'ஸாயித் தன்மை' பிரேம மார்க்கத்தில் தான் தேனைக் கொட்டுகிறது.

சுவைக்க இன்னம் தாமதிப்பானேன்?

Koviloor Digital Library

அத்தியாயம்—49

பிரேம ஸாயி

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவ(து) ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

— திருமூலர் திருமந்திரம்

காரணமே யில்லாத கருணையின் வடிவினள்

— லலிதா ஸஹஸ்ரநாமம், 992

அன்பினுக்குக் கடலையுந்தான் விழுங்கவல்லான்;
அன்பினையே தெய்வமென்பான்; அன்பே யாவான்.

— பாரதி அறுபத்தாறு

பாபாவை அன்புருவம் என்று 'நிரூபிக்க' வேண்டிய தேவையே இல்லை. ரோஜாப் பூ ரோஜா நிறம் என்று நிரூபிக்க வேண்டுமா என்ன? பாபா அவதரித்ததே மக்கள் குலத்தை முன்னேற்ற வேண்டும் என்ற பிரேமையில்தான். இத்தனையும் மக்களுக்காக அவர் அனவரதமும் உபதேசிப்பது, ஸங்கீர்த்தனம் செய்வது, எழுதுவது, சஞ்சாரம் செய்வது அனைத்தும் இறைவன் ஒருவனுக்கே இருக்கக்கூடிய பரம காருண்யத்தின் பேறு தான். பல்லாயிரவரை விபத்திலிருந்து, வியாதியிலிருந்து, வியாகுலத்திலிருந்து வாரி எடுத்துக் காத்து ரக்ஷணை செய்வதில் ஸாயிக்கு நிகர் ஒரு தெய்வமுண்டோ? இத்தனைக்கும் காரணம் அன்பொன்றே அன்றோ?

மூன்று ஸாயிக்கள் உண்டு என்றும், முதலில் ஷிர்டி ஸாயியாக வந்ததாகவும், இப்போது ஸத்ய ஸாயியாக வந்திருப்பதாகவும், இந்த அவதாரத்துக்குப்பின் கர்நாடக தேசத்தில்

Koviloor Digital Library

ம்ாண்ட்யா மாவட்டத்தில் பிரேம ஸாயியாகப் பிறக்கப் போவ தாகவும் நம் ஸ்வாமி சொல்வதுண்டு. ஆனால் பக்தர்களைப் பொறுத்த மட்டில் இந்த அவதாரத்திலேயே அவர் முதற்கண் பிரேம ஸாயிதான்.

தாம் செய்யும் அன்பையே பக்தரும் தம்மிடம் செய்ய எதிர்பார்க்கிறார். அவ்வாறெனில் ஸ்வாமியும் பிரதியை எதிர் பார்க்கிறாரா? அல்லவே அல்ல. 'தம்மிடம் என்றால் தம் உருவங் களேயான ஸகல ஜீவராசிகளிடமும் என்று பொருள்' என்பார். "என்னிடம் அஞ்ச வேண்டா, தயங்க வேண்டா. என்னிடம் உங்களுக்கு ஸர்வ ஸ்வாதீனமும் உண்டு. எனவே அன்போடு வந்து கேளுங்கள். உரிமையோடு கேளுங்கள். தட்டிக் கேளுங் கள். தருகிறேன்" என்பார், கேட்காமலும் கொடுக்கும் கிருபாளு!

நாம் இறைவனிடம் பக்தி வைக்க வேண்டுமாயின் அவனை அன்பு வடிவாகவே கொள்ள வேண்டும். 'கொள்வது' என்ன? அவன் அன்பேதான். கடுமையாய், கொடுமையாய் தோன்றுவ தெல்லாமும் அவனது அன்பில் பிறந்தவைதான். "பிரபஞ்ச சத்தைத் தோற்றுவித்து இயக்குவதே அன்புச் சக்திதான்" என்பார் பாபா. ஒன்றாக இருந்த பொருள் பிரிந்து பலவான பிரபஞ்சமானது, அவற்றை மறுபடி தன்னிடம் இழுத்துக் கொள்கிற அன்பு விளையாட்டைச் செய்யத்தான். ஒன்றாகவே இருந்துவிட்டால் ஜீவர்களின் பக்திதான் ஏது, பகவானின் கருணைதான் ஏது? பக்தியும் கருணையும் வெளிப்படவே சிருஷ்டி யில்லை. பக்தி என்பது நாம் அவனிடம் செய்யும் அன்பு. கருணை என்பது அவன் நம்மிடம் செய்யும் அன்பு.

"நான் செய்வதெல்லாம் அன்பின் மீதேயாகும். நான் அன்பையே பேசுகிறேன். அன்புப் பாதையிலேயே வழிகாட்டி அழைத்துச் செல்கிறேன். நான் அன்பே" என்பார் பாபா.

பிரேமோபநிஷதம் எனத்தக்க அவரது வாசகங்களில் சில மந்திரங்களைப் பார்ப்போம் :

"ஒவ்வொரு நாளையும் அன்பில் தொடங்குங்கள். ஒவ்வொரு நாளையும் அன்பில் தொடருங்கள். ஒவ்வொரு நாளையும் அன்பில் செலவழியுங்கள். ஒவ்வொரு நாளையும் அன்போடு முடியுங்கள். ஒவ்வொரு நாளையும் அன்பால் முழுக்கடியுங்கள். இதுதான் பகவானிடம் சேரும் வழி".

"அன்பே என் ரூபம்
சத்யம் என் சுவாஸம்
இன்பம் என் ஆகாரம்
என் வாழ்வே உபதேசம்
விரிவே என் வாழ்வு
காரணமற்றதே அன்பு
பருவமற்றதே அன்பு"

Koviloor Digital Library

"என் தனி அடையாளம் பிரேமைதான். ஆரோக்யம் தருவது, செல்வம் தருவது, பரிசு சிருஷ்டித்துத் தருவது எல்லாம் அந்தப் பிரேமையின் அறிகுறிகள்தாம். நான் செய்யும் 'மிரகிளில்' என் பெருமையில்லை. அந்த 'மிரகிளு'க்குக் காரணமாக என்னை உங்களிடம் இடரிலும், நோயிலும் அடித்துத் தள்ளிக்கொண்டு வருகிறதே, அந்த அன்புச் சக்திதான் என் தெய்விக மஹிமையாகும்."

"உங்கள் இதய விளக்கில் அன்புச் சுடரை ஏற்றி வைக்கவே வந்திருக்கிறேன். அதன் ஒளியில் நீங்கள் ஒவ்வொருவரையும் ஸாயியாகவே காண்பீர்கள்."

"அன்பும் ஆண்டவனும் ஒன்றே என்பதை நிருபிக்கத்தான் நான் வந்திருக்கிறேன்."

"ஜீவ ரேடியோவை தெய்வ சக்திக்கு 'ட்யூன்' பண்ணுவது அன்புதான்."

"பகவானுக்கு நீங்கள் தருகிற பிரேம புஷ்பத்தின் புத்தம் புதுமைக்குச் சற்றும் மாசு இருக்கக் கூடாது. அவன் விட்ட வழி என்றில்லாமல் உங்களுக்கென எதையோ வைத்துக் கொள்வது, தயங்குவது, போலித்தனம் செய்வது, செருக்கு, அஹங்காரம், இவை எல்லாம் அன்பு மலரைத் தூசுபடுத்துவனவாகும்."

"அச்சம் என்பதே அறியா நான் எவர் முன்னும் வணங்குவதில்லை. ஆனால் அன்பின் முன் வணங்குகிறேன். நீங்களும் த்வேஷம், கொடுமை, புரளி இவற்றுக்குப் பயந்து அடிபணியாமல், பிரேமைக்கும் உண்மைக்கும் மட்டுமே மண்டியிட வேண்டும்."

"பிரேமை என்பதுதான் மனித வாழ்வின் பிராணன்."

ஸத்ய - தர்ம - சாந்தி - பிரேமை என்பதாகத் தாம் அளித்துள்ள மகாமந்திரத்தில், "சத்தியம் மின்சாரக் கரண்ட், தர்மம் அதை எடுத்து வரும் மின்கம்பி, சாந்தி மின் விளக்கு, அதிலே ஒளிரும் ஜோதியே பிரேமை" என்று அன்பைச் சிறப்பித்துக் கூறுவார்.

"ஆத்மிக வைத்தியத்திலும் பல மருந்துகள் உண்டு. ஆனாலும் இங்கே ஸர்வ ரோக நிவாரணி பிரேமைதான். அது பல வைடமின்களில் ஒன்று மட்டும் அல்ல. A-யிலிருந்து Z-வரை எல்லா வைடமின்களும் அதில் அடக்கம்" என்பார்.

ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தியில் பேசுகிறார் : "நான் அன்பை வருஷிக்கிறேன். அன்பைப் புசித்து கொள்கிறேன். அன்பினாலேயே பிரீதி அடைகிறேன். உங்கள் அன்பு மேன்மேலும் வளரட்டும். அது மேன்மேலும் ஜீவராசிகளிடம் பரவட்டும் என்று ஆசிர்வதிக்கிறேன். அன்பே ஆண்டவன். அன்பிலேயே

Koviloor Digital Library

வாழுங்கள். இதுதான் அன்பையும், அமைதியையுமே தருவ தற்காக அவதரித்த கண்ணனின் ஜன்மாஷ்டமி தரும் சந்தேசம்.''

''என் உபதேசம், என் பிறவிப் பணி அன்பு, அன்பு, அன்பே. வேறேதுமில்லை.''

''பருப்பு, புளி, கறிகாய் எல்லாம் உயர்ந்தவையாக இருந் தாலும், பாத்திரம் நல்ல பித்தளையில் கனமாகச் செய்ததாக இருந்தாலும், அதில் ஈயம் பூசாமலிருந்தால் சாம்பார் கெட்டுத் தான் போகும்; விஷமாகத்தான் ஆகும். இதே போல் எந்த மார்க்கத்தில் எந்த ஸாதனை செய்தாலும் ஸாதகன் உள்ளத்தில் அன்பு என்ற ஈயத்தைப் பூசிக்கொள்ளாவிடில் அத்தனையும் பாழ் தான்.''

''உங்களுக்கு அன்பு வேறு, ஆனந்தம் வேறு என்றிருக்க லாம். எனக்கோ அன்பே ஆனந்தம். இந்த அன்பான ஆனந்தம் என்னை விட்டு ஒருபோதும் நீங்காதது. நான் கோபமாக என்னைக் காட்டிக் கொள்ளும் போதும் இந்தப் பிரேமானந்தத்தில் நிலைத்தே இருக்கிறேன். கோபம் என்பது சந்தர்ப்பத்தை அநுசரித்து நான் போட்டுக்கொள்ளும் வேஷம்தான்!''

எத்தனை அன்பிருந்தால் கீழ்க்கண்டவாறு பேச முடியும்? ''நம்மிடம் இவ்வளவு பாபம் உள்ளதே என்று என்னிடம் வரத் தயங்காதீர்கள். உங்கள் தோஷங்கள் எதைக் கண்டுமே நான் அதிர்ச்சி அடையமாட்டேன். எத்தனை தோஷத்தையும் போக்கவே வந்திருக்கிறேன். ஸாதனை எதுவும் செய்ய முடிய வில்லையே என்று துக்கப்படாதீர்கள்! சித்தத்தை ஒருமுகமாக்க முடியவில்லையா? பரவாயில்லை. எதையும் துறக்க முடிய வில்லையா? பரவாயில்லை. எந்த ஸாதனையும் இயலாவிட்டாலும் பரவாயில்லை. நான் கேட்பதெல்லாம் அன்பு என்ற ஒன்றுதான். அன்பை அப்யஸிக்கத் தொடங்குங்கள். போதும். நான் பார்த்துக் கொள்கிறேன், உங்கள் ஆத்ம அபிவிருத்தியை.''

''நான் உங்களைத் தள்ளவே மாட்டேன். நான் உங்கள் அம்மா அல்லவோ?''

''சந்திரனை இருண்ட வானத்தில் எப்படிப் பார்க்கிறோம்? விளக்கை வைத்துக்கொண்டா? அல்லவே! சந்திரனை அவனது நிலவாலேயேதானே பார்க்கிறோம்? இப்படியே பகவானைப் பார்க்க வேறெதையோ விளக்காகத் தேட வேண்டாம். உன் இதயத்தில் அன்பு நிலவைப் புலர்த்திக் கொள். அப்போது அந்த அன்பே பகவான் என்று உணர்வாய்.''

''எனக்கு எவராலும் இலக்கணம் வகுக்க இயலாது. ஆனால் கிட்டத்தட்ட எனக்கு இலக்கணம் கூறவேண்டுமானால், 'ப்ரேம ஸ்வரூபம்' எனலாம். மனிதனுக்குப் பிரேமை வழங்குவதையும், பிரேமை பெறுவதையும்விட வாழ்வில் பெரிய இன்பம், ஊக்க சக்தி, ஆறுதல் ஏது?''

Koviloor Digital Library

''மிரகிள், மிரகிள் என்று உலகம் வியக்கும் என் அற்புத லீலைகள் என் உண்மையான சக்தியில் ஓர் அணு மாத்திரமே. ஆனால் என்னுள் இயங்கும் பிரேமை அளவிட முடியாத ஆழ்ந்த சமுத்ரம் போன்றது. அதுவே என் அகண்ட சக்தி.''

''கோயில் திருப்பணிகளுக்கும் மற்ற தெய்வகாரியங்களுக்கும் ஒருத்தர் ஏராளமாக நன்கொடை தரலாம்; லக்ஷலக்ஷமாக ஜபம் செய்திருக்கலாம்; நாமத்தை எழுதியிருக்கலாம். ஆயினும் ஆசையின் மாசே படியாத அன்பு, பலனில் விருப்பமே இல்லாத பிரேமை இல்லாவிடில் இவை எதுவும் பயனில்லை. பிரேமை தான் பக்தி. மற்ற ஆசாரம், சடங்கு, ஜபம், தியானம், தானம் முதலானவை பக்திக்கு ஜீவாதாரம் இல்லை என்பது மட்டுமில்லை; அவற்றை இரண்டாம் பக்ஷம் என்றுகூடச் சொல்வதற்கில்லை. பிரேமை மட்டும் இருந்துவிட்டால் மற்றவை தேவையே இல்லை.''

''தர்மங்களில் மஹாதர்மம், அனைத்தும் தழுவும் தர்மம் அன்புதான். எல்லா மதத்தினரையும், கொள்கையினரையும் தழுவும் அந்த அன்பை எடுத்தியம்பவே நான் வந்திருக்கிறேன், சஞ்சரிக்கிறேன். என் பிரதாபத்தைப் பிரகடனம் செய்துகொண்டு சிஷ்யர்களைச் சேர்த்துக்கொள்ளவோ, பொருள் சேர்க்கவோ, அல்லது ஒரு குறிப்பிட்ட தர்மத்துக்கு ஆள் சேர்க்கவோ அல்ல.'' (நைரோபியில் கூறியது).

''உங்களுக்கு தெய்வ நம்பிக்கை வராவிட்டாலும் பரவாயில்லை. ஸத்யத்தைக் கடைப்பிடியுங்கள்; பிரேமையைக் கைக்கொள்ளுங்கள். இவையே தெய்வத்திடம் உங்களை அழைத்துச் சென்றுவிடும்.''

* * *

ஜீவராசிகளிடம் நம் பிரேமையை வெளிக்காட்டிக் காரிய உருவில் உபகாரம் புரிவது சேவையின் மூலம்தானே? இதனால் தான் அன்பின் உயிர்க் கருவாக பாபா தொண்டு செய்வதையே மிக மிக வற்புறுத்துவார். நாடெங்கும் இன்று பரவியுள்ள ஸத்ய ஸாயி ஸமிதிகளுக்கு, 'பக்தி ஸமிதி' என்றோ, 'ஞான ஸமிதி' என்றோ இன்றி ''ஸத்ய ஸாயி ஸேவா ஸமிதி' என்றே பெயர் இருப்பது குறிப்பிடத்தக்கது. இப்படிப் பெயரிட்டதற்கேற்ப ஸ்வாமியே, ''ஸாயி நிறுவனங்கள் என் பெருமையை முழக்க ஏற்பட்டவை அல்ல. அவை மக்களுக்குப் பணி புரியவே ஏற்பட்டவை'' என்கிறார்.

ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களின் ஆசியில் காமகோடி மட அன்பர்கள் ஆற்றிவரும் அநேகப் பொது நலப் பணிகளைப் போலவே ஸத்ய ஸாயி ஸேவா ஸமிதியினர், தேசமெங்கிலும், உலகெங்கிலும் நடத்தி வருகின்றனர். சிறைக்கூடங்கள், ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று பஜனை நடத்துவது, பிரஸாதம் வழங்குவதுதான் இவற்றில் முக்கியமானது. மற்ற பொது நலத் தொண்டுகளைவிட பகவானைக் காட்டிக் கொடுக்கும் தொண்டுதான் மிகப்

Koviloor Digital Library

பெரிது என்பார் நம் சரித நாயகர். நகர ஸங்கீர்த்தனம் எனும் வீதி பஜனையின் மூலம் பகவந் நாமங்களைச் சூழல் முழுவதும் நிரப்புவதே மக்கள் நலனுக்கான நல்லதாய தொண்டு என்பார். மற்றும் ரத்த தானம், சேரிச் சுத்திகரிப்பு, கோயில் பிராகாரங்களில் கல் முள் எடுப்பது, திருவிழா நடக்கும் ஊர்களின் ரயில் நிலையங்களில் பிரயாணிகளுக்கு வழிகாட்டி உதவுவது ஆகியன ஸமிதித் தொண்டர்களின் பணிகளாகும். ஸேவா ஸமிதியினர் ஆங்காங்கு நடத்தும் வைத்திய முகாம்களின் பணியோ அபாரிமிதமானது. கண் நோய் போன்ற குறிப்பிட்ட பிணிகளுக்கென்றும், எல்லாவிதமான வியாதிகளுக்காகவும் தலைசிறந்த வைத்திய நிபுணர்களைக் கொண்டு இவ்வாறு இலவசத் தொண்டு செய்கிறார்கள். படிப்போடு ஆன்மிக, அறநெறி போதனை உள்ளடக்கிய பள்ளிகள் நடத்துவது, மருத்துவமனைகள் நடத்துவது, பஞ்ச காலத்தில் அவசியமான நிவாரணப் பணிகள் புரிவது, பிடியரிசிச் சேகரிப்பால் அன்னதானம் (அல்ல, நாராயண சேவை) செய்வது என்பதாகத்தானே இந்த சமூக நலப் பணிகள் ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடி வருகின்றன.

பகவானது நடமாடும் மருத்துவமனை புட்டபர்த்தியையும், ஒயிட்ஃபீல்டையும் சுற்றியுள்ள கிராமங்களில் சஞ்சரித்துப் புரியும் வைத்தியப் பணியைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். இந்த 'வானி'ல் ரத்த சோதனை, பல் பிடுங்குதல், கண் வைத்தியம், எக்ஸ்-ரே முதலியவற்றுக்குக்கூட வசதியுள்ளது. ஸ்பெஷலிஸ்ட்களின் கைங்கரியத்தில் இது அருமையான பணி புரிந்து வருகிறது.

வைத்திய ரீதியான சேவை ஒருபுறமிருக்க, சேவை புரிபவரின் அன்பே பெரிய வைத்தியம் என்கிறார் நம் தெய்வம். அடடா, ஒரு முறை இதனை எவ்வளவு உயர்த்திக் கூறிவிட்டார்? பிரசாந்தி நிலைய மருத்துவ மனையில் தீராத நோயெல்லாம் வைத்திய ரீதிக்குப் புரிபடாத விதத்தில் தீரும் அற்புதத்தைப் பற்றி ஸ்வாமியிடம் குறிப்பிட்ட டாக்டர் சீதாராமையா, ''இதற்கெல்லாம் தங்கள் சக்திதான் காரணம், பகவானே!'' என்றார். ''அல்ல, அப்பனே'' என்றார் பகவான். ''உடலால் சிரமதானம் செய்து எத்தனை பக்தர்கள் இந்த ஆஸ்பத்திரியைக் கட்டியிருக்கிறார்கள்? அவர்களுடைய அன்பு ஆஸ்பத்திரியில் நிரம்பிக் கிடக்கிறது. இங்கே டாக்டர்கள், நர்ஸ்கள் முதலியோரும் கூலிக்காகச் செய்யாமல், தூய அன்போடு சிகித்ஸை செய்கிறார்கள். பக்கத்திலேயே பஜனை நடந்து, அந்த அன்பலைகள் இங்கு வந்து வீசுகின்றன. பிரசாந்தி நிலயத்துக்குள் பலர் புரிகிற சாதனைகளின் பிரேம சக்தியும் இங்கு எதிரொலிக்கிறது. இந்த அன்பெல்லாம் சேர்ந்த தன் சக்தியாலேயே இங்கே வருகிற கேஸ்கள் யாவும் வெற்றியாக முடிகின்றன'' என்று கூறினார் ஸ்வாமி. ''இப்படிப்பட்ட அன்பால் நோயாளிகளின் உடல் வியாதியோடு, மனோ வியாதியும் குணமாகிறது'' என்று முடித்தார்.

ஸ்வாமி குறிப்பிட்ட இவர்கள் யாவரும் சிரமதானமாகவோ, மருத்துவ முறையிலோ, ஸங்கீர்த்தனத்திலோ, மற்ற ஸாதனை

Koviloor Digital Library

களிலோ, பிலிற்றும் அந்த அன்புக்கெல்லாம் காரணம் அவரே யன்றோ? அவர்களுடைய மட்டுற வியாதிகளைத் தீர்க்கும் இவரது அன்பின் மாண்புக்கு அடையாளந்தானே அவர்களது இதயத்தில் பிறக்கும் அன்புணர்ச்சி அத்தனையும்?

ஐந்து விரல்கள் கொண்ட கை போன்றது ஸத்ய ஸாயி ஸ்தாபனத்தின் ஐந்து அங்கங்கள் என்று ஸ்வாமி கூறுவது வழக்கம். வயது வந்தோர் அங்கம் பெறும் ஸத்ய ஸாயி ஸேவா ஸமிதி என்ற அமைப்பே இவை யாவற்றையும் மேற்பார்வை யிட்டும், வழிகாட்டியும் நிர்வகிப்பதாகும். இவை ஒவ்வொன்றின் சேவையும் உலகுக்கு மிகவும் தேவை. குழந்தைப் பருவத்தி லேயே பக்தி, அன்பு, ஒழுக்கத்தைப் பயிற்றுவிக்கும் பால விகாஸ். ஓரளவு வயது வந்த சிறுவர்கள் சண்டையிலும், பொய்யிலும் போகாமல் அவர்களைத் தொண்டில் ஈடுபடுத்தும் பூர்வாங்க சேவா தளம். சகல விபரீதங்களுக்கும் ஆளாகக் கூடிய நுட்பமான கால கட்டத்தில் அவர்களை நன்னெறிப்படுத்தும் சேவா தளம். பெண்களைப் பெண்களாக, இனிமையும், உழைப்பும், அடக்கமும், ஆஸ்திகமும் உள்ள உண்மைப் பெண்களாக ஆக்கும் மஹிளா விபாக். இந்த நான்கின் அங்கத்தினருக்கும் பொதுவானதும், ஸ்வாமி குறிப்பிடும் தலையாய சேவையைப் புரிவதுமான பஜனை மண்டலி. ஆஹா, மனத்தில் நேரே பாய்வதில் ஸாயி பஜனுக்கே உரிய சக்தியால் மலர்ந்து வரும் மனங்கள் எத்தனையெத்தனை? அதிலும், பஜனைக்கூடங்களை நாடாதவர்களுக்காகவும் நடத்தப் படும் நகர ஸங்கீர்த்தனம் அதிகாலையில் வீதி வீதியாக "ராமா", "க்ருஷ்ணா", "கோவிந்தா", "ஜகதம்பா", "ஹரஹரா", "ஸாயீச்வரா" என்ற திவ்ய கோஷத்தை எழுப்புகையில் படுக்கையில் கிடக்கும் எத்தனை உள்ளங்களில் அது ஒரே சமயத்தில் பனியின் குளிர்ச்சியையும், உதய சூரியனின் இனிய பிரகாசத்தை யும் ஊட்டுவிக்கிறது?

'ஸாதனா முகாம்' என்பதாக மாதத்தில் ஒரு நாள் ஸாயி பக்தர்கள் கவனிப்பாரற்ற ஒரு கிராமக் கோயிலருகே தங்கி, ஆலயத்தைச் சுத்தம் செய்து, அபிஷேகாதிகள் செய்வித்து, பஜனை செய்து கிராமவாசிகளுக்கு உயர்ந்ததோர் எழுச்சியைத் தரும் சேவையும் போற்றத்தக்கதாகும்.

பாபா என்றாலே ஆத்திரப்படுபவர்கள் இதையெல்லாம் ஏன் எண்ணிப் பார்க்கக் கூடாது? ஸ்வாமியின் ஆத்ம சக்தி எப்படி யெல்லாம், எப்படிப்பட்டவர்களை யெல்லாம் சேவையில் திருப்பு கிறது? அதன் மூலம் அந்த சேவகர்களிடையே உயர்வு தாழ்வே யின்றி சமத்துவத்தை, சகோதரத்துவத்தை ஏற்படுத்திவிடுகிறது?

பொடிப் பசங்களே ஒன்றுசேர்ந்துதான் பிரசாந்தி நிலையச் சிறு குன்றின் அடிவாரத்திலிருந்து, அதன் மத்தியிலுள்ள அறு கோண விருந்தினர் விடுதி வரை பாதை போட்டிருக்கின்றனர்! நகத்தில் அழுக்குப் படாத நாசுக்கு வெள்ளைக்காரிகளும், நவாப் ஸாஹேபாக்கள் பலரும் உட்படப் பெண்மணிகள் மட்டுமே தான் ஒன்றுகூடி, பூர்ண சந்திர மன்றத்தின் கடைகாலான

Koviloor Digital Library

250 அடி நீளமும், 150 அடி அகலமும், 10 அடி ஆழமும் கொண்ட பள்ளத்தைப் பதினைந்தே நாட்களில் சித்ராவதி மணலைக் கொட்டி நிரப்பியிருக்கிறார்கள்! குடியிருப்பு மாளிகையின் கட்டுமானத்துக்காக லெஃப்டினன்ட் கவர்னர் ஸ்ரீ நாகுல் ஸென் போன்றவர்களும் கூடை கூடையாக மண் கொணர்ந்து கொட்டியிருக்கின்றனர். பிட்டுக்கு மண் சுமந்த நம் சோமப்பாவின் அன்புப் பிட்டை பிட்சை பெற்றதால்தான் மன்னர்களும் மண் சுமந்து பணி செய்தனர். இதெல்லாம் வெறும் லௌகிகக் காரியமாக இல்லாமல், பணி புரிபவர் அனைவரும் "ஸாயிராம்" "ஸாயிராம்" என்று கோஷித்துக்கொண்டே அதைத் தெய்விக மாக்கி, இத் திவ்யப் பிரேம சக்தியாலேயே 'மாயா பஜார்கள்' செய்துவிடுகிறார்கள்.

ஒயிட்ஃபீல்ட் அருகே பாபா தம் தொண்டர்களான மாணவரைக் கொண்டே கிராமவாசிகளின் வழிபாட்டுக்கென சோமேச்வரருக்கும், சேவையின் பரம உத்தம வடிவான ஆஞ்ஜநேய ஸ்வாமிக்கும் கோயில் கட்டுவித்திருக்கிறார். ஒயிட்ஃபீல்ட் எனப்படும் காடுகொடியிலேயே பழுதுற்ற இரு கோபுரங்களைப் புதுப்பிக்கவும் செய்திருக்கிறார்.

சமீபத்தில் புட்டபர்த்தியில் மழைக் கொடுமையால் வீடு இழந்து நின்ற ஹரிஜனங்களுக்கென இந்த 1976 குரு பூர்ணிமையின்போது ஸ்வாமி நூறு இருக்கைகள் கொண்ட காலனி கட்டிக் கொடுத்திருக்கிறார். அடுத்து, விநாயக சதுர்த்தியின்போது ஒயிட்ஃபீல்டில் பெண்கள் மருத்துவமனை ஒன்றை நிர்மாணித்துத் தொடங்கி வைத்திருக்கிறார். இதுபோல் எவ்வளவோ சமூக சேவை!

வித்யாதானம், வைத்யதானம்,கிருஹதானம், அன்னதானம், வஸ்திரதானம், தனதானம், எல்லாவற்றுக்கும் மேலாக பகவத் ஸ்மரணதானம் என்றிப்படி ஸாயி ஸேவா ஸமிதிகள் ஒப்பற்ற தொண்டு புரிந்து வருகின்றன.

தொண்டு புரிவதில் உள்ள எளிய பெருமையை, உள்ள நிறைவை அனைவருக்கும் உணர்த்த வேண்டுமென்றேதான் ஸ்வாமி பாலப் பருவத்தில் சாரணர் படையில் சேர்ந்து, தம்மிடம் பணம் இல்லாததால் பூம்பாதம் நோவப் புஷ்பகிரி சந்தைக்கு நடந்தே சென்றார். இன்று எத்தனை ஆயிரம் சேவா தளத் தொண்டர்களை அவர் சேர்த்து விட்டார்?

தொண்டர்கள் சற்றும் உயர்வு மனப்பான்மையின்றி, அடர்ந்த மனிதாபிமானத்தோடு மக்களுக்குப் பணி புரிய வேண்டியதன் அவசியத்தை ஸ்வாமி பிரசாந்தி நிலைய விழாக்களின் போது சேவா தளத்தினருக்கு மிகவும் விரிவாக விளக்கிக் கூறத் தவறுவதே இல்லை.

பிரசாந்தி நிலையத்தில் வாழும் குடும்பத் தலைவிகள் தினமும் பகவந் நாமாவைச் சொல்லி ஒரு பிடி அரிசியை எடுத்து வைக்க

Koviloor Digital Library

வேண்டும்; குரு வாரந்தன்று அநனே நாம ஜபத்தோடு பொங்க லாக்கி வெளிப் பரதேசிகளுக்குப் போட வேண்டும் என விதித் திருக்கிறார். காஞ்சிப் பெரியவாள் போலவே எத்தனை எளிமை யாக, நடைமுறை சாத்தியமாக அனைவரையும் ஒரு பரோபகார மாவது செய்ய வைப்பதில் ஐயன் பேரக்கறை கொண்டுள்ளார், பாருங்கள்!

சேவை பற்றி நம் காவிய நாதர் கூறுவதெல்லாம் பொன் எழுத்துக்களில் பொறிக்கத்தக்கன. முத்துக் குவியலில் ஒரு சில நித்திலம் பாருங்கள் :

''நான் புதிதாகச் சொல்வதல்ல; வியாஸ மகரிஷியே சொன்னதுதான். அவர் பதினெட்டுப் புராணங்களையும் இயற்றி னார். அதவ்வளவின் ஸாரத்தையும் அரை சுலோகத்தில் தரு கிறேன் என்று கூறினார். அந்த அரை சுலோகம் : ''பரோபகார: புண்யாய, பாபாய பரபீடனம்'—'பிறருக்கு உதவி செய்தால் அதுவே புண்யம், பிறருக்குத் தீங்கு இழைத்தால் அதுவே பாபம்.''

பாகவதத்தில் பிரஹ்லாதன் ஒன்பது விதமான பக்தி உபாஸனைகளைச் சொல்கிறான். அவற்றில் 'பாத ஸேவனம்'— பகவான் பாதத்தைச் சேவிப்பது—ஒன்று. இதற்கு வியாக்கியானம் செய்யும் ஸ்ரீதரர், ''உலகம் முழுதும் பகவானின் பாதமாகும் என்று புருஷ ஸூக்தம் கூறுகிறது. எனவே லோக சேவையே பாதஸேவனம்'' என்கிறார். நம் ஸ்வாமியும் இதே கருத்துடையவர் தாம். அதோடு, நவ வித உபாஸனைகளில் இன்னொன்றான 'தாஸ்யம்' என்பதும் பகவானின் தாஸனாக இருப்பதை மட்டு மின்றி மக்களுக்கும் தொண்டனாக இருப்பதைக் குறிக்கும் என்பார்.

''பர உபகாரம் என்று சொன்னாலும், உண்மையில் ஆத்மா வுக்குப் 'பர'மாக எதுவுமே இல்லை. அத்வைத பாவத்தில் அனைவரையும் ஆத்மாவாகவே, தானாகவே கண்டு செய்யும் உபகாரம்தான் உயர்ந்தது. அப்போது அது மற்றவனுக்கு நன்மை செய்வதோடு, தனக்கும் ஆத்மஸாதனையாகி விடுகிறது. இப்படியின்றி, 'பிறர்' என்று இன்னொருத்தரைக் கருதும்போது, அவர்கள் நம் உதவியை எதிர்பார்க்கிறவர்கள், நாம் அவர்களிடம் கருணை காட்டுகிறோம் என்பது போன்ற அகந்தை எண்ணங்கள் உண்டாகும். அகந்தையின் வாடை துளி அடித்தாலும் அது சேவையாகாது. நாமே நமக்கே செய்து கொள்கிறோம் என்ற உணர்வோடு தொண்டு புரிவதுதான் முறை.''

''மானவ (மனித) சேவை மாதவ சேவையே என்ற எண்ணத் துடன், பணிவுடன் பணி புரிய வேண்டும்.''

''ஜீவகாருண்யமே யில்லாத ஒருவன் 'பக்தி' புரிவதாக நினைத்துச் செய்கிற எந்த மஹா பெரிய ஸாதனையாலும் சடங் காலும் ஒருகாலும் உய்வு பெறமுடியாது.''

''உலகில் பல விதங்களில் இன்னலுற்றவருக்கு நம்மாலான சிறு உபகாரம் செய்வதில் மனம் வைக்காமல், ஆடம்பரமாகப்

Koviloor Digital Library

பூஜை செய்வதாலும், மந்திர தந்திர ஸாதனையாலும் உய்வு பெற்றுவிடலாமென எண்ணுவது மகத்தான சுய ஏமாற்றுத் தான். மாயையைக் கடப்பதற்காகப் பல விதமான சமயா-நுஷ்டானங்களைக் கைக்கொண்டுள்ளவரைப் பிடித்தாட்டும் பெரிய மாயை இதுவே.''

''பணி புரிய, உதவ, ஆறுதல் கூற, ஊக்குவிக்க உன் கையை நீ எப்போது தூக்குகிறாயோ, அப்போது நீ ஆண்டவனைக் கும்பிடக் கை தூக்கியதாகவே அர்த்தம்.''

''நீ கஷ்டத்திலிருப்பதாக எண்ணிக் கடவுளை துணை கூப்பிடு கிறாய். உன்னைவிடக் கஷ்டத்திலிருப்பவர்கள் உன்னை துணை கூப்பிடும்போது, அதற்கு நீ செவி சாய்க்காவிட்டால், உன் முறையீட்டை மட்டும் ஆண்டவன் எப்படிக் கேட்டுக்கொள்வான்? அவன்தானே அந்த அநாதையாகி உன் உதவியைக் கேட்பவன்? நீ ஸ்தூலமாக உதவ முடியாவிட்டாலும் உன் மனமாவது இரக்கத் தில் உருக்கம் காட்ட வேண்டாமா? உன் குரலுக்கு ஓடி வர இறைவன் அருகிலேயே காத்துக்கொண்டுதான் இருக்கிறான். ஒரு சிறு துவாரம் ஏற்பட்டாலும் அதன் வழியாகப் பாயக் காத்துக் கொண்டிருக்கும் ஸூரிய கிரணம் போல் காத்துக்கொண்டிருக் கிறான். அகந்தையில் உன்னையே அடைத்து வைத்துக்கொண்டு உள்ள நீ, ஜீவகாருண்யத்தால் அந்த அடைப்பில் ஒரு சிறு துளை செய்துகொண்டுவிட்டால் போதும்; அதன் வழியாக அருளின் ஒளிக் கீற்றுக்கள் உன்னிடம் பாய்ந்து வந்துவிடும். உன் இதயத் தில் இறைவனது கிருபாப் பிரகாசம் ஏற்பட வேண்டுமாயின், பிறரது இருள் வாழ்வில் உன்னாலான பிரகாசத்தைப் பொழிய நீ முற்பட வேண்டும்.

''உள்ளே உனக்கும் ஒளி வேண்டியிருக்கிறது. வெளியே உலகத்தவருக்கும் ஒளி வேண்டியிருக்கிறது. நல்லது; வாசல் நிலைப்படியில் ஒரு தீபத்தை ஏற்றி வைத்தால் அது வீட்டுக்குள்ளும் ஒளி வீசுகிறது; வெளியே வீதிக்கும் ஒளி தருகிறது. உன் தேகம் என்னும் இல்லத்தில் வாயிலாக இருப்பது வாய். அதிலே பகவந் நாம தீபத்தை வைத்து பஜனை பாடு. அருள் ஒளி உன்னுள்ளும் பாயும், வெளியே உலகின்மீது பாய்ந்து மக்களையும் தூய்மைப் படுத்தும்.''

''இறைவனை மறந்து வாடியுள்ள மக்கள்மீது நாம கீர்த்தன கிரணங்களைப் பொழிந்து அவர்களைத் தாமரையாக மலர்வியுங் கள். பகவதநுபவத்துக்கு மேம்பட்ட நலன் ஏதுமில்லை. இதற்கு உதவுவதைவிடப் பெரிய சமூகசேவை எதுவுமில்லை. அன்னதானம், வித்யா தானம், வஸ்திர தானம், பிணி தீர்த்தல் யாவும் நல்லவைதாம். முடிந்த அளவில் அனைவரும் இவற்றைச் செய்ய வேண்டும். ஆயினும் இவற்றால் பலன் அடைபவரின் உள்ளம் உயர்ந்தாலன்றி இவையும் வீண்தான். ஆகையால், பக்தியைப் பரப்புவதைவிடப் பெரிய பரோபகாரம் இல்லை.''

நாம ஸங்கீர்த்தனம் என்பதே இந்த யுகத்தின் விசேஷ ஸாதனம். இதைப் பரப்புவதையே, சமூக சேவையின் முடிமணி

யாக பாபா பிரகடனம் செய்கிறார். முதல் அகில உலக ஸாயி மாநாடு பம்பாயில் நடந்தபோது ஸபையில் வேதாந்த மயமான சின்னங்களையும், உபதேசங்களையும் பொறிக்கப் பலர் எண்ணினர் —அதுவே அயல்நாட்டினரைக் கவரும் என்ற நினைப்பில். ஆனால் நாம ஸங்கீர்த்தனமே நம் நாட்டுக்கு மட்டுமின்றி நானிலம் முழுதற்கும் நலன் பயக்கவல்லது எனக் கருதிய ஸ்வாமியோ, விழா மேடையின் இரு புறங்களிலும் சைதன்யர், தியாகையர் இவர்களின் திருவுருவங்களையே பிரதானமாக வைக்கச் செய்தார்.

''உலக மாயை ஒரு நர்த்தகியாக (ஆடல் மங்கையாக) மயக்குகிறது. இதை மாற்ற அவளை அடியோடு மாற்ற வேண்டும். ''ந–ர்த்த–கி''யை மாற்றி ''கி–ர்த்த–ந என்றாக்கி, நாம ஸங்கீர்த்தனம் செய்யுங்கள். உய்வு பெறலாம்'' என்றார். (வடமொழி, தெலுங்கு முதலிய கூட்டெழுத்துள்ள லிபிகளில் 'ர்த்த' என்பது ஒரே எழுத்தாக வரும்.)

''சின்னஞ் சிறிய நாம ஜபம் முக்தி என்ற பெரிய நெறியில் சேர்க்கப் போதுமா என்று குழம்பாதீர்கள். சின்னஞ் சிறு டார்ச் ஒளியிலேயே எத்தனையோ நீளக் காட்டிலும் வழிகண்டு முன்னேற முடியவில்லையா? சின்னஞ் சிறிய படகைக் கொண்டு மஹா நதிகளையும் கடக்க முடியவில்லையா? மற்றவர்களுக்கும் நாம ஒளி காட்டுங்கள்; அதனால் ஸம்ஸாரக் கடலைக் கடத்துவியுங்கள்'' என்றார்.

இன்னொரு சமயம் ஸ்வாமி மொழிந்தது : ''இப்போது அநேக ஸாதகர்கள் நாமத்தை விட்டு, யோகம், பிராணாயாமம் என்றிப்படி வேறு அப்பியாஸங்களுக்குப் போகிறார்கள். இப்படிப் பட்ட இதர வழிகளைப் பின்பற்றுவதால் சில ஆபத்துக்களும் உள்ளன. அவற்றைச் சரிவரப் பயில்வது சிரமமானது. சரியாகப் பயின்றாலும்கூடப் பலனை நீடித்துக் காப்பது அதனினும் சிரமமாகும். நான் சொல்வதைக் கவனியுங்கள் : ஒரு தேசத்தில் குறிப்பிட்டதொரு வியாதி பரவுகிறதென்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது அதே தேசத்திலேயே அதற்கு மருந்தான மூலிகையும் கண்டுபிடிக்கப்படுகிறது. இவ்வாறே கலியுகத்தின் வியாதிக்கு நாமமே மற்ற எந்த ஸாதனையையும்விடப் பரம ஔஷதமாகக் கூறப்பட்டிருக்கிறது. இப்போது நாமத்துக்கே மற்ற எந்த யுகத்திலும் இருந்ததைவிட மகத்தான மருத்துவ சக்தி ஏற்பட்டிருக்கிறது. இந்த மருந்தை மக்களுக்கெல்லாம் நல்கும் நகர ஸங்கீர்த்தனமே சமூகப் பணிகளில் தலைசிறந்தது.''

[மக்கட் பணி குறித்து ஸ்வாமியின் அமுத மொழிகளை இந்த நிறைய எடுத்துக்காட்டியதால், இங்கேயே இன்னொன்றையும் குறிப்பிட்டுவிட வேண்டும். சேவை பற்றி இங்கு சொன்னதெல்லாம் பொதுவாக மக்களின் சராசரி இயல்பை முன்னிட்டுக் கூறியதேயாம். ஆயினும் சராசரிக்கு மாறான பிரத்யேக மனோபாவங்கள் உள்ளோருக்கும், அவரவர் பான்மைக்கிசைந்த பாதையைக் காட்டுபவரல்லவோ நம் ஸ்வாமி? இதையொட்டிச் சிலரை ஏகாந்தமான ஆத்ம விசாரம், யோகம், தியானம் முதலிய

Koviloor Digital Library

வற்றில் விசேஷமாக ஈடுபடுத்துகிறார். இப்படிப்பட்டவர்கள் சமூக சேவையைச் சிறப்பாகச் செய்வதற்கில்லாமல் ஆகிறதே என்று ஓர் அமெரிக்கர் வினவியபோது ஸ்வாமி சொன்னார் :

''உலகுக்குப் பணி புரிவதில் இரண்டு விதங்கள் உண்டு. பலர் காரிய உருவில் செய்கிறார்கள். வேறு சிலரோ, தாம் அறியாமலே, தமது சாந்தத்தாலேயே லோக சேவை செய்து விடுகிறார்கள். எல்லா ஸாதகர்களும் எல்லா ஸாதனைகளையும் செய்ய முடியாது; செய்ய வேண்டியதும் இல்லை. மிகச் சிறுபான்மையினரே ஏகாந்த சாந்தத்துக்கு இயல்பாக அவாவ முடியும். பகவானேதான் அவர்களை அப்படி சிருஷ்டி செய்திருக்கிறான். இதை உணர்ந்து அவர்கள் அந்த நெறியிலேயே நிற்க முனைய வேண்டும். ஆயினும் ஸ்தூலமாக சேவை செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி, எந்த ஸாதகனுக்கும் சமூகத்திடம், உலகத்திடம், ஸகல ஜீவராசிகளிடம் எள்ளளவும் துவேஷம் இருக்கக் கூடாது. கர்ம யோகம், பக்தி யோகம், ஞான யோகம், குண்டலினி யோகம் எதுவாயினும் அதற்கு உயிராக இருப்பது பிரேம யோகம்தான்.''

இதற்கேற்பவே பாபா மற்ற மார்க்கங்களிலும் கூட அன்பைக் கலந்து பிசைந்துவிடுகிறார். முன்பே பார்த்தோம், இந்திரா தேவி என்ற அமெரிக்க மூதாட்டியின் யோக அப்பியாஸத்தில் இவர் அன்பான மனோபாவங்களையும் ரொட்டி மாவில் நெய் சேர்ப்பது போல் சேர்த்துப் பிசைந்ததை. இப்படியேதான் ஜோதித் தியானத்திலும். ''அசையாத ஒரு தீபக் கொழுந்தையே உற்றுப் பார்- ஒருமுகமாகப் பார். அதை புருவ மத்தியில் நாட்டிக்கொண்டு உள்ளே அது தொண்டை வழியாக இறங்கி இதயத்தில் வந்து நிற்பதாக பாவனை செய். அதன் ஒளி உன் சரீரத்தின் ஸகல மூலை முடுக்குகளிலும் பாய்ந்து உன் தேகத்தையும், மனத்தையும், புத்தியையும் பரிசுத்தப்படுத்துவதாக உணர்'' என்று கூறும் ஸ்வாமி தொடர்ந்து, ''இதோடு நின்று விடாதே! இந்த ஒளி வெள்ளம் அன்பு அலைகளாகி உனக்கு வெளியிலும் ஸமஸ்த ஜீவராசிகளையும் தழுவித் தன் தூய்மையால் அவற்றின் தோஷங்களையும் துடைப்பதாக பாவித்து அநுபவி'' என்பார்.

மந்திர மகிமையை நிரம்பச் சொல்பவர் அவர். இந்த நாளில் ராக்கெட் முதலிய யந்திரங்களை வைத்துக்கொண்டு செய்வதை ஆதியில் மந்திரத்தாலேயே செய்துவிட்டார்கள் என்பார். ஆனாலும், ''மந்திர பீஜாக்ஷரங்களைக் கொஞ்சம்கூடப் பரிமாணம் பிசகாமல் மொழிவது சிரமமாயிற்றே, அவற்றை அக்ஷர சுத்தத்தோடு சொன்னால்தானே பலன்?'' என்று ஸாதகர் ஒருவர் கேட்டபோது,

''நீ ஏன் அதைப்பற்றி வருத்தப்படறே? அதெல்லாம் வறட்டு வறட்டு என்று ஜபம் செய்கிறவர்களுக்கு அல்லவா? பிரேமையில் நனைந்து ஜபம் பண்ணுகிறவர்களுக்கு இந்த அக்ஷர, ஸ்வர ஸ்பஷ்டம் எல்லாம் அத்தனை அவசியமில்லை. அம்மா தன்னைக் குழந்தை இலக்கணமாக, சுருதி சுத்தமாகக் கூப்பிடணும்

என்று எதிர்பார்ப்பாள்? பிரேமிக்கத் தெரியாமல் மெகானிகலாக ஜபிக்கிறவர்களுக்குத்தான் அந்த மாத்திரை எல்லாம் முக்கியம். அன்பில் நினைந்து ஜபித்தால், உச்சாரணத்தில் தவறு இருந்தாலும் லோக மாதா அதைப் பொருட்படுத்தாமல் அருள்வாள்'' என்றார்.

நமக்குச் செய்யும் பூஜையில் அன்பே எல்லாச் சடங்கையும், சாமக்ரியையும் விட முக்கியமானது என்பார். முன்னொரு முறை சம்ஸ்கிருத மகா பண்டிதர் ஒருவர் ''ஸத்ய ஸாயி பூஜா பத்ததி'' என்று வழிபாட்டு முறை ஒன்றை எழுதி வந்து, அதனை ஸ்வாமியிடமே படித்துக் காட்ட அனுமதி கோரினார். பகவானும் இசைவு தந்தார். சம்பிரதாயப்படி தியானம், ஆவாஹனம், ஆஸனம், பாத்யம், அர்க்யம், ஆசமனீயம், ஸ்நானம், கந்த—புஷ்ப—அர்ச்சனா—தூப—தீப—நைவேத்ய—தாம்பூலம்— நீராஜனம், மந்திர புஷ்பம், பிரதக்ஷிண நமஸ்காரம், அபராத க்ஷமாபனம், ஸமாபனம் என்றிப்படி ஒவ்வொன்றுக்கும் சுலோகங்கள் யாத்திருந்தார் அப் பண்டிதர். இதனை அவர் படிக்க, ஸ்வாமியும் முறுவலுடன் கேட்டுக்கொண்டார். முடிவில், ''இப்படியும் பூஜை செய்யலாம். இப்படித்தான் செய்ய வேண்டும் என்றில்லை. அன்போடு ஸ்மரிக்க எந்தச் சடங்கும் வாசகமும் உதவி செய்தாலும் சரி. இவை இல்லாமலே அன்போடு நினைத்தாலும் ரொம்பச் சரியே'' என்றார் பிரேமாவதாரர்.

பிரேமை யொன்றே பகவானிடம் செலுத்தப்படுகையில் பக்தியாகிறது என்பதால், பிரேம ஸாயி பக்தி மார்க்கத்தை எடுத்தியம்பிப் பரப்புகிறார். பக்தி மார்க்கத்தில் இரண்டு உண்டு. ஆரம்ப கால பக்தி; ஒன்று முடிவான பக்தி ஒன்று. இவ்விரண்டுக்கும் நடுவிலேதான் ஸம்பிரதாயமான சாஸ்திரங்களில் கூறப்படும் ஞான மார்க்கம் வருகிறது. இந்த ஞான வழியில் முதலில் உலகைக் கனவு, மாயை என்று ஒதுக்கத்தான் வேண்டும். ஞானம் பெற்றபின் உலகும் பகவானின் திருவிளையாடல் என்று கண்டு, தனக்குக் குற்றம் சேராமல் அதில் ஈடுபட்டு மகிழ முடியும்; உலகுக்கு நலன் புரியவும் முடியும். துச்சமான மாயை என முன் ஒதுக்க வேண்டியிருந்த உலகமே இப்போது பராசக்தியின் தர்ம மயமான அழகு விளையாட்டுச்சாலையாகி, நம்மோடு சேர்த்துக்கொள்ள வேண்டியதாகும். விளையாட்டைப் புரியும் அச் சக்தியிடமும் இப்போது ஒரு புதிய அன்பு பிறக்கிறது. இந்த நிலையில் ஞானத்தில் கனிந்த ஓர் அற்புத சக்தி பிறக்கிறது. முதலில் பக்தி என்ற கப்பி ரஸ்தா ஞானம் என்ற தார் ரோட்டில் சேர்த்தது எனில், இப்போது ஞானத் தார் ரோடு பராபக்தி என்ற மலர்ப் பூங்காவில் கொண்டு விடும். இப் பூங்காவில் மலர்ந்த புஷ்பங்களான ஸாயி வாக்குகளைக் கேளுங்கள்:

''உலகம் என்பது சூன்யக் கனவு அல்ல. அதற்கு ஒரு குறிக்கோள் உள்ளது. அது ஒரு நாடகம். அழகான கதைத் திட்டம் (ப்ளாட்) உள்ள நாடகம். உலகமே இறைவனைக் காண உதவுகிறது. உலக இயற்கையின் ஒழுங்கான போக்கு, கம்பீரம், அழகு இவற்றில் இறைவனைக் கண்டுகொள்ளுங்கள். மனித

Koviloor Digital Library

இயற்கையின் அன்பு, துறவு, சீலம், விச்வாஸம் இவற்றிலும் அவனைக் காணுங்கள்.''

''நித்ய ஸத்தியம் ஒன்றாகத்தான் இருக்க முடியும். அதுவே மாறுபாடற்ற பிரம்மம், அல்லது ஆத்மா. இப்படிச் சொல்வதால் மாறுபாடுள்ளதும், அநித்யமானதுமான உலகம் அஸத்தியமாகத்தான் இருக்க வேண்டும் என்றாகாது. நாடகம் என்பது நிஜ வாழ்க்கை அல்லதான். ஆனாலும் மேடையில் நடிக்கப்படுமளவும், நாடகத்தைப் பரம ஸத்தியமாக நினைத்தே ஆசிரியரின் கதைப்படி, டைரக்டர் இயக்குவித்தபடி அதைச் செம்மையாகத் தானே நடிக்க வேண்டும்? அப்படியானால் பகவானின் சங்கல்பத்தில் சிருஷ்டிக்கப்பட்ட உலக நாடகம் இன்னும் எவ்வளவு மடங்கு ஸத்தியமாக நடிக்கப்பட வேண்டும்? இதில் பகவான் ப்ரொட்யூஸரும், டைரக்டரும், கதை—வசனகர்த்தாவும் மட்டும் அல்ல. அவனேதான் நடிகர்களுக்கு உள்ளும் இருப்பவன்.''

பக்தியும் ஞானமும் ஒன்றுபடும் நிலையைத்தான் ஸ்வாமி, ''நேத்ரங்களை பிரேமை மயமாக்கிக் கொள்ளுங்கள்; அப்போது உலகே பிரம்ம மயமாகத் தெரியும்'' என்ற அமரவாசகத்தில் மொழிகிறார்.

''பக்திமார்க்கமும் பிரம்மத்தை அதுவாகவே ஆசி அநுபவிக்கும் ஞானத்தில் கொண்டு சேர்க்கும். பக்தன் இந்தப் பிரம்ம ஞானத்துக்கு ஆசைப்படாவிட்டாலும்கூட பகவானே அதை அவனுக்கு அநுக்கிரஹித்து விடுவார்.''

* * *

பிரேமையே உயிரினத்தின் பிராணன் என்று பாபா கூறுகையில் சூக்ஷ்மமான முறையில் யோக மார்க்கத்திலும் அன்பை நெய்துவிடுகிறார் எனலாம். இந்திரா தேவி, ராஜ யோகத்தில் செய்தாற் போலவே, பிராண சக்தியை எழுப்பிக்கொள்ளும் குண்டலினி யோகத்திலும் அன்பைக் கலந்து கலந்து பயிற்சி செய்ய வல்ல எவரையேனும் பாபா தோற்றுவிப்பாரோ என்னவோ?

மூச்சடக்கல், மனத்தை அடக்கல் ஆகியன இல்லாமல் சுத்த அன்பு பொழிவதையே ''பிரேம யோகம்'' என்று அழகுபடக் கூறும் ஸ்வாமி மேலும் சொல்வார் : ''கடவுள் ஒரு குறுகிய எல்லைக்குள் தந்துள்ள சுதந்திரத்தைக் கொண்டு சக்திகளை விரயமாக்காமல் பிரேம மயமாக வாழுங்கள். போதனு, நந்தனர், கௌராங்கர் (சைதன்யர்), ஜயதேவர், துகாராம், மீரா ஆகியோர் பிரேம யோகத்தாலேயே அஹங்காரம் அடியோடு கரைந்துவிடுகிறது என்று காட்டியுள்ளனர். 'எல்லாம் அன்பு மயம்'. 'ஸர்வம் ப்ரேம மயம்' என்று கூட 'ஸர்வம்' என்பதை 'ப்ரேமை'யிலிருந்து பிரிக்க முடியாமல், பகவத் அநுக்கிரஹத்தால் அத்வைத ஞான நிலையை அடையவும் பிரேம யோகமே வழி செய்துவிடும். இறைவன் அருளால் அடைய முடியாத ஒன்றும்

Koviloor Digital Library

இருக்க முடியுமா? அவ்வாறெனில் அத்வைத மோக்ஷத்தையும் அவனிடம் பக்தி செய்து, அதனால் பெறும் அருள் மூலமே அடைய முடியும்தான். எனவே உங்களைப் பொறுத்தமட்டில் எல்லா ஸாதனைகளின் ஸாரமும் பக்தியை வளர்த்துக் கொள்வது தான் எனக் கொள்ளுங்கள்; பிரேமையால் சித்தத்தைத் தூய்மை செய்துகொள்ளுங்கள். ஞானத்தால்தான் அத்வைத ஸத்தியத்தை அடைய முடியும் என்பது இல்லை. கர்மம், பக்தி, ராஜ யோகம் முதலிய எதுவானாலும் அதை அப்பழுக்கின்றிச் செய்தால் எதுவுமே ஸத்ய ஸாக்ஷாத்காரம் அளித்துவிடும். இன்னின்ன மார்க்கத்துக்கு இன்னின்னதான் பலன் என்ற சர்ச்சைக்கு அர்த்தமில்லை. இவற்றில் பெரும்பாலார் எளிதே பின்பற்றக் கூடியது பக்தியே—அதுவும் நாம கீர்த்தனத்தின் மூலமே.''

யோகம், ஞானம், மந்திரம் என்பன போலன்றி அன்பு எளிதாகத் தோன்றுவதால், அந்த மார்க்கங்களில் ஐயன் தரும் மஹாநுபவங்களைப் பிரேம மார்க்கத்தில் பெற முடியாதென்பதில்லை. அநேக ஸாயி பக்தர்கள் அவ்வப்போது இந்த அன்பானது தங்கள் என்பினுள்ளும் புகுந்து, பட்ட மரமொன்றை திடுமென இலைகளும், பூக்களும், பழங்களும் தழைத்த உயிர்த் தேக்கமாக்குவது போல், விவரிக்க வொண்ணாததோர் பேரநுபவத்தைக் கிளறி விட்டுக் குளிர வைப்பதை உணர்ந்துதான் வருகிறார்கள். வர்ணிக்கவொண்ணா இன்பம் முட்டி எழும். கண்களால் மட்டுமின்றி மயிர்க்கால்தோறும் ஒரு பிரேம ரஸ தாரை பொழிவது போலிருக்கும். அப்புறம் இந்த உணர்ச்சிக் கொந்தளிப்பு யாவும் அடங்கிப் பரம சாந்தத்தில் ஆழ்ந்து விடுவோம்.

'மஹா' அநுபவமாகத்தான் அன்பு தெரிய வேண்டுமா என்ன? அது சகஜமாக உள்ளபோது தரும் இதமான இன்பமே போதாதா?

அன்பே அமுதம், அன்பே தெய்விகம், அன்பே ஆனந்தம், அன்பே ஆத்மா; அதுவே தாம்; அதுவே நாமும் என்ற முற்றுணர்வோடு பாபா தம் சொற்பொழிவுகளின் இடையே நம்மை, ''அம்ருத ஸ்வரூபலாரா'', ''திவ்யாத்ம ஸ்வரூபலாரா'', ''ஆனந்த ஸ்வரூபலாரா'' என்றெல்லாம் அழைப்பது அன்பின் எல்லையில் பிறந்த விளிகளாகவே ஒலிக்கும்.

*

அன்பெனும் பரமசிவத்தை அபார ஆற்றலோடு பொழியவே அவதரித்துள்ள பராசக்தி நம் பாபா. இக் காவியத் தொடக்கத்திலிருந்து இவ்வன்பு ஜோதிமலையிலிருந்து எழுந்த லீலைக் கதிர்களையே தான் அடுக்கடுக்காகப் பார்த்து வந்திருக்கிறோம். மனித ரீதியில் அவர் செய்யும் சிறு சிறு காரியங்களிலும் அன்பே சொட்டுகிறது. உதாரணமாக :

பதினெட்டாண்டுகளுக்கு முன் பதரிநாத யாத்திரை செய்த ஸ்வாமி முதலில் டில்லிக்கு விமான மூலம் சென்றுவிட்டார்.

Koviloor Digital Library

பிறகுதான் பரிவாரத்தினர் ரயிலில் வந்திறங்கினர். டில்லி ரயில் நிலையத்துக்கே சென்று பாபா அவர்களை வரவேற்றார். அப்போது பரஸ்பரம் மோதிய அன்புப் பிரவாகம் உண்டே!

பரிஜனங்களுடன் வெயிலில் வெளியே போய்விட்டு வரும் போது பாபாவே முதலில் வேகமாக இருக்கைக்குள் பிரவேசிப் பார். மற்றவர்களுக்காக மின்விசிறியைப் போடுவார். அவர்கள் சிரம பரிகாரம் செய்துகொள்ளத் தம் தலையணைகளைக்கூட எடுத்துப் போடுவார். தாமே சர்பத் தயாரித்து விநியோகிப்பார்.

பிரசாந்தி நிலயத்தில் டாக்டர் மோடி நடத்திய கண் சிகித்ஸை முகாமில் பாபாவே மற்ற தொண்டர்களுடன், நோயாளி களுக்குப் படுக்கைகள்கூடப் போட்டிருக்கிறாரே!

இவ்வளவெல்லாம் செய்ய வேண்டுமென்பதில்லை. கூட்டத்தில் நாம் எழுந்திருந்து முறையிடுகையில், வட்டக் குழல் ஆடத் தலையைச் சற்றே சாய்த்து, மாதுளை மொட்டாக வாயைத் திறந்து, ''என்(னம்)மா?'' என்ற ஒரே வார்த்தையை அவர் உதிர்ப்பதில் ஓர் அன்பு ஸமுத்திரமே பெருகி விடுகிறதே!

தம் உபந்நியாசங்களை முடிக்கையில் அவர், ''ஆசிர்வதிஸ் தாநு'' என்று கூறும்போது அது ஒரு சிறிய வார்த்தையாகவா இருக்கிறது? அதன் ஒவ்வோர் அக்ஷரத்திலும் ஓர் அன்புப் பிரபஞ்சம் அல்லவோ உருண்டு வரும்? அதிகாரத்துவமும், குழைவும் ஒன்றுக்கொன்று முரணானவை. ஆனாலும் ஸ்வாமி அதிகாரபூர்வமாக ஆசிர்வதிக்கும்போதே அதில் எத்தனை குழைவு இழைகிறது?

பாபாவுடைய அன்பின் சக்தி மகா அதிசயமானது. சதுரங்க சேனை பலத்தாலும் முடியாததை இச் சிறு மூர்த்தியின் அன்புச் சக்தி சாதித்து விடுகிறது. ஆம், டில்லி, பம்பாய் போன்ற இடங்களில் கட்டுக்கடங்காத கூட்டம் சேர்ந்து போலிஸாரும் 'ஸ்டாம்பீட்'தான் ஏற்படப்போகிறது என்று பயந்து நடுங்கிய சந்தர்ப்பங்களில் பாபா அந்த அமளி துமளிக் கூட்டத்திடையே அன்புச் சுடர் தெறிக்கும் கண்களோடு அமைதியாகப் பிரவேசிப் பார். சண்ட மாருதமாகக் கிளம்பிய கூட்டமும் எப்படியோ மந்த மாருதமாக அடங்கி அமர்ந்துவிடும். எப்படியோவா? அன்பின் சக்தியில்தான். அந்தச் சக்தி சிவமயமாதலின் சாந்தத்தில் அடங்குவதே அல்லவா?

பல சமயங்களில், கூட்டம் முடிந்தபின் பாபா எப்படி பக்தி வெறியில் நெரியும் மக்களிடை வழி ஏற்படுத்திக் கொண்டு வந்து, அவரது காரைச் சுற்றிச் சூழ்ந்துள்ள அன்புப் பித்தர்களை மீறி வண்டியில் ஏற முடியும் என்று உடன் சென்றோர் நடுங்கிய துண்டு. ஆனால் மந்திரத்தில் கட்டுண்ட சர்ப்பமாக மக்கள் ஆவேசம் அடங்கித் தமக்கும் அடங்கிப் போகுமாறு ஸ்வாமி செய்துவிடுகிறார். எதுவுமே செய்யாமல் வெறும் அன்பாலேயே இதைச் சாதித்து விடுகிறார்.

இப்படிப் பிரம்மாண்டக் கூட்டங்கள் சேருவதே ஸ்வாமியின் பிரேம சக்தியால்தான். ஆம், இது ஓர் அற்புதமே. ஏனெனில் ஸ்வாமியின் விஜயம், பொதுக்கூட்டம் முதலியன குறித்துச் செய்தித் தாள்கள் மூலமோ, சுவரொட்டிகள் மூலமோ, நோட்டீஸ் மூலமோ விளம்பரம் செய்யும் வழக்கமே கிடையாது. ஆயினும் அவர் ஓரிடத்துக்கு வருகிறாரெனில் ஆயிரமாயிரம் மக்கள் திரண்டுவிடுகிறார்கள்.

ஸ்வாமி ஆழ்வார்ப்பேட்டையிலிருந்து சென்னையில் பல இடங்களில் உள்ள பக்தரில்லங்களுக்கோ, ஸாயி ஸங்கங்களுக்கோ புறப்படுகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். தாம் போவது எங்கே என்று அவர் பெரும்பாலும் எவரிடமும் சொல்வதில்லை. காரில் ஏறிய பின் டிரைவரிடம் மட்டும் சொல்வார். ஆனாலும், இவர் ஷிர்டி பாபா கோயிலுக்கோ, பெரம்பூர் சாந்தி நிவாஸுக்கோ, பக்ஸ் சாலைக்கோ, அப்பட்ஸ்பரிக்கோ போகிறார் எனில், இவர் அங்கு செல்வதற்குள் மாபெரும் கூட்டம் சேர்ந்து விடுகிறது. ஆழ்வார்ப்பேட்டையில் தரிசித்த பக்தர்களில் பலரும் கூட இங்கெல்லாமும் வந்து விடுகிறார்கள்.

ஆதியில் நாம் கண்ட பெங்களூர் கிருஷ்ணமூர்த்தி ஒருவர் தான் பாபாவை 'மோப்பம்' பிடித்தார் என்றில்லை. அவரளவுக்கு இல்லாவிட்டாலும், பக்தரான நாம் அனைவருமே துளி அவரை மோப்பம் பிடிப்பதால்தான் எவ்வித அறிவிப்பும் இன்றியே, அவர் விஜயம் புரியுமிடமெல்லாம் இப்படி மகத்தான ஜனத்திரள் சேர்ந்துவிடுகிறது. அவருடைய அன்பின் அதி ரகசிய மணத்தைத் தான் நாமறியாமலே மோப்பம் பிடிக்கிறோம்.

பெங்களூர் ஒயிட் ஃபீல்டில் பாபா தனிப் பேட்டி தருவதில்லை என்று தெரிந்தும், சென்னையிலிருந்து (ஏன், இன்னும் அப்பாலுள்ள இடங்களிலிருந்தும்) அங்கு ஓடுகிறோம். பல மணி நேரம் பழியாகக் காத்துக் கிடக்கிறோம். பிரபு வருகிறார். ஓர் ஐந்தே நிமிஷம் நம்மிடை உலவிவிட்டுப் போய்விடுகிறார். நம்முடன் அவர் பேசவில்லை. நாம் அவர் பாதத்தைத் தொட்டு வணங்கக்கூட அநுமதிக்கவில்லை. மிகச் சிறிது நேரம் அவரைப் பார்த்தோம், அவ்வளவுதான். ஆனாலும் நமது பெரிய சாதிப்புக்களில்கூட நிறையாத நம் நெஞ்சம் இப்போது ஏன் ஆனந்தத்தில் நிறைந்துவிடுகிறது? பிரயாணம், செலவு, மற்ற சிரமங்களெல்லாம் தகுதிக்கு மேற்பட்ட பலனைத் தந்ததாக என்னுகிறோமே, அது எதனால்? ஐயனின் பிரேம சக்தியாலும், அது நம்முள் எதிரொலியாக எழுப்பும் அன்பின் ஆற்றலாலுந் தான்.

நம் குறைகளைச் சொல்லி பாபா நம்மை வாங்கு வாங்கு என்று வாங்குகிறாரே, அப்போது நம் அனைவர் நெஞ்சம் அடங்கி, அதை வாழ்த்தாக வாங்கிக் கொள்கிறோமே, இது எதனால்? நாம் என்ன! பட்ட படோடக்காரான மந்திரிகள், நீதிபதிகள், துணை வேந்தர்கள், தொழிலதிபர்கள், கலைஞர்களையும் அறுக்க மாமனிதர்களை பாபா என்ன காய்ச்சக் காய்ச்சுகிறார்? இதில்

Koviloor Digital Library

ஆயிரத்திலொரு பங்கையேனும் அவர்கள் பிறர் எவரிடமிருந்தேனும் பொறுப்பரா? ஆனால் பாபா வைவதையே அவர் பட்டம் கொடுத்தாற்போல் மகிழ்ந்தேற்று, அந்த வசவுகளை இவர்களே பிறரிடமும் பூரித்துக் கூறுகிறார்களே! இந்த அகந்தை நாசம் எப்படி நடக்கிறது? கோபத்துள்ளும் கொப்பளிக்கும் திவ்யப் பிரேமையால்தான்!

திட்டுவதும் நம்மைப் பொருட்படுத்துவதால்தான் என்பதால் வசவை நாம் ஏற்பதிலும் 'யமோதத்வ நியாயம்' இருக்கலாம். அவர் நம்மைப் பொருட்படுத்தாத சந்தர்ப்பங்களும் உண்டே! பெரிய பிரச்னையுடன் பர்த்தி செல்கிறோம், ஐயன் தீர்ப்பார் என்ற ஆவலுடன். ஆனால் அவர் நம்மைக் கோரிக்கைக்கு அழைக்கிறாரில்லை. நாட்கணக்கில் தங்குகிறோம். இதனால் பல சிரமங்களைப் படுகிறோம். ஊஹூம், அவர் நம்மைக் கண்டு கொள்ளவே யில்லை. எவ்வித பிரச்னையுமில்லாமல், விசேஷ பக்தியும் இல்லாமல், ஏதோ பொழுதுபோக்காக வந்தவர்களைப் பேட்டிக்குக் கூப்பிடுகிறார்; நம்மைப் புறக்கணிக்கிறார். கடைசியில் பேட்டியின்றியே திரும்புகிறோம். நம் பிரச்னையும் திராமலே தான் இருக்கிறது. ஆயினும் நாம் ஐயனை நொந்து கொள்வதில்லை; பட்சபாதி என்று குறை சொல்வதில்லை. சற்று அலக்ஷியம் செய்யப்பட்டாலும் பொங்கி எழும் நம் அகங்காரம் இப்படி அடிபட்டுப் போனது எதனால்? அவரது பிரேம சக்தியால்தான். நமக்கும் அவருக்கும் வெளித் தொடர்பு ஏற்படாவிட்டாலும் உள்ளூற அவரோடு நமக்குள்ள நீங்காத, நீக்க முடியாத, பிரேம பாசத்தால்தான்.

பௌதிகப் பிரபஞ்சத்தின் அடிப்படையான இரு பெரும் விதிகள் ஈர்ப்பதும் (attraction) விலக்குவதும் (repulsion) தான். இதற்கு மூலம் மானஸப் பிரபஞ்சத்தின் ஈர்ப்பான அன்பும், விலக்குவதான வெறுப்புந்தான். பிரேமையாம் ஆகர்ஷ சக்தியாலேயே 'க்ருஷ்ணன்' எனப் பெயர் கொண்டு அன்று எவன் பிருந்தாவனத்தையும், துவாரகையையும் பிச்சேற்றினானோ, அவனேதான் இன்று ஸாயிக் காந்தனாக வந்து, நம் இரும்பு மனங்களையும் இப்படிக் காந்தமாக ஆகர்ஷிக்கிறான்! அவரைப் பற்றி நானாவிதமான புரளிகள் பரப்பப்பட்டும் நாவிலமெங்கிருந்தும் நாள் தோறும் அவரிடம் அடியார் கூட்டம் பல்கிப் பெருகி வருவது அவரது அன்பின் காந்த சக்தியால்தான்.

மக்கட் கூட்டத்திடையே அவர் சஞ்சரிக்கும்போது மௌனமாகவே இருக்கலாம்; அவர்களிடம் பட்டுக்கொள்ளாமல் விலகியிருப்பதாகவும் காணலாம். ஆயினும்கூட அவர் மக்களது அதி ரகசியமான ஆசை அபிலாஷைகளையும் அறிந்தவராக, அவற்றில் நல்லதை ஈந்து, அல்லதைப் போக்கப் பரிவு கொண்டிருப்பது அவரது பம்பை முடியிலிருந்து பங்கஜ அடிவரையில் ததும்பிக்கொண்டு தெரியும். அன்பே உருவாக அவர் கூட்டத்திடைச் செல்வதை நினைத்தாலே தமக்குக் கண்கள் தாரையாகக் கொட்டுகின்றன என்பார் இந்திரா தேவி.

Koviloor Digital Library

பெண்களின் கண்கள் தாரை பொழிவதைவிட, இறுக்கமான ஓர் ஆடவர் மெழுகாக உருகுவது விசேஷம்தானே?

சமீபத்தில் ஸ்வாமியைப் பற்றி Sai Baba, The Holy Man — and the Psychiatrist என்ற அருமையான நூலைத் தந்துள்ள ஸாமுவேல் ஸாண்ட்வைஸுக்கு நம்பிக்கை வருவதற்கு முற்பட்ட கால சம்பவமொன்று. ஸ்வாமி ஏழை எளியவர் கூட்டத்திடை புகுந்து அன்ன, வஸ்திர தானம் செய்கிறார். இக்காட்சியில் ஸாண்ட்வைஸ் அறியாமலே அவரது கண்கள் தாரையைப் பெருக்குகின்றன. திடீரென ஒரு ஜன்னல் திறந்து, அதன் மறுபுறம் சாக்ஷாத் கடவுள் காணப்பட்டால் எப்படி உணர்ச்சி வெடித்துப் பொங்கும்? அப்படியிருந்ததாம். அனைத்துமறிந்தவனும், அனைவர்க்கும் ஆறுதல் தருபவனுமாகப் பரமண்டலத்தில் ஒரு பரம பிதா இருப்பதாக பைபிள் சொல்கிறதல்லவா? அப்படிப்பட்ட பிதா வாஸ்தவத்தில் இங்கேயே மனித ரூபத்தில் இருக்கவும் முடியும் என்ற சாத்தியக் கூறு அழுத்தமாகத் தோன்றியதாம்! ஆம், அப்போது பக்தராகாதவருக்கே!

* * *

பிரேம ஸாயி புரியும் மதுரதமமான அருள் நம் இதயத்திலும் பிரேமையைத் தோற்றுவிப்பதே. ஸாயி பக்தர்களிடையே நிலவும் பாத்தவ்யம் கற்கண்டானது. அவர்களுக்குள் முன்பின் தெரியாதவர் என்றே இல்லை. இன்னொருத்தர் ஸாயி பக்தர் என்று அறிந்த மாத்திரத்தில் இரு இதயங்களுக்குமிடையே அன்புப் பாலம் அமைக்கப்பட்டு விடுகிறது. பரஸ்பரம் மனமார உதவிபுரியும் பான்மை ஏற்பட்டுவிடுகிறது. ஹவார்ட் மர்ஃபெட் இதை அடிக்கோடிட்டுக் குறிப்பிட்டுள்ளார். தாம் அநேக ஸ்வாமிகளைச் சேர்ந்த அடியார்களிடம் பரிசயம் கொண்டிருந்ததாகவும், இவர்கள் யாவரும் தமக்கு அன்போடு உதவி புரியத்தான் செய்தார்கள் எனினும், இந்த ஸாயி பக்தர்கள் மட்டும் அன்பு செய்வதிலும், உதவி அளிப்பதிலும் மற்றவர்களை விடப் பலபடிகள் மேலே இருக்கிறார்கள் என்றும் அவர் பாராட்டி எழுதியுள்ளார்.

இந்நூலாசிரியன் இச் சரிதத்தை எழுதுவதிலும், இதற்கான புகைப்படங்கள் பெறுவதிலும், இதையொட்டி மேலும் பல விதங்களிலும் சென்றவிடமெல்லாம் ஸாயி பக்தர்களின் நிறைந்த இதயத்திலிருந்து பெற்ற உண்மையான அன்பும், உத்தமமான உதவியும் உண்டே, ஆஹா!

இவன் மற்றோரிடமிருந்து பெற்ற பிரேமை இருக்கட்டும் ; தன் இதயத்துக்குள்ளேயே பெற்ற பிரேமாவேசம் இதனினும் விசேஷம். ஸாயிநாதனை தரிசித்து, அவர் பாதம் போகும் இடங்களிலெல்லாம் தன் இதயமும் கண்மூடிக் கண்டி இழுக்கப்பட்ட போதுதான் இவனுக்குப் பிரேமாநுபவம் என்பதன் இனிமையே புரிந்தது. வறண்டு கிடந்த தன்னாலும் இத்தனை பிரேமிக்க முடிகிறதா என்று இவன் ஆச்சரியப்பட்டிருக்கிறான். பாலை

Koviloor Digital Library

இதயத்தில் அவர் அப்படியோர் அன்புத் திருக்கோயின் ஊற்றுக் கண்களை திறந்து விடுகிறார்.

இப்படி எத்தனை பேருக்கு?

மலைச் சிகரத்தில் விர் விர்ரென வீசும் காற்றைப் போல் அல்லவா ஸாயி ஸந்நிதியில் அன்பு புயலடிக்கிறது?

ஒரு சில ஆண்டுகளுக்கு முன் சென்னையில் வேங்கட முனி பங்களாப் பந்தலில் அடியார்கள் நீண்ட நேரம் ஸ்வாமிக்காகக் காத்திருந்தார்கள். அடியார் பலரது இல்லங்களுக்குச் சென்று ஐயன் திரும்ப நெடுநேரமாகி விட்டது.

அவர் திரும்பியவுடன்,

அப்பப்பா! ஒரு பிரேமைப் பிரவாகம் பொங்கியிருக்கிறதே! படே படேக்களிலிருந்து பாமரர் வரை அவரது கால்களைக் கட்டிக்கொண்டு விடவே இல்லை. மத்த யானைகளும் பூனைக் குட்டிகளாகக் கிடந்தன இங்கே!

சாதாரணமாக, 'போறும், போறும்', 'அப்படியெல்லாம் பண்ணக் கூடாது' என்று கூறி, தம் பாதத்தைத் தீண்ட வருவோரைத் தடுக்கும் ஸ்வாமியும் இன்று மலையாக வந்த அன்பு அலையில் உருட்டிப் புரட்டப்பட்டார் போலும். எவரையும் தடுக்காமல் கருணை விக்கிரஹமாக நின்று விட்டார்.

கூட்டத்தில் ஒருவர் தொண்டை அடைக்க, "தாய்ப்பசு மேய்ச்சலுக்குப் போய்த் திரும்பி விட்டது. கன்றுக் குட்டிகள் விடுமா?" என்றார்.

'கோமாதா' என்றும் 'கோவிந்த ரூபிணி' என்றும் ஸஹஸ்ரநாமம் போற்றும் லலிதைத் தாயைத் தவிர, வேறெவர் பகை நிறைந்த இவ்வுலகில் இப்படி அன்பைப் பூர்ணிமை நிலவாகப் பொலிவிக்க முடியும்?

ஸாயித் தாயிடம் மட்டுமே பொங்கும் இவ்வன்பு ஊற்று நாளாவட்டத்தில் அவளது குழந்தைகளான எல்லா உயிர் களிடமுமே பாயத் தொடங்கும். "உங்களுக்குத் தொழில் இங்கே அன்பு செய்தல் கண்டீர்" என்ற அமர கவியின் வாக்கு முழு சத்தியம் என்று புரியவைப்பார்.

ஜான் ஹிஸ்லாப் பகவான் தரிசனத்தின் விளைவைச் சொல்கிறார், கேளுங்கள்: "இதை எழுதுபவனின் (ஹிஸ்லாப்பின்) வறட்சியான மேனாட்டு இதயத்தில் அன்புக் கரென்ட் ஓட ஆரம்பித்தது. இந்த அன்போட்டத்துக்கு மூலம் (ஸத்ய ஸாயி) பகவானே என்று மிகத் தெளிவாகத் தெரிந்தது...இதற்கும் மேலே, தன் இதயத்துள் பகவானின் மாதுரியமே உயிரோடு உறைந்துள்ளது என்று தெரிந்தது. முன்பின் தெரியாத தன்

Koviloor Digital Library

இதயத்தில் பகவான் இருக்கிறார் எனில், தன்னைப்போல் அவரைத் தெரியாதவராக நினைத்துள்ள எல்லோர் இதயங்களிலும் அவர் பிரசன்னமாக இருக்கிறார் என்பதை மறுப்பது பகுத்தறிவின்மை தான் என்ற உணர்ச்சியும் ஏற்பட்டது.''

* * *

ஸ்வாமியின் அன்பு மக்களை இழுக்கும் இழுப்புக்கு, கடந்த சில ஆண்டுகளாகப் பிரசாந்தி நிலயத்தில் நடக்கும் ஓணத் திருவிழா ஓர் அருமையான சான்று. ஓணத்தன்று மாஹபலி பாதாளத்திலிருந்து கேரளத்துக்கு வருவதாக ஐதிஹ்யமாதலால் அன்று வெளியூர்களிலும் வெளிநாடுகளிலும் உள்ள மலையாளி களும்கூடப் பிறந்த ஊருக்கு வந்து விடுவார்கள். கேரள மண்ணுக்கு அன்று அப்படி ஒரு விசேஷம் என்ற உயர்வு மலையாளிகளின் ரத்தத்தோடு கரைந்து விட்டதாகும். ஆயினும் சிற்றடியால் மூவுலகளந்த வாமன மூர்த்தியே இன்று சிறு மூர்த்தியாகி ஐந்து கண்டங்களையும் பிரேமையால் 'அளந்து' வருகிறாரல்லவா? வாமனராக வந்து மாவலிக்கு வருடத்தில் ஒரு நாள் தந்த மவுஸையும் இவர் தஸ்கரம் செய்யப் பார்க்கிறார்! ஓணத்தன்று சொந்த பூமியை விட்டு விலக ஒருகாலும் பிரியப்படாத கேரளியர் பலர் இத் திருநாளில் பிரசாந்தி நிலயத் துக்கு வந்து குழுமத் தொடங்கியுள்ளனர். முதலில் நூற்றுக் கணக்கில் இருந்து வந்த கூட்டம் இப்போது ஆயிரக் கணக்காகி வருகிறது. இது அன்பின் மஹா பலமே. தாயக பாசத்தையும் அத் தாயின் பாசத்தில் தியாகம் செய்து விட முடிகிறது.

இந்த பிரேமாகர்ஷணத்தின் பூர்ண சக்தியைப் பிற்பாடு ஸ்வாமியின் கிழக்காப்பிரிக்க விஜயத்தில் பார்ப்பீர்கள்.

பொதுவாக ஸ்வாமிக்கு மாபாவி உட்பட — தமக்கு விஷம் வைக்கச் சதி செய்தவர் உட்பட — அனைவரிடமும் பொங்கும் அன்புக்கு நூல் நெடுக உதாரணங்கள் பார்த்து விட்டோம். குறிப்பாக, ஏழையரிடமும் ஏதலரிடமும் அவர் உள்ளம் அனிச்சமலராகக் குழைவதை, பிச்சைக்காரருக்கு இட்டுத் தாமே பட்டினி கிடந்த பச்சைக் குழந்தைப் பருவத்தி லேயே கண்டோம். ''சென்னையம்பதியில் ஒரு ஷிர்டி-பர்த்தி'' என்ற அதிகாரத்தின் இடைப் பகுதியில் இம் மதுர காவியம் விரியக் கண்டோம். உடன் வந்த தனவான்களை விட்டு, கடைமல்லைச் செம்படவர்களைக் கூப்பிட்டுக் கூப்பிட்டு ஸ்வாமி அமுதம் ஈந்ததொன்று போதாதா? போதாது எனில் இன்னம் ஒன்றே ஒன்று பார்த்து விடுங்கள்:

அந்தக் கிழவி ஏழையிலும் பரம ஏழை. அசுத்தம் பிடித்த தனக்குப் பிரசாந்தி நிலயத்தின் பஜனைக்கூடத்துள் போகத் தகுதியில்லை என்று அவளாகவே தீர்மானித்துக்கொண்டு, அக் கட்டடத்துக்குப் பெண்கள் வரும் பின்புற வராந்தாவிலேயே காத்துக் கொண்டிருந்தாள். சுத்தத்தின் வடிவேயான பாபாவிடம் பெரிதாக ஒன்றை எதிர்பார்த்தே காத்துக் கிடந்தாள் — அது

Koviloor Digital Library

எவர் தகுதிக்குமே அப்பாற்பட்டது என்று அறிந்துங்கூட. அறிவு வேறு, அன்பு வேறு அல்லவா? அதனுல்தான்.

இவளது ஆசையைத் தெரிந்துகொண்ட பெண்களில் சிலர் ஏளனச் சிரிப்புச் சிரித்துக்கொண்டனர். மற்றவர்கள், 'பாவம், என்னவோ இப்படி ஓர் ஆசை! ஆனுல் ஸ்வாமி இந்தப் பின் வராந்தாப் பக்கம் வருவதே கிடையாதே' என்று பரிதாபப் பட்டனர்.

காத்துப் பார்த்த கிழவி வராந்தாவிலேயே படுத்துவிட்டாள்.

மாலை மணி நாலு இருக்கும்.

ஐயன் அறைக்கு எதிரேயுள்ள முன்புற வராந்தாவிலும், வெளியிலும் பக்தர்கள் தரிசனத்துக்காகக் கூடியிருந்தனர். அப்போது கவர்னராக இருந்த டாக்டர் பி. ராமகிருஷ்ண ராவும் கூட்டத்தினரில் ஒருவர்.

கதவம் திறந்தது.

பகவன் வெளிவந்தார்.

வழக்கமாக வெளிவந்தவுடன் ' ஹம்ஸ கதியில்தான் அடி வைப்பார். இன்றோ வழக்கத்துக்கு விரோதமாகப் பரபரத்தார், பறந்தார் — அதுவும் வழக்கத்துக்கு விரோதமான எதிர்த் திசையில்.

ஆம், சொல்லி வைத்தாற்போல் கிழவி படுத்திருந்த பின் வராந்தாவுக்கே சென்ருர்.

அதற்குள் அங்கு கூடிவிட்ட பெண்டுகள் கண்ட கற்கண்டுக் காட்சியை என்னென்பது?

அசங்கியமான ஏழைக் கிழவியின் வெகு அண்மையில் சென்று நின்ருர் அண்ணல்.

வாரிப் புடைத்துக்கொண்டு எழுந்து நின்ற அவளிடம், ''நான்தான் பாபா, உன் குழந்தை வந்திருக்கேன். எங்கே, அந்த வெற்றிலையைக் கொண்டா'' என்ருர்.

கண்ணன் குசேலரிடம் செய்தாற்போலவே (குசேலராவது வறியவராயினும் சுசி ருசியானவராயிற்றே!)பிடுங்காத குறையாக அவளுடைய அழுக்குச் சுருக்குப் பையை வாங்கிக் கொண்டார். வெண்ணெயாக உருகிக் கொண்டு, எண்ணெய் ஏறிய அப் பையைப் பிரித்தார். அதிலிருந்து காய்ந்து கிடந்த வெற்றிலைச் சருகு, கல்லாகி விட்ட சுண்ணாம்பு, தேய்ந்து போன களிப்பாக்கு முதலியவற்றை எடுத்துக் களிப்புடன் கனிவாயில் இட்டுக் கொண்டார் — தாம்பூல அதரத்திலும் சிவந்த இதயத்தவர்!

Koviloor Digital Library

'தகுதி'க்கு மீறிய மனோரதம் பூர்த்தியுற்ற அக் கிழவி மட்டுந்தானா அழுதாள்? அந்தப் பெண்களும் — ஏளனமாகச் சிரித்தவர், பரிதாபப்பட்டவர், கோடீச்வரர்கள் சுகந்தப் பொடிகள் யாவும் நிறைந்த தாம்பூலத்தை பாபாவுக்கென்றே செய்த தங்கக் காளாஞ்சியில் வைத்துச் சமர்ப்பிக்க அதைத் தொடாமலே அவர் சென்றதைப் பார்த்தவர்கள், ஆக எல்லோருமே — அன்று கண்ணீர் விட்டு விட்டார்கள்.

ஜகன்மாதாவான ஸாயீச்வரி அக் கிழவிக்குக் குழவியானது அனைவரையுமே அன்பில் குழைத்துவிட்டது.

பாபாவின் பொதுவான மக்களன்புக்கு இதோடு உதாரணம் போதுமாயினும், குழவிகளிடம் அவருக்குள்ள தாயன்பைப் பற்றித் தனியே சொல்லத்தான் வேண்டும்.

தாயாலும் முடியாததை இவர் தாயினும் சாலப் பரிந்தே சாதித்து விடுவார். மேலே, அடங்காத மக்கட்கூட்டமும் இவரது பிரேமையில் பெட்டிப் பாம்பாவதைப் பார்த்தோம்! இதே விதமாகத்தான் என்ன செய்தாலும் கட்டுப்படுத்த முடியாத அடங்காப் பிடாரிக் குழந்தைகளையும் பாபா அநாயாஸமாக அடக்கி விடுவார்.

மக்களனைவரையும் குழந்தைகளாகக் கொண்டுள்ள ஸாயம்மா வயதிலேயே குழந்தைகளாக உள்ளவர்களோடு புரியும் அன்பு - அது ஒரு தனி காவியந்தான். பொம்மைகளும், தின்பண்டங்களும் தந்து குழந்தைகளைக் களிப்பூட்டுவார். வித விதமான சப்த ஜாலங்கள், கோணங்கிகள், மிமிக்ரி எல்லாம் செய்து குழந்தைகளை ஆனந்த லோகத்தின் உச்சிக்குத் தூக்கி விடுவார். அப்போது ஸாயம்மாவா, ஸாயியே பச்சைக் குழந்தையா என்று தோன்றும். கை நிழலாட்டத்திலேயே பாபா காட்டும் விநோதக் காட்சிகள் அனந்தம். பெருங் கூட்டத்திலும் ஸ்லேட்டும் கையுமாக நிற்கும் குழந்தைகளிடம் வந்து அவர் 'ஓம்' எழுதித் தருவதில்தான் எவ்வளவு அன்பு கொழிக்கும்!

குழந்தைகளை அவர் மார்போடணைத்துக் கொள்ளும் போதோ 'ஞானப் பாலூட்டும் ஸாயி மாதா' என்ற பாடல் உடல் தரித்து வந்ததாகத் தோன்றும்.

ஒரு காலத்தில் பெரியவர்களிடம் செலவிட்டதைவிட அதிகப் போதை அவர் குழந்தைகளிடமே செலவிட்டிருக்கிறார். பந்தை உருட்டி, அதனால் அடிப்பது போல் குழந்தையிடம் வீசுவார். அது அஞ்சி ஓடப் பார்க்கும். ''பங்காரு, அதைப் பார்'' என்பார் ஸ்வாமி. பார்த்தால் மண்ணுருண்டை லட்டுவாகி யிருக்கும்.

குழந்தைகளை நயமாகவும், பயமாகவும், தாஜா செய்தும், மிரட்டியும் வழிக்குக் கொண்டு வருவதில் அவரிடம் அன்னையரும்

Koviloor Digital Library

பாடம் படிக்கத்தான் வேண்டும். குழந்தை வளர்ப்பில் தாயார் களுக்கும், ஆசிரியர்களுக்கும் பாபா மிக நுட்பமான விஷயங்களை விளக்குவார். குழந்தைக்குப் பல் முளைக்கிற சமயம், நடை கற்றுக்கொள்ளும் சமயம், பால் மறக்கடிக்கிற சமயம் ஆகிய வற்றில் அதன் தேக, மன ஆரோக்யங்களைப் பேணுவதற்காகப் பெரியோர் பொறுமையுடன் இன்னின்ன செய்ய வேண்டும் என்று தேர்ந்தெடுத்த சைல்ட்-ஸைகாலஜிஸ்டும் தோற்றுப் போகும் விதத்தில் அறிவுரை தருவார் ஸ்வாமி.

நாடகம் முதலிய கலை நிகழ்ச்சிகளில் குழந்தைகள் பங்கு கொள்ளும்போது அதைத் தவம் போன்ற தீவிர கவனத்துடன் பாபா பார்த்து மகிழ்ந்து, பரிசுகள் தருவதும் இந்த அன்புத் தருவின் அருங்சுவைக் கனிகள்தாம்.

* * *

குழந்தைகளிலிருந்து எல்லாப் பருவத்தினரிடமும் அன்பு பூண்டவர் அவர். படு கிழவர்களையும் ''என்னம்மா, ஏதம்மா'' என்று குழந்தைகளாக்கி அழைப்பவர். வருங்காலப் பிரஜை களான மாணவரிடம் அவரது அன்பு கொள்ளும் மாண்பு அதிசயமானது. பெரும்பாலும் இவர்கள் தவறான வழியில் போக ஹேது அதிக முண்டு. இதனாலேயே, இவர்களிடம்தான் எதிர்காலம் இருக்கிறது என்பதால் பாபா இவர்களைத் தமது ஓவர்-டோஸ் பிரேமையில் முழுக்கிப் பதப்படுத்துவதுண்டே, அது அலாதியிலும் அலாதிதான். தப்பிப் போகிற, போகக் கூடியவர் களிடம் பரிதாபத்தை, அநுதாபத்தைக் குழைத்துத் திருத்தும் பூரண பிரேமை இதயத்தையே இங்கு காண்கிறோம்.

பால விகாஸ் குழந்தைகளிலிருந்து, கல்லூரி மாணவர்வரை பாபா உடன் வைத்துக்கொண்டு அடிக்கும் கொட்டம் உண்டே! தேனை மொய்க்கும் ஈக்களாக இவர்கள் அவரை நெரித்து, பரம ஸ்வாதீனமாக அவரைப் படுத்தும் பாடும் அதி விசேஷந்தான். போட்டி போட்டுக்கொண்டு ஒரு பெரிய மரத்தைச் சுற்றித் தழுவும் பல சிறிய பெரிய கொடிகள் போல், இச் சிறுரும் யுவருமாக பாபாவின் பாதங்களை அமுக்கி விடும் ஒரு காட்சியை இங்கு புகைப்படமாகத் தந்திருக்கிறோம். நம் இதயத்தையே இதமாகப் பிடித்துவிடும் பிரேமையின் தழுவல்தான்!

பிரசாந்தி நிலையத்திலும், பிருந்தாவனத்திலும் பாபாவின் தனியறைகூட இரவு உள்பட எப்போதும் அவரது ஆண் கல்லூரி களின் மாணவர்களுக்காகத் திறந்து கிடக்கும். ஸ்வாமியுடனேயே உண்டு, உரையாடி, உறங்கும் இந்த மகா அதிருஷ்டக்காரர்களை நினைந்து நாம் பொறாமைப்பட முடியாமல், பெருமையே பட வைத்திருப்பதும் ஐயனின் பிரேம சக்திதான்.

ஆம், பாபா நம்மைப் புறக்கணித்துவிட்டு அல்லது அதட்டி விட்டு, பக்கத்திலே உள்ள இன்னொருவருக்கு விபூதி நிருஷ்டித்துத்

தரும்போதுகூட நமக்கு உவகையே ஊற்றெடுக்கிறது. எந்த ஒருவருக்கு ஸ்வாமி அநுக்கிரஹித்தாலும் அதை பக்தகுலகம் முழுதும் நெஞ்சாரப் பகிர்ந்து கொள்வது அந்த அம்மாவின் அன்புச் சக்தியால்தான்!

* * *

மக்களிடம் பாபாவின் அன்பு லீலையை நிறையப் பார்த்து விட்டோம். இனி மாக்களிடம் மாதேவனின் அன்பைச் சிறிது பார்ப்போம்.

மனித குலத்திடம் மட்டுமின்றி எல்லா உயிரினங்களிடமும் இதயத்தை இழைய விட்டு, அவற்றின் நலனைக் கோருவது கிறிஸ்துவம், பௌத்தம், இஸ்லாம் மட்டுமின்றி வேத மதத்தின் அடிப்படை விதிகளிலும் ஒன்று. சிவபிரான் பசுபதியானவன். திருமால் கோபாலனானவன். ராமன் குரங்கையும் கரடியையும் அணிலையும் உற்றோராகக் கொண்டான். புத்தரும் இயேசுவும் ஆட்டுக் குட்டியை அருமைச்சிட்டனர். ஸத்ய ஸாயி நாதனின் பேரன்புக் குடும்பத்தில் சேராத விலங்கினமோ, பக்ஷியினமோ, பூச்சியோ, புழுவோ இல்லை.

ஆரம்ப அத்தியாயங்களிலேயே பால ஸத்யாவின் ஜீவகாருண்யத்தைக் காட்டிய மதுரமான விவரங்களையும் இங்கு வாசகர் நினைவு கொள்ளலாம்.

ஆதியில் பிரசாந்தி நிலயத்தில் எத்தனையோ நாய்கள், மான்கள், மயில்கள், முயல்கள் ஆகியன வைத்து வளர்த்திருக்கிறார். பஞ்ச கல்யாணிக் குதிரை ஒன்றுகூட அவரிடம் செல்லமாக வளர்ந்திருக்கிறது. அவற்றிடம் பாபாவுக்கு அன்பு அதிகமா, பாபாவிடம் அவற்றுக்கு அன்பு அதிகமா என்று சொல்ல முடியாது. அவரே அனைத்தின் ஆத்மாவும் ஆதலால் எந்த ஜீவராசியும் அவரை உயிராழத்திலிருந்து நேசிக்கின்றன. மனிதன் தன் மூலத்தை மமதையால் மறந்து, மூல புருஷனைப் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும், மற்ற உயிரினங்கள் இந்த மாபெரும் குற்றத்தைச் செய்யவில்லை.

கடவுள் மனிதரை உய்விப்பதற்காக அவதரிப்பது போல் மற்ற உயிரினங்களின் பொருட்டு அவதரிக்காததால், அவருக்கு மானுடரிடமே விசேஷ பிரேமையோ என ஒருவர் வினவ, பாபா நகைத்துச் சொன்னார் : ''ஆண்டவனுக்கு அனைத்திடமும் சற்றுக்கூட ஏற்றத் தாழ்வற்ற சமமான பிரேமைதான். ஆனால், மனிதனுக்காக மட்டும் அவன் அவதரிப்பதன் காரணம், இந்த ஜீவ இனம் ஒன்றுதான் தன் தர்மத்தை விட்டு விலகுகிறது என்பதே. சிதிலமுறும் தர்மத்தை நிலைநாட்டவே அவதாரம் ஏற்படுகிறது. பக்ஷிகளும், விலங்குகளும், மரம், செடி, கொடிகளும் சிருஷ்டித் தொடக்கத்திலிருந்து அவற்றுக்கு ஏற்பட்ட தர்மங்களையே இம்மியும் பிறழாமல் பின்பற்றுவதால் அவற்றைப் புதிதாக நிலைநாட்டவேண்டிய அவசியமே இல்லை; எனவேதான் அவற்றுக்கென அவதாரமும் இல்லை'' என்றார்.

Koviloor Digital Library

'ச்வபதி' என்று வேதமே ருத்ரனைச் சொல்வதுபோல், பல நாய்களை அன்டிக்கிட்ட நாயகர் அவர். உதகையிலிருந்து வந்த ஜாக்-ஜில் இரண்டும்தான் அவரது முதற் செல்லங்கள். இவை குருவாரத்தில் பூரண உபவாஸம் இருந்தவை! மற்ற நாட்களிலும் புலால் உண்ணாதவை! இரவு வேளையில் ஒன்று பாபாவின் தலை மாட்டிலும், மற்றது கால் மாட்டிலும் படுத்துறங்குவது வழக்கம்.

அந்தக் காலத்தில் சித்ராவதிக்கு அக்கரையிலேயே கார்கள் விடப்படும். அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பை ஜாக் தானாகவே ஆற்றி வந்தது! ஒருநாள் காலை இது அப்படிப்பட்ட ஒரு காரின் அடியில் படுத்திருக்கையில் டிரைவர் கவனியாது வண்டியை 'ஸ்டார்ட்' செய்துவிட்டார். ஜாக் அரைபட்டு விட்டது. குற்றுயிரும் குலையுயிருமாக எப்படியோ பாத மந்திரத்துக்கு வந்து, தன் ஜீவ சக்தி முழுவதையும் கண்ணில் தேக்கி பாபாவை நோக்கியது.

கடிதம் எழுதிக் கொண்டிருந்த பாபா அதை அள்ளி மடியில் கிடத்திக்கொண்டார். அவருக்குள் அடக்கமாகிவிட்டது, ஜாக்கின் ஜீவஜோதி.

அதன் தர்மபத்னி ஜில் விரைவிலேயே பதியைப் பின் தொடர்ந்தது. பழைய மந்திரத்துக்குப் பின்புறம் இவற்றுக்கு பாபா பிருந்தாவனம் (ஸமாதி) அமைத்தார். ரமணரும் இவ்விதமே பல மிருகங்களுக்கு ஸமாதி எடுத்திருக்கிறார். மிருகமா அவை? எந்த தேவர்கள் சாப நிவிருத்திக்காக இப்படிப் பிறந்து, மறைந்தனரோ?

இப்படியே சிட்டியையும் பிட்டியையும் சில காலம் 'பெட்' டாகப் போஷித்துப் பிறவா நெறி சேர்த்தார் பாபா. உதகையில் இவற்றின் ஸமாதி உள்ளது.

அவர் சுவான ஜோடிகளுக்கு வைக்கிற பெயர்களில் எத்தனை அழகு? எதுகை மோனை? லில்லி-பில்லி; மின்னி-மிக்கி; ஹனி-கோல்டி; ரோவர்-ரீடா; ப்ளாக்கி-ப்ரௌனி. பொமரேனியன், காக்கர் ஸ்பானியல், அல்சேஷியன் இப்படிப் பலரக ஞமலிகள் நம் கதாநாதரின் அருளுக்குப் பாத்திரமானவை. அவற்றின் மொழியிலேயே பேசுவார், உணவிடுவார், அணைப்பார், தட்டிக் கொடுப்பார். பாக்யசாலிகள்!

* * *

1962-ல் பாபா நீலகிரியிலுள்ள பிக்கட்டி கிராமத்துக்கு விஜயம் செய்தார். அந்த ஊருக்கே காவலாக ஒரு கிழ நொண்டி நாய் உண்டு. 'குட்டன்' என்று பெயர். அந்தச் சீமை பாஷையில் 'குட்டன்' என்றால் 'நொண்டி' என்று அர்த்தம். ஊருக்கே அன்பனானாலும், குட்டன் வெளியூராரிடம் படுகோபக்காரனாகக் கிட்டேயே சேர்க்காமல் காவல் காப்பான். ஒரு வேளை இதனால் தான் பிக்கட்டிக்கு அவன் அருமையாகியிருக்க வேண்டும்.

Koviloor Digital Library

பாபா விஜயம் செய்தபோது இவன் உபத்திரவப்படுத்தப் போகிறானோ என்று சங்கிலியால் கட்டிப் போட்டிருந்தார்கள். பாபாவைப் பார்த்ததும் குட்டன் சங்கிலியை அறுத்துக்கொள்ளப் படாத பாடுபட்டது. அது தம்மைக் கடிக்க விரும்பவில்லை, கட்டி அணைக்கவே விரும்புகிறது என்று பிரேமஸாயிக்கா தெரியாது? அதனிடம் போய் ''பங்காரு'' என்று தட்டிக்கொடுத்தார். பக்கத்திலிருந்தவர்களிடம், ''அவனை அவிழ்த்து விடுங்கள். அவன் சுத்தாத்மா'' என்றார். அவர்கள் அவ்விதமே செய்தனர்.

என்ன ஆச்சரியம்! பாபா வெளியாரே அல்ல என்று புரிந்து கொண்டு, அவரோடு ஒட்டிக்கொண்டே சென்றது குட்டன். தம்மோடு அதை மேடை மேலும் அழைத்துச் சென்றார் நம் அன்புக் கடவுள். குட்டன் முழு ஈடுபாட்டோடு பஜன் கேட்டது.

ஊராருக்கெல்லாம் விருந்துக்கு ஏற்பாடாகியிருந்தது. போஜன கூடத்தில் ஒரு புறம் ஸ்வாமிக்காக உயர்ந்த மேடை போடப்பட்டிருந்தது. பஜனை முடிந்ததும் ஸ்வாமி நேரே சமையலறைக்குச் சென்றார் — ஒட்டிவந்த குட்டனோடு. அன்னத்தில் தம் தெய்வக்கரத்தை வைத்து அருட்பிரஸாதமாக மாற்றினார். ''முதலில் குட்டனுக்குச் சாப்பாடு போடுங்கள்'' என்றார். மற்றோர் உண்ணுமுன் நொண்டி நாய்க்கு என்ன அவசரம் என்று எவருக்கும் புரியவில்லை. ஆயினும் ஆக்ஞையை நிறைவேற்றினர். குட்டன் உண்டு கொண்டிருக்கையிலேயே பாபா நீண்ட நீண்ட வரிசைகளாக அமர்ந்திருந்த மக்களுக்குப் பரிமாறத் தொடங்கலாம் என்றார். மேடை மீதிருந்து ஸ்வாமியே இதை மேற்பார்வை செய்தார். உண்டு முடித்து வந்த குட்டனும் அவர் பக்கத்தில் நின்று அனைவரும் உண்பதைப் பார்த்தது.

பாபா நாற்காலியில் அமர்ந்து பாதபீடத்தில் சரணாரவிந்தங்களைப் பொருத்தினார். குட்டன் அந்தப் பாதபீடத்தில் தலைவைத்து அப்படியே சாய்ந்தது. தலைவன் தாளில் ஐக்கியமே ஆகிவிட்டது. ''சுத்தாத்மா'' என்று ஸ்வாமியின் பரிசுத்த வாயால் போற்றப்பட்ட ஞமலி.

* * *

பசுபதியும் கோபாலனுமான ஐயனின் கோசாலை புனித அழகு நிரம்பியதாகும். சமீபத்தில் அது விரிந்து ''கோகுலம்'' என்றே பெயர் பெற்றுள்ளது. பர்த்திக்கு மீண்டும் பசுச் செல்வம் தந்த பிரபு, மாடுகளின் கழுத்துத் தொங்கு சதையை உருவி மகிழ்வதும், தாமே அவற்றுக்குத் தீவனம் ஊட்டுவதும் பரம பாவனக் காட்சிகள். பசுக்களின் கழுத்தில் பட்டுக் கட்டி, காலில் சதங்கை அணிவித்து, முகத்திலும் வாலிலும் மஞ்சள் குங்குமம் பூசுவதில் ஸ்வாமி காட்டும் மகிழ்ச்சி அலாதியானது. ஒரு கோகுலாஷ்டமியன்று அவர் பிரசாந்தி நிலயத்தில் உரையாற்றுகையில் அத்தனை மாடுகளும் விடாமல், 'அம்மா, அம்மா' என்று இந்த கோபால மாதாவை அழைக்க, பேச்சை அப்படியே நிறுத்தி விட்டு அவற்றிடம் ஓடிவிட்டார் ஸ்வாமி. கன்றின் குரலைக் கேட்கக் கனிந்து வரும் பசு!

Koviloor Digital Library

ஸாயி கீதா என்ற யானை பிரசாந்தி நிலயத்தில் இருக்கிறதே, தினமும் மாலையில் பாபாவுக்கு மாலை அணிவிக்கும் இந்த கஜ கன்னிக்கு அவரிடம் உள்ள பிரேமை! அவரைப் போக விடாமல், தன் துதிக்கையால் அவரது இடுப்பை வளைக்கும். "போறும்மா, போறும்மா" என்று அவளைத் தட்டிக் கொடுத்து, அவளிடமிருந்து தப்புவதற்கு அவர் எத்தனை தாஜா செய்ய வேண்டியிருக்கிறது?

பாபா வாரக் கணக்கில் வெளியூரில் இருந்துவிட்டால் ஸாயி கீதா சோகாக்ராந்தையாகி விடுகிறாள். உண்ண மறுக்கிறாள். உறங்காமல் தவிக்கிறாள். 'ஊண் உறக்கம் விட்டு' என்பது அப்படியே உண்மையாகிறது! திரும்பி வந்ததும் பாபா அவளது கன்னங்களைத் தட்டியதும், திவ்ய ஸ்பரிசம் பெற்ற அக் கன்னங்களை அவளது கண்ணீர் அபிஷேகம் செய்கிறது!

மாவுத்தர் அவளை அநாவசியமாக அங்குசத்தால் குத்தி விட்டால் போதும், உடனே பாபாவின் அறைப்பக்கம் ஒரடி எடுத்து வைத்து, அவர் வசிக்கும் மாடி உயரத்துக்குத் தலையைத் தூக்கிப் பார்ப்பாள் — "உம்மாச்சி கிட்டே சொல்லி உதை வாங்கி வைக்கிறேன் பார்!" என்று அர்த்தம்.

விழா நாட்களில் முகபடாம் மின்ன ஸர்வாலங்கார பூஷிதையாக அவள் துதிக்கையை இடமும் வலமுமாக ஆட்டிக் கொண்டு ஐயனுக்கு முன் செல்லும் ஒயிலில் அவரது ஜீவதயையின் செழிப்பு முழுதையும் வெளியிட்டு விடுவாள்.

முதுமலை, தெப்பக்காடு முதலிய பல விலங்குகளின் சரணாலயங்களுக்குச் சென்று நம் சரணாகத ரக்ஷகன் யானை முதலிய விலங்குகளைக் கண்டு மகிழ்வதுண்டு; அவற்றை மகிழ்விப்பதுண்டு. யானைக் கூட்டங்களிடையே அவர் ஸர்வ சகஜமாக நின்று கொண்டு கரும்பும், வெல்லமும், தேங்காயும் ஊட்டுவது நம் மனத்துக்கே கரும்பாக, வெல்லமாக, தேங்காயாக இனிக்கும். பைஸன் காளை போன்ற முரட்டு விலங்குகளும் சரி, கருங்குரங்கு போன்ற விஷம விலங்குகளும் சரி, சாம்பர் மான் போல் நாணம் மிகுந்த விலங்குகளும் சரி, ஐயன் விஷயத்தில் கொடுமையை, விஷமத்தை, நாணத்தை விட்டு அவரிடம் ஓட்டி உராய்ந்து உறவு கொண்டாடும். 'இதயம் பேசுகிறது' என்பதன்றி என் சொல்ல?

அவரது கிழக்காப்பிரிக்க விஜயத்தின்போது சரணாகத ஸ்வாமி 'சொரன்கெதி தேசியப் பூங்கா' என்ற விஸ்தாரமான வனத்தில் செல்கையில் அவர் காரருகே வந்து கண் குளிரத் தரிசனம் செய்துகொண்ட சிங்கங்களும், மற்ற பயங்கர மிருகங்களும் பலப்பல. அஹிம்சையில் பிரதிஷ்டையானவனின் ஸந்நிதியில் மற்ற ஜீவராசிகளின் குரூர ஸ்வபாவமும் தானே இளகிவிடும் என்ற பதஞ்சலி வாக்குக்கு இதைவிட நிரூபணம் வேண்டாம்தான்.

ஒரு முறை மிருக வைத்திய அதிகாரி ஸ்ரீ என். கோபாலன் அபயாரண்யத்தில், மோயார் நதிக்கரையில், யானைக் கூட்டம்

Koviloor Digital Library

வருவது கண்டு, அருகே விருந்தினர் விடுதியில் தங்கியிருந்த பாபாவை அக் காட்சி காண விரைவுபடுத்தினார் — யானைக் கூட்டம் அதிக நேரம் தங்காமல் போய்விடும் என்பது அவரது நீண்டகால அனுபவமாதலால். ஆனால் பாபாவோ சாவதானமாக "இன்னும் அரை மணி போகட்டும், பிறகு போகலாம்" என்று கூறிவிட்டார்.

அப்போது பிற்பகல் மணி மூன்று. மூன்றரைக்குப் பின் தான் ஐயன் பரிவாரம் சூழப் புறப்பட்டார். யானைகளைக் காண ஐந்து யானைகளின் மீதேறி அனைவரும் சென்றனர். 'ஆனால், இவர்கள் யானைகளைக் காணத்தான் போகிறார்களா? இத்தனை நேரம் அவை அங்கேயே இருப்பது சாத்தியமல்லவே' என்று ஐயுற்றார் ஸ்ரீ கோபாலன்.

ஆனால் மோயாரின் இக்கரையை இவர்கள் அடைகையில் அக்கரையில் கண்ட காட்சி! 'எனது இருபத்து நாலு வருடக் காட்டு அனுபவத்தில் அப்படிப்பட்ட மஹத்தான காட்சி ஒன்றைக் கண்டதே யில்லை' என்கிறார் கோபாலன்.

கஜேந்திர மோக்ஷமும் கொடுத்தவன் வருகிறான் என்று உள்ளுணர்வு உந்திற்று போலும், அந்த வனத்திலுள்ள ஏராளமான யானைகள் மந்தையாக அங்கு வந்து விட்டன. அவற்றின் ஆனந்தப் பிளிறலும், ஆற்றிலே விழுந்து அவை செய்த அட்டஹாஸமும்! குட்டி யானைகளோ பக்கத்திலுள்ள அறுபது டிகிரிச் சரிவில் ஏறமாட்டாமல் ஏறி, அதன் உச்சியிலிருந்து உருண்டு உருண்டோட வந்து நதிக்குள் விழுந்து திமிலோகப்படுத்தின! மலரினும் மென்மையான அன்பு, யானைகளையும் உருட்டிவிடுமோ? ஒன்றோடொன்று மோதிக்கொண்டு பொய்ச் சண்டை வேறு போட்டுக் காட்டித் தங்கள் போர்த்திறனுக்கும், நாடகத் திறனுக்கும் நமது உலக நாடக சூத்ரதாரியிடம் 'ஸபாஷ்' பெற்றன. தும்பிக்கையால் தண்ணீரை வாரி வாரி அடித்தன. தமது தளிர்ந்த கடாக்ஷம் வழக்கத்தைவிட அதிகப் பிரேமையில் பரம சீதளமாக நனைந்திருக்க பிரபு நீண்ட நேரம் இக் காட்சியிலேயே சொக்கியிருந்தார். அத்தனை நேரமும் இவர்கள் ஏறி வந்த ஐந்து யானைகளும், எதிரேயே தம் இனத்தார் இத்தனை ஆர்ப்பாட்டம் செய்தபோதிலும், ஆடாமல் அசையாமல் நிலைக் குத்திட்டு நின்றது இன்னொரு அதிசயம். அன்பு பொங்கவும் வைக்கும்; அடங்கவும் வைக்கும்!

இத்தனை கண்டும் ஸ்ரீ கோபாலன் சற்றே குலைநடுங்கிய ஒரு ஸம்பவம் 1975 மார்ச் 17-ந் தேதியன்று முதுமலையில் நடந்து விட்டது.

இவர்கள் கேரள எல்லை நோக்கிச் செல்லும் ஓர் ஆனை மந்தையைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவற்றிலொன்று திரும்பிப் பார்க்கையில் பாபாவைக் கண்டு விட்டது. அவ்வளவு தான்! பிறகு அது நகரவில்லை. ஆனைகளின் 'கூட்ட மனப் பான்மை'க்கு முற்றிலும் விரோதமாக, மற்ற ஆனைகள் ஒரு

Koviloor Digital Library

குன்றைச் சுற்றிக்கொண்டு பார்வையிலிருந்து மறைந்து சென்ற பின்பும் இந்த ஓர் ஆனை மட்டும் பதித்த அடியை எடுக்காமல், வைத்த கண்ணை வாங்காமல் பாபாவையே பார்த்த கண் பார்த்தபடியே நின்றுவிட்டது.

உள்ளூற ஸ்ரீ கோபாலனுக்கும் உடன் வந்த ட்ராக்கர்கள், ரேஞ்சர்கள் ஆகியோருக்கும் குலைநடுக்கம் எடுத்தது. கூட்டத்திலிருந்து தனியே பிரிந்த ஆனை என்ன அட்டூழியம் வேண்டுமாயினும் செய்யக்கூடும். இதுவோ ஆனைகளிலேயே அமித வளர்ச்சியுடன் பிரம்மாண்டமாக நிற்கிறது. அதோடுகூட அது ஆண் ஆனை. பாபா கோஷ்டியார் பெண் யானைகளின்மீது வந்திருக்கின்றனர். எனவே அதற்கு மதம் உண்டாகவும், மதவெறியில் என்ன வேண்டுமாயினும் செய்யவும் நிறைய வாய்ப்பு இருந்தது!

பாபாவை விரைவுபடுத்தி அங்கிருந்து அழைத்துப் போகலாமா என்று பார்த்தால்,

அவரோ, எப்படி அந்த கஜம் சில கெஜங்களுக்கு அப்பாலிருந்து தன் முழு உணர்வையும் சின்னஞ்சிறு கண்களிலேயே திரட்டிக்கொண்டு இவரைப் பார்த்ததோ, அவ்வாறே தாமும் வேறு கவனமேயில்லாமல் தீக்ஷண்யமாக திருஷ்டியை அந்த ஆனை மீதே புதைத்திருக்கிறார். தீக்ஷண்யமாயினும் தாக்ஷிண்யம் கரை புரள்கிறது அந்த வீக்ஷண்யத்தில்!

இப்படி சுமார் கால்மணி ஆனையும் ஆண்டையும் பரஸ்பரம் ஏறக்குறையப் பிரேம ஸமாதி நிலையில் பார்த்தபடி யிருந்தனர். சூழலில் ஒரே மௌனம்.

சட்டென கஜராஜனின் பார்வை விலகிற்று. தன் சகாக்களை நினைத்துக்கொண்டு அதிவேகமாக அசக்கி அசக்கிக் கொண்டு நடையைக் கட்டிற்று.

அந்த ஆனை உண்மையில் ஆரோ? பாபாவும் அதுவும் பார்வையிலேயே என்னென்ன உண்மைகளைப் பரிமாறிக் கொண்டார்களோ? அல்லது தமது திருஷ்டியின் ஞான தீக்ஷையால் ஒரே உண்மையான மூலப் பொருளில்தான் அதைப் பூர்வ புண்ய வசத்தில் அவர் அந்தக் கால் மணியும் அழுத்தியிருந்தாரோ?

கிழக்காப்பிரிக்க விஜயத்தின்போது, உகாந்தாவில் உள்ள மர்ச்சின்ஸன் நீர்வீழ்ச்சிக்கருகில் ஓர் ஆனை, மந்தையிலிருந்து பிரிந்தே வந்து பாபாவின் காரை நெருங்கியது. அதன் நடையிலும் பார்வையிலும் ஓர் அலாதிப் பணிவு தெரிந்தது.

பாபா காரை நிறுத்தச்செய்து, கீழே இறங்கி அதற்கு நக-சிகா பரியந்தம் திவ்ய தரிசனம் அளித்தார்.

ஒன்றை ஆனைக்கு மற்றொர் பயப்படுவார்கள். இங்கோ அப்படி வந்த ஹஸ்தி, அபயஹஸ்தம் பெறுகிறது.

Koviloor Digital Library

சங்கட சதுர்த்தியில் பிறந்த ஸாயி கணேசனைவிட ஆனைகளுக்கொரு இஷ்டத் தெய்வமும் உண்டோ?

* * *

பாபாவுக்கு விலங்குக் காட்சிகளில் விசேஷப்பிரியம் இருக்கிறது என நினைத்து, அவரை கோவை மாவட்ட வால்பாறைக் கருகேயுள்ள 'புல்மலை' (Grass Hills)க்கு அழைத்தார் ஸ்ரீ கோபாலன். அங்கு ஆனைகள், பைஸன்களோடு, அதி நளினம் வாய்ந்த ஐபெக்ஸ் மான்களையும் காணலாம் என்பதால். துளிப் பயமுறுத்தி விட்டால்கூட இந்த மான் கூட்டம் சிதறி அடித்துக்கொண்டு துள்ளி ஓடும் அழகைக் காணவே இயற்கைப் பிரியர்கள் வருவதுண்டாம்.

அப்போது ஸ்வாமி கூறிய அற்புத மறுமொழியைக் கேளுங்கள்: ''எனக்கு எந்தக் காட்சியும் காணவேண்டும் என்ற ஆசை இல்லை. எனக்கு எவ்விதக் காட்சியும் புதிதும் அல்ல. நான் மிருக சரணாலயங்களுக்குச் செல்வதற்குக் காரணம் பக்தர்களுக்கு மிருகங்களிடம் அன்பும் அநுதாபமும் ஏற்படச் செய்ய வேண்டும்; அவை எப்படி ஒத்துழைத்து கூட்டு வாழ்வு வாழ்கின்றன என்று மக்களுக்குக் காட்டிப் படிப்பினை புகட்டவேண்டும்; அவை எப்படி தத்தம் தர்மத்தைத் துளிக்கூட மாற்றிக் கொள்ளவில்லை என்பதை உணர்த்த வேண்டும்; மனிதனைவிட அவற்றுக்கு எத்தனை அதிகம் நன்றியுணர்ச்சி உள்ளது என்று தெரியப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான்.

(மேலே சொன்ன காரணத்தோடு, எக் காரணத்தாலோ மிருக ஜன்மா எடுத்துள்ள இந்தப் பக்தர்களுக்கு அநுக்கிரஹம் புரியவும் பாபா அவற்றைத் தேடிச் செல்கிறார் என்று நாம் சேர்த்துக் கொள்ளலாம்.)

''அப்பா! மான்கள் பயந்தோடுவது நன்றாயிருக்கும் என்கிறாயே! பேதை விலங்குகளை அச்சுறுத்தி அதிலேயா என் கண்ணுக்கு விருந்து படைத்துக் கொள்ள வேண்டும்? அவை அமைதியாக புல் மேய்ந்துகொண்டிருந்தால் அதுதான் எனக்கு விருந்து.''

பாபாவுக்கு விலங்குகளைத் தொந்தரவு செய்யாமல் காமிராவில் 'ஷூட்' செய்து படம் எடுப்பதுதான் பிடிக்குமே அன்றி, துப்பாக்கிக் குண்டால் 'ஷூட்' செய்வதை வெகுண்டு ஆக்ஷேபிப்பார். அவற்றை விளையாட்டாகப் பயமுறுத்தினால்கூட சகிக்காதவரல்லவா? கென்யாவில் ஓரிடத்தில் பயணிகளின் காட்சிப் பொருளாவதற்காக, பல்புகள் ஒளிவெள்ளம் பொழியும் ஒரு மேடையில் சிறுத்தைப் புலிகளை நயமாகவும் பயமாகவும் ஏற்றியபோது, ஸ்வாமி தம் முகத்தையே திருப்பிக் கொண்டாராம்!

''தன் சொந்த வீட்டில் (காட்டில்) இருக்கிற மிருகத்தைத் தேடிப்போய் வேட்டையாடி, இதை ஒரு விளையாட்டு என்பது

Koviloor Digital Library

எத்தனை காட்டு மிராண்டித்தனம்?'' என்று ஷூட்டிங்கைக் கண்டிப்பார். அநேக மன்னர்களும், ஜமீன்தார்களும் ஸ்வாமியின் பக்தர் குழாத்தில் இருப்பதைப் பரிகசித்துக் கூறுவோர், இதனால் எத்தனைபேரின் ஷூட்டிங் மோஹத்தை ஸ்வாமி ஷூட் செய்து, எத்தனை வாயில்லா உயிர்களைக் காத்திருக்கிறார் என்பதை நினைத்துப் பார்த்தால் போதுமானது.

* * *

உள்ளுணர்ச்சியால் பாபாவிடம் பெரிய விலங்குகள் மட்டும் தான் ஈர்க்கப்படுமா? புள்ளினமும் இதற்கு விலக்கல்ல என்பதைக் காட்டுவதே போன்றதொரு நிகழ்ச்சி.

1973 மார்சு 31-ந்தேதி பாபா ஜாம்நகரில் உரையாற்றுகை யில் ஓர் ஆண் மயில் பக்கத்திலிருந்த அரண்மனையின் விருந்தினர் விடுதிமேல் தோகை விரித்தமர்ந்து பேச்சுக் கேட்டது. அதைப் பார்த்த பாபா உபந்நியாஸத்திலேயே ஒரு கதை சொன்னார்.

ராவணன் பரமேச்வரனிடம், ''ஏன், ஸ்வாமி, பெண்ணி னத்துக்கே இத்தனை அழகைக் கொடுத்திருக்கிறீர்கள்? ஒரு புருஷன் எத்தனைதான் அழகானாலும் ஸௌந்தரியவதியான பெண்ணின் பக்கத்தில் மரக்கட்டை மாதிரியல்லவா ஆகிவிடு கிறான்? ஸ்ருஷ்டியில் ஏன் இந்த பாரபக்ஷம்?'' என்று கேட் டானாம்.

சிவபெருமான், ''ஸ்ருஷ்டியில் அப்படி எல்லாம் பாரபக்ஷ மில்லை. மனித இனத்தில் இப்படியிருந்தாலும் அதற்கு மாறாக பக்ஷி இனத்தைப் பார். ஆண் மயிலுக்குள்ள தோகை யழகு பெண் மயிலுக்கு உண்டா? ஆண் கிளிக்கு உள்ள விசிறி போன்ற இறகு பெண் கிளிக்கு உண்டா?'' என்று கேட்டாராம்.

பாபா இந்தக் கதை கூறுகையில் பலர், 'ஆண் மயிலின் தோகை விசேஷம் அனைவரும் அறிந்தது தான்! ஆனால் ஆண் கிளியின் இறகில் இப்படிப்பட்ட விசிறி விசேஷம் உண்டா?' என்று எண்ணித்தான் இருக்கவேண்டும்.

சரியாக அதே சமயத்தில் ஓர் ஆண் கிளி எங்கிருந்தோ பச்சைப் பசேலென்று பளபளத்துக் கொண்டு கூட்டம் நடக்கு மிடத்துக்குப் பறந்து வந்தது.

அதன் தோகை விசிறியாக விரிந்திருந்தது!

ஸ்வாமியின் உள்ளன்பே எங்கோ இருந்த அப் பக்ஷியின் அநு-தாப நரம்பை (sympathetic nerve)த் தொட்டு, அவர் வார்த்தையை மெய்ப்பிப்பதற்காக அதை அங்கு பறந்துவரச் செய்ததோ?

இதைவிட அதிசயம்! ஒரு முறை ஸ்வாமி திருப்பதிக்கு விஜயம் செய்தபோது ஒரு குரங்கு அவரிடம் தாவி வந்தது.

எங்கிருந்துதான் கொணர்ந்ததோ, அதனிடம் புஷ்பஹாரம் ஒன்று இருந்தது. 'குரங்கு கைப் பூமாலை'யாக அதைப் பிய்க்க வில்லை அந்த வானரம். மாறாகத் தன் குரங்குப் புத்தி பிரேம பக்தியாக மாறி, நம் ஸ்வாமியின் கழுத்திலேயே பாங்காக அந்த மாலையைப் போட்டு விட்டது! இப்படி ஓர் ஆஞ்ஜநேயர் நம் ஸாயிராமனுக்கு வழிபாடு செய்ததைக் கண்ட அடியார் பலருள்ளனர்.

ஒயிட்ஃபீல்ட் பிருந்தாவனத்தில் ஏகப்பட்ட பக்ஷிகளை மேல் மாடியில் வைத்து வளர்க்கிறார். அவற்றுக்குப் பழம், பருப்பு, நீர் பார்த்துப் பார்த்து வழங்குவதில் அவரது கரிசனம்! இப்போது ஓர் ஒட்டகம் அவரிடம் உறவு கொண்டாட வந்திருக்கிறது.

இத்தனை பரிவு இருந்தாலும் ஜட பரதருக்கிருந்த பாசம் இவருக்கு எள்ளளவும் கிடையாது. அவருக்கு ரொம்ப அருமை என்று எண்ணப்படும் இந்த மிருகங்களை, பக்ஷிகளை சகஜமாக எவரேனும் பக்தருக்குக் கொடுத்தனுப்பியும் விடுவார். பிரசாந்தி நிலயத்திலிருந்த 'செல்லங்கள்' பல அங்கிருந்து சென்று விட்டதற்கு இதுவே காரணம். சாதாரணமாகப் பழைய எஜமானர்களை விட்டுப் பிரிய முடியாமல் திரும்பி விடுவதே வளர்ப்பு மிருகங்கள், பக்ஷிகள் ஆகியவற்றின் குணம். எனினும், மற்ற எஜமானர்களை விடவும் அதிப் பிரீதிக்குப் பாத்திரரான ஸ்வாமியை விட்டுச் செல்லும் வளர்ப்புக்களோ புது எஜமானர்களிடம் ஒட்டிக்கொள்வது இன்னோர் அதிசயம்தான். ஒருவேளை எவரையுமே ஸாயியாகக் காணும் பாவனை அவற்றுக்கு வந்த பின்தான் இவர் அவற்றை தானம் செய்கிறாரோ?

* * *

ஓங்கோல், காங்கேயம் ஆகிய ஆந்திர மாட்டு ஜாதிகள் மட்டுமின்றி ஹோல்ஸ்டைன், ஃப்ரீஸியன், ரெட்-டேன் ஜெர்ஸி ஆகிய சீமை ஜாதிகளும் அவரது கோகுலவாஸிகளாகும் பேறு பெற்றுள்ளன. மர்ரி எருமைகள் லாரி, பஸ்களையும் வழி மறித்துக் கொண்டு அக்கடா என்று நிற்பதைப் பார்த்துக் குதூகலிப்பார்! ''எந்த ட்ராஃபிக்கானாலும் இந்த வி.ஐ.பி.க் களுக்குப் பின்னால் நிற்க வேண்டியதுதான்'' என்று ஆனந்தப் படுவார்!

* * *

மதனபல்லிக்கு அருகுள்ள ஹார்ஸ்லி ஹில்ஸில் 1960-ம் ஆண்டு சில காலம் தங்கியிருந்தார் பாபா, பரிவாரங்களோடு. முகாம் முடியும்போது அனைவருடனும் தாமும் மலையடிவாரம் வரையில் அருமையாக நடந்து வரத் திருவுளம் கொள்கிறார். புறப்பட்டுச் சில அடிகள்கூட வைத்தாயிற்று. ஏதோ நினைத்துக் கொண்டு ''ரொம்ப முக்யஸ்தரிடம் சொல்லிக்க வேண்டாமே!'' என்று தமக்குத்தாமே சொல்லிக்கொண்டு விடுவிடு வென்று தோட்டப்புறம் செல்கிறார். அங்கே ஒரு மரத்தடியில் நிற்கிறார் அந்த முக்கியஸ்தரான மகிஷதேவர்! எருமை

Koviloor Digital Library

மாட்டின் கழுத்தில் ஒரு கையை வளைத்து, மறு கையால் அதன் தவடையைத் தட்டிக் கொடுத்து, ''துன்னபோது, பாக ஸேவ சேஸிநாவு!'' (எருமையே! நல்ல சேவை செய்தாய்!) என்று அன்பு முட்டச் சொல்லி, விபூதி சிருஷ்டித்து அதற்கு இடுகிறார்! ''தாங்க் யூ! நாம் மறுபடி சந்திக்கலாம்'' என்று கூறிப் புறப்படுகிறார் — இவை விளையாட்டு வார்த்தைகளாக இல்லை; பரம உண்மையான அன்பில் ஊறி வெளிவருகின்றன. தினமும் இந்த எருமைதான் இரண்டு மைல்களுக்கு அப்பாலுள்ள குளத்திலிருந்து இவர்களுக்குக் குடிநீர் சுமந்து வந்தது. அதற்குத் தம் கையால் நீறு இட்டுக் கைம்மாறு செய்கிறார் பெருந்தகை!

* * *

எங்கோ அமெரிக்காவில் மின்கம்பியில் ஷாக் அடித்து விழுகிறது ஒரு சிட்டுக் குருவி.

கொலைவேடராக இருந்து 'மரா மரா' சொல்லியே ரிஷியான வால்மீகிக்கு, வேடனொருவனது அம்பில் கிரௌஞ்ச பட்சி துடித்து விழுந்தபோது சுரந்த கருணைதான் ராமாயணத்தையே தோற்றுவித்தது. 'ராம் ராம்' என்று பெயர் மாற்றிக்கொண்ட பால் என்ற ஸாதகருக்கு ஊற்றெடுத்த கருணை நம் ஸாயி ராமாயணத்தில் ஒரு மதுர அத்தியாயத்தை மிளிர்வித்தது.

சாகும் தறுவாயிலிருந்த சிட்டுக் குருவியை 'ராம் ராம்' அணைத்தெடுத்து வந்தார். பாபாவின் பிரஸாதமான விபூதிப் பொட்டணம் மீதாக ஓர் அங்குல உயரத்தில் அதைச் சுழற்றினார். விபூதிப் பிரதக்ஷிணத்தோடு அதன் சித்திரவதை தீர்ந்து உயிர் பிரியட்டும் என்ற நல்ல எண்ணத்தில்!

என்ன ஆச்சரியம்! இவரது கைக்குள் குறுகுறுவெனச் சிறகு அடித்துக் கொள்கிறது! மறுகணம், சிட்டு வெளியே சிறகடித்து உற்சாகமாகப் பறந்து போயிற்று!

இயேசுவின் மணிமொழியை நினைத்துக் கண்ணீர் மல்கினார் 'ராம் ராம்': ''விண்ணுறையும் பிதாவின் கவனத்திலிருந்து ஒரு சிட்டு விழுவதும் தப்புவதில்லை''.

not a sparrow falling
without the Heavenly Father taking note.

* * *

நாய்களுக்கு வெறி பிடிக்கும் காலத்தில் ஸ்வாமி பிரசாந்தி நிலயத்திலிருந்து நாய்களையெல்லாம் வெளியேற்றச் செய்வார். ஆனால் ஹிம்சை செய்யாமலே அவற்றைத் துரத்த வேண்டும் என்று கட்டளையிடுவார்.

ஒருசமயம், வெளியேயுள்ள கிராமப் பிள்ளைகள் ஒரு நாயைக் கம்பியால் தாறுமாறாகக் கட்டிவிட்டார்கள். அது எப்படியோ தப்பி நிலயத்துக்குள் ஓடி வந்துவிட்டது.

Koviloor Digital Library

குரூரமாகக் கட்டிய கம்பி நாயின் உடலில் அழுந்திப் புண்ணாய்ச் சீழுமாகி விட்டது. அதனால் உண்ணவும் முடியவில்லை. அதன் கட்டை அவிழ்க்கலாம் என்றாலோ, எவரையும் அது அண்ட விடவில்லை. உதவி செய்ய முயன்றவர்களைக் கடிக்கப் போயிற்று.

இந்தப் பரிதாபம் தாளாமல் ஓர் அம்மணி பஜனையின் போது ஸ்வாமியிடம் மானஸிகமாக முறையிட்டுக் கொண்டார். ஸ்வாமி ஒரு கோணல் புன்னகையை நெளிய விட்டு, வெளியே பார்த்தார். கருணை நிறைந்த அப் பார்வை, சித்ரவதைப்பட்ட சுவானத்தின் மேல் பட்டது.

ஆச்சரியம் நிகழ்ந்தது.

வெளியே வேலிக்கான முள் கம்பியைப் பெரிய சுருளாகச் சுருட்டி வைத்திருந்தது — இரு புறமும் வாய் திறந்த உருளை போல. அதன் ஒரு வாய் வழியாகப் புகுந்தது நாய். ஏற்கெனவே கம்பி அழுத்திப் புண்ணாக்கியது போதாது என்று இந்த முள் சுருள் வேறு குத்தி நாய் மேலும் அவதியுறப் போகிறதே என்று வேதனையுடன் அம்மணி பார்த்துக் கொண்டிருக்க,

மறு வாய் வழியாக நாய் வெளிவந்தது.

அதன் பழைய கம்பிக் கட்டைக் காணவே காணோம்! நாய் ஆனந்தமாகத் துள்ளி ஓடியது!

அது கயிற்றுக் கட்டாக இருந்தாலாவது முள் கம்பி குத்தி இழுத்ததில் அது வெட்டுப் பட்டது என்று கொள்ளலாம். அதுவோ கம்பி அல்லவா?

ஐயனின் ஜீவகாருண்ய கடாக்ஷ சக்தியிலேயே, கம்பி கம்பிநீட்டி விட்டது என்றுதானே சொல்லவேண்டும்? சம்ஸாரக் கட்டையே தெறிக்கச் செய்பவர் கம்பிக் கட்டை ஏன் தெறித்துப் போகச் செய்யமாட்டார்?

* * *

1972-ல் பாபாவின் ஜன்மோத்ஸவத்துக்காக அஸ்ஸாமிலிருந்து வந்த 108 பக்தர்களுக்கு, ஜயந்திக்கு மறுநாளான நவம்பர் 24-தேதி பஜன மந்திரத்தில் பிரத்தியேக தரிசனமும் உரையும் வழங்குகிறார் பாபா. வரிசையாக அமர்ந்துள்ள ஒவ்வொருவரிடமும் வந்து தாமே விபூதிப் பொட்டலம் தருகிறார். ஒரு பெண்மணிக்கு வழங்கிவிட்டு, அடுத்தவரிடம் நகர்ந்த பாபா, மீண்டும் அவளிடமே திரும்பி, இரண்டு பொட்டலங்களைப் போட்டு, "யே, பில்லி கே லியே!" (இவை பூனைக்காக) என்கிறார். புரியாமல் விழிப்பவளைக் குறுகுறுக்க நோக்கி மீண்டும், "யே பில்லி கே லியே!" எனச் சொல்லிவிட்டு மேலே போகிறார்.

Koviloor Digital Library

நினைவு வந்துவிட்டது! அவள் மெய் சிலிர்க்கிறாள்!

எட்டு மாதம் முன் ஓரிரவு கௌஹாத்தியில் அவள் ஒரு விருந்து நடத்தினாள். அப்போது அவளுடைய வளர்ப்புப் பூனை திடுமென உணவு மேஜையில் பாய்ந்து, ஒரு தின்பண்டத்தைக் கவ்விக் கொண்டு ஓடிற்று. கடும் கோபமுற்ற இப் பெண்மணி, பக்கத்திலிருந்த ஒரு தடியால் அந்தப் பூனையை அடித்துவிட்டாள்.

உடனே நடந்ததென்ன?

அஸ்ஸாமுக்கே உரிய பூகம்பம் ஏற்பட்டு விட்டதா என்ன? இல்லை, பூமி அதிரவில்லை. ஆனால் அந்த ஹாலில் மாட்டியிருந்த பாபா படங்கள் அனைத்தும் தடால் தடாலெனக் கீழே விழுந்தன.

பச்சாத்தாபத்திலும், புனித அச்சத்திலும் நடுங்கிய அப் பெண் பூனையிடம் சென்று அதை எடுத்தாள். ஆஹா, அதன்மேல் ஒரே விபூதி வர்ஷம்! பாபா சிருஷ்டிக்கும் விபூதிக்கே உரிய புனித ஸுகந்தம் வீசும் திருநீறு!

பூனையின் புண் ஆறியது; புண் செய்தவளின் கண் ஆறு பெருகியது; அதில் இவள் செய்த குற்றம் கரைந்தது.

எட்டு மாதத்துக்குப் பின் அந்தப் பூனைக்குத்தான் ஸ்பெஷலாக இங்கிருந்து இரண்டு பாக்கெட் விபூதி கொடுத்தனுப்புகிறார் பாபா!

இங்கே flash-back-ஆக ஷிர்டி ஸம்பவம் ஒன்றை நினைவுகூர்ந்தால், இரு அவதாரங்களையும் இணைக்கும் இழை அன்பே எனத் தெளியலாம்.

ஷிர்டி பாபாவைத் தரிசிக்க வந்தார் பக்தர் ஹன்ஸ்ராஜ். "என்னை அடிச்சேயில்லே?" என்று கேட்டு ஷிர்டிப் பிரபு தம் தோளைக் காட்டினார். அங்கே ஏற்பட்டிருந்த காயத்தைக் கண்டு ஹன்ஸ்ராஜ் துடித்தார். நிரபராதியான தான் அடித்துக் காயப்படுத்தியதாக பாபா அபாண்டமாகச் சொல்கிறாரே என்று அதனினும் துடித்தார். பாபா சிரித்தார். "ஏனப்பா? நான் இந்த எண்சாண் உடம்புக்குள்தான் இருக்கேனா? தயிரைக் குடிச்சிடுத்து என்பதாலே நீ பூனையை வெளுத்து வாங்கினயே, அந்த அடியையும் நான்தான் வாங்கிண்டேன்" என்றார்.

அடிவாங்கிய ஷிர்டி நாதர் இன்னும் பர்த்தியில் வந்து அடியாருக்காக எத்தனையோ வித அடிகளை வாங்கிக்கொண்டு தான் இருக்கிறார்.

"எவ்வுயிர்த்திரளும் உலகில் என்னுயிர் எனக் குழைந் துருகும்" பிரேம ஸாயி அன்றோ? அவற்றின் உயிர் இவர் உயிர். அவற்றின் உடல் இவர் உடல். 'என்பும் உரியர் பிறர்க்கு' என்றபடி தம் தேகத்தையே பிறருக்கெனத் தரும் பரமத் தியாகம் இந்தப் பிரேமையில் பிறப்பதே.

தியாக ஸாயியை அடுத்த அத்தியாயத்தில் தரிசிப்போம்.

Koviloor Digital Library

அத்தியாயம்—50

தியாக ஸாயி

உடல் கொண்ட அனைத்து உயிர்களின் துன்ப வதையையும் ஏற்கவே நான் விரும்புகிறேன். ஜீவராசிகளின் உள்ளெல்லாம் நின்று, அவர்களின் துயரை நான் வாங்கிக் கொண்டு, அவர்களைத் துயரற்றவராகச் செய்வதையே தெய்வத்திடம் விரும்பி வேண்டுகிறேன்.

— பாகவதத்தில் ரந்தி தேவன்

தம்மைச் சுற்றி உலக முழுதையுமே தரித்த மனிதகுல மாணிக்கம் (கிறிஸ்து) துன்ப வதையை வாங்கி அநுபவித்தவரே.

— தாமஸ் டெக்கர்

தியாகம் என்பது எத்தனை சிரமமாயிருக்கிறது நமக்கு! அத்தனை சிரமம் ஸ்வாமிக்கு — தியாகம் செய்யாமலிருப்பது.

நம்மிடம் பொருள்களைச் சேர்த்துக்கொண்டு அநுபவிக்கவே ஆசைப்படுகிறோம். பொருளைக் கொடுப்பதென்றால் மனம் வரவே மாட்டேன் என்கிறது. ஆனால் ஆசையை விட்டால், கொடுக்கப் பழகினால்தான் தெரிகிறது அதிலே எத்தனை பெரிய ஆனந்தம் உள்ளது என்று. மஹாமாயையின் விஷமத்தால்தான் இந்த ஆனந்தத்தை அநுபவிக்காமல் சொந்த அநுபோகம் என்ற சிற்றின்பத்தை அநுபவித்துப் பிறகு அதனால் பாபத் துயரைச் சேர்த்துக் கொள்கிறோம். 'தியாகம்' எனும்போது 'துறவு', 'இழப்பு' என்ற அர்த்தங்களை அதற்குச் செய்து கொள்வதே தவறு; இப்போதைவிட நிறைந்த இன்பத்தை ஈட்டிக் கொள்கிற பெரிய லாபம் அல்லவோ அது என்று தெரிகிறது. பொருளை மட்டுமின்றி உழைப்பு, சித்தம் இவற்றையும் பிறர் நலனுக்கு நல்கப் பழகிவிட்டால், ''இதுவேதான் நம் இயற்கை; இதுகாறும் செயற்கையாக வாழ்ந்து நம்மை நாமே ஹிம்ஸைப் படுத்திக் கொண்டிருக்கிறோம்'' என்று புரியும்.

Koviloor Digital Library

இதையே ஸ்வாமி அருமையாகச் சொல்வார். "கொடுப்பதென்பது மனிதனின் இன்றியமையாத இயற்கை. உள்ளே இழுத்த மூச்சை வெளியே விடாவிடில், உயிர் போய்விடும் அல்லவா? உட்சுவாசமும், நிஃசுவாஸமும் போன்றவையே ஈட்டுவதும் கொடுப்பதும். கொடுக்கவே ஈட்ட வேண்டும். போகம் உண்மையில் ரோகமே; தியாகம்தான் யோகம்."

சின்னதும் பெரிதுமாக பாபா புரிந்த, புரியும் தியாகங்கள் நம்மால் எண்ணி முடியாதவை.

* * *

தியாகம் என்றால் ஒன்றைத் தருவதுதான் என்றில்லை. 'தனது' என்பதே இல்லாமலிருப்பதுதான் பெரிய தியாகம். துறவறம், சந்நியாசம் என்பது இதுவே.

பாபா போல் அஹங்கார, மமகாராதிகளற்ற தியாகி அருமையிலும் அருமையே. பொருளில் பற்றற்றோர் இருக்கலாம்; சரீரப்பற்று இல்லாதிருக்கலாம்; ஆனால் பெயரில், புகழில் பற்றில்லாதோராக மஹான்களிலும் எங்கோ ஒருவரைத்தான் விட்டு வைத்திருக்கிறாள் மஹாமாயை. 'சாதித்த சாதனையும் தமதென்று சங்கிப்பர்' என்ற ஆப்தர் மொழிக்கேற்ப, தாங்கள் சாதித்ததை எப்படியேனும் நாசூக்காக வெளியிடவே மஹாபட்ட பெரியவர்களும் விரும்புகிறார்கள்!

ஆனால் பாபா! திக்பிரமிக்கச் செய்யும் தமது மிரகிள்களைக் கூட என்றேனும் அவர் அவையில் வெளியிட்டதுண்டா? இயேசு அறையுண்ட சிலுவை மரத்துண்டாலேயே ஆன 'மினி' சிலுவை, சந்திர மண்டல விநோதம் முற்றிலும் கொண்ட 'மினி' சந்திரன், ஸ்டாலெக்மைட் - ஸ்டாலெக்டைட் 'மினி' குகையான சாளக்கிராமம், பட்டப் பகல் ஒளியில் தோன்றிய வான வில் — ஆகிய அவரது பரமாற்புத சிருஷ்டிகளைப் பற்றிக்கூட அவராகத் தப்பித் தவறியேனும் வெளியுலகுக்குச் சொல்வதில்லையே!

அமெரிக்காவில் மேக மண்டலத்தில் விமானத்தே பெண்ணைக் காத்தது, டிகேட் காட்டுத் தீ வெள்ளத்தைக் கட்டி வைத்தது, கலக நாகரின் சரமாரி குண்டுக்களையிலிருந்து காயத்ரைவைக் காத்தது, நக்ஸல்பாரியின் பாய்ந்து வரும் கொலை வாளிலிருந்து ஸேது மாதவன் நாயரை ரக்ஷித்தது, கிதமலே ஸ்வாமியின் ஜீவ ஜோதியைத் தம்முள் கொண்டது, புருஷோத்தமாநந்தாவுக்கு ஜோதி நாரணனாய் சேவை சாதித்தது, அமிருதா நந்தாவுக்கு மஹாகணபதியாய் தரிசனம் தந்தது, அபேதா நந்தாவுக்கு ரமணராக அபேத அநுபூதி கூட்டியது, பதரியிலும் ஸோமநாதத்திலும் மூல லிங்கங்களை வெளிப்படுத்தி சாந்நித்ய டைனமோவை அதிநயமாக 'சார்ஜ்' செய்தது — போன்ற மஹா மஹா மிராகிள்களையும் உடனிருந்து பார்த்தவர்கள், அல்லது மிராகிள் வழிப்பாய்ந்த அருளுக்குப் பாத்திரமானோர்

Koviloor Digital Library

வெளியிட்டிருந்தான் (சிலர் வெகுகாலம் கழித்தே வெளியிட்டுள்ளனர்). நாம் அறிகிறோமே யன்றி, அணுக்கத் தொண்டரிடமும் ஸ்வாமி யாகச் சொல்லிக் கொண்டதில்லை. ஒன்பது வால்யூம்கள் வந்துள்ள அவரது பேருரைகளில் மிராகிள் பிரதாபம் ஒரு வரியாவது உள்ளதா? இராது. தாம் தரும் 'மிராகுலஸ்' காப்புக்குப் பாத்திரமானவரில் சிலருக்குமே கூட அதைத் தம் அருளாகக் காட்டிக் கொள்ளாத, அஹங்கார லேசமும் நாசமான திவ்யத் தியாகத்தை ஸ்வாமியிடம் காண்கிறோம்.

தம் ஸ்தாபனம், தம் ஸமிதியினர் என்ற மமகாரங்கள் அவரிடம் வாலாட்டவே முடியாது.

'ஸத்யஸாயி வைத்தியசாலை' அறிக்கையைப் படிக்கும் டாக்டர், ''இங்கே எல்லாக் 'கேஸ்'களும் வெற்றி'' என்று கூறினால், உடனே பாபா குறுக்கிடுகிறார். ''தப்பு. இங்கு குணமடையாதவர்களும் இருக்கிறார்களே! அதைப் பொதுக் கூட்டத்தில் சொல்லு'' என்று உத்தரவிடுகிறார்.

தம்மைக் குறித்து எதிர்ப்புப் பரவுவதை ஒரு பொதுக் கூட்டத்தில் கூறிய பாபா, ''சந்திரனைப் பார்த்து ஒரு தெரு நாய் குரைத்தது. அது குரைப்பதைப் பார்த்து அத் தெருவின் மற்ற நாய்களும் காரணம் தெரியாமலே ஊளையிடத் தொடங்கின. இச் சப்தம் கேட்டு ஊர் நாய்கள் யாவும் குரைக்க ஆரம்பித்தன. சத்தம் ஓங்கி ஓங்கி சந்திரன் வீட்டில் காவல் காக்கிற நாயே யோசனை செய்யாமல் குரைக்க ஆரம்பித்து விட்டதாம்! இப்படித்தான், யாரோ அசலார் ஆரம்பித்த எதிர்ப்பை மற்றவர்களும் சிந்திக்காமல் தொடர்ந்து, கடைசியில் ஸத்ய ஸாயி ஸ்தாபனக்காரர்களில் சிலரே அதில் சேருகிற அளவுக்கு ஆகி விட்டது'' என்றார். இவ்வுரையை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வந்தவர், என்ன இருந்தாலும் நம் ஸ்தாபனத்திலேயே யாரோ சிலர் செய்த தவறுதலைப் பொதுக் கூட்டத்தில் தெரிவிப்பானேன் என்ற எண்ணத்தில், குறிப்பிட்ட வாக்கியத்தை மட்டும் மழுப்பிக்கொண்டு மேலே போகப் பார்த்தார். ஆனால் ஸ்வாமியோ ''செப்பு'' என்று ஆணையிட்டு, இவ்விஷயங்களையும் அவர் அப்பட்டமாக மொழிபெயர்க்குமாறு செய்தார். இந்த ஸத்திய சந்தத் தன்மையும் மமகார மற்ற தியாகசீலந்தான்.

ஸாயி ஸமிதி பஜன், தனியார் பஜன் என்று ஸ்வாமி எள்ளளவும் வித்தியாசம் பாராட்டவே மாட்டார். ஒரு சங்கத்தில் சேர்ந்து பணி செய்ய முடியாத மனப்பான்மை கொண்டவர்களிடம் அவரே வியக்தமாக, ''உங்களுக்கு ஸமிதி சரிப்பட்டு வராது. அதில் சேர்ந்தால் சண்டைதான் வரும். எனவே, உங்கள் வீட்டிலேயே பஜன் நடத்துங்கள். ஸ்வாமி அங்கும் அநுக்கிரகிக்கிறேன்'' என்று கூறியிருப்பது நூலாசிரியருக்குத் தெரியும். இதற்கேற்பச் சில இடங்களில் ஸமிதியில் நடப்பதைவிட விமரிசையாகத் தனியார் கோஷ்டிகள் பஜனை, ஸ்வாமி ஜயந்தி, லக்ஷார்ச்சனை முதலியன நடத்துகிறார்கள்.

Koviloor Digital Library

இவற்றில் சிலவற்றில் அந்தந்த இடத்து ஸமிதிக்காரர்கள் கலந்துகொள்ளவும் மாட்டார்கள். ஆனாலும் ஸ்வாமி கலந்து கொள்வார்! ''அநுக்கிரகிக்கிறேன்'' என்று வாக்குத் தந்தபடி நிச்சயமாகத் தமது அற்புத கங்கேதங்களை இங்கே காட்டி யருள்வார்.

ஸ்தாபன மமகாரம் ஸ்வாமிக்கு இல்லவே இல்லை என்பதற்கு இன்னொரு சான்று. பிரபல பிறமொழி எழுத்தாளர் உட்படப் பலர் ஸ்வாமியைப் பற்றிப் பல மொழிகளில் பல்லாயிரக்கணக்கான பிரதிகள் விற்பனையாகும் நூல்கள் எழுதியுள்ளனர். இவர்கள் யாவரும் ஏதோ ஒரு கட்டத்தில் ஸ்வாமியிடமிருந்து ஒரு வார்த்தை ஆசி பெற்றுக் கொள்கிறார்கள். அவர்கள் எழுதுவதில் ஏதாவது தப்பிதம் வந்துவிடப் போகிறதே என்பதற்காக ஸ்வாமி ஏதாவது guidance தருகிறாரா? இல்லவே இல்லை. அவரவர் தங்களுக்குத் தோன்றியதை எழுதுகிறார்கள். இது போகட்டும். இவற்றில் சில வெகு அருமையான நூல்கள். இவற்றை 'ஸத்யஸாயி பப்ளிகேஷ'னே வெளியிட்டால் வெகு நன்றாகப் பிரசாரம் செய்ய முடியும்; நிறைய லாபமும் பெற முடியும். ஆனால் தம் ஸ்தாபனம் என்ற பாசமேயில்லாத ஸ்வாமி இவற்றை எழுத்தாளருக்கு விருப்பமான பதிப்பகம் மூலமே வெளியிடப் பரம உதாரமாக அநுமதிக்கிறார்.

முன்பு ஓர் ஆங்கில எழுத்தாளர் பாபாவைப் பற்றி எழுத விரும்பி அவரது ஆசியைக் கோரினார். லக்ஷக்கணக்கான பிரதிகள் விற்பனையாகக்கூடிய 'மவுசு' பொருந்தியவர் அவ்வெழுத்தாளர். அவரிடம் ஸ்வாமி சொன்னார்: ''டியர்! இப்போது ஏதோ சிறிது காலம் என்னைப் பார்த்ததில், என்னைப் பற்றிய விஷயங்கள் கேட்டதில் நீ மனவெழுச்சி அடைந்து என்னைப் பற்றிப் பெருமையாக எழுதிப் பிரசாரம் செய்ய விரும்புகிறாய். ஆனால் இப்படி அவசரப்படாதே. என்னைப் பற்றி வேறு விதமான எதிர்ப்புப் பிரசாரங்களும் நடக்கின்றன. அதையெல்லாம் கேட்டால் உனக்கே என்ன தோன்றுமோ? ஆகவே, நீ இப்போது அவசரப் பட்டுப் புத்தகம் எழுதிவிட்டு, எங்கும் அது பிரசாரமாகி, என் பெருமையை நீ நன்றாக விளக்கியதாக ஊரெல்லாம் உனக்குப் புகழாரம் சூட்டும்போது, நீயே உள்ளூற, 'எதிர்ப்பாளரின் பிரசாரத்தில் உண்மையிருக்குமோ?' என்று கலங்கிக் கொண்டிருந்தால் அது எத்தனை பரிதாபமான, தர்ம சங்கடமான நிலையாக இருக்கும்? ஆகவே இன்னம் பல்லாண்டுகள் பொறு. என்னை நன்றாக ஆராய்ந்து அநுபவி. எதிர்ப் பிரசாரங்களையும் கேள். உன் சொந்த அநுபவத்தால் அந்த எதிர்ப்பைப் பற்றி உனக்கு என்ன உறுதி ஏற்படுகிறதோ, அதற்கு இசைவாக எழுதுவதானால் எழுது.''

நீதித் துலாமுள் இழையும் கோடாமல் தம்மிலிருந்தே ஒதுங்கிப் பேசும் துறவறம்! அந்தப் பிரசித்த எழுத்தாளரைப் போன்ற ஒருவரின் பிரசாரம் என்கிற மேனகை மயக்கு வலை விசுகிற சமயத்தில், அநேக ஆத்மிகப் பெரியோர்களையும் விச்வாமித்ரரைப்போல் வீழ்ச்சியுறத்தான் வைத்திருக்கும். ஆனால்,

Koviloor Digital Library

சந்தியம் என்ற சந்நியாசப் பாவட்டாவை இங்கும் பட்டொளி வீசப் பறக்கவிட்டார் நம் பாபா.

வேறொரு இந்திய எழுத்தாளருக்கு வருவோம். இந்த எழுத்தாளரை ஸ்வாமி ஆட்கொள்ளத் தொடங்கியவுடன் அவருக்கு ஒரு பயங்கர சந்தேகம் எழுந்தது. இந்த எழுத்தாளர் அநேக ஆத்மிகப் பெரியார்களைச் சந்தித்தவர். அவர்களில் அபூர்வமான ஓரிரு விலக்குகள் தவிர மற்ற அனைவருக்கும் அவர்களைப் பற்றி இந்த எழுத்தாளர் எழுதவேண்டும் என்ற அரிப்பு இருந்திருக்கிறது. அதை வெகு நாசூக்காக அவர்களில் சிலரும், அப்பட்டமாகவே மற்றவர்களும் வெளியிட்டிருக்கின்றனர். மஹாமாயையின் வேலைத்தனந்தான்! இப்போது இவரை ஸத்யஸாயி ஆகர்ஷிக்கத் தொடங்கியதும், 'ஒருவேளை நம் எழுத்தின் மூலம் தமக்குப் பிரசாரம் பெறவே ஆட்படுத்திக் கொள்கிறாரோ?' என்று எண்ணத் தலைப்பட்டார்.

பிற்பாடு ஸ்வாமியின் மகிமைகளில் நன்கு திளைத்தார். தாமே ஆசைப்பட்டு ஸ்வாமியைப் பற்றி எழுத விரும்பினார். இதற்கு அவரிடம் அனுமதியும் ஆசியும் பெறப் புட்டபர்த்திக்குச் சென்றார்.

என்ன ஆச்சரியம்! இதுவரை எழுத்தாளர் சென்ற போதெல்லாம் அவருக்குத் தனிப்பேட்டி அருளிய ஸ்வாமி இம்முறை இவரைக் கண்டும், பேட்டிக்கு அழையாததோடு, கூட்டத்திலேயே இவர் அநுமதி கேட்கக்கூட விடாமல் நகர்ந்து விட்டார்.

தாம் புட்டபர்த்திக்கு வந்த நோக்கம் ஸர்வக்ஞ ஸ்வாமிக்கு நிச்சயம் தெரியும் என்று எழுத்தாளர் உறுதி பெற்றிருந்ததால் இந்த ஏமாற்றத்திலேயே இவருக்குப் பழைய சந்தேக விஷயமாகப் பாதிக் கண் திறந்தது. அதாவது ஸ்வாமி தமது சரித்திரம் பிரசாரமாவதில் அக்கறையே கொண்டிருக்கவில்லை என்று தெளிந்தார்.

பிற்பாடு வேறோர் அணுக்கத் தொண்டர் மூலமே ஸ்வாமியின் ஆசி யநுமதியைப் பெற்றார்.

அப்புறம் இந்த எழுத்தாளர் தாம் எழுதும் சரிதையை நூலாக வெளியிடுமுன் வெகுஜன விநியோகமுள்ள ஓர் ஏட்டில் தொடராகப் பிரசுரிக்க எண்ணினார். இதற்கும் அதே அணுக்கத் தொண்டரை ஸ்வாமியின் 'காதில் போடச் சொல்லி' அனுப்பினார். அப்போது தொண்டர் கூறியது ஏற்கெனவே இவர் எண்ணியதை உறுதி செய்து பாக்கிப் பாதிக் கண்ணையும் திறந்து விட்டது. தொண்டர் கூறினார்: ''ஸ்வாமியிடம் இம்மாதிரி விஷயங்களைக் கேட்பதற்கில்லை. அவர் இதையெல்லாம் பொருட்படுத்துவது கிடையாது. உங்களுக்குப் பொதுவாக எழுத ஆசி தந்து விட்டாரல்லவா? இனி நீங்கள் அதை எப்படி வேண்டுமாயினும் வெளியிட்டுக் கொள்ளலாம்.''

வேறு எத்தனை ஸாதுக்கள் இப்படித் தம்மைக் குறித்த விஷயத்திலிருந்தே விலகி நிற்க முடியும்?

வெகுஜன ஆதரவு பெற்ற பத்திரிகை மூலம் பிரசுரிப்பதென எழுத்தாளர் முடிவு செய்தார். தகவல்கள், புகைப்படங்கள் சேகரிப்பதில், இவரது திறந்த கண் மேலும் மலர்ந்தது. மற்ற ஸ்வாமியார்களும், அவர்களது ஸ்தாபனங்களும் அவர்களைப் பற்றி எழுதினால் தகவல்களும், படங்களும் யதேஷ்டமாகக் கொடுப்பதற்குப் பேரார்வமுற்றிருக்க, ஸ்வாமியிடமிருந்தோ அவரது ஸ்தாபனத்திடமிருந்தோ இப்படி உதவி ஏதும் நம் எழுத்தாளருக்குக் கிடைக்கவில்லை. ஸ்தாபனத்தின் முக்யஸ்தர் சிலர் தனிப்பட்ட ரீதியில் பேருதவி நல்கினர் எனினும், 'ஸ்தாபன ரீதியில் உதவி புரிய ஸ்வாமி சம்மதிக்க மாட்டார். இவ்விஷயமாக அவரிடம் பேசுவதற்கில்லை' என்று கூறி விட்டனர்.

ஸ்வாமி? நேராக அவரையே பிடிக்கலாம் என்றாலோ அவர் பிடிபட்டால்தானே? லோக ரக்ஷணையே கர்மமாகக் கொண்ட தியாகி தம் சரித ரக்ஷணைக்குப் பிடிபடுவாரா?

ஸ்வாமி உதவாததிலேயே எழுத்தாளர் நிறைவான உவகை பெற்றார். 'எந்தப் பிரதியும் எதிர்பாராமலே நம்மை ரக்ஷிக்க முன் வந்த செம்மல் அவர். சின்னஞ்சிறியனான நம் பிரசாரத்தை அந்த மஹாமேரு விரும்பியதாக ஐயுற்றது எத்தனை பாபம்?' என்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

'தன் சரிதம்' என்ற மமகாரம் ஸ்வாமிக்கு இல்லை என்பதோடு கதை முடியவில்லை. 'தான் எழுதும் சரிதம்', 'தன் ஸ்வாமியின் சரிதம்' என்ற மமகாரங்கள் எழுத்தாளருக்கும் இல்லாமற் செய்ய அவர் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தது மேற்படி சரிதம் வெகுஜன ஆதரவு பெற்ற ஏட்டில் தொடராக வெளியானபோது புலனாயிற்று.

அப் பத்திரிக்கைக்காரர்கள் மொத்தம் தம் ஏட்டில் நூறு பக்கத்திற்கான விஷயம்தான் கேட்டார்கள். எழுத்தாளரோ தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாத உற்சாகத்தில் இருநூறு பக்கங்களுக்கும் மேல் எழுதிவிட்டார். அதோடு, கடமையுணர்வில் பின்வாங்கி, தாம் எழுதியபடியே பத்திரிக்கைக்கு அனுப்பி வைத்து, அதன் ஆசிரியரையே விருப்பம்போல் குறைத்துப் போட்டுக் கொள்ளவும் சொல்லிவிட்டார்.

வந்தது வினை. பத்திரிக்கைக்காரர்கள் ஸ்வாமியின் அருமை அறியாதவர்கள். ஆன்மிகத்திலோ சமயத்திலோ விசேஷமாக ஈடுபடாதவர்கள். வியாபார நோக்கு ஒன்றிலேயே இவ் வரலாற்றை வெளியிட முன்வந்தவர்கள். இதையெல்லாம் முதலிலேயே எழுத்தாளர் நன்கு அறிந்தும்தான் விஷயதானம் செய்தார். ஏனெனில், இவரும் சந்தர்ப்ப நெருக்கடியில் பாதி வியாபார நோக்கில்தான் — பணம் பண்ணும் எண்ணத்தில்தான்— அவ்வேட்டுக்கு எழுதினார். மீதி பாதி நோக்கம், "நம் ஸ்வாமி

Koviloor Digital Library

பற்றி லக்ஷக்கணக்கான வாசகருக்குப் பிரசாரம் செய்யலாமே!'' என்பதே. இதையும் ஒருவித மமகாரமாகத்தான் ஸ்வாமி கருதியிருக்கிறார்.

முதலில் சிறிது காலம் ஏட்டிலே சரிதம் வெகு நல்ல முறையில் வெளிவந்தது. பிறகு பத்திரிகையாளர் அதைச் சிதைந்துச் சின்னபின்னமாக்கி வெளியிடத் தொடங்கினர். எழுத்தாளர் ஆதியில் தாம் ஸ்வாமியைப் பற்றிச் சந்தேகித்த பாபத்தின் தண்டனையே இது எனக் கருதினார். ஆயினும் முன்பின் தொடர்ச்சிகூட இல்லாமல், ஸ்வாமியின் மகிமைக்கே பங்கம் விளைவிப்பதுபோல், தாறுமாறாகக் கட்டுரைகள் சித்ரவதை செய்யப்படுவதைப் பொறுக்க மாட்டாமல் ஸ்வாமியிடம் பிரார்த்தித்துக் கொண்டார். ''பகவானே! ஒன்று, விஷயம் நல்லபடி வெளிவரவாவது அருள்வாய். அல்லது, இதை நிறுத்தி விடுமாறு நான் பத்திரிகாசிரியருக்கு எழுதி, அதை அவர் ஏற்றுக்கொண்டு நிறுத்தும்படியாவது செய்வாய்'' என வேண்டினார். ஸ்வாமி, ''அவர்கள் cut பண்ணுவது பண்ணாதது இருக்கட்டும். இந்த விஷயத்தையே நீ mind-லிருந்து cut பண்ணிவிட்டுப் பேசாமலிரு'' என்று பளிச்செனக் கூறிவிட்டார். தமது அற்புத சரித்திரம் பாழ்படுத்தப் படுவதுபற்றி எள்ளளவும் பொருட்படுத்தாத துறவறச் சிறப்பு! அதோடு எழுத்தாளருக்கும் ''தமது'' என்பது கூடாது என்று உபதேசம்! வாய் உபதேசத்தோடு நிற்பவரல்லவே ஸ்வாமி? வாஸ்தவத்திலேயே அந்த எழுத்தாளர் தமது சிருஷ்டியின் சித்ரவதை குறித்து இதன் பின் சற்றும் விசாரப்படாதவாறு, அவரது mind-ஐ cut செய்தும் விட்டார்!

பெயருக்கும் புகழுக்கும் ஊறு வருவதையும் பொருட்படுத்தாத ஸ்வாமியின் துறவே துறவு!

* * *

ஹிமாலய தியாகங்கள் இரண்டினை நம் ஸ்வாமி புரிந்து வருகிறார். சூட்சுமம் வாய்ந்த தியாகங்கள்.

ஒன்று, நம் பிரேம ஸாயி தம் பிரேமையையே தியாகம் செய்தாற்போல் தம்மைக் காட்டிக்கொள்வது. அதாவது தாம் பக்தரிடம் பட்டுக் கொள்ளாமலிருப்பது போலவோ, அல்லது பக்தர்களிடம் கோபமே கொண்டது போலவோ அவர் அநேக சமயங்களில் காட்டிக்கொள்ள வேண்டியிருக்கிறதே, இது ஒரு மஹாத் தியாகம்தான்.

வாஸ்தவத்தில் நாம் அவரிடம் நம் உயிர் முழுதையும் திரட்டிச் செய்கிற அன்பும், அவர் நம்மிடம் கொண்டுள்ள அன்பாம் சமுத்திரத்தில் ஒரு சொட்டுதான். மணிவாசகர் சொன்னார்: ''இறைவா! பக்த சிகாமணிகள் தம்மையே நிர்த்துக் கட்டிக்கொண்டு, உன்னிடம் அன்பு ஒன்றினாலேயே ஒன்றியிருக்கிறார்கள். ஆனால் இப்படி அன்பு செய்பவர்களிடம்,

Koviloor Digital Library

அவர்களை விடவும் நீ அதிக அன்பைக் கொட்டிவிடுகிறாய்! வாழி உன் அன்பு!''

தீர்ந்த அன்பாய அன்பருக்கு
அவரினும் அன்ப போற்றி!

மூலிகைச் சாற்றை இறுக்கியே பழனியாண்டவரின் விக்ரஹத்தைச் செய்திருப்பதுபோல், அன்புச் சாற்றை இறுக்கியே உருவான மூர்த்தி நம் ஸத்யஸாயி. நவகண்டத்திலும் அவதியுறும் கோடானு கோடியருக்கு அருள் மழை பொழிவதில் அலுப்புறுநவர் அவர். ஆனாலும் அது காலத் தத்வத்துக்கும் இட தத்வத்துக்கும் கட்டுப்படாத ஸூக்ஷ்ம ரூபத்தில் செய்வதே! கால — இட தத்வங்களில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்ட ஸ்தூல ஸாயியோ இது காரணமாகவே பக்தர் ஒவ்வொருவரிடமும் அன்பை ஸ்தூலமாகக் காட்டி உரையாடி, பாத நமஸ்காரம் தந்து, தட்டித் தடவிக் கொடுத்து இன்புறுத்த முடியாமலிருக்கிறதே! அவர்களைக் கண்டும் காணாதது போலவும், உதாசினப் படுத்துவது போலவும்கூட நடக்க வேண்டியிருக்கிறதே! தன் காலிலே விழ ஒரு பக்தர் அவாவுறுகிறார் எனில், அதைவிட அதிகமாக அவரை வாரியெடுத்தணைக்க விரும்பும் ஸாயிமா இவர் எனினும், 'இந்த ஒரு பக்தருக்கு அந்தப் பேற்றைத் தந்தால், கூட்டம் முழுதும் அதற்காக ஆர்வமுற்று வரும்; தமக்கு வேறெந்த அலுவலும் இயலாமற்போகும்' என்பதால் அக் குழந்தையை ஒதுக்கிச் செல்லவேண்டியிருக்கிறது? அப்படியும் அது பிடிவாதம் பிடித்தால் அதை அதட்டக்கூட வேண்டியிருக்கிறது. அப்போது பக்தர் மனத்தைவிட இந்தப் பரமர் மனம் தானே உள்ளூற அதிகம் வேதனைப்படவேண்டும்? 'நான் உங்கள் அந்தர்யாமியானதால் உங்கள் வேதனையின் உள் அடிகளை நானே படுகிறேன்' என்பாரே! ஆயினும் பிரேம ஸ்வரூபத்தையே உதாசின ஸ்வரூபம் போலவும் ஆக்கிக்கொண்டு உலவுகிறார், சந்தர்ப்ப நெருக்கடியில்.

ஸ்வாமி ஒரு கடற்பஞ்சு (sponge). கடற்பஞ்சின் புரை புரையும் நீரில் தோய்ந்து நீரை முகந்து கொண்டிருந்தாலும், வெளிப் பார்வைக்கு அதிலுள்ள நீர் தெரியாது. கடற்பஞ்சில் ஈரப் பசைகூடத் தெரியாமல் பொறபொறப்பாகவே தோன்றும். ஆனால், துளி அழுத்துங்கள். கக்கும் தண்ணீரை! நர சரீரம் கொண்டதற்காக இந்த அசாத்தியமான அன்புத் தியாகத்தை அவர் புரிய வேண்டியிருக்கிறது! நர சரீரம் கொண்டதோ, மக்கட் குலத்திடமுள்ள அன்பால்தான். அதை உய்விக்க வேண்டும் என்ற கருணை உந்தலால்தான்! மஹாமாயே, உன் புதிரே புதிர்!

நம்மை நல்வழிப்படுத்தும் அன்பின் பொருட்டு அவர் கோப வேஷமும் போடவேண்டியிருப்பது தியாகமன்றி வேறில்லை. அதிலும் பிரசாந்தி நிலையவாஸிகள், ஸாயி ஸ்தாபனத் தொடர்புள்ளவர் போன்றவரிடம் சற்றும் ஒழுக்கக் குறைவு இருக்கக்கூடாது என்பதால் அவர் அவர்களை வறுத்தெடுக்க வேண்டியிருக்கிறது. பாபாவால் பொசுக்கப்படுவது (getting

Koviloor Digital Library

burnt) என்று ஸ்ரீ. வி. கே. கோகக் கூறுவது வாசகர் அறிந்தது தானே?

'அன்பே சிவம்' என்கிறோம். அந்த சிவம் தேவ, அசுர, மனித, விலங்கு இனம் ஒவ்வொன்றிடமும் வெகுண்டு நிக்கிரஹம் செய்ததையெல்லாம் தொகுத்து நக்கீரர் ஒரு பட்டியலில் தருகிறார். இப் பாடலுக்கு 'கோபப் பிரஸாதம்' என்றே அற்புதப் பெயர் கொடுத்திருக்கிறார். ஆம், கோபமும் இறைவனின் அருட்கொடையாம் பிரஸாதம்தான்! திருவாசகமும், தக்கன் வேள்வியில் நக்கன் செய்த கொடுமைகளைத் 'தூய்மைகள் செய்தவா' என்றே போற்றுகிறது. பாபாவின் அன்பு விளி 'பங்காரு' என்றபடி, பொன் தாது தன் அழுக்கையெல்லாம் இழந்து சொக்கப் பொன்னாவதற்காக அவர் தூய்மைகள் செய்யும் போது, கோபமாம் வாது உலையில் கொஞ்சம் பொசுக்கவும் நேருகிறது. காரியத்தில் தீமை இருந்தாலும், அது தூய்மையே. அவர் 'தீதிலா நன்மைத் திருவருட் குன்று'தான். அதில் எள்ளளவும் ஐயமில்லை.

இறைவன் கோபருபமும் எடுத்தேயாக வேண்டியிருக்கிறது என்பதை ரசிக்கும் வேதம், ருத்ரனைத் துதிக்கத் தொடங்கும் போதே "உன் கோபத்துக்கு ஒரு நமஸ்காரமப்பா" என்கிறது. 'பீமன்' என்று இறைவனுக்குள்ள பெயருக்கே 'பீதி ஊட்டுபவன்' என்றுதான் அர்த்தம். 'உக்ரன்' என்று இன்னொரு பெயரும் சொல்கிறது வேதம். அவனிடம் பயத்தாலேயே காற்று வீசுகிறது, சூரியன் உதிக்கிறது என்றெல்லாம் தைத்திரிய உபநிஷதம் சொல்லிக்கொண்டே போகிறது. நம்மைப் போல் உணர்ச்சிச் சிதறலாலா இறைவன் கோபிக்கிறான்? அல்ல. அவன் தர்மத்தைக் காக்கும் விரதம் பூண்டிருப்பவன். இதன் பொருட்டே மஹா கோபமும் கொள்கிறான்: "மஹான் உக்ரோ அபி வ்ரதை:" என்று வேதம் நயம்படக் கூறும்.

கோபத்தால் பயமுறுத்துவது நம் ஸ்வாமியின் அன்பில் ஓர் அம்சம் எனில், அவரிடம் பயப்பட்டு நடப்பது நம் அன்பில் ஓர் அம்சமாகும். "அஞ்சியாகிலும் அன்பு பட்டாகிலும்" நல்வழி செல்லவேண்டும் என்பார் அப்பரடிகள். அன்பு படும்போதே, அதன் அங்கமாக அஞ்சவும் வேண்டும். "தெய்வப் பிரீதி என்பது வலது கண் எனில், பாப பீதி என்பது இடது கண்" என்று இதையே நம் ஸ்வாமி சொல்வார். ஆம், கடவுளிடம் அச்சம் என்பது உண்மையில் பாபம் செய்தால் கடவுள் தண்டிப்பார் என்ற அச்சந்தானே?

ஸ்வாமியிடம் ஸ்ரீ கோகக் ஒரு முறை, "தாங்கள் இப்படித் தாக்ஷிண்யமில்லாமல் இருக்கிறீர்களே!" என்று கேட்டு விட்டார்.

பாபா பளிச்சென்று பதில் கொடுத்தார்: "We also melt (நாம் உருகவும் செய்கிறோம்)". ராஜாவாகவும் மாதாவாகவும் ஒருங்கே இருந்து மொழிந்த அற்புத வாசகம்.

ஆனால், "உருகவும்" என்று "உம்" போட வேண்டுமா? உருகத்தான் செய்கிறார். நடுவே நம்மை உருக்கிச் சுத்தப்

Koviloor Digital Library

பொன்னுக்குவதற்காகப் பொசுக்குகிறார். நம்மை தகதகா மய மாக்கவே தகிக்கிறார். அப்போது அவரும் உள்ளூற உருகிக் கொண்டேதான் இருக்கிறார். கடலின் கர்ப்பத்தில் வடவைத் தீ யிருப்பதாகச் சொல்வார்கள். இங்கோ, மாறுகத் தீயின் கருவாக வும் அன்புக் கடலே உள்ளது.

தாம் எப்போதும் அன்பனே என்பதை மக்கள் புரிந்து கொள்ளாததை ஸாயிமா உருகிக் கூறுகிறாள்: ''நீங்கள் யாவரும் என் சொத்து. சொத்தைக் காப்பாற்றி வைத்துக் கொள்ளப் பாடுபடுவதுபோல் உங்களைக் காப்பாற்ற நான் முடிவில்லாத இன்னலையும் ஏற்பேன். எனக்குள்ள அத்தனை சக்தியும் உங்களைக் காப்பதற்காகச் செலவிடவேதான்! நீங்கள் கேட்காவிடினும் நான் உங்களுக்கு என் பிரேமையைத் தரத்தான் செய்வேன். அது உங்கள் உரிமையல்லவா? நீங்கள் விரும்பிய வரங்களை நான் தராததால் எனக்கு அன்பில்லை என்று சிலர் நினைக்கிறீர்கள். இது சரியே அல்ல. உங்கள் பார்வை குறுகியது. உங்களுக்கு முன்னும் தெரியாது. பின்னும் தெரியாது. எல்லாம் தெரிந்த நானே எதை எப்போது தரலாம், தரக் கூடாது என்று அறிவேன். ஒன்றைத் தராமல் உங்களைத் தவிக்க விடுவதே பிற்பாடு இதை விடப் பெரிய தவிப்பிலிருந்து உங்களை மீட்கத்தான். என்னைப் புரிந்துகொள்ளாமல் திட்டினாலும் சரி, நிந்தனையை மலையாகக் குவித்தாலும் சரி, நான் எவரையும் கைவிடவே மாட்டேன். நான் சில சமயம் சுரீல் என்று பேசுகிறேன், சுளீர் என்று தண்டிக்கிறேன் எனில் இதற்கும் காரணம் பிரேமைதான். இவர்களைத் திருத்தி, நல்ல கருவிகளாக்க வேண்டும் என்றே கண்டிக்கிறேன்'' என்பார்.

நாம் உள்ளூற ஒருவரிடம் கோபம் கொண்டிருக்கும்போதும் வெளியில் மதுரமாகப் பேசி நடிக்கும் சந்தர்ப்பங்கள் பல. பாபாவின் நடிப்பு இதற்குத் தலைகீழானது. உள்ளூற மதுரமாக இருந்துகொண்டே வெளியே சீற்றம் காட்டுகிறார் — அடியாருக்கு நல்ல மாற்றம் தரவேண்டும் என்றே.

''எனக்குக் கோபமோ, வெறுப்போ அணுவளவும் கிடையாது. என் ஜீவாதார ரத்தமே அன்புதான். ஆனாலும் நான் காட்டும் வழியில் நீங்கள் போகாதபோது, உங்களை அதில் திருப்புவதற்கே கோபமுற்றதாகக் காட்டுகிறேன். நான் போலியாகக் கோபங்கொள்ளும்போதும், நீங்கள் ஸன்மார்க்கத் தில் செல்ல வேண்டுமென்பதில் எனக்குள்ள அக்கறையே அது, எனவே என் அன்பின் இன்னொரு வடிவமே, என்று புரிந்து கொள்ளுங்கள்'' என்கிறார் ஸ்வாமி.

அன்பே வடிவான மகான்களுக்குக் கோபிக்கக் காரணமுள்ள போதுகூடக் கண்டிப்பதென்பது சிரமமாகத்தான் இருக்கும். ஆயினும் கோபத்துக்குப் பாத்திரமாகிறவரே, 'காரணத்தோடு, நம்மைத் திருத்தும் நல்லெண்ணத்தோடுதான் இம் மகான் நம்மைக் கண்டிக்கிறார்' என்று அதை மன இசைவோடு ஏற்றுக் கொள்வர் என்பதால் கண்டிப்பர். ஸ்வாமியோ பக்தரோடு

Koviloor Digital Library

பெறும் மன இசைவு என்ற இனிமையைக்கூடத் தியாகம் செய்து அவர்களைக் காரணமில்லாமலேயும் திட்டுவதுண்டு—இதனால் உள்ளூறத் தாமே சிரமப்படுவதுண்டு.

காரணமில்லாமலா? ஆம். வசவு வாங்குபவருக்கு அப்படித் தான் தோன்றும். அவர்கள் செய்திராத தப்புக்களையெல்லாம் ஸ்வாமி அவர்கள்மீது சுமத்தித் திட்டுகிறார் எனில், இது காரணமில்லாத கோபம் என்று தோன்றுவது நியாயந்தானே? அது மட்டுமில்லை. 'இதென்ன? நாம் ஒருகாலும் செய்யாத பிழைகளைக் கூறிக் கண்டிக்கிறாரே! இவரா ஸர்வக்ஞர்?' என்று தடுமாறவும் தோன்றும். இம்மாதிரி, செய்யாத தவறுகளுக்கு 'டோஸ்' வாங்கும் பாக்கியம் பிரசாந்தி நிலயத்தின் நிரந்தர வாஸிகள் முதலிய வெகு அணுக்கத் தொண்டருக்கே கிடைப்ப தாகும். இங்கே 'பாக்கியம்' என்றது கேலியாக அல்ல. இந்த நியாயமற்ற கோபத்துக்கு ஸ்வாமி கூறும் விளக்கம் பாக்கி யத்தை விளக்கும். ''ஒருவருடைய பாப மூட்டையை அவராகக் குறைத்துக் கொள்வது தவிர பிறரும் குறைப்பதுண்டு. எப்படியெனில், ஒருவரை இன்னொருவர் அபாண்டமாகத் தாக்கும்போது, தாக்கப்பட்டவரின் பாபத்தில் சிறிது தாக்கு பவரைச் சென்றடைகிறது. பூர்வ ஜன்மத்தில் மாபாவம் செய்த ஓர் அந்தணர் கண்ணனிடம் வந்து இப் பிறவியிலேயே முக்தி வேண்டியபோது, கண்ணன் பல ஜன்மாக்களிலேயே தீரவேண்டிய அவரது பாப மூட்டையை இப்படித்தான் ஊர் அபவாதத்தை யெல்லாம் அவர் ஏற்குமாறு செய்து குறைத்தான். இறுதியில் தானும் அவரை அபாண்டமாகக் குற்றம் கூறி, எஞ்சியிருந்த பாபத்தையும் தானே வாங்கிக்கொண்டு அவரை அப்போதே மோக்ஷம் சேர்ந்தான். என் ஆஸ்தானத்தில் நெருங்கியுள்ள உங்களை நான் சில சந்தர்ப்பங்களில் அகாரணமாகச் சாடுவதன் காரணம் இதுவே. அப்போது என்னைப் பற்றியே நீங்கள் தடுமாறுவதும்கூடச் சேர்ந்து உங்கள் பழைய மூட்டையை மேலும் குறைக்கிறது'' என்பார்.

இவ்விதம் ஸ்வாமியே சொல்லியும்கூட, மறுபடி அவர் காரணமின்றித் தாக்குகையில் தொண்டர்களுக்கு இக் காரணம் மறக்கும்படி மறைத்து விடுவாராம். அப்போதுதானே அவர்களது பாபத்தைக் குறைக்கும் பணியை இவர் ஆற்றமுடியும்? பாபத்தையும் வாங்கிக்கொண்டு, அதனால் தம்மையே ஸம்சயத்துக்கும் ஆளாக்கிக்கொள்ளும் இந்தத் தியாகத்தை என் சொல்ல?

இந்த ஜன்மாவில் இவர்கள் புரியாத தவற்றைச் சொல்லிக் கண்டிக்கிறார். அதனால் இது காரணமற்றது, நியாயமற்றது என்று தோன்றுகிறது. ஆனால் பூர்வ ஜன்மாவையும் இசைத்துப் பார்த்தாலோ இதைவிடக் காரணமுள்ள கருணை, நியாயமயமான நேயம் இருக்க முடியாது என்பது புலனாகும். அதிலேயே பரமத் தியாகமும்!

அன்பின் பொருட்டு, அந்த அன்புக்குப் பாத்திரமாகிறவரே நம்மை ஐயுறவும் செய்கிறார். பக்தர்களின் பக்தியைத் தியாகம்

Koviloor Digital Library

செய்வது பகவானுக்கும் எளிதில் கைவராததுதான். அதையும் செய்யத் துணிகிறார். அன்பும் ஆனந்தமுமே வடிவானவர் த்வேஷ வேஷமும் போட்டுத் தாமே உள்ளூறத் துன்பம் அநுபவிக்கிறார்.

கோபத்தையும் மனித மனம் ஒரளவு பொறுக்கும்; அலக்ஷியப்படுத்தப் பெறுவதைத்தான் பொறுக்காது. ஸ்வாமி கூட்டத்திடை வருகையில் சில சமயங்களில் நம்மைப் பார்ப்பதாகவே தெரிவதில்லை. எழுந்திருக்கிறோம். ''உட்கார்'' என்று வறட்சியாக ஒரே வார்த்தை சொல்லி நகருகிறார் ஸ்வாமி. அருள் உருவமாக நம்மை எண்ணிமுடியா இடர்களில் காப்பவர் இப்படி அலக்ஷிய வடிவராக உள்ளாரே என்று தோன்றும். ஸ்வாமி சொல்கிறார்: ''நான் வெளியில் அலக்ஷியக்காரனாகத் தோன்றினாலும் எனக்கு சகல ஜீவரிடத்தும் நிறைந்த அன்பு இன்றி வேறில்லை. நான் ஒவ்வொருவரது பூர்வகர்மாவையும் அறிவேன். அதற்காக அவர்கள் படவேண்டிய கஷ்டத்தைக் குறைக்கவும் செய்கிறேன். இருந்தாலும் ஒருவர் என் முன்னே நிற்கும்போது அவரது அழுக்காறு முழுதும் எனக்குத் தெரிவதால் ஸ்தூலமாக நிரம்பவும் அன்பு காட்டக்கூடாது என்றே கட்டுப் படுத்திக் கொள்கிறேன்.''

(இன்னொரு காரணம், ஸ்தூலஸாயி காலத்துக்குக் கட்டுப் பட்டிருப்பதால் ஒவ்வொருவரிடமும் ஸ்தூல அன்பைக் காட்டிக் கொள்ள முடியாதிருப்பது.)

''உங்களை நான் கவனிக்கவில்லை என்பதாலோ, நீங்கள் விரும்பும்படியே பணம், பதவி, ஆரோக்கியம், சௌகரியம் முதலியவற்றைத் தராததாலோ, ஸ்வாமி அலக்ஷியம் செய்கிறார் என்று எண்ணுகிறீர்கள். உங்களிடம் ஸ்வாமிக்கு உள்ள உண்மையான கவலை உங்களுக்குத் தெரியாது. ஆனால் ஸ்வாமி உங்களைப் பணக்காரராக, பதவிக்காரராக, பலிஷ்டராக, பவிஷுள்ளவராக ஆக்குவதில் கவலை கொண்டிருக்கவில்லை. உங்கள் சித்தத்தைச் சுத்தம் செய்து உங்களை உய்விப்பதிலேயே கவலை கொண்டிருக்கிறேன்'' என்பார் நம் கதாநாதர்.

''உங்களுக்கெல்லாம் அன்பும் ஆனந்தமும் இரு வேறு விஷயங்களாக இருக்கலாம். அன்பாக இல்லாமல் வேறு விதங்களிலும் நீங்கள் ஆனந்தத்தைத் தேடலாம். எனக்கோ ஆனந்தமே அன்பு செய்வதொன்றுதான். நான் எப்போதும் ஆனந்த ஸ்வரூபி; அதாவது எப்போதும் அன்பில் நிலைத்திருப்பவன். கோபிக்கும்போது கோபிக்கிறவருக்கே ஆனந்தம் போய்விடுகிறது. நானும் கோபிக்கிறேன். ஆனால் அப்போதும் என் ஆனந்தம் போய்விடவில்லை. ஏனென்றால் 'கோபம்' என்பது நான் போடும் வெளி வேஷந்தான். சில சந்தர்ப்பங்களில், சிலரைத் திருத்தவே, கட்டுப்படுத்தவே இந்த வேஷம் போடுகிறேன்'' என்பார் பகவான்.

இங்கே ஸ்வாமி தாம் எப்போதும் ஆனந்தமாக இருப்பதாகச் சொல்கிறார். நூலாசிரியருக்கு அநேக அவதார புருஷர்களைப்

Koviloor Digital Library

பற்றிப் படிக்கும் பாக்கியமும், இன்றுள்ள அவதார சிரேஷ்டர்களை நேருற்றுத் தரிசிக்கும் பேறும் கிடைத்துள்ளது. இதிலிருந்து அவர்களும் மனம் சாம்பித் துக்கிக்கிற — அல்லது அப்படித் தோன்றுகிற — சந்தர்ப்பங்கள் இருக்கின்றன என்று தெரிகிறது. உதாரணமாக: ஸ்ரீராமன் ஸீதாபஹரணத்தின்போது புலம்பிய புலம்பல். இயேசுநாதன் "ஏலோய் ஏலோய், லாமா ஸபக்தானி" என்று சிலுவையிலிருந்து அலறியது. அக்ஷய் போன்றவர்களின் மறைவில் ராமகிருஷ்ணர் குமுறிக் கதறியது. ஆத்ம ஞான மலையாம் ரமணரே, "ஓர் உதவியும் இல்லாத என்னால் ஆசிரம நிர்வாகிகளுக்கு எத்தனை கஷ்டம்?" என்று நொந்து கொண்டது; "அணிலும் குரங்கும் என்னைக் காண முடியாதபடி என்னைச் சிறைப்படுத்தியிருக்கிறார்களே!" என்று அவர் குபுகுபுவெனக் கண்ணீர் பெருக்கியது.

இப்படிப்பட்ட துக்கங்களிலும் ஒரு பாவனம் உண்டு. அவற்றில் நம் இதயம் அநுதபிக்கும்போதே நம் பாவத்தில் பல தீர்கின்றன.

உலகெங்குமுள்ள துயரை — விச்வ வேதனையை — மஹா புருஷர்களும் வாங்கிக்கொள்கிறார்கள். அவர்கள் இவற்றை அநுபவிப்பதாலும், அவர்களோடு சேர்ந்து நாமும் அநுபவிப்பதாலும் உலக வேதனை குறைகிறது, நம் பாபமும் கரைகிறது. அன்புருவானவர்கள் துயருற்றுத்தான் ஆகவேண்டும் — உலகின் துயர் தீர்க்கவே.

பேரன்பு செய்தாரில் யாவரே
பெருந்துயரம் பிழைத்து நின்றார்?

என்று இதைத்தான் கவியும் கேட்கிறார்.

ஆனால் நம் பேரன்புப் பொக்கிஷமான பாபாவோ ஒரு போதும் துயருற்றதாகத் தோன்றவில்லை. பக்தர் பொருட்டுத் தம் உடலில் நோய் கொண்டு அவர் துயருறும்போதும் அது 'வேதனை' என்பதாக இருப்பதில்லை. உடல் கஷ்டப்படும். அதனால் அவர் வேதனை அடைவதில்லை. நிச்சயமாக அவர் ஸ்ரீ ராமாதியரைப்போல் மனவேதனை அடைந்ததாகக் காட்டிக் கொண்டதே யில்லை.

நூலாசிரியன் அவரது அடிநாள் பக்தரிலிருந்து இன்றைய நெருங்கிய அடியார் வரையிலும் கேட்டறிந்த விஷயம்: அவர் வேதனைப்பட்டு அவர்கள் கண்டதே யில்லை என்பதுதான்.

அவர் கோபிக்கும்போது முகத்தில் க்ஷணம் எரிச்சலின் லேசம் தெரியலாம். அதுவும் உடனே நீரெழுத்தாக மறைகிறது. நிச்சயமாகக் கிலேச லேசமும் அவரிடம் இல்லை. இந்தக் கோபமும் அவர் பக்தர் பொருட்டே போடும் வேஷமன்றி மெய்யல்ல என்பதற்கு ஓர் அழுத்தமான சான்று பார்க்கலாம்.

Koviloor Digital Library

அவரைப் பற்றி மிகவும் அபஸ்மாரமாக புரளிகள் பரப்பப் படுவது அவர் காதுக்குப் போகும் சந்தர்ப்பம் பல இருக்கும் அல்லவா? இப்படிப்பட்ட சந்தர்ப்பம் ஒன்றில்கூட அவர் கோபமும் அடைந்ததில்லை, வருத்தமும் பட்டதில்லை என்று அணுக்கத் தொண்டர்கள் ஒருமுகமாகக் கூறியுள்ளனர். வெகு கௌரவமான பெண்கள் சிலர் புரளிக்கு நடுங்கி அவரிடம் முறை யிடுகையிலும், அவர் அலையெறா ஏரியாக கம்பீரமாகவே நின்று, ''இதையெல்லாம் நினைச்சு 'வொர்ரி' பண்ணிக்கலாமா அம்மா? நம் காரியத்தை, நம் தர்மத்தை நாம் பண்ணிக்கொண்டே போக வேண்டியதுதான்'' என்று கூறி அப்படியே சுத்திரித்து விடு வாராம். தாம் கோபிப்பதில்லை, வருந்துவதில்லை என்பது மட்டு மின்றி, பிறர் கோபிப்பதை, வருந்துவதையும் அவர் பொருட் படுத்தாததால்தான் புரளிக்காரர்மீது சில பக்தர்கள் மானநஷ்ட தாவா தொடுக்காமலிருக்கிறார்கள்.

ஆக, ஏதோ சில சமயங்களில் ஆழ்ந்த சிந்தனை வசந்தராக அவர் அடர்ந்து காண்பது தவிர, சோகவாடை என்பதே அறியா வாடாத ஆனந்த புஷ்பந்தான் நம் ஸ்வாமி.

அப்படியானால் இவர் விச்வ வேதனையை அநுபவிக்க வில்லையா? அநுபவிக்காமல் எப்படி இருக்க முடியும்? அம்மா ஆயிற்றே? விச்வ வேதனையை அநுபவிப்பதிலும் அவர் ஒரு மஹாத் தியாகம் புரிகிறார் என்றுதான் சொல்லவேண்டும். அதாவது, தாம் உலகத் துயரை வாங்கிக்கொண்டு உள்ளே அடிபட்டுக்கொள்ளும் போதிலும் வெளியிலே அதைக் காட்டிக் கொள்வதில்லை. தப்பித்தவறி அது வெளிப்பட்டு விடாமல் உள்ளேயே ஜீரணித்துக் கொள்கிறார். தியாகத்தின் பொருட்டுத் தாம் உடலால் படும் துயரையேனும் பக்தர்கள் ஓரளவு தாங்கிக் கொள்ளலாம்; இன்று லோகத்தில் உடல் நோயை விடக் கொடூரமாக உள்ள மனநோயைத் தாம் வாங்கிக்கொள்வது மட்டும் தம்மோடு போகட்டும், அதையும் பக்தர் பகிர்ந்து கொள்ள வேண்டாம் என்றே தம்மை ஆனந்த ஸாயியாக அனவரதமும் காட்டிக் கொள்கிறார்.

பாபாவே வெகு அபூர்வமாகச் சொல்வார்: "உங்கள் இதயத் தின் வாதைகள் அனைத்தையும் நான் அறிவேன். ஆனால் அவற்றை வாங்கிக் கொள்வதாலேயே என் இதயம் உறும் வாதையை நீங்கள் அறிய மாட்டீர்கள். உங்களது ஒவ்வொரு துன்பத்தையும் நானுந்தான் அநுபவிக்கிறேன்.''

அநுபவித்தாலும், அநுதபித்தாலும் தர்ம நீதியை, கர்ம ரீதியை முன்விட்டு அதை நீக்குவதில்லை — அவர் பிரேம ஸாயியா யிருந்தும். மக்களிடம் உள்ளதைவிட தர்மத்திடம் அதிகப் பிரேமை கொண்ட ஸாயிதான்!

மேற்கண்டவாறு பாபா கூறுவது வெகு அபூர்வமே. தாமும் வருந்துகிறோம் என்பதால் பக்தர் வருத்தப்படுவரே என்பதால் தமது வருத்தத்தையும் மறைத்துக்கொண்டு விடுவார்!

அடியாரின் பாப விளைவாக ஏற்பட்ட நோய்களை அவர் ஏற்றுத் துடிப்பதை எத்தனை ரகசியமாகச் செய்துவிடுகிறார்? எவரோ ஒரு அடியாருக்காக இங்கு ஸ்வாமி ரத்தவாந்தி எடுத்து குடலும், தொண்டையும் புண்ணாகியிருப்பதைச் சில சமயங்களில் அணுக்கத் தொண்டர் ஓரிருவர் அறிந்தும் இருக்கிறார்கள். அவர்களிடமும் தம் உபாதையை மறைத்து உவகையாகக் காட்டிக் கொள்ளத்தான் பாபா முயல்வார் எனினும், தாமே உவந்தேற்ற கர்மாவின் சக்தி அவ்வப்போது வெளிப்பட்டு உபாதையும் வெளியாகிவிடும். இதனால் அவ்வணுக்கத் தொண்டர் பெற்ற மனப்புண், மேலும் கடும் விரணமாகும், இதைத் தொடர்ந்து அவர் தியாகத்தால் போடும் ஆனந்த வேஷத்தின் போது. வேறு பக்தர்கள் பாபாவுக்குத் தாம்பூலம் கொண்டு வந்து தருவார்கள். வாயும், தொண்டையும், குடலும் புண்கொண்ட ஸ்வாமி இவ்வளவு சுண்ணாம்பு தடவிய வெற்றிலையைப் போட்டுக்கொண்டால் எப்பேர்ப்பட்ட எரிச்சலாக இருக்கும்? இதை எண்ணித்தான் தொண்டர்கள் துடிப்பர். ஸ்வாமியோ சகஜமாக அந்தத் தாம்பூலத்தை அங்கீகரிப்பார். வாதையைச் சற்றும் வெளிக்காட்டாமலே, குதறிய வாய் வழியாக, தொண்டை வழியாக அந்தச் சுண்ணாம்புத் தாம்பூலத்தை ரத்த வாந்தி செய்த வயிற்றுக்கு அனுப்பி விட்டுச் சிரித்துக் கொண்டிருப்பார்.

பொதுவாக நமக்கு நமது சந்தோஷத்தைவிடத் துக்கத்தை வெளிக்காட்டிப் பலர் அதைப் பகிர்ந்துகொள்ளச் செய்வதே இயல்பு. பிறர்பொருட்டே துக்கத்தை ஏற்கும் பிரபுவோ இதற்கு நேரெதிர்த் துருவம்.

வெளிப்படவே பல்லாயிரவருக்குத் தெரிகிற ஓர் ஆனந்த ஆக்டிங்கைப் பாருங்கள்: சிவராத்ரி லிங்கம் உத்பவமாகி எழும் போது பேற்று நோய் போன்ற வலி கொள்கிறார்; சிறிய தொண்டைக்குழலில் அது ஏறி, உதடுகளைச் சற்றுக் கிழித்துக் கொண்டுங்கூட வெளிப்படுகையில் நிச்சயம் சித்ரவதை படத்தான் செய்கிறார். ஆனாலும் அப்போதும் பொங்கிப் பொங்கிச் சிரிக்கவே முயல்கிறார், பாருங்கள். தம் துயரம் பிறருக்குத் தெரியவும் கூடாது! பிறர் துயரையோ தாம் தெரிந்து கொள்வது மட்டுமின்றி, அதனை வாங்கி அநுபவித்தே தீரவேண்டும் என்ற பிரேம சிகரம், தியாகக் கொடுமுடி!

கிறிஸ்து ஒரேமுறை சிலுவையில் அறையுண்டார். ஸ்வாமி அன்றன்றும் அறைபடும் சிலுவைகள் எத்தனையோ! ஆனால் கிறிஸ்துவுக்கு மக்கட் குலக் கண்ணீரானது அந்த வேதனையிலும் பன்னீர் தெளிக்கிறது. பாபாவின் தியாகமோ சற்றும் வெளி உலகுக்குத் தெரியாததால், "அவருக்கென்ன? ஸில்க் உடையும், பங்களா வாசமும், கார் சவாரியும், தாம்பூல வாயுமாகக் கும்மாளம் போட்டுக் கொண்டிருக்கிற ஷோக் சாமியார்" என்று சிலர் அவர்மீது மிளகாய் நீரையும் கொட்டுகிறார்கள். அப்போதும் சிரித்துக்கொண்டிருக்கிறார் பகவான்.

ராமனும் ரமணரும் ராமகிருஷ்ணரும் வெளியே துயரப் பட்டபோதே உள்ளே ஆத்மாராமராக இன்புற்றிருந்தது உண்மை

Koviloor Digital Library

தான் எனில், இன்னொரு புறம் நம் ஸ்வாமி வெளியிலே ஆனந்த ரூபியாகவே இருந்தபோதிலும் உள்ளே தம் எண்ணிறந்த குழந்தைகளின் ஷாக்—அப்ஸார்பராக அடிபட்டுக்கொண்டே யிருக்கிறார். அதற்கும் அடிமட்டத்தில் உள்ள ஆத்மானந்தத்தி லும் ஊன்றியிருக்கும் அற்புதம் அவர்.

உலகத்துயரை ஏற்று அடிபடுவதற்கு பிருத்விதான் சின்னம். பூமாதாதானே அத்தனை பாபத்தையும் தாங்குகிறாள்? ஸீதாதேவி இறுதியில் மண்ணுள் மறைந்தது மன்னுயிரின் வேதனையை அவள் தாங்கியதால்தான். பூமாதேவியான பாமா தேவிக் காகவே புவிக்கு வந்தவர் பார்த்திசன். புட்டபர்த்தி என்பது புற்று மண். அதாவது அது காஞ்சி போன்ற பிருத்வி க்ஷேத்ரம். காமாக்ஷியான ஸத்ய ஸாயி இங்கிருந்து உலக வாதையை உவந் தேற்று அநுபவித்துத்தான் வருகிறார். பிருத்வி தத்வத்தின் உருவாம் விநாயகனுக்குகந்த சங்கடஹர சதுர்த்தியில் நம் ஸ்வாமி அவதரித்ததன் உள்ளர்த்தம் இப்படித்தான் இருக்க வேண்டும். அவதார விதி இதுதான். ஸ்ரீராமனைப் போலன்றி ஆனந்த ரூபனாகவே, லீலாலோலனாகவே இருந்துகொண்டு லோக தாபம் தாங்கிய கண்ணனின் மறுபதிப்பே நம் ஸ்வாமி.

இந்த விச்வ வேதனையைப் பகிர்ந்துகொள்ளும் தியாக பாக்கியத்தை ஒருவிதத்தில் பக்தர்களுக்கும் அளிக்கிறார் ஸ்வாமி. அதாவது, அவரைப் பற்றிய விரஸமான புரளிகளைக் கேட்டு அடியார்கள் தவிக்கிறோமே, இந்தத் தாபத்தால் உலக பாபம் (எதிராளிகளின் பாபமேகூட) தீருவதற்கு நாம் துளித்துளி பணிபுரிகிறோமோ என்னவோ? நம் தாபத்தை அவர் வாங்கி அநுபவிக்கிறாரெனில், அவர் சற்றும் தாபப்படாத விஷயத்தில் நாம் தபிப்பது நம்மாலான சிறு தியாக வேள்வியாக அவரால் திட்டமிடப்பட்டிருக்கிறதோ?

*

ஸ்வாமி செய்யும் இன்னொரு மாபெரும் தியாகம், அவர் 'மிரகிள்' புரிவதேயாகும். மிரகிளுக்காகவே அவரைப் பெரும் பாலோர் பூஷிக்கின்றனர்; சிறுபாலோர் தூஷிக்கின்றனர். பெரும் பாலாரை பக்தியில் திருப்ப மிரகிள்தான் ஒப்பற்ற சாதனமாக இருக்கிறது என்பதால் அவர் அற்புதங்கள் செய்கிறார். ஆனால் நூலாசிரியன் கருத்தில் அவர் இதை விரும்பிச் செய்யவில்லை என்றே சொல்ல வேண்டும். ''இயற்கையன்னை ஒழுங்காக நடத்தும் குடித்தனத்தில் நான் தலையிட விரும்பவில்லை'' என்றே கூறுபவர் அல்லவா அவர்?

மிரகிள்கள் இயற்கை விதிகளை மீறியன என்று அர்த்தமல்ல. மிரகிளும் ஓர் உயர்ந்த இயற்கை விதிப்படி நடப்பதுதான். ஆனாலும் இவ்வுலகில் மக்களுக்கெனப் பரம்பொருள் விதித்த நியதிகளுக்கு இவை மேம்பட்டனவாதலால், அவற்றை இங்கே பொருத்திக் காட்ட பாபா விரும்பாமல்தான் இருப்பார். ஆயினும் மக்களின் மன இயற்கையை வலிந்து மாற்றாமல் அவர் களை பக்தி வழிப்படுத்துவது எளிதாக இல்லை. அவர்களே

Koviloor Digital Library

சுதந்திரமாக மன இயற்கையை மாற்றிக்கொண்டு பக்தி வழி செல்ல வேண்டுமானால், இதற்கு மிரகிள் செய்வதுதான் பெரிய உபாயமாக இருக்கிறது. உயிருள்ள மன இயற்கையின் விதியை மாற்றுவதா, உயிரற்ற ஜட இயற்கையின் விதியை மாற்றுவதா என்ற கேள்வி எழுகிறது. உயிரிடம் உள்ள மதிப்புணர்ச்சி காரணமாக அதனை வசியப்படுத்தக் கூடாதென்றே ஸ்வாமி கருதி, ஜட இயற்கை விதிகளை மாற்றி, மிரகிள் செய்கிறார். இதனால் மனத்தை அதுவாக விரும்பி தெய்வசக்தியை நினைக்கும்படிச் செய்கிறார்.

கடவுள் ஒரு கவி. கடவுளின் அவதாரமான பாபா ஒரு கவி. எல்லாவற்றையும் உடைத்துச் சொல்லி விடாமல், ரஸம் மிகுந்த விஷயங்களை ரகசியமாகவே சொல்வது கவி இயல்பு. இதை வியங்கியம், த்வனி என்றெல்லாம் அலங்கார சாஸ்திரங்கள் கொண்டாடும். பக்குவம் வாய்ந்த ஒரு சிலருக்கு மட்டுமின்றி மக்களனைவருக்கும் காவியம் படைக்க ஒரு கவி முன்வரும்போது அவன் தன்னுடைய சிறப்பாகப் போற்றும் வியங்கியங்களையும் உடைத்துக் காட்டவேண்டி வருகிறது. இது ஒரு பெரிய தியாகம். இறைவனின் கவிதையான இயற்கையில் அன்றன்றும் நிகழும் அனந்த கோடி அற்புதங்கள் இப்படி வியங்கியமாகவே உள்ளன. பக்குவர், அபக்குவர் அனைவரையும் கடைத்தேற்ற அவன் பாபாவாக அவதரித்திருக்கும்போது, தனது இக் காவிய நுட்பத்தைச் சிதைத்தே மிரகிள் புரிய வேண்டியதாகிறது. அற்புதம் செய்கிறார் என்பதால் பாபாவிடம் பெருமதிப்புக் கொள்பவர்கள், இந்த அற்புதத்தை அவர் ஒரு சாதனையாக அன்றி, தியாகமாகவே செய்கிறார் என்றும் புரிந்துகொண்டால் மேலும் மதிப்புக் கொள்வர்.

பிரம்மஞானிகளின் முடிமணி என்று பண்டித ஸதஸ் அனைத்தாலும் கௌரவிக்கப்படத்தக்க உபதேசங்களையும், அநுபவங்களையும் அருளிவரும் பாபா, பண்டிதர் மட்டுமின்றி அரை வாய், கால் வாய்கள் கூடத் தம்மை வெறும் சித்துக்காரர் என்று பரிகசித்தாலும் பரவாயில்லை என்று, சாமானியரின் பொருட்டு மிரகிள் புரிகிறாரே, இதுதான் தியாகம்.

"நான் அற்புதம் செய்வதை 'அட்வர்டைஸ்மென்ட்' என்று பரிகசிப்பவர் இருக்கலாம். அவர்களுக்கு 'அட்வர்டைஸ்மென்ட்' ஆகத் தோன்றினால் அப்படித்தான் இருந்துவிட்டுப் போகட்டுமே! நான் வந்திருப்பது என் குழந்தைகளுக்காக, என்னால் எப்படியெல்லாம் முடியுமோ அப்படியெல்லாம் சேவகம் செய்து அவர்களை எவ்விதமேனும் ஈச்வர பக்தியில் திருப்புவதற்காகத் தான்" என்கிறார் ஸ்வாமி.

எவருக்கும் பணிந்தறியா நம் சக்ரவர்த்தி அன்பிலே பணியாளாகி ஷாக்மனிடம் சொன்னார்: "I am here to *serve* my devotees the best way I can."

ஆம், கண்ணன் ஏகநாதருக்குச் செய்ததைவிடத் தம்மைக் குறைத்துக்கொண்டு சேவகம் செய்திருக்கிறார். அதை

Koviloor Digital Library

நினைத்தால் நம் உடம்பு சற்று ஆடியேவிடும். 1970-ஆம் ஆண்டு தமது ஜயந்திக்கு நாலு நாட்களுக்குப் பிறகு இந்த அதிர அடிக்கும் எளிமையைச் செய்தார். அன்று நள்ளிரவு பிரசாந்தி நிலைய வைத்யசாலையில் படுத்திருந்த கிருஷ்ணு மாவட்டத்து பவதேவபள்ளியைச் சேர்ந்த ஸ்ரீ ராஜுவின் அவஸ்தையைத் தீர்த்து பாபா அவரது குடலை இளக்கியது மட்டுமல்ல. தாமே சூக்ஷ்ம ரூபத்தில் அங்கு சென்று அவருக்கு 'பெட்-பான்' பிடித்திருக்கிறார்!

வியாதி நீர்ப்பதில் செய்த தியாகம் ஒருவிதம் எனில் வியாதியைத் தாமே வாங்கி அநுபவிக்கும் தியாகமோ?

இதில் ஷிர்டி சரித்திரத்தையே ஸ்வாமி பர்த்தி சரீரத்திலிருந்து தொடருகிறார். ஷிர்டி பாபா ஒரு பக்தரின் குழந்தை தீயில் விழுந்தபோது, அதன் தகிப்பைத் தாம் ஏற்றுக் காப்பாற்றினார். பலவந்த் கபர்தேக்கு ஏற்பட்ட பிளேக் வியாதியை மனம் உவந்து ஏற்றவர் ஷிர்டி மூர்த்தி. கடைசியில் அவர் யாக்கை நீத்ததே தாந்த்யா படேலைக் காப்பதன் பொருட்டுத்தான் என்ற நம்பிக்கையும் உள்ளது.

பர்த்தி ஸாயியின் இப்படிப்பட்ட பெரும் தியாகங்களைப் பார்க்கு முன் சிறு தியாகங்களையும் பார்த்து விடுவோம்.

* * *

புக்கபட்டணத்தில் ஏதோ விழாவுக்கு ஸ்வாமியை அழைத்துப் போகிறார்கள். அதிகாலையில் பாபா காபி அருந்தியதோடு சரி. அங்கு விழா முடிய மணி பதினொன்றுக்கு மேலாகியும், 'அவரும் ஒரு நர சரீரத்திலிருப்பவர்; ஒரு பானமாவது தரவேண்டும்' என்ற எண்ணமே நிர்வாகிகளுக்கு எழவில்லை. 'எட்டரைக்கு ஸ்வாமி சிற்றுண்டி அருந்துவாரே, இவர்கள் ஏற்பாடு செய்யவில்லையே' என்று உடன்வந்த பிரசாந்தி நிலைய முக்யஸ்தர் ஒருவருக்குக் கோபமாக வந்தது. அவர் எதற்கும் இருக்கட்டும் என்று ஃப்ளாஸ்கில் காபி கொண்டு வந்திருந்ததால், ஸ்வாமியின் காதோடு, காபி அருந்துகிறாரா என வினவினார். 'வேண்டாம்' என்று ஜாடையாகத் தெரிவித்தார் ஸ்வாமி.

ஊர்வலம் வந்தார்.

பிறகு புக்கபட்டணத்திலிருந்து திரும்புகையில் புட்டபர்த்தியிலும் பல இடங்களுக்குச் சென்றுவிட்டு நல்ல வெயிலில், நண்பகலுக்கு மேல்தான் பிரசாந்தி நிலையத்துக்குத் திரும்பினார்.

அப்போது மேலே சொன்ன அன்பரிடம், "அப்பா, நான் விருந்துபசாரம் பெறவா வெளியூர் செல்கிறேன்? ஜனங்களுக்கு தரிசனம், உபதேசம் தருகிற என் கடமையைச் செய்வதற்குத் தானே போகிறேன்? அவர்களுக்கு என்னை உபசரிக்க மறந்து போனாலும், அதைக் குத்திக் காட்டுவது போல், இங்கிருந்தே கொண்டு போனதை அவர்கள் எதிரில் உண்டு காட்டுவது பண்பாகுமா?" என்றார்.

Koviloor Digital Library

அடியார்கள் வெயிலில் நின்று காண சகியாத பாபா, தாமே பாதரக்ஷையும் அணியாத மலர்ப்பாதம் பொறியச் சுடு மணலில் நடந்து சென்றிருப்பது எத்தனை முறை? சென்னை, பம்பாய், டெல்லி முதலான இடங்களில் பல அன்பர்களின் இருக்கைக்கு விஜயம் செய்யும் பொருட்டு எத்தனை அகாலங்களில் போஜனமும், நித்திரையும் வைத்துக்கொள்ள நேர்ந்திருக்கிறது?

ஒரு காலத்தில் உயர் ரக பக்ஷணங்களையும், இனிப்பு வகைகளையும் ரஸித்து உண்ட அந்த ரஸராஜன், தாம் உவக்கிறோம் என்பதால் ஏழையரும் இவற்றை வாங்கிவந்து படைக்கிறார்களே என்பதால், இவற்றை உண்பதை நிறுத்திவிட்டிருக்கிறாரே!

தள்ளுவதில் மட்டுமின்றி, கொள்ளுவதிலும்கூடப் பெரும் தியாகம் இருப்பதுண்டு. அநேக இடங்களில் பக்தி மிகுதியால் பாபாவை உபசரிக்க வெகு ஆடம்பர ஏற்பாடுகளைச் செய்து விடுகிறார்கள். பாபா தம்மை வரவேற்பதில் பகட்டும் படா டோபமும் அடியோடு உதவாது என்று சொல்லியுங்கூட இவ்விதம் செய்துவிடுகிறார்கள். 'எனக்குத் தேவை யெல்லாம் ஜனங்கள் யாவருக்கும் தெரிகிற மாதிரி நான் நிற்பதற்காக ஒரு விசுப் பலகை ; அவர்கள் யாவருக்கும் என் குரல் கேட்பதற்காக ஓர் ஒலிபெருக்கி. வேறு தோரணங்கள், பூமாலைகள் முதலியன தேவையே இல்லை' என்று அவர் சொன்னாலும், நம் ஸம்பிரதாயப் பண்பு காரணமாக இதோடு நிறுத்தத் தோன்றுகிறதா? ஆடம்பர வரவேற்புதான் தருகிறோம். பாபா இவற்றையும், நம் மனம் நோவாதிருப்பதற்காக ஏற்று அருள் புரிகிறார். 'இந்தச் சாமி யாருக்கு எதற்கு இத்தனை டாம்பீகம்?' என்று எதிராளிகள் கரித்துக்கொட்டுவதையும் ஏற்றருள் புரிகிறார்! தள்ளும் தியாகம் ஒருவிதம் எனில் கொள்ளும் தியாகம் இப்படி!

சமூகம் கழித்துக் கட்டியவர்களையும் அவர் கொள்கிற நியாய துறவை ஆரம்ப அத்தியாயம் ஒன்றிலேயே பார்த்து விட்டோம்.

* * *

பிரேமப் புயல் மழையில் தியாக வெள்ளம் அடித்து மோதி வரும்போது அதை நம் பகுத்தறிவால் அணை போட்டு நிறுத்த முடியாதுதான். அடியார் ஒருவரது உபாதையை பாபாவே வாங்கி அநுபவிக்கும் தியாகம் அடிக்கடி நிகழ்வதுண்டு. இம் மாதிரியான ஒரு சமயத்தில் ஒரு பக்தர், "ஸ்வாமி! அந்த ஒரே ஒரு அடியாரின் அவஸ்தை தீர வேண்டும் என்பதற்காகத் தாங்கள் நோயை ஏற்று இத்தனை அடியார்களை வேதனையுறச் செய்யலாமா?" என்றார்.

அப்போது பாபா தமக்குப் பிரேமை பீறிவரும்போது இந்தக் கணக்கெல்லாம் போட்டுப் பார்க்க முடிவதில்லை என்றும், அந்நிலையில் அடியார் நோயைத் தாமே ஏற்று அவரை ஆற்றுவது தவிர வேறெதுவுமே தமக்குத் தோன்றுவதில்லை என்றும் கூறினார்.

Koviloor Digital Library

இப்படித்தான் அவர் கட்டுப்படுத்த முடியாத ஒரு தியாகப் பிரவாஹம் 1950-ல் பிரசாந்தி நிலைய மேற்கூரை ஒட்டப்படும் போது பெருக்கெடுத்தது. அப்போது அந்த மொட்டைமாடிக்குச் சுற்றுக் கைப்பிடிச் சுவர் எழுப்பியாகவில்லை.

இரவு வேளை: வேலை செய்து களைத்த எஞ்ஜினீயர்கள், மற்றும் சில பக்தருடன் ஸ்வாமி அங்கே அரட்டையடித்துக் கொண்டிருக்கிறார். ஒரே சிரிப்பும், களிப்புந்தான்.

திடுமென இதற்கு முற்றிலும் மாறாக, "நான் வந்து விட்டேன், வந்துவிட்டேன்" என்று அலறிக்கொண்டு திக்கு திசை பாராமல் ஓடலானார் நம் ஸ்வாமி.

ஐயோ! சுற்றுச் சுவரில்லாத மொட்டைமாடியின் ஒட்டு விளிம்பை நோக்கி ஓடுகிறாரே!

பரபரவென்று பக்தர்கள் அடித்துப் புடைத்துக்கொண்டு சென்று, கைகோத்துக்கொண்டு ஒரு சுவராகத் தடுத்து நின்றார்களோ, பாபா மாடியிலிருந்து விழாமல் தப்பினாரோ!

மனிதச் சுவரில் மோதிக்கொண்டு மாடித்தரையிலேயே விழுந்த பாபா பிரக்ஞை இழந்தார். அவர் சரீர—அதீத—யாத்திரை (extra-corporeal journey) செய்யும் போதெல்லாம் இப்படி நடப்பது வழக்கந்தானே? இதைப்பற்றி பக்தர் கவலைப் படவில்லை.

சிறிது போதுக்குப் பின் உணர்வு மீண்ட பாபா தெரிவித்த விவரம்: கடற்கரை ஆந்திர தேசத்தில் அவருக்கு ஒரு மிராசுதார் பக்தர் உண்டு. அப் பக்தரைக் கொள்ளையடிக்கவும் கொலை செய்யவும் ஒரு கூட்டம் கிராமத்தை நோக்கிப் போயிற்று. அந்தப் பட்டாளம் வருவதை அறிந்தார் மிராசுதார். ஆனால் அப்போதைய நிலையில் அவர் செய்யக்கூடியது, பாபாவைப் பிரார்த்திப்பது தவிர வேறு எதுவும் இல்லை.

இங்கே மொட்டைமாடியில் ஜோக் அடித்துக்கொண்டு ஷோக்காகக் காணப்பட்ட பாபாவின் காதுகளில் அந்த தீனக் குரல் விழுந்ததும் அவருக்கு பிரேமையின் ஷாக் அடித்துவிட்டது. உடனே "து:க ஜஹாம் தஹாம் பீர்" என்ற மீரா வாக்கியப்படி. "துக்கமுள்ள இடத்தில் எல்லாம் எழுந்தருளும் பிரபு" விழுந்தடித்துக் கொண்டு கிளம்பிவிட்டார்!

ஆபத் ரக்ஷக வெறியில்தான் தமது ஸ்தூல சரீரத்துக்கு ஏற்படக்கூடிய ஆபத்தையும் பொருட்படுத்தாமல் அப்படி மாடி விளிம்பு நோக்கிச் சென்றுவிட்டார்! பெற்றெடுத்த தாய்க்கு வருமா அந்தத் தியாக எழுச்சி?

(பிற்பாடு, இங்கே இவர் தரையில் சாய்ந்ததும், அங்கே கிராம வாசலில் சூக்ஷ்ம ஸாயி ஒரு போலீஸ்காரனாக நின்றார்.

Koviloor Digital Library

முன்கூட்டியே தங்களது படையெடுப்பை மிராசுதார் அறிந்து போலீஸ் படையையே வரவழைத்திருக்கிறார் என்று கொள்ளையர் முடிவு கட்டியிருக்க வேண்டும். வந்த சுவடு தெரியாமல் கம்பி நீட்டிவிட்டனர்!)

''ஸ்வாமி! இப்படி இந்த சரீரத்துக்கே பிராணாபத்தை ஏற்படுத்திக் கொள்கிற அளவுக்குத் தாங்கள் அன்புக்குப் பரவசமாகலாமா?'' என்று பக்தர்கள் கண்ணீர் விட்டுக் கேட்டனர்.

நடுவிலே சிறு இடுக்கு விட்ட அழகுப் பல் வரிசை முல்லைச் சரமாகச் சிரிப்பில் மலர ஐயன் ஸர்வ சகஜமாகச் சொன்னார் : ''ஆமாம், அப்படியே நான் மாடியிலிருந்து விழுந்து செத்துப் போயிருந்தால்தான் என்ன? பத்தோடு பதினொண்ணும் போச்சு என்றாகியிருக்கும்.''

உலகில் மரிக்கிற எத்தனையோ பேரில் ஒருவராகத் தாமும் போயிருக்கக்கூடும் என்று, உலகையே காக்க வந்தவர் எளிமையாகச் சொன்னார்! 'பத்தோடு பதினொண்ணு' என்கிற பழமொழியைச் சொன்னாலும், இதிலேயே தசாவதாரத்தோடு இந்த அவதாரமும் முடிந்திருக்கும் என்பதாகத் தம் மகிமையையும் உள்ளுரைத்தாரோ என்னவோ? (கண்ணன், புத்தர் இருவரையும் அவதாரமாகச் சேர்த்தால் ஸாயி பதின்மூராம் அவதாரமே ஆவார்.)

* * *

ஒரு தசராவில் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்குப் பிரசாந்தி நிலயத்தில் விருந்து படைக்கப்படுகிறது. பல விதமான வியாதியுள்ளவர், கண்ணிலே அழுக்கும், மூக்கிலே அழுக்குமாக, பரட்டைத் தலையும், தூர்வாடைத் துணியுமாக வந்து நாகரிகமில்லாமல் சத்தம் போட்டுக்கொண்டு உட்கார்ந்ததில் பி.எஸ். மேனனுக்கு அருவருப்பு, வயிற்றையே குமட்டுகிறது. வாலண்டீயர்களில் ஒருவராகப் பரிமாறுகிறவர் அவர். பாபா, ''மேனன்'' என்று அழைக்கிறார். அவரது பிரேம நயனங்கள் அந்தப் பரதைப் பட்டாளம் முழுவதையும் சுற்றி வருகிறது. ''சிருஷ்டி எத்தனை அற்புதம் பார்த்தாயா, மேனன்?'' என்று கனிந்து சொல்கிறார்.

எத்தனை எத்தனையோ அற்புதம் செய்பவருக்கு அநாகரிக அழுக்குக் கூட்டம் 'அற்புத'மாகத் தோன்றுகிறதெனில் அந்த அன்பை என்னென்பது?

தாமே லட்டுப் பாத்திரத்தை வாங்கிக்கொண்டு அத்தனை ஆயிரம் ஏழைகளுக்கும் தமது லட்டினும் இனிய கையால் பரிமாறுகிறார். சொந்தக் குழந்தைகள் என்பதால் அவலக்ஷணமும் அநாகரிகமும் இந்தப் பரம சொகசுக்காரருக்கு. சுசிருசியானவருக்கு லவலேசமும் தெரியவில்லை.

Koviloor Digital Library

சமையற்கட்டின் உஷ்ணத்தில், முதுகை நிமிர்த்த முடியாமல் நிமிர்த்திக் கொண்டு மேனன் நிற்கும்போது பாபா பரிமாறி முடித்துப் புதுமலராக வந்து நிற்கிறார்.

"ரொம்ப க்ராண்ட் இல்லே?" என்கிறார்.

கூட்டத்தைச் சொல்கிறார் என்று நினைத்த மேனன், "ஆமாம், குறைந்தது மூவாயிரம் பேர் இருக்கும்" என்கிறார்.

"ஊஹூம்", என்கிறாள் நவராத்ரி நாயகியான ஸாயி மாதா. "அதைச் சொல்லலே. இவாளுக்கெல்லாம் பணி செய்ததில் நமக்கு உண்டாகிற சாந்தியும், ஆனந்தமும் இருக்கே, அதைச் சொன்னேன்" என்கிறாள்!

கண்ணனைப் பற்றி பாபா சொன்ன ஒரு வேடிக்கைக் கதையில் இந்த சேவா மனச் செவ்வியையே பார்க்கிறோம். ராஜசூய யாகத்தில் கண்ணன் தர்மபுத்திரரிடம், "என் தகுதிப் பிரகாரம் எனக்கு இங்கே ஒரு பணி கொடுக்க வேண்டும்" என்றானும். தர்மபுத்திரர் கண்ணனே ஸர்வேச்வரன் என்று தெரிந்தும் விளையாட்டாக, "உன் தகுதி என்ன?" என்றாராம். "எம்.ஏ." என்றானும் கண்ணன். "எம்.ஏ.-ஆ, நீயா? எந்தக் காலேஜில் எப்போது படித்தாய்? அதெல்லாம் ஒப்புக் கொள்வதற்கில்லை" என்றார் யுதிஷ்டிரர். கண்ணன் அருள்நகை செய்தான். "எம். ஏ. என்றால்—'எம்கிலி ஆகுலு'—'எச்சில் இலை'. இங்கே உண்பவர்களின் இலைகளை நான்தான் எடுத்துச் சுத்தம் செய்யப் போகிறேன்" என்றான். ஸ்வாமி கூறும் இக் கண்ணன் கதை அவரது சுய சரிதையுந்தான்.

எச்சில் இலையைக் கூட நாம் அசுசி பார்க்காமல் எடுத்துப் போட்டுவிடலாம். ஆனால் அழுகிச் சொட்டும் தொழுநோய் முதலியன உள்ளோரையும் ஸ்வாமி தொட்டுத் தொட்டு அன்பு புரிவது போல் எவரால் செய்ய முடியும்? ஊட்டியிலிருந்து உடலெல்லாம் விகாரமாக ஊநீர் சொட்டிக் கொண்டு வந்த ஒரு வழக்கறிஞரின் 'கொத கொத'ப் புண்களை யெல்லாம், பரம சுத்தரான ஸ்வாமி அசங்கியம் பாராமல் தடவி, அவற்றுக்கு விபூதி சிருஷ்டித்து அப்பியதைக் கண்டு பெண்டிர் கண்ணீரே உகுத்திருக்கிறார்கள். இப்படி ஒரு நாள் அல்ல, பல நாட்கள் தொடர்ந்து செய்தே நோயைப் பெருமளவு கட்டுப்படுத்தினார். இங்கே பிரேமையும் தர்மமும் கைக்கோத்துலவும் விந்தை பாருங்கள். இத்தனை பிரேமை பொழிந்தும் தர்ம உணர்வால் அவரது கர்மாவை ஸ்வாமி உடனே தீர்க்காததைக் கவனியுங்கள்— வேறெதற்காகவும் இல்லாவிடினும்— தினந்தினமும் அந்த பயங்கர விரணங்களைத் தொட வேண்டியிருக்கிறதே என்பதற்காகக்கூட அவ் வழக்குரைஞரின் நோயைக் குணப்படுத்தாதது தர்மமும் தியாகமும் கங்கா யமுனாவாகக் கலப்பதுதான்.

ஸ்தூல ஸாயியைவிட சூக்ஷ்ம ஸாயி எத்தனை முறை எத்தனை சின்ன சின்ன வேலைகளை எல்லாம் செய்து, "கண்ணன் என் சேவகன்" என்பதை மெய்ப்பிக்கிறார்!

Koviloor Digital Library

சங்கற்ப மாத்திரத்திலேயே பிறரது நோவைத் தீர்க்கும் வல்லமை வாய்ந்தவர், கர்ம கதியை அடியோடு மாற்றக்கூடாது என்ற தர்ம உணர்வால், அவர்களது உபாதையைத் தாம் வாங்கி அநுபவித்துத் தீர்க்கும் சந்தர்ப்பங்கள் பலப்பல. 'என்பும் உரியர் பிறர்க்கு' என்பது இங்கேதான்! எங்கோ எவரோ நெருப்பிலே புண்ணுண்டால், அதைத் தணிக்க இங்கே பாபா 102 டிகிரி ஜ்வரத்தைச் சிறிது நேரம் அநுபவிப்பார். சாதாரண மாநுட காயம் பத்து நாளில் அநுபவிக்க வேண்டியதை இந்த திவ்ய காயத்தால் பத்து நிமிஷத்தில் கழித்துத் தீர்த்து விடுவார். சாதாரண நர சரீரம் கான்ஸராக அநுபவிக்க வேண்டியதைத் தமது ஸூக்ஷ்ம சரீரத்தில் சிறு புண்ணாகக் கழித்துத் தீர்ப்பார். 'உற்ற நோய் நோன்ற'லையே தவம் என்கிறார் வள்ளுவர். தமக்கு உறுமல், இன்னொருத்தருக்கு உற்றதைத் தாம் வலிய வாங்கி நோன்றலை என் சொல்லிப் புகழ்வது?

நாலாண்டுகளுக்கு முன் கோவா கவர்னர் மாளிகையில் பாபாவின் குடல்வால் சிழ்பிடித்து வெடித்து, பிராணாபத்தான நிலைக்கு வந்தது, இன்னொருத்தருக்கு வந்த அப்பெண்டிஸிடிஸை இவர் உவந்தேற்றதன் விளைவுதான். ஒரு விதமான வைத்தியத்தை யும் ஏற்க மறுத்து, தம்மைத்தாமே அப்போது அவர் குணப்படுத்திக்கொண்ட விந்தையை கவர்னர் நகுல்ஸென் வரவழைத்த மருத்துவ நிபுணர்களே கண்டு அதிசயித்திருக் கிறார்கள். தாம் உற்ற வேதனைக்கு 'விசித்திர சங்கடனு' என்று பாபா 'நாமகரணம்' செய்து விளையாட்டாக்கிவிட்டார்!

இவ்வத்தியாயத்தில் இனி பாபா ஏற்ற மற்றொரு சித்திர வதையைச் சற்றே விஸ்தாரச் சித்திரமாக விரிக்கவிருப்பதால் கோவா நோயைச் சுருக்கி விட்டோம். அப்போது அன்புப் பாலைச் சுண்டக் காய்ச்சி அதில் தியாகச் சீனியிட்டு ஐயன் தந்த ஒரு 'கோவா' வாசகத்தை மட்டும் கொடுக்கிறோம்:

ஸ்வாமி அநுபவித்த வேதனையில் சிறிதைத் தமக்குப் பகிர்ந்து தருமாறு கவர்னர் ராணி ஸ்ரீமதி இந்து நகுல் ஸென் பிடிவாதம் பிடித்தபோது ஐயன் சிரிக்க முயன்றவண்ணம் சொன்னார்: "அம்மா! வேதனையைப் பிரசாதமாக விநியோகிப்பது என் வழக்கத்தில் இல்லை."

இந்தத் தியாகச் சிகரமாக 1963 குரு பூர்ணிமாவுக்கு முன் ஸ்வாமி ஒரு வாரம் பாரிசவாயுவுற்றிருந்தது பக்தர் அனைவருக்கும் தெரிந்தது. அதனை விவரிக்கு முன்னர், பக்தருக்குத் தெரியாத, அதே போன்ற சமீபத்தில் நிகழ்ந்த இன்னொன்றைத் தெரிந்து கொள்வோம்.

1974 மார்ச் மாதம். பக்தர் ஒருவரின் நோவை பாபா பரிந்தேற்றதால் அவரது இரு கால்களும் பாரிசவாயுவில் மரத்துப் போயின. இரண்டு நாட்கள் முழுதும் இந்த நிலையிலேயே இருந்தார். தரையோடு தரையாகக் காலை இழுத்துக் கொண்டே அவர் 'பாத் ரூமு'க்கு நகர்ந்த பரிதாபம் அன்பர் இதயங்களைச் சுட்டது.

Koviloor Digital Library

மூன்றும் நாள் நீர் கேட்டார். அதில் சிறிதை எடுத்து இரண்டு கால்கள் மீதும் தெளித்துக்கொண்டார்.

விருட்டென எழுந்தார். விசுக்கென்று நடந்தார்!

இந்த சம்பவத்தை ஸ்ரீ கோகக் அமெரிக்காவிலுள்ள ஒஹாயில் வழக்கறிஞர் ஸில்வரின் வீட்டு பஜனைக்குப் பின் விவரித்த போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது.

அங்கிருந்த அனைவரும் இந்திய முறைப்படி தரையில் அமர்ந்திருக்க, பதினைந்தாண்டுகளாகப் பாரிசவாயு உற்றிருந்த ஸில்வரின் தாயார் மட்டும் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தார்—அல்ல, அமர்த்தி வைக்கப்பட்டிருந்தார். கோகக் வேறேதோ பாரிசவாயுக்காரரின் நோய் தீர்ந்ததைச் சொல்லும்போதே அந்த மூதாட்டி தம்மையும் அறியாமல் நாற்காலியிலிருந்து இறங்கினார்; மற்றவர்களைப் போலவே தாமும் பாரிச வாயுக் கால்களை மடக்கிக்கொண்டு தரையில் அமர்ந்து விட்டார்!

ஆம், தியாக சரிதத்தின் சிரவணமே இவரது நீரா நோயைத் தீர்த்துவிட்டது!

அது சரி, ஆனால் இந்த அம்மாளின் பாரிசவாயுவை பாபா வாங்கிக்கொண்டு அநுபவித்தாரா? இல்லை! இன்னம் அவர் ஆயிரமாயிரவர் நோய்களைத் தீர்க்கிறாரே. அத்தனையையும் அவரே தம் உடலில் வாங்கிக்கொண்டா கஷ்டப்படுகிறார்? அல்லவே! இதற்கு நூலாசிரியர் காணக்கூடிய ஒரே விடை, கர்மாவால் வியாதி ஏற்படாதபோது ஸ்வாமி அதனைத் தம் அநுக்கிரஹத் தாலேயே தீர்க்கிறார்; தாம் வாங்கிக்கொண்டு தீர்ப்பதில்லை. தர்ம ரூபியான அவர் பெரும்பாலும் கர்ம வியாதியாக இல்லாத வற்றையே தீர்க்கிறார். ஆனால் அன்பு முட்டி மோதிவரும் சந்தர்ப்பங்களில், தர்மத்தையும் கருணையால் மீறி, கர்ம வியாதி யையும் குணப்படுத்த முனைகிறார். நோயாளி தனது கர்மாவை மீறிக் குணமாகிறான். இப்படி தர்மத்தை மீறிச் செய்ததற்காக இச்சமயங்களில் பாபா தாமே அந்த வியாதியை வாங்கிக்கொண்டு அநுபவிக்கிறார்.

''எல்லா அறமும் விட்டிங்கு என்னொருவனையே சரண் புகு''—ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ— என்றான் கண்ணன். ஸாயிக் கண்ணனோ அடியாரின் விஷயத்தில் கர்ம தர்மத்தை அவர்கள் மீறி வெளிவரும்படிச் செய்கையிலேயே, தாம் அதை மதித்து, அதன் பொருட்டு அவர்களது பாப கர்ம வினைவான நோயை ஏற்றுக்கொள்கிறான்!

இந்த மஹாத் தியாகக் கொடுமுடியைப் பார்ப்போம்.

* * *

1963 ஜூன் 28ந் தேதி இரவு பாபா, ஸ்ரீ கஸ்தூரியை அழைத்து, 'நாளையிலிருந்து ஒரு வாரம் 'கோரிக்கை' இல்லை என்று அறிவித்து விடு'' என்றார்.

Koviloor Digital Library

ஏன் அப்படி என்று கஸ்தூரிக்குப் புரியவில்லை. நவராத்ரி, சிவராத்ரி, பாபா ஜயந்தி போன்ற பண்டிகைகளுக்குச் சில தினங்களுக்கு முன்பிருந்தே புட்டபர்த்தியில் கூட்டம் பெருகி விடுமாதலால் பாபா தனிக் கோரிக்கைகளை நிறுத்துவதுண்டுதான். ஆனால் இப்போது அப்படிப்பட்ட கூட்டம் ஏதும் இல்லை. குரு பூர்ணிமை நெருங்கி வந்ததெனினும், பேட்டியில்லை எனுமளவுக்கு நிச்சயமாகக் கூட்டம் சேர்ந்து விடவில்லை. இருந்தாலும் ஸ்வாமி உத்தரவானதால் கஸ்தூரி அவர் சொன்னதை எதிர்க் கேள்வி கேளாமல் அறிவித்து வந்தார்.

மறுநாள் சனிக்கிழமை. சனியன் பிடித்த கிழமையாகவே விடிந்தது! விடியற்காலை பாபா தமதறைக்கு முன்னுள்ள வராந்தாவில் தலைசுற்றி, தடுகுட்டமாகச் சாய்ந்தார். விழும் போதே இடது கை மடங்கி மூடிக்கொண்டது. இடக்கால் விரைத்தது. பாத விரல்கள் மடக்க மாட்டாது நீட்டிக் கொண்டன.

எவருடைய பாரிசவாயுவையோ பாபா வாங்கிக்கொண்டு இருக்கிறார் என்று கஸ்தூரி ஊகித்துவிட்டார். அதற்காகத்தான் பேட்டியை நிறுத்தியிருக்கிறார். அப்படியானால், ஒரு வாரம் பேட்டியில்லை என்றதால் ஒரு வாரமுமா அதை அநுபவிக்கப் போகிறார்? தம் கோமள தேகத்தில் இந்தக் கொடூரத்தை அத்துணைக் காலம் அவர் தாங்குவதா?

பலவிதப் பாரிசவாயுக்களில் இது மிகக் கொடூரமான பாரிசவாயு என்பது மட்டுமல்ல! மூளையில் ட்யூபர்குலர் மெனின்ஜைடிஸ் ஏற்பட்டு அதனால் ரத்த நாள வெடிப்பான செரிப்ரல் த்ராம்பாஸிஸ் உண்டாகி, அதன் விளைவாக ஏற்பட்ட பாரிசவாயு! ஆம், பிற்பாடு மைசூர் ராஜ்ய மருத்துவத் துறை இயக்குநரின் ரிபோர்ட் அப்படித்தான் பாபாவுக்கு உற்ற—அல்ல, பாபாவாகவே உவந்தேற்ற—நோயை வர்ணித்தது!

டைஃபாயிட், வயிற்றுப் புண், காது குத்தல், பொன்னுக்கு வீங்கி, இத்யாதி உபாதைகளைப் பிறர் பொருட்டு இந்தக் காருண்ய விக்கிரஹர் தாங்கிப் பார்த்தவர்கள்தாம் பிரசாந்தி வாஸியர். ஆனால் அதெல்லாம் கொஞ்சம் நேரமே அநுபவித்த சிறிய உபாதைகள். இம்முறை நிலையவாசிகளை மிக மிகச் சோதித்து, அழ அழச் செய்துவிட்டார். அந்தச் சோதனையும் காருண்யம்தான். தாம் அநுபவித்த நோயோடு, அவர்கள் சிந்திய கண்ணீர் மூலமாகவும் உலகத்தைப் பிடித்துள்ள எத்தனையோ பிணிகளை நிவிருத்தி செய்திருப்பார். விச்வ வேதனைக்குச் செய்த மஹா பிராயச்சித்த யாகத்தைத் தொடங்கி விட்டார் தியாகராஜர் பாபா.

பாபாவின் ஸுந்தர முகாரவிந்தம் விகாரமாக இடப் பக்கம் கோணி இழுத்துக்கொண்டது. நாக்கு வெளியே துருத்திக் கொண்டது. இடக் கண்ணிலே துளிக்கூட ஜீவகளையே இல்லை. அதன் பார்வையே போய்விட்டதெனத் தெரிந்தது. வைரமாக மின்னும் கண்மணி கரியாகிவிட்டது!

Koviloor Digital Library

கடிகாரத்தில் விநாடிக்கரம் மட்டுமல்ல, நிமிஷக்கரம் மட்டுமல்ல, மணிக்கரமும் கூட நகரத் தொடங்கியும் பாபா அப்படியே கிடந்தவுடன், அணுக்கத் தொண்டர் துணுக்குற்றனர். அது அசட்டுத் தனமாயிருந்தாலும் இருக்கட்டும், பக்தி குறைவாகத் தோன்றினாலும் தோன்றட்டும் எனக் கருதி நிலைய வைத்ய சாலையின் டாக்டர் பி. ஜி. கிருஷ்ணமூர்த்தியை அழைத்துப் பரிசோதிக்கச் செய்தனர்.

மூளையில் வெடிப்பு ஏற்பட்டு ஐயனுக்கு இடப்பக்கம் இழுத்தே விட்டது என்ற பயங்கரத்தை டாக்டர் கண்டு கொண்டார். ஆபத்தான கேஸ்களின் போதெல்லாம் பாபா விடமே ஓடி வரும் அவர் இந்தப் பேராபத்தில் செய்வதற்கேதும் அறியாது, அவரிடமே, ''தங்கள் நோவைத் தீர்த்துக் கொள்ளுங்கள்'' எனப் பிரார்த்திக்கலானார்.

நள்ளிரவு வரையில் பாபா வெளிப் பிரக்ஞை நலிந்தே கிடந்ததால் அடியாரின் தவிப்பு அதிகமாயிற்று. பெங்களூரி லிருந்து மருத்துவத் துறை பெரிய டாக்டர் பிரஸன்ன ஸிம்ம ராவை வரவழைத்தனர். அவர் வந்தபோது பாபா எந்த வலியும் தெரியாமல் 'கோமா'வில் பிரக்ஞை யிழந்திருப்பதாக வெளிப் பார்வைக்குத் தோன்றினாலும், உள்ளூறத் தாங்க முடியாத சித்திரவதைப்பட்டதாக 'மெடிகல் ரிபோர்ட்' கூறுகிறது.

குளிர்ந்த கடாக்ஷன் குருடாகிவிட்டான்! அம்ருதப் பிரஸங்கன் ஊமையாகிவிட்டான்! பல குருடருக்குப் பார்வையும் ஊமையருக்குப் பேச்சும் கொடுத்த வள்ளல், திருஷ்டியை, வாக்கை இழந்தே விட்டான்—மருத்துவ சாஸ்திர ரீதியில். நீண்ட காலம் மூளையின் உள்ளே மௌனமாயிருந்த ஒரு க்ஷயரோகக் கட்டி இப்போது வஞ்சம் தீர்த்துக் கொள்ளத் தொடங்கியதாகக் கண்டார் பிரஸன்ன ஸிம்ம ராவ். விவரமாக டயக்னோஸ் செய்யும் பொருட்டு லம்பார்—பங்க்சர் (முதுகெலும்பிலே ஊசி குத்தி, மூளையிலிருந்து திராவகம் எடுப்பது) செய்ய எண்ணினார். இதற்குப் பூர்வாங்கமாக பாபாவின் ரத்தக் குழலில் க்ளூகோஸ் இஞ்செக்ஷன் செலுத்தச் சென்றார்.

என்ன விந்தை! சுய இயக்கம் அற்றுப்போன பாரிசவர்யு பாபா, டாக்டர் தமக்கு ஊசி போடக் கூடாது என்று சைகை யால் தடுத்து, உடம்பையும் காட்டாது விலக்கிக் கொண்டார்? மருந்திசனுக்கு மருந்தா? வைத்தீச்வரனுக்கு வைத்தியமா?

தாம் உள்ளுக்கோ, வெளிக்கோ எந்த வைத்தியமும் செய்து கொள்ளப் போவதில்லை என்று அவர் பிடிவாதமாக உணர்த்திய பின் பெங்களூர் டாக்டர் வேறு வழியின்றி ஊருக்குத் திரும்பினார்—''இந்த அவதார சரிதத்தைத் தரிசிப்பது இதுவே கடைசி முறை என்ற எண்ணத்தோடு'' என்கிறார்!

அடியார்கள் பாபாவின் வாயைப் பலவந்தமாகத் திறந்து ஒரிரு ஸ்பூன் எலுமிச்சையும் க்ளூகோஸும் கரைத்த தீர்த்தம்

Koviloor Digital Library

மட்டுமே விட முடிந்தது. மற்றபடி படு பட்டினி. சரீரம் வைக்கோற் துரும்பாகிவிட்டது!

திடீரென வியர்த்துக் கொட்டியது விகிர்தனுக்கு. நோய் விட்ட அடையாளமா? இல்லை. நேர்மாறாக, மாரடைப்பு ஏற்பட்டிருக்கிறது! த்ராம்பாஸிஸ், மெனஞ்ஜைடிஸ் போதாது; இப்போது ஹார்ட் அட்டாக்! வலி தாளாது அந்த ஊமை நிலையில் அவரிடமிருந்து வெளிப்பட்ட பயங்கரப் பிளிறல்கள்! ஆயிரம் தேள் ஒருங்கே பிடுங்குவது போன்ற 'ஆங்கினபெக் டோரஸ்' — மருத்துவ சாஸ்திரம் அறிந்த சித்ரவதைகளுள் சிகரமானது.

ஈ எறும்புக்கும், தம்மைக் கொலை செய்ய நினைத்த பகைவருக்கும்கூட, நல்லதே எண்ணும் ஸாயிநாதனுக்கா இத்தனை கொடூர வதை? அதுவாக அவரை நெருங்குமா? அவராக அல்லவா ஏற்றுக்கொண்டிருக்கிறார்?

எப்போதேனும் உணர்வு சற்று வந்தால், பார்வை உள்ள ஒரு கண்ணால் சுற்றியுள்ளோரைப் பரிவொழுகப் பார்ப்பார். 'அழ வேண்டாம், வருந்த வேண்டாம்' என்று சைகை காட்டுவார். அதை வாயாலும் சொல்ல முயன்று, தோல்வியுற்று அவர்களை மேலும் அழுமாறு, விம்முமாறு செய்துவிடுவார்.

இன்னும் ஒரு நாள் ஓடியது.

அந்தரங்கச் சேவகரை அருகழைத்து, அவரவருக்கு ஏற்பட்ட பணிகளைத் தளர்வுறாமல் செய்யும்படி அவர் குழறிக் குழறி, உளறி உளறிக் கூறினார். "ஐயோ! அப்படியானால், அப்பன் புவியை விட்டுப் புறப்பட்டே விடப்போகிறாரா?" என்று அவர்கள் இடிந்துவிட்டனர்.

அவரது நாவுலர்ந்து, உள்ளே இடப்புறமாகச் சுழன்று ஒட்டிக்கொண்ட பின் அந்தக் குழறலும் நின்றது.

பூமியே நழுவினாற்போல் அணுக்கத் தொண்டர் பீதி கொண்டபோது, மறுபடி அவர் குழறலானார். அமிருதமாக அபயம் சொன்னார்: "பயப்படாதீர்கள்! வெளியே இருக்கும் பக்தர் கூட்டத்திடம் பொய்க் காரணம் சொல்லாமல், எனக்கு உடல் சுகவீனம் என்று தெரிவித்து வாருங்கள். அதே சமயம் அவர்கள் கவலையும் பயமும் கொள்கிற மாதிரி, ஆபத்து என்று சொல்லாதீர்கள். அவர்கள் நச்சரிப்பதாக எண்ணி எரிந்து விழாதீர்கள். இதமாகப் பேசுங்கள்; பிரியமாகப் பேசுங்கள்" என்று திக்கித் திணறிக் கூறினார். துளிர்க் குரல் சருகாகிப் பொடிக்கிறது. பனிக்குரல் பரக்கட்டையாக ஒலிக்கிறது. ஆயினும் உள்ளே அன்பு துளிராகவே, பனியாகவே உள்ளது.

இவ்வதிகாரத் தொடக்கத்தில் சொன்ன ஒளிவு மறைவற்ற உண்மையில் பிறக்கும் தியாகத்துக்கு இது ஓர் அற்புதச் சான்று. ஏனெனில் இதுவரை அணுக்கத் தொண்டர்கள் வெளியாருக்கு

Koviloor Digital Library

விஷயத்தை மூடி மூடியே வைத்தனர். பகவான் என்று தாங்கள் சொல்லும் ஒருவர் பயங்கர நோயுற்று மரணப் படுக்கையில் இருக்கிறார் என்று தெரிந்தால் வெளி உலகம் பரிகசிக்குமே என்ற 'தற்காப்பு'—அகங்காரம் இவர்களை விட்டுப்போகவில்லை. எனவே, தரிசனத்துக்காக வந்து காத்திருந்து காத்திருந்து பாபா இறங்கியே வராததாலும், அத்தாணிச் சேவகரும் மருத்துவப் பட்டாளமும் மட்டும் அடிக்கடி அவரது அறைக்குச் செல்வதாலும் பலப் பல எண்ணியிருந்த பக்தர் கூட்டத்திடம் இவர்கள் ஏதுமே சொல்லவில்லை. அவர்களை அடியோடு தவிர்த்தே வந்தனர். இச்சமயத்தில்தான் பாபா உள்ளது உள்ளபடி தமது உடலுபாதையை அவர்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்.

ஆனாலும் உள்ளது உள்ளபடியே அல்ல. நோயின் கொடூரத்தைக் குறைத்தே சொல்லுமாறு பணிக்கிறார். ஏன்? அவர்கள் பயப்படக் கூடாது, கவலைப்படக் கூடாது என்றே! தமது பெருமைக்குப் பங்கமோ என்னுமிடத்து சத்தியம்; பிறர் வருந்துவரே என்னுமிடத்து சத்தியத்தின் காரத்தில் பிரேமை நெய் வார்ப்பது!

செவ்வாய்க்கிழமை. ''டாக்டர் வந்திருக்கிறார். மூன்று நாட்கள் முழுக்கச் சோதித்தது போதும். சிகித்ஸைக்கு இணங்க வேணும்'' என அடியார் வேண்டினர்.

மங்கள வாரத்தில் மங்கலச் செய்தியை சைகையால் பாதியும், குழறலால் பாதியுமாகத் தெரிவித்தார் ஸ்வாமி. ''டாக்டர் வந்திருக்கிறார் என்றால் தரிசனம் செய்துவிட்டுப் போகட்டும். நாளையிலிருந்து உபாதி குறையும். இது வரை இரு ஹார்ட்-அட்டாக்குகளைத் தாங்கிவிட்டேன்'' என்றார். மூளையில் ரத்தம் கட்டியதால் ஏற்பட்ட விபரீதம், நாளங்கள் வெடித்த விவரம், அது காரணமாக இதய ஓட்டத்தில் ஏற்பட்ட பாதிப்பு எல்லாவற்றையும் அவரே வர்ணித்தார்! ''இந்த உபாதியைத் தாங்குவது எந்த மனிதராலும் முடியாத காரியம்'' என்று முறுவலிக்க முயன்றார். ஐயோ, உதடு கோணிப் போகிறதே!

மறுநாள் நிலைய ஆஸ்பத்திரித் தலைமை டாக்டர் பி. ஸீதா ராமையா வந்ததாலும், நேற்றே நிலைமை திருந்தும் என்று பகவான் சொல்லியிருந்ததாலும், அனைவருக்கும் சற்று நிம்மதி பிறந்தது. ஆனால் பாபாவின் தேக ஸ்திதியோ இன்று அதி தீவிரமான கட்டத்தை அடைந்துவிட்டது.

சுவாஸப் போராட்டம் தொடங்கிவிட்டது. விக்கல்கள் அவரைப் பிளந்தன. 'ஸிங்க்' ஆவது என்பார்களே, அந்திமத்தில் கொஞ்சம் கொஞ்சமாகத் தோய்கிற அந்த நிலை!

ஈச்வராம்பாவுக்கும், வெங்கப்ப ராஜுவுக்கும், சேஷம ராஜுவுக்கும், பார்வதம்மாவுக்கும், வெங்கம்மாவுக்கும், இன்னம் பிரசாந்தி நிலையவாஸிகளுக்கும், மற்ற பக்தர்களுக்கும் ஸகல

Koviloor Digital Library

சராசரமும் பிரளயத்தில் அமிழ்ந்து கொண்டிருப்பதாகவே தோன்றியது.

இதோ பாதங்கள் சில்லிட்டு விட்டன. பத்மக் கரங்கள், குளத்திலிருந்து பறித்துப்போட்ட தாமரைத் தண்டுகளென வெளிறி, பனிக்கட்டியாகிவிட்டன. சுவாஸம் குறைந்துகொண்டே வருகிறது. விக்கலும் நின்றது.

மற்றவர்கள் விக்கி விக்கிப் புலம்பலாயினர்.

டாக்டர்கள் முகங்களைக் கைகளில் புதைத்துக்கொண்டு அமர்ந்துவிட்டனர்.

எந்த வினாடியும் ...

ஒரு விநாடி, மறு விநாடி, மூன்றாம் விநாடி—விடிவு நாடி நின்றனர் அந்த விபரீதத்திலும்.

விபரீதமும் நிகழாமலே விநாடிகள் ஓடின; நிமிடங்கள் ஓடின; வள்ளிசாக நான்கு மணிகள் ஓடின!

ராஜீவ தள லோசனங்கள் திறந்தன. நிஜமாகத் திறந்தன. சுற்றியிருந்த அனைவரையும் தேன் பார்வையில் துழாவின. இதழ்களில் புன்னகை நெளியப் பார்த்தது. அப்....பா! அத்தனை உள்ளங்களும் ஆஹாகாரம் செய்தன; ஆனந்த சாகரத்தில் மூழ்கின.

பாபா குழறல் குரலில் சொன்னார் : ''மனம் ஒரு ஆயிரம் இதழ்த் தாமரை. 'ஸஹஸ்ரார கமலம்' என்பது அதுதான். ஒவ்வோர் இதழும் வெளி உலகில் ஒரு அம்சத்தை நோக்கிப் போகிறது. மனத்தை இவற்றின் மூலம் வெளியே செலுத்தி விரயப்படுத்தக் கூடாது. தாமரை மையத்தில் 'நான்' என்கிற ஆத்ம ஜோதி இருக்கிறது. இதை ஒவ்வொரு இதழையும் நோக்கி ஆடிக்கொண்டேயிருக்கிற சலனக் கொழுந்தாக வைத்திருக்கலாகாது. சங்கல்ப பலத்தால் அதை ஆடாமல் செய்து தனது மைய ஸ்தானத்திலேயே ஒருமுகப்படுத்தி நிறுத்த வேண்டும். அப்போது வெளியே உடம்புக்கு என்ன நேர்ந்தாலும், தான் அவற்றால் பாதிக்கப்படாமல் ஆத்மாராமனாக இருந்து கொண்டிருக்கலாம். கடந்த நாலு மணி நேரமும் அந்த ஜோதியை நான் நிச்சலனமாக வைத்திருந்தேன். உள்ளூற அந்த நிச்சலனத்தில் நிலைத்தே, நோவால் உடலுக்கு ஏற்படும் சலனங்களைக் கவனித்தேன். என் உடம்பிலிருந்து வெளியே நின்று, அதன் பாதிப்புக்களில் நான் சற்றும் சம்பந்தப்படாமல் பார்த்துக் கொண்டு மட்டும் இருந்தேன்.'' மரணத்தின் ஒட்டு விளிம்பில் அமர வாசகங்கள்!

அன்றிரவு தமக்கு மூன்றாவது முறையாக மாரடைப்பு உண்டாகும் என்றும் எல்லோரும் உடன் இருக்க வேண்டும், அங்கேயே படுத்திருக்க வேண்டும் என்றும் சொல்லி, ஆசுவாஸ

Koviloor Digital Library

முற்றவர்களை மறுபடி ஆயாஸப்படுத்திவிட்டார். இவர் நோயாலும், அவர்கள் அதைக் காணும் தாபத்தாலும் இன்னம் தீர்க்கவேண்டிய விச்வ வேதனை மீதமிருந்ததே! அதனால்தான் ஆயாஸப்படுத்தினர்.

இருட்களில் காரிருளாக, பேரிருளாகக் கழிந்தது அன்றைய கொடூர ராத்திரி. மருத்துவ நியதிகளை யெல்லாம் முறித்து, மூன்றும் மாரடைப்பையும் வென்று நின்றது பாபாவின் காயம்.

குரு வாரம் நற்போதாக விடிந்தது. அதுவரை நெருப்பாக எரிந்த இதயம் சற்று சமனமானதாக ஸ்வாமி சொன்னார். ஒற்றை எழுத்துக்களைக் குழறாமல் கூறினர். இரண்டு நாட்களுக்குப் பின் குரு பூர்ணிமையன்று தாம் வெளிவந்து பக்தருக்கெல்லாம் தரிசனம் தரப்போவதாக அறிவிக்குமாறு ஸ்ரீ கஸ்தூரிக்கு உத்தரவிட்டார்.

ஒரு வாரம் முன்பு குழப்பத்தோடு பேட்டியில்லை என அறிவிப்பு செய்த அதே கஸ்தூரி இன்று ஆனந்த மிகுதியில் அறிவிப்புச் செய்து வந்தார். பாபா அவரைக் கடிந்துகொண்டார்: ''வெறுமே சனிக்கிழமை தரிசனம் உண்டு என்று மட்டும் சொல்லி வந்தாயே. இது சரியல்ல. இதுவரை என் உடல் நிலைபற்றி அவர்களுக்கு நீங்கள் யாரும் விளக்கிச் சொல்லவில்லை. நான் சொன்னதன்மீது ஏதோ சிறிது தெரிவித்தீர்கள். எனவே இன்னமும் அவர்கள் பலப்பல எண்ணியிருக்கிறார்கள். இப்போது விவரமாகச் சொல்லி வா. நீ சற்று முன் செய்த அறிவிப்பி லிருந்து, நான் முற்றிலும் பழைய பாபாவாகவே தரிசனத்துக்கு வருவேன் என்று அவர்கள் நினைக்கக்கூடும். எனவே நானே நின்று என்னை இந்த வியாதிக் கோலத்தில் பார்த்தால் அவர்களுக்கு 'ஷாக்' ஆகிவிடும். ஆகையால் பாரிச வாயுவுடனேயே இடது கால், கை, முகம், கண், வாய் எல்லாம் இழுத்த நிலையில்தான் நான் வருவேன் என்பதை முன்கூட்டியே — ஆனால் பக்குவமாக — சொல்லி வா'' என்றார் தயாகரன்.

அப்படியானால் இவர் மூளை வெடிப்பையும், மாரடைப்பை யும் மட்டுமே குணமாக்கிக் கொண்டாரே ஒழிய, இந்தப் பாரிச வாயுவுடன்தான் ஆயுசு முழுதும் இருக்கப் போகிறாரா?

ஆனந்த அறிவிப்பு செய்த கஸ்தூரி மறுபடி சென்று அழுது கொண்டே இதையும் அறிவித்து வந்தார்.

உயிராபத்திலிருந்து மீண்டார் என்பதில் வெளியடியாரின் உள்ளங்கள் மலர்ந்தாலும், பாரிசவாயுக் கோலத்தில் பகவானை நினைத்தவுடன் வாடவே செய்தன.

அன்றிரவு மூளையில் ரத்தம் கட்டியிருந்த இடங்களெல்லாம் நன்கு கரைந்து விட்டதாக, தமக்குத்தாமே வைத்தியரான பாபா வெளியிட்டு பக்தர்களை மகிழ்வித்தார்.

இருப்பினும் பாபா தாமாகக் கீழே வந்து தரிசனம் தர இவ்வளவு அவசரம் வேண்டியதில்லை என்றும், கிருஷ்ணாஷ்டமி

Koviloor Digital Library

வரை தள்ளிப் போடலாம் என்றும் அணுக்கத் தொண்டர் வேண்டினர். அவரா கேட்பார்? செய்கலைப் பிரிந்து ஸாயித்தாய் இன்னும் தாமதிப்பாளா?

குரு பூர்ணிமையன்று பிரசாந்தி நிலயம் நிரம்பி வழிந்தது.

மாலை மணி ஆறிருக்கும்.

மேலே மாடியில் தமதறையிலிருந்து புறப்பட ஆயத்தமானார் பாபா. தாடியும் மீசையுமான தம் முகம் தெரியாமல் கூடுமான அளவு கைக்குட்டையால் முடியையும் சேர்த்துக் கட்டச் செய்தார். இன்னம் இடது கால், இடது கை ஸ்வாதீனத்துக்கு வரவேயில்லை: இந்த நிலையிலும் தம்மை நாற்காலியில் வைத்துத் தூக்கிப் போகக் கூடாது, பக்தர்களின் கைத் தாங்கலாகத் தாமே மாடியிறங்கி வருவேன் என்று பிடிவாதம் செய்தார். (இதைவிட மோசமான நிலையிலும் தமக்கு பெட்-பான் வைக்க அநுமதியாமல் தாமே தரையோடு தரையாக இழுந்துக்கொண்டு பாத்ரூம் சென்றவராயிற்றே, அடியாருக்கு பெட்-பான் பிடித்த ஸ்வாமி!)

வழங்காத காலை ஒவ்வொரு படியிலும் ஊன்ற முடியாமல் ஊன்றி, வழங்காத கையால் படி வரிசையின் கைப்பிடியைப் பற்ற முடியாமல் பற்றி அவர் பக்தர் தாங்குதலில் (பக்தரைத் தாங்குபவர்தாம்!) பதினெட்டுப் படியும் இறங்கி வந்த கண்ணறுவி சொல்லத் தரமன்று.

கோரிக்கை அறைக் கதவு திறந்ததும் ஆயிரக்கணக்கான நெஞ்சங்கள் செம்மட்டி போட்டு அடித்துக்கொண்டன.

பாபா தெரிந்தார்.

"ஆஹா" என்று ஆனந்திக்க வேண்டியவர்கள் "ஹா" என்று அலறி விட்டனர்.

முன்கூட்டியே கஸ்தூரி தெரிவித்தும்கூட, தளுக்கும் குலுக்குமாய் வரும் தங்கள் சிங்க பாபா, இன்று மெலிந்து ரோகியாக, கைவிழுந்து, காலிழுத்து, வாயிழுத்து நடக்க முடியாமல் நடந்து வருவதை அவர்களால் கண்கொண்டு காண முடியவில்லை.

பாபாவை அவரது வெள்ளி சிம்மாஸனத்தில் சாய்வாக அமர்த்தி அவரது இடக்கையையும் காலையும் ஸ்ரீ ராஜா ரெட்டி ஏடை வஸ்துக்களைச் சரி செய்வதுபோல், மெல்ல மெல்ல நகர்த்தி வைத்தபோது பக்தர்கள் கதறியே விட்டனர். பாபாவின் மார்பில் வைத்த சிறு திண்டில் அவரது இடக்கரம் 'வைக்கப் பட்டது.'

மற்றவர்களைவிடத் தம் ஸங்கேதங்களை நன்கு புரிந்து கொள்ளக் கூடிய கஸ்தூரியைக் கொண்டு பாபா இந்த அறிவிப்பை வெளியிட்டார்: "துக்கப்படாதீர்கள்! ('மா சுச:' தானே

Koviloor Digital Library

கீதாசார்யனின் மருந்து மொழி?) எனக்கேதும் நோய் இல்லை. இது நானாக எடுத்துக்கொண்ட நோய். எனக்கு நோயே வர முடியாது. ஒருகாலும் முடியாது. இதைப் பார்த்து மனம் தளராதீர்கள். உங்கள் மன நோய்தான் என்னை நோவுபடுத்தும்.''

இதன்பின் கஸ்தூரி சிறிது நேரம் கண்ணீரும் கம்பலையுமாக பேசினார். இந்த குரு பூர்ணிமையை இருள் மேகம் மூடிவிட்டாலும், அடுத்த பூர்ணிமையிலாவது நிலா முழுமையாக வெளிவரும் என நம்புவதாக முடித்தார்.

இவர் யார் ஒரு மாத காலம் ஒத்திப் போட?

பாபா மைக்கைத் தம்மிடம் நகர்த்தச் சொன்னார்.

குழறலோடு, ''விநிபிஸ்துந்தா?'' (கேட்கிறதா?) என்று வினவினார்.

தெளிவாகக் கேட்கத்தான் இல்லை.

இரண்டாம் முறையும் கேட்டார்.

ஊஹூம், இப்போதும் ஸ்பஷ்டமாக இல்லை.

ஜலம் வேண்டுமென ஜாடை காட்டினார். ஒன்றுவிட்ட ஸோதரர் ஸ்ரீ கிஷ்டப்பா வெள்ளித் தம்ளரில் நீர் கொணர்ந்தார். பாபா பருகவே கேட்கிறார் என்றெண்ணி ராஜா ரெட்டி தம்ளரை அவரது உதட்டருகே கொண்டு போனார்.

பாபா தமது வலக் கரத்தைத் தம்ளருக்குள் விட்டார். சிறிது ஜலத்தை எடுத்து, மார்பின்மீது தலையணை மேல் 'வைக்கப்பட்டிருந்த' கை மீது தெளித்தார். இடக் கால் மீதும் நீர்த் திவலைகளை விரலால் சிந்திக் கொண்டார். வலக் கையால் இடக் கையைத் தட்டிக் கொடுத்தார்.

இரண்டு கைகளாலும், ஆம், இதுவரை வழங்காதிருந்த இடது கையாலும்தான், இடக்காலைத் தட்டிக் கொடுத்தார்!

இரண்டு காலையும்—ஆமவே ஆமாம்—சென்ற நொடி வரை பாரிச வாயுவுற்றிருந்த இடது காலையும் தான்—நன்றாக நிலத்தே ஊன்றிக் குபீரென எழுந்து நின்றார்.

> சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
> வேரி மயிர் பொங்க, எப்பாடும் பேர்ந்துதறி
> மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு
> போதருமா போலே பூவைப் பூவண்ணன் தன்
> கோயில் நின்(று) இங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
> சீரிய சிங்காதனத்திருந்து

குதித்தெழுந்து உதித்த சூரியனாக உயிர்ப்பு கொந்தளித்து நிற்க,

Koviloor Digital Library

ராஜா ரெட்டி ''ஸாயி ராம்'' என்று ஆர்ந்த ஆர்ப்பு அந்தமேபேரின் எலும்புக் குருத்துக்குள்ளும், பிரசாந்தி நிலயச் சுவர்கள், விதானம் இவற்றுள்ளும் குடைந்து சென்றது!

உதய சூரியனா? இல்லை, நம் அம்மையிடம் வெம்மை இல்லை. குரு பூர்ணிமாவில், சரியாகப் பூர்ணிமைச் சந்திரன் உதிக்கும் சமயத்தில் தாமும் முழுமதியமாக எழுந்தார்!

டாக்டர்கள் கிருஷ்ணமூர்த்தி, ஸீதாராமையா, எம். பாநு, ஆர். கோபாலன், ஏ. கிருஷ்ண ராவ் எல்லோரும் ஸ்தம்பித்து அமர்ந்திருக்க, பாரிசவாயுவில் ஸ்தம்பனமாயிருந்தவர், தமது பழைய ரீங்காரக் குரல் மணி முழக்கமிடப் பிரஸங்கம் தொடங்கி விட்டார்! ''வைத்தியர்களின் வைத்தியர் தம்மைத்தாமே க்ஷணத்தில் குணப்படுத்திக்கொண்டார்'' என்று பாநு பிற்பாடு எழுதினார்.

''ப்ரேம ஸ்வரூபலாரா!''—அன்பே உருவானவர்களே'' என்று ஸாயிமாதா குழந்தைகளை அழைத்துப் பேசுகிறாள்!

அவரது உரையைக்கூட கேட்க முடியாத உத்ஸாக வெறியில் அடியார்கள் கூத்தாடத் தொடங்கிவிட்டனர். 'நம் ஸ்வாமி நம்மைவிட்டுப் போகாமல், பூர்ண ஸ்வாமியாக, பழைய ஸ்வாமியாகவே நமக்குத் தக்கிவிட்டார்!'

''திக்கு லேனி வானிகி தேவுடே கதி'' (திக்கற்றவருக்கு தெய்வமே துணை)—திக்கிப் பேசுவது போய் தீர்மானமாகப் பேசுகிறார் ஐயன்: ''என்னையே கதியாகக் கொண்ட ஒரு பக்தரின் பொருட்டு, அவரால் தாங்க முடியாத நோயை நான் தாங்கி அநுபவித்துத் தீர்த்தேன். **பக்த ஸம் ரக்ஷணமே மாதர்மமு:** — அடியார்க்கு அருளுவதே என் அறம்... இது என் பொறுப்பு; என் விளையாட்டு; என் இயல்பு...

''எட்டு நாட்கள் இது நீடித்ததற்கு ஒரு காரணம் உண்டு. அதையும் சொல்கிறேன். இந்த முப்பத்தெட்டாண்டுகளாக வெளியிடாத ரகசியத்தை வெளியிடுகிறேன்.

''**நான் சிவ-சக்தி**''.

''பரம சிவனிடமும் பராசக்தியிடமும் பரத்வாஜ ரிஷி கேட்டுப் பெற்ற வரத்தின் பொருட்டே சிவனும் சக்தியுமான நான் பாரத்வாஜ கோத்திரத்தில் வந்து பிறந்தேன்.

''திரேதா யுகத்தில் கைலாஸத்திலே ஈச்வரனுக்கும் அம்பாளுக்குமிடையே நடனப் போட்டி நடந்தது. நடனம் உச்ச கட்டத்திலிருந்தபோது பரத்வாஜ முனிவர் வந்தார். தாம் நடத்தும் யாகத்துக்கு அம்பிகை அக்ராஸனம் வகிக்க வேண்டும் என்று பிரார்த்தித்தார். நாட்டியப் போட்டி வெற்றியிலேயே தீவிர ஈடுபாடு கொண்டிருந்த தேவி பிரார்த்தனையைக் கவனித்த தாகக் காட்டிக்கொள்ளவில்லை. ஈச்வரன் சொல்லியும்கூட, அவள் வெறுமே புன்னகை செய்துவிட்டு, நாட்டியத்தைத்

Koviloor Digital Library

தொடர்ந்தாள். பரத்வாஜர் அம்பாள் தம்மை அவமதித்ததாக எண்ணி மனம் சலித்து அங்கிருந்து திரும்பினர். ஆயின், அவரால் அடியெடுத்து வைக்க முடியவில்லை. அம்பிகை அந்தப் புன்னகை மூலமே அவருக்கு அநுக்கிரஹம் புரிந்து விட்டாளாயினும், அதை அவர் புரிந்துகொள்ளாமல் அவளிடம் குறைபட்டுக் கோபம் உற்றார் அல்லவா? இதனால் அவரது இடப்புறச் சக்தியை அவள் இழுத்துக் கொண்டு விட்டாள். இடப் பக்கப் பாரிசவாயுவுடன் முனிவர் அங்கே எட்டு நாள் கிடந்தார்.

''நாட்டியம் முடிந்தது. பரமேச்வரன் தம் கமண்டலு நீரை முனிவர் மேல் புரோக்ஷணம் செய்து அவரைக் குணப் படுத்தினர்.

''பிறகு அம்பாள் மட்டுமின்றி ஈசனும் சேர்ந்து அவரது வேள்விக்குச் சென்றனர். அப்போது அவர்கள் முனிவருக்கு வரம் கொடுத்தனர்—அவரது வம்சத்தில், அதாவது பாரத்வாஜ கோத்திரத்தில் மும்முறை பிறப்பதாக. முதலில் சக்தி தூக்கலாக ஷிர்டி ஸாயி அவதாரம்—பிறகு சிவமும் சக்தியும் ஸமமாக ஸத்ய ஸாயி அவதாரம்—மூன்றும் முறை சிவம் தூக்கலாகப் பிரேம ஸாயி அவதாரம் எனப் பிறப்பதாகக் கூறினர்.

''சக்தி அவரை எட்டு நாட்கள் இடப்புறம் செயலிழக்கச் செய்ததற்குக் கழுவாயாக சிவ-சக்தி ஸ்வரூபமான ஸத்ய ஸாயி எட்டு நாட்கள் அதே கொடுமையை, இட பாகமான சக்தியின் மூலம் அநுபவிப்பார் எனவும், வல பாகரான ஈசன் பிறகு அதைப் புரோக்ஷணத்தால் குணம் செய்வாரெனவும், சிவ-சக்தியரே அப்போது விதித்துக் கொண்டனர்.

''அதன்படிதான் இப்போது என்னில் இடப்பக்கமான பரா சக்தி பாரிசவாயு கொண்டாள். வலப்பக்கமான பரசிவன் தீர்த்தப் புரோக்ஷணத்தால் நோயைத் தீர்த்தார்.''

— என்று முடித்தார் அர்த்தநாரியாம் பர்த்தி ஸாயி.

அனந்தமான வேதக் கிளைகள் அனைத்தையும் அறிய விரும்பியவர் பரத்வாஜர். ஆனால் நூறாண்டு தவத்தினாலும் வேதமலையில் பிடியளவையே இவர் பெற முடிந்தது. இவர் வேதம் முழுவதன் பலனையும் பெறும் பொருட்டு, அம்பிகையிடம் ஞானோபதேசம் பெற்ற இந்திரனை ஆலோசனை கேட்டார். இந்திரன் ''ஸாவித்ர ஸயனம்'' என்ற யாகத்தை இவருக்குக் கற்பித்தான். இவ்விஷயம் வேதத்திலேயே கூறப்படுகிறது.

இந்த வேத வேள்விக்கு ஞானம்பாளைத்தானே அவர் அக்ராஸனம் வகிக்க அழைத்திருக்க வேண்டும்? அதன் தொடர் பாக மேலே நம் ஸ்வாமி தெரிவித்த விருத்தாந்தம் வேதத்திலும் புராணத்திலும் காணாத ஒன்று. இதை வாய்ச் சொல்லாலன்றி, வாழ்க்கையாக—புராணத்தினும் அதிசயமான நவீன நிகழ்ச்சி யாக—காட்டிய பிரேம ஸாயியை இனி வேதவேள்விகளுக்கு அக்ராஸனம் தாங்கும் வேத ஸாயியாகப் பார்ப்போம்.

Koviloor Digital Library

அத்தியாயம்—51

வேத ஸாயி

**மந்திரமும் மறை பொருளும் ஆனுன் தன்னை...
சந்தோக சாமம் ஓதும் வாயானை, மந்திரிப்பார்
மனத்துளானை.**

— அப்பர் ஸ்வாமிகள்

**சந்தோகன் பௌழியன் ஐந்தழலோம்பு
தைத்திரியன் சாமவேதி**

— திருமங்கையாழ்வார்

வேத மந்த்ர சொருபா நமோ நம

— அருணகிரி நாதர்

முன் அத்தியாயங்களில் ஸ்வாமியை ஞான ஸாயியாகவும் பிரேம ஸாயியாகவும் பார்த்தோம். அவர் வேத ஸாயியாக இருப்பதால்தான் ஞான ஸாயியாகவும் பிரேம ஸாயியாகவும் இருக்கிறார்.

வெளிப் பார்வைக்கு வேதம் என்பது சப்த மயமாகவும், அதன் சடங்குகள் காரிய மயமாகவும் தோன்றலாம். வேறு சில மதங்களைப் போல் அறிவு மயமாக, அன்பு மயமாக இது இல்லை எனத் தோன்றலாம். ஆனாலும் மிக மர்மமான ஒரு முறையில் இந்த சப்தத்தின் மூலமும், சடங்கின் மூலமுமே பரம்பொருளின் பேரன்பும் பேரறிவும் உலகினருக்குப் பெருநலமூட்டிப் பிரகாசிக்கின்றன. மரங்களின் பட்டைகளுக்குப் பூவிலுள்ள மணம் இல்லை; கனியில் உள்ள இனிமை இல்லை. ஆனால் பூவையும் கனியையும் விட அதிக மருத்துவ சக்தி அதற்கே உண்டு. பட்டை மாதிரி நம் வேதம் தோன்றலாம். பூ, பழமாக மற்ற மதங்கள் தோன்றலாம். ஆனாலும் ஆத்மிக மருத்துவத்தில் வேதத்தின் சக்தியே அபரிமிதமானது.

Koviloor Digital Library.

மந்திரங்களின் பொருளைப் பார்த்தால் பெரும்பாலும், ஸகல ஜீவராசிகளின் க்ஷேமத்தையும் கோருவதாகவே இருக்கும். தனக்கு மட்டும் ஒன்றைக் கேட்கவே தெரியாமல், விச்வக் குடும்பத்துக்கே ஸதாவும் நலனைப் பிரார்த்தித்தவர்கள் வேத ரிஷிகள். ஸகல உயிரினங்களையும் தழுவும் அவர்களது அன்பு இதயம் புத்தர், இயேசு, முகமது நபி முதலியோரின் இதயத்துக்கு ஒருகாலும் பின்தங்கியது அல்ல. இன்னம் சொல்லப்போனால், வெறுமே, 'அன்பு செய்' என்று உபதேசம் மட்டும் செய்யாமல், நம் இதயத்தில் அன்பு ஊற்விட்டாலும் சரி, நாம் வெறுமே மொழிவதால் மட்டுமே பரமேச்வரனின் அன்பையே உயிர்க் குலத்துக்கு சப்த மாத்திரத்தால் பாய்ச்சக்கூடிய மஹாமந்திரங்களைத் தந்தவர்கள் வேத ரிஷிகளே!

வைதிக ஐதிகத்தை நிலைநிறுத்தத்தான் அத்தனை அவதாரங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அதைச் சக்தியுடன் ஆற்றவே ஸத்ய ஸாயி அவதாரமும் ஏற்பட்டுள்ளது. அரக்கர்கள் வேதத்தை அபகரித்ததாகவும், அவதாரங்கள் அதை மீட்டு வையத்துக்குத் தந்ததாகவும் புராணங்கள் கூறும்.

முன்காலங்களைவிட அவைதிகம் வலுவாக ஓங்கிவிட்ட காலம் இது. வைதிக தத்வங்களான உபநிஷதக் கருத்துக்கள் இன்று உலகெங்குமுள்ள அறிஞர்களிடை விரவப் பரவியிருப்பினும், வேதத்தை மரபுப்படி ஓதி அத்யயனம் செய்வதும், அதில் விதித்துள்ள வேள்விகளை முறைப்படி புரிவதும் மிக மிகக் குறைந்து விட்டன.

இவற்றைப் பெருமளவில் வளர்ப்பது நிகழ்காலத்தில் சாத்தியமாகவும் தோன்றவில்லை. வேத சப்தங்களையும், சடங்குகளையும் கைக்கொள்பவர்கள் பல நியமங்களைக் கண்டிப்பாகப் பின்பற்றினாலே அவை பயன் அளிக்கும். நிகழ்காலத்தில் இந்த நியமாசாரங்களைப் பெரும்பாலார் பற்றியொழுகுவது சாத்தியம் இல்லை. இந்தக் காலம் இப்படியிருக்கும் என்று தீர்க்க திருஷ்டியில் கண்டேதான் ஆன்றோர், நமக்கு எளிய நாம ஸங்கீர்த்தனத்தைத் தலையாய ஸாதனையாகத் தந்திருக்கிறார்கள்.

அப்படியாயின் வேதங்களை அடியோடு விட்டுவிடலாமா? யுகம் யுகமாக, புஸ்தகத்தில் எழுதாமலே காச்மீரத்திலிருந்து கன்யாகுமரி வரை, ஸோமநாதத்திலிருந்து காமரூபம் வரை தலைமுறை தத்வமாக வந்துள்ள வாய்மொழிச் செல்வம் நம்மோடு போகட்டும் என்று விட்டு விடலாமா? தேவ சக்திகளைக் கொண்டு பூவுலகில் தன தான்ய வளப்பமும், மதிநலமும் பெற்றுத் தரும் யாக யக்ஞங்களை அடியோடு வேண்டாம் எனலாமா? பல்லாயிரம் காலமாக வந்துள்ள பொற்சங்கிலி, அடுத்த தலைமுறைக்கு வேண்டாம் என்று நடுவே வந்துள்ள நாம் கத்திரித்து விடுவது முறையா, தர்மமா, நியாயமா?

வேத வேள்விகள் இருக்கத்தான் வேண்டும்: உய்வுக்கு பகவன் நாமம் இருக்கிறதென்றாலும், புராதன கலாசாரத்தின்

Koviloor Digital Library

மூலந்தி என்பதற்காகவேனும் வேதத்தை, வேத வேள்வியை அதற்குள்ள வழி முறைப்படி ஓரளவேனும் உலகத்தில் வைத்துப் போஷிக்கத்தான் வேண்டும். பெரிய அளவில் செய்யப் போனால், அதற்கான கட்டுத் திட்டங்களுடன் வைத்துக் காப்பாற்ற இயலாமற் போகும்.

குங்குமப் பூவை கோடி ஏக்கரில் பயிர் செய்ய வேண்டியது இல்லை. நமக்கு அரிசி நாம ஸங்கீர்த்தனம். அதைக் கோடி ஏக்கர் பயிர் செய்வோம். ஆயினும் வெள்ளாமை செய்வதில் பல சிரமங்கள் உள்ளன என்பதால் குங்குமப் பூவை அடியோடு மறந்து விடாதிருப்போம். அரிசியில் செய்யும் சர்க்கரான்னத்துக்கு அலாதி ருசி ஊட்டுவது அதுவே!

குங்குமப்பூப் பண்ணையாகவே பாபா பிரசாந்தி வித்வன் மஹா ஸபையை 1962-ல் தொடங்கினார். தமிழகத்தில் காஞ்சிப் பெரியவர்களின் ஆதரவில் வேத தர்ம சாஸ்திர பரிபாலன ஸபை செய்வதையே, ஆந்திரத்தில் ஓரளவு பிரசாந்தி வித்வன் மஹா ஸபை செய்து வந்திருக்கிறது. இரண்டுமே அகில பாரத அமைப்புக்கள்தாம். ஆயினும் ஒன்று தமிழகத்திலும், மற்றது ஆந்திரத்திலும் அதிகச் செல்வாக்குடன் செயலாற்றுகின்றன.

(ஸ்ரீ பெரியவாளின் திட்டமே ஆந்திரத்திலும் சக்திகரமாகச் செயலாகத் தொடங்கிவிட்டபின் பிரசாந்தி வித்வன் மஹா ஸபை மங்கியதாகத்தான் தெரிகிறது. அரைத்த மாவையே அரைப்பானேன் என்று ஐயனே தம் ஸபையை நலிவித்து இருப்பாரோ?)

வேத சம்பந்தமான விஷயங்கள் மஹா ஸபை மூலம் பிரசாரம் ஆவது ஒரு புறமிருக்க, 1962 நவராத்ரியிலிருந்து புட்டபர்த்தியில் நடைபெறும் வேத புருஷ ஸப்தாஹ யக்ஞம் என்ற ஏழு நாள் வேள்வியானது, ஸாயி பக்தர்கள் அனைவரையுமே வைதிக நெறிகளில் மதிப்பும் மரியாதையும் செலுத்த வைத்திருக்கிறது.

அனைத்தும் ஒன்றே என்ற ஞான அநுபவத்தில் தோய்ந்த ஞான ஸாயி எல்லா உயிரையும் தானாக உணர்ந்து அவற்றின் துயரைத் தன்னில் ஏற்கும் பிரேம ஸாயியாகவும் அதன் சிகரமான தியாக ஸாயியாகவும் விளங்குவதை முன் அதிகாரங்களில் பார்த்தோம். தியாகமும் யாகமும் ஒன்றேதான். உயிர்க் குலத்தின் நலனை வேண்டி, உடைமைகளை நெருப்பில் இட்டு எரிக்கும் தியாகமே யாகம். எனவே நம் தியாக ஸாயி யாக ரக்ஷகனாகி, வேத ஸாயியாயிருப்பதில் விந்தை என்ன?

இயேசு எந்த சம்பிரதாயத்தையும் தகர்ப்பதற்காக வராமல், எல்லா சம்பிரதாயங்களையும் நிறைவிப்பதற்கே வந்ததாகச் சொல்வதுபோல், ஸாயிராம் ஸகல மரபுகளையும் பேணி வளர்க்கவே வந்துள்ளாரே தவிர, எதையும் அழிக்கவோ அல்லது ஸாயி மதம், 'ஸாயிஸம்' என்று புதிதாக ஒன்றை

Koviloor Digital Library

ஸ்தாபிக்கவோ வரவில்லே. அவர் ஸர்வமத சின்னங்களேயும் தமது கொடியில் பொறித்துக்கொண்டிருப்பவர்.

இவ்வாறு ஸகல சமய போஷகராக, அவற்றை இணைத்துத் தரும் இணையற்ற தலைவராக உள்ள பாபா, ஹிந்து மதம் என்ற பொதுப் பெயரில் இருக்கும் அத்தனை ஸித்தாந்தங்களேயும் அவரவர் பக்குவப்படி அவரவர்க்கு உரியதாக விதித்து வருபவர். வேறு வேருன இக்கிளேகள் அனைத்துக்கும் ஒரே வேரான வேதத்தை அவர் விசேஷமாக வளர்ப்பதில் ஆச்சரியம் என்ன?

* * *

அம்பிகையை வேத யக்ஞத்துக்கு பரத்வாஜர் அழைத்தது ஸத்ய ஸாயி அவதாரத்துக்கு ஒரு முக்ய காரணமாதலால் போலும், அவளுக்குரிய நவராத்ரியின்போதே பிரசாந்தி நிலயத்தில் 1962-லிருந்து ஏழு நாள் ருத்ர யாகம் அமோகமாக நடந்து வருகிறது. சண்டீ ஹோமமும் நடக்கிறது. அது தவிர வேத பாராயணமும் இடைவிடாது நடக்கிறது.

இதுவரை நவராத்ரி நடைமுறையில் முக்யமாக இருந்தது ஒன்பது நாளும் அம்பாளுக்கு விசேஷ பூஜை. அதாவது பாபாவையே அம்பாளாக வைத்து ஸஹஸ்ர நாம, திரிசதி அர்ச்சனேகளேச் செய்வது. இதை ஒரே ஒரு நாளோடு நிறுத்தி விட்டு, தேவியின் ஸ்ரீயந்திரத்துக்குக்கான பூஜையையும், சண்டீ, தேவி பாகவதம் இவற்றின் பாராயணத்தையும் மட்டும் பாபா தொடர்ந்து நடக்கச் செய்தார். தம் பூஜைக்குப் பதில் வேத யக்ஞத்தையே மையமான வைபவமாக வைத்து விட்டார். இதிலிருந்தே வைதிகத்துக்கு அவர் தரும் பெருமதிப்பு தெரிகிறது அல்லவா?

ஆந்திர தேசத்தின் மஹா பண்டிதர்கள் இவ்வேள்விகளில் கலந்துகொள்வார்கள். வேத பர்வதங்களான இந்த பிரம்மஸ்ரீ களில் சிலரது பேராவது நம் காதில் விழட்டும். கேளுங்கள்: செருகுமல்லி காமேச்வர கனபாடிகள் (இவர் பிற்பாடு தம் ஊரையே விட்டு புட்டபர்த்திக்கு வந்துவிட்டார். அங்கு ஸ்தாபிக்கப்பட்ட வேத பாடசாலேயின் தலைமை அத்யக்ஷகர் ஆனுர்.) குப்பா பைராகி சாஸ்திரி, உப்பலூரி கணபதி சாஸ்திரி, வேம்பரால ஸூர்ய நாராயண சாஸ்திரி, மல்லவஜ்ஜால வேங்கடசுப்ப ராம சாஸ்திரி.

1962-ல் இவர்கள் பாபாவிடம் ஈடுபாடு கொண்டவர்களே அல்ல. ஏதோ நல்ல காரியம், அழைத்திருக்கிருர்கள், நடத்திக் கொடுப்போமே என்றுதான் வந்தனர். ஸகல சமயத்தவரையும், ஸகல வகுப்பினர்களேயும் அடியார்களாகக் கொண்டராயிற்றே, வைதிக காரியங்களுக்குரிய நியமங்களே இங்கு வழுவற எதிர் பார்க்க முடியுமா என்ற ஐயத்துடன் வந்தனர்.

பிரசாந்தி நிலேயத்தில் அவர்கள் கண்ட பிரத்யக்ஷ நிலே அவர்களேப் பிரமிக்கச் செய்தது என்றே சொல்ல வேண்டும்.

Koviloor Digital Library

மற்ற விஷயங்களில் நவ கால ஸமத்வம் தான் அங்கு காணப் பட்டது. ஆனால் இந்த வேத யக்ஞத்தைப் பொறுத்த மட்டில், வேத கண்டிப்புடன் ஆசார நெறிகளைக் கைக்கொள்ளும் ஸம்பிரதாய மடாலயங்களைவிடக் கண்டிப்புடன் ஸநாதன தர்ம சாஸ்திர விதி முறைகளையே கடைப்பிடிக்க வேண்டுமென்பதில் பாபா தீவிரமாக இருந்து அப்படியே நடத்திக் காட்டினார். திரவியங்கள், வஸ்திரங்கள் ஆகிய யாவும் விதிவத்தாகத் தயார் செய்யப்பட்டிருந்தன. இவற்றை ஒழுங்கு செய்வதிலும், அபிப்பிராயம் சொல்வதிலும் கனபாடிகளுக்கெல்லாம் மேலான கனபாடியாக இருந்தார் பாபா. ஹோதா, அத்வர்யு, உத்காதா ஆகிய ரித்விக்கு (வேள்வி செய்வோர்)களுக்கு அவர் செய்த ஒவ்வொன்றும் தர்ம சாஸ்திரத்தை அடியொற்றியே இருந்து பெரும் திருப்தியும் பேரானந்தமும் தந்தன.

அது மட்டுமல்ல. ஆங்காங்கே மந்திரங்களின் ஸ்வரங்களை பாபாவே திருத்திக்கொடுத்தார் அந்த மஹா ஸிம்மங்களுக்கு! இறைவனை வேதியருள் வேதியன்—'ரிக்மிபி: ரிக்மீ'—என்று வேதமே நவில்கிறதே! வேதங்களில் முதல் மந்திரமே பரம்பொருளை வேள்வியுடன் தான் பிரிதற இணைத்துப் பேசுகிறது. புரோஹிதன், யக்ஞதேவன், யக்ஞம் செய்பவன் (ரித்விக்), ஹோமம் செய்பவன் (ஹோதா) என்றெல்லாம் அம் மந்திரம் இறைவனைக் கூறுகிறது. இதெல்லாம் சரி, ஆனால் இதோடு, ரத்தினங்களை வழங்குவதில் நிபுணன் (ரத்னதாதம) என்றும் அம் மந்திரம் ஏன் சொல்கிறது என்பது வேள்வி முடிவான பூர்ணாஹுதியின்போது தெரிந்தது.

ரத்னாகர வம்சத்தில் பிறந்த ஸ்வாமி, அந்த முடிவான ஆஹுதியில் அக்னிக்கு மேல் கரத்தை நீட்ட அதிலிருந்து நவ ரத்தினங்களும் கலகலவெனப் புனிதத்தீயில் விழுந்தன. ஆண்டு தோறும் இவ்விதம் தம்மை 'ரத்னதாதம'ராகக் காட்டிக் கொள்கிறார்.

அமரரெல்லாம் வந்து நம்முள்
 அவிகள் கொண்டாரே — இந்நேரம்
நமனுமில்லை பகையுமில்லை
 நன்மை கண்டோமே

என்றும்,

வாழ்க தேவர்! வாழ்க வேள்வி!
 மாந்தர் வாழ்வாரே — இந்நேரம்;
வாழ்க வையம்! வாழ்க வேதம்!
 வாழ்க தீ! தீ! தீ!

என்றும் பாரதி பாடியது நம் அகச் செவியில் பாயும், இவ் வேள்விகளில்.

முதன் முறை ஸப்தாஹ யக்ஞம் முடிந்ததும் அத்தனை வித்வான்களும் பாபாவின் வைதிக தைவிகத்தில் உருகி விட்டனர்.

Koviloor Digital Library

வேள்வி முடிந்து அவப்ருத ஸ்நானமாகி அவர்கள் திரும்பியபின் பாபா அனைவருக்கும் மந்திர தீர்த்தம் புரோக்ஷித்தபோது, அது வரை அவரை நமஸ்கரிக்கத் தயங்கிய பண்டிதர்களும் சடசட எனத் தண்டனிட்டு, அவரிடம் புரோக்ஷணத்தை வேண்டினர்.

அன்றன்றும் மாலை நடந்த உபந்நியாஸங்களில் அவர்கள் பேசுகையில், இத்தனை நியமமான விதத்தில் ஒரு வேள்வி இந்தக் காலத்தில் நடந்தது இங்கோரிடத்தில்தான் என்ற அளவுக்கு வானளாவ சிலாகித்துப் பேசினர். அவர்களில் பலர் பகிரங்கமாக, தாங்கள் பாபாவை ஏதோ ஸித்தராகத்தான் எண்ணி வந்ததாகவும், பார்க்கப் பார்க்க, பழகப் பழக, கேட்கக் கேட்க அவர் வேதநாயகனே, வேதங்களை வாழ்விக்கவே அவதரித்த வேந்தனே என்று தெளிந்ததாகவும் மனமுருகிக் கூறினர். "ஸநாதன ஸாரதி" என்றே தமது சஞ்சிகைக்குப் பெயரிட்டுள்ள அவர் மெய்யாலுமே ஸநாதன வேத தர்மத்தில் மக்களை ஓட்டிச் செல்லும் ஸாரதிதான் என்று வாயாரப் புகழ்ந்தனர். "வேதத் தொழிலார் விரும்ப நின்றார்" என்ற வாக்கை வாழ்க்கையாக்கிக் காட்டினார் வேந்தன்.

பாபாவும் வேத மந்திரங்கள், யக்ஞங்கள் இவற்றின் மகத்தான சக்தியை வெகுவாக எடுத்துரைத்து உபந்நியஸித்தார், வெளியில் சடங்காக இருக்கும்போதே அதில் உள் அர்த்தமும் உண்டு; இந்தச் சடங்கைச் செய்யும்போதே அந்த உட்பொருளும் பலிதமாகும் என்றார்: "கோ" (பசு) என்றால் ஜீவன். பசுவின் ஸாரம் நெய். ஜீவனின் உள்ளுறை அஹங்காரம் ஈச்வராக்னியில் அர்ப்பணமாவதே நெய் ஆஹுதி. மக்கட் குலத்தின் திருஷ்டி சக்திக்கெல்லாம் சூரியன் அதி தேவதை. எனவே ஆதித்ய யக்ஞம், லோக முழுதிலும் உள்ளோர் ஒரே பார்வையினராக ஒன்றுசேர உதவுகிறது. மக்களின் கை ஆற்றலுக்கு இந்திரன் அதி தேவதை. ஆகையால் இந்திர யக்ஞம் மக்கள் அனைவர் கைகளையும் ஒத்துழைப்பில் இணைக்க உதவும். சூரியன் புத்தி சக்திக்கும், சந்திரன் மனோசக்திக்கும் அதி தேவதையர் ; இவர் களுக்கான வேள்விகள் மனித குலத்தில் ஐக்கிய புத்தியையும், ஏகமனத்தையும் உண்டுபண்ண வெகுவாக உதவும்.

"பிரத்யக்ஷமாகப் பலனைக் காட்ட முடியாவிட்டாலும், இந்த ஸ்தூல யக்ஞத்தால், சூக்ஷ்மமான முறையில் மேற்சொன்ன நலங்கள் விளைந்தே இருக்கும். இதில் சற்றும் சந்தேகமில்லை" என்றார்.

'சொட்டுச் சொட்டாக இத்தனை தர்ப்பணம் ஏன்? துளித் துளியாக இத்தனை ஆஹுதி ஏன்? இவற்றை ஒட்டு மொத்தமாகச் சுருக்கினால் என்ன?' என்று நினைத்த 'பிருஹஸ்பதி'களுக்கு இப்படி பதில் சொன்னார் : "நீங்கள் நினைப்பது எப்படியிருக்கிற தென்றால், 'பேனாவின் மூலமாக மையை இத்தனை மெல்லிய எழுத்துக்களில் இத்தனை நேரம் கை வலிக்க எழுதிச் செலவிடு வானேன்? அப்படியே நோட்டுப் புத்தகத்தை இங்கிப் பாட்டிலில் தோய்த்து எடுத்துவிடலாமே!' என்று எண்ணுவதைப்

Koviloor Digital Library

போலத்தான் இருக்கிறது. வேத காரியங்களை அணு அணுவும் அவற்றுக்கான நியமங்களுடனேதான் பின்பற்ற வேண்டும்'' என்றார்.

''இங்கே நெருப்பிலே இத்தனை நெய் வீணாயிற்றே என்று கூச்சல் போடுபவர்கள் இருக்கிறார்கள். இப்படிச் சத்தம் போடுகிறவர்கள் எவ்வளவு நெய்யை விழுங்கியிருக்கிறார்கள்? யோசித்துப் பார்த்தால், இவர்களால் யாருக்கு என்ன உபயோகம்? இவர்களுக்கே தான் என்ன உபயோகம்? வாழ்க்கைப் பயனைப் பெற முடியாதவர்கள் உண்பதனைத்தும் வீண்தான். ஆனால் யக்ஞத்தில் செலவானது வீண் ஆவதில்லை. நெல்லை விதைக்கும்போது, 'ஐயையோ, உண்பதற்குரிய நெல்லை இப்படி மண்ணில் கொட்டி வீணாக்கிவிட்டார்களே!' என்பதா? மண்ணில் புதைத்த ஒவ்வொரு நெல்லும் ஆயிரமாக விளைவதுபோலவே, நெருப்பிலே போட்ட ஒவ்வொரு வஸ்துவும் ஸூக்ஷ்மமாக தேவ சக்திகளை ஊக்குவித்து அபார மடங்கு நற்பலனை லோகத்துக்கு உண்டாக்கும். நெருப்பு என்கிற தபால் பெட்டியில் போட்டால்தான் ஆஹுதி லெட்டர்கள் தேவர்களை அடையும்'' என்றார்.

ஒரு முறை வேத புருஷ ஸப்தாஹ யக்ஞத்தில் ஸ்வாமி கூறினார்: ''வேதத்தைக் குற்றம் கூறிப் பேசுவதும், அதன் ஸத்தியத்தில் ஐயுறுவதும் மூளைக் கோளாற்றில் ஒரு வகையே. ஒரு சில பிராம்மணர்கள் செய்த தந்திர உபாயம்தான் வேத சாஸ்திரம் என்று சொல்வது முட்டாள்தனத்தின் சிகரமேயாகும். இப்படிச் சொல்பவர்கள் 'தவறாகப் புரிந்துகொண்டு பேசுகிறார்கள்' என்று கௌரவம் கொடுத்துக் கண்டிக்க வேண்டியதில்லை. அவர்கள் இருட்டுத் தனத்தால், குருட்டுத் தனத்தால் இப்படிப் பேசுகிறார்கள் என்று அப்பட்டமாகவே கண்டித்துச் சொல்ல வேண்டும். இங்கே இந்த வேத வித்துக்கள் பின்பற்றிய கடும் நெறிகள் யாவும் மூடநம்பிக்கையில் பிறந்ததாக எண்ணவே எண்ணாதீர். உலகுக்கு மருந்தாக அவர்கள் தந்த யக்ஞத்துக்கு இந்த ஆசாரங்களையே பத்தியமாக எடுத்துக்கொண்டனர்.''

பூர்ணாஹுதி நடக்கு முன், ''உங்களுடைய பலவிதமான அஹங்கார மமகார எண்ணங்களும் பரஞ்ஜோதியில் போடப்படுவதாக பாவியுங்கள். யக்ஞ புருஷன் என்றே போற்றப்படும் அந்தப் பரஞ்ஜோதியே ஸத்ய ஸாயி வடிவில் பக்கத்தில் நின்று யக்ஞத்தை ஏற்று, பலனை அளிக்கப்போவதை உணருங்கள்'' என்பார் பாபா.

இந்த யக்ஞத்தால் வைதிக பண்டிதர்கள் தங்களுக்கு சமூகத்தில் ஏற்பட்ட புதிய, நியாயமான கௌரவத்தை உணர்ந்து பாபாவுக்கு நன்றியஞ்சலி செலுத்துகிறார்கள்.

''வேதங்களையும் சாஸ்திரங்களையும் யாரோ ஒரு வகுப்பார் சுயநலத்துக்காக எழுதி வைத்துக்கொண்டார்கள் என்றெண்ணினால் அதைவிட அபத்தம் வேறில்லை. மற்ற மதஸ்தர்கள் பைபிள், குர்ஆன் என்றே பக்தியோடு குறிப்பிடும்போது, ஹிந்துக்கள் தமது சமய ஆதார நூல்களைப் பற்றியே இப்படி நினைத்தால்

Koviloor Digital Library

உருப்படுவது எப்படி? வேதத்தின் லக்ஷியம் ஸகல லோக க்ஷேமம்தானே யன்றி, ஒரு வகுப்பார் நலன் மட்டுமல்ல. லோக க்ஷேமார்த்தமாக வேதத்தை ரக்ஷிப்பதற்கென்றே வம்ச வழியாக அந்த ஒரு வகுப்பை ஏற்படுத்தியதால், அது அவர்கள் நலனுக்கு மட்டுமே ஏற்பட்டது என்று நினைப்பது மிகவும் தவறானது. வேத விரோதியும், பிரம்ம த்வேஷியும் ஸாயிக்குப் பக்தனாக மாட்டான். ஏனெனில் என் நாற்பெரும் அவதாரப் பணிகளே, ஸகருக்குமான தர்ம ரக்ஷணம், குறிப்பாக பக்தர்களின் ரக்ஷணம், தர்ம ஆதாரமான வேதத்தின் போஷிப்பு, அதைப் பராமரித்து வரும் வேத வித்துக்களின் போஷிப்பு இவைதாம்'' என்று பாபா கம்பீரமாகக் கூறியதிலிருந்து அதுவரை 'வேதம், வேதியர்' என்றால் 'ஒரு மாதிரி' நினைத்துவந்த ஸாயி பக்தர்களும் புது விழிப்புப் பெற்றனர்.

வேதத்திலும், வேதியரிடத்திலும் மரியாதை கொள்வதில் மேலும் 'உறைக்கும்' விதத்தில் ஸ்வாமி ஒளிவு மறைவின்றி உரைப்பார் : ''சிலர் ஸாயி பக்தர்கள் என்று தங்களை நினைத்துக் கொண்டு என்னைப் போற்றிப் பூஜை செய்கிறார்கள், பஜனை செய்கிறார்கள். ஆனால் இவர்கள் வைதிக ஆசாரங்களை நிந்திக்கவும் செய்கிறார்கள். ஒரு புறம் என்னை வந்தனை செய்துகொண்டு இன்னொரு புறம் வேதத்தை நிந்தனை செய்கிறவர்கள், என் முகத்துக்கெதிரே கர்ப்பூர ஹாரத்தி காட்டிக்கொண்டே என்னுடைய பாதங்களில் ஊசிகளைக் குத்துகிறவர்கள்தான்.''

முதல் முறை நடந்த ஸப்தாஹ யக்ஞ விழாவில், வேதத்தோடு மற்ற வேதாங்கங்கள், இதர சாஸ்திரங்களைக் குறித்த பண்டிதர்களும் மாலை அரங்குகளில் பங்கு கொண்டனர் ; தத்தம் சாஸ்திரத்தில் பாபாவுக்குள்ள ஞானத்தையும் அதைப் பேணுவதில் அவருக்குள்ள ஈடுபாட்டையும் கண்டு பேருவகை யுற்றுப் போற்றினர்.

அத்தனை வித்வான்களும் வேள்வி முடிவில் அவரை வேத நாயகனாக, சாஸ்திர காவலனாக பரமாத்மாவின் அவதாரமாகவே கருதினர். ஆதியில் வேத மாதாவும், ஒவ்வொரு சாஸ்திர அதி தேவதையும் க்ஷீரஸாகரத்தில் நாராயணனிடம் முறையிட்டதாகச் சொல்வார்கள். அதேபோல் தாங்கள் அவரிடம் முறையிட விரும்புவதாகவும், அவர் அரியாசனத்து அமர்ந்து அவ் விண்ணப்பத்தைச் செவிமடுக்க வேண்டும் என்றும் வித்வான்கள் வித்தகனிடம் விக்ஞாபித்தனர். உடனே வேறு சிலர், ''ஸ்வாமி, உங்களை நாடகத்தில் நடிக்கிறமாதிரி செய்யச் சொல்கிறார்கள். நீங்கள் ஆட்டுவிக்கும் ஸூத்ரதாரி. உங்களை இவர்கள் நாடக பாத்திரமாக்கக் கூடாது'' என்றனர். பாபா சிரித்துக்கொண்டே, ''ஒரு வேஷமுமில்லாத நிர்விசேஷ சைதன்யம் தானே நர வேஷத்தில் வந்திருக்கிறேன்!'' என்றார்.

அவர் அரியாசனத்தில் அமர்ந்து வைகுந்த தர்பார் நடத்தப் போகிறாரா என்பது தெளிவாகவில்லை.

Koviloor Digital Library

ஆனால் மறுதினமே, அரியாசனமென்ன, அரவாசனமே அதாவது ஆதிசேஷனே—இந்த நிர்விசேஷ சைதன்யத்தின் வேஷத்துக்கு வந்துவிட்டான்.

பம்பாயில் இருந்த பக்தை ஸ்ரீமதி பத்மா ஜாவா சில தினங்களுக்கு முன் ஸத்ய ஸாயியை சேஷ சாயியாகவே ஸ்வப்பனத்தில் கண்டாராம். உடனே அவர் மனத்தில் ஒரு வேகம் பிறந்தது. மரத்திலே அற்புத நாக வாஹனம் செய்து, லாரியில் புட்டபர்த்திக்கு அனுப்பி வைத்துவிட்டார்! அதுதான் சொல்லி வைத்தாற்போல் இன்று வந்தது. வித்வான்களின் விருப்பம் பூர்த்தியாயிற்று.

சேஷ பர்யங்கத்தில் விற்று பாபா ஒவ்வொரு வேதத்துக்கும், வேத அங்கங்கத்துக்கும் பிரதிநிதியான வித்வானின் விண்ணப்பத்தைக் கேட்டு அருள்புரிந்தார்.

இந்த 'நாடக'த்துக்குத் "திரிபுவன விஜயம்" என்று பெயரும் கொடுத்தார்!

வாயோது வேதம் மலிகின்ற தொல் சீர்
மறையாளர் நாளும் முறையால் வளர்த்த
தீயோங்க ஒங்கப் புகழோங்கு

பெம்மான்தான் நம் ஸ்வாமி.

* * *

தற்போது வேத நெறிக்கு விரோதமான எண்ணம் ஏற்படுவதற்கு முக்கிய காரணமான ஆரிய—திராவிட இன வேற்றுமை பற்றி ஸ்வாமி சொல்வது ஸ்ரீ காஞ்சிப் பெரியவர் பேசுகிறாரோ என்றே நம்மை மலைப்புற வைக்கும். ஸத்ய ஸாயிதான் பேசுகிறார் (1974 தொடக்கத்தில் ராஜமஹேந்திரபுரத்தில் நடந்த அகில இந்திய ஸாயி மாநாட்டின் பால விகாஸ் குருமார் கூட்டத்தில்) : "இங்கே நான் ஒரு விஷயத்தை அழுத்தமாகச் சொல்ல வேண்டும். தற்காலத்தில், ஆராய்ச்சியாளர் என்று சொல்லப்படும் so-called அறிஞர்கள் எழுதிய பாட புஸ்தகங்களை நீங்கள் கையாண்டு, மாணவர்களுக்குப் போதிக்க வேண்டியிருக்கிறது. இதை நீங்கள் வெகு ஜாக்கிரதையுடன் செய்தாக வேண்டும். இந்த அறிஞர்களுக்கு நம் சாஸ்திரங்களிலோ, இதிஹாஸ புராணங்களிலோ நம்பிக்கையே கிடையாது. அவர்களைப் பொறுத்தமட்டில் ராமாயணம், பாரதம், பாகவதம் முதலியன யதார்த்தத்தில் நடந்தனவே அல்ல. ராம—ராவண யுத்தம், தேவாசுர யுத்தம் எல்லாமே இவர்கள் நோக்கில் ஆரியர்கள்-திராவிடர்கள் என்ற இரு வேறு இனங்களுக்கிடையே நடந்த சண்டைகளின் உருவகம்தான். இந்த அபிப்பிராயம் முற்றிலும் தவறானது. பாரதீய கலாசாரம் ஒன்றேதான். அதற்குள் இன வேற்றுமை கற்பித்துத் துவேஷ மனப்பான்மைகளைத் தூண்டி வளர்க்கும் சரித்திர ஆராய்ச்சிகள் சரியானவை அல்ல.

Koviloor Digital Library

''நம்முடைய பெரிய துரதிருஷ்டம் யாதெனில், ஸநாதன தர்மத்தின் அஸ்திவாரமான ஒழுக்கங்களைப் புரிந்துகொள்ளச் செய்வதற்கான பயிற்சி நம்முடைய கல்வி முறையில் இல்லவே இல்லை. இந்த அளவுக்கு இந்தியப் படிப்பு முறையை ஒரு தோல்வி என்றே சொல்ல வேண்டும்.''

★

ஸம்பிரதாயக் காவலராக ஸ்வாமி கூறும் அருள்வாக்குகளில் சில: ''வைதிக தர்மமே மெய்யானது என்று நம்பி சுபிக்ஷமாக இருந்த வரையில் நம் தேசம் **வேத பூமியாக** இருந்தது. அந்த நம்பிக்கை போன பின்தான் சுபிக்ஷமும் போய் **வேதனை பூமியாக** மாறியிருக்கிறது.''

''ஒரு நிலையில் சாஸ்திர தர்மங்களும் விட்டுப்போகும் என்பது உண்மைதான். ஆனால் ஆரம்ப நிலையிலேயே அவை கூடாது என்றால் நெறிகெட்டுப் போகும். நமக்கு நன்கு தெரியும் இந்த தர்மங்களை இடது கையால் பற்றிக்கொண்டே, நமக்குத் தெரியாத பிரம்மத்தை வலது கையால் தேட வேண்டும். அது பிடிபட்ட பின் கொஞ்சம் கொஞ்சமாக இடது கைப்பிடிப்பை விடலாம். இது 'Left—கை. Left என்றால் விடப்படுவது' தானே? Right—கை, Right—ஆன, எப்போதுமே சரியான கை. அது சரியான இடத்தில் சேர்ந்தபின் தர்மங்களும் தானே நழுவும். முதலிலேயே தர்மத்தைப் பிடிக்காவிட்டால் இகம், பரம் இரண்டுக்கும் வழியில்லாமலாகிவிடும்.''

''சாஸ்திர விதிகள் மனச் சுதந்திரத்தை மதிப்பதில்லை என்று நாகரிகர்கள் நினைக்கிறார்கள். இது தவறு. அந்தக் கட்டுப்பாடு களுக்கு அடங்கி வாழ்ந்து பார்த்தால் அதிலேதான் மனிதனின் உண்மையான ஆனந்தத்துக்கு, ஆத்ம சுதந்திரத்துக்கு வழி இருக்கிறது எனத் தெரியும். 'உலகமே ஒரு விளையாட்டு' என்றால் வாழ்க்கையையும் ஒரு விளையாட்டாக நடத்த வேண்டும். 'இத்தனை நியமங்கள் போட்டு சிரமப்படுத்தக் கூடாது' என்று நினைப்பது சரியல்ல. விளையாட்டில் மட்டும் விதிகள் இல்லையா? அவற்றிலும் தான் நிறைய விதிகள் உள்ளன. ஒரு காற்பந்து ஆட்டம் என்றால் இப்படி அடித்தால் ஃபௌல், அப்படி அடித்தால் 'அவுட்', இப்படி அடித்தால் ஆஃப்—ஸைட், அப்படி அடித்தால் கோல் என்று எத்தனை விதிகள் உள்ளன? இப்படியேதான் ஒவ்வோர் ஆட்டத்துக்கும். விதிகள் இருப்பதால் இவற்றில் உற்சாகம் போய்விடுகிறதா, என்ன? எந்த விதியும் இல்லாவிடில் விளையாட்டே இல்லையே! வாழ்க்கை விளையாட்டையும் இன்புறுத்தவே, உற்சாகப்படுத்தவே வேத தர்மத்தில் இவ்வளவு விதிகளைச் சொல்லியிருக்கிறது. அதில் ஃபௌல் செய்து 'அவுட்' ஆகாமல், கோல் போடுவீர்களாக!''

''எல்லாவற்றையும் நம் அறிவின் எல்லைக்குள் கொண்டு வந்தே ஏற்க வேண்டுமென்று நினைப்பது சரியல்ல. ரிஷிகள், மஹாத்மாக்கள் முதலியோர் சாமான்யரின் சிற்றறிவுக்கு அப்பாற் பட்ட உண்மைகளைத் தமது அநுபவத்தால் கூறுகிறார்கள். இவற்றைச் சிற்றறிவால் ஆராயாமல், நம்பித்தான் ஏற்க

Koviloor Digital Library

வேண்டும். நம்பிக்கைக்கே விசுவாஸம் என்று பெயர். உடல் வாழ சுவாஸம் எவ்வளவு அவசியமோ, அவ்வளவுக்கு உள்ளம் வாழ விசுவாஸம் அவசியம்.''

(எழுத்துக்கெழுத்து காஞ்சிப் பெரியவர்களை அநுசரித்துப் பேசுகிறார் நம் பார்த்திப் பெரியோன்) : ''ஆத்ம சம்பந்தமான விஷயங்களை நிரூபிக்கக் கண்ணின் சாக்ஷியம் போதாது. இவ் விஷயத்தில் வேதம் கூறுவதே மெய்யான சாக்ஷி. சாக்ஷி மட்டும் அல்ல: வேதத்துக்கு வேதமே நிரூபணம். அதை நம் அறிவாலோ, வேறு எதாலுமோ நிரூபித்துப் பார்ப்பதற்கில்லை.''

(மீண்டும் காஞ்சிக் குரல் பார்த்தியிலிருந்து) : ''நம் முன்னோர்களுக்குத் தெரியாத ஸமத்துவத்தைத் தாங்களே கண்டு பிடித்ததுபோல் இன்று பலர் பேசுகிறார்கள். உண்மையில் பிரபஞ்ச முழுவதையுமே ஒன்றாக உணர்ந்து பிரகடனம் செய்ததே நம் மூதாதையர்தாம். அப்போது உள்ளத்திலே உண்மை ஸமத்துவம் இருந்ததால் உலகு க்ஷேமமாக இருந்தது. இப்போது பேச்சில்தான் ஸமத்துவம் படாடோபமாக உள்ளது. வாஸ்தவத்திலோ, மக்களைப் பல ஜாதிகள் பிளவுபடுத்தினதாகச் சொல்லப்படுகிற அப்போது இருந்த ஸெளஜன்யமும் சாந்தியும் இன்றுதான் இல்லை. தினே தினே போட்டியும், பொறாமையும், துவேஷமும் வளர்ந்து வருகின்றன. எனவே உண்மையான நாகரிகசாலிகள் யார்? இன்றைய தலைமுறையினரா, நம் பண்டைய மூதாதையரா?''

(அதே புனித எதிரொலியில் இன்னொன்று): ''பல வேறு அந்நிய கலாசாரத்தினர் திரும்பத் திரும்ப நம் நாட்டின்மீது வந்து மோதிய போதிலும் நமது நாகரிகம் நலியாமல் குறையாமல் அழுந்த நின்று வந்திருப்பதற்குக் காரணம் அது ஸநாதன தர்மத்திலேயே ஒட்டிக்கொண்டு நின்றதுதான். ஞானப் பேரொளியைக் கண்ட ரிஷிகளின் மூலம் வெளிப்பட்ட ஸநாதன தர்மமானது ஒரு காலத்துக்கு மட்டுமன்றி எக்காலத்துக்குமான சாசுவத தர்மமாகும்.''

''வேத அத்யயனத்தை ஏன் ஒரு வகுப்புக்கு மட்டும் விடவேண்டும் என்று மற்ற வகுப்பார் எண்ண வேண்டியதில்லை. எல்லா வகுப்பாரும் முக்தி பெற உபாயமாக நாம ஸங்கீர்த்தனம் உள்ளது. இதை அவரவரும் பின்பற்றினாலே உய்வுக்குப் போதுமானது. ஆகையால் வேத அத்யயனத்தை மற்ற வகுப்பார் மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை.''

வர்ணாச்ரம தர்மத்தை ஆதரிப்பவரே ஸ்வாமி என்பது பற்றி 'பகைவனுக்கருள் வாய்' என்ற அத்தியாயத்தில் கூறிய வற்றையும் இங்கே புரட்டிப் பார்த்துக் கொள்ளலாம்.

குறிப்பாக ஒன்று : ''ஓர் அறைக்கு நாலு சுவர்கள் இருப்பது போல சமூகத்துக்கு நாலு சுவர்களாகக் காப்புத் தருவனவே நாலு வர்ணங்கள். ஒவ்வொருவரும் தமது பாரம்பரிய தர்மத்தைப் பற்றி ஒழுகுவதே சமூக க்ஷேமமளிக்கும்.''

Koviloor Digital Library

வர்ணாசிரமப் பாகுபாட்டை அதிநயம்பட அவர் ஆதரித்துப் பேசுவதைப் பாருங்கள் : ''இப்போது பலர் 'எல்லோருக்குள்ளும் ஒரே பரம்பொருள்தானே இருக்கிறான்? எதற்காகப் பிரிக்க வேண்டும்?' என்கின்றனர். ஒரே பரம்பொருள் இருந்தாலும் உலகத்தில் ஒரே காரியமின்றி, பல காரியங்கள் நடந்தாக வேண்டியிருப்பதால்தான் பலவகையாகப் பிரிவினை செய்தார்கள். ஒரே மின்சாரத்தினால்தான் அச்சுக்கூடத்தில் அச்சு இயந்திரம் புத்தகங்களைப் பிரசுரிக்கிறது; அங்கேயே போஜன சாலையில் எலெக்ட்ரிக் 'ஸ்டவ்'வினால் சமையல் நடக்கிறது. மின்சாரம் ஒன்றுதானே என்பதால் அச்சு இயந்திரத்தில் சாதம் வடிக்க முடியுமா? 'ஸ்டவ்'வில் புத்தகம் அச்சுப்போட முடியுமா?''

லலிதா ஸஹஸ்ரநாமம் கூறும் ''வர்ணாச்ரம விதாயினி'' யாகத்தான் ஸாயி மாதா இருக்கிறாள் எனலாமா?

எந்த விதி இருப்பினும் அதற்கு விலக்கு உண்டு என்பதாலோ என்னவோ, சிலரைப் பொறுத்தமட்டில் ஸநாதனிகள் ஒப்பாத சில காரியங்களையும் ஸ்வாமி செய்யத்தான் செய்கிறார் : உதாரணமாக வெள்ளையரும், பெண்மணிகளும் கூட ஓம்காரம், மற்றும் காயத்ரீ, புருஷ ஸூக்தாதி மந்திரங்களை ஓதுவதற்கு ஆதரவு தருகிறார். அத்யயனத்தையே வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டு கற்பிப்பது அந்தணருக்கு மட்டுமே உரித்தானது என்பது அவர் கருத்தாயினும், மற்றவர்கள் அதை வாழ்க்கைத் தொழிலாகக் கொள்ளாமல், தம் மட்டில் கற்பதில் ஆக்ஷேபம் தெரிவிக்கவில்லை.

ஆதி கால சாஸ்திரங்களை ஆராய்ச்சி செய்துள்ள சிலரும் ஸ்வாமியின் அபிப்பிராயம் வேத லக்ஷியத்துக்கு முரணானதல்ல என்றும், பிற்கால தர்ம சாஸ்திரங்கள்தாம் வேதத்தை முற்றிலும் ஒரே வகுப்புக்கு உரிமை ஆக்கிவிட்டது என்றும் கூறுகிறார்கள்.

''இந்த மங்களமான வேத வாக்குக்களை நான் நாலு வர்ணத்தாருக்கும், நம் தேசத்தார் மட்டுமின்றி அந்நியருக்கும் கூறுவேனாக! (யதே மாம் வாசம் கல்யாணீம் ஆவதானி ஜனேப்ய: | ப்ரஹ்ம ராஜன்யாப்யாம் சூத்ராய சார்யாய ச, ஸ்வாய சாரணாய ச ||)'' என்று வேத ரிஷியே யஜுர் வேதத்தில் (26—2) கூறுவதை மேற்கோள் காட்டி, இதிலிருந்து வேத ரக்ஷணத்தையே ஜீவனமாக்கிக் கொள்வது ஒரு ஜாதிக்கு மட்டும் ஏற்பட்ட போதிலும், மற்றோரும் அதை அறிவதை வேதமே அநுமதிக்கிறது என்பர். இந்த மற்றோரில் அந்நிய தேசத்தாரும் அடக்கம் தான்.

வால்மீகி ராமாயணம் சுந்தர காண்டம், பதிநான்காம் ஸர்க்க முடிவில், ''ஸீதை ஸந்தியா வந்தனம் செய்வதற்காக இந்த நதிக்கரைக்கு வருவாள்'' என ஆஞ்ஜநேயர் சொல்வது முதலான பல மேற்கோள்களைக் காட்டி ஆதியில் பெண்களுக்கும் வேதங்களில் உரிமை இருந்தது என்றும், பிற்காலத்தில்தான் அதை மறுத்து விட்டனர் என்றும் ஆராய்ச்சியாளர் கூறுகிறார்கள். சுமார் பதினைந்து நூற்றாண்டுகளுக்குமுன் ஆழ்வாராதியர்

Koviloor Digital Library

காலத்தில்கூடப் பெண்களுக்கு வேதப் பயிற்சி இருந்து, அவர்கள் சொல்லிக்கொடுத்த மந்திரங்களைக் கிள்ளைகளும் மொழிந்ததாக,

வேல் நெடுங்கண்
முளைவாள் எயிற்று மடவார் பயிற்று
மொழிகேட்டிருந்து முதிராத இன்சொல்
வளைவாய கிள்ளை மறை பாடு

என்று திருமங்கையாரின் திவ்யப் பிரபந்தம் சொல்வதால், நம் பகவான் செய்வது வாஸ்தவத்தில் சாஸ்திர விலக்கல்ல என்றும் கொள்ளலாம்.

* * *

தனிப்பட்டவர்களின் அவைதிக, அநாசாரங்களை ஸ்வாமி அவ்வளவாகப் பொருட்படுத்தாமல், அவர்களது பொதுவான நல்லொழுக்கத்தாலும் பக்தியாலுமே உய்வு பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கையை ஊட்டி வந்தபோதிலும், தமது பொதுப் பிரஸங்கங்களில் வைதிக ஆசாரங்களையே அதிகம் வலியுறுத்துவார். எல்லா மக்களுக்குமாகப் பேசும்போது, மரபில் அவர்களுக்கு மதிப்பு குலையவிடக் கூடாது என்பதில் மிகுந்த கவனம் செலுத்துகிறார் போலும். என்னதான் 'டேப்'பில் பதிவு செய்தாலும் பேச்சு ஓரளவு காற்றோடு போவதே. அச்சிட்ட எழுத்தோ இன்னும் அழுத்தமாக நிலைத்திருப்பது. எனவேதான் போலும், பேச்சை விடக் கூட, எழுதுகையில் ஸ்வாமி மேலும் சற்றுத் தீவிரமாகவே ஸம்பிரதாய நெறிகளை வலியுறுத்துகிறார்.

ஏராளமான மக்கள் கூடியிருக்கையில் ஆசார விருத்தமாக ஏதும் செய்யலாகாது என்பதில் ஐயனுக்குள்ள அக்கறைக்கு ஓர் உதாரணம்: 1965-ம் ஆண்டு ஸ்வாமி ஜயந்தியன்று சூரியக் கிரஹணம் நிகழ்ந்தது. அனைவரும் கிரஹண தர்ப்பணம், ஸ்நானம் முதலியன செய்ய வேண்டும் என்பதால் அன்று ஸ்வாமி விழாவையே முற்பகல் பதினொரு மணிக்கு மேல்தான் தொடங்கினார்!

இதற்கு முன்பெல்லாம் ஜயந்திதோறும் ஒவ்வோர் அடியாரும் க்யூவில் வந்து தமக்கு மாலையிட அனுமதித்து வந்தார். இதன் பொருட்டு எட்டு மணிகள் தம் துருதுருப்பையெல்லாம் அடக்கிக்கொண்டு ஒரே இடத்தில் அமர்ந்திருப்பார். ஆனால் 1965 ஜயந்தியின்போது பதினொரு மணிக்கு மேல்தான் கொடியேற்றம், தைலம் வைத்தல், லட்டு விநியோகம் முதலியன நடந்ததால் மாலையிடும் நிகழ்ச்சியை ரத்து செய்துவிட்டார். அந்த வருஷத்தோடு அந்த இனிய அங்கம் நின்றே போயிற்று.

தமது நிறுவனங்களில் ஸ்வாமி வேத விதிப்படி அஸ்திவார ஸ்தாபனம், கிருஹப்ரவேசம் முதலியன செய்வதையும் இங்கு குறிப்பிட வேண்டும். இந்தச் சடங்குகள் இன்றியே ஸ்வாமியின் திவ்ய ஸங்கல்பத்தால் இந்த நிறுவனங்கள் எழும்பிவிடும் என்பதில் சந்தேகமே யில்லை. ஆயினும் அவரே தேங்காய் உடைத்து,

Koviloor Digital Library

சாஸ்திரிமார் மந்திரம் ஓதச் சடங்குகளைச் செய்கிறார். தாமே பெரிய ரகசியமாக இருந்தும், நவக்ரஹ விக்ரஹங்கள், யந்திரங்கள், நவமணிகள் போன்றவற்றைச் சிருஷ்டித்து அஸ்திவாரத்தில் போடுகிறார்!

தம்மை நூதனராக அவர் கருதவில்லை என்பதற்கு ''ஸநாதன ஸாரதி'' என்று பெயர் சூட்டிக்கொண்டிருப்பதே போதுமான சான்றுதானே?

''பத்ததி'', ''பத்ததி'' என்று கௌரவத்தோடு சொல்லி, அநேகப் பண்டைய வழங்குகளை பாபா தம் பக்தருக்கு வலியுறுத்து வார். பத்ததி 'கூடாது' என்று வைத்துவிட்ட சில விஷயங்களை, வாஸ்தவத்திலே அவற்றில் தவறாக ஏதும் இல்லாவிடினுங்கூட, மரபுக் காப்பாளராக மதித்து ஒழுகுகிறார். உதாரணமாக முன்பு மாலை மரியாதையை அவர் ஏற்றுவந்தபோது (குறிப்பாக, ஜயந்தியன்று ஸகல பக்தரும் அவருக்கு ஹாரம் சமர்ப்பித்த போது) ஆண்கள்தான் அவரது கழுத்தில் சூட்டலாம். பெண்டிரிட மிருந்து கையிலேயே வாங்கிக் கொள்வார்.

தாம் விபூதி சிருஷ்டித்து வழங்குகையில் ஆண்களுக்குத் தாமே இட்டும் விடுவார்; பெண்களின் கையில்தான் போடுவார்.

பரஸ்பரம் சிறிதுகூட விகல்பம் இன்றியே ஓர் அம்மணி சாதகர் ஒருவரது கையில் தராமல் வாயில் பிரஸாதத்தைப் போட்டு விட்டார் என்பதற்காக பாபா, ''இனிமேல் இம்மாதிரி மனசில் தப்பில்லை என்று பத்ததிக்கு விரோதமாகச் செய்தால் உங்கள் சாதனை முழுவதையும் பஸ்மமாக்கி விடுவேன்'' என வெகுண்டாராம்.

பிரசாந்தி நிலயத்தில் பண்டிகைகள் கொண்டாடப்படும் போது பாபா அது ஒவ்வொன்றின் தத்வார்த்தத்தையும் விளக்கு வார். 'அந்தத் தத்வத்தில் ஈடுபடுவதே உண்மையான கொண்டாட்டம். வெளிச்சடங்கோடும், வெறும் விருந்தோடும் நின்று விடுவது வீண்' என்பார். கையோடு கையாக, ஸநாதன ஸாரதியாக, சொல்வார் : ''இப்படி நான் சொல்வதால் பண்டிகை கொண்டாட வேண்டாம், பழைய ஐதிகங்கள் வேண்டாம் என்று அர்த்தமாகாது. நானே இங்கே இவற்றைக் கொண்டாடத்தானே செய்கிறேன்? (வருஷப் பிறப்பன்று ஆசிரம வாஸிகளுக்கு வேப்பம் பூவும் வெல்லமும் சேர்த்து இடித்த சூர்ணத்தை ஸ்வாமியே வழங்குவார் என்பதிலிருந்து பண்டிகை யின் வெளிமரபுகளை அவர் பின்பற்றும் செவ்வியை உணரலாம்). வெளிக் கொண்டாட்டங்களையும் ஸம்பிரதாயங்களையும்கூடப் பின்பற்றத்தான் வேண்டும். ஏனெனில் இவை யாவும் நமக்கு நீண்டகாலமாக வழி வழி வந்துள்ளன. அந்தப் பெரிய ஸம்பிர தாயத்தை நாம் மதிக்கவே வேண்டும்'' என்பார்.

பாபாவிடம் பரம பக்தர்களான ஓர் உயர் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞனுக்கு பாபாவே கலியாணம் நிச்சயம்செய்தபோது அவன் கேட்டான்: ''ஸ்வாமி! கடவுளான தாங்களே என் மண

Koviloor Digital Library

வாழ்க்கை நன்கு நடக்க ஆசி தருகிறீர்கள். எனவே அது நன்றாகத்தான் அமையும். இப்படியிருக்க, எதற்காக விவாஹம் என்று வைதிகச் சடங்குகள் பண்ண வேண்டும்? உங்கள் ஆசியைக் காட்டிலும் அவை பெரிதா என்ன?''

பாபா பரிவோடு நகைத்தார். ''பங்காரு! நீ சொல்வது வாஸ்தவந்தான். என் ஆசிர்வாதமே போதும்—வேறொன்றும் வேண்டாந்தான். நீ தனிக் கட்டையாக இருந்தால் நானும் உன் மனசுப்படியே விட்டு விடுவேன். ஆனால் நீ ஒரு பெரிய குடும்பத்தில் மூத்த பிள்ளை. உன் அகத்தார் வைதிக சம்பிரதாயங்களை விட்டுவிட்டால் சமூகத்தில் அது எவ்வளவு பாதிப்பை உண்டாக்கும்? அதற்கு இடம் கொடுக்கலாமா? உனக்கு சம்பிரதாய பூர்வமாகக் கலியாணம் நடந்தால்தான், உன் தம்பி தங்கைகளுக்கும் கௌரவமான இடத்தில் பத்ததி தப்பால் கலியாணமாக முடியும். ட்ரெடிஷனை எப்பவும் ரெஸ்பெக்ட் பண்ணணும், நாயனா'' என்றார்.

தனிப்பட்ட முறையில் மரபை மீறக் கூடிய பாத்திரத்தையும் சம்பிரதாய பத்ததியிலேயே செலுத்துவது அருமையாகத்தான் இருக்கிறது!

* * *

சில விஷயங்களில் அவர் படு ஸநாதனி என்றே சொல்ல வேண்டும். உதாரணமாக கோடைப் பயிற்சி முடிவில் மாணவர்கள் சான்றிதழ் பெறும்போது வேஷ்டியை மூலைக் கச்சமாக உடுத்த வேண்டும் என்று விதித்திருப்பதை முன்பே பார்த்து இருக்கிறோம்.

செயற்கையான குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஆக்ஷேபிப்பார் நம் ஸ்வாமி. சுத்த ஸத்வ உணவு, தியானம் முதலியவற்றால் இயற்கையான இந்திரிய நிக்ரஹம் ஏற்படுவதைத் தான் அவர் ஆதரிக்கிறார். ''ஒரு புறம் உணர்ச்சிகளைத் தூண்டி விடும் ஸினிமா, புஸ்தகங்கள் முதலியன பெருகி வரும் போதே, மற்றொரு புறம் செயற்கையாகக் குடும்பக்கட்டுப்பாடு செய்வது தனி மனிதர்களின் மன நலன், சமூகத்தின் ஒழுக்கம் இரண்டுக்குமே மகத்தான ஊறு விளைவிக்கும்'' என்பார்.

மனச் சுதந்திரத்தையே பெரிதாகச் சொல்வதுதான் நூதன நாகரிகம். ஆனால் பாபா ஆசிரமத்திலும் ஸ்தாபனத்திலும் அநேகக் கட்டுப்பாடுகளையே அமல் செய்கிறார். இதிலேயே அவரது 'கர்நாடக'ப் போக்கைத்தான் பார்க்கிறோம். மனத்திலிருந்து சுதந்திரம் பெறுவதே ஆத்ம லாபம்; மனத்துக்குச் சுதந்திரம் தருவது ஆத்ம ஹானி என்ற ஸநாதனக் கருத்துக் கொண்டவரே நம் ஸ்வாமி.

* * *

ஸ்திரீ தர்மமாக அடக்கம், குடும்பப் பொறுப்பு இவற்றை வலியுறுத்துவதிலும் ஸாயிநாதனை ஸநாதனன் என்றே சொல்ல வேண்டும்.

Koviloor Digital Library

பெண்களை அடக்கக் குத்து விளக்குகளாகப் பார்க்கவே முடியவில்லையே என்று ஏங்குகிற 'கர்நாடக' மனிதர்களுக்குப் பிரசாந்தி நிலயமும், பாபா விஜயம் செய்யும் மற்ற இடங்களும் தருகிற ஆறுதல்! இங்கெல்லாம் ஆயிரக் கணக்கிலான அதி நாகரிக மங்கையர்களையும் இழுத்துப் போர்த்த சேலையுடன் உட்கார்த்தி வைக்கிறாரே, இது ஒன்றே அவரது அவதார சக்திக்குப் போதுமானது!

கட்டுப்பாட்டு நெறியில் ஆண்களை விடவும் பெண்களிடம் ஸ்வாமி அதிகம் எதிர்பார்க்கிறார் என்று ஓர் உதாரணத்தில் தெரிகிறது. கூட்டத்திடையே ஸ்வாமி வருகையில் ஆடவர்கள் கட்டுப்பாடு இழந்து அவர் பாதத்தைத் தொட வந்தாலே ஸ்வாமி விரும்பத்தான் மாட்டார்; தொடர்ந்து செல்லாமல் திரும்பியே விடுவார். ஆனால் பெண்கள் இப்படிக் கட்டுப்பாடு இழந்தாலோ அவர் முகத்தில் அஸாத்தியமான கோபக் குறியே தென்படும். தம் தலையிலே இரண்டு தட்டு தட்டிக்கொண்டு அவர் திரும்புகையில், அந்த மதுர அதரங்களுக்குச் சற்றும் பொருந்தாத ''பிசாசுகள்'' என்ற வார்த்தைகள்கூட வெளிவரும் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

அந்த அதரங்களின் பரிபூர்ண மதுரம் வெளியாவதும் அவர் பெண்களிடம் பேசும்போது, ''அம்மா'' என்று அழைக்கிறாரே, அப்போதுதான்! தெய்வக் குழந்தையாகவே பாவனமாக அழைப்பார், ''அம்மா'' என்று. ஆயிரம் சொற்பொழிவுகளை விட இந்த ''அம்மா'' ஒன்றே, பெண்களின் இயற்கை தர்மம்—அன்னையாக இருந்து குடும்பத்தைப் பேணுவதுதான் என்று காட்டிவிடும்.

'ஸோஷல்' என்று சொல்லிக்கொண்டு பெண்களும் ஆண்களும் நெருங்கிப் பழகுவதை ஸ்வாமி ரஸிப்பதில்லை. பிரசாந்தி நிலயவாஸிகளைப் பொறுத்தமட்டிலோ இவ் விஷயத்தில் மிகக் கடுமையான கட்டுப்பாடே விதித்திருக்கிறார். கோடைகால மாணவர் பயிற்சி முகாமிலும் இவ்வாறே மாணவ மாணவியருக்கிடையே நெருப்பு வேலி போட்டாற்போல் பிரித்து வைத்து இருப்பார்.

நமது பெண்கள் நல்ல கல்வியறிவு பெற்றிருக்க வேண்டும்; அவசியம் ஏற்படுகையில் கண்யமாக உழைத்துப் பிழைத்துக் கொள்வதற்கான தகுதி பெற்றிருக்க வேண்டும்; உபாத்திமைத் தொழில், பெண் வைத்தியம் முதலியவற்றில் அவர்களுக்கே உரிய தனிப் பங்கு உண்டு என்றெல்லாம் ஸ்வாமி கருதுவது வாஸ்தவம். இதற்காகத்தான் அனந்தப்பூரில் அற்புதமானதொரு மகளிர் கல்லூரி நிறுவியிருக்கிறார். கலாசாலை என்ற பெயருக்கேற்ப, கலைக் களஞ்சியமான அவர் தாமே பார்த்துப் பார்த்து இக் கல்லூரியை உருவாக்கினார். இதனை அடுத்து ஜெய்ப்பூர், ஆஜ்மீர் முதலான இடங்களிலும் ஸத்ய ஸாயி மகளிர் கல்லூரிகள் தோன்றியுள்ளன.

ஆனால் பெண்கள் பெண்மையின் நளினங்களை விட்டு விட்டுப் பட்டம், பதவி இவற்றைப் பெறுகிற உத்தேசத்துக்காக அவர்

Koviloor Digital Library

இவற்றை நிறுவவில்லை என்பதை அடிக்கோடிட்டுச் சொல்ல வேண்டும். இக்காலத்தில் பெண்கள் பள்ளியுடன் நில்லாமல் மேற்படிப்பும் பயில்வது வழக்கத்துக்கு வந்துவிட்டது. இந்த வழக்கத்தில் அவர்கள் ஸ்திரீதர்மங்களைப் பறிகொடுத்து விடக் கூடாது என்பதற்கு உதவவே இக் கல்லூரிகளை நிறுவி, அவர்களைப் பாரதியக் கலாசாரத்தில் நிலைநிறுத்த முயல்கிறார்.

நவீனம், நாகரிகம் என்ற பெயரில் அடக்கப் பண்பையும், தொன்மையான மங்கள பத்ததிகளையும் பெண்கள் கைவிடுவதை அவர் வன்மையாகக் கண்டிப்பார். வன்மைக் கண்டிப்பைவிட, மென்மையான பரிஹாஸத்தாலேயே தாக்கிவிடுவார். வயதுக்கு உகாத அலங்காரத்தோடு வரும் ஓர் அம்மையிடம், ''என்ன சந்திரலேகா?'' என்று அவர் புன்னகையுடன் கேட்டாலே போதும், அவ்விரு வார்த்தைகள் சவுக்காக அந்த அம்மாளை அடித்து, அதன்பின் இந்த அகௌரவ அலங்காரத்தை நினைக்கவே முடியாதபடி செய்துவிடும். ஆசிரமவாஸிகளான பெண்களுக்கும், ஸ்வாமியின் ஸந்நிதியில் திருமணம் அல்லது மணிவிழா காணும் பெண்களுக்கும் அவர் வழங்கும் சேலைகளைப் பார்த்தால் அவரது 'டேஸ்ட்' சற்று கர்நாடகமானது என்றுதான் சொல்ல வேண்டும். சுமங்கலிகளும், கன்னியரும் கரைபோடாத வெள்ளைப் புடவை உடுத்துவதை அவர் விரும்ப மாட்டாராம்.

'அடடா, மஞ்சளின் இடத்தை வாசனைப் பவுடர் வந்து பிடித்துக்கொண்டு விட்டதே' என வாட்டமுடன் சொல்பவர் என்பதிலிருந்து பார்த்துக் கொள்ளுங்களேன், கர்நாடகத்தை!

ஸௌபாக்யம், ஸௌமாங்கல்யம் என்ற பதங்களைப் பெண்களுடனேயே விசேஷமாகப் பொருத்துவது பாரதப் பண்பு. எனவே ஸ்வாமி, முற்றிலும் ஸாதகிகளாகவே இருக்க வேண்டிய பெண்களை ஏறக்குறைய துறவியர் கோலத்தில் வாழப் பணித்த போதிலும், மற்றோர் நாகரிகத்தின் பெயரில் மூளிகளாக நிற்பதை விரும்புவதில்லை. 'கவர்ச்சிகரம்' நிச்சயமாகக் கூடாது; அதே போதில் அமங்களமும் கூடாது; கவர்ச்சியில்லாத, கௌரவமான மங்கள ஆடை, அணிகள் பாரதிய குடும்ப ஸ்திரீதர்மத்தில் எப்படி வந்திருக்கிறதோ அப்படியே காக்க வேண்டும்—இதுவே ஸ்வாமியின் அபிப்பிராயம். ஸுமங்கலிகள் மெட்டி, மங்கள ஸூத்திரம், பெரிய குங்குமத் திலகம் முதலியன கூட இல்லாமல் இருப்பது நிச்சயமாக அவருக்குப் பிரீதியானதல்ல.

பிறர் தங்களை வெறுத்துப் பார்க்கிற விதத்தில் பெண்கள் ஒருகாலும் தோற்றமளிக்கக்கூடாது என்று—இவ் விஷயத்தைத் தாம் சொல்ல வேண்டியுள்ளதே என்ற வருத்தமான கூச்சத்துடன், ஆனால் தாமும் சொல்லாவிட்டால் வேறு எவர்தான் திருத்துவது என்ற கடமை உணர்ச்சியுடன் வற்புறுத்தியிருக்கிறார்.

குடும்பத்தையும் குடும்பத்தாரையும் கவனியாமல் பெண்கள் புட்டபர்த்திக்கு வருவதே நியாயமல்ல என்று கூறுபவர் ஸ்வாமி. எனவே பெண்களுக்கென அவர் கல்லூரிகள் வைத்திருப்பதால் அவர்களை உத்யோக புருஷிகளாக்குவதில் முனைந்திருக்கிறார் என்று

Koviloor Digital Library

எண்ணிஞல் அது சற்றும் சரியல்ல. பெண்கள் கிருஹலக்ஷ்மி களாக இருப்பதைத்தான் அவர் உவக்கிருர். தாயாக அவள் ஆற்ற வேண்டிய அறப்பணி, ஆஸ்திகப் பணி கெட்டுப்போனுல் அடுத்த தலைமுறைக்கு அது பெரும் ஹானி என்று அடிக்கடி எடுத்துக்காட்டி யிருக்கிருர்.

ஸ்திரீதர்மம் பற்றி பாபாவின் ஒரு பொன்மொழி பாருங்கள்: ''பெண் என்பவள் பச்சைக் குழந்தைக்குக் காப்புத் தெய்வம்; சிறுருக்கு அன்னையும், குருவும்; யுவனுக்குப் பத்தினி; நடுத்தர வயதினனுக்கு ஸகா; வயதானவருக்குப் பணிமகள். அன்புக்கும், சேவைக்குமே அவள் உருவகம். மிகப் பெரும் பாலான பெண்களின் பணிக்கு உரிய கேந்திரம் இல்லம்தான். இல்லத்தரசிகளாக இருப்பதுதான் அவர்களது பெருமை. இதை அவர்களே உணராதிருக்கலாமா? இப்போது இல்லத்தைப் புறக் கணித்து, ஆண்களோடு ஸமத்துவம் என்பதாக எதையோ நினைத்துக்கொண்டு 'உயர்வதற்கு' முயல்கிருர்கள். உண்மையில் இது தங்களையே ஏமாற்றிக் கொள்வதுதான்; உயர்வதற்குப் பதில் தாழ்த்திக் கொள்வதுதான். ஏனெனில் கிருஹலக்ஷ்மி களாக இருக்கும்போது அவர்கள் ஆண்களைவிடவும் ஒருபடி மேலே இருக்கிருர்கள். மேலே இருப்பவர்கள் ஸமத்துவ நிலைக்கு வருவது என்ருல் அது தாழ்ந்து போவதுதானே?''

மேலே கூறியவற்றிலிருந்து தற்கால யுவதிகளின் பண்பாட்டுச் சீரழிவை ஓரளவேனும் தடுப்பதற்காகத்தான் அவர் மகளிர் கல்லூரிகள் நிறுவியிருக்கிருர் என்று கொள்ளலாம் அல்லவா?

அதே சமயத்தில் அவர் பிற்கால தர்ம சாஸ்திரக்காரர்களோடு சேர்ந்துகொண்டு பெண்களை ஒரேயடியாக அடக்கி, அமுக்கி வைக்கவில்லை என்பதும் வெள்ளிடைமலை. இப்படியிருப்பின் அவர்களுக்குக் கலாசாலைப் படிப்புத் தர வசதி செய்வாரா? இதைவிட முக்கியமாக ஆத்மிகத்தில் அவர்களுக்கு மறுக்கப்பட்ட ''சரிநிகர் சமான''த்தை மறுபடி வழங்குபவர் அல்லவோ ஸ்வாமி? ஓங்காரத்திலும், மற்ற மந்திரங்களிலும் பெண்களுக்கும் உரிமை உண்டு என்று அழுத்தமாகச் சொல்லி வருபவர் ஸ்வாமி என்பதை முன்பே பார்த்திருக்கிருேம். குழந்தைகளைச் செம்மைப்படுத்து வதில் அம்மைக் குலத்துக்குத் தனித் திறன் உண்டு என்பதால்தான் 'பால விகாஸ்'களில் பெண்களையே குருவாக நியமித்திருக்கிருர்.

பெண்கள் அநுஷ்டிக்கும் கௌரீகணேச விரதம், வரமஹா லக்ஷ்மி பூஜை முதலியவற்றுக்கு ஸ்வாமி அளிக்கும் ஊக்கத்தை யும், அப்போது வீட்டைக் கோலம் தோரணம் முதலியவற்ருல் லக்ஷ்மீகரமாக வைத்திருக்க அவர்களுக்கு அவர் கூறும் அறிவுரை களையும் பார்க்கும்போது அவர்களுக்கான பாரதிய கலாசாரத்தில் ஸ்வாமிக்கு உள்ள அலாதிப் பிரியம் வெளிப்படும்.

'ஸம்பிரதாயேச்வரி' என்ற லலிதா ஸஹஸ்ர நாம வாக்கை நிச்சயம் மெய்ப்பிப்பவர்தாம் ஸ்வாமி.

Koviloor Digital Library

காலம் வகுக்க முடியாதபோதே தோன்றிவிட்ட வேத நெறி ஒவ்வொரு காலத்திலும் பல புது அம்சங்களைத் தன்னுட் கொண்டு வளர்ந்து பாரத நாகரிகமாகியுள்ளது. பிறகு சேர்ந்த அம்சங்களில் சிலவற்றை ஸ்வாமி ஒதுக்குவதால் அவர் ஸநாதனி அல்லவோ என்று தோன்றலாமாயினும், நடைமுறையில் ஸகல மாந்தரிடையும் சழக்கும் காழ்ப்பும் இல்லாதிருக்க அவரது நீக்குப் போக்கான கொள்கைதான் உதவி புரியும் என்பது சற்று ஆராய்ந்து பார்த்தால் புரியும். இப்படி ஏதோ சில அம்சங்களில் வைதிகத்துக்கு முரணாக அவர் தோன்றினாலும்கூட மூலமான வேதங்களை எடுத்துக்கொண்டால் அவற்றின் உள்ளார்ந்த மகிமையில் ஸ்வாமிக்கு உள்ள ஈடுபாடு எந்த ஸநாதன ஆசாரியருக்கும் சளைத்ததில்லை.

இன்று வேதம் முழுதையும் வேதியர் அனைவரும் காக்குமாறு சமூகத்தை மாற்ற இயலாதாயினும், வேத ஸாரமாக அவர்களிடை வந்துள்ள ஒன்றே ஒன்றை மட்டும் அவர்கள் நிச்சயம் ரக்ஷித்தாக வேண்டும் என ஸ்வாமி விரும்புகிறார். அதைச் சற்று விரிவாகப் பார்ப்போம்.

* * *

திரிவேதங்களின் ஸாரம் எனப்படுவது காயத்ரீ மஹா மந்திரம். எனவே உபநயனம் செய்துகொண்டு ஸந்தியாவந்தனத்தின் மூலம் காயத்ரியை உபாஸிக்க அதிகாரம் பெற்றவர்கள், லோக நலனுக்காகவும் ஆத்ம சிரேயஸுக்காகவும் இதை வழுவின்றிச் செய்யவேண்டும் என்பதை எப்போதும் வலியுறுத்துவார் பாபா.

ஒரு முறை கூறினார் : ''இரு பிறப்பாளர்கள் என்பதாகத் தாய் வயிற்றிலிருந்து ஒரு முறை பிறந்து, காயத்ரீ உபதேசத்தால் இரண்டாம் பிறப்பெடுக்கும் பிராமணர்கள் ஸந்தியாவந்தனத்தைக் கைவிடுவரேல் அவர்கள் அடியோடு வீழ்ந்துவிடுவர். ஸந்தியாவந்தனம் செய்யாவிடில் வேறெந்தப் புண்ய கர்மமும் செய்ய அவர்கள் தகுதி இழந்துவிடுகின்றனர். திட்டிலே செய்த கர்மம் பலிக்காதது போல் இவர்கள் செய்யும் மற்ற புண்ய கர்மங்களும் பலன் தரா. இதை எல்லா ஸ்ம்ருதிகளும் கூறுகின்றன :

ஸந்த்யா ஹீநோ (அ)சுசிர்நித்யம் அனர்ஹஸ்
ஸர்வ கர்மஸு |
யத் அன்யத் குருதே கர்ம ந தஸ்ய பலபாக் பவேத்||

''ஸந்தியாவந்தனம் செய்து ஈட்டிய சக்தியால்தான் புராதனர்கள் ரிஷிகளாகி, நீண்ட ஆயுளும், புகழும், ஞானமும், தெய்விக ஒளியும் பெற்றனர் என்று மநு கூறுகிறார். எனவே காயத்ரீ ஜபம் செய்யாத எவனும் பிராமணன் என்ற பெயருக்குத் தகுதி பெற்றவனல்ல. பிரம்மத்தைத் தியானிக்கும் எல்லோரும் பிராமணர்கள்தான் என்பது ஒரு பக்கம் உண்மையாகவே

Koviloor Digital Library

இருக்கட்டும். இன்னொரு பக்கத்தில், பாரம்பரியமான ஒரு ஜாதியில் பிறந்து பிராமணர் என்று பெயர் கொண்டவர்களுக்கு ஸந்தியோபாஸனையில், காயத்ரீ ஜபத்தில் விசேஷப் பொறுப்பு இருக்கத்தான் செய்கிறது.''

பிரசாந்தி நிலயத்திலும், ஒயிட்ஃபீல்ட் பிருந்தாவனத்திலும் பல முறைகள் நூற்றுக்கணக்கானவருக்குத் தாமே உபநயனம் செய்வித்திருக்கிறார். 1964-ல் இவர்களது எண்ணிக்கை முன்னூறாகவும், 1965-ல் நானூற்றைம்பதாகவும் இருந்தது. வேத வழி தழைக்கவே இரு ஞான சூரியர்களாக வந்த வியாஸர், சங்கர பகவத்பாதர் ஆகியவர்களுக்குரிய குரு பூர்ணிமை, சங்கர ஜயந்தி ஆகிய இரு தினங்களில் இந்த உபநயன மஹோத்ஸவத்தை நடத்துவார் ஸ்வாமி—எத்தனைப் பொருத்தம்!

''கலியுகத்தின் தன்மையை ஒட்டி, முன் யுகங்களில்போல சத்ரு ஸம்ஹாரம் செய்யாமல், ஸகலருக்கும் ஞான உபதேசம் மூலமே தர்ம ஸம்ஸ்தாபனம் செய்த முதல் அவதாரமான சங்கரரின் ஜயந்தியில் பிரம்மோபதேசம் பெறும் பாக்கியம் உங்களுக்குப் பல ஜன்மங்களில் செய்த புண்யத்தால் கிட்டியுள்ளது'' என்று உபநயன உபந்நியாஸத்தில் அவர் கூறுவது வழக்கம்.

இவற்றின்போது ஸாக்ஷாத் வாமனாவதாரம் ஒன்றுக்கே அடித்த பேரதிருஷ்டம் ஒவ்வொரு புது பிரம்மசாரிக்கும் அடிக்கும். அதென்ன அதிருஷ்டமெனில், வாமனருக்கு முதல் பிக்ஷையிட்டது அன்னபூர்ணேச்வரியே ஆவாள். இந்தப் பிரம்மசாரிகளும், ''பவதி பிக்ஷாம் தேஹி'' என்று முதல் பிக்ஷை வாங்குவது ஸத்ய ஸாயீச்வரியிடம்தான்! பிறகுதான் தாயார் பிக்ஷை போட வேண்டும்! ''தானே ஸத்ய மாதா, பெற்றவர் மித்ய (பொய்) மாதா தான்'' என்பவரன்றோ?

தனிப்பட்ட முறையிலும் பலரை உபநயன ஸம்ஸ்காரத்தில் ஊக்குவித்து, காயத்ரீ ஜபத்தில் ஊன்றி நிற்கச் செய்திருக்கிறார். பிரபல பிரவசனக்காரர் ஒருவரை பாபா கேட்ட முதல் கேள்வியே, ''நீ ஏன் ஒழுங்காக ஸந்தியாவந்தனம் செய்வதில்லை?'' என்பது தான். ''சூரியனின் மஹா தேஜஸுக்கும் காரணமான ஞான ஒளியில் நீ அப்படியே முழுகி, அதுவே உன் அறிவைத் தூண்டுகிறது என்ற பாவனையுடன், ஸ்வரம் தப்பாமல் காயத்ரீ ஜபம் செய்'' என்று உபதேசிப்பார்.

எதிர்பாராமல் சிலருக்குத் தாமே காயத்ரீ உபதேசித்து உபநயனம் செய்வித்திருக்கிறார்.

''சட்டையைக் கழற்று'' என்று சட்டென ஓர் ஆக்ஞை போடுவார் வயது வந்த ஒரு வாலிபனிடம்.

அவன் சட்டையைக் கழற்று முன் ஸ்வாமி கரத்தைச் சுழற்ற, அதில் அப்போதே பூசிய ஈர மஞ்சளுடன் பூணூல் 'வந்திருக்கும்.'

...

Koviloor Digital Library

''யக்ஞோபவிதம் பரமம் பவித்ரம்'' என்ற மந்திரத்தைத் தம் பரம பவித்ரமான வாக்கால் கூறி அவனுக்குப் பூணூலை அணிவிப்பார் ஸ்வாமி.

சந்தஸ்களின் மாதாவான காயத்ரியை ஸர்வஜன மாதாவான ஸாயியே உபதேசிப்பார்.

* * *

கதைச் சுவையோடு இந்த அத்தியாயத்தில் ஒரு சம்பவமாவது வேண்டாமா?

1965-ம் ஆண்டு ஏப்ரில் 26-ந் தேதி.

புது, சிர்ஸியிலுள்ள ஸ்ரீ ஸி. ராமசந்திரனுக்கு ஒரு தந்தி வருகிறது. ''மே ஐந்தாம் தேதி ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபா உங்கள் வீட்டில் நடக்கும் உபநயனத்துக்கு வந்து பிரம்மோபதேசம் செய்யப் போகிறார்'' என்பது தந்தி வாசகம்.

ராமசந்திரனுக்கு வியப்பாக இருக்கிறது. பிள்ளையின் உபநயனத்துக்கு இவர் ஏற்பாடே செய்யாதபோது, ஒரே வார இடைவெளியில் இதென்ன தந்தி? பகவானே வருவதாவது?

தந்தி கொடுத்தது யார் என்று எவ்வளவு ஆராய்ந்தும், விசாரித்தும் புரியவில்லை.

ஏற்கெனவே பாபாவின் லீலா விபூதிகள் பலவற்றை அநுபவித்திருந்த ராமசந்திரன், ''இதுவும் ஸ்வாமி லீலைதான். எப்படியும் பையனுக்கு பூணூலை மாட்டிவிடுவோம். இவ்வளவு குறுகிய இடைவெளியில் பெரிய ஏற்பாடு செய்வதற்கில்லை. 'ஆத்தோடு' போட்டு விடுவோம்'' என்று முடிவு செய்தார். உள்ளூற பகவான் வருவாரா, வருவாரா என்ற ஆசை!

இவர் 'ஆத்தோடு' போட நினைத்தாலும், அன்று, புனித சங்கர ஜயந்தியான மே 5-ந் தேதி காலை, 'இங்கே பாபா வருகிறாராமே' என்று கேட்டுக்கொண்டு சிறுகச் சிறுக ஆயிரம் ஜனங்கள் சேர்ந்துவிட்டனர். அந்த ரகசியம் எப்படிப் பரவிற்றோ?

பாபாவுக்கென ஓர் ஆஸனம் போட்டு, அதன் கைப்பிடியில் பூச்செண்டை வைத்து, பட்டு நடைபாவாடையும் விரித்துவிட்டு, சடங்கைத் தொடங்கினார் ஸ்ரீ ராமசந்திரன்.

பாபா வருகிற வழியாகக் காணோம். மிகுந்த ஏமாற்றத்தோடு ராமசந்திரனே பட்டைப் போர்த்திக்கொண்டு காயத்ரீ உபதேசத்தை ஆரம்பித்தார்.

பூணூல்கார பையன் ராஜாவோ, ''அப்பா, உங்கள் முகம் ஸ்வாமி முகமாக மாறியிருக்கு'' என்றான். இவர் உபதேசித்த

Koviloor Digital Library

காயத்ரியை ஸ்வாமியின் குரலிலேயே கேட்டுக்கொண்டான் அந்த அதிருஷ்டசாலி.

அதாவது தந்திப்படி பாபாவே பிரம்மோபதேசம் செய்து விட்டார்!

பிரம்மசாரி பிக்ஷை எடுத்தான்.

திடுமென மற்றொரு சிறுவன் அங்கே தோன்றினான். ஸர்வ ஸ்வாதீனமாக ஸ்ரீமதி ராமசந்திரனிடம் சென்று, ''சாதம் போடுங்கள்'' என்றான்.

அவருக்கு அதில் என்ன உட்பொருள் தெரிந்ததோ? உடனே அந்தப் பிள்ளையை அமர்த்தி, அமுது படைத்தார். பாபா கொறிப்பது போலவே இரண்டு மூன்று கவளம் சாப்பிடுவதாகப் பேர் பண்ணினான் பாலன். எழுந்திருந்து சென்றான். பார்த்துக் கொண்டேயிருக்கும்போது...எங்கே போனான்?

வெளியில் வந்து பார்த்தார்கள். காணவே காணோம்.

உள்ளே பாபாவுக்காக விரித்திருந்த நடைபாவாடையில் அவருக்கான ஆஸனம் வரையில், யாரோ நடந்து சென்ற சுவடு காணப்படுகிறது. ஆஸனத்தின் பிடிமேல் வைத்திருந்த செண்டு ஒரு கையால் அழுத்தப்பட்டாற்போல் நசுங்கியிருக்கிறது!

இந்த அற்புதங்களைப் பார்த்த அந்த ஆயிரம் வெளியாரும் பேசிக்கொண்டே நின்றனரேயன்றி நகருவதாக இல்லை.

போஜன வேளை வந்துவிட்டது.

அத்தனை பேரும் தாங்களாகவே பந்தியில் உட்கார்ந்தனர்.

ராமசந்திரன் குடும்பத்தினர் பாபாவின் தலையில் பாரத்தைப் போட்டு விட்டு 'ஆத்தோடு' சமைத்திருந்ததை ஆயிரம் பேருக்குப் பரிமாறினார்கள். அன்று துரௌபதியிடம் ஒரு கீரைத் துணுக்கைப் பெற்றுண்ட மாயன் துர்வாஸரின் அத்தனை பரிவாரத்துக்கும் அப்போதே பசியாற்றி விட்டான். இன்று பாலனாக வந்து அவன் பிக்ஷை கொண்ட ராசி, இவர்கள் எடுக்க எடுக்கக் குறையாமல் ஆயிரம் பேருக்கும் அன்னம் போட்டுவிட்டனர். மற்ற பிரம்மசாரிகளுக்கு முதல் பிக்ஷை போடுபவர், இங்கு மட்டும் தாமே முதல் பிக்ஷை உண்ட மகிமைதான்!

உரிய காலத்தில் தமது பக்தர்கள் உபநயனம் செய்ய வேண்டும் என்ற கருத்தில் இத்தனை லீலை செய்திருக்கிறார்.

* * *

அறிஞரும் அநுபவியுமான ஸ்ரீ குருதத் (முன்னாள் ஐ.ஏ.எஸ்.) தமக்கு ஸ்வாமி ஓர் அற்புத காயத்ரீ விக்ரஹம் சிருஷ்டித்துத்

தந்ததை மிகுந்த நெகிழ்ச்சியோடு கூறுவதை இங்கு நினைவு கூரலாம். ஆதிகால பக்தரில் ஒருவரான உயர் போலிஸ் அதிகாரி ஸ்ரீ வி. ராமசந்திர ஐயரை (புகழ்பெற்ற ஸ்ரீ வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரின் சகோதரர்) ஸ்வாமி, ''ஓடுகிற ரயிலில்கூட மாத்யான் ஹிகத்தை விடாதவரல்லவா நீங்கள்?'' என்றே உளம் வழிந்து பாராட்டுவாராம். காயத்ரி உபாஸகர்களிடம் அவருக்கு அப்படியொரு தனிப் பிரியம்!

*　　　*　　　*

ஸநாதன தர்மத்துக்கும் ஸம்பிரதாய நெறி முறைகளுக்கும் பாபாவினால் ஊறு நேர்ந்ததாக நினைப்பவர்கள் அடியோடு விஷயம் தெரியாதவர்கள்.

எவரையும் அவர் தீவிர ஆசார நெறியில் செலுத்துவதில்லை தான். ஆயினும் ஜீவகாருண்யத்துக்கு ஊறு இல்லாமலும், பிறர் மனத்தை நோக அடிக்காமலும், வெறும் கண்மூடித்தனம் இன்றியும் வைதிக நெறிகளைக் கடைப்பிடிப்பவர்களை அவர் நிச்சயமாக அவ்வழியில் ஊக்கித்தான் வருகிறார். மற்றவர்கள் இவ்வழிக்குத் திரும்பாவிடினும் இதைப் பழிக்கக் கூடாது, இதனை மதிப்புணர்ச்சியுடனேயே பார்க்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தி வருகிறார் வேத மாயி.

Koviloor Digital Library
KOVILUR ADHEENAM
KOVILUR B. O.
(Via) MANAGIRI
RAMANATHAPURAM DIST.
PIN: 623 307

அத்தியாயம்—52

ஸர்வமத ஸம்மத ஸாயி

எந்தச் சமயம் இசைந்தும் அறிவூடறிவாய்
வந்த பொருளே பொருளாய் வாஞ்சிப்பதெந்நாளோ?

— தாயுமானவர்

எம்மதத்தில் எவரெவர்க்கும் இயைந்த அநுபவமாய்
எல்லாமாய் அல்லவுமாய் இருந்தபடி இருந்தே ...
சம்மதத்தால் ஒன்றளித்த தயவினை என் புகல்வேன்?

— ராமலிங்க ஸ்வாமிகள்

வேதம் என்றால் இன்று ஹிந்து சமய நூல் என்று மட்டுமே கொள்கிறோம். உண்மையில் சகல சமய தத்வங்களுக்கும், சடங்குகளுக்கும் ஆதாரங்களை வேதத்திலேயே காணலாம். எம் மதத்தினருக்கும் பொதுவான ஞான விசாரமும் யோகமும் வேதத்தில் கூறப்படுவனவே. பக்தி என்பதையும் இஷ்ட தெய்வம் ஒன்றிடம் செய்யும் ஆராதனையாகக் கொள்ளாமல், கடவுள் என்ற ஒரு பொதுச் சக்தியிடம் காட்டும் அன்பு எனக் கொள்கையில், எல்லா மதங்களும் கூறும் பக்தியானது வேதத்தின் வழி வந்ததேயாகும். எனவே நம் வேத ஸாயி, வேத ஸாயியாக இருப்பதாலேயே ஸர்வமத ஸம்மத ஸாயியாக உலகெங்கும் கொழுந்துவிட்டுப் பிரகாசிக்கிறார்.

வேதத்தின் குழந்தைகள்தாம் அதிலிருந்து அஹிம்ஸை, அன்பு, தியானம், தவம், தத்வ விசாரம் இவற்றை மட்டும் எடுத்துக்கொண்ட பௌத்த, சமண மதங்கள்; பௌத்தத்தின் அன்பை மட்டும் விசேஷமாக எடுத்துக்கொண்ட அதன் குழந்தையான கிறிஸ்துவம் வேத மதத்துக்குப் பேரன்; இந்த அன்பிலும் தோன்றும் சகோதரத்துவம், கட்டுப்பாடு இவற்றையே முக்கியமாகக் கொண்ட இஸ்லாம் வேத சமயத்தின் கொள்ளுப் பேரன் என்றெல்லாம் நம் ஸ்வாமி அழகாகப் பிரவரம்

Koviloor Digital Library

(வம்சாவளி) சொல்வார். வேதத்திலிருந்து அக்னி வழிபாட்டை எடுத்துக் கொண்டுள்ள பார்ஸி மதம் அதன் சாக்ஷாத் புத்திரனே என்பார்.

முறையே வைதிகம், பௌத்தம், பார்ஸியம், இஸ்லாம், கிறிஸ்துவம் என்ற ஐந்து உலகப் பெரு மதங்களின் சின்னங்களான பிரணவம் (ஓம்), (தர்ம) சக்கரம், தீக் கொழுந்து, பிறை மதி—தாரகை, சிலுவை இவை பொறித்த இலச்சினையையே ஸத்ய ஸாயி ஸ்தாபனங்களின் அதிகார பூர்வமான முத்திரையாக அவர் நிர்ணயித்திருப்பதிலிருந்தே அவரது ஸர்வமத ஸம்மதம் தெற்றென வெளியாகிறது.

இந்த அற்புத இலச்சினை குறித்து ஒரு வார்த்தை: மத்தியில், ஜீவனைச் சிவனாக உயர்த்திக்கொண்டு போகும் யோகத்தின் அடையாளமாக ஒரு குத்துவிளக்குத் தண்டு. அதன் உச்சியில் மானுடம் தெய்விகமாக மலர்வதைக் குறிக்கும் கமலம். கமலத்துக்குள்ளிருந்து பரஞ்ஜோதிக் கொழுந்து. இந்த மைய நிபந்தம்பத்தைச் சுற்றி ஒரு வட்டம். அவ் வட்டத்தின் விளிம்பில்தான் மேற்சொன்ன ஐம்பெரும் மதங்களின் சின்னங்கள். உச்சியில் பிரணவத்தில் தொடங்கிப் பிரதக்ஷிணமாக வந்தால் வரிசையாக சக்கரம், தீ, பிறை, சிலுவை இவற்றின் வழியாகப் பிரணவத்துக்கே வந்து சேர்வோம். உலகையெல்லாம் ஐக்கியப் படுத்தும் அரிய சின்னம்!

ஒவ்வொரு மதச் சின்னத்தின் தத்வார்த்தத்தை ஐயன் செப்பக் கேளுங்கள்: ''உன் இதயத்தில் ஆழ்ந்து, தானே அங்கு ஒலிக்கும் ஆதி சப்தமாம் ஓங்காரத்தைக் கேள். அப்போது, அப் பிரணவ ஒலியே பிரபஞ்ச முழுவதின் இதயத்துள்ளும் ஒலிப்பதால், நீ அனைத்துமான ஒன்றினையே உணர்ந்து விடுவாய். கர்மா என்ற காரணப் பாதையிலேயே நம் காரியங்களான சகடம் செல்லும் என்ற தர்ம நியதியே சக்கரம். கீழான உணர்ச்சிகளைப் பொசுக்கித் தெய்விகத்தில் புடமிடுவதுதான் தீ. பிறையை விட்டு அகலாமல் நிற்கும் நக்ஷத்திரத்தைப் போல் இறைவனிடம் நிலையான நம்பிக்கையில் ஊன்றி நிற்க வேண்டும். 'நான்' என்ற உணர்ச்சியை, அகந்தையைச் சிலுவையில் அறைந்தாலே நித்யத்துவம் பெற்றுப் புத்துருவில் எழலாம்.

''எல்லாச் சமயங்களும் அன்பு, தூய்மை, தியாகம், தர்மம் என்ற கோட்பாடுகளைத்தான் வலியுறுத்துகின்றன. ஒன்றேயான சத்தியத்தின் பல்வேறு சாயல்கள்தாம் நானா சமயங்களும். அவை யாவும் ஒரே இறைவனின் மகிமையைத்தான் போற்றுகின்றன.''

பொன்விழாவிலிருந்து அநேகமாக ஒவ்வோர் உபந்நியாஸத்திலும் ஸ்வாமி முழக்கிவரும் ஐக்கிய வாசகம்: ''இருப்பது ஒரு கடவுள்தான்; உலகெங்கும் பரவிய ஸர்வ வியாபியே அது. இருப்பது ஒரு மதம்தான்: அன்பு மதமே அது. இருப்பது ஒரு ஜாதிதான்; மக்கட்குலம் என்பதே அது. இருப்பது ஒரு மொழி தான்: இதயத்தின் மொழியே அது.''

Koviloor Digital Library

எல்லா மதங்களையும் கலந்து பிசைந்துவிட வேண்டுமென்றோ, புதிதாக ஒரு மதத்தை சர்வ தேச மக்களுக் கெனவும் நிர்மாணிக்க வேண்டும் என்றோ பாபா கூறவே யில்லை. எந்த மதத்தை உள்ளபடி அநுசரித்தாலும் அது மெய்ப்பொருளில் கொண்டு சேர்த்து விடும்; இவ்வாறு 'உள்ளபடி' அநுசரிப்பதானால் எம் மதத்தவரும் பிற மதத்தவரைப் பழிப்பதற்கே யில்லை என்று தான் கூறுகிறார்.

பிற மத நிந்தனை அறவே உதவாது என்பதற்கு எந்த ஆசாரியரும் கூறாத ஓர் அருமையான வாசகத்தை ஐக்கியத்தின் உரையும் பொருளுமாக இலங்கும் நம் அகில ஆசாரிய ஸாயி கூறுவார் : "ஸர்வ தேவ நமஸ்கார: கேசவம் ப்ரதிகச்சதி என்கிறோம். அதாவது, எந்த மதத்தினன் தெய்வத்தை எப்படி நினைத்து வழிபட்டாலும் அது ஒருவனேயான கடவுளைத்தான் சென்றடைகிறது என்கிறோம். இந்த நாணயத்தின் மறுபுறத்தில் ஒருவன் எவ்விதமான மத வழிபாட்டைப் பழித்தாலும், அந்தப் பழி இவனது மதமும் கூறுவதான அந்த ஒரே இறைவனை நிந்திப்பதாகத்தானே ஆகும்?"

பாபாவிடம் வந்துள்ள ஏனைய மதத்தினர் நமது நாம கீர்த்தனம், மந்திர ஜபம், யோகாதி ஸாதனைகள் முதலியவற்றைத் தாமே விரும்பி ஏற்பதால்தான் பாபா அவர்களை இவற்றில் ஊக்கி வருகிறாரேயன்றி, பாபாவாக அவர்களைத் தத்தம் சமயத்தை விட்டு விட்டு இவற்றை மேற்கொள்ளுமாறு கூறியதே கிடையாது. அநேகமாகப் பிற மதஸ்தரும் தமது மதாநுஷ்டானங்களோடேயேதான் இவற்றையும் சேர்த்துக் கொள்கின்றனரே அன்றி, பிறந்த மதத்தை விட்டு இவற்றை மட்டும் கொள்வதில்லை.

எந்த மத அநுஷ்டானமாயினும், சித்தாந்தமாயினும் அனைத்துக்கும் எலும்புள் ஓடும் ஜீவரஸமாக அன்பு என்ற ஒன்றையே கொள்ள வேண்டும் என்று விதித்தே பாபா ஸர்வ மத ஸமரஸத்தை நிலைநாட்டி வருகிறார்.

★

ஸர்வ மத ஸமரஸம் என்பது நமக்குப் புதிதான ஒன்றல்ல. உலகின் ஆதி நூலாம் வேதத்தின் பெருமையே இதுதான். ஒரு குறிப்பிட்ட வழியாலன்றி, எவ்வழியில் சிரத்தையோடு சென்றாலும் மெய்ப்பொருளைச் சேரலாம்; அந்த ஒரே சத்தியத்தைத்தான் பல்வேறு ஞானியர் பல்வேறு விதங்களில் பிடித்திருக்கிறார்கள் என்று வேதம் முரசறையும்.

"பல்வேறு மொழிகளைப் பேசிப் பல்வேறு தர்மங்களைப் பின்பற்றுபவர்களான நானாவித மக்களைத் தாங்குபவள் புவித் தாய். (நாநா தர்மாணம் ப்ருதிவீ யதௌகஸாம்.) இவள் ஆயிரம் தாரையாகப் பால் பெருக்கும் காமதேனுவாக எமக்கு எல்லாச் செல்வங்களையும் பொழிவளாக" என்கிறார் வேதரிஷி (அதர்வம் 12.1.45).

Koviloor Digital Library

(இங்கும் சரி, பிற்கால சாஸ்திரங்களிலும் சரி, 'தர்மம்' என்றது 'மதம்' என்பதையே குறிக்கும். வாழ்க்கை நெறியான அறம் முழுதையும் கூறுவதே சமயம்.)

'அவரவர் தமதம தறிவறி வகைவகை அவரவர் இறையவர்' என ஆழ்வார் திலகமும் சமய சமரஸத்தையே புகன்றார்.

இறைவனை, 'நம் தேசத்தவன்; அவனே அந்நிய தேசங்களை யும் சேர்ந்தவன்' என்னும் மாமறை:

ய: ஸந்தேச்யோ யோ விதேச்ய: |

இதைத்தான் மணிவாசகர் "தென்னாடுடைய சிவனே போற்றி; எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்றார்.

நம் ஸாயீசன் இன்று பிரத்தியட்சத்தில் எந்நாட்டவர்க்கும் இறைவனாக பல்வேறு தேசத்தாரால் தெய்வமாகத் தொழப்படுகிறார். ஆனால் இதனால் "ஸாயி மதம்" என்ற ஒன்று ஏற்பட்டு விடாமல், அவரவரின் மதமும், மொத்தத்தில் ஸர்வ மத ஸமரஸமுமே தழைத்து வருவதுதான் அவர் பெருமை.

"எவன் எப்படி வழிபட்டாலும் அவ்வழிபாட்டை நானே வலுவாக்குகிறேன்" என்றான் கீதாசாரியன். ஆனாலும் அவனுக்குப் பின்னும் சமயச் சழக்குகள் பல்லாயிரமாண்டுகள் தொடர்ந்து வந்தே இருக்கிறது. ஆதி சங்கரர் அத்வைதத்தால் தத்வ ரீதியிலும் ஷண்மத ஸ்தாபனத்தால் வழிபாட்டு ரீதியிலும் ஐக்கியம் உண்டாக்கினார்—பர சமயம் என்று பலவற்றை வென்று, இல்லாமற் செய்து அம் மதத்தாரையும் தம் சித்தாந்தத்தை சம்மதிக்க வைத்து ஒற்றுமை ஏற்படுத்தினார். ஆனால், மீளவும் பிளவுகள் தோன்றி நூறு நூறாண்டுகள் நீடித்தன. அப்போது தான் சென்ற நூற்றாண்டில் ஸர்வமத ஸமரஸத்துக்கெனவே பரமஹம்ஸ ராமகிருஷ்ணரின் அற்புத அவதாரம் ஏற்பட்டது. அவர் ஹிந்து சமயம் என்ற பொதுப் பெயரில் உள்ள வெவ்வேறு ஸித்தாந்தங்கள் மட்டுமின்றி, பௌத்தம், கிறிஸ்துவம், இஸ்லாம் முதலியவற்றையும் தாமே ஒரு தீவிர சாதகனைப்போல் அநுசரித்து, அநுபவித்து, அவை ஒவ்வொன்றின் மூலமும் மெய்ப்பொருளை அடையலாம் என அநுபவபூர்வமாகக் கண்டார். அவர் கண்ட உண்மையையே பாரெங்கும் பிரகடனம் செய்தார் ஸ்வாமி விவேகாநந்தர். (இதே சமயத்தில் ராமலிங்க ஸ்வாமிகள் தமிழகத்தில் ஸமரஸ ஸன்மார்க்கத்தினை அமைத்தார்.)

பரமஹம்ஸ அவதாரம் முடியு முன்பே தோன்றிய ஷிர்டி ஸாயி அவதாரமும் ஸர்வ மத ஸமரஸத்தை வலியுறுத்தியது. குறிப்பாக அவர் முஸ்லிமா, ஹிந்துவா என்றே சொல்லவொண்ணாத கலவையாக இருந்து ஹிந்து-முஸ்லிம் ஐக்கியத்தை ஏற்படுத்தினார்.

அவரே பர்த்திஅவதாரராகி இப்போது 'எந் நாட்டவர்க்கும் இறைவ'னாகி யிருக்கிறார்.

Koviloor Digital Library

ராமகிருஷ்ணர் முற்றிலும் பக்தராகவே ஒவ்வொரு மதத்தையும் பின்பற்றிக் காட்டினார், தாம் அவதாரமே ஆயினும். ஷிர்டி ஸாயி பக்தராகவும் பகவானாகவும் தாமே மாறி மாறி இருந்து ஸமரஸத்தை வெளியிட்டார். பர்த்தி ஸாயியோ முற்றிலும் பகவானாக மட்டுமே இருந்து, அவர்களையெல்லாம்விட வலுவான முறையில், தமது ஜீவிய தசையிலேயே அகில உலக ரீதியில் ஸர்வமதத்தாராலும் வணங்கப்பெற்று, இதன் மூலமே அனைத்து மதத்தாரிடையும் ஐக்கியத்தைப் பொலிவித்து வருகிறார்.

ஹிந்து சமயத்தைச் சேர்ந்த சைவர், வைணவர் முதலான பல்வேறு இஷ்ட தேவதையின் வழிபாட்டுக்காரர்கள், அத்வைதம்–த்வைதம் முதலான வெவ்வேறு சித்தாந்திகள், யோகத்தின் பல மார்க்கங்களைப் பின்பற்றுவோர், இவர்களைத் தவிர அந்நிய மதத்தினரும் 'ஸாயி' என்ற சரட்டின் மூலம் பரஸ்பர ஐக்கியத்தை பெற்றிருப்பது அன்புச் சக்தியின் அளப்பரும் வெற்றியேயாம்.

''அஸிந்த்ர ஸாதாரணஸ்த்வம்'' என்றது வேதம்–''பெரும! நீ அனைவர்க்கும் ஒருபோல் பொதுவாய் இருக்கிறாய்'' என்று பொருள். ''எல்லோர்க்கும் பொதுவில் நடம்'' என்று இதைத் தான் நம் அடிகளார் கூறினார். இப்படி லோகத்துக்கெல்லாம் பொதுவான மகா மங்கள ஜோதியாக அன்பொளியைப் பரப்பி வரும் நம் ஸ்வாமி, ''the first international Avatar in his own life-time'' என்று ஆங்கிலேயர்கள் எழுதுவது போல், நர சரீரத்தில் தமது ஜீவதசையிலேயே சர்வதேசத்தாரும் தெய்வமாகப் போற்றும் முதல் அவதாரமாக இருக்கிறார். ஆன்மிகத்துக்கு விஞ்ஞானம் விரோதமாகவே கருதப்படினும், இக்கால ஆகாய விமானம், தொலைபேசி, புத்தகப் பிரசுரம், செய்தித் திரைப்படம், டேப்-ரிகார்டுகள் முதலியனதாம் ஐயன் புகழ் நானிலம் எங்கும் பரவவும், நானா நாட்டு அடியார் அவரை நாடி வரவும் உதவியிருக்கிறது என்பதை ஒப்பியே ஆக வேண்டும். பிரபஞ்ச மஹாசக்தியின் திட்டத்தில் இந்த நவீன சாதனங்கள் ஏற்பட்ட பின் இந்த அவதாரம் நிகழ்வதும் முன்பே சங்கற்பிக்கப் பட்டிருக்க வேண்டும்.

ஆந்திர குக்கிராமம் ஒன்றில் ஒரு சாமானிய வீட்டில் பிறந்து பள்ளிப் படிப்புக்கூட முடிக்காத பிள்ளை இன்று புவிக்குளே முதன்மை உற்று, இதன்முன் எந்தப் புராணத்திலும் கேட்டிராவண்ணம், சர்வ தேசங்களிலும் லக்ஷோபலக்ஷரால் பிரத்தியக்ஷ பகவானாகத் தொழப்படும் பெற்றியை என்சொல்ல?

எல்லா மதங்களும் இறுதியில் கொண்டு சேர்க்கும் கடவுளே தான் என்ற உணர்வால்தான் அவர் தமக்கென ஒரு மதத்தை ஸ்தாபிக்காமல் ஸர்வ மதங்களையும் தமதாக ஏற்றிருக்கிறார்.

அத்வைதமே அவர் முடிந்த முடிபாகக் கூறும் தத்துவம், பாமரர் கூட்டங்களிலும் அவர்போல அத்வைதத்தைப் பகர்ந்தவர் எவருமில்லை என்று முன்னரே கண்டிருக்கிறோம். இதற்கேற்ப சங்கர பகவத் பாதருக்கு அவர் தனியான ஏற்றம் கொடுத்துத்

Koviloor Digital Library

தான் பேசுவார். சங்கர ஜயந்திகளிலேயே ஸமஷ்டி உபநயனம் செய்து வந்தார். ஒரு கோடைப் பயிற்சி முகாமில் முப்பது நாட்களும் "பஜகோவிந்தம்" குறித்தே அருளுரை வழங்கினார். சீனப் படையெடுப்பின்போது அவர், "சங்கரர் மட்டும் அவதரித்திராவிடின் பாரதமே சீனாவாகத்தான் ஆகியிருக்கும்" என்றதன் பொருளாழம் புரிந்தவர்க்கே புரியும். இவ்வாறு சங்கரருக்கும், அத்வைதத்துக்கும் அவர் சிறப்பிடம் தருவதால் மற்ற மார்க்கங்களைப் புறக்கணிப்பதாக ஆகவே ஆகாது. ஏனெனில் சங்கராத்வைதமே, ஸ்வாமி கூறுமாப் போலே, மற்ற எல்லா மார்க்கங்களுக்கும் அதனதன் இடத்தை வரிசைப்படுத்தித் தந்து, அனைத்தையும் அரவணைப்பதுதான்.

பல்லாண்டுகளுக்கு முன்பே ஸத்ய ஸாயி நிறுவன இலச்சினையாக ஸர்வ மத சின்னத்தைக் கொண்ட ஸ்வாமி, சென்ற ஆண்டு ஸ்வர்ண ஜயந்தியின்போது பிரசாந்தி நிலயத்தில் "ஸர்வ தர்ம (தர்மம் என்றாலே மதம்தான் எனக் கண்டிருக்கிறோமே) ஐக்கிய ஸ்தூபி" என்பதாக உலகப் பெருமதங்கள் ஐந்தினையும் இணைத்துப் ஐம்பதடி உயர ஸ்தம்பத்தைத் திறந்து வைத்தார். இதற்கு முன்னோடியாக பம்பாயிலும் ஓர் ஐக்கிய ஸ்தூபி ஜயனால் நாட்டப்பட்டது.

அவரேதான் இவை யாவற்றிலும் பெரிய ஒற்றுமை ஸ்தம்பம்.

ஒற்றுமைக்குள் உய்யவே நாடெல்லாம் (பாரெல்லாம்)
ஒரு பெருஞ் செயல் செய்வாய் வா வா வா

என அவதரித்த ஸத்ய ஸாயி விருக்ஷம் ஆலாகத் தழைத்து அகில நாடுகளிலும் குளிரக் குளிரத் தன் நிழலைப் பரப்பி வருகிறது.

ஹிந்துக்களில் அவரவர்க்கு இஷ்ட தெய்வமாக; பிற மதஸ்தரும் ஹிந்துக் கடவுளரை 'ஸ்வீகாரம்' செய்து கொள்கையில் அவர்களுக்கு அந்தக் கடவுளாக; அல்லது அவர்கள் வழிபடும் புத்தராக, கிறிஸ்துவாக, நபியாக, ஜினராக, நானக்காக இருக்கிறார். 'பிற தெய்வ உருவத்தில் இவரைக் கண்டுதானா பக்தி செய்ய வேண்டும்? இந்த ஸத்ய ஸாயி ரூபமே நமக்குப் பரம இஷ்ட தெய்வம்' என்று உலகெங்கும் எண்ணுவோருக்கும் அப்படியே அருள்கிறார்.

அப்பப்பா! இந்தச் சிறு மூர்த்தி குமார் தமது நாற்பது வயதளவிலேயே சர்வ தேசத்திலும் பலருக்கு சர்வ தேவனாக ஆவது பரமேச்வர சக்தியாலன்றிச் சாத்தியமே இல்லை.

*

தெய்வமாக மட்டுமின்றி குருவாகவும் அனைத்து நாடுகளிலும் போற்றப்படுகிறார் நம் ஸ்வாமி. தெய்வ குரு என்றே ஸாயி பக்தரில் பெரும்பாலார் கருதினாலும், தெய்வத்தைக் காட்டிக் கொடுக்கும் குரு என்ற அளவில் மட்டுமே அவரைப் போற்றுவோரும் உள்ளனர்.

Koviloor Digital Library

ஸாயி ஸத்குருவை, ஜகத்குருவைச் சற்று தரிசிப்போம். கண்ணன் குருவாகவும் ஆகி பகவத் கீதை, உத்தவ கீதை முதலியவற்றை உபதேசித்ததற்கொப்ப, நம் ஸ்வாமியும் நிச்சயமாகத் தாமே உவந்து ஆசாரிய ஸ்தானமும் ஏற்றிருக்கிறார். தமது முப்பத்திரண்டாவது வயதிலிருந்து உபதேசங்களை வழங்கி ஸத்குரு ஸாயியாக விளங்க வேண்டுமென்று அவதாரத்துக்கு முன்பே நிர்ணயமாகிவிட்டதாகக் கூறுவார். அதன் பின் இரு முப்பத்திரண்டாண்டுகள்—அதாவது ஸ்வாமியின் தொண்ணூற்றாறாவது வயதில் இச்சரீரம் மறையும் வரை —உபதேசப் பணி நடக்கும் என்றும் கூறியுள்ளார்.

குருமார்களின் முக்கியமான லக்ஷணங்களில் ஒன்று உபந்நியாசங்கள் மூலமும், நூல்கள் மூலமும் உபதேசங்களை நல்குவதுதானே? பதினெட்டாண்டுகளாக பாபா ''ஸநாதன ஸாரதி''யில் அருளி வரும் அருமையான விஷயங்களும், பல நூறு மேடைகளில் அவர் நிகழ்த்தி ஒன்பது பகுதிகளாக நூல் வடிவம் பெற்றுள்ள அரிய உரைகளும் அவரை இந்த யுகத்தின் மஹா உபதேசகர்களில் ஒருவராக உயர்த்தியுள்ளன.

உயிரிலேயே கலந்து அவர் உத்தமோத்தம குருவாக நம்மை நல்வழிப்படுத்துவது ஒரு புறம். மந்திரோபதேசம் செய்வது இன்னொரு புறம். யோகம், தியானம், பஜனை முதலியவற்றை அவரே பயிற்றுவது மற்றொரு புறம். இவை யாவற்றாலும் அவர் ஆசாரிய ஸாயியாக இருக்கிறார் எனினும், மற்ற ஆசாரியர்களைப் போலவே வருங்காலங்களுக்கும் நல்வழி காட்டுவது உபதேசங்களால்தான்.

சாதாரணமாக, ஞானம் என்பது அதீந்திரியமானது என்பதால் இந்திரிய இன்பமாகத் தோன்றும் கலை என்பது அதற்கு முரணானது என்று தோன்றலாம். ஆனால் இந்திரிய வழியே இந்திரியாதீத இன்பம் பயப்பதே உண்மைக் கலை. இதனால்தான் எந்த ஆசாரியரும் உபதேசகராகும்போது கலைஞர் ஆகவும் ஆகி விடுகிறார். அவர்களது சத்திய அநுபவத்தைச் சக்திகரமான சொற்களில் இயம்பும்போது அதில் இலக்கியச் சுவையின் உன்னதத்தைக் காண்கிறோம். சிலேடை முதலான சொல் விளையாடல், எதுகை மோனை, உவமையணி, கதையாற்றல் யாவுமே மகான்களின் வாக்கில் மண்டிக் கிடக்கின்றன. இதற்கு ஏற்ப நம் ஸத்குரு ஸாயியும் கலாஸாயியாகத் திகழ்கிறார் — ஸத்குரு ஸாயியாக இருப்பதாலேயே.

சில சமயங்களில் அவர் சைதன்யர், கபீர், ராமகிருஷ்ணர், ராமாநந்தர் போன்றவர்களின் வாக்குகளையும் மேற்கோள்களைப் போலன்றி, தமது வாசகம் மாதிரியே கூறுவதுண்டு. ஆனால் இது ஒருகாலும் கருத்துத் திருட்டு (Plagiarism) ஆகாது என்பதை அவரது உயர் பண்பறிந்தோர் திண்ணமாக உணருவர். அந்த மஹான்களும் தம்மிலேயே இணைந்தவர் என்ற மஹா பாவத்தில் தான் அவர்கள் வாக்கையும் ஸ்வாமி மொழிகிறார். கண்ணனைவிட இதற்குச் சான்று வேண்டாம். பகவத் கீதையில் உபநிஷதக்

Koviloor Digital Library

கருத்துக்களை மட்டுமின்றி, உபநிஷத வாசகங்களையே கூட (குறிப்பாக, கடோபநிஷதம்) கண்ணன் அப்படியப்படியே எடுத்துத் தனதாகத் தந்திருக்கிறான். 'பெற்றேன்' என்று அவன் கூறவில்லை. அந்த உரிமை அவனுக்கு உண்டு — ஏனெனில் உபநிஷத ரிஷிகளுக்குள்ளிருந்து அந்த வாசகங்களைக் கிளறி விட்டவனே அவன்தானே? இதே உரிமை நம் ஸ்வாமிக்கும் உண்டு என்றே ஸாயி அடியார் கருதுவோம்.

இப்படிப் பழையதைப் புதிதாகச் சொல்வது அபூர்வந்தான். பெரும்பாலும் புதுப் புது உண்மைகளையே இலக்கிய எழிலுற உபதேசிப்பவர் நம் ஸத்குரு, ஸத்கலைஞர். இந்நூல் நெடுக அவரது இப்பேர்ப்பட்ட அமர வாசகங்கள் பலவற்றை — சத்தியம் சுடர் தெறிக்கும், கலை எழில் அலையெறியும் வாக்குகளை — கண்டிருக்கிறோம். இப்படி அனந்தம் உண்டெனினும், விட்டுப் போன முத்து மலையிலிருந்து ஒரு சில பிடிகளை இங்கே அள்ளிப் பார்ப்போம்.

வார்த்தை விளையாட்டுக்களில் அவர் தெலுங்கில் புகல்வதை பிற மொழிகளில் ஆக்க முடியாதுதான். ஆயினும் ஆங்கிலமும் ஐயன் நாவில் புரண்டு விளையாடுமே, அதிலே சில சொல் ஜாலம் :

"நாஸ்திகனும் தன்னை அறியாமல் ஆஸ்திகனாகத்தான் இருக்கிறான். God is *nowhere* என்று அவன் எழுதுவதே God is *now, here* என்று இப்பொழுதே இங்கேயே கடவுள் இருப்பதைப் பறைசாற்றுகிறதே!"

"நாஸ்திகனுக்குள்ளும் ஆஸ்திக்கியம் உள்ளது. பேயுள்ளும் இருக்கிறான் பெருமான். Devil என்பதிலேயே Dev என்பது இருக்கிறதே"—இப்படிப் புகல்வதோ Devi—ஆன ஸாயி!

சொத்துக்கள் நமக்கு உகாத பந்தங்கள் என்பதை "Properties are not proper ties" என்பார்!

ராதை என்பவள் ஆராதனை என்ற அன்புத் தாரைக்கு ஆதார சக்தியின் உருவகம் என்பதை R–A–D–H–A என்ற ஐந்தெழுத்துக்களையே மடக்கி மடக்கி ஐயன் சொற் சிலம்பமாடுவதைக் கேளுங்கள் :

"*Radha* is the *adhar* of the *dhara* of *aradh*."

B–A–B–A என்பதை Being, Awareness, Bliss, Atma என்று சத்–சித்–ஆனந்த ஆத்ம வடிவாக அவர் புகல்வதை முன்பே பார்த்திருக்கிறோம்.

தம் புதர் முடியை forest அல்ல, for rest என்றதையும் முன்பே கேட்டோம்.

விஞ்ஞானிகள் திறந்த உள்ளத்தோடு மதங்களை அணுகினால் அவர்களே மெய்ஞ்ஞானிகளின் அடியார் ஆவர் என்பதை, scientist–கள் saintist ஆவர் என்பார்.

Koviloor Digital Library

உபதேச மன்னரான ஸ்வாமி ஸகல உபதேசங்களின் முடிவிடம் மௌனமே என்பார். முடிவு மட்டுமின்றி, சாதகனின் அத்யாத்ம வாழ்வின் ஆரம்பப் படியே பேச்சைக் குறைப்பதுதான் என்பார். பாபா இருக்குமிடத்தில் மேற்கொள்ளப்படும் கண்டிப்பான நிசப்தம் அடியார் அறிந்ததே. உபதேசங்கள் என்று வரும்போது மதங்களுக்குள் மாறுபாடு இருக்கலாம். ஆனால் மௌனம் என்பது அனைத்துச் சமயத்தினருக்கும் ஒன்றேதானே? இதனால் தானோ என்னவோ நம் ஸர்வமத ஸ்வாமி மௌனத்தை விசேஷமாக வலியுறுத்துகிறார். இந்த மௌனமே ஸாயித்வம் பொருந்தியது என்று குறிப்பிடும் ஸ்வாமி Silence—ஐ *Sai*lence என்பார்.

"Eye வெளியே மட்டுமே பார்க்கிறது, உள்ளே மட்டும் பார்ப்பது I"—ஆஹா, எத்துணை உயர்ந்த தத்வம் எத்துணை சுருக்கமாக வந்துவிடுகிறது!

சொல்விளையாட்டிலேயே அற்புதக் கருத்து மிளிர்வதை, "Love lives by giving and forgiving; ego lives by getting and forgetting" என்ற வாக்கில் ருசிக்கிறோம்.

காரோட்டிகளுக்கான அறிவிப்பையே ஸாதகருக்கும் விதித்து ஸ்வாமி மொழிகிறார் : Start early, drive slowly, reach safely.

இங்கே இவ்வளவு ஆங்கில வாசகங்களைக் கொடுத்துவிட்டதால், ஸ்வாமி அம் மொழியை அதி லாகவத்துடன் கையாண்டு, தமது ஈச்வரத்துவத்தை அதிகார பூர்வமாக வெளியிட்ட ஆணித்தரமான மஹாப் பிரகடனத்தையும் அம் மொழியிலேயே கேட்டு விடுவோம். இது கல்கத்தா ஸத்ய ஸாயி ஸேவா ஸமிதிக்காக ஸ்வாமியே எழுதியது.

> There was no one to know who I was till I created this world at My pleasure with one word. Immediately mountains rose up, immediately rivers started running. Earth below and sky overhead, oceans, seas, lands and watersheds, sun, moon and desert sands sprang up from nowhere to prove My existence. Came all forms of beings, mankind, beasts, and birds – flying, speaking, hearing. And powers were bestowed upon them under My orders. The first place was granted to mankind and My knowledge was placed in his mind.
>
> Come one, come all. Let us not be called ungrateful.
>
> Let us faithfully serve Him and love Him, love Him love Him.

"சூரிய வெளிச்சத்தைக் கொஞ்சம் எழுதிக் காட்டுங்களேன்" என்றால் நூலாசிரியர் எப்படித் திண்டாடுவாரோ அப்படியே

Koviloor Digital Library

தான் இம் மகா வாக்கியங்களையும் தமிழாக்கத் தியங்குகிறார். என்றாலும் ஆங்கிலமறியாதாரின் திருப்திக்காக இதோ தஞ்சைக் கோபுரத்தை நெட்டிப் பொம்மையாகத் தருகிறார்:

''என் விருப்பத்தின்மீது நானே ஒரு சொல் மாத்திரத்தால் இவ்வுலகைச் சிருஷ்டிக்கும் வரையில் நான் யார் என்றறியவே எவரும் இல்லாதிருந்தார்கள். (ஒரு சொல் ஆணையிட்ட) உடனே பர்வதங்கள் எழும்பின; நதிகள் பாயத் தொடங்கின. கீழே பூமி, தலைக்கு மேல் ஆகாயம், மகா சமுத்திரங்கள், கடல்கள், நிலங்கள், நீர்நிலைகள் இடையிட்ட நிலத்திட்டுக்கள், சூரியன், சந்திரன், பாலைவன மணல்கள் யாவும் என் இருப்பை நிரூபிக்கவே சூனியத்திலிருந்து பொங்கி வெளிவந்தன. வந்தனவே அனைத்து உயிரின உருவங்களும்—மனித இனம், விலங்குகள், பட்சிகள்—பறந்துகொண்டும், பேசிக் கொண்டும், கேட்டுக் கொண்டும். என் ஆக்ஞைப் பிரகாரம் அவற்றுக்கு ஆற்றல்களும் வழங்கப்பட்டன. முதலிடம் மனித குலத்துக்கே அளிக்கப்பட்டது. எனது அறிவு அவனது புத்தியில் வைக்கப்பட்டது.

''ஒவ்வொருவரும் வருக! அனைவரும் வாரீர்! நாம் நன்றி மறந்தவர்கள் என்ற பெயர் வாங்காமலிருப்போம்.

''அவனை விச்வாஸத்தோடு சேவிப்போம். அவனை அன்புக்கிடுவோம், அன்புக்கிடுவோம், அன்புக்கிடுவோம்.''

சிருஷ்டி மகிமையை உத்கிருஷ்டமாகக் கூறும் ரிக்வேத நாஸதீய ஸூக்தத்துக்குச் சமதையான வாக்குத்தான். முடிவிலோ பரமனை பக்தனாகிவிடுகிறான்!

வடமொழியாம் வாடா மொழியில் நம் வேதநாயகனின் வார்த்தை ஜாலங்களைப் பார்ப்போம்:

''மோஹ க்ஷயமே மோக்ஷம்.''

''யஜ என்றால் யாகம் புரி; தியாகம் செய் என்று பொருள். அதுவே ஜய என்ற வெற்றியைத் தருவது.''

''ந—ர்த்த—கி (நடன மங்கை)யாக நம்மை மயக்கும் மாயையிலிருந்து மீள கி—ர்த்த—ந (நாம பஜனை) மார்க்கமே சுலபமான உபாயம்.''

சித்—ஜட ஸங்கமான அங்கத்தால் ஏற்படும் ஜங்கம (சம்சாரம்) நிர லிங்கம்தான் கதி.''

''ஸந்த்யாவந்தனம் என்றால் ஸந்த்யா காலத்தில் செய்யும் வழிபாடு மட்டுமல்ல. ஸந்—நன்றாக, த்யா—தியானிப்பதே ஸந்த்யா.''

Koviloor Digital Library

''வருஷப் பிறப்பன்று பஞ்சாங்கம் படித்து விட்டால் போதாது. அன்றன்றும் நம் பஞ்ச—அங்கத்தை, ஐம்புலன்களை, படித்துத் திருந்திக் கொள்ள வேண்டும்.''

உரைகளில் 'விவேக, வைராக்ய, விசக்ஷணுதி' என்பது போல் மோனை அணி தொனிக்க ஸம்ஸ்கிருத பதங்களை அடுக்குவது ஸ்வாமிக்குத் தண்ணீர் பட்ட பாடு.

இனி, கருத்தழகும், அழுத்தமும், சுருக்கமும் கவிதை நயத்தோடு கலந்து வரும் மணிவாக்குகள் சில மாந்துவோம். பாபாவின் உபதேசச் சோலையிலிருந்து மனம் போனபடி (random) கொய்த மலர்கள். மனம்போனபடி கொய்ததால் மலர்களின் அழகும் மணமும் மாறிவிடுமா, என்ன?

''மெய்யான மனநிறைவு நமக்குப் பிடித்ததையெல்லாம் செய்வதால் ஏற்படாது; நாம் செய்ய வேண்டியதையே பிடித்த மாக்கிக் கொள்வதுதான் உள்ள நிறைவைத் தரும்.''

''சூரியன்தான் பெரிய தோட்ட வேலைக்காரன். தனது கதிர்க் கரங்களால் கடல் ஜலத்தை வாரி உலகம் முழுதற்கும் தெளிப்பவன் அவனே.''

''அன்பின் பாதையில் பகையின் தடை இருந்தாலொழிய அது அன்பாக இருக்க முடியாது; சத்தியத்தின் பாதையில் அசத்தியத் தடை இருந்தாலொழிய அது சத்தியமாக இருக்க முடியாது. அன்புச் சக்தியின் பெருமையும், சத்தியச் சக்தியின் மகிமையும் தெரிவதற்கே பகையும், பொய்யும் கற்பிக்கப்பட்டு உள்ளன.''

''அஞ்ஞானத்தின் சாரம் என்னவென ஆராய்ந்தால் ஞானமே எனக் காண்போம். இப்படியே பாபத்தின் சாரம் புண்ணியமே என்றும், சாவின் ஸாரம் அமரத்வமே என்றும் காண்போம். இவ்வாறே பிறரது துவேஷத்தின் மூலமே நம் அன்பின் உண்மையை அறிவோம். இப்படிப் பார்க்கப் பழகினால் பாபத்தையும் மரணத்தையும் விட இருளானவையும் நம்மை நன்மையான உண்மையின் சூரியோதய வெளிச்சத்துக்கே கொண்டு விடும்.''

''வாழ்க்கை ஒரு சவால்; அதற்கு முகம் கொடு.
வாழ்க்கை என்பது அன்பு; அதை அநுபவி.
வாழ்க்கை ஒரு கனவு; அதை மெய்யாக்கு.
வாழ்க்கை ஒரு விளையாட்டு; அதை விளையாடு.''

(14-7-1966 அன்று பிரசாந்தி நிலையத்தில் ஸ்டேட் பாங்குக் கிளை திறந்து வைத்தபோது): ''தனத்தைச் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டியதுதான். ஆனாலும் மனிதன் பணம் பணம் என்ற வேட்கையை வெற்றிகொண்டு, அதாவது தனத்தை ஜயித்து, தனஞ்ஜயன் ஆனால்தான் கண்ணன் அவன் கூடவே துணை நிற்பான். பகவானின் பாங்கில் ஏற்கப்படும்

Koviloor Digital Library

கரென்ஸிக்குப் புண்ணியம் என்று பெயர். பக்தி சிரத்தையின் முத்திரை பதித்த அக் கரென்ஸியை சம்பாதிக்கப் பாடுபடுங்கள்.''

''வெறும் படிப்பறிவு மேலெழுந்தவாரியான இன்பத்தைத் தான் தருமேயன்றி, அநுபவத்தின் உள் ஆனந்தத்தைத் தர முடியாது. அநுபவம் பெறப் படிப்புச் சற்று அநுகூலமாக மட்டுமே இருக்க முடியும். உயர்ந்த படுக்கை வாங்கலாம். தூக்கத்தை வாங்க முடியுமா? நல்ல டானிக் வாங்கலாம். நேராக ஆரோக்கியத்தையே வாங்க முடியுமா?''

(சிவராத்ரி உபந்நியாஸத்தில்): ''தேய்பிறைச் சதுர்த்தசி இரவில் சிவ லிங்கோத்பவம் கொண்டாடப்படுகிறது. இன்று சந்திரன் தேய்ந்து தேய்ந்து ஒரே கலைதான் மிதமுள்ளது. மனித மனத்துக்கும் சந்திரனுக்கும் சம்பந்தமுள்ளது. ஏனெனில் புருஷ ஸூக்தத்தின்படி இறைவனின் மனத்திலிருந்தே சந்திரன் பிறந்தது. இந்த மனம்தான் ஜீவனை சிவனிடமிருந்து வேறு படுத்துகிறது. மனம் அழிந்து விட்டால் ஆத்மனான சிவமே நிற்கும். சிவ ஸ்மரணத்தால் அப்படி மனத்தை அடியோடு தேய்ப்பதற்கே தேய்பிறைச் சதுர்த்தசிச் சந்திரன் அடையாள மாகிறது. இந்த ஒரு கலையும் இல்லாமல் அமாவாஸையாகவே இருக்கலாமே எனில், அப்போது 'எது இல்லை?' என்றே தெரியாது. சந்திரன் என்ற ஒன்றை ஒரு பிறையாவது காட்டினால்தான் இந்தச் சந்திரன்தான் தேய்ந்து தேய்ந்து இல்லாமற் போக வேண்டிய வஸ்து என்று தெரியும். மனம் இவ்வாறு அழிந்து ஆத்மாவில் லயிக்க வேண்டும். அந்த லய ஸ்தானம்தான் லிங்கம். எதில் எல்லாம் லயிக்கின்றனவோ (லியதே), எதிலிருந்து எல்லாம் உண்டாகி வெளிவருகின்றனவோ (கம்யதே) அதுவே லிங்கம்.''

(குரு பூர்ணிமை உரையில்): ''ஒன்று, மனத்தை ஞான மார்க்கத்தில் அடக்கித் தேய்த்துவிட வேண்டும். அல்லது அதை அன்பு மார்க்கத்தில் குற்றங்குறையே சாராமல் பூரண நிலைக்கு வளர்த்து, உலகு முழுதற்கும் பிரேமை நிலாவொளியைத் தர வேண்டும். ஞானமார்க்க ஆசாரியர்கள் உள்பட குருமார் அனைவரும் உலகின்மீது மிகுந்த கருணை கொண்டு தங்களது நிறைந்த மதியால் உபதேசித்தவர்களாதலாலேயே, அவர்களை வழிபடும் இத் தினம் நிறைமதியின் நாளான பௌர்ணமியாக உள்ளது.''

''அனைவரும் கண்களை நிலாவெனக் குளிர்ச்சியாக்கிக் கொண்டு உலகைக் காணுங்கள்; இதயத்தை வெண்ணெயென மிருதுவாக்கிக் கொள்ளுங்கள்; மனத்தைத் தேனென மதுரமாக்கிக் கொள்ளுங்கள்; வாக்கை அடாத தீபமென சத்திய ஒளியில் நிலைநாட்டிக் கொள்ளுங்கள்.''

(தீபாவளிப் பிரசங்கத்தில்): 'நரகாசுரனின் தலைநகருக்கு 'ப்ராக் ஜ்யோதி ஷ புரம்' என்று பெயர். 'ப்ராக்' என்றால் 'முற்பட்ட'. முன்னைக்கும் முன்னையான ஞான ஜ்யோதியே 'ப்ராக் ஜ்யோதி'. 'ஷ' என்பது அழிவைக் குறிக்கும். அறிவு அழிவுபட்ட

Koviloor Digital Library

நிலையே பிராக்-ஜோதி-ஷ-புரம். அங்கே அஞ்ஞான இருள் நரகின் உருவமாக இருப்பவன் நரகாசுரன். இவனை ஸத்ய தத்வமான ஸத்ய பாமையின் துணையுடன் பிரேம தத்வமான கண்ணன் தன்னுள் கொண்டவுடன், மீண்டும் ஞான தீபம் பிரகாசிக்கத் தொடங்கியதே தீபாவளித் தத்துவம்.''

''முதலில் ஒரு நாமத்தில் மட்டும் பற்று இருக்கிறதே, எல்லா நாமங்களிலும் ஸம பாவம் உண்டாகவில்லையே என்று வருந்த வேண்டா. மனம் விரும்பும் அந்த ஒரு நாமாவையே விடாமல் ஜபியுங்கள். அதுவே உங்களைச் சுத்தப்படுத்திவிடும். பிறகு நீங்களாகவே இதே மகிழ்ச்சியுடன் மற்ற நாமங்களையும் விரும்பத் தொடங்குவீர்கள். காரோட்டக் கற்பவன் ஒரே சாலையில் ஓட்டி ஓட்டித்தான் பழகுகிறான். இதிலே அவன் தேர்ந்தபின் எல்லாச் சாலைகளிலும் சரளமாக, சுலபமாகக் கார் விடுகிறானல்லவா?''

கஞ்சா போன்ற ட்ரக்குகள் உண்டாலும் ஸமாதியின்பம் கூடுமா என்று கேட்டபோது, மஹாகவியாக ஸ்வாமி ஒரே வாக்கியத்தில் சொன்ன விடை: ''பிளாஸ்டிக் திராக்ஷை வேண்டுமானால் இந்த வழிகளில் போகலாம்.''

''பண்டங்களின் விலை உயர்ந்துகொண்டே இருப்பதை எப்படி இறக்குவது என்று படாதபாடு படுகிறார்கள். நான் சொல்கிறேன்: மனிதன் தன் ஆத்ம சம்பத்தை மறந்து வெளிப் பண்டங்களையே தேடி ஓடுவதால்தான் அவற்றுக்குக் கிராக்கி ஏற்பட்டு விலைகள் உயர்கின்றன. எனவே மனிதனின் மதிப்பை உயர்த்துங்கள்; உடனே பண்டங்களின் மதிப்புக் குறைந்து போகும்.'' ('டிவால்யுவான நாணயத்தை ரி-வால்யு செய்யுமுன் டி-வால்யுவான மனிதனை ரிவால்யு செய்ய வேண்டும்.')

''மோக்ஷத்துக்கு வழி இரண்டுதான். ஒன்று, உன் சிறிய 'நானை' எல்லையில்லாத அனந்தமாக விஸ்தரித்துக் கொள். அல்லது, அதைச் சுருக்கிக்கொண்டே போய் ஸைஃபராக்கிக் கொள். முதலில் சொன்னது ஞானம்; இரண்டாவதாகச் சொன்னது பக்தி.''

''எத்தனையோ வேலைகள் செய்ய ஏற்றதாக, ஒவ்வோர் அங்கத்திலும் அற்புதமான விசித்திரங்கள் கொண்டதாக, அமைந்துள்ள இந்த சரீரம் பகவான் கொடுத்ததல்லவா? இதை வைத்துக்கொண்டு நாம் பலவிதமான நுகர்ச்சிகளைத் துய்த்தாலும் இறுதியில் இதை பகவானிடம் கொடுக்கும்போது நம் மனத்தின் அசுத்தங்களில்லாமல் திருப்பித் தரவேண்டும். இரவல் பாத்திரம் வாங்கிச் சமைத்து உண்டு விட்டு, திரும்ப உடைமையாளரிடம் கொடுக்கும்போது நன்றாகத் தேய்த்துத் துலக்கித் தருகிறோமே, அதுபோல.''

''ஒரே கால் இருந்தால் நடக்க முடியாது. சராசர விலங்கெனவே மனிதனுக்கு இரு கால்களாக இகமும் பரமும் உள்ளன.

Koviloor Digital Library

இரண்டும் ஒரே உடலின் அங்கங்கள்தாம். இகம், பரம் என்பன வற்றையே முறையே தர்மம், பிரம்மம் எனலாம். தார்மிகமான லோக வாழ்வும் ஆத்மிகமான பிரம்மாநுபவமும் சேர்ந்து சேர்ந்து வருபவையே.''

''உடல் என்ற காமிராவில், நன் மனத்தை லென்ஸாகக் கொண்டு, அன்பு ஃபிலிமைப் போட்டுக்கொண்டு, அறிவு விசையைத் தட்டினுல் பகவான் ஒளிச்சித்திரமாக உள்ளே பதிந்து விடுவார்.''

''காலம் எப்படிப் போகிறது என்றே தெரியாமல் கரை கிறது—பனிக்கட்டி கண்டு கொள்ளப்படாமலே (imperceptible-ஆக) உருகுவது போல.''

''நாம் ஒரு வஸ்துவை நம்மிடம் வைத்துக்கொண்டிருப்ப தால் அதற்கு நாம் உடைமையாளர் என எண்ணுவது விந்தை. இது வாஸ்தவத்துக்கு நேர்மாறனது. நாம் உடைமையாளர் என்ற மேலாதிக்கம் பெற்றிருந்தால் அந்த வஸ்து இல்லாமலும் முடியும் என்ற அலக்ஷிய புத்தி அல்லவோ அதனிடம் இருக்க வேண்டும்? 'இது வேண்டாம்' என்று ஒன்றை நாமே வைத்துக் கொள்ளாமல், கொடுக்க முடிகிறபோதுதான் நாம் அதன் உடைமை யாளர். அதை நம்மால் விட முடியவில்லை என்றால் அப்படிப்பட்ட சொத்துதான் நம் மீது மேலாதிக்கம் செலுத்தி, நமக்கு உடைமை யாளராக இருக்கிறது என்று அர்த்தம்.''

''பகவானும் கர்மயோகம், பக்தி (அன்பு) யோகம், ஞான யோகம் மூன்றும் புரிகிறன். ஸிருஷ்டியே கர்ம யோகம், பரிபாலனம் பக்தி யோகம், லயம்தான் ஞான யோகம்.''

''ஆடுகிற கொடிதான் நம் கண்ணில் தெரிகிறது; ஆட்டு விக்கும் காற்று தெரியவில்லை. இப்படியேதான் விளைவான உலகையே பார்க்கிறோமே அன்றி, இதை விளைவித்த காரணமான கடவுளைக் கண்டோமில்லை.''

— ஒரு கொடி காற்றில் சடசடப்பதைப் பார்த்த மாத்திரத்தில் இப்படிச் சொன்ன பாபா, இதேபோல் தம்மைச் சுற்றி நிகழும் நடைமுறை சம்பவங்களிலேயே பரமதத்வங்களை விளக்கி விடுவார். இப்படி, மேற்சொன்ன காரண — காரிய விஷயமாகவே இன்னென்று:

பாபாவை மாணவர்கள் சூழ்ந்து நெருக்குகிறர்கள். பாபா ஒரு மாணவனுக்கு ஏதோ ஒரு பொருள் ஸிருஷ்டித்துத் தருகிறர். உடனே எல்லா மாணவரும் அவனையே சூழ, பாபா 'விடுபடு கிறர்.' அவர் போய்க்கொண்டே, உடன் வருபவரிடம், ''பார்த்தாயா? இப்படித்தான் ஸிருஷ்டிகர்த்தாவை மறந்து விட்டு எல்லோரும் ஸிருஷ்டி விநோதத்தையே பெரிதாக நினைத்து அதிலேயே ஈடுபட்டிருக்கிறர்கள்'' என்றர்.

''எதிலும் பட்டுக்கொள்ளாமல் விலகியிருந்து பார்க்க வேண்டும். 'த்ரஷ்டாவாக இரு, ஸாக்ஷியாக இரு' என்று

Koviloor Digital Library

இதைத்தான் வேதாந்தம் சொல்கிறது. இப்படி இருப்பதால் புதுப்புது இன்பமின்றி, சூனிய நிலை போலிருக்கும் என்று எண்ணுகிறீர்கள். வெயிலில் ஓடி, ஆடி, அடிபட்டுக் கிரிக்கெட் விளையாடுபவர்களைவிட, அதை வெறுமே பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கே உணர்ச்சிக் குதூகலம் அதிகமுள்ளதல்லவா?''

(இன்றைய கோளாறுகளைச் சுண்டக் காய்ச்சிக் கூறுகிறார்): ''கொள்கையில்லாத அரசியல், நடத்தையில்லாத கல்வி, மனிதாபிமானமில்லாத விஞ்ஞானம், நெறிகளில்லாத வர்த்தகம்.''

''பிரம்ம தத்வத்தைப் பற்றி உண்மைகளைக் கோத்துத் தரும் சரடாக உள்ள நூலை பிரம்ம சூத்திரம் என்கிறோம். பிரம்மமே சூத்திரம்தான். ஜீவாத்மாக்களான இத்தனை மலர்களையும் தொடுத்து உலக மாலையாகக் காட்டுவது இதனைத்துக்கும் ஆதாரமான அந்த பிரம்மமான சரடுதான். மாலைக்குள் உள்ள ஆதாரமான நார் தெரியாதது போல், உலகம் தெரிகிறதேயன்றி இதைச் சேர்த்து வைத்துள்ள பிரம்மசூத்திரம் தெரியவில்லை. ஆயினும் மலர்கள் வாடி உதிர, வாடாமலே இருக்கும் நார் போல், ஜீவர்கள் மாய்ந்தாலும் பிரம்ம தத்வம் மாயாமலே, மாறுமலே இருக்கிறது.''

''பாரத தேசம் மட்டும் வைதிக கர்மங்களில் இயக்கப்பட்டு ஸன்மார்க்கத்தில் சென்றால், உலகம் முழுதும் எப்படி அந்த நல்வழியில் முன்னேறும் என்று எண்ணக் கூடாது. எஞ்ஜின் ஒன்றில் மட்டும் டிரைவர் சில கருவிகளை முடுக்கினாலும், அந்த எஞ்ஜின் மட்டுமா தண்டவாளத்தில் போகிறது? அதன் பின் கோக்கப்பட்டுள்ள பெட்டிகளும்தானே இருப்புப் பாதையில் ஓடுகின்றன? கர்மபூமியான பாரதத்தையே உலகத்தின் எஞ்ஜினாகவும், மற்ற நாடுகளைக் கம்பார்ட்மெண்ட்களாகவும் பகவான் சங்கற்பித்திருக்கிறார்.''

''இக் காலத்தின் மிகவும் பயங்கரமான சத்ரு போலித்தனம் — ஹிபாக்ரிஸிதான். மற்ற யுகங்களில் அசுரர்கள், அரக்கர்கள் இருந்தார்கள். ஆனால் தோற்றத்தாலும் வெளிச் செயல்களாலுமே அவர்கள் தீயவர்கள் என்று மற்றவர்கள் தெரிந்துகொண்டு ஜாக்கிரதையாக இருக்க முடிந்தது. ஆனால் இன்றோ அசுரராக, அரக்கராக எவரும் தெரியவில்லை. பார்வைக்கு எல்லாரும் சாதுக்கள் போலவே இருக்கிறார்கள். எல்லாரும் கீதையும், உபநிஷத்தும், நற்பண்புகள் பற்றிப் பிரசங்கமும் பொழிகிறார்கள். ஆனால் நடத்தையில் எவரும் இப் பண்புகளைப் பின்பற்றக் காணோம். அசுரர்கள் உள்ளொன்றும் புறமொன்றுமாக இருக்கவில்லை. இன்றைய மனிதர்களோ புறத்தில் தேவர்களாக வேஷம் போட்டுக்கொண்டே உள்ளத்தில் அசுரர்களாக இருக்கிறார்கள்.''

ஒரளவு சௌக்கியங்கள் கொண்ட ஒரு பக்தர் மேலும் நலனை விரும்பி, ஸ்வாமி நல்கவில்லையே என்று அவரிடமே தாபப் பட்டார். ஸ்வாமி சிறிதும் கோபமில்லாமல், ''நாயனு, நான்

உனக்குப் பாதரக்ஷை கொடுக்கவில்லை என்று குறைப்படுகிறாய். ஆனால் பாதமே இல்லாத முடவர் பலரை நான் கவனித்தாகணுமே.''

ஸ்வாமியின் புகழ் ஓங்கி ஓங்கி வருகையிலேயே எதிராளிகளின் தூற்றலும் அதிகரிப்பதை பக்தர் குறிப்பிட்ட போது, ''கிணற்றை மேலும் மேலும் தோண்டி ஜலத்தை அதிகமாக்கும்போதே, வெளியே தோண்டிப் போட்ட சேறும் சகதியும் உயர்ந்துகொண்டு வருகிறது'' என்றார் ஸ்வாமி.

ராமகிருஷ்ணரைப் போலக் கதைகள் கூறி அவற்றின் மூலம் சர்க்கரைப் பூச்சு மாத்திரையாக மருந்தூட்டுவதிலும் ஸாயி மருத்துவர் மகா நிபுணர். விரிவஞ்சி, இங்கு அவரது கணக்கற்ற 'கதோபநிஷத்து'களில் ஒன்றே ஒன்றை மட்டும் கொடுக்கிறோம். நம்பிக்கையின் அவசியத்தை நயமுற விளக்கும் கதை.

''சொத்து சுதந்திரங்களுக்கு ஒருவன் மிகவும் ஆசைப்பட்டான். அவனிடம் ஒருவர், 'வேங்கடரமண ஸ்வாமிக்குப் பூஜை செய்து வா. ஸ்ரீ—நிவாஸரான அவர் உனக்குச் செல்வம் அருளுவார்' என்றார். அவன் வேங்கடாசலபதிக்கு அமர்க்களமாகப் பூஜை செய்ய ஆரம்பித்தான். ஓரிரண்டு மாதங்களாகியும் இவன் விரும்பியது பலிதமாகவில்லை. பூரண நம்பிக்கை இல்லாவிடில் பகவான் அநுக்கிரகம் செய்வாரா? இவனுக்குப் பூரண நம்பிக்கை இல்லை. அதனால் பலிதமாகவில்லை. ஆனால் எல்லா மனிதர்களைப் போலவும் இவனும் வேங்கடரமண ஸ்வாமியிடமே சலிப்புக் கொண்டான். இந்தச் சமயத்தில் ஒரு சிவ பக்தர், 'நீ சிவபெருமானைப் பூஜை செய்தால்தான் பலன் கிட்டும். ஈச்வரனான அவர்தான் ஐச்வரியம் யாவும் தருபவர்' என்றார். உடனே இம் மனிதன் வேங்கடாசலபதியை விட்டுவிட்டு சிவ பூஜை ஆரம்பித்தான். இதிலும் ஓரிரண்டு மாதம் ஓடிற்று. பூஜைக்காக இவன் மேலும் செலவுதான் செய்தானே யொழிய, செல்வ வரவு ஏதும் இவனுக்கு இன்னமும் ஏற்படவில்லை. ஈச்வரனிடமும் இவனுக்கு முழு நம்பிக்கை வராததால் பலன் ஏற்படவில்லை. இதைப் புரிந்துகொள்ளாமல் இவனோ ஈச்வரனிடமே அதிருப்தி கொண்டான். இந்த சமயத்தில் ஒரு ஸ்ரீ வித்யோபாஸகர் இவனிடம் வந்தார். 'பிரம்மா, விஷ்ணு, மஹேச்வரன் எல்லோருக்கும் மேலாக, அவர்களையும் ஆட்டி வைத்துக் கொண்டிருப்பவள் பராசக்தியான லலிதாம்பா அல்லவா? ராஜராஜேச்வரியான அவளைப் பூஜை செய்தால்தான் உனக்கு ராஜ பதவிகூடக் கிடைக்கும்' என்றார். அவ்வாறில் இவன் லலிதாம்பாவின் விக்கிரஹத்தை வைத்துப் பூஜை செய்ய ஆரம்பித்தான்.

''அர்ச்சனை முடிந்து தூபம் காட்டினான். சாம்பிராணி புகை குபு குபு என்று அறை முழுதும் பரவியது. அந்த அறையில் மாட்டியிருந்த காலண்டர்களில் ஒன்றில் வேங்கடாசலபதியின் படம் போட்டிருந்தது; இன்னொன்றில் ஈச்வரனின் சித்திரம் வரைந்திருந்தது. சாம்பிராணி தூபம் காற்றில் பரவும்போது இந்த இரு படங்கள்மேலும் பட்டது.

Koviloor Digital Library

''அவ்வளவுதான், வந்தது கோபம் நம் ஆசாமிக்கு. 'என்னிடம் ஏராளமான பூஜை வாங்கிக்கொண்டும் எந்த அநுக்கிரகமும் செய்யாத சாமிமார்களா! இன்னமும் என் பூஜை வஸ்து உங்களைச் சேர விடுவேனா?' என்று சொல்லிக் கொண்டு, இரண்டு துணிகளை எடுத்தான். அந்த இரண்டு படங்களின் மூக்கையும் துணிகளால் கட்டிவிட்டு, 'என் தூபம் இனி உங்களைச் சேருமா பார்க்கிறேன்' என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டான்.

''அப்போதே ஓர் அதிசயம் நிகழ்ந்தது. கட்டிய துணிகள் தெறித்து விழுந்தன. அந்த இரண்டு படங்களிலிருந்தும் சாக்ஷாத் மஹாவிஷ்ணுவும், மஹேச்வரனுமே குதித்துக்கொண்டு ஆவிர் பவித்துவிட்டார்கள்! 'என்ன வரம் வேண்டும்?' என்று இவனைக் கேட்டார்கள்.

''இவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. 'உங்களுக்குப் பூஜை செய்த போதெல்லாம் பிரஸன்னமாகாத நீங்கள், இப்போது நான் அபசாரம் செய்தபோது பிரத்தியக்ஷமாகி இருப்பது என்ன விந்தை?' என்று கேட்டான்.

''அதற்கு அவர்கள், 'நீ வெளியிலே பெரிதாகப் பூஜை பண்ணினாலும், கடவுள் என்ற ஓர் உயிருள்ள சக்தி இருக்கிறது என்று உள்ளூறப் பூரண நம்பிக்கை வைக்காமல், 'கடவுள் என்று ஒருவர் வாஸ்தவத்தில் உண்டா, அவர் நமக்கு அருளுவாரா?' என்று சந்தேகப்பட்டுக் கொண்டுதான் இருந்தாய். ஆனால் இப்போது தூபம் எங்கள் மூக்கில் ஏறக் கூடாது என்று துணி போட்டுக் கட்டியபோது, நாங்கள் வாஸ்தவமாகவே உயிர் கொண்டு இருக்கிறோம், உன் தூபத்தை சுவாஸிக்கிறோம் என்ற பூரண நம்பிக்கையோடு இப்படிச் செய்தாய். பூரண நம்பிக்கையிருந்தால் பிரஸன்னமாகிவிடுவது எங்கள் தர்மம். ஆதலின் இங்கே எழுந்தருளிவிட்டோம்' என்றனர்.''

★

இந்தக் கலா ஸாயி கலைகள் விஷயமாகவே கூறியுள்ள மொழிகளை எந்தக் கலைஞரும், ரஸிகரும் தலைமேற் கொண்டு போற்றுவர். இந்நூல் ஆரம்பத்தில் ''ஆட்டி வைத்தால் ஆரொருவர் ஆடாதாரே?'' என்ற அதிகாரத்தை வாசகர்கள் சற்றுப் புரட்டிப் பார்த்தால் இவற்றில் சிலவற்றைக் காணலாம்.

அன்பே தமக்கு ஆனந்தம் என்று பாபா மொழிவதை நாம் கேட்டிருக்கிறோம். பிரேம ஸாயி கலா ஸாயியாக இருக்கையில், ''அந்தமே ஆனந்தமு'' என்று மகாமலர்ச்சியுடன் கூறுவார். 'அழகே ஆனந்தம்' என்று அர்த்தம். பார்க்கப் போனால் பிரேம ஸாயியும் கலா ஸாயியும் வேறு வேறல்லர். பரமாத்மாவின் அன்பேதான் அழகாக மலர்கிறது. 'காருண்யம் தான் லாவண்யம்' என்று இதைத்தான் காஞ்சி முனிவர் கவினுற, கனிவுறக் கூறுவார்.

Koviloor Digital Library

நில வானையும், கோல வனங்களையும், சோலை மலரையும், மண் பாயும் அருவியையும், விண் தோயும் மலையையும் காணும் போது ஐயன் கண்கள் ஜொலிக்க, செப்புதடுகள் ''அந்தமே ஆனந்தமு'' என்று ருசித்து மொழியும். அன்பினால் அடையும் அதே பிரம்மானந்தந்தான்! ஸத்யம்—சிவம்—சுந்தரம் என்பதில் சுந்தரமே சிவமான அன்பாகி, ஸத்யப் பரம்பொருளின் பேரின்பத்தை நல்குகிறது.

நம் ஸ்வாமி எப்போதும் அழகரெனினும், சில சமயங்களில் அதி ஸௌந்தர்ய வடிவமாகி, இவ்வழகை வெறுமே தரிசிப்பதிலேயே பக்தருக்கு அளிக்கும் ஆத்மானந்தம்—அது அநுபவித்தவருக்கே தெரியும். எந்தப் பாடும் இல்லை, சாதனையும் இல்லை. வெறுமே பார்க்கிறோம் சுந்தரனை, அந்தமொன்றிலா ஆனந்தத்தில் ஆழ்ந்து விடுகிறோம்! ''அச்சோ ஒருவர் அழகிய ஆ'' என்று ஆழ்வார் விதந்துரைத்ததே சுந்தர ஸாயியின் மகிமை!

அழகுத் தத்துவமே ஆன அவர் வேதம் சொன்னபடி கவிஞர்களுள் கவிஞராக (கவிம் கவீனாம்) நவராத்ரிக் கவியரங்குகளில் தலைமை தாங்குவார். ரிஷிக்கு உரிய புனிதமான திர்க்கப் பார்வை பெற்றவனே கவி என்பது நமது மரபு என்பதை விளக்கி, கவிதையிலும், மற்ற இலக்கியங்களிலும், இதர கலைகளிலும் ஆபாசத்துக்கு இடமேயில்லை என்று வலியுறுத்துவார்.

கவிதையின் உயிரை, கவிஞனின் இயல்பை எப்படிக் கையில் பிடித்துக்கொடுக்கிறார் பாருங்கள்: ''கவிதையில் எந்தப் பதத்தைப் பிரயோகிக்கலாம், எந்தக் கருத்தைப் புகுத்தலாம் என்று ஒருவர் சிந்தித்து யோசிக்கிறாரெனினும் அது உண்மையான கவிதையே அல்ல என்றுதான் அர்த்தம். வலிந்து யோசிப்பதன் சுமையே இன்றி எண்ணமும் சொல்லும் தாமாகவே பளிச்சென்று உதயமாகி வருவதுதான் கவிதை. உண்மைக் கவிஞனுக்குத் தன் கொள்கை என்ற உறுதிய பிடிமானம், அதில் உணர்ச்சி வசப்படல் ஆகியன அடியோடு உதவா. திறந்த மனமே அவனது தன்மை. நெறி முறைகளுக்குக் கட்டுப்பட்டு ஒருவன் வாழ்ந்தாலன்றி இப்படிப்பட்ட விசாலப்பான்மை சித்திக்காது. எனவே ஒழுக்கம் உள்ளவனே உண்மைக் கவியாக இருக்க முடியும். அப்படிப் பட்டவனது சொல்லின் சக்திதான் சிரஞ்சீவியாக நிற்கும்.''

கலைகளை வளர்ப்பதற்கே ஏற்பட்டதாகச் சொல்லப்படும் பத்திரிகைகளை நடத்துவோருக்கு உபதேசிக்கிறார்: ''பாரத மரபையும், வாழ்முறையையும் வலியுறுத்தி அவற்றின் ஐக்கியப்படுத்தும் சக்தியை வெளிப்படுத்துவதே பத்திரிகைகளின் பணி. பத்திரிகை உலகம் நாட்டு ஆத்மிகக் குலதனத்தின் பெருமையைப் பேணிக் காக்க வேண்டும். தனி மனிதர்களை வால் பிடிப்பது, தூற்றுவது ஆகிய இரண்டும் பத்திரிகைக்கு உதவாதது. எல்லா மக்களிடையும் அன்பையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்துவதே பத்திரிகையாளர் கடமை. குறிப்பாக, இளைஞர்களின் உணர்ச்சிகளைக் கட்டுப்படாமல் சீறிவிடுவதைத் தவிர்த்து,

Koviloor Digital Library

அவர்களது மனோவேகங்களை சமனம் செய்து, ஆக்கப் பணிகளிலும் ஆத்மிக சிந்தனைகளிலும் அவர்களை ஊக்கவே எழுத்தைப் பயனாக்க வேண்டும்.''

''லலித கலைகள் யாவும் மனிதனைத் தார்மிகமாக உயர்த்தவே பயனாவதைத்தான் நான் உவக்கிறேன். ஆத்மிகமாக மனிதனைக் கலை உயர்த்தவில்லையாயின், அப்போது அக் கலையும் தாழ்த்தத் தான் படுகிறது. சந்தைக் கடைக்குக் கலைகளை இழுத்து வந்து, மனிதனின் கீழ்த்தரமான பசிகளைப் போக்குவதற்காக உபயோகிப்பது மக்களின் மாண்பு, கலையின் மாண்பு இரண்டையுமே குலைப்பதாகும்.''

(முன்பு ஆண்டுதோறும் திருப்பதி தியாகராஜ உத்ஸவத்துக்கு சென்று வருவதை வழக்கமாகக் கொண்டிருந்த ஸ்வாமி அந்த நாதயோகியைப் பற்றிச் சொல்கிறார்:) ''தியாகராஜரின் சிந்தனையை அப்படியே அவரது சொல் பிரதிபலித்தது. சிந்தனை, சொல் இரண்டுக்கும் இசைவாகக் கவ்வி வந்தது பாடலின் ராகம். சிந்தனை, சொல், ராகம் மூன்றின் அழகையும் திட்டப்படுத்தித் தந்தது கிருதியின் தாளம். இப்படியாக மனோபாவம், ராக பாவம், வாக்கு, லயம் யாவும் ஒன்றி வந்ததற்குக் காரணம் தியாகராஜர் ஒரு பக்தராக, மகானாக இருந்ததுதான். ரிஷிக் கவியான வால்மீகியின் அவதாரமாகத் தியாகராஜர் இருந்ததாலேயே அவரது பாடல்கள் இப் பெருமை பெற்றன. (இனி தமிழர் பூரிப்படையும்படி ஸ்வாமி சொல்வார்:) தேவகி பெற்ற கண்ணனை அசோதையே சீராட்டி வளர்த்ததுபோல் ஆந்திரமாதா பெற்ற தியாகராஜரைத் தமிழன்னையே ஸ்வீகரித்துப் போற்றி வருகிறாள்.''

'முழுதும் அழகிய குமர' என்று அருணகிரி முருகனைச் சொன்னாற்போல் ரூபம், எண்ணம், செயல், சொல் (அந்தச் சொல்லைத் திட்டும் கையெழுத்துகூட), யாவும் அழகு மயமான நம் சுந்தர ஸாயி, அழகு பற்றியே நறுக்குத் தெறித்தார்போல் எழுதியதுண்டு. அவரது அற்புதமான அசல் ஆங்கில வாசகத்தை முதலில் பார்த்துவிட்டு, பிறகு அதனுடைய தமிழாக்கத்தையும் காண்போம்.

Beauty is not an independent value but is the manner in which the mind of a subject is affected by an external form which acts as a counterpart of the taste present in the subject.

Objects appear beautiful as long as there is a demand for them from within. When there is no desire, there is no special beauty in anything. It is *maya* that objectifies beauty.

Beauty is not skin deep. Beauty lies in the virtuous deep.

''அழகு என்பது தன்னில் தானே தனித்துள்ள தத்வமல்ல. ஒருவரது மனம் ஒரு வெளிப் பொருளால் பாதிக்கப்படும்* போது,

* 'பாதிப்பு' என்பதற்குக் கெடுதலான பொருள் கொள்ளலாகாது.

அது அவரது ரஸனையைப் பொறுத்து, அவரது மனோபாவத்தைப் பூர்த்தி செய்யும் அங்கமாக ஏற்படுத்தும் அநுபவமே அழகு என்ற உணர்வு. ஒருவரது மனத்துள் வெளிப்பொருள்களிடம் வேட்கை உள்ளபோதே அப்படிப்பட்ட பொருள்கள் (மட்டும்) அழகாகத் தோன்றுகின்றன. வேட்கையே இல்லையாயின், எதொன்றிலும் (மட்டும்) தனியான அழகு தெரிவதில்லை. அழகை வெளிப் பொருளாக்கிக் காட்டுவது மாயையின் காரியமே.

“அழகென்பது மேல் தோல் அளவில் ஆழமற்று நின்று விடுவதல்ல. புனிதமான உள்ளாழத்தில் இலகுவது அது.”

(இங்கு ‘மட்டும்’ என்று இரு இடங்களில் நகவளைவுகளில் குறிப்பிட்டிருப்பதே ரஸிக ராஜரான ஸ்வாமியின் மெய்யான கருத்தை வெளியிடும் என்பது நூலாசிரியரின் எண்ணம். உள்ளழகான ஆத்மா மாயையால் பல வெளிப் பொருள்களாகத் தோன்றுகையில், அவ்வாத்மாவின் அழகே வெளி வஸ்துக்களின் அழகாகிறது என்று கூறும் ஸ்வாமி, எல்லாமே ஆத்மாவாதலின் யாவுமே அழகானவை என்றுதான் கருதுவாரே ஒழிய, எதுவுமே அழகல்ல என்றோ, சில மட்டும் அழகானவை—சில அழகானவையல்ல என்றோ கருதமாட்டார்! நம் மனத்தில் வேட்கைகள் உள்ளவரையில், அம் மனம் வேண்டும் பொருளில் மட்டுமே அழகைக் காண்கிறது என்றும், வேட்கை போனால் எப்பொருளுமே அழகாகிவிடும் என்றும்தான் ஸ்வாமி கருதக்கூடும்.)

*

கலை நயம் அது ரத்னச் சுருக்கமாக வெளிப்படுவதிலேயே உள்ளது என்பர். இப்படிப் பார்த்தால் ஸ்வாமி செய்யும் நாமகரணங்களில் ஒரு தத்வ லோகமே வந்து விடுகின்றன! தமது பட்டபர்த்தி இருக்கைக்கு ‘பிரசாந்தி நிலயம்’ என்றும், பெங்களூர் இருக்கைக்கு ‘பிருந்தாவனம்’ என்றும், உதகை இருக்கைக்கு ‘நந்தனவனம்’ (இது ஸ்வர்க்கத்தில் இருப்பது) என்றும், பம்பாய் ஸாயி கேந்திரத்துக்கு ‘தர்ம க்ஷேத்திரம்’ என்றும், அந்தமான் தமது இருக்கைக்கு ‘ஸத்ய தீபம்’ என்றும், இந்த ‘ஸத்ய’த்தை ஒட்டி ‘சிவம்’, ‘சுந்தரம்’ என்று முறையே ஹைதராபாத், சென்னை இருக்கைகளுக்கும் ஸ்வாமி நாமகரணம் செய்திருப்பதெல்லாம் செவிக்கு இனிப்பதுடன், அர்த்தபுஷ்டியும் வாய்ந்தன அல்லவா?

குழந்தைகளுக்கான பால ‘விஹாரம்’ என்பதை அவர்களது மதுரமான மனமலர்ச்சி வெளியாகும் விதத்தில் பால ‘விகாஸம்’ என்று அவர் மாற்றியதிலே எத்துணைக் கலை நுண்மை?

பெண் குழந்தைகளுக்கு ஸாயமுனா, ஸாயி கீதா, ஸாயி லீலா, ஸாயி ஸுதா என்பது போலும், ஆண் குழந்தைகளுக்கு விஜய ஸாயி, ஸாயி ஸுதாகர் என்பது போலும் அவர் நாமகரணம் செய்வதில் எத்தனை அழகு!

Koviloor Digital Library

அருணாசல ரமணரிடம் அத்யந்த பக்தி கொண்ட ஸ்ரீ ஹெக்டேயின் இரட்டைப் பெண் குழந்தைகளுக்கு அருணா, அசலா என்று ஸ்வாமி பெயரிட்ட கவியெழிலை என் சொல்ல?

சிற்பக்கலை, கட்டிடக்கலை முதலியவற்றில் ஸ்வாமியின் ஸூக்ஷ்ம உணர்வுக்குப் பிரசாந்தி நிலயமும், அனந்தப்பூர் மகளிர் கல்லூரியுமே கட்டியம் கூறும். இவற்றின் டிஸைனர் ஸாக்ஷாத் ஸ்வாமிதானே? அனந்தப்பூர் கல்லூரி டிஸைனில் அவரது ஒரிஜினாலிடிக்காக ஆர்க்கிடெக்ட்களும் புகழாரம் சூட்டினர்.

அவரது யோசனையில் மலர்ந்த பம்பாய் இருக்கையான 'ஸத்ய தீப'மும் இப்படியே. "புஷ்கரிணி இவ வேச்ம பரிஷ்க்ருதம் தேவ மானேவ சித்தம்" என்ற வேத வாக்கை அக்ஷரத்துக்கு அக்ஷரம் மெய்யாக்கி, தேவ தேவன் அம் மாளிகையைத் தாமரை வடிவிலேயே அமைத்திருக்கிறார். ஹைதராபாத்தில் "சிவம்" என்ற தர்மாலயமோ இலிங்க வடிவிலேயே இலங்குகிறது!

✻

இவ்வளவு நுண்ணிய ரஸிக்கியம் உள்ள ஸ்வாமியைத்தான் முன் அத்தியாயம் ஒன்றில் சில மானுடக் குறைகள் உள்ளவராக வர்ணிக்கையில் ஜிகினா அலங்காரங்களிலும், அவுட்—வான சங்கீத சங்கதிகளிலும் மகிழ்பவராகச் சொன்னோம். இது பொருந்தாப் புதிராகத்தான் தோன்றும்.

தம்மைக் காணக் குழுமும் ஏராளமான பாமரரின் மகிழ்ச்சிக்காகவே ஸ்வாமி தாமும் உள்ளீடற்ற இப் பளபளப்புக்களில் மகிழ்வதாகவும் நடிக்கக் கூடியவர்தாம்! அவரது தியாக நாடகத்தில் இதுவும் ஓர் அங்கமாயிருக்கலாம்.

பெற்ற தாயைப் பிள்ளை மறப்பது, பிள்ளையைப் பெற்ற தாய் மறப்பது, உற்ற தேகத்தை உயிர் மறப்பது முதலிய பெரிய தியாகங்களோடு, 'கற்ற நெஞ்சகம் கலை மறப்ப'தையும் பாடினார் நமது வள்ளலார். ஆனால், கல்லாமலே கற்ற மகான்களோ தங்களது கலா ரஸனையையும் மக்களன்பில் தியாகம் செய்யத்தான் செய்கிறார்கள். அனைவரும் தம்மை அணுகி அடைய வேண்டும் என்ற "ஸௌலப்ய"த்துக்கு உரைகல்லாக ஸ்ரீவைஷ்ணவர்கள் கூறுவது, இவ்வாறு அவர்கள் ரஸனையில் மந்தமானவர்களையும் உவப்பதைத்தான். ஏனெனில் வேறெந்தச் சிறுமையைச் சகித்தாலும் ரஸிகன் ஒருவனால் தரக்குறைவான கலையம்சத்தை மட்டும் சகிக்கவே முடியாது.

இந்தத் தியாகத்தில் நூலாசிரியருக்குத் தெரிந்து சக்கரவர்த்திகளாக இருப்பவர்கள், ஒருவர் காஞ்சிப் பெரியவர்; மற்றவர் நம் கதாநாதர்.

அறிஞர் திலகமான ஸ்ரீ பெரியவர் முன் எத்தனை அறைகுறைப் பண்டிதர்கள் அபத்தப் பிரசங்கம் செய்கின்றனர்?

Koviloor Digital Library

கலைமாமணியான அவர் முன் எத்தனை கற்றுக்குட்டிகள் வந்து அபஸ்வரப் பாட்டுப் பாடுகின்றனர்? பிரஸன்ன முகத்துடன் இவற்றையும் செவியுற்று ஆசி கூறுகிறார்! ஆச்சரியந்தான்!

இப்படியே, சற்றே தருக்குற்ற பிரசித்த பஜனைக் கலைஞர்கள் சங்கீர்த்தனம் தொடங்கிய மாத்திரத்தில் சிம்மாசனத்திலிருந்து எழுந்திருந்து, மன்றத்தை விட்டே வெளியேறி, அவர்களை மன்னிப்புக் கோர வைக்கும் பாபா, சுற்றுப்பயணத்தில் எளிய கிராமவாசிகள் அவரை வரவேற்றுப் பாடும் கர்ண கடூரமான பொருளற்ற பாடல்களை அவர்கள் ஓயாமாரியாகப் பாடி முடிக்கும் வரையில் கேட்டுப் பிரமாதமாக ரஸிக்கிறார். 'எங்கே நம் பாட்டு முடியுமுன் பகவான் போய்விடுவாரோ?' என்று புகழ் பெற்ற வித்வான்களும் தவிப்பதாக இருக்க, இங்கோ இந்தக் கிராமவாசிகள் பாடி முடித்தும் கூட பாபா அசையமாட்டேன் என்று அமர்ந்திருக்கிறார். அவர்களும் அப்போதைக்கப்போதே இட்டுக் கட்டி,

சேப்பு கவுன் பாபா
தலைமுடி பாபா
நாற்காலி பாபா
பந்தல் பாபா

என்றெல்லாம் பாட, ஏதோ கம்ப-காளிதாஸர்கள் கவி பாடினாற் போல் குதூகலிக்கிறார் நம் ரஸிக மணி! ராகத்தை விட அநுராகத்தையும், அர்த்த பாவத்தை விட மனோபாவத்தையுமே பார்ப்பவர் அல்லவா?

* * *

வெவ்வேறு கொள்கையினரையும் ஒன்றாக இணைப்பது கலையே என்பதால்தான் பிளவுகள் மலிந்துள்ள கலியில் எளிய மார்க்கமான நாம பஜனையே ஸர்வ ஜனங்களுக்குமான சாதனை என்று ஆன்றோர் விதித்தனர் போலும்! இதற்கேற்ப, இன்று நானாதேசத்திலும் ஸாயி பக்தர்கள் அவரவரைப் பொறுத்த மட்டில் எந்தச் சாதனையைப் பின்பற்றினாலும் கூட்டாக பஜனை புரிந்து பெரு மகிழ்ச்சி அடைகிறார்கள். அமெரிக்கரும், நீக்ரோக்களும் எத்தனை அழகாக "ம்ருத்யுஞ்ஜயாய நம ஓம்! த்ர்யம்பகாய நம ஓம்!" என்பது போன்ற வாயில் நுழையாத வார்த்தைகளை, நுட்ப-திட்பம் பொருந்திய பாரதிய சாஸ்திர இசைக்கு இணங்க அநாயாசமாகப் பாடுகிறார்கள்?

பஜனைக்குத் தான் அப்படியொரு ஏலச் சரக்கு? இதனால்தான் போலும் குரலோ, ஸங்கீத ஞானமோ இல்லாத அநேக ஸாயி பக்தர்கள் கூட நிரந்தரமான இவற்றில் விருத்தியடைந்து நல்ல பஜனைப் பாடகர்களாவதற்கு ஸ்வாமி அருளியிருக்கிறார்.

இந்திரா தேவியை. "பஜனை பாடு, பாடு" என்றாராம் ஸ்வாமி. பாடுவது என்றால் அந்த அம்மாளுக்குப் பெரும்பாடாம்!

Koviloor Digital Library

அதைக் கேட்பவர்களுக்குந்தான்! அதனால் அவர் எத்தனையோ மறுத்தும், பாபா பிடிவாதம் பிடித்தாராம். கடைசியில் அந்த அம்மாள் பாட ஆரம்பித்தபோது, தானா இவ்வளவு சுகமாக, சரியாகப் பாடுகிறேம் என்று ஆச்சரியமே ஏற்பட்டு விட்டதாம்!

நூலாசிரியருக்குத் தெரிந்தே முன்பு கர்ண கடூரமாகவும், லய ஞானமின்றியும் பாடிய சிலர் ஒரு சில மாதங்களிலேயே வெகு அழகாக பஜன் பாடும் திறன் பெற்றிருக்கிறார்கள். நெய்வேலியில் உள்ள எழுத்தோவியர் ஸ்ரீ ஆனந்த் இசைக்கு எட்டாத் தொலைவில் இருந்த தம்மை இன்று பாபா பாட்டுவித்து வரும் அற்புதத்தை உருகிக் கூறுகிறார்.

இன்னம் அநேகருக்குச் சபைக் கோழைத்தனத்தைப் போக்கி, கம்பீரமாகப் பரமனைப் பாட வைத்துள்ளார்.

நாம ஸங்கீர்த்தனமே பிரேம மார்க்கத்தின் பிரம்மாஸ்திரம் என்று கூறும் ஸ்வாமி அந்த அஸ்திரத்தை எய்யக் கூடிய பஜனை விரர்களையும் உண்டாக்கத்தானே வேண்டும்?

எத்தனை பஜனை பத்ததிகள் இருப்பினும், ஸாயி பஜனின் மதுரக் கவர்ச்சி அலாதிதான்!

* * *

'காதுபிர் ஜ்யேஷ்ட:' (கானம் செய்வோரில் முதல்வன்) என்ற வேத வர்ணனைப்படி அவரே அமுதகானத்தை வாய்ப் பாட்டிலும், வீணையிலும், குழலிலும் இசைப்பவர். பிரபஞ்சங்களை லய கதியில் பிசகாது செலுத்துபவர் கஞ்ஜிரா போன்ற லய வாத்தியங்களிலும் தம் சதுரத்தைக் காட்டியிருக்கிறார். இந்நூல் நெடுக அவர் 'கானலோல ப்ரபு' என்பதற்குச் சாட்சியங்கள் பார்த்திருக்கிறோம். பஜன்கள் பல இயற்றி அருமையாக மெட்டு அமைத்து நமக்குத் தந்திருக்கிறார். ஆதியில் ஸ்ரீமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மியின் மெட்டு ஒன்றில் 'மாதவ முரஹர மதுர மனோஹர கிரிதர கோபாலா'வைத் தொகையறுக்கள் உட்பட வெகுந்துக் கட்டிய பகவான், 1968 சிவராத்ரியில் ஸ்ரீமதி லதா மங்கேஷ்கரின் மெட்டொன்றை அநுசரித்து 'சிவ லிங்கா மங்களாங்கா ஸ்ரீ கங்காதரி லிங்கா' என்று தேனூறப் பாடி ஆயிரமாயிரவரை ஆச்சரியானந்தத்தில் ஆழ்த்தினார்.

''தாண்டவ கேளி சல்பெனு பரமேச்வருடு ஸ்ரீ ஸாம்பசிவுடு' என்பதாக பிரு ஸுகு பொருந்திய அஷ்டராகமாலிகையாக மோஹனம், கேதாரகௌளை, புந்நாகவராளி, வஸந்தா, அடாணு, ஷண்முகப்ரியா, பேகட, ஸுரடி ராகங்களில், நடனச் சொற் கட்டுக்களையும் ஒரு மணி இழைத்து ஸ்வாமியே கிருதி இயற்றி, மோஹனக் குரலில் பாடியும் இருக்கிறார். பரமேசனின் விச்வ நடனத்துக்கேற்ப ராகமாலிகை ராகமாளிகையாக எழும்பும், இதிலே! நம் ஸ்வாமிக்கு வாக்கேயகாரர் பதவிதர இப் பாட லொன்று போதும். ஸாம்பிளுக்கு இரண்டே வரிகள் :

Koviloor Digital Library

ரமாதேவி கீதமு பாடக கமலஜுடு தாளமு ஸேயக
உமாதேவி கொலுவுளஹருடு பரீ பரீ பரி பரி
விதமுலுக (தாண்டவ கேளி சல்பெனு)

'செப்பிநட்லு சேஸ்தாரா?'விலிருந்து இன்று வரை பாபா எழுதி, தமது கல்லூரிகள் அல்லது பாடசாலை மாணவரைக் கொண்டு நடிப்பித்திருக்கும் நாடகங்கள் ஏராளம். அநேகமாகப் புராணங்களைத் தழுவியே எழுதுவார். அவற்றில் புராதனக் கருத்துக்களே அதிகம் இருக்கும். முன்பே சொன்னாற்போல் பேசுவதைவிட எழுதுவதில் அவர் தீவிர சம்பிரதாயவாதியாகத் தான் இருப்பார். (மரபுக்கு மாறாக ஆயிரம் பேசினாலும் பேசலாம்; ஆனால் ஒன்றைக்கூட எழுதி வைத்துவிடக் கூடாது—ஸஹஸ்ரம் வத, ஏகம் மா லிக— என்ற ஆன்றோர் நெறியையே கைக்கொள்கிறார் போலும்!)

ஏதோ மாணவர்கள் போடுகிற நாடகம் என்று அலட்சியமாக இராமல் பாபாவே உடனிருந்து இயக்குவிக்கும் சிரத்தை அதிசயமானது.

'பஜகோவிந்த'த்தை அடிப்படையாக வைத்து எவரோ எழுதிய சாரமற்ற நாடகத்தை ஸ்வாமியின் ரஸவாதக் கையாளல் நவரஸக் கொழிப்பாக்கிவிட்டது. இங்கே தமது கதை—வசனத் திறனைக் காட்டியவர், மேடை ஏறியே அறியாத ஒரு மாணுக்கனை ஆதி சங்கரராக வேடமிட்டு அற்புதமாக நடிக்க வைத்துத் தமது டைரக்டிங் திறமையையும் நிரூபித்தார்.

இன்னொரு நாடகத்தில் முஸ்லிம் மாணவன் ஒருவனைக் கண்ணனாகவும், கிறிஸ்தவ மாணவர் இருவரை பீம அர்ஜுனர்களாகவும் அருமையாக நடிக்கச் செய்து ஸர்வமத ஸமரஸத்தை ரஸமாகப் பொழிவித்தார்.

அட, அத்தியாயத் தொடக்கத்தில் கண்ட எம்மத சம்மதத்துக்கே திரும்பிவிட்டோமே!

ஆம், ஸர்வமத ஸமரஸ குருவாக அவர் இருப்பதில் ஓர் அம்சந்தான் அவரது கலாவிநோதம்.

* * *

இனி அவரே ஸர்வ குருமார்களாகவும் இருப்பதைக் கொஞ்சம் காண்போம்.

ஆதி குரு தக்ஷிணாமூர்த்தியாகவும், கீதாசாரியக் கண்ணனாகவும் அவர் பல பக்தர்களுக்கு இருக்கிறார். வெள்ளையரான பரம பக்தருக்கு அவரே கிறிஸ்து. ஈழவாசியர் பலருக்கு அவர் புத்தர். ஜாகர்த்தாவில் நகர ஸங்கீர்த்தனம் செய்வோரில் உள்ள முஸ்லிம்களுக்கு அவரே நபிகள் நாயகம். நவஸாரியில் சமணருக்கான மஞ்சள் நிற சூர்ணத்தைப் படத்திலிருந்து பொழிந்து, பலருக்கு மஹா வீரராகவும் ஆகியிருக்கிறார். தில்லி, பஞ்சாப், ஹரியானாவில் அவருக்காகத் திரளும் ஸிக்கியருக்கு அவரே நானக்.

Koviloor Digital Library

பரமஹம்ஸரின் நேர் சிஷ்டரான மஹாபுருஷ்ஜியிடம் உபதேசம் பெற்ற ஸ்ரீ கஸ்தூரி, அந்தப் பரமஹம்ஸரே தம்மைக் கையும் மெய்யுமாகப் பிடித்து வந்து பிரசாந்தி நிலயத்தில் விட்டுச் சென்றதாக நம்புகிறார்.

விவேகாநந்தரே தம்மை ஸூக்ஷ்மத்தில் காத்து வருவதாக உணர்ந்த யோகினி இந்திரா தேவி, இன்று அவ் விவேகாநந்தரை நம் ஸ்வாமிக்குள்ளேயே கண்டுகொள்கிறார்.

அரவிந்த யோகம் பயின்ற டாக்டர் கோகக் இன்று அந்த அரவிந்தமும் 'தாமரைப் பூங்காடனைய' நம் ஸ்வாமியில் மலர்ந்த புஷ்பமே எனக் கருதுகிறார்.

அமிருதாநந்தருக்கு இவரே ரமண பகவான். அபேதாநந்தருக்கோ இவரே தாமாகவும் ரமணராகவும் மாறி மாறியும், பிறகு இரண்டும் ஒருச் சேர்ந்தும் தரிசனம் நல்கி இருக்கிறார்.

ஷிர்டி பாபா நூறு சதமும் நம் பர்த்தி நாதன் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

ஷிமோகா ராமாநந்தராவுக்கு சாக்ஷாத் அவரது குருவாம் (கன்ஹன்காட்) ஸ்ரீ ராமதாஸாகவே ஸ்வாமி தரிசனம் தந்திருக்கிறார்.

'நமக்கென மத்தூர் குருவிருக்க இந்த ஸாயி ஸங்கத்தில் வந்து மாட்டிக்கொண்டோமே!' என்று மனத்துள் குழம்பியபடி ஸ்வாமியை நமஸ்கரித்த பெங்களூர் நபர் ஒருவரிடம், ''உன் நமஸ்காரம் மத்தூர் குருவைச் சென்றடைந்து விட்டதப்பா'' என்று குறும்புடன் கூறியிருக்கிறார்.

அனைவருக்கும் ஒரே சித்தாந்தத்தை, சாதனையைச் சகட்டு மேனியாக விதிக்காமல் எல்லாச் சமய சம்பிரதாயங்களையும் அததற்குரியவர்க்கு போதித்து, அவற்றில் மக்களை ஈடுபடுத்தி வரும் மஹா மஹா குரு நம் ஸ்வாமி.

''தம் வர்த்தலிர் அநுவர்த்தந்த ஏக இத்'' என்ற வேத வாக்குக்கிணங்க—

பாதை எலாம் அவன் பாதம் சேருது! உ–
பாதையற்(று) ஏக அபேதம் பொலியுது!

''யாதொரு தெய்வம் கொண்டீர், அத் தெய்வமாகி ஆங்கே'' என்ற உண்மையை ''ஸர்வ தேவ ரூபா!'' என்ற அதிகாரத்தில் கண்டாற்போலவே, யாதொரு குருவும் நம் ஸத்ய ஸாயி என்று நிரூபிக்கப் பட்டியலை நீட்டிக்கொண்டே போகலாம்.

மற்ற குருமாரும் தாமே ஆயினும், அவர்கள் செய்யும் அருளைத் தாமே புரிய முடியுமாயினும், ஸ்வாமி மற்ற குருமார்

Koviloor Digital Library

களின் சிடர்களில் தம்மிடம் வருவோரை யெல்லாம் தமது இந்த ரூபத்திலேயே ஆட்படுத்தி விடுவதில்லை; தம்மிடம் வந்த பின்பும் அவர்களில் பலர் அந்தந்த குருக்களையே ஆசிரயிக்குமாறு செய்கிறார் என்பது அழுத்திக் கூற வேண்டியதோர் உண்மை. மிராகின் காட்டி, ஏனைய குருமாரின் சிடரை பாபா இழுத்துக் கொள்கிறார் என்பது ஆதாரமில்லாத குற்றச்சாட்டு.

உள்ளே எல்லா குருக்களும் ஒன்றே எனினும், வெளியில் ஒவ்வொருவருக்குமான குரு முன்பே நிர்ணயமாகியிருப்பதை, "அபுலா பாப் தோ அபுலா பாப்" (அவனவனுக்குத் தன் தந்தை ஒருத்தனே தந்தை) என்று பொருள்படக் கூறுவாராம் ஷிர்டி பாபா. அதனால்தான் அவரே பர்த்தி பாபாவாக உருவம் கொண்ட பின்னும் ஷிர்டி மூர்த்தி என்ற வெளி ரூபத்துக்கென மட்டும் நிர்ணயமானவர்களையும் அந்த ரூபத்தாலேயே ஈர்த்து வருகிறார். பர்த்தி பாபா இவ்வுண்மையை மற்ற குருமார் விஷயத்திலும் செயலில் காட்டியிருப்பது பன்முறையாகும்.

இவரிடம் தமது விசுவாசத்தைப் பகட்டாகப் பிரகடனம் செய்த அமெரிக்க இளைஞர் ஒருவரிடம், "என்ன டியர் கதைக்கிறாய்? உன் குரு பெங்களூரில் அல்லவா இருக்கிறார்?" என்று கேட்டார் ஸ்வாமி. அப்போது பெங்களூரில் இருந்த அந்த குருவான ஸ்ரீ மஹேஷ் யோகியிடமே அவரை அனுப்பி வைத்தார்.

யாழ்ப்பாணத்தில் ஒரு மகானின் பெயரிலான நிறுவனங்களை நிருவகித்து வரும் பண்பு மிக்க தமிழ்த் தம்பதியர் ஸத்ய ஸாயியிடம் ஈடுபடத் தொடங்கியவுடன், அவர்களைச் சேர்ந்தோர், 'நம் குருவை இவர்கள் விட்டு விடுவரோ?' என சம்சயித்தனர். ஆனால் நம் ஸ்வாமி இத் தம்பதியரை அம் மகானின் சேவையிலேயே நிலைநிற்கச் சொல்லி, அவரது நிறுவனங்களில் இவர்களுக்கு ஏற்பட்டிருந்த பலவிதமான சிரமங்களையும் தாம் போக்கி, அருளி, அப் பணியில் இவர்களை மேலும் ஊக்குவதாகக் கூறினாராம். இதை அவர்களே வெகுவாக வியந்து நூலாசிரியரிடம் கூறியுள்ளனர்.

ராமகிருஷ்ண மடத்துப் பிரம்மசாரி ஒருவர் 'காலிக்' என்ற வயிற்று உபாதியுடன் பிரசாந்தி நிலயத்துக்கு வந்து அது தீரப் பிரார்த்தித்தபோது ஸ்வாமி "இதற்காகவா குருமஹராஜை (ராமகிருஷ்ணரை) விட்டு இங்கு வந்தாய்? குருமஹராஜால் இதைத் தீர்க்க முடியாமல் போய்விடவில்லை. நீ செய்யும் தியானம்தான் சரியில்லை. போ. போய் குரு மஹராஜையே நம்பிக்கையுடன் தியானி. அவரே நோயைத் தீர்ப்பார்" என்றார். (1965-ல் அமலாபுரத்தில் ராமகிருஷ்ணர், சாரதா மணி தேவி, விவேகாநந்தர் திரு உருவப்படங்களை ஸ்வாமியே திறந்து வைத்திருக்கிறார்.)

சொந்த அநுபவத்தையும் சொல்லியே ஆக வேண்டும். ஸ்வாமியை ஆசிரயித்த பின்தான் நூலாசிரியனுக்கு ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்களின் பரமாத்மத்வத்தில் பரிபூர்ண உறுதிப்பாடும்,

Koviloor Digital Library

அவர்களைப் பற்றி எவ்வித எதிர்க்கேள்வியும் எழுப்பாமல் அடங்கிக் கிடக்கும் ஆழ்ந்த மரியாதையும் ஏற்பட்டுள்ளன.

* * *

அத்வைத குருவான ஸ்ரீ கௌடபாதர், "மற்ற சம்பிரதாயத்தார் பரஸ்பரம் விரோதித்துக் கொண்டாலும், நமக்கு எவரிடமும் விரோதம் இல்லை" என்றார். பரஸ்பரம் விரோதித்துக் கொண்ட பல குருமார்களும் இப்போது ஒன்றுசேர்ந்து பாபாவை ஏகமனதாக விரோதித்து எதிர்ப் பிரசாரம் செய்கிறார்கள். ஆயினும் பெருந்தன்மைக்கும், மனோ விசாலத்துக்கும் மஹா பாஷ்யமாக விளங்கும் நம் பாபாவுக்கு அவர்களிடம் லவலேசம் காழ்ப்புக் கிடையாது.

* * *

மற்ற குருமார் பலர் பாபாவிடம் வருகையில் அவர் காட்டும் உத்தமப் பண்பை எவ்வளவு போற்றினாலும் தகும். இவர்களில் சிலர் அந்தரங்கப் பேட்டியில் தம் தவறுகளை ஸ்வாமி கண்டித்ததையும் பணிவுடன் வெளியிட்டுள்ளனர். ஆனால் ஸ்வாமியாக வாய் திறந்து மற்றவர்களிடம் இவர்களைக் குறை கூறிப் பேசியதில்லை. நாம் 'உத்தமப் பண்பு' என்றது இது மட்டுமல்ல. மேற்படி குருமார் ஸ்வாமியிடம் வருகையில் அவருக்குத் தண்டவிடுகிறார்களா என்று பார்ப்பதில் ஸ்வாமியின் பரிஜனங்கள், அந்த குருமாரின் பரிஜனங்கள் ஆகிய இரு சாரா ருக்கும் இரு வேறு விதமான கவனம் இருக்குமல்லவா? ஸ்வாமியோ அபார சாமர்த்தியத்துடன் அவர்கள் வணங்க வில்லையே என்று தமது பார்ஷதர்கள் குறைப்படாதவாறும், வணங்கிவிட்டனரே என்று அவர்களது பார்ஷதர்கள் குறைப் படாதவாறும் சமாளிப்பார். என்ன செய்வாரெனில், அறையில் கிக்கிடமான ஓர் இடத்தில் அமர்ந்து கொண்டோ, அல்லது ஃபர்னிச்சரையும் பரிஜனங்களையும் தம்மைச் சூழ அமைத்துக் கொண்டோ, அந்த ஸ்வாமியார்களே ஆசைப்பட்டாலுங்கூட, விழுந்து வணங்க முடியாத இட நெருக்கடியை உண்டாக்கி விடுவார். "மானதன், மானதன்" (கௌரவத்தைக் காப்பவன்) என்று மீரா தெரியாமலா பாடினாள்? தம் அடியாரின் மானாபி மானம் போக்குபவரே, ஒரு நிலையில் கௌரவப் பிரச்னை கொண்டிருப்பவர்களையும் மதித்து அதற்கிசைய நடத்துகிறார்.

★

இதனால் போலி குருமாரைப் பற்றி பாபா மக்களுக்கு எச்சரிக்காதிருக்கிறார் என்று அர்த்தமில்லை. வழிகாட்டியாக நடக்க வேண்டிய குருமாரில் பலரே போலியாக இருப்பது, மற்ற ஜனங்களின் 'ஹிபாக்ரிஸி'யைவிட மாபாவம் ஆகும் எனச் சாடுவார். பெயர் குறிப்பிடாமலே சாடுவார். சொல்வார்:

"இக்காலத்தில் நாம கீர்த்தனத்தின் மூலம் பகவானையே சுலபமாகப் பிடித்து விடலாம். ஆனால் பய பக்தி, விநயம்,

Koviloor Digital Library

விசுவாஸம் உள்ள சீடனைக் கண்டுபிடிப்பதுதான் இப்போது சிரமசாத்தியமாகி யிருக்கிறது. அதேபோல் உண்மை ஞானமும், ஒழுக்கமும், கருணையும் உள்ள குருமாரைக் காண்பதும் அரிதாகி யிருக்கிறது.''

''தாம் போதிக்கும் விஷயங்களில் தாமே ஸ்வாநுபூதி பெறாத குருமார்கள் — பெற இயலாத குருமார்கள் — மலிந்து வருகின்றனர். இவர்கள் ஆச்ரிதர்கள் (தங்களை அடைந்த சீடரை)ப் பேணுவதைவிடத் தங்கள் ஆச்ரமங்களைப் பேணிப் பெரிதாக்கிக் கொள்வதிலேயே குறியாக உள்ளனர். இவர்களை அடைபவர்கள் நாளடைவில் இவர்களிடம் மனம் சலிப்புற்றாலும், குருவை விடுவது துரோகமாகுமோ என்று கலங்குகிறார்கள். நான் சொல்கிறேன்: குரு யோக்கியதை அற்றவர் என்று தெரிந்தால் அவரை விடுவதில் தவறே யில்லை. குரு தந்த மார்க்கத்தையே நம்பிக்கையுடன் விடாமல் பற்ற வேண்டும் என்பதுதான் சாஸ்திரங்களின் சரியான அர்த்தமே தவிர, குருவையே அவர் குரு ஸ்தானத்துக்கு லாயக்கற்றவர் ஆயினும் பற்ற வேண்டும் என்றல்ல. எந்த குருவானாலும், அவர் தந்த மந்திரத்தையோ, பூஜா முறையையோ, யோக ஸாதனை யையோ விடாமல் பின்பற்றுங்கள். பலன் காண்பீர்கள். மாறாக சுயநலமிகளான குருமாரையே பற்றி, அவர்களிடம் நெருக்கம் பாராட்டினால் நீங்களும் அத்யாத்ம மார்க்கத்தில் தாழ்ந்து போக நேரிடலாம். தற்போதுள்ள அநேக குருமார்களைக் காண்கையில், 'குருர் பிரம்மா, குருர் விஷ்ணு:, குருர் தேவோ மஹேச்வர:, குரு: ஸாக்ஷாத் பரப்பிரம்ம' என்பதற்கு ஒரு புது அர்த்தம் செய்து கொள்ள வேண்டும் என்றே தோன்றுகிறது. அதாவது குருவை மும்மூர்த்தியாகவும், மூன்றுமான பரம்பொருளாகவும் எண்ணுவதற்குப் பதில், மும் மூர்த்திகளில் ஒருவரையோ,அல்லது பரம்பொருளையோ குருவாகக் கருதிப் பிரார்த்தித்தால் அவர்களே அப்படி வந்து உபதேசிப்பார்கள் என்று பொருள் கொள்ளத் தோன்றுகிறது.''

அமெரிக்காவிலுள்ள ஏராளமான பக்தர்கள் ஸ்வாமியைப் பல்லாண்டுகளாக வருந்தி வருந்தி அழைத்தும் அவர் அந் நாட்டுக்குச் செல்லாததற்கு ஒரு காரணம், 'இண்டியன் ஸாதுஸ்' என்றாலே பணம் பறிக்க வருகிறார்கள் என்ற அபிப்பிராயமும் அமெரிக்காவில் பரவலாக ஏற்பட்டிருப்பதுதான் எனத் தெரிகிறது.

''ஆச்ரமங்களிலும், கல்விச் சாலைகளிலும் மெய்யான குருமார் தோன்ற வேண்டும். போதிப்பதைத் தமது சொந்த வாழ்வில் செய்து காட்டுவதுதான் குரு லக்ஷணம். சிஷ்யர்கள், மாணவர்களின் லக்ஷணம் இப்படிப்பட்ட யோக்கியதை பெற்றவர் களிடம் அடங்கியிருந்து, தாம் பயிலும் சாதனை அல்லது கல்வி யிடத்தும் அடக்கம் காட்டுவதேயாகும். வித்தையும் விநயமும் சேர்த்துச் சேர்த்தே நம் சாஸ்திரங்களில் பேசப்படுகின்றன. ஆனால் இப்போதோ ஒழுங்கான குருமாரைக் காண முடியாதது போலவே ஒழுங்கான சீடரையும் காணமுடியவில்லை. மக்களுக்கு விநயம்போய் அகங்காரமே அதிகரித்து வருகிறது. விநயம்

Koviloor Digital Library

போன இடத்தில் உண்மை வித்யை பிறவாது. வித்யார்த்தியாக இருக்க வேண்டிய மாணவனும் ஸாதகனும் புலநுகர்ச்சிகளையே தேடும் விஷயார்த்திகளாகவே உள்ளனர். குருமாரிலும் அநேகருக்குப் பொருள் முதலான பற்றுக்கள் போகாததால் அவர்கள் சீடரை இழக்கத் துணியாமல், கண்டிக்காமலே இருக்கிறார்கள். அதுவுமன்றி சொந்தத் தூய்மை இன்றிக் கண்டிக்க வாய் ஏது?''

தற்காலத்தில் சில குருமார்கள் சீடர்களைக் கண்டித்து நல்வழியில் திருப்பத் தயங்குவதை பாபா ஆட்சேபிக்கிறார். சீடர்களுக்கு அகங்காரம் மூளாமல் காப்பது குருவின் தலையாய பணி என்று கருதுகிறார். இதனால்தான் ''புகழ்'' என்ற மயக்கு மோகினியைக் காட்டிச் சீடரின் அகம்பாவத்தை வளர்ப்பதை வன்மையாகச் சாடுகிறார். ''உண்மையில் ஒரு குரு சீடர்களுக்குப் பட்டம் தந்து உயர்த்தும்போதுதான், அவர்களை அகம்பாவத்துக்கு ஆளாக்கி மிகவும் தாழ்மட்டத்திற்குத் தள்ளிவிடுகிறார். சீடர்களுக்குப் பட்டம் கொடுக்கவே கூடாது'' என்பார்.

கடுமையாகத் தோன்றினாலும் ஒப்ப வேண்டிய மஹா வாக்கியந்தான். பட்டம் பெறுவது எத்தனை அகந்தைக்குக் காரணமாகிவிடுகிறது — உள்ளூறவேனும்? பாபா இதுவரை எவருக்கும் பட்டம் தந்ததில்லை. ஒருவர் செய்த நல்ல காரியத்தில் மகிழ்ந்து மனமார அவர் இரண்டு வார்த்தை சொல்லி, தட்டிக் கொடுப்பதே ஆயிரம் பட்டத்துக்கு மேல். இது அகந்தை ஊட்டாமல் உருக அல்லவா செய்யும்?

குரு-சீடர் இருவரும் சரியில்லை என்கிறாரே! அப்படியானால் எதிர்காலத்தில் நம்பிக்கை இழக்க வேண்டியதுதானா? வேண்டாம், வேண்டாம். இன்னமும் ஸத்குரவர் பலர் இருப்பதையும், ஸன்மார்க்கத்தைத் தொட விழையும் சீடர் பலர் இருப்பதையும் ஸ்வாமி கூறுகிறார். அவர் எதிர்காலத்தில் நம்பிக்கை இழக்கவில்லை. அது அவதார லக்ஷியத்துக்கே விரோதமாயிற்றே! ''குரு வடிவாகிக் குவலயம் தன்னில் திருவடி வைத்து'' நம் அவதாரன் புரிந்துள்ள அற மறுமலர்ச்சியில் நாமும் உத்சாகம் உத்வேகம் பெற்று, இனி ஐயனை அற வடிவனாக அநுபவிப்போம்.

Koviloor Digital Library

அத்தியாயம்—53

தர்ம ஸாயி

"எப்போதெப்போது தர்மத்துக்கு நலிவும் அதர்மத்துக்குப் பொலிவும் உண்டாகின்றனவோ, அப்போதப்போதும் என்னை நானே அவதரிக்கச் செய்கிறேன் ... தர்மத்தை நன்கு நிலைநாட்டவே நான் யுகந்தோறும் பிறப்பெடுக்கிறேன்."

— கீதையில் கண்ணன் (4–7, 8)

அறம் தலை நிறுத்தி, வேதம் அருள் சுரந்து அறைந்த நீதித்
திறம் தெரிந்(து), உலகம் பூணச் செந்நெறி செலுத்தி, *தீயோர்
இறந்(து) உகநூறி, தக்கோர் இடர்துடைத்(து) ஏக, ஈண்டுப்
பிறந்தனன்—தன் பொன்பாதம் ஏத்துவார் பிறப்(பு)
அறுப்பான்.

— கம்பராமாயணம்; சுந்தர காண்டம்
(ராவணனிடம் அநுமன் வசனம்).

கிணறு நீர் கொடுப்பதில் வியப்பதற்கென்ன இருக்கிறது? கிணறு வெட்டியதே நீருக்காகத்தானே? நம் ஸ்வாமியின் தர்ம மகா திருப்பணியில் வியக்க என்ன உள்ளது? அவதாரம் என்பதே தர்ம ஸம்ஸ்தாபனத்துக்குத்தானே? 'தருமப் பயிர் வாழத் தருண மா மழையாக' வந்தவரே அவர். அவர் இப்படி வாழப்போவதைத்தானே பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே ரிஷிகளின் நாடிகள், "வாழ்நாள் முழுதும் தருமப் பிரசாரம் செய்வார் . . . அறத்தை நிறுவுவதே பிறவிப் பணியாகக் கொள்வார் . . . அன்பு, அருள், ஒளி (ஞானம்) மூலம் நித்திய ஸத்யத்தை நிலைநாட்டுவார்" என்றெல்லாம் முரசறைந்திருக்கின்றன!

***தீயோரை இறந்து உக நூற மட்டும் நம் ஸாயிராமனுக்குத் தெரியாதுதான்.**

Koviloor Digital Library

இன்று கலி பாபம் எவ்வளவு மண்டியிருப்பினும், தனியொருவரான ஸ்வாமியால் நவ கண்டங்களிலும் ஆன்மிகம், ஆஸ்திகம், அறநெறி ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள புது விழிப்பு பிரமிப்பூட்டுவதுதான். அதுவும் அவர் ஸ்தூலமாகச் செல்லா இடங்களிலும், ஸாயி தர்மமாக சாசுவத தர்மம் தழைத்து வருவதுண்டே! பர்த்தியில் தொடங்கி, பாரதத்தில் பரந்து, இன்று பாரெல்லாம் ஒப்பும் உயர்வுமின்றிக் கப்பும் கிளையுமாகப் பரவி விட்டது ஸாயி விருக்ஷம்—தருமத் தரு! கொண்டம ராஜுவின் கனவில் பாமை எதிர்பார்த்த கற்பக பாதபம்!

* * *

இந்தியாவிலேயே இதுகாறும் அவர் சென்றிராத வங்கம், அஸ்ஸாம், நாகாலாந்து, மேகாலயா, அருணாசலப் பிரதேஷ் முதலிய பகுதிகளில்தான் அவர் மகிமை வீட்டுக்கு வீடு சுடர் விட்டுப் பிரகாசிப்பது ஓர் அதிசயம். அதுவும் இவர்களில் தங்கள் மத வழக்கங்களைத் தவிர மற்றவற்றை விரோதமாகவே எண்ணும் பழங்குடிகள் 'ஸாயிராம் ஸாயிராம்' என்று ஸ்வாமியிடம் ஆழங்காற்பட்டிருப்பதைப் பிரபுவின் ஆழங்காணவொண்ணு அன்புச் சக்தியின் வெற்றியாகவே சொல்ல வேண்டும். இவ்விடங்களுக்குச் சென்று வந்த ஸாயி பக்தரொருவர் கண்ட காட்சிகள்:

நாகாலாந்தில் வாண்டுகள் விளையாடும்போது, ''ஸத்ய ஸாயி ராம்'' என்று சொல்லிக்கொண்டே குழிக்குள் கோலிக் குண்டைப் போட்டது; டார்ஜிலிங் மிருகக் காட்சி சாலைப் பணியாள், ''ஓம் ஸ்ரீ ஸத்ய ஸாயி ராம்'' என்று ஜபித்துக் கொண்டே குப்பை கூட்டியது; தக்ஷிணேச்வரத்தில் ஸ்ரீ ராம கிருஷ்ணர் வழிபட்ட பவதாரிணியின் சந்நிதியைச் சுற்றி பஜனை செய்து வந்த கோஷ்டி,

ஜேய் ஸாயிராம் ஜேய் ஸாயிராம்
ஜேய் ஸாயிராம் ஜேய் ஜேய் ராம்
ஜேய் ஸாயிராம் ஜேய் ஜேய் ராம்

என்று உச்ச ஸ்தாயியில் உணர்ச்சி பொங்கப் பாடியது!

உலக நாடுகளைச் சுற்றி வந்தவர்களும் இவ்வாறே எதிர் பாராத தூர தூர இடங்களில் பாபா படம், ஸாயி பஜனை, இவற்றுக்கெல்லாம் மேலாக அவர் கூறும் வழி நிற்றல் ஆகியவற்றைக் கண்டு வந்து புளகமுற்றுக் கூறுகிறார்கள்.

முன்பு இந்தியாவிலேயே பாபாவைப் பற்றி நல்லபடியாகக் கேள்விப்படாததால் அவரைத் தரிசிப்பதில் ஆர்வம் குன்றிப் போன இந்திரா தேவி, அடுத்து ஸைகோனுக்குச் சென்றால் அங்கே பாபா மகிமையே பரக்க ஓதப்பட்டு இவ்வம்மையைப் பர்த்திக்கு பறக்க வைத்தது!

ஹவாயில் விட்டுக் கூரை ஒட்டும் தச்சர்கள் ''ஸாயி ராம், ஸாயி ராம்'' என்று சொல்லிக்கொண்டு தார் ஊற்றிய விந்தையைக் கண்டிருக்கிறார் ஸ்ரீ கோகக்.

Koviloor Digital Library

தென் கிழக்காசிய நாடுகளிலிருந்து ஒரு பெரிய ப்ளேனையே அமர்த்திக்கொண்டு ஓர் அந்நிய கோஷ்டி பிரசாந்தி நிலயத்துக்கு வந்திருக்கிறது.

டான்ஸானியாவில் டாக்டர் தீராத நோவுகளுக்கும் ''ஸாயி ராம் மிக்ஸ்சர்' என்று கூறி பாபாவின் திருநீற்றை நீரில் இட்டுத் தருகிறார்.

ட்ரினிடாட் தேசக் குழந்தைகள், ஸ்வாமி அஹிம்ஸாவாதி என்பதால் தாங்களும் புலால் மறுத்துப் பிரதிக்ஞை செய்கின்றன!

வேதத்தில் 'தன் புகழைத் தானே 'ஸூபர்லேடிவ்'வாக உயர்த்திக்கொள்பவன்'—ஸ்வயசஸ்தரம்'—என்று இறைவனுக்கு ஓர் அருமையான அடைமொழி உள்ளது. முன் அவதாரங்களை விட, தமது அவதார காலத்திலேயே, நாடிச் சுவடி சொன்னாற் போல், 'அகிலத்தார் பிதாவாக' ஒளிரும் ஸத்ய ஸாயி ''ஸ்வயசஸ்தரர்''தாம்!

★

இன்று சர்வ தேசங்களிலும் ஸாயி பக்தர் உள்ளனர். ஸ்தாபன ரீதியிலேயே 45 நாடுகளில் ஸத்ய ஸாயி ஸேவா ஸமிதியின் ஏழாயிரம் கிளைகள் பணியாற்றி வருகின்றன என்பது நம் தோள்களை வெள்ளி மலையெனப் புடைக்க வைக்கும்.

ஸ்வாமியின் தர்ம ஸம்ஸ்தாபனத்துக்கென அமைத்த முதற் பெரும் ஸ்தாபனம் இந்த ஸமிதிதான். கையின் ஐந்து விரல்கள் போல் ஸமிதியின் ஐந்து அங்கங்களாக உள்ள பால விகாஸ், பூர்வாங்க சேவாதளம், சேவாதளம், மஹிளா விபாக், பஜன் மண்டலி முதலியவற்றின் பணிகளை ''பிரேம ஸாயி'' என்ற அத்தியாயத்திலேயே குறிப்பிட்டிருக்கிறோம்.

சிறு குழந்தைகள் பால விகாஸில் பயிற்சி பெறுகின்றனர். பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு ஸ்வாமி 'குரு' என்ற புனிதப் பெயர் கொடுத்து, முதலில் இவர்களது ஒழுக்கத்தைக் கண்டிப்புடன் விதிக்கிறார். பால விகாஸ் குழந்தைகள் ஒன்றுக்கொன்று 'ஹலோ' சொல்லிக்கொள்ளாமல், 'ஓம்' என்று முகமன் கூறிக்கொள்வதே ஓர் அழகு. எழுத்துக்களைச் சொல்லிக் கொடுக்கும்போது, ஒவ்வோர் எழுத்திலும் தொடங்கும் ஓர் உத்தம புருஷனின் படத்தையும் (அதன் மூலம் கதையையும்) கொடுக்கும் அரிச்சுவடிகளை ஸ்ரீ காஞ்சிப் பெரியவர் தொடக்கி வைத்தாரல்லவா? இதே போல், 'அரிச்சுவடி'யின் பேருக்கேற்ப ஹரியின் பாதங்களைக் காட்டிக்கொடுக்கும் சமயப் பண்பாட்டு நூல்கள் பால விகாஸ் குழந்தைகளுக்கு போதிக்கப்படுகின்றன. தாய் தந்தையரிடம் மரியாதையாய் இருப்பது, அனைவரிடமும் நயமுறப் பழகுவது, சாலைகளில் இடப்புறமே நடப்பது போன்ற விதிகளில் கட்டுப்பட்டொழுகுவது, ஆலயங்களில் கிரமப்படி வழிபடுவது—ஆகியவற்றில் பாலர்கள் பழக்கப்படுகிறார்கள்.

Koviloor Digital Library

முக்கியமாக நிறைய பஜன்கள் கற்றுக்கொள்கிறார்கள். புராண, இதிஹாஸங்களிலிருந்தும், மகான்களின் சரிதங்களிலிருந்தும், உபநிஷதங்களிலிருந்தும் ஸ்வாமியே தேர்வு செய்து எழுதியுள்ள நாடகங்களை இக் குழந்தைக் கலைஞர்கள் அரங்கேற்றுகிறார்கள். பொம்மைக் கோயில் கட்டுகிறார்கள். பம்பாயில் கல்வியாளரும், மனோதத்வ ஆராய்ச்சியாளரும் இக் குழந்தைகளைப் பரிட்சித்துப் படிப்பு, பண்பு இரண்டிலுமே ஸாயித்வ ட்ரெயினிங் இவற்றுக்கு ஊட்டியுள்ள மேம்பாட்டுக்குச் சான்றிதழ் கொடுத்துள்ளனர்.

அடுத்த பருவத்தில் இக் குழந்தைகள் பூர்வாங்க சேவா தளத்தில் சேருகையில் பகவத் கீதையின் தேர்ந்தெடுத்த பகுதிகளைக் கற்கின்றனர். மகான்களின் துதிகளை மனப்பாடம் செய்கிறார்கள். முதலுதவி மருத்துவம் பயிலுகிறார்கள். நாடகப் பயிற்சி தொடருகிறது. சித்திர வேலை, புஷ்பாலங்காரம் முதலியவற்றில் தேர்ச்சி பெறுகின்றனர். பாபாவைப் பற்றியும், அவர் கூறும் கதைகளை மையமாகக் கொண்டும் இச் சிறார்கள் கணீரென்று மேடையேறிப் பிரசங்கம் செய்கையில், "பால் மாறாப் பால வாய் மூலம் நீ ஆத்ம சக்தி ஊட்ட ஆக்ஞையிட்டுள்ளாய்" (Out of the mouth of babes and sucklings hast Thou ordained strength") என்ற விவிலிய வாசகம் கண் முன்னே விரியக் காண்கிறோம். இப் பருவத்தில் குழந்தைகள் தியானத்திலும் ஈடுபடுத்தப்பெறுகிறார்கள்.

பதினெட்டு வயதானதும் (அசல்) சேவா தளத்துக்கு அநுமதிக்கப்படுகிறார்கள். அத்யாத்ம சாஸ்திரங்களில் பயிற்சி பெறுகிறார்கள். வழிபாடு, ஜபம், தியானம் முதலான சாதனைகளும் அப்பியசிக்கிறார்கள். தார்மிக நாடகங்கள் இப்போதும் தொடருகின்றன. பிரசங்கத் திறனும் அதிக மலர்ச்சி பெறுகிறது. ஸ்வாமி வெகுவாக வலியுறுத்தும் மக்கட் தொண்டே இவர்களுக்கு உயிர் நாடி என்பதை 'சேவா தளம்' என்ற பெயரிலிருந்தே ஊகிக்கலாம். தத்தம் ஊரையும் அடுத்துள்ள கிராமங்களையும் சுத்தப்படுத்துவதில் இவர்கள் சிறப்பான கவனம் செலுத்துகிறார்கள். சிறைச்சாலைகள், இளம் குற்றவாளிப் பள்ளிகள், ஆஸ்பத்திரிகள், சேரிகள், கல்விச்சாலைகள், ஹாஸ்டல்கள் முதலியவற்றில் இவர்கள் பஜனை நடத்துகிறார்கள். சென்ற வருடம் ஸ்வாமியின் பொன்விழாவின்போது, குக்கிராமமான பர்த்திக்குப் படை எடுத்த லக்ஷோபலக்ஷம் மக்களை இவர்கள் நிர்வகித்து, உணவு விநியோகித்ததும், கழிவுச் சுத்தம் செய்தது மட்டுமே போதும், இவர்களுக்கு நாம் தொண்டர் குலசேகரரென முடி சூட்டுவதற்கு!

மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டிய பருவம் இதுவே. வருங்கால உலகை ஆக்கப் போகிறவர்கள் இவர்களே. ஆதலால் தான் பாபா இவர்களை நல்வழிப்படுத்துவதில் கூடுதலான அக்கறை காட்டிப் பல கல்லூரிகளை நிறுவியிருக்கிறார். அவற்றை வெறும் பயிற்சிக் கூடம் என்ற பாலைவனங்களாக வைத்திராமல், தாமே அங்கு அடிக்கடி எழுந்தருளி, பொங்கும் சுனையான தம் அன்பை மாணவர்பால் நெருக்கிப் பெருக்கிச் சோலைவனங்களாக்குகிறார்.

Koviloor Digital Library

ஆண்களுக்காக பெங்களூர் புறநகரில் ஒயிட்ஃபீல்ட் எனப்படும் காடுகோடியிலும், மகளிருக்காக அனந்தப்பூர், ஜெய்ப்பூர், போபால் ஆகிய இடங்களிலும் ஸத்ய ஸாயிக் கல்லூரிகள் நடைபெறுகின்றன. இவ்விதம் தனித் தனியாக ஆடவருக்கும் பெண்டிருக்குமாக மாநிலத்துக்கு ஒரு ஸத்ய ஸாயிக் கல்லூரியேனும் நிறுவி ஆதரிச மாணவர்களை உண்டாக்கித் தர ஸ்வாமி திருவுள்ளம் கொண்டிருப்பதாகவும் தெரிகிறது. எதிர்கால தர்ம மூலம் இந்த ஸ்தாபனங்களே என்பதை உணர்ந்தால்தான், பாபா ஏன் இவ்வளவு அதிதப் பிரேமையுடன் விட்டுக் கொடுத்தும், தட்டிக் கொடுத்தும் கல்லூரி மாணவரை அரவணைக்கிறார் என்று புரிந்து கொள்ளலாம். (பெண்கள் பெண்ணாகப் பிறந்துவிட்டதாலும், அவர்கள் எவ்வளவுதான் பண்புக்கு விலகிப் போனாலும் அவர்களை இப் பாதைக்கு மீள ஈர்ப்பது எளிதாதலாலும் ஸ்வாமி அவர்களிடம் இவ் விசேஷமான 'சொந்த'த்தைக் காட்டுவதில்லை.)

அறபோதனை, ஆன்ம சாதனை, சமூக சேவை இவற்றில் இம் மாணவர் தேர்ச்சி பெறுவது மட்டுமின்றி, படிப்பிலும் முன்னணியில் நின்று பல்கலைக் கழகப் பரீட்சைகளில் முதலிடங்களைப் பிடிப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மாணவர்தாம் எத்தனை யெத்தனை காரியங்களை அருமையாகச் செய்கிறார்கள்? கூட்டங்களை ஒழுங்குபடுத்துவது, விழா நாட்களில் பிரசாந்தி நிலைய போஜனசாலையில் சமைப்பது, பரிமாறுவது, பிரசாதம் விநியோகிப்பது, ஒலி பெருக்கி—மின்சார ஜோடனை முதலியன செய்வது, பந்தல் போடுவது ஆகியவற்றிலும், மாணவிகள் ரங்கோலிகள் தீட்டுவதிலும் நிபுணர்களாக இருக்கிறார்கள். பஜன் பாடுவது பாபா பக்தரனைவருக்குமே கை வந்த கலை என்றாலும், இம் மாணவர்கள் பாண்ட் வாசிப்பதிலுமல்லவா சூரர்களாக இருக்கிறார்கள்? பட்சிகளையும், நாய்களையும், ஒட்டையையும் கூடப் பராமரிக்க இப் பையன்கள் அறிந்திருப்பது அதிசயம் தான். எத்தனை சமூகமாகக் கூட்டத்தினருக்கு உதவிகள் செய்கிறார்கள்? அவர்களது நடக்கையிலேயே என்ன அமரிக்கை? எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையூட்டும் தீபங்கள் — பாபாவின் பிரேமை நெய்யில் சுப்ரமாகப் பிரகாசிக்கும் தீபங்கள்!

அநேக இல்லங்களில் இளைஞர்கள்தாம் ஸாயியால் முதலில் ஈர்க்கப்பட்டு, ஸாயி தர்மத்தைப் புகுத்தியிருக்கிறார்கள். பாபா என்றால் என்னவோ ஏதோ என்று ஒதுங்கியிருந்த பெரியோர்கள், இச் சிறியவர்களாலேயே மெல்ல மெல்ல அவரது அன்புலகில் பிரவேசிக்கிறார்கள். பெற்றோர்கள் மக்களுக்கு வழிகாட்டுவதற்குப் பதில் மக்களே பெற்றோரை நல்வழியில் சேர்க்கிறார்கள். இதுவே சேவா தள இளைஞர் புரியும் தலையாய சேவை எனலாம்.

துயர் நீக்கிக் கிருதயுகந்
தனை உலகில் இசைக்க வல்ல
புத்தமுதாம் ஸ்ரீந்துமதப் பெருமைதனைப்
பாரறியப் புகட்டும் வண்ணம்

Koviloor Digital Library

இளைஞர் பலர் ஊக்கம் மிக்கார்,
உண்மையே தாரகமென் றுணர்ந்திட்டார்,
அன்பொன்றே உறுதி யென்பார்,
வண்மையே குலதர்ம மெனக்கொண்டார்,
தொண்டொன்றே வழியாக் கண்டார்,
ஒண்மையுயர் கடவுளிடத் தன்புடையார்,
அவ்வன்பின் ஊற்றத்தாலே
திண்மையுறும் ... சங்கமொன்று சேர்ந்திட்டாரே!

என்று பாட்டுக்கொரு புலவன் கவியிசைத்தது ஸத்ய ஸாயி ஸேவா தள இளைஞருக்கு மிகப் பொருத்தம்.

தர்மப் பயிருக்கு வைக்கும் அதி வீரிய எருவாகச் சொல்ல வேண்டும், கல்லூரி மாணவருக்கென பாபா கோடைக்காலத்தில் ஒரு மாத அளவு நடத்தும் ஆத்மிக—கலாசாரப் பயிற்சி முகாம்களை. பரத நாட்டியத்திலிருந்து, தேகாப்பியாசத்திலிருந்து பாதஞ்—ஜல யோகம், அத்வைத வேதாந்தம் வரையிலான எல்லா விஷயங்களையும் பாரதத்தின் தலைசிறந்த பேராசிரியர்களையும் பண்டிதர்களையும் கொண்டு இம் முகாம்களில் பாபா போதிக்கச் செய்கிறார். 1972, 73, 74 ஆண்டுகளில் முறையே முந்நூறு, ஐநூறு, ஐநூறு மாணவர்கள் அகில இந்தியாவிலிருந்தும் தேர்வு செய்யப்பட்டு இம் முகாம்களில் பயிற்சி பெற்றனர் ; நகர கீர்த்தனம் செய்தனர் ; சுற்றுப்புற கிராமங்களைச் சுத்தம் செய்தனர்; சாலை போட்டனர்; நாராயண சேவையில் அன்னம் பரிமாறினர். ஸாயிக் 'கடவுளிடத்து அன்புடையார், அவ்வன்பின் ஊற்றத்தாலே' தான் இவ்வளவும் செய்தனர். அந்த அன்புக் கடவுளும் அவர்களுக்குப் பஞ்சபட்சிய விருந்தும், ஐஸ்கிரீமும், குண்டு மல்கோவாவும் பிரதிவேளையும் படைத்தது. தன் தரிசனத்தைப் பொழிந்து அவர்களைப் பரிஜனங்களாகப் பெற்றது. ஸ்தூலமாகவே தர்மபோதனையும் தினந்தோறும் அருளியது.

துரதிருஷ்டவசமாக அங்கங்கும் பிரதேச பாஷைகளே கல்லூரி மட்டத்திலும் பயிற்று மொழியாகி, ஆங்கில அறிவு நலிந்து வருவதால் கடந்த ஈராண்டுகளாக இப்படிப்பட்ட மாபெரும் அகில இந்திய ரீதியிலான பயிற்சி முகாம் நடத்தப்படவில்லை. ஆனாலும் பிராந்திய ரீதியில் அந்தந்த மாநிலத்திலும் மாணவருக்குக் கலாசார போதனை நடந்து வருகிறது. இவ்வாண்டு உதகையில் ஒயிட்ஃபீல்ட், அனந்தப்பூர், ஜெய்ப்பூர், போபால் ஆகிய இடங்களிலுள்ள ஸாயிக் கல்லூரிகளின் மாணவருக்கு மட்டும் நடந்த கோடை முகாமில் ஸ்வாமியே உடனிருந்து, (ஸ்ரீ கஸ்தூரி நயமுறக் கூறுவதேபோல்) ''கோடை மழை''யாக அறவுரைகள், அறிவுரைகள் வருஷித்தார்.

முன்பே பிரஸ்தாவித்த ஒன்றை மறுபடி கூறுகிறோம். ஸ்வாமி மகளிர் கல்லூரிகள் நிறுவியுள்ள போதிலும் அவர்கள் பாரத ஸ்திரீதர்மங்களை மேற்கொண்டு கிருஹலக்ஷ்மிகளாக விளங்குவதையே உவக்கிறார். சமீபத்தில் அனந்தப்பூரில் ''ஹோம்

Koviloor Digital Library

ஸயன்ஸ்'' பிரிவைத் தொடங்கி வைத்தபோது, இயல்பாக நம் பெண்களுக்கு வீட்டிலே கைவரும் குடித்தனப் பணிகளுக்குத்தான் ''ஹோம் ஸயன்ஸ்'' என்ற பெத்தப் பேர் கொடுக்கப்பட்டிருக்கிறது என்கிறார். நூலாசிரியன் கருத்தில், அவர் பெண்கள் கல்லூரி நிறுவியிருப்பது, இது ஒரு necessary evil — ஆகிவிட்டது என்ற உணர்வில்தானே எனத் தோன்றுகிறது!

(கல்லூரிக்கு வருவதற்குள்ளேயே சிறுவருக்குள் கலி ஊறி விடுகிற காலமாகிவிட்டது! எனவே பள்ளி நேரம் போக அவர்களை பால விகாஸில் பழக்குவது மட்டும் போதாது என்று ஸ்வாமி கருதுகிறார் போலும். இதனால்தான் இப்போது கல்லூரி வரை காத்திராமல் பள்ளிகளிலேயே அறநெறி போதனையைக் கலந்து தந்துவிட வேண்டும் என்ற கருத்தில் தாமே பள்ளிகள் நிறுவுவதிலும் கவனத்தைத் திருப்பி வருகிறார். இவற்றில் முதற் பள்ளிக்குத் தம்மைப் 'பிறப்பித்த' ஈச்வராம்பாவின் பெயரிட்டுத் தமது பிறந்த ஊரான புட்டபர்த்திக்கே அதை வழங்கியுள்ளார்.)

வயது வந்தோருக்கான சேவா சமிதிகள் பஜனை மண்டலிகளை நிர்வகிப்பதன் மூலம் நாம பஜனையாம் மஹா பெரும் தர்மத்தைத் தழைக்கச் செய்து வருகின்றன. மகான்கள் நினைவு நாட்களையும், மற்ற பண்டிகைகளையும் கொண்டாடி ஆஸ்திகத்தை வளர்க்கின்றன. 'ஸ்டடி ஸர்க்கிள்கள்' மூலம் புனித விஷயங்களைப் படித்து அறிந்து விவாதித்துத் தெளிவுபெற உதவுகின்றன. ஸத் கதா பிரவசனங்களுக்கும் ஏற்பாடு செய்கின்றன. ஸ்வாமி குறித்த திரைப்படக் காட்சி, புகைப்படக் காட்சி முதலியவற்றுக்கு ஏற்பாடு செய்து ஸாயியின்பத்தைப் பாய வைத்து, எல்லா அறங்களுக்கும் மூல ஊற்றில் மக்களை முழுக்காட்டுகின்றன. ஆலயத் திருப்பணியில் ஆர்வமுறச் செயற்படுகின்றன.

தர்ம தாதாவான ஸ்வாமி வழங்கியுள்ள தலையாய அறக் கொடைகளில் ஒன்று ''ஸநாதன ஸாரதி'' என்ற மாத சஞ்சிகை. முதலில், இவ்வேடு பொதுவான தருமோபதேசமே தரவேண்டும் என்றும், தமது லீலைகளைப் பிரசுரிக்கலாகாது என்றும்தான் ஸ்வாமி கருதினாராம். ஆனால் அணுக்கத் தொண்டர்கள், பாபாவின் லீலாம்ருதத்தின் மூலமே சகல தர்மங்களையும், அவற்றின் சாரமான ஈச்வரப் பிரேமையையும் பெறமுடிகிறது என்று எடுத்துக் காட்டி, உயிர் கொண்ட ஓர் உத்தம வியக்தியின் ஜீவன் ததும்பும் தொடர்பில்லாவிடில், 'ஸநாதன ஸாரதி'யும் நூற்றோடு நூற்றியோராவது தர்மப் பத்திரிகையாக எவரும் சீண்டாமலே வாடித்தான் போகும் என்று வாதித்தனராம். இதன்மேல் ஸ்வாமி தமது லீலைகளையும் அதில் வெளியிட அநுமதி தந்தார். இதில் குறிப்பிட வேண்டிய அம்சம் பக்தர்கள்தாம் இந்த லீலைகளை ஏராளமாக எழுதி அனுப்புகின்றனரே யன்றி, பகவானுகத் தமது சுய சரித லீலைகளை வெளியிட்டு இந்தப் பத்தொன்பது ஆண்டுகளில் ஒரு வரி எழுதியதில்லை. தவறாக எதையும் வெளியிட்டு விடக்கூடாது என்பதற்காக ஆசிரியர் இந்தப் பரமாற்புத லீலைகள் குறித்து நுணுகி விசாரித்து உறுதி செய்துகொண்டே வெளியிடுகிறார். ஸ்வாமியால்தான் உறுதி செய்யக்கூடிய

Koviloor Digital Library

லீலைகளைப் பற்றி அவரிடமே பிரஸ்தாவிக்கிறார். அவற்றில் மிகையாகவோ, புனைந்தோ உரைக்கப்படுவனவற்றை ஸ்வாமி கம்பளிப் புழுப் போல அருவருத்துத் தள்ளுகிறார். "நான் செய்கிற லீலைகளையே புரிந்துகொள்ள முடியாதபோது, செய்யாத லீலைகளை ஏன் தான் புனைந்துரைக்கிறார்களோ?" என்பாராம்.

பாபா லீலை தவிர தார்மிக விஷயங்களும் நிறைய இவ் வேட்டிலே வெளிவருகிறது. குறிப்பாக, பேரிலக்கிய கர்த்தரான ஸ்வாமியே இவற்றை எழுதுகிறார். கீதை, உபநிஷதங்கள், மற்றும் யோகம்—பக்தி—சாஸ்திர தர்மங்கள், குறித்து அவர் தொடர் கட்டுரைகளாக அருளியுள்ள 'கீதா வாஹினி', 'ஞான வாஹினி', 'த்யான வாஹினி' 'ப்ரேம வாஹினி', 'தர்மவாஹினி', 'பிரசாந்தி வாஹினி' முதலியன இகவாழ்க்கை அகவாழ்க்கை இரண்டையும் இசைத்துத் தரும் நெறிகளைப் போதிப்பனவாகும்.

வாஹினி என்றால் சேனை என்றும் நதி என்றும் இரு பொருளுண்டு. அதர்மத்தைப் பொருது வெல்லும் சேனையாகவும், உலகாயதத்தால் தகிக்கப்பட்ட மாந்தர் குள்ளக் குடைந்து நீராடும் நதியாகவும் விளங்குவன ஸ்வாமி எழுதியருளிய இவ் வாஹினிகள். இவை நூல் வடிவிலும் வெளிவந்துள்ளன. முன்பு ஸாயிக் கண்ணன் தொடராக ஸ்ரீமத் பாகவதத் தொடர்பான கட்டுரைகள் எழுதினார். இப்போது ஸ்ரீமத் ராமாயணம் சாங்கோபாங்கமாக ஸாயிராமனின் எழுதுகோல் மூலம் பிரதிமாதமும் தொடர்ந்து வருகிறது.

ரிஷிகளே நாடியில், "அற நூல்கள் அருளுவார்" என்று சொல்லியிருக்கிறார்களே! ஸ்வாமி அவ்வப்போது ஆற்றும் உரைகளும் இந்த ஆத்மிக விருந்தில் லட்டுக்களாகவும், அவரது தனித் தனி அமரவாசகங்கள் ஆங்காங்கு பூந்திகளாகவும் இவ்வேட்டில் பரிமாறப்படுகின்றன.

ஆரம்பத்தில் ஆங்கிலத்திலும் தெலுங்கிலும் மட்டுமே வெளியான 'ஸநாதன ஸாரதி' தற்போது இந்தியாவின் முக்கியமான மொழிகள் அனைத்திலும் (தமிழ், மலையாளம், கன்னடம், மராத்தி, குஜராத்தி, ஹிந்தி, ஸிந்தி, நேபாளி, அஸ்ஸாமி, வங்காளி, ஒரியா ஆகிய இத்துணை மொழிகளில்) வெளி வருகிறது. இவற்றில் சில, ஆங்கில சஞ்சிகையின் ஆக்கமாக மட்டும் உள்ளன; தமிழ் உள்பட வேறு சில மொழிகளில் வரும் 'ஸநாதன ஸாரதி' பதிப்புக்கள், ஸ்வாமியின் விஷயதானம் போன்ற சில கட்டுரைகளைத் தவிர ஏனைய கட்டுரைகளைப் பிரத்தியேகமாக வழங்குகின்றன.

ஸாயி பக்தர்களின் இல்லங்களிலெல்லாம் 'ஸநாதன ஸாரதி'யின் ஏதேனும் ஒரு பதிப்பு "மஸ்ட்" ஆகியிருக்கிறது.

Sri Sathya Sai Education and Publication Foundation என்பது பாபா வழங்கிய, அல்லது பாபா குறித்த, அருமையான நூல்களைப் பன்மொழிகளில் வெளியிட்டு அறத்தைப் பரப்பி வருகிறது.

Koviloor Digital Library

**பல நூல்கள் பதிப்பித்தும், பல பெரியோர்
பிரசங்கம் பண்ணுவித்தும்
நலமுடைய கலாசாலை புத்தகசா -
லைபலவும் நாட்டியும்...**

ஸத்ய ஸாயி ட்ரஸ்ட் புரியும் பணிகளைக் காண்கையில் எதிர்கால அறவளர்ச்சியில் நமக்கும் 'ட்ரஸ்ட்' உண்டாகிறது.

''ப்ரம்மா பவதி ஸாரதி:'' என்று வேதம் சொன்னதை வேந்தன் மெய்ப்பிக்கிறார், ''ஸநாதன ஸாரதி''யாகி. பார்த்த ஸாரதி இன்று பார் முழுதற்கும் ஸாரதியாகி, தர்ம மார்க்கத்தில் செலுத்தி வருகிறார்!

★

ஸ்வாமியின் ஸ்தூல சஞ்சாரம், ஸூக்ஷ்ம சஞ்சாரம் யாவற்றுக்கும் முடிவான நோக்கம் அறத்தை நிலைநாட்டுவதுதான்; மறத்தைத் தலைசாய்ப்பதுதான்.

ஸ்வாமி எங்கு விஜயம் செய்தாலும் அங்கு தெய்விக உணர்வு விம்மி எழுகிறது. விஜயம் முடித்து அவர் திரும்பியபின் இந்த எழுச்சி அடியோடு தணிந்து விடுவதில்லை. அவர் பாதம் பட்ட இடங்களிலெல்லாம் நல்லறங்களும், பக்தியும், ஆன்மிக நாட்டங்களும் நிச்சயமாகச் சற்றேனும் வேர் பிடிக்காமலிருப்பதில்லை. அவரது வருகையால் பழைய பக்தர்கள் புதிய எழுச்சி பெறுகிறார்கள்; புது பக்தர் பலரும் ஏற்படுகிறார்கள். அதாவது, தர்ம சாலிகளாக முயல்பவர்கள் மேலும் சேருகிறார்கள்.

நடமாடும் தர்ம நிலையமாக பாபா செய்துள்ள சஞ்சாரங்களை விவரிப்பதற்கு நாம் ஆதிசேஷனல்லவாதலால் அவரது அதி விசேஷமான திக்விஜயங்கள் சிலவற்றை மட்டுமே பார்ப்போம். நின்று நின்று வரும் இச் சரிதை யாத்திரையில் அவரது சரீர யாத்திரைகளை முடிந்த மட்டில் குறைப்போம்.

*　　*　　*

பொதுவில் பெரிய அளவில் தர்மோபதேசத்துக்கு ஸ்வாமி துவஜாரோஹணம் செய்தது 1957-ல் வேங்கடகிரியில் நடந்த தெய்விக வாழ்க்கைச் சங்கத்தின் சம்மேளனத்தில்தான்.

ரிஷிகேச மஹாத்மா பூஜ்யஸ்ரீ சிவானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகளின் சங்கமே இது. அதன் பொதுக் காரியதரிசியாக இருந்த ஸ்வாமி ஸச்சிதானந்தா ஆச்ரமத்தில் ஈடுபாடு மிகுந்த (காலஞ்சென்ற) வேங்கடகிரி ராஜாவிடம் இச் சம்மேளன ஏற்பாட்டை ஒப்படைத்தார். ராஜா, பாபா பக்தராதலால் அவரையே தலைமை தாங்க அழைத்துவிட்டார்.

சம்மேளனத்தினிடையே ஸ்வாமி ஸச்சிதானந்தா மனத்தை விட்டுச் சொன்னதாவது : ''பாபாவை மன்னர் அக்ராஸனம்

Koviloor Digital Library

ஏற்கச் செய்ததாக அறிந்தவுடன் நான் 'போயும் போயும் ஒரு 'மாஜிக்'காரரை ஏற்பாடு செய்துவிட்டாரே; ஆயினும் ராஜா வாதலால் ஆட்சேபிப்பது நன்றாக இராதே' என்று அதிருப்தி யோடுதான் இம் மாநாட்டுக்கு வந்தேன். ஆனால் இங்கு வந்தபின் பாபாவின் மகத்துவத்தை அற்புதச் செயல்களில் மட்டுமின்றி, அரிய ஸத் உபதேசங்களிலும் தெளிவாகத் தெரிந்துகொண்டு பூரண திருப்தி பெற்றிருக்கிறேன்'' என்றார். ''அவர் சித்கனமூர்த்தி, ஸர்வக்ஞர், ஸர்வாந்தர்யாமி, ஸர்வ பூத அந்தராத்மன்'' என்றெல்லாம் விண்ணெட்டத் துதித்தார். பாபாவிடம் அவர் அந்தரங்கத்தில் பெற்ற சொந்த அநுபவம் அவரை அப்படிப் பேச வைத்தது!

சம்மேளனத்தின் மற்றொரு முக்கியஸ்தரான ஸ்வாமி ஸதா நந்தாவும் பாபாவின் தெய்விகத்தில் தீவிரமாக ஈர்க்கப்பட்டு உலகறிய அவர் புகழை ஓதினார். பிற்பாடு இந்த ஸதாநந்தருக்குத் தான் ஸ்வாமி கன்யாகுமரிக் கடற்கரையில் 'உதித்த' மணிகளைக் 'கோத்து' ஜபமாலையாக்கித் தந்தது. இவருக்கே இன்னொரு முறை ஒரு தந்த அரிசியைத் தந்த பாபா, ''அதை பூதக் கண்ணாடியில் பாருங்கள்'' என்றார். சின்னஞ் சிறு அரிசியில் 108 யானை உருவங்களைக் கண்டு விஸ்மிதமுற்றார் ஸ்வாமி ஸதாநந்தா.

ஸச்சிதாநந்தரும் ஸதாநந்தரும் தெரிவித்த உயர்ந்த கருத் தின்மீது, வெள்ளை உள்ளத்தரான சிவாநந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் நம் ஸ்வாமியைப் பரிவாரத்தோடு ஹ்ருஷீகேசம் வருமாறு அழைப்பு விடுத்தார்.

இதனை ஏற்று 1957 ஜூலை கடைசியில் பாபா சென்றதே அவரது முதலாவது உத்தர பாரத திக்விஜயம்.

எவரையுமே வணங்கத் தயங்காத எளிய பெரியராம் சிவா நந்தாஜி இரு கை குவித்து இளைய வேளாம் பாபாவை வரவேற்க, இவர் கை தூக்கி அவருக்கு அபயஹஸ்தம் சாதித்தார்! கை நிறைய நீறு ''வரவழைத்து''த் தாமே முனிவரின் பரந்த நெற்றியில் அப்பினார் அப்பன். ஹ்ருஷீகேச ரிஷிக்கு நமது விரித்தகேசர் 108 ருத்ராக்ஷங்கள் கட்டிய, அற்புத வேலைப்பாடு அமைந்த ஜபமாலை சிருஷ்டித்துச் சூட்டினார்.

பாபா வந்தபோது சக்கர வண்டியில் அமர்ந்தே வந்த சிவாநந்தருக்கு பாபா கங்கையையே மருந்துச் சாறாக மாற்றிக் கொடுத்தும், பழங்கள், விபூதி முதலியன உட்கொள்ளக் கொடுத்தும் சிறிது நாட்களிலேயே அவரது முடக்குப் பிடிப்பைக் குணப்படுத்தினார். சக்கர வண்டியில் வந்தவர் இப்போது தாமே படிகள்கூட ஏறிச் சென்று பாபாவை ஆசிரமத்தின் பல பகுதி களுக்கும் அழைத்துச் சென்று காட்டினார்.

சிவாநந்தா ஆசிரமத்தில் பாபா இருந்த நாட்களில் சிவாநந்த வெள்ளமே பெருகிக் கொண்டிருந்தது. சிவாநந்தரும், மற்ற

Koviloor Digital Library

பல ஸாதுக்களும், ஸாதகர்களும் போற்றி ஏற்கும் வண்ணம் பிரசிருதி தர்மம், பரமார்த்த தர்மம், கர்த்தவ்ய தர்மம் ஆகியவற்றை பாபா அருமையாக விளக்கித் தம்மை தர்ம ஸாயியாகக் காட்டிக் கொண்டார்.

'ஹ்ருஷிக' என்றால் புலன் என்று பொருள். புலன்களை ஆளும் பரமனே ஹ்ருஷீகேசன். புலன்களை அடக்கி ஆள்வதை விட, அவற்றைத் திவ்விய ரஸங்களில் திளைக்கச் செய்தே ஆள வல்லவர் நம் ஸ்வாமி என்பதை அவர் பரப்பும் ஆனந்தத்தில் சிவாநந்த நகரவாஸிகளில் பலரும் உணர்ந்தனர்.

1957 ஜுலை 30—ஒரு மறக்க முடியாத புனித நாள். கண்ணன் பிறந்து வளர்ந்த வட மதுரை, ஆய்ப்பாடி முதலிய இடங்களுக்கு ஸாயிக் கண்ணன் சென்று ஆடிப் பாடிய நாள் அது. "அதோ நான் இரட்டை மருத மரங்களை இறுத்த இடம்; இதோ நான் காளியனை அடக்கிய நீர்ச் சுனை; இதுதான் கோபியரை வெருட்டிப் பிரிந்த இடம்" என்றெல்லாம் களித்துக் களித்து அடையாளம் சொன்னார். 'பிருந்தாவனத்தில் நந்த குமாரன் விந்தை புரிந்த அந்த நாளும் வந்திடாதோ?' என்பதை 'வந்திட்டதே' எனக் காட்டி, யமுனையினும் பெரிதான இன்பைப் பெருக்கவிட்டார். ராதேச்யாம் சந்நிதியில் மூல விக்ரஹங்களின் அச்சாக இரு குட்டிப் பிம்பங்களை சிருஷ்டித்தார்.

காச்மீரமும் பாபாவின் பாதஸ்பரிசம் பெற்றது.

ஸ்ரீநகர் சங்கர மடாதிபதிகள் பாபாவைத் தமது திரு மடத்திலேயே தங்குமாறு வேண்டியும், பாபா 'அலெக்ஸாண்ட்ரா' என்ற படகு வீட்டிலேயே தங்கினார். ரஸிக ராஜன் அல்லவா? மிதந்துகொண்டே அடியாரை ஆனந்தத்தில் மிதக்க விட்டார். படகு வீட்டுப் பயணத்தில் குதூகலித்தார். "அந்தமே ஆனந்தமு" என்று அழகினைப் போற்றும் குழலழகர் குழந்தை போலக் கும்மாளமிட்டுப் பனி மலைமுடிகளையும், ஷாலிமார் நிஷாத்பாக் முதலான பூங்காக்களையும் பரிவாரத்தோடு கண்டார். கல்கியே எனப் புரவியில் ஆரோஹணித்து குல்மார்க், கிலன்மார்க் ஆகியவற்றுக்கு சாரத்தியம் செய்தார் தர்ம மார்க்க ஸாரதி.

இந்த யாத்திரை முடித்துப் புட்டபர்த்திக்குத் திரும்பிய பின்தான் பாபா ஞானோபதேசத்தை வலிவும் விரிவும் படுத்த லானார். பிரசாந்தி நிலயத்தின் அன்றாட நடவடிக்கைகளை பிராம்ம முஹூர்த்தத்தில் ஓங்கார ஜபத்துடன் தொடங்கச் செய்ததும் சிவாநந்தாசிரம வழி முறையைப் பின்பற்றியே எனலாம்.

சொல்லாற்றல் வேந்தனாக நூறு நூறு மேடைகள் பாபாவை கண்டது இதன் பின்தான். பாபாவைப் போல் தங்கு தடை யின்றி, கங்கு கரையின்றி, நுங்கும் நுரையுமாகப் பொங்கு கங்கையென ஒரு மணி நேரத்துக்கும் மேல் சொற் பிரவாஹம் பொழிபவர் எவரும் இருக்க முடியும் என்று தோன்றவில்லை.

Koviloor Digital Library

என்ன வேகம், என்ன துடிப்பு? தர்மம் பரவ வேண்டும் என்ற வேகந்தான், துடிப்புத்தான்! உன்னதத்துக்கு உன்னதம், உலகியலுக்கு உலகியல், கவிநயத்துக்குக் கவிநயம், நகைச்சுவைக்கு நகைச்சுவை என்று எல்லாம் அற்புதக் கதம்பமாகத் தொகுப்புண்ட பேருரை! கதை, கவிதை, கானம், பல்வித சாஸ்திரங்கள், ஸயன்ஸ்கள், மனித சுபாவ மர்மங்கள், தெய்வ அநுபூதித் தத்வங்கள் யாவும் ஸஹஸ்ரதாரையாக அந்த ரீங்காரக் குரலில் கலந்து பெருக்கிட்டு, சுழியிட்டு, நம்மீது மோதி விசி நீராட்டித் தரும் புத்துணர்ச்சியும், புத்தறிவும் புகலுதற்கரியவை தாம். பேசும் போது நவரஸ நாயகனாக அவர் முகத்திலும் கைகளிலும் உணர்ச்சிகள் அலை எறிவது ஓர் அழகு எனில், ''சாந்த முக'' என்பது போன்ற வார்த்தைகளில் இந்த வேக வேந்தர் அமைதிக் கடலாவது அதனினும் அழகு.

பல மொழிகளில் சரளமாகப் பேசக்கூடிய வித்தகராயினும் (சில சமயங்களில் கன்னடத்தில் உரையாற்றுவது தவிர) அவர் தெலுங்கு மொழியிலேயேதான் பிரசங்கம் செய்கிறார். ''சுந்தரத் தெலுங்கு'' என்று தமிழ் மகாகவியே புகழ்ந்த பாஷையாயிற்றே! ஒரு முறை திருவனந்தபுரத்தில் தமிழில் சிற்றுரை வழங்கியிருக்கிறார். முதலாவது அகில உலக ஸாயி ஸம்மேளனத்தை பம்பாயில் 1968-ல் தொடக்கி வைக்கையில் ஆரம்ப வாசகமாக, நமது ஆன்மிய கலாசாரப் பொக்கிஷங்களைப் பொதிந்து கொண்டுள்ள ஸம்ஸ்கிருதத்தில் சில வாக்கியங்களைத் தமது ஆலாட்சமணிக் குரலில் கூறினார்.

புத்தர் தமது 'தர்ம சக்கரப் பிரவர்த்தன'த்தைப் பொது மக்களுக்கெல்லாம் பொழிகையில் ஸம்ஸ்கிருதத்தை ஒதுக்கி, அதன் கொச்சையாக மக்களிடம் வழங்கிய பாலி மொழியைக் கையாண்டு ''தம்ம சக்க பவத்தன''மாகவே உபதேசம் வழங்கினார். புத்தரிடம் மகத்தான மதிப்பு கொண்ட ஸ்வாமி விவேகாநந்தரே இவ்வாறு ஸம்ஸ்கிருதத்தை விலக்கியதால் தேசத்தின் கௌரவப் பண்புக்கு ஊறு நேர்ந்ததாகக் கூறியிருக்கிறார். பொது மக்களுக்கெல்லாம் நமது ஆன்மிய குலதனத்தை அள்ளித் தரும் தர்ம சக்கரப் பிரவர்த்தகரே பாபா எனினும், அவருக்கு ஸம்ஸ்கிருத அபிவிருத்தியில் ஆழ்ந்த நாட்டமுண்டு. தமது பாடசாலை மாணவர் பலருக்கு ஸம்ஸ்கிருத காவியப் பயிற்சியும் அளிக்கிறார். அகில உலக மாநாட்டுத் தொடக்கத்தில் தேவவாணியில் பேசியதன் மூலம் தமது சர்வ தேச பக்தர்களுக்கும் அம் மொழியிடம் இருக்க வேண்டிய மரியாதையை உணர்த்தி விட்டார்.

பாபா எப்போதும் தம் பிரசங்கத்துக்கு முன் ஒரு சுலோகமோ தெலுங்குப் பத்யமோ பாடுவார்—சம்பிரதாயத்தில் தேர்ந்த பாகவதரைப்போல் ஆனந்த பைரவி, பிலஹரி, சங்கராபரணம் போன்றதொரு ராகத்தில். முடிவில் சில பஜன்களை கானம் செய்து, அனைவரையும் பரவசத்துடன் பின்பாட வைப்பார். அநேகமாக இப் பஜன்கள் 'ப்ரேம முதித மனஸ கஹோரா'வில் தொடங்கி, 'கோவிந்தா கோபால ப்ரபு கிரிதாரி' வழியாக

Koviloor Digital Library

'கங்க ஜடாதர கௌரீ சங்கர கிரிஜாமனரமணு'வை அடைந்து, 'ஸுப்ரம்மண்யம், ஸுப்ரம்மண்யம், ஷண்முக நாதா ஸுப்ரம் மண்ய'த்தில் நான் நிறையும். பல்லாயிரம் மக்களை மேலும் மேலும் ஊக்கி உற்சாகப்படுத்தி நாமத்தைப் பாட வைப்பதில் ஸ்வாமிக்கு உள்ள சக்தி பரமாத்புதம்! ஆனால் நாமியே கண் காண நின்று பாடுகையில் நாமத்தைத் திருப்பிப் பாட முடியாமல் நாத்தழு தழுத்தோரும் இருப்போம்!

இப்படி பாரதத்தின் பல பகுதிகளிலும் சூறாவளிப் பயணங்கள் செய்து, ஆன்மிகப் பெரியோரில் பிரம்மாண்டக் கூட்டங்களைக் கவருவதில் நம்பர்—1 ஆக விளங்கி, செல்லுமிட மெல்லாம் தர்மச் செல்வத்தை விருத்தி செய்கிறார் தர்ம ஸாயி.

* * *

பாபாவின் எழுதி மாளா சஞ்சாரங்களில், ஒரு தலையாய நோக்கத்தைக் கொண்ட 1961-ம் வருஷத்திய வட புல யாத்திரையை மட்டும் நாம் விடுவதற்கில்லை.

அந்தத் தலையாய நோக்கம் என்ன?

"ஸநாதன தர்மத்தை ஒரு பெரிய விருக்ஷமாகச் சொல் கிறோம். விருக்ஷம் என்றால் அதற்கு ஆதாரமாக வேர் இருக்க வேண்டும். முடிவில் அது தருகிற பலனாகப் பழம் இருக்க வேண்டும். ஸநாதன தர்ம விருக்ஷத்துக்கு எது வேர், எது பழம் என்றால் வேதம்தான் வேர். ஆலயங்கள்தான் பழம். அந்த வேர் உயிரோடு, சக்தியோடு இருந்தால்தான் இந்தப் பழம் உண்டாகும். 'வேதத்தின் மந்திரத்தால் வெண் மணலே சிவமாக' என்று தேவாரம் சொல்கிறாற்போல், வேத மந்திரங் களால்தான் கோயில்களில் தெய்வ ஸாந்நித்தியம் உண்டாகிறது. இந்த ஸாந்நித்தியம் ஸேவார்த்திகள் எடுத்துக்கொள்ள எடுத்துக் கொள்ளக் குறைந்துகொண்டே வருமாதலால்தான் அடிக்கடி (முப்பது வருஷத்துக்கொரு தரமாவது) வேத மந்திரங்களால் கும்பாபிஷேகம் பண்ணி ஸாந்நித்தியத்தைப் புதுப்பிக்க வேண்டும் என்பது" என்பார் ஸ்ரீ காமகோடி பரமாசாரியாள்.

ஆலயத்துக்கு வந்து வழிபடுவோரின் கர்மா குறையவே அங்கு வேதத்தால் ஸாந்நித்தியம் ஈட்டி வைக்கப்படுகிறது. இவர்களது கர்மாவைக் குறைப்பதால் மட்டுமின்றி, வேதத்துக்கே உரிய கட்டுப்பான நியமங்கள் கோயில் வழிபாட்டிலேயே தளர்ச்சி அடைந்தால், அவ்வாறு தளருமளவுக்கும் ஸாந்நித்தியம் குறையும்.

வேரான வேதத்தைப் போஷித்து வரும் வேத ஸாயி, ஸநாதன தர்ம விருக்ஷத்தின் பல தாதாவான ஸாயியாகும்போது, பழத்தையும், அதாவது பழம்பெரும் ஆலயங்களின் ஸாந்நித்தியத் தையும் அள்ள அள்ளக் குறையாத நித்திய நிதியாக்குவதற்காகப் "புது முறை"யில் புதுப்பிப்பதைத் தமது சஞ்சாரங்களின் தலையாவதொரு நோக்கமாகக் கொண்டுள்ளார்.

Koviloor Digital Library

விஸ்தாரமான கும்பாபிஷேகச் சடங்கு செய்து வேத மந்திர சக்தியை ஈட்டி வைப்பதற்குப் பதில், வேத மந்திர ஸ்வரூபமான தாம் இவ்வாலயங்களுக்கு எழுந்தருள்வதால் மட்டுமே, அல்லது அங்குள்ள மூர்த்திகளைத் தொடுவதாலோ, அவற்றுக்குத் தமது சிருஷ்டிகளான அணிகளால் அலங்கரிப்பதாலோ மாத்திரமே ஸாந்நித்யத்தைப் புதுப்பிப்பதுதான் ஸ்வாமி கையாளும் ''புது முறை.''

மாபெரும் ஸாந்நித்ய பவர்-ஹவுஸ்களான காசி, பதரி, ஸோமநாதபுரம், துவாரகை, பண்டரிபுரம், பத்ராசலம், ஸ்ரீ சைலம், திருப்பதி முதலான க்ஷேத்திரங்களுக்கு ஐயன் விஜயம் செய்தது தமது ஆத்ம சக்தியால் அவற்றின் தெய்விக பாட்டரியை ரி-சார்ஜ் செய்வதற்கே ஆகும். இந்த ஸாந்நித்யப் புதுமலர்ச்சி பாபாவின் மற்ற அற்புதச் செயல்கள் போலப் பிரத்தியக்ஷத்தில் பரிமளிக்கத் தெரியாவிடினும், மேற்படி தலங்களில் நாள்தோறும் ஓங்கிவரும் அடியார் கூட்டமும், பொதுவாகவே தேசத்தில் நாஸ்திக ஆவேசம் தடுக்கப்பட்டிருப்பதும் இதையே மிராகிளுக் கெல்லாம் மேலான மிராகிளாக்கி யுள்ளன.

1961 மார்ச் இறுதியில் அடியார் புடைசூழ ஸ்வாமி உத்தரப் பிரதேசத்துக்குச் சென்றார். முன்பு கண்ணனின் அவதார ஸ்தலத்துக்குச் சென்றவர், இப்போது ராமபிரான் ஜனித்த அயோத்திக்கு எழுந்தருளினார். ஸரயு நதிக்கு ஸரஸ ஸாயி அடியாரை இட்டுச் சென்றார். ஸ்ரீராமன் ஸரயுவில் முழுகி, அடிச்சோதிக்கு அயோத்தி மக்கள் அனைவரையும் தன்னோடு அழைத்துச் செல்கையில், ஆஞ்ஜநேயனை மட்டும் உலகைக் கவனித்துக் கொள்ளும் பொருட்டு இங்கேயே சிரஞ்ஜீவியாக நியமித்து, அவன் குடிகொள்வதற்காக ஒரு திட்டினை அருகே கொடுத்தான். மாருதி நித்ய வாஸம் செய்யும் இந்தத் திட்டு பரம பவித்திரமானது எனக் கூறி அங்கு பரிஜனங்களை அழைத்துச் சென்றார் பாபா. அங்கேயிருந்த மாருதி மந்திரப் பிரஸாதத்தைத் தாமே அனைவருக்கும் விநியோகித்தார்: ''ஸாகேத ராமன் அருளில் ஸாயிராமன் அருளும் கலந்து வருகிறது'' எனக் கூறியபடி.

பாபாவிடம் பெரும்பாலும் கண்ணனுடையதைப் போன்ற பகிரங்க பரத்துவமே ஒளி வீசுகிறது; ஸ்ரீராமனைப் போல் மானுடமாக அவர் தம்மை அடக்கிக் கொள்ளவில்லை. ஆயினும் ஸர்வதேவ ரூபியான அவருக்குப் பரம நுணுக்கமான ராமத்வமும் உண்டு என்பதை ராம பக்தர்கள் சத்தியமிட்டுச் சாற்றுவார்கள். ஷிர்டி பாபாவாக அவர் இருந்தபோது தமது ஜயந்தி நாள் எதுவென வெளியிடவே இல்லை. ஆயினும் விழாக் கொண்டாட விழைந்த அடியாருக்கு அன்பில் கட்டுப்பட்டு, ஸ்ரீராமநவமி யன்றே தமக்கு உருஸ் (உத்ஸவம்) எடுக்குமாறு கூறினார். ஸாயி பாபாவின் நாமத்தையே தாரகமாக ஜபிக்கையிலும் ''பாபா'' என்பதையே விடுத்து, ''ஸாயி ராம்'' என்றுதானே கூறுகிறோம்?

Koviloor Digital Library

பாபாவின் காசி விஜயம் காசிவிக்கே முக்கியத்துவம் வாய்ந்ததாகும். சிவ ராஜதானியாகவும், ராமநாம தாமமாகவும் ஒருங்கே இருப்பதால் நம் சமயத்தின் இரு நேத்திரங்களையும் கொண்ட க்ஷேத்திரமா யிருப்பதல்லவோ காசி?

காசியில் ஸேவார்த்திகளே நேராக விச்வநாத மஹா லிங்கத்துக்கு கங்காபிஷேகம் செய்வர். ஸ்வாமி கங்காபிஷேகம் செய்வதில் திருப்தி கொள்ளவில்லை. அங்கையை அசைக்க கங்கையே சூர்ணமாக வந்ததோ எனும்படி, பவித்ரமான பரிமள விபூதி "வந்தது." விச்வேசனுக்கு விபூதியைத் தமது விந்தை விரல்களால் முப்பட்டையாக இட்டுவிட்டார் விசாலாக்ஷி மயமாகி இருந்த ஸ்வாமி. 'ஸுகந்தி'யான பரமேசனுக்கென திவ்ய மணம் வீசும் சந்தனம் சிருஷ்டித்து திருநீற்றுப் பூச்சுக்கு மத்தியில் அதைப் பாங்குற இட்டார். தேவனுக்கு இவ்வளவு அலங்காரம் செய்ததோடு தேவிக்குத் திருப்தி ஏற்பட்டுவிடவில்லை. மறுபடி கையசைக்க விபூதியும், சந்தனமும் வேறொரு உருவில் வந்தன. ஆம், வைரக் கற்களால் இழைத்த விபூதிப் பட்டையும், அதன் நடுவே சந்தனமாக மஞ்சள் ஒளி வீசும் கோமேதகமும் சிருஷ்டியாகி யிருந்தன. இந்த ஆபரணத்தில் தொங்கட்டானாக எந்நாளும் வாடாத மரகதக் கற்களாலான வில்வ பத்திரம்! சிகரமாக, பட்டை உச்சியில் ஒளி மழை கொட்டும் வைரப் பிரணவம்!

"இது வெறும் அழகு நகை மட்டுமல்ல. இப் புனித லிங்கத்தின் ஸாந்நித்யத்தை அதிகமாக்கும் மந்திர கவசம் இது" எனக் கூறிய பாபா அதைப் பிரேம மயமாக விச்வேசனுக்கு அணிவிக்க,

பண்டாக்கள் அதிசயித்துப் பணிய,

பக்தர் குழாம், "ஓம் சிவாய நம: சிவாய சம்போ சங்கர ஓம் சிவாய" என்று திமிர்த்துப் பாட,

மெய்யாலுமே பூலோக கைலாஸமாயிற்று காசியம்பதி.

ஹே விச்வநாத! ஹே கௌரிநாத! ஹே ஸாயிநாத பகவான்!

தயா கரோ! க்ருபா கரோ! க்ஷமா கரோ பகவான்!

பின்னர் வேத ஸாயி, தமது அடியாரைக் கொண்டு விதிவத்தான ருத்ர பாராயணத்தோடு கங்காதரனுக்கு கங்காபிஷேகமும் செய்வித்தார். 'பெற்றோருக்கு' ஸ்பெஷல் அநுக்கிரகமாக, வெங்கப்ப ராஜு ஈச்வரம்மா இருவரும் சேர்ந்து அபிஷேகம் செய்ய வைத்தார்.

* * *

ஆலயங்களில் ஆகம சம்பிரதாய வழுவின்றியே வழிபாடு நடத்த வேண்டும் என்று வலியுறுத்துபவர் நம் ஸ்வாமி.

Koviloor Digital Library

பக்தர்கள் தமக்கு எப்படி வேண்டுமானாலும் பூஜை செய்யலாம்; பக்தியில் கனிகையில் தமது வீட்டுப் பூஜைகளில் எந்தத் தெய்வத்தையும் தீவிர நியமங்கள் பாராமலும் பூஜிக்கலாம் என்பவர்தாம் பாபா. அவரே அனைவருக்குமான ஆலயங்களில் சாஸ்திர மரபு மாறாமல்தான் ஆராதனை நடத்த வேண்டும் என்கிறார். புக்க பட்டணம் கோயிலில் விளக்கேற்றி வைத்து அவர் ஆற்றிய உரையைப் பெயர் போடாமல் பிரசுரித்தால், காஞ்சிப் பெரியவர் உபந்நியாஸம் என்றே எண்ணும்படி இருக்கும். அதிலே ஒரு சில வாசகங்கள்:

''முன்னெல்லாம் ஜனங்கள் யாத்திரா மார்க்கத்தில் எந்தக் கிராமத்தின் வழியாகப் போக நேர்ந்தாலும், 'கோயில் இருக்கிறதா? எங்கே இருக்கிறது?' என்றுதான் முதல் கேள்வி கேட்பார்கள். அநேகமாகக் கோயில் இல்லாமலிராது. அப்படி எங்கேனும் இல்லையெனில், அங்கே தங்காமல், கோயில் உள்ள அடுத்த ஊருக்குப் போய்விடுவார்கள். இப்போது எந்த குக்கிராமமாயினும் அங்கே போக நேருபவர்கள் முதலில், 'ஸினிமாக் கொட்டகை இருக்கிறதா?' என்றுதான் கேட்கிறார்கள். எவ்வளவு சின்ன பட்டிதொட்டியானாலும் அங்கே நிச்சயமாக ஸினிமாக் கொட்டகையும் ஒன்றுக்கு இரண்டாக இருக்கவே செய்கிறது. கோயில்களில் ஜனக்கூட்டம் இருந்தவரை தேசம் எல்லா ரீதியிலும் எவ்வளவு உத்தமமான ஸ்திதியில் இருந்தது என்பதும், ஸினிமாக் கொட்டகையில் ஜனங்கள் திரளும் இப்போது எவ்வளவு தாழ்வடைந்திருக்கிறது என்பதும் நிதரிசனம்.

''ஒரு ஊரில் கோயில் மட்டும் நல்ல நிலையில் இருந்துவிட்டால் போதும்; அங்கே ஸகல தர்மங்களும் செழித்துவிடும்.

''இன்றைக்கு நான் இக் கோயிலுக்கு விளக்குப் போடுவதை விடக் கோயிலின் தத்துவம் பற்றி விளக்கி, உங்களுக்குள் விளக்குப் போட்டுக் காட்டுவதுதான் முக்கியம். கோயில் என்பது வெறும் கட்டிடம் இல்லை. அது ஸநாதன தர்மத்தின் கருவூலம். விக்கிரஹங்கள் வெறும் பொம்மைகளோ, கலாரீதியில் அழகான வடிவங்களோ மட்டுமல்ல. மந்திரத்தால் ஆவிர்பவமான தெய்வ சக்திக் கட்டிகளே அவை.

''சம்பிரதாயப்படி வந்துள்ள விதிகளையும் விலக்குகளையும் வழுவின்றிக் கடைப்பிடித்து ஆலயங்களின் புனிதத் தன்மையையும், ஸாந்நித்யத்தையும் பேணிக் காப்பது நம் பொறுப்பு. கோயில் சூழலுக்குள் வீணான வாதப் பிரதிவாதங்களைக் கொண்டு வராமல், மரபுப்படியான சடங்குகளின் மூலமே ஆண்டவனை ஆராதித்து வாருங்கள். அதனால் அன்பும், அடக்கமும், அமைதியும் பெற்று வாழுங்கள் என ஆசிர்வதிக்கிறேன்.''

பதரிநாதம் போன்ற தலங்களின் மரபை மாற்றி பாபாவைக் கருவறையில் அநுமதித்து, விரும்பினால் மூலமூர்த்திகளைத் தொடவும் அவருக்குச் சலுகை தரவேண்டும் என்று அப்போது

உ.பி. கவர்னராக இருந்த டாக்டர் ராமகிருஷ்ண ராவ் முயன்ற போது, ''அந்தந்த ஆலயமும் அததற்குரிய சம்பிரதாயப்படி நடப்பதில் நாம் குறுக்கிடக் கூடாது. அர்ச்சகருக்கு மட்டுமே சில க்ஷேத்திரங்களில் தரப்பட்டுள்ள அதிகாரங்களை எனக்கு வழங்க வேண்டும் என்று வற்புறுத்த வேண்டாம்'' என்றார் ஸ்வாமி.

அடியாருக்கு அன்னபூரணியும் ஆன்ம பூரணியுமான ஸ்வாமியோடு காசியிலிருந்த நாம் நம்மையறியாமலே அவரோடு பதரி யாத்திரையிலும் தொடருகிறோம்!

* * *

''நான் தவம் செய்த தலத்துக்கு உங்களை ஒருநாள் அழைத்துப் போவேன்'' என்று பாபா 1958-ல் கூறியபோது உடனிருந்த அடியாருக்கு விசித்ரமா யிருந்தது. 'பிறந்ததிலிருந்து எந்த ஸாதனையும் புரியாமலே தெய்வ சக்தித் தேக்கமாக உள்ள ஸ்வாமி எப்போது தவம் செய்தார்?' என அவர்கள் அதிசயித்தனர். மூன்றாண்டுகளுக்குப் பின் ஜூன் மத்தியில் அவர்கள் வாழ்வில் என்றும் மறக்கவொண்ணு நிகழ்ச்சியாக பாபாவுடன் பதரிநாத் அடைந்தபோதுதான் புதிர் அவிழ்ந்தது.

அங்குள்ள நாராயண மூர்த்தியின் தபோ முத்திரையை பாபா அவ்வடியாருக்குக் காட்டி, ''பார்த்தீர்களா? நான் தவம் செய்த இடம்!'' என்றார்.

நர–நாராயணர்கள் தவமிருந்த பதரிநாதத்துக்கு நரனாக வந்துள்ள ஸத்ய நாராயணன் மீண்டும் வந்தது சமய சரித்திரத்தில் ஒரு பொன்நாள்தான்.

போகும் வழி நெடுக, இமயமலைக்கு மேல் மலையாகக் கவிந்திருந்த கார் முகில்கள் ஒரு தூறலைக்கூடச் சிந்தாமல் பாபா நிறுத்தி வைத்ததுண்டே, அது அவரொருவராலேயே முடியும். உயிராபத்தான பள்ளங்களில், சறுக்குப் பனித் திட்டுக்களில் செல்கையில் தம் உயிராழத்திலிருந்து உல்லாஸத்தைக் கொட்டி உடன்வந்தோரை உத்ஸாகப்படுத்தினரே, அதுவும் அவரால்தான் முடியும். டோலி, குதிரைச் சவாரி போன்ற வற்றைப் பெண்டிருக்கும், பலவீனருக்கும் ஏற்பாடு செய்துவிட்டு, ஏனையோரோடு தாமும் கடைசிப் பதினைந்து மைல்களைப் பாத சாரியாகவே கடந்தார்.

''பனியில் பங்கயம் வாடும். ஆனால் பனிமலையிலேயே உன் பங்கயப் பாதங்கள் வாடாமல் பாங்குறச் சஞ்சரிக்கின்றனவே!'' என்று அம்பிகையை ஆதி சங்கரர் வியந்தது அன்பர் காட்சிக்கு கோசரமாயிற்று. வெள்ளிமலையின் ஐயன் துள்ளித் துள்ளிச் சென்றது உள்ளத்தை அள்ளி எடுத்து ஆனந்த வெள்ளத்தைப் பாய்ச்சியிருக்கும்.

Koviloor Digital Library

ஜூன் 17-ந் தேதி காலை எட்டே கால் மணிக்கு பதரி நாராயணனுக்குக் கருவறையில் அபிஷேகம் தொடங்குகையில், வெளியே மூர்த்திக்கு நேரெதிரே அமர்ந்தார் பர்த்தி நாராயணன். இவர் கரத்தே உதித்தது சிறு நாராயணப் பிரதிமை ஒன்று. அடுத்து மலர்ந்தது ஒரு பொற்றாமரை. ஜோதிர்லிங்கமொன்றும் உற்பவித்தது. லிங்கத்தை ஸ்வர்ணத் தாமரைக்குள் வைத்தார் ஸ்வாமி.

எல்லாவற்றையும் ஒரு வெள்ளித் தாலத்தில் வைத்து, முகாமிட்டிருந்த தர்மசாலைக்குக் கொணர்ந்தார்.

ஹிமாலயக் கடுங்குளிரிலும் ஸ்வெட்டரோ, மஃப்ளரோ போடாமல் குஷியுடன் சஞ்சரித்த ஸ்வாமி இச் சமயத்தில் மட்டும் மேலே அழகாக ஒரு சால்வை போர்த்தியிருந்தார். இந்த லளிதக் கோலத்தில், பல் தெரிய நகைத்து, விழி விரிய நோக்கிய வாறு அவர் பதரிப் பிரதிமைகளை வெள்ளித் தாலத்தில் வைத்து ஏந்தியுள்ள புகைப்படத்தை''பதரிப் பிரஸாத்'' என்பர். பாபா வின் பிரஸன்ன வதனம், கள்ளமற்ற வெள்ளைப் பிள்ளையின் தெள்ளத் தெளிந்த வடிவம்—இதுவே மஹாப் பிரஸாதம்!

ஸ்வாமி ஜோதிர்லிங்கத்தை ஒவ்வொருவருக்கும் காட்டினார். ''இது என் ஸ்ருஷ்டியல்ல. அநேகமாக எவருமறியாத ஒரு ரகசியத்தைச் சொல்கிறேன். இந்த பதரியானது நாராயண க்ஷேத்திரமாகவே பிரசித்தி அடைந்துள்ள தெனினும், இது வாஸ்தவத்தில் சைவ—வைஷ்ணவ ஐக்ய ஸ்தலமாகும். அலக நந்தா நதிப் படுகையில் பதரி நாராயணனைக் கண்டெடுத்து, பின்பு பிரதிஷ்டை செய்த ஆதி சங்கரர், அந்த விக்கிரஹத்துக்கு ஸாந்நித்யத்தைப் பெருக்க ஒரு ஜோதிர்லிங்கத்தின் மூலமே திவ்ய சக்திகளைக் கிரகித்துப் பாய்ச்சினார். அதை எவருமறியா மறைவிடமொன்றில் ஸ்தாபித்து விட்டார். இதோ நீங்கள் காணும் நேத்திரலிங்கம் அதுவேதான்'' என்றார்.

ஆச்சரியம்! லிங்கத்துள் அழகாக, தெளிவாக நேத்திரம் தெரிந்தது!

''இப்போது பதரி நாராயணனின் ஸாந்நித்யத்தைப் புநுப்பிக்கும்போது, அதன் சக்திமூலமான இந்த நேத்ர ஜோதி லிங்கத்திலும் திவ்ய சக்திகளை உறைவிக்க எண்ணம் கொண்டே இதை வரவழைத்திருக்கிறேன்'' என்றார் ஆன்மிக எலெக்ட்ரீஷிய னான ஸாயீசன்.

கை அசைத்தார். கங்கோத்ரி தீர்த்தம் வந்தது.

ருத்ர கோஷத்தோடு, தாமே ஜோதிர்லிங்கத்துக்குத் திருமுழுக்காட்டினார்.

காந்தள் விரல்கள் காற்றில் அளைய, பளபளவென்று 108 தங்க வில்வ பத்திரங்கள் பறந்து வந்தன. அவற்றால் லிங்கத்துக்கு அஷ்டோத்தர அர்ச்சனை செய்தார்.

Koviloor Digital Library

பனித் துளி வற்றுத புத்தம் புதுத் தும்பைக் குவியல் புனிதக் கையில் சிருஷ்டியாயிற்று. லிங்க மூர்த்தியின் மேல் அதைப் பொல பொலவெனப் பொழிந்தார்.

இந்த ஆராதனையால் பதரிநாதனுக்கு ஒரு மஹா ஸம்பு ரோக்ஷணம் செய்வதற்கும் அதிகமாக ஸாந்நித்யம் ஊட்டப்பட்டு விட்டதாம்! அவ்வாண்டிலிருந்து பதரி யாத்ரிகர்களின் எண்ணிக்கை வெகு கணிசமாக வளர்ந்துகொண்டே யிருப்பதால் இதை நாம் நம்பத்தான் வேண்டும்.

ஸங்கல்ப மாத்திரத்தில் எதையும் சாதிக்க வல்ல ஸாயி மஹாதேவன், சம்பிரதாய பூர்வமாக மௌனக்கிட்டு சிரத்தை யுடன் ஆற்றிய இந்த வைதிகச் சடங்கு வையம் முழுதற்கும் சூக்ஷ்ம நலன் கூட்டியே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆராதனை முடிந்ததும் பிரதிமைகள் கொண்ட தட்டத்தை கவர்னராணி ஸ்ரீமதி அனந்தலக்ஷ்மி ராமகிருஷ்ண ராவிடம் கொடுத்த பாபா, "பத்திரம், பத்திரம்! ஜாக்கிரதையாக வையம்மா" என்றார்.

அம்மணி அதை உள்ளே எடுத்துச் சென்றார்.

சிறிது நேரம் சென்றது. பாபா அம்மையாரிடம் தட்டத்தைக் கொணரச் சொன்னார்.

உள்ளே சென்று திரும்பிய அனந்தலக்ஷ்மியின் முகம் வெளிறி யிருந்தது. கை கால்கள் உதறின.

தாலம், தாமரை, திருமால் ஆகியன வைத்தது வைத்தபடி இருந்தன. ஆனால் க்ஷேத்ர மகிமைக்கே மூலமான நேத்ர லிங்கத்தைக் காணவில்லை!

பாபா முகத்தில் வழக்கத்துக்கு விரோதமாகக் கோபம் கொப்பளித்தது. பல்லைக் கடித்தார். "உபயோகமில்லாத பொம்மனாட்டி! எத்தனை உத்தமமான வஸ்துவை, எவ்வளவு ஜாக்கிரதை சொல்லி உன்னிடம் கொடுத்தேன்! துப்பில்லாமல் தொலைத்து விட்டாயே" என்று கடிந்துகொட்டினார் கவர்னராணியை.

பதரி வந்ததே வீணாயிற்றே என்று பதறிய அம் மாதரசி கதறிக் கண்ணீர் வடிக்க வேண்டிய சமயம். கண்டத்தில் மலைப் பரல் கொண்ட பொற்சதங்கை குலுங்குவதே போலக் கலகல நகை செய்தார் ஸ்வாமி. குரூரம் கொப்பளித்த முகத்தில் குறும்பு கொந்தளித்தது!

"அம்மாயி, விளையாட்டுக்குத்தான் கோவிச்சுண்டேன்" என்றார் நடிப்புத் திலகம்.

Koviloor Digital Library

அப்...பா என்று அனந்தலக்ஷ்மியும், உடன் வந்த அனைவருமே ஆசுவாஸமுற்றனர்.

ஐயன் தொடர்ந்தார்: "அந்த லிங்கம் மஹா புனிதமானது, வீர்ய வத்தானது. அது ஸதா ஸர்வ காலமும் வெளி உலகின் பார்வையில் இருப்பதற்கில்லை. அதனால்தான் ஆதி சங்கரரே லோகத்தின் பார்வைக்கு நாராயண மூர்த்தியை வைத்து விட்டு இந்த லிங்கத்தை குஹ்யமாக அலகநந்தா கர்ப்பத்திலேயே வைத்திருந்தார். காரியார்த்தமாக அதைத் தாற்காலிகமாக வரவழைத்த நான் காரியம் முடிந்தவுடன் அதை அதன் ரகசிய ஸ்தானத்துக்கே அனுப்பிவிட்டேன். அதற்குள் கொஞ்சம் ஆட்டம் போட்டு நாடகம் பார்க்கத்தான் . . ."

ஆடுகின்றவனும் நீ
ஆடல் கண்டவனும் நீ

★

பிரம்ம கபாலத்தில் உடன்வந்தவர்களைப் பித்ரு தர்ப்பணம், ச்ராத்தம் செய்யப் பணித்தார்.

"தர்ப்பண ஜலமும், எள்ளும், திவஸ போஜனமும் மூதாதையரிடம் போய்ச் சேருகிறதா என்ற வீண் கேள்விகள் வேண்டாம். நம்பிக்கையோடும் நன்றியறிதலோடும் ஒரு காரியம் செய்தால் அது நிச்சயம் நற்பலன் அளிக்கும். பித்ருக்களுக்கு நடக்கும் நல்லதைவிட, இந்தக் காரியங்களால் உங்களுக்கே மிகவும் நல்லது" என்றார் ஸநாதன ஸாரதி.

தர்ப்பணம் முதலியன செய்ய முடியாத கைம்பெண்களும், மற்றவர்களும் விசனித்து நின்றபோது, எல்லா சாஸ்திரங்களையும் விடத் தூய பிரேமையே பெரிது என்ற கொள்கை கொண்ட ஸ்வாமி அவர்களைத் தாமே அலகநந்தாவுக்கு அழைத்துப் போனார். ஒரு பஞ்ச பாத்திரத்தில் அதன் நீரை மொண்டார். எப்படியோ அந்த நீருக்குள் "ஓம்" என்று பொறித்த கெட்டியான விபூதிக் கூம்பு முளைத்திருந்தது! தர்ப்பணத்துக்குரிய எள்ளுகளும் அதிலே மிதக்கின்றன!

வருந்தியவர்களை ஒவ்வொருவராக பாபா கூப்பிட்டு தாமே அவர்கள் கையில் நீரைச் சாய்த்தார். "எவரது திருப்திக்காகத் தர்ப்பிக்கிறீர்களோ அவரை நினைத்துக் கொள். அதுவே போதும். மந்திரம் எதுவும் வேண்டாம்" என்றார்.

ஏன் போதாமல்? சம்பிரதாயத்தை மீறி இவர்களை மந்திரமும் கூறச் செய்ய வேண்டாம் என்றுதானே சகல மந்திரமூலமான பிரணவத்தை நீருக்குள் சிருஷ்டித்திருக்கிறார்! ஐயனே 'சாஸ்திரி'களாக இருந்து நடத்திய தர்ப்பணத்தில் திருப்தியுறாத ஜீவரும் இருக்க முடியுமா? பகவத் அர்ப்பணமான தர்ப்பணமன்றோ அது?

Koviloor Digital Library

பதரியில் ஐநூற்றுக்கு மேற்பட்ட ஸாதுக்களுக்குக் குளிர் காக்கப் போர்வையோ, அல்லது அதற்குரிய பொருளோ கொடுத்துத் தமது குளிரிதயத்தைக் காட்டினார் 'பரித்ராணாய ஸாதூனாம்' வந்துள்ள பரமன்.

★

வடக்கே பதரிநாதம் போல மேற்கே ஸோமநாதம். விக்ரஹ நிக்ரஹம் செய்த முஸ்லிம்களின் மாளாத் தாக்குக்கு மீள மீள ஆளாகியும், ஹிந்து ரத்தம் அலுக்காமல் சலுக்காமல் புதுப்பித்து வந்த பெருமை ஸோமநாதபுர ஆலயத்துக்கு உரியது. சுதந்திர பாரதத்தில் ஸர்தார் வல்லப பாய் படேல்ஜி முன்னின்று இக் கோயிலை ஆறும் முறையாக நிர்மாணித்தார்.

ஸ்காந்த புராணத்தின்படி, ஸோமநாத ஜோதிர்லிங்கம் புவிக்கடியில் சுயம்புவாக முளைத்திருப்பது; ஸ்பரிச லிங்கம் எனப் படும் அது முட்டை அளவேயானது; சூரியனைப் போல் ஒளிர்வது. ஸோமநாதலிங்கமென மூலஸ்தானத்தில் இருந்துள்ள மூர்த்திக்கும், ஸ்காந்த புராண வர்ணனைக்கும் பல நூற்றாண்டுகளாக சம்பந்த மில்லாமலிருந்திருக்கிறது. முஸ்லிம்களின் கைக்கு அந்த ஜோதிர் லிங்கம் அகப்படலாகாது என்றே முன்னோர்கள் எங்கோ புதைத் திருக்க வேண்டும் என்று அநுமானிக்க முடிந்ததே யன்றி, அப் புதைவிடம் மர்மமாகவே இருந்து வந்திருக்கிறது.

அந்த மர்மத்தின் கர்மத்தைத் தீர்க்க நம் ஸ்வாமியால் முடியாதா என்ன?

பரம பக்தரான (காலஞ்சென்ற) நவநகர் மன்னர் ஜாம் ஸாஹேபின் பெயரில் ராஜகுடும்பத்தினர் ஸோமநாதர் ஆலயத்தில் எழுப்பியிருந்த "திக்விஜய த்வார்" என்ற முகவாயிலைத் திறந்து வைப்பதற்கு 1970 மே 17-ந் தேதி ஸ்வாமி அங்கு திக்விஜயம் செய்தார். கோலாஹல உற்சவமாக அந்த க்ஷேத்திரம் ஸ்வாமியை வரவேற்றது.

சுதந்திர பாரதத்தில் பிரதிஷ்டையான மூன்றடி மூல லிங்கத்தின்மீது, பண்டிதர்களின் வேத கோஷத்துக்கிடையே பாபா 108 வெள்ளி வில்வங்களையும், 108 ஸ்வர்ண புஷ்பங் களையும் சொரிந்து ஸாந்நித்யப் பிரதிஷ்டை செய்தார்.

ஆனால் இதுவோ, இதற்கு முன் பல நூற்றாண்டுகள் மூல லிங்கங்களாக இருந்தவையோ ஸ்காந்தம் கூறும் ஆதியான ஜோதிர்லிங்கம் அல்லவே!

இதோ ஐயனின் செங்கை சுழல்கிறது!

ஆஹாஹா, அதிலே ஒளி வீசுகிறது ஒரு சிறு லிங்கம்!

"மூல ஜோதிர்லிங்கமேதான்" என்று உறுதிப்படுத்துகிறார் பாபா.

Koviloor Digital Library

ஆம், முட்டையளவில் ஒளிரும் வைரக்கல் போன்ற அநு சூரியப் பிஞ்சென ஜொலிக்கிறது!

"இனி இதை நிலத்துக்கடியில் ஒளித்து வைக்க வேண்டிய அவசியமில்லை. அனைவரும் பக்திக் கண்ணால் கண்டு, இதன் ஜோதியைத் தமது உள்ளத்தே பிரதிஷ்டை செய்து கொள்வராக!' என்று கூறிய பாபா—பதரி லிங்கத்தைப் போலன்றி—இதை பகிரங்கமாக ஸ்தாபனம் செய்தார்.

ஸோம வாரத்து உதித்த ஜோடி ஆதிபல்லி ஸோமப்பர் ஸோமநாதத்தை மெய்யான ஸோமநாதமாக்கிவிட்டார்!

ஜ்யோதிர்லிங்க மய ஸாம்ப சிவோம்
ஹரஹர ஹரஹர ஸாம்ப சிவோம்
விபூதி சங்கர ஸாயி சிவோம்

ஸோம நாதத்தில் திக் விஜயத் துவாரம் திறந்து வைக்க திக்விஜயம் செய்தவர் துவாரகாபுரிக்கும் சென்று கண்ணனின் ராஜதானிக்குப் புது பட்டம் கொடுத்தார்.

'ஏனையோர் ஆசி பெறவே என் ஆசிரமத்துக்கு வருகிறார்கள். விநோபா பாவேயோ இதற்கு ஆசி தர வந்திருக்கிறார்' என்றாராம் காந்திஜி. நாம் புதுச் சக்தி பெறுவதற்காக ஆலயத்துக்குச் செல்கிறோம்; பாபாவோ ஆலயத்துக்கே புதுச் சக்தி ஊட்டுவதற்காகச் செல்கிறார்!

★

"லோக அர்ச்சா முக்ய மூர்த்தி" என்ற அஷ்டோத்தர நாமாவுக்கேற்ப, இன்று உலகெங்குமுள்ள தெய்வ மூர்த்திகளுள் மிக அதிக பக்தரைக் கவரும் நித்யோத்ஸவன் திருப்பதி வேங்கடரமணனே. புட்டபர்த்தியை நவ திருப்பதியாகவும், பாபாவை நடமாடும் பாலாஜியாகவும் கொண்டிருப்போர் ஏராளம். எனவே திருப்பதியின் நித்ய ஸாந்நித்யத்தில் பாபாவுக்கு சூக்ஷ்மத் தொடர்பு இருக்கவே செய்யும். அல்லாவிடில், முன்பு ஆண்டுதோறும் தியாகராஜ உத்ஸவத்துக்காகத் திருப்பதி சென்ற பாபா திருமலையப்பன் சந்நிதிக்கும் ஏன் சென்றிருக்க வேண்டும்?

வேங்கடவன் முன் வெறுமேதான் நிற்பாராம் நம் ஸ்வாமி. ஆனாலும் 'வெறுமே' என்பது நம் குறுகிய பார்வைக்குத்தான். உள்ளே என்னென்ன நடந்தனவோ?

ஷிர்டி பாபா தம் குருவும் தெய்வமுமாகச் சொல்லிக் கொண்ட பூஜ்ய கோபால் ராவ் தேஷ்முக்கை வேங்கடவனின் அம்சமாகவே கொண்டு "வெங்கூசா" என்றும் சொல்வார். வெங்காவதூதர் வேண்டுதலுக்கிணங்க வெங்கப்பரின் தனயராக வெங்கம்மாவின் இளையராக அவதரித்தவர் நம் ஸ்வாமி.

Koviloor Digital Library

'(ஷிர்டி) ஸாயிநாத மனன'த்தில் அவருக்கும் ஏழுமலை யானுக்கும் பேதமே தெரியவில்லை எனக் கூறியிருப்பது, பர்த்தி ஸாயி விஷயமாகவும் மறுக்கவொண்ணு உண்மையே :

வெங்கடேசஸ்து ஸாயீச : |
தயோர் பேதம் ந வித்யதே ||

★

'திரு-மலை' என்றாலும் 'ஸ்ரீ—சைலம்' என்றாலும் ஒன்றே தான். ஸ்ரீசைல நாதனைக் குறித்து,

ஸ்ரீ மல்லிகார்ஜுன மஹேச்வரா
ஸ்ரீ ஸாயி சம்போ விச்வேச்வரா

என்று பாடுகிறோம். ஆம், ஆதி சங்கரர் சிவ க்ஷேத்திரங்களுள் முதலிடம் கொடுத்துத் தமது 'சிவாநந்த லஹரி'யை ஆக்கிய ஸ்ரீசைலத்தின் ஸாந்நித்யமும் ஸாயியால் தூண்டிவிடப் பட்டிருக்கிறது. அடியாரனைவரும் கட்டியணைக்க இடம் தந்து கட்டிக் கரும்பாக இருக்கும் ஸ்ரீசைல மல்லிகார்ஜுனனை பாபாவின் சிவமயமான கரமும் தடவிக் கொடுத்திருக்கிறது; அவன்மீது பில்வ, புஷ்பங்களைப் பொழிந்திருக்கிறது.

பிரசித்தி பெற்ற பத்ராசல ராமனையும் பர்த்திவாஸ ஸாயிராமன் கண்டு, அம் மூர்த்தியின் உள்ளிலங்கும் தெய்விக சக்தியைப் புலர்வித்திருக்கிறார்.

ஷிர்டி—ஸத்ய ஸாயிக்கள் இருவருக்குமே பண்டரீ பஜனில் அத்தியந்த சம்பந்தமுண்டே! 'விட்டல விட்டல பாண்டுரங்க' என்று மஹாராஷ்டிரத்தையே பிச்சேற்றியவன் பண்டரிநாதன். கலியின் தனி மருந்தாம் நாம கீர்த்தனமே மூர்த்திகரித்தவன் அவன். அந்த விட்டலனை நமது நாம பஜனை நாயகர் விட்டு வைப்பாரா?

பண்டரிபுரத்தில் ருக்மிணி மங்கள நாண் இல்லாதிருப்பதைக் கண்ட மாத்திரத்தில் ஸ்வாமி ஸ்வாதீனமாகத் தாலிச் சரடு சிருஷ்டித்து அவளுக்கு அணிவித்ததை முன்னரே கண்டிருக்கிறோம்.

★

கோயில்களுக்கும், ஆகம சாஸ்திரிய வழிபாட்டுக்கும் முதற் பெயர் கொண்ட தமிழகத்தின் ஆலயங்கள் எதற்குமே ஸ்வாமி சென்றதில்லை.

வியப்பாக இருக்கிறதா?

ஏன் வியக்க வேண்டும்? யோசித்துப் பாருங்கள். பாபா தரிசனார்த்தம் எந்தக் கோயிலுக்கும் செல்வதில்லை. அப்படியே ஒரு மூர்த்தியைக் காண அவர் விரும்பினாலும் தாம் இருக்குமிடத்தி

Koviloor Digital Library

லிருந்தே கண்டு கொள்ள முடியும். பிறருக்குத் தாம் தரிசனம் தரச் சஞ்சாரம் செய்கையிலேயே, ஆலயங்களின் ஸாந்நித்யத்தை விருத்தி செய்யும் பொருட்டுக் கோயில்களுக்கும் செல்கிறார். தமிழகத்தைப் பொறுத்த மட்டில் அதன் க்ஷேத்திரங்களில் திவ்ய சக்தியை 'ரி—சார்ஜ்' செய்வதில்தான் ஸ்ரீ காஞ்சி மாமுனிவர் தனித் தலைமை ஏற்றிருக்கிறாரே!

வேதக் கல்வி பரப்புவதில் ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள் புரியும் அரும்பணியை, பாபா அரைத்த மாவையே அரைப்பதுபோல் 'டுப்ளிகேட்' செய்ய விரும்பாதிருக்கக்கூடும் என்று முன்பே கண்டோம். அவ்வாறே தமிழக தேவாலயங்களின் ஸாந்நித்ய வளர்ச்சிக்கும் தாம் அவசியப்படவில்லை என ஸ்வாமி கருதுவதாகவே கொள்ளலாம்.

நமது ஆலய நிர்வாகிகளும், அர்ச்சகர்களும் பாபாவுக்கு உரிய மரியாதை காட்ட மாட்டார்கள் என்பதாலேயே தமிழ் நாட்டுக் கோயில்களுக்கு அவர் வருவதில்லை என்று ஸாயி பக்தர்கள் நினைப்பது சரியல்ல. இதனால், இவர்கள் அவரை மரியாதையுடன் வரவேற்பார்கள் என்று நாம் சொல்வதாக அர்த்தமில்லை. ஆனால் தமக்கொரு சிறிய நோக்கம் இருக்குமாயின், அங்கே இந்தச் சிறிய உபசார விஷயங்களைப் பொருட்படுத்துபவரல்ல நம் பெருந்தகை. அப்படிப் பார்த்தால், மாநில கவர்னரே பாபா கோஷ்டியில் இருந்தும் பதரிநாத ரவால்கள் பாபாவை விசேஷமாக மதிக்கவில்லைதான். ஆயினும் தர்ம ஸம்ஸ்தாபனத்தின் பொருட்டு ஸ்வாமி அங்கு சென்று, சக்தி ஊட்டிவிட்டுத்தானே வந்தார்?

ஆயினும், நாராயணாவதாரரான ஸத்ய நாராயணர் பதரி, அயோத்தி, வடமதுரை, துவாரகை, பண்டரிபுரம், பத்ராசலம், திருப்பதி முதலான தலங்களுக்கு விஜயம் செய்து விட்டு, வைணவத்தில் 'கோயில்' என்றே பெயர் கொண்ட ஸ்ரீரங்கத்தை மட்டும் விடக்கூடாது என்று எண்ணினாரோ என்னவோ? தமது வெளிப்படையான சஞ்சாரத்தில் திருவரங்க ஆலயத்துக்கு அவர் எழுந்தருளாவிடினும், ஒரு நாள் ஸேவார்த்திகள் பலர் ஸ்பஷ்டமாகக் காண, ஸ்ரீரங்கத்தில் கர்ப்பக் கிருஹத்திலேயே பாபா தரிசனம் சாதித்தாராம். இக் காட்சிக்கு அன்பர் பலர் அத்தாட்சி பகர்கின்றனர்.

ஸ்ரீ ரங்கசாயீ! சேஷசாயீ!
சோபித மோஹன ஸ்ரீ ஸத்யஸாயீ!

✱

பழைய கோயில்களின் மந்திர சக்தியை நலியாது காப்பதில் அக்கறை கொண்டுள்ள நம் ஸ்வாமி தற்போது பேட்டைக்குப் பேட்டை புதுக் கோயில்கள் எழுப்புவதை ஆதரிக்கவில்லை என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். வெறுமே ஒரு கட்டிடமாகக் கோயிலை எழுப்பி அங்கே ஒரு மூர்த்தியை வைத்துவிடுவதால் அந்த பண்டைய ரிஷிகளும் மகான்களும் பழைய ஆலயங்களில் திவ்ய

ஸாந்நித்யத்தைத் திரட்டி வைத்தது போலாகிவிடாது என்பதே ஸ்வாமியின் கருத்தெனத் தோன்றுகிறது. புதிதாகவே எழும்பும் பல தொழில் நகரங்களில் உள்ளவர்கள் அங்கு ஏற்கெனவே கோயில் இல்லாததால் புதுக் கோயில் எழுப்பிக் கொள்ள வேண்டியதுதான்; ஆனால் அருகேயே சுற்றுவட்டாரத்தில் முன்னமே கோயிலுள்ள இடங்களிலெல்லாம்கூட புதுப் புதுக் கோயில்கள் எழுப்ப வேண்டிய அவசியமில்லை; அந்தப் பழைய கோயிலுக்கே சுற்றுப்புற வாசிகள் சென்று வழிபட வேண்டும்; ஸாந்நித்யம் வாய்ந்த அக் கோயில்களையே செப்பம் செய்து திருப்பணிகள் நடத்த வேண்டும்; உள்ளார்ந்த மகிமை வாய்ந்த பண்டைக் கோயில்களைச் சிதையவிட்டு, புதுக் கோயில்கள் எழுப்புவது உதவாது என்பதே அவரது அறிவுரை. அநேக சந்தர்ப்பங்களில், பழைய கோயிலுக்குத் திருப்பணி செய்வதால் தங்களுக்கு 'பெயர்' கிடைப்பதில்லை என்றே, அங்கங்கு தங்கள் பெருமைக்காகச் சிறிய கோயில்கள் எழுப்பப்படுவதாகவும் ஸ்வாமி சாடுகிறார். இப் புதுக்கோயில்களில் சில 'இன்ன ஸ்வாமியின் ஆலயம்' எனப்படாமல், 'இன்னாரின் ஆலயம்' என்று உபயதாரரின் பெயரிலேயே வழங்கப்படுவதாகச் சொல்லிப் பரிகசிக்கிறார். நிஜமான பக்தியோ, அதர்மத்தில் பயமோ இல்லாதவர்கள் ஒவ்வொரு பேட்டையிலும் இப்படித் தங்கள் பொழுதுபோக்குக்காகவும் பிரதாபத்துக்காகவுமே கோயில்கள் எழுப்புவதை வன்மையாகக் கண்டித்து, 'அறம்பாவம் கரையவே ஆலய வழிபாடு ஆன்றோரால் விதிக்கப்பட்டிருக்க, இப்போது தங்கள் அறப்பாவத்தை வளர்த்துக் கொள்வதற்கே கோயில் கட்டும் பைத்தியம் பரவி வருகிறது' என்கிறார். 'இம்மாதிரி எங்கு பார்த்தாலும் கோயில் கட்டுவதானால் அதற்காக ஓயாமல் நன்கொடை வசூலிக்க வேண்டியதாகிறது. இதனால் ஜனங்களுக்கு எரிச்சல் ஏற்படுகிறது. இதயபூர்வமாக நடக்க வேண்டிய இறை பணி 'கடனே' என்று நிறைவேற்றப்படுகிறது. பிறகு கோயிலை நிர்வகிக்கக் கமிட்டி, அதிலே பதவிப் போட்டிகள், பொறாமைகள் என்று பலவிதமாகத் தீமைகள் ஏற்படுகின்றன. ஏற்கெனவே உள்ள கோயில்களைச் செவ்வனே பராமரிப்பதற்கு அதிகமாக இந்த வெற்று விளம்பர ஆலய நிர்மாணங்கள் தேவையே யில்லை' என்று ஒளிவு மறைவின்றிக் கூறுவார்.

குறிப்பாக ஸத்ய ஸாயி மந்திரங்கள் என்று எவரும் கட்டக் கூடாது என விதிக்கும் ஸ்வாமி, ''என் பெயரைச் சொல்லித் திருப்பணி என்று யாராவது நன்கொடைக்கு வந்தால் ஒரு நயா பைஸாகூடக் கொடுக்காதீர்கள்'' என்று வெட்டொன்றும் துண்டிரண்டுமாகக் கூறுகிறார்.

தமக்குப் பூஜையோ பஜனையோ செய்யும் பரம ஏழையும் தனது சக்தியானுசாரம் என்ன செய்தாலும் போதும் என்றும், பிறரிடமிருந்து இதன் பொருட்டு எந்தத் திரவியமும் ஏற்கலாகாது என்றும் கண்டிப்பாக விதிக்கிறார்.

அதர்மத்தின் அழகான மயக்குகளுக்கு ஆட்படாமல் காப்பதும் தர்ம ஸம்ஸ்தாபனத்தின் 'நெகடிவ்' அம்சமாதலின்,

Koviloor Digital Library

இதையும் ஸ்வாமி அறத்தை நிலைநிறுத்துவதற்காகச் செய்பவற்றோடு சேர்க்க வேண்டும்.

(நிதி வசூலுக்குத் தரும் முக்கியத்துவமும், நிதி தருவதால் ஒருவர் பெறும் முக்கியத்துவமும் தகாதவையாகும் என்ற ஸ்வாமியின் கருத்தையொட்டி இங்கு இன்னொன்றும் கூற வேண்டும். ஸத்ய ஸாயி ஸமிதிகள் நடத்தும் அறப்பணிகளுக்கும் நிதியம் வேண்டும்தானே? இவை அநாவசிய ஆடம்பரங்களிலும், விரலுக்கு மிஞ்சிய விக்கமான சாதிப்புகளிலும் இறங்கக்கூடாது என வன்மையாகக் கூறுவார் ஸ்வாமி. எனவே இவை வசூல் என்று ஆலாப் பறக்க அவசியமில்லை. அவசியச் செலவுக்கும் கூடச் சந்தா என எவரையும் நிர்ப்பந்திக்கக் கூடாது; நிறையத் தந்தார் என்று ஒருவருக்கு பவ்வியப்பட்டு விடக்கூடாது என்கிறார். எனவே ரகசிய வாக்குப் பதிவுபோல், அங்கத்தினர் ஒவ்வொருவரும் பிறர் அறியாமல் ஓர் உண்டியில் தங்களால் இயன்றதைச் செலுத்தி விட வேண்டும்; ஒரு பணிக்கு எஞ்சி அதில் மிச்சம் நின்றால் அதை அடுத்த பணிக்கு ஒதுக்கிக் கொள்ள வேண்டும்; எடுத்த பணிக்கே போதாமல் துண்டு விழுந்தால், குறைகிற தொகையை உறுப்பினர் யாவரும் சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என விதித்திருக்கிறார்.

பணத்தின் முக்கியத்துவமும், பணக்காரர்களின் முக்கியத்துவமும் அடியோடு இன்றி, விளம்பரமோ, விடு விடாக யாசகமோ இன்றிக் காதும் காதும் வைத்தாற்போல் ஸமிதிப் பணிகள் நடப்பதே அவற்றின் தனிப் பெருமை. இதனாலேயே அவை அறத்தை நிலைநாட்டும் மெய்யான நிலையங்களாக இருந்து வருகின்றன.)

* * *

தர்மத்துக்கு மறுமலர்ச்சி தந்த திருவிழாவாக நடந்த ஒன்று 1968 மே மாதம் பம்பாயில் நடந்த அகில உலக ஸத்ய ஸாயி ஸமிதிகளின் ஸம்மேளனமாகும். பாரதிய வித்யா பவன மன்றத்தில் இந்த மாபெரும் மாநாடு நடைபெற்றது. சர்வ தேசங்களிலிருந்தும் 1700 பிரதிநிதிகள் குழுமியிருந்தனர். "முன் எந்த அவதாரத்திலும் இப்படி அகில உலகத்தினரும் ஒன்றுகூடி அந்த அவதாரத்தின் உபதேசத்தைப் பெற்றதில்லை" என்று ஸ்வாமியே இதை சிலாகித்துச் சொன்னார்.

ஆம், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நார்வே, உகாந்தா, ஈழம் முதலிய நாடுகளிலிருந்தெல்லாம் வந்திருந்த பிரதிநிதிகள் அங்கெல்லாமும் ஸாயி தர்மம் களகளவென முளைவிட்டு வருவதைத் தெரிவித்தனர்.

ஸாயி தர்மம் என்பது ஸநாதன தர்மந்தானே?

இம் மாநாட்டினால் பாரதத்தில் விசேஷமாகவும், வெளிநாடுகளில் ஓரளவுக்கும் ஆன்மிக ஆஸ்திகங்கள் பொலிவு பெற்றன— ஸாயி வட்டம் பெற்ற விஸ்தரிப்பு மூலம்!

Koviloor Digital Library

உலக நாடுகள் பாபாவைத் தேடி வருவதைவிட பாபாவே உலக நாடுகளைத் தேடிப் பயணம் செய்வாராகில் சர்வ தேசங்களிலும் தர்மம் அதியற்புதமாகத் தழைத்துவிடும் என்பது அடியார்களின் எண்ணம். அநேக வெளி நாடுகள்—குறிப்பாக அமெரிக்கா—அவரை வேண்டி வேண்டி அழைத்தபடியும் உள்ளன. ஆயினும் அவரது திட்டங்களின் மர்மத்தை எவரே அறிவர்? அவர் லோக சஞ்சாரத்தை மேற்கொள்ளவில்லை. ஏன், பாரதத்திலேயே வங்கம் முதலான கிழக்கோரப் பகுதிகளுக்கு அவர் இதுகாறும் விஜயம் செய்யவில்லை. விஜயம் செய்யாமலே தமக்கு மற்ற இடங்களையும்விட அங்கே அதிக பக்தரை உண்டாக்க முடிந்திருக்கிறது என்றும் காட்டியிருக்கிறார்!

இப்படிப்பட்டவர் 1968 ஜூன் 30-ந் தேதி கிழக்காப்பிரிக்கக் குடியரசுகள் சிலவற்றுக்கு மட்டும் திக் விஜயம் புறப்பட்ட மர்மம் நமக்குப் புரியாத ஒன்று.

அப் பகுதியில் குடியேறியுள்ள இந்தியர்களில் பலர் நல்ல ஸாயி பக்தர்கள். அப்போது உகாந்தா அதிபராயிருந்த ஸ்ரீ ஒபோட்டின் மருத்துவரான டாக்டர் ஸி. ஜி. படேல் என்ற இந்தியர் இந்த பக்தர்களுக்கு முடிமணியாயிருந்தார். அவரது ஊக்கத்தில் எழும்பிய அநேக ஸமிதிகள் ஸ்வாமியை வெகுவாக அழைத்து வந்தன.

அவருக்காக ஏங்கி உருகி அழைக்கும் இடங்கள் உலகில் எத்தனையோ உள்ளன. ஆயினும் கிழக்காப்பிரிக்காவுக்கே 'லக்கி ப்ரைஸ்' விழுந்தது.

1968 ஜூன் 30-ந் தேதி நண்பகலில் பாபாவைத் தாங்கும் பாக்கியம் பெற்ற போயிங், நைரோபி விமான தளத்தைத் தொட்டபோது, அவரது புகழும் எப்படி நண்பகல் சூரியனாக உச்சி வானிலிருந்து உலக மீது ஒளி வீசுகிறது என்று புலனாயிற்று.

நந்தலாலா யது நந்தலாலா
ப்ருந்தாவன கோவிந்தலாலா

என்ற பஜனை கோஷம் நூறு நூறு கண்டங்களிலிருந்து புறப்பட்டு விமான நிலையத்தை விம்மிதமுறச் செய்தது.

கசிந்து விட்டார் பாபா, கசிந்து. "ஜயதேவர், கௌராங்கர் வாழ்ந்த நாட்கள் நினைவு வருகின்றன" என்று அகவினார்.

நைரோபியிலிருந்து கின்யா ராஜ்யத்தின் வழியாக உகாந்தா தலைநகருக்குப் புறப்பட்டார் ஸ்வாமி—புஷ்பாலங்கிருதமான காரில்.

407 மைல் கொண்ட அம் மார்க்கத்தில் வழி நெடுக இந்தியர் மட்டுமின்றி, ஆப்பிரிக்கர்களும், வேறு அயல் தேசத்தினரும் கூட்டம் கூட்டமாக நின்று பாபாவின் ஆசியையும், சில இடங்களில் விபூதியையும் கூட, பெற்றனர்.

Koviloor Digital Library

உகாந்தாவின் எல்லையான மலாபாவைக் கார் தொட்டவுடன், அங்கே ராஜாங்க மரியாதையுடன் ராஜராஜன் வரவேற்கப்பட்டார். அதற்கடையாளமாக ஒரு பைலட்-கார் அவரது வண்டிக்கு முன் கட்டியம் கூறிச் சென்றது. 'மதச் சார்பற்ற' நம் நாட்டிலும் கூட நடப்பதற்கில்லாத அரசாங்க மரியாதை!

உகாந்தாவின் தலைநகரான கம்பாலா சரியாக 108 வரவேற்பு வளைவுகள் எடுத்து பாபாவை வரவேற்றது.

நள்ளிரவு ஒன்றரை மணி, பாபா ஸ்ரீ ஸி.ஜி. படேலின் மாளிகையை அடைந்தபோது. அப்போதும் அங்கே ஈராயிரம் மக்கள் காத்திருந்து ஈரக் கண்களால் ஐயனை ஆரப் பருகினுர்கள். ஸ்வாமி பங்களாவுக்குள் போகவே விருப்பமற்றவர்போல் அவர்களிடை சுற்றிச் சுற்றி வந்தார்.

மறுநாள் சூரியோதயத்தின்போது கம்பாலாவில் இப்படியொரு கூட்டம் ஓர் ஆத்மிகத் தலைவருக்குக் கூடியதில்லை, கூடப் போவதுமில்லை என்பது போல் ஜனத் திரள் நெரிந்தது.

அத்தனை நெரிசலிலும் ஸ்வாமி வழி ஏற்படுத்திக்கொண்டு சென்று பலரைப் பிரத்தியேகப் பேட்டிக்குத் தேர்வு செய்து அழைத்துக்கொண்டு போனுர். கிழக்காப்பிரிக்க விஜயத்தில் இந்தப் பேட்டி பன்முறை தொடர்ந்தது. கோரிக்கை பெற்றவர்களில் பலர் ஆப்பிரிக்கரேயாவர். அவர்களுடன் அவர்களது தாய்மொழியான ஸ்வாஹிலியிலேயே அளவளாவினுர் நம் ஸ்வாமி!

பேட்டியறைக்குள் சென்ற போலியோப் பிள்ளைகள் ராஜ கம்பீரமாக நடந்தவாறும், செவிடர் சப்தப் பிரபஞ்சம் என ஒரு விந்தை உளதே என்ற வியப்புடனும் வெளிவருவதைக் கண்டு அந்நாடே ஆச்சரியமடைந்து, ஐயனின் தெய்விக சக்திக்குத் தலையைத் தாழ்த்தியது.

ஸ்வாமியின் இந்தப் பரிபாலன லீலை மட்டுமின்றி சிருஷ்டி லீலையும் அக் கண்டத்தில் அலை வீசியது. ஆப்பிரிக்கரின் காட்டுத் தெய்வங்கள் உள்பட, கிறிஸ்து, நானக், பாபா என்றிப்படிப் பலருக்கு அவரவரது இஷ்ட தெய்வம் பொறித்த பதக்கங்களைப் படைத்துத் தந்தார்.

தம்முடன் வந்த நாலைந்து பேரை ஊர் சுற்றிப் பார்க்கச் சொன்ன பாபா, ''எனக்கு எந்தக் காட்சியும் பார்க்கத் தேவையில்லை. இங்கே என் பணியாக மக்களைத் தேற்றவே வந்திருக்கிறேன். அதையே செய்யப் போகிறேன்''என்முர். கர்ம யோகி!

இருந்தாலும் பாபாவின் உல்லாசப் பயணத்துக்கு ஏற்கெனவே மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்துவிட்டனராதலின் அவர்களது வேண்டுகோளை ஏற்றுச் சில இடங்களுக்குச் செல்ல இசைந்தார்.

இவற்றில் ஸொரன்கெதி தேசியப் பூங்கா வழியாக ங்கோ— ரோங்கோரோ என்ற மகத்தான எரிமலை வெடிப்பைப் பார்க்கச்

Koviloor Digital Library

சென்றதும் ஒன்று. ஸ்வாஹிலி மொழியில் 'ஸிம்ப' எனப்படும் ஸிம்மங்கள், ஒட்டைச் சிவிங்கிகள், வரிக் குதிரைகள், காட்டெருமைகள், பலவித மாவினங்களைக் கண்டு மகிழ்ந்தபடி கானகங்கள் வழியாகச் சென்றனர்.

"ஆஹா, அதோ பார்த்தீர்களா? அந்த ஸிங்க ராணி தூரத்தில் தெரியும் ஒட்டைச் சிவிங்கிக் கூட்டத்தை வேட்டையாட நினைத்து வந்தாள். இதை இங்கேயிருந்த பட்சிகள் பறந்து போய் எச்சரிக்கை செய்தன. உடனேதான், அந்தச் சிவிங்கிகள் ஓட்டம் பிடிக்கின்றன. அது மட்டுமில்லை, எச்சரிக்கையை அவை 'ரிலே' செய்ய, அதோ தொடுவானத்தில் காட்டெருமைகளும், வரிக் குதிரைகளும், க்னு மான்களும் கூட ஓடி ஒளிகின்றன பாருங்கள்!" என்று விலங்கினங்களின் பரஸ்பர சகாயத்தில் மகிழ்ந்து கூறினார் ஸ்வாமி. நெகிழ்ச்சியுடன் தொடர்ந்தார்: "மற்ற ஜீவராசிகள் இப்படி ஒன்றுக்கொன்று உதவி புரிந்துகொண்டே உயிர் வாழ்கின்றன. ஆனால் மனிதன்! போட்டிச் சண்டையில் முன்னேறுவதுதான் உயிர் வாழ வழி (Survival of the fittest) என்று பெரிய தத்துவமாகவே எழுதி வைத்துக்கொண்டு விட்டான்!"

வெண்ணை ஆடை பூண்ட நம் தேவனுக்கு எரிமலைப் புகை தூபம் காட்டி வழிபட்டதாக ஸ்ரீ கஸ்தூரி கூறுவது அதி நயம்!

நைரோபியில் பாபா முதல் பொதுப் பிரசங்கம் புரிந்த போது அப் பூங்காத் திடலில் நெரிந்த திரள் பூரிப்பில் பூத்தது. இங்கும், இதன்பின் அக் கண்டத்தில் நிகழ்த்திய மற்ற உரைகளிலும் பாபா, தாம் தமக்குக் கூட்டம் சேர்த்துக் கொள்வதற்காக இப்பயணம் மேற்கொள்ளவில்லை என்றும் தர்மத்தை, பரம தர்மமான பிரேமையை எங்கும் பாய்ச்சவே வந்திருப்பதாகவும் கூறினார். ஆப்பிரிக்கா—ஆசியா என்றும், நீக்ரோவர்—பாரதியர்—வெள்ளையர் என்றும் உள்ள பேதங்கள் பிரேமையில் ஒன்றி விடுகின்றன என்றார். உடலில் பல பகுதிகள் இருப்பினும் ஒரே ரத்த ஓட்டமே நெடுகிலும் பாய்ந்து அவை அனைத்தையும் உயிருடன் வைத்திருப்பதுபோல, அன்பு ஒன்றே அனைத்துலக மக்களையும் ஜீவசக்தியுடன் வாழ வைப்பது என்று எடுத்துரைத்தார்.

நாம் கோழி கூவக் கேட்டு விழிப்பதுபோல் ஸிம்ம கர்ஜனை கேட்டு விழிக்கும் நகரம் நைரோபி. அங்குள்ள தேசியப் பூங்காவில் ஸிம்மங்கள் மட்டுமின்றி ஏராளமான காண்டாமிருகங்களையும், முதலைகளையும் கண்ட பாபா அவற்றிடமிருந்தும் மனிதன் பெற வேண்டிய பாடங்களைச் சொன்னார். "குரூரமோ, மதுரமோ, ஒரு விலங்கு அப்படியிருப்பது அதன் இயற்கை. எந்த விலங்கேனும் படைப்புத் தொடக்கத்திலிருந்து இன்றளவும் அதனதன் இயற்கை தர்மத்தில் மாறி இருக்கிறதா? மனிதன் மட்டும் தன் தர்மமாம் அன்பையும், ஒழுக்கத்தையும் விட்டுவிட்டான்" என்று அங்கலாய்த்தார் தர்மஸாயி.

Koviloor Digital Library

கடல் மட்டத்திலிருந்து 6,400 அடி உயரத்தில் அமைந்து உள்ள நான்யுகி என்ற ஊரில் ஒருவர் உலகின் கிழ்ப்பகுதியில் ஒருகாலும், மேற்பகுதியில் மறுகாலும் வைக்க முடியும் என்பர். காரணம் அங்கே பூமத்ய ரேகை ஓடுவதுதான். பிரபஞ்சத்தின் மைய சக்தியான பாபா, தம் சிற்றடியால் உலகின் இரு பாதியையும் அளந்த நூதன வாமனர், அங்கு பாதம் பாலித்தார்.

இரவு ''ரகசியப் பள்ளத்தாக்கு'' எனும் வனத்தில், மரத்து உச்சி மேல் நிர்மாணிக்கப்பட்ட உயரக் குடில்களிலிருந்துகொண்டு, செயற்கைச் சந்திரனின் ஒளியில், காட்டு விலங்குகளின் இயற்கை யான போக்குகளைக் கண்டு களித்தனர் பாபா கோஷ்டியர்.

''இத்தனை விலங்குகளையும் அடக்கி வசப்படுத்தும் சாமர்த்தி யத்தை மனிதன் பிரமாதமாகப் பிரயோகித்துக் காட்டுகிறான். ஆனால் தன்னுள்ளேயே சீறிக்கொண்டிருக்கும் காமக் குரோதாதி களான மிருகப் பட்டாளத்தைப் பிரேமையாலும் ஞானத்தாலும் அடக்கத்தான் எந்த முயற்சியும் செய்கிறானில்லை'' என்று பரிதவிப் புடன் கூறினார் பரமர்.

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்;
கரடி வெம்புலி வாயையும் கட்டலாம்; ஒரு
சிங்க முதுகின்மேற் கொள்ளலாம்...
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறம் அரிது

நைரோபிக்குத் திரும்புகையில் ஒவ்வோர் ஊராரும் பாபா வின் வருகையை மோப்பம் பிடித்து வழியெங்கும் வரவேற்பு தந்தது அவர் பிலிற்றும் பிரேம ரஸத்தின் மணத்துக்கு அற்புதச் சான்றாயிருந்தது.

கம்பாலாவுக்கு மீண்டும் பாபா வருகை புரிந்தபோது ஆப்பிரிக்கத் தலைவர் பலரும் அவரைத் தரிசித்து அறிவுரையும், பரிசமும் பெற்றனர். பாதுகாப்பு அமைச்சர் ஓனுமா, செய்தி அமைச்சர் ஓஜிரா, உள்நாட்டு அமைச்சர் படாரிங்காயா, போலீஸ் ஐ.ஜியான ஓர்யெமா ஆகியோரும், இன்று ஒரு பித்துக்குளி ஹிட்லராகப் பரிணமித்து சர்வாதிகாரம் ஓச்சி வருபவரும் அன்று சேநாபதியாக இருந்தவருமான இடி அமீனும் பாபாவிடம் பேட்டி பெற்றுச் சென்றனர்.

கம்பாலாவின் டாக்டர்கள், வக்கீல்கள், வர்த்தகர்கள், சமூக சேவகர்கள், ரோடரி சங்கத்தினர், அரிமா கழகத்தினர் ஆகியோ ருக்கு பாபா அரிய அறிவுரைகள் வழங்கினார். தமது வழக்கப்படி மாகரெரெ பல்கலைக் கழக மாணவரிடம் ஓவர்–டோஸ் அன்பு காட்டி நெடுநேரம் அளாவளாவினார். 'பஹாய்' என்ற பெயரில் புதிதாக அங்கு பரவி வரும் சர்வதேச பொதுச் சமயாலயத் துக்குச் சென்று ஆசி வழங்கினார். தமக்குத் தினைத்துணை பணி செய்தாரிடமும் நன்றி மறவா நாயகன் காரோட்டிகளுக்கும் போலீஸாருக்கும் சேவா தளத் தொண்டருக்கும் பரிசுகள் வழங்கினார்.

Koviloor Digital Library

ஜுலை பத்தாம் தேதி நிகழ்ந்த குரு பூர்ணிமைக்கு பாபா பம்பாய் திரும்பி விடுவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் ஆப்பிரிக்கா அவ்வளவு சீக்கிரத்தில் அவரை விடுவதாக இல்லை. ஒன்பதாம் தேதியன்று மாளிகை ஜன்னல் வழியாக ஸ்ரீ கஸ்தூரி எதிரே மைதானத்தில் கண்ட காட்சி அவரை உருக்கி விட்டது. அங்கே கூட்டத்திடை பாபா செல்கையில் இந்தியர்களும், நீக்ரோவர்களும் எழுந்து நின்று கைகட்டி வாய் புதைத்துக் கூறுவது என்னவாக இருக்கும் என்று கஸ்தூரியால் ஊகிக்க முடிந்ததே அவரைக் கண்ணீர் உகுக்க வைத்தது.

தம்மை மறந்து பிரேமாவேசத்தில் நெடு நேரம் கண்ண நீர் சோர அமர்ந்திருந்த கஸ்தூரியின் முதுகில் ஒரு மென்மையான தட்டல் விழுந்தது. பூனை போல் நடக்கும் ஸ்வாமிதான் பக்கத்தே நின்றார். "ஏனப்பா இந்தக் கண்ணீர்?" என்று அவர் கேட்டாலும், அவருமே உள் கண்ணீரில் ஊறித்தானிருந்தார். கூட்டத்தார் தம்மிடம் தந்த காகிதத் துண்டுகளைக் கஸ்தூரியின் முன் போட்டார்—வழக்கத்துக்கு விரோதமாக. அவற்றில் தனி மனிதப் பிரச்னை ஏதும் இல்லை. அத்தனை பேரும் ஏகமனமாகத்தான் எழுதியிருந்தார்கள் :

"அப்பா, எங்களை விட்டுப் போகாதே!"

"எந்தையே, இதற்குள் அவசரமா?"

"எம்மை இத்தனை சீக்கிரமா பிரியப் போகிறீர்கள்?"

பிரியவில்லை பிரிய ஸாயி. முதல் திட்டத்தை ரத்து செய்து விட்டார். கம்பாலாவில் குரு பூர்ணிமை கொண்டாடவும், மேலும் நாலு நாட்கள் தங்கவும் திரு உளம் கொண்டார்.

அம் மக்கள் உற்சாக வெறி கொண்டனர்.

குரு பூர்ணிமையன்று பூர்ணிமை நிலவாக ஸ்வாமி கம்பாலாவின் பிரம்மாண்டக் கூட்டத்திடை இரண்டு மணிகளுக்கு அதிகமாக உலவினார். விபூதிப் பொட்டணமும், இனிப்பும் தம் கையாலேயே ஏராளமானவருக்கு வழங்கினார்.

ப்ரேம ஸ்வரூபா ஸாயிராம்!
ப்ரேமாவதாரா ஸாயிராம்!

என்று பஜனை நாதம் சத்திய அநுபவத்தில் சக்தியுடன் ஒலித்தது. ஆப்பிரிக்கர் பின் நிற்பரா? ஜூடு என்ற டான்ஸானியாப் பாடகர் முன்பாட அவர்களும் கோஷ்டிகானம் சக்கை போடு போட்டனர். டான்ஸானியா, கென்யா முதலிய அண்டை நாட்டினரும் ஆண்டையை குரு பூர்ணிமாவில் காணக் குழுமியிருந்தனர்.

ஜுலை 12-ந் தேதி, மகாநதியான நைல் மாபெரும் மர்ச்சிஸன் நீர்வீழ்ச்சியாக விழுவதைக் காண பாபா கோஷ்டி சென்றது.

Koviloor Digital Library

நடுவே ஓரிடத்தில் படகுப் பயணம் செல்கையில் கரை நெடுக நூற்றுக்கணக்கில் படுத்திருந்த முதலைகளை பாபா அன்பருக்குக் காட்டி, ''அதோ முதலையின் பயங்கர வாய்க்குள்ளேயே ப்ளவர் பட்சிகள் நுழைந்து, அவற்றின் பல்லிடுக்கில் மாட்டிக்கொண்டுள்ள உணவுத் துண்டங்களைத் தங்கள் கூரிய அலகால் குத்தி எடுத்துத் தின்கின்றன, பாருங்கள்'' என்றார். விலங்கினம், புள்ளினம் முதலியவற்றைக் காணுந்தோறும், அவற்றுக்கு மாறாக மனிதன் ஸ்வதர்மத்தை மறந்து தம்மை அவதரிக்கச் செய்து விட்டானே என்று ஸ்வாமி 'வருந்துவது' வழக்கமல்லவா? சொன்னார்: ''பயங்கர முதலைக்கும் ஒரு வியவஸ்தை இருக்கிறது— வாய்க்குள்ளேயே வந்தமரும் இந்தப் பட்சிகளை விழுங்கக்கூடா தென்று. மனிதன் மட்டும் ஏன் இப்படி ஒரு வியவஸ்தையும் இல்லாதிருக்கிறானே?''

மன்பதையின் போக்கில் மனம் பதைத்தாற்போல் காட்டிய ஐயன், மர்ச்சிஸன் வீழ்ச்சியில் ஆனந்த நீர்வீழ்ச்சியாக ஆர்ப்புக் கொண்டார். ''அந்தமே ஆனந்தமு'' என்று கூறி அழகில் இறையின்பத்தை ரஸிக்கும் ஸ்வாமி, நைல் நதியானது 160 அடி உயரத்திலிருந்து விழும் அந்த மகோன்னதக் காட்சியைத் தமது பரிஜனங்களான ஐவர் காண முடிந்ததில் பேருவகை தெரிவித்தார்.

கிகோண்டோவில் ஆப்பிரிக்க சிற்ப பாணியிலேயே கட்டப் பட்ட பஜனை மந்திரத்தில் ஏராளமான நீக்ரோத் தொழிலாளி களுக்கு இனிப்புக்களும், மருந்துகளும் படைத்தளித்து விட்டு பகல் ஒரு மணிக்கு பாபா கம்பாலாவுக்குத் திரும்பினார்.

அந்த வேளைக்கும் இடத்தை விட்டுப் பெயராமலே அமர்ந் திருக்கிறது, வைகறையில் அங்கே திரண்ட கூட்டம்.

13-ந் தேதி மாலை, புறப்பாட்டை மேலும் தள்ளிப்போட வேணும் என்று பாபாவிடம் கம்பாலா மேயர் விஞ்ஞாபித்தார். தத்தம் ஊருக்கு அவரைப் பிய்த்துக்கொண்டு போவதற்காக ம்வான்ஸா, தாரெஸ்ஸலாம், மொம்பாஸா, எல்டோரெட் என்ற இடங்களிலிருந்தெல்லாம் பிரதிநிதிகள் வந்துவிட்டனர். பார்த்தார் பாபா. ''உலகம் முழுதும் என் வீடு. அதில் ஓர் அறையிலிருந்து இன்னோர் அறைக்குப் போவதே நான் ஒரு கண்டத்திலிருந்து இன்னொன்றுக்குச் செல்வது'' என்கிற தம்மை கிழக்காப்பிரிக்க அறையே சிறை செய்துவிட்டால், மற்ற அறைகள் என்னாவது என்று மனத்தைக் கல்லாக்கிக் கொண்டார். எனவே மறுநாட் காலை புறப்பட்டேயாவது என்று முடிவு செய்து, தெரிவித்துவிட்டார்.

அப்பா, அந்த 14-ந் தேதி காலை! பார்வதி பரிணயத் துக்குக் கயிலையில் சாய்ந்த கூட்டம் போல் திமிலோகப்பட்டது லோகநாதனின் முகாம். கார்கள் மட்டுமின்றி பிளேன்களும் அமர்த்திக் கொண்டு மக்கள் வந்து சேர்ந்தனர். நாம் கேள்வி கூடப் பட்டிராத ஜிஞ்ஜா, இம்பாலா, காகினு, இம்பாராரே,

Koviloor Digital Library

இகாயே, காபிலா ஆகிய ஊர்களிலிருந்தும் ஸத்ய ஸாயி ஸேவா ஸமிதி அங்கத்தினர்கள் வந்திருந்ததிலிருந்து ஐயன் பணி எப்படி வையத்தில் வேரோடிவிட்டது எனப் புரிந்து கொள்ளலாம்.

பாபா காருக்கு வருகையில் கண்ணீரும் கம்பலையுமாகக் கம்பாலா அவரைச் சூழ்ந்து மோதி வந்தது. அவர்களைக் கட்டுப் படுத்திய போலீஸாராலும் மன எழுச்சியைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பது அவர்களது கலங்கிய கண்களிலிருந்து தெரிந்தது. அந்தக் கன்னங்கரிய நீக்ரோக் காவலரையும் ஸ்வாமி பொன்னாகக் கண்டு, ''பங்காரு, பங்காரு'' என்று தட்டிக் கொடுத்தாரோ இல்லையோ, அழுகை வெடித்தே வந்துவிட்டது.

ஆச்சரியம்! இந்தச் சின்ன மூர்த்தி பல்லாயிரம் மைல்களுக் கப்பால் ஆறடிக்கு மேல் உயர்ந்து, வெளிப்பார்வைக்குக் கரடு முரடாகத் தெரியும் நீக்ரோப் போலீஸாரைப் பிழியப் பிழிய அழ வைக்கிறார்; அதுவும் சொந்த நலன் எதற்காகவும் இன்றி, இவரிடம் ஏற்பட்ட சொந்தத்துக்காகவே!

கடினமான மலைமுகட்டில் மெத்தெனும் மேகம் மோதி மழையாகக் கொட்டுகிறது. இங்கோ குன்றனைய நீக்ரோவரிடை நம் நளின மேக சியாமளன் உலவ, குன்றுகளே கண்ணீர் மழையாக உருகுகின்றன!

வாழ்க்கையில் முன்னும் பின்னும் எத்தனை பாவம் செய்தா லும், இடையே சில நொடிகள் இப்படிப் பிரேமையில் கரைந் தாலும் இதிலேயே மலையளவு புண்ணியம் சம்பாதித்துவிடலாமே! இதைவிடப் பெரிய தர்ம ஸம்ஸ்தாபனம் என்ன இருக்கிறது?

கம்பாலாவிலிருந்து இருபத்தியொரு மைல் தாண்டியுள்ள என்டெப்பி விமான நிலையம் வரையில் காரும், ட்ரக்கும், ஸ்கூட்டரும், சைகிளும் அணி அணியாக நெரித்து வந்தன.

பதினைந்து நாட்கள்—ஒரு பக்ஷம்—தாய்ப் பக்ஷியெனக் கிழக்கு ஆப்பிரிக்காவைப் பக்ஷமுடன் அடைகாத்த ஸ்வாமி, விமானமேறி அதன் வாயிலில் அபயஹஸ்தம் காட்டி நின்றபோது,

அந்நியக் கண்டத்தில் அந்நியோந்நியமான ஆயிரமாயிரம் கண்டங்கள் யுகாவதாரிக்கு ஜயவிஜயிபவ கூறின:

ஸ்ரீ ஸத்யஸாயி பாபா மஹராஜ்கி ஜேய்!

உகாந்தாவை மட்டில் உகந்து ஸ்வாமி சென்று வந்த மர்மத்தை விஷயஞானமுள்ள ஒரன்பர் இப்படி விளக்குகிறார்:

இடி அமீன் இப்போது எத்தனையோ கொடூரக் கோணங்கி களைச் செய்து வந்தாலும், இவற்றில் சில கோணங்கியாக மட்டுமே நின்றிருக்கின்றன. பாபா உகாந்தாவுக்குச் சென்றது ஏதோ

Koviloor Digital Library

ஒரு ரகசிய முறையில் அவரைத் தணிப்பதற்கே. பாபா மட்டும் சமனம் செய்திராவிடில் இடி அமீன் அயல் நாட்டினர்மீது இடியாகவே விழுந்து அவர்களை ஒழித்துக் கட்டியிருப்பார் — நாட்டை விட்டு வெளியேற்றியதோடு நின்றிருக்க மாட்டார்.

பாபா சென்றபோதே அங்குள்ள இந்தியர் பலரைத் தாயகம் திரும்ப ஊக்கியதாகவும் இவர் தெரிவிக்கிறார். பிற்பாடு அமீன் நடத்திய அலங்கோல தர்பாரிலும்கூட பிரிட்டிஷார் போன்ற விதேசிகளை வெளியேற்றுவதில் அவர் காட்டிய வெறித் தனத்தை இந்தியர்மீது காட்டாமல் சற்று நீக்குப் போக்குடன் நடந்து கொண்டதையும் சுட்டிக் காட்டுகிறார்.

* * *

பாபா அருளியுள்ள தர்மோத்ஸவங்களில் சிகர ஜோதியாக விளங்குவது சென்ற ஆண்டு (1975) கொண்டாடப்பட்ட அவரது ஸ்வர்ண ஜயந்தியேயாகும்.

எட்டாவது வயதுக்கு மேல்தான் பூணூல் போட வேண்டும் என்பது விதி. ஆனாலும் நம் ஆன்றோர் புனித காயத்ரீ உபதேசத்தை இன்னம் கொஞ்சம் விரைவு படுத்தலாமே என்ப தால் 'கர்ப்பத்தைக் கூட்டி எட்டாவது வயது' என்று அர்த்தம் செய்து கொண்டு ஏழாவது வயதிலேயே பூணூல் போட்டு விடுவர். இவ்விதமேதான் போலும், ஸ்வர்ண ஜயந்தி என்பது ஐம்பதாவது வயது முடியும் இந்த 1976 நவம்பர் 23-ந் தேதிதான் கொண்டாடப்பட வேண்டும் எனினும், தர்மத்துக்கு மகா மலர்ச்சியை ஊட்ட வல்ல அவ்வுற்சவத்தை விரைவுபடுத்த எண்ணி, சென்ற ஆண்டு, ஐம்பதாண்டுத் தொடக்கத்தின்போதே, பொன் விழா எடுத்துக்கொண்டு விட்டார். பிறப்பிலி பிறந்த நாள் கொண்டாடிக் கொள்ளும்போது கர்ப்பத்தைக் கூட்டிக் கொள்வது 'அயம் விசேஷ:' தான்! எல்லாவற்றிலும் உள்ள துருதுருப்பை இதிலும் காட்டிவிட்டார்!

இப்போதே பாரதமாக விரிந்துவிட்ட இந்நூலில் பொன் விழாவை வர்ணித்து எழுதப் புகுந்தால் இரு மடங்காகிவிடும். எனவே எஸ்ஸென்ஸை மட்டும் தருகிறோம்.

நவம்பர் 15-லிருந்து 23 முடிய ஒரு நவராத்ரியாக நடந்தது நவயுக நாயகனின் பொன் விழா. நவராத்ரி யக்ஞத்தையும் ஸ்வாமி இச்சமயத்துக்கே தள்ளிவைத்துக் கொண்டார் — பக்தர்கள் ஒரே மாத இடைவெளியில் இரு முறை புட்டபர்த்திக்கு அலைந்து திரிந்து வரவேண்டாம் என்ற கரிசனத்தால். அது மட்டுந்தானா? ஒரே கல்லில் மூன்றாவது மாங்கனியாக, இரண்டா வது அகில உலக ஸாயி ஸம்மேளனத்தையும் இவ்விழாவிலேயே பிணைத்து விட்டார். எப்படியும் பொன் விழாக் காண சர்வ தேச பக்தர்களும் ஆர்வத்தோடு வருவார்கள், அதைப் பயன் படுத்திக்கொள்வோமே என்ற கருத்தில்.

நவராத்ரியாக உத்தேசித்த விழா முன்னே ஒரு நாளும் பின்னே ஒரு நாளும் குட்டி போட்டுக் கொண்டு 'ஏகாதசினி'யாக நிறைவேறியது.

நவம்பர் 14-ந் தேதியன்று, பிரசாந்தி மந்திரமாகக் கோயில் வடிவில் புத்துருப் பெற்ற பிரசாந்தி நிலயத்தின் விமானங்களுக்கும் பிரதானமான வடக்கு வாயிலில் புதிதே எழுப்பப்பட்ட ராஜ கோபுரத்துக்கும் கலச ஸ்தாபனம் செய்யப்பட்டது.

15, 16 தேதிகளில் அகில இந்திய ஸத்ய ஸாயி ஸேவா தள் மகாநாடு நடந்தது. தமது ஐம்பதாண்டுத் தொடக்கத்திலிருந்து அது முடியும் வரையிலான ஓராண்டில் சேவா தளத் தொண்டர் யாவரும் மன, மொழி, மெய்களால் தம்மாலியன்ற அதிக பட்ச மக்கட் பணி புரிந்து இதை "சேவை ஆண்டாக" ஆக்குவதே தமக்குப் பொன் விழா என்றார் ஸ்வாமி. (இம் மாபெரும் விழாவில் சேவா தளம் செய்த சீரிய பணியே அவரது திரு வுள்ளத்தைப் பிரீதி செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை.)

பால விகாஸின் ஆயிரம் குருமார்களுக்கான மகாநாடு 17-ந் தேதி நடைபெற்றது. இதைவிட முக்கியமாக, இக் குருமார் பயில்வித்தபடி 22-ந் தேதியன்று ஆயிரம் வாண்டுகள் ஸாயிராம் புகழ்பாடி அணிவகுப்பு நடத்தியதையும், பாரதத்தின் பல்வேறு பகுதிகளுக்குரிய கிராமிய நடனங்களை ரம்மியமாக ஆடிக் கலாசார ஐக்கியத்தை மிளிரச் செய்ததும் குறிப்பிடத்தக்கன.

18-ந் தேதி. பதினெட்டு என்றாலே ஜய (வெற்றி) என்று அர்த்தம். கார்த்திகை தீபப் பண்டிகையான அத் திருநாளன்று, இதுகாறும் புட்டபர்த்தியின் நவீன தெய்வத்தால் வெல்லப்பட்டு மங்கியிருந்த பழைய தெய்வங்கள் இன்னொரு நாள் மட்டும் அவர் மீது வெற்றி கொண்டன. இன்று பாபா பர்த்தியின் ஆதி தெய்வமான வேணுகோபால ஸ்வாமிக்குத் திருத்தேர் செய்தளித்து ரதோத்ஸவம் நடத்தினார். இவரது ஆலயத்தையும், மற்றும் பாமை, ஈச்வரன், ஆஞ்ஜநேயர் ஆகியோரது ஆலயங்களையும் பொன் விழாவை முன்னிட்டுப் புதுக்கியிருந்த புதுக் கடவுள், இன்று சந்திர மௌலீச்வரர்-பார்வதி, ராமலக்ஷ்மணரைப் புயமீது சுமந்த மாருதிப் பிரபு ஆகிய வெள்ளியிலான விக்கிரகங்களை வழங்கி அவற்றுக்கு வீதி உலா நடத்தி வைத்தார். அன்று பாபாவே சற்றுப் பின்னணிக்குப் போய், இத் தெய்வங்களுக்குத் தான் முக்யத்வம் கிடைக்கச் செய்தார்—சம்பிரதாய ரக்ஷகர் என்பதற்கு மற்றொரு சான்று.

மறு நாளான கார்த்திகை கிருஷ்ணப் பிரதமைதான் பாபாவின் வாக்குப்படி ஷிர்டி ஸாயி நாதரின் ஜயந்தியாகும். வழக்கமாக நவராத்ரியில் நடத்தும் சண்டி யாகத்தைத் தள்ளி வைத்து ஷிர்டி ஜயந்தியான இன்று தொடக்கி, ஐந்து நாட்களுக்குப் 'பாஞ்ச ராத்ர'மாகத் தொடர்ந்து, பர்த்தி ஜயந்தியன்று பூர்ணாஹுதி செய்து பூர்த்தி செய்தது அருமையான பொருத்தம்! வழக்கமாக சண்டி ஹோமத்தைவிட ருத்ர யாகம்தான் முக்கியம்

Koviloor Digital Library

பெற்றிருக்கும் எளிதும் சக்தி மயமான ஸ்வாமி இப் பொன் விழாவில் பராசக்தியின் வேள்விக்கே சிறப்புத் தந்தார்.

19, 20, 21 ஆகிய தேதிகளில் இரண்டாவது அகில உலக ஸத்ய ஸாயி ஸ்தாபனங்களின் மகாநாடு நடந்தது. மகாநாடு என்றால் போதாது; மகா மகா மகாநாடு என்றே சொல்ல வேண்டும். ஆத்மிக ஐ.நா. சபைபோல் நாற்பத்தியாறு தேசங்களைச் சேர்ந்த எண்ணாயிரம் பிரதிநிதிகள் இந்த ஆந்திரக் கிராமத்தில் குழுமினர். இதை வர்ணிக்க நமக்குத் திறன் போதாது என்றுதான் அன்றே பாரதி பாடி வைத்துவிட்டார்:

புண்ணிய நாளிற் புகழ் வளர் குரவன்
திருமொழி கேட்கச் செறிந்தனர் சீடர்கள்,
"யா(து) அவன் கூறும்? என் எமக்கருளும்?
எப்பணி விதித்தெமது ஏழேழ் பிறவியும்
இன்புடைத்தாக்கும்?" எனப்பலக் கருதி,
மாலோன் திருமுனர் வந்து கண்ணுயர்த்தே
ஆக்கினை [தெரிவான் ஆவலொடு துடிக்கும்
தேவரை ஒத்தனர்

(ஆக்கினை தெரிவான்—ஆக்ஞையைத் தெரிந்துகொள்ள)

அவர்களிடையே பாபா உலவி உபதேசித்ததையும்,

.................. இளமையும் திறலும்
ஆதிபத் தகைமையும் அமைந்ததோர் உருவம்
விழிகளில் தெய்வப் பெருங்கனல் வீசிட
திருமுடி சூழ்ந்ததோர் தேசு காத்திருப்ப

(ஆதிபத் தகைமை—ஆதிபத்திய ஆற்றல்; தேசு—ஜோதி)

என்ற அமரகவி வாக்கிலேயே நாம் தரிசனம் செய்து கொண்டு விடலாம்.

ஈடிணையில்லா 23-ந் தேதி—சாக்ஷாத் ஜன்ம தினம். பங்காரு பாபாவின் பங்காரு ஜயந்தி. தினே தினே பெருகி வந்த ஸ்பெஷல் ரயில்களும், ஸ்பெஷல் பஸ்களும், கார்களும், ஜட்காக்களும், மாட்டு வண்டிகளும், (கூட்டு வண்டிகளும் கூட) இன்று நிலயத்துக்கு ஒரு மைல் அப்பாலேயே நிறுத்தப்பட வேண்டிய நெரிசல். 'மாடஸ்ட் எஸ்டிமேட்'டில் மூன்று லக்ஷம் மக்கள் என்கிறார்கள். ஸாயி பக்தியில் 'விஸ்தாரப் பார்வை' பெற்றவர்களோ ஏழு லக்ஷம் என்று சாற்றுகிறார்கள்.

ஒரு விதமான லௌகிகமான பிரதிபயனையும் எதிர்பாராமல் இப்படி லோகம் முழுதிலிருந்து எத்தனையோ சிரமப்பட்டுக் கொண்டு இவ்வளவு பேர் அந்தத் தெலுங்குக் கிராமத்தில் திரண்டு, குடில்களிலும், டேராக்களிலும், திறந்த வானத்தின் கீழேயும் இந்த மழைக் காலத்தில் தயங்காது தங்கியதை என்

Koviloor Digital Library

சொல்ல, என்னதான் சொல்ல? அரசியல் தலைவர்களுக்கும் ஸினிமா ஸ்டார்களுக்கும் கூடும் கூட்டங்களுக்கும் இதற்குமுள்ள கௌரவமான, தெய்விகமான, பிரேம மயமான மாறுபாடு எப்படி நிகழ்கிறது? ஸத்ய ஸாயி நாதனும் சின்னஞ் சிறு மூர்த்தியின் இதயத்தில் பொங்கு மாங்கடலாகப் பிரவகிக்கும் தெய்விகக் கருணையின் சக்திதான் ஸ்வாமி!

ஊரையே அடைத்துவிட்ட கூட்டத்தின் ஊடே வழி ஏற்படுத்திக் கொண்டு வர முடியாது என்று முன்பே அறிந்துதான் பாபா ஹெலிகாப்டரில் பறந்து பவனி தரிசனம் தர ஏற்பாடு செய்திருந்தார். மக்கள் கூட்டத்தைச் சுற்றிச் சுற்றி ஹெலிகாப்டரில் ஸ்வாமி ஆசி பொழியும் கரமும், அன்பு சொரியும் முகமுமாக அற்புத பவனி வந்தபோது அதிகம் மகிழ்ந்தது அடியாரா, பகவானா என்று தெரியவில்லை என்பார் ஸ்ரீ கஸ்தூரி.

பவனி முடிந்து ஸ்வாமி பிரசாந்தி மந்திரத்தின் முன் வந்து இறங்கியதும், அங்கு ஸர்வ தர்ம ஐக்கிய ஸ்தூபி திறந்து வைக்கப் பட்டது. அப்போது பால விகாஸ் குழந்தைகள், ஸ்தூபம் குறிக்கும் ஐம்பெரு மதங்களுக்குரிய வேதம், ஜெண்டவஸ்தா (பார்ஸி மதம்), த்ரிபிடகம் (பௌத்தம்), பைபிள், குர்ஆன் முதலியவற்றை ஓதியது எதிர்காலத்தில் ஸர்வ மதங்களுமான ஸாயி மதம் உலகெங்கும் செழிக்கப் போவதற்கு பிருதம் கூறிற்று.

அன்று அத்தனை லக்ஷம் பேருக்கும் ஸாயி அன்னையே அன்னம் பாலித்தாள். இலைபோட்டுப் பரிமாறுவது அடியோடு முடியாத காரியமாதலால் பொட்டணங்களாகவே கட்டித் தொண்டர்கள் பெரும்பாடு பட்டு ஒருத்தரும் விட்டுப்போகாமல் விநியோகம் செய்தனர்.

அன்று மாலை மத்ய, மாநில மந்திரிமார் உட்பட்ட முக்யஸ்தர்கள் ஸ்வாமிக்குப் புகழாஞ்சலி செலுத்தினர். பகவானும் பேருரை அருளினார். அதிலே அநேக அரிய விஷயங்களைக் கூறினார். ஒன்றை மட்டும் குறிப்பிடலாம் :

"ருஷ்ய விண்வெளிப் பயணிகளான யூரி காகரின் முதலானோர் சந்திரனுக்குச் சென்று, அது வெறும் ஜடவஸ்துதான், அதில் தெய்விகமாக எதுவுமில்லை என்று ஆஸ்திகர்களைப் பரிகசித்திருக்கிறார்கள். 'வெறும்' ஜடம், அதனால் தெய்விகமில்லை என்ற கருத்து அடியோடு தவறாகும். சூரியனும், சந்திரனும், நாம் வாழும் இந்தப் பூமியும் கூட சாஸ்திரங்கள் கூறுவதுபோல் தெய்விகமானவைதாம். இவை மட்டுமில்லை. அனைத்தும், ஒவ்வோர் அணுவும், பரமாணுவும் இறைவனாலேநிறைந்திருக்கிறது. ஈசன் அனைத்துப் பூதங்களிலும் இருக்கிறான் என்பதைத்தான் 'ஈசாவாஸ்யம் இதம் ஸர்வம்,' 'ஈச்வரஸ் ஸர்வ பூதானாம்', 'ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்' முதலான சாஸ்திர வாசகங்கள் இயம்புகின்றன. யந்திரத்தால் வெளி உலகங்களை மட்டும் பிடிக்கும் உலகாயதர்கள், மந்திரத்தால் உள்ளுலகத்தைப் பிடித்துக் கொண்டால், 'அனைத்திலும் ஒரே பராசக்திதான்

Koviloor Digital Library

நிறைந்திருக்கிறது, எனவே அனைத்தும் தெய்விகம்தான்' என்று கண்டு கொள்வார்கள். இப்படி இவர்கள் சாஸ்திர வழிப்படி வராவிட்டாலும் இவர்களது ஸயன்ஸின்படியே ஆலோசித்துப் பார்க்கட்டும். 'அணுவுக்குள் எலெக்ட்ரானும், ப்ரோடானும், ந்யூட்ரானும் அமைந்து இவ்வளவு சீரான கதியில் அளப்பரும் வேகத்தோடு சுழல்வது எப்படி? ஓர் அணுவைப் பிளக்கும்போது வெளிப்படும் மாபெரும் சக்தி அதற்குள் அடங்கிக் கிடப்பது எப்படி?' என்று யோசித்தால் ஒரு பராசக்திதான் இவற்றை இப்படி நிர்மித்து இயக்கி வர வேண்டும் என்று உணருவர். சகல வஸ்துக்களும் ஒரே விதமான சக்தி அலைகள்தான் என்று ஸயன்ஸே ஒப்புக்கொள்கிறதே! இந்த சக்தி உயிர்கொண்ட, அன்பு கொண்ட ஒரு பேரறிவாக இருப்பதால்தான் 'வெறும் ஜடம்' என்று சொல்லப்படும் அநேக வஸ்துக்கள் அற்புதமாக இசைந்து செயற்பட்டு பிரபஞ்ச வியாபாரம் நடைபெறுகிறது. பரமாணுவிலிருந்து பிரம்மாண்டம் வரையில், ஜட வஸ்து, சித் வஸ்து யாவும் அந்த ஒரே பேரறிவுதான் என்று அநுபவத்தில் காண்பதே மதம். இப்படி அனைத்திலும் ஒரே உயிரை உணரும் போதுதான் பரிசுத்தமான பிரேமை உதிக்கும். இவ்வித அன்பு அனைவருக்கும் உண்டானாலே உலகம் ஆனந்த வீடாகும். வெவ் வேறாகத் தெரியும் அனைத்துள்ளும் இலகும் அந்த ஒரே பரா சக்தியைப் பார் முழுதற்கும் காட்டிக் கொடுப்பதுதான் என் பணி'' என்றாள் பார்த்திப் பராசக்தி.

''அன்பானது இங்கு பல லக்ஷம் மக்களை ஒன்றுசேர்த்து, எந்த இடுக்கண்ணையும் பொருட்படுத்தாமல் ஆனந்தமாக இருக்கச் செய்வதைப் பிரத்தியக்ஷமாகப் பார்க்கிறோம். இதே அன்பை விஸ்தரித்து உலகையெல்லாம் இணைத்து இன்பத்தில் ஆழ்த்துவதே நம் லக்ஷியமாக வேண்டும்.''

பொதுப்படையான இந்த ஸத்திய வாசகங்கள் உன்னதமாக இருந்தாலும், சொந்தப் பாங்குடன் நம்முடன் இழைந்து நிற்கும் ''பாபாத்வ'' இன்பமாகிவிடுமா? இப்பேரின்ப வாசகங்களையும் ஐயன் இந் நன்னாளில் கனிந்து கனிந்து செப்பினார் : ''உங்கள் எல்லோருக்கும் என்னிடம் பண்பட்ட அன்பைத் தந்து, நீங்கள் என்னை உங்களோடு இதயத்தில் ஒட்டிக்கொள்ளச் செய்யவே நான் விழைகிறேன்; அதுவே விசாரமா யிருக்கிறேன். ஸாயி உங்களைத் தாங்கவும், காக்கவும் ஒருகாலும் தவறமாட்டான். அவனால் எப்படி இதிலிருந்து தவற முடியும்?''

விழா நிறைவாக 24—ந்தேதி இரவு வெள்ளை உடை தரித்த பாபா ஊஞ்சலுற்சவம் பெற்றது, என்றென்றும் உள்ளத்தில் அமுதத்தைப் பொழியும் காட்சி! அலங்கார ஊஞ்சலில் வெண்பட்டங்கி பளபளக்க அவர் ஒய்யாரமாக ஆடுகையில் ஐம்பது வயதுக் கிழமாகவா இருந்தார்? ஐந்து நாள் குழந்தையாக, தமது ஆடையினும் வெள்ளைப் பிள்ளையாக நெஞ்சைக் கொள்ளை கொண்டார்.

இத்தனை லக்ஷம் மக்கள் ஸ்வாமியிடம் மட்டும் பிரேமித் திராமல், அது காரணமாகவே பரஸ்பரமும் அன்புடன்,

Koviloor Digital Library

ஒத்தாசை ஒத்துழைப்புடன், பரம ஒழுக்கத்துடன், அதிசயக் கட்டுப்பாட்டுடன் விழாவில் நடந்துகொண்டது இப் பொன் விழாவை நிச்சயம் தர்ம மஹோத்ஸவமே ஆக்கிவிட்டது. அப்புக்காத சிரமங்களையும் தாங்கும் சக்தி மக்களுக்கு இன்றும் இருக்கிறது என்பதை மெய்ப்படுத்தி, எதிர்காலத்தில் அவதாரப் பணி அமோகமாகப் பலிதமாக முடியும் என்று நம்பிக்கையை ஊட்டிவிட்டது இப் பொன்விழா.

எத்தனை எத்தனையோ எழுத வேண்டிய இவ்வைபவம் குறித்துச் சுருக்கக் கூறி முடிக்கையில், இவ்விழாவால் புத்தெழுச்சி வியுயப்பெற்ற தொண்டர்கள் அண்டத்து நாடுகளுக்கெல்லாம் திரும்பியதை, இறைவனின் பூதங்கள் (கிங்கரர்கள்) புது உத்வேகம் பெற்று எங்கும் ஆடிப்பாடி தெய்விக நலன்களையும், அன்பையும், அபயநிலையையும், ஆனந்தத்தையும் பெருக்க விட்டதாக நம்மாழ்வார் கூறும் தனி மொழிகளில் தான் வர்ணிக்க வேண்டும்:

பொலிக பொலிக பொலிக!
போயிற்று வல்லுயிர்ச் சாபம்.
நலியும் நரகமும் நைந்த;
நமனுக்கிங்கு யாதொன்றுமில்லை!
கலியும் கெடும்; கண்டு கொண்மின்!
கடல் வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப் புகுந்(து) இசை பாடி
ஆடி உழிதரக் கண்டோம்.

(நைந்த-நைந்தன; உழிதர-நடமாட)

கண்டோம் கண்டோம் கண்டோம்!
கண்ணுக்கினியன கண்டோம்!
தொண்டீர் எல்லீரும் வாரீர்!...

(எல்லீரும் - எல்லோரும்)

திரியும் கலியுகம் நீங்கித்
தேவர்கள் தாமும் புகுந்து
பெரிய கிதயுகம் பற்றிப்
பேரின்ப வெள்ளம் பெருக
கரிய முகில் வண்ணன் எம்மான்
கடல் வண்ணன் பூதங்கள் மண்மேல்
இரியப் புகுந்(து) இசை பாடி
எங்கும் இடம் கொண்டனவே

(திரியும்-தர்மங்கள் தலைகீழாகும்; கிதயுகம்-க்ருதயுகம்; இரிய-கோலாகலத்துடன்)

உலகில் இன்றும் உள்ள அதர்மப் போக்குகளைப் பார்க்கும் போது ஸத்ய பாபா ஸத்ய யுகமாம் க்ருதயுகத்தை மீளவும்

Koviloor Digital Library

ஏற்படுத்துவாரா என்று சில சமயங்களில் சம்சயம் ஏற்படத் தான் செய்கிறது. இப்போதே பாபா எத்தனை வலுவான அதர்மக் கொடூரத்தைத் தடுத்து வைத்திருக்கிறார் என்பதை உணர்ந்தால் சம்சயம் போய்விடும். உன்னிப்பார்த்தால், கோடாநு கோடியரை அதள பாதாளத்துக்குச் சரிந்து விழாமல் நிறுத்தியதோடு, அவர்கள் இருந்த இடத்திலிருந்து ஒரங்குல மாவது உயர்த்தியிருப்பதிலேயே பாபாவின் அசாத்திய சக்தி தெரியத்தான் செய்கிறது. தர்ம ரக்ஷணம் என்பது கண்ணுக்குப் பரிமளிக்கத் தெரியும் ஒன்றல்ல. புதிதாக ஒரு சிறு குரோட் டன்ஸ் பயிர் செய்தால் அதன் வளர்ச்சியும் வளமும் கண் ணுக்குப் பரிமளிக்கத் தெரியும். ஒரு மாபெரும் ஆல விருட் சத்தைப் பூச்சிகள் உள்ளிருந்து அரித்து, வெளியிலும் புல் லுருவிகள் பாயும்போது அது அடியோடு உளுத்து விழாமல் காப் பது, குரோட்டன்ஸ் வளர்ப்பதைவிட ஆயிரம் மடங்கு பெரிய காரியம். ஆயினும் அச் சிறு செடியின் வளர்ச்சியைப்போல இந்த நெடிய தருவைக் காப்பது பரிமளிக்கத் தெரியாது. இன்னமும் பூச்சிகளும், புல்லுருவிகளும் இருக்கின்றனவே என்று தான் தோன்றும். ஒரு பயனுமில்லாத அற்பாயுள் குரோட்டன்ஸ் போல் விசித்திரமாக ஒரு புது மதம் ஸ்தாபிக்க வந்தவரல்ல ஸ்வாமி. ஏற்கெனவே ஸ்தாபிதமான ஸநாதன தர்ம விருக்ஷம் பூச்சிகளாலும், புல்லுருவிகளாலும் சிதிலமாகி வருவதைத் தடுத்து, அதைப் புதுத் தளிர்ப்பு கொள்ளச் செய்யவே அவர் வந்திருக்கிறார். ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள் போன்றோரும் இதற்கே அவதரித்திருக்கிறார்கள். இவர்கள் வந்திராவிடின் இந் நேரம் ஆலமரம் சாய்ந்து மட்கியே போயிருக்கும். அப்படி ஆகவிடாமல் மரத்தை நிறுத்தியிருப்பதோடு, சில கிளைகளில் பூச்சி யும் புல்லுருவியும் உற்பாதம் செய்து வந்தாலும், வேறு பல கிளைகளில் துளிர்ச்சியும் வளர்ச்சியும் தந்து நம் தளர்ச்சியை நீக்கித்தான் வருகிறார்கள். அவதார சக்தியாலேயே இது நிகழ்கிறது.

இன்று, சிறிய அம்சங்களிலும் அதர்மத்தைப் பற்றிப் பயந்து வாழும் ஸாயிபக்தர் அநேகர் தோன்றியுள்ளனர். அதர்மத்தில் அச்சமும், அறத்தில் பற்றுமே உண்மையான ஸாயி பக்தி என்றுணர்ந்திருக்கிறார்கள். முதலில் அதர்ம வினை வான பாபத்தில் பயத்தாலேயே தர்மத்தில் ஈடுபட்டாலும், நாளடைவில் தர்மத்திலும் பிரேமிக்கத் தக்கது வேறில்லை என்ற உணர்வோடு, விரும்பி அறவழி நிற்கிறார்கள். "நெஞ்சுள் நின்று நினைப்பிக்கு நீதி" ஸாயியே என்பதில் ஊறும் பிரேமைதான்!

இவ்வாறு ஒவ்வொரு ஸாயிபக்தனும் அவர் விரும்புவது போல் ஒரு தர்மநிலையமாகி, அவரது அவதார சக்தி மேன்மேலும் பக்தரை இழுக்குமாயின், "திரியும் கலியுகம் நீங்கிப் பெரிய கி(ரு)தயுகம் பற்றிப் பேரின்ப வெள்ளம் பெருக"வதும் மெய்யே ஆகலாம்.

இப்படி தர்ம ஸம்ஸ்தாபனம் செய்ய வந்த கல்கியாகவே நம் ஸ்வாமியைக் கொண்டு 'கல்கிபுராண'வாக்கிலேயே வேண்டு வாம்:

Koviloor Digital Library

பாயாத் ஸத்ய யுகாதிக்ருத் ஸ பகவான்
தர்ம ப்ரவ்ருத்தி ப்ரிய: ||

(தர்மத்திலேயே ஈடுபட்டிருப்பதை விரும்புபவரும், ஸத்ய யுகத்தைச் சமைப்பவருமான ஆண்டவன் நம்மைக் காப்பாராக!)

★

நம் ஸ்வாமி தர்மத்திலேயே ஈடுபட்டு வாழும் செவ்வியை இனி ரஸிக்கலாம். பொது வாழ்வில் தர்ம மூர்த்தியாக அவர் வாழ்வதை இதுவரை கண்ட நாம், தமக்கும் ஒரு தனி வாழ்வு இருப்பதுபோல் கொண்டு, அதில் அவர் ஒவ்வொரு மூச்சையும் அறமயமாக வாழும் அழகை அநுபவிக்கலாம்!

Koviloor Digital Library

அத்தியாயம்—54

யோக ஸாயி (= கர்ம ஸாயி)

"பார்த்தா! செய்ய வேண்டிய கர்மம் ஏதும் எனக்கில்லை. நான் இதுவரை அடையாததாக, இனி (கர்மம் செய்து) அடைய வேண்டியதாக எதுவுமில்லை. எனினும் நான் அனவரதமும் காரியம் செய்துகொண்டே யிருக்கிறேன். ஏனெனில் நான் அயர்வின்றிக் கர்மத்தில் ஈடுபட்டிராவிடில், மக்களும் என்னைப் பார்த்து அவ்வழியிலேயே செல்வர். அதனால் உலகே அழிந்து படும்."

— கீதையில் கண்ணன் 3–22, 23, 24

"யோக ஸாயியா? = கர்ம ஸாயியா? என்ன ஐயா, ஒரே முரண்பாடாக இருக்கிறது? முன்னே ஓரிடத்தில், 'தனி ஒரு பெருவாழ்வே ஆகிவிட்ட பாபாவுக்கு பக்தரக்ஷணம் புரிவதன்றி வேறு தனிவாழ்வே கிடையாது' என்றீர். இப்போதோ அவரது தனி வாழ்வைப் பார்க்கலாம் என்கிறீர். சரி, போகிறது. அதிலே பாபா தர்மங்களையெல்லாம் நடத்திக் காட்டுகிறார் என்றீராதலால், இது கர்ம மயமாகத்தான் இருக்க வேண்டும். அதனால் இவ்வதிகாரத்துக்கு 'கர்மஸாயி' என்றே முகுடம் இருக்கும் என்று எதிர்பார்த்தால், அதற்கு முன் நேர்மாறாக 'யோகஸாயி' என்றும் தலைப்பிட்டிருக்கிறீர். காரியங்களை அடியோடு நிறுத்தி, மூக்கைப் பிடித்துக்கொண்டு உட்காருவ தல்லவா யோகம்? அந்த யோகஸாயியைத்தான் முன்னமே 'ஞானஸாயி'யில் ஓர் அங்கமாக வர்ணித்து விட்டீரே! போதாததற்கு நேர்மாறான யோக ஸாயியையும் கர்மஸாயியையும் ஸர்வ ஸமமாக்கி '=' போட்டு வேறு குழப்புகிறீர்! கதாநாதன் க்ஷோபணமூர்த்தி என்பதற்காகக் கதாசிரியனும் அந்தப் பட்டம் பெறலாம் எனப் பார்க்கிறீரா?"

வாசகர்காள், சற்றுப் பொறுக்க வேணும். முரண் எதுவுமில்லை. முன்னே 'ஞானஸாயி'யில் சொன்ன யோகஸாயி

Koviloor Digital Library

சாமானிய மனிதர்களான நமக்கான யோகத்தைச் சொன்னவர். இப்போது காணப்போகிற யோகமாயி பகவானுக்கான, பகவானில் நிறைந்த மஹான்களுக்கான யோகத்தைச் செய்கிறவர்.

"அதென்ன விசித்ரம்? இப்படி இரண்டு வித யோகம் உண்டா என்ன? அதுவும் பகவானே புரிய வேண்டிய யோகம் என்று ஒன்று இருக்கிறதா?"

பொறுக்கமாட்டேன் என்கிறீர்களே, ஸ்வாமின்? 'யோகம்' என்றால் 'சேருவது' என்று பொருள். மானுடரான நாம் மெய்ப்பொருளுடன் சேர வேண்டும். அப்படிச் சேர்க்க உதவுவதே நமக்கான 'யோகம்'. மூச்சைப் பிடித்து அதன் மூலமான சத்தியவஸ்துவுடன் சேர்வது ராஜயோகம். மனத்தைப் பிடித்து அதன் மூலமுமான அதே சத்வஸ்துவில் சேர்வது ஞான யோகம். இது நம் கதை.

இனி, பகவான் விஷயம் என்ன? மெய்ப் பொருளேயான அவன் எதோடு சேரவேண்டும்? தர்க்க ரீதியில் எதோடும் சேர வேண்டாம்தான். 'நான் இனி அடைய வேண்டியதாக எதுவும் இல்லை' என்ற பூர்ண நிலையில் இருப்பவனல்லவா அவன்? ஆனாலும் அவன் அறிவோடு நின்றுவிடும் தர்க்க சாஸ்திரியல்ல. அன்பே புரியும் கருணாமயன் அவன். அதனால் தானும் சேர வேண்டிய ஒன்று இருப்பதாகக் கொண்டு, அப்படிச் சேர்ப்பிக்கும் யோகம் ஒன்றினைப் பயில்கிறான். மெய்ப் பொருளான அவன் சேர விரும்புவது பொய்ப் பொருளான நம்மைத்தான்! அவனது பூர்ண நிலையை நமக்கும் அடைவிப்பதற்கே இப்படி நம்மோடு சேர விரும்புகிறான்.

முதலில் இந்தப் பொய் நிலையிலேயே நாம் ஒழுங்காக இருக்கச் செய்ய வேண்டும். அப்படியிருந்தால்தான் நாம் ராஜயோகம், ஞானயோகம் முதலியவற்றையே செம்மையாகப் பின்பற்ற முடியும். 'பொய் நிலையிலேயே ஒழுங்காக இருப்பதுதான்' அன்றாட வாழ்வை, குடும்ப வாழ்வை, அலுவலக வாழ்வை, சமூக வாழ்வை தர்மமாக நடத்துவது. வீட்டையும் சமூகத்தையும் துறந்து யோகியாக வேண்டாம். இவற்றுக்குரிய கடமைகளை நேர்மையாக ஆற்ற வேண்டும். ஆசையும், பலனில் இச்சையும் இல்லாமல் இப்படிக் கர்மத்தை ஆற்றிக் கொண்டிருந்தாலே சித்த சுத்தி ஏற்படும். பிறகு ராஜ—ஞானயோக லக்ஷியமும் சித்திக்கும்.

அந்த லக்ஷியம் சித்தித்த பின்பே, பொய்ப் பொருளாக நினைத்த உலக வாழ்வும் இறைவனின் அலகிலா லீலா வடிவமே என்று தெரியும். இந்த உணர்வினால் நாம் பெறும் ஆனந்தத்தைப் பிறரும் பெற வேண்டும் என்ற அன்புணர்ச்சியால் அவர்களையும் தர்ம மயமாகக் கர்மங்களை ஆற்ற ஊக்குவிக்கத் தோன்றும். ஊக்குவது வெறும் உபதேசத்தால் முடியாது என்பதால் பரம ஞானியும், மஹா யோகியும் கூடத்

Koviloor Digital Library

தானே அன்றாட உலகில் ஒவ்வொரு செயலிலும அறத்தை ஜீவித்துக் காட்டுவான். லக்ஷியத்தை எய்து, அதிலே நிலைத்த அவன் வெளியில் எத்தனை காரியம் செய்தாலும் அதிலே சுய விருப்பு வெறுப்பு கலவாததால் உள் அமைதி குலையாமலே இருப்பான். மஹாபுருஷர்கள் இப்படித்தான் ஒரு சொந்தப் பயனும் கருதாமல் ஸதாவும் ஸத்கர்மா செய்து ஏனையோருக்கு வழிகாட்டி வருகின்றனர்.

பகவான் சங்கற்ப மாத்திரத்தில் உலகைத் திருத்தி விடாமல் அவதாரம் புரிவது, அவனும் நமக்கு முதல் நிலையிலான தர்ம கர்மத்தோடு சேர்ந்து — அதாவது கர்மயோகம் புரிந்து — அதன் வழியே அவனது கர்மமற்ற நிலையில் நம்மைத் தூக்கி விடத்தான்.

''இறைவன் இச்சா மாத்திரத்தில் உலகை நல்லதாக்கி விடலாம்தான். ஆனாலும் ஜீவனுக்குத் தனி மனித சுதந்திரம் என்ற ஒன்றை அவன் லீலையில் கொடுத்திருப்பதால் அதை அழித்து, பலவந்தத் திருத்தம் செய்ய விரும்புவதில்லை. ஜீவனே விரும்பித் திருந்துமாறு, அவன் முன்னே தர்மங்களை நடத்திக் காட்டி, இந்த தர்ம வாழ்வில் உள்ள நிறைவை அவனுக்கு உணர்த்திக்கொண்டே வருவதைத்தான் இறைவன் விரும்புகிறான். இதன் பொருட்டே அவதாரமெடுத்து கர்ம யோகியாக வாழ்கிறான்'' என்பார் நம் ஸ்வாமி.

கர்மா நின்றால் யோகம், எனவே கர்மத்துக்கு முரண் யோகம் என்பதில்லை. கர்ம பலனில் ஆசை போனால் கர்மாவே நம்மை பகவானிடம் சேர்க்க உதவும் யோகமாகும். இதனால்தான் ''கர்மயோகம்'' என்ற பதமே உண்டாயிருக்கிறது. இது ஆரம்ப நிலை. தன்னை நலப்படுத்திக் கொள்ளும் நிலை. இதன் மூலம் அந்தமான அனந்தத்தை அடைந்த பின்னும், லோக நலனையே உத்தேசித்த கர்மயோகம்.

கீதாசாரியன், 'காரியத்தை விடுவது யோகமில்லை, கர்மங்களை அப்பழுக்கின்றிச் செய்யும் திறமே யோகம் (யோக: கர்மஸு கௌசலம்)' என்று உபதேசித்தான். அதைத் தானே வாழ்ந்தும் காட்டினான். அதே கர்மயோகத்தை இன்றும் இனிதே இயற்றிக்காட்டும் நம் நவயுகக் கண்ணனுக்குத்தான் இங்கு ''யோக ஸாயி'' என்று பெயரிட்டிருக்கிறோம். அதனாலேயே அவர் 'கர்மஸாயி'யாக இருப்பதை உணர்த்துவித்தோம்.

நமக்குக் கடமைகளை, கர்மங்களை ஜீவித உதாரணத்தின் மீது உணர்த்த வேண்டியிருப்பதால்தான் பகவான் நம்மில் ஒருவனாகத் தனக்கும் ஒரு தனி வாழ்வு இருப்பதாகக் கொள்கிறான்.

அவர் பக்த ரக்ஷணம் தவிரத் தமக்கெனத் தனி வாழ்வில்லாதவர் என்று முன்பு சொன்னது முக்காலும் ஸத்தியம்

Koviloor Digital Library

தான். சுயச்சார்பு அறவே அற்ற வாழ்க்கையை நடத்துபவராதலால் — வாழ்க்கையில் நாம் உறும் சொந்த உணர்ச்சி மோதல்களையும், வெற்றி தோல்விகளையும், லாப நஷ்டங்களையும் இம்மியும் அநுபவிக்காதவராதலால் அவருக்குத் தனி வாழ்வு இல்லை என்றதும் சரிதான். அதே சமயம் பக்த ரக்ஷணமாகவே அவர்களுக்கு வாழ்க்கை நெறிகளை நடத்திக் காட்ட வேண்டும் என்பதற்காகத் தாமும் பல கடமைகளை, காரியங்களை ஏற்று மானுட ரீதியில் அவற்றைத் தமது தனிவாழ்வில் ஆற்றுகிறார்.

தெய்வ லாயியை மானுட லாயியாக நமக்குக் கட்டிப் பிடித்துத் தருவது இதுதான். ஆயினும் மானுடரான நமக்குள்ள சொந்தக் கலப்பை இங்கு காணவே காணோம். எனவேதான் கர்மயோக லாயியின் மானுடத்திலேயே பரம தெய்விக மாண்பை நுகர்கிறோம்.

பரமன் தெய்விகமாகவும் மானுடமாகவும் ஒருங்கே திகழும் அற்புதத்தை வேதம் சாற்றியது:

யோ தைவோ வருணோ யச்ச மாநுஷ:

டென்னிஸனும் மானுடப் பண்பின் சிகரத்தில் இறைவனே மனிதனாகவும் தேவனாகவும் இருப்பதைப் போற்றினான்:

Thou seemest human and divine,
The Highest Holiest Manhood Thou.

கவி கண்ட அந்த அதி உன்னத, அதி புனித மானுடத் தன்மையை நம் கர்ம யோக லாயியிடம் காண்போம்.

இப்படி நமக்காக அவர் நடிக்கும் 'சொந்த' வாழ்வில் தெய்விக சக்திகளைச் சற்றும் பிரயோகப்படுத்திக் கொள்ளாததாலேயே மானுடமான சகல வேலைகளையும் (மானுடருக்குள்ள அலுப்பில்லாமல்) செய்து காட்டுகிறார். அடடா, அவரது அன்றாட நடக்கைகளில்தான் எத்தனை ஒழுங்கு!

* * *

ஐந்து மணி அளவில் நாள் தப்பாமல் எழுந்து விடுகிறார் ஐயன். பல் துலக்கிக் காபி பருகுகிறார். இதை ஒரு விஷயமாகச் சொல்ல வேண்டுமா என்றால், இப்போது அநேக ஸாதுக்கள் உறக்கத்தில் நர சரீரத்துக்கு உறும் அசுத்தங்கள் தமக்கில்லை என்று காட்டிக் கொள்வதற்காக 'பெட்-காபி' பருகுகிறார்களே! மக்களுக்கு முன்னுதாரணம் காட்டியே உத்தாரணம் புரிய விரும்பும் நம் பிரபுவிடம் இந்த விசித்ரங்களைப் பார்க்க முடியாது.

காபி பருகியதும் ஒன்று விட்டொரு நாள் ஷேவ் செய்து கொள்கிறார். முன்னமே கூறினாற்போல் ஷேவிங் க்ரீம், ப்ளேட்,

Koviloor Digital Library

ஸோப்பு முதலியவற்றில் இன்ன ப்ராண்ட்தான் தமக்கு வேண்டுமென்றில்லாதவர் அவர். சுத்தமாகத் தோன்ற வேண்டும் என்று நமக்கெல்லாம் பாடம் கற்பிக்கும் ஐயன், இதிலேயே நாம் மோகங்களுக்கு ஆளாகிவிடக் கூடாது என்பதையும் உணர்த்துகிறார். 'எது கிடைத்ததோ அதில் திருப்தி அடைய வேண்டும்' என்று நடக்கை மூலமே காட்டுகிறார்.

ஷேவிங் அளவுடன் ஸ்நானம். சாதாரணமாக வெந்நீர் ஸ்நானமே செய்கிறார். முன்பெல்லாம் அரக்கடி தைலம் தேய்த்து ஊறி ஸ்நானம் செய்து வந்தார். இப்போது கருணை காரியங்கள் மிக விருத்தியாகி விட்டதால் தம் பொருட்டு அவ்வளவு நேரம் செலவழித்துக்கொள்ளக் கூடாது என்றோ என்னவோ, சில ஆண்டுகளாக எண்ணெய்க் குளியலை நிறுத்தி விட்டார். தினமும் தலைக்கு ஸ்நானம் செய்பவர் நம் விநோத முடியர்.

தினமும் அம் முடியை (ஸெண்ட்கள் கலவாத) தைலம் தடவி, விசேஷப் பல் கொண்ட சிப்பினால் நன்றாக வாரி விட்டுக் கொள்கிறார். ஸ்வாமியைத் தங்களில் ஒருவராகக் கருதும் ஹிப்பிகள் கவனத்துக்காக, முன்பே சொன்ன இவ்விஷயத்தை மீளவும் கூறுகிறோம்.

சுசி ருசியாகவும் இருக்க வேண்டும், அதற்காக 'லக்ஷுரி' யான சொகுசுகள் கூடாது என்பது ஸ்வாமி காட்டும் வழி.

ஆகாரத்திலும் பாருங்கள். சாமானிய உணவே மிகவும் மித அளவில் கொள்கிறார். ஸ்வாமிக்குப் பிரியமானவை என்று சில போஜன வகைகளையும் தின்பண்டங்களையும் குறிப்பிட்டாலும், அவராக 'இது வேண்டும், இது வேண்டாம்' என்று சொல்ல மாட்டார். வெளியூர் சஞ்சாரங்களில் எதை உண விட்டாலும் உவந்து உட்கொள்வார்.

கருக்காக அதிகாலை காபி, எட்டு மணிக்குச் சிற்றுண்டி, நண்பகலில் போஜனம், மாலை மூன்றரை மணி அளவில் காபி, இரவு எட்டுக்குச் சாப்பாடு என்று வைத்துக்கொண்டிருக்கிறார். நச்சுப் பிச்சென்று உண்ண மாட்டார். இதெல்லாமும் கூடத் தான் நமக்குப் பாடங்கள்.

பாலும், நெய்யுமே சேர்த்துக் கொள்ளாத பாபாவுக்கு ஹார்லிக்ஸ், ஓவல் போன்றவையும் லக்ஷுரிதாம். இப்படியெல்லாம் ஒரு பழக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு அதற்கு அடிமையாவதைக் கண்டிப்பார். அதே போதில் ஆரோக்கியத்துக்கோ சுறுசுறுப்புக்கோ ஹானியாக தேகத்தை வருத்திக் கொள்வதையும் ஆட்சேபிக்கிறார். "காபி குடிக்கலாமா?" என்று கேட்ட பக்தரிடம், "காபி குடித்தாய் என்பதற்காக பகவான் பேரூலக வாசலை மூடிவிட மாட்டார். அதிலே அப்படியொன்றும் போதையில்லை. ஆனால் அதிலேயே பைத்தியமாக இருக்காதே. காபியை நீ குடி; காபி உன்னைக் குடிக்க விடாதே" என்றார்.

Koviloor Digital Library

இதை சொன்ன மத்ய மார்க்கப்படி, ஒரேயடியாக தேகத்தைக் கஷ்டப்படுத்தாமலும், அல்லது தேக போஷணையே சகலமும் என்று அதையே போஷித்துக் கொண்டிராமலும் நடப்பதே ஸ்வாமி நடத்திக் காட்டும் நெறி.

(என்னதான் மானுட வேடமிட்டாலும் அவர் தெய்வ ஸாயி யாகப் பிறர் நோவைத் தம் மனித சரீரத்தில் ஏற்று, 'இழுக்கி' அநுபவிப்பதும் உண்டே! இம்மாதிரிச் சமயங்களிலோ என்னவோ—நம் அநுமானம்தான்; அவர் உடைத்துச் சொல்வது இல்லை—காபி உள்பட அடியோடு ஏதும் உண்ணாமலே யிருப்பார். நாட்கணக்கில், வாரக்கணக்கிலும், இந்த முழுப் பட்டினி நீடிப்பது உண்டு. ஆயினும் இது தெரிந்தால் வெளிமக்கள் 'ஏன், என்ன?' என்ற கேள்விகளில் இறங்குவர், மனக்கிலேசமும் உறுவர் என்பதால் வெளியில் தெரியாமலே நாடகம் போடுவார். ஒட்ட ஒட்ட உபவாசமிருந்தாலும் சற்றுகூடத் தளர்வின்றி அத்தனை காரியங்களையும் பம்பரமாகச் சுற்றி ஆற்றுவார். எவ்வித மான உணவு வகையிலும், காபி முதலான பானங்களிலும்கூட அவர் லவலேசச் சபலமும் இல்லாதவர் என்பதை இக் கடும் உபவாசங்களிலிருந்து அறியலாம்.)

'லக்ஷரி' கூடாது என்பதால்தான் இன்றளவும் மின் விசிறிக்கு அதிகமாக 'ஏர்-கன்டிஷன்' முதலிய வசதிகளை அவர் பிரசாந்தி நிலயத்தில் செய்து கொள்ளவில்லை—அங்கு வெயில் வறுத்தெடுக்குமாயினும் கூட.

அவரிடம் எலெக்ட்ரிக் ஷேவர் கிடையாது. உண்பதற்கு அவர் ஸ்பூன் உபயோகிப்பதில்லை.

தாம்பூலம் தரிப்பவராயினும் அதிலும் அநேகர் உபயோகிக் கும் அநேக மசாலைகளை 'லக்ஷரி'யாக ஒதுக்கியிருக்கிறார். இப்படி ஒவ்வொன்றிலும் அளவு பார்த்து, அதற்கு மில்லி மீட்டரும் மேலோ கீழோ போகாமல் ஒழுகிக் காட்டுகிறார்.

கசகசப்பு போகவும், ஒரு சங்கத்தில் துர்க்கந்தம் இல்லா திருக்கவும் இதமான மென் மணமுள்ள பவுடர் போடுவதை அவர் ஆட்சேபிக்க மாட்டார். ஆனால் கவர்ச்சிக்காக முகத்தில் வெள்ளை யடித்துக் கொள்வதையும், ஷோக்குக்காகச் சுரில் மண ஸெண்ட்கள் போடுவதையும் அவர் விரும்பவில்லை. சுயமான பரிமள மேனியரான அவர் தம்மளவில் பவுடர், ஸெண்ட் உபயோகிப்பதில்லை. குளித்து, பரம சுத்தமாக உடுத்து, முடியை ஒழுங்கு செய்துகொள்வதோடு சரி.

ஸ்நானம் முடித்தவுடன் நாம் செய்ய வேண்டியதற்கு மட்டும் ஸ்வாமியை ஆதர்சமாகக் கொள்ளக் கூடாது. ஏனெனில் குளித்ததும் நம் கடன் பூஜையிலோ, தியானத்திலோ, துதிகள் ஓதுவதிலோ இறை நினைவில் இருப்பது. மானுடமாகப் பல விதங்களில் நடித்தாலும் ஸ்வாமியால் வழிபாடோ, யோகமோ, தியானமோ புரிவதாக மட்டும் நடிக்க முடிவதில்லை!

Koviloor Digital Library

இப்போதே தம் ''ஆபீஸை''த் தொடங்கி விடுகிறார்; அல்லது ''குடித்தன'' காரியங்களை ஆரம்பித்து விடுகிறார்.

இரண்டாம் திருப்பதியாக நாள்தோறும் விரிந்து வரும் பிரசாந்தி நிலயம், அதன் வைத்தியசாலை, பாடசாலை, போஜனசாலை, நாலு கல்லூரிகள், பள்ளி, பிரசுராலயம், மாத சஞ்சிகை, மாபெரும் கோகுலம், ஏழாயிரம் ஸமிதிகளுக்கு மூலாதாரமான மத்ய டிரஸ்ட் இவற்றை நிர்வகிக்கும் மகாபெரும் ஆபீஸ். எத்தனை விதமான அலுவல்கள் இருக்கும்? அத்தனையும் இவரது நேர்பார்வையில், சொந்தமான கவனத்தில் நடப்பவை.

தமக்கென ஒரு காரியதரிசியோ, மானேஜரோ, ஸ்டெனோவோ இல்லாமல் இந்தக் காரியங்களையெல்லாம் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் ஆற்றும் அற்புத உழைப்பாளி நமது பிரபு. எசமானருக்கெல்லாம் எசமானரானவர் செய்யும் உழைப்பு கொஞ்ச நஞ்சமல்ல.

ஸ்தாபன ரீதியில் இவர் செய்ய வேண்டியவை, ஸ்தாபன ரீதியில் வேறு பலர் இவரை அழைப்பது பற்றி முடிவெடுப்பது போன்றவற்றைத் தாமே நிர்வகித்துக்கொள்கிறார்.

ஸ்தாபன அடிப்படையிலான இந்த 'ஆபீஸ்' போக, மாபெரும் 'குடித்தனக்கார'ராகவும் தனி மனிதர்களுக்குப் பொறுப்பாற்றுகிறார்!

உலகக் குடும்பம் முழுதற்கும் ரக்ஷணை தருகிறாரே அதைச் சொல்லவில்லை. அது சூக்ஷ்ம காரியம். அதிலும் ஸ்தூலமாக இருக்கும் ஒன்று, தினந்தோறும் உலகின் எட்டெட்டு திக்கிலிருந்தும் வந்து குவியும் கடிதங்களில் சிலவற்றை லீலைக்காகப் படித்துப் பார்ப்பதும், அவற்றிலே ஒரு சிலவற்றுக்குத் தாமே கைப்படப் பதில் எழுதுவதும்.

பாபாவிடம் நாம் கற்கவேண்டிய மானுட தர்மங்களில் ஒன்று பிறரது அந்தரங்கங்களை ரகசியமாகக் காப்பதாகும். சகலரது குறைகளையும் அறிந்தவராயினும் ஒருத்தரைப் பற்றிய ரகசியத்தை இன்னொருத்தரிடம் தவறியும் சொல்லமாட்டார். இதனால்தான் டிக்டேட் செய்து டைப் அடிக்காமல், தாம் கைப்படவே கடிதம் எழுதி, கவரைத் தாமே ஒட்டித்தான் தபாலில் சேர்க்கச் செய்கிறார். தமக்கு வரும் கடிதங்களைப் பிறர் உடைத்துத் தரவும் அனுமதிக்கமாட்டார். மிகச் சமீப காலம் வரையில் ரப்பர் ஸ்டாம்ப் வைத்துக்கொள்ளாமல் ரிஜிஸ்தர் தபால்களுக்குத் தாமே ஒப்பமிட்டுத்தான் பெற்றுக்கொண்டார். ஸ்வாமியின் 'ஆட்டோக்ராஃப்' கிடைக்கிறதென்றே எவ்வித விண்ணப்பமும் இல்லாதவர்களும்கூட ரிஜிஸ்தர் கடிதங்கள் எழுதுவார்கள்!

லோகத்துக்காக அவர் செய்யும் மற்றொரு மாபெரும் ஸ்தூல காரியத்தை முன்பே சொல்லி விட்டோம். ஆயிரமாயிரம்

Koviloor Digital Library

மைல்கள் காரிலும், ப்ளேனிலும் சென்று, விடியுமுன்பிருந்து நள்ளிரவுக்குப் பின் வரை வேளாவேளைக்கு உணவின்றி, ஓய்ச்சல் ஒழிவில்லாமல் அவர் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதும், பக்தரில்லங்களுக்கு விஜயம் செய்வதும் நாம் நிறையக் கண்டவைதாமே!

ஆனாலும் மேலே நாம் அவரைக் ''குடித்தனக்கார'' ராகச் சொன்னது, அகில உலக இல்லத்துக்கு அவர் ஆற்றும் இந்த ஸ்தூல - சூக்ஷ்மப் பொறுப்புக்களைப் பொறுத்தல்ல.

அவரை ரக்ஷக தேவதையாக மட்டுமின்றி, நேர் தலைவ ராகக் கொண்டதொரு மாபெரும் குடும்பமுண்டு. மேலே அவர் ''ஆபிஸ்'' செய்யும் ஸத்ய ஸாயி ஸ்தாபனங்களைச் சொன்னோமே, இந்த ஸ்தாபனங்களைச் சேர்ந்த அங்கத்தினர் களை அவர் சிப்பந்திகளாக மட்டும் கருதவில்லை; தம் நேர் பொறுப்பிலுள்ள குடும்ப பந்துக்களாகவே கருதுகிறார்.

அவரது கல்லூரி மாணவர்கள் பரீட்சையில் நல்ல ரிஸல்ட் காட்டிவிட்டால் மட்டும் அவருக்குப் போதாது. அவர்கள் ஒழுக்கசாலிகளாக இருக்க வேண்டியதும் அவருக்கு முக்கியம். இதிலேயே கண்ணும் கருத்தும் வைத்திருக்கிறார். அவரது கல்லூரி ஆசிரியர்கள் நல்ல போதகர்களாக மட்டும் இருந்து விட்டால் போதாது. அவர்களை நல்ல ஸாதகர்களாகவும் இருக்கச் செய்வது தம் பொறுப்பு எனக் கொள்கிறார். இப்படியே ஸத்ய ஸாயி நிறுவனங்களில் இருப்போரின் சொந்த வாழ்க்கையின் சிலத்துக்கும் பாபா காவலராகத் தம்மை நியமித்துக் கொண்டிருப்பதால், அந்த நிறுவனங்கள் இவருக்கு ஆபீஸாக இருக்கையில், நிறுவனத்தார் ஆயிரமாயிரவரும் இவரது குடித் தனத்தைச் சேர்ந்த சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள்.

தம் ஸ்தாபனங்களைச் சேர்ந்தோரின் கஷ்ட நஷ்டங்கள், இன்பங்கள், லாபங்கள், கலியாணம், மரணம் எல்லா வற்றிலும் சம்பந்தப்பட்டு அருளாலும், பொருளாலும் ஆற்ற வேண்டியவற்றை, இக் குடும்பத்தின் அம்மையும் அப்பனுமான பிரபு கடமை வழுவாது புரிகிறார்.

வெளியுலக பக்தர்களைவிட இவர்களிடமே அதிகக் கண்டிப்புடன் நெறிகளை எதிர்பார்க்கிறார்.

அதிலும் பிரசாந்தி நிலயத்திலேயே வசிக்கும் ஆசிரம வாஸிகள் விஷயத்தில் கேட்கவே வேண்டாம்.

பூர்வ புண்ணிய வசத்தால் இவர்கள் ஏனையோரைப்போல் பக்தராக மட்டுமின்றி ஸ்வாமியின் நேர்த் தலைமையில் வாழ் கிறார்களல்லவா? அந்தப் புண்ணியத்தை இப் பிறவியில் நலிவித்துக் கொள்ளாமல், அவர்கள் முற்றும் உய்வு பெற வேண்டுமென்றே அவர்களது நடத்தை, நல்லொழுக்கங்களில் ஸ்வாமி மிகவும் கறாராக இருக்கிறார்.

Koviloor Digital Library

இன்னொரு காரணமும் உண்டு. ஸ்தாபனக்காரர் ஒருவர் ஏனைய பக்தர்களிடத் தங்களையே பிழைகளுக்காக ஸ்வாமி வறுத்தெடுப்பதைப்பற்றி விசனித்தபோது, இக்காரணத்தை ஸ்வாமி பளிச்சென்று வெளியிட்டார்: "I am judged by your behaviour."

ஸாயி ஸ்தாபனத்தார் ஒழுங்கீனமாக நடந்தால் வெளி உலகில் ஸாயியின் பெயரே அல்லவா அதனால் பாதிக்கப்படும்?

தம் பெயரைப்பற்றி ஸ்வாமிக்கு சொந்த ரீதியில் கவலையே இல்லைதான். ஒரு காரணமும், ஒரு முகாந்தரமும் இல்லாமலே, அவருக்கு அவப்பெயர் உண்டாக்குவதற்காகச் செய்யும் கொடூர அபவாதங்களாலும் மயிரிழை சலன முறாத மகாமேரு அன்றோ அவர்? பின் ஏன் இப்படிச் சொன்னார் எனில் மக்களுக்கு நியாயமான குறைகள் தோன்ற இடம் தரலாகாது என்றுதான். பாபாவின் நிறுவனத்தார் தவறி நடந்தால் பாபாவையேதான் உலகம் பழிக்கும். இது நியாயமான பழிதான். இப்பழியால் ஸாயித்தாய் உய்வு தரத் துடிக்கும் பல மக்கள் அவரிடம் வரமாட்டார்கள்—உய்வு தர இவர் துடித்தாலும் அவர்களது மனத்தின் சுதந்திரத்தை மதித்து விட்டிருப்பதால். இவ்வாறு உலகுக்கு ஏற்படக்கூடிய நஷ்டத்துக்காகத்தான் தமது நற்பெயரில் அவர் கருத்து வைத்திருப்பதுபோல் ஸ்தாபனத்தாரிடம் கூறினார், ''உங்கள் நடத்தையால்தான் என்னை மதிப்பிடுகிறார்கள்'' என்று.

(ஸ்தாபனத்தாரின் தவறு வெளியுலகுக்குத் தெரியக் கூடாது என எண்ணுபவரல்ல. ஸ்தாபனத்தார் வாஸ்தவமாகவே தவறு செய்யக்கூடாது என்று கருதுபவரே அவர். நிஜமாக அவர்கள் தப்பிதம் செய்கையில் உலகுக்குத் தெரியாமல் மூடி மழுப்ப மாட்டார். அவர் ஸத்ய ஸாயி, தர்ம ஸாயி. எனவே தவற்றைப் பூசி மெழுகுவதை அவரிடம் காணவே முடியாது. உதாரணமாக, பாடசாலை மாணவன் ஒருவன் ஒழுங்கீனம் ஒன்றினைச் செய்துவிட்டான். வேறு சில மாணவர்கள் இதற்கு உடந்தை. இன்னம் சிலர், தப்பிதத்தை அறிந்தும் மேலிடத்துக்குச் சொல்லாதிருந்து விட்டனர். ஆனால் ஸ்வாமியிடமிருந்து விஷயம் எப்படித் தப்பும்? அவர் காதும் காதும் வைத்தாற்போல் மாணவரைக் கண்டித்திருக்கலாம். ஆனால் அப்படியா செய்தார்? தம் அலுவலர் ஒருவரைக் கொண்டு அனைவரும் அறிய பகிரங்கமாகவே அந்த மாணவர்களைக் கண்டித்து, பயணச் செலவைத் தந்து அவரவர்களை வீட்டுக்கே மூட்டை கட்டி அனுப்பிவிட்டார். ஒளிவு மறைவற்ற தெளிவினை நமக்கு வாழ்ந்து காட்டுபவர் மானுட ஸாயி.)

பிறரது தூஷணை, பூஷணைகளைப் பொருட்படுத்தாமல் அவரவரும் கடமை புரிய வேண்டும் என்ற மானுட தர்மத்துக்கு ஆதர்சமாக இருப்பவரே, யார் என்ன சொன்னாலும் நம் மனம் போனபடி நடக்கலாம் என்றில்லாமல் உலக அபிப்பிராயத்திற்கு மதிப்புத் தரவேண்டும் என்ற நெறியையும் நமக்குக்

Koviloor Digital Library

கற்பிப்பவராவார். அதுவும் தனி மனிதரோடு நில்லாமல் ஸ்தாபனத்தைப் பாதிக்கும் விஷயங்களில், அதன் கௌரவத்தைக் காப்பதில், லோகக் கருத்தை தலைமேற் கொள்பவர். இதிலே லோகாபவாதத்துக்காக மைதிலியை வனம் ஓட்டிய ஸ்ரீராமசந்திர மூர்த்தியைப் போலவே அவர் நடந்துகொள்ளும் சந்தர்ப்பங்களும் உண்டு. இதற்குப் பிற்பாடு சான்று தருவோம்.

இங்கே சொல்ல வந்தது யாதெனில் அவருக்கு மகத்தானதொரு "அலுவலக"ப் பொறுப்பும், "குடும்ப"ப் பொறுப்பும் உள்ளன என்பதுதான். இவற்றையும், உலகப் பொறுப்பில் ஸ்தூலமாக உள்ளதையுந்தான் காலை ஸ்நானம் முடித்துச் சுமார் ஆறரை மணியிலிருந்து இரவு சுமார் ஒன்பதரை வரையில் (வெளியூரானால் நள்ளிரவு வரையில்) சுருசுருவென ஆற்றுகிறார்.

வேத வாக்குகளை நூறுசதமும் இதிலே நிரூபித்துக் காட்டுபவர் நம் தேவர். இவரைக் குறித்தே திர்க்க திருஷ்டி வாய்ந்த ரிஷிகண்ட மந்திரமோ என்று வியக்க வைக்கும் மறை மொழி ஒன்று:

அஸ்வப்னஜஸ் தரணய: ஸுசேவா
அதந்த்ராஸோ (அ)வ்ருகா அச்ரமிஷ்டா: |
தே பாயவ: ஸத்ர்யஞ்சோ நிஷத்யா
(அ)க்னே தவ ந: பாந்த்வமூர் ||

"ஒளித்தேவா! நீ உறங்கி வழிவதே யில்லை. சுறுசுறுப்பாக உள்ளாய். அருளாளனாக இருக்கிறாய். குன்றாத உற்சாகத்தோடு ஆயாசமே உறாமல் நேயனாகச் செயற்படுகிறாய். பிழையே செய்யாத உனது இந்த அருட்சக்திகள் ஒன்றுசேர்ந்து எமைக் காத்தருளட்டும்."

இறைவன் சொல்லேதான் ரிஷிகள் மூலம் வேதமாக வந்தது. மேலே அந்த சொல்லைக் கேட்டோம். இனி பார்த்தி இறைவனை நமது கர்மயோகத்தைச் சொல்லிக்கொள்ளும் அமுத வாக்கைக் கேளுங்கள்:

"பாபா ஓய்வு எடுத்துக்கொள்வதே யில்லை. அவர் ஒரு போதும் களைப்படைவதில்லை. எப்போது பார்த்தாலும் வேலை செய்துகொண்டே இருக்கிறார்... சாதாரணமாக மூன்று, நாலு பேர் அடுத்தடுத்து தங்களைப் பார்க்க வந்தாலே ஜனங்கள் அலுப்பும் எரிச்சலும் அடைந்து விடுவார்கள். ஆனால் பாபாவைப் பார்க்கவோ முடிவேயில்லாமல் வந்தபடி இருக்கிறார்கள். அதோடு பாபா தன் பள்ளிகள், கல்லூரிகள் குறித்த ஒவ்வொரு அம்சத்தையும் தாமே கவனிக்கிறார். லக்ஷக்கணக்கான பக்தர்களையும் கவனித்துக்கொள்கிறார்.

"மற்ற ஜனங்களுக்கு வேலை செய்வதோடு பொறுப்பு தீர்ந்தது. அதன் பலனை அவர்களாக ஏற்படுத்திக்கொள்ள

Koviloor Digital Library

முடியாது. அது பலதாதாவான ஈச்வரன் கையிலுள்ள விஷயம். எனவே வேலைக்கு மட்டுமே அவர்கள் ஜவாப்தாரியேயன்றி, அதன் பலனுக்குப் பொறுப்பேற்கவில்லை. பாபாவோ வேலைக்கு மட்டுமின்றி அதன் பலனுக்குமான பொறுப்பை வகிக்கிறார்.

''இப்படி எல்லா உலகிலும் முடிவே யில்லாமல் உழைத்தும் பாபா இத்தனை கர்மாவையும் எளிதாக எடுத்துக்கொள்கிறார். பரம லேசாகவே அதைக் கருதுகிறார். வேலைச் 'சுமை' என்பதே அவருக்கில்லை. ஸதா ஆனந்தமாக உழைக்கிறார். இதுதான் அவரது நிஜமான மிராகிள். மிராகிள்களாக உலகில் சொல்லப் படுவன So-called தான். அவை வாஸ்தவத்தில் அற்புதமுமில்லை; பாபாவுடைய தெய்விக சக்தியின் நிரூபணமும் அவற்றில் இல்லை. அந்த நிரூபணம் அவரது அயராத, ஆனந்த உழைப்பில்தான் உள்ளது.''

வேலையில் பட்டுக்கொள்ளாமல் ஒதுங்கி இருப்பதாலேயே ஆனந்தமாகக் கர்மா புரியும் பாபா, தம்மிலிருந்தே தாம் விலகித் தம்மையே எத்தனை நயமாக அளவெடுத்து வர்ணித்துவிட்டார்! இயற்கைக்கு அதீத அற்புதத்தைவிட, மானுட இயற்கைப்படி தேவதேவன் கர்மயோகம் செய்வதுதான் மகிமை மிக்கதாம்!

ஐயனின் கர்மயோகம் எட்டு மணி ஷிஃப்ட் அல்ல. பதினைந்து மணி ஷிஃப்ட் ஆகும். குளித்து வந்ததும் வேத பாடசாலை அத்யக்ஷகருக்கே முதல் தரிசனமும் பேட்டியும் கொடுத்து, அவர் அலுவலைத் தொடங்குவது, அவர் செய்வ தனைத்தும் ஸநாதன தர்ம ஸம்ஸ்தாபனத்துக்குத்தான் என்பதைச் சொல்லாமற் சொல்கிறது. காலை ஆறரையிலிருந்து இரவு ஒன்பதரை வரையில் நடக்கும் இந்தப் பதினைந்து மணி ஷிஃப்டிலேயேதான், நடுவே காலை எட்டுக்குச் சிற்றுண்டி கொள்வார். வெயில் காலமானால் அப்போதே, மந்திரத்துக்கு வெளியே திரண்டுள்ள மக்களிடை உலவி, பேட்டிக்கானவர் களைத் தேர்வுசெய்து, ''கோரிக்கை'' கொடுக்கத் தொடங்கு வார். குளிர்காலமாயின் பத்து மணிக்கு மேல் இப் பணியை மேற்கொள்வார். மற்ற வேலைகளை இதற்கேற்ப 'அட்ஜஸ்ட்' செய்துகொள்வார். ஆகக்கூடி வேலையில் அவருக்கு ஓய்வே யில்லை.

காலையிலும் மாலையிலுமாக பாபா வெளியே உலவுவதும் பேட்டிகள் கொடுப்பதும் சுமார் நாலு மணி நேரம் எடுத் துக்கொள்கிறது — ஒவ்வொரு ஸெஷனிலும் ஏறத்தாழ இரண்டு மணிகள் வீதம். உட்காராமலே சேர்ந்தாற்போல இரண்டு மணி நடப்பதும் நிற்பதும் (பேட்டி முழுக்க ஸ்வாமி நின்று கொண்டேதான் இருப்பார். சில சமயங்களில்தான் பேட்டி யாளர் அனைவரையும் சுற்றி அமர்த்திக்கொண்டு, தாமும் உட்கார்ந்து உரை அருளுவார்) நமக்கு இடுப்பை ஒடிக்கிற காரியந்தான். ஆனால் ஸ்வாமிக்கு இதில் ஆயாசம் இருப்பதே இல்லை. கோரிக்கைக்காரர்களிடம் அடித்தொண்டையில் பேசு வதிலும் அவருக்கு சிரமமில்லை. புழுக்கமாகப் புழுங்கும் நாட்

Koviloor Digital Library

களிலும் கர்ணாகவசமான முழு நீள கஃப்னி, பட்டுவேஷ்டி இவற்றால் சிரமப்படக் காரேறும். சௌகரியங்களையே பாராட்டிக் கொண்டிருக்கும் நமக்கு இதெல்லாமும் பாடம்தான்.

பௌதிக சிரமம் ஒரு பக்கம் இருக்கட்டும். பக்தர் கூட்டத்தினரிலும், கோரிக்கை பெறுபவர்களிலும் பெரும்பாலா ருக்குப் பிரச்னைகள் இருக்கின்றன. 'உலகில் எத்தனை திறு சான கஷ்டங்கள் இருக்கிறது என்று எனக்குத்தான் தெரியும்' என்று காஞ்சிப் பெரியவர்கள் சொல்வதுபோல், ஸ்வாமி யிடமும் வந்து குவியும் கிலேசங்கள், தாபங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இப்பேர்ப்பட்ட சூழலில் அவர் மனம் சற்றும் சாம்பிவிடாமல், சேற்றிடை செந்தாமரையாக மகா மலர்ச்சி யுடன் இருப்பதுதான் நிஷ்காம்ய கர்மயோகத்தின் சிகரம்.

1974 ஜனவரி 27ந்தேதி நூலாசிரியர் பெற்ற மறக்க வொண்ணா அநுபவம் — நிஷ்காம்ய கர்ம யோகத்தின் அப்பட்ட மான சௌந்தரிய தரிசனம்! அன்று காலை சுமார் 9.30 யிலிருந்து பகல் 12.20 வரையிலும், மாலை 3—45லிருந்து 7 வரை யிலுமாக, மொத்தம் ஆறு மணிகளுக்கு மேல் ஸ்வாமி நின்ற வாறு பேட்டி கொடுத்து, தொண்டை வலிக்கப் பேசி, மண்டை உடைக்கும் பிரச்னைகளுக்கிடையே புகுந்து தீர்வுகள் தந்திருக் கிறார். ஆயினும் அவர் மாலை ஏழுக்கு நேராகக் கோரிக்கை அறையிலிருந்து பஜனைக்கு வந்து அமர்ந்தாரே, அப்போது இழையேனும் வாடி வதங்கியிருப்பாரோ? மாறாக அன்று அவரிடம் மோதிய புத்தம் புது விகாஸம்! மிக உன்னத முறையில் (ப்ர) புத்தம் புதிதாகவே (நவ) உள்ள ப்ரணவப் பொருள் தாமே என்று நிரூபிக்கும் பரமாற்புத சௌந்தரிய சமுத்திர மாக அன்று பாபா விளங்கியது — அப்பப்பா, சொந்த அநுபவத்தில்தான் அதன் முழுமையை உணர முடியும்.

பேட்டிகளுக்கு முன்னும் பின்னும் 15-மணி ஷிஃப்ட்டின் மற்ற அலுவல்கள் விடாமல் தொடருகின்றன. அதனிடை சின்னச் சின்னக் காரியங்களை அவர் சிரமைச் செய்வது நமக்கு வழிகாட்டிகள்தாம். உதாரணமாக, படித்துக் கிழித்த காகிதங்களை அவரே கொண்டு வந்து கூடையில் போடுவார். வெளியே வந்து பேட்டிக்குத் தேர்வு செய்யும் சிறிது நேரம்கூடக் கோரிக்கை அறையில் மின்விசிறி சுற்றாமல், மறவாது அதை நிறுத்திவிட்டு வருவார். உள்ளே கோரிக்கை யாளர் அனைவரையும் விட்டதும் தம் கையாலேயே கதவைச் சாத்துவார்; நிறுத்திய ஃபானைப் போடுவார். பேட்டி முடிந்த தும், எவரேனும் அலுவலரை விட்டு விபூதிப் பொட்ட லங்கள் வழங்காமல் தாமே பிளாஸ்டிக் கூடையைத் தூக்கி வந்து தம் கையாலேயே அந்த திவ்யப் பிரஸாதத்தை அளித்தருவார். இம்மாதிரி சின்னஞ்சிறிய செயல்களிலும் காரியச் செம்மை, சிக்கனம், பண்பு முதலியவற்றை போதித்து விடுகிறார். "மஹான்களின் மகத்தான சாதனைகளைவிட அவர் களது சின்னஞ்சிறு செயல்களிலேயே அதிகமான இனிமையைக் காண்கிறேன்" என்று ஸ்வாமி விவேகானந்தர் சொன்னது

Koviloor Digital Library

நம் ஸ்வாமிக்குப் பொற்கவசம் போல் பொருந்துகிறது. அர்ஜுனன் பகவானிடம் ''பிரம்மஞானத்தில் நிலைத்தவன் எப்படிப் பேசுவான், எப்படி உட்காருவான், எப்படி நடப்பான்?'' என்று கேட்டதற்கு உட்பொருள் கற்பியாமல், வார்த்தைப் பொருளையே கொண்டாலும் தப்பில்லைதான். ''மதுராதிபதே: அகிலம் மதுரம்'' என்பதுபோல் அவதாரர்களின், மகான்களின் ஸகல காரியங்களுமே அழகுதான், பொருள் கொண்டவைதான், நமக்கு போதனைதான்.

'எப்படிப் பேசுவான்? எப்படி உட்காருவான்? எப்படி நடப்பான்?'—இந்த மூன்றுமே ஸ்வாமியிடம் விசேஷம்தான். அநாவசியமாகக் குரலை உயர்த்தாமல், எதிலும் மத்திமம் என்பதுபோல், இதமாகவே பேசுவார். இதயப் பேச்சாதலின், வாய் மட்டுமின்றி சர்வாங்கமும் உணர்ச்சிகளைப் பிரதிபலிக்கப் பேசுவார். மிருதுவாகப் பேசினாலும் உச்சாரணமோ பரம ஸ்பஷ்டமாயிருக்கும்.

உட்காருவது? நீளக் கஃப்னியைப் போட்டுக்கொண்டு உட்காருவதில் உள்ள சிரமமே தெரியாமல் பதவிசாக உட்காருவார். சிம்மாசனத்திலோ மன்னராகவும் அமருவார். நட்ட நடுவிலின்றி சற்று ஒருக்கமாக அவர் அமரும் அமரிக்கையை முன்பே சொல்லியிருக்கிறோம். சப்பணமிடுவதை விட, மண்டியிட்டமர்வதே அதிகம். இதில் பெண்மையின் மென்மை மண்டிக்கிடக்கும்.

'எப்படி நடப்பான்?' அன்ன நடையில் சாந்தப் பிரம்மத்தைக் காட்டுவார். அதி அவசர நடையில் காரிய பராசக்தியைக் காட்டுவார். இத்தனை வேகமாக நடந்தாலும் ஓசையே கேளாது. பட்டாடை வேண்டுமானால் 'ஸ்விஷ்' ஒலி எழுப்புமே தவிர, பாதத்தின் சிப்புச் சத்தமோ, குதிகாலின் 'திம்' ஒலியோ கேளாது. அகிலம் மதுரம்தான் — அகிலத்துக்கு வழிகாட்டிதான் எதிலுமே! அவரது நடையழகிலிருந்து தினசரி நடவடிக்கைக்குத் திரும்புவோம்!

மாலை அலுவலிடை காலை பஜனையில் தரிசனம். பிறகு அநேகமாக ஸ்தாபன ரீதியில் பார்க்க வந்திருப்பவர்களிடம் உரையாடல். அதிலும் மாணவருக்குப் பாடங்கள். சர்வாதிகாரம் செலுத்தாமல் அவர்களை அபிப்பிராயம் தெரிவிக்க ஊக்குவார். அவர்கள் ஸ்வாமிக்கு மாற்றுக் கருத்துத் தெரிவிக்கலாமோ எனத் தயங்கினாலும் இவரே தைரியம் தருவார். அவர்களைத் திருத்த வேண்டிய விஷயங்களிலோ வெட்டு ஒன்றும் துண்டு இரண்டுமாகக் கண்டித்துக் கூறுவார். பளிச்சுப் பளிச்சென்று முடிவெடுத்துச் சொல்வதில் ஸ்வாமியின் சதுரத்தை ஸ்தாபன முக்கியஸ்தர்கள் விண்ணுயரப் போற்றுகிறார்கள்.

ராஜாதிராஜன்தான்! கோவையில் ஸாயிஸமிதியார் கட்ட உத்தேசித்துள்ள கோடி ரூபாய் வைத்யசாலையாகத்தான்

இருக்கட்டுமே, அதுவும் ஒரு பெரிய விஷயமல்ல நம் சக்ரவர்த்திக்கு. வைத்யசாலை வரைபடம் போட்டு, அங்கிகாரம் பெற வந்திருக்கும் மகாப் பிரமுகர்களும் ஏனையோரைப் போலத்தான் ஒயிட்ஃபீல்ட் பிருந்தாவன மைதானத்தில் காத்திருக்கிறார்கள். ராஜாவும் தம் கால நிர்ணயப்படியே வருகிறார். (ஒயிட்ஃபீல்ட்டில் பாபா தொலைவிலுள்ள மாளிகையிலிருந்து வெளிப்படுவதும், மாளிகையின் பெரிய கேட்கள் மன்னனுக்காகத் திறப்பதும் அவர் விசுக் விசுக்கென்று மனோஹரமாக நீண்ட பாதையில் நெளிந்து வருவதும் ஒரு தனி அழகுதான்!) ஒரு மர நிழலில் இந்தப் பிரமுகர்களிடம் நிற்கிறார். (நிற்காமலே போனாலும் அவர்கள் ஒன்றும் செய்து கொள்வதற்கில்லை!) வரைபடத்தை வாங்கி ஒருசில க்ஷணங்கள்தாம் பார்க்கிறார். அதற்குள் அனிதரமான சில அபிப்பிராயங்களைச் சொல்லிவிட்டு, அவர்களிடம் அரை நிமிஷத்துக்குள் ஏரி அன்பைப் பொழிந்து மேலே நடையைக் கட்டுகிறார். வேறெவராயிருந்தாலும் இதுபோன்ற ஒரு பெரிய வைத்யசாலைத் திட்டத்தை வகுக்கவே முடியாது. அப்படி வகுத்துவிட்டால், பிறகு அதே சிந்தையாகத்தான் அனவரதமும் இருப்பார்கள். இவருக்கு இது இரண்டே நிமிஷக் காரியந்தான்.

இவரே பசங்கள் போடும் டிராமாவுக்காக மணிக்கணக்கில் உடனிருந்து சகலமும் செய்கிறார்! ஏன்? இந்த நாடகப் பயிற்சியும், ஏற்பாடும் தம் ஒருவராலேயே செய்யக் கூடியன என்பதால் இதற்கு நெற்றி வேர்வை நிலத்தில் விழ உழைக்கிறார். கோடி ரூபாய் ஆஸ்பத்திரியைத் தம் ஸ்தாபனத்தினரே செவ்வையாக நிறைவேற்றி விடுவார்கள் என்று நம்புவதால் அதில் தாம் அதிகம் ஈடுபடவில்லை. அவர்கள் பொறுப்பிலேயே விட்டுவிடுகிறார். ஸாயி ஸ்தாபனத்தில் ஸ்வாமியின் சர்வாதிகாரமே நடப்பதாக எண்ணுபவர்கள், அவர் ஸ்தாபனத்தாரிடம் வைத்துள்ள இந்த அற்புத நம்பிக்கையையும் நன்மதிப்பையும் கவனிக்க வேண்டும். இவ்வாறு, உழைப்பாளியான ஸ்வாமி முதலாளிகளுக்கும் ஆதர்சமாக இருக்கிறார்.

'செய்வன திருந்தச் செய்' என்பதற்கு ஸ்வாமியினும் இலக்கியம் இல்லை. மேலே கண்டாற்போல் பாலவிகாஸ் வாண்டுகள் போடும் நாடகமானால்கூட, அதை ஏதோ அகில உலக ரிலீஸாகும் திரைப்படம் போல பாவித்து, காட்சி, உடுப்பு ஒவ்வொன்றும் எப்படி இருக்கவேண்டுமோ அப்படியே கூர்த்த கவனத்துடன் அமைப்பார். காஷுவலாகத் தோன்றும் சின்னச் சின்னக் காரியங்களிலும் அவருக்கு இதே ஈடுபாடு. கூட்டத்தில் குழந்தைகளுக்கு ஓம் எழுதிக்கொடுப்பது, அடியார்க்குக் கிறு கிறுவென விபூதிப் பொட்டணம் வழங்குவது ஆகிய புகைப் படங்களில் ஸ்வாமியைப் பாருங்கள் — சிரத்தையின் சித்திரமாகவே விளங்குவார். ஷிர்டிபாபாவின் அபிஷேகத்தில் இவர் காட்டும் ஈடுபாட்டையே இச் சிறு செயல்களிலும் காணலாம். ஒரு தேங்காயை உடைத்தால்கூட, அது நூலிழை கணக்குப் பிசகாமல் இரு பாதியாக உடையும்படியாக அப்படியொரு செய்நேர்த்தி!

பகல் போஜனம் முடித்ததும் கடிதங்களைப் பார்ப்பதும், பதிலெழுதுவதும். ஸ்ரீமுகங்கள் தம் கைப்பட எழுதுவார்.

Koviloor Digital Library

'ஸநாதன ஸாரதி'க்கு தலைப் பொறுப்பாகத் தமது தொடரை எழுதுவார். ஸ்வாமி வெளியூர் செல்கிறாரே, அடுத்த இதழுக்கும் விஷயதானம் கேட்கலாமா என்று ஆசிரியர் தயங்கிக் கொண்டே வந்தால், ஸ்வாமியோ அடுத்த நாலு இதழ் களுக்கான கட்டுரைகளை ஓர் அடித்தல் திருத்தல் இல்லாமல் எழுதி வைத்திருந்து அந்தக் கத்தையை அவர் கையில் போடுகிறார். ''போதுமா, இன்னம் வேணுமா?' என்று வேறு கேட்கிறார்.

எழுதுவதில்கூட நமக்குப் பாடம். வேகமாக எழுதி னாலும் எழுத்தின் உருவத்தில் சந்தேகம் இராது. கண்ணில் ஒற்றிக் கொள்ளலாம் போலிருக்கும். பல விதங்களில் பெண்மைச் சாயல் வீசும் ஸ்வாமியின் கையெழுத்திலும் மெல்லியலாரின் நேர்த்தி காணப்படும்.

பிறகு ஸ்தாபன ரீதியிலான காரியங்கள் தொடரும். இதன் பொருட்டுப் பெரிய மனிதர்களுக்குப் பேட்டி. பிரமுகர் களுக்கு ஸ்வாமி பேட்டி தருவதிலும் பல நுட்பமான பண்பு கள் மின்னுகின்றன. அவர்களாக பக்தராக வரும்போது பிரமுகர்களையும் ஏனையோரைப் போலத்தான் நடத்துவார். கவர்னர் ஸ்ரீ தர்மவிராவும், தளபதியான அட்மிரல் நந்தாவும் கூட மற்ற மக்களோடுதான் பாபாவின் தரிசனத்துக்காக அமர்ந் திருக்கிறார்கள். ஆனால் ஸ்தாபன காரியங்களை ஒட்டியும், விழாக்களுக்கும் ஸ்வாமியே பிரமுகர்களை அழைக்க வேண்டியுள்ளதல்லவா? இச்சமயங்களில், பக்தராக வராமல், விருந்தினராக வரும் அவர்களுக்கு ஸ்வாமி காட்டும் உபசாரப் பண்பு, விருந்தோம்பலில் நமக்கெல்லாம் அது ஒரு பாடம். ஸ்தாபனத்தாருக்கு இந்த கௌரவிப்புப் பத்ததிகள் தெரியாது என்று அவர்கள் குறை சொல்ல முடியாதபடி செய்து விடுவார். உள்ளே தாமே அவர்களுக்கான ஷர்பத்தில் எஸ்ஸென்ஸை விட்டு, அழகாக ட்ரேயில் வைத்து, கைத் துடைக்கத் துணியும் சொருகுவார். பிறகு ராஜகம்பீரமாக வந்து அவர்களோடு இவர் உரையாட, ஊழியரொருவர் ட்ரேயை எடுத்து வந்து பரிமாறுவார். என்ன ராஜதர்பார் அப்பா!

காருபாரு ஸேயுவாரு கலரே
நீவலெ ஸாகேத நகரிநி

''அயோத்தியில் நீ ராஜ்யபாரம் செய்வதுபோல் எவர் தான் அரசாட்சி புரியப் போகிறார்கள்?'' என்று தியாகையர் ஸ்ரீராமனைக் கேட்பதைத்தான் நாம் ஸாயிராமனிடம் கேட்க வேண்டும்.

ராஷ்டிரபதி, கவர்னர், மந்திரி போன்றோர் விழாக் களுக்கு அழைக்கப்பட்டு வருகையில் யாராருக்கு எப்படிப்பட்ட மாலைகளை, ஸாயி ஸ்தாபனத்தினரில் எவரெவர், எந்தெந்த இடத்தில் அணிவிக்க வேண்டும் என்பதையெல்லாம் அறு

Koviloor Digital Library

அனுவாக முன்பே ஸ்வாமி திட்டம் செய்து விடுவார். எந்த மகாப் பிரமுகர் வந்தாலும் தம் மரியாதையைக் குறைத்துக் கொண்டு தாமே மாலையிட்டு விட மாட்டார். வரவேற்புரையோ வந்தனோபசாரமோ சொல்லவும் மாட்டார். அதெல்லாம் ஸ்தாபனத்தின் மற்ற முக்கியஸ்தர்களுக்கே ஸ்வாமி தரும் பொறுப்பாகும். மறுபடியும் தியாகையர் நினைவுதான் வருகிறது. பரமப் பிரியனான ஆஞ்ஜநேயனையே ஸ்ரீராமன் முதல் முறை கண்டபோது, தாம் நேரே அவரிடம் பேசாமல், இலக்குவனைப் பேசச் செய்ததை ''ஆடமோடி கலதே'' பாடலில் தியாகையர்வாள் வியப்பதைத்தான் சொல்கிறோம்.

பிரமுகர்கள்தான் என்றில்லை; பக்தராகத் தரிசனார்த்தமாக வராமல் அரசாங்கக் காரியார்த்தமாக வருகிற சிறிய ஊழியருக்குங்கூட மரியாதை காட்டச் செய்வார் ஸ்வாமி.

ஒருமுறை பிரசாந்தி நிலயப் பிரமுகர் ஒருவரைப் ஸ்வாமி பொறுக்கவொண்ணாத அளவுக்குப் புறக்கணித்தார். அவர் மனம் வெதும்பி, கண்ணில் நீர் ததும்பி ஸ்வாமியிடம் வந்து, ''தாங்கள் என்னை அடித்து வேண்டுமானாலும் கொல்லுங்கள்; அலக்ஷியம் மட்டும் செய்யாதீர்கள். நான் என்ன பிழை செய்தேன் என்று வெளிப்படச் சொல்லுங்கள்'' என்று பிரலாபித்தார்.

''அலக்ஷியம் செய்வது எவ்வளவு துன்பம் தருகிறது என்று இப்போதாவது புரிந்துகொண்டாயா அப்பா?'' என்றார் ஸ்வாமி. தொடர்ந்தார்: ''இங்கே நவராத்ரிக்கு சுகாதார இலாகா சிப்பந்தி வந்திருந்தானே, அவன் தரிசனத்துக்காகவா வந்தான்? இங்கே கூடுகிற கூட்டத்தில் தொற்று வியாதிகள் பரவாமல் தடுப்பு ஊசி போட அல்லவா வந்திருந்தான்? நியாயமாக அவனுக்கு ஜாகை வசதி தந்து, போஜனத்துக்கும் ஏற்பாடு செய்திருக்க வேண்டும். ஆனால் தவறி விட்டாய். தோன்றுகிறது! பிறகு அவனே உன்னிடம் வந்து சாப்பாட்டுக்கும், இடத்துக்கும் வசதி செய்து தருமாறு கேட்டானே, அப்போதாவது உனக்குக் கடமை உணர்ச்சி வந்ததா? உன் வழக்கப்படி எங்கேயோ பார்த்துக்கொண்டு, அலக்ஷியமாக உதட்டைப் பிதுக்கிவிட்டாயே! இப்படிப்பட்ட உனக்கு நான் உன்னை அலக்ஷியம் செய்தேன் என்று நொந்து கொள்வதற்கு உரிமை ஏது?''

மடாதிபதிகள், மற்ற பிரசித்த ஸாதுக்கள் வருகையில் ஸ்வாமி, அவர்களை விரும்பினாலும் தம்மைப் பலரெதிரில் விழுந்து வணங்க முடியாதபடி சமாளிக்கும் அற்புத மரியாதைப் பண்பை முன்னமே பார்த்தோம்.

நிலைய விழாக்களில் கலை நிகழ்ச்சிகளை அளிக்கும் இசைக் கலைஞர்கள் முதலானோருக்கு ஸபாக்களில் செய்வதற்கு மேல் சம்பாவனை செய்து விடுவார் பாபா. வெறும் நாட்களில் அவர்களாக வந்து விண்ணப்பித்துக்கொண்டு தங்களது

Koviloor Digital Library

கானம் முதலான கலைகளை அர்ப்பணம் செய்கையில் சம்மானம் அளிக்கமாட்டார். இப்படியேதான் யக்ஞம் முதலான வற்றில் கலந்துகொள்ளும் பண்டிதர்களுக்கும் காமதேனு வாக தக்ஷிணை வழங்குவார். ஸ்தாபன கௌரவத்தை இவ்வாறெல்லாம் காப்பவர் அவர்.

அன்றாட நடப்பில் ஸ்வாமியை விட்ட இடத்துக்குத் திரும்புவோம்.

பிற்பகல் மூன்று மணிக்கு மேல் காபி, பிறகு கோரிக்கை கொடுத்தல், மாலை நிலையத்தைச் சுற்றிவந்து நிறுவனங்களையும் இல்லங்களையும் பார்வையிடல், பிறகு பஜனைக்கு எழுந்தருளல், எட்டு மணிக்குப் பின் போஜனம், அதன் பிறகும் ஸாயி ஸாம்ராஜ்ய அலுவல்கள். சக்கரவர்த்தி கடைநிலை ஊழியரைவிடப் பணிவுடன் உழைப்பார். மனிதர் எவரிடமும் பணிவில்லை; கடமைக்குப் பணிகிறார்.'

ஒன்பதரை மணி அளவில் அணுக்கத் தொண்டருடனே, பரம பாக்யசாலிகளான மாணவருடனே சிறிது குற்றமற்ற அரட்டை அடித்து, வெள்ளையின்பம் பெருக்கவிட்டு,

உலகின் பார்வைக்கு உறக்கம் கொள்வார் உத்த மோத்தம கர்மயோகி.

★

எத்தனையெத்தனை விதமான வேலைகளைத் திருந்தச் செய்கிறார்!

விழாக் காலங்களில் தாமே காண்டீனில் புகுந்து யோசனை கள் தருகிறார். அன்னதானத்துக்கான உணவு வகைகளில் ஒரு சிட்டிகை எடுத்து ருசி பார்க்கிறார். எதற்காக? ஏழையருக்கு என்பதால் ஏனோதானோ என்று தயார் செய்யாமலிருந்து விடுவதற்கு இதைவிட என்ன பரிட்சை வேண்டும்?

அவ்வேழையருக்கென வாங்கிய ஆயிரக்கணக்கான இரட்டை வேஷ்டிகளை ஒன்றொன்றாகக் கிழிப்பவர்களில் தாமும் ஒருவ ராகக் கத்திரி போட்டு, 'கிர்'ரென்று இழுக்கிறார்—அதிலும் ஒரு ஜவுளிக்கடைக்காரரின் லாகவம் இருக்கும்!

பதினாயிரம் மைல் கடந்து பக்தி பொங்கும் இதயத்தோடு வரும் அமெரிக்க பக்தர்களுக்காக அறையை ஒழித்து, ஃபர்னிச்சர் போடும் மாணவர்களோடு தாமும் சேர்ந்துகொண்டு உழைக்கிறார். கண்ணுக்குக் குளிர்ச்சியான வர்ணமும் டிஸைனும் கொண்ட ஜமுக்காளம், படுக்கை விரிப்பு, திரைச்சீலை முதலியவற்றைத் தாமே பார்த்துப் பார்த்து எடுத்து வந்து போடுகிறார்— 'இன்டீரியர் டெகார்' என்று இந்நாட்களில் சொல்கிறார்களே, அதிலும் எக்ஸ்பெர்ட்டாக!

Koviloor Digital Library

வெளியூர்களுக்குச் செல்கையில் தமது உடுப்புக்களையும் மற்ற பொருட்களையும் அவரே நறுவிசாகப் பெட்டிகளிலும் கைப்பைகளிலும் 'பாக்' பண்ணும் அழகை என் சொல்ல? தமக்காகப் பிறரை மெனக்கிட வைக்காத உத்தமப் பண்பையும் இதனால் உணர்த்துகிறார். ஆம், ஏவல் புரிவது பாக்கியமென ஏராளமானவர் காத்திருந்தும், ஸ்வாமி தம் கையே தமக்குதவி என்று வாழ்கிறார். அன்புக்குக் கட்டுப்பட்டே, அடியார்கள் தமது திருவடிகளைப் பிடிப்பதுபோன்ற தொண்டுகளை ஏற்கிறாரே யன்றி, அவராக முதலாளித்வம் காட்டி காரியம் வாங்கமாட்டார். பயங்கர நோய்களிலும் தொண்டர் 'பெட்–பான்' பிடிக்க விடாமல், தரையோடு சிய்த்துக் கொண்டு 'பாத்–ரூம்' போகிறவர் என்பதை வாசகர் மறந்திருக்க முடியாது.

கடமை உணர்ச்சிக்கேயான கடவுள் என்று பாபாவைச் சொல்லலாம்.

அத்யந்த பக்தரொருவர் தம் உறவுப்பிள்ளை ஒருவரின் திருமணத்தைப் புட்டபர்த்தியில் ஏற்பாடு செய்கிறார். பாபாவிடம் பிடிமானம் இல்லாததாலோ என்னவோ பெண் வீட்டார் பணத்தை எடுக்காமலே இருக்கிறார்கள்—பாபாவே நடத்துவார் என்று நினைத்தார்களோ என்னவோ? (அப்படியும் பாபா அநேகருக்குச் செய்திருக்கிறாரே!) மாவஸ்தரான அந்த பக்தர் மணநாள் மிகவும் நெருங்கியும் பெண் வீட்டாரிடமிருந்து பணம் பெயராததைப் பார்த்துக் குமுறிக்கொண்டிருக்கிறார். இனி பொறுப்பதற்கில்லை என்ற நேரத்தில் ஸ்வாமி அவரை அழைக்கிறார்.

பண்புப் பொக்கசம்தான்! எவரையும் குத்திக் காட்டுவதுபோல் ஒரு சொல் சொல்லவில்லை. பக்தரிடம் "லிஸ்ட் எழுதிக்கோ" என்று சொல்லிக் கலியாணச் சாமான்களை லப்ராடா அடுக்கிக்கொண்டு போகிறார். கத்தையாக ரூபாய் கொடுத்து — அதை ஒரு விஷயமாகவே நினைக்காமல், பரம பெருந்தன்மையோடு உரிமையாளருக்குத் திருப்பிக் கொடுப்பது போல் கொடுத்து — "ஹிந்துப்பூருக்குப் போய் எல்லாம் வாங்கிட்டு வா, நாயனு" என்று பக்தரை அனுப்பி வைக்கிறார்.

பக்தர் ஓர் அசட்டுத்தனம் செய்து விட்டார். கல்யாணத்துக்குத் தேவையான நூற்றுக்கு மேற்பட்ட வஸ்துக்களில் ஒவ்வொன்றும் இத்தனை படி, அல்லது எடை இருக்க வேண்டும் என்று கறுக்காகக் கணக்குப் போட்ட ஸ்வாமி, அவற்றுக்கான செலவையும் பைஸா தவறாது கணக்கிட்டே கொடுத்திருக்கிறார் என்று இவர் புரிந்துகொள்ளவில்லை. எனவே உடன் வந்த நிலைய அதிகாரி ஏதோ பண்டம் வாங்க நினைத்து, பணமில்லாததால் வேண்டாம் என்று வைத்தபோது, இவர் அவருக்காகப் பணம் கொடுத்து அதையும் வாங்கச் செய்தார். அதன் விளைவு என்னவாயிற்றெனில், இவர் நள்ளிரவு ஒன்றரை மணிக்குப் பிரசாந்தி நிலையத்துக்கு லாரியில் சகல சாமான்

Koviloor Digital Library

களுடன் திரும்புகையில், லாரிக்காரருக்குத் தரக் கையில் பணமில்லை. இவர் மட்டும் நிலைய அலுவலருக்குப் பணம் தந்திராவிடில், சரியாக லாரிக்குரிய வாடகை தந்திருக்க முடியும். அப்பேர்ப் பட்ட அக்கவுன்டன்ட் — ஜெனரலாக ஸ்வாமி பொருள் வழங்கி யிருக்கிறார்!

இந்த அகாலத்தில் பிரசாந்தி நிலையத்தில் எவரை எழுப்பிப் பணம் கேட்பது? லாரியோ உடனே ஹிந்துப்பூருக்குத் திரும்பியாக வேண்டுமே! — மானியான பக்தர் குன்றிக் குமைந்து கொண்டு லாரியிலிருந்து இறங்கிய அயனான அதே கணம்—

நிஜமா? அதோ, பிரசாந்தி நிலைய மாடி வராந்தா விலிருந்து ஸாயிநாதன் குரலா கேட்கிறது?

ஆம், அவரேதான்! அணுக்கத் தொண்டரொருவரைப் பெயர் சொல்லி அழைக்கிறார். அண்மைக் குடிலிலிருந்து அவர் 'என்னவோ, ஏதோ' என்று மாடிக்குப் பறக்கிறார்.

திரும்பியவர் நேரே நம் பக்தரிடம் வருகிறார். ஸ்வாமி கொடுக்கச் சொன்னார் என்று ரூபாய் நோட்டுக்களை இவர் கையில் போடுகிறார்.

பக்தரின் இதயமே கண்ணுக்கு எழும்பி வந்து நீரைக் கொட்டுகிறது. சரியாக இவருக்குத் துண்டு விழுந்த அதே தொகையைத்தான் கொடுத்தனுப்பி யிருக்கிறார்.

இரவு மணி ஒன்றரைக்கு இப்படி ஒரு கடமை ஈடுபாடு! தாம் ஏற்றுக்கொண்ட பக்தர், தம் நிலையத்தில் ஏற்றுக்கொண்ட கலியாணம் என்பதால்!

ஸ்வாமி 'பணிக்க'ச் செய்யும் பணிகள் எண்ணில. எத்தனை சொன்னாலும் முடிவு பெறாது.

சிற்றெறும்பினும் சுறுசுறுப்பாக, நேர்த்தியாக, சீர்த்தி யாக அவர் செயல்படுவதால்தான் சோம்பலையும், கடனே என்று காரியம் செய்வதையும் சாடுகிறார்.

''ந ஸ்வப்னாய ஸ்ப்ருஹயந்தி'' (தூங்கி வழிவோரைக் கடவுளர் விரும்புவதில்லை), ''ந ருதே சராந்தஸ்ய ஸக்யாய தேவா:'' (உண்மையாக உழைப்பவரிடமே கடவுளர் தோழமை கொள்கின்றனர்) என்று வேதம் சொல்வதை நேரில் காட்டு பவர் நம் கதாநாதர்.

அவரது தொழிலூக்கத்தின் வீரியம் மற்றவர்களையும் ''தொத்திக் கொள்கிறது'' என்றே சொல்லலாம். பொறி இயல் ஆரம்பவாளான ஸ்ரீ பவராஜு ஸத்யநாராயணா தமது ஐம்பத்தைந்து வருட அநுபவத்தில் கண்டிராத பிரமான அற்புதத்தைக் கண்டது, கர்மவீர ஸாயியின் ஸாந்நித்யத்தில் தானே மலர்ந்த தொழிலூக்கம்தான். அந்த அற்புதம் என்ன?

Koviloor Digital Library

1970—ல் ஐம்பது லக்ஷ ரூபாய் செலவில் அனந்தப்பூர் கல்லூரியும், 1972—ல் இன்னொரு அரைக்கோடி செலவில் புட்டபர்த்தியில் பிரசாந்தி நிலயக் குடியிருப்புக்கள், போஜனசாலை, யாத்ரிகர் தங்குகூடம், கழிவுகால்கள், குடிநீர்ப்பணிகள், ஆடிட்டோரியம், பிள்ளையார் கோயில், வெங்கப்பா — ஈச்வரம்மா ஸமாதிகள் ஆகியனவும் நிர்மாணிக்கப்பட்டபோது அவற்றில் முக்கியமான பங்கு ஏற்றவர் ஸ்ரீ பவராஜு. 'இந்த ஏற்பாடு செய்திருந்த தொழிலாளர் படையைக் கொண்டு சாதாரணமாக வேலை நடக்கேறும் செய்திருந்தால், இவை ஒவ்வொன்றும் பூர்த்தியாகக் குறைந்த பட்சம் நாலாண்டுகள் பிடித்திருக்கும். ஆனால் அதிசயிக்கத்தக்க விதத்தில் அனந்தப்பூர் கல்லூரி ஒன்பதே மாதத்திலும், புட்டபர்த்தியில் நடந்த நிர்மாணங்கள் எட்டே மாதத்திலும் அருமையாக நிறைவு பெற்றுவிட்டன' என்று வியக்கிறார் ஸ்ரீ பவராஜு. Man – power, horse – power இவற்றுக்கு மேலான பாபாவின் divine power — ஆல்தான் இது நடந்தது' என்கிறார். அந்த தெய்வ சக்திக்குச் சில சான்றுகளும் தருகிறார். உருக்கிரும்புக்குத் தட்டுப்பாடு வந்துவிட்டது என்று பொறியியலார் பாபாவிடம் முறையிடுவராம். மறுநாளே பத்ராவதியிலிருந்து டன் டன்னாக உருக்கிரும்பு வந்திறங்குமாம். ஸிமென்ட் தட்டுப்பாடு என்று ஸ்வாமியிடம் இவர்கள் குறையிரப்பராம். அடுத்த தினமே பன்யம் ஆலையிலிருந்து லாரி லாரியாக மூட்டைகள் வந்திறங்குமாம்.

அதிமாநுஷ தெய்வசக்தி, பிரேம சக்தியாகவும் வந்து தொழிலாளரை ஊக்கிற்று. 'ஓர்க்—ஸ்பாட்'டுக்கே பாபா இரு வேளையும் வந்து தொழிலாளரோடு பேசி விளையாடி ஸ்வீட்டும் ஐஸ்—க்ரீமும் வழங்கித் தமது பரம ஸ்வீட்டான, ஐஸ்—க்ரீமினும் குளிர்ந்த அன்பைக் கொட்டுவார். அதிலே தொழிலாளர் பெற்ற ஊக்கத்தைச் சொல்லி முடியுமா? ''என்னய்யா, ஸர்தார் பட்டேல்!'' என்று பாபா மேஸ்திரி ஒருவரை விளித்தால், அது அவரிடமிருந்து எட்டு மடங்கு வேலையைக் கரந்துவிடும்!

ஆம், பக்தராக வருவோரை மட்டுமின்றி, கூலிக்கு வேலை செய்யவே வந்தோரையும் பாபாவின் பிரேம சக்தி ஆட்கொண்டது. இதனால்தான் பாபா எடுத்துக்கொண்ட பிரம்மாண்டமான கட்டுமானப் பணிகளில், இக்காலத்தில் ஸர்வ வியாபகமாகிவிட்ட தொழிலாளர் — தொழில் வாங்குவோர் — பிணக்கு என்பது தலைகாட்டியதில்லை.

ஸ்வாமியிடம் இயல்பான மரியாதை தொழிலாளருக்கும் மூண்டுவிடும். நூலாசிரியன் கண்டு வியந்த காட்சி: புட்டபர்த்தியின் மஹா அநுஷ்டானம் தலையானதல்லவா? அதற்கு மாறாக மகத்தான கட்டுமான வேலைகளின்போது லாரிகளும், க்ரேன்களும், அரவைக் கருவிகளும் சத்தமிட்டது உண்மைதான். ஆனால் தொழிலாளிகள், மேஸ்திரிகள் சத்தம் போடாமலே, ரகசியமாகவும், சைகையாலுமே உரையாடிக் கொள்வர்.

Koviloor Digital Library

ஸ்வாமி அறையை அடுத்தே புனர்நிர்மாணம் நடந்தபோது அங்கு லாரி லாரியாகக் கற்களை இறக்கி ஒரு தொழிலாளர் கை மாற்றி இன்னொருவர் என்று போட்டுக்கொண்டு போனபோது பேசாத திரைப்படம் பார்ப்பது போலவே அத்தனை மவுன மாக நடந்தது!

தொழிலாளர் பாபாவின் பாதவந்தனம் கேட்பர். பாபாவும் மறுக்கவே மாட்டார். பட்டுக் கஃப்னியை விலக்கி, அதைவிடப் பட்டான பாதம் காட்டி ''சேஸ்கோ'' என்பார். அவர்களது மரியாதை அன்பிலே பாசமாகப் பரிணமிக்கும். ஸ்வாதீனம் கொண்டு ஸ்வாமியைக் கட்டிக்கொள்ள வேண்டும் என்பர். நம்பவொண்ணுக் கோரிக்கை! மேலும் நம்பவொண் ணுமல் அந்தக் கோரிக்கைக்கும் ''ஆஹா' என்று ஆமோதிப்பு நல்குவார் ஸ்வாமி! 'கைவருந்தி உழைப்பவர் தெய்வம்' ஆச்சே!

அமாநுஷ்ய சக்தியும், பிரேம சக்தியும் மட்டுமின்றி பாபாவின் கர்மயோக சக்தியும் ''பேசுவதாலேயே''— அவரது சொந்த உழைப்பின் ஆதர்ச சக்தியாலேயே—ஏராளமான வருக்கு உழைப்பில், கடமையில், உற்சாகமேற்பட்டிருக்கிறது. ஓரளவு சோம்பியும், கடமையைக் கடனே என்று கருதியும், ஓய்வை ஓயாமல் விரும்பியும் வந்த நூலாசிரியனே இதற்கு அநுபவ பூர்வமாகச் சான்று தரமுடியும்.

தள்ளிப்போடுவதும், மறப்பும், சோம்பலும், உறங்கி வழிவதும் ஜீவசக்தியின் சாவை விரும்புவோரை ஏற்றிச் செல்லும் மரக்கலம் என்றார் தெய்வப்புலவர்:

நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடும்நீரார் காமக் கலன்

நம் தெய்வத்தின் கருத்தும் அதுவே என்பதை அவர் காரியத்தில் காட்டுவதால்தான் ஸாயிபக்தர் அனைவரும் கர்ம யோகத்தில் முன்னேறி வருகிறார்கள்.

*

துவாரகாதீசன் பதினாறாயிரம் பத்தினிகளுக்கு நாயக னாகப் பதினாறாயிரம் இல்லங்களில் குடும்பத் தலைவனாகக் கர்ம யோகம் இயற்றினான். நம் பர்த்தீசனுடைய துவாரகைதான் பிரசாந்தி நிலையம். ஆனால் இங்கே பதினாறாயிரம் இல்லங்கள் இல்லை. பர்த்தீசனுக்கோ பத்தினியரே இல்லை. ஆயினும் ஒரு 'டவுன்ஷிப்'பாகப் பிரசாந்திநிலையம் விருத்தியாகி விட்டது. மந்திரம், பாடசாலை, வைத்யசாலை, பிரசுரக்கினை, கான்டீன், தபாலாபீஸ், பாங்கு, கோகுலம், ஈச்வராம்பா பள்ளி முதலிய வற்றின் ஊழியரும் ஸாதகர்களுமாக சுமார் ஐநூறு பேர் — இவர்களில் பலர் குடும்பமாகவே — வசிக்கிற குட்டி துவாரகை அது. நிலையத்தில் சுமார் இருநூறு ஜாகைகளில்

Koviloor Digital Library

இவர்கள் வசிக்கிறார்கள். தேகநாயகனைவிடப் பன்மடங்கு தூய பிராணநாயகனாக, ஆத்ம நாயகனாக இவர்களுக்கெல்லாம் ஸ்வாமியே விளங்கி, ஆதர்ச குடும்பத்தலைவராக வாழ்ந்து காட்டுகிறார்.

கர்மா தீர்க்கும் தெய்வ ஸாயி, கர்மயோக மானுட ஸாயியாக நம் நெருக்கத்தில் வருவதில் இதுவும் ஓர் அங்கம்.

நெருக்கத்திலா? இங்கேதான் அதிகம் வெருட்டுவதாகவும் தோன்றும். ஆம். முன்னமே சொன்னாற்போல், பிரசாந்தி நிலயவாஸிகள்தான் இவரது நேர் ஆதினத்தில் இருப்பதால் நன்னெறியில் வெகு கடுமையாகச் செலுத்தப்படுகின்றனர்; இது காரணமாக ஸ்வாமியின் ''கோபப் பிரஸாத''த்துக்கு வெகுவாகப் பாத்திரராகிறவர்கள் இவர்களே. ஸாயி ஸ்தாபனங்களில் ஆழ்ந்த பங்குகொண்ட மற்றவர்களும் இந்த மறக் கருணைக்கு விசேஷமாக ஆளாகிறவர்கள். 'அகிலம் மதுர' மாதலால் இந்தச் சினமும் இனியதே!

உள்ளத்திலே கர்வம் கொண்ட போதினில்
ஓங்கி அடித்திடுவான்—நெஞ்சில்
கள்ளத்தைக் கொண்டொரு வார்த்தை சொன்னால்
அங்கு
காறி உமிழ்ந்திடுவான் ... — அவன்
சொன்னபடி நடவாவிடிலோ மிகத்
தொல்லை இழைத்திடுவான்...
உண்மை தவறி நடப்பவர் தம்மை
உதைத்து நசுக்கிடுவான்...சில நேரம்
தழலின் குணம் உடையான்

என்றெல்லாம் கவி கண்ட ரௌத்திர ரஸக்கண்ணன் — ரௌத்திரமாயினும் அதுவும் ரஸந்தான்—இங்கு விரிகிறான்.

பிரசாந்தி நிலயவாஸிகளான பின்னும் ஆத்மலோகமான பிரசாந்தி நிலயத்தில் இருக்க முயலாமல் வெளி உலகப் பாச பந்தங்களை வைத்துக்கொண்டிருப்பதைக் கண்டிக்கிறார். உள்ளுலகப் பிரவேசத்துக்கு முட்டுக்கட்டைகளாக உள்ள பல ரூபம் கொண்ட ஆசை, துவேஷங்களை ஆட்சேபிக்கிறார். இதைப் புரிந்துகொண்டால், ''கடவுள் யாரிடம் அன்பு கொண்டுள்ளாரோ அவர்களையே தண்டித்துத் திருத்துவார்'' என்ற பைபிள் வாக்குதானே நிலைநாட்டப்படுகிறது?

கோபப் பிரஸாதத்துக்குச் சில உதாரணங்கள்:

முன்பே லோகாபவாதத்துக்கு மதிப்புத் தருவதை பிரஸ்தாவித்து விட்டதால் அதற்கொரு எடுத்துக்காட்டுப் பார்ப்போம்.

Koviloor Digital Library

ஒருமுறை ஓர் அணுக்கத் தொண்டரிடம் ஐந்நூறு ரூபாய்க்குச் சில்லறை வாங்கிவரச் சொன்னார் ஐயன். அவர் அதை ஒற்றை ரூபாய்களாக மாற்றி, அத்தனை கற்றைகளையும் உறையில் போடாமல் கையிலேயே எடுத்துக்கொண்டு மாடியில் உள்ள அறைக்குள் அடியெடுத்து வைத்தாரோ இல்லையோ,

''போ வெளியே'' என்று ரௌத்திராகாரமாக கர்ஜித்தார் பாபா.

காரணமே புரியாமல் தொண்டர் விலவிலத்து நின்றார்.

காரணத்தை விளக்கியது ஸ்வாமியின் கடினமான வாசகம்: ''உனக்குக் கொஞ்சமாவது மூளை இல்லை? வெளியே அத்தனை பேர் கோரிக்கைக்காகக் காத்திருக்க, எல்லாரும் பார்க்கிற மாதிரி இத்தனை பணத்தைக் கையில் வைத்துக் கொண்டு ராஜாபோல் நேரே என் ரூமுக்கு வருகிறாயே! ஏற்கெனவே நான் உன்னிடம் பணம் கொடுத்து மாற்றி வரச் சொன்னதோ, நீ இங்கே நெருங்கி சம்பந்தப்பட்டிருப்பவன் என்பதோ வெளிஜனங்களுக்குத் தெரியுமா? அவர்கள் என்ன நினைப்பார்கள்? கை நிறையப் பணத்தை அள்ளிக்கொண்டு போய்க் கொட்டினால், உடனே பிரசாந்தி நிலயத்தில் பாபா விடம் பிரத்யேகப் பேட்டிக்கு அனுப்பி விடுகிறார்கள் என்று தானே நினைப்பார்கள்?''

உள்ளத்திலே கர்வம் கொண்டால் ஓங்கி அடிப்பதற்கு எத்தனையோ உதாரணம். பிரசாந்தி நிலய நிறுவனங்களி லும், மற்ற ஸாயி ஸ்தாபனங்களிலும் உள்ளவர்கள் தங்கள் பணிக்குத் தாங்களே இன்றியமையாதவர்கள் என்று எண்ண ஆரம்பித்தால் அந்நேரமே அப்பணியை இன்னொருவருக்குத் தந்து, அவர்களை ஒன்று, வேலையில்லாமல் வைத்துத் தண்டச் சோறு போட்டு மனமாசைச் சுட்டெரிப்பார்; அல்லது வெளியே அனுப்பியே விடுவார். இவர்கள் யாரைக் கையா லாகாதவர்கள் என்றனரோ அவர்களுக்கே இவர்கள் செய்த பணியைப் பிடுங்கித் தந்து, புத்தி கற்பிப்பார். தம் இசையிலேயே பாபாவுக்குப் பிரீதி என்று பஜனகர் நினைத்து மற்றோருக்குச் சான்ஸ் தராவிடில், இவர் பாட ஆரம்பித்த வுடனேயே ஸ்வாமி மன்றத்தை விட்டு வெளியேறி மூக்கை உடைப்பார். ''தர்ப்பக்நன்''—கொழுப்பை அடக்குபவன்—என்று விஷ்ணு ஸஹஸ்ரநாமம் சொல்வதற்கு ஸஹஸ்ரத்துக்கும் மேலே சான்று காணலாம் ஸ்வாமியிடம்.

பாபாவின் பரம அத்யந்த சேவகர் என்று உலகம் மதிக்கும் ஒருவர். வெளி மாநிலம் ஒன்றின் ஸமிதிகளில் ஸ்வாமி யைப் பற்றி அருமையாக உரைகளாற்றி, வெகு நல்ல பேரோடு திரும்புகிறார்.

பாபா வாழ்த்தி வரவேற்கவில்லை. மாறாக அன்பு முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கின்றன. தாஸர் நெருங்கவே அஞ்சுகிறார்.

Koviloor Digital Library

நாட்கள் நகர்கின்றன. கடுகடுப்பு மாறவே யில்லை அவ ரொருவர் விஷயத்திலே. தாளொர் தாங்க முடியாமல் நெருங்கப் பார்க்கிறார், காரணம் கேட்க. ஆனால் நரஸிம்மமாக ஹுங்காரம் செய்து அவரை வெருட்டுகிறார் பாபா.

சென்னையில் அகில இந்திய ஸாயி மகாநாடு நடக்கிறது. இந்த மகா முக்கியஸ்தருக்கு அதற்கான பிரதிநிதி 'பாஸ்'கூட வழங்கப்படவில்லை, பாபாவின் உத்தரவு இல்லாததால்.

நரஸிம்மம் கிழித்துப்போட்டாலும் — போடட்டும் என்று அதே முக்கியஸ்தர் நெருங்கி, மகாநாட்டுக்கு அநுமதி கோரு கிறார். அது குறித்து இவருக்கு எழுத்துப்பொறுப்பு உள்ளதே!

நரஸிம்மமும் போனால் போகிறதென்று சென்னைக்கு வரும் ஒரு காரில் அவருக்கு இடம் ஒதுக்கப் பணிக்கிறது.

ஆனால் சென்னையிலோ? முக்கியஸ்தருக்கு விழா மன்றத்துள் வர அநுமதிச்சீட்டு வழங்கச் சொல்லவில்லை!

எனவே இவர் வெளி மைதானத்திலேயே அமர்ந்து ஒலிபெருக்கி மூலம் உள் நடப்புக்களைக் கேட்டுக் குறிப்பெடுத்துக் கொள்கிறார்.

'நிஜமாகவே . . . தானா இப்படி வெளியே கண்ணீர் விட் டமர்ந்து நோட்ஸ் எடுத்துக்கொள்வது?' என்று பார்க்கிறவர் களெல்லாம் ஆச்சரியப்படுகிறார்கள்.

ஆச்சரியந்தான்! அந்த முக்கியஸ்தருக்குள்ள தகுதி, வயது, பழைய ஸ்தானம் முதலியவற்றைக் கவனித்தால், பாபா அவரைப் 'படுத்தியதில்' விசத்தில் ஓர் அம்சமேனும் எந்த மஹாராஜா செய்திருந்தாலும், அவரது ரோஷம் பீறி வந்து, 'நீ கெட்டாய்' என்று வெளிவந்திருப்பார். இப்படியே தான், முன்னை ஐந்நூறு ரூபாய்க்குச் சில்லறை மாற்றி வந்தவரும் அவரது நகரத்திலேயே ஒரு முன்னணிப் பிரமுகர். அவரும் பாபா கர்ஜித்ததற்காக அவருக்கு முழுக்குப் போட்டு விடவில்லை. ஏன்?

இவர்களுக்கும் சரி, இன்னம் அவரிடம் 'செழுத்தி'யாக வாங்கிக் கட்டிக் கொள்ளும் மற்ற பிரசாந்தி நிலையவாஸி கள், ஸாயி ஸ்தாபனத்தினர் ஆகியோருக்கும் சரி, இதயபூர்வ மாகத் தெரியும், தங்களைக் கொலை செய்யவும் உரிமை படைத்த ஸர்வேச்வரனே ஸாயி என்று. அதோடு அவர் பிரேமேச் வரனை, அவர் கொலையே செய்தாலும் அதுவும் ரக்ஷிக்கும் பிரேமையில்தான் என்றும் தெரியும். 'அவரால் கத்தியால் வெட்டப்படுவதையும் நான் காதலிப்பேன்' என்று இதைத் தான் மனவெழுச்சியுடன் கூறினார் ஸ்ரீ வி.கே. கோகக்.

இது பாபாவின் அலாதிப் பெருமை. மஹாவீர்யவத்தான மூர்த்திகளைக் கொண்ட பெரும் க்ஷேத்திரங்களில் அர்ச்சகரும்,

Koviloor Digital Library

மற்ற ஆலய ஊழியரும் மட்டும் அந்த ஸாந்நித்யத்தைக் கொஞ்சமும் உணராமல், பயபக்தி இன்றிச் செயல்படுகிருர்கள். பேராற்றல் கொண்ட மகான்களின் ஆசிரமங்களில் உள்ள ஊழியர்கள் அவர்களைக் கிள்ளுக்கிரையாக நினைக்கும் விந்தையையும் பார்க்கிறோம். ஆனால் நம் ஸ்வாமி விஷயத்திலோ நிலையவாஸிகளும், ஸ்தாபன ஊழியரும்தான் நம் எல்லோரையும்விட அவரது தெய்வத் தன்மைக்குக் கைகட்டி வாய் புதைத்து, அடங்கி ஒடுங்கி நடக்கின்றனர். மனச் சுதந்திரத்தால் இவர்களும் தப்புச் செய்கிருர்கள். ஆனுல் அவர் தண்டிக்கும்போது அவரிடம் எள்ளளவும் மனுேபேதம் கொள்வதில்லை. எந்தத் தப்புக்கு அவர் தண்டிக்கிருர் என்றே இவர்களுக்குத் தெரியாதபோதுகூட, தண்டனையால் அவரிடம் பற்றை நலிய விடுவதில்லை.

இப்படித்தான் அந்தப் பிரசாந்திப் பிரமுகர் அத்தனை அவமானங்களையும் சகித்துக்கொண்டு சென்னை மகாநாட்டுக்கும் சென்று திரும்பினுர்.

ஸ்வாமியின் பராமுகம் தொடர்ந்தது.

பிரமுகருக்குக் குடும்பப் பிரச்னை ஒன்று ஏற்பட்டது.

பாபாவின் அநுக்கிரகமின்றி முடியாது என்பதால் அவரைத் துணிந்து அணுகிப் பிரார்த்தித்தார்.

பனிமலை பாபா எரிமலையாய் வெடித்தார்: ''உன் பல்லை உதிர்த்தால் என்ன? என்னிடம் வேண்டுகிருயே, வெட்கமில்லை? வெளி ராஜ்யம் போய் டூர் அடித்தாயே, அப்போது என்ன காரியம் செய்து விட்டாய்?''

அப்படி என்ன கெட்ட காரியம் செய்தோம் என்று இவருக்கு நினைவில்லை.

''நினைவுகூட இல்லை? ம்?'' என்று உருமி ஒரு நோட்டீஸை அவரிடம் வீசினுர் ஸ்வாமி.

வெளி ராஜ்யத்தில் இவர் பயணம் செய்தபோது ஓர் ஊரில் விநியோகிக்கப்பட்ட நோட்டீஸ்தான் அது. அதில் இவரது அன்ருட நிகழ்ச்சி நிரல் அச்சிட்டிருந்தது.

அதனிடையே ஒன்று, இத்தனை மணியிலிருந்து இத்தனை மணி வரை இவர் ஸாயிபக்தர்களுக்குப் பேட்டி வழங்குவார் என்பது.

இவர் முகத்தருகே நோட்டீஸைக் கொணர்ந்து அவ்வரியை விரலால் குத்திக்காட்டினுர் ருத்ரஸாயி. அவரது ஏகத் தாளக் குரல் பிரமுகரின் இதயத்தைக் குத்தியது: ''பேட்டி தருகிருயில்லை, பேட்டி? அப்படிப்பட்ட மகா பெரிய மநுஷ்யனுக்கு இங்கே என்னிடம் என்னப்பா வேலை?''

Koviloor Digital Library

தொண்டர் தண்டனிட்டார். "ஸ்வாமீ, இது எனக்கே தெரியாமல் அவர்கள் செய்த காரியம்.." என்று இவர் விம்மும்போது,

இடியாக இடித்து, நீ வெள்ள மின்னலைக் கக்கிய மேகம் க்ஷணத்தே ஜில்லெனக் கொட்டுவது போல்,

"பங்காரு பங்காரு" என்று அடியாரைத் தட்டிக் கொடுக்கிறார் ஆண்டை.

கோபத்திலே ஒரு சொல்லிற் சிரித்துக்
குலுங்கிடச் செய்திடுவான் — மனஸ்
தாபத்திலே ஒன்று செய்து மகிழ்ச்சி
தளிர்த்திடச் செய்திடுவான்

என்று கவி சொன்னதும் நம் கதாநாயகனைக் கவியின் 'க்ராந்த த்ருஷ்டி'யால் அன்றே கண்டுதான். ஆனால் இந்தக் கோபமும், மனஸ்தாபமும் கூட இவரே கொள்ளும் வேஷந் தான், எதிராளியுடையவை அல்ல. இவரது கோபத்தாலும் தாபத்தாலும் அவர்கள் சோகமயமானபோது அவர்களைச் சிரித்துக் குலுங்கித் தளிர்த்திடச் செய்வார்.

"பங்காரு! எனக்குத் தெரியாதாம்மா, அவங்களாச் செஞ்ச காரியம்னு? ஆனாலும் இதுக்கெல்லாம் ஸத்யஸாயி ஸேவகங்க கொஞ்சம்கூட இடம் தரப்படாது. நீ அவங்களை நல்லாக் கண்டிச்சிருக்கணும். அவங்க ப்ரோக்ராம்லே 'கலந்துக்கவே மாட்டேன்'னு பயமுறுத்தியிருக்கணும். அதிகப் பிரஸங்கித்தனம், பொய் இதுங்களுக்குத் தயா தாக்ஷிண்யமே காட்டப்படாது, நாயனா" என்றார், தாக்ஷிண்யம் காட்டிய குற்றத்துக்காக இத்தனை தாக்ஷிண்யம் காட்டாத ஸ்வாமி.

உள்ளொன்றும் புறமொன்றுமாக உள்ள 'ஹிபாக்ரிஸி'யே நவீனகாலத்தின் மாபெரும் தீமை என்பவரல்லவா ஸ்வாமி? "முன் யுகங்களில் அரக்கர், அதர்மிஷ்டர் என்றால் அவர்களது வெளித்தோற்றம், பேச்சு இவற்றிலும் தீமையே தெரியுமாதலால் மற்றவர்கள் அவர்களை இனம் கண்டு கொண்டு ஜாக்கிரதையாக இருக்க முடிந்தது. ஆனால் இக் காலத்தில் அவ்வரும் வெளிப்பார்வைக்கு கௌரவமானவர் போலவே இருக்கிறார்கள்; பேச்சிலும் ஒழுக்கங்களை, பண்புகளை முழக்குகிறார்கள். ஆனால் உள்ளத்தில் தீமைகளை அடைத்துக்கொண்டு, காரியத்தில் கெட்டதையே செய்கிறார்கள்" என்பவராயிற்றே! இதற்கேற்பத் தமது அணுக்கத் தொண்டர்களிடம் 'ஹிபாக்ரஸி' காணப்பட்டால் பூகர்ப்பமாகக் கனன்று விடுவார். வேறு பெரிய பிழைகள் செய்தவரைக்கூட மனித இயற்கை, சந்தர்ப்ப நெரிசல் என்று மன்னித்தாலும் மன்னிப்பார். ஆனால் சிறிய பிழை செய்தவர்கூட அதை மறைத்து நல்லவராக வேஷம் போடுகையில் சீறுவார்.

Koviloor Digital Library

ஸ்தாபனப் பிரமுகர் ஒருவர், விழாவொன்றில் பேசுகையில், பக்தர்கள் 'பாபா ஓரிடத்தில் மட்டும் உள்ளார் என எண்ணுமல் அவர் எங்குமுள்ள ஸர்வ வியாபி' என்ற உணர்வு பெறவேண்டும் எனக் கூறி, அவரது வியாபகத்தை எடுத்துக் காட்ட வாசாலமாகச் சான்றுகளை அடுக்கத் தொடங்கினுர். பாபா நட்டநடுப் பொதுக்கூட்டத்தில் அவரை இடைமறித்துப் பேசினுர்: ''தாம் சொல்வதில் தமக்கே உறுதியில்லாமல் இப் பேச்சாளர் கதைக்கிருர். நான் இவரை விட்டு வெளியூர் சென்று பல நாட்கள் தங்கி விட்டால், அப்போது இவருக்கு என் ஸர்வ வியாபக உணர்வு எங்கேயோ போய்விடுகிறது. என் பாதவந்தனம் பெருமல் தவிப்பதாக எனக்கே கடிதம் எழுதுகிருர்!'' என்ருர்.

இப்படி அம்பலத்தில் மானத்தை வாங்கினுலும் இவரிடம் துணைவேந்தர்களும், லெஃப்டினர் கவர்னர்களும், ஹைகோர்ட் ஜட்ஜ்களும், தொழில் அதிபர்களும் தாஸாநு தாஸர்களாகப் பணி செய்கிருர்கள். ஏனெனில் மானத்தை வாங்க சகலத் தகுதியும் வாய்ந்த ஒழுக்க சிகரத்தை இவர்கள் அவரிடம் தரிசிப்பதுதான்.

ஹிபாக்ரிஸித் தண்டிப்புக்கு இன்னேர் உதாரணம்:

நிலைய பாராக்காரர்களில் ஒருவர் யாத்ரீகர்களிடம் பாபா வின் ஸர்வதேவத்வத்தைப் பரக்க ஓதுகிருர். 'அவர் விட்ட வழி என்றிருங்கள். பேட்டிக்கு அவர் அழைக்காவிட்டாலும், அவர் சித்தம் என்றிருங்கள். இந்தப் புட்டபர்த்தியை மிதித்ததே மகாபுண்ணியம் என்ற திருப்தியோடு ஊருக்குப் போங்கள்' என்றெல்லாம் சண்டப் பிரசண்டமாகப் பேசுகிருர்.

பிறகு இவரது உறவினர் ஒருவர் திருப்பதிக்குப் போகிருர். பாராக்காரருக்கும் உடன்போக ஆசை உண்டாகிறது. வெறும் ஆசை மட்டுமில்லை. உள்ளூற, வேங்கடரமண தரிசனம் பெற்று லன்றித் தமக்கு ஜன்ம ஸாபல்யமில்லை என எண்ணுகிருர். ஸ்வாமியிடம் உறவினர் அழைப்பதாகச் சொல்லி உத்தரவு கேட்கிருர். ஸ்வாமி சிரித்துக்கொள்கிருர். ''போகத்தான் வேண்டும்? ம்?'' என்கிருர். பாராக்காரர் பேசாமலே நிற்கிருர். ''தங்கள் சித்தப்படி; தாங்கள் விட்ட வழி'' என்று சொன் ஞரில்லை. ''சரி போய் வா!'' என்கிருர் ஸ்வாமி.

திருப்பதியில் போய் பாராக்காரர் பட்ட பாடு! மண்டை பிளந்து போகிருற்போல் வலி எடுத்தது. வேங்கடரமணனுவது, தரிசனமாவது? ஊருக்குத் திரும்பினுல் போதும் என்ருகி விட்டது. பாலாஜியைத் தரிசிக்காமலே பாபாஜியிடம் திரும்பினுர்.

பாராக்காரரிடம் பாராமுகம் காட்டினுர் பாபா. ஆனுல் இன்னமும் இவரை விடாமல் 'அநுக்கிரகித்து' வந்த தலைவலியின்

Koviloor Digital Library

கொடுமை தாங்க முடியாமல் பாராக்காரர் ஸ்வாமியின் பாதத்தில் விழுந்தார்.

''இனிமேல் இப்படி மனமொன்றும் சொல்லொன்றுமாக இருக்கமாட்டியே?'' என்று கேட்ட பாபா திருநீறு கொடுத்தார்,

தலைவன் அருளில் தலைவலி பறந்தது.

'பாலாஜியை தரிசிக்க விரும்புவது அத்தனை தவறானதா? இதற்காகவா பாபா தண்டித்தார்?' என்று விபரீத வியாக்யானம் செய்துகொள்ள வேண்டாம். இதே பாபா அநேக அத்யந்த பக்தர்களிடம், ''வழக்கத்தை விட்டு ஏன் இங்கே முடியிறக்குகிறீர்கள்? திருப்பதிக்கே போங்கள்'' என்று விரட்டியிருக்கிறார். கோவை மாவட்டச் செட்டிக் குடும்பம் ஒன்றின் கல்யாணத்தைப் புட்டபர்த்தியிலேயே நடத்தினார் பகவான். ஆனால் அதன் முன்னும் பின்னும் அவர்கள் குல வழக்கப்படி செய்யவேண்டிய அங்காள பரமேச்வரி ஆராதனை முதலியவற்றை பாபாவே நினைப்பூட்டிச் செய்ய வைத்தார்.

ஆக, பாராக்காரரைத் தண்டித்ததற்குக் காரணம் அவர் பிறருக்கு பாபாவின் ஸர்வதேவத்வத்தை முழக்கிவிட்டுத் தாமே அதில் நம்பிக்கையில்லாமல் திருமலைக்கு ஓடியதற்காகத் தான். பாபாவே திருமலைவாஸனும் என்ற எண்ணத்தில் அவர் சென்றிருந்தால் தண்டித்திருக்கமாட்டார். அல்லது, அப்படி எண்ணாவிட்டாலும் பரவாயில்லை; பிறருக்கு இவ்வாறு சொல்லாதிருந்தால் தண்டித்திருக்கமாட்டார்.

இன்னொன்றும் — ஆரம்ப அதிகாரமொன்றில் சொன்னதை — வலியுறுத்துகிறோம். தம் ஆஸ்தான சேவகரான பாராக்காரர் போன்ற ''நேர்'' தொண்டருக்குத்தான் இப்படி பாபா 'தீமை காட்டி விலக்கிடும் தெய்வமாக'த் தண்டனையும் எப்போதாவது தருவாரே அன்றி, பொதுவில் அவர் அமாநுஷ்ய சக்தியால் எவருக்கும் தீம்பு செய்ய மாட்டார் என்பது சத்தியம், பரம சத்தியம்.

ஸ்வாமிக்கு ஸுப்ரம்மண்யத்வம் மிகவும் உண்டு. அவரை பக்தரனைவரும் 'ஸ்வாமி' என்றே சொல்கிறோமே இதுவே அவரது முருகத்வத்துக்கு ஓர் அடையாளந்தான். ஏவெனில் வெறுமே 'ஸ்வாமி' என்று மட்டும் சொன்னால் முருகன் என்றுதான் அர்த்தம். வடமொழி நிகண்டு அப்படித்தான் சொல்கிறது. இந்த ஸ்வாமித்வம் காரணமாகத் தானோ என்னவோ பாபா அலுக்காமல் சலுக்காமல் ஒவ்வொரு பஜனை முடிவிலும் தவறாமல்

ஸுப்ரம்மண்யம் ஸுப்ரம்மண்யம்
ஷண்முகநாதா ஸுப்ரம்மண்யம்

என்று ஆவேசமயமாகப் பாடுகிறார்.

Koviloor Digital Library

முருகக் கடவுளால் தம்மை நெருங்கியவரிடம் ஒழுங்கீனத்தைச் சற்றும் பொறுக்க முடியாது; மகா கடுமையாகத் தண்டித்து விடுவார். பிரம்மாவும், தேவேந்திரனும் அவரிடம் பட்ட பாடு!

'ரக்தாம்பரன்' எனப்படும் அச் செவ்வாடைச் செவ்வேள் செந்தணலாகச் சிறுபவன். அக்னி ஸ்வரூபன் அன்றோ? 'பைரவி பெற்ற பெருங் கனல்' என்றாரே கவி!

ஆயினும் தியான அவனே தீஞ்சுவை கங்கையில், குளிர் பூம்புனலான சரவணப் பொய்கையில் தோன்றிய காங்கேயன், சரவணபவன். எரிக்கும்போது எரித்து விட்டு, வட்டியும் முதலுமாகக் குளிர்மழையில் முக்குவான். இதனையே நம் காவியநாதரிடமும் நாம் அற்புதமாகப் பார்க்கிறோம்.

புண்ணிய தீர்த்தம் மும்முறை பொறுக்கும், அதாவது அதில் முழுகியவர் மும்முறை மேல் மட்டத்துக்கு எழும்ப உந்துதல் தந்து, பிறகே அவர்களை மீளாமல் முழுக்கிவிடும் என்பார்கள். பொதுவாக பாபாவும் இப்படியே மும்முறை மன்னிப்பார். ஒருவர் தவறும்போது அவரிடம் முதலில் நய மாகச் சொல்லி உணர்த்துவார்; அப்படியும் தவறினால் அந்தரங்கத்தில் கண்டித்தே சொல்வார்; பின்னரும் தப்பைத் தொடர்ந்தால் பகிரங்கமாகப் பலர் இருக்கையிலேயே காய்ச்சு வார்; அதுவும் பலன் தராதபோதுதான் குற்றம் செய்தவரை பகிஷ்காரமே செய்துவிடுவார்.

தவறு என்று வருகையில் லவலேசமும் சொந்தப் பாச மில்லாத ஸந்நியாச சிகரத்தை ஸ்வாமியிடமே பார்க்க முடியும்.

வடதேசத்து பஜனகர் ஒருவருக்கு ஸ்வாமி நிலைய மன்றத்துள்ளேயே ஸங்கீர்த்தனம் செய்ய அநுமதி தருவதோடு, உறையுளும் உடையும் உணவும் வழங்கி அன்பு செய்வதைப் பார்க்கும்போது அவரிடம் ஸ்வாமிக்கு ஒரு பாசமே இருப்பதாக நாம் எண்ணுவோம். பஜனகர் ஒரு தவறு செய்கையில், இனி அவர் மன்றத்துள் பாடலாகாது — நகர ஸங்கீர்த்தனம் மட்டுமே செய்யலாம் என விதிக்கிறார் ஸ்வாமி. தவறு தொடர்கிறது. நகர கீர்த்தனமும் அவருக்கு மறுக்கப் படுகிறது. பின்னரும் திருந்தாததால் நிலையத்திலிருந்தே வெளியேற்றப்படுகிறார். ஸ்வாமிக்கு சொந்தப் பாசமே இல்லை எனத் தெளிகிறோம்.

ஸ்வாமியின் 'செல்லம்' என்றே ஓர் இளைஞரை எண்ணுகிறோம். இவர் அத்தனை சுதந்திரமாக ஸ்வாமியின் ஓயிட்ஃபீல்ட் இருக்கையில் தர்பார் செய்கிறார். ஒருநாள் பார்த்தால் இளைஞர் இருந்த இடம் தெரியவில்லை. விசாரிக்கிறோம். ஏதோ காதல் விவகாரத்தில் அவர் முறை தப்பி நடந்ததால் ஸ்வாமி சர்வ சகஜமாக, இம்மி சலனமின்றி "போய்விடு"

Koviloor Digital Library

என்று ஒரே வார்த்தையில் கூறிவிட்டாராம். அவர் கதறு கதறு எனக் கதறினாராம். 'செல்லத்'தின் கண்ணீர் வெள்ளம் ஸ்வாமியின் உள்ளத்தைத் தொடவேயில்லை. அதே நிச்சலனம். ஆம், கோபக் குறிப்புகூட முகத்தில் இல்லாமல் உணர்ச்சியே இன்றி இருந்தாராம். 'செல்லம்' தேம்பிக்கொண்டே பெட்டி, படுக்கைகளைப் 'பாக்' செய்து புறப்படுகையில், ஸ்வாமி சகஜமாக மற்றொருடன் உரையாடி காரியங்களைக் கவனித்தாராம். 'இப்படி ஒரு விரக்தி நவகண்டத்திலும் இராது' என்கின்றனர் உடனிருந்து கண்டவர்.

மாணவரிடம் விசேஷப் பரிவு கொண்ட ஸ்வாமியே கோடைப் பயிற்சி முகாம்களின்போது ஸினிமாப் பித்து, ஸிகரெட் மோகம் முதலியவற்றை, இவர் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் விடாத மாணவர்களை, டிக்கெட் வாங்கிக்கொடுத்து அவரவர் ஊருக்கு ரயில் ஏற்றிவிட்டுத்தான் மறுகாரியம் பார்த்திருக்கிறார்.

மனிதரிடம் பாசம் இருப்பதுபோல் காட்டினாலும் உண்மையில் அவருக்கு தர்மமொன்றிடம்தான் பாசம் உண்டு!

தமது நன்னெறி நாட்டத்தில் கோபவெறி ஏற்படுவதை அவரே உணர்ந்திருக்கிறார். இதனால் தம்மை ஆன்மநாயகனாகக் கொண்டவர்கள் தம்மோடு 'குடித்தனம்' நடத்துவது எத்தனை கஷ்டம் என்றும் புரிந்துகொண்டிருக்கிறார். எனவே தம்மை விட்டு நீண்ட காலமாக நீங்காத டாக்டர் பிரம்மம், ஸ்ரீ கஸ்தூரி போன்றோரை 'பெத்த முத்தைதி' ('பெரிய சுமங்கலி') என்று ஹாஸ்யமாக அழைக்கிறார்.

ஹாஸ்யக் 'குத்த'லாலேயேகூட ஸ்வாமி திருத்திப் பணி கொள்வதுமுண்டு. ஆம்; 'ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக் கறக்க வேண்டும்; பாடிக் கறக்கிற மாட்டைப் பாடிக் கறக்க வேண்டும்' என்ற பேதங்களை நன்கு அறிந்தவர் ஸ்வாமி. தமக்கு அணுக்கமான எல்லோரையுமே சகட்டுமேனியாகத் தாக்கித்தான் திருத்துவார் என்றில்லை.

ஆசிரமவாஸினியொருவர் வயதுக்குத் தகாத அலங்காரத்துடன் வருகையில், "சந்திரலேகா, சௌக்கியமா அம்மா?" என்று சிரித்துக் கேட்கிறார். இந்த ஹாஸ்யமே ஆயிரம் சவுக்கடியைவிடச் சக்திகரமாகச் செயற்பட்டு அந்த அம்மாளை அவ்வித அலங்காரத்தை அன்றிலிருந்து விடச்செய்கிறது.

நிராதரவான நிலையில் பகவானால் நிலையத்தில் அமர்த்திப் பேணப்பட்ட ஓர் அம்மையார், 'நமக்கு வரவேண்டிய சொத்துக்கள் இருக்க ஸ்வாமிக்கு பாரமாக இருப்பானேன்? ஊருக்குப் போய் கேஸாவது போட்டு அதைத் திரும்பப் பெறலாம்' என்றெண்ணுகிறார்.

ஸ்வாமி இவரை அவலாக தகிக்கவில்லை. ஹாஸ்யமாகக் கூட ஏளனம் செய்யவில்லை. இவரது பதத்தை அறிந்த

Koviloor Digital Library

ஸ்வாமி இதமாக, இங்கிதமாக இவரிடம் கல்யாணி ராகத்தில் தியாகராஜ கிருதி பாடுகிறார்:

நிதி த்ஸால ஸுகமா? ராமுனி ஸந்-
நிதி ஸேவ ஸுகமா?

("சொத்து சுகம் தருமா? ராமனின் ஸந்நிதித்தொண்டு சுகம் தருமா?")

தெளிவு பெறுகிறார் அம்மாள். 'ஸாயிராமனின் ஸந்நிதியில் அன்றாடம் தனக்குக் கிடைத்துள்ள சேவையைக் காட்டிலும் ஒன்று உண்டா? இனி தலை போனாலும் பிரசாந்தி நிலயத்தை விட்டுப் போவதில்லை' என்று உறுதிகொள்கிறார்.

* * *

ஸ்வாமியின் கோபத்திலேயே இன்னம் இரண்டு தினுசுகள் உண்டு.

சில சமயங்களில் ஸ்வாமி காரணமின்றி அணுக்கத் தொண்டரை வேறு சிலர் முன் ஏசுவார். பிறகு விளக்கு வார்: "அவர்களுக்கு உன்னிடம் நான் அதிக பட்சம் வைத் திருக்கிறேன் என்று தாபம்! பாவம், ஆரம்ப நிலையில் இதெல் லாம் சகஜம்தான். என் பிரீதியைப் பெறுவதில்தானே போட்டி போடுகிறார்கள்? இந்த ஸ்டேஜில் அவர்களை விட்டுப் பிடிக்கத்தான் வேண்டும். அவர்கள் திருப்திக்காகத்தான் உன்னை ஏசினேன், பங்காரு" என்பார்.

மனச் சுதந்திரத்தின் கோணங்கியால் ஆசிரமவாஸிகள், ஸ்தாபன அங்கத்தினர் இவர்களிடையேயும் போட்டி பொறாமைகள் ஏற்படுவதுண்டுதான்!

ஆனால் இத் தவற்றிலுங்கூட மனோதத்வ 'நியாயங்'களை ஒப்புக்கொள்ள வேண்டிய அளவில் ஒப்பி, மகா நுட்பமாக, விதரணையாகக் குடித்தனம் நடத்திக் காட்டுகிறார் முன்னோடி பாபா.

இதுவே, நீண்ட காலத் தொண்டரிடை போட்டி பொறாமை இருந்ததோ அப்போது ஸ்வாமி நடந்துகொள்ளும் விதமே வேறு! தம் அறையைவிட்டே இறங்காமல், உணவும் கொள்ளாமல் சத்யாக்ரஹம்கூடச் செய்வார். பிரேம பாபா தங்களால் வாடுகிறார் என்றவுடனே பிணங்கிய இருவரும் இணங்கி விடுவர். இருவருமாகச் சென்று ஸ்வாமியை வணங்கி அவர் சத்யாக்ரஹத்தை விடுமாறு செய்வர்.

பாபாவின் காரணமில்லாத கோபத்தில் இன்னொரு தினுசை முன்னரே கூறியிருந்தாலும் மீள நினைவுறுத்து கிறோம். இக் கோபத்துக்கு ஆளாகிறவருக்கே தெரியாத அவரது பூர்வஜன்ம பாபத்தைத் தணிவிக்கவே இப்படி பாபா

Koviloor Digital Library

சிறி விழுந்து அவர்களைத் துடிக்கச் செய்வது. இந்தத் துடிப்பால் அவர்கள் கழுவாய் பெற்றபின் பாபா அவர்களிடம் மெழுகாய் உருகிப் பேசுவதுண்டே!

இப்படித் துடித்துவிட்டு, பிறகு பாபாவிடமே 'ஊடல்' செய்தார் பாபாவின் அத்தாணிச் சேவகரான ஒரு பெரியவர். பாபாவை விட்டு விலகி விலகிப் போனார். பாபா அவரை இழுத்துப்பிடித்து, தாஜா செய்வதில் ராஜாவாக, ''பங்காரு! நீயோ பாவம்! நான் உன்னைக் கோவிச்சுக்கலேயடா, உன்னைக் கோவிச்சுக்கவே யில்லே'' என்று சீராட்டினார்.

அவரது குடும்பத்தார் இதை உருகி, உருகிச் சொல்வார்கள்.

''உன்னைக் கோபிக்கவில்லை'' என்றது உண்மைதான். அடியாரின் பூர்வகர்மாவிடந்தான் ஸ்வாமிக்குக் கோபம். அதையே தமது கோபத்தால் விரட்டினார். எங்கோ விரட்டாமல் தம்மிடமே அதன் பாபவினைவை அழைத்துக்கொள்ளவும் செய்வார். இதற்காக நர சரீரத்தால் ரகசியமாக அநுபவிக்கவும் செய்வார், மஹாத் தியாகி.

ரகசியமானாலும் இது நிலையவாஸிகளை நூலாசிரியன் குடைந்து குடைந்து கேட்டு அவர்களைக் 'கக்க' வைத்ததிலிருந்து (அதுவும் ஸ்வாமி கிருபைதான்) இவன் காதுவரையில் வந்து விட்டதால், பரசியமாக்கி உங்களுக்கும் தரலாம். தாம் வெருட்டுபவர் உள்பட, அத்தாணிச் சேவகர் பலரது தப்பிதங்களுக்காக பாபாவே தேகரீதியில் பல கஷ்டங்களை ஏற்றுப் பிராயச்சித்தம் செய்கிறார். வெளியில் பார்ப்பவர் எட்டு மணிக்குச் சிற்றுண்டியும், நண்பகல் விருந்தும், முன் மாலையில் காபியும், இரவில் போஜனமுமாக பாபா ஜமாய்ப்பதாகத் தான் எண்ணுவோம்—மாடி வராந்தாவில் வேளை தவறாமல் இவர் உணவறைக்குப் போவதைப் பார்த்து. உள்ளே நடக்கும் தியாக நாடகத்தை எவரே அறிவர்?

உலகினர் அனைவரின் தப்பிதங்களையும் இப்படி ஒரு நர சரீரத்தில் ஏற்று அநுபவிப்பது அடியோடு முடியாத காரியம். எனவேதான் பாபா அணுக்கத் தொண்டர் விஷயத்திலேயே இதை விசேஷமாகச் செய்கிறார். ஏதோ ஸுக்ருதத்தால்தானே அவர்களுக்கு மட்டும் இவ்வனுக்கம் கிட்டியுள்ளது?

இந்த ஜன்மாவில் ஒருவர் காரணம் காணமுடியாத பிழைக்காக பாபா அவரைச் சாடி, அதனால் அவர் மனம் வெதும்புகையில் அவராகப் பூர்வ வினையைத் தீர்த்துக்கொள்வதோடு பாபாவும் அதைப் பகிர்ந்துகொண்டு தீர்க்கிறார். இதை இவ்வளவு நுணுக்கமாகப் புரிந்துகொள்ளாவிடினும், ஆசிரமத்தில் பொதுவாகச் சொல்லப்படுவதைக் கேட்டு ஓர் இளம் ஆசிரமவாஸி, ''ஸ்வாமி! நீங்கள் ரொம்ப வேண்டிய வர்களை மட்டுமே கோபித்துக் கொள்வீர்களாமே, அப்படி

Koviloor Digital Library

யானல் நான் என்னை? ஒரு தடவைகூடத் திட்டவே இல்லையே!'' என்று நிஷ்கபடமாகக் கேட்டபோது ஸ்வாமியே சிரித்துவிட்டார்.

ஆனாலும் கோபப் பிரஸாதத்தைத் தரக் 'கிராக்கி' செய்துகொண்டார். ''அதெல்லாம் இப்போ கோவிச்சுக்க முடியாது. அப்புறம் ஒருநாள் வரும் பார். காண்டினெண்ட், காண்டினெண்டாக (ஒவ்வொரு கண்டத்திலிருந்தும்) இங்கே வருகிறவா சிலரும் உன்னிடம் போட்டிக்கு வரும் ரீதியில் உனக்கு இங்கே ஒரு காரியம் ஏற்பட்டிருக்கும். அப்போ அவாளுடைய திருப்திக்காக உன்னைத் திட்டுவேன்—கண்டபடி திட்டுவேன். நீயேதான் அதை அவாளுக்கு 'ட்ரான்ஸ்லேட்' பண்ணணும், என்ன? ஆமாம், அப்போ நீ நிறையப் படிச் சுட்டு வந்திருப்பே, அதனுலே உன்னையே 'ட்ரான்ஸ்லேட்' பண்ணச் சொல்வேன்'' என்றார்.

எத்தனை நகைச்சுவை உணர்வு! மானுடமாகப் பல பண்பு களைக் காட்டும்போது ஹாஸ்ய ரஸனையையும் நமக்குப் படிப் பிக்கிறார்.

இதிலேயே எளிமையும்! பள்ளிப் படிப்பும் முடிக்காத தமக்கு ஆங்கில வசவுகள் தெரியாது போலவும், அதை இந்தக் குட்டி பக்தரே மெத்தப் படித்து வந்து மொழிபெயர்க்க வேண்டும் என்பது போலவும் நிஷ்கபடமாகச் சொல்கிறார்.

அந்த நாளும் வந்தது—நாலைந்து ஆண்டுகளுக்குப் பின்னல்.

பாபா சொன்னதற்போலவே கல்லூரி படிப்புப் பெற்ற இளவடியாருக்கு பிரசாந்தி நிலைய பஜனையில் முக்கிய கைங்கரியம் வாய்த்தது. வெளி நாடுகளிலிருந்து வந்த வெள்ளை யரும் இதற்காகப் போட்டி போட்டனர். சொன்னவண்ணம் செய்யும் பெருமான், அவர்களது 'திரு' முன்னரே இளவடி யாரை 'அர்ச்சனை' செய்ய, அவரது நடிப்புக்குச் சமானமாக இந்த நபரும் நடித்து, உள்ளுக்குள்ளே சிரித்துக்கொண்டே, வெளியில் அழுதபடி 'அர்ச்சனை'களை ஆங்கிலத்தில் ஆக்கிப் போட்டியாளருக்கும் புரியவைத்தார். அவர்களுக்குப் பரம சந்தோஷம்—பாபா அந்த நபரைத் திட்டியது மட்டுமின்றி, திட்டலை அவரே இவர்களுக்கு மொழிபெயர்க்குமாறு செய்து இரட்டிப்பாக மட்டம் தட்டியதில். நாரத மகரிஷியும் பரம ஹம்ஸரும் கூறினாற்போல் ஆசை, துவேஷம், பொறாமை முதலானவற்றையும் பகவத் சம்பந்தமாக ஆக்க வேண்டிய முதல் நிலையில் இருந்தவர்கள் இந்தப் போட்டியாளர்கள். அவர்களது திருப்தியும் ஸ்வாமிக்கு நியாயமாகவே பட்டிருக் கிறது!

இதைப் பார்த்தே, 'இப்படி ஒருநாள் நாமும் மான பங்கப்பட வேண்டியிருக்குமோ?' என்று அவர்களில் சிலர் நழுவியும் விட்டார்களாம். அப்படி நழுவச் செய்யவும் ஸ்வாமி விளையாடி இருக்கக்கூடும்.

Koviloor Digital Library

அவரது நிர்மலமான கபட நாடகங்களை நாம் எப்படிப் புரிந்துகொள்ளமுடியும்?

கபடமாயினும், கடோரமாயினும் அது நிர்மலப் பிரேமையையே மூலமாகக் கொண்டது என்பதே நாம் புரிந்து கொள்ள வேண்டுவது.

★

நாம் பிறர்மீது கொண்டுள்ள ஆத்திர க்ஷாத்திரங்களை வெளி உலகுக்குக் காட்டுவதில்லை; யாருக்கேனும் சிறிது நன்மை செய்தோமாயின் அதை மட்டுமே விளம்பரப்படுத்திக் கொள்வோம். பாபா எத்தனை வித்தியாசமானவர்? ஆசிரம வாஸி ஒருவர் எழுதுவதைச் சுருக்கமாகச் செப்பம் செய்து தருகிறோம்:

"ஸ்வாமி எங்களுக்குச் செய்யும் சிக்ஷை வெளி உலகுக்குத் தெரிகிறமாதிரி ரக்ஷை தெரிவதில்லை. அத்தனை ரகசியமாகச் செய்வார். சிக்ஷை என்று தோன்றுவதேகூட ரக்ஷையாக இருக்கும். ஒருமுறை பாடசாலை ஸீனியர் மாணவர் சிலரை அவர் துரத்தி விட்டதாகத்தான் வெளியில் தெரியும். ஆனால் வெளியே போனவர்களை எல்லாம் பல இடங்களில் நல்ல நல்ல வேலைகளில் அமர்த்தி, அவர்களும் அந்தக் குடும்பங்களும் இன்று ஸ்வாமியை வாழ்த்துவது எங்களைப் போன்ற ஒரு சிலருக்குத்தான் தெரியும். பஜனை பாடி வந்த பையனை வெளியேற்றியபோது எங்களுக்கே மனம் கலங்கத்தான் செய்தது. ஆனால் வெளியேறியவுடனேயே, வெளியேறியதாலேயே, அவனுக்கு அகாடெமி 'ஸ்காலர்ஷிப்' ஒன்று கிடைத்தது. மாதம் முந்நூறு ரூபாய் சம்பாதிக்கிறான். 'எதிர்காலத்தில் வேத போதனையோ, புரோஹிதத் தொழிலோ செய்கிற எண்ணமில்லாமலே இங்கே தற்கால வசதிக்காகப் பாடசாலையில் சேர்ந்து படித்து, நல்ல வயசும் வந்துவிட்ட மாணவர்களை இன்னமும் நாம் வைத்திருந்து என்ன பிரயோஜனம் என்று தான் அனுப்பிவிட்டேன்' என்று பிற்பாடு ஸ்வாமியே சொன்னதாகத் தெரிந்தது."

தாம் மனமார விரும்பும் வேத போஷணத்தில் ஈடுபாடில்லாமல் உதர போஷணத்துக்காகவே பாடசாலையில் சேர்ந்தோரையும் உதார சித்தத்தோடு அத்துணை காலம் ஆதரித்திருக்கிறார்! வெளியேற்றியபோதும் பிழை செய்தவர்களுக்குப் பிழைப்புக் காட்டியருளிய ஸ்வாமி, "கோபமுள்ள இடத்தில் குணமிருக்கும்" என்பதன் உயிருருவம் தான்!

குணமெனும் குன்றேறி நிற்கும் அவரது வெகுளியை (கோபத்தை) கணமேனும் காத்தல் உலகுக்கும் அரிதுதான்—இந்தக் கோப நாடகத்தைக் கணத்துக்கு மேல் நடித்துக் காப்பது அவருக்கும் அரிதுதான். ஆயினும் நல்வழிப்படுத்தும் பொருட்டே அவர் சினத்தை நீண்ட காலம் காக்கும் அரும் சாதனையும் செய்கிறார்!

Koviloor Digital Library

குணத்தைப் புரிந்துகொண்டவர்கள் கோபத்தை உள்ளபடி எடுத்துக்கொள்ளமாட்டார்கள். பாபா வெளியேற்றினாலும் சித்ராவதிப் புளிய மரத்தடிக்குப் போய்த் தங்கி இரண்டு நாள் ஜபம் செய்வார்கள். பிறகு மந்திரத்துக்குத் திரும்பு வார்கள். ''என்ன தவறு நாங்கள் செய்திருந்தாலும் தங்களிடமிருந்து பிரிக்கும் தண்டனையை மட்டும் தராதீர்கள். இங்கேயே வைத்துக்கொண்டு கொல்லுங்கள் ஸ்வாமீ'' என்பார்கள்.

''சரி சரி! ஜாகைக்குப் போய்க் காரியத்தைப் பார்'' என்பார் தாம் வழிக்கு வந்ததாகக் காட்டி அவர்களை வழிக்குக் கொண்டு வந்த மனித தர்ம முன்னோடி.

எப்போதேனும் வாய்விட்டே சொல்வாராம்: ''நான் கோபித்து ஒருவர் படுகிற கஷ்டம் எனக்கில்லையா? நான் விரட்டியடிக்கும்போதும் நல்லதேதான் செய்கிறேன்.'' பரம உருக்கமாய் வருமாம் இவ் வார்த்தைகள்.

''ஜகன்மாதா எங்கேனும் தீங்கு செய்வாளா?'' என்றெழுதுகிறார் மேற்சொன்ன ஆசிரமவாஸி.

இக்காலப் பத்திரிகையாளருக்கே உரிய துணிச்சலுடன் ஒரு நிருபர் பாபாவிடம் அவரது எதிர்ப்பாளர்களின் கண்டனங்களைப் பற்றி வளைத்து வளைத்துக் கேள்வி கேட்டபோது, அவர் புண்ணுண்ட குரலில் கூறினார்: ''அவர்கள் என்னை என்ன வேண்டுமானாலும் தூற்றிவிட்டுப் போகட்டும். அவர்கள் கூறுவதுபோல் என்னால் உலகத்தைத் திருத்த முடியாவிட்டாலும் போகட்டும். ஆனால் ஒன்று; ஜன்மா எடுத்த நாளாக நான் எந்த ஜீவராசிக்கும் தீங்கு செய்ததில்லை.''

★

நெருங்கியுள்ளோரிடம் மறக்கருணையையே விரிவாகப் பார்த்தோம் எனினும் இங்கே மாதுரியக் கருணையும் மதர்த்துப் பாயும்தான்! மானுடமான மதுரம்; மானுடரிலும் பச்சைக் குழந்தையின் மதுரம்!

பிரசாந்தி நிலையத்தில் பலவிதமானவரைக் குடியேற்றிக் கொண்டு குடிதாங்கும் கருணாநிதியாக இருக்கிறார். தாமாக ஸ்வாமியிடம் பிரார்த்தித்துக்கொண்டு வந்தவர்கள், அவராகக் கூப்பிட்டு அமர்த்திக் கொண்டவர்கள் என்று இருசாராரும் ஆசிரமவாஸிகளில் உள்ளனர். அவர்களைப் பலவிதப் பணி களில் நியமித்திருக்கிறார். மத்ய ஸ்தாபன வேலைகள், 'ஸநாதன ஸாரதி'க்கான வேலைகள், புத்தக விற்பனை, கான்டீன் காரியங்கள், ஆஸ்பத்திரி ஊழியங்கள், கோகுலப் பராமரிப்பு, பஜனை கைங்கரியம், கோயிற்பணிகள், பாடசாலை போதனை என்றிப்படி அவரவருக்கு இயலும் பொறுப்புக்களை அளித்து இவர்களை வைத்துக்கொண்டிருக்கிறார்.

Koviloor Digital Library

சம்பளம் வாங்கிக்கொள்பவர்களும் உண்டு. கௌரவப் பணி புரிவோரும் உண்டு. ஜாகை தந்திருப்பதோடு எவருக்கும் அன்ன வஸ்திரத்துக்குக் குறையே இல்லாமல் படி அளப்பார் பகவான். அவர் 'அளந்து' கொடுப்பதை அளவிலா ரஸிப்புடன் கூறுவார் இவ்வூழிய நண்பரொருவர். ஆம், பணமாக மித மிஞ்சி ஸ்வாமி ஊதியம் தரவே மாட்டார். ஏனெனில் சுக ஜீவனம் எனும் கஷ்டத்துக்கு மனிதர் ஆளாவதை அவர் விரும்ப வில்லை. எழுத்துக்கெழுத்து காஞ்சிப் பெரியவாளாகவே, "வாழ்க்கைத் தர உயர்வு என்று இப்போது ஓயாமல் சொல்லப் படுகிற போக்கியம், உண்மை சௌக்கியமான மன உயர் வுக்கு உதவாதது" என்பவர் நம் ஸ்வாமி. மனிதனின் அத்யா வசியத் தேவைக்கு மேல் வேண்டாத வஸ்துக்களைச் சேர்த்துக்கொள்வதை அவர் ஆமோதிப்பதில்லை. இதனால் தான் ஸ்ரீ கஸ்தூரி போன்ற முக்யஸ்தர்களுக்கும் ஒரு சிறிய இரட்டையறை ஃப்ளாட் தான் ஒதுக்கியிருக்கிறார். வேறெந்த ஆசிரம ஸம்ஸ்தானமாயினும் இந்த என்பது பிராயப் பெரியாருக்கென கார் வழங்கமாலிருப்பார்களோ? ஆயினும் வேறெங்கேயும் உள்ள ஊழியர்களைவிட இவர்களே பரம திருப்தர்களாக இருக்கிறார்கள் — பகவானின் சாக்ஷாத் சாந்நித்யம் கைவரப்பெற்றிருப்பதால்.

காண்டீனில் இலவச போஜனம், வஸ்திரதானம், அவர் களது குடும்ப சுபாசுபச் செலவுகள் முதலியவற்றைத் தாமே ஏற்று விடுவதால், சம்பளமாக அவர்கள் கண்களில் அதிகம் காட்டித் துராசைகளில் தூண்டி விடுவதில்லை.

தாங்களே முழுச்செலவும் செய்துகொள்பவர்கள், சம்பளம் பெறுபவர்கள், சம்பளம் என்றில்லாமல் ஸ்வாமி யாலேயே பராமரிக்கப்படுபவர்கள், தாங்களும் செலவழித்துக் கொண்டு போதாததற்கு அவரால் இட்டு நிரப்பப்படுபவர்கள் என்று பலவகையானவர் நிலையத்தில் உள்ளனர். தனி மனிதர் களும் உண்டு, குடும்பமாக உள்ளோரும் உண்டு.

நடுத்தர வயதுக்கு மேற்பட்ட விதவையர் ஏகாங்கிகளாக உள்ளனர். தாய் அல்லது தகுந்ததோர் முதிய பெண்ணின் துணையின்றிக் கன்னிப் பெண்கள் வைத்துக்கொள்ளப்படுவ தில்லை.

தொண்ணூறு வயதுக்கு மேற்பட்ட பெத்தபொட்டு அம்மா கூட ஆடவர்களிடம், பாடசாலை மாணவரிடம்கூட, அத்தியாவசியமில்லாவிடில் பழகக்கூடாது. இவ் விஷயத்தில் 'காலத்துக்கு ஒவ்வாதது' என்று முற்போக்குக்காரர்கள் நினைக்கக் கூடிய அளவுக்கு, பழைய காலக் கன்னிமாடங்களின் கடும் கட்டுப்பாடு பிரசாந்தி நிலையத்தில் அமலாகிறது. ஆசிரம வாஸிகளில் பலர் ஸ்வாமியின் பரமோன்னத அநுக்கிரகத் துக்குப் பாத்திரமானவர் எனினும் அவர்களது அநுபவங்களை நூலாசிரியன் உங்களுக்காகப் பெற்றுத் தர முடியாதபடி குறுக்கே நிற்பது இந்த அதிதக் கட்டுப்பாடுதான்.

Koviloor Digital Library

நிலையத்துக்கு வந்துவிட்டால் எந்த வெள்ளைக்காரக் கொம்பரானாலும் சரி, முன்னாள் மஹாராணியானாலும் சரி, இந்த உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிந்துதான் ஆகவேண்டும்.

முன்பே சொன்னாற்போல், முதலாவதாக, இங்கு வந்த பின்னும் வெளியுலகப் பாசபந்தங்களை வளர்த்துக்கொண்டிருக்கக் கூடாது. இங்குள்ள ஒரு தமிழ் பிராமணக் குடும்பத்தில் குடும்பத் தலைவரின் தம்பி தங்கை போன்றோரின் வீட்டு விசேஷங்களுக்கு அவரை மட்டும் ஸ்வாமி அனுப்பிவைப்பார்; அம்மாளின் உறவினர் அகத்து வைபவங்களுக்கு அவளை மட்டுமே அனுப்புவார். குடும்பத் தலைவராக பாபா செய்கிற பாலன்ஸிங் வித்தைகள் உண்டே!

எல்லோரும் நாம ஜபம், ஓம்கார ஜபம், தியானம் போன்ற சாதனைகள் புரிய வேண்டும்.

பேச்சை அதம பட்சமாகக் குறைக்க வேண்டும். பரஸ்பர வம்பும் கோளும் உதவாது.

(அநேக இடங்களில் மகான்களிடமும் சீடர்கள் கோள் சொல்லிக் கலைத்துக்கொடுக்கும் விசித்ரத்தை நூலாசிரியன் கண்டு நொந்திருக்கிறான். நம் ஸ்வாமியிடம் மாத்திரம் ஒருவர் இன்னொருவரைப்பற்றிப் புறங்கூறுவது என்பது கனவிலும் நடவாத காரியம். ''ஸர்வத: அக்ஷி: ஸர்வத: ச்ருதி மன் லோகே'' என்றபடி அவரது கண்ணும் செவியும் எங்கணும் பரவியிருப்பதை ஆசிரமவாஸிகள் நன்கு அறிவராதலால், தாங்கள் ஒருவரைக் குறை கூறித்தான் அவர் அறிந்து கொள்ள வேண்டுமென்றில்லை என்று வாய் மூடிக் கிடக்கிறார்கள். குறை சொல்வதென்ன? பிறரைப் பற்றி நல்லதாகவே சொல்லிக்கூடச் சிபாரிசு செய்ய முடியாத ஒரு சந்நிதானம் இன்று உலகில் இருக்கிறதெனில் அது ஸாயி ஸம்ஸ்தானமே அன்றோ? அவரிடம் எவருமே எவரைப் பற்றியுமே நல்லதாகவோ கெட்டதாகவோ கூற முடியாது. கூறமுற்படின் வாய் மேல் போடுவார்!)

சுறுசுறுப்பாகக் காரியங்களைச் செய்ய வேண்டும். 'வேலையில்லாவிடின் மனித மனமானது சைத்தானின் தொழிற்கூடமாகிவிடும் என்ற ஆங்கில வசனத்தை நன்குணர்ந்து, ஆணைப்படுத்தி வருபவர் நம் ஸ்வாமி. உதாரணமாக, சில தொண்டர்களைத் தும்பைப் பூவினால் ஏழெட்டு சரங்கள் கட்டி மாலையாக முறுக்கி மந்திரத்திலுள்ள தெய்வ மூர்த்திகளுக்குச் சாத்தச் சொல்லிப் பணித்திருந்தார். ஒவ்வொன்றாகத் தும்பை எடுத்து, கோத்து, நீள நீள மாலையாக்குவதென்றால் எத்தனை மணி பிடிக்கும்?

சித்த சுத்திக்கு உழைப்பைவிட உபாயமில்லை என்பதால் தான் கட்டுமானப் பணிகள், சாலைபோடுவது, செடிகளுக்கு நீர் ஊற்றுவது முதலிய பணிகளில் ஆசிரமவாஸிகளை ஏவுகிறார்.

Koviloor Digital Library

ஸதாவும் வேலை செய்வது ஸாத்தியமல்ல. வெறுமே இருக்கையில் எப்போதும் ஜபமும், பூஜையும் முடியுமா? அப்படி நிறைய நேரம் செய்தாலும் மனந்தான் அவற்றிலேயே குவிந்து நிற்குமா? இதனால் மனத்தைத் தப்பான வழிகளில் செலுத்த அவகாசமில்லாமலே நிலையவாஸிகளுக்கெனப் பண்டிதர்களைக் கொண்டு ஸத்கதாப் பிரவசனம், அறவுரை முதலியன நடத்தச் செய்கிறார்.

பெண்களை நல்வழியில் நிறுத்தத் தனி உபாயங்கள்: கோபுரவாயிலிலிருந்து மந்திரம் வரை கட்டுக் கட்டாகக் கோலம் போடுவது, அதுவும் ஸ்வாமி வெளியூர் செல்கிறபோது நெருக்கமாகப் போட்டுப் பூவால் நடைபாதை அமைப்பது, காண்டீனுக்குக் காய்கறி நறுக்கிக் கொடுப்பது, பாத்திரம் கழுவுவது, வடக்கத்தியார் சாப்பாட்டுக்குச் சப்பாத்தி செய்வது, மந்திரத்துக்காகப் பூத் தொடுப்பது, பண்டிகை நாட்களுக்காக ரொட்டி, பிஸ்கட் செய்வது, பெருக்கி ஜலம் தெளிப்பது, கோகுலப் பசுக்களுக்குத் தீனி வைப்பதில் ஒரு கண் வைத்திருப்பது, சாயம் தோய்ப்பது, நூற்பது—முதலானவை. ஆண்களுக்கு அலுவலகப் பணிகளை நிறையக் கொடுத்திருப்பதால், பெண்களுக்கு மட்டும் இப்படி 'ஸ்பெஷல்' வேலைகள்.

மிகவும் கிழவர், மிகவும் சிறியவர் தவிர மற்ற பெண்கள் குருவாரத்தில் ஒரே வேளை பொங்கல் அல்லது பாயஸம் நிவேதித்து உண்டு, அன்று மௌனம் அநுஷ்டிக்க வேண்டுமென விதித்துள்ளார்.

அனைவருக்கும் 'மஸ்ட்'கள்: காலை நாலரைக்கே மந்திரத்தில் ஓம்கார ஜபம், ஸுப்ரபாத சிரவணம், இவற்றை அடுத்து நகர கீர்த்தனம். பகலிலும் மாலையிலும் வேளைக்குச் சுமார் முக்கால் மணி மந்திரத்தில் பஜனை. மாலை பஜனை முடிந்ததும் பத்து நிமிட தியானம்.

ஆக 'டைட்'டாகக் கர்மயோகத்தில் நிலையவாஸிகளை வைத்திருக்கிறார். அவர்களுக்குச் சுறுசுறுப்பை உணர்த்தவே போலும், தாம் அதிதப் பரபரப்புக்காரராக இருக்கிறார்.

கர்மாவோடேயே இறை நினைவையும் குழைக்கச் செய்வார். அதாவது பிறரிடம் பேசாமல், நாமத்தைச் சொல்லிக் கொண்டே இயந்திர கதியிலான காரியங்களைச் செய்யச் சொல்வார்.

"ஸ்வாமி தங்களுக்கு எந்த பாயஸம் பிரீதி? அதை நிவேதிக்கிறேன்" என்றாள் ஒரு பெண்மணி.

"நாம பாயஸம்" என்று புதிர் போட்டார் ஸ்வாமி.

"ராம நாம பாயஸகே" என்று புரந்தரதாஸர், அடியார் நாவுக்கு நாமமே பாயஸம் என்றாரே, அப்படியா ஸ்வாமி

Koviloor Digital Library

சொன்னார்? அல்ல. 'பத்ததி'களில் பற்றுள்ளவரை அவ்வழியே ஊக்குபவராச்சே! பாயஸ நிவேதனம் நம் பக்தி வழிபாட்டுப் பத்ததியல்லவா?

''அம்மா! ரவையோ, பருப்போ, சேமியாயோ எதைப் போட்டு வேண்டுமானாலும் பாயஸம் பண்ணு. ஆனால் இதில் கல், மண் பொறுக்குவதிலிருந்து, அடுப்பில் பாயஸம் பக்குவமாகி இறக்குகிற வரையில் பகவந் நாமாவைச் சொல்'' என்றார்.

இயந்திரகதியில் நடக்கும் அநேக காரியங்களைப் பாவாகச் செய்கையிலேயே ஊடாக நாமத்தை இசைக்கச் சொல்கிறார்.

ஆனால் ''கர்மாவே யோகம்'' என்ற முறையில் புத்தியை அதில் பதிக்கவேண்டியபோது நாமத்தில் திசை திருப்புவதும் தப்பு என்பார். ஒருமுக ஈடுபாட்டைக் கடமையிலேயே செலுத்த வேண்டும். ''ட்யூடி செய்வதுதான் டிவோஷன்'' என்பார். பரீட்சைக்குப் படிக்காமல் மாணவன் பஜனைக்குப் போனால் ஸ்வாமி அதைக் கண்டிக்கத்தான் செய்வார்.

எடுத்துக்கொண்ட காரியத்துக்கு மதிப்புத் தராமல் தமக்கு மதிப்புத் தருவதும் தப்பு என்ற கருத்துள்ளவர் அவர். கோடைப்பயிற்சி முகாமில் மாணவர்கள் ஆஸனம் பயிலும் போது, ஸ்வாமி அங்கு வந்தார் என்பதால் அவசரமாக ஆஸன பாஸ்ச்சரை விட்டு நமஸ்கரிக்க முற்பட்டனர். ஸ்வாமி, ''கூடாது, கூடாது'' என்று சொல்லிவிட்டு நகர்ந்தார்.

*

இன்னம் அவர் ஆச்ரமவாஸிகள், ஸ்தாபத்தினர் ஆகியோரிடம் அன்பைக் கொட்டும் அழகைச் சொல்லவில்லையே. அதன்றோ இச் சந்நிதியின் பஞ்சமுக நெய்த் தீபம்? பாறுங் கல்போல் அவ்வப்போது அவர் நடித்தாலும் உள்ளிலங்கும் நவநீத ஹ்ருதயம் உருகி, மணந்து, நெய்யாகி வெள்ளை வெளேரென்று அன்பைக் கொழுந்து விட்டெரியச் செய்கிறதே!

கண்டிப்பைப் பெறுகிறவர்கள், அத்தனை கண்டிப்பையும் ஒரு குளிர் நகையில், நளிர் மொழியில், தளிர் நோக்கில் பாபா போக்கிவிடும் பரமானந்தத்தையும் மொண்டு மொண்டு குடிக்கிறார்கள்.

தமது பரிஜனங்களை வறுக்க வேண்டியபோது வறுக்கத் தயங்காத ஸ்வாமி, வருத்த வேண்டாதபோது அவர்களை வருமுன் காப்பார். உதாரணமாக, சுமார் பத்து நாட்கள் பாரிசவாயுவை ஏற்றுப் பாரிஷதரைப் பரிதவிக்க வைத்தாரே, அப்போது நல்ல திடசாலிகளை மட்டுந்தான் நிலயத்தில் வைத்துக் கொண்டிருந்தார். மற்றவர்களை, ஆசிரமவாஸிகளில் பெரும்பாலாரை, இதற்கு இரு தினங்களுக்கு முன்பே அவரவர் விரும்பும் உறவினர் ஊர் அல்லது புண்ய க்ஷேத்திரம், அல்லது

Koviloor Digital Library

ஸ்தாபன வேலையான பிரயாணம் என்றிப்படி வெளியூர்களுக்கு அனுப்பிவைத்துவிட்டார்—தம் உபாதையால் அவர்கள் உபாதைப்படக் கூடாதெனக் கருதிய தயாளு.

இந்த பயங்கர நோயின்போது "ம ம ம ம" என்ற முனகலுக்கிடையே பாபா திரும்பத் திரும்பச் சொன்னது, பரிஜனங்கள் அழவே கூடாது; தாமே உவந்தேற்ற நோய் தம்மை உள்ளூறப் பாதிக்காதபோது இந்த அழுகையே தம்மைப் பாதிக்கிறது என்பதைத்தான். அப்போதும் அவர்களை ஒருவேளைகூடப் பட்டினி கிடக்கவிடவில்லை, அன்னபூர்ணியன்னை. அவர்கள் சாப்பிட்டால்தான் தமது உள்ளம் பசியாறும் என்று கூறி அவர்களை உண்ண வைப்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்தார்.

பலரது கொடு நோய்களை பாபா வாங்கிச் சிறிது நேரத்தில் தீர்ப்பது அவர் அறையிலேயே பரம அந்தரங்கமாக நடப்பது. அச் சிறு நேரத்தில் அவர் உடல் படும் கோர வதை சொல்லி முடியாது. சொல்லவும் கூடாது என்று, உடன் எவரேனும் இருக்க நேர்ந்தால் அவர்களிடம் கட்டளையிடுவார். சிலசமயங்கள், சிறிது நேரம் என்பது பல மணிகளாகவும் நீண்டு, இரவெல்லாம் அனலிடைப் புழுவாகத் துடிப்பார். மறுநாள், உடனிருந்தவர்களின் சிவந்த கண்ணையும் விங்கிய முகத்தையும் கண்டுதான் ஆசிரமவாஸிகளில் மற்றவர் ஸ்வாமி செய்த தியாக வேள்வியை ஊகிக்க முடியுமே தவிர, அவ்வணுக்கச் சேவகர் வாய் திறக்கமாட்டார்கள். "என் ஆதரவில் நான் கொண்டுவந்து வைத்துக்கொண்டிருப்பவர்களின் மனத்துக்கு என் பொருட்டு துக்கம் ஏற்படச் சகியேன். ஆனந்தம் தருவதுதான் என் ஜீவித லக்ஷியம்" என்பார்.

இதேபோல், தவறு செய்யுமிடத்துத் தண்டிப்பாரேயன்றி, நம்பிக்கைக்குப் பாத்திரமானவரிடம் தவற்றைக் கற்பிக்க மாட்டார். இப்படித் தமது பரிஜனங்களுக்குள்ளேயே ஒருவர் மற்றவரிடம் ஐயுறுவதையும் கண்டிப்பார். அடியார்களைப்பற்றி மகாலக்ஷ்மியே குறை சொன்னாலும் பகவான் காதில் போட்டுக் கொள்ளமாட்டாராம். 'அவர்கள் அப்படிச் செய்யமாட்டார்கள்; அப்படிச் செய்திருப்பாரேயாகில் அதுதான் நல்லது' என்பாராம்:

> தன் அடியார் திறத்தகத்துத் தாமரையாள் ஆகிலும்
> சிதகுரைக்குமேல்
> "என் அடியார் அது செய்யார்; செய்தாரேல் நன்று
> செய்தார்" என்பர்.

(சிதகுரைக்குமேல் – குற்றம் சொல்வாளாயின்)

கோடைப் பயிற்சியின் முடிவில் மாணவருக்குப் பரீட்சை நடக்கும். அப்போது அலுவலர்கள் மாணவர்களை வழக்கம் போல் அடுத்தடுத்து அமரவிடாமல் ஒருவருக்கொருவர் இடையே இடம்

Koviloor Digital Library

விட்டு அமர்த்திக்கொண்டிருந்தனர். அந்தப் பக்கமாக வந்த பாபா, எந்த அவமான அவதூற்றையும் பொருட்படுத்தாத பாபா, ஆஹா, பெரிய மானபங்கம் இழைக்கப் பட்டாற்போல பதறினர். "No, no. My children will not cheat" என்று கூறி மாணவரை எப்போதும் போல் அடுத்தடுத்து அமர்த்தியே பரீட்சை எழுத வைத்தார்.

"என் குழந்தைகள்" எத்தனை அன்பு! அவர்கள் காப்பியடிப்பார்கள் என்று பிறர் நினைத்தால் அம்மை—அப்பன் மனமே பதறுகிறது.

தமது ஆஸ்தானப் பரிஜனங்களுக்கு வியாதியோ விபத்தோ ஏற்பட்டால் ஸ்வாமி பொங்கு புனலாகப் பரிவைப் பொழிவார். ஒரே ஓர் உதாரணம்:

பாபாவுடன் கிழக்காப்பிரிக்காவுக்குச் சென்ற ஸ்ரீ கஸ்தூரி, மர்ச்சிஸன் நீர்வீழ்ச்சிக்கு அவரைப் பின்தொடர்ந்து செல்கையில் இவரது கார் பின்தங்கிவிட்டது. முப்பது மைல்கள் முன்சென்று விட்ட ஸ்வாமி உடன் இருந்தோரிடம், "பின்னால் வர காருக்கு 'ட்ரபிள்.' அவங்க வேறே டாக்ஸியிலே வரப் போருங்க" என்றார். அவர்கள் அலமாப்புறாமலிருக்கவே 'ட்ரபிள்' என்ற சின்ன வார்த்தையை உபயோகித்தார். வாஸ்தவத்தில் நடந்ததோ ஒரு பெரிய 'ஆக்ஸிடென்ட்.' ஆனால் ஸ்வாமி அதைச் சின்ன 'ட்ரபிளா'கத்தான் மாற்றி விட்டார்!

கஸ்தூரி இருந்த காரின் சாரதி, மலைப்பாதையில் இன்னொரு வண்டியை ஓவர்-டேக் செய்வதில் அவசரப்பட்டதன் விளைவாக இந்தக் கார் உருண்டு உருண்டு சரிந்து, கடைசியில் ஒருவழியாகப் பூமியில் சாய்ந்தது. சாரதி வெளியே போய் விழுந்தார். மற்றவர்கள் உள்ளுக்குள்ளேயே அடிபட்டு, வெட்டுக்கள் பட்டுத் தாறுமாறாகக் கிடந்தார்கள்.

ஆயினும் பாபா கோஷ்டியின் மூன்றாவது கார் வந்து இவர்களை மீட்கையில், இவர்களில் எவருக்கும் பிராணாபத்தோ எலும்பு முறிவோ ஏற்பட்டிருக்கவில்லை. சாதாரண அடிகள், சிறாய்ப்புகள்தாம். அவர்களுள் அதிகம் அவஸ்தைக்கு ஆளாகியிருந்த ஸ்ரீ கஸ்தூரி, கார் விழுந்த இடத்துக்கு வெகு அண்மையிலேயே இருந்த ஆஸ்பத்திரிக்குச் செல்ல, டாக்டர் 'சிறு சிராய்ப்புக்கள்தான்' என்று சொல்லி சிகித்ஸை செய்து அனுப்பி வைத்தார்.

மூன்றாவது காரிலேயே அடைந்துகொண்டு இவர்களும் சிறிது தூரம் பயணம் செய்தபின், பாபா சொன்னவாறே ஒரு டாக்ஸி பிடித்துக்கொண்டு தொடர்ந்தனர்.

கோர விபத்தை பாபா இப்படி மாற்றியது மட்டுமில்லை.

'ப்ராஸ்பாரி ஹாட்'டில் அவர் இவர்களை வரவேற்று, கரிசனத்தில் மூழ்கடித்தது உண்டே! விபூதியும், ஆயின்ட்மென்ட்டும், மாத்திரைகளும் சிருஷ்டித்துத் தந்தார். தாமே வீங்கிய இடங்களைத் தேய்த்தார், அமுக்கினார்; சுளுக்கிய இடங்களை நீவி விட்டார்; ஆயின்ட்மென்டைத் தம் அமுத விரலாலேயே தீற்றினார்; தமது கைக்குட்டையாலேயே கட்டுப் போட்டார்.

இந்த அன்பினை நினைந்தவர்கள் விபத்தை உண்டாக்கிய காரோட்டியை வாழ்த்தினார்களாம்!

கண்ணனிடம் குந்தி சொன்னதுதானே? "ஜகத்குரோ! எமக்கு எப்போதும் விபத்துக்கள் வந்துகொண்டேயிருக்கட்டும். அவையே கையோடு உன் கருணையைக் கூட்டி வருவன அல்லவா?"

தமது ஆதீனத்தில் உள்ளோர், தமது ஆஸ்தானத்தில் பணிபுரிவோர் ஆகியோரின் மனத்தூய்மைக்காக ஒருவிதத்தில் கட்டுப்படுத்தும்போதே, தாயன்பால் அதற்கு நஷ்ட ஈடும் செய்வார். உதாரணமாக: நிலையவாஸிகள் மிதமாக ஸத்வ உணவு கொள்வதுதான் நல்லது என்கிறார். அதிலும் தியானத்தில் விசேஷமாக ஈடுபடும் ஸாதகர் தாமே ஒரு பொங்கலைப் பொங்கித் தின்று கொள்வதே சிலாக்கியம் என்கிறார். (காஞ்சிப் பெரியவாள் சொல்லும் லேசான ஸ்வயம்பாகம் பிரசாந்தி நிலயத்தில்தான் அமோகமாகச் செயலாகிறது.) ஸ்வயம் பாகம் செய்துகொள்ளாதவருக்காக கான்டீனிலேயே காரம் நீக்கிய குழம்பு, ரஸம், சப்பைக்கறி, சப்பாத்தி முதலிய ஸத்வ போஜனம் கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறார். இளவயதிலேயே இருவேளையும் அன்னமின்றிப் பலகாரம் மட்டும் செய்யும் சாதகர்களும் பிரசாந்தி நிலயத்தில் உண்டு என்று அறிந்தால்தான், அதை ஏதோ கேளிக்கைச்சாலையாக எண்ணிக் கேலி செய்பவர் எப்பேர்ப்பட்ட பாவம் செய்கிறார்களென்பது தெரியும். ஸாயி குரு இப்படியெல்லாம் சிடர்களைக் கட்டுப்படுத்தும்போதே ஸாயி அம்மா அவர்களைக் குழந்தைகளாகச் சீராட்ட விழைகிறாள். கோகுலம் வைத்து ஸத்வ உணவான பால், தயிர், வெண்ணெய் முதலியவற்றை இவர்களுக்கு யதேஷ்டமாக அளிக்கிறாள்.

கவர்ச்சியாக ஆடை ஆபரணம் கூடாதெனக் கண்டிப்புச் செய்கிறார். அதே சமயம், தாமே பார்த்துப் பார்த்து தீபாவளி, நவராத்ரி, ஜயந்தி முதலான விழாக்களுக்கு கௌரவமான பட்டாடைகள் எடுத்து வழங்குகிறார். பாசம் கொழிக்கும் குடும்பத் தலைவராக ஸ்வாமியைக் காண்பது இச்சமயத்தில் பரமாற்புதம். தமிழக பிராமண மாமிகளுக்கான ஒன்பது கஜப்புடவை தர்மாவரத்தில் கிடைக்காததால் தாய்க்கு மேல் நினைப்பார். பெங்களூர் செல்கையில் தாமே கடை ஏறிப் பதினெட்டு முழப்புடவை வாங்கித் தம் பெட்டியிலேயே வைத்து எடுத்து வருவார். இன்ன கலர் இன்னாருக்குப்

Koviloor Digital Library

பிடிக்குமா? பிரியமாக எடுத்துக்கொள்வாளா?—என்றெல்லாம் அவர் படும் கவலே! பெண்கள் ஒருத்தருக்கொருத்தர் ஒப்பிட்டுப் பார்த்து ஏற்றத் தாழ்வு இருப்பதாக எண்ணக்கூடாது என்பதற்காக ஒரே அளவு பேட்டும், தலைப்பு ஜரிகையும் கொண்ட புடவை ஸெலக்ஷனுக்காக அவர் படும்பாடு!

"உங்களுக்கும் ஏன் ஸ்வாமி இந்த சிரமங்கள்? இச்சா மாத்திரத்தில் சிருஷ்டித்து விடுங்களேன். 'ஸாயி ஸ்டோர்'ஸில் இல்லாததா?" என்று கேட்டால், அமர வாசகத்தில் விடை சொல்வார்: "கைப்பிடித் துணி கைவசமே இருக்கும்போது, அடுப்புப் பாத்திரத்தை நகத்தின் நுனியால் இறக்குகிற சாதனையில் ஏன் இறங்கவேண்டும்?"

(அவசியமின்றி இயற்கைக்கு அநிதமாகச் செயற்பட ஸ்வாமி விரும்பவில்லை எனக் காட்டும் இரு மஹா வாக்கியங் களில் இது ஒன்று. இன்னொன்று, முன்பு கண்டுள்ள, "இயற்கை அன்னை ஒழுங்காகவே நடத்தி வரும் அடுக்களையில் நான் அடிக்கடி தலையிட விரும்பவில்லை" என்பதே!)

உலகியல் ரீதியில் சேகரித்த நிதியத்தைக் கொண்டுதான் பிரசாந்தி நிலையம் நடக்கிறதே யன்றி பாபாவின் மாயா பஜார் சிருஷ்டிகளாலல்ல. இதனால்தான் பாபா ஆசிரமவாஸிகளை ஏனையோரையும்விட எளியராக வாழப் பணிக்கிறார். ஆனாலும் செலவழிக்க வேண்டிய சமயத்தில் மன்னாதி மன்னராக வாரிவிட்டு அவர்களை மகிழ்விப்பார். காசி, பதரிநாதம் முதலிய யாத்திரைகளின்போது எத்தனை பெரிய கோஷ்டியாகப் பரிஜனங்களை அழைத்துப்போய், அவர்களுக்கு வேண்டியதெல்லாம் செய்து அழைத்து வந்தார்? அவர்களுக்கும் ஒரு 'சேஞ்ச்' வேண்டும் என்ற மனோதத்வத்தை . மனிதாபிமானத்தோடு பார்ப்பவரே பாபா. பம்பாயில் "தர்மக்ஷேத்ரா" திறப்பு விழாவின்போது நூற்றுக்கணக்கான பரிவாரத்தை அழைத்துச் சென்று, இரண்டு வாரங்கள் ஆரே பால் பண்ணையில் சகல வசதிகளுடன் தங்கவைத்து, ஊரெல்லாம் காட்டி அழைத்து வந்திருக்கிறார். கோஷ்டியோடு வெளியிடங்களுக்குச் சென்று திரும்புகையில், தாமே ஜாகைக்குள் முதலில் வேகமாகப் பிரவேசித்து, அவர்களுக்காக ஃபான் போட்டு, பாய் போட்டு, தமது தலையணை உள்படத் 'தலைக்குசரம்' தந்து, தாமே ஷர்பத் விநியோகம் செய்கிற பாபா இவர்களைக் கண்டிப்பில் வைத்திருக்கிறார் என்றால் நம்பவும் முடியாது.

வேண்டிய கொடுத்திடுவாள் — அவை
விரும்புமுன் கொடுத்திட விரைந்திடுவாள்

என்று கவி பாடிய 'கண்ணன் — என் தாய்' தான்!

திரும்பியவுடன் வெளியூருக்கு வர முடியாதிருந்த ஆசிரம வாஸிகளிடம் அவர் பொழியும் பரிவு அபாரமானது. வெளி யூரிலிருந்து இவர்களுக்குக் கடிதம் எழுதி அன்பைக் கொட்டு

Koviloor Digital Library

வார். ஸ்ரீராமன் நாடனைத்தையும் காப்பவனாயினும், தன் பரிஜனங்களைச் சிறப்பாகப் பாலிக்கும் 'ஸ்வஜன ரக்ஷகன்' என்று வால்மீகி செப்பியது ஸாயி ராமனுக்கும் பொருந்தும்.

''பௌரான் ஸ்வஜநான் நித்யம் குசலம் பரிப்ருச்சதி''— ''தனது நகரமக்களின் சௌக்கியத்தை நிதமும் கேட்டறிகிறான்''- என்று ஸ்ரீராமனை ஆதி கவி வர்ணிப்பதும் ஸாயி நகரமாம் பிரசாந்தி நிலயத்தில் கண்கான நடக்கிறது. மாலை வேளைகளில் வெளியில் உலவுகையில் இல்லங்களுள் நுழைந்து பந்துத்வம் கொண்டாடி உள்ளங்களுள் உவகை ஊற்றைப் பிறிடச் செய்வார்.

ஸ்வாமியை உரியபடி வரவேற்க ஏதும் தயாராகச் செய்யவில்லையே என அவர்கள் கலங்கினால், ''எனக்காக என்ன 'ரெடி'பண்ணனும்? என்னை 'ரிஸிவ்' பண்ண இது தானே 'ரெடி'யா இருக்கணும்?'' என்று இதயத்தைச் சுட்டி அவர் சொல்கையில் அவர்கள் விண்ணில் பறப்பார்கள்.

ஆசிரமத்தார், ஸ்தாபனத்தார், பரமபக்தர்கள் ஆகியோரது வீட்டுக் கல்யாணங்களை பாபாவே ஏற்று நடத்தும் போது மனிதப் பண்பின் கொடுமுடியை அவரிடம் காணலாம்.

பிள்ளைவீட்டார் மட்டுமின்றி, பெண் வீட்டாரும் எவ்விதப் பொறுப்புமின்றி சம்பந்திகள் போல வந்து, இருந்து திருமணத்தை முடித்துக்கொண்டு போக, பாபாவே பம்பரமாகச் சுழன்று சகல ஏற்பாடுகளையும் அபார நறுவிசாக, அதி விதரணையுடன் செய்திருப்பார். பாண்ட், மேளதாளம், பூ அலங்காரம் உள்பட எல்லாமும் ஏற்பாடு செய்திருப்பார். இந்த பிரம்மசாரி—சந்நியாசிக்குக் கல்யாணம் நடத்துவதில் எப்படி இவ்வளவு திறன் இருக்கிறது என்று வியப்போம். முக்கிய அம்சமான சமையலுக்கு அவர் 'லிஸ்ட்' போடுவது சமையற்கலைச் சக்ரவர்த்திகளையும் தூக்கி அடிக்கும். இஞ்சி கறுவேப்பிலையிலிருந்து ஒன்று விடாமல், ஒவ்வொன்றையும் சரியாக அளவை கூறி, அவர் கடகடவென்று பட்டியல் கொடுப்பதை அறுக்கத் தொண்டர்கள் வியந்து வியந்து சொல்கிறார்கள். அதிலும் லிஸ்ட் தொடங்குகையில் ''மஞ்சள்-இவ்வளவு; குங்குமம்-இவ்வளவு'' என்று அவர் பத்ததி தப்பாமல் சொல்வதுண்டே!

சமையல், கலைநிகழ்ச்சி இவற்றுக்கு மட்டும் 'பொறுப்பேற்காமல், சாஸ்திரிமாரோடு சாஸ்திரியாராக மந்திரங்களையும் ஓதுவார்.

தம் செலவிலேயே இப்படிக் கல்யாணங்களைச் செய்வதும் உண்டு. எந்தக் கல்யாணமானாலும் கூரைப் புடவை, முஹூர்த்த வேஷ்டி ஸ்வாமியின் அன்பளிப்புத்தான். திருமாங்கல்யமும் சிருஷ்டித்துத் தருவார். மந்திராக்ஷதை சிருஷ்டித்து மணமக்கள்மீது தூவுவார்.

Koviloor Digital Library

ஷஷ்டியப்தபூர்த்தி, உபநயனம் ஆகியனவும் இவ்வாறே தம் சந்நிதியில் நடத்துகிறார். முன்பெல்லாம் பிரசாந்தி நிலயத்திலேயே நடந்த இச் சுப வைபவங்கள் இப்போது பாத மந்திரமாம் 'பெத்த வெங்கப்பராஜு கல்யாண மண்டப'த்தில் நடக்கின்றன.

* * *

இன்றைவிட ஸ்தூலமான உலக காரியங்கள் பாபாவுக்கு மிகக் குறைவாக இருந்த காலத்தில் அவர் அந்யந்த பக்தர்களுக்கு எழுதிய கடிதங்கள் எத்தனை? ஒவ்வொன்றும் ஓர் அன்புச் சுரங்கம்.

கடிதத்தின் மேல் தாமே படம் போடுவார், அநேகமாக ஒரு கிளி அந்தக் கடிதத்தைக் கொணர்ந்து போடுவதாக! பக்தனின் இதயம் கிளிக்குஞ்சாம். அதற்கு ஸாயி என்ற தாய்க்கிளி இக் கடிதத்திலுள்ள அன்புக் கனியைக் கொத்திவந்து ஊட்டுகிறதாம்!

ஸாயிராமக் கிளி ஸந்தோஷமே உனது
ஆவிக் கூண்டினில் ஊஞ்சல் ஆட வருமே!
ஸாயிக்கண்ணன் உந்தன் சோக வேளை தன்னில்
வேயின் குழல் ஊதி வீதி வருவான்!
ஸாயீச்வரன் உனக்கு ஆரோக்யம் ஐச்வர்யம்
ஆயுளும் தந்துதவி ஆதரிப்பான்!
இத்தனையும் போதுமெனப் பக்குவம் நீ பெறச்செய்து
ஸாயி உன் அன்பிதய ஸ்தாயி யாவான்!

என்றெல்லாம் கொழுஞ்சாறு கொட்டக் கவிதை மடல்கள் எழுதுவார்.

சில சமயம் பலரும் அமர்ந்திருக்கையில், மற்றவர்களுக்குப் புரியாதபடி, ஊர்களையும் பெயர்களையும் மாற்றித் தமது அணுக்கத் தொண்டர்களின் வாழ்க்கை வரலாறு முழுவதையும் ஆசுகவியாகப் பாடி, அவர்களை ஆனந்தத்தின் ஏழாவது ஸ்வர்க்க உச்சிக்குத் தூக்கிவிடுவார். பக்தர்கள் அவர் வரலாற்றைப் பாட இயலாமல் தவிக்க, அவரே பக்தர் புராணத்தை இயற்றிப் பாடி அதிசயிக்கச் செய்வார்!

நெருங்கிய பரிஜனங்களின் பேறே பேறு!

எத்தனை மானுடமாக அவர்களோடு கும்மாளமடிக்கிறார்?

முன்பு ஒரு முக்கியஸ்தரை ஒதுக்கி ஒதுக்கி அழவைத்த 'கொடுங்கோலை'க் கண்டோமே! அவரை அதைப்போல் ஆயிர மடங்கு சிரிக்கவைத்த சிராட்டைப் பார்க்க வேண்டாமா?

இப்போதும் முக்கியஸ்தர் உரைகள் ஆற்றுவதற்காக வெளியூருக்குப் புறப்படுகிறார். பொதுக்கூட்டத்தில் இதை

ஸ்வாமியே, ''...அங்கெல்லாம் போய் 'டான்ஸ்' ஆடிவிட்டு வரப்போகிறார்'' என்று அறிவிக்கிறார்.

சபை சிரிப்பில் வெடிக்கிறது. பிரஸ்தாவ நபரின் இதயம் மெய்யாலுமே 'டான்ஸ்' ஆடுகிறது.

அவர் புறப்படும் சமயம். பாபா முகத்தை ரொம்ப ஸீரியஸாக வைத்துக்கொண்டு அவரை அருகழைக்கிறார். இதய 'டான்ஸ்' வேறு கதியில் பாய்கிறது! பாபா இவரை அதிநெருக்கத்தில் அழைத்து, தலையைக் குனிந்து கொள்ளச் சொல்கிறார். அருகு அருகாகப் பம்மி நிற்கும் திருமுடி இவரது மண்டையில் பரமஹம்ஸமாக மொறு மொறு என்று உரசும் போது பக்தருக்குப் புல்லரிக்கிறது. பாபாவின் பட்டு அதரம் காதுக்கு அருகே வந்து, திவ்விய மூச்சு மேலே படும்போதோ இவருக்கு உள்ளமெல்லாம் புளகிக்கிறது. ரகசியக் குரல் செவிக்குள் புகும்போதோ இதய டான்ஸ் பாலே துள்ளலாகவே திருநட்டமிடுகிறது. இத்தனை ரகசியமாக பாபா என்ன மஹாமந்திரோபதேசம் செய்யப் போகிறாரோ என்று ஆர்வ விளிம்பின் ஓட்டில் நின்றுகொண்டு கேட்கிறார்.

பாபா ரகசியக் குரலில் கூறுகிறார்: ''நாயனா! போகிற இடத்திலெல்லாம் 'டான்ஸ்' மட்டும் பண்ணு! ஒருகாலும் பாடிவிடாதே!''

என்ன குறும்பு? என்ன குழந்தைத்தனம்?

மந்திரோபதேசத்தைவிட உயர்ந்த ஆனந்த சிகரத்தில் தொண்டரை ஏற்றிவிடுகிறது ஆண்டவனின் குறும்பு.

இவர் விஷயமாக நடந்த மந்திரோபதேச சமாசாரம் ஒன்றையும் பார்த்துவிடுவோம்.

காசி யாத்திரையின்போது இத் தொண்டரும் ஐயனின் கோஷ்டியில் இருந்தார். சாக்ஷாத் பரமேச்வரனே தாரக மந்திரம் உபதேசிக்கும் காசியில், நம் பரமனிடமிருந்து மந்திர தீக்ஷை பெற வேண்டும் என்று தொண்டர் அவாக் கொண்டார். இதை ஸ்வாமியிடமே விக்ஞாபிக்க, அவர், ''ஆஹா'' என்றார். இவரும் ஐயனிடம் உபதேசம் பெறும் நேரத்தைப் பேராவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஸ்நானம் செய்து மடியானார். ஸ்வாமி உபதேசம் செய்வதாகத் தெரியவில்லை. கடிகாரம் 'டிக்'கிக் கொண்டே இருந்தது. இவரது இதயமும் 'திக் திக்' என்று அடித்துக் கொள்ளலாயிற்று. 'போஜனத்துக்கு ஏற்பாடு நடக்கிறதே! உணவு கொள்ளும் முன் அல்லவா உபதேசம் செய்ய வேண்டும்? சாப்பாடாகிச் சிறிது போதில் காசியை விட்டே புறப்பட்டாக வேண்டுமே!'

ஸ்வாமியைப் பரிதாபமாகப் பார்த்தார். ஸ்வாமி சர்வ சகஜமாக, ''ம், வா சாப்பிட! எல்லாரும் உட்கார்ந்தாச்சு.

Koviloor Digital Library

உனக்கு மேள தாளம் வைச்சுக் கூப்பிடணுமோ?'' என்று சிரிக்கிறார்.

எல்லோரும் சிரிக்கிறார்கள்.

தொண்டர் உள்ளுக்குள் அழுதுகொண்டே கலத்தின் முன் வந்தமர்கிறார்.

''ஏன் நாயனா, சரியாவே சாப்பிட மாட்டேங்கிறே? இதைச் சாப்பிடு, அதைச் சாப்பிடு; இன்னும் போட்டுக் கோடா'' என்றெல்லாம் ஸ்வாமி சீராட்டுகிறார். தித்திப்பு மிளகாய்!

இவர் கை உணவைப் பிசைந்தபடி இருக்க மனத்தையும் பிசைந்தெடுக்கிறது. 'ஸ்வாமி நம்மை ஏமாற்றியே விட்டார். ஆனால் நமக்கு அவ்வளவு லாயக்கு உண்டா? பகவானிடம் தாரக உபதேசம் பெற்று இந்த ஜன்மாவோடு மோக்ஷம் சேருகிற அருகதை நமக்கு ஏது?'

உபதேசமாகாமலே உத்தரதேச யாத்திரை முடிந்தது. கோஷ்டி பிரசாந்தி நிலயத்துக்குத் திரும்பியது. கங்காபூஜை நடத்தப்பட்டது. யாத்திரா விவரங்களை யெல்லாம் பக்த கோடிகளுக்குச் சொல்லும்படி மேற்படி தொண்டரையே ஸ்வாமி பணித்தார். அவரும் ஸாங்கோபாங்கமாக அழகுபடச் சொல்லி முடித்தார்.

''இவன் ஒன்றைச் சொல்லாமல் விட்டு விட்டான்'' என்று மானத்தை வாங்கத் தொடங்கினார் ஸ்வாமி. தொடர்ந்தார்: ''காசியிலே இவனுக்கு நான் மந்திரோபதேசம் பண்ண வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். எனக்கா, இவன் கேட்டது ஒரே வேடிக்கை;சிரிப்பாக வந்தது. தானாக இவனுக்கு புத்தி வருமா என்று மேலும் வேடிக்கை பார்க்க நினைத்து ஒப்புக்கொண்டேன். கடைசிவரை உபதேசிக்கவே இல்லை. அதற்காக இவன் உள்ளுக்குள்ளே பட்ட அவஸ்தை கொஞ்ச நஞ்சமில்லை. அதை மட்டும் இப்போது சொல்லாமல் விட்டு விட்டான். காசி யாத்திரையில் அப்படியே எல்லாரும் மனசு நிரம்பி வந்துவிட்டதாகக் கதை அளக்கிறான். இவனுக்கே அந்தத் திருப்தி இல்லை—என்னிடம் உபதேசம் பெறாததால். எத்தனை அசடு பாருங்கள்! அத்தனை மந்திரங்களுக்கும் ஆதாரமும் லக்ஷியமுமான என்னை அடைந்து என் பக்கத்திலிருப்பதே தாரகம் என்று தெரியாமல், அந்த லக்ஷியமே அதற்கான ஒரு பாதையான மந்திரத்தை உபதேசிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறான்.''

இப்படி ஸ்வாமியே அழுத்தந் திருத்தமாகச் சொல்லும் போது, ஆசிரமவாஸிகள் அவர் விதிக்கிற எந்த லௌகிகப் பணியும்கூட ஆத்மஸாதனைதான் எனக்கொண்டு அதனையே பிறழாமல் பற்றி ஒழுகுவதில் விந்தை என்ன? அவர்களுக்கு

Koviloor Digital Library

ஸ்வாமி அடிக்கிற 'ஜோக்'குகள்கூட மந்திரோபதேசத்துக்கும் மேலேதான்!

அவரும் ஹாஸ்ய வெடிகளை வீசிக்கொண்டு அன்பர் குடும்பங்களைச் சிரிக்க வைத்துத் தாமும் சிரித்துக்கொண்டு நிற்பார்.

★

மாதுடஸாயியின் மாமதுர அம்சமாக உள்ள ஹாஸ்ய ஸாயியை இங்கேயே சற்று ஆர அமரத் தரிசிக்கலாம். பரம ஹம்ஸரையும், ரமணரையும், காஞ்சிப் பெரியவாளையும் போல் ஸாயி பர்வதத்துள்ளும் ஒரு நகைச்சுவை நீர்நாடி ஓடிக்கொண்டேயிருந்து ஆங்காங்கு சுனைகளாகப் பொங்கி வரும். அதில் சில சுனைகள் அள்ளிப் பருகலாம்:

வடக்கத்தி ராஜகுடும்ப பக்தர்களிடையே பாபா அமர்ந்திருக்கிறார். ஒரு ஜபமாலையை எண்ணியபடி முணமுணக்கிறார்.

''என்ன பாபா, எல்லோர் போலவும் நீங்களும் ஜபிக்கிறீர்கள்?'' என்று வியக்கிறார் ஒரு ராணிக் கிழவி.

''எல்லோர் போலவும் ஜபித்துக் காட்டத்தான்'' என்று குறும்பு நகையோடு சொல்லிவிட்டு, கண்களை மூடி மறுபடி மாலையை உருட்டியவாறு முணமுணக்கிறார். சில விநாடிக்குள் கண்ணைத் திறந்து, மாலையையும் உருட்டியபடியே, ''தோபி ஆயா?'' (வண்ணான் வந்துட்டானா?) என்று கேட்டுக்கொண்டே, மறுபடி மோன மோன என்று உதட்டைக் கூட்டுகிறார்!

எல்லோர் போலவும் ஜபிக்கும் நேர்த்தி பார்த்தீர்களா?

* * *

பிரசாந்தி நிலயத்தில் டாக்டர் மோடியைக் கொண்டு ஏழையருக்குக் கண் சிகித்ஸை முகாம் நடத்துகிறார் ஸ்வாமி.

எப்போதும் ஆண் பெண்களைப் பிரித்தே அமர்த்துவது பிரசாந்தி நிலய வழக்கு. இன்று மட்டும் எப்படியோ குருட்டு நோயாளிகள் சில வரிசையில் கலந்தாங்கட்டியாக உட்கார்ந்திருக்கிறார்கள். இவர்களை மாற்றி அமர்த்துவதற்காக ஒரு பெண் வாலன்டியர் ஆவேசமாகக் கிளம்புகையில் பாபா அவரைக் குறுகுறுவென்று பார்த்துத் தடுக்கிறார். ''அம்மாயி, பரவாயில்லை. அவங்களுக்கு ஒண்ணும் வித்தியாசம் தெரியாது பார்!'' என்கிறார். எத்தனை நுட்பமான நகைச்சுவை!

* * *

பெங்களூரிலிருந்து பாபா சென்னைக்குப் புறப்படுகிறார் என்று தெரிந்த அத்தாணிச் சேவகர், ''எந்தக் காரில்?'' எனக் கேட்கிறார்.

Koviloor Digital Library

"நாராயண அவதாரம் காரில் போவதாவது? கருட வாஹனத்தில்தான் போகிறேன்" என்கிறார் ஸ்வாமி. ஆகாய விமானத்தைத்தான் சொல்கிறார்!

* * *

இன்னொர் அத்தாணிச் சேவகர் அறியாத்தனத்தால், உரவகொண்டாவில் பால ஸத்யாவைக் கருந்தேள் தீண்டியவுடன் அவரில் ஷிர்டி ஸாயிபாபா ஆவேசித்து விட்டார் என்று எழுதிவிட்டார். ஸ்வாமி சிரித்தார். "ஒன்றென்ன, நூறு கருந்தேளைப் பிடித்துக் கொட்ட வைத்துக்கொண்டு நீயுந் தான் ஸாயிபாபா ஆகிவிடேன்" என்றார்!

* * *

பரம தெய்விகத்திலும் ஹாஸ்யத்தைக் காட்டுவார். வீணைக் கலைஞர் ஒருவரிடம், "மகுடி வாசி" என்றார். முகத்தில் குறும்பு கொப்பளிக்கிறது.

'திடுமென வீணையில் எப்படி மகுடி வாசிப்பது? இதில் குறும்புத் தனம் வேறென்ன?' என்று புரியாமல், ஏதோ தனக்குத் தெரிந்த அளவில், "ஆடு பாம்பே, விளையாடு பாம்பே" என்று மீட்டியபடி வைணிகர் தலைதூக்கிப் பார்த்தால்,

ஆஹா! மெய்யாகவே மாபெரும் நாகமொன்று, உலகில் கண்டிரா கருநீலப் பிரகாசத்தைப் பொழிந்துகொண்டு படத்தை ஆட்டி ஆட்டி ரஸிக்கிறது! ஆம், ஸ்வாமியேதான் நாகஸாயியாகி ரஸிக்கிறார்! அவர் மகுடி வாசிக்கச் சொன்னதன் ஹாஸ்யக் குறும்பை வைணிகரும் ரஸிக்கிறார்!

* * *

இப்படி உன்னத உட்பொருளின்றி எளிய வெள்ளை ஹாஸ்யங்களும் செய்வார். சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் வந்து தங்கியிருக்கையில் ஒருநாள் ஸ்ரீ வேங்கடமுனியிடம், "இன்று தரிசனம் இல்லை என்று வெளியே உள்ள கூட்டத்துக்குச் சொல்லி அனுப்பி வை" என்கிறார்.

வேங்கடமுனி இதை வாசலுக்கு வந்து அறிவித்துக் கொண்டிருக்கும்போதே, அவர் அறியாமல் அவருக்குப் பின் படியில் வந்து சிரித்துக்கொண்டு நிற்கிறார் ஸ்வாமி.

"வேங்கட முனி தரிசனம் கிடையாது என்று சொல்லிரு ராக்கும்" என்று ஸ்வாமியின் மோஹனக் குரல் பின்னே கேட்டு, அவர் விலவிலக்க, கூட்டத்தினர் இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் கொல்லென்று சிரிக்க, வேங்கடமுனியும் சிரிக்க, அந்தச் சிரிப்பும் மூர்த்திகரித்தாற்போல் பாபா நிற்கிறார்.

* * *

அத்யந்த பக்தர் குடும்பத்துப் பிள்ளைக்குக் கல்யாணம் நிச்சயமாகி யிருக்கிறது. நிச்சயித்தவரே பாபாதான். ஆனால்

Koviloor Digital Library

ஏதும் தெரியாதவர்போல் (மாறுடஸாயியின் ஸாரமே இது தானோ?) மணப்பிள்ளையிடம், மணப்பெண்ணின் பெயர் என்ன வென்று கேட்கிறார். அந்தப் பிள்ளையும் இன்னவென்று சொல் கிறார். பாபா குழந்தையாகக் கைகொட்டிச் சிரிக்கிறார். "ரௌடி, ரௌடி! கல்யாணம் ஆகிறதற்கு முந்தியே பொண் டாட்டி பேரைச் சொல்றான்!" என்கிறார். குடும்பமே ஆனந் தத்தில் ஆர்ப்பரிக்கிறது.

இதே வீட்டுப் பெண்ணுக்குக் கல்யாணம். மாப்பிள்ளை மணமகளின் காலைப் பிடித்து அம்மி ஏற்றும்போது, "ஆரம்பிச் சாச்சு அகத்துக்காரிக்கு ஸேவாம்" என்கிறார் ஸ்வாமி. கல்யாணக் கூட்டம் கலீர் நகையில் மலர்கிறது. எல்லோரையும் விடப் பெரிதாகச் சிரிக்கிறார் ஸ்ரீ கஸ்தூரி. "ஏய்!" என்று ஸ்வாமி மூக்கின் மேல் விரலை வைத்து பொய் மிரட்டல் செய்கிறார். "உன் கதை மட்டும் தெரியாதா? அறுபது வருஷம் முந்தி நீயும் இப்படிக் காலைப் பிடிச்சவன் தான்டா!" என்கிறார். அணை கடந்த வெள்ளமாக அங்கே நகை ஒலி பொங்குகிறது!

★

ஹாஸ்ய பாபா கையோடு குழந்தை பாபாவை அழைத்து வருகிறார். மாறுடஸாயியில் மற்றொரு மனோஹர அம்சம்.

'பாலஸாயி' என்று இளம்பருவ பாபாவைக் குறிப்பிட்டோ மாயினும் அவரது பாலத்வம் — பாலான வெள்ளைப் பிள்ளைத்துவம் — இன்றும் மறையவில்லை; என்றும் மறையாது. ஏனெனில் உபநிஷத வாசகப்படி பிரம்மத்திலேயே நிலைத்த ஞானி பாண்டியத்தியத்தைத் தூக்கி எறிந்துவிட்டு பாலனாகவே நிற்பவன் அன்றோ?

பாண்டித்யம் நிர்வித்ய பால்யேன திஷ்டாஸேத்

பரமஹம்ஸர், ரமணர், காஞ்சிப் பெரியவர்கள் ஆகியோரிடம் கூடவும் குழந்தைத் தன்மை அகடிதகடனா சக்தி பொருந்திய பாபாவையும் நாம் அள்ளி எடுத்துக்கொள்ளும்படி செய்கிறது. மஹா த்ரிபுரஸுந்தரி என்ற பிரம்மப் பெரும் சக்தி பாலா த்ரிபுரஸுந்தரியாக இருப்பதே இங்கு நிதரிசனமாகிறது.

பிரசாந்திக் குடில்கள் ஒவ்வொன்றிலும் சமையலறை வரை சென்று, பாத்திரங்களைத் திறந்து பார்க்கும்போது பாபா பச்சைப் பிள்ளையாகத்தான் இருப்பார். சில சமயங் களில் பாலகிருஷ்ணனாக அவர்கள் இல்லாதபோதே வந்து திருட்டும் செய்வார். ஆம், வீட்டுக்காரிக் கிழவி வருகையில், உள்ளேயிருந்து காலிப் பாத்திரத்தைத் தலைகீழாகக் காட்டி, "உன் பலகாரத்தையெல்லாம் சாப்பிட்டுட்டேனே!" என்று கையை விரிப்பார். முகம் நகையில் விரியும். கிழவிக்கோ அமிர்தமானதையே போஜனம் செய்த மகிழ்ச்சி உண்டாகும். அந்தப் பலகாரத்தை ஸ்வாமி வேறு பாத்திரத்துக்கு மாற்றி விட்டே, காலியானதைக் கவிழ்த்திருப்பார்.

Koviloor Digital Library

சூதிலேயே சூதற்ற நிஷ்கபடம். ''கண்ணன் சொல்லு மொழிகள் குழந்தைகள் போலொரு சூதறியாது சொல்வான்'' என்ற கவி வாக்கின் கவின் வடிவம். ''இல்லையே'' என்று இரு கையும் விரிப்பதே, நவநிதியை வாரிக்கொடுக்கும் இன்பத்தை ஊட்டும் இந்தச் சூதான நிஷ்கபடத்தில்.

பாபாவுடன் பேசிக்கொண்டிருக்கும் பிரமுகர் வெற்றிலைப் பெட்டியைத் திறப்பார். ''நீ அந்தண்டை போயிருக் கச்சே நான் காலி பண்ணிட்டேன், உனக்கு இல்லையே!'' என்று இரண்டு கைகளையும் போக்கிரிக் குழந்தையாக விரிப் பார்—அகிலமெல்லாம் போற்றும் ஸத்யஸாயி நாதன்தான்!

பாபா பேச்சிடையே கைவிரித்துச் சிரிக்கும் குழந்தை யழகு அலாதிதான்.

இவ்வாறே அவர் வெளியூர் செல்லக் காரில் ஏறிவிட்ட போது, இதயம் குழைந்து வெளியே நிற்கும் பக்தரைப் பார்த்து, ''விட்டுட்டுப் போறேனே'' என்று மலர மலரக் கண்ணை விரித்து அவர் சொல்கையில், அந்தத் துஷ்டக்குழந்தை யிடம், துஷ்டத்தனத்துக்காகவே, பாழும் மனசு மேலும் ஒட்டிக் கொள்ளும்.

பஜனின்போது நாற்காலியில் அமர்ந்திருக்கும் கோலத்தி லுள்ள பாபாவின் படங்கள் பலவற்றில் அவரது மடியைக் கூர்ந்து பாருங்கள். நிறையப் பூ இதழ்கள் இருப்பது தெரியும். ஆம். இந்தக் குழந்தைதான் பஜனை நடக்கும்போது, நாற் காலிக் கையில் வைக்கப்படும் செண்டை எடுத்து கர்ம சிரத்தை யாக, இந்த லோகத்தில் இதைவிடப் பெரிய காரியமே இல்லை என்பது போல் அத்தனை பிள்ளைத்தனமான ஈடுபாட் டோடு, ஒவ்வொரு இதழாகப் பிய்த்து இப்படிப் போட்டுக் கொண்டிருக்கிறது! ஒருமுறை இன்னம் அதிபாலனாக, பிய்த்த மலர்களை வாயில் போட்டுக் குதப்புக் குதப்பு என்று குதப்பி விழுங்கிவிட்டு, பிறகு முழு சரத்தையே இழுத்துத் தந்திருப்பது நினைவிருக்கிறதல்லவா?

சாதாரணமாக ஜிப்பா மணிக்கட்டினால் அவர் முக வாயைத் துடைத்துக்கொள்கையிலும் இந்தக் குழந்தைத் தன்மை தெரியும். வெள்ளை உடை தரித்து ஊஞ்சல் விழாவில் ஆடும்போதும் பாலா—ஸாயீச்வரியையே காண்கிறோம். ஒரு கையின் ஆள்காட்டி விரலை மற்ற கைவிரல்களால் கவ்விப் பிடித்துக்கொண்டு ஊஞ்சலாடும் இக் குழந்தை நம்மை ஆனந் தத்தில் பிழிய பிழிய அழவைப்பதுபோல், அரும் பெரும் அற்புதங்களை ஆற்றும் 'அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயக ஸத்ய ஸாயி மஹராஜ்' அவர்களாலும் செய்ய முடியாது.

அருமையில் எளிய அழகே போற்றி!

என்று மணிவாசகர் தெரியாமலா சொன்னார்?

மானுடம் வென்றதம்மா!

என்று கம்பர் சும்மாவுக்காகவா பாடினார்?

ஆம்! பாபாவின் தெய்விக அற்புதங்கள் ஒரு வித்வானின் ரஸவஜாதி விநோதங்களைப் போல் நம்மைப் பிரமிக்க வைத்து இன்பமூட்டினாலும், அந்த பிருகாப் பொழிவிலும் காணாத ஹித ஸௌக்கியத்தை ஓர் எளிய கமகத்தில், கார்வையில் பெறுவதுபோல், பாபாவுடைய மானுடத்தின் எளிமை நம்மை அள்ளுவது அலாதிதான்!

இந்த எளிமையின் எல்லை நிலத்தே ஓர் எழிற்காட்சி:

தெய்வமாச் சக்தியை பாபாவின் அற்புதங்களில் கண்டிருப்பவர் அந்தத் துணைவேந்தர். இணையற்ற வேந்தனான பாபா இத் துணை வேந்தரை அறநெறிக் கண்டிப்பில் ''கொளுத்தி''யும் இருக்கிறார். இத்தனை சக்திமான் — இன்று, இந்த அதிகாலையில், வெளியூர் முகாமில் இந்தத் துணைவேந்தரது கதவைத் தட்டி, அவர் திறந்தவுடன் தந்த காட்சி! பரமேச்வரனாகவோ, பராசக்தியாகவோ, பரவாஸுதேவனாகவோவா நின்றார்? அல்ல. அவற்றைவிட உள்ளுருக்கும் காட்சி. 'ஷேவிங் க்ரீமை' மொத்தையாக முகவாயில் பூசிய காட்சி! அதுவே ஏழுமலையப்பனின் பச்சைக் கர்ப்பூர முகவாயாக இருக்கிறது. பச்சைக் கர்ப்பூரமாகவே கேட்கிறார் பரம மானுடஸாயி: ''உன் ஷேவிங் ப்ரஷ் தருகிறாயா? நான் கொண்டு வர மறந்துட்டேன்.''

மறப்பு உள்ளிட்ட எல்லா மானுடத் தன்மைகளையும், குற்றமில்லாத மலித குணமனைத்தையும், நடித்துக் காட்டுகிறார் தேவாதிதேவர்.

கோடைப் பயிற்சி முகாமில் ஒரு சிறுபெண் மயங்கிச் சாய்ந்தபோது, தன் ஆதீனத்தில் வந்த குழந்தைக்கு சுகவீனம் ஏற்பட்டதே என எத்தனை மானுட பாசத்துடன் பதறினார்? அவளிடம் வந்து, ''சூடம்மா, இக்கட சூடம்மா!'' (''பாரம்மா, இங்கே பாரம்மா'') என்று பரிவுமயமாகச் சொல்பவர்— 'கணநேரம் கடைக்கண் பாரம்மா' என்று மகாபுருஷரும் வேண்டும் ஸாயிபராசக்திதான்!

★

இத்தனை மானுட இயல்புகளைக் காட்டியபோதிலும் ஆச்ரமவாஸிகளும் சரி, மற்ற ஆஸ்தான சேவகரும் சரி அவரைத் தெய்வம் என்றே கொண்டு அவரிட்ட கோட்டைத் தாண்டி நடவாதபடி செய்திருக்கிறார்.

மானுஷம், தைவிகம் இவற்றின் அதி விசித்ரக் கலவை தான் பாபா! ஸ்தூல ஸாயியாக மானுடமாகவும், ஸூக்ஷ்ம ஸாயியாக தெய்விகமாகவும் இரட்டை வேஷம் போடும் விசித்ர சித்தர்தான் அவர். இவ்விசித்ரத்தை இந்நூல் விஷயமாகவே காட்டியிருக்கிறார். மானுடப் பண்பின் சிகரத்தில் அஹம்பாவ லேசமும் அற்றவராக இருந்து, தம் சரிதத்துக்குத்

Koviloor Digital Library

தாமே உதவக்கூடாது என்ற தர்மத்தை மேற்கொண்டு ஸ்தூலத்தில் அணுவளாவும் உபகாரம் செய்யாமல் நூலாசிரியனைச் சோதித்திருக்கிறார். அதே சமயம் இவன் விரும்பிய ஏராளமான தகவல்கள், சந்தேக விளக்கங்கள் பல இடங்களிலிருந்து நாட்டாமல் கிடைக்கவும், புகைப்படங்கள் முதலியன எதிர்பாரா இடங்களிலிருந்தும் கிடைக்கவும் சூக்ஷ்மஸாயி அருளியிருப்பதற்குக் காலமெல்லாம் நன்றி சொன்னாலும் தீராது. போன விநாடி வரை முகம் கொடுக்காத ஓர் அணுக்கத் தொண்டர் திடீரென இந்த விநாடி பரம சகாயராக மாறிய அற்புதத்தை இந் நூலின் தொடர்பாக ஆசிரியன் பன்முறை அநுபவித்திருக்கிறான். ஆயினும் இன்றளவும் ஸ்தூல ஸாயியிடம் நூலைப் பற்றிச் சொல்ல இவனுக்கே தயக்கமாகத்தான் இருக்கிறது — எப்படி ஏற்பாரோ என்பதால்.

இந்த ஸ்தூல—சூக்ஷ்ம, மானுட—தெய்விகக் கலவையில் மானுடம் தெய்விகத்தில் அடிபட்டுப் போகத் தவறுவதேயில்லை, பக்தரின் ரக்ஷணத்திலே. உதாரணமாக, பிரசாந்தி நிலைய உள் விவரங்களையும் அறிந்த ஒரு திருடன், உள்ளே பாபா எவரது உபாதையையோ ஏற்றுப் பிரக்ஞையற்றிருந்ததைத் தெரிந்துகொண்டு, இருட்டிலே ஆசிரமவாஸினி ஒருவரின் கழுத்துச் சங்கிலியைப் பிடித்திழுத்தான். என்ன ஆச்சரியம்! தபதப என்று அவன் முதுகில் திம்மாக் குத்துக்கள் விழுந்தன. குத்திய கரம் தெரியாவிடினும், அதியில் பிறக்கு முன்பே தம்பூராவையும் மிருதங்கத்தையும் கண்டிய கரம் தான் இன்று போர் வேகம் கொண்டிருக்கிறது என்று குழந்தையும் ஊகிக்குமே! நடுங்கி ஓட்டம் பிடித்தானாம் அத் திருடன்.

பாபா எவ்வளவு மானுடமாக இருந்தாலும், மானுடக் குறைகள் சில அவரிடம் இருப்பதாகத் தோன்றினாலும்கூட, நம்மை ரக்ஷிப்பதில் இந்த மானுடம் குறுக்கே நிற்காது என்று உறுதி பெற இது சான்றல்லவா? கம்பன் இன்றில்லையே— ''மானுடம் வென்றதம்மா'', ''தெய்விகம் வென்றதம்மா'' என்று பிரித்துப் பிரித்துப் பாட!

இத் தெய்விக சக்தியில் தீரத் தெளிய நம்பியிருப்போர் அவரது பரிஜனங்கள். வீட்டுக்கு வந்து விளையாடும் அவரிடமே எத்தனை யெத்தனை தெய்வ ரூபங்களை இவர்கள் கண்ணாரத் தரிசித்திருக்கிறார்கள்?

விந்தை விந்தையாக எனக்கே—பல
விதவிதத் தோற்றங்கள் காட்டுவிப்பாள்

என்பதை இவர்களுக்கு ஸாயீச்வரி ஆழமாக மெய்ப்பித்திருக்கிறாளே!

இதனால்தான் வெளியாரான நாம், 'அவரிடம் அவரே உகந்தேற்ற மானுடக் குறையும் உண்டு' என்று எண்ணுவதும் இவர்களுக்கு அபசாரமாகத் தோன்றும். ''குறையா? அவரிடமா?

நம் அற்ப புத்தியால் புரிந்துகொள்ள முடியாது என்று சொல்லுங்கள்'' என்று நம்மைச் சாட வருவார்கள்.

பாபா போல் ஒரு தெய்வம் கிடைப்பது அதிசயமெனில், பிரசாந்தி நிலைய அலுவலர்போல் சரணாகதி செய்து உத்தரவை அப்படியே நிறைவேற்றுபவர் அதனினும் அதிசயம். நண்பர் ஸ்ரீ ஆஞ்சநேயுலு இவர்களை, ராமன் உத்தரவு போட்டதும் எதிர்க்கேள்வி கேளாமல் நிறை கர்ப்பிணியான பிராட்டியை அடவியில் விட்டு வந்த இளையபெருமாளுக்கு ஒப்பிடுவார்.

இவர்களைப் பொறுத்தவரையில் ஸ்வாமி எதைச் செய்தாலும், செய்யாவிட்டாலும் அதற்கு உள்ளர்த்தம் உண்டு; மாறுபாடாக அவர் தப்பியதாகத் தோன்றுவதற்கும் அவரே உத்தேசித்த காரணம் உண்டு.

'பாபா என்ன புலி, சிங்கமா? அல்லது ராக்ஷசரா? தயாதாக்ஷிண்யமே இல்லாதவரா?' என்று நாம் நினைக்குமளவுக்கு இவர்கள் மிகையான பயபக்தியுடன் ஒன்றுமில்லாததற்கெல்லாம் fuss செய்வதாகவே நமக்குத் தோன்றும். உதாரணமாக இந்த அத்தியாயத்தில் நீங்கள் குறித்த அநேக தேன் சொட்டுக்களைத் தெரிவிக்க இவர்கள் பிணங்கியதும், கலங்கியதும் உண்டே, அதை fuss என்ற ஆங்கில வார்த்தையாலன்றி வர்ணிப்பதற்கில்லை. 'தாயார் குழந்தைகளுக்குச் செய்வதை விளம்பரப்படுத்துவது எப்படி புனிதக் குறைவோ, அப்படியே நாம் இவர்களை அன்புக்கிடுவதை இவர்கள் வெளியே சொல்வதும்' என்று பாபா சொன்னதன் விளைவு இது. இதற்கு, தாரதரம் பாராமல் எல்லோரிடமும் இவர்கள் பிரகடனம் செய்யக்கூடாதென்றும், அடிக்கடி இப்படிச் சொல்லிக் கொள்வதால் இவர்களுக்கே ஏற்படக்கூடிய அகம்பாவத்திலிருந்து எச்சரித்திருப்பார் என்றும்தான் நாம் அர்த்தம் செய்துகொள்வோம். ஆனால் பாபாவின் பக்தர்கள் பாபானந்தத்தில் திளைப்பதற்காகவே எழுதுகிற நூலில் — முடிந்தமட்டும் இவர்கள் பேரையே வெளியிடாத நூலில்கூட இவற்றை வெளியிடுவது அபசாரமோ என்று அவர்கள் நடுங்குகிறார்கள். இது நமக்கு 'அதி'யாகத்தான் தோன்றும். ஆயினும் தன்மானம், ரோஷம் என்ற பெயர்களில் கொழுப்பை எல்லையில்லாமல் வளர்த்துக் கொண்டுவிட்ட இந்த உலகத்தில் இப்படியும் பதராக அடங்கிக் கிடக்கிற சிலர் இருக்கத்தான் வேண்டும் என்பது இயற்கையின் தராசு விதியாயிருக்கலாம். பரிபூரண சரணாகத நிலை என்று ஒன்றைச் சொல்கிறார்கள் அல்லவா? அந்தக் கோணத்திலேயே இதையும் நாம் அநு—தாபத்தோடு பார்த்து ரசிக்கத்தான் வேண்டும்.

நாம் வெளிப்படச் சொல்வதற்குச் சிறிது அதிகமாக இவர்கள் செய்ய ஆரம்பித்தாலும் அதுவே இவர்களைச் சிறப்புபடியாமையில் மேலே மேலே இழுத்துக்கொண்டு போய்விடும் என்றே பாபாவும் இவர்களைக் கண்டிப்பில் வைத்திருக்கிறார் போலும்!

Koviloor Digital Library

வெளி பக்தர்களுக்குப் பிரசாந்தி நிலைய அலுவலர்களிடம், குறிப்பாக ஸர்வஸ்ரீ கஸ்தூரி, சூரையா என்கிற சூரியநாராயண ராவ், குடும்பராவ் போன்றவர்களிடம் குறையிருக்கிறது. இவர்கள் யாத்ரீகர்களிடம் இன்னம் கொஞ்சம் சரஸமாக, சரளமாகப் பழகக்கூடாதா என்று தாபப்படுகிறார்கள். இந்த அணுக்கத் தொண்டர்களுக்காக நூலாசிரியன் பரிந்து எழுத வில்லை. கர்மயோகிகளான அவர்களுக்கு இந்தப் பரிந்துரை பொருட்டும் இல்லை. பிறர் தாபப்படுவதோ, நாம் இங்கே அவர் களுக்காக நியாயம் பேசுவதோ—இரண்டுமே இவர்களுக்கு லக்ஷியம் இல்லை. ஆயினும் பிரத்யக்ஷ அவதாரனின் சாக்ஷாத் ராஜதானியான பிரசாந்தி நிலைய நெறிமுறைகளைப் பற்றி ஏராள மான பக்தர்களுக்குக் குறை இருக்கலாகாது என்றே எழுது கிறோம்:

இந்த அலுவலர்கள் மட்டும் நாம் விரும்புவதுபோல் சரளமாக இருக்க ஆரம்பித்தால் நாம் நமது வேண்டாத அக்கப்போர்களை இவர்களிடமும் ஆரம்பித்துவிடுவோம். மௌனம்தான் பிரசாந்தி நிலையத்தின் மூலநெறி. அதற்கே குந்தகம் விளைவிப்போம். நாமும் மௌன விதியை மீறி, அவர்களையும் மீறவைப்போம்.

அதோடு, அவர்கள் ஸ்வாமியின் அணுக்கத்தில் இருப்ப தால் நம் சார்பாக அவரிடம் முறையிடச் சொல்வோம்; நம்மைப் பேட்டிக்கு அவர் அழைக்கச் சிபாரிசு செய்யச் சொல்வோம்.

ஆனால் பிரசாந்தி நிலையத்தின் தலையாய தனியம்சங்கள் இரண்டு. ஒன்று: அங்கு காணிக்கை, கையுறை என்பது அறவே விலக்கப்படுவது. மற்றது: சிபாரிசு என்பதன் நிழ லாட்டத்துக்கும் அங்கு இடமே இல்லாதது.

பிரசாந்தி நிலையத்தில் ஸ்வாமியின் திருவுளம் இன்றி ஒரு சிறு காரியம் நடக்காது. அத்தாணிச் சேவகரில் மகா முக்கியஸ்தராக நாம் நினைப்பவர்களும் அவரைக் கொஞ்சம் கூடத் தங்கள் வழிக்கு வளைக்க முடியாது. அப்படி வளைக்க அவர்கள் எண்ணவும் மாட்டார்கள். குயவன் கைம்மண்ணாக இவர்கள் அவர் வளைக்கிறபடி என்றே கிடப்பார்கள். இவர்கள் தம் பொருட்டே அவரிடம் எந்தச் சலுகையும் கோரிப் பெற முடியாது என்னும்போது பிறருக்காகப் பரிந்துரைப்பது பற்றிக் கனவிலும் நினைப்பதற்கில்லை. ஸர்வக்ஞரான ஸ்வாமி தாமே பக்தகோடிகளில் யாருக்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வார் என்ற நம்பிக்கையுடன்தான் நாம் அவரிடம் செல்ல வேண்டும்.

'ஸ்வாமி எங்கே போகிறார், எப்போது வருவார்?' என்ற கேள்விகளுக்குக்கூட ஏன் இவ்வலுவலர்கள் கையை விரிக்கிறார்கள் என்று கேட்கிறீர்களா? வாஸ்தவத்தில் இவர் களுக்கே அது தெரியாதே! அந்த ட்ஹா சக்ரவர்த்தி இவர்

Koviloor Digital Library

களிடம் மட்டும் தம் போகை வருகைகளைச் சொல்கிறாரா என்ன? தம் காரியங்களில் அவர்களுக்கும் 'ஸஸ்பென்ஸ்', 'ஸர்ப்ரைஸ்'கள் வைக்கிற நாடக சதுரரல்லவா அவர்?

ஸ்தாபனத் தலைவரின் அலுவல்களைப்பற்றியே தெரிந்து சொல்ல முடியாத ஸ்தாபன அலுவலர்கள்! இப்படிப்பட்டவர்கள் பிரசாந்தி நிலயத்தினரைவிட வெளியாரிடம் திறம்பட நடக்கவே முடியாது என்று அழுத்திச் சொல்லலாம்.

ஆகவே பகவானின் ஆஸ்தான சேவகர்களிடம் நாம் தாபப்படுவதை விட்டு, அவர்கள் சுய விருப்பு வெறுப்பின்றிப் பரிபூரண சரணாகதர்களாக பகவானுக்கு அடங்கிய செயற்படும் செல்வியை மதித்து வணங்கவே வேண்டும்.

மற்ற பல ஆசிரமங்களில் நாம் முகமலர்ச்சியுடன் முகமன் கூறி விருந்தோம்பும் ஊழியர்களைக் காண்பதுபோல் பிரசாந்தி நிலயத்தில் காணமுடியாது என்பதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். அங்கெல்லாம்விட இங்கு திரளுகிற அபரிமிதக் கூட்டத்தில் இது சாத்தியமே அல்ல என்பது ஒரு காரணம். இன்னொரு காரணம், என்னதான் இங்கு தனியாக நிலயத்தார் என்றும், அதன் தலைவர் என்றும் இருந்தாலும், உண்மையில் நாமும் அந்த நிலயத் தலைவரின் சாக்ஷாத் குழந்தைகளே என்பதால் அவரும் அந்த நிலயத்தாரும் நம்மை விருந்தாளிகளாக உபசரிக்க வேண்டியதில்லை என்பது. ஒருவேளை, மூன்றாவதாக ஒரு காரணம், அலட்சியப்படுத்தப்பட்டாலும் அடங்கியிருந்து ஆனந்தமாக இருக்க நமக்கும் இது ஒரு பாடமோ என்னவோ?

*

மானுடனாய் நமக்குப் புகட்டாத பாடமும் உண்டா? மானுடம் என்பதே பண்புடன் வாழப்படுகையில் தெய்விக மாகிறது என்பதைப் புங்கானுபுங்கம் அவர் வாழ்ந்து காட்டுவதை நூல் நெடுகவும், குறிப்பாக இவ்வதிகாரத்திலும் பார்த்தோம். 'பண்பு' என்பதோடு 'நாகரிகம்' என்பதும் இணைத்துப் பேசப்படுவதால், அது தொடர்பாகவும், மானுட மாண்பின் வேறு சில அம்சங்களையும் ஸ்வாமியிடம் பார்த்துத் தரிசிக்கட்டுவோம்.

ஆய்ப்பாடி கிராமக் குழந்தையான கண்ணனை மீரா, 'நாகரன்' என்றே பாடுவாள். நாகரன் என்றால் நகரவாசி, நாகரிகம் தெரிந்தவன் என்று பொருள். ஆந்திர குக்கிராமத்தில் பிறந்து, பள்ளிப் படிப்பும் முடிக்காத ஸாயிகிருஷ்ணனும் மகா நாகரிகம் தெரிந்தவன்.

நடை, உடை, பேச்சு, செய்கை முதலியவற்றில் பொது விஷயத்தே அவர் காட்டும் நாகரிகத்தை வெள்ளையரும் விசேஷித்து எழுதுகிறார்கள். அந்தரங்கத்தில் தங்களைப் பிய்த்து

Koviloor Digital Library

வாங்கும்போதுகூட அவர் நாகரிகராகவே இருப்பதை இதனினும் வியந்து எழுதுகிறார்கள். அமெரிக்க தூதராக இருந்த ஸ்ரீ கென்னத் கிடிங் போன்றவர்களின் வரவேற்புபசாரத்தை ஏற்கையில் அவர் காட்டும் நாகரிகத்தைப் பார்த்து, சமூக நடக்கைப் பண்புகளைப் பிரமாதப்படுத்தும் மேநாட்டினரும் ஆச்சரியப்படுகிறார்கள்.

மடிப்புக் கலையாத, வண்ணம் குலையாத உடை. துளி அழுக்கு இராது. குட்டிப் பாதரக்ஷை அணிந்து, கைக்குட்டையால் உதட்டை ஒற்றியவாறு ஸ்வாமி நடக்கும்போது 'டீஸன்ஸி'யின் வார்ப்பாக இருப்பார்.

நாகரிகத்தோடு பாபாவின் பெண்மையும் சேர்கையில் வெகு சொகஸாக இருக்கிறது. அவரது பெண்மை பற்றி இந் நூலில் தனியாக எழுதி முடியாது. ஏனெனில் சிவ—சக்தி எனத் தம்மைச் சொல்லிக்கொள்பவர் குறைந்தது 51 சதவிதம் சக்தியாகவே இருப்பவர். அவரது நடை, உடை (உடல் முழுதும் மூடும் வண்ணப்பட்டு), பாவனை, குரல் இவற்றில் ததும்பும் பெண்மை உலகறிந்ததுதானே? ஆண்மையின் கட்டுறுதியும், அதிகாரமும் வாய்ந்தவரெனினும் பெண்களின் மென்மையும் அதிசயமாகக் கூடியிருப்பவர். குதிகால்கூடத் தெரியாத அளவுக்குக் கஃப்னியை அவர் விரலால் சிறிதே தூக்கி நடப்பது மழை பெய்து சிறு சிறு குட்டைகள் தேங்கி நிற்கும்போதுகூட, இத்தனை 'ஜாக்கிரதை'யாக அங்கியைப் பிடித்துக்கொண்டே, 'ஜாக்கிரதை' தெரியாத லாகவ சரஸத்துடன் சதிராடி நகர்வது—நாகரிக சொகஸின் அதிநயமான 'மூவி' ஓவியந் தான். தசரா வேள்வியில் குட்டி சிம்மாசனத்தே குறுகி நெளிந்து அமரும் பாபாவை அசல் பெண் என்றே நினைத்து விடக்கூடும்தான்.

பெண்ணெழில் தாம்பூல தாரணத்தில் தூக்கித் தெரிகிறது. தாம்பூல அதரத்தைக் கைக்குட்டையால் ஒற்றுவதிலும் நாகரிகம். வெற்றிலைப் பழக்கமுள்ளோர் வாயிலேயே அவ் வுமிழ்நீரை வைத்துக்கொண்டு பேசும் அசங்கியம், கண்ட கண்ட இடங்களில் துப்பும் அநாகரிகம், பற்களில் காவி ஏற்றிக்கொள்ளும் அசுத்தம் ஆகியன ஸ்வாமியிடம் தலை காட்டவும் முடியாது. பொது ஸ்தலத்தில் நமது நாகரர் தாம்பூலம் போட்டுக் கொள்வதில்லை. இதெல்லாம் ஜன சமூகத்துக்குக் காட்ட வேண்டிய மரியாதையை நமக்கு உணர்த்துவதுதான்.

பதற்றம் வந்து விட்டால் நாகரிக நடக்கை உடனே பறந்துவிடும். நம் ஸ்வாமியோ அற்புதர். மிகவும் பரபரப்புக் காரராயினும் பதற்றம் இல்லாதவர். எனவே நாகரிகத்தில் பிறழாதவர்.

போஜனம் கொள்வதில்கூட அத்தனை நாகரிகமாம்! மற்றவர்கள் ரஸம் சாதத்துக்கு வரும்போதே முழு போஜ

Koviloor Digital Library

ஊத்தையும் முடித்து, வெற்றிலைக்குச் சுண்ணாம்பு தடவத் தொடங்கும் ஸ்வாமி பரபரவென்று அள்ளிப் போட்டுக் கொண்ட மாதிரியே தெரியாதாம்!

காரணம், மன நெறிதான். அதுதானே நிஜ நாகரிகம்?

* * *

மாறுடலாயிடம் நாம் கற்றுணர வேண்டிய இன்னொரு அம்சத்தைப் பார்ப்போம்.

'வியவஸ்தை' என்பதே இக்காலத்தில் வெகுவாகக் குறைந்து வருகிறது. ஸ்வாமி தம் ராஜதானியிலோ அருமையாக வியவஸ்தைப் பங்கீடு செய்திருக்கிறார். யார் என்ன செய்ய வேண்டும், எந்த இடத்தோடு நிற்க வேண்டும் என்பதை விதரணையாக வகை தொகைப்படுத்தி யிருக்கிறார்.

வெள்ளையரானாலும் ஆசிரமக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றியே ஆக வேண்டும். புகைக்கக் கூடாது; புலால் கூடாது; மது கூடாது; அவர்களது நாகரிகப்படி தவறின்றி ஆண் பெண்கள் நெருங்கிப் பழகுவதும் இங்கே உதவாது. அந்நிய நாட்டுப் பெண்களும் சேலை அணிந்து போர்த்திய மேலாக்குடன் தான் இருக்க வேண்டும். ஆனாலும் சுதந்திர சமுதாயத்தினரை ரொம்பவும் நெரிக்கக் கூடாது என்றே பாபா இவர்களை அநேகமாக அன்றன்றும் தனியாக சந்தித்து, அளவளாவி, பஜன்கள் கற்றுக்கொடுத்து இன்புறுத்துகிறார்.

இன்னொரு பக்கம் பாடசாலைக்காரர்களுக்குத் தனியான ஆசார வியவஸ்தை.

வழிபாட்டிலும் வியவஸ்தைகள். பஜனை, விபூதி அபிஷேகம், லிங்கோத்பவம் போன்றவை பகிரங்கமாயினும், லலிதா ஸஹஸ்ரநாமம், திரிசதி போன்ற குங்குமார்ச்சனைகள் நிலயத்தாரோடும், சாஸ்திரிமாரோடும் அந்தரங்கமாகவே நடக்கும்.

ஆசிரமவாசினிகளான எல்லாப் பெண்களையும் ஒரு வியவஸ்தையில் எல்லைபோட்டு நிறுத்தியிருக்கிறார். பிரசாந்தி நிலயப் பெண்கள், ஸ்வாமியின் வாஸ ஸ்தானமான மாடி அறைகளுக்குச் செல்வது பற்றி சொப்பனமும் காண முடியாது. தமக்கைக்கு மட்டுமே அவரது போஜன அறையில் மட்டும் பிரவேசிக்க அநுமதி உண்டு. ஏனையோர், ஸ்வாமி உணவுக்கு வருமுன்பே அவரவர் தயாரித்த நிவேதனத்தை உணவறைக்கு அனுப்பிவிட்டு, வெளியே மாடிப்படிகளில்தான் காத்திருப்பர். ஸ்வாமி போஜனம் முடித்து, எதிர்ப்புறமுள்ள தம் 'லிவிங்–ரூம்'க்குத் திரும்பிய பின்னரே, இவர்களுக்கு அவரவர் நிவேதித்தது திருப்பித் தரப்படும். அபூர்வமாக, அவற்றில் சிலவற்றில் சிறிதளவை ஸ்வாமி அமுது செய்திருப்பது தெரியும்.

Koviloor Digital Library

பிரசாந்தி நிலையப் பெண்கள் அநாவசியமாக நிலையத்தை விட்டு வெளியே போகக் கூடாது. நிலயத்துக்குள்ளும்கூட இரவு வேளைகளில் திரியக்கூடாது.

இவ்வாறெனில் ஒரேயடியாகக் கட்டுப்படுத்தி நெரிப்ப வரா? அல்ல. மனோதத்வ நுண்மைகளைப் புரிந்துகொண்டு நாம் மற்றோரை அநுதாபத்தோடு நடத்துவதற்கும் பாபாவே ஆதரிச புருஷர். கண்டிப்புக்காரராயினும் சித்தப் பண்பின் விசித்ரப் போக்கை எப்படியெல்லாம் விட்டுப் பிடிக்கிறார் என்பதற்குச் சான்றுகள் பார்த்தோம். இன்னம்:

மென்மனம் கொண்ட பெண்டிரும் பிரசாந்தியில் அதிதக் கண்டிப்பில்தானே வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கிறது? இதை ஈடு செய்வதற்காக பாபா அவர்களிடம் வரலக்ஷ்மி விரதம், கௌரிகணேச விரதம், காரடை நோன்பு, நவராத்ரி முதலிய தினங்களில் வழிபாடு பெறும்போது சிரிக்கச் சிரிக்கப் பேசி ஓர் ஆனந்தப் பிரபஞ்சத்தையே 'படைத்துவிடுவார். ''எனக்கு ஒட்டியாணம் எங்கே? புல்லாக்கு எங்கே? வளையல் எங்கே?'' என்பார். அவர்கள் புஷ்பங்களைத் தூவுகையில் ''இது ஒட்டியாணம், இது புல்லாக்கு, . இது வளையல்'' என்று உவந்து உவந்து ஏற்பார். ''கோயில் அம்பாள் மாதிரி நினைத்து எனக்கு நைவேத்தியத்தை வெறுமே காட்டிவிட்டு, நீங்களே சாப்பிடுவதென்பது நடக்காது. நானே சாப்பிட்டு விடுவேனாக்கும்'' என்று 'பய'முறுத்துவார்!

இந்த மனோதத்வ அநுதாபத்தின் சிகரமாக, சுப காரியங்களுக்கே உரிய இப் பண்டிகைகளில் கைம்பெண்களையும் அநுமதித்துப் புஷ்பாஞ்சலி பெறுவார். ஸாயிமாதாவின் இதயம் போல் ஒரு புஷ்பம் திரிலோகத்திலும் கிடையாதுதான்.

ஆசிரமக் கண்டிப்பில் வளரும் சிறுருக்குத் தீபாவளிப் பட்டாசு, ஜயந்தி வாண வேடிக்கை ஆகியவற்றில் மனோ ரஞ்ஜனமூட்டுவார். பள்ளியில் விளையாட்டுப் போட்டிகளுக்குப் பரிசு தந்து, சிறு மனசுகளைச் செழிக்க வைக்கிறார்.

தம்மோடு யாத்திரை வர முடியாத கிழங்களையும் நோயாளிகளையும் மறவாமல், திரும்பி வந்தவுடன் அவர்களை யெல்லாம் கூட்டி யாத்திரா விவரங்களை நேரில் பார்ப்பது போல் சுவாரஸ்யமாக வர்ணித்துப் பிரஸாதமளிப்பார்.

முன்பு பாபாவின் குறைகளில் ஒன்றாகச் சொன்னதும், இம் மனோதத்வ அநுதாபத்தில் பொன்மெருகு பெற்று விடுகிறது—அதாவது சுத்த ஸத்வ உணவையே வெகுவாகச் சிலாகித்துப் பேசும் பாபா, தமது கான்டீனிலேயே பொதுச் சமையலில் காரத்தையும் மசாலாக்களையும் அநுமதித்திருக்கும் 'குறை'யில், ''பாவம்! நம்மைத் தரிசிக்க வந்திருக்கும் குழந்தை களின் நாவுக்குத் திமிர்க் கட்டுப்பாடு போட்டு அவர்களை சிரமப்படுத்துவானேன்?'' என்ற அநுதாபத்தைக் காணலாம்....

Koviloor Digital Library

பிரசாந்தி மந்திர பஜன்கள் ஒவ்வொரு வேளையும் ஒரு மணிதான் அதிகபட்சமாக நடக்கும். பாபா புட்டபர்த்தியில் இருக்கும் நாட்களில், பாதி பஜனில் எழுந்தருளி அப்புறம் பத்து நிமிஷத்துக்குள்ளேயே முடித்துவிடுவார். சிவராத்ரி போன்ற விழாக்கள் தவிர நீண்ட நேர பஜனை பிரசாந்தி நிலயத்தில் நடப்பதில்லை. இது பல பக்தர்களுக்குக் குறையாக இருக்கிறது. ஆனால் ஸ்வாமி மனுஷதத்வம் நன்கறிந்தவர். ஒரு மணிக்கு மேல் பஜன் நீண்டால், இப்போது குறைப் படுபவர்கள் உள்பட, பலருக்கு அதில் ஈடுபாடு சாயத் தொடங்கும் என்று அவர் அறிவார். 'முடியாதா?' என்ற எண்ணம் தலைதூக்குவதைவிட, 'முடிந்துவிட்டதே!' என்ற குறை இருப்பதே சிலாக்கியம் எனக் கருதுகிறார். இன்னொன்று: அநேக பஜனைகளில் நடுவே சிலர் (பிறர் தொடர்ந்து பாடாமல்) கீர்த்தனங்கள், விருத்தங்கள் முதலியன பாடுகிறார்கள். இவை மிக நன்றாகவே இருந்தாலும்கூட, சில சமயங்களில் பக்தர் கூட்டம் முழுதையுமே ஈர்த்தாலும்கூட, நீடித்து ஒரு சங்கம் முழுதும் இறை நினைவில் ஈடுபட்டிருக்க உதவுவ தில்லை. எளிய பஜன்களைப் பிறரும் திருப்பிப் பாட வேண்டி யிருக்கையில்தான் அவர்களது மனம் அதில் ஓரளவேனும் ஆழ ஈடுபடுகிறது. இதனால்தான் பிரசாந்தி பஜனில் பஜன் தவிர கிருதிகள், விருத்தங்களுக்கு அவர் இடம் தரவில்லை.

சிக்கனம் என்பது ஸ்வாமியிடம் கற்றுக்கொள்ள வேண்டிய இன்னொரு பாடம். வீணாகப் பைஸா செலவழிக்க மாட்டார்; மற்றோரைச் செலவழிக்க விடவும் மாட்டார். கோரிக்கைக்குத் தேர்வுசெய்ய வெளிவரும்போதும், சிற்றுண்டிக் காக எதிரறை செல்லும்போதும் எத்தனை ஞாபகமாக மின் விசிறியை அணைத்து விடுகிறார்? மங்களூர் தையல்காரருக் குத் தாம் வாக்களித்திருந்த பிரயாணச்செலவில் ஷால்மன் தபாற்கூலிக்காகக் கொடுத்திருந்த சிறு தொகையைக் கழித்துக் கொண்டே ஸ்வாமி கொடுத்ததை முன்பே கண்டிருக்கிறோம். இந்த 1976 ஏப்ரிலில் சென்னையில் ஒரு காட்சி ஆச்சரியமாக இருந்தது. பக்ஸ் சாலைப் பந்தரில் தரிசனம் சாதித்துப் புறப்படவிருந்த ஸ்வாமி மேடையில் மீண்டும் ஏறினார்; அங்கே தாம் போட்டிருந்த சாதாரணக் கைக்குட்டையைக் குனிந்து எடுத்துக்கொண்டு இறங்கினார்!

ஸ்வாமி வள்ளல்களில் வள்ளல். சிக்கனத்திலும் நிபுணர். வண்மைக்கு அவர் போல் எவருண்டு? நிறுவனங்களுக் காகவும், தனி மனிதர்களுக்காகவும் எப்படி அள்ளி அள்ளித் தருகிறார்? முன்னமே சொன்னாற்போல் தமது மோடார் கார்கள், கம்பளிகள், வளர்ப்பு மிருகங்கள் முதலியவற்றைப் பிறருக்கு அநாயாசமாக ஈந்துவிடுவார். பிறகு அது பற்றிப் பேசவும் மாட்டார். என்ன பெருந்தன்மை நம் பெருந் தகைக்கு? பாபாவிடம் பொருளுதவி பெற்றவர்கள் நூலாசிரிய ரிடம், "தயவுசெய்து தப்பித் தவறிக்கூட இதைப் பிரசுரித்து விடாதீர்கள். ஸ்வாமிக்குக் கட்டோடு பிடிக்காத காரி யம் தம் கொடையைப் பிரகடனப்படுத்துவதுதான்" என்று

Koviloor Digital Library

மன்றாடிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். கொடையோடு, 'கொடுத்தோம்' என்ற உணர்வையும் கொடுத்து ஒழித்துவிடும் நம் ஸாயிக்கண்ணன். அவரை ஸாயிக்கர்ணனாகவும் விவரித்து எழுதமுடியாமல் செய்துவிட்டார்.

அவரது செல்லங்களாக நாம் நினைத்த வளர்ப்பு மிருகங்களையும் அவர் ஈந்து விடுவதில் பற்றின்மையைப் போதிக்கிறார். தம்மிடம் அவை இருந்தவரையில் அவற்றிடம் காட்டிய ஈடுபாட்டிலோ நமக்குக் கடமை, பிரேமை முதலியவற்றைப் போதிக்கிறார்.

அனந்த கல்யாண குணஸாகரமான அவர் எந்தப் பண்பைத்தான் நமக்கு வாழ்க்கை உதாரணத்தால் போதிக்காமல் விட்டார்?

நன்றியுணர்வு என்பதுதானே மனித தர்மங்களில் தலையானதென தமிழ்மறை சொல்கிறது? 'நன்று அல்லது அன்றே மறக்கும்' ஸ்வாமி நன்றி மறக்கவே மாட்டார். அடிநாளில் இவருக்கு இடி சோறு போட்டவர் உள்பட எல்லோருக்கும் சமயமறிந்து அருளும் பொருளும் வழங்கியிருக்கிறார். திருவனந்தபுரத்தில் கவர்னரைக் காக்க வைத்து, முதலில் 'ஆசிரியர்' ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி அய்யங்காரின் இல்லத்துக்குத்தான் சென்றார். ஹார்ஸ்லி ஹில்ஸ் எருமை நீரெடுத்து வந்ததை 'ஞாலத்தின் மாணப் பெரிதாக'க் கொண்டு அதற்குப் பிரசாதம் அருளினரே! தமக்காகக் கூடும் கூட்டத்தை ஒழுங்கு செய்கிறார்கள் என்பதால் போலிஸாருக்கும், வாலன்டீர்களுக்கும் விட்டுப் போகாமல் தனிப் பரிசு தருபவர் நம் ஸ்வாமி.

*

இப்படி அவரது 'அகணித குண கண'ங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம். ''(ஸாயி)ராம நீ ஸமான மெவரு?'' என்று பாடலாம்.

"Work is inevitable, it must be so; but we should work to the highest purpose"

என்று ஸ்வாமி விவேகாநந்தர் சொன்னபடி, நம்மால் தவிர்க்கவே முடியாத செயலை உத்தம லக்ஷியமான ஆத்மாநுபவத்துக்கு வழியாக்கிக் கொள்ளும் கர்மயோகத்தைப் புரிந்து காட்டுகிறார் ஸ்ரீ ஸத்யஸாயி. காரியம் வெளியாகையிலேயே குண நலன்களும் வெளியாகின்றன. மானுட ரீதியான காரியம்போலவே குணங்களும் மானுடமானவையே. ஆனாலும் அவற்றின் முழுமையால் தெய்விகமாகி விடுகின்றன.

காரிய நெரிசலில் குணம் கெட்டு விடாத அதி சிறப்பை ஸ்வாமி காட்டுகிறார். அவரைப் போல ஓயா அலுவல் இருப்பின் நாம் மற்றவர்களிடம் எரிந்து விழத்தான் செய்வோம்.

Koviloor Digital Library

நமக்கு மனத்தின் வாடாத மலர்ச்சியைக் காட்டும் முன்னுதாரணம் ஸ்வாமியே. இதற்குப் பெரிய சான்று, இருவேளையும் கோரிக்கை கொடுக்கும்போது பலரது வாழ்வின் அவல, அசங்கிய, அழுத் துயரங்களில் முழுகி வரும் ஸ்வாமி, உடனேயே அணுக்கத் தொண்டரோடு ஹாஸ்ய அதிர்வெடிகளை வீசிவிட்டு பஜனுக்கு வருவதுதான்.

முடிவாக மானுடஸாயியின் பெருங்குணம் அவரது நெருக்கப் பண்புதான். நம்மில் ஒருவராக அந்த தெய்வத்தை நாம் கொள்ளுமாறு செய்வதுதான். கோரிக்கையின்போது நம் இருள் வாழ்வுக்குள்ளேயே அவர் முழுகி நிற்கும்போதும் சரி, நம்மை அதிலிருந்து இழுத்துப் போடுவதாக வாக்களிக்கும் ஒளிக் கடவுளாக இலங்கும்போதும் சரி, அவரிடமிருந்து நாம் விலகி நிற்காமல், ஒரு மானுடமான கதகதப்பை உண்டாக்கி விடுகிறார். அந்தச் சிரிப்பிலும், பேச்சிலும், தோற்றத்திலும் எளிமையான, கலமான, மானுட நல்லியல்பை — bonhomie என்று ஆங்கிலத்தில் சொல்கிறார்களே, அதை — அடர்த்தியாக உணர்வோம். அத்தனை அடர்த்தியிலும் அது லேசாகவே இருக்கும். இதுதான் மானுடஸாயியின் உயிர்நாடி. அதற்காக அவரிடம் நாம் மரியாதை கெட்டு நடந்துவிட முடியாது. கங்கையில் எத்தனை புரண்டாலும் பக்தி குறைகிறதா? எப்போதோ கிட்டும் இந்த கங்கா ஸ்நானம் பிரசாந்தி வாசிகளுக்கு அனுதின அநுபவமாகும்.

★

கடைசியாக எல்லாமே அடங்கினால்தான் ஆனந்தம் என்பதையே ஆசிரமவாசிகள் ஓரளவு சிரமத்தோடு ஏற்கிற நிலையில்தான் சிறிது காலமாக பாபா அவர்களை நடத்தி வருகிறார். தமது ஸ்தூல தரிசன, பாத ஸ்பரிசன, சம்பாஷணையில் அவர்களுக்குள்ள ஆர்வமும் அடங்கி, அவர்கள் அந்தர்யாமியான பரம்பொருளை அநுபவித்துப் பழகுவதற்கே, ஓராண்டுக்கு மேலாக ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறார். எனவே முன்போல் அவர்களிடம் ஸ்தூலத்தில் நெருங்கி ஆட்டம் போடுவதில்லை. ஜீவன் தன் சிறிய நானை விட்டால் மட்டும் போதாது: மேலே ஏற ஏற, இவ்வாறு ஏற்றும் அவதாரனையும் விட்டுப் பெரிய நானாக வேண்டும் என்ற மகாத் தியாகத்தை அவர்களுக்குப் போதிக்கிறார். "நான் இந்த ஸ்தூல ரூபத்தோடு முடிந்துவிடவில்லை. ஒரே பெரும் இறுதி நானாக இருப்பதும் நான்தான். எனவே அந்நிலை அடைகிறபோது ஸ்தூலமான என்னை விடவேண்டுமே என்று நீங்கள் கலங்கலாகாது. பிரித்து வைத்து என்னிடம் நீங்கள் செலுத்தும் அடர்ந்த பக்தி, அன்பு, நன்றி இவற்றைவிட நானாகவே நீங்கள் ஆவதைத்தான் உவக்கிறேன்" என்ற ஒப்பற்ற வாசகங்களை மொழிகிறார்.

ஆனாலும் ஆனாலும்..மாமதுர ஸ்தூல ஸாயியை அவர்கள் எப்படித் தியாகம் செய்ய முன்வர முடியும்? உரையற்ற உறவற்ற ஏக நிலையை அவர் சொன்னாலும்.

Koviloor Digital Library

ஒய்வும் ஒழிதலும் இல்லாமல்—அவன்
உறவை நினைத்திருக்கும் உள்ளம்
வாயும் உரைப்பதுண்டு கண்டாய்—அந்த
மாயன் புகழினை எப்போதும்

என்ற தவிப்பு நிலையில்தான் இவர்கள் இருக்கிறார்கள். காரணம், ''நேசம் மறக்கவில்லை நெஞ்சம்''! ஏன் இவர் அத்தனை நேசத்தை அவர்களிடம் பொழிந்தாராம்?

கண்ணனன்பில் திளைத்த கோபியர், பிறகு அவன் விட்டுச் சென்றபின் உத்தவரிடம் துடித்துத் துடித்துச் சொன்னதெல்லாம் ஸாயி பாகவதத்திலும் திரும்புகிறது.

பிறகு கோபியருக்கு நடந்தது இவர்களுக்கும் இனி நடக்கத்தான் வேண்டும். அதாவது அவர்கள் எப்படி உள்ளும் புறமும் அனைத்தும் கண்ணனும் ஒரே மெய்ப்பொருளையே உணர்ந்தவரோ அப்படியே இவர்களையும் ஸாயிக்கண்ணர் உய்விப்பார். அந்த மஹாநுபூதிக்குப் பேற்று நோய்தான் இப்போது இவர்கள் படும் துன்பம்.

அந்த நோவிலேயே இவர்களது கர்மாவும், அதை அறிந்து அநுதபிக்கும் நம் கர்மாவும் ஓரளவு விலகும். நமக்கே கண்ணீர் வருகிறது—இவர்கள், ''பிரசாந்தி நிலயத்தைப் பிரசாந்தி மந்திரமாக்கி ஸ்வாமி என்றைக்கு கோபுரமும் விமானமும் எடுத்தாரோ, அன்றிலிருந்தே எங்களைப் பொறுத்த வரை அதுகாறும் நடமாடும் தெய்வமாக இருந்தவர், நகராத, பேசாத கோயில் மூலவராகி விட்டார்'' என்னும்போது.

'நடமாடும் தெய்வம்' என்றவுடன் காஞ்சிப் பெரியவர்களின் நினைவு வருகிறது. ஸ்வாமிக்கும் அவருக்கும் பல ஒப்புவமை பார்த்தோம். அதில் இதுவும் சேருகிறது. அவரும்தான் என்னப் பேச்சுப் பேசினார், லீலா விநோதங்கள் செய்தார்? இப்போது அதெல்லாம் எவ்வளவு அடங்கியே விட்டன? பாதி நாளுக்கு மேல் காஷ்ட மௌனமாக அல்லவோ இருக்கிறார்? உலகுக்கு ஏற்படவிருக்கும் மகத்தான கலி பாதையை நலிவிக்கவே இவ்விரு மஹா புருஷர்களும் இப்படி ஒரு விரக்தி விரதம் அநுஷ்டிக்கிறார்களோ? இப்போதுதான் இருவரிடமுமே அகில உலகிலிருந்தும் ஏராளமானவர் ஆகர்ஷிக்கப்பட்டு வருகிறார்கள். எனவே சிலரிடம் விரக்தி நடிப்பிலேயே பலரை இழுக்கும் ரக்தியும் இருக்கிறதோ?

பழவடியார் தாமாகச் சற்று விலக வேண்டும் என்றும் பாபா அவர்களுக்கு உணர்த்துவதுண்டு. இவர்கள்தாம் நிறைய அவரை அநுபவித்து விட்டார்களே, இனி அதில் ஓர் அம்சமாவது மற்ற பக்த கோடிகளுக்கு இவர்கள் அநுமதிக்க வேண்டாமா?

Koviloor Digital Library

எத்தனை விட்டேற்றியாகத் தோன்றினாலும் ஸ்வாமி அவர்களை விலகுவதோ, விடுவதோ நடவாத காரியம். ''ஸர்வாத்மாவான என்னிடமிருந்து உங்களுக்குப் பிரிவு என்பது ஒருபோதும் இல்லை'' என்று கோகுலவாஸியருக்குக் கண்ணன் அனுப்பிய தூது இன்றைய பிரசாந்திவாஸிகளுக்கும் பொருந்தும்.

விட்டு விடுவதற்கா ஆதியில் இவர்களை அப்படிக் கட்டி இழுத்தார். ஷிர்டிபாபா சொல்வார்: ''என் பரிஜனங்களை நான் என்னோடு கயிறு போட்டுக் கட்டிக் கொண்டிருக்கிறேன். நீங்காத பந்தம் இது. அவர்கள் என்னை நீங்க நினைத்தாலும் விடமாட்டேன். விளையாட்டுப் பிள்ளைகள் மைனாவின் காலில் ஒரு கயிற்றைக் கட்டித் தங்களோடு பிடித்துக் கொள்கிற மாதிரி இவர்களைப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறேன். கயிற்றின் நீளம் வரை பட்சி பறந்தாலும், பிய்த்துக்கொண்டு ஒரேயடியாகப் போய்விடாதபடி பிடித்திழுத்துக் கொள்வேன்.''

பர்த்தியவதாரத்திலும் அவர் இதை நிச்சயமாகத் தொடருகிறார். சில பரிஜனங்களை அவர் விரட்டுவதை மட்டும் முன் சொன்னோம். ஆனால் பரிஜனங்கள் மட்டுமின்றி வெளி பக்தரிலும் பலர் பக்தி இழந்து பாபாத் தொடர்பை நீக்கிக் கொள்ள முயலும் போதெல்லாம் அந்த மஹா அம்மா வலிந்து இழுத்துக் கொள்ளத்தான் செய்கிறாள். இப்படியே ஆசிரமவாஸிகளிலும் ஆசாபங்கமுற்றோ, அல்லது புரளிகளை நம்பியோ ஓடிவிட யத்தனித்தவர்கள் உண்டு. நடு வழியில் பாபா அவர்களை விதவிதமாகத் தடுத்தாட்கொண்டு, அற்புதத் தெளிவு தந்து, திரும்பி வரச் செய்திருக்கிறார். எதற்காக? அவர்களால் இவருக்கு என்ன ஆகவேண்டும்? அவர்களை உய்வித்தே தீருவது என்ற அருள் விம்புதான்!

* * *

''அனைத்தும் ஒன்றே என்ற ஞானம் கலவாத பக்தி பசுவைப் போல ஒரு தெய்வத்திடமிருந்து இன்னொன்றிடமும், ஓர் உணர்ச்சியிலிருந்து இன்னொன்றுக்கும் தாவிக்கொண்டே இருக்குமேயன்றி சாசுவத சாந்தி தராது. பக்தியில்லாத வெறும் ஞானமோ ஒருத்தனை வறட்சியாக்கிவிடும். பெரும் பாலான மக்கள் உள்ள நிலையில் உரிய கர்மாவை (கடமையை) ஆற்றாமல் பக்தி, ஞானம் என்று போவதில் பலன் காணமுடியாது. எனவே ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு, பக்தியில் தோய்ந்து, கர்மாவைச் செய்யுங்கள். ஞானம் புத்தியைத் தெளிவாக்குகிறது; பக்தி மனத்தை மிருதுவாக்குகிறது; கர்மா உடலைக் காரியத்தில் ஏவி மனம், புத்தி இரண்டும் கண்டபடி அலையாமல் கட்டுப்படுத்திச் சுத்தம் செய்கிறது. ஞானம், பக்தி, கர்மம் மூன்றும் கலந்த திரிவேணி சங்கமத்தில் முழுகுவீராக'' என்பதை உய்வுக்கு

Koviloor Digital Library

வழியாகக் கூறும் பாபா தாமும் இம் மூன்றையும் செய்து காட்டுகிறார். ஒப்பாரும் மிக்காரும் இல்லாத கர்ம யோகியாகக் கடமைகளை ஆற்றுகிறார். நம் கடமை சிறிது; அவரது கடமை மகா பெரிது; உலகனைத்தும் தழுவுவது. அதிலேயே ஒரு குட்டி உலகமாம் பிரசாந்தி நிலயவாஸிகளுக்காக அவர் கடமையை வழுவற ஆற்றுவதிலேயே உலக வாழ்வில் உள்ளோர் யாவரும் எப்படி தர்ம ஜீவனம் நடத்தவேண்டும் என்று வெகு நுணுக்கமாகக் காட்டி விடுகிறார். "My life is My message: என் வாழ்வே நான் தரும் உபதேசம்" என்று அவர் சொல்வது இந்தக் கர்ம யோகத்தைத்தான்.

மாளாக் கடமையை ஓயாது ஆற்றியும் எப்போதும் சூரியோதயத்தின் இளவளத்துடன், தெளிவுடன் இருப்பதற்குக் காரணம் அவரது திவ்வியப் பிரேமைதான். இப் பிரேமையே அவர் புரியும் பக்தியோகம்.

இப்படிப்பட்ட கலப்பற்ற பிரேமை எப்படிப் பிறக்கிறதெனில் அனைத்தும் ஒன்றே என்ற அநுபவத்தில் அவர் ஆழ்ந்திருப்பதால் தான். அந்நியமாக ஏதுமே இல்லை, யாவுமே தான் என்ற நிலையில் பிரேமை தவிர துவேஷம், பயம் முதலான உணர்வுகளுக்கு இடமேது? இந்த ஏகத்வ அநுபவமே ஞானயோகம்.

தம்மிடம் பிரேமயோகம் புரியும் அணுக்கமான பரிஜனங்களும், தாம் இந்த சரீரத்தோடு முடிந்துவிடவில்லை என்று உணர்ந்து அனைத்தும் தாமாகக் காணவேண்டும் — ஞானியராக வேண்டும் — என்றே அவர்களுக்கு ஸ்தூல நெருக்கத்தைக் குறைத்து வருவதாக ஸ்வாமி கூறுகிறார். ஸ்தூலத்தில் ஒதுங்கி யிருந்தாலும் அவர்களைப் பக்குவப்படுத்துவதில் தமது அருள் எக்காலும் சலிக்காது, சளைக்காது என்று வாக்குறுதி தருகிறார். "நான் எட்டத்தில் இருப்பதால் உங்களுக்குச் செய்ய வேண்டியதைச் செய்யத் தவறிவிடுவேனா என்ன? பழமொழி தெரியாதா? வட்டிச்சே வாள்ளு மநவாரைத்தே எக்கட கூர்ச்சுண்டே ஏமி? (பரிமாறுகிறவன் நம்மவனாக இருக்கும்போது பந்தியில் எந்த மூலையில் உட்கார்ந்து கொண்டால்தான் என்ன?)"

பாபாவை 'மநவாரு'வாக — தங்களவராக — அடைந்த இந்த மகாபாக்கியசாலிகளுக்கு அந்தப் பரிசாரகர் தமது ஸ்பெஷல் பரிசான ஸ்வீட்டைப் பரிமாறாமல் விடமாட்டார். அதற்குப் பெயர்தான் சாந்தம். இன்று இவர்களது மனம் அலை மோதினாலும், அது மோத இடமின்றிப் பிரமோத சாந்தமாக, பிரசாந்தமாக ஒரு நாள் நிறையத்தான் போகிறது!

Koviloor Digital Library

அத்தியாயம்—55

சாந்த ஸாயி (= ஸத்ய ஸாயி)

ஓம் நம: ப்ரணவார்த்தாய சுத்த ஞானைக மூர்த்தயே |
நிர்மலாய ப்ரசாந்தாய தக்ஷிணாமூர்த்தயே நம: ||

(ஓம்! பிரணவப் பொருளும், தூய அறிவாம் ஏக வடிவனும், அமலனும், அமைதி நிறைவாம் பிரசாந்தி நிலையனுமான தக்ஷிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.)

— ஆதி சங்கரர்

வேத ஸத்யம் ப்ரஹ்மேதி ஸத்யம் ஹ்யேவ ப்ரஹ்ம ||

(ஸத்யம் பரம்பொருள், ஸத்தியமே பரம்பொருள் என்றறிக.)

— பிருஹதாரண்ய உபநிஷதம்

இன்றைக்கும்தான் பாருங்கள், பிரசாந்தி நிலையத்தில் எத்தனை அன்பு அலைகள் வீசினாலும், அங்கு எத்தனைதான் ஆரவாரமும் அலைச்சலும் கொப்பளித்தாலும் இவற்றையெல்லாம் விஞ்சிக் கொண்டு, அங்கே பூரித்து நிற்பது இனம் தெரியாததோர் அமைதிதான். மார்க்பெட் அழகுறச் சொல்வதேபோல் பிரசாந்தி நிலையத்துக்குள் போய்விட்டோம் என்பதால் நாம் பிரச்னைகளிலிருந்து பூரணமாக விடுபட்டு விடவில்லைதான்; ஆயினும் பைனாகுலரைத் திருப்பி வைத்துக்கொண்டு பார்க்கும்போது பொருட்கள் எங்கோ தொலை தூரத்தில் சிறுத்துக் காணப்படுவதேபோல் நம் பிரச்னைகள் எட்டத்தே அற்பமாகி நிற்கின்றன; நம்மை அமைதியாக இருக்க விடுகின்றன.

பிரசாந்தி நிலையத்தின் இப் பிரத்தியக்ஷ சாந்திக்குக் காரணம் ஸாயியின் ஸாந்நித்யமே எனில் அவர் சாந்த ஸாயியாகத் தானே இருந்தாக வேண்டும்?

ஸத்தியம்—தர்மம்—சாந்தி—பிரேமை இவையே வாழ்வின் நான்கு ஆதார ஸ்தம்பங்கள் என்பவர் பாபா. அவரையே நாம்

Koviloor Digital Library

தர்ம ஸாயியாக, அதன் அங்கமான வேத ஸாயியாக, ஸத் குரு ஸாயியாக, கர்ம ஸாயியாகக் கண்டுவிட்டோம். பிரேம ஸாயியை யும் அதன் கனிந்த கனிவான தியாக ஸாயியையும் தரிசித்து விட்டோம். அவ்வாறெனில் ஸத்திய—சாந்த ஸாயிக்கள் மீத முள்ளவரா?

இல்லை. இவ்விருவரும் ஒருவரேதான். ஸத்தியமேதான் சாந்தம்.

ஸத்தியம் என்பது பல நிலைகளில் பலவாக உள்ளது. தர்மம் என்பதாக எது வெளிப்படுகிறதோ அதன் உள் வடிவமே ஸத்தியம் என்பது ஒரு நிலை. ஸத்ய—தர்மம் என்று சேர்த்துச் சேர்த்துப் பேசுவது இங்குதான். ''ஸவிதா ஸத்ய—தர்மா'' என்று இறைவனையே இந்த இரட்டையின் ஒட்டு வடிவாக வேதம் கூறுகிறது. வாழ்வின் உயிர்நாடியாக ஸத்ய—தர்ம—சாந்தி—பிரேமைகளை வகுக்கும் ஸ்வாமி, 'ஒன்றுக்கொன்று இணையான ஸத்தியம், தர்மம் என்ற இரு தண்டவாளங்களின் மேல் பிரேமை என்ற நீராவிச் சக்தியால் வாழ்க்கை என்ஜினைச் செலுத்தி சாந்தி என்றும் இலக்கை எய்த வேண்டும்' என்கையில், ஸத்தியத்தை தர்மத்தின் உட்தத்வமாகவே கொள்கிறார். 'வாய்மை' என்ற வாக்குச் சத்தியமும், 'மெய்ம்மை' என்ற உடலால் ஒழுகும் நடத்தைச் சத்தியமுமே தர்மம் என்றும், 'உண்மை' என்ற உள்ளத்தில் இலகும் சத்தியமே சத்தியம் என்றும் பண்டிதர் பகுக்கிறார்கள். இப்பொருளின்படி தர்ம ஸாயியே ஸத்ய ஸாயிதான். இங்கே ஸாதுவாக (நல்லதாக) இருப்பதே ஸத்தியம் என்று ஓர் இலக்கணம் கூறப்படுவதைக் கருத்தில் கொள்ள வேண்டும். ஸத்ய ஸாயியைவிட நல்ல வஸ்து எதுவுண்டு? ''எல்லையில்(லா) அந்நலம்'' என்று ஆழ்வார் சொன்ன மகா நல்லது அவரே.

ஆனால் இதற்கெல்லாம் மேலாக, பல நிலைகளில் பலவாக இன்றி, நல்லதைப் போலவே தீயது உட்பட எல்லாவற்றையும் உள்ளடக்கிய ஏகமான பரம்பொருளையும் 'ஸத்தியம்' என்கிறோம். எக்காலும் மாறுபடாமல் ஒன்றாகவே உள்ள பிரம்மமே ஸத்தியம் என்கிறோம். எப்போதும் உள்ளது என்பதாலேயே 'உண்மை'; உள்ளத்தின் நன்மை என்பதால் மட்டும் 'உண்மை'யல்ல. இந்த உண்மை நிலையில் அனைத்தும் தாமாக, அதேபோதில் அனைத்தி லிருந்தும் விடுபட்ட தாமாக இலங்கும் பிரம்ம ஸ்வரூபமே நம் கதாநாயகராதலால் அவர் ஸத்ய ஸாயியேதான்—பரம ஸத்ய ஸாயி!

இந்த ஸத்ய ஸாயி ஸதாவும் சாந்த ஸாயிதான். ''கர்ம பல த்யாகாத், சாந்திர் அனந்தரம்'' என்றான் கண்ணன். அதாவது, ஏராளமான காரியங்களைச் செய்துகொண்டிருப்பதால் ஒருவருக்கு சாந்தி இல்லை என்றில்லை. எத்தனைக் கருமம் புரிந்தாலும் அதிலே சொந்தமான பலனில் இச்சையை விட்டு விட்டால் பரம சாந்தமாக இருக்கலாம். இப்படித்தான் கர்ம ஸாயி சாந்த ஸாயியாக இருக்கிறார். அது 'மனச் சலனம்

Koviloor Digital Library

இல்லை' என்கிற எதிர்மறை சாந்தமில்லை. 'மனம் கடந்த ஆத்மா இருக்கிறது' என்கிற உயிருள்ள சாந்தம். இந்த ஆத்மாவேதான் பிரம்ம ஸத்தியம். புயலுக்கெல்லாம் கருவான அமைதியிடம் போல், அணுவுள் பரமாணுக்களின் சுழற்சிக்கெல்லாம் நடுவே சுழலாமல் உள்ள சாந்த மையம் போல், நம் மன ஓட்டம் செயலோட்டம் இவற்றுக்கெல்லாம் ஆதாரமாயிருந்தும் நிச்சலமாக உள்ள சாந்தமான ஸத்தியத்தின், ஸத்தியமான சாந்தத்தின் வடிவமே நம் காவிய நாயகர்.

ஆனால் இவரை எப்படி வர்ணிப்பது? எல்லாமுமாய், எதுவுமே அல்லாததுமாய் உள்ள ஸத்தியத்தை எப்படி விளக்குவது? எந்த உணர்ச்சியுமே அற்று, எல்லா உணர்ச்சிகளுக்கும் ஆதாரமாக இருந்து கொண்டிருக்கும் பேருணர்வாம் சாந்தியை எப்படி விவரிப்பது? வாக்கும் மனமும் பிடிக்க முடியாத ஸ்தானமல்லவா அது?

ஆயினும் ஸத்ய ஸாயி சரிதத்தில் ஸத்ய சாந்தத்துக்கு என ஓர் அதிகாரம் ஒதுக்காவிட்டால் மனத்துக்குத் திருப்தியாக இல்லையே!

எனவே, வாக்கும் மனமும் பிடிக்க முடியாத ஸ்தானம் மானுட உடல் கொண்டுள்ளபோது தனக்கு வாஸ ஸ்தானமாகக் கொண்டுள்ளதே, அந்தப் பிரசாந்தி நிலயத்தின் கதையை இங்கு பார்ப்போம்.

"பிரசாந்தி நிலயம்!"—புட்டபர்த்தி பகவானின் இத்திருஇருக்கையின் பெயரிலேயே சாந்தியும் சத்தியமும் உள்ளனவே. 'பிரசாந்தி'யில் சாந்தி. 'நிலயம்' என்றால் அனைத்தும் லயித்து மறைந்துவிடும் பிரம்மமாம் சத்தியம் என்று பொருள் கொள்ளலாம்.

நம் ஸ்வாமி எப்போதும் உள்ளே சாந்தம். அச் சத்திய சாந்தத்தில் அன்பாம் சிவம் பிறந்தது. அன்பைக் கொட்டவே ஆற்றல்—சக்தி — உதித்தது. அவரை சாந்த—சிவ—சக்தி எனலாம்.

நாம் அவருக்கு நேர் எதிர். முதற்கண் நமக்குத் தெரிவது நம் சக்திதான். இந்த அற்ப சக்தியைப் பெரிதாக எண்ணி விபரீதமாகப் பயன்படுத்துகிறோம் — அற்ப சக்தியும் மகா சக்தியுடன் நம்மைச் சறுக்குப் பாதையில் கீழே கீழே உருட்டுகிறது. இப்படிப் பாழாகாமல் மேலே மேலே எழும்புவதற்காக சாந்த சிவசக்தியன்னை நம் ஆற்றலை அன்பில் முழுக்கக் கற்றுக் கொடுக்கிறாள். தர்மப் பாதையில் நாம் மேலேறிப் போனால், உச்சியில் அவளும் நாமும் ஒன்றிய, அனைத்தும் ஒன்றிய, அமைதியில் சேர்ப்பாள். ஆக, நம் பாட்டை சக்தி—சிவம்—சாந்தம் என்று அமைகிறது.

சாந்தமே நம் இலக்கு என்று விளக்கவே சக்தி தனக்குக் கோயில் எடுத்துக்கொண்டபோது அதற்குப் 'பிரசாந்தி நிலயம்'

Koviloor Digital Library

என்று அமுதப் பெயரிட்டாள். எத்தனை எத்தனையோ அறச் செயல்களுக்கு அது வளமான வயலாயினும், அதற்கு தர்ம க்ஷேத்திரம் என்று பெயரிடாமல் பம்பாய்க்கு தர்ம க்ஷேத்திரத்தைக் கொடுத்தார். அமைதியோடு கூடிய அன்புக்கு அது நிலைக்களனாயினும் அதற்கு சிவ மந்திரமெனப் பெயரிடாது ஹைதராபாத்துக்குச் சிவத்தைத் தந்தார். விநோதம் செறிந்த லீலைகளுக்கு அது களஞ்சியமாயினும் பிருந்தாவனம் என்ற பெயரை ஒயிட் ஃபீல்டுக்கு ஈந்தார். அழகுகளின் அரங்கம் இது எனினும், சுந்தரத்தைச் சென்னைக்கு வழங்கினார். தமது தலையாய வாஸ ஸ்தானத்துக்குப் பிரசாந்தி என்றே பெயரிட்டார். சக்தி மயமாக நிமிர்த்து மதர்த்து ஆற்றல் பெருக்கைப் பொழிந்தே உலகை ஈர்க்கும் ஸ்வாமி, சாந்தி நிலயத்தை முக்கிய இருக்கை யாக உவந்தது அர்த்தபுஷ்டி நிரம்பியதாகும்.

இதற்கேற்பப் பிரசாந்தி நிலயத்தில் ஆதார சத்தியத்தின் சாந்த மென் காற்றையே நாம் விசேஷமாக அநுபவிக்கிறோம்.

பிரசாந்தி நிலயத்தின் பெருமை அலாதியானது. ஸ்வாமிக்கு எத்தனை ஊர்களில் எத்தனை இருக்கைகள் இருந்தாலும், ''பிரசாந்தி வாஸா!'', ''பிரசாந்தி நிலயே!'' என்றெல்லாம் தான் அவரைக் கீர்த்தனம் செய்கிறோமே யன்றி, மற்ற இருக்கை களைச் சொல்வதில்லை.

பிரசாந்தி நிலயத்தைப் போலவே ஆத்ம தத்வத்தின் சிறப்பான உருவகமாக உள்ள புட்டபர்த்திக்கும் இத் தனிப் பெருமை உண்டு. சில ஆண்டுகளாக பாபா புட்டபர்த்தியில் இருப்பதைவிட அதிக நாட்கள் ஒயிட் ஃபீல்ட்டில்தான் தங்கி வருகிறாரெனினும் கூட, ''பர்த்தி புரீசா'', ''புட்டபர்த்தீசா'' என்றெல்லாந்தான் அவரைத் துதிப்போமே யன்றி ''ஒயிட் ஃபீல்ட் வாஸா'' என மாட்டோம்! புட்டபர்த்திக் கதையை ஆரம்பத்திலேயே பார்த்து விட்டோம். இனி பிரசாந்தி நிலயத்தைப் பார்ப்போம்.

* * *

புட்டபர்த்தி மகாத்மியத்தில் பல அற்புதங்கள் உண்டெனில் பிரசாந்தி நிலயம் எழும்பியதிலும் எத்தனையோ அதிசயங்கள்!

ஒன்றை மட்டும் பார்ப்போம்:

மத்திய பஜனைக் கூடத்துக்கான நீண்ட நீண்ட கர்டர்களைப் புட்டபர்த்திக்கு எப்படிக் கொண்டு வருவது என்பது பெரும் பிரச்னையாக இருந்தது.

அவை பெனுகொண்டா ரயில் நிலயம் வரையில் எளிதே வந்துவிடும். ஆனால் அங்கிருந்து அவற்றை எப்படி எதனால் தூக்கி எடுத்து, எதிலே வைத்து, குண்டும் குழியுமான சாலை களிலும், மிகக் குறுகலான சந்துகளிலும், சாலையாகவோ

Koviloor Digital Library

சந்தாகவோ இல்லாத சித்ராவதி ஆற்றுப் படுகையிலும் கொண்டு வருவது?—என்ஜினியர் விசாரத்தில் ஆழ்ந்துவிட்டார்.

என்ஜின்கள் வெளியே இறைந்தன, ஒரு நள்ளிரவில் அனந்தப் பூரில் அவர் வீட்டருகே. ''ஏன் விசாரப்படுகிறாய்?'' என்றுதான் அந்த இயந்திரங்கள் ஏகமாக இரைச்சல் போட்டன போலும்!

வெளியே வந்து விசாரித்தார் என்ஜினியர்.

துங்கபத்ரா அணை வேலைக்காகப் போய்க் கொண்டிருந்த க்ரேன்தான் அது. வண்டி மக்கர் செய்து இங்கேயே நின்று விட்டது. எப்பாடு பட்டும் கிளப்ப முடியவில்லை. என்ன ரிப்பேர் என்றும் புரியவில்லை.

அணைக்கட்டு ஊழியர்கள் கையைப் பிசைய, இதுவரை கையைப் பிசைந்துகொண்டிருந்த நம் என்ஜினியரோ உவகை கொண்டார். வாயிக் கர்ணனின் விஷமக் கையையே இதில் கண்டார் அவர். அன்று கர்ணனின் நாக பாசம் வேகமே வர அர்ஜுனனின் நேரரை அழுத்திய கை அன்றோ?

பர்த்திக்கு ஓடினார் பொறியாளர்.

பகவான் ஏதேனும் செய்தால், வாய்ப்பாக வந்துள்ள க்ரேன் வண்டியை உபயோகித்துக் கொண்டு கர்டர்களைக் கொண்டு வந்து விடலாம் என விண்ணப்பித்துக் கொண்டார்.

பகவான் என்ன செய்தார்? விஷமம் செய்யும் குட்டிக் கரத்தை சிறு சிறு அலைகளாக அசைத்தார். விபூதி வந்தது.

விபூதியை வைத்துக்கொண்டு க்ரேன் வாகனத்தை என்ன செய்வது என்று என்ஜினியர் கேட்கவில்லை.

அனந்தப்பூர் திரும்பினார்.

க்ரேன் வாகன ஓட்டுனரும், மற்றோரும் பரிகாசமாக எண்ணியபோதிலும் நமது பொறியாளர் பொறி கலங்கவில்லை. வண்டியின் என்ஜின் மேல் விபூதியைத் தூவினார். ஓட்டுனரிடம், ''ஸ்டார்ட் செய்து பாருங்கள்'' என்றார்.

பரமம் விசித்ரம் லீலா விபூதிதான்! திருநீற்றுப் பொடிகள் க்ரேன் வண்டியைத் தன்னிஷ்டப்படி ஆட்டுவிக்கும், ஓட்டுவிக்கும் சொக்குப் பொடியா யிருந்தன. பரிகாசம் செய்தோரைப் பரிகாசம் செய்துகொண்டு கிர்...கிர்...கிர் என்று ஊரை இரண்டு படுத்திக்கொண்டு புறப்பட்டு விட்டது அந்த க்ரேன் வாகனம்.

இந்தப் பேருதவிக்குக் கைம்மாறாக, அணைக்கட்டு நிர்வாகிகள் அந்த க்ரேனையே புட்டபர்த்திக்கு கர்டர்களை எடுத்துச் சென்று, தூக்கிப் பொருத்தத் தந்துதவினர்.

Koviloor Digital Library

குண்டும் குழியுமான சாலைகளில், குறுகலான சந்துகளில் அந்த நீள நீள கர்டர்களுடன் வண்டி எப்படி அநாயாசமாகச் சென்றது என்பது குண்டும் குழியும் குறுகலுமான நம் சித்தங்களுள்ளும் அலாக்காகப் புகுந்து புறப்படும் புட்டபர்த்தீசனுக்கே வெளிச்சம்!

திரும்பித் திரும்பி புக்கபட்டணம் வரை அந்த கனமான கர்டர்களைச் சமர்த்தாகக் கொணர்ந்து விட்டது க்ரேன் வண்டி.

ஆனால்...சித்ராவதி ஆற்று மணலில் முரண்டு பண்ணி விட்டது. பாபா வளைத்த வளைப்புக் கெல்லாம் தான் வளைவதைப் பார்த்து மனிதர்கள் தன்மீது பொறுமை கொண்டு விடப் போகிறார்களே என்று நினைத்து க்ரேன்—வாகனம் இடக்குப் பண்ண ஆரம்பித்தது. பெருமூச்சுக்கள் விட்டபடி ஆற்று மணலில் அழுந்த நின்று சோதித்து விட்டது!

சித்த ஓட்டம்தான் சித்ராவதி. அதன் சித்ரவதையைக் கடந்தாலே பிரசாந்தி நிலையை அடையலாம்.

பிரசாந்தி நிலயில் சேர்க்கும் மகா குரு நாதரே வந்தார். க்ரேன்—வண்டியின் பக்திக்கு மெச்சி நடுவழியிலேயே அதை எதிர் கொள்ள வந்தார் போலும்!

டிரைவர் ஸ்தானத்தில் தாமே அமர்ந்தார் — ஸநாதன ஸாரதி.

ஓட்டுச் சக்கரத்தை ஓடித்தார்.

கர ஸ்பரிச ஆனந்தத்தில் குதித்துக்கொண்டு கிளம்பி விட்டது வாகனம்! உற்சாக மூச்சு விட்டவண்ணம், மணலை வாரி இறைத்துக்கொண்டு கடகடவென்று முன்னேறியது.

கருட வாஹனர் கர்டருக்காகக் கொக்கு (க்ரேன்) வாஹனரானதும் ஒரு விந்தையே!

புட்டபர்த்தி அடைந்த கர்டர்கள் பஜனைக் கூடத்தின் நெடுதோங்கிய சுவர்களின்மீது ஏறியதும் சரி, பிற்பாடு இன்றளவும் பிரசாந்தி நிலயமும் அதன் சுற்றுக் கட்டிடங்களும் ஒரு குட்டி நகராக எழும்பியிருப்பதும் சரி, ஓரளவுக்குத்தான் இயந்திர சக்தியால். பெருமளவுக்கு அவை உருவானது, இவற்றில் ஈடுபட்ட நூறு நூறு ஊழியர்கள் கோஷித்த 'ஸாயிராம்' மந்திர சக்தியால்தான்!

கிணறு எடுப்பதற்காக வாடர்—டிவைனர்கள் ஓர் இடத்தைக் குறித்தார்கள். அவர்கள் செய்யும் 'டிவைனிங்' நீரோட்ட ஆழத்தை அநுமானிப்பதே. ஆழங்காணவொண்ணா 'டிவைன்' சக்தி கொண்ட பாபாவுக்கோ அநுமானம் என்பதே கிடையாது. இவர் சொல்வதெல்லாம் பிரமாணமேதான்! இப்போது இவர்

Koviloor Digital Library

டிவைனர்கள் குறித்த இடத்தைத் தேர்வு செய்யவில்லை. இரு தேங்காய்களை ஒன்றோடொன்று மோதி உடைத்து, இளநீரை வேறோர் இடத்தில் தெளித்தார். ''இங்கே வெட்டுங்கள்'' என்றார்.

அவ்வாறே செய்தனர்.

அந்தச் சிமையைக் கருத்தில் கொண்டால், அருகிலேயே நீர் கிடைத்துவிட்டது. ருசியோ? கற்கண்டுதான். ஐயன் தெளித்த இளநீர் மகிமையோ? உள்ளத்தின் மகிமையோ?

இது பிரசாந்தி வெளி வாயிலருகில் உள்ள பெரிய கிணறு. பல்லாண்டுகளுக்குப் பிறகு அனந்தப்பூர் கல்லூரியில் கிணறு எடுத்தபோதும், அபிவிருத்தியான புதிய பிரசாந்திக்கு டாங்க் வழியே குழாய் நீர் வழங்குவதற்காகச் சித்ராவதிக் கரைக் குன்றின் அடிவாரத்தில் கிணறு எடுத்தபோதும் பாபாவே வாடர்—டிவைனராக இருந்திருக்கிறார்.

நமக்குள்ளேயும் எங்கோ புதைந்துள்ள பிரேமை நீரோட்டத்தைக் கண்டுபிடித்து வெளிக்கொண்டு வருவார் என்பதைக் குறிப்பிடுகிறாரோ?

★

கிணறு எடுத்ததற்கு மட்டுமின்றி பிரசாந்தி நிலயத்தின் பல அம்சங்களுக்கு அன்பர்கள் தத்வார்த்தம் சொல்கிறார்கள்— தில்லை, திருவரங்கம், காஞ்சி காமகோட்டம் போன்ற க்ஷேத்திரங்களில் ஆலய அமைப்புக்கு பல ஆன்மிக உட்பொருள்கள் தருவது போல்.

தற்போது ராஜ கோபுரம் உள்ள பிரதானமான வடக்கு வாயில், அதைத் தாண்டிச் செல்கையில் திறந்த வெளியில் உள்ள ஸர்வ தர்ம ஐக்கிய சிற்பம் கொண்ட மந்திர முன்வாயில், பிறகுதான் பிரசாந்தி நிலய போர்டிகோ வாயில் என்று மூன்று உள்ளன. ஸ்தூலம், ஸூக்ஷ்மம், காரணம் என்ற முப்புரங்களைக் கடந்தே பிரசாந்த ஆத்மனை அடைவதை இது குறிக்கிறதாம். தமோ, ரஜோ, ஸத்வ குணங்களைக் கடந்து சாந்தி எய்துவதற்கும் இது உருவகமாகிறது.

பிரசாந்தி நகருக்கு வடக்கு வாயில் தவிரக் கிழண்டைப் புறத்தில் மட்டும் ஒரு பக்க வாயில் உள்ளது. 'ஓம்' என்று எழுதுகையில் பக்கத்தே ஒரு சுழியும், அடியிலே ஒரு சுழியும் இருப்பது போல் இவ்விரு வாயில்களும் ஓங்கார க்ஷேத்திரமான பிரசாந்தி நகருக்கு அமைவதாக ஒரன்பர் கூறினார். ஓங்கார கோஷத்துடனேயே நாளைத் தொடங்கும் தலத்துக்குப் பொருத்தம்தான். உடலுக்கு வலத்தே (இடத்தே அல்ல) உள்ள ஆன்மிக இதயமாகக் கிழண்டை வாசலைக் கொண்டால், வடக்கு வாசல் சரியாக மூலாதார ஸ்தானமாக இருக்கும். இதய வாசலால்

Koviloor Digital Library

காலும் பிரணவ ஸ்வரூபியும், மூலாதார அதி தேவதையும் ஒருவரேயான விநாயகப் பெருமான்தான். இதற்கேற்ப இரு வாயில்களுக்கு உள்ளேயும் நேராக மையத்தே பிள்ளையார் குடி கொண்டிருக்கிறார். இது சாந்தி நிலயம் என்பதற்கேற்ப மூலாதார வாயிலுக்கு நேரே உள்ள சக்தி கணேசர் சிறியவராகவும், இதய வாயிலுக்கு நேர் இலங்கும் சாந்த கணேசர் பெரியவராகவும் இருக்கிறார்.

நிலயத்தின் மையமான பஜனை கூடத்துக்கு முன்புறம் மூன்றும், பின்புறம் இரண்டுமாக ஐந்து வாயில்கள் இருப்பது பஞ்சேந்திரியம் அல்லது பஞ்ச கோசத்தைக் குறிப்பது என்கிறார்கள்.

இக் குட்டி நகரம் முழுவதையும் 'பிரசாந்தி நிலயம்' என்றும், பஜனைக் கூடமும் ஐயன் இருக்கையும் அமைந்த மைய மாளிகையைப் 'பிரசாந்தி மந்திரம்' என்றும் சொல்கிறார்கள். மந்திரத்தின் முன் உள்ள வட்டத் திட்டின் தத்வப் பொருளை பாபாவே விளக்கியுள்ளார். வட்டத்தின் வெளிச் சுற்றிலுள்ள புதர்ச் செடிகள் கொண்ட பகுதி காமக் குரோதாதிகளைக் குறிப்பதாம். உட்புறமாக அதை அடுத்துள்ள சிவப்புப் படி ரஜோகுண வேகங்களைக் கடந்து மேலே செல்லப் பணிப்பனவாம். இதனுள் இருக்கும் பச்சைப் பசும் புல் திட்டுத்தான் பிரேமை. இதற்கும் உள் வெற்றிடம். இதுவே சாந்தி. இங்கே யோக தண்டத்தைக் குறிக்கும் சிறு ஸ்தம்பம். குறுந்தூணின் உச்சியில் உள்ள கமலம் இதய மலர்ச்சியாம். அதில் புறப்படும் தீக் கொழுந்தே ஞானப் பரஞ்சோதி. இந்த மையத்துக்கு வெகு வெகு அப்பாலே, வட்டத்தின் வெளி ஓரத்தே உள்ள எட்டு செடிச் செட்டிகள்தாம், கண்ணுக்குக் கவர்ச்சியாயிருந்தாலும் ஸாதனை வட்டத்துக்குள் நுழையவே அநுமதி பெறாத அஷ்டமா ஸித்திகள். (ஸாதகனுக்கு ஸித்திகள் உதவவே உதவாது என்ற ஸ்வாமியின் கருத்தையும், அதற்கு அவர் தந்துள்ள இவ்வுருவகத்தையும் முன்னரே கூறியுள்ளோம்.)

*

பிரசாந்தி மந்திரத்தின் முக்கால்வாசிப் பாகத்தை நிரப்புவது பஜனைக் கூடம்தான். வடக்குப் பார்க்க அமைந்த மந்திரத்தில் கிழக்கு மேற்காக அமைந்தது இந்த பஜனை மன்றம். மன்றத்தின் கிழக்கு, மேற்கு இரு ஓரங்களிலும் இரு அரங்கங்கள் உண்டு.

மேலப் புற மேடையே பூஜா க்ருஹமாக உள்ளது.

கீழண்டை மேடையில் தற்போது பிரம்மாண்டமான கீதோபதேசச் சிற்பம் இடம் பெற்றிருக்கிறது. முன்பெல்லாம் இங்குதான் பக்தர் வீட்டுக் கல்யாணம், ஷஷ்டி பூர்த்தி முதலியன நடந்தன.

மேலண்டை மேடைப் பூஜா க்ருஹத்தில் நடுநாயகமாக, வெள்ளி நாகருடன், வெள்ளி விக்கிரஹ வடிவில் விளங்குகிறார்

Koviloor Digital Library

ஷிர்டி பாபா. இவரை நடுநாயகராக இருக்க வொட்டாமல் பின்னே ஒரு வேணுகோபாலன் நின்று பக்தர் கவனத்தைத் தானே பறித்து வந்தான். நீல நிறத்தில் அமைந்த அந்த அருயரப் பொம்மைக்கு 'பொம்மை' என மாட்டாத ஜீவச் செழிப்பு உண்டு. ஷிர்டி பாபா பூடி மந்திரத்தில் ஒரு முரளீதர விக்கிரஹம் வைக்க விரும்பியும், அவ் விருப்பம் பலிதமாகு முன்பே மஹா சமாதி எய்திவிட்டதால், பர்த்தியவதாரத்தில் அதைப் பூர்த்தி செய்துகொண்டதாகச் சொல்வதுண்டு. ஆனால் பிரசாந்தியின் விஸ்தாரப் புத்தமைப்பில் பக்தர் மனத்தை நோகச் செய்யும் சில மாறுதல்களையும் செய்துள்ள நம் விசித்ர சித்தர் இந்த மனமோஹன வேணுகோபாலனை அகற்றிவிட்டி ருக்கிறார். தம் உருவந்திடங்கூட ஆசை கூடாது என்பவர் நமது சில தெய்விக ஆசைகளையும் தியாகம் செய்ய வைக்கிறாரோ? மண்டபத்தின் பின் சுவரை ஒட்டினாற்போல், தென்புறத்தே ஷிர்டி பாபாவும் வடப் புறத்தே பர்த்தி பாபாவும் வண்ணத் தைல ஓவியங்களாக தரிசனம் தருகிறார்கள். வெள்ளி மணிச் சட்டகத்துள் ஆடும் நர்த்தன விநாயகர், வெள்ளி வேல் இவை யும், நித்யப்படி பூஜை பெறும் விக்ரஹங்களும் இம் மேடையில் குடிகொண்டிருக்கும். நான்கு பெரிய குத்து விளக்குகள் ஒளி பொழியும். சாந்நித்யத்துக்குக் கேட்கவே வேண்டாம். இறைவனே எழுப்பிய பூஜா மாடமன்றோ?

இம்மேடைக்குக் கீழ், வடக்குப் புறமாக ஒரு மரப்பீடத்தின் மீது விரித்த புலித்தோலின் மேல் போட்டுள்ள சிம்மாதனம்— சொல்லவும் வேண்டுமா, நம் ஸ்வாமிக்கானதுதான். இதற்குச் சிராக, எதிரே தெற்கு வாசலை அடுத்து ஷிர்டி பாபாவின் சலவைக் கற் பதுமை விளங்குகிறது. கிழவருக்கு இங்கே அத்தனை முக்யத்வம். மையமான வெள்ளி விக்கிரஹ ஷிர்டீசர் தான் விழாக் காலங்களில் ஸ்வாமி புரியும் விபூதி அபிஷேகத்தைப் பெறுபவர்.

நித்யப்படி பூஜை பெறும் சின்னஞ்சிறு மூர்த்திகளும், யந்திரங்களும் பல உள்ளன. நெற்றிக் கண் உள்ள சிவலிங்கம், சேஷசாயி, துர்கா தேவி, ஸ்ரீசக்ரம் என்றிப்படி ஸ்வாமியே சிருஷ்டித்துத் தந்திருக்கிறார். இவற்றுக்கு தினமும் காலையில் அர்ச்சகர் சம்பிரதாய பூர்வமாக அபிஷேக, அர்ச்சனாதிகள் செய்கிறார்.

பிரசாந்தி மந்திரத்துக்கு உள்ள ஒரே மாடியின் உச்சியையும் சேர்த்து உயர்ந்து நிற்பது பஜனை மன்றம். இதைச் சுற்றியுள்ள சிற்நன வராந்தாக்கள், மாடித் தள வராந்தாக்கள் ஒவ்வொன்றி லும் நாலு மூலைகளில் நாலு சிறிய அறைகள்.

இவற்றில் கீழேயுள்ள வடகிழக்கு மூலை அறையில்தான் முன்பெல்லாம் பக்தர்கள் ஸ்வாமியின் பொற்பாதங்களை வெள்ளித் தாலத்தில் வைத்துப் பன்னீரால் அபிஷேகித்து, சந்தன குங்கும மிட்டுப் பாத பூஜை செய்வர். "அப்படியும் ஒரு காலம் இருந்ததுஸ் ஹாய்!" என்று இன்று நெடுமூச்செறியத்தான் வேண்டும்.

Koviloor Digital Library

இதற்கு நேரே வடமேற்கில் உள்ள அறைதான் உலகப் பிரசித்தி பெற்ற 'கோரிக்கை' யறை.

அதற்கு நேர் மேலே மாடியிலுள்ள அறை — அதுவே ஸர்வ லோகநாதன் வாழும் பரம பவித்திர ஸந்நிதானம். உண்பது தவிர, மற்றப் போதுகளில் ஸ்வாமி இருப்பதும், உழைப்பதும், சயனிப்பதும் இவ்வறையில்தான். அதையொட்டிக் குளியலறையும் வைத்துக் கொண்டிருக்கிறார்.

இதற்கு எதிரே வடகிழக்கு மூலையிலுள்ள அறைக்குச் சென்றுதான் உணவு கொள்வார்.

* * *

பிரசாந்தி நகரின் பிரதான வடக்கு வாசலுக்கும் இரண்டாம் வாசலுக்கும் இடையேயுள்ள விஸ்தாரமான பகுதியில், மேற்குப் புறமாக உள்ள விசால வெளியில் இருக்கும் மாபெரும் மன்றமே பூர்ணசந்திர ஆடிட்டோரியம் என்பது. அற்புத சிற்பங்கள் கொண்ட பிரம்மாண்ட மன்றம். இதிலே அரங்கம் உள்ள தெற்கு வாசலுக்கு எதிரேதான் வெளியில் ஸர்வ—தர்ம—ஐக்கிய ஸ்தூபம் உள்ளது.

ஆடிட்டோரியத்திலிருந்து இரண்டாம் வாயிலுக்கு நுழையுமிடத்தில் இருந்த சாந்திவேதிகா—லிங்கோத்பவம் பல கண்ட சௌந்தரிய மண்டபம்—அதுவும்.. 'இருந்த' என்பதிலிருந்தே இன்றில்லை எனத் தெரிகிறதல்லவா? தெய்விக ஆசைகளையும் துறக்கச் செய்கிறார் என்று சமாதானப்படுத்திக் கொள்ள வேண்டியதுதான்!

* * *

இனி லௌகிகமான கட்டுமானங்களைப் பார்க்கலாம்.

கிழக்கு வாயிலில் நுழைந்தவுடன், பிள்ளையார் கோயிலுக்கு எதிரே மாபெரும் ஷெட் உள்ளதே—இதுதான் பெரும்பாலான யாத்ரீகருக்கான தங்குமிடம். அங்கங்கே அவர்களே சமைத்தும் கூட உண்டு கொள்கிறார்கள். ஒட்டினாற்போல் வரிசையாகக் குளியலறைகள் உள்ளன. 'ஷெட்'டில் அதம பட்ச சௌகரியமே உண்டெனினும், ஐயனிடம் அதிகமாக உள்ள பட்சத்தினால் இங்கு வசதி படைத்தவரும் முணுமுணுக்காமல் தங்குகிறார்கள். ஸ்வாமியே ஆசிரமவாசத்தில் தேக சிரமம் பாராட்டாத பான்மை அவசியம் என்று கூறித்தானே இப்படி வைத்திருக்கிறார்?

இருந்தாலும் இப்போது தனித் தனி ஃப்ளாட்கள் கொண்ட மூன்றடுக்குக் கட்டிடங்களும் எழுப்பியபடி இருக்கிறார். கிழக்குப் பிரசாந்தி, மேற்குப் பிரசாந்தி, வடக்குப் பிரசாந்தி, தெற்குப் பிரசாந்தி என்றிப்படி நாற்புறமும் மாபெரும் ப்ளாக்குகள், ஒவ்வொன்றிலும் ஏராள ஃப்ளாட்களுடனும் தோன்றிக்

Koviloor Digital Library

கொண்டிருக்கின்றன. மேற்கிலே நிறைய இடமிருப்பதால் மூன்று ப்ளாக்குகள் எழும்பிவிட்டன. இதை எழுதும் 1976 நவம்பரில், இன்னம் மூன்றும் எழும்பலாம் எனத் தெரியவருகிறது.

திருப்பதி காட்டேஜ்கள் போல் இந்த ஃப்ளாட்களுக்குப் பலர் போட்டி போட்டுக்கொண்டு மூல நிதியம் கொடுத்து, அவ்வப் போது வந்து தங்கிக் கொள்கிறார்கள். இவர்கள் தங்காத சமயங்களில் பிற யாத்ரிகர்களுக்கும் இவற்றில் தங்க அனுமதி தரப்படுகிறது.

பிரசாந்தி நிலயத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கும் இவற்றில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தவிரவும் நிலயப் பெண்களுக்குத் தனியாக, முன்பு சொன்ன 'ஷெட்'டுக்குப் பக்கத்தில் ஜாகைகள் உள்ளன. பாடசாலைப் பண்டிதர்களுக்கும், மாணவர்களுக்கும் தனியான 'மடி'ச் சமையலுடன் தனியாக இருக்கை உள்ளது. (இதை எழுதுகையில், புத்தமைப்பில் பாட சாலை எங்கே அமையும் என்று தெரியாததால் அது குறித்துச் சொல்லவில்லை.)

பரம லௌகிகமான ஸ்டேட் பாங்கு வெளிவாசலருகே உள்ளது. ஸ்டேட் பாங்கு வழியிருக்கும் நிலயத்தில் ஜாகை உண்டு. ஆடிட்டோரியத்துக்கும் வடக்கு வெளி மதிலுக்கும் இடையே பிரசுரக் கிளை, 'ஸநாதன ஸாரதி' அலுவலகம் முதலியன. இவற்றுக்கு எதிர்ப்புறம் மாபெரும் காண்டீன். அதற்கும் அப்பால் யாத்ரிகர்களுக்காக மாபெரும் ஷெட்கள். வடக்கு வாயிலால் உள்ளே போகும்போது, இரண்டாம் வாயிலுக்கு இடைப் பகுதியில், கிழக்கைப் புறமாக உள்ள கட்டிடங்களுக்கிடையில் தபால் ஆபீஸும் உள்ளது. 1959 அக்டோபரில் இந்த அஞ்சல் நிலயம் தொடங்கியதிலிருந்து பிரசாந்தி நிலயம் தனித் தபாற் பகுதியாக உள்ளது.

1966-ல் பிரசாந்தி நிலயம் தனி டவுன்ஷிப் ஆயிற்று.

ஸ்வாமியிடம் புட்டபர்த்திப் பிரமுகர்கள் கொண்டிருந்த பகைமைப் பற்றி இந் நூலில் முற்பகுதிகளில் ஓரளவு சொல்லியிருக்கிறோம். எதிர்ப்பாளரிடமிருந்து மீளவே கண்ணன் துவாரகை நிர்மாணம் செய்துகொண்டு அங்கு குடிபெயர்ந்ததை ஓரளவு நினைப்பூட்டுவதே, ஸ்வாமியும் புட்டபர்த்தி ஸராட்சிக்கு உட்படாத பிரசாந்தி நிலயத்தைத் தனி டவுன்ஷிப்பாக அமைத்துக்கொண்டது. இதன் பின் நம் பகவான் தமக்கே உரிய அன்பிதயத்தோடு, தாமாக முதலடி வைத்து அந்தப் பிரமுகர்களில் ஒவ்வொருவர் வீடாகச் சென்று, அவர்களுக்குத் தம்மிடமிருந்த காழ்ப்பைப் போக்கியதோடு, அவர்களுக்குள்ளேயே பரம்பரமாக இருந்து வந்த கருத்து வேற்றுமைகளையும் களைந்தார். அன்று ஸ்வாமி நிகழ்த்திய உபந்நியாசத்திலேயே, தாம் பிறந்த ஊரில் துவேஷங்கள் இருந்து வந்ததில் அவர் உள்ளூறக் கொண்டிருந்த விசனமும், இன்று அது தீர்ந்து சௌஜன்யம் உண்டானதில் அவர் உற்ற திருப்தியும் தெளிவாகத் தொனித்தன.

Koviloor Digital Library

டவுன்ஷிப் அலுவலர்களுக்கும் நிலயத்திலேயே வீடுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

பிரசாந்தி நிலயம் முழுதுமே மேட்டு நிலத்தில் அமைந்தது. மந்திரத்துக்குப் பின்புறமோ ஒரு சிறு குன்றே உள்ளது. இக் குன்றில் சிறிது ஏறித் தெற்கே திரும்பினால் வைத்யசாலை — மருத்துவமும் ஸாயி மகத்துவமும் சங்கமிக்கும் இடம்!

முன்பு வைத்யசாலையை அடுத்தே வேதசாலையாம் பாடசாலை இருந்தது.

* * *

மகா சாம்ராஜ்யத் தலைநகராக இன்று விரிந்து வரும் பிரசாந்தி அதன் ஆதி உருவில் பூர்த்தியானது 1950-ம் ஆண்டில். பாபாவின் இருபத்தைந்தாவது ஜயந்தியன்று நடந்தது கிருஹப் பிரவேசம் — கர்ப்பக் கிருஹப் பிரவேசம் என்று வேண்டுமானால் சொல்லலாமா?

அப்புறம் இருபத்தைந்தாண்டுகளில் அனந்தம் மாறுதல் களைப் பெற்று, இன்று கோபுரமும், விமானங்களும், கலசங்களும், சிற்பத் தூண்களும், வளைவுகளும், தெய்வப் பதுமைகளும், யாளி முகங்களும், மாட மத்தியில் வெள்ளி மணிக் கதவுமுமாக அசல் ஆலயமாக விளங்குகிறது. சுற்றுப்புறக் கட்டுமானங்களோ இதனை ஓர் அசல் நகரமே ஆக்கிவிட்டிருக்கிறது. பாபாவின் பொன் விழாவோடு தன் வெள்ளி விழாவையும் சேர்த்துக் கொண்டாடிக் கொண்ட பிரசாந்தி நிலயத்துக்கு நம் பிரணாமங்கள். பிரசாந்தனுடைய அருள் லீலைகளின் மைய கேந்திரத்தைத் தலைதாழ்த்தி வணங்குவோம்.

* * *

லக்ஷ லக்ஷமாகச் செலவழித்து எழுப்பிய தெய்விக, லௌகிக கட்டுமானங்களையெல்லாம் பார்த்து விட்டோம். ஒரு செலவுமே இல்லாமல் எழும்பிய ஒன்றுதான் பிரசாந்தி நிலயத்தின் உச்சி ஸ்தானம்.

அது என்ன?

1959 ஏப்ரில் மாதத்தில் ஒரு நாள் ஸ்வாமி அடியாரோடு சித்ராவதிக் கரையில் பிரேமை நதியைப் பெருக்கிக் கொண்டிருந்தார். ஞானோபதேசம் கங்கையாக வந்தது. புத்தர் ஞானம் பெற்ற போதி விருக்ஷம், அக்ஷய வடம் போன்றவற்றின் தொன்மைப் புகழைக் கூறிய ஸ்வாமி, இந்தத் தருக்களின் அடியில் மஹாபுருஷர்கள் ஸ்தாபித்த யந்திரங்களின் சக்தியால் தான் இவற்றுக்கு மகிமை ஏற்பட்டிருக்கிறது எனக் கூறினார். பீஜம் விருக்ஷமாக வளர்வதுபோலவே மந்திர பீஜாக்ஷரம் கொண்ட யந்திரங்களை தெய்வ புருஷர்கள் 'வித்திட்டு', அவற்றின் மேல் வளர்ந்த மரங்கள், மந்திர மகாசக்தியைப் பெருக்கி யிருக்கின்றன!

Koviloor Digital Library

மணலே அளைந்தன காந்தனின் காந்தள் விரல்கள்.

அவ்விரல்கள் வெளிவந்தபோது பிடித்திருந்தது ஓர் அற்புதச் செப்பேட்டினை!

பதினைந்து அங்குல நீளமும் பத்து அங்குல அகலமும் கொண்ட பெரிய செப்பேடு. அதிலேதான் எத்தனை யந்திரங்கள் பொறித்திருந்தன! யந்திரங்களுள் புரியாத லிபிகளில் எத்தனை யெத்தனை பீஜாக்ஷரங்கள்!

இரண்டு மாதங்களுக்கு மேல் பாபா அதைத் தம்மிடமே வைத்துக்கொண்டு மேலும் திவ்விய சக்தி ஊட்டினார்.

ஜூலை 29-ந் தேதி.

மேள தாளங்களோடு அந்த மஹா யந்திரம் பிரசாந்தி நிலயத்துக்குப் பின்புறமுள்ள குன்றின் உச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

சிகர ஜோதியானது மலைக்கு மேல் கண்காண ஒளி தரும். இந்த யந்திரமோ ரஹஸ்ய ஜோதி அல்லவா? எனவே பகவான் அதைக் குன்றுச்சியில், கண்காணுமல் பூமிக்குள் ஸ்தாபிதம் செய்தார். போதி விருக்ஷம் குறித்து அன்று தாம் பேசியதற்கு ஏற்ப, இன்று புதைத்த யந்திரத்தின் மேல் ஓர் ஆலங்கன்றை நட்டார்.

"இது வளர்ந்த பின், இவ்வாலடியில் செய்யும் ஜபம், யோகம், தியானம் முதலானவற்றுக்கு அதி விசேஷமான வீரியம் உண்டாகும். இது ஒரு தபோவனமாக உலகின் பல பாகங்களி லுள்ள யோக ஸாதகர்களைத் தன்கீழ் இழுக்கப் போகிறது" என்று கூறி அருளினர் ஞான மூர்த்தி.

மேல்வாட்டில் பிரசாந்தி நிலயம் இந்தக் குன்றுச்சி வட விருக்ஷத்தோடுதான் முடிகிறது. எத்தனை பொருத்தம்?

எத்தனைதான் காரியங்கள் பிரசாந்தி நிலயத்தில் நடை பெற்றாலும், அதன் ஜீவநாடி வட விருக்ஷ மூலனான ஸ்ரீ தக்ஷிணு மூர்த்தியின் சாந்திதானே?

ஓம் நம: ப்ரணவார்த்தாய சுத்த ஞானைக மூர்த்தயே |
நிர்மலாய ப்ரசாந்தாய தக்ஷிணுமூர்த்தயே நம: ||

Koviloor Digital Library

அத்தியாயம்—56

ஆனந்த ஸாயி

ஆனந்தமே பிரம்மம் என்று அநுபவத்தால் அறிந்தார்.

— தைத்திரீய உபநிஷதம் 3.6

நினைத்தொறும் காண்தொறும் பேசும்தொறும் எப்போதும்
அனைத்(து) எலும்பு உள்நெக ஆனந்தத்தேன் சொரியும்
குனிப்புடையான்

(நெக — உருக; குனிப்புடையான் — ஆடல்புரியும் நடராஜன்)

— திருவாசகம்

'ஓம் சாந்தி : சாந்தி : சாந்தி :' என்றே எந்த ஆன்மிக சாதனையையும், தெய்விக கர்மாவையும் முடிப்பது நம் பண்பு. ஆதி அந்தம் இரண்டும் சாந்தம்தான்.

பின் ஏன் 'சாந்த ஸாயி'யோடு இவ் வரலாறு பூர்த்தியாகவில்லை?

மும்முறை சாந்தி சொல்வதால்தான்.

முதல் சாந்தி காரியமும் சிந்தனையும் அற்ற தானும் பேருணர்வுத் தனி நிலை.

விந்தையிலும் விந்தையாக இந்நிலையில் இருந்துகொண்டே லோக நலனின் பொருட்டு ஓயாமல் செயற்பட்டு ஓயாமல் சிந்தித்து மங்களம் புரியும் நிலையிலேயே பராசக்தி இருக்கிறாள். தன்னில் தானாக ஒன்றியவர்களையும் அவள் இப்படியே லோக கல்யாணம் புரிய வைக்கிறாள். உலகின் பொருட்டு வெளியே ஸத்தியமும், தர்மமும், பிரேமையும் பொழிந்துகொண்டே, தன்னைப் பொறுத்த மட்டில் அனைத்தும் அடங்கி அமைதி பூரித்த இந்த இரண்டாவது சாந்தியே பிரசாந்தி, அதாவது சிரேஷ்டமான சாந்தி.

இதுறல் தன்னிலேயே ஏற்படும் அற்புத ஆனந்தம், ஆனந்தம் என்றதோர் உணர்ச்சிக் கிளர்ச்சியாக இராமல் அடங்கிக் குளிர்ச் சுடர் வீசுகிறதே, மிருது மணம் கமழ்கிறதே இதுதான் மூன்றாவது சாந்தி. சுடரொளி பிறர்மீது வீசுவதே போல், சுகந்தம் பிறர்மீது பரவுவதே போல், இந்த அமைதி யானந்தமும் உலகின்மீது மெல்லலே விரித்துக்கொண்டேதான் இருக்கும். ரஸ பேதங்கள் கொந்தளித்தாலும் உள்ளுக்குள்ளே சாந்த மயமாயுள்ள இந்த ஆனந்தமே மெய்யான ஆனந்தம்.

தன்னில் தானாக அடங்கும் சாந்தி அல்ல முடிந்த நிலை. அந்த சாந்தியில் நின்று சிவமான அன்பைச் சக்திகரமான காரியத்தில் பொழிந்து பிறருக்கும் சாந்தியூட்டுவதால் ஏற்படும் ஆனந்தம் தான் அந்தம்.

''அசாந்தஸ்ய குத: ஸுகம்?'' என்றான் கீதாசார்யன். ''சாந்தமு லேக ஸௌக்யமு லேது'' என்றார் தியாகையர். இவற்றிலிருந்து சாந்தத்தால் பெறப்படுவதே ஆனந்தம். அதாவது சாந்தத்தின் அந்தத்தில் உள்ளது ஆனந்தமே என்று ஆகிறது. ''பிரசாந்த மனத்தனை உத்தமமான ஆனந்தம் வந்து அடைகிறது'' என்று கண்ணன் கீதையில் (6—27) தெளிவாகச் சொல்வதால், சாந்திக்கும் பிறகே ஆனந்தம் முடிவான நிலையாக வருகிறது என்று உறுதிப்படுகிறது.

பஞ்ச கோசங்களிலும் முடிவு ஆனந்த மய கோசமேயன்றி சாந்த மய கோசமல்ல. ஸத்—சித்—ஆனந்தம் என்றேதானே பரம்பொருளையும் கூறுகிறோம்? எல்லாம் மறைந்தடங்கிய சாந்தமாக இன்றி, எல்லாவற்றுக்கும் அமரமான செழிப்பூட்டும் சாந்தத்தை ஊட்டும் ஆனந்த ஸாயிதான் நம் வரலாற்றின் நிறைந்த நிறைவாக வருபவர். சிவ ஸ்தலங்களின் உச்சியில் ஆனந்த நடராஜனும், விஷ்ணு ஸ்தலங்களின் உச்சியில் ஆனந்த விமான வேங்கடவனும் போலே.

பிரசாந்தி நிலயத்துள் ஒரு நாள் யாத்ரிகர்களாக வசிப்பதைவிட இந்த ஆனந்த ஸாயியை அநுபவிப்பதற்குச் சிறந்த உபாயமில்லை.

எனவே,

வாருங்கள், நமது பிராந்திகள் தீர்க்கும் பிரசாந்தி நிலயத்துக்கு!

★

பிராம்ம முஹூர்த்தம்.

காலை மணி நாலரை.

மணி முழங்குகிறது.

Koviloor Digital Library

ஸகுணப் பிரம்மத்தின் உறைவிடம் விழிப்புற்றுவிடுகிறது.

பிரசாந்தி நிலயத்துள்ளோ, அல்லது அதற்கு வெளியில் தவியார்கள் குடக்கூலிக்காக விடும் விடுதிகளிலோ, எங்கு நாம் தங்கியிருந்தாலும் கண்டாமணி நம்மை எழுப்பிவிடும்.

இவ்வேளையில் துயிலெழுவதே வெளியில் மட்டுமின்றி உள்ளுக்கும் தன்மை பில்குகிறது. அதுவும் இந்த நிலயத்திலோ இனம் தெரியா புனித சாந்தச் செறிவு. அரையிருளுக்கே உரிய நுண்ணிய சோகத்தில், அந்த சோகத்துக்கே உரிய சாந்தானந்தம் கமழ்கிறது. அதோ அந்த மாடி அறையில்தான் பிரபு சயனித்திருக்கிறுன் என்பதை நினைத்தாலோ இந்த சாந்த சோக ஆனந்தம் உயிர்க் குருத்தை அள்ளியெடுக்கிறது.

ஸ்நானம் செய்து வருவோம். சித்ராவதிக்குப் போய்வர இப்போது அவகாசம் போதாது. நிலயக் குழாய்களிலேயே குளிக்கலாம். அல்லது வென்னீர் வேண்டுமாயின் நிலயத்துக்கு வெளியே இதையே வியாபாரமாக நடத்தும் குளியல் கடைகளுக்குப் போகலாம். மரியாதைப் பண்போடு வியாபாரம் செய்வார்கள்.

ஸ்நானம் முடிந்ததா?

பஜனைக் கூடத்துக்கு விரைவோம்.

விரைந்தாலும் மவுனம், மவுனம், மவுனமே. மனவடக்கத்துக்கு முதற்படி வாயடக்கமே என்பதை ஸ்வாமி இங்கு வெகு கண்டிப்பாக அமலில் வைத்திருக்கிருரே! இதை இங்கு அலுவலர் நடத்தி வைப்பது சற்றே அதியாக, செயற்கையாகவும் தோன்றலாம். ஆனுல் நம் வாயை அடைக்க இவ்வளவு கெடுபிடி இன்றி ஆகாது.

க்யூ வரிசையில் பஜனைக் கூடத்துள் செல்ல வேண்டும் — வடக்கு வாசலால் ஆண்களும், தெற்கு வாசலால் பெண்களும்.

துணியின் சலசலப்பு, அடிவைப்பின் ஓசை, உள்ளோ கூடத்தில் அமரும்போது எலும்புகளின் 'மளுக்' இவை தவிரப் பேச்சின்றி, டார்ச் ஒளியில் நிழலாட்டமிட்டுக் கொண்டு, இங்கு வந்தமர்வதில் ஒரு இதமான சௌக்கியம் இருக்கத்தான் செய்கிறது.

ஆண்கள் இம் மன்றத்தின் வடவண்டைப் பாதியிலும், பெண்கள் தென்னண்டைப் பாதியிலுமாக அமர்கிறோம் — மேலைப் புறமுள்ள பூஜா மண்டபத்தை நோக்கி.

குத்து விளக்கொளியில் பூஜா கிருஹ மூர்த்தங்களைக் காணும்போது தானே மனம் பக்தியில் அடங்கிப் படிகிறது.

கணீரென மணி மீண்டும் முழங்குகிறது.

"ஓம்!"

Koviloor Digital Library

பிரணவ நாதம் சாந்த கம்பீரத்துடன் அத்தனை கண்டங்களிலிருந்தும் பிறக்கிறது. எதற்கும் பறக்கும் நாம், பரம நிதானமாக, வெகு வெகு நிர்க்கமாக இருபத்தியொரு முறை ஒங்காரம் சொல்கிறோம். அத்தனை குரல்களும் இழைந்து நீட்டி நீட்டிச் சொல்கையில் அது நம் உடலெல்லாம் அதிர்ந்து பரவிப் பிராண மூலத்தையே தொடுகிறது.

தனியாகச் சொல்லும் ஓங்காரத்தில் நாம் உணராத இந்த சக்தி வாய்ந்த சாந்தம் ஸத் ஸங்கத்தின் பெருமைக்கு, அனைவரும் ஒன்றுசேர்வதன் இனிமைக்கு அழுத்தமான சான்றாகிறது.

ஓம்காரம் முடிந்த மவுனத்தில் ரீங்காரம் செய்கிறது தம்புரா.

ஈச்வராம்பா ஸுத ஸ்ரீமன்! பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே|
உத்திஷ்ட ஸத்ய ஸாயீச! கர்த்தவ்யம் தைவம்
ஆன்ஹிகம் ||

நித்ரா லீலை புரியும் பிரக்ஞா ரூபனைத் திருப்பள்ளியெழுச்சி செய்ய ஸுப்ரபாதம் ஓதப்படுகிறது. நிலைய பஜனைகளில் ஒரே ஓர் ஆடவர், ஒரு பெண்மணியின் கனிந்த கணீர்க் குரலில், விளை யிட்டோடு, ஸ்பஷ்டமாக, சாவதானமாகப் பாடப் பெறுகிறது. உலையும் நம் உள்ளத்துக்கு இதிலே எத்தனை ஆறுதல்?

வெளியே வருகிறோம்.

ஆணும் பெண்ணும் தனித்தனியே அணி வகுத்து நிற்கிறோம்.

பாடசாலையினர் வேதத்தின் ஸ்வஸ்தி வசன மந்திரங்களை மொழிகின்றனர். உலக நலனுக்காகவே ஏற்பட்ட அந்தச் செஞ்சொற்களை ரிஷிகளே நம் மீது புரோக்ஷணம் செய்வது போலிருக்கிறது.

வேதம் முடிந்து கீதம்.

கௌரீ கணேஷ் உமா கணேஷ் !
பார்வதீ நந்தன ஸ்ரீ கணேஷ் !

பெண்கள் கிழக்கு வாயில் நோக்கி கம்பீரமாக எழுந்தருளும் விநாயகனின் திருமுன்னர் பஜனை தொடங்கி விட்டார்கள். அங்கிருந்து நிலையத்தைப் பிரதக்ஷிணமாக வந்து நகர ஸங்கீர்த்தனம் செய்யப் புறப்படுகிறார்கள்.

பிறகு ஆண்களின் அணி விக்நேசன் முன் வந்து நின்று, அவனைத் துதித்து, நகர கீர்த்தனம் தொடங்குகிறது.

மந்திரத்தை பகவந் நாம கீதத்துடன் வலம் வருகையில் பகவானின் அறைக்குக் கீழே செல்கையில் நம்மை அறியாமலே

Koviloor Digital Library

அன்றுந்து பார்க்கிறோம். நம் தேங்காய் ஓட்டு மனத்திலும் இளநீர் சுரக்கிறது. பஜனை லக்ஷியமான ஸ்வாமி அங்கே அரிதுயில் கலந்து கொண்டிருப்பார் என்ற எண்ணம் காலைப் பனியை விட லேசாக, சிதமாக நெஞ்சமாம் கஞ்ச மலரில் படிகிறது.

நிலையத்தைச் சுற்றி வந்து நிலையான கஜமுகனிடம் பஜனம் முடிக்கிறோம்.

இனி ஜாகைக்குத் திரும்பலாம்; நவின ஸரயுவும் யமுனையுமான சித்ராவதி செல்லலாம்; கோபால ஸ்வாமி, பாமை, சந்திரமௌளீசர், மாருதி ஆலயங்களுக்குச் சென்று வரலாம் ; கோகுலம் செல்லலாம். எல்லாம் அரை மைல் ஆரத்துக்குள் இருப்பனதாமே! வட விருக்ஷத்தடியே 'கண்மூடி மௌனியாக' உட்கார்ந்திருந்தாலும் அயம் விசேஷ:. மந்திரத்துக்கு நாம் திரும்பி வர இன்னம் நிறையப் போது இருக்கிறது.

முன்பெல்லாமாயின், பாபா ஆறு மணிக்குள்ளேயே மாடி வராந்தாவில் தமது அறைக்கு வெளியே வந்து விச்வரூபம் எனும் முதல் தரிசனம் சாதித்து வந்தார். அந்த வேளையில், அந்த உயரத்தில், அவரது ஒதுக்கமும் ஒட்டுதலும் விந்தையாய்க் கலந்த தரிசனம், சாக்ஷாத் பரமசிவனைக் காண்பது போலவே இருக்கும். ஆனால் புத்தமைப்பில் நமது மனம் நோகும் துறவுகளில் ஒன்றாக இந்த தரிசனத்தையும் நிறுத்திவிட்டிருக்கிறாரே!

இப்போதெல்லாம், வெயில் காலமாயின் காலை எட்டு மணி அளவில் அவர் 'கோரிக்கை'க்கு பக்தர்களைத் தேர்வு செய்ய வரும்போதுதான் தரிசனம் கிடைக்கிறது. மழை காலம், குளிர் காலமாயின் இதுவும் பத்து மணிக்குத்தான்.

முன்பு எட்டு மணி அளவில் அவர் சிற்றுண்டி கொள்வதற்காக மேற்கு அறையிலிருந்து கிழக்கு அறைக்குச் செல்கையில் நீண்ட வராந்தாவில் அவர் நிதானமாக நடக்குமளவும் நம் நயனத்தை நனைத்துக் கொள்ளலாம். இப்போதோ, தாம் செல்வதும் தெரியாதபடி வராந்தாவை விரித்து, கைப்பிடிச் சுவரையும் உயர்த்திவிட்டாரே. என்னவோ, ரொம்பத்தான் கிராக்கி செய்துகொள்கிறார்! செய்யட்டும், செய்யட்டும்! அவருக்கு நம்மிடம் இல்லாத உரிமையா?

காலை மணி எட்டு.

பஜனை மன்றமாம் மந்திரத்தில் சாஸ்திரிகள் பூஜை தொடங்கி விட்டார். நித்யப்படி பூஜா மூர்த்தங்கள் பற்றி முன்பே சொன்னோம். பஞ்சாயதன பூஜையோடு ஸாயி அஷ்டோத்ரமும் கூறி அர்ச்சிக்கிறார். குரு வாரமாயின் ஸாயி ஸஹஸ்ர நாமம். 'பேராயிரம் பரவும் பெம்மா'னன்றோ? சுக்ர வாரங்களில் லலிதா ஸஹஸ்ரநாம அர்ச்சனையும் உண்டு. ருத்ர, சமக, புருஷ ஸூக்தாதிகளுடன் யதோக்தமாக, ஆயினும் மிகவும்

Koviloor Digital Library

வளர்த்தாமல், நடைபெறும் இப் பூஜை காண மிக நிம்மதியாக இருக்கும். நிம்மதியின்றி பாபாவின் தரிசனத்துக்கு அவாவி, மன்றத்துக்கு வெளியே பக்த கோடிகளுக்கான அரைவட்டத்தில் அமர்ந்திருந்தாலும் பூஜா நாதம் அங்கும் ரம்யமாகப் பரவிப் பிடிவாதமாக நமக்குச் சிறிது நிம்மதி ஊட்டியே தீரும்.

''எப்போ வருவாரோ, என்றன் கலி தீர?'' என்று இரண்டாம் வாயிலை ஒட்டிய அரை வட்டத்தில் மேற்கே பெண் களும், கிழக்கே ஆண்களுமாக அடியார்கள் குழுமியிருக்கிறோம். மௌனமாக சமய நூல்களைப் படிக்கிறோம்; ஜபத் தியானாதிகளும் செய்கிறோம்.

ஸ்வாமி வரும் நேரம் நெருங்குகிறது.

அத்தனை கண்களும் கோரிக்கை அறையின் மூடிய கதவிலேயே கோர்த்தாகப் பதிந்துள்ளன.

ஒவ்வொரு விநாடியும் யுகமாக நீளுகிறது.

இதோ, வைகுண்ட நாதனின் துவார பாலகரான ஜய—விஜயர்கள்போல் இரு வாலிபத் தொண்டர்கள் கோரிக்கை அறை முன் இரு புறமும் வந்து நிற்கிறார்கள்.

அடியார் கணம் பரபரக்கிறது.

ஆஹா! இதோ கதவு மெல்லத் திறக்கிறது.

பட்டாக வந்துவிட்டான் வாஸுதேவன், பட்டங்கி புரள.

அவன் நிற்கும் அந்த இடத்தின் ஒளிக் குறைவில் பட்டங்கியும் மின்னவில்லை. சாமள மேனியும் நிழலாகவே தெரிகிறது. ஆம், மின்னும் அற்புதங்கள் மண்டிய பராசக்தி இங்கே பிரசாந்தியாகவே அடங்கியிருப்பதால், முதற்கண் காண்கையில் தூங்கும் ஓடையாகவே தோன்றுகிறாரோ?

மங்கித் தெரிந்தாலும், இங்கே நம்முன் அவ்வுருவைக் கண்ட மாத்திரத்தில் ஒரு மங்களப் பிரவாகம் மடை திறக்கத்தான் செய்கிறது.

தியாகையர் சொன்னது எவ்வளவு உண்மை?

எந்நக மநஸுகுராநி பங்கஜாயி ஸொகஸு
பந்துக கநுகொநநி கந்நுலேலே?

'மானஸிக வழிபாடுதான் சிறந்தது; ஸ்தூல பூஜையையும் ஓரிடத்தில் நிறுத்தவே வேண்டும்' என்று ஆன்றோர் கூறுகிறார்கள்; நம் ஸ்வாமியும் இதை வன்மையாகக் கூறுகிறார். ஆயினும் எப்படித்தான் மனத்தில் கொண்டுவரப் பார்த்தாலும் பன்னக

Koviloor Digital Library

சாயியோ, பர்த்தி ஸாயியோ கண்காண அளிக்கும் தெள்ளிய தரிசனம் மானஸிகத்துக்கு வரமாட்டேன் என்கிறதே! இத் தரிசனத்தைக் காணாத "கந்நுலேலே?" "காணாத கண் என்ன கண்ணே?" மனத்தாலும் இத்தனை ஸ்பஷ்டமாக தரிசிக்கும் நிலை அடையும் வரையில், அல்லது மனம், தரிசனம் இவை கடந்த நிலை அடையும் வரையில், ஸ்தூல தரிசனம்தான் நமக்கு மஹாநுபவம். அவரே மறுத்தாலும் ஒப்ப முடியாது!

மாதவன் மந்த மந்தமாக மெத்துப் பாதங்களை அடிமேலடி வைத்து நெடிய வராந்தாவில் வருகிறான். கனவுலகிலே சஞ்சரிக்கும் கருணைக் கனவாகத் தோன்றும் கேசவன் கேச பாரத்தை அழுந்தப் பிடித்துக்கொண்டு சிலையாக நிற்கிறான் சில விநாடி. இப்போது ரூபம் தெளிவே தெரிகிறது. ஹம்...மா!

வேணு ஊதிய விரல்கள் எழும்பி வெற்றிடத்தில் சிற்றலைகளைச் சுழிக்கின்றன. சுந்தரன் அந்தரத்தில் எதையோ எழுதி, ஏனோ கை விரிக்கிறான். உதட்டையும் பிதுக்கிவிட்டான். என்ன அர்த்தமோ? இன்றைக்கு நமக்குப் பேட்டி இல்லை என்று பொருளோ?

நமக்குப் புறங்கை தெரியுமாறு கரத்தை உயர்த்திப் பரத்துக்குப் பரமான தம் அகத்துக்குள்ளேயே பார்வையைப் பதிக்கிறார்.

வராந்தாவின் கிழக்குக் கோடிப் படியருகே வந்தவர் ஒரு கணம் கையைப் பின்னே கட்டி நிற்கிறார். இதிலே விரியும் மார்பு, சம்பக நாசியை மலர்த்தி அவர் விட்டுக்கொள்ளும் பெருமூச்சில் இன்னம் விரிகிறது.

விரைவு வருகிறது வேந்தனுக்கு. படிக்கட்டில் இறங்கு— கையில் கஃப்னியும், உள் வேஷ்டியும் விலக —

பளிச்செனக் கிடைக்கிறது பாத தரிசனம்!

அழ(கு) எழுதலாகாத அருட் சேவடி
அடியார்கட்(கு) ஆரமுதம் ஆய அடி
பணிபவர்க்குப் பாங்காக வல்ல அடி
பற்றார் பற்றறுக்கும் பவள அடி
மணி அடி, பொன் அடி, மாண்பாம் அடி
மருந்தாய்ப் பிணிதீர்க்க வல்ல அடி

என்று அப்பரடிகள் பாடிய திவ்ய சரணாரவிந்தம்!

காலை வெயிலை மேலே சொரிந்துகொண்டு ஆடவருள்ள திசைப் பக்கமாக, அபய ஹஸ்தமும், மந்த ஹஸிதமுமாக ஐயன் கிறுகிறுவென வருகிறான். சிறு வெயிலும் பொறுக்க முடியாமல் இடுக்கிய கண்ணோடு வருகிறானெனினும், நாம் விரிகிறோம்!

Koviloor Digital Library

இதயங்கள் கதகதக்கின்றன; குதுகுதுக்கின்றன!

மங்கித் தெரிந்த உரு பூர்ணப் பிரகாசமாய்ப் பொலிகிறது! வெயிலில் பட்டங்கி பளபள வெள்ளம் பொழிகிறது.

தனது காந்தை நீளப் பட்டங்கி உடுத்து ஒளியில் செல்கையில் அவளது வஸ்திரமே உருகி ஓடுவதுபோல் 'டால்' பொழிந்ததை "liquefaction of her clothes" என்று வர்ணித்து மகா கவிகளிடை இடம் கொண்டான் ராபர்ட் ஹெர்ரிக். இங்கே ஆத்ம காந்தனின் அங்கி பொழியும் சிவப்பு வெள்ளமோ பிரேம ஹ்ருதயத்தின் வெளி அடையாளமாதலால் நம்மையே liquefy செய்து விடுகிறது. வார்த்தை ஜாலமல்ல—அநுபவ சத்தியம்.

கிட்டக் கிட்ட வந்துவிட்டார்.

பக்தர் வரிசைக்குள்ளேயே புகுந்து உலவுகிறார்.

வெற்றிலையில் சிவந்த கீழுதட்டை மடித்துக் கொள்கிறார். கைக்குட்டையால் அதரங்களை அதி நாசூக்காகத் துடைத்துக் கொள்கிறார். துரைதான்!

பேட்டிக்கு அழைப்பாரா என்று ஏங்கி, வீங்கி, ஓங்கும் உள்ளம் அநேகம். 'அழைக்கிறார், அழைக்கவில்லை, அதைப் பற்றி என்ன? இப்போது கண்முன் இருக்கும் அழகுப் பேழையை, அருள் கருவூலத்தைக் கண்ணார விழுங்குவோம்' என்ற தாகம் சிலருக்கு.

ஸ்ரீராமசந்திரன் பாதம் பட்டுக் கல் பெண்ணாயிற்று. ஸாயி ராமன் ஒவ்வோர் அடி வைக்கும்போதும் கல் மனங்கள் மெல்லியல் மலராகின்றன. "ராமோ ரமயதாம் வர:" என்று இலக்கணம் கூறினார் வன்மீகி. 'ஆனந்தம் ஊட்டுபவர்களில் தலைமையானவனே ராமன்" என்று பொருள். நம் ஆனந்த ஸாயி "ரமயதாம் வர"ர்தாம். அழ வைத்தே ஆனந்த மூட்டுவதுதான் அவருடைய மஹா மிராகிள்.

வேதத்தில் உஷா பரமேச்வரியை ஸத்யச்ரவர் போன்ற ரிஷிகள் வர்ணிப்பது, நம் வாழ்வுக்கே வைகறையாம் ஸத்ய ஸாயி உஷைக்கே எடுத்த மந்திரங்களாக உள்ளன. செம்பட்டில் ஒளிர்ந்து கொண்டு (அருணப்ஸு: விபாதீம்) இருப்பதில் மட்டும் அல்ல. குறையிரப்போரின் புறமெல்லாம் குனிந்து குனிந்து குளிரக் கடாக்ஷித்தபடியும், வரம் வழங்கியபடியும், மறைந்த ஜோதியை மீண்டும் நம்முள் நுந்தியபடியும், சீலமே வடிவாய், பிரபஞ்ச மஹா தர்மத்தின் தேஜஸோடு ரிக் வேதத்தின் ஐந்தாம் மண்டலத்து எண்பதாம் ஸூக்தத்தில் வரும் உஷா பராசக்தி, இதோ நம்மிடை நயமுற நலமுற நடை பயில்கிறாள் பிரசாந்தி நாயகியாக.

ஆங்காங்கே, பேசும் அந்த ஆள்காட்டி விரலசைப்பாலோ, பார்வை வெட்டாலோ பேட்டிக்குச் சிலரை எழுப்புகிறார்.

Koviloor Digital Library

அவர்கள் இறும்பூதுடன் கோரிக்கை அறைக்கு முன்னுள்ள வராந்தாவுக்கு விரைகிறார்கள்.

''பாபா!'', ''பகவான்!'' ''ஸ்வாமீ!'' என்றெல்லாம் அரற்றியவாறு பேட்டி வேண்டி எழுந்திருப்போரிடம் பிரிய வசனமோ, பரிஹாஸ மொழியோ, கண்டிப்பு வார்த்தையோ கூறியபடி, தாமே ராஜாவாகத் தம் இஷ்டப்படியே கோரிக்கையாளரைத் தேர்வு செய்துகொண்டு நகர்கிறார்—மிதக்கிறார் என்றே தோன்றுகிறது. ''உட்கார்'', ''பைடோ'', ''கூர்ச்சோ'', ''கூதுகோ'' என்று அவரவர் மொழியில் அமர்த்துகிறார் பரபரப்பவரை. குறைகளைக் கடிதமாக எழுதி வந்திருப்பவரில் எவரையும் விடாமல், பக்தர் வரிசைகளைத் துளைத்துக்கொண்டு செல்லும் பாபா சிறிது நின்றாலும் பல கரங்கள் அவரது பாதங்களை மொய்க்கின்றன. ''அப்படீல்லாம் பண்ணக் கூடாது'' என்றோ, ''இங்கே தொட்டுக்கோ'' என்று இதயத்தைச் சுட்டியோ பாத நமஸ்காரத்தைத் தடுக்கிறார். தாமும் காலத்துக்குக் கட்டுப்படுவதால் பக்தர் கரத்துக்குக் காலைக் கட்டுப்படுத்த முடியாமல் நகர்கிறார். இவரே அபூர்வமாக ஓரிருவரிடம் சென்று, 'என் பாதத்தை ஆரப் பிடித்தாலொழிய நகரமாட்டேன்' என்று சொல்லாமற் சொல்வதேபோல் அவர்கள் மேல் மோதாத குறையாக, தம் அங்கி அவர்களை உரசிப் போர்த்துமாறும் நிற்கிறார். அதென்ன கர்மக் கணக்கோ, யார் சொல்ல முடியும்?

ஆம், இல்லாவிடில் பெரும் பிரச்னையுடன் ஆயிரம் மைலுக்கப்பாலிருந்து வந்து, ஆராத பக்தியுடன் வாரக் கணக்கில் காத்திருக்கும் சிலரையும் விடுத்து, பிரச்னையுமின்றி பக்தியுமின்றி பக்கத்து ஊரிலிருந்து வந்த ஓரிருவரைப் பேட்டிக்கு அழைப்பாரா?

(பேட்டிக்குத் தேர்வானவரைப் பார்த்தால் அவரைப் 'பணக்காரர்களின் சாமியார்' என்பது வடிக்கட்டிய அபத்தமென்று தெரியும் என்கிறார் ஓர் ஆங்கில ஏட்டின் ஆசிரியர்.)

இளம் குரல், மென் குரல், ''ஸந்தோஷம்'', ''அச்சா'', ''மஞ்சிதி'' என்ற சுபமொழிகளைச் சொல்லிக்கொண்டே போகப் பெரு நலனை நுகர்கிறோம். பிரசாந்தி நிலைய விதி முறை அறியாது பழங்களும் மலர்களும் வாங்கி வந்து நீட்டுவோரிடம், ''பரவாயில்லை'', ''பர்வா நஹி'' என்று பரிவுறக் கூறிக்கொண்டே கழற்றிக் கொள்கிறார்!

இப்படிப் பரிபவரே, காலைத் தொட வருபவரிடம் ஒரு ''ஸ்'' சொல்லி, ''ஸ்'' போடும் ஸர்ப்பமாகவே பின்னுக்கு விரைவே நெளிந்து செல்கையில் நம் ஸப்த நாடியும் ஒடுங்குகிறது!

இந்த பய—பக்தி பரமாற்புதம். ஸத்ய ஸாயிபாபா இறைவனா என்பதில் கருத்து வேற்றுமை இருக்கலாம். அதை நாமும் மற்றோருக்கு நிரூபிக்க முடியாது. ஆனால் ஸத்ய ஸாயி பாபா இறைவனே எனக் கொண்டு பரம அகம்பாவிகள் உள்பட

Koviloor Digital Library

லக்ஷலக்ஷம் மக்கள் பய பக்தி கொண்டு பிரசாந்தி நிலயத்தில் அடங்கியிருப்பது போல் இந்தப் பிருத்வியில் வேறெங்கணும் காண முடியாது என்பதை எவரும் மறுக்க முடியாது.

பவ்யமாக விஞ்ஞாபிக்கும் பக்தர் ஒருவரிடம், கொண்டற் குழலில் புதைந்த திருச் செவியைக் குனிந்து, பவள வாய் திறந்து, முத்துப் பல் தெரிய, ''ஆங்?'' என அவர் வினவுகையில் இடுக்கண் தீர்க்கும் உடுக் கண்கள் ஜொலிக்கின்றன. விண்ணப்பித்தவரின் தோளில் அழுந்தக் கை வைத்து அமர்த்துகிறார். கிழவனார் ஒருவரிடம், ''என்னய்யா! இன்னம் நீ போகலியா?'' என்று கேலி செய்கிறார். ஊருக்குச் செல்ல உத்தரவு கேட்பவரிடம், ''ஸந்தோஷம், ஸந்தோஷம், ரொம்ப ஸந்தோஷம்'' என்று குதர்க்கம்போல இவர் சொன்னாலும், அதிலேயே பக்தர் பூரிக்கிறார். இன்னொருவர் என்ன கேட்டாரோ, நறுக்கென ஏதோ கூறுகிறார். வேறொருவருக்கு விபூதி சிருஷ்டித்து நெற்றியில் இடுகிறார். அதுவே அந்நீறு பெருக்கும் இட்டு விட்டது போன்ற இனிமையைப் பரப்பி விடுகிறது. கீழுதட்டை மடித்துக் கொண்டே முன்னேறுகிறார்.

அவர் அலக்ஷியம், பரிஹாஸம், கண்டிப்பு எது செய்தாலும் இவற்றையும் முழுக்கிக்கொண்டு அழகான அழகும், அருளான அருளுமே மனத்தில் மேவி நிற்கின்றன.

காலையில் முதலில் ஆடவரையும், மாலையில் முதலில் பெண்டிரையும் பேட்டிக்குத் தேர்வு செய்வார். பெண்டிரிடை அவர் புழங்கையில் அவரிடம் மதுரத்துள்ளேயே ஏற்படும் புதியதோர் அன்னித்வமும், கௌரவ ஒதுக்கமும், பக்தைகள் பாவன பரமேச்வரியாக அன்றி வேறெவ்விதமும் அவரை நினைக்கவொண்ணாமல் பரவசமுறுவதும்—நம் பார்வைக்கே புனிதக் காட்சி.

ஆடவரைப் பேட்டிக்கு அழைத்தாலும், அவரது மனைவி, தாய், மகன், மணமாகாத மகள் ஆகிய குடும்பத்தினரும் உடன் செல்வர். (மணமான மகள் பிற குடும்பத்தைச் சேர்ந்து விடுகிறாள் என்ற சாஸ்திர தர்மத்தை நம் சம்பிரதாயக் காவலரும் ஏற்றிருக்கிறார்.) இவ்வாறே அவர் ஒரு ஸ்திரீயை அழைத்தாலும் அவரோடு ஆடவர் உள்ளிட்ட குடும்பத்தினரும் பேட்டிக்குச் செல்வர்.

தேர்வு பெற்ற சிறு கூட்டம் பேட்டி அறை வாசலில் குழுமும். அவர்களைச் சுமார் நாலு பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியாக அறைக்குள் அழைத்துக் கொள்வார். இவர்கள் உள்ளே நுழைந்ததும் கதவைச் சாத்தி, மின் விசிறி போட்டு விட்டுத் திரும்பும் பாபா—ஆஹா!

எத்தனை 'ஆஹா' போட்டாலும் போதாது —

வெளியே கண்ட பாபாவைவிட மிகமிக அணுக்கராக, இனியராக, சுலபராகத் திகழ்வார். அன்பில் அலைமோதிக்

Koviloor Digital Library

கொண்டு காணப்படுவார். அங்கை அசைவில் விபூதி படைத்து, அனைவருக்கும் அளிப்பார். ஆடவரில் பலருக்குத் தாமே இட்டும் விடுவார்.

விபூதி மணம், ஸ்வாமியின் சரீர மணம், அந்த அறையின் ஸாந்நித்திய மணம் ஆக மூன்றுகவும் உள்ள சுகந்தம் நம் மூச்சில் மட்டுமின்றி மனத்திலும் புகும்.

பிறகு, தனி நபராக வந்திருப்போரை ஒவ்வொருவராகவும், குடும்பமாக வந்தோரைக் குடும்பமாகவும், இச் சிறிய அறையில் திரைக்குப் பின்னுலுள்ள குறுகிய இடத்துக்கு அநுமதிப்பார். தாம் திரையை ஒட்டி, வெளியே உள்ளோருக்கும் ஓரளவு தெரியும் வண்ணம் நின்று கொண்டு, ஜகப் பிரசித்தி பெற்ற ''கோரிக்கை'' கொடுக்கத் தொடங்குவார்.

பரம்பரனுடன் பரம பாமரனும் முகமுகமாக உரையாடும் தெய்விகப் பேட்டி!

அல்ல; அவரோடு உரையாடுவதா?

முக்காலே மூன்று விசம் அவரேதான் உரையாடுவார்.

உள்ளே சென்றதும் நம்மைக் கண்ணுரக் கடாக்ஷித்து, வாயார, ''என்ன ஸமாசாரம்?'' என்று அவர் கேட்டவுடன், நாம் எத்தனை தயார் செய்துகொண்டு போயிருந்தாலும், ஒரு சமாசாரமும் வாய்க்கு வராமல் நிற்போம். அவர் அப்படிக் கேட்பதும் மாயம்தான்!

தாமே கடகடவென்று நம்முடைய சகல சமாசாரங்களையும், நமக்கு அறவே தெரியாத சமாசாரங்களையுங்கூட, பொழிந்து விடுவார். மறு பகுதியில் உள்ளோருக்குக் கேட்காவண்ணம் ரகசியமாக, ரகசியத்திலும் ரசம் கசியும் அநுதாபத்தோடு, அவரவர் தாய்மொழியில் தாயாக மொழிவார். பரிகாசம் செய்வார். பரிசும் சிலருக்குத் தருவார். அநேகமாகப் பேட்டியாளர் எல்லோருக்குமே பாதஸ்பரிசம் தருவார். மின்வேக மருத்துவம், மந்திரோபதேசம், விக்கிரஹ சிருஷ்டி எல்லாமும் பாக்யசாலிகளுக்குப் பேட்டியின்போது லபிக்கும்.

கருணைப் பூரிப்பில் பாபாவே கொழுத்துவிட்டதுபோலத் தோன்றும், அவரது அண்மையில் நாம் நிற்கையிலே. பொன்முகம் பென்னம் பெரிதாகி, கன்ன மறுவும், குவளைக் கண்களும், செப்பு உதடும், இடுக்கு விட்ட அடுக்குப் பல்லும், குறுகுறு குழல் மந்தையும் நம்மைத் 'தொல்லையின்பத்து இறுதி' சேர்த்துவிடும்.

''ஸ்வாமி நான் கூடவே இருக்கேன். ஸ்வாமி உன்னைக் கைவிடறதே இல்லே. ஸ்வாமி பூர்ண அநுக்கிரஹம் உனக்கு இருக்கு'' என்று ஸ்வாமியே ரகசியத்திலும் பரம அழுத்தத்துடன் நம்மிடம் சொல்வது—கிடைக்கக்கூடிய பேறு?

Koviloor Digital Library

நம் குறைகளையும், பிரச்னைகளையும் அவர் கூறும்போது—சண்டிக்கிற பொழுதும்கூட— நம் வேதனையை அவரே பகிர்ந்து கொள்ளும் பேரன்பையும் உணர்வோம். பாத வந்தனம் தந்து, நம் சிரத்தை அவர் அழுந்தத் தொட்டு, ஆசிர்வதிப்பதைவிட இந்த ஜன்மாவில் பெரிய நிதியம் நமக்கு இல்லை தான்!

"கோரிக்கை"யை எவ்வளவு வர்ணித்தாலும், உண்மையில் சதாம்சம்கூடச் சொன்னதாகாது என்பதால் இதோடு நிறுத்திக்கொள்ளலாம்.

பேட்டி முடிந்ததும், நாம் மறுபடி திரைக்கு இப்பாலே வந்து நிற்கிறோம். மற்றவர்களுக்கும் பேட்டி கொடுத்து முடிக்க முடிக்க, அவர்களும் நம்மோடு வந்து சேர்கிறார்கள். எல்லோருக்கும் "கோரிக்கை" முடிந்து ஒன்றுகூடிய பின் பகவான் பிரேம மாதாவாகக் கருக்கும் நெடுக்கும் அலைபாய்ந்து வந்து, விபூதிக் கூடையிலிருந்து தாமே பொட்டணங்களை அள்ளி ஒவ்வொருவருக்கும் குத்துக் குத்தாக வழங்குகிறார்.

இது முடிந்து, நம்மை வெளியே அனுப்பி வைக்கும்போது, என்ன மாறுதல்! பிரேம மாதா ஏன் இத்தனை விரக்தியாகி விட்டார்? ஆனால் இவர் இப்போது விட்டேற்றியாக இல்லாவிடில், இவரது பாதத்தை விட்டு நகர எவருக்கு மனம் வரும்? கர்மயோகிசனின் மற்ற ஏராள அலுவல்கள் என்னாவது?

பேட்டி நேரத்தைப் பொறுத்து, காலை ஒன்பதிலிருந்தோ அல்லது பதினொன்றிலிருந்தோ பஜனைக் கூடத்தில் பஜனை நடக்கிறது.

மந்திர பஜனைகளில் ஆணும் பெண்ணும் மாறி மாறி முன்பாட, நூறு நூறு பக்தர்கள் திருப்பிப் பாடுவர்.

கலியுக ஔஷதம் நாம கீர்த்தனமே என்பது பரம ஸ்வச்சமாகத் தெரியும்—எவ்வித வித்தியாஸமுமின்றி எல்லா வகுப்பு ஜனங்களும் பரவசத்துடன் பரமன் நாமத்தை ஆவேச தாளத்துடன் பாடிப் பரவுகையிலே.

பஜனை நடக்கும்போதே, பேட்டி முடித்து, அறைக்குத் தொண்டரிடம் சற்று 'ஜோக்' அடித்து வருவார் ஸ்வாமி.

ஆடி ஆடி வரும் ஆதி நாராயணன், தமக்கே உரிய விரல் சேஷ்டை, உதட்டுப் பிதுக்கல், தலையாட்டல் இவற்றோடு கூடத்துள் பிரவேசித்து, சரசரவென சிம்மாதனத்துக்குச் சென்று விருட்டென ஆரோஹணிப்பார்.

பஜனை உச்ச கதியில் நடக்கும்.

பகவான் விதவிதமாக ரஸிப்பார்.

Koviloor Digital Library

ரஸிக்காதது போலவும் கவனமற்று இருப்பார்.

ஆனால் நம் கவனமனைத்தும் அவரிடமேதான் புதைந்திருக்கும்.

பாத பீடத்தைச் சற்றே தமது சிம்மாஸனப் பக்கமாகக் காலால் தள்ளிக் கொள்கிறார்.

அதுதான் சமிக்ஞை — பஜனை முடிக்க.

"ஓம்! ஜய் ஜகதீச ஹரே!"

— மங்களாரத்தில் பாடலை அவ்வளவு குரல்களும் குழைந்து ஒலிக்கின்றன.

பூஜகரான சாஸ்திரியார் பாபாவுக்குக் கேசாதிபாதம் (கேசமாவது கேசம்! பாதமாவது பாதம்!) கர்ப்பூரம் காட்டுகிறார். ஸ்வாமி குபீரென மன்றத்திலிருந்து வெளியேறி, பேட்டி அறைக்குள் மறைகிறார்.

இப்போதுதான் நண்பகலில் ஸ்வாமி போஜனத்துக்குச் செல்வதையும் நாம் பார்க்க முடியாதே. எனவே வயிற்றுப் பாட்டைக் கவனித்துக்கொண்டு, ஓய்வெடுத்துக் கொள்ளப் போகலாம். இப்போதே வயிறு நிரம்பினாற்போலத்தான் இருக்கிறது, இல்லை?

பாபா உண்ணட்டும். பிறகு கடிதங்களை மானுட, அமானுட ரீதிகளில் படித்து, மானுட, அமானுட ரீதிகளில் பதிலும் எழுதட்டும். ஸமிதிக்காரர்கள், ஸாயி டிரஸ்டினர், பதிப்பாளர், கல்வித்துறையாளர், கோகுல அலுவலர், வைத்ய சாலைக்காரர்கள் ஆகியோரிடம் விசாரணை, விவாதம், யோசனை, ஆலோசனை எல்லாம் நடத்தி ராஜ்யபாரம் நடத்தட்டும்.

பிற்பகல் மூன்றரை மணி அளவில் கோரிக்கைக்காக மக்கள் அமரத் தொடங்குகின்றனர். நமக்குப் பேட்டி முடிந்து விட்டாலும், தெவிட்டாத ஸ்வாமி தரிசனத்துக்காக நாமும் இவர்களோடு உட்காருவோம்.

ஐந்து மணி அளவில் ஐயன் காலையில் போலவே பேட்டித்தேர்வுக் கடமையை ஆற்ற வருகிறார்.

கோரிக்கை கொடுத்து முடிகையில் அந்தி மங்குகிறது.

இந்த மனோஹரப் பொழுதில், அதோ அவர் அலைகள் மீது நிர்த்தமிடுவது போல் ஜிலுஜிலுவென ஒல்கி ஒசிந்து யானைக் கொட்டகைக்குச் செல்லும் அழகை எப்படி வர்ணிப்

Koviloor Digital Library

பேன்? செவ்வாடை பூண்ட பின்னழகு, புஷ்ப லதையாக, லலிதையாகவே தோன்றி நம் கண்களைக் கலக்குகிறது. கனகன்லி ஸாயிகீதா சூட்டும் மாலையைக் கணம் அணிந்து, இந்த மாலைப்பொழுதையே இன்பச் சோலையாக்கி விடுகிறார். கரும்பலகையுடன் காத்திருக்கும் குழந்தைகளுக்கு 'ஓம்' எழுதிக் கொடுத்துவிட்டு, பிரசாந்தி நிலயத்தைச் சுற்றிவரப் புறப்பட்டு விட்டார்.

எட்டத்தில், இன்னம் எட்டத்தில், பனிப் படலமாக அந்தப் பம்பை முடியை, சிவப்புப் போர்த்திய சிங்கார மேனியை, 'ஸ்ப்ரிங்' நடையைக் காண்கையில் நெஞ்சு பஞ்சாகிறது.

பின்புற பேட்டுப் பகுதியிலிருந்து ஸ்வாமி சிலுசிலுசிலு வென வரும்போதோ? முன்பு அலைமேல் நடனமாடியதாகத் தோன்றியதெனில், இப்போதோ மைசூர் பிருந்தாவனத்தில் காவிரியன்னை படிகள்மீது அலைகளையே நட்டமிட்டு இறங்குவாளே, அப்படி யிருக்கிறது!

இங்கே மந்திரத்தில் வினாகானம் முடிந்து பஜன் தொடங்கி விட்டது. ஐயன் வெளியே உலவுவதால், அவரது தரிசனத்தை விட்டு பஜனைக் கூடத்துக்குப் போகவும் மனம் வரவில்லை தான். ஆனால் பிறகு பஜனையில் சற்றே நீண்ட நேரம் அவரது தரிசனத்தைப் பெற முடியும் என்பதால், இப்போதே நாம் மந்றத்துக்குள் போக வேண்டியதுதான். பஜனை நடுவில் எவரையும் உள்ளே அநுமதிக்கமாட்டார்களே! இங்கே விதிகள் கடுமையாச்சே!

தரிசனத்தை விடவே மாட்டாமல், தூரத்தே சஞ்சரிக்கும் ஸ்வாமியைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே மந்திரத் துக்குச் செல்கிறோம். என்ன விந்தையம்மா? இப்படியும் ஒரு புலிநப் பிரேம பாசம் உண்டா? ஏன் அவரைப் பிரிய முடியவே மாட்டேன் என்கிறது? அவர்தான் நம்முடைய நிஜமான நாம் என்பதால்தானே?

பஜனைக் கூடத்துள் வந்தமர்ந்தாலும், இங்கே இத்தனை பேர் பஜனையில் ஈடுபட்டிருந்தாலும், நம்மை அவர் குழைத்து விட்ட அனாதிக் குழைப்பில் அந்த திவ்ய மோஹன ரூபத்தை இங்கிருந்தும் இன்டு இடுக்குகள் வழியாகத் துழாவித் துழாவிப் பார்க்கிறோம்.

அதோ, வட்டத் திட்டுக்கு அப்பால் பாடசாலை, பள்ளி வாண்டுகளிடம் பரிவைச் சொரிந்துகொண்டு நிற்கிறார். இந்த பஜனை அவரை அப்படியே கட்டித் தூக்கி, மந்திரத் துள் கொண்டு வராதா?

ஹே பர்த்தி புரீசா, ப்ரசாந்தி வாஸா
ஸத்குரு ஸாயீராம் !

Koviloor Digital Library

தாரஸ்தாயியில் உணர்ச்சியுச்சியில் ஆயிரம் கண்டங்கள் கரைவது ஸ்வாமியைக் கொத்தித் தூக்குகிறது போலும்!

உல்லாஸ நடையிட்டு, கைநிறைய பக்தர் கடிதத்தோடு, உதட்டை ஜிப்பா மணிக்கட்டால் துடைத்தவாறு மந்திர் நோக்கித்தான் விரைகிருர்.

ராம சரம் தான். சரசரவென வருகிருர். பரபரப்பிலும் பதற்றமில்லே. பெண்ணின் ஒயில் நடையிலும் சக்ரவர்த்திப் பௌருஷம். அப்பா, நீ அற்புதக் கலவைதான்!

பகலேவிட, இந்த முன்னிரா நேரத்தில், மின் விளக் கொளியில் பெறுகிற தரிசனத்தில் கனிவும் களிப்பும் ஒருபடி கூடுதலாகவே உள்ளன.

''தழையத் தழைய உடுத்தி, கண்ணுக்குக் காமதேனுவாக நீ நாட்டிய நடை இட்டு வர, பக்தர்கள் உன் பாதத்தைக் கட்டி அணைக்கிருர்கள்'' என்று வேதம் (ரிக். 6—29—3) சொன்னதைக் கண்ணுக்கு மெய்யாகக் காண்கிறோம், பகவான் வரும் வழியிலே பாத நமஸ்காரப் பேறு பெற்றவரிடம்.

அந்தப் பட்டங்கியாகவே நாமும் பாதத்தில் புரள மாட்டோமா, துவளமாட்டோமா, அவரது ஒவ்வோர் அடி வைப்பிலும் ஒட்டிக்கொள்ளும் மண்பொடிகளில் ஒன்ருக நாம் இருக்க மாட்டோமா? நிஜ நாம் பொய் நாமை இப்படி யெல்லாம் வலிந்து இழுக்கிறது.

நரஹரி ரூபா நாராயணு
நாராயணு ஸாயி நாராயணு
நாசோ நாசோ நாசோ நந்தலாலா!

பக்தர் அடிவயிற்றிலிருந்து அகவுவது அவரைச் சுண்டி யிழுத்தே விட்டது.

தூண்கள் ஸ்வாமியைச் சற்று மறைக்கின்றன.

முன் வாசலில் அவர் நுழைவார் என்று கண்களே முன்னே பதித்துள்ள நாம், பின் வரிசைகளில் உண்டாகும் சிறு சலசலப்பில் திரும்பிப் பார்க்கிறோம்.

சிவசிவ சிவசிவ ஷிர்டி புரீச்வர
சம்போ சங்கர ஸாம்ப சிவோம்
பவபவ பவபவ பர்த்தி புரீச்வர
சம்போ சங்கர ஸதாசிவோம்

பஜனேக் கூடத்தின் நடு நடைபாவாடையில் ஸாம்பசிவோ மாக, ஸதாசிவோமாக அமைதியில் சொக்கி நிற்கிருர்

Koviloor Digital Library

றயர். கை வழக்கமான போஸில் உயரே எழும்பி நிற்கிறது: மெல்லச் சுழல்கிறது.

உதட்டில் ஒரு கோணல் சிரிப்பு நெளிகிறது. சிம்மாசனத்தை நோக்கி நடக்கிறார்.

கௌரி ஸரஸ்வதி ரமாமணி!

மலைமகள், கலைமகள், அலைமகள் மூன்றும் ஒன்றிய மும்மடங்கு அம்மா சிரித்துக் கொள்கிறாள். பஜனை நாதம் பாற்கடலாக அலை மோத, பாற்கடலிடை உதித்த ரமாமணியாக, மாமணியாக, பரம லக்ஷ்மிகரமாக நடுவே திகழ்கிறார் பிரபு.

ஒரு தாவலில் சிம்மாதனத்தே ஏறுகிறார்.

பிரத்தியக்ஷ தெய்வ தரிசனம் என்றால் இதுவல்லவோ?

பெம்மான் சிம்மாசனத்தமர்ந்து செம்மாந்திருக்கும் சேவையை மாந்துகிறோம்.

ராஜாதி ராஜ, ராஜ கம்பீர

என்று அடாணா அரசமிடுக்கில் இசை பாட, சிம்மாசனத்திருந்தாலும் இவர் அம்மா அன்றோ என்ற உருக்க அன்பு நீலாம்பரியாக நெகிழ்கிறது:

ஸிம்ஹாஸனேச்வரீ, ஸாயீச்வரீ!

மகா அம்மா, பசுங்குழந்தையாகிறாள்! ஆதனக் கைப்பிடியில் வைத்திருந்த பூச்செண்டை எடுத்து பாபாப் பாப்பா திருப்பித் திருப்பிப் பார்க்கிறது! ஒவ்வொரு இதழாகப் பிய்த்துப் பிய்த்துப் போடுகிறது! உள்ளங்கையில் கொழுக்கட்டைக் குத்துச்சுகள் போட்டுக்கொண்டு பஜனையை ரஸிக்கிறது! நிஜமாக இந்தப் பச்சைக் குழந்தையா உலகம் போற்றி வியக்கும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸத்யஸாயி பாபாஜி மஹராஜ்?

குழந்தை அல்லவா? நீலாம்பரியில் தாலாட்டியதும் தூக்கம் வந்துவிட்டது போலும்! கொட்டாவி முட்டி முட்டி வருகிறது! இரவு ஏழரைக்கே கொட்டாவி விடுவதா என்று அடக்கிப் பார்க்கிறது; அதனால் கண்ணில் ஜலம் கட்டுகிறது; கைக்குட்டையால் துடைத்துக்கொண்டு, ஆதனத்தின் பின்னே தலைசாய்த்து, பரந்த கண்களை மூடிக்கொள்கிறது. சுளைசுளையாக என்ன இமையழகு?

தூக்கமா?

அல்ல. சாந்த சித்ரயாக இலகும் பாபா இப்போது தான், தானாக இருக்கிறார். புருவமத்தியில் விரலை அழுத்திக்கொண்டு அங்கே சித்தத்தை ஒருமுகப்படுத்தினால் நாமும் தானாகலாம் என உணர்த்துகிறார்.

Koviloor Digital Library

ஸோஹம் ஸோஹம் த்யான கரோ!
ஸத்குரு ஸாயீ சரண படோ!

சாந்த சிவமாய் இலகிய பாபா, சாக்த கிருபையாய் இளகுகிறது; ஆற்றல் மயமாக மலர்கிறது; தலையை ஆட்டி விரலோடு விரல் தட்டியும், உள்ளங்கைகளை அடித்தும், தொடை தாளம் போட்டும் ஜீவசக்தியைப் பெருக்க விடுகிறது. பொருத்தமாக வருகிறது பஜனும்:

அனந்த கோடி ப்ரம்மாண்ட நாயகி
தச மஹாவித்யா வேத விலாஸினி
முக்தி ப்ரதாயினி பவபய நாசினி
ஸத்ய ஸாயி புவனேச்வரீ

கலீர் கலீர் என்று பொங்கிப் பொங்கிச் சிரிக்கிறாள் ஸாயீச்வரி. கண்மூடி, இரு கைகளையும் தூக்கி விரித்து, கால்களைப் பின்னி சைதன்யர், ராமகிருஷ்ணர் போன்றோரின் பாவஸமாதியை நினைப்பூட்டுகிறார்.

நமக்கு இந்த உன்னதம் தாளாது என்றே, மறுகணம் மதுரமயமாகிறார்—அப்பப்பா, எத்தனையெத்தனை ரஸபேதங்கள் காட்டுகிறார்!

மதுர மனோஹர மங்கள நாம்
ச்யாமள கோமள நயனபிராம்!

ராமனையும்விட மதுரமாக, கோமளமாகப் பிரேமக் கண்ணனாக அமர்ந்திருக்கிறார். இன்றைக்கென்னமோ, 'பொருந்தி' பஜன் கேட்கிறார், நம் அதிருஷ்டம்தான்! பிருந்தாவனத்திலே துளஸியினும் பசேலென்று, துளஸியினும் கமகமத்துக்கொண்டு, குழலூதும் இசையினும் இனிய இதயத்தால் உலகின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட கண்ணனாக இதோ பகவான் உட்கார்ந்திருக்கப் பார்க்கிறோமே, இதனினும் என்ன வேண்டும்?

படா சித்தசோரா, பிருந்தாவன ஸஞ்சாரா!
கோபாலா கோபாலா ஹே முரளீ கோபாலா!

பாதத்தைப் பீடத்தில் அழுந்திவிட்டார். உள்ளே தள்ளி பஜன் முடித்துவிடப் போகிறார் என்றெண்ணுகிறோம்.

ஊஹூம்! இன்றைக்கு அபார அருள்! இன்னம் பஜனையிலேயே இருக்கிறார் — அங்கியும் வேஷ்டியும் சற்றே மேலேற, பொற்பாதத்தை வெகு நன்றாக நமக்குக் காட்டியபடி. அந்தப் பாதம் தாளம் போடுகையில், பூவான உள்ளங்காலும் தெரிகிறது; நம் உள்ளம் குழைகிறது. 'உள்ளம் குழையுதடீ! ஊனும் உருகுதடீ!' எனச் செய்யும் வள்ளிக் கணவன் பேரும் தொடர்ந்து வருகிறது:

Koviloor Digital Library

ஷண்முக நாத ஷண்முக நாதா
ஓம் சரவணபவ ஷண்முக நாதா
ஸாயி சரவணபவ ஷண்முகநாதா

சம்ஸாரக் கடலில் புணையாக உள்ள சரணாரவிந்தங்களை சரண்புகச் சொல்லுமாப்போலே ஆர அமரக் காட்டுகிறார் ஸாயி சரவணர்.

கையால் தொழுதுன் கழற் சேவடிகள்
கழுமத் தழுவிக் கொண்(டு)
எய்யா(து) என்றென் தலைமேல் வைத்(து)
"எம்பெருமான் பெருமான்" என்(று)
ஐயா என்றன் வாயால் அரற்றி
அழல்சேர் மெழுகொப்ப
ஐயாற்றரசே ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே

நம்முடைய இத்தகைய உணர்ச்சி எழுச்சிகள் அடங்கும் வண்ணம் எளிய எழிலோடு ஸத்யஸாயியாகவே அமர்ந்து விட்டார். ஸத்யம் எத்தனை எளிமையோ அத்தனை எளிய ஸௌந்தர்யம். அந்த வெறும் அழகிலேயே ஸத்ய ஸாக்ஷாத் காரத்தின் அமைதியை அநுபவிக்கிறோம்.

ஸௌந்தர ரூபா ஸ்ரீ ஸாயிதேவா
சரணம் சரணம் ஸத்குரு தேவா

ஒருதானே தொடக்கம் நிறைவு இரண்டும்? அந்த நிறைவிலே, ஆத்மா ராமா! ஆனந்த ரமணா! என்ற நாம கீர்த்தனத்தோடு பூர்த்தி ஸ்தானத்தில் பூரித்த ஆனந்த ஸாயி,

பாத பீடத்தைத் தள்ளி பஜனையை நிறைவித்து விடுகிறார்.

"ஓம், ஜய் ஜகதீச ஹரே" முழங்க, கர்ப்பூர ஆரத்தி ஏற்றாரா என்றுகூடத் தெரியாமல் அதி விசையாகத் துள்ளி ஓடிவிடுகிறார் மாடிக்கு.

நாம் மந்திரத்துக்கு வெளியே வந்து திறந்தவெளியில் அமர்கிறோம்.

பிரசாந்தி நிலயவாஸிகள் மட்டும் மன்றத்துள் மௌன ஜபத்தில் இருக்கிறார்கள்.

வெளியே நாமும் மோனத் தியானத்தில் மூழ்குகிறோம்.

பிரசாந்தி நிலயத்தில் மோனந்தான் முக்கியமாயினும், மற்ற சமயங்களில் நாம் ஒரு கட்டுப்பாட்டின் கீழேதான் பேசாதிருக்கிறோம். இப்போது பஜனையின் பரவச அலைகள்

Koviloor Digital Library

அடங்கி விழ, இந்த இருளிலே, நீலவானின் கீழ், மந்தமாருதம் வீச, நாமாக விரும்பி ஸாயிமயமான மோனத்தில் நழுவுகிறோம்.

அஸதோ மா ஸத்கமய
தமஸோ மா ஜ்யோதிர் கமய
ம்ருத்யோர் மா அம்ருதம் கமய
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:||

இன்மையிலிருந்து உண்மைக்கும், இருளிலிருந்து ஒளிக்கும், அழிவிலிருந்து அமரத்துவத்துக்கும் அழைத்துச் செல்ல வேண்டுகின்ற மறைமொழி ஆழம் பொருந்திய இசை வடிவில் மந்திருக்குள்ளிருந்து குமு குமுக் குமுறலாக ஒலிக்கிறது.

அதிலே நம் மவுனம் கலைகிறதா? இல்லை, கனிகிறது!

இந்தப் பேரநுபவத்துக்குக் காரணமான புண்ய புருஷனுக்கு மந்திருக்குள்ளே ஜய கோஷம் எழுப்பப்படுகிறது:

ஜேய் போலோ பகவான் ஸ்ரீ ஸத்ய ஸாயி பாபாஜி கி!
ஸத் – சித் – ஆனந்த மூர்த்திஜி கி!

பாபாவைவிட நம் நன்றிக்கும் அன்புக்கும் பாத்திரமானவர் எவருண்டு? நாம் நிறைந்த நெஞ்சோடு "ஜேய்" போட்டு எழுகிறோம்.

உணவு கொள்வதில் நாட்டமில்லை — உள்ளே ஓர் அமுது பொசிந்துகொண்டே யிருப்பதால்.

கால் வலிக்கும் வரையில் அல்லது தூக்கம் வரும் வரையில் பிரசாந்தி மந்திரத்தைப் பிரதக்ஷிணம் செய்யலாம் என்று ஆரம்பிக்கிறோம்.

நிலையமெங்கிலும் எட்டரை மணிக்கே விளக்குகள் அணைக்கப்பட்டு விடுகின்றன. காலை நாலரைக்கே விழிப்புற வேண்டுமாதலின், இரவு முன்னதாக உறங்கப் போகவேண்டும் என்பது ஸ்வாமி ஆணை.

நாம் பிரதக்ஷிணம் செய்துகொண்டே யிருக்கிறோம். மேலண்டைப்புறம் வரும்போதெல்லாம் மேலே பார்வை போகிறது. மாடி அறையில் விளக்கு எரிகிறது! நமக்குள்ளேயும்தான்!

அண்டர் நாயகன் உண்டு வந்திருப்பார். இன்னமும் ஸ்தாபன காரியங்களை அயராமல் ஆற்றிக் கொண்டிருப்பார்.

ஒன்பதாகிவிட்டது. நமக்குக் கால் வலிக்கவில்லை. புது வலிவு ஏற்பட்டுவிட்டது. இன்னமும் சுற்றுகிறோம். பூமி

Koviloor Digital Library

சூரியனைச் சுற்றிக்கொண்டேயிருப்பது போலவும், சந்திரன் பூமியைச் சுற்றிக்கொண்டேயிருப்பது போலவும், நமக்கும் நமது மூலவனைச் சுற்றிக்கொண்டிருப்பதில் ஓர் இன்பத் திருப்தி ஏற்படுகிறது.

வேலைச் சுமையைச் சற்றும் கருதாமல் பசுந்துளிராகவே வாழும் ஐயன் இப்போது அத்தாணிச் சேவகர் சிலரோடு தமாஷ் பண்ணிக்கொண்டிருப்பார்.

பண்ணு ஐயா, பண்ணு! பிரபஞ்சமே உன் தமாஷ்தானே! நீ சிரித்தால் நிலமே மலருமே! சிரித்து விநோதம் செய்; உலகெங்கும் பரவியுள்ள விரோதங்கள் பஸ்மமாக, சிரித்துப் புரமெரித்த உன்னையன்றி யார் கதி?

மணி ஒன்பதரை.

அத்யந்தத் தொண்டர்களும் மாடியிலிருந்து இறங்கி வந்து விட்டனர்.

மாடியறை விளக்கும் அணைக்கப்பட்டு, மின் விசிறி ஒலி மட்டும் மெத மெல்லக் கேட்கிறது.

அணையாத லோகமங்கள விளக்கான ஸ்வாமி ஏகாந்த மாகச் சயனித்திருப்பார். ஏக அந்தமாக, அதிலேயே இரண்டாகி அன்புக் காந்தமாக, உள்ள அந்த சாசுவத இன்பர் தலையணை வைத்து நீள நெடுகச் சயனித்திருப்பார் என்றுகூடச் சொல்வதற்கில்லை. இரவெல்லாம் சாய்மானத் திண்டில் சாய்ந்தபடியே விழித்திருந்தாலும் இருப்பார். அப்படியே ஸ்தூலத்தில் உறங்கினாலும்கூட அவரது அருள் சக்தி அப்போதும் உறங்காது.

இதோ வெளியே வானமாதேவி ஆயிரமாயிரம் தாரகைக் கண்கொண்டு உலகைப் பார்ப்பது போலத்தான், வான் கருணை ஸாயித்தாயும் கோடிக் கண்களை இமைப்போதும் கொட்டாமல் பக்தகோடிகளைப் பார்த்து வருகிறாள். ஆகாய தேவி பார்ப்பது மட்டுமே! ஸாயி தேவி பார்ப்பதோடு காக்கவும் செய்வாள்.

செயலற்ற தானாக சாந்தியில் இருந்துகொண்டே, பார் முழுதுமுள்ள சேய்களைச் சீராட்டிச் சீர்ப்படுத்தும் அன்பிலே பிரசாந்தமாகி, பிரபஞ்சமெங்கும் ஆனந்தம் பரப்பத்தானே பராசக்தி ஸாயியாக அவதரித்திருக்கிறாள்?

அவள் தனியே இருந்தாலும் தனித்தா இருக்கிறாள்? அவளைத் தவிர வேறாக ஏதுமின்றித் தனியே இருந்தவள், தன்னை வேறு வேறு போல் நாமாக்கித் தடுமாற வைத்து விட்டு, இப்போது விலகிப் போய் ஏகாந்த இன்பம் காண முடியுமா?

Koviloor Digital Library

நம்மைத் தூக்கிவிடும் காரியத்தை அயராமல் செய்து இன்புறவே வந்தவள், அந்த யோகத்திலேயே ஆழ்ந்து இன்பமே வடிவாகிடப் பெற்றிருக்கிருள். அவ்வின்பத்தை அவ்வப்போதேனும் நமக்கும் ஊட்டுகிருள் ஆனந்த ஸாயீச்வரி.

அம்மா ஸாயீ! நீயே அப்படித்தானே சொல்வாய்? ''என் ஜீவித லக்ஷ்யம் ஸர்வ : ஸர்வத்ர நந்தது (எல்லோரும், எங்கெங்கிலும் இன்புற்றிருக்க வேண்டும்?) என்பதுதான்'' என்பாயே!

தகுதியே இல்லாவிடினும் எங்களுக்கும் இந்த ஆனந் தத்தை, பிரசாந்தத்தை அவ்வப்போது ஊட்டிவரும் அம்மா! எங்கள் ப்ரியமே! பிரசாந்த மதுரமே! உன் சிராட்டை என் சொல்ல? எங்கள் பிழை பொறுத்து எத்தனையோ அருள் செய்பவள், அவற்றின் சிகரமாக உன்னை உனக்காகவே உள்ளி நினைக்கும் பேரானந்தத்தைத் தந்துவிட்டாய்!

இதைவிட சுலபமான ஸாதனை என்ன உண்டு? ராஜ யோகம், குண்டலினீ, பூஜை, தவம், தியானம், ஜபம், ஆத்மவிசாரம், யக்ஞம் என்று எதுவாயினும் அதிலே ஒரு பாரம் இருக்கிறது. ஆனுல் உன்னை நினைப்பது எத்தனை லேசாக உள்ளது? ஆனுல் அந்த ஸாதனைகளாலும் எளிதே கைவரப் பெருத நிறைந்த ஆனந்தத்தை உன் ஸ்மரணமே கொடுத்து விடுகிறது. உன் பரம கிருபையான நெம்புகோலை நீ பதமாக எங்கள் உள்ள மையத்தில் பிரயோகிப்பதால் அது துக்கபாரத்தைக் கல்லி எறிந்து ஆனந்த கனத்தை அதிலேசான ஸ்மரணையிலேயே தள்ளிக்கொண்டு வந்துவிடுகிறது.

பூர்ண ஆனந்தத்தின் பிரேம ஸ்பரிசங்களைத் தரும் அந்த உன் ஸ்மரணத்தை இச் சரிதத்தால் அருளினுய். இதோ நூல் முடிகிறது. நூல் எனில் எங்கோ முடியத்தானே வேண்டும்? முடியட்டும்.

ஸ்மரணம் மட்டும் முடியாமல் இதயத்தே தோய்ந் திருக்கட்டும். இதை உன்னிடம் பிரார்த்திப்பதுகூட, ஒரு சுமையை ஏற்படுத்திக் கொள்வதுதான். அவசியமில்லாதது தான்.

அம்மா, உனக்குத் தெரியாததா? நீயே எதை எப்போது தர வேண்டுமோ அதை அப்போது தருவாய். இதை உணர்வதே — ஏதோ இப்போது தாற்காலிகமாகவாவது உணர்வதே — மகா நிம்மதி, நிறைவு. 'நீ விட்டபடி.' என் றிருந்து விட்டால் போதும். அப்படித்தானே?

''ஆம்'' என்று நீ மென்முறுவலால் அங்கிகரிப்பதை இங்கிருந்தே அகக்கண்ணில் காண்கிறேம்.

என்ன ஆச்சரியம்!

Koviloor Digital Library

இன்று காலை உன் முதல் தரிசனத்தில், என்னதான் மானஸிக வழிபாடு செய்தாலும் உன் ஸ்தூல தரிசனத்துக்கு ஈடாகாது என்றோம். இப்போதோ மானஸிகமாகவே உன்னைத் தெள்ளத் தெளிய வெகு வெகு அணித்தே கண்டு கொள்ள வைத்து விட்டாயே! இதைக் காண்கையில் இதே போல் இன்னம் மேலே மேலே எங்களை ஏற்றி, நாங்கள் நீயேயாகும் ஏகானந்தத்தையும் ஒருநாள் தந்தே தீருவாய் என்ற நம்பிக்கை சுடரிடுகிறது.

'பன்னகசாயி சோகஸா' போன்ற மாடியில் சோகஸாகத் திண்டிலே சாய்ந்துள்ள நீ, ''ஆம்'' சொல்லி ஆமோதிப்பதற்கு அடையாளமாகவே உனது ''தாம்பூல ரஞ்சித முகாரவிந்த'த்தில் மந்தஹாஸத்தை தெளிய விடுகிறாய்.

ஆஹா! வெற்றியைக் காட்டும் வெற்றிலைச் சிரிப்பால் நீயே இச் சரிதையைப் பூர்த்தி செய்யும் பேரருளை என்னென்பது? எங்கள் பாக்கியத்தை என் சொல்வது? அகவுரையில் தாம்பூலம் தந்து அன்பின் ஆனந்த நிறைவோடு வாசகர்களை உன்னிடம் அழைத்து வந்தேன். அன்பே வடிவாம் ஆனந்தமயீ! நிறைவுரையாக, உரை கடந்த நிறைவாக, இப்போது நீயே உன் தாம்பூல முறுவலின் செவ்வொளியிலே உனக்குப், உன் ஆனந்த லீலா நிமித்தம் உன்னிலிருந்தே நீ உண்டாக்கிக் கொண்ட எங்களுக்குமாகச் சேர்த்து மங்களாரத்தி எடுத்து விட்டாய். ஆனந்த ஸாகரத்தில் திளைக்கிறோம். அகிலமெலாம் பெறட்டும் இப் பேரின்பத்தை!

ஜயது ஜயது ஜகதீச்வரி
ஜய சிவ சக்தீச்வரீ — அம்பா
ஜய ஜய ஸத்ய ஸாயீச்வரீ — மம்மு
பாலின்ச்சவே தேவீ பர்த்தீச்வரி!

———

2088